
Δ9:67

MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

Published under the authority
of the
Government of Madras

General Editor:
T. CHANDRASEKHARAN, M.A., L.T.,
Curator, Government Oriental Manuscripts Library, Madras.

No. CIII



ஸப்தரிஷி நாடி

(விருஷப லக்னம்)

SAPTARIṢI NĀḌI

(VOLUME II)

(Vṛsabhalagnam)

EDITED WITH INTRODUCTION
AND NOTES

BY

Pandit S. THANGAVEL NADAR,

Astro - Palmist and Medalist, Kaumāra Nāḍi Astrologist

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

1953

Price Rs. 30.

L 899a

PRINTED AT THE
RATHNAM PRESS (BRANCH)
MADRAS-1.

INTRODUCTION

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May, 1948. Important Manuscripts Libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, Madras, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48–10, Education, dated 4-4-1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following are the members of the Committee :—

1. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L.
2. ,, R. P. Sethu Pillai, B.A., B.L.
3. ,, C. M. Ramachandra Chettiar, B.A., B.L.
4. ,, R. Krishnamoorthy, (Kalki).
5. Dr. N. Venkataramanayya, M.A., Ph. D.
6. Sri M. Ramanuja Rao Naidu, M.A.
7. ,, V. Prabhakara Sastri.
8. ,, N. Venkata Rao, M.A.
9. ,, H. Sesha Ayyangar.
10. ,, Masti Venkatesa Ayyangar.
11. ,, M. Mariappa Bhat, M.A., L.T.
12. Dr. C. Achyuta Menon, B.A., Ph. D.

18. Dr. C. Kunhan Raja, M.A., D. Phil.
14. ,, A. Sankaran, M.A., Ph.D., L.T.
15. Sri Polakam Rama Sastri.
16. ,, S. K. Ramanatha Sastri.
17. Dr. M. Abdul Haq, M.A., D. Phil., (Oxon.)
18. Afzul-ul-Ulama Hakim Khader Ahamed.
19. Sri P. D. Joshi.
20. ,, S. Gopalan, B.A., B.L.
21. ,, T. Chandrasekharan, M.A., L.T.

With the exception of Sri Masti Venkatesa Ayyangar, and Dr. C. Kunhan Raja, the above members continued to be members of the Expert Committee for 1950–51 also to which the following gentlemen were added in Govt. Memo. 7297-E/50-3, Edn., D/—19—5—'50 and Govt. Memo. No. 15875-E/50-4, Edn., D/—7—9—'50.

1. Dr. A. Chidambaranatha Chettiar, M.A., Ph. D.,
2. Sri S. Govindarajulu, B.A., B.L., LL.B., Bar-at-law.
3. Capt. G. Srinivasamoorthy, B.A., B.L., M.B., and C.M.
4. Dr. Muhammad Hussain Nainar, M.A., Ph. D.,
5. Sri T. V. Subba Rao, B.A., B.L.,
6. Principal, College of Indigenous Medicine, Madras.

The members of the Committee formed into Sub-Committees for the various languages, Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Mahrathi and Islamic Languages. They met during the month of May, 1949, at Madras and at Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government and they decided to call these publications as the "MADRAS GOVERNMENT ORIENTAL SERIES," and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications under this series.

The following manuscripts were taken up for publication during 1949-50.

"A" FROM THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

TAMIL

1. Kappal Śāttiram
2. Anubhava Vaittiya Muṟai
3. Āttānakōḷāhalam
4. Upadēśa Kāṇḍam
5. Cōḷaṉ Pūrva Paṭṭayam
6. Śivajñāna Dīpam

TELUGU

1. Auṣadha Yōgamulu
2. Vaidya Nighaṇṭuvu
3. Dhanurvidyā Vilāsamu
4. Yōga Darśana Viṣayamu
5. Khaḍga Lakṣaṇa Śirōmaṇi

SANSKRIT

1. Viṣṇārāyaṇīyam—(Tantrasārasaṅgraha)
2. Bhārgava Nāḍikā
3. Hariharacaturaṅgam
4. Brahmasūtravṛtti—Mitākṣarā
5. Nyāyasiddhānta Tattvāmṛtam

MALAYĀLAM

1. Garbha Cikitsa
2. (a) Vāstulakṣaṇam
   (b) Śilpaviṣayam
3. Mahāsāram
4. Kaṇakkusāram
5. Kriyākramam
6. Kaṇakkusāram—(Bālaprabōdham)

KANNAḌA

1. Lōkōpakāram
2. Raṭṭamatam

3. Aśvaśāstram
4. Vividha Vaidya Viṣayagaḷu
5. Saṅgītaratnākara
6. Sūpaśāstra

ISLAMIC LANGUAGES

1. Jamil-Al-Ashya
2. Tibb-E-Faridi
3. Tahqiq-Al-Buhran
4. Safinat-Al-Najat

"B" FROM THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATHI MAHAL LIBRARY, TANJORE

TAMIL

1. Śarabendra Vaidya Muṟai (Diabetes)
2. Do. (Eyes)
3. Do. (Anaemia)
4. Do. (Svāsakāsam)
5. Agastiyar 200
6. Koṅkaṇaṟśarakku Vaippu
7. Tiruccirṟambalakkovaiyār with Padavurai
8. Tālasamudram
9. Bharatanāṭyam
10. (a) Paṇḍikēḷi Vilāsa Nāṭakam
    (b) Purūrava Cakravarti Nāṭakam
    (c) Madana Sundara Vilāsa Nāṭakam
11. Percy Macqueen's Collection of Folklore in the Madras University Library
12. Rāmaiyaṉ Ammāṉai

TELUGU

1. Kāmandakanītisāramu
2. Tāladaśāprāṇapradīpikā
3. Raghunātha Nāyakābhyudayamu
4. Rājagōpāla Vilāsamu
5. Rāmāyaṇamu by Kaṭṭa Varadarāju

MAHRĀTHI.

1. Nāṭyaśāstra Saṅgraha
2. (a) Book of Knowledge
   (b) Folk Songs
   (c) Dora Darun Veṇi Paddhati
   (d) Āsvāsa Catula Dumani
3. (a) Pratāpasimhendra Vijaya Prabandha
   (b) Sarabhendra Tīrthāvali
   (c) Lāvaṇi
4. Devendra Kuravañji
5. Bhakta Vilāsa
6. Śloka Baddha Rāmāyaṇa

SANSKRIT

1. Aśvaśāstra with Tricolour illustrations
2. Rājamṛgāṅka
3. Ānandakandam
4. Āyurvedamahodadhi
5. Gīta Govinda Abhinaya
6. (a) Coḷacampū
   (b) Sāhendra Vilāsa
7. Dharmākūtam—Sundara Kāṇḍa.
8. Jātakasāra
9. Viṣṇutattvanirṇaya Vyākhyā
10. Saṅgīta Darpaṇa
11. Bījapallava

During 1950, only the Sub-Committee for TAMIL, TELUGU and KANNAḌA met in the month of July 1950 at Madras.

The following books were taken up for publication in the various languages during 1950–51.

TAMIL

1. Daṭcanāyaṇār–Vaiddiya–Aṭṭavaṇai
2. Vaittiyak Kaḷañciyam
3. Anubhava Vaittiya Muṟai Vol. 3

TELUGU

1. Śaivācārasaṅgrahamu
2. Anubhava Vaidyam
3. Abhinayadarpaṇamu

SANSKRIT

1. Ārogyacintāmaṇi
2. Tattvasāra WITH Ratnasāriṇī
3. Sūtrārthāmṛtalaharī
4. (a) Ratnadīpikā
   (b) Ratnaśāstra

MALAYĀLAM

1. Aśvacikitsa
2. Phalasārasamuccaya

KANNADA

1. Vaidya Sāra Saṅgraha

During 1951–52, only the Sub-Committees for TAMIL, TELUGU and MALAYĀLAM met in the month of April 1951. The following books were taken up for publication in the various languages.

TAMIL

1. Saptariṣināḍi
2. Karnāṭakarājākkaḷ Savistāra Caritram
3. Bharata Siddāntam
4. Pillaippiṇivākaṭam
5. Anubhava Vaittiyam Vol. 4
6. Māṭṭuvākaṭam

TELUGU

1. Brahmavidyā Sudhārṇavamu
2. Rāgatāḷacintāmaṇi
3. Vaidyacintāmaṇi
4. Kumārarāmuni Kathā
5. Kāṭamarāju Kathā

SANSKRIT

1. Devakeralam—Candrakalā Nāḍi
2. Pātañjala Yogasūtra Bhāṣya Vivaraṇa by Sri Śaṅkarācārya

MALAYĀLAM

1. Kiḷivaṇḍusamvādam
2. Advaita Vedāntam
3. Bārhaspatyasūtra WITH Malayālam commentary
4. Karaṇapaddhati

KANNADA

1. Sadgururahasyam

ARABIC

2. Shawakil-Ul-Hur

In Government memorandum No. 18947 - E/52-2. Edn. dated 7—8—1952, a few changes were made in the personnel of the Expert Committee.

The names of following members were deleted :

1. Sri V. Prabhakara Sastri.
2. Professor M. Hiriyanna.
3. ,, C. Achyuta Menon.
4. ,, M. Abdul Haq.

The following gentlemen were included as members of the Expert Comittee :

1. Sri M. Somasekhara Sarma.
2. Dr. V. Raghavan, M.A., Ph. D.,
3. ,, R. Nagaraja Sarma, M.A. Ph. D.,
4. ,, S. Krishna Nair, M.A., Ph. D.,
5. Professor S. A. Bukhari, M.A.,

The Sub-Commitees for all the languages met during September 1952 for selecting manuscripts for publication.

The following manuscripts were taken up for publication during 1952-53 :

TAMIL

1. Saptariṣināḍi Volume II - VRSABHA LAGNA.
2. Temple Inscriptions of south India.

TELUGU

1. Śārīramu.

KANNAḌA

1. Bijjalarāya Carite.
2. Vaidyasāra Saṅgraha Volume II

MALAYĀLAM

1. Vidyāmādhavīyam.
2. Sarvasādhāraṇa Cikitsa.
3. Viṣa Cikitsa AND Viṣappāṭṭusāram.

SANSKRIT

1. Nyāyaratnam with the commentary Dyutimālikā.
2. Cikisātilakam.
3. Nṛttaratnāvali.

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within a few years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The editors have, however,

tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets and correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the foot-notes except in the case of a few books in which the correct readings have been given in the foot-note or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the press. The various Presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

The present edition of the Vṛṣabha Lagna of the Saptarṣi Nāḍi is based on a palm leaf Ms. Bearing R. No. 305, Vol. II. containing 411 folios and a restored copy of the above bearing the R. No. 2557. (paper) containing 1114 pages with 20 lines a page. This volume contains 121 Horoscopes in Vṛṣabha Lagna.

Reference has to be made to the good work done by Sri V. R. Kalyanasundaram, and Sri V. S. Krishnan, Pandits of the library, in seeing the work through the Press.

T. CHANDRASEKHARAN,
General Editor.
Madras Govt. Oriental Series.

Madras,
23—2—1953.

PREFACE

ASTROLOGY is undoubtedly one of the most ancient sciences of the East, particularly in India. The innate spiritual character of Indians linked man's destiny with planetary movements. This resulted naturally in a deep study of Astrology. Consequently various works crept up and "BRHAT JĀTAKA" "JYOTISA RATNĀVALI," "BRHAT SAMHITĀ," "NILAKANTHA TAJĀKAM" are some of the famous works in this branch of science.

India, from time immemorial, has laid its moral foundations strongly—and rightly so—in the ancient four Vedas, Purāṇas and also Itihāsas. The latter two are just the practical commentaries of Veda to bring force to the truth of ideologies expounded in the Vedas. Astrology is a jewelled pillar of the monumental structure of Vedic Culture.

The present work SAPTARISI NĀDI is, in a simple and lucid style, expressed in verses in Tamil. It just appeals to common man and goes direct to his heart. The authors are the seven great sages as it is evident from the very title. The seven great sages are ATRI, AGASTYA, BHUJANDA, JAYAMUNI, KAUŚIKA, PARĀŚARA and VASISTHA. This is in the form of a discussion in an assemblage of reputed sages under the Presidency of "PĀRVATI." The names of Vidura and Bhṛgu are also found. This work deals with the character and destiny of some persons and the influence exerted by the nine planets *viz.*, SUN, MOON, MARS, VENUS, JUPITER, MERCURY, SATURN, RĀHU and KETU.

The first volume of SAPTARISI NĀDI "Meṣa Lagna" was published last year and the present edition deals with the natives who have VRSABHA LAGNA at the time of their birth. There are about 121 horoscopes with different planetary positions. Each horoscope is dealt descriptively in about forty verses. Usually the first verse describes the planetary position.

The second and third verses describe the sex of the native, location of the place, and even house, at the time of birth. Then details about parentage, information about brothers, sisters, wife and children, past and future births etc., are given in the suceeding verses. The special position of a particular planet, if any, and its influence also is set out with an emphasis on the scientific view point. The concluding verses speak of the native's Karma Kāla - both of himself, his wife's and his parents'.

It is to be noted that our country has an inherent faith in the working of an Unseen Almighty Force which is usually interpreted as Fate. Every action begets a reaction. All acts, whether good or bad, have their own results. This chain of work which is termed as " Karma " can never be got rid of. We should be trespassing the regions of Philosophy if we tread any further in this subject. Suffice it to say that " Karma " cannot be shaken off and so it has become a common custom to maintain that Fate cannot be surmounted. However, faith in the mysterious forces which determine the order of events is the only confidence for human beings. The indication and position of planets so arrange within themselves as benefics or malefics or both, as we lived the previous birth, in discharging, properly or otherwise, our duties in this mundane world of cause and action.

This Nāḍi-Grantha lays emphasis in deeds and misdeeds with their consequences. This is quite helpful to the common man in as much as it explains the gravity of a misdeed or misdemeanour. Several instances are brought out to show that mistakes committed in an excited hour bring disaster just as otherwise. The special feature of this grantha is, while it vividly describes the sins of common place occurence, it also supplies the vital knowledge as to how to eradicate or overcome the evil effects of previous birth.

Although this VRSABHA LAGNA deals with the characteristics of a certain set of people born under a set combination of individual planetary position, the common man can gain

knowledge of the atonements for a given or particular effect. In this grantha, we also find certain sins which brook no invocation. This will light the common man's limited knowledge and forbid him for ever from falling a prey to such intemperate sins lest he should get enmeshed and not get out of the inscrutable after-effects.

More often than not, we are made to realise the mighty force of the effects of bad deeds which the Omnipresence does not fail to observe and act upon. This grantha, therefore, serves also as a wise old friend preventing us from committing such sins and promoting us towards good follow-ship. This Nāḍi-grantha also proves complete accord between divine decrees and earthly submission to phenomenal actions of individuals. This, again, will serve us as a stern reprimand to refrain us from perpetrating crimes. This also encourages the strong (Indian) belief in the effectiveness of even stray good deeds which help not only to wipe out sins but add to the peace of a man.

The authors have referred to another part of SAPTARISI NĀDI almost at the end of each horoscope's explanatery verses; but, so far, this other part in which it is claimed that still greater details are furnished, is not available.

I have furnished the various names for the twelve *lagnas* and the nine planets. I have also included in the appendix the Kārakas with their Ādhipatyams to enable us to find out the effect of a particular " Kārakādhipati " from a native's horoscope.

This SAPTARISI NĀDI reads quite simple but for these various names which have got to be correctly deciphered. It is hoped that those interested in Astrology will make a good use of this publication.

I must acknowledge the help rendered to me by **Sri R. V. Rajagopala Iyengar of Royampettai,** but for whose encouragement I would not have dared to attempt to edit the present work.

My grateful thanks are also due to **Sri V. Ranganathan of Valuthur** who has spent night and day with ceaseless devotion to the bringing out of this edition.

In conclusien, I must mention my indebtedness to **Sri T. Chandrasekharan,** M.A., L.T., **Curator, Government Oriental Manuscripts Library, Madras,** for his valuable suggestions which have gone a long way in making this edition a rich one.

I shall be failing in my duty if I do not acknowledge the help rendered by the Press in bringing out this edition within a very short compass of time.

I invoke the blessings of all readers of this edition and request them to be indulgent over the mistakes that might have crept in.

Kaumāranāḍi
Jyōtiṣa Śāstrālayam,
2, Royapettah High Road,
Madras-14,
Dated 20-2-1953.

PANDIT
S. THANGAVEL NADAR,
Kaumāranāḍi Astrologer.

ஸ்ரீ:

முன்னுரை

கல்விப் பயிற்சிக்கு ஆசிரியர் வழியாக உபதேசம் பெறுவதே முக்கிய ஆதாரம். அங்ஙனமின்றிக் கற்குங் கல்வி, பயன் தராது என்று பெரியோர் கூறுவர்.

கடவுள் ஆதிகாலத்தில், பிரமதேவனுக்கு, வேதங்கள் அனைத்தையும் உபதேசஞ்செய்து, அவற்றின் மூலம், உலக மக்கள் நன்மை தீமைகளை யுணர்ந்து கடைப்பிடிக்க ஒருவழி காட்டியதாகச் சான்றோர் கூறுகின்றனர். வேதத்தின் உட்பொருளை நமக்கு நன்கு உணர்த்த, இதிஹாஸம், புராணம் முதலியவைகளை வால்மீகி, வியாசர், ஆகியோர் வழியாகக் கடவுளே வெளியிட்டதாக ஆன்றோர் கருதுவர். அவ் வேதங்களின் கருத்துக்களைப் பின்பற்றியே தமிழ்நாட்டில், ஆழ்வார்கள் நாயன்மார்கள் முதலான அடியவர்கள் தோன்றி, வேதாந்த ரகசியங்களைத் தமிழ்ப் பாடல்களாக வெளியிட்டார்கள்.

இங்ஙனம் சிறப்பு வாய்ந்த வேதத்துக்கு, சோதிட சாஸ்திரம் ஒரு அங்கமாகக் கூறப்பட்டுள்ளது. இதனுள் நவக்கிரகங்களின் நிலைகள் நன்கு ஆராயப்பட்டு, அவ்வக் காலத்தில், பிறந்தவனின் குணங்களும், அவனுக்கு ஏற்படும் நன்மை தீமைகளும் எடுத்து விளக்கப் படுகின்றன. முனிவர்கள் பலரால் எழுதப் பட்டுள்ள நாடி நூல்களைப் பார்க்கு மிடத்து, அவற்றில் கூறுகின்ற செய்திகள் சாதாரண மக்களுக்கும் மிகவும் பயன்படக் கூடியன என்று தெரிகின்றது. இராமன், கண்ணன் முதலான தேவர்களின் அவதாரச் செய்திகளை விளக்கும் இராமாயணம் பாகவதம் போன்ற இதிஹாஸ புராணங்களை நாம் படிப்பதால், தெய்வ பக்தியுண்டாகி, மறுமைக்கு வேண்டிய வழிகளும் நன்கு புலப்படுகின்றன. சாதாரணமாக, மக்கள் தம் வாழ்க்கையில் என்னென்ன குற்றங்களைச் செய்கின்றார்கள்; அவற்றின் விளைவுகள் யாவை? என்னென்ன நன்மைகள் செய்தால், எவ்வெப் பயன்களுண்டாம் என்பனவற்றைப் பல உதாரணங்களுடன், இந்த நாடிக் கிரகங்கள் தெளிவுறுத்துகின்றன. மனிதனின் தினசரி வாழ்க்கையில் நேரும் துன்பங்கள், குற்றங்

கள் முதலியவற்றை எடுத்துக்கூறி, இவைகளைப் போக்குவதற்காக, என்னென்ன பரிகாரங்கள் செய்யவேண்டும் என்பனவும் இந் நூல்களுள் சொல்லப் பட்டுள்ளன. ஆதலின், சோதிட சாஸ்திரத்தைச் சேர்ந்தவையான நாடி நூல்கள் எல்லா மக்களுக்கும் மிகவும் உபயோகமுள்ளவை என்பது ஒருவாறு விளங்கும்.

இவ்வாறான நாடி நூல்கள், தேவர்களாலும், முக்கால முணர்ந்த முனிவர்களாலும், மும் மூர்த்திகளின் நாயகியர்களான இலக்குமி, பார்வதி, சரசுவதி ஆகியோர் முன்னிலையில் சொல்லப் பட்டனவாக அமைந்துள்ளன. சந்திரகலா நாடி நந்தி நாடி, பார்க்கவ நாடி முதலிய வடமொழிக் கிரந்தங்களும், கௌமார நாடி, சுக்கிர நாடி, காகபுஜண்டர் நாடி, கௌசிக நாடி, அகஸ்தியர் நாடி முதலான தமிழ் நூல்களும் இம்முறையில் உள்ளனவாம். பாவச் செயல்களைச் செய்து கொண்டு இவ்வுலக வாழ்க்கையில் கிடந்துழலும் நம் போன்றவர்கள் வரலாறுகளை, பார்வதி முதலானவர்கள் கேட்குமாறு, முனிவர்கள் கூறுவானேன் என்று ஒரு ஐயம் தோன்றுதல் கூடும். நமக்கு நம் முற்பிறவியைப் பற்றிய செய்திகளெவையும் தெரியாததால், நம் போன்றவருக்குப் பயன்படும்படி, தேவர்கள் கேட்க, முனிவர்கள் சொல்லியிருக்கலாம். அன்றியும் நம்மெல்லோரையும் படைத்துக் காக்குங் கடவுள் நாம் செய்யும் குற்றங்களைப் போக்குவதற்கு ஒருவழி காட்டுவது இயல்பன்றே; ஆகவே, நம் முற் பிறவி வரலாற்றையும், தோஷங்களையும் எடுத்துக் கூறி, தோஷங்கள் நீங்குவதற்குரிய பரிகாரங்களையும் முனிவர்கள் வாயிலாகக் கடவுள் அருளினர் என்று கொள்ளுதல் தகும். சில நாடிநூல்களில் கூறப்பெறும் செய்திகளைக் கவனித்தால், இறைவனருளால், முக்காலமும் முணரும் வல்லமை படைத்த முனிவர்களா லன்றி, வேறு ஒருவராலும் அவற்றைக் கூற வியலாது என்றே கருதவேண்டியுளது. நாம் பிறந்த ஊரின்பெயர், நம்முடைய பெயர், பெற்றோர் மனைவி ஆகியோர் பெயர்கள் இவையனைத்தும் சொல்லப்பட்டுள்ளன வென்றால் நமக்கு மிகவும் வியப்பை யளிக்கின்ற தன்றே? இவ்வளவு விவரமான குறிப்புக்கள் கூறப்பட வில்லையானால், இந்நூலில் சொல்லப்பட்டிருப்பவைகளில் நமக்கு நம்பிக்கை யுண்டாகாது.

இங்ஙனம் முனிவர்களால் கூறப்பெற்றுள்ள நாடி நூல்களில், கடந்த காலப் பலன்கள் ஒழுங்காகச் சொல்லப் பெற்றுள்ளன. எதிர்காலத்தைப் பற்றிக் கூறுபவற்றில் சில தவறுபடுகின்றன. இதற்குக் காரணம் யாது என்று நாம் சிறிது சிந்திக்க வேண்டும். முற்பிறவியில் நேர்ந்த நன்மை தீமைகளைக் கூறி, அவற்றுல் இப்பிறப்பில் ஒருவர்க்கு உண்டாகும் இன்ப துன்பங்களைச் சொல்லுவதோடு, ஏற்பட்ட தீமைகளைப் போக்குவதற்குச் சில பரிகாரங்களும் இந்நூல்களில் கூறப்பெற்றுள்ளன. நாம், அந்தப் பரிகாரங்களைச் செய்து, நன்மை யடையப் போகின்றோமா என்ற விஷயம் விளக்கப் படவில்லை. ஆனல், கூறிய வண்ணம் பரிகாரங்களைச் செய்தால் நன்மைகளுண்டாம் எனவும், செய்யா விட்டால் தீமைகள் விலகா வென்றும் திட்டமாகச் சொல்லப்பட் டுளது. நம் முயற்சியால் செய்யக் கூடியவையான, அன்ன தானம், கடவுளுக்கு அருச்சனை, புண்ணியஸ்தல யாத்திரை, தீர்த்தங்களில் நீராடுதல் முதலியவைகளைச் செய்தால், கெடுதல்கள் நேராமல் நன்மையுண்டாம். அதுபோலவே, இப்பிறப்பில் தீயசெயல்களை மிகுதியாகச் செய்தால், ஏற்படக் கூடிய நன்மைகள் இல்லாமல், துன்பங்கள் மிகுதியாவது திண்ணமே. ஆகவே இந்த நாடிகளில், சாதாரண மக்களின் வாழ்க்கை யனுபவத்தை ஒட்டிய பலன்களே கூறப் பெற்றுள்ளன.

நூல்

ஸப்தரிஷி நாடி என்னும் பெயர் கொண்ட இந்நூல், மேற்கூறப் பெற்ற நாடி நூல்கள் போன்ற தொன்று. இஃது, ஏழு முனிவர்கள், பார்வதி தேவிக்குக், கூறுவதாக அமைந்துள்ளது. ஆயினும் இதனுள், அத்திரி, பிருகு, வசிட்டர், கௌசிகர், பராசரர், செயமுனிவர், புஜண்டர், அகத்தியர். விதுரர், நாரதர் முதலான பல முனிவர்களின் பெயர்கள் கூறப் பெற்றுள்ளன. ஏழு முனிவர்கள் முக்யஸ்தர்களாக விருந்து, வேறு சிலர் உடனிருந்தவராகக் கருதலாம்.

இந்நூலில், பனிரெண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் தனித்தனியே ஒரு இனக்கினத்தைப் பற்றிக் கூறுகின்றது. ஒரே இலக்கினத்தில் வெவ்வேறான கிரக

நிலைகளைக் கொண்டு பிறந்த பலருடைய ஜாதகங்கள் எழுதப் பட்டுள்ளன.

முதல் பாடலில் கிரக நிலைகள், இலக்கினம் இவை கூறப் பெற்று, பின்வரும் பாடல்களில் பிறக்கும் வீடு, ஊர் இவற்றிற் குரிய அடையாளங்கள், ஜாதகன், தாய் தந்தையர், உடன் பிறந்தோர், மனைவி, புத்திரர் முதலானவர் யோகங்கள், முற்பிறப்பு மறு பிறப்புக்கள் ஆகிய வனைத்தும் சொல்லப் படுகின்றன.

இந்நூலின் முதற்பகுதியாகிய மேஷ விலக்கினம் சென்ற ஆண்டில் வெளிவந்துள்ளது. இப்பொழுது வெளியாகும் ஸப்தரிஷி நாடி இரண்டாம் பகுதியாகிய விருஷப லக்கினத்தில் 121 ஜாதகங்கள் உள்ளன. பெரும்பான்மையான ஜாதகங்கள் வெவ்வேறான கிரக நிலைகளைக் கொண்டுள்ளன. ஓரிரண்டு ஜாதகங்களின் கிரக அமைப்புக்கள் ஒரேவிதமாக இருந்தாலும் பலன்கள் வேறாகக் கூறப்பட்டுள்ளன. ஸப்த ரிஷிகளையும் பார்த்து, பார்வதி தேவி, இன்ன இன்ன கிரகங்கள் இவ்விவ் விடங்களில் நிற்க, விருஷப லக்கினத்தில் பிறந்த ஜாதகர் களுக்குப் பலன்களைக் கூறுங்கள் என்று கேட்பதாக, முதல் பாடலும், ஏழு முனிவர்களில் ஒருவர் பலன்களைக் கூறி வருவதாகப் பின்வரும் பாடல்களும் அமைந்துள்ளன. இடை யில் தோன்றும் ஐயங்களைப் பார்வதி கேட்கும் போது மற்றொரு முனிவர் விளக்குவார். முனிவர்களும், தங்களுக்குள்ளாகவே, ஒருவர் கூறுபவற்றை, இன்னொருவர் தக்க காரணங் காட்டி மறுத்துப் பேசுவதனையும் இந்நூலில் கண்டு மகிழலாம்.

நூலின் சிறப்பியல்புகள்

இந்தச் சோதிட நூலில், சோதிடக்கலையில் பயிற்சி பெற்ற வர் மாத்திரமே யன்றி, எல்லா மக்களும் படித்து உணர்ந்து கொள்ள வேண்டிய அரிய பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் இன்றியமையாத சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

நாள்தோறும் நடைமுறையில், அறிந்தோ, அறியாமலோ, நாம் செய்யும் சில செயல்கள் தீங்கானவையாக மாறி, அவற்றால் பெரிய குற்றங்கள் ஏற்படுகின்றன. அவற்றிற்கு இந்நூலிருந்து

சில உதாரணங்களைப் பார்க்கலாம். வயிற்றுக்கு உணவு தருமாறு யாசிக்கும் ஏழையை, இல்லையென்று கோபத்துடன் கூறி, விரட்டுவது பெருங்குற்றமாகக் கருதப்படுகின்றது. முற்பிறப்பில், அங்ஙனம் செய்திருந்தாலும், இப்பிறப்பில் அது தொடருமாம். அதனால் புத்திர தோஷம் ஏற்படும் என்று சொல்லப்பட்டுள்ளது.

"சுகமான பூமி யுண்டாய்ச் சுதனுமே வாழு நாளில்
பகையாக வந்த வூழைப் பகருவோம் விவர மாக
இகபர னன்பு பூண்ட வதிதியு மோர்நாள் தன்னில்
அகமது சென்று மேதான் அன்னமுங் கேட்க லுற்றார்.

வந்தவர் கேட்கும் போது மனத்தினில கோப முற்று
இந்தநே ரத்தில் சாதம் இல்லையென் றுரைத்த போது
அந்தவர் சொல்லு கின்றார் அன்பனே கோபம் வேண்டாம்
என்பசி யதிக மாச்சு ஈகுவாய்ச் சாத மென்ன ;

சினமது வதிக முற்றுச் செல்லுவாய் வேறு யில்லம்
அன்னமு மிங்கே யில்லை அதிதியுஞ் சொல்லு கின்றார்
வீணயாகச் சொன்ன பாவி மேவிடு மறுசென் மத்தில்
கனமான புதல்வ ரின்றிக் காசினில் வாழ்வா னென்று ;

செப்பியே வேறில் சென்றார் சேர்ந்தது வந்தத் தோடம்
.....[ஜாதகம் 109 பக்கங்கள் 1291-92]

பசியினால் வருந்துகின்ற குழந்தைக்குப் பால் வேண்டும் என்று ஒருவர் கேட்டால் இல்லையென்று சொல்வது தோஷமாகும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

"அந்ததோர் தோட மொன்றும் அணுகிற்று விவனுக்
[கேதான்
பிந்தியு மறையோ னின்ற பிள்ளைக்கா யாவின் பாலை
இந்தவன் தன்னைக் கேட்க இல்லையென் றுரைத்தா னம்மா
வந்தது வந்தத் தோடம் மங்கையே ! மேலுங் கேளே.

[ஜாதகம் 109: பக்கம் 1293]

ஏழைகளுக்கு அன்புடன் மறுமொழி கூறியனுப்பினால் குற்றமாகக் கருதப்பட வில்லையென்று தெரிகின்றது. புத்திர தோஷம் ஏற்படுவதற்கு மேற்கூறியவை தவிர, இன்னும் பலவும் கூறப்பெற்றுள்ளன. கைம்பெண்ணுடன் இன்ப

மனுபவித்தலும், அவளுக்குத் தோன்றும் கருவினையழித்தலும், வீட்டில், நல்லபாம்பு படமெடுத்து ஆடும்பொழுது அதனைத் தடியால் அடித்துக் கொல்லுதலும், மிகப் பெரிய பாவமாகி, அவற்றுல், மதலே தோஷம் ஏற்படும் என்றும் விவரிக்கப் பெற்றுளது.

"விதிக்கின்றேரும் வந்த ஊழை விதவையைப் போகந்
[துய்த்து
அதனுலே கருவு தங்கி அநேகமா யவிழ்த்த மீந்தான்"

"கருவுக ளழிந்து பின்பு காரிழை மரண மாளுள்
அருமையா யந்தத் தோடம் அணுகிற்று யிவனுக் கேதான்
அறைகின்றே மிச்சென் மத்தில் மைந்தர்கள் தோட
[முண்டாய்ப்
பெருமையுங் குறைவ தாகப் பிழைத்தன னிவனே யம்மா."

[ஜாதகம்: 4 பாடல்கள் 26, 27]

"உரகனு மோர்நாள் தன்னில் உறையில்லந் தன்னில் செல்ல
அரவுமே மகுடங் கொண்டு அங்ஙன மயங்கி நிற்க
விரைவினி லின்னேன் தானும் வாட்டினன் கழியி னுலே
அறைகின்றே மந்தத் தோடம் வந்தது கேளு மம்மா."

"இருவிதத் தோடத் தாலே இயம்பினே மதலே தோடம்"

[ஜாதகம் 8: பக்கம் 104]

சகோதர தோஷம் ஏற்படுவதற்குப் பலகாரணங்கள் இந் நூலுள் சொல்லப்பட்டுள்ளன. கணவன், தன்மனைவியின் தன் உடன்பிறந்தார் மீதோ மனைவி கணவனின் உடன் பிறந்தார் பேரிலோ, சந்தேக மேற்படும்படி தகாத சொற்களைச் சொல்ல, அதனுல் மனவருத்த மடைந்து, மற்றவர் சொல்லும் சொற் களால் குற்றங் கூறியவர்க்குச் சகோதர தோஷம் உண்டாகுமாம். தன்னுடன் பிறந்தவனுக்கு உரிய பாகத்தைத் தராமல் மோசஞ் செய்துவிட்டாலும், பொய்ச்சாட்சி முதலியன கூறுதலாலும், மறு பிறப்பில் சகோதரர் தோன்றமாட்டார்கள் என்றும், நியாய சபையில் நீதிவழங்க வேண்டிய நீதிபதி, வழக்கொன்றில், ஒரு தரப்பாரிடம் பொருள் பெற்றுக் கொண்டு, இன்னெருவர்க்கு விரோதமாகத் தீர்ப்புக் கூறினுல் மிகப் பெரிய குற்றங்கள்

அவரை யடையும் என்றும் இந்நூலில் பலவிடங்களில் கூறப் பெற்றுள்ளது. பின்வரும் பாடல்களில் இவற்றைக் காணலாம்.

"வரனுடைத் தம்பி பேரில் வருணித்தாள் சிலேடை
[வார்த்தை
குறைமன மாகச் சொல்வான் குறைகளூப் பெண்மேல்
[சொன்னன்
வருஞ்சென்மந் துணையா ணின்றி மைத்துனன் மூத்தா ரின்றித்
தரையினில் வாழ்வா யென்னச் சார்ந்தது வந்தச் சாபம்.

[ஜாதகம் 6: பக்கம் 79.]

"மறையவ ரிருவர் தாமும் விளைவினுல் விரோத முற்று
அரசர்பால் செல்லும் போது அவர்களி லொருவர் பக்கந்
தெரியாத வார்த்தை சொல்லச் சொல்லினுல் துன்பம் நேர
குறைவுள மனத்த ராகிக் கூறுவார் சாபந் தானும்;

"வீண்வார்த்தை சொன்ன பாவி மேவுபின் சென்மந்
[தன்னில்
ஆண்பெண்கள் துணையு மின்றி அவன்தந்தை யாஸ்தி
[யின்றிப்
பூணவே வாழ்வா யென்று....."

[ஜாதகம் 99: பக்கம் 1162-63.]

"ஞாதியின் பாகம் வேண்டி நவின்றன னேழை தானும்
பாதகன் தனைய ழைத்துப் பகர்ந்திட விலஞ்சம் வாங்கிச்
சூதினுல் தீர்ப்புச் செய்தான் தோற்றவன் மனவெ றுப்பால்
மேதினில் சொல்லு கின்றுன் மெல்லியே கேட்டி டாயே"

"தந்தையி னுஸ்தி போக்கித் தந்துணை விகளால் நிந்தை
வந்துமே சனன காலம் வறுமைக ளதிகம் நேர்ந்து
நொந்திடுங் குடும்ப மென்று நுவலுவா னேழை தானும்
சுந்ததந் திரகம் நீங்கித் தாயின்றன் வர்க்கந் தன்னில்;
சீவிப்பா யென்று சொல்லி"

[ஜாதகம் 4: பாடல்கள் 41, 42.]

"முன்சென்ம மேழை சாப முயன்றதா லிச்சென் மத்தில்
தன்தந்தை யில்லங் காணுன் சக்தியா லவமா னங்கள்
வந்திடு மென்று சொன்னேம்....."

மத்திய வயதில் ஒருபெண், கணவனை யிழந்து நிற்பதற்குக் காரணம் பின்வருமாறு கூறப்படுகின்றது. முற்பிறப்பில், இப் பெண், தன் கணவனுடன் கோவிலுக்குப் போய் இறைவனை வழி பட்டு மீளும்போது, ஒரு கடைக்குச் சென்று குங்குமம் மஞ்சள் சீப்பு இவற்றை வாங்கிக் கொண்டு அவற்றிற்குரிய விலைப் பணத் தைத்தராது ஓடிவிட்டாள். அதனையுணர்ந்த கடைக்காரன் மன வருத்த மடைந்து, " இப்பொருள்கள் உபயோகமாகு முன்பே உன்கணவன் இறப்பான் ; மறுபிறப்பிலும் மத்திய காலத்தில் கணவனை இழந்து வாழ்வாய்" என்று சாபமிடுகின்றான். அதனால் இப்பிறப்பில் இவள் இடைக் காலத்தில் கணவனை யிழந்து தனித்து வாழ்கின்றாள் என்று பல இடங்களில் சொல்லப் பட்டுளது. ஒரு உதாரணத்தைக் கீழே காண்போம்.

காரிழை நாணி ழந்து காதலி சிறையாய் வாழ்வள்
நாரிக்கு விவ்வார் குற்றம் நடக்குங்கா ரணங்க ளென்ன
ஆரிழை பூர்வந் தன்னி லணுகிற்றுச் சிலவே தோடம்"

"தன்வரன் தன்னை டொத்துச் சென்றனள் பழனிக்
[கேதான்
அன்னவள் முருகன் பாதம் அருச்சித்துக் கடைக்குச்
[சென்று"

" குங்கும மஞ்சள் சீப்புக் கோதையும் வாங்கிக் கொண்டு
தங்கமு மீயா ளாகிச் சர்வமான் போல்ப றந்தாள்
அங்கதை வணிகன் பார்த்து அம்மாதைக் காண் ஞகிச்
சிங்கம்போல் கோப முற்றுச் செப்புவான் சாபந் தானும்"

" குங்கும மாகா முன்னே கொழுநனு மரண மாவன்
மங்கின மனத்த ளாகி மருவும் பின் சென்மந் தன்னில்
பங்கமாய் வரனு முண்டாய்ப் பர்த்தாவின் சுகமு மின்றி
நங்கையும் நாணி ழந்து நலிந்ததோர் மனமாய் வாழ்வள்"

" சொல்லியே தெருத்தூள் விட்டான் சேர்ந்தது வந்தச்
[சாபம் "

" ஆதியில் நாணி ழந்து அருந்தவ முனிபோல் வாழ்வள் "

[ஜாதகம் 35 : பாடல்கள் 14, 15, 16, 17, 18, 19.]

இருமனைவியர் ஏற்படுவதற்குக் காரணங்கள், தன்தந்தை யின் ஆஸ்தி கிடைக்காமல் போவதற்கு ஏதுக்கள் முதலியன இந்நூலில் பலவிடங்களில் நன்கு எடுத்து விளக்கப் பெற் றுள்ளன.

[ஜாதகம் 66: பக்கம் 800. ஜாதகம் 3: பக்கம் 36ல் காண்க.]

இவை தவிரவும், கைகால்களுக்கு ஊனமுண்டாதல், கண் பார்வை இழுத்தல், வாய் பேசாதிருத்தல், கொடிய ரோகங்கள் ஏற்படுதல் முதலியவைகளும் எவ்வெத் தீமைகளால் ஏற்பட்டன என்று கூறப்பட்டிருக்கின்றது.

இங்ஙனமாக, ஒருவன் செய்யும் செயல்களில் தோஷங் களாகக் கருதப்படுவன இவை என்பதனையும், அவ்வத் தோஷங் களினுல் ஏற்படும் பலன்களையும், அந்தத் தீவினைகள் நீக்கி, நன்மைகளுண்டாக, தோஷங்களின் தன்மைகளுக் கேற்பச் சாந்தி முறைகளையும் இந்நூல் தெளிவுபெறக் கூறுகின்றது. சேது போன்ற புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல், சான்றோர் பலருக்கும் ஏழைகளுக்கும், உணவளித்தல், அரசமரத்தின் கீழே நாகப் பிரதிஷ்டை செய்தல், விரதங்களை மேற்கொள்ளல், கோயி லில் விளக்கேற்றி வைத்தல், இறைவனுக்கு அருச்சனை முதலியன செய்து போற்றுதல், கிரிப்பிரதட்சிணம் செய்தல், சாலை யோரங் களில் தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், சுமைதாங்கி நிறுவுதல், சோலை, கிணறு, குளம் முதலியன செய்தல் ஆகிய நற்செயல் களால் உலகமக்கள், புத்திர தோஷம், சகோதர தோஷம் போன்ற பலதீவினைகளினின்று நீங்கி நலம் பெறுவர் என்று. திட்டமாகப் பலவிடங்களில் ஸப்தரிஷிகள் கூறியுள்ளனர்.

சில தோஷங்களுக்கு மந்திர சாஸ்திரங்களிலிருந்து பரிகார முறைகளும், சிலநோய்களுக்கு, மருத்துவக் காண்டத்திலிருந்து வைத்திய முறைகளும் கூறப்பெற்றுள்ளன.

சில தோஷங்களுக்குப் பரிகாரமே இல்லையென்றுஞ் சொல்லப் பட்டிருக்கின்றது. (ஜாதகம் 113 பாடல் 32). இரகசியங்களைக் கொண்டு ஆராய்ந்தும் புத்திர தோஷம், களத்திர தோஷம், சகோதர தோஷம் முதலியன ஏற்படுவது பற்றி முனிவர்கள் அறிவித்துள்ளனர். அவற்றைக் குறிக்கும் பாடல்களாவன :—

" புத்திரத் தோட மெய்தும் புகலுவீ ரந்தச் சங்கை
புத்திர நாதன் புந்தி பொன்னவன் கூடிப் பத்தில்
சித்தமா யிருப்ப தாலுஞ் சென்மமும் நந்தி யாக
இத்தகைப் பலத்தி னுலே இடருண்டு சுதருக் கேதாம்."

[ஜாதகம் 98: பக்கம் 1148.]

" புத்திரத் தானும் புதனுமே யாகிச்
சித்தமா யாரூன் சேர்ந்துமே யேழில்
வித்தகர் குருவும் விரயத்தில் செல்லக்
குற்றமா மாண்பால் கூறினே மையா "

[ஜாதகம் 4: பக்கம் 50.]

" அத்திரி தடுத்துச் சொல்வார் அவனுக்குத் தாரம் ரெண்டு
சித்தமாய் நேரு மென்றீர் செப்புவீ ரந்தச் சங்கை
குற்றமாய்க் கேது ரெண்டில் குடும்பத்தோன் விரயம்
[தங்கச்
சுத்தமத் தோன்ச ரத்தில் சனிமதி யெழில் நிற்க"

[ஜாதகம் 10: பக்கம் 129.]

" மங்கைக்கு வயது தீர்க்கம் மாமுனி தடுத்துச் சொல்வார்
தங்காது முதன்ம னேதான் சார்ந்திடு மிரண்டாம் பாரி
சங்கையைச் சொல்லு மென்ன சனிமதி யேழில் நின்று
மங்கலன் ஏழோனுகி மருவிட மூன்றில் நீச்சம்"

"கேதுவு மிரண்டி லேறக் கிட்டிய பால னுக்குக்
காதலி யிரண்டு யென்றேம்"

[ஜாதகம் 11 பக்கம் 115.]

என்னகா ரணத்தி னுலே இவளுக்குத் துணையாண் தோடம்
மந்தனு மிராகு மூன்றில் மங்கலன் பார்த்த தாலே
துணைகளுங் காணு தாகும் சுதர்குரு மூன்றைப் பார்க்கக்
கனமான துணவி ருத்தி காதலி சொல்லும் போது;"

" சினமிலாப் பராசர் சொல்வார் தேவர்தங் குருவு மெட்டாய்ப்
பிணையான இடமே யாகில் பலமில்லை துணைவர் தாமே"

[ஜாதகம் 7. பக்கம் 89.]

"என்னகா ரணத்தி னலே இவள்துணை தோடஞ் சொன்னீர்
துன்மையாய்க் கேது ரெண்டில் தொடர்ந்ததால் தோடஞ்
[சொன்னேம்"
[ஜாதகம் 10. பக்கம் 126.]

இவ்வாறு இந்நூல், சோதிடக் கலையுணர்ந்தோருக்குப் பெருவிருந்தாயும், சாதாரண மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் உள்ள அரிய கலைப்பொக்கிஷமாக விளங்குகின்றது. என்று கூறத் தடையேது? மக்கள் நல்வாழ்வில் கருத்துக் கொண்ட ஸப்தரிஷிகளும் உதாரண வாயிலாகவும், நேரிடையாகவும் நல்லுபதேசங்கள் பலவற்றை இந் நூலில் வெளியிட்டுள்ளார்கள். பார்வதி தேவிக்கு, இடையில் தோன்றும் ஐயங்களைப் போக்குவதற்கு முனிவர்கள் கூறும் விடைகளையும், ஒரு முனிவர் கருத்தினை இன்னொருவர் ஆதாரங்களுடன் மறுப்பதனையும் நாம் படிக்குந் தோறும் இன்பக் கடலில் திளைக்கின்றோம். எளிய முறையில், அரிய சாஸ்திரக் கருத்துக்களை கூறியிருப்பதனை இந்த நூலினன்றி வேறெங்கும் காண வியலாது.

ஒவ்வொரு ஜாதகத்திலும், "மற்றவற்றை விவரமாகப் பின்பாகத்தில் கூறுவோம்" என்று சொல்லப்பட்டுளது. "ஸப்தரிஷி நாடி" இரண்டாம் பாகம் இப்பொழுது இருப்பதாகத் தெரியவில்லை.

மேடம் முதலிய பனிரண்டு ராசிகளுக்கும், நவக்கிரகங்களுக்கும் உரிய வேறு பெயர்களையும், கிரகங்களின் உச்ச நீச்ச ஆட்சி விவரங்களையும், இலக்கினம் முதல் பனிரண்டு இடங்கட்கு முரிய பெயர்களையும், கிரக நிலைகளின் அட்டவணையையும் தனித் தனியே எழுதிச் சேர்த்துள்ளேன்.

இறுதியாக, இப்பெரும் பொறுப்பினை எனக்கு அளித்த சென்னை அரசாங்கக் கீழ்த்திசைக் கலைக் கையெழுத்துப் பிரதி நூல்நிலையத் தலைவர் திரு. T. சந்திரசேகரன் எம். ஏ. எல். டி. அவர்கட்கு என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்பணியை ஏற்றுக் கொள்ளுமாறு என்னைத் தூண்டிய என் நண்பர் இராயம்பேட்டை, சத்தியாகாலம் திருமலை,

திரு. R. V. இராஜ கோபால ஐயங்கார் அவர்கட்கும், உரை யெழுதுதல், முன்னுரை யமைத்தல், அட்டவணை தயாரித்தல் முதலியவற்றைச் செய்யும்போது உடனிருந்து தக்க உதவிகள் புரிந்த நண்பர், வழுத்தூர்; திரு. V. ரங்கநாதன் அவர்கட்கும் யான் மிக்க கடப்பாடுடையேன். இவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

மிகக் குறுகிய காலத்தில், சிறப்புற இந்த நூலை அச்சி யற்றிய அச்சகத்தார்க்கு என் அன்பார்ந்த நன்றியைச் செலுத்து கின்றேன்.

எனது உடல் தளர்ச்சியினாலும், பிறவற்றாலும் ஆங்காங்கு பிழைகள் பல நேர்ந்திருக்கலாம். பெரிய பிழைகளாகத் தோன்றியவற்றைத் தொகுத்து, திருத்தங்களையும் சேர்த்துத் தனியே கொடுத்துள்ளேன். இவற்றில் காணுத பிழைகள் உளவேல், அறிஞர்கள் பொறுப்பார்களாக. இவ்வரிய செயலை, எளியேனுகிய என்னைக் கொண்டு முற்றுப்பெறச் செய்வித்த தோன்றாத் துணையாம் இறையருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

கௌமாரநாடி சோதிட சாலை
2, இராயப்பேட்டை
ஹைரோடு,
சென்னை-14, 20-2-53.

பண்டிட் செ. தங்கவேல் நாடார்,
கௌமார நாடி சோதிடர்.

இலக்கினம் முதல் பன்னிரண்டு இடங்களுக்குரிய வேறு பெயர்கள்

இலக்கினம் : முதலாமிடம்—சரீர ஸ்தானம், கீர்த்தி.

இரண்டு : இரண்டாமிடம்—தனம், குடும்பம், நேத்திரம், வாக்கு.

மூன்று : மூன்றுமிடம்—சகோதர ஸ்தானம், தைரிய ஸ்தானம்.

நான்கு : நான்காமிடம்—வித்யா ஸ்தானம், சுக ஸ்தானம், மாத்ரு ஸ்தானம், கிருக ஸ்தானம்.

ஐந்து : ஐந்தாமிடம்—புத்திர ஸ்தானம், பூர்வ புண்ணிய ஸ்தானம்.

ஆறு : ஆறுமிடம்—கடன், வியாதி, முதலியன. சத்துரு ஸ்தானம், மறைவு ஸ்தானம்.

ஏழு : ஏழாமிடம்—களத்திர ஸ்தானம்.

எட்டு : எட்டாமிடம்—ஆயுள் ஸ்தானம்.

ஒன்பது : ஒன்பதாமிடம்—பாக்கிய ஸ்தானம், பிதிரு ஸ்தானம்.

பத்து : பத்தாமிடம்—ஜீவன ஸ்தானம், ராஜ்ய ஸ்தானம், கரும ஸ்தானம்.

பதினென்று : பதினென்றுமிடம்—லாப ஸ்தானம், மூத்த சகோதர ஸ்தானம்.

பன்னிரண்டு : பன்னிரண்டாமிடம்—சயன ஸ்தானம், விரய ஸ்தானம், யாத்திரா ஸ்தானம்.

நவக்கிரகங்களின் உச்ச, நீச, ஆட்சி ஸ்தானங்கள்

	சூரியன்	சந்திரன்	செவ்வாய்	புதன்	குரு	சுக்கிரன்	சனி	ராகு	கேது
உச்சம் ...	மேஷம்	விருஷபம்	மகரம்	கன்னி	கடகம்	மீனம்	துலாம்	விருஷபம்	விருச்சிகம்
நீச்சம் ...	துலாம்	விருச்சிகம்	கடகம்	மீனம்	மகரம்	கன்னி	மேஷம்	விருச்சிகம்	ரிஷபம்
ஆட்சி ...	சிம்மம்	கடகம்	மேஷம் விருச்சிகம்	மிதுனம் கன்னி	தனுசு மீனம்	விருஷபம் துலாம்	மகரம் கும்பம்	... ...	... ...
பார்வை ...	7-ஆம் இடம்	7-ஆம் இடம்	4, 7, 8-ஆம் இடங்கள்	7-ஆம் இடம்	5, 7, 9-ஆம் இடங்கள்	7-ஆம் இடம்	3, 7, 10-ஆம் இடங்கள்	7-ஆம் இடம்	7-ஆம் இடம்

நவக்கிரகங்களுக்கும் இந்நூலில் வந்துள்ள வேறு பெயர்கள்

சூரியன் : இரவி, பரிதி, பானு, தபனன், வெஞ்சுடர், உதயன், கதிர், பரியோன், பங்கயன், புரவியோன், வெய்யோன், செங்கதிர், பகலவன், பதங்கன், தினகரன்.

சந்திரன் : மதி, கலை, திங்கள், அலவன், உடுபதி, பிறை, ஆலோன், அம்புலி, பிருகு.

செவ்வாய் : குசன், சேய், பார்மகன், ஆரல், செந்தி, மங்களன், தரைமகன், பூமகன், நிலமகன், வக்கிரன், குருதி.

புதன் : மால், கணக்கன், புந்தி, புலவன், மா, கூரியன், பாகன், அருணன், அருணன்தூதுவன், தூதுவன், பண்டிதன்.

குரு : மறை, பொன், மந்திரி, அந்தணன், மன்னவன், வியாழன், அண்டர்கோன், சுரர்குரு, வள்ளல், கனகன், பொன்னவன், வேந்தன், வேதியன், சிகண்டி, பீதகன், மலரோன், நாயகன், சீலன்.

சுக்கிரன் : புகர், வெள்ளி, சுங்கன், மழைக்கோள், பார்க்கவன், ஒரு கண்ணுடையோன், சல்லியன், கங்கைகோள், கவி, பளிங்கன், நதிக்கோள், குருடன், அசுர மந்திரி, கவிமகன்.

சனி : காரியவன், கார், மந்தன், விதியன், விதி, கொண்டி, மூடவன், நீலன், சௌரியன்.

ராகு : கருங்கோள், கயிறு, பாம்பு, நஞ்சு, உரகன், சர்ப்பம், நீள்கயர், பணி, வருகயர், மந்தரக் கயிறு, மலைப்பாம்பு, அரவு, சர்ப்பம், சேடன், புயங்கன், நாகன், விடம்.

கேது : சிகி, செம்பாம்பு, மூனி, ஞானி, ஞானத்தோன், செங்கிறக்கோள், அதிதி, நீத்தோன், தவசி.

இந்நூலில் வந்துள்ள மேஷம் முதலிய பன்னிரண்டு ராசிகளுக்குரிய வேறு பெயர்கள்

மேஷம்	:	ஆடு, வருடை, கொச்சை.
விருஷபம்	:	குண்டை, நந்தி, ஏறு, புல்லம், மாடு, ஊர்தி, விடை, காளை, ஈசனூர் வாகனம்.
மிதுனம்	:	வீணை, மகளிர்.
கடகம்	:	வண்டி, நண்டு, அலவன், வளையல், நள்ளி.
சிம்மம்	:	அரி, ஆளி, மா, புலி.
கன்னி	:	மாதை, பெண், தெரிவை, அரிவை.
துலாம்	:	கோல், துலை, தூக்கம்.
விருச்சிகம்	:	தேள், தெருக்கால், விடம்.
தனுசு	:	மேரு, வில், சாபம்.
மகரம்	:	மான், சுரு, கலை.
கும்பம்	:	சாடி, குடம்.
மீனம்	:	சேல், கெண்டை.

நவக்கிரகங்களின் காரகாதிபத்தியங்கள்

சூரியன்	:	பிதிரு காரகன்.
சந்திரன்	:	மாதிரு காரகன்.
செவ்வாய்	:	பிராதிருகாரகன் (சகோதர காரகன்).
புதன்	:	வித்யா காரகன், மாதுலன் (அம்மான்).
குரு	:	புத்திர காரகன்.
சுக்கிரன்	:	களத்திர காரகன்.
சனி	:	ஆயுஷ் காரகன்.
ராகு	:	பிதாமக காரகன் (தகப்பனின் தந்தை).
கேது	:	மோக்ஷ காரகன், ஞான காரகன், பிதாமகி (தகப்பனின் தாய்).

விருஷப லக்ன ஜாதகங்களில் வந்துள்ள கிரக நீலைகளின் அட்டவணை

[விருஷபம் முதலாகவும், மேஷம் பனிரண்டாமிடமாகவும் கொண்டு முறையே எழுதப்பட்டுளது.]

ஜாதக எண்	சூரியன்	சந்திரன்	செவ்வாய்	புதன்	குரு	சுக்கிரன்	சனி	ராகு	கேது
1	8	2	7	7	11	9	11	8	2
2	2	5	3	3	10	2	4	1	7
3	3	2	5	3	3	2	1	5	11
4	7	4	2	7	12	7	12	7	1
5	4	8	8	3	3	3	4	9	3
6	12	9	12	12	9	11	9	6	12
7	6	4	8	6	7	7	3	3	9
8	12	6	8	12	6	10	9	11	5
9	3	1	2	2	1	2	7	2	8
10	1	7	3	12	6	12	7	8	2
11	1	7	3	12	6	12	7	8	2
12	4	2	6	4	11	4	2	11	5
13	2	11	11	3	10	4	11	9	3
14	3	7	3	2	4	3	4	8	2
15	8	4	7	8	1	10	6	11	5
16	6	12	6	6	3	5	6	10	4
17	3	12	12	3	3	3	6	10	4
18	1	9	1	2	6	3	2	4	10
19	9	11	3	8	6	7	7	8	2
20	7	8	2	7	4	8	7	9	3
21	10	4	9	9	10	8	2	6	12
22	5	11	7	6	8	5	1	1	7
23	4	1	5	4	11	4	11	8	2
24	7	1	7	8	5	7	7	9	3
25	3	7	4	3	11	3	12	8	2

ஜாதக எண்	சூரியன்	சந்திரன்	செவ்வாய்	புதன்	குரு	சுக்கிரன்	சனி	ராகு	கேது
26	8	6	4	7	8	9	1	1	7
27	11	12	2	11	4	12	7	9	3
28	3	2	3	3	3	3	8	1	7
29	4	2	3	3	3	4	8	1	7
30	10	2	12	9	9	10	10	10	4
31	7	1	7	8	5	7	7	9	3
32	11	12	11	10	11	10	9	5	11
33	3	11	10	3	8	4	10	10	4
34	12	7	10	12	10	2	11	9	3
35	6	7	6	7	11	7	11	8	2
36	5	11	12	5	10	4	9	5	11
37	12	9	12	12	4	12	1	5	11
38	4	9	7	5	9	5	4	1	7
39	11	6	7	11	12	12	10	4	10
40	12	8	1	12	9	10	10	9	3
41	5	3	6	5	6	5	7	8	2
42	12	7	1	12	1	1	10	3	9
43	2	5	5	1	11	4	9	5	11
44	3	4	7	4	1	5	3	10	4
45	9	9	5	9	10	9	9	5	11
46	12	7	10	12	10	2	11	9	3
47	9	9	5	9	10	9	9	5	11
48	7	9	6	8	9	7	10	9	3
49	6	9	8	5	10	4	4	5	11
50	11	6	3	12	3	1	1	6	12
51	2	9	2	3	5	3	9	12	6
52	2	1	6	2	7	2	3	3	9
53	3	5	4	4	7	1	6	6	12
54	8	10	8	8	4	7	1	5	11
55	3	4	4	3	1	4	5	12	6
56	4	8	1	4	4	4	6	10	4
57	9	10	3	8	6	7	7	8	2

ஜாதக எண்	சூரியன்	சந்திரன்	செவ்வாய்	புதன்	குரு	சுக்கிரன்	சனி	ராகு	கேது
58	1	1	2	12	12	1	5	12	6
59	10	11	10	9	12	10	8	3	9
60	5	2	1	5	10	5	11	8	2
61	12	12	2	12	9	11	10	9	3
62	8	11	8	8	7	9	8	7	1
63	4	9	6	3	5	4	2	4	10
64	5	12	2	5	4	6	6	10	4
65	6	8	6	7	1	8	5	11	5
66	10	11	5	9	1	11	8	2	8
67	7	12	6	7	7	6	10	10	4
68	1	4	12	1	9	11	9	6	12
69	3	8	7	3	9	4	4	2	8
70	3	11	5	3	3	2	1	5	11
71	3	11	5	2	3	2	1	5	11
72	1	12	8	2	6	12	9	11	5
73	10	9	12	10	10	9	4	1	7
74	2	5	4	2	4	1	7	9	3
75	3	7	7	3	9	4	4	2	8
76	5	11	5	5	11	5	11	8	2
77	1	9	7	1	12	1	10	4	10
78	11	1	1	10	2	12	6	10	4
79	7	5	8	7	6	7	3	4	10
80	12	7	3	12	3	1	1	6	12
81	12	2	1	11	1	1	10	3	9
82	8	5	1	9	4	9	7	9	3
83	4	8	2	5	3	4	1	6	12
84	4	5	7	5	7	5	3	3	9
85	5	1	6	5	5	4	2	4	10
86	10	7	9	9	3	9	6	10	4
87	8	4	11	8	10	7	11	8	2
88	3	3	1	3	5	4	7	8	2
89	4	6	7	5	7	5	3	3	9

ஜாதக எண்	சூரியன்	சந்திரன்	செவ்வாய்	புதன்	குரு	சுக்கிரன்	சனி	ராகு	கேது
90	2	9	6	2	1	12	10	4	10
91	2	11	12	1	2	1	1	6	12
92	1	1	9	1	8	1	10	10	4
93	7	2	10	7	4	6	4	9	3
94	3	5	1	4	3	4	6	10	4
95	2	10	1	2	11	2	7	4	10
96	1	2	8	2	2	1	11	3	9
97	2	8	10	1	8	2	10	10	4
98	10	1	8	10	10	11	11	9	3
99	11	10	1	12	10	10	4	1	7
100	3	1	3	3	2	5	10	3	9
101	6	1	7	6	4	5	2	5	11
102	2	7	4	2	4	1	7	9	3
103	12	3	8	11	6	10	9	11	5
104	10	5	12	10	1	8	3	10	4
105	1	1	3	2	11	1	11	8	2
106	1	7	10	1	4	11	4	8	2
107	3	9	8	3	6	3	9	11	5
108	10	11	10	9	12	10	7	3	9
109	11	9	10	11	3	11	6	10	4
110	7	8	2	6	12	6	12	7	1
111	11	8	6	11	4	12	9	1	7
112	9	2	12	9	6	10	5	1	7
113	1	3	3	1	6	1	7	8	2
114	11	6	1	11	11	11	5	12	6
115	1	1	12	1	7	2	8	7	1
116	4	5	6	4	6	4	7	8	2
117	6	6	6	7	1	8	5	11	5
118	10	10	9	9	5	10	7	9	3
119	4	2	2	4	5	6	7	8	2
120	4	1	6	4	8	5	8	6	12
121	6	12	4	7	7	5	8	7	1

பிழையுந் திருத்தமும்

2–ஆம் பக்கம் 30–ஆம் வரியில் "தந்தைக்கு" என்பதனை "பாட்டனுருக்கு" எனவும், "ஜாதகன்" என்பதற்குமேல் "தந்தை" எனச் சேர்த்தும் படிக்க.

4–ஆம் பக்கம் 2–ஆம் வரியில் "ஜாதகனுடன்" என்பதனை "ஜாதகன் தந்தையினுடன்" என்று மாற்றுக.

28–ஆம் பக்கம் 20–ஆம் வரியில் "சொல்லுவோம்" என் பதற்குப் பின்பு "ஜாதகனுக்கு வியாதியுண்டு; தந்தைக்கு மிகுதி யாகச் செலவேற்படும்" என்று வாசிக்க.

40–ஆம் பக்கம் 30–ஆம் வரியில் "நிற்பதனால்" என்பதற்கு மேல் "ஜாதகனுக்கு மரணம் நேராது" என்று படித்துக் கொள்ளவும். 32–ஆம் வரியில் "பார்வையாக" என்றிருப்பதை "பாவத்தை" எனத் திருத்துக.

43–ஆம் பக்கத்தில் 11–ஆம் வரியில் "நான்கு வகையினும்" என்பதற்கு மாற்றுக, "கால் நடைகள்" என்று சேர்க்கவும்.

65–ஆம் பக்கம் 21–ஆம் வரியில் "தவிரவும்" என்பதற்கு மேல் "எட்டாமிடத்துக்கு உரியவனுன குரு, சந்திரனுடைய வீடாகிய கடகத்தில் தங்கி, ஆறும் வீட்டுக்குரிய சுக்கிரனும் அவனோடு சேர்ந்திருப்பதால்" என்று படித்துக் கொள்ளவும்.

70–ஆம் பக்கம் 7–ஆம் வரியில் "தனுர் மாதம்" என்பதனை "[1]தனுர் மாதம் எனவும், "[1]மன்னுசேய் [2]திசை" என்றிருப் பதை "மன்னு[2]சேய் தசை" என்றும் மாற்றுக.

81–ஆம் பக்கத்தில் 15–ஆம் வரியில் "வக்கிரம்" என்ப தனை "வக்கிரன்" எனவும், 19–ஆம் வரியில் "வக்கிரமாக" என்றிருப்பதை "செவ்வாயும்" எனவுந் திருத்துக.

145–ஆம் பக்கம் 4–ஆம் வரியில் "இடார்" என்பதற்குப் பதிலாக "இடர்" என்று படிக்க.

316–ஆம் பக்கம் கீழ்க்குறிப்பில் "2. கன்னியா ராசி" என்பது "2. சிம்மவிராசி" என்றிருத்தல் வேண்டும்.

329–ஆம் பக்கம் 4–ஆம் வரியில் "கும்பம்" என்பதனை "மானில்" எனவும், இராசிச் சக்கரத்தில் "மகரத்தில் ராகுவை யும்" அமைத்துக் கொள்க.

388–ஆம் பக்கம் 6–ஆம் வரியில் "செய்வானுகில்" என்பது "செய்யானுகில்" என்றிருத்தல் வேண்டும்.

402-ஆம் பக்கம் 5-ஆம் வரியில் "லாயம்" என்பதனை "லாபம்" எனப் படிக்க.

437-ஆம் பக்கம் 27-ஆம் வரியில் "பங்குனி" என்பதற்கு மாற்றாக "ஐப்பசி" எனச் சேர்க்கவும்.

485-ஆம் பக்கம் 14-ஆம் வரியில் "கணவனை" என்பதற்கு மாற்றாக "அவனை" என்று திருத்தவும்.

486-ஆம் பக்கம் இறுதி வரியில் "இவனை" என்றிருப்பதை "இவளை" என்று படிக்கவும்.

487-ஆம் பக்கம் 27-ஆம் வரியில் "காதலிக் கன்பாய்" என்பதனை "காதலிக் கன்பான்" எனவும், 31-ஆம் வரியில் "மணமான" என்பதற்கு மாற்றாக "ஐம்பத்து" என்றும் திருத்துக.

490-ஆம் பக்கம் 12-ஆம் வரியில் "தோன்றுவர்" என்பதற்குமேல் "ஜாதகியினது" என்று சேர்த்துக் கொள்ளவும். 27-ஆம் வரியில் "சிறப்புற்றிருக்கும்" என்பதற்குப் பின் "ஜாதகியினது" எனச் சேர்க்க.

491-ஆம் பக்கம் 22-ஆம் வரியில் "தாய் தந்தையர்களுக்கு" என்றிருப்பதனை "பாட்டி (தாயைப்பெற்றவள்) க்கு" என வாசிக்க.

524-ஆம் பக்கம் 20-ஆவது வரியில் "முற்பிறப்பை" என்பதனை "மறுபிறப்பை" என்று வாசிக்க.

570-ஆம் பக்கம் இராசிச் சக்கரம் இலக்கினத்தில் இருக்கும் "சந்திரன் சனி" என்பனவற்றை மகரத்தில் மாற்றவும்.

592-ஆம் பக்கத்தில் 6-ஆம் வரியில் "சனி" என்பதற்குப் பதில் "செவ்வாய்" எனப் படிக்கவும்.

750-ஆம் பக்கத்தில் 11-ஆம் வரியில் "கேது கும்பத்திலும்" என்பதற்குப் பின்பு "குரு கன்னியிலும்" என்று சேர்க்கவும். இராசிச் சக்கரத்திலும் "குரு" வைக் கன்னியில் அமைக்கவும்.

[ஆதாரம் 63-ஆம் ஜாதகம் 21, 24-ஆம் பாடல்களில் காண்க].

1255-ஆம் பக்கம் 17-ஆம் வரியில் "துன்னவன்" என்பதனை "அன்னவன்" என்று திருத்துக.

ஸ்ரீ:

ஸப்தரிஷி நாடி.

விருஷப லக்னம்

ஜாதகம்—1.

1. மறைசனி சேல தாக மால்குசன் தேள தாக
நிறைமதி கேது [1]வீணை நீள்புகர் மான தாக
இரவியும் ராகு மேரு இவன்சென்மம் [2]குண்டை யாக
திறமுடன் கிரகமிவ் வாறு செறிந்ததால் பலன்சொல் வீரே.

1. மகரிஷிகளே! குருவும் சனியும் மீனத்திலும், புதனும் செவ்வாயும் விருச்சிகத்திலும், சந்திரன் கேது மிதுனத்திலும், சுக்கிரன் மகரத்திலும், சூரியன் இராகு தனுசிலும் இருக்கும் நிலையில் விருஷப லக்னத்தில் ஜனனமான ஜாதகனுக்குப் பலன் சொல்லுங்கள், என்று அம்பிகை கேட்கத் தொடங்கினள்.

குரு சனி		லக்கினம்	சந்திரன் கேது
சுக்கிரன்	இராசி சக்கரம்		
சூரியன் ராகு	புதன் செவ்வாய்		

2. அத்திரி முனிவர் சொல்வார் ஆணது சென்ன மாகும்
வித்தக னுதித்த யில்லம் விளம்புவோம் கீழ்மேல் வீதி
உத்திரம் வாடை யாகும் உரைக்கின்றே மெதிரில் சந்து
பத்திய மேற்கில் ஈசன் பராசக்தி கணேசன் கோட்டம்.

2. அத்திரி முனிவர் பலன்சொல்லத் தொடங்கினர்; இது ஆண் மகன் ஜாதகமாகும். இவன் பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்வோம்; அது

---

1. மிதுனராசி.
2. ரிஷபம்.

கிழக்கு மேற்காக உள்ள தெருவில் வடக்கு வாடையில் உள்ளதாகும். வீட்டுக்கு எதிரில் சந்து ஒன்று உண்டு. வீட்டுக்கு மேற்கில் வரிசையாகச் சிவபெருமான், அம்பிகை, விநாயகர் முதலான தெய்வங்களின் கோயில்கள் உள்ளன.

3. அருகினில் சோலை சூழி அழகிலாம் முசல்மாக் கோட்டம்
குறைதலை மாரி தென்மேல் கூறுவோ மிதுவல் லாமல்
பெருவயி றப்பன் கீழ்பால் பேசுவோம் தட்சி ணத்தில்
குறைவிலா வயல்கள் ஓடை கூறுவோம் சாதி யுண்டு.

3. மேலும், அவ்வீட்டுக்கு அருகினில் சோலை, தர்க்கையாலயம் முதலியனவும் அழகு பொருந்திய மசூதியொன்றும் உள்ளன. தென்மேற்குத் திசையில் உடல்குறையாகத் தலைமட்டும் உள்ள மாரியம்மன் கோயிலுண்டு. இவைதவிர, பெருவயிற்றோடு கூடிய விநாயகர் கோயிலும் கீழ்ப்பாகத்திலுண்டு. தென்பாகத்தில் குறைவில்லாமல் நெல் விளையக்கூடிய வயல்களும், நீரோடைகளும் உண்டு. பல்வேறு சாதி மக்களும் வாழ்ந்திருப்பர்.

4. இதுவலால் பலதே வாசம் இலகிய சமவூர் தன்னில்
பதியது கெட்டி யாகும் பகருமிவ் வடையா ளத்துள்
நதிகுல முதிப்பா னுகும் நற்றுணை தந்தை மாதா
சதியிலா மனைவி புத்ரர் சாற்றுவோ முன்பின் சென்மம்.

4. இவை மாத்திரமன்றி, இன்னும் பல தெய்வங்களின் கோயில்களும் அங்கு உள்ளன. இங்ஙனம் சிறந்து விளங்கிய சிற்றாரில், சொல்லப்பட்ட இவ்வடையாளங்களுடன் கூடிய உறுதியான வீட்டில், வேளாள வமிசத்தில் இந்த ஆண்மகன் பிறப்பான். இவனுடைய உடன்பிறந்தார், தாய்தந்தையர், குற்றமில்லாத மனைவி, புதல்வர் முதலானவர்களைப்பற்றி இனிமேல் கூறுவோம். இவன் முற்பிறப்பு, பின்பிறப்பு ஆகியவைபற்றியும் சொல்லுவோம்.

5. தாதைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு முதல்மா தின்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
கோதிலா மவன்கு ணத்தைக் கூறுவோ மானி றத்தான்
சூதிலான் கபடு மில்லான் சுத்தநன் மனத்த னுமே.

5. இவனுடைய தந்தைக்கு மனைவியர் இருவர். இந்த ஜாதகன் முதல் மனைவி பெற்றெடுத்தவனுவன். இவன் தந்தையின் தன்மையைப் பற்றிச் சிறிது கூறுவோம்; கருமையான நிறமுடையவன்; சூது, வஞ்சனைகள் இல்லாதவன்; தூய்மையான மனமுடையவன்.

6. முகமது வசிய முள்ளான் மூலனே யுடைய னுவன்
பகையிலான் பொய்கள் சொல்லான் பாரினில் யூகை சாலி
வகையான வார்த்தை சொல்வான் மம்மவான் சுசீல னுவன்
இகபர னன்பு கூர்வன் சுகைவான் பெருமை யுள்ளான்.

6. முகத்தில் பிறரை வசீகரிக்கும் கலை பொருந்தியவன்; இவனுக்கு மூலவியாதி யுண்டு; எவரிடமும் பகையில்லாதவன்; பொய்கள் சொல்ல மாட்டான்; எந்தச் செய்தியைப்பற்றியும் ஊகம் செய்து உணர்ந்து கொள்ளுந் திறமையுடையவன்; பேசும்பொழுது தகுந்த முறையில் பேசுவான்; எந்தச் செய்தியையும் விரைவில் வெளியிடமாட்டான்; சிறந்த ஒழுக்கமுள்ளவன்; இகத்துக்கும் பரத்துக்கும் பொருத்தமானவன். தருமசிந்தை யுள்ளவன்; பலரும் பாராட்டும் பெருமையுடையவன்.

7. அடக்கமு முடைய னுவன் ஆபத்து வேளை காப்பன்
நடக்கையு நல்ல தாகும் நாயகிப் பிரிய னுவன்
இடக்குக ளெண்ணு சித்தன் இவன்கரம் பத்ம ரேகை
விடங்களும் வாச மாகும் வித்தகன் குணத்துக் கேதான்.

7. அடக்க முடையவன்; ஒருவருக்குத் துன்பம் நேரிட்டபொழுது முடிந்த உதவி செய்து காப்பான். நன்னடத்தை யுள்ளவன்: மனைவியினிடம் அன்புடையவன்; நீங்குகள் எண்ணுத மனமுடையவன்: இவன் கையில் பத்மரேகை யுண்டு. இவன் குணத்தைக் கண்டு கொடிய விஷ முடைய பாம்பு, தேள் முதலியவையும் இவனுக்கு வசப்படும்.

8. பெருதன முடைய னுவன் பலமான குடும்ப முள்ளான்
உறன்முறை மெச்ச வாழ்வன் உலகுக்கு நல்லோ னுவன்
தரைமிகத் தேட வல்லன் தைரியன் கிருஷி யுள்ளான்
துருசான வார்த்தை யில்லான் சொல்வது மேம்பா டாமே.

8. மிகுந்த செல்வமுடையவன்; குடும்பமும் பெரியது; உறவினர்கள் பாராட்டும் நிலையில் வாழ்ந்திருப்பான்; உலகத்திலுள்ளோரிடம் நற் பெயர் எடுப்பான்; நிலங்களை அதிகமாகச் சேர்ப்பதில் வல்லவன். மனவுறுதி யுடையவன். பயிர்த்தொழில் செய்பவன். குற்றமுள்ள சொற்களைச் சொல்லாதவன்; இவன் சொற்கள் மதிப்புடையனவாம்.

9. இவனுடைத் துணைவர் தன்னை இசைக்கின்றேம் ஆண்பா [லொன்று
நவனியில் கன்னி காணேம் நாட்டுவோம் மூத்தோ னுக
பவமுள இரண்டாம் தாய்க்குப் பாலர்கள் உண்டோ என்ன
அவனியில் ஆண்பால் ரெண்டு அறைகின்றேம் தீர்க்க மாகும்.

9. இந்த ஜாதகனுடன் பிறந்தவர்களைப்பற்றி இனிச் சொல்லுகின்றோம். இவனுடன் பிறந்த ஆண்மகன் ஒருவன்; பெண் இல்லை. இவன் மூத்த புதல்வன் என்று சொல்லுகின்றோம். இவனுடைய இரண்டாந் தாய்க்கு மக்கள் உளரோ என்று கேட்டால் கூறுகின்றோம்; ஆண்பால் இருவர். இருவரும் குறையாத ஆயுளுடன் வாழ்வார்கள் என்று சொல்லுகின்றோம்.

10. மற்றது சேத மென்றோம் அவர்கள்தம் சேதி யெல்லாம்
சித்தமா யிரண்டு சொல்வோம் சேயன்தன் குணத்தைக் [கேளாய்
வித்தகன் மானி றத்தான் மேதினி கிருஷி செய்வன்
தத்திய நெய்பா லிட்டன் சமதேகன் கல்வி யுள்ளான்.

10. இன்னும் பல குழந்தைகள் இரண்டாந் தாய்க்குப் பிறந்து சேத மடையும் என்று சொன்னோம். அவர்களைப் பற்றிய செய்திகளையெல்லாம் இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். இந்த ஜாதகனின் குணத்தைக் கேட்பீராக; மானிற (கருமையானநிற)முடையவன்; இவ்வுலகத்தில் பயிர்த் தொழிலைச் செய்வான். தயிர், நெய், பால் இவைகளில் விருப்பமுடையவன். கல்வியறிவுள்ளவன்.

11. சொல்லது தவரு ஞரும் சுகமுளான் அன்ன மீவன்
இல்லையென் றுரைக்க மாட்டான் ஈகைவான் பித்த தேகன்
நல்லவ னாகி வாழ்வன் நாதனூர் பத்தி யுள்ளான்
அல்லலு மில்லா னாரும் அம்பிகை யாளே கேளாய்.

11. சொன்ன சொல் தவறுதவன்; நலமுடையவன்; பசித்துவந்தவர்க்கு உணவுகொடுப்பான். எவர்க்கும் இல்லை யென்று கூறுது கொடுக்கும் வள்ளல்தன்மையுடையவன். பித்தம் மேலிட்ட தேகமுடையவன்; எல்லோருக்கும் நல்லவனாக இருப்பான். இறைவனிடம் பக்தி கொண்டவன். துன்பமில்லாதவன். பார்வதிதேவியே! மேலுங் கேட்பாயாக.

12. கோவுகள் விருத்தி யுள்ளான் குத்திர வசனம் பேசான்
சேவலங் கொடியோன் பத்தி செய்குவான் ஆட்கள் [சேர்ப்பன்
காளைகள் அதிக மில்லான் கனத்ததோர் குடும்ப மாவன்
தாவிய பேரைக் காப்பன் தந்தைதாய் இட்ட முள்ளான்.

12. பசுக்கள் வளர்ச்சி யுடையவன்: குற்றமுள்ள சொற்களைப் பேசமாட்டான். சேவற்கொடியையுடைய முருகப்பிரானிடம் பக்தியும் அன்பும் செய்பவன். பணியாட்கள் பலரைச் சேர்ப்பவன்; எருதுகள் அதிகமில்லாதவன்; பெரிய குடும்ப முடையவன். தன்னை வந்தடைந்தவர்களைத்

சர்ப்பவன். தாட்சிணிய குணமுடையவன். தந்தை தாய் ஆகியோரிடம் அன்புள்ளவன்.

13. உண்டிசெய் உணவின் மீது உறப்பிலான் புளிப்பி லிச்சை
குண்டுணி கலகம் செய்யான் கூறுவோம் துணைவர் தம்மை
கண்டித மிருநான் காகும் காளையு மெட்டாம் சென்மம்
விண்டதோர் மூத்தோ ரெல்லாம் விளங்காது மாளுந் தானே.

13. உணவில், உறைப்புப் பொருளின்மீது விருப்ப மில்லாதவன். புளிப்பில் ஆசை. கோள், கலகம் செய்யமாட்டான். இவன் உடன்பிறந்த வர்களைப்பற்றிச் சொல்லுவோம். நிச்சயமாக எட்டுப்பேர். இந்த ஜாதகன் எட்டாம் பிறப்பு. சொல்லப்பட்ட இவனுக்கு மூத்தோரெல்லாம் நிலையாமல் அழிவர்.

14. கன்னிகை யொன்று மாகும் காளையு மவ்வா றாகும்
தன்னிலே யிரண்டு தீர்க்கம் சாற்றுவோம் மற்ற தெல்லாம்
பின்னமா மென்று சொன்னேம் பேசுவோ மன்றல் காலம்
அன்னையே யீரெட் டாண்டில் அவனுடைய யுள்ளூர்
[தெற்கில்,

14. பெண் ஒருத்தி யுண்டு. புதல்வனும் அவ்வாறே ஒருவன் உளன். இவ்விருவரும் நிலைப்பர். மற்றவர்கள் அழிவர் என்று கூறினேம். இவன் மணத்திற்கு உரிய காலத்தைப் பற்றிப் பேசுவோம். எல்லாவுயிர்க்குந் தாயாகிய பார்வதியே! இந்த ஜாதகனின் பதினாறும் வயதில், உள்ளூரி லேயே, தெற்குப் பக்கத்திலிருந்து,

15. மாதுவும் வருவா ளாகும் அவள்குணம் மானி றத்தாள்
சூதுகள் இல்லா நெஞ்சம் சுந்தரி யோக சாலி
பாதக மில்லா ளாகும் பாரினில் கீர்த்தி கொள்வள்
நீதியாய் நடக்கை யுள்ளாள் நிமலியே மேலும் கேளே.

15. மனைவியாகப்போகும் பெண் வருவாள். அவள் தன்மையைப் பற்றிச் சிறிது சொல்லுவோம். மானிற முடையவள். வஞ்சனையில்லாத மனத்தோடு கூடியவள். சிறந்த யோக முடையவள். தீங்கு இல்லாதவள். உலகத்தில் நல்ல புகழை ஏற்பாள். நியாயமான நடத்தையுள்ளவள். குற்றமில்லாத தாயே! மேலுங் கேட்பாயாக.

16. நடையது துரிசு முள்ளாள் நாதனுர் பத்தி கொள்வள்
தடைசொல்லாள் வரனுக் கேதான் சற்றுமுன் கோபி யாவள்
அடைவுடன் பித்த தேகி அழகுள்ளாள் அன்ன மீவள்
கடினமாய் வார்த்தை சொல்வள் காரக தேக மூள்ளாள்.

16. சுறுசுறுப்பான நடையுள்ளவள். இறைவனிடம் பக்தி பூணுவாள். தன் கணவன் வார்த்தைக்கு எதிர்த்துச் சொல்லமாட்டாள், சிறிது முன்கோப முடையவள். பித்த தேகமுடையவள். அழகுடையவள். பசித்து வந்தோருக்கு உணவு கொடுப்பாள். சொல்லும் சொற்கள் கடுமையுள்ளனபோலத் தோன்றும். காரகவியாதி சம்பந்தமும் தேகத்தில் சிறிது உண்டு.

17. புத்திரர் விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணும்
அத்திரி சொல்லும் போது அம்மனும் கேட்க லுற்றாள்
வித்தகன் தனக்குப் புத்ரர் விளங்காது என்று சொன்னீர்
குற்றத்தைச் சொல்லு மென்ன கூறுவார் முனிவர் தாமே.

17. இந்த ஜாதகனுக்குப் புத்திர அபிவிருத்தியைப்பற்றிக் கூறுவதற்குக் கிரகபலமில்லை, என்று அத்திரி முனிவர் சொல்லும்பொழுது, பார்வதி தேவி மறித்துக் கேட்கத் தொடங்கினாள்; இந்த ஜாதகனுக்குப் புத்திரர் அபிவிருத்தி இல்லை யென்று சொன்னீர்கள்; என்ன குற்றத்தினால் புத்திரர் வளர்ச்சி இல்லை? கூறுங்கள்; என்று கேட்க, அத்திரி முனிவர் காரணங் கூறுவார்:

18. அஞ்சினுக் குடையோ னோடு ஆரலும் கூடி ஏழில்
தஞ்சமாய்ச் சனியு மைந்தைச் சதிருடன் பார்த்த தாலே
துஞ்சிடு மதலை என்றோம் சுரர்குரு வைந்தைப் பார்க்க
வஞ்சியே சுதர்கள் உண்டாம் வருகினும் தீதே யாகும்.

18. ஐந்துக்குடையவன் புதனுடன் செவ்வாயொடுகூடி ஏழாமிடத்தில் இருக்க, சனி ஐந்தாம் இடத்தைப் பார்ப்பதால், இவனுக்குக் குழந்தை பிறந்து நிலைக்காது என்றோம். ஆனால் குருவினால் ஐந்தாம் இடம் பார்க்கப்படும் காரணத்தால் எப்படியும் சந்ததி யுண்டு. ஆனாலும், சுபம் ஏற்படுவதைவிட, தோஷம் அதிகமாக ஏற்படும்.

19. என்னகா ரணத்தி னாலே இலகாது மதலை என்றீர்
அன்னையே முன்சென் மத்தில் அறைந்தது அந்தத் தோஷம்
என்னவூழ் சொல்லு மென்ன இயம்புவார் முனிவர் தாமும்
இன்னவன் முன் பிறப்பு இசைக்கின்றோம் கேளு மம்மா.

19. அம்பிகை மேலும் கேட்கலுற்றாள்: முனிவரே! என்ன காரணத்தினாலே பிறக்கும் குழந்தை நிலைக்காது என்று சொன்னீர்கள்? தாயே! முற்பிறப்பில் ஏற்பட்டது ஒரு தோஷம். முற்பிறப்பில் என்ன தோஷம்? அதனைச் சொல்லுமென்று கேட்க, முனிவர் சொல்லுவார். இந்த ஜாதகனுடைய முற்பிறப்பைப்பற்றிச் சொல்லுகிறோம், கேளும் தாயே!

20. விரிஞ்சிநாட் டதனி லேதான் வித்தக னிக்கு லத்தில்
திறமையாய்ச் செட்டுச் செய்து சேயிழை மதலை யுண்டாய்
உறன்முறை மெச்ச வாழ்ந்து உலகினில் கீர்த்தி பெற்று
வருகிற நாளி லேதான் வந்தவூழ் தன்னைச் சொல்வேன்.

20. இந்த ஜாதகன் முற்பிறப்பில், விரிஞ்சி நாட்டிலுள்ள ஒரு நகரில் பிறந்தான். மிகுந்த திறமையுடன் வியாபாரம் செய்துகொண்டிருந்தான். பெண், ஆண் குழந்தைகள் பிறந்தன. உறவினர் பாராட்டும் வகையில் வாழ்ந்து, உலகத்தில் சிறந்த புகழைப்பெற்று, விளங்கும் காலத்தில், ஏற்பட்ட தோஷத்தைப் பற்றிச் சொல்லுவேன்.

21. அந்நகர் நதியின் பக்கல் அணுகிய அரசின் கீழே
தந்தியும் நாக நிற்கும் தானவர் வாசம் செய்வார்
மந்திரம் ஓதும் வேத மறையவர் பூசை செய்வார்
இந்தவா ரிடத்தி லேதான் இரவினில் ஏது செய்தான்,

21. அவன் இருந்த நகரின் சமீபத்திலுள்ள நதிக்கரையில் இருக்கும் அரசமரத்தின்கீழே விநாயகர் எழுந்தருளியிருக்கின்றார். நாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுளது. இன்னும் பல ராக்ஷஸ தேவதைகள் அங்கு வாசம் செய்வர். இந்த இடத்துக்கு வந்து வேதங்களையுணர்ந்த அந்தணர்கள் பூசை முதலியன செய்வர். இப்படிப்பட்ட துய்மையான இடத்தில் இரவு வேளையில் இவன் என்ன செய்தானென்றால்,

22. விதவையம் மரத்தின் கீழே வித்தகன் போகந் துய்த்தான்
அதனலே கருவுந் தங்கி அனேகமாய் அவிழ்தம் ஈய
சதியினுல் கருவு நீங்கிச் சத்தியு மாண்டா லென்றோரும்
மதிநுத லாள்தன் தோஷம் வந்தன விவனுக் கேதான்.

22. கைம்பெண் ஒருத்தியுடன் சுகமனுபவித்தான். அப்பெண்ணுக்குக் கருத்தங்கிற்று. பலவித மருந்துகள் கொடுத்தான். அதனால் கரு வழிந்து, அப்பெண்ணும் இறந்தாள். அப்பெண்ணின் தோஷம்தான் இவனை வந்தடைந்தது.

23. ஆகையால் அச்சென் மத்தில் அந்திய காலம் தன்னில்
யோகமும் குறைச்ச லாகி உதித்திடு மதலை நீங்கிப்
பாகமாய்த் தட்சி ணத்தில் பாலகன் சேதுக் கேகி
வாகையாய்த் தீர்த்தம் தோய்ந்து மனமது களிப்புக்
[கொண்டு;

23. ஆதலினால், அப்பிறப்பில், இவனுக்குக் கடைசி காலத்தில் நலம் குறைந்து, பிறந்த பிள்ளையும் இறந்தது. பின்பு, இவன் தெற்கிலுள்ள சேதுவுக்குச் சென்று கடல்நீராடி, மனத்தில் மகிழ்ச்சிகொண்டு;

24. இராமலிங் கத்தைப் போற்றி நலமுள மதுரை புக்கித்
தீமையை விலக்கும் வைகைத் தீர்த்தத்தில் மூழ்கி யேதான்
சோமனே யணிந்த சொக்க நாதர்தம் பாதம் போற்றித்
தாமத மாக வேதான் தான்பல தலங்கள் சென்று,

24. அங்குக் கோயில்கொண்டுள்ள இராமலிங்கப்பெருமானைத் துதித்தான். அங்கிருந்து மதுரைக்குச் சென்று, பாவத்தைப் போக்கும் வைகையாற்றில் மூழ்கியெழுந்தான். சோமசுந்தரக் கடவுளின் பாதங்களைப் போற்றி, மெள்ளமெள்ளப் பல தலங்களுக்குச் சென்று தரிசனம்செய்து கொண்டு,

25. மனைவியுந் தானு மாக வடதிசை செல்லும் போது
அனையவே சேதி ஒன்று அறைகின்றேம் விவர மாகக்
கனமுள மார்க்கந் தன்னில் கள்ளரால் பயந்து மேதான்
வனிதையர் பிரம்ம மாது வரவினை யிவர்கள் கண்டு,

25. தானுந் தன் மனைவியுமாக வடக்குத் திசையை நோக்கிச் செல்லும்பொழுது, நேர்ந்த செயல் ஒன்றை விவரமாகச் சொல்லுகின்றேம். வழியில் திருடர்களால் பயமுறுத்தப்பட்டுவந்த பிராமணப் பெண்கள் இருவரை இவர்கள் கண்டு,

26. ஆதரித் தார்கள் அந்த அதிதிகள் இருவ ரைத்தாம்
வேதனை யில்லா ராகி வஸ்திர மவர்க்கு யீந்து
நீதியா யுபச ரித்தார் நிமலியும் சொல்லு கின்றாள்
தீதிலா மறுசென் மத்தில் செல்வங்கள் மிகவே யுண்டாய்,

26. மனத்தில் சலிப்பில்லாமல், உணவு உடை முதலியன அவர்களுக்கு வழங்கி உபசரித்தனர். இவர்களது உபசாரத்தினால் மனங்களித்த ஒரு பெண் பின்வருமாறு கூறுகிறாள். மறுபிறப்பில் உங்களுக்குப் பலவித செல்வங்களும் நிரம்பவுண்டாகி,

27. வறுமைக ளில்லா ஞகி வளமையாய்க் குடும்பம் பெற்றுத்
திருமகள் விலாசம் பூண்டு செகத்தினில் வாழ்வா யென்று
இருவரும் சொல்லி யேதான் ஏகினர் சேதுக் கேதான்
உரமுடன் உள்ளூர் சென்று உத்தமன் சிலநாள் வாழ்ந்து,

27. தரித்திரமில்லாமல், நல்ல குடும்பத்தைப்பெற்று, இலட்சுமீகடாட்சம் எற்பட்டு இவ்வுலகத்தில் வாழ்வீராக, என்று கூறிவிட்டு இருவரும் சேதுவுக்குச் செல்லப் புறப்பட்டனர். பிறகு, இவனும் தன் மனைவியுடன் உள்ளூருக்குச் சென்று சிலகாலம் வாழ்ந்திருந்து,

28. அனுயாச மரண மாகி அரிமகன் வரையப் பட்டுக்
கனமுட னிக்கு லத்தில் காவலன் பிறந்தா னென்றேரும்
அனையவே முன்சென் மத்தில் அதிதியை ஆத ரித்து
இனையான வரத்தி னலே யின்பமாய் வாழ்வா னுமே.

28. துன்பமில்லாத மரணத்தையடைந்து, பிரமதேவனுல் படைக்கப் பட்டு, திரும்பவும் இக்குலத்தில் பிறந்தான், என்று கூறுகிறேரும். முற் பிறப்பில் இவன் அதிதிகளே ஆதரித்து இன்பமுடன் இருந்தான்.

29. சேதுவின் தீர்த்தத் தாலே சேயனும் கங்கை வமிச
மீதினில் உதித்தா னென்றேரும் விளம்புமுன் கருவு தோடம்
தீதாகும் புத்தி ரர்க்குச் செப்புவோம் கிரிகை யொன்று
போதக வானைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

29. தவிரவும், இச்சென்மத்தில், முற்பிறப்பில் சேதுவில் சென்று நீராடிய புண்ணியத்தினுலே, இவன் வேளாளர் வமிசத்தில் பிறந்தான் என்று கூறினேம். ஆனுல், முற்பிறப்பில் கருவினையழித்த தோஷம் இவனுக்குப் பிறக்கும் புத்திரர்க்குத் தீதாகும். அதற்கு ஒரு பரிகாரம் கூறுவோம். யானேமுகக் கடவுளாகிய விநாயகரைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக!

30. பாலகன் மனைவி யோடு பட்சிதன் மலைக்கு ஏகிச்
சீலமா யோர்வா ரம்தான் சிறப்புடன் கிரியைச் சுற்றி
ஆலத்தை உண்டோன் பாதம் அர்ச்சித்து ரசிதம் தன்னுல்
வேலனைப் போலே செய்து விடம்புட்பம் கந்தத் தோடு,

30. இந்த ஜாதகன் தன் மனைவியுடன் திருக்கழுக்குன்றம் சென்று, சிறந்த ஒழுக்கத்துடன், நன்முறையில் ஒருவாரம் அந்த மலையைப் பிரதட் சிணம் செய்து, விஷத்தையுண்டவனுகிய சிவபெருமானின பாதத்தில் அருச்சனே செய்து வணங்கி, வெள்ளியினுல் சுப்பிரமணியரைப் போன்ற உருவம் செய்து, மலர், வாசனைப்பொருள்கள் முதலியவற்றுல் உபசரித்து,

31. மறையவர் தமக்கு மீந்து மவருடன் முன்னூழ் தன்னைக்
குறைவிலா அவர்க்கு ஓதி குணமுடன் ஏழு பேர்க்குத்
திறமுடன் அன்ன மீந்து சேயனும் உள்ளூர் மீண்டு
சரிவர ஓராண் டும்தான் சேய்வாரம் விரதம் கொண்டால்,

31. அந்தணர்களுக்கு அந்த முருகக்கடவுளின் உருவங்களேத் தானம் செய்து, அவர்களிடம் முன்சென்ம தீவினையைப்பற்றிக் கூறி, ஏழு பேர்க்கு உணவு அளித்துப் பின்பு இந்த ஜாதகன் உள்ளூர் திரும்பி, குறையாமல் ஒரு வருஷம் செவ்வாய்க்கிழமைதோறும் விரதம் இருந்தால்,

32. புத்திரர் ஆண்பால் ஒன்று பெண்ணது யிரண்டு விருத்தி
சித்தமாய் மூன்றும் தீர்க்கம் செப்பின கிரிகை தானும்
ஒத்துமை செய்யா ஞகில் உதிக்காது மதலே தானும்
வித்தகன் செய்வா ஞகில் விளங்கிடும் சுதர்க ளென்றோம்.

32. ஆண் குழந்தை யொன்றும், பெண் குழந்தைகள் இரண்டும் உண்டு. நிச்சயமாய் இம்மூன்று குழந்தைகளும் ஆயுள் விருத்தியுடையன. சொன்ன பரிகாரத்தை நன்கு செய்யாதுவிட்டால் குழந்தை உதிக்காது. சொன்னபடி செய்தால் குழந்தைகள் நிலைக்கும் என்று கூறினோம்.

33. மாதுரு குணத்தை யாங்கள் வரைகின்றோம் மால்நி றத்தாள்
பாதக மில்லா ளாகும் பந்துவை யாத ரிப்பாள்
கோதிலா வடக்க முள்ளாள் குத்திரம் வார்த்தை கூறுள்
சூதுகள் கொஞ்சம் உள்ளாள் சுந்தரி கோபம் கொஞ்சம்.

33. தாயின் குணத்தை நாங்கள் சொல்லுகிறோம். கரியநிறமுடையவள். தீதில்லாதவள். உறவினரை யாதரிப்பாள். அடக்கமுடையவள். குற்றமுடைய சொற்களைக் கூறுள். சிறிது சூதுள்ளவள். இவளுக்குக் கோபமும் கொஞ்சமுண்டு.

34. அவளுடைத் துணைவர் தன்னை அறைகின்றோம் இருநான்
[காகும்
அவனியில் சிலது சேதம் நாயகி முன்சென் மத்தைக்
கவனமாய்ச் சொல்லு கின்றேன் காஞ்சியின் நதிக்கு
[உத்திரம்
நவமுள பேரூர் தன்னில் பாவையும் சூத்திர வமிசம்,

34. அவளுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுகிறோம். அவர்கள் எட்டுப்பேர். சிலர் இடையில் அழிவர். இவள் முற்பிறப்பினைச் சொல்லுகின்றேன். காஞ்சீபுரத்தில் உள்ள ஆற்றுக்கு வடக்காக இருக்கும் ஒரு பெரிய ஊரில், சூத்திரர் குலத்தில்,

35. உதித்துமே பெருமை பூண்டு உத்தமர் நேசங் கொண்டு
பதியினில் திருவும் உண்டாய்ப் பஞ்சைகட் கன்ன மீந்தும்
திருவினை அணிந்தோன் தன்னை நாயகி பூசை செய்து
சதமான மதலே யுண்டாய் தன்வரன் முன்னே மாண்டு,

35. இவள் பிறந்து, பெருமையுடன் வாழ்ந்து, நல்லவர்களின் நட்பை அடைந்து, சிறந்த செல்வத்தைப்பெற்று, கதியில்லாதவர்களுக்கு உணவு கொடுத்து ஆதரித்தும், இலக்குமியை மார்பில் தரித்த திருமாலைப் பூசை

செய்தும், கீடித்த ஆயுளையுடைய குழந்தையைப் பெற்றும், பின்பு தன் கணவனுக்கு முன்பே இறந்து,

36. வந்தவள் இவளே யென்றேம் வழுத்துவோம் இவள்பிற் [சென்மம்
முந்திய தில்லை தன்னில் முயற்சியாய்ப் பிரம்ம சேயாய்ச்
சந்தத முதிப்பா ளாகும் சாற்றுவோம் தந்தைக் கேதான்
பந்தமாய் முன்சென் மத்தைப் பகருவோம் கேளு மம்மா.

36. இந்தப் பிறப்பில் இக்குலத்தில் பிறந்தவள் இவள் என்று கூறி னேம். இவளுடைய மறுபிறப்பைக் கூறுவோம். சிதம்பரத்தில், நல்ல முயற்சியையுடைய அந்தணர் குலத்தில் ஒரு குழந்தையாக இவள் பிறப்பாள். இந்த ஜாதகனுடைய தந்தையின் முற்பிறப்பைப்பற்றி இனிமேல் சொல்லு வோம்; தாயே! கேளுங்கள்.

37. பிதாவுடை முன்சென் மத்தைப் பேசுவோம் காஞ்சி [தன்னில்
சதியில்செங் குந்த வமிசம் தன்னிலே யுதித்து மேலும்
விதவித வணிகம் செய்து மெல்லியு மதலை யுண்டாய்
அதிபனும் பெருமை பூண்டு வருவோர்க்கு அன்ன மீந்து,

37. தகப்பனாரின் முன்பிறப்பைக் கூறுவோம். காஞ்சி நகரில் குற்றமில்லாத செங்குந்த வமிசத்தில் பிறந்து, பலவிதமான வியாபாரங்கள் செய்து, பெண் ஆண் குழந்தைகள் உண்டாகி, மிகுந்த பெருமையடைந்து, பசித்து வருவோருக்கு உணவு தந்து,

38. பொருளது மிகவே பெற்றுப் பூமிகள் உள்ளா னுகித்
திறமையாய் வாழ்ந்து பின்பு திருப்பணி அதிகம் செய்து
அறைகின்றேம் பித்த சூலை அதனுலே மரண மாகிப்
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவன் இவனே யென்றேம்.

38. மிகுந்த செல்வத்தைப் பெற்று, நிலங்கள் அதிகமுடையனுகி, திறமையாய் வாழ்ந்து, பலவித தருமத்தொண்டுகள் செய்து, பின்பு பித்த சூலை எற்பட்டு, அதனுலே இறந்தான் என்று சொல்லுகின்றேம். பிரம தேவனுல் படைக்கப்பட்டு, மறுபடியும் இவ்வுலகத்தில் பிறந்தவன் இவன் என்று கூறினேம்.

39. பின்சென்மம் துவாரை தன்னில் பிராமண குலமு திப்பான்
அன்னையும் கேட்க லுற்றுள் அவனுமிச் சென்மம் தன்னில்
என்னபுண் ணியங்கள் செய்தான் இயம்புவீர் என்று கேட்க
இன்னவன் எவர்க்கும் நல்லன் ஈகைவான் பொறுமை சாலி.

39. மறுபிறப்பில் துவராகரில் அந்தணர் குலமுதிப்பான். பர்வதி தேவி கேட்கத் தொடங்கினாள்; இவன் இப்பிறப்பில் என்ன நல்வினைகள் செய்தான்? சொல்வீராக, என்று கேட்க, இவன் யாவருக்கும் நல்லவனாக இருந்தான்; தருமசிந்தை யுடையவன்; பொறுமை யுடையவன்.

40. ஆபத்தைக் காப்பா னாகும் ஆதலால் மறையோன் வமிசம்
மேதினி யுதிப்பா னாகும் விளம்புவோம் இவர்கள் காலம்
கோதிலா முப்பா னாலில் கூறுவோம் தந்தை காலம்
மாதவர் துதிக்கா நின்ற மங்கையே மேலும் கேளே.

40. பிறருக்கு நேரிடும் துன்பங்களிலிருந்து பாதுகாப்பதில் வல்லவன். ஆதலினால், மறுபிறப்பில் அந்தணர் வமிசத்தில் பிறப்பான். தாய் தந்தையர்களுடைய மரணகாலத்தைப் பற்றிச் சொல்லுவோம்; இந்த ஜாதகனுடைய முப்பத்துநான்காம் வயதில் தந்தையின் முடிவுகாலம் ஏற்படும். சிறந்த தவத்தினைச் செய்யும் முனிவர்கள் துதிக்கின்ற அம்பிகையே! மேலுங் கேட்பாயாக.

41. முப்பத்து ஏழாண் டின்மேல் முயலுவோம் மாதுர்
[கெண்டம்
செப்புவோம் சாத கர்க்குச் சிறந்திடும் அறுபான் ரெண்டில்
ஓப்புடன் மகர மாதம் உயர்வளர் பக்கம் சட்டி
தப்பித முடலத் துக்குச் சாற்றுவோம் கேளு மம்மா.

41. ஜாதகனின் முப்பத்தேழு வயதிற்குமேல் தாயின் மரணம் உண்டாகும். இந்த ஜாதகனுக்கு உரிய முடிவு காலத்தைக் கூறுவோம். சிறந்த வாழ்வு வாழும் இவனுக்கு, அறுபத்திரண்டாம் வயதில் தை மாதத்தில், வளர்பிறை சஷ்டிதிதியில் மரணம் உண்டாகும் என்று சொல்லுவோம். தாயே! கேளும்.

42. சாதகன் பொதுயோ கத்தைச் சாற்றுவோம் இருஷி
[செய்வன்
சூதுகள் இல்லா னாகும் சொல்லது மேன்மை யுள்ளான்
மாதவர் தமைத்து திப்பான் வளமான குடும்ப மாவன்
மேதினி கீர்த்தி யுள்ளான் விளைபுலம் சேர்ப்பா னுமே.

42. இந்த ஜாதகனுடைய பொதுவான நன்மைகளைப் பற்றிக் கூறுவோம். பயிர்த்தொழில் செய்வான். சூது இல்லாதவன்; இவன் சொற்களுக்கு மதிப்பு ஏற்படும் வகையில் நடந்து கொள்ளுவான். கல்வியறிவுடைய சான்றோர்களைப் போற்றுவான். செளக்கியமான குடும்பத்தை

யுடையவன். உலகில் நல்ல புகழ் உடையவன். நல்ல விளைவுகளைக் கொண்ட நிலங்களைச் சேர்ப்பான்.

43. பாக்கியம் உடைய னுவன் பரஉப காரம் செய்வன்
யோக்கியன் பெருமை யுள்ளான் உறவினர் மெச்ச வாழ்வன்
காக்கவே பத்தி மானும் காலாள்கள் உடைய னுகும்
மூர்க்கமில் லாதா னுகும் மொழிகின்றேம் மேலும் கேளே.

43. செல்வவான்; பிறருக்கு உபகாரம் செய்வான். யோக்கியமான வன்; பெருமை யுள்ளவன். உறவினர்கள் பாராட்ட வாழ்ந்திருப்பான். இறைவனிடம் பக்தி பூண்டவன். ஏவலாட்களை யுடையவன். முரட்டுத் தனம் இல்லாதவன். மேலுங் கூறுகிறேம். தாயே! கேட்பாயாக.

44. இருபது ஆண்டின் மேலே இடரில்லான் ருணமு மில்லான்
திருமகள் வாச முள்ளான் சேர்ந்திடும் பாக்கி யங்கள்
வரவரச் செல்வ மோங்கும் மாடுகள் விருத்தி யாகும்
குறைவிலான் அன்ன·மீவன் குபேரனும் என்று சொன்னேம்.

44. இவனுடைய இருபது வயதுக்குமேலே துன்பங்கள் அனைத்தும் நீங்கி வாழ்வான். கடனில்லாதவன். இலட்சுமீ கடாட்சமுள்ளவன். பல வித நன்மைகள் இவனை வந்தடையும். வரவரச் செல்வம் விருத்தியாகும். மாடுகள் இவனிடம் மிகுதியாம். ஒரு குறையு மில்லாதவன். பிறருக்கு உணவு கொடுப்பான். குபேரனைப்போன்ற செல்வம் பெற்று வாழ்வான் என்று கூறினேம்.

45. காளையு முதித்த காலம் கரும்பாம்பு திசைஇ ருப்பு
ஏலவே ஒன்பான் ஆண்டும் இசைந்திடு மாதம் ஒன்றும்
கோலவே நாள்கள் பத்தும் கூறுவோம் வைசூரி யாலும்
பாலகன் தனக்கு ரோகம் பலப்பலப் பிணியு முண்டு.

45. இந்த ஜாதகன் பிறந்த காலத்தில் ராகுமகாதசை இருப்பு ஒன்பது வருஷம், ஒரு மாதம், பத்து நாட்கள் ஆம். வைசூரிநோய் இவனுக்கு ஏற்படும். இன்னும் பல வியாதிகளும் இவனுக்கு உண்டு.

46. குடும்பத்தில் சுபமும் சூதம் கூறுவோம் துணைவர் விருத்தி
அடைவுடன் சகடும் சேரும் யாவரும் உறவே யாவர்
உடனேதான் பூமி சேரும் உறும்தந்தை வர்க்கம் சூதம்
திடமான கலகம் உண்டு செப்புவோம் விபரம் ரெண்டில்.

46. இவனுடைய குடும்பத்தில் சுபங்களும், அசுபங்களும் ஏற்படும். உடன்பிறந்தார் விருத்தி. வண்டி முதலான வாகனங்கள் சேரும். எல்

லோரும் உறவினராவர். நிலங்களும் சேரும். தந்தை வர்க்கத்தில் அசுபமான செயல்கள் ஏற்படும். நிச்சயமாகக் கலகம் ஒன்றும் இவன் வாழ்க்கையில் உண்டாகும். அதன் விவரத்தை இரண்டாம் பாகத்தில் கூறுவோம்.

47. மந்திரி தசையி லேதான் அநேகமாய்ப் பூமி சேரும்
சந்ததம் கீர்த்தி ஓங்கும் சகலரும் வசிய மாகும்
முந்திய மனைவி வாய்க்கும் முன்துணை சுபம தாகும்
எந்தையே சித்திர வீடு இயற்றுவான் ருணங்கள் உண்டு.

47. இவனுக்குக் குருமகாதசையில் அதிகமான நிலங்கள் சேரும். நிச்சயமாகப் புகழ் உயரும். எல்லோரும் இவனுக்கு வசமாவர். மணம் ஆகும். இவன் மூத்த சகோதரனுக்குச் சுபம் ஏற்படும். அழகிய சித்திர வேலைப்பாடுகள் அமைந்த வீட்டினைக் கட்டுவான். கடனும் ஏற்படும்.

48. குடும்பமும் வேற தாகும் குலத்தினில் சூதம் காணும்
அடைவுடன் மாதுர் வர்க்க மதிலேயும் சூதம் உண்டு
திடமதாய்ச் சுபமும் உண்டு சேயிழை வர்க்கம் சூதம்
விடம்போலப் பிணியு முண்டு வித்தகன் தனக்குத் தானே.

48. உடன்பிறந்தார்களுடன் ஒன்றுபட்டிருந்த இவன் குடும்பமும் தனியாகப் பிரியும். இவன் குலத்தில் அசுபம் ஏற்படும். தாய் வர்க்கத்திலும் அசுபம் உண்டு. பின்பு நிச்சயமாய்ச் சுபமும் உண்டு. மனைவி வழியிலும் அசுபம் நிகழும். இவனுக்கு விடத்தைப்போன்று கொடிய வியாதிகளும் ஏற்படும்.

49. பூமியும் சேரு மென்றோம் புண்ணிய தீர்த்தம் நேரும்
சேமமாம் குடும்பம் தானும் சென்றிடம் பெருமை யுண்டு
நேமியோர் வணக்க மாகும் நிருபர்கள் உறவே யாகும்
தீமைகள் வந்து வெல்வன் செப்புவோம் விபரம் ரெண்டில்.

49. நிலங்களும் இவனுக்குச் சேருமென்று முன்பு கூறினோம். பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடும் பாக்கியமும் இவனுக்குக் கிடைக்கும். குடும்பம் கடைசியில் நன்மையடையும். இவன் சென்ற இடங்களிலும் பெருமையடைவான். உலகிலுள்ளார் இவனுக்கு அடங்கியவராயிருப்பர். அரசர்களின் நட்பு ஏற்படும். தீமைகள் இடையே ஏற்பட்டாலும் அவற்றிலிருந்து மீண்டு வெற்றியடைவான். இன்னும் மற்ற விவரங்கள் இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம்.

50. அத்திரி முனிவர் சொல்ல அப்பிகை கேட்க லுற்றுள்
சுத்தமாய்த் துணைவர் சேதி சொல்லுவோம் என்று
[சொன்னீர்
மெத்தவே சொல்லும் என்ன விளம்புவார் முனிவர் தாமும்
பத்தினி சேதி சொல்வேன் பார்வதி கேட்டி டாயே.

50. என்று அத்திரி முனிவர் சொல்ல, பார்வதி கேட்கத் தொடங்கினாள்; இவனுடைய உடன்பிறந்தாரைப் பற்றிய விவரங்களைச் சொல்லுவதாகச் சொன்னீர்கள், அவற்றைக் கூறுங்கள் என்று கேட்க, முனிவர் சொல்லுவார்: முதலில் இவன் மனைவியைப் பற்றிக் கூறுகின்றேன், பார்வதியே! கேட்பாயாக.

51. மாநிறம் ஒடிசல் தேகி மர்மவாள் சாயல் நேத்ரம்
தேன்மொழி வார்த்தை சொல்வள் தீரமா நெஞ்சி யாகும்
ஆனதோர் யீகை கொஞ்சம் அவளுக்குப் புத்திர பாவம்
தானென ஆண்பால் ஒன்று சாற்றுவோம் பெண்பால்.
[ரெண்டு.

51. மாநிற முண்டையவள். மெல்லிய சரீர முடையவள். மர்மமானவள். அழகான கண்களுடையவள். இனிமையான சொற்களைப் பேசுவாள். உறுதியான மனமுடையவள். சிறிது தருமமும் செய்வாள். அவளுக்குப் புத்திர பாவத்தைப்பற்றிச் சொல்லுவோம். ஓர் ஆண் குழந்தையும், இரண்டு பெண் குழந்தைகளும் உண்டு.

52. மூன்றுமே தீர்க்க மாகும் முயன்றதோர் குடும்பி யாவள்
ஈன்றவன் பின்னென் சேதி இயம்புவோ மிருநி றத்தான்
சான்றோர்க ளன்பு பூண்பன் சகலர்க்கு நேய னவன்
பான்மையாய்க் கல்வி யுள்ளான் பயிர்த்தொழில் செட்டு
[முள்ளான்.

52. இம்மூன்று குழந்தைகளும் நீண்ட ஆயுளுடையவை. முயற்சியுள்ள குடும்பப் பெண்ணாக இருப்பாள். இந்த ஜாதகனின் சிறிய தகப்பனாரைப்பற்றி இப்பொழுது சொல்லுகிறேன். கரிய நிறமுடையவன். சான்றோர்களிடம் அன்புகொள்வான். எல்லோருக்கும் நண்பனவன். நல்ல கல்வியறி வுடையவன். பயிர்த்தொழில், வியாபாரம் முதலியன செய்பவன்.

53. துரிசான நடையு முள்ளான் துட்டமாய் வார்த்தை
[சொல்வன்
பெருமவர்க் கினிய னவன் பெரும்புகழ் தேட வல்லான்
அறநெறி பூண்பா னாகும் அவசர மனத்த னாகும்
திருமகள் வாச முள்ளான் தேவியு மொருத்தி யாமே.

53. சுறுசுறுப்பான நடையுள்ளவன். துடுக்கான சொற்களைச்சொல்லுவான். பெரும்பான்மையோருக்கு இனியனாக இருப்பான். பெரிய கீர்த்தியைத் தேடவல்லவன். தரும மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவனாவன். அவசர புத்தியுள்ளவன். இலட்சுமீ கடாட்ச முள்ளவன். மனைவியும் ஒருத்தியேயாவாள்.

54. அவனுக்குப் புத்திர பாவம் ஆனது ரெண்டு மாகும்
நவமதில் பெண்பால் அவ்வார் நாட்டுவோ மிவனுக் கேதான்
கவனமா யிரண்டி லேதான் கழறுவோம் விவர மாக
தவமுடை யோரைக் காக்கும் தயாபரி மேலுங் கேளே.

54. இவனுக்குப் புத்திர பாவத்தைப் பற்றிச் சொல்லுவோம். இரண்டு ஆண். பெண்களும் அவ்வாறே இருவர் என்று சொல்லுவோம் இவனுக்கு. இவனைப்பற்றிய மற்றைய விவரங்களை மறவாது இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். தவஞ்செய்தவர்களெல்லோரையும் காக்கும் கருணையுடைய பார்வதி தேவியே! மேலுங் கேட்பாயாக.

ஜாதகம் 2

1. சந்திரன் மாதை நின்று சனியரி புதன்சேய் வண்டி.
மந்திரி சாடி யாக வான்புகர் இரவி வீணை
பிந்திய சிகியு முச்சம் பெலராகு [1]நீச்ச மாக
வந்தவ னிடபம் சென்மம் வரைகுவீர் பலனைத் தானே.

1. சந்திரன் கன்னியா ராசியிலும், சனி சிம்மத்திலும், புதன் செவ்வாய் கடகத்திலும், குரு குப்பத்திலும், சுக்கிரன் சூரியன் மிதுனத்திலும், கேது விருச்சிகத்திலும், வலிமையுள்ள ராகு விருஷபத்திலும், இருக்கின்ற நிலையில், பிறந்த விருஷப லக்கின ஜாதகனுக்கு உரிய பலன்களைச் சொல்லுவீர்!

		லக்கினம் ராகு	சுக்கிரன் சூரியன்
குரு	இராசி சக்கரம்		புதன் செவ்வாய்
			சனி
	கேது		சந்திரன்

2. பாலகன் பிறந்த இல்லம் பகருவோம் கீழ்மேல் வீதி
சீலமாய்த் தெற்கு வாசல் திருமால்தன் கோட்டம் கீழ்பால்
ஆலத்தை யுண்டோன் காளி அவர்கோட்டம் வடகீழ்
[தங்கும்
நீலியா மாரி மேற்கில் நிகர்குண்டம் தங்கு மென்றோம்.

2. இந்த ஜாதகன் பிறந்த வீட்டைப் பற்றிச் சொல்லுவோம். கிழக்கு மேற்கு வீதியில், தெற்குப் பார்த்த வாசல் உள்ள வீடு. அதற்குக் கீழ்ப் புறத்தில் திருமால் ஆலயமும், வடகிழக்கில் சிவாலயமும் காளிகோவிலும் உண்டு. துர்க்கையம்மன் கோவில் மேற்கில் இருக்கிறது. அங்குத் தடாகமும் உண்டு.

---

1. இங்குக் கூறியுள்ளபடி கேது ராகுவுக்கு நீசசம் விருஷபம்; உச்சம் விருச்சிகம். சிலர் ராகுவுக்கு மாத்திரம் விருச்சிக ராசியில் உச்சம் என்றும் கேதுவிற்கு விருஷபத்தில் உச்சமென்றும் கூறுவர்.

3. தும்பியும் மாரி தானும் சொல்லுவோம் வடமேல் திக்கில்
இன்பமாம் சிற்றூர் தன்னில் இலகிய தந்தை யில்லம்
தெம்புடன் மூன்றும் சென்மம் செனிப்பனும் இந்தப் பாலன்
அம்புவி யளந்தோன் தங்கை அறைகுவோம் மேலும்
[கேளே.

3. வடமேற்கில் கணபதி, மாரியம்மன் ஆகியோர் ஆலயங்கள் உண்டு. இப்படிப்பட்ட வளமைவாய்ந்த சிறிய கிராமத்தில், தந்தையின் இல்லத்தில், மூன்றாங் கர்ப்பத்தில் பிறப்பவன் இவன். பூமியை அளந்த திருமாலின் சகோதரியாகிய அம்பிகையே! மேலுங் கேட்பாயாக.

4. உதித்தவன் யோகந் தானும் உறுந்தந்தை தாயின் யோகம்
மதித்திட துணைவர் யோகம் வரும்புத்திர களத்திர யோகம்
சதியிலா முன்பின் சென்மம் சாந்தியு மிந்நூல் தன்னில்
விதிக்கிறேரும் பலனே யாங்கள் வித்தகி கேட்டி டாயே.

4. பிறந்த ஜாதகனுடைய யோக பாவத்தையும், தாய்தந்தையரைப் பற்றியும், சகோதர பாவத்தையும், புத்திர களத்திர யோகத்தையும், முன் பின் சென்ம விவரத்தையும், அவற்றிற்குள்ள சாந்தி நலத்தையும் இந்நூலில் சொல்லப் போகிறேரும். உமாதேவியே! கேட்பாயாக.

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோம் பதினொன்
[றுகும்
பந்தமாய்ச் சிலது சேதம் பகருவோம் ஆண்பால் ரண்டு
சந்ததம் கன்னி மூன்று சதிருட னைந்தும் தீர்க்கம்
இந்தவார் தந்தை செய்தி இயம்புவோம் கேளு மம்மா.

5. தந்தையின் கூடப்பிறந்தவர்கள் பதினொருவர். சேதமானவை போக, ஆண் குழந்தைகள் இரண்டும், பெண் குழந்தைகள் மூன்றும் நல்ல நிலைமையில் இருக்கும். இனிமேல் தந்தையின் செய்தியைப்பற்றிக் கூறுவோம். கேளும், தாயே!

6. சொன்னசொல் கேட்பா னுகும் சோம்பலுங் கொஞ்ச
[முள்ளான்
கன்னென மொழியு முள்ளான் கனத்ததோர் புத்தி
[யுள்ளான்
உன்னித நடையு முள்ளான் உறுதியாம் மனத்த னுகும்
பன்னியே யுரைக்க வல்லான் பகருவான் கட்டு வார்த்தை.

6. சொன்ன சொல்லைக் கேட்பான். சிறிது சோம்பலுமுண்டு. இனிமையான மொழியில் பேசக்கூடியவன். பெரும்புத்தியுமுண்டு. கம்பீரமான நடைத்தோற்ற முள்ளவன். உறுதியான மனமுடையவன். பன்னிப் பன்னிப் பேசவல்லவன். சொற்களைக் கட்டிக் கூறுவதில் வல்லவன்.

7. உரோமங்கள் நீட்சி யுள்ளான் நுவலுவோம் சிவந்த மேனி
தீமையாங் குணமுங் கொஞ்சம் சீலமு முடைய னுகும்
நேமமாய்ப் பத்தி யுள்ளான் நிதானமாய் வார்த்தை
[சொல்வான்
தாமதம் ஒடிச வுள்ளான் தனத்தின்மே லிச்சை யுள்ளான்.

7. உரோம அடர்த்தியும், சிவந்த மேனியுமுடையவன். தீய குணமும், நற்குணமும் கலந்து காணப்படுபவன். பக்திசிரத்தையும், நிதானமாகப் பதில் சொல்லக்கூடிய தாமத குணமும், மெல்லிய தேகமும், செல்வத்தில் விருப்பமும் உள்ளவன்.

8. கிருஷியும் செய்வா னுகும் கெடுதலைப் புத்தி கொஞ்சம்
விரைவில்வெஞ் சினமு முண்டு விரும்புவான் சுகிபு சிப்பு
கரமதில் விஷ்ணு ரேகை கான்றதோர் சுழியு முண்டு
அறைகிறேம் பித்த வாயு அணுகிடு மிவனுக் கேதான்.

8. விவசாயம் செய்பவன். கேடு நினைக்கும் மனப்பான்மையுமுள்ளவன். சீக்கிரத்தில் கோபமும் வரும். சுவையுள்ள உணவில் விருப்பமுள்ளவன். இவன் கையில் விஷ்ணு ரேகையும், விளக்கமான ஒரு சுழியுமுண்டு. இவனுக்குப் பித்தவாயு நோய் ஏற்படும்.

9. இக்குண முடையோ னுக்கு இவனுமே உதிப்பா னென்றேம்
மிக்கவே இவன்கு ணத்தை விளம்புவோம் சிவந்த மெய்யன்
தக்கதோர் கல்வி கற்பன் தாட்சிண்யன் யூகை சாலி
மைக்கண்ணி னார்கள் மோகன் மனமது கிலேச மில்லான்.

9. இவ்வாறான குணங்கள் வாய்ந்த தந்தைக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இனி, இந்த ஜாதகன் குணத்தைச் சொல்லுவோம். சிவந்த மெய்யன். போதுமான அளவு கல்வி கற்பவன். தாட்சிண்யமுடையவன். புத்திசாலி. விலைமாதர்களிடம் விருப்பமுள்ளவன். மனத்தில் எப்பொழுதும் கவலை பற்றுதவன்.

10. பெருமையும் புகழு முள்ளான் புண்ணியங் கொஞ்சம்
[செய்வன்
திருமகள் வாச முள்ளான் சிரமுகம் வடிவு காணும்
உரமுடன் நடக்க வல்லன் உத்தமர் நேசம் கொள்வன்
துறவிபோல் பேச வல்லன் சுருதிகள் கற்க வல்லான்.

10. பெருமையும் புகழுமுடையவன். சிறிது புண்ணிய சிந்தனையும் உண்டு. இலட்சுமீகடாட்சமுள்ளவன். வசீகரத் தோற்றமுடையவன். எந்தக் காரியத்திலும் பயப்படாமல் நடக்கக் கூடியவன். நல்லவர்கள் நட்பைப் பெறுவான். தூதவிகளைப் போல் பேசுந் திறமையும், பல சாஸ்திர பரிசீலனை செய்யுந் தன்மையும் உள்ளவன்.

11. பாக்கிய முடைய னுகும் பசித்தாபன் சீல முள்ளான்
யோக்கியன் பூமி விருத்தி உறுதியா மனத்த னுகும்
வாக்குரை சுத்த முள்ளான் மனைவிக்கு நேய முள்ளான்
தீர்க்கமாய் வயது முண்டு சித்தசன் ஒப்ப தாமே.

11. செல்வப் பெருக்கமுள்ளவன். பசி தாங்கமாட்டாதவன். ஒழுக்க முடையவன். இவன் காலத்தில் ஒழுங்கான முறையில் பூமிகளை விருத்தி செய்வான். திடமான மனமுடையவன். சொன்ன சொல் தவறமாட்டான். மனைவியிடம் விருப்பமுள்ளவன். நீண்ட ஆயுளுடையவன். மன்மதனை ஒப்பவன்.

12. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோம் ஆண்பா [லொன்று
அவனியில் கன்னி ரெண்டு அறைகின்றோம் தீர்க்க மாக
நவனியில் இளையோ னுக நாயகன் வருவா னென்றோம்
கவனமாய் இவன்தன் சேதி கழறுவோம் கேளு மம்மா.

12. இவனுடைய உடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுவோம். ஆண் ஒன்று. பெண் இரண்டு. இவையிரண்டும் நிலைத்திருக்கும். அவற்றுள், இளைய சகோதரனுக இந்த ஜாதகன் பிறப்பான். இவனுடைய செய்தியைப்பற்றிச் சொல்லுகின்றோம். கேளுங்கள், தாயே!

13. கல்விமான் சிவந்த மேனி காலாட்க ளுடைய னுவன்
இல்லையென் றுரைக்க மாட்டான் இயம்புவான் கட்டு [வார்த்தை
சொல்லது இரண்டு முள்ளான் சுகமாக வார்த்தை சொல்வன்
நல்லவன் தந்திர வாதி நற்சுகி போச னத்தான்.

13. கல்வியறிவுடையான். சிவந்த உடம்போடு கூடியவன். வேலைக் காரர்களையுடையவன். பசித்து வந்தவருக்கு இல்லையென்று சொல்லாதவன். சொற்களைக் கட்டிக் கூறுவதில் சமர்த்தன். சில சமயங்களில் இரண்டுவித மாகப் பேசுவான். இனிய சொற்களைச் சொல்லுவான். நல்ல குணமுடையவன், தந்திரமுடையவன். போஜன சுகமுள்ளவன்.

14. குடும்பத்தை ஆதரிப்பான் குலத்துக்கு மேலாய் வாழ்வான்
அடவுடன் மனைவி ஒன்று அறைகிறேம் தீர்க்க மாகத்
திடமதாய் ஆண்பால் ரெண்டு செப்பிறேம் கன்னி ஒன்று
கடமையாய் மூன்றுந் தீர்க்கம் காதலி மீண்டுங் கேளே.

14. தன் குடும்பத்தை நன்கு காப்பான். குலத்தில் சிறந்தவனாக வாழ்வான். இவனுக்கு மனைவி ஒருத்தி யுண்டு. அவள் ஆயுள் விருத்தியாகும். இந்த ஜாதகனுக்கு ஆண் குழந்தைகள் இரண்டும், பெண் குழந்தை ஒன்றும் உண்டு. இம்மூன்றும் நீண்ட ஆயுளுடன் இருக்கும். தாயே! மேலுங் கேட்பாயாக.

15. துணைவிகள் செய்தி தம்மைச் சொல்லுவோம் இரண்டி
[லேதாம்
கனமுடன் சாத கர்க்குக் கழறுவோம் மன்றல் காலம்
அனையவே இருப தாண்டில் அம்மாது வருவ ளாகும்
மணமது இரண்டு என்றேம் மங்கையே மேலுங் கேளே.

15. இவனுடைய சகோதரிகளைப் பற்றிய விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். இவன் திருமண காலத்தைப்பற்றி இப்போழுது கூறுவோம். இந்த ஜாதகனின் இருபதாம் வயதில் மனைவி வாய்ப்பாள். இவனுக்கு இரு மனைவியர் என்று கூறினேம். பார்வதிதேவியே! மேலுங் கேட்பாயாக.

16. முனிவர்இவ் வாறுய்ச் சொல்ல மொழிகுவார் பராசர் தானும்
கனமுடன் சாத கர்க்குக் கழறினீர் தாரம் ரெண்டு
இனமதைச் சொல்லு மென்ன இயம்புவார் வசிட்டர் தானும்
மனையவள் தானம் தன்னில் வருங்கேது இருப்ப தாலும்,

16. முனிவர் இப்படிச் சொல்லப் பராசரர் கேட்கத் தொடங்கினர். ஜாதகனுக்கு இரு மனைவியர் என்று சொன்னீர்கள். காரணம் என்ன? கூறுங்கள் என்று கேட்க, வசிஷ்ட முனிவர் விடை கூறுவார்; களத்திர ஸ்தானத்தில் கேது இருப்பதாலும்,

17. [1]குருதியும் நீச்ச மாகக் கொண்டதால் மனைவி ரெண்டு
விரைவினில் இதனைக் கேட்டு விளம்புவார் பராசர் தானும்
குருவுமே குடும்பனைக் குணமுடன் பார்த்த தாலே
அறைகின்றேம் தாரம் ஒன்று அபிமானம் ஒன்று
[சொன்னேம்.

17. செவ்வாய் நீச்சமாய் இருப்பதாலும், மனைவியர் இருவராவர் என்று கூறப் பராசரர் கேட்டுச் சொல்லுவார். குரு குடும்ப ஸ்தானத்தைப்

1. செவ்வாய்.

பார்த்ததனால் மனைவி ஒருத்தியே. இவனுக்கு அபிமான ஸ்திரீயாக இருப் பவள் மற்றொருத்தி என்று கூறினேம்.

18. செயமுனி இதனைக் கேட்டு செப்புவார் வதிட்ட ருக்கு
நயமுதல் தாரத் திற்கு நாட்டினேம் சங்கை யொன்று
தயவுடன் திருமங் கல்யம் சாற்றுவான் இரண்டு தானும்
வியமில்லை தாரம் தானும் வித்தகி கேட்க லுற்றாள்.

18. செயமுனி என்பவர் இவைகளைக் கேட்டுவிட்டு, வசிஷ்டரைப் பார்த்து ஒன்று சொல்லுகிறார். முதல் மனைவிக்கு ஒரு குறைவு ஏற்படும் என்று சொல்லுகிறேம். அதாவது முதல் மாங்கலியம் போய்விடும். இரண் டாம் முறையாகத் திருமங்கலியம் ஏற்படும். இதுவே தவிர, மனைவி இறக்க மாட்டாள். இதனைக் கேட்டுப் பார்வதிதேவி சொல்லுகிறாள்.

19. ஏதுகா ரணத்தி னுலே இரு[1]தாரம் ஒருத்திக் கேதான்
ஓதினீர் அந்தச் சங்கை உத்தமன் தரித்த முத்திரை
மேதினில் கள்ள னுலே விரயமாய்ப் பின்பு தானும்
நீதிலா ஒருமாங் கலியம் சேர்ப்பனும் என்று சொன்னேம்.

19. என்ன காரணத்தினால் ஒருத்திக்கே இரண்டு மாங்கல்யம் ஏற் படும் என்று சொன்னீர்? என்று கேட்க, இவள் கணவனால் முதலில் ஏற் பட்ட மாங்கலியம் திருட்டுப் போய்விடும். பின்பு குற்றமில்லாத வேறொரு மாங்கலியம் செய்து மனைவியின் கழுத்தில் அணிவான் என்று கூறினேம்.

20. அவள்குணஞ் சிவந்த மேனி அம்மான்தன் வர்க்க
[மென்றேம்
நவனியில் உத்தி ரத்தில் நாயகி வருவா ளாகும்
தவநிலை யோருக் கன்பள் தன்மனம் பொறுமை யுண்டு
கவனமாய் அன்னம் ஈவள் காதலி! கோபி என்றேம்.

20. மனைவியின் தன்மைகளைச் சிறிது கூறுகிறேம். சிவந்த உடல்; இந்த ஜாதகனின் மாமன் வர்க்கத்திலிருந்து இவனுக்கு மனைவியாக வருவாள். அவள் வடதிசையிலிருந்து வருபவள். தவமுடைய சான்றோருக்கு அன்புடை யவள். மனத்தில் சிறிது பொறுமையுண்டு. ஏழைகளுக்கு உணவு கொடுப் பாள். தாயே! கோபமுடையவள் என்று சொன்னேம்.

21. புத்திர பாகம் தன்னைப் புகலவே ஆண்பால் ஒன்று
சித்தமாய்த் தீர்க்க மாகும் சீரண மற்ற தெல்லாம்
அத்திரி கேட்க லுற்றார் அவனுக்கு மதலை தோடம்
பெத்தகா ரணங்க ளென்ன புகலுவீர் முனியே என்றார்.

---

1. திருமாங்கல்யச்சரடு.

21. இவனுடைய புத்திரபாவத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஆண் குழந்தை ஒன்று. இது தீர்க்கமாக இருக்கும். மற்றவையெல்லாம் நிலைக்காது. அத்திரிமுனிவர் கேட்டார்; இவனுக்கு என்ன காரணத்தினால் புத்திரதோஷம் ஏற்பட்டது? சொல்லுங்கள், முனிவரே! என்றார்.

22. [1]அஞ்சினுக் குடையோ னேடே [2]ஆரலும் கூடி மூன்றில்
தஞ்சமாய் இருந்த தாலே சாற்றினேம் புத்திர தோடம்
விஞ்சிய ஒருவன் தீர்க்க மொழிந்திட்டீ ரதுஎவ் வாறு
[3]அஞ்சினில் மதியும் நிற்க அறைந்திட்டோம் ஒருவன் தானே.

22. ஐந்தாம் இடத்துக்கு உடையவனாகிய புதனுடன் செவ்வாயும் சேர்ந்து, கடகத்தில் தங்கியதால் புத்திர தோஷம் ஏற்படும் என்று சொன்னோம். ஒரு புதல்வன் தீர்க்கம் என்று எவ்வாறு கூறினீர்? என்று அத்திரி முனிவர் மீண்டும் கேட்க, சந்திரன் கன்னியில் இருப்பதனால் ஒருவன் தீர்க்கம் என்று கூறினோம் என்றார்.

23. அதுவுமே சாந்தி செய்யில் அறைந்திட்டோம் வயது தீர்க்கம்
எதனாலே சாந்தி செய்ய இவனுமே முன்சென் மத்தில்
சதியிலா தவனைக் கீழ்பால் சாற்றிய சிற்றூர் தன்னில்
வதிபனு மருகர் வமிசம் வந்தவ னிவனே யென்றோம்.

23. இவன் ஒரு சாந்தி செய்தால் குழந்தைகள் வயது தீர்க்கமாம். சாந்தி செய்யவேண்டிய காரணம் என்ன? என்று கேட்க, இந்த ஜாதகன் முற்பிறப்பில், குற்றமில்லாத தவனே என்னும் ஊருக்குக் கிழக்கே உள்ள ஒரு சிறிய கிராமத்தில் ஜைனகுலத்தில் பிறந்தவன் என்று சொன்னோம்.

24. பூமிபொன் னுள்ளா னுகிப் புத்திரர் மனைவி யோடு
சேமமாய்க் குடும்பி யாகித் தினம்வரு வோர்க்கு அன்னம்
காமனும் அளித்து வந்தான் கனத்ததோர் அரசர் நேசன்
நேமங்கள் தப்பா னுகி நிருபனும் வாழ்ந்தா னென்றோம்.

24. நிலம், செல்வம் முதலியன மிகுதியாகப் பெற்றிருந்தான். மனைவிமக்களோடு சுகமான குடும்பமுள்ளவனாக இருந்தான். பசித்து வரு பவருக்கு உணவு அளித்தான். பெரிய அரசர்கள் நட்பைப் பெற்றிருந்தான். ஒழுங்குமுறை தவறாதவனாகி இவன் வாழ்ந்து வந்தான்.

---

1. ஐந்தாம் இடமாகிய சிம்மராசிக்குரிய புதன்.
2. செவ்வாய்.
3. இலக்கினத்துக்கு ஐந்தாமிடம் : கன்னி.

25. அப்படி வாழு நாளில் அவனூர்க்குக் குடகி லேதான்
மெய்ப்புட னரசர் வாசம் செய்தனர் நகர மொன்றில்
மைப்படி மாது ஒன்று மறைகுலம் நாணி மூங்தோள்
செப்புவாள் இவனைக் கண்டே சித்திரம் வாரும் என்றுள்.

25. அப்படி வாழ்ந்திருக்கும் காலத்தில், அவன் வசித்து வந்த ஊருக்கு மேற்கில் உள்ள நகரத்துக்கு ஒரு சமயம் சென்றான். அங்கு, அந்தணர் குலத்தைச்சேர்ந்த கைம்பெண் ஒருத்தி இவனைக் கண்டு என் வீட்டுக்கு வந்து ஒரு சித்திரம் எழுதிக்கொடுங்கள் என்று கேட்டாள்.

26. அம்மொழி இவனும் கேட்டு அவளில்லம் செல்ல லுற்றான்
துன்மையாய் விரகம் கொண்டு சுந்தரி போகம் துய்க்க
இன்பமாய் வாரும் என்றுள் இவனதற் கிசையா னுகி
வம்புகள் பேச லுற்றான் அறைகின்றாள் விதவை மாது ;

26. அந்த வார்த்தையைக் கேட்டு, இவன் அப்பெண்ணின் வீட்டுக்குச் சென்றான். அங்கு அவள் இவன்மீது மோகங்கொண்டு, "என்னுடன் இன்பம் அனுபவிக்க வருக" என்று இவனை யழைத்தாள். இவன் அவள் விருப்பத்துக்கு உடன்படாது, பலவாறு அவளை ஏசினான். அவற்றைக் கேட்டு, அந்த விதவைப்பெண் சொல்லுகிறாள் :

27. சுதர்களும் மனைவி செல்வம் சோர்ந்திடு முனக்கு மேதான்
கனமுடன் மறுசென் மத்தில் கன்னிகை யானு தித்துப்
பதியினில் மனைவி யாகப் பாவையும் வருவே னென்று
விதவிதம் சொல்லி யேதான் வித்தகி நீங்க லுற்றாள்.

27. உன் மக்களும் மனைவியும் இறப்பர். உன் செல்வமும் குறையும். மறுபிறப்பில் யான் உன்மனைவியாக வருவேன் என்று பல சொற்களைச் சொல்லிவிட்டு அந்தப்பெண் நீங்கினாள்.

28. அச்சென்மம் தன்னி லேதான் அவன்பந்து இல்லா வேளை
உச்சித பேதி யாலே உரைந்தனன் எமப திக்கு
மிச்சமாய் இகலோ கத்தில் மேவின னிவனே யென்றும்
நச்சுபோல் அந்தத் தோஷம் நல்கிடு மிவனுக் கேதான் ;

28. அப்பிறப்பில் இந்த ஜாதகனும் உறவினர் யாரும் அருகினில் இல்லாத வேளையில் பேதி ஏற்பட்டு மரணமடைந்தான். பின்பு பிரமனால் படைக்கப்பட்டு இவ்வுலகத்தில் இப்பிறப்பாகப் பிறந்தான். விஷம் போல், அந்தப் பெண்ணின் சாபம் இவனை யடைந்தது.

29. அந்ததோர் தோடம் தீர அறைகின்றேம் கிரிகை ஒன்று
மைந்தனும் மனைவி யோடு வள்ளூரு தனக்குச் சென்று
சந்ததம் மாலுக் கேதான் சகச்ரவர்ச் சனைகள் செய்து
மூந்திய மறையோ ருக்கு முயற்சியால் அன்ன மீய ;

29. அந்தத் தோஷந் தீர ஒரு பரிகாரம் கூறுகின்றேம். இந்த ஜாதகன் தன் மனைவியுடன் திருவள்ளூருக்குச் சென்று, அங்குக் கோயில் கொண் டுள்ள திருமாலுக்கு ஆயிரம் பெயர்களால் அருச்சனை செய்து, அந்தணர்க ளுக்கும் போஜனம் அளிக்க,

30. பாவங்கள் விலகு மென்றேம் பாலனும் தீர்க்க மாகும்
மேவிய யிதற்கு மேலே விளங்காது மதலை தானும்
தாவிய மாதுர் சேதி சாற்றுவோம் சிவந்த மேனி
பூவினில் நிந்தை யுண்டு புருடனுக் கினிய ளாமே.

30. இவனுடைய தோஷங்கள் நீங்கும் என்று கூறுவோம். இவனது புத்திரனும் தீர்க்கமாவான். ஒரு புதல்வனுக்குமேல் இவனுக்கு இல்லை. இவனுடைய தாயின் செய்தியைப் பற்றிச் சொல்லுவோம். சிவந்த மேனியுடையவள். இவளுக்குச் சிறிது பழியுண்டு. கணவனுக்கு இனியளா யிருப்பாள்.

31. அவளுடைத் துணைவர்..... ஆணது ஒருவ னென்றேம்
பவமுள கன்னி யவ்வார் பருகிடும் தீர்க்க மாக
நவனியில் மாமன் தானும் நற்றந்தை இல்லம் நீங்கிக்
கவனமாய்க் கிழக்குத் திக்கில் காவலன் செல்வா
[னென்றேம்.

31. தாயினுடைய துணைவர்..... ஆண்மகன் ஒருவனென்று கூறு வோம். பெண்ணும் அவ்வாறே ஒருத்தி. அவள் தீர்க்கமாவள். இந்த ஜாதகனுடைய மாமன் தன் தந்தையின் வீட்டைவிட்டு நீங்கிக் கிழக்குத் திசை நோக்கிச் செல்லுவான்.

32. மாமன்தன் சேதி யெல்லாம் வரைகின்றேம் ரெண்டி
[லேதான்
நேமமாய் மாதுர் சென்மம் நிகழ்த்துவோம் விவர மாக
ஆவலாய் ஒரூர் தன்னில் அவள்கவு சீக வம்சம்
பாவையும் பிறந்தாள் என்றேம் பலருக்கு நல்லோ ளாகி ;

32. மாமனுடைய செய்திகளை யெல்லாம் இரண்டாம் பாகத்தில் விவரமாகக் கூறுகின்றேம். தாயின் பிறப்பைப் பற்றிச் சொல்லுகிறேம் விவரமாக. ஒரு சிற்றூரில் கௌரிக வமிசத்தில் அவள் பிறந்தாள். பல ருக்கும் நல்லவளாக இருந்த சமயத்தில் ;

33. வரனுமே செட்டுச் செய்து வந்தவ ரிலேப்பை யாற்றித்
திறமையா யிந்த மாதைச் செல்வனும் மணம்பு ரிந்து
உறைந்தனன் காஞ்சி தன்னில் உதித்திடு மதலே யுண்டாய்ப்
பெருமையாய்த் தெய்வ பக்தி பேதையு மில்லா ளாகி ;

33. வியாபாரம் செய்து, பகித்து வந்தவர் இலேப்பைப் போக்கி, கல மூடன் வாழ்ந்து கொண்டிருந்த செல்வன் ஒருவன் இவளே மணம் புரிந்து கொண்டு, காஞ்சிபுரத்தில் வசித்து வந்தான். அப்பொழுது புத்திர பாக்கியம் ஏற்பட்டது. இந்தப் பெண்ணுக்குத் தெய்வபக்தி இல்லாமல் ;

34. பணிகள்மே லிச்சை வைத்துப் பாவையு மாண்டா
[ளென்றேரும்
கணிகையு மிச்சென் மத்தில் கருதிஞ ளிவளே யென்றேரும்
அணையவே யிவள்பிற் சென்மம் ஆலங்காட் டதற்கு
[உத்திரம்
வணிகர்தம் குலமு திப்பாள் வரைகின்றேரும் மேலும் கேளே.

34. ஆபரணங்கள்மீது விருப்பங் கொண்டு, இறுதியில் மாண்டாள் என்று கூறினேம். இப்பிறப்பில் இந்த ஜாதகனின் தாயாகப் பிறந்தாள் இவள் என்று கூறுகிறேரும். இவள் மறுபிறப்பில் திருவாலங்காட்டிற்கு வடதிசையில் வணிகர் குலத்திலுதிப்பாள், என்று கூறுகின்றேரும். மேலும் கேட்பாயாக.

35. தந்தையின் பூர்வ சென்மம் சாற்றுவோம் தணிகை கீழ்பால்
வந்ததோர் பேரூர் தன்னில் வளமுள ரெட்டி வமிசம்
சந்ததம் கிருஷி யோங்கித் தனம்பூமி யுள்ளா னுகிச்
சிந்தையில் தரும வானுய்ச் செல்வனும் வாழ்ந்தா
[னென்றேரும்.

35. தந்தையின் முற்பிறப்பைப் பற்றிக் கூறுவோம். திருத்தணிகையின் கிழக்கில் உள்ள ஒரு பெரிய ஊரில், செல்வச் செழிப்புள்ள ரெட்டியார் வமிசத்தில் பிறந்திருந்தான். விவசாயத் தொழிலில் பெருமைபெற்று, செல்வம் விளைநிலம் இவைகள் மிகுதியுமுடையவனுகி, மனத்தில் தரும சிந்தையுடையவனுய் இவன் வாழ்ந்திருந்தான் என்று கூறினேம்.

36. மரணமே யாகி யேதான் வந்தன னிவனின் தந்தை
அறைகின்றேரும் இவன்பின் சென்மம் ஆதிமால் வேங்க
[டத்துள்
திறமையாய்ப் பிரம்ம சேயாய்ச் செனித்துமே அரசர்பக்கல்
உரமுடன் சிவிப் பானும் உத்தமி மேலுங் கேளே.

36. பின்பு மரணமடைந்து இப்பிறப்பில் பிறந்தான் இவன் தந்தை என்று கூறுகின்றோம். இவன் மறுசென்மத்தில் திருவேங்கடத்துள் அந்தணர் குலத்தில் பிறந்து, அரசர்களைச் சார்ந்து ஜீவித்திருப்பான். உத்தமியே! மேலுங் கேட்பாயாக.

37. தந்தையின் மரணங் கேளே சாற்றுவோம் மூப்ப தாண்டில்
பந்தமாய் மாதுர் காலம் பகருவோம் அதில்மேல் பத்தும்
எந்தையே யிவனின் காலம் இயம்புவோம் அன்பா னேழில்
மூந்திய [1]மேட மாத மெழில்பரு வங்கள் தன்னில் ;

37. இந்த ஜாதகனின் தந்தைக்கு மரண காலத்தைப் பற்றிச் சொல்லுவோம். இவன் மூப்பதாவது வயதில் தந்தை மரணமடைவான். இவன் தாய் இவனுடைய நாற்பதாவது வயதில் மரணமடைவாள். இந்த ஜாதகனின் மரண காலத்தைச் சொல்லுவோம். ஐம்பத்தேழாவது வயதில் சித்திரை மாதத்தில் வளர்பிறையில் ;

38. சேத்தும சுரத்தி னுலே செல்வனு மரண மாகி
வித்தகன் பின்சென் மத்தை விளம்புவோம் காசி தன்னில்
தீர்த்தத்துக் கருகி லேதான் செனிப்பனும் பிரம்ம சேயாய்
நாற்றிசை புகழ வாழ்வன் நாயகி கேட்டி டாயே.

38. கபவாத சுரத்தினுலே மரணமடைவான். இவன் பின்சென் மத்தைக் கூறுவோம். காசி நகரில் கங்கை நதிக்கருகில் உள்ள ஒரு வீட்டில் அந்தணர் குலத்தில் பிறப்பான். நான்கு திசையிலும் உள்ளவர்கள் புகழும் படி வாழ்வான். தேவியே! கேட்பாயாக.

39. இவனுடை யோகச் செய்கை இயம்புவோம் தனங்க
[ளுள்ளான்
நவதானியம் விருத்தி செய்வன் நாடெல்லாம் கீர்த்தி ஏற்பன்
அவனியில் செட்டுச் செய்வன் அநேகருக் குதவி செய்வன்
பகைவரை வெல்வா னுகும் பெருகிடும் பூமி தானே.

39. இவனுடைய யோகத்தைப் பற்றிக் கூறுவோம். செல்வமுடையவன். நவதானியங்களையும் விருத்தி செய்வான். நாடெங்கும் புகழ் ஏற்படும். வியாபாரம் செய்வான். பலருக்கு உதவி செய்வான். விரோதிகளை வெற்றி கொள்ளுவான். இவனுக்கு நிலங்கள் மேன்மேலும் சேரும்.

40. பரியுண்டு சகடு முண்டு பலவித லாபம் சேர்ப்பான்
வரவரச் செல்வ மோங்கும் மாடுகள் விருத்தி யாகும்
நிறைந்திடும் திருவு தானும் நிகர்திருப் பணியும் செய்வன்
அரசர்கள் உறவு கொள்வன் அம்பிகை யாளே கேளாய்.

---

1. சித்திரை.

40. குதிரைகளுண்டு. வண்டிகளும் உண்டு. பலவிதங்களில் லர்பம் அடைவான். வரவரச் செல்வங்கள் பெருகும். மாடுகள் மிகுதியாம். இலட்சுமீகடாட்சம் பூரணமாக ஏற்படும். ஒப்பற்ற பல திருப்பணிகள் செய்வான். அரசர்கள் நட்பைக் கொள்ளுவான். பார்வதியம்மையே! கேள்.

41. பால்பாக்கிய மூடைப ளுகும் பாரினுல் பொருளு முண்டு
சீலவான் அன்ன மீவன் திருமாலுக் கடிமை செய்வன்
ஆலம்போல் பகைவர் தம்மை யவனுமே செயிப்பா ளுகும்
கோலமாய்த் தீர்த்தம் தோய்வன் குடும்பத்தை யாதரிப்பன்.

41. பால் பசு பாக்கியமுடையவன். பூமியினுல் செல்வம் உண்டு. ஒழுக்கமுள்ளவன். ஏழைகளுக்கு உணவு தருவான். திருமாலுக்குத் தொண்டு செய்வான். விஷம் போன்ற கொடிய பகைவர்களை வெல்வான். பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவான். குடும்பத்தை நன்கு காப்பான்.

42. பாலகன் செனன காலம் பரிதியின் தசையி லேதான்
கோலமாய் ஆண்டு மூன்று குறித்திடும் திங்கள் ஆறும்
ஞாலமேல் சாத கர்க்கு நவிலுவோம் ரோகம் தானும்
சீலமாய்த் தந்தைக் கேதான் செலவுகள் அதிக முண்டு.

42. இந்தப் பாலன் பிறந்த காலத்தில் சூரியமகாதசையில் மூன்று வருஷம் ஆறு மாதம் இருப்பு என்று சொல்லுவோம். இவனுடைய தந்தைக்கு இவன் பிறக்கும்போது வியாதியுண்டு. செலவுகள் மிகுதி.

43. பந்துவில் சூத முண்டு பயங்கர மனங்க ளுண்டு
திங்தையாய் நேத்திர ரோகம் தீட்சண்யம் சிரங்கு முண்டு
வந்துமே நிவர்த்தி யாகும் விவரங்கள் ரெண்டில் சொல்வேன்
கந்தனைப் பெற்ற மாதே! கழறுவோ மிதன்மேல் கேளே.

43. உறவினர்கள் வழியில் அசுபம் ஏற்படும். பயங்காமான எண்ணங்கள் உண்டாம். கண் வியாதியுண்டு. சிரங்குமுண்டு. இவைகள் பின்பு நிவர்த்தியாம். மற்ற விவரங்கள் இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். முருகக்கடவுளைப் பெற்ற பார்வதியே! இதற்குமேல் சொல்லுவோம், கேட்பாயாக.

44. மதிதசை ஒருபா ளுண்டும் வந்திடும் கல்வி தானும்
பதியது புதிதாய் நேரும் பகருவோம் குடும்பம் வேறு
சதியிலா துணைவர் விருத்தி சனபதை பூமி சேரும்
நதிபல தீர்த்தம் நேரும் நாற்காலி விருத்தி யுண்டாம்.

44. சந்திரமகாதசை பத்து வருஷங்களும் நல்ல கல்வி கற்பான். வசிக்கும் ஊர் புதிதாகும். குடும்பம் வேறும். உடன் பிறந்தார் விருத்தி ஏற்படும். ஜன விரோதம் உண்டாகும். நிலம் சேரும். பல தீர்த்தங்களில் நீராடும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். கால் நடைகள் விருத்தியுண்டு.


45. செட்டுகள் செய்வான் தந்தை சனங்களும் வசிய மாகும்
நட்டமும் கொஞ்ச முண்டு நன்மாதுர் வாயு பாதை
திட்டமாம் பிதாம கிக்குச் செப்பினேம் மார கங்கள்
சட்டமா யிரண்டில் சொல்வேன் சங்கரி விவர மாக.

45. வியாபாரங்கள் செய்வான். தந்தையைச் சேர்ந்தோர் இவனுக்கு வசமாவர். வியாபாரத்தில் சிறிது நஷ்டமும் ஏற்படும். தாய்க்கு வாயு ரோகம் உண்டாகும். இவனுடைய பாட்டிக்கு (தந்தையைப் பெற்ற தாய்க்கு) மரணம் முதலியவை பற்றி உறுதியாக இரண்டாம் பாகத்தில் விவரமுடன் சொல்லுவேன். பார்வதியே! கேள்.

ஜாதகம் 3

1. பரிதிபொன் புதனும் வண்டி பார்மகன் ராகு பெண்ணில்
கரியவன் நந்தி யாகக் கலிபுகர் [1]மகளீர் தங்கச்
சரியிலா கேது கெண்டை சென்மமும் நந்தி யாக
நிரையவே நவக்கோள் இவ்வார் நின்றதால்
[பலன்சொல் வீரே.

1. சூரியன், குரு, புதன் கடகத்திலும், செவ்வாய், ராகு கன்னியிலும், சனி ரிஷபத்திலும், சந்திரன், சுக்கிரன் ஆகியோர் மிதுனத்திலும், கேது மீனத்திலும் தங்கி, இலக்கினம் விருஷபமும் ஆக இவ்விதம் நவக்கிரகங்களும் நிறைந்திருக்கும் இந்த ஜாதகத்துக்குரிய பலனைச் சொல்லுவீர்;



2. உமையவள் கேட்கும் போது உரைக்கின்றார் முனிவர்
[தாமும்
அமைந்திடு மாண்பால் சென்மம் அறைகின்றேம் இல்லம்
[தானும்
எமன்வாசல் கீழ்மேல் வீதி இந்திரன் திசையில் தந்தி
பவமுள மேற்கில் காளி பரமனுந் தடாகம் சோலை.

2. என்று பார்வதி கேட்கும்போது, முனிவர் சொல்லுகின்றார், இது ஆண்மகன் ஜாதகம். இவனுடைய வீட்டைப் பற்றிச் சொல்லுவோம். தெற்குப் பார்த்த வாயிலுடையது. கிழக்கு மேற்கான வீதி. கிழக்கில் பிள்ளையார் கோயில். மேற்கில் காளி, சிவபெருமான் ஆகியோர் கோயில்களும், குளம், சோலை முதலியனவும்;

---

1. மிதுனராசி.

3. சந்தியும் தந்தி நிற்கும் தென்மேற்கில் மாரி யுண்டு
நேர்ந்திடு மாயோன் தானும் நுவலுவோம் சமவூர் தன்னில்
இந்தநல் அடையா ளத்துள் இவனுமே வாசம் செய்வன்
மூந்திய பலன்கள் தம்மை மொழிகின்றோம் மேலும் கேளே.

3. காற்சந்தியும், விநாயகர் கோயிலொன்றும் உள்ளன. தென்மேற்குத் திசையில் மாரியம்மன் கோயிலுண்டு. திருமால் கோயிலும் அத்திசையில் இருக்கின்றது என்று சொல்லுவோம். மேற்கூறிய அடையாளங்கள் கொண்ட இப்படிப்பட்ட ஒழுங்குள்ள ஊரில் இந்த ஜாதகன் வசிப்பான். இவனுக்கு உரிய பலன்களைச் சொல்லுவோம் மேலுங் கேட்பாயாக.

4. தந்தையின் வர்க்கம் தன்னைச் சாற்றுவோ மெழுவ ராகும்
நொந்திடு யாவுந் தானும் நுவலுவோம் பிதாகு ணத்தைச்
சந்ததம் ஒடிச்சல் தேகி தக்கமால் நிறத்த னாகும்
கந்தன்மேல் பத்தி பூண்பன் கரமதில் குற்ற முள்ளான்.

4. இவனுடைய தந்தையின் வர்க்கத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஏழு பேர்கள். இவன் தந்தை தவிர மற்றவர் அனைவரும் மாள்வர். தந்தையின் குணத்தைப் பற்றிச் சொல்லுவோம். மெல்லிய உடலுடையவன். கரிய நிறமுடையவன். முருகப்பிரான்மீது பக்தி கொள்வான். கையில் நீங்கான ரேகையுடையவன்.

5. அடக்கமு மொடுக்க முள்ளான் அன்னங்கள் போட வல்லான்
துடுக்கென வார்த்தை கூறுன் சுகபுசிப் புடைய னுவன்
நடக்கையு நல்ல தாகும் நாயகி விருப்ப முள்ளான்
இடக்குகள் சொல்லா னுகும் இன்பமாய் வார்த்தை கூர்வன்;

5. அடக்க வொடுக்க முள்ளவன். ஏழைகளுக்கு உணவு அளிப்பதில் வல்லவன். துடுக்கான சொற்களைச் சொல்லான். சுவையுள்ள உணவைச் சாப்பிடுவான். நல்ல நடத்தையுள்ளவன். மனைவியிடம் விருப்பமுள்ளவன். இடக்கான பேச்சுக்களைப் பேசான். இனிமையான வார்த்தைகளைப் பேசுவான்.

6. பூமியும் பரிபா லிப்பன் புண்ணிய மனத்த னாகும்
தீமையு மொருவர்க் கெண்ணன் சிரசினில் குறியு முள்ளான்
தாமத குணத்த னாகும் தங்கிடும் பித்த சூடு
நேமியில் மாது ரிரண்டு நிகழ்த்திலை மிவனுக் கேதான்.

6. நிலபுலங்களை ஒழுங்காகப் பாதுகாப்பான். நற்குணமுள்ள மனமுடையவன். எவர்க்கும் தீங்கு நினைக்கமாட்டான். தலையில் ஓர் அடை

யாளமுள்ளவன். சுறுசுறுப்பு இல்லாதவன். இவனுக்குப் பித்தசூல உண்டு. இவனுக்குத் தாயார் இருவர் என்று கூறினேம்.

7. எந்ததாய்ப் புத்திர னேயா யிலகினுன் இவனே சொல்வாய்
முந்திய மாது ருக்கு முயன்றவன் இவனே என்றேரும்
பிந்திய மாதுருக்குப் பேசுவோம் ஆண்பால் ரெண்டு
நந்திடு மற்ற தெல்லாம் நாயகி மேலும் கேளே.

7. இரண்டு தாயாரில், யாருடைய புத்திரனாக இந்த ஜாதகன் விளங்கினுன்? சொல்லுவீராக, என்று பார்வதியம்மன் கேட்க, முனிவர் சொல்லுகிறார். முதல் தாய்க்குப் பிறந்தவன் இவன் என்று கூறினேம். இவனுடைய சிறிய தாயாருக்கு ஆண் குழந்தைகள் இருவர். மேலுங் குழந்தைகள் பிறந்து மாளும். தேவியே! மேலுங் கேள்.

8. இக்குண முடையோ னுக்கு இவனுமே உதிப்பா னுகும்
தொக்கவே யிவன்கு ணத்தைச் சொல்லுவோம் யூகை
[யுள்ளான்
தக்கவே கல்வி யுள்ளான் தைரிய மில்லா னுகும்
நக்கர்மேல் பத்தி யுள்ளான் நாயகி மேலும் கேளே,

8. மேற்கூறப்பட்ட குணமுடைய தந்தைக்குப் புதல்வனாக இவன் பிறப்பான். இனி, இந்த ஜாதகனின் குணத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஊகமுடையவன். கல்வியறிவுள்ளவன். தைரியமில்லாதவன். சிவபெருமான்மீது பக்தியுள்ளவன். பார்வதி! மேலுங் கேள்.

9. கருநிற மொடிசல் தேகி கனத்தவர் நேசம் கொள்வன்
திருமகள் வாச முள்ளான் சீக்கிர நடையு முள்ளான்
உறன்முறை மெச்ச வாழ்வன் ஒண்டொடி யார்க்கு நேயன்
குறைவிலா வாழ்வா னுகும் குத்திரம் பேசா னென்றேரும்.

9. கரிய நிறமுடையான். மெல்லிய சரீரமுள்ளவன். மதிப்புடைய பெரியோர் நட்பைக் கொள்ளுவான். இலட்சுமீகடாட்ச முடையவன். விரைவான நடையுடையவன். உறவினர் பாராட்டும்படி வாழ்ந்திருப்பான். மனைவியிடம் விருப்பமுள்ளவன். கவலையில்லாமல் வாழ்வான், குற்றமுள்ள சொற்களைப் பேசமாட்டான் என்று சொன்னேம்.

10. கிருஷிகள் செய்வா னுகும் கீர்த்திமான் பெருமை யுள்ளான்
விரைவினில் கோபம் கொள்வன் விளைபுலம் விருத்தி
[செய்வன்
திறமான வார்த்தை யுள்ளான் செனவுப காரமுள்ளான்
அரனடி யார்க்கு நேயன் அம்பிகை யாளே கேளாய்.

10. விவசாயம் செய்வான். கீர்த்தியுடையவன். சீக்கிரத்தில் கோபங் கொள்ளுவான். விளைநிலங்களை அபிவிருத்தி செய்வான். பயனுள்ள சொற்களைப் பேசுவான். மக்களுக்கு உபகாரம் செய்வான். சிவனடியார்களிடம் விருப்பங் கொண்டவன். பார்வதியே! கேள்.

11. துணைவரை யாதரிப்பன் சுத்தனன் மனத்தனுகும்
இணையிலாச் செல்வ முள்ளான் இடருகள் வந்து நீங்கும்
அனையவே புத்திர ரில்லான் ஆங்கார முடைய னுகும்
தனமுளான் சுசீல னுவன் தந்தைதாய் இஷ்ட மாவன்.

11. உடன்பிறந்தார்களைக் காப்பான். தூய்மையான மனமுடையவன். ஒப்பில்லாத செல்வமுள்ளவன். இவனுக்குத் துன்பங்கள் பல வந்து நீங்கிப்போம். புத்திரர் இல்லாதவன். சிறிது அகங்காரமுடையவன். நல்லொழுக்க முள்ளவன். தந்தை தாயாரிடம் பிரியமுள்ளவன்.

12. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோ மெழுவ ராகும்
நவனியில் மூத்தோர் காணும் நாயகன் பின்னு லேதான்
அவனியில் ஒருவ னுண்டு அழிந்திடு மற்ற தெல்லாம்
தவசியே யவன்கு ணத்தைச் சாற்றுவோம் கேளு மம்மா.

12. இவனுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். அவர்கள் எழுவர். இவனுக்கு மூத்தவர் எவருமில்லை. இளையவர் எழுவரில் ஒருவன் நிலைப்பான். மற்றவர் மரிப்பர். முனிவரே! இந்த ஜாதகனுடைய இளைய சகோதரன் குணத்தைச் சொல்லுவோம். தாயே! நீங்களுங் கேளுங்கள்.

13. கல்விமான் பெருமை யுள்ளான் காமுகி ஒடிச்சல் தேகி
இல்லையென் றுரைக்க மாட்டான் யாரையு முறவு [கொள்வான்
அல்லல்கள் அதிக முண்டு அவன்முக வடிவு காணும்
நல்லவ னுகி வாழ்வன் நாடெல்லாம் கீர்த்தி யுள்ளான்.

13. கல்வியறிவுடையான். பெருமையுள்ளவன். காமவிச்சை யுடையான். மெல்லிய தேகமுள்ளவன். கேட்பவருக்கு இல்லையென்று சொல்லாதவன். எவரையும் தனக்கு நண்பனுகக் கொள்ளுவான். இவனுக்குத் துன்பங்கள் மிகுதியாக உண்டு. முகத்தில் பிரகாசமுண்டு. நல்ல குணமுடையவனுக வாழ்வான். நாடு முழுவதும் புகழ் பரவும்.

14. தீரமா மனத்த னுகும் செப்புவான் கட்டு வார்த்தை
பாரியாள் இட்ட முள்ளான் பலவிதச் செட்டுச் செய்வன்
தேரிய வழியைக் கூர்வன் சயம்செய்வ னெடுத்த வேலை
காரிய சமர்த்த னுகும் காலாட்கள் உடைய னுமே.

14. தைரியமான மனமுடையவன். சொற்களைக் கட்டிக் கூறுவான். மனைவியிடம் விருப்பமுடையவன். பலவித வியாபாரங்கள் செய்வான். ஆராய்ந்து தேர்ந்து நல்வழியைக் கடைப்பிடிப்பான். இவன் தொடங்கிய செயல்களில் வெற்றி கிட்டும். காரியங்களைச் செய்வதில் சமர்த்தன். பணியாட்களை யுடையவன்.

15. துண்டமாம் குணத்த னுகும் துருசான நடையு முள்ளான்
அண்டினோர்க் குதவி செய்வன் அரசர்கள் இஷ்டம்
[கொள்வன்
பண்டிபண் டாரம் சேர்ப்பன் பெருதன முடைய னுவன்
உண்டியும் சுகமாய்க் கொள்வன் உத்தமி மேலும் கேளே.

15. அடிக்கடி மாறும் சுபாவமுடையவன். வேகமான நடையுடைய வன். தன்னை யடைந்தவர்க்கு உதவி செய்வான். அரசர்களின் பிரியத் தைக் கொள்ளுவான். வண்டிகள் பொருள்கள் சேர்ப்பான். மிகுந்த செல்வமுடையவன். சுகமான போஜனத்தைக் கொள்ளுவான். உத்தமியே! மேலுங் கேட்பாயாக.

16. துணையவள் ஒருத்தி யாகும் வருடப்புத்திரர் ஆண்பால்
[ரெண்டு
அனையவே பெண்பால் ரெண்டு அறைகின்றோம் அவனுக்
[கேதான்
கனமுள சாத கர்க்குக் கழறுவோம் மணத்தின் காலம்
இணையில யிரொன் பாண்டுள் ஈசானிய திசையி லேதான்;

16. இவனுக்குச் சகோதரி ஒருத்தி யுண்டு. இவனுக்கு ஆண்மக்கள் இருவரும், பெண்கள் இருவரும் உண்டாவர். இனி, இந்த ஜாதகனுக்கு மணமாகுங் காலத்தைப் பற்றிச் சொல்லுவோம். இவனுடைய பதினெட்டா வது வயதில், வடகிழக்குத் திசையிலிருந்து;

17. மாதுரு வர்க்கந் தன்னில் வருகுவாள் குணத்தைக் கேளாய்ச்
சூதிலாள் சிவந்த மேனி சுகமான வார்த்தை கூர்வாள்
மாதவர் தமைத்து திப்பள் வரனுக்கு நேய முள்ளாள்
பாதக மில்லா நெஞ்சப் பஞ்சைகட் கன்ன மீவள்.

17. தாயாருடைய வர்க்கத்திலிருந்து மனைவி வருவாள். அவள் குணத் தைக் கேளுங்கள். வஞ்சனையில்லாதவள். சிவந்த உடலுடையவள். இனிய சொற்களைப் பேசுவாள். சான்றோர்களை வணங்குவாள். கணவனுக்கு விருப்பமுள்ளவள். பிறருக்குத் தீங்கு நினையாத மனமுடையாள். கதி யில்லாதவர்கட்கு உணவு தருவாள்.

18. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணேும்
அத்திரி சொல்லும் போது அம்பிகை கேட்க லுற்றுள்
வித்தகன் தனக்குப் புத்திரர் விளங்காது யென்று சொன்னீர்
குற்றத்தைச் சொல்லு மென்ன கூறுவார் முனிவர் தாமே.

18. இந்த ஜாதகனுக்குப் புத்திர பாக்கியத்தைப் பற்றிச் சொல்ல
கிரக வலிவு இல்லை என்று அத்திரிமுனிவர் சொல்லும்போது, பார்வதி
கேட்கலுற்றாள். இவனுக்குப் புத்திரர் நிலையார் என்று கூறினீர். என்ன
தோஷத்தினால் நிலைக்கவில்லை? சொல்லுங்கள், என்று கேட்க, முனிவர்
சொல்லுவார்.

19. [1]அஞ்சினில் சேயும் ராகு மமர்ந்திடில் மதலை தோஷம்
மிஞ்சியே யுதித்தா லும்தான் விளங்காது என்று
[சொன்னேம்
தஞ்சமா யைந்தோ னேடு தபனனும் மறையோன் கூடி
விஞ்சியே இருப்ப தாலே விருத்தியாம் சுதர்கள் என்றேும்.

19. ஐந்தாம் இடத்தில் செவ்வாயும், ராகுவும் தங்கியிருந்தால் புத்திர
தோஷமுண்டு. அப்படிப் பிறந்தாலும் நிலையாது என்று சொன்னேம்.
ஐந்தாம் இடத்துக்கு உரியவனாகிய புதனுடன் சூரியனும் குருவும் கூடிக்
கடகத்தில் இருப்பதால் புத்திரர்கள் உதிப்பர் என்று சொன்னேம்.

20. தசமத்தோன் சனியே யாகிச் சென்மத்தி லிருந்து மூன்றை
அசைவிலா பார்த்த தாலே அவனுக்கு முன்னூழ்த் தோஷம்
இசைந்ததால் சுதர்கள் தோஷம் இயம்புவீர் விபர மாக
வசையதைச் சொல்லு கின்றேன் மங்கையே கேட்டி டாயே.

20. பத்தாமிடத்தானாகிய சனி இலக்கினத்தில் இருந்து கொண்டு
மூன்றுமிடத்தைப் பார்ப்பதாலும், இந்த ஜாதகனுக்கு முன்சென்ம தோஷம்
இருப்பதாலும் பிறந்த பிள்ளைகள் நிலைக்கவில்லை என்று முனிவர் கூறினார்.
உடனே பார்வதி முன்சென்ம தோஷத்தை விவரமாகச் சொல்லுங்கள்
என்று கேட்க, அந்தத் தோஷத்தை விவரமாகச் சொல்லுகின்றேன்;
பார்வதியே! கேட்பாயாக, என்று கூறத்தொடங்கினர் முனிவர்.

21. வந்தவன் முன்சென் மத்தில் வாழைமா நகரி லேதான்
இந்துவார் குலமு தித்து இணையிலாக் குடும்பி யாகிச்
சொந்தபந் துக்கு மேலாய்ச் சுதர்களு மனைவி யுண்டாய்ச்
சந்ததம் வாழு நாளில் சாற்றுவோம் ஊழி தானே

21. இவன் மூற்பிறப்பில் வாழைமாநகரில் சந்திர வமிசத்தில் உதித்
தான். ஒப்பற்ற குடும்ப வாழ்க்கை யுடையனாய், தன் உறவினர்க்கெல்லாம்

1. இலக்கினத்துக்கு ஐந்தாமிடம்; கன்னியாராசி.

மேலாய் வாழ்ந்தான். மக்களும் மனைவியு முண்டாகி வாழ்கின்ற காலத்தில் நேர்ந்த தோஷத்தைச் சொல்லுகின்றேன்.

22. அந்நகர் நதியின் பக்கல் அணுகிய வரசி லேதான்
பன்னிய பசாசு ஒன்று பயின்றது அறியா மல்தான்
இன்னவன் விருட்சம் தன்னை யிவன்வேலை தனக்குவேண்டி
மன்னவன் வெட்டி விட்டான் வந்ததோர் பசாசு தானும் ;

22. இந்த நகரத்திலுள்ள நதிக்குப் பக்கத்தில் ஓர் அரசமரமிருந்தது. அங்கு ஒரு பிசாசு வசித்தது. அதனை யுணராமல் இவன் அந்த மரத்தைத் தனக்குத் தேவையான ஒரு காரியத்துக்காக வெட்டினான். அந்தப் பிசாசு,

23. இருப்பிட மில்லா தாலே யியம்பிற்றுச் சாபம் தானும்
மறுபிறப் பினிலே நீயும் வந்தயில் தன்னை நீங்கி
இருமையாய் வேறி டத்தில் செல்லுவாய் இதுவல் லமால்
கருவுகள் தோஷ மாகக் கழறிற்றுக் [1]கருப்புத் தானும்.

23. தனக்கு இருப்பிடமில்லாததால், இவனுக்கு ஒரு சாபம் இட்டது. நீ மறுபிறப்பில் பிறந்த வீட்டை விட்டு நீங்கி வேறிடஞ் செல்லுவாய். இது தவிர, உனக்குப் பிறக்கும் குழந்தைகள் கர்ப்பத்திலேயே நாசமடையும் என்று கூறியது பிசாசு.

24. இதுஒரு தோஷ மாச்சு இயம்புவேன் இன்ன மொன்று
பதியினில் உரக னேர்நாள் பயின்றது அதனைக் கண்டு
சதியினல் மனையில் சர்ப்பம் என்றுமே யெண்ணி மல்தான்
அதிபனு மடித்து விட்டான் வந்தது தோஷம் தானும்.

24. இந்த ஒரு தோஷம் இவனுக்கு ஏற்பட்டது. இன்னுமொரு தோஷமுண்டு. சொல்லுவேன். இவன் வீட்டில் ஒரு நாள் பாம்பு ஒன்று வந்தது. அதனைக் கண்ட இவன் நல்லபாம்பு என்று நினைக்காமல் அடித்துக் கொன்று விட்டான். அந்தத் தோஷம் வேறு வந்தது இவனுக்கு.

25. இவ்வித தோஷத் தாலே இலகிற்று அச்சென் மத்தில்
பவ்வமாய் அந்தி யத்தில் பாலகர் யாவும் போக்கி
நவ்வியே மரண மாகி நாற்றலைக் கஞ்சன் தன்னல்
ஒவ்வியே வரையப் பட்டு உதித்தவ னிவனே யம்மா.

25. இந்தவிதத் தோஷங்களினலே அப்பிறப்பில் இவன் கடைசி காலத்தில் புதல்வர்கள் அனைவரும் மரிக்க, பிறகு இவனும் மரணமடைந்து மீண்டும் பிரமனல் படைக்கப்பட்டு, இப்பிறப்பில் பிறந்தவன் இவனே யென்று சொன்னேம், தாயே.

---

1. பிசாசு.

26. அந்ததோ ரிரண்டு தோஷம் அணுகிற்று இச்சென் மத்தில்
மைந்தர்க்குத் தோஷ முண்டாம் அறைகின்றேம் சாந்தி [ஒன்று
முந்தியே பசாசு பீடை முயன்றதால் நிவர்த்தி கேளீர்
கந்தனைப் பெற்ற மாதே கழறிய மொழிகுன் றாது.

26. அந்த இரண்டு தோஷங்களும் இவனைச் சேர்ந்தன. அவற்றினால் இப்பிறப்பில் புதல்வர்களுக்குத் தோஷமுண்டாயிற்று. இதற்குச் சாந்தி ஒன்று சொல்லுகின்றேம். முதலில் எற்பட்ட பிசாசின் பீடைக்குப் பரிகாரம் சொல்லுவோம். முருகனைப்பெற்ற பார்வதியே! நாம் கூறியவை தவறு.

27. அதர்வணம் கற்றோ ராலே அம்பிகை பூசை செய்து
பதியினில் சாந்தி செய்து பராபரி பீசம் தன்னைச்
சததள தகட்டில் கீறித் தன்மனை யாளுந் தானும்
கதிகொள வணிவா னுகில் காலைகள் விருத்தி யாமே.

27. அதர்வண வேதம் அறிந்தவராலே அம்பிகைக்குப் பூசை செய்வித்து, சாந்திகள் பல செய்து, பராசக்தியின் பீஜாட்சரத்தை நூறு இதழ் கொண்ட பொன் தகட்டில் பொறித்து, தன் மனைவியுந் தானும் அணிந்து கொள்வானுகில், புதல்வர்கள் விருத்தி எற்படும்.

28. ராகுவின் தோஷம் தீர நவிலுவோம் சாந்தி ஒன்று
பாகமா நதியின் பக்கல் பாலகன் அரசு வைத்து
வேகமாய்ச் சிலையி னாலே விதானமாய்ப் பணியும் செய்து
ஆகவே அர்ச்சித் தேத்தி அருமறை யோர்க்கு அன்னம்;

28. பாம்பை அடித்ததனால் எற்பட்ட தோஷந்தீர ஒரு சாந்தி கூறுகின்றேம். தன் ஊரிலுள்ள நதிக்கரையில் அரசமரம் வைத்துப் பயிர்செய்து, அதன்கீழே கல்லினால் நாகப்பிரதிஷ்டை செய்து, அந்த நாகத்துக்கு அர்ச்சனை முதலியன செய்து போற்றி, வேதமுணர்ந்த அந்தணர்களுக்கு உணவு பொன் முதலிய,

29. தானமு மீவா னுகில் சர்ப்பத்தின் தோஷம் நீங்கி
மானமாய் மதலை தோன்றும் மர்மமாய்ச் செய்யா னுகில்
ஈனமாம் சுதர்கள் என்றேம் இலகினு மரிட்ட மாகும்
யானையைப் பெற்ற மாதே அறைகின்றேம் மேலும் கேளே.

29. தானங்கள் கொடுத்து உதவினால், கல்லபாம்பினால் எற்பட்ட தோஷம் நீங்கும். பிள்ளைகள் பிறப்பர். இவற்றைச் செய்யாவுகில் மக்கள் தோன்றார் என்று கூறினேம். அப்படிப் பிறந்தாலும் கஷ்டமடைவர். விநாயகரைப் பெற்ற பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

30. சொற்படி செய்வா னுகில் துலங்கிடு மாண்பா லொன்று
மைப்படி பெண்பால் ரெண்டு அறைகின்றேம் தீர்க்க மாகச்
செப்புவேன் மாதுர் சேதி சிவந்திடு மேனி யாவள்
தப்பித மில்லா ளாகும் சாந்தமும் குணவா ளாமே.

30. சொன்னபடி செய்வானுகில் ஆண் குழந்தையொன்றும், பெண் குழந்தைகள் இரண்டும் தீர்க்கமாக இருக்கும். இவனுடைய தாயாருடைய செய்தியைச் சொல்லுவேன். சிவந்த மேனியுடையவள். தீங்கான குண மில்லாதவள். சாந்தகுண முடையவள்.

31. பித்தமும் இருப்பில் ரோகி புண்ணிய மனத்த ளாகும்
வித்தகி சுசில முள்ளாள் விளம்புவோம் துணைவர் தம்மைச்
சுத்தமாய் நவம தாகும் துலங்கிடு மாண்பால் ரெண்டு
பத்தினி அவ்வா றுகும் பகருவோம் தீர்க்க மாக.

31. பித்த நோயுடையவள். நல்ல மனமுள்ளவள். நல்லொழுக்க முடையாள். இவளுடைய உடன் பிறந்தார்களைப்பற்றிச் சொல்லுவோம். அவர்கள் ஒன்பதின்மர். அவர்களில் இரண்டு ஆண்மக்கள் மாத்திரம் தீர்க்கமாக இருப்பர். இந்தப் பெண்ணும் அங்ஙனமே நீண்ட ஆயுளுடையவள் என்று சொல்லுவோம்.

32. மற்றது சேத மாகும் அறைகின்றே மிவள்முன் சென்மம்
வித்தகி தவளே மேல்பால் விளங்கிய சிற்றூர் தன்னில்
சித்தமாய்க் கோகு லத்தில் செனித்துமே மதலை யுண்டாய்ப்
பத்தினி குடும்பி யாகிப் பஞ்சைகட் கன்ன மீந்து ;

32. மற்றவை அழியும். இவள் முன்சென்மத்தைப் பற்றிக் கூறுகின்றேம். தவளே என்னும் ஊருக்கு மேற்கில் இருந்த ஒரு சிறிய ஊரில் இடையர்குலத்தில் பிறந்தாள். குழந்தைகள் பிறந்து பெரிய குடும்பமுடையளாகி ஏழைகளுக்கு உணவுகொடுத்து ;

33. குறைவுக ளில்லா ளாகிக் கோதையும் வாழ்ந்து பின்பு
வரனுக்கு முன்னே மாண்டு வந்தவ ளிவளே யென்றேம்
நிறையவே அவர்கள் வீட்டில் நிற்பளே தெய்வ மாக
அறைகின்றே மிவள்பிற் சென்மம் அம்மணி மேலும்கேளே.

33. ஒருகுறையு மில்லாதவளாகி வாழ்ந்து, தன் கணவனுக்கு முன்பே மாண்டு இப்பிறப்பில் பிறந்திருப்பவள் இவளே யென்று கூறினேம். அவர்கள் வீட்டில் தெய்வமாக இருப்பாள் இவள். இவளுடைய மறுபிறப்பைப் பற்றிச் சொல்லுகின்றேம். தாயே! மேலுங் கேள்.

34. கச்சிக்குக் கீழ்பா லாகக் கனமுள பேரூர் தன்னில்
நச்சணி மதத்த ராக நற்சைவ கங்கை வமிசம்
கச்சணி மாது தோன்றிக் காதலி வாழ்வா ளாகும்
அச்சுதன் தங்கை யாளே அறைகின்றேம் மேலும் கேளே.

34. காஞ்சீபுரத்துக்குக் கிழக்கே, ஒரு பெரிய ஊரில் சைவ மதத்தைச் சேர்ந்த வேளாளர் வமிசத்தில் இந்தப் பெண் பிறந்து வாழ்வாள். திருமாலின் தங்கையாகிய பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

35. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் தொண்டை [நாட்டில்
முந்திய தியின் வமிச முயன்றுமே கிருஷி யாலும்
சந்ததம் செட்டுச் செய்து சகலர்க்கு நல்லோ னுகிச்
சொந்தமாய்த் தும்பி யப்பன் திருப்பணி யதிகம் செய்து;

35. இந்த ஜாதகனின் தந்தையினுடைய முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். தொண்டைநாட்டில் வன்னியர் குலத்தில் பிறந்து, விவசாயத் தொழிலினாலும், வியாபாரங்கள் செய்தும் எல்லோர்க்கும் நல்லவனுகி, யானைமுகக்கடவுளாகிய விநாயகருக்குத் தொண்டுகள் மிகுதியாகச்செய்து;

36. பாரியும் தானு மாகப் பலவித தலங்கள் சென்று
சீருடன் தீர்த்தம் தோய்ந்து சேயர்கள் சாபத் தாலே
சீரிய [1]தோகைக் கேகிக் குமாரர்க்கு அர்ச்சித் தேத்தி
வீறுடன் உள்ளூர் சென்று விரதங்கள் பூண்டு வந்து

36. மனைவியுந் தானுமாகப் பல க்ஷேத்திரங்களும் சென்று, சிறப்பாகப் புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி, புதல்வர்களுக்குத் தோஷம் ஏற்பட்டு அதனைப் போக்க சிறப்புடைய தோகைமலைக்குச் சென்று, முருகப்பெருமானுக்கு அர்ச்சனைகள் செய்து துதித்து, உள்ளூருக்குப் போய்ப் பல விரதங்களை மேற்கொண்டு;

37. சுதர்களும் விருத்தி யாகிச் சுந்தரன் சிலநாள் சென்று
வதிபனும் மரண மாகி வந்தவ னிவனே யென்றேம்
சதியிலா பின்சென் மத்தைச் சாற்றுவோ மவ்வூர் தன்னில்
சுதனுக்குச் சுதனே யாகத் தோற்றுவா னிவனே யம்மா!

37. புதல்வர்கள் விருத்தியேற்பட்டு, மரணமடைந்து இங்குப் பிறந்தவன் இவனே யென்று சொன்னேம். இவனுடைய மறுசென்மத்தைக் கூறுவோம். அவ்வூரிலேயே தன் பிள்ளைக்குப் பிள்ளையாகப் பிறப்பான் இவன், தாயே!

---

1. இது மதுரை ஜில்லாவிலுள்ள ஒருதலம். இங்கு முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ளார்.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1
6899

38. தந்தையின் மரண காலம் சாற்றுவோம் மூப்பா னெட்டில்
மூந்திய தேளின் மாதம் மொழிகிறேம் கருமந் தானும்
பிந்திய அன்னைக் கேதான் பேசுவோம் நாற்பான் ரெண்டில்
சந்ததம் ஆனி மாதம் சாற்றுவோம் மார கங்கள்.

38. இந்த ஜாதகனின் தந்தை மரணமடையுங் காலத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஜாதகனின் மூப்பத்தெட்டாம் வயதில் கார்த்திகை மாதத்தில் தந்தை இறப்பான். இவன் தாய்க்கு இவனுடைய நாற்பத்திரண்டாம் வயதில் ஆனி மாதத்தில் மரணம் ஏற்படும் என்று சொல்லுவோம்.

39. சாதகன் மரண காலம் சாற்றுவோம் அறுபா னுறில்
கோதிலா [1]மகர மாதம் குறைபக்கம் நவமி தன்னில்
மேதினில் பித்த நோயால் வித்தக னுடலம் வாடும்
மாதவர் சொல்லும் போது அறைகின்றார் பராசர் தாமே.

39. ஜாதகனின் மரணகாலத்தைப் பற்றிக் கூறுவோம். அறுபத்தாறும் வயதில், தைமாதம் கிருஷ்ண பட்சம் நவமி திதியில் பித்த நோயினால் இவன் மரணமடைவான் என்று முனிவர் கூறும்போது, பராசரர் கேட்கின்றார்.

40. எப்படிச் சொன்னீ ரய்யா எட்டினுக் குடையோன் தானு
மெய்ப்புடன் குருவே யாகி வில்லுக்கு யெட்டில் நிற்கச்
செப்புமத் தசைகா லத்தே சேயர்க்குத் தோஷ மாகும்
தப்பித மில்லை ராசா தானவன் உச்ச மாகி;

40. ஜாதகன் அறுபத்தாறும் வயதில் மரணமடைவான் என்று எப்படிச் சொன்னீர்கள்? எட்டாமிடத்துக்கு உரியவனாகிய குரு தனுர் ராசிக்கு எட்டாவதாகிய கடகத்தில் இருக்கக், குருமகாதசையில் ஜாதகனுக்குத்தோஷம் ஏற்படும். ஆனாலும், தவறில்லை. குரு உச்சமாகி;

41. புகருமே மிரண்டி லாகப் பொன்னவன் மூன்றில் நிற்கப்
பகையில்லை வயது தீர்க்கம் பகருவோ மிதற்கு நேராய்த்
தகைமைசா தகநூ லில்தான் சாற்றினே மேதா னெட்டாம்
வகையாகப் பார்ப்ப ராகில் மனமது தீரு மென்றேரும்.

41. சுக்கிரன் மிதுனத்திலும், குரு கடகத்திலும் நிற்பதனால் இவர்களுக்குள் பகைகிடையாது. ஆயுள் விருத்தி ஏற்படும். இதற்கு ஆதாரம் சோதிட நூலிலிருந்து கூறினேம். எட்டாம் பார்வையாகப் பார்த்தார்களாலும் மனக்குறை நீங்கும்.

---

1. தைமாதம்.

42. இன்னவன் யோகச் செய்கை யியம்புவோம் சகட யோகம்
மன்னிய வேசி யோகம் வகுக்கின்றோம் பலனை யாங்கள்
தன்னிலே செல்வ வானும் தனம்பூமி யுள்ளா னாகும்
அன்னமு மீவா னாகும் அவன்தர்ம குணமு முள்ளான்.

42. இவனுடைய யோகங்களைப் பற்றிச் சொல்லுவோம். சகட யோகமுண்டு. வேசி யோகமுமுண்டு. இவனுக்குரிய பலன்களைச் சொல்லுகின்றோம். செல்வமுடையவன். நிலங்களுள்ளவன். ஏழை களுக்கு உணவு தருவான். தரும சிந்தையுள்ளவன்.

43. தேவதா பணியும் செய்வன் சிறுத்தவர்க் குதவி செய்வன்
மேதினில் நல்லோ னுவன் விளைபுலம் விருத்தி செய்வன்
கோவலர் நேசம் கொள்வன் குலத்துளோர் மெச்ச வாழ்வன்
ஆவுகள் விருத்தி யுள்ளான் அதிகமாய்க் கீர்த்தி கொள்வன்.

43. தெய்வத் தொண்டுகள் பல செய்வான். ஏழைகளுக்கு உபகாரம் செய்வான். உலகில் நல்லவனாக இருப்பான். விளைநிலங்களை அபிவிருத்தி செய்வான். அரசர்கள் உறவைக் கொள்ளுவான். குலத்திலுள்ளோர் பாராட்டும்படி வாழ்வான். பசுக்கள் விருத்தியுடையவன். மிக்க புகழைக் கொள்வான்.

44. சனியுமே லக்கி னத்தில் சார்ந்திட நற்கு ணத்தன்
கனமுள தீர்த்தம் தோய்வன் காலாட்கள் உடைய னாகும்
இனங்களை யாத ரிப்பன் எதிரியை வசியம் செய்வன்
அனையவை ஐந்து மேலாய் அறைந்தனம் இப்ப லன்கள்.

44. சனி இலக்கினத்தில் சேர்ந்திருப்பதனால் நல்லகுணம் உடைய வனாக இருப்பான். புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவான். பணியாட்களை உடையவன் ஆம். தன் உறவினர்களைக் காப்பான். எதிரியாக இருப் பவனையும் வசப்படுத்துவான். அப்படிப்பட்ட மேன்மையான ஐந்து பலன் களைக் கூறினோம்.

45. காளையு முதித்த காலை கரும்பாம்பு திசையி ருப்பு
நாளது ஆண்டு எட்டும் நவிலுவோம் திங்கள் பத்தும்
வாளைநேர் விழியா ளேகேள் மாதுரு நலியு மாகும்
கோள்களும் கொஞ்ச முண்டு குழவிக்கும் பிணியு முண்டு.

45. இந்த ஜாதகன் பிறந்த காலத்தில் ராகுமகாதசையிருப்பு எட்டு வருஷங்கள், பத்து மாதங்கள் என்று கூறுவோம். மீன்போன்ற கண்களை யுடைய பார்வதியே! கேள். தாய்க்கு நோய்கள் ஏற்படும். இவனைப்

பற்றிய கலகவார்த்தைகளும் கொஞ்சம் உண்டு. குழந்தைக்கு நோயு முண்டு.

46. மாதுரு தந்தை வர்க்கம் வந்திடும் சூத மென்றேரும்
கோதிலாத் துணைவர் சேதம் குறித்தனம் தந்தை நோயாம்
சூதிலாச் சுபமு முண்டு சொந்தமாய்ப் பூமி சேரும்
போதக வானைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

46. தாய்தந்தையர் வர்க்கத்தில் அசுபங்கள் வரும் என்று சொன்னேம். குற்றமில்லாத சகோதரர் மரிப்பர். தந்தைக்கு வியாதியுண்டாகும் என்று கூறினேம். சுபமும் ஏற்படும். சொந்தமாக நிலங்கள் சேரும். யானைமுகக் கடவுளைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

47. பொன்திசை காலந் தன்னில் புதுமனைச் சித்திர மாகும்
தன்னிலே பணமு முண்டு தனதானிய விருத்தி யாகும்
உன்னிதப் பணியும் சேரும் உடன்பிறந் தோர்கள் சேதம்
பன்னிய குடும்பம் வேறு பகருவோம் மேலும் கேளே.

47. குருமகாதசையில் அழகிய புதுவீடு ஏற்படும். செல்வம், தானியம் முதலியன விருத்தியாகும். ஆபாணங்களும் சேரும். உடன்பிறந்தார்கள் நஷ்டமும் உண்டு. குடும்பமும் வேறாகும் என்று சொல்லுவோம். மேலுங் கேட்பாயாக.

48. குடும்பத்தில் சுபமும் சூதம் கொண்டிடும் சமமாம் யோகம்
இடும்புகள் ஒன்று மில்லை இலகிடும் கன்று காலி
மடத்தினில் திருவும் வாசம் அறைகின்றேரும் விபரம்
[ரெண்டில்
தடவரை மகளாய் வந்த சத்தியே மேலும் கேளே.

48. குடும்பத்தில் சுபங்களும் அசுபங்களும் ஏற்படும். சமமான பலன்களுண்டு. தன்பங்கள் ஒன்றுமில்லை. கால்நடைகள் விருத்தியாகும். இலட்சுமி வாசஞ்செய்வாள். விவரமாக இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றேரும். இமயமலையின் புதல்வியாகப் பிறந்த பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

49. காரியின் திசையி லேதான் கனத்திடு யோகம் தானும்
பேறுகள் பெருக்க மாகும் பூமியு மதிக மோங்கும்
சீரியர்க் குதவி செய்வன் தீர்த்தங்கள் பலவும் தோய்வன்
கூரிய குடும்ப மேலாய்க் கோவலர் நேச மாகும்.

49. சனிதசையில் இந்த ஜாதகனுக்கு யோகங்கள் பெருகும். பாக்கியங்கள் மிகும். நிலங்களும் அதிகமாம். சிறந்தவர்களுக்கு உதவிசெய்வான். பல புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வான். குடும்பம் மேன்மையாகும். அரசர்கள் கட்பு ஏற்படும்.

50. தந்தைதாய் ஊரும் நேரும் சதுஷ்பாதம் விருத்தி யாகும்
முந்திய சித்திர வீடும் எய்திடும் மனசந் தோஷம்
சந்ததம் துணைவ ருக்குச் சாற்றினேம் சுபமும் விருத்தி
எந்தையே விபரம் ரெண்டில் இயம்புவோம் கேளு மம்மா.

50. தந்தைதாயர் இவனுடன் ஊரில் நலமுடன் வாழ்ந்திருப்பர். நான்குவகையிலும் செல்வம் பெருகும். அழகிய வேலைப்பாடமைந்த வீடு சேரும். மனத்தில் நிலையான மகிழ்ச்சி ஏற்படும். உடன் பிறந்தார்க்குச் சுபங்கள் விருத்தியாம். இவனைப்பற்றிய மற்றைய விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். கேளுங்கள், தாயே!

51. சாதகன் பின்சென் மத்தைச் சாற்றுவோம் தணிகை [உத்ரம்
கோதிலாப் பேரும் தன்னில் குறித்தனம் சத்திரிய வமிசம்
மேதினில் உதித்து மேலும் வெகுதன முள்ளா னகித்
தீதிலா வரசர் பக்கல் சிவிப்பான் இவனே யென்றோம்.

51. ஜாதகனுடைய மறுபிறப்பைக் கூறுவோம். திருத்தணிகைக்கு வடக்கில் உள்ள ஒரு ஊரில் குற்றமற்ற நற்பெயருடைய க்ஷத்திரிய வமிசத்தில் பிறந்து மேன் மேலும் செல்வ விருத்தியுள்ளவனாய், அரசர்களைச் சார்ந்து வசிப்பான் இவன் என்று சொன்னோம்.

ஜாதகம் 4

1. [1]பொன்சனி [2]ஆட தாகப் பூமகன் வீணை யாக
வன்மதி அரியில் புக்க மால்புக ரிரவி ராகு
தன்மையாய்த் தெருக்கா லேறச் செம்பாம்பு நந்தி யாக
இன்னவன் சென்னங் குண்டை இயம்புவீர் பலனைத் தானே.

1. குருவும் சனியும் மேஷத்திலும், செவ்வாய் மிதுனத்திலும், சந்திரன் சிம்மத்திலும், புதன் சுக்கிரன் சூரியன் ராகு ஆகியோர் விருச்சிகத்திலும், கேது விருஷபத்திலும், தங்கியிருக்கும் படியான கிரக நிலைகளுடன் கூடிய விருஷப லக்கினத்தில் பிறந்த இந்த ஜாதகனுக்கு உரிய பலன்களைச் சொல்லுவீர் முனிவரே!

<table>
<tr><td></td><td>குரு
சனி</td><td>லக்கினம்
கேது</td><td>செவ்வாய்</td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">இராசி
சக்கரம்</td><td></td></tr>
<tr><td></td><td>சந்திரன்</td></tr>
<tr><td></td><td>புதன்
சுக்கிரன்
சூரியன்
ராகு</td><td></td><td></td></tr>
</table>

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூற லுற்றார்
மேதினில் ஆணும் சென்மம் விளம்புமில் கீழ்மேல் வீதி
போதவே வடக்கு வாடை போற்றுவோம் மேற்கில் சந்தி
தீதிலா மாரி தென்மேல் செப்புவோம் கேளு மம்மா.

2. என்று பார்வதிதேவி கேட்கும்போது, கௌசிக முனிவர் சொல்லத் தொடங்கினார். பூமியில் ஆண்மகனாகப் பிறந்த இந்த ஜாதகன் வீடு கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு வரிசையில் உள்ளதாகும். இவன் வீட்டுக்கு மேற்கில் தெருக்கள் கூடும் சந்தி யொன்றுண்டு. மாரியம்மன் கோயில் தென்மேற்குத் திசையில் இருக்கிறது. மேலுஞ்சொல்லுவோம், தாயே! கேளுங்கள்.

3. இதுவலால் வடமேல் திக்கில் இலகிடும் காளி என்றும்
பதியது கூரை கொஞ்சம் பகருவோம் சிற்றார் தன்னில்
நதிகங்கை வம்மி சத்தில் நாயகன் செனிப் பாலுகும்
அதிகமாய்த் தவங்கள் செய்யு மம்மையே மேலும் கேளே.

---

1. குரு.
2. மேடவிராசி.

3. இவையல்லாமல், வடமேற்குத் திசையில் காளிகோயில் விளங்குகின்றது என்று சொன்னோம். வீடு கூரை வேயப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு சிறிய ஊரில் வேளாளர் வமிசத்தில் இந்த ஜாதகன் பிறப்பான். மிக்க தவங்களைச் செய்யும் பார்வதி தேவியே! மேலுங் கேள்.

4. இன்னவன் யோகச் செய்கை இவன்தந்தை தாயின் யோகம்
மன்னிய துணைவர் யோகம் வரும்புத்திர களத்திர யோகம்
தன்னிலே முன்பின் சென்மம் சாந்தியும் கூறு கின்றோம்
அன்னையே யாங்கள் சொல்லும் அருண்மொழி குன்ற
[தென்றோம்.

4. இவனுடைய யோகம், இவனது தந்தையின் யோகம், நீலிபெற்ற இந்த ஜாதகனின் உடன் பிறந்தார்களின் யோகங்கள், இவனுக்குப் பிறக்கப் போகும் குழந்தைகள், வரப் போகும் மனைவி ஆகியவர்கள் யோகங்கள், இவனுடைய முன்பின் சென்மங்களைப் பற்றிய விவரங்கள், சாந்தி முதலிய எல்லாவற்றையுஞ் சொல்லுகின்றோம், தாயே! நாங்கள் சொல்லும் இந்தத் தூய்மையான பலன்கள் தவறு என்று சொன்னோம்.

5. தாதைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு முதல்மா தீன்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
ஓதவே யவன்கு ணத்தைப் போற்றுவோம் மாநி றத்தான்
மேதினில் சமதே கத்தன் வித்தகன் யோக சாலி.

5. இவன் பாட்டனுருக்கு இரு மனைவியர். அவர்களில் இந்த ஜாதகனின் தந்தை முதல் மனைவிக்குப் புதல்வனுகப் பிறந்து விளங்கியவன் என்று சொல்லுவோம். இவன் தந்தையின் குணத்தைப் பற்றிச் சொல்லுவோம். மாநிறமுடையவன். குற்றமில்லாத உடலுடையவன். சாமர்த்தியமுடையவன், அதிர்ஷ்ட முள்ளவன்.

6. கல்விமான் பெருமை யுள்ளான் கனத்தவர் நேசம்
[கொள்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான் யாரையும் வசியம்
[செய்வன்
எல்லைகள் அதிக மசேர்ப்பன் இவன்சுகி போச னத்தன்
சொல்லுமே நெறியுள் ளோனும் சுந்தரி மேலும் கேளே.

6. கல்வியறிவுடையான். பெருமையுடையவன். பெரியவர்கள் நட்பைக் கொள்ளுவான். தன்னிடம் ஒன்றை யாசித்தவர்கட்கு இல்லையென்று சொல்லமாட்டான். எப்படிப்பட்டவரையும் வசப்படுத்துவான். பூமியின் எல்லைகளை அதிகப்படுத்துவான். சுகமான போஜனமுடையவன். சொல்லும் சொற்களில் ஒழுங்குள்ளவன். பார்வதியே! மேலுங் கேள்.

7. பூமியைப் பரிபா லிப்பன் புண்ணிய மனத்த னுகும்
சேமமாங் குடும்பமுள்ளான் சென்றிடம் பெருமை யுள்ளான்
தாமத குணத்தா னுகும் தைரியன் அன்ன மீவன்
மாமன்தன் ஆஸ்தி தன்னே மன்னனு மடைவா னென்றேரும்.

7. நிலங்களைப் பரிபாலிப்பான். நல்ல சிந்தையுள்ளவன். செளக்கிய மான குடும்பமுடையவன். செல்லுமிடங்களில் பெருமையுடையவன். சிறிது மந்தமான குணமுடையவன். தைரியசாலி. பசித்தவர்களுக்கு உணவு தருவான். இவனுடைய மாமனின் சொத்துக்களை இவன் அடைவான் என்று சொன்னேம்.

8. தந்தையின் ஆஸ்தி தன்னைச் சாதகன் அடையா னென்றேரும்
வந்திடும் துணைவர் தம்மை வருக்கின்றேரும் ஆண்பால் [ரெண்டு
பந்தமா யிளையோ னுக்குப் பாலர்கள் இல்லை யாகும்
சந்தத மணமு மில்லான் தன்நேத்ர ரோக முள்ளான்.

8. இவனுடைய தகப்பனரின் சொத்துக்களை இவன் அடைய மாட்டான் என்று சொல்லுவோம். இவன் தந்தையின் உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுகின்றேரும். ஆண் மக்கள் இருவர். இவனுடைய இளையவனுக்குப் பிள்ளைகள் இல்லை. மணமுமில்லாதவன். கண்வியாதியுள்ளவன்.

9. எப்போதும் பிணியு முள்ளான் யூகையும் குறை வதாகும்
செப்புவோம் அவன்பின் வந்தோன் சேதியைக் கேளு [மம்மா
அப்புறம் சிலநாள் செல்வன் அநேகமாய் வணிபம் செய்வன்
மெய்ப்புடன் பொருளைச் சோப்பன் மேவுவன் [1]சோங்கின் [மேலே.

9. எப்போதும் வியாதியுள்ளவன். ஊகிக்கும் சக்தி குறைந்தவன். அவனுக்கு அடுத்த சகோதரனின் செய்தியைச் சொல்லுவோம், கேளுங்கள் தாயே! சிலகாலம் சுலமுடன் வாழ்ந்திருப்பன். பலவித வியாபாரங்கள் செய்வான். முயற்சியுடன் பொருளைச் சேர்ப்பான். கப்பற்பிரயாணம் செய்வான்.

10. தந்திர வாதி யாகும் சமர்த்தனும் யூக சாலி
சந்ததி உடைய னுகும் தைரிய மனத்த னென்றேரும்
சிந்தையில் கபடு மூள்ளான் சித்திலி சாதி யாவன்
பந்தமாய்ச் சலவியா பாரம் பண்ணுவ னிவனே யென்றேரும்.

10. தந்திரமுடையவன். சாமர்த்தியமுடையவன். யூகமுள்ளவன். மக்கள் விருத்தியுடைவன். தைரியமான மனத்தோடு கூடியவன் என்று

1. கப்பல்.

சொன்னேம். மனத்தில் கபடமுள்ளவன். சித்தினிசாதிப் புருஷன். இவன் திரவ உருவமான பொருள்களே வியாபாரம் செய்வான்.

11. இவ்வித அடையா ளங்கள இலகிய தந்தைக் கேதான்
ஓவ்விய மிந்த பாலன் உதிப்பனும் மூன்றும் சென்மம்
பவ்வமாய் முனிவர் கூறப் பத்தினி கேட்க லுற்றாள்
ஓவ்விய தந்தைக் கேதான் உரைத்திட்டீர் தாயார் ரெண்டு.

11. இப்படிப்பட்ட அடையாளங்களுள்ள தந்தைக்குப் புத்திரனாக இந்த ஜாதகன் பிறப்பான். இவன் மூன்றும் பிறப்பு என்று முனிவர் செல்ல, பார்வதி கேட்கத் தொடங்கினாள். இவனுடைய தகப்பனுக்கு இருதாய் மார் என்று கூறினீர்கள்.

12. மறுதாயின் குடும்பச் சேதி வரைகுவீர் முனியே என்றாள்
திறமையாய்க் கேளு மம்மா தீங்காகும் குடும்பம் தானும்
வரும்சுதர் ஆண்பால் ஒன்று வளர்கன்னி அவ்வா றாகும்
குறையுண்டு அவர்க ளாலே கூறுவோ மிரண்டு லேதான்.

12. இரேயதாயின் குடும்பச் செய்தியைச் சொல்லுங்கள், முனிவரே! என்று கேட்டாள். உடனே முனிவர் சொல்வார். நன்றாகக் கேளுங்கள், தாயே! அவளுடைய குடும்பத்தில் கெடுதல்கள் ஏற்படும். ஓர் ஆண் மகனும் ஒரு பெண்ணும் அவளுக்குப் பிறப்பர். அவர்களால் அவளுக்குக் குறைகள் ஏற்படும். இவற்றையெல்லாம் இரண்டாம் பாகத்தில் விவரமாகக் கூறுகிறோம்.

13. சாதகன் குணத்தைக் கேளாய் சாருமா நிறத்த னாகும்
மேதினில் சமதே கத்தன் விரோபுலம் சேர்ப்பா னாகும்
பாதக மொருவர்க் கெண்ணன் பந்துபூ சிதனும் மேலும்
நீதியாய் நடக்கை யுள்ளான் நிமலியே மேலும் கேளாய்.

13. இந்த ஜாதகனின் குணத்தைக் கேளுங்கள். கருமையான நிற முடையவன். குறையில்லாத உடம்பையுடையவன். விரோ நிலங்களைச் சேர்ப்பவன். ஒருவருக்கும் கெடுதல் எண்ணாதவன். உறவினர்களைப் போற்றுவான். நியாயமான நடத்தையுடையவன். பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

14. பால்தயிர் இட்ட முள்ளான் பதநடை சொகுசு முள்ளான்
சீலவா சார முள்ளான் சிந்தையில் கபடு மில்லான்
சாலவே சித்திர வீடு சாதிப்பான் சமமாம் கல்வி
கோலமாம் கிருஷி செய்வன் கோதையே மேலும் கேளாய்.

14. பால் தயிர்களில் விருப்பமுள்ளான். கடையழகுள்ளவன். சிறந்த ஒழுக்கமுள்ளவன். மனத்தில் வஞ்சனையில்லாதவன். வேலைப்பாடமைந்த அழகிய வீடு கட்டுவான். சிறந்த கல்வி யுடையவன். நல்ல விவசாயத் தொழில் செய்வான். தாயே! மேலுங் கேள்.

15. அண்டிநோர்க் குதவி செய்வன் அன்னங்கள் போட வல்லன்
குண்டைகோ விருத்தி யுள்ளான் குலநிந்தை யுடைய னுகும்
வண்டி வா கனமு முள்ளான் அடிமையாள் விருத்தி யுள்ளான்
எண்டிசைக் கீர்த்தி கொள்வன் இவன்பித்த தேக முள்ளான்.

15. தன்னையடைந்தவர்களுக்கு உபசாரம் செய்வான். பசித்து வந்தவர்களுக்கு உணவளிக்க வல்லவன். எருது, பசு மாடுகள் விருத்தியுள்ள வன். குலத்தால் பழியை ஏற்பவன். வண்டி, முதலிய போக்குவரவு சாதனங் களின் வசதியுடையவன். பணியாட்களை மிகுதியாகப் பெற்றவன். எட்டுத் திசைகளிலும் புகழைக் கொள்ளுவான். பித்ததேக முடையவன்.

16. வறுமைக ளில்லா னுகும் வாக்குச்சொல் தப்பா னுகும்
அருமறை யவர்கள் நேசன் அநேகபாக் கியமும் சேர்ப்பன்
திருமகள் வாச முள்ளான் சிலசில வணிபம் செய்வன்
நிறையுப தேச முள்ளான் நிமலன்மேல் பத்தி பூண்பன்.

16. தரித்திர மில்லாதவன். சொன்ன சொல் தவறுதவன். வேதம் உணர்ந்த அந்தணர்களின் சகவாசமுடையவன். பலவித பாக்கியங்களை யடைவான். இலட்சுமிதேவியின் கடாட்ச முள்ளவன். சில வியாபாரங்கள் செய்வான். நிறைந்த உபதேசங்களைப் பெற்றவன். இறைவன் மீது பக்தி கொள்ளுவான்.

17. அவனுடைத் துணைவர் தம்மை அறைகின்றேம் மூத்தோர்
[காணேம்
இவனுக்கு இளையோ ருண்டு இயம்புவோ மாண்பா
[லொன்று
பவமுள கன்னி யொன்று பருகிடும் தீர்க்க மாகத்
தவமுடை யோரைக் காக்கும் தயாபரி மேலுங் கேளே.

17. இவனுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவனுக்கு மூத்தவர்கள் இல்லை. இளையவர்கள் உண்டு. ஓர் ஆண் மகனும் ஒரு பெண்ணும் தீர்க்கமாக இருப்பர். தவத்தையுடைய சான்றோர்களைப் பாதுகாக்கும் கருணைபொருந்திய பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

18. இவனுடை மணத்தின் காலம் இயம்புவோ மொருபா
[ஞென்பான்
அவனியில் தட்சி ணத்தில் அம்மாது வருவா ளென்றும்
கவனமா யவள்தன் சேதி கழறுவோம் சிவந்த மேனி
தவமுடை யோருக் கன்பள் தயாளமாம் குணத்தளாமே.

18. இவனுடைய திருமணகாலத்தைப் பற்றிக் கூறுவோம். பத்தொன்பதாவது வயதில் தெற்குத் திசையிலிருந்து இவனுக்கு மனைவியாக வாய்ப்பவள் வருவாள். அவளுடைய செய்தியைக் கூறுவோம். சிவந்த மேனியுடையவள். சான்றோர்களிடம் பக்தியும் அன்புங் கொண்டவள். இரக்க முடையவள்.

19. புத்திமான் பொறுமை சாலி புண்ணிய மனத்த ளாகும்
சித்தமே கரப்பும் இல்லாள் தீங்கதை மனத்தி லெண்ணாள்
நித்தியம் சுசீல முள்ளாள் நேமியோர் மெச்ச வாழ்வாள்
பத்தினி வரனுக் கன்பள் பார்வதி மேலுங் கேளே.

19. புத்திசாலி. பொறுமை யுள்ளவள். நல்ல சிந்தை யுடையவள். மனத்தில் சிறிதும் கபடமில்லாதவள். கெடுதல் நினைக்கமாட்டாள். எப்பொழுதும் நல்லொழுக்கமுள்ளவள். உலகிலுள்ளோர் பாராட்ட வாழ்வாள். கணவனிடம் மிக்க அன்புடையவள். பார்வதியே! மேலுங் கேள்.

20. முனிவரிவ் விதமாயக் கூற மொழிகுவார் புசண்டர் தாமும்
கனிவுள சாத கர்க்குக் கழறுவோம் தாரம் ரெண்டு
இனமதைச் சொல்லு மென்ன ஏழினில் ராகு நிற்க
அனையவப் பதத்தி னுலே அறைகின்றோம் தாரம் ரெண்டு.

20. கௌசிக முனிவர் இப்படிக் கூறிக் கொண்டுவர, புசண்ட முனிவர் மேலுங் கூறுவார். இந்த ஜாதகனுக்கு இரண்டு மனைவியர் என்று கூறுவோம். காரணம் என்ன? சொல்லும், என்று கேட்க, முனிவர் சொல்லுவார். இலக்கினத்துக்கு ஏழாமிடத்தில் ராகு தங்கியிருப்பதனுலே இரு மனைவியர் என்று சொல்லுகின்றோம்.

21. சயமுனி இதனைக் கேட்டுச் செப்புவா ரம்ம னுக்கு
வியமேலோ னிரண்டில் நிற்க மிக்கவேழ் புதனும் நிற்கப்
பயமில்லை தார மொன்றே பகருவோ மிவனுக் கேதான்
நயமாக நாலில் சந்திரன் நல்குயும் குருவும் பார்க்க ;

21. செயமுனி என்பவர் இதனைக் கேட்டு, பார்வதியை நோக்கிச் சொல்லுவார். விரயத்துக்கும் ஏழாமிடத்துக்கும் உடையவனுகிய செவ்வாய் மிதுனத்தில் தங்கியிருக்க, ஏழாமிடத்தில் புதனும் நிற்பதால்

அஞ்சவேண்டியதில்லை. இவனுக்கு மனைவி ஒருத்தியே யாவள். தவிரவும், நாலாமிடத்தில் சந்திரன் நிற்க, அவனும் குருவினால் பார்க்கப்படுவதால்;

22. தாரமே ஒன்று என்றோம் சாதகன் தனக்குப் புத்திரர்
வீறுது ஆண்பா லுந்தான் விளங்கிடும் பெண்பா லொன்று
கூறிய மொழியைக் கேட்டுக் குறுமுனி சொல்லு கின்றார்
வீறுது மதலை என்றீர் விளம்புவீர் அந்தச் சங்கை.

22. மனைவி ஒருத்தி என்று சொன்னோம். இந்த ஜாதகனுக்குப் புத்திர பாக்கியத்தைப் பற்றிச் சொல்லுவோம். இவனுக்கு ஆண் குழந்தை பிறந்து விளங்காது. பெண் குழந்தை யொன்று விளங்கும். இவ்வாறு செயமுனி கூறியதைக் கேட்டு, அகத்தியர் கேட்கின்றார். ஆண் குழந்தை விளங்காது என்று சொன்னீர். அதற்கு உரிய தோஷத்தைச் சொல்லுங்கள்.

வேறு

23. புத்திரத் தானும் புதனுமே யாகிச்
சித்தமாய் [1]ஆறோன் சேர்ந்துமே ஏழில்
வித்தகர் குருவும் [2]விரயத்தில் செல்லக்
குத்தமாம் ஆண்பால் கூறினோம் ஐயா.

23. புத்திர ஸ்தானாதிபதி புதனாகி அவனோடு ஆறாம் வீட்டுக் கதிபனாகிய சுக்கிரனும் ஏழாமிடத்தில் சேர்ந்து நிற்பதாலும், குரு விரய ஸ்தானமாகிய பன்னிரண்டாம் இடத்தில் இருப்பதாலும், இந்த ஜாதகனுக்குப் புத்திர தோஷம் கூறினோம், முனிவரே!

24. சாதக ரீதியா [3]யைந்தாம் பாவம்
ஓதினோம் அதைநீர் உணருவீர் என்றார்
நீதியாய் நாலில் நிகர்குரு பார்க்கப்
போதவே [4]குடும்பப் பூமகன் இருக்க;

24. சோதிட சாஸ்திர முறைப்படி ஐந்தாம் பாவத்தின் விவரத்தைச் சொன்னோம். குரு நான்காம் இடத்தைப் பார்ப்பதாலும், இரண்டாமிடமாகிய குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதாலும்,

---

1. சுக்கிரன்.
2. இலக்கினத்துக்குப் பன்னிரண்டாம் இடம்: ரண்டு மேஷம்.
3. புத்திர பாவம்.
4. இரண்டாம் இடம்: மிதுன ராசி.

வேறு

25. முன்செனம வினையி ஞலே மொழிந்திட்டோம் மதலை
[தோடம்
என்னவுழ் அதனை நீங்க ளியம்புவி ரென்று கேட்க
மன்னிய முன்சென் மத்தை அறைகின்றேரும் அருணை
[உத்திரம்
உன்னித பேரூர் தன்னில் உயர்பிரம்ம குலத்தி லேதான் ;

25. முற்பிறப்பில் இந்த ஜாதகனுக்கு ஏற்பட்ட தீவினையினலே இப் பிறப்பில் இவனுக்குப் புத்திர தோஷம் உண்டாயிற்று என்று கூறினேம். அது என்ன தீவினை ? அதனைச் சொல்லுங்கள், என்று கேட்க, முனிவர் சொல்லுகின்ரூர். இவனுடைய முன்சென்மத்தைச் சொல்லுகின்றேரும். திருவண்ணுமலைக்கு வடக்கில் உள்ள சிறந்த ஓர் ஊரில் பிராமண குலத்தில் ;

26. உதித்துமே பெருமை பூண்டு உயர்பூமி உள்ளா ஞகிப்
பதியினில் திரிபு முண்டாய்ப் பாலகன் வாழும் நாளில்
விதிக்கிறேரும் வந்த ஊழை விதவையைப் போகந் துய்த்து
அதினலே கருவு தங்கி அநேகமாய் அவிழ்த்த மீந்தான்.

26. இவன் பிறந்து, பெருமை பெற்று, நிலங்கள் மிகுதியாக உடைய ஞகி, வீட்டில் மாறுதல் ஏற்பட்டு, வாழுங்காலத்தில் உண்டான தீவினையைச் சொல்லுகின்றேரும். கணவனை யிழந்த பெண்ணெருத்தியுடன் இவன் இன்பம் அனுபவித்ததனல் அவளுக்குக் கர்ப்பம் ஏற்பட்டது. பலவித மருந்துகள் அவளுக்குக் கொடுத்தான்.

27. கருவுக ளழிந்து பின்பு காரிழை மரண மானுள்
அருமையா யந்தத் தோடம் அணுகிற்று இவனுக் கேதான்
அறைகின்றே மச்சென் மத்தில் மைந்தர்கள் தோட
[முண்டாய்ப்
பெருமையும் குறைவ தாகப் பிழைத்தனன் இவனே
[யம்மா.

27. அதனல் அவளுடைய கர்ப்பம் அழிந்து, அவளும் மரண மடைந் தாள். இந்த தோஷம் இவனை வந்தடைந்தது. ஆகையினல் அச்சென் மத்தில் புத்திர தோஷங்கள் உண்டாகி, பெருமையுங் குறைந்து, வாழ்ந் தான் இவன்.

28. அந்திய காலந் தன்னில் அவனுக்கு மேக ரோகம்
வந்துபின் மரண மாகி மறலியால் பாதைப் பட்டுப்
பந்தமாய்க் கஞ்சன் தன்னுல் பாரினில் வரைய வந்த
சந்ததி இவனே என்றேரும் சத்தியே மேலுங் கேளே.

28. கடைசிக் காலத்தில் மேக வியாதியால் பீடிக்கப்பட்டு, மரண மடைந்தான். பின்பு பிரமதேவனுல் படைக்கப்பட்டு, இவ்வுலகத்தில் பிறந்த மகன் இவன் என்று சொன்னேனும். பார்வதி தேவியே! மேலுங் கேள்.

29. ஆகையால் கருவு தோடம் அணுகிற்று இச்சென் மத்தில்
பாகமாய்த் தோடம் நீங்கப் பகருவோம் கிரியை ஒன்று
தோகையுந் தானு மாகச் [1]சுருதியின் மலைக்குச் சென்று
வாகையாய்க் கிரியைச் சுற்றி மங்கள வாரந் தன்னில்;

29. ஆதலினுல் அந்தக் கருவழித்த தோஷம் இச்சென்மத்திலும் இவனை வந்தடைந்தது. பக்குவமாக அந்தத் தோஷங்கள் நீங்குவதற்கு ஒரு சாந்தி சொல்லுகின்றேரும். மனைவியுந் தானுமாகத் திருக்கழுக் குன்றத்துக்குச் சென்று முறைப்படி மலையை வலம் வந்து செவ்வாய்க் கிழமை யன்று;

30. அண்ணலுக் கருச்சித் தேத்தி அதிதிகட் கன்ன மீந்து
மன்னிய ரசித்தம் தன்னுல் மதலைபோல் செய்து மேலும்
தன்னிலே கந்தம் புஷ்பம் தாம்பூல மிவைக ளெல்லாம்
பன்னிய மறையோர்க் கீந்து பாலக னுள்ளூர் மீண்டு;

30. மலைமீது எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு அர்ச்சனைகள் செய்து போற்றித் துதித்து, விருந்தினர்களுக்கு உணவு அளித்து, வெள்ளி யினுல் குழந்தை போல் உருவம்செய்து, சந்தனம், பூ, தாம்பூலம் முதலிய வற்றுடன் அந்தணர்களுக்குக் கொடுத்து, மீளவும் உள்ளூர் வந்து;

31. ஓராண்டு [2]சட்டி நோன்பு உத்தமன் கொள்வா னுகில்
கூறுவோம் மனைவி தீர்க்கம் குழவிகள் விருத்தி யாகும்
மாறியே செய்வா னுகில் விளங்காது மனைவி மைந்தர்
தேறிய வினைகள் செய்ய செப்புவோம் ஆண்பால் ஒன்று;

---

1. திருக்கழுக்குன்றம்.

2. சஷ்டி: முருகக் கடவுள் அவதரித்த தினம். முருகப் பெருமானின் அருளைப் பெறவேண்டுவோர் இந்நாளில் விரதம் அநுஷ்டித்தல் மிக்க சிறப் பாகும். ஸ்கந்த சஷ்டி விரதம் என்று இது போற்றப்படுவது.

31. ஒரு வருஷ காலம் சஷ்டி விரதத்தை இவன் மேற்கொள்ளுவாளுகில் மனைவி சௌக்யமாயிருப்பாள். புதல்வர்கள் விருத்தி யுண்டாம். இங்ஙனம் செய்யாமல் தவறுவாளுகில் மனைவி மக்கள் விளங்க மாட்டார்கள். சொன்னபடி செய்வாளுகில் ஆண் குழந்தை யொன்றும் ;

32. கன்னியு மூன்று தீர்க்கம் கழறுவோம் மாதுர் சேதி
பன்னியே உரைக்க வல்லாள் பாலர்மேல் பிரிய மாவள்
அன்னியர் மெச்ச வாழ்வள் அவள்பித்த தேகி யாவள்
கன்னென மொழியை யொக்கும் காதலி ! மேலுங்கேளை.

32. பெண்கள் மூவரும் பிறந்து தீர்க்கமாம். தாயின் செய்தியைச் சொல்லுவோம். பன்னிப் பன்னிப் பேசுவாள். புதல்வர்கள்மீது விருப்பமாக இருப்பாள். அயலார் பாராட்டும்படி வாழ்வாள். பித்த தேக முடையவள். கரும்பு போன்று இனிய சொற்களைப் பேசும் பார்வதியே ! மேலுங் கேட்பாயாக.

33. வரனுக்கு இட்ட முள்ளாள் மங்கைநன் னடக்கை
[யுள்ளாள்
திருமக ளொப்ப தாகும் செல்வியு மதிட்ட சாலி
பெருமையாய்க் குணத்த ளாகும் பேதைமுன் கோபங்
[கொஞ்சம்
அரனடி பூசிப் பாளாம் அம்பிகை யாளே கேளாய்.

33. கணவனிடம் விருப்பம் கொண்டவள். நல்ல நடத்தை யுடையவள். இலக்குமி போன்றவள். அதிர்ஷ்டசாலி. பெருமைப்படத்தக்க குணமுள்ளவள். சிறிது முன்கோபமுண்டு. சிவபெருமானின் பாதங்களை வணங்குவாள். பார்வதியே ! கேட்பாயாக.

34. அவளுடைத் துணைவர் தம்மை அறைகின்றேம் ஆண்பால்
[ரெண்டு
நவனியில் கன்னி மூன்று நாட்டுவோம் தீர்க்க மாக
அவர்கள்தம் குடும்பந் தானும் அலைச்சலாம் வேறுய்ச்
[செல்வர்
பவமுள்ள மாதுர் சென்மம் பகருவோம் கேளு மம்மா.

34. அவளுடைய உடன் பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுகின்றேம். ஆண்கள் இருவர். பெண்கள் மூவர். இவர்கள் தீர்க்கமாக இருப்பர் என்று கூறுவோம். அவர்களுடைய குடும்பத்தில் நிலையான தன்மை யிராது. அலைச்சல் எற்படும். உடன் பிறந்தார்கள் பிரிந்து வேறுகச் செல்லுவர். இவளுடைய தாயின் முன்சென்மத்தைக் கூறுவோம் ; தாயே ! கேளும்.

35. கச்சிக்கு மேல்பா லாகக் கனமுள பேரூர் தன்னில்
இச்சையாய் வணிகர் வம்ச மிவளுமே பிறந்து மேலும்
மிச்சமாய்ப் பூஷ ணங்கள் மேதினில் பாக்கியம் பெற்றுக்
கச்சணி மாது வுக்குக் காளிகள் இல்லா தீகி;

35. காஞ்சீபுரத்துக்கு மேற்கில் உள்ள பெருமை மிக்க ஓர் ஊரில், வணிகர் குலத்தில் இவள் பிறந்து, ஆபரணங்கள் செல்வங்கள் முதலிய பல பாக்கியங்களோயும் உலகத்தில் அடைந்து வாழும்போது, இவளுக்குப் புதல்வர்கள் இல்லாமல் இருந்ததால் ;

36. வரனுடன் தலங்கள் சென்று மாதீர்த்தம் தோய்ந்து
[மேதான்
அறநெறி யார்க்கு அன்னம் அன்புட னீந்து வந்து
உரமுடன் உள்ளூர் மீண்டு உத்தமி விரதம் கொண்டு
குறைமன மாக வேதான் கோடித்தாள் நோன்பை யேதான்.

36. தன் கணவனுடன் பல புண்ணிய தலங்களுக்கு யாத்திரை சென்று, தீர்த்தங்களில் நீராடி, நல்லொழுக்கமுள்ள சாதுக்களுக்கு அன்புடன் உணவளித்து மகிழ்ந்து, தன் ஊருக்குத் திரும்பி, விரதம் மேற்கொண்டு, நிறைந்த மனமில்லாமல் பல நோன்புகளோச் செய்தாள்.

37. அச்சென்மம் தன்னி லேதான் அவளுக்கு முதலி யின்றிக்
கச்சணி வாயு நோயால் காதலி மரண மாகி
மிச்சமா யிச்சென் மத்தில் விளங்கினுள் இவளே யென்றும்
உச்சித மறுசென் மத்தை உரைக்கின்றும் கேளு மம்மா.

37. அந்தப் பிறப்பில் அவளுக்குக் குழந்தை யில்லாமல், வாயு நோய் ஏற்பட்டு மரண மடைந்தாள். பிறகு இந்தச் சென்மத்தில் இப் பிறப்பாகப் பிறந்தவள் இவள் என்று சொன்னேம். இவளுடைய மறுபிறப்பைப் பற்றிச் சொல்லுகின்றோம் : கேளுங்கள், தாயே !

38. தில்லையில் சைவ வமிசம் தேவியு முதித்து மேதான்
நல்லவ ளாகி யேதான் நாட்டில்நற் கீர்த்தி பெற்று
வல்லியும் வாழ்வா ளாகும் அறைகின்றோம் தந்தை
[சென்மம்
அல்லலை அகற்று மாதே அம்பிகை யாளே கேளாய்.

38. சிதம்பரத்தில் சைவ குலத்தில் இவள் பிறந்து நல்ல குணமுடையவளாய் நாட்டில் புகழ்பெற்று வாழ்வாளாம். தந்தையின் மறுசென்மத்தைச் சொல்லுகின்றோம். எல்லோருடைய துன்பங்களோயும் போக்கும் பார்வதியே! அம்பிகையே! கேட்பாயாக.

39. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் ஆழி
[மேல்பால்

அந்தணர் குலமு தித்து ஆரியர் கல்வி கற்றுச்
சந்தத மரசர் பக்கல் தானதி காரம் பெற்றுப்
பந்தமாய் வாழு நாளில் பகருவோம் ஊழி தானே.

39. தந்தையின் முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். திருப்பாற் கடல் என்னும் ஊருக்கு மேற்கில் பிராமண குலத்தில் பிறந்து வடமொழிக் கல்வி முதலானவற்றைக் கற்று அரசர்களிடத்தில் உத்தரவுபெற்ற அதிகாரி யாக இருந்து வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் நேர்ந்த தோஷத்தைச் சொல்லுவோம்.

40. வருவோர்கள் மனத்தைத் தேற்றி வண்மையாய்த் தீர்ப்புச்
[செய்து

பெருமையாய் வாழு நாளில் பேசுவோம் ஊழி தானும்
ஒருமையாய் இருவர் தானும் உறைந்துபின் விரோத முற்று
வறுமையாய் இவன்பா லுந்தான் வந்தனன் வேளா
[ளன்தான்.

40. தன்னிடம் வழக்குரைக்க வருபவர்களுக்கு அவர்கள் வழக்கைக் கேட்டு அவர்கள் மனம் சமாதானம் அடையும் வகையில் நியாயமான தீர்ப் பைக் கூறியனுப்பிப் பெருமையோடு வாழ்ந்து கொண்டிருந்தான். இங்ஙனம் வாழும் நாளில் நேர்ந்த ஒரு தோஷத்தைச் சொல்லுவோம். தானும் தன் ஜாதியுமாக ஒற்றுமையாக வாழ்ந்திருக்கையில் இடையில் ஏற்பட்ட விரோ தத்தினால் ஜாதி தன் போகத்தை யபகரித்துக் கொள்ள, ஒன்றும் செய்ய முடியாமல் ஏழ்மை யடைந்த ஒரு வேளாளன் இவனிடம் வந்தான்.

41. ஜாதியின் பாகம் வேண்டி நவின்றனன் ஒருவன் தானும்
பாதகன் தனைய ழைத்துப் பகர்ந்திட லஞ்சம் வாங்கிச்
சூதினால் தீர்ப்புச் செய்தான் தோற்றவன் மனவெ றுப்பால்
மேதினில் சொல்லு கின்றான் மெல்லியே கேட்டி டாயே.

41. அப்படி வந்த வேளாளன் தன்னுடைய ஜாதி யபகரித்துக் கொண்ட பாகத்தை மீட்டுத் தரும்படி இவனிடம் வேண்டினான். உடனே இவன் ஜாதியை யழைத்து வழக்கைச் சொல்லி, அவனிடம் லஞ்சம்பெற் றுக் கொண்டு வஞ்சனையாக ஜாதியின் பக்கமே தீர்ப்புச் செய்தான். வழக்குத் தோற்றுப் போன வேளாளன் மிக்க மன வெறுப்படைந்து சொல் லுகின்றான். பார்வதி தேவியே! கேட்பாயாக.

42. தந்தையி னுஸ்தி போக்கித் தந்துணை விகளால் நிந்தை
வந்துமே சனன காலம் வறுமைகள் அதிகம் நேர்ந்து
நொந்திடும் குடும்ப மென்று நுவலுவா னேழை தானும்
சந்ததம் கிரகம் நீங்கித் தாயின்தன் வர்க்கந் தன்னில்;

42. ஒரு பக்கமாகத் தீர்ப்புச் சொன்ன இவன் தன் தந்தையினால் சேர்த்து வைக்கப்பட்ட ஆஸ்திகளை இழந்து, தன் சகோதரிகள் மனைவி முதலியவர்களால் நிந்தனைபெற்று, பிறக்குங் காலத்தில் மிக்க வறுமையுள்ள நிலையில் இருந்து குடும்பத்தோடு வருந்துவான் என்று சாபமிட்டான். மேலும் நல்வினை நீங்கி, தாயாரின் வர்க்கத்தினர் ஆதரவில் ;

43. சிவிப்பா யென்று சொல்லிச் செப்பினன் ஏழை தானும்
மேவிய அச்சென் மத்தில் விரையினில் பருவு கண்டு
தாவியே மரண மாகிச் சதுமுகன் வரையப் பட்டுத்
தாவிய இச்சென் மத்தில் சனித்தவன் இவனே யென்றோம்.

43. சிவிப்பாய் என்று கூறினன் ஏழை. பொருந்திய அச்சென்மத்தில் மரும ஸ்தானத்தில் கட்டி புறப்பட்டு அதனால் மரணமடைந்தான். பின்பு பிரமதேவனால் படைக்கப்பட்டு இச்சென்மத்தில் பிறந்தவன் இவனே யென்று சொன்னோம்.

44. முன்சென்ம மேழை சாபம் முயன்றதா லிச்சென் மத்தில்
தன்தந்தை இல்லம் காணுன் சக்தியா லவமா னங்கள்
வந்திடு மென்று சொன்னோம் வரைகின்றோம் பின்சென்
[மத்தைச்
சந்ததம் காஞ்சி தன்னில் தனவைசிய குலே யேதான்
சொந்தமன் வணிபம் செய்து சுகமுடன் வாழ்வா னுமே.

44. முற்பிறப்பில் ஏழையின் சாபம் ஏற்பட்டதால், இப்பிறப்பில் தந்தையின் வீட்டிலிருக்க முடியாமலும், பெண்ணால் அவமானங்களும் நேரும் என்றும் சொன்னோம். மறுபிறப்பைப் பற்றிக் கூறுகின்றோம். காஞ்சீபுரத்தில் தனவைசிய குலத்தில் பிறந்து, சொந்த வியாபாரங்கள் செய்து, சுகமாக வாழ்வான்.

45. தந்தையின் மரண காலம் சாற்றுவோம் முப்பான் மூன்றில்
வந்தவை காசி மாதம் வரைகின்றோம் கருமம் தானும்
பிந்திய அன்னை காலம் பேசுவோம் முப்பா னென்பான்
தன்தனுர் மாதந் தன்னில் தாய்க்குமே கண்டம் உண்டாம்.

45. இவனுடைய தந்தையின் மரண காலத்தைக் கூறுவோம். முப்பத்து மூன்றும் வயதில் வைகாசி மாதத்தில் இந்த ஜாதகனுக்குக் கருமதசை

யுண்டென்று கூறுகின்றோம். இவன் தாயின் மரண காலத்தைப் பற்றிச் சொல்லுவோம். இவனுடைய முப்பத்தொன்பதாம் வயதில் மார்கழி மாதத்தில் தாய்க்கு மரணம் ஏற்படும்.

46. இன்னவன் பொதுயோ கத்தை இயம்புவோம் சுகமு
[மூள்ளான்
தன்சொலும் மேன்மை யுள்ளால் சகலரும் மெச்ச
[வாழ்வான்
உன்னித பாக்கிய வானும் உலகுளோர்க் குதவி செய்வான்
பன்னிய பூமி சேர்ப்பன் பாரினில் கீர்த்தி யுள்ளான்.

46. இவனுடைய பொதுவான யோகத்தைப் பற்றிச் சொல்லுவோம். நலமுடையவன். தன்வார்த்தைக்கு மதிப்புப் பெற்றவன். பலரும் போற்ற வாழ்வான். சிறந்த பாக்கியங்களுள்ளவன். உலகிலுள்ளாருக்கு உபகாரங்கள் செய்வான். பூமிகள் சேர்ப்பான். உலகினில் கீர்த்தியுள்ளவன்.

47. சித்திர வீடு செய்வன் செப்புவா ளம்மன் தானும்
எத்திசை யெந்த காலம் இவன்வீடு செய்வா னென்றீர் ?
பத்தினி கேட்கும் போது பகருவார் விசுவா மித்திரர்
சுத்தமாய்ப் பதினெட் டாண்டில் தொகுப்பனும் கிரகம்
[தானே.

47. அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய வீட்டைக் கட்டுவான். பார்வதியம்மன் கேட்கலுற்றாள். எந்தத் திசையில், எந்தக் காலத்தில் இவன் வீடு கட்டுவான் என்று சொன்னீர்கள் ? பார்வதி தேவி இவ்வாறு கேட்கும் போது, விசுவாமித்திரர் சொல்லுவார். பதினெட்டாம் வயதில் வீடு கட்டுவான்.

48. இன்னவன் சனனந் தொட்டு இவனுடை ஆயுள் மட்டும்
உன்னித மறைபோல் யோகம் ஓங்கிடு மிவனுக் கேதான்
பன்னிய மரண காலம் பகருவாய் என்று கேட்க
மன்னிய முனிவர் சொல்வார் மங்கையே மேலும் கேளே.

48. இவனுடைய பிறப்பு முதல் ஆயுள் முடிவுவரை மேன்மையுள்ள வேதாங்கமோப் போல் இவனுடைய யோகங்கள் உயரும். இவனுக்கு மரண காலம் எப்பொழுது என்று சொல்லுவீர் ? என்று பார்வதி கேட்க, கேள், மேலும், என்று விசுவாமித்திர முனிவர் கூறுவார்.

49. சாதகன் மரண காலம் சாற்றுவோ மறுபா னேழில்
தீதிலாக் [1]கூனி மாதம் சிறந்ததோர் பருவந் தன்னில்
மேதினில் சூலை யாலே வித்தகன் மரண மாவன்
மாதுகேள் இவன்பின் சென்மம் வரைகின்றே மிவனுக்
[கேதான்.

49. இந்த ஜாதகனின் மரண காலத்தைப் பற்றிச் சொல்லுவோம். அறுபத்தேழாம் வயதில் குற்றமற்ற பங்குனி மாதம் வளர்பிறையில் சூலை நோய் ஏற்பட்டு இவன் மரணமடைவான். பெண்ணே! கேள். இவன் மறுபிறப்பைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

50. காஞ்சிமா நகரி லேதான் காவல னிக்கு லத்தில்
வாஞ்சையா யுதிப்பா னுகும் வணிபங்க ளதிகம் செய்வன்
தாஞ்சையா யிவன்பின் னுலே தன்மனை கெண்ட மாகும்
பூஞ்சோலை வாசஞ் செய்யும் புண்ணிய வதியே கேளாய்.

50. காஞ்சீபுரத்தில் இந்த ஜாதகன் இக்குலத்தில் விருப்புடன் உதிப்பான். வியாபாரங்கள் மிகுதியாகச் செய்வான். இவனுக்குப் பிறகு இவன் மனைவி மரணமடைவாள். அழகிய சோலைகளையமைத்து அவற்றில் உல்லாச வாழ்வு வாழ்வான். புண்ணியவதியாகிய பார்வதி தேவியே! மேலுங் கேள்.

51. செனித்திடு காலந் தன்னில் செம்பாம்பு திசையி ருப்புக்
குனித்திடு மாண்டு மைந்தும் கூறுவோம் திங்க
[ளொன்பான்
வனிதையே சாத கர்க்கு வனேகமாய்ப் பிணியு முண்டு
இனங்களுஞ் சேத மாகும் இடறுக ளனந்த முண்டு.

51. சென்ன காலத்தில், கேது மகா தசை இருப்பு ஐந்து ஆண்டுகளும் ஒன்பது மாதங்களும் என்று சொல்லுவோம். தாயே! இந்த ஜாதகனுக்குப் பிணிகள் அதிகமுண்டு. இவனுடைய சுற்றத்தார்களுக்கு அசுபங்கள் நிகழும். துன்பங்கள் மிகுதியாக ஏற்படும்.

52. புகர்திசை பலனே யாங்கள் புகலுவோம் பூமி சேரும்
பதியது புதிதாய்ச் செய்வன் பெருகிடும் துணைவர் தாமும்
வகையான மனைவி வாய்க்கும் வான்பொருள் வந்து சேரும்
தகைமையாய்த் துணைவர் கட்குச் சாற்றுவோம் சுபமு
[முண்டாம்.

52. சுக்கிர மகாதசையின் பலனே நாங்கள் சொல்லுவோம். பூமிகள் சேரும். புதிய வீடு கட்டுவான். உடன் பிறந்தார், நண்பர்கள் ஆகியோர்

1. பங்குனி

விருத்தியாவர். பொருத்தமான மனைவி வாய்ப்பாள். மிகுந்த பொருள் சேரும். இவனுடைய உடன் பிறந்தார் முதலியவர்களுக்குச் சுபங்கள் ஏற்படும் என்று சொல்லுவோம்.

55. தந்தையின் துணைவ ருக்கும் சாற்றுவோம் சுபங்கள் தாமும்
அந்ததோர் துணைவன் தன்னுல் அநேகமாய்ப் பொருளுஞ் [சேரும்
சந்ததம் காலி விருத்தி சஞ்சல நிவர்த்தி யாகும்
சொந்தஆள் அடிமை சேரும் சுயபந்து நேச மாவர்.

53. இவனுடைய தந்தையின் உடன்பிறந்தார்களுக்கும் சுபங்கள் ஏற்படும் என்று சொல்லுவோம். உடன்பிறந்தவன் வழியாக மிகுதியான பொருளுஞ் சேரும். மாடுகள் விருத்தியாம். சஞ்சலங்கள் அனைத்தும் நீங்கும். சொந்த ஆட்களும், பணியாட்களும் சேருவர். சொந்த பந்துக்கள் மிக்க நேசமா யிருப்பர்.

54. பெண்ணினுல் குறைவு நேர்ந்து பின்புதான் சாந்த மாகும்
கண்ணிய மாக வாழ்வன் கீர்த்திக ளதிக மோங்கும்
பண்ணிய கிருஷி யோங்கும் பகருவோம் விபரம் ரெண்டில்
அண்ணலைப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

54. பெண்ணினுல் குறை ஏற்பட்டுப் பின்பு நிவர்த்தியாகும். மதிப் பாக வாழ்வான். புகழ் மிகுதியாக ஓங்கும். செய்யும் பயிர்த் தொழில்கள் விருத்தியாம். இரண்டாம் பாகத்தில் மற்றவற்றை விபரமாகச் சொல்லு வோம். பரமசிவனைப் பூசைசெய்யும் பார்வதி தேவியே! கேட்பாயாக.

ஜாதகம் 5

1. மதிகுசன் [1]மேரு வாக மந்தனு மிரவி சியம்
புதன்புகர் கேது பொன்னேன் புக்கிட [2]வண்டி தன்னில்
அதி[3]கயர் மான தாக அதற்குமேல் சென்மம் நந்தி
இதுவிதக் கோளு நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் செவ்வாய் தனுசிலும், சனி சூரியன் சிம்மத்திலும், புதன் சுக்கிரன் கேது குரு கடகத்திலும், ராகு மகரத்திலும் தங்கியுள்ள விருஷப லக்கின ஜாதகனுக்குப் பலனைச் சொல்லுவீர்.

		லக்கினம்	
	இராசி சக்கரம்		புதன் சுக்கிரன் கேது குரு
இராகு			சனி சூரியன்
சந்திரன் செவ்வாய்			

2. அத்திரி சொல்லு கின்ரூர் ஆணது சென்ம மாகும்
வித்தக னுதித்த யில்லம் விளம்புவோம் கீழ்மேல் வீதி
உத்திரம் வாச லாகும் உயர்மேற்கில் அனுமான் கோட்டம்
எத்திசை புகழு முண்டாம் இயம்புவோம் மார்க்க முண்டு.

2. அத்திரி முனிவர் கூறுகின்ரூர். இஃது ஆண்மகன் ஜாதகமாகும். இவன் பிறந்த வீட்டைப் பற்றிச் சொல்லுவோம். அது கிழக்கு மேற்கான வீதியில் வடக்குப் பார்த்த வாசலை யுடையது. இவன் வீட்டுக்கு மேற்கில் அனுமார் கோவில் உண்டு. எல்லாத் திசையிலும் அவ்வூரைப் பற்றிய புகழ் பரவியுள்ளது. பல இடங்களுக்கு அவ்வூரின் வழியாகச் சாலைகள் செல்லு கின்றன.

---

1. தனுர் ராசி.
2. கடகம்.
3. இராகு.

3. வேலுடைக் கடவுள் உத்திரம் மீனத்தி லீசன் கோட்டம்
நீலியு மாரி தெற்கு நிகழ்த்துவோம் கம்மா ருண்டு
சாலவே யானை கோவில் தந்திடும் தெற்கி லேதான்
கோலமாய்க் கீழ்பால் சந்தி குலவிய சோலை யுண்டு.

3. முருகக் கடவுளின் கோயில் வடக்குத் திசையில் உள்ளது. வட கிழக்கில் சிவபெருமான் கோயில். துர்க்கையும் மாரியும் தெற்குத் திசையில் வாசம்செய்வர். கம்மியர்கள் அங்கு வசிக்கிறார்கள். பொருத்தமாக விநாயகர் கோயில் தெற்குத் திக்கில் அமைந்துள்ளது. கிழக்குப் பக்கமாக அழகிய நாற்சந்தி, சோலை ஆகியவை உள்ளன.

4. இவ்வித வடையா ளத்துள் இளவலும் வாசம் செய்வன்
ஓவ்விய தந்தை மாதா உறுந்துணை களத்திர புத்திரர்
பவ்வமாய் மூன்பின் சென்மம் பாலகன் யோகம் தானும்
நவ்விய நவக்கோ ளாய்ந்து நவிலுவோம் கேளும் தாயே.

4. இவ்வாறான அடையாளங்கள் உள்ள இடத்தில் இந்த ஜாதகன் வசிப்பான். இவனுடையவும், இவனுடைய தந்தை, தாய், உடன்பிறந்தார், மனைவி, மக்கள் ஆகியோருடையவுமான முற்பிறப்பு, மறுபிறப்பு, யோகச் செய்கைகள் முதலிய அனைத்தையும் இந்த ஜாதகத்தில் அமைந்துள்ள நவக்கிரகங்களையும் நன்கு ஆராய்ந்து சொல்லுவோம்; கேளுங்கள், தாயே!

5. தந்தையின் வர்க்கந் தன்னைச் சாற்றுவோம் ஆண்பால் [மூன்று
வந்திடும் கன்னி யொன்று யறைந்தனம் இவனுக் கேதான்
நந்திடும் மற்ற தெல்லாம் நுவலுவோம் பிதாகு ணத்தைச்
சந்ததம் மால்நி றத்தான் சாந்தவான் யூகை யுள்ளான்.

5. இந்த ஜாதகனின், தந்தை வர்க்கத்தைப் பற்றிச் சொல்லுவோம். தந்தையுடன் பிறந்தவர் ஆண்கள் மூவரும் பெண் ஒருத்தியும் உளர் என்று கூறினேம். மற்றவரெல்லாம், நிலைத்திராமல் மடிவர். இவன் தந்தையின் குணத்தைப் பற்றிக் கூறுவோம். கரிய நிறமுடையவன். சாந்தமுள்ளவன் ஊகமுள்ளவன்.

6. பலவித வணிபம் செய்வன் பாருளோர் மெச்ச வாழ்வன்
நலமுள வார்த்தை கூர்வன் நாயகிப் பட்ச முள்ளான்
விலைமாதர் விருப்பம் கொள்ளான் வீணப வாத மில்லான்
உலகுக்கு நல்லோ னுவன் உறுதியா மனத்த னேமே.

6. பலவித வியாபாரங்கள செய்வான். பூமியிலுள்ளோர் பாராட்டும் படி வாழ்வான். கல்ல சொற்களேயே சொல்லுவான். மனவியிடம் விருப்ப முள்ளவன். வேசையரிடம் விருப்பம் கொள்ளாதவன். வீண் பழியில்லாத வன். உலகத்தவருக்கு நல்லவன். திடசித்தம் உடையவன்.

7. உடல்நிலை பித்த சூடு உறைந்திடும் வறுமை யில்லான்
திட்டமதாய்க் குடும்பி யாவன் சிறுத்தவர்க் குதவி செய்வான்
விடவுரை பகரா னகும் வீண்வார்த்தை சொல்லா
[னென்றேரும்
தடவரை மகளே யாங்கள் சாற்றிய மொழிகுன் ரூது.

7. பித்த சூடுடையவன். எழ்மை யில்லாதவன். வலிவுள்ள குடும்பி யாக வாழ்வான். செல்வமில்லாது சிறுமை யடைந்தவர்களுக்கு உதவிசெய் வான். கொடிய சொற்களைச் சொல்லாதவன். வீண்மொழிகள் கூறான் என்று சொன்னேம். இமயமலையின் புதல்வியாகிய பார்வதியே! நாங்கள் கூறிய சொற்கள் தவரு.

8. இக்குண முடையோ னுக்கு இவனுமே மூன்றுஞ் சென்மம்
மிக்கவே யுதிப்பா னகும் விளம்புவோ மிவன்கு ணத்தைத்
தொக்கவே இருநி றத்தான் தேகமும் பித்த சூடு
பக்குவ மாக வார்த்தை பகருவான் இவனே யென்றேரும்.

8. இவ்வித குணங்களை உடையவனுக்கு இந்த ஜாதகன் மூன்றும் பிறப்பாகப் பிறப்பான். இவன் தன்மையைப் பற்றிச் சொல்லுவோம். கரிய நிறமுடையவன். பித்த சூடு பொருந்திய தேக முள்ளவன். பொருத்த மாகச் சொற்களைச் சொல்லுவான் இவன், என்று சொன்னேம்.

9. வஞ்சக நெஞ்ச னுவன் மருமமு முள்ளா னென்றேரும்
அஞ்சியே வார்த்தை சொல்வன் அவன்பல செட்டுச்
[செய்வன்
கொஞ்சிய மொழியு முள்ளான் குலத்துளோர் மெச்ச
[வாழ்வன்
கிஞ்சுக ரோகி யாவன் கேவல மனுகா சித்தன்.

9. வஞ்சக மனமுடையவன். மருமமான எண்ணங்களைக் கொண்டவன். பயந்து சொற்களைச் சொல்லுவான். பல வியாபாரங்களையும் செய்வான். இளமைததும்பும் சொற்களைப் பேசுவான். குலத்திலுள்ளார் பாராட்ட வாழ் வான். கிஞ்சுக ரோகமுள்ளவன். அற்பமானவற்றை அடைய விரும்பாத மனமுடையவன்.

10. தந்தையி னுஸ்தி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
பிந்தியும் பூமி சேர்ப்பான் புண்ணிய மனத்த னுகும்
நந்திய பேரைக் காப்பன் நிதம்சுகி போச னத்தன்
வந்தவர்க் கன்ன மீவன் வாக்குகள் தவரு னுமே.

10. தந்தையின் ஆஸ்தியை விருத்தி செய்வான். மேலும் நிலபுலங்களைச் சேர்ப்பான். புண்ணிய மனமுடையவன். தன்பமடைந்தவர்களைக் காப்பாற்றுவான். தினந்தோறும் சுகமான போஜனத்தை உண்பவன். வீடு தேடி வந்தவர்க்கு உணவு அளிப்பான். சொன்ன சொல் தவறுதவன்.

11. முகமதில் வடிவு காணும் முன்கோபம் வெளிவி டாதான்
பகையிலா னெவர்க்கும் நண்பன் பத்தினிக் கிட்ட னுகும்
தகைமையாய்க் குடும்பி யாவன் தன்கரம் பத்ம ரேகைச்
செகமதில் ஞாதி வர்க்கம் சீரண மென்று சொன்னேனும்.

11. முகத்தில் இலட்சணமுடையவன். கோபத்தை அடக்குபவன். விரோதிகளில்லாதவன். யாவருக்கும் நட்பினன். மனைவியிடம் பிரியமுள்ளவன். தகுதியுள்ள குடும்பியாக வாழ்வான். இவன் கையில் பத்ம ரேகை உண்டு. இவனுடைய ஞாதியர் வம்சம் அழியும் என்று சொன்னேனும்.

12. அவர்கள் தன் ஆஸ்தி யெல்லாம் மணுகிடு மிவனுக் கேதான்
அவனியில் சனனம் தொட்டு நாயகன் மரணம் மட்டும்
அவனியில் தரித்திர மில்லான் அம்புலி போல யோகம்
இவனுக்கு நேரு மென்றேனும் ஈச்வரி கேட்டி டாயே.

12. ஞாதியர்களின் சொத்துக்கள் முழுவதும் இவனை அடையும். இப்புவியில் இவன் பிறப்புமுதல், இறப்புவரை தரித்திரமில்லாமல் வாழ்வான். வளர்பிறைபோல இவனுக்கு அதிர்ஷ்டம் வாய்க்கும் என்று சொன்னேனும். பார்வதி தேவியே! கேட்பாயாக.

13. துணைவர்கள் ஐந்து மாகும் சொல்லுவோ மாண்பால் மூன்று
அணையவே பெண்பா லொன்று அவைகளும் தீர்க்க
[மென்றேனும்
கனமுடன் ஒன்றுய் வாழ்வர் காளைகள் சேர்த்தி யெல்லாம்
துணிவாக யிரண்டில் சொல்வேன் தோகையே மேலுங்
[கேளே.

13. உடன் பிறந்தார்கள் ஐவர் என்று சொல்லுவோம். அவர்களில் ஆண்பால் மூவர். பெண்பால் ஒருத்தி. இவர்கள் தீர்க்காயிருப்பர் என்று சொன்னேனும். இவர்கள் அனைவரும் பெருமையுடன் ஒன்றுய் வாழ்வர்.

இவர்கள் சேர்க்கையைப் பற்றிய விவரமெல்லாம் நிச்சயமாக இரண்டாம் பாகத்தில் சொல்லுவேன். பார்வதியே! மேலுங் கேள்.

14. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மிருபான் ரெண்டில்
மேதினில் குடகு திக்கில் வித்தகி வருவா ளாகும்
கோதிலா அவள்கு ணத்தைக் கூறுவோ மிருசி கப்பள்
தீதிலா குணத்தா ளாகும் திருமுக வடிவு மூள்ளாள்.

14. இந்த ஜாதகனுக்கு மணம் நிகழும் காலத்தைப் பற்றிச் சொல்லுவோம். இவனுடைய இருபத்திரண்டாவது வயதில் மேற்குத் திசையிலிருந்து இவனுக்கு மனைவியாகப் போகும் பெண் வருவாள். குற்றமற்ற அவள் குணத்தைக் கூறுவோம். கருமை கலந்த செந்நிற முடையவள். கெடுதலில்லாத குணங்களை யுடையாள். முக இலட்சணமுடையவள்.

15. வரனுக்கு நேய மூள்ளாள் மாதுகன் னடத்தை யாவள்
திறமையாய்ப் பேச வல்லள் செல்வியு மதிட்ட சாலி
பொறுமையு முடைய ளாகும் புண்ணிய மனத்த ளாகும்
அறநெறி பூண்ப ளாகும் அவளுமுன் கோபங் கொஞ்சம்.

15. கணவனிடம் விருப்பமுள்ளவள். நன்னடத்தை யுடையவள். சாமர்த்தியமாகப் பேசுவதில் வல்லவள். இவள் அதிர்ஷ்டசாலி. பொறுமை யுடையவள். புண்ணிய மனமுடையவள். தரும வழியை மேற்கொள்ளுவாள். சிறிது முன்கோப முண்டு.

16. துணைவர்க ளில்லா ளாகும் சொல்லுவோம் புத்திர பாகம்
கனமுட னுண்பா லொன்று கன்னிகை யிரண்டு தீர்க்கம்
பிணையாகு மூன்று தானும் பிரதமம் பெண்பா லாகும்
அனையவே கடகம் சென்ம மவிட்டநாள் தனிலு திப்பாள்.

16. உடன்பிறந்தார்க ளில்லாதவளாகும். இவளுக்குப் புத்திர பாவத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஆண் ஒன்று. பெண்கள் இருவர். இவர்கள் மாத்திரம் தீர்க்கம். பின்பு மூன்று குழந்தைகள் பிறந்து சேதமாம். முதலாவது பெண் குழந்தை. அவள் கடக லக்னம், அவிட்ட நட்சத்திரத்தில் இவளுக்குப் பிறப்பாள்.

17. அதற்குப்பி னிரண்டு சேதம் அறைகின்றேம் நான்கு வித்தி
சதமாகும் அதன்மேல் தோடம் சயமுனி புகலு கின்றார்
அதிபர்க்கு மதலை யாண்பால் விளங்காது யென்று
[சொன்னீர்
எதுவிதக் காரணத்தால் இயம்பினீர் மூனியே நீர்தாம்.

17. அதன்பிறகு இரண்டு குழந்தைகள் சேதம்; நான்கு விருத்தியாம் என்று சொல்லுவோம். நிச்சயமாக ஒரு தோஷமுண்டென்று சொல்லுவோம். செயமுனி சொல்லுவார். இந்த ஜாதகனுக்கு ஆண் குழந்தை பிறந்து விளங்காது என்று சொன்னீர்? எந்தக் காரணத்தினால் அப்படிச் சொன்னீர்கள்? முனிவரே! நீங்கள்.

18. நந்தியும் சென்ம மாக [1]நாயகன் மூன்றில் சேரப்
[2]புந்தியு மைந்தோ னுகப் புகருடன் சேர்ந்து நிற்க
[3]ஐந்தினிற் கைந்தில் ராகு அஞ்சியே இருப்ப தாலே
வந்திடு மதலை ஆண்பால் விளங்காது என்று சொன்னேம்.

18. விருஷபம் சென்மமாகவும், குரு மூன்றுமிடத்தில் இருப்பதாலும், ஐந்தாமிடத்தவனை புதன் சுக்கிரனுடன் சேர்ந்து நிற்பதாலும், கன்னியா ராசிக்கு ஐந்தாமிடமாகிய மகரத்தில் இராகு பயந்து தங்கி யிருப்பதாலும், இவனுக்குப் பிறக்கும் ஆண் குழந்தை விளங்காது என்று சொன்னேம்.

19. அத்திரி மறித்துச் சொல்வார் அந்தணன் உச்ச மாகிப்
பத்திய நவத்தில் பாம்பைப் பார்த்ததால் சுதர்கள் விருத்தி
வித்தகன் குருவு மெட்டாய் வெண்மதி வீட்டில் சேரக்
குத்தமா யாரோன் தானும் கூடியே இருப்ப தாலே,

19. அத்திரி முனிவர் இடைமறித்துச் சொல்லுவார். குரு கடகத்தில் உச்சமாகி ஒன்பதாமிடத்தில் உள்ள ராகுவைப் பார்த்ததால், புதல்வர்கள் விருத்தி ஏற்படும். தவிரவும், குருவுக்குரிய எட்டாமிடமான தனுர்ராசியில் சந்திரன் நிற்க, அவனுடன் ஆரூம் வீட்டுக்குரிய செவ்வாயும் சேர்ந்திருப்பதால்;

20. குருவுக்குப் பயமே யில்லை குடும்பத்தோ னதற்கு ரெண்டு
இருப்பதால் வலிவு காணும் இவன்பல மாண்பா லொன்று
உரைத்திட்டோ மிதுவு மன்றி உயர்கரு மத்தோன் நாலில்
பெருமையா யிருப்ப தாலே பேசிலேம் மதலை யாண்மால்.

20. குருவுக்குப் பலமேயில்லை. குடும்ப ஸ்தானத்துக்கு உரியவனை புதன் கடகத்தில் இருப்பதால் சிறிது வலிவு ஏற்படும். ஆதலினால் இவனுக்கு ஆண்பால் ஒன்று உண்டு என்று சொன்னேம். இதுவுமன்றி, கரும காரகனை சனி பெருமையுடன் சிம்மத்தில் தங்கியிருப்பதால், ஆண்பிள்ளையுண்டென்று சொன்னேம்

---

1. குரு
2. புதன்
3. ஐந்தினிற் கைந்து: இலக்கினத்திலிருந்து ஐந்தாமிடம் கன்னியா ராசி; அதற்கைந்து மகரம்.

21. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிகின்றார் பராசர் தானும்
இனிமையா யைந்தோன் தன்னை இயல்செவ்வாய் பார்த்த
[தாலே
தனயனும் முன்சென் மத்தில் சார்ந்திடுந் தோடத் தாலே
கனமுள சுதராண் தோடம் கழறுவோம் குற்றந் தன்னை.

21. அத்தினி முனிவர் இவ்வாறு சொல்ல, பராசரர் கூறுகின்றார். ஐந்தாமிடமாகிய புத்திர ஸ்தானத்துக்குரிய புதனை விருப்புடன் செவ்வாய் பார்த்ததாலும், இந்த ஜாதகனுக்கு முன்சென்மத்தில் ஏற்பட்ட தோஷத்தினாலும் ஆண்குழந்தைகள் நிலையாமல் போம் என்று சொன்னோம் இப் பொழுது முற்பிறப்பில் ஏற்பட்ட அந்தத் தோஷத்தைப் பற்றிச் சொல்லுவோம்.

22. பெண்ணையின் நதிவ டக்காய்ப் பெரும்பனைப் பட்டிதன்னில்
அன்னவன் சூத்திர ஜாக அவனுமே யுதித்து மேலும்
பொன்னெடு பணிதி பெற்றுப் பூமியும் புகழு முண்டாய்த்
தன்னிலே வாழும் நாளில் சாலைமார்க் கத்தி லேதான்;

22. பெண்ணையாற்றின் வடக்கிலுள்ள பனைப்பட்டி என்னும் ஊரில், சூத்திர குலத்தில் இவன் பிறந்து, பொன் ஆபரணங்கள் முதலானவற்றுடன் நிலபுலங்களையும் புகழையும் அடைந்து, பலரும் செல்லுகின்ற சாலை வழியில்;

23. தாகப்பந் தலும மைத்துத் தன்மனைப் புத்திர ருண்டாய்ப்
பாகமாய் வாழும் நாளில் பகருவோம் ஊழி தானே
மோகத்தால் விதவை தன்னை முயற்சியால் போகந் துய்த்துத்
தோகைக்குக் கருவு தங்கிச் சுந்தரன் உடனே சென்று;

23. தண்ணீர்ப் பந்தல் ஏற்படுத்தித் தனக்குப் பிறந்த புத்திரர்களுடன் பக்குவமாக வாழ்ந்துகொண்டிருக்கும் சமயத்தில், ஏற்பட்ட தோஷத்தைச் சொல்லுவோம். காமவிச்சையினால், கணவனை யிழந்த கைம்பெண்ணுடன் தன் முயற்சியினால் போகம் அனுபவித்தான். அதனால் அவளுக்குக் கரு ஏற்பட்டுவிடவே, இவன் உடனே சென்று;

24. பலவித பண்டி தங்கள் பாவைக்குச் செய்ய லுற்றான்
குலவிய கருவு ழிந்து கோதையும் சீவித் தாளாம்
தலைமையா யந்தத் தோடம் சார்ந்தது யிவனுக் கேதான்
நிலைமையாய் மறலி பக்கல் நேர்ந்தனன் இவனே யென்றோம்.

24. பலவித மருத்துவங்கள் செய்தான். அவற்றால் கருவழிந்து போய்ப் பெண் பிழைத்தாள். இந்தத் தோஷம் முதன்மையாக இவனை

வந்தடைந்தது. இந்தத் தோஷந் தீராமலேயே இவன் முன்சென்மத்தில் மரணமடைந்தான் என்று சொன்னோம்.

25. பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ னிவனே யென்றோம்
அறைகின்றோ மிச்சென் மத்தில் அவனுக்குச் சுதரான்
[தோடம்
உரைக்கின்றோம் தோடந் தீர உத்தமன் காஞ்சிக் கேகித்
திருமுரு குமரக்[1] கோட்டம் சென்றுமே தீர்த்தம்
[தோய்ந்தும் ;

25. பிரமதேவனுல் மீண்டும் படைக்கப்பட்டு இவ்வுலகில் பிறந்தவன் இவன் என்று சொல்லுவோம். இந்தப் பிறப்பில் இவனுக்குப் புத்திர தோஷம் ஏற்பட்டது. அது நீங்கும் விதத்தைப் பற்றிச் சொல்லுவோம். இவன் காஞ்சீபுரத்தில் குமர கோட்டத்துக்குச் சென்று, அங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ;

26. அண்ணலுக் கருச்சித் தேத்தி யைந்துபோர்க் கன்ன மீந்து
திண்ணமாய் வெள்ளி யாலே [2]சேயனைப் போலே செய்து
நண்ணிய மறையோ ருக்கு நற்கந்தம் விடங்க ளோடு
விண்ணவர் தனைத்து திக்கும் [3]விப்பிரர் தமக்கு மேதான்;

26. முருகப் பிரானுக்கு அருச்சனை முதலியவைகள் செய்து போற்றி, ஐந்து பேருக்கு உணவளித்து, வெள்ளியினுல் முருகப் பெருமானின் திருவுருவமைத்து, வேத மந்திரங்களினுலே தேவர்களைத் துதிக்கும் அந்தணர் முதலியவர்களுக்கு வாசனைத் திரவியங்கள் முதலியவற்றுடன்,

27. ஆதிபம் தன்னைச் சேர்த்து அவருக்குத் தான மீந்து
கோதிலா முன்னூழ் தன்னைக் கூறவும் பெற்றே னென்று
நீதியா யவர்கள் சொல்ல நிருபனும் சட்டி நோன்பு
தீதிலா ஓராண் டுந்தான் செய்யவும் தோடம் போக்கி ;

27. அருக்கியம் முதலானவை யளித்து உபசரித்து, அவர்களுக்குத் தானங்கள் செய்து, முன்சென்ம தோஷத்தை அவர்களிடம் சொல்ல, அவர்கள் மனத் திருப்தியுடன் தானங்களைப் பெற்றோமென்று சொல்லுவர். பின்பு இவன் சஷ்டி விரதம் ஒரு வருஷம் இருந்துவந்து, புத்திர தோஷத்தைப் போக்கினுன் ;

1, காஞ்சியிலுள்ள முருகக் கடவுள் கோயில்.
2. முருகன்.
3. பிராமணர்.

28. சுதராணும் விருத்தி யென்றேரும் சொல்போலே செய்யா
[ஞகில்
சதமுடன் ஆண்பால் காணுன் சத்திமா ரிருவ ரென்றேரும்
மதிநுதல் மாதுர் சேதி யறைகின்றேரும் மால்நி றத்தாள்
சதியிலா மனத்த ளாகும் தருமமாம் குணத்த ளென்றேரும்.

28. ஆண் குழந்தைகள் பிறந்து விருத்தியாம் என்று சொன்னேம். சொல்லியதுபோல் செய்யாஞகில், நிச்சயமாய் ஆண் குழந்தை நிலையாது. பெண்கள் இருவர் என்று சொன்னேம். இவனுடைய தாயாரின் செய்தியைச் சொல்லுகின்றேரும். கரிய நிறமுடையவள். குற்றமில்லாத மனமுடையவள். தரும சிந்தனை யுடையவள் என்று சொன்னேம்.

29. அவளுடைத் துணைவர் தம்மை அறைகின்றேரும் ஆண்பால்
[மூன்று
நவனியில் பெண்பா லாறு நாட்டுவோம் சிலது சேதம்
பவமுள ஒருவன் தானும் பாகமில் லாம லேதான்
இவளுடை ஊர்க்கு மேற்கில் ஏகுவா னென்று சொன்னேம்.

29. அவளுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுகின்றேரும். ஆண்மக்கள் மூவர். பெண்கள் அறுவர். இவர்களில் சிலர் சேதமடைவர் என்று சொல்லுவோம். உயிரோடிருந்தவர்களில் ஒருவன் சொத்தில் பாகங் கிடைக்காமல், இவளுடைய ஊருக்கு மேற்குப் பக்கமாக யாத்திரை செல்லுவான் என்று கூறுவோம்.

30. இன்னமும் விபர மாக இயம்புவோ மிரண்டி லேதான்
அன்னையின் பூர்வம் தன்னை அறைகின்றேரும் சிறுபாக்
[கத்தில்
உன்னத செக்கான் வமிச முறைந்துமே மதலை யின்றித்
தென்திசைத் தலங்கள் சென்று தீர்த்தங்கள் பலவுந்
[தோய்ந்து ;

30. இதற்கு மேலும் விவரமாக இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். இந்த ஜாதகன் தாயாரின் முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். சிறுபாக்கம் என்ற ஊரில் உயர்ந்த வாணியர் வமிசத்தில் பிறந்து, குழந்தைகள் இல்லாமல், தெற்குத் திசையிலுள்ள பல புண்ணிய தலங்களுக்குச் சென்று, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி ;

31. யாவர்க்கும் நல்லா ளாகி அறத்தின்மே லிச்சை வந்து
பாவத்தில் மனம்வை யாமல் பாவையு மரண மாகிக்
கோவைசிய குலத்தி லேதான் குதித்தன ளிவளே
[யென்றேரும்
ஆவலா யுத்தி ரத்தில் அறுரெண்டு கடிகை தாரம் ;

31. எவருக்கும் நல்லவளாகி, தருமத்தில் ஆசை ஏற்பட்டு பாவத் தின்மேல் மனஞ் செலுத்தாமல் வாழ்ந்து மரணமடைந்து, இப்பிறப்பில் வைசிய குலத்தில் பிறந்தாள் இவள் என்று சொன்னேம். உத்திர நட்சத்தி ரம் வந்து பன்னிரண்டு நாழிகையில் இவள் ஜனனியாக ;

32. வரனிடம் வந்தா ளென்றேரும் மறுசென்மம் காஞ்சி தன்னில் பெருமையா யிக்கு லத்தில் பிறப்பளே சுகமுண் டாகித் திருமகள் விலாசம் பூண்டு செல்வத்தில் வாழ்வா ளாகும் கரிமுக வானைப் பெற்ற காதலி கேட்டி டாயே.

32. கணவனிடம் வந்தாள் என்று சொன்னேம். இவள் மறுபிறப்பில் காஞ்சீபுரத்தில் மேன்மையுடன் இக்குலத்தில் பிறப்பாள். எல்லாவித நலங் களும் ஏற்பட்டு, இலட் சுமீகடாட்சமும் உண்டாகி, செல்வ வாழ்க்கை நடத் துவாள். யானைமுகக் கடவுளாகிய விநாயகரைப் பெற்ற பார்வதியே ! கேட்பாயாக.

33. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோ மினிமே லாகப் பன்னுதக் கோலந் தன்னில் பாலன்செங் குந்த வமிசம் அன்னவ னுதித்து மேலும் யாவர்க்கு நல்லோ னாகி உன்னத நெசவு செய்து உயர்பூமி யுள்ளா னாகி ;

33. இவன் தந்தையின் பூர்வத்தைப் பற்றிச் சொல்லுவோம், இனி மேல். தக்கோலத்தில் செங்குந்தர் வமிசத்தில் பிறந்து, எல்லோருக்கும் நல்லவனாகி, உயர்ந்த நெசவுத் தொழில் செய்து, நிலபுலங்கள் உள்ளவனாகி;

34. அறந்தன்னி லிச்சை வைத்து அறுமுகர்க் கன்பு பூண்டு மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டு விரைவில்கோ வைசிய வமிச மீதினி லுதித்தா னென்றேரும் மறுசென்மம் காஞ்சி தன்னில் மறைக்குலம் உதிப்பா [னென்றேரும்.

34. தருமங்களில் இச்சைகொண்டு, முருகக் கடவுளிடம் அன்பு பூண்டவனாகி, பின்பு மரணமடைந்து, விரைவில் பிரம்மதேவனால் படைக்கப் பட்டு, வைசிய குலத்தில் உதித்தானென்று கூறினேம். மறுபிறவி காஞ்சி யம்பதியில் அந்தணர் குலத்தில் உதிப்பானென்று உரைத்தோம்.

35. தந்தையின் மரணகாலம் சாற்றுவோம் இருபான் மூன்றில் பந்தமாய் [1]மிதுன மாதம் பகருவோம் கருமம் தானும் அந்ததோர் காலம் தன்னில் [2]அசுரர்மந் திரிதி சையில் புந்தியின் புசிப்பி லேதான் புகலுவோம் கண்டம் தானே.

---

1. ஆனி
2. சுக்கிரன்

35. பிதாவின் மரண காலத்தை உரைப்போம். இந்த ஜாதகனுக்கு இருபத்து மூன்றும் வயதில் கருமதசை வரும் என்று சொல்லுவோம். அந்தக் காலத்தில் சுக்கிர மகாதசை புத புக்தியில் தந்தைக்கு மரணம் என்று கூறுவோம்.

36. அன்னையின் மரண காலம் அறைகின்றேம் நாற்பா லுலில்
தந்தனுர் மாதந் தன்னில் சாற்றினேம் கருமம் தானும்
[1]மன்னுசேய் [2]திசையி லேதான் [3]மதிமகன் பொசிக்கு நாளில்
உனனித கெண்டடம் சொல்வோம் உத்தமி கேட்டி டாயே.

36. தாயின் மரண காலத்தைச் சொல்லுவோம். இந்த ஜாதகனின் நாற்பத்து நான்காம் வயதில் மார்கழி மாதத்தில் கரும தசை வருகிறது. செவ்வாய்த் தசையில் புத புக்தியில் தாயாருக்குக் மரணம் நேரும் என்று சொல்லுவோம். உத்தமியே! கேட்பாயாக.

37. சாதகன் மரண காலம் சாற்றுவோம் அறுபா னேழில்
நீதிலா ஆடி மாதம் [4]குறைபட்சம் சட்டி தன்னில்
நீதான வாயு நோயால் செப்புவோம் மார கங்கள்
போதக வானைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

37. ஜாதகனுடைய மரண காலத்தைச் சொல்லுவோம். அறுபத் தேழாம் வயதில் குற்றமில்லாத ஆடிமாதத்தில் கிருஷ்ண பட்சம் சஷ்டி திதியில் கொடிய வாயுநோயால் மரணம் நேரும் என்று சொல்லுவோம். யானைமுகக் கடவுளைப்பெற்ற புண்ணியசாலியே! கேள்.

38. மறுசென்மம் துவாரை தன்னில் வைசிய குலமு தித்து
பெருமையாய்ச் செட்டுச் செய்து பிரபல கீர்த்தி யாகி
இருவினை யில்லா னுகி இவனுமே வாழ்வா னுகும்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

38. மறுபிறப்பில் துவாரகையில் வைசியகுலத்தில் பிறந்து, மேன்மை யுடன் வியாபாரங்கள் செய்து, பிரபலமாய்ப் புகழடைந்து, தீவினையில்லாதவ னுகி, இவனும் வாழ்ந்திருப்பான் என்று சொன்னேம். சுப்பிரமணியக் கட வுளைப்பெற்ற பார்வதி தேவியே! கேட்பாயாக.

---

1. மார்கழி
2. செவ்வாய்
3. புதன்
4. கிருஷ்ண பட்சம்

39. பாரியாள் முன்சென் மத்தைப் பகருவோம் விரிஞ்சி
[நாட்டில்
ஆரிய குலமூ தித்து அவள்வரன் சுகமுண் டாகிச்
சாரியாய் வாழு நாளில் சாற்றுவோம் ஊழி தானும்
ஈரிய பட்சி யில்ல மேவியே வாழு நாளில் ;

39. இவன் மனைவியின் முன் சென்மத்தைபற்றிச் சொல்லுவோம். விரிஞ்சிநாட்டில், ஆரிய வைசியகுலத்தில் பிறந்து, மணமாகி, கணவனுடன் சுகமாக வாழும் நாளில், நேர்ந்த தோஷ மொன்றைச் சொல்லுவோம். இளமையான பறவை யொன்று கூடுகட்டிக் கொண்டு வீட்டில் வாழும்போது ;

40. அந்ததோ [1]ரடைக்க லானும் [2]அறைதனில் குஞ்சு வைத்துச்
சந்ததம் வாழும் நாளில் சத்தியு மதனைக் கண்டு
பந்தமாய்க் கலைத்து விட்டுப் பாலரைக் கொன்ரு
[ளென்ரேம்
முந்திய அந்தத் தோட மேவிற்று இவளுக் கேதான்.

40. அந்தப் பறவை தனது கூட்டில் தன் குஞ்சுகளுடன் சுகமாக வாழுங் காலத்தில், இவள் அதனைக் கண்டு, கூட்டைக் கலைத்து, குஞ்சுகளைக் கொன்ருள் என்று சொன்னேம். முற்பிறப்பில் செய்த அந்தத் தோஷம் இவளை யடைந்தது என்ரேம்

41. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனுல் வரையப் பட்டு
ஞாலமே லிக்கு லத்தில் நாயகி உதித்தா ளென்ரேம்
கோலமா யிச்சென் மத்தில் குருவியின் சாபத் தாலே
ஏலவே துணைவர் தோட மெய்திடு மென்று சொன்னேம்.

41. பின்பு மரண மடைந்து, பிரமதேவனுல் படைக்கப்பட்டுப் பூமியில் இக்குலத்தில் இவள் பிறந்தாள் என்று சொன்னேம். இப்பிறப்பில், அந்தக் குஞ்சுகளைக் கொன்ற தோஷம் தொடர்ந்ததால், உடன்பிறந்தவர்களுக்குத் தோஷ மேற்படும் என்று சொன்னேம்.

42. மறுசென்மம் வள்ளுர் தன்னில் மாதுவு மிக்கு லத்தில்
உறைகுவா ளென்று சொன்னேம் உரைக்கின்ரேம் மரண
[ா லம்
வரன்பின்னு லுய்வா ளென்ரேம் வாக்கது தப்பா தாகும்
அறந்தன்னை வளர்க்கு மாதே அம்பிகை புகன்றிட் டோமே.

---

1. பறவை.

2. கூடு.

42. மறுபிறப்பில் திருவள்ளூரில் இக்குலத்தில் இவள் பிறப்பாள் என்று சொன்னேம். இவள் மரண காலத்தைப் பற்றிச் சொல்லுவோம். தன் கணவனுக்குப் பின்பு சிலகாலம் சீவித்திருப்பாள் என்று சொன்னேம். நாங்கள் கூறிய வாக்குத் தவறுது. தருமத்தை வளர்க்குந் தாயே! அம்பிகையே! இவ்வாறு நாங்கள் கூறினேம்.

43. இவனுடை யோகச் சேதி யியம்புவோம் வறுமை யில்லா
னவனியில் நல்லோ னுவன் நற்பூமி விருத்தி செய்வன்
பவமுள தந்தை மேலாய்ப் பாலகன் வாழ்வா னுமே
தவசியே பூமி தன்னில் தனமது நேரு மென்றேரும்.

43. இவனுடைய யோகச் செய்தியைச் சொல்லுவோம். தரித்திரம் இல்லாதவன். உலகில் நல்லவனுவன். நல்ல நிலபுலங்களை விருத்திசெய் வான். தந்தையினும் மேலான நிலையில் இவன் வாழ்வான். பூமியினால் இவனுக்குச் செல்வஞ் சேருமென்று கூறினேம்.

44. செனித்திடுங் காலந் தன்னில் [1]செம்பாம்பு திசையி ருப்புக்
குனித்திடு மாண்டு நாலுங் கூறிய திங்கள் ஏழும்
இனமதில் சூத முண்டு இவனுக்குத் தேக கண்டம்
தனமது செலவே யுண்டு தாய்தந்தை பிணியு மாமே.

44. செனன காலத்தில் கேது மகாதசை யிருப்பு வருஷங்கள் நான்கும் மாதம் ஏழுமாம். அப்பொழுது பத்து வர்க்கத்தில் அசுபம் ஏற்படும். இவ னுக்கும் கண்டம் ஏற்படும். பணச் செலவு உண்டு. தாய் தந்தையர்க்கு வியா தியும் உண்டாம்.

45. செய்தொழில் பலித மாகும் தாய்வர்க்கம் சூத முண்டு
வையமேல் கீர்த்தி யேற்பன் வருந்துதுணை விருத்தி யாகும்
பையவே களவு போகும் பகருவோம் விபரம் ரெண்டில்
ஐயமென் றேரைக் காக்கும் அம்பிகை மேலுங் கேளே.

45. இவன் செய்யுந் தொழில்கள் நல்ல பலனைக் கொடுக் கும். தாய் வழியில் அசுபம் ஏற்படும். உலகில் கீர்த்தி பெறுவான். துணை வர்கள் விருத்தியுண்டு. பொருள்கள் களவுபோம், விவரமாக இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். அடைக்கல மென்றவர்களைப் பாதுகாக்கும் அம்பிகையே! மேலுங் கேள்.

---

1. கேது.

ஜாதகம் 6

1. நந்தியும் சென்ன மாக ராகுவும் ஆறி லேற
மந்திரி காரி திங்கள் மகரத்தில் வெள்ளி மீனம்
புந்திசேய்ப் பானு கேது புகலிட [1]மீரு ருக
இந்தவார் கோளும் நின்ரூல் இயம்புவீர் பலனே யென்று ;

1. இரிஷபம் லக்கினமாக, ராகுவும் துலாத்தில் தங்கியிருக்க, குரு சனி, சந்திரன் மகரத்திலும், சுக்கிரன் மீனத்திலும், புதன் செவ்வாய் சூரியன் கேது மேஷத்திலும் ஆக இவ்விதமாக நவக்கிரகங்களும் நின்ரூல் எற்படும் பலன்களைச் சொல்லுவீர் என்று ;

சுக்கிரன்	புதன் செவ்வாய் சூரியன் கேது	லக்கினம்	
	இராசி சக்கரம்		
குரு சனி சந்திரன்			
		ராகு	

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்ரூர்
மேதினில் ஆண்பால் சென்மம் வந்தயில் வடபால் வாசல்
ஆதவன் மேற்கு வீதி அந்தரி கன்னி யுத்திரம்
போதவே சிற்றா ராகும் புதல்வனும் மேலாம் சென்மம்.

2. பார்வதி தேவி கேட்கும் போது கௌசிக முனிவர் கூறுகின்ரூர். இந்தப் பிறப்பு உலகத்தில் ஆண்பாலாகும். இவன் பிறந்த வீடு வடக்குப் பார்த்த வாசலுடையது. கிழக்கு மேற்கு வீதி. துர்க்கை, காளி ஆகிய தேவதைகள் கோயில்கள் வடக்கில் உள்ளன. இவ்வாரூன சிறிய ஊரில் இந்த ஜாதகன் மேன்மையான குலமொன்றில் பிறந்தவன்.

3. இன்னவன் சென்ன யோகம் எழில்பெரும் தந்தை யோகம்
அன்னையின் யோகம் தானும் அவன்துணை களத்திர [புத்திரர்
மூன்பின்சென் மங்கள் யாவும் உரைக்கின்ரோம் இந்நூல் [தன்னில்
கன்னென மொழியை யொக்கும் காதலி கேட்டி டாயே.

1. இலக்கினத்துக்குப் பன்னிரண்டாமிடம் ; மேஷம்.

3. இந்த ஜாதகன் சனன யோகம், அழகிய தந்தையின் யோகம், தாயின் யோகம், இவன் உடன்பிறந்தவர்கள், மனைவி, மக்கள் ஆகியோர் செய்திகள், இவனுடைய முன்சென்மம், மறுசென்மம் முதலான யாவற்றையும் இந்த சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுகின்றோம். கரும்பு போன்ற இனிய சொற்களைப் பேசும் பார்வதி தேவியே! கேட்பாயாக.

4. தந்தையின் துணையாண் காணுன் சத்தியு மைவ ராகும்
பிந்தியுஞ் சிலது சேதம் பிதாவுமே தனியாய் வாழ்வன்
எந்தகா ரணத்தி னுலே இவன்துணை ஆண்பால் காணுன்
[1]மந்தனு நவத்தி லாக [2]மழைக்கோளு மதற்கு மூன்றில் ;

4. தந்தையின் உடன்பிறந்தவர்களில் ஆண்கள் எவருமில்லை. பெண்கள் ஐவர். அவர்களிலுஞ் சிலர் சேதமடைவர். தந்தை தனியாக வாழ்வான். எந்தக் காரணத்தினுல் தந்தைக்குயுடன் பிறந்த சகோதரர்கள் இல்லை? சனி ஒன்பதாமிடத்திலும், சுக்கிரன் அதற்கு மூன்ரு மிடமாகிய மீனராசியில்,

5. இருப்பதால் சொன்னேனும் யாங்கள் இயம்புவோம் பிதாகு
[ணத்தை
தரையினுல் சீவிப் பானும் செகராசர் பேட்டி கொள்வன்
வருவோரை யாத ரிப்பன் விளைவுமே செய்வா னுகும்
குறையென்றோர்க் குதவி செய்வன் குஞ்சர நடையு மாவன்.

5. இருப்பதாலும் ஆண் துணையில்லை என்று சொன்னேம். தந்தையின் குணத்தைச் சொல்லுவோம். நிலங்களிலிருந்து வரும் வருமானத்தினுல் ஜீவிப்பான். பூவுலக அரசர்களைப் பேட்டி காண்பான். வீடு தேடிவருபவர்களை ஆதரிப்பான். நிலங்களில் பயிர் செய்வான். உதவியென்று வந்தவர்களுக்கு உதவி செய்வான். களிறு போன்ற கம்பீர நடையை யுடையவன்.

6. பூமியும் இருவூர் சேர்ப்பன் புயபல முடைய னுகும்
நாவதைக் காப்பா னுகும் நளினமாய் வார்த்தை கூர்வன்
கோவுகள் பலித முண்டு கோதையர் மோக னுவன்
பாவத்தில் மனம்வை யாதான் பணிதிபாத் திரங்கள்
[சேர்ப்பன்.

6. நிலங்களும் இரண்டு கிராமங்களில் சேர்ப்பான். தோள்வலிமை யுடையவன். சொன்ன சொற்களைக் காப்பவன். அழகான சொற்களைப் பேசுவான். பசுக்கள் அபிவிருத்தி யுண்டு. பெண்களிடம் மோகமுள்ளவன். பாவச் செய்கைகளை மனத்தில் நினையாதவன். ஆபரணங்கள், பாத்திரங்கள் முதலியன சேர்ப்பான்.

1, சனி.
2, சுக்கிரன்.

7. குணமது நல்ல தாகும் குறிப்பினில் கொடுமை காணும்
மணங்கந்த மிட்டம் கொள்வன் மாநிறம் வாத தேகி
கனமுள புகழு மேற்பன் கிணறுகள் வேலை செய்வன்
துணிவுளன் சல்யம் காணுன் செகராசர்க் கிவன்சொல்
[மேன்மை.

7. நல்ல குணமுடையவன். முகக் குறிப்பில் கடுமை இருக்கும். நல்ல வாசனைப் பொருள்களில் விருப்பங் கொள்ளுவான். மாநிற முடையவன். வாத தேகமுடையான். யாவரும் மதிக்கத்தக்க புகழையுடையவன். கிணறுகள் தோண்டுவிக்கும் வேலையில் ஈடுபடுவான். துணிவுடையவன். கடன் இல்லாதவன். அரசர்களுக்கு இவன் சொற்களில் மதிப்புண்டு.

8. கரமதில் மாலின் ரேகை கஞ்சமாம் ரேகை யுண்டு
உறன்முறை மதிக்க வாழ்வ னுறுதியில் லாத நெஞ்சம்
மறையவர்க் கிட்ட னுகும் மாற்றூனை லகுவில் வெல்வன்
வரனின்றி மாது போகம் அடைந்தோரை யாத ரிப்பன்.

8. கையில் விஷ்ணு ரேகையும் பத்ம ரேகையு முண்டு. உறவினர் மதிக்கும்படி வாழ்வான். உறுதியில்லாத மனமுடையவன். வேதமுணர்ந்த அந்தணர்களிடம் விருப்பமானவன். பகைவனைச் சுலபமாக வெல்லுவான். எல்லையில்லாது பெண்களுடன் இன்பமனுபவிப்பான். தன்னை யடைந்த வரை ஆதரிப்பான்.

9. முன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றேம் காரைக்காலில்
மன்னிய குலமு தித்து மனைவிமைந் தருமுண் டாகி
அன்னவன் வாழு நாளில் அணுகின வினையைக் கேண்மோ
தன்னுடைத் துணைக்குப் பாகம் தராமலே மோசம்
[செய்தான்.

9. முற்பிறப்பில் இவன் இருந்த நிலையைச் சொல்லுகின்றேம். காரைக்காலில், நிலபெற்ற இக்குலத்தில் பிறந்து, மனைவி மக்களும் ஏற்பட்டு, இவன் வாழ்கின்ற காலத்தில், இவனை அடைந்த தீவினையைக் கேளுங்கள். தன்னுடைய உடன்பிறந்தானுக்குப் பாகங் கொடுக்காமல் மோசஞ் செய்துவிட்டான்.

10. துணைவனும் வருத்த முற்றுச் செப்பின சாபம் கேண்மோ
கனமுள பொருளீ யாமல் கடனதைத் தந்த பாவி
இனிவரும் சென்மந் தன்னில் எனைப்போலே துணையா
[ணின்றி
மனைவியு மந்த் மாண்டு வனவாச மாக வாழ்வாய்;

10. இவனுடைய உடன்பிறந்தானும் மனவருத்தமடைந்து கூறிய சாபத்தைக் கேளுங்கள். எனக்குச் சேரவேண்டிய மதிப்புள்ள பாகத்தைக் கொடுக்காமல், கடனே மாத்திரம் கொடுத்தவனுகிய பாவியே! இனி வரப் போகும் பிறவியில் என்னைப்போன்ற சகோதரரில்லாமல், மனைவியும் இறந்து, வனத்தில் வாழ்வதுபோலத் தனித்து வாழ்வாயாக ;

11. இன்னமும் பலவார் சொல்லி இறைத்தனன் தெருத்தூள்
[தானும்
துன்மையா யிந்தச் சாபம் தோன்றிய தென்று சொல்வோம்
மன்னனு மந்தி யத்தில் வறுமைகள் மிகவே கொண்டு
முன்னோர்க்குத் தொண்டு பூண்டு மேகினன் காலன் நாடு.

11. என்றும், இன்னும் பலவிதமாகவும் சொல்லி, தெருமண்ணை வாரி யிறைத்தான். கொடிய இந்தச் சாபம் இவனுக்கு ஏற்பட்டது என்று சொல்லுகின்றோம். இந்த ஜாதகனும் கடைசி காலத்தில் மிகவும் தரித்திர நிலையை யடைந்து, பலருக்கும் தொண்டுகள் செய்து எமனுலகமடைந்தான்.

12. பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவன் என்று சொல்வோம்
வருந்துணை ஆண்பால் தோடம் மனைவியு மந்த மேகும்
சிறையாக வாழ்வா னுகும் செப்பின குணத்தா னுக்குத்
திருமகள் நில்லா ளாகும் செப்புவோ மிவன்கு ணத்தை.

12. பின்பு பிரமதேவனுல் படைக்கப்பட்டு இவ்வுலகத்தில் பிறந்தவன் இவன் என்று சொல்லுவோம். இவனுக்குச் சகோதர தோஷம் உண்டு. மனைவியும் கடைசி காலத்தில் மரணமடைவாள். சுதந்திரமில்லாமல் வாழ்வான். இலட்சுமிதேவி இவனிடம் நிலைத்திருக்க மாட்டாள். இனி இவனுடைய குணத்தைச் சொல்லுவோம்.

13. கல்வியு மிரண்டு கற்பன் கனத்தபுத் திகளு மேற்பன்
இல்லையென் றுரைக்க மாட்டான் இடர்செய்யான் யாவ
[ருக்கும்
மல்லுக்கு முன்செல் லாதான் வருவோரை யாதரி ப்பன்
தல்லியின் சுகமில் லாதான் சாராட்க ளதிகம் சேர்ப்பன்.

13. இருவிதக் கல்வி கற்பான். மேன்மை தரத்தக்க அறிவுரைகளை ஏற்றுக்கொள்வான். கேட்டவர்களுக்கு இல்லையென்று சொல்லமாட்டான்: எவருக்கும் துன்பம் செய்யமாட்டான். பிறருடன் வீண் மல்லுக்கு முன்னுல் செல்லாதவன். தாயாரினுல் சுகமில்லாதவன். தன் பக்கம் அதிகமான ஆள் பலத்தைச் சேர்த்துக் கொள்ளுவான்.

14. தந்தைநாள் பூமி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
எந்திடம் பெருமை யேற்பன் யாரையும் வசியம் கொள்வன்
சுந்தர முடையா னுகும் சோம்பிடான் காரி யத்தில்
முந்துமால் பத்தி கொள்வன் மொழியதைக் காப்பா னுகும்.

14. தந்தை காலம் முதல் உள்ள நிலபுலங்களை விருத்தி செய்வான். எவ்விடத்திலும் பெருமை பெறுவான். எவரையும் வசப்படுத்துவான். அழகுடையவன். காரியம் செய்வதில் சோம்பலில்லாதவன். திருமாலிடம் பக்தி கொள்வான். சொன்ன சொல்லைப் பாதுகாப்பான்.

15. கடன்படா னிடுக்க மில்லான் காகுத்தன் ரேகை யுண்டு
உடன்படான் பிழைக ளுக்கு உண்மையை வெளிக்காட்
[டாதான்
படைதனில் செல்லா னுகும் பால்பாக்கிய முடையா னுகும்
மடையரை உறவு கொள்ளான் வளவுகள் செய்வா னுகும்.

15. கடன் படாதவன். துன்ப மில்லாதவன். கையில் காகுத்த ரேகை யுண்டு. தவறு செய்வதற்கு உடன்பட மாட்டான். உண்மையைத் தெரிவிக் காதவன். இராணுவத்தில் சேர மாட்டான். பால்பாக்கிய முடையவன். அறி வில்லாதவருடன் உறவு கொள்ளமாட்டான். வீடுகள் முதலியன கட்டுவான்.

16. உண்டியும் வறுமை காணுன் உறப்பொடு புளிப்பி விச்சை
அண்டினோர் தம்மைக் காப்பன் ஆவுகள் பனைஏர் விருத்தி
வண்டிவா கனமும் ஏற்பன் வளமுள தலங்கள் செல்வன்
துண்டமாய்க் கூரு னுகும் தோகையே கேட்டி டாயே.

16. உண்ணும் உணவில் தரித்திர மில்லாதவன். காரத்திலும் புளிப்பி லும் விருப்பமுள்ளவன். புகல் அடைந்தவர்களைக் காப்பவன். பசுக்கள், பனை மரங்கள், ஏர்கள் விருத்தி. வண்டிகள் முதலிய வாகனங்களையும் அடை வான். நல்ல செழுமையான இடங்களுக்குச் செல்வான். நறுக்காகச் சொற்களைக் கூறமாட்டான். மயில்போன்ற சாயலை உடைய உமாதேவியே! கேட்பாயாக.

17. தன்துணை முன்னுன் காணுன் சக்திமார் அளவாய் ஐந்து
சொன்னனே பின்பால் தோஷம் சுதனுமே தனியாய்
[வாழ்வன்
என்னகா ரணத்தி னுலே இவன்துணை ஆண்பால் காணுன்
துன்மையாய் ஆறில் ராகு தொடர்ந்ததால் சொன்னேம்
[யாங்கள்.

17. தனக்கு உடன்பிறந்த ஆண் துணையில்லாதவன். பெண்கள் ஐவர். ஆண்பால் துணை தோஷம் ஏற்படும் என்று சொன்னேம். இவன் தனியாக வாழ்வான். என்ன காரணத்தினால் இவனுக்கு சகோதரர் இல்லை? கொடுமையாக லக்கினத்துக்கு ஆறுமிடத்தில் ராகு தங்கியிருப்பதால் ஆண் துணை யில்லை யென்று சொன்னேம், நாங்கள்.

18. இதுவன்றி நாலோன் தானும் ஈராறி லிருப்ப தாலே
மதிமுக மன்னை யாண்டுள் மரிப்பளா மென்று சொல்வோம்
வதிபதி குணமெவ் வாறு அறிவிப்பீர் முனியே நீர்தாம்
துதிசெய்தோர்க் குதவு வாளாம் துன்பங்க ளெவர்க்கு
[மெண்ணுள்.

18. இதுவுந் தவிர, நான்காமிடத்துக்கு உரியவனை சூரியன் விரய ஸ்தானத்தில் இருப்பதால், இவன் அன்னை ஓராண்டுக்குள் இறப்பாள் என்று சொல்லுவோம். அவள் குணம் எப்படிப்பட்டது? சொல்லுங்கள், முனிவரே! நீங்கள். தன்னைப் புகழ்ந்தவர்க்கு உதவிசெய்வாள். எவருக்கும் துன்பம் செய்ய நினைக்க மாட்டாள்.

19. அன்னம்போல் சாய லொக்கும் அடாவடி கூரு ளாகும்
அன்னியர் மதிக்க வாழ்வள் ஆளன்தன் மனத்துக்கேற் றோள்
அன்னவள் யோக சாலி அயல்குற்றம் புகலா ளாகும்
அன்னமும் அன்பா யீவள் அரிமனை யொப்ப தாகும்.

19. ஹம்ஸத்தைப் போன்ற சாயலை உடையவள். அநியாயமாகப் பேசமாட்டாள். அயலாருக்கு மதிப்பாக வாழ்வாள். கணவனின் மனத்துக் கேற்ப இருப்பவள். அவள் நல்ல யோகமுடையவள். பிறர் குற்றத்தை எடுத்துக் கூறமாட்டாள். பசித்தோருக்கு அன்புடன் உணவளிப்பாள். இலக்குமியை ஒத்தவளாகும்.

20. முன்கோபம் பின்பு சாந்தம் மொழியதைக் காப்பா ளாகும்
தன்துணை யாண்பால் காணுள் சத்திமா ரிருவ ராகும்
பின்னமா மொன்று என்றேரும் பொலிவுடன் ஒருத்தி
[கற்பள்
அன்னைபால் உத்தி ரமாகும் அறைகின்றே மிவள்முன்
[சென்மம்

20. முன் கோபமடைந்து பின்பு சாந்தமடைவாள். வாக்கைக் காப் பாற்றுபவள். தனக்கு உடன்பிறந்த சகோதரர்கள் இல்லாதவள். சகோதரி கள் இருவர். ஒருத்தி இறந்துபோவாள். ஒருபெண் நன்கு கல்விகற்றுத் தீர்க்கமாக வசிப்பாள். தாயின் இருப்பிடம் வடக்குத்திசையாகும். இவள் பூர்வ சென்மத்தைக் கூறுவோம்.

21. சிறுபாக்கம் கீழ்பா லாகச் சிறுஊரில் இக்கு லத்தில்
திருமக ளுதித்து மேலும் செழிப்பான குடும்பி யாகி
மறையவர்க் குதவி செய்து வாழ்நாளில் வினையைச்
[சொல்வேன்
குறைசெய்தாள் ஏழை யோர்க்குக் குலவிற்று அதுஓர்
[தோஷம்.

21. சிறுபாக்கம் என்னும் ஊருக்குக் கிழக்கில் உள்ள ஒரு சிறிய ஊரில் இந்தக்குலத்தில் இவள் பிறந்து, மிகுந்த செல்வாக்குள்ள குடும்ப முடையவளாகி, அந்தணர்களுக்கு உபகாரங்கள் செய்து வாழ்ந்து வந்த காலத்தில், ஏற்பட்ட தீவினையைச் சொல்லுவேன். ஏழைகளுக்குத் துன்பம் செய்தாள். அந்தத் தோஷம் இவளிடம் விளங்கியது.

22. வரனுடைத் தம்பி பேரில் வர்ணித்தாள் சிலேடை வார்த்தை
குறைமன மாகச் சொல்வாள் குறைகளைப் பெண்மேல்
[சொன்னாள்
வரும்சென்மம் துணைஆ னின்றி மைத்துனன் மூத்தா
[ரின்றித்
தரையினில் வாழ்வா யென்னச் சார்ந்தது அந்தச் சாபம்.

22. கணவனின் தம்பிமீது இருபொருள் படும்படி தூஷணையான வார்த்தைகளைச் சொன்னாள். மனத்திருப்தி யில்லாமல் பல குறைகளைப் பெண்மீது சொன்னாள். அதைக்கேட்ட அவர்கள் அடுத்த பிறவியில், சகோதரர், மைத்துனன், மூத்தவரில்லாது இப்பூமியில் வாழ்வாயாக என்று கூற, அந்தச் சாபம் வந்தது.

23. மாதுரும் அந்தி யத்தில் மாரிக்குத் தொண்டு செய்து
நிதான கால நாடு சென்றுதன் வரன்முன் னுக
வேதியன் வரையப் பட்டு விளங்கினாள் இந்த மாது
பாதகம் சேர்ந்த தென்றேரும் பாவைக்குத் துணையாண்
[தோடம்.

23. இந்தப் பெண்ணும் தன் கடைசிக் காலத்தில் மாரியம்மனுக்குத் தொண்டுகள் செய்து தன் கணவனுக்கு முன்பாகக் கொடிய எமனுலக மடைந்தாள். பின்பு பிரமனால் படைக்கப்பட்டு இவ்வுலகில் பிறந்தாள் இவளுக்குச் சகோதர தோஷம் ஏற்பட்டது என்று கூறினோம்.

24. சுகமுள குடும்ப மேற்பள் செப்புவே னிவள்பின் சென்மம்
மிகுதவம் புரியு கின்ற வேலன்கா டதனி லேதான்
பகையிலாச் சத்திரிய சேயாய்ப் பாலிய முடைய ளாகி
சகமதில் நல்லா ளாகிச் செல்வத்தில் வாழ்வா ளாகும்.

24. கஷ்டமில்லாத குடும்பத்தை ஏற்றுக்கொள்வாள். இவள் அடுத்த பிறவியை உரைப்பேன். மிகுந்த தவம் செய்கின்றவர் வாழும் திருவேலங் காட்டில், பகைமையில்லாத ராஜகுலப் பெண்ணாக, நல்ல பாலியமுடன், பாரினில் நல்லவளாகி மிகுந்த செல்வத்தில் வாழ்ந்திருப்பாள்.

25. இருபத்து நாலு ஆண்டில் இயம்புவோம் தந்தை கெண்டம்
மருசென்மம் கலிங்க நாட்டில் மன்னர்தங் குலமு தித்து
பொருளது பெருக்க முண்டாய்ப் புண்ணியன் வாழ்வா
[னுகும்
பராசரும் அறிந்து சொல்வார் பாலக னிச்சென் மத்தில்,
[ஜாதகனின்

25. இருபத்து நாலாவது வயதில் தந்தைக்கு மரணம் என்று சொல்லுவோம். அடுத்த பிறவியில் கலிங்க தேசத்தில் க்ஷத்திரிய குலத்தில் பிறந்து நல்ல செல்வங்கள் பெருகி இப்புண்ணியசாலி வாழ்வான். பராச முனிவரும் கூறுவார். ஜாதகன் இப்பிறவியில்;

26. சிலர்க்குவஞ் சனையும் செய்து சொல்லது புரட்ட லாயும்
கலகமா மனத்த னையும் காவலன் வாழ்வ தாலே
நலமுணர் திரிய சேயாய் நாயகன் உதிக்கும் வண்ணம்
நிலையில்லார்க் குதவி செய்தும் நெடுமாலின் கோட்டம்
[செய்தும்;

26. சிலருக்கு வஞ்சனை முதலியனசெய்து சொன்ன வார்த்தைகளைப் புரட்டிக் கலக மனமுடையவனாக இவன் இருந்து வருவதால், நன்மையுணரும் க்ஷத்திரிய குலத்தில் பிறக்க நேர்ந்த காரணத்தைச் சொல்லுகின்றேன். கதியற்றவர்களுக்கு உதவிகள் செய்தும், திருமாலுக்குக் கோயில் அமைத்தும்;

27. தேவதாத் தலங்கள் சென்றும் சிறுத்தோர்க்குத் தான
[மீந்தும்
காவலன் வாழ்வ தாலே கழறினேம் சத்திரிய சேயாய்க்
கோவலன் போலே வாழ்வன் கூறின மொழிகுன் ருது
ஆவலாய்த் தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

27. புண்ணிய தலங்களுக்குச் சென்றும், சிறுமைப்பட்டோருக்குத் தானங்கள் செய்தும், இவன் வாழ்ந்திருந்ததால், இவ்வாறு சொன்னேம். க்ஷத்திரியப் புதல்வனாய் அரசனைப்போல வாழ்வான். நாம் சொன்ன சொல் கவருது. விருப்பத்தோடு தவம்புரியும் அம்பிகையே! கேட்பாயாக.

28. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோம் ரெட் டாண்டுள்
காதலி கீழ்ப்பால் நேரும் கழறுவோ மவன்கு ணத்தை
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உறுதியில் லாத நெஞ்சம்
பாவத்தில் மனமில் லாதாள் பால்பாக்கிய முடைய ளாகும்.

28. ஜாதகனுடைய திருமண காலத்தைச் சொல்லுவோம். பதினேழாவது வயதில் இவனுக்குக் கீழ்த்திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் குணத்தை உரைப்போம். நன்றாகப் பேசுவாள். உறுதியில்லாத மனமுடையவள். பாவத்திற்கு அஞ்சுபவள். பால்தரும் பசுக்களுடையவள்.

29. தோகைபோல் சாய லொக்கும் சொல்லது சுருக்க மாகும்
ஆகம முணர்ந்தோ ருக்கு அன்னமு மன்பா யீவள்
தாகமென் றோர்க்கு ஈவள் தன்வரன் மனத்துக் கேத்தாள்
நாகரீ கங்க ளுள்ளாள் நாயகி தீர்க்க ஜீவி.

29. மயிலைப்போன்ற சாயலை உடையவள். சுருக்கமான வார்த்தை கூறுவாள். நல்வழி நடக்கும் அந்தணர்களுக்கு அன்புடன் அன்னம் இடுவாள். தாகமென்றோர்க்கு ஈவள். தன் கணவனின் மனத்துக்கேற்ப நடப்பாள். நாகரீகமாக இருப்பாள், பூரண ஆயுளுடையவள்.

30. செயமுனி மறித்துச் சொல்வார் தேவியு மிருவ ராகும்
பயமில்லா சொன்ன சங்கை பகருவீர் விபர மாக
வியமதில் பானு புந்தி வக்கிர மிருப்ப தாலே
நயமுடன் சொன்னேம் யாமும் நாரதர் மறுத்துச்
[சொல்வார்,

30. செயமுனி இடைமறித்துச் சொல்லுவார். இவனுக்கு மனைவியர் இருவர். அப்படி ஏற்படுவதற்குரிய தோஷத்தைச் சொல்லுவீர், விவரமாக. விரயஸ்தானத்தில் சூரியனும் புதனும் வக்கிரமாக இருப்பதால், இவ்வாறு கூறினேம் நாம். நாரதர் இதனை மறுத்துக் கூறுவார்.

31. சத்தமத் தோனு மாட்சி தபனனு முச்ச மாக
வித்தகி யொன்றே தீர்க்கம் மேவாது தாரம் ரெண்டு
சத்தியும் இவன்முன் னலே செல்லுவாள் கால நாடு
குத்தங்கள் ஆகும் காலம் கூறுவீர் முனியே நீர்தாம்.

31. ஏழாம் இடத்திற்கு உரியவனான செவ்வாய் ஆட்சியாகவிருக்க, சூரியனும் உச்சமாக விருப்பதால் மனைவி ஒருத்தியே தீர்க்கமாக இருப்பாள். இரண்டு மனைவியர் இல்லை. மனைவியும் கணவனுக்கு முன்னமே மரணமடைவாள். மரண மடையுங் காலம் எப்பொழுது ? முனிவரே, நீர் கூறும்.

32. அன்பது ஆறு ஆண்டில் அடைகுவாள் கால நாடு
தன்சுத ருதிக்கும் தீதாம் சாற்றுவீ ரந்தச் சங்கை
பொன்னவன் நவத்தில் நீச்சம் புதனுமே விரயம் தங்கச்
சொன்னனே சுதர்கள் தோஷம் சுதனுடைப் பூர்வம்
[கேளாய்.

32. ஐம்பத்தாறும் வயதில் எமனுலகம் புகுவாள். தனக்குப் பிள்ளைகள் பிறந்தும் நிலையாமல் மடியும். அதற்குக் காரணமான தோஷத்தைச் சொல்லுங்கள். குரு ஒன்பதாமிடத்தில் நீச்சமாகவும், புத்திர ஸ்தானத்துக் குரியவனுன புதன் விரயஸ்தானத்திலும் இருப்பதால் பிள்ளைகள் பிறந்து தோஷமாம் என்று சொன்னேன். இந்த ஜாதகனுடைய முற்பிறப்பைப் பற்றிக் கேளாய்.

33. தென்திசை யாழி தன்னில் செனித்தனன மறையோனுக
பொன்பணி அதிக முண்டாய்ப் புகழுடன் வாழும் நாளில்
கன்னிகை விதவை போகம் கலந்துமே கருவு தங்க
பின்னங்கள் செய்தா னென்றே புக்கித்து அந்த தோடம்

33. தென்தேசத்தில் கடற்கரைக் கருகிலுள்ள ஒரு ஊரில் அந்தணனுக உதித்தான். செல்வங்கள் அதிகமாகிப் புகழுடன் வாழும்போது விதவையுடன் கூடியதால் அவளுக்குக் கர்ப்பமுண்டாகி, அதைக் கலைத்தபோது அந்தத் தோஷம் இவனைச் சார்ந்தது.

34. காலன்தன் நாட டைந்து கஞ்சனுல் வரையப் பட்டு
சிலமில் லாத ரெட்டி குலமதில் உதிப்பா னுகும்
சாலவே பிருகு சொல்வார் சதுர்மறை குலமுன் சென்மம்
பாலகன் குலந்தாழ் வாகப் பிறந்தகா ரணங்கள் சொல்வாய்.

34. பின்பு மரணமடைந்து பிரமனுல் படைக்கப்பட்டு ஒழுக்கமில்லாத ரெட்டியார் குலத்தில் பிறந்தான். பிருகு முனி சொல்லுவார். இவன் முன் சென்மம் அந்தணர் குலம். இப்பிறவியில் இவன் தாழ்ந்த குடியில் பிறந்த காரணங்களைச் சொல்வாய்.

35. முன்சென்மம் வேதம் தன்னை முயலாத தோடம் ஒன்று
கன்னிகை விதவை யாகக் கலந்ததால் குலந்தாழ் வாச்சு
தன்சுத ருதிக்கும் நீதாம் சாற்றுவீ ரதற்குச் சாந்தி
மன்னவன் தில்லைக் கேகி மாரனை எரித்தோ னுக்கு.

35. முற்பிறப்பில் வேதங்களைக் கற்காத தோஷத்தாலும் விதவையைக் கூடியதாலும், இப்பிறப்பில் குலம் தாழ்வாயிற்று. தன் குமாரர்களுக்கும் நீமையாம். அதற்குச் சாந்தியைச் சொல்லுவீர். ஜாதகன் சிதம்பரம் சென்று மன்மதனை எரித்த சிவபெருமானுக்கு,

36. சகஸ்திர அர்ச்சனை செய்து சதுர்மறை மாதுக் கேதான்
பகையிலா விடமும் கந்தம் பணம்சீலை அவர்க்குத் தந்து
மிகுதவம் புரிவோ ரான வேதியர் தசம்பே ருக்கு
உரிமையா யன்ன மீய ஓதுங்கிடும் வினைகள் தாமே.

36. ஆயிரம் அருச்சனைகள் செய்து, அந்தணர்குல மங்கைக்கு சந்தணம் பணம் ஆடைகள் முதலாயின தந்து, மிகுந்த தவம் செய்கின்ற பத்து அந்தணர்களுக்கு நல்ல அன்னமும் அளிக்க, தீவினைகள் தொலையும்.

37. மதலைக ளாண்பால் ரெண்டு மாதுவு மவ்வார் தீர்க்கம்
இதுநிற்க இவனின் யோகம் இயம்புவோ மினிமே லாகப்
பதியது மூன்று மெய்தும் பாருகள் மூவூர் சேர்ப்பன்
நிதியது பெருக்கம் செய்வன் நேமியோர்க் குதவி செய்வன்.

37. புத்திரர்கள் இரண்டு பேர். பெண்களும் இரண்டு பேர். நிற்க, இனிமேல் இவன் யோகங்களை உரைப்போம். மூன்று வீடுகள் கிடைக்கும். மூன்று ஊர்கள் சேர்ப்பான். செல்வங்களை விருத்தி செய்வான். அண்டினவர்க்கு உதவிகள் புரிவான்.

38. தந்தைக்கு மேலாய் வாழ்வன் திருப்பணி செய்வா னுகும்
முந்தின புகழு மேற்பன் மொழியதைக் காப்பா னுகும்
வந்தவர்க் கன்ன மீவன் வழக்கோரை நசிக்க வைப்பன்
நிந்தைக ளேற்கா னுகும் நிருபர்கள் நேசம் சொள்வன்.

38. தகப்பனுருக்கு மேலாக மதிப்புடன் வாழ்வான். திருப்பணிகள் பல செய்வான். முற்பட்ட பெருமைகளை அடைவான். சொன்ன சொல்லைக் காப்பான். பசியென வந்தவர்களுக்கு அன்னம் ஈவான். வம்பர்களைத் தொலைப்பான். பழிச் சொற்களை எற்கமாட்டான். அரசர்கள் நட்பைக் கொள்ளுவான்.

39. யோகமெவ் விதமாய்ச் சொன்னீர் உரைப்பீர்க ளந்தச் சங்கை
[1]ஆகமன் காரி திங்கள் அணுகிட நவத்தி லாக
நாகமு மாறி லேற [2]லக்கினத் தோனு முச்சம்
பாகமா யிருப்ப தாலே பாரிசாத யோகம் ஒன்று.

39. யோகம் எற்படும் என்று எப்படிச் சொன்னீர்கள்? அந்தச் சந்தேகத்தை விளக்கிக் கூறுங்கள். குரு, சனி, சந்திரன் ஆகியோர் ஒன்பதாமிடத்தில் தங்கவும் ராகு துலாத்தில் நிற்கவும் சுக்கிரன் மீனராசியில் உச்சமாக இருப்பதாலும், பாரிசாத யோகம் ஒன்று.

40. தர்மகர் மாதி யோகம் தாமரை யோக மொன்று
திருதிய யோகத் தாலே சேயனும் சுகமாய் வாழ்வன்
அரசருக் கிவன்சொல் மேன்மை அறம்செய்வன் பெருமை
[யேற்பன்
மருவாரை வசித்தே வெல்வன் அளகேசன் போலே
[வாழ்வன்.

---

1. குரு
2. ஈண்டு சுக்கிரன்

40. தர்மகர்மாதிபதியிலுல் எற்படும் யோகம், தாமரை யோகம் ஒன்று ஆக இம்மூன்று யோகங்களிலுலும் இவன் சுகமாக வாழ்வான். அரசர்களுக்கு இவன் சொல்லே மதிப்பாகும். தருமங்கள் செய்வான். பெருமைகள் கொள்வான். பகைவர்களுடன் உறவாடி வெல்லுவான். குபேரனைப் போல வாழ்வான்.

41. அறுபது ஒன்ப தாண்டில் ஆவணி மாதந் தன்னில்
நிறைபக்கம் சட்டி தன்னில் நிமலன்தன் னுடல மேகும்
மறுசென்மம் வேங்க டத்தில் வருகுவான் மறைகு லத்தில்
குறையிலா தவங்கள் செய்யும் கோதையே கேட்டி டாயே.

41. அறுபத்து ஒன்பதாம் வயதில் ஆவணி மாதத்தில் வளர்பிறைச் சஷ்டியில் இவன் மரண மடைவான். மறுபிறவி வேங்கடத்தில் அந்தணர் குலத்தில் உதிப்பான். குறையில்லாது தவம்புரியும் உமையே! கேட்பாயாக.

42. இதுமத்தில் சாத கர்க்கு எய்தாதோ மார கங்கள்
விதவித பிணி யனேகம் மேவிடும் கண்டம் போலே
மதிகுரு நவத்தில் தங்க வரும்வினை விலகு மென்றும்
சதியிலா வயது தீர்க்கம் சங்கரி கேட்டி டாயே.

42. இந்த ஜாதகனுக்கு இடையில் மரணத்தைக் கொடுக்கக்கூடிய வியாதிகள் எற்படாவோ? பலவிதமான வியாதிகள் கண்டங்கள் போல எற்படும். ஆனல், சந்திரனும் குருவும் ஒன்பதாமிடத்தில் தங்கியிருப்பதால் எற்படக்கூடிய துன்பங்கள் விலகும். குற்றமில்லாமல் வயது தீர்க்கம். பார்வதியே! கேட்பாயாக.


43. உதித்திடுங் காலந் தன்னில் உத்திராடம் கடைபா தத்தில்
பதங்கன்தன் தசையி ருப்புப் பகருவோம் திங்க ளெட்டும்
இதுமுதல் பாகம் சொன்னேம் இயம்புவோம் பின்பா
[கத்தில்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

43. சென்ன காலத்தில் உத்திராட நட்சத்திரம் நான்காம் பாதமாகும், சூரியமகாதசை இருப்பு எட்டு மாதங்கள் என்று சொல்லுவோம். இதுவரை முதல்பாகம் கூறினேம். மற்றவற்றை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். அடைக்கலமென்று அடைந்தவர்களைக் காக்கும் அம்பிகையே! மேலும் கேட்பாயாக.

ஜாதகம்—7

1. சந்திர னரியில் புக்கத் தபனனும் புதனும் கோவில்
மந்தனு இராகு வண்டி மறைபுகர் தேள தாக
முந்துசேய் மேரு வாக [1]முனி[2]மானில் நந்தி சென்மம்
இந்தவார் கோளு நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே

1. சந்திரன் சிம்மத்திலும், சூரியனும் புதனும் துலாத்திலும், சனியும் ராகுவும் கடகத்திலும், குருவும் சுக்கிரனும் விருச்சிகத்திலும், செவ்வாய் தனுசிலும், கேது மகரத்திலுமாக, இவ்விதம் நவக்கிரகங்களும் நின்று, லக்கினம் விருஷபமாகவும் உள்ள இந்த ஜாதகனுக்கு உரிய பலனைச் சொல்லுவீர்.



2. அத்திரி சொல்லு கின்ரூர் அம்பிகை சென்ன மாகும்
வித்தகி யில்லம் தன்னை விளம்புவோம் கீழ்மேல் வீதி
உத்திரம் தெற்கு வாசல் உரைக்கின்ரூம் மேற்கி லேதான்
சித்திர ரதமும் தோன்றும் தேவியா மாரி தங்கும்.

2. அத்திரி முனிவர் சொல்லுகின்ரூர். இது பெண்பால் ஜாதகம். இவள் பிறந்த வீட்டைப் பற்றிச் சொல்லுவோம். கிழக்கு மேற்கான வீதியிலுள்ளது. தெற்குப் பார்த்த வாசலையுடையது. மேற்குத் திசையில் அழகிய தேரும், அம்பிகை கோயிலும், மாரியம்மன் கோயிலும் உள்ளன என்று சொல்லுவோம்.

3. அருகினில் மாயோன் நிற்பான் அதன்கீழ்பால் ஈசன்
[கோட்டம்
பெருவயி றப்பன் தென்மேல் பெருமுனி அம்மன் கோட்டம்
வருநதி யருகில் தங்கும் மன்னர்தம் துருவம் கீழ்பால்
உரைக்கின்ரூம் சம்வூர் தன்னில் உதிப்பளாம் செக்கான்
[வம்சம்.

1. கேது
2. மகாராசி

3. இவற்றிற்கு அருகில் திருமால் கோயிலுண்டு. அக்கோயிலுக்குக் கிழக்கே சிவபெருமான் கோயில் இருக்கின்றது. விநாயகப் பெருமான் தென் மேற்கில் வீற்றிருக்கின்றார். பெரிய முனியம்மன் கோயிலும் அங்குண்டு. இந்த ஊருக்கு அருகில் நதியொன்று உள்ளது. அரசன் அரண்மனையும் கிழக்குப் பக்கம் இருக்கின்றது. இவ்வாறான ஊரில் வாணியர் வமிசத்தில் இந்தப் பெண் பிறப்பாள் என்று சொல்லுவோம்.

4. பிறந்தவ ளிவளின் யோகம் பேசுவோம் தந்தை யோகம்
சிறந்திடும் மாதுர் யோகம் செப்புவோம் துணைவர் யோகம்
உரைந்திடு புத்திர யோகம் உரைக்கின்றோம் முன்பின்
[சென்மம்
நிரந்தர மாகச் சொல்வேன் நிமலியே கேட்டி டாயே.

4. வாணியர் குலத்தில் பிறந்த இவள் யோகம், இவளுடைய தந்தை, தாய், உடன்பிறந்தார், பிறக்கும் மக்கள் முதலானவர் யோகங்கள், முற் பிறப்பு, மறுபிறப்பு ஆகிய இவற்றையெல்லாம் உறுதியாகச் சொல்லுவேன். குற்றமற்ற பார்வதியே! கேட்பாயாக.

5. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோ மால்நி
[றத்தான்
எந்தையே சமதே கத்தன் இவன்யூகி கல்வி மானும்
நிந்தையு முடைய னுகும் நீள்நிலம் விருத்தி செய்வன்
கந்தன்மேல் பக்தி செய்வன் காதலி கேட்டி டாயே.

5. இவளுடைய தந்தையின் குணத்தை நாங்கள் சொல்லுகின்றோம். கரிய நிறமுடையவன். குற்றமற்ற தேகமுடையவன். ஊகித்து உணரும் சக்திபெற்றவன். படிப்பாளி. சிறிது பழியுமுடையவன். மிக்க வீனை நிலங்களை விருத்திசெய்வான். முருகப்பெருமானிடம் பக்தி கொள்ளுவான். தேவியே! கேட்பாயாக.

6. வித்தையும் புத்தி யுண்டு வீண்திரிச் சலேயே யுண்டு
சக்தியே அடக்க முள்ளான் சனஉப காரம் செய்வன்
வெற்றியாம் ஈகை யுள்ளான் வெருண்டிடும் பேரைக்
[காப்பன்
புத்தியும் பெரிதா யுள்ளான் புன்னகை யுடைய னுமே.

6. படிப்பும் நல்லறிவும் உண்டு. வீண் அலைச்சலையுடையவன். தேவியே! அடக்கமுடையவன். மக்களுக்கு உபகாரங்கள் செய்வான். வெற்றிகரமான தருமங்களைச் செய்வான். பயந்தவர்களைக் காப்பான். பெரும் புத்தியுடையவன். புன்சிரிப்புடையவன்.

7. உண்பதில் விருப்ப முள்ளான் உரைப்பது நிசமே யாகும்
தனபர வசன னுகும் தக்கவா தங்க ளுள்ளான்
பண்பெரும் பெண்கள் மோகன் பருகிய மனைவி பட்சன்
அன்புறும் கடவுள் பத்தி அணுகிடு மிவனுக் கென்றேும்.

7. சுவையுள்ள உணவை உண்பதில் விருப்ப முடையவன். உண்மையையே உரைப்பான். நன்றுக வார்த்தைகள் சொல்லுவான். தகுந்த முறையில் வாதங்கள் புரிவான். பெண் மோகம் உடையவன். மனைவியிடம் விருப்பமா யிருப்பான். இவனுக்குக் கடவுள் பக்தி நிரம்ப ஏற்படும் என்று சொன்னேம்.

8. மனமது குழப்ப முள்ளான் மாதுரு நான்க தாகும்
சினமது சுளுவி லுண்டு செல்நிலம் விருத்தி செய்வன்
இனமுள எவர்க்கு நண்பன் இனசெனப் பிரிய னுவன்
தனமது பின்னு லுள்ளான் தைரிய மனத்த னென்றேும்

8. மனக் குழப்ப முடையவன். இவனுக்குத் தாய்மார் நால்வர். விரைவில் கொபங் கொள்ளுவான். நெல் விளைநிலங்களை விருத்தி செய்வான். எவருக்கும் நண்பன். பந்து வர்க்கத்தாரிடம் விருப்ப முடையவன். பிற்காலத்தில் செல்வப் பெருக்கமுடையவன். தைரியமான மனத்தையுடையவன் இவன், என்று சொன்னேம்.

9. நித்திரைப் பிரிய னுவன் நீர்தன்னில் தோய வல்லன்
குத்திர மெவர்க்கும் பேசான் கோதுமை ரேகை யுள்ளான்
பித்தமாம் தேகி யாவன் பூமியில் கிருஷி செய்வன்
அத்திரி சொல்லும் போது அம்பிகை கேட்க லுற்றுள்.

9. தூக்கத்தில் பிரிய முள்ளவன். நீர்மூழ்குவதில் வல்லவன். குதர்க்கமான சொற்களை எவரிடமும் பேச மாட்டான். கையில் கோதுமை ரேகையுடையவள். பித்த தேகமுள்ளவன். உலகில் பயிர்த்தொழில் செய்வான். இவ்வாறு அத்திரி முனிவர் சொல்லும்போது, உமாதேவி கேட்கத் தொடங்கினள்.

10. உரைத்தீர்கள் மாதா நான்கு உதித்தன னெந்தத் தாய்க்கு
நிறையவே நாலாந் தாய்க்கு நேர்ந்தன னிவனே யென்றேும்
திறமையாய்த் துணைவ னென்று செப்பினேம் இனையோ
[னுக
அறைகின்றேு மவன்தன் சேதி அம்பிகை யாளே கேளாய்.

10. தாய்மார் நால்வர் என்று கூறினீர்கள். இவன் எந்தத் தாயிடம் பிறந்தான் ? நான்காம் தாய்க்குப் பிறந்தான் இவன் என்று கூறினேம். நிற

மையான இளைய சகோதரன் ஒருவன் இவனுக்குண்டு என்று சொன்னேம். அவனுடைய செய்தியைச் சொல்லுகின்றேம். அம்பிகையே! கேட்பாயாக.

11. மாநிறம் சமதே கத்தன் மருமமும் பெருமை காட்டும்
தேன்மொழி கூறு வானும் சொல்லது இரண்டு மூண்டு
ஆனவர் நேசங் கொள்வன் அழகுளான் செலவு செய்வன்
ஈனமாம் குணங்க ளுள்ளான் எதிரிக்கு அஞ்சா
[னென்றேம்.

11. மாநிறமுடையவன். உடற்கட்டுடையவன். மர்மமுடையவன். பெருமை யுள்ளவன். தேன்போன்ற இனிய சொற்களைப் பேசுவான். இரண்டுவிதமாகப் பேசுவான். பலர் இவன் நட்பை விரும்பிப் பெறுவர். அழகுடையவன். செலவாளி. தீய குணமு முடையவன். பகைவர்களுக்குப் பயப்பட மாட்டான்.

12. தூரிதான நடையு முள்ளான் சோம்பிடான் தந்திர வாதி
குறையாத மனத்த னுவன் கல்வியு முடைய னென்றேம்
தரையினுல் சிவிப் பானும் தனயன்தன் னுடனே வாழ்ந்து
விரைவினில் வேறுய்ச் செல்வன் விளம்பினேம் மனுவி
[யொன்று.

12. வேகமான நடை யுடையவன். சோம்ப லில்லாதவன். தந்திர முடையவன். நிறைந்த மனமுள்ளான். படித்தவன் இவன் என்று சொன்னேம். பூமியினுல் ஜீவிப்பான். புதல்வனுடன் வாழ்ந்திருப்பான். விரைவில் மனைவிட்டுப் பிரிந்துவாழ்வான். ஒரு மனைவிதான் இவனுக்கு என்று கூறினேம்.

13. புத்திர ரிருவ ராகும் பெண்ணது அவ்வா றுகும்
சித்தசன் வயதும் தீர்க்கம் செப்புமிவ் வடையா ளத்துள்
ஒப்பிய தந்தைக் கேதான் உதிப்பளா மிரண்டாம் சென்மம்
அத்தியைப் பெற்ற மாதே அறைகின்றே மிவன்கு ணத்தை.

13. புத்திரர்கள் இருவர். பெண்களும் இரண்டு பேர். இவன் நிறைந்த ஆயுளையுடையவன். சொல்லப்பட்ட இந்த அடையாளங்கள் கொண்ட இடத்தில் இந்த ஜாதகி தந்தைக்கு மூன்றும் பிறப்பாகப் பிறப்பாள். யானைமுகக் கடவுளைப் பெற்ற பார்வதி தேவியே! இவள் குணத்தைச் சொல்லுவோம்.

14. சாதகி இருநி றத்தாள் சமதேகம் பொறுமை சாலி
மேதினில் யூகை யுள்ளாள் வின்னமில் லாத தேகி
தோதக மெண்ணு ளாகும் சுகமுளாள் அழகு முள்ளாள்
கோதிலா பித்த தேகி கோமளி மேலும் கேளை.

14. இந்த ஜாதகி கரிய நிறமுடையவள். நல்ல உடற்கட்டுடைய வள். பொறுமை யுள்ளவள். குற்றமில்லாத தேகத்தாள். ஊகித்துணரும் சக்தி யுடையவள். தீமைகளே எண்ணமாட்டாள். சுகமுடையவள். அழகும் உடையவள். பித்த தேகமுள்ளவள். தாயே! மேலுங் கேட்பாயாக.

15. அடிசலுக் கினியா ளாகும் அன்னம்போல் நடையு மாவள்
தடைசொல்லாள் வரனுக் கேதான் தான்பெரு தனமும்
[செய்வள்
படபட கோபம் கொஞ்சம் பண்டுபூ சிதமு முள்ளாள்
விடவுரை பகரா ளாகும் விளம்புவோம் துணைவர் தம்மை.

15. சமைப்பதில் சிறந்தவள். அன்னம்போன்ற நடையையுடை யவள். கணவன் சொற்களுக்கு எதிர்வார்த்தை பேசமாட்டாள். பெரு தனமும் உண்டு. சிறிது படப்படப்பான கோபமுடையவள். முன்சென்ம நல்வினை யுள்ளவள். விஷம்போன்ற கொடிய வார்த்தைகளைச்சொல்ல மாட்டாள். இவள் சகோதரரைக் குறித்துக் கூறுவோம்.

16. தன்னுடைத் துணைவர் காணுள் சங்கரி கேட்க லுற்றுள்
என்னகா ரணத்தி னலே இவளுக்குத் துணைவர் தோஷம்
முன்னமே சொல்லு மென்ன மொழிகின்றார் அத்திரி தானும்
மந்தனும் ராகு மூன்றில் மங்கலன் பார்த்த தாலே;

16. தன்னுடன் பிறந்தார் இல்லாதவள். பார்வதி கேட்கத் தொடங் கினாள். என்ன காரணத்தினால் இவளுக்குச் சகோதர தோஷம் ஏற்பட் டது? அதனை முன்னே சொல்லும் என்று கேட்க, அத்திரி முனிவர் கூறு கின்றார். சனியும் ராகுவும் மூன்றுமிடத்தில் இருக்க, அவர்களைச் செவ் வாய் பார்ப்பதால் ;

17. துணைகளும் காண தாகும் சுரர்குரு மூன்றைப் பார்க்கக்
கனமான துணைவர் விருத்தி காதலி சொல்லும் போது
சினமில்லா பராசர் சொல்வார் தேவர்தன் குருவு மெட்டாய்ப்
பிணையான இடமே யாகில் பலமில்லை துணைவர் தாமே

17. உடன்பிறந்தவர்கள் இல்லாதவளாவள். ஆயினும், குரு மூன்று மிடத்தைப் பார்ப்பதனால் தோஷம் நீங்கி மேன்மையான துணைவர் விருத்தி ஏற்படும் என்று பார்வதியிடம் சொல்லும்போது, கோபமே யில்லாத பராசர முனிவர் கூறுவார். குரு எட்டாமிடத்தில் மறைந்து இருப்பதால் சகோதர பலமில்லை.

18. ஆகிலு மதிக்கு மூன்றில் அருக்கனும் புந்தி சேரில்
பாகமாய் மாதுர் வாலே பெருகிற்று அந்தத் தோஷம்
தாகமாய் அந்தத் தோஷம் சாற்றுவீர் முனியே என்றுள்
வேகமாய்ச் சொல்லு கின்றேன் வித்தகி கேட்டி டாயே.

18. ஆயினும், மாதுர்காரகனை சந்திரனுக்கு மூன்றுமிடத்தில் சூரியனும், புதனும் சேர்ந்திருப்பதாலும் முற்பிறப்பில் இவள் தாய்க்கு ஏற்பட்ட ஒரு பழியினாலும் சகோதர தோஷம் ஏற்பட்டது. அந்தத் தோஷம் எப்படி ஏற்பட்டது? என்று சொல்லுங்கள், முனிவரே! என்று பார்வதிதேவி கேட்டாள். மிக விரைவாக அந்தத் தோஷத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். தேவியே! கேட்பாயாக.

19. மாதுமால் நிறத்த ளாவள் மனதுசஞ் சலமு முள்ளாள்
மேதினில் பித்த சூடு மேவிடு நாபி நோயும்
பாதக மில்லா ளாகும் பாலர்கள் ஆடை யுள்ளாள்
சூதுக ளில்லா ளாகும் சோம்பிடாள் காரி யத்தில்.

19. இப்பெண் கரிய நிறமுடையவள். சஞ்சல மனத்தை உடையவள். பித்தசூடும், நாபி நோயும் உண்டு. குற்றமில்லாதவள். ஆடையை உடையவள். கபட மில்லாதவள். வேலை செய்வதற்குச் சோம்பல் கொள்ளாதவள்.

20. அவசர மனத்த ளாகும் அவள்துணை ஆண்பால் ரெண்டு
நவனியில் கன்னி ஒன்று நவிலுவோம் தீர்க்க மாக
இவளுடைத் தாயின் இல்லம் இயம்புவோம் உள்ளூர் [தன்னில்
தவசியே பூர்வம் சொல்வேன் தயாபரி கேட்டி டாயே.

20. அவசரமான மனமுடையவள். இவளுக்குச் சகோதரர் இருவர். சகோதரி ஒருத்தி உண்டு என்று சொல்லுவோம். இவளுடைய தாயின் வீட்டைப்பற்றிச் சொல்லுவோம். உள்ளூரிலேயே தாய் வீடு. தவம் புரிகின்றவளே! அவள் பூர்வத்தைச் சொல்லுவேன். தயையுடைய பார்வதியே! கேட்பாயாக.

21. அன்னையின் மூன்சென் மத்தை அறைகின்றேம் ஓதூர் [கீழ்பால்
தன்னிலே குலால வமிசம் தானவள் உதித்து மேலும்
பொன்னெடு பணிதி பெற்றுப் புத்திரன் உள்ளா ளாகி
இன்னவள் வாழு நாளில் இயம்புவேன் ஊழி தானே.

21. தாயின் முற்பிறப்பைச் சொல்லுவோம். ஓதூர் என்னும் ஊரின் கிழக்கில், குயவர் வமிசத்தில் பிறந்து, செல்வங்களை உடையவளாகி,

புத்திரனைப் பெற்று, இவள் வாழ்ந்திருக்கும்போது, நேர்ந்த தீவினையைப் பற்றிச் சொல்லுவேன்.

22. தன்னுடைக் கொல்லை தன்னில் சடாமுனி கருப்பு வாசம்
அன்னகர்க் குடிகள் வந்து அவைகளைப் பூசிப் பார்கள்
இன்னவள் குலதெய் வங்கள் இதுவன்றி வேறே யில்லை
சொன்னனே கருப்பைத் தானும் தோகையும் கருவத் தாலே.

22. இவளுடைய தோட்டத்தில் சடாமுனியும் கருப்பனும் வாசமாக இருந்தன. அந்த ஊர் மக்களெல்லோரும் வந்து அவைகளைப் பூஜிப்பார்கள். இவளுடைய குல தெய்வங்களும் அவைகள்தாம். அப்படி இருக்க, இப் பெண்ணும் கருவத்தால் கருப்பனுக்கு;

23. பூசைகள் புரிய வில்லை புலம்பிற் றுப் பிசாசு தானும்
பாசமாய்த் துதிக்கா மல்தான் பராமுகம் பார்த்த தாலே
வாசமாய் உன்பால் சென்று மைந்தரை நசிப்பே னென்று
வீசியே சொல்லியே தான் மேவிற்று இவள்பா லுந்தான்.

23. பூசைகள் செய்யாமல் இருக்க, பிசாசும் சொல்லியது. வழக்கமான பூசைகளைச் செய்யாமல் நீ பராமுகமாயிருந்ததனால் உன்னிடத் திலேயே வாசமாயிருந்து உன் புதல்வரைத் தொலைப்பேனென்று சபதம் செய்து இவளை அந்தப் பிசாசு பிடித்துக் கொண்டது.

24. அந்திய காலம் தன்னில் அவள் சுதர் யாவு மற்று
பிந்தியே மரண மாகிப் பிரமனால் வரையப் பட்டு
வந்தவ ளிவளே யென்றும் அவளுடன் பிசாசு தங்கும்
முந்தின சுதரும் தோஷம் மொழிகின்றோம் பின்னும் கேளே.

24. இவளுடைய அந்திய காலத்தில் இவள் புத்திரர்கள் அனைவரும் மாண்டுபோக, அவர்களுக்குப் பின் தான் மரணமடைந்து, பிறகு பிரமனால் படைக்கப்பட்டு வந்தவள் இவள்தான் என்று சொன்னோம். அவளுடன் பிசாசும் தங்கும். இதனால் புதல்வர் தோஷம் ஏற்படும். மேலும் சொல்லு வோம்; கேட்பாயாக.

25. மாசாந்திர காலம் தன்னில் மங்கையு மிரண்டாம் நாளில்
ஆசார நதிக டந்தாள் அதுஒரு தோட மாச்சு
பாசமா யிரண்டு தோஷம் பெருகிற்று ஆகை யாலே
தோஷங்கள் சுதர்க்கு என்றும் தோன்றினு மரிட்ட மாகும்.

25. இவளுடைய மாதவிடாய்க் காலத்தில் இரண்டாம் நாள், ஒரு புண்ணிய ஆற்றில் இறங்கி அதனைக் கடந்ததால், இவளுக்கு அது ஒரு

தோஷமாக ஆயிற்று. இரண்டு தோஷங்கள் ஏற்பட்டனவாதலால், புத்திர தோஷம் உண்டாகும் என்று சொன்னோம். அப்படிப் பிறந்தாலும் நிலையாமல் போம்.

26. செயமுனி இதனைக் கேட்டுச் செப்புவார் முனிவ ருக்கு
வியமாகும் சுதர்கள் என்றீர் வித்தகி இருப்ப தென்ன
நயமுடன் சொல்லு மென்ன நற்குரு புகரு மேழில்
பயமிலா திருப்ப தாலே பகருவோம் வயது தீர்க்கம்.

26. செயமுனிவர் இதனைக் கேட்டு அத்திரி முனிவரிடம் சொல் லுவார். புத்திர தோஷம் உண்டு என்று கூறினீர். இவள் மாத்திரம் நிறைந்த ஆயுளுடன் இருப்பது எப்படி? அதற்குரிய காரணத்தைச் சொல்லுங்கள் என்று கேட்க, குரு சுக்கிரன் ஆகியோர் ஏழாமிடத்தில் பய மில்லாமல் தங்கியிருப்பதால் இவளுக்கு வயது தீர்க்கம்.

27. இப்படிச் சொல்லும் போது ஈச்வரி கேட்க லுற்றாள்
செப்பினீர் சுதர்கள் தோஷம் செனிக்குமா யில்லை
[யோசொல்
ஒப்புடன் சாந்தி யொன்று உரைக்கின்றோம் செய்வா ராகில்
கப்பிய கருப்பு நீங்கிக் காளையும் விருத்தி யாமே.

27. இங்ஙனம் கூறும்போது ஈசுவரி கேட்டாள். புதல்வர்கள் தோஷத்தைக் கூறினீர். புதல்வர் பிறப்பரா? பிறவாரா? சொல்லும் என்ன, அதற்கான சாந்தியைச் சொல்லுவோம்; அதனைச் செய்வாளாகில் அவளைப் பிடித்த பிசாசும் நீங்கி, புதல்வரும் விருத்தியாவர்.

28. சாந்தியும் விவரம் கேளாய்ச் சமித்துகள் நவதா னியங்கள்
சேர்ந்ததோர் கலசம் ஒன்பான் சதிபதி பிம்பம் செய்து
நேர்ந்தவா டைகள் சாத்தி நெய்யினல் ஓமம் செய்து
கூர்ந்திடு மூலம் சொல்வேன் கோதையே கேட்டி டாயே.

28. சாந்தி செய்யும் விதத்தைக் கேட்பாயாக. சமித்துக்கள் சேகரித்து, நவதானியங்கள் நிறைந்த ஒன்பது கலசங்கள் ஸ்தாபனம் செய்து, பார்வதியோடு கூடிய சிவபெருமான் உருவம் ஒன்று அமைத்து, அதற்குப் புது ஆடைகள் முதலியன அணிவித்து, பின்பு நெய்யினல் ஹோமங்கள் செய்ய வேண்டும். அதன் பிறகு செபிக்க வேண்டிய மூல மந்திரத்தைச் சொல்லுவேன். உமையே! கேட்பாயாக.

29. தியானம் ஓம்ஐயும் கிலியும் சௌவுடன் மௌவும் சீயும்
மாயமாய்த் திரியும் பேயை மறைத்திடு நம்சிவாயென்று
நேயமாய் மனத்தி லேதான் சகஸ்திரம் செபமே செய்து
ஆயவே தாம்பி ரத்தில் அறுகோண பீஜம் போட்டு;

29. தியானம்ாக, ஓம், ஐம், கிலியும், சௌ, வௌ, சீயும் என்று கூறி, மாயமாகக் கண்ணுக்குப் படாமல் திரியும் பிசாசை அகற்றிடுவாய், சிவ பெருமானே! உனக்கு வணக்கம்; என்று பக்தியுடன் மனத்தில் நினைத்து ஆயிரம் முறை செபித்து, தாமிரத்தகட்டில் அறுகோண வடிவமுள்ள சக்கரம் போட்டு, அதனுள் அம்பிகை பீஜாட்சரத்தை எழுதி:

30. சக்தியின் பூசை செய்வீர் சகஸ்திரம் உருவு கொண்டு
பக்தியாய் அணிவா ராகில் பிசாசுதன் பீடை நீங்கி
வித்தகி தனக்குப் புத்திரர் விளங்கிடு மாண்டால் ஒன்று
குத்தமாய்ச் செய்யா ளாகில் கூறினேம் சுதர்கள் தோஷம்.

30. அம்பிகைக்கு ஆயிரம் முறை அருச்சனை செய்து, அந்தத் தகட்டினைப் பக்தியுடன் அணிந்து கொள்வாளானால், பிசாசின் துன்பம் நீங்கி, இவளுக்கு ஆண் குழந்தை யொன்று பிறந்து நிலைக்கும். செய்யாமல் தவறுவாளாகில், புத்திரதோஷம் ஏற்படும் என்று சொன்னேம்.

31. சாதகி மணத்தின் காலம் சாற்றுவோம் பதின்மூன் ருண்டுள்
ஓதுவோம் தென்கீழ் தன்னில் உத்தமன் வரன்உண் டாகும்
நீதிலான் நற்கு ணத்தான் சித்தசன் ஒப்ப தாகும்
மேதினில் பாக்கியம் கொஞ்சம் விதவித செட்டுச் செய்வன்.

31. ஜாதகியின் திருமண காலத்தை உரைப்போம். இவளின் பதின் மூன்றுவது வயதில் தென்கிழக்குத் திசையில் உத்தமமான கணவன் கிடைப்பான். நீதியில்லாதவன். நல்ல குணமுடையவன். உலகில் குறைவான பாக்கியத்தை உடையவன். பலவித வியாபாரங்கள் செய்வான்.

32. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் ஆண்பால் ரெண்டு
சித்தமாய்ப் பெண்பால் மூன்று செப்பினேம் தீர்க்க மாக
பத்திய மூன்று நஷ்டம் பகருவோம் இவளுக்குக் கேதான்
அத்தியைப் பெற்ற மாதே அறைந்தனம் மொழிகுன் ருது.

32. புத்திர சம்பத்தைச் சொல்லுவோம். இரண்டு ஆண்கள், பெண்கள் மூவர் என்று கூறினேம். இவளுக்குப் பிறப்பவர்களில் மூவர் மரணமடைவர். யானைமுகனைப் பெற்ற பெண்ணே! நாங்கள் கூறிய சொற்கள்கள் தவறு.

33. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் பட்சி தன்னில்
எந்தையே சூத்திர னுக இவனுமே யுத்தி தானென் றேறும்
சந்ததம் ஆல யத்தில் தானுமே வாத்தியம் செய்து
பந்தமாய் மனைவி மைந்தர் பாரினில் கீர்த்தி யாகி.

33. தகப்பனரின் முற்பிறப்பைக் கூறுவோம், திருக்கழுக்குன்றத்தில் சூத்திர சாதியில் இவன் பிறந்தானென்று சொன்னேம். தினமும் கோவிலில் வாத்தியம் வாசித்து மனைவி புத்திரர் இவர்களுடன் உலகில் புகழோடு,

34. வந்தவர் மனம்க ளிக்க மங்கைக்குக் கல்வி சொல்லி
சிந்தையு மர்ம மின்றிச் சிவகாமி பூசை செய்து
முந்தியே மரண மாகி முயன்றவ னிவனே யென்றும்
பிந்திய சென்மம் தன்னைப் பேசுவோ மினிமே லாக.

34. வந்தவர்களின் மணம் சந்தோஷிக்கப் பெண்ணுக்குப் படிப்பு முதலியன சொல்லிவைத்து எண்ணத்தில் கபடமில்லாது, பார்வதி தேவியைப் பூஜைசெய்து மனைவிக்கு முன்னுலேயே மரணமடைந்தவன் இவன் என்று கூறினேம். இவனுடைய அடுத்த பிறவியை உரைப்போம் இனி மேல்.

35. அருணையின் நகரம் தன்னில் அவனுமே சைவ வமிசம்
பெருமையாய் உதித்து மேலும் பிரபல குடும்பி யாகி
வருவோர்க்கு உபதே சித்து வாழ்குவா னென்று சொன்னேம்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

35. திருவண்ணுமலை நகரத்தில் சைவ குலத்தில் பிறந்து மேலும் பிரபலமான குடும்பியாகி, வந்தவர்களுக்குப் புத்திகள் சொல்லி வாழ்வான் என்று சொன்னேம். முருகக் கடவுளைப்பெற்ற பார்வதிதேவியே! மேலும் கேட்பாயாக.

36. தந்தைக்கு இருபா னெட்டில் சாற்றுவோம் கண்டம்
[தானும்
வந்திடு நோய்க ளெல்லா வறுமுகன் தன்னுல் நீங்கும்
பிந்தியே மூப்ப தாண்டில் பங்குனி மாதம் தன்னில்
சந்தகம் தந்தை கண்டம் தயாபரி கேட்டி டாயே.

36. இருபத்தெட்டாம் வயதில் தந்தைக்கு வரும் கண்டமும், மற்றும் வரும் நோய்களெல்லாமும் ஆறுமுகனின் கருணையால் நீங்கிவிடும். பின்பு மூப்பதாவது வயதில் பல்குனி மாதத்தில் தந்தைக்கு மரணம் நேரும். மிகுந்த தயை யுடைய உமையே! கேட்பாயாக.

37. அன்னைக்கு நாற்பா னுறில் ஆவணி மாதம் தன்னில்
மன்னிய கண்ட மூண்டு வரனுக்கு நாற்பா னுலில்
தன்னிலே மரண மெய்தும் தானவள் விதவை யாவவள்
பின்னையு மன்பா னேழில் பங்குனி மாதம் தன்னில்;

37. தாயாருக்கு இவளுடைய நாற்பத்தாறுவது வயதில் ஆவணி மாதத்தில் ஒருகண்டமுண்டு. கணவனுக்கு நாற்பத்து நான்காம் வயதில் மரணமேற்படும். அவள் விதவையாவாள். பிறகு ஐம்பத்தேழாவது வயதில் பங்குனி மாதத்தில் ;

38. உதித்தவள் மரண மெய்தும் உரைக்கிறேரும் பூர்வம் தன்னை
விதியினுல் வான்மி யூரில் வித்தகி இக்கு லத்தில்
அதிபதி யாய்ப்பி றந்து அநேகபாக் கியமுண் டாகி
சதியிலாக் குடும்பி யாகி சண்முகர்க் கடிமை பூண்டு ;

38. இந்த ஜாதகி மரணமடைவாள். சொல்லுவோம் இவள் மூற் பிறப்பை. பிரமனுல் படைக்கப்பட்டுத் திருவான்மியூரில் இவள் இக்குலத்தில் பிறந்து அநேக பாக்கியங்களுடன் தீமையில்லாத குடும்பியாகி முருகப் பெருமானுக்கு அடிமைசெய்து,

39. மதலைகள் இல்லா ளாகி மங்கையும் மரண மாகி
விதியவன் வரையப் பட்டு மேவினு ளிவளே யென்றேரும்
சதியிலாப் பின்சென் மத்தைச் சாற்றுவோம் காஞ்சி தன்னில்
வதிபதி பிரும்ம சேயாய் வருகுவாள் என்று சொன்னேம்

39. குழந்தைகள் இல்லாதவளாகி மரணமடைந்து, மீண்டும் பிரம தேவனுல் படைக்கப்பட்டு வந்தாள் இவள், என்று கூறினேம். இவள் அடுத்த பிறப்பைக் கூறுவோம். காஞ்சி நகரில் பிராமணப் பெண்ணுக உதிப்பாள் என்று சொன்னேம்.

40. பின்சென்மம் அன்னைக் கேதான் பேசுவோம் காஞ்சி
[தன்னில்
அன்னவள் செங்குந்த வம்சம் அணுகுவாள் வறுமை
[யில்லாள்
உன்னித தந்தைக் கேதான் உரைக்கின்றேரும் யோகச் சேதி
இன்னவள் ஈரா றுண்டின் மேலேதான் யோகம் வாய்க்கும்.

40. அன்னையின் அடுத்த பிறவியை உரைப்போம். காஞ்சி நகரில் அவள் செங்குந்த வமிசத்தில் பிறப்பாள். தரித்திரமில்லாதவள். இவள் தந்தைக்கு யோகச் செய்தியைச் சொல்லுவோம். இவளுடைய பனிரண் டாவது வயதிற்குமேலே தான் தந்தைக்கு யோகம் வாய்க்கும்.

41. மரமாட்டுந் தொழிலும் வாய்க்கும் வண்டிவா கனமும்
[உண்டு
விரைவினில் செட்டு ஓங்கும் மேதினி பூமி சேரும்
வரவர லாபு மெய்தும் மனமது-களிப்பு உண்டு
உறன்முறை மெச்ச வாழ்வன் உலகுக்கு நல்லோ னவன்.

41. மர வேலை செய்வான். வண்டி முதலிய வாகனங்களும் இவன் பெறுவான். சீக்கிரத்தில் வியாபார முறையில் மேன்மையடைவான். உலகில் விளைநிலங்களும் சேரும். வரவர இலாப முண்டாகும், மனத்தில் சந்தோஷம் உண்டு, பங்காளிகள் புகழ வாழ்வான், உலகத்தாருக்கு நல்லவனு யிருப்பான்,

42 கடனிலான் கொள்ளா னுகும் காலாட்கள் சேரு
[மென்றும்
திடமுள குடும்பி யாகும் சொல்வது செயமே யுண்டு
அடைவுடன் சாத கிக்கு அப்பலன் சொல்ல லாகும்
திடவரை மகளாய் வந்த சக்தியே மேலும் கேளே.

42. கடனில்லாதவன். கடனும் வாங்கமாட்டான், அடிமையாட் கள் மிகுதியாக இருப்பர் என்று கூறினேம். பலமுள்ள குடும்பஸ்தனுக விருப்பான். இவன் சொல்லும் சொல் பலனுள்ளதாக இருக்கும். இந்த ஜாதகிக்கும் இவ்வாறான பலன்களைச் சொல்லலாம். இமயமலையின் மக ளான சக்தியே! மேலும் கேடபாயாக.

43. சேயது வுதிக்கும் காலை செம்பாம்பு திசையி ருப்பு
நேயமாய் ஆண்டு நாலும் நேர்ந்திடும் திங்க ளேழும்
ஆயவே நாட்கள் பத்தும் அறைகிறேம் பலனை யாங்கள்
சேய்க்குப்பால் குறைச்ச லாகும் தேகமும் பிணியும்
[காட்டும்

43. குழந்தை பிறக்கும் காலத்தில் கேதுமகா தசை இருப்பு நான்கு வருஷங்களும், எட்டு மாதங்களும் பத்து நாட்களுமாம். நாங்கள் பலனைக் கூறுகின்றேம். குழந்தைக்குத் தாய்ப்பால் குறைவாகப் போகும். உடம்பில் வியாதிகளும் ஏற்படும்.

44. குடும்பமும் கலக முண்டு கோவுகள் சேத மாகும்
அடைவுடன் சனங்கள் பீடை அவள்தந்தை ரோகம்
[எய்தும்
படபடச் செல வனேகம் பத்தினி வர்க்கம் சூதம்
திடவரை மகளே பின்பால் சாற்றுவோம் விபர மாக.

44. குடும்பத்தில் கலகங்கள் உண்டு. பசுக்கள் சேதமடையும். அவ ளைச் சேர்ந்த ஜனங்களுக்கு துன்பம் ஏற்படும், ஜாதகியின் தந்தை வியாதி யடைவான். விரைவாகச் செலவுகள் பலவுண்டாம். அவள் பத்து வர்க் கத்தில் அசுபம் ஏற்படும். பர்வதராஜன் புதல்வியே! விவரமாகப் பின்பாகத் தில் சொல்லுவோம்.

———

ஜாதகம் 8

1. குண்டையும் சென்ன மாகக் குருமதி யாறில் புக்க
விண்புகர் தசம தாக வெஞ்சுடர் மரல்[1]வி யத்தில்
நஞ்சுமே [2] யிலாப மேற நற்காரி [3]பாக்கியம் சேயும்
வண்ணமா யிருநான் காக மாதையில் கேது தங்க ;

1. விருஷபம் லக்கினமாகவும், குருவும் சந்திரனும் துலாத்திலும், சுக்கிரன் கும்பத்திலும், சூரியனும் புதனும் மேஷத்திலும், ராகு மீனத்திலும், சனி மகரத்திலும், செவ்வாய் தனுசிலும், கன்னியில் கேதுவுமாகத் தங்கி,

ராகு	சூரியன் புதன்	லக்கினம்	
சுக்கிரன்	இராசி சக்கரம்		
சனி			
செவ்வாய்		குரு சந்திரன்	கேது

2. இவ்விதங் கோள்கள் நின்ரு லியம்புவீர் பலன்கள் தாமே
திவ்விய மாணஞ் சென்மம் செப்புவோ மில்லந் தன்னை
ஓவ்விய கீழ்மேல் வீதி உத்திரம் வாடை யாகும்
நவ்விய மேற்கில் மாரி நற்றடா கங்க ளுண்டே.

2. இவ்வாறு நவக்கிரகங்களும் இருந்தால் ஏற்படும் பலன்களைச் சொல்லுவீர். இது நல்ல ஆண்மகன் ஜாதகம். இவன் வீட்டைப் பற்றிச் சொல்லுவோம். கிழக்கு மேற்கு வீதியில் வடக்கு வாடையிலுள்ளது. மேற்கில் மாரியம்மன் கோயில். நல்ல தடாகங்கள் அங்குண்டு.

3. [4]மீனத்தி லீசன் காளி விளம்புவோம் வடமேல் திக்கில்
ஆனதோர் கணேசன் மாது அமர்ந்திடுங் கிழக்கில் மாயோன்
ஈனமா மென்று சொன்னேம் இவ்வித வடையா ளத்துள்
மானமாய்ச் சிற்றூர் தன்னில் வருகுவா னிரண்டாஞ்
[சென்மம்.

1. இலக்கினத்துக்குப் பனிரெண்டாம் இடம் ; மேஷம்.
2. இலக்கினத்துக்குப் பதினோராம் இடம். இங்கு மீனம்.
3. இலக்கினத்துக்கு ஒன்பதாமிடம். இங்கு மகரம்.
4. வடகிழக்கு.

3. வடகிழக்கில் சிவபெருமான், துர்க்கை கோயில்கள். வடமேற்குத் திசையில் விநாயகர், அம்பிகை ஆகியோர் கோயில்கள் உள்ளன என்று சொல்லுவோம். கிழக்கில் திருமாலின் கோயிலொன்று பாழடைந்துள்ளது. இவ்விதமான அடையாளங்கள் கொண்ட சிறிய ஊரில், மதிப்புள்ள குடும்பத்தில் இரண்டாம் பிறப்பாய் இந்த ஜாதகன் பிறப்பான்.

4. இவன்பிதா மாதுர் யோகம் எழில்பெருந் துணைவர் யோகம்
அவனியில் களத்திர புத்திரர் அறைகின்றோம் யோகச்
[செய்கை
நவனியில் இவன்முன் சென்மம் நாட்டுவோ மிந்நூல்
[தன்னில்
சிவனிடப் பாகத் தாளே செல்வியே மேலுங் கேளே.

4. இவனுடைய தாய், அழகிய உடன் பிறந்தார், மனைவி, புத்திரர் ஆகியோர் யோகச் செய்கைகளைப் பற்றிச் சொல்லுகின்றோம். அதுவன்றி இவனுடைய முன்சென்மத்தைப் பற்றியும் இந்த நூலில் கூறுவோம். சிவபெருமானின் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் உமாதேவியே! பார்வதி தேவியே! மேலுங் கேட்பாயாக.

5. தந்தையின் வர்க்கந் தன்னைச் சாற்றுவோ மெழுவ ராகும்
நொந்திடுஞ் சிலது தானும் நுவலுவோம் பிதாகு ணத்தைப்
பந்தமால் நிறத்த னாகும் பாருகள் சேர்ப்பா னாகும்
சந்ததம் பித்த சூடு தங்கிடும் என்று சொன்னோம்.

5. இந்த ஜாதகனின் தந்தை வர்க்கத்தைப் பற்றிச் சொல்லுவோம். அவர்கள் எழுவர். சிலர் சேதம். தந்தையின் குணத்தைச் சொல்லுவோம். கரிய நிறமுடையவன். பூமிகள் சேர்ப்பான். எப்பொழுதும் தேகத்தில் பித்தசூடு தங்கியிருக்கும் என்று சொல்லுவோம்.

6. யோசனை பலவுஞ் செய்வான் திருமாலின் பக்தி கொள்வான்
தாசிதா சாளு முள்ளான் சற்சன ருறவு கொள்வான்
காசுமே லாசை யுள்ளான் காவலர் நேசம் கொள்வான்
பேசுவோன் கிராமச் செட்டுப் பேணுவா னிவனே
[யென்றோம்.

6. எந்தச் செயலையும் செய்வதற்கு முன்பாக நன்கு யோசனை செய்வான். திருமாலிடம் பக்தி கொள்ளுவான். வேலைக்காரர்கள் உடையவன்,

சான்றோர்கள் உறவைக் கொள்ளுவான். செல்வத்தின்மீது ஆசையுள்ளவன். அரசர்கள் நட்பைப் பெறுவான். பேசுதலில் வல்லவன். கிராமத்தில் வியாபாரம் செய்வான் இவன் என்று கூறினேம்.

7. அதிகார முடைய னுகும் யாரையும் வசியம் செய்வன்
தநிநெய்பால் இஷ்ட முள்ளான் தனதானிய முடைய னுகும்
நிதிமிகத் தேட வல்லன் நித்தியம் சுகபு சிப்புச்
சதியான மனத்த னுகும் தாட்சிண்யன் யோக சாலி.

7. அதிகாரங்களே உடையவன். எவரையும் வசப்படுத்துவான். தயிர் நெய் பால்களில் விருப்பமுடையவன். தனதானிய சம்பத்துக்களுடையவன். செல்வத்தை மிகுதியாகத் தேடிச் சம்பாதிப்பதில் வல்லவன். தினந்தோறும் சுகமான போஜனத்தைப் புசிப்பான். சிறிது வஞ்சனையான மனமுடையவன். தாட்சிணியமுள்ளவன். அதிர்ஷ்டமுடையவன்.

8. இனத்துக்கு விரோதியாவன் இடறுகள் அனந்த முள்ளான்
சினமுளான் தியாகி யாவன் செலவுகள் அதிகம் செய்வன்
கனமுடன் வாழ்வா னுகும் கைகாலில் வடிவு முள்ளான்
இணையிலாக் குடும்பி யாவன் என்றனர் ரிஷிகள் தாமே.

8. தன் இனத்தார்களுக்கு விரோதியாவன். துன்பங்கள் மிகுதியாக உள்ளவன். கோபமுடையவன். சிறந்த தியாகியாக இருப்பான். செலவுகள் மிகுதியாகச் செய்வான். மதிப்புடன் வாழ்வான். கை கால்களில் அடையாளங்களுள்ளவன். ஒப்பில்லாத குடும்பியாக வாழ்வான் என்று கூறினர் முனிவர்கள்.

9. இக்குண முடையோ னுக்கு இவனுமே உதிப்பா
[னென்றேரும்
தொக்கவே பலன்கள் யாவும் சொல்லுவோம் மால்நி
[றத்தான்.
தக்கதோர் கல்வி யுள்ளான் தனமுளான் கோபம் கொஞ்சம்
சிக்கெனப் பொருளும் சேர்ப்பன் தேவிமேல் பிரிய னுவன்.

9. இவ்விதமான குணமுடையவனுக்கு இந்த ஜாதகன் புதல்வனுகப் பிறப்பான் என்று சொன்னேம். இவனுக்குரிய பலன்களைத் தொகுத்துச் சொல்லுவோம். கரிய நிறமுடையவன். தகுதியான கல்வியுள்ளவன். செல்வமுடையவன். சிறிது கோபமுடையவன். விரைவில் பொருள்கள் சேர்ப்பான். மனைவிமீது விருப்பமுள்ளவன்.

10. சொன்னசொல் தப்பா னுகும் துறவிகள் நேசம் கொள்வன்
பன்னியே யுரைக்க வல்லன் பந்துவுக் கினிய னுகும்
அன்னம்போல் நடையு முள்ளான் யாரையு முறவு
[கொள்வன்
உன்னித தந்த முள்ளான் உயர்ந்ததோர் பூமி சேர்ப்பன்.

10. சொன்னசொல் தவறமாட்டான். துறவிகளின் சேர்க்கையைப் பெறுவான். பன்னிப் பன்னிப் பேசுவதில் வல்லவன். பந்துக்களுக்கு நல்லவன். அன்னம் போன்ற மெதுவான நடையுடையவன். எவரையும் உறவாகக் கொள்ளுவான். விளக்கமான பல்வரிசை யுடையவன். விளைநிலங்களைச் சேர்ப்பான்.

11. உரோமங்கள் நீட்சி யுள்ளான் நுவலுப தேசம் கொளவன்
காமனை யொத்த தேகன் கணக்கினில் யூக சாலி
தாமத குணத்தா னுகும் தைரியன் யோக உள்ளான்
தீமையில் குணத்தா னுகும் சஞ்சல மனத்த னுமே.

11. உடலில் நீண்ட உரோமங்கள் உள்ளவன். சான்றோர் கூறும் உபதேச மொழிகளை ஏற்றுக்கொள்ளுவான். மன்மதனைப் போன்ற உடலழகுடையவன். கண்க்கில் சிறந்த ஊகமுடையவன். சில சமயங்களில் தாமத குணமுடையவன். தைரியசாலி. தருமம் செய்பவன். ஒழுதலில்லாத குணங்களை யுடையவன். அடிக்கடி சஞ்சல மடையும் மனத்தன்.

12. துணைவரால் அவமா னத்தன் துருசான நடையு முள்ளான்
இணையிலாச் செல்வ முள்ளான் இன்பமாய் வார்த்தை
[கூர்வன்
வனிதையர் மோக வானும் மர்மமும் சொஞ்ச முள்ளான்
இணையிலா மனத்த னுகும் மெல்லியே மேலும் கேளே.

12. உடன் பிறந்தாரால் அவமானத்தை ஏற்பவன். துரிதமான நடையுள்ளவன். ஒப்பில்லாத செல்வ முள்ளவன். இன்பமான சொற்களைப் பேசுவான். பெண்கள் மோகமுடையவன். வஞ்சனையும் சிறிது உடையவன். ஒப்பில்லாத மன முடையான். மென்மைத் தன்மையுடைய பார்வதியே! மேலுங் கேள்.

13. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோம் மூத்தோர்
[காணேம்
அவனியில் இளையோர் ரெண்டு ஆணது தீர்க்க மாகும்
நவனியில் பெண்பால் காணேம் நாயக னிளையோன் சேதி
கவனமாய்ச் சொல்லு கின்றேன் காதலி கேட்டி டாயே.

13. இவனுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். இவனுக்கு மூத்தவர்கள் இல்லை. இளைய இரண்டு ஆண் சகோதரர்கள் உண்டு. அவர்கள் தீர்க்கம். பெண் துணை இல்லை. இவனுடைய இளைய சகோதரன் ஒருவனின் செய்தியைப் பற்றிக் கவனமுடன் சொல்லுகின்றேன். பார்வதியே! கேட்பாயாக.

14. அவசர மனத்த னுகும் அக்ரமம் செய்வா னுகும்
நவனியில் நிந்தை யுள்ளான் நாயகிப் பட்ச முள்ளான்
பவமுள கிருஷி செய்வான் பாலர்கள் விருத்தி யாகும்
இவனுமுன் கோபி யாவன் ஈகையு முடையா னுமே.

14. அவசர மனமுடையவனும். அக்கிரமங்கள் செய்பவன். உலகில் பழியுள்ளவன். மனைவியிடம் விருப்பமுள்ளவன். பயிர்த் தொழில்கள் செய்வான். புதல்வர்கள் விருத்தியுண்டு. இவன் முன்கோப முடையவன். தருமமும் உடையவன்.

15. பெண்களா லவமா னத்தன் பலமுளான் பித்த சூடு
தண்மையாய்ப் பேச வல்லன் சந்தேக மனத்த னுகும்
உண்மையை உரைக்க மாட்டான் உதித்திடு மூலச் சூடு
சின்னசா திகளு மிட்டன் செவிடனு மிரணத் தோனே.

15. பெண்களினால் அவமானத்தை அடைவான். பலமுள்ளவன். பித்த சூடுடையான். எவரிடமும் குளிர்ச்சியாய்ப் பேசுதலில் வல்லவன். சந்தேகத்தினால் நிறைந்த மனமுடையவன். உண்மை சொல்லமாட்டான். இவனுக்கு மூலச்சூடு உண்டாகும். தாழ்ந்தவர்களுடன் விருப்பத்தோடு பழகுவான். செவிடனுவன். கடனுள்ளவன்.

16. தாரமே ஒன்று என்றும் சந்ததி ஆண்பால் ரெண்டு
தீரமாய்ப் பெண்பால் ரெண்டு செப்புவோம் தீர்க்க மாகக்
கூறினும் வயது தீர்க்கம் குறிக்கின்றே மவன்பின்
[வந்தோன்
வீரியன் சேதி கேளாய் மேதினில் மாஞ்சி வப்பன்.

16. இவனுக்கு மனைவி ஒருத்தி என்றும். ஆண் குழந்தைகள் இருவர். பெண்கள் இருவர். இவர்கள் தீர்க்க ஆயுளுடன் விளங்குவர் என்று சொன்னும். இவனுக்குஇளையவன் செய்தியைக் கேட்பாயாக., வீரமுடையவன். மாநிற முள்ளவன்.

17. சமதேகன் கல்வி மானும் சகலர்க்கும் நல்லோ னுவன்
இமையவர் பூசை செய்வன் இவன்பிதா தனக்கு மேலாய்
அவனியில் வாழ்வா னுகும் அழகுளான் யோக வானும்
தமையன்சொல் தப்பா னுகும் சக்தியே மேலுங் கேளே.

17. உடற்கட்டுடையவன். படிப்பாளி. எல்லோருக்கும் நல்லவன். தெய்வங்களுக்குப் பக்தியுடன் பூசைகள் செய்வான். தன்னுடைய தகப்பனாரைவிட மேன்மையாக இவ்வுலகில் வாழ்வான். அழகுள்ளவன். அதிர்ஷ்டசாலி. தன்னுடைய மூத்த சகோதரனின் சொற்களைக் கேட்கத் தவறுன். அம்பிகையே! மேலுங் கேள்.

18. புத்திமான் பொறுமை சாலி புண்ணிய மனத்த னுகும்
பத்தினி நேய னுகும் பகருவோம் தார மொன்றே
பெற்றிடு மதலை யாண்பால் பேசினேம் ஒருவன் தீர்க்கம்
சித்தமாய்ப் பெண்பால் ரெண்டு செப்பினேம் தீர்க்க மாக.

18. புத்திசாலி. பொறுமையுடையவன். நல்ல மனத்துடன் இருப்பான். மனைவியிடம் விருப்ப முள்ளவன். இவனுக்கு மனைவி ஒருத்தி யென்று சொல்லுவோம். இவனுக்கு ஆண்குழந்தை யொன்றுண்டு. அது தீர்க்கமாக இருக்கும். பெண் குழந்தைகள் இருவர். அவர்களும் தீர்க்க ஆயுளுடன் இருப்பர் என்று நிச்சயமாய்ச் சொல்லுவோம்.

19. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோம் ஈரொன் பானில்
மேதினில் உத்தி ரத்தில் வித்தகி வருவ ளாகும்
தீதிலா குணத்த ளாகும் தெய்வமேல் பக்தி பூண்பாள்
மேதினில் இருநி றத்தாள் விளைந்திடும் சாயல் நேத்திரம்.

19. இனி, இந்த ஜாதகனின் திருமண காலத்தைச் சொல்லுவோம். இவனுக்குப் பதினெட்டாம் வயதில் வடக்குத் திசையிலிருந்து மனைவி வருவாள். அவள் குற்றமற்ற குணத்தை யுடையவள். தெய்வத்தின்மீது பக்தி கொள்ளுவாள். கரிய நிறமுடையவள். சாய்ந்த பார்வையுடையவள்.

20. நடையது துருசு முள்ளான் நற்குண மன்ன மீவள்
அடைமொழி கூரு ளாகும் ஆளனுக் கினியா ளாகும்
தடைசொல்லாள் பித்த வாயு தங்கிடும் மதலை யுள்ளாள்
விடையிலாள் குடும்பம் காப்பள் வித்தகி மேலுங் கேளே.

20. துரிதமான நடையை யுடையவள். நற்குண முள்ளவள். பசி யென்று வந்தவர்க்கு உணவு அளிப்பாள். அடித்தடித்துப் பேச மாட்டாள். கணவனுக்கு இனியவள். கணவன் வார்த்தைக்கு மறுவார்த்தை கூறுள். அவளுக்குப் பித்தவாயு உண்டு. சந்ததி யுள்ளவள். குடும்பத்தை நன்கு காப்பாள். பார்வதி தேவியே! மேலுங் கேள்.

21. மதலைகள் விருத்தி தன்னை அறைகின்றேம் ஆண்பால்
[காணுள்
சதியிலாப் பெண்பால் ரெண்டு தங்கிடும் தீர்க்க மாக
அதிமுனி இவ்வார் கூற அம்பிகை கேட்க லுற்றாள்
எதுவிதக் குணத்தி னலே இயம்பினீ ராண்பால் தோடம்.

21. மக்கள் விருத்தியைப் பற்றிச் சொல்லுகின்றேம். ஆண் குழந்தை யில்லை. பெண் குழந்தை இரண்டு பிறந்து தீர்க்க ஆயுளுடன் இருக்கும். அத்திரி முனிவர் இவ்விதம் சொல்ல, பார்வதி கேட்கத் தொடங்கினாள். என்ன காரணத்தினால், ஆண் சந்ததிக்குத் தோஷம் கூறினீர்.

22. அஞ்சிலில் கேது நிற்க அதற்கஞ்சில் சனியுங் கூடத்
துஞ்சிடு மாண்பா லுந்தான் செயமுனி கூறு கின்றார்
வஞ்சிமார் விருத்தி யெவ்வார் வரைகுவீர் முனியே நீர்தாம்
தஞ்சமாய்ப் புகரு மேதான் தசமத்தி லிருப்ப தாலே ;

22. இலக்கினத்துக்கு ஐந்தாமிடமாகிய கன்னியில் கேது தங்கி யிருக்க, அதற்கு ஐந்தாமிடமாகிய மகரத்தில் சனியுந் தங்கியிருப்பதால், ஆண் குழந்தை நிலையாது மரிக்கும். அப்பொழுது செய முனிவர் கூறுகின் றார். பெண் குழந்தைகள் அபிவிருத்தி எப்படி ஏற்படும்? என்று நீங்கள் சொல்லுங்கள் முனிவரே! சுக்கிரன் பத்தாம் இடமாகிய மகரத்தில் தங்கி யிருப்பதாலும்,

23. புத்திரி விருத்தி யென்றேம் பொன்னவன் ரெண்டைப்
[பார்க்கச்
சித்தசன் முன்னூழ் தன்னில் செய்தபா வத்தி னலே
சுத்தமாய்ப் புதல்வ ரில்லாம் செய்தவூழ் சொல்லு மென்ன
அத்தியைப் பெற்ற மாதே அறைகின்றேம் விபர மாக.

23. குரு இரண்டாம் இடத்தை (குடும்ப ஸ்தானத்தை)ப் பார்ப்பத னாலும், பெண் குழந்தைகள் விருத்தி யென்றேம். இந்த ஜாதகன் முற் பிறப்பில் செய்த பாவத்தினால் அடியோடு புதல்வரில்லாமல் போவர். முற்பிறப்பில் செய்த தீவினையைச் சொல்லுமென்று பார்வதி கேட்க, யானை முகக் கடவுளைப்பெற்ற பார்வதியே! விவரமாகச் சொல்லுகின்றேம்; கேட் பாயாக என்று முனிவர் கூறத் தொடங்கினார்.

24. சாதகன் முன்சென் மத்தைச் சாற்றுவோம் பட்கி தன்னில்
நீதியாய்ச் சூத்திர னகி நிலபுலம் அதிகம் பெற்றுக்
கோதிலா மனைவி மைந்தர் குணமுடன் வாழும் நாளில்
ஆதியாய் வந்த வூழை அறைகின்றேம் கேளு மம்மா

24. இந்த ஜாதகன் முற்பிறப்பைப் பற்றிச் சொலலுகின்றோம். திருக்கழுக்குன்றத்தில் சூத்திர சாதியில் பிறந்து, விளைநிலங்களை மிகுதியாகப் பெற்று, குற்றமில்லாத மனைவி புத்திரர் இவர்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில், முதன்மையாக இவனையடைந்த தீவினையைப் பற்றிச் சொல்லுகின்றோம். கேளும் தாயே!

25. அந்தகர் நதியின் பக்கல் அணுகிய அரசின் கீழே
தந்தியும் நாகம் நிற்கும் தானவர் வாசம் கொள்வர்
மந்திர மோதும் வேத மறையவர் பூசை செய்வர்
இந்தவா றிடத்தி லேதான் இரவினில் ஏது செய்தான்;

25. அந்த ஊரிலுள்ள ஆற்றங்கரையின் பக்கத்தில் உள்ள அரசமரத்தின் கீழே விநாயகர் எழுந்தருளி யிருந்தார். நாகப் பிரதிஷ்டை செய்யப் பட்டிருந்தது. பல தெய்வங்கள் வாசம் செய்யும் இடம் அது. வேத மந்திரங்களை யோதும் அந்தணர்கள் அந்தத் தெய்வங்களுக்குப் பூசை முதலியன செய்வார்கள். இவ்வாறான சிறப்புக்கள் கொண்ட இடத்தில் இரவு வேளையில் இவன் என்ன செய்தான் என்றால்;

26. விதவையம் மரத்தின் கீழே வித்தகன் போகந் துய்த்தான்
அதனலே கருவு தங்கி அநேகமாய் அவிழ்த்த மீயச்
சதியினல் கருவு நீங்கிச் சார்ந்தது அந்தத் தோடம்
இதுவலால் இன்ன மொன்று இயம்புவேன் கேளு மம்மா.

26. ஒரு கைம்பெண்ணுடன் அந்த மரத்தின்கீழே இன்பமனுபவித்தான். அதனல் அப்பெண்ணுக்குக் கருத் தங்கியது. அநேகவித மருந்துகள் கொடுக்கக் கரு அழிந்தது. கருவையழித்த தோஷம் இவனை யடைந்தது. இது தவிர, இன்னொரு தோஷமும் சொல்லுவேன். கேளுந் தாயே!

27. [1]உரகனும் ஓர்நாள் தன்னில் உறையில்லம் தன்னில் செல்ல
அரவுமே மகுடங் கொண்டு அங்ஙன மயங்கி நிற்க
விரைவினில் இன்னேன் தானும் வாட்டினன் கழியி னலே
யறைகின்றே மந்தத் தோடம் வந்தது கேளு மம்மா.

27. பாம்பு ஒன்று ஒருநாள் வீட்டுக்குள் சென்று படமெடுத்து மயங்கி ஆடிக்கொண்டு நிற்க, இவன் வேகமாக ஓடித் தடியை எடுத்து அதனை அடித்துக் கொன்றுவிட்டான். அந்தத் தோஷம் வேறு இவனை யடைந்தது. கேளுந் தாயே!

1. பாம்பு

28. இருவிதத் தோடத் தாலே இயம்பிலேம் மதலைத் தோடம்
திறமையாய்த் தோடம் நீங்கச் செப்புவோம் சாந்தி தானும்
விரைவினில் நாக தோடம் விலகிடக் கிரிகை சொல்வேன்
திருமகன் தன்னூர் மேற்கில் சலக்கரை யருகி லேதான் ;

28. இந்த இரண்டுவித பாபங்களினால், இவனுக்குப் புத்திர தோஷம் ஏற்படும் என்று சொன்னோம். இந்தத் தோஷங்களுக்குப் பரிகாரம் சொல்லுவோம். விரைவில் சர்ப்ப தோஷம் விலகிப் போக ஒரு பரிகாரம் சொல்லுவேன். இவன் ஊருக்கு மேற்கில் ஒரு நதிக்கரையின் அருகில் உள்ள,

29. எய்திடு மரசு தன்னைத் திங்களொன் றுரையும் சுற்றி
ஐயமில் லாம லேதான் அப்[1]பணி ரசிதம் தன்னில்
பையவே செய்து பின்பு பிராமணர்க் கன்ன மீந்து
மைவிழி தானு மாக விடங்கெந்தந் தனமும் சேர்த்து ;

29. அரச மரமொன்றை ஒன்றரை மாதங்கள் பிரதட்சிணம் செய்து, மனத்தில் சிறிதும் சந்தேகங் கொள்ளாமல், அந்தப் பாம்பு போன்ற உருவத்தை வெள்ளியினால் செய்து, பின்பு அந்தணர்களுக்குப் போஜனம் முதலியன அளித்து, மனைவியுந் தானுமாக வாசனைத் திரவியங்கள், காசுகள் முதலியவற்றைச் சேர்த்து,

30. மறையவர் தமக்கு மீந்து மவருடன் முன்னூழ் ஓதிக்
குறைவிலாப் பெற்றே மென்று குணமுட னுசி பெற்றுத்
திறமையாய்ப் பட்சிக் கேகிச் சேய்வாரம் அண்ண லுக்குப்
பெருமையாய் அர்ச்சித் தேத்திப் பிராமணர் தமக்கு
[அன்னம் ;

30. பிராமணர்களுக்குத் தானங் கொடுத்து, அவர்களிடம் முன் சென்ம தீவினையைச் சொல்ல, அவர்கள் இந்தத் தானங்களை மனத்திருப்தியுடன் பெற்றுக்கொண்டோம் என்று கூறி, ஆசீர்வாதங்களை அளிப்பார்கள். அவற்றைப் பெற்றுக்கொண்டு, பின்பு திருக்கழுக்குன்றம் சென்று, செவ்வாய்க்கிழமையன்று சிவபெருமானுக்கு மேன்மையான அருச்சனைகள் செய்து துதித்து, அந்தணர்களுக்குப் போஜனம்,

31. தந்துமே உள்ளூர் மீண்டு சனிவாரம் மாத மோர்நாள்
விந்தையாய் விரதம் கொண்டு வேதத்தோன் தந்தை
[தன்னைச்
சந்ததம் ஆரா திக்கச் சனித்திடு மாண்பால் ஒன்று
மூந்தியே தீர்க்க மாகும் மொழிகின்றேம் மேலும் கேளே.

1. பாம்பு.

31. அளித்து, உள்ளூருக்கு வந்து, மாதம் ஒரு சனிக்கிழமை விரதம் இருந்து, பிரம்ம தேவனின் தந்தையாகிய திருமாலுக்கு நாள்தோறும் பூசை செய்துவர, ஆண்குழந்தையொன்று உதிக்கும். அது தீர்க்கமாக இருக்கும். மேலுங் கேள் ; சொல்லுகின்றோம்.

32. சொற்படி செய்யா னுகில் தோன்றினும் தோஷ மாகும்
மைப்புடன் செய்வா னுகில் விருத்தியாம் மதலை தானும்
செப்புவாய் தந்தை மாரம் தேவியுங் கேட்கும் போது
தப்பித மிலாது சொல்வேன் சங்கரி கேட்டி டாயே.

32. சொன்னபடி செய்யாவிட்டால், ஆண்குழந்தை பிறந்தாலும் அழிந்துபோகும். சொன்னபடி செய்வானுலுல், ஆண் குழந்தை விருத்தி ஏற்படும். இவன் தந்தையின் மரண காலத்தைச் சொல்லுவீர், முனிவரே! என்று பார்வதி கேட்கும்போது, தவறில்லாமல் அதனைச் சொல்லுவேன்; பார்வதியே கேட்பாயாக என்று முனிவர் கூறத் தொடங்கினர்:

33. பதினேழு ஆண்டு தன்னில் பகர்[1]தேளின் மாதம் தன்னில்
விதியினுல் தந்தை வீழ்வன் விளம்புவோ மதற்கு மேலே
அதிகமாம் இருபான் மூன்றில் அழகிய [2]ரிடப மாதம்
சதியிலா மாதுர் கெண்டம் சாற்றுவோம் கேளு மம்மா.

33. பதினேழாவது வயதில், கார்த்திகை மாதத்தில். தந்தை மரண மடைவான். அதற்குப் பிறகு நடக்கப்போவதைச் சொல்லுவோம். இந்த ஜாதகனின் இருபத்துமூன்றும் வயதில், வைகாசி மாதத்தில், குற்றமற்ற தாய்க்கு மரணம் ஏற்படும் என்று சொல்லுவோம். தாயே! கேளும்.

34. சாதகர் மரண காலம் சாற்றுவோம் அன்பா னுன்பான்
மேற்றினி [3]துலாமா தத்தில் [4]வளர்பக்கந் துதியை தன்னில்
சூதான பித்த நோயால் சுந்தரன் உடலம் வாடும்
ஓதுவே னிவன்பின் சென்மம் உத்தமி கேட்டி டாயே.

34. இந்த ஜாதகனின் முடிவு காலத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஐம்பத்தொன்பதாம் வயதில், ஐப்பசி மாதம், சுக்கில பட்சம் துதியை திதியில், கொடிய பித்த நோயால் இவன் மரணமடைவான். இவன் மறு பிறப்பைச் சொல்லுவோம், பார்வதியே! கேட்பாயாக.

---

1. கார்த்திகை.
2. வைகாசி.
3. ஐப்பசி.
4. சுக்கில பட்சம்.

35. மறுசென்மம் அருணை கீழ்பால் வளமுள்ள பேரூர் தன்னில்
உரிமையாய் வைசிய சேயாய் உதித்துமே செட்டுச்செய்து
பெருப்பொருள் அதிகம் பெற்றுப் புண்ணியன் வாழ்வா
[னுகும்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்மையே மேலுங் கேளே.

35. மறுபிறப்பு, திருவண்ணுமலைக்குக் கிழக்கில் வளப்பமுள்ள பெரிய ஊரில், வைசியப் புதல்வனுய்ப் பிறந்து, வியாபாரங்கள் செய்து, மிகுதியான செல்வத்தைச் சேர்த்து, நல்ல மனமுடைய இவன் வாழ்ந்திருப் பான். சுப்பிரமணியரைப் பெற்ற தாயே! மேலும் கேட்பாயாக.

36. மாதுரு குணத்தை யாங்கள் வரைகின்றே மிருநி றத்தாள்
ஒதுநற் குணத்தா ளாகும் உத்தமி பொறுமை சாலி
தீதிலா நடக்கை யுள்ளாள் சேயர்மேல் பிரிய முள்ளாள்
சூதுகள் இல்லா ளாகும் துணைவர்கள் நாச மென்றேரும்.

36. தாயின் குணத்தைச் சொல்லுகின்றேரும். கரிய நிறமுடையவன். நல்ல குணமுடையவள். உத்தமி. பொறுமையுடையவள். கெட்ட நடத்தை யில்லாதவள். குழந்தைகளிடம் பிரியமுடையவள். கபடமில்லாதவள். இவ ளுடைய உடன் பிறந்தவர்கள் இறந்து போவார்கள்.

37. அவள்வர்க்க மழியு மென்றேரும் அறைகின்றேரும் முன்சென்
[மத்தை
தவளேயின் மலைக்கு உத்திரம் சாற்றிய சிற்றூர் தன்னில்
இவளுமே இக்கு லத்தில் இசைந்தனள் வறுமை யில்லாள்
பவமுள புத்திர ருண்டாய்ப் பலருக்கு நல்லோ ளாகி

37. இவளுடைய வர்க்கமும் அழியும் என்று கூறினேம். இவளுடைய முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுகின்றேரும். தவளைமலைக்கு வடக்குப் பக்க மாக உள்ள ஒரு சிறிய கிராமத்தில், இக்குலத்தில் பிறந்தாள். தரித்திரமில் லாமல் வாழ்ந்தாள். புத்திர சம்பத்துக்கள் ஏற்பட்டு, பலரும் நல்லவள் என்று புகழும்படி இருந்துவந்து,

38. மரித்துமே கஞ்சன் தன்னுல் வலியவே வந்தா ளென்றேரும்
உரைக்கின்றேரும் பின்சென் மத்தை உத்திரம் காஞ்சி
[தன்னில்
பெருமையாய் இக்கு லத்தில் பிறப்பளே யிவளே யென்றேரும்
அருமறை முதன்மை யான அம்பிகை யாளே கேளாய்.

38. மரணமடைவாள். பின்பு பிரமதேவனுல் படைக்கப்பட்டு, இப் பிறப்பாக வந்தாள் என்று கூறுகின்றேரும். இவளுடைய மறுபிறப்பைக்

கூறுகின்றேம். காஞ்சீபுரத்துக்கு வடக்கில், பெருமையுடன் இந்தக் குலத்தில் பிறப்பாள் இவள் என்று சொல்லுகிறேம். அரிய வேதங்களுக்கு முதல்வியான பார்வதியே! கேட்பாயாக.

39. தந்தையின் முன்சென் மத்தில் தக்கோல நகரி லேதான்
வந்தசெங் குந்த வமிச மரபினில் உதித்து மேலும்
சந்ததம் நெசவு செய்து தனம்பூமி உள்ளா னுகிக்
கந்தன்மேல் பக்தி பூண்டு காவலர் நேசத் தாலே;

39. இவனுடைய தந்தை, முற்பிறப்பில் தக்கோலம் என்ற நகரத்தில் செங்குந்தர் வமிசத்தில் பிறந்து, நெசவுத் தொழில் செய்து, செல்வம், விளைநிலம் முதலியன உடையவனுகி, முருகக் கடவுள்மீது பக்திகொண்டு, அரசர்கள் சேர்க்கையினால்;

40. பலபல செட்டுச் செய்து பாலகன் மரண மாகிக்
குலவியே இச்சென் மத்தில் குதித்தவ னிவனே யென்றேம்
உலகினில் பின்சென் மத்தை உரைக்கின்றேம் விரிஞ்சி
[நாட்டில்
தலைவனும் சத்ரியச் சேயாய்த் தானவ னுதிப்பா
[னென்றேம்.

40. பலவிதமான வியாபாரங்கள் செய்து, மரணமடைந்து, பின்பு இச்சென்மம் எடுத்தவன் இவன் என்று சொன்னேம். இவ்வுலகில் இவனுடைய மறுபிறப்பைச் சொல்லுகின்றேம். விரிஞ்சி நாட்டில், இவன் க்ஷத்திரியப் புதல்வனுய்ப் பிறப்பான் என்று சொன்னேம்.

41. மனையிவள் முன்சென் மத்தில் வரைகின்றேம் தொண்டை
[நாட்டில்
கனமுடன் சூத்திர வமிசம் கன்னிகை யுதித்து மேலும்
சினமிலா வாழ்ந்து பின்பு சேயர்கள் உள்ளா ளாகி
அனையவே பலதீர்த் தங்கள் அவளுமே தோய்ந்து மேதான்;

41. இவனுடைய மனைவியின் முற்பிறப்பைச் சொல்லுகின்றேம். தொண்டை மண்டலத்தில், மதிப்புள்ள சூத்திர வமிசப் பெண்ணுய்ப்பிறந்து, கோபமில்லாத குணத்துடன் வசித்து, பின்பு மக்கட் செல்வத்தையுடையவளாய், பல புண்ணிய தீர்த்தங்களில் இவள் நீராடி,

42. தானங்கள் பலவும் செய்து தன்னிலம் சேர்ந்து பின்பு
மானமாய் வாழ்ந்து பின்பு மரித்துமே பிரம ஞலே
ஆனவள் வரையப் பட்டு அறைந்தன மிவனின் பெண்டு
பான்மையாய்ப் பின்சென் மத்தைப் பகருவோம் கேளு
[மம்மா.

42. தருமங்கள் பல செய்து, பின்பு தன் ஊரையடைந்து, மதிப்புடன் வாழ்க்கை நடத்தி முடிவில் மரணமடைந்து, திரும்பவும் பிரம தேவனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவள் இவன்மனைவி என்று கூறினேம். தகுந்த முறையில் இவள் மறுபிறப்பைக் கூறுவோம். கேளுந் தாயே.

43. மறுபடி அடுத்த ஊரில் மறைகுல முதிப்பா ளாகும்
திருமகன் தனக்கு யோகம் செப்புவோம் பொறுமை
[யுள்ளான்
வரவரச் செல்வ மோங்கும் மானிலம் விருத்தி செய்வன்
குறைவிலா யோக சாலி குபேரனுய் வாழ்வா னுமே.

43. மீண்டும் அடுத்த ஊரில் பிராமண குலத்தில் பிறப்பாள் இவள். இந்த ஜாதகனின் யோகத்தைப் பற்றிக் கூறுவோம். பொறுமை யுள்ளவன். நாளடைவில் பொருட் செல்வம் வளரும். பெரிய விளைநிலங்களை விருத்தி செய்வான். நிறைந்த அதிர்ஷ்டமுள்ளவனுய்க் குபேரனைப் போன்று வசிப்பான்.

44. அண்டினோர்க் குதவு வானும் ஆங்கார முடைய னுகும்
குண்டைகோ விருத்தி யுள்ளான் கூடிடும் பூமி தானம்
வண்டிவா கனமு முள்ளான் அரசர்க ளிட்ட னுவன்
எண்டிசை கிராமச் செட்டு இவனுமே செய்வா னுமே.

44. தன்னை யடைந்தவர்க்கு உபகாரங்கள் செய்வான். அகங்காரங் கொண்டவன். எருதுகள் பசுக்கள் விருத்தியுள்ளவன். பூதானம் சேரும் இவனுக்கு. வண்டி முதலான வாகன வசதிகள் பல உடையவன். அரசர் களுக்கு விருப்பமானவன். எல்லாத் திசைகளிலும் இவன் புகழ் பரவும் வகையில் கிராமத்தில் வியாபாரங்கள் இவன் செய்வான்.

45. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிகுவார் புசண்டர் தாமும்
தனயனும் கிராமச் செட்டுச் செய்குவா னென்று சொன்னீர்
அனையவே அந்தக் காலம் அறிவிப்பீர் விவர மாகக்
கனமுடன் மூப்பா னுண்டில் காவலன் செய்வா
[னென்றேரும்.

45. அத்திரி முனிவர் இவ்வாறு சொல்ல, புஜண்ட முனிவர் கூறுவார். இந்த ஜாதகன் கிராமத்தில் வியாபாரம் செய்வான் என்று சொன்னீர்கள். அதற்குரிய காலம் எப்பொழுது? விவரமாகத் தெரிவியுங்கள். மூப்பதாம் வயதில் மேன்மையாய் இவன் வியாபாரம் செய்வான் என்றோம்.

46. மைந்தன்தன் சென்ன காலம் மந்திரி தசையி லேதான்
வந்திடு மாண்டு மொன்பான் வருந்திங்கள் இரண்டே
[யாகும்
சந்ததம் பலனைச் சொல்வீர் சகோதர விருத்தி யாகும்
பந்தமாய்க் குடும்பம் வேறு பாலகன் தனக்கு ரோகம்.

46. இந்த ஜாதகன் பிறந்த காலத்தில் குருமகா தசையில் ஒன்பது வருஷங்களும், மாதம் இரண்டுமாம். இவனுக்குரிய பலனைச் சொல்லுவீர். சகோதரர் விருத்தி ஏற்படும். குடும்பம் வேறாகும். ஜாதகனுக்கு வியாதி உண்டு.

47. சனிதசை காலந் தன்னில் தந்தைக்குப் பகையு நேரும்
கனமான தனங்கள் சேதம் கத்திரி யோக மென்றோம்
பிணிகாணும் மரண மெய்தும் பேசுவோம் சாத கர்க்கு
இணையிலாச் சுபமும் நேரும் இடருகள் துணைவ ருக்கு.

47. சனி ஜாதகதசையில் இவன் தகப்பனாருக்கு விரோதிகள் ஏற்படுவர். மதிப்புள்ள செல்வங்களுக்கு நஷ்டம் நேரும். கத்திரியோகம் உண்டாம். வியாதி தோன்றும். மரணமும் நேரும். இனி ஜாதகனைப் பற்றிச் சொல்லுவோம். ஒப்பில்லாத சுபகாரியங்கள் நிகழும். உடன்பிறந்தாருக்குத் துன்பங்கள் உண்டாகும்.


48. வந்திடும் நிந்தை தானும் மாதுரு கெண்ட முண்டு
பந்தமாய்த் துணைவ ரேழு பாலகர் விருத்தி யாகும்
மூந்திய தானிய மோங்கு மெய்திடும் யாவு நன்மை
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் விபர மாக.

48. பழி வரும். தாய்க்கு மரணம் உண்டாகும். இவனுக்கு உடன் பிறந்தார்கள் ஏழுவர். புதல்வர்கள் விருத்தியுண்டு. தானியங்கள் நன்கு விளைந்து உயர்வு ஏற்படும். நன்மைகளெல்லாம் இவனே வந்தடையும். மற்றவற்றைப் பற்றிப் பின்பாகத்தில் விவரமாகச் சொல்லுவோம்.

ஜாதகம் 9

1. சந்திரன் குருவும் நந்தி சனிதேளில் இரவி நண்டு
புந்திசேய் புகரும் பாம்பு புதுமக[1] ளீரில் தங்க
மந்தனுக் கிரண்டில் கேது வந்தவன் சென்மம் [2]ஏறு
இந்தவார் கோளும் நின்ரூல் இயம்புவீர் பலனைத் தாமே.

1. சந்திரனுங் குருவும் விருஷபத்திலும் சனி விருச்சிகத்திலும், சூரியன் கடகத்திலும், புதன் செவ்வாய் சுக்கிரன் ராகு ஆகியோர் மிதுனத்திலும், தனுசில் கேதுவும் தங்கியிருக்கப் பிறந்த இந்த ஜாதகன் லக்கினம் விருஷபம். இவ்விதமாகக் கிரக நிலைகள் இருந்தால் உரிய பலன் களைச் சொல்லுவீர்.



2, குறுமுனி[3] சொல்லு கின்ரூர் குறித்தனம் ஆணை யாகும்
வருமவன் இல்லம் கீழ்மேல் வாசலும் வடக்குத் தங்கும்
உரமான கிரக மாகும் ஊர்காளி மாரி மாயோன்
நிறமுடன் கிழக்கில் தங்கும் தட்சிணம் வயல்க ளோடை.

2. அகத்திய முனிவர் சொல்லுகின்ரூர். இந்தப் பிறப்பு ஆண் என்று சொல்லுவோம். இவன் வீடு கிழக்கு மேற்கான வீதியில் வடக்குப் பார்த்த வாசலைக் கொண்டது. நல்ல கட்டுக்கோப்பான வீடாகும். ஊரைக் காக்கும் துர்க்கை, மாரியம்மன், திருமால் ஆகியோர் கோயில்கள் கிழக்கில் இருக்கும். தெற்குத் திசையில் நெல்வயல்களும் நீரோடைகளும் உள்ளன.

---

1. மிதுனம்
2. விருஷபம்.
3. அகஸ்தியர்.

3. வடகீழ்பால் ஈசன் கோட்டம் வடக்கினில் நதியு முண்டு
அடைவுடன் வடமேல் திக்கில் அருகரு மாலை தங்கும்
திடமில்லா மேற்கில் சண்டி செப்பிய வடையா ளத்துள்
மடமயி லாளே கங்கை வமிசத்தில் வருவா னென்றோம்.

3. வட கிழக்கில் சிவபிரான் கோயில். வடக்குத்திசையில் ஒரு ஆறு முண்டு. வடமேற்குத் திசையில் அருக தேவன் கோயிலும் விநாயகர் கோயிலும் உள. மேற்கில் காளி கோயில். சொல்லப்பட்ட இவ்வடையாளங்கள் கொண்ட இடத்தில், இளமையான மயில் போன்ற சாயலையுடைய பார்வதியே! இந்த ஜாதகன் வேளாளர் வமிசத்தில் பிறப்பான் என்று சொன்னோம்.

4. அன்னையும் தந்தை யோகம் அவன்துணை களத்திர யோகம்
பின்னையும் புத்திர யோகம் கூறுவ சனனம் யாவும்
உன்னித இவனின் யோகம் உரைக்கின்றோம் இந்நூல்
[தன்னில்
கன்னலு மொழியை யொக்கும் காதலி புகல்வேன் கேளாய்.

4. இந்த ஜாதகனின் தந்தை, தாய், உடன்பிறந்தார், மனைவி, புத்திரர் ஆகியோரின் யோகங்களைக் கூறுவதோடு, அவர்களுடைய முன்பிறப்பு மறு பிறப்பு, இவனுடைய யோகம் முதலிய எல்லாவற்றையும் இந்த நூலில் சொல்லுகின்றோம். கரும்பு போன்ற இனிய சொற்களைப் பேசும் பார்வதி தேவியே! கேள்.

5. இவன்பிதா குணத்தை யாங்கள் இயம்புவோ மிருந்நி றத்
[தான்
அவனியில் சமதே கத்தன் அவனுக்கு மாமி ரண்டு
நவனியில் யூகை சாவி நற்றுணை யில்லா னுகும்
பவமுள கிருஷி செய்வன் பந்துவும் புகழ வாழ்வான்.

5. இந்த ஜாதகனுடைய தந்தையின் குணத்தை நாங்கள் சொல்லுவோம். கரிய நிறமுடையவன். நல்ல உடற்கட்டுடையவன். அவனுக்கு மாமியர் இருவர். உலகில் நல்ல யூக முடையவன். உடன் பிறந்தாரில்லாதவன். பயிர்த்தொழில் செய்வான். உறவினர்கள் புகழும்படி வாழ்வான்

6. கிராமாதி காரம் செய்வன் கண்ணிய முடைய னவன்
தராதர மறிய வல்வன் தரணியோர் இஷ்டம் கொள்வன்
விரைவினில் நடக்க வல்லன் வித்தையு முடைய னென்
[றோம்
குறையிலா மனத்த னுகும் குணவதி கேட்டி டாயே.

6. கிராமத்தை ஆட்சி செய்யும் அதிகாரம் பெற்றவன். மதிப்புடையவன். மக்களுக்குள் ஒவ்வொருவரின் தன்மையையும் பிரித்து அறியும் சக்தி உள்ளவன். உலகத்திலுள்ளோர் அனைவருடைய விருப்பத்தையும் பெறுவான். வேகமாக நடப்பவன். கல்வியு முள்ளவன் என்று கூறிலேும். நிறைந்தமனமுடையவன். சற்குணவதியே ! கேட்பாயாக.

7. சுகமுளான் அலச்ச லுள்ளான் சொன்ன சொல் தவறு
[ஞகும்
பகையிலான் பக்தி யுள்ளான் பணத்தின்மேல் இச்சை
[யுள்ளான்
செகமதில் புகழு மேற்பன் சேயிழைப் பிரிய ஞவன்
வகையுடன் துணைவர் காணுன் மங்கையே கேட்டி டாயே.

7. சுகமுடையவன். திரிச்சலையுடையவன். சொன்ன சொற்கள் தவறுதவன். யாரிடமும் விரோதமில்லாதவன். தெய்வபக்தி யுடையவன். செல்வத்தில் ஆசையுள்ளவன். பூமியில் கீர்த்தி அடைவான். மனைவியிடம் விருப்பமுடையவன். உடன்பிறந்தார் இல்லாதவன். பெண்ணே ! கேட்பாயாக.

8. இக்குண முடையோ னுக்கு இவனுமே யுதிப்பா
[னென்றேும்
தொக்கவே யிவன்கு ணத்தைச் சொல்லு வோமிருநி றத்தன்
தக்கவே கல்வி யுள்ளான் சன்மார்க்கன் சமதே கத்தான்
மிக்கவே மனைவி பட்சன் விளைபுலம் விருத்தி செய்வன்.

8. இவ்விதகுணங்களையுடைய தந்தைக்கு, இந்த ஜாதகன் புதல்வனுய்ப் பிறப்பான் என்று சொன்னேும். இவன் குணங்கள் முழுவதனையும் சொல்லுவோம். கரிய நிறமுடையவன். தகுந்த கல்வி யறிவுள்ளவன். நல்ல ஒழுக்கமுள்ளவன். உடற்கட்டுடையவன். மனைவியிடம் மிக்க ஆசை யுள்ளவன். விளைநிலங்களை விருத்தி செய்வான்.

9. தேவதா பக்தி கொள்வன் செனவுப காரம் செய்வன்
தாவிய பேரைக் காப்பன் தானியத் தொழிலே செய்வன்
நேமியில் பித்த சூடு நிகழ்த்துவோம் பொறுமை யுண்டு
தீமையு மெண்ணு ஞகும் சுகபுஷப் பதனில் இச்சை.

9. தெய்வத்திடம் பக்தி கொள்ளுவான். மக்களுக்கு உதவி செய்வான். தன்னை யடைந்தவர்களைக் காப்பான். தானிய வியாபாரங்களும் பயிர்த்தொழிலும் செய்வான். பித்த சூடு பொருந்திய தேகமுடையவன். இவனுக்குப் பொறுமையுண்டு என்று சொல்லுவோம். எவருக்கும்

மனத்தால் கெடுதி நினையாதவன். சுகமான போஜனத்தில் விருப்பமுள்ளவன்.

10. வஞ்சக நெஞ்ச னுவன் மர்மவான் ரூசியாய்ச் சொல்வன்
அஞ்சிடான் எதிரிக் கேதான் அவன்பித்த சூடாந் தேகம்
தஞ்சமாய்த் துணைவர் தம்மைச் சாற்றுவோ மிருநான் காகும்
துஞ்சிடும் துணைவ ரெல்லாம் தோன்றிடு மாண்பால்
[ரெண்டு.

10. சிறிது வஞ்சனைபொருந்திய மனமுடையவனுவன். மர்மமுள்ளவன். சுவையான பேச்சுக்களைப் பேசுவான். எதிரிக்குப் பயப்படமாட்டான். பித்தசூடு உள்ள உடலுடையவன். இவனுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். அவர்கள் எட்டுப் பேர். உடன்பிறந்தா ரனைவரும் மரணமடைவர். பின்பு இரண்டு சகோதரர்கள் பிறப்பார்கள்.

11. தீர்க்கமாய் முந்திய மாதா செறிந்திடும் பெண்பால் ஒன்று
ஏற்கவே தீர்க்க மாகும் இவர்களும் சிலநாள் ஒன்றாய்
மார்க்கமாய்க் கூடிப் பின்னுல் விலகுவர் வேற தாக
ஆர்க்கவே மணத்தின் காலம் அறைகின்றேம் மேலுங்
[கேளே.

11. அவர்கள் தீர்க்கம். இவனுடைய முதல் தாய்க்குப் பெண் ஒருத்தியுண்டு. அவளும் தீர்க்க ஆயுளுடன் இருப்பாள். இவர்களனைவரும் சிலகாலம் ஒன்றுகச் சேர்ந்து வாழ்ந்து பின்பு வேறுகப் பிரிவார்கள். இனி இந்த ஜாதகனின் திருமணம் நிகழும் காலத்தைச் சொல்லுவோம். தாயே! மேலுங் கேட்பாயாக.

12. இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோம் பத்தொன்
[பாண்டில்
கன்னிகை தென்மேல் திக்கில் காதலி வருவா ளாகும்
அன்னவள் சிவந்த மேனி அழகுளாள் கோபம் கொஞ்சம்
தன்னிலே பித்த தேகி சாந்தவாள் நற்கு ணத்தாள்.

12. இவனுடைய திருமண காலத்தைச் சொல்லுவோம். பத்தொன்பதாம் வயதில், இவனுக்கு மனைவியாக வாய்ப்பவள், தென்மேற்குத் திசையிலிருந்து வருவாள். அவள் சிவந்த தேகமுடையவள். அழகுடையவள். சிறிது கோபமும் பித்த சரீரமும் சாந்தகுணமு முடையவள். நல்ல குணவதியாவள்.

13. பர்த்தாவுக் கினியா ளாகும் பாரினில் எவர்க்கும் நல்லாள்
குற்றமில் லாதா ளாகும் கூறுவாள் சுகமாய் வார்த்தை
வித்தகி யோக சாலி வீண்அப வாத மில்லாள்
நித்தியம் சீல முள்ளாள் நிமலியே கேட்டி டாயே.

13. கணவனுக்கு இனியவள். உலகில் எல்லோருக்கும் நல்லவள். குற்ற மில்லாதவள். நல்ல சொற்களைப் பேசுவாள். சிறந்த அதிர்ஷ்டசாலி. வீண்பழி யில்லாதவள். எப்பொழுதும் நல்லொழுக்க முள்ளவள். குற்ற மற்ற பார்வதி தேவியே! கேட்பாயாக.

14. அவளுடைத் துணைவர் தம்மை அறைகின்றோம் ஆண்பால் [காணே
மவனியில் பெண்பால் ஒன்று நாடடுவோம் தீர்க்க மாகத்
தவசியே புத்திர பாகம் சாற்றுவோம் ஆண்பால் ரெண்டு
பவமுள பெண்பால் அவ்வார் பகருவோம் தீர்க்க மாக.

14. அவளுடைய உடன் பிறந்தார்களைப் பற்றிக் கூறுகின்றோம். ஆண்கள் இல்லை. பெண் ஒருத்தி யுண்டு. அவள் இவ்வுலகில் தீர்க்கமாக இருப்பாள் என்று சொல்லுவோம். தவத்தைச் செய்யும் பார்வதியே! இவளுடைய புத்திர பாவத்தைச் சொல்லுவோம். ஆண்கள் இருவர். பெண்கள் இரண்டு பேர். இவர்கள் தீர்க்காயுளுடன் விளங்குவர் என்று சொல்லுவோம்.

15. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிகுவாள் அம்மன் தானும்
அனையவே மனைவிக் கேதான் ஆண்துணை யில்லை யென்றீர்
இணையிலா அவள்தாய் தந்தைக் கெவர்செய்வர் உரிமை [தானும்
கனமுடன் நவக்கோ ளாய்ந்து கழறுவீர் முனியே என்றாள்.

15. அகத்திய முனிவர் இவ்வாறு சொல்ல, பார்வதி தேவி பின் வருமாறு கேட்கின்றாள். இந்த ஜாதகனின் மனைவிக்குச் சகோதரர் இல்லை யென்று கூறினீர். அப்படியானால், ஒப்பில்லாத அவளுடைய பெற்றோருக்குச் செய்ய வேண்டிய உரிமைக் கடன்களை யார் செய்வர்? அதனை, ஒன்பது கிரக நிலைகளையும் நன்றாக ஆராய்ந்து சொல்லுவீர், முனிவரே!

16. இவள்புத்திர ரிருவ ரென்றோம் இதிலொரு சுதனும் [தானும்
அவர்களுக் குரிமை செய்வான் அம்பிகை கேட்க லுற்றாள்
கவனமாய் அவர்க ளுக்குத் தாயாதி யில்லை யோசொல்
நவநியில் ஒருவ னுண்டு நல்கிடும் மதலை ஒன்று.

16. இவளுக்குப் புத்திரர் இரண்டுபேர் என்று கூறினேம். அவர்களில் ஒருவன் இவளுடைய பெற்றோர்களுக்கு உரிமைக் கடன்களைச் செய்வான். உடனே பார்வதியம்மன் கேட்கத் தொடங்கினாள் அவர்களுக்குப் பங்காளிகள் இல்லையோ ? சொல்லுங்கள். ஒருவனுண்டு. அவனுக்கு ஒரு புதல்வனும் உண்டு.

17. நற்சுதன் ஒருவ னென்றீர் நல்காதோ கருமந் தானும்
பிச்சமாய்ச் செய்யா னுகும் மேதினில் இவனின் மைந்தன்
கச்சணி மாதே செய்வன் கழறினேம் அவன்தன் ஆஸ்தி
உச்சிதப் பாதி தானும் உரைக்கின்றே மிவன்சு தர்க்கு.

17. பங்காளிக்கு ஒரு புதல்வன் உண்டு என்று சொன்னீர்கள். அவன் அவர்களுக்குக் கர்மம் முதலியன செய்யானே ? என்று பார்வதி கேட்டாள். அவன் செய்யமாட்டான். இந்த ஜாதகனின் புதல்வனே, தன் தாயின் பெற்றோர்களுக்குக் கர்மம் முதலியன செய்வான். அவர்களுடைய சொத்தில் பாதி இவன் புதல்வர்களுக்குக் கிடைக்கும்.

18. ஞாதியு மொருவ னென்றீர் நல்குவீர் குடும்பச் சேதி
ஓதுவேன் ஒன்றாய் வாழ்வர் உறைந்துபின் செல்வா
[ரென்றேம்
மேதினில் அவர்கள் சேதி விளம்புவோம் பின்பா கத்தில்
போதக வானைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்

18. ஞாதி ஒருவன் என்று சொன்னீர்கள். இவன் குடும்பச் செய்தியைப் பற்றிச் சொல்லுங்கள். அதனைச் சொல்லுகின்றேன். ஒற்றுமையுடன் ஒன்றாக வாழ்ந்திருப்பார்கள். சிலகாலம் இப்படி வாழ்ந்திருந்து பிறகு வேறாகச் செல்வார்கள் என்று சொன்னேம். அவர்களுடைய செய்தியைப் பின் பாகத்தில் சொல்வோம். யானைமுகக் கடவுளைப் பெற்ற புண்ணியவதியே ! கேட்பாயாக.

19. சாதகன் முன்சென் மத்தைச் சாற்றுவோம் தணிகை
[தென்பால்
மேதினில் அருகி லேதான் விளங்கிய பேரூர் தன்னில்
சூதிலா இக்கு லத்தில் தோன்றியே பெருமை பூண்டு
நீதியாய்க் கிருஷி செய்து நிமலனும் வாழு நாளில் ;

19. ஜாதகனின் முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். திருத்தணிகைக்குத் தெற்குப் பக்கத்தில், மிகவும் சமீபமாக இருந்த பெரிய ஊரில், குற்றமில்லாத இந்தக் குலத்தில் பிறந்து, பெருமை ஏற்று, நியாயமாகப் பயிர்த்தொழில் செய்துகொண்டு, களங்கமில்லாத இவன் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில்;

20. மார்க்கத்தில் தாகப் பந்தல் வைத்துமே வருவோ ருக்கு
ஏற்கவே களைகள் தீர்த்து இடுக்கணின் றேரைக் காத்து
நாற்றிசை கீர்த்தி கொண்டு நல்கிடும் நாளி லேதான்
தார்க்கவே அவ்வூர் சத்திரம் செல்வனும் மனைவி தானும் ;

20. நடைபாதையில் தண்ணீர்ப்பந்தல் வைத்து, வழியில் களைப்புடன் நடந்து வருவோருக்குக் களைப்புத் தீரத் தண்ணீர் முதலியன கொடுத்து, துன்பமென்று வந்தவர்களை அதனின்றும் காப்பாற்றி, நான்கு திசைகளிலும் தன் புகழைப் பரவச் செய்து விளங்கும் காலத்தில், அவ்வூர்ச் சத்திரத்தில் கணவனும் மனைவியுமான இருவர் ;

21. வந்தனர் உத்தி ரத்தில் மகாதலம் செல்ல வென்று
மைந்தனும் அவர்க ளுக்கு வெகுஉப காரம் செய்ய
அந்ததோர் செல்வன் பாரி அவளிவன் மேலே மோகம்
சிந்தையில் எண்ணங் கொண்டு சிலசில வார்த்தை கூற ;

21. வடக்கே பெரிய புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செல்லுகின் றோம் என்று கூறிக்கொண்டு வந்து தங்கினர். இவன் அவர்களுக்கு மிகுந்த உதவிகளைச் செய்தான். அங்ஙனம் யாத்திரையாக வந்த செல்வனின் மனைவி, இவன் மீது மனத்தில் ஆசை கொண்டு, சில சொற்களைக் கூற;

22. அதற்கிவன் இசையா னுகி அவளுக்குச் சாந்தம் சொல்லக்
குதர்க்கங்கள் நேர்ந்த தென்று கொண்டஎண் ணங்கள் [கெட்டு
விதியினுல் மறுசென் மத்தில் மேவுவேன் பாரி யாகப்
பதியினில் வாழ்வே னென்று பாவையும் கருத்தி லெண்ணி;

22. அந்தச் சொற்களைக் கேட்டு, அவள் விருப்பத்திற்குச் சம்மதிக்கா மல் அவளுக்குப் பல நல்ல புத்திமதிகளைக் கூறிச் சாந்தப்படுத்தினன். அதற்கவள் நான் நினைத்தது தவருகப்போய் என் எண்ணங்களும் கெட்டன ; நான் மறுபிறப்பில் இவனுடைய மனைவியாக வந்து, இவ்வுலகில் வாழப் போகின்றேன் என்று மனத்தில் எண்ணி;

23. அறுமுகர் கோட்டம் சென்று அவரடி பணிந்து கொண்டு
பெருநதித் தலங்கள் சென்று பெம்மானைத் தியானம் செய்து
குறையான மனத்த ளாகிக் கோதையும் மரண மாகிப்
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தனள் இவனின் பாரி.

23. முருகக் கடவுளின் கோயிலுக்குப் போய், அவர் பாதங்களில் வணங்கி, பெரிய புண்ணிய நதிகளைக் கொண்ட தலங்களுக்குச் சென்று, நதி

கரில் நீராடி, செல்லுமிடங்களில் கோயில் கொண்டிருக்கும் இறைவனைப் போற்றி, குறையுள்ள மனத்துடன் இவள் மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இக்குலத்தில் பிறந்து, இவன் மனைவியானாள்.

24. அத்திரி முதலா யுள்ள அருள்முனி இவ்வார் கூற
வித்தகர் பராசர் தானும் விளம்புவார் சங்கை யொன்று
வித்தகி முன்சென் மத்தில் விளம்பினீர் சைவ மென்றும்
முத்தியைக் கொடுக்குந் தீர்த்தம் முயன்றனள் என்று
[சொன்னீர்.

24. அத்திரி முதலான சில முனிவர்கள் இப்படிச் சொல்ல, பராசர முனிவர் ஒரு சந்தேகத்தைச் சொல்லுவார். இவள் முற்பிறப்பில் வைசிய குலத்தில் பிறந்து, மோட்சத்தைக் கொடுக்கும் பல புண்ணிய தீர்த்தங்களுக்குச் சென்று நீராடினாள் என்று கூறினீர்கள்.

25. அப்படிச் சென்ற மாது அவளுமிக் குலமு திக்கத்
தப்பிதம் வந்த தென்ன சாற்றுவிர் அந்தச் சங்கை
செப்புவேன் பராச ரேகேள் தேவியு முன்சென் மத்தில்
சொல்படுத் திகளும் கொண்டு சோரங்கள் செய்ய எண்ணம்;

25. அப்படிப் போய் வந்த இந்தப் பெண் இக்குலத்தில் பிறக்கும்படியான தவறு என்ன நேர்ந்தது? அந்தத் தோஷத்தைச் சொல்லுங்கள், பராசரரே! சொல்லுகின்றேன்; கேட்பீராக. இவள் முற்பிறப்பில் அற்பபுத்தியுடன், விபசாரம் செய்ய எண்ணம்;

26. கருதின தாலே மாது கங்கைதன் குலமு தித்தாள்
திருமகன் சேதி கேளாய்த் தினம்வரு வோருக் கன்னம்
பெரும்பொருள் இச்சை வைத்துப் பூமியில் மரண மாகிச்
சிரநான்கோன் தன்னுல் லக்கம் செய்துபின் வந்தா
[னென்றோம்.

26. கொண்டதனால் வேளாளர் வம்சத்தில் பிறந்தாள். ஜாதகனுடைய செய்தியைக் கேட்பீராக. தினந்தோறும் தன்னை நாடி வருகின்றவர்களுக்கு உணவு அளித்து, பாதுகாத்து, புகழிலும் செல்வத்திலும் ஆசை வைத்து, வாழ்ந்திருந்து மரணமடைந்தான். பின்பு பிரமதேவனால் படைக்கப்பட்டு இவ்வுலகில் வந்தவன் என்று கூறுவோம்.

27. [1]இச்சென்மம் தன்னு லேயே தான்சுக முடைய னவன்
கச்சணி மனைவி யாலும் காளைக ளாலும் யோகம்
மிச்சமாய்ப் பெருகு மென்றேரும் மேதினில் சல்லிய மில்லான்

27. இந்தப் பிறப்பில் இவனுடைய நிலையாலேயே இவன் சுகமுடை யவனு யிருப்பான். மனைவி புத்திரர் ஆகியோராலும் இவனுக்கு அதிர்ஷ்டம் பெருகும் என்று சொன்னேம். கடனில்லாதவன்.

28. இவனுக்கு மேலாய் யோகம் இயம்புவோம் புதல்வ ருக்குத்
தவமுனி சொல்லும் போது செயமுனி கூறு கின்றார்
பவமுள புத்திர ரெவ்வார் பலித்திடு மிவனுக் கேதான்
இவன்சென்ம மிடப மாகி இரண்டினில் புந்தி நிற்க ;

28. இவனுடைய புதல்வர்களுக்கு இவனைவிட மேலான நிலை ஏற் படும் என்று சொல்லுவோம் என அத்திரி முனிவர் சொல்லும்போது, செயமுனி கேட்கின்றார். புத்திரபாக்கியம் இவனுக்கு ஏற்படக் கூடிய யோகம் என்ன? இவனுடைய லக்கினம் விருஷபமாகி, இரண்டாம் இடத் தில் புதன் தங்க;

29. மதலையும் காணு னுகும் வருகினும் தீதே யாகும்
நதிபுகர் இரண்டில் சேர நற்குரு வைந்தப் பார்க்க
அதிபதி யாக மைந்தர் அணுகிடு மிவனுக் கேதான்
மதிகுரு சேர்வ தாலே வருமுதல் சுதர்கள் தோடம்.

29. புத்திரபாக்கியம் அடையான். ஏற்பட்டாலும் நிலைத்திராது. ஆனாலும் சுக்கிரன் மிதுனத்தில் சேரவும், குரு ஐந்தாம்வீட்டைப் பார்ப்பதா லும், தலைசிறந்த புத்திரசம்பத்து இவனுக்கு ஏற்படும். சந்திரனும் குருவும் சேர்ந்திருப்பதால் முதலில் தோன்றும் புத்திரனுக்குத் தோஷம் உண்டாகும்.

30. இதுவன்றி வேறு சங்கை இயம்பொணு திவனுக் கேதான்
மதிமுக மாதர் சேதி வரைகின்றேரும் இருநி றத்தாள்
சதியிலா மனத்த ளாகும் தன்வரன் மனம்போல் வாழ்வள்
அதிகநற் குணத்த ளாகும் அவள்பித்த தேகி யாவள்.

30. இதுவல்லாமல் வேறுவிதமான தோஷங்கள் எவையும் இவனுக் குச் சொல்லமுடியாது. இனிமேல் இவனுடைய தாயின் செய்தியைச் சொல்லுகின்றேரும். கரிய நிறமுடையவள். குற்றமில்லாத மனமுடையவள், தன் கணவனின் மனமறிந்து வாழ்க்கை நடத்துவாள். மிகுந்த நற்குண முடையவள். பித்த தேகமுடையவள்.

1. இந்தச் செய்யுளின் நான்காமடி எட்டில் இல்லை.

31. அவள்வர்க்க மல்ப விருத்தி அறைந்தனம் பூர்வம்
[சொல்வேன்
விதியினுல் கச்சூர் மேற்கில் விளங்கிய சிற்றூர் தன்னில்
இவளுமே வடுக வமிச மிலகியே குடும்பி யாகி
அதிவரன் ராச மூல மதிகாரஞ் செய்து வந்தான்.

31. அவள் பந்து வர்க்கத்தில் சிறிது அபிவிருத்தியே எற்படும் என்று சொன்னேம். அவளுடைய முன் சென்மத்தைப் பற்றிச் சொல்லுவோம். பிரமதேவன் படைப்பினுல் திருக்கச்சூருக்கு மேற்கில் இருந்த ஒரு சிறிய ஊரில், இவள் வடுகர் குலத்தில் பிறந்து, வளர்ந்து, நல்ல குடும்ப முடையவளாகி வாழ்ந்தாள். இவள் கணவன் அரசாங்க உத்தியோகம் எற்று அதிகாரஞ் செய்து வந்தான்.

32. பந்துவும் மெச்ச வாழ்ந்து பாரினில் நல்லோ ளாகி
மூந்தியே மரண மாகி மூபன்றவ ளிவளே யென்றேம்
பிந்திய சென்மந் தன்னைப் பேசுவோ மவ்வூர் மேற்கில்
சந்தத மிக்கு லத்தில் சாருவா ளென்று சொன்னேம்.

32. உறவினர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்தி உலகத்தினருக்கு நல்லவளாகி, கணவனுக்கு முன்னுல் மரணமடைந்து, மீண்டும் இங்குப் பிறந்தவள் இவள் என்று சொன்னேம். இவளுடைய மறுபிறப்பைச் சொல்லுவோம். அந்த ஊருக்கு மேற்கில் உள்ள ஒரு கிராமத்தில் இக்குலத்தில் பிறப்பாள் என்று சொன்னேம்.

33. இவள்பிதா பூர்வம் சொல்வேன் இடரிலாக் காஞ்சி
[தன்னில்
அவனுமே தீயின் வமிசம் அணுகியே கிருஷி செய்து
நவனியில் மனைவி உண்டாய் நற்சுத ரில்லா லுகிப்
பவமுள மருமா தைத்தான் பாரினில் கொண்டா
[னென்றேம்.

33. இவளுடைய தந்தையின் முற்பிறப்பைச் சொல்லுவேன். துன்பமில்லாத காஞ்சிபுரத்தில், அவன் அக்கினி குலத்தில் பிறந்து, பயிர்த்தொழில் செய்து, மனைவியையடைந்து, நல்ல புதல்வரில்லாமல், வேறு ஒரு பெண்ணை மணந்து கொண்டான் என்று சொன்னேம்.

34. மறுமனை தனக்குப் புத்திரர் வராமலே வாழும் நாளில்
இருமனை விரோத முற்று இப்படி வாழும் நாளில்
பெருமனை பட்ச மின்றிப் பின்மனை இட்டம் கொள்ள
உறைகுவான் முதல்ம னைதான் இனியொரு சென்மந்
[தன்னில்;

34. இரண்டாம் மனைவிக்கும் புத்திரர் இல்லை. இப்படி வாழ்கின்ற காலத்தில், இரு மனைவியரும் ஒருவருக்கொருவர் விரோதங் கொண்டனர்.

இவன் முதல் மனைவியிடம் விருப்ப மில்லாமல் இளைய மனைவியிடம் விருப் பங் கொண்டிருந்தான். இவனுல் வெறுக்கப்பட்ட முதல் மனைவியும், இனி வரப்போகும் பிறவியில்;

35. வந்திடும் மனைவி ரெண்டு வளர்துணை யில்லா னுகி
மூந்திய மனைவி கர்ப்ப முயன்றுமே மரண மாகிப்
பிந்திடு மிரண்டா மாது பேணுவா யென்று சொல்லிச்
சந்ததம் சலத்தில் வீழ்ந்து தையலு மாண்டா ளென்றேரும்.

35. உனக்கு இரண்டு மனைவியர் வாய்ப்பர். நீ உடன் பிறந்தாரில் லாதவனுக வாழ்வாய். உனக்கு முதலில் வாய்க்கும் மனைவிக்குக் கர்ப்பம். ஏற்பட்டு, அதனுல் மரணமடைவாள். பின்பு இரண்டாவதாக ஒரு பெண்ணை மணந்து அவளைக் காப்பாய் என்று வருத்தத்துடன் தன் கணவனைப் பார்த்துக் கூறிவிட்டு, நீரில் விழுந்து இறந்தாள் என்று சொன்னேம்.

36. மாண்டபின் மைந்தன் தானு மறுமுகன் தனக்கு ஊழி
வேண்டிய பணிகள் செய்து வித்தகன் மரண மாகிப்
பூண்டதோர் கங்கை வமிசம் பொருந்தினு னிவனே
[யென்றேரும்
நீண்டஇச் சென்மந் தன்னில் நேர்ந்திடும் தாரம் ரெண்டே.

36. முதல் மனைவி இறந்த பிறகு, இவனும் முருகக் கடவுளுக்குப் பக்தி யோடு பலவிதமான தொண்டுகள் செய்து வாழ்ந்திருந்து மரணமடைந்தான். பின்பு இச் சென்மத்தில் வேளாளர் குலத்தில் வந்து பிறந்தவன் இவனே என்று சொன்னேம். நீண்ட ஆயுளையுடைய இவனுக்கு இப்பிறப்பில் இரண்டு மனைவியர் வாய்ப்பர்.

37. பின்சென்மம் காஞ்சி நாட்டில் பிறப்பனே சைவ னுக
அன்னவன் சுகமுண் டாகி அதிகமாய்ச் செட்டுச் செய்து
தன்னிலே வாழ்வா னுகும் சாற்றுவோம் பதினைந் தாண்டில்
மன்னிய தந்தை கெண்ட மறைகின்றேரும் கேளும் தாயே.

37. மறு பிறப்பில் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பிரதேசத்தில், சைவ குலத்தவனுகப் பிறந்து, எல்லாச் சௌகரியங்களும் ஏற்பட்டு, வியாபாரம் செய்து வாழ்வான். இவனுடைய பதினைந்தாம் வயதில் தந்தையின் மர ணத்தைச் சொல்லுகின்றேரும், கேளுங்கள்; தாயே!

38. இருபது ஐந்து ஆண்டில் இவன்தாயும் கெண்ட முண்டு
வீரைவினில் குடும்பம் வேறு விளம்புவோ மிவனுக் கேதான்
குறுமுனி சொல்லும் போது கூறுவாள் அம்மன் தானும்
வருந்துணை வர்கள்தம் சேதி வருவிப்பாய் முனியே
[என்ருள்.

38. இவனுடைய இருபத்தைந்தாம் வயதில், இவன் தாயின் மரணம் எற்படும். அதனைத் தொடர்ந்து, இவன் குடும்பமும் விரைவில் வேறு இடம் செல்லும் என்று சொல்லுவோம். இவ்வாறு அகத்தியர் சொல்லும் போது, பார்வதி தேவி இடைமறித்துச் சொல்லுவாள். இவனுடைய உடன்பிறந்த வர்களைப் பற்றிய செய்தியை இனிக் கூறுவீர், முனிவரே! என்றாள்.

39. பின்சொல்வேன் சாத கர்க்குப் பிராணகா லத்தைக் கேளாய்
அன்னவன் ஐம்பான் ஐந்தில் அழகிய தனுசு மாதம்
பின்பக்கம் தசமி தன்னில் பித்தரோ கத்தா லுய்வின்
மன்னிய மனைவி யேதான் வரன்முன்னே ராண்டில்
[மாய்வள்.

39. அவர்கள் செய்தியைப் பிறகு சொல்லுவேன். இந்த ஜாதகனுக்கு மரண காலத்தைப் பற்றிக் கேட்பாயாக. இவன் ஐம்பத்தைந்தாம் வயதில், சிறந்த மார்கழி மாதம் கிருஷ்ண பட்சம் தசமி திதியில், பித்த வியாதியினால் மரணமடைவான். நிலைபெற்ற இவன் மனைவியும் கணவனிறப்பதற்கு ஒரு வருஷம் முன்னால் மாண்டுபோவாள்.

40. சாதகன் பின்சென் மத்தைச் சாற்றுவோம் விரிஞ்சி தன்னில்
மேதினிக் குலத்தி லேதான் வருதுவான் பூமி யாலும்
போதவே செட்டுச் செய்வன் புகழாக வாழ்வா னுகும்
மாதவர் துதிக்கா நின்ற மங்கையே மேலுங் கேளே.

40. ஜாதகனின் மறுபிறப்பைச் சொல்லுவோம். விரிஞ்சி நாட்டில் இக்குலத்திலேயே பிறப்பான். நிலபுலங்களினால் வரும்படி பெற்று வியா பாரங்கள் செய்வான். புகழுடையவனாக வாழ்ந்திருப்பான். பெரிய தவ முனிவர்கள் துதிக்கின்ற பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

41. பாலகன் செனிக்குங் காலம் பரிதியின் திசையி லேதான்
கோலமா யாண்டு மூன்றும் குறித்தனம் நாள்களீ ரேழும்
பாலகன் தனக்கு ரோகம் பலபல பிணியு முண்டு
ஞாலமேல் செலவ னந்தம் நாயகி கேட்டி டாயே.

41. இந்த ஜாதகன் பிறக்கின்ற காலத்தில், சூரிய மகா தசையில் மூன்று வருஷங்கள், பதினைந்து நாள்கள் என்று கூறினோம். இந்தப் பால கனுக்குப் பலவிதமான வியாதிகள் ஏற்படும். உலகில் இவன் செலவுகள் அளவில்லாதன. தேவியே! கேட்பாயாக.

42. தந்தைக்கு விரோத முண்டு தன்துணை சேத மாகும்
அந்தணர் காலி சேதம் அவன்பந்து சூத முண்டு
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விபர மாக
கந்தனைப் பெற்ற மாதே கழறின மொழிகுன் றாது.

42. இவனுடைய தகப்பனுருக்கு வீரோதிகள் உண்டு. உடன்பிறந்தவர்கள் நஷ்டம். பசுக்கள் நாசம். இவன் பந்துக்கள் வழியில் அசுபம் எற்படும். மற்றவற்றை யெல்லாம் பின்பாகத்தில் விவரமாகக் கூறுவோம். முருகக்கடவுளைப் பெற்ற பார்வதியே! கூறிய சொற்கள் தவறுபடா.

43. இவனுடைப் பொதுயோ கத்தை இயம்புவோம் சனனம்
[தொட்டு
அவனுடை மரணம் மட்டும் அணுகாது தரித்தி ரங்க
ளவனியில் ஆரு ராண்டு மேலேதான் யோகம் வாய்க்கும்
பவமுள தரித்திர மில்லான் பார்வதி கேட்டி டாயே.

43. இவனுடைய பொதுவான அதிர்ஷ்ட நிலையைப்பற்றிச் சொல்லுவோம். பிறந்ததுமுதல் இறக்கும்வரையில் வறுமைத் துன்பங்கள் இவனை அடையா. உலகில் இவனுக்கு மூப்பத்தாறு வயதுக்கு மேற்பட்டுத்தான் அதிர்ஷ்டங்கள் எற்படும். தரித்திர மில்லாதவன். பார்வதிதேவியே! கேட்பாயாக.

44. எண்ணஞ்சு ஆண்டு தன்னில் இவன்சித்திர வீடு செய்வான்
நண்ணிய பூமி விருத்தி நவதானியம் அதிகம் சேரும்
வண்ணமாய்ப் பாக்கியஞ் சேரும் அவன்பந்து பூசி தங்கள்
கண்ணிய மாக வாழ்வான் கீர்த்தியு மேல்மேல் ஓங்கும்.

44. நாற்பதாம் வயதில் இவன் அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய வீடு அமைப்பான். இவனிடமுள்ள நிலபுலங்களை அபிவிருத்தி செய்வான். நவதானியங்களும் நன்முக விளைந்து மிகுதியாக இவனுக்குச் சேரும். எல்லாவிதப் பேறுகளும் அழகாக இவனை யடையும். உறவினர்களைப் போற்றுவான். மதிப்புடன் வாழ்வான். இவனுடைய புகழும் மேன்மேல் உயரும்.

45. மனைவியி னுர்ச்சி தங்கள் வந்திடு மிவனுக் கேதான்
கனமுள குடும்பி யாவன் காசினில் சல்லிய மில்லான்
அனைவரும் உறவே கொள்வர் அவன்புதல் வர்களால்
[யோகம்
பனிவரை மகளாய் வந்த பார்வதி கேட்டி டாயே.

45. மனைவி வீட்டைச் சேர்ந்த சொத்துக்களும் இவனுக்குக் கிடைக்கும். பெருமையுள்ள குடும்ப முடையவனுவன். உலகில் கடனில்லாதவனுயிருப்பான். யாவரும் இவனிடம் நட்புக்கொள்ளுவர். இவனுடைய புதல்வர்களாலும் இவனுக்கு யோகம் வாய்க்கும். பர்வதராஜனின் புதல்வியாக அவதரித்த பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 10

1. மதியும் சனியும் தேளிலுற மாலும் புகரும் மேடமுற
உதயன் நந்தி சிங்[1] வீணை உரகன் தனுசு குருகோலாம்
சதிசே யலவன் கடகமுற சென்மம் நந்தி பலனெவ்வார்
துதிசெய் வதிட்டர் தான்சொலவார் தோன்று மாண்பால்

[சென்னமுமே.

1. சந்திரனும் சனியும் விருச்சிகத்திலும், புதனும் சுக்கிரனும் மேஷத்திலும், சூரியன் விருஷபத்திலும், கேது மிதுனத்திலும், ராகு தனுசிலும், குரு துலாத்திலும், செவ்வாய் கடகத்திலும், தங்கியிருக்கும் விருஷப லக்கின ஜாதனுக்குப் பலன்கள் எப்படி ? என்று பார்வதி தேவி கேட்க, முனிவர்கள் போற்றும் வசிஷ்டர் பின் வருமாறு சொல்லுவார். இந்த ஜாதகர் ஆண் பிறப்பாம்.

	புதன் சுக்கிரன்	லக்கினம் சூரியன்	கேது
	இராசி சக்கரம்		செவ்வாய்
ராகு	சந்திரன் சனி	குரு	

2. மேவு மில்லாம் வடதெற்கு மேல்பால் வாசல்

[அரன்மேற்குச்

சேவற் கொடியோன் அருகிலுறும் தேவ யிந்திரன் நகராகும்
கோவர்க் கங்களும் கீழ்வாரிக் குறித்தோம் பலதே வர்வாசம்
ஆவ லுறவே வியநதிகள் அணுகும் பேரு ரெனவுரைத்தோம்.

2. இவனுடைய வீடு, வடக்குத் தெற்கான வீதியில், மேற்குப் பார்த்த வாசலையுடையது. சிவபெருமான் மேற்குத் திசையில் கோயில் கொண்டுள்ளார். சேவற்கொடி யேந்திய முருகப் பிரானும் அருகில் எழுந்தருளியிருக்கின்றார். தேவர்களுக்கு அரசனுகிய இந்திரன் ஆட்சிபுரியும் அமராவதி யென்னும் நகரைப் போன்றதாகும். இவனது ஊர். அரச குலத்தினர் கிழக்கு வாடையில் அங்கணில் வசிக்கின்றனர். பல தெய்வங்களின் கோயில்கள் அங்கு உள்ளன. சிறந்த ஆறுகள் சூழ்ந்துள்ளன. இப்படிப்பட்ட சிறப்புப் பொருந்திய பெரிய நகரமாம் என்று சொன்னேனும்.

---

1. மிதுனம்

3. உரைத்தோம் அன்னே இலமாகும் உதித்தோன் தந்தை
[தாய்யோகம்
மரும மிலாமல் துணையோகம் மனைபுத் திரர்கள் யோகமுமே
திருத்த மாக முன்பின்னும் சென்மம் புகல்வோ மிந்நூலில்
கருத்த. குழலாய் மாதரசே கழறு வோம்தந்தை
[குணத்தையே.

3. இவன் பிறந்த இடம் தாய்வீடு என்று சொல்லுவோம். இந்த ஜாதகனின் தந்தை, தாய், குற்றமில்லாத உடன்பிறந்தார், மனைவி, புத்திரர் ஆகியோர் யோகங்களையும், இவர்களுடைய முற்பிறப்பு மறு பிறப்புக்களையும் ஒழுங்காக இந்த நூலில் சொல்லுவோம். கருமையான கூந்தலையுடையவளே! பெண்களுக்கு அரசியாயிருப்பவளே! இவன் தந்தையின் குணத்தைச் சொல்லுவோம்.

வேறு

4. தாதைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு மிளையாள் ஈன்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
சூதிலான் நற்கு ணத்தோன் துறவோர்கள் பக்தி பூண்பன்
[1]கீர்தியு முடைய னாகும் கருதிடான் கட்டு வார்த்தை.

4, இவனுடைய தந்தையின் தந்தைக்கு இரு மனைவியர். அவர்களில் இளைய மனைவி பெற்றெடுத்த புதல்வனாக விளங்குவான் இவன் தந்தை என்று சொல்லுவோம். வஞ்சனையில்லாதவன். நல்ல குணமுடையவன். சந்நியாசிகளிடம் பக்தி கொள்ளுவான். நல்ல புகழுமுடையவன். தானுகச் சொற்களைக் கட்டிக் கூறமாட்டான்.

5. மால்நிறம் வாத தேகி மன்னனுல் உய்வ னாகும்
சீலம்போல் வெளிம யக்கன் தந்தைஆர்ச் சிதத்தை
[வேண்டான்
ஞாலமேல் நல்லோ னாகும் நற்கரம் விஷ்ணு ரேகை
வேலன்மேல் பக்தி பூண்பன் வீண்பழி யேற்கா னாகும்.

5. கரிய நிறமுடையவன். வாத நோயுள்ள உடல். அரசாங்க உத்தியோகத்தினுல் பிழைப்பவன். நல்ல ஒழுக்க முடையவனைப்போல வெளியாரை மயங்கச் செய்வான். தந்தையால் தேடி வைக்கப்பட்ட சொத்துக்களை விரும்பமாட்டான். உலகில் நல்லவனுவன். இவனுடைய கையில் திருமாலின் ரேகையுண்டு. முருகப்பெருமான்மீது பக்திகொள்ளுவான். வீணன பழிச்சொற்களை அடையமாட்டான்.

---

1. புகழ்.

6. ரோமங்கள் நீட்சி யுள்ளான் நுண்ணிய புத்தி ஏற்பன்
சேமமாம் குடும்ப மேற்பன் செனவுப காரி யாகும்
காமனை விருப்பங் கொள்வன் கடைநாளில் கெண்டை ராசி
ஆமவன் உதிப்பா னுகும் அதிதிக்கு அன்ன மீவன்.

6. உடலில் நீண்ட உரோமங்கள் உள்ளவன். நுட்பமான அறிவுடையவன். செளக்கியமான குடும்பத்தை நடத்துபவன். மக்களுக்கு உபகாரங்கள் செய்வான். மன்மதனுக்கு விருப்பமுடன் பூசைகள் செய்வான். இரேவதி நட்சத்திரம் மீனராசியில் இவன் பிறப்பான். விருந்தாக வருபவர்களுக்கு உணவு அளிப்பான்.

7. குலமதில் குற்ற முண்டு குஞ்சர மொத்த தேகன்
தலவாசம் செய்வா னுகும் நந்தைக்கு மேலாய் வாழுவன்
குலவனும் கல்வி மேன்மை புதிதாக இல்லம் செய்வன்
பலர்களால் பெருமை ஏற்பன் பஞ்சைமேல் இரக்க னுவன்.

7. இவன் குலத்தில் களங்கம் உண்டு. யானையைப் போன்ற உடற் கட்டுடையவன். பல புண்ணிய தலங்களில் வசிப்பான். தகப்பனுருக்கு மேலான நிலைக்கு வருவான். படிப்பில் மேன்மையுற்று விளங்குவான். புதிய வீடு கட்டுவான். பலராலும் பெருமைப்படுத்தப் படுவான். கதியற்றவர்களிடம் இரக்கங் கொள்ளுவான்.

8. தன்துணை காணு னுகும் தரித்திடில் தீத்த யாகும்
என்னகா ரணத் தினுலே இவன்துணை தோடம் சொன்னீர்
துன்மையாய்க் கேது ரெண்டில் தொடர்ந்ததால் தோஷம்
[சொன்னேம்
இன்நெறி யுடையா னுக்கு இப்பால னிரண்டாம் சென்மம்.

8. தனக்கு உடன்பிறப்பு இல்லாதவன். தோன்றினுலும் நிலையாது. என்ன காரணத்தினுல் இவன் உடன்பிறந்தானுக்குத் தோஷங் கூறினீர்? கேது கொடிய தன்மையாய் மிதுனத்தில் தங்கியிருப்பதால், சகோதர தோஷஞ் சொன்னேம். இக்கிலையையுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் இரண்டாம் பிறப்பாகப் பிறப்பான்.

9. வருகுவான் குணத்தைச் சொல்வேன் மதனிகர் மேனி
[யாகும்
திருமக னுப்ப தாகும் தீரமில் லாத நெஞ்சம்
இருகல்வி மேன்மை யாகும் இராசபூ சிதமூ மாவன்
பெருமவர் நேசம் கொள்வன் [1]பிஞ்சகன் தனைத்து திப்பான்.

1. சிவபெருமான்.

9. இவனுடைய குணத்தைச் சொல்லுவோம். மன்மதனேப்போன்ற உடலழகுடையவன். உறுதியில்லாத மனமுடையவன். இரண்டுவிதக் கல்வி கற்பான். அவற்றுல் மேன்மை யடைவான். அரசர்களின் போற்று தலேயும் பெறுபவன். பெரியோர்கள் நட்பைக் கொள்ளுவான். சிவபெரு மானேத் துதிப்பான்.

10. அன்னிய பாஷை மேன்மை அதனுலே தொழிலு மேற்பன்
பொன்னது அதிகம் சேர்ப்பன் பிதாமேலாய் வாழ்வா
[னுகும்
தன்சொலு மடக்க முண்டு தாட்சிண்யன் கனத்த புத்தி
பின்னமில் லாத தேகி பெரிதான ஞானம் கேட்பன்.

10. அயல்மொழியில் தேர்ச்சிபெற்று மேன்மையடைவான். அந்தக் கல்வியினுல் உத்தியோகமும் ஏற்பான். பொருட் செல்வம் மிகுதியாய்ச் சேர்ப்பான். தகப்பனுருக்கு மேலாக வாழ்வான். பணிவான சொற்களேப் பேசுவான். தாட்சிணிய முடையவன். பெரும் புத்தியுடையவன். குற்ற மில்லாத தேகம் உள்ளவன். பெரிய அறிவுரைகளேக் கேட்பான்.

11. கரமதில் சங்கு சக்கரம் கஞ்சமாம் ரேகை மூன்று
உறன்முறை மதிக்க வாழ்வன் உயர்வான தலங்கள் செல்வன்
திருப்பணி செய்வா னுகும் சேயிழை மார்கள் மோகன்
நறைமல ரிட்டம் கொள்வன் நடத்துவன் பரியும் வண்டி.

11. கையில் சங்கு சக்ர பத்ம ரேகைகளுள. பந்துக்கள் மதிக்கும் படி வாழ்க்கை நடத்துவான். பல புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செல் லுவான். பல திருப்பணிகள் செய்வான். பெண்களிடம் மோகமுள்ளவன். மணமுள்ள மலர்களில் விருப்பம் உள்ளவன். குதிரை வண்டி வைத்துக் கொள்ளுவான்.

12. யோகம்எவ் விதமாய்ச் சொன்னீர் உரைப்பீர்கள் அந்தச்
[சங்கை
நாகமு மேரு வாக நன்மதி காரி ஏழில்
பாகமாய்க் குருவும் பார்க்கப் பகர்ந்தனம் விசேட யோகம்
போதக வாணைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

12. இவனுக்கு யோகம் இவ்வளவும் வாய்க்கும் என்று என்ன காரணத்தினுல் கூறினீர்கள்? அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்யுங்கள் என்று பார்வதிதேவி சொன்னுள். இராகு தனுசிலும், சந்திரன், சனி விருச்சிகத் திலும் தங்கியிருக்க, பக்குவமாய்க் குருவும் பார்ப்பதனுல், இவனுக்கு விசேஷமான அதிர்ஷ்டங்கள் ஏற்படும் என்று சொன்னேம். விநாயகரைப் பெற்ற புண்ணியவதியே! கேட்பாயாக.

13. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோம் முன்பெண்
[ஒன்று
அவளுமே தீர்க்க மெய்தும் அறைகின்றோம் குணத்தை
[யாங்கள்
தவசிகட் கன்ன மீவள் சத்தான வஸ்து இஷ்டம்
நவனியில் முன்கோ பத்தாள் நற்புத்தி உடைய ளாமே.

13. இவனுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். முதலில் பெண் ஒருத்தி. அவள் தீர்க்கமாய் இருப்பாள். அவளுடைய குணத்தை நாங்கள் கூறுகின்றோம். துறவிகளுக்கு உணவு அளிப்பாள். நல்ல பொருள்களில் விருப்பமுள்ளவள். முன்கோப முடையவள். நல்ல புத்தியுள்ளவள்.

14. கல்விமான் சிவந்த மேனி கணவனுக் கினிய ளாகும்
இல்லையென் றுரைக்க மாட்டாள் இடரான புத்தி யில்லாள்
தல்லிபோல் குணத்தா ளாகும் தன்வரன் கீழ்பால் கேரும்
வல்லிக்குச் சுதராண் ரெண்டு மங்கையும் மூவ ராகும்.

14. கல்வியடையவள். சிவந்த தேக முள்ளவள். கணவனுக்கு இனியவளா யிருப்பாள். கேட்டவருக்கு இல்லையென்று சொல்லமாட்டாள். தவறுன புத்தியில்லாதவள். தாயாரைப் போன்ற நற்குணமுடையவள். இவளுக்குக் கணவன் கீழ்த் திசையிலிருந்து வருவான். இந்தப் பெண்ணுக்குப் புத்திரர் இருவர். பெண்கள் மூவர்

15. மங்கையும் போன பின்பு வரனுக்கு யோகம் வாய்க்கும்
பொங்கிய குடும்ப மேற்பன் பூஷண மதிகம் சேர்ப்பன்
தங்கிடும் பித்த சூடு சற்பாத்திரி என்று சொல்வோம்
ஐங்கரன் தனைவ ளர்த்த அம்பிகை யாளே கேளாய்.

15. இவள் இறந்தபிறகு, இவளுடைய கணவனுக்கு யோகம் ஏற்படும். பெருமையுள்ள குடும்பப் பொறுப்பை ஏற்பான். நகை முதலியன மிகுதியாகச் சேர்ப்பான். இவன் உடலில் பித்த சூடு உண்டு. சர்ப்பாத்திரி யோகம் உண்டு என்று சொல்லுவோம், விநாயகரைப் பெற்று வளர்த்த பார்வதியே! கேட்பாயாக.

16. மைந்தன்பின் ஆண்பால் ரெண்டு மருவிடும் கன்னி ஒன்று
இந்தவர் தீர்க்க மெய்தும் இவன்பலன் பின்பால்
[சொல்வேன்
சந்ததம் மணத்தின் காலம் சாற்றுவோம் மீரொன் பாண்டில்
சேர்ந்ததோர் அன்னை வர்க்கம் தோகையும் வருவா ளாகும்.

16. இவனுக்குப் பிறகு, ஆண் சந்ததி இரண்டு உண்டாம். பெண் ஒன்று. இவர்கள் தீர்க்கமா யிருப்பர். இவர்களுக்குப் பலன்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுவேன். இந்த ஜாதகனின் திருமண காலத்தைக் கூறுவோம். பதினெட்டு வயதில் தாயின் வர்க்கத்தில் இவனுக்கு மனைவி வருவாள்.

17. மாதுவின் குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனி யாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உள்மனம் கபடு மில்லாள்
பாதக மனமில் லாதாள் பர்த்தாவின் மனம்போல் வாழ்வள்
தீதென்றோர்க் குதவி செய்வள் சீலியர் மென்று சொல்வோம்.

17. அந்தப் பெண்ணின் குணத்தைப் பற்றிச் சொல்லுவேன். மாந்தளிர் போன்ற மென்மையான உடம்புள்ளவள். நல்ல வார்த்தைகள் சொல்லுவாள். மனத்தில் வஞ்சனை யில்லாதவள். கெடுதல் எண்ணுதவள். கணவனின் மனமறிந்து வாழ்க்கை நடத்துவாள். கெட்டுவிட்டோம் என்று வருபவருக்கு உபகாரம் செய்வாள். நல்ல ஒழுக்க முடையவளாம் என்று சொல்லுவோம்.

18. பால்பாக்கிய முடைய ளாகும் பசித்தோர்க்கு அன்ன மீவள்
மால்மனை ஒப்ப தாகும் பலமான குடும்பம் ஏற்பள்
காலத்தை அறிந்து ரைப்பள் கல்விமான் யூகை சாலி
வேலனை வளர்த்த மாதே வித்தகி வயது தீர்க்கம்.

18. பால், பசு பாக்கிய முடையவள். பசியென்று வருபவருக்கு உணவு அளிப்பாள். இலட்சுமி போன்றவள். பெரிய குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்துவாள். காலமறிந்து சொற்களைப் பேசுவாள். கல்வியுடையவள். ஊகித்து உணரும் சக்தியுடையவள். முருகப் பெருமானைப் பெற்றுவளர்த்த பார்வதியே! அவள் ஆயுள் தீர்க்கம்.

19. அத்திரி தடுத்துச் சொல்வார் அவனுக்குத் தாரம் ரெண்டு
சித்தமாய் நேரு மென்றீர் செப்புவீர் அந்தச் சங்கை
குத்தமாய்க் கேது ரெண்டில் குடும்பத்தோன் விரயம் தங்கச்
[1]சத்தமத் தோன் [2]சரத்தில் சனிமதி ஏழில் தங்க.

19. அத்திரிமுனிவர் இடைமறித்துக் கூறுவார். இந்த ஜாதகனுக்கு மனைவிமார் இருவர் நிச்சயமாய் வாய்ப்பர் என்று கூறினீர். அஃது எவ்வாறு

---

1. விருச்சிகராசிக் குடைவனை செவ்வாய்.
2. இங்குக் கடகம்.

என்று விளக்குவீர். குற்றமேற்படும்படி கேது குடும்பஸ்தானமாகிய மிது னத்திலும், குடும்ப ஸ்தானத்துக்குரிய புதன் விரய ஸ்தானமாகிய மேஷத் திலும் தங்கியிருக்க, ஏழாமிடத்தாலுகிய செவ்வாய் கடகத்திலும், சனியும் சந்திரனும் விருச்சிகத்திலும் இருப்பதால்;

20. ஆகையால் தாரம் ரெண்டு அறிவித்தோம் பால னுக்கு
வேகமாய்ப் பராசர் சொல்வார் மேவாது அந்தச் சங்கை
பாகமாய்த் தர்ம கர்மன் பரிதியின் மகனே யாகித்
தோகைதா னத்தில் தங்கச் சேயிழை யொன்றே யாகும்.

20. இவனுக்கு இரண்டு மனைவியர் என்று சொன்னேம். உடனே விரைவாகப் பராசரர் பேசத் தொடங்கினர். அந்தக் காரணம் பொருந் தாது. சனி, தர்ம கர்மாதிபதியாகிக் களத்திர ஸ்தானமாகிய ஏழாம் இடத்தில் தங்கி யிருப்பதால் இவனுக்கு மனைவி யொருத்தியே யாவாள்.

21. மாதுக்கு யிரெண்டு முத்திரை மாரனும் தரிப்பா னுகும்
ஓதுவீர் அந்தச் சங்கை ஒன்பது நான்கு ஆண்டில்
தீதாகும் கள்ள ராலே செய்குவான் வேறு முத்திரை
ஆதலால் தார மொன்றே அபிமானம் ஒன்று உண்டாம்.

21. ஆனல், இவன் மனைவி இரண்டுமுறை மாங்கலியம் தரிக்கும்படி நேரும். அஃது என்? என்று சொல்லுவீர். அவளுடைய மூப்பத்தாறும் வய தில் மாங்கலியம் திருடர்களால் பறிக்கப்படும். அதனல் இவன் தன் மனை விக்கு வேறு மாங்கலியம் செய்வித்து அணிவான். ஆகவே இவனுக்கு மனைவி ஒருத்தியேயாம். அபிமானப் பெண் ஒருத்தியுண்டு.

22. எந்தகா லத்தில் நேரும் இயம்புவீர் முனியே நீர்தாம்
சந்ததம் மூப்பான் ரெண்டு ஆண்டினில் வடுக மாது
இந்திரன் திசையில் நேரும் இருப்பளாம் மரண மட்டும்
சந்ததி காணு தாகும் சங்கரி கேட்டி டாயே.

22. எப்பொழுது அபிமான ஸ்திரீ ஏற்படுவாள்? முனிவரே! நீங் கள் அதனைச் சொல்லுங்கள், என்று பார்வதிதேவி கேட்க, மூப்பத்திரண் டாம் வயதில் வடுகர் வமிசத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி கிழக்குத் திசை யிலிருந்து இவனுக்குக் கிடைப்பாள். அவள் மரணகாலம் வரையில் இவனி டம் வசிப்பாள். அவளுக்குப் புத்திர பாக்கியம் இல்லை. பார்வதியே! கேட்பாயாக.

23. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் எழுவர் தோன்றும்
சித்தமாய் ஆண்பால் யிரண்டு செல்விமார் அவ்வார் தீர்க்கம்
செத்திடும் முதலில் யிரண்டு செப்புவீர் அந்தச் சங்கை
குத்தமாய் [1]ஐந்தோ [2]ஞரேன் கூடியே [3]விரயம் புக்க

23. இந்த ஜாதகனுக்குப் புத்திர பாக்கியத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஏழு பேர் தோன்றுவார். அவர்களில் ஆண்கள் இருவர். பெண்கள் மூவர். நீண்ட ஆயுளுடன் இருப்பர். பிறந்தவுடனேயே இரு குழந்தைகள் மரிக்கும். அதற்கான காரணத்தைச் சொல்லுவீர். ஐந்தாம் வீட்டுக்குடைய புதனும், ஆரும் வீட்டுக்குடைய சுக்கிரனும் சேர்ந்து விரய ஸ்தானமாகிய மேஷத்தில் தங்கி யிருப்பதால்;

24. சேதமாம் முதலில் யிரெண்டு செப்புவோம் பால னுக்கு
ஓதுவே னிவன்முன் சென்மம் உயர்வான அருணை நாட்டில்
தீதிலாக் கங்கை சேயாய்ச் செனித்துமே கிருஷி செய்து
காதலி மதலை யுண்டாய்க் கனத்ததோர் குடும்பி யாகி ;

24. இவனுக்கு முதலில் பிறக்கும் இரு குழந்தைகள் இறக்கும் என்று சொல்லுவோம். இவனுடைய முற்பிறப்பைக் கூறுவோம். திருவண்ணாமலையில், குற்றமற்ற வேளாளர் புதல்வனாய்ப் பிறந்து, பயிர்த்தொழில் செய்து, மனைவி புத்திரர் உண்டாகி, பெரிய மதிப்புள்ள குடும்பமுடையவனாகி,

25. அறுமுகன் தொண்டு பூண்டு அதிதிகட் கன்ன மீந்து
திருமகன் வாழும் நாளில் திகைத்தோர் மாது தானும்
மருவினள் இல்லந் தன்னில் வயிறுக்கு உணவு வேண்டிப்
பறைபள்ளு பாரில் இல்லம் பணிகளைச் செய்வே னென்றுள்.

25. முருகப்பிரானுக்குத் தொண்டுகள் செய்து, விருந்தினருக்கு உணவளித்து, சிறப்புடைய இவன் வாழ்கின்ற காலத்தில், பிழைக்க வழியில்லாது திகைப்படைந்த ஒருபெண் இவனுடைய வீட்டையடைந்து, வயிற்றுக்கு உணவு தரும்படி வேண்டினாள். பின்பு, பள்ளர் முதலியவர்போல் அடிமையாகி, உன் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றேன் என்று இவனிடம் கூறினாள்.

---

1. புதன்
2. சுக்கிரன்
3. இங்கு மேஷம்

26. மங்கையை ஆத ரித்து வளவினில் வேலை செய்தாள்
தங்கைபோல் பார்த்து வந்தான் தையலும் ஒருநாள் தன்னில்
சங்கையா மனத்த ளாகித் தனம்பணித் தன்கைக் கொண்டு
அங்கவள் பறந்தா ளென்றோம் அம்பிகை யாளே கேளாய்.

26. இவனும் தன் வீட்டையடைந்த அப்பெண்ணை யாதரித்து, தன் தங்கைபோல் கருதி வந்தான். அவள் வேலை செய்துகொண்டிருந்தாள். அவள் ஒருநாள், மனத்தில் கெட்ட எண்ணத்தைக் கொண்டு செல்வம் ஆபரணங்கள் முதலானவற்றை அவ்வீட்டிலிருந்து அபகரித்துக்கொண்டு, ஓடி விட்டாள் என்று சொன்னோம். பார்வதியே! கேட்பாயாக.

27. மருவினும் தேடிப் பார்த்து மாதுவைக் காண தாகிக்
கரிமதக் கோட்ட முன்பாய்க் காதலி வார்த்தை சொல்லித்
தெருத்தூளைத் தூற்றிச் சென்றான் தீரனும் அந்தி யத்தில்
வருமார்க்கம் தாகம் வைத்து அதிதிகட் கன்ன மீந்து;

27. இவன் எங்குச்சென்று தேடினும் அவளைக் காணவில்லை. பின்பு விநாயகக் கடவுள் கோயிலுக்கு முன்பாக நின்று, ஓடிப்போன பெண்ணைப் பற்றிய துக்கமான செய்தியைச் சொல்லி, தெருமண்ணை வாரியிறைத்து விட்டுச் சென்றான். இவன் கடைசிக் காலத்தில் பலரும் செல்லும் சாலை வழியில் தண்ணீர்ப பந்தல் வைத்து, விருந்தினர்களுக்கு உணவளித்து,

28. காலன்தன் நாட டைந்து களஞ்சலில் வரையப் பட்டுச்
சீலமில் லாத கர்ணன் சேயலு யுதிப்பா லகும்
நீலிமுன் சென்மம் தன்னி னேர்பொருள் கவர்ந்தோள் தானும்
பாலிகை யபிமா னப்பெண் பரவுவா ளென்று
[சொல்வோம்.

28. எமனுலக மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, ஒழுக்க மில்லாத ஒரு கொடையாளியின் புதல்வனாய்ப் பிறப்பான். முற்பிறப்பில் இவன் வீட்டில் பொருள்களைத் திருடிய கொடியவள் இப்பிறப்பில் இவனுக்கு அபிமான ஸ்திரீயாக வருவாள் என்று சொல்லுவோம்.

29. வந்தவன் யோகச் சேதி தெரிவிப்போ மினிமேலாகத்
தன்தன மதிகம் சேர்ப்பபன் சாராள்க ளுடைய னாகும்
இந்திர போக மேற்பன் இராசனால் தொழிலு மேற்பன்
கந்தன்தன் அருளு மோங்கும் காதலி கேட்டி டாயே.

29. இவனுடைய யோகச் செய்திகளைச் சொல்லுவோம் இனி மேல். செல்வங்களை மிகுதியாகச் சேர்ப்பான். தனக்குச் சொந்த மான பணியாட்களை யுடையவன். இந்திரனைப்போன்ற பெரிய போகத்

துடன் கூடிய பதவியை ஏற்பான். அரசர்மூலம் உயர்ந்த உத்தி யோகத்தையும் அடைவான். இவனுக்கு முருகக் கடவுளின் கருணையும் மிகுதியாகக் கிடைக்கும். பார்வதியே! கேட்பாயாக.

30. இருபது இரண்டாண் டின்மேல் இராசனுல் தொழிலு
[மோங்கும்
பிறையது போலே செல்வம் பெறுவானும் வறுமை காணுன்
துரைராசர்க் கிவன்சொல் மேன்மை தொடுத்ததை லகுவில்
[வெல்வான்.
மருமத்தை வெளிக்காட் டாதான் மருவிடும் அன்பா
[ணுண்டில்;

30. இருபத்திரண்டு வருஷங்களுக்குமேல் அரசர்மூலம் ஏற்பட்ட உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வளர்பிறை போன்று மேன்மேலும் செல்வத்தை யடைவான். தரித்திரத்தைக் காணுதவன். பெரிய அதிகாரி கள் அரசர்கள் ஆகியோர்க்கு இவன் சொற்களில் மிக்க மதிப்புண்டு. எடுத்த காரியத்தில் சுலபமாக வெற்றியடைவான். மனத்திலுள்ளவற்றை வெளி யில் விடமாட்டான். பொருந்திய ஐம்பதாம் வயதில்,

31. அரசுமே புரிவா னுகும் அழிவிலா நேரு மென்றும்
தரையது சேர்ப்ப னுகும் சம்பத்துக் குறைவு றுதான்
பறைபள்ளு முடைய னுகும் பண்ணுவான் சித்திர இல்லம்
வருமிவ னுலகி லேதான் மருவில்லம் மூவைந் தாண்டில்;

31. அரசாட்சி செய்வான். அழிவில்லாமல் இவனுக்கு எவையுங் கிட்டும் என்று சொன்னேம். பூமிகள் சேர்ப்பான். செல்வம் குறைபடாத நிலையிலுள்ளவன். பள்ளர் பறையர்களைப் பணியாட்களாக வுடையவன். அழகிய வேலைப்பாடமைந்த வீடு கட்டுவான். பதினைந்து வருஷங்களில் அழகிய வீடு;

32. நேரிடும் பால னுக்கு நினைவதை முடிப்பா னுகும்
காரியச் சமர்த்த னுகும் கசடரை உறவு கொள்ளான்
மாறிடான் பெரியோர் வார்த்தை வாக்கதைக் காப்பா
[னுகும்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

32. கிடைக்கும் இவனுக்கு. நினைத்தவற்றைச் செய்து முடிக்கவல்ல வன். காரியங்கள் செய்வதில் சாமர்த்தியசாலி. குற்றமுள்ளவரை நட் பாகக் கொள்ளாதவன். பெரியோர் சொற்களை மீறமாட்டான். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவான். சுப்பிரமணியரைப் புதல்வராக அடைந்த பார்வதி தேவியே! கேட்பாயாக.

33. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளாள் சிவந்த
[மேனி
தன்சொல்லு மடக்க முண்டு சர்ப்பாத்திரி யோக சால்
கன்னென மொழியு முண்டு கல்விமான் கோபம் கொஞ்சம்
பின்சாந்தம் நடையும் நன்மை பெரியோர்போல் மொழிக
[ளுண்டு.

33. இவனுடைய தாயின் குணத்தைச் சொல்லுவேன். அழகுடையவள். சிவந்த தேகமுடையவள். தான் பேசுஞ் சொற்களில் பணிவு காட்டுபவள். சற்பாத்திரி யோகம் உள்ளவள். கரும்பைப் போன்ற இனிய சொற்களைப் பேசுபவள். கல்வி யுடையவள். சிறிது கோபமுமுண்டு. உடனே சாந்தமடைவாள். நல்ல ஒழுக்கம் உள்ளவள். சிறந்த சான்றோர்களைப் போன்று நல்ல சொற்களைப் பேசுவாள்.

34. அடிசலுக் கினிய ளாவள் ஆளன்தன் மனத்துக் கேற்றுள்
படிமிசை நல்லோ ளாவள் பதரினில் செல்லா ளாகும்
மடையரை உறவு கொள்ளாள் அன்னமு மன்பா யிவள்
தடவரை மகளே யாங்கள் சாற்றின மொழிகுன் றாது.

34. உணவு சமைப்பதில் சிறந்தவள். கணவன் மனத்துக்குப் பொருத்தமாக நடந்து, உலகில் நல்லவளாக விளங்குவாள். அற்பமானவற்றில் ஈடுபடாள். மூடர்கள் நட்பைக் கொள்ளாள். பசித்து வந்தவருக்கு அன்போடு உணவு அளிப்பாள். பர்வதராஜன் புதல்வியே! நாங்கள் கூறிய சொற்கள் தவறு.

35. இல்லமும் கீழ்பால் நேரும் இவள்துணை யாண்பால் மூன்று
வல்லியு மொருத்தி தீர்க்கம் மருவாது மற்ற தெல்லாம்
சொல்லிய ஆண்பால் தன்னில் தேசம்மேல் சொல்லு
[மொன்று
அல்லலாய் ஒருவன் வாழ்வன் அரசர்பா லொருவன்
[வாழ்வன்.

35. இவள் வீடு கிழக்குப் பக்கத்தில் இருப்பது. இவளுக்கு உடன் பிறந்தவர்களில் ஆண்கள் இருவர், பெண் ஒருத்தி தீர்க்கமாய் விளங்குவர். மற்றவர்கள் நிலைக்கமாட்டார்கள். ஆண்களில் ஒருவன் தேச யாத்திரை செல்லுவான். வறுமைத் துன்பத்துடன் ஒருவன் வாழ்வான். இன்னொருவன் அரசர்களைச் சார்ந்து வாழ்ந்திருப்பான்.

36. பின்பாகம் விபர மாகப் பேசுவோ மவர்கள் சேதி
முன்சென்மம் அன்னைக் கேதான் மொழிகின்றோம் தில்லை
[தன்னில்
நன்னய வைசிய சேயாய் நல்கியே வறுமை யின்றிப்
பொன்னெடு பணிதி யுண்டாய்ப் புதல்வர்க ளதிக
[முண்டாய்;

36. அவர்களுடைய செய்தியைப் பற்றி விவரமாக இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். இவன் தாய்க்கு முன் பிறப்பைச் சொல்லுகின்றோம். சிதம்பரத்தில் வைசியப் பெண்ணுப்பிறந்து, தரித்திரமில்லாமல், பொன், ஆபரணங்கள் முதலியன ஏற்பட்டு, புத்திர பாக்கியமும் அதிகமாய் அடைந்து;

37. அறமதில் இச்சை யுண்டாய் அந்தகன் நாட டைந்து
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று சொல்வோம்
திருமகள் வறுமை காணுள் செப்புவோ மிவள்பின்
[சென்மம்
பிரிதிவி தலத்தி லேதான் பிறப்பளாம் சௌராட்டிர
[வமிசம்.

37. தருமத்தில் ஆசை ஏற்பட்டு, பின்பு எமனுலகஞ் சென்று, பிரமாவினுல் மீண்டும் படைக்கப்பட்டு, இவ்வுலகில் பிறந்தவள் இவள் என்று சொல்லுவோம். இலட்சுமிபோன்ற இவள் தரித்திரமில்லாதவள். இவளுடைய மறுபிறப்பைச் சொல்லுவோம். இவ்வுலகில் சௌராஷ்டிரர் குலத்தில் பிறப்பாள்.

38. தந்தையின் பூர்வம் சொல்வோம் தாம்பிர பரணி தன்னில்
வந்தனன் தியின் வமிசம் வளமுள குடும்பி யாகி
அந்தவன் வாழு நாளில் அணுகின வினையைக் கேண்மோர்
பிந்திணேன் பாகம் தன்னைப் பிழைசெய்தா னென்று
[சொல்வோம்.

38. இவளுடைய தந்தையின் முற்பிறப்பைச் சொல்லுவோம். தாமிரவருணி நதிக்கரையில், வன்னியர் வமிசத்தில் பிறந்தான். அவன் நல்ல குடும்பமுடையவனுக வாழ்ந்திருந்த காலத்தில் ஏற்பட்ட ஊழ்வினைப் பயனைக் கேளுங்கள். தனக்கு இளையவனின் பாகத்துக்குரிய சொத்தைக் கொடுக்காமல் மோசஞ் செய்தான் என்று சொல்லுவோம்.

39. துணைவனும் வருத்த முற்றுச் செப்புவான் சாபம் தானும்
கனமுள பொருளீ யாமல் கடனதைத் தந்த பாவி
வினையுண்டு ஆஸ்திக் கேதான் மேவும்பின் சென்மந் தன்னில்
சினமுடன் தந்தை யாஸ்தி சிதறிடும் உனக்கொவ் வாது.

39. இவன் சகோதரன் வருத்தமடைந்து, ஒரு சாப மிடுவான். மிக்க மதிப்புள்ள என் பாகத்துக்குரிய பொருளைத் தராமல் கடனைமாத்திரம் கொடுத்தான் இந்தப் பாவி. இந்தச் சொத்துக்குத் தீங்குண்டு. மறுபிறப்பில் தந்தையின் கோபத்தினால் அவருடைய ஆஸ்தி உனக்குக் கிடைக்காமல் சிதறிப் போகும்.

40. அண்ணன்தம் பிகளு மின்றி அம்புவி தன்னில் வாழ்வாய்
குன்றிய மனத்தான் சொல்லக் குலவிற்று அந்தச் சாபம்
வண்ணமா யந்தி யத்தில் அறுமுகன் தொண்டு பூண்டு
புண்ணிய தலங்கள் சென்று பெரியோருக் கன்ன மீந்து ;

40. சகோதரரில்லாமல் இவ்வுலகில் நீ தனித்து வாழ்வாய் என்று மன வருத்தமடைந்த இளையவன் சொல்ல, அந்தச் சாபம் இவனை வந்தடைந்தது. பின்பு இவன் மனம் வருந்தி, தனது கடைசிக் காலத்தில் முருகப் பெருமானுக்குத் தொண்டுகள் புரிந்தும், புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்றும், சான்றோர்களுக்கு உணவு அளித்து உபசரித்தும்;

41. மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருமக னுதித்தா னென்றேஞ் சேர்ந்திடு முன்னூழ் சாபம்
பெருந்தந்தை யாஸ்தி வேண்டான் புகலொணாத் துணைவர்
[தாமும்
அறுமுகன் அருளி னாலே அரசனுல் தொழிலு மேற்பன்.

41. எமனுலகமடைந்து, பிரமனால் படைக்கப்பட்டு, இவ்வுலகில் பிறந்தான், என்று சொன்னேம், முற்பிறப்பில் வந்த சாபம் இவனைச் சேர்ந்தது. தந்தையின் சொத்துக்களை விரும்பான். இவனுக்கு உடன்பிறந்தார்களும் இல்லை. முருகக் கடவுளின் கருணையினால் அரசாங்க உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளுவான்.

42. அவனுடை மரண மட்டும் அணுகாது வறுமை தானும்
நவனியில் சொல்காப் பானும் நற்சேது பதிக்குச் செல்வன்
சிவமுடை யோர்க்கு அன்பன் தேறின புத்தி யுண்டு
பவமன மில்லா னாகும் பரிவுப காரி யென்றேம்.

42. மரணம் வரையில் தரித்திரம் இவனை நெருங்காது. சொன்ன சொல்லைக் காப்பான். சேது யாத்திரை போவான். சிவபெருமானிடம் பக்தியுடையவர்களுக்கு அன்பன். தெளிவான அறிவு படைத்தவன். பாவத் தொழிலில் மனமில்லாதவன். பிறருக்கு உபகாரங்கள் செய்வான் என்று சொன்னேம்.

43. மறுசென்மம் காளாத்தி தன்னில் மறைக்குல முதிப்பா
[ணுகும்
திருமகன் இச்சென் மத்தில் செய்தபுண் ணியங்க ளென்ன
குறையென்றோர்க் குதவி செய்தும் கோபத்தை வெளிக்காட்
[டாதும்
முருகர்தம் பக்தி யாலும் உயர்வான தலங்கள் சென்றும் ;

43. மறுபிறப்பு, காளஹஸ்தியில், அந்தணர் வம்சத்தில் பிறப்பான். இவன் இப்பிறப்பில் செய்த நல்வினைகள் என்ன ? குறையுடையோம் என்று தன்னிடம் வந்தவர்களுக்கு உதவிகள் செய்தும், கோபத்தை அடக்கிக் கொண்டும், முருகப் பெருமானிடம் பக்தியுண்டும், புண்ணிய தலங்களுக்கு யாத்திரை சென்றும்;

44. சொல்லதைக் காத்து மேதான் சுந்தரன் வாழ்வ தாலே
புல்குவான் மறைக்கு லத்தில் புகலுவீர் காலந் தன்னை
நல்லதோர் கேது காலம் நாயகன் மூப்பா னுலில்
செல்லுவான் தந்தை யென்றோம் சேயிழை கேட்டி டாயே.

44. சொன்ன சொற்களைக் காப்பாற்றியும் இவன் வாழ்வதனால், மறு பிறப்பில் பிராமண குலத்தில் பிறப்பான். ஜாதகனுக்கும் தாய், தந்தையர்க்கும் மரண காலத்தைச் சொல்லுவீர். கேதுமகா தசையில், ஜாதகனுடைய மூப்பத்துகாலாம் வயதில், தந்தை மரணமடைவான் என்று சொன்னோம். இவந்த ஆபரணங்களை யணிந்த பார்வதியே ! கேட்பாயாக.

45. புகர்திசை பானு புத்தி பொருந்திடுங் காலந் தன்னில்
தகைமையாய் நாற்பா னுண்டில் தாய்க்குமே கண்ட
[மெய்தும்
மகனுக்கு அறுபான் மூன்றில் மாசிமா தத்தி லேதான்
பகையாகக் கால னுடு பறப்பனு மென்று சொல்வோம்.

45. சுக்கிரமகா தசையில் சூரிய புக்தி வருங்காலத்தில் ஜாதகனின் நாற்பதாமாண்டில், தாய்க்கு மரணமாம். ஜாதகன் அறுபத்துமூன்றும் வயதில், மாசி மாதத்தில், எமனுலக மடைவான் என்று, சொல்லுவோம்.

46. பின்சென்மங் கொங்கு நாட்டில் பிறப்பனும் பிரம்ம
[சேயாய்ப்
பொன்பொரு ளுடையோ னுகிப் புகழான குடும்பி யாவன்
அன்னவன் சனன காலம் அனுடத்தின் இரண்டாம் பாதம்
துன்சனி பதினே ராண்டும் திங்களும் தசமே யென்றோம்.

46. மறுபிறப்பு, கொங்கு நாட்டில் அந்தணர்குலப் பிள்ளையாய்ப் பிறப்பான். பொன், பணம் முதலியவை யுடையவனாய், புகழோடு கூடிய குடும்ப முள்ளவனாக வாழ்வான். அவன் பிறந்தது அனுஷ நட்சத்திரத்தில் இரண்டாம் பாதமாகும். அப்பொழுது கொடிய சனிமகா தசையில் பதி னொரு வருஷங்கள், பத்து மாதங்கள் இருந்தன என்று சொன்னோம்.

47. மைந்தனின் பலத்தைக் கேண்மோ மருவும்பின் துணைக
[ளுந்தான்
சொந்தஇல் சேரு மென்றோம் சுதனுக்குக் கல்வி மேன்மை
தன்தனம் சேர்த்த லுண்டு தன்பந்து சுபமும் சூதம்
இந்திர னிறைஞ்சு மாதே யிதுபூர்வ பாக மாகும்.

47. இந்த ஜாதகனுக்குப் பலன்களைக் கேளுங்கள். இவனுக்குப் பின் பிறந்தவர்கள் உண்டு. சொந்த வீடு ஏற்படும். இவன் புதல்வனுக்குக் கல்வி யிலில் மேன்மை உண்டாகும். தன்னுடைய செல்வமும் பெருகும். தனது உறவினர்களிடையில் சுப காரியங்களும், கெடுதல்களும் நிகழும். தேவேந் திரன் வணங்குகின்ற பார்வதி தேவியே! இந்த ஜாதகனுக்கு இது முதல் பாகமாகும்.

ஜாதகம் 11

1. நந்தியு முதய மாக ரவியுமே சென்மம் தங்கப்
புந்தியும் புகரீ ருரில் பூமகன் மூன்றி லேறச்
சந்திரன் சனியு மேழில் சர்ப்பமும் மிருநான் காக
மந்திரி ஆறி லேற வறைகுவீர் பலனைத் தானே.

1. விருஷபம் லக்கினமாக இருக்க, சூரியன் லக்கினத்திலும், புதனும் சுக்கிரனும் மேஷத்திலும், செவ்வாய் கடகத்திலும், சந்திரனும் சனியும் விருச்சிகத்திலும், இராகு தனுசிலும், கேது மிதுனத்திலும் தங்கியுள்ள இந்த ஜாதகனுக்குப் பலனைச் சொல்லுவீர்.

	புதன் சுக்கிரன்	லக்கினம் சூரியன்	கேது
	இராசி சக்கரம்		செவ்வாய்
இராகு	சந்திரன் சனி	குரு	

2. பிருகுமே புகலு கின்றூர் பிறந்திடு மாண்பால் சென்மம்
வருமில்லம் கீழ்மேல் வீதி வாசலும் வடக்குப் பார்வை
உருவற்ற மாரி தென்மேல் ஓராணை முகத்தோன் மேற்கில்
அரன்கோட்டம் காளி யுத்ர மாதிமால் வடமே லாகும்.

2. பிருகு முனிவர் சொல்லுகின்றூர். ஆண் பிறப்பு உண்டாகும். பிறக்கும் வீடு கிழக்கு மேற்கான வீதியில், வடக்குப் பார்த்த வாசலையுடையது. உருவம் இல்லாமல் தலைமட்டுமுள்ள மாரியம்மன் கோயில் தென் மேற்கில் உள்ளது. யானைமுகக் கடவுள் மேற்கில் எழுந்தருளி யிருக்கின்றூர். சிவபெருமான், காளி இவர்கள் கோயில்கள் வடக்கில். முதன்மையான திருமால் வடமேற்கில் கோயில் கொண்டுள்ளார்.

3. சொல்லிய அடையா ளத்துள் சிறுவூரில் இந்தப் பாலன்
புல்குவான் மூன்றும் சென்மம் பலமிலா இல்ல மாகும்
தல்லியின் தந்தை யோகம் தன்துணை களத்திர புத்திரர்
வல்லவன் முன்பின் சென்மம் வரைகின்றே மிந்நூல்

[தன்னில்.

3. இங்ஙனம் கூறப்பட்ட அடையாளங்கள் கொண்ட சிறியதொரு ஊரில், மூன்றும் பிறபப்காப் பிறப்பான். இவன் வீடு பலமில்லாதது. தாய், தந்தையர், உடன்பிறந்தார், மனைவி, புத்திரர் ஆகியோர் யோகங்கள், முற்பிறப்பு, மறுபிறப்பு முதலியன யாவற்றையும் இந்த நூலில் சொல்லுகின்றோம்.

4. தந்தையின் துணைவ ரேழில் தங்காது யாவு மென்றும்
தந்தையும் தனியாய் வாழ்வன் சாற்றுவோ மவன்கு
[ணத்தைத்
தந்தமும் தரள மொக்கும் சிவந்தமெய் ஒடிச்சல் நீட்சி
தந்தைசொல் கடவா னுகும் தரணியில் உய்வா னுகும்.

4. தந்தையின் உடன்பிறந்தார் ஏழு பேரில் ஒருவரும் நிலைத்திருக்க மாட்டார்கள் என்று சொன்னோம். தந்தை தனியாக வாழ்வான். அவன் குணத்தைச் சொல்லுவோம். அவன் பற்கள் முத்துக்களைப் போன்ற வெண்மை யுடையன. சிவந்த சரீரமுடையவன். மெல்லியவன். உயர முள்ளவன். தன் தந்தையின் சொற்களைத் தட்டாதவன். உலகில் பிழைக்கும் வழி தெரிந்தவன்.

5. கல்வியு மல்ப மாகும் கனத்தபுத் திகளு மேற்பன்
இல்லையென் றுரைக்க மாட்டான் யாவர்க்கும் நல்லோ
[னுவன்
சொல்லது அடக்க முண்டு துர்வழக் கதனில் செல்லான்
சல்லியங் கொள்ளா னுகும் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு.

5. அவன் படிப்பு, சிறிதாகும். மிகுதியான அறிவுரைகளைக் கேட்டு அவற்றை மனத்தில் பதிய வைத்துக்கொள்ளுவான். வந்து கேட்டவர் களுக்கு இல்லையென்று சொல்லமாட்டான். எல்லோருக்கும் நல்லவனுவன். பேசுஞ் சொற்களில் பணிவு உண்டு. கெட்ட வழக்குக்களில் தலையிடான். கடன் கொள்ளாதவன். கால் நடைகள் விருத்தியுண்டு.

6. மனமதில் கபடு மில்லான் வருவோரை யாத ரிப்பான்
இனமதிப் புடனே வாழ்வன் இமையவர் பக்தி பூணன்
கனதன மில்லா னுகும் காதலி தன்னுல் யோகம்
சினமுண்டு வெளிக்காட் டாதான் சித்திர யில்லம்
[செய்வான்.

6. மனத்தில் வஞ்சனை யில்லாதவன். தன்னிடம் வருபவர்களைக் காப்பான். தன் இனத்தாரிடையே மிக்க மதிப்பு உடையவனுக வாழ் வான். தெய்வபக்தி யில்லாதவன், மிகுதியான செல்வ மில்லாதவன். இவனுக்கு மனைவியால் அதிர்ஷ்டம் வாய்க்கும். கோபமுண்டு. அதனை

வெளிப்படுத்தமாட்டான். அழகிய வேலைப்பாடமைந்த வீட்டைக் கட்டுவான்.

7. எந்தக்கா லத்தில் செய்வா னியம்புவீர் முனியே நீர்தாம்
வந்தவ னிருநான் காண்டில் வளவுமே கொஞ்சம் செய்வன்
பிந்தியு மீரே ழாண்டில் பலமுள யில்லம் செய்வான்
கந்தணை யின்ற மாதே கழறின மொழிகுன் ருது.

7. எப்பொழுது சித்திர வீடு கட்டுவான் என்று சொன்னீர்? முனிவரே! நீர், என்று பார்வதி கேட்டாள். இவன் வயதுவந்து, சம்பாதிக்க ஆரம்பித்த பிறகு, எட்டு வருஷங்களில் வீட்டைச் சிறிதாகக் கட்டுவான். பின்பு பதினன்கு வருஷங்களில் பலம்பொருந்திய பெரிய வீட்டைக் கட்டுவிப்பான். முருகப் பெருமானைப் பெற்ற பார்வதியே! சொன்ன சொற்கள் தவரு.

8. முன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றேம் முனியே [கேளும்
செந்தில்மா மலையி லேதான் செனித்தனன் சேடர் வமிசம்
விந்தையாய் வணிகம் செய்து வித்தகன் வாழும் நாளில்
வந்ததோர் வினையை நாங்கள் வழுத்துவோந் தாயே [கேளும்;

8. முற்பிறப்பில் இவன் இருந்த நிலையைச் சொல்லுகின்றேம். முனிவரே! கேளும். திருச்செந்தூர் மலையில் சேடர் குலத்தில் பிறந்தான். எவரும் ஆச்சரியப்படும்படி பல வியாபாரங்கள் செய்து இவன் வாழ்ந்துகொண்டிருக்கும் நாளில்; நேர்ந்த தோஷமொன்றை நாங்கள் சொல்லுவோம்; தாயே! கேளுங்கள்.

9. மறையவன் நேசம் செய்து மாபத்துக் குதவி செய்தும்
வருநாளில் அவனை யின்னேன் வஞ்சனை செய்ய லுற்றான்
அறைகுவான் மறையோன் சாபம் உதிக்கும்பின் சென்மம் [தன்னில்
வருந்துணை யாவும் தீது வளமிலா யில்ல மாகும்.

9. ஓர் அந்தணரை நட்புக்கொண்டான். அவர் இவனுக்கு ஆபத்து நேர்ந்த சமயத்தில் உதவிசெய்து காப்பாற்றினர். இப்படி இவர்கள் வாழ்ந்து வரும்பொழுது, அந்தப் பிராமணரை இவன் வஞ்சிக்கத் தொடங்கினன். அதனைத் தெரிந்துகொண்ட அந்தணர் இவனுக்குச் சாபமிட்டார். நீ பிறகப் போகும் மறுபிறப்பில் உன் உடன்பிறந்தார் யாவரும் மாள்வர், பலமில்லாத வீட்டில் பிறப்பாய்.

10. முதல்சுதன் சேத மாகும் மொழிந்தனர் மறையோர் தாமும்
அதிபனுக் கந்தச் சாபம் மருவிய தென்று சொல்வோம்
சதியான கால நாடு சார்ந்துமே பிரமன் லெக்கம்
அதிதியே வடுகர் வர்க்கம் அருளினு னென்று சொல்வோம்.

10. உனக்குப் பிறக்கும் குழந்தைகளில் முதல் குழந்தை நாசமடையும் என்றிவ்வாறு சாபங்களைக் கொடுத்தார் பிராமணர். அந்தச் சாபம் இவனை யடைந்தது என்று சொல்லுவோம். பின்பு எமனுலகம் அடைந்து, பிரமன் எழுத்தினால் மீண்டும் இவ்வுலகில் வடுகர் குலத்தில் பிறந்தான் என்று கூறுவோம்.

11. சொன்னஇக் குணத்தா னுக்குச் சுதனுமே உதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளான் சிவந்த
[மேனி
தன்னுடல் மெலிவு முண்டு சமகல்வி யூகை யுண்டு
பொன்கடன் கொள்ளா னுகும் பூமியால் சீவிப்பா னும்.

11. இவ்வாறு கூறப்பட்ட குணங்களையுடைய தந்தைக்கு இவன் புதல்வனுகப் பிறப்பான். இவனுடைய குணங்களைச் சொல்லுவோம். அழகுடையவன். சிவப்பான உடலும், மெலிந்த சரீரமும், சிறந்த கல்வியுமுடையவன். ஊகித்துணரும் சக்தியுண்டு. பணம், காசு முதலியவை கடனுகப் பெற்றுக் கொள்ளாதவனுவன். விவசாயத்தால் ஜீவிப்பான்.

12. பலருக்கும் பந்தி னர்க்கும் பரிந்துப சாரம் செய்வன்
நலமதை யெவர்க்கும் செய்வன் நாற்காலி விருத்தி யுண்டு
விலைமாதர் மோகம் கொள்ளான் விகடங்கள் கூரு னுகும்
புலவன்போல் வார்த்தை சொல்வன் புயபல முடைய
[னுமே.

12. உறவினருக்கும் மற்றுமுள்ள அனைவருக்கும் விருப்பத்துடன் உபசாரங்கள் செய்வான். எவருக்கும் நல்லன செய்வான். இவனிடம் பசு, எருது ஆகிய விலங்குகள் அபிவிருத்தி யுண்டு. வேசையர்மீது இச்சை கொள்ளமாட்டான். குறும்பான சொற்களைச் சொல்லமாட்டான். சிறந்த வித்துவான் போலப் பேசுவான். தோள் வலிமை யுடையவன்.

13. அறமதி லிச்சை யுண்டு அடாவடி கூரு னுகும்
உறன்முறை மதிக்க வாழ்வன் உண்மையை வெளிக்காட்
[டாதான்
கரமதில் சங்கு சக்ரம் கமலரே கையுமே யுண்டு
நிறமான காரி யத்தைச் செய்குவா னென்று சொல்வோம்.

13. தருமம் செய்வதில் ஆசையுண்டு. அடாவடியாகப் பேசமாட்டான். பந்துக்கள் மதிக்கும்படி வாழ்க்கை நடத்துவான். மனத்தில் உள்ளதை வெளியில் காண்பிக்காதவன். இவன் கையில் சங்கு சக்கர பத்ம ரேகைகளுள்ளன. தகுதியான செயல்களைச் செய்வான் என்று சொல்லுவோம்.

14. இன்னவன் துணைவர் தம்மை இயம்புவோ முன்பெண்
[ணென்று
அன்னவள் தீர்க்க சிவி அவள்குணம் புகலக் கேண்மோ
கன்னென மொழியே சொல்வள் கபடிலா முன்கோ
[பத்தாள்
பொன்னிற முடைய ளாகும் புகழ்ந்தோருக் குதவி
[செய்வள்

14. இவனுடைய உடன்பிறந்தார்களைச் சொல்லுவோம். இவனுக்கு மூத்தவள் ஒருத்தியாவள். அவள் தீர்க்காயுளை யுடையவள். அவள் குணத்தைச் சொல்லுகின்றேன், கேளுங்கள். கரும்புபோன்ற இனிய சொற்களையே பேசுவாள். வஞ்சனை கலவாத முன்கோப முடையவள். பொன் போன்ற நிறமுடையவள். தன்னைப்பற்றிப் புகழ்ந்தோருக்கு உபகாரங்கள் செய்வாள்.

15. வரனுமே மேல்பால் நேரும் மைந்தர்க ளாண்பால் மூன்று
அரிவைமா ரிரண்டு தீர்க்கம் அழிவுண்டு இரண்டு என்றேம்
திருகிலா குணத்தா ளாகும் செய்நன்றி மறவா ளாகும்
பெருமையாய்க் குடும்ப மேற்பள் பால்பாக்கிய மதிக
[மூண்டு.

15. அவளுக்கு மேற்குத் திசையிலிருந்து கணவன் வாய்ப்பான். அவளுடைய மக்களில் ஆண்பிள்ளைகள் மூவர்; பெண்கள் இருவர். இவர்கள் தீர்க்கமா யிருப்பர். இரண்டு குழந்தைகள் பிறந்து நாசமடையும் என்று சொன்னேம். மாறில்லாத குணமுடையவளாவள். ஒருவர்செய்த உபகாரத்தை மறக்காதவள். பெருமையுடன் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவாள். பால் பசு, பாக்கியங்கள் அதிகமாக இவளுக்கு உண்டு.

16. பின்துணை கன்னி யொன்று பேசுவோம் தீர்க்க சிவி
உன்னத வார்த்தை சொல்வள் உபாயமாம் புத்தி சொல்வள்
பின்னமில் லாத தேகி புருடனுக் கினிய ளாகும்
சொன்னசொல் சுகமே யாகும் சோம்பிடாள் காரி யத்தில்.

16. இந்த ஜாதகனுக்குப் பின்பிறந்த பெண்ணொருத்தியுண்டு. அவள் தீர்க்க ஆயுளுடன் இருப்பாள் என்று சொல்லுவோம். உயர்ந்த கருத்துக்கள் கொண்ட சொற்களைப் பேசுவாள். தக்க சமயத்தில் நல்ல உபாயமான புத்தி மதிகளைக் கூறுவாள். குற்றமில்லாத தேகமுடையவள். கணவனுக்கு இனியவளா யிருப்பாள். அவள் சொல்லுகின்ற சொற்கள் நல்ல தன்மையுடைய வனுய் இருக்கும். காரியங்கள் செய்வதில் சோம்பலடைய மாட்டாள்.

17. மாதுக்கு வரனு மேற்கில் மைந்தர்க ளாண்பால் ஒன்று
காதலி மூன்று என்றேரும் காசினில் வறுமை காணுள்
டோர்தன முடைய ளாகும் பேச்சது அதிக முண்டு
சாதிப்பாள் சிலது சங்கை சார்ந்திடும் பித்த சூடு.

17. இந்தப் பெண்ணுக்குக் கணவனும் மேற்குத் திசையிலிருந்து வருவான். இவளுக்கு ஆண் மக்கள் இருவர்; பெண்கள் மூவர் என்று சொன்னேம். உலகில் தரித்திரம் இல்லாமல் வாழ்பவள். நல்ல பெயரும் செல்வமும் உடையவள். அதிகமாகப் பேசுவாள். சில சந்தேகங்களைத் துணிவுடன் போக்குவாள். இவளுக்குப் பித்த சூடு ஏற்படும்.

18. பாலனும் தனியாய் வாழ்வன் பெருகாது ஆண்பா லுந்தான்
சாலவே பிருகு சொல்லச் சயமுனி தடுத்துச் சொல்வர்
ஏலவே துணையாம் தோடம் இயம்புவீ ரந்தச் சங்கை
நீலனு மதியு மேழில் நின்றுமே குசனு மூன்றில்;

18. இந்த ஜாதகன் தனித்து வாழ்க்கை நடத்துவான். இவனுக்குச் சகோதர பாக்கியம் ஏற்படாது, என்று பொருத்தமாகப் பிருகு முனிவர் கூற, செயமுனி இடைமறித்துச் சொல்லுவார். உடன்பிறந்தான் இல்லாமல் போனதற்குரிய தோஷத்தைச் சொல்லுவீர். சனியும் சந்திரனும் ஏழாமிடமாகிய விருச்சிகத்தில் தங்க, செவ்வாயும் மூன்றுமிடமாகிய கடகத்தில்;

19. இருப்பதால் துணையாண் தோடம் எய்தினும் கட்ட
[மெய்தும்
திருமகன் மணத்தின் காலம் செப்புவோ மினிமே லாக
இருபது ஒன்று ஆண்டில் இவனுக்குப் பாரி வாய்க்கும்
வருமனை மேல்பால் நேரும் மங்கையின் குணத்தைச்
[சொல்வேன்.

19. இருப்பதனலும் சகோதர தோஷம் ஏற்படும். சகோதரனிருந்தாலும் நாசமடைவான். இனிமேல் ஜாதகனின் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இவனுடைய இருபத்தோராம் வயதில், இவனுக்கு மனைவி வாய்ப்பாள். மனைவி மேற்குத் திசையிலிருந்து வருவாள். அந்தப் பெண்ணின் குணங்களைச் சொல்லுவேன்.

20. மாந்தளிர் மேனி யாகும் வருவோரை ஆத ரிப்பள்
கூர்ந்துமே வார்த்தை சொல்வள் குணமது நல்ல தாகும்
ஏந்திய தனத்தா ளாகும் இடரென்றோர்க் குதவி செய்வள்
காந்தம்போல் புத்தி யேற்பள் கசடரை உறவு கொள்ளாள்.

20. மாந்தளிர் போன்ற மென்மையான தேகத்தை யுடையவளாவள். தன் வீட்டைத் தேடி வருபவர்களைக் காப்பாள். நன்கு ஆலோசனை செய்து பேச்சுக்களைப் பேசுவாள். அவள் குணம் நல்லது. உயர்ந்த செல்வ முடையவள். 'துன்பமென்று வந்தவர்களுக்கு உபகாரம் செய்வாள். மேன்மை யான சொற்களை காந்தம்போல் கிருஹிப்பவள். கசடர்களிடத்தில் உறவு கொள்ளமாட்டாள்.

21. மங்கைக்கு வயது தீர்க்கம் மாமுனி தடுத்துச் சொல்வர்
தங்காது முதல்ம னைதான் சார்ந்திடு மிரண்டாம் பாரி
சங்கையைச் சொல்லு மென்னச் சனிமதி ஏழில் நின்று
மங்கலன் ஏழோனுகி மருவிட மூன்றில் நீச்சம்;

21. இவன் மனைவிக்கு ஆயுள் விருத்தியுண்டு. சிறந்த முனிவராகிய செய முனிவர் இதனைத் தடுத்துப் பேசுவார். முதல் மனைவி நிலைத்து வாழ்ந்திருக்க மாட்டாள். இவனுக்கு இரண்டாம் மனைவி வாய்ப்பாள். அதற் குரிய காரணத்தைச் சொல்லுங்கள் என்று கேட்க, சனியும் சந்திரனும் ஏழாமிடத்தில் நின்று, களத்திர ஸ்தானமாகிய ஏழாமிடத்துக்கு உரிய செவ்வாய் கடகத்தில் நீச்சமாயும்;

22. கேதுவு மிரண்டி லேறக் கிட்டிய பால னுக்குக்
கர்தலி யிரண்டு என்றோரும் கழறின பாரி ரெண்டும்
தீதுண்டோ தீர்க்க மோசொல் செல்லுவாள் முதல்ம [னைதான்
மேதினி லிரண்டா மாது விருத்தியாம் பால னுக்கு.

22. கேது குடும்ப ஸ்தானமாகிய இரண்டாம் வீட்டில் தங்கியிருப்பதா லும் இந்த ஜாதகனுக்கு மனைவியர் இருவர் என்று கூறினேம். சொல்லப் பட்ட இரண்டு மனைவியரும் தீர்க்கமாய் இருப்பார்களோ? அன்றி அவர் களுக்குக் கெடுதியுண்டோ? முதல் மனைவி மரணமடைவாள். இரண்டாம் மனைவி தீர்க்க ஆயுளுடன் இருப்பாள்.

23. எந்தக்கா லத்தில் செல்வாள் இயம்புவீர் முனியே நீர்தாம்
வந்தவ ளிருபா னெட்டில் மடிவுண்டு கர்ப்பத் தாலே
பிந்திவேறு மாது சேர்வள் பெற்றதாய் வழியில் நேரும்
அந்தவள் உள்ளு ராகும் அவளுமே தீர்க்க சீவி.

23. எந்தக் காலத்தில் முதல் மனைவி மரணமடைவாள்? முனிவரே! நீர் அதனைச் சொல்லும். இவனுக்கு முதல் மனைவியாக வந்தவள் இவனு

டைய இருபத்தெட்டாம் வயதில் கருப்ப மேற்பட்டு அதனால் மரணமடை வாள். மறுபடி வேறு பெண் மனைவியாவள். அவளும் தாய் வழியில் வந்தவள். அவள் உள்ளூரைச் சேர்ந்தவள். தீர்க்க ஆயுளுடையவள்.

24. புத்திர விருத்தி தானும் பொருந்தாது முதன்ம னைக்கு
வித்தகி பின்மா[1]துக்கு விளங்கிடும் கன்னி ரெண்டு
சுத்தமா யாண்பால் ரெண்டு செப்புவோம் தீர்க்க மாக
அத்தியை வளர்த்த மாதே அறைந்தன மொழிகுன் றுது.

24. முதல் மனைவிக்குப் புத்திர பாக்கியம் ஏற்படாது. இரண்டாம் மனைவிக்குப் பெண்கள் இருவர் பிறந்து விளங்குவர். ஆண்களும் இருவர். இவர்கள் தீர்க்கம் என்று சொல்லுவோம். யானைமுகக் கடவுளைப் புதல்வ ராக அடைந்து வளர்த்த பார்வதியே! கூறிய சொற்கள் தவறு.

25. முன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றேம் வாரி யோரம்
துன்னுமா பலியி லேதான் செனித்தனன் கர்ண சேயாய்
அந்நகர் கணக்கு வேலை அவனுமே செய்யுங் காலை
பின்னரெருக் கிடைஞ்சல் செய்தான் புகலுவார் ஏழை
[யோர்கள்.

25. முன்பு இவன் இருந்த பிறப்பைச் சொல்லுகின்றோம். கடற் கரை யோரமாகவுள்ள மகாபலிபுரத்தில், கருணீகர் குலப் புதல்வனாய்ப் பிறந்தான். அந்த நகரத்தின் கணக்கு வேலையை அவன் பார்த்து வந்த பொழுது, அங்கிருந்த ஏழைகளுக்குத் துன்பங்கள் செய்தான். அவர்கள் பின்வருமாறு சாபமிட்டார்கள்.

26. மற்றெரு சென்மம் தன்னில் வரும்துணை யாணில் லாமல்
பத்தினி யிரண்டு மாயும் பாரினில் வாழ்வா யென்றார்
சத்தியத் தோர்கள் சொல்லச் சார்ந்தது அந்தச் சாபம்
குற்றமாய்ச் சிலது தோடம் குலவிற்றுப் பால னுக்கு.

26. மறுபிறப்பில் உடன்பிறந்தார்கள் இல்லாமல், இரண்டு மனைவியர் ஏற்பட்டு, இவ்வுலகில் வாழ்வாய் என்று சாபமிட்டனர். உண்மையுடைய அந்த ஏழைகள் கூறிய சாபம் இவனை யடைந்தது. அந்தத் தவறுதலால் சில தோஷங்கள் இந்த ஜாதகனை யடைந்தன.

27. மைந்தனு மந்தி யத்தில் வறுமைகள் மிகவே கொண்டு
மூந்துமால் பக்தி யாகி மேவினன் கால நாடு
பொன்னவன் வரையப் பட்டுப் பிறப்பனு மென்று
[சொல்வோம்
துன்மையாய் முன்னூழ் சாபம் சேர்ந்திடு மிச்சென் மத்தில்.

27. இவன் கடைசிக் காலத்தில் திருமால் மீது மிக்க பக்தியுட னிருந்து மரணமடைந்தான். பின்பு, பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டு இப்பிறப் பில் பிறந்தான் என்று கூறுவோம். முற்பிறவியிலேற்பட்ட கொடிய அந்தச் சாபம் இப்பிறவியில் இவனை யடையும்.

28. ஆண்துணை தோட மெய்தும் அணுகிடும் பாரி ரெண்டு
பூணுவீர் அதற்குச் சாந்தி புகலவே மாட்டோம் யாங்கள்
காணவே யதுபோல் நேரும் காவலன் தனக்கு மேதான்
வேணுகோ பாலன் தங்கை வித்தகி கேட்டி டாயே.

28. சகோதர தோஷம் உண்டாகும். மனைவியர் இருவர் வாய்ப்பர். அதற்குப் பரிகாரஞ் சொல்லும் என்று பார்வதியம்மன் கேட்டாள். நாங்கள் சாந்தி பரிகாரங் கூறமாட்டோம். இந்த ஜாதகனுக்குச் சொன்னது போல் நடந்தே தீரும். கண்ணபிரானின் தங்கையே! மேன்மையுடைய பார்வதியே! கேட்பாயாக.

29. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளாள் சிவந்த [மேனி
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பாள் தணிந்த சாயல்
முன்கோபம் கொஞ்ச முண்டு மேவிடும் பித்த வாயு
தன்பாலும் பாதை கொஞ்சம் தைரிய மனத்த ளாகும்.

29. இவனுடைய தாயின் குணங்களைச் சொல்லுவேன். அழகுடைய வள். சிவந்த உடல். தான் கூறிய சொற்கள் மேன்மையுடையன என்று நிலைநாட்டுவாள். நல்ல உடற்கட்டினை யுடையவள். முன் கோபம் சிறிது உண்டு. பித்த வாயு இவள் சரீரத்தில் தங்கியிருக்கும். அதனால் ஏற்படும் துன்பம் சிறிதேயாகும். துணிவான மனத்தை யுடையவளாகும்.

30. வரன்மனம் போலே வாழ்வாள் மனத்திலே கபடு கொஞ்சம்
அரிவைக்குத் துணையாண் ரெண்டு அம்பிகை யாளொ ருத்தி
திறமாகு மென்று சொல்வோம் செனித்தயில் உள்ளூ [ராகும்
உரைக்கின்றே மிவள்முன் சென்மம் உத்தமி கேட்டி [டாயே.

30. கணவனின் மனம் அறிந்து வாழ்க்கை நடத்துவாள். மனத்தில் வஞ்சனை கொஞ்சம். அவளுக்குச் சகோதரர் இருவர். சகோதரி ஒருத்தி. இவர்கள் தீர்க்கமாய் வசிப்பர் என்று சொல்லுவோம். பிறந்த இடம் உள் ளூர். இவளுடைய முற்பிறப்பைச் சொல்லுகின்றோம். நற்குணமுடைய வளே! கேட்பாயாக.

31. ஆலங்கா டதற்குக் கீழ்பால் அணுகிய சிறுஊர் தன்னில்
நீலியும் ரெட்டி வமிசம் சேர்ந்துமே வறுமை யின்றிப்
பாலர்கள் விருத்தி யுண்டாய்ப் பாவத்தில் மனம்வை யாமல்
மேலான குடும்பி யாகி வித்தகி வாழ்ந்து மேதான் ;

31. திருவாலங்காட்டிற்குக் கிழக்கில் உள்ள ஒரு சிறிய ஊரில், ரெட்டியார் குலத்தில், இவள் பிறந்து தரித்திரமில்லாமல், புத்திர விருத்தி ஏற்பட்டு, பாவச் செயல்களில் மனஞ் செலுத்தாமல், மேன்மையுள்ள குடும்ப முடையவளாகி வாழ்ந்து;

32. மரணமே யாகி யின்னுளெள் மலரயன் வரையப் பட்டு
உறைந்தன ளிக்கு லத்தி லுயர்வான குடும்பம் பின்னுல்
அரிவைபின் சென்மம் சொல்வேன் அணுகிய தணிகை
[யுத்திரம்
சிறுஊரில் வைசிய சேயாய்ச் செனிப்பளாம் இந்த மாது.

32. மரணமடைந்து, பிரம்மாவினுல் படைக்கப்பட்டு, இக்குலத்தில் வந்தாள். உயர்வான குடும்பப் பொறுப்பைப் பின்னுல் ஏற்பாள். இவளுடைய மறுபிறப்பைச் சொல்லுவேன். திருத்தணிகைக்குச் சமீபத்தில் வடக்குப் பக்கமாகவுள்ள ஒரு சிற்றூரில், வைசிய குலக் குழந்தையாக இவள் பிறப்பாள்.

33. முப்பத்து ஏழு ஆண்டில் விளம்புவோம் தந்தை கெண்டம்
செப்புவோ மிவன்பின் சென்மம் செழிப்புள காஞ்சி
[கீழ்பால்
ஓப்புடன் பேரூர் தன்னில் உதிப்பனும் கங்கை சேயாய்
அப்பணி சடையோன் தேவி அறைந்தன மொழிகுன் றுது.

33. ஜாதகனின் முப்பத்தேழாம் வயதில் தந்தைக்கு மரணம் நேரும் என்று சொல்லுவோம். இவனுடைய மறுபிறப்பைக் கூறுவோம். வளமுள்ள காஞ்சீபுரத்துக்குக் கிழக்கில் உள்ள பெரிய ஊரில், வேளாளர் குலப் புதல்வனுய்ப் பிறப்பான். கங்கையைத் தலையில் தரித்த சிவபெருமானின் தேவியே! கூறிய சொற்கள் தவரு.

34. எண்ணஞ்சு ஆண்டு தன்னில் இயம்புவோ மன்னை கெண்டம்
திண்ணமா யன்பா னெட்டில் [1]தேள்மாதம் [2]குறைபக்
[கத்தில்
வண்ணமாய்த் துதியை தன்னில் மாரன்தன் உடலை மேகும்
அண்ணலைப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

1. ஐப்பசி.
2. கிருஷ்ணபட்சம்.

34. இவனுடைய நாற்பத்தாம் வயதில் தாய்க்கு மரணம் நேரும் என்று கூறுவோம். நிச்சயமாய் ஐம்பத்தெட்டாம் வயதில், ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்சம் துதியை திதியில், இவன் மரணமடைவான். சிவபெருமானைப் பூசைசெய்யும் பார்வதியே! கேட்பாயாக.

35. மறுசென்மம் கலிங்க நாட்டில் வருகுவான் சைவ சேயாய்த்
திருமகன் சென்ன காலம் கேட்டையி லிரண்டாம் பாதம்
அருணன்தன் திசையி ருப்பு அணுகிய பதினே ராண்டு
உரைந்திடும் திங்க ளொன்றும் உரைத்தனம் பூர்வ பாகம்.

35. மறுபிறப்பு, கலிங்க நாட்டில் சைவகுலப் புதல்வனாய்ப் பிறப்பான். சென்ன காலம் கேட்டை நக்ஷத்திரம் இரண்டாம் பாதமாகும். புதமகா தசையில் இருப்பு பதினெரு வருஷங்கள், மாதம் ஒன்று. இவ்விதமாக முதல் பாகத்தைச் சொன்னேம்.

36. பாலகன் யோகச் சேதி பகருவோ மினிமே லாக
ஏலவே பூமி யாலும் எய்திடும் சிவ னங்கள்
ஞாலத்தில் வறுமை காணுன் நவஆண்டில் மேலாய் யோகம்
பால்பாக்கியந் தனதான் யங்கள் பெருகிடும் புகழு மேற்பன்.

36. ஜாதகன் யோகச் செய்திகள்பற்றி இனிமேல் சொல்லுவோம். நிலங்களினால் சிவனம் ஏற்படும். உலகில் தரித்திரத்தை யறியாதவன். ஒன்பது வருஷங்களில் உயர்ந்த அதிர்ஷ்டம் வாய்க்கும். பால் பசு பாக்கியமுடையவன். செல்வங்களும் தானியங்களும் பெருகிடும். புகழையடைவான்.

37. சல்லிய பாதை யில்லான் தரணியை விருத்தி செய்வன்
நல்லவ னாகி வாழ்வன் நலிந்தோரை யாத ரிப்பன்
சொல்லது மேம்பா டாகும் சோம்பிடா னறமும் செய்வன்
[1]எல்லையை அளந்தோன் பக்தி இவனுமே கொள்வ னேம.

37. கடன் தொந்தரவு இல்லாதவன். நிலங்களை அபிவிருத்தி செய்வான். யாவருக்கும் நல்லவனாக வாழ்வான். துன்பமடைந்தவர்களைக் காப்பான். இவன் சொற்கள் மேன்மையுடையனவாய் இருக்கும். காரியஞ் செய்வதில் சோம்பலில்லாதவன். தருமங்கள் செய்வான். உலகத்தை யளந்த திருமாலின்மீது இவன் பக்தி கொள்ளுவான்.


---

1. திருமால்.

ஜாதகம் 12

1. சந்திரன் சனியும் வீணை சார்ந்ததிற் கைந்தில் சேயும்
புந்திபான் [1]சுங்கன் சீயம் புக்கிட [2]தெரிவைக் கேது
அந்தணன் கருங்கோள் சேலாய் அமர்ந்திட நவக்கோள்
[இவ்வார்
எந்தையே உதயம் புல்லம் எழில்சுதன் உதிப்பா னுகில்;

1. சந்திரனும் சனியும் மிதுனத்திலும், துலாத்தில் செவ்வாயும், புதன் சூரியன் சுக்கிரன் சிம்மத்திலும், கன்னியில் கேதுவும், குரு இராகு மீனத்திலுமாக, நவக்கிரகங்கள் இவ்வாறு தங்கியிருக்கும் நிலையில், விருசப லக்கினத்தில் ஆண் மகன் பிறப்பானுகில்;



2. வந்தவன் கீழ்மேல் வீதி வளரில்ல முத்திர னேக்கம்
எந்தை ஏந்தலும் பக்கம் இலகிடும் பரதெய் வங்கள்
இந்தயிவ் வடையா ளத்துள் விளங்கிய சிற்றூர் தன்னில்
சிந்துறும் இந்தப் பாலன் செனித்தது கேளு மாதே.

2. அவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் வடக்குப் பார்வை பார்வை வீட்டுக்குப் பக்கத்தில் வேறு தெய்வங்களின் கோயில்களுமுள்ளன. சொல்லப்பட்ட இவ்வடையாளங்களுடன் விளங்கிய சிறிய ஊரில் இந்த ஜாதகன் பிறந்தான். கேளுங்கள், தாயே!

3. செனித்திடு குலமே தென்னில் சிறக்கும்கா ராளர் சேயாம்
குனித்திடு மிவனின் யோகம் கூறுவோம் தந்தை யோகம்
வணித்திடு மன்னை யோகம் வளமுறு மிவன்முன் சென்மம்
கணித்திடும் பலன்க ளெல்லாம் கழறுவோ மிந்நூல்
[தன்னில்.

1. சுக்கிரன்
2. கன்னியா ராசி.

3. காரளார் குலத்தில் பிறந்தவன். இவனுடைய யோகங்களைக் கூறுவோம். தாய் தந்தையர் யோகங்கள், சிறப்புடைய இவன் முற்பிறப்பு, மறுபிறப்பு, இவனுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் ஆகிய அனைத்தையும் இந்த நூலில் சொல்லுகின்றோம்.

4. இன்னவன் குடும்பச் செய்கை இயற்றுவோம் உண்மை [கேளும்
சொன்னதோர் தந்தை வர்க்கம் சுபமுடன் ஆண்பால்ரெண்டு
அன்னையே கன்னி அவ்வார் அணுகிடும் தீர்க்க மாக
வின்னமாய் இதற்கு மேலாய் விளம்புவோம் பலமு ருது.

4. இவனுடைய குடும்பச் செய்திகளை உள்ளபடி கூறுவோம். கேட்பாயாக. இவன் தந்தை வழியில் நலமுடன் ஆண்கள் இருவர். பெண்களும் அங்ஙனமே இருவர் தீர்க்கமாக விளங்குவர். இவர்களுக்குப் பிறகு புத்திர பாக்கியம் உண்டாகாது.

5. பாலகன் வர்க்கம் தன்னைப் பகருவோம் இனிமே லாகச்
சீலமாய் ஆண்பால் மூன்று சிறந்திடாக் கன்னி ஒன்றும்
ஏலவே யிதற்கு மேலாய் இலகிடா செனித்த போதும்
சாலவே சுளுவில் வீயும் சாற்றிய மொழிகுன் ருது.

5. இந்த ஜாதகனின் வர்க்கத்தைப் பற்றி இனிமேல் சொல்லுவோம். ஆண்கள் மூவர். நெடுநாள் வாழாத பெண் ஒருத்தி. இவர்களுக்குப் பிறகு குழந்தைகள் பிறந்தாலும் நிலைத்திரா. எளிதில் மரிக்கும். நாங்கள் சொன்ன சொற்கள் தவறு.

6. சாதகன் நிறம்கு ணத்தைச் சாற்றுவோம் மாதே கேளாய்
போதவே இருசி கப்பன் பொருந்திடும் சமதே கத்தன்
தோதமாய்த் தரள தந்தம் சொல்லுவோம் நெருங்கி நிற்கும்
காதலி! குழலி னளே! கழறுவோம் மேலும் கேளே.

6. ஜாதகனுடைய நிறம், குணம் இவைகளைச் சொல்லுவோம். பெண்ணே! கேட்பாயாக. கருஞ் சிவப்பாக விருப்பான். ஒழுங்கான உடலமைப்புடையவன். முத்துக்கள் கோத்தாற் போன்ற வெண்மையோடு நெருங்கிய பல் வரிசையுண்டு. கருங் கூந்தலையுடைய தாயே! சொல்லுகின்றோம், மேலுங் கேட்பாயாக.

7. பொய்யது பகரான் மிஞ்சிப் புத்திநல் லறிவு முண்டு
துய்யநீ ராட யிச்சை சிறுத்தவர்க் குதவி செய்வன்
மெய்யினில் மருவு முண்டு மேலவர் நேயம் கொள்வன்
நையவே வார்த்தை கூறுன் நங்கையே கேட்டி டாயே.

7. பொய்கள் சொல்லமாட்டான். நல்ல அறிவுடையவன். புண்ணிய தீர்த்தங்களில் நீராட விருப்பம் உண்டு. செல்வமில்லாமல் சிறுமையடைந்தவர்களுக்கு உதவிசெய்வான். இவன் உடம்பில் மச்சம் இருக்கும். சான்றோர்களின் நட்பைக் கொள்ளுவான். பிறர் வருத்தமடையும் சொற்களைச் சொல்லான். பார்வதியே! கேட்பாயாக.

8. காரிய சம்ர்த்த னுகும் கணக்கதில் யூக வானும்
சாரிவன் செங்கை தன்னில் சார்ந்திடும் சந்திர ரேகை
பாரினில் கீர்த்தி ஏற்பன் பாவைமேல் ஆசை யுள்ளான்
தேரிய வழியில் நிற்பன் தேவியே யோக வானே.

8. காரியங்கள் செய்வதில் சாமர்த்திய முடையவன். கணக்கில் சூட்சும முள்ளவன். இவனுடைய சிறந்த கையில் சந்திரரேகை யுண்டு. உலகில் மிக்க புகழை யடைவான். மனைவிமீது அன்புடையவன். தெளிவான பாதையில் செல்லுவான். தேவியே! இவன் அதிர்ஷ்ட முள்ளவன்.

9. தேவதா பக்தி யுள்ளான் சனங்களைக் காக்க வல்லான்
ஆவலாய்ப் பசித்தோர்க் கன்னம் அன்புட னீய வல்லான்
நாவலர் முதலோர் செய்த நற்றமிழ் நுணுக்கம் தேர்வான்
தேவியே அன்ப னுகும் தீங்கிலா வாழ்வான் சொல்லே.

9. தெய்வபக்தியுள்ளவன். மக்களுக்குத் துன்பம் நேர்ந்தபோது அவர்களைக் காப்பதில் சிறந்தவன். உணவு கிடைக்குமோ என்று ஆவலுடன் பசித்து வந்தவர்களுக்கு அன்புடன் உணவு அளிப்பான். சிறந்த நாவலர்களும், பாவலர்களும் இயற்றிய தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ள நுட்பங்களை ஆராய்ந்து உணர்வான். பார்வதி தேவியே! யாவரிடமும் அன்புடையவன். துன்பமில்லாமல் வாழ்வான்.

10. அன்னிய மக்கள் நேயம் அலங்கார முடைய னுகும்
கண்ணிய வார்த்தை கூர்வன் கேவல மணுகாச் சித்தன்
நன்னய வார்த்தை கூர்வன் [1]நக்கன்மேல் பக்தி யுண்டு
இன்னிலத் தேவர் மெச்ச எழிலுடன் வாழ்வா னென்றோம்.

10. அயல் மக்களிடம் நட்புக் கொள்ளுவான். தன்னைச் சிறப்பாக ஆடை முதலியவற்றால் அலங்கரித்துக் கொள்ளுவான். மதிப்புடைய சொற்களைச் சொல்லுவான். அற்பமான குணங்கள் படியாத மனமுடையவன். நல்ல தன்மையையுடைய சொற்களைப் பேசுவான். இவனுக்குச் சிவபெருமான் மீது பக்தியுண்டு. இவ்வுலகத்திலுள்ள அந்தணர் முதலானவர் போற்றும்படி சிறப்பாக வாழ்க்கை நடத்துவான், என்று கூறுவோம்.

---

1. சிவபெருமான்.

11. அற்பரை உறவு கொள்ளான் அணுகிடான் அவர்பால்
[செல்லான்
சொற்படி நடக்க வல்லான் சோம்பிடான் காரி யத்தில்
உற்பமாய்த் தந்தை தாய்க்கு உகந்திடும் பட்ச முள்ளான்
விற்புரு வத்தி னுளே விளம்புவோம் மேலும் கேளே.

11. அற்பர்கள் சிநேகத்தைக் கொள்ளமாட்டான். அவரிருக்கும் மிடம் செல்லமாட்டான். சொல்லுகின்ற வார்த்தைகளின்படியே நடப்பதில் சிறந்தவன். காரியங்கள் செய்யச் சோம்பலடையான். பெற்ற தாய், தந்தையர்களிடம் மிக்க விருப்பமுள்ளவன். வில்போன்ற புருவ முடைய பார்வதி தேவியே! மேலுங் கேட்பாயாக.

12. வித்தையும் புத்தி யுண்டு விளங்கிடும் பாடை கற்பன்
சத்தியே ததிநெய் பாலில் சார்ந்திடும் உறப்பி லிச்சை
பத்தியே எதிரி தன்னைப் பாவையே செயிக்க வல்லன்
சித்திடை மாத ராலே சிறந்திடும் வியாதி கொஞ்சம்.

12. கல்வியும் நல்லறிவு முண்டு. பிரபலமாக விளங்கும் பழமொழி களைக் கற்பான். தயிர், பால், நெய், உறைப்புப் பொருள்கள் ஆகிய இவற் றில் விருப்பம் அதிகமுள்ளவன். விரோதிகளைச் செயிப்பதில் வல்லவன். இவனுக்குச் சிறிய இடையுடைய பெண்களால் சிறிது வியாதி ஏற்படும்.

13. முன்னமாங் கோப முண்டு முனிவுடன் பின்னுல் தாழ்வன்
துன்னிய கிருஷி யாலே துலங்குமே சீவ னெல்லாம்
சொன்ன தோர் ஞாதி கட்குத் துலங்கிய பட்ச முள்ளான்
அன்னையே அனைவோர் நேயன் அரிவையே கேட்டி டாயே.

13. முன் கோபமுண்டு. முதலில் கோபமேற்பட்டாலும் உடனே தாழ்ந்து பேசுவான். பயிர்த்தொழிலினுல் இவன் சீவனம் நடைபெறும். தன் பங்காளிகளிடம் விருப்பமாக இருப்பவன். தாயே! இவன் எல்லோ ருக்கும் அன்பன். பெண்ணே! கேட்பாயாக.

14. இந்நல முடையோ னுக்கு இயற்றுவோம் மணத்தின் காலம்
சொன்ன தோர் நாலே ழாண்டில் துலங்கிய வருண திக்கில்
துன்னியே உதித்தாள் தன்னைச் சாதகன் மணமே
[கொள்வன்
கன்னலின் சுவையி னுளே கருதிய மொழிகுன் றாது.

14. இவ்வாறான சிறந்த குணங்களையுடைய இவனுடைய திருமண காலத்தைச் சொல்லுவோம். சொல்லப்பட்ட இருபத்தெட்டாம் வயதில் மேற்குத் திசையில் பிறந்த ஒரு பெண்ணை இவன் மணம்புரிந்து கொள்வ

வான். கரும்புபோன்று இனிமை பொருந்திய சொற்களைப் பேசுபவளே! நாங்கள் ஆலோசித்துக் கூறிய சொற்கள் தவறு.

15. புத்திர விருத்தி ஆண்பால் புகன்றனம் மூவர் ஆகும்
சித்தியாம் பெண்பால் நான்கு சிறப்புடன் தீர்க்க மாகும்
எத்தியா யிதற்கு மேலாய் உயிருடன் செனித்த போது
சத்தியே நிலைக்கா தென்று சாற்றினேம் ரிஷிகள் அம்மா.

15. புத்திர பாக்கியத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஆண் குழந்தைகள் மூவர் என்று சொன்னேம். பெண்கள் நால்வர். இவர்கள் தீர்க்காயுளுடையவரா யிருப்பர். இவர்களுக்குப் பிறகு பிறந்த குழந்தைகள் நிலையா வென்று முனிவர்களாகிய நாங்கள் கூறினேம், தாயே!

16. அத்திரி முதல்வ ராக அருமுனி இதனைக் கூற
வெற்றியாம் விசுவா மித்திரர் விளம்புவார் அதிலோர்
[சங்கை
நத்தியே பஞ்ச மாதி நவில்சுகம் அரிசுங்[1] கோடு
சத்தியே இருக்கக் கேது சதிருள பஞ்ச மத்தில்

16. அத்திரி என்னும் பெயர்பூண்ட குணத்திற் சிறந்த முனிவர் இங்ஙனம் சொல்ல, விசுவாமித்திரர் ஒரு சந்தேகத்தைக் கூறுவார். ஐந்தாம் இடத்தவனுகிய புத்ன் சிம்ம ராசியில் சுக்கிரனுடு கூடியிருப்பதாலும், கேது ஐந்தாம் இடமாகிய கன்னியில் இருப்பதாலும்;

17. என்னமாய்ப் புத்திர தீர்க்கம் இயம்பினீர் ஐயா தீர்க்கம்
அன்னதை விபர மாக அருளுவீ ரருள்வீ ரென்றார்
சொன்னது மெய்தான் மெய்தான் சுகமுள பாலனுக்கு
இன்னமா முன்னுள் ஊழி விளம்புவோம் அம்மா கேளும்.

17. எப்படி இந்த ஜாதகனுக்குப் பிறக்கும் மக்கள் தீர்க்கமுடையவர் என்று கூறினீர்கள்? அதனை விவரமாகச் சொல்லுங்கள், என்று கூறினர். நாம் கூறியது நிச்சயமாய் உண்மையே யாகும். நன்மையுடைய இந்த ஜாதகனுக்கு முற்பிறப்புச செய்தியைக் கூறுகின்றேன், தாயே! கேளுங்கள்.

18. இன்னவன் முன்னுள் சென்மம் இயற்றுவோம் இனிமே
[லாக
நன்னய பாண்டி நாட்டில் நலமுள சிற்றூர் ஒன்றில்
தன்னதில் வைசிய சேயாய்த் தான்மிகப் பொருளு மேற்று
வின்னமில் மனைவி யோடு விளங்கியே வாழும் நாளில்;

---

1. சுங்கு : சுங்கன் : சுக்கிரன்.

18. இந்த ஜாதகனின் முன்சென்மத்தைப் பற்றிச் சொல்லுவோம், இனிமேல். பாண்டிய நாட்டில், கல்ல சூழ்நிலையுடன் கூடிய ஒரு சிறிய ஊரில், வைசியப் புதல்வனுகப் பிறந்து, மிகுந்த செல்வத்தையடைந்து, சுற்ற மற்ற மனைவியுடன் வாழ்ந்திருக்கும் காலத்தில்;

19. நன்னிடைக் குலத்தில் தானே தழைத்திடும் கன்னி
[யொன்று
வின்னமாய்ப் போகம் துய்க்க வீரியன் மனத்தி லெண்ணி
அன்னவள் தனக்கு மேதான் அன்புடன் இதங்கள் கூறி
என்னையே சேர்வா யானுல் இயல்பல வுனக்கே யீவேன்;

19. கல்ல இடையர் குலத்தில் சிறந்து விளங்கிய பெண்ணொருத்தி புடன் சுகம் அனுபவிக்க இவன் மனத்தில் நினைத்து, அவளிடம் சென்று, அன்புடன் பல இதமான வார்த்தைகளைச் சொல்லி, நீ என்னை யடைவாயே யானுல் என்னுல் கொடுக்க முடிந்த பொருள்களை யெல்லாம் உனக்குத் தருவேன்;

20. என்றுமே கற்பில் மிக்காள் எழிலுள மங்கை தன்னை
நன்றுடன் கேட்க வேதான் நங்கையுங் கோபம் கொண்டு
கொண்டிடும் புருஷ னுக்குக் கோதையும் அறைய லானுள்
சென்றவன் கொழுநன் தானும் சிந்தையும் மிகவே நொந்து ;

20. என்று கற்பிற்சிறந்து விளங்கிய அந்தப் பெண்ணைக் கேட்க, அவள் கோபங்கொண்டு, தன் கணவனிடம் இவனைப் பற்றிக் கூறினுள். அதனைக்கேட்ட அவள் கணவன் மனம் மிக வருந்தி;

21. ஓவ்வியு இவனை நோக்கி உரைத்திட்டான் சாபம் தானும்
திவ்விய பாலா நீயும் செப்பும்பின் சென்மந் தோறும்
கவ்விய புத்திர தோஷம் கருதிய மனைவி மாய்வள்
துவ்விய அன்னென் தானும் சொல்லியே மறைத லானுன்.

21. இவனைப் பார்த்து பின்வருஞ் சாபமிட்டான். "சிறந்த குண முடையவனே ! நீ என் மனைவியை நோக்கித் தகாத சொற்களைக் கூறிய தனுல், வரும் பிறவிகளில் உனக்குப் புத்திர தோஷம் ஏற்படும். உன்மனைவி யும் இறப்பாள்". இவ்வாறு சொல்லிவிட்டு அவன் சென்றுன்.

22. அந்தநல் தோஷம் தானும் அருள்சுதன் தன்னைச் சூழ்ந்து
எந்தையே யன்னுள் போக்கி இலக்கிய கஞ்சன் தன்னுல்
விந்தையாய் வரையப் பட்டு வந்தவ னிவனே யம்மா
கொந்தலர்க் குழலாய் யாங்கள் கூறிய மொழிகுன் றுது.

22. அந்தத் தோஷம் இந்த ஜாதகனைச் சூழ்ந்தது. சிலகாலங் கழித்து மரணமடைந்தான். பின்பு பிரம்மாவினால் படைக்கப்பட்டுப் பிறந்தவன் இவன்தான், தாயே! மணம் பொருந்திய மலர்கள் நிறைந்த கூந்தலையுடைய பார்வதியே! நாங்கள் சொன்ன சொற்கள் தவரு.

23. அந்தநல் தோஷந் தீர அருளுவோம் கிரிகை ஒன்று
சிந்தையாம் மனைவி யோடு சிறந்திடு [1]மருணைக் கேகிச்
சிந்தையாந் தீர்த்தம் தோய்ந்து சிவபிரான் தன்னைப் போற்றி
விந்தையாம் சுவர்ணம் தன்னில் விளங்குபெண் மதலை
[செய்து;

23. அந்த வலிமையுள்ள தோஷம் நீங்குவதற்கு ஒரு பரிகாரத்தைச் சொல்லுவோம். மனமொத்த மனைவியுடன், சிறந்த தலமான திருவண்ணாமலைக்குச் சென்று, அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, சிவபெருமானை வணங்கி, தங்கத்தால் பெண் குழந்தையொரு ஒன்றைச் செய்து;

24. உன்னிய அடைக்காய் கெந்தம் உரமுள ஆடை யோடு
மன்னிய தனமும் கூட்டி மருவிய மறையோ னுக்கு
அன்னையே தானம் ஈந்து அணுகுமுன் னாழி சொல்லித்
துன்னிய மனம்க ளிக்கத் துலக்கமாய் ஆசீர் ஏற்று;

24. தாம்பூலம் சந்தனம் நல்ல ஆடைகள் இவற்றுடன் பணமும் சேர்த்து, அந்தணர்களுக்குத் தானம்செய்து, முன்சென்ம தோஷத்தை அவர்களிடம் சொல்லி, அவர்களால் ஆசீர்வாதங்கள் பெற்றுக்கொண்டு,

25. திரமுள்ள உள்ளூர் மீண்டு தரித்திடும் [2]சேயின் வாரம்
நிறுவிய விரதம் தன்னை நிகழ்கின்ற ஆண்டு மூன்று
சரமுடன் அனுஷ்டி செய்தால் சாற்றிய முன்னுள் ஊழி
இரவிமுன் பனியைப் போல இயற்றிய மொழிகுன் ருது.

25. திரும்ப இவனுடைய ஊருக்கு வந்து, மூன்று ஆண்டுகள் வாரந் தோறும் செவ்வாய்க்கிழமை யன்று விரதங்கள் அனுஷ்டித்தால், முற்பிறவி தோஷங்கள் சூரியன் முன்பு பனியைப் போலாம். நாங்கள் கூறிய சொற்கள் தவரு.

26. சத்தியே மனைவிக் கீனம் சார்ந்திடா புத்திர தோஷம்
உற்றிடும் யாவும் நன்மை உரமுள பால னுக்கு
வெற்றியாம் யோக மேன்மை வந்திடும் நயம தாக
அத்தனுர் பாக மேறும் அம்மையே மேலும் கேளே.

---

1. திருவண்ணாமலை.
2. செவ்வாய்க்கிழமை

26. தாயே! இவனுடைய மனைவியும் இறக்கமாட்டாள். புத்திர தோஷமும் ஏற்படாது. பல நலன்களும் இவனுக்கு வாய்க்கும். மேலும் நன்மைகள் உண்டாகும். சிவபெருமான் உடலில் ஒரு பாகமாக விளங்கும் பார்வதி தேவியே! மேலுங் கேட்பாயாக.

27. இவ்விதம் செய்யா னுனல் இலகிடும் புத்திர தோஷம்
ஒவ்விய மனைவி மாய்வள் உறைந்திடும் தீங்கு மேலாய்ச்
சிவ்விய யாங்கள் சொன்ன சீர்மொழி குன்றி டாது
நவ்விய முகத்தி னுளே நங்கையே கேட்டி டாயே.

27. இங்ஙனம் நாங்கள் கூறிய பரிகாரத்தைச் செய்யாமல் தவிர்வா னுகில், புத்திர தோஷம் இவனை யடைந்து விளங்கும். மனைவியும் மாய்வாள். மேன்மேலும் தீங்குகள் நேரும். நாங்கள் கூறிய சிறப்புடைய சொற்கள் தவறு. மான்போன்ற மருண்ட கண்கள் பொருந்திய முகமுடைய பார்வதியே! கேட்பாயாக.

28. இந்நல முன்னுள் செய்கை இயற்றினேம் நவக்கோ
[ளாய்ந்து
பின்னையும் இவனின் யோகம் பேசுவோம் இனிமே லாக
மன்னிய சென்மம் தொட்டே மருவிய நாலா முண்டும்
உன்னிய யோக மேன்மை உறைந்திடும் தந்தைக் கேதான்.

28. இவ்விதமாக இவனுடைய முற்பிறவியில் நிகழ்ந்த செயல்களை நவக்கிரகங்களையும் ஆராய்ந்து கூறினேம். இனிமேல் இவனுடைய யோகங்களைப் பற்றிப் பேசுவோம். இவனுடைய பிறப்பு முதற்கொண்டு இருபத்து நான்கு வயது முடிய இவன் தந்தைக்கு மேன்மையான யோகங்கள் வாய்க்கும்.

29. [1]எந்தையே பூமி ஓங்கும் எழில்பல இனத்தி னுலும்
விந்தையாங் கிருஷி யாலும் விளங்டும் பொருள்கள் சேரும்
சொந்தமாய்ப் பணிதி பாத்ரம் துலங்கிடும் என்று செப்பு

.....

29. விளைநிலங்கள் மிருதியாம். இனத்தவாலும் சிறந்த முறையில் இயற்றும் பயிர்த் தொழிலினுலும் செல்வம் சேரும். இவனுக்குச் சொந்தமாகப் பல பாத்திரங்களும் ஆபரணங்களும் நிறைந்து விளங்கும் என்று சொல்லுவோம்.

---

1. இந்தச் செய்யுளின் நான்காம் வரி ஏட்டில் இல்லை.

ஜாதகம் 13

1. மதிகுசன் சனியு மீனம் மன்னவன் கும்ப மாகக்
[1]கதிர்மிது னத்தில் நிற்கக் [2]கணக்கனும் கேது நண்டில்
நதிபுகர் சிம்ம மாக [3]நீள்கயர் சுருவில் தங்க
விதியது [4]புல்லு திப்ப விளங்கிய வாண்பால் சென்மம்.

1. சந்திரன், செவ்வாய், சனி மீனராசியிலும், குரு கும்பத்திலும், சூரியன் மிதுனத்திலும், புதனும் கேதுவும் கடகத்திலும், சுக்கிரன் சிம்மத்திலும், இராகு மகரத்திலும், இலக்கினம் விருஷப மாகவும் உள்ள இது ஆண் மகன் ஜாதகம்.

சந்திரன் செவ்வாய் சனி		லக்கினம்	சூரியன்
குரு	இராசி சக்கரம்		புதன் கேது
ராகு			சுக்கிரன்

2. சாதகன் இல்லம் தன்னைச் சாற்றுவேன் கீழ்மேல் வீதி
நீதியாய் வடக்குப் பார்வை நிகர்கீழ்பால் [5]மூத்தோன் வாசம்
ஆதியாய்க் காளி யும்தான் அதின்கீழ்பால் வாச மாகும்
மாதவர் போற்று மீசன் வடமேல்பால் கோட்டம் தானே.

2. ஜாதகன் பிறந்த வீட்டைப் பற்றிச் சொல்லுவோம். கிழக்கு மேற்கான வீதியில் வடக்குப் பார்த்த வாசலுள்ளது. கீழ்ப்புறமாக விநாயகர் கோயில். அதற்குக் கிழக்கே காளிதேவி எழுந்தருளியிருக்கும் கோயில். பெருமை பொருந்திய முனிவர்கள் துதிக்கின்ற சிவபெருமான் கோயில் வட மேற்கில் உள்ளது.

---

1. சூரியன்.
2. புதன்.
3. இராகு.
4. ரிஷபம்.
5. விநாயகர்.

3. அதின்மேல்பால் தடாகம் சோலை அணுகிடும் மேற்கில்
[மாயோன்
பதியது கெட்டி யாகும் பற்றிய சிற்றூர் தன்னில்
விதியினை லுதித்த பாலன் விளம்புவோம் யோகம் தானும்.
மதிநிகர் மாதுர் தந்தை மங்கையர் யோகம் சொல்வேன்.

3. சிவபெருமான் கோயிலுக்கு மேற்கில் குளம், சோலை முதலியன உள்ளன. அவற்றிற்கு மேற்கே திருமால் கோயில் கொண்டுள்ளார். இவனுடைய வீடு அந்தச் சிறிய ஊரில் பலமுடையதாகும். இந்த ஜாதகன் யோகங்கள், தாய், தந்தையர், மனைவி, மக்கள் யோகங்கள் முதலான எல்லாவற்றையும் சொல்லுகின்றேன்.

4. தாதைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடும் கடைமா தீன்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
கோதிலாக் குணத்தைச் சொல்வோம் குரலுமே சன்ன
[மில்லான்
தீதில்லான் மிகுசி க்ப்பான் சிவபத்தி உடைய னுமே.

4. பாட்டனருக்கு மனைவியர் இருவர். அவர்களில் இளையவளுக்குப் பிறந்தவன் இந்த ஜாதகனின் தந்தை. அவன் குணத்தைக் கூறுவோம். மிருதுவான குரலில்லாதவன். கெடுதல் இல்லாதவன். மிகுந்த சிவப்பு நிறமுடையவன். சிவபெருமானிடம் நிரம்பவும் பக்தி பூண்டவன்.

5. ஆள்கார ருடைய னுவன் அதிகார னில்லான் நல்லன்
நீள்புவி அதிக முள்ளான் நித்தியம் சிவத்தைப் பேணும்
வேல்விழி மாத ராசை விரும்பாத மனத்த னுகும்
கால்கரம் வலிவு முள்ளான் கங்கையின் குலவா னுமே.

5. வேலையாட்களை யுடையவன். மிக்க கோபமில்லாதவன். நற்குண முடையவன். மிகுதியான விளைநிலங்களைக் கொண்டவன். தினந்தோறும் சிவபெருமானுக்குப் பூசைகள் செய்வான். வேல் போன்ற கண்களைக் கொண்ட பெண்களைக் கண்டு விரும்பாத மனத்தையுடையவன். வலிவுள்ள கை கால்களைப் பெற்றவன். வேளாள வமிசத்தில் பிறந்தவன்.

6. வந்தவர் தம்மைக் காப்பன் வாக்குகள் குளறு முள்ளான்
சிந்தையில் கபடு மில்லான் சீலனும் யூகை கொஞ்சம்
தந்தங்கள் பெரிதா யுள்ளான் சம்பத்து உடைய னுவன்
சந்ததம் சிருஷி வேலை தாட்சிணிய முடைய னுமே.

6. தன்னை யடைந்தவர்களை யாதரிப்பான். குழறிப் பேசும் இயல்புடையவன். மனத்தில் வஞ்சனை யில்லாதவன். நல்லொழுக்கமுள்ளவன்.

ஊகித்து உணரும் சக்தி சிறிது உண்டு. பெரிய பற்கள் கொண்டவன். செல்வமுடையவன். எப்பொழுதும் பயிர்த்தொழில் செய்பவன். பிறரிடம் இரக்கம் கொண்டவன்.

7. இப்படி யிருக்கும் தந்தை இவனுக்கு உதித்த பாலன்
செப்புவோம் பலன்கள் யாவும் தீரமு மில்லா நெஞ்சன்
தப்பித மொருவர்க் கெண்ணுன் சபைதன்னில் பேச
[மாட்டான்
மைப்படி கண்ணு ளொன்று வழுத்திலேம் இவனுக்
[கம்மா.

7. இப்படியுள்ள தந்தைக்குப் பிறந்த இந்த ஜாதகனுக்குப் பலன் களைச் சொல்லுவோம். உறுதியில்லாத மனமுடையவன். எவருக்கும் கெடுதல் நினையாதவன். சபையில் பேசத் தயக்கமுள்ளவன். இவனுக்கு மனைவி யொருத்தியே யென்று கூறினேம், தாயே!

8. ரோமங்கள் நீட்சி யுள்ளான் நுவலுப தேச முள்ளான்
காமியன் பித்த தேகி கண்பெரி தாக நிற்கும்
மாமனு மில்லா தாகும் வந்தவர் தம்மைக் காப்பான்
பூமிக ளதிக முள்ளான் புண்ணிய மனத்த னுமே.

8. உடலில் உரோமங்கள் நீண்டுள்ளவன். பெரியோர்களின் உப தேசங்களைக் கடைப்பிடிப்பான். காமமுள்ளவன். பித்த தேகம் கொண்ட வன். பெரிய கண்களையுடையவன். மாமனில்லாதவன். தன்னையடைந்த வர்களைப் பாதுகாப்பான். வீளைநிலங்களை மிகுதியாகவுடையவன். நல்ல சிந்தை யுள்ளவன்.

9. தோப்புகள் துரவு முள்ளான் துர்ச்சனர் நேசம்
[கொள்ளான்
தீப்பட வுரைக்க மாட்டான் திங்குகள் எண்ணுச் சித்தன்
காப்பிடும் செங்கை தன்னில் கனத்ததோர் ரேகை
[யுள்ளான்
சாப்பாடு சுகமு முள்ளான் சந்ததி யதிக மில்லான்.

9. தோப்புக்கள், கிணறுகள் உடையவன். துஷ்டர்கள் உறவைக் கொள்ளமாட்டான். கொடிய சொற்களைச் சொல்லாதவன். கெடுதல்கள் எண்ணுத மனமுடையவன். தனது அழகிய கையில் மேன்மையான அதிர்ஷ்டத்தைக் குறிக்கின்ற ரேகையைக் கொண்டவன். போஜன சௌக்கிய முள்ளவன். புத்திர பாக்கியம் மிகுதியாக இல்லாதவன்.

10. அண்டின பேரைக் காப்பன் ஆள்கார ருடைய னுவன்
குண்டையும் கோவி ருத்திக் குளறுவார்த் தைகளு
[முள்ளான்
தண்டமிழ்க் கல்வி கொஞ்சம் தானிய வீருத்தி யுள்ளான்.
குண்டுணி கலகம் செய்யான் கூறுவோம் மேலும் கேளே.

10. கதியற்றுத் தன்னை யடைந்தவர்களைக் காப்பான். வேலை யாட்களை யுடையவன். எருதுகள், பசுக்கள் மிகுதியாக யுடையவன். குளறிப் பேசும் தன்மையுடையவன். இனிய தமிழ்க்கல்வி சிறிது கற்றவன். தானியச்செல்வ வளர்ச்சி பெற்றவன். கோள், கலகம் செய்யாதவன். மேலுஞ் சொல்லுகின்றேம் ; கேட்பாயாக.

11. அவசர மனத்த னுகும் அரன்பத்தி யுடைய னுவன்
நவமதில் பொய்கள் சொல்லான் நாட்டுவோம் இருசி கப்பன்
இவனுமே பொறுமை யுள்ளான் இடருக ளநேக
[முள்ளான்
தவமுள்ளான் தீர்த்தம் தோய்வன் சத்தியே மேலும்
[கேளே.

11. அவசர புத்தியுடையவன். சிவபக்தியுள்ளவனுக இருப்பான். பொய் கூறான். கருமை கலந்த சிவப்புடையவன். சிறிது பொறுமையும் இவனுக்குண்டு. வாழ்க்கையில் பல துன்பங்களை யனுபவிப்பவன். புண்ணியமு முடையவன். புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவான். பார்வதியே ! மேலுங் கேட்பாயாக.

12. இன்னவன் முன்சென் மத்தை இயம்புவோம் ஆழி
[தென்பால்
வன்னிய மரபில் தோன்றி மைந்தர்கள் மனைவி யோடு
தின்னிலே வாழும் நாளில் சாற்றுவே னூழி தானும்
அன்னையே விதவை தன்னை அவனுமே போகம் துய்த்தான்.

12. இவனுடைய முற்பிறப்பைச் சொல்லுவோம். ஆழி என்ற ஊருக்குத் தெற்கில் வன்னியர் குலத்தில் பிறந்து, மனைவி மக்களோடு வாழ்ந்திருந்த காலத்தில், எற்பட்ட ஒரு தோஷத்தைச் சொல்லுவோம். தாயே ! இவன் ஒரு விதவைப்பெண்ணுடன் சுகமனுபவித்தான்.

13. போகத்தால் கருவு நேர்ந்து பிண்டத்தை யழிக்க வேண்டி
வாகையாய் அவித்த மீய மங்கையு மரண மானுள்
தோகையின் பாவம் தானும் தொடர்ந்தது இவ்னுக்
[கேதான்
யோகமுஞ் குறைவும் நேர்ந்து உண்டியும் குறைச்ச லாச்சு,

13. அதனல் அவளுக்குக் கரு ஏற்பட்டது. அந்தக் கர்ப்பத்தை யழிப்பதற்காக இவன் வகையான பல மருந்துகளே அவளுக்குக் கொடுத் தான். அந்தப் பெண் இறந்து விட்டாள். அவள் இறந்த தோஷம் இவனேத் தொடர்ந்தது. இவனுடைய கலங்களும் குறைந்து ; உணவிலும் குறைவு ஏற்பட்டது.

14. இதுவலால் இன்னும் சொல்வேன் இவனுடை முன்னுள்
[ஊழி
அதிதிபோல் பெரியோர் தாமும் அவனிட மணுகி யன்னம்
தருகென்று கேட்டா ரிந்தச் சாதகன் தாரே னென்று
பதிதன்னில் கூறி யேகிப் பரமர்க்கு அன்ன மீந்து ;

14. இதுவன்றி, இவனுடைய முற்பிறப்பில் உண்டான தோஷம் இன்னுமொன்று சொல்லுவேன். "அதிதிகளாக வந்துள்ளோம். உணவு அளிப்பாயாக" என்று சொல்லிக் கொண்டு பெரியோர் சிலர் இவனே யடைந்து கேட்டார்கள். இவனும் உணவளிப்பதாகக்கூறி, வீட்டுக்குள் அழைத்துச் சென்று அவர்களுக்கு உணவு தந்து,

15. அவருடைப் பொருளே யெல்லாம் அபகரித் தானும் மேலும்
சிவவேடம் கொண்ட ஞானி தீயைப்போல் மனங்கொ
[தித்துப்
பவமுள சாபம் சொன்னர் பயலேநீ சென்மந் தோறும்
வியங்கொண்டு மதலே யின்றி விளங்கிடுந் துணைவ ரின்றி ;

15. அவர்களிட மிருந்த பொருள்களெல்லாவற்றையும் அபகரித்துக் கொண்டான். அதனே யுணர்ந்து, சிவவேடம் கொண்ட அந்தப் பெரியோர் கள் நெருப்பைப்போல மனங் கொதித்து ஒரு சாபம் இட்டார்கள். நீ, இனி வரும் பிறவிகளில் மிக்க செலவுடையவனுய், புத்திர பாக்கியமும் உடன் பிறந்தார்களும் இல்லாமல் ;

16. சென்னமே யெடுப்பா யென்று செப்பிஞ ரதிதி தாமும்
மனமது வாடிப் பின்னும் மைந்தனும் தரித்ர ணுகிக்
கனமுடன் சேதுக் கேகிக் காவலன் தீர்த்தம் தோய்ந்து
தினந்தினம் ராம லிங்க தெரிசனம் செய்து மேலும் ;

16. பிறப்பாய், என்று கூறினர்கள். இதைக்கேட்ட இவன் மனம் மிக வருந்தினன். காலடைவில் தரித்திரமடைந்தான். பின்பு சேதுவுக் குச் சென்று, புண்ணியமான சமுத்திர நீரில் மூழ்கி, தினந்தோறும் இராமலிங்க சுவாமியை வணங்கி, மேலும் ;

17. ஆலய தீபந் தன்னை அணுகியே பார்த்து வந்து
ஞாலமேல் மரண மாகி [1]நாற்றலைக் கஞ்சன் தன்னுல்
கோலமாய் வரையப் பட்டுக் கூறுமிச் சென்மந் தன்னில்
சீலமாய்க் கங்கை வமிசம் சேர்ந்தவ னிவனே யம்மா.

17. கோயிலில் வைக்கப்பட்டிருக்கும் தீபத்தையும் தரிசனம் செய்து கொண்டு, வாழ்ந்திருந்து மரணமடைந்தான். திரும்பவும் நான்கு முகங்களை யுடைய பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் வேளாளர் வமிசத் தவனுகப் பிறந்தவன் இவன், தாயே!

18. சேதுவின் தீர்த்த பலன் இச்சென் மத்தில்
திறமாகக் கங்கையெனுங் குலத்தில் வந்து
போதவே பெருஞ்செல்வம் மிகவுண் டாகிப்
பெருங்குடும்பி யாகயிவன் வாழ்வா னம்மா
நீதியாய்த் துணைவர்களும் ஆண்பால் காணுன்
நீலம்போல் விழியார்க ளிருவ ருண்டு
காதலுடன் மன்றலெனும் காலம் சொல்லுவேன்
கழறுவேன் ஈரொன்பது ஆண்டில் தானே.

18. சேதுவில் நீராடிய புண்ணியத்தினுலே இப்பிறவியில், வேளாளர் குலத்தில் பிறந்து, புகழும் செல்வமும் மிகுந்து, பெரிய குடும்பமுள்ளவனுக இவன் வாழ்ந்திருப்பான். தாயே! இவனுக்குச் சகோதரர்கள் இல்லை. சகோதரிகள் இருவர் உண்டு. விருப்பமுடன் இவனுக்குத் திருமணக் காலத் தைச் சொல்லுவேன். பதினெட்டாம் வயதில், என்று சொல்லுவேன்.

19. மாதுதென் திசையி லேதான் வருகுவள் அவள்கு ணத்தை
ஓதுவேன் ஒடிசல் தேகி உண்மையாய்க் கற்பு முள்ளாள்
தீதிலா குணத்த ளாகும் தேவர்தம் பூசை யுள்ளாள்
மாதவர் வணக்க முள்ளாள் மறுமொழி கூரு ளென்றோம்.

19. இவனுக்கு மனைவி தெற்குப் பக்கமாகவுள்ள ஊரிலிருந்து வரு வாள். அவள் குணத்தைச் சொல்லுவேன். மெலிந்த சரீரமுடையவள். சிறந்த கற்புடையவள். குற்றமற்ற குணமுடையவள். தெய்வங்களுக்குப் பக்தியுடன் பூசைகள் செய்பவள். பெரிய தவமுடைய சான்றோர்களை வணங்குபவள். கணவன் சொற்களுக்கு மறுவார்த்தை சொல்லாதவள், என்று சொன்னேம்.

---

1. பிரமதேவன்.

20. புத்திமான் பெருமை யுள்ளாள் பூஷண மதிக முள்ளாள்
பத்திமான் கபடு மில்லாள் பந்துவுக் கினிய ளாவள்
நித்திய மன்ன மீவள் நிதானமாய் வார்த்தை கூர்வள்
வித்தகி தனக்கும் புத்ரர் வீருது என்று சொன்னேம்.

20. புத்திசாலி. பெருமை யுடையவள். ஆபரணங்கள் அதிகமுள்ள வள். தெய்வபக்தி யுள்ளவள். வஞ்சனை யில்லாதவள். உறவினர்களுக்கு நல்லவளாக இருப்பாள், தினந்தோறும் ஏழைகளுக்கு உணவளிப்பாள். நிதானமாகப் பேசுவாள். இவளுக்குப் புத்திர பாக்கியம் ஏற்படாது, என்று சொன்னேம்.

21. இங்ஙன மறுவர் கூற இயற்செய முனிவர் சொல்வார்
மங்கைக்குப் புத்திர ரில்லை என்றதோர் கார ணத்தைச்
சங்கையில் லாமல் சொல்வீர் என்றுமே முனிவர் கூறத்
துங்கமாய்ப் புயண்டர் தானும் சுருதியால் எடுத்துச்
சொல்வார்.

21. இவ்வாறுக ஆறு முனிவர்கள் சொல்ல, செயமுனிவர் என்பவர் கேட்கின்றார். இந்தப் பெண்ணுக்குப் புத்திரபாக்கியம் இல்லை என்பதற்கு உரிய காரணத்தைச் சந்தேகமில்லாமல் சொல்லுவீராக. உடனே சோதிட நூல் பிரமாணங்களைக் கொண்டு புசண்ட முனிவர் சொல்லுகிறார்.

22. அஷ்டமும் குருவீ டாகி அவருமே பத்தில் நிற்கச்
சஷ்டமன் திசைகா லத்தில் சாதகர்க் கரிட்ட மாகும்
இஷ்டமாம் சனிலா புத்தி லிருந்ததால் [1]அரிஷ்டம் நீங்கும்
துஷ்டநோய் வந்து தீரச் சுபமுடன் சாந்தி சொல்வேன்.

22. எட்டாமிடத்தவனாகிய குரு பத்தாமிடமாகிய கும்பத்தில் நிற்க, ஆறும்வீடாகிய தனுராசியிற்குரியவனான சுக்கிரனின் தசையில் இந்த ஜாதகனுக்கு வியாதி முதலிய துன்பங்கள் ஏற்படும். ஆயுள்காரகனாகிய சனி லாபஸ்தானமாகிய மீனத்தில் தங்கியிருப்பதால், துன்பங்கள் நீங்கும். கொடிய நோய் முதலாயின தீருவதற்கு நல்ல பரிகாரத்தைச் சொல்லுகின்றேன்.

23. தணிகையின் மலைக்கு மேதான் தன்மனை யாளும் கூடி
இணையிலா ஏழு மாதம் இன்பமாய்க் காத்தி கைக்குத்
தனிகனும் செல்வா னுகில் சகலதோ ஷங்கள் நீங்கும்
பிணியது தீரு மய்யா பேசுவோ மிந்நூல் தன்னில்.

---

1. துன்பங்கள்.

23. கார்த்திகை நட்சத்திரந்தோறும், ஏழு மாதம், தன் மனைவியுந் தானுமாக, திருத்தணிகை மலைக்குச் சென்று, முருகப் பெருமானைத் தரிசித்தால், எல்லாவிதத் தோஷங்களும் விலகும்; வியாதிகளும் போம், என்று இந்நூலை ஆராய்ந்து சொல்லுவோம்.

24. எந்தகா லத்தில் சாதகன் தனக்கு
இடருகள் நேருமென் றுரைத்தீர்
அந்தகா ளதனை அறிவிப்பீ ரென்று
அருந்தவ முனிவரும் கேட்கச்
சந்ததம் வெள்ளி திசையில்தன் புசிப்பில்
சாதகர்க் கனேகமாய்த் துன்பம்
வந்திடு மென்றேன் அறுமுக னருளால்
வயசுவி ருத்தியே யாகும்.

24. எந்தக் காலத்தில் ஜாதகனுக்குத் துன்பங்கள் உண்டாகும் என்று சொன்னீர்கள்? அந்தக் காலம் எப்பொழுது? என்று சொல்லுங்கள், என்று அரிய தவத்தைச் செய்த ஆறு முனிவர்கள் கேட்க, செயமுனிவர் கூறுகின்றார். நிச்சயமாக சுக்கிரமகா தசை சுக்கிர புக்தியில் ஜாதகனுக்குப் பல துன்பங்கள் நேரும், என்று கூறினேன். சுப்பிரமணியக் கடவுளின் கருணையினால் ஆயுள் தீர்க்கம் ஏற்படும்.

25. மலைக்கிவன் செல்லா னகில் வந்திடு மனேக துன்பம்
நிலைக்காது தேகந் தானும் நேராது மக்க ளய்யா
மலைக்குமே செல்வா னகில் வரும்நோய்க ளனேகந் தீரும்
கலைகளை ஆய்ந்து நன்றுரைக் கழறின மொழிகுன் றுது.

25. திருத்தணிகை மலைக்கு நாம் கூறியபடி சென்று வராமல் இருப்பானகில், பல துன்பங்கள் இவனுக்கு ஏற்படும். இவனுக்கு ஆயுள் விருத்தியும் ஏற்படாது. புத்திர பாக்கியமும் உண்டாகாது. திருத்தணிகை மலைக்குச் சென்று, முருகப்பெருமானைத் தரிசித்தால், வருகின்ற நோய்கள் பலவுந் தீரும். சாஸ்திரங்களை நன்றாக ஆராய்ந்து கூறிய இவை தவறா.

26. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றினேம் ஆண்பால் [ரெண்டு
வந்ததோர் கன்னி ஒன்று வகையுடன் விருத்தி யாகும்
எந்தையே இதன்மேல் தோன்றில் இலகாது அரிட்ட மாகும்
கந்தனைப் பெற்ற தாயே! கழறின மொழிகுன் றுது.

26. இந்த ஜாதகனின் தந்தைக்கு உடன்பிறந்த சகோதரர் இருவர், சகோதரி ஒருத்தி என்று கூறினேம். இவர்கள் ஆயுள் விருத்தியுடன்

இருப்பர். இவர்களுக்குப் பின்பு குழந்தைகள் பிறந்தால் நிலைத்திராமல் நஷ்டமாம். முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியே! கூறிய சொற்கள் தவறு.

27. தந்தையின் மூத்தோன் செய்கை தானதை எடுத்துக் கூறில்
நிந்தையும் கொஞ்ச முள்ளான் நிதியுமே செலவு செய்வான்
வந்தவர்க் கன்ன மீவன் வள்ளல்மேல் பக்தி யுள்ளான்
சந்ததம் அதிருஷ்ட வானும் சக்தியே மேலும் கேளே.

27. தந்தைக்கு மூத்த சகோதரன் செய்தியை எடுத்துக் கூறுவோம். சிறிது பழியுமுடையவன். செல்வத்தைச் செலவு செய்வான். தன் வீட்டைத் தேடி வந்தவர்களுக்கு உணவு அளிப்பான். இறைவன்மீது பக்தியுள்ளவன். எப்பொழுதும் அதிர்ஷ்டமுடையவன். பார்வதியே! மேலுங் கேள்.

28. கீர்த்திவான் பெருமை யுள்ளான் கிஞ்சுக மலைச்ச லுள்ளான்
பார்த்திபர் தன்னுல் யோகம் பாலிப்பான் சிலகா லம்தான்
பூர்த்தியாய்ச் சத்துரு உண்டாம் புண்ணிய மனத்த னுகும்
நாற்றிசை புகழ வாழ்வன் நன்னிலம் அதிகம் சேர்ப்பன்.

28. புகழுடையவன். பெருமை பெற்றவன். கொஞ்சம் சுகமும் அலைச்சலு முள்ளவன். அரசர்களால் பெருமை ஏற்பட்டுச் சிலகாலம் அதனை அனுபவிப்பான். இவனுக்கு விரோதிகள் உண்டு. நல்ல மனமுடையவன். நான்கு திசையிலுள்ளோரும் புகழும்படி வாழ்ந்திருப்பான். நல்ல வீட்டு நிலங்களை மிகுதியாகச் சேர்ப்பான்.

29. இன்னவர் தனக்குப் புத்திரர் இயம்புவோம் ஆண்பால் [ஒன்று
கன்னியு மூவ ராகும் கழறினேம் அதின்மேல் தோன்றில்
பின்னங்க ளுண்டு கண்டாய் பேசுவோம் நான்கு தீர்க்கம்
அன்னையே அவன்பின் வந்தோன் அறைகின்றேம் [பலத்தைக் கேளே.

29. இவனுக்குப் புத்திர பாவத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஆண் ஒன்று. பெண்கள் மூவர் என்று சொன்னேம். இன்னும் தோன்றினால் கஷ்டமுண்டு. இந்த நால்வரும் தீர்க்கமுடையவர். தாயே! இவனுக்குப் பின்னால் தோன்றியவனுக்குப் பலன்களைச் சொல்லுகின்றேம், இனிமேல், கேளுங்கள்.

30. பலமில்லா தேக வானும் பாரினில் ஓர மெல்லாம்
நலமுளான் கிருஷி செய்வன் நன்மைந்த ரில்லா னுகும்
கலகமும் உரைக்கா நெஞ்சன் கனத்ததோர் கீர்த்தி யுள்ளான்
நிலையிலா தாரம் ரெண்டு நேருமே யிவனுக் கமமா.

30. வலிமையில்லாத உடலுடையவன். உலகத்திலுள்ள மூலை, முடுக்குகளிலெல்லாம் புகழ் பரவியவன். விவசாயம் செய்வான். புத்திர ரில்லாதவன். கலகம் செய்ய எண்ணுத மனத்தையுடையவன். மதிப்பான கீர்த்தி பெற்றவன். இவனுக்கு இரு மனைவியர் உண்டு, தாயே!

31. புத்திர ராண்பால் காணும் பெண்களும் விருத்தி யுள்ளான்
வித்தகன் தனக்குக் கோவும் விருத்தியாம் அடியா
[ளுள்ளான்
புத்திமான் இருநி றத்தான் புண்ணிய மனத்த னுகும்
[1]பித்தன்மேல் பத்தி யுள்ளான் பலமான குடும்ப மூள்ளான்.

31. ஆண் குழந்தைகள் இல்லை. பெண்கள் உண்டு. பசுக்கள் விருத்தியுண்டு. கேலியாட்களை யுடையவன். புத்திசாலி. கருமை நிறம் பெற்றவன். நல்ல மன முள்ளவன். சிவபெருமான்மீது பத்தி பூண்டவன். பலமுள்ள குடும்பத்தை யுடையவன்.

32. இன்னவன் சனனம் தொட்டு இருபது ஆண்டுக் குள்ளே
தன்னிலே பூமி சேரும் சத்துரு நாசம் ஆகும்
பின்னமில் லாமல் தானும் பலத்திடும் குடும்பம் தானும்
அன்னவன் தனக்கு ரோகம் அணுகியே நீங்கு மம்மா.

32. இந்த ஜாதகனின் பிறப்பு முதல் இருபது வருஷங்களுக்குள் வீடு நிலங்கள் சேரும். விரோதிகள் அழிவர். குறைவில்லாமல் குடும்பம் பெருகும். இவனுக்கு வியாதி ஏறபட்டு நீங்கும், தாயே!

33. சுபங்களு முடியும் பின்பு சொன்னதோ ராண்டின் மேலே
நயமுடன் மூன்றாண் டுக்குள் நாயகன் தனக்கு மேதான்
பயமெல்லாம் தேக பாதை பற்றிய கெண்டம் நேர்ந்து
மயில்வாக னத்தோ னுலே வருங்கெண்டம் நீங்கும் தானே.

33. அதற்குமேல் ஒரு வருஷத்திற்குள் குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். பின்பு மூன்று வருஷங்களுக்குள் இவனுக்கு உடலில் பல வியாதிகள் ஏற்பட்டு மயில் வாகனத்தையுடைய முருகக் கடவுளருளினால் அவையனைத்தும் விலகும்.

---

1. சிவபெருமான்.

34. அதற்குமேல் மரண மட்டும் அணுகாது தோஷம் தானும்
பதியது விருத்தி யாகும் பாலகன் தீர்க்க மாகும்
விதியது அறுபான் மூன்றில் விளங்குமைப் பசிமா தத்தில்
திதியது பருவந் தன்னில் சிவபாதம் அடைவான்
[சொன்னேம்.

34. அதற்குப் பிறகு மரணகாலம் வரையில் இவனுக்கு ஒருவிதத் தோஷமும் ஏற்படாது. இருப்பிடம் விருத்தியாகும். இவன் தீர்க்கமாக இருப்பான். அறுபத்துமூன்றும் வயதில், ஐப்பசி மாதத்தில், பௌர்ணமி திதியில், சிவபதம் அடைவான், என்று கூறினேம்.

35. மறுசென்மம்காஞ்சி தென்பால் வளமுள நதியின் பக்கல்
திறமையா யிக்கு லத்தில் செனித்துமே கீர்த்தி வானுய்
உறன்முறை மெச்ச வாழ்ந்து உயர்பூமி யதிகம் பெற்றுப்
பெருமையாய் வாழ்வா னென்று பேசினேம் ரிஷிக ளம்மா.

35. மறு பிறப்பில், காஞ்சீபுரத்துக்குத் தெற்குப் பக்கமாக, ஆற்றங் கரையில் உள்ள ஒரு சிற்றூரில், இக்குலத்தில் பிறந்து, புகழுடன் உறவினர்கள் பாராட்டும்படி வாழ்க்கை நடத்திக் கொண்டு, சிறந்த வீடு நிலங்கள் மிகுதி யாக அடைந்து, பெருமையோடு இருப்பான், என்று முனிவர்களாகிய நாங்கள் கூறினேம், தாயே!

36. தந்தையின் மரண காலம் சாற்றுவேன் முப்பா னேழில்
பிந்தியும் நாற்பா னென்றில் பேசுவோம் அன்னை காலம்
பந்தமாய்ப் புத்திரர் தாமும் பகருவோம் ஆண்பா லொன்று
எந்தையே பெண்பால் ரெண்டு இலகிடும் தீர்க்க மாகும்.

36. தந்தையின் மரண காலத்தைச் சொல்லுவேன். ஜாதகனது மூப்பத்தேழாம் வயதில் தந்தை இறப்பான். இவனுடைய நாற்பத்தோராம் வயதில் தாய் மரணமடைவாள் என்று சொல்லுவோம். இவனுக்கு ஆண் ஒன்றும் பெண்கள் இரண்டும் பிறந்து தீர்க்கமாய் விளங்கும்.

37. மற்றது மூன்று நஷ்டம் மங்கையே முதலில் தோஷம்
உற்றதோர் இரண்டு மூன்று உறுதியாம் நான்கு நஷ்டம்
மற்றதோர் ஐந்தும் தோஷம் பலத்திடும் ஆறும் தானும்
வெற்றிசேர் ஈசன் பக்கல் விளங்கிடு மாதே கேளாய்.

37. பின்பு மூன்று குழந்தைகள் பிறந்து நஷ்டமாம். பார்வதியே! இந்த ஜாதகனுக்கு முதலாவது குழந்தை பிறந்து இறக்கும். இரண்டாவதும் மூன்றுவதும் விருத்தியடையும். நான்காவது நிலையாது. ஐந்தாவது ரோக மடையும். ஆறுவது பலமுள்ளது. வெற்றியையுடைய சிவபெருமானின் உடலில் ஒரு பகுதியாக விளங்கும் பெண்ணே! கேட்பாயாக.

ஜாதகம் 14

1. மதிவிருச் சிகத்தி லாக மந்தனும் குருவும் சிம்மம்
புதன்சிங் மிதுன மாகப் புகர்குச னிரவி நண்டில்
அதிகயர் தனுவு மேற ஆண்மைபுல் லுதிப்பா னுகில்
விதியது ஆணும் சென்மம் விளங்கிடு விபரம் கேளே.

1. சந்திரன் விருச்சிக ராசியிலும், சனியும் குருவும் சிம்மத்திலும், புதன் கேது மிதுனத்திலும், சுக்கிரன் செவ்வாய் சூரியன் கடகத்திலும், இராகு தனுர்ராசியிலும் தங்கி, இலக்கினம் விருஷப மாகவும் இருந்து, பிறக்கும் பிறவி, ஆண் பிறப்பாக விளங்கும். பலன்களைக் கேட்பாயாக.

		லக்கினம்	புதன் கேது
	இராசி சக்கரம்		சுக்கிரன் செவ்வாய் சூரியன்
			சனி குரு
ராகு	சந்திரன்		

2. சனித்தவூர் சிற்றா ராகும் தேவியே கீழ்மேல் வீதி
குளித்திடும் வடக்கு வாசல் குணமுள மாயோன் மேற்கில்
கனிவுள மூத்தோன் கீழ்பால் காளியு மீனம் வாசம்
தனிமையாய் வடமேல் திக்கில் சங்கரன் கோட்ட முண்டு.

2. பிறந்த ஊர் சிறிய கிராமம். பார்வதியே! பிறந்தது கிழக்கு மேற்கு வீதியில் வடக்குப் பார்த்த வாசல் உள்ள வீடாகும். திருமால் கோயில் மேற்கிலுள்ளது. விநாயகப் பெருமான் கிழக்கில் கோயில் கொண்டுள்ளார். காளிதேவி வடகிழக்கில் தங்குவாள். வடமேற்குத் திசையில் தனியாகச் சிவபெருமான் கோயில் இருக்கின்றது.

3 அதின்மேற்கில் தடாகம் தோப்பு அணுகிடு மவ்வூர் தன்னில்
நதிகங்கை வமிசம் தன்னில் நாயகன் செனிப்பா னுகும்
பதியோகம் அன்னை யோகம் பாலகன் தந்தை யோகம்
விதியினுல் முன்பின் சென்மம் விளம்புவோ மிந்நூல்

தன்னில்.

3. அதற்கு மேற்கில் குளம், தோப்பு முதலியன உள்ளன. இப்படிப் பட்ட அந்த ஊரில் வேளாளர் குலத்தில் இந்த ஜாதகன் பிறப்பான். இவனுடைய யோகம், தாயின் யோகம், தந்தையின் யோகம், இவர் களுடைய, மூற்பிறப்பு மறு பிறப்புக்கள் ஆகிய எல்லாவற்றையும் இந்த நூலில் விளக்கமாகக் கூறுவோம்.

4. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் வெகுபேர்க் [கன்பன்
வந்தவர்க் கன்ன மீவன் வள்ளல்மேல் பத்தி யுள்ளான்
சிந்தையில் கிலேச மில்லான் செனங்களே யாத ரிப்பான்
தன்தனமுடைய னுவான் தாட்சிணியன் குள்ள னுவன்.

4. இவனுடைய தந்தையின் குணத்தை நாங்கள் சொல்லுவோம். தன் வீடு தேடி வந்தவர்களுக்கு உணவு அளிப்பான். இறைவன்மீது பக்தி யுடையவன். மனத்தில் துயரம் இல்லாதவன். பந்துக்களையும் மற்றவர் களையும் காப்பாற்றுவான். தானுகச் சம்பாதித்த சொத்துக்களை யுடைய வன். தாட்சிணிய முடையவன். குட்டையன்.

5. தானமும் தருமம் செய்வான் சற்சன நூறவு கொள்வன்
ஈனரை மனத்தி லெண்ணுன் எதிரியை நாசம் செய்வன்
மானம துடைய னுவன் வழக்குகள் பேச வல்லன்
கோவென அதிகா ரங்கள் கொள்ளுவன் மேலும் கேளே.

5. தான தருமங்கள் செய்வான். சான்றோர்கள் கூட்டுறவைப் பெறு வான். தீயவர்களைப் பற்றி மனத்தாலும் நினைக்கமாட்டான். விரோதிகளை யழிப்பான். தன் மதிப்பு உடையவன். ஊர் வழக்குகளை விசாரித்து நியாயங் கூற வல்லவன். அரசனைப்போல அதிகாரங்கள் உடையவன். மேலுங் கேட்பாயாக.

6. இன்னவன் செங்கை தன்னில் இலங்கிடும் சங்கு சக்ரம்
அன்னமே மச்ச ரேகை அணுகிடு மிவனுக் கம்மா
பன்னியே உரைக்க வல்லான் பந்துவு மெச்ச வாழ்வன்
மன்னரால் அதிகா ரங்கள் வந்திடு மிவனுக் கம்மா.

6. இவனுடைய அழகிய கையில் சங்கு சக்கர ரேகைகளும் மச்ச ரேகையும் உண்டு. பன்னிப் பன்னிப் பேச வல்லவன். உறவினர்கள் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். அரசர்களால் பல அதிகாரங்கள் இவனுக்குக் கிடைக்கும். தாயே!

7. கிராமாதி காரம் செய்வன் கீர்த்திவான் பொறுமை யுள்ளான்
பொருமையும் கொஞ்ச முள்ளான் புரவலர் மெச்ச வாழ்வன்
தராதர மறிய வல்லன் சற்சன ருறவு கொள்வன்
துராசையு மில்லான் நல்லன் சோம்பிடான் காரி யத்தில்.

7. கிராமத்தில் அதிகாரஞ் செலுத்துவான். கீர்த்தி யுடையவன். பொறுமை யுள்ளவன். சிறிது பொருமையு முள்ளவன். அரசர்கள் பாராட்டும்படி வாழ்ந்திருப்பான். ஒவ்வொருவருடைய தன்மையையும் உணர்ந்து கொள்வதில் வல்லவன். நல்லவர்கள் சேர்க்கையைப் பெறுவான். கெட்ட நோக்கங் கொண்ட விருப்ப மில்லாதவன். நல்லவன். காரியங்கள் செய்வதில் சோம்ப லில்லாதவன்.

8 தோப்புகள் துரவு குண்டம் சித்திர வீடு செய்வன்
அஞ்சலென் றடைந்தோர் தம்மை ஆதரிப் பானும் மேலும்
நெஞ்சுமே இரக்க முள்ளான் நிலையிது தவறான் ரோமம்
கொஞ்சமும் நீட்சி யுள்ளான் குரலது யிரண்டு மாகும்.

8. தோப்புக்கள், கிணறுகள், கோயில் இவற்றையும் அழகிய வீட்டையும் அமைப்பான். தன்னிடம் வந்தவர்களைப் பயப்படாதீர்கள் என்று சொல்லிக்காப்பான். இளகிய மனமுள்ளவன். தன் நிலையிலிருந்து தாழாதவன். தேகத்தில் நீண்ட உரோமங்களை யுடையவன். இரு குரல் படப் பேசுவான்.

9. இப்படி யிருக்கும் தந்தை யிவனுக்கே உதித்த பாலன்
செப்புவோம் குணத்தை யாங்கள் தீரமு மனத்த னாகும்
ஒப்பிலா மாநிறத்தான் உம்பர்கள் பூசை செய்வன்
தப்பித மொருவர்க் கெண்ணன் சந்ததி விருத்தி யுள்ளான்.

9. இப்படியாக விளங்குகின்ற தந்தைக்குப் பிறந்த இந்தப் பாலகனின் குணத்தை நாங்கள் சொல்லுவோம். தைரியம் பொருந்திய மனமுடையான். கரியநிற முடையவன். தெய்வங்களுக்குப் பூசைகள் முதலியன செய்வான். எவருக்கும் தீங்கு செய்ய நினையான். இவனுக்குச் சந்ததிகள் அபிவிருத்தியுண்டு.

10. நடையது சொகுசு முள்ளான் நாட்டினில் கீர்த்தி யுள்ளான்
அடைமொழி அதிகம் கூறுன் ஆட்கார ரனேக முள்ளான்
மடையரை நேசம் செய்யான் வண்டிவா கனமு முள்ளான்
படபட நடையு முள்ளான் பாவைமேல் பிரிய னுவன்.

10. சொகுசான நடையுடையவன். தேசத்தில் புகழ் பெற்றவன். அடுத்தடுத்து அதிகம் பேசமாட்டான். அடிமையாட்கள் அநேகம் பேருடை

யவன். மூடர்கள் நட்பைக் கொள்ளான். வண்டி முதலிய வாகன வசதி கள் பெற்றவன். விறுவிறுப்பான நடையுள்ளவன். மனைவிமீது விருப்ப முடையவன்.

11. கோதுமை சங்கு சக்ரம் குறைசுழி ரேகை யுண்டு
நீதியாய் விசேஷ பூமி நிருமிப்பான் பாக்கிய வானும்
மேதினில் கோவி ருத்தி விளங்கிடு மிவனுக் கம்மா
ஆதியாய் நிறைந்த செல்வம் அணுகிடு மேலும் கேளே.

11. இவனுடைய கையில் கோதுமை, சங்கு, சக்கர ரேகைக ளுள்ளன. சுழியொன்று முண்டு. நியாயமான வழியில் விசேஷமாக நிலங்களைச் சேர்ப்பான். சௌபாக்கியங்க ளுடையவன். இவனிடம் பசுக்கள் விருத்தி யுண்டு. பழமையாக நிறைந்துள்ள செல்வம் மேன்மேலும் இவனுக்குக் கிடைக்கும். தாயே! மேலுங் கேள்.

12. பால்தயி ரிஷ்ட முள்ளான் பந்துவும் புகழ வாழ்வன்
சீலமு முடையனுவன் சௌக்கிய மாதி ரிப்பன்
கோலமாய்ச் சமதே கத்தன் குறைவிலாச் செல்வ முள்ளான்
நீலம்போல் மேக ரோகம் நேர்ந்துமே தீரு மம்மா.

12. பால், தயிர் இவற்றில் விருப்பமுள்ளவன். உறவினர் பாராட்டும் படி வாழ்ந்திருப்பான். நல்லொழுக்க முடையவன். தன் உறவினர்களைக் காப்பான். நல்ல சரீரக்கட் டுடையவன். நிறைந்த செல்வ முடைய வன். விஷம்போல மேகவியாதி இவனுக்கு ஏற்பட்டு, பின்பு நீங்கும்.

13. வருவோர்க்கு அன்ன மீவன் வமிசமும் விருத்தி உள்ளான்
குறைவிலா குடும்ப முள்ளான் குத்திர வசனம் கூறுன்
பரம்பரை யோகம் உள்ளான் பிராமணர் பக்தி யுள்ளான்
பெருமையாய்க் குடும்ப முள்ளான் பேசுவோம் இவன்முன் [சென்மம்.

13. வீட்டைத் தேடி வருபவர்களுக்கு உணவளிப்பான். இவன் வமிசம் அபிவிருத்தியாம். நிறைந்த குடும்பமுள்ளவன். குயுக்தியான சொற்களைப் பேசான். தொன்று தொட்டு வருகின்ற அதிர்ஷ்ட முடைய வன். அந்தணர்களிடம் பக்தி கொண்டவன். மேன்மையான குடும்பத் தைப் பெற்றவன். இவன் முற்பிறப்பைப்பற்றிப் பேசுவோம்.

14. தோகைதன் மலைக்கு மேல்பால் சிற்றூரில் ரெட்டி யாகி
நாகரீ கங்க ளாக நற்றவ சிகளுக் கேதான்
பாகமாய் அன்னம் மீந்து பாலரு மனைவி யோடு
போகமும் அதிகம் பெற்றுப் புத்திரன் வாழும் நாளில் ;

14. தோகை மலைக்கு மேற்குப் பக்கமாகவுள்ள ஒரு சிறிய ஊரில், ரெட்டியார் வமிசத்தில் பிறந்து, ராகரீக வாழ்க்கை கடத்தி, நல்ல தவத்தைச் செய்த துறவிகட்குப் பக்குவமாக உணவு முதலியன அளித்து, மக்கள் மனைவி ஆகியவர்களுடன் சுகங்களும் மிகுதியாகப் பெற்று, இந்த ஜாதகன் வாழுகின்ற காலத்தில்,

15. மற்றொரு நாளி லேதான் மார்ச்சால மேலே வெங்கீர்
குற்றத்தால் தெளித்தான் பாலன் கூக்குர லிட்டு மேதான்
முத்துபோல் தேகம் பொங்கி மூர்ச்சையு மடைந்த தம்மா
பத்தினி யதையெ டுத்துப் பாருக்குள் போட்டு விட்டான்.

15. ஒரு நாள் தன் வீட்டில் இருந்த பூனை யொன்றின் மேல் கெட்ட எண்ணத்தினால் வெந்நீரைக் கொட்டினான். அது பொறுக்காமல், பூனை கத்தியது. அதன் தேகத்தில் முத்துக்கள் போன்ற கொப்புளங்கள் ஏற்பட அந்தப் பூனை இறந்து விட்டது. உத்தமமான பதிவிரதையே! இவன் அப் பூனையை யெடுத்துப் பூமிக்குள் புதைத்து விட்டான்.

16. கண்டவர் சிலபேர் வந்து காவலன் தன்னைக் கண்டு
துங்கமாய்ச் செய்த பாவம் தொலைந்திட தோகை தன்னில்
அண்டர்கோன் மருக னுக்கு அபிடேகம் அர்ச்சித் தேத்தி
முண்டக மிடையாள் தீபம் முன்னூறு செய்து வந்தால்;

16. இந்தச் செயலைப் பார்த்த சிலர் இவனிடம் வந்து, நீ செய்த பாவம் தொலைந்து தூய்மையடைய, திருத்தணிகை மலைக்குப்போய், தேவர்களுக்குத் தலைவனாகிய திருமாலின் மருகன் முருகப்பிரானுக்கு அபிடேகம், அருச்சனை முதலானவைகள் செய்து, வணங்கி, மனைவியுடன் இறைவன் சந்நிதியில் முந்நூறு விளக்குகள் ஏற்றி வந்தால்,

17. பாவங்கள் விலகிப் போகும் பரமன் தன் மகனு லேதான்
தீவினை யில்லை யென்று செப்பினர் சிலபேர் தாமும்
ஆவலாய் அந்தத் தோஷம் அணுகிடா சாந்தி செய்தான்
தீபங்கள் அனந்தம் வைத்துச் சேயனும் உள்ளூர் மீண்டு;

17. முருகப்பிரான் அருளினால் பாவங்கள் அனைத்தும் விலகிப்போம். தீவினையில்லை என்று கூறினர்கள். அவர்கள் சொல்லியபடி மிக்க விருப்பத்துடன், அந்தத் தோஷம் தன்னைப் பற்றாமல் இருப்பதற்காக, இறைவன் சந்நிதியில் அதிகமான விளக்குகள் வைத்துப் போற்றிப் பின்பு தன்னூருக்குத் திரும்பி,

18. அதிதிகட் கன்ன தானம் அநேகமா யிந்து பின்னும்
செகமதில் கீர்த்தி பெற்றுச் செல்வனும் மரண மாகித்
தகைமையாய் இச்சென் மத்தில் தானவன் சைவ சேயாய்
வகையுடன் பிறந்தா னென்று வழுத்தி னேம் ரிஷிக
[ளம்மா.

18. அதிதிகட்கு அன்னதானங்கள் மிகுதியாகச் செய்து, உலகில் மிக்க புகழடைந்து, மரணமடைந்தான். பின்பு இப்பிறப்பில் இந்த ஜாதகன் சைவ குலத்தவனுய்ப் பிறந்தான் என்று முனிவர்களாகிய நாங்கள் கூறி னேம்; தாயே!

19. இன்னவன் துணைவர் தம்மை இயம்புவோம் அல்ப மென்று
கன்னியும் மூவ ராகும் கழறிடும் ஆண்பால் ஒன்று
பின்னங்கள் ஆண்பா லும்தான் போய்விடும் சிலநாள்
[தன்னில்
கன்னிகள் தீர்க்க மாகும் காதலி! மேலும் கேளே.

19. இவனுடைய உடன் பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். சகோதர பலம் அற்பமாகும். பெண்கள் மூவர். ஆண் ஒன்று. சிறிது காலத்தில் ஆண் பால் சேதமாம். பெண்கள் தீர்க்கம். பார்வதியே! மேலுங்கேள்.

20. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோம் இருபான்
[மூன்றில்
நீதியா மேற்குத் திக்கில் நேர்ந்திடும் மாதர் வர்க்கம்
காதலி குணத்தைச் சொல்வேன் கபடிலாள் கருதி றத்தாள்
தோதக மொருவர்க் கெண்ணுள் சுந்தரி! கற்பு முள்ளாள்.

20. ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இருபத்து மூன்றும் வயதில் இவன் ஊருக்கு மேற்குத் திசையிலுள்ள ஒரு சிற்றூரி லிருந்து தாய் வழியைச் சேர்ந்த பெண்ணொருத்தி இவனுக்கு மனைவியாக வாய்ப்பாள். அவள் குணத்தைச் சொல்லுகின்றேன். வஞ்சகமில்லாதவள். கருமை நிறமுடையவள். எவருக்கும் கெடுதல் எண்ணுதவள். அழகியே! அவள் கற்புடையவள்.

21. கணவனுக் கினியளாவள் கடுஞ்சினம் இல்லா ளாகும்
குணமுளாள் அன்ன மீவள் குடும்பத்தை விருத்தி செய்வள்
கனமுடன் பித்த தேகி கனத்ததோர் தந்த முள்ளாள்
அனையவள் குடும்பம் தன்னை அறைகின்றேம் இரண்டாம்
[பாகம்.

21. கணவனுக்கு இனியவள். கொடிய சோபம் இல்லாதவள். நற் குணமுள்ளவள். தன் குடும்பத்தைக் கருத்துடன் அபிவிருத்தி செய்வாள். பித்த தேகமுடையவள். உறுதியான பற்களுள்ளவள். அவளுடைய குடும்பத்தைப் பற்றிப் பின் பாகத்தில் விவரமாகச் சொல்லுகின்றோம்.

22. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் காஞ்சி [நாட்டில்
சந்ததம் வைசிய சாதி தன்னிலே உதித்து மேலும்
பந்தமாய் வணிபம் செய்து பாலர்கள் மனைவி யோடு
மைந்தனும் சேதுக் கேகி வளமுள தீர்த்தம் தோய்ந்து ;

22. இந்த ஜாதகனின் தகப்பனருடைய முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுகின்றோம். காஞ்சீபுரத்தைச் சார்ந்த இடத்தில் வைசியகுலத்தில் பிறந்து, தகுதியாக வியாபாரங்கள் செய்து, மக்கள், மனைவி ஆகியவர் களுடன் சேதுவுக்குச் சென்று புண்ணிய தீர்த்தத்தில் நீராடி,

23. மறுபடியும் உள்ளூர் மீண்டு வணிபங்க ளனேகம் செய்து
சிறுமைஎன் றடைந்தோ ருக்குச் செல்வங்கள் உதவி செய்து
பெருந்தவர்க் கன்ன மீந்து பிஞ்சகன் தனைப்பூ சித்துக்
குறைவிலா வாழ்ந்து பின்பு கூற்றன்தன் விரோதி பாதம் ;

23. மீண்டும் தன்னூருக்குத் திரும்பி பலவிதமான வியாபாரங்கள் செய்து, துன்பமடைந்தோம் என்று வந்தவர்களுக்குப் பொருளுதவிகள் செய்து, பெரிய தவத்தைச் செய்த துறவிகட்கு உணவளித்துச் சிவபெரு மானைப் பூசித்துக் குறையொன்றுமில்லாமல் வாழ்க்கை நடத்திப் பிறகு, யமனுக்கு விரோதியாகிய சிவபெருமானின் இணையடிகளை,

24. சேர்ந்தபின் இச்சென் மத்தில் செல்வனும் கங்கை சேயாய்
ஊர்ந்தனன் மறுசென் மத்தில் உத்திரம் திக்கி லேதான்
சார்ந்தகா ளத்தி தன்னில் சத்திய குலத்தி லேதான்
வேந்தனுய் உதித்து மேலும் விளைபுலம் அதிகம் உண்டாய்;

24. அடைந்து மறுபடி இப்பிறப்பில் இவன் வேளாளர் குலத்த வனுகப் பிறந்தான். மறுபிறப்பில் வடக்குத திசையில் உள்ள திருக்காளத்தி யில் அரச குலத்தில் அரசனைப்போன்ற யோகவானுய்ப் பிறந்து, விளை நிலங்கள் மிகுதியாக ஏற்பட்டு,

25. நகரநா டுகளும் பெற்று நராதிபர் மெச்ச வாழ்த்து
செகபதி யாக யானை சேனைக ளுடனே சூழ்ந்து
சிகரகோ புரம மைத்துச் சேர்ந்தபின் ஈசன் பாதம்
உவகையால் காசி தன்னில் உதிப்பனே பிருமம் சேயாய்.

25. தேசத்தலைமை, நகரத்தலைமை முதலியவற்றை யடைந்து அரசர்கள் பாராட்டும்படி வாழ்ந்து, உலகத்தலைவனுகி யானை முதலிய படைகள் தன்னைச் சூழ்ந்து வரும் பெருமை பெற்று, மாட மாளிகை கூடகோபுரங்கள் அமைத்துப் பின்பு இறைவன் திருவடி நிழலை அடைந்து மீண்டும் காசியில் அந்தணர் குலத்தவனுய்ப் பிறப்பான்.

26. தந்தையின் துணைவர் தம்மைச் சார்ற்றுவேன் ஆண்பால்
[ரெண்டு
கன்னியு மவ்வா ருகும் கனத்திடும் பின்பு நஷ்டம்
எந்தையே சாத கர்க்கு இயம்புவேன் புத்திர பாகம்
சந்ததம் எழுவ ராகும் சக்தியே கேட்டி டாயே.

26. இவன் தகப்பனரின் உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். ஆண்கள் இருவர். பெண்களும் இருவர். பின்பு பிறந்து சேதமடைவதும் மிகுதியாம். இந்த ஜாதகனுக்குப் புத்திர பாவத்தைச் சொல்லுவோம். நிச்சயமாய் எழுவர். தாயே! கேட்பாயாக.

27. இப்படிப் புயண்டர் சொல்ல இயல்பரா சரருஞ் சொல்வார்
எப்படித் புத்திர பாகம் இயம்பினீர் ஐந்தாம் வீட்டோன்
செப்பமாய்ப் புந்தி வீட்டில் சிகிகூடி இருப்ப தாலே
குப்புறப் புத்திர ரில்லை கூறுவேன் மேலும் கேளே.

27, இவ்வாறு புசண்டமுனிவர் கூறத் தகுதி வாய்ந்த பராசரர் சொல்லுவார். புத்திரர் எழுவரென்று என்ன காரணத்தினுல் கூறினீர். ஐந்தாம் வீட்டுக்குரிய புத்திர ஸ்தானத்தில் புதன், மிதுனத்தில் கேதுவுடன் கூடியிருப்பதால் இந்த ஜாதகனுக்குப் புத்திரரில்லை. மேலுங் கூறுகின்றேன். கேள் தாயே!

வேறு

28. சாதக சுருதி பஞ்சம பாகம் சாற்றியே நூலிலு ரைதான்
நீதியாய் உரைத்தா ரதனைநீ பார்த்து நிகழ்த்துவீர்
[புயண்டரே யென்ன
கோதிலாப் பராசர முனிவரே கேளீர் குருவுடன் தர்மகர்
[மாதி
தீதிலா திருக்க வதற்குமே நாலில் திங்களு மிருப்பத னலும்;

28. சோதிட சாஸ்திரத்தில் புத்திர பாவத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் பிரிவில் இதனைப் பற்றி நியாயமான முறையில் விளக்கியுள்ளார்கள். அதனை நன்முக ஆராய்ந்து பார்த்துச சொல்லுங்கள்; புசண்டமுனிவரே யென்று பராசரர் கூற, புயண்டர் விடை கூறுகின்றார். குற்றமற்ற பராசர முனிவரே! கேளுங்கள். குருவுடன் தர்மகர்மாதிபதியாகிய சனியும் சிம்மத்தில் சேர்ந்து இருப்பதனலும், அவர் ஏழுக்கு நாலாம் வீடாகிய விருச்சிகத்தில் சந்திரன் தங்கியிருப்பதாலும்,

29. புத்திர விருத்தி சொன்னேன் புதன்கேது இருந்த தோஷம்
சித்தமாய் முதலி ரண்டு செனிக்கினும் நஷ்ட மாகும்
மற்றது விருத்தி யாகும் மைந்தனும் ஆண்பால் ரெண்டு
வெற்றியாய்ப் பெண்பால் ரெண்டு விளங்கிடும் தீர்க்க மாக.

29. இந்த ஜாதகனுக்குப் புத்திர விருத்தி எற்படும் என்று கூறினேன். புதனும், கேதுவும் இரண்டாம் வீட்டில் கூடியிருப்பதால் உண்டாகும் தோஷத்தினால், நிச்சயமாய் முதலிரண்டு குழந்தைகள் பிறந்து நஷ்ட மடையும். பின்பு பிறப்பவை விருத்தியாம். ஆண் இரண்டு, பெண் இரண்டு நீண்ட ஆயுளுடன் விளங்கும்.

30. இன்னவன் தனக்குக் கருமம் இயம்புவேன் நாற்பான்
[ரெண்டில்
அன்னைக்குக் கண்ட மாகும் அதற்குமேல் மூன்று
[ஆண்டில்
மன்னிய தந்தை கணடம் மைந்தனும் அறுடா னெட்டில்
பன்னிய ஆனி மாதம் பஞ்சமி பூர்வ பட்சம்;

30. இவனுக்குக் கருமதசை எற்படும் காலத்தைச் சொல்லுவேன். இவனுடைய நாற்பத்திரண்டாம் வயதில் தாயாருக்கு மரணம் உண்டாகும். அதற்கு மூன்று வருஷங்களுக்குப் பிறகு இவன் தகப்பனாருக்கு மரணம் ஏற்படும். இந்த ஜாதகனும் தனது அறுபத்தெட்டாம் வயதில், ஆனி மாதம் சுக்கிலபட்சம் பஞ்சமி திதியில் ;

31. மேகரோ கத்தி னலே வித்தகன் மரண மாகித்
தாகமாய் அருணை நாட்டில் சாதகன் சைவச் சேயாய்ப்
போகமு மதிகம் பெற்றுப் புத்திரர் மனைவி யோடு
ஏகனாய் வாழ்வ னென்று இயம்பினேம் ரிஷிக ளம்மா.

31. மேக வியாதியினால் மரணமடைந்து, திருவண்ணாமலையைச் சேர்ந்த பிரதேசத்தில், சைவர் குலத்தவனாய்ப் பிறந்து, பல சௌக்கியமடைந்து, மக்கள் மனைவி ஆகியோருடன், ஒப்பற்றவனாய் வாழ்ந்திருப்பான், என்று முனிவர்களாகிய நாங்கள் கூறினோம், தாயே!

32. இங்ஙனம் இவர்கள் கூற ஈசுவரி கேட்க லுற்றாள்
பொங்கமாய்க் குறும்பச் செய்கை புகலுவீர் என்று கேட்கத்
துங்கமா முனிவர் தாமும் சொல்லுவார் சாத கன்றான்
மங்கையே சென்மம் தொட்டு மரணமாம் வரைக்கு
[மேதான்;

32. இப்படி முனிவர்கள் சொல்ல, பார்வதிதேவி கேட்கின்றாள். ஜாதகனின் குடும்ப சௌக்கியத்தைப் பற்றிச் சொல்லுவீர், என்றாள். ஆய்மையுடைய முனிவர் சொல்லுவார். இந்த ஜாதகனுக்குப் பிறந்தது முதல் மரணம் வரையிலும் ;

33. குடும்பத்திற் குறைவு மில்லை கூறுவோம் சிலவே சங்கை
நடுவது ஈரா ருண்டில் நாட்டுமூ தாதை கருமம்
கெடுதிக ளநேக முண்டு கூறுவோ மந்தச் சங்கை
திடமுடன் உள்ளூர் தன்னில் தீராத வழக்கு நேரும்.

33. குடும்பத்தில் குறையெதுவும் கிடையாது. இருப்பினும் சில தோஷங்கள் கூறுவோம். இவனுடைய பன்னிரண்டாம் வயதில், இவன் மூதாதையர் வழியில், அசுபங்கள் நேரும். இடைக்காலத்தில் கெடுதல்கள் பல நிகழும். அவற்றைப் பற்றிச் சொல்லுகின்றோம். உள்ளூரில் விரைவில் முடிவடையாத வழக்குகள் எற்படும்.

34. அதினாலே தனங்கள் சேதம் அலைச்சலு மதிக முண்டு
எதிரிகள் நாச மாகும் எப்போது மிவனுக் கம்மா
அதிகாரக் குறைவு முண்டு அதிலொரு சாட்சி சொல்வேன்
துதிராமன் சென்ம மாகும் சொல்லுவோ மிவனுக் கம்மா.

34. அந்த வழக்குகளினால் பொருள் நஷ்டமும், சரீரத்துக்கு வீண் அலைச்சலும் மிகுதியாக உண்டாம். இவனுடைய விரோதிகள் எப்பொழுதும் இவனை எதிர்த்து அழிவார்கள். அதிகாரத்துக்குக் குறைவும் எற்படும். இவனுடைய நிரகநிலைகளைக் கொண்டு ஓர் உதாரணம் சொல்லுகின்றேன். யாவரும் போற்றுகின்ற இராமபிரான் போன்ற பிறப்பாகும், இவனுடைய பிறப்பு, என்று சொல்லுவோம் ; தாயே !

35. இராமன்தன் சென்மம் என்றீர் நவிலுவீர் முனிவ ரேநீர்
பூமகன் இரவி வெள்ளி பொருந்தியே மூன்றில் நிற்கத்
தீமைகள் வந்த போதும் சிரணம் சத்துரு வெல்லாம்
சோமனை யணிந்தோன் பக்கல் சுந்தரி மேலும் கேளே.

35. இராமபிரானுடைய பிறப்புப் போன்றது என்று சொன்னீர்கள், முனிவரே ! நீர் அதற்குக் காரணங் கூறுவீர். செவ்வாய், சூரியன், சுக்கிரன் ஆகிய மூவரும் மூன்றும் வீடாகிய கடகத்தில் நிற்பதால், விரோதிகளால் கெடுதல்கள் வந்த போதிலும், அவர்கள் முடிவில் நாசமடைவார்கள். சந்திரனைத் தலையில் தரித்துள்ள சிவபெருமானின் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் அழகியே ! மேலுங் கேட்பாயாக.

36. முப்பது ஏழாம் ஆண்டில் மூதாதை மனையாள் கெண்டம்
எப்பவும் குடும்பச் சேமம் இலகிடும் இவனுக் கம்மா
தப்பிதம் வராது கண்டாய் தந்தையின் சகோதர வர்க்கம்
ஒப்புடன் விருத்தி யிராது உரைத்தனம் ரிஷிக ளம்மா.

36. ஜாதகனின் முப்பத்தேழாம் வயதில், மூதாதையின் (பாட்டனாரின்) மனைவிக்கு மரணம். பொதுவாக எப்பொழுதும் இவன் குடும்பத்தில் நலம் சிறந்து விளங்கும்; தாயே! பெரிய செய்திகள் வரா. தந்தையின் சகோதர வர்க்கத்தில் விருத்தியிராது, என்று முனிவர்களாகிய நாங்கள் கூறினோம், தாயே!

37. இந்தவார் முனிவர் கூற ஈச்வரி மனத்தில் சங்கை
இந்தநம் பாலனுக்குக் கருமேகம் அணுகு மென்றீர்
எந்தகா ரணத்தால் வந்து இலகிடும் அந்தச் சங்கை
முந்தவே கூறு மென்ன மொழிகுவார் ரிஷிகள் தாமே.

37. இப்படி முனிவர்கள் சொல்ல, பார்வதி தேவியின் மனத்தில் ஒரு சந்தேகம் எற்பட்டுக் கேட்கின்றாள் இந்த ஜாதகனுக்குக் கருமையான மேக வியாதி உண்டாகும் என்று சொன்னீர்கள். எந்தத் தோஷத்தினால் அந்த வியாதி எற்படும்? அந்தச் சந்தேகத்தை விளக்குங்கள், என்று கேட்க, முனிவர்கள் கூறுகின்றார்கள்.

38. முன்சென்மம் பூனை யாலே முயன்றது இச்சென் மத்தில்
அந்தவோர் வியாதி நீர அறைகுவோம் சாந்தி ஒன்று
வந்ததோர் மனைவி யோடு மயிலத்துக் கேகிப் பின்னும்
கந்தனுக் கபிடே கித்துக் கனமுடன் அர்ச்சித் தேத்தி;

38. முற்பிறப்பில் எற்பட்ட தீவினையினால் அந்த வியாதி இப்பிறவியில் இவனுக்கு உண்டாயிற்று. அந்த நோய் தீருவதற்கு ஒரு பரிகாரம் சொல்லுவோம். தன் மனைவியுடன் திருமயில மென்னும் தலத்துக்குச் சென்று, அங்கு மலைமீது கோயில் கொண்டிருக்கும் முருகப்பெருமானுக்கு அபிடேகம் அருச்சனைகள் முதலியன செய்து போற்றி;

39. மறுபடி உள்ளூர் மீண்டு மாதமோர் கார்த்தி கைக்குக்
குறைவில்லா பரத்துக் கன்னம் குணமுட னளிப்பா னாகில்
திறமான வியாதி போகும் சேயனும் சேம மாகும்
வரவரச் செல்வ மோங்கும் வமிசமும் விருத்தி யாகும்.

39. மீண்டும் உள்ளூர் திரும்பி, ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திரத்தன்று நிறைந்த மனமுடன் பாதேசிகளுக்கு உணவு அளிப்

பாலுகில், இவனுக்கு வந்துள்ள வியாதி நீங்கும். இவன் சௌக்கியமடை வான். வரவரச் செல்வம் அதிகரிக்கும். குலத்தில் அபிவிருத்தி ஏற்படும்.


40. இப்படிச் செய்யா ஞகில் இவனுக்கு ரோகம் வாய்க்கும்
எப்பவும் பாதை உண்டு இடருகள் அநேக மூண்டு
மைப்படிக் கண்ணு ளுக்கும் மருவுமே ரோகம் தானும்
சொற்படி செய்து வந்தால் தொலைந்திடும் தோஷந் தானே.

40. இவ்வாறு சொன்ன பரிகாரத்தைச் செய்யாஞகில் மேகரோகம் நீங்காது; நிலைக்கும். எப்பொழுதும் அதனல் துன்பங்களுண்டு. வேறு பல துன்பங்களும் ஏற்படும். இவனுடைய மனைவிக்கும் வியாதி உண்டாகும். நாங்கள் கூறிய சொற்களின்படி பரிகாரங்கள் செய்து வந்தால் தோஷங் கள் அனைத்தும் விலகிப்போம்.

ஜாதகம் 15

1. பொன்நந்தி புகரும் சாடி புதன்ரவி வில்லில் தங்கச்
செந்தியும் தேள தாகச் சனிதுலாம் மதியும் சீயம்
மன்கருங் கோளு மீனம் மாதையில் சிகியும் நிற்க
உன்னித இடபம் சென்மம் உறைந்ததால் பலன்சொல்
[வீரே.

1. குரு விருஷபத்திலும், சுக்கிரன் கும்பத்திலும், புதனும் சூரியனும் தனுசிலும், செவ்வாய் விருச்சிகத்திலும், சனி துலாத்திலும், சந்திரன் சிம்மத்திலும், ராகு மீனத்திலும், கேது கன்னியிலும் நிற்கும்படியான கிரக நிலைகளோடு விருஷப லக்கினத்தில் பிறந்த இந்த ஜாதகனுக்குப் பலன்களைச் சொல்லுவீர்;



2. அம்பிகை கேட்கும் போது அத்திரி முனிவர் சொல்வார்
செம்மையாய் ஆண்பால் சென்மம் செனித்தயில் கிழ்மேல்
[வீதி
கொம்மையே உத்திர வாடை குறித்தனம் உத்தி ரத்தில்
அம்புலி அணிந்தோன் கோஷ்டம் அழகிய நதியு முண்டே.

2. என்று பார்வதிதேவி கேட்கும்போது, அத்திரி முனிவர் சொல்லத் தொடங்குவார். இது நல்ல ஆண்மகன் ஜாதகம். பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் வடக்கு வாடையில் உள்ளதாகும் என்று சொன்னேம். வீட்டுக்கு வடக்கில் இளம்பிறையைச் சடைமுடியிலணிந்த சிவபெருமான் கோயிலும் சிறந்த ஆறு ஒன்றும் உண்டு.

3. துருவசக் கரமே ஓடும் தோன்றிடும் கிழக்கில் தந்தி
பெருமையாய்த் தட்சி ணத்தில் பிஞ்ஞக னீசன் வாசம்
அருமையாய் அவ்வூர் தன்னில் அத்தியு மரசர் வாசம்
திருமகள் வாச முண்டு செட்டுகள மிகவே யோங்கும்.

3. அங்குத் துருவச் சக்கரம் பொருந்தியுள்ளது. கிழக்கில் விநாயகர் கோயிலுண்டு. தெற்குத் திசையிலும் மேன்மைபெற்ற சிவபெருமான் கோயில் கொண்டுள்ளார். அவ்வூரில் கம்பீரமான யானைகள் விளங்குகின்றன. அரசர்கள் வசிப்பர். இலட்சுமீ கடாட்சம் அங்கு நிலவும். வியாபாரங்கள் மிக்க செழிப்புடன் உயர்வு பெற்றிருக்கும்.

4. பலசாதி அவ்வூர் வாசம் பலதேவர் வாச மாகும்
நலமான பேருர் தன்னில் நல்வித கிரகம் தன்னில்
குலவியே உதிப்பா னுகும் குறித்தஇவ் வடையா ளத்துள்
நலமான வன்னிய வமிசம் பிறந்தன னிவனே யம்மா.

4. பல சாதி மக்களும் வாழ்ந்திருப்பர். பல தெய்வங்களின் கோயில்களும் அவ்வூரில் உண்டு. இவ்வாறுகச் சொல்லிய அடையாளங்கள் கொண்ட நலமுடைய பெரிய ஊரின்கண், சிறந்த வீடு ஒன்றில், இந்த ஜாதகன் வன்னியர் வமிசத்தில் பிறந்தான், தாயே!

5. பிறந்தசே யில்லத் துக்குப் பேசுவோம் தட்சி ணத்தில்
நிறைந்தவூழ் கடிகை தன்னில் நிற்குமே தந்தை யில்லம்
குறைந்திடும் தந்தை இல்லம் கூறுவோம் பிதாகு ணத்தைச்
சிறந்தநன் மேனி யாளே செப்புவோம் கேளு மம்மா.

5. இங்ஙனம் பிறந்த வீட்டுக்குத் தெற்குப் பக்கமாக ஏழு காழிகை வழி தூரத்தில், இந்த ஜாதகனின் தந்தை வீடு இருக்கின்றது. தந்தையின் வீடு சிறிது சேத மடைந்ததாகும். தந்தையின் குணத்தைச் சொல்லுவோம். அழகிய திருமேனியைப் பெற்ற பார்வதி தேவியே! மேலுங் கூறுகின்றோம்; கேளும், தாயே!

6. தந்தைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு முதல்மா தின்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
போதவே துணைவர் தம்மைப் புகலவே பலத்தைக் காணும்
வேதனை ஒருவர்க் கெண்ணுன் வித்தகன் யூக சாலி.

6. பாட்டனாரின் மனைவியர் இருவர். அவர்களில் முதல் மனைவிக்குப் புத்திரனுகத் தோன்றினன், இந்த ஜாதகனின் தந்தை. இவனுக்குச் சகோதர பாவம் சிறப்புடையதாக இல்லை. ஒருவருக்குத் தீங்கு நினையான். சாமர்த்திய முடையவன். ஊகித்து உணரும் சக்தி பெற்றவன்.

7. மூர்க்கமா மனத்த னுகும் முன்கோபி பூமி சேர்ப்பன்
சிக்கிர நடையு முள்ளான் சித்தினி சாதி யாவன்
பார்க்குளே கீர்த்தி யேற்பன் பாரிக்குப் பகைவ னுவான்
ஏற்பவர் தங்கட் கீவன் இடருகள் அநேக முள்ளான்.

7. பிடிவாத எண்ணமுள்ளவன். முன்கோப முடையவன், நில புலங்களைச் சேர்ப்பான். வேகமான நடை யுள்ளவன். சித்தினி சாதிப் புரு டனுவன். உலகில் புகழைப் பெறுவான். வள்ளல்தன்மையில் பாரிவள்ள லுக்கு விரோதி யாவன். யாசிப்பவர்களுக்குக் கொடுப்பான். பல துன்பங் கள் இவனுக்கு ஏற்படும்.

8. கிராமாதி காரம் செய்வன் கீர்த்தியும் செய்வா னுகும்
தராதர மறிய வல்லான் தைரிய மனத்த னுகும்
துராசையு மில்லான் நல்லன் சோம்பிடான் காரி யத்தில்
முராரியின் தங்கை யாளே மொழிகிறேம் இவனுக்கேதான்.

8. கிராமத்துக்குத் தலைவனாகிருந்து அதிகாரங்கள் செய்வான். புக ழுக்குரிய செயல்களைச் செய்வான். ஒவ்வொருவரின் தன்மையையும் நன்கு உணரக் கூடியவன். உறுதியான மன முடையவன். கெட்ட எண்ண மில்லாதவன். நல்லவன். காரியங்கள் செய்வதில் சோம்ப லில்லாதவன். திருமாலின் தங்கையாகிய பார்வதியே! இவன் குணத்தை இங்ஙனம் கூறு கின்றேம்.

9. சேமமாம் குடும்ப முள்ளான் சென்றிடம் பெருமை காண்
[பான்
மாமிக ளிரண்ட தாகும் மங்கையால் அவமா னத்தன்
காமமாம் குணத்த னுகும் காரிய சமர்த்த னென்றேம்
நேமியில் நிந்தை யுள்ளான் நிதம்சுக புசிப்பா னுமே.

9. செளக்கியமான குடும்ப முள்ளவன். செல்லுமிடங்களில் பெருமை பெறுவான். இவனுக்கு மாமியர் இருவர். பெண்ணால் அவமானமடை வான். பெண் மோகம் கொண்டவன். காரியங்களைச் சாமர்த்தியமாகச் செய்ய வல்லவன். உலகில் சிறிது பழியை யுடையவன். தினந்தோறும் சுகமான போஜனத்தைப் புசிப்பவன்.

10. இக்குண முடையோ னுக்கு இவனுக்குத் தாரம் ரெண்டில்
தொக்கவே கடைமா துக்குத் தோன்றினு னிவனே
[யென்றேம்
மிக்கவே முதல்மா துக்கு விளங்காது புத்திர ரென்றேம்
நக்கனே அணிந்தோன் தேவி நவிலுவோம் இவன்குணத்தை.

10. இவ்வித குணமுடைய தந்தைக்கு மனைவியர் இருவர். அவர் களில் இளைய மனைவிக்குப் புதல்வனாக இந்த ஜாதகன் பிறந்தான் என்று கூறினேம். முதல் மனைவிக்குப் புத்திர பாக்கியம் இல்லையென்று கூறி னேம். சிவபெருமானின் மனைவியாகிய பார்வதி யம்மையே! இந்த ஜாத கனின் குணத்தைச் சொல்லுவோம்.

11. மாநிற முடைய னுவன் வாயுதே கத்தன் மேலும்
னனரைச் சேரா னுகும் இருவித குணத்தா னென்றும்
தானமும் தருமம் செய்வன் சற்பாத்திரன் கல்வி யுள்ளான்
சேனைகள் இல்லா னுகும் செப்புவோம் மேலும் கேளே.

11. கரிய நிற முடையவன். வாயு சரீர முடையவன். தாழ்வான குண முடையவர்களைச் சேரமாட்டான். இரண்டுவித குணங்களைப் பெற்றவன். தான தருமங்கள் செய்வான். தகுதி பெற்றவன். கல்வியறி வுடையவன். படை பலம் இல்லாதவன். மேலுங் கூறுவோம்; கேட்பாயாக.

12. தந்தையின் ஆஸ்தி தன்னைத் தானவன் அடைய மாட்டான்
சொந்தனன் மாது வாலே சுகமுண்டு பெருமை யுண்டு
முந்திய வணிகம் செய்வன் மூன்றுகர் மங்கள் செய்வான்
வந்திடு துணைவ ரில்லான் மர்மவான் சுகடி சிப்பான்.

12. தந்தையால் தேடி வைக்கப்பட்ட சொத்தை அடைய மாட்டான். தாயாரால் இவனுக்குச் சுகங்களுண்டு. மேன்மையும் உண்டு. வியாபாரம் செய்வான். மூன்று கருமங்களைச் செய்வான். உடன்பிறந்தார் இல்லாதவன். மர்மமுடையவன். சுகமான போஜனத்தைப் புசிப்பான்.

13. பூமியும் விருத்தி செய்யான் பிரபலச் செட்டும் ஓங்கும்
நேமியோர் மெச்ச வாழ்வான் நீண்டதோர் ரோக முள்ளான்
மாமன்மார் தன்னுல் யோகம் வந்திடு மிவனுக் கம்மா
தீமைகள் சூதி லேதான் சிறந்திடு மென்று சொன்னேம்.

13. பூமிலிங்களை விருத்தி செய்யமாட்டான். இவன் செய்யும் வியாபாரத் தொழில் உயர்வடையும். உலகிலுள்ளார் பாராட்டும்படி வாழ்ந்திருப்பான். உடலில் நீண்ட உரோமங்களைப் பெற்றவன். மாமன்மார்களால் இவனுக்கு அதிர்ஷ்டம் உண்டாகும். பிறருக்கு வஞ்சனையான எண்ணத்துடன் தீமைகள் செய்வதில் சிறந்து விளங்குவான், தாயே !

14. கரமதில் சங்கு சக்கரம் கனதன ரேகை யுள்ளான்
உரமுடன் நடக்க வல்லான் உந்தமர் நேசம் கொள்வான்
தருநிகர் கொடைய னுகும் தரளம்போல் தந்த முள்ளான்
அறுமுகன் றன்னைப் பெற்ற அம்மையே மேலும் கேளே.

14. இவனுடைய கையில் சங்கு சக்கர ரேகைகளும் தனரேகையும் உள்ளன. திடமாக நடக்க வல்லவன். நற்குணமுடையோரின் நட்பைப் பெறுவான். கற்பக விருக்ஷம் போன்ற கொடையுடையவன். முத்துப் போன்ற வெண்மையான பற்களை யுடையவன். ஆறுமுகக் கடவுளைப் பெற்ற பார்வதியம்மனே ! மேலுங் கேட்பாயாக.

15. இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோம் ஒருபான்
[ஒன்பான்
கன்னியு முத்திர திக்கில் காதலி மாது வர்க்கம்
உன்னித வருவா ளாகும் உத்தமி வந்த பின்பு
பன்னிய குபேரன் போலே பெருகிடும் செல்வம் தானே.

15. இவன் திருமண காலத்தைச் சொல்லுவோம். பத்தொன்பதாம் வயதில் வடக்குத் திசையிலிருந்து இவனுக்கு மனைவி வருவாள். அவள் தாய் வர்க்கத்தைச் சேர்ந்தவள். அவள் மனைவியாக வாய்த்தபின்பு, இவனுக்குக் குபேரனைப் போன்று செல்வம் பெருகும்.

16. களத்திர குணத்தை யாங்கள் கழறுவோம் சிவந்த மேனி
வளர்த்தியாய்க் குடும்ப முள்ளாள் வரனுக்கு நேய முள்ளாள்
தளர்ச்சியாய் வந்த பேரைத் தானவள் ஆத ரிப்பாள்
கலக்கங்கள் இல்லா நெஞ்சம் கழறுவோம் மேலும் கேளே.

16. மனைவியின் குணத்தை நாங்கள் சொல்லுகின்றோம். சிவந்த தேகமுடையவள். பெருகிய குடும்ப முடையவள். கணவனுக்கு இனிய வள். சோர்வுடன் தன் வீட்டுக்கு வந்தவர்களை ஆதரிப்பாள். கலங்காத மனமுடையவள். மேலுங் கூறுவோம், கேள்!

17. அன்னங்கள் போட வல்லாள் அநேகபூ ஷணமு முள்ளாள்
பின்னிமில் லாத தேகம் பெருத்ததோர் புத்தி யுள்ளாள்
உன்னித புத்திர பாகம் உரைக்கிறோம் இவனுக் கேதான்
அன்னையே ஆண்பா லில்லை அறைகிறோம் பெண்கள் உண்டே.

17. எல்லோருக்கும் உணவு அளிப்பதில் சிறந்தவள். மிகுதியான ஆபரணங்கள் உடையவள். குறையில்லாத தேகம். பெரும்புத்தி யுள்ள வள். இந்த ஜாதகனுக்குச் சிறந்ததாகிய புத்திர பாவத்தைப்பற்றிச் சொல் லுகின்றோம் தாயே! ஆண் குழந்தை இவனுக்கு இல்லை. பெண் சந்த திகள் உண்டு.

18. இப்படி முனிவர் கூற ஈசுவரி கேட்க லுற்றாள்
செப்புவார் புத்திர சங்கை தேவிக்கு விபர மாக
ஒப்புடன் முனிவர் சொல்வார் உதித்தவன் முன்னூழ்
[தன்னுல்
தப்பிதம் வந்த தென்றோம் சாற்றுவோம் அந்தச் சங்கை.

18. இவ்வாறு முனிவர் கூறவே, பார்வதிதேவி கேட்கின்றாள். பின்பு முனிவர், இந்த ஜாதகனுக்கு ஆண் சந்ததி ஏற்படாததற்குரிய தோஷத்தை விவரமாகப் பார்வதியம்மனுக்குக் கூறத் தொடங்கினர். இவ

னுடைய முன்சென்ம தீவினைப் பயனால் இப்பிறப்பில் ஆண் சந்ததி உண்டா காமல் தவறிவிட்டது. அந்தத் தீவினையை விளங்கச் சொல்லுகின்றோம்.

19. சாதகன் முன்சென் மத்தைச் சாற்றுவோம் புதுவை
[மேல்பால்
நீதியாய்ச் சிற்றூர் தன்னில் நேர்ந்தனன் வணிக வமிசம்
ஆதிமால் மதத்தா னுகும் அவனுக்கு மனைவி மைந்தர்
கோதின்றி வாழ்ந்து பின்னும் குலத்துக்குப் பெருமை
[பூண்டு ;

19. ஜாதகனின் முற்பிறப்பைச் சொல்லுகின்றோம். புதுசேரிக்கு மேற்கில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் வைசிய குலத்தில் பிறந்தான். இவன் விஷ்ணுவை வழிபடும் வைணவ மதத்தவனாக இருந்தான். மனைவி மக்களுடன் குற்றமில்லாமல் வாழ்க்கை நடத்தி, பிறந்த குலத்துக்கும் மேன்மை யுண்டாக்கி;

20. மரமாட்டும் தொழிலே பெற்று வணிகங்கள் அதிகமோங்கிப்
பெருமையாய் வாழும் நாளில் பேசுவோம் ஊழி தானும்
அருமறை யாளன் பெரியோன் அவனிடம் சிநேகம் செய்து
தரும்பொருள் வாங்கி யேதான் சார்ந்தனன் தன்னூ
[ரும்தான்.

20. மரங்களை இணைக்கும் தொழிலை மேற்கொண்டு, அதன் வழியாக வியாபாரத்தில் மிக்க உயர்வுபெற்று, சிறப்புடன் இருந்துவந்த காலத்தில், சேர்ந்த தோஷத்தைச் சொல்லுவோம். அயலூரிலிருந்த ஓர் அந்தணன் இவனுடன் சிநேகமாக இருந்துவந்தான். ஒரு சமயம் அவ்வந்தணன் இவனிடம் கடனாகச் சிறிது பொருள் பெற்றுக்கொண்டு தன்னூருக்குப் போனான்.

21. மற்றொரு நாளி லேதான் மறையவன் பொருள்கொ ணர்ந்து
சித்தசன் வணிகன் பாலில் சேர்ந்தனன் சிலநாள் சென்று
வித்தகன் கணக்கில் மோசம் விளம்பினன் வணிகன் தானும்
குற்றமாய்ப் பொருளைக் கேட்கக் கூறுவான் மறையோ
[னும்தான்.

21. சிலகாலஞ் சென்று அவ்வந்தணன் தான் பெற்றுச் சென்ற பொருளைக் கொணர்ந்து, இவ் வணிகனிடம் கொடுத்தான். இவ்வணிகன் ஒழுங்கான முறையில் கணக்கைத் தீர்க்காமல், அந்தணனை மோசம்செய்ய எண்ணி, "என் கணக்குப்படி நீ இன்னும் பொருள் தரவேண்டும்" என்று அந்தணனைக் கேட்டான். உடனே அந்தணன் சொல்லுவான்.

22. கணக்கினில் மோசம் செய்த கனமுள்ள பாவிக் கேதான்
இணக்கமாய்ப் பின்சென் மத்தில் இடருகள் அதிகம் நேர்ந்து
பிணக்குகள் ஒருவ ருலே போயிடும் தந்தை ஆஸ்தி
குணிக்கவே வறுமை யுண்டாய்க் குடும்பமு மலைச்ச லாகி ;

22. கணக்கை ஒழுங்குபடக் கூறுமல் மோசம் செய்துவிட்ட இந்தப் பாவிக்கு மறுபிறவியில் துன்பங்கள் பல நேரும். ஒருவனிடம் விரோதம் உண்டாகி, அதனால் தகப்பனாரின் சொத்தும் இவனுக்கு கிடைக்காமல் போகும். தரித்திரம் உண்டாகி, குடும்பத்திலும் நிலையில்லாமல், அலைச்சல் கள் ஏற்படும்:

23. சகோதர ரில்லா ஜனித் தனியனாய் இருந்து மேலும்
அகமது இல்லா தாகி அம்மறை யோனும் கூறிப்
பகையாகிப் பொருளு மீந்து பாரினில் சாபம் தந்தான்
தகைமையா யிச்சென் மத்தில் சார்ந்திடு மந்தச் சாபம்.

23. சகோதரர் இல்லாதவனாகவும், சொந்த வீடும் இல்லாது தனிய னாகவும் போவான் என்று கொடிய சாபமிட்டு, இவ்வணிகன் கேட்ட அதி கப் பொருளையும் கொடுத்துவிட்டு, அந்த அந்தணன் சென்றான். தகுதியான முறையில் அந்தச் சாபம் இப்பிறவியில் இந்த ஜாதகனை யடைந்தது.

24. இதுவலால் இன்னம் ஊழி இசைக்கிறேம் நேசன்
[பெண்டை
பதிவ்ரதை யென்றெண் ணுமல் பாலகன் போகம் துய்க்க
விதவித வார்த்தை கூறி வினயமாய்ப் பொருளு மீந்தான்
மதிமுக மாது தானும் அறைகின்றாள் மனவெ றுப்பால்.

24. இது தவிர, மேலுமொரு தோஷம் சொல்லுகின்றேம். இவன் ஒரு கற்புடைய பெண்ணைப் பார்த்து, அவள் சிறந்த பத்தினி என்று நினை யாமல், அவளுடன் சுகமனுபவிக்க எண்ணி, பலவிதமான ஆசை வார்த்தை கள் அவளிடம் கூறி, மிக்க வினயத்துடன் பொருளும் அவளுக்குக் கொடுத் தான். சந்திரனைப் போல் அழகிய முகமுடைய அப்பெண்ணும் இவன் செய்கையைக் கண்டு மிக்க மனவெறுப்புடன்;

25. என்னோ நீ போகம் துய்க்க எண்ணிய பாவி நீதான்
உன்னுடைச் செல்வ மற்று உதித்திடு மதலை யின்றித்
தன்னுடைத் துணைவ ரின்றித் தனித்துமே வாழ்வா
[யென்றாள்
அன்னவள் சாபம் தானும் அணுகிற்று அச்சென் மத்தில்.

25. என்னிடம் சுகம்பெற எண்ணிய பாவியே! நீ செல்வத்தை யிழந்து, பிறந்த பிள்ளைகள் நிலைத்திராமலும், உடன் பிறந்தார்கள்

இல்லாமலும் தனியாக வாழ்வாய், என்று இவனே நோக்கிக் கூறினாள். அவள் கூறிய சாபம் இப்பிறப்பில் இவனே யடைந்தது.

26. மனைவிமைந் தருமே நீங்கி வளப்பொருள் யாவும் நீங்கித்
தனயனும் வறுமை கொண்டு தட்சிணம் தீர்த்தம்
[தோய்ந்து
கனமுடன் பழனி புக்குக் கதிர்வேலர் பாதம் போற்றித்
தனிகனும் பேதி யாலே தானவன் மரண மானான்.

26. மனைவி மக்களைப் பிரிந்து, தன்னிடமுள்ள செழிப்பான பொருள் களனைத்தும் நீங்கி, தரித்திரம் அடைந்து, தென்திசை நோக்கிச் சென்று, அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, பழனிக்குப் போய், அங்குக் கோயில் கொண்டுள்ள முருகப்பிரான் திருவடிகளை வணங்கி, தன் னுரை யடைந்து, பேதி ஏற்பட்டு, மரணமடைந்தான்.

27. கஞ்சனுல் வரையப் பட்டுக் காவலன் இச்சென் மத்தில்
மிஞ்சிய வன்னிய வமிசம் மேதினில் உதித்தா னென்றும்
தஞ்சமா யிச்சென் மத்தில் தன்துணை யில்லா தாகித்
துஞ்சிடும் செல்வ மென்றூர் தோகையே மேலும் கேளே.

27. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இவன் இப்பிறப்பில் வன்னிய குலத்தவனுகப் பிறந்தான் என்று கூறினேம். இப்பிறப்பில் உடன் பிறந்தார் இல்லாமல் இருப்பதோடு, செல்வமும் இவனைவிட்டு நீங்கும் என்று முனிவர்கள் கூறினர்கள். மயில்போன்ற சாயலையுடைய பார் வதியே! மேலுங் கேள்.

28. முனிவரிவ் வாறுய்க் கூற மொழிகுவாள் அம்மன் தானும்
அனையவே சாத கர்க்கு ஆதரிப் பார்கள் யார்சொல்
கனமுடன் தந்தைக் கேதான் கதித்திடு மிளைய மாதா
இனையவள் மதலே தன்பால் இருப்பனே இவனே யம்மா.

28. முனிவர் இங்ஙனம் சொல்லப் பார்வதி கூறுவாள். எல்லோரை யும் இவன் பிரிய நேர்ந்தால் இவனைக் காப்பவர்கள் யாவர்? சொல்லுங் கள். இவன் தந்தைக்கு இளையவளாக வாழ்க்கைப்பட்ட சிறிய தாயார் ஒருத்தி இவனுக்குண்டு. அவளுடைய புதல்வனிடம் இவன் தங்கியிருப் பான், தாயே!

29. அவனுடைத் துணைவர் தம்மை அறைகின்றேம் ஆண்பால்
[காணேம்
நவமதில் பெண்பால் ரெண்டு நாட்டுவோம் தீர்க்க மாகக்
கவனமாய் அவன்கு ணத்தைக் கழறுவோம் மருமம்
[மூள்ளான்
தவமுடை யோர்க்கு அன்பன் தாட்சணியன் கனவா னுமே.

29. இளைய தாயாரின் புதல்வனுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். சகோதரன் இல்லை. சகோதரிகள் இருவர் தீர்க்கமாய் இருப்பர் என்று கூறுவோம். அவன் குணத்தைச் சொல்லுவோம். மர்ம முடையவன். தவத்தைச் செய்யும் முனிவர்களிடம் அன்பு பூண்டவன். தாட்சிணிய முள்ளவன். மதிப்புடன் இருப்பவன்.

30. செலவுகள் அதிக முள்ளான் சிவந்தநன் மேனி யாவன்
நலமுளோர் நேசம் கொள்வன் நற்புத்தி தந்திர வாதி
பலபல புத்தி யுள்ளான் பகர்ந்தசொல் தப்பா னகும்
குலவிடு மனமும் உள்ளான் குலநிந்தை உடைய னலே.

30. செலவுகள் மிகுதியாக வுடையவன். சிவந்த சரீர முள்ளவன். நற்குணமுடையவர்களின் நட்பைப் பெறுவான். நல்ல புத்தி யுள்ளவன். தந்திரசாலி யாவன். விசேடமான அறிவைப் பெற்றவன். சொன்னசொல் தவறுதவன். நல்லெண்ணத்துடன் பொருந்திய மனமுடையவன். குலத்தில் பழியும் இவனுக்குண்டு.

31. இக்குண முடையோன் தானும் இவனையே ஆதரிப்பன்
தொக்கவே புத்திர தோஷம் சொன்னீர்கள் அதற்குச் சாந்தி
மிக்கவே கூறு மென்ன விளம்புவார் கிரிகை தானும்
முக்கிய அரசின் பக்கல் முயற்சியாய் நாக மொன்று ;

31. இவ்வாறான தன்மையுடைய இளைய சகோதரன் இந்த ஜாதகனைக் காப்பாற்றுவான். இவனுக்குப் புத்திர தோஷமுண்டு என்று கூறினீர்களே! அதற்குப் பரிகாரம் சொல்லுங்கள், என்று பார்வதிதேவி கேட்க, முனிவர் புத்திர தோஷந் தீரச் சாந்தியொன்று சொல்லுவார். மரங்களில் சிறந்ததாகிய அரசமரத்தடியில், நாகத்தின் உருவமொன்றை;

32. பிரதிட்டை செய்து வைத்துப் பிராமணர் தமக்கு மன்னம்
திறமையாய் அளிப்பா னகில் செல்வனும் ஆண்பால் ஒன்று
பெருமையாய்ப் பெண்பால் ரெண்டு பேசினே மிவனுக்
[கேதான்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

32. பிரதிஷ்டை செய்து. அந்தணர்களுக்கும் போஜனம் அளிப்பானகில், இந்த ஜாதகனுக்கு ஆண்குழந்தை ஒன்றும், பெண் இரண்டும் உண்டாம் என்று சொன்னோம். ஆறுமுகங்களையுடைய முருகப்பிரானைக் குழந்தையாக வடைந்த பார்வதியே! கேட்பாயாக.

33. மாதுரு குணத்தை யாங்கள் வறைகின்றோம் இருநி றத்தாள்
மேதினில் வாயு தேகி வித்தகி கபடு மில்லாள்
தீதிலாக் குணத்தா ளாதும் தீயசொல் மனத்தி லெண்ணுள்
வேதனை ஒருவர்க் கெண்ணுள் மிருதுவாம் வார்த்தை
[கூர்வள்.

33. ஜாதகனின் தாயாருடைய குணத்தை நாங்கள் சொல்லுகின்றோம். கருமை நிறமுடையவள். வாயு தேகமுள்ளவள். வஞ்சனை யில்லாதவள். குற்றமற்ற தன்மையுடையவள். கெட்ட சொற்களை மனத்தாலும் எண்ணுதவள். எவருக்கும் தீங்கு நினையாள். மென்மையான சொற்களைச் சொல்லுவாள்.

34. பரவின சுகமு முள்ளாள் பாரினில் நிந்தை யுள்ளாள்
உறன்முறைக் கன்பு சாலி உளத்தினில் கோபம் மூர்க்கம்
நிறமையாய் அன்ன மீவள் சுசிலமு மடக்க முள்ளாள்
அரனிடப் பாகத் தாளே அம்மையே மேலும் கேளே.

34. சுகமுடையவள். உலகில் பழியுமுள்ளவள். பந்துக்களிடம் அன்பு பாராட்டுபவள். மனத்தில் கொடிய கோபமுடையவள். பசித்து வந்தவர்க்கு உணவு கொடுப்பாள். நல்லொழுக்கமும் பணிவும் உள்ளவள். சிவபெருமானின் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் பார்வதி யம்மையே! மேலுங் கூறுகின்றோம்; கேட்பாயாக.

35. இவளுடைத் துணைவர் தம்மை இசைக்கின்றோம் ஆண்பால்
[ஒன்று
அவனியில் பெண்பால் ரெண்டு அறைகின்றோம் தீர்க்க மாக
நவமதில் துணைவி சேதி நாட்டுவோம் நிந்தை உள்ளாள்
அவனியில் குலத்தில் குற்றம் அவள்வரன் சுகமே இல்லாள்

35. இவளுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஆண்மகன் ஒருவன். பெண்கள் இருவர். இவர்கள் தீர்க்கமாயிருப்பர் என்று கூறுகின்றோம். சகோதரியின் செய்தியைச் சொல்லுகிறோம். பழியுள்ளவள். அவள் புகுந்த குலத்தில் குற்றமுள்ளவள். கலமில்லாத கணவனைப் பெற்றவள்.

36. மற்றசே திகளு மெல்லாம் வரைகின்றே மிரண்டாம் பாகம்
சுற்றமாய் மாது வுக்குச் சொல்லுவோம் முன்சென் மத்தை
உற்றதோர் வேலன் காட்டில் உயர்ந்தசெங் குந்தர் வெமிசம்
வித்தகி உதித்தாள் என்றும் விளம்புவோம் மேலும்
[கேளே.

36. மற்றச் செய்திகளனைத்தையும் இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம். இந்த ஜாதகனின் தாயாருக்கு ஏற்பட்டிருந்த முற்பிறப்பைக் கூறுவோம். வேலங்காடு என்ற ஊரில், உயர்வான செங்குந்தர் குலத்தில், இவள் பிறந்தாள் என்று கூறினோம். மேலுங் கூறுகின்றோம். கேட்பாயாக.

37. மைந்தரும் வரனும் உண்டாய் மகிழ்ச்சியாய் வாழும் நாளில்
பந்தமாய் ஊழி தானும் பகருவோம் கேளு மம்மா
மூந்திய வாலி பத்தில் முதற்கூறு நடக்கும் காலை
இந்தவார் கன்னி தானும் இயல்கடை வீதி தன்னில் ;

37. கணவனும் புதல்வர்களும் ஏற்பட்டு, சந்தோஷமாக வாழுகின்ற காலத்தில், இளமைப் பருவத்தில் நேர்ந்த தோஷமொன்று இவளைச் சூழ்ந்தது. அதனைச் சொல்லுவோம்; கேளுங்கள், தாயே! வாலிப வயதில் முதல் பருவம் நடக்கும்பொழுது, இந்தப் பெண் கடை வீதியிலுள்ள;

38. குங்கும மஞ்ச ளும்தான் கோதையும் எடுத்துக் கொண்டு
இங்கித வணிக னுக்கு இவள்பணம் தராம லேதான்
சங்கையாய் வந்து விட்டாள் சாற்றினன் வணிகன் தானும்
பொங்கிய சென்மந் தோறும் புருடன்தன் சுகமே யின்றி ;

38. ஒரு கடையில், குங்குமம் மஞ்சள் இவற்றைப் பெற்றுக்கொண்டு, கடைக்காரனிடம் அவற்றிற்குரிய விலைப் பணத்தைத் தராமல் வந்துவிட்டாள். இவளுடைய செயலைக் கண்ட வணிகன் மனம்நொந்து பின்வருமாறு கூறினான். "வரும் பிறவிகளிலெல்லாம் கணவனால் இன்பம் அடையாமல்;

39. மத்திய வயதி லேதான் வரனும்துர் மரண மாகிக்
குற்றமாய் வாழ்வா யென்று கூறினன் சாபம் தானும்
வெற்றியாய் வணிகன் சாபம் மேவிற்று இச்சென் மத்தில்
வித்தகி கயிறி ழுந்து மேதினில் வருத்த முற்று ;

39. உன் மத்திய வயதில் கணவனும் துர்மரண மடையத் துன்ப முடன் நீ வாழ்ந்திருப்பாய்" என்று சாபமிட்டான். முறைப்படி அவ்வியாபாரியின் சாபம் அப்பிறப்பிலேயே இவளை யடைந்தது. இவள் கணவனை யிழந்து, உலகில் துன்பமடைந்து,

40. பித்துகுன் மத்தி னுலே பேதையும் மரண மாகிச்
சித்தமாய் இக்கு லத்தில் செனித்தவ ளிவளே யம்மா
உத்தமி பிற்சென் மத்தை உறைக்கின்றோம் ஆரூர் தன்னில்
வெற்றியாய்ச் சைவ வமிச மீதினில் உதித்து மேதான் ;

40. பித்த குன்மரோய் உண்டாகி மரணமடைந்தாள். பின்பு இப் பிறவியில் இக்குலத்தில் பிறந்தாள் இவள், தாயே! இவளுடைய மறுபிறப் பைச் சொல்லுகின்றோம். திருவாரூரில் சைவ மரபில் பிறந்து,

41. பூமியும் பொருளும் பெற்றுப் புத்திர ருள்ளா ளாகி
நேமியோர் மெச்ச வாழ்வள் நிமலியும் கேட்க லுற்றுள்
தீமைகள் அனந்த மாகச் செறிந்தது மிச்சென் மத்தில்
பூமியில் நிந்தை யாகப் புரிந்தன ளதனுல் நீரும்;

41. நிலமும் செல்வமும் அடைந்து, மக்கட் செல்வத்தையும் பெற்று, உலகினர் பாராட்டும்படி வாழ்ந்திருப்பாள். பார்வதி கேட்கின்றாள். அள வில்லாத தீமைகள் இப்பிறப்பில் இவளுக்கு ஏற்பட்டன. உலகில் பழியும் உண்டாயிற்று. ஆகையினுல் தாங்கள்;

42. எப்படிச் சொன்னீ ரய்யா இவள்சைவம் பிற்சென் மந்தான்
மைப்படி மாது தானும் மனமது தெய்வ பக்தி
ஒப்புடன் இருப்ப தாலே உரைத்திட்டோம் சைவ வமிசம்
அப்பணி சடையோன் தேவி அருளுவோம் மேலும் கேளே.

42. மறுபிறவியில் இவள் சைவ மரபில் பிறப்பாள் என்று எவ்வாறு கூறினீர்கள்? இந்தப் பெண்ணின் மனத்தில் சிவபக்தி நிறைந்திருப்ப தால், மறுபிறவியில் சைவ மரபில் பிறப்பாள், என்றுகூறினேம். கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! மேலும் கூறுவோம்; கேள்.

43. தந்தையின் மரண காலம் சாற்றுவோம் ஓராண் டுக்கும்
சந்ததம் கும்ப மாசம் தந்தைதுர் மரண மாவன்
பிந்திய மாது வுக்குப் பேசுவோம் நாற்பா னுறில்
வந்திடு மிதுன மாதம் வரைகிறோம் கெண்டம் தானே.

43. இந்த ஜாதகனின் தந்தைக்கு மரண காலத்தைக் கூறுவோம். இவன் பிறந்த முதல் வருஷத்திலேயே, தை மாதத்தில், தந்தை துர்மரண மடைவான். தாயின் மரணத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஜாதகனின் நாற்பத்தாறும் வயதில், ஆனிமாதத்தில், தாய்க்கு மரணம் ஏற்படும் என்று கூறுவோம்.

44. சாதகன் மரண காலம் சாற்றுவோம் அறுபா னுவில்
மேதினில் [1]கூனி மாதம் வளர்பிறை நவமி தன்னில்
தீதான பருவு கண்டு சிறந்தகன் னுடலம் வாடும்
போதக வானப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

1. பங்குனி.

44. ஜாதகனுக்கு மரணமேற்படும் காலத்தைச் சொல்லுவோம். அது பத்து நான்காம் வயதில், பங்குனிமாதம் சுக்கிலபட்ச நவமியில், கொடிய கட்டியொன்று எற்பட்டு, இவன் மரண மெய்துவான். யாவரும் கடவு ளைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

45. பின்சென்மம் மருவூர் தன்னில் பலமுள வைசிய சேயாய்
உன்னித செட்டுச் செய்து உலகெலாம் கீர்த்தி வானுய்
அந்நக ராலய த்தில் அவனூழி அதிகம் செய்வன்
கன்னென மொழியை யொக்கும் காரிழை புகன்றிட்
[டோமே.

45. மறுபிறவி மருவூர் என்ற இடத்தில், செல்வாக்குள்ள வைசிய மர பினனுய்ப் பிறந்து, உயர்ந்த பல வியாபாரங்கள் செய்து, உலகமெங்கும் தன்புகழ் பரவப் பெற்றவனுய், அந்த நகரத்திலுள்ள இறைவன் கோயிலில் மிக்க திருப்பணிகள் செய்துகொண்டு வாழ்ந்திருப்பான். கரும்புபோன்ற இனிய சொற்களைப் பேசும் பார்வதி தேவியே! இவ்வாறு நாங்கள் கூறி னேம்.

46. உதித்தவன் யோகச் செய்கை உரைக்கின்றேம் விபர மாக
மதித்திட வாழ்வா னுகும் வாணிபம் அதிகம் செய்வான்
சதிராகச் சித்திர வீடு தானவன் கட்டு வானும்
மதிநிகர் மனையா ளாலே வந்திடும் யோக மென்றேம்.

46. இந்த ஜாதகனின் நலங்களை விவரமாகக் கூறுகின்றேம். யாவரும் மதிக்கும்படி வாழ்க்கை நடத்துவான். வியாபாரங்கள் மிகுதியாகச் செய் வான். அழகிய வேலைப்பாடுகள் பொருந்திய வீட்டைக் கட்டுவான். சந்திரன் போன்ற அழகிய முகமுடைய மனைவியினுலே இவனுக்கு அதிர்ஷ் டம் வரும், என்று சொன்னேம்.

47. பால்பசு விருத்தி யுள்ளான் பந்துவும் புகழ வாழ்வன்
ஞாலமேல் வறுமை யில்லான் [1]நராதிபர் நேசம் கொள்வான்
கோலமாய்ப் பூஷ ணங்கள் கிரகமும் கையி ருப்பு
சீலமா ருயி ரம்பொன் சேர்ப்பனும் என்று சொன்னேம்.

47. பாலைத் தரும் பசுக்களை மிகுதியாக வுடையவன். உறவினர்களும் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். தரித்திரமில்லாதவன். அரசர்கள் நட் பைப்பெறுவான். அழகிய ஆபரணங்களும் வீடும் இவனுக்குச் சொந்தமாம். ஒழுங்கான வகையில் ஆறுராயிரம் வெண்பொற் காசுகள் சேர்ப்பான் என்று கூறினேம்.

---

1. அரசர்.

48. பிறந்தசெய்ச் சனன காலம் புகர்தசை இருப்புத் தானும்
சிறந்திடு ஆண்டு ஐந்து திங்களேழ் நாளீ ரெட்டாம்
உறைந்திடும் பலனே யாங்கள் உரைக்கின்றோம் பிதாவ
[ரிட்டம்
பறந்திடும் பூமி தானும் பாரினில் அலைச்ச லுண்டே.

48. இவன் பிறந்த காலத்தில், சுக்கிர மகா தசை இருப்பு ஐந்து வருடமும்; ஏழு மாதம்; பதினெறு நாட்களாம். அப்பொழுது எற்படக் கூடிய பலனே நாங்கள் சொல்லுகின்றோம். தகப்பனருக்குக் கெடுதி உண்டாகும். சொந்த நிலம் கைவிட்டுப் போகும். பலவிடங்களுக்குச் சென்று அலைய நேரிடும்.

49. நோகமே பாதை யுண்டாம் திரிச்சலாம் செலவு நோகம்
யோகமே குறைச்ச லாகும் உற்றவர் விரோதி யாகும்
பாகமாய்ச் சல்லிய முண்டு பந்துரு தகமும் நேரும்
வாகையாய் வனவா சந்தான் மாதுரு வயிற்றில் நோயாம்.

49. உடம்புக்கு நோய் எற்படும். அலைச்சலும் மிக்க செலவும் உண்டாம். தலன் குறைவுபடும். தன்னைச் சேர்ந்தவர்களிடம் விரோதம் உண்டாகும். கடன் எற்படும். உறவினர் வழியில் அசுபமும் நேரும். வனத்தில் வாழ்வதுபோன்ற நிலை உண்டாகும். தாய்க்கு வயிற்றில் நோய் எற்படும்.

ஜாதகம் 16

1. மதிமேடம் [1]புகரும் கன்னி [2]மங்கள னிரவி [3]புந்தி
விதிசனி துலையி லாக வியாழமும் வண்டி யாக
அதிகயர் [4]சாடி யாக அரியினில் கேது வாகத்
துதிசென்மம் மாட தாகத் தோன்றினுல் பலனைச் சொல்வீர்.

1. சந்திரன் மேஷத்திலும், சுக்கிரன் கன்னியிலும், செவ்வாய் சூரியன் புதன் சனி துலாத்திலும், குரு கடகத்திலும், இராகு கும்பத்திலும், கேது சிம்மத்திலும், இலக்கினம் விருஷபமாகவும் இருக்கும் நிலையில் தோன்றும் ஜாதகனுக்குப் பலன்கள் சொல்லுவீர்.

	சந்திரன்	லக்கினம்	
ராகு	இராசி சக்கரம்		குரு
			கேது
		செவ்வாய் சூரியன் புதன் சனி	சுக்கிரன்,

2. வந்தவ னுணும் சென்மம் வரைகின்றேரும் கீழ்மேல் வீதி
எந்தையே வடக்கு வாசல் ஈசனும் முசல்மான் கோரி
தந்தியும் தென்மேல் கோஷ்டம் தடாகமும் சோலை யுத்திரம்
முந்திய வடமேல் திக்கில் முயற்சியாய்த் [5]தும்பி நிற்பன்.

2. பிறந்தவன் ஆண் மகன் என்று சொல்லுகின்றேரும். பிறந்த வீடு கிழக்கு மேற்கு வீதியில், வடக்குப் பார்த்த வாயிலுடையது. சிவபெருமான் கோயில், மகமதியர் பள்ளிவாசல், விநாயகர் கோயில் இவைகள் தென்மேற்கில் உள்ளன. குளம், சோலை ஆகியன வடக்குத் திசையில் இருக்கின்றன. வடமேற்குத் திசையிலும் விநாயகர் கோயில் கொண்டுள்ளார்.

---

1. சுக்கிரன்
2. செவ்வாய்
3. புதன்
4. கும்பவிராசி
5. யானை: இங்கு யானை முகத்தையுடைய விநாயகரைக் குறிக்கும்.

3. பலசாலி அவ்வூர் வாசம் பாருத்தோர் செட்டு ஒங்கும்
இலகிய பேரூர் தன்னில் இராசர்கள் வாச மாகும்
நலமுள சேத்திரம் தன்னில் நாயகன் செனிப்பா னுகும்
தலமது பாகம் இரண்டாய்ச் சாற்றினேம் கேளு மம்மா.

3. பலசாலிகள் பலர் அவ்வூரில் வசிக்கின்றார்கள். பெரிய வியாபாரங்கள் அங்கு நடைபெறும். இங்ஙனம் சிறந்து விளங்குகின்ற அவ்வூர், அரசர்கள் வசிக்குமிடமாக விளங்கும். இந்தத் தலத்தில் ஜாதகன் பிறப்பான். இவன் பிறக்கும் வீடு இரண்டு பிரிவையுடையது என்று சொன்னேம். கேளுங்கள், காயே!

4. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோ மிருநி றத்தான்
கந்தன்மேல் பக்தி யுள்ளான் காவலன் சமதே கத்தன்
சிந்தையில் கபடு மில்லான் சிநேகிதர் அதிக முள்ளான்
வந்தவர்க் கன்ன மீவன் வாக்குகள் தப்பா னுமே.

4. இவனுடைய தகப்பனாரின் குணத்தை நாங்கள் சொல்லுவோம். கருமை நிறமுடையவன். முருகப்பிரான் மீது பக்தி கொண்டவன். நல்ல சரீரக் கட்டுடையவன். மனத்தில் வஞ்சனை யில்லாதவன். நண்பர்களை மிகுதியாகப் பெற்றவன். வீட்டைத் தேடி வந்தவர்கட்கு உணவு தருவான். சொன்ன சொல் தவறுதவன்.

5. பித்தமாம் தேக முள்ளான் பிறதேச லாப முள்ளான்
எத்திசைக் கீர்த்தி கொள்வன் யாரையும் வசியம் செய்வன்
உத்தமர்க் கினிய னுவன் உலகினில் செட்டுச் செய்வன்
சித்தமாய்ப் பூமி சேர்ப்பன் சோங்குமேல் சிலநாள் வாசம்.

5. பித்த தேகமுடையவன். அந்நிய நாட்டிற்குச் சென்று பொருள் சம்பாதிப்பவன். எல்லாத் திசைகளிலும் பரவிய புகழுள்ளவன். எப்படிப் பட்டவர்களையும் வசப்படுத்துவான். நற்குணமுடையோர்க்கு நல்லவனு யிருப்பான். வியாபாரம் செய்வான். நிலபுலங்கள் சேர்ப்பான். கப்பல் பிரயாணம் சிலகாலம் செய்வான்.

6. வண்டிவா கனமு முள்ளான் மாமிகள் இரண்ட தாகும்
குண்டைகோ விருத்தி யுள்ளான் குலத்துக்குச் சேஷ்ட [னுவன்
தண்டமிழ்க் கல்வி கொஞ்சம் சதாதிரிச் சலுமே உண்டாம்
அண்டினோர் தம்மைக் காப்பன் ஆள்கார ருடைய னுமே.

6. வண்டி முதலான பிரயாண சாதனங்களைப் பெற்றவன். இவனுக்கு மாமியர் இருவர். எருது, பசு விருத்தி யுள்ளவன். குலத்தில்

முதல்வன். இனிய தமிழ்க் கல்விப் பயிற்சி சிறிது இவனுக்குண்டு. எப்பொழுதும் இவனுக்கு அலைச்சல் ஏற்படும். தன்னை அடைந்தவர்களைக் காப்பான். பணியாட்களை யுடையவன்.

7. அக்கினி வடிவ முள்ளான் அவன்தந்தை ஆஸ்தி யில்லான்
நக்கன்மேல் பக்தி யுள்ளான் நன்முக வசிய முள்ளான்
அக்கரை சிலநாள செல்வன் அவனகையில் பத்ம ரேகை
முக்கிய தயிர்பா லிட்டன் முன்கோபம் கபடு கொஞ்சம்.

7. தீப்போன்ற செந்நிறமுடையவன். இவன் தந்தையினால் சேர்த்து வைக்கப்பட்ட சொத்து இல்லாதவன். சிவபெருமான்மீது பக்தியுள்ளவன். முக வசிகர முடையவன். கடல் கடந்து அயல்நாடு சென்று சிலகாலம் வசிப்பான். இவன் கையில் பத்மரேகை யுண்டு. தயிர், பால் இவற்றில் விருப்பமுள்ளவன். முன்கோப முண்டு. வஞ்சனையும் சிறிதுண்டு.

8. இன்னவன் துணைவர் தம்மை யியம்புவோ மாண்பால்
[மூன்று
கன்னியு மவனுக் கில்லை கண்டிடி லரிட்டம் காணும்
பன்னுமிக் குணத்தா னுக்குப் பாவையர் இரண்டி லேதான்
உன்னித மிரணடாம் மாதுக் குதிப்பனே நானகாம்
[சென்மம்.

8. இவனுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். ஆண்கள் மூவர். பெண் இல்லை. தோன்றினாலும் சேதமாம். இவ்வாறுகச் சொல்லப்பட்ட குணங்களையுடைய தந்தைக்கு, மனைவியர் இருவரில், இரண்டாவது மனைவிக்கு நான்காம் பிறப்பாக இந்த ஜாதகன் பிறப்பான்.

9. சாதகன் நிறம்கு ணத்தைச் சாற்றுவோ மிருநி றத்தான்
கோதிலா ஒடிசல் தேகி கூறுமன கோபி யாவன்
மேதினில் கல்வி யுள்ளான் இருசுகப் புசிப்பா னுகும்
தீதிலாக் குணத்தா னுகும் சேர்ந்தவர் தம்மைக் காப்பன்.

9. ஜாதகனின் நிறம், தன்மை இவைகளை இனிமேல் சொல்லுவோம். கரிய நிறமுடையவன். குற்றமில்லாத மெலிந்த சரீரமுள்ளவன். முன்கோபமுடையவன். படிப்புள்ளவன். சுகமான போஜனத்தை உண்பவன். நல்ல குணமுடையவன். அடைந்தவர்களைக் காப்பான்.

10. பலவித வணிபம் செய்வான் பந்துவும் மெச்ச வாழ்வன்
இனங்களால் பெருமை யுள்ளான் எதிரியை வசியம்
[செய்வன்
தனங்களும் அதிகம் சேர்ப்பன் தாரணி விருத்தி செய்வன்
கனமுடன் வாழ்வா னுகும் கனத்தவர் நேசம் கொள்வன்.

10. பலவிதமான வியாபாரங்கள் செய்வான். உறவினரும் பாராட்டும்படி வாழ்ந்திருப்பான். தன்னைச் சேர்ந்தவர்களால் இவனுக்குப் பெருமையுண்டு. தன் விரோதியையும் வசப்படுத்துவான். செல்வமும் மிகுதியாகச் சேர்ப்பான். வீண் நிலங்களை விருத்தி செய்வான். பெருமையுடன் வாழ்க்கை நடத்துவான். சான்றோர்கள் நட்பைக் கொள்ளுவான்.

11. சொன்னசொல் கேட்ப ரகும் துறவிகள் பக்தி யுள்ளான்
பன்னியே உரைக்க வல்லன் பாரினில் கீர்த்தி ஏற்பன்
உன்னித நடையு முள்ளான் உற்றதோர் தியாகி யாவன்
கன்னியர் மோக வாளும் காதலி மேலுங் கேளே.

11. பெரியோர் கூறும் சொற்களைக் கேட்பான். சந்நியாசிகளிடம் பக்தி கொள்ளுவான். பன்னிப் பன்னிப் பேசுதலில் வல்லவன். உலகில் புகழைப் பெறுவான். உயர்ந்த ஒழுக்க முள்ளவன். சிறந்த தியாகியாக விளங்குவான். பெண்களிடம் மோக முள்ளவன். பார்வதியே! மேலுங் கேள்.

12. தானிய விருத்தி யுள்ளான் சகலரும் மெச்ச வாழ்வன்
தாழ்விலாக் குடும்ப முள்ளான் சந்ததி அல்ல தாகும்
ரனரைச் சேரா ரகும் இரத்தினபூ ஷணங்கள் சேர்ப்பன்
ஆனதோர் ஆள்க ளுள்ளான் அகரியம் சொல்வா ரகும்.

12. தானியங்கள் விருத்தியாம். எல்லோரும் பாராட்ட வாழ்வான். தாழ்வையடையாத குடும்பத்தை யுடையவன். இவனுக்குப் புத்திர பாக்கியம் சிறப்பாக இல்லை. தாழ்ந்தவர்களோடு சேரமாட்டான். இரத்தினங்கள், ஆபரணங்கள் ஆகியவற்றைச் சேர்ப்பான். பணியாட்க ளுள்ளவன். வேடிக்கையாகப் பேசுவான்.

13. இவனுடைத் துணைவர் தம்மை இசைக்கின்றே மெழுவ
[ராகும்
அவனியி லாண்பால் காணே மம்மணி பெண்பால்
[ரெண்டு
நவனியில் விருத்தி யாகும் நாட்டுவோம் இவனுக் கேதான்
சிவனிடப் பாகத் தாளே செல்வியே மேலுங் கேளே.

13. இவனுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். பெண்கள் எழுவர் உளர். ஆண்கள் எவருமிலர். அவர்களில் இருவர் தீர்க்க ஆயுளுடன் இருப்பர் என்று சொல்லுவோம். சிவபெருமானின் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் பார்வதியே! மேலுங் கேள்.

14. உதித்தவன் மணத்தின் காலம் உரைக்கின்றேம் ஒருபான்
[ஏழில்
சதியிலா மேற்குத் திக்கில் சாற்றுவோம் மாதுர் வர்க்கம்
விதியினால் மனையாள் வாய்க்கும் வித்தகி தீர்க்க சீவி
நதிசடைப் பாகத் தாளை நங்கையே மேலுங் கேளே.

14. ஜாதகனின் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேம். பதினேழாம் வயதில், இவனுடைய ஊருக்கு மேற்குத் திசையிலுள்ள ஓர் ஊரிலிருந்து, தாயார் வழியைச் சேர்ந்த ஒரு பெண் இவனுக்கு மனைவியாக வாய்ப்பாள். அவள் தீர்க்காயுளுடனிருப்பாள். கங்கைநதியைச் சடைமுடியில் தரித்துள்ள சிவபெருமானின் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் பார்வதி தேவியே! மேலுங் கேள்.

15. மாதுரு குணத்தை யாங்கள் வரைகின்றே மிருநி றத்தாள்
மேதினி லுயர மில்லாள் வித்தகி யூகை சாலி
பாதக மெண்ணு நெஞ்சம் பாரினில் பித்த தேகி
கோதிலா வரனுக் கேதான். குணமுடன் நடக்க வல்லாள்.

15. இவன் தாயாரின் குணத்தை நாங்கள் சொல்லுகின்றோம். கருமை நிறமுடையவள். குள்ளமானவள். சாமர்த்தியசாலி. பிறருக்குத் தீங்கு எண்ணுத மனமுடையவள். பித்த சரீர முள்ளவள். தன் கணவனுக் குகந்த முறையில் நடந்து கொள்வதில் சிறந்தவள்.

16. அன்னையு மதிர்ஷ்ட சாலி அன்பான குணத்த ளாகும்
பன்னியே உரைக்க வல்லாள் பகைவரை மனத்தி
[லெண்ணுள்
பன்னுநன் னடக்கை யுள்ளாள் பாலர்மேல் பிரிய முள்ளாள்
கன்னென மொழியு முள்ளாள் கால்கரம் குறைவு முள்ளாள்!

16. இவளுடைய தாயார் மிக்க நல்லினை யுடையவள். அன்புடையவள். பன்னிப் பன்னிப் பேசுதலில் வல்லவள். தன்னிடம் விரோத முள்ளவர்களை மனத்தாலும் நினையாள். நல்லொழுக்க முள்ளவள். புதல்வர்கள்மீது விருப்ப முடையவள். கரும்பு போன்ற இனிய சொற்களைப் பேசுபவள். கை, கால்களில் ஊனமுள்ளவள்.

17. இவளுடைத் துணைவர் தம்மை இயம்புவோ மாண்பால்
[இரண்டு
அவனியில் கன்னி நான்கு அறைகின்றே மிவளுக் கேதான்
நவமதில் துணைவர் சேதி நாட்டுவோம் கேளு மடமா
தவமுடை யோரைக் காக்கும் தயாபரி மேலுங் கேளே.

17. இவருடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுவோம். ஆண்கள் இருவர். பெண்கள் நால்வர் என்று சொல்லுகின்றோம். உடன் பிறந்தார் கள் செய்தியைச் சொல்லுகின்றோம்; கேளுங்கள் தாயே! தவத்தை இயற் றிய பெரியோர்களைக் காப்பாற்றும் தயையுள்ள பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

18. தேசாந்தர மொருவன் செல்வன் திரளான பாக்கியம்
[சேர்ப்பன்
வாசமா யிளையோ னும்தான் மருவுவன் தந்தை யில்லம்
பாசமாய்த் துணைவி ஒன்று பருகாது துன்ப மாகும்
ஆசையாய் வரனின் கூட வன்புடன் இருப்பர் மற்றோர்.

18. ஒரு சகோதரன் தேச யாத்திரையாகச் செல்லுவான். சென்ற விடத்தில் மிக்க செல்வத்தைச் சேர்ப்பான். அவனுக்கு இளையவன் தந்தை யின் வீட்டிலேயே வசிப்பான். ஒரு சகோதரி வாழ்க்கையில் துன்பப் படுவாள். மற்ற சகோதரிகள் தங்கள் கணவன்மார்களுடன் நலமுடன் வசிப்பார்கள்.

19. முனிவரிவ வாருய்க் கூற மொழிகுவாள் அம்மன் தானும்
கனமுடன் தந்தைக் கேதான் கழறினீர் தாரம் ரெண்டாய்
மனமுடன் முதல்மா துக்கு மதலைகள் உண்டோ வென்னக்
குணமில்லை ஆண்பா லும்தான் செல்வதி ஒருத்தி தீர்க்கம்.

19. முனிவர் இவ்விதமாகச் சொல்ல, பார்வதிதேவி கேட்கின்றாள். இந்த ஜாதகனின் தந்தைக்கு இரு மனைவியர் என்று கூறினீர்கள். முதல் மனைவிக்குக் குழந்தைகள் உண்டோ சொல்லுங்கள்; என்று கேட்க, ஆண் சந்ததி யில்லை. பெண் ஒருத்தி பிறந்து தீர்க்கமாக இருப்பாள்.

20. சாதகன் தனக்குப் புத்திரன் சாற்றவே பலத்தைக் காணேம்
மாதவர் சொல்லும் போது மங்கையுங் கேட்க லுற்றாள்
மேதினில் அந்தச் சேதி விளம்புவீ ரென்று கேட்கக்
கோதிலாத் திரிகோ ணத்தில் கேதுவு மிருப்ப தாலே;

20. ஜாதகனுக்குப் புத்திரபாக்கியத்தைப் பற்றிச் சொல்லுவோமென் றால், கிரகவலிவு இல்லை என்று முனிவர் சொல்லும்போது, பார்வதியம்மன் கேட்கத் தொடங்கினாள். புத்திர பாக்கியம் ஏற்படாதிருக்கும் காரணத்தை விளக்கமாகச் சொல்லுவீர் என்று கேட்க, திரிகோண ஸ்தானத்தில் கேது நிற்பதாலும்;

21. புத்திர தோஷ மாகும் பூருவ ஜூழி யாலே
சுத்தமா யந்த ஜூழைச் செப்புவோம் கேளு மம்மா
வித்தகன் முன்சென் மத்தில் விளங்கிய பழனி பக்கல்
சித்தூரில் சைவ சேயாய்ச் செனித்துமே கல்வி தன்னுல் ;

21. முன்சென்மத் தீவினையினாலும் இவனுக்குப் புத்திரதோஷம் ஏற்படும். அந்தப் பூர்வ சென்ம தோஷத்தை நிச்சயமாய்ச் சொல்லுகின்றேம், கேளுந் தாயே! இவன், முற்பிறப்பில், பழனி என்ற தலத்துக்கு அருகில் உள்ள ஒரு சிறிய ஊரில், சைவ மரபினராகப் பிறந்து, கல்வி முதலியவற்றைக் கற்று ;

22. பலருக்கு முபதே சித்துப் பரமனைப் பூசை செய்து
குலவிய மனைவி மக்கள் குறைவிலாச் செல்வம் பெற்று
உலகினில் பெருமை பூண்டு உத்தமன் வாழும் நாளில்
தலைவியும் ஆசையாலே [1]தத்தையும் வளர்த்தாள் என்றேும்.

22. பலருக்கும் உபதேசங்கள் செய்து, கடவுளுக்குப் பூசைகள் இயற்றி, மனைவி மக்களுடன் நிறைந்த செல்வத்தையும் அடைந்து, உலகில் பெருமை பெற்று இவன் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில், இவன் மனைவி மிக்க விருப்புடன் ஒரு கிளியை வளர்த்தாள்.

23. வார்த்தைகள் விசேட மாக வர்ணித்து இருக்குங் காலை
மார்ச்சாலம் கவர்ந்தான் அதனை வஞ்சித்து யிவனு மேதான்
பூர்த்தியாய் ஞாதிக் கேதான் பாகமும் தராத தாலே
சாற்றுவார் ஞாதி தானும் தனியனுய் உதித்து மேலும் ;

23. அதனை விசேஷமான சொற்களைப் பேசும்படி பழக்கி வளர்த்து வரும் நாளையில், இந்த ஜாதகன் ஒரு பூனையை எவி வஞ்சகமாகக் கிளியைக் கொன்று விட்டான். தவிர, தன்னுடைய பங்காளிக்கு ஆஸ்தியில் முறைப்படி சேர வேண்டிய பாகத்தையும் கொடுக்கவில்லை. அதனால் மனவருத்தமடைந்த ஞாதி, இவனை நோக்கிச் சொல்லுவான். "நீ வரும் பிறவியில் தனியனுய்ப் பிறந்து ;

24. தந்தையின் ஆஸ்தி யின்றித் தாழ்வான குலமு தித்து
நொந்திடு மதலை யென்று நுவர்ந்தனன் ஞாதி தானும்
இந்தவார் மன்னன் தானும் இன்பங்க ளற்று மேதான்
அந்திய காலம் தன்னில் அந்தக னுகி யேதான் ;

---

1. கிளி.

24. தந்தையினால் சேர்த்து வைக்கப்பட்ட ஆஸ்தியில்லாதவனாய், தாழ்வான வம்சத்தில் பிறந்து, சந்ததியின்றி, வாழ்வாய்" என்று சாப மிட்டான். இந்தச் சாபத்தை யேற்ற இவன் அப்பிறவியிலேயே இன்பங் கள் அனைத்தும் நீங்கப் பெற்றவனாய், முடிவுக் காலத்தில் குருடனாகி ;

25. மரணமே யாகி யேதான் மறலிதன் பதிக்குச் சென்று
பிரமனால் வரையப் பட்டுப் பிறந்தவ னிவனே யென்றும்
தெரியவே இச்சென் மத்தில் சேயர்கள் தோஷ முண்டாம்
அறைகின்றோம சாந்தி ஒன்று அந்ததோர் தோஷம் தீர.

25. மரணமடைந்து, எமனுலகஞ் சென்று, மீண்டும் பிரமனால் படைக் கப்பட்டு, இப்பிறப்பில் பிறந்தவன் இவன் என்று சொன்னோம். இப்பிறப் பில் இவனுக்குப் புத்திர தோஷம் உண்டாம். அந்தத் தோஷம் நீங்கு வதற்கு ஒரு பரிகாரம் கூறுகின்றோம்.

26. மனைவியும் தானு மாக வடதிசைக் கச்சி தன்னில்
கனமுடன் குமரன் கோட்டம் கதிர்வேலர்க் கர்ச்சித் தேத்தி
சினமிலா ஏழு கார்த்தி சென்றுபின் ரசிதம் தன்னால்
அனையவே கிளிபோல் செய்து அந்தணர் தமக்கு மேதான்,

26. மனைவியும் இவனுமாக, வடக்குத் திசையிலுள்ள காஞ்சீபுரத்தில், உள்ள குமர கோட்டத்துக்கு ஏழு கார்த்திகைகள் சென்று, முருகக் கடவு ளுக்கு அருச்சனை முதலியவை செய்து துதித்து, பின்பு வெள்ளியினால் கிளி போல் செய்து, பிராமணர்களுக்கு ;

27. விடம்கந்தம் சொர்ணத் தோடு விப்பிரர் தமக்கு யீந்து
அடைவுடன் உள்ளூர் மீண்டு ஆளனும் மனைவி யோடு
படமுள வரசு தன்னைப் பட்சமே பிரதிட்டை செய்தால்
உடனேதான் மதலை தோன்றும் உத்தமி கேளு மம்மா.

27. சந்தனம் தாம்பூலம் பொன் இவற்றுடன் அதைத் தானமாகக் கொடுத்து உள்ளூருக்குத் திரும்பி, படத்தோடு கூடிய நாகப் பிரதிஷ்டையும் செய்தால், உடனே புத்திர பாக்கியம் ஏற்படும். நற்குணமுள்ள உத்தமியே ! கேளுங்கள்.

28. சொற்படி செய்யா னாகி லிலகாது மதலை தானும்
சொற்படி செய்வா னாகில் தோன்றிடும் மதலை யென்றும்
மைப்புடன் ஆண்பா லொன்று மேதினில் கன்னி மூன்று
நிற்குமே என்று சொன்னோம் நிமலியே மேலும் கேளே.

28. நாங்கள் கூறியவாறு செய்யாது தவறுவானாகில் புத்திர பாக்கி யம் ஏற்படாது. சொன்னபடி செய்தால் புத்திர சம்பத்து உண்டாகும்

என்று கூறினேம். ஓர் ஆண் குழந்தையும், மூன்று பெண்களும் தீர்க்க மாக விளங்குவர் என்று சொன்னேம். குற்றமற்ற பார்வதிதேவி! மேலும் கேட்பாயாக.

29. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் தில்லை [கீழ்பால்
பந்தமாய்ப் பேரூர் தன்னில் பாலகன் மறவர் வமிசம்
வந்துதே உதித்து மேதான் மாநிதி அதிகம் பெற்றுச்
சந்ததம் மனைவி மைந்தர் தான்வாழும் காலம் தன்னில்,

29. ஜாதகனுடைய தகப்பனாரின் முற்பிறப்பைச் சொல்லுவோம். சிதம்பரத்துக்குக் கிழக்கேயுள்ள பெரியஊரில், மறவர் மரபில் பிறந்து மிகுந்த செல்வத்தைப் பெற்று, மனைவி மக்களுடன் வாழ்ந்திருக்கும் காலத்தில்;

30. அந்நகர் அரனுக் கேதான் அவன்திருப் பணியும் செய்யும்
வந்தவர்க் கன்ன மீந்து மாநிலம் தீர்த்தம் தோய்ந்து
பன்னியே மரண மாகிப் பங்கய மலரோன் தன்னுல்
உன்னியே வரையப் பட்டு உதித்தவ னிவனே யென்றேரும்.

30. அந்த நகரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானுக்குத் தொண்டுகள் பல செய்தும், வீடுதேடி வந்தவர்கட்கு உணவு அளித்தும், பூமியில் பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடியும், முடிவில் மரணமடைந் தான். பின்பு தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனுல் படைக்கப் பட்டு, இவ்வுலகில் இப்பிறப்பாய்ப் பிறந்தவன் இவன் தந்தை என்று சொன் னேம்.

31. மறுசென்மம் காஞ்சி தன்னில் மன்னவன் கங்கை வமிசம்
பெருமையா யுதித்து மேலும் பிரபல செட்டுச் செய்து
வருவோர்க்கு அன்ன மீவன் மாதுரு முன்சென் மத்தை
அரனிடப் பாகத் தாளே அறைகின்றேரும் கேளு மம்மா!

31. மறு பிறவியில், காஞ்சிபுரத்தில் உயர்ந்த வேளாளர் மரபில் மேன் மையுறத் தோன்றி, பற்பல வியாபாரங்கள் செய்து, விருந்தினர்களுக்கு விருந்தளித்து வாழ்ந்து வருவான். தாயின் முற்பிறப்பைக் கூறுகிறேன். சிவபெருமானின் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் பார்வதியே! கேட்பாயாக.

32. முன்சென்மம் வீரிஞ்சி கீழ்ப்பால் முதுமறை குலமு தித்துப்
பொன்னெடு பணிதி பெற்றுப் புத்திர ருள்ளா ளாகி
இன்னவள் வரனின் கூட இன்பமாய் வாழும் நாளில்
அன்புடன் வந்த வூழை அறைகின்றேரும் கேளு மம்மா.

32. இவள் முற்பிறப்பில் விரிஞ்சிபுரத்திற்குக் கிழக்கேயுள்ள ஒரு ஊரில், உயர்ந்த அந்தணர் குலத்திலே தோன்றி, சீரும் செல்வமும் பெற்று, மக்கட்பேறும் உண்டாகி, கணவனுடன் சிறப்பாக வாழ்ந்துவரும் காளில், இவளே வந்தடைந்த தீவினையைக் கேளுங்கள்.

33. மாதாந்தர காலம் தன்னில் மங்கையுந் தலங்கள் சென்றும்
மேதினில் நதிகள் தாண்டி வித்தகி வந்தா ளென்றேரும்
கோதிலா அந்தத் தோடம் குறித்தனம் வேறொருன் றில்லை
தீதிலா மரண மாகிச் செனித்தவ ளிவளே யென்றேரும்.

33. இவள் மாதவிடாய் நேரத்தில் திவ்வியத் தலங்களுக்குச் சென்றும், பற்பல நதிகளைத் தாண்டியும் யாத்திரை செய்தாள். அந்தத் தோஷம் இவளை யடைந்தது. வேறு குற்றம் ஒன்றும் புரிந்திலள். பிறகு மரண மடைந்து இப்பிறப்பை யடைந்தாள்.

34. முனிவரிவ் வாறுய்க் கூற மொழிகுவா ளம்மன் தானும்
கனமுடன் முன்சென் மத்தில் காதலி பிரம்ம வமிசம்
அனையவே யுதித்துப் பின்பு அவளுமே அக்கினி வமிசம்
இணையிலா உதித்த தென்ன இயம்புவீ ரென்று கேட்டாள்

34. முனிவர் இவ்வாறு கூறும்போது, பார்வதி கேட்கின்றாள். முன் பிறவியில் இவள் உயர்ந்த அந்தணர் குலத்திலுதித்து, இப்பிறவியில் வன்னியர் மரபில் பிறந்த காரணம் என்ன? அந்தக் காரணத்தைத் தாங்கள் உரைக்க வேண்டும்.

35. முன்சென்மம் விடாய்க்கா லத்தில் முயற்சியால்
[தலங்கள் சென்று
அன்புடன் நதிகள் தோய்ந்து அணுகிய தோடத் தாலே
மன்னிய இக்கு லத்தில் வந்தன ளெனறு சொன்னேம்
பின்சென்மம் தன்னை யாங்கள் பேசுவோம் கேளு மம்மா.

35. முற்பிறவியில் மாதவிடாய்க் காலத்தில் வேண்டுமெனத் தலங்களுக்குச் சென்றும், நதிகளைத் தாண்டியதுமான தோஷங்களினால் இக் குலத்தில் உதித்தனள் என்று கூறினேம். பின் பிறப்பைக் கூறுகின்றேம்; கேளுங்கள்!

36. வேலன்கா டதனி லேதான் வைசிய குலமு தித்து
ஞாலமேல் பெருமை பூண்டு நற்புத்தி ரருள்வா ளாகி
ஆலங்காட் டண்ண லுக்கு அவள்பணி விடைகள் செய்வள்
காலனை யுதைத்தோன் தேவி கழறின மொழிகுன் றுது.

36. திருவாலங்காட்டில், வைசிய குலத்தில் உதித்து, உலகில் பெருமையுடன் வாழ்வாள். மக்கட் பேறும் பெற்றிடுவாள். திருவாலங்காட்டில் உள்ள கடவுளுக்குக் கைங்கரியங்கள் செய்வாள். மார்க்கண்டேயனைக் காக்க எமனைக் காலாலுதைத்த பரமனின் மனைவியே! நாங்கள் கூறிய சொற்கள் மாறா.

37. இவன்பிதா மரண காலம் இயம்புவோ மிருபா னேழில்
ஆவனியில் துலாமா தத்தில் அறைகின்றோம் கண்டம்
[தானும்
நவமதில் மாது ருக்கு நாட்டுவோ முப்பா னறில்
சிவநட மிடுமா தத்தில் செப்புவோம் கண்டம் தானே

37. ஜாதகன் தந்தைக்கு மரண காலத்தைக் கூறுகின்றேன். இவனது இருபத்தேழாவது வயதில் ஐப்பசி மாதத்தில் தந்தைக்கு மரணம் ஏற்படுமெனக் கூறுகின்றோம். இவனது முப்பத்தாறாம் வயதில் மார்கழி மாதத்தில் இவன் தாயாருக்கு மரணம் ஏற்படும் என்று கூறுவோம்.

38. இன்னவன் மரண காலம் இயம்புவோ மெழுபான்
[ரெண்டில்
உன்னித மேட மாதம் உயர் பட்ச துவாதசி யாகும்
தன்னிலே மார்பு நோயால் சாதகன் மரண மாவன்
அன்னமே யாங்கள் சொல்லு மருள்மொழி குன்றா
[தென்றோம்.

38. ஜாதகனின் மரண காலம் கூறுவோம். எழுபத்திரண்டாம் வயதில் சித்திரை மாதம், சுக்கில பட்சத் துவாதசி திதியில், இவன் மார்வலியால் மரணமடைவான். இவ்வாறு நாங்கள் கூறும் மொழி ஒருபொழுதும் மாறாது.

39. இதுமட்டில் சிலவே சென்றும் இசைந்துமே நீங்கு
[மென்றோம்
சதிருடன் பின்சென் மத்தைச் சாற்றுவோம் அருணை
[நாட்டில்
நதிகங்கை வம்மி சத்தில் நாயக னுதித்து நோலும்
அதிவித யோக மாக அவனுமே வாழ்வா னென்றோம்.

39. இதுவரையில், இந்த ஜாதகனுக்குச் சில தீவினைகள் வராமல் விலகியும், சில வந்தும் நீங்கும். இவனது மறுபிறவியைக் கூறுகின்றோம். இவன் திருவண்ணாமலையைச் சேர்ந்த பிரதேசத்தில் வேளாளர் குலத்தில் உதித்து, பல யோகங்களுடன் நலமுற வாழ்ந்து வருவான் என்றோம்.

40. பிறந்தசேய் யோகச் செய்கை பேசுவோம் பாக்கிய வானும்
நிரந்தரம் பூமி சேர்ப்பன் நித்தியம் சுகபு சிப்பு
அறைந்திடு மனைகச் செட்டு அவனுமே செய்வா னுகும்
சிறந்திடு சுசீல னுவன் தேவர்மேல் பக்தி யுள்ளான்.

40. அவ்வாறு உதித்த ஜாதகனின் யோகங்களைப் பற்றிக் கூறுகின்றோம். அவன் நல்ல பாக்கிசாலி. எப்பொழுதும் நிலபுலன்களைச சேர்ப்பான். நாடோறும் பல வியாபாரங்கள் செய்வான். நல்ல உணவை உட்கொள்வான். சிறந்த நல்லொழுக்க முடையவனுவான். கடவுள் பக்தி நிறைந்தவன்.

41. கண்டித வார்த்தை யுள்ளான் கனத்தஆள் அடிமை [சேர்ப்பன்
தண்டமிழ்க் கல்வி யுள்ளான் சன்மார்க்கன் தியாகி யாவன்
அண்டினோர் தம்மைக் காப்பன் அதிகபூ ஷணமும் சேர்ப்பன்
குண்டைகோ விருத்தி யுள்ளான் குலத்துக்குத் தலைவ [னுவன்.

41. கண்டிப்பாகப் பேசுவான். மிகுதியான வேலைக்காரர்களை உடையவன். இனிய தமிழ்க் கல்வியைக் கற்பான். நன்னெறியில் நடப்பான். தியாகங்கள் செய்வான். தன்னை வந்தடைந்தவர்களைக் காப்பாற்றுவான். நிறைய ஆபரணங்களை வாங்குவான். காலடைச் செல்வம் பெருகும். தன்னினத்துக்குத் தலைவனுக விளங்குவான்.

42. நெய்தொழில் தன்னி னுலும் நிலத்தினுல் கிருஷி யாலும்
உய்யவே செட்டி னுலும் உயர்ந்திடும செல்வந் தானும்
பையவே பூமி தன்னுல் பாக்கியம் நேரு மென்றோம்
செய்யவே ழாயி ரம்பொன் சேர்ப்பனு மென்று சொன்னோம்.

42. நெசவுத் தொழிலாலும், விவசாயத்தாலும், வியாபாரத்தாலும் செல்வம் பெருகும். பூமியாலும் பாக்கியம் ஏற்படும். ஏழாயிரம் பொன்களுக்குமேல் பொருளைச் சேர்ப்பான் என்று கூறுகின்றோம்.

43. அத்திரி முதல்வ ரான அருமுனி யிவ்வார் கூற
வித்தகர் புயண்டர் தானும் விளம்புவார் சங்கை யொன்று
பத்திய நிலத்தி லேதான் பாக்கியம் நேரு மென்றீர்
எத்திசை எந்தப்பூமி எக்காலம் சொல்லு மென்றார்.

43. அத்திரி முதலிய அரிய முனிவர்கள் இவ்வாறு கூறவும், புஜண்ட முனிவர் கேட்கின்றார்; இவனுக்கு நல்வழியில் சேர்ந்த நிலத்தினுல் பெரும் பாக்கியங்கள் உண்டாம் என்று கூறினீர்கள். எந்தத் திசையில் எந்த நிலத்தின் மூலம் அப்பாக்கியங்கள் கிட்டும்? கூறுங்கள்.

44. தன்னுடை யில்லத் திற்குத் தங்கிய கிழக்குப் பாதி
இன்னவன் தனக்குச் சேர்ந்து இலகிடும் பொருளும் தானும்
பன்னிய புகரோன் தசையில் பாக்கியன் குருபு சுப்பில்
மன்னிய காலம் தன்னில் வந்திடும் பொருள னேகம்.

44. இவனது வீட்டுக்குக் கிழக்குத் திசையில் பாதியளவு நிலம் இவனைச் சாரும். அதனால் இவன் பொருளும் பெருகும். சுக்கிர மகா தசையில், பாக்கியாதிபனை குரு புக்தியில் இவனுக்குச் செல்வம் மிகுதியாக வந்து சேரும்.

45. உதித்தவன் சனன காலம் உயர்கேது திசையி ருப்பு
விதித்திட ஆண்டு நான்கு மேவிய திங்க ளெட்டே
சதிருடன் நாள்கள் மூன்றும் சாற்றுவோம் பலனே யாங்கள்
விதவித நோய்கள் காணும் விரயங்கள் மிகவே யுண்டு.

45. இவன் சனன காலத்தில் கேதுமகா தசையில் இருப்பு வருஷம் நான்கும், மாதங்கள் எட்டும், நாட்கள் மூன்றும் ஆமென்று நாங்கள் கூறுவோம். இவனுக்குப் பலபல நோய்கள் உண்டாம். செலவும் அதிகமாக இருக்கும்.

46. திரிச்சலு மனவ லேச்சல் செலவுண்டு வரவு கொஞ்சம்
பெருத்திடும் செட்டுத் தானும் பேசுவோம் ருணங்கள் [சேரும்
வருத்தங்கள் பொருள்மூ லத்தால் வந்திடும் சிலவே னீதாம்
நிறைந்திடு பூமி சேரும் நிமலியே மேலுங் கேளே.

46. மனஆயாசமும் திரிச்சலும் அதிகமாக ஏற்படும். வியாபாரம் பெருகும். கடன் உண்டு. பொருள் மூலமாக மன வருத்தங்களும் வரும். சில சமயங்களில் மிகுதியாகப் பூமி சேரும். பார்வதியே! கேட்பாயாக.

47. புகர்தசை இருப தாண்டும் புகலுவோம் பலனே யாங்கள்
அகமது பாதி சேரும் அனேகரின் உறவே யாகும்
வகையுட னன்னிய தேசக் கூட்டுவா ணிபமே செய்வன்
தகைமையாய்ப் பூமி சேரும் சாற்றினேம் நிதிநிட் சேபம்.

47. சுக்கிர மகா தசை இருபதாண்டின் பலன்களைக் கூறுகின்றோம். இல்லத்தில் பாதி சேரும். பலருடன் கூட்டு ஏற்படும். அயல்நாட்டு வாணிபங்கள் மிகுதியாகச் செய்வான். தகுதியாக நிலபுலன்கள் சேரும். புதையலும் கிடைக்கும்.

48. சகோதர சுபமே யுண்டாம் தனக்குமே மணமே காணும்
பகைவர்க ளுறவே யாகும் பலபல ஆட்கள் சேரும்
அகமது மகிழ்ச்சி யாகும் அணுகாது தரித்திர மென்றும்
இகபர னன்புண் டாகும் ஈச்வரி மேலுங் கேளே.

48. சகோதரர்களுக்கு நன்மைகளுண்டாம். தனக்கும் திருமணம் கூடைபெறும். பகைவர்களும் நண்பராவர். பல வேலையாட்கள் சேருவர். இல்லத்தில் மகிழ்ச்சி நிலவும். வறுமை யணுகாது. இம்மை மறுமைக்குரிய நன்மைகளுண்டாம். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

49. இதற்குமேல் மரணம் மட்டும் இலகாது தரித்தி ரங்கள்
விதவித லாப முண்டு மண்ணினில் கீர்த்தி யோங்கும்
நதிபல தீர்த்தம் தோய்வன் நற்குரு உபதே சங்கள்
சதிருடன் பெருவா னென்றும் சங்கரி மேலுங் கேளே.

49. இதற்குமேல் இறக்கும்வரை வறுமையே வராது. பற்பல இலாபங்கள் எற்படும். உலகில் புகழுண்டு. புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல் செய்வான். நல்ல ஆசானை யடைந்து நல்லுபதேசங்களைப் பெறுவான். பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 17

1. மதி[1]குசன் [2]வருடை யாக மந்தனு முச்ச மாகப்
புதன்புகர் இரவி பொன்னும் புக்கிட [3]அலவன் தன்னில்
விதி[4]கருங் கோளும் சாடி மேவியும் கேது சீயம்
நதிபிறை அணிந்தோன் [5]ஊர்தி நல்கிய சென்ம மாக :

1. சந்திரன் செவ்வாய் மேஷத்திலும், சனி துலாத்தில் உச்சமாகவும் புதன் சுக்கிரன் சூரியன் குரு கடகத்திலும், இராகு கும்பத்திலும், கேது சிம்மத்திலும் தங்கி, கங்கை நதியையும், இளம்பிறைச் சந்திரனையும் சடை முடியிலணிந்த சிவபெருமானின் வாகனமாகிய விருஷபம் லக்கினமாகவும் ;

	சந்திரன் செவ்வாய்	லக்கினம்	
இராகு	இராசி சக்கரம்		புதன் சுக்கிரன் சூரியன் குரு
			கேது
		சனி	

2. இந்தவார் சேதி சொல்வாய் இளவலு மாண்பால் சென்மம்
வந்தவன் வடதென் வீதி வாசலும் இந்திர லோக்கம்
தந்தியும் மாரி கீழ்பால் சாற்றினேம் ரதமு மூண்டு
விந்தையாய்க் காளி தந்தி மேவிடும் தென்கீழ் தன்னில்.

2. உள்ள இந்த ஜாதகப் பலன்களைச் சொல்லுவீர், முனிவரே ! இஃது ஆண்மகன் ஜாதகம். பிறந்த வீடு வடக்குத் தெற்கான தெருவில், கிழக்கு நோக்கிய வாயிலையுடையது. விநாயகர் கோயிலும் மாரியம்மன் கோயிலும் கிழக்கில் உள்ளன என்று கூறினேம். அங்கு, தேர் ஒன்று முள்ளது. காளி, யானைமுகக் கடவுள் ஆகியோரது கோயில்கள் தென் கிழக்கில் இருக்கின்றன.

---

1. செவ்வாய்.
2. மேஷ ராசி.
3. கடகம்.
4. இராகு.
5. விருஷபம்.

3. தென்திசை நதியு முண்டு சிதைந்திடு மீசன் கோட்டம்
அன்னையு முனியும் நிற்கும் அருகரும் வடமேல் தங்கும்
பின்னமாம் மாயோன் மீனம் புராந்தக னதன்கீழ் தங்கும்
மன்னர்கள் துருவம் கீழ்பால் மங்கையின் வரங்கள் சூழி.

3. தெற்குத் திசையில் ஓர் ஆறும் ஓடுகின்றது. சிதைந்துள்ள சிவ பெருமான் கோயிலொன்றும் அந்தத் திசையில் உள்ளது. அம்பிகை, முனி யாண்டவர், ஜைனர் கோயில்களும் வடமேற்குத் திசையில் உள்ளன. இடிந் துள்ள திருமாலின் கோயில் ஒன்று வடகிழக்கில் இருக்கின்றது. மற்றொரு சிவபெருமான் கோயில் அதற்குக் கிழக்குத் திசையில் உள்ளது. அரசர்கள் அரண்மனைகள் கீழ்த்திசையில் இருக்கின்றன. அம்பிகை கோயிலும் மலைக் கோட்டையும் அங்குள்ளன ;

4. பலவித சோலை யுண்டு பலசாதி யவ்வூர் வாசம்
நவமுள தந்தை மாதா நற்புத்திர களத்திர யோகம்
குலவிய முன்பின் சென்மம் கூறுவோ மிந்நூல் தன்னில்
மலையிறை மகளே யாங்க ளறைகின்றோம் விபர மாக.

4. பலவிதமான சோலைகளுள. பல்வேறு சாதி மக்கள் அங்கு வாழ் கின்றார்கள். இவ்வித நிலையிலுள்ள ஊரில், பிறந்த இந்த ஜாதகனின் தந்தை, தாய், புதல்வர், மனைவியர் ஆகியோரது யோகங்கள், முற்பிறப்பு, மறு பிறப்புக்கள் முதலான அனைத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுவோம். மலைகளுக்கு அரசனை இமவானின் புதல்வியே ! விவரமாகப் பலன்களைச் சொல்லப் போகின்றோம்.

5. தாதைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு மிளையா ளீன்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
கோதிலாத் துணைவர் தம்மைக் கூறுவோ மாண்பா
[லொன்று
மேதினில் தீர்க்க மென்றோம் வித்தகி கேட்க லுற்றாள்.

5. இந்த ஜாதகனின் பாட்டனுக்கு இரு மனைவியர். அவர்களில் இளைய மனைவிக்குப் பிறந்தவன் இந்த ஜாதகனின் தந்தையாவன். அவ னுக்குச் சகோதர பாவத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஆண்மக னொரு வன். அவன் உலகில் தீர்க்கமான ஆயுளுட னிருப்பான் என்று கூறி னோம். பார்வதி கேட்கின்றாள்.

6. முந்தின மாதா வுக்கு மொழிகுவீர் புத்திர பாகம்
எம்மையே சொல்லு கின்றேன் ஏழுது சென்ன மாகும்
வந்தவர் யாவும் சேதம் மன்னவன் ஒருவ னுண்டு
அந்தியி லென்று சொன்னோம் அவனுமே வேறுய்ச்
[செல்வன்.

6. மூத்த தாயாருக்குப் புத்திர பாவத்தைப் பற்றிச் சொல்லுவீர், முனிவரே! என் தாயே! கூறுகின்றேன். அவளுக்கு ஏழு குழந்தைகள் பிறக்கும். ஓர் ஆண்மகன் இலேப்பான். மற்றக் குழந்தைகள் அனைத்தும் சேதமாம். அவனும் முடிவில் வேறு குடும்பமாகச் செல்லுவான்.

7. மனமது அழுத்த முள்ளான் மர்மவான் ஈகை கொஞ்சம்
தனமிகச் செலவு செய்யான் தைரியன் அல்ப உண்டி
கனதன முடைய னுவன் காரிய சமர்த்தன் என்றேரும்
சினமிலான் அடக்க முள்ளான் தேவியே கேட்டி டாயே.

7. அவன் நெஞ்சழுத்த முள்ளவன். மர்மமுடையவன். கொடைக் குணமும் சிறிதுண்டு. பணத்தை மிகுதியாகச் செலவு செய்யமாட்டான். தைரியசாலி. குறைவான உணவை உட்கொள்ளுவ ன். மிக்க செல்வமுடைய வன். காரியங்கள் செய்வதில் சாமர்த்திய முடையவன். கோபமில்லாத வன். பணிவுடையவன். பார்வதி தேவியே! கேட்பாயாக.

8. பாரியாள் ஒன்றே யாகும் பாலர்க ளாண்பால் ரெண்டு
தீரமாய்ப் பெண்பால் அவ்வார் செப்புவோம் தீர்க்க மாகக்
கூறினேம் வயது தீர்க்கம் குமரனும் கிருஷி செய்வன்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை மேலுங் கேளே.

8. இவனுக்கு மனைவி ஒருத்தியே. புதல்வர் இருவர்; புதல்வியர் இருவர் உளர் என்று சொல்லுவோம். அவர்கள் நீண்ட ஆயுளைப்பெற்று விளங்குவர். இவனும் குறைவில்லாத வயதைப் பெற்றிருப்பான் என்று சொன்னேம். பயிர்த்தொழில் செய்வான். முருகக்கடவுளைப் புதல்வனாகப் பெற்ற பார்வதிதேவியே! மேலுங் கேட்பாயாக.

9. தந்தையின் இனையோன் சேதி சாற்றுவோம் கல்வி [கொஞ்சம்
முந்திடு மனத்த னுகும் நேமியில் சல்லிய முள்ளான்
எந்தெந்தத் தேசம் செல்வன் இடறுக ளனந்தம் உள்ளான்
தந்தையின் பூமி கொஞ்சம் தானவன் விரயம் செய்வான்.

9. ஜாதகன் சிறிய தகப்பனாரின் செய்தியைக் கூறுவோம். சிறிது படிப்பு உண்டு முற்போக்கான மனமுடையவன். உலகில் கடனுள்ளவ னாக விளங்குவான். பல நாடுகளுக்குச் செல்லுவான். மிகுதியான துன்பங் களுள்ளவன். தகப்பனார் தேடிவைத்த நிலத்தில் சிறு பகுதியை விரயம் செய்துவிடுவான்.

10. செலவுகள் செய்வா னுகும் சிறையாகச் சிலநாள் வாழ்வன்
நலமுள வயது தீர்க்கம் நாயகி ஒருத்தி யென்றேம்
நீலமையாய் ஆண்பால் ஒன்று நிகழ்த்துவோம் பெண்பால்
[ரெண்டு
குலவிடு மென்று சொன்னேம் கோமளி கேட்க லுற்றாள்.

10. மிகுதியாகச் செலவு செய்வான். சிறையிலிருப்பது போலச் சுதந்திரமின்றிச் சிலகாலம் வசிப்பான். தீர்க்கமான ஆயுளைப் பெற்றவன். இவனுக்கு மனைவி ஒருத்தியே என்று கூறினேம். புதல்வன் ஒருவனும் புதல்வியர் இருவரும் தோன்றி விளங்குவர் என்று சொன்னேம். பார்வதி கேட்கத் தொடங்கினள்.

11. எப்போதும் வறுமை யாக இருப்பனே நலமும் உண்டோ
செப்புவீர் முனியே என்றாள் செனித்தவன் ஆறுண்
[டின்மேல்
ஒப்புடன் யோகம் வாய்க்கு முரைக்கின்றேம் அதன்மே
[லாகத்
தப்பிதம் வறுமை யில்லான் சங்கரி கேட்டி டாயே.

11. "இவன் எப்பொழுதும் வறுமைத் துன்பத்திலேயே ஆழ்ந்திருப்பானே? இவனுக்குப் பல நலங்களும் எற்படுமா? கூறுங்கள். முனிவரே! நீங்கள் என்றாள். புதல்வன் பிறந்து ஆறு வருஷத்துக்குப் பிறகு இவனுக்கு அதிர்ஷ்டம் வாய்க்கும் என்று சொல்லுகின்றேம். அதற்குமேல் சிறிதும் தரித்திரமில்லாமல் இருப்பான். பார்வதியே! கேட்பாயாக.

12. தந்தையின் குணத்தைக் கேளாய்ச் சமர்த்துளான் மால்நி
[றத்தான்
சந்ததம் சமதே கத்தன் சங்கீதப் பிரிய னுகும்
வந்தவர்க் கன்ன மீவன் மர்மமில் லாதான் ஆகும்
எந்தையே கை யுள்ளான் இவனுமே கல்வி மானும்.

12. ஜாதகன் தந்தையின் குணத்தைக் கேள். சாமர்த்தியமுள்ளவன். கரிய நிறமுடையவன். உடற் கட்டுள்ளவன். இசையில் விருப்ப முடையவனு யிருப்பான். வீடுதேடி வந்தவர்க்கு உணவு தருவான். மனத்தில் கபடமில்லாதவன். தருமமுடையவன். ஏமக்குத் தாயே! இவன் படிப்பாளி.

13. தேவதாப் பணியும் செய்வன் செனஉப காரனுவன்
ஆவலாய் வந்த வர்க்கு ஆதரிப் பானும் என்றேம்
சேவலங் கொடியோன் பக்தி செய்குவான் யூகை யுள்ளான்
நாவது தவரு னுகும் நயப்படக் கூறு வானும்.

13. தெய்வத் தொண்டுகளும் செய்வான். மக்களுக்கு உதவி புரிபவனாக விளங்குவான். ஆவலோடு வீடுதேடி வந்தவர்களைக் காப்பான் என்று கூறினேம். சேவற்கொடியை யேந்திய முருகப்பிரான்மீது பக்திகொள்ளுவான். ஊகமுள்ளவன். சொன்ன சொல் தவறுதவன். நயமாகப் பேசுவான்.

14. கரமதில் சங்கு சக்கரம் காரிழை யிட்டம் கொள்வன்
திருமகள் வாசம் கொள்வான் தேகமும் சூடும் உண்டு
கிருஷியும் செய்வா னுதம் கிரகமும் புதிதாய்ச் செய்வன்
துருசான நடையு முள்ளான் தொல்புவி விருத்தி செய்வான்.

14. கையில் சங்கு சக்கர ரேகைகளுள்ளவன். மனைவியின் விருப்பத்தைப் பெற்றவன். இலட்சுமீ கடாட்சம் பெறுவான். உடலில் உஷ்ணமுண்டு. பயிர்த்தொழில் செய்வான். புதிய வீடு கட்டுவான். விரைவான நடையுடையவன். பழமையான நிலபுலங்களை அபிவிருத்தி செய்வான்.

15. யாவர்க்கும் நல்லோனுவன் அறத்தின்மே லிச்சை யுள்ளான்
பாவத்தில் மனம்வை யாதான் பால்தயிர் இஷ்டம்
[கொள்வன்
கோவுகள் விருத்தி யுள்ளான் குஞ்சர நடையு முள்ளான்
மேவுமிக் குணத்தா னுக்கு வித்தகன் இரண்டாம் சென்மம்.

15. எல்லோருக்கும் நல்லவனாக விருப்பான். தருமத்தில் விருப்பமுள்ளவன். பாவச் செயல்களில் மனத்தைச் செலுத்தாதவன். பால், தயிர் இவற்றில் ஆசைகொள்ளுவான். பசுக்கள் விருத்தி யுடையவன். களிறு போன்ற நடையுள்ளவன். இவ்வாறான தன்மைகள் பொருந்தியவனுக்கு இந்த ஜாதகன் இரண்டாம் பிறப்பாக,

16. உதிப்பனும் இவனே யென்றோம் உரைக்கின்றோம் இவன்கு
[ணத்தைச்
சதியிலா மனத்த னாகும் சகலகல் விகளும் கற்பன்
சதிசெய்தோர் தம்மைக் காப்பான் துயரங்க ளில்லா
[னாகும்
அதிபதி யாக வாழ்வன் அவன்இரு நிறத்த னாமே.

16. பிறப்பான் என்று கூறினேம். இவன் குணத்தை நாங்கள் சொல்லுகின்றோம். குற்றமில்லாத மனத்தை யுடையவன். எல்லாதவித சாஸ்திரங்களையும் கற்பான். தனக்குத் துன்ப மிழைத்தவர்களையும் காப்பான். துன்பங்கள் எவையும் இல்லாதவன். தலைமை பெற்றவனாக வாழ்வான். கருமை நிறமுள்ளவன்.

17. சங்கீதம் இஷ்டம் கொள்வன் தரைமிகத் தேட வல்லன்
பொங்கிய குடும்ப முள்ளான் பொய்யது அதிகம் பேசான்
திங்களைப் போல யோகம் செறிந்திடு மிவனுக் கேதான்
எங்களுக் கன்ப னுவன் யாரையும் உறவு கொள்வன்.

17. இசையில் விருப்பம் கொள்ளுவான். மிகுதியான வினோதங்களைச் சேர்ப்பதில் வல்லவன். நிறைந்த குடும்ப முள்ளவன். மிகுதியாகப் பொய்யுரை பேசாதவன். வளர்பிறைச் சந்திரனைப்போல இவனுக்கு அதிர்ஷ்டம் வாய்க்கும். தவமுடையவர்களுக்கு அன்பன். எவரையும் தனக்கு நட்பாகக் கொள்ளுவான்.

18. பயிர்த்தொழில் உடைய னுகும் பலகாரப் பிரிய னென்றேும்
சயம்செய்வன் எடுத்த வேலை திறமான மனத்த னுகும்
அயலார்பொன் இச்சை வையான் ஆள்கார ருடைய னுகும்
கயவரைச் சேரா னுகும் காதலி கேட்டி டாயே.

18. விவசாயத் தொழிலுடையவன். சிற்றுண்டிகளில் விருப்பமுள்ளவன். எடுத்த தொழிலை வெற்றியுடன் முடிப்பான். பக்குவமான மனமுடையவன். அயலார் செல்வத்தில் ஆசை வைக்கமாட்டான். ஏவலாட்கள் உடையவன். கீழோரைச் சேரான். பார்வதியே! கேட்பாயாக.

19. சுபங்களும் பாட வல்லன் தொல்புவி கீர்த்தி யேற்பன்
பயமிலா மனத்த னுகும் பசுவுகள் விருத்தி யுள்ளான்
நயமுள துணைவர் தம்மை நாட்டுவோம் ஆண்பால் ஒன்று
வியமிலாப் பெண்பால் ரெண்டு விளங்கிடும் தீர்க்க மாக.

19. சுபச் செயல்களுக்குரிய நல்ல பாடல்களை இயற்றுவதில் வல்லவன். உலகில் புகழை அடைவான். தைரியமான மனமுடையவன். பசுக்கள் விருத்தி யுள்ளவன். இவன் உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். சகோதரன் ஒருவன், சகோதரிகள் இருவர் தீர்க்கமாக விளங்குவர்.

20. மற்றது மூன்று சேத மறைகின்றே மிவனுக் கேதான்
பத்தினி வரும்கா லத்தைப் பகருவோம் ஒருபான் ஏழில்
உத்தமி தென்கீழ் தன்னில் உறைகுவாள் என்று
[சொன்னேம்
சித்தமாய் அவள்தன் சேதி செப்புவோம் கேளும் தாயே.

20. மேலும் இவனுடன் தோன்றும் மூவர் சோதரமடைவர் என்று சொல்லுகின்றேம். இவனுக்கு மனைவி வரும் காலத்தைக் கூறுவோம். இவனுடைய பதினேழாம் வயதில், தென் கிழக்குத் திசையிலிருந்து மனைவி வருவாள், தாயே! அவளைப் பற்றிக் கூறுகின்றேம், கேளுங்கள்.

21. அன்னம்போல் சாய லுள்ளாள் ஆளனுக் கினிய ளாகும்
பன்னுமா சார முள்ளாள் பந்துவும் மெச்ச வாழ்வள்
உன்னத மிருசி கப்பள் உத்தமி அதிருஷ்ட சாலி
கன்னென மொழியைச் சொல்வள் கழறுமுன் கோபி
[யாவள்.

21. அன்னப் பறவையைப்போல் நடை யழகுள்ளவள். கணவனிடம் விருப்பமுள்ளவள், நல்ல அணிகலன்களைப் பெற்றிருப்பாள். உறவினர் மெச்சும்படி வாழ்வாள். மிகவும் மேன்மையுடையவள். இருண்ட சிவப்பு நிறத்தினள். பதிவிரதை. நல்ல அதிர்ஷ்ட முள்ளவள். இனிமையாகப் பேசும் தன்மையினள். கூறுவதற்குமுன் கோபப்படுவாள்.

22. வாததே கத்தாள் என்றும் மர்மமில் லாதா ளாகும்
பேதகம் இல்லா நெஞ்சம் பேசுவோம் புத்திர பாகம்
மேதினில் விருத்தி யில்லை விளங்கினும் தீதே யாகும்
மாதவர் பராசர் சொல்ல மங்கையும் கேட்க லுற்றாள்.

22. வாத சரீர முள்ளவள். மர்ம மில்லாதவள். வஞ்சனையில்லா நெஞ்ச முள்ளவள். இவளது புத்திர பாவத்தைக் கூறுவோம். இவளுக்குப் புத்திர விருத்தி யுண்டாகாது. தோன்றினும் அழிந்து போம். இவ்வாறு பெரும் தவமியற்றும் பராசரர் கூற, பார்வதி கேட்கலானாள்.

23. என்னகா ரணத்தி னுலே இலகாது மதலே தானும்
அன்னையே சொல்லு கின்றேன் அவன்சென்ம மந்தியாகப்
புந்தியும் மைந்தோ னுகிப் பூமகன் சனியும் பார்க்க
மன்னிய கடகம் புக்க வறைந்தனம் சுதர்கள் தோஷம்.

23. எந்தக் காரணத்தால் இவனுக்குப் புத்திரபாக்கியம் ஏற்படாது? தாயே! கூறுகின்றேன். அவனது லக்கினம் விருஷபமாகவும், ஐந்தாமிடத்துக் குரியவனான புதன், சனி, செவ்வாய் இவர்கள் பார்க்கும்படி கடகத்திலிருப்பதால் புத்திர தோஷத்தைக் கூறினோம்.

24. அத்திரி சொல்லு கின்றார் அந்தணன் உச்ச மாகப்
பத்திய புதனும் கூடப் பெருகிடும் சுதர்கள் என்றும்
உத்தமர் பராசர் சொல்வார் ஓங்கியே பணியும் பத்தில்
சித்தமாய் இருப்ப தாலே சேயவன் முன்னூழ் செய்த;

24. அத்திரி முனிவர் கூறுகின்றார், "குரு உச்சனுகிப் புதனுடன் உள்ள காரணத்தால், புத்திரர்கள் தோன்றுவர். உத்தமராகிய பராசரர் கூறுகின்றார். இராகு பத்தாமிடத்தில் இருப்பதாலும், ஜாதகன் முற்பிறவியில் செய்த;

25. வினையினுல் புதல்வர் தோஷம் விளம்புவீர் விபர மாக
அனையவே இவன்முன் சென்மம் அக்காஞ்சி கீழ்பா லாகக்
கனமுள மாரி வாழும் கனத்ததோர் நகரம் தன்னில்
வினையிலாச் செங்குந்த வமிசம் வித்தக னுதித்தா
[னென்றோம்.

25. தீவினையாலும் புத்திர தோஷம் ஏற்படும். அதை விவரமாகக் கூறுங்கள். இவனது முன்சென்மம், காஞ்சீபுரத்திற்குக் கிழக்கில் மாமாரி யம்மன் வாழும் பெரிய நகரமொன்றில் குற்றமில்லாத செங்குந்த (கைக் கோளர்) மரபில் ஏற்பட்டது என்று கூறுவோம்.

26. பிறந்துமே நெசவு செய்து பூமியில் தனம்ப டைத்துத்
தரம்தரம் நெசவு செய்து சகலர்க்கும் உதவி செய்து
திருமகள் விலாசம் பூண்டு செல்வனும் வாழும் நாளில்
உறைந்திட்ட வுளைழச் சொல்வேன் உத்தமி கேட்டி டாயே

26. அங்ஙனம் தோன்றி, நெசவுத்தொழில் செய்து, பூமியில் செல் வங்களைப் பெற்று, விதவிதமான நெசவுத் தொழிலைச்செய்து, அனைவருக்கும் உதவிகளைச் செய்து, செல்வத்தில் திளைத்து, வாழ்ந்து வரும் நாளில் நேர்ந்த தீவினையைக் கூறுகின்றேன். தாயே! கேளுங்கள்.

27. மறையவன் ஒருவன் தானும் மைந்தர்க்குப நயனம் செய்யக்
குறையான மனத்த னுகிக் குறிக்குமே இவன்பால் சென்று
தருகுவாய்ப் பொருளு மென்னச் செங்குந்தன் தைரியம்
[சொல்ல
விரைவினில் நடக்க வைத்து வித்தக னில்லை யென்றான்.

27. பிராவணன் ஒருவன், தன் புதல்வனுக்கு உபநயனம் செய்ய வேண் டுமே என்று குறையுள்ள மனமுள்ளவனுக, இவனை வந்தடைந்து, பொருளைக் கேட்க, இவனும் கொடுப்பதாகத் தைரியம் கூறி, அவனை நடக்கவைத்தான். பிறகு பொருள் இல்லையென்று கூறிவிட்டான்.

28. வேதத்தோன் மனவெ றுப்பால் விளம்புவான் சர்பம்
[தானும்
போதவே சுபத்துக் காகப் பொருள்தரா நடக்க வைத்தும்
தீதுகள் செய்தோ னுக்குச் செனித்திடும் மதலை தோஷம்
மேதினில் மறுசென் மத்தில் விளங்காது சுதர்கள் தாமே.

28. அவ்வந்தணனும் மனவெறுப்பால் இவனுக்கு ஒரு சர்பத்தை யளித்தான். "ஒரு நல்ல செயலுக்குப் பணம் தருகிறேன் என்றுகூறி, நடக்க வைத்துக் கொடுக்காது தீமைகளைச்செய்த உனக்கு, புத்திர தோஷம்

ஏற்படும். அடுத்த பிறப்பில் இவ்வுலகில் புதல்வர்கள் நிலைத்திருக்கமாட்டார்கள்.

29. இப்படிச் சொல்லி யேதான் ஏகினன் மறையோன் தானும்
செப்புவான் அந்தத் தோஷம் சேர்ந்தது இதுவல் லாமல்
மைப்பட்டிச் சைவ மாது விதவையும் வறுமை கொண்டு
ஒப்புடன் இவன்பால் சென்று உடலுயிர் ஒன்றுபோல் வாழ்ந்து ;

29. இந்தவாறு சொல்லி அந்தணன், சென்றுவிட்டான். அந்தத் தோஷம் இவனே யடைந்தது. அதைத் தவிர, சைவ குலத்திலுதித்த ஒரு கைம்பெண் வறுமையால் வாடி, இவனிடம் சென்று, உயிரும் உடலுமாக மனமொத்து வாழ்ந்தாள்.

30. இருக்கிற காலந் தன்னில் இவளுக்குக் கருவு தங்கி
விரைவினில் பண்டி தங்கள் வேணது செய்தா னென்றேும்
கருவுமே அழிந்து பின்பு கன்னியும் மரண மாகி
உறைந்தது அந்தத் தோஷம் உத்தமி கேட்டி டாயே.

30. அந்த நாளில் இவள் கருவுற்றாள். விரைவாக இவன் பலவாறு மருத்துவங்கள் செய்தான். கருவும் அழிந்து போயிற்று. அப்பெண்ணும் இறந்துபோனாள். அந்தத் தோஷமும் இவனே யடைந்தது. உத்தமியே! கேட்பாயாக.

31. தந்தையை விரோதம் செய்யத் தானவர் கூறு கின்றார்
பிந்திய சென்மம் தன்னில் புத்திரர் மனைவி தோஷம்
இந்தவார் சொன்னன் தந்தை இவனுமே அந்தி யத்தில்
பந்தமாம் வாயு நோயால் பாலகன் மரண மாகி ;

31. இவன் தன் தந்தையைப் பகைக்கவே அவர் கூறுகிறார். பின் சென்மத்தில் புத்திர தோஷமும் மனைவி தோஷமும் ஏற்படும். இவ்வாறு கூறினர் தந்தை. இவனும் பிற்காலத்தில் வாயுநோயால் மரணமடைந்தான்.

32. பிரமனால் வரையப் பட்டுப் பிறந்தவ னிவனே யென்றேும்
அறைகின்றே மிச்சென் மத்தில் அந்தணன் சாபம் ஒன்று
கருவதை அழித்த தோஷம் கனத்ததோர் தந்தை சாபம்
உறைந்தது இவனுக் கேதான் உதித்திடு மதலை ஈனம்.

32. பிறகு பிரம்மனால் படைக்கப்பட்டு இந்தக் குலத்தவனாகப் பிறந்தான். இப்பிறவியில் பிராமண சாபமும், கருவழித்த தோஷமும், தந்தையின் பெரிய சாபமும் இவனே வந்தடைந்தன. ஆகவே புத்திர விருத்தி குறைவாம்.

33. வந்திடும் தோஷம் தீர வறைகின்றேம் சாந்தி தானும்
இந்தவன் மனைவி யோடு இருவரும் காளாத்தி சென்று
முந்திய தீர்த்தம் தோய்ந்து முக்கணார்க் கர்ச்சித் தேத்திப்
பிந்தியும் வெள்ளி யாலே பிள்ளைபோல் செய்து மேதான் ;

33. இப்படி வந்தடைந்த தோஷங்கள் தீர சாந்தியைக் கூறுகிறோம். இவன், தன் மனைவியோடு காளத்தி சென்று, அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் மூழ்கி, முக்கண்ணனைப் பூசித்து, வெள்ளியால் பிள்ளையைப் போல் செய்து;

34. விப்பிரர் தமக்கு ஈந்து விளம்பியு முன்னூழ் தன்னை
ஒப்புடன் பொறுத்தே னென்று உத்தமர் ஆசி ஏற்றுச்
செப்புவோம் நாற்பத் தைந்து சீர்மறை யோருக் கன்னம்
அப்படனும் ஈவா னுகில் அணுகுவூழ் வினைகள் போக்கி ;

34. அந்தணர்களுக்குக் கொடுத்து, முன்செய்மத் தீவினைகளை மன்னித்தோமென்று பெரியோர்கள் கூறும் ஆசியைப்பெற்று, வணங்கி, நாற்பத்தைந்து நல்ல பிராமணர்களுக்கு நல்லுணவு அளிப்பானுயின், முன்செய்ம வினைகள் நீங்கும்.

35. சுதர்களும் விருத்தி யாகும் சொற்படி செய்யா னுகில்
மதலைகள் மனைவி தோஷம் வந்திடு மிலைய மாது
விதியினால் முன்னூழ் போக வித்தகன் செய்வா னுகில்
புதல்வரும் ஆண்பா லொன்று பெண்ணது இரண்டு

[தீர்க்கம்.

35. புதல்வர்களும் தோன்றுவர். சொன்னபடி செய்யாவிடின் புத்திர மனைவி தோஷம் நீங்காது. முன்செய்ம தோஷந்தீர, விதிப்படி இவன் சாந்தி செய்வானுயின், ஒரு புதல்வனும் இரண்டு பெண்களும் தீர்க்கமாகத் தோன்றுவர்.

36. புத்திரன் இவர்தன் மேலாய்ப் பொருந்திடும் யோகம் தானும்
சித்தமாய்த் தந்தை பூர்வம் செப்புவோம் கேளும் தாயே
அத்தியும் வரதர் வாழும் அக்காஞ்சி தன்னி லேதான்
வித்தகன் கருண வபிசம் விளங்கினு னிவனே யென்றோம்.

36. புத்திரன் இவனுக்கு மேலான யோகசாலியாக இருப்பான். இவன் தந்தையின் முற்பிறப்பைக் கூறுவோம். தாயே! கேளுங்கள். அத்தி வரதர் வாழும் அதே காஞ்சீபுரத்தில், கணக்குப்பிள்ளை குலத்தில், இவன் பிறந்தான்.

37. மால்கோஷ்டம் கணக்கு வேலை மைந்தனும் பார்த்து வந்து
ஞாலமேல் யாவ ருக்கும் நல்லவ னுகி யேதான்
சீலமு முடைய னுகிச் சிந்தையில் கபடில் லாமல்
கோலமாய் வாழ்ந்து பின்பு கூற்றன்தன் பதிக்குச் சென்றான்.

37. பெருமாள் கோவில் கணக்கு வேலையை இவன் பார்த்து வந்தான். உலகில் அனைவருக்கும் நல்லவனுக இருந்தான். நல்லொழுக்க முடையவ னுகவும், மனத்தில் வஞ்சனை யில்லாதவனுகவும் நலமுற வாழ்ந்துவந்து, பிறகு மரணமடைந்தான்.

38. உந்தியி லுதித்தோ னுலை உத்தமன் வரையப் பட்டு
வந்தவ னிவனே யென்றோம் வறைகின்றோ மிவன்பின்
[சென்மம்
சந்ததம் வேங்க டத்துள் சத்ரிய குலமு தித்து
வந்தவர்க் கன்ன மீந்து மன்னர்பால் அரசு செய்து ;

38. பிறகு பிரம்மனுல் படைக்கப்பட்டு இந்த ஜாதகன் தந்தையாக உதித்தான். இவன் பின்சென்மத்தைக் கூறுவோம். திருவேங்கடத்தில், க்ஷத்திரிய குலத்தில் இவன் உதித்து, தன்னை யடைந்தவர்களுக்கு உணவளித்து மன்னனிடம் உத்தியோகம் பெற்று ;

39. பூமியில் கீர்த்தி ஏற்பன் புகலுவோம் மாதுர் சேதி
நேமியில் இருநி றத்தாள் நிதமுமே பித்த தேகி
தாமத குணத்தா ளாகும் சடுதியிற் கோபி யாவள்
தீமையை எண்ணு ளாகும் திருகது சொல்லா ளாகும்.

39. பூமியில் புகழடைவான். தாயின் சேதியைக் கூறுவோம். அவள் மாநிறமுள்ளவள். பித்த சரீர முடையவள். தாமத குணமுண்டவள். விரைவில் கோபம் கொள்வாள். தீங்கை நினையாதவள். மாறுபாடான சொற்களைக் கூறமாட்டாள்.

40. அவளுடைத் துணைவர் தம்மை அறைகின்றோம் ஆண்பால்
[ஒன்று
நவனியில் பெண்பால் ரெண்டு நாட்டுவோம் இவளுக்
[கேதான்
பவமுள மாமன் சேதி பகருவோம் இருநி றத்தான்
இவனுமே யுகை யில்லான் இன்பமாய் வார்த்தை
[சொல்வான்

40. அவளுடைய உடன் பிறந்தாரைக் கூறுவோம். ஆண் ஒன்று, பெண்கள் இருவர். மாமனின் வரலாற்றை உரைப்போம். மாநிறமானவன். ஊகிக்கும் திறமை யற்றவன். இன்பமாகப் பேசுவான்.

41. மனவிமைந் தரும்இல் லாதான் மருமவான் ஊமை யாவன்
கனமிலா வாழ்வா னுகும் கலகலத் திடும்கு டும்பம்
சினமிலாத் தென்கீழ் தன்னில் செப்புவோம் மாது இல்லம்
வினையிலா மாதுர் பூர்வம் விளம்புவோம் கேளும் தாயே.

41. மனைவி, மைந்தர்கள் இல்லாதவன். மருமமுள்ளவன். ஊமை யாக இருப்பான். மேன்மையின்றி வாழ்வான். குடும்பம் கலகலத்துப் போய் விடும். தாயின் வீடு தென்கிழக்குத் திசையில் உளது என்று உரைப்போம். குற்றமற்ற தாயின் முன்சென்மத்தைக் கூறுவோம். தாயே ! கேளுங்கள்.

42. பட்சியின் மலைக்கு உத்திரம் அருகினில் சிற்றூர் தன்னில்
மிச்சமா யிக்கு லத்தில் மேவியே வறுமை பூண்டு
உச்சித மதலை யுண்டாய் உலகுக்கு நல்லோ ளாகித்
துர்ச்சின மில்லா தாகித் தோகைவா கனத்தோன் பேரில்
மிச்சமாய்ப் பக்தி கொண்டு வித்தகி வாழ்ந்தா ளென்றேும்.

42. திருக்கழுக்குன்றத்துக்கு வடக்கே, சிறிய ஊரில், இந்தக் குலத்தி லேயே தோன்றி, ஏழ்மையால் கஷ்டப்பட்டு, தகுந்த புதல்வர்களைப் பெற்று, உலகில் அனைவருக்கும் நல்லவளாகி, கோபமில்லாதவளாய், முருகனிடம் பக்தி பூண்டு, இவள் வாழ்ந்தாள் என்று கூறினேம்.

43. அந்தகன் பக்கல் சென்று அரிமகன் வரையப் பட்டு
வந்தவ ளிவளே யென்றேும் வரைகின்றேும் இவள்பின்
[சென்மம்
சந்ததம் தணிகை உத்திரம் சாற்றிய பேரூர் தன்னில்
எந்தையே சத்திரிய சேயாய் எய்துவா ளென்று
[சொன்னேம்.

43. பிறகு மரணமடைந்து, பிரம்மனால் படைக்கப்பட்டு, உதித்தாள் இவள் என்றேும். இவள் பின் சென்மம் திருத்தணிகைக்கு வடக்கேயுள்ள பெரிய ஊரில், க்ஷத்திரிய குலத்தில் ஏற்படும் என்று கூறுவோம்.

44. இவளுடை நிர்யா ணங்கள் இயம்புவோம் இருபான்
[ஒன்பான்
அவனியில் கும்ப மாதம் அறைந்தனம் கண்டம் தானும்
நவனிமேல் தசையி லேதான் நற்கருங் கோள்பு குத்தித்
தவசியே நடக்கு மென்றேும் சாற்றிய மொழிகுன் றாது.

44. இவளுடைய இறப்பைக் கூறுவோம். ஜாதகனின் இருபத்தொன் பதாவது வயதில், மாசி மாதத்தில் இவளுக்குக் கண்டம் என்று கூறுவோம். அங்காரக மகா தசையில், ராகு புக்தியில் மரணம் வந்தடையும். நாங்கள் கூறிய சொற்கள் தவறு.

45. முப்பது ஏழாண் டில்தான் உயிர்கன்னி மாதம் தன்னில்
செப்புவோம் தந்தை காலம் தீரமாய்க் கருங்கோள் காலம்
ஒப்புடன் சுயபு குத்தி தீர்ந்திடும் காலம் தன்னில்
மைப்புடன் கருமம் நேரும் வித்தகி கேட்டி டாயே.

45. முப்பத்தேழாவது வயதில், புரட்டாசி மாதத்தில், தந்தையின் மரணம் ஏற்படும். ராகு மகாதசை ராகுபுக்தி முடியும் காலத்தில், ஜாதக னுக்கு, கரும தசை ஏற்படும், பார்வதியே! கேட்பாயாக.

46. இன்னவன் மரண காலம் இயம்புவோம் அறுபான் ஒன்றில்
தன்னிலே தேளின் மாதம் தசமியாம் குறைபக் கத்தில்
அன்னவன் பாண்டு வாலே அவனது உடலம் வாடும்
பொன்தசை காலம் தன்னில் புகலுவோம் கண்டம் தானே.

46. ஜாதகன் மரண காலத்தைக் கூறுவோம். அறுபத்தேழாம் வய தில், கார்த்திகை மாதத்தில் கிருஷ்ணபட்ச தசமி திதியில், பாண்டுரோயால் இறந்து போவான். குரு மகாதசையில் கண்டம் ஏற்படும்.

47. பின்சென்மம் உத்தி ரத்தில் பேசும்கோ கர்ணந் தன்னில்
சொன்னனே சத்திரிய னுக்குச் சுதனுகத் தோன்று வானும்
மன்னிய பரியும் யானை வளமுள நாடாள் வானும்
அன்னையும் கேட்க லுற்றுள் அவனிந்த சென்மந் தன்னில்;

47. பின் சென்மம், வடக்கே கோகர்ண க்ஷேத்திரத்தில், க்ஷத்திரிய குலத்தில் ஏற்படும். யானை குதிரை முதலிய பரிவாரங்களுடன் நாடாள் வான். பார்வதி கேட்கலானுள். அவன் இப்பிறப்பில்;

48. என்னபுண் ணியங்கள் செய்தான் இயம்புவீர் முனியே
[நீர்தாம்
இன்னவன் இச்சென் மத்தில் யாவர்க்கும் நல்லோ னுகித்
திண்ணமாய் ஈச னுக்குத் திருப்பணி விடையும் செய்து
வந்தவர்க் கன்ன மீந்தும் வளமுள சோலை வைத்தும்,

48. என்ன புண்ணியங்கள் செய்தான்? முனியே! கூறுங்கள். இவன் இப்பிறவியில், அனைவருக்கும் நல்லவனுக இருந்து, கடவுளுக்குத் திருப்பணி

கள் பல புரிந்து, விருந்தினர்களுக்கு உணவளித்து, வளப்பமுள்ள தோட்டங்களும் அமைத்து;

49. வருவதால் சத்ரிய சேயாய் படதிசை வருவா னென்றோம்
கருமத்தோன் பாக்கி யத்தோன் காரியாய் உச்ச மாகக்
குருவுமே உச்ச மாகக் குறித்தனம் யோகம் தானும்
நிறையவே குடும்பி யாவன் நேமியோர் மெச்ச வாழ்வன்.

49. நற்பணிகள் புரிந்தமையால், க்ஷத்ரிய பாலகனும் உதிப்பான் என்று கூறினோம். கர்ம பாக்கியாதி பதியாகிய சனி, உச்சமாகத் துலாத்திலும், குரு உச்சமாகக் கடகத்திலும் இருப்பதால், சகல யோகங்களும் நிறைந்து குடும்பியாகி, யாவரும் மெச்ச வாழ்வான் என்று சொன்னோம்.

50. பலஊரில் பூமி சேர்ப்பன் பனிரெண்டு ஆண்டு மேலாய்
பலபூள யோகம் வாய்க்கும் நாயகன் வறுமை யில்லான்
குலவிய அந்தாண் டின்மேல் குலவிடும் சித்திர வீடு
உலகுளோர் வசிய மாகும் உத்தமி கேட்டி டாயே.

50. பல ஊர்களில் நிலங்களைச் சேர்ப்பான். பன்னிரண்டு வயதுக்கு மேல் சகல யோகங்களும் வந்தடையும். ஜாதகன் வறுமை யறியாதவன். அந்த வயதுக்குமேல் அழகிய இல்லத்தைக் கட்டுவான். உலகில் அனைவரும் இவனுக்கு வசமாவர். பார்வதி! கேட்பாயாக.

51. மாதுரு துணைவி பக்கல் மாதுரு மகிகள் சேர்வர்
ஓதுவோம் தட்சி ணத்தில் உறைகுவார் என்று சொன்னோம்
மேதினில் விபர மாக விளம்புவோம் இரண்டி லேதான்
போதக வானைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

51. தாயின் சகோதரியிடம் ஜாதகனின் பாட்டி சென்று, தங்குவாள். அவர்கள் தென்திசையில் வாழ்வர், என்று கூறுவோம். இரண்டாம் பாகத்தில் விவரம் கூறுவோம். யானைமுகத்தோனைப் புதல்வனாகப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

52 பாலகன் செனிக்கும் காலம் பளிங்குதன் தசையி ருப்பு
ஞாலமேல் பனிரண் டாண்டும் நாட்டுவோம் திங்கள் [ஒன்றும்
கோலமாய்ச் சாத கர்க்குக் குணமில்லா ரோகம் வாய்க்கும்
வேல்விழி மாது வுக்கு மேவிடும் கர்ப்ப பாதை.

52. ஜாதகன் செனன காலத்தில், சுக்கிர மகா தசையில் இருப்பு வருஷம் பன்னிரண்டும், மாதம் ஒன்றும் ஆம். குணமாகாத நோய்கள் வரும். மனைவிக்குக் கர்ப்ப நோய்கள் உண்டாம்.

53. மாரகன் போல நேர்ந்து மறுபடி விலகு மென்றேரும்
தீரமாய்த் தந்தை பாட்டன் செல்லுவார் எமப திக்கு
நாரியர் துணைவர் விருத்தி நன்மாதர் வர்க்கம் பீடை
சாரியாய்ச் சித்திர வீடு தான்அவன் செய்வா னென்றேரும்.

53. ஜாதகனுக்கு மரணம் உண்டாக்கத் தக்க நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தந்தையின் பாட்டன் இறந்துபோவார். சகோதர சகோதரிகள் விருத்தி உண்டு. தாய் வர்க்கத்துக்குப் பீடை ஏற்படும். அழகிய இல்லங் களைக் கட்டுவான் ஜாதகன் என்று கூறினேம்.

54 தந்தையின் துணைவ ருங்குச் சந்ததி சுபமு முண்டு
எந்தையே பூமி சேரும் இடருகள் வந்து நீங்கும்
தந்தனம் செலவும் உண்டு சாற்றுவோம் விபரம் ரெண்டில்
இந்திர னிறைஞ்சும் மாதே எழில்சுதன் பரணி தானே.

54. தந்தையின் சகோதரர்களுக்குப் புத்திர விருத்தியுண்டு. நில புலங்கள் சேரும். துன்பங்கள் நேர்ந்து நீங்கும். தன் செல்வம் செலவழியும். மற்ற விவரம் இரண்டாம் பாகத்தில் கூறுவோம். இந்திராதி தேவர்கள் வணங்கும் பார்வதியே! பரணி நாளில் பிறந்தவன்.

ஜாதகம் 18

1. குண்டை யும் சென னை மாகக் குசன்ரவி நந்தி யாக
அண்டர்கோன் தூலையில் புக்க [1]அலவன்மான் ராகு சியம்
[2]கொண்டியும் புந்தி வீணை [3]ஞானத்தோன் சாடி யாக
வண்டியில் புகரும் துங்க வறைகுவீர் பலனைத் தானே.

1. விருஷபம் லக்கினமாகவும், செவ்வாய் சூரியன் விருஷபத்திலும், குரு தலா ராசியிலும்; சந்திரன் கும்பத்திலும், ராகு சிம்மத்திலும், சனி புதன் மிதுனத்திலும், கேது கும்பத்திலும், சுக்கிரன் கடகத்திலும் தங்கி யிருக்கும்படியான ஜாதகப் பலனைச் சொல்லுவீர் முனிவரே.

<table>
<tr><td></td><td></td><td>லக்கினம்
செவ்வாய்
சூரியன்</td><td>சனி
புதன்</td></tr>
<tr><td>கேது</td><td colspan="2" rowspan="2">இராசி
சக்கரம்</td><td>சுக்கிரன்</td></tr>
<tr><td>சந்திரன்</td><td>இராகு</td></tr>
<tr><td></td><td></td><td>குரு</td><td></td></tr>
</table>

2. ஆனது சென னை மாகும் அவனில்லம் வடதென் வீதி
பூணுவோம் கிழக்கு வாசல் உன்புத்திரன் மூத்தோ னுத்
[திரம்
காணவே வடகிழ் தன்னில் நாதன்தன் கோட்டம் பார்ஆம
தோணவே மார்க்கம் சூழி சோலையும் காணு மம்மா.

2. இது ஆண் பிறப்பு. இவன் பிறந்த வீடு வடக்குத் தெற்கான தெருவில் கிழக்குப் பார்த்த வாசலை யுடையது. உமது மூத்த புதல்வராகிய விநாயகப் பெருமான் வடக்குத் திசையில் கோயில் கொண்டுள்ளார். வட கிழக்கில் சிவபெருமான் கோயிலொன்று பாழடைந்துளது. நல்ல வழி நடைப் பாதையும், மலைக்கோட்டையும், சோலையும் அங்குக் காணப்படும், தாயே!

---

1. சந்திரன்
2. சனி
3. கேது

3. இதுவலால் தெற்கில் கம்மார் இலகிய மார்க்கம் உண்டு
மதிசடை அணிந்தோன் கோஷ்டம் நல்கிடும் குடகி லேதான்
சதியிலாச் சோலை சூழி சார்ந்திடு சிற்றூர் தன்னில்
பதியது கெட்டி யாகும் பகருமிவ் வடையா ளத்துள்.

3. இவை தவிர, தெற்குத் திசையில் கம்மியர் உளர். நன்கு விளங்கும் சோலை யொன்றுண்டு. மேற்கில் பிறைச் சந்திரனைத் தலையில் தரித்த சிவ பெருமான் கோயில் உள்ளது. இன்னும், சோலைகளும் மலைக்கோட்டையும் பொருந்தி விளங்குகின்ற சிறிய ஊரில், சொல்லப்பட்ட இவ்வடையாளங்க ளுடன் கூடிய திடமானதொரு வீட்டில்,

4. உதிப்பனும் பத்தாம் சென்மம் உறும்தந்தை தாயின்
[யோகம்
மதித்திடத் துணைவர் யோகம் வருப்புத்ர களத்ர யோகம்
கதித்திடு முன்பின் சென்மங் கழறுவோம் மிந்நூல் தன்னில்
நதிசடை யணிந்தோன் தேவி நங்கையே மேலும் கேளே.

4. பத்தாம் பிறப்பாக இந்த ஜாதகன் பிறப்பான். இந்த ஜாதகனின் யோகங்கள், தந்தை, தாய், உடன் பிறந்தார் ஆகியோர் யோகங்கள், பிறக்கப் போகும் புதல்வர், மனைவியர் யோகங்கள், குற்றமற்ற முற்பிறப்பு மறுபிறப்பு முதலிய அனைத்தையும் இந்த நூலில் நாங்கள் சொல்லுவோம். கங்கை நதி யைச் சடைமுடியி லணிந்துள்ள சிவபெருமானின் பத்தினியே! மேலுங் கேட்பாயாக.

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோம் ஆண்பால்
[ஒன்று
நொந்திடு மதுவுந் தானும் நவிலுவோம் அவன்குணத்தைத்
சிந்தையும் வெகுளி யாவன் செந்நிறம் தெய்வ பக்தி
கந்தகன்மேல் பக்தி கொள்வன் காவலன் நேசம் கொள்வன்.

5. ஜாதகன் தந்தையின் உடன் பிறந்தோர்களைப் பற்றிச் சொல்லு வோம். சகோதரன் ஒருவனுளன். மத்திய வயதில் அவன் இறப்பான். குணத்தைக் கூறுவோம். மனத்தில் கோப முடையவன். சிவந்த நிறமுடை யவன். தெய்வபக்தி யுள்ளவன். முருகப்பிரான் மீது விசேஷமான பக்தி கொள்ளுவான். அரசர் நட்பைப் பெறுவான்.

6. கிராமாதி காரம் செய்வன் கண்ணிய மாக வாழ்வன்
தராதர மறிய வல்லன் சற்சன ருறவு கொள்வன்
அரசனுல் செட்டுச் செய்வன் அவனியில் கீர்த்தி ஏற்பன்
திரிசூலி தனக்கு ஊழி செய்குவ னிவனே யென்றோம்.

6. கிராமத்துக்குத் தலைமை தாங்கி, அதிகாரஞ் செலுத்துவான். மதிப்புள்ள வாழ்க்கையை நடத்துவான். ஒவ்வொருவருடைய தன்மையையும் ஆராய்ந்து உணர்வதில் வல்லவன். நல்லவர்கள் சேர்க்கையைப் பெறுவான். அரசனின் உதவி பெற்று வியாபாரங்கள் செய்வான். உலகில் நல்ல புகழை அடைவான். சூலப்படையையுடைய தூர்க்கைக்கு ஏவல் செய்வான் இவன், என்று சொன்னேம்.

7. முன்கோபம் பின்பு சாந்தம் முயற்சியாய்க் குடும்பி யாவன்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பா னிவனே [யென்றேம்
இன்னவன் செனிக்கா முன்னம் ஏகுவன் எமப திக்கு
அன்னவன் தனக்குப் பாரி அணுகிடும் ஒன்றே யென்றேம்.

7. முன்கோப முண்டு. பிறகு சாந்த மடைவான். சுய முயற்சியுடன் குடும்பத்தை நடத்துவான். தன் வார்த்தைக்குச் சிறந்த மதிப்பு உண்டாகும்படி செய்வான் இவன் என்று சொன்னேம். இந்த ஜாதகன் பிறப்பதற்கு முன்பே இவன் எமனுலக மடைவான். இவனுக்கு மனைவி ஒருத்தியே வாய்ப்பாள் என்று சொல்லுவோம்.

8. சுதர்களும் ஆண்பால் ரெண்டு தோகையு மொன்றே யாகும்
பதியது வேறே செல்வர் பாருகள் அதிகம் சேர்ப்பர்
அதிபன்தன் தந்தை சேதி யறைகின்றேம் இனிமே லாக
விதவித வார்த்தை சொல்வன் விளம்புவான் கட்டு வார்த்தை.

8. இவனுக்குப் புத்திரர் இருவர். புதல்வி யொருத்தி. இவர்கள் வேறு குடும்பமாகச் செல்லுவார்கள். நிலபுலங்களே மிகுதியாகச் சேர்ப்பர். இனிமேல் ஜாதகனின் தந்தையின் செய்தியைச் சொல்லுகிறோம். பலவிதமாகப் பேசுவான். சொற்களைக் கட்டிக் கூறுவான்.

9. சிவந்திடும் மேனி யாவன் தேகமும் சமம தாகும்
அவனியில் செட்டுச் செய்வன் அன்னியப் பெண்கள் மோகன்
இவனுமுன் கோபி யாவன் ஈகையும் சொஞ்ச மூள்ளான்
தவசிகள் உறவு கொள்ளான் சந்தேக மனத்த னுமே.

9. சிவந்த தேகமுடையவன். உடற்கட்டுள்ளவன். உலகில் வியாபாரம் செய்வான். அயல் பெண்கள்மீது ஆசை கொண்டவன். முன்கோபமுடையவன். சிறிது கொண்டக்குண முள்ளவன். சான்றோர்கள் சேர்க்கையைக் கொள்ளாதவன். சந்தேக மனமுடையவன்.

10. சிரமுக வடிவம் உள்ளான் தேகமும் பித்த சூடு
பெருமையாய்க் குடும்பி யாவன் பூமியும் விருத்தி செய்வன்
விரைவினில் நடக்க வல்லான் வீணஅப வாத முள்ளான்
பரிவண்டி உடைய னுகும் பாக்கிய முடைய னென்றேரும்.

10. தலையிலும் முகத்திலும் அடையாளங்க ளுள்ளவன். பித்தசூடு பொருந்திய உடலுடையவன். மதிப்பான குடும்பஸ்தனாக வாழ்வான். வீண நிலங்களை விருத்தி செய்வான். விரைவாக யோசனைகள் செய்து, அவற்றின்படி நடக்க வல்லவன். வீண்பழி யுள்ளவன். குதிரைவண்டி யுடையவன். அதிர்ஷ்ட முள்ளவன் என்று கூறினேம்.

11. மூர்க்கமும் சாந்த முண்டு மூலச்சூ டுடைய னுவன்
ஏற்கவே சுகபு சிப்பன் இவன்மன சஞ்ச லத்தன்
நாக்கது தவரு னுகும் நாட்டினில் கீர்த்தி ஏற்பன்
பாக்குவெற் றிலைக ளிட்டன் பாலர்மேல் பிரிய னுவன்.

11. மூர்க்கக் குணமும் உடனே சாந்த மடையும் தன்மையும் இவனுக்குள. மூலச்சூடுடையவன். சுகமான உணவை உட்கொள்ளுவான். எப் பொழுதும் மனத்தில் சஞ்சலம் கொண்டவன். சொல் தவறுவன். உலகில் புகழை ஏற்பான். தாம்பூலந் தரிப்பதில் விருப்பங் கொண்டவன். குழந் தைகளிடம் பிரியமுள்ளவன்.

12. இக்குண முடையோ னுக்கு இவனுமே தாரம் ரெண்டில்
மிக்கவே இளையா னுக்கு வித்தக னுதிப்பா னென்றேரும்
தொக்கவே யிவன்கு ணத்தைச் சொல்லுவோம் சிவந்த
[மெய்யன்
நக்கன்மேல் பக்தி கொள்வன் நற்கல்வி யுடைய னுமே.

12. இவ்வாறான தன்மைகளை யுடைய தகப்பனுருக்கு, இரண்டாம் மனைவியிடத்தில் இந்த ஜாதகன் பிறப்பான். இவன் குணத்தைச் சொல்லு வோம். சிவந்த தேகமுடையவன். சிவபெருமான்மீது பக்தி கொள்ளு வான். நல்ல படிப்புடையவன்.

13. வறுமைக ளில்லா னுகும் மன்னரால் செட்டுச் செய்வன்
பெருமையும் புகழு முள்ளான் புண்ணிய மனத்த னுகும்
திருகமள் வாச முள்ளான் சொல்லது தவரு னுகும்
சிறுமைகள் ஆதி லேதான் செப்புவோ மிவனுக் கேதான்.

13. தரித்திரங்கள் இல்லாதவன். அரசர்கள் ஆதரவின் மூலம் வியா பாரங்கள் செய்வான். பெருமையும் கீர்த்தியும் உடையவன். புண்ணியம் நிறைந்த மனத்தினன். இலட்சுமீ கடாட்ச முள்ளவன். சொன்ன சொல்

தவருதவன். இவனுக்கு இளமைக் காலத்தில் தாழ்வுகள் நேரும் என்று சொல்லுவோம்.

14. சகடுவா கனமு முள்ளான் சற்சன ருறவு கொள்வான்
பகைவரைச் செயிப்பா னுகும் பாருகள் விருத்தி செய்வன்
உவமையாய் வார்த்தை சொல்வன் உத்தமர் நேசம்
[கொள்வன்
செகமதில் நல்லோ னுவன் தீரனும் தந்திர வாதி.

14. வண்டி முதலான வாகன வசதிக ளுள்ளவன். நற்குணமுடை யோரின் நட்பைப் பெறுவான். விரோதிகளை வெற்றிகொள்ளுவான். நில புலங்களை விருத்தி செய்வான். சிறந்த உபமானங்களுடன் பேசுவான். நல்லவர்கள் சிநேகத்தை அடைவான். உலகில் நல்லவனுக வாழ்வான். தைரிய மனமுடையவன். தந்திரசாலி.

15. சல்லியம் கொள்ளா னுகும் சதுஷ்பாதம் விருத்தி யுள்ளான்
இல்லையென் றுரைக்க மாட்டான் இன்பமாய் வார்த்தை
[சொல்வான்
புல்லிய புத்தி எண்ணன் பூமியில் கிருஷி செய்வான்
இல்லறம் புதிதாய்ச் செய்வன் இவன்சுக போச னத்தன்.

15. கடன் வாங்கமாட்டான். கால்நடைகள் மிகுதியாக உடையவன். தன்னிடம் யாசித்தவர்களுக்கு இல்லையென்று சொல்லான். இன்பந்தரும் சொற்களைச் சொல்லுவான். அற்பமான எண்ணத்தைக் கொள்ளான். உல கில் பயிர்த் தொழில் செய்வான். புதுமையான முறையில் இல்வாழ்க்கை நடத்துவான். இவன் போஜன சுகமுள்ளவன்.

16. பணிகளும் அதிகம் சேர்ப்பன் பங்கய ரேகை யுள்ளான்
துணிவான குணத்தா னுகும் திருப்பணி வேலை செய்வன்
வீணையது ஒருவர்க் கெண்ணன் வீண்அப வாத முள்ளான்
சினமது கொஞ்ச முள்ளான் சிறப்பான கல்வி கற்பன்.

16. ஆபரணங்களை மிகுதியாகச் சேர்ப்பன். கையில் பத்மரேகை யுடையவன். துணிவான குணமுடையவன். கோயில்களுக்குத் திருப் பணிகள் செய்வான். ஒருவர்க்கும் தீங்கு நினையான். வீணை பழியுள்ளவன். சிறிது கோபமுள்ளவன். மேன்மையான கல்வி கற்பான்.

17. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோம் இளையோ
[ரில்லான்
அவனியில் மூத்தோர் உண்டு ஆணது ஒன்று தீர்க்கம்
நவனியில் பெண்பா லொன்று நாட்டுவோம் தீர்க்க மாகப்
பவமுள இரண்டாம் சென்மம் பகருவோம் ஆண்பா
[லும்தான்.

17. இவனுடைய உடன் பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். இவனுக்கு இளையவர் இல்லை. மூத்தவர்கள் உளர். ஓர் ஆண் மகனும் பெண்ணொருத்தியு மாவர். அவர்கள் தீர்க்காயுளுடன் விளங்குவர் என்று கூறுவோம். மூத்த சகோதரனும் இவன் தந்தைக்கு இரண்டாம் பிறப்பாகப் பிறந்தவன் என்று சொல்லுவோம்.

18. மங்கையு மைந்தாம் சென்ம மறைகின்றோம் இவனுக்
[கேதான்
பொங்கமாய்த் தமையன் சேதி புகலுவோம் இருநி றத்தான்
சங்கையா மனத்த னுகும் தைரியன் சுகை கொஞ்சம்
நங்கையர் மோக வானும் நலம்படக் கூறு வானும்.

18. சதோதரி ஐந்தாம் பிறப்பாவாள். இவனுடைய தமையன் செய்தியைச் சொல்லுவோம். கரிய நிறமுள்ளவன். சந்தேகத்துடன் கூடிய மனமுள்ளவன். தைரியசாலி. தருமஞ் செய்யும் குணமும் சிறிது உண்டு. பெண்களிடம் மோகமுள்ளவன். அழகுபடப் பேசுவான்.

19. உண்டியும் லகுவாய் உண்பான் உலகினில் செட்டுச்
[செய்வான்
குண்டுணி கலகம் கொஞ்சம் குள்ளனும் யூக சாலி
எண்டிசைக் கீர்த்தி கொள்வன் இவன்பூமி கிருஷி செய்வன்
வண்டிவா கனமு முண்டு மறுமொழி அதிகம் கூறுன்.

19. எளிதாக உணவு உட்கொள்ளுவான். உலகில் வியாபாரம் செய்வான். கோள் கலகம் சிறிது உண்டு. குள்ளமானவன். சாமர்த்தியசாலி. எட்டுத் திசைகளிலும் புகழ் ஏற்பான். விவசாயம் செய்வான். வண்டி முதலான வாகன வசதிகளுண்டு. ஒருவர் கூறுவதற்கு மேலும் மேலும் மறுமொழிகள் கூறமாட்டான்.

20. மனமுமே அடக்க முள்ளான் மாநிலம் விருத்தி செய்வான்
கனமான குடும்பி யாவன் கரமதில் ருத்திர ரேகை
இனங்களு மெச்ச வாழ்வன் இவன்பித்த வாயு தேகி
சினமதை மனத்தில் வையான் சீக்கிர நடையு மாவன்.

20. மனவடக்க முள்ளவன். நெல் விளைகின்ற பெரிய நிலங்களை அபிவிருத்தி செய்வான். மதிப்புள்ள குடும்பஸ்தனுவான். கையில் உருத்திர ரேகையுண்டு. தன்னைச் சேர்ந்தவர்கள் பாராட்டும்படி வாழ்க்கையை நடத்துவான். பித்தவாயு பொருந்திய உடலுடையவன். மனத்தில் கோபமில்லாதவன். விரைவான நடையுடையவன்.

21. மனைவியு மொன்றே யாகும் மைந்தரும் ஆண்பால் ஒன்று
அனையவே பெண்பால் ஒன்று அறைகின்றேம் தீர்க்க மாகப்
பிணையாகும் மற்ற தெல்லாம் பிறந்தமை சேத மென்றேம்
வினையிலா வயது தீர்க்கம் வித்தகி கேட்டி டாயே.

21. இவனுக்கு மனைவி ஒருத்தியே யாவாள். ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக மக்கள் இருவர் தீர்க்கமாக விளங்குவர் என்று சொல்லுகின்றேம். மற்றும் பிறப்பவை யனைத்தும் சேதமாம் என்று கூறினேம். முன் கூறிய இருவர்க்கும் நிறைந்த வயதுண்டு. பார்வதியே! கேட்பாயாக.

22. மங்கையின் சேதி சொல்வேன் மாரனுக் கினிய ளாகும்
துங்கமா மனத்த ளாகும் சொல்லுமுன் கோபி யாவள்
இனங்களால் சிலவே துன்பம் எய்திடும் தர்மம் செய்வள்
உங்கள்மேல் பக்தி யுள்ளாள் உறுதியா மனத்தா ளாமே.

22. சகோதரியின் செய்தியைச் சொல்லுவேன். கணவனுக்கு இனியவள். தூய்மையான மனமுடையவள். சொல்லுவதற்குமுன் கோப முள்ளவள். பந்துக்களால் சில துன்பங்க ளுள்ளவள். தருமம் செய்வாள். பார்வதியே! தங்கள்மீதும் தங்கள் நாயகராகிய சிவபெருமான்மீதும் பக்தியுடையவள். திடமான மனமுள்ளவள்.

23. குடும்பத்தை யாத ரிப்பள் கூறுவாள் சுகமாய் வார்த்தை
திடமான குடும்பி யாவள் சிக்கிர நடையு மாவள்
விடவாக்கு அன்ன மீவள் மலரவள் இவள்பால் வாசம்
வடதிசை வரனு முண்டாம் வரனுநன் னடக்கை
[யுள்ளான்.

23. குடும்பத்தை நன்கு காப்பாள். சுகமான சொற்களைப் பேசுவாள். பலமுள்ள குடும்ப முடையவளாக இருப்பாள். விரைவான நடையுள்ளவள். இவள் சொற்கள் விஷம் போன்றன. உணவு அளிப்பாள். இலட்சுமீ கடாட்சம் உடையவள். இவளுக்கு வடதிசையிலிருந்து கணவன் வாய்ப்பான். அவன் நல்லொழுக்க முள்ளவன்.

24. புத்திரர் ஆண்பால் ரெண்டு பெண்ணது அவ்வா றுகும்
சித்தமாய் முதலில் நஷ்டம் செப்புவோம் அவளுக் கேதான்
வித்தகி வரன்முன் னேதான் மேவுவாள் யமப திக்குச்
சுத்தமாய் விபரம் ரெண்டில் சொல்லுவோம் கேளும்
[தாயே.

24. இவளுக்குப் புத்திரர் இருவர். பெண்களும் அங்ஙனமே இருவர். முதலில் ஓரிரண்டு பிறந்து சேதமாம் இவளுக்கு, என்று சொல்லுவோம். இவள் தன் கணவனுக்கு முன்பாகவே மரணமடைவாள். இவளைப் பற்றிய மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். தாயே! கேளுங்கள்.

25. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோம் ஒருபான்
[ஒன்பான்
மேதினில் உத்தி ரத்தில் வித்தகி மாதுர் வர்க்கம்
கோதிலா வருவ ளாகும் கூறுவோம் அவள்கு ணத்தைத்
தீதிலாக் குணத்தா ளென்றேரும் சிவந்திடு மேனி யாவள்.

25. ஜாதகன் விவாக காலத்தைக் கூறுவோம். பத்தொன்பதாம் வயதில், வடதிசையிலிருந்து இவனுக்கு மனைவி வாய்ப்பாள். அவள் இவனது தாய்வர்க்கத்தைச் சேர்ந்தவளாவாள். அவள் குணத்தைக் கூறுவோம். தீங்கில்லாத குணமுள்ளவள். சிவந்த சரீர முடையவள்.

26. வித்தையும் யுக்தி யுள்ளாள் வரனுக்கு நேய மாவள்
பத்தியாய் அன்ன மீவள் பலருக்கும் நல்லோ ளாவள்
நித்தியம் சீல மாவள் நேமியோர்க் குதவி செய்வள்
அத்தியைப் பெற்ற மாதே! அறைந்தன மொழிகுன் றாது.

26. கல்வியும், யுக்தியும் உள்ளவள். கணவனால் நேசிக்கப் படுவாள். வந்தவர்களுக்குப் பக்தியுடன் உணவளிப்பாள். பலருக்கும் நல்லவளாவாள். எப்பொழுதும் நல்லொழுக்க முள்ளவள். உலகிலுள்ளவருக்கு உதவி செய்வாள். விநாகரைப் பெற்ற பார்வதியே! கூறிய வார்த்தை தவறாது.

27. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் ஆண்பால் ரெண்டு
சித்தமாய்ப் பெண்பால் ரெண்டு செப்புவோம் இவனுக்
[கேதான்
குத்தமாய் நான்கு நஷ்டம் கூறுவோம் தாயே கேளீர்
சுத்தமாய் எட்டு விருத்தி செப்புவோம் இவனுக் கேதான்.

27. புத்திர பாக்கியத்தைக் கூறுவோம். புத்திரர்கள் இருவரும், பெண்கள் இருவரும் தோன்றுவர். நான்கு தவறிப் போம். தாயே!

கேளுங்கள். இவனுக்கு எட்டுச் சந்ததி ஏற்படுமென்று உறுதியாய்க் கூறுகின்றேம்.

28. மதலைகள் விருத்தி என்று வரைந்திட்டீர் முனிவ ரேநீர்
புதனேந்தாம் இடத்தோன் ஆகிப் பங்குமே சேர்ந்து [ரெண்டில்
புதல்வர்கா ரகனு மாறில் பொருந்தியே யிருப்ப தாலே
சுதர்களும் தோஷ மென்றேம் சயமுனி சொல்லு கின்றார்.

28. முனிவரே! தாங்கள் சந்ததி விருத்தி யுண்டு என்று கூறினீர்கள். புத்திரஸ்தானமாகிய ஐந்தா மிடத்துக்கு அதிபனான புதன், மிதுனமாகிய இரண்டில் சனியுடன் சேர்ந்து இருப்பதாலும், புத்திரகாரகனான குரு ஆறாமிடத்தில் உள்ளதாலும், இவனுக்குப் புத்திர தோஷம் உண்டு என, செயமுனி கூறுகின்றார்.

29. கருமத்தில் கேது நின்று கனகனும் பார்த்த தாலே
பெருமையாய்ப் புதல்வர் தோன்றும் பிரதமை தோட [மாகும்
உரிமையாய் மத்தி யத்தில் உறங்கிடும் சிலவே என்றேம்
கரிமுகன் தன்னைப் பெற்ற காரிமை புகன்றிட் டோமே.

29. கருமஸ்தானமாகிய பத்தாமிடத்தில் கேது இருந்து, அவனைக் குரு பார்க்கின்ற காரணத்தால், மேன்மையாகப் புதல்வன் தோன்றுவான். பின்பு தோன்றுபவை நிலையா. இடையில் தோன்றிய சில மரிக்கும் என்று கூறினேம். யானைமுகக் கடவுளைப் பெற்ற பார்வதியே! நாங்கள் இவ்வாறு கூறினேம்.

30. மாதுரு நிறம்சி கப்பாம் மனமது தளர்ச்சி யுள்ளாள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உத்தமி அதிர்ஷ்ட சாலி
தீதுகள் எண்ணு ளாகும் செப்புநன் னடக்கை யுள்ளாள்
சூதுகள் எண்ணு ளாகும் துறவியே கேட்டி டாயே.

30. தாயின் நிறம் சிவப்பாகும். இளகிய மனமுடையவள். இனிமையாகப் பேசுவாள். நல்ல அதிருஷ்டமுடையவள். மனத்தில் தீமைகளை நினையாள். சிறப்பித்துக் கூறும் நன்னடக்கையுடையவள். தீமைகளை நினைக்கமாட்டாள். முனிவரே! கேளுங்கள்.

31. தூணேவர்கள் எழுவ ராகும் சோர்ந்திடும் சிலவே நாளில்
அணையவே பெண்பால் ரெண்டு அறைந்தனம் தீர்க்க மாகக்
கனமுடன் மாதுர் தானும் காளையைப் பெற்ற ஆண்டில்
பிணையான திங்க ளொன்றில் பேசுவோம் மாற கங்கள்.

31. அவளுடன் பிறந்தவர் எழுவராவர். சிறிது காலத்துக்குப் பின்பு சிலர் மரிப்பர். இரு சகோதரிகள் தீர்க்கமாவர். தாயும் பெருமையுடன் புதல்வனை (ஜாதகனை)ப் பெற்ற வருஷத்தில் முதல்மாதத்தில் இறந்து விடுவாள் என்று சொல்லுவோம்.

32. அவளுடை முன்சென் மத்தை அறைகின்றேம் காஞ்சி
[தென்மேல்
நவனியில் பேரூர் தன்னில் நாயகி கர்ண வமிசம்
இவளுமே உதித்து மேலும் இன்பங்கள் உடைய ளாகிப்
பவமுள மதலை யுண்டாய்ப் பஞ்சைமேல் இரக்க மாகி;

32. அவளுடைய முன்சென்மத்தைக் கூறுகின்றேம். காஞ்சிபுரத்திற்குத் தென்மேற்கில் உள்ள பெரிய ஓர் ஊரில், கணக்குப்பிள்ளைக் குலத்தில் தோன்றி, பல இன்பங்களைப் பெற்று, புதல்வர்களை யடைந்து ஏழைகள் பால் கருணை காட்டி;

33. பந்துவும் புகழ வாழ்ந்து பலருக்கும் நல்லோ ளாகி
அந்தகன் பக்கல் சேர்ந்து அரிமகன் வரையப் பட்டுக்
கஞ்சியில் உதித்தா ளென்றேம் காதலி பின்சென் மத்தைத்
தஞ்சமாய்த் தணிகை தன்னில் தானவள் வைசியச் சேயாய்;

33. சுற்றத்தினர் புகழும்படி வாழ்ந்து, பலருக்கும் நல்லவளாக இருந்து, மரண மடைந்தாள். பிறகு பிரமனால் படைக்கப்பட்டு, காஞ்சிபுரத்தில் உதித்தாள் என்று கூறினேம். இவளது பின்சென்மம் சிறந்த திருத்தணிகையில் வைசிய குலத்தில் ஏற்பதும்.

34. பிறந்துமே பெருமை பூண்டு பணிகளும் அதிகம் உண்டாய்ச்
சிறுமையில் லாமல் வாழ்வள் செப்புவோம் தந்தை பூர்வம்
அறைகின்றேம் அருணை உத்திரம் அணுகிய பேரூர்
[தன்னில்
நிறையவே தியின் வமிசம் நேர்ந்தனன் இவனே யென்றேம்.

34. பிறந்து, பெருமையடைந்து, அணிகள் பல பெற்று, வறுமையின்றி இனிது வாழ்வாள். தந்தையின் முன்சென்மத்தைக் கூறுவோம். திருவண்ணாமலைக்கு வடக்கேயுள்ள ஒருபெரிய ஊரில், வன்னிய குலத்தில் தோன்றுவான் என்றேம்.

35. வண்டிவா கனமு முண்டாய் வணிபங்கள் செய்து வந்தும்
அண்டினோர்க் குதவி செய்தும் அவன்மனை புத்திர
[ருண்டாய்
எண்டிசைக் கீர்த்தி பெற்று இவன்வாழும் காலம் தன்னில்
துண்டமாய் வந்த வூழைச் சொல்லுவேன் கேளும் தாயே!

35. வண்டி முதலிய வாகனங்களைப் பெற்று, வியாபாரங்களைச் செய்து, தன்னையடைந்தவர்களுக்கு உதவி, மனைவிமக்களைப் பெற்று, எண் திசைகளிலும் புகழ்அடைந்து, இவன் வாழ்ந்துவரும் நாளில், இவனுக்கு ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள், தாயே !

36. ஏழையோன் மணத்துக் காக இவனைமாங் கலியம் கேட்கத் தாழ்விலாத் தாரே னென்று சதுர்த்தனும் கூறும் போது ஆழியில் சுபங்கள் கூட்டி அணுகியே கேட்கும் போது தோழனும் இல்லை என்றன் தோகையே கேட்டி டாயே.

36. ஏழை ஒருவன் மணத்துக்காக இவனை வந்து மாங்கலியம் கேட்க, தடையின்றித் தருகிறேன் என்று கூறினன். அவன் சென்று மணவினைக் கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு வந்து கேட்கும்போது, இவன் இல்லை என்று கூறினன். பெண்ணே ! கேட்பாயாக.

37. வேறொரு முத்திரை தன்னை வேண்டியே மணமு டித்துக் கூறுவான் சாபம் தானும் குலவிய பின்சென் மத்தில் நாரிய ரிரண்டு மாகி நடுவது வயதி லேதான் பாரியாள் மரண மாகிப் பாரினில் தனியாய் வாழ்வான்.

37. வேறு மாங்கலியம் வாங்கி, மணத்தை முடித்த ஏழை, பின் வரு மாறு சாபங் கூறினன். பின்சென்மத்தில், இருமனைவியரை யடைந்து, நடுவயதில் மனைவி இறந்து, தனியாக வாழக்கடவாய்.

38. அன்னிய மாதை நீயும் அனுசரித் தவளால் துன்பம் சின்னங்கள் அதிக மாகிச் சிறையினில் வாழ்வா யென்று சொன்னனன் ஏழை யோனும் தோழனும் மந்தி யத்தில் தன்மனை மரண மாகிச் சண்டன்தன் பதிக்குச் சென்றான்.

38. வேறொரு பெண்ணை அடைந்ததனால் துன்பங்களின் அடை யாளங்கள் மிகுந்து, சிறைப்பட்டவன் போன்று வாழ்வாயாக என்று ஏழை கூறினன். இவனும் கடைசியில் தன்மனைவி இறந்துபோய் மரண மடைந்தனன்.

39. கஞ்சனுல் வரையப் பட்டுக் கங்கைதன் குலத்தி லேதான் மிஞ்சியே உதித்தா னுகும் ஏழையின் சாபம் போலத் துஞ்சிடும் மனைவி ரெண்டாய்த் தோன்றிடும் இவன்பின் [சென்மம் கஞ்சியில் வைசிய வமிசம் காவலன் உதிப்பா னென்றோம்.

39. பின்பு பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறவியில் வேளாளர் குலத்தில் தோன்றினான். எழையிட்ட சாபத்தின்படி, மனைவியை யிழந்து இன்னொரு மனைவியை யடைவான். இவன் பின்பிறப்பு, காஞ்சியில், வைசிய குலத்தில் எற்படும்.

40. சாதகன் முன்சென் மத்தைச் சாற்றுவோம் புலியூர் தன்னில்
மேதினில் இக்கு லத்தில் மேவியே பெருமை பூண்டு
நீதிலா மனைவி மைந்தர் செட்டுக்கள் கிருஷி உண்டாய்க்
கோதிலாத் தோகை தன்னில் குமரர்க்கு அன்பு பூண்டு ;

40. ஜாதகன், முன்பிறவியைக் கூறுவோம். புலியூரில் இதே குலத்தில் பிறந்து, பெருமையுடன் குற்றமற்ற மனைவி மக்களைப் பெற்று, வியாபாரம், விவசாயம் முதலியன செய்து, தோகைமலை முருகப்பிரான்மீது அன்பு செலுத்தி ;

41. பலருக்கு நல்லோ னாகிப் பாரினில் வறுமை யின்றி
நலமிலாக் காலன் பக்கல் நாயகன் சென்று மேதான்
தலைநான்கோன் வரையப் பட்டுச் செனித்தவ னிவனே
[என்றும்
உலகினில் இவனின் யோகம் உரைக்கின்றேம் கேளும்
[தாயே.

41. பலருக்கும் நல்லவனாக, உலகில் வறுமையின்றி வாழ்ந்திருந்து மரண மடைந்தான். பிறகு, நான்கு தலைகளையுடைய பிரமனால் படைக்கப் பட்டுத் தோன்றியவன் இவன் ஆவான். இவ்வுலகில், இவன் யோகத்தைக் கூறுகின்றேம். தாயே ! கேளுங்கள்.

42. கிராமாதி காரம் செய்வன் கண்ணிய மாக வாழ்வன்
பாரெலாம் நல்லோ னாகிப் பலவித வண்ணச் செட்டு
வீரியன் செய்வா னாகும் விசேடகீர்த் திகளு மூள்ளான்
தேரிய வழியில் செல்வன் சண்முகன் அருளுள் ளானே.

42. கிராமங்களுக்குத் தலைவனாக இருந்து, அதிகாரம் செலுத்துவான். மேன்மையாக வாழ்வான், உலகில் நல்லவன் என்று போற்றப்படுவான். பலவித வாணிகங்கள் செய்வான். மிக்க புகழ் அடைவான். நல்வழி களிலேயே செல்வான். முருகன் அருளைப் பெறுவான்.

43. தந்தையின் மேலாய் வாழ்வன் தனங்களு மதிகம் சேர்ப்பன்
வந்தவர்க் கன்ன மீவன் வாக்குகள் சுத்த மாவன்
சந்ததம் நான்கு கிராமம் தாரணி உடைய னாகும்
எம்மையே குடும்பம் ஒன்றாய் எய்திடும் யோக வானே

43. தன் தந்தையினுஞ் சிறப்பாக வாழ்வான். செல்வம் மிகுதியாகச் சேர்ப்பான். வந்தவர்களுக்கு உணவு அளிப்பான். தூய்மையான சொற்க ளைப் பேசுவான். நான்கு கிராமங்களில் நிலபுலங்களை உடையவன். ஒரே குடும்பமாக வாழ்ந்திடுவான். நல்ல யோகமுடையவன்.

44. இவன்பிதா மரண காலம் இயம்புவோம் இருபான்
[மூன்றில்
அவனியில் தேளின் மாதம் அறைகின்றோம் கருமம் தானே
நவனியில் சாத கர்க்கு நாட்டுவோம் அன்பா னலில்
பவமுள மகர மாதம் [1]பருவநாள் உய்வன் தானே.

44. இவன் தந்தையின் மரண காலத்தைக் கூறுவோம். இவனது இருபத்து மூன்றும் வயதில், கார்த்திகை மாதத்தில், இவனுக்குக் கருமதசை வரும் என்று கூறுவோம். இவ்வுலகில் ஜாதகனுக்கு மரணகாலம் ஐம்பத்து நான்காம் வயதில், தைமாதத்தில், பௌர்ணமியன்று ஏற்படும்.

45. மறுசென்மம் தில்லை தன்னில் மறைக்குலம் உதிப்பா னுகும்
பெருமையாய் அரசர் பக்கல் போற்றியே சீவிப் பானுகும்
அருமுனி இவ்வார் கூற அத்திரி சொல்லு கின்றார்
திருமகன் தனக்கு யோகம் செப்பினீர் கிராமச் செட்டு ;

45. மறு பிறப்புச் சிதம்பரத்தில், அத்தணர் குலத்தில் ஏற்படும். அர சர்களிடம் சென்று பிழைப்பான். முனிவர் இவ்வாறு கூற, அத்திரி முனி வர் கூறுகின்றார். ஜாதகனுக்கு யோகத்தை கூறினீர்கள். கிராமத்தில் வியாபாரத்தை ;

46. எந்தக்கா லத்திலேதான் இவனுக்கு யோகம் வாய்க்கும்
அந்ததோர் சேதி சொல்வீர் அறுநான்கு ஆண்டு மேலே
முந்தியே கிராமச் செட்டு மெய்திடும் மறையோ னுலே
[2]மந்திரி தசையி லேதான் மந்தனும் புசிக்கு நாளில் ;

46. எந்தக் காலத்தில் இவன் செய்வான். இத்தகைய யோகங்கள் வாய்க்கின்ற செய்தியைக் கூறுங்கள். இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு மேல், இவனுக்கு ஓர் அந்தணன் மூலம் கிராம வியாபாரம் ஏற்படும். குரு மகாதசை சனிபுக்தியில் ;

---

1. பௌர்ணமி.

2. குரு

47. குறித்தனம் இதுவு மன்றிக் கோவல ஞலே செட்டு
உரைத்தனம் கீர்த்தி ஏற்பன் உலகுக்கு நல்லோ ஞவன்
சிறுத்தவர் தம்மைக் காப்பான் சிலபணி திகளும் நேரும்
அறந்தன்னை வளர்க்கு மாதே அன்னையே புகன்றிட்
[டோமே.

47. இவ் வியாபாரத்தைக் கூறினேம். இதைத்தவிர, அரசர் ஆதரவி ஞல் தொழில்கள் செய்வான் என்று கூறினேம். நற்புகழை அடைவான். மக்களுக்கு நன்மையைப் புரிவான். ஏழைகளைக் காப்பான். சில ஆபர ணங்களையும் அடைவான். தருமத்தை வளர்க்கின்ற அன்னையே! இவ்வாறு நாங்கள் கூறினேம்.

48. செனித்திடு காலம் தன்னில் சேய்தசை தனிலு தித்துக்
குறித்தனம் ஆண்டு நான்கும் கூறுவோம் திங்கள் ஐந்தும்
தினமது ஈரஞ் சாகும் செப்புவோம் பலனை யாங்கள்
மனைதன்னில் மாதுர் கெண்டம் வரும்துணை பீடை யாமே.

48. ஜாதகன் செனன காலத்தில் அங்காரக மகா தசையில் இருப்பு வருஷம் நான்கும், மாதம் ஐந்தும், நாட்கள் பத்துமாம். அதன் பலனைக் கூறுகின்றேம். வீட்டில் தாய்க்குக் கண்டமும், உடன் பிறந்தவர்களுக்குப் பீடையும் ஏற்படும்.


49. தனக்கன்னம் குறைவ தாகும் தன்தேகம் சந்தே கங்கள்
இனத்தினில் சூத முண்டு இடருகள் அனந்த மாகும்
வினைகளும் துணைவிக் கேதான் மேவிடும் பிசாசு பீடை
அனையவே விபர மாக அறிவிப்போம் இரண்டி லேதான்.

49. தனக்கு போஜன சௌக்கியங்கள் குறையும். தன்னுடலுக்கு நோயுண்டு. தன் சுற்றத்தினர்களுக்கு அசுபங்கள் ஏற்படும். பலவித துன் பங்கள் நேரும். சகோதரிக்கும் பல துன்பங்கள் உண்டாம். பிசாசு பீடை ஏற்படும். இவை யனைத்தையும் இரண்டாம் பாகத்தில் விவரமாகக் கூறுவோம்.

ஜாதகம் 19

1. பரிதிமான் மதியு மீனம் பணிபுதன் மேரு வாக
குருதியும் நீச்ச மாகக் குருடனும் முடவன் தேளில்
சுரார்குரு தூக்க மாக செம்பாம்பு வீணை யாக
வருவது சென்ம மாடு வந்ததால் பலன்சொல் வீரே.

1. சூரியன் மகரத்திலும், சந்திரன் மீனத்திலும், ராகு புதன் தனுசிலும், செவ்வாய் கடகத்தில் நீச்சமாகவும், சனி சுக்கிரன் விருச்சிகத்திலும், குரு துலாத்திலும், கேது மிதுனத்திலும், இலக்கினம் விருஷபமாகவும் உள்ள ஜாதகப் பலனைச் சொல்லுவீர்.



2. உமையவள் கேட்கும் போது உரைக்கின்றார் விசுவா மித்ரர்
அமைந்திடு ஆண்பால் சென்மம் அறைகின்றோம் தந்தை
[யில்லம்
யமனுத்ரம் வீதி யாகும் இந்திரன் வாடை யாகும்
செமதக்னி மாயோன் கீழ்பால் சிவன்கோட்ட மருகில்
[தங்கும்.

2. என்று பார்வதிதேவி கேட்கும்போது, விசுவாமித்திர முனிவர் கூறுகின்றார். ஆண் சென்னம். பிறந்த வீடு தந்தையினுடையது. தெற்கு வடக்கான தெருவில், கிழக்கு வரிசையில் உள்ள வீடாகும். மாரியம்மன், திருமால் ஆகிய தெய்வங்களின் கோயில்கள் வீட்டுக்குக் கிழக்கில் உள்ளன. சிவபெருமான் கோயிலும் பக்கத்திலுண்டு.

3. சிங்கவா னத்தாள் தந்தி தென்கீழ்பால் தங்கு மென்றோம்
துங்கமா நதியும் தெற்கில் தோன்றிடும் இதுவல் லாமல்
மங்கையும் முனியும் நிற்கும் மன்னர்கள் துருவம் கீழ்பால்
பங்கமாம் சமணன் உத்திரம் பகருமிவ் வடையா ளத்துள்,

3. சிங்க வாகனமுடைய துர்க்கை, விநாயகர் கோயில்கள் தென் திசையில் உள்ளன. தூய்மையான ஆறு ஒன்றும், தெற்குத் திசையி லுண்டு. இவை தவிர, அம்பிகை, முனியாண்டவர் கோயில்களு முள்ளன. அரசர் கோட்டை கிழக்குப் பக்க முளது. அருகர் கோயில் வடக்கில். சொல்லப் பட்ட இவ்வடையாளங்கள் கொண்ட இடத்துள்;

4. வாசமே செய்வா னென்றேரும் மாதுரு தந்தை யோகம்
நேசமாம் துணைவர் யோகம் நேரிழை புத்திர யோகம்
பாசமாம் முன்பின் சென்மம் பகருவோ மிந்நூல் தன்னில்
ஈசனை பூசை செய்யும் ஏந்திழை கேட்டி டாயே.

4. இந்த ஜாதகன் தோன்றி வசிப்பான். தாய், தந்தையர், அன் புள்ள உடன்பிறந்தார், மனைவி, புத்திரர் ஆகியோரின் யோகங்கள், அவர் களுடைய முற்பிறப்பு, மறுபிறப்பு முதலிய அனைத்தையும் இந்த நூலில் நாங்கள் சொல்லுவோம். சிவபெருமானைப் பூசைபுரியும் பார்வதியே! கேட்பாயாக.

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றவே ஆண்பால் ஒன்று
வந்திடுங் கன்னி அவ்வார் வகையுடன் தீர்க்க மென்றேரும்
நொந்திடு மற்ற தெல்லாம் நுவலுவோம் பிதாகு ணத்தை
எந்தைமால் நிறத்தா னுகும் இன்பமாய் வார்த்தை
[சொல்வன்.

5. தந்தையின் உடன்பிறந்தவர்களைச் சொல்லுவோமானால், ஆண் மகன் ஒருவன், பெண்ணொருத்தி தீர்க்கமாக விளங்குவர் என்போம். மேலும் பிறப்பவை சேதமாம். பிதாவின் குணங்களைச் சொல்லுவோம். கரிய நிறமுடையவன். சுகமாகப் பேசுவான்.

6. பயிர்த்தொழில் செய்வா னுகும் பால்தயிர் இஷ்டம்
[கொள்வன்
அயலார்பொன் இச்சை யில்லான் அவன்கரம் ருத்திர ரேகை
தவவுள மனத்த னுகும் சமதேகன் நாபிச் சூடு
கயவரைச் சேரா னுவன் கனத்ததோர் புத்தி யுள்ளான்.

6. விவசாயம் செய்வான். பால், தயிர் இவற்றில் விருப்பங் கொள்ளு வான். அயலவர் செல்வத்தில் ஆசை யில்லாதவன். அவன் கையில் உருத் திர ரேகையுண்டு. இரக்கம் பொருந்திய மனமுடையவன். உடற்கட்டுடை யவன். நாபிச்சூடு உண்டு. கீழோர்களைச் சேரமாட்டான். பெரும் புத்தி யுடையவன்.

7. உண்ணிய உணவின் மீது உறைப்பொடு இச்சை யுள்ளான்
அண்டிடுனோர்க் குதவி செய்வன் ஆவுகள் விருத்தி யுள்ளான்
தண்டமிழ்க் கொஞ்ச முள்ளான் சமர்த்தனுய் வார்த்தை
[சொல்வன்
எண்டிசைப் புகழ வாழ்வன் யாவர்க்கும் நல்லோ னுவன்.

7. காரமுள்ள உணவில் விருப்பமுள்ளவன். அடுத்தவர்க்கு உபகாரம் செய்வான். பசுக்கள் விருத்தி யுடையவன். குளிர்ந்த தமிழ்க்கல்வி சிறி துடையவன். சாமர்த்தியமாகப் பேசுவான். எட்டுத் திசையிலுள்ளாரும் புகழும்படி வாழ்வான். எல்லோருக்கும் நல்லவனுவன்.

8. பொய்யது அதிகம் பேசான் புண்ணியம் கொஞ்சம்
[செய்வன்
தையல்மேல் மோகம் கொள்வன் தன்மனம் கபடு
[கொஞ்சம்
கையது அழுத்தம் கொஞ்சம் காரியச் சமர்த்த னுகும்
நையவே கூரு னுகும் நாட்டினில் சல்லிய மில்லான்.

8. பொய்யுரைகள் மிகுதியாகப் பேசான். நல்வினைகள் சிறிது செய் வான். மனைவிமீது விருப்பங் கொள்ளுவான். மனத்தில் சிறிது கபட முண்டு. கையழுத்த முடையவன். செயல்களாற்றுவதில் சாமர்த்திய சாலி. பிறர் வருத்தமுறும்படி பேசான். உலகில் கடனின்றி வாழ்வான்.

9. சொன்னசொல் தவரு னுகும் துணைவரை ஆத ரிப்பன்
பன்னியே பேச வல்லன் பகருவோம் துணைவன் சேதி
அன்னியர்க் குற்றம் சொல்வன் அடைமொழி அதிகம்
[கூர்வன்
இன்னவ னீகை கொஞ்சம் இவனுக்குக் கல்வி கொஞ்சம்.

9. சொன்ன சொல் தவறுதவன். உடன்பிறந்தோரை ஆதரிப்பான். பன்னிப் பன்னிப் பேசுதலில் வல்லவன். இவன் உடன் பிறந்தானின் செய் தியைச் சொல்லுவோம். பிறர்மீது குற்றங் கூறுவான். அடைமொழிகளை மிகுதியாகச் சேர்த்துப் பேசுவான். கொடைக்குணம் சிறிதுடையவன். இவனுக்குப் படிப்புச் சிறிதுண்டு.

10. போசனப் பிரிய னுகும் புகலுமுன் கோபம் கொஞ்சம்
காசுமே லாசை கொள்ளான் கடவுளர் பக்தி கொள்வான்
பாசமாய் அல்பத் தீனி பதார்த்தங்க ளிச்சை யுள்ளான்
வாசமாய்ச் சோம்பல் கொஞ்சம் மாநிலம் விருத்தி செய்வன்.

10. போஜனத்தில் விருப்பமுள்ளவன். பிறர் பேசுவதற்கு முன்பே கோபம் சிறிது ஏற்படும். பணத்தில் விருப்பம் வையான். தெய்வபக்தி கொள்ளுவான். சிற்றுண்டிகளில் விருப்பமுடையவன். சோம்பல் சிறிதே யுண்டு. பெரிய விஷயங்களை விருத்தி செய்வான்.

11. பாரியாள் ஒன்றே யாகும் பகருவோம் புத்திர பாவம்
நீரமாய் ஆண்பால் ஒன்று செப்புவோம் கன்னி திரண்டு
கூறிய மூன்றும் தீர்க்கம் குறித்தனம் மூன்று நஷ்டம்
வீரியன் வயது தீர்க்கம் மெல்லியே கேட்டி டாயே

11. இவனுக்கு மனைவி ஒருத்தியே. புத்திர பாவத்தைச் சொல்லு வோம். ஆண்மகன் ஒருவனும், பெண்கள் இருவரும் தோன்றித் தீர்க்கமாவர் என்று கூறினேம். மூன்று குழந்தைகள் பிறந்து சேதமாம். இவன் தீர்க்க ஆயுளுடன் விளங்குவான். மென்மைத் தன்மையுடைய பார்வதியே! கேட்பாயாக.

12. பெண்ணது ஒருத்தி சேதி பேசுவோம் பின்பா கத்தில்
சொன்னஇக் குணத்தா னுக்குச் சுதனுமே யுதிப்பா னுகும்
திண்ணமாய் இவன்கு ணத்தைச் செப்புவோம் இனிமே
[லாகக்
கண்ணன்போல் வடிவ முள்ளான் கல்வியு முடைய னுமே.

12. தந்தையின் சகோதரி யொருத்தியின் செய்தியை, பின்பாகத்தில் கூறுவோம். மேற்கூறிய குணங்களையுடைய தந்தைக்கு ஜாதகன் பிறப் பான். இவன் குணத்தைச் சொல்லுவோம் இனிமேல். கண்ணபிரானைப் போன்று வடிவழகுடையவன். படிப்பு முள்ளவன்.

13. மாநிறம் சமதே கத்தன் வள்ளல்மேல் பக்தி கொள்வன்
மானனை யார்க்கு நேயன் மர்மவான் யூக சாலி
ஆனசங் கீதம் சொல்வன் அல்பமாம் பொருளு மிட்டன்
தேன்மொழி கோபி யாவன் தீரனு மிளம னத்தன்.

13. கரிய நிறமுடையவன். இறைவன்மீது பக்தி கொள்ளுவான். மான்போன்று மருண்ட கண்களையுடைய பெண்கள்மீது விருப்பமுள்ளவன். மர்மமுடையவன். ஊகித்துணரும் சக்தி பெற்றவன். சங்கீதம் கற்றுப் பாடுவான். அற்பமான பொருள்களில் ஆசையுள்ளவன். தேன் போன்று இனிய சொற்களைப் பேசுவான். கோபமுடையவன். தைரிய முள்ளவன். இனமை நிரம்பிய மனமுடையவன்.

14. நல்லோர்க்கு நல்ல னுவன் நன்முக வடிவு காணும்
இல்லையென் றுரைக்க மாட்டான் எதிரியை வசியம் செய்வன்
சொல்லது இரண்டு முள்ளான் சுகபுசிப் பிட்டம் கொள்வன்
தொல்லையு மில்லா னுகும் சொல்பமாம் வயது முள்ளான்.

14. நல்லவர்களுக்கு நல்லவனுக இருப்பான். இவன் முகத்தில் ஓர் அடையாளம் உண்டு. கேட்டவர்க்கு இல்லை என்று சொல்லாதவன். விரோதியையும் வசப்படுத்துவான். இருவிதமாகப் பேசுவான். சுகமான போஜனத்தில் விருப்பங் கொள்ளுவான். துன்பங்கள் இல்லாதவன். குறைந்த ஆயுளுடையவன்.

15. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிகுவாள் அம்மன் தானும்
அனையவே சாத கர்க்கு அல்பமாம் வயது என்றீர்
பிணையான சேதி தன்னைப் பேசுவீர் என்று கேட்கக்
கணமிலா எட்டோ னுறில் கலந்ததால் சொன்னே னம்மா.

15. முனிவர் இவ்விதமாகக் கூற, பார்வதியம்மன் கேட்கின்றாள். ஜாதகனுக்கு வயது குறைவு என்று கூறினீர்கள். அவ்வாறு ஏற்படக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, எட்டாமிடத்துக்கு உரியவனுன குரு, ஆறுமிடமாகிய துலாத்தில் இருப்பதால், குறைந்த வயதுடையவன் என்று கூறினேம், தாயே!

16. குறுமுனி சொல்லு கின்றார் குருவுமே யாறில் நிற்கத்
திருமகன் தனக்கு எந்தத் தீங்குகள் வந்த போதும்
இரவிமுன் பனிபோல் நீங்கும் இதுவலால் [1]தர்மம் தன்னில்
பரிதியும் இருப்ப தாலே பாலகன் தந்தை கருமம்,

16. அகத்தியர் கூறுகின்றார். குரு ஆறுமிடத்தில் நிற்பதால், ஜாதகனுக்கு எவ்விதத் துன்பங்கள் வந்தாலும், சூரியனுக்கு முன்பு பனிபோல மறையும். இதுவுந் தவிர, தர்ம ஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தில் சூரியன் இருப்பதால், ஜாதகன் தந்தைக்குக் கர்மம் முதலியன,

17. செய்குவா னென்று சொன்னேம் தீர்க்கமாய் வயது
[முள்ளான்
ஐயங்கள் இவனுக் கில்லை அதற்குமேல் விபரம் சொல்வீர்
பையவே துணைவர் தம்மைப் பகருவோம் இனிமே லாக
வையமேல் முன்பின் சென்மம் வந்திடும் நஷ்ட
[மென்றோம்.

---

1. ஒன்பதாமிடம் : ஈண்டு மகரம்.

17. செய்வான் என்று கூறினேம். தீர்க்க ஆயுளையு முடையவன். இதனில் சந்தேகமே இல்லை. இதற்குமேல் இவன் செய்தியை விவரமாகச் சொல்லுவோம். ஜாதகன் உடன்பிறந்தார்களைப் பற்றிக் கூறுவோம் இனி மேல். இவனுக்கு முன்னுல் ஒன்றும், பின்பு ஒன்றும் சேதமாம் என்று கூறினேம்.

18. ஆணது ஒன்றே தீர்க்கம் அரிவையர் இரண்டு மாகும்
காணவே மூன்றும் தீர்க்கம் கழறுவோம் மணத்தின் காலம்
தோணவே யிருபதா மாண்டில் தென்கீழ்பால் மனைவி
[வாய்க்கும்
பூணுவோம் அவள்தன் சேதி புண்ணிய வதியே கேளாய்.

18. ஆண்துணை ஒன்று, சகோதரிகள் இருவர் ஆகிய மூவரும் தீர்க்க மாக விளங்குவர். ஜாதகனின் திருமண காலத்தைச் சொல்லுவோம். இவ னுடைய இருபதாம் வயதில், இவனுர்க்குத் தென்கிழக்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் செய்தியைச் சொல்லுவோம். புண்ணிய சாலியே! கேட்பாயாக.

19. சிவந்திடு மேனி யாவள் தேகமு மொடிச்ச லுள்ளாள்
நவனியில் பொய்கள் சொல்லாள் நளினமாய் வார்த்தை
[சொல்வள்
சிவனடி யார்க்கு நேயள் தீரமில் லாத நெஞ்சம்
அவனியில் பொறுமை சாலி அழகுளாள் என்று
[சொன்னேம்.

19. சிவந்த சரீர முடையவள். மெலிந்த உடல். உலகில் பொய் யுரை கூரூள். சுகமான சொற்களைப் பேசுவாள். சிவனடியார்களிடம் அன்புள்ளவள். உறுதியில்லாத மனமுள்ளவள். பொறுமையுடையவள். அழ குடையவள் என்று கூறினேம்.

20. புத்திர ராண்பால் ரெண்டு பெண்ணது அவ்வா ருகும்
சித்தமாய் நான்கும் தீர்க்கம் சேதமாம் மூன்று தாமும்
உத்தமி மாதுர் சேதி உரைக்கின்றேம் யோக சாலி
சித்தமும் சிவப்ப தாவள் சீலமும் கொஞ்ச முள்ளாள்.

20. இவனுக்கு ஆண்மக்கள் இருவர். பெண்கள் இருவர். இவர்கள் நால்வரும் தீர்க்கம். மேலும் மூன்று பிறந்து சேதமாம். உத்தமியே! ஜாத கன் தாயாரின் செய்தியைச் சொல்லுகின்றேம். அதிர்ஷ்ட முள்ளவள். மனத்தில் கோப முடையவள், நல்லொழுக்க முள்ளவள்,

21. முன்கோபம் பின்சாந்தம் முயற்சியாய்க் குடும்பி யாவள்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பா ளிவளே [யென்றேரும்
பின்புத்தி உடையா ளாகும் பிசகிலாள் வறுமை யில்லாள்
அன்னியர் குற்றம் சொல்லாள் அம்பிகை யாளே கேளாய்.

21. முன்கோப முண்டு. பின்பு சாந்தமடைவாள். முயற்சியுள்ள குடும்ப முடையவள். தன் வார்த்தையே சிறந்தது என்று நிலைநாட்டுவாள். பின் புத்தி யுடையவள். தவறில்லாதவள். தரித்திரமில்லாதவள். அயலார் குற்றத்தைக் கூறுள். பார்வதியே! கேட்பாயாக.

22. அவளுடைத் துணைவர் தம்மை அறைகின்றேரும் ஆண்பால் [ஒன்று
நவனியில் பெண்பால் ஒன்று நாயகி மூத்தோ ரென்றேரும்
இவைகளும் விருத்தி யென்றேரும் ஈச்வரி கேட்க லுற்றாள்
தவசியே மாதா மகிக்குச் சஞ்சலஞ் செய்வார் சொல்வீர்.

22. தாயின் துணைவர்களைப் பற்றிச் சொல்லுகின்றேரும். ஆண்மகன் ஒருவன். பெண் ஒருத்தி. தலைவியே! இவர்கள் ஜாதகன் தாய்க்கு மூத்தவர் ஆவர் என்று கூறினேரும். இவர்கள் ஆயுள் விருத்தியுடைவர் என்று சொன்னேரும். பார்வதி கேட்கத் தொடங்கினாள். முனிவரே! இவளுடைய பாட்டிக்கு (தாயைப் பெற்றவள்) உரிமைக் கடன்கள் செய்பவர் யாவர் என்று சொல்லுவீர்.

23. மாதுரு மகியி னுஸ்தி வந்திடு மிவளுக் கேதான்
மேதினி லவளின் பக்கல் மேவுவாள் இவளே யென்றேரும்
போதவே துணைவர் கட்குப் பொருந்தாவோ அந்த ஆஸ்தி
ஓதுவேன் அவளுக் கேதான் உறையாது ஆண்பா லுந்தான்.

23. பாட்டியினுடைய சொத்து இவளுக்குக் கிடைக்கும். அவளிடம் சென்று வசிப்பாள் இவள் என்று கூறினேரும். இவளுடைய தாயின் சகோதரர்களுக்கு அந்த ஆஸ்தி கிடைக்காதோ? இவள் பாட்டிக்கு ஆண் சந்ததியில்லை.

24. மங்கையு முண்டு யென்றேரும் அதுவுமே ஒருத்தி யாகும்
சங்கைகள் அவளுக் கேதான் சாராது அந்த ஆஸ்தி
பொங்கமா யிவனுக் கேதான் புகலுவோம் மாமன் ஆஸ்தி
பங்கய முகத்தி னுளே பகருவோம் இன்னுங் கேளே.

24. பெண் உண்டு. அவளும் ஒருத்தி. அவளுக்கு ஆஸ்தி கிடைக்காது. இந்த ஜாதகனுக்கு மாமனின் ஆஸ்தி சேரும் என்று சொல்லுவோம்.

தாமரை மலர்போல் அழகிய முகத்தையுடைய பார்வதியே! கூறுவோம்; மேலுங் கேட்பாயாக.

25. மாதுரு பூர்வம் தன்னை யறைகின்றேம் இனிமே லாகப்
போதவே பட்சி மேல்பால் பேரூரில் வடுக னுக்கு
மேதினில் மகவாய்த் தோன் றிவித்தையும் புத்தி உண்டாய்த்
தீதிலாக் குணத்த ளாகிச் சேயர்கள் அதிகம் உண்டாய்;

25. இனிமேல் தாயின் முற்பிறப்பைக் கூறுகின்றேம். திருக்கழுக் குன்றத்துக்கு மேற்கில் உள்ள பெரிய ஊரில், வடுகர் குலத்தைச் சார்ந்த ஒருவனுக்கு மகளாய்ப் பிறந்து, படிப்பும் கல்ல அறிவும் ஏற்பட்டு, குற்ற மற்ற குணங்களை யுடையவளாய், மக்கட் செல்வத்தை மிகுதியாகப் பெற்று,

26. பந்துவுக் கினிய ளாகிப் பஞ்சைகட் கன்ன மீந்து
தஞ்சமாய் அவள்வ ரன்தான் தரணியாள் அரசர் பக்கல்
கொஞ்சியே சீவித் தானும் கோதையும் அந்தி யத்தில்
மிஞ்சியே மார்பு நோயால் மெல்லியு மரண மாகி;

26. உறவினருக்கு கல்லவளாகி, அகதிகட்கு உண்டியளித்து வாழ்ந் தாள். இவள் கணவன் பூமியை யாளும் அரசர்களைச் சார்ந்து பிழைத்தான். அந்திய காலத்தில் இவள் மார்பு நோயினல் மரண மடைந்து;

27. பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவள் இவளே என்றேம்
அறைகின்றேம் பின்சென் மத்தை அவ்வூரில் இக்கு லத்தில்
விரைவினில் தெளகித் திரியாய் வித்தகி உதிப்பா
[ளென்றேம்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

27. பிரமதேவனுல் படைக்கப்பட்டு இவ்வுலகில் பிறந்தவள் இவள் என்று கூறினேம். இவள் மறுபிறப்பைக் கூறுவோம். அவ்வூரில் இந்தக் குலத்தவனுக்கே பேத்தியாக (பெண் வயிற்றுப் புதல்வியாக)ப் பிறப்பாள் என்று கூறினேம். முருகக் கடவுளைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

28. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் சேர
[நாட்டில்
முந்திய நதியின் பக்கல் உயர்குல மறையோ னுக்கு
வந்துமே மகவாய்த் தோன்றி மன்னர்பால் செட்டுச் செய்து
சந்ததம் தனங்கள் பெற்றுத் தான்வாழும் காலந் தன்னில்;

28. ஜாதகன் முற்பிறப்பைச் சொல்லுவோம். சேர நாட்டில், நதிக் கரையிலுள்ள ஓர் ஊரில், உயர்ந்த அந்தணர் குலத்தைச் சேர்ந்த ஒருவனுக்

குப் புதல்வனுகப் பிறந்து, அரசர்களே யடைந்து, தொழில் செய்து மிக்க செல்வத்தைப் பெற்று, வாழுகின்ற காலத்தில்;

29. ஏழையாய் ஒருவன் வந்து இவன்பக்கல் ஊழி செய்து
தாழ்விலா மனத்த னுகிச் சதுர்த்தன்மேல் இச்சை வைத்து
ஆழியி லாத ரித்தான் அவன்செய்த மோசச் செயல்கேள்
நாழியில் சிலவே பொன்னை நாயகன் எடுத்துச் செல்வன்.

29. ஏழையான நான்காம் வருணத்தான் ஒருவன் இவனை யடுத்து ஊழியம் செய்துகொண்டிருந்தான். தாழ்வில்லாத மனத்துடன் அந்த ஏழைமீது அன்புகொண்டு உலகில் அவனை ஆதரித்தான். அந்த ஏழை செய்த மோசச் செயலைக் கேளும், தாயே! ஒரு சிறிய பாத்திரத்தில் வைத்திருந்த காசுகள் சிலவற்றை எடுத்துச் சென்றுவிட்டான்.

30. மறையவன் திகில டைந்து வறைகுவான் சாபம் தானும்
மறுசென்மம் உந்தன் ஆஸ்தி வளமெலாம் வரண்டு
[வேன்நான்
மறுமொழி கூரு னுகி மங்கையை மணம்பு ரிந்து
வருஞ்சுதர் தன்னுல் ஆஸ்தி வாங்குவே னென்று சொல்லி,

30. ஏழையின் செயலைக்கண்டு அந்தணன் திடுக்கிட்டுச் சாபமிட்டான். மறுபிறப்பில் செல்வவள மனைத்தையும் நான் சுரண்டுவேன் என, மறுமொழி யொன்றும் சொல்லாமல் நின்றான் ஏழை. மேலுங் கூறுவான். மறுபிறப்பில் உன் பெண்ணை மணந்து அவளுக்குப் பிறக்கும் புதல்வர்மூலம் உன் சொத்தைப் பெறுவேன் என்று சொல்லி;

31. உறுதியும் செய்து கொண்டு உத்தமன் வாழ்ந்தா
[னென்றும்
மறலியின் பதிக்குச் சென்று மறையோனுல் வரையப் பட்டு
அறைகின்றும் கங்கை வம்சம் அவனுமே உதித்தா
[னென்றும்
உரைக்கின்றும் முன்னூழ்ச் சாபம் உறைந்திடு மவனுக்
[கேதான்.

31. மனவுறுதியுடன் அவன் வாழ்ந்து வந்தான். பின்பு மரண மடைந்து, பிரம தேவனுல் படைக்கப்பட்டு, வேளாளர் குலத்தவனுகப் பிறந்தான் என்று சொன்னேம். முன்சென்ம தோஷம் இப்பிறப்பில் ஏழையை யடைந்தது.

32. மனைவியி னுஸ்தி யெல்லாம் வந்திடும் இவனுக் கேதான்
மனைவியும் எந்தத் திக்கு அறைகுவீர் முனியே என்றுள்
மனைவியும் தென்கீழ் தன்னில் அறைந்தனம் சிற்றூர்
[ஆகும்
மனைவியால் பெருமை காணும் மங்கையே கேட்டி டாயே.

32. மனைவியின் ஆஸ்தி யனைத்தும் இவனுக்குச் சேரும். மனைவி எந்தத் திசையிலிருந்து வாய்ப்பாள்? முனிவரே! கூறுங்கள், என்று பார்வதி கேட்டாள். மனைவி, தென் கிழக்குத் திசையிலுள்ள சிறிய ஊரிலிருந்து வருவாள் என்று சொன்னேம். மனைவியால் பெருமை யடைவான். பார்வதியே! கேட்பாயாக.

33. மறைக்குல முன்சென் மத்தில் வந்தவ னிச்சென் மத்தில்
வரநதி குலத்தி லேதான் வந்தகா ரணங்க ளென்ன
அறைகின்றேம் முன்சென் மத்தில் அரசர்பால் செட்டுச்
[செய்தும்
இருவேலை சபத பங்கள் இவனுமே செய்யா தாலும்;

33. முன்பிறவியில் அந்தணர் குலத்தவனாக இருந்த இந்த ஜாதகன் தந்தை, இப்பிறவியில் வேளாளர் வமிசத்தில் பிறந்ததற்குக் காரணங்கள் என்ன? சொல்லுகின்றேம். முற்பிறப்பில் அரசர்களிடம் தொழில் செய்ததாலும், காலை, மாலை வேளைகளில் ஜபதபங்கள் செய்யாமலிருந்ததாலும்,

34. உதித்தனன் இவனே யென்றேம் உரைக்கின்றேம்
[இவன்பின் சென்மம்
மதித்திட அருணை தன்னில் மறைக்குலம் உதிப்பா னாகும்
பெருமையாய்ச் செட்டுச் செய்து பிரபல கீர்த்தி பெற்று
இருவினை இல்லா னாகி இவனுமே வாழ்வா னாகும்.

34. இவன் வேளாளர் வமிசத்தில் பிறந்தான் என்று சொன்னேம். இவன் மறுபிறப்பைச் சொல்லுகின்றேம். திருவண்ணாமலையில், அந்தணர் குலத்தில் பிறப்பான். பெருமையுடன் வியாபாரங்கள் செய்து, பிரபலமான புகழைப் பெற்று, தீவினையில்லாதவனாய், இவன் வாழ்க்கை நடத்துவான்.

35. இன்னவன் முன்சென் மத்தை இயம்புவோம் காஞ்சி
[தன்னில்
தன்னிலே தீர்த்தம் கீழ்பால் தானவன் முசல்மான் வமிசம்
அன்னவன் உதித்து மேலும் அக்கோரி தன்னி லேதான்
இன்னவன் குரான்ப டித்து எழில்பொருள் வாங்கிக்
[கொண்டு;

35. இந்த ஜாதகனின் முற்பிறப்பைக் கூறுவோம். காஞ்சிபுரத்தில், தீர்த்தக் கரைக்குக் கிழக்கில், மகமதியர் வமிசத்தில் பிறந்து, மசூதியில் முகமதியர் வேதமான குரான் படித்துக் கூறி, அதனால் மிக்க பொருளைப் பெற்று,

36. வருவோர்க்குச் சலங்க ளீந்து மன்னனும் மரண மாகி
வருங்கங்கை குலத்தி லேதான் வந்தவ னிவனே யென்றும்
அருமறை முனிவர் கூற அம்பிகை கேட்க லுற்றுள்
உரிமையாய் முன்சென் மத்தி லுதித்தனன் மஸ்தா
[னென்றீர்.

36. தாகமென்று கூறித் தன்னை நோக்கி வந்தவர்களுக்குத் தண்ணீர் அளித்து வந்தான். சிலகாலஞ் சென்று இறந்தான். பிறகு வேளாளர் குலத்திலே பிறந்தவன் இவன் என்று கூறினேம். இவ்வாறு முனிவர் கூறவும் பார்வதி கேட்கலானாள். முன் சென்மத்தில் மகமதியனாகப் பிறந்தான் என்று கூறினீர்கள்;

37. இக்குல முதித்த தென்ன இயம்புவீர் முனியே யென்றுள்
தக்கவே முன்சென் மத்தில் சான்றோர்க்குச் சலங்க ளீந்து
மிக்கவே யிருந்த தாலே மேவினன் இக்கு லத்தில்
[1]நக்கனைப் பூசை செய்யும் நாயகி கேட்டி டாயே.

37. பிறகு இக்குலத்தில் தோன்றியது ஏன்? முனிவரே! கூறுங்கள் என்றுள். முற்பிறப்பில் நல்ல பெரியோர்களுக்கு, தண்ணீர் கொடுத்து, மேன்மையாக இருந்துவந்ததால், இந்த சென்மத்தில் இக்குலத்தில் தோன்றினன். சிவபெருமானைப் பூசிக்கும் பார்வதியே! கேட்பாயாக.

38. தந்தையின் மரண காலம் சாற்றுவீர் முனியே யென்றுள்
வந்தவன் முப்பா னேழில் வைகாசி மாதம் தன்னில்
எந்தையே கருமம் நேரும் இயம்புவோம் அந்தக் காலம்
புந்தியின் தசையி லேதான் சவுரியன் புசிக்கும் காலம்.

38. இவன் தந்தையின் மரண காலத்தைக் கூறுங்கள், முனிவரே! என்றுள். ஜாதகனுக்கு முப்பத்தேழாம் வயதில், வைகாசி மாதம் கரும தசை ஏற்படும் என்போம். அந்தக் காலம் புதமகா தசையில் சனி புக்தியாகும்.

39. மாரகம் நேரு மென்றும் மாதுரு தனக்குச் சொல்வேன்
தீரமாம் முப்பான் ஐந்தில் சித்திரை மாதம் தன்னில்
கூறுவோம் கர்மந் தானும் கூரியன் தசையி லேதான்
பாரிய குருபு குத்தி பண்புடன் நடக்கு மென்றும்.

1. சிவபெருமான்

39. அப்பொழுது தந்தைக்கு மரணம். இனி, தாய்க்கு மரண காலங் கூறுவோம். ஜாதகனின் முப்பத்தைந்தாம் வயதில் சித்திரை மாதத்தில், புதமகா தசை குரு புக்தியில் தாய்க் கருமம் நன்கு நடைபெறும் என்று சொல்லுவோம்.

40. இன்னவன் தனக்குக் கண்டம் இயம்புவோம் ஓராண்
[டுக்குள்
என்னநோய் வந்த போதும் இலகிடும் இவனுக் கேதான்
அன்னவன் அன்பான் ஆறில் ஐப்பசி மாதம் தன்னில்
உன்னத வளர்பக் கத்தில் உயர்சஷ்டி தன்னி லேதான்,

40. இவனது மரணத்தைக் கூறுவோம். ஒரு வயதுக்குள்ளாக எத் தகைய வியாதி வந்தபோதும் நீங்கிப் போகும். இவனது ஐம்பத்தாறுவது வயதில், ஐப்பசி மாதத்தில், சுக்கில பட்சம் சஷ்டியில்,

41. மரணமே ஆகிப் பின்பு மறுசென்ம மாலங் காட்டில்
திறமையாய் இக்கு லத்தில் செனிப்பனும் பெருமை
[பூண்டு
பெருநிதி யதிக முண்டாய்ப் பூமியில் வாழ்வா னுகும்
கரிமுகன் தன்னைப் பெற்ற காதலி கேட்டி டாயே.

41. இறந்து போவான். பிறகு மறுபிறவியில் திருவாலங்காட்டில் இதே குலத்தில் தோன்றுவான். மேன்மையுடன் செல்வம் மிகுதியாகப் பெற்று, இவ்வுலகில் வாழ்வான். விநாயகரைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

42. உதித்தவன் பொதுயோ கத்தை உரைக்கின்றேம் சுகபு
[சிப்பன்
சதமான பூமி சேர்ப்பன் தன்தாயால் யோகம் வாய்க்கும்
அதிபதி யாக வாழ்வன் யாவர்க்கும் நல்லோ னுவன்
துதிசெய்தோர்க் குதவி செய்வன் துன்பமில் லாமல்
[வாழ்வன்.

42. அவ்வாறு தோன்றிய இவனது பொதுவான யோகத்தைக் கூறு கின்றேம். சுகமான போஜன முடையவன். ஏராளமாக நிலபுலன்களைச் சேர்ப்பான். தன்னுடைய தாயினால் அதிர்ஷ்டங்கள் உண்டாம். எஜமான னுக வாழ்ந்து வருவான். அனைவருக்கும் நல்லவனுவான். தன்னைப் புகழ்ந்தவர்களுக்கு உதவி யளிப்பான். துன்பமின்றி வாழ்ந்து வருவான்.

43. எந்தக்கா லத்தி லேதான் இவன்மா துர்ஆஸ்தி சேரும
மூந்தவே கூறு மென்ன வுதித்தவன் பத்தாண் டின்மேல்
சொந்தமாய்ச் சேரு மென்றேரும் சுதனுமே ஆருண்
[டின்மேல்
அந்ததோர் இடத்தி லேதான் அணுகுவான் என்று
[சொன்னேம்.

43. எந்தக் காலத்தில் இவனுக்குத் தன்தாயின் செல்வம் சேர்ந்திடும்? அதைக் கூறுங்கள். ஜாதகனது பத்தாம் வயதுக்குமேல், தாயின் செல்வத்துக்கு இவன் உரிமை யுள்ளவனுவன். ஜாதகன் ஆறு வயதுக்குமேல் தாயின் வீட்டுக்குச் செல்வான்.

44. சத்துரு சயமே செய்வன் சகலபாக் கியமும் சேர்ப்பன்
குத்திரம் அதிகம் சொல்வன் குலத்துக்குத் தலைவன் ஆவன்
சத்தியை விருப்பாற் கொள்வன் சாலவா சால னென்றேரும்
வித்தகன் தனக்கு ஆஸ்தி விளம்புமே ழாயி ரம்பொன்.

44. விரோதிகளை வெற்றி கொள்ளுவான். எல்லா நன்மைகளையும் அடைவான். குயுக்தியாகப் பேசுவான். தன் குலத்துக்கே தலைவனுவான். தன் மனைவியை விருப்பத்துடன் மணப்பன். நன்றாகப் பேசுவான். ஜாதகனுக்கு ஆஸ்தி ஏழாயிரம் பொன் என்று கூறுவோம்.

45. பாலகன் செனிக்கும் காலை [1]பீதகன் திசையி ருப்பு
கோலமாய் ஆண்டு ரெண்டு குறித்தனம் திங்கள் பத்தும்
ஞாலமேல் நாள்களீ ரேழு நாட்டுவோம் பலனை யாங்கள்
சாலவே சாத கர்க்குச் சாற்றுவோம் கண்டம் தானே.

45. ஜாதகன் செனன காலத்தில் குரு மகா தசையில் இருப்பு; வருஷம் இரண்டும், மாதங்கள் பத்தும், நாட்கள் பதினுன்கு மென்று நாங்கள் கூறுவோம். அதன் நற்பலன்களையும் துன்பத்தையும் இவனுக்குக் கூறுவோம்.

46. குடும்பத்தில் சுகமே நேரும் குலவிடும் தனதா னியங்கள்
அடைவுடன் காலி விருத்தி அவனுக்குத் துணைவர்
[விருத்தி
திடமுடன் சூத கங்கள் செப்புவோ மிவனுக் கேதான்
தடவரை மகளே பின்பால் சாற்றுவோம் சித்தி ரங்கள்.

46. குடும்பத்தில் சுகமேற்படும். தன தானிய விருத்தியுண்டு. கால் நடைகள் விருத்தியும் உண்டாகும். சகோதரர்களும் வளம் பெற்றிருப்பர். நிச்சயமாகச் சிற்சில அசுபங்களும் இவனுக்கு ஏற்படுமென்று கூறுவோம். இவன்பெற்ற பார்வதியே! மற்ற விவரங்களைப் பின்பகுதியில் கூறுவோம்.

---

1. குரு

ஜாதகம் 20

1. பிறைபுகர் மேரு வாகப் பொன்சீயம் ராகு மானில்
[1]தரைமகன் வீணை புக்க சனிரவி புந்தி தேளில்
வருவது சென்மம் நந்தி வரும்கேது [2]வளையல் புக்க
உரைப்பீர்கள் பலனை யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சந்திரனும் சுக்கிரனும் தனுசிலும், குரு சிம்மத்திலும், இராகு மகரத்திலும், செவ்வாய் மிதுனத்திலும். சனி சூரியன் புதன் விருச்சிகத்திலும், கேது கடகத்திலும் தங்கி, இலக்கினம் விருஷபமாக இருந்தால், அதற்குரிய பலன்களைக் கூறுங்கள் என்று பார்வதி கேட்கலானாள்.

		லக்கினம்	செவ்வாய்
	இராசி சக்கரம்		கேது
ராகு			குரு
சந்திரன் சுக்கிரன்	சனி சூரியன் புதன்		

2. அத்திரி சொல்லு கின்றார் ஆணது சென்ன மாகும்
வித்தக னில்லம் தன்னை வளம்புவோம் வடதென் வீதி
சித்தமாய் இந்திர வாடை செழிப்புள கிரக மாகும்
அத்தியு மாரி காளி அறைந்தனம் தென்கீழ் தன்னில்.

2. அத்திரி முனிவர் கூறுகின்றார். இஃது ஓர் ஆணின் ஜாதகமாகும். ஜாதகன் பிறந்த வீட்டைக் கூறுவோம். தெற்கு வடக்கு வீதியில், கிழக்கு வரிசையிலுள்ளது. இவன் வீடு, செல்வத்திலும் மிக்கது. இல்லத்திற்குத் தென் கிழக்கில், விநாயகர், மாரியம்மன், காளிதேவி இவர்களது கோயில்கள் உள்ளன.

3. மாலவன் கோட்டம் கீழ்பால் மறைந்திடு மதன்கீ ழீசன்
சாலவே துருவம் கீழ்பால் தானது நடக்கு மென்றோம்
பாலகன் இல்லத் துக்குப் பகருவோம் அருகர் வாயு
ஆலத்தை யுண்டோன் பக்கல் அமர்ந்திடு மாது தெற்கில்.

---

1. செவ்வாய்
2. கடகராசி

3. கிழக்கே விஷ்ணு கோவிலும், உண்டு. அதற்குக் கிழக்கில் சிவ பெருமான் கோயிலொன்றுண்டு. கீழ்த் திசையில் குருவ சக்கரங்கள் உள. ஜாதகன் வீட்டின் பக்கத்தில், அதாவது தென்மேற்குத் திசையில், ஜைன தேவன் கோயில் உண்டு. அதற்குத் தெற்கில், ஆலகாலத்தை அருந்திய சிவபெருமானின் இடப்பாகத்தில் அமைந்துள்ள அம்பிகை ஆலயம் உளது.

4. திங்களை அணிந்தோன் கோட்டம் சிதைந்திடு மருகி
[லேதான்
பொங்கமாய் நதியு முண்டு புகன்றதோர் சமவூர் தன்னில்
தங்கிடும் சோலை சூழி சாற்றுவோம் கங்கை சேயாய்
மங்கையே யுதிப்பா ளுகு மறைகின்றோம் கேட்டி டாயே.

4. அவ்வூரில், பிறையை முடியில் தரித்துள்ள சிவபெருமான் கோயில் ஒன்று சிதைந்துள்ளது. அதனருகில் ஒரு நதி யுண்டு. அங்கு பூஞ்சோலைகளும், நீர்நிலைகளும் உள்ளன. இத்தகைய அடையாளமுள்ள நல்ல ஊரில் வேளாளர் குலத்தில் உதிப்பான் இந்த ஜாதகன் என்று கூறுகின்றோம். கேட்பாயாக.

5. அன்னையின் தந்தை யோகம் அவன்துணை களத்திர
[புத்திரர்
தன்னுடை யோகம் தாமும் சாற்றுவோம் முன்பின்
[சென்மம்
உன்னத கருமஞ் சாந்தி உரைக்கின்றோம் இந்நூல் தன்னில்
தந்தியைப் பெற்ற மாதே தயாபரி கேட்டி டாயே.

5. ஜாதகனின் தாய், தந்தையர், சகோதரர்கள், மனைவி, புதல்வர் ஆகியோரின் யோகங்கள், ஜாதகனின் யோகங்கள், இவர்களது முன், பின் சென்மங்கள், தோஷங்களுக்குப் பரிகாரங்கள், முதலியவற்றை இந்நூலில் கூறுகின்றோம். விநாயகப் பெருமானைப் பெற்ற தயையுள்ள பார்வதியே ! கேளுங்கள்.

6. தாதைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு முதல்மா தின்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோம் இவனின் தந்தை
போதவே துணைவர் தம்மைப் புகலுவோம் அறுவர்
[மூத்தோர்
தீதாகு மென்று சொன்னோம் சேயவன் ஏழாம் சென்மம்.

6. இவன் பாட்டனாரின் இரண்டு மனைவியர்களில் முதல் மனைவி பெற்ற மைந்தனே ஜாதகனுக்குத் தந்தையாவான். இவனது உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். இவனுடன் பிறந்தவர்கள் ஆறு பேர் மூத்தவர். அனைவரும் இறந்து போவர். இவன் ஏழாவது பிறப்பு.

7. துணைவர்க ளில்லா ருகும் தோகையும் கேட்க லுற்றுள்
கனமுடன் இளைய தாய்க்குக் காளைகள் இல்லை யோசொல்
அனையவே ஆண்பால் ரெண்டு அறைந்தனம் தீர்க்க மாகப்
பிணையாகு மற்ற தெல்லாம் புராதனி கேட்டி டாயே.

7. இவனுக்குச் சகோதரர்கள் இல்லை. பார்வதி கேட்கலாளுள்; தந்தையின் சிறிய தாயாருக்குப் புதல்வர்கள் இல்லையோ? அவளுக்கு இரண்டு ஆண்கள் தீர்க்கமாக இருப்பார்கள் என்று சொன்னேம். மற்றவர் கிலையார். பார்வதியே! கேட்பாயாக.

8. இன்னவர் வேறுப்ச் செல்வர் இயம்புவோம் பிதாகு
[ணத்தைத்
தன்னிலே சமதே கத்தன் தனத்தின்மேல் இச்சை யுள்ளான்
அன்னவன் ஈகை கொஞ்சம் அவன்சுக புசிப்பில் லாதான்
உன்னத வார்த்தை கூர்வன் உறுதியா மனத்த னுமே.

8. அவர்கள் வேறு குடும்பமாகச் சென்றுவிடுவர். தந்தையின் குணத்தைக் கூறுவோம். உடற்கட்டுடையவன். செல்வத்தில் விருப்ப முள்ளவன். சிறிதளவு தான தருமங்கள் செய்வான். சுக போஜன மில் லாதவன். உயர்ந்த வார்த்தைகளைக் கூறுவான். உறுதியான மனமுடை யவன்.

9. காரிய சமர்த்த ருகும் கன்மனம் கல்வி கொஞ்சம்
பாரியாள் இஷ்டம் கொள்வன் பாலர்மேல் பிரிய னுவன்
மாறியே சொல்லு வானும் மர்மவான் கிருஷி செய்வன்
சீறிடான் பாக்ய முள்ளான் தேவியே கேட்டி டாயே.

9. செயலாற்றுவதில் வல்லவன். கருணையற்ற உள்ளமுடையவன். சிறிதே கல்வி யுடையவன். மனத்துக்கேற்ற மனைவியைப் பெறுவான். புதல்வர்கள்மேல் விருப்பமுள்ளவ னுவான். மூர்க்க சொற்களை உடை யவன். இரகசிய முடையவன். பயிர்த்தொழில் புரிவான். கோபம் அடைய மாட்டான். பாக்கிய முடையவன். தேவியே! கேட்பாயாக.

10. அறத்தின்மேல் இச்சை யில்லான் ஆள்கார ருடைய ருகும்
திறமையாய்ப் பித்த தேகி செப்புவோம் வறுமை யில்லான்
அறைகின்றே மந்தி யத்தில் அலைச்சலும் சஞ்ச லங்கள்
குறையான புசிப்பு முள்ளான் கோதையே மேலுங் கேளே.

10. தருமத்தில் விருப்ப மில்லாதவன். நல்ல வேலைக்காரர்களைப் பெற்றிருப்பான். பித்த சரீர முடையவன். தரித்திர மில்லாதவன். இவன், கடைசி நாளில் வீணான அலைச்சலும், சஞ்சலங்களும் உடை

யவனுவன். குறைவான உணவை உட்கொள்ளுவான். பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

11. இக்குண முடையோ னுக்கு இவனுமே யிரண்டாஞ் [சென்மம்
மிக்கவே உதிப்பா னுகும் விளம்புவோம் இவன்குணத்தைத்
தக்கவே சிவந்த மேனி தைரியன் கல்வி மானும்
திக்கெலா மெச்ச வாழ்வன் சொல்லது தவரு தென்றேரும்.

11. இந்தக் குணமுடைய தந்தைக்கு ஜாதகன் இரண்டாம் பிறப்பாகப் பிறப்பான். இவன் குணத்தைக் கூறுகின்றேரும். அழகிய சிவந்த சரீரமுள்ளவன். தைரிய முள்ளவன். நல்ல கல்வி கற்பான். எண்திசைகளிலு முள்ளோர் மெச்ச வாழ்வான். நாங்கள் சொன்ன சொற்கள் தவரு.

12. விலாவுகள் விருத்தி செய்வன் மெல்லியர் இஷ்ட னுவன்
களவுகள் மனத்த னுகும் கடூரமாம் கோபி யாவன்
அளவிலாப் பாக்கிய வானும் ஆவுகள் விருத்தி செய்வன்
கிளிமொழி கூறு வானும் கேவல மணுகாச் சித்தன்.

12. பயிர்களை விருத்தி செய்வான். பெண்கள் மீது விருப்ப முள்ளவனுவான். கள்ளத்தனமுள்ள மனமுடையவன். கடுமையான கோப முள்ளவன். அளவற்ற பாக்கிய முடையவன். பசுக்கள் விருத்தியுள்ளவன். கிள்ளைபோல் இனிய மொழிகளைப் பேசுவான். அற்பகுணம் இல்லாத மனமுடையவன்.

13. பலவித லாப முள்ளான் பந்துவும் புகழ வாழ்வன்
நலமுளோர் நேயம் கொள்வன் நாட்டினில் வணிபம் [செய்வன்
விலைமாதர் விருப்பம் கொள்ளான் வீணப வாத மில்லான்
தலந்தொறும் தீர்த்தம் தோய்வன் சங்கரி கேட்டி டாயே.

13. பலவித இலாபங்கள் உடையவன். தன் இனத்தவர் புகழும்படி வாழ்வான். நல்லவர்களிடம் நட்புக் கொள்ளுவான். நாட்டில் வியாபாரம் செய்வான். வேசிகள் நேசம் கொள்ளான். வீண் பழியைப் பெறமாட்டான். புண்ணியத் தலங்கள் சென்று, நதிகளில் நீராடுவான். பார்வதியே! கேட்பாயாக.

14. திருப்பணி வேலை செய்வன் தேவதா பக்தி கொள்வன்
திருமகள் வாசம் உள்ளான் சனங்களுக் குதவி செய்வன்
பெறுமவர்க் கினிய னுகும் புகழுளான் நாபி நோயன்
திருமாளி புதிதாய்ச் செய்வன் தேவியே கேட்டி டாயே.

14. கோயில் திருப்பணிகள் புரிவான். கடவுளிடம் பக்தி கொள்ளுவான். இலட்சுமீதேவி இவன் இல்லத்தில் வாழ்வாள். மக்களுக்கு உதவி செய்வான். பெற்றோர்களுக்கு நல்லவனுவன். நற்புகழுடையவன். நாபி நோயுள்ளவன். இல்லங்களைப் புதியனவாகக் கட்டுவான். பார்வதியே! கேட்பாயாக.

15. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோம் ஆண்பா
[லொன்று
அவனியில் பெண்பால் ரெண்டு அறைகின்றோம் தீர்க்க மாக
அவனியில் மூன்று நஷ்டம் நவின்றனம் இவனுக் கேதான்
சிவன்தனைப் பூசை செய்யும் தேவியே கேட்டி டாயே.

15. இவனுடன் பிறந்தவரைப் பற்றிக் கூறுவோம். ஆண்மகன் ஒருவனும், பெண்கள் இருவரும் தீர்க்கமாக இருப்பார்கள் என்று கூறுகின்றோம். இப்புவியில் இவனுடன் பிறந்தவர்களில் மூன்று பேர் இறந்துபோவார்கள் என்றோம். பரமசிவனைப் பூசைசெய்யும் பார்வதியே! கேட்பாயாக.

16. தம்பியின் சேதி தன்னைச் சாற்றுவோம் சிவந்த மேனி
இன்பமாய் வார்த்தை கூர்வன் எதிரிக்கும் அஞ்சா னுகும்
தன்மனம் கபடு மூள்ளான் சகலகல் விகளும் கற்பன்
அம்புவி சேர்ப்பா னுகும் அறுமுகன் தனைப்பூ சிப்பன்.

16. இவன் தம்பியின் வரலாற்றைக் கூறுவோம். சிவந்த சரீரமுள்ளவன். இன்பமாக உரையாடுவான். பகைவர்க்கும் பயப்பட மாட்டான். மனத்தில் கபடமுடையவன். எல்லாக் கல்விகளையும் கற்பான். சிறந்த வீனைநிலங்களைச் சேர்ப்பான். முருகனைப் பூசை செய்வான்.

17. அன்னமும் அற்ப மீவன் அடுத்தவர்க் குதவி செய்வன்
பொன்னெடு பணிநற் றூசு புகழுறச் சேண்பா லுண்டாம்
சொன்னயப் புடைய வார்த்தை சொகுசுவூண் சொர்ண
[முண்டாம்
இன்னமும் செல்வம் பின்னுல் எய்திடும் இவனுக் கேதான்.

17. பிறருக்குச் சிறிதே உணவளிப்பான். தன்னை வந்தடைந்தவர்களுக்கு உதவிபுரிவான். பொன்னும் பொருளும் ஆடைகளும் பெற்று நீண்ட புகழுடையவனுவான். நயமான சொற்களை வெகு அழகாகக் கூறுவான். நல்ல போஜன சௌக்கியத்தையும் செல்வத்தையும் பெறுவான். பிற்காலத்தில் இவனுக்கு மேலுஞ் செல்வம் வந்தடையும்.

18. முத்துடன் மணிக லங்கள் முன்னோர்கள் ஆஸ்தி விருத்தி
பெற்றிடும் பூமி தன்னில் பிரபல யோக முண்டாம்
உற்றநற் றுணைவ னென்றுய் உறைகுவான் என்று
[சொன்னேம்
நித்தமும் சில னுவன் நிலையிலாக் கலகம் செய்வன்.

18. முத்து, மணி, அணிகள், முன்னோர்கள் ஆஸ்தி, முதலானவற்றுடன் செல்வப் பெருக்கம் உண்டாகும். நிலபுலங்களினால் பெரிய யோகம் வந்தடையும். இவன் தன் தம்பியோடு வாழ்வான் என்று கூறினேம். எப்பொழுதும் நல்லொழுக்க முடையனுவான். பிறருக்கு கீடித்த துன்பத்தை உண்டாக்காத கோள்கள் மூட்டுவான்.

19. அவனுக்கு மனைவி ஒன்று அறைந்தனம் சுதர்ஆண் மூன்று
பவமுள பெண்பால் ரெண்டு பெருகிடும் மிவனுக் கேதான்
இவனுக்கு வயது தீர்க்கம் என்றுமே முனிவர் கூறத்
தவசியும் வசிட்டர் சொல்வார் [1]சகோதரத் தானம் தன்னில்;

19. இவனுக்கு மனைவி ஒருத்தியே என்று கூறினேம். புத்திரர்கள் மூவரும், பெண்கள் இருவரும் தோன்றிடுவர். இவன் நீண்ட ஆயுளைப் பெறுவான் என்று முனிவர் கூற, வசிஷ்ட முனிவர் கூறுகின்றார். சகோதர ஸ்தானமான மூன்றுமிடத்தில்;

20. கேதுவும் இருப்ப தாலே கிளர்மதி யெட்டில் நிற்கத்
தீதாவர் துணைவர் என்றேரும் செயமுனி சொல்லு கின்றார்
மாதவர் சேயு [2]மூன்று மிடத்தோனைப் பார்ப்ப தாலே
ஓதுவேன் துணைவர் விருத்தி உடன்துணை சேத
[மென்றேரும்.

20. கேது இருப்பதாலும், சந்திரன் எட்டில் உள்ளதாலும், துணைவர் தோஷம் உண்டாகும் என்றேரும். செயமுனி கூறுகின்றார். மாபெரும் தவசியே! செவ்வாய் மூன்றும் இடத்துக் குரியவனுன சந்திரனைப் பார்ப்பதால் சகோதர விருத்தியுண்டு. ஆயினும், உடனே சேதமு முண்டு என்றேரும்.

21. இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோம் யிரோன்
[பானில்
கன்னிகை தெற்கு தன்னில் கலந்திடு மென்று சொன்னேம்
அன்னவள் இருசி கப்பாம் அழகுளாள் சமதே கத்தாள்
உன்னத கோபி யாவள் உறைந்திடும் நாபி நோயும்.

---

1. இலக்கினத்துக்கு மூன்றுமிடம் : இங்குக் கடகம்
2. மூன்றுமிடத்துக்குரிய சந்திரன்

21. இவன் திருமண காலத்தைக் கூறுவோம். இவனுடைய பதினெட்டாம் வயதில் தென் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் நிறம் கருஞ்சிவப்பு. அழகுடையவள். உடற்கட் டுடையவள். மிகவும் கோப முள்ளவள். அவளுக்கு நாபி நோயுண்டாகும்.

22. பால்பாக்கிய முடைய ளாகும் பந்துவும் புகழ வாழ்வாள்
சீலமா சார முள்ளாள் செய்ந்நன்றி மறவா ளாகும்
சாலவே தரும நெஞ்சு தரித்திர மில்லா ளாகும்
வேலனைப் பெற்ற மாதே விளம்புவோம் மேலும் கேளே.

22. பால் பாக்கிய முடையவளாவாள். தன் சுற்றத்தினர் புகழும்படி வாழ்வாள். நல்ல ஒழுக்க முள்ளவள். செய்ந்நன்றி மறவாதவள். தரும சிந்தையுள்ளவள். வறுமை யில்லாதவள். முருகனைப்பெற்ற தாயே! நாங்கள் கூறுவதைக் கேளுங்கள்.

23. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணும்
சித்தமாய் உதித்தா லும்தான் தீங்காகு மென்று [சொன்னேம்
அத்திரி முனிவர் சொல்ல அம்பிகை கேட்க லுற்றாள்
வித்தகன் தனக்குப் புத்ரர் விளங்காது என்று சொன்னீர்.

23. புத்திர பாவத்தைக் கூறும்போது, அது பலமுள்ளதாக இல்லை. அங்ஙனம் புதல்வர்கள் தோன்றினாலும் நிலையார் என்று சொன்னேம் என, அத்திரி முனிவர் கூற, பார்வதி கேட்கலானாள்! ஜாதகனுக்குப் புத்திர பாக்கியம் இடையாது என்று கூறினீர்கள்.

24. காரணம் யாது என்று காதலி கேட்கும் போது
கூறுவார் முனிவர் தாமும் குழவியின் தானத் துக்கு
வீரிய அஞ்சில் ராகு இருக்கவே சனிசேய் பார்க்க
நேராது சுதர்கள் என்றேம் நிமலியே கேட்டி டாயே.

24. காரணம் என்ன? என்று பார்வதி கேட்கும்போது, முனிவர் கூறுகின்றார். புத்திர ஸ்தானமான கன்னிக்கு, ஐந்தாமிடமான மகரத்தில் ராகு இருக்க, அவனைச் சனியும், செவ்வாயும் பார்க்கின்ற காரணத்தால் புத்திரர்கள் தோன்ற மாட்டார்கள் என்றேம். பார்வதியே! கேட்பாயாக.

25. இதுவன்றி யிடபம் சென்மம் இருப்பதால் தோஷ மாகும்
பதியினிக் கிரண்டி லேதான் பார்மகன் இருப்ப தாலே
விதிமுன்னூழ்ச் சாபத் தாலே வீருது மதலை என்றேம்
அதுசேதி செல்லு மென்ன அறைகின்றார் முனிவர் தாமே.

25. இதைத் தவிர, இலக்கினம் விருஷபமாகவும், இலக்கினத்துக்கு இரண்டில் செவ்வாய் இருப்பதாலும் தோஷமாகும். முன் சென்மத்திய தீவினையாலும் புதல்வர்கள் தோன்ற மாட்டார்கள். அந்த வரலாற்றைக் கூறுங்கள் என, முனிவர் கூறலானார்.

26. முன்சென்மம் புதுவை தன்னில் முயன்றனன் செக்கான் [வமிசம்
இன்பமாய்ப் பொருள்ப டைத்து யாவர்க்கும் நல்லோ னாகி
அம்புவி தன்னில் செட்டு அவனுமே செய்து வந்து
பின்னையும் மனைவி மைந்தர் பூமிக ளுள்ளா னாகி;

26. முன் பிறவியில் புதுச்சேரியில் வாணிய வமிசத்தில் தோன்றி, நலமுடன் செல்வம் பெற்று, அனைவருக்கும் நல்லவனாக இருந்து, அழகிய இவ்வுலகில் வியாபாரம் செய்து, மனைவி மைந்தர்களுடன், நிலபுலன்களைப் பெற்று;

27. இருக்கின்ற காலம் தன்னில் இவன்செய்த வினையைச் [சொல்வேன்
வருத்தமும் பசிநோய் கொண்ட மாதுவும் இவன்பால் [சென்று
தருகுவா யுணவே யென்னத் தானவள் பேரில் கோபம்
வருவித்துத் துரத்தி விட்டான் மாதுவும் ஏது சொன்னாள்;

27. வாழ்கின்ற காலத்தில் இவன் செய்த வினையைக் கூறுவோம். கவலையும் பசியும் உள்ள ஒரு பெண், இவனிடம் சென்று உணவு யாசித்தாள். இவன் அவள்மீது கோபங் கொண்டு வெருட்டித் துரத்தினான். உடனே அவள் யாது கூறினாள் என்றால்;

28. மறுசென்மம் மகனாய்த் தோன்றி வரும்சுதர் தோஷ மாகி
வறுமையும் உடைய னாகி வாழ்குவா யென்று சொல்லி
வறுமையு முடைய மாது மறுஇல்லம் சென்று [ளென்றோம்
நிறையவே இதுவு மன்றி நிகழ்த்துவோம் வேறு ஒன்று.

28. மறுபிறவியில், புத்திரர்கள் இல்லாதவனாகி, வறுமையுடைய னாக வாழ்வாய் என்று சாபமிட்டுவிட்டு, அந்த ஏழைப் பெண் வேறு வீட்டுக் குச் சென்றாள் என்று சொன்னோம். இதைத் தவிர, மற்றொன்றும் கூறுவோம்.

29. தன்னுடை இனத்தா னுக்குத் தனமது உதவி செய்து
பின்னேயும் லாபம் சேர்த்துப் பூமிகள் வீடு யாவும்
இன்னவன் தன்கைக் கொண்டான் இனத்தானும் வேறுய்ச்
[சென்று
உன்னித மனவெ றுப்பால் உரைப்பாரே சிலவே தாமும்.

29. தன் குலத்தினனுக்குப் பொருளுதவிசெய்து, பிறகு இலாபத்தைச் சேர்த்து, அவனது வீடு நிலங்கள் எல்லாவற்றையும் தன்னுடையதாகச் செய்துகொண்டான். வீடு, நிலங்கள் இவற்றை இழந்த உறவினன் தனியே சென்று மிக்க மனவெறுப்புடன் இருந்தான். இதனைக்கண்ட இவன் இனத்தார்களில் சிலர் சில கூறுவார்;

30. மறுசென்மம் வமிச தோஷம் வந்திடும் என்று சொல்லி
உறன்முறை யார்கள் ஏச உறைந்தது அந்தி யத்தில்
எருதினுல் பாதை சேர்ந்து எமபுரம் சேர்ந்தா னென்றேயும்
குறைதலைக் [1]கஞ்சன் தன்னுல் குணமுடன் வரையப் பட்டு;

30. மறு பிறவியில் உன் வமிசத்துக்குத் தோஷம் உண்டாகும் என்று ஏச, அந்தப் பழி இவனே யடைந்தது. கடைசிக் காலத்தில், காளை மாட்டினுல் ஆபத்து உண்டாகி இறந்துபோனுன் என்று சொன்னேனும், பிறகு பிரமனுல் கன்கு படைக்கப்பட்டு,

31. வந்தவ னிவனே யென்றே மறைகின்றேரும் இச்சென்
[மத்தில்
சந்ததி தோஷ மென்றேரும் செனிக்கினும் தீதே யாகும்
அந்ததோர் தோஷம் தீர அறைகின்றேரும் சாந்தி தானும்
இந்ததோர் மன்னன் மாது இருவரும் பட்சிக் கேகி;

31. தோன்றியவன் இவன் என்று கூறுகின்றேரும். இப்பிறவியில் புத்திர தோஷம் உண்டாயிற்று. தோன்றினும் நிலையாது. அந்தத் தோஷம் தீரச் சாந்தியைக் கூறுகின்றேரும். இவனும், இவன் மனைவியும் திருக்கழுக்குன்றம் சென்று,

32. ஒருவாரம் கிரியைச் சுற்றி ஒன்பது பரத்துக் கன்னம்
திறமையா யீந்து பின்பு திங்களே யணிந்தோ னுக்குக்
குறைவிலா அர்ச்சித் தேத்திக் குணமுடன் உள்ளூர் சென்று
குருதியின் வார நோன்பு கொள்ளவும் தோஷம் நீங்கி;

---

1. பிரமன். பிரமதேவனுக் கிருந்த ஐந்து தலைகளில் ஒன்று சிவபெருமானுல் குறைக்கப் பட்டது குறித்து "குறைதலைக் கஞ்சன்" எனப் பட்டது.

32. ஒருவாரம் கிரிப் பிரதட்சணம் செய்து, ஒன்பது பரதேசிகளுக்கு உணவளித்து, பிறகு சிவபெருமானைப் பூசித்துப் பணிந்து, கலமுடன் தன் ஊர் சென்று, செவ்வாய்க்கிழமை தோறும் நோன்பு கொண்டால் தோஷம் நீங்கி,

33. மதலைகள் விருத்தி யுண்டு வறைகின்றேரும் ஆண்பால் ஒன்று
சதியிலாப் பெண்பால் அவ்வார் சாற்றுவோம் தீர்க்க மாக
விதம்போலச் செய்யா ஞகில் விளங்காது மதலை என்றேரும்
நதிசடை யணிந்தோன் தேவி நங்கையே மேலும் கேளே.

33. புத்திர விருத்தியுண்டு என்று கூறுகின்றேரும். இவனுக்குப் புத்திரன் ஒருவனும், புத்திரி ஒருத்தியும் தீர்க்கமாக விளங்குவர். நாம் கூறியபடி சாந்திகள் செய்யாஞயின் புத்திர பாக்கியம் ஏற்படாது என்றேரும். சடைமுடியில் கங்கையை யணிந்த சிவபெருமானின் தேவியே! மேலுங் கேட்பாயாக.

34. மாதுரு சிவந்த மேனி மர்மமும் கோபம் மூர்க்கம்
மேதினில் யீகை கொஞ்சம் வித்தகி சமதே கத்தாள்
மாதவர் இட்டம் கொள்வாள் வரனுக்கு நேய முள்ளாள்
போதவே அதிட்ட சாலி புண்ணிய வதிபாட் டாளி.

34. தாய் சிவந்த உடலுடையவள். சிறிது கபடமுள்ளவள். கோபமும், மூர்க்கத் தன்மையும் உடையவள். உலகில் சிறிதளவே கொடை வழங்குவாள். சமமான உடலமைப்பைப் பெற்றவள். பெருந் தவமியற்றும் பெரியோரின் விருப்பப்படி நடப்பாள். கணவனது அன்பைப் பெற்றவள். மிகவும் அதிர்ஷ்ட முள்ளவள். நற்கருமங்களைப் புரிந்தவள். உழைப்பாளியுமாவாள்.

35. அவளுடைத் துணைவர் தம்மை அறைகின்றேரும் ஆண்பால் [ஒன்று
நவனியில் பெண்பால் ரெண்டு நாட்டுவோம் தீர்க்க மாகப்
பவமுள மாமன் சேதி பகருவோம் மனைவி ரெண்டாம்
தவசிகள் உறவு கொள்வன் சந்ததி விருத்தி யாமே.

35. அவளுடைய உடன்பிறந்தாரைக் கூறுவோம். ஆண்மகன் ஒருவனும், பெண் இருவரு மாவார். இவர்கள் தீர்க்கமாக இருப்பார்கள். ஜாதகனின் மாமனைப்பற்றிக் கூறுவோம். அவனுக்கு மனைவிமார் இருவர். தவத்தோர்கள் நேசம் கொள்வான். அவனுக்குச் சந்ததி விருத்தியுண்டு.

36. தேவதா பக்தி கொள்வன் தீரனும் யூகை சாலி
ஆவலாய் அடுத்தோர் தம்மை ஆதரிப் பானும் என்றேரும்
பாவத்திற் குட்ப டானும் பாரினல் சீவிப் பானும்
நாவது தவரு னென்றேரும் நாயகி கேட்டி டாயே.

36. கடவுளிடம் பக்தி கொள்ளுவான். தைரியமுள்ளவன். ஊகித் தறியும் ஆற்றலுடையவன். தம்மை யடைந்தவரை அன்புடன் காப்பாற்று வான் என்றேரும். பாவமான காரியத்திற்கு இணங்கமாட்டான். வீண நிலத்தால் பிழைப்பவன். சொன்ன சொல் தவறுதவன். தேவியே! கேட்பாயாக.

37. மாதுரு பூர்வம் தன்னை யறைகின்றேரும் சோழ நாட்டில்
நிதான கள்ளர் வம்சம் செனித்துமே வறுமை யின்றிச்
சுதுகள் இல்லா ளாகிச் சுதர்களும் விருத்தி யாகிப்
பாதக மில்லா ளாகிப் பாவையும் வரன்பின் னலே;

37. தாயின் முற்பிறப்பைக் கூறுவோம். அவள் சோழ நாட்டில் கொடிய கள்ளர் மரபில் தோன்றி, தரித்திர மில்லாமலும் தீமைகளின்றியும், புதல்வர்களைப் பெற்று, நலமுடன் வாழ்ந்திருந்து, கணவன் இறந்தவுட னேயே;

38. மரணமே யாகி யேதான் வந்தவ ளிவளே யென்றேரும்
வரும்சென்மம் இவனுக் கேதான் மகளாக உதிப்பா
[ளென்போரும்
உரமுடன் தந்தை பூர்வம் உரைக்கின்றேரும் ஓதூர் கீழ்பால்
பெருமையாய் இக்கு லத்தில் பிறந்தவ ளிவளே யென்றேரும்.

38. தானும் மாண்டாள். பின்பு இப்பிறப்பில் வந்தவள் இவள் என்றேரும். வரும் பிறவியில் இந்த ஜாதகனின் மகளாகவே உதிப்பாள் என் போரும். தந்தையின் முன்சென்மத்தைக் கூறுகின்றேரும். ஓதூர் என்ற ஊருக் குக் கிழக்கேயுள்ள ஊரில், மேன்மையுள்ள இக்குலத்தில் பிறந்தவன் இவன் தந்தை என்றேரும்.

39. ஏறுகள் பூமி யுண்டாய் இடுக்கண்கள் இல்லா ஞகிச்
சீருடன் வாழும் நாளில் செய்தவூழ் தன்னைச் சொல்வேன்
பாரினில் சூலை கொண்ட [1]பைரவன் ஒருநாள் தன்னில்
மாரன்தன் இல்லம் சென்று வன்னங்கள் கெடுதி செய்ய;

39. அவன், காளைகள் நிலபுலன்கள் ஆகியவற்றைப் பெற்று, துன்பமின்றி, சீரும் சிறப்புமாக வாழும் நாளில், செய்த வினையைச் சொல்

1. சர்ய்.

லுகின்றேன். கருவுற்ற நாய் ஒன்று இவனது வீட்டையடைந்து பல தின் பங்க ளிழைத்தது,

40. இவனுமே அதனைக் கண்டு எமபுரம் சேர்த்து விட்டான்
அவனியில் அந்தத் தோஷம் அணுகிற்று இவனுக் கேதான்
பவமூள மரண மாகிப் பருத்ததோர் நரகம் புக்கு
நவனியில் பிரமன் லக்கம் நல்கிட வந்தா னென்றும்.

40. இவன் அதைக் கண்டு உடனே கொன்று விட்டான். பூமியில் அந்தத் தோஷம் இவனே வந்தடைந்தது. பிறகு மாணமடைந்து, கொடிய நரகத்தில் சேர்ந்தான். பின்பு, பிரமனால் படைக்கப்பட்டு, இவ்வாறு தோன்றினன் என்று கூறினேம்.

41. [1]குக்கலின் தோஷம் தானும் கூறுவோம் துணைவர் தோடம்
தொக்கவே மாதர் பீடை சஞ்சலம் ஆறி லேதான்
மிக்கவே நேரு மென்றும் விளம்புவோம் இவன்பின்
[சென்மம்
தக்கவே வானைக் காவல் சதுர்த்தனுங் குலமு திப்பான்.

41. நாயைக் கொன்ற தோஷம், இப்பிறப்பில் இவனைத் தொடர்ந்தது என்போம். சகோதர தோஷமும், தாய்க்குத் துன்பமும், குழப்பங்களும் இவனது ஆறும் வயதில் ஏற்படும். இவனது பின்சென்மம் கூறுவோம். இவன் திருவானைக்கா என்ற தலத்தில் நான்காம் வருணத்தவனுகத் தோன்றுவான்.

42. மங்கையும் கேட்க லுற்றாள் மாரனும் கங்கை வம்சம்
பொங்கமா யுதித்துப் பின்பு பிறப்பனே சதுர்த்த னென்றீர்
சங்கைகள் சொல்லு மென்னச் சாற்றுவேன் இச்சென்
[மத்தில்
இங்கிதப் புண்ணிய மில்லை இவன் தாழ்வாய்த்
[தோற்று வானே.

42. பார்வதி கேட்கலானுள். இவன் உயர்ந்த வேளாளர் வமிசத்தில் தோன்றி, பின்பு இழிவான நான்காம் வருணத்தில் ஏன் உதிக்கவேண்டும்? என, கூறுகின்றேன். இப்பிறவியில் இவன் நல்ல புண்ணியச் செயல்க ளெவையும் செய்யவே இல்லை. ஆதலின் தாழ்ந்த குலத்தில் உதிப்பான்.

---

1. நாய்.

43. இவன்பிதா மரணகாலம் இயம்புவே னிருபா னெட்டில்
அவனியில் தனுசு மாதம் அறைகின்றேரும் கர்மம் தானே
நவனியில் மாது ருக்கு நாட்டுவோம் முப்பா னுலில்
கவனமா யிடப மாதம் கண்டித கண்ட முண்டு.

43. இவன் தந்தையின் மரண காலத்தைக் கூறுவேன். இருபத் தெட்டாம் வயதில், மார்கழி மாதத்தில் ஜாதகனுக்குக் கரும தசையைக் கூறு கின்றேம். தாயாருக்கு ஜாதகனுடைய முப்பத்துநாலாவது வயதில் வைகாசி மாதத்தில், நிச்சயமாக மரணம் ஏற்படும்.

44. சாதகன் மரண காலம் சாற்றுவோம் நாற்பா னுலில்
மேதினில் கண்டம் நேரும் விலகிடும் பண்டி தத்தால்
ஓதுவேன் அறுபான் ஒன்பான் உயராடி மாதம் தன்னில்
தீதிலாப் பூச நாளில் தேகமே வாடு மென்றேரும்.

44. ஜாதகன் மரண காலத்தைக் கூறுவோம். இவனது நாற்பத்து நான்காம் வயதில் கண்டம் ஒன்று ஏற்படும். மருத்துவத்தினால் அது நீங் கும். அறுபத்தொன்பதாம் ஆண்டில், உயர்ந்த ஆடி மாதம் பூச நட்சத்தி ரத்துடன் கூடிய தினத்தில் இவன் இறப்பான்.

45. மறுசென்மம் காஞ்சி கீழ்ப்பால் வளமுள பேரூர் தன்னில்
பெருமையாய் வணிகர் வம்சம் பிறந்துமே செட்டுச் செய்து
இருவினை யில்லா னுகி இவனுமே வாழ்வா னுகும்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்

45. மறுபிறவியில் காஞ்சிக்குக் கிழக்கேயுள்ள பெரிய ஊரில், மேன் மையுள்ள வணிகர் வமிசத்தில் தோன்றி, வியாபாரங்கள் செய்து, தீவினை யின்றி வாழ்ந்து வருவான். முருகனைப்பெற்ற தாயே! கேட்பாயாக.

46. செனித்திடுங் காலம் தன்னில் செம்பாம்பு திசையி ருப்புக்
குனித்திடு மாண்டு மாறும் கூர்திங்கள் இருநான் காகும்
தனக்குமே ரோகம் வாய்க்கும் சாற்றுவோம் கண்டம்
[உண்டு
வினையது பிதாம கிக்கு விளைந்திடும் மார கங்கள்.

46. இவன் பிறந்த காலத்தில், கேதுமகா தசையில் இருப்பு வருஷம் ஆறும், மாதம் எட்டும் ஆம். இக்காலத்தில் ஜாதகனுக்குப் பல பிணிகள் கள் உண்டாம். கண்டமும் ஏற்படும். தாய் தந்தையர்க்குத் துன்பங் களும் ஏற்படும். இவனது பாட்டி (தந்தையைப் பெற்றவள்) இறந்து போவாள்.

47. துணைவர்கள் விருத்தி யென்றேரும் சுபங்களும் தந்தை
[வர்க்கம்
கனமுள மாம னுக்குக் காளைகள் கிரகம் வாய்க்கும்
அனையவே பலன்கள் யாவும் அறைகின்றேம் விபரம்
[ரெண்டில்
கனமத வாணப் பெற்ற காதலி! கேட்டி டாயே.

47. சகோதர விருத்தியுண்டு என்று சொன்னேம். தந்தை வர்க்கத்தில் சுபச் செயல்கள் நிகழும். மேன்மையான மாமனுக்கு, கால் நடைகளும் வீடும் கிடைக்கும். இவ்வாறு பலன்களைச் சொல்லுகின்றேம். விவரம் இரண்டாம் பாகத்தில் கூறுவோம். விநாயகரைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 21

1. மதிசியம் ராகு கோலில் [1]மழைக்கோளும் மேரு வாகப்
புதன்குசன் மான தாகப் பரிதிபொன் சாடி புக்க
விதிகேது மேட மாக மந்தனும் வீணை யாக
இதுவிதக் கோளு நின்று லக்கினம் நந்தி யாக ;

1. சந்திரன் சிம்மத்திலும், ராகு துலாத்திலும், சுக்கிரன் தனுர்ராசியிலும், புதன் செவ்வாய் மகரத்திலும், சூரியன் குரு கும்பத்திலும், கேது மேஷத்திலும், சனி மிதுனத்திலுமாக, இவ்விதம் நவக் கிரகங்களும் நின்று, லக்கினம் விருஷபமாகவும் உள்ள இந்த ஜாதகருக்கு,

	கேது	லக்கினம்	சனி
சூரியன் குரு	இராசி சக்கரம்		
புதன் செவ்வாய்			சந்திரன்
சுக்கிரன்		ராகு	

2. சொல்லுவீர் பலனே யென்று சுந்தரி கேட்கும் போது
வல்லவர் வசிட்டர் சொல்வார் வரனது சனன மாகும்
இல்லமும் வடதென் வீதி இந்திரன் வாடை யாகும்
நல்லநீர் கடியும் கூவல் நல்கிடும் அவ்வூர் தன்னில்.

2. பலனைக் கூறுங்கள், என்று பார்வதி கேட்கும்போது, வசிஷ்ட முனிவர் சொல்லுவார். இஃது ஆண்மகன் ஜாதகம். இவன் பிறந்த வீடு, வடக்குத் தெற்கான வீதியில், கிழக்கு வரிசையி லுள்ளது. கிணறைக்குங் கிணறுகள் அவ்வூரில் உள்ளன.

3. இந்திரன் நகர மொப்பாம் இயம்பின அடையா ளத்தில்
அந்தவன் சேட்ட னுக அமைகுவான் வன்னிய சேயாய்
வந்தவன் யோகச் சேதி யறைகின்றேம் இந்நூல் தன்னில்
கந்தனை யின்ற மாதே கழறுவோம் தாயே கேளும்.

3. தேவேந்திரனின் நகரமான அமராவதிய ஒத்து விளங்கும் அந்தப் பெரிய ஊரில், சொல்லப்பட்ட இவ்வடையாளங் கொண்ட இல்லத்தில்,

---

1. சுக்கிரன்.

வன்னியர் குலத்தில், இந்த ஜாதகன் மூத்த புதல்வனுகப் பிறப்பான். இவனுடைய யோகங்களை, இந்தச் சோதிட சாஸ்திரத்தில் கூறுகின்றேம். முருகக் கடவுளைப் புதல்வராக அடைந்த பார்வதி யம்மையே! சொல்லுவோம், கேளுங்கள்.

4. தந்தையின் துணையாண் மூன்று சாற்றுவோம் தீர்க்க மாக
அந்தவர் பின்பால் வேறு அடைகுவார் என்று சொல்வோம்
இந்தவன் தந்தை சேதி யியம்புவோம் யூகை கொஞ்சம்
முந்துமால் நிறத்த னுகும் மொழியது சுகமில் லாதான்.

4. ஜாதகனின் தந்தைக்குச் சகோதரர் மூவர் தீர்க்கமாக விளங்குவர் என்போம். அவர்கள் சிலகாலத்துக்குப் பின்பு வேறு குடும்பமாகச் செல்லுவார் என்று கூறுவோம். இந்த ஜாதகன் தந்தையின் செய்தியைக் கூறுவோம். ஊகித்தறியும் சக்தி சிறிதண்டு. கரிய நிறமுடையவன். இனிய சொற்களைப் பேசாதவன்.

5. வித்தையு மில்லா னுகும் வீண்வம்பு சொல்லா னுகும்
பத்தினிக் கடக்க மாகும் பஞ்சைபோல் திரிவா னுகும்
பித்தம்போல் திரிவா னுகும் பிறர்பொருள் இச்சை
[யில்லான்
குற்றத்தை மனத்தில் வையான் குலமதிப் பில்லா வாழ்வன்.

5. கல்வி யில்லாதவன். வீணன வம்புச் சொற்களைப் பேசமாட்டான். மனைவியிடம் அடங்கி நடப்பான். அசடைபோல் அலைவான். சில சமயங்களில் பயித்தியங் கொண்டவனைப் போலத் திரிந்து கொண்டிருப்பான். அயலார் பொருள்மீது ஆசை வையான். கெட்ட எண்ண மில்லாதவன். குலத்தில் மதிப்பின்றி வாழ்வான்.

6. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவான் இந்தப்
[பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் ஆனையி நிறத்த னுகும்
தன்சொலு மடக்க முண்டு சமரசக் கல்வி கற்பன்
பின்னமில் லாத தேகி பொய்யது புகலா னுகும்.

6. இங்ஙனமான தன்மையுடையவனுக்கு, இந்து ஜாதகன் புதல்வனுகத் தோன்றுவான். இவன் குணங்களைச் சொல்லுவோம். கருமை நிறமுடையவன். அடக்கமாகப் பேசுவான். சமரச ஞானத்தை வளர்க்கும் கல்வியைக் கற்பான். குற்றமில்லாத உடலுடையவன். பொய்யுரைகள் கூறான்.

7. தந்தையால் சுகமில் லாதான் தாய்துணை தன்னுல் வாழ்வன்
தந்தையின் ஆஸ்தி காணுன் தைரிய மில்லா னுகும்
தன்மனை தன்னுல் யோகம் தரணிகள் சேர்ப்பா னுகும்
தந்தமும் தரள மொக்கும் தனம்சேர்ப்பன் சீலம் செய்வன்.

7. தந்தையினுல் நன்மை யடையாதவன். மாமனின் ஆதரவில் வாழ் வான். தந்தையால் தேடிவைக்கப்பட்ட சொத்துக்கள் இல்லாதவன். தைரிய மில்லாதவன். மனைவியினுல் இவனுக்கு அதிர்ஷ்டம் ஏற்படும். பின்பு விளைநிலங்களைச் சேர்ப்பான். இவனது பற்கள் முத்துக்களைப் போன்று வெண்மையானவை. செல்வத்தைச் சேர்ப்பான். நல்லொழுக்கத் துடன் தொழில்கள் செய்வான்.

8. சிலநாட்கள் தனவான் பக்கல் சேர்ந்துமே உய்வா னுகும்
விலகிடும் தொழிலும் சூதில் விளம்புவீர் காலம் தன்னைத்
தலைவனுக் கிருபத் தாறில் தனச்சேதம் தொழிலும் கேடாம்
விலகிப்பின் தொழிலும் வாய்க்கும் மேதினி சேர்த்தல்
[உண்டே.

8. சிலகாலம் ஒரு பணக்காரனைச் சார்ந்து தொழில்செய்து ஜீவிப் பான். பிறர் வஞ்சனையினுல் அந்தத் தொழிலிலிருந்து பின்பு விலகுவான். விலகுங் காலத்தைச் சொல்லுவீர். ஜாதகனின் இருபத்தாரும் வயதில், செல்வத்துக்கு அழிவு நேரும். செய்யுந் தொழிலுக்கும் தீங்கு உண்டாகும். சிறிது காலத்தில் துன்பங்கள் நீங்கி, நல்ல தொழில் ஏற்படும். நிலபுலங்க ளும் சேரும்.

9. பாரியாள் ஆஸ்தி யாவும் பாலகன் தனக்கு நேரும்
வேறொரு தீங்கு காணுன் விகடங்கள் கூறு னுகும்
போர்தனில் செல்லா னுகும் புவிராசர் பேட்டி கொள்வன்
ஆறுமா முகத்தோன் பக்தி அருளுவான் இந்தப் பாலன்.

9. மனைவியின் பிறந்தகச் சொத்துக்கள் யாவும் ஜாதகனைச் சேரும். இவன், வேறுவிதக் கெடுதி யாது மில்லாதவன். குறும்பான சொற்களைப் பேசாதவன். வீண் சண்டைக்குச் செல்லாதவன். அரசர்களையும் பேட்டி காண்பான். ஆறுமுகங்களுடைய முருகப்பெருமான்மீது பக்தி கொள்ளு வான், இந்த ஜாதகன்.

10. தன்துணை காணு ளுகும் சாற்றுவீர் அந்தச் சங்கை
துன்மையாய் ராகு ஆறில் தொடர்ந்ததால் தனியாய்
[வாழ்வன்
மன்னவன் மணத்தின் கால மறைகின்றேம்
[மீரெட் டாண்டில்
அன்னையின் வர்க்கம் நேரும் அருளுவோம் அவள்கு
[ணத்தை.

10. தனக்கு உடன் பிறந்தார் இல்லாதவன். அதற்குரிய காரணத்தைச் சொல்லுவீர். கொடிய தன்மையாய் ராகு இலக்கினத்துக்கு ஆறுமிட மாகிய தலாத்தில் தங்கியிருப்பதால் துணைவர்களில்லை. தனியளுக வாழ்வான். இவனுடைய திருமண காலத்தைச் சொல்லுகின்றேம். இவனுக்குப் பதினெட்டாம் வயதில், தாயாரின் வர்க்கத்திலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் குணங்களைக் கூறுகின்றேம்.

11. புத்திமான் பொறுமை சாலி புண்ணிய மனத்த ளாகும்
சுத்தம்போல் வெளிம யக்கம் சோம்பலுங் கொஞ்ச
[முண்டு
பத்திமா னவர்க்கு வன்னம் படைப்பளாம் யூகை சாலி
உத்தம குணத்த ளாகும் உலகினில் வறுமை காணுள்.

11. புத்திசாலி. பொறுமை யுள்ளவள். கல்ல மனமுடையவள். தாய்மையுடையாள் போல் வெளியாரை மயங்கச் செய்வாள். சோம்பலும் சிறிது உண்டு. அடியார்களுக்கு உணவு அளிப்பாள். சாமர்த்திய முடைய வள். நற்குண முள்ளவள். தரித்திர மில்லாதவள்.

12. பலகீன முடையா ளாகும் பர்த்தாவின் மனத்துக் கேற்றேள்
நலமதை எவர்க்கும் செய்வள் நாயகி சந்தே கத்தாள்
கலகத்தைக் கூரு ளாகும் கணவனுக் கிவளால் யோகம்
தலைவியும் தீர்க்க சீவி சர்ப்பம்போல் கோபம் கொஞ்சம்.

12. உடலில் வலிவில்லாதவள். கணவனின் மனமறிந்து நடப்பவள். யாவருக்கும் நன்மை செய்வாள். சிறிது சந்தேக மனமுள்ளவள். கலக வார்த்தைகள் சொல்லாதவள். கணவனுக்கு இவளால் அதிரஷ்டம் எற்படும். தீர்க்க ஆயுளுடையளா யிருப்பாள். பாம்பு சீறுவது போல, சில சமயங்களில் கோபங் கொள்ளுவாள்.

13. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் இனிமே லாகச்
சுத்தமாய் ஆண்பால் ஒன்று தோகையர் இருவர் தீர்க்கம்
குத்தமா முதலில் என்றேம் கூறுவீர் அந்தச் சங்கை
புத்திர நாதன் புந்தி யாகியே சேயும் சேர்ந்து ;

13. ஜாதகனுக்குப் புத்திர பாக்கியத்தைப் பற்றி இனிமேல் கூறுவோம். ஆண் மகன் ஒருவனும், பெண்கள் இருவரும் தீர்க்கமாக விளங்குவர். முதலில் தோன்றும் குழந்தை நிலையாது என்று கூறினேம். அதற்குரிய தோஷங்களைச் சொல்லுங்கள். புத்திர ஸ்தானத்துக் குரியவன் புதனுஞ்சி, அவனுடன் செவ்வாயும் சேர்ந்து ;

14. ஒன்பதில் இருப்ப தாலே உரைத்திட்டோம் அந்தச் சங்கை
இன்னவள முன்சென் மத்தை இயம்புவோம் புதுவை
[தன்னில்
துன்மதி வைசிய சேயாய்த் தோன்றியே செட்டுச் செய்து
பொன்பணி யுடையா ளாகிப் புகழுடன் வாழும் நாளில் ;

14. இலக்கினத்துக்கு ஒன்பதா மிடமாகிய மகரத்தில் தங்கியிருப்ப தால், புத்திரதோஷம் கூறினேம். இவனுடைய முற்பிறப்பைக் கூறுவோம். புதுச்சேரியில் வைசிய குலத்தவனாய்ப் பிறந்து, வியாபாரம் செய்து, பொன், ஆபரணங்கள் முதலியன பெற்று, புகழோடு வாழுகின்ற காலத்தில் ;

15. தன்னுடைத் துணைவன் பாகம் தராமலே மோசம் செய்வான்
பின்னவன் வருத்த முற்றுப் புகன்றசா பத்தைக் கேண்மோ
பொன்கடன் தந்த பாவி பிறக்கும்பின் சென்மந் தன்னில்
தன்தந்தை ஆஸ்தி யின்றி ஒண்டியாய் வாழ்வான் என்று,

15. தன் உடன்பிறந்தானுக்குத் தாயபாகம் கொடுக்காமல் ஏமாற்றி விட்டான். இவன் செய்கையைக் கண்டு இளையவன் வருத்தமடைந்து கூறிய சாபத்தைக் கேளுங்கள். "என் பாகத்துக்குரிய சொத்துக்களைத் தராமல் கடனே மாத்திரம் எனக்குக் கொடுத்த இந்தப் பாவி, மறு பிறவியில் தந்தையால் தேடி வைக்கப்பட்ட பொருளில்லாமல் தனித்து வாழ்வான்" என்று ;

16. குலமதில் குற்ற மாயும் கூறியே தெருத்தூள் விட்டான்
தலைவனுக் கந்தச் சாபம் சார்ந்தது என்று சொல்வோம்
நலமுள தலங்கள் சென்று நாயகன் அந்தி யத்தில்
அலைகடல் துயின்றோன் பத்தி அவனுமே கொண்டு
[வந்தான்.

16. தன் குலத்தைச் சேர்ந்த சிலரிடம் மனவருத்தத்துடன் சொல்லித் தெருமண்ணே வாரி யிறைத்தான். இவனுக்கு அந்தச் சாபம் ஏற்பட்டது என்று சொல்லுவோம். நன்மையளிக்கும் புண்ணியத் தலங்களுக்கு இந்த ஜாதகன் சென்று, அங்குக் கோயில் கொண்டுள்ள இறைவனைத் தரிசித்து,

கடைசிக் காலத்தில், பாற்கடலில் அறிதுயில் புரியும் திருமாலின்மீது பக்தியுடன் இருந்து வந்தான்.

17. தென்திசை கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
வன்னிய குலமு திப்பான் மருவிடும் முன்னூழ்ச் சாபம்
தன்துணை காணு ளுகும் தந்தையால் சுகமில் லாதான்.
அன்னையால் சுகமு மேற்பன் அறைகுவீர் அவள்கு ணத்தை.

17. பின்பு மரணமடைந்து, பிரமதேவனுல் படைக்கப் பட்டு, இப் பிறவியில், வன்னியர் வகிசத்தில் பிறந்தான் இவன். முற் பிறப்பில் ஏற் பட்ட சாபம் இவனைத் தொடர்ந்தது. அதன் பயனுகத் தனக்கு உடன் பிறந்தா ரில்லாதவ னுனன். தந்தையினுல் நன்மை யில்லாதவன். தாயினுல் சுகத்தை யடைவான். தாயாரின் குணத்தைக் கூறுங்கள்.

18. இருநிறம் வாத தேகி இன்பச் சொல் பொறுமை சாலி
வரனுலே சுகமில் லாதாள் வஞ்சனை மனமுங் கொஞ்சம்
பொருளது சேர்ப்பா ளாகும் புண்ணிய மனத்தா ளாகும்
அரிவைக்குத் துணையால் யோகம் அவள்வரன் மனம்போல்
[வாழாள்.

18. கரிய நிறமுடையவள். வாத சரீரமுள்ளவள். இன்பமான சொற்களைப் பேசுவாள். பொறுமை யுடையவள். கணவனுல் சுகம் இல்லாதவள். சிறிது வஞ்சனை பொருந்திய மனமுள்ளவள். செல்வத்தைத் திரட்டுவாள். புண்ணிய மனத்தினள். இவளுக்கு உடன் பிறந்தாரால் அதிர்ஷ்டங்கள் வாய்க்கும். கணவன் மனத்துக்கு ஒத்தவகையில் வாழ்க்கை நடத்துவாள்.

19. தன்துணை ஆண்பால் மூன்று சாற்றுவோம் தீர்க்க மாக
அன்னவர் சேதி பின்பால் அறிவிப்போம் தாயே யாங்கள்
இன்னவன் முன்சென் மத்தை இயம்புவோம் [1]ஆழி தன்னில்
கன்னியும் ரெட்டி வமிசம் கலந்துமே வாழும் நாளில் ;

19. இவளுக்கு மூன்று சகோதரர்கள் தீர்க்கமாக விளங்குவர் என்றேம். அவர்கள் செய்திக ளனைத்தையும் விவரமாக இரண்டாம் பாகத்தில் நாங்கள் சொல்லுவோம் ; தாயே! இவளுடைய முற்பிறப்பைக் கூறுவோம். திருப்பாற்கடல் என்னும் ஊரில், ரெட்டியார் குலத்தில் பிறந்து, வாழுகின்ற காலத்தில் ;

---

1. செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள திருப்பாற்கடல் என்னும் ஊராக இருக்கலாம்,

20. [1]பஞ்சையாய் ஏழை மாது பாலர்க்கு அன்னம் வேண்ட
மிஞ்சிய வார்த்தை சொல்லி விரட்டினுள் ஏழை தன்னை
வஞ்சியும் மனவெ றுப்பா லறைந்தசா பத்தைக் கேண்மோ
.....

20. அநாதையான ஏழைப் பெண்ணொருத்தி, தன் புதல்வர்க்கு உணவு தரும்படி இவளிடம் வேண்ட, வீணை சொற்களைச் சொல்லி அவளை விரட்டி விட்டாள். அந்த ஏழைப் பெண் மனவெறுப்புடன் கூறிய சாபத்தைக் கேளுங்கள்.

21. பாலர்சோ றியலாப் பாவி பெருகாதே சுதரு னக்குச்
சாலவே பின்சென் மத்தில் சந்ததி யில்லா தாயும்
ஏலவே வாழ்வா யென்று ஏகினுள் வேறு சார்பு
ஆலம்போல் அந்தச் சாபம் அணுகிற்றுப் பாவைக் கேதான்.

21. "பசியுடனுள்ள என் குழந்தைகளுக்கு உணவுதர வியலா தென்று கூறிய பாவியே! உனக்கு, புத்திர சம்பத்து ஏற்படாது. அடுத்த பிறப்பில் சந்ததி இல்லாமல் வாழ்வாய்" என்று கூறிவிட்டு, வேறு இடம் சென்றுள். விஷம்போல அந்தச் சாபம் இவளை யடைந்தது.

22. மங்கைக்கு அந்தி யத்தில் மைந்தர்கள் தோஷ மாயும்
அங்கதன் கோஷ்டந் தன்னில் அவளொடு தீபம் வைத்துச்
சங்கையாய்க் கால நாடு சென்றுமே ராமன் வர்க்கம்
இங்கிவள் உதித்தா ளென்றே மெய்திடு மேழை சாபம்.

22. இவளுடைய அந்திய காலத்தில் மக்களுக்குத் தோஷம் ஏற்பட்டது. அந்தத் தோஷந் தீர, விநாயகர் கோவிலில் தீபங்கள் வைத்து வணங்கினுள். பின்பு, எமனுலகமடைந்து, பிரமனுல் படைக்கப்பட்டு, வன்னிய குல க்ஷத்திரிய வமிசத்தவளாக இவ்வுலகில் இவள் பிறந்தாள் என்று கூறினும். இப் பிறவியில், அந்த ஏழைப் பெண் இட்ட சாபம் இவளை யடைந்தது.

23. புத்திர தோடம் எய்தும் பிருகுமே மறித்துச் சொல்வார்
வித்தகன் எவ்வார் தீர்க்கம் விளம்புவீர் அந்தச் சங்கை
அத்தியின் கோட்டத் திற்கு அணுகின வந்தப் புண்யம்
உத்தமன் உதித்தான் தீர்க்கம் உரைக்கின்றேம் இவன்பின்
[சென்மம்.

---

1. இந்தச் செய்யுளின் நான்காம் அடி எட்டில் இல்லை.

23. அதனால் இவளுக்குப் புத்திர தோஷமுண்டாகும். பிருகு முனிவர் மறுத்துக் கூறுவார். இந்த ஜாதகன் இவளுக்குப் புதல்வனுடன் தீர்க்காயுளுடன் விளங்குவது எங்ஙனம்? அந்தச் சந்தேகத்தை விளக்கிக் கூறுங்கள். இவன் தாய் முற்பிறப்பில் விநாயகர் கோவிலுக்குச் சென்று வணங்கிய புண்ணியத்தினால் இந்த ஜாதகன் பிறந்து தீர்க்கமாக விளங்குகின்றான். இவனுடைய மறுபிறப்பைச் சொல்லுகின்றோம்.

24. பிருதிவி கீழ்பா லாகப் பேரூரில் செங்குந்த சேயாய்
வருகுவான் என்று சொல்வோ மறைகின்றோம் தந்தை
[பூர்வம்
அருணைக்கு மேல்பா லாக அணுகிய சிறுவூர் தன்னில்
வலையர்தங் குலமு தித்து வாழ்நாளில் வினையைச்
[சொல்வேன்.

24. காஞ்சீபுரத்துக்குக் கிழக்கில் உள்ள பெரிய ஊரில், செங்குந்த வகுப்பில் பிறப்பான். இவன் தந்தையின் முற்பிறப்பைக் கூறுகின்றோம். திருவண்ணாமலைக்கு மேற்கில் உள்ள சிறிய ஊரொன்றில், செம்படவர் குலத்தில், பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில், நேர்ந்த வினையைச் சொல்லுவோம்.

25. கண்ணிகள் குத்தி யேதான் கபடாகச் சிலவே பட்சி
இன்னவன் தன்கைக் கொண்டான் இருக்கிற நாளி லேதான்
பெண்பட்சி சூலை கொண்டு புரிவது விரிதல் செய்த
துன்மையாய்ச் யந்தச் சாபம் தொடர்ந்தது என்று
[சொல்வோம்.

25. வலைகள் விரித்து, வஞ்சனையாக, ஆணும் பெண்ணுமான இரு பட்சிகளை இவன் தன்கைப் பற்றினான். இங்ஙனம் இருக்கின்ற காலத்தில், பெண் பறவை கருவுற்று இறந்தது. ஆண் புரு தப்பி யோடிற்று. கொடிய அந்தத் தோஷம் இவனைத் தொடர்ந்தது.

26. அந்திய காலம் தன்னில் அவள்கரம் காலும் சேர்ந்து
அந்தகன் நகரம் சேர்ந்து அயனாலே வரையப் பட்டு
வந்தவ னென்று சொல்வோம் மருவிடும் பட்சி தோடம்
பந்தணி மனம்போல் வாழாள் பத்தினி யந்தம் மாண்டு;

26. கடைசிக் காலத்தில், கை கால்கள் சோர்வடைந்து, மரணமடைந்தான். பின்பு பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறப்பில் பிறந்தான். இப்பிறப்பில் பறவை தோஷம் தொடர்ந்தது. மனக் கருத்துக்கு ஒத்து வாழாத இவனுடைய மனைவியும் கடைநாளில் இறக்க;

27. சிறையுடன் பித்த பாதை செறிந்துமே வாழ்வா னுகும்
கருமகா லங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர்தாம்
இருபது ஏழு ஆண்டில் இயம்புவோம் தந்தை கண்டம்
மறுசென்மம் அவ்வூர் தன்னில் வருகுவான் வடுக னுக.

27. சிறைப்பட்டவன் போன்று பித்த உபாதை நிறைந்தவனுக வாழ்வான். ஜாதகனுக்குக் கரும தசையைச் சொல்லுங்கள் முனிவரே! நீங்கள். ஜாதகனின் இருபத்தேழாம் வயதில் தந்தைக்கு மரணம் ஏற்படும் என்று சொல்லுவோம். மறுபிறப்பில் அவ்வூரிலேயே இவன் தந்தை வடுகர் குலத்தவனுகப் பிறப்பான்.

28. இருபது மூன்று ஆண்டுள் ஏகுவாள் அன்னை தானும்
அறுபது ஆறு ஆண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
திருமகன் உடலம் ஏகும் செப்புவோ மிவன்பின் சென்மம்
விரிஞ்சியில் பிரம சேயாய் மேவுவான் என்று சொல்லுவோம்.

28. ஜாதகனின் இருபத்து மூன்றுவது வயதுக்குள் தாய் மரண மடைவாள். அறுபத்தாறும் வயதில், ஐப்பசி மாதத்தில், ஜாதகன் மரண மடைவான். இவன் மறுபிறப்பைக் கூறுவோம். விரிஞ்சி நாட்டில், அந்தணர் குலத்தவனுகப் பிறப்பான் என்று சொல்லுவோம்.

29. பாரியும் இவன்பின் னுலே பறப்பளாம் கால நாடு
கூறுவோம் இவனின் யோகம் குலமதிப் புடனே வாழ்வன்
சேருமே மாமன் ஆஸ்தி செய்நிலம் அதிகம் சேர்ப்பன்
பாரினில் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

29. மனைவியும், இவன் இறந்த நான்கு ஆண்டுகளுக்குப் பின்பு எமபுர மடைவாள். ஜாதகனின் யோகங்களைக் கூறுவோம். குலத்தில் மதிப்புடையவனுக வாழ்ந்திருப்பான். மாமன் ஆஸ்திகள் இவனை யடையும். விளை நிலங்கள் மிகுதியாகச் சேர்ப்பான். உயர்ந்த தவ மியற்றும் பார்வதியே! கேட்பாயாக.

30. உதித்திடு காலம் தன்னி லுத்திர முதற்பா தத்தில்
கதிர்த்தசை ஆண்டு ஆறும் கலங்குமிப் பால னுக்கு
இதுநிற்க இருபத் தேழு ஆண்டின்மேல் பிறைபோல்
[யோகம்
சதியுளோ ருறவே யாகும் சயம்செய்வன் எடுத்த வேலை.

30. ஜாதகன் பிறக்கும் காலத்தில், உத்திர நட்சத்திரம் முதல்பாதம் ஆகும். சூரிய மகாதசையில் ஆறு வருஷங்கள் இருப்பு. இந்த ஆறு வருஷங்களிலும் ஜாதகனுக்குத் துன்பங்கள் இருந்து கொண்டிருக்கும். இருபத்தேழாம் வயதுக்கு மேல், வளர்பிறைச் சந்திரன் போல அதிர்ஷ்டங்கள் பெருகும். விரோதிகளும் நட்பாவார். எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவான்.

31. செய்தொழில் பலித மேன்மை சேர்ப்பனே யாயி ரம்பொன்
அய்யங்கள் செய்வா னுகும் அடைந்தோரை ஆத ரிப்பன்
பொய்மொழி கூரு னுகும் போசனம் குணங்கா ணுதான்
தையலாள் யோகம் சொன்னேம் சங்கரி கேட்டி டாயே.

31. செய்யுந் தொழில்களில் மேன்மையான பலன்கள் ஏற்படும். ஐயாயிரம் பொன் சேர்ப்பான். தானங்கள் செய்வான். பிச்சை யிடுவான். தன்னை யடைந்தவர்களை ஆதரிப்பான். பொய்யுரை சொல்லான். உணவில் சுகங் காணுதவன். இவன் மனைவிக்கும் யோகங்கள் கூறினேம். பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 22

1. மதியது மீன மாக மந்தனும் ராகு நந்தி
கதிர்புகர் கன்னி யாகக் கணக்கனும் துலையில் மேவச்
சதிசிகி சேய் [1]தெ ருக்கால் தனுசினில் குருவு மேவ
விதிகுண்டை யுதய மாகில் விளம்புமிச் சென்னம் பெண்ணே.

1. சந்திரன் மீனத்திலும், சனி இராகு விருஷபத்திலும், சூரியன் சுக்கிரன் கன்னியிலும், புதன் துலாத்திலும், கேது செவ்வாய் விருச்சிகத்திலும், குரு தனுசிலும், தங்கியிருந்து, இலக்கினமும் விருஷப மாக இருந்தால் உண்டாகும் பலனைக் கூறுங்கள். இது ஒரு பெண்பாலின் ஜாதகமாகும்.

சந்திரன்		லக்கினம் சனி ராகு	
	இராசி சக்கரம்		
குரு	கேது செவ்வாய்	புதன்	சூரியன் சுக்கிரன்

2. உவரிக்குக் குடகு மாகும் ஓதூரு தனக்கு உத்ரம்
தவசிறு பாக்கம் கீழ்பால் தனிப்பாலை நதிக்குத் தென்பால்
நவமிது மத்தி லேதான் நாட்டிய பேரூர் தன்னில்
சிவமதம் [1]பறவை கோத்ரம் செனித்தவ ளிவளே யம்மா.

2. கடலுக்கு மேற்கிலும், ஓதூக்கு வடக்கிலும், உயர்ந்த சிறுபாக்கத்திற்குக் கிழக்கிலும், பாலை நதிக்குத் தெற்கிலுமான எல்லைகளுக்கு இடையே அமைந்துள்ள ஒரு பெரிய ஊரில், சைவ குலத்தில், கௌசிக கோத்திரத்தில் உதித்தவள் இவள்.

3. உதித்ததோர் இல்லம் சொல்வோம் உயர்கீழ்மேல் வீதி [யாகும்
சதிசெயு மெமனின் பார்வை சந்துதான் மேற்கில் தங்கும்
துதியப்பன் மேல்பக் கத்தில் துலங்காத கோட்ட மூண்டு
கதிர்வேலன் தெற்கில் வாசம் காளியும் வடபால் தங்கும்.

---

1. விருச்சிகம்

1. கௌசிக மென்று ஒருபறவையின் பெயர்.

3. இவள் பிறந்த வீட்டைக் கூறுவோம். கிழக்கு மேற்குத் தெரு வில், தெற்கு நோக்கிய வாயிலையுடையது இவள் வீடு. வீட்டிற்கு மேற்கில் ஒரு சந்து உண்டு. மேற்குத் திசையில் விராயகரின் பாழடைந்த கோவில் ஒன்றுண்டு. தெற்கில் சுப்பிரமணியர் கோயிலும், வடக்கே காளி கோவிலும் உள்ளன.

4. குணக்கினி லரனின் கோட்டம் குபேரன்தன் நகர தாகும்
பிணக்கிலாப் பெருமாள் கன்னி பாஞ்சாலி நிருதி மூலை
இணக்கமா யீசன் மேற்கில் இவ்வித அடையா ளத்துள்
வணக்கமுள் ளவளா மாது வந்ததோர் அடையா ளந்தான்.

4. கிழக்கில் கிவபெருமான் கோவில் உண்டு. இவள் பிறந்த ஊர் அனகாபுரி போல விளங்கும். தென்மேற்குத் திசையில் திருமால் கோயிலும், பெண்கடவுளாகிய திரௌபதியம்மன் கோவிலும், மேற்குத் திசையில் ஈசன் கோவிலு மிருக்கும். இவ்வித அடையாளமுள்ள இல்லத்தில்தான் வணக்க முள்ளவளாகிய இவள் பிறந்தாள்.

5. சாதகி சென்ன யோகம் சாற்றிய அன்னை யோகம்
போதவே குடும்ப யோகம் புகலுவேன் முற்சென் மந்தான்
தீதிலா மறுசென் மந்தான் திகழ்மைந்தர் சகோதர யோகம்
மாதவர் எழுவர் தாமு மறைகின்றேம் கேளு மம்மா.

5. ஜாதகியின் சென்ன யோகத்தையும், தாயின் யோகம், குடும்பசுகம் முதலியவற்றையும், முன்பின் சென்மங்கள், புத்திரர் சகோதரர் யோகங்கள் ஆகியவனேத்தையும், எழு முனிவர்களாகிய நாங்கள் கூறுகின்றோம். தாயே! கேளுங்கள்.

6. சாதகி குணத்தை யாங்கள் சாற்றுவோ மாலொப் பாகும்
நீதியாய் ஒடிசல் தேகி நிகழ்பித்த தேகி யாகும்
ஆதியில் குடும்ப மேழை அதிகமாய் வித்தை புத்தி
கியாதியு மதிக மேற்பள் கனதன யோக முண்டு.

6. ஜாதகியின் குணத்தை நாங்கள் கூறுவோம். திருமாலே யொத்த நிறத்தவள். மெல்லிய உடலுடையவள். உடலில் பித்தம் மேலிட்டிருக்கும். முதலில் குடும்பம் வறுமை யுடையது. கல்வி, அறிவு, புகழ் முதலியவற்றை மிகுதியாகப் பெறுவாள். அதிகச் செல்வமடையும் யோகமுண்டு.

7. பரதத்தில் அதிக மேன்மை பசுங்கிளி மொழிய தாகும்
சரசத்தி லூர்வசி யாவள் சகலபாக் கியமு முண்டாம்
அரன்சேயன் அடிமை யாகும் அரசர்கள் உறவு முள்ளாள்
பெருமையு முடைய ளாவள் பிஞ்ஞகன் தனைத்து திப்பாள்.

7. உலகில் அதிக மேன்மையை உடையவள். பைங்கிளியைப் போல் இனிமையாகப் பேசுவாள். சாசம் செய்வதில் ஊர்வசியைப் போன்றவள். எல்லாவகைப் பாக்கியங்களும் பெற்றவள். முருகப்பெருமானிடம் பக்தி கொண்டவள். கணவனால் பெருமை அடைபவள். சிவபெருமானைத் துதிப்பவள்.

8. அற்பர்கள் உறவு கொள்ளாள் அநேகமாய்த் தனமும்
[சேர்ப்பள்
பொற்பணி ரத்தி னங்கள் பூஷண மதிகம் சேர்ப்பள்
விற்பன விவேகர் தம்மை விரும்புவள் அல்ப உண்டி
கற்புமே யுடையா ளாகும் கழ்றுவோ மின்னுங் கேளே.

8. அற்பமானவர்களிடம் தொடர்பு வைத்துக் கொள்ளமாட்டாள். மிகுதியாகச் செல்வத்தைச் சேர்ப்பாள். பொன்னாலான ஆபரணங்கள், இரத்தினங்கள் இவற்றை அதிகமாகப் பெறுவாள். கல்வி, கேள்விகளில் சிறந்த அறிவாளிகளை விரும்புவாள். சிற்றுண்டிகளை உட்கொள்ள விரும்புவாள் என்று கூறுவோம். மேலும் கேளுங்கள்.

9. உரோமங்கள் அதிக முள்ளாள் நுவலுப தேச முள்ளாள்
சேமமாம் குடும்ப முள்ளாள் சித்திர வீடும் உள்ளாள்
தீமையும் எண்ணுள் பாரில் சேர்ந்தவர் தம்மைக் காப்பாள்
மாவுண்டு சகடு முண்டு வந்தவர் தம்மைக் காப்பாள்.

9. தலைமயிர் அதிகமாகப் பெற்றிருப்பாள். மேன்மையான நல்லுப தேசத்தை உடையவள். நலம் மிகுந்த குடும்ப முடையவள். அழகிய வீட்டை உடையவள். உலகில் எவருக்கும் தீங்கை நினையாதவள். தமது உறவினர்களை யாதரிப்பாள். கால்நடை, வண்டி முதலிய வாகனங்களை உடையவள். தம்மை நோக்கி வந்தவர்களைக் காப்பாற்றுவாள்.

10. பூமியும் சோலை யுண்டு புரவலர் மெச்ச வாழ்வள்
தாமத குணத்தா ளாகும் சற்றினில் கோபம் உண்டாம்
மாமன்மார் தம்மால் யோகம் வந்திடு மிவளுக் கம்மா
தீமையாய்க் கபடு மில்லாள் சிறுத்தவர் தம்மைக்
[காப்பாள்.

10. நிலபுலன்களும், சோலைகளும் உடையவள். மன்னர்கள் புகழும் படி வாழ்வாள். தாமத குணமுடையவள். விரைவில் கோப மடைவாள். இவளுக்குத் தன் மாமன்மார்களால் அதிர்ஷ்டம் வரும். நிதான வஞ்சனைகள் இல்லாதவள். ஏழைகளைக் காப்பாற்றுவாள்.

11. முன்கோபம் அதிக முண்டு மூலநோய் கொஞ்ச முண்டு
தன்னுடன் பிறந்தோ ரில்லை தைரிய மனத்தா ளாகும்
சொன்னபுத் திரரு மில்லை சூட்சும யூகை யாளாம்
இன்னமும் சூடாந் தேகம் ஏற்பவர்க் குதவி செய்வள்.

11. முன்கோபம் அதிகமாக இருக்கும். சிறிது மூல வியாதியால் கஷ்டப்படுவாள். இவளுக்கு உடன்பிறந்தவர்கள் இல்லை. தைரியமான மன முடையவள். புத்திர பாக்கிய மில்லாதவள். நுண்ணிய அறிவு உடை யவள். உஷ்ணமான உடலுடையவள். யாசிப்பவர்களுக்கு உபகாரம் செய்வாள்.

12. நல்லபோ சனத்தா ளாகும் நாடெலாம் வசிய முண்டு
தொல்லையெப் பொழுது மூண்டு துறவிகள் பக்தி
[யுள்ளாள்
இல்லையென் றுரைக்க மாட்டாள் இலட்சுமி வாசம் உண்டு
தில்லையன் அருளி னலே செப்பின மொழிகுன் றாது.

12. நல்ல போஜன சுகமுடையவள். உலகெல்லாம் இவளுக்கு வசிய மாகும். எப்பொழுதும் வீண் தொல்லைகள் உள்ளவள். சந்நியாசிகளிடம் பக்தி உடையவள். கேட்பவருக்கு இல்லையென்று சொல்லமாட்டாள். சிவ பெருமான் அருளால் இலட்சுமீ கடாட்சம் குறையாமல் எப்பொழுதும் இவளிடம் நிறைந்திருக்கும். கூறிய வார்த்தை மாறாது.

13. இப்படி அறுவர் கூற இன்பமாய்ப் பராசர் தாமும்
மெப்புடன் சொன்னீர் ஐயா விளம்புவேன் அதிலோர்
[சங்கை
மைப்படி கண்ணு னுக்கு மைந்தரும் இல்லை என்றீர்
செப்பமா யந்தச் சங்கை தெரிவிப்பீர் என்று கேட்க.

13. இவ்வாறு ஆறு முனிவர்கள் கூற, இன்பமாகப் பராசர முனிவர் சொல்லுவார். அழகாகக் கூறினீர்கள். அதில் ஓர் ஐயமுண்டு. இந்த ஜாதகிக்கு மைந்தர்கள் இல்லை என்று கூறினீர்கள். எதனால் அவ்வாறு கூறினீர்கள்? விளக்கமாகக் கூறுங்கள்.

14. அஞ்சினில் புகருந் தங்கி யமர்ந்திடு மஞ்சேர்ன் ஆறில்
தஞ்சமாய் இருந்த தாலே சாதகி தனக்கு முன்னல்
வந்திடு மூழி யாலே மைந்தரும் தோஷ முண்டு
கஞ்சனல் வரைந்த சேதி கழறுவோம் கேளு மம்மா!

14. ஐந்தாமிடத்தில் சுக்கிரனிருந்து, ஐந்தாமிடத்துக்கு உடையவ னான புதன் ஆறுமிடத்தில் இருக்கின்ற காரணத்தாலும், முன்வினையி

லும் ஜாதகிக்குப் புத்திர தோஷம் வந்து சேரும். பிரமனுல் எற்பட்ட இவள் முற்பிறவி வரலாற்றைக் கூறுவோம். தாயே! கேளுங்கள்.

15. இங்கவள் முன்சென் மத்தை இயம்புவேன் பேரூர் தன்னில்
பொங்கமாய்க் கருணை வமிசம் பிறந்தனள் இவளே யம்மா
மங்கையும் வரனுண் டாகி மைந்தரும் விருத்தி யாகிச்
சங்கையில் லாம லேதான் தான்வாழும் காலம் தன்னில்;

15. இங்கு அவள் முன்சென்மத்தைக் கூறுவேன். பெரிய ஊரில் கருணீகர் குலத்தில் பிறந்தாள். இவள் நல்ல கணவனையும், புத்திரர்களையும் பெற்று, மேம்பட வாழ்ந்து வரும்போது;

16. பஞ்சையாய்ப் பெண்ணும் ஓர்நாள் பாலகன் தனக்குச் சாதம்
கெஞ்சினுள் இவள்பால் சென்று கேட்டிட வில்லை யென்றுள்
வஞ்சியும் பால ரன்னம் வகுக்காத பாவிக் கேதான்
துஞ்சிடும் பால ரென்று சொல்லினுள் இவளுக் கம்மா.

16. ஓர் ஏழைப் பெண் தன் குழந்தைக்குச் சாதம் வேண்டுமென இவளிடம் சென்று கேட்க, இவள் இல்லை என்று கூறினுள். குழந்தைக்குச் சாதம் அளிக்காத பாவியாம் இவளுக்குக் குழந்தைகள் இறந்துபோம் என்று கூறினுள். தாயே! கேளுங்கள்.

17. இதுஒரு தோஷ மாச்சு இன்னும்வே றொன்று உண்டு
அதுவுந்தான் சொல்லு கின்றேரும் அறுமுகன் அடிமை யான
திருவேணு மாது ஓர்நாள் செம்மைபொன் நகையை
[வாங்கிப்
பதியினில் கள்ள ருக்குப் பயந்துமே இவள்பால் சென்று;

17. இஃது ஒரு தோஷம். இதைத் தவிர மற்றொன்றும் உண்டு. அதையும் கூறுகின்றேரும்; கேளுங்கள்! முருகனிடம் பக்திகொண்ட செல்வ முள்ள பெண் ஒருத்தி பொன் நகையை வாங்கி, திருடருக்குப் பயந்து, இவளிடம் சென்று,

18. வைத்திடு மென்று சொல்லி மாதுவும் தந்தாள் அப்பால்
பத்தினி வாங்கி வைத்தாள் பாவையோர் திங்கள் சென்று
இரத்தின பூஷ ணத்தை நல்குவாய் என்று கேட்க
வித்தகி செய்த மோசம் விளம்புவோம் கேளு மம்மா.

18. இதை வைத்திரு, என்றுசொல்லி, அந்நகைகளைக் கொடுத்தாள். இவளும் அதை வாங்கி வைத்தாள். அந்தப் பெண் ஒரு மாதம் கடந்து அவ்வாபரணத்தைக் கொடு என்று கேட்கவும், இவள் செய்த மோசத்தைக் கூறுவோம், தாயே! கேளுங்கள்.

வேறு

19. கொடுத்தநகை யவற்றில்சில எடுத்துக் கொண்டு
குறைநகையை யவளிடத்தில் கொடுத்தா ளப்போ
மடக்கொடியு மனமெரிந்து சாபம் சொல்வாள்
மறுசென்மம் என்போல உருவெ டுத்து
அடுக்கடுக்காய்ச் சிலமாதர் நிந்தை சொல்லி
அள்ளியிடும் வாய்க்கரிசி கொள்ளிக் கேதான்
துடுக்கான புத்திரரு மற்று மண்மேல்
தோன்றிடார் சகோதரரும் சொன்ன ளம்மா.

19. அவள் கொடுத்த நகைகளில் சிலவற்றை எடுத்துக்கொண்டு எஞ்சியுள்ளவற்றை அவளிடம் அளித்தாள். அப்பொழுது அந்தப் பெண் மனம் நொந்து சாபம் தந்தாள். மறுபிறவியில் என்னைப்போன்ற பிறப் பெடுத்து, சில பெண்களால் தூஷிக்கப்பட்டு, தீயிட மைந்தர்களுமின்றி, வாய்க்கரிசி போடச் சகோதர்களுமின்றி இருப்பாயாக, என்று கூறினள், தாயே!

வேறு

20. இப்படி யிருவர் சாபங்கள் தோன்றி
இச்சென்மந் தன்னிலே யிவளும்
கைப்பிடிக் கணவன் இன்றியே மாது
கலந்தனள் பறவையின் குலத்தில்
மைப்படிக் கண்ணுள் இவளுக்குத் தோஷம்
மைந்தரும் இன்றியே யிருப்பள்
செப்பமாய்த் தத்து புத்திரி யுண்டாம்
செங்கண்மால் தங்கையே கேளாய்.

20. இப்படியாக இந்த இரண்டு தோஷங்கள் இவளை யடைந்தன. இச்சென்மத்தில் இவள் கௌசிக கோத்திரத்தில் பிறந்து கணவன் சுக மின்றி இருந்தாள். ஆகையால் இவளுக்குப் புத்திர தோஷம் உண்டு. புத்தி ரர்கள் உண்டாக மாட்டார்கள். சுவீகார புத்திரி உண்டு. செந்தாமரை மலர்போன்ற அழகிய கண்களைப்பெற்ற திருமாலின் தங்கையே! கேளுங்கள்.

வேறு

21. இச்சாபம் நீங்கச் சாந்தி இயம்புவீர் என்று கேட்க
எச்சாந்தி செய்தா லும்தான் எழில்தீர்த்தம் தோய்ந்தா [லுந்தான்
கச்சணி மாத ருக்குக் கண்டிடா புத்திரர் தாமும்
இச்சையாய்ப் பிற்சென் மத்தை இயம்புவேன் கேளு மாதே.

21. இந்தச் சாபம் நீங்க, ஒரு சாந்தியைக் கூறுங்கள் என்று கேட்க, எந்தவிதமான சாந்திகளைச் செய்தாலும், புண்ணிய தீர்த்தங்களில் நீராடினாலும், கஞ்சுகம் அணிந்துள்ள இவளுக்குப் புத்திரர்கள் உண்டாகமாட்டார்கள். பின்சென்மத்தைக் கூறுவேன், கேளுங்கள்.

22. இன்னவள் காசி தன்னில் இயல்பிரம்ம குலத்தி லேதான்
நன்னய குருக்கள் வீட்டில் நாயகி செனிப்பா ளம்மா
சொன்னது மெய்தான் இந்தத் தேவியும் இச்சென் மத்தில்
புண்ணிய மில்லா ளாகி புத்திரர் தாமு மற்று ;

22. இவள், காசித் தலத்தில், உயர்ந்த பிராமணர் குலத்தவளாய் நலமிக்க குருக்கள் இல்லத்தில் பிறப்பாள். கூறியபடியே இப்பிறவியில் புண்ணியங்கள் இல்லாதவளாய், புதல்வர்களு மின்றி,

23. மலடியென் றொருபேர் கொண்டு வருத்தத்தால் மறுசென்
[மத்தில்
தலைவியும் காசி தன்னில் உதிப்பது எவ்வார் சொல்லே
நலமிகு இச்சென் மத்தில் நக்கனின் பூசை யாலும்
பலவித ஏழை யோர்க்குப் பகரன்ன மளிப்ப தாலும்,

23. மலடி என்று நிந்திக்கப்பட்டு, வருத்தமடைந்து, வாழ்ந்து வருவாள். மறுபிறவியில் ஜாதகி காசியில் எவ்விதம் பிறப்பாள்? கூறுக என, மேன்மையான இப்பிறப்பில் சிவபெருமானைப் பூசிப்பதாலும், பல ஏழைகளுக்கு உணவு அளிப்பதாலும்,

24. வருவோர்க்கு ஆடை அன்னம் வண்மையாய்க் கொடுப்ப
[தாலும்
பெருமையாய் மறுசென் மத்தில் பிராமண குலமு திப்பாள்
திருமகள் கடாட்ச முண்டாய்த் தீங்கிலா வாழ்வா ளம்மா
அறுமுகன் தன்னைப் பெற்ற அன்னையே கேட்டி டாயே.

24. 24. தன்னை யடைந்தவர்களுக்கு ஊணுடைகளை மிகுதியாகக் கொடுப்பதாலும், மறுபிறப்பில் மேன்மையான காசியில் பிராமணர் குலத்தில் தோன்றுவாள். திருமகள் கடாட்சம்பெற்று, தீங்கின்றி வாழ்வாள். ஆறுமுகனைப் பெற்ற தாயே! கேட்பாயாக.

25. அன்னையின் யோகம் தானும் அறைகின்றேம் சிவந்த மேனி
நன்னய வாயு தேகி நற்றந்த ரோகி யாவள்
பன்னிய கல்வி அற்பம் பாரினில் செல்வம் கொஞ்சம்
தன்னினத் துடனே வாழ்வள் சகோதர ரதிக மாமே.

25. தாயின் யோகத்தைக் கூறுகின்றோம். சிவந்த உடலுடையவள் வாயு சரீர முடையவள். பல் ரோக முடையவள். சிறிதளவே கல்வி பெற்றவள். செல்வமும் கொஞ்சமே யாகும். தன் குலத்தவரோடு வாழ்வாள். சகோதரர்களை அதிகமாகப் பெற்றிருப்பாள்.

26. துணையவ ரீரைந் தாகத் தோன்றிடு மிவளுக் கம்மா
அணையவே செனித்த போது அரிட்டமாம் சிலவே பின்பு
இணையிலாச் சிலநாள் சென்று ஏகிடும் சகோத ரங்கள்
துணைபோலே ஒருவன் தீர்க்கம் பார்வதி கேளு மம்மா.

26. இவளுக்கு உடன்பிறந்தார் பத்துப்பேர் தோன்றிடுவர். அவர்களுள் சிலர் பிறந்தபோதே இறந்துபோவர். சிறிதுநாள் சென்று சிலர் இறப்பர். அவர்களுள் ஒருவன் தீர்க்கமாக இருப்பான். பார்வதியே! கேட்பாயாக.

27. மாதாவின் முன்சென் மத்தை யறைகின்றோம் கொச்சி [நாட்டில்
யாதவ சென்ம மாகி யரனுடைக் கோட்டத் திற்கு
தீதிலாப் பால்கொ டுத்தும் தேவியும் தீபம் வைத்தாள்
காதகி ஓர்நாள் தன்னில் கணவனை விட்டு மேதான்;

27. தாயின் முன்சென்மத்தைக் கூறுவோம். கொச்சி நாட்டில், யாதவ குலத்தில் தோன்றி, சிவன் கோவிலுக்கு நல்ல பால்கொடுத்து, விளக் கேற்றி வைத்து, வாழ்ந்து வந்தாள். பிறகு இவள் ஒருநாள் தன் கணவனை விட்டு;

28. அன்னிய போகம் துய்க்க அதையவள் வரனும் கண்டு
பின்னமாய்ப் பேசி யேதான் விரட்டினன் இவளைத் தானும்
கன்னியும் பழனி புக்குக் காராளன் தன்பால் சென்று
நன்னயக் குடும்ப மாகி நாயகி வீற்றி ருந்தாள்.

28. வேறு மனிதனோடு இன்பம் துய்த்தாள். அதை அவள் கணவன் பார்த்து, திட்டிப் பேசி, அவளைத் துரத்திவிட்டான். இவளும் பழனிக்குச் சென்று, அவனுடன் குடும்பமாக வாழ்ந்து வந்தாள்.

29. இவ்வித மிருக்கும் போது இவள்தினம் முருக னைத்தான்
செவ்வியும் தியானம் செய்து திங்களோர் நாளி லேதான்
நவ்விய தாகப் பந்தல் நாட்டினுள் வருவோ ருக்குத்
தெவ்விய நீரும் தந்து திங்கிலா வாழும் நாளில்,

29. இவ்வாறு இருக்கும்போது, இவள் காள்தோறும் முருகனை கன்கு பூசித்து வந்தாள். ஒருமாதம் சிறந்த காளில், தண்ணீர்ப் பந்தல் நிறுவினள். வருபவருக்கு நல்ல தண்ணீர் அளித்து, குற்றமில்லாது வாழும் காளில் ;

30. மரணமாய் அச்சென் மத்தில் வகுத்திட்ட புண்ணி யத்தால்
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவள் இவளின் தாயார்
தருநிகர் கரத்தி லேதான் தாமரை ரேகை தங்கும்
திருவெனும் மாது ருக்கே சொல்லுவோம் பிற்சென்
[மந்தான்.

30. மரண மண்டைந்தாள். அந்தச் சென்மத்தில் செய்த புண்ணியத் தால், பிரமனுல் படைக்கப்பட்டு, ஜாதகியின் தாயாகத் தோன்றினுள். கற்பக மரத்தை யொத்த இவள் கையில் தாமரை ரேகையுண்டு. இலட்சுமியைப் போன்ற இவள் தாயின் பின்சென்மத்தைக் கூறுவோம்.

31. வேங்கட மலைக்குத் தென்பால் வேளாள குலமு தித்தும்
பாங்குள வநேக பாக்கியம் பத்தினி பெற்று வாழ்வள்
திங்களாப் புத்திர விருத்தி செல்விக்கு அதிக முண்டு
ஓங்கியே வாழ்வா ளாகும் உரைத்திட்டோம் கேளு மம்மா.

31. வேங்கடத்திற்குத் தெற்கே, வேளாளர் குலத்தில் உதித்து, பல பாக்கியங்களைப் பெற்று, வாழ்ந்து வருவாள். இவளுக்குப் புத்திரச் செல் வம் நிறைந்திருக்கும். மேன்மையுற வாழ்ந்து வருவாள் என்று கூறினேம். கேளுங்கள்.

32. கோதுமை ரேகை யுண்டு குறைவிலா யோகம் வாய்க்கும்
சீதமா ரேகை யுண்டு சிறப்புடன் வசிய மாகும்
காதலாய் மச்ச ரேகை கனத்தசெங் கோலு முண்டு
சாதனை நவக்கோ ளாய்ந்து சாற்றினேம் இவள்க ரத்தில்.

32. கோதுமை ரேகை உண்டு. குறைவற்ற யோகங்களைப் பெற வாள். இலக்குமி ரேகையும் உண்டு. ஆதலின், அனைவரும் இவளுக்கு வசிய மாவார். இவற்றைத் தவிர, மச்ச ரேகையும், தடித்த செங்கோல் ரேகை யும் உள. நவக்கிரகங்களை யாராய்ந்து, இங்ஙனம் இருப்பதாகக் கூறினேம்.

வேறு

33. மூன்றுவித ரேகையுண்டு இவள்க ரத்தில்
மொழிகுவோம் அதன்பலனை முனிவு முள்ளாள்
சான்றவர்கள் இட்டமுள்ளாள் சினனம் தொட்டுச்
சாகின்ற வரைக்குந்தான் சீர்த்தி யுள்ளாள்
நின்றதொரு மாதுர்வர்க்கம் விரோத முண்டு
நிகழ்த்துவோம் சஞ்சலமாம் புத்தி யுள்ளாள்
இயன்றதொரு மூன்றுவீ டிவளும் செய்வாள்
இளந்தோப்பு பூமியுண்டு இன்னுங் கேளே.

33. இவள் கரத்தில் மூன்றுவித ரேகைகள் உள. அவற்றின் பலன்களைக் கூறுவோம். கோபம் உள்ளவள். பெரியோர்களால் விரும்பப் படுவாள். பிறந்ததுமுதல் இறக்கும்வரை புகழுடன் வாழ்வாள். தாய் வர்க்கத்தாருடன் விரோதம் ஏற்படும். சஞ்சலமான புத்தியுள்ளவள். தன் முயற்சியால் மூன்று வீடுகள் அமைப்பாள். இளமையான (செழிப்பான) தோப்புக்களும் நிலபுலன்களும் உண்டாம். மற்றும் கேளுங்கள்.

34. மாதுரு காலம் தன்னை வகுக்கின்றோம் நாற்பான் ஏழில்
தீதிலாத் தேளின் மாதம் திங்களின் வாரம் தன்னில்
கோதிலாப் பருவந் தன்னில் குன்மரோ கத்தால் மாய்வள்
நாதனு ரிடத்தில் வாழும் நங்கையே மேலும் கேளே.

வேறு

34. தாயின் மரண காலத்தைக் கூறுவோம். நாற்பத்தேழாம் வயதில், கார்த்திகை மாதத்தில், திங்கட்கிழமை, பௌர்ணமியன்று, இவள் தாய் குன்ம நோயால் இறந்துபோவாள். சிவபெருமானின் இடப்பாகத்தில் வாழும் தாயே! கேட்பாயாக.

35. இன்னவள் மரண காலம் இயம்புவோம் அறுபான் ஆறில்
திண்ணமாய்க் கூனி மாதம் தசமியுந் திதியாந் தன்னில்
பண்ணிய பித்த நோயால் பாவையும் மரண மாவள்
அன்னமே யாங்கள் சொல்லும் அடைமொழி குன்றி டாது.

35. ஜாதகியின் மரண காலத்தைக் கூறுவோம். அறுபத்தாறுவது வயதில், நிச்சயமாகப் பங்குனி மாதத்தில், தசமி திதியில், பித்த நோயால் மரணமடைவாள். அன்னத்தைப் போன்ற நடையுள்ளவளே! நாங்கள் சொல்லும் சொற்கள் தவறு.

36. இவளுக்குக் கருமம் செய்யும் இவள்தத்து புத்திரி என்றோம்
அவளுடைக் குணத்தை யாங்கள் அறைகின்றோம் சிவப்புத்
[தேகி
நவமதில் கீர்த்தி யுள்ளாள் நாயகி சித்தினி யாவள்
சிவனையே துதிப்பா ளாகும் செய்தன ரேகை யுள்ளாள்.

36. இவளுக்குக் கருமம் செய்பவள் இவளது சுவீகார புத்திரியாவாள் என்றேரும். அவளுடைய குணத்தைக் கூறுவோம். சிறந்த நிறமுடையவள். புவியில் புகழுள்ளவள். நல்ல மனமுடையவள். சாமுத்ரிகா லக்ஷணம் பொருந்திய சித்ரிணீ என்னும் வகையைச் சார்ந்தவள். சிவபெருமானையே பூசிப்பாள். தன ரேகைகளைக் கையில் உடையவள்.

37. வித்தையும் புத்தி யுள்ளாள் மேன்மக்கள் உறவு [கொள்வாள்
இரத்தின நகைகள் சேர்ப்பாள் நடனசங் கீத மேன்மை
எத்திசைக் கீர்த்தி கொள்வள் எவர்களும் மதிக்க வாழ்வள்
பெற்றிடு தனம நேகம் பிரபல குடும்ப மாவள்.

37. கல்வியும் புத்தியும் உடையவள். பெரியோர்களுடன் நேசம் கொள்ளுவாள். இரத்தின ஆபரணங்களைச் சேர்ப்பாள். நாட்டியம், சங்கீதம் மூலம் எண்திசைகளிலும் புகழடைவாள். பலராலும் மதிக்கப்பட்டு வாழ்வாள். மிகுதியாகச் செல்வத்தைச் சேர்ப்பாள். பிரசித்திபெற்ற குடும்பத்தை யடைவாள்.

38. புத்திர விருத்தி சொல்வேன் பெண்களு மிரண்ட தாகும்
சித்தசன் தன்னைப் போலச் செல்வனும் ஒருவ னாகும்
முத்தியே கொடுக்கும் தேவ முருகர்க்கு அடிமை யாகிக்
குத்தமு மில்லா ளாகிக் குணமுடன் வாழ்வா ளம்மா.

38. அவளது புத்திரபாவத்தைக் கூறுவேன். அவளுக்கு இரண்டு பெண்களும், ஒரு புதல்வனும் தோன்றுவர். மோட்சத்தைக் கொடுக்கும் முருகனுக்கு அடிமையாகி, குற்றமில்லாது நலமுற வாழ்ந்து வருவாள்.

39. இன்னவள் சனனம் தொட்டு ஈரேழு ஆண்டுக் குள்ளே
பின்னங்க ளதிக முண்டு பேசுவோம் குடும்ப மேழை
தன்தனம் குறைவு முண்டு தரித்திரம் கொஞ்ச முண் டாய்
உன்னிய காரி யங்கள் ஓங்கிடா தென்று சொல்வோம்.

39. இவள் பிறந்து பதினொன்று வருஷங்களுக்குள்ளாக, பல துன்பங்கள் ஏற்படும். குடும்பமும் வறுமை யுள்ளதாகும். செல்வமும் குறைவாம். தரித்திரம் ஏற்படும். நினைத்தபடி காரியங்கள் முடைபெறா என்று கூறுவோம்.

40. அதுமுதல் முப்பா னூறில் அநேகமாம் சுகமே யுண்டு
பெறுமவர் இட்ட மாகும் பிரபல கீர்த்தி யுண்டாம்
திருவுமே சேர்வ ளம்மா சித்திர வீடு செய்வள்
உறன்முறை மெச்ச வாழ்வள் உயருமே யோகம் தானும்.

40. அதுமுதல் முப்பத்தாறு வயது வரை, பல நன்மைகள் உண்டாம். பெற்றோர்களுக்கு நன்மை ஏற்படும். பெரும் புகழ் எய்தும். செல்வமும் சேரும். அழகிய இல்லமும் ஏற்படும். இனத்தார் புகழ வாழ்வாள். யோகங்களும் உயரும்.

41. பூஷணம் அதிக முண்டு பூமியுஞ் சோலை யுண்டு
காசினில் நினைத்த தோங்கும் கனதன சௌக்ய முண்டு
தூசுபொன் னதிகஞ் சேரும் சொல்லுவேன் அதன்மேல்
[பத்தும்
காசினில் கலக முண்டு கனத்தவர் விரோத மாகும்.

41. ஆபரணங்களும் அதிக மேற்படும். நிலபுலன்களும் தோப்புக்களும் சேரும். உலகில் நினைத்த காரியம் கைகூடும். பெருஞ் செல்வமும், சுகமும் ஏற்படும். ஆடை, பொன் முதலியவை அதிகமாகச் சேரும். அதற்கு மேல் பத்து வருடங்கட்கும் பலன்கள் கூறுவேன். சில சச்சரவுகளும் தோன்றும். பெரியவர்களிடம் விரோதமும் ஏற்படும்.

42. இன்னவள் மரண காலம் இயம்புவோம் அறுபா லுறில்
நன்னிய வதற்கு மேதான் நற்சுக மிராது கண்டாய்
அன்னிய கிராமம் தன்னில் அவளுக்கு லாப முண்டு
துன்னிய கலகம் கொஞ்சம் தோன்றிடு மிவளுக் கம்மா.

42. இவள் மரண காலத்தைக் கூறுவோம். அறுபத்தாறும் வயதில். மரணம் உண்டாகும். அக்காலத்தில் நிலைத்த சுகங்கள் இரா. வேறு கிராமத்தில் இலாபமுண்டு. சிறிய சச்சரவுகளும் தோன்றும்; தாயே!

ஜாதகம் 23

1. பொன்சனி மீன மாகப் புதன்புகர் இரவி சிம்மம்
நன்நில முடையோன் கன்னி ராகுவில் மதியும் நந்தி
செந்நிறக் கோளும் வீணை சென்மமும் புல்லு திப்ப
இன்னவார் நவக்கோள் நின்ரூல் இதன்பலன் கூறும்
[என்ரூள்.

1. குரு சனி மீனத்திலும், புதன் சுக்கிரன் சூரியன் சிம்மத்திலும், செவ்வாய் கன்னியிலும், இராகு தனுசிலும், சந்திரன் விருஷபத்திலும், கேது மிதுனத்திலும் தங்கியிருந்து, இலக்கினமும் விருஷபமாக இருந்தால், உண்டாகும் பலனைக் கூறுங்கள் என்ரூள் பார்வதிதேவி.

குரு சனி		லக்கினம் சந்திரன்	கேது
	இராசி சக்கரம்		புதன் சுக்கிரன் சூரியன்
இராகு			செவ்வாய்

வேறு

2. கும்பமுனி சொல்லுகின்ரூர் ஆணும் சென்மம்
கூறுவோம் பிறந்தயில்லம் கீழ்மேல் வீதி
செம்மையாய் வடபார்வை வாச லாகும்
தட்சிணத்தில் அருகர்குடி ஆல யந்தான்
அம்புலியை அணிந்தவனும் வடகீழ் தங்கும்
ஆத்தாளாம் காளிஎனும் குடகில் வாழும்
தும்பியப்பன் மீனத்தில் குடியி ருப்பான்
சொலும்கோரி யக்கினியில் தோன்ரும் தானே.

2. அகத்திய முனிவர் கூறுகின்ரூர். இஃது ஆண்பால் ஜாதகம். இவன் பிறந்த வீட்டைக் கூறுவோம். கிழக்கு மேற்கு வீதியில் வடக்குப் பார்த்த வாயிலுடையது இவன் வீடு. தென் திசையில் ஓர் அருகர் கோவில் உண்டு. வடகிழக்குத் திசையில் சிவபெருமான் கோவில் இருக்கும். மேற்குத் திசையில் காளியம்மன் கோவிலுண்டு. வடகிழக்குத் திசையில் விநாயகர் கோவில், தென்கிழக்குத் திசையில் மகம்மதியர் பள்ளிவாசல்,

3. தோன்றுமே சிற்றூரில் சைவச் சேயாய்ச்
சொல்லுகின்றேன் இவன்யோகம் அன்னை யோகம்
ஈன்றதந்தை துணைவர்களும் களத்திர யோகம்
இவன்முன்பின் சென்னமெலாம் எடுத்துச்
[சொல்வேன்
ஆன்றபிதா குணம்சொல்வேன் மால்நி றத்தான்
அவன்பித்த தேகமுளான் மூல நோயன்
சான்றோர்கள் இட்டமுளான் முன்கோ பத்தான்
சத்தியவான் பொறுமையுளான் தயாளன் தானே.

3, இத்தகைய அடையாளங்கள் உள்ள சிறிய ஊரில், சைவர் குலத்தில் உதிப்பான். இவன் யோகம், தாய் தந்தை சகோதரர் மனைவி முதலியவர் யோகங்கள், இவன் முன்பின் சென்மங்கள் ஆகிய அனைத்தையும் சொல்லுவோம். இவனைப்பெற்ற தந்தையின் குணத்தைக் கூறுவேன். கரிய நிறமுள்ளவன். பித்த தேக முடையவன். மூல நோயுள்ளவன். பெரியோர்களால் விரும்பப் படுவான். முன்கோப முள்ளவன். உண்மை யுடையவன். பொறுமை யுள்ளவன். மனவிரக்க முள்ளவன்.

வேறு

4. முகமார்பில் வடிவு முள்ளான் மொழியது தப்பா னுகும்
செகமது கிருஷி யுள்ளான் தீரன் மனத்த னுகும்
பகைவர்க ளில்லா னுகும் படைப்பனே சித்ர வீடு
வகையுள சஞ்ச லத்தான் மங்கையே மேலுங் கேளே.

4. முகத்திலும். மார்பிலும் மச்ச முடையவன். சொன்ன சொல் தவறுதவன். உலகில் பயிர்த்தொழிலைச் செய்வான். தைரியம் பொருந்திய மனமுடையவன். விரோதிகள் இல்லாதவன். அழகிய இல்லம் கட்டுவான். மனத்தில் பலவித சஞ்சலங்களைப் பெற்றிருப்பான். பார்வதியே! மேலும் கேளுங்கள்.

5. இன்னவன் துணைவர் தம்மை இயம்புவோ மாண்பா
[லொன்று
கன்னியு மவ்வா றுகும் கனக்காது இதன்மேல் தோன்றில்
அன்னையே இக்த ணத்தான் அவனுக்குப் பிறந்த பாலன்
மன்னவன் சேதி தன்னை யறைகின்றோம் ஓடிச்சல் தேகி.

5. இவன் சகோதரபாவத்தைக் கூறுவோம். சகோதரன் ஒருவனும் சகோதரி ஒருத்தியும் இருப்பர். அவர்களுக்குப் பின்பு தோன்றிலும் நிலையா. தாயே! இந்தக் குணங்களை உடையவனுக்குப் பிறந்த ஜாதகனின் வரலாற்றைக் கூறுகின்றோம். மெல்லிய உடலுடையவன்.

6. இருவித குணத்தா னுகும் எவரையும் நேசங் கொள்வன்
பொறுமையும் கொஞ்ச முள்ளான் புண்ணிய மனத்த னுகும்
கருவமும் அதிக மில்லான் கீர்த்திமான் சுகபு சிப்பான்
வரவர யோக முள்ளான் மறுமொழி அதிகஞ் சொல்லான்.

6. இருவிதக் குணமுடையவன். எல்லோரையும் நேசிப்பான். சிறிது பொறுமை யுள்ளவன். நல்ல மனமுடையவன். அதிகக் கருவமில்லாத வன். புகழுடையவன். நல்ல போஜன வசதி உடையவன். மேன்மேலும் யோக முள்ளவன். விடைகளைச் சுருங்க கூறுவான்.

7. தந்தைதாய் ஆஸ்தி தன்னைத் தானவன் விரும்பா னென்றும்
பந்தமாய் மனைவி பக்கல் பாலகன் வாசம் செய்வன்
வந்ததோர் மனைவி தன்னால் வருஞ்சௌக்ய மனேக மாகும்
சொந்தமாய்ப் பூமி சேர்ப்பன் சுகமது பெருகும் தானே.

7. தாய், தந்தையாது செல்வத்தை ஜாதகன் விரும்பமாட்டான் என்றும். கட்டுப்பட்டு மனைவி வர்க்கத்தாரோடு வாசம் செய்வான். மனை வியால் பல நன்மைகளைப் பெறுவான். சுயமாக நிலங்களைச் சேர்ப்பான். நலங்கள் வளரும்.

8. தனதான்ய விருத்தி யுள்ளான் சகலரு மெச்ச வாழ்வன்
துணைவர்கள் தமக்கு மேலாய்ச் சுந்தரன் வாழ்வா னுகும்
கனமுள புத்தி யுள்ளான் காலிகள் அதிகம் சேர்ப்பன்
வினைகளு மெண்ணு நெஞ்சன் வித்தையு மதிக மில்லான்.

8. தன தானியங்கள் பெருக்கமுள்ளவன். எல்லோரும் புகழ வாழ் வான். தன் சகோதரர்களைவிட மேன்மையாக வாழ்ந்திருப்பான். மேன் மையான அறிவைப் படைத்தவன். கால்நடைகள் விருத்தி செய்வான். நிலம் நினையா மனத்தினன். சிறிதே கல்வி கற்பான்.

9. ஊகையு முடைய னுகும் உத்தமர் நேசம் கொள்வன்
யோகமும் பின்னு முள்ளான் உறுதியான் துணைவர் [சொல்வேன்
பாகமா யாண்பால் ரெண்டு பத்தினி ஒருத்தி யாகும்
வேகமாய் நடக்க வல்லான் வித்தகி மேலுங் கேளே.

9. ஊகிக்கும் ஆற்றல் பெற்றவன். நல்லவர் நட்புச் கொள்வான். பிற் காலத்தில் யோகங்களை அடைவான். மனவுறுதி யுள்ளவன். உடன்பிறந் தவரைக் கூறுவோம். இரு சகோதரர்களும், சகோதரி ஒருத்தியும் இருப்

பர். விரைவாக நடக்கும் ஆற்றல் படைத்தவன். பார்வதியே! மேலும் கேளுங்கள்.

10. இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோ மிருபான்
[ரெண்டில்
கன்னியு முத்திர திக்கில் கனதன மாதுர் வம்சம்
அன்னவள் வருவா ளம்மா அவள்குண மதிர்ஷ்ட
[முள்ளாள்
நன்னய சிவந்த மேனி நாடெலாம் மெச்ச வாழ்வள்.

10. இவன் திருமண காலத்தைக் கூறுவோம். இருபத்திரண்டாம் வயதில், வட திசையில், தன் தாய் வர்க்கத்திலிருந்து, மனைவியைக் கொள்வான். அவள் நற்குணமும் நல்ல அதிர்ஷ்டமும் உடையவள். அழகிய சிவந்த நிறமுள்ளவள். நாடு முழுதும் பாராட்டும்படி வாழ்வாள்.

11. அன்னங்கள் போட வல்லாள் ஆளனுக் கினிய ளாவள்
பன்னுமா சார முள்ளாள் பாலர்கள் விருத்தி யுள்ளாள்
இன்னவள் தன்னல் யோகம் இசைக்கின்றே மிவனுக் கம்மா
சொன்னசொல் குன்றி டாது சுந்தரி மேலுங் கேளே.

11. பலருக்கும் உணவளிப்பதில் வல்லவள். கணவனுக்கு இனிய வள். நல்லொழுக்க முள்ளவள். புத்திர விருத்தி உடையவள். இவளால் கணவனுக்கு அதிர்ஷ்டம் ஏற்படும் என்று சொல்லுவோம். நாங்கள் கூறிய சொற்கள் தவறு. அழகுள்ளவளே! மேலுங் கேட்பாயாக.

12. சாதகன் தனக்குப் புத்திரர் சாற்றுவோ மாண்பால் ரெண்டு
மேதினில் கன்னி மூன்று விளங்கிடும் தீர்க்க மாகக்
கோதிலா விதன்மேல் தோன்றில் குறைவுறும் நட்ட மாகும்
மாதவர் போற்று கின்ற மங்கையே! மேலுங் கேளே.

12. ஜாதகனுக்குப் புத்திர பாக்கியத்தைச் சொல்லுவோம். ஆண் இரண்டு, பெண் மூன்று தீர்க்கமாக விளங்கும். மேலும் தோன்றுவன நஷ்டமாம். பெரிய தவத்தைச் செய்யும் முனிவர்கள் துதிக்கின்ற பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

13. மாதுரு குணத்தை யாங்க ளறைகின்றே மிருநி றத்தாள்
தீதிலாக் குணத்தா ளாகும் செப்புநன் னடக்கை யுள்ளாள்
வேதனே மேவா நெஞ்சம் வரனுக்கு நேய முள்ளாள்
மாதவன் பத்தி யுள்ளாள் மறுமொழி கூரு ளென்றேரும்.

13. ஜாதகன் தாயாருடைய குணத்தை நாங்கள் சொல்லுகின்றோம். கரிய நிறமுடையவள். குற்றமற்ற குணமுள்ளவள். நல்லொழுக்க முடையவள். துன்பமடையாத மனத்தினள். கணவனுக்குப் பிரியமானவள். திருமால்மீது பக்தி கொண்டவள். எதிர்வார்த்தை சொல்லாதவள் என்று கூறினோம்.

14. சுககர முடைய ளாகும் சொல்லது மிருது வாகும்
வசைகளு மில்லா ளாகும் வரும்பித்த தேக முள்ளாள்
இசைக்கின்றோம் துணைவர் தம்மை இன்பமாய் ஆண்பா [லொன்று
நசையுமே விருத்தி தானும் நங்கையும் ஒருத்தி யாமே.

14. சுகத்தைத் தரும் ரேகையைக் கையில் பெற்றவள். மென்மையான சொற்களைப் பேசுவாள். பழிகள் இல்லாதவள். பித்த சரீர முடையவள். இவளுக்குச் சகோதர பாவத்தைக் கூறுகின்றோம். சகோதரன் ஒருவனும், சகோதரி ஒருத்தியும் உளர்.

15. இன்னவன் முன்சென் மத்தை இயம்புவோம் சோழ [நாட்டில்
அன்னவன் சூத்திர னகி அவனுமே கிருஷி யுண்டாய்
மன்னவன் தனக்குப் புத்திரர் மனைவிக ளுள்ளோ னகி
நன்னயக் குடும்பம் பெற்று நாயகன் வாழ்ந்து பின்பு;

15. ஜாதகன் முற்பிறப்பைச் சொல்லுவோம். சோழவள நாட்டில், சூத்திர குலத்தவனாய்ப் பிறந்து, விவசாயம் செய்து, மனைவி, புத்திர பாக்கியங்கள் உண்டாகி, நல்ல குடும்பத்தைப் பெற்று, இவ்வுலகில்வாழ்ந்து, பிறகு;

16. மரணமே யாகிப் பின்பு வந்தவ னிவனே யம்மா
திறமையாய்த் தந்தை சென்மம் செப்புவோம் [1]தில்லை [நாட்டில்
பெருமையா யிக்கு லத்தில் பிறந்துமே துணைவ ருண்டாய்
ஒருமையாய் மனைவி மைந்தர் உத்தமன் வாழும் நாளில்;

16. மரணமடைந்து, மீண்டும் பிறந்துள்ளவன் இவன்தான் தாயே! இவன் தந்தையின் முற்பிறப்பைச் சொல்லுவோம். சிதம்பரத்தில் மேன்மையுடன் இக்குலத்தில் பிறந்து, உடன்பிறந்தார்கள், மனைவி மக்கள் ஆகியோர் ஏற்பட்டு, வாழ்ந்துகொண்டிருக்கும் காலத்தில்;

---

1. சிதம்பரம்

17. புண்ணிய மில்லா னுகிப் பூமியில் கீர்த்தி யின்றி
அன்னவன் மரண மாகி யவனிவ னென்றே மம்மா
இன்னவன் தனக்கு யோகம் இசையவே மாட்டோ மம்மா
கின்னென மொழியை யொக்கும் காரிகை புகன்றிட்
[டோர்மே.

17. நல்வினை யில்லாதவனும், உலகில் புகழின்றி, மரணமடைந்து, இப்பிறப்பாகப் பிறந்தவன் இவன் என்று கூறினேம். தாயே! இவனுக்கு யோகம் எதுவும் உண்டு என்று கூறமாட்டோம், தாயே! கரும்புபோல் இனிய சொற்களைப் பேசும் பார்வதியே! இவ்வாறு நாங்கள் சொன்னேம்.

18. அந்தவன் மரண காலம் சாற்றுவோம் முப்பான் மூன்றில்
எந்தையே அன்னை காலம் இயம்புவோம் அதன்மேல்
[மூன்றும்
மன்னவன் காலம் தன்னை யறைகின்றோம் அறுபா னூறில்
முந்திய தனுசு மாதம் மூலநாள் தன்னி லேதான்;

18. ஜாதகனுடைய தந்தையின் மரண காலத்தைச் சொல்லுவோம். ஜாதகனுடைய முப்பத்து மூன்றும் வயதில் தந்தை இறப்பான். ஜாதகன் முப்பத்தாறும் வயதில் தாயாருக்கு முடிவு நாள் என்று கூறுவோம். ஜாதகன் இறுதி நாளைச் சொல்லுகின்றோம். அறுபத்தாறும் வயதில், மார்கழி மாதம் மூல நட்சத்திரத்தில்,

19. மரணமே யாகிப் பின்பு வரும்சென்மம் பட்சி. கீழ்பால்
திறமையாய்ப் போரூ ரில்தான் செனிப்பனே வைசிய
[சேயாய்ப்
பெருமையாய்ச் செட்டுச் செய்து பிஞ்ஞகன் தமைப்பூ சித்துக்
குறைவிலா வாழ்வா னம்மா கூறுவோம் மேலுங் கேளே.

19. மரண மடைந்து, பின்பு அடுத்த பிறவியில், திருக்கழுக்குன்றத்துக்குக் கிழக்கில் உள்ள திருப்போரூரில், வைசிய குலத்தவனாகப் பிறப்பான். மேன்மையுடன் வியாபாரங்கள் செய்து, சிவபெருமானைப் பூசித்து, குறையில்லாமல் வாழ்ந்திருப்பான். சொல்லுகின்றோம்; மேலுங் கேட்பாயாக.

20. இன்னவன் யோகச் செய்கை இசைக்கின்றோம் செனனம்
[தொட்டு
மன்னவ னிருபா னுண்டுள் வரும்பலன் குறைச்ச லாகும்
அன்னமே செலவ நேகம் அன்னங்கள் குறைவ தாகும்
முன்னமே யோக மில்லான் மொழிகின்றோ மிவனுக் கம்மா.

20. இவனுடைய பிறப்பு முதல் உள்ள பலன்களைக் கூறுகின்றோம். இருபது வயதுக்குள் ஜாதகனுக்கு ஏற்படும் பலன்கள் மிகக் குறைவானவை. செலவு மிகுதி. போஜன சௌகரியங்கள் குறையும். அதிர்ஷ்டமில்லாமல் இருப்பான். இங்ஙனம் இவனுக்குப் பலன்களை நாங்கள் கூறுகின்றோம். தாயே !

21. இதற்குமேல் முப்பா ணுண்டில் இவன்பலம் சமமாய் நிற்கும்
பெருமையும் உடைய ணுவன் பூமியும் கொஞ்சம் சேர்ப்பன்
வரவர யோகம் வாய்க்கும் மாமன்த ணுஸ்தி சேரும்
திருவுமே வாச மாகும் சென்றிடம் பெருமை யுண்டாம்.

21. இதற்குமேல் முப்பது வயதுவரை இவனுக்குப் பலன்கள், சுக துக்கங்கள் இரண்டிலும் சமமாக இருக்கும். மேன்மையுடையவ ணுவான். நிலபுலன்கள் சிறிது சேர்ப்பான். நாளடைவில் அதிர்ஷ்டம் உண்டாகும். மாமனின் சொத்துக்கள் சேரும். இலட்சுமீ கடாட்சம் ஏற்படும். செல்லுமிடங்களில் பெருமை ஏற்படும்.

22. பாக்கிய விருத்தி யுண்டாம் பணிதிகள் சேர்ப்பா ணுகும்
யோக்கிய ணுகி வாழ்வன் உத்தமர் நேச மாகும்
வாக்குகள் மேன்மை யுண்டு மனத்துன்பம் விடுதல்
[செய்யும்
நீங்கின பூமி சேரும் நிகழ்த்துவோம் அதற்கு மேலே.

22. பல நன்மைகளும் பெருகும். ஆபரணங்கள் சேர்ப்பான். நற்குணமுள்ளவனுக வாழ்வான். நல்லோர் நட்பு ஏற்படும். இவன் சொல்லுக்கு மதிப்புண்டு. மனத்தில் துன்பம் நீங்கும். கைவிட்டுப்போன நிலங்கள் சேரும். இவற்றிற்கு மேல் சொல்லுவோம்.

23. அதுமுதல் மரண மட்டும் அநேகபூ மிகளும் சேரும்
பதியது புதிதாய்ச் செய்வன் பாலர்கள் விருத்தி யுண்டாம்
நிதியது விசேடம் சேர்ப்பன் நீள்நிலம் கீர்த்தி கொள்வன்
நதிபல தீர்த்தம் தோய்வன் நாடெலாம் வசியம்
[கொள்வன்.

23. முப்பது வயதுக்குமேல் மரணம் வரையில் மிகுதியாக நிலங்கள் சேரும். புதிய வீடு கட்டுவான். புதல்வர் விருத்தியுண்டு. செல்வம் விசேஷமாகச் சேர்ப்பான். உலகில் புகழ் ஏற்பான். பல புண்ணிய நதிகளில் நீராடுவான். நாட்டிலுள்ளோர் அனைவரையும் தன் வசப்படுத்துவான்.

24. பெருமையு மதிக முள்ளான் புண்ணியம் செய்வா னுகும்
திருமகள் வாச முள்ளான் செட்டுகள் செய்வா னுகும்
வரவரச் செல்வ மோங்கும் வண்டிவா கனமு முள்ளான்
குறைவிலா வாழ்வா னம்மா கூறுவோம் மேலுங் கேளே.

24. பெருமை மிகுதியாக உடையவன். கல்வீனைகள் செய்வான். இலட்சுமீ கடாட்சம் பெற்றவன். வியாபாரம் செய்வான். வரவரப் பொருள் மிகும். வண்டி முதலான வாகன வசதிகள் உள்ளவன். நிறைந்த மனமுடன் வாழ்வான். மேலுஞ் சொல்லுவோம், கேட்பாயாக.


25. பாலரால் யோக முள்ளான் பார்மன்னர் நேசம் கொள்வான்
ஏலவே ஏழை கட்கு இவன்பொரு ளுதவி செய்வான்
கோலமாய்த் தந்தைக் கேதான் கூறுவோம் பின்சென்
[மத்தை
ஞாலமேல் பரங்குன் றத்தில் நாட்டுவோ மிக்கு லத்தில்.

25. புத்திரரால் அதிர்ஷ்ட மடைவான். அரசர்கள் நட்பைப் பெறுவான். தரித்திரர்களுக்குப் பொருளுதவி செய்வான். இவன் தந்தைக்கு மறுபிறப்பைக் கூறுவோம். திருப்பரங்குன்றத்தில் இக்குலத்திலேயே பிறப்பான் என்று சொல்லுவோம்.

ஜாதகம் 24

1. மதிவிடை நண்டு கேது மந்திரி கன்னி யாகி
அதிகாரி ரவிசேய் சுங்கன் அடைவுடன் தேளில் தங்க
பதிபுதன் வில்லு ராகு பாங்குள சுறுவ தாக
விதிசென்ம மிடப மாக விளம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் ரிஷபத்திலும், கடகத்தில் கேதுவும், குரு கன்னியிலும், சனி சூரியன் செவ்வாய் சுக்கிரன் ஆகியோர் சேர்ந்து விருச்சிகத்திலும், புதன் தனுசிலும், இராகு மகரத்திலும் தங்கி, லக்கினம் விருஷபமாகவுமுள்ள இந்த ஜாதகப் பலனைச் சொல்லுவீர்.



2. பிறந்தது பெண்பால் சென்மம் பேசுவோம் மிலேச்சர் சாதி
சிறந்திடு கீழ்மேல் வீதி சித்திரம் உத்திர நோக்கம்
உறைந்திடும் கிழக்கில் சந்து உயர்தந்தி [1]கும்ப மாகும்
நிரந்தர மாரி கிழ்பால் நீள்துர்க்கை [2]வில்லு தானே.

2. இது பெண்பால் ஜாதகம். இவள் மிலேச்ச சாதியினள். இவளுடைய வீடு கிழக்கு மேற்ான வீதியில், வடக்கு நோக்கிய வாசலையுடையது. வீட்டுக்குக் கிழக்கில் சந்து ஒன்றுண்டு. விநாயகர் கோயில் வட திசையிலுள்ளது. மாரியம்மன் கிழக்கில் நிலையாய் வாசம் செய்வாள். துர்க்கையம்மன் வடமேற்கில் கோயில் கொண்டுள்ளாள்.

3. சிற்றூரில் பிறந்த பெண்பால் சிறந்திடு மாதர் தந்தை
அற்றதோர் துணைவர் யோகம் அன்புள முன்பின் சென்மம்
தேன்மொழி மாமன் யோகம் செப்புவோம் இந்நூல்
[தன்னில்
வானவர் துதிக்கா நின்ற மங்கையே மேலுங் கேளே.

1. வடக்கு
2. வடமேற்கு

3. இவ்வாறான சிறிய ஊரில் தோன்றிய ஜாதகியின் யோகங்கள், இவளுடைய தாய் தந்தையர், உடன்பிறந்தார் ஆகியோரது யோகங்கள், இவர்களது முற்பிறப்பு, மறுபிறப்பு முதலான அனைத்தையும் இந்த நூலில் சொல்லுவோம். தேவர்கள் துதிக்கின்ற பார்வதி தேவியே! கேட்பாயாக.

4. தந்தையின் துணைவர் ஆண்பால் சாற்றுவோம் இருவ
[ராகும்
வந்திடும் கன்னி மூன்று வளமுடன் தீர்க்க மாகும்
எந்தையே ஐந்து சீர்ணம் இயம்புவோம் தந்தை சேதி
சந்தத மிருநி றத்தான் தாட்சிண்யன் கனவா னுமே.

4. ஜாதகியின் தந்தைக்குச் சகோதரர் இருவர். சகோதரி ஒருத்தி. இவர்கள் தீர்க்கமாக இருப்பர். மேலும் ஐவர் தோன்றி அழிவர். இனி, தந்தையின் செய்தியைச் சொல்லுவோம். கரிய நிறமுள்ளவன். தாட்சிணிய முடையவன். மதிப்புள்ளவன்.

5. அடக்கமு முடைய னுவன் அநேகரு மெச்ச வாழ்வன்
துடுக்கென வார்த்தை கூறுன் சோம்பலும் கொஞ்ச
[முள்ளான்
மடக்கொடி மூன்று முள்ளான் வார்த்தைகள் சரியில்
[லாதான்
படபட வார்த்தை யுள்ளான் பாரினில் ஈகை கொஞ்சம்.

5 அடக்க முள்ளவன். பலரும் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். துடுக்கான சொற்களைப் பேசமாட்டான். சிறிது சோம்பலு முள்ளவன். மூன்று புதல்வியரை யுடையவன். பொருத்தமாகப் பேசுதல் செய்யான். விரைவாகப் பேசுபவன். தருமம் செய்யுங் குணமும் சிறிதுடையவன்.

6. பூமியும் விருத்தி செய்வன் புண்ணிய மனத்த னுகும்
தீமையும் எண்ணு நெஞ்சன் தீரமும் உடைய னுவன்
நேமியோர்க் குதவி செய்வன் நீள்நில அதிக முள்ளான்
சாமிமேல் பக்தி யுள்ளான் சக்தியால் பொருளும் சேதம்.

6. நிலபுலன்களை விருத்தி செய்வான். தூய்மையான மனமுடையவன். எவருக்கும் தீங்கு நினையாத சித்தமுள்ளவன். தைரிய முடையவன். உலகிலுள்ளோருக்கு உதவிகள் செய்வான். விளைநிலங்களை மிகுதியாக வுடையவன். கடவுள் பக்தி யுள்ளவன். மனைவியினால் பொருளுக்கு நஷ்டம் ஏற்படும்.

7. செட்டுடன் கிருஷி செய்வன் சனங்களால் உதவி கொள்வன்
திட்டமாய்ப் பெரியோர் நேசம் சயம்செய்வன் எடுத்த [வேலை
கட்டமும் இல்லா னுகும் காலைகள் இல்லா னுகும்
இட்டமா யெவர்க்கும் நேயன் இனத்திலல் பொருளும் [சேதம்.

7. வியாபாரமும் விவசாயமுஞ் செய்வான். உறவினர்களால் உபகாரம் அடைவான். நிச்சயமாய்ப் பெரியோர் கூட்டுறவு உண்டு. தொடங்கிய காரியத்தில் வெற்றி பெறுவான். துன்பம் இல்லாதவன். ஆண்மகள் இல்லாதவன். யாவருக்கும் விருப்பமானவன். இனத்தவர்களால் செல்வத்துக்கு அழிவு நேரும்.

8. இப்படி இருக்கும் தந்தை இவனுக்கு உற்ற சேயும்
ஒப்புடன் பலன்கள் யாவும் உரைக்கின்றேம் யூக சாலி
செப்புவோம் கருணி றத்தாள் திருமகள் ஒப்ப தாகும்
தப்பித மில்லா ளாகும் சார்ந்திடு கோபம் கொஞ்சம்.

8. இங்ஙனம் உள்ள தந்தைக்குப் பிறந்த இந்த ஜாதகிக்கு உரிய பலன்கள் அனைத்தையும் கூறுகின்றேம். ஊகித்தறியும் சக்தி பெற்றவள். கரிய நிறமுடையவள். இலட்சுமி தேவி போன்ற எழிலுள்ளவள். குற்றமில்லாதவள். சிறிது கோபம் உண்டு.

9. சந்ததம் பித்த தேகி தானவள் பொறுமை சாலி
சிந்தையில் கபடு கொஞ்சம் சீலமு முடைய ளாகும்
வந்தவர்க் கன்ன மீவள் வரனுக்கு நேய முள்ளாள்
தன்தன முடைய தாகும் தாட்சிண்ய முடைய ளாமே.

9. பித்த தேக முடையவள். பொறுமை யுள்ளவள். மனத்தில் சிறிது வஞ்சனையுண்டு. ஒழுக்கமு முடையவள். வீடு தேடி வந்தவர்களுக்கு உணவு அளிப்பாள். கணவனுக்கு விருப்பமானவள். தன் பிதிரார்ஜித சொத்துடையவள். மனவிரக்க முள்ளவள்.

10. நித்தியம் நெய்பா லிட்டம் நீங்காத செல்வ முள்ளாள்
புத்திமான் பெருமை யுள்ளாள் பூஷண மதிக முள்ளாள்
எத்திசை கீர்த்தி கொள்வள் ஏழையை ஆத ரிப்பள்
சத்தியம் தப்பா ளாகும் சாமிமேல் பக்தி யுள்ளாள்.

10. தினந்தோறும் நெய், பால் இவற்றில் ஆசை யுள்ளவள். தன்னை விட்டு என்றும் விலகாத செல்வத்தை யுடையவள். புத்திசாலி. அடக்கமுள்ளவள். மிகுதியான ஆபரணங்களுடையவள். எந்தத் திசையிலும்

புகழ் பரவியவள். தரித்திரர்களைக் காப்பாற்றுவாள். உண்மை நெறி தவறாதவள். கடவுள் பக்தி யுடையவள்.

11. இவளுடைத் துணைவர் தம்மை இயம்புவோம் பெண்பால் [ஒன்று
அவனியி லாண்பா லில்லை அழகுடன் செனித்தாள் பின்னும்
நவனியில் சேத மாகும நாட்டுவோ முன்னது தீர்க்கம்
சிவனிடப் பாகத் தாளே செல்வியே மேலுங் கேளே.

11. இவளுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். பெண் ஒருத்தி. ஆண்மகன் இல்லை. மிக்க அழகுடன் இவளுக்குப் பின் பிறந்த பெண் ஒருத்தி இறப்பாள். முன்னுள் கூறிய சகோதரி தீர்க்க ஆயுளுடன் இருப்பாள். சிவபெருமானின் இடப்பாகத்தில் வாழும் அம்பிகையே! மேலுங் கேட்பாயாக.

12. இன்னவள் மணத்தின் காலம் இயம்புவோம் நவம [தாண்டுள்
மன்னவன் தட்சி ணத்தில் வருகுவா னென்று சொன்னேம்
இன்னவள் போன பின்பு இலகிடும் யோகம் தாமும்
சொன்னசொல் குன்றி டாது சுந்தரி மேலுங் கேளே.

12. இந்த ஜாதகியின் திருமண காலத்தைச் சொல்லுவோம். இவளது ஒன்பதாம் வயதில் இவளூருக்குத் தென்திசையிலுள்ள ஒரு கிராமத்திலிருந்து கணவன் வருவான் என்று கூறினேம். இவள் தன் கணவன் இல்லத்துக்குச் சென்றபின்பு, யோகங்கள் ஏற்படும். நாங்கள் கூறிய சொற்கள் தவறுபடா. பார்வதியே! மேலுங் கேள்.

13. சாதகி தனக்குப் புத்ரர் சாற்றுவோ மாண்பா லொன்று
மேதினில் பெண்பால் ரெண்டு விருத்தியாம் தீர்க்க மாகும்
போதவே இதற்கு மேலே யிலகாது மற்ற தெல்லாம்
நாதனுர் மனத்தில் வாழும் நங்கையே மேலுங் கேளே.

13, ஜாதகிக்குப் புத்திர பாவத்தைச் சொல்லுவோம். ஆண் ஒன்றும், பெண்கள் இருவரும் தீர்க்கம். இவர்களுக்குப் பின்பு தோன்றுபவை நிலைத்திரா. சிவபெருமான் மனத்தில் வாசஞ் செய்யும் அம்பிகையே! மேலுங் கேட்பாயாக.

14. பால்பாக்கிய முடைய ளாவள் பங்கய முகத்தா ளாகும்
கோலமாய்த் தரளத் தத்தம் குணமுடன் இவளுக் குண்டு
சீலமா சார முள்ளாள் சிந்தையில் கபடு கொஞ்சம்
பாலர்கள் விருப்ப முள்ளாள் பார்வதி மேலுங் கேளே.

14. பால், பசு பாக்கியம் உடையவள். தாமரை மலர்போல் அழகிய முக முள்ளவள். நல்லொழுக்க முடையவள். மனத்தில் வஞ்சனையும் சிறிதுண்டு. முத்துக்கள் போல் வெண்மையான பற்கள் இவளுக்கு உண்டு. குழந்தைகளிடம் பிரியமானவள். பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

15. இன்னவள் தந்தை சென்மம் இசைக்கின்றேம் பாண்டி
[நாட்டில்
இன்னவன் வன்னிய னுகு இயல்மைந்தர் மனியா
[ளுண்டாய்த்
தன்னிலே தனங்கள் உண்டாய்த் தானவன் வாழுங் காலம்
பன்னியே வந்த வுழைப் பகருவோம் கேளு மாதே.

15. ஜாதகியின் தந்தையினுடைய முற்பிறப்பைச் சொல்லுகின்றேம். பாண்டிய நாட்டில், வன்னியர் மரபில் பிறந்து, மனைவி மக்கள் எற்பட்டு, தன் முயற்சியால் செல்வம் சேர்த்து, இவன் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில், உண்டாகிய தோஷத்தைச் சொல்லுவோம். கேளுங்கள், தாயே!

16. பிச்சைகள் எடுத்து நின்ற பெண்பாலும் இவன்பால்
[சென்று
இச்சேய்க் குழந்தைக் கன்னம் ஈகுவாய் என்று கேட்க
மிச்சமா யில்லை யென்று மெல்லியைக் கைப்பி டித்து
இலச்சைகள் மிகவே செய்து நலமுடன் போகம் துய்த்தான்.

16. பிச்சையெடுத்து வயிறு வளர்க்கின்ற பெண்ணொருத்தி இவனிடம் சென்று, எனது சிறிய இக்குழந்தைக்கு உணவு சிறிது அளிப்பாயாக என்று வேண்டினாள். உனக்குக் கொடுக்கும்படி ஒன்றும் இல்லை என்று கூறி, இவன் அவள் கைப்பிடித்து, சரசங்கள் பேசி, அவளிடம் இன்ப மனுபவித்தான்.

17. பின்பவள் சாபம் சொல்வாள் பூமியில் மறு சென்ம த்தில்
இன்பமாய் மனையாள் மூன்று இசைந்துமே புத்திர னின்றித்
தன்மையாய் மிலேச்ச சாதி உதித்துமே நீயும் வாழ்வாய்
அம்புவி தன்னி லேதான் அவமானம் பெண்ணால் நேரும்.

17. இவனால் கற்பழிக்கப்பட்ட அந்தப் பெண், இவனுக்குப் பின்வருமாறு சாபமிட்டாள். மறு பிறவியில் மிலேச்ச சாதியில் பிறப்பாய். உனக்கு மூன்று மனைவியர் எற்பட்டு, புத்திரன் இல்லாமல், உலகில் பெண்ணினால் அவமானமும் உண்டாகும்.

18. மைந்தனும் மரண மாகி வந்தவ ளிவளின் தந்தை
பந்தமாய்ப் பிற்சென் மத்தைப் பகருவோம் காஞ்சி தன்னில்
சந்ததம் வைசிய னுகித் தனம்பூமி அதிக முண்டாம்
இன்பமாய் முனிவர் சொல்ல ஈச்வரி கேட்க லுற்றாள்.

18. பின்பு மரணமடைந்து, இப்பிறப்பில் பிறந்தவன் இவளுடைய தந்தை. இவனது மறுபிறப்பைக் கூறுவோம். காஞ்சிபுரத்தில், வைசிய குலத்தவனாய், செல்வம், நிலபுலம் ஏற்பட்டு வாழ்வான் என்று முனிவர் கூற, பார்வதி கேட்கின்றாள்.

19, தந்தைக்குப் புத்திர ரில்லை சாற்றிய முனிவ ரேகேள்
வந்திடு கருமம் தானும் வகையுடன் செய்வார் யாவர்
எந்தையும் சொல்ல லுற்றார் இனியொரு மாது வுக்கு
மைந்தனும் பிறக்கு மென்று மாதவர் உரைத் திட்டாரே.

19. இவளுடைய தந்தைக்கு ஆண் சந்ததி யில்லை என்று கூறிய முனிவரே! கேளுங்கள். அவனுக்கு உரிமைக் கடன்கள் வகையாகச் செய்பவர் யாவர்? முனிவர் கூறுகின்றார். இன்னொரு மனைவிக்குப் புத்திரன் பிறப்பான் என்றார்.

20. எந்ததோர் காலந் தன்னில் இனியொரு மாது வும்தான்
சொந்தமாய் வருவாள் கேளும் சொல்லுவாய் சாத கிக்குப்
பந்தமாய் ஆண்டு ஒன்றில் பாங்குடன் வருவா ளென்றோம்
சிந்தையில் இருக்கும் தாயே தேவியே கேட்டி டாயே.

20. எந்தக் காலத்தில் இன்னொரு மனைவி வாய்ப்பாள்? இந்த ஜாதகி பிறந்து, ஒரு வருஷத்தில் தந்தைக்கு மறு மனைவி வருவாள் என்று கூறினோம். எங்கள் மனத்தில் நித்திய வாசஞ்செய்யும் அம்பிகையே! பார்வதி தேவியே! கேட்பாயாக.

21. மாதுரு துணைவர் தம்மை வகுக்கின்றோம் ஆண்பா லொன்று
மேதினில் பெண்பா லொன்று விருத்தியாம் தீர்க்க மாதம்
ஏதவே அன்னை சேதி இயம்புவோம் கருநி றத்தாள்
போதவே உயர மில்லாள் புகலுவோம் மேலுங் கேளே.

21. ஜாதகி தாயாருடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஆண் மகன் ஒருவன், பெண்ணொருத்தி தீர்க்கமாக விளங்குவர். தாயின் செய்தியைச் சொல்லுவோம். கரிய நிற முடையவள். குள்ளமானவள். மேலுங் கூறுவோம்; கேட்பாயாக.

22. கோபமும் கொஞ்ச முள்ளாள் குணமிலாள் பொருமை
[யுள்ளாள்
தீமையாஞ் சொல்லு முள்ளாள் சனங்கள்மேல்
[வெறுப்பு முள்ளாள்
ஈனமாம் வார்த்தை சொல்வாள் இட்டமும் தாய்வீ
[டுள்ளாள்
தேன்மொழி சேதி யெல்லாம் செப்புவோம் பிற்பா கத்தில்.

22. கோபமும் சிறிதுடையவள். நற்குண மில்லாதவள். பொருமை யுடையவள். கெடுதியான வாக்குள்ளவள். உறவினர்மீது வெறுப்புடை யவள். கீழ்த்தன்மையான சொற்களைப் பேசுவாள். தனது தாய்வீட்டா ரின்மீது ஆசையுள்ளவள். இவளுடைய மற்றச் செய்திக ளனைத்தையும் இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம்.

23. சாதகி முன்சென் மத்தைச் சாற்றுவோம் சிறுபாக் கத்தில்
மேதினில் பிரம்ம சேயாய் வித்தகி உதித்து மேலும்
கோதிலாப் பொருள னேகம் கொண்டுமே வாழும் நாளில்
தீதிலா வந்த வூழைச் செப்புவோம் மேலுங் கேளே.

23. ஜாதகியின் முற்பிறப்பைச் சொல்லுவோம். சிறுபாக்கம் என்ற ஊரில், அந்தணர் குலத்தவளாய்ப் பிறந்து, குற்றமற்ற மிக்க செல்வத்தை யடைந்து வாழுகின்ற காலத்தில் ஏற்பட்ட தோஷத்தைச் சொல்லுவோம். மேலுங் கேட்பாயாக.

24. மறைகளே யுணர வில்லை மங்கையும் நிந்தை யுண்டாய்
இனத்துக்கு உதவா ளாகி யாவரும் நிந்தை கூறி
மனத்துக்கு வருத்தம் வந்து மங்கைதா மரண மாகி
அனத்திய ளிவளே யென்று அருளினர் முனிவர் தாமே.

24. வேதப் பொருள்களே அறியவில்லை. பழி எற்பட்டு, தன் இனத் தவருக்கு உதவிசெய்யாமல், யாவராலும் பழிக்கப்பட்டு, அதனால் மனத்தில் துயரம் உண்டாகி, துர்மரணம் அடைந்தவள் இவளேயாம் என்று முனிவர்கள் கூறினர்.

25. இன்னமும் சிலவே சங்கை இசைக்கின்றேம் பின்பா கத்தில்
அன்னவள் சேதி யாவும் அறைகின்றேம் விபர மாக
முன்னமே சிலவே சங்கை முழுமையும் அம்மன் கேட்டுத்
தன்னிலே கணவ னுக்குச் சாற்றுவாய் சேதி என்ன.

25. இவளுக்கு ஏற்பட்ட இன்னுஞ் சில தோஷங்களையும், மற்றச் செய்திகளையும் இரண்டாம் பாகத்தில் விஸ்தாரமாகச் சொல்லுகின்றோம். வேறு சில தோஷங்களைப் பற்றிப் பார்வதியம்மன் முனிவர்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, ஜாதகியின் கணவனைப் பற்றிய செய்திகளைச் கூறுங்கள் முனிவரே! என, முனிவர் சொல்லுவார்.


26. உதித்தசேய் சென்னனந் தொட்டு ஓராண்டு முடிவு தானும்
பதியது அலைச் சலாகும் பாழதாம் பொருளும் சேதம்
விதியினல் மனையா ளாலே மேலதாம் வழக்கு நேரும்
சதியினல் வேற தாகும் சல்லிய பாதை யுண்டு.

26. பல இடங்களுக்குச் சென்றுவர வேண்டிய அலைச்சல் ஏற்படும். பொருள் நஷ்ட முண்டாகும். மனைவியினல் பெரிய வழக்குகள் நேரும். பிறர் சூழ்ச்சியினல் குடும்பம் வேறுகும். கடன் தொந்தரவு உண்டு.

ஜாதகம் 25

1. மதிதேளில் குருவு மீனம் மந்தனு மேட மாக
நிதிபுகர் புந்தி பானு நீள்கட கத்தில் தங்க
விதிகுசன் அரியி லேற பாம்புவில் வீணை கேது
துதிசேன்மம் புல்ல மாகத் தோன்றினுல் பலத்தைச்
[சொல்வீர்.

1. சந்திரன் விருச்சிகத்திலும், குரு மீனத்திலும், சனி மேஷத்திலும், சுக்கிரன் புதன் சூரியன் ஆகியோர் கடகத்திலும், செவ்வாய் சிம்மத்திலும், ராகு தனுசிலும், கேது மிதுனத்திலு மிருக்க, விருஷப இலக்கினத்தில் தோன்றிய இந்த ஜாதகனின் பலத்தைச் சொல்லுவீர்.



2. செனித்ததேய் ஆணும் சென்மம் செப்புவோம் கீழ்மேல் வீதி
குனித்திடும் வடக்குப் பார்வை குணமிலா மர்யோன்
[மேற்கில்
தனித்திடும் யானை கீழ்பால் காளியு மீனம் வாசம்
தனித்திடும் அரனின் கோட்டம் தான்வட மேல்பால்
[தங்கும்.

2. செனித்தவர் ஆண் பிறப்பு. கிழக்கு மேற்கு வீதியில், வடக்குப் பார்வையுள்ள வீடு. சிதைந்த விஷ்ணுவின் ஆலயம் மேற்கிலும், கிழக்கில் விநாயகர் கோவிலும், வடகிழக்கில் காளி கோவிலும், வடமேற்கில் பரமசிவன் கோவிலும் உள்ளன.

3. அதன்மேற்கில் சோலை குண்டம் அணுகிடும் சிற்றூர்
[தன்னில்
பதியது கெட்டி யாகும் பாலகன் இல்லம் தானும்
மதிநிகர் தந்தை யோகம் மாதுரு மாமன் யோகம்
விதியினுல் முன்பின் சென்மம் விளம்புவோ மிந்நூல்
[தன்னில்,

3. அதற்கு மேற்கில் சோலையும், குளமும் உள்ளன. இந்தச் சிறிய ஊரில், ஜாதகன் உறுதியான வீட்டை உடையவன். இவனுடைய தந்தை, தாய், மாமன் இவர்களது யோகம், முற்பிறப்பு, மறுபிறப்பு இவைகளைப் பற்றி இந்நூலில் சொல்லுவோம்.

4. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் தைரி
[யத்தான்
சிந்தையில் யூக வானும் தியாகியாம் வெகுபேர்க் கன்பன்
வந்தபேர்க் கன்ன மீவன் வண்டிவா கனமு முள்ளான்
தந்தன முடைய னவன் தாட்சிணியன் கனவா னாமே.

4. தந்தையின் குணத்தைச் சொல்லுவோம். தைரியசாலி, யூகை யுள்ளவன். தியாகி. பலபேருக் கன்பன். வீடுதேடி வந்தவர்களுக்கு அன்ன மளிப்பான். வண்டி வாகனாதிகள் உள்ளவன். சுயார்ச்சிதமான பொருளுடையவன். தாட்சிணிய முடையவன். பெருமை யுடையவன்.

5. அண்டின பேரைக் காப்பன் ஆள்காரர் அதிக முள்ளான்
குண்டைகோ விருத்தி யுள்ளான் கூவலும் சோலை
[வைப்பான்
எண்டிசைக் கீர்த்தி யுள்ளான் எடுத்தகா ரியம்செ யிப்பன்
தண்டமிழ்க் கல்வி கொஞ்சம் சற்சன ருறவு கொள்வன்.

5. நம்பி வந்தோரைக் காப்பான். வேலையாட்களை யுடையவன். பசு, காளைகள் அதிக முடையவன். தோட்டம், நிலபு எற்படுத்துவான். எட்டுத் திசைகளிலும் கீர்த்தி யுடையவன். எடுத்த காரியங்களை முடிக்க வல்லவன். நற்றமிழைக் கொஞ்சம் கற்பான். நல்லோ ருறவுடையவன்.

6. ஏழைமேல் பிரிய னவன் யாரையும் வசியம் செய்வன்
ஆழியில் செட்டுச் செய்வன் அதிகார மில்லா னாகும்
தோழியர் மோக மில்லான் சோம்பிடான் காரி யத்தில்
தீயரை செயிக்க வல்லன் செப்புவோம் மேலுங் கேளே.

6. ஏழைகளிடத்தில் அன்புடையவன். எல்லோரையும் வசிகரிப் பான். கடல்தாண்டி வியாபாரம் செய்வன். அதிகாரமில்லாதவன். மாதர் மேல் விருப்ப மில்லாதவன். காரியம் செய்வதில் சோம்பலில்லாதவன். விரோதிகளைச் செயிப்பான். இன்னமும் சொல்லுவோம், கேள்! பார்வதியே!

7. தானங்கள் தருமம் செய்வன் தைரிய மனத்த னாகும்
மானமாய்ச் சிவிப் பானும் மைந்தர்மேல் பக்தி யுள்ளான்
ஈனமாய்க் குணங்க ளில்லான் எதிரியைப் போது முள்ளான்
தேனென மொழியு முள்ளான் சொல்பிச காதா னாமே.

7. தான தருமங்கள் செய்வன். தைரியசாலி. கண்ணியமான வாழ்க்கை நடத்துவான். குழந்தைகள்மேல் அன்புடையவன். தாழ்ந்த குணங்களில்லாதவன். விரோதிகள் உடையவன். இனிய வார்த்தைகள் பேசுவான். சொல் தவறுதவன்.

8. பூமியும் அதிகம் சேர்ப்பன் புண்ணிய மனத்த னுகும்
நேமியோர்க் குதவி செய்வன் நிதானமாய் வார்த்தை
[கூர்வன்
சேமமாம் குடும்ப முள்ளான் திருமகள் விலாச முள்ளான்
மாமிய ரிரண்டு முள்ளா னறைகின்றே மொடிசல் தேகி.

8. விளை நிலங்களை அதிகம் சேர்ப்பான். புண்ணியமான மனத்தை உடையவன். உலகத்தவர்களுக்கு உதவி செய்வன். மெதுவான வாக்குடையவன். நலமுள்ள குடும்பத்தை உடையவன். இலட்சுமி கடாட்ச முள்ளவன். இரு மாமியர் உடையவன். மெலிந்த தேகமுள்ளவன்.

9. தந்தநோ யுடைய னுவன் சதாவலைச் சலுமே.யுண்டு
சிந்தையில் கலக்க முள்ளான் சிவனடி யார்க்கு நண்பன்
கந்தன்மேல் பக்தி யுள்ளான் கார்நிற முடைய னுவன்
பந்தமாம் துணைவர் தம்மைப் பகருவோம் மேலும் கேளே.

9. பல் நோயுடையவன். மிகுதியான திரிச்ச லுள்ளவன். மனக் கலக்க முடையவன். பரமசிவனுடைய பக்தர்களைப் பூசிப்பான். முருகன் மீது பக்தி உடையவன். மேகம் போல் கரிய நிறமுடையவன். அவனுடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுவோம். மேலுங் கேட்பாயாக.

10. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றவே யாண்பா லொன்று
முந்தின துணைவ ரென்று மொழிகுவோம் அதுவும் நீதாம்
இன்னவன் உதிக்கா முன்னம் ஏகுவன் தந்தை மூத்தோன்
கன்னியும் நட்ட மென்று கழறினேம் கேளு மம்மா.

10. தந்தைக்குச் சகோதரன் ஒருவனுண்டு. அவனும் இவன் தகப்பனுக்கு மூத்தோன். ஆனல் அவன் மரிப்பான். இந்த ஜாதகன் பிறப்பதற்கு முன்பு பெரிய தகப்பன் இறப்பான். ஒரு சகோதரி பிறந்து மரிப்பாள் என்று சொன்னேம். கேளுந் தாயே!

11. தந்தைக்குத் தர்மம் ரெண்டில் தரித்திடு ரிளையா வின்ற
மைந்தனும் சாத கன்தான் வறைகின்றேம் பலன்கள்
[கேளாய்
பந்தமா யிருநி றத்தான் பருத்ததோர் தேக முள்ளான்
கந்தன்மேல் பக்தி மானும் கல்வியு மதிக முள்ளான்.

11. தந்தையின் மனைவியர் இருவரில் இளையவளுக்குப் பிறந்தவன் இந்த ஜாதகன். இவன் கரிய நிறமுடையவன். பெருத்த சரீர முள்ளவன். சுப்பிரமணியக் கடவுளின் மேல் பக்தி கொண்டவன். நல்ல கல்வியறி வுடையவன்.

12. கிராமாதி காரம் செய்வன் கீர்த்திமான் பலபேர்க் கன்பன்
துராசையு மில்லா னுகும் சுகமுளான் பெருமை யுள்ளான்
தராதர மறிய வல்லன் சன்மார்க்கன் மர்ம மில்லான்
மூராரியின் தங்கை யேகேள் மொழிகுவோம் கேளு மம்மா.

12. கிராமாதிகார முடையவன். புகழுடையவன். பலபேர்களுக்குப் பிரியனவன். கெட்ட ஆசை யில்லாதவன். சுகமுடையவன். பெருமை யுள்ளவன். நன்மை தீமைகளை அறியும் சக்தி யுடையவன். நல்வழியில் நடப்பவன். இரகசிய மில்லாதவன். கிருஷ்ண பரமாத்மாவின் சோதரியே! சொல்லுவோம், கேளுங்கள்.

13. பூமியும் விருத்தி செய்வன் புத்திர ரதிக மில்லான்
நேமியோர் மெச்ச வாழ்வன் நிதம்சுகி புசிப்ப னுகும்
தீமையாம் பகைவர் தம்மைச் செயிப்பனும் தந்தி ரத்தில்
தாமத மன்ன ரிட்டன் சத்தியம் தப்பா னுமே.

13. வீடு நிலங்களை விருத்தி செய்வான். புத்திர பாக்கியம் குறை வுள்ளவன். பெரியோர்கள் புகழும்படி நடப்பான். தினந்தோறும் சுகமான உணவு உண்பவன். விரோதிகளை, தந்திரமாக வெல்வான். அரசருக்கு இஷ்டனவன். சத்தியம் தவறாமல் நடப்பவன்.

14. ஆள்கார ருடைய னவன் ஆவுகள் விருத்தி யுள்ளான்
கோள்களும் எண்ணைச் சித்தன் குறைவிலாப் பாக்ய வானும்
நாளுக்கு நாளாய் யோகம் நல்கிடு மிவனுக் கம்மா
வேல்விழி மாதர் தம்மை விரும்புநன் மனத்த னுமே.

14. வேலைக்காரர்க ளுடையவன். பசுக்கள் அதிக முள்ளவன். பிறர் மேல் குற்ற மெண்ணுதவன். அழிவில்லாத பாக்கிய முடையவன். இவ னுக்கு மேன் மேலும் யோகம் அதிகரிக்கும். பெண்கள்மீது மோகமுடைய வன். நல்ல மனமுள்ளவன்.

15. இன்னவன் செங்கை தன்னில் இலகிடும் கமல ரேகை
மன்னிய சுழியு முள்ளான் மதுகனப் பிரிய முள்ளான்
துன்னிய புளிப்பி லிச்சை சித்திர வீடு செய்வன்
இன்னவ னிரண்டு வீடு இயலாகக் கட்டு வானும்.

15. இவனுடைய கையில் கமல ரேகை யுடையவன். ஒரு சழியு முடையவன். தேன் பருக இச்சை யுள்ளவன். புளிப்பான பதார்த்தங்களில் ஆசை யுடையவன். அழகான வீடு அமைப்பான். இவன் இரு வீடுகள் கட்டுவான்.

16. இன்னவன் தூணைவர் தம்மை இசைக்கின்றேம் மூத்தோர் [காணேம்
தன்னிலே இளையோன் ஒன்று சாற்றினேம் தீர்க்க மாகப்
பின்னமா மிதன்மேல் தோன்றில் பலக்காது சகோத [ரங்கள்
அன்னையே தந்தை பூர்வம் அறைகின்றேம் கேளு மம்மா.

16. இவனுடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுவோம். மூத்தவரில்லை. இளையவன் ஒருவன் உண்டு. அவன் தீர்க்காயு ளுள்ளவன். மேலும் பிறந்தாலும் மரிப்பர். தந்தையின் முன் சென்மத்தைப் பற்றிச் சொல்லுவோம், கேளும்! தாயே.

17. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் தில்லை [தென்பால்
பந்தமாய்ச சூத்திர ருகிப் பாலர்கள் மனைவி யோடு
சந்ததம் தனங்கள் பெற்றுச் சகலர்க்கும் உதவி செய்து
வந்திடும் நாளி லேதா னறைகின்றேம் ஊழி தானே.

17. இவனுடைய தந்தை முற்பிறப்பில் சிதம்பரத்துக்குத் தெற்கில், சூத்திர வம்சத்தில் பிறந்து, குழந்தைகள் மனைவியோடு செல்வத்தைப் பெற்று, பிறருக்கு உபகாரம் செய்து வரும் நாளில், எற்பட்ட தோஷத்தைச் சொல்லுகின்றேம்.

18. அங்கநகர் நதியின் பக்கல் அணுகிய அரசு தன்னை
மன்னவன் வெட்டி விட்டான் வந்தது தோஷம் தானும்
பின்னங்கள் அச்சென் மத்தில் பேசுவோம் ஒன்று மில்லை
கன்னியும் மதலை யற்றுக் காளையும் மரண மானான்.

18. அந்தப் பட்டணத்திற்குப் பக்கத்தில் ஓடும் நதிக்கு அருகில் இருந்த அரச மரத்தை வெட்டினான். அந்தத் தோஷம் இவனைச் சேர்ந்தது. அப்பிறவியில் வேறு தோஷ மெதுவு மில்லை. மனைவியும் குழந்தைகளு மில்லாமல் இவன் இறந்தான்.

19. ஆகையா லிச்சென் மத்தில் அன்புடன் சைவச் சேயாய்ப்
போகமும் அதிகம் பெற்றுப் புண்ணியன் வாழும் நாளில்
நாகத்தின் அரசு தன்னை நாயகன் கொன்ற தோஷம்
பாகமாய் மனைவி மைந்தர் பெருகிடா தரிட்ட மாமே.

19. இந்தப் பிறவியில் சைவச் செல்வனுகப் பிறந்து, அதிக சுகத்துடன் வாழ்ந்து வரும்போது, அரசமரத்தை வெட்டிய தோஷம் ஏற்பட்டு, மனைவி, புத்திரபாக்கியம் இல்லாமல் நாசம் அடைவான்.

வேறு

20. இச்சென்மம் தன்னில் ஏழைகள் தமக்கு இவன்பொருள்
[உதவின தாலும்
கச்சணி மாது மறுமனை தனக்குக் காளைகள் விருத்தியு
[முண்டாம்
இலச்சைகள் அனந்தம் நாயகன் பட்டு நாட்டினில்
[வழக்குகள் அநேகம்
மிச்சமாய் நடத்தி மரணமே யாகி வேறுபின்
[சென்மத்தைச் சொல்வேன்.

20. இந்தப் பிறவியில் இவன் ஏழைகட்குப் பொருளுதவி செய்ததால் இவனுடைய இஷ்ட தாரத்திற்குப் புத்திர விருத்தி ஏற்படும். அதிகமான தொல்லைகள் ஏற்பட்டு, வழக்குகள் உண்டாகிப் பிறகு, மரண மடைவான். மறுபிறப்பைப் பற்றிச் சொல்லுவோம்.

வேறு

21. தில்லைக்கு உத்திர திக்கில் சிறப்புள பேரூர் தன்னில்
வல்லவன் வைசிய குல வணிபங்கள் அநேகம் செய்து
நல்லவ னுகி வாழ்ந்து நாடெலாங் கீர்த்தி பெற்று
அல்லலைத் தவிர்க்கு மீசன் அன்புடன் பூசிப் பானும்.

21. சிதம்பரத்துக்கு வடக்கில், சிறப்பான பெரிய ஊரில், வைசிய குலத்தில் பிறந்து, அநேக வியாபாரங்கள் செய்து, நற்குண முடையவனுக வாழ்ந்து, தேசத்தில் புகழ் பெற்று, கெடுதல்களைப் போக்கும் பரமசிவன் திருவடிகளைப் பூசிப்பான்.

22. சாதகன் முன்சென் மத்தைச் சாற்றுவோம் தொண்டை
[நாட்டில்
நீதியாய்ச் சத்திய னுகி நிலபுலம் அதிகம் பெற்றுக்
கோதிலாப் பொருள நேகம் கொண்டுமே வணிபம் செய்து
தீதிலா வாழும் நாளில் செய்தவூழ் கேளு மம்மா.

22. ஜாதகனுடைய முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். தொண்டை நாட்டில், க்ஷத்திரிய வமிசத்தில் பிறந்து, விஸ்தார நிலங்களை மிகுதியாகப் பெற்று, பொருள்களைக் கொண்டு வியாபாரம் செய்து, கெடுதலில்லாமல் வாழ்ந்து வரும் காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளும்; தாயே!

வேறு

23. நச்சுக்குழை யப்பியாசம் தனுவப் யாசம்
நாயகனும் செய்துவந்தான் அதிலோர் நாளில்
பச்சைக்கிளி குஞ்சுகளைக் கூட்டில் விட்டுப்
பசிநோயா லிரைகொணரச் செல்லும் போது
உச்சிதமாய்த் தனுவிலுண்டை வைத்த டித்தான்
உயர்பறக்கும் தத்தைமேல் பட்டு வீழ்ந்து
இலச்சைப்பட்டு உயிர்நீங்கி விட்ட தப்போ
நாயகனும் மனம்பதைத்து ஏது செய்தான்.

23. மண் உருண்டைகளை வில்லில் வைத்து அடிக்கும் பழக்கத்தை ஜாதகன் தினமும் செய்துவந்தான். ஒருநாள் பசுமையான கிளியொன்று தன் குஞ்சுகளைக் கூட்டில் விட்டு, அவற்றின் பசியைப் போக்க இரை கொண்டுவரச் சென்றது. இந்த ஜாதகன் அப்பொழுது மண் உருண்டையை வில்லில் வைத்து அடித்தான். அது உயரப் பறந்துசென்ற கிளியின்மீது பட்டது. கிளி கீழேவிழுந்து இறந்தது. இவன் மனம் துடித்து ஒரு செயல் செய்தான்.

வேறு

24. உயிர்விட்ட கிளியது தன்னை உத்தமர் புதைத்து விட்டுப்
பயமுடன் மறுநாள் தன்னில் பாலபி டேகம் செய்து
இயலுடன் வாழும் நாளில் இக்கிளிக் குஞ்சு தானும்
வயிற்றுக்கு உணவு இன்றி மாண்டது கேளு மம்மா.

24. மரண மடைந்த கிளியை, ஜாதகன் மண்ணில் புதைத்தான். பயத்துடன் மறுநாள் இறைவனுக்குப் பாலபிடேகம் செய்தான். இங்ஙன மிருந்தபோது குஞ்சுக் கிளிகள் ஆகாரமின்றி மரணமடைந்தன. தாயே! கேளுங்கள்.

25. அந்ததோர் தோடம் தானும் அணுகியே அச்சென் மத்தில்
மைந்தரும் இல்லா ஞகி மன்னனும் சேது புக்குப்
பந்தமாய்த் தீர்த்தம் தோய்ந்து பாலகன் உள்ளூர் மீண்டு
கந்தனைப் பூசை செய்து காளையும் மரண மானான்.

25. அந்தத் தோஷம் இவனை யடைந்தது. அந்தப் பிறவியில் குழந்தைகள் இல்லாதவனானான். ஜாதகன் சேது ஸ்நானம் செய்து, உள்ளூரடைந்து, சுப்பிரமணியக் கடவுளைப் பூசித்து, மரண மடைந்தான்.

26. சேதுவின் பலத்தி னுலே சேயனும் சைவச் சேயாய்
மீதினில் உதித்தா னம்மா வேலனைத் தொழுத தாலே
பூதலம் பொருள நேகம் பெற்றுமே வாழ்வா னம்மா
ஆதியாய் நிறைந்த செல்வம் அணுகிடும் மரண மட்டும்.

26. சேது ஸ்நானம் செய்த புண்ணியத்தால் ஜாதகன் பூமியில் சைவ னுகப் பிறந்தான். வேல் முருகனைப் பூசித்ததால் பூமியில் மிகுதியாகச் செல்வமடைந்து வாழ்வான். ஆரம்பத்தி லிருந்த மிகுதியான செல்வம் கடைசி வரையில் இருக்கும்.

27. இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோம் ஒருபான் [ஐந்தில்
அன்னவன் மேற்குத் திக்கில் அவனுடைத் துணைவி வர்க்கம்
கன்னிகை வருவா ளம்மா காதலி குணத்தைக் கேளாய்
முன்னமே கோபம் கொஞ்சம் மொழிகின்றும் கேளு மம்மா.

27. இந்த ஜாதகனுடைய திருமண காலத்தைச் சொல்லுவோம். பதினைந்தாம் வயதில், மேற்குத் திக்கிலிருந்து சகோதரி வர்க்கத்தில் மனைவி வாய்ப்பாள். அவள் குணத்தைப் பற்றிச் சொல்லுவோம். சிறிது முன் கோப முடையவள்.

28. வார்த்தையும் நல்ல தாகும் வரனுக்கு நேய முள்ளாள்
நாற்றிசை புகழ வாழ்வள் நாயகி அதிர்ஷ்ட முள்ளாள்
வேற்றொரு சங்கை யில்லாள் வித்தகி கறுப்பு மாவள்
ஏற்றவர்க் கன்ன மீவள் இவள்ரதிக் கொப்பா ளாமே.

28. நல்வார்த்தை யுடையவள். புருடனுக்கு இஷ்டமானவள். நான்கு திசைகளிலும் புகழுண்டாகும்படி வாழ்ந்திருப்பாள். அதிருஷ்ட முடையவள். வேறு தோஷமில்லாதவள். கருமை நிறமானவள். உணவு வேண்டுபவருக்கு உணவளிப்பாள். இரதிபோன்ற அழகுடையவள்.

29. பூஷண மதிக முள்ளாள் புத்திமான் பொறுமை யுள்ளாள்
ஆடவர் தம்மைச் சேராள் அரனடி பூசிப் பாளாம்
கூடிய துணைவர் தம்மைக் கூறுவோம் ஆண்பால் ரெண்டு
நாடிய பெண்பால் அவ்வார் நாட்டினேம் மேலும் கேளே.

29. ஆபரணங்கள் அதிக முடையவள். புத்திசாலி. அடக்க முடை யவள். அயல் புருடரை விரும்பாள். சிவபெருமானைப் பூசிப்பாள். அவளு டைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். ஆண்கள். இருவரும் பெண்கள் இருவரும் உள்ளனர் என்று கூறினேம். மேலும் கேள்.

30. மாதுரு குணத்தை யாங்க ளறைகின்றேம் சிவந்த மேனி
மேதினி உயர மில்லாள் வயிற்றினில் சொல்ப ரோகி
பாதகம் ஒருவர்க் கொண்ணுள் பந்துவுக் கினிய ளாவள்
தோதக மில்லா நெஞ்சம் சுவைகளுக் கினிய ளாவள்.

30. அன்னையின் குணத்தைப் பற்றிச் சொல்லுவோம். சிவந்த நிற முடையவள். குள்ளமானவள். சிறிது வயிற்று வலி யுள்ளவள். பிறருக்குத் தீங்கு எண்ணுதவள். உறவினருக்குப் பிரியமானவள். கெடுத லில்லாத மனமுடையவள். சுவையான பதார்த்தங்களில் இஷ்டமுள்ளவள்.

31. பொய்யுரை அதிகம் சொல்லாள் புத்திமான் காமி யாவள்
நையவே உரைக்க மாட்டாள் நாட்டில்முன் கோபம்
[கொஞ்சம்
மெய்யினில் சொற்ப ரோகி வீண்வார்த்தை சொல்லா
[ளாகும்
அய்யமென் றடைந்தோர் தம்மை ஆதரிப் பாளாம் அம்மா.

31. பொய் உரைக்க மாட்டாள். புத்திசாலி. போகத்தில் பிரிய முள்ளவள். பிறர் வருந்தப் பேசாள். முன்கோபம் சிறிதுண்டு. சிறிது ரோகமுள்ளவள். வீணுகப் பேசாள். அடைக்கல மடைந்தோரைக் காப்பாள்; தாயே!

32. தந்தையின் மரண காலம் சாற்றுவோம் ஒருபான் ஆறில்
பிந்தியும் அன்னை காலம் பேசுவோ முப்பா னேழில்
எம்மையே இவனின் காலம் இயம்புவோ மன்பா ஞறில்
மூந்திய ஆனி மாதம் முன்பக்கம் தசமி தன்னில்.

32. தந்தையின் மரண காலத்தைச் சொல்லுவோம். ஜாதகனின் பதினாறும் வயதில் நேரும். முப்பத்தேழாம் வயதில் அன்னையின் மரண மேற்படும் என்று சொல்லுவோம். ஜாதகன், ஐம்பத்தாறும் வயதில் ஆனி மாதம் வளர்பிறை தசமியில், மரணமடைவான்.

33. வாதரோ கத்தி னுலே மரணமே யாகி யேதான்
கோதிலாக் காஞ்சி நாட்டில் கூறுமிக் குலத்தி லேதான்
மேதினி லுதிப்பா னம்மா வியாபாரம் அதிகம் செய்வன்
போதக வானைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

33. வாயு நோயினுல் மரண மடைந்து, மறுபிறவியில் குற்றமில்லாத காஞ்சிபுரத்தில் இதே குலத்தில் பிறப்பான். தாயே! வியாபாரம் அதிகம் செய்வான். விநாயகரைப் பெற்ற பாக்கியவதியே! மேலும் கேளும்.

34. இன்னவன் தனக்குப் புத்திர ரியம்பு வோ மிருவான் காகும்
கன்னியு மிருவர் தீர்க்கம் கனமுள ஆண்டால் ஒன்று
தன்னிலே மூன்றும் தீர்க்கம் சதிருள வைந்து நட்டம்
அன்னமே யாங்கள் சொல்லு மடைமொழி குன்றி டாதே.

34. இந்த ஜாதகனுக்குப் புத்திரர் எண்மர். இரு பெண்களும் ஆண் மகன் ஒருவனும் தீர்க்கமா யிருப்பர். மற்ற ஐவரும் மடிவர். தாயே! யாங்கள் சொன்ன சொற்கள் தவறு.

35. இப்படிப் பராசர் சொல்ல இயல்முனி கூறு கின்றார்
தப்பிதம் புத்திர ருக்குச் சார்ந்தகா ரணங்க ளென்ன
ஒப்புடன் சொல்வீ ரென்று உயர்முனி கேட்கும் போது
செப்புவார் பராசர் தானும் செல்வியே கேளு மம்மா.

35. என்று பராசரர் கூற, செயமுனிவர் சொல்லுவார். புத்திர தோஷ மேற்படக் காரணங்களென்ன ? சொல்லுவீர். பராசர் சொல்லுவார்; கேளும், தாயே.

36. முன்சென்மம் கிளியின் சாபம் முயன்றது இச்சென் மத்தில்
பின்னங்கள் புத்திர ருக்குப் பேசுவோம் நஷ்ட மாகும்
அன்னையே அதற்குச் சாந்தி அறைகின்றோம் மனைவி யோடு
மன்னனும் அருணைக் கேகி மகாதீர்த்தம் தன்னில்
[தோய்ந்து;

36. முற் பிறப்பில் ஏற்பட்ட கிளியின் சாபம் இப்பிறப்பில் வந்தடைந்தது. அதனால் புத்திரருக்கு அழிவு ஏற்படும். தாயே! அதற்குச் சாந்தி சொல்லுவோம். தன் மனைவியுடன் தானும் திருவண்ணாமலை சென்று, மகா தீர்த்தத்தில் தோய்ந்து;

37. சனுக் கபிடே கித்து இன்பமாய் அர்ச்சித் தேத்தி
நேசமாய் ரசிதம் தன்னால் நேர்கிளி வரையச் செய்து
பூசனை புரியும் வேத பிராமணர் தமக்குத் தானம்
பாசமாய் கந்தம் புட்பம் பாக்குடன் தான மீந்தால்;

37. சிவபெருமானுக்கு அபிஷேகம் அருச்சனை முதலியன செய்து பூசித்து, கிளிபோன்ற உருவம் செய்து, அதை, வேதமோதும் பிராமணர்களுக்குப் புஷ்பம், சந்தனம், தாம்பூலம் இவைகளுடன் தானமாகக் கொடுத்தால்;

38. தோடங்கள் விலகிப் பின்பு தோன்றிடும் புத்திரன் ஒன்று
ஆடவர் இரண்டும் தீர்க்கம் அதிசாந்தி செய்யா னாகில்
மூடமாம் புதல்வர் தாமும் முயலாது நட்ட மூண்டாம்
வேடவர் வடிவெ டுத்த வித்தகி மேலும் கேளே.

38. தீங்குகள் விலகி, பிறகு ஒரு மகன் பிறப்பான். இரு ஆண் குழந்தைகளும் தீர்க்கமா யிருப்பர். சாந்தி செய்யா விட்டால் பிள்ளைகள் பிறக்கினும் மரிக்கும். வேடன் வடிவெடுத்த சிவபெருமானின் காதலியே! மேலும் கேள்.

39. இங்ஙனம் பராசர் சொல்ல ஈச்வரி கேட்க லுற்றுள்
பங்கமாய் கிராமச் செட்டு புகன்றிட்டீர் சங்கை சொல்வீர்
மங்கையே இருப தாண்டில் வந்திடு மிராச யோகம்
சிங்கம்போ லரசு செய்வன் தேவியே மேலும் கேளே.

39. இவ்வாறு பராசரர் கூற, ஈச்வரி கேட்கலானாள். கிராமத்தில் வியாபாரம் செய்வான் என்று சொன்னீர்கள். எப்பொழுது செய்வான் என்று கூறுங்கள். மங்கையே! இந்த ஜாதகனுக்கு இருபதாம் வயதில், இராஜ யோகம் அணுகும். சிங்கம் போல் கம்பீரமாக இருப்பான். தேவியே! மேலும் கேளும்.

40. எவ்வித கார ணத்தால் இலகிடு மிராச யோகம்
திவ்விய முனிவ ரேயச் சேதியைக் கூறு மென்றுள்
பவ்வமாய்த் தந்தை மூத்தோன் பாலகன் அதிகா ரத்தை
நவ்விய யிட்டத் தாலே நாயகன் பார்ப்பா ரோமே.

40. எந்தக் காரணத்தினால் ராஜ யோகம் உண்டாகும், சொல்லும்? என்று பார்வதி வினவ, பெரிய தந்தையின் புதல்வன் செலுத்திய அதிகார பதவியை, அவன் விருப்பப்படி இந்த ஜாதகன் செலுத்துவான்.

41. பாலகன் பார்க்கும் காலம் பகையுண்டோ இல்லை யோசொல்
ஆலம்போல் பகைவ ருக்கு அண்ணலும் கருட னுவன்
கோலமாம் பகைவ ரென்று கூறுர்கள் அந்தக் காலம்
வேலன்முன் சூர ரைப்போல் விலகிடும் பகைவர் தாமே.

41. இவன் அதிகாரம் செலுத்தும்போது விரோதிகள் உளரோ? இலரோ? சொல்லுங்கள். விஷம்போன்ற பகைவருக்கு இவன் கருடன் போன்றவன். அந்தக் காலத்தில் இவனுக்கு விரோதிகள் என்று எவரும் கூறுர். சண்முகன்முன் சூரனென்ற அசுரனைப்போல் விரோதிகள் நாசமடைவர்.

42. இப்படி முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்றுள்
எப்படி ராச யோகம் இவனுக்கு வருமே யென்றீர்
ஒப்புட னந்த சேதி உரையென அம்மன் கேட்கப்
செப்பமாய்ப் பராசர் தாமும் சொல்லுவார் மேலும் கேளே.

42. இவ்வாறு முனிவர் சொல்ல, பார்வதி கேட்கின்றாள். இவனுக்கு இராஜ யோகம் எப்படி வரும் என்று சொல்லுங்கள். பராசரர் சொல்லுகின்றார். மேலும் கேளும், தாயே.

43. தன்மகர் மாதி யான சனியனே யாகிமேலும்
மன்புதன் தனக்குப் பத்தில் மந்தனும் மிருப்ப தாலே
இன்பமாய் அதிகா ரங்கள் இவனுமே செய்வா னம்மா
வன்மடம் சோலை கூவல் மைந்தனும் செய்வா னுமே.

43. தர்ம கர்மாதி பதியான சனி, புதனுக்குப் பத்தில் [மேஷத்தில்] இருப்பதால், இந்த ஜாதகன் மகிழ்ச்சியுடன் அதிகாரங்களுள்ள பதவிகளை யேற்று, தொழில் புரிவான். சத்திரம், தோட்டம், கிணறு முதலியன அமைப்பான்.

44. பூருவ ஆல யத்தைப் புதிதாகச் செய்வன் மேலும்
பாரினில் பரங்கட் கன்னம் பட்சமா யிவன் மேலும்
கோரின காரி யத்தைக் குணமுடன் முடிக்க வல்லான்
தேரிய வழியில் நிற்பான் செல்வனும் என்று சொன்னேனும்.

44. பாழடைந்த கோவிலைப் புதிதாகச் செய்வன். உலகில் ஏழைகளுக்கு அன்புடன் அன்ன மளிப்பான். நினைத்த காரியத்தைத் திறமையுடன் முடிக்கும் சாமர்த்திய முடையவன். சான்றோர் காட்டிய வழியிலே செல்வான் என்று கூறினேனும்.

45. இன்னவன் சனனம் தொட்டு இவனுடை யாயுள் மட்டும்
பின்னங்கள் அணுகா தம்மா பெருகுமே செல்வம் தானும்
மன்னவன் துணைவ னுக்கு மறுமொழி கூறு னம்மா
சொன்னசொல் குன்றி டாது சுந்தரி மேலும் கேளே.

45. இந்த ஜாதகனுக்குப் பிறந்தது முதல், முடிவு வரையில் துன்பங்கள் இரா. செல்வங்கள் பெருகும். தன் மூத்த சகோதரனுக்கு எதிர்வார்த்தை சொல்லான். நாங்கள் சொன்ன சொற்கள் தவறு. அழகியே! மேலும் கேள்.

46. மாதுரு துணைவர் தம்மை வறைகின்றேம் ஆண்பா லைந்து
மேதினில் கன்னி ரெண்டு விளங்கிடு மதிலே சங்கை
தீதுகள் ஆண்பா லுக்குச் சிலநாளில் நட்ட மாகும்
பேதமி லுத்ரம் மாமன் வீடெனப் புகன்றிட் டோமே.

46. அன்னையின் உடன் பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஆண்கள் ஐவர். பெண்கள் இருவர்; அவர்களில் ஆண்களுக்குக் கெடுதல் ஏற்படும். சிறிது காலத்துக்குப் பின்பு மரணமடைவர். ஜாதகனின் மாமன் வீடு வடக்குத் திசையிலுள்ளது என்று சொன்னேனும்.

47. குடும்பத்தில் கேது நிற்கக் கூறுவீர் பலனே யென்றுள்
மடமொழி மனையா ளுக்கு வருந்தந்தை தாய்க ளில்லாள்
வடமெனத் துணைவ ரில்லாள் மெல்லியல் ஒருத்தி யாகும்
குடகினில் வருவா ளம்மா கூறுவோம் மேலும் கேளே.

47. மிதுனத்தில் (குடும்பஸ்தானத்தில்) கேது இருக்க, அதன் பலனைச் சொல்லுமென்று பார்வதி கேட்டாள். வரும் மனைவிக்குத் தாய் தந்தையர் இருக்க மாட்டார்கள். உடன்பிறந்தாரும் இல்லாதவள். சகோதரி ஒருத்தி உண்டு. அவள் மேற்குத் திசையிலிருந்து வருவாளென்று சொன்னேம்.

48. இன்னவள் வந்த பின்பு இணையிலாச் செல்வ மும்தான்
மன்னிய வரனின் தந்தை மரணமாம் விரய மாகும்
கன்னலின் மொழியு மான காதலி பலன்க ளெல்லாம்
அன்னமே யினிமே லாக வறைகின்றே முனிவ ரம்மா.

48. மனைவி வந்த பிறகு, வீடில்லாச் செல்வம் சேரும். ஜாதகன் தந்தை மரண மடைவான். கரும்பைப் போல் இனிய மொழியைப் பேசும் பார்வதியே! அன்னம் போன்ற நடையுடையவளே! முனிவர்களாகிய நாங்கள், மற்றப் பலன்களைப் பிற்பகுதியில் சொல்லுகின்றோம்.

ஜாதகம் 26

1. பொன்ரவி மேரு வாகப் புகர்மானில் [1]பூமன் [2]மாவில்
மந்தனும் ராகு நந்தி மால்சிகி தெருக்கால் ஏற
வன்மதி [3]கோல தாக வருசென்ம மிடப மாக
இன்னவா ரவர்கோ ளிவ்வார் இருப்பதால் பலன்சொல்
[வீரே.

1. குரு சூரியன் தனுசிலும், சுக்கிரன் மகரத்திலும், செவ்வாய் சிம்மத்திலும், சனி ராகு விருஷபத்திலும், புதன் கேது விருச்சிகத்திலும், சந்திரன் துலாத்திலுமாக, இவ்விதம் நவக்கிரகங்களும் நின்று, விருஷப லக்கினத்தில் பிறந்த ஜாதகனுக்குப் பலன் சொல்லுங்கள் ;

		லக்கினம் சனி ராகு	
சுக்கிரன்	இராசி சக்கரம்		செவ்வாய்
குரு சூரியன்	புதன் கேது	சந்திரன்	

2. உமையவள் கேட்கும் போது உரைக்கின்றார் பராசர் தாமும்
அமைந்திடு மாண்பால் சென்மம் அறைகின்றேமும்
[கீழ்மேல் வீதி
நவமது தெற்கு வாசல் நன்னெதி ரில்ல மில்லை
பவமாலின் கோட்டம் மேற்கில் பெருகிடும் என்று
[சொன்னேம்.

2. என்று பார்வதிதேவி கேட்கின்றபொழுது, பராசரர் கூறுகின்றார். இஃது ஆண்மகன் ஜாதகம். கிழக்கு மேற்கான வீதியில் தெற்குப் பார்த்த வாசலே யுடையது ஜாதகன் வீடு. எதிர்ப் பக்கத்தில் வீடு எதுவும் கிடையாது. திருமாலின் கோயில் மேற்கிலுள்ளது, என்று கூறினேம்.

---

1. செவ்வாய்
2. கன்னியா ராசி
3. துலா ராசி

3. தந்தியும் சந்தி யப்பன் சார்ந்திடு மீசன் திக்கில்
சந்ததம் காளி உத்திரம் தங்கிடும் கிழக்கில் [1]குண்டம்
பந்தமாய் வடமேல் மாரி பெருகிடும் அருகில் சந்தி
இந்தவா றடையா ளத்துள் இலகிய சிற்றூர் தன்னில் ;

3. கர்ச்சந்திகளில் எழுந்தருளி யிருப்பவாராகிய விநாயகர் வடகிழக்கில் கோயில் கொண்டுளார். காளிதேவி வடக்கில் வாசம் செய்வாள். கிழக்கில் ஒரு தடாகமுண்டு. வடமேற்கில் மாரியம்மன் கோயி லிருக்கின்றது, அதற்கருகில் நான்கு தெருக்கள் கூடுமிடம் ஒன்றுளது. இப்படிப்பட்ட அடையாளங்களுடன் விளங்கிய சிறிய ஊரில் ;

4. உதிப்பனே யிவனே யம்மா உரைக்கின்றேம் பலன்கள் [யாவும்
மதிநிகர் மனையாள் புத்ரர் வரும்துணை குடும்பச் செய்கை
விதியினல் முன்பின் சென்மம் விளம்புவோம் இந்நூல் [தன்னில்
அதிதிகள் போற்று கின்ற அம்மையே மேலும் கேளை.

4. பிறப்பான் இந்த ஜாதகன், தாயே ! இவனுக்குரிய பலன்கள், சந்திரனைப் போல் அழகிய முகமுடைய இவன் மனைவி, புதல்வர், உடன்பிறந்தார் ஆகியோர்க்குரிய பலன்கள், இவர்களது குடும்பச் செய்திகள், முற்பிறப்பு, மறு பிறப்பு, முதலான அனைத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் கூறுவோம். முனிவர்கள் போற்றுகின்ற பார்வதியம்மையே ! மேலுங் கேட்பாயாக.

5. சாதகன் நிறம்கு ணத்தைச் சாற்றுவோம் இருசி கப்பன்
மேதினில் கீர்த்தி ஏற்பன் வித்தைகள் அதிகம் கற்பன்
பாதகம் எண்ணுச் சித்தன் பருத்ததோர் தேக முள்ளான்
மாதவர் தமைத்து திப்பன் மறுமொழி அதிகம் கூர்வன்.

5. ஜாதகன் நிறம் குணம் ஆகியவற்றைச் சொல்லுவோம். கருஞ் சிவப்பு நிறமுள்ளவன். உலகில் புகழடைவான். மிகுதியாகக் கல்வி கற்பான். கெடுதி நினையாத மனமுடையவன். பருமனை உடலுடையவன். தவத்திற் சிறந்தோர்களைப் போற்றுவான். எதிர்மொழிகள் அதிகமாகச் சொல்லுவான்.

6. பலவிதக் கல்வி யுள்ளான் பங்கய முகத்தா னுகும்
விலோமாதர் நேசம் கொள்வன் விளைபுலம் அதிக முள்ளான்
தலந்தோறும் தீர்த்தம் தோய்வன் சற்சன ருறவு கொள்வன்
கலகல வார்த்தை சொல்வன் காரிய சமர்த்த னுவன்.

1. தடாகம்

6. பலவிதமான கல்வி யுடையவன். தாமரை மலர்போன்ற முக முள்ளவன். வேசையர் நட்பைக் கொள்ளுவான். விஷநிலங்களே மிகுதி யாகச் சேர்ப்பான். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று தூய்மையான தீர்த்தங்களில் நீராடுவான் சான்றோர்களின் உறவைக் கொள்ளுவான். கலகலப்பாகப் பேசுவான். செயலாற்றுவதில் சாமர்த்திய முடையவன்.

7. சங்கீதப் பிரிய னுகும் தயாளமாம் குணத்தா னுகும்
பங்கய ரேகை யுள்ளான் பாவையர் மோக வானும்
மங்களச் சொல்லே யுள்ளான் மன்னர்கள் நேசம் கொள்வன்
எங்களுக் கன்ப னுவன் இவன்சுகப் புசிப்பா னென்றேரும்.

7. இசையில் விருப்ப முடையவன். இரக்கம் பொருந்திய மன முள்ளவன். கையில் பத்மரேகை யுடையவன். பெண்களிடம் மோகமுள்ள வன். மங்கலமான சொற்களையே பேசுவான். அரசர்கள் சேர்க்கையைக் கொள்ளுவான். எம்மைப் போன்ற முனிவர்களிடம் அன்புடையவன். சுக மாகப் போஜனம் அருந்துவான் என்று சொன்னேம்.

8. வாகன முடைய னுவன் மனவேதை அதிக முள்ளான்
யோகமு முடைய னுவன் உறுதியா மனத்த னுகும்
பாகமாய்ப் பேச வல்லன் பந்துவு மெச்ச வாழ்வன்
நாகரீ கங்க ளுள்ளான் அரசர்க்குப் பிரிய னுவன்.

8. வண்டி முதலான வாகன வசதிகளுள்ளவன். மனத்தில் மிகுதி யான வேதனையுடையவன். அதிர்ஷ்ட முள்ளவன். திடமான மனமுடை யவன். பக்குவமாய்ப் பேசுதலில் வல்லவன். உறவினர்கள் பாராட்டும்படி வாழ்ந்திருப்பான். நாகரிக முடையவன். அரச குலத்தினருக்கு விருப்ப மானவன்.

9. கல்வியால் பெருமை யுள்ளான் காளைமுன் கோபி யாவன்
இல்லையென் றுரைக்க மாட்டான் யாரையும் வசியம்
[செய்வன்
நல்லவர் பலர்க ளாலே நாடெலாம் கீர்த்தி யுள்ளான்
சொல்லுமே நெறியுள் ளோனும் துணைவியால் பெருமை
[யுள்ளான்.

9. படிப்பினால் மேன்மை பெற்றவன். முன்கோப முடையவன். கேட்டவருக்கு இல்லையென்று சொல்ல மாட்டான். எவரையும் வசப்படுத்து வான். நல்லவர் பலருடைய சேர்க்கையினால் உலகெங்கும் புகழடைவான். பேச்சில் ஒழுங்குள்ளவன். சகோதரியின் ஆதரவால் பெருமை பெறுவான்.

10. தந்தையின் ஆஸ்தி இல்லான் மாதிவள் துணையி னுலே
மைந்தனும் சீவிப் பானும் சூதுகள் கொஞ்சம் உள்ளான்
தோத்திரப் பிரிய னுவன் நாதனர் பூசை செய்வன்
நக்கன்மேல் பத்தி யுள்ளான் நாற்காலி விருத்தி யுள்ளான்.

10. பிதிரார்ச்சித சொத்துக்கள் இல்லாதவன். தன் சகோதரியின் பாதுகாப்பில் ஜீவனம் செய்வான். வஞ்சனே சிறிதுடையவன். பிறர் தம்மைப் புகழ்வதில் விருப்பமுள்ளவன். கடவுளுக்குப் பூசைகள் புரிவான். சிவபெருமானிடம் பக்தியுள்ளவன். கால்நடைகள் விருத்தி யுள்ளவன்.

11. பால்பாக்கியம் உடைய னுவன் பத்தினி ஒருத்தி யாகும்
கோலமாம் தைரி யத்தன் குறைவிலாச் செல்வ முள்ளான்
ஞாலமேல் பெருமை பூண்பன் நாயகன் வயது தீர்க்கம்
ஆலம்போல் பகைவ ருக்கு அண்ணனும் கருட னுவன்.

11. பால் பசு பாக்கிய முடையவன். இவனுக்கு மனைவி ஒருத்தியே. தைரியமுள்ளவன். நிறைந்த செல்வ முடையவன். உலகில் பெருமை பெறுவான். தீர்க்கமான வயதுடையவன். விஷம் போன்று கொடிய விரோதிகளுக்குக் கருடனைப் போன்றவன்.

12. மத்திய வயதி லேதான் வாதநோய் உடைய னுவன்
நித்தியம் சல்ய பாதை நேயர்கள் பகைய தாகும்
சித்தமுங் கலக்க முள்ளான் சேயர்கள் நாச மாகும்
குத்திர வசனம் நேரும் கூறுவோம் மேலும் கேளே.

12. ஜாதகன் மத்திய வயதில், வாத நோய் உடையவனுவன். தினந் தோறும் கடன் தொந்தர வுள்ளவன். நண்பர்களும் பகைவராவர். மனத்தில் சஞ்சல முடையவன் ஆவான். மக்கள் நாசமடைவர். இவனைப் பற்றிக் கோள் கலகங்கள் முதலியன நிகழும். மேலுங் கூறுகின்றோம், கேட்பாயாக.

13. இன்னவன் துணைவர் தம்மை இயம்புவோ மைந்த தாகும்
கன்னிகை இரண்டு தீர்க்கம் கனக்காது மற்ற தெல்லாம்
துன்னிய முனிவர் கூறச் சொல்லுவாள் அம்மன் தானும்
மன்னிய துணைவர் நட்ட மறைந்திட்டு ரந்தச் சேதி ;

13. இவனுடைய உடன்பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுவோம். அவர்கள் ஐவர். இரண்டு பெண்களைத் தவிர, மற்றவர் நிலையார். இங்ஙனம் முனிவர் சொல்ல, பார்வதியம்மன், உடன்பிறந்தார் நஷ்டம் என்று கூறி னீர்கள். அங்ஙனமாவதற் குரிய காரணத்தை ;

14. சொல்லுவீர் என்று கேட்கச் செயமுனி கூற லுற்றார்
நல்லதோர் [1]மூன்றோன் ஆறோன் [2]லாபத்தோன் இவர்கள்
[தாமும்
புல்லிய மறைவுத் தானம் பொருந்திடும் ஆண்பால் சேதம்
வில்நுதல் பெண்பா லுந்தான் விளங்கிடும் என்று
[சொன்னேம்.

14. சொல்லுங்கள் என்றான். செயமுனிவர் சொல்லுவார். சகோதர ஸ்தானமாகிய மூன்றாமிடத்துக்குரிய சந்திரனும், ஆறாமிடத்துக்குரிய சுக்கிரனும், இலாப ஸ்தானத்தவனை குருவும் முறையே ஆறாமிடத்திலும், ஒன்பதாமிடத்திலும், எட்டாமிடத்திலும் மறைவாகத் தங்கியிருப்பதால், சகோதரர் நஷ்டமாவர். விற்போன்ற புருவமுடைய பெண்ணைருத்தியே தீர்க்கமாவள் என்று கூறினேம்.

15. இவனுடை மன்றல் காலம் இயம்புவோம் இருபான்
[மூன்றில்
நவமதில் உத்திர திக்கில் நாயகி வருவா ளென்றோம்
அவளுடைக் குணத்தை யாங்கள் அறைகின்றோம் சிவந்த
[மேனி
எவர்களும் புகழ வாழ்வள் இவளுமுன் கோபி யாவள்.

15. இந்த ஜாதகனின் திருமண காலத்தைச் சொல்லுவோம். இவனது இருபத்துமூன்றாம் வயதில், இவனூருக்கு வடக்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள் என்று சொன்னேம். மனைவியின் குணத்தை நாங்கள் சொல்லுகின்றோம். சிவந்த உடல். யாவரும் புகழும்படி வாழ்க்கை நடத்துவாள். முன்கோப முண்டையவள்.

16. அன்னங்கள் போட வல்லாள் ஆளனுக் கினிய ளாவள்
கன்னென மொழியு முள்ளாள் கனநாச மூர்க்க மாவள்
பன்னிய வாயு தேகி பாலர்கள் உடைய ளாவள்
சொன்னசொல் தப்பா ளாகும் துணைவியால் அவமா
[னத்தாள்.

16. வீட்டைத் தேடி வந்தவர்களுக்கு உணவு அளிப்பதில் சிறந்தவள். கணவனுக்கு இனியவள். கரும்புபோல் இனிய சொற்களைப் பேசுவாள். மிக்க மூர்க்கமுள்ளவள். வாயு சரீர முடையவள். மக்கட் செல்வமுள்ளவள். சகோதரியால் இவளுக்கு அவமானம் நேரும்.

---

1. சந்திரன்
2. குரு

17. சஞ்சல மனத்தா ளாகும் தன்குலங் குற்ற முள்ளாள்
அஞ்சலென் றடைந்தோர் தம்மை ஆதரிப் பாளாம் மேலும்
கிஞ்சுக ரோகி யாவள் கற்புளாள் அடக்க முள்ளாள்
தஞ்சமாய்க் கருமி யாவள் சந்ததி நாச மென்றோம்.

17. கலக்கங்கள் நிறைந்த மன முடையவள். தன் குலத்தில் குற்ற முள்ளவள். கதியற்றுத் தன்னை யடைந்தவர்களை பயப்படாதீர்கள் என்று கூறிப் பாதுகாப்பாள். காச நோயுடையவள். கற்புள்ளாள். அடக்க முடையவள். கருமித்தன முள்ளவள். புத்திர தோஷம் எற்படும் என்று சொன்னோம்.

18. இப்படி முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்றாள்
எப்படிக் கருமி என்றும் இவள்புத்ர தோஷம் தன்னைச்
செப்புவீர் என்று கேட்கச் சொல்லுவார் பராசர் தாமும்
ஒப்புடன் முன்னுள் ஊழி உறைந்ததைச் சொல்லு
[வேன்கேள்.

18. இவ்வாறு முனிவர் சொல்ல, பார்வதிதேவி கேட்கின்றாள். இவள் கருமி என்று எப்படிச் சொன்னீர்கள்? புத்திர தோஷம் ஏற்படுவதற்குக் காரணத்தைக் கூறுங்கள்! என, பராசரர் சொல்லுவார். முற்பிறப்பில் வந்த தோஷத்தைச் சொல்லுவேன்; கேட்பாயாக.

19. முன்சென்மம் பேரூர் தன்னில் முயற்சியாய் வைசிய வமிசம்
தன்னிலே உதித்து மேலும் தனங்களும் அதிகம் பெற்றுப்
பன்னிய வரன்ம னம்போல் பாவையு முள்ளா ளாகி
உன்னிதப் பந்து மெச்ச உலகத்தில் வாழ்ந்து மேதான்;

19. இவள் முன்பிறவியில், திருப்போரூரில், வைசிய குலத்தில் பிறந்து, செல்வமும் மிகுதியாகப் பெற்று, கணவனின் மனமறிந்தவளாய், உறவினர்கள் பாராட்ட உலகில் வாழ்ந்துகொண்டு;

20. இருக்கின்ற காலந் தன்னில் இவள்பாலோர் பெண்ணு
[மோர்நாள்
நெருக்கமாய்த் தரித்தி ரமாகி நிர்மித்த மதலைக் கேதான்
உருக்கமாய்ச் சாதம் தன்னை உத்தமி தன்பால் கேட்க
வருத்தமாய் இல்லை என்றுள் வஞ்சியும் மனவெ றுப்பால்;

20. இருக்கின்ற காலத்தில், இவர்களிடம் ஒரு பெண் வந்து, தரித்திரத்தினால், தன் குழந்தைக்குச் சிறிது உணவு தரும்படி வேண்டினாள் உடனே இவள், அவ்வேழைப் பெண்ணின் மனம் வருந்தும்படியான சொற்

களைக் கூறி, உணவு இல்லை என்றாள். அந்தப் பெண்ணும் மனவெறுப்புக் கொண்டு;

21. பாலர்கள் தமக்கு அன்னம் பகராத பாபிக் கேதான்
கோலமாய்ப் பின்சென் மத்தில் குழந்தைகள் நட்ட மாகி
வேல்விழி துணைவி தன்னுல் வேணது நிந்தை யாகிச்
சால்வே மாதுர் வமிசம் சந்ததி அற்றுப் போமே.

21. பசித்த குழந்தைகளுக்கு உணவு தராத பாவிக்கு, மறுபிறப்பில் குழந்தைகள் சேதமாகி, சகோதரியினுல் அவமானம் ஏற்பட்டு, மிகுந்த பழியுண்டாகி, தாயின் வமிசத்திலும் சந்ததியில்லாமல் போம்.

22. பிறப்பளே என்று சொல்லிப் பஞ்சையும் சாபம் தந்து
சிறப்புள வீடும் நீங்கிச் செல்வியு மயல்வீ டுற்றுள்
உறைப்புடை யந்தச் சாபம் உத்தமி தன்னைப் பற்றித்
திறத்துடன் அச்சென் மத்தில் செறிந்தது இவளுக் கம்மா.

22. இங்ஙனமாக, மறு பிறவியில் பிறந்து வாழ்வாள் என்று அந்த அகதியும் சாபங் கொடுத்துவிட்டு, இவள் வீட்டிலிருந்து நீங்கி, அயல் வீட்டுக்குப் போனுள். கொடிய அந்தச் சாபம், அச்சென்மத்திலேயே இவளை யடைந்தது, தாயே!

23. வைசிய குலமு தித்து மதலையு மில்லா ளாகி
நயமுள தென்தே சத்தில் நாயகி தீர்த்தம் தோய்ந்து
பயமிலா வரனின் கூடப் பத்தினி யரங்கஞ் சென்று
தயவுடன் அதிதி கட்குத் தானவ ளன்ன மீந்து,

23. வைசிய குலத்தில் பிறந்த இவள், புத்திர பாக்கியமில்லாமல், தென்னுட்டில் பல புண்ணிய தீர்த்தங்களில் போய், நீராடி, கணவனுடன் திருவரங்கஞ் சென்று, மனவிரக்கத்துடன் அகதிகளுக்கு உணவு தந்து;

24. மாலவன் பதங்கள் தம்மை மறுமலர் அர்ச்சித் தேத்திக்
கோலமா யுள்ளூர் மீண்டு குறைலக் கஞ்சன் தன்னுல்
ஞாலமேல் வரையப் பட்டு நவின்றனள் இவளே யம்மா
வேலனைப் பெற்ற மாதே விளம்பின மொழிகுன் றுது.

24. அங்குக் கோயில் கொண்டுள்ள திருமாலின் திருவடிகளில் மண முள்ள மலர்களால் அருச்சனை முதலியன செய்து, துதித்து, உள்ளூருக்குத் திரும்பி, மரணமடைந்து, மீண்டும் பிரம்மாவினுல் படைக்கப்பட்டு, இப் பிறப்பாகப் பிறந்தாள் என்று கூறினும், முருகப் பெருமானைப் பெற்ற பார்வதியே! கூறிய சொல் தவறுது.

25. முனிவரிவ் வாறுய்ச் சொல்ல மொழிகுவார் புசண்டர்
[தாமும்
அனையவே முன்சென் மத்தில் அவள்வைசிய குலமு தித்துத்
தனையர்கள் இல்லா ளாகித் தானேழைப் பிள்ளைக் கன்னம்
தினையள வின்றி யேதான் சொறிந்திடா திருப்ப தாலும் ;

25. பராசர முனிவர் இங்ஙனம் சொல்ல, புஜண்ட முனிவர் கூறுவார். இவள் முற்பிறப்பில், வைசிய குலத்தில் பிறந்து, புதல்வர்கள் இல்லாமல், ஏழைக் குழந்தைகளுக்குத் தினையளவு உணவும் அளிக்காமல் இருக்க ;

26. இச்சென்மம் தன்னி லேதான் இவள்பிரம்ம குலமு தித்து
அச்சுதன் மதத்த ளாகி அவள்வந்த கார ணத்தை
மிச்சமாய்ச் சொல்லு மென்ன விளம்புவார் பராசர் தாமும்
உச்சிதப் பலதீர்த் தங்கள் உறைந்ததால் அதுவல் லாமல்;

26. இப்பிறவியில் விஷ்ணு மதத்தைச் சார்ந்த அந்தணர் குலத்தவளாகப் பிறந்ததற்குக் காரணம் என்ன? கூறுங்கள் என்று கேட்க, பராசரர் கூறுவார். பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடியதாலும், அதுவன்றி,

27. அரங்கமா நகரஞ் சென்று ஆதிமால் அருச்சித் தேத்தி
உறைந்தனள் இச்சென் மத்தில் உதித்தனள் இவளை யையா
பிறந்திடு மதலை சேதம் பேசினீ ரந்தச் சேதி
நிரந்தர மாக நீங்கள் நிகழ்த்துவீ ரென்று கேட்க,

27. திருவரங்கஞ் சென்று, அங்குக் கோயில் கொண்டுள்ள அரங்கநாதப்பெருமானுக்கு அருச்சனை முதலியனசெய்தும், இப்பிறப்பில், பிறந்தாள் இவள். பிறக்குங் குழந்தைகள் சேதமாம் என்று கூறினீர்கள். அந்தச் செய்தியை விவரமாகக் கூறுங்கள் என்று கேட்க.

28. செயமுனி எழுந்தி ருந்து திடுக்கென உரைக்க லுற்றார்
பயமதாப் பெண்ணும் ஓர்நாள் பாலர்கள் தமக்கு அன்னம்
தயவுடன் கேட்கும் பொது தானவள் இல்லை யென்றுள்
வியமுடை மனவெ றுப்பால் விளம்பினள் சாபம் தானே;

28. செய முனிவர் எழுந்திருந்து, விரைவாகச் சொல்லுவார். அச்சத்துடன் ஒரு பெண் இவளிடம் வந்து, தன் குழந்தைகட்கு உணவு கேட்டாள். இவள் இல்லையென்று மறுத்துக் கூறினள். அந்தப் பெண் மனவெறுப்புடன் சாபமிட்டாள்

29. இச்சென்மம் தன்னி லேதான் இவளுக்கு முன்சா பந்தான்
மிச்சமாய் வந்த தாலே விளங்கார்கள் புத்திரர் தாமும்
உச்சித மாக வேதான் உதிக்கினும் நட்ட மாகும்
அச்சுதான் தங்கை யாளே அறைகின்றேம் மேலும் கேளே.

29. முற்பிறப்பில் எற்பட்ட தோஷம் இப்பிறவியில் இவளை யடைந்ததால், புத்திர பாக்கியம் உண்டாகாது. பிறந்தாலும் நஷ்டமடையும். திருமாலின் சகோதரியே! சொல்லுகின்றேம், மேலுங் கேள்.

30. எத்தனைப் புத்திரர் தாமும் இவளுக்கு உதிப்ப ரையா
சித்தமாய்ப் புசண்டர் தாமும் செப்பவே முனிவர் [சொல்வார்
பெற்றிடு மதலை யைந்து பிறக்கினும் நட்ட மாகும்
உற்றதோர் சாபந் தீர உரைப்பீர்கள் கிரிகை யொன்று.

30. எத்தனைப் புதல்வர் இவளுக்குப் பிறப்பார்கள், சொல்லுங்கள் என்று புஜண்டர் கேட்க, செய முனிவர் சொல்லுவார். பிறக்கும் குழந்தைகள் ஐந்து. அவை நஷ்டமாம். எற்பட்ட தோஷங்கள் நீங்கச் சாந்தி யொன்று கூறுங்கள்.

31. இதற்குமேல் புத்திரர் தாமும் இலகாது என்று சொன்னேம்
குதர்க்கங்கள் இதற்குள் உண்டு கூறுவோம் அந்தச் சங்கை
விதவிதப் [1]பம்பு வைப்பு வித்தகி தனக்கு நேர்ந்து
பதிதனில் கருவு தானும் பங்துவால் நொந்து மேதானு;

31. இதற்கு மேலாகப் புத்திர பாக்கியம் உண்டாகாது என்று கூறினேம். இதற்குள் பல துன்பங்கள் உண்டாகும் என்று கூறுவோம் உறவினர்களால் சூனியமந்திரங்கள் பல இவள்பால் பிரயோகிச்சப் பட்டு. அதனால் இவள் கருவும் அழிந்து போகும்.

32. அந்ததோர் கார ணத்தால் அணுகாது புத்திர ரென்றேம்
பந்தமாய் முனிவர் கூறப் பார்வதி கேட்க லுற்றாள்
இந்ததோர் கருமம் தீர இசைக்கின்றேம் சாந்தி ஒன்று
முந்தவே நவம ணிக்கு முயற்சியாய் அருச்சித் தேத்தி

32. அந்த ஒரு காரணத்தால் புத்திரர்கள் தோன்ற மாட்டார்கள் என்று கூறினேம். இங்ஙனம் முனிவரும் பொருத்தமாகக் கூற, பார்வதி கேட்கலானாள். இந்தக்கருமம் தீரச் சாந்தி ஒன்று உரைக்கின்றேம். அம்பிகைக்கு நன்கு அருச்சித்துப் போற்றி;

---

1. சூனியம் முதலியன.

33. பம்புகள் விலக்க வேண்டி பலவிதக் கிரியை செய்து
தும்பியப் பனைப்பூ சித்து தூயமந் திரம்செ பித்து
செம்பினுல் தகடு செய்து சேயிழை தரிப்பா ளாகில்
அம்புவி தனிலே கருமம் அணுகாது என்று சொன்னேம்.

33. அத்தகைய சூனியங்கள் விலகப் பல சாந்திகள் செய்து, விரா டபனைப் பூசித்து, தன் மந்திரங்களை ஜபித்து, செப்புத் தகடு செய்து, அதில் பீஜாட்சரத்தை வரைந்து, அவள் அதை அணிந்து கொண்டால், இவ் வுலகில் மந்திரப் பிரயோகங்களினுல் ஏற்படும் துன்பங்கள் இவளை யணுகா என்று கூறினேம்.

34. முன்சொன்ன பெண்ணின் சாபம் முயன்றதால் இச்சென் [மத்தில்
தன்னுடை வரனின் கூடச் சாதகி சேதுக் கேகி
அன்புடன் தீர்த்தம் தோய்ந்து அனேகவா லயங்கள் [சென்று
இன்னவ ளுள்ளூர் மீண்டு இவள்சுக்கிர வாரம் தன்னில் ;

34. முன் சொன்ன பெண்ணின் சாபம், இவளை இச்சென்மத்தில் வந் தடைந்ததால், இவள் தன் கணவனுடன் சேதுவுக்குப்போய் கடலில் நீராடி, பல புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை சென்று, இறைவனைத் தரிசித்துவிட்டு, தன்னூர்வந்து, வெள்ளி தோறும் ;

35. ஓராண்டு விரத நோன்பு உத்தமி கொள்வா ளாகில்
சீரான புத்திர ருண்டு செயித்திடு வயது தீர்க்கம்
நேராக யிரண்டு சாந்தி நிமலியும் செய்வா ளாகில்
பேரான புத்திர ருண்டு பேசுவோம் வயது தீர்க்கம்.

35. ஓராண்டு விரத மிருந்து வருவாளாயின், இவளுக்குப் புதல்வர் தோன்றி தீர்க்கமாக இருப்பர். விதிப்படி இரண்டு சாந்திகளையும் இவள் செய் வாளாஞல் மேன்மையான புதல்வர் தோன்றுவர். நீண்ட ஆயுளைப் பெற் றிருப்பாள் என்று சொல்லுவோம்.

36. அப்புத்திரர் தாமு மேதான் ஐந்துக்கு மேலாய்த் தோன்றும்
செப்பின கிரிகை தானும் செல்வதி செய்யா ளாகில்
மப்புடன் புதல்வர் காணுள் வித்தகி கருமி என்றோரும்
ஒப்புடன் முனிவர் கூற உரைக்கின்றுள் அம்மன் தானும்

36. அப்படித் தோன்றும் புதல்வர் ஐவருக்கு மேலாவர். நாம் கூறிய சாந்திகளைச் செய்யாளாயின் புத்திரர் தோன்றார். அவள் மலடி யாவாள். இவ்வாறு பொருத்தமாக முனிவர் கூற, பார்வதி கேட்கலானுள்.

37. சாதகன் முன்சென் மத்தைச் சாற்றுவீ ரென்று கேட்க
நீதியாய் முனிவர் தாமும் நிகழ்த்துவார் தில்லை தன்னில்
நீதியாய்ச் சத்திரிய குலத்தில் நிலபுல மதிகம் பெற்று
மாதவன் தனைத்து தித்து மனவிமைத் தருமுண் டாகி :

37. ஜாதகன் முன் சென்மத்தைக் கூறுங்கள் என்று கேட்க, முனிவரும் கூறுகின்றார். சிதம்பரத்தில், க்ஷத்திரிய குலத்தில் தோன்றி, நிலபுலன்களை மிகுதியாகப் பெற்று, திருமாலைப் பூசித்து, மனைவி மக்களையுமடைந்து ;

38. வருவோர்க்கு அன்ன மீந்து வள்ளல்மேல் பத்தி பூண்டு
பெருமடம் கட்டி வைத்துப் பிசகிலா திருக்கும் பின்பு
உரிமையாய் மரண மாகி உறைந்தன னிவனே யம்மா
வருவது சென்மம் தன்னை வகுக்கின்றோம் மேலுங் கேளே.

38. தன் வீடு தேடி வருபவர்களுக்கு உணவளித்து, இறைவன் மேல் பக்தி பூண்டு, பெரிய மடங்களைக் கட்டி, குற்றமில்லாது வாழ்ந்து, மரணமடைந்து, மீண்டும் பிறந்தவன் இவனே ஆவான். வரும் பிறவியைக் கூறுவோம். மேலுங்கேளுங்கள்.

39. பின்சென்மம் காஞ்சி தன்னில் பிறந்ததுமே இக்கு லத்தில்
மன்னரால் அரசு பெற்று மனவிமைத் தருமுண் டாகி
உன்னத மாக வாழ்வன் உத்தமர் சொல்லும் போது
கன்னென சொல்லு முள்ள காதலி கேட்க லுற்றாள்.

39. பின் சென்மம், காஞ்சீபுரத்தில், இதே குலத்தில் தோன்றி, அரசாங்க உத்தியோகம் பெற்று, மனைவி மக்களையடைந்து, மேன்மையாக வாழ்ந்து வருவான். இவ்வாறு முனிவர் கூறும்போது, இனிய மொழிகளையுடைய பார்வதி கேட்கலானாள்.

40. இச்சென்மம் தன்னி லேதான் இவன்பலன் சொல்வீ ரென்று
பச்சைமால் தங்கை கேட்கப் பகருவார் முனிவர் தாமும்
இலச்சைகள் சிலவே உண்டு கன்மன வருத்தம் நேரும்
மிச்சமாம் நிந்தை யுண்டு விளம்புவோம் மேலும் கேளே.

40. இப்பிறவியில் இவனது பலன்களைக் கூறுங்கள் என்று திருமால் தங்கையாகிய பார்வதி கேட்க, முனிவரும் கூறுகின்றார். துன்பங்கள் சிலவே ஏற்படும். கல் மனத்திற்குக் கஷ்டங்கள் ஏற்படும். நிந்தையான பழியுமுண்டு. மேலும் கூறுவோம் ; கேளுங்கள்.

41. தந்தையின் மரண காலம் சாற்றுவோம் இருபான்
[ரெண்டில்
பின்னையும் அன்னே காலம் பேசுவோம் மூப்பா னுவில்
எம்மையே இவனின் காலம் இயம்புவோம் எழுபான்
[ஒன்றில்
வந்ததோர் துலாமா தத்தில் வருமமா வாசை தன்னில் ;

41. தந்தையின் மரண காலத்தைக் கூறுவோம். ஜாதகனின் இருபத்தி ரண்டாம் வயதில் தந்தை மரணமடைவான். இவனுடைய மூப்பத்து நான்காம் வயதில் தாய் மரண மடைவாள். இவன் இறக்கும் காலத்தைக் கூறுவோம். எழுபத்தொன்றும் வயதில், ஐப்பசி மாதம், அமாவாசை திதியில்

42. வாதரோ கத்தி னுலே மரணமே யாவா னென்றேரும்
மேதினில் ஐம்பா னுவில் வித்தகி மனேயா னுய்வாள்
தீதிலா முனிவர் கூறச் செயமுனி கேட்க லுற்றூர்
சாதகன் தனக்குப் புத்ரர் சாற்றுவீர் என்று கேட்க ;

42. வாத ரோகத்தால் இவன் மரணமடைவான் என்று கூறினேர். இவனுடைய ஐம்பத்து நான்காம் வயதில், இவன் மனைவி இறப்பாள், என்று குற்றமற்ற முனிவர் கூற, செயமுனி கேட்கலானூர். ஜாதகனுடைய புத்திர பாவத்தைக் கூறுங்கள், என்று கேட்க,

43. பராசரும் சொல்லு கின்றூர் பாலகன் தனக்குப் புத்திரர்
உரமுள ஐந்த தாகும் ஒன்றுமே விருத்தி யில்லே
பொறுமையாய் முனிவர் கூறப் புசண்டரும் கேட்க லுற்றூர்
திறமையாய் அந்தச் சேதி தெளிவாகச் சொல்லு மென்றூர்.

43. பராசரர் கூறுகின்றூர். ஜாதகனுக்குப் புத்திரர் ஐவர் தோன்று வர். அவர்களில் ஒருவரும் நிலையார் என்று சொல்ல, புஜண்டர், புதல்வர் கள் நிலைத்திராமைக்குரிய காரணத்தைச் சொல்லுங்கள் என்று கேட்டார்.

44. அஞ்சினுக் குடையோ னேடு [1]அரவுமே சேர்ந்து மேதான்
விஞ்சிய பத்தோ னேடு வீர்கருங் கோளும் கூடி
தஞ்சமா யிருப்ப தாலே சாற்றுவேன் விபர மாக
வஞ்சியும் மனேயா னுக்கு வந்ததோர் ஊழி யாலே ;

44. ஐந்தாமிடத்துக் குரியவனுன புதனுடன் கேது சேர்ந்து விருச் சிகத்திலும், பத்துக் குடையவனுகிய சனியுடன் இராகு கூடி விருஷபத்தி லும் தங்கி யிருப்பதாலும் கூறுவோம். தவிர, இவன் மனைவிக்கு ஏற்பட்ட முன் சென்ம தோஷத்தினுலும் ;

---

1. கேது.

45. புத்திரத் தோட மென்று புகலுவோம் புசண்ட ரேகேள்
சித்தமாய் முன்னுள் ஊழி செல்வனும் செய்வா னுகில்
குத்தங்கள் புத்திர னுக்குக் குணமுடன் செய்வா னுகில்
சித்தமாய் மதலே யொன்று தீர்க்கமாம் என்று சொன்னேம்.

45. புத்திர தோஷம் உண்டு என்று சொல்லுவோம்; புஜண்ட முனிவரே! கேளுங்கள். முற்பிறப்பில் ஏற்பட்ட தோஷங்கள் நீங்க, தகுதியாகப் பரிகாரங்கள் செய்வானுகில், புத்திர தோஷம் நீங்கி, நிச்சயமாய் ஆண் மகன் ஒருவன் பிறந்து தீர்க்கமாவன் என்று கூறினேம்.

46. மனைவிக்குப் புத்திர தோட மறைந்திட்டோம் இவனுக்
[கில்லே
இனையிலா மனைவிக் கேதான் இசைந்திட்டோம்
[பின்சென் மத்தை
அனையவே காசி பக்கல் அவள்சத்ரிய குலமு தித்துச்
சினமிலா வாழ்வா னென்றேம் செல்வியே மேலுங் கேளே.

46. மனைவிக்குப் புத்திர தோஷம் கூறினேம். அந்தத் தோஷம் இவனுக்கு இல்லே. ஒப்பில்லாத இவன் மனையாளின் மறு சென்மத்தைக் கூறுகின்றேம். காசிக்குப் பக்கத்தில், க்ஷத்திரிய குலசத்தில் பிறந்து, நல முடன் வாழ்ந்து வருவாள். பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

ஜாதகம் 27

1. மதிசுங்கன ஆட்டி லேற மங்கலன் மிதுனம் தங்க
சிகியுமே கடக மாகச் சிம்மத்தில் மன்னன் நிற்க
சனிதேளு கும்பம் ராகு சார்புதன் பானும் சேலில்[1]
விதிசென்மம் புல்லு மாக விளம்புவிர் பலனைத் தானே.

1. சந்திரனும சுக்கிரனும் மேஷத்திலும், செவ்வாய் மிதுனத்திலும், கேது கடகத்திலும், குரு சிம்மத்திலும், சனி விருச்சிகத்திலும், சூரியனும் புதனும் மீனத்திலும் தங்கியிருக்கும் நிலையில் விருஷப லக்கினத்தில் பிறந்த ஜாதகனின் பலனைக் கூறுவீர்;

<table>
<tr><td>புதன்
சூரியன்</td><td>சந்திரன்
சுக்கிரன்</td><td>லக்கினம்</td><td>செவ்வாய்</td></tr>
<tr><td>ராகு</td><td colspan="2" rowspan="2">இராசி
சக்கரம்</td><td>கேது</td></tr>
<tr><td></td><td>குரு</td></tr>
<tr><td></td><td>சனி</td><td></td><td></td></tr>
</table>

2. பார்வதி கேட்கும் போது பராசருஞ் சொல்லு கின்றூர்
சீர்புகழ் கிழக்கு மேற்கில் சிறந்தசந் நிதியின் வீதி
மேற்குமே வடக்குப் பார்வை பெருத்ததோர் ஊரி லேதான்
நேர்மையாண் சனன மாக நீணிலந் தனிலு தித்தான்.

2. என்று பார்வதி கேட்க, பராசர் சொல்லுகின்றூர். புகழ் பெற்ற பெரிய ஊரில், கிழக்கு மேற்கான சந்நிதித் தெருவில், மேற்கு வாசலில், வடக்குப் பார்த்த வீட்டில், ஆண் மகனாகப் பிறந்தான்.

3. மேற்கினில் முசல்மான் கோயில் விளங்கிய காளி மாரி
பார்க்கவே அதற்கு உத்ரம் படைமன்னர் இடம தாகும்
மேற்குமா காளி உத்ரம் நிகழ்பாஞ் சாலி தன்னில்
சீர்க்குணம் தும்பி யப்பன் செப்புவோம் கன்னி மூலை.

3. மேற்கில் பள்ளி வாசல். காளி கோயிலும் உள்ளது. அவற்றிற்கு வடக்கில் அரசனுடைய படை வீடுளது. காளி கோயிலுக்கு வடக்கில்,

---

1. மீனராசி.

திருவளபதியம்மன் கோவிலும், தென்மேற்கு மூலையில் விநாயகர் கோவிலும் உள்ளன.

4. இன்னமும் பலதே வாசம் இலகிய பேரூர் தன்னில்
மின்னிய இந்தப் பாலன் மகமது குலத்தி லேதான்
அன்னவன் உதித்தான் தந்தை அன்னையின் யோகம் தானும்
துன்னிய மாமன் புத்திரர் துலங்கிய சகோதர யோகம் ;

4. இன்னும் பல தெய்வங்கள் வாசஞ் செய்யும் பெரிய ஊரில், மகமதிய வமிசத்தில், இந்த ஜாதகன் பிறந்தான். ஜாதகனுடையவும், தந்தை தாய் மாமன் புத்திரர் சகோதரர் முதலியோர்க ளுடையவுமான யோகங்களையும்,

5. களத்திர யோகம் தானும் கழறுவோம் முன்பின் சென்மம்
வளர்த்தியாய்த் தந்தை சேதி வழுத்துவோம் இருநி றத்தான்
நலந்தரு வாயு தேகன் நலமுடன் குள்ள முள்ளான்
தளர்ச்சிகள் இல்லா னுகும் சரீரமும் கெட்டி யுள்ளான்.

5. மனைவியின் யோகம், முற்பிறப்பு, மறுபிறப்பு இவைகளையுஞ் சொல்லுவோம். முதலில் தந்தையின் குணத்தைக் கூறுவோம். கரிய நிற முடையவன். வாயு தேகத்தான். குள்ளனுவன். சோர்வு இல்லாதவன். உறுதியான உடலுடையவன்.

6. பித்தசூ டுடைய னுவன் பிரபல கீர்த்தி கொள்வன்
உத்தமர்க் கினிய னுவன் உறுதியா மனத்த னுகும்
எத்திசை புகழ வாழ்வன் எதிரியை செயிப்ப னுகும்
நித்தியம் சுகபு சிப்பன் நிதானமாய் வார்த்தை சொல்வன்.

6. பித்த சூடு உடையவன். மீகுதியான புகழுடையவன். நல்லோருக்கு நண்பன். திடமான மனமுடையவன். உலகத்தோர் புகழும்படி வாழ்ந்திருப்பான். விரோதிகளைச் செயிக்கக் கூடியவன். தினமும் நன்கு புசிப்பான். மெதுவான வாக்குடையவன்.

7. செட்டுடன் கிரியை செய்வன் சினங்கள்மேல் பட்ச
[முள்ளான்
மட்டது எடுத்த வேலை வகையுடன் முடிப்பான் கண்டாய்
திட்டமாய் எவர்க்கும் நேயன் சிக்கிரக் கோப முள்ளான்
துட்டர்கள் உறவு கொள்ளான் சோம்பிடான் காரி யத்தில்.

7. வியாபாரங்கள் செய்வான். உறவினர் மீது பிரியமுடையவன். எடுத்த காரியத்தைத் திறமையுடன் முடிப்பான். எல்லோருக்கும் நண்பன். முன்கோபி. நியாயம் நட்பு இல்லாதவன். சோம்பலில்லாதவன்.

8. தந்தையின் ஆஸ்தி யில்லான் தரித்திர முந்தி யுள்ளான்
இந்துக்கள் மனுக்க ளாலே இயலுடன் சுகமே யுண்டு
வந்தவர்க் கன்ன மீவன் வாகன முடைய னவன்
சிந்தையில் கபடு மில்லான் செனங்களுக்குக் குதவி
[செய்வான்.

8. தகப்பனாால் தேடிவைக்கப்பட்ட பொருளில்லாதவன். முன்னால் தரித்திரனாக இருப்பவன். அரசர்களால் நன்மை யடைவான். தேடி வந்தோருக்கு அன்ன மளிப்பான். வாகன வசதி உடையவன். வஞ்சனை யில்லாத நெஞ்சினன். உபகாரி.

9. வண்டிவா கனமு முள்ளான் வர்த்தகம் செய்வா னுகும்
குண்டைகோ விருத்தி யுள்ளான் கூவலுஞ் சோலை வைப்பான்
எண்டிசைக் கீர்த்தி கொள்வன் ஏழையை யாத ரிப்பன்
தண்டமிழ்க் கல்வி கொஞ்சம் சத்தியந் தப்பா னுமே.

9. வண்டி முதலான வாகன வசதிகள் உடையவன். வியாபாரம் செய்வான். பசு, எருதுகள் அதிகமாக உடையவன். தோட்டம், கிணறு செய்வான். பூமியில் புகழுடையவன். ஏழைகளின் மேல் பிரியமுள்ளவன். சிறிதளவு தமிழ்க் கல்வி கற்பான். சத்தியந் தவற மாட்டான்.

10. பூமியில் பெருமை யுள்ளான் புண்ணிய மனத்த னுகும்
சாமிமேல் பத்தி மானும் தானுமே பொறுமை யுள்ளான்
சேமமும் பின்னல் உள்ளான் சித்திர வீடும் செய்வான்
சோமனை அணிந்தோன் தேவி சொல்லுவோம் மேலும்
[கேளே.

10. உலகத்தில் பெருமை யுடையவன். நல்ல மனமுள்ளவன். கடவுள் பக்தி யுடையவன். அடக்க மானவன். பின்னல் சுக முடையவன். அழகிய வீடு அமைப்பான். சந்திரனைத் தலையில் அணிந்த சிவபெருமானின் தேவியே! கேளுங்கள்.

11. சுயசன விரோத முள்ளான் சருக்கினில் கோபம் கொள்வன்
நயமதாய் வார்த்தை கூர்வன் நாடெலா மிட்ட முள்ளான்
பயமிலான் எதிரி கட்குப் பட்சமும் மனையாள் நேயன்
கயம்போல நடையு முள்ளான் கரமதில் ரேகை யுள்ளான்.

11. தன்னுடைய உறவுமுறையினரே விரோதியாவர். முன்பு கோபமடைந்து விரைவில் சாந்த மடைவான். இனிமையாகப் பேசுவான். நாட்டிலுள்ளோருக்கு அன்பன். பயமில்லாதவன். எதிரிகளிடமும் அன்பான

வன். மனைவிக்குப் பிரியனுவன். யானை போல் கம்பீரமான நடையுடைய வன். இவன் கையில் ரேகை உண்டு.

12. *தயிநெய்பா லிட்ட முள்ளான் தன்வசம் பொருளு*
[முள்ளான்
சதியொரு வருக்குஞ் செய்யான் சஞ்சல மனத்த னுமே
அதிசயம் வார்த்தை சொல்வன் யாரையு மிட்டங்
[கொள்வன்
நிதியுமே தேட வல்லான் நித்திரை யல்ப முள்ளான்.

12. தயிர், நெய், பால் இவைகளில் விருப்ப முள்ளவன். தன்னிடம் பொருள் இல்லாதவன். ஒருவருக்கும் கெடுதல் எண்ணுதவன். எவருக்கும் தன்பஞ் செய்ய நினையான். சஞ்சலம் பொருந்திய மனத்தினன். திடுக்கி டும்படி வார்த்தைகளைப் பேசுவான். எவரையும் வசப்படுத்துவான். பொருள்களைச் சம்பாதிப்பதில் வல்லவன். சிறிதே உறக்கம் உள்ளவன்.

13. *இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோ மைவ ராகும்*
அவனியி லாண்பா லொன்று அன்புள கன்னி யொன்று
நவனியி லிரண்டு சேதம் நாயகி அன்னை சேதி
கவனமா யுரைக்கக் கேளாய் காதலி கருதி றத்தாள்.

13. இவனுடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுவோம். அவர்கள் ஐந்து பேர். ஓர் ஆண் மகனும், ஒரு பெண்ணும் சேதமடைவர். அன்னை யின் குணத்தைப் பற்றிச் சொல்லுவோம். தாயே! கேளுங்கள். அவள் கருமை நிற முடையவள்.

14. *வணக்கமு முடைய ளாகும் வரனுக்கு நேய முள்ளாள்*
இணக்கமாய் வார்த்தை சொல்வாள் இடுக்கண்க ளில்லா
[நெஞ்சம்
அனையவே கற்பு முள்ளாள் ஆண்டவர் பத்தி யுள்ளாள்
துணைவர்கள் விபரம் தன்னைச் சொல்லுவோம் மேலுங்
[கேளே.

14. பணிவுடையவள். கணவனுக்கு விருப்பமானவள். தணிவான வார்த்தைகளைப் பேசுவாள். தன்பங்களில்லாத மன முடையவள். கற்பு டையவள். கடவுளின் மீது பக்தி யுள்ளவள். தாயின் உடன் பிறந்தவர்க ளைப் பற்றிச் சொல்லுகின்றோம். கேளும்.

15. அன்னையின் துணைவர் தம்மை அறைகின்றேரும் நவம
[தாகும்
பின்னையும் ஆண்பா லொன்று பேசுவோம் கன்னி யொன்று
கன்னிய மூன்று தீர்க்கம் கேடுமே மற்ற தெல்லாப்
சொன்னசொல் குன்றி டாது சுந்தரி கேளு மாதே.

15. தாயாரின் சகோதர பாவத்தைச் சொல்லுவோம். ஒன்பது பேர். ஆண்மகன் ஒருவனும், பெண் ஒருத்தியுமாக இவளுடன் மூவரைத் தவிர, மற்றவர்கள் சேதமாவர். நாங்கள் சொல்லியவை தவறு. தாயே! கேளுங்கள்.

16. சாதகன் நிறங்கு ணத்தைச் சாற்றுவே மிருநி றத்தான்
பாதக மொருவர்க் கெண்ணுன் பசிபொருன் சாந்த
[முள்ளான்
சீதள முகத்தா னுதும் செந்திரு வாச முள்ளான்
சோதிபோல் முகத்தி லேதான் தோன்றிடு மருவு தானே.

16. ஜாதகனின் நிறம், குணம் இவைகளைப் பற்றிச் சொல்லுவோம். பிறருக்குக் கெடுதல் எண்ணுதவன். கரிய நிற முடையவன். பசி பொறுக்க மாட்டான். அமைதி யுடையவன் குளிர்ந்த முக முடையவன், இலட்சமீ கடாட்ச முள்ளவன். முகத்தில் பிரகாசமான மச்ச முள்ளவன்.

17. யோகவான் கோப முள்ளான் உத்தமர் நேசங் கொள்வான்
தேரகைமேல் விருப்ப முள்ளான் துணைவரை யாத ரிப்பன்
சோகரம் பொருளும் சேர்ப்பன் சித்திர வீடும் சேர்ப்பன்
சாதக வார்த்தை சொல்வன் சந்ததி அதிக மில்லான்.

17. அதிர்ஷ்ட முடையவன். கோபங் கொள்வான். பெரியோர்களின் கட்டளைக் கொள்ளுவான். மனைவிக்கு அன்பனுவன். சகோதரர்களை ஆதரிப்பான். கிரம்பப் பொருளும் சம்பாதிப்பான். அழகிய வீடு கட்டுவான். அனுகூலமாய்ப் பேசுவான். குழந்தைகள் அதிக மில்லாதவன்.

18. நஞ்சையும் புஞ்சை யுள்ளான் நவமான செட்டு முள்ளான்
வஞ்சகம் ஒருவர்க் கெண்ணுன் வாயுமே தேக முள்ளான்
ரிஞ்சவே கருமம் செய்வன் மேலதாய் வார்த்தை கூர்வன்
தஞ்சமாய் அடைந்தோர் தம்மைத் தானுமே காப்ப னுமே.

18. நன்செய், புன்செய் நிலங்களுடையவன். புதிதான வியாபாரங்கள் செய்வான். ஒருவருக்கும் வஞ்சனை செய்யாதவன். வாயு தேகத்தன். சிறந்த செயல்களைப் புரிவான். மேன்மையான சொற்களைப் பேசுவான். அடைக்கலமென்று வந்தவர்களை ஆதரிப்பான்.

19. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோம் மாண்பால் [ரெண்டு
அவனியில் கன்னி அவ்வார் அறைந்தனம் தீர்க்க மாக
தவமையாய்ப் பிதாசென் மத்தைச் சாற்றுவேன் இனிமே [லாகச்
சிவனிடப் பாகத் தாளே செல்வியே மேலுங் கேளே.

19. இவனுடைய உடன் பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். ஆண்கள் இருவர். பெண்களும் இருவர். நால்வரும் தீர்க்கமா யிருப்பர். இனி, இவனுடைய தந்தையின் பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். சங்கர னின் இடப்பாகத்தில் தங்கியுள்ள உமாதேவியே! மேலுங் கேள்.

20. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் விரிஞ்சி [நாட்டில்
பந்தமாய் வன்னிய ருகப் பாலர்கள் மனைவி யுண்டாய்ச்
சிந்தையுந் தர்ம வாணுய்ச் செல்வனுந் தண்ணீர்ப் பந்தல்
சந்ததம் வருவோ ருக்குத் தானவ னளித்து வந்தான்.

20. தகப்பனாரின் முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். விரிஞ்சி நாட்டில், வன்னியர் குலத்தில் பிறந்து, மனைவி மக்கள் உண்டாகி, தரும சித்த முடையவனும், தாகந் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தல் வைத்து, வருவோ ருக்குத் தண்ணீர் கொடுத்து வந்தான்.

21. இதுவலால் மதுரை தில்லை இன்பமாய் நாகூர் சென்று
அதிபனும் அருச்சித் தேத்தி அதிபனும் மீண்டு வந்தான்
சதிருட னுண்ட வர்தஞ் சந்நிதி மூன்று ஆண்டு
பதியுடன் வருவே னென்று பரிவுடன் சொல்லி வந்தான்.

21. இது தவிர, மதுரை, சிதம்பரம், நாகூர் முதலிய ஸ்தலங்களுக் குச் சென்று, அவ்விடங்களில் கோயில் கொண்டுள்ள கடவுளர்க்கு அருச்சனை முதலானவைகள் செய்து போற்றி, உள்ளூருக்குத் திரும்பினான். வரும் போது, நாகூர் ஆண்டவன் சந்நிதிக்கு மனைவியுடன் மூன்று வருஷங்கள் வருவேனென்று பிரியமாகச் சொல்லி வந்தான்.

22. வந்தவ னிரண்டு ஆண்டில் வகையுடன் சென்று னங்கே
சுந்தரன் மூன்று மாண்டில் சோர்ந்துமே மரண மானுன்
அந்ததோர் கடனைத் தானும் அவனுமே செய்யா தாலே
விந்தையா யிக்கு லத்தில் மேதினில் உதித்தா னம்மா.

22. அங்ஙனம் மனைவியுடன் இரண்டு வருடங்கள் சென்றான். மூன் றாவது வருஷத்தில் மரணமடைந்தான். மூன்றாவது ஆண்டு வருவதாகச்

சொன்ன கடமையைச் செய்ய வியலாததால், இந்தக் குலத்தில் பிறந்தான் என்று சொன்னேம்.

23. அறுவரிவ் வாருய்க் கூற அன்புடன் விசுவா மித்திரர்
சுறுசுறுப் பாக வேதான் சொல்லுவார் முன்சென் மத்தில்
பெருகிய வன்னிய வம்சம் பிறந்துமே பின்சென் மத்தில்
வருவது மிலேச்ச சாதி வந்தகா ரணங்க ளென்ன.

23. இவ்விதம் ஆறு முனிவர்கள் சொல்ல, பிரியமுடன் விசுவாமித்திர முனிவர் கூறுகின்றார். முற் பிறவியில் வன்னியர் குலத்தில் பிறந்து, மறு பிறவியில் மகம்மதிய வமிசத்தில் பிறக்கும் காரணங்கள் என்ன ? என்று கேட்டார்.

24. சொல்லுவேன் கேளு மய்யா சுதனுமே நாகூ ரார்க்கு
மெல்லியு மூன்று ஆண்டு வருகிறே னென்று சொல்லி
வல்லவ னிரண்டு ஆண்டு வந்துமே பின்பு தானும்
இல்லையே பின்பு தானும் இக்நலந் தனிலு தித்தான்.

24. சொல்லுவேன், கேளுங்கள் ஐயா. இம் மகன் நாகூர் ஆண்டவனுடைய ஆலயத்துக்கு மூன்று ஆண்டுகள், மனைவியோடு வருவதாகச் சொல்லி இரண்டு வருஷங்கள் மட்டும் வந்து, மரண மடைய நேரிட்டததால் இந்தக் குலத்தில் பிறந்தான்.

25. சாமியை ஒன்றைத் தானும் தயவுடன் தொழுது வந்து
நேமியில் வேறோர் தெய்வம் நிமலனும் நினைக்கா வண்ணம்
பூமியில் இருப்பா யென்று புனிதனர் சாபம் செய்தார்
காமனை எரித்தோன் தேவி கனமுடன் கேளுந் தாயே.

25. நாகூரில் சோறில் கொண்டுள்ள இறைவன் ஒருவனையே தொழுது வந்து, வேறு தெய்வத்தைத் தொழாமல் பூமியில் இருந்து வருவாய் என்று ஆண்டவன் சாபமிட்டார். மன்மதனை எரித்த சிவபெருமானின் தேவியே ! கேளுங்கள்.

26. பின்சென்மம் எவ்வா றென்னப் பேசுவோம் காஞ்சி தன்னில்
இன்னவன் அருகர் வம்சம் எழிலுடன் உதித்து மேலும்
மின்பொருள் அதிகம் பெற்றுப் புண்ணியன் தவமும் [செய்து
தன்னினத் தார்க்கு மேலாய்ச் சாதகல் வாழ்வா னம்மா.

26. மறு சென்மம் எப்படி என்று வினவ, காஞ்சீபுரத்தில், ஜைனர் வமிசத்தில் பிறந்து, செல்வங்கள் அதிகமுண்டாகி, நல்வினைகள் பலசெய்து, தன் இனத்தவர்களுக்கு மேலாக வாழ்ந்து வருவான்; தாயே !

27. அன்னையின் முன்சென் மத்தை அடைவுடன் சொல்லக்
[கேளாய்
பன்னிய தில்லை தன்னில் பெருத்தயில் இக்கு லத்தில்
தன்னிலே பிறந்து மேலும் சத்தியத் துடனே வாழ்ந்து
மண்ணுமூழ் வினையில் லாமல் வந்தவ ளிவளே யம்மா.

27. தாயாரின் முற்பிறப்பைச் சொல்லுவோம். சிதம்பரத்தில், மிகப் பெரிய வீட்டில், இக்குலத்தில் பிறந்து, உண்மையுடன் வாழ்ந்துவந்து, முற் பிறப்பில் ஏற்பட்ட தீவினையில்லாமல், இப்பிறப்பில் பிறந்தவள் இவள் என்று சொன்னேனும்.

28. மறுசென் மம் [1]தவளை தென்பால் வளமுள சித்தூர் தன்னில்
திருவுசெங் குந்தர் வமிசம் தேவியு முதிப்பா ளென்றும்
அறுவருஞ் சொல்லும் போது அத்திரி முனியும் சொல்வார்
வரும்பாலன் முன்சென் மத்தை வழுத்துவீ ரென்று
[கேட்டார்.

28. மறுபிறப்பு, தவளை மலைக்குத் தெற்கில் செழிப்புள்ள சிறிய ஊரில், அழகிய செங்குந்த வமிசத்தில் பிறப்பாள் என்று கூறினேம். இவ் வாறு ஆறு முனிவர்களும் சொல்லும்போது, அத்திரி முனிவர் கேட்கின் றார். ஜாதகனின் முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுங்கள்.

29. மதுரையில் கள்ளர் வம்சம் வகையுட னுதித்துப் பாலன்
நிதமுமே கிருஷி யுண்டாய் நிமலனும் பொருளுந் தேடிப்
புதுமையா யறமுந் தேடி யனேகபுண் ணியங்கள் செய்தும்
விதமுடன் உதித்த பாலன் மேதினில் இவனே யம்மா.

29. மதுரையில் கள்ளர் வமிசத்தில் பிறந்து, பயிர்த்தொழில் செய்து, பொருள்கள் சம்பாதித்து, தான தருமங்கள் செய்து, புண்ணியங்கள் பல இயற்றி வாழ்ந்துவந்து, இப்பிறப்பாகப் பூமியில் பிறந்தவன் இவன்; தாயே!

30. எழுவரும் சொல்லும போது ஈச்வரி மனத்தில் சங்கை
தொழுதுமே முனிவர் சொல்வார் சுருதியை ஆய்ந்து நன்றாய்
பழுதுண்டு எவ்வா றென்னப் பாலகன் கள்ளர் வம்சம்
நிழுவியே இச்சென் மத்தில் நாயகன் மிலேச்சர் வம்சம்;

30. எழு முனிவர்களும் இவ்வாறு கூறினர். பார்வதி தன்மனத்தில் ஏற்பட்ட, சந்தேக மொன்றைக் கேட்கின்றாள். அம்மனத் தொழுது, சோதிட சாஸ்திரத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்து, முனிவர் கூறுகின் றார். ஒரு தோஷம் உண்டு. கள்ளர் வமிசத்தில் பிறந்த இப்பாலகன், இப்பிறவியில் மகமதிய வமிசத்தில் பிறந்தது ஏன்?

31. வந்தகா ரணங்க ளென்ன வழுத்துவாய் முனியே என்முள்
சுந்தரி தமக்குத் தாமும் சொல்லுவார் முன்சென் மத்தில்
விந்தையாய்ப் பதியுந் தானும் மிக்கவே லீலை செய்து
பிந்தியே ஞான மின்றிப் பிள்ளையா ராலை யத்தில்;

31. காரணங்களைச் சொல்லுவீர், முனிவரே! அழகிய பார்வதிக்கு, முனிவர் சொல்லுகிறார். முற்பிறவியில் இவனும் இவன் மனைவியும், பல போகங்களை அனுபவித்துவிட்டு, நீராடாமல் விநாயகர் கோவிலுக்குச் சென்று;

32. தரிசித்து வந்த காலஞ் செப்பிலுன் தும்பி யப்பன
வரைய வே பிற்சென் மத்தில் மகமதிய குலத்தி லேதான்
அரியநீ பிறந்து மேதான் ஆண்டவன் தனைத்து திப்பாய்
சரிசரி பிற்சென் மத்தைச் சாற்றுவீர் என்று கேட்டாள்.

32. சுவாமி தரிசனம் செய்யும்போது, விநாயகர் சொல்லுகின்றார். மறு சென்மத்தில் நீ மகமதிய குலத்தில் பிறந்து, நாகூர் ஆண்டவனைப் பூசித்து வருவாய். இவன் மறு சென்மத்தைப் பற்றிக் கூறும் என்று பார்வதி கேட்டாள்.

33. பட்சிமா நகரந் தன்னில் பாலனும் வைசிய குல
உச்சித மாக வந்து உதிப்பனு மிவனே யம்மா
இலச்சைக ளில்லா னுகி நயமுடன் பொருள னேகம்
உச்சித மாகப் பெற்று உத்தமன் வாழ்வா னம்மா.

33. திருக்கழுக்குன்றத்தில், இந்த ஜாதகன், வைசிய குலத்தில் பிறப்பான். துன்பங்கள் இல்லாதவனுக, மிகுதியாகப் பொருள் பெற்று, நல்லோனுக வாழ்ந்திருப்பான்; தாயே!

34. ஈசர்க்குத் தொண்டு மேதான் இவனுமே செய்வா னுகும்
நேசமாய் மனையாள் மக்கள் நிகருடன் இருந்து பின்பு
காசியும் ராம லிங்கம் கனத்திடு தீர்த்த மெல்லாம்
ஆசையாய்ப் பார்க்க வல்லான் அம்மையே மேலுங் கேளே.

34. பரமசிவனுக்குத் தொண்டுகள் பல செய்து வருவான். மனைவி மக்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்து, காசி, இராமேசுவரம் முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்கு பக்தியுடன் யாத்திரையாகச் செல்லுவான். தாயே! மேலும் கேளும்.

35. யோகமு முடைய னுவன் உறவுடன் பொருள னேகம்
தேகமே வலிவு முள்ளான் திருமகள் வாச மாகும்
தோகையு மிருவ ருள்ளான் சிலுக்குடன் கோப மாவான்
நோகவே உரைக்க மாட்டான் நுண்ணிய புத்தி சாலி.

35. நல்ல யோக முடையவன். உறன்முறையார்களோடு மிகுதி யாகப் பொருளும் அடைந்தவன். உறுதியான தேகக் கட்டுடையவன். இலட்சுமீ கடாட்ச முண்டு. மிகுந்த செல்வமுடையவன். இரு மனைவியர் உள்ளவன். சீக்கிரத்தில் கோபமடைந்து சாந்தமாவான். பிறர் மனம் புண்படப் பேசான். கூர்மையான அறிவாளி.

36. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோம் பதின்மூன்
[றுண்டுள்
நேமியாய் வடக்குத் திக்கில் நிமலியும் வருவா ளென்றோம்
நாதனார் பத்தி மாளும் நன்னெறி யுடைய ளாவள்
பாதக மெண்ணு நெஞ்சம் பார்வதி மேலுங் கேளே.

36. ஜாதகனுடைய திருமண காலத்தைச் சொல்லுவோம். பதின் மூன்றும் வயதுக்குள், வடக்குத் திக்கிலிருந்து மனைவி வாய்ப்பாள் என்று சொன்னோம். சிவபெருமானிடம் பக்தி யுள்ளவள். ஒழுக்க முடையவள். பிறருக்குக் கெடுதல் நினையாத மனமுடையவள், பார் வதியே! மேலும் கேள்.

37. உதித்தசெய்ச் சனனம் தொட்டு ஒருமூன்று ஆண்டுக்
[குள்ளே
பதியது சேத மாகும் பந்துவும் பகையுங் கொஞ்சம்
நிதியுமே கடனு மாகும் நீணிலம் வந்து சேரும்
அதிசயப் சுகங்கள் பின்னுல் ஆகுமென் றறைந்திட் டோமே.

37. இந்த ஜாதகன் பிறந்து மூன்று வருஷத்திற்குள் வீடு நஷ்ட மாகும். உறவினர்கள் விரோதம் சிறிது ஏற்படும். கடன் ஏற்படும். மிகுதி யாகப் பூமி சேரும். பின்பு, இவன் வாழ்க்கையில் பல அதிசய சுகழ்ச்சி களும், நலங்களும் உண்டாகும் என்று கூறினோம்.

38. சொன்னது மெய்தா னய்யா சுதனுக்குப் புத்திர பாவம்
மெல்லவே சொல்லு மென்ன மேதினில் விச்வா மித்ரர்
நல்லது ஆண்பா லொன்று நாயகி இருவ ருண்டு
கன்னலின் சுவையைப் போக்கும் காரிகை புகன்றிட்
[டோமே.

38. சொன்னவை உண்மையே. ஜாதகனின் புத்திர பாவத்தைச் சொல்லும், என்று வினவ, விசுவாமித்திரர் கூறுவார். ஆண் மகன் ஒரு வனும், பெண்கள் இருவரும் தோன்றுவர். கரும்பின் இனிப்பைக் குறைக் கின்ற இனிய சொற்களைப் பேசும் பார்வதியே! இவ்வா றாங்கள் சொல் லோம்;

39. பால்பசு மேலே யுண்டு பண்புடன் குணவி ருத்தி
சீலமாய்ச் செட்டு ஓங்கும் செகமதில் புகழு முண்டாம்
கோலமன் னர்க ளாலே கொஞ்சமும் நன்மை யுண்டாம்
ஆலம்போல் பகைவ ருக்கு அண்ணலும் கருட னுவன்.

39. நல்ல பால்தரும் பசுக்களும் உண்டு. ஒழுக்கத்துடன் குண மும் விருத்தியாம். வியாபாரங்கள் அதிகமாம். உலகில் கீர்த்தியுண்டு. அரசகளால் சிறிது நன்மை உண்டாகும். இந்த ஜாதகனும் பாம்புபோன்று கொடிய பகைவரை, கருடன்போல் வெல்லுவான்.


40. சுகத்துக்குப் பொருளும் தானும் சுருக்குடன் கொடுப்பா [னுகும்
அகத்தினில் குறைவு மில்லை ஆளடி வந்து சேரும்
சுகத்துக்கு நல்லோ னென்று தன்மமு முண்டு கண்டாய்
மிகத்துடன் வாழ்வா னம்மா மெல்லியே மேலும் கேளே.

40. பிறர் நலத்துக்காக விரைவில் பொருளுதவி செய்வான். குறை யான மனமில்லாதவன். வேலையாட்கள் மிகுதியாக இருப்பர். மிகுந்த சௌக்கியமுள்ளவனாக இருப்பான். தருமசிந்தனை யுண்டு. மென்மைத் தன்மையையுடைய தாயே! மேலும் கேள்.

ஜாதகம் 28

1. சந்திரன் மிதுனந் தங்கச் சார்குரு புதன்சேய் நண்டு
வந்திடு ரவியும் சுங்கன் [1]நள்ளிதேள் சிகியு மாக
மந்தனும் வில்லி லாக வருகயர் புல்லு தங்க
பந்தமா யிடபம் சென்மம் பகருவீர் பலனே என்று

1. சந்திரன் மிதுனத்திலும், குரு புதன் செவ்வாய் சூரியன் சுக்கிரன் ஆகியோர் கடகத்திலும், கேது விருச்சிகத்திலும், சனி தனுர் ராசியிலும், இராகு விருஷபத்திலும் தங்கி, இலக்கினமும் விருஷபமாக இருக்கும் இந்த ஜாதகப் பலனைச் சொல்லுங்கள் என்று;



2. பார்வதி கேட்கும் போது பராசரும் பகருகின்றார்
சீர்புக ழாண்பால் சென்மம் செப்புவோம் கீழ்மேல் வீதி
நேர்மையாய்த் தெற்கு வாடை நிகழ்த்துவோம் கணேசன்
[தேரு
சாற்றினேன் சிற்றூர் தன்னில் சைவர்தம் குலமு திப்பன்.

2. பார்வதி தேவி கேட்கும்போது, பராசர முனிவர் கூறுகின்றார். இது ஓர் ஆண்மகன் ஜாதகம். கிழக்கு மேற்கு வீதியில் இவன் பிறந்த வீடு தெற்கு வாட்டியிலுள்ளது என்று சொல்லுவோம். மேற்குத் திசையில் விநாயகர் கோயிலொன்று உண்டு. இவ்வாறான அடையாளங்கள் கொண்ட சிறிய ஊரில், செல்வர் குலமொன்றில், இந்த ஜாதகன் பிறப்பான்.

---

1. நண்டு; கடகம்

5. உத்திரம் காளி வாசம் உரைக்கின்றேரும் மாரி மீனம்
பித்தனும் தெற்கு மாயோன் பெரியவள் கன்னி மூலை
சித்தமாய்ச் சாலைக் கீழ்பால் செப்புமிவ் வடையா ளத்துள்
தப்பித மில்லா மல்தான் சங்கரி கேட்டி டாயே.

5. வடக்கில் காளிதேவி கோயிள்ளது. மாரியம்மன் கோயில் வட கிழக்கிலுள்ளது. சிவபெருமானும் தெற்குத் திசையில் எழுந்தருளியுள்ளார். திருமால், துர்க்கையம்மன் ஆகியோர் கோயில்கள் தென்மேற்குத் திசையி லுள்ளன. மக்கள் செல்லும் சாலையொன்று கிழக்குப் பக்கமுளது. சொல்லுகின்ற இவ் வடையாளங்களுள்ள விடத்தில் தவறுமல் இந்த ஜாத கன் தோன்றுவான், பார்வதியே! கேட்பாயாக.

4. சாதகன் யோகம் தானும் சாற்றிய அன்னை தந்தை
வேதனை மாமன் யோகம் விரும்பிய சகோதரி யோகம்
போதவே களத்திர புத்திரர் புகலுவோம் முன்பின்
[சென்மம்
நாதனு ரிடத்தில் வாழு மங்கையே மேலுங் கேள.

4. ஜாதகனது யோகங்கள், தாய் தந்தையர், ஜாதகனின் மாமன், சகோதரி ஆகியோரது யோகங்கள், மனைவி மைந்தர் செய்கிகள், இவர் களுடைய முற்பிறப்பு மறுபிறப்புக்கள் முதலியன அனைத்தையும் சொல்லு வோம். சிவபெருமானின் இடப்பாகத்தில் வசிக்கின்ற பார்வதி தேவியே! இன்னுங் கேள்.

5. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோ மிருதத்தான்
பந்தமாய்ச் சமவ ளர்த்தி பாரினி லுகை கொஞ்சம்
விந்தையாய்க் கிருஷி செய்வன் மேதினி விருத்தி கொள்வன்
வந்தவர்க் கன்ன மீவன் மர்மமும் உடைய னுமே.

5. இவனுடைய தகப்பனரின் குணத்தை நாங்கள் சொல்லுவோம். கரிய நிறமுடையவன். சமமான உடல் வளர்ச்சி யுள்ளவன். உலகில் சிறிது ஊக முள்ளவனுக விளங்குவான். விவசாயம் செய்வான். சிலபுலங்களை அபிவிருத்தி செய்வான். வீடு தேடி வந்தவர்கட்கு உணவு அளிப்பான். மர்மமான எண்ணத்தை யுடையவன்.

6. கோபமும் கொஞ்ச முள்ளான் குஞ்சர நடையு முள்ளான்
சோமமாய்க் குடும்ப முள்ளான் திருமகள் வாச முள்ளான்
சாமிமேல் பத்தி யுள்ளான் சஞ்சல மனத்த னுகும்
பூமியு மதிக முள்ளான் பெண்டுமே ரெண்டு முள்ளான்.

6. சிறிது கோப முடையவன். யானைபோன்று கம்பீர நடையுள்ள வன். தெளக்கியமான குடும்பத்தை யுடையவன். இலட்சுமீ கடாட்சமுள் ளவன். கடவுள்மீது பக்தியுடையவன். தன்பங்கள் நிறைந்த மனமுள்ள வன். நிலபுலன்கள் மிகுதியாக வுடையவன். இருமனைவியரைப் பெற்றவன்.

7. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோ மாண்பால்
[ரெண்டு
அவனியில் கன்னி யொன்று அன்புடன் தீர்க்கம் கண்டாய்
கவனமாய் மத்தி யத்தில் காளைகள் சேதங் கண்டாய்
நவனியில் பெண்பால் தீர்க்கம் நங்கையே மேலுங் கேளே.

7. தந்தையுடன் பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். ஆண்கள் இருவர்; பெண் ஒருத்தி தீர்க்க ஆயுளுடன் விளங்குவாள். இடைக்காலத் தில் சகோதரர்களுக்கு அழிவு நேரும். சகோதரி யொருத்தி நிறைந்த ஆயுளைப் பெற்றிருப்பாள். பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

8. இப்படி யிருக்கும் தந்தை இவனுக்குத் தாரம் ரெண்டில்
செப்புவோ மிளையா ளுக்குச் செனித்தவ னிவனே
[யென்றோம்
ஓப்புட னிவன்கு ணத்தை உரைக்கின்றோ மிருநிற த்தான்
தப்பித மெண்ணு நெஞ்சன் சங்கரி கேளும் தாயே.

8. இங்ஙனமாக இருக்கின்ற தந்தைக்கு, இரு மனைவியரில் இளைய வளுக்குப் பிறந்தவன் இந்த ஜாதகன் என்று கூறினோம். இவனது குணங் களைச் சொல்லுகின்றோம். கரிய நிறமுடையவன். தீங்கு நினையாத மன முள்ளவன். பார்வதியே! தாயே! கேளுங்கள்.

9. குள்ளமும் உடைய னுவன் கூறுமுன் கோபம் கொஞ்சம்
வள்ளல்மேல் பத்தி யுள்ளான் மர்மவா னிகை கொஞ்சம்
தெள்ளிதாய்ப் பொருளும் சேர்ப்பன் செகத்தினில் கீர்த்தி
[கொள்வன்
கள்ளமா மனமும் உள்ளான் காரிகை புகன்றிட் டோமே.

9. குள்ளமானவன். சிறிது முன்கோப முண்டு. கடவுள் பக்தியுட யவன். மர்மமான எண்ணமுடையவன். கொடைக் குணமும் சிறிதுண்டு. தேர்ந்த வழியில் பொருளைச் சேர்ப்பான். உலகில் புகழை எற்பான். வஞ் சனை மனமும் உள்ளவன். பெண்ணே! இவ்வாறு நாங்கள் கூறினோம்.

10. யோகமும் பின்னு லுள்ளான் உறுதியாம் மனத்த னுகும்
போகபோக் கியமு முள்ளான் பூமியில் கிருஷி செய்வன்
தோகைமேல் பிரிய முள்ளான் சோம்பலும் கொஞ்ச
[முள்ளான்
வேகமாய் நடக்க வல்லான் விசித்திர குணவா னுமே.

10. சிறிது காலத்துக்குப் பின்பு, இவனுக்கு யோகங்கள் ஏற்படும். திடமான மனத்தை யுடையவன். பல உயர்ந்த யோகங்களை அனுபவிப் பான். பயிர்த்தொழில் செய்வான். மனைவிமீது ஆசையுடையவன். சோம் பலும் சிறிதுள்ளவன். விரைவாக நடப்பதில் சிறந்தவன். மற்றவர்களி டம் காணப்படாத குணங்களைப் பெற்றவன்.

11. சித்திர வீடு செய்வன் சினங்கள்மேல் பட்ச முள்ளான்
நித்தியம் நெய்பா லிட்டம் நிலையாதைத் தவற மாட்டான்
புத்திமான் பொறுமை யுள்ளான் பிறந்திடம் தனக்கில்
[லாதான்
அத்திமா முகனைப் பெற்ற அம்மையே மேலுங் கேளே.

11. வேலைப்பாடுகள் அமைந்த அழகிய வீட்டைக் கட்டுவான். பந்து வர்க்கத்தினர் மீது விருப்பமுடையவன். தினந்தோறும் நெய், பால் இவற் றில் விருப்பங் கொள்ளுவான். தன் நிலையிலிருந்து தாழ்வடைய மாட்டான். புத்திசாலி. அடக்கமுள்ளவன். பிறந்த இடம் தனக்குச் சொந்தமில்லா தவன். யானைமுகக் கடவுளைப் புதல்வராக அடைந்த பார்வதியே! இன்னுங் கேட்பாயாக.

12. இன்னவன் அன்னை சேதி இயம்புவோ மால்நி றத்தாள்
தன்னவள் குள்ள முள்ளாள் தானவள் அதிர்ஷ்ட சாலி
பன்னியே உரைக்க மாட்டாள் பாலர்கள் உடையா ளாகும்
கன்னியும் பொறுமை யுள்ளாள் காதலி மேலுங் கேளே.

12. இவனுடைய தாயின் செய்தியைச் சொல்லுவோம். கரிய நிற முடையவள். குள்ளமானவள். அதிர்ஷ்ட முள்ளவள். பன்னிப் பன்னிப் பேசமாட்டாள். புத்தி பாக்கிய முடையவள். பொறுமை யுள்ளாள். பார்வதியே! மேலுங் கேள்.

13. கற்புமே உடைய ளாகும் கனதன முடையாள் மேலும்
நற்புத்தி யுடைய ளாகும் நன்முக வடிவு முள்ளாள்
அற்பர்கள் உறவு கொள்ளாள் அரன்பூசை செய்வா ளாகும்
விற்பன வீவேகி கட்கு மிருதுவாம மசாலலு முள்ளாள்.

13. கறபுடையவள். மதிப்பான செல்வ முள்ளவள். நல்ல புத்தி யுடையவள். முகத்தில் நல்ல லட்சண முள்ளவள். அற்பமானவர்கள் நட்பைக் கொள்ளாதவள். சிவபெருமானைப் பூசை செய்வாள். நல்ல கல்வியையுடைய விவேகிகளான சான்றோர்களிடம் மென்மையான சொற்களில் பேசுபவள்.

14. இவருடைத் துணைவர் தம்மை இயம்புவோம் ஆண்பால்
[நான்கு
நவனியில் கன்னி அவ்வார் நசித்தது பாதி தாமும்
கவனமாய் ஆண்பால் ரெண்டு கன்னியும் அவ்வார் தீர்க்கம்
சிவனிடப் பாகத் தாளே செல்வியே மேலுங் கேளே.

14. தாயின் உடன்பிறந்தார்களைச் சொல்லுவோம். ஆண்கள் நால்வர். பெண்களும் அங்ஙனமே நால்வர். இவர்களில் பாதிப்பேர் இறந்தனர். இரண்டு பெண்களும், இரு ஆண்களும் தீர்க்கமாக விளங்கினர். சிவபெருமான் இடப்பாகத்தில் வாழும் அம்பிகையே! இன்னுங் கேள்.

15. இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோ மிருபான்
[ஒன்றில்
அன்னவள் கன்னி மூலை அவளுமே வருவா ளென்றும்
நன்னய மவள்கு ணத்தை நாட்டுவோ மால்நி றத்தாள்
கன்னென வார்த்தை யுள்ளாள் காதலி ஓடிச்ச லுள்ளாள்.

15. ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இவனது இருபத்தோராம் வயதில், இவனுருக்குத் தென்மேற்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் குணங்களைச் சொல்லுவோம். கருநிற முடையவள். கரும்பு போன்ற இனிய சொற்களை யுடையவள். மெல்லிய உடலுள்ளவள்.

16. வரனுக்கு நேய முள்ளாள் வாக்குகள் தப்பா ளாகும்
வாக்குகள் சுத்த முள்ளாள் கரம்காலில் வலியு முள்ளாள்
கபடுமே கொஞ்ச முள்ளாள் கனமுடன் வார்த்தை
[சொல்வாள்
நிந்தைகள் உடைய ளாகும் பிறைபோலச் செல்வ
[முண்டாம்.

16. கணவனுக்கு விருப்ப மானவள். சொன்ன சொற்கள் தவறுதவள். சொற்களில் தூய்மை யுடையவள். கை கால்களில் அடையாளங்களுள்ளவள். வஞ்சனையும் சிறிதுடையவள். மதிப்பாகப் பேசுவாள். பழுக்கள் உள்ளவள். வளர்பிறைச் சந்திரன் போல் இவளுக்குச் செல்வம் வளரும்.

17. தந்தைதாய் முன்பின் சென்மம் சட்டமாய் மரண காலம்
வந்திடு மிரண்டாம் பாகம் வழுத்துவோம் அந்தச் சங்கை
எந்தையே இவன்சென் மத்தை இயம்புவோம் போரூர்
[தன்னில்
சந்ததம் வன்னிய குலத் தானவன் பிறந்தா னம்மா.

17. ஜாதகனின் தந்தை தாய் ஆகியோர்களது முன்சென்மம், பின் சென்மம் இவற்றை இரண்டாம் பாகத்தில் முறைப்படி சொல்லுவோம். ஜாதகனின் முற்பிறப்பைக் கூறுவோம். திருப்போரூரில் வன்னியர் குலத் தவனாகப் பிறந்தான்.

18. பூமியும் பெண்டு பிள்ளை புகழுடன் வாழ்ந்து மேலும்
சாமியாம் முருக னுக்குத் தினந்தீபம் ஒன்று வைத்து
நேமியில் ஓர்நாள் தன்னில் நினைப்பிலா மறந்து விட்டான்
தீமையாம் அந்தத் தோடம் சேர்ந்தது யிவனுக் கேதான்.

18. நிலபுலன்கள்பெற்று, மனைவி மக்கள் முதலியவர்களை யடைந்து, கீர்த்தியுடன் வாழ்ந்து, முருகக் கடவுள் கோயிலில் தினந்தோறும் தீபம் ஏற்றி வைத்து வந்தான். ஒருநாள் அங்ஙனம் செய்ய மறந்துவிட்டான். அந்தத் தோஷம் இவனைச் சேர்ந்தது.

19. இப்பாவம் எவ்வா றென்ன இயம்புவார் புசண்டர் தாமும்
தப்பிதம் வந்த தாலே சாதகன தனக்குப் புத்திரர்
துப்புறப் புத்திர ரில்லைச் சுருதியைப் பார்த்துச் சொல்வீர்
செப்புவோம் பெண்பால் ரெண்டு செல்வனு மில்லை தானே.

19. இதற்குப் பலன் என்ன என்று பார்வதி கேட்க, புஜண்ட முனிவர் கூறுவார். தீபம் வைக்காது தோஷம் ஏற்பட்டதனால், புத்திரர்கள் இல்லை. சோதிட சாஸ்திரத்தை நன்கு ஆராய்ந்து கூறுங்கள் என, அங்ஙனமே சொல்லுவோம். பெண்கள் இருவர் தோன்றுவர்; புதல்வன் இல்லை என்றனர் முனிவர்.

20. அஞ்சினிற் குடையோன் புந்தி அவருடன் குருசேய் கூடித்
தஞ்சமாய்க் கடகந் தங்கத் தரித்திடும் ஆண்பால் ஒன்று
துஞ்சாத பெண்பால் ரெண்டு துலக்கமாய் மூன்று தீர்க்கம்
நஞ்சணி சடையோன் பக்கல் நாயகி மேலுங் கேளே.

20. ஜாதகம்பிடத்துக் குரியவனை புதனுடன், குரு செவ்வாய் ஆகியோர் சேர்ந்து கடகத்தில் தங்கி யிருப்பதால், புத்திரன் ஒருவனும், பெண்கள் இருவரும் தோன்றுவர். இவர்கள் மூவரும் தீர்க்கமாக விளங்குவர். பாம்பணிந்த சடை முடியையுடைய சிவபெருமானின் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் தேவியே! கேட்பாயாக.

21. நாலினுக் குடையோன் பானு நண்டினில் இருக்கத் தானும்
நூலிடை நிகர மென்றுல் நுவலுவோ மாயி ரம்பொன்
சாலவே மரண காலம் சட்டமாய் உண்டு கண்டாய்
மேலதாய் நாங்கள் சொன்னேம் மெல்லியே கேளும் தாயே.

21. நான்காம் இடத்துக்கு உரியவனுகிய சூரியன், கடகத்தில் தங்கியிருப்பதால், படிப்பினுல் புகழ்பெற்று, இவன் இறக்கும் காலத்தில் ஆயிரம் பொன்களுக்குக் குறையாமல் பொருள் சேர்த்திருப்பான் என்று சொல்லுவோம். மேன்மையான பலன்களைக் கூறினேம். மென்மைத்தன்மை வாய்ந்த பார்வதியம்மனே! கேளுங்கள்.

22. மறுசென்மம் பனையூர் தன்னில் வைசியர் குலமு தித்துப்
பெருகிய பொருளும் பெற்றுப் பிரபல மாக வாழ்ந்து
உறன்முறை மெச்ச வாழ்ந்து உத்தமன் இருப்ப னுகும்
திறமையாய் உரைத்த வார்த்தை தேவியே மேலும் கேளே.

22. ஜாதகன் மறுபிறப்பில், பனையூரில் வைசியர் குலத்தவனுய்ப் பிறந்து, மிக்க செல்வத்தை யடைந்து, பிரபலமான வாழ்க்கையையும், உறவினர் பாராட்டுதலையும் பெற்று விளங்குவான். தகுதியாக நாங்கள் சொன்ன சொற்களாம் இவை. பார்வதி தேவியே! இன்னுங் கேட்பாயாக.

23. அட்டமும் [1]அரச னுகி அவனுமே கடக முச்சம்
சட்டமாயப் பலனைத் தானும் சாற்றுவோம் அறுபா னைந்தில்
வட்டமாய்ச் [2]சிம்ம மாதம் வளர்பிறை பூர்வ பட்சம்
நட்டமாய் மார்பு நோயால் காலையும் மரண மாமே.

23. எட்டாமிடத்தவனுகிய குரு, கடக ராசியில் உச்சமா யிருப்பதால், எற்படும் பலனைச் சொல்லுவோம், ஜாதகன் அறுபத்தைந்தாம் வயதில், ஆவணிமாதம், வளர்பிறைப் பருவத்தில், மார்புநோய் உண்டாகி மரணமடைவான்.

24. உத்திர திக்கி லேதான் உறுதியாய்க் கெட்டி தாகச்
சித்திர கிரகம் நேரும் சேயது சுகமே யுண்டு
மித்திர ராலே தாமும் மேன்மைகள் உண்டு கண்டாய்
பத்தினி மாதே யாங்கள பகர்மொழி கேட்டி டாயே.

24. வடக்குத் திசையில், உறுதியானதும், வேலைப்பாடமைந்ததுமான வீடு ஏற்படும். மக்களுக்கு நலன் உண்டாம். நண்பர்களால் சிறப்புக்கள் வாய்க்கும். பத்தினியாகிய பார்வதியே! நாங்கள் சொன்ன சொற்களைக் கேட்பாயாக.

---

1. குரு
2. ஆவணி

ஜாதகம் 29

1. சந்திரன் மிதுனம் தங்கச் சார்குரு புதன்சேய் கண்டு
வந்திடு ரவியுஞ் சுங்கன் [1]ஆளியாம் சிகியும் தேளு
மந்தனும் வில்லு வாக வருகயர் புல்லு மாகப்.
பந்தமா யிடபம் சென்மம் பகருவீர் பலனை என்று;

1. சந்திரன் மிதுனத்திலும், குரு புதன் செவ்வாய் கடகத்திலும், சூரியன் சுக்கிரன் சிம்மத்திலும், கேது விருச்சிகத்திலும், சனி தனுசிலும், ராகு விருஷபத்திலும் நின்று, பிறந்த இலக்கினமும் விருஷபமாக விருக்கும் ஜாதகப் பலனைச் சொல்லுங்கள் என்று;

		லக்கினம் ராகு	சந்திரன்
	இராசி சக்கரம்		குரு புதன் செவ்வாய்
			சூரியன் சுக்கிரன்
சனி	கேது		

2. பார்வதி கேட்கும் போது பராசரும் சொல்ல லுற்றார்
சீர்புகழ் ஆண்பால் சென்மம் செப்புவோம் கீழ்மேல் வீதி
நேர்மையாய்த் தெற்கு வாடை நிகழ்த்துவோம் கணேசன்
[2]தேளு
சாற்றுவோம் சிற்றூ ரில்தான் சாதகன் செனித்தா
[னென்றேரும்.

2. பார்வதி தேவி கேட்கும்போது, பராசர முனிவர் சொல்லுகின்றார். மிக்க புகழுடன் கூடிய ஆண் பிறப்பாகும் இஃது என்று சொல்லுவோம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில், தெற்கு வாடையி லுள்ளதாகும் என்று கூறுவோம். விநாயகர் கோயில் மேற்கிலுள்ளது என்று சொல்லுவோம். இவ்வாறான சிறிய ஊரில் இந்த ஜாதகன் பிறந்தான் என்றோம்.

---

*28ஆம் ஜாதகப் பாடல்களில் பெரும்பான்மையானவை இந்த ஜாதகத்திலும் காணப்படுகின்றன. ஆயினும், பாடல்கள் எண்ணிக்கையிலும், சில நிலைகளிலும் காணப்பெறும் சிறு வேறுபாடு கருதிச் சனியே வெளியிடப் பெறுகின்றது.

1. சிம்மம்.
2. மேற்குத் திசை.

3. உத்திர மம்மன் வாசம் உரைக்கின்றோம காளி [1]கும்பம்
சித்திர மாரி மீனம் சேயின்ற மூலி மாயோன்
பித்தனு மதற்குத் தெற்குப் பேசுவோம் கிழக்கில் சாலை
வைத்தயிவ் வடையா ளத்துள் வழுத்துவோம் மேலுங்
[கேளே.

3. வடக்கில் அம்பிகை வாசம் செய்வாள். காளி தேவி கோவிலும் வடக்கில் உள்ளது. மாரியம்மன் கோயில் வட கிழக்கில் உள்ளது. வட கிழக்கில் திருமால் எழுந்தருளி யிருக்கின்றார். அதற்குத் தெற்கில் சிவபெருமான். கிழக்கில் சாலையொன்றுளது என்று சொல்லுவோம். சொல்லப்பட்ட இவ்வடையாள முள்ள இடத்தில், பிறந்தான் அவன்; என் போம். மேலுங் கேட்பாயாக.

4. சாதகன் யோகம் தானும் சாற்றிய அன்னை தந்தை
வேதனை பாபன் யோகம் விரும்புவோம் சகோதர யோகம்
போதவே களத்திர புத்திரர் புகழுமே முன்பின் சென்மம்
நாதனுர் இடத்தில் வாழும் நங்கையே மேலுங் கேளே.

4. ஜாதகன் யோகங்கள், தாய் தந்தையர், மாமன், சகோதரர் ஆகியோர் யோகங்கள், மனைவி மைந்தர் செய்திகள், முற்பிறப்பு மறு பிறப்புக்கள் முதலியவை யனைத்தையும் கூறுவோம். சிவபெருமான் இடப் பாகத்தில் வாழும் பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

5. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் இருநி
[றத்தான்
பந்தமாய்ச் சபல ளர்த்தி பாரினில் யூகை கொஞ்சம்
விந்தையாய்க் கிருஷி செய்வன் மேதினில் கீர்த்தி கொள்வன்
வந்தவர்க் கன்ன மீவன் மர்மமு முடைய னாமே.

5. ஜாதகன் தகப்பனுருடைய குணங்களை நாங்கள் சொல்லுவோம். கபில நிறமுள்ளவன். சமமான உடல் வளர்ச்சி யுடையவன். ஊகித்தறியும் சக்தியும் சிறிது பெற்றவன். பலரும் ஆச்சரியப்படத்தக்க வகையில் விவசாயஞ் செய்வான். உலகில் புகழை எற்பான். வீடு தேடி வந்தவர்கட்கு உணவளிப்பான். மர்மமான எண்ணமும் உடையவன்.

6. கோபமுங் கொஞ்ச முள்ளான் குஞ்சர நடையு முள்ளான்
சேமமாய்க் குடும்ப முள்ளான் திருமகள் வாச முள்ளான்
சாமிமேல் பக்தி யுள்ளான் சஞ்சல மனத்த னாகும்
பூமியும் அதிக முள்ளான் பெண்டுமே ரெண்டு மாகும்.

---

1. வடக்கு.

6. சிறிது கோபமும் உள்ளவன். யானை போன்று கம்பீர நடை யுடையவன். சௌக்கியமான குடும்ப முள்ளவன். இலட்சுமீ கடாட்சம் உள்ளவன். கடவுள் பக்தி யுடையவன். துன்பங்கள் கொண்ட மனத்தி னன். நிலபுலன்கள் மிகுதியாக வுடையவன். இவனுக்கு மனைவியர் இருவர்.

7. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோம் ஆண்பால் [ரெண்டு
அவனியில் கன்னி ஒன்று அன்புடன் உறுதி கண்டாய்
கவனமாய் மத்தி யத்தில் காளைகள் சேத மாகும்
நவனியில் பெண்பால் தீர்க்கம் நங்கையே மேலுங் கேளே.

7. இவனுடைய உடன்பிறந்தார்களைச் சொல்லுவோம். ஆண்கள் இருவர்; பெண் ஒருத்தி, நிச்சயமாய்த் தோன்றுவர். இடைக்காலத்தில் சகோதரர் நஷ்டமாவர். சகோதரி தீர்க்கமாக விருப்பாள். பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

8. இப்படி யிருக்குந் தந்தை இவனுக்குத் தார மிரண்டில் செப்புவோ மிளையா ளுக்குச் சனித்தவ னிவனே [யென்றும்
ஒப்புடன் இவன்கு ணத்தை உரைக்கின்றோம் இருநி [றத்தான்
தப்பித மெண்ணு நெஞ்சன் சங்கரி கேளும் தாயே.

8. இங்ஙனமாக விளங்குகின்ற தந்தையின் மனைவியர் இருவரில், இளையாளுக்குப் பிறந்தவன் இந்த ஜாதகன் என்று சொன்னோம். இவன் குணங்களைச் சொல்லுகின்றோம். கரிய நிறமுள்ளவன். தீங்கு நினையாத மனமுள்ளவன். பார்வதி யம்மையே! கேளுங்கள்.

9. குள்ளமும் உடைய னுவன் கூறுமுன் கோபம் கொஞ்சம்
வள்ளல்மேல் பக்தி யுள்ளான் மர்மவான் சுகை கொஞ்சம்
தெள்ளிதாய்ப் பொருளும் சேர்ப்பன் செகத்தினில் கீர்த்தி [கொள்வன்
கள்ளமா மனமும் உள்ளான் காரிழை புகன்றிட் டோமே.

9. குள்ளமானவன். முன்கோபஞ் சிறிதுடையவன். கடவுளின் மீது பக்தியுள்ளவன். மர்மமுள்ளவன். சிறிது கொடைக்குண முள்ளவன். செல்வத்தைச் சேர்ப்பான். உலகில் கீர்த்தி பெறுவான். வஞ்சனையான மன முடையவன். பார்வதியே! இவ்வாறு நான்கள் கூறினோம்.

10. யோகமும் பின்னல் உள்ளான் உறுதியாம் மனத்த னுகும்
போகபோக் கியமு முள்ளான் பூமியில் கிருஷி செய்வன்
தோகைமேல் பிரிய முள்ளான் சோம்பலும் கொஞ்ச
[முள்ளான்
வேகமாய் நடக்க வல்லான் மித்திர ருள்ளா னுமே.

10. பிற்காலத்தில் யோக முடையவன். திடமான மனமுள்ளவன். பலவித போகங்களை அனுபவிப்பான். பயிர்த்தொழில் செய்வான். மனைவி மீது விருப்ப முடையவன். சோம்பலும் சிறிது உள்ளவன். விரைவாக நடப்பதில் வல்லவன். நண்பர்க ளுள்ளவன்.

11. சித்திர வீடு செய்வன் சனங்கள்மேல் பட்ச முள்ளான்
நித்தியம நெய்பா லிட்டன் நிலையதைத் தவற மாட்டான்
புத்திமான் பொறுமை யுள்ளான் புறந்திட மில்லா னுகும்
அத்திமா முகனைப் பெற்ற அம்மையே மேலுங் கேளே.

11. அழகிய வேலைப்பாடு மிக்க வீட்டினை யமைப்பான். உறவினர் மீது விருப்ப முடையவன். நெய், பால் இவற்றில் விருப்ப முள்ளவன். தன் நிலையிலிருந்து தவறான். புத்திசாலி. அடக்கமுள்ளவன். வெளியில் தைரியமில்லாதவன் போல் காணப்படுவான். யானைமுகனைப் பெற்ற அம் பிகையே! இன்னுங் கேள்.

12. இன்னவன் அன்னை சேதி இயம்புவேர்ம் மால்நி றத்தாள்
தன்னவள் குள்ள முள்ளாள் தானவள் அதிர்ஷ்ட சாலி
பன்னியே உரைக்க மாட்டாள் பாரினில் கீர்த்தி கொள்வாள்
கன்னியும் பொறுமை யுள்ளாள் காசினம் இல்லா ளாகும்.

12. இவனுடைய தாயின் செய்திகளைச் சொல்லுவோம். கரிய நிறமுடையவள். குள்ளமானவள். அதிர்ஷ்ட முடையவள். பன்னிப் பன்னிப் பேசமாட்டாள். உலகினில் கீர்த்தி பெறுவாள். பொறுமை யுள்ள வள். கோபமில்லாதவள்.

13. கற்புமே யுடையா ளாகும் கனதன முடையாள் மேலும்
அற்பர்கள் உறவு கொள்ளாள் அறமது செய்வா ளாகும்
விற்பன விவேக முள்ளாள் மிருதுவாஞ் சொல்லு முள்ளாள்
நற்புத்தி யுடையா ளாகும் நங்கையே கேளுந் தாயே.

13. கற்புடையவள். மேன்மேலும் மிகுந்த செல்வ முள்ளவள். கீழ் மக்கள் சேர்க்கையைக் கொள்ளமாட்டாள். தருமம் செய்வாள். வித்தையும், விவேகமும் உடையவள். மென்மையான சொற்களைப் பேசுவாள். நல்ல புத்தி யுடையவள். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

14. [1]இவளுடைத் துணைவர் தம்மை இயம்புவோம் ஆண்பால்
[நான்கு
நவனியில் கன்னி அவ்வார் நசித்திடும் நான்கே தானும்
கவனமாய் ஆண்பால் ரெண்டு கன்னியும் அவ்வார் தீர்க்கம்

.....

14. இவளுடைய உடன்பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். ஆண்கள் நால்வர். பெண்களும் அங்ஙனமே நால்வர். இவர்களில் நால்வர் நஷ்டமாவர். சகோதரர் இருவரும், சகோதரிகள் இருவரும் தீர்க்க மாவர்.

15. சாதகன் குணத்தை யாங்கள் சாற்றுவோம் மால்நி றத்தான்
வேதனை யொருவர்க் கெண்ணுன் விரும்புமுன் கோபம்
[கொஞ்சம்
புத்தியும் உடைய னவன் புத்திரர் அதிக மில்லான்
அத்திமா முகனைப் பெற்ற அன்னையே மேலும் கேளே.

15. ஜாதகன் குணத்தை நாங்கள் சொல்லுவோம். கரிய நிற முடையவன். எவருக்குந் துன்பம் எண்ணுதவன். முன்கோபம் சிறிதுண்டு. நற் புத்தி யுள்ளவன். புத்திர பாக்கியம் மிகுதியாக இல்லாதவன். யானைமுகக் கடவுளைப் பெற்ற தாயே! மேலுங் கேள்.

16. குள்ளமும் உடைய னவன் குரலது இரண்டு மாகும்
வள்ளல்மேல் பக்தி யுள்ளான் மர்மங்கள் வெளிவி டாதான்
கள்ளவிழ் குழலாள் நேயன் கனதனம் பின்னு ளுள்ளான்
மெள்ளவே நடப்பா னுகும் மெல்லியே மேலும் கேளே.

16. குள்ளமானவன். இவன் பேசும்போது இரு குரல்கள் தோன்றும். கடவுட் பக்தி யுடையவன். மனத்தி லுள்ளவற்றை வெளிவிடாதவன். கட்டவிழ்ந்த மலர்கள் சூட்டப் பெற்ற கூந்தலுடன் கூடிய மனைவிக்குப் பிரியமானவன். பிற்காலத்தில் மிக்க செல்வத்தை யுடையவனு யிருப்பான். மெதுவான நடையை யுடையவன். மென்மைத் தன்மை வாய்ந்த பார்வதியே! இன்னுங் கேட்பாயாக.

17. இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோம் இருபான்
[ஒன்றில்
அன்னவள் கன்னி மூலை அவளுமே வருவா ளென்றோம்
நன்னிய மவள்வரு ணத்தை நாட்டுவோம் இருநி றத்தாள்
கன்னென வார்த்தை யுள்ளாள் காதலி ஒடிச்ச லுள்ளாள்.

---

1. இந்தச் செய்யுளின் நான்காம் வரி எட்டில் இல்லை.

17. இந்த ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இருபத் தோராம் வயதில், தென்மேற்கு மூலையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் தன்மையைச் சொல்லுவோம். கரிய நிற முடையவள். கரும்பு போல் இனிய சொற்களைப் பேசுவாள். மெல்லிய சரீர முள்ளவள்.

18. வரனுக்கு நேய முள்ளாள் வாக்குகள் தப்பா ளாகும்
கரங்காலில் வலியு முள்ளாள் கபடது கொஞ்ச முள்ளாள்
நிறையவே வார்த்தை சொல்வாள் நிந்தைக ளில்லா ளாகும்
பிறையது போலே செல்வம் பெருகிடும் பின்னுல் தானே.

18. கணவனுக்கு விருப்ப மானவள். சொன்ன சொற்கள் தவறுத வள். இவளுக்குக் கை கால்களில் வலியுண்டு. வஞ்சனையும் சிறிதுடைய வள். மிகுதியான சொற்களைப் பேசுவாள். பழி யில்லாதவள். பிற்காலத் தில் இவளுக்கு வளர்பிறை போலச் செல்வம் பெருகும்.

19. இவளுக்குப் புத்திர பாவம் இயம்புவோம் ஆண்பால் ஒன்று
தவமுள கன்னி ரெண்டு சட்டமாய்த் தீர்க்கம மாகும்
உவமுள தந்தை சென்மம் உரைப்பீர்கள் என்று கேட்கத்
தவமுள விசுவா மித்திரர் சாற்றுவோம் கேளுந் தாயே.

19. இவளுக்குப் புத்திர பாவத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஆண் மகன் ஒருவன், பெண்கள் இருவர். இவர்கள் மூவரும் தீர்க்கமாக வாழ்வர். ஜாதகனின் தந்தைக்கு, முற்பிறப்பு முதலானவற்றைச் சொல்லுங்கள் என்று பார்வதி தேவி கேட்க, மிக்க தவத்தையுடைய விசுவாமித்திர முனி வர் சொல்லுவார். கேளுங்கள், தாயே!

20. தந்தைதாய் மூன்பின் சென்மம் சட்டமாய் மரண காலம்
வந்திடு மிரண்டாம் பாகம் வழுத்துவோம் விபர மாக
எம்மையே இவன்சென் மத்தை இயம்புவோம் போரூர்
[தன்னில்
சந்ததம் வன்னிய வம்சம் சாதக னுதித்தா னம்மா.

20. தந்தை தாயர் முற்பிறப்பு, பிற் பிறப்பு, அவர்கள் மரண காலம் முதலியவற்றை, உறுதியாய் இரண்டாம் பாகத்தில் விவரமாகச் சொல்லு வோம். ஜாதகன் முற்பிறப்பைக் கூறுவோம். திருப்போரூரில், வன்னியர் மரபில் பிறந்தான்; தாயே!

21. பூமியில் பெண்டு பிள்ளை புகழுடன் வாழ்ந்து மேலும்
சாமியாரம் [1]ரேணு கைக்குச் சதாவுமே தீபம் வைத்து
நேமியில் ஓர்நாள் தன்னில் நிறுத்தினன் தீபம் தன்னைத்
தீமையா யம்மை யுந்தான் செப்பினள் வார்த்தை தானே.

21. உலகில், மனைவி மக்கள் முதலானவர்களுடன் புகழோடு வாழ்ந்து, மாரியம்மனுக்கு எப்பொழுதும் தீபங்கள் ஏற்றி வைத்துக்கொண்டு இருந்தான். ஒரு நாள் தீபம் ஏற்றுமல் தவறினன். பின்வருமாறு மாரியம்மன் கொடிய சாபமிட்டாள்.

22. மறுசென்மம் சைவ சேயாய் வந்துமே சிலநாள் தாமும்
பெருகிய பொருளில லாமல் பிறந்திடம் அதுவும் விட்டுச்
சிறுத்திடு மனமே தானும் செகத்தினில் மனம்வே றுகி
அறுத்திடும் சோதரர் தாமே யாவரும் நட்ட மாவர்.

22. வரும் பிறப்பில், சைவ குலத்தவனாய்ப் பிறந்து, செல்வமில்லாமல் சில காலம் வாழ்ந்து, பிறப்பிடத்தையும் விட்டு நீங்கி, மனத்தில் துன்பங்கள் ஏற்பட்டு, உலக இன்பத்தில் பற்றில்லாமல் இருந்து, சகோதரர் நஷ்டத்தையும் அடைவான்.

23. பின்சென்மம் உத்திர திக்கில் பலமுள பேரூர் தன்னில்
அன்னவன் இக்கு லத்தில் அவனுமே யுதிப்பா னென்றேரும்
துன்னிய மனையாள் மக்கள் சுகமுள பூமி யுண்டாய்த்
தன்னினத் துக்கு மேலாய்ச் சட்டமாய் வாழ்வா னுமே.

23. பின் பிறப்பில், வடதிசையில் பலம் பொருந்திய பெரிய ஊரில், இக் குலத்திலேயே இந்த ஜாதகன் பிறப்பான் என்று கூறினோம். மனைவி மக்கள் நிலபுலங்கள் ஏற்பட்டு, தன் இனத்தவர்களை விட மேன்மையான நிலையில் வாழ்வான்.

24. அட்டமும் அரச னுகி அவருமே கண்டில் உச்சம்
சட்டமாய் வயது தானும் சாற்றுவோம் அறுபான் ஐந்தில்
வட்டமாய்ச் சிம்ம மாதம் வளர்பிறை பூர்வ பக்கம்
கட்டமாம் மார்பு நோயால் காவலன் மரண மாவன்.

24. எட்டாம் இடத்துக் குரியவனுகிய குரு கடகத்தில் உச்சமாக இருப்பதால், இவன் மரண காலம் இப்பொழுதென்று உறுதியாய்ச் சொல்லுவோம். அறுபத்தைந்தாம் வயதில், ஆவணி மாதம், வளர்பிறைப் பருவத்தில், மார்பு நோயால் ஜாதகன் மரண மடைவான்.

---

1. மாரியம்மன்

25. முப்பது ஆண்டுக் குள்ளே முயற்சியாய்க் கட்டுக் கோப்புச்
செப்பவா யுத்தி ரத்தில் சிறந்திடுங் கிரகம் தானும்
தப்பிதம் எவையும் இல்லை சங்கைகள் நிவிர்த்தி யாகும்
எப்பவும் சுகமா மென்று இயம்பின மொழிகுன் முது.

25. முப்பது வருஷங்களுக்குள் தன் முயற்சியால், தான் பிறந்த வீட்டுக்கு வடதிசையில், கட்டுக்கோப்பான நல்ல வீடு ஏற்படும். குற்றங்கள் எவையும் நேரா. தோஷங்கள் விலகும். பின்பு எப்பொழுதும் நலமே யுண்டாகும். நாம் கூறியவை தவறு.

26. இலாபாதி குருவு மாகிக் கனபுதன் சேயு மூவர்
தாபமாய் மூன்றி லேறச் சட்டமாய்ப் பூமி. யுண்டு
ஆபத்து வந்த போதும் ஆதவன் தன்னைக் கண்ட
சோபமாய்ப் பனியைப் போலச் சுருக்கினில் தீரும் தானே.

26. இலாபஸ்தானாதிபதி குரு, புதன், செவ்வாய் ஆகிய மூவரும் கடகத்தில் சேர்ந்திருப்பதால், நிச்சயமாய் நிலபுலன்கள் ஏற்படும். எதேனும் துன்பங்கள் நேர்ந்தாலும் சூரியன் முன்பு பனியைப் போல் விரைவில் அகலும்.


27. அந்திய காலம் தன்னில் அவன்பொருள் தம்மைச்
[சொல்வோம்
பந்தமா யிரண்டா யிரம்பொன் பாலகன் தலைக்கு உண்டு
சந்தத முதவி செய்வன் தர்மத்தை நிறுத்தி வைப்பான்
சிந்தையி லிருக்குந் தாயே செல்வியே கேட்டி டாயே.

27. கடைசிக் காலத்தில், இவன் மனைவியின் மரணம் ஏற்படும் என்று சொல்லுவோம். இரண்டாயிரம் பொன்களை, தகுந்த முறையில் இந்த ஜாதகன் சேர்ப்பான். எப்பொழுதும் பிறருக்கு உதவி செய்வான். அயலாரது தருமச் செயல்கள் சிலவற்றைத் தடுப்பான். எங்கள் மனத்தில் எக்காலமும் நிலை பெற்றிருக்கும் தாயே! கேட்பாயாக.

ஜாதகம் 30

1. [1]மந்திரி புதனும் மானில் மங்களன் மேட மாகச்
சந்திரன் வீணை புக்க சனிரவி ராகு வெள்ளி
சிந்துர [2]குடத்தில் தங்கச் செம்பாம்பு சீய மாக
நந்தியும் சென்ம மாக நவிலுவீர் பலனைத் தானே.

1. குருவும் புதனும் மகரத்திலும், செவ்வாய் மேஷத்திலும், சந்திரன் மிதுனத்திலும், சனி சூரியன் இராகு சுக்கிரன் கும்பத்திலும், கேது சிம்மத்திலும் இருந்து, சென்ம லக்கினம் விருஷபமாக உள்ள ஜாதகத்திற்குப் பலனைக் கூறுங்கள்.



2. அத்திரி சொல்ல லுற்றார் ஆணது சென்ன மாகும்
வித்தகன் இல்லந் தன்னை விளம்புவோம் வடதென் வீதி
சுத்தமாய்க் கிழக்கு வாசல் சேத்திரம் தனியாய் நிற்கும்
உத்திரம் திசையில் ஈசன் உறங்கிடும் காளி யுண்டே.

2. அத்திரி முனிவர் கூறுகிறார். இஃது ஆண்மகன்ஜாதகம். இந்த ஜாதகனது வீட்டைக் கூறுகின்றோம். அது, தெற்கு வடக்காக உள்ள தெருவில், கிழக்கு நோக்கிய வாயிற்படியை யுடையது. இவன் வீடு தனியாக இருக்கும். இவனது வீட்டிற்கு வடதிசையில் சிவன் கோயிலும், ஒருகாளி கோவிலு முண்டு.

---

1. குரு

2. கும்பராசி

3. மேற்கினில் மாயோன் தாமு மிலங்காத கோட்டம் உண்டு
ஏற்கவே அதன்மேல் ஓடை எழில்மாரி குண்டம் உண்டு
தெற்கினில் கணேசன் கோட்டம் செப்புவோம் எதிர்வீ
[டில்லை
மார்க்கமாய்ப் புளிநா ரத்தை வளர்ந்திடும் கொல்லை தன்னில்.

3. இவன் வீட்டிற்கு மேற்கில், சிதைந்த விஷ்ணுவின் கோயில் இருக்கும். அதற்கு மேலாக ஓர் அழகிய மாரியம்மன் கோவிலும் உண்டு. அங்குக் குளமொன்றும் உள்ளது. தென் திசையில் பிள்ளையார் கோவில் உண்டு. இந்த வீட்டிற்கு எதிரே வேறு வீடுகள் கிடையா. இந்த வீட்டின் தோட்டத்தில் புளி, நாரத்தை முதலிய மரங்கள் வளர்ந்திருக்கும்.

4. இத்தகை யடையா ளத்துள் இயம்பிடுமே சமவூர் தன்னில்
சக்தியாய்ப் பிரம சேயாய்ப் பகர்ந்தனம் இவனின் யோகம்
பெற்றவள் தந்தை வர்க்கம் புத்திர களத்திர யோகம்
சுத்தமாய் முன்பின் சென்மம் செப்புவோம் இந்நூல்
[தன்னில்.

4. இவ்வாறான அடையாளங்களுடன் சம பூமியாக உள்ள அவ்வூரில், இவன் சக்தியுள்ள பிராமணக் குழந்தையாகப் பிறப்பான் என்று கூறினேம். இந்நூலில் இவனைப் பெற்றவளாகிய தாயைப் பற்றியும், அவள் தகப்பனாரைப் பற்றியும், புத்திரர் மனைவி இவர்களின் யோகங்களையும் முற்பிறப்பு, மறுபிறப்புக்களையும் நன்றாக எடுத்துக் கூறுகின்றோம்.

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோம் ஆண்பால்
[ஒன்று
எந்தையே தீர்க்க மாகும் இதுவுமே மூத்தோ னாகும்
இந்தவன் சேதி சொல்வேன் அவனுமால் நிறத்த னாகும்
பிந்திநாள் நேத்ர ரோகம் பெருகிடும் என்று சொன்னேம்.

5. தந்தையினுடன் பிறந்தவர்களில் ஆண்மகன் ஒருவன். இவன் தந்தையே மூத்தவராவார். இவன் தந்தை திருமால் போன்ற கரிய நிறத்தினர். இவருக்குக் கடைசி நாளில் கண் வியாதி வந்து, அதிகமாகக் கஷ்டப் படுவார் என்று கூறியுள்ளோம்.

6. தானபே தங்கள் செய்வன் சல்லிய முடைய னவன்
ஈனமாம் குணங்கள் உள்ளான் இடரான புத்தி யுள்ளான்
மானிலம் வறுமை யுள்ளான் மைந்தராண் இரண்டு என்றும்
மானவிழி பெண்பால் மூன்று மறைந்திடு மொன்று
[என்றும்.

6. இவன் அடிக்கடி இடம் மாறிக்கொண்டே இருப்பான். அதிகக் கடனுடையவனுவான். கீழ்த்தரமான குணங்களே யுடையவன். நேர்மாறான புத்தியுடையவன். உலகில் வறுமையால் அல்லல்படுவான். இவனுக்கு இரண்டு ஆண் சந்ததிகளும், மூன்று பெண் சந்ததிகளும் உளவாம். அவை களில் ஒன்று தவறிப் போகும்.

7. மற்றது இரண்டு பெண்பால் வரன்சுகம் சிலநாள் இல்லை
குற்றமே அடைவா ளாகும் குடும்பமும் வேறே யுண்டு
உற்றவன் உதிக்கா முன்னம் உரைத்திட்டோம்
[இன்னுஞ் சேதி
சுத்தமா யிரண்டி லேதான் செப்புவோம் இவர்க ளுக்கே.

7. மற்ற இரண்டு பெண்களுக்கும் சிறிது காலம்வரை கணவன்மார் கள் அமைவது கஷ்டமாக இருக்கும். அவர்களுக்குக் குற்றங்களும் ஏற்படும். வேறு குடும்பமாகச் செல்ல நேரும். ஜாதகன் தோன்றுவதற்கு முன்பாகவே நடந்த செய்திகள் இவை. மற்றவைகளே இரண்டாம் பாகத் தில் நன்கு உரைப்போம்.

8. இவன்பிதா குணத்தைக் கேளாய் இடரான புத்தி யில்லான்
அவனியில் நல்லோ னுவன் ஆனையின் நிறத்த னுகும்
நவனியில் ஓடிசல் தேகி நளினமாய் வார்த்தை சொல்வன்
பவமுள கிருஷி செய்வன் பரவுப காரி னுவன்.

8. இவன் தந்தையின் குணத்தைக் கேள். நோான புத்தியுள்ளவன். உலகில் நல்லவன் இவன் என்று கூறப்படுவான். கரிய நிறத்தினன். ஒல்லியான உடலமைப்பைப் பெற்றவன். சுகமாகப் பேசுதலில் வல்லவன். விவசாயம் புரிபவன். பிறருக்கு உபகாரம்செய்யும் தன்மையினன்.

9. தேவதா பூசை செய்வன் செய்ந்நன்றி மறவா னுகும்
ஏவலா ளுடைய னுகும் எதிரிகள் இல்லா னுகும்
மேவிடு மூலச் சூடு விரையில்நோ யுடையா னென்றேும்
தாமத குணத்தா னுகும் சக்தியே மேலும் கேளே.

9. தெய்வ பூசை புரிவான், செய்ந்நன்றி மறவாதவன். வேலை யாட்களே உடையவன். விரோதிகளற்றவன். மூலச்சூட்டு நோயால் வருத்தப்படுவான். இவனுக்கு விரைநோய் ஏற்படும். தாமதமான குண முள்ளவன். பராசக்தியே! இன்னமும் கேள்.

10. உரோமங்கள் நீட்சி யில்லான் நுவலுப தேசங் கொள்வான்
தீமையை யொருவர்க் கெண்ணுன் தீர்த்தங்கள் தோய்வா
[ஞகும்
நேமியை விருத்தி செய்வான் நிதானமாய்ப் பேச வல்லான்
ஆமதைச் செய்வா ஞகும் அம்பிகை யாளே கேளாய்.

10. நீளமில்லாத தலைமயி ருடையவன். நல்ல உபதேசங்களைப் பெறுவான். பிறருக்குத் தீங்கை எண்ணமாட்டான். புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வான். பூமியைப் பெருக்குவான். ஆராய்ந்து பேசுவதில் சிறந்தவன். பழிக்கப்படாத காரியங்களையே செய்வான். அம்பிகையே! கேட்பாயாக.

11. இக்குண முடையோ னுக்கு இவனுமே யுதிப்பா ஞகும்
மிக்கவே இவன்கு ணத்தை விளம்புவோம் மால்நி றத்தான்
தக்கவர் நேசம் கொள்வன் சமர்த்துளான் கபடு முள்ளான்
சிக்கெனப் பொருளுஞ் சேர்ப்பன் தேகமே சமமாம்
[என்றோம்.

11. இப்படிப்பட்ட குணம் உடைய தந்தைக்கு இந்த ஜாதகன் புத்தி ரனுய்ப் பிறப்பான். இவன் தன்மைகளைக் கூறுகின்றோம். திருமாலைப் போல் கரிய நிறத்தினன். நல்லோருடன் நட்புக்கொள்வான். திறமை வாய்ந்தவன். நெஞ்சிலே கபடமும் உடையவன். விரைவிலேயே பொருளும் சேர்ப்பான். சமமான உடலமைப்பைப் பெற்றவன்.

12. மாதுரு இரண்டே யாகும் வளமையா யிளையா ளுக்கு
நீதியால் இவனு தித்தான் நிகழ்த்துவோம் துணைவர் தம்மை
மேதினில் மூத்தோ னுள்ளான் விளங்குவான் இளையோன்
[ஒன்று
சூதிலான் கிருஷி செய்வன் சுகதுக்க முடைய னுமே.

12 இவனுக்கு இரு தாய்மார்கள் உளர். இவன் இளையவளிடம் பிறந்தான். இவன் உடன்பிறந்தார்களைக் கூறுவோம். இவனுக்கு இவ் வுலகில் மூத்தவன் ஒருவன் உள்ளான். இளையவன் ஒருவனும் உள்ளான். சூது இல்லாதவன். பயிர்த்தொழில் செய்வான். சுகம் துக்கம் இரண்டை யும் உடையவனுவான்.

13. கல்வியுங் கொஞ்ச முள்ளான் காலாட்கள் விருத்தி யுள்ளான்
புல்லியர் உறவு கொள்வன் பிதுரில்லம் வாழ்வா ஞகும்
சல்லியங் கொள்ளா ஞகும் சந்தேக மனத்த ஞகும்
அல்லலு முடைய ஞகும் அவன்சம யோக வானே.

13. சிதிதளவே கல்வி உடையவனுவான். வேலையாட்கள் பலர் இருப்பர். கீழ் மக்களுடன் நேசம் கொள்வான். தந்தையின் வீட்டில் வசிப்பான். கடன் வாங்கமாட்டான். சந்தேகப்படும் மனத்தை உடைய வன். கஷ்டங்களும் இடையிடையே ஏற்படும். சமமான யோகத்தை உடை யவனுவான். (அஃதாவது சுகம் துக்கம் இரண்டும் கலந்தே வாழ்க்கை நடத்த நேரிடும்.)

14. கரமதில் விஷ்ணு ரேகை கருநிறம் வலிவு முள்ளான்
உறன்முறை நேசம் கொள்வன் உத்தமி மனைவி ஒன்று
பெரும்சுதர் ஆண்பால் ஒன்று பெண்ணது மூன்று மாகும்
திருமகன் வயது தீர்க்கம் செப்புவோம் இவனுக் கேதான்.

14. கையில் கரிய நிறமுள்ள விஷ்ணுரேகை உண்டு. பலமுள்ளவன். சொந்தக்காரர்கள் நேசம் உடையவனுவான். கற்புக்கரசியான மனைவி ஒருத்தி இவனுக்குண்டு. சந்ததிகளில் ஆண் ஒன்றும், பெண்கள் மூவரும் உளர். இவனுக்கு நீண்ட ஆயுள் உண்டென்று கூறுவோம்.

15. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிகுவாள் அம்மன் தாமும்
கனமுள முதல்தா யார்க்குக் காலாக ளுண்டோ சொல்வாய்
சினமிலா ஒருவ னுண்டு சிலநாளில் அன்னிய தேசம்
அனையவே செல்வா னுகும் அவன்மாதா மரண மெய்தி ;

15. இவ்வாறு முனிவர் சொல்லவும் பராசக்தி உரைக்கின்றுள். இவன் மதிப்புக்குரிய மூத்த தாய்க்குப் புத்திரப் பேறு உண்டோ ? கூறுவீர்; கோபமில்லாத ஒரு புத்திரன் உண்டு. அவன், தாய் மரண மடைந்தவுடன் வேறு நாடு செல்வான்.

16. இன்னவன் தாயி ரண்டா மாதென்று சொன்னேம் யாமே
தன்னிலே மணத்தின் காலம் சாற்றுவோம் இருபா லிலில்
கன்னிகை கீழ்ப்பா லாகக் காதலி மாதுர் வர்க்கம்
பின்னையும் வருவா ளாகும் பேசுவோ மவள்கு ணத்தை.

16. இந்த ஜாதகனின் தாய், இரண்டாம் மனைவி (இளையாள்) என்று சொன்னேம். இவனுக்கு இருபதாவது வயது திருமண காலமாகும் என்று சொல்லுவோம். மனைவி கிழக்குத் திசையில் தாய் வர்க்கத்திலிருந்து வரு வாள். அவள் குணத்தைப் பற்றி இனிச் சொல்லுவோம்.

17. சிவந்திடு மேனி யாவள் தேகமு முயர மில்லாள்
நவனியில் நல்லோ ளாவள் நற்புத்தி சூடாந் தேகம்
அவனியோர்க் கன்ன மீவள் அன்புள மனத்த ளாகும்
இவளுக்கு வயது தீர்க்கம் இம்மொழி பராசர் கேட்டு :

17. சிவப்பான சரீர முடையவள். உயரமில்லாதவள். உலகில் நல்லவள் என்று கூறப்படுவாள். நல்ல புத்தி யுடையவள். உஷ்ணமான உடலுடையவள். உலகில் அன்னதானம் செய்வாள். அன்புநிறைந்த மன முடையவள். நீண்ட ஆயுளைப் பெற்றவள். இந்த வார்த்தையைப் பராசரர் கேட்டுக் கூறுகின்றார்.

18. எப்படித் தாரம் ஒன்று இயம்பினீர் விபரம் சொல்வீர்
செப்புவேன் [1]குடும்பம் தன்னில் சந்திரன் இருப்ப தாலும்
ஒப்புடன் ஏழோன் தானும் உத்தம ஸ்ட்சி யாகி
இப்படி யிருப்ப தாலே இயம்பினேம் தாரம் ஒன்றே.

18. இந்த ஜாதகனுக்கு ஒரு மனைவி என்று எவ்வாறு கூறினீர்? அதற்குக் காரணம் என்ன? எனவும், முனிவர் கூறுகின்றார். ஜாதக னுக்குக் குடும்ப ஸ்தானமாகிய மிதுனத்தில், சந்திரன் இருப்பதாலும், களத்ரஸ்தானமாகிய ஏழாவது வீட்டுக்குடையவன் சுபனுய் நல்லாட்சி செய்வதாலும், ஜாதகனுக்கு ஒரே மனைவி என்று கூறினேம்.

19. மறுத்துமே பராசர் சொல்வார் மங்களன் ஏழோன் ஆகி
விரயத்தில் சார்ந்த தாலே விளங்கியே இருப்ப தாலே
குறித்தனந் தாரம் ரெண்டு குறுமுனி சொல்லு கின்றார்
[2]கரியவன் தருமம் கருமம் கலந்துமே குசனைப் பார்க்க;

19. இவ்வாறு முனிவர் கூறியதை மறுத்து, பராசரர் மீண்டும் சொல் லுகின்றார். விருச்சிகத்துக்கு உடையவனுகிய செவ்வாய் விரய ஸ்தான மாகிய பனிரண்டாம் இடத்தில், அஃதாவது மேஷத்தில் இருப்பதால், இவனுக்கு மனைவிமார் இருவரே என்று கூற, முனிவர் மீண்டும் கூறுகின்றார். சனி தரும கர்மாதியாகி, செவ்வாயைப் பார்ப்பதால்;

20. மனைவியும் ஒன்றே யாகும் அபிமானம் ஒன்றுண் டாகும்
துணையென மூப்ப தாண்டில் சார்ந்திடும் அந்த மாது
கனமுள பணிக ளுண்டாய்க் கங்கையின் குலத்து மாது
பிணையிலாச் சேரு மென்றேம் புண்ணிய வதியே கேளாய்.

20. இந்த ஜாதகனுக்கு மனைவி ஒருத்தியே. அபிமானப் பெண் ஒருத்தி. அந்த மாதின் சேர்க்கை அவனது மூப்பதாவது ஆண்டில்

---

1. குடும்ப ஸ்தானம் : மிதுனம்.

2. சனி.

ஏற்படும். மிகுந்த அணிகலன்களுடன் கூடிய வேளாளர் குலமாது, பந்தங்கள் ஏதுமின்றி, இவளே யடைவாள். பார்வதியே! கேட்பாயாக.

21. புத்திரர் ஆண்பால் ரெண்டு பெண்ணது அவ்வா றுகும்
சித்தமாய் நாலும் தீர்க்கம் சோர்ந்திடும் மூன்று தாமும்
பத்தினி மாதுர் சேதி பகருவோம் சிவந்த மேனி
வித்தகி உயர மில்லாள் மேதினில் வாத தேகி.

21. சந்ததிகளில் ஆண்கள் இருவரும், அவ்வாறே பெண்கள் இருவரும் ஏற்படுவர். அந்நால்வரும் நீண்டநாள் வாழ்வர். ஆனால், அவர்களில் மூவர் முன்னால் தவறிப் போவர். ஜாதகனின் தாயைப் பற்றிய வரலாறுகளை இனிக் கூறுவோம். அவள் சிவந்த மேனியள். பரந்த நோக்கமுடையவள். அதிக உயர மில்லாதவள். வாத சரீரம் பெற்றவள்.

22. பொறுமையும் புகழு முள்ளாள் புருடன்தன் மனம்போல்
[வாழ்வள்
திருமகள் ஒப்ப தாகும் தேவியும் யோக சாலி
கிரகமும் கீழ்ப்பால் ஆகும் [1]கிஞ்சுக ரோக முள்ளாள்
உரைக்கின்றேம் அவள்தன் பூர்வம் உத்தமி கேட்டி.
[டாயே.

22. பொறுமையும் புகழும் உடையவள். தன் கணவன் மனம் போல் வாழ்பவள். இலக்குமியைப் போன்றவள். அதிர்ஷ்ட முடையவள். கீழ்ப் பக்கத்தில் வீடு ஏற்படும். காச நோய் உடையவள். அவளது முற் பிறவியைப்பற்றிக் கூறுகின்றேம், கேட்பாயாக.

23. அன்னையின் முன்சென் மத்தை அறைகின்றேம் [2]வாரி
[யோரம்
உன்னுமா வலியி லேதான் உதித்தனள் சைவ வமிசம்
பின்னையும் பட்சி தன்னில் புருடனும் உள்ளா ளாகித்
தன்தனம் உடையா ளாகிச் சந்ததி அதிகம் உண்டாய்;

23. தாயின் முற்பிறவியைப் பற்றிக் கூறுவோம். இவள் கடலோரத்தில் உள்ள மகாபலிபுரம் என்னும் ஊரில், சைவ வமிசத்தில் உதித்தனள். பிறகு, திருக்கழுக்குன்றத்தில் கணவனை யடைந்து, தன் பிறந்தகச் செல்வ முடையவளாய், புத்திர பாக்கியங்களை மிகுதியாகப் பெற்று வாழ்ந்தாள்.

---

1. காசநோய்

2. கடல்

24. வருவோர்க்கு அன்ன மீந்து மாநிலம் நல்லோ ளாகி
அரன்பத்தி மிகவே கொண்டு அச்சென்மம் ஊழில் லாமல்
மறலியின் பதிக்குச் சென்று மலரயன் வரையப் பட்டு
உறைந்தனள் மறைக்கு லத்தில் உத்தமி கேட்டி டாயே.

24. தனதில்லம் வருகின்ற விருந்தினர்களுக்கு அன்னமிட்டு, உலகத்தாரால் நல்லவள் என்று போற்றப்பட்டு, சிவபக்தி நிறைந்தவளாய், அப்பிறவியில் தீய கருமங்களற்றவளாய், இயமனது நகரம் சென்று (இறந்து), பிரம தேவனால் மீண்டும் படைக்கப்பட்டு, அந்தணர் குலத்தில் தோன்றினள். அம்பிகையே! கேட்பாயாக.

25. ஆறு று ஆண்டு தன்னி லேப்பசி மாதந் தன்னில்
தீராமாய் வாயு நோயால் செல்லுவாள் காலன் பக்கல்
கூறுவோ மிவள்பிற் சென்மம் [1]கூடலி லிக்கு லத்தில்
சேருவாள் சுகமுண் டாகிச் செல்வதி வாழ்வா ளாமே.

25. முப்பத்தாறும் வயதில், ஐப்பசி மாதத்தில், வாயுநோயால் துன்பப்பட்டு மரண மடைவாள். இவளது மறுபிறவியைப் பற்றிச் சொல்லுவோம். இவள் மதுரையில், பிராமண குலத்திலே உதித்து, சுகத்துடனும், செல்வத்தோடும் இனிது வாழ்வாள்.

26. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோந் தவளை
[கீழ்ப்பால்
முந்திய சமவூர் தன்னி லுதித்தனன் கங்கை சேயாய்
வந்திடு மனைவி யுண்டாய் மதலைக ளுள்ளா னுகிச்
சந்தத்தம் பூமி யுண்டாய்த் தானவன் வாழு நாளில்;

26. தகப்பனாரின் முற்பிறவியைப் பற்றிச் சொல்லுகின்றோம். தவளை மலைக்குக் கிழக்கிலுள்ள ஒரு கிராமத்தில், வேளாளர் குலத்தில் பிறந்தான். பிறகு, மனைவியை யடைந்து, பல சந்ததிகள், நிலபுலன்கள் பெற்றவனாக, வாழ்ந்திடும் நாளில் ;

27. வந்தவூழ் தன்னைச் சொல்வேன் மறையவன் ஏழை தானும்
தன்மகள் மணங்கள் வேண்டித் தனம்பொரு ளிவன்பால்
[கேட்க
அன்னவன் அம்மை போலத் தந்தவள் மணமு டித்துச்
சின்னளில் பொருளைக் கேட்கத் தாழ்ந்தசொற் களுமே கூறி,

---

1. மதுரை.

27. ஏற்பட்ட தினனையைச் சொல்லுகின்றோம், கேள். ஓர் ஏழைப் பிராமணன், தன் பெண் திருமணத்திற்காக இவனிடம் வந்து பொருளை வேண்டவும், இவனும் திருமகள் போலக் கேட்ட பொருளையளித்து, அவளது திருமணத்தை முடித்து வைத்து, சிலநாள் சென்று, தான் கொடுத்த பொருளைக் கொடுக்கும்படி கேட்க, அந்தணன் மனைவி இவனை நோக்கி, இழிவான சொற்களைக் கூறி வைதாள்.

28. இப்படிச் சிலநாள் சென்று இணங்கியும் பொருளைக் கேட்க
மைப்படி மறையோன் மாது வேளாளன் தன்மேல் மோகம்
ஓப்புடன் கொண்டு மேதான் உரைத்தனள் சிலேடை
[வார்த்தை
செப்பிய மொழிக்கு வேளான் செவிதனில் கையை வைத்து;

28. இவ்வாறு சிலநாட்கள் சென்று, மறுபடியும் அவர்களிடம் பொருளைக் கேட்டான். அப்பொழுது அவ்வந்தணன் மனைவி, வேளாளனை இவன்மேல் மையலுற்று, பிறகு, இருபொருள் தோன்றும்படி காதல்மொழிகள் கூறினள். இவன், காதுகளைக் கையினல் பொத்தி,

29. அம்மொழி சொல்லொ ணாது அருமறைத் தாயே நீதான்
துன்மைகள் அதிகம் நேரும் தோகையிவ் வார்த்தை கேட்டு
என்மனம் போலே செய்வாய் இடருகள் ஒன்று மில்லை
மன்மதன் தனைச்செ யிப்பாய் வருந்தினள் மறையோர்
[மாது.

29. நற்குலத்திலுதித்த என் தாயைப் போன்றவளே! அத்தகைய பேச்சுக்களைப் பேசாதீர். அதனல் பாவங்கள் பல உண்டாம் என்றான். அப்பெண் இம்மொழியைக் கேட்டு, அண்ப! என் மனம்போல் நடந்தால் ஒரு துன்பமும் நேரிடாது. மன்மதனையும் வெல்லுவாய் என்று கூறி வருந்தினள்.

30. அதற்கிவன் இசையா னகி அவனில்லம் செல்லும் போது
குதர்க்கமாய்ச் சொல்லு கின்றுள் கூறிப்பின் சென்மந்
[தன்னில்
விதியினல் மனையாள் ரெண்டாய் மேவியும் தனிவீ டாகி
நிதமுமே வாழ்வா யென்று நிர்மித்தா ளந்த மாது.

30. அதற்கு இவன் இசையாது தன் வீடுநோக்கிச் செல்லுகையில், அந்தப் பெண், பகைமை யுணர்ச்சியுடன் கூறினள். மறுபிறவியில், இரு மனைவியரை யடைந்து, தனி வீட்டில் வாழக்கடவாய் என்று அப்பெண் சபித்தாள்.

31. பின்சில நாளி ருந்து பொருளதை மறையோ னீந்து
தன்முறி வாங்கிக் கொண்டான் தனமதை யிவனும்
[பெற்றுத்
தென்திசை யாவுஞ் சென்று சேதுவின் தீர்த்தந் தோய்ந்து
தன்னக ரடைந்து யின்னேன் தா[1]னரி பூசை செய்து ;

31. பிறகு சிலகாள் சென்ற பின்னர், பிராமணன் இவனிடம் வாங்கிய பணத்தைக் கொடுத்துவிட்டு, விடுதலைப் பத்திரத்தையும் பெற்றுக் கொண்டான். இவன் அதைப் பெற்றுக்கொண்டு, தென்னாடு முழுவதும் யாத்திரை சென்று, சேது ஸ்நானம் செய்து, தன் நகருக்குத் திரும்பி வந்து, விஷ்ணு பூஜை புரிந்து,

32. மறலியின் பதிக்குச் சென்று வந்தவ னிவனே யென்றேம்
அரன்மனை யாளுங் கேட்பாள் அவனுமுன் சென்மந் தன்னில்
வரநதி குலமு தித்து மறுசென்மம் பிரம்ம சேயாய்
உறையும்கா ரணங்க ளென்ன உரைப்பீர்கள் விபர மாக.

32. மரணமடைந்து, மீண்டும் இவ்வுலகில் வந்தவன் இவனேயாவான் என்று கூறினேம். சிவபெருமான் மனைவியாகிய அம்பிகை கேட்கின்றாள் அவன் முற்பிறவியில் வேளாளர் குலத்திலுதித்து, இப்பிறவியில் அந்தணர் குலத்தில் வந்து உதிக்கக் காரணம் என்ன ? கூறுவீர்களாக.

33. மூன்சென்மம் சேது தீர்த்தம் முயன்றதால் குலமு யர்ந்து
அன்னவன் வந்தா னென்றேம் அதுமறை மாதுர் சாபம்
இந்ததோர் சென்மந் தன்னில் இலகிடுந் தாரம் ரெண்டாய்ப்
பின்சென்மம் சொல்லு கின்றேன் புண்ணிய வதியே
[கேளாய்.

33. முற்பிறவியில் சேது ஸ்நானம் செய்ததால், இவன் குலம் உயர்ந்தது என்று சொன்னேம். அந்தணப் பெண்ணின் சாபமிருந்ததால் இப் பிறவியில் இவனுக்கு இருதாரங்கள் என்று கூறினேம். இவனது மறு பிறப்பைப் பற்றிக் கூறுகின்றேம். புண்ணியவதியே ! கேள்.

34. வேங்கடம் தன்னி லேதான் விளங்குவோ னிக்கு லத்தில்
தீங்கிலா மாலுக் கேதான் செய்குவான் பணியு மேதான்
அன்னவன் முப்பான் மூன்றில் ஆனிமா தத்தி லேதான்
[1]அந்தகன் பக்கல் சேர்வன் அம்பிகை யாளே கேளாய்.

---

1. விஷ்ணு.

1. யமன்.

34. அம்பிகையே ! கேளாய். இவன் திருமலையில் அந்தணர் குலத்தில் உதித்து, பரம்பொருளான திருமாலுக்குக் கைங்கரியம் செய்திடுவான். தனது முப்பத்து மூன்றும் வயதில், ஆனி மாதத்தில் இறந்துவிடுவான்.

35. சாதகன் முன்சென் மத்தைச் சாற்றுவோம் வள்ளூர்
[தெற்கில்
நீதியாய்ச் சமவூர் தன்னில் நேர்ந்தனன் இக்கு லத்தில்
போதவே பூமி யுண்டாய்ப் புத்திரர் மனைவி யாகி
மேதினில் சுகமாய் வாழ்ந்து வினைகளு மில்லா னுகி;

35. ஜாதகனின் முற்பிறவியைப் பற்றிக் கூறுவோம். திருவள்ளூருக்குத் தெற்கில் உள்ள ஓர் ஊரில், அந்தணர் குலத்தில் தோன்றினான். போதுமான பூமிகளை உடையவனாகி, இவ்வுலகில் குற்றமின்றி, புத்திரர் மனைவியருடன் சுகமாக வாழ்ந்து வந்தான்.

36. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனுல் வயைப் பட்டு
ஞாலமேல் வந்தா னென்றேரும் நவிலுவோம் இவனின்
[யோகம்
சிலவான் நலனைப் போலே செய்குவான் ஊழி தானும்
சாலவே அன்னிய தேசம் சாருவான் பொருளுஞ் சேர்ப்பன்.

36. பிறகு மரணமடைந்து, மீண்டும் பிரம்மனுல் படைக்கப்பட்டு, இப் பூமியில் தோன்றினான். இவனது யோகத்தைச் சொல்லுகின்றோம். கல்லொழுக்க முள்ளவன். இவனுக்கு உள்ள செல்வத்திற் கேற்றவாறே கருமங்களையும் புரிவான். வேறு நாடுகளுக்குச் சென்று பொருள் ஈட்டுவான்.

37. முப்பது ஆண்டு தன்னி லெய்திடும் நிதிநிட் சேபம்
செப்புவோ மிடமுந் தெற்கில் சேட்டனுந் தந்தை யில்லம்
அப்பூமி நிலம தாகும் அதுவுமே யிவன்பால் சேரும்
ஒப்புடன் அந்தி யத்தில் உதித்திடும் பொருளு மென்றோரும்.

37. இவனது முப்பதாவது ஆண்டில், புதையல் கிடைத்திடும். அஃது உள்ள இடத்தையும் சொல்லுகின்றோம். பாழாய்ப்போன பெரிய தகப்பனரின் வீட்டில், தெற்குப் பாகத்தில் அஃது இருக்கும். அதுவும் இவனுக்கு வரும். கடைசிக் காலத்திலும் இவனுக்குப் பொருள் கிடைக்கும்.

38. தந்தைநாள் பூமி கொஞ்சம் தானவன் கொஞ்சம் சேர்ப்பன்
வந்தவர்க் கன்ன மீவன் மாடுகள் விருத்தி யுள்ளான்
நொந்திடு பேரைக் காப்பன் நேமியில் நல்லோ னுவன்
சந்தத மீகை யுள்ளான் தனமது பெருகி வாழ்வன்.

38. இவன் தந்தை நாட்களில், நிலங்கள் குறைவாக இருக்கும். இவன் நிலங்களே அதிகமாகச் சேர்ப்பான். தன் வீடு தேடி வந்தவர்களுக்கு விருந்தளிப்பான். கால்நடைகள் நிறைந்திருக்கும். கஷ்டப்பட்டவர்களைக் காப்பாற்றுவான். பூமியில் அனைவருக்கும் நல்லவனாக இருப்பான். எப்பொழுதும் தானம் வழங்குவான். பொருளைப் பெருக்கி நன்கு வாழ்வான்.

39. இனத்துக்கு மேலாய் வாழ்வன் எடுத்தகா ரியமு டிப்பன்
கனத்தவர் நேசங் கொள்வன் கட்டுவார்த் தைகளும் [சொல்வன்
மனையது சித்திரம் செய்வன் மகாதீர்த்தந் தோய்வா னுகும்
தனயர்கள் தமைக்காப் பானும் சத்தியே மேலுங் கேளே.

39. தன்னினத்தவர் அனைவரினும் சிறப்பாக வாழ்வான். எடுத்த காரியத்தை முடிப்பான். நல்ல பெரியோர்களின் நட்பைக் கொள்வான். கற்பனையான மொழிகளைப் பேசுவான். வீட்டை, படங்கள் வரைந்து அலங்கரிப்பான். புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவான். மைத்தர்களை நன்கு வளர்ப்பான். பராசக்தியே! கேட்பாயாக.

40. நாலேழு ஆண்டு மேலாய் நல்கிடும் பலத்த யோகம்
சீலமாய் மாயோ னுக்குத் திருப்பணி வேலை செய்வன்
ஞாலமேல் வறுமை யில்லான் நற்புத்தி அன்ன மீவன்
வேல்விழி மாதர் மோகம் வித்தகி மேலுங் கேளே.

40. இருபத்தெட்டாண்டுகள் நல்ல யோகம் பொங்கிடும். நல்லொழுக்கத்துடன் திருமாலுக்குத் திருப்பணிகள் புரிந்திடுவான். உலகில் ஏழைமையின்றி வாழ்வான். நல்ல புத்தி உள்ளவனுவன். அன்னதானம் செய்வான். அழகிய பெண்களின்மேல் மையல் கொள்வான். நல்ல மனமுடைய அம்பிகையே! கேட்பாயாக.

41. சிலநாட்கள் அன்னிய தேசம் சென்றுமே யுள்ளூர் செல்வன்
நலமுளோர் தம்மால் லாபம் நல்கிடும் கீர்த்தி ஏற்பன்
பலவித லாப முண்டு பரவுப காரி யாவன்
மலையிறை மகளே யாங்கள றைந்தது நடப்ப தாமே.

41. சிறிது நாட்கள் தேசாந்தரத்தில் இருந்துவிட்டுத் தன் சொந்த ஊருக்குப் போவான். நல்லவர்களினால் இலாபத்தை அடைந்திடுவான். நல்ல புகழ் ஏற்படும். பலவிதங்களில் இலாபம் கிடைக்கும். பிறருக்கு உபகாரம் செய்வான். இமயவராசனின் குமாரியே! நாங்கள் கூறியபடியே நடைபெறும்.

42. அன்பது மூன்று ஆண்டில் அழகிய மகர மாதம்
பின்பக்கம் துதியை தன்னில் பித்தரோ கத்தி னாலே
இன்னவ னுடலம் வாடும் இனிவருஞ் சென்மம் சொல்வேன்
துன்மையை விலக்கும் வள்ளுர் சேத்திரந் தனிலு நித்து;

42. ஐம்பத்துமூன்றும், வயதில் தை மாதத்தில், கிருஷ்ணபட்ச துவிதியை நாளில், பித்த ரோகத்தால் இறப்பான். இனி வரப்போகும் பிறப்பைக் கூறுகின்றேம். பாவத்தைப் போக்கும் திருவள்ளுர் என்னும் கேஷேத்திரத்தில் தோன்றி,

43. அரசர்பா லணுகி யேதான் அதிகாரம் மிகவே கொண்டு
உறன்முறை மெச்ச வாழ்வன் உதித்திடு காலந் தன்னில்
குருதியின் தசையி லேதான் கூறுவோர் திங்க ளொன்று
அறைகின்றேம் இருபான் நாளும் அம்பிகை யாளே
[கேளாய்.

43. அரசர்களே யடைந்து, அதிக அதிகாரம் வகித்து, சுற்றத்தார் புகழும்படி வாழ்வான். இவன் தோன்றுகின்ற காலத்தில், அங்காரக மகா தசையில் இருப்பு ஒரு மாதமும் நாட்கள் இருபதும் ஆம். பார்வதியே! கேட்பாயாக.

44. பணிதசை பதினெட் டாண்டும் பலன்தனைக் கூறக்
[கேளாய்த
துணைவர்க்குச் சுபமும் உண்டு தோலைறிடுந் துணைவர்
[தாமும்
வினையிலாச் சமமாம் யோகம் பூமியும் பலித மாகும்
கனமுள குடும்ப லேச்சல் காவலன் தனக்கு ரோகம்.

44. இராகு தசை பதினெட்டாண்டின் பலனைச் சொல்லுகின்றேம். கேளுங்கள். சகோதரர்களுக்கு நன்மை பிறக்கும். மற்றொரு சகோதரனும் தோன்றுவான். குற்றமேதுமின்றி சம யோக ஜாதகனும் இருப்பான். பூமியும் பலிதமாம். குடும்பத்திற்குக் கஷ்டங்களும், குடும்பத் தலைவனுக்கு வியாதிகளும் உண்டாம்.


45. இன்னமும் சிலவே சேதி யியம்புவோம் விபரம் ரெண்டில்
அன்னவன் வீடு பூமி யாபர ணங்க ளெல்லாம்
பன்னுமெண் ணூயிரம் பொன் பகர்ந்தனம் இவனுக் கேதான்
உன்னத தவங்கள் செய்யும் உத்தமி கேட்டி டாயே.

45. இதைத் தவிர, இரண்டாம் காண்டத்தில், வேறு சில செய்திகளும் கூறப்படும். ஜாதகனின் வீடு, பூமி, ஆபரணங்கள் எல்லாம் எண்ணூயிரம் பொன் மதிப்புடையனவாம். நல்ல தவங்களோ ஆற்றுகின்ற பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 31

1. மதி[1]விடை நண்டு கேது மந்திரி கன்னி யாக
அதி[2]காரி ரவிசேய் சுங்கன் அடைவுடன் தேளில் தங்
பதிபுதன் வில்லு ராகு பாங்குள [3]சுறுவ தாக
விதிசென்ம மிடப மாக விளம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் விருஷபத்திலும், கடகத்தில் கேதுவும், குரு கன்னியா ராசியிலும், சனி சூரியன் செவ்வாய் சுக்கிரன் விருச்சிகத்திலும், புதன் தனுசிலும், இராகு மகாத்திலும் தங்கியிருக்கும் நிலையில், விருஷப லக்னத்தில் பிறந்த இந்த ஜாதகருக்குப் பலன்களைச் சொல்லுவீர்;



2. பார்வதி கேட்கும் போது பகருவார் பராசர் தாமும்
சீர்புகழ் பெண்பால் சென்மம் செப்புவோம் கீழ்மேல் வீதி
தேரிய சிறந்த பார்வை சிறந்திடு மிலேச்ச சேயாய்
நேரியாய் உதிப்பா ளென்று நிகழ்த்திரர் முனிவர் தாமே.

2. என்று பார்வதி தேவி கேட்கும்போது, பராசரர் சொல்லுவார். இது பெண் ஜாதகம் என்று சொல்லுவோம். பிறந்த வீடு கிழக்கு மேற்கு வீதியில், நல்ல பார்வையான இடத்தில் உள்ளது. இவள் மகமதிய குலத்தில் பிறப்பாள் என்று முனிவர்கள் கூறினர்.

---

1. விருஷபராசி
2. சனி
3. மகரம்

3. தந்தியும் [1]மகர மாகும் சாமுண்டி [2]வில்லில் தங்க
வந்திடு மாரி கீழ்ப்பால் வகையுள கிரிக்கு உத்ரம்
சாலையுங் கீழ்ப்பால் தங்கும் சட்டமாய் வடக்கில் [3]சேயார்
விந்தையாய் ஏரி மேற்கில் விளங்கிய சிற்றூர் தன்னில்;

3. விநாயகர் கோயில் தெற்கிலும், சாமுண்டி தேவியின் கோயில் மேற்கிலும் உள்ளன. கிழக்கில் மாரியம்மன் கோயிலும் உண்டு. அங்குள்ள ஒரு மலைக்கு வடக்கில் முருகன் கோயிலும், கிழக்குப் பக்கம் சாலை யொன்றும் உள்ளன. மேற்கில் நீர் நிறைந்த ஏரி யொன்றும் உளது. இவ்வாறான சிறப்புக்களுடன் விளங்கிய சிறிய ஊர் ஒன்றில்;

4. வாசமே செய்வா ளம்மா மாதுரு தந்தை யோகம்
ஆசையாய்ப் பிதுரின் யோகம் அடைவுடன் சகோதர
[யோகம்
நேசமாய் மாமன் யோகம் நிகழ்த்துவோம் முன்பின்
[சென்மம்
தூசுபோல் மனத்த ளான சுந்தரி மேலுங் கேளே.

4. வாசம் செய்வாள். அவள் தாய் தந்தையர் யோகத்தையும், சகோதர யோகத்தையும், மாமனின் யோகத்தையும், முன் பின் பிறவிகளைப் பற்றியும் இந்நூலில் எடுத்துக் கூறுகின்றோம். நன் மனத்தினைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

5. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் இருநி
[றத்தான்
பந்தமாய்ச் சமதே கத்தன் பாரினில் வாயு தேகன்
சிந்தையில் கபடு கொஞ்சம் சிநேகிதன் மிகவே கொள்வன்
வந்தவர்க் கன்ன மீவன் வாககுகள் தப்பா னென்றோம்.

5. தந்தையின் குணத்தைக் கூறுகின்றோம். அவன் மாசற்ற மூடையவன். சம்மான அவயவங்களைப் பெற்றவன். வாயு சரீர முடையவன். மனத்தில் கொஞ்சம் கபடமுடையவன். நண்பர் பலரைப் பெறுவான். தனதில்லம் வந்தவர்களுக்கு உணவளிப்பான். பிறழாத சொல்லினை உடையவன்.

---

1. தென்மேற்கு
2. மேற்கு
3. சுப்பிரமணியர்

6. செட்டுடன் கிருஷி செய்வன் தீரகன் மனத்த னுகும்
சட்டமாய்ப் பேச வல்லான் சற்சன ரூறவு கொள்வன்
திட்டமா யெடுத்த வேலை சிக்கிரம் முடிக்க வல்லன்
கட்டமென் றுரைத்தோர் தம்மைக் காவல னுத ரிப்பான்.

6. வியாபாரமும் பயிர்த்தொழிலுஞ் செய்வான். ஒன்றிற்கும் அசை வில்லாத நன் மனத்தைப் பெற்றவன். ஒழுங்காகப் பேசுவதில் வல்லவன். நல்லோர் நட்பைக் கொள்வான். தானெடுத்த வேலையை விரைவில் செய்து முடிப்பான். "கஷ்டம்" என்று கூறி வந்தவர்களுக்குத் தக்க உதவியைச் செய்வான்.

7. முன்கோபங் கொஞ்ச முள்ளான் மகமதைத் தொழுத
[லுள்ளான்
அன்னியர் தமக்கு நேயன் அடைமொழி அதிகம் கூர்வன்
இன்னவன் கரத்தி லேதான் இலகிடும் பத்ம ரேகை
தன்னிலே சுழியு முள்ளான் சகலபாக் கியமும் சேர்ப்பன்.

7. சிறிதளவு முன் கோபமுள்ளவன். அழகிய கவர்ச்சி மிக்க முகத்தை யுடையவன். பிறரால் நேசிக்கப் படுபவன். புகழுரைகளை யதிக மாகக் கூறுபவன். இவன் கையில் பத்மரேகை விளங்குகின்றது. அந்த ரேகையில் சுழியொன்றும் பெற்றுள்ளான். எல்லாவித நன்மைகளையும் அடைவான்.

8. இருதாரம் உடையா னுவன் இளையாள்மேல் பட்ச
[முள்ளான்
கர்வமும் இல்லா னுகும் காளைகள் இல்லா னுகும்
சிறுமையு மில்லா னுகும் சென்றிடம் பெருமை யுள்ளான்
நெறியுமே உடைய னுகும் நீணில முடைய னுமே.

8. இவனுக்கு இரண்டு மனைவியர். இளையவள் மீது அன்புடையவன். கர்வமற்றவன. புத்திரப் பேறு இல்லாதவன். இழிவற்றவன். சென்ற விடமெல்லாம் சிறப்புடையவன். நல்லொழுக்க முடையவன். நீண்ட (அதிகமான) நில புலன்களைப் பெற்றிருப்பான்.

9. இப்படி யிருக்குந் தந்தை இவனுக்குத் தாரம் ரெண்டில்
ஒப்புடன் இளையா ளுக்கு உதித்தவ ளிவளே யென்றோம்
மைப்புடன் தாய்க்கு ணத்தை விளம்புவேன் மால்நி றத்தாள்
தப்பிதம் ஒருவர்க் கெண்ணுள் தானவள் சமதே கத்தாள்.

9. இத்தகைய தந்தையின் இரு மனைவியரில் இளையவளுக்கு மக ளாகப் பிறந்தவளே இவள். இவளது தாயின் குணத்தைக் கூறுவோம்.

கரிய நிறமுள்ளவள். பிறருக்கு எக்காலத்திலும் தீமையை நினையாதவள். சமமான அவயவங்களைப் பெற்றிருப்பாள்.

10. நெஞ்சினில் கபடு முள்ளாள் நியாயமாய்ப் பேச மாட்டாள்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பாள் கட்டு வார்த்தை
இஞ்சுக ரோக முள்ளாள் கீர்த்தியும் கொஞ்ச முள்ளாள்
தஞ்சமாய்ப் புருடன் சொல்லைத் தடுத்துமே வார்த்தை
[சொல்வாள்.

10. கபட உள்ளத்தினள். நியாயமாக உரையாட மாட்டாள். தான் கூறிய மொழிகளே சிறந்தவை என்று சாதிப்பாள். கற்பனை உரைகள் பல வழங்குவாள். காசநோ யுடையவள். சிறிது புகழும் பெற்றவள். தன் கணவன் கூறும் சொற்களைத் தடுத்து மேலும் மேலும் பேசுவாள்.

11. தந்தையின் வர்க்க மொத்தம் சாற்றுவோம் பதினொன்
[றாகும்
விந்தையா யாண்பால் மூன்று விளங்கிடும் பெண்பா லவ்வார்
எந்தையே யிதற்கு மேலே இலகாது மற்ற வெல்லாம்
கந்தனைப் பெற்ற மாதே கழிறின மொழிகுன் றாது.

11. தகப்பனுரின் வர்க்கத்தைக் கூறுகின்றோம். தந்தையின் கூடப் பிறந்தவர்களது எண்ணிக்கை மொத்தம் பதினொன்று. அவர்களில் ஆண்கள் மூவர்; பெண்கள் ஐவர். இவர்களைத் தவிர வேறெயவர் நிலையார். முருகனைப் பெற்ற பார்வதியே! கூறிய வார்த்தைகள் பிழையா.

12. சாதகி குணத்தை யாங்கள் சாற்றுவோ மிருநி றத்தாள்
நாதனுர் பக்தி மானும் நாயகி வாயு தேகி
வேதனை ஒருவர்க் கெண்ணுள் வித்தகி யூகை சாலி
சீதள குணத்தா ளாகும் சார்ந்திடுங் கோபம் கொஞ்சம்.

12. இந்த ஜாதகியின் குணத்தைக் கூறுகின்றோம். இவள் மாநிற முள்ளவள். கடவுள் பக்தி பூண்டு ஒழுகுவாள். வாயு சரீரம் படைத்தவள். பிறருக்குத் துன்பம் நினையாதவள். நன்மனம் உடையவள். ஆராய்ந்து செயலாற்றும் தன்மையினள். தண்ணிய பண்புடையவள். ஆனல், சிறிது கோபமுடையவள்.

13. புத்தியும் பொருளு முள்ளாள் புண்ணிய சாலி யாகும்
நித்தியம் சுகபு சிப்பாள் நிதானமாய் வார்த்தை சொல்வாள்
தத்திய நெய்பா லிட்டம் தயாளமு முடைய ளாகும்
பத்தினி துணைவர் தம்மைப் பகருவோம் கேளு மம்மா.

13. புத்தியும் செல்வமும் உடையவள். நல்ல புண்ணியச் செயல்களைப் புரிபவள். நான்தோறும் சுகமான உணவினை உட்கொள்ளுவாள். பதட்டமில்லாது உரையாடுவாள். இவளுக்கு நெய் பால் முதலியவைகளில் விருப்ப மதிகம். தாராள மனப்பான்மை உடையவள். தயை மிக்கவள். இவளது சகோதர பாவத்தைக் கூறுவோம். தாயே! கேளுங்கள்.

14. இவளுடைத் துணைவர் தம்மை இயம்புவோ மைவ ராமே
அவனியில் பெண்பால் நான்கு அவையுமே தீர்க்க மாகும்
பவமுள ஆண்பா லொன்று பெருகாது நட்ட மாகும்
சிவனிடப் பாகத் தாளே செல்வியே மேலுங் கேளே.

14. இவளுடன் பிறந்தவர் ஐவர் என்று கூறுவோம். பெண்கள் நால்வர். இவர்கள் தீர்க்கமாவர். ஆண்மகன் ஒருவன். அவன் இறந்து விடுவான். சிவபெருமானின் இடப்பாகத்தில் வாசம்செய்யும் உமையே! செல்வியே! மேலும் கேளுங்கள்.

15. இப்படி யறுவர் சொல்ல இயல்செய முனிவர் சொல்வார்
எப்படி ஆண்பால் சேதம் இயம்புவீர் முனியே நீர்தாம்
தப்பிதம் மூன்றில் கேது சார்ந்ததால் சகோதர ஸ்தி
ஒப்புடன் உதித்தா லுந்தான் உறுதியும் இல்லை தானே.

15. இப்படியாக, பராசர முனிவர் கூறவும், செயமுனிவர் கூறுகின்றார். எப்படி இந்த ஜாதகிக்குச் சகோதர தோஷம் கூறமுடியும்? ஜாதகியின் சென்ம லக்னமாகிய விருஷபத்திற்கு மூன்றாவது இடத்தில் இருப்பதால், சகோதர தோஷம் உண்டு. தோன்றினாலும் அவன் நிலைத்து இருக்க மாட்டான். விரைவிலேயே இறந்து போவான்.

16. தந்தையின் முன்சென் மத்தைச சாற்றுவோ மதுரை
[தன்னில்
பந்தமாய் வன்னிய ருகிப் பாலர்கள் மனைவி யுண்டாய்த்
தந்தன் மதிகம் பெற்றுத் தானவன் வாழு நாளில்
வந்தவுன் தன்னை யேதான் வகையுடன் சொல்லக் கேளாய்.

16. இவள் தந்தையின் முற்பிறவியைக் கூறுவோம். மதுரை நகரத்தில், வன்னியர் குலத்தில் உதித்து, மனைவி மக்கள் உடையவனாய், செல்வமும் சிறப்பும் பெற்று, இவன் வாழ்ந்து வந்த நாளில், சேர்ந்த நிலையொன்றைக் கூறுகின்றோம். கேளுங்கள்.

17. ஏழையின் பெண்பால் தானும் இவன்வீட்டில் நிசியில்
[வந்து
பாலக னுக்கு வன்னம் பகருவீர் என்று கேட்கச்
சீலமா யளித்துத் தானும் சித்திரி மேலே மோகம்
கோலமா யெண்ணங் கொண்டு கோதையைக் கைப்பி
[டித்தான்.

17. ஓர் ஏழைப் பெண், ஒரு நாள் நள்ளிரவில், இவனில்லம் வந்து தன் குழந்தைக்குச் சிறிது உணவு கொடுங்கள் என்று யாசித்தாள். இவன், உணவு அவளுக்குக் கொடுத்து, அவள்பால் மையல் கொண்டு, அவள் கையைப் பற்றினான்.

18. கைதனை யுதறிக் கொண்டு காவலன் பின்சென் மத்தில்
தையல ரிரண்டு மாகிச் சற்புத்ர ரில்லா ஞகி
மைவிழி பெண்க ளுண்டாய் மனையாளால் வருத்த
[முண்டாய்
வையகம் தன்னி லேதான் வாழவே சாப மிட்டாள்.

18. அந்தப் பெண் கையை உதறித் தள்ளி, சினங் கொண்டு, மறு பிறவியில் இரு மனைவியரைப் பெற்று, நல்ல புதல்வர் இல்லாமல், பெண்கள் பலர் தோன்றி, மனைவியால் துன்பங்கள் ஏற்பட்டு, உலகில் வாழவேண்டும் என்று இவனைச் சபித்தான்.

19. இப்படி முனிவர் சொல்லப் பார்வதி கேட்க லுற்றுள்
தப்பிதம் முன்சென் மத்தில் சேர்ந்தவூழ் தீரச் சாந்தி
செப்பிடு மென்று கேட்கச் செயமுனி கூறு கின்றார்
ஒப்புட னிருவ ருந்தான் உறுதியாய் [1]நாகூர் சென்று ;

19. இவ்வாறு முனிவர்கள் கூற, பார்வதி கேட்கலானாள். முன் சென்மத்தில் செய்த வினை தீரச் சாந்தியைக் கூறுங்கள் என்று கேட்க, செய முனிவர் கூறுகின்றார். மன வொற்றுமையுடன் இருவரும் நாகூர் சென்று ;

20. ஆண்டவன் பாதம் போற்றி அங்குள்ள ஏழை கட்குத்
தோன்றவே நூறு பேர்க்குச் சுசியுடன் அன்ன மீந்து
பூணவே இரண்டு பொன்னைப் புண்ணிய தானம் செய்தால்
வேணதாய்ப் புத்ர னென்று விளங்கிடு மென்று
[சொன்னார்.

1. தஞ்சை ஜில்லாவில்லுள்ளது. மகமதியர்களுக்கு முக்கியத் தலம்.

20. ஆண்டவன் பாதங்களில் வணங்கி, அங்கு வாழ்கின்ற ஏழைகள் நூறுபேருக்கு நல்ல உணவளித்து, இரண்டு பொன் தானமும் வழங்கினால், நல்ல புத்திரன் ஒருவன் தோன்றுவான்.

21. இப்படிச் செய்யா ஞகில் இலகாது புத்திரன் தானும்
சொற்படி செய்வா ஞகில் துலங்கிடும் புத்திர னென்று
செப்புவோ மிவள்முன் சென்மம் தீர்ந்திடும் காஞ்சி தன்னில்
துப்பிலாப் பிரம்ம சேயாய்ச் சாதகி பிறந்தா ளென்றோம்.

21. இவ்வாறு செய்யாவிட்டால் புத்திரப் பேறு உண்டாகாது. சொன்னபடி செய்தால், ஒரு புதல்வன் பிறந்து விளங்குவான். ஜாதகியின் முற் பிறவியைக் கூறுவோம். இவள் காஞ்சீபுரத்தில் அந்தணர் குலத்தில் பிறந்தாள் என்று சொன்னோம்.

22. முன்சென்மம் பிரம்ம சாதி முயற்சியாய்ப் பிறந்து மேலும்
இச்சென்மம் மிலேச்ச சாதி இலகிய காரணத்தை
உச்சித மாகச் சொல்லும் உமையவள் கேட்கும் போது
மிச்சமாய்ப் புசண்டர் தாமும் மேதினில் சொல்ல லுற்றார்.

22. முன் சென்மத்தில் அந்தணர் குலத்தில் மேன்மையுறப் பிறந்து, இப் பிறவியில் மகமதியக் குலத்தில் பிறந்த காரணத்தைத் தக்கபடி கூறுங்கள் என்று பார்வதி கேட்கும்போது, புசண்ட முனிவர் கூறலானார்.

23. குளிப்பது மில்லை பூசை குணமுட னில்லை தானும்
சலிப்புட னிச்சென் மத்தில் சாதகி செனித்தா ளென்றோம்
நயப்புடன் குளிக்க வேதான் நாயகன் பதந்து திக்கத்
துணிவுடன் வாழ்வா ளென்றோம் சுந்தரி மேலுங் கேளே.

23. குளிப்பதில்லை. நல்ல தேவதா பூசை யில்லை. ஆகையால் தான் ஜாதகி இப்பிறவியில் இந்தக் குலத்தில் உதித்தாள் என்று கூறினோம். இப்பொழுது புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதாலும், இறைவனது திருவடிகளைப் பூசிப்பதாலும் நன்கு வாழ்வாள் என்று கூறினோம். பார்வதியே! மேலுங் கேளுங்கள்.

24. இவளுக்கு வேட்டை கந்தான் எமன்திசை தனிலி ருந்து
குணமுள சிவந்த தேகன் கொள்ளுவாள் ஏழு ஆண்டில்
தவமுள அவட்குப் புத்திரர் சாற்றுவோம் ஆண்பால் ஒன்று
நவமதில் பெண்பால் ஒன்று நாட்டுவோம் கேளு மாதே.

24. இந்த ஜாதகிக்குக் கணவன் வீடு தென் திசையில் எற்படும். நல்ல குணமுள்ளவனும், சிவந்த நிறமுடையவனுமான ஒருவன், இவளுடைய ஏழாவது வயதில் மணந்து கொள்ளுவான். இவளுக்கு ஆண் ஒன்று, பெண் ஒன்றுமாக இரு சந்ததிகள் உண்டு என்று கூறுவோம். உமையே! கேட்பீராக.

ஜாதகம் 32

1. நந்தியும் சென்ன மாக ராகுவு மைந்தில் தங்க
மந்தனும் நவத்தி லாக மால்புகர் தசம தாகச்
சந்திரன் விரயம் புக்க சேய்குரு பானு கேது
தந்தலா பத்தி லேறச் சாற்றுவீர் பலனைத் தானே.

1. சென்ம லக்கினம் விருஷபமாகவும், லக்கினத்துக்கு ஐந்தாமிடமாகிய கன்னியில் ராகுவும், சனி ஒன்பதாமிடமாகிய மகரத்திலும், புதனும் சுக்கிரனும் பத்தாமிடத்திலும், சந்திரன் விரய ஸ்தானமாகிய பன்னிரண்டிலும், இலாப ஸ்தானமாகிய பதினொன்றில் செவ்வாய் குரு சூரியன் கேது ஆகிய கிரகங்களும் அமைந்திருந்தால் உண்டாம் பலன்களைக் கூறுவீர்.

கேது குரு சூரியன் செவ்வாய்	சந்திரன்	லக்கினம்	
புதன் சுக்கிரன்	ராசி சக்கரம்		
சனி			
			ராகு

2. குறுமுனி புகலு கின்றார் குறித்தன மாண்பால் சென்மம்
பெறுந்தாதைக் கில்லம் சொல்வேன் பூதவா கனத்தாள் [தேவி
கரிமத யானை யுத்ரம் கௌதமர் மாரி வாயு
அரன்கோட்டம் பால தாகும் [1]அழகேசன் வாச லாமே.

2. அகத்திய முனிவர் சொல்லுகின்றார். இந்த ஆண்மகனது ஜாதகம். இவன் பிறந்த, தந்தையின் வீட்டைப் பற்றிக் கூறுகின்றேன். காளிதேவி, விநாயகர் ஆகியோர் கோயில்கள் வீட்டுக்கு வடக்கில் உள்ளன. மாரியம்மன் வடமேற்கில் வாசம். சிவன் கோயில் ஒன்று வீட்டுக்கு அருகில் உள்ளது. வடக்கு நோக்கிய வாயிலை யுடையது, இவன் பிறந்த வீடு.

3. அருகினில் சந்து மூண்டு அணுகிய சிறுவூர் ஆகும்
வருகுவா னிரண்டாம் சென்மம் வடுகர்தங் குலமே யாமே
பெருமன்னன் தந்தை யோகம் பேதையாள் புத்திர யோகம்
திருமகன் மூன்பின் சென்மம் செப்புவோ மிந்நூல் தன்னில்.

1. குபேரன்.

3. வீட்டுக்கு அருகில் சந்து ஒன்றுண்டு. இங்ஙனமான சிறியதொரு ஊரில், வடுகர் வமிசத்தில், தன் தந்தைக்கு இரண்டாம் பிறப்பாகப் பிறப்பவன் இந்த ஜாதகன். இவனது தாய் தந்தையர், மனைவி, புதல்வர் ஆகியோர்கள் யோகங்கள், ஜாதகன் முற்பிறப்பு மறுபிறப்புக்கள் முதலிய அனைத்தையும், இந்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுவோம்.

4. தாதைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு முதல்மா தின்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
போதவே துணைவர் காணுன் பூமியில் தனியாய் வாழ்வன்
ஓதுவார் பராசர் தாமும் உரைத்திட்டீர் மறுதாய் ஒன்று.

4. ஜாதகன் தாட்டனுருக்கு மனைவியர் இருவர். அவர்களில் முதல் மனைவி பெற்ற புதல்வனுவன் இந்த ஜாதகனின் தந்தை என்று கொல்லுவோம். உடன்பிறந்தார்கள் இல்லாதவனும், உலகில் தனித்து வாழ்வான். பராசரர் கேட்கின்றார். இந்த ஜாதகன் தந்தைக்கு மறு தாய் ஒருத்தியுண்டென்று கூறினீர்கள்.

5. அதற்குமே சுதர் களுண்டோ அறிவிப்பீர் முனியே நீர்தாம்
அதிசதி யொன்று தீர்க்க மாரண மவ்வா ருகும்
சதியிலாக் கன்னி சேதி சாற்றுவோம் சிவந்த மேனி
துதிசெய்வோர்க் குதவு வாளாம் தோகைபோல் சாயல்
[ஓக்கும்.

5. அவனுக்குப் புதல்வர்கள் உள்ளனரோ என்று நீர் தெரிவிப்பீராக. அவனுக்கு ஒரு பெண் பிறந்து தீர்க்கமாக விளங்குவாள். ஒருத்தி பிறந்து சில காலத்தில் மடிவாள். குற்றமற்ற அந்தப் பெண்ணின் செய்தியைக் கூறுவோம். சிவந்த உடல். தன்னைப் புகழுவோருக்கு உபகாரம் செய்வாள். மயில்போன்ற சாயலை யுடையவள்.

6. சமயோகம் வறுமை காணுள் சாதமும் குறைவு ருதாள்
அமைந்திடு வரனும் உத்ரம் அவளுக்குச் சுதர்கள் தோடம்
நியமவர் அருளி னுலே எய்திடு மாண்பால் ரெண்டு
பவமிலாப் பெண்பா லவ்வார் பெருகிடும் தீர்க்க மாக.

6. இன்பமும் துன்பமும் சமமாக உடையவள். தரித்திர மில்லாதவள். போஜன சௌக்கியம் குறையாதவள். அவளுக்குக் கணவனும் அவளுருக்கு வடக்குத் திசையிலிருந்து வாய்ப்பான். அவளுக்குப் புத்திர தோஷம் உண்டு. ஆயினும் ஒழுக்கமுள்ள பெரியோர்களின் அருளினுல், ஆண்கள் இருவரும் பெண்கள் இருவரும் பிறந்து தீர்க்க ஆயுளுடன் விளங்குவர்.

7. மங்கையும் தீர்க்க சீவி மாரன்தன் சேதி சொல்வேன்
சங்கையாம் மனத்த னுகும் தங்கிடும் பித்த பாதை
சிங்கம்போல் கோப முண்டு சிலேடையாய்ப் பேசு வானும்
பொங்கின கும்ப மொப்பப் பூமியில் சீவிப் பானும்.

7. பெண் ஒருத்தி தீர்க்க வயதுடன் வாழ்வாள். அவள் கணவன் வரலாற்றினைக் கூறுகின்றோம். சந்தேகமுள்ள மனத்தினன். அவனைப் பித்த ரோகம் வாட்டும். சிங்கத்தைப் போன்று சினம் உள்ளவன். இருபொருள் தோன்ற வார்த்தைகளைக் கூறுவான். நிறைகுடத்தைப் போலப் பல நலங்களும் நிறைந்து வாழ்வான்.

8. அன்னையின் சுகமில் லாதான் அடைந்தாரை ஆத ரிப்பான்
பொன்பணி சேர்ப்பா னுகும் பிதாவுக்குத் தாழ்வு றுதான்
கன்னியர் மோக னுவன் காளைகள் பனையோர் விருத்தி
துன்மையை யெவர்க்கு மெண்ணுன் தொடுவழக் கதனில் [செல்லான்.

8. தாயினுல் சுகமைகளைப் பெறமாட்டான். தன்னை வந்தடைந்தவர் களைக் காப்பாற்றுவான். பொன்னும் ஆபரணங்களுஞ் சேர்ப்பான். தன் தந்தை இருந்த நிலையில் இவனும் வாழ்வான். பெண்களிடம் மையல் கொள் வான். கால் நடைகள், பனைமரங்கள், ஏர்கள் விருத்தி யுடையவன். மனத்தில் எவர்க்கும் தீங்கு நினையாதவன். வீண் வழக்குகளில் தலையிட மாட்டான்.

9. ஆதிரைக் கடக ராசி அணுகுவா னந்தப் பாலன்
பாதக மனஞ்செல் லாதான் பதர்கொஞ்ச முடைய னுகும்
காதலி யொன்றே யென்றோம் காளைகள் ஆண்பால் மூன்று
சீதள வதனம் போன்ற செல்விமார் இருவ ராகும்.

9. திருவாதிரை நட்சத்திரம் கடக ராசியில் இந்தப் பாலகன் தோன்றுவான். பாவமான செயல்களில் மனத்தைச் செலுத்தாதவன். சிறிதளவு கோபமுள்ளவன். இவனுக்கு மனைவி ஒருத்தியே. சந்ததிகளில் ஆண்கள் மூவரும், சந்திரனை யொத்த அழகியரான பெண்கள் இருவரும் ஆவர்.

10. உடன்கூடி வாழ்வ னுகும் உரைக்கின்றோம் தந்தை சேதி
விடவுரை பகரா னுகும் வீண்பழி ஏற்கா னுகும்
கடகமும் அம்மி நாளில் கலப்பனும் யூகை சாலி
படையில்முன் செல்லா னுகும் பண்போர்க்கு மன்ன மீவன்

10. இவன் எல்லோருடனும் கூடி வாழ்வான். இனி ஜாதகன் தந்தை வரலாற்றை உரைக்கின்றோம். அவன் கடகராசியில், புனர்பூச நட்சத்திரத்தில்

பிறப்பான். மிக்கும் ஆராய்ந்து செயலாற்றுபவன். போர்க்களத்தில் முன்னணியில் செல்லமாட்டான். நற்குண முடையவர்களுக்கு உணவளிப்பான்.

11. பொறுமையும் பெருமை யேற்பன் போசனப் பிரிய னுகும்
வருவோரை ஆத ரிப்பான் மருவிடும் நாபிச் சூடு
குறையென்றோர்க் குதவி செய்வன் குத்திரம் பேசா னுகும்
அறிவுளான் கல்வி மானும் அவன்ஞாதி உறவு மாவன்.

11. பொறுமையும் பெருமையும் ஏற்பான். போஜனத்தில் விருப்ப முடையவன். தன் வீடு நோக்கி வருகின்றவரை ஆதரிப்பான். நாபிச் சூட்டினால் வருந்துவான். துன்பமடைந்தவர்களுக்கு உதவி செய்வான். பிழைபடப் பேசாதவன். அறிவுள்ளவன். கல்வியிற் சிறந்தவன். தாயாதியருடன் நேசங் கொள்வான்.

12. பந்துவால் வேரூர் பூமி பாலகன் விரயம் செய்வன்
துண்டமாய்க் கூரு னுகும் சோம்பலுங் கொஞ்ச முண்டு
வண்டிவா கனமு முண்டு மாற்றுனை உறவு கொள்வன்
கண்டிதம் பேசா னுகும் காலிகள் விருத்தி யுண்டு.

12. உறவினர் வழியாக வேற்றூரில் உள்ள நிலத்தை அழிப்பான். நறுக்காகப் பேசமாட்டான். சிறிதளவு சோம்பலும் உடையவன். வண்டி முதலிய வாகனங்கள் உண்டு. பகைவனை நேசம் கொள்வான். கண்டிப்பாகப் பேசமாட்டான். கால்நடைகள் விருத்தியுள்ளவன்.

13. என்னகா ரணத்தி னுலே இவன்துணை தோடம் சொன்னீர்
ஒன்பதில் சனியுந் தங்க உயர்கேது லாப மேற
அன்னையு மாறில் மாற அணுகாது துணைவர் தாமும்
துன்மையாய் நாபிச் சூடு தோன்றுங்கா ரணங்க ளெவ்வார்.

13. எந்தக் காரணத்தினால் இவனுக்குச் சகோதர தோஷம் உண்டு என்று கூறினீர்கள்? இலக்கினத்துக்கு ஒன்பதாம் இடத்தில் சனியும், லாப ஸ்தானமாகிய பதினொன்றில் கேதுவும் இருப்பதாலும், மாத்ருகாரகன் ஆறில் மாறுவதாலும் சகோதர தோஷம் உண்டு. நாபிச் சூட்டு நோய் அதிகமாக ஏற்படுவதற்குக் காரணம் யாது?

14. புதன்புகர் கூடி பத்தில் பொருந்தின பலத்தால் நேரும்
இதுவன்றிப் பூர்வம் தன்னில் இவன்சில கொடுமை
[செய்தான்
அதனுலே நேர்ந்த தென்றோரும் அறிவிப்பீ ரந்தச் சங்கை
எதிபன்தன் பூர்வம் தன்னை யறைகின்றோரும் முனியே கேளும்

14. புதனும், சுக்கிரனும் பத்தாமிடத்தில் பொருந்தி யிருப்பதால் காபிநோய் ஏற்படும். இதைத் தவிரவும், இவன் முற்பிறவியில் சில கொடுமை களைச் செய்துள்ளான். அதனாலேயே இத்தகைய பலன்கள் ஏற்பட்டன. அவற்றைத் தெரிவியுங்கள். தந்தையின் முற்பிறவியைப் பற்றிக் கூறுகின் றோம்; முனிவரே! கேளுங்கள்.

15. சொக்கர்வாழ் பாண்டி யுத்ரம் சிறுவூரில் வேளா ளுகத்
தக்கநன் குடும்பி யாகித் தனமது பெருகி யேதான்
மிக்கவே வாழும் நாளில் மேவின வினையைச் சொல்வேன்
குக்கலுக் கன்ன மீயாக் குறையொன்று சேர்ந்த தென்றோம்.

15. சோம சுந்தரக் கடவுள் திருக்கோயில் கொண்டுள்ள மதுரைக்கு வடக்கில், ஒரு சிற்றூரில், வேளாளர் குலத்தில், தகுதியான குடும்பமுடைய வனுய்ச் செல்வம் மிகுந்து, அறிவு பெருகி, சுகமாக வாழ்ந்திருக்கும் நாளில், ஏற்பட்ட தோஷமொன்றைக் கூறுகின்றோம். நாய்க்குச் சோறிடாத பிழை யொன்று இவனே வந்தடைந்தது.

16. அன்னிய மாது பேரில் அடாநிந்தை சொன்ன போது
கன்னிகை வருத்த முற்றுக் கழறின சாபங் கேண்மோ
துன்மையாய் வார்த்தை யென்மேல் செப்பின பாவிக்
[கேதான்
பின்வருஞ் சென்மந் தன்னில் பெற்றதாய் சுகமு மின்றி:

16. வேறு பெண் ஒருத்தி மீது அடாத பழியொன்றை இவன் கூறிய போது, அப்பெண் மனம் வருந்திக் கூறிய சாபத்தைக் கேளுங்கள். என்மீது அக்கிரமமாக அடாப்பழியைக் கூறிய பாவியே! வரும் பிறவியில் பெற்ற தாயினல் சுகம் ஏதுமின்றியும்,

17. துணைவரு மில்லா தாகித் தொல்புவி தன்னில் வாழ்வாய்
பிணையாகச் சொல்லி யேதான் சென்றனள் மாது தானும்
வினைவேறு மில்லை யென்றோம் வித்தகன் மரண மாகிக்
கனமுள பிரமன் லக்கம் [1]கமலமாங் குலமு தித்தான்

17. சகோதரர்கள் இல்லாமலும், இந்தப் புவியில் உன் வாழ்வு அமைக என்று கூறிச் சென்றனள். அதைத் தவிர வேறு தோஷம் ஒன்று மில்லை. பின்பு மரணமடைந்து, பிரமனல் படைக்கப்பட்டு, அந்தணர்குலத் தில் பிறந்தான்.

---

1. அந்தணர்.

18. பெண்ணது சாபத் தாலே பெற்றதாய் ஆறில் மாள்வள்
அண்ணன்தம் பிகளு மின்றி அணுகிடும் பித்த வாயு
குன்னிய மனத்த னுகிக் குவலயம் தன்னில் வாழ்வான்
கண்ணன்தன் தங்கை யாளே கழறின குணத்தா னுக்கு ;

18. முற்பிறப்பில் ஏற்பட்ட பெண்ணின் சாபத்தால், இவனே ஈன் றெடுத்த தாய் இவனது ஆறுவது வயதிலேயே இறந்துபோவாள். அண் ணன் தம்பிகள் எவருமில்லாமல் இவன் பித்தவாயு நோயினால் துன்பப்படு வான். மனம் கொந்து வருத்தத்துடன் இவ்வுலகில் வாழ்வான். திரு மாலின் தங்கையாகிய பார்வதியே! இங்ஙனம் கூறப்பட்ட குணமுடை யவனுக்கு;

19. உதிப்பனும் இந்தப் பாலன் உரைக்கின்றே மிவன்கு
[ணத்தைச்
சதியிலா மனத்த னுகும் சிவந்தமெய் வாத தேகி
அதிதிபோல் வார்த்தை யுண்டு யாவர்க்கும் நல்லோ னுவன்
துதிசெய்தோர்க் கன்ன மீவன் தோகையர் மோக னுவன்.

19. இந்த ஜாதகன் பிறப்பான். இவன் குணத்தைக் கூறுகின்றோம். வஞ்சகமில்லா உள்ள முடையவன். சிவந்த சரீர முடையவன். வாத சரீரம் உள்ளவன். மிகவும் இனிமையாகப் பேசுவான். யாவர்க்கும் நல் லவனுவான். தன்னைப் புகழ்ந்தவர்களுக்கு உணவளிப்பான். பெண்களிடம் மோகம் உடையவனுவான்.

20. செய்ந்நன்றி மறவா னுகும் திருப்பணி வேலை செய்வன்
ஐயமென் றோரைக் காப்பன் அடாதிந்தை கூறு னுகும்
மெய்யுமே தினியும் பொன்னும் மகிழ்ச்சியாய்த் தேட
[வல்லன்
கைதனில் கோதுமை ரேகை கஞ்சமாம் ரேகை யுண்டு.

20. செய்ந்நன்றி மறவாதவன். கோயில் திருப்பணிகள் புரிவான். யாசிப்பவர்களை ஆதரிப்பான். அடாத வார்த்தைகளை ஒருபோதும் பேச மாட்டான். இவன், நிலம் பொன் முதலிய செல்வங்களைத் தேடுவதில் நிறமை வாய்ந்தவன். இவனது கரத்தில் கோதுமை ரேகையும், பத்மரேகை யும் பொருந்தி யிருக்கும்.

21. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தரணிகள் பலவூர் சேர்ப்பன்
விந்தையாய்ப் பேச வல்லன் விருந்தோர்மேல் பிரிய னுகும்
சுந்தர முடையோ னுகும செகராசர் பேட்டி கொள்வன்
முந்தின தலங்கள் செல்வன் உயர்வான குடும்பி யாவன்.

21. தன் தந்தையைவிடச் சிறப்புள்ளவனாக வாழ்வான். இப்புவியில் பல கிராமங்களைத் தனது உடைமை யாக்குவான். கலைச்சுவை ததும்பப் பேசுவதில் வல்லவன். விருந்தினர்மீது விருப்பமுள்ளவன். மிகவும் அழ கிய உடலமைப்பைப் பெற்றவன். அரசர்களைப் பேட்டி காண்பான். புண்ணி யத் தலங்களுக்கு யாத்திரை செய்வான். உயர்ந்த குடும்பியாக வாழ்வான்.

22. பாலகன் தனக்கு யோகம் பகர்ந்தகா ரணங்கள் சொல்வாய்
[1]ஆலமும் கன்னி யாக அந்தணன் லாபம் தங்க
[2]நீலனும் தர்மகர்மன் நீள்ரவி புகர்க்கு ரெண்டில்
சாலவே யிருப்ப தாலே சாமரை யோக முண்டு.

22. இந்த பாலகனுக்கு இவ்வித யோக முண்டாகுமென்று கூறிய தற்குக் காரணங்களைக் கூறுங்கள். ராகு கன்னியிலும், குரு லாபஸ்தான மாகிய பதினொன்றிலும், சனி தர்ம கர்மாதிபதியாகியும், சூரியன் சுக்கிர னுக்கு இரண்டாமிடத்திலும் இருப்பதால் சாமரை யோக மொன்றும்;

23. பர்வத யோக மொன்று பகருவோம் வேசி யோகம்
திருதிய யோகம் சொன்னேம் செகமதில் வறுமை காணன்
அரசர்க்கு இவன்சொல் மேன்மை அதிகாரத் தொழிலு [மேற்பன்
இருஇல்லம் செய்வா னுகும் இருநான்காண் டதன்மேல் [யோகம்.

23. பர்வத யோகம் ஒன்றும், வேசி யோகம் ஒன்றுமாகிய மூன்று யோகங்கள் இவனுக்குக் கூறினேம். உலகில் வறுமையைக் காண மாட்டான். மன்னனும் இவன் சொல்லே மேன்மையாகக் கருதுவான். நல்ல அதிகாரமுடைய தொழிலே ஏற்பான். இரு வீடுகளைக் கட்டுவான். எட்டு வருஷங்களுக்குமேல் போகம் உண்டு.

24. அதுமுதல் ஐம்ப தாண்டும் அப் புலி போலே யோகம்
நிதிபிகப் பெருக்க மாகும் நினைத்தகா ரியங்க ளோங்கும்
விதவித லாப மேலும் விளம்புவோம் பின்பால் சேதி
புதையலும் கூடும் என்றேம் புகர்தசை அந்தம் தன்னில்.

24. அதுமுதல் ஐம்பது வயதுவரை வளர்பிறைச் சந்திரனைப்போல் யோகவாழ்க்கை நிகழுவான். செல்வமும் பெருகும். எண்ணிய காரியம் கைகூடும். விதவிதமான இலாபங்கள் உண்டாம். பிற்பகுதியில் பல னைக் கூறுகின்றோம். சுக்கிர மகா தசையின் இறுதியில் இவனுக்குப் புதை யலும் கிடைக்கும்.

---

1. ராகு,
2. சனி.

25. தன்துணை முன்பெண் ணைன்று சாற்றுவோம் தீர்க்க மாக
அன்னவள் தன்மை சொல்வேன் அழகுண்டு சிவந்த மேனி
கன்னென மொழியு முண்டு கனத்தபூ ணைமு மேற்பள்
பின்னமில் லாத தேகி பொய்யது புகலா ளாகும்.

25. ஜாதகனுக்கு மூத்த சகோதரி யொருத்தி தீர்க்கமாக விளங்குவாள். அவள் தன்மையைக் கூறுகின்றேம். அழகுடையவள். சிவப்பு நிறத்தினள். இனிமையாகப் பேசுபவள். விலையுயர்ந்த ஆபரணங்கள் பல அணிவாள். குற்றமற்ற உடலமைப்புக் கொண்டவள். பொய்யே பேசாதவள்.

26. வரனுமே வடபால் நேரும் மாதுரு கினையி லேதான்
பெரும்சுத ராண்பால் மூன்று பெண்ணது அவ்வார் தீர்க்கம்
திருமக ளொப்ப வாழ்வள் சிறுத்தோருக் கன்ன மீவள்
அரிவையும் தீர்க்க சீவி அம்பிகை யாளே கேளாய்.

26. இவளுக்குக் கணவன், தாய் வர்க்கத்தில் வடதிசையிலிருந்து வாய்ப்பான். இவள் மூன்று ஆண் மகவையும் மூன்று பெண் குழந்தைகளையும் பெறுவாள். இலக்குமியைப் போல் சிறப்புற வாழ்வாள். ஏழ்மையடைந்தோருக்கு உதவி புரிவாள். நீண்ட ஆயுளை உடையவள். அன்னையே! கேட்பாயாக.

27. பின்துணை ஆண்பா லொன்று பெண்ணது ரெண்டு தீர்க்கம்
அன்னவர் சேதி பின்பால் அறிவிப்போம் தாயே கேளும்
இன்னவள் மணத்தின் கால மறைகின்றேரும் இருப
[தாண்டில்
கன்னிகை வடபால் நேரும் கழறுவோம் அவள்கு ணத்தை.

27. இவளுக்குப் பிறகு ஓர் ஆணும் இரண்டு பெண்களும் ஜாதகனுக்கு இளையவர்களாகத் தோன்றுவர். அவர்கள் செய்திகளைப் பிற்பகுதியில் கூறுவோம். அன்னையே! கேளுங்கள். ஜாதகன் திருமண காலத்தைச் சொல்லுகின்றேரும். இவனது இருபதாவது வயதில், வடக்குத் திக்கிலிருந்து மனைவி வாய்ப்பாள், அவள் குணத்தைக் கூறுகின்றேரும்.

28. இருநிற முடைய ளாகும் இன்பச்சொல் இதமாய் வார்த்தை
பெரியோர்போல் வார்த்தை யுண்டு பிழையதை எவர்க்கு
[மெண்ணுள்
அரிமனை ஒப்ப தாகும் அன்னமும் அன்பா யீவள்
குறையுளோர்க் குதவி செய்வள் குவலயம் நல்லோ ளாவள்.

28. மாநிறமுள்ளவள். இனிய சொற்களைக் கூறுவாள். கற்றறிந்த பெரியோர் போலவே பேசுவாள். எவருக்கும் தீங்கு நினைக்காதவள்.

விஷ்ணுவின் பத்தினியாகிய இலக்குமி போன்றவள். கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்வாள். உலகத்தாருக்கு நல்லவள்.

29. பாவையும் தீர்க்க சிவி பகவானின் தொண்டு பூண்பள்
காரிகை கல்வி மானும் காளைகள் பலத்தைச் சொல்வேன்
வீரது சுதர்கள் தாமும் விடமூலம் அஞ்சி லேறக்
கூறினேம் அந்தச் சங்கை குழவியின் பூர்வம் கேளாய்.

29. நீண்ட ஆயுளைப் பெற்றவள். கடவுளுக்குத் தொண்டு புரிவாள். கல்வி கேள்விகளில் சிறந்தவள். இவளுக்குப் புத்திரபாவத்தைக் கூறுகின்றோம். புத்திரர்கள் உண்டாக மாட்டார்கள். ஏனெனில், இலக்கினத்துக்கு ஐந்தாம் இடத்தில் இராகு இருப்பதால் இவ்வாறு கூறினோம். இவன் முற்பிறவியைக் கேளுங்கள்.

30. மாரனின் பூர்வம் சொல்வேன் வடக்குவேங் கடத்து
[மேல்பால்
தீரமாய் ரெட்டி வமிசம் செனித்துமே கிருஷி செய்து
பாரியு மதலை யுண்டாய்ப் பாலகன் வாழு நாளில்
கூறுவோம் வினையை யாங்கள் குறைசெய்தான் தாய்க்கு
[மேதான்.

30. ஜாதகனின் முற்பிறவியைக் கூறுகின்றோம்; கேட்பாயாக. வடக்கிலுள்ள வேங்கடத்துக்கு (திருமலைக்கு) மேற்கில் ரெட்டியார் குலத்தில் பிறந்து, பயிர்த்தொழில் புரிந்து, வாழ்ந்து வரும் நாளில், ஏற்பட்ட ஒரு தோஷத்தைக் கூறுகின்றோம். இவன் தன் தாய்க்கே குறைபுரிந்தான்.

31. குறையதைப் புகல்வீ ரையா கோதையின் வார்த்தை
[கேட்டுச்
சரியிலா வார்த்தை சொல்லச் சாற்றுவாள் சாபம் தானும்
உறையாது சுதர்கள் தாமும் உதிக்கும்பின் சென்மம்
[தன்னில்
பிறவாது பிறக்கில் தீதாம் பேசினர் பராசர் தாமும்.

31. தன் தாய்க்கு யாது குறைபுரிந்தனன் என்பதைக் கூறுங்கள். தன் மனைவியின் பேச்சைக் கேட்டுத் தாயைப் பார்த்துத் தாறுமாறான வார்த்தைகளைக் கூறினன். அவள் சாபமிட்டாள். இப்பிறவியில் புத்திரப் பேறு ஏற்படாது. மறு பிறவியில் ஏற்படும். இப் பிறவியில் புத்திரப் பேறு ஏற்படினும் தங்காது. பராசரர் கூறுகின்றார்.

32. அதுவொரு தோட மாச்சு அறைகின்றேம் வேறு ஒன்று
பதியினில் உரகன் வாசம் பரலோகம் சேர்த்தா னென்றேம்
வதிபனு அந்தி யத்தில் வாய்ப்புண்ணுல் மரண மாகி
விதியவன் வரையப் பட்டு விளங்கினன் இந்தப் பாலன்.

32. அது ஒரு தோஷம். தவிர மற்றொன்றும் சொல்லுகின்றேம். தனதில்லத்தில் வந்த பாம்பைக் கொன்றான் என்று கூறினேம். இந்த ஜாதகன் கடைசி காளில் வாய்ப்புண்ணுல் மரணமடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இக்குலத்தில் தோன்றினன்.

33. மாதுரு சாபத் தாலும் மாநாகம் கொன்ற தோடம்
மேதினில் சுதர்கள் காணன் விளம்புவோம் கிரிகை யொன்று
காதலி தானு மாகக் [1]கனல்மலே தனக்குச் சென்று
நீதியாய்க் கிரியைச் சுற்றி நிலமனுக் கருச்சித் தேத்தி ;

33. தாயின் சாபத்தாலும், நாகத்தைக் கொன்ற தோஷத்தாலும் இவனுக்கு இவ்வுலகில் புத்திரப் பேறு ஏற்படாது. இவை தீர்வதற்கான ஒரு சாந்தியைக் கூறுவோம். இவனும் இவன் மனைவியும், திருவண்ணுமலைக்குச் சென்று, மலைப் பிரதட்சிணம் செய்து, அருணுசலேச்சாருக்கு அருச்சனை முதலியவை செய்து, துதித்து;

34. மறைமாது மூவ ருக்கு மஞ்சள்குங் குமங்கள் சீப்பும்
நரைமலர் சொர்ண மீந்து நாயகி தானும் போற்றி
அரனடி ஏழு பேர்க்கு அன்னமு மன்பா யியத்
திருகான அன்னை சாபம் தீர்ந்திடு மென்று சொன்னேம்.

34. பிறகு, பிராமணப் பெண்கள் மூவருக்கு மஞ்சள், குங்குமம், சீப்பு, மலர், பொன் முதலியவை வழங்கி, அம்மனையும் தரிசித்து, சிவனடியார் எழுவர்க்கு உணவளித்தால், அன்னையின் சாபம் நீங்கப் பெறும் என்று கூறினேம்.

35. நாகதோ டங்கள் தீர நவிலுவோம் கிரிகை யொன்று
நாகமும் சிலையில் செய்து நன்மாரிக் கோட்டம் தன்னில்
ஆகம விதிபோல் வைத்து அந்தணர் தசம்பே ருக்குப்
பாகமாய் அன்ன மீயப் [2]பணிதோடம் நீங்கு மென்றேம்.

35. நாக தோஷம் தீர மாற்றுக் கூறுவோம். கல்லினுல் நாகத்தின் உரு ஒன்று செய்து, கல்ல மாரியம்மன் கோவிலில், ஆகமத்தில் கூறிய

1. திருவண்ணுமலே
2. பாம்பு

படி பிரதிட்டை செய்து, பத்துப் பிராமணர்களுக்குச் சுவையுள்ள உணவு அளிக்க, நாக தோஷம் நீங்கும்.

36. சொற்படி செய்வா னுகில் தோன்றிடும் ஆண்பா லொன்று
மைப்படி பெண்பால் ரெண்டு வறைகுவோம் தீர்க்க மாகச்
சொற்படி செய்வா னுகில் தோன்றுது தோன்றில் நீதாம்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுது.

36. நாம் கூறியபடி செய்வானுயின், ஒரு புத்திரனும், இரு புதல்வி யருந் தோன்றித் தீர்க்கமாவர் என்போம். நாம் கூறியபடி செய்யானுயின் புத்திரப் பேறு உண்டாகாது. அவ்வாறு உண்டானுலும் நிலைத்திரா. கங்கை நீரைத் தலையில் தரித்த பரமசிவனின் பத்தினியாகிய பார்வதியே! கூறிய சொற்கள் மாறு.

37. பெற்றமா தாவின் சேதி பேசுவோ மிருசி கப்பள்
குற்றத்தை எண்ணு ளாகும் கொடுமையைக் காட்டா [ளாகும்
உற்றோர்கள் மதிக்க வாழ்வள் உவமையாய்ப் பேசு வாளாம்
வித்தகி வறுமை காணுள் மேன்புத்தி யுடைய ளாமே.

37. இவனைப் பெற்ற தாயின் வரலாற்றைக் கூறுவோம். கருஞ் சிவப்பு நிறமுள்ளவள். உலகில் பிறருக்குத் தீங்கை எண்ணமாட்டாள். கொடுமையை வெளிக் காட்டாதவள். தன் உறவினர்கள் மதிக்கும்படி வாழ் வாள். உவமானங்களைக் காட்டிப் பேசும் இயல்பினள். நல்ல மனம் படைத்தவள். ஏழைமை யறியாதவள். மேன்மையான புத்தி உடையவள்.

38. அன்னையும் இரண்டு மாகும் அணுகிய முன்தாய்க் [கென்றேம்
தன்துணை யாண்பால் காணுள் சக்தியும் ஒருத்தி யாகும்
அன்னையின் துணைவி தானும் அணுகுவாள் மறுதா யாக
பின்னேர்க்கு ஆண்பா லொன்று பேதையு மிரண்டு தீர்க்கம்.

38. தாய்மாரும் இருவராவர். இவன் தாய் மூத்தவளிடம் பிறந்தவள். இவளுக்குச் சகோதரன் இல்லை. சகோதரி ஒருத்தியுண்டு. இவள் அன்னையின் சகோதரி மாற்றுந் தாயாக வருவாள். இவை தாய்க்கு ஆண் சந்ததி ஒன்று உண்டு. பெண்கள் இருவர் உளர். அவர்கள் நீண்ட ஆயுளுடையரா யிருப்பர்.

39. மாதுலன் குணத்தைச் சொல்வேன் மன்னர்கள் பேட்டி [கொள்வன்
சாதிப்பன் சிலவே கங்கை சிவந்தமெய் கல்வி ரெண்டு
போர்தனம் சேர்ப்பா னுகும் புவிராசர் தம்மா லுய்வன்
மேதினி பின்னுல் சேர்ப்பன் விகடங்கள் கூறு வானும்.

39. மாமனின் குணத்தைக் கூறுகின்றேம். மன்னரைப் பேட்டி காண்பான். அரிய செயல்களைச் செய்து முடிப்பான். திவந்த உடலுடை யவன். இருவிதக் கல்வி உள்ளவன். மிக்க செல்வத்தைச் சேர்ப்பான். மன்னர்களை யடைந்து பிழைப்பான். பூமியைச் சேர்ப்பான். நகைச் சுவை ததும்பப் பேசுவான்.

40. தவத்திலுல் சுதர்கள் தோன்றும் சத்திமா ரிருவ ராகும்
நவனியில் ஆண்பால் ஒன்று நல்கிடும் தீர்க்க மாகப்
பவமன மில்லா ஞகும் பரவுப காரி யாகும்
சிவனருள் வயது தீர்க்கம் சிறப்புடன் வாழ்வா ஞகும்.

40. பல விரதங்கள் இருந்து, புத்திரப் பேறு அடைவான். பெண் கள் இருவர் தோன்றுவர். ஆண் சந்ததி ஒன்று உண்டு. அவன் நீண்ட ஆயுளைப் பெற்று விளங்குவான். உலக வாழ்க்கையில் ஈடுபடாத மனமுடை யவன். பிறருக்கு உதவி செய்பவன். பரமனருளால் நீண்ட ஆயுளைப் பெற்றுச் சிறப்புற வாழ்வான்.

41. அன்னையின் பூர்வம் சொல்வேன் அருணைக்கு உத்தி ரத்தில்
சின்னவூர் தன்னி லேதான் செனித்தனள் கோகு லத்தில்
கன்னிகை சுபமாய் வாழுங் காலத்தில் வினையைச்
[சொல்வேன்
முன்னோர்கள் தாகம் கேட்க உதவுவேன் என்று சொல்லி;

41. தாயின் முற்பிறப்பு வரலாற்றைக் கூறுகின்றேன். திருவண்ணு மலைக்கு வடக்கில் உள்ளதொரு சிறிய கிராமத்தில், இடையர் சேரியில் பிறந்தாள். அவள் நன்கு வாழ்ந்துவரும் நாளில் ஏற்பட்ட குற்றத்தைச் சொல்லுவோம். ஒரு பெரியவர் தாகம் என்று பால் கேட்கும்போது, தரு கின்றேன் என்று சொல்லி;

42. பத்துநீர் கலந்த ளித்தாள் பணமது பெற்றுக் கொண்டு
குற்றங்கள் நேர்ந்த தென்றும் கூறுவோம் வேறு ஒன்று
பித்தனார் பூசைக் காகப் பசும்பாலா மென்று சொல்லிக்
குத்தமாய்க் கொதித்த பாலைக் கொடுத்தனள் அதுவோர்
[தோடம்.

42. பணம் வாங்கிக்கொண்டு தண்ணீரைக் கலந்து பாலைக் கொடுத தாள். இஃது ஒரு தோஷமாயிற்று என்று கூறினேம். வேறு தோஷத் தையும் கூறுகின்றேம். சிவபூசைக்குப் பசும்பால் தருவதாகக் கூறி, கெட்டுப் போனதும், காய்ச்சியதுமான பாலை அளித்தாள். அதுவும் ஒரு தோஷமாயிற்று.

43. இப்படிச் சிலவே தோட மெய்தின பலத்தி ஞலே
மைப்படி மாதுர் நாசம் ஆண்துணை காணு ளாகும்
செப்புவோம் இவள்பிற் சென்மம் திருவள்ளூர் தன்னி
[லேதான்
ஒப்புவாள் வைசியச் சேயாய் உத்தமி கேட்டி டாயே.

43. இல்வாறு சில தோஷங்கள் எற்பட்ட காரணத்தால், இவள் தாயின் அழிவும் ஏற்பட்டது. சகோதரர்களும் இல்லாதவ ளாஞள். இவளது மறுபிறப்பைக் கூறுவோம். திருவள்ளூரில் வைசியக் குடும்பத்தில் பிறப்பாள். உத்தமியே! கேட்பாயாக.

44. இரவியின் தசைகா லத்தில் இவன்தந்தை கண்டங் காணும்
மறலியைக் காணு ஞகும் மதிதசை காலம் தன்னில்
திருமகன் முப்ப தாண்டில் செப்புவோர்ந் தந்தை கண்டம்
மறுசென்மம் பனைக்காட் டூரில் வருகுவான் சைவச் சேயாய்.

44. சூர்ய மகா தசையில் இவன் தந்தைக்கு ஒரு கண்டம் எற்படும். ஆனல் மரணமடைய மாட்டான். சந்திர மகா தசையில், ஜாதகனது முப்ப தாவது வயதில் தந்தைக்கு மரணம் எற்படும் என்று கூறுகின்றோம். மறு பிறவி பனங்காட்டூரில் வைசியஞய்ப் பிறப்பான்.

45. இருபது எட்டு ஆண்டில் இயம்புவோ மன்னை கண்டம்
திருமகன் தனக்குச் சொல்வேன் செம்பொனின் தசைகா
[லத்தில்
அறுபது ஏழு ஆண்டில் அணுகிய மேட மாதம்
மறலியின் நாடு சேர்வன் வறைகின்றோ மிவன்பின் சென்மம்

45. இவனது இருபத்து எட்டாவது வயதில் தாய்க்கு மரணம் எற்ப டும். ஜாதகனுக்கு மரண காலத்தைச் சொல்லுவோம். குரு மகா தசையில் அறுபத்தேழாம் வயதில், சித்திரை மாதத்தில் இறந்து போவான். இவ னது மறு பிறவியைக் கூறுகின்றோம்.

46. தில்லையில் மறைக்கு லத்தில் செனிப்பனும் பாலன் தானும்
வல்லவன் யோகச் சேதி வறைகின்றோ மினிமே லாகக்
கல்வியால் வேரூர் செல்வன் காதலி வர்க்கந் தன்னில்
சல்லியன் தசையில் சென்று தங்நகர் அந்தம் சேர்வன்.

46. தெம்பரத்தில், அந்தணர் குலத்தில் தோன்றுவான். இவனது யோகங்களை இனிக் கூறுகின்றோம். கல்வி கற்க வேற்றூருக்குச் செல்வான். மனைவி வர்க்கத்தினரின் ஊருக்குச் சுக்கிர மகா தசையில் சென்று வசித்து, கடைசிக் காலத்தில் தன்னூரை அடைவான்.


47. முன்னவன் யோகஞ் சொன்னேம் விபரமாய்ப் பின்பால்
[சொல்வேன்
இன்னவன் சென்ன காலம் இரவிநாள் கடைப்பா தத்தில்
வன்கேது தசையோ ராண்டு திங்களும் ரெண்டே யாகும்
பன்னுவோம் பலனை யாங்கள் பார்வதி கேட்டி டாயே.

47. இதுவரை ஜாதகன் யோகங்களை உரைத்தோம். பிற்பாகத்தில் விவரமாக மற்றவற்றைச் சொல்லுவோம். இவனது பிறப்புக் காலம் அசுவினி நட்சத்திரம் கடைசி பாதம்; கேது மகா தசையில் இருப்பு; ஒரு வருஷம், இரண்டு மாதம். நாங்கள் இந்தப் பலன்களைக் கூறினேம், பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 33

1. நந்தியும் செனன மாக ரவிபுதன் மூன்றி லேற
சந்திரன் லாப மேறச் சனிராகு குசனும் பத்தில்
மந்திரி யிருநான் காக வெள்ளியும் கேது நாலில்
இந்தவார் கோளும் நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. இலக்கினம் விருஷபமாக இருந்து, லக்கினத்திற்கு மூன்றில் சூரியனும் புதனும் தங்கி, பதினொன்றுமிடத்தில் சந்திரனும், பத்தாமிடத்தில் சனி ராகு செவ்வாயும், குரு எட்டாமிடத்திலும், சுக்கிரனும் கேதுவும் நான்காமிடத்திலும் இருந்தால் ஏற்படும் பலனைக் கூறுங்கள்.



2. சுந்தரி கேட்கும் போது செயமுனி கூறு கின்ரூர்
இந்தசேய் ஆணும் சென்மம் இல்லமும் கீழ்பால் வாசல்
முந்தின நகர மாகும் உயர்வான செட்டும் ஓங்கும்
இந்திரன் திசையில் மாரி இறையவர் கோயி லுண்டு.

2. பார்வதி கேட்கும்போது, செயமுனிவர் கூறுகின்ரூர். இஃது ஆண் மகன் ஜாதகம். இவனது வீடு கிழக்கு நோக்கிய வாயிலை உடையது. சிறப்புள்ள பட்டணம். அங்கு உயர்வான வாணிகம் நடைபெறும். கிழக்குத் திசையில் மாரியம்மன் கோயிலும், பிற கடவுளர் வாசஞ்செய்யும் கோயில்களு முள்ளன.

3. அறுசம யத்தோர் தோய அணுகிடும் அவ்வூர் தன்னில்
துருவசக் கரங்கள் எங்கும் தோன்றிய வடையா ளங்கள்
திருவுறை மாளி வாடை செனிப்பனும் செட்டி சென்மம்
வருணிப்போம் குடும்பச் சேதி மங்கையே கேட்டி டாயே.

3. ஆறு சமயத்தாரும் நீராடும் வகையில் ஒரு நதி அங்குப் பெருகும். துருவ சக்கரங்கள் எங்கும் தோன்றும் அடையாளங்களுள்ள செல்வம் நிறைந்த மாளிகையில், வைசியனுய்ப் பிறப்பான் இந்த ஜாதகன். இவனது குடும்ப வரலாறுகளைச் சொல்லுவோம். பார்வதியே! கேட்பாயாக,

4. இவன்பிதா குணத்தைச் சொல்வோம் இன்பமாய் வார்த்தை
[கூர்வன்
பவமன மில்லா வாழ்வன் பண்டிதஞ் செய்வா னாகும்
தவசிக ளுறவு கொள்வன் சங்கரி தியானம் செய்வன்.
அவனியோர் மதிக்க உய்வன் அற்பமாய்க் கல்வி யென்றோம்.

4. இவன் தந்தையின் குணத்தைக் கூறுவோம். இனிமையாகப் பேசுவான். வாழ்க்கையில் பற்றில்லா மனத்தினன். மருத்துவம் செய்வான். முனிவர்கள் நேசம் கொள்வான். பார்வதியைத் தியானம் செய்வான். மாநிலத்தார் மதிக்கும்படி வாழ்வான். கல்வியறிவு சிறிது உள்ளவன்.

5. தந்தையின் இல்லம் வாழான் சகலரை வசியம் கொள்வன்
பந்துவை ஆத ரிப்பன் பலர்பிணி தீர்ப்பா னாகும்
வந்தவர்க் கன்ன மீவன் பலமுள இல்லம் சேர்ப்பன்
கந்தன்மேல் பக்தி கொள்வன் கஞ்சமா நிறத்த னாகும்.

5. தகப்பனார் வீட்டில் வசிக்கமாட்டான். பலரையும் வசப்படுத்திக் கொள்ளுவான். சுற்றத்தாரை ஆதரிப்பான். பலருடைய நோயைப் போக்குவான். விருந்தினர்களுக்கு உணவளிப்பான். மாளிகை போன்ற வீடுகளைக் கட்டுவான். முருகன்மீது பக்தி செலுத்துவான். செந்தாமரை போன்ற நிறமுடையவன்.

6. ஆதியில் தனமு மில்லான் அன்னையால் சுகமு மில்லான்
சூதிலான் ஒருவர்க் கஞ்சான் தோகையின் தன்னுல் யோகம்
கியாதியும் அதிகம் ஏற்பன் கௌரவ குடும்ப மேற்பன்
பேர்தனம் சேர்ப்பா னாகும் புண்ணியத் தலங்கள் செல்வன்.

6. இளமையில் செல்வ மில்லாதவன். தாயினுல் சுக மடையாதவன். வஞ்சனை இல்லாதவன். ஒருவருக்கும் பயப்படாதவன். மனைவியால் யோகத்தை யடைவான். பெரும்புகழ் உடையவன். மதிப்பாகக் குடும்பத்தை நடத்துவான். மிகுந்த செல்வத்தைச் சம்பாதிப்பான். புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை செய்வான்.

7. தன்துணை காணு னாகும் சாற்றுவீர் அந்தச் சங்கை
அன்னையும் ஆதில் மாண்டு அணுகிடும் பின்தாய் ஒன்று
கன்னிக்குச் சுதர னேகங் கலந்திடும் யாவும் தீது
மன்னன்போல் ஒருவன் தீர்க்கம் வறைகின்றோம் அவன்கு
[ணத்தை.

7. உடன்பிறந்தா ரில்லாதவன். இவன் தாய் இளமையிலேயே மாண்டு போவாள். பின்பு மாற்றுந்தாய் ஏற்படுவாள். அவளுக்கும் பல புதல்வர்கள் தோன்றுவர். மிகுதியானவர் இறந்துபோவர். அரசனைப்போல்

மேன்மையுடன் ஒருவன் நீண்ட ஆயுளைப்பெற்று வாழ்வான். இவன் குணத்தைக் கூறுகின்றோம்.

8. சொல்லிடு வசன மெல்லாம் சுத்தமாம் சொகுசு ணுண்பன்
நல்லவ னுகி வாழ்வன் நாற்காலி விருத்தி யற்பம்
சொல்லது சுருக்க மாகும் தோகைவா கனனைப் போற்றும்
அல்லல்கள் பாதி மாறு அணுகிடும் என்று சொல்வோம்.

8. அவனது சொற்கள் பிழையின்றி இருக்கும். சுகமான உணவை உண்பான். நல்லவன் என்று கூறும்படி வாழ்க்கை நடத்துவான். கால் நடைச் செல்வம் நிறைய பெற்றவன். மொழிகளைச் சுருக்கமாகக் கூறுவான். மயில் வாகனனுகிய முருகனை வணங்குவான். கஷ்டங்களில் பாதி நீங்கா மல் இருக்கும் என்று கூறுவோம்.

9. குறுமுனி தொழிலுஞ் செய்வன் கோவலர் மெச்ச வாழ்வன்
திருவிலா ஒன்றுய் வாழ்வன் தேவிமார் மூவ ராகும்
பெருஞ்சுதர் ஆண்பால் ரெண்டு பேதையும் ஒன்று தீர்க்கம்
திருதிய மாது வுக்குச் செப்புவோம் புத்திர பாவம்.

9. அகத்தியர் தொழிலைச் (தமிழ்க் கல்வி போதிப்பது) செய்வான். மன்னர்கள் மெச்சும்படி வாழ்வான். மாறுதல் இல்லாது ஒரு சீரான வாழ்க்கையை நடத்துவான். இவனுக்கு மூன்று மனைவியர். ஆண்கள் இருவரும், பெண் ஒருத்தியும் பிறந்து தீர்க்கமாக வாழ்வர். மூன்றும் மனைவிக்குப் புத்திர பாவம் கூறுவோம்.

10. பெரியவர் ஒருவ ராலே பொன்தொழில் செய்வா னுகும்
வருமவன் காலஞ் சொல்வீர் ஆறஞ்சு நாலாண் டின்மேல்
[1]மறலியின் திசைபக் கத்தில் வருகுவார் தபசி தாமும்
அருமையாய் வாத சித்தி அவர்களால் அணுகு மென்றோம்.

10. பெரியவர் ஒருவரது நட்பினால் பொன் வேலைகள் (இரசவாதம்) புரிவான். பெரியவர் வருங் காலத்தை யறிந்து சொல்வீர். முப்பத்து நான்காம் ஆண்டுக்கு மேல் தென் திசையிலிருந்து ஒரு தவமுனி வருவார். இரசவாத சித்திகளை அவரால் பெறுவான் என்றோம்.

11. சிவபூசை செய்வா னுகும் தேறினோர் தொண்டு பூண்பன்
தவசிகட் கன்ன மீவன் தனமது பெருக்கஞ் செய்வன்
அவனியோர் மதிப்புக் கொள்வான் அணுகிடும் வேறு [இல்லம்
இவனுக்கு வயது தீர்க்கம் ஈச்வரி கேட்டி டாயே.

1. தென்திசை

11. சிவபூசை புரிவான். பெரியோர்களுக்குச் சேவை செய்வான். துறவிகட்கு உணவளிப்பான். செல்வத்தைப் பெருக்குவான். உலகத்தார் மதிப்பைப் பெறுவான். வேறு வீடு வாங்குவான். நீண்ட ஆயுளைப்பெற்றவன். பார்வதியே! கேட்பாயாக.

12. தந்தையின் பூர்வந் தன்னைச் சாற்றுவோம் வாரி யோரம்
விந்தையாய் நவபா டாணம் மேன்மையாம் நகரம் தன்னில்
வந்தனன் நதியின் வம்சம் வளமையாய் வணிபம் செய்து
பைந்தொடி மதலை யுண்டாய் பந்துவுக் கெசமா னுகி;

12. தகப்பனாரின் குணத்தைக் கூறுவோம். கடலோரத்தில் உள்ள அழகான நவபாஷணம் என்ற பட்டணத்தில், வேளாண் மரபில் பிறந்து, நன்கு வியாபாரம்செய்து, மனைவி மக்களை அடைந்து, சுற்றத்தினருக்கெல்லாம் தலைவனாக இருப்பான்.

13. வினையதைப் புகலக் கேண்மோ வீண்பழி யொருபெண் [பேரில்
இனங்களுஞ் சொல்லும் போது இவனுமே அதைய றிந்து
சினமுளன் மாதை நீக்கத் திகில்கொண்டு மாது தானும்
துணைவிபோல் எண்ணு மல்தான் தூறுகள் செய்த பாவி;

13. இப்படி இருக்கும்போது, அவனுக்கு ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். இவன் வீட்டில் சகோதரிபோல் வளர்ந்துவந்த ஒருபெண்மீது அவள் உறவினர் பழிகளைக் கூறினர். இவனும் அதையறிந்து, கோபத்துடன் அந்தப் பெண்ணை விலக்கி வைத்தான். அச்சம்கொண்டு, அப்பெண்ணும் சகோதரிபோல் நினையாது தாறுமாறான செயலைச் செய்த பாவியாகிய;

14. உன்னுடை வமிசம் நாஸ்தி உதிக்கும்பின் சென்மந் தன்னில்
தன்துணை யில்லா தாயும் தாய்சுகம் இன்றி வாழ்வாய்
இன்னமும் பலவார் சொல்ல எய்திற்று அந்தச் சாபம்
மன்னனும் அந்தி யத்தில் மருவினன் சேதுக் கேதான்.

14. உன்னுடைய வமிசம் நாசமடையும். மறுபிறவியில் சகோதர பாவமும், தாய் சுகமும் அற்று வாழ்வாய், என்று மேலும் பற்பல சொற்கள் கூறிச் சென்றனர். அச்சாபம் வந்தடைந்தது. கடைசி நாளில் ஜாதகனும் சேதுக்குச் சென்றான்.

15. சிலநாட்கள் அடியா ருக்குச் சாதமு மீந்து பின்னென்
குலவினன் கால நாடு குறைதலை வரையப் பட்டுத்
தலைவனு முதித்தா னென்றோம் சார்ந்திடும் மாது சாபம்
உலகினில் துணைவர் காணன் உறுந்தாயின் சுகமில் லாதான்.

15. சிறிதுகாலம் அடியார்களுக்கு அன்னதானம் செய்து வாழ்ந்து பிறகு மரணமடைந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு இப்பிறப்பாகப் பிறந்தான். அந்தப் பெண்ணின் சாபம் வந்தடைந்தது. இவனுக்குச் சகோதரபாவம் சிறந்ததாக இல்லை. பெற்றதாயினால் சுகம் பெறுதவன்.

16. இன்னவன் தனக்கு யோகம் எய்தின கார ணஞ்சொல்
முன்னோர்க்கு அன்ன மீந்து முயர்வான சேது சென்றும்
அன்னவன் வாழ்ந்த தாலே அளகேசன் ஒப்பாய் வாழ்வன்
சொன்னவிக் குணத்தா னுக்குத் தோனறுவா னிந்தப்
[பாலன்.

16. இவனுக்கு யோகம் வந்த காரணத்தைக் கூறுங்கள்? பெரியோர்களுக்கு உணவு அளித்தும், உயர்வான சேதுவில் நீராடியும் வந்த காரணங்களால் குபேரனுக்குப் ஒப்பாக வாழ்வான். இங்ஙனம் கூறிய குணத்தை உடையவனுக்கு ஜாதகன் தோன்றுவான்.

17. அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் இருநி
[றத்தான்
தன்சொலும் அடக்க முண்டு சாந்தவான் பெருமை யோனும்
பொன்பணி சேர்ப்பா னுகும் புறஞ்சொலான் வறுமை
[காணன்
பன்னியே பேசு வானும் பஞ்சைமேல் இரக்கம் ஆவன்.

17. இவனது குணத்தைக் கூறுகின்றேன். அழகுள்ளவன். மாசிறமுள்ளவன். அடக்கமாகப் பேசும் இயல்பினன். பெருமை பெற்றவனாக இருப்பான். பொன் முதலிய பொருள்களைச் சேர்ப்பான். புறங் கூறான். ஏழைமை இல்லாதவன். கூறியதைக் கூறிக்கொண்டே யிருப்பான். ஏழைகளின்மீது இரக்கம் கொள்ளுவான்.

18. கல்வியும் ரெண்டு முண்டு கனமிலா தென்று சொல்வோம்
சொல்லது காப்பா னுகும் சோப்பிடான் காரி யத்தில்
தல்லிசொல் கடவா னுகும் சந்தேக மனத்த னுகும்
மல்லினில் செல்லா னுகும் மன்னர்பால் உய்வா னுகும்.

18. கல்வியும் இரண்டு வகைகளில் பெற்றிருப்பான். அதனால் பயனில்லாதவன். சொன்ன சொற்களைக் காக்கும் இயல்பினன். செயலாற்றுவதில் சோம்பல் கொள்ளமாட்டான். தாயின் சொல்லை மீறமாட்டான். சண்டைக்குச் செல்லமாட்டான். சந்தேகப்படும் மனமுடையவன். அரசாங்க உத்தியோகம் பெறுவான்.

19. கோதுமை ரேகை யுண்டு குஞ்சர நடையு மாவன்
வாதியின் குணமு முண்டு மஞ்சன மெத்தை யேற்பன்
சூதிலான் பொய்கள் சொல்வான் துணைவரை யாத ரிப்பான்
ஆதியாஞ் சிவன்தன் பூசை அணுகுவான் என்று
[சொல்வோம்.

19. இவனது கையில் கோதுமை ரேகை பெற்றிருப்பான். யானை போல் கம்பீரமான நடை உடையவன். நல்ல குணங்களைப் பெற்றவன். மெல்லிய பஞ்சணையில் துயில்வான். சூதில்லாதவன். ஆனல் பொய் பேசுவான். சகோதரர்களைக் காப்பான். சிவபூசை செய்வான்.

20. வறுமையெப் போதுங் காணுன் மாமியர் ரெண்டே யாகும்
முருகர்தன் பக்தி கொள்வ னுயர்சீல முடைய னுகும்
பிருகுமே தடுத்துச் சொல்வார் புகன்றிட்டீர் யோகம்
[தானும்
உரைப்பீர்கள் அந்தச் சங்கை உதயனும் புதனும் மூன்றில்;

20. வறுமை யில்லாதவன். இவனுக்கு இரண்டு மாமியர். முருகன் மீது பக்தி உடையவன். நல்லொழுக்கம் பெற்றவன். பிருகு முனிவர் தடுத்துக் கூறுவார். யோகத்தைக் கூறினீர்கள். எப்படிஎற்படும் என்று கூறுங்கள். சூரியனும் புதனும் மூன்றும் இடத்திலும்;

21. தர்மகர் மாதி கேந்த்ரம் தரைமகன் கூறி நிற்கப்
பிறையுமே லாப மேறப் புகன்றன மிராச யோகம்
அரசர்பால் அணுகி வாழ்வன் அறுநான்கு ஆண்டு மேலாய்
மருவிடும் அன்பான் ஆண்டும் வைத்திய மெதுவுஞ்
[செய்வன்.

21. தர்ம கர்மாதியாகிய சனி கேந்திர ஸ்தானத்தில் செவ்வாயுடன் சேர்ந்திருப்பதாலும், சந்திரன் மீனத்தில் உள்ளதாலும் இராசயோகம் உடையவன் என்று சொன்னேம். இருபத்துநான்காம் வயதுக்குமேல் இவன் அரசரை அடுத்து வாழ்வான். ஐம்பதாம் வயதுக்குமேல் வைத்தியத் தொழில் புரிவான்.

22. தன்துணை நவமே தோன்றும் சாற்றுவோம் ஆண்பால்
[மூன்று
கன்னிகை ஒன்று தீர்க்கம் கனக்காது மற்ற தெல்லாம்
முன்துணை சேத மெய்தும் மொழிகுவீர் அந்தச் சங்கை
பொன்னவன் எட்டில் தங்கப் பொருந்தாது என்று
[சொல்வோம்.

22. இவனுக்குக் கூடப் பிறந்தவர் ஒன்பதுபேர். அவர்களில் மூன்று ஆண்களும், ஒருபெண்ணும் தீர்க்கமாக விளங்குவர். மற்றவர் மாண்டுபோவர்.

மூத்தவனுக்குத் தோஷம் ஏற்படும் என்பதை எப்படிச் சொல்லுவீர்? குரு எட்டாமிடத்தில் தங்குவதால் மூத்தவன் நிலையான் என்று கூறுவோம்.

23. மங்களம் பதின்மூன் றுண்டுள் மருவிடும் மேல்பால் பாரி
அங்கவள் குணத்தைச் சொல்வேன் [1]அரிமனை ஒப்ப தாகும்
பங்கய முகத்தா ளாகும் பாவையும் யோக சாலி
தங்கம்பொன் பணிக ளிச்சை சட்டினில் கோபி யாவ்ள்.

23. அங்காரக மகா தசை பதின்மூன்று வருஷங்களுக்குள் திருமணம் நடக்கும். அவள் மேற்குத் திசையிலிருந்து வருவாள். அவளது குணத்தைக் கூறுகின்றேன். இலக்குமி போன்றவள். தாமரைபோல் அழகிய முகத்தினை உடையவள். நல்ல அதிர்ஷ்டமுடையவள். அணிகலன்களில் விருப்பமுடையவள். விரைவில் கோபமுடையவள்.

24. பலகீன முடைய ளாகும் பர்த்தாவின் மனத்துக் கேற்றுள்
சொலுமொழி காப்பா ளாகும் தோகைபோல் சாயல் ஒக்கும்
நிலவுபோல் குணத்தா ளாகும் நீத்தோர்க்கு அன்ன மீவள்
மலையிறை மகள்போ லொப்பாம் வயதுமே தீர்க்க
[மென்றோம்.

24. மெலிந்த உடலுடையவள். கணவன் மனத்துக்கு ஏற்றவள். சொன்ன சொல் காப்பவள். மயிலைப்போல் சாயலுடையவள். சந்திரனைப் போல் தண்மையான குணமுடையவள். துறவிகளுக்கு உணவளிப்பாள். பார்வதியைப் போல் அழகுடையவள். நீண்ட ஆயுளைப்பெற்றவள் என்றோம்.

25. மங்கைக்கு வயது தீர்க்கம் வரைந்தகா ரணங்கள் சங்கை
மங்கலன் ராகு காரி மருவிடம் தசமே யாக
மங்கைகள் இருவ ராக மாரனும் அடைவ ருகும்
மங்களம் நடவா தாகு மறைகுவீர் அந்தச் சங்கை.

25. இவளுக்கு நீண்ட ஆயுள் உண்டு என்று கூறியதன் காரணம் என்ன? செவ்வாய், ராகு, சனி இவர்கள் பத்தாமிடத்தில் தங்கியிருப்பதால் அவ்வாறு கூறப்பட்டது. இரு மனைவியர் இவனுக்கு உண்டாவர். சுபங்கள் எவையும் நடவா.

26. நாலிரண் டாமி டத்தை நயப்புடன் குருவும் பார்க்கச்
சாலவே தார மொன்று சாற்றுவோம் தீர்க்க மாக
ஏலவே நாவில் வெள்ளி இருப்பதால் தசையந் தத்தில்
கால்கையில் பிணியு மாகும் பச்சோந்தி போல வாழ்வன்.

---

1. திருமாலின் மனைவியாகிய இலக்குமி

26. நான்கு இரண்டாம் இடங்களைக் குரு பார்ப்பதால் ஜாதகனுக்கு மனைவி ஒருத்தியே தீர்க்கம் என்று சொல்லுவோம். தான்காமிடத்தில் சுக்கிரன் உள்ளதால் சுக்கிர மகா தசையின் கடைசியில், கால் கைகளில் நோய் உண்டாம். பச்சோந்தி போன்ற குணமுடையவனாக வாழ்வான்.

27. காரணம் யாது என்ன கார்மக னுரே னுகிப்
பார்மகன் பார்த்த தோடம் பலகீன மாகி வாழ்வன்
வேரொரு மணங்கள் கூடா வெய்யவன் தசைமுற் பாகம்
ஆலம்போல் பிணியும் எய்தும் அறைகின்றோம் கிரியை
[ஒன்று.

27. காரணம் என்னவென்றால், ஆரும் வீட்டுக்குடையனாகிய சுக்கிரன் நாலில் நின்று, கும்பத்திலுள்ள செவ்வாயால் பார்க்கப்படுவதால், பல மற்றவனாக வாழ்வான். சூரிய மகா தசையின் முன்பாகத்தில் வேறு சுபச் செயல்கள் நடைபெறா. விஷம்போல் கொடிய வியாதி வரும். அதற்கான ஒரு மாற்றுக் கூறுகின்றோம்.

28. நவகார்த்தி விடாமல் போரூர் நாயகி வரனுஞ் சென்று
சிவகுரு நாத னுக்குச் சிறப்புடன் அருச்சித் தேத்தித்
தவசிகள் தசப்பே ருக்குச் சாதமும் அன்பா யீந்து
இவனில்லம் சென்று மேதான் இன்பகூழ் மாண்ட லேக்யம்;

28. தொடர்ச்சியாக ஒன்பது கிருத்திகைகள் திருப்போரூருக்குக் கணவனும் மனைவியுமாகச் சென்று, சிவகுருநாதனைப் பூசித்து, துறவிகள் பத்துப் பேருக்கு உணவு அளித்து, வீடுவந்து சேர்ந்து, இனிமையான கூழ் மாண்ட லேகியம்;

29. மண்டலம் அருந்து வாரேல் மருவின வினைகள் நீங்கும்
வண்டணி சுகமே யாகும் மைந்தர்கள் பலத்தைச்
[சொல்வேன்
பெண்ணது இரண்டு தீர்க்கம் புத்திரர் ஆண்பால் தோடம்
திண்ணமாய்ச் சொன்னோம் யாங்கள் தேவியே கேட்டி
[டாயே.

29. ஒரு மண்டலம் (45-நாட்கள்) சாப்பிடுவதால், அடைந்த வினைகள் தீரும். மனைவிக்கு கலம் ஏற்படும். புத்திரபாவத்தைக் கூறுவோம். பெண்கள் இருவர் நீண்ட ஆயுளைப்பெற்று வாழ்வர். ஆண் சந்ததிகள் ஏற்படா என்று நிச்சயமாகக் கூறுவோம். தாயே! கேட்பாயாக.

30. எந்தக்கா ரணத்தி னலே இவன்சுத ராண்பால் தோடம்
நந்தியும் சென்ன மாக ரவிபுதன் மூன்றி லேற
மந்தனும் பணியும் பத்தில் மருவின பலத்தி னலே
சேர்ந்தநேர் சுதர்தான் காணன் துணைசுதன் கருமம்
[செய்வான்.

30. எந்தக் காரணத்தால் புத்திர தோஷம் ஏற்பட்டது? இலக்கினம் விருஷபமாகவும், சூரியனும் புதனும் மூன்றும் இடத்திலும், சனியும் ராகுவும் பத்தாமிடத்திலும் இருப்பதால், புத்திர பாக்கியம் கிடையாது என்று கூறினேம். உடன்பிறந்தான் புத்திரனே கருமம் செய்வான்.

31. துணைமூன்றில் எவர்தன் புத்ரன் செப்புவீர் முனியே
[நீர்தாம்
பிணையில்லா இளையோன புத்ரன் பெறுவனும் கருமத்
[துக்குச்
சினமிலாப் பின்பா கத்தில் செப்புவோம் விபர மாக
அனையவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

31. இவனது மூன்று சகோதரர்களில் எவருடைய புதல்வன் கமரும் செய்வான் என்று கூறுங்கள்? இவனுக்கு நேர் இளையவன் புதல்வன் கருமத்தைச் செய்வான். இரண்டாம் பாகத்தில் எல்லாவற்றையும் விவரமாகக் கூறுவோம். அதிகமாகத் தவம்புரியும் பார்வதியே! கேட்பாயாக.

32. பாலகன் முன்சென் மத்தைப் பகருவோ மினிமே லாக
வேலன்வாழ் திருச்செந் தூரில் விளங்கினன் கர்ண சேயாய்ச்
சாலவே யங்ஙகர் கணக்குத் தானவன் எழுதி யேதான்
ஏலவே வாழும் நாளில் எய்தின வினையைக் கேண்மோ.

32. ஜாதகன் முற்பிறவியைப் பற்றி இனிக் கூறுவோம். வேலவன் வாழ்ந்திடும் திருச்செந்தூரில், கருணீகர் வருணத்தில் உதிப்பான். அவன் அவ்வூர் கணக்கு வேலையைச் சரிவரச் செய்துகொண்டு வரும்போது, நேர்ந்த தீவினையைக் கேளுங்கள்.

33. பஞ்சைபால் பொருளும் பெற்றுப் பிறகுமே தாரே னென்று
கொஞ்சிய வார்த்தை சொல்லிக் கொடாமலே நின்று
[னென்றேரும்
துஞ்சிய மனத்த ராகிச் செப்புவார் ஏழை சாபம்
தஞ்சமாய் வம்சம் நாஸ்தி சாரும்பின் சென்மந் தன்னில்;

33. ஓர் ஏழையினிடம், பிறகு தருகின்றேன் என்று அன்பு வார்த்தை கூறி, பொருள் வாங்கிக் கொண்டு; திருப்பிக் கொடுக்கவில்லை. அந்த ஏழை

மனம் வருந்தி ஒரு சாபமிட்டான். உனக்கு இப்பிறவியில் வமிச விருத்தி ஏற்படாது. மறு பிறவியில்,

34. கூறும்புத் திரளுமின்றிக் கலந்துமே வாழ்வாய் நீயும்
வருந்துணை முன்பின் இன்றி வாழ்குவாய் என்று சொல்ல
உறைந்தது அந்தத் தோடம் உத்தமன் அந்தி யத்தில்
பெருநதி சேது சென்று பெரியோர்கள் தொண்டு பூண்டு;

34. புத்திரனில்லாது நீ வாழ்வாய்; உடன் பிறந்தாரில்லாமல் தன்பப் படுவாய்; என்று கூறிய சாபம் தொடர்ந்தது. அந்தத் தீவினை நீங்குவதற்காக, ஜாதகன் கடைசிக் காலத்தில், சேதுக்குச் சென்று புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, பெரியோர்களுக்குப் பணிவிடை புரிந்து,

35. அன்னமு மடியார்க் கீந்து அந்தகன் நாட டைந்து
பொன்னவன் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
முன்சென்மம் ஏழை சாபம் மேவிடும் இச்சென் மத்தில்
தன்சுதர் ஆண்பால் தோடம் சாற்றுவீர் கிரிகை ஒன்று.

35. அடியவர்களுக்கு உணவளித்து, மரணமடைந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இக்குலத்தில் தோன்றுவான். முற்பிறவியில் ஏற்பட்ட சாபம் இப்பிறவியில் இவனைத் தொடரும். புத்திர தோஷம் நீங்க ஒரு சாந்தி கூறுவீர்களாக.

36. என்னசாந் திகள்செய் தாலும் ஏழைகள் சாபம் நீங்கா
துன்மையே துன்மை யாகும் செப்புதேவா மன்னா சேதி
பின்னமில் லாத தேகி பிறர்குற்றம் புகலா ளாகும்
தன்னினத் தவரைக் காப்பாள் சாந்தமாம் என்று
[சொல்வோம்.

36. எப்படிப்பட்ட சாந்திகள் செய்தாலும் ஏழையின் சாபம் விலகாது. தோஷம் தோஷந்தான். தாயின் செய்தியைக் கூறுவோம். நல்ல உடலமைப்பைப் பெற்றவள். பிறரைப்பற்றி அவதூறான சொற்களைக் கூறான். உறவினரைக் காப்பான். சாந்த முள்ளவள்.

37. நாயகன் மனத்துக் கேற்றாள் நளினமாய் வார்த்தை யுண்டு
மாயன்தன் மனைபோ வெப்பாம் மங்கையும் வந்த பின்பு
நேயமாய் யோக முண்டு நேர்ந்திடும் பித்த வாயு
காய்கிற குணமில் லாதாள் காதலி கேட்டி டாயே.

37. கணவன் மனத்துக்குப் பிடித்தமானவள். அழகாகப் பேசுபவள். இலக்குமி போன்றவள். இவள் வந்தபிறகு, நல்ல யோகமுண்டு. பித்தவாயு நோய் ஏற்படும். கோபமில்லாதவள். பார்வதியே! கேட்பாயாக.

38. தன்துணை யாண்பா லொன்று சத்தியு மவ்வா றுகும்
பின்னமா மற்ற தெல்லாம் பேதைபால் தென்பா லாகும்
அன்னையின் பூர்வம் சொல்வேன் அறுமுகன் வாழு கின்ற
தென்திசைப் பழனி தன்னில் செனித்தனள் கோகு லத்தில்.

38. அவள் சகோதரன் ஒருவன். அவள் சகோதரியும் ஒருத்தி. மற்றவை அழியும். அன்னையின் முற்பிறவியைக் கூறுகின்றேன். முருகப் பிரான் எழுந்தருளியுள்ள பழனியில், இடையர் குலத்தில் பிறந்தாள்.

39. சுகமுள குடும்பி யாகித் துறவியர்க் கன்ன மீந்து
பகையின்றிப் பரம னுக்குப் பசும்பாலைச் சிலநாள் தந்து
தகைமையாய்க் கால நாடு சேர்ந்துமே பிரமன் லக்கம்
மிகுவீர சைவ வம்சம் மேவினள் என்று சொல்வோம்.

39. சுகமான குடும்பியாக இருந்து, துறவிகளுக்கு உணவளித்து, விரோதமில்லாமல் பரமன் பூஜைக்குப் பசும்பால் கொடுத்து, நன்முக வாழ்க்கை முடிவில் இறந்தாள். பிறகு பிரமனால் படைக்கப்பட்டு, வீர சைவ வமிசத்தில் பிறந்தாள் என்று சொல்வோம்.

40. மறுசென்மம் காஞ்சி தன்னில் வருகுவா ளிக்கு லத்தில்
மறலியின் நாட்டை யன்னை வாங்குவாள் முப்பா னேழில்
பெறுந்தந்தை தமக்குச் சொல்வேன் பேசுவோம் இருபா [னுறில்
உரைக்கின்றேம் மரணம் தானும் உரைக்கின்றேம் [இவன்பின் சென்மம்.

40. மறுபிறவி காஞ்சிபுரத்தில், இக்குலத்தில் பிறப்பாள். அன்னை, ஜாதகனின் முப்பத்தேழாம் வயதில் மரண மடைவாள். தந்தைக்கு இவனுடைய இருபத்தோருவது வயதில் மரணம் வந்திடும் என்று சொல்லுவோம். தந்தையின் மறுபிறப்பைக் கூறுகின்றோம்.

41. பின்சென்மம் வேங்க டத்தில் பிறப்பனும் சத்திரிய சேயாய்ப்
பொன்பொருள் உடைய னுகிப் புகழ்ச்சியாய்ச் செட்டுச் [செய்து
அன்னவன் வாழ்வா னுகும் அறைந்தன மொழிகுன் றுது
உன்னத வானைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

41. பின் சென்மம், திருவேங்கடத்தில், க்ஷத்திரிய வமிசத்தில் உண்டாகும். பொன் பொருள் முதலியன பெற்று, புகழுடன் வாணிபம் செய்து, நலமுடன் வாழ்ந்து வருவான். சொன்ன வார்த்தை மாறாது. பெற்ற கணவனைக்கொண்ட பார்வதியே! கேட்பாயாக.

42. அறுபது ரெண்டு ஆண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
திருமகன் உடலம் ஏகும் செப்புவோம் இவன்பின் சென்மம்
அருணையில் இக்கு லத்தில் அருளுவான் ஆசா ஞகப்
பெருவயி ரூனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

42. அறுபத்திரண்டாம் வயதில், ஐப்பசி மாதத்தில், ஜாதகன் மரண மடைவான். இவனது மறுபிறவியைப் பற்றிக் கூறுவோம். திருவண்ணு மலையில், இக்குலத்தில் பிறப்பான். ஆசிரியனுகத் திகழுவான். விநாயக ரைப்பெற்ற பார்வதியே! கேள்.

43. காவலன் செனிக்கும் காலைக் [1]கடைநாளில் [2]கடைமா தத்தில்
மேவிய புதனி ருப்பு விளம்புவோ மாண்டு ரெண்டும்
தாவிய திங்க ளைந்தும் சார்ந்திடும் நாளீ ரெட்டும்
நேமியில் பூர்வம் சொன்னேம் நிமலியே கேட்டி டாயே.

43. இந்த ஜாதகன் பிறக்கும் காலம் பங்குனி மாதம், ரேவதி நட்சத்திரம், புதமகா தசையில் இருப்பு; இரண்டு வருஷம், ஐந்துமாதம், பதினறு நாட்கள் என்று சொல்லுவோம். இதுவரை இந்த ஜாதகனுக்கு முதற் பாகங் கூறினேம். குற்றமற்ற பார்வதியே! கேட்பாயாக.

---

1. ரேவதி
2. பங்குனி

ஜாதகம் 34

1. [1]ரசனூர் வர்கனந்தான் சென்ன மாகி
இரண்டில்புகர் மதியேழில் [2]பணியு மொன்பான்
வாசமாம் பானுபுதன் விரய மாக
[3]வள்ளல்[4]குசன் தசமத்தில் காரி லாயம்
நேசமாய் இக்கிரகம் கூடி நின்ரூல்
பகருவீர் பலன்துணையே நீத்தோ ரேநீர்
பாசமா யாண்சென்னம் மகிழ்இல் வாசல்
பத்தினிமா காளியுமே தென்பா லாகும்.

1. சென்ம லக்கினம் விருஷபமாகவும், இரண்டாமிடத்தில் சுக்கிரனும், சந்திரன் ஏழாமிடத்திலும், ராகு ஒன்பதாமிடத்திலும், சூரியனும், புதனும் பன்னிரண்டாமிடத்திலும், குருவும் செவ்வாயும் பத்தாமிடத்திலும், சனி லாப ஸ்தானமாகிய பதினொன்றிலும் தங்கியிருந்தால் எற்படும் பலன்களைக் கூறுங்கள். இந்த ஜாதகன் செல்வம் கொழிக்கும் வீட்டில் பிறப்பான். வீட்டுக்குத் தென்புறத்தில் காளி கோவில் இருக்கும்.

சனி	சூரியன் புதன்	லக்கினம்	சுக்கிரன்
குரு செவ்வாய்	இராசி சக்கரம்		கேது
ராகு			
	சந்திரன்		

---

1. விருஷபம்
2. ராகு
3. குரு
4. செவ்வாய்

2. சிரமற்றேள் கீழ்ப்பாலில் வடபால் தந்தி
சிறுவூராம் வைசியகுலஞ் செனிப்ப தாகும்
பெருந்தந்தை தாய்யோகம் துணைவர் யோகம்
பேதைபுத்ரர் யோகமெல்லாம் பரிவாய்க் கேளே
மர்மமிலான் பலவணிபம் செய்வா னுகும்
மனைவியால் புகழுடையன் மறுத்துக் கூறான்
வறுமையிலான் கடன்கொள்ளான் மருமம் கொஞ்சம்
மலர்க்கரத்தில் பிரமவரி வரைய லாமே.

2. கிழக்குப் பக்கத்தில் மாரி கோவிலும், வடக்கில் விநாயகர் கோவிலும் உள்ளன. இத்தகைய அடையாளங்கள் கொண்டதொரு சிறிய கிராமத்தில் வைசியர் குலத்தில் இவனுக்குப் பிறப்பு உண்டாகும். இவனைப் பெற்ற தந்தை, தாய், சகோதரர், மனைவி, புத்திரர் இவர்களது யோகங்களையெல்லாம் கூறுகின்றேம்; கேட்பாயாக. மருமமில்லாதவன். பல வியாபாரங்கள் செய்வான். மனைவியினால் புகழ் பெற்றவன். அவள் சொற்களை மறுத்து உரையாட மாட்டான். வறுமை இல்லாதவன். கடன் வாங்க மாட்டான். சிறிதளவே கபட முடையவன். இவன் கையில் பிரம ரேகை உண்டு.

3. தந்திரமாம் வார்த்தையுள்ளான் சமமாம் கல்வி
சான்றோர்கள் நேசமில்லான் தனமே லிச்சை
பந்துவுமே மதிக்கவுய்வன் பணிந்தோர் நேயன்
பகையென்று மனத்தில்வையான் பலர்க்கு நேயன்
கந்தன்மேல் பக்தியுள்ளான் துணைகாப் பானும்
கருதிடான் பொய்யுரையும் காம னெப்பான்
முந்தினதோர் குடும்பமதாய் மொழிய லாகும்
முன்பின்னுய்த் துணையுமுண்டு அந்தம் நாஸ்தி.

3. தந்திரமாகப் பேசுவான். சுமாரான கல்வி யறிவு உள்ளவன். பெரியோர் சட்டைக் கொள்ளாதவன். செல்வத்தில் அதிக விருப்பமுடையவன். சுற்றத்தினர் மதிக்கும்படி வாழ்க்கை நடத்துவான். தன்னை வணங்கியவருக்கு நண்பன். மனத்தில் விரோதம் கொள்ளாதவன். பலருக்கும் நண்பனுவான். முருகன்மேல், பக்தி உடையவன். சகோதரர்களை ஆதரிப்பான். பொய்யை மனத்திலும் நினைக்க மாட்டான். மன்மதனைப் போல் அழகானவன். சிறந்த குடும்பத்தைப் பெற்றிருப்பான். இவனுக்கு மூத்த சகோதரனும், இளையவரும் உளர். கடைசி நாட்களில் சகோதர தோஷம் உண்டு.

4. அந்தியத்தில் துணைதோடம் அறையுஞ் சேதி
அரவுமே நவமதிலே அதற்கு மூன்றில்
மந்தனுமே இருப்பதனல் சொன்னேம் யாங்கள்
மருவிற்றுப் பூர்வவினை விபரம் சொல்வீர்
முன்சென்மம் பாண்டிநாட்டில் மறவ னாகி
உயர்வான குடும்பமதாய் மேலோர் பக்தி
சிந்தையிலே கொண்டுஇவன் வாழும் நாளில்
சேர்ந்ததுமோர் வினைகேண்மோ தேவி தங்கை.

4. கடைசி நாட்களில், சகோதர தோஷம் கூறப்பட்டதன் காரணம் கூறுங்கள். ராகு இலக்கினத்திற்கு ஒன்பதாவது இடத்தில் தங்கி யுள்ள தாலும், மீனத்தில் சனி இருப்பதாலும் தோஷங் கூறினேம். முற் பிறவியில் சேர்ந்த தீவினைச் செயல்களைக் கூறுங்கள்? இவன், பாண்டிய நாட்டில், மறவர் குலத்தில் பிறந்து, உயர்ந்த குடும்ப முடையவனாய், பெரி யோர்களிடம் பக்திகொண்டு வாழ்ந்துவரும் நாளில், உற்ற தீவினையைக் கேட்பாயாக. இவன் மனைவியின் தங்கை;

5. மாதுவுமே விதவையதாய் இல்லம் வாழ
மங்கையின்மேல் மோகமுற்று மருவி வந்தான்
சாதியோர் அதைக்கேட்டு மாதை நீக்கச்
சக்தியிவன் பாலணுகிக் காப்பா யென்னைக்
காதலியே வேறிடத்தில் சொல்வா யென்னக்
கழறுவாள் மனம்வாடி மறுசென் மத்தில்
போதவே துணைதோன்றும் அந்தந் தன்னில்
பொருந்தார்கள் புதல்வர்அந்தம் பொருந்தா ரென்றும்:

5. கணவனை இழந்து, விதவையாய் இவன் வீட்டில் வசிக்க, இவன் மையல் கொண்டு, அவளை யடைந்தான். அப் பெண்ணின் கணவன் வீட்டி லுள்ளவர் இதைக் கேள்வியுற்று, அப் பெண்ணை விலக்கி விட்டனர். அப் பெண் இவனை யடைந்து, நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டாள். அதற்கிவன், பெண்ணே! வேறு இடம் சென்றுவிடு என்று கூறினான். இதைக் கேட்டு அவள் வருத்தமுற்று, மறு பிறவியில் சகோ தரர் தோன்றுவர். கடைசி நாட்களில் சகோதரர் பொருந்த மாட்டார்கள், புதல்வரும் உன் அந்திய காலத்தில்இறந்து போவார்கள். ஏன்றும்,

வேறு

6. இன்னமும் பலவார் சொல்லி ஏகினள் அந்த மாது
துன்மையா யந்தத் தோடம் சேர்ந்ததிவ் வரனுக் கேதான்
கன்னிகை சாபந் தானுங் கடையினில் துணைவர் தோடம்
சொன்னஇக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்.

6. மற்றும் பலவிதமாகவும் சொல்லிவிட்டுச் சென்றாள். அப்பெண் ணின் சாபத்தினாலே இந்தத் தோஷம் இவனே வந்தடைந்தது. கன்னியின் சாபத்தினால், கடைசி நாளில் சகோதர தோஷமும் ஏற்பட்டது. இவ்விதக் குணங்களே யுடையவனுக்கு இந்த ஜாதகன் தோன்றுவான்.

வேறு

7. பாலகன் குணத்தைப் பகருவோம் தாயே
பசுமஞ்சள் நிறமுளோன் அழகன்
சீலமாய்க் கல்வி செட்டுகள் செய்வன்
செய்ந்நன்றி மறந்திடான் தீரன்
வேலன்மேல் பக்தி விரும்புவா னடக்கம்
மேலவர் பக்தியே கொள்வன்
நீலம்போல் விழிகள் சாயலு முண்டு
நினைத்தகா ரியங்களே முடிப்பன்.

7. தாயே! இந்தப் பாலகனின் குணத்தைக் கூறுவோம். பொன் னிற முடையவன். அழகுள்ளவன். நன்கு கல்வி பயிலுவான். வியாபாரம் செய்வான். செய்த நன்றி மறவாதவன். தைரிய முள்ளவன். முருகன் மேல் பக்தி உள்ளவன். அடக்கத்தை விரும்புகின்றவன். பெரியவர்களிடம் பக்தி கொள்வான். கருமையான விழிகளுடையவன். சிறிது சாய்ந்த விழிகள். நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பான்.

8. கொள்ளவும் விற்க வல்லவ னுவன்
கூறுவான் சுகமதாய் வார்த்தை
கள்ளமும் கொஞ்சம் கடுநடை யுடையன்
கன்னியர் மோகமே கொள்வன்
விள்ளவே உரைப்பன் சுகமதாய்ப் புசிப்பு
உடையன்வே ரூரிலே வாசம்
சள்ளைக ளிலாதான் தனம்பின்னல் சேர்ப்பன்
தரணியில் கால்நடை விருத்தி.

8. சரக்குகளை வாங்குவதிலும் விற்பதிலும் சாமர்த்திய முள்ளவன். இனிமையாகப் பேசுவான். சிறிது திருட்டுத் தனமும், வேகமான நடையும் உடையவன். பெண்கள்பால் மோகம் கொள்ளுவான். விளங்கும்படி பேசுபவன். சுகபோஜனம் உடையவன். வேற்றூரில் வாழ்வான். கடனில்லாதவன். பிற்காலத்தில் செல்வஞ் சேர்ப்பான். கால்நடை விருத்தி உடையவன்.

வேறு

9. மால்வரியும் கரத்திலுறும் தென்பால் தன்னில்
மருவுவான் சிகிதசையில் ஈரெட் டுக்குள்
சாலவே ஆண்துணைகள் மூன்று தீர்க்கம்
சக்தியொன்று தீர்க்கமே பால னுக்கு
ஏலாது மற்றதெல்லாம் அவர்கள் சேதி
இயம்புகின்றேம் பின்பாகம் இடறில் லாமல்
பாலிகையும் வரும்காலம் பதினே ழாண்டில்
பகருவோம் தென்மேல்பால் பாவை தானே.

9. ஜாதகனுக்குக் கையில் விஷ்ணு ரேகை யுண்டு. இவன், கேது மகா தசை பதினாறு வருஷங்களுக்குள் தெற்குத் திசையிலுள்ள ஒரு ஊரை யடைவான். இவனுக்கு மூன்று சகோதரர்களும், சகோதரி ஒருத்தியும் தீர்க்கமாக உளர். மற்றவர் நிலைத்து நில்லார். அவர்களைப் பற்றிய வரலாறு களைப் பின் பாகத்தில் விவரமாகக் கூறுவோம். இவனுக்குப் பதினேழாம் வயதில் திருமணம் நடைபெறும். இவனுக்கு மனைவி, தென் மேற்குத் திக்கிலிருந்து வருவாள்.

10. வருமாது மறுஆண்டில் கால நாட்டை
வாங்குவாள் பின்னைந்தாம் ஆண்டின் மேலாய்
இருபதின் மூன்றுண்டில் தென்பக் கத்தில்
எய்திடுமே மருபாரி தீர்க்க சிவி
திருமகள்போல் நற்குணமாம் தீர நெஞ்சம்
சிறுத்ததோர்க்கு உதவிடுவள் சிலுகு கொஞ்சம்
விரதங்கள் பூணுவளாம் சீலி யாகும்
வெஞ்சினமுன் பின்சாந்தம் விரிந்தோர் கேயள்.

10. இவளால் மணக்கப்பட்ட பெண், மணம் நடந்த மறு வருஷமே மரித்துப் போவாள். பிறகு, ஐந்து வருஷங்கள் கழித்து இவனது இருபத்து மூன்றும் வயதில், மறு மணம் செய்து கொள்வான். அப் பெண் தெற் குத் திசையிலிருந்து வாய்ப்பாள். நீண்ட ஆயுளைப் பெற்றிருப்பாள். இலக் குமியைப் போன்ற நற்குணம் வாய்ந்தவள். தைரியமுள்ள மனத்தினள். ஏழைகளுக்கு உதவி புரிவாள். வீண் செலவு சிறிது உண்டு. விரதங்களைக்

கடைப்பிடிப்பாள். நல்லொழுக்க முடையவள். சிறிது முன் கோபமுடை யவள். உடனே சாந்தமடைவாள். பெரியோர்களை விரும்புவாள்.

வேறு

11. ஏதுகா ரணத்தி னுலே இருமனை பால னுக்கு
ஓதினீர் விபரம் சொல்வீர் [1]உடுபதி ஏழில் நீசன்
[2]தூதுவன் குடும்ப னுகிச் சூரியன் சுகத்தோ னுகித்
தீதாகயீ ருரில் தங்கச் செப்பினேந் தாரம் ரெண்டு.

11. எந்தக் காரணத்தினுல் ஜாதகனுக்கு இரண்டு மனைவியர் என்று கூறினீர்கள்? விவரம் கூறுங்கள்? சந்திரன் ஏழாமிடத்தில் நீசனுகி இருப் பதாலும், குடும்பாதிபதியான புதனும், சுகாதிபதியான சூரியனும் விரயஸ் தானமாகிய பன்னிரண்டில் தங்கியுள்ளதாலும் இருதாரம் இவனுக்கு என்று கூறினேம்.

12. இருதாரம் அணுகா வண்ணம் இயம்புவீர் கிரிகை ஒன்று
வருவது வந்தே தீரும் மைந்தன்முன் வினையாம் தாயே
திருமகன் என்ன செய்தான் செப்புவீர் விபரம் தன்னை
உரைக்கின்றேம் பூர்வம் தென்பால் உயர்சோழ நாட்டி
[லேதான்;

12. இரு தாரம் உண்டாகாதவாறு இருக்கச் சாந்தி ஒன்றைக் கூறுங் கள். வருவது வந்தே தீரும். இஃது இவன் முற்பிறப்பில் செய்த வினையின் பயனே. இவன் முற்பிறவியில் என்ன தீவினை செய்தான்? விவ ரத்தைக் கூறுங்கள். இவனது முற் பிறப்புத் தீவினையைக் கூறுகின்றேம். இவன் சோழ நாட்டில்;

13. காவிரி அருகி லேதான் கனமிலாச் சிறுஊர் தன்னில்
தாவினன் இக்கு லத்தில் தனமது பெருக்க முண்டாய்ப்
பூவினில் அதிகச் செட்டுப் பொருந்தியே மனைவி மைந்தர்
பாலகன் வாழும் நாளில் பரவின ஊழைக் கேண்மோ.

13. காவிரிக்கு அருகில் உள்ளதொரு சிறிய கிராமத்தில், இக் குலத்த வனுக, செல்வம் நிறைந்த ஒரு குடும்பத்தில் பிறந்தான். வியாபாரம் நன்கு செழித்தோங்க, மனைவி மக்களோடு இவன் சுகமாக வாழ்ந்த நாளில், உண் டான தீவினையைக் கேளுங்கள்.

---

1. சந்திரன்
2. புதன்

14. மனைவிமேல் நிந்தை சொல்லி மாதுரு இல்லம் ஓட்ட
வனிதையும் கர்ப்ப மாது வரைந்தசா பத்தைக் கேண்மோ
இனிவரும் சென்மம் தன்னில் இருமனை யாகத் தோன்றும்
அனையவே செனித்த இல்லம் அடையாமல் வேறூர் வாசம்.

14. தன் மனைவியின் மீது அவதூறுகளைச் சொல்லி, அவளைத் தாய் வீட்டுக்கு அனுப்பி விட்டான். அப்பொழுது அவள் கருவுற்றிருந்தாள். அந் நேரத்தில் அவள் கூறியவற்றைக் கேள். இனி வரும் பிறவியில், இரு மனைவியரை அடைவாய். பிறந்த வீட்டில் வாழமுடியாமல் உனக்கு வேறு ஊரில் வாசம் உண்டாகும்.

15. இன்னமும் பலவார் சொல்லி இறந்தனள் சலத்தி லேதான்
கன்னிகை சாபந் தானும் கலந்திடு மிச்சென் மத்தில்
மூன்மனை விரைவில் மாண்டு மேவிடும் மறும னைதான்
உனனத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

15. மற்றும் பலவாறுகக் கூறி, தண்ணீரில் வீழ்ந்து இறந்து போனாள். கன்னியின் சாபம் இப் பிறவியில் தொடர்ந்து வரும். முதல் மனைவி விரைவில் இறப்பாள். மறு மனைவியைக் கொள்வான். பரமனை மணந்த பார்வதியே! கேட்பாயாக.

16. சுதர்களும் பிறவா ராகும் தோன்றினும் நீதே யாகும்
எதுவிதக் குற்றத் தாலே இயம்புவீர் அந்தச் சங்கை
புதல்வர்தா னத்தோன் புந்தி புரவியோன் கூடியீ ருறில்
பதியுமே நந்தி யாகப் பாலர்கள் தோஷம் சொன்னேம்.

16. இவனுக்குப் புத்திரப் பேறு உண்டாகாது. தோன்றினும் நிலையாது. எதனால் அவ்வாறு கூறினீர்கள்? புத்திர ஸ்தானாதிபதியான புதன், சூரியனுடன் கூடி, பன்னிரண்டாம் இடமாகிய விரயத்தில் இருப்ப தாலும், இலக்கினம் விருஷபமாக உள்ளதாலும் புத்திர தோஷத்தைக் கூறினேம்.

17. அத்திரி புகலு கின்றார் அந்தணன் [1]கருமம் தங்கப்
புத்திரர் தம்மால் கருமம் பொருந்திடும் பால னுக்கு
வித்தகர் பாரசர் சொல்வார் விடமது நவத்தி லேறப்
பத்தினி சாபம் பூர்வம் படர்ந்தது பால னுக்கு

17. குரு கர்மஸ்தானமாகிய பத்தில் உள்ளதால், இந்த ஜாதகனுக் குப் புத்திரனால் செய்யப்படும் கிரியை கிட்டும் என்று அத்திரி கூறவும்,

---

1. பத்தாமிடம்

பராசரர் மறுமொழி கூறுகின்றார். ஒன்பதாமிடத்தில் ராகு உள்ளதாலும், மூற்பிறவியில் மனைவியின் சாபம் ஏற்பட்டதாலும் இத்தத்தோஷம் ஜாதகனுக்கு ஏற்பட்டது.

18. அந்ததோர் தோஷந் தீர அருளுவோம் கிரிகை ஒன்று
மைந்தனும் மனைவி யோடு மாயூர நதிக்குச் சென்று
முந்திய தீர்த்தம் தோய்ந்து [1]விப்பிரர் தசம்பே ருக்குக்
கந்தமும் விடமும் சொர்ணம் கிருத்யமாய்த் தான மீந்து ;

18. அந்தத் தோஷம் நீங்க, ஒரு சாந்தி கூறுவோம். ஜாதகன் மனைவியுடன் மாயவரம் சென்று, காவிரியில் நீராடி, அந்தணர் பத்துப் பேருக்கு, சந்தனத்தோடு பொன் முதலியவற்றைச் சாஸ்திரங்களில் கூறிய படி தானஞ் செய்து ;

19. அவரடி பணிந்து பின்னுல் அரனுக்கு அர்ச்சித் தேத்தித்
தவசிகட் கன்ன மீந்து தந்நகர் அடைந்து மேதான்
இவன்பாரி சுக்கிர வாரம் இன்பமாய் விரதம் கொள்ள
பவமது விலகி யேதான் பாலர்கள் விருத்தி தீர்க்கம்.

19. அவர்களை வணங்கி, மயூர நாதனைத் தரிசித்து, பூசை முதலியன இயற்றி, துறவிகளுக்கு உணவளித்து, தன்னுடைய நகரத்தை யடைந்து, இவன் மனைவி வெள்ளிதோறும் விரதங்களைக் செய்து வருவாளேயாயின், பாவங்கள் நீங்கி, நீண்ட ஆயுள் உள்ள புதல்வரை யடைவான்.

20. சொற்படி செய்யா ராகில் தோன்றுது தோன்றில் தீதாம்
சொற்படி செய்வா ராகில் தோன்றிடும் ஆண்பால் ரெண்டு
மைப்படி பெண்பால் மூன்று மருவிடும் தீர்க்க மாகத்
தப்பிதம் மூன்று யென்றும் சங்கரி கேட்டி டாயே.

20. சொன்னபடி செய்யாவிடில் புத்திரப் பேறு உண்டாகாது. ஏற்பட்டாலும் நிலையாது. சொன்னபடி செய்தால், புதல்வர்கள் இருவரும், பெண்கள் மூவரும் தோன்றித் தீர்க்கமாவர். மூவர் தோன்றி மாள்வர். பார்வதியே ! கேட்பாயாக.

21. மாதுரு குணத்தைச் சொல்வேன் மனமது தளர்ச்சி யாகும்
வேதனை யெண்ணு ளாகும் வித்தகி யோக சாலி
சாதிப்பாள் சிலவே சங்கை சந்தேக மனத்த ளாகும்
ஓதுமுன் கோபம் கொஞ்சம் உயர்வான புத்தி ஏற்பள்.

---

1. அந்தணர்

21. தாயின் குணத்தைக் கூறுகின்றேன். தளர்ந்த மனமுடையவள். தீங்கு நினையாதவள். நன் மன முள்ளவள். அதிருஷ்ட முள்ளவள். சில சந்தேகங்களைத் துணிவுடன் முடிப்பாள். சந்தேக மனமுடையவள். சொல்வதற்கு முன் கோபங் கொள்ளுவாள். மேலான புத்தி உடையவள்.

22. சீலியாம் விரத மேற்பள் தேவிக்குத் துணையாண் ரெண்டு
நீலிமார் மூவ ராகும் நிலையாது மற்ற தெல்லாம்
சாலவே கீழ்ப்பால் தன்னில் தாயில்லம் என்று சொல்வோம்
ஆலம்போல் பித்த வாயு அணுகிடும் சொற்ப மாக.

22. ஒழுக்க முடையவள். விரதங்களை யனுஷ்டிப்பாள். இவளுக்கு இரு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உளர். மேலுந் தோன்றுபவர் நிலையார். இவளுர்க்குக் கிழக்குத் திசையில் இவளது தாய் வீடு. கொடிய விஷம்போன்று பித்த வாயு நோய் சிறிது ஏற்படும்.

23. முன்சென்மம் பட்சி தன்னில் உதித்தனள் வன்னி சேயாய்த்
தன்சுதர் அதிகம் உண்டாய்ச் சான்றோருக் கன்ன மீந்து
அன்னியர் மதிக்க வாழ்ந்து அச்சென்மம் வினையில் லாது
துன்னிய காள நாடு சென்றுமே பிரமன் லக்கம்;

23. முற்பிறவியில் திருக்கழுக்குன்றத்தில், வன்னியர் குலத்தில் உதித்தாள். புத்திரப் பேற்றை மிகுதியாகப் பெற்று, பெரியோர்களுக்கு உணவளித்து, அயலார் மதிக்கும்படி வாழ்ந்து, அப் பிறப்பில் ஜீவனை யொன்று மில்லாது மரணமடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு;

24. வந்தவ ளென்று சொல்வோம் வரும்சென்மம் கொங்கு
[நாட்டில்
முந்திய கங்கை சேயாய் உதிப்பாளாம் என்று சொல்வோம்
தந்தையின் சென்மம் சொல்வேன் தென்றிசைக் கடையூர்
[தன்னில்
விந்தையாய்ச் சத்திரிய சேயாய் மேவுவான் என்று
[சொல்வோம்.

24. இப்பிறப்பில் பிறந்தாள் என்று சொல்லுவோம். வருஞ் சென்மத்தில், கொங்கு நாட்டில், வேளாளர் மரபில் உதிப்பாள். ஜாதகன் தந்தையின் மறு பிறப்பைக் கூறுவோம். தென் திசையில் உள்ள திருக்கடையூரில், க்ஷத்திரியக் குலத்தில் பிறப்பான் என்று சொல்லுவோம்.

25. முப்பது ரெண்டா மாண்டில் வீளம்புவோம் தந்தை
[கண்டம்
செப்புவோ மதன்மே லிந்து ஆண்டினில் அன்னை கண்டம்
அப்போது புகரின் காலம் அணுகிடும் என்று சொல்வோம்
ஓப்புடன் தவங்கள் செய்யும் உத்தமி கேட்டி டாயே.

25. ஜாதகனின் முப்பத் திரண்டாம் வயதில், தந்தைக்கு மரணம் எற்படும் என்று கூறுவோம். முப்பத்தேழாம் வயதில் தாயாருக்கு மரணம் உண்டாகும் என்போம். அப்பொழுது சுக்கிர மகாதசை ஆரம்பமாகும் என்று சொல்லுவோம். உயர்ந்த தவங்கள் புரியும் பார்வதியே! கேட்பாயாக.

26. அறுபது எட்டு ஆண்டில் ஆனிமா தத்தி லேதான்
திருமக னுடல மேகும் செப்புவோ மிவன்பின் சென்மம்
பெருமையாய்த் [1]துவாரை தன்னில் பிறப்பனும் பின்கு
[லத்தில்
கரிமத வானைப் பெற்ற காதலி கேட்டி டாயே.

26. அறுபத்தெட்டாம் வயதில், ஆனி மாதம், ஜாதகன் இறந்து போவான். இவனுடைய மறு பிறப்பைச் சொல்லுவோம். மேன்மையுடன் துவாரகையில் நான்காம் வருணத்தவனுகப் பிறப்பான். விநாயகரைப் புதல்வராகப் பெற்ற அன்னையே! கேட்பாயாக.

27. சாதகன் பொதுயோ கத்தைச் சாற்றிடக் கேளு மாதே
நீதிமான் வணிபம் செய்வன் நேர்ந்திடும் நிதிநிட் சேபம்
சூதிலா முப்ப தாண்டில் சேருமே பால னுக்குப்
பேர்தனம் பூமி வீடு புகழ்பதி ஞயி ரம்பொன்.

27. ஜாதகனின் பொதுவான யோகத்தைக் கூறுகின்றோம். கேளுங்கள். நியாயமுள்ளவன். வியாபாரம் செய்வான். முப்பதாம் வயதில், இவனுக்குப் புதையல் கிடைக்கும். பெருஞ் செல்வம், வீடு, நிலம், புகழ், கிராமம், பதினுயிரம் பொன் முதலியவற்றை;

28. அடைகுவா னென்று சொல்வோம் ஆறஞ்சு ஆண்டு
[மேலாய்த்
திடமதாய்ப் புகழும் பூமி செட்டுக்கள் பலவாய் ஓங்கும்
உடன்துணைத் தனைக்காப் பானும் உறவோர்கள் மெச்ச
[வாழ்வன்
விடமணிப் பாகத் தாளே விளம்பின மொழிகுன் றூது.

28. அடைவான் என்போம். முப்பதாம் வயதில் நிச்சயமாகப் புகழும், நிலமும், வாணிபமும் பன்மடங்கு வளரும். சகோதரர்களைக் காப்பான்.

சுற்றத்தினர் மெச்சும்படி வாழ்வான். சிவபெருமானின் இடப்பாகத்தில் வாழும் தேவியே! கூறிய சொற்கள் மாரு.

29. எப்படி யோகம் சொன்னீர் இயம்புவீ ரந்தச் சங்கை
ஒப்புடன் தர்ம கர்மன் ஒருவராய் லாபம் நிற்க
மைப்புடன் தசத்தில் பொன்னோன் வெள்ளியும் [1]ரதத்தி
[லேற
அப்பணி நவத்தி லேற அளகேச யோக் மென்றோம்.

29. எங்ஙனம் இவ்வாறான யோகங்கள் ஜாதகனுக்குண்டு என்று கூறினீர்கள்? தர்ம கர்மாதிபனான சனி, தனியனுய்ப் பதினோராமிடத்திலும், பத்தில் குருவும், மிதுனத்தில் சுக்கிரனும், ஒன்பதில் ராகுவும் இருப்பதால், இவனுக்குக் குபேரனைப் போல் யோகம் வாய்க்கும் என்று கூறினோம்.

30. பிறந்திடு காலந் தன்னில் புதன்தசை பதினு லாண்டுஞ்
சிறந்திடுந் திங்கள் ஆறும் தினமது ஈரஞ் சாகும்
மருவிடும் பிணிய நேக மவன்தந்தை வர்க்கம் சூதம்
அருமையாப் பூர்வம் சொன்னோம் அம்பிகை யாளே
[கேளாய்.

30. ஜாதகன் பிறக்குங் காலத்தில் புத மகாதசை இருப்பு; பதினொன்று வருஷங்கள், ஆறு மாதங்கள் பத்துத் தினங்களாம். பல நோய்கள் அணுகும். தந்தை வர்க்கத்தில் அசுபம் உண்டாகும். இதுவரையில், திறமையாக இந்த ஜாதகனுக்குப் பூர்வ பாகஞ் சொன்னோம். அம்பிகையே! கேட்பாயாக.

---

1. மிதுனம்

ஜாதகம் 35

1. நந்தியும் சென்ன மாக ரவிகுச ஞறி லேறப்
புந்தியும் வெள்ளி திங்கள் புக்கிடம் ஏழ தாக
[1]மந்தர கயறு எட்டில் [2]மறைசனி லாப மேற
இந்தவார் இரகம் நின்ரூல் இயம்புவீர் பலனைத்தானே.

1. இலக்கினம் விருஷபமாகவும், சூரியன் செவ்வாய் துலாத்திலும், புதன் சுக்கிரன் சந்திரன் விருச்சிகத்திலும், இராகு தனுசிலும், குரு சனி லாப ஸ்தானமாகிய மீனத்திலும், தங்கியிருக்கும் நிலையில் தோன்றிலல், உரிய ஜாதக பலன்களைக் கூறுவீர்களாக.

குரு சனி		லக்கினம்	கேது
	இராசி சக்கரம்		
இராகு	புதன் சுக்கிரன் சந்திரன்	சூரியன் செவ்வாய்	

2. குறுமுனி புகலு கின்ரூர் குறித்தது ஆண்பா லாகும்
வருமில்லங் கீழ்மேல் வீதி வாசலும் எமனின் பார்வை
[3]பெருவயி றப்பன் மேல்பால் [4]புலிவா கனத்தாள் மீனம்
சிறுஊராங் கங்கை சேயாய்ச் செனிப்பனு மைந்தாஞ்
[சென்மம்.

2. அக்தீய முனிவர் கூறுகின்ரூர். ஜாதகன் ஆண்பாலாவான். கிழக்கு மேற்கு வீதியில் இவன் வீடு இருக்கும். வீட்டின் வாயில் தெற்கு நோக்கியது. இல்லத்துக்கு மேற்குத் திசையில் விநாயகர் கோயிலும் கிழக்குப் பக்கத்தில் காளிகோவிலும் உள்ளன. இத்தகைய அடையாளங்கள் உள்ள ஒரு சிறிய கிராமத்தில், வேளாள மரபில், ஐந்தாம் பிறப்பாய் ஜாதகன் தோன்றுவான்.

---

1. இராகு
2. குரு
3. விநாயகர்
4. துர்க்கை

3. இன்னவன் சனன யோகம் எழில்பெரும் தந்தை யோகம்
அன்னையுங் களத்திர புத்திரர் அவன்துணை யோகச் சேதி
முன்பின்சென் மங்கள் யாவும் உரைக்கின்றே மிந்நூல்
[தன்னில்
தந்தையின் துணையாண் ஒன்று சத்திமார் நால்வ ராகும்.

3. இவனுடைய பிறப்பு, யோகங்கள், தந்தை தாய் மனைவி புத்திரி சகோதரர்கள் முதலியவர்களின் யோகங்கள், முற்பிறவி, பின்சென்மம் ஆகிய அனைத்தையும் கூறுகின்றோம் இந்த நூலில். இவன் தந்தையின் உடன் பிறந்தவர்களில் ஆண் ஒருவன்; பெண்கள் நால்வராவர்.

4. அவர்களும் கால நாடு அடைகுவர் தந்தை தானும்
தவசிபோல் தனியாய் வாழ்வன் சாற்றுவோ மவன்கு
[ணத்தை
நவனியை விருத்தி செய்வன் நற்புத்தி யுக சாலி
பவமன மில்லா னகும் பஞ்சைமே லிரக்க னுவன்.

4. தந்தையின் உடன் பிறந்தவர்களும் இறந்துபோவார்கள். இவன் தந்தை தனித்தே வாழ்வான். அவன் குணத்தைக் கூறுவோம். நில புலன்களை விருத்தி செய்வான். நல்ல புத்தி உடையவன். ஊகித்தறியும் ஆற்றல் பெற்றவன். தீங்கற்ற மனத்தினன். ஏழைகள்பால் இரக்கம் கொண்டவன்.

5. இருநிறம் உயர மில்லான் ஏவலா ளுடைய னுகும்
குறைவுள்ள வஸ்து இட்டம் குண்டைகோ விருத்தி யுண்டு
மர்மநூல் அறியா னுகும் வாக்குச்சொல் காப்பா னுகும்
தரையது இரண்டு ஊரில் சார்ந்திடு மென்று சொல்வோம்.

5. கரிய நிறமுள்ளவன். உயரமில்லாதவன். வேலைக்காரர்களை உடையவன். குறைவாக உள்ள பொருள்களின்மீது விருப்பமுடையவன். காளை, பசுக்கள் விருத்தியுண்டு. வேதாந்த இரகசியங்களை உணரமாட்டான். சொன்ன சொல் தவறுதவன். இவனுக்கு இரு ஊர்களில் வீடுநிலஞ் சேரும் என்போம்.

6. மதுத்தொழில் புரிவா னுகும் மன்மது கபடு மில்லான்
திதிபாக்ய முடைய னுகும் சல்லியங் கொஞ்ச முண்டு
மதிநுதல் மனைவி பட்ச மறுமுகன் பக்தி பூண்பன்
அதிதியே கன்னி ராசி அணுகுமே சதய நாளாம்.

6. கள் வியாபாரம் செய்வான். கபடமற்ற மனமுடையவன். பால் பசு பாக்கியமும் உண்டு. கடனும் சிறிதளவு இருக்கும். பிறைச் சந்திரனைப்

போல் வளைந்த நெற்றியையுடைய மனைவியிடம் விருப்பமுள்ளவன். முருகன் மீது பக்தி கொள்ளுவான். சதய நட்சத்திரம் கன்னியா ராசியில்;

7. உதிப்பனும் பூர்வம் சொல்வேன் உறையூருக் கருகில்
[கீழ்பால்
சதியில்லா வன்னிய சேயாய்ச் செனித்துமே கிருஷி செய்து
அதிகார முடைய னாகி அவனுமே வாழும் நாளில்
அதிபனும் ஒரு பெண் பேரில் வர்ணித்தான் நிந்தை
[வார்த்தை.

7. உதிப்பான். இவனது முன்பிறவியைக் கூறுவோம். உறையூருக்குச் சமீபத்தில், கிழக்குத் திசையில், குற்றமற்ற வன்னியர் குலத்தில் பிறந்து, உழவுத்தொழிலை நடத்தி, அதிகாரங்களை யடைந்து வாழ்ந்துவரும் நாளில், ஒரு பெண்ணின் மீது அவதூறான பழிகளைக் கூறினான்.

8. மாதுவும் மனங்க லங்கி யறைந்திட்ட சாபங் கேண்மோ
ஓதினால் நிந்தை வார்த்தை உதிக்கும்பின் சென்மம் தன்னில்
தீதாகும் துணைவர் லாபம் சிலர்களால் நிந்தை ஏற்பாய்
காதலி சொல்லிச் சென்றாள் கலந்தது அந்தச் சாபம்.

8. அப்பெண்ணும், மனம் வருந்தி இட்ட சாபத்தைக் கேளுங்கள். என்னைப்பற்றி நீ அவதூறுகளைக் கூறியதால், உனது மறுபிறப்பில் சகோதர பாக்கியம் இல்லாதவனாய், நீயும் சில அடாப்பழிகளை ஏற்பாய் என்று கூறி அப்பெண் சென்றாள். அந்தச் சாபம் இப்பொழுது ஏற்பட்டது.

9. மங்கையின் சாபம் போல வருந்துணை யாவும் தீது
நங்கையாய் வார்த்தை யேற்பன் நவின்றவிக் குணத்தா
[னுக்கு
இங்கிவன் உதிப்பா னாகும் இயம்புவோ மிவன்கு ணத்தைத்
துங்கமா மனத்தா னாகும் தொடுத்ததை முடிப்பா னாகும்.

9. பெண்ணின் சாபப்படியே உடன்பிறந்தவர் இறந்து போவர். நிறந்த மொழிகளைக் கேட்பான். இத்தகைய குணமுடையதற்கைக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இவனது குணத்தைக் கூறுவோம். தாய்மையான மனம் கொண்டவன். எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல் பெற்றவனாவன்.

10. மாநிறம் சமதே கத்தான் மாடுகள் விருத்தி யுண்டு
ஊனமில் லாத தேகி உறுதியில் லாத நெஞ்சம்
னனரை உறவு கொள்ளான் ஏவலாள் உடையா னாகும்
கான்மயில் முருகன் பக்தி கழறுவா னென்று சொல்வோம்.

10. கரிய நிறமுள்ளவன். சமமான உடலமைப்பைப் பெற்றவன். மாடுகள் விருத்தியுள்ளவன். குறைவற்ற உருவம் படைத்தவன். உறுதியில்லாத மனமுடையவன். கீழ்மக்கள் நேசம் கொள்ளாதவன். வேலைக்காரர்களைப் பெற்றிருப்பான். முருகனிடம் பக்தி பூண்டவன்.

11. வித்தையு மதிக மில்லான் வீண்பழி ஏற்கா னுகும்
சுத்தவா னறத்தி லிச்சை சோம்பலுங் கொஞ்ச முண்டு
நத்தினோர்க் குதவி செய்வன் நடையது துருசு முண்டு
சத்திய மென்றுல் அச்சம் தன்கரம் விஷ்ணு ரேகை

11. கல்வியறிவு நிறையப் பெறுதவன். அடாப்பழி ஏற்காதவன். தூய்மையுள்ளவன். தருமத்தில் விருப்பமுள்ளவன். சிறிது சோம்பலும் உடையவன். துன்பமடைந்தவர்களுக்கு உதவி செய்வான். வேகமான நடையுடையவன். சத்தியத்திற்குப் பயப்படுகின்றவன். கையில் விஷ்ணு ரேகை உள்ளவன்.

12. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தரணியால் உய்வா னுகும்
பிந்தியும் வடகீழ் தன்னில் புகுவனும் வேரூர் தன்னில்
எந்தக்கா லத்தில் செல்வான் இயம்புவீர் முனியே நீர்தாம்
சந்தத முப்பாண் டின்மேல் சாருவான் மனைவி யூரில்;

12. தன் தந்தையைவிடச் சிறப்பாக வாழ்வான். விவசாயத்தால் பிழைப்பான். பிறகு, வடகிழக்குத் திசையில் உள்ள வேரூருக்குச் சென்று குடிபுகுவான். அவன் அவ்வூரில் எப்பொழுது குடியேறுவான்? என்பதனைக் கூறுங்கள். முப்பதாம் வயதுக்கு மேல் மனைவியூராகிய அந்தச் சிற்றூரில் குடிபுகுவான்.

13. தன்துணை சேட்டன் நீரால் [1]சண்டன்தன் பதிக்குச் [செல்வன்
பிந்தியும் கன்னி முன்று புகலுவோம் தீர்க்க மாகக்
கன்னியில் மூத்தோர் சேதி கழறுவோம் மால்நி றத்தாள்
நன்னடை மிருது வார்த்தை நங்கைக்கு வடகீழ் மாரன்.

13. அப்பொழுது ஜாதகனின் மூத்த சகோதரன் தண்ணீரில் மூழ்கி இறந்து போவான். பிறகு இவனுக்கு மூன்று பெண்கள் தோன்றித் தீர்க்க மாவர் என்போம். பெண்களில் மூத்தவள் வாலாற்றைக் கூறுவோம். அவள் கரிய நிறமுள்ளவள். அழகிய நடையுடையவள். மென்மையாக உரையாடுவாள். இவளுக்கு வடகிழக்குத் திசையில் கணவன் வாய்ப்பான்.

---

1. இயமன்

14. மாரன்தன் சுகத்தைக் காணுள் மைந்தர்க ளில்லா ளாகும்
காரிழை நாணி ழுந்து காதலி சிறையாய் வாழ்வள்
நாரிக்கு இவ்வார் குற்றம் நடக்குங்கா ரணங்க ளென்ன
ஆரிழை பூர்வம் தன்னில் அணுகிற்றுச் சிலவே தோடம்.

14. கணவனுல் இன்பத்தை யடையமாட்டாள். புத்திரப் பேறும் இல்லை. இவள் விதவையாகி, வீட்டினுள்ளேயே சிறைபட்டவள்போல் வாழ்ந்து வருவாள். இவளுக்கு இப்படிப்பட்ட தோஷங்கள் ஏற்படக் காரணமென்ன? முற்பிறப்பில் சில தோஷங்கள் இவளையடைந்தன.

15. என்னவூழ் செய்தா ளதனை இயம்புவீர் முனியே நீர்தாம்
முன்சென்மம் மலைநா டதனில் உதித்தனள் வைசியச்
[சேயாய்த்
தன்வரன் தன்னை டொடுத்துச் சென்றனள் பழனிக்
[கேதான்
அன்னவள் முருகன் பாதம் அருச்சித்துக் கடைக்குச்
[சென்று;

15. எத்தகைய தீவினைகளைச் செய்தாள்? அவற்றைக் கூறுங்கள். இவள் முற்பிறப்பில், மலைநாட்டில், வைசிய குலத்தில் தோன்றினுள். தன் கணவனுடன் மனமொத்து பழனிக்குச் சென்றுள். அங்குக் கோயில் கொண்டுள்ள முருகப்பிரானைப் பணிந்து, அருச்சனை முதலியன செய்து, போற்றி, கடைக்குச் சென்று;

16. குங்குமம் மஞ்சள் சிப்புக் கோதையும் வாங்கிக் கொண்டு
தங்கமும் ஈயா ளாகிச் சர்வமான் போல்ப றந்தாள்
அங்கதை வணிபன் பார்த்து அம்மாதைக் காணு ளுகிச்
சிங்கம்போல் கோப முற்றுச் செப்புவான் சாபந் தானும்;

16. குங்குமம், மஞ்சள், சிப்பு, இவற்றை வாங்கிக்கொண்டு, அவற்றிற்குரிய விலைப்பணத்தைக் கொடாது, மானைப்போல் விரைந்து சென்று விட்டாள். வியாபாரி அப்பெண்ணைக் காணுதவனுய், சிங்கத்தைப்போல் வெகுண்டு, சாபமொன்று இடுவான்.

17. குங்குமம் ஆகா முன்னே கொழுநனும் மரண மாகும்
மங்கின மனத்த ளாகி மருவும்பின் சென்மம் தன்னில்
பங்கமாய் வரனு முண்டாய்ப் பர்த்தாவின் சுகமு மின்றி
நங்கையும் நாணி ழுந்து நலிந்ததோர் மணமாய் வாழ்வள்.

17. இவளுக்குக் இக்குங்குமம் உபயோகப்படு முன்பாகவே கணவன் மரிப்பான். மனம் வருந்தி வாடுவாள். பின்சென்மத்தில் கணவனைப்

பெற்று, அவனுல் இன்பமின்றி வாழ்ந்து, முடிவில் திருமாங்கலியம் இழந்து விதவையாய் வாழ்வள்.

18. சொல்லியே தெருத்தூள் விட்டான் சேர்ந்தது அந்தச் சாபம்
வல்லிக்கு அந்த ஆண்டில் மாரனும் மரண மாகி
அல்லலாய்க் கால நாடு அணுகியே பிரமன் லக்கம்
புல்கினுள் இக்கு லத்தில் பூர்வசா பத்தி னுலே ;

18. என்று கூறி, தெருமண்ணை வாரி இறைத்தான். அந்தச் சாபம் இவளைச் சார்ந்தது. கணவனும் இறந்து அவளுக்கும் அந்த ஆண்டிலேயே மரணமேற்பட்டது. பிறகு, பிரமனுல் படைக்கப்பட்டு இக்குலத்தில் பிறந்தாள். முன்பிறப்பில் உண்டான சாபத்தின்படியே;

19. ஆதியில் நாணி முந்து அருந்தவ முனிபோல் வாழ்வள்
காதலி பின்சென் மத்தைக் கழறுவோம் அருணை தன்னில்
ஓதுவார் குலமு திப்பாள் உரைத்தது தப்பா தாகும்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்;

19. முதலில் மாங்கலியம் இழந்து, அரிய தவம் புரியும் சந்நியாசினி போல் வாழ்ந்து வருவாள். இவளது பின்சென்மத்தைக் கூறுகின்றோம். திருவண்ணுமலையில், ஓதுவார் குலத்தில் பிறப்பாள். கூறிய சொல் தவறுது. விநாயகரைப் புதல்வராகப் பெற்ற பார்வதியே ! கேட்பாயாக.

20. மற்றதோர் துணைவி சேதி யறைகுவோம் பின்பா கத்தில்
வித்தகன் மணத்தின் காலம் வினம்புவோ மிருபான் [ரெண்டில்
பத்தினி வடகிழ் தன்னில் பாவையும் வருவா ளாகும்
சுத்தமாம் சீலி யாகும் சுந்தர முடைய ளாகும்.

20. ஜாதகனின் மற்றொரு சகோதரியின் வரலாற்றை இரண்டாம் பாகத்தில் கூறுகின்றோம். இந்த ஜாதகனுக்குத் திருமணம் நிகழுங்காலத்தைக் கூறுவோம். இவனது இருபத்திரண்டாம் வயதில் திருமணம் நடைபெறும். இவனுக்கு, வடகிழக்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். தூய்மையானவள். நல்லொழுக்கமுடையவள். அழகுள்ளவள்.

21. மாந்தளிர் மேனி யாகும் மனமது கபடு மில்லாள்
கூர்ந்துமே வார்த்தை சொல்வள் குணமது நல்ல தாகும்
காந்தம்போல் புத்தி யுண்டு கடந்தோர்க்கு மன்ன மீவள்
ஏந்திடை யோக சாலி எய்திடும் நாபிச் சூடு.

21. மரந்துளிர்போன்ற மென்மையான உடலுடையவள். வஞ்சனையில்லா நெஞ்சத்தினள். நன்கு ஆராய்ந்து உரையாடுபவள். நற்குணமுள்ளவள். காந்தத்தைப்போன்று எந்த விஷயத்தையும் கிரகிக்கும் அறிவுடையவள். தறவிகளுக்கு உணவளிப்பாள். நல்ல அதிருஷ்டமுடையவள். இவளுக்கு ஈபிச் சூட்டு நோய் உண்டாகும்.

22. அன்னையு மிரண்டு மாகும் அணுகிய முன்தாய்க் கின்னோள்
கன்னிகை யுதிப்ப ளாகும் காதலி வறுமை காணுள்
பொன்பணி யதிகம் சேர்ப்பள் பிதுரூரில் பின்னுல் வாசம்
தன்வரன் மனத்துக் கேற்றோள் சக்திக்கு வயது தீர்க்கம்.

22. இவளுக்கு இரு தாய்மார்கள் உள்ளனர். இவள் முதல் தாய்க்குத் தோன்றுவாள். வறுமை யறியாதவள். பொன் முதலிய செல்வங்கள் அதிகமாகச் சேர்ப்பாள். தந்தையின் ஊரிலேயே பிற்காலத்தில் வசிப்பாள். தன் கணவன் மனத்துக்கு ஏற்றபடி நடந்து கொள்வாள்; நீண்ட ஆயுளைப் பெற்றிருப்பாள்.

23. பிருகுமே தடுத்துச் சொல்வார் புதல்வனுக் கிரண்டு தாரம்
வருகுமே காரணஞ்சொல் மங்கலன் ஏழோ ணுகிப்
பரிதியுங் கூடியாறில் பற்றிட ரெண்டில் கேது
மருவின பலத்தி னுலே யறைந்தனந் தாரம் ரெண்டு.

23. பிருகு மகரிஷி தடுத்துக் கூறுகின்றார். இந்த ஜாதகனுக்கு இரு மனைவியர் ஏற்படக் காரணம் என்ன? ஏழாவது வீட்டுக்கு உடையவனுகிய செவ்வாய், சூரியனுடன் கூடி ஆறுமிடத்தில் இருப்பதாலும், கேது இரண்டாம் இடத்தில் உள்ளதாலும் இவனுக்கு இரு மனைவியர் என்று கூறினேம்.

24. அத்திரி தடுத்துச் சொல்வார் அணுகாது தாரம் ரெண்டு
பத்தினித் தானம் தன்னைப் [1]பார்ப்பானும் பார்த்த தாலே
குத்தமே அடையா ளாகும் கோதையும் ஒன்றே தீர்க்கம்
சுத்தமாய்த் தவங்கள் செய்யும் துறவியே கேட்டி டாயே.

24. அத்திரி தடுத்துக் கூறுகின்றார். இவனுக்கு இரு மனைவியர் இல்லை. ஏனெனில், களத்திர ஸ்தானமாகிய ஏழாமிடத்தைக் குரு பார்ப்பதால், களத்திர தோஷம் இடையாது. இவனுக்கு மனைவி ஒருத்தியே. நற்றவம் புரியும் முனிவரே! கேளுங்கள்.

25. சுதர்களு மாண்பால் ரெண்டு தோகையும் மூன்று என்றோம்
இதுவைந்தும் தீர்க்க மெய்தும் ஏகிடும் ரெண்டும் என்றோம்
முதலைந்தும் சேத மெய்தும் மொழிகுவீர் அந்தச் சங்கை
புதனைந்தா மிடத்தோ ணுகிப் பிறைபுகர் ஏழில் கூடி;

25. சந்ததிகளில் ஆண்கள் இருவரும் பெண்கள் மூவரும் என்று கூறி னேம். இவர்கள் ஐவரும் நீர்க்கமாக விளங்குவர். மேலும் இரண்டு பிறந்து சேதமாம். முதலில் ஐந்து பிறந்து கஷ்டமாம். அதற்குக் காரணம் யாது? என்று கூறுங்கள். ஐந்தாம் வீட்டுக்குடையவனுகிய புதன், சந்திரன் சுக்கிரனேடு கூடி, எழாமிடத்தில்;

26. இருப்பதால் தோடஞ் சொன்னேம் இவனுடைப் பூர்வம்
[கேளாய்த்
திருப்பரங் குன்றந் தன்னில் செனித்தனன் சேடர் வம்சம்
தறித்தொழில் செய்து இன்னேன் சண்முகன் அருளி னலே
பொருளது பெருக்க மாகிப் பெரியோர்க்கு அன்ன மீந்து;

26. இருப்பதால் இந்தத் தோஷம் கூறினேம். இவன் முற்பிறப் பைக் கேளுங்கள். திருப்பரங்குன்றத்தில், சேடர் குலத்தவனுகத் தோன்றி னன். நெசவுத் தொழில்செய்து, முருகனருளால் பெரும் பொருளீட்டி, பெரியோர்களுக்கு உணவளித்து;

27. காலன்தன் நாட டைந்து கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமாய்க் கங்கை சேயாய்ச் செனித்தன னென்று
[சொல்வோம்
பாலகன் யோகச் சேதி பகருவோ மினிமே லாக
ஞாலங்க ளிரண்டு ஊரில் நல்கிடும் வறுமை காணுன்.

27. மரண மடைந்தான். பின்பு, பிரமனுல் படைக்கப்பட்டு, நல் லொழுக்கமுள்ள வேளாளர் மரபில் தோன்றினன் என்போம். இனி இவனது யோகத்தைக் கூறுவோம். இரு ஊர்களில் நிலங்களைப் பெற்றிருப் பான். ஏழைமையை யறியாதவன்.

28. திருப்பணி வேலை செய்வன் தேறினேர்க் கன்ன மீவன்
பொருளது பெருக்கம் செய்வன் புண்ணியத் தலங்கள்
[செல்வன்
குறையென்றேர்க் குதவி செய்வன் கொடுமையை
[யெவர்க்கு மெண்ணுன்
நறைமல ரிட்டம் கொள்வன் நாற்காலி விருத்தி யுண்டு.

28. கோயில் பணிகள் புரிவான். பெரியோர்களுக்கு உணவளிப்பான். செல்வத்தைப் பெருக்குவான். புண்ணிய ஸ்தலங்களுக்குப் போவான். இல்லே என்று வந்தவருக்கு உதவி யளிப்பான். எவருக்கும் தீங்கு நினை யான். நறுமணம் கமழும் மலர்களில் விருப்ப முடையவன். கால் நடைகள் விருத்தி யுடையவனுவான்.

29. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளாள் மாஞ்சி
[வப்பாள்
தன்மனம் மர்மம் கொஞ்சஞ் சாதமு மன்பா யிவள்
முன்கோபம் கொஞ்ச முண்டு உலகினில் நல்லோ ளாவள்
தந்தநோ யுடைய ளாகும் தன்வரன் மனத்துக் கேற்றோள்.

29. தாயின் குணத்தைச் சொல்லுவோம். அழகுள்ளவள். சிவந்த மேனியள். மனத்தில் இரகசிய முடையவள். அன்புடன் அன்னம் அளிப் பாள். சிறிது முன்கோப முண்டு. உலகில் நல்லவள் என்று போற்றப்படு வாள். பல் நோய் உடையவள். கணவன் மனத்திற்கு ஏற்றவள்.

30. இல்லமும் வடகீ ழாகும் இவள்துணை யாண்பால் நட்டம்
வல்லியு மொன்றே தீர்க்க மறைகின்றோ மிவள்முன்
[சென்மம்
அல்லலே விலக்கு கின்ற அருணைக்குக் கீழ்ப்பா லாகப்
புல்கினாள் சிறுவூர் தன்னில் பூவையும் கர்ண சேயாய்.

30. இவள் வீடு வடகிழக்குத் திசையில் உளது. இவள் உடன்பிறந்த வர்களில் ஆண்மகன் ஒருவனுமில்லை. பெண்ணொருத்தி யுண்டு. இவள் முற்பிறப்பைக் கூறுகின்றோம். துன்பங்களை நீக்குகின்ற திருவண்ணாமலைக் குக் கிழக்கில் உள்ள ஒரு சிறிய ஊரில், கருணைகர் வகுப்பில் தோன்றினள்.

31. மங்கையும் வாழு நாளில் மருவின வினையைக் கேண்மோ
சங்கையாய் நாத்தி பேரில் செப்பினாள் நிந்தை வார்த்தை
அங்கவள் மனமும் வாடி அறைந்திட்ட சாபம் கேண்மோ
பங்கமாய் வார்த்தை யென்மேல் பகர்ந்திட்ட பாவிக்
[கேதான்;

31. இவ்வாறு இவள் வாழ்ந்து வரும்போது இவளை யடைந்த தீவினையைக் கேளுங்கள். இவள் தன் நாத்தியின்மீது ஐயங்கொண்டு, அவளைப் கூறினாள். அவள் மனம் வருந்திக் கொடுத்த சாபத்தைக் கேளும். என்மீது வீணைப் பழிகூறிய பாவி: -

32. பின்வரும் சென்மம் தன்னில் பேதைக்குத் துணையா
[ணின்றித்
தன்சுதர் முதலில் நட்டம் தந்தமும் பிணியு மாகிச்
சொந்தநாத் திகளு மின்றித் தொல்புவி தன்னில் வாழ்வள்
இன்னமும் பலவார் சொன்னாள் எய்திற்று அந்தச் சாபம்.

32. பின் சென்மத்தில் சகோதரன் இல்லாமலும், முதலில் தோன் றும் புதல்வர்களை இழந்தும், பல்நோய் கண்டும், சொந்த நாத்தியர் எவரு

மின்றி, இவ்வுலகில் தனித்து வாழ்வாள். இன்னமும் பலவிதமாகக் கூறி னுள். அந்தச் சாபம் இவளை யடைந்தது.

33. மாதுவு மரண மாகி மால்மகன் வரையப் படுச்
சூதிலா இக்கு லத்தில் செனித்தனள் என்று சொல்வோம்
காதலி நாத்தி சாபம் கலந்திடு மிச்சென் மத்தில்
நீதாகுந் துணையா னுந்தான் சுதர்களும் முதலில் நட்டம்.

33. பின்பு, இவள் இறந்து, பிரமனால் படைக்கப்பட்டு, குற்றமில் லாத இக்குலத்தில் பிறந்தாள் என்று கூறுவோம். இப்பிறவியில் நாத்தியின் சாபம் இவளை யடைந்தது. ஆதலால் சகோதரர்கள் இவளுக்கில்லை. புதல் வர்களும் முதலில் தோன்றி இறந்தனர்.

34. தந்தமும் பிணியு மெய்தும் சாற்றுவோ மிவள்பின்
[சென்மம்
கந்தன்வாழ் போரூர் தன்னில் கலப்பளாஞ் சைவச் சேயாய்ச்
சந்தத முப்பான் ரெண்டில் தானவள் மரண மாவாள்
தந்தியை வளர்க்கு மெங்கள் தயாபரி கேட்டி டாயே.

34. பல் நோயும் இவளுக்கு உண்டாகும். இவள் பின் சென்மத்தைக் கூறுகின்றோம். முருகன் கோயில் கொண்டிருக்கும் திருப்போரூரில், சைவ வமிசத்தில் தோன்றுவாள். மூப்பத்திரண்டாம் வயதில் மரண மடைவாள். விநாயகரைப் பெற்று வளர்த்த பார்வதியே! கேட்பாயாக.

35. இருபது ஒன்ப தாண்டில் இவன்பிதா கண்ட மெய்தும்
வரும்சென்மம் தில்லை தன்னில் மறைக்குல முதிப்ப னுகும்
பராசரும் தடுத்துச் சொல்வர் பாலக னிச்சென் மத்தில்
சுராபுசிப் புடைய னுயுஞ் சுத்தமில் லாதா னுயும்.

35. ஜாதகன் இருபத்தொன்பதாம் வயதில் தந்தை மரணமடைவான். மறு பிறவியில் சிதம்பரத்தில், அந்தணர் குலத்தில் உதிப்பான். பராசரர் தடுத்துக் கூறுகின்றார். அவன் இப்பிறவியில் கள் குடித்தும், சுத்த மற்றவ னுகவும்;

36. இருப்பதால் மறைக்கு லத்தில் எப்படி உதிப்பான்
[சொல்லும்
முருகன்தன் பக்தி யாயும் மொழியதைக் காத்த லாலும்
சிறுமையென் றோரைக் காத்தும் சிந்தையும் நல்ல தாக
வருவதா லுதிப்ப னுகும் மங்கையே கேட்டி டாயே.

36. இருப்பதால், அந்தணர் குலத்தில், எப்படிப் பிறப்பு ஏற்படும்? முருகனிடம் பக்தி கொண்டதாலும், சொன்ன சொல்லைக் காப்பாற்றிய தாலும், எழைகளிடம் இரக்கம் கொண்டதாலும், நல்ல மனத்துடன் இருப்பதாலும் அந்தணர் குலத்தில் பிறப்பு ஏற்பட்டது. பார்வதியே! கேட்பாயாக.

37. பாலகன் மரண காலம் பகருவோம் அறுபான் ஏழில்
தேள்மதம் வளர்பக் கத்தில் திருதியைத் திதியி லேதான்
காலன்தன் நாட்டைச் சேர்வன் கழறுவோ மிவன்பின் [சென்மம்
[1]மால்மலி தன்னி லேதான் வருகுவான் சத்திரியச் சேயாய்.

37. ஜாதகனின் மரண காலத்தைச் சொல்லுவோம். அறுபத்தேழாம் வயதில், கார்த்திகை மாதம் சுக்லபக்ஷ திருதியை திதியில் மரணமடைவான். இவன் பின்சென்மத்தைக் கூறுகின்றோம். திருமாலிருஞ்சோலையில், க்ஷத்திரிய மாபில் தோன்றுவான்.

38. அன்னவன் சனன காலம் அனுடத்தின் கடைபா தத்தில்
துன்சனி திசையி ருப்புச் செப்புவோ மாண்டு ரெண்டு
மன்னவன் பிணியால் வாடும் மாதரு நலியு மெய்தும்
தந்தையின் துணைவர் சேதம் சாற்றினேம் பூர்வ பாகம்.

38. இவன் பிறப்புக் காலம் அனுஷ நக்ஷத்திரம் நாலாவது பாதம் ஆகும். சனி மகா தசையில் இருப்பு; இரண்டு வருஷம் ஆம். இக்காலத்தில் ஜாதகனுக்கு நோய்கள் பல உண்டாம். தாயின் மரணமும் ஏற்படும். தந்தையின், சகோதரர்களும் இறந்து போவர். இவ்வாறு இவனது பூர்வ பாகத்தைக் கூறினேம்.

---

1. அழகர்மலையா யிருக்கலாம்

ஜாதகம் 36

1 மதியும் கேது மீனமுற
மழைக்கோள் சியம் மால்பணிபான்
சதிராய்க் கன்னி சேய்கேடில்[1]
சனிமான் குருவும் சாடியுறப்
பதியும் நந்தி பலனெவ்வார்.
பகர்வீர் முனியே விபரமதாய்த்
துதிசெய் பிருகு தான்சொல்வார்
தோன்றும் சனனம் ஆணதுவே.

1. சந்திரன் கேது மீனத்திலும், சுக்கிரன் சிம்மத்திலும், புதன் இராகு சூரியன் கன்னியிலும், செவ்வாய் விரய ஸ்தானமாகிய மேஷத்திலும், சனி மகரத்திலும், குரு கும்பத்திலும், இலக்கினம் விருஷபமாகவும் இருக்கும் ஜாதகனுக்கு உரிய பலனைக் கூறுங்கள் என்று கேட்கப், பிருகு முனிவர் கூறுகின்றார். இது ஆண்பால் ஜாதகமாகும்.

சந்திரன் கேது	செவ்வாய்	லக்கினம்	
குரு	இராசி சக்கரம்		
சனி			சுக்கிரன்
			சூரியன் புதன் ராகு

2. அதுவே தந்தை யில்சொல்வேன்
அருணன் வாசல் தென்வடக்குப்
பதியும் இந்திர நகரொப்பாய்ப்
பாரா ளரசர் கெடியுண்டு
நதியும் வாரி கீழ்ப்பாலில்
நல்கும் சுடலை காளியுத்ரம்
துருவம் ஓடும் தென்பாலில்
தேவ ரனேகம் வாசமுமாம்.

2. தந்தையின் வீட்டைக் கூறுகின்றேன். தெற்கு வடக்கு வீதியில் கிழக்கு நோக்கிய வாயிலுடையது. இவன்தை ஊரும் இந்திரன் நகரமாகிய அமராவதியைப் போன்றது.

---

1. விரயஸ்தானம்: மேஷம்.

அங்கு காட்டையாளும் மன்னரின் கோட்டை உண்டு. வீட்டுக்குக் கிழக்குத் திசையில் ஒரு நதியும் கடலும் உள்ளன. வடக்கில் இகொடும் காளி கோவிலும் உள்ளன. தெற்குத் திசையில் துருவ சக்கரங்கள் பொருந்தியுள்ளன. பல தேவர்களும் அங்கு வாசம் செய்வர்.

3. ஆமே வடுகர்க் குலமாகும்
அப்பா லனும்மூன் றுஞ்சென்மம்
தீமையில் லாமல் தான்புகல்வோன்
செனித்த இல்லம் தென்திசையில்
வாமி யன்னை துணைவியில்லம்
வருவா னிந்தப் பாலனுமே
காமன் குடும்பச் செய்திதனைக்
கழறுவோம் தாயே இனிமேலே.

3. இவன் வடுகர் வகுப்பினன். ஜாதகன் மூன்றும் பிறப்பாவான். குற்றமில்லாத சொற்களைப் பேசுபவன். இவன் பிறந்த வீடு தெற்குத் திசையில் உள்ளது. தனது தாயின் சகோதரி வீட்டில் இவன் பிறப்பு நேரும். இவன் குடும்பத்தைப் பற்றிய செய்திகளை இனிமேல் சொல்லுவோம்! தாயே.

4. மேலே தந்தை துணைவர்களும்
விளங்கா தென்றும் தளியாவன்
சால தந்தை குணம்கேளாய்ச்
சமர்த்தாய் வார்த்தை கல்வியிலான்
ஞாலம் சேர்க்கான் ஈகையுளன்
நளின வார்த்தை அறனிச்சை
சில மிலாதான் தினம்கூலி
செய்வான் வறுமை காணுதான்.

4. இந்த ஜாதகனின் தந்தை, உடன்பிறந்தார் எவருமின்றித் தனியனாக இருப்பான். அவன் குணத்தைக் கேட்பாயாக. திறமையாகப் பேசுவான். படிப்பில்லாதவன். நிலபுலங்களைச் சேர்க்க மாட்டான். கொடைக்குணம் உடையவன். இனிய சொற்களைச் சொல்லுவான். சிவபெருமான் மீது பக்தி கொண்டவன். ஒழுக்கம் இல்லாதவன். தினந்தோறும் கூலிக்குப் பணி புரிவான். தரித்திரம் இல்லாதவன்.

5. வானோர் பக்தி கொண்டிடுவன்
அரசர் தன்பால் தானுய்வன்
மானேர் விழியா ளிட்டமுளன்
மறுத்துப் பேசான் மாமிஒன்றே
ஈன நிறவு கொள்ளாதான்
ஏவா மக்கள் என்றுரைப்போம்
ஊன மிலாத தேகியுமாம்
உறவு நிறமா மிரண்டென்றோம்.

5. தெய்வ பக்தியுள்ளவன். அரசர்களே யடித்துப் பிழைப்பான். மான்போன்ற கண்களையுடைய மனைவியிடம் விருப்புள்ளவன். அவள் சொற்களே மறுத்துப் பேசான். அவனுக்கு மாமி ஒருத்தி. தாழ்ந்தவர் நட்பைக் கொள்ளாதவன். குறிப்புணர்ந்து பிறர் எவுதற்கு முன்னமே அச்செயலைச் செய்ய முயற்சிப்பவன் என்று சொல்லுவோம். குற்றமில்லாத உடலுடையவன். செம்மை கலந்த கருநிற முள்ளவன்.

6. என்றே பூர்வம் வறுமையுண்டு
இன்பம் பின்னுல் தானெய்தும்
குன்று மனத்தான் கோள்புகலான்
குறையென் றோர்க்கு உதவிடுவன்
மன்ற லிரண்டும் மருவிடுமே
மருவும் பித்த வாய்வென்றோம்
தன்றி ஆஸ்தி அற்பமென்றோம்
சாரும் வாயு சங்காரியே.

6. இவன் முதலில் ஏழையாகவே இருப்பான். பிறகு நலம் ஏற்படும். துன்பம் வந்திடினும் கலங்காத மனமுடையவன். புறங் கூறமாட்டான். "இல்லே" என்றவர்க்கு உதவி யளிப்பான். இவனுக்கு இரண்டு மனைவியர் ஏற்படுவர். பித்த வாயு நோயினுல் துன்புறுவான். பிதுரார்ச்சிதப் பொருள் சிறிதளவே. பார்வதியே! இவனுக்கு வாயு நோய் உண்டாகும்.

7. சங்கை புகல்வீர் துணைவர்களும்
சாரா வண்ணம் காரணம்சொல்
பங்கு நவத்தில் தானிருக்கப்
[1]பற்றற் றோனும் மதிலாபம்
தங்கத் துணைவர் தோடமென்றோம்
சாரும் பூர்வ வினையாலே
பொங்கும் பின்னுல் தான்புகல்வோம்
பேதைக் கரசே பூஷணியே.

1. கேது

7. இவனுக்கு உடன்பிறந்தோர் இல்லாமைக்குரிய காரணத்தைக் கூறுங்கள்? சனி ஒன்பதாமிடத்திலும், கேதுவும் சந்திரனும் இலாப ஸ்தானமாகிய பதினோராமிடத்திலும், இருப்பதால், சகோதர தோஷம் இவனுக்கு உண்டு என்று சொன்னேம். தவிர, மூன் வீனேயும் இவனேச் சாரும். பார்வதியே! பின்பு விவரமாகக் கூறுவோம்.

வேறு

8. இங்கெறி யுடையா னுக்கு இருதாரம் இளேயா ளுக்கு
அன்னவ னுந்திப்பா ளுகு மறைகின்றே மவன்கு
[ணத்தை
உன்னதக் கல்வி மானு முயர்வான புத்தி ஏற்பன்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பான் சிவந்த மேனி.

8. இத்தகைய நெறி உடையவனுக்கு இரு மனைவியர் உளர். அவர் களில் இளேயவளிடம் இந்த ஜாதகன் தோன்றுவான். அவன் குணத்தைக் கூறுகின்றேம். சிறந்த கல்வி உடையவன். மேம்பட்ட அறிவுபெற்றவன். தான் கூறும் வார்த்தையே சிறந்தது என்று சாதிப்பான். சிவந்த நிற முள்ளவன்.

9. கல்வியும் ரெண்டு கற்பன் கனராசர் தன்னு லுய்வன்
சொல்லது மேம்பா டாகும் சுருக்கமாய் வார்த்தை யுண்டு
எல்லேகள் சேர்ப்பா ளுகு மிராசர்க்கு மிவன்சொல்
[மேன்மை
வெல்லுவான் தந்தை மேலாய் மேதினி தன்னில் வாழ்வன்.

9. இருவிதத் துறைகளில் கல்வி கற்பான். மன்னர்களே யடுத்து வாழ்வான். இவன் சொல்லுக்கு மதிப்புண்டு. சுருக்கமாகப் பேசுவான். நிலபுலங்களேச் சேர்ப்பான். மன்னர்களும் இவனது சொற்கள் சிறந்தன வென்று புகழுவர். உலகில் தன் தந்தையைவிடச் சிறப்பாக வாழ்வான்.

10. அன்னிய பாடை மேன்மை அஞ்சிடான் எதிரி கட்குப்
பின்னமில் லாத தேகி பொய்யது புகலா ளுகும்
பொன்பொருள் அதிகம் சேர்ப்பன் பொருத்தமாய்ப் பேசு
[வானும்
தன்னினத் தவர்க்கு மேலாய்த் தனிகனு யுய்வா ளுகும்.

10. பிறநாட்டு மொழிகளில் புலமை வாய்ந்தவன். விரோதிகளுக்குப் பயப்பட மாட்டான். குறைவு இல்லாத உடலுடையவன்: பொய்யுரை பேசாதவன். பொன், செல்வம் இவற்றை மிகுதியாகச் சேர்ப்பான். பொருத்தமான சொற்களேப் பேசுவான். தன் குலத்தவர்களேவிடச் செல்வச் சிறப்புடன் வாழ்வான்.

11. எப்படி யோகம் சொன்னீர் இயம்புவீர் அந்தச் சங்கை
மைப்புடன் தர்ம கர்மன் பிரியனுய் ஆட்சி யாக
ஒப்புடன் மதியும் லாபம் உயர்புகர் நாலி லாக
அப்பணி கன்னி யாக ஆரலு மாட்சி யாக ;

11. அவனுக்கு எங்ஙனம் யோகத்தைக் கூறினீர்கள் ? அதற்கான காரணத்தைக் கூறுங்கள். தர்ம கர்மாதிபனை சனி, சுபனுகத் தன்னிடத்தில் ஆட்சியாக இருப்பதாலும், சந்திரன் இலாப ஸ்தானமாகிய பதினென்றில் இருப்பதாலும், சுக்கிரன் நாலாமிடத்தில் தங்கி இருப்பதாலும், இராகு கன்னியில் உள்ளதாலும், செவ்வாய் வியஸ்தானத்தில் ஆட்சியாக இருப்பதாலும்

12. ஆகையால் வேசி யோகம் அளகேசன் யோகம் ஒன்று
பாகமாய்ச் சர்ப்ப யோகம் பகர்ந்தனன் மூன்று யோகம்
போகபோக் கியங்க ளேற்பன் புகழான குடும்பி யாவன்
மேகம்போல் தொழிலு மேற்பன் வீண்பழி யேற்கா னுகும்.

12. இவனுக்கு வேசி யோகம், அளகேசன் (குபேரன்) யோகம், சர்ப்ப யோகம் என்ற மூன்று யோகங்கள் உளவென்று கூறினேம். பலவித போகங்களை அனுபவிப்பான். புகழுடன் குடும்பம் நடத்துவான். மேகத்தைப்போல் பிறருக்கு உதவக்கூடிய தொழிலைச் செய்வான். அடாப் பழியை ஏற்கமாட்டான்.

13. திருப்பணி வேலை செய்வன் தேவதாத் தலங்கள் செல்வன்
அரசரால் தொழிலு மேற்பன் அஞ்சிடான் எதிரி கட்குத்
தரைசேர்ப்பன் சகடு முள்ளான் தன்பந்து புகழ உய்வன்
மருவிடு மிரண்டு யில்லம் மால்ரேகை உடைய னுமே.

13. கோயில் திருப்பணிகள் புரிவான். தேவதைகள் கோயில்கொண்டிருக்கும் தலங்களுக்குச செல்வான். அரசாங்கத்திலும், தொழிலாற்றுவான். பகைவர்களுக்குப் பயப்பட மாட்டான். நிலபுலன்களைச் சேர்ப்பான். வண்டி முதலிய வாகன வசதிகளுள்ளவன். தன் சுற்றத்தினர் புகழும்படி வாழ்வான். இரண்டு வீடுகளைப் பெறுவான். இவன் கையில் விஷ்ணு ரேகை உண்டு.

14. இன்னவன் துணைவர் தம்மை இயம்புமுன் பன்னி ரண்டு
அன்னவர் தீர்க்க மென்றேம் அவன்பின்னுல் துணைவன்

[தொடரும்

மூன்மாதா ஒன்று என்றீர் மொழிகுவீர் அவர்க்குப் புத்ரர்
கன்னிகை யிரண்டு தீர்க்கம் காதலி மாள்வாள் என்றேம்.

14. இவனுடைய உடன்பிறந்தவர்களைக் கூறுவோம். பன்னிரண்டு பேர்கள் ஆவர். அவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்றிருப்பர் என்று சொன்னேம். இவனுக்குப் பின்னால் சகோதர தோஷம் ஏற்படும். மூத்த தாய் ஒருத்தி இவனுக்கு உண்டு என்று கூறினீர்கள்? அவளுடைய புத்திர பாவத்தைக் கூறுங்கள்? அவளுக்கு இரண்டு புதல்வியர் நிச்சயமாக இருப்பர். அவள் மரண மடைவாள் என்று கூறினேம்.

15. முன்மாதா துணைவி தானும் மேவுவா ளிவனின் தாயார்
அன்னவள் சேதி பின்பால் அறிவிப்போம் தாயே கேளும்
இன்னவள் துணைமூன் சேதி இயம்புவோம் வறுமை
[காணுள்
பொன்னிறம் சமமாந் தேகம் புருடனும் தென்பால் நேரும்.

15. மூத்த தாயின் சகோதரியே இவனது தாயாவள். அவளைப் பற்றிய வரலாறுகளைப் பிற் பகுதியில் கூறுவோம். முதலில், அவள் மூத்த சகோதரியின் வரலாற்றைக் கூறுவோம். இவளுடன் பிறந்தவன் ஏழைமை யறியாதவள். பொன்னைப் போன்ற நிறமுள்ளவள். குறைவில்லாத உடலமைப்பைப் பெற்றவள். அவளுக்குக் கணவன் தென் திசையில் நேர்வான்.

16. திருமகள் ஒப்ப தாகும் சீலியாம் விரத சாலி
அரிபோலக் கோபம் கொஞ்சம் ஆண்மையாய்க் குடும்ப
[மேற்பள்
நறைமலர்க் கந்த மிட்டம் நல்கிடும் சுதராண் ரெண்டில்
மருவிடும் கன்னி யவ்வார் வயதுமே தீர்க்க மெய்தும்.

16. இலக்குமி போன்ற அழகுடையவள். பல விரதங்களைப் புரிவாள். சிங்கம்போல் சிறிது கோபம் கொள்வாள். ஆண்மகனைப்போல் பொறுப்பை ஏற்று நடத்துவாள். நறுமணம் பொருந்திய மலர்களில் விருப்ப முள்ளவள். இவளுக்குப் புத்திரர் இருவரும், புத்திரிகள் இருவரும் தோன்றுவர்.

17. பின்துணை சேதி சொல்வேன் பிரியமாய் வார்த்தை யுண்டு
தன்னுடல் மெலிவு நீட்சி தரணியில் வறுமை காணுள்
பொன்பணி இச்சை உண்டு புகழ்ந்தோரை யாத ரிப்பாள்
அன்னியர் மதிக்க வாழ்வள் அற்பமாய்க் கல்வி யுண்டு.

17. இவள் தங்கையின் வரலாற்றைக் கூறுகின்றேன். அன்புடன் உரையாடுவாள். இவள் உடல் மெலிந்து நீண்டு இருக்கும். வறுமை யறியாதவள், பொன் நகைகளில் அவளுக்கு விருப்பமுண்டு. தன்னைப் புகழ்ந்த

வரை யாதரிப்பாள். பிறர் மதிக்கும்படி வாழ்வாள். சிறிதே கல்வியறிவு உள்ளவள்.

18. பெருதன முடைய ளாகும் புத்திரர் ஆண்பால் மூன்று
அரிவையர் ரெண்டு தீர்க்கம் அவனியில் வறுமை காணுள்
வரனுமே தென்பால் நேரும் வயதுமே தீர்க்க மெய்தும்
குறையென்றோர்க் குதவி செய்வள் கோதையே கேட்டி
[டாயே.

18. திரண்ட செல்வ முடையவள். இவளுக்குப் புதல்வர் மூவரும், புதல்வியர் இருவரும் தோன்றுவர். வறுமை என்பதையே அறியாதவள். இவளுக்குக் கணவன் தென் திசையிலிருந்து வாய்ப்பான். நீண்ட வயது உடையவள். இல்லை என்பவர்க்கு உதவி செய்வாள். பார்வதியே! கேட்பாயாக.

19. இன்னமும் விபர மாக இயம்புவோம் பின்பால் சேதி
மன்னவன் மணத்தின் கால மறைகின்றோம் பத்தொன்
[பாண்டுள்
கன்னிகை தென்பால் நேரும் கழறுவோம் அவள்கு
[ணத்தைப்
பின்னமில் லாத தேகி பொய்யது புகலா ளாகும்.

19. இன்னும் விரிவாகப் பிற்பகுதியில் கூறுகின்றோம். இந்த ஜாதகன் திருமணம் நடக்கும் காலத்தைக் கூறுவோம். இவனுடைய பத்தொன்பதாம் வயதில், தென் திசையைச் சேர்ந்த பெண்ணை இவன் மணப்பான். அவள் குணத்தைச் சொல்லுவோம். நல்ல உடலமைப்பைப் பெற்றவள். பொய்யுரை பேச மாட்டாள்.

20. புண்ணிய மனத்த ளாகும் புருடனுக் கினிய ளாகும்
கண்ணிய குடும்ப மேற்பள் கேவல மணுகாச் சித்தம்
தன்மையாங் குணத்தா ளாகும் சாதமு மன்பா யீவள்
அன்னவள் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

20. தூய மனமுடையவள். புருடன் விரும்பும்படி நடப்பாள். மேன்மையுடன் குடும்பம் நடத்துவாள். கீழான எண்ணங்களுக்கு இடமில்லா மனத்தினள். இத்தகைய தன்மைகள் வாய்ந்தவள். அன்புடன் விருந்தினருக்கு விருந்தளிப்பாள். அப்படிப்பட்டவர்களால், பூசிக்கப்படும் பார்வதியே! நீ கேட்பாயாக.

21. பால்பாக்கிய முடைய ளாகும் பகையென்று மனத்தில் [வையாள்
ஆலம்போல் கோப முண்டு அடாவடி கூரு ளாகும்
சீலியாம் விரத சாலி செனஉப காரி யாகும்
மால்மனை ஒப்ப தாகும் வயதுமே தீர்க்க மெய்தும்.

21. இவள் பால் பசு பாக்கியத்தைப் பெற்றிருப்பாள். விரோதத்தை மனத்தில் நினையாதவள். பாம்புபோல் கோப மடைவாள். அடாவடிப் பேச்சுக்கள் பேசாள். ஒழுக்க முடையவள். நோன்புகள் பல நோற்பாள். உலக மக்களுக்கு உபகாரம் செய்வாள்; இலக்குமியைப் போன்றவள். நீண்ட வயதையும் பெற்றிருப்பாள்.

22. புத்திர விருத்தி தம்மைப் புகலுவோம் பலமு ருது
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகும் என்று சொல்வோம்
குற்றத்தைச் சொல்லு மென்னக் குழவியின் தானம் [தன்னில்
வித்தகன் பானு ராகு மேவின பதத்தி னலே.

22. ஜாதகனது புத்திர பாவத்தைக் கூறுவோம். இவனுடைய புத்திரபாவம் பலமுள்ளதாக இராது. புத்திர சந்தானம் ஏற்பட்டாலும் நிலைத்திராது என்போம். ஏன் அவ்வாறு கூறினீர்கள்? என்று பார்வதி கேட்க, புத்திர ஸ்தானமாகிய ஐந்தாமிடத்தில் சூரியனும், இராகுவும் தங்கியுள்ள காரணத்தால்;

23. சுதர்தோஷ மென்று சொல்வோம் சேயன்முன் சென்மந் [தன்னில்
அதனமாய் வினைகள் செய்தான் அணுகிற்று அந்தத் [தோடம்
இவன்செய்த வினைக ளென்ன அறிவிப்பீர் முனிவ ரேநீர்
பதிதனில் உயர்வ தான பரங்குன்ற மதனில் வந்து;

23. ஜாதகனுக்கு நாம் புத்திர தோஷத்தைக் கூறினோம். தவிர, முன் சென்மத்தில் தீமான கருமங்கள் புரிந்துள்ளான். அந்தத் தோஷங் களும் இவனை யடைந்தன. ஜாதகன் செய்த தீவினைகள் என்ன? கூறுங் கள். நதி பாய்வதால் சிறப்புப்பெற்ற அழகிய திருப்பரங்குன்றம் என்னும் நகரில்;

24. பிறந்தனன் ரெட்டி வர்க்கம் பேதைய ருடைய ஞகித்
தரணிக ளதிகம் பெற்றுத் தனமது பெருக்க மாகி
வருங்நாளில் வினையைச் சொல்வோம் வாசுகி யில்லம்
[வாசம்
திருகாக மகுடம் கொண்டு இயங்கிற்று முற்றந் தன்னில்;

24. ரெட்டியார் மரபில் இவன் பிறந்தான். மனைவி மக்களைப்பெற்று நிலபுலன்களையும் அடைந்து, செல்வவந்தனாக வாழ்ந்து வரும் நாளில் சேர்ந்த தீவினையைச் சொல்லுவோம். இவன் வீட்டின் முற்றத்தில் பாம்பு ஒன்று அழகாகப் படமெடுத்து ஆடிற்று.

25. அரங்கமே செய்தும் போகா தடித்தனன் கழியி ஞலே
மறலியின் பதிக்குச் செல்ல மருவிற்று அந்தத் தோடம்
அரிவையைப் போகம் துய்த்து அணுகிற்றுக் கருவு தானும்
திருகுகள் பண்டி தத்தால் செய்தனன் அதுவோர் தோடம்.

25. அப் பாம்பு சத்தியம் செய்த போதும் கூட, அதைப் போக விடாது கம்பினு லடித்தான். அந்தப் பாம்பும் இறந்தது. அதனுல் இவனைச் சர்ப்ப தோஷம் வந்தடைந்தது. ஒரு பெண்ணைச் சேர்ந்ததால் அவள் கருவுற்ருள். இவன் மருத்துவ முறையால் கருவை அழித்தான். கருவழித்த தோஷமும் வந்தது.

26. மைந்தனுக் கந்தி யத்தில் மைந்தர்கள் தோட மாயும்
தென்திசைத் தலங்கள் சென்று சென்றனன் கால நாடு
முந்திஞேன் வரையப் பட்டு முதிப்பனும் இந்தப் பாலன்
[1]தந்தியை வளர்த்த யெங்கள் தயாபரி கேட்டி டாயே.

26. இவனுக்குப் பின்னுளில், இந்தப் புத்திர தோஷம் ஏற்பட்டது. தென்னுட்டுத் தலங்களுக்குச் சென்று, பிறகு இவன் இறந்து போனன். பிரமனுல் படைக்கப்பட்டு மீண்டும் பிறப்பான் இவன். விநாயகரைப் பெற்று வளர்த்த எங்கள் பார்வதியே! கேளுங்கள்.

27. ஆகையா லிச்சென் மத்தி லணுகிடும் நாக சாபம்
பாகமாய்க் கருவு ழித்த பாபமும் சேர்ந்த தாலே
தோகையே சுதர்கள் தோட்டம் தொலைந்திடக் கிரிகை
[சொல்வீர்
நாகத்தைக் கொன்ற தோடம் நலிந்திடக் கிரிகை
[சொல்வோம்.

---

1. விநாயகர்

27. இப்பிறவியில் இவனைச் சர்ப்ப தோஷமும், கருவழித்த தோஷமும் சாரும். அதனாலேயே புத்திர தோஷத்தைக் கூறினேனும். அந்தத் தோஷங்கள் நீங்க, ஒரு சாந்தி கூறுங்கள். நாகத்தைக் கொன்ற தோஷம் நீங்க ஒரு சாந்தியைக் கூறுகின்றேம்.

28. மைந்தனு மைந்து திங்கள் வள்ளுரு தனக்குச் சென்று
தந்தியை யாத ரித்த தாமரைக் கண்ண னுக்குப்
பைந்துழா யாலர்ச் சித்துப் பகவானைப் போற்றி செய்து
ஐந்தாவ திங்கள் தன்னில் அரவம்போல் ரசிதத் தாலே :

28. ஜாதகன், ஐந்து மாதங்கள் திருவள்ளூருக்குச் சென்று, கஜேந்திரனுக்கு அடைக்கலம் தந்து காப்பாறிய செந்தாமரைக் கண்ணனுக் திருமாலை, பசுமையான திருத்துழாய்' கொண்டு அருச்சித்து, அவனைப் போற்றி, வணங்கி, ஐந்தாவது மாதத்தில் வெள்ளியால் நாகத்தின் உரு ஒன்று,

29. செய்துமே மறையோ ருக்குத் தானமு மீந்து பின்பு
மைவிழி மாதுந் தானும் மாதமோ ரேகா தசியில்
துய்யவே விரதம் கொள்ளத் தொலைந்திடும் நாக சாபம்
தையல்தன் கருவின் தோடம் சாற்றுவோம் கிரியை ஒன்று.

29. செய்து, அந்தணர்களுக்குத் தானமாகக் கொடுத்து, இவனும் மனைவியும் ஒவ்வொரு மாதமும் ஏகாதசி விரதமும் இருந்தால், இவனை வந்தடைந்த நாக தோஷம் நீங்கும். கருவழித்த தோஷத்துக்குச் சாந்தி யொன்று கூறுகின்றேம்.

30. வருமார்க்கம் சுமைதாங்கி ஒன்று வைத்திட அதுவும் நீங்கிப்
பெருஞ்சுத ராண்பா லொன்று பேதையு மிரண்டு தீர்க்கம்
குறையென்று செய்யா னுகில் குழவிகள் தோட மெய்தும்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

30. நடைவழியில் சுமை தாங்கி ஒன்று வைத்தால், அந்தத் தோஷமும் நீங்கிவிடும். பிறகு இவனுக்கு ஆண் மகன் ஒருவனும், பெண்கள் இருவரும் தோன்றித் தீர்க்கமாவர். கூறப்பட்ட சாந்திகளைச் செய்யாவிடின் புத்திர தோஷம் ஏற்படும். விநாயகனைப் பெற்று வளர்த்த புண்ணிய வதியே! கேட்பாயாக.

31. அன்னையின் குணத்தைச் சொல்வோம் அன்புள மனத்த
[ளாகும்
சொன்னசொல் சுகமே யாகும் துருவழக் கதனில் செல்லாள்
அன்னமு மன்பா யீவள் ஆளன்தன் மனத்துக் கேற்றோள்
தன்னுட லிருநி றத்தாள் சற்பாத்திரி யோக சாலி.

31. இவன் தாயின் குணத்தைக் கூறுவோம். அவள் அன்பு கனிந்த மனமுடையவள். கூறும் சொற்கள் நன்மை பயப்பனவாக விருக்கும். அடா வழக்குகளில் தலையிட்டுக் கொள்ள மாட்டாள். பலருக்குப் பரி வுடன் விருந்தளிப்பாள். கணவன் மனத்திற்கேற்ப நடப்பாள். கருமை கலந்த நிவப்புநிற முடையவள். சற்பாத்திரி யோகம் உடையவள்.

32. தன்துணை யாண்பால் ஒன்று சத்திமார் மூவ ராகும்
இன்னவள் சென்ன மான இல்லமும் தென்மே லாகும்
சொன்னவாண் தம்மைச் சொல்வேன் சுகமுள வார்த்தை
[கூர்வன்
உன்னத இல்லம் செய்வன் உறுதிவான் சுகை கொஞ்சம்.

32. அவளுடன் பிறந்தவர்களில் ஆண் மகன் ஒருவனும், பெண்கள் மூவரு மாவர். இவள் பிறந்த ஊரும் வீடும் தென் மேற்குத் திசையில் உள்ளன. இவளது சகோதரனைப் பற்றிச் சொல்லுகின்றேன். இனிமையான வார்த்தைகளைக் கூறுவான். பெரிய வீடுகளை கட்டுவான். மன உறுதி படைத்தவன். சிறிது, தான தருமங்கள் செய்வான்.

33. தனத்தின்மேல் இச்சை உண்டு தரணிகள் அதிகம்
[சேர்ப்பன்
இனம்மெச்ச வாழ்வா னுகும் இருவிதக் குணமும் உண்டு
வனிதைய ரிரண்டும் நேரும் மைந்தர்கள் ஆண்பால் ஒன்று
கனமுள பெண்பால் ஒன்று கழறுவோம் தீர்க்க மாக.

33. பொருளில் விருப்ப முடையவன். நிலபுலன்கள் மிகுதியாகச் சேர்ப்பான். சுற்றத்தினர் புகழும்படி வாழ்வான். இரண்டுவிதக் குணங்க ளைப் பெற்றிருப்பான். இவனுக்கு இரண்டு மனைவியர் ஏற்படுவர். புதல் வன் ஒருவனும், பெண் ஒருத்தியும் தோன்றுவர். அவர்கள் தீர்க்கமாக விளங்குவர் என்று சொல்லுவோம்.

34. எந்தமா துக்குப் புத்ரர் இயம்புவீர் முனியே நீர்தாம்
முந்திய மாதுக் கேதான் மேவிடும் சுதராண் ஒன்று
இந்தவன் செனித்த பின்பு யமபுரம் புனலால் மாள்வள்
பிந்தியும் வேறு மாது புக்கிடும் சுதர்கள் விருத்தி.

34. முனிவரே! இவனது இரு மனைவியர்களில் எவருக்குப் புத்திரர் தோன்றுவர் என்று கூறுங்கள். மூத்தவளுக்கே ஆண் மகன் ஒருவன் தோன்றுவான். அவன் பிறந்த பிறகு, அவள் தண்ணீரில் மூழ்கி இறப்பாள். பின்பு, வேறு ஒருத்தியை மணப்பான். புத்திர விருத்தி உண்டாகும்.

35. வயதுமே தீர்க்க மெய்து மறிவிப்பீர் காலந் தன்னை
நயமுடன் இருபான் மூன்றில் நன்மாமன் கண்ட மெய்தும்
தயவிலா மனத்த னுகும் சந்தேக மனமும் கொஞ்சம்
பயமிலான் எதிரிக் களஞ்சான் பல்ருமே மெச்ச வாழ்வன்.

35. இவன் நீண்ட ஆயுளைப் பெற்றிருப்பான். இவனது மாமனுக்கு மரண காலம் எப்பொழுது என்று கூறுங்கள். ஜாதகனது இருபத்து மூன்றும் வயதில் மாமனுக்கு மரணம் ஏற்படும். இந்த ஜாதகன், கருணையில்லாத மனமுடையவன். சந்தேகப்படும் தன்மையினன். பகைவர்களைக் கண்டு பயப்பட மாட்டான். பலரும் புகழும்படி வாழ்வான்.

36. மாதுல னுதவி யாலே மாரனும் வாழ்வா னுகும்
ஓதுவேன் பின்பால் சேதி உரைக்கின்றேன் மன்னை பூர்வம்
நீதுகள் விலக்கு கின்ற திருக்கடை யூரி லேதான்
சூதிலாக் கங்கை சேயாய்ச் செனித்துமே வறுமை யின்றி;

36. ஜாதகன் மாமன் உதவியாலே வாழ்க்கையை நடத்துவான். இவனைப் பற்றிய வரலாற்றின் விரிவைப் பிற்பாகத்தில் கூறுகின்றேம். இவன் தாயின் முற்பிறவியைக் கூறுகின்றேம். பாவங்களைப் போக்குகின்ற திருக்கடையூர் என்னும் தலத்தில், குற்றமற்ற செல்வச் சிறப்பு வாய்ந்துள்ள வேளாளர் குலத்திலே பிறந்து, ஏழைமை இல்லாமல்;

37. அறமதி லிச்சை யுண்டாய் அந்தகன் நகரைச் சேர்ந்து
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று சொல்வோம்
வறுமையெப் போதும் காணுள் வருஞ்சென்மம் காளாத்தி
[தன்னில்
உறைகுவாள் சைவச் சேயாய் உயர்வான குடும்பம் தன்னில்;

37. தருமத்தில் விருப்ப முள்ளவள். சிறிது நாளில் மரணமடைந்து, பிரமனுல் மீண்டும் படைக்கப் பட்டுப் பிறந்தவள் இவள் என்று சொல்லுவோம். இவள் மறு பிறப்பில், காளஹஸ்தியில் சைவ மரபினளாக உயர்ந்த குடும்பத்தில், தோன்றுவாள்.

38. தந்தையின் பூர்வம் சொல்வேன் சம்புகேச் வரத்தி லேதான்
நிந்தைசெய் முத்திரிய சேயாய் நேர்ந்துமே கிருஷி செய்து
அந்தவன் வாழும் நாளில் அணுகின வினையைக் கேண்மோ
விந்தையாய்க் கல்வி சொன்ன வாத்தியின் மகள்மேல்
[மோகம்;

38. இவன் தந்தையின் முற்பிறவியைப் பற்றிக் கூறுகின்றேம். திருவானைக்காவில், வன்னியர் குலத்தில் தோன்றி, பயிர்த்தொழில் செய்து

வாழ்ந்து வரும் காளில், நேர்ந்த தீவினையைக் கேளுங்கள். இவனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் மகள் மீது, இவன் மோகம் கொண்டான்.

39. காதலாய் வார்த்தை சொல்லக் கன்னிகை மறுத்துச்
[சொல்வள்
பாதக முனக்குண் டாகும் பலகலே சொன்னேனென் புத்ரி
மேதினில் தங்கை வேண்டாம் விரும்பாதே அந்தச் சங்கை
போதனே செவிக்கே ரூமல் பலாத்கார மாகச் சேர்ந்தான்.

39: அவளிடம் காதல் உரை வழங்கவும், அந்தப் பெண் இவனைத் தடுத்துக் கூறுகின்றாள். "உனக்குத் தீமைகள் உண்டாகும். பல கலைகளைக் கற்பித்த ஆசிரியரின் பெண் தான். உனக்குத் தங்கை முறையாக வேண்டும். இவ் வெண்ணம் வேண்டாம். என்னை விரும்பாதே". இந்த போதனைகளைக் கேளாது அவளுடன் பலாத்காரமாகச் சேர்ந்தான்.

40. சங்கையை பிதாவ றிந்து சாற்றுவான் சாபந் தானும்
மங்கிடு மனைவி மைந்தர் வறுமைக ளாக வாழ்வாய்
தங்கும்பின் சென்மந் தன்னில் தாரமு மிரண்டு மாயும்
துங்கமாம் வித்தை யின்றித் துணைவரும் இல்லா தாயும் ;

40. இதை, அப்பெண்ணின் தந்தை யறிந்து, சினந்து பின்வருமாறு சாபமிடுவான். நீ உன் மனைவி மக்களின்றி, தரித்திரனாகி வாழ்வாய்: மறு பிறப்பில் இரு மனைவியரை யடைவாய். சிறந்த கல்வி யற்றவனாகவும், உடன்பிறந்தோரில்லாதவனாகவும், இருப்பாய் என்றும் ;

41. இன்னமும் விசேடம் சொன்னார் எய்திற்று அந்தச் சாபம்
கன்னியும் சுருக்கில் மாண்டாள் கலந்தது அதுவே
[யென்றேரும்
மன்னனு மந்தி யத்தில் வளமிலாக் குடும்பி யாகித்
துன்மையாய்க் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம் ;

41. மற்றும் பலவும் கூறினர். அந்தச் சாபம் இவனை யடைந்தது. மனைவியும் விரைவிலேயே மாண்டு போனாள். சாபமும் பலித்தது என்று சொன்னேம். ஜாதகனும் தனது கடைசி நாட்களில் செல்வமற்ற குடும்பியாகி, பல துன்பங்களை யடைந்து, முடிவில் இறந்தான். பிறகு பிரமனால் படைக்கப்பட்டு ;

42. வந்தவ னென்று சொல்வோம் வாத்தியின் சாபத் தாலே
தன்துணை காணு தாகும் தாரமு மிரண்டே யாகும்
உன்னதக் கலைகள் காணுன் உரைக்கின்றேரும் இவன்பின்
[சென்மம்
கன்னமா புரத்தி லேதான் கலப்பனுஞ் சைவச் சேயாய்.

42. இப் பிறப்பில் பிறந்தவன் என்று கூறுவோம். ஆசிரியர் சாபத்தால் உடன்பிறப் பற்றவனானன். மனைவியர் இருவர் ஏற்பட்டனர். சிறந்த கல்வியையும் பெற்றிலன். இவன் மறுபிறப்பைக் கூறுகின்றோம். கன்னமா புரத்தில், சைவ குலத்தவனாகத் தோன்றுவான்.

43. இருபது ஆண்டு தன்னில் எய்திடும் தந்தை கண்டம்
[1]அருணன் தூ துவனின் சக்ரம் [2]அலரியின் புக்தி யாகும்
மறலியைக் காணு ஞகும் மதிபுக்தி காலந் தன்னில்
உறைகுவான் கால நாடு உத்தமி கேட்டி டாயே.

43. இவனுடைய இருபதாம் வயதில், தந்தைக்குக் கண்டம் ஒன்று ஏற்படும். அப்பொழுது புத மகா தசையில் சூரிய புக்தி யாகும். ஆனால் மரண மேற்படாது. புத மகா தசை சந்திர புக்தியில் தந்தை இறந்து போவான். பார்வதியே! கேட்பாயாக.

44. ஆறைந்து இரண்டு ஆண்டில் அன்னைக்குக் கண்ட மெய்தும்
தீரமாய் ஆரும் ஆண்டில் செல்லுவாள் தந்தை அன்னை
பாரினில் ஏழாம் ஆண்டில் பிறப்பளாம் அன்னை தானும்.
மாறிடா திந்த வார்ததை மங்கையே கேட்டி டாயே.

44. ஜாதகனுடைய முப்பத்திரண்டாம் வயதில் தாய்க்கு மரணம் ஏற்படும். ஜாதகனது, ஆறுவது வயதில் தந்தை யன்னை (பாட்டி) இறப்பாள். இவனது, ஏழாவது வயதில் அவள் மறுபடியும் பிறப்பாள். சொன்ன வார்த்தை தவறாது. பார்வதியே! கேட்பாயாக.

45. பாலகன் மரண காலம் பகருவோம் அறுபான் நாலில்
சேல்மாதம் வளர்பக் கத்தில் குலவிய தசமி தன்னில்
காலன்தன் மனைக்குச் செல்வன் கழறுவோம் இவன்பின்
[சென்மம்
சீலமாங் காஞ்சி தன்னில் செனிப்பனும் பிரம்ம சேயாய்.

45. ஜாதகன் மரண காலத்தைக் கூறுவோம். அறுபத்து நான்காம் வயதில், ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் தசமி திதியில் இவன் இறந்து போவான். இவன் மறு பிறப்பைச் சொல்லுவோம். நல்லொழுக்க முள்ளோர் நிறைந்த காஞ்சீபுரத்தில் பிராமண குலத்தில் தோன்றுவான்.

---

1. புத மகா தசை

2. சூரியன்.

46. இதுமத்தில் சாத கர்க்கு எய்தாதோ மார கங்கள்
நதிபுகர் நாலில் தங்க நற்குரு தசம மேற
எதுவிதப் பிணிகள் வந்தும் இரவிமுன் பனிபோல் நீங்கும்
அதிபனும் வயது தீர்க்கம் மங்கையே கேட்டி டாயே.

46. இதற்கு இடையே ஜாதகனுக்கு மரணத்தை யுண்டாக்கும் கண்டங்கள் எற்படாவோ? சுக்கிரன் நான்கா மிடத்திலும், சுபனான குரு பத்திலும் இருப்பதால், எத்தகைய நோய்கள் வந்தாலும் சூரியன் முன் பனி போல நீங்கி விடும். ஜாதகனுக்கு நீண்ட ஆயுள் உண்டு. பார்வதியே! கேட்பாயாக.

47. அத்திரி புகலு கின்றார் அறைந்திட்டீர் ராச யோகம்
சுத்தமாய்க் காலம் சொல்வீர் சுதனுக்கு இருபான் ரெண்டில்
வித்தகன் ராச யோகம் மேவிடும் பிறைபோ லோங்கும்
சத்தியே அன்பா னுண்டும் சாற்றுவோம் ராச யோகம்.

47. அத்திரி கேட்கின்றார்: ஜாதகனுக்கு இராசயோகம் உண்டாகும் என்று கூறினீர்கள். அஃது எப்போது உண்டாகும் என்பதைக் கூறுங்கள். இவன் இருபத்திரண்டாம் வயதில் இராச யோகம் உண்டாகி, வளர் பிறைச் சந்திரன் போல் உயரும். ஐம்பதாம் வயது வரை இராச யோகம் நீடிக்கும் என்று சொல்லுவோம்.

48. அதன்விவ ரங்கள் யாவும் அறைகின்றோம் பின்பா கத்தில்
அதிபனும் சென்ன காலம் மந்தனின் திசையி ருப்புச்
சதியிலாப் பதின்மூன் றுண்டும் திங்களும் மூன்றே யாகும்
இதுபூர்வ பாகம் சொன்னோம் ஈசுவரி கேட்டி டாயே.

48. அதைப் பற்றிய விவரங்களைப் பிற்பாகத்தில் கூறுகின்றோம். ஜாதகனது பிறப்புக் காலத்தில் சனி மகா தசையில் இருப்பு; வருஷம் பதிமூன்று; மாதங்கள் மூன்றுமாம். இது பூர்வபாக மென்று கூறினோம், பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 37

1. நந்தியும் சென்ன மாக நற்சனி யதிலே தங்க
மந்திரி நாலி லாக மலைப்பாம்பு அஞ்சி லாகச்
சந்திரன் நவத்தி லேறச் சிகிலாபம் புகர்பான் சேயும்
புந்தியும் மீரு ருகப் புகலுவீர் பலனைத் தானே.

1. விருஷபம் இலக்கினமாகவும், சனி லக்கினத்திலும், குரு நாலி லும், இராகு ஐந்திலும், சந்திரன் ஒன்பதிலும், கேது பதிஞென்றிலும், சுக்கிரன், சூரியன், புதன், செவ்வாய், பன்னிரண்டா மிடமாகிய மேஷத்திலும் தங்கி இருந்தால், ஏற்ப டும் பலன்களைக் கூறுங் கள்;

கேது	சுக்கிரன் சூரியன் செவ்வாய் புதன்	லக்கினம் சனி	
	இராசி சக்கரம்		
சந்திரன்			குரு
			ராகு

2. பார்வதி கேட்கும் போது பராசரும் புகலு கின்றூர்
சீர்புகழ் ஆண்பால் சென்மம் செப்புவோ மில்லந் தானும்
பார்புனை மேல்பால் நோக்கம் [1]தலையற்றோள் கோட்ட
[மும்தரம்
நீரணி கடவுள் தென்பால் நசித்திடும் அருகில் காளி.

2. என்று பார்வதி கேட்கும்போது பராசரர் கூறுகின்றூர். சீரும் புகழும் பெற்ற ஆணை இவன் உதிப்பான் என்று சொல்லுவோம். இவன் வீடும் மேற்குத் திசையை நோக்கியது. வடதிசையில் மாரியம்மன் கோவி லுண்டு. தெற்குத் திசையில் கங்கையையணிந்த சிவபெருமான் கோவிலும், வீட்டின் அருகில் பாழான காளி கோவிலு முள்ளன.

3. இத்தகை யடையா ளத்துள் இலகிய சிறுவூர் தன்னில்
மூத்திரி குலமு திப்பான் விளம்புவோங் குடும்பச் சேதி
பெற்றதா யன்னை யோகம் பேதையர் புத்திர யோகம்
சுத்தமாய் முன்பின் சென்மம் செப்புவோ மிந்நூல் தன்னில்.

1. தலையறுபட்டவள்: மாரியம்மை.

3. இப்படிப்பட்ட அடையாளங்களுடைய சிறிய கிராமத்தில், உயர்ந்த தொரு குலத்தின்கண், இந்த ஜாதகன் தோன்றுவான். இவன் குடும்ப வரலாற்றை உரைப்போம். இவனைப் பெற்ற தாய் தந்தையர், இவனது மனைவி, புத்திரர்கள் ஆகியோர் யோகங்கள், அவர்கள் மூற் பிறப்பு மறு பிறப்புக்கள் முதலிய வனைத்தையும் இந்நூலில் நன்கு கூறுவோம்,

4. தந்தையின் குணத்தைச் சொல்லுவாம் தரணியை விருத்தி [செய்வன்
தந்தமும் தரள மொக்கும் சாதமுங் குறைவி ராதாம்
தன்பந்துக் கிணக்கம் சொல்லான் தனமது செலவு செய்வன்
தந்திர மொழியு மூண்டு சாராட்கள் சேர்ப்பா னுகும்.

4. தந்தையின் குணத்தைக் கூறுவோம். நிலபுலன்களை விருத்தி செய்வான், அவனது பற்கள் முத்துக்களைப் போன்றிருக்கும். போஜன சௌக்கிய முள்ளவன். தன் சுற்றத்தார்களுடன் இணங்கி இருக்க மாட்டான். பொருளை நன்கு செலவழிப்பான். தந்திரமாக உரையாடுவான். வேலைக்காரர்களையும் பெற்றிருப்பான்.

5. மால்பூசை செய்வா னுகும் மாற்றுனை உறவு கொள்வன்
சீலவான் பொறுமை சாலி சனசகா யங்கள் செய்வன்
பால்தயிர் பிரிய னுகும் பெருகிடும் பித்த சூடு
சாலவே துணையாண் ரெண்டு சாற்றுவோம் தீர்க்க மாக.

5. திருமாலுக்குப் பூசை புரிவான். விரோதியரை நேசம் கொள்வான். ஒழுக்க முடையவன். பொறுமை யுள்ளவன். ஜனங்களுக்கு உதவி செய்வான். பால் தயிர் இவைகளில் விருப்பமுடையவன். பித்த சூட்டு நோயினால் துன்புறுவான். இவனுடன் பிறந்த இரண்டு ஆண்கள் தீர்க்கமாவர் என்று கூறுவோம்.

6. பாலகன் குணத்தைச் சொல்வேன் பற்களும் தேய்வு மூண்டு
சீலவான் சிவந்த மேனி சனஉப காரி யாவன்
ஞாலத்தை விருத்தி செய்வன் நளினமாய் வார்த்தை கூர்வன்
மால்பூசை செய்வா னுகும் மாடுகள் விருத்தி யுண்டு.

6. ஜாதகன் குணத்தைக் கூறுகின்றேன். பற்களில் தேய்வுள்ளவன். நல்லொழுக்க முடையவன். சிவப்பு நிறமுள்ளவன். ஜனங்களுக்கு உதவி செய்வான். நிலபுலன்களைப் பெருக்குவான். இனிமையாக உரையாடுவான். திருமாலுக்குப் பூசை புரிவான். கால்நடைகள் விருத்தியுள்ளவன்.

7. தந்தையால் சுகமில் லாதான் தந்தையின் முன்னே ராலே
இந்தவன் உய்வா னுகும் சகைவான் இரண்டு கல்வி
வந்தவர்க் கன்ன மீவன் மர்மமில் லாதா னுகும்
பந்தினர்க் கிணக்கம் சொல்லான் பாக்கியம் பின்னுல்
[சேர்ப்பன்.

7. தன் தந்தையால் சுகத்தைப் பெறுதவன். தந்தைக்கு மூத்தவ ரால் இவன் காப்பாற்றப் படுவான். கொடை வழங்குவான். இரு தாரைக் கல்வி பயிலுவான். வீடு தேடி வந்தவர்களுக்கு உணவளிப்பான். இர கியமற்றவன். சுற்றத்தார்களுடன் இணங்கி இருக்க மாட்டான். பிற் காலத்தில் செல்வங்களைச் சேர்ப்பான்.

8. பிதாதுணை முன்னேன் ஆஸ்தி பொருந்திடும் கர்மம்
[செய்வன்
நிதியது பின்னுல் சேர்ப்பன் நிமலிமார் மோக னுவன்
பதியது சித்திரம் செய்வன் பர்வத ரேகை யுண்டு
துதிசெய்தோர்க் குதவு வானும் சோம்பலுங் கொஞ்ச
[முண்டு.

8. இவனுக்குப் பெரிய தந்தையின் ஆஸ்தி சேரும். அவருக்கு இவனே ஈமக்கடன் செய்வான். செல்வத்தைப் பிற்காலத்தில் பெருக்கு வான். பெண்களால் மோகமுள்ளவன். வீட்டைச் சித்திரங்களால் அழகு படுத்துவான். கையில் பர்வத ரேகை பெற்றிருப்பான். தன்னைப் புகழ்ந்த வர்களுக்கு உதவி செய்வான். சிறிது சோம்பலும் உடையவன்.

9. தன்துணை முன்ஆண் ரெண்டு சத்தியும் ஒன்றே தீர்க்கம்
கன்னியின் சேதி சொல்வேன் கண்முகம் வசிய முண்டு
அன்னமும் அன்பா யீவள் யாவர்க்கும நல்லோ ளாவள்
தன்வரன் தென்பால் நேரும் சடுதியில் நாட்ட மாகும்.

9. இவனுக்கு முன்பு இரண்டு ஆண்களும், பின்பு ஒரு சகோதரியும் தோன்றித் தீர்க்கமாவர். சகோதரியின் வரலாற்றை யுரைக்கின்றேரும். அழகிய கண்களும் முகமும் கவர்ச்சிகரமாக விருக்கும். பலருக்கும் உணவு அளிப்பாள். நல்லவள் என்று புகழப்படுவாள். இவளுக்குக் கணவன் தெற்குத் திசையிலிருந்து வாய்ப்பான். விரைவிலேயே அவன் இறந்து போவான்.

10. சுகமின்றி விதவை யாவள் செப்புவீர் அந்தச் சங்கை
பகைபூர்வ வினையி னுலே பாவைக்குச் சுகமில் லாதாம்
வகையதைச் சொல்லு மென்ன மாதுமுன் சென்மம்
[சொல்வேன்
மிகுதவம் புரியு கின்ற வீரிஞ்சிமா நகரி லேதான்;

10. கணவன் சுகமின்றி விதவையாவாள். அதற்குக் காரணத்தைக் கூறுங்கள். மூன்றிய தீவினையாலே, இப்பிறப்பில் இவளுக்குக் கணவனால் சுகம் இல்லை. அத் தீவினை யாது? இவளது முற்பிறவியைக் கூறுகின்றோம். நல்வினை யியற்றுஞ் சான்றோர்கள் வாழும் விரிஞ்சிமா நகரில்;

11. பிறந்தனள் சைவச் சேயாய்ப் பூவையும் வாழும் நாளில்
திருவிழாக் காலம் தன்னில் தேவன்தன் பாதம் போற்றி
ஒருமஞ்சள் சிவப்புச் சீப்பு ஒண்டொடி வாங்கிக் கொண்டு
பொருளீயாச் சென்று ளென்றோம் புகலுவான் வணிகன்
[சாபம்.

11. சைவ குடும்பத்தில் பிறந்து வாழும் நாளில், அவ்வூர்த் திருவிழா தொடக்கமாயிற்று. அப்பொழுது கோயிலுக்குச் சென்ற இவள், கடவுளை வணங்கி, மீளுகையில், ஒரு கடைக்குச் சென்று, மஞ்சள் குங்குமம் சீப்பு இவற்றை வாங்கிக் கொண்டு, பணம் கொடுக்காது சென்றுவிட்டாள் என்றோம். கடைக்காரன் பின்வருமாறு சாபமிட்டான்.

12. தனமது ரியாப் பாவி தானுமே யிச்சென் மத்தில்
இவளது ஆகா முன்னம் ஏகுவான் வரனு மேதான்
வனிதைபின் சென்மந் தன்னில் மணமுண்டாய்ச் சுகமு
[மின்றி
இனமதிப் பில்லா வாழ்வள் என்றுமே தெருத்தூள்
[விட்டான்.

12. விலைப் பணம் கொடுக்காது சென்ற பாவிக்கு, இந்தப் பொருள்கள் உபயோகப்படு முன்பே கணவன் இறந்து போவான். மறு பிறப்பில் இவளுக்கு மணவினை நடந்தேறினும், சுக மில்லாது, இனத்தவரால் மதிக்கப் படாமல் வாழ்வாள் என்று கூறித் தெரு மண்ணை வாரி யிறைத்தான்.

13. அந்ததோர் சாபந் தானும் அணுகிற்று அச்சென் மத்தில்
அவ்வாண்டில் வரனும் மாண்டு அவள்மன சஞ்ச லத்தால்
தென்திசை சேது சென்று தேறினோர்க் கன்ன மீந்து
அந்தகன் நகரம் சென்று அயனுலே வரையப் பட்டு;

13. அந்தச் சாபம் அப் பிறவியில் வந்தடைந்தது. அப் பிறவியில் அவள் கணவன் இறந்து போய், அதே மனக் கவலையுடன் இருந்து, தெற்குத் திசையில் உள்ள சேது சென்று, பெரியோர்களுக்கு உணவளித்து, முடிவில் இறந்து போனாள். பின்பு பிரமனால் படைக்கப்பட்டு;

14. வருகுவாள் இந்த மாது வணிபன்தன் சாபத் தாலே
அரிவையும் நாணி முந்து அன்னைபால் வாழ்வா ளாகும்
பிருகுமே புகலு கின்றூர் பூருவம் சைவச் சேயாய்
மறைக்குல முதிக்கும் வண்ண மறிவிப்பீ ரந்தச் சங்கை;

14. இப் பிறப்பில் பிறந்தாள் இவள். வியாபாரியின் சாபத்தால் இப் பிறப்பில் மாங்கலியம் இழந்து, தாயில்லத்தில் வாழ்வாள். பிருகு முனிவர் கேட்கின்றூர்: முன்பு சைவ குலத்தில் பிறந்து, பிறகு அந்தணர் குலத்தில் பிறந்த காரணத்தைக் கூறுங்கள்.

15. சேதுவின் பலத்தி னுலே சென்மமும் மேலா யிற்றுச்
சேதுவின் பலத்தி னுலே தீராதோ அந்தச் சாபம்
ஓதவே மாட்டோம் யாங்கள் உயர்மஞ்சள் சாபத் துக்கு
நீதியாய்த் தவங்கள் செய்யும் நிமலியே கேட்டி டாயே.

15. சேதுவில் நீராடிய பலத்தால், இப் பிறவியில் மேலான குலத்தில் பிறப்புக் கிடைத்தது. சேதுவில் நீராடியதால் வியாபாரியின் சாபம் நீங்காதோ? உயர்ந்த மஞ்சளைப் பொருள் தராமல் பெற்றதால் ஏற்பட்ட தோஷம் நீங்குமென நாம் கூறமாட்டோம். பார்வதியே! கேட்பாயாக.

16. துணைவர்கள் ஆண்பா லுந்தான் சேருவர் வடபால் தன்னில்
கனமுடன் வாழ்வா ளாகும் கழறுவோம் பின்பால் சேதி
அனையவே பாரி தானும் அணுகுங்கா லங்கள் சொல்வீர்
சினமிலா மூவெட் டாண்டுள் தென்திசை பாரி வாய்க்கும்.

16. இவளது சகோதரர்கள் வடதிசையை அடைவார்கள். இவள் மேன்மையுடன் வாழ்வாள். மற்றவை பிற்பாகத்தில் கூறுகின்றேம். ஜாதகனுக்கு மனைவி வரும் காலத்தைக் கூறுங்கள். கோபமற்ற இவனது இருபத்து நான்காம் வயதுக்குள், தென் திசையிலிருந்து மனைவி வாய்ப் பாள்.

17. மாதுவின் குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனி யாகும்
சூதிலாள் அடக்க வார்த்தை சுருக்கின வார்த்தை யுண்டு
வேதனை யொருவர்க் கெண்ணுள் வீண்பழி யேற்கா ளாகும்
சீதள குணத்தா ளாகும் தெய்வமேல் பக்தி பூண்பாள்.

17. அவளது குணத்தைக் கூறுவோம். மாந்தளிர் போன்ற மென் மையான மேனியள். சூது வாது இல்லாதவள். பணிவும், சுருக்கமுமான சொற்களைக் கூறுவாள். எவருக்கும் தீங்கை நினையாள். அடாத பழிக ளைப் பெறமாட்டாள். தண்மையான குணமுள்ளவள். கடவுள் பக்தி நிரம் பியவள்.

18. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலமு ருது
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று சொல்வோம்
குற்றத்தைப் புகலு மென்னக் [1]குழவியின் தானம் தன்னில்
பற்றினன் ராகு தானும் பாலர்கள் தோஷம் சொன்னேம்.

18. ஜாதகனுக்குப் புத்திரபாவம் சிறப்புடையதாக இராது. புதல்வர் தோன்றினாலும் கிலேக்க மாட்டார்கள் என்று சொல்லுவோம். குற்றம் என்ன? சொல்லுங்கள். புத்ரஸ்தானமாகிய ஐந்தாமிடத்தை ராகு பற்றிக் கொண்டதனால் புத்திர தோஷத்தைக் கூறினேம்.

19. முன்சென்ம வினையி னலே மேவார்கள் சுதர்கள் தாமும்
என்னவூழ் செய்தா னதனை யியம்புவீர் முனியே நீர்தாம்
அன்னவன் பூர்வம் சொல்வேன் அழகர்வாழ் பாண்டி
[தன்னில்
பின்குலம் தனிலு தித்துப் பெரிதான செட்டுச் செய்து;

19. முன்சென்மத் தீவினையால் புத்திரப் பேறு உண்டாகாது. இவன், என்ன தீவினையைச் செய்தான்? கூறுவீர். இவனுடைய முற்பிறவியைக் கூறுகின்றேம். அழகர் பெருமான் வாழும் மதுரையம்பதியில் நான்காம் வருணத்தில் தோன்றி, நல்ல வியாபாரம் செய்து வந்தான்.

20. பாரியும் மதலை யுண்டாய்ப் பாலகன் வாழும் நாளில்
கூறுவோம் வினையை யாங்கள் குடியினில் வெகுநா ளாகத்
தீரமாய்ப் புயங்கன் வாசம் சிலுக்காக வொருநாள் தன்னில்
வாரிய மகுடம் கொண்டு வாசலில் இயங்கும் போது;

20. மனைவி மக்களைப் பெற்று, ஜாதகன் வாழ்ந்து வரும் நாளில், சேர்ந்த தீவினையைக் கூறுவோம். இவன் வசிக்கும் வீட்டில் வெகுநாட்களாகப் பாம்பு ஒன்று வசித்து வந்தது. அஃது ஒருநாள் தன் படத்தை விரித்துக் கொண்டு வாசலில் செல்லும்போது;

21. அரங்கமே செய்து இன்னேன் அடித்தனன் கழியி னலே
மறவியாம் பதிக்கு நாகம் மறுவிற்று அதுவோர் தோஷம்
திருகிலாள் ஏழைக் கேதான் தீங்குகள் செய்தான்
[இன்னேன்
குறையுளோள் வருத்த முற்றுக் கூறுவாள் சாபந் தானும்.

---

1. புத்திரஸ்தானம்: ஐந்தாமிடம்.

21. இவன் கம்பு ஒன்று கொண்டு அதனை அடித்தான். நாகமும் இறந்தது. அந்தத் தோஷம் ஒன்று ஏற்பட்டது. கதியற்ற ஓர் ஏழைக்கு இவன் பல குற்றங்களிழைத்தான். ஏழை வருந்திச் சாபம் கொடுத்தாள்.

22. மற்றொரு சென்மந் தன்னில் வருந்துணை கூடி யின்றிப்
பெற்றதாய் தந்தைக் கேதான் புரியாமல் கருமந் தானும்
வித்தகன் வாழ்வா யென்ன விளங்கார்கள் சுதர்கள் தாமும்
இத்தகை சொல்ல லுற்றாள் எய்திற்று அந்தச் சாபம்.

22. வரும் பிறவியில் உடன் பிறந்தார் எவருமின்றியும், பெற்ற தந்தைக்குக் கருமம் புரியாமலும் நீ வாழ்வாய். உனக்குப் புதல்வர்களும் தோன்ற மாட்டார்கள் என்று கூறினாள். அந்தச் சாபம் வந்தடைந்தது.

23. மாரனும் அந்தி யத்தில் மைந்தர்கள் தோட மாயும்
பாரியுஞ் சேது சென்று பலருக்குத் தானம் ஈந்து
தீரமாய்க் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
பாரினி லுதிப்பா ளாகும் பெருகிடும் முன்னூழ்த் தோடம்.

23. இவன் கடைசிக் காலத்தில் மனைவியுடன் சேதுக்குச் சென்று நீராடி, பலருக்கும் தானங்கள் வழங்கி, பிறகு இறந்து போவான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இப் பிறவியை அடைவான். முன் செய்த தீவினை இப் பிறப்பில் வந்து சேரும்.

24. சுதர்களும் தோட மெய்தும் செப்புவீர் அதற்குச் சாந்தி
அதிபனும் மனைவி யோடு வள்ளூரு தனக்குச் சென்று
ததியுண்டோன் தனக்கர்ச் சித்துச் சர்ப்பம்போல்
[வெள்ளி யாலே
மதியுடன் செய்து மிக்க நலமுட னேற்நாள் தன்னில்;

24. புத்திர தோஷம் வந்தடையும் என்று கூறினீர்கள். அதற்குச் சாந்தியைக் கூறுங்கள். ஜாதகனும் தன் மனைவியுடன் திருவள்ளூருக்குச் சென்று, தயிரை விரும்பிப் புசித்த திருமாலுக்கு அருச்சனை முதலியன செய்து பூசித்து, நாகம் போன்ற உருவொன்றை நல்லெண்ணத்துடன் வெள்ளியால் செய்து, நல்லதொரு நாளில்,

25. நேமித்து மறையோர்க் கிந்து நிமலனும் தசம்போர்க் கன்னம்
நேமம்போல் அளித்து இன்னேன் நிகரான கூடல் சென்று
வாமனுக் கர்ச்சித் தேத்தி வளவுமே சென்று யின்னேன்
பூமியை அளந்தோன் தங்கை பூவையாம் மாரிக் கேதான்.

25. நியமமாய் அந்தணர்களுக்குக் கொடுத்து, பத்துப் பேருக்கு விதிப் படி போஜனமும் அளித்து, மதுரைக்குச் சென்று சொக்கநாதரை அருச் சித்துப் போற்றி, வீட்டுக்குத் திரும்பி ; உலகளந்த திருமாலின் தங்கையே ! மாரியம்மன் கோவிலில் ;

26. தினமொரு தீபம் வைக்கத் தீவினை விலகி யேதான்
கனமுள சுதர்கள் தோன்றும் கழறுவோம் ஆண்பால் ஒன்று
வனிதையர் இருவர் தோன்று மறைந்தது தப்பா தாகும்
கனமத வாணை பெற்ற காதலி கேட்டி டாயே.

26. இவன் தினம் ஒரு விளக்கு ஏற்றி வைத்தால், இவனை யடைந்த தீவினைகள் விலகி, மேன்மையான புதல்வர் தோன்றுவர். ஒரு புத்திரனும், இரண்டு புத்திரிகளும் தோன்றுவார்கள். கூறிய வார்த்தை தவறாது. விநா யகக் கடவுளைப் பெற்ற பார்வதியே ! கேட்பாயாக.

27. இன்னவன் யோகச் சேதி இயம்புவோம் தரணி யாலும்
உன்னதச் செட்டி னாலும் உத்தமன் சீவிப் பானும்
கன்னிகை வந்த பின்பு கலிபிறை போல யோகம்
பொன்பணி யதிகம் நேரும் புகழது பெருக்க மாகும்.

27. ஜாதகனுடைய யோகத்தைக் கூறுகின்றோம். இவன் பூமியா லும் உயர்ந்த வியாபாரத்தாலும் பிழைப்பான். இவன் மனைவி வந்தவுடன் வளர்பிறைச் சந்திரன் போல யோகங்களை அடைவான். பொன்னும் ஆப ரணங்களும் மிகுதியாகச் சேரும். புகழ் ஓங்கி வளரும்.

28. அதற்குமேல் வறுமை காணு னையந்து ஆண்டு மேலாய்
நிதிமிகப் பெருகு மென்றோம் நேமியில் சல்யம் காணன்
பதிவேறு செய்த லுண்டு பால்பாக்கியம் விருத்தி யோங்கும்
சதியிலாப் பின்பா கத்தில் சாற்றுவோம் விபர மாக.

28. அதற்கு மேல் இவனுக்கு வறுமையே யிராது. இருபத்தைந்தாம் வயதுக்கு மேல் பொருள் மிகுதியாகப் பெருகும் என்று கூறினோம். உலகில் கடன் தொல்லை இராது. வேறு இல்லங்களைக் கட்டுவான். பால் பசு பாக் கியங்கள் மிகுதியாகப் பெறுவான். குற்றமில்லாத இவனைப்பற்றி விவர மாகப் பின் பாகத்தில் கூறுவோம்.

29. மாதுரு குணத்தைச் சொல்வேன் மனமது கபடு மில்லாள்
சூதிலாள் சிவந்த மேனி தோகைபோல் சாயல் ஒக்கும்
காதலி யில்லம் மேற்குக் கழறுவோம் துணைஆண் நான்கு
சீதள வதனம் போன்ற செல்விமா ரவ்வார் தீர்க்கம்.

29. ஜாதகன் தாயின் குணத்தைக் கூறுவோம். வஞ்சனையற்ற மனத்தினள். சூதுவாது இல்லாதவள். சிவந்த நிற முடையவள். மயிலைப் போல் அழகிய சாயலுள்ளவள். இவள் வீடு மேற்குத் திசையில் உளது. உடன் பிறந்தவர்களில் ஆண்கள் நால்வர் என்று சொல்லுவோம். குளிர்ச்சியான சந்திரனைப் போன்ற முகமுடைய சகோதரிகள் இருவரும் தீர்க்கமாக விளங்குவர்.

30. அன்னையும் வடபால் சென்று அவன்முன்னோன் பக்கல்
[மேவிப்
பின்னமாம் என்று சொல்வோம் பேதையின் பூர்வம்
[கேளாய்
கன்னியா குமரி தன்னில் கலந்தன ளிக்கு லத்தில்
பொன்னெடு பணிதி பெற்றுப் புகழுடன் வாழ்ந்து மேதான்;

30. இவன் தாயும் வடக்கேயுள்ள தன் அண்ணனிடம் சென்று இறந்து போவாள் என்று கூறுவோம். இவளது முந்திய பிறப்பைப் பற்றிக் கேட்பாயாக: கன்னியா குமரியில், இக்குலத்திலே தோன்றினாள். பொன், ஆபரணங்கள் முதலியனவற்றைப் பெற்று, நற்புகழுடன் வாழ்ந்து வந்தாள்.

31. மறலியின் பதிக்குச் சென்று மறைவன் வரையப் பட்டு
அரிவையும் உதித்தா னென்றோம் அறைகின்றோம்
[இவள்பின் சென்மம்
குறைதீர்க்குங் கோகர் ணத்தில் குதிப்பாளா மிக்கு லத்தில்
திருகாக இருப தாண்டில் செப்புவோம் கண்டம் ஒன்று.

31. பிறகு மரணமடைந்து, பிரமனால் மீண்டும் படைக்கப்பட்டு, இப் பிறவியை அடைந்தாள் என்று சொன்னோம். இவள் பின் சென்மத்தைக் கூறுகின்றோம். சென்றவர் குறைகளைப் போக்கும் கோகர்ணம் என்னும் தலத்தில், இதே குலத்தில் தோன்றுவாள். இருபதா மாண்டில் இவளுக்குக் கண்டம் ஒன்று ஏற்படும்.

32. இருபது ஐந்து ஆண்டில் ஏகுவாள் கால நாடு
உரைக்கின்றோம் தந்தை பூர்வம் உயர்தில்லை தன்னி
[லேதான்
தறித்தொழில் செயுங்கு லத்தில் செனித்துமே பசனை செய்து
மருமலர் சோலை வைத்து மறலியின் பதிக்குப் புக்கு;

32. இருபத்தைந்தாம் ஆண்டில் இறந்துவிடுவாள். ஜாதகன் தந்தையின் முற்பிறப்பைக் கூறுகின்றோம். உயர்ந்த, தில்லை என்னும் சிதம்பரத்தில், நெசவுத் தொழில் செய்யும் குலத்தில் தோன்றி, பஜனைகள் செய்தும், நறுமண மலர்ச் சோலைகள் வைத்தும், வாழ்ந்திருந்து இறந்து போவான்.

33. வந்தவ னென்று சொல்வோம் மறைகுவான் நாலா
[மாண்டில்
பிந்தின சென்மம் சொல்வோம் பிரயாகையில் இக்கு லத்தில்
அந்தவன் உதிப்பா னுகும் அறைகின்றே மீரே மூண்டில்
முந்தின தந்தை மாள்வன் முதல்வியே கேட்டி டாயே.

33. பிறகு இப் பிறவியில் பிறந்தவன் என்று சொல்லுவோம். ஜாதகன் பிறந்த நாலாம் ஆண்டில் தந்தை இறந்து போவான். அவன் பின்சென்மத்தைக் கூறுவோம். பிரயாகையில், இக் குலத்திலேயே தோன்றுவான். பதினான்காம் வயதில் அவனுக்குத் தந்தை மாண்டுபோவான். உலகங்களுக் கெல்லாம் முதல்வியான பார்வதியே! கேட்பாயாக.

34. மூப்பது ஆண்டு தன்னில் விளம்புவோம் முன்தாய்க்
கண்டம்
செப்புவோ மிருபான் ஆறில் சேயன்முன் துணைவன்
[சேர்வன்
தப்பித மாக வாழ்வர் சாற்றின ஆண்டு முன்னுல்
ஒப்புடன் பின்பா கத்தில் உரைக்கின்றேம் அவர்கள் சேதி.

34. ஜாதகனின் முப்பதாம் வயதில், முதல் தாயாருக்கு மரணம் நேர்ந்திடும். இருபத்தாரும் வயதில் மூத்த சகோதரன் மரிப்பான். கூறிய வயதுக்கு முன்னுல் தோன்றினவர் யாவரும் நிலையார். பின் பாகத்தில் அவர்களைப் பற்றிய வரலாறுகளை யுரைக்கின்றேம்.

35. சாதகன் மரண காலம் சாற்றுவோ மறுபா னேழில்
திதிலாத் தனுசு மாதம் சஷ்டியின் திதியி லேதான்
சூதான கால நாடு செல்லுவான் இந்தப் பாலன்
போதவே பின்சென் மத்தைப் புகலுவோ முனியே கேளும்.

35. ஜாதகன் மரண காலத்தைக் கூறுவோம். அறுபத்தேழாம் வயதில், மார்கழி மாதம் சஷ்டி திதியில் இவன் மரணமடைவான். இவனது மறு பிறப்பைக் கூறுவோம், முனிவரே கேளுங்கள்.

36. [1]பிருதிவி தலத்தி லேதான் பிறப்பனுஞ் சத்திரிய சேயாய்
அரசனுல் தொழிலும் பெற்று அவனுமே வாழ்வா னுகும்
அரிவைபின் துணையின் சென்மம் ஆதி[2]மால் மலையி
[லேதான்
உறைகுவா ளிக்கு லத்தில் உத்தமன் நாற்பா ணுண்டில்;

---

1. காஞ்சீபுரம். முன்னர் வந்துள்ள இடங்களிலும் இங்ஙனமே கொள்க.

2. அழகர்மலை. திருவேங்கடமுமாம்.

36. காஞ்சிபுரத்தில், அரசர் மரபில் பிறப்பான். அரசனுல் தொழி லேப் பெற்று வாழ்வான். மனைவியின் இளைய சகோதரன் மறு பிறப்பில் திருமாலிருஞ் சோலையில் இக் குலத்திலேயே பிறந்து வாழ்ந்து வருவான். அவனது ஈற்பதாம் வயதில் ;

37. நேரிடும் கண்ட மென்றேம் நிகழ்த்துவோம் பின்பால் சேதி
மாரனும் சனன காலம் [1]மார்த்தாண்டன் திசையைந்
[தாண்டும்
தீரமாய்த் திங்கள் மூன்று செப்பினேம் பூர்வ பாவம்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

37. கண்டம் ஒன்று எற்படும். பின் பாகத்தில் எஞ்சியவற்றைக் கூறுவோம். ஜாதகனின் சனன காலத்தில் சூரிய மகாதசையில் இருப்பு வருஷம் ஐந்தும், மாதங்கள் மூன்றும் ஆம் என்று கூறினேம். இவ்விதமாக இவனது பூர்வ பாகத்தைச் சொன்னேம். முருகனைப் பெற்று வளர்த்த பார்வதியே ! கேட்பாயாக.


---

1. சூரியன்

ஜாதகம் 38

1. பிறைமானில் பொன்னேன் மானில் பூமகன் கேது தேளில்
பரிதியுங் காரி சிம்மம் [1]பார்க்கவன் புதனுங் கன்னி
அரவமே நந்தி யாக அணுகிய ரிஷபம் சென்மம்
உரையுமே பலனே என்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சந்திரன் மகரத்திலும், செவ்வாயும் கேதுவும் விருச்சிகத்திலும், சூரியனும் சனியும் சிம்மத்திலும், சுக்கிரனும் புதனும் கன்னியிலும், ராகு விருஷபத்திலும் நின்று, இலக்கினமும் விருஷபமாக இருந்தால், அதற்கான பலன்களைக் கூறுங்கள் என்று பார்வதி கேட்கலானாள்.



2. அத்திரி புகலு கின்றார் ஆணது சென்ன மாகும்
வித்தக னில்லஞ் சொல்வேன் வடவாசல் கீழ்மேல் வீதி
உத்திர மடம தாகும் உறைந்திடும் கணேசன் மாரி
பத்துமே மேல்பால் தன்னில் பகருவோம் சிறுஊ ராகும்.

2. அத்திரி முனிவர் கூறுகின்றார். இது ஆண்மகன் ஜாதகமாகும். ஜாதகனின் வீட்டைக் கூறுகின்றேன். இவன் வீடு கிழக்கு மேற்கான தெருவில், வடக்கு நோக்கிய வாயிலை உடையது. வீட்டிற்கு வடதிசையில் மடமொன்று உண்டு. மேற்குத் திசையில் ஒரு விநாயகர் கோவிலும், மாரியம்மன் கோவிலும் உள்ளன. அது சிறிய ஊராகும் என்று சொல்லுவோம்.

3. சொல்லிய அடையா ளத்துள் சுதனுமே வாசம் செய்வன்
தல்லியின் தந்தை யோகம் தன்மனே புத்திர யோகம்
வல்லவன் முன்பின் சென்ம மறைகின்றோம் இந்நூல்
[தன்னில்
அல்லலைத் தவிர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

1. சுக்கிரன்

3. இப்படிப்பட்ட அடையாளங்களுடைய வீட்டில், ஜாதகன் வாழ்ந்து வருவான். இவன் தந்தை, மனைவி, புத்திரர் ஆகியோர் யோகங்கள், முன் பின் சென்மங்கள் முதலிய விஷயத்தையும் இந்நூலில் கூறுகின்றோம். எங்கள் துன்பங்களைத் தீர்க்கும் உயிருக்குயிரான தாயே! கேட்பாயாக.

4. தந்தைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடும் இளையா னின்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோம் இவனின் தந்தை
போதவே துணையாண் ஒன்று பொருந்திடும் தீர்க்க மாக
மேதினில் செல்வா னுகும் விசனமே குடியாய்த் தங்கும்.

4. இவன் பாட்டனுக்கு இரு மனைவியர். அவர்களில் இளையவளிடம் தோன்றிய மைந்தன் இவன் தந்தை என்று சொல்லுவோம். தந்தையின் சகோதரர்களில் ஒருவன் நிலைப்பான், அவன் எப்பொழுதும் விசனத்துக்கு இருப்பிடமாய் விளங்குவான்.

5. வேறதாய்ச் செல்வா னுகும் விளம்புவோம் பின்பால் சேதி
மாரன்தன் தந்தை சேதி யறிவிப்போம் மால்நி றத்தான்
காரிய சமர்த்த னுகும் கண்முகம் வசிய மூண்டு
போரினில் செல்லா னுகும் போற்றுவான் முருகன் பத்தி.

5. வேறு குடும்பமாகச் செல்லுவான். அவன் வரலாறுகளைப் பிற பாகத்தில் கூறுவோம். ஜாதகன் தந்தை வரலாற்றைக் கூறுகின்றோம். கரிய நிறமுள்ளவன், காரியங்கள் செய்வதில் திறமையுள்ளவன். கவரத்தக்க கண்களையும், முகத்தையும் பெற்றிருப்பான். சண்டைக்குச் செல்லமாட்டான். முருகனிடம் பக்தி கொண்டவன்.

6. பலவூரில் வாசனு செய்வன் பலவித வணிபம் செய்வன்
நலமுளோர் நேசங் கொள்வன் நாயகி இட்டம் கொள்வன்
விலைமாதர் மோகம் கொள்வான் மேதினி சேர்ப்பா னுகும்
கலகத்தைக் கூரு னுகும் கஞ்சமாம் ரேகை யுண்டு.

6. பல ஊர்களில் வாசம் செய்வான். பற்பல வியாபாரங்களைச் செய்வான். நல்லவர்களுடன் நட்புக் கொள்ளுவான். மனத்துக்குகந்த மனைவியைப் பெறுவான். வேசிகள் நேசம் கொள்வான். நிலபுலன்களைச் சேர்ப்பான். கலகம் விளைவிக்கத்தக்க சொற்களைக் கூறமாட்டான். பத்ம ரேகை யுடையவன்.

7. இல்லமுஞ் செய்வா னுகும் இடரென்றோர்க் குதவி செய்வன்
சொல்லதைக் காப்பா னுகும் தந்தையார்ச் சிதத்தில் வாழான்
நல்லவ னுகி வாழ்வன் நவிலுவோ மிவன்முன் சென்மம்
அல்லலி னிவிர்த்தி செய்யும் அருணையில் வன்னிய சேயாய்;

7. வீடு கட்டுவான். துன்பமடைந்தவர்களுக்கு உதவி செய்வான். சொன்ன சொற்களைக் காப்பான். தந்தையால் தேடி வைக்கப்பட்ட ஆஸ்தி மூலம் ஜீவிக்க மாட்டான். அனைவருக்கும் நல்லவனாக வாழ்வான். இவனது முன் சென்மத்தைக் கூறுவோம். துன்பங்களைப் போக்கும் திருவண்ணு மலையில் வன்னியர் குலத்தில்;

8. பிறந்துமே பூமி யுண்டாய்ப் பாரியும் மதலை யோடு
பொருளது பெருக்க மாகிப் புண்ணிய மனத்த னாகி
இருவினை இல்லா னாகி யிவனுமே வாழ்ந்து மேதான்
மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டு;

8. தோன்றி, நிலபுலன்களையும் மனைவி மக்களையும்பெற்று, செல்வத்தைப் பெருக்கி, புண்ணிய மனமுடையவனாக, தீவினை யில்லாதவனாகி, வாழ்ந்திருந்து இறந்துபோனான், பிறகு பிரமனால் படைக்கப்பட்டு,

9. வந்தவ னென்று சொல்வோ மறைந்தவிக் குணத்தா னுக்கு
இந்தவ னந்தாஞ் சென்மம் இறங்குவான் வைசிய சேயாய்
அந்தவன் குணத்தைச் சொல்வேன் [1]அரிநிறம் கல்வி மானும்
விந்தையர்ய்ச் செட்டுச் செய்வன் விகடங்கள் கூறு னாகும்.

9. இப்பிறப்பில் வந்தவன் என்று கூறுவோம். இத்தகைய குணங்களுடைய இவனுக்கு இந்த ஜாதகன் ஐந்தாம் பிறப்பாக வைசிய குலத்தில் தோன்றுவான். அவன் குணத்தைக் கூறுகின்றேன். கரிய நிறமுள்ளவன், கல்வி யுள்ளவன். வியாபாரங்களைச் செய்வான், குறும்பாகப் பேசுமாட்டான்.

10. வண்டிவா கனமு மேற்பன் மாநிலம் சேர்ப்பா னாகும்
குண்டைகோ விருத்தி யுண்டு குலமதிப் புடைய னாவன்
பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் விருத்தி செய்வன்
துண்டபாய்க் கூறு னாகும் துராசையுங் கொஞ்ச முண்டு.

10. வண்டி முதலிய வாகன வசதிகளை யடைவான். நிலபுலன்களைச் சேர்ப்பான். கால்கடை விருத்தியுண்டு. தன் குலம் மேன்மையுற வாழ்வான். பரம்பரையாகக் கிடைத்துள்ள நிலங்களை விருத்தி செய்வான். கண்டிப்பான வார்த்தைகளைப் பேச மாட்டான். கெட்ட ஆசையும் கொஞ்சம் உண்டு.

11. வறுமையைப் பொழுதுங் காணான் மாநிலம் கூவல் செய்வன்
அறுமுகன் பக்தி கொள்வன் அடாவடி கூறு னாகும்
பறைபள்ளு சேர்ப்பா னாகும் பஞ்சமேல் இரக்க மாவன்
கரிமத வானைப் பெற்ற காதலி கேட்டி டாயே.

---

1. திருமால். அவர் நிறம் நீலமேகம் போன்றது.

11. வறுமை யறியமாட்டான். கிணறுகள் தோண்டுவிப்பான். முருகனிடம் பக்திகொள்வான். அடாவடியாகப் பேசான். பறையர் பள்ளர்களைச் சேர்ப்பான். ஏழைகள்மேல் இரக்கம் கொள்வான். விநாயகருக்குத் தாயாகிய பார்வதியே! கேடபாயாக.

12. தன்துணை அறுவர் தோன்றும் தங்குமுன் கன்னி ஒன்று
தன்துணை ஆண்பால் ரெண்டு பேசுவோம் பாலனுக்கு
முன்துணை கன்னி சேதி மொழியது சுகமே யாகும்
அன்னியர் குற்றம் சொல்வாள் அடாவடி கூரு ளாகும்.

12. இவனுடன் அறுவர் தோன்றுவர். இவனுக்குமுன் ஒரு பெண்ணும், பின் இரண்டு ஆண்களும் நிலைப்பர் என்று சொல்லுவோம். இவனது சகோதரியைப் பற்றிக் கூறுவோம். இனிய மொழியுடையவள். பிறர் குற்றங்களே எடுத்துக் கூறுவாள். ஆனால், அடாவடியாகப் பேசாள்.

13. சுகதுக்கம் கலந்து வாழ்வள் தொல்புவி வறுமை காணுள்
உகமையாய்ப் பேசு வாளாம் உதித்திடும் சுதராண் மூன்று
தகைமையாய்ப் பெண்பால் ரெண்டு செப்புவோம் பாவைக்
[கேதான்
செகமதில் வடமேல் மாரன் செப்புவோம் வயது தீர்க்கம்.

13. சுகம் துக்கம் இரண்டிலும் ஒரே தன்மையாக வாழ்வாள். உலகில் வறுமை யறியாதவள். இனிமையாகப் பேசுவாள். இவளுக்கு ஆண் மூன்றும், பெண் இரண்டும் தோன்றும். இவளுக்குக் கணவன், வடமேற்குத் திசையிலிருந்து வாய்ப்பான். அவன் நீண்ட ஆயுளுடையவன்.

14. பின்துணைச் சேதி தன்னைப் பேசுவோம் பின்பால் சேதி
இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோம் யிரோன்
[பாண்டில்
தென்திசை பாரி வாய்க்கும் செப்புவோம் மவள்கு
[ணத்தைக்
கன்னென மொழியே சொல்வள் கபடிலாள் இருநி றத்தாள்.

14. இவைய சகோதரர்களைப் பற்றிப் பிற்பாகத்தில் கூறுவோம். ஜாதகன் திருமண காலத்தைச் சொல்லுவோம். பதினெட்டாம் வயதில் தெற்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் குணத்தைக் கூறுவோம். கரும்பினும் இனிய மொழியினள். வஞ்சனை யில்லாதவள். மாநிற முள்ளவள்.

15. அன்னம்போல் சாய லொக்கும் ஆபத்தைச் சிலர்க்குக்
[காப்பள்

அன்னமு மல்பா யீவள் அடாவடி கூரு ளாகும்
அன்னியர் மதிக்க வாழ்வள் அடிசிலுக் கினிய ளாகும்
அன்னவள் யூக சாலி அவளுக்கு வயது தீர்க்கம்.

15. அன்னத்தைப் போன்ற நடையுடையவள். சிலருக்கு வந்த ஆபத்தைத் தீர்ப்பாள். அன்புடன் உணவளிப்பாள். அடாவடியாகப் பேச மாட்டாள். பிறர் மதிக்கும்படி வாழ்வாள். சமைப்பதில் சிறந்தவள். ஊகித்து அறிந்துகொள்ளும் திறமைபெற்றவள். நீண்ட ஆயுளைப்பெற்றவள்.

16. பிருகுமே புகலு கின்றார் பேதைய ரிருவ ராகும்
வருமாறு சொல்லு மென்ன மங்களன் கேது ஏழில்
கரியவன் நாலில் தங்கக் காதலி இரண்டு என்போம்
பராசரும் மறித்துச் சொல்வார் பகரொணுத் தாரம் ரெண்டு.

16. பிருகு முனிவர் கூறுகின்றார். இவனுக்கு மனைவியர் இருவர் என்பதற்குக் காரணங்களைக் கூறுங்கள். செவ்வாயும் கேதுவும் ஏழிலும், சனி நான்காமிடத்திலும், தங்கி யிருப்பதால், மனைவியர் இருவர் என்றோம். பராசரர் மறுத்துக் கூறுகின்றார். இவனுக்கு இரண்டு மனைவியர் என்று சொல்ல முடியாது.

17. காரணம் புகலு மென்னக் கதிரவன் நாலில் ஆட்சி
பார்மகன் ஏழில் ஆட்சி புதனுமே அஞ்சில் உச்சம்
தீரமா யிருப்ப தாலே சேயிழை யொன்றே தீர்க்கம்
கூறுவோஞ் சங்கை யொன்று கோதைக்கு இருமாங் கல்யம்.

17. காரண மென்னவென்றால், சூரியன் நாலில் ஆட்சியாகவும், செவ்வாய் ஏழில் ஆட்சியாகவும், புதன் ஐந்தில் உச்சமாகவும் இருப்பதால், மனைவி ஒருத்தியே தீர்க்கமாவள். ஆனால் இவன் மனைவிக்கு இரு மாங்கல்யம்,

18. செய்குவா னிவனே யென்றோம் செப்புவீ ரந்தச் சங்கை
ஐயமாங் கள்ள ராலே ஆறாறு ஆண்டில் நேரும்
தையலும் தீர்க்க சீவி செப்பின மொழிகுன் றாது
வையமேல் தவங்கள் செய்யு மம்பிகை யாளே கேளாய்.

18. செய்வான் என்று சொல்லுவோம். என்? என்று கூறுங்கள். மூப்பத்தாறும் வயதில் திருடர்களால் முதல் மாங்கல்யம் களவாடப்படும். இவன் நீண்ட ஆயுளைப் பெற்றவள். சொன்ன வார்த்தை தவறாது. சிறந்த தவங்களே யியற்றும் பார்வதியே! கேட்பாயாக.

19. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலமு ருது
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று சொன்னேனும்
குத்தத்தைச் சொல்லு மென்னக் குருடனும் புதனு மஞ்சில்
பத்தின பலத்தால் சொன்னேனும் பார்வதி கேட்டி டாயே.

19. புத்திரபாவத்தைக் கூறும்போது, அது பலமுள்ளதாக இல்லை. தோன்றினும் பழுதாகும். குற்றம் என்னவெனில் புத்திர ஸ்தானத்தில் சுக்கிரனும் புதனும் சேர்ந்து இருப்பதால் அவ்வாறு கூறினேனும்.

20. முன்சென்மம் வினையுங் கொஞ்சம் மேவிற்றுப் பால னுக்கு
என்ன ழுழ் செய்தா னதனை யியம்புவீர் முனியே நீர்தாம்
தென்திசைப் பாண்டி தன்னில் செனித்தனன் வேளா ளுகப்
பொன்பல முடைய ளுகிப் புகழான குடும்பம் பெற்று;

20. முன் சென்மத்தில் செய்த தீவினையும் சிறிது ஜாதகனை வந்தடைந்தது. ஜாதகன் என்ன குற்றத்தைச் செய்தான்? அதைக் கூறுங்கள் முனிவரே! நீங்கள். தெற்குத் திசையிலுள்ள பாண்டிய நாட்டில், இவன் வேளாளர் குலத்தில் உதித்து, செல்வங்களைப் பெற்று, புகழுள்ள மனைவி மக்களை யடைந்து;

21. இருக்கிற காலந் தன்னில் எய்தின வினையைக் கேண்மோ
குருக்கள்தன் மகள்மேல் மோகம் கொண்டுமே தனமும்
[ஈந்து
கருவிழி மாது போகம் கலந்தனன் அதுவோர் தோடம்
அரவதை மாலின் கோட்டம் அடித்தனன் அதுவோர்
[தோடம்.

21. வாழ்ந்துவரும் காலத்தில், இவனுக்கு நேர்ந்த தீவினையைக் கேளுங்கள். தன் ஆசிரியர் மகள் மீது மையல் கொண்டு, அவளுக்குச் செல்வ மளித்து, அவளுடன் இன்பந் துய்த்தான். அஃது ஒரு குற்றம். திருமாலின் கோவிலில் உள்ள ஒரு பாம்பைக் கொன்றான். அதுவும் ஒரு தோஷம்.

22. பஞ்சையா யேழை யோர்க்குப் பணமது லகுவாய்த் தந்து
மிஞ்சியே தந்தே னென்று விளைபுலந் தன்னைக்
[கொண்டான்
தஞ்சமா யேழை சாபம் சார்ந்தது என்று சொல்வோம்
அஞ்சினோர் தம்மைக் காக்கும் அம்பிகை யாளே கேளாய்.

22. மிகவும் ஏழையான மக்களுக்கு மிகச் சிறிதளவு பொருள் கொடுத்து, நான் அதிகமாகக் கொடுத்தேன் என்றுகூறி; அவர்களது விளை

நிலங்களைப் பறித்துக்கொண்டான். மனம் நொந்த ஏழைகளின் சாபமும் இவனை யடைந்தது என்று கூறினேம். பயந்தவர்களைக் காப்பாற்றும் பார் வதியே! கேட்பாயாக.

23. அந்திய காலம் தன்னில் அறுமுகன் தொண்டு பூண்டு
நஞ்சான கால நாடு நல்கியே பிரமன் லக்கம்
தஞ்சமா யுதிப்பா னுகும் சார்ந்திடும் முன்னூழ்த் தோடம்
கொஞ்சிய மதலை காணுன் கோதையே கேட்டி டாயே.

23. தன் கடைசிக் காலத்தில், முருகனுக்குத் தொண்டாற்றி, மரண மடைந்தான். பிறகு பிரமனல் படைக்கப்பட்டு, இவ்வுலகில் இப்பிறப்பாய்த் தோன்றிவான். இந்தச் சென்மத்தில் முன்பிறப்பில் ஏற்பட்ட தோஷம் இவனை வந்தடையும். அதனல் இவனுக்குப் புத்திரர்கள் தோன்றமாட்டார் கள். பார்வதியே! கேட்பாயாக.

24. அந்ததோர் தோடந் தீர அருளுவீர் கிரிகை யொன்று
வேந்தனும் மனைவி யோடு அருணைமா நகரஞ் சென்று
முந்தின தீர்த்தம் தோய்ந்து முக்கணன் தமயர்ச் சித்தே
சந்ததம் கிரியைச் சுற்றிச் சகஸ்திரவர்ச் சனைகள் செய்து.

24. அந்தத் தோஷங்கள் நீங்கச் சாந்தியைத் தாங்கள் கூறுங்கள்; ஜாதகனும் தன் மனைவியுடன் அருணை என்னும் திருவண்ணுமலை யடைந்து, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, அருணுசலேச்வாருக்கு அருச்சனை முதலி யன செய்து, பூசித்து, பக்தியுடன் மலைப் பிரதட்சணம் செய்து, ஆயிரம் நாமங்களால் கடவுளை அருச்சித்து;

25. இருபத்தோர் பரத்துக் கன்னம் இன்பமா யளித்துப் பின்பு
மறுபடி உள்ளூர் சென்று மாரியின் கோட்டத் திற்குத்
திருவிளக் கொன்று வைக்கத் தீவினை நிவிர்த்தி யாகிப்
பிறந்திடும் சுதர்க ளென்றேரும் பேதையே கேட்டி டாயே.

25. இருபத்தொரு பரதேசிகளுக்கு இன்முகத்துடன் உணவளித்து, பிறகு தன்னூர் சென்று, மாரியம்மன் கோவிலில் விளக்கேற்றி வைத்து வரு வானுயின், தீவினைகள் நீங்கும். புத்திர பாக்கியம் பெறுவான் என்று கூறி னேம். பார்வதியே! கேட்பாயாக.

26. சொற்படி செய்யா னுகில் சுதர்தோன்றூர் தோன்றில் தீதாம்
சொற்படி செய்வா னுகில் தோன்றிடு மாண்பா லொன்று
மைப்படி பெண்பால் ரெண்டு வறைகின்றேரும் தீர்க்க மாக
அப்புணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் ருது.

26. நாம் கூறியபடி செய்யாளுயின் புதல்வர் தோன்றூர். அவ்வாறு தோன்றினும் நிலையார். நாம் கூறியபடி செய்தால் ஒரு புத்திரனும் புத்திரிகள் இருவரும் தீர்க்கமாகத் தோன்றுவர். கங்கைதரைச் சடையிலணிந்த சிவபெருமானின் பத்தினியாகிய பார்வதியே! நாங்கள் சொன்னவை மாறூ.

27. மாதுரு குணத்தைச் சொல்வோம் மாநிறம் சமதே கத்தாள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உண்மையாம் மனத்த ளாகும்
பாதக மனமில் லாதாள் பற்களும் பெரிதாய்க் காட்டும்
சூதிலாள் பொறுமை சாலி துணையாண்பா லொன்றே
[தீர்க்கம்.

27. தாயின் குணத்தைக் கூறுவோம். அவள் கரிய நிறமுள்ளவள். குறைவில்லாத அழகிய உடலுடையவள். இனிமையாகப் பேசுவாள். உண்மை நிரம்பிய மனமுடையவள். தீமையில்லாத மனத்தினள். நீண்ட பற்களை உடையவள். வஞ்சனை யற்றவள். பொறுமை உடையவள். இவளுடன் பிறந்தவரில் ஆண்மகன் ஒருவன் தீர்க்கமாக இருப்பான்.

28. அன்னையு மிரண்டு மாகும் அணுகிய பின்தாய்க் கின்னாள்
சொன்னசொல் சுகமே யாகும் தொல்புவி வறுமை காணாள்
மன்னன்தன் மனத்துக் கேற்றே எறைகின்றே மிவள்தன்
[பூர்வம்
கன்னியா குமரி தன்னில் கிலந்தனள் செக்கான் வம்சம்.

28. இவளுக்கு இரண்டு தாய்மார்கள். அவர்களுள் இளையவளுக்குப் பிறந்தவள் இந்த ஜாதகனின் தாயார். இவள் இனிமையாகப் பேசுவாள். உலகில் வறுமை யறியாதவள். தன் கணவன் மனத்திற்கேற்ப நடப்பாள். இவள் முற்பிறப்பில் கன்னியா குமரியில், வாணிபச் செட்டியார் மரபில் பிறந்தாள்.

29. மங்கையுஞ் சுகமாய் வாழ்ந்து வறுமைக ளில்லா ளாகி
எங்கள்போல் அதிதிக் கன்ன மீந்துமே வினையில் லாமல்
சங்கையாய்க் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
இங்கிவள் உதித்தா ளென்றேும் ஈச்வரி கேட்டி டாயே.

29. இவள் வறுமைதளின்றி, சுகமாக வாழ்ந்து எங்களைப் போன்ற துறவிகளுக்கு உணவளித்து குற்றமொன்று மின்றி, மரண மடைந்தாள். பிறகு பிரமனால் படைக்கப்பட்டு இவ்விடத்தில் தோன்றினாள் என்றேும், ஈசுவரியே! கேட்பாயாக.

30. மறுசென்மம் கொங்கு நாட்டில் வருகுவாள் பிரம்ம
[சேயாய்த்
திருமக ளிச்சன் மத்தில் செய்தபுண் ணியங்க ளென்ன
வருவோரை யாத ரித்து மாநிலம் நல்லோ ளாகிக்
குறையென்றோர்க்குதவி செய்து சோதையும் வாழ்வ தாலே;

30. மறு பிறவி கொங்கு நாட்டில் அந்தண மாபில் தோன்றுவாள். இவள் இப்பிறவியில் செய்த புண்ணியங்கள் என்ன? விருந்தினர்களே வரவேற்று உபசரித்து, நல்லவளாகி, துன்பமடைந்தவர்களுக்கும் உபகாரங்கள் செய்து இவள் வாழ்ந்து வருவதால்,

31. பிறப்பளாம் என்று சொல்வோம் பேசுவோம் முப்பான்
[மூன்றில்
அரிவையு மரிப்பா ளாகும் அதற்குமுன் தந்தை மாள்வன்
திருகாகப் பதின்மூன் றுண்டில் செல்லுவாள் என்று
[சொல்வோம்
மறுசென்மந் தில்லை தன்னில் வருகுவா ளிக்கு லத்தில்.

31. அந்தணர் குலத்தில் பிறப்பாள் என்று கூறுவோம். இவள் முப்பத்துமூன்றும் வயதில் மரணமடைவாள். அதற்குமுன்பு, இவள் தந்தை பதிமூன்றும் வயதில் இறந்து போவார். மறுபிறவியில் சிதம்பரத்தில் இக்குலத்திலேயே தோன்றுவாள் என்று கூறினேம்.

32. பாலகன் மரண காலம் பகருவோம் அறுபான் ஏழில்
சாலவே தனுசு மாதம் சதுர்த்தசி வளர்பக் கத்தில்
ஏலவே யுடல மேகும் இயம்புவோம் இவன்பின் சென்மம்
காலனை யுதைத்த நாட்டில் கலப்பனும் கங்கை சேயாய்.

32. ஜாதகன் மரண காலத்தைக் கூறுவோம். இவன் அறுபத்தேழாம் வயதில், மார்கழி மாதம் சுக்கிலபட்ச சதுர்தசி திதியில் மரணமடைவான். இவன் பின் சென்மம் மார்கண்டேயனுக்காக இயமனை, சிவபெருமான் உதைத்தத் தலத்தில் வேளாள மாபில் தோன்றுவான்.

33. வந்தவன் பொதுயோ கத்தை யறைகின்றோம் தாயே கேளும்
நிந்தைக ளேற்கா னுகும் [1]நேமிகள் இருவூர் சேர்ப்பன்
முந்திய வாணிபம் செய்வன் மொழியது சுருக்க மாகும்
கந்தன்மேல் பக்தி பூண்பன் கடன்படா னென்று
[சொல்வேன்.

---

1 பூமி.

33. அவ்வாறு தோன்றிய அவனது பொதுவான பலன்களைக் கூறுவோம். தாயே! கேளுங்கள். பழிகளை எற்காதவன். இரண்டு ஊர்களில் நிலபுலன்களைச் சேர்ப்பான். நல்ல வியாபாரங்களைச் செய்வான். சுருக்கமாக உரையாடுவான். முருகன்மீது பக்தி கொள்வான். கடன்படாது வாழ்வான் என்று கூறுவேன்.

34. திருப்பணி செய்வா னுகும் தேறினோர்க் கன்ன மீவன்
பெருமையாய்க் குடும்ப மேற்பன் பிதாமேலாய் வாழ்வா
[னுகும்
பொருளது புதையல் வைப்பன் பந்துவு மதிக்க வாழ்வன்
அருமறை முடியி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

34. கோவில் திருப்பணிகள் செய்வான். நல்லோர்க்கு அன்னமளிப்பான். பெருமையாகக் குடும்பம் நடத்துவான். தன் தந்தைக்கு மேலாக சிறப்பாக வாழ்வான். செல்வத்தைப் புதைத்து வைப்பான். சுற்றத்தார் மதிக்க வாழ்வான். வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களில் விளக்கப் படும் பார்வதியே! கேட்பாயாக.

35. செனித்திடுங் காலம் தன்னில் செம்பாம்புத் திசையி ருப்புக்
குனித்திடு ஆண்டு ஒன்று கூறுவோம மதிங்க ளொன்று
சினமிலாப் பூர்வம் சொன்னேம் செப்புவோம் பின்பால்
[சேதி
அனையவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

35. இவன் ஜனன காலத்தில் கேதுமகா தசையில் இருப்பு வருஷம் ஒன்று, மாதம் ஒன்று என்றும் கூறுவோம். நலமான முற்பகுதியைக் கூறினேம். மற்றவை பிற்பகுதியில் கூறுவோம். பொருத்தமான தவங்கள் புரியும் பார்வதியே: கேட்பாயாக.

ஜாதகம் 39

1. நந்தியும் செனன மாக ராகுவும் நாலில் தங்கச்
சந்திரன் ஆறி லேறச் சேயேழில் காரி பத்தில்
புந்தியும் பானு லாபம் புகர்குரு விரயம் புக்க
இந்தவார் கோளு நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. இலக்கினம் விருஷபமாகவும், ராகு நான்காமிடமாகிய சிம்மத்திலும், சந்திரன் துலாத்திலும், செவ்வாய் விருச்சிகத்திலும், சனி பத்தாமிடத்திலும், புதனும் சூரியனும் லாப ஸ்தானமான மீனத்திலும், சுக்கிரனும் குருவும் விரய ஸ்தானமான மேஷத்திலும் தங்கியிருந்தால், இதற்குரியப் பலன்களைக் கூறுங்கள்.

சூரியன் புதன்	சுக்கிரன் குரு	லக்கினம்	
சனி கேது	இராசி சக்கரம்		
			ராகு
	செவ்வாய்	சந்திரன்	

2. பிறகுமே புகலு நின்ரூர் பிறந்திடு மாண்பால் சென்மம்
வருமில்லங் கீழ்மேல் வீதி வாசலும் வடபால் நோக்கும்
பெருவயி றப்பன் மாரி பேசுவோம் மேல்பால் தன்னில்
சிறுவூராம் வைசியச் சேயாய்ச் செனிப்பனும் சேட்ட னுக.

2. பிருகுரிஷி கூறுகின்ரூர். இந்த ஜாதகத்துக்குரியவன் ஆண் மகனுவான். இவன் வாழும் வீடு கிழக்கு மேற்கு வீதியில் வடக்குப் பார்த்த தாகும். மேற்குத் திசையில் விநாயகர் கோவிலும், மாரியம்மன் கோவிலு முண்டு. சிறிய ஊர். அதில் வைசிய குலத்தில் சிறப்புடன் மூத்தவனுகத் தோன்றுவான்.

வேறு

3. இன்னவன் செனனம் இருப்பிட மதற்கு
இருநான்கு கடிகைதூ ரத்தில்
மன்னிய வடமேல் தந்தையின் இல்லம்
வடவாடை கிழக்குமேல் வீதி
தன்னிய மேல்பால் கழறுவோம் தாயே
இலமான ஈசனும் மாயோன்
தென்திசை தோன்றும் சேயன்தன் சேதி
செப்புவோம் விபரமாய் யாங்கள்.

3. இவன் பிறந்த வீட்டிற்கு எட்டு நாழிகை தூரத்தில் வடமேற்குத் திசையில், கிழக்கு மேற்கு வீதியில், வடக்கு வாடையில் இவன் தந்தையின் வீடு இருக்கும். மேற்கில் பாழடைந்த ஒரு சிவபெருமான் கோவிலுண்டு தெற்குத் திசையில் விஷ்ணு கோவிலும் இருக்கும், ஜாதகனைப் பற்றிய வரலாறுகளை நாங்கள் விவரமாகக் கூறுகின்றோம்.

வேறு

4. தந்தையின் துணையாண் ரெண்டு சத்தியும் ஒருத்தி யாகும்
பிந்தியும் ஆண்பா லொன்று புகுவனுங் கால நாடு
அந்தவர் சேதி பின்பால் அறிவிப்போம் தாயே யாங்கள்
இந்தவன் தந்தை சேதி இயம்புவோ மினிமே லாக.

4. இவன் தந்தையின் உடன்பிறந்தவர்களில் ஆண்கள் இருவர். சகோதரி ஒருத்தி. அதற்குப் பிறகு ஆண் ஒருவன் இறந்துபோவான். அவர் களைப்பற்றி பிறகு நாங்கள் சொல்லுவோம். இனி, தந்தையைப் பற்றிக் கூறுவோம்.

5. மால்நிறம் சமதே கத்தான் வணிபங்கள் செய்வா னுகும்
ஞாலங்கள் கொஞ்சம் சேர்ப்பன் நளினமாய் வார்த்தை [யுண்டு
சிலம்போல் வெளிம யக்கன் சிந்தையும் நல்ல தாகும்
ஞாலமேல் சல்லியங் கொள்ளான் நடையது சொகுசு மாகும்.

5. கரிய நிறத்தினன். கட்டமைந்த சரீர முடையவன். வியாபா ரங்கள் செய்வான். நிலங்கள் சிறிது சேர்ப்பான். சரசமாகப் பேசுவான். நல்லொழுக்க முடையவன். பகட்டான வெளித் தோற்ற முடையவன். நல்ல மன முடையவன். உலகில் கடன் வாங்க மாட்டான். அழகிய நடை யுடையவன்.

6. அறுமுகன் பத்தி கொள்வன் அடாவடி கூரு னுகும்
திரு[1]மாளி செய்வா னுகும் சிரசினில் பிணியு மெய்தும்
தறிபடப் புகலா னுகும் சங்கையா மனத்தா னுகும்
குறையென்றோர்க் குதவி செய்வான் குத்திரம் பேசா னுகும்.

6. முருகன்மீது பக்தி உடையவன். தகாததைச் சொல்ல மாட்டான். அழகிய இல்லங்களை யமைப்பான். தலையில் நோய் ஏற்படும். பொருத்த மாகப் பேசாதவன். சந்தேக மனமுடையவன். துன்பமுற்றவர்க்கு உதவி செய்வான். குயுக்தியாகப் பேசமாட்டான்.

---

1. வீடு. மாளிகை என்பது "மாளி" எனக் குறைந்தது.

7. மூன்னவன் இருந்த சென்மம் மொழிகுவோம் குடந்தை
[தன்னில்
வன்னிய குலமு தித்து வளமிலாக் குடும்பி யாகி
முன்னோர்போல் கிருஷி செய்து உலகினில் நல்லோ ருகிப்
பன்னுவோர் தொண்டு பூண்டு பறந்தனன் கால நாடு.

7. அவன் முற்பிறவியைக் கூறுவோம். கும்பகோணத்தில், வன்னிய குலத்தில் தோன்றி, நலமில்லாக் குடும்பங்களே யடைந்து, தன் முன்னோர் செய்த விவசாயம்செய்து, அனைவருக்கும் நல்லவனாக இருந்து, சில கற்பணிகள் செய்து மரண மடைந்தான்.

8. பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தனன் என்று சொல்வோம்
உரைத்தஇக் குணத்தா னுக்கு உதிப்பனும் இந்தப் பாலன்
திருமகன் குணத்தைச் சொல்வேன் சொல்லது சுருக்க
[மாகும்
இருவிதக் கல்வி நேரும் ஏவலாள் சேர்ப்பா னுகும்.

8. பிரம்மனுல் மீண்டும் படைக்கப்பட்டுப் பிறந்தான் என்று கூறுவோம். இத்தகைய குணமுள்ளவனுக்கு ஜாதகன் பிறந்தான். இவன் குணத்தைக்கூறுகின்றேன். சுருங்கக் கூறுவான். இரு துறைகளில் கல்வி கற்பான். வேலைக்காரர்களே யடைவான்.

9. புத்திமான் பொறுமை சாலி புவியது சேர்ப்பா னுகும்
புத்திமான் அவர்கட் கன்னம் படைப்பனும் வணிபம்
[செய்வன்
குத்தத்தை வெளிக்காட் டாதான் குருவுப தேசம்
[கொள்வன்
சுத்தத்தார் மதிக்க வுய்வன் சோம்பிடான் காரி யத்தில்.

9. புத்திசாலியாவான். பொறுமை யுள்ளவன். நிலபுலன்களைச் சேர்ப்பான். பரமனிடம் பக்தி கொண்டவர்களுக்கு உணவளிப்பான். வியாபாரங்கள் செய்வான். குற்றத்தை வெளிப்படுத்தாதவன். நற்குருவினிடம் நல்லுபதேசம் பெறுவான். சுற்றத்தார் மெச்ச வாழ்வான். காரியங்கள் செய்வதில் சோம்பல் கொள்ளமாட்டான்

10. கரமதில் கோதுமை ரேகை கஞ்சமாம் ரேகை யுண்டு
மருவரை வசித்தே வெல்வன் மாடுகள் பணையோர் விருத்தி
அறுமுகன் பத்தி கொள்வன் அற்புத வார்த்தை யுண்டு
பெருவயி ரூனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

10. இவன் கையில் கோதுமை ரேகையும், பத்ம ரேகையும் உண்டு. உறவாடிப் பகைவர்களை வெல்வான். மாடு, பண்ணை, ஏர் விருத்தியுண்டு. முருகனிடம் பக்தி கொள்வான். விநோதமாகப் பேசுவான். விநாயகனைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

11. இன்னவன் துணைவர் தம்மை இயம்புவோம் ஆண்பால்
[ரெண்டில்
கன்னிகை அவ்வா றுகும் கழறுவோம் பின்பால் சேதி
அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளாள் மாநி
[றத்தாள்
தன்சொலு மடக்க மூண்டு தானிள மனத்தா ளாகும்.

11. இவன் உடன்பிறந்தாரைக் கூறுவோம். சகோதரர் இருவர். சகோதரிகளும் இருவராவர். அவர்களைப் பற்றிப் பிறகு கூறுவோம். தாயின் குணத்தைக் கூறுகின்றேன். அழகுள்ளவள். கரிய நிறத்தினள். இளகிய மன முடையவள்.

12. சீலியம் விரத மேற்பள் திருகான குணமில் லாதாள்
பால்பாக்ய முடையா ளாகும் பர்த்தாவின் மனத்துக்
[கேற்றோள்
ஞாலமேல் நல்லோ ளாவள் நளினமாய் வார்த்தை யுண்டு
[1]மால்மனை ஒப்ப தாகும் வருவோரை யாத ரிப்பள்.

12. நல்லொழுக்க முடையவள். விரதங்களை மேற்கொள்ளுவாள். குற்றமில்லா நற்குணத்தினள். பால் பாக்கிய முடையவள். கணவன் மனத்திற் கேற்றவள். உலகத்தாரால் நல்லவள் என்று கூறப்படுவாள். அழகாகப் பேசுவாள். இலக்குமியைப் போன்றவள். தன்னிடம் வரு வோரை உபசரிப்பாள்.

13. மங்கையின் துணைவ ராறில் ஆண்மூன்று தீர்க்க மெய்தும்
சங்கையாங் கடையோன் என்றோம சாற்றுவோம்
[பின்பால் சேதி
இங்கிவள் முன்சென் மத்தை இயம்புவோம் தோகை
[தன்னில்
பொங்கிய குடும்பந் தன்னில் பிறந்தனள் ரெட்டி வம்சம்.

13. இவளது உடன்பிறந்தோர் அறுவரில் சகோதரர் மூவரும் தீர்க்க மாக இருப்பார்கள். கடைசியில் பிறந்தவன் மரிப்பான். பிறகு இவர்களைப் பற்றிக் கூறுவோம். இப்பொழுது இவள் முன்சென்மத்தைக் கூறுவோம். தோகைமலையில் வளமுள்ள ஒரு குடும்பத்தில், ரெட்டியார் வகுப்பில் பிறந்தாள்.

---

1. இலக்குமி தேவி

14. சுகமுள குடும்பி யாகிச் சார்வோருக்கு அன்ன மீந்து
விததல வாசஞ் சென்று வினையது இல்லா தாகிப்
பகையான காள நாடு பரவியே பிரமன் லக்கம்
தகைமையா யுதித்தா ளென்றேரும் சங்கரி கேட்டி டாயே.

14. வளமுள்ள குடும்பங்களைப்பெற்று வந்தவர்களுக்கு விருந்தளித்து, வெவ்வேறான புண்ணியத் தலங்களுக்குச் சென்று சில நாட்கள் வசித்து, குற்றமில்லாது வாழ்ந்து மரண மடைந்தாள். பிறகு பிரம்மனால் படைக்கப் பட்டு இவள் தோன்றினாள் என்று கூறினேம். சங்கரன் மனைவியே! கேட்பாயாக.

15. ஆறுது ஒன்ப தாண்டில் ஆவணி மாதம் தன்னில்
கூறுவோம் அன்னை கண்டம் குறிக்கின்றேரும் இவள்பின்
[சென்மம்
திரமாய் விரிஞ்சி தன்னில் செனிப்பளா மிக்கு லத்தில்
பாரிய குடும்பி யாகிப் பாவையும் வாழ்வா ளாகும்.

15. ஜாதகன் ஐம்புத்தி நான்காம் வயதில், ஆவணி மாதத்தில், தாய் மரண மடைவாள் என்போம். இவளது மறு பிறப்பு விரிஞ்சிபுரத்தில் இதே குலத்தில் ஏற்படும். பெரிய குடும்பங்களைப் பெற்று இவள் வாழ்ந்து வருவாள்.

16. மூப்பது ஒன்று ஆண்டில் மேடமா தத்தி லேதான்
செப்புவோந் தந்தை கெண்டம் சிறக்கும்பின் சென்மம்
[சொல்வோம்
ஒப்புடன் வான்மீ யூரில் உதிப்பனுங் கங்கை சேயாய்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுது.

16. ஜாதகனுடைய முப்பத்தோரும் வயதில் சித்திரை மாதத்தில், தந்தைக்கு மரணமேற்படும். தந்தையின் சிறப்பான பின் சென்மத்தைக் கூறுவோம். திருவான்மியூரில், வேளாள குலத்தில் தோன்றுவான். சடை முடியில் சர்ப்பங்களைச் சூட்டியுள்ள சிவபெருமானின் மனைவியே! கூறிய மொழி தவறு.

17. மன்னவன் மணத்தின் காள மறைகின்றேரும் பதினெட்
[டாண்டில்
அன்னையின் துணைவன் புத்திரி அம்மாதை மாலை பூண்பன்
கன்னிகை குணத்தைச் சொல்வேன் கருதிடாள் கட்டு
[வார்த்தை
உன்னத சீவி யாகும் உரைக்குமுன் கோபி யாவள்.

17, ஜாதகனின் திருமண காலத்தைக் கூறுகிறோம். பதினெட்டாம் வயதில், அவன் தன் மாமன் மகளை மணப்பான். அப்பெண்ணின் குணத்

தைக் கூறுவேன். கற்பனை மொழிகளைக் கூறமாட்டாள். உயர்ந்த ஒழுக்க முடையவள். கூறுவதற்கு முன்பு கோபம் கொள்வாள்.

18. மாந்தளிர் மேனி யாகும் மாதுவும் யோக சாலி
கூர்ந்துமே வார்த்தை சொல்வள் குலமதிப் புடைய ளாகும்
ஏந்திய தனத்த ளர்கும் இடரென்றோர்க் குதவி செய்வாள்
காந்தம்போல் புத்தி யுண்டு கடூரத்தை வெளிக்காட்
[டாதாள்.

18. மாந்தளிர் போன்ற மென்மையான உடலுடையவள். நல்ல அதிர்ஷ்ட முடையவள். ஆராய்ந்து பேசுபவள். குலமதிப்பைப் பெற்ற வள். நல்ல செல்வம் படைத்தவள். துன்ப மடைந்தவருக்கு உதவிசெய் வாள். நுண்ணிய அறிவு படைத்தவள். தன் கொடுமையை வெளிப்படுத் தாதவள்.

19. வயதுமே தீர்க்க மெய்தும் மைந்தர்கள் பலத்தைச்
[சொல்வேன்
வியமாகும் உதித்தா லுந்தான் விளம்புவீர் அந்தச் சங்கை
நயமிலா வைந்தோன் புந்தி லாபத்தில் நீச்ச மாகப்
பயமிலாச் சொன்னேம் நாங்கள் பாலகன் பூர்வம் தன்னில்;

19. நீண்ட வயதைப் பெற்றவள். புத்திர பாவத்தைக் கூறுவோம். புத்திரர்கள் தோன்றினாலும் நிலைக்க மாட்டார்கள். அதற்குக் காரணம் என்ன? ஐந்தாமிடத்துக்கு உரியவனான புதன் இலாப ஸ்தானமாகிய மீனத் தில் நீசமாக இருப்பதால் புத்திரபாவம் பலமில்லை என்று சொன்னேம். ஜாதகன் முற்பிறவியில்;

20. செய்வினை அதிகத் தாலே சுதர்களும் தோட மெய்தும்
வெய்யவே என்ன செய்தா னன்றைகின்றோ மந்தச் சங்கை
ஐயங்கள் நிவிர்த்தி செய்யும் [1]அப்புவின் தலத்தி லேதான்
கைமுத லுடைய ஞகக் கங்கையின் குலமு தித்து;

20. தீவினைகள் அதிகமாகச் செய்ததாலும், புத்திர தோஷம் உண்டு. ஜாதகன் என்ன குற்றம் செய்தான்? செய்த குற்றத்தைக் கூறுகின்றோம். சந்தேகங்களை நீக்கும் திருவானைக்காவில் செல்வமுள்ளவனுக வேளாள மரபில் தோன்றி;

21. பாரியும் மதலை யுண்டாய்ப் பெரியதோர் குடும்பி யாகித்
தீரனும் வாழும் நாளில் செய்ததோர் வினையைக் கேண்மோ
காரிழை விதவை போகம் கலந்துமே கருவ ழித்தான்
நேரிற்று அந்தத் தோடம் நிமலியே கேட்டி டாயே.

1. திருவானைக்கா

21. மனைவி மக்களைப் பெற்று, பெரிய குடும்பங்களை யடைந்து, இவன் வாழும் நாளில், செய்த ஒரு வினையைக் கேளுங்கள். கைம்பெண்ணு டன் சம்போகம் செய்து ஏற்பட்ட கருவழித்தான். அத்தத் தோஷம் இவனை யடைந்தது. பார்வதியே! கேட்பாயாக.

22. இதுவன்றி வேறு சொல்வேன் ஏழையோர் மதலைக் கன்னம்
அதிபன்பால் வினவும் போது மாரனும் கோப முற்று
அதிகமாய் வார்த்தை சொல்லி அணுகாதே என்று
[சொல்லத்
தீதிலா ஏழை மாது தொடுத்தசா பத்தைக் கேண்மோ.

22. இதைத் தவிர மற்றொன்றும் சொல்வேன். ஒரு ஏழைப் பெண், குழந்தைக்குச் சோறு வேண்டுமென இவனைக் கேட்கும்போது, இவன் கோபம் கொண்டு "நெருங்காதே" என்று கூற, குற்றமற்ற அப்பெண் கூறிய சாபத்தைக் கேள்.

23. மைந்தர்சோ றீயாப் பாவி மருவாது சுதரு னக்குப்
பிந்திய சென்மந் தன்னில் பிறவாது பிறக்கில் தீதாம்
இந்தவள் சொல்லி யேதான் ஏகினள் வேறு சாகை
அந்ததோர் சாபந் தானும் அணுகிற்றுப் பால னுக்கு.

23. குழந்தைகளுக்குச் சோறு இல்லை என்று கூறிய பாவியாகிய உனக்குப் புத்திரர்கள் பின்பிறப்பில் தோன்றார்கள். அவ்வாறு பிறந்தாலும் நிலையார்கள். இவ்வாறு கூறி வேறுவீட்டிற்குச் சென்றுவிட்டாள். இந்தச் சாபமும் இவனை வந்தடைந்தது.

24. மாரனும் அந்தி யத்தில் மைந்தர்கள் நட்ட மெய்திப்
பாரினில் மனமும் வாடிப் பறந்தனன் கால நாடு
தீரமாய்ப் பிரமன் லக்கம் செனிப்பனும் என்று சொல்வோம்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

24. ஜாதகனுக்கும் கடைசி நாளில் பல புத்திரர்கள் இறந்துபோய் மனம் வருந்தி மரண மடைந்தான். பிறகு பிரம்மனால் படைக்கப்பட்டுப் பிறப் பெடுப்பான் என்று கூறுவோம். முகுகனைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

25. ஆகையால் முன்னூழ்த் தோடம் அணுகிடு மிச்சென்
[மத்தில்
ஏகிடும் சுதர்கள் தாமும் இயம்புவோம் கிரிகை ஒன்று
தோகையுந் தானு மாகத் திருத்தணி மலைக்குச் சென்று
பாகமாய்த் தீர்த்தந் தோய்ந்து புகவானை யருச்சித் தேத்தி;

25. ஆகையால் முன் சென்மத்தில் செய்த குற்றங்கள் இச்சென்மத்தில் தொடர்ந்தன. புத்திரர்கள் மரிப்பர். புத்திர தோஷம் நீங்கச் சாந்தி யொன்று கூறுகிறேன். மனைவியுடன் இவன் திருத்தணிகை மலைக்குச் சென்று, புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, கடவுளை அருசித்துப் பணிந்து;

26. இப்படி ஏழு கார்த்தி ஏற்றவார் சென்று மேதான்
ஒப்புடன் கடைநாள் தன்னில் ஒரேழு அடியார்க் கன்னம்
தப்பித மின்றி யீந்து தந்நகர் அடைந்து இன்னேன்
செப்பமாய்க் கணேச னுக்குத் தினமொரு தீபம் வைக்க;

26. இவ்வாறு, ஏழு திருத்திகைகள் தக்கபடி சென்று, கடைசி தினத்தில் ஏழு அடியார்களுக்கு அன்புடன் உணவளித்து, தன்னூர் அடைந்து, விநாயகருக்கு நாள்தோறும் திருவிளக்கு ஏற்றி வைத்தால்,

27. முன்வினை நிவிர்த்தி யாகி மேவிடும் ஆண்பா லொன்று
கன்னிகை யிருவர் நேரும் கழறின மொழிகுன் றாது
இன்னவன் ஏற்றச் சேதி இயம்புவோ மினிமே லாகப்
பொன்பணி சேர்ப்பா னுகும் புதையலும் வைப்பா னுகும்.

27. முன்வினைகள் நீங்கி, புதல்வன் ஒருவன் தோன்றுவான். இரு பெண்களும் பிறப்பர். கூறிய வார்த்தை மாறாது. இவன் யோகச் செய்திகளை இனிக் கூறுவோம். பொன்னணி பல சேர்ப்பான். பொருளையும் புதைத்து வைப்பான்.

28. உதித்தநாள் முதலாய் ஆக ஒருநான்கு ஆண்டு மட்டும்
விதவிதத் துன்பம் நேரும் இவனுக்குச் செலவ னேகம்
நிதமன சஞ்ச லங்கள் நிமலனும் பணிய நேகம்
பதியதில் சூத முண்டு பகருவோம் அதன்மே லாக.

28. இவன் பிறந்து நான்கு வயதுவரை பற்பல துன்பங்கள் உண்டாகும். செலவுகள் பெருகும். எப்பொழுதும் மனக் கவலைகள் ஏற்படும். இவனும் பல காரியங்களை உடையவனுவான். இவன் வீட்டில் பல அசுபகாரியங்கள் நடைபெறும். அதற்குமேலே கூறுவோம்.

29. செய்தொழில் மேன்மை யாகும் சந்திரன் பிறைபோல்
[ஓங்கும்
ஐயங்கள் நிவிர்த்தி யாகும் ஆவுகள் பலித முண்டு
வையமேல் புகழு மெய்தும் வாகனம் சேர்க்கை யுண்டு
[1]பையர வணிந்தான் பாரி பகருவாள் சங்கை யொன்று.

1. விஷமுள்ள பாம்பினை ஆபரணமாக அணிந்துள்ள சிவபெருமான்

29. செய்யும் தொழில் வளர்பிறைச் சந்திரன் போல் ஓங்கும். தன்பங்கள் அகலும். பசுக்கள் விருத்தியுண்டு. உலகில் புகழேற்படும். வாகன வசதிகளைப் பெறுவான். கொடிய விஷம்பொருந்திய நாகத்தை யணிந்த பரமன் மனைவியான பார்வதி கேட்கலாளுள்.

30. யோக மெவ் விதமாய்ச் சொன்னீ ருதயத்தோன் விரயம்
[புக்கு
ஆகமன் லாப ருகி அவனுமே விரயம் சேரப்
பாகனும் நீச மாகிப் பகர்ந்தகா ரணங்க ளென்ன
வேகமாய்த் தர்ம கர்மன் மேவிடம் தசம தாக.

30. ஜாதகனுக்கு யோகங்களை எவ்வாறு கூறினீர்கள்? சுக்கிரன் விரய ஸ்தானமாகிய பன்னிரண்டை யடைந்தும், யோகத்தை யளிக்கும் குரு விரய ஸ்தானத்திலும், புதன் மீனத்தில் நீச்சமாகவும் இருப்பதால் இவனுக்கு யோகத்தை எப்படிக் கூறினீர்கள்? தர்ம கர்மாதிபனான சனி பத்தாமிடத்தில் இருப்பதாலும்;

31. மதிக்கேழில் மன்னன் தங்க மங்கலன் ஏழி லாட்சி
இதுவிதக் கிரகத் தாலே இயம்பினேம் யோகம் தானும்
ததிபாக்யம் பெரிதாய்ச் செட்டுச் சகலரும் வசிய மாகும்
சதியிலா மனத்த னாகும் சங்கரி கேட்டி டாயே.

31. சந்திர லக்னத்திலிருந்து ஏழாமிடத்தில் குரு தங்கியிருப்பதும், செவ்வாய் எழிலிருந்து தன்னுட்சி செய்வதுமான இத்தகைய கிரக நிலைகளைக் கொண்டு இவனுக்கு யோகத்தைக் கூறினேம். பால், தயிர் பாக்கியம் உள்ளவன். பெரிய வியாபாரங்கள் செய்வான். அனைவரும் இவனுக்கு அடக்கமாவார். குற்றமற்ற மனத்தினன். பார்வதியே! கேட்பாயாக.

32. மைந்தனின் மரண காலம் வரைகின்றோம் எண்பா
[னெட்டில்
விந்தையாய்த் துலாமா தத்தில் வளர்பிறை தசமி தன்னில்
இந்தவ னுடல மேகும் இயம்புவார் அத்திரி தாமும்
பந்தமாய் மூன்றாண் டுக்குள் பாலகன் தனக்குக் கண்டம்.

32. ஜாதகன் மரண காலத்தைக் கூறுவோம். எண்பத்தெட்டாம் வயதில், ஐப்பசி மாதத்தில், சுக்கிலபட்ச தசமி திதியில் இவன் மரணமடைவான். இதைக்கேட்ட அத்திரி முனிவர், பிறந்து மூன்று ஆண்டுகளுக்குள்ளாக ஜாதகனுக்குக் கண்டம்;

33. நேரிடும் என்று சொல்வோம் [1]நிலவுக்கு ஏழில் மன்னன்
தீரமா யிருப்ப தாலே செப்பொணு மார கங்கள்
மாரனுந் தீர்க்க சீவி யறைகின்றோம் இவன்முன் சென்மம்
பாரினில் உயர்வ தான பட்சியின் நகரந் தன்னில் ;

33. எற்படும் என்று கூறினர். சந்திரனுக்கு ஏழாமிடத்தில் குரு வலிவுடனிருப்பதால் மூன்றாண்டுக்குள் மரண மேற்படும் என்று சொல்ல முடியாது. ஜாதகன் நீண்ட ஆயுளைப் பெற்றிருப்பான். இவன் முற்பிறவி யைக் கூறுவோம். உயர்ந்த திருக்கழுக்குன்றத்தில்;

34. உதிப்பனும் இக்கு லத்தில் உயர்வான குடும்பி யாக
அதிபனும் வாழ்வா னுகும் மைந்தனும் சென்ன காலம்
சதிசெயும் சேயின் காலம் திங்களும் நவமே யாகும்
இதுபூர்வ பாகஞ் சொன்னேம் ஈச்வரி கேட்டி டாயே.

34. இக்குலத்திலேயே உயர்ந்த குடும்பத்தில் தோன்றுவான். நன்றாக வாழ்ந்து வருவான். ஜாதகன் பிறந்த காலத்தில் அங்காரக மகா தசையில் இருப்பு ஒன்பது மாதங்கள் ஆம். இவ்வாறு இவனது முதற் பாகத்தைக் கூறினேம். பார்வதியே! கேட்பாயாக.

---

1. சந்திரன்

ஜாதகம் 40

1. மதிதனு பணிபொன் மானில் மழைக்கோளுங் காரி சாடி
புதன்பரி யோனு மேடம் பூமகன் நந்தி யாக
[1]அதிதியும் கடக மாக அரன்விடை சென்ம மாக
இதுவிதக் கோளும் நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் தனுசிலும், ராகு குரு மகரத்திலும், சுக்கிரன் சனி கும்பத்திலும், புதன் சூரியன் மேஷத்திலும், செவ்வாய் விருஷபத்திலும், கேது கடகத்திலும் தங்கி, இலக்கினம் விருஷபமாக வுள்ள கிரகங்களின் அமைப்புக்கு உரிய பலன்களைக் கூறுங்கள்.

	சூரியன் புதன்	லக்கினம் செவ்வாய்	
சுக்கிரன் சனி	இராசி சக்கரம்		கேது
இராகு குரு			
சந்திரன்			

2. மங்கையும் கேட்கும் போது வசிட்டரும் புகலு கின்ரூர்
இங்கிவன் ஆண்பால் சென்மம் இல்லமும் கீழ்மேல் வீதி
தங்கிடும் தென்பால் வாசம் சத்திமா காளி யுத்ரம்
செங்கண்மால் மேல்பா லாகும் தீர்த்தமும் தென்பா லாகும்.

2. பார்வதி கேட்கும்போது, வசிஷ்டர் கூறுகின்ரூர். இஃது ஆண் மகனின் ஜாதகமாகும். இவன் வீடு கிழக்கு மேற்குத் தெருவில், தென் வாடையில் இருக்கும். வடக்குத் திசையில் மாகாளி கோவில் உண்டு. மேற்குத் திசையில் திருமால் கோவிலும், தென் திசையில் ஒரு குளமும் இருக்கும்.

3. இத்தகை யடையா ளத்து ளிலகிய சிறுவூர் தன்னில்
மூந்திய குலமு திப்பான் மொழிகின்ரேம் இவனின் யோகம்
பெற்றதாய்த் தந்தை யோகம் பேதையர் புத்ர யோகம்
சுத்தமாய் முன்பின் சென்மம் செப்புவோம் இந்நூல்
[தன்னில்.

1. கேது.

3. இத்தகைய அடையாள முள்ள சிறிய ஊரில், அந்தணர் குலத்தில் உதிப்பான். இந்த ஜாதகன் யோகத்தையும், தாய் தந்தை மனைவி புத்திரர்களுடைய யோகங்களையும், முன் பின் சென்மங்களையும், இந் நூலில் நன்கு கூறுவோம்.

வேறு

4. தந்தைகுணம் கூறுகின்றோம் மாநி றத்தான்
சரசமாய் வார்த்தையுண்டு தைரி யத்தான்
தந்தமது தரளமொக்கும் ஈகை யாளன்
தான்மாலின் தொண்டுசெய்வன் சமமாம் கல்வி
தந்தையில்லம் வாழாதான் மனைவி யில்லம்
தான்வாழ்வன் இற்செய்வன் தலங்கள் செல்வன்
தந்தமது தரளமொக்கும் முன்கோ பத்தன்
சத்தான பொருளிட்டன் சந்தே கத்தன்.

4. தந்தையின் குணத்தைக் கூறுகின்றோம். கரிய நிறமுடையவன். அழகாகப் பேசுவான். தைரியமுள்ளவன். முத்துப் போன்ற பற்களுடையவன். கொடையாளி. திருமாலுக்குக் கைங்கரியம் செய்வான். சாதாரணக் கல்வி யறிவுள்ளவன். தந்தையின் வீட்டில் வசிக்க மாட்டான். மனைவி வீட்டில் வாழ்வான். வீடு கட்டுவான். புண்ணியத் தலங்கள் செல்வான். முன்கோப முடையவன். சத்துள்ள பொருள்களின்மீது விருப்ப முள்ளவன். சந்தேக மனமுடையவன்.

5. கடுநடையன் கால்பாதை தந்த நோயன்
கஞ்சமாம் ரேகையுண்டு காம ஞெப்பாம்
மடமையில்பால் தானணுகி வாழ்வன் மாதே
வடதிசையில் தான்செல்வன் மரும மில்லான்
விடவாக்கன் துணைகாணுன் கார ணம்சொல்
வேந்துபணி நவத்திருக்க துணைவர் உண்டு
உடன்கூடி வாழாமல் பிரிவி ஆஸ்தி
உட்பட்டு உருமங்கள் உறைவா னென்றோம்.

5. வேகமாக நடப்பான். பற்பிணி யுடையவன். பத்மரேகை இவன் கரத்திலுண்டு. மன்மதனைப் போல் அழகானவன். மனைவி பிறந்தகம் சென்று வாழ்வான். வடக்கு நோக்கிச் செல்லுவான். இரகசிய மில்லாதவன். விஷத்தைப போல கொடிய சொற்களுடையவன். சகோதரர்கள் இல்லாதவன். காரணம் கூறும். குருவும், ராகுவும் ஒன்பதா மிடத்தில் உள்ளதால் சகோதரர்களைப் பெற்றிருப்பான். ஆனால் அவர்களுடன் கூடி வாழாது, மனைவியின் பொருள் சேர்ந்து, வேட்டகத்தில் வாழ்வான் என்று கூறினோம்.

6. முன்சென்மம் தான்புகல்வேன் பழனி தன்னி
லுதித்தனன்காண் வைசியகுலம் செட்டுச் செய்து
பொன்மிகவே தான்படைத்து வாழும் நாளில்
பொய்வார்த்தை பேதையின்மேல் புகலும் போது
அன்னவளும் வருத்தமுற்றுச் சொல்லும் சாபம்
அடாதமொழி தான்புகன்றுய் அறிவில் லாமல்
பின்சென்மம் துணைவிட்டு வேட்ட கத்தில்
பொருந்திடுவாய் என்றுசொல்லி புழுதி தூற்ற;

6. இவன் முன் சென்மத்தைக் கூறுவேன். பழனியில், வைசிய குலத்தில் தோன்றினன். வியாபாரம் செய்து பொருள் சேர்த்து வாழும் போது, ஒரு பெண்ணின் மீது அடாத பொய்ப்பழியைக் கூறும்போது, அவள் வருந்திக் கூறிய சாபம் வருமாறு: அறிவு இல்லாமல் அடாத வார்த்தை களைக்கூறினாய். வரும் பிறவியில் சகோதரர்களுடன் கூடிவாழாது வேட்ட கத்தில் வாழ்வாயாக என்று கூறிவிட்டு, தெருமண்ணைத் தூவினாள்.

வேறு

7. அந்தரம் ததாஸ்து என்ன அடைந்தது அந்தச் சாபம்
தென்திசை சேது சென்று தேறினோர்க் கன்ன மீந்து
துன்மையாய் வாய்புண் கண்டு சேர்ந்தனன் கால நாடு
பொன்னவன் வரையப் பட்டுப் பிறந்தவ னென்று
[சொல்வோம்.

7. பிறகு அப்படியே அந்தச் சாபம் இவனை யடைந்தது. தெற்குத் திசையில் சேதுவுக்குச் சென்று, நல்லோர்க்கு உணவளித்தான். பிறகு வாயில் புண் ஏற்பட்டு மரண மடைந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டுப் பிறந்தவன் இவன் என்று கூறினோம்.

8. ஆகையால் இச்சென் மத்தில் அவன்தந்தை ஆஸ்தி யின்றித்
தோகையின் சாபம் போலே சாருவான் மனைவி யில்லம்
ஏகனாய் வாழ்வா னுகும் இயம்பின மொழியைக் கேட்டுப்
பாகமாய்ப் பராசர் சொல்வீர் பிராமண குலமெவ் வாறு,

8. ஆகையால் இச் சென்மத்தில் தந்தையின் செல்வத்தை யடையாது பெண்ணின் சாபப்படி மனைவி வீட்டை யடைவான். தான் தனித்து வாழ்வான். இவ்வாறு கூறிய சொற்களைக் கேட்டு பராசர், இவன் பிரா மண குலத்தில் எவ்வாறு பிறந்தான்?

9. வந்தகா ரணங்கள் சொல்வாய் மாரனும் முன்சென் மத்தில்
முந்திநேர்க் கன்ன மீந்தும் பாலகன் சேது சென்றும்
அந்ததோர் புண்ணி யத்தால் அருமறைக் குலமு தித்தான்
கந்தனை ஈன்ற மாதே கழறின மொழிகுன் ருது.

9. அதற்குக் காரணங்களைக் கூறுங்கள். ஜாதகன் முன் சென்மத்தில் பெரியோரான அந்தணர்களுக்கு உணவளித்ததும், சேதுவுக்குச் சென்று கடலில் நீராடினதுமான புண்ணியத்தால் அந்தணர் குலத்தில் பிறந்தான். கந்தனைப் பெற்ற பார்வதியே! கூறிய வார்த்தை தவறுது.

10. பாலகன் குணத்தைச் சொல்வேன் பச்சைமால் நிறத்த [ணுகும்
சீலவான் பொறுமை சாலி சென்றிடம் பெருமை ஏற்பன்
ஞாலமேல் நல்லோ னுவன் நனினமாய் வார்த்தை கூர்வன்
மால்பூசை செய்வா னுகும் மனைவிசொல் கடவா னுகும்.

10. ஜாதகன் குணத்தைக் கூறுவேன். கரிய நிறமுடையவன். கல்லெழுக்க முடையவன். பொறுமை யுள்ளவன். சென்ற விடங்களில் சிறப்பைப் பெறுவான். மக்களுக்கு நல்லவனுவான். இனிமையாகப் பேசுவான். திருமாலுக்குப் பூசை செய்வான். மனைவி சொல் கடவாதவன்.

11. வித்தையும் சமம தாகும் வீண்வம்பு புகலா னுகும்
புத்தியில் பெரியோ னுகும் பொய்யது வழுத்தா னுகும்
சுற்றத்தார் மதிக்க வாழ்வன் தந்திசங் கீதம் கற்பன்
நத்திநேர்க் குதவி செய்வன் நாற்காலி விருத்தி அல்பம்.

11. சாதாரணக் கல்வி யுடையவன். வீணை வார்த்தைகளைப் பேசாதவன். கூரிய அறிவு படைத்தவன். பொய் பேசாதவன். பந்துக்கள் மெச்ச வாழ்வான். வீணை முதலிய தந்தி வாத்தியங்களில் சங்கீதம் பயிலுவான். துன்ப மடைந்தவர்களுக்கு உதவி செய்வான். கால்நடைகளின் விருத்தி கொஞ்சமாம்.

12. பலதல வாசம் செய்வன் பரஉப காரி யாகும்
நலம்திருப் பணியும் செய்வன் நற்றந்தை பகையு மாவன்
குலவிடும் பித்த வாயு கூறும்சொல் சுகமே யாகும்
கலகத்தைக் கூரு னுகும் கண்முகம் வசியம் உண்டு.

12. பல புண்ணியத் தலங்களில் வாசம் செய்வான். பிறருக்கு உதவி செய்வான். நல்ல கோவில் திருப்பணிகளைப் புரிவான். தன்னைப் பெற்ற தந்தையை விரோதித்துக் கொள்ளுவான். இவனுக்குப் பித்த வாயு நோய்

வரும். இனிய மொழிகளைப் பேசுவான். சச்சரவு தரும் மொழிகளைக் கூறமாட்டான். அழகிய கண்ணும், முகமும் உடையவன்.

13. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோம் ஆண்பால் [ஒன்று
நவனியில் கன்னி ஒன்று நவிலுவோம் தீர்க்க மாக
அவர்சேதி பின்பா கத்தில் அறிவிப்போம் முனியே கேளும்
தவசியே மணத்தின் காலம் சாற்றுவோம் இனிமே லாக.

13. இவன் சகோதர பாவத்தைக் கூறுவோம். சகோதரன் ஒருவன். சகோதரி ஒருத்தி. இருவரும் தீர்க்கமாக இருப்பர். அவர்களைப் பற்றிப் பிறகு கூறுவோம். முனியே! கேளுங்கள். ஜாதகன் திருமண காலத்தை இனிக்கூறுவோம்.

14. ஈராறு ஆண்டுக் குள்ளே இவனுக்குப் பாரி வாய்க்கும்
நாரியும் வடமேல் திக்கில் நல்கிடும் குணத்தைச் சொல்வேன்
பாரியின் புத்தி ஏற்பன் பரஉப காரி யாகும்
கூறுவாள் சுகமாய் வார்த்தை குணமது இரண்டு முண்டு.

14. பன்னிரண்டு வயதுக்குள்ளேயே இவனுக்கு மணம் நடைபெறும். இவனுக்கு மனைவி வடமேற்குத் திசையிலிருந்து வாய்ப்பாள், அவள் குணத்தைக் கூறுவேன். மேன்மையான குணமுள்ளவள். 'பிறருக்கு உதவி செய்வாள். இன்பம் பயக்கும் மொழிகளைக் கூறுவாள். இருவிதக் குணங்களைப் பெற்றவள்.

15. சஞ்சல மனத்த ளாகும் தாணிரு நிறத்த ளாகும்
தஞ்சமென் றோரைக் காப்பள் தன்துணை ஆண்பால் [காணுள்
கொஞ்சிய மதலை காணுள் கொழுநன்தன் மனதுக் கேற்றோள்
வெஞ்சினம் கொஞ்ச முண்டு வீண்பழி ஏற்கா ளாகும்.

15. குழம்பிய மன முள்ளவள். கரிய நிறமுள்ளவள். அடைக்கலம் என்று அடைந்தவரைக் காப்பவள். சகோதரர்க ளில்லாதவள். புத்திரப் பேறு இல்லாதவள். கணவன் மனத்திற்கு ஏற்றவள், சிறிதளவு கோபம் உண்டு. அடாப்பழிகளை அடைய மாட்டாள்.

16. வயதுமே தீர்க்க மெய்தும் மைந்தர்கள் பலமு ருது
செயமுனி இதனைக் கேட்டு செப்புவார் சங்கை ஒன்று
பயமிலாப் புத்திர தோடம் பகர்ந்தகா ரணங்கள் சொல்வாய்
வியத்தினில் புந்தி யோடு வைரவன் கூடி நிற்க;

16. நீண்ட ஆயுளை உடையவள், புத்திர பாவம் பலமுள்ளதாக இராது. இதைச் செயமுனி கேட்டு ஒரு சந்தேகம் கேட்கின்றார். இவனுக்

குப் புத்திர தோஷம் கூறிய காரணம் என்ன? விரயஸ்தானமாகிய பன்னி ரண்டா மிடத்தில் புதனுடன் சூரியன் கூடியிருப்பதாலும்;

17. தசமத்தில் காரி தங்கச் சந்ததி தோஷம் சொன்னேம்
வசைகளும் பூர்வம் தன்னில் மருவிற்றுப் பாவைக்கே தான்
இசைகுவார் அந்தச் சங்கை இவளுடைப் பூர்வம் கேளாய்
அசைவிலாக் கடையூர் தென்பால் அணுகிய சிறுவூர்
[தன்னில்;

17. பத்தாமிடத்தில் சனி தங்குவதாலும் புத்திர தோஷத்தைக் கூறினேம். முன் சென்மத்தில் இவளுக்குச் சாபமும் உண்டாயிற்று. அதைக் கூறலானார். இவளுடைய முன் சென்மத்தில் திருக்கடையூருக்குத் தெற்கேயுள்ள ஒரு சிறிய ஊரில்;

18. பிறந்தனள் சைவச் சேயாய்ப் பெரிதான குடும்பந் தன்னில்
வரனுண்டாய் மதலை உண்டாய் வாழ்நாளில் வினையைச்
[சொல்வேன்
திருவிலா ஏழை மாது சேயர்க்கு அன்னம் வேண்டித்
தருகுவாய் என்று கேட்கச் சர்ப்பம் போல் கோபமுற்று;

18. சைவ குலத்தில் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்தாள். கணவனையும் மக்களையும் அடைந்து வாழ்ந்து வரும்போது நேர்ந்த தீவினையைக் கூறுகின்றேன். குற்றமில்லாத ஏழைப் பெண் ஒருத்தி தன் குழந்தைக்குச் சாதம் வேண்டினாள். இவள் பாம்பு போல சீறி, கோபம்கொண்டு;

19. இல்லையென் றுரைத்த போது ஏழையும் வருத்த முற்றுப்
புல்லின பாபம் கேண்மோ புதல்வர்கள் தோடம் எய்தும்
வல்லிபின் சென்மம் தன்னில் மருவாது சுதர்கள் தாமும்
சொல்லியே சென்றாள் என்றேம் சேர்ந்தது அந்தச் சாபம்

19. இல்லை யென்று கூறியபோது ஏழை வருந்தி, கூறிய சாபத்தைக் கேட்பாயாக. உனக்குப் புத்திர தோஷம் உண்டாகும். பின் சென்மத்தில் சந்ததிகள் தோன்றா என்று கூறிச் சென்றாள் என்றேம். அந்தச் சாபமும் இவளைச் சேர்ந்தது.

20. தன்னிடைக் கொல்லை தன்னில் தங்கிற்றுக் கருப்பன் சாமி
முன்னோர்கள் தோத்த ரிப்பர் முதல்குலத் தெய்வம் என்று
கன்னிகை தொழாமல் நின்றாள் கருப்பனும் புகலும் சாபம்
மனைசுதர் மருவும் தன்மை சொல்லுவேன் பின்சென்
[மத்தில்.

20. அவள் வீட்டுப் பின்புறத்தில் கரிப்பன் சாமி கோவிலுண்டு. இவள் முன்னோர்கள் தங்கள் குல தெய்வமென்று அதற்குப் பூசை செய்வார்கள். இவள் அதைத் தொழாது இருந்தாள். கருப்பனும் சாபமிடும், இவளுக்கு வரும் சென்மத்தில் மனைவி, மக்கள் முதலியவர் நிலைக்கும் தன்மையைப் பற்றிக் கூறுவேன்.

21. மைந்தரும் உதிக்கா வண்ணம் மருவுவேன் உன்பால் [யானும்
இந்தவார் சொல்லி யேதான் ஏகிற்று வேறு சாகை
அந்ததோர் சாபம் தானும் அணுகிற்றுப் பாவைக் கேதான்
சுந்தரிக் கந்தி யத்தில் சுதர்களும் தோஷ மெய்தி;

21. புதல்வர்கள் தோன்றுதவாறு உன்னை நான் அடைவேன். இவ்வாறு கூறி, கருப்பன் வேறிடம் சென்றுவிட்டது. இவளை அந்தச் சாபமும் வந்தடைந்தது. இவளது கடைசி நாட்களில் புத்திர தோஷம் ஏற்பட்டு,

22. மனமது சஞ்ச லத்தால் மறலியின் பதிக்குப் புக்கிக்
கனமுள பிரமன் பக்கம் கலந்தனள் இந்த மாது
வினையது ஏழை சாபம் மேவிடும் முனியின் தோஷம்
பிணையாகும் சுதர்கள் என்றோம் பிறக்கினும் தீதே யாகும்.

22. மனம் வருந்தி இறந்து போனாள். பிறகு பிரமனால் படைக்கப் பட்டாள். இவளை ஏழை சாபமும், கருப்பன் சாபமும் வந்தடைந்தன. அதனால் புத்திர தோஷம் ஏற்பட்டது. புதல்வர் தோன்றினாலும் நிலைத் திராது.

23. இதுவன்றிப் பால னாலே எய்திற்று சிலவே தோடம்
அதன்பலன் புகலு மென்ன அவனுடைப் பூர்வம் கேளாய்க்
கதிதரும் பாண்டி தன்னில் கலந்தனன் நட்டுவ னாக
மதிமுக மாதர் கட்கு வாத்தியாம் பரதம் சொல்லி;

23. இதைத் தவிரவும், ஜாதகனாலும் சில தோஷங்கள் ஏற்பட்டன. அதைக் கூறுங்கள். அவனுடைய முன் சென்மத்தைக் கேளுங்கள். மோட்ச மளிக்கும் பாண்டிய நாட்டில், நட்டுவனாகப் பிறந்தான். அழகிய பெண்களுக்கு ஆசான் ஒருவன் பரத நாட்டியம் கற்பித்து;

24. இருக்கிற காலம் தன்னில் இவன்செய்த கொடுமை கேளாய்க்
கருவீழி மார்கள் மோகம் கலந்தனன் ஆல யத்தில்
மருவிற்று அதனால் தோடம் வாத்தியின் சாபம் ஒன்று
குறுகிற்றுப் பால னுக்குக் கோதையே கேட்டி டாயே.

24. வரும் காளில், இவன் செய்த தீமையைக் கேளுங்கள். அழகிய விழிகளே உடைய பெண்கள் மீது மையலுற்று, கோவிலில் அவர்களுடன் புணர்ந்தான். அந்தத் தோஷம் இவனே யடைந்தது. ஆசிரியர் சாபம் ஒன்றும் இவனே யடைந்தது. பார்வதியே! கேட்பாயாக.

25. அந்திய காலந் தன்னில் அரனுக்குத் தொண்டு பூண்டு
தென்திசை சேது சென்று சலமார்க்கம் தீர்த்தம் தந்து
விந்தையாய்க் கால நாடு மேவியே பிரமன் லக்கம்
மூந்தின குலமு திப்பான் மேவிடும் இரண்டு தோடம்.

25. கடைசி காலத்தில் சிவபெருமானுக்குத் தொண்டாற்றி, தெற்கி லுள்ள சேதுவுக்குச் சென்று, மார்க்கத்தில் தண்ணீர்ப் பந்தல் வைத்து, மரணமடைந்தான். பிறகு பிரமனுல் படைக்கப்பட்டு அந்தணர் குலத்தில் உதித்தான். அந்த இரு குற்றங்களும் இவனைத் தொடர்ந்தன.

26. புத்திர தோட மெய்தும் பராசரும் தடுத்துச் சொல்வார்
வித்தகன் முன்சென் மத்தில் வேசியர்க் கல்வி சொல்லும்
குத்தமாம் குலமு தித்தோர் குலவுமிச் சென்மந் தன்னில்
முத்திய குலம்எவ் வாறு விளங்கும்கா ரணங்கள் சொல்வாய்.

26. புத்திர தோஷம் உண்டாகும். பராசரர் மறித்துக் கூறுகின்றூர். வித்தகன் முன் சென்மத்தில் வேசியருக்குக் கல்வி போதிக்கும் இழிவான குலத்தில் உதித்ததால், இந்தச் சென்மத்தில் உயர்ந்ததான அந்தணர் குலம் இவனுக்கு எவ்வாறு ஏற்படும்? காரணங்களைக் கூறுங்கள்.

27. தாகப்பந் தலுமை மைத்தும் சேதுவின் பதிக்குச் சென்றும்
நாகத்தை அணிந்தோன் தொண்டு நாயகன் புரிந்த தாலும்
ஆகம குலமு திப்பான் அச்சேது புண்ணி யத்தால்
போகாதோ வினைக ளும்தான் பேசுவீர் முனியே நீர்தாம்.

27. தண்ணீர்ப் பந்த லமைத்து, சேதுவுக்குச் சென்று, இராமலிங் கத்தைப் பூசித்ததாலும் அந்தணர் குலத்தில் உதிப்பான். சேது ஸ்நானத் தால் வினைகளும் நீங்கி விடாதா? தாங்களே கூறுங்கள்.

28. உபதேசம் செய்தோன் சாபம் ஒதுங்காது எதுசெய் தாலும்
தவசியே புத்திரன் தோன்றுன் சாற்றுவீர் கிரிகை யொன்று
இவன்செய்த தோடத் துக்கு இயம்புவோம் கிரிகை
[யொன்று
பவநீக்கும் அரங்கம் சென்று பகவானை அருச்சித் தேத்தி.

28. குருவின் சாபம் எந்தச் சாந்தி செய்தாலும் நீங்காது. முனிவரே புத்திரன் தோன்றுவதற்கான சாந்தியொன்று கூறுங்கள். இவன் செய்த தோஷத்திற்கு ஒரு சாந்தி கூறுவோம். பிறப்பை விடுவிக்கும் மேன்மையான ஸ்ரீரங்கம் சென்று பகவானைப் பூசித்து;

29. அங்குள மறையோ ரான ஐந்துபேர்க் கன்ன மீந்து
கந்தமும் விடங்கள் சொர்ணம் கிருத்தியம் போலே தந்தால்
சங்கைகள் விலகு மென்றும் தன்மனை செய்வி னைக்குத்
துங்கமாம் கர்ம சாந்தி செய்துமே சத்தி யாகும்.

29. அங்கு வாழும் ஐந்து பிராமணர்களுக்கு உணவளித்து, சந்தனம் புஷ்பம் தட்சிணை இவைகளை விதிப்படி அளித்தால், இவன் செய்த தோஷங்கள் நீங்கும் என்றும். தன் மனைவி தோஷத்துக்கு உயர்ந்த கரும சாந்தி செய்து, அம்பிகையின் மந்திரத்தை;

30. இரணிய ரேக்கில் கீரி இயம்பியே சாத்திர மூலம்
அரிவையும் அணிந்து கொள்ள அவ்வினை பிந்தி யேதான்
பிறந்திடும் ஆண்பால் ஒன்று பிழையென்று செய்யா னாகில்
மருவாது சுதர்க ளென்றும் மங்கையே கேட்டி டாயே.

30. தங்கத் தகட்டில் வரைந்து ஜெபித்து, சாஸ்திரங்களில் கூறிய படி இவன் மனைவியும் அணிந்து கொண்டால், அத்தத் தோஷம் நீங்கும். பிறகு புத்திரன் ஒருவன் தோன்றுவான். சாந்திகள் செய்யாவிட்டால் புத்திரர்கள் தோன்றமாட்டார். பார்வதியே! கேட்பாயாக.

31. சொல்லிய படிசெய் யாரேல் சுதனுக்கும் மனைக்கும் கர்மம்
புல்குவாள் விபரம் சொல்வாள் பேதையின் பின்னோன்
[புத்ரன்
அல்லலில் லாமல் செய்வன் அறிவிப்போம் பின்பால் சேதி
தொல்லையை விலக்கு மெங்கள் தோகையே கேட்டி டாயே.

31. சொன்னபடி செய்யாவிடின் ஜாதகனுக்கும் அவன் மனைவிக்கும் இறந்த பின் செய்யும் கருமத்தை இவன் மனைவிக்குச் சகோதரனின் மகன் கஷ்டமின்றிச் செய்து முடிப்பான். மற்றவை பிறகு கூறுவோம். துன்பங்களை விலக்கும் எங்கள் பார்வதியே! கேட்பாயாக.

32. இன்னவன் யோகச் சேதி இயம்புவோம் இனிமே லாக
உன்னத சித்தத் தாலே உயர்பெரு புகழு மேற்பன்
பொன்பணி அதனால் சேர்ப்பன் பின்தசைப் பின்பா கத்தில்
தன்னில்லம் வேறு செய்வன் தரணிகள் சேர்ப்பா னாகும்.

32. இவனுடைய யோகங்களை இனிக் கூறுவோம். மேன்மையான மனத்தாலே உயர்ந்த பெரும் புகழை அடைவான். அதனால் பொன்னணிகள் பல சேர்ப்பான். பிற்காலத்தில், தான் வசிக்க, வேறு வீடு கட்டுவான். நில புலன்களையும் சேர்ப்பான்.

33. முப்பது இரண்டாண் டின்மேல் விளம்புவோம் விசேட [யோகம்

தப்பிதம் அதன்முன் னுகச் சல்லியம் சஞ்ச லங்கள்
எப்போதும் செலவு முண்டு இடிவிழு மாம்போ லொப்பாம்
செப்பினீர் யோக மெவ்வார் செங்கதிர் விரயம் புக்க.

33. இவனுக்கு முப்பத்திரண்டாம் வயதில் விசேஷ யோகங்கள் உண்டு. அதற்கு முன் பல துன்பங்கள், கடன் தொல்லைகள், மனக் குழப்பம், இடி விழுவதைப் போல எதிர்பாராத சிலசெலவுகள் ஏற்படும். "எவ்வாறு யோகங்களைக் கூறினீர்கள்? சூரியன் விரயஸ்தானமான பன்னிரண்டிலும்"

34. மன்னனுக் கீராறில் திங்கள் மருவியே சகட யோகம்
முன்வய தினில்ப லன்கள் உரைக்கவே மாட்டோம் யாங்கள்
தன்மகள் மாது யோகம் சார்ந்திடும் பின்பா கத்தில்
அன்னிய ருதவி யாலே அநேகபாக் கியங்கள் சேர்ப்பன்.

34. குருவுக்குப் பன்னிரண்டில் சந்திரனும் இருப்பதால் சகடயோகம் இருக்கும். இளமையில் நாங்கள் பலன்களைக் கூறமாட்டோம். தன் மகன், மனைவி இவர்களின் யோகம் பின் பாகத்தில் கூறுவோம். பிறருதவியால் பல நன்மைகளை யடைவான்.

35. திருப்பணி செய்வா னுகும் திருமாலின் பூசை ஏற்பன்
பெருமையும் புகழும் எய்தும் பூஷணம் பூமி யில்லம்
திருவிலா மூவா யிரம்பொன் ஏற்படும் இந்தப் பாலன்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

35. திருப்பணிகள் புரிவான். விஷ்ணு பூசையும் செய்வான். மதிப்பையும், புகழையும் அடைவான். ஆபரணங்கள், நிலபுலன்கள், வீடு, தீதில்லாத மூவாயிரம் பொற்காசுகள் இவைகளையும் அடைவான். வேதங்களின் இறுதியில் விளக்கப்படும் பரம்பொருளான பார்வதியே! கேட்பாயாக.

36. அன்னையும் நற்குணத்தாள் அன்புள மனத்த ளாகும்
அன்னியர் குற்றம் சொல்லாள் ஆளனுக் கினிய ளாகும்
அன்னமும் அன்பா யீவள் அதிகமாய் விர்த மேற்பள்
அன்னியர் மதிக்க உய்வள் அம்பிகை யாளே கேளாய்.

36. தாயும் நற்குண முடையவள். அன்பு நிறைந்த உள்ள முடையவள். பிறர்மீது குற்றம் கூறுதவள். கணவனால் நேசிக்கப்படுபவள். அன்

புடன் உணவளிப்பவள். அதிகமாக விரதங்களைக் கடைப் பிடிப்பாள். பிறர் புகழ வாழ்வாள். பார்வதியே ! கேட்பாயாக.

37. பித்ததே கத்த ளாகும் பேதைக்குத் துணைஆண் தோடம்
சக்திமார் இருவர் தீர்க்கம் சஞ்சலம் ஒருத்தி யென்றும்
சுத்தமாய்ப் பின்பா கத்தில் செப்புவோம் விபர மாக
முந்தின சென்மம் தன்னை மொழிகின்றும் அன்னைக்
[கேதான்.

37. பித்த தேகமுடையவள். சகோதர தோஷ முடையவள். சகோதரிகள் இருவர். ஒருத்தி நிலைக்க மாட்டாள். ஆதலின் ஒருத்தியே இருப்பாள். பின்பகுதியில் விவரமாகக் கூறுவோம். தாயின் முன்சென்மத்தைக் கூறுவோம்.

38. கொங்குநாடு அதனி லேதான் குதித்தனள் இக்கு லத்தில்
தீங்கிலாக் குடும்பி யாகித் திகைத்தோர்க்கு உதவி செய்து
ஆங்கவள் வினையில் லாமல் ஆளன்முன் மரண மாகி
ஏங்கினேன் வரைய வந்தாள் ஈசுவரி கேட்டி டாயே.

38. கொங்கு நாட்டில் இதே குலத்தில் தோன்றினாள். குற்றமற்ற குடும்பங்களைப் பெற்று துன்பமடைந்தவருக்கு உதவிசெய்து, குற்றமின்றி வாழ்ந்து கணவனுக்கு முன்பு மரண மடைந்தாள். பிறகு பிரமனால் படைக்கப்பட்டு பிறந்தாள். ஈசுவரியே ! கேட்பாயாக.

39. ஆறுறு ஆண்டு தன்னில் அன்னைக்குக் கெண்ட மெய்தும்
கூறுவோம் இவள்பின் சென்மம் கூடலில் இக்கு லத்தில்
தீரமாய் உதிப்பா ளாகும் செல்வங்க ளதிக முண்டாய்ப்
பாரினில் தவங்கள் செய்யுங் பார்வதி கேட்டி டாயே.

39. ஜாதகனின் முப்பத்தாறும் வயதில், தாய்க்கு மரணம் எற்படும். இவள் பின்சென்மத்தைக் கூறுவோம். மதுரையில் இதேகுலத்தில் இவள் தோன்றுவாள். செல்வங்களை மிகுதியாகப் பெற்று வாழ்வாள். உலகில் பல தவங்கள்புரிந்த பார்வதியே ! கேட்பாயாக.

40. முப்பது எட்டு ஆண்டில் விளம்புவோம் தந்தை கண்டம்
செப்புவோம் இவன்பின் சென்மம் திருவள்ளூர் தன்னி
[லேதான்
ஒப்புவான் இக்கு லத்தில் உரைத்தது தப்பா தாகும்

.....

40. ஜாதகனின் முப்பத்தெட்டாம் வயதில், தந்தை மரண மடைவான். இவன் பின் சென்மத்தைக் கூறுவோம். திருவள்ளூரில், இதே குலத்தில் தோன்றுவான், கூறியது தவறுது.

இப்பாடலின் நான்காம் வரி எட்டிலில்லை.

ஜாதகம் 41

1. கலிகட கத்தில் தங்கக் கதிர்புதன் வெள்ளி கன்னி
நிலமகன் குருவும் கோலில்நீலனும் தேள தாக
[1]மலிப்பாம்பும் மேரு வாக மாடது சென்ம மாகக்
குலவினுல் பலனெவ் வாறு கூறுவீர் முனிவே நீர்தாம்.

1. சந்திரன் கடகத்திலும், சூரியன் புதன் சுக்கிரன் கன்னியிலும், செவ்வாய் குரு துலாத்திலும், சனி விருச்சிகத்திலும், ராகு தனுசிலும் தங்கியிருந்து, இலக்கினம் விருஷபமாக இருந்தால் அதற்கு உரிய பலன்களைக் கூறுங்கள், முனிவரே.

<table>
<tr><td></td><td></td><td>லக்கினம்</td><td>கேது</td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">இராசி
சக்கரம்</td><td>சந்திரன்</td></tr>
<tr><td></td><td></td></tr>
<tr><td>ராகு</td><td>சனி</td><td>செவ்வாய்
குரு</td><td>சூரியன்
புதன்
சுக்கிரன்</td></tr>
</table>

2. தென்முனி புகலு கின்றூர் செனித்திடும் பெண்பா லாகும்
கன்னிகை யில்லம் சொல்வேன் கதிரவன் வாச லாகும்
தென்திசை கணேச னுண்டு பாஞ்சாலி வடபால் ஆகும்
துன்னுமால் மேல்பா லாகும் செப்பிய சிறுவூர் தன்னில்;

2. அகத்தியர் கூறுகின்றூர். இஃது ஒரு பெண்ணின் ஜாதகமாகும். இவள் வீட்டைக் கூறுவேன். அது கிழக்குநோக்கிய வாயிலை உடையது. வீட்டிற்குத் தெற்கில் விநாயகப் பெருமான் கோவிலுண்டு. வடக்குத் திசையில் திரௌபதியின் கோவிலிருக்கும். மேற்கே திருமால் கோவிலுண்டு. இவ்விதமான ஓர் சிறிய ஊரில்;

3. மருவுவாள் செட்டி யாக மாதுரு தந்தை யோகம்
பெருஞ்சுதர் வரனின் யோகம் பின்துணை புத்ரர் யோகம்
திருமகள் முனபின் சென்மம் செப்புவோம் இந்நூல்
[தன்னில்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

1. ராகு

3. இவள் செட்டிமார் குலத்தில் தோன்றுவாள். தாய், தந்தை, புத்திரர், கணவன், சகோதரர் அவர்களின் புதல்வர்கள் ஆகிய இவர்களின் யோகங்களையும், இவளுடைய முன்பின் சென்மங்களையும் பற்றி இந்நூலில் கூறுகின்றேம். யானேமுகக் கடவுளைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

வேறு

4. தந்தை குணத்தைக் கூறுகின்றேம்
சரச வார்த்தை [2]தயவாளி
விந்தை யாகப் பேசிடுவன்
மெல்லி மார்கள் மோகமுளன்
சிந்தை கபடு மில்லாதான்
சகத்தோர் வசியம் கொண்டிடுவன்
பந்தி னோர்கள் மதிக்கவுய்வன்
பகல்பா கங்கள் தான்செய்வன்.

4. தந்தையின் குணத்தைக் கூறுகின்றேம். அழகாகப் பேசுவான் கருணை யுள்ளவன். விநோதமாகப் பேசுவான். பெண்களின் மீது ஆசை யுள்ளவன். மனத்தில் கபட மில்லாதவன். உலக மக்களை வசியம் செய்து கொள்வான். சுற்றத்தார் மதிக்க வாழ்வான். தாழ்நிலைமையைக் கைக் கொள்வான்.

5. இடுவன் ஏழை தமக்கன்னம்
இடரே செய்வன் சிலருக்குக்
கடனே கொள்வன் நிவர்த்திசெய்வன்
கருது வானும் இருவார்த்தை
படையில் செல்வான் பலர்நேயன்
பகவான் பக்தி அதிகமிலான்
விடம்போல் கோபம் பின்சாந்தம்
மெல்லி மானுல் பழியேற்பான்.

5. ஏழைகளுக்கு உணவளிப்பான். சிலருக்குத் துன்பங்களைச் செய்வான். கடன் வாங்குவான். அதை அடைத்தும் விடுவான். இருவிதமாக உரையாடுவான். படைகளில் சேர்ந்து பணியாற்றுவான். கடவுளிடம் அதிக பக்தியில்லாதவன். விஷம்போல் கொடிய கோபம் உண்டு. உடனே சாந்தமடைவான். ஒரு பெண்ணுல் பழி ஏற்பான்.

6. மன்ன னுலே சிவனங்கள்
மருவும் மரண மட்டுமுய்வன்
சொன்ன வார்த்தை தான்காப்பன்
துவாரை அரசன் போல்வாழ்வன்
பொன்னும் சேர்ப்பன் செலவுசெய்வன்
புகழ்ந்தோர்க் கன்பன் பொய்மெய்யான்
பின்னமில் லாதான் காமன்தொழில்
புரிவான் புசிப்பு சுகியென்றேம்.

6. இவன் இறக்கும்வரை அரசாங்க உத்தியோகம் செய்து வருவான். தான் சொன்னசொல் தவறுதவன். துவாரகைக்கு மன்னனான கண்ணன் போல் இனிதாக வாழ்வான். பொருள் சேர்ப்பான். அதைச் செலவும் செய்வான். தன்னைப் புகழ்ந்தவர்களை நேசிப்பான். பொய்யும் மெய்யும் கலந்து பேசுவான். கட்டமைந்த உடலுடையவன். மன்மதனைப் போல் அழகுள்ளவன். மன்மதனது தொழில் செய்வான். நல்ல போசன சுகமுடையவன்;

7. என்றேம் அதுவும் இட்டமுளன்
இரக்க முடையன் ஈகையுளன்
குன்று மனத்தன் துணையாண்பால்
கூறும் இரண்டே விருத்தியதாம்
சென்ற இடத்தில் பெருமையுளன்
சிறப்பாய் வாழ்வன் யூகையுளான்
வென்றி அரசர் இட்டனுமாம்
வித்தை யிரண்டும் மேவிடுமே.

7. என்று சொன்னேம். போஜனத்தில் விருப்பமுடையவன். இளகிய மனமுடையவன். கொடையாளி. ஒன்றுக்கும் கலங்காத மன முடையவன். இவனுக்கு இரு சகோதரர்கள் தீர்க்கமாக இருப்பர். சென்ற விடங்களிலெல்லாம் சிறப்பைப் பெறுவான். மேன்மையாக வாழ்க்கை நடத்துவான். ஊகித்தறிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவன். வெற்றி வேந்தர்களால் விரும்பப்படுவான். இரு தாரைகளில் கல்வி பயின்றிருப்பான்.

வேறு

8. சொன்னவிந்த குணத்தானுக் கிந்தப் பாவை
தோன்றிடுவள் இவள்குணத்தைச் செப்பக் கேண்மோ
கன்னல்மொழி கல்வியுண்டு பொறுமை சாலி
கருதிடாள் பொய்வார்த்தை கனத்த புத்தி
அன்னியர்கள் மதிக்கஉய்வள் வறுமை காணுள்
அஞ்சினவார்த் தையுடையள் ஆவு விருத்தி
பொன்பணிகள் உடையவளாம் புறஞ்சொல் லாதாள்
புருடன்மனம் போல்வாழ்வள் பூவை தானே.

8. இந்த குணமுடையவனுக்கு ஜாதகி புதல்வியாய்த் தோன்றுவாள். இவள் குணத்தைக் கூறுவோம். கேளுங்கள். இனிமையாகப்பேசுபவள். கல்வி பயின்றவள். பொறுமையை அணியாகக் கொண்டவள். பொய் மொழியை மனத்தாலும் கினையாதவள். மேன்மையான அறிவுடையவள். பிறர் மெச்ச வாழ்வாள். வறுமை யறியாதவள். பயந்து பேசும் தன்மை உடையவள். கால்நடைச் செல்வம் பெருகும். பொன்னாலான ஆபரணங்களைப் பெற்றிருப் பாள். புறஞ்சொற்களைக் கூறமாட்டாள். கணவன் மனத்திற்கேற்ப நடப்பாள் இவள்.

9. பூவைக்குத் துணையாண்பால் இரண்டே யாகும்
பெண்ணொன்று தீர்க்கமுறும் அந்தம் தன்னில்
ஆவலாய் அவள்சேதி சொல்வோம் முன்னோன்
அரசனுல் தொழிலேற்பன் அதிகா ரத்தன்
தாவினோர்க் குதவிடுவன் பொறுமை யாளன்
சகடுவா கனமுடையன் கல்வி மேன்மை
மேலவர்கள் உறவுகொள்வன் விகடங் கூறான்
மெல்லியொன்று தீர்க்கமுறும் விசனங் காணான்.

9. இவளுக்கு உடன் பிறந்தவர்களில், சகோதரர் இருவரும் சகோதரி ஒருத்தியும் தீர்க்கமாக இருப்பர். அவளைப் பற்றிக் கூறுவோம். இவள் சகோதரன் அரசாங்கத்தில் பணியாற்றுவான். நல்ல அதிகாரமுடை யவனுவான். தன்னை யடைந்தவர்களுக்கு உதவி செய்வான். பொறுமை உடையவன். வண்டி முதலிய வாகன வசதிகள் இவனுக்கு உண்டு. மேலான கல்வி கற்பான். பெரியோர்களின் நேசம் கொள்வான். நகைச்சுவை யுண் டாகப் பேசமாட்டான். ஒரு மனைவியை உடையவன். வாழ்க்கையில் விசனத்தை யறியாதவன்.

10. சுதராண்பால் ரெண்டாகும் கன்னி அவ்வார்
செப்புகின்றேம் தீர்க்கமதாய்ச் சிறப்பாய் வாழ்வன்
அதன்பின்னுல் துணைசேதி அழக னுவன்
அறிவாளி தந்திரமொழி அன்னிய பாடை
இதங்களால் அரசுசெய்வன் மேலோர் பத்தி
மேதினியில் இடம்பனுய் மேவு வான்ம்
கதியென்றேர் தமைக்காப்பன் மனைவி யொன்று
கருதுவோம் ஆண்ஒன்று கழறு வோமே.

10. இவனுக்குப் புத்திரர்கள் இருவரும் பெண்கள் இருவரும் சீரும் சிறப்புமாகத் தோன்றுவர். இவள் சகோதரனைப் பற்றிக் கூறுவோம். அழகுள்ளவன். அறிவுள்ளவன். தந்திரமாகப் பேச வல்லவன். நல்ல தன்மை

யுடன் அதிகாரம் செலுத்துவான். பெரியோர்களிடம் பக்தி உள்ளவன். உலகில் பகட்டாக வாழ்க்கை நடத்துவான். கதியில்லே என்பவர்களுக்கு உபகாரம் செய்வான். ஒரே மனைவியுண்டு. ஆண்மகன் ஒருவன் தோன்றுவான் என்று கூறுவோம்.

11. கன்னியுமே மூன்றுகும் தீர்க்க சீவி
காதலனும் வயதுதீர்க்கம் கனமாய் வாழ்வன்
மன்னரால் பெருமையுளன் தனமும் சேர்ப்பன்
வருவோரை ஆதரிப்பன் மறித்துச் சொல்வன்
அன்னவன்பின் கன்னிகுணம் சுகமாய் வார்த்தை
அடைந்தோரை ஆதரிப்பள் அஞ்சா நெஞ்சம்
முன்கோபம் பெருமையுண்டு மூலச் சூடு
மொழிகாப்பள் சிறுமையிலாள் உயர்வாய் வாழ்வள்.

11. பெண்கள் மூவர் தோன்றுவர். அவர்கள் தீர்க்கமாவர். கணவனும் நீண்ட ஆயுளேப்பெற்று மேன்மையாக வாழ்வான். அரசர்களால் மேன்மை அடைவான். செல்வங்களேச் சேர்ப்பான். விருந்தினர்களே உபசரிப்பான். கூறிய வார்த்தைகளேத் தடித்துக் கூறும் இயல்புள்ளவன். அவன் இளைய சகோதரியின் குணத்தைக் கூறுவேன். அழகாகப் பேசுவாள். அடைந்தவர்களே வரவேற்று உபசரிப்பாள். எதற்கும் பயப்படாத மனமுடையவள். முன் கோபம் உண்டு. மேன்மை யுள்ளவள். மூலச்சூட்டு நோயால் வருந்துவாள். சொன்ன சொல் தவறுதவள். வறுமை யற்றவள். மேன்மையாக வாழ்க்கையை நடத்துவாள்.

12. வரனுமே கீழ்ப்பாலில் மருவு மென்றும்
மைந்தர்களும் ஆண்காணுள் கன்னி ரெண்டு
திறமாகும் சத்தியிதே மதிப்பா ளாகும்
செப்புவோம் பின்பாலில் சேதி யாவும்
அரிவைக்கு ஈரேழு ஆண்டு தன்னில்
அணுகிடுமே கீழ்ப்பாலில் வரனு மேதான்
தெரிவிப்போம் அவன்குணத்தை நெஞ்சம் சிந்தை
நலம்சிவந்த மெய்யாகும் யூக சாலி.

12. அவளுக்குக் கணவனும் கிழக்குத் திசையிலிருந்து வாய்ப்பான். புத்திரர் இல்லே. இரு பெண்கள் உண்டு. அவர்கள் தீர்க்கம். மதிப்புடையவள். இவர்களேப் பற்றிப் பிற்பகுதியில் பேசுவோம். ஜாதகிக்கு பதினன்தாம் வயதில், கிழக்குத் திசையிலிருந்து கணவன் வாய்ப்பான். அவன் குணத்தைச் சொல்லுவோம். நல்ல மன முடையவன். சிவந்த உடலுடையவன். ஊகித்தறியும் ஆற்றலுள்ளவன்.

13. அரசனுல் சீவனமும் அணுகு மென்றேரும்
அழகான கல்வியுண்டு அல்ப போகி
குறையென்றேர்க் குதவிடுவன் பொருளுஞ் சேர்ப்பன்
குலமதிப்பாய் வாழ்ந்திடுவன் குணவா னுவன்
திருமாலின் ரேகையுண்டு செய்த நன்றி
மறவாது மிருசிவப் புடைய னுமே.

13. அரசாங்கத்தில் வேலை ஏற்று ஜீவிப்பான். நல்ல கல்வி கற்பான். சிறிதே சுகமுள்ளவன். துன்பமடைந்தவருக்கு உதவி செய்வான். செல்வமும் சேர்ப்பான். குலமதிப்புக் குன்றாது இனிது வாழ்வான். நற்குண முடையவன். இவன் கையில் விஷ்ணு ரேகையுண்டு. செய்நன்றி மறவாதவன். கருமை கலந்த சிவந்த மேனியன்.

வேறு

14. சுதர்களும் அறுவர் தோன்றும் சோர்வுறும் முதலில்
[மூன்றும்
சதமாகப் பின்பால் மூன்றும் தீர்க்கமா மதிலாண் ஒன்று
மதிமுகப் பெண்பால் ரெண்டு வறைகின்றேரும் இவளுக்
[கேதான்
எதுவிதக் குற்றத் தாலே ஏகிடும் முதலில் மூன்று.

14. இவளுக்கு ஆறு சந்ததிகள் தோன்றுவர். முதல் மூன்று அழிந்து போம். பின் மூன்றும் தீர்க்கமாம். அம்மூவரில் ஆண்மகன் ஒருவன். பெண்கள் இருவர். இவளுக்கு எதனுல் முதல் மூன்று சந்ததிகளும் மாண்டு போம்.

15. நந்தியும் சென்ன மாக நற்சனி ஏழில் தங்க
ஐந்தினில் புந்தி வெள்ளி அமர்ந்திடச் சொன்னேம் யாங்கள்
முந்தின சென்மந் தன்னில் மேவிற்றுச் சிலவே தோடம்
வந்தவாழ் தன்னை நீங்கள் அறிவிப்பீர் முனியே நீர்தாம்.

15. விருஷபம் இலக்கினமாகவும். சனி ஏழாமிடத்திலும் புதன், சுக்கிரன் ஐந்தாமிடத்திலும் தங்கி இருப்பதால் நாங்கள் முதல்மூன்று சந்ததி தோஷத்தைக் கூறினேம். முன் சென்மத்தில் சில தோஷங்களும் இவனை யடைந்தன. முனிவரே! அவற்றைத் தாங்கள் கூறுங்கள்.

16. கன்னிகை பூர்வம் சொல்வேன் கஞ்சனூர் தன்னி லேதான்
வன்னிய குலமு தித்து வாழ்நாளில் வினையைச் சொல்வேன்
தன்னிலம் அடைக்க லானுஞ் சார்ந்துமே கருவு வைத்து
அன்னது வாழும் நாளில் அதம்செய்தாள் கருவைத்
[தானும்.

16. பெண்ணின் முன் சென்மத்தைக் கூறுவேன். கஞ்சனூர் என்னும் ஊரில் வன்னிய குலத்தில் தோன்றி வாழ்ந்து வந்த நாளில், இவளுக்கு ஏற்பட்ட தீவினையைக் கூறுவேன். தன் வீட்டில் பறவை, கூடு கட்டி முட்டை யிட்டிருந்தது. அது வளரும்போது அக்கருவை யழித்து விட்டாள்.

17. பட்சியின் சாபத் தாலே பாலர்கள் இல்லா ளாகி
வித்தகி மரண மாகி வேதியன் வரையப் பட்டு
முந்திய குலமு தித்தாள் மேவிடும் பட்சி சாபம்
புத்திரர் முதலில் மூன்று பொருந்தாது பாவைக் கேதான்.

17. பட்சியின் சாபத்தாலே புத்திரர் இல்லாதவளாகி, இவள் மரண மடைந்து, பிரம்மனுல் படைக்கப்பட்டு பிராமணர் குலத்தில் உதித்தாள். இவளைப் பட்சி சாபமும் தொடர்ந்தது. அதனுல் முதலில் தோன்றும் மூன்றும் நிலைத்திரா.

18. அவ்வினை தீர வேண்டி அருளுவீர் கிரியை தானும்
எவ்வினை செய்த போதும் இடரது இடரே யாகும்
பவ்வமாய் இவளின் யோகம் பகருவோம் குறைவி ராதாள்
திவ்விய வரனுக் கேதான் செகராசர் பேட்டி எய்தும்.

18. அந்தத் தோஷம் நீங்க ஒரு சாந்தி கூறுங்கள். எந்தச் சாந்தி செய்தாலும் குற்றம் குற்றமே. பொருத்தமாக இவள் யோகத்தைக் கூறுவோம். எவ்விதக் குறையுமற்றவள். இவளுடைய கணவனுக்கு அரசர்கள் பேட்டி கிடைக்கும்.

19. மாதுவும் போன பின்பு வரனுக்கு யோக மென்றேம்
காதலிக் கன்பாய் நாலு ஆண்டினில் கணவன் ஏகும்
ஓதுவேன் அன்னை சேதி உள்மனம் கபடு மூண்டு
சாதிப்பாள் மூர்க்கம் கொஞ்சம் சர்ப்பம்போல் கோபம்
[உண்டு.

19. இவளை மணந்தபிறகே அவனுக்கு யோகங்கள் என்றுசொன்னேம். மணமான நான்காம் ஆண்டிலேயே கணவன் இறப்பான். இவள் தாயின் வரலாற்றை யுரைப்போம். மனத்தில் கபடமுடையவள். மூர்க்கத் தனமாகத் தான் கூறியவற்றையே சாதிப்பாள். பாம்புபோல் கோப மடைவாள்.

20. பின்புத்தி உடைய ளாகும் பேசிடாள் அதிக வார்த்தை
கன்னியுங் துணைஆண் காணுள் காதலி ஒன்றே தீர்க்கம்
அன்னிய மாதர் தானும் அவள்சுகம் கொள்வா ளாகும்
தன்னிழல் போலே மாது தங்குவாள் தன்னில் லத்தில்.

20. பின் புத்தி யுடையவள். அதிகம் பேசமாட்டாள். அவளுக்குச் சகோதரர் இல்லை. சகோதரி ஒருத்தியே தீர்க்கமாக இரும்பாள், வேறு பெண் ஒருத்தி அவளுக்கு சன்மை செய்வாள். இவள் வீட்டில் நிழல் போல் தொடர்ந்து கொண்டே அந்தப் பெண் தங்கி யிருப்பாள்.

21. ஏதுகா ரணத்தி னலே இம்மாது இல்லம் வாசம்
ஓதுவீர் குணமும் சங்கை உரகன்போல் கோபம் ஏற்பள்
சாதிப்பாள் சிறிது சங்கை சந்தேக மனத்த ளாகும்
சூதிலாள் மால்நி றத்தாள் சொல்லது அதிகம் ஏற்பள்.

21. எந்தக் காரணத்தால் பெண் ஒருத்தி இவள் வீட்டிலே வாசம் செய்வாள்? அவள் குணத்தைக் கூறுங்கள். பாம்பைப் போன்று கோபம் உடையவள். கூறியவற்றைச் சாதிக்கும் பிடிவாத முள்ளவள். சந்தேகப்படும் தன்மையானவள். குற்ற மில்லாதவள். கரிய நிறமானவள். பழியே அதிகமாக ஏற்பாள்.

22. அன்னம்போல் சாய லொக்கும் அதிகாரம் இன்னும் [செய்வள்
முன்னொரு மாரன் பக்கல் மேவியே சுதரும் உண்டாய்க்
கன்னிகை அவனை நீங்கிக் கலந்தனள் தந்தை யில்லம்
இன்னவள் பூர்வ தோடம் இயம்புவோம் இனிமே லாக.

22. அன்னம் போல் சாயலுடையவள். அதிகமாக அதிகார முடைய வள். கணவனைப் பெற்று புத்திரப் பேற்றை யடைந்தாள். பிறகு இவள் அவனை விட்டு நீங்கி, தந்தை இல்லம் அடைந்தாள். ஜாதகியின் முன் சென்ம ஜீவினையை இனிக் கூறுவோம்.

23. மாதுவின் சென்மம் சொல்வேன் [1]வாயுவின் தலத்தி [லேதான்
பேர்தன முடையா னுக்குப் பிறந்தனள் வைசியச் சேயாய்க்
காதலி வாழும் காலம் கனத்ததோர் பொருளும் கொண்டு
சூதான லாபத் துக்குத் தோகையு மீந்து மேதான்.

23. ஜாதகியின் வீட்டில் வசிப்பவளது முன் சென்மத்தைக் கூறுகின் றேன். காளஹஸ்தி என்னும் தலத்தில் பெரிய செல்வமுடைய வைசியனுக்

1. காளஹஸ்தி

குப் புத்திரியாய்த் தோன்றினாள். இவள் வாழ்ந்து வரும்போது, பெரும் பொருளைப் பெற்று அதிக லாபத்துடன் ஒரு பெண்ணுக்கு ஒரு பொருளைக் கொடுத்தாள்.

24. சிலதுநாள் சென்ற பின்பு தேவியும் மாண்டா ளென்றேரும்
பலமுள பொருளும் வாங்கப் புகுந்தனள் இந்த மாது
தலைவியும் மரண மட்டும் சாருவாள் இல்லம் தன்னில்
குலம்விளங் காது என்றேரும் குழவிக்கு இருபான் ஏழில்;

24. சிலநாட்கள் சென்றபின் இவள் இறந்து போனாள். தான் அதிக லாபத்துக்குக் கொடுத்த பொருளை வாங்கிய பெண், இவள் வீட்டில் வசிக்கின்றாள். அவள், வீட்டு எஜமானி இறக்கும்வரை இவ் வீட்டிலேயே இருப்பாள் என்று கூறினேம். இவள் குலம் விளங்காது என்றேரும். இவளுக்கு இருபத்தேழாம் வயதில்,

25. விலகுவாள் காலநாடு விளம்புவோம் இவள்பின் சென்மம்
தலமதில் உயர்வ தான தில்லையில் ரெட்டி வம்சம்
பலமுள தனவா னுக்குப் பிறப்பளாம் சுகமுள் ளோளாய்
மலையிறை மகளே யாங்கள் வழுத்துவோம் அன்னை பூர்வம்.

25. மரண மேற்படும். இவள் பிற் பிறப்பைக் கூறுவோம். மிக உயர்ந்த தலமாகிய சிதம்பரத்தில், ரெட்டியார் வமிசத்தில், பெரும் செல்வவா னுக்குப் புத்திரியாய்த் தோன்றுவாள். சுகமுள்ளவளாக இருப்பாள். இமயத் னின் பெண்ணே! இவள் தாயின் மூன் சென்மத்தை நாங்கள் கூறுகின் றேரும்.

26. திருக்கடை யூரி லேதான் செனித்தனள் தீயின் வம்சம்
வறுமைகள் இல்லா வாழும் காலத்தில் வினையைச்
[சொல்வேன்
உரைத்தனள் நிந்தை வார்த்தை உடையவன் தம்பி பேரில்
சிறியவன் மனங்க லங்கிச் செப்புவான் சாபந் தானே.

26. திருக்கடையூரில், வன்னியர் குலத்தில் தோன்றினாள். தரித்திர மில்லாமல் வாழும் நாளில் சேர்ந்த தீவினையைக் கேளுங்கள். தன் கணவன் தம்பி மீது அடாப்பழிகளைக் கூறினாள். கணவன் தம்பியும் மனம் வருந்திச் சாபமளித்தான்.

27. பொய்ப்பழி சொன்ன பாவி பின்சென்மந் தன்னி லேதான்
தையலர் அநேகம் பேர்கள் சாருவார் உன்சு கத்தை
நையவே மனத்த ளாகி நல்காது துணை ஆ ணுந்தான்
ஐயமா மனத்தான் சொல்ல அணுகிற்று அந்தச் சாபம்.

27. அடாத பழிகளைச் சொன்ன பாவியே! வரும் பிறப்பில் பெண்கள் பலர் உன் நலத்தைப் பகிர்ந்து கொள்வர். சகோதரர்கள் தோன்றுமையால் மீனம் வருந்தும்படி நேரும் என்று, துன்பப்பட்ட மனமுள்ளவன் கூற, இவளை அச்சாபம் தொடர்ந்தது.

28. மரணமே யாகி யின்னேள் மறையோனல் வரையப் பட்டு
அரிவையும் உதித்தா ளென்றோரும் அணுகுமைத் துனன்சா
[பத்தால்
உறையாது துணையா ணுந்தான் உறைந்திடும் அநேக மாதர்
திருகாக நாற்ப தாண்டில் செல்லுவாள் கால நாடு.

28. இவள் மரணமடைந்து, பிரமனால் படைக்கப் பட்டுத் தோன்றி னள். தன் மைத்துனன் சாபத்தாலே சகோதரர் தோன்றவில்லை. பெண் கள் பலர் தோன்றுவர். நாற்பதாம் வயதில் மரண மடைவாள்.

29. பின்சென்மம் [1]பிருதிவி தன்னில் பிறப்பளாம் சௌராஷ்டிர
[வம்சம்
தந்தையின் பூர்வம் சொல்வேன் சீர்காழி தன்னி லேதான்
விந்தையாய் வடுகர் வர்க்கம் மேவியே பெருமை பூண்டு
தன்தனம் அதிக முண்டாய்த் தானமும் சிலர்க்கு ஈந்து;

29. பின்பிறப்பு; காஞ்சீபுரத்தில், சௌராஷ்டிர குலத்தில் தோன்று வாள். இவள் தந்தையின் முன் சென்மத்தைக் கூறுவேன். இவன் சீர்காழி என்னும் தலத்தில், தெலுங்கர் மரபில் தோன்றி, பெருமையுடன் பெருஞ் செல்வம் பெற்று, சிலருக்குத் தான தருமங்கள் வழங்கி;

30. பெரியர்தம் உறவு பூண்டு புக்கினன் கால நாடு
மறையோனல் வரையப் பட்டு வந்தவ னென்று
[சொல்வோம்
குறைவிலா இருபான் மூன்றில் ஆண்டுக்கும் அரசு ஓங்கும்
நிறையவே முப்பான் மூன்றில் நேருவான் கால நாடு.

30. நல்லவர் நட்புக் கொண்டு மரண மடைந்தான். மீண்டும் பிரமனால் தோற்றுவிக்கப் பட்டு, இவள் தந்தையாகப் பிறந்தான். இருபத்து மூன்றும் ஆண்டில் யோகங்கள் சிறப்புற்றிருக்கும். முப்பத்து மூன்றும் வயதில் மரண மெய்துவான்.

---

1. காஞ்சீபுரம்

31. மறுசென்மம் விரிஞ்சி தன்னில் மன்னர்தங் குலமு தித்துக்
கரிபரி யுடைய னுகிக் காவலன் வாழ்வா னுகும்
அரிவைக்கு அறுப தாண்டில் ஆடிமா தத்தி லேதான்
உறைகுவாள் கால நாடு உத்தமி கேட்டி டாயே.

31. மறு பிறப்பு, விரிஞ்சி புரத்தில், க்ஷத்திரியக் குலத்தில் பிறந்து, யானை குதிரையாகிய பரிவாரங்களைப் பெற்று, சுகமுற வாழ்ந்து வருவான். ஜாதகிக்கு அறுபதாம் வயதில், ஆடி மாதத்தில் மரண மேற்படும். பார்வதியே! கேட்பாயாக.

32. பின்சென்மம் வான்மி யூரில் பிறப்பளாம் கங்கை சேயாய்
அன்னவள் சனன காலம் [1]அலரியின் மகனி ருப்புப்
பொன்னெனப் பதினெட் டாண்டும் செப்பினேன் பூர்வ [பாகம்
உன்னத வானைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

32. பின் சென்மம் திருவான்மியூரில் வேளாள மரபிற் பிறப்பாள். அவள் ஜனன காலத்தில் சனி மகா தசையில் இருப்பு; வருடம் பதினெட்டு. இவ்வாறு பூர்வ பாகத்தைக் கூறினேன். விசாயகக் கடவுளைப் பெற்ற தாயே! கேட்பாயாக.

33. ஈரெட்டு ஆண்டு தன்னில் இவள்தந்தை அன்னை கண்டம்
காரிழை வரன்முன் சென்மம் கழறுவோம் காஞ்சி [தென்மேல்
தேரின அருகர் வர்க்கம் செனித்துமே வணிபம் செய்து
நாரியும் மதலை யின்றி நமன்பதி சென்று இன்னேன்;

33. இவளது பதினாறும் வயதில், இவள் தாய் தந்தையர்களுக்கு மரணம் நேரிடும். இவள் கணவனின் முன் சென்மம் கூறுவோம். காஞ்சிபுரத்திற்குத் தென் மேற்கில், நல்ல சமணர்கள் குலத்தில், இவன் தோன்றி வியாபாரம் செய்து, மனைவி மக்களைப் பெறுமலேயே மரணமடைந்து;

34. [1]வேதனல் வரையப் பட்டு விளங்கிய னிவனே யென்றும்
ஓதுவேன் இவன்பின் சென்மம் உயர்மலே வேங்க டத்தில்
நீதிலாச் சைவச் சேயாய்ச் செனித்துமே வணிபம் செய்வன்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்

34. பிரமதேவனால் மீண்டும் படைக்கப்பட்டு, இவள் கணவனாகத் தோன்றினன் என்றும். இவன் பின் பிறப்பைக் கூறுவேன். உயர்ந்த மலையாகிய வேங்கடத்தில் (திருப்பதிமலையில்) குற்றமில்லாத சைவ குலத்தில் தோன்றி, வியாபாரம் செய்வான். யானையைப் பெற்ற பரிசுத்தமான பார்வதியே! கேட்பாயாக.


---

1. சூரியன் மகன்: சனி.
2. பிரமன்

ஜாதகம் 42

1. மதியும் தேளில் சிகிமானில்
மந்தன் சாபு பணியலவன்
உதயன் புதனும் மேடமுற
[1]ஒருகண் ணுடையோன் சேய்நந்தி
இதுவே கிரகம் தானின்று
இடபம் சென்மம் தானுக
அதுவே பலன்கள் எவ்வாறு
அறிவிப் பீர்கள் தவமுனியே.

1. சந்திரன் விருச்சிகத்திலும், கேது மகரத்திலும், சனி கும்பத்திலும், ராகு கடகத்திலும், சூரியன் புதன் மேஷத்திலும், சுக்கிரன் [2]குரு செவ்வாய் விருஷபத்திலும் தங்கி, விருஷப லக்கினத்தில் பிறந்த ஜாதகருக்கு பலன்கள் எங்ஙனம்? கூறுங்கள் முனிவரே!



2. மாதே ஆண்பால் சென்னமுமே
மருவு மில்லம் வடவாடை
போதே கீழ்மேல் வீதியது
பேரு ராகும் அருகர்குலம்
மேதி லநேக வாலயமாம்
மேவும் சேட்ட னுயுரைப்போம்
ஓதும் குடும்பச் சேதிதனை
உரைப்போம் இந்நூல் உத்தமியே.

---

1. சுக்கிரன்

2. பத்தாம் பாடல் 6ஆம் வரி காண்க.

2. பார்வதியே! இஃது ஆண் பிறப்பாகும். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில், வடக்கு வரிசையில் உள்ளதாகும். பெரிய ஊர். ஜைனர் குலம். அவ்வூரில் அநேகக் கோயில்கள் உள்ளன. இந்த ஜாதகன் தன் தந்தைக்கு மூத்த புதல்வனுகப் பிறந்தான் என்று சொல்லுவோம். இவன் குடும்பச் செய்திகளை இந்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் கூடி வோம். தாயே!

3. தந்தை துணையாண் டிரண்டாகும்
சகத்தி மார்கள் தோடமுறும்
அந்த இருவர் பின்னுகும்
அறிவிப் போம்முன் னேன்சேதி
விந்தை யாகப் பேசிடுவன்
விரதம் காப்பன் சீலமுளன்
நந்தி ஆவு பணியோர்கள்
நல்கும் வறுமையி லாதவனே.

3. ஜாதகனின் தந்தைக்குச் சகோதரர்கள் இருவர். சகோதரிகள் தோன்றி யிலர். சகோதரர்கள் இருவரும் இவன் தந்தைக்கு இளையவர் கள். அவ்விருவரில் மூத்தவன் செய்தியைச் சொல்லுவோம். வேடிக்கை யாகப் பேசுவான். விரதங்களைக் காப்பான். ஒழுக்கமுள்ளவன். காளைகள், பசுக்கள், பண்ணை, எர்கள் விருத்தியுள்ளவன். ஏழைமை யில்லாதவன்.

4. மனவி யுண்டாய் மதலையின்றி
மடிவான் மத்தில் என்றுரைப்போம்
வினையாம் காலம் தானுரைப்பீர்
மேவு மிரண்டா மாண்டதனில்
கனமாம் பின்னேன் குணங்கேளாய்
கல்வி அற்பம் சொலுமல்பம்
சினமே உடையான் கிருஷிசெய்வான்
தீர மனத்தன் தேவியரே.

4. மனவி ஏற்பட்டு, குழந்தை யில்லாமல், மத்திய வயதில் மடிவான் என்று சொல்லுவோம். இவன் மரண காலத்தைச் சொல்லுவீர்? மணமாகி, இரண்டு ஆண்டுகளில் மரணம் உண்டாகும். இவனுக்கு இளையவனின் தன் மையைக் கேள். சிறிதே படிப்புடையவன். அற்பமான சொற்களைப் பேசு வான். கோப முள்ளவன். விவசாயம் செய்வான். தைரியமுள்ள மன முடையவன். தேவியே!

5. வறுமை யிலாதான் மனைவியொன்று
மகவு ஆண்பால் ஒன்றதுமே
அரிவை யிரண்டு விருத்தியதாம்
அவனும் தீர்க்க முறவாழ்வன்
துரையாம் பிதாவின் குணமுரைப்பேன்
சொல்லைக் காப்பன் சுகவார்த்தை
பெருமை குணமும் வறுமையிலான்
பூமி விருத்தி செய்திடுவான்.

5. தரித்திர மில்லாதவன். இவனுக்கு மனைவி ஒருத்தியே. ஆண் மகன் ஒருவன் உண்டு. பெண்கள் இருவர் தோன்றித் தீர்க்கமாவர். இவனும் தீர்க்காயுளுட னிருப்பான். இவன் தந்தையின் குணத்தைக் கூறுவோம். சொன்ன சொற்களைக் காப்பான். சுகமாகப் பேசுவான். மேலான குணமுள்ளவன். தந்திர மில்லாதவன். நிலபுலங்களை விருத்திசெய்வான்.

6. [1]இடுவன் ஏழை தமக்கன்னம்
இடரே செய்யான் சுகையுடன்
கடனே கொள்வன் குற்றமிலான்
குறியாய்ப் பிதாவின் குணமுரைப்பேன்
கொடுமை யெவர்க்கும் நிவிர்த்திசெய்வன்
கஞ்சம் ரேகை கரத்திலுறும்
நடையு நன்மை துணைகாப்பன்
நலிந்தோர் நேயன் அறமிச்சை
விடைசொல் லாதான் பெரியோர்க்கு
மேலா முத்ரந் தானுரைப்பன்.

6. ஏழைகளுக்கு உணவளிப்பான். எவருக்கும் தன்பங்கள் செய்யான். கொடைக்குண முடையவன். கடன் வாங்குவான். குற்ற மில்லாதவன். இனி, ஜாதகனின் தந்தையின் குணத்தைச் சொல்லுவோம். துன்பமடைந்தவர்களை அவற்றினின்று விடுவிப்பான். கையில் பத்ம ரேகையுண்டு. நல்ல ஒழுக்க முள்ளவன். சகோதரர்களை ஆதரிப்பான். ஏழைகளுக்கு நண்பன். தருமம் செய்வதில் விருப்பமுண்டு. பெரியவர்கள் கூறுகின்ற சொற்களுக்கு எதிர்மொழி கூறான். கூறினாலும் சிறந்த முறையில் விடை கூறுவான்.

---

1. இப்பாடலில் ஒருவரி மிகுந்துள்ளது.

வேறு

7. சொன்னவிந்த குணத்தானுக் கிந்தப் பாலன்
தோன்றிடுவன் இவன்குணத்தைச் செப்பக் கேண்மோ
கன்னன்மொழி சகையுளன் கல்வி மானும்
கனராசர் பேட்டிகொள்வன் காம ரூப்பாம்
அன்னியரை உறவுகொள்வன் ஆட்கள் சேர்க்கை
அடைந்தோரை ஆதரிப்பன் அரசு செய்வன்
பொன்பணிகள் புரவிவண்டி பொருந்து மென்றோம்
புகழோற்பன் பூமிவிருத்தி புறஞ்சொல் லாதான்.

7. இங்ஙனம் கூறப்பட்ட குணங்களே யுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இவன் குணங்களைக் கூறுவோம், கேளுங்கள். கரும்புபோல் இனிய சொற்களைப் பேசுவான். கொடைக்குண முள்ளவன். படிப்பாளி. அரசர்களைப் பேட்டி காண்பான். மன்மதனே யொத்த அழகுடையவன். அயலாரையும் நட்பாகக் கொள்ளுவான். வேலையாட்கள் உளர். தன்னை யடைந்தவர்களைக் காப்பான். அரச பதவி போன்ற மேலான பதவியை ஏற்பான். பொன்னுபரணங்கள், குதிரைவண்டிகள் முதலியன சேரும். கீர்த்தி பெறுவான். நிலபுலன்கள் விருத்தி யுள்ளவன். புறங்கூற மாட்டான்.

8. உபதேசம் பெறுவானும் உண்மை யாளன்
உரைதவிரான் சின்னூட்கள் வேறூர் வாசம்
பவமனமு மில்லாதான் பராசர் சொல்லப்
பிருகுமறுத் தோதுகின்றூர் பால னுக்கு
நவனியில்யோ கங்கள்சொன்னீர் விபரஞ் சொல்வீர்
நவதசமம் ஒன்றுகத் தசத்தி லேறப்
பவமின்றி குருபுகர்சேய்ச் சென்மம் தங்கப்
பகர்ந்திட்டோம் வீணமத்தள யோகந் தாயே.

8. நல்லவர்கள் உபதேசத்தைப் பெறுவான். உண்மை யுடையவன். சொன்ன சொற்களை மீறமாட்டான். சிலகாலம் வேற்றூரில் சென்று வசிப்பான். உலக இன்பங்களில் அதிகப் பற்றில்லாதவன். இங்ஙனம் பராசரர் சொல்ல, பிருகு முனிவர் மறுத்துக் கூறுகின்றூர். ஜாதகனுக்கு யோகங்கள் பல உண்டாம் என்று கூறினீர்கள். எப்பொழுது ஏற்படும் என்று விவரமாகக் கூறுங்கள். ஒன்பதாம் இடத்துக்கும் பத்தாம் இடத்துக்கும் உரியவனுகிய சனி, பத்தாமிடத்தில் தங்கியிருப்பதாலும், குரு சுக்கிரன் செவ்வாய் லக்னத்தில் சேர்ந்து இருப்பதாலும், 'வீணை மத்தள வாத்திய யோகங்கள்' ஏற்படும் என்று கூறினேம்.

9. தர்மகர்மன் அறுமூன்று யோகம் தாமும்
சாற்றுகின்றேரும் அதன்விவரம் தயாள மாவன்
மர்ம்மிலான் அரசர்பக்கல் மருவி உய்வன்
வானவர்போல் வாழ்ந்திடுவன் வறுமை காணுன்
சிரமமது எவர்க்குமெண்ணுன் தொழிலு மேன்மை
செயமுனியும் மறுத்துரைப்பார் சேய னுக்கு
வறுமையின்றித் தொழிலணுகும் காலம் சொல்வீர்
மாரனுக்கு மூவெட்டாண் டதனில் நேரும்.

9. தர்மகர்மாதிபதியான சனியினுல் பதினெட்டு யோகங்கள் உண்டாம் என்று சொல்லுவோம். அவற்றில் சில விவரங்களைக் கூறுவோம். தயை யுள்ளவன். இரகசிய மில்லாதவன். அரசர்களைச் சார்ந்து தொழில் செய்து ஜீவிப்பான். தேவரைப்போல் சிறப்புடன் வாழ்வான். தரித்திர மில்லாமல் இருப்பான். எவருக்கும் துன்பம் செய்ய நினையான். தொழிலால் மேன்மை யுண்டாம். செய முனிவர் இடைமறித்துக் கூறுவார். ஜாதகனுக்குத் தரித்திர மில்லாமல் மேன்மையான தொழில் வாய்க்கும் காலம் எப்பொழுது என்று கூறுங்கள். இவனுடைய இருபத்து நான்காம் வயதில் மேன்மையுள்ள தொழில் நேரும்.

10. நேருநாள் முதலாக இருபத் தெட்டு
நிகராண்டு மட்டரசு செய்வா னுகும்
பாரில்லம் பணிபொருளும் இருபதினு யிரமாம்
பொன்படைப்ப னுமிதற்குள் தொழிலுக் கீனம்
நேராதோ விபரத்தைப் புகல்வீர் ஐயா
[1]நிருபன்புகர் சென்மமதில் நின்ற தாலே
வேறுதீங்கு காணுமை வந்த போதும்
வெய்யவன்முன் பனிபோல விலகு மென்றேரும்.

10. யோகம் வந்த நாள் முதல் இருபத்திரண் டாண்டுக்குள், அரசனைப் போல் ஒப்பில்லாத தொழில் புரிவான். பெரிய வீடு, ஆபரணங்கள், செல்வம், இருபதினுயிரம் வெண்பொற் காசுகள் இவற்றை யடைவான். செய்யுந் தொழிலுக்குத் தாழ்வு நேருமோ? விவரமாகச் சொல்லுங்கள். குருவும் சுக்கிரனும் லக்கினத்தில் தங்கி யிருப்பதால், தீங்கு எவையும் நேரா நேர்ந்தாலும் சூரியனுக்கு முன் பனியைப் போல் விலகும் என்று கூறினேம்.

---

1. குரு

11. பாலகன்பின் துணையாண்பா லிரண்டே யாகும்
பைங்கிளிபோல் மொழியுடைய பாவை யவ்வார்
ஞாலமேல் விருத்தியதாம் பிற்பா கத்தில்
நவிலுவோம் அவர்குணத்தை நாங்க ளம்மா
சாலவே தாய்க்குணத்தைச் சாற்றக் கேண்மோ
சாந்தகுணம் மாநிறத்தாள் தவருள் வார்த்தை
ஆலம்போல் முன்கோபி அடைந்தோர்க் கன்பள்
ஆபத்தில் சிலர்காப்பாள் அறையாள் பொய்யும்.

11. ஜாதகனுக்குப் பின் பிறந்த சகோதரர் இருவர். பசுங் கிளியைப் போல் பேசும் சகோதரிகள் இருவர். இவர்கள் உலகில் தீர்க்கமா யிருப் பர். அவர்கள் குணங்களைப் பற்றி விவரமாகப் பிற்பகுதியில் நாங்கள் சொல்லுவோம். தாயே! ஜாதகியின் குணத்தைச் சொல்லுவோம். கேளுங் கள். சாந்த குணமுள்ளவள். கரிய நிறத்தினள். சொன்ன சொல் தவரு தவள். கொடிய விஷம் போன்ற முன் கோபத்தை யுடையவள். தன்னிட மடைந்தவரைக் காப்பாள். துன்ப மடைந்தவர்களையும் காப்பாள். பொய் கூறுள்.

12. அன்னமிட ஆசையுளாள் வறுமை காணுள்
ஆளன்மன மேத்தவளாம் அதிதிக் கன்பள்
அன்னையிலம் வடகீழ்ப்பால் துணையாண் ஒன்று
அம்பிகைமார் நால்வரென் றறையக் கேண்மோ
சொன்னதிலே ஒருமாது துக்க மேற்பள்
சொல்லுவேன் பின்பாகம் சேதி யாவும்
தல்லியின்தன் பூர்வமதைச் சாற்றக் கேண்மோ
சீயாழி தனில்பிரம குலமு தித்து;

12. உணவு கேட்பவர்களுக்கு உணவு அளிக்க விருப்ப முள்ளவள். தரித்திரமில்லாதவள். கணவன் மனத்துக் குகந்தவள். விருந்தாக வந்த வர்க்கு இனியவள். இவள் தாய் வீடு வட கிழக்குத் திசையிலுள்ளது. இவளுக்குச் சகோதரன் ஒருவன் உண்டு. சகோதரிகள் நால்வர் என்று கூறுவோம்: கேளுங்கள். மேற்கூறியவரில் ஒரு பெண் துக்க முடையவள். அவர்களைப் பற்றிய செய்திக ளனைத்தையும் பிற் பாகத்தில் சொல்லுவோம். தாயின் முற் பிறப்பைக் கூறுவோம். கேளுங்கள். சீகாழியில் அந்தணர் குலத்தில் பிறந்து;

13. நெறிகாத்தும் நிமலன்மனம் போல வாழ்ந்தும்
நீத்தோர்க்கு அன்ன மீந்தும் வறுமை யின்றி
மறலிபதி வரன்முன்னே அணுகி யேதான்
மறையவனுல் வரையவந்த மாதா வென்றேன்
குறையின்றி வாழ்ந்திடுவாள் கொடுமை காட்டாள்
கூறுகின்றேரும் பின்சென்மம் கோகர் ணத்தில்
வருகுவாள் சத்ரியவம்சம் பெருமை பூண்டு
மாதுவுமே வாழ்ந்திடுவாள் மதிப்பா கத்தான்.

13. கற்பு நெறி தவறாது, கணவனின் மன மறிந்தவளாய் வாழ்ந்து, துறவிகட்கு உணவளித்து, தரித்திரம் இல்லாமல், கணவனுக்கு முன்பாக யமபுர மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு இவன் தாயாகப் பிறந் தாள் என்று கூறினேம். நிறைந்த மனமுடன் வாழ்வாள். எவரிடமும் கொடியத் தன்மையைக் காட்டாதவள். இவள் மறு பிறப்பைக் கூறுகின் ரோம். திருக்கோகர்ணம் என்ற தலத்தில், சுத்திரிய வமிசத்தில் பிறந்து, பெருமையேற்று, மதிப்பாக வாழ்க்கை நடத்துவாள்.

14. தந்தையின்தன் பூர்வமதைச் சாற்றக் கேண்மோ
சடகோபன் வாழரங்க நாட்டி லேதான்
விந்தையாய்க் கிருஷிசெய்யும் வேளா ளுக
மேவியே கிராமச் செட்டுச் செய்யுங் காலே
நொந்திடுமோர் மாதின்மேல் வேறொ ருத்தன்
நீங்காத மோகமுற்று வினவும் போது
அந்தவளு மிசையாமல் பலவந் தத்தால்
அவன்போகம் தான்துய்த்தான் அவளும் வெட்கி;

14. ஜாதகன் தகப்பனுரின் முற் பிறப்பைச் சொல்லுவோம். கேட்பா யாக. நம்மாழ்வார் அவதரித்து வாழ்ந்த திருக்குருகூரைச் சேர்ந்த பிரதே சத்தில், விவசாயத் தொழில் புரியும் வேளாள மரபினுகப் பிறந்து, கிரா மத்தில் வியாபாரம் செய்து வாழ்ந்திருந்தான். அந்நாளில் ஒருவன், அவ் வூரிலிருந்த ஏழைப் பெண்ணொருத்தியின் மீது மோகங்கொண்டு, அவளைத் தன் விருப்பத்துக் கிணங்கும்படி கேட்டான். அவள் இணங்காமலிருக்கவே அவன் பலவந்தமாய் அவளிடம் இன்ப மனுபவித்தான். அந்தப் பெண் வெட்க மடைந்து,

15. அதிகாரி இடத்தில்சொல் தூதே விட்டு
அழைத்தவனே வினவியே பொருளும் பெற்று
வதிசதிமேல் நிந்தைசொல் மனவெ றுப்பால்
மாரன்பால் பொருள்பெற்றே என்மேல் குற்றம்
சதிசொன்னாய்ப் பின்சென்மம் துணையெ னைப்போல்
சாராது மத்தியஞ்சஞ் சலங்க ளேற்பாய்
விதவிதங்கள் தானுரைத்துத் தெருத்தூள் தூற்ற
மேவிற்று அந்தசாபம் வேந்த னுக்கு.

15. அந்த ஊர் அதிகாரியிடம் இந்தச் செய்தியைச் சொல்லும்படி ஜாதகனின் தந்தையை அனுப்பினாள். இவன், கற்பழித்தவனிடம் பொருளைப் பெற்றுக் கொண்டு பெண்ணின் மீது தவறு கூறினான். இவள் அதனைக் கேட்டு, மனவெறுப்புடன், "என்னைக் கற்பழித்த கயவனிடம் பொருள் பெற்றுக்கொண்டு, என் மீது குற்றம் கூறினாய். மறு பிறவியில் என்னைப் போல் உடன்பிறந்தா ரில்லாமல் இருப்பாய். இடைக் காலத்தில் துன்பங்கள் பல ஏற்படும்" என்றும் இன்னும் பலவாறு கூறியும் தெரு மண்ணை வாரி இறைத்தாள். அந்தச் சாபம் இவனை யடைந்தது.

வேறு

16. அந்தியக் காலம் தன்னில் அவன்வாயில் ரணமும் கண்டு
அந்தகன் பக்கல் சென்று அயனுலே வரையப் பட்டு
வந்தவ னென்று சொல்வோம் மாதுவின் சாபம் போலே
தன்துணை கன்னி காணுன் சஞ்சல மத்தில் நேரும்.

16. கடைசிக் காலத்தில், வாயில் புண் உண்டாகி, மரண மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, இப் பிறப்பில் இவன் தந்தையாகப் பிறந்தான் என்று கூறுவோம். முன் சென்மத்தில் உண்டான பெண்ணின் சாபத்தின்படி இப் பிறவியில் தனக்குச் சகோதரி யில்லாதவனுவன். துன் பங்கள் மத்திய காலத்தில் நேரும்.

17. மறுசென்மம் வேங்க டத்தில் வருவனுஞ் சத்ரிய சேயாய்த்
திருமக னிச்சென் மததில் செய்தபுண் ணியங்க ளென்ன
அருகர்தன் பக்தி யாயும் ஆபத்தைச் சிலர்க்குக் காத்தும்
மருமமில் லாதா னுயும் வருவதால் உதிப்ப னுகும்.

17. மறு பிறவியில், திருவேங்கடத்தில் க்ஷத்திரிய குலத்தவனுகப் பிறப்பான். ஜாதகன் இப் பிறவியில் செய்த நல் வினைகள் யாவை? ஜின தேவனிடம் பக்தி பூண்டவனுயும், துன்பங்களிலிருந்து சிலரைக் காப்பாற்று பவனுயும், மனத்தில் எதையும் மறைத்து வையாதவனுயும் இருந்து வரு வதால், மறு பிறவியில் க்ஷத்திரிய குலத்தில் பிறப்பான்.

18. ஆறுறு ஆண்டு தன்னில் அணுகிய மேட மாதம்
நீரமாய்த் தந்தை கண்டம் செப்புவோம் நாற்ப தாண்டில்
[1]காரிழை மாதம் தன்னில் காலன்தன் நகர மன்னே
சேருவா ளென்று சொல்வோம் செப்பிய மொழிகுன் ரூது.

18. ஜாதகனின் முப்பத்தாரும் வயதில், சித்திரை மாதத்தில், தந்தைக்கு மரணம் உண்டாகுமென்று சொல்லுவோம். இவனது நாற்பதாம் வயதில் புரட்டாசி மாதம் தாயார் மரண மடைவாள் என்று கூறுவோம். நாங்கள் கூறிய சொற்கள் தவரு.

19. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் இருபான் ஒன்றில்
நீலியும் வடமேல் நேரும் நுவலுவோம் அவள்கு ணத்தைச்
சீலமும் பொறுமை சாலி தேறின புத்தி யுண்டு
காலத்தை யறிந்து ரைப்பள் கணவனுக் கினியா ளாகும்.

19. ஜாதகன் திருமண காலத்தைச் சொல்லுவோம். இருபத்தோரும் வயதில், இவனுக்கு வடக்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் குணத்தைச் சொல்லுவோம். நல்லொழுக்க முடையவள். பொறுமை யுள்ளவள். தெளிவான புத்தியுண்டு. காலமறிந்து பேசுவாள். கணவனுக்கு உகந்தவள்.

20. இந்திர மனைபோல் ஒப்பாம் இடரான புத்தி யுள்ளாள்
வந்தவர்க் கன்ன மீவள் மாதுவும் யோக சாலி
சுந்தரி இணக்க வார்த்தை சிரித்தோர்மேல் பட்ச முண்டு
பந்தணி மாது தீர்க்கம் பார்வதி கேட்டி டாயே.

20. இந்திரன் மனைவி போன்றவள். சில சமயங்களில் இடக்கான புத்தி யுடையவள். வீடு தேடி வந்தவர்களுக்கு உணவு அளித்து உபசரிப்பாள். அதிர்ஷ்ட முடையவள். பொருத்தமான சொற்களைப் பேசுவாள். அன்பாகப் பேசுபவர்களிடம் பிரியத்துடன் இருப்பாள். இவள் தீர்க்காயுளுடன் விளங்குவாள். பார்வதியே! கேட்பாயாக.

21. புத்திர விருத்தி தன்னைப் புகலுவே பலமு ரூது
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகும் என்று சொல்வோம்
குத்தத்தைச் சொல்லு மென்னக் [2]கூரியோ னஞ்சோ ரூகிப்
பத்தின தீரா ருகிப் பகர்விடை சென்ம மாக;

---

1. புரட்டாசி
2. புதன்

21. இந்த ஜாதகனுக்குப் புத்திர பாவத்தைப் பற்றிக் கூறுவோமெனின், அது வலிவுள்ளதாக இல்லை. பிறந்தாலும் தவறிப்போம் என்று சொல்லுவோம். புத்திர தோஷம் ஏற்படக் காரணம் என்ன? கூறுங்கள். ஐந்தாமிடத்துக்குரிய புதன், விரயஸ்தானமாகிய பன்னிரெண்டில் தங்கி, லக்கினம் விருஷபமாகவும்;

22. இருப்பதால் புகன்றோரும் யாங்கள் இயம்புவார் அத்திரி
[தானும்
குருவுமே அஞ்சைப் பார்க்கக் [1]கருமத்தோன் ஆட்சி யாகப்
பெறுஞ்சுதர் தன்னுல் கருமம் புகலுவோம் பால னுக்குப்
பிருகுமே புகலு கின்றூர் புதன்வியத்[2] திருந்த தோடம்;

22. இருப்பதால், ஜாதகனுக்குப் புத்திர தோஷம் ஏற்படும் என்று நாங்கள் கூறினேம். இதைக்கேட்டு, அத்திரி முனிவர் சொல்லுவார். குரு ஐந்தாமிடத்தைப் பார்க்க, கருமஸ்தானுதிபதியாகிய சனி, பத்தாமிடத்தில் ஆட்சியாக விருப்பதாலும், தனக்குத் தோன்றிய புதல்வனுல், ஜாதகனுக்கு இறுதிக் கடன்கள் நடைபெறும் என்று கூறுவோம். பிருகு முனிவர் சொல்லுகின்றூர். புதன் விரயஸ்தானமாகிய பன்னிரெண்டில் இருப்பதால் ஏற்படும் தோஷத்தின் காரணமாக;

23. உதிக்கும்சேய்-முதலில்ரெண்டு ஓங்காது பால னுக்கு
அதற்குப்பின் விருத்தி யாகும் ஆணென்று கன்னி மூன்று
இவைகளும் விருத்தி யென்றோரும் இயம்பின மொழிகுன்
[ருது
நதிசடை அணிந்தோன் தேவி நவிலுவோம் இவன்மூன்
[சென்மம்.

23. ஜாதகனுக்குப் பிறக்கும் குழந்தைகளில் முதலிரண்டு நிலைத்திரா. பின்பு தோன்றுபவை தீர்க்கமாம். ஆண் மகன் ஒருவன், பெண்கள் மூவர் தீர்க்கமாக விளங்குவர் என்று கூறினேம். நாங்கள் கூறிய சொற்கள் தவறு. கங்கை நதியைச் சடைமுடியி லணிந்த சிவபெருமானின் மனைவியே! ஜாதகனின் முற் பிறப்பை இனிக் கூறுவோம்.

24. முன்சென்மம் வான்மி யூரில் உதித்தனன் வைசியச் சேயாய்
அன்னையின் தந்தை மிக்க அழகான செட்டுச் செய்து
இன்னவன் வாழு நாளில் எய்தின வினையைக் கேண்மோ
கன்னிகை விதவை போகம் கலந்துமே கருவு தங்க;

---

1. சனி.
2. இலக்கினத்துக்குப் பனிரண்டா மிடம்.

24. முற்பிறப்பு, திருவான்மியூரில் வைசிய மரபினனுய்ப் பிறந்தான். தாய் தந்தையருடன் நல்ல குடும்பத்தை யடைந்து, சிறந்த வகையில் வியாபாரம் செய்து கொண்டு இவன் வாழ்ந்துவந்த காலத்தில் நேர்ந்த தீவினையொன்றைக் கேளுங்கள். கைம்பெண் ஒருத்தியுடன் இன்பம் அனுபவித்ததனுல் அவளுக்குக் கரு உண்டாகி ;

25. பலவித பண்டி தங்கள் பாவைக்குச் செய்யும் போது
குலவிய கருவு நீங்கிக் கோதையும் தீர்க்க மானுள்
தலைவனிவ் விதமாய் ரெண்டு தான்செய்தான் அதுவோர்
[தோடம்
உலகினில் வேறு காணுன் உத்தமி கேட்டி டாயே

25. பலவிதமான வைத்தியங்கள் செய்தான். அதனுல் அப் பெண்ணுக்கு ஏற்பட்ட கரு அழிந்து, அவள் தீர்க்கமாக விருந்தாள். இந்த ஜாதகன் இதுபோல் இருமுறை செய்தான். இந்த ஒரு தோஷம் இவனைப் பற்றியது. இதனைத் தவிர வேறு தீங்கு ஒன்றும் செய்யவில்லை. உத்தம குணமுள்ள பார்வதியே! கேடபாயாக.

26. அந்திய காலம் தன்னில் அருமறைச் கன்னம் ஈந்து
தந்தியின் கோட்டம் செய்து சண்டன்தன் பதிக்குப் புக்கு
முந்திஞேன் வரையப் பட்டு உதிப்பனும் அந்தப் பாலன்
விந்தையாய்க் கருவின் தோடம் வியர்த்தமா மிரண்டு புத்ரர்.

26. தனது கடைசிக் காலத்தில் அரிய வேதங்களை யுணர்ந்த அந்தணர்கட்கு உணவு தந்து, விநாயகர் கோயில் ஒன்று அமைத்து, பின்பு மரண மடைந்தான். மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, இந்தப் பிறப்பாகப் பிறந்தானிவன். முற் பிறப்பில் இரு முறை கருவழித்த தோஷத்தினுல், இப் பிறப்பில் இவனுக்குத் தோன்றும் முதலிரண்டு புத்திரர்கள் கஷ்டமானவர்.

27. அத்திரி புகலு கின்ருர் அவன்முன்சென் மத்தி லேதான்
பெற்றபுண் ணியங்க ளென்ன பேசுவீர் முனியே நீர்தாம்
முந்திஞேர்க் கன்ன மீந்தும் மூஷிகன் கோட்டம் செய்தும்
வைத்ததால் சினகு லத்தில் வந்தன னென்று சொல்வோம்

27. அத்திரி முனிவர் கேட்கின்ருர். இவன் முற் பிறப்பில் இயற்றிய நல் வினைகள் யாவை? முனிவரே! கூறுங்கள். அந்தணர்க்கு உணவளித்ததும், விநாயகர் கோயிலமைத்ததும் ஆகிய நல் விஷயங்களைச் செய்ததால், ஜைன குலத்தவனுக இப் பிறப்பில் பிறந்தான் என்று கூறுவோம்.

28. ஆனையின் கோட்டம் செய்தும் அருமறைக் கன்ன மீந்தும்
தான்வினை விலகா தோசொல் சந்ததி அழித்த தோடம்
ஊனமாம் விலகா தாகும் உயர்குலம் போக பாக்கியம்
மான்மழு தரித்தோன் தேவி யறைகின்றேம் பால னுயுள்.

28. முற் பிறவியில் விநாயகர் கோயில் கட்டியும், வேதங்களை யுணர்ந்த அந்தணர்களுக்கு உணவு அளித்தும், நற்பணிகளைப் புரிந்தமை யால், கருவழித்த தோஷம் விலகாதோ? கூறுங்கள். கருவழித்த தோஷம் மாத்திரம் நீங்காது. உயர் குலப் பிறப்பு, போக போக்கியங்கள் முதலியன வெல்லாம் நீங்காமல் பெறுவான். மானையும் மழுவாயுதத்தையும் கையில் தரித்த சிவபெருமானின் பத்தினியே! ஜாதகனின் ஆயுள் பாவத்தைச் சொல்லுகின்றேம்.

29. அறுபது நாலு ஆண்டில் ஆனிமா தத்தி லேதான்
நிறைபக்கம் துவாதசி தன்னில் நிமலன்தன் னுடலம் ஏகும்
பிருகுமே மறுத்துச் சொல்வார் புதல்வனுக் கிரண்டாண்
[டுள்ளே
மருவிடும் கண்ட மென்றேம் வதிட்டரும் கூறு கின்றார்.

29. இவனது அறுபத்து நான்காம் வயதில், ஆனி மாதத்தில் பூர்வ பட்ச துவாதசியில் மரணம் ஏற்படும். பிருகு முனிவர் இதனை மறுத்துக் கூறுவவார். இவன் பிறந்த இரண்டு வருஷங்களில் இவனுக்குக் கண்டம் ஏற்படும் என்று கூறினேம். வசிஷ்ட முனிவர் சொல்லுகின்றார்.

30. சொன்னதோ ராண்டு தன்னில் சுதனுடைச் சிறிய தந்தை
நண்ணிய பிதாம கிக்கும் மாரகம் நேரு மென்றேம்
இன்னவன் தனக்கு நேரா எப்படிச் சொல்லு மென்ன
கன்மத்தில் கா ரி தங்கக் காளையும் தீர்க்க சீவி.

30. தாங்கள் கூறிய வருஷத்தில் இவனுடைய சிறிய தந்தைக்கும், பாட்டிக்(தகப்பனாரைப் பெற்றவள்)கும் மரணம் ஏற்படும் என்று சொன் னேம். இவனுக்கு ஒரு துன்பமும் நேராது. எதனால் என்று கூறுங்கள். கருமஸ்தானத்தில் (பத்தாமிடத்தில்) சனி தங்கி யிருப்பதால் ஜாதகன் தீர்க் காயுசாயிருப்பான்.

31. மறுசென்மம் காஞ்சி தன்னில் வருவனு மிக்கு லத்தில்
பெருமையாய்ச் செட்டுச் செய்து புண்ணியன் வாழ்வா
[னுகும்
திருகிலா வைந்தா மாண்டில் செல்லுவாள் பிதாவின் அன்னை
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

31. ஜாதகன், மறு பிறப்பில் காஞ்சிமா நகரில் இக் குலத்திலேயே பிறப்பான். மேன்மையுடன் வியாபாரங்கள் செய்து வாழ்வான். இவன் பிறந்த ஐந்தாவது ஆண்டில் தந்தையின் தாய் (பாட்டி) மரணமடைவாள். யானை முகனைப் புதல்வராக அடைந்த பார்வதியே! கேட்பாயாக.

32. அன்னவன் சென்ன காலம் அனுடத்தின் நாலாம் பாதம்
துன்சனி ஆண்டு மூன்றும் திங்களும் பதினொன் றாகும்
இன்னவன் தனக்கு ரோகம் எய்திடும் குடும்ப சூதம்
பின்துணை விருத்தி யுண்டு பூமியும் பலித மாகும்.

32. இந்த ஜாதகன் பிறப்புக் காலம் அனுட நட்சத்திரம் நாலாம் பாத மாகும். அப்பொழுது சனி மகாதசை இருப்பு ; மூன்று வருஷங்களும், பதினொரு மாதங்களுமாம். அந் நாட்களில் இவனுக்கு வியாதி யுண்டாகும். குடும்பத்தில் அசுபம் ஏற்படும். பின்பு சகோதர விருத்தி யுண்டு. நில புலன்களில் நல்ல பலனும் கிடைக்கும்.

ஜாதகம் 43

1. திங்கள்சேய் ராகு கன்னி சனிமானில் புகரும் சீயம்
[1]பங்கயன் வீணை யாகப் புதன்நந்தி குருவும் [2]கெண்டை
இங்கிவை கிரகம் நின்று யிலக்கினம் குண்டை யாக
அங்கது பலனெவ் வாறு அறிவிப்பீர் முனியே நீர்தாம்.

1. சந்திரன் செவ்வாய் ராகு கன்னியிலும், சனி மகரத்திலும், சுக்கிரன் சிம்மத்திலும், சூரியன் மிதுனத்திலும், புதன் ரிஷபத்திலும், குரு கேது மீனத்திலுமாக இந்நிலையில் நவக்கிரகங்களும் தங்கி, இலக்கினம் விருஷபமாக இருந்தால் உண்டாகும் பலன்கள் யாவை? முனிவரே! நீங்கள் கூறுங்கள்.

குரு கேது		லக்கினம் புதன்	சூரியன்
	இராசி சக்கரம்		
சனி			சுக்கிரன்
			சந்திரன் செவ்வாய் இராகு

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்றார்
மேதினில் ஆண்பால் சென்மம் வந்தஇல் கீழ்மேல் வீதி
போதுவே வடக்கு வாடை புலிவாக னத்தாள் கீழ்பால்
நீதியாம் வடமேல் மாரி நின்றிடும் தந்தி தென்பால்.

2. பார்வதி இங்ஙனம் கேட்கும்போது, விசுவாமித்திர முனிவர் சொல்லுகின்றார். இந்த ஜாதகத்துக் குரியவர் ஆண் பிறப்பு. பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில், வடக்கு வரிசையி லுள்ளதாகும். வீட்டுக்குக் கிழக்கில் புலி வாகனத்தையுடைய துர்க்கையம்மன் கோயிலுள்ளது. வடமேற்கில் மாரியம்மன் கோயில். விநாயகர் தென் திசையில் வாசம் செய்கின்றார்.

---

1. சூரியன்

2. மீனராசி

3. இத்தகை யடையா ளத்துள் இலகிய சிறுஹூர் தன்னில்
வித்தகன் நான்காம் சென்மம் விளம்புவோம் பிரம்ம
[சேயாய்ப்
பெற்றதாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகம்
சுத்தமாய் முன்பின் சென்மம் செப்புவோம் இந்நூல்
[தன்னில்.

3. இவ்வாறான அடையாளங்களுடன் உள்ள சிறியதோர் ஊரில் அந்தணர் குலத்தில் நான்காம் பிறப்பாகப் பிறப்பவன் இந்த ஜாதகன் என்று சொல்லுவோம். இவன் பெற்றோர்கள், மனைவி, புதல்வர்கள் முதலானவர்களின் யோகங்கள், இவர்களுடைய முற்பிறப்பு மறு பிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் கூறுவோம்.

4. தந்தையின் துணையாண் ரெண்டு சத்தியு மவ்வா றுகும்
அந்தவர் வேறுய்ச் செல்வர் அறைகின்றோம் முன்னோன்
[சேதி
மூந்துமால் நிறத்த னுகும் மேவிடும் தாரம் மூன்று
சந்ததம் கிருஷி செய்வன் செகராசர் பேட்டி கொள்வன்.

4. ஜாதகனின் தந்தைக்குச் சகோதரர்கள் இருவர். சகோதரிகளும் அங்ஙனமே இருவர். அவர்கள் வேறு குடும்பமாகச் செல்லுவர். இவர்களில் மூத்த சகோதரனின் செய்தியைச் சொல்லுகின்றோம். கரிய நிறமுடையவன். இவனுக்கு மூன்று மனைவியர். விவசாயத் தொழில் செய்வான். அரசர்களைப் பேட்டிக் காண்பான்.

5. கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன் காலாட்கள் உடைய
[னுகும்
விடவுரை பகரா னுகும் விருந்தோர்மேல் பிரிய னுகும்
மடையரை உறவு கொள்ளான் அவன்கிராமக் கணக்கு
[வேலை
தடபுடல் செய்கை யுண்டு சங்கரி கேட்டி டாயே.

5. கடன் வாங்குவான். அதனைத் திரும்பக் கொடுத்து விடுவான். அடிமையாட்க ளுடையவன். கெட்ட சொற்களைக் கூறுதவன். விருந்தினர் மீது அன்புடையவன். அறிவில்லாதவரை நண்பராகக் கொள்ளமாட்டான். அவ்வூர்க் கணக்கு வேலை பார்ப்பான். ஆடம்பரமான செயல்களைச் செய்வான். பார்வதியே! கேட்பாயாக.

6. மற்றொரு துணைவன் சேதி மாநிறம் உணைச்சல் தேகி
சுத்தம்போல் வெளிமை யக்கன் சோம்பிடான் காரி யத்தில்
பத்தினி யிரண்டே யாகும் பாரது விருத்தி செய்வன்
நத்தினோர்க் குதவி செய்வன் நற்கிராமச் செட்டுச் செய்வன்.

6. இன்னொரு சகோதரனின் செய்கையைக் கூறுவோம். மாநிறத்தான். மெல்லிய சரீர முள்ளவன். தூய்மை யுடையவன்போல் நடித்து வெளியாரை மயங்கச் செய்வான். காரியங்கள் செய்வதில் சோம்பல் கொள்ளான். இவனுக்கு மனைவியர் இருவர். நிலபுலன்களை விருத்தி செய்வான். சிறுமை யடைந்தவர்கட்கு உபகாரம் செய்வான். கிராமத்தில் வியாபாரம் செய்வான்.

7. வயதுமே தீர்க்க மெய்தும் மாமன்னர் மெச்ச வாழ்வன்
அயலார்பொன் இச்சை கொஞ்சம் ஆவுகள் விருத்தி யுண்டு
பயமிலான் எதிரிக் கஞ்சான் பகர்கிராம கணக்கும் செய்வன்
நயமுள மனத்த னாகும் மெல்லியர் மோக னுவன்.

7. தீர்க்காயுளைப் பெற்றிருப்பான். பெரிய அரசர்கள் பாராட்டும் படி வாழ்ந்திருப்பான். அயலார் செல்வத்தில் சிறிது ஆசையுள்ளவன். பசுக்கள் விருத்தி யுடையவன். அச்ச மில்லாதவன். விரோதிகட்குப் பயப்படமாட்டான். கிராமக் கணக்கு வேலையும் சில சமயங்களில் செய்வான். நல்ல மனமுடையவன். பெண்கள்பால் மோக முடையவன்.

8. முன்துணை யுடனே கூடி மேவியே வாழ்வா னாகும்
பொன்பூமி தன்னல் பின்னல் பொருந்திடு மென்று [சொல்வோம்
பின்னமில் லாத தேகி பொருத்தமாய்ப் பேச வல்லன்
உன்னத வானைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

8. இவன் தன் மூத்த சகோதரனுடன் சேர்ந்து வசிப்பான். செல்வம் நிலபுலன்கள் முதலியன பிற்காலத்தில் இவனுக்குச் சேரும் என்று சொல்லுவோம். குற்றமில்லாத உடலை யுடையவன். பொருத்தமாகப் பேசுவான். உத்தமமான கணவனைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

9. தந்தையின் குணத்தைச் சொல்வேன் தரணியி லுய்வா [னாகும்
தந்தமு மூன மாகும் சல்லியம் கொஞ்ச முண்டு
தன்பந்துக் கிணக்கம் சொல்வன் சாராட்கள் உடைய னாகும்
தன்னுடல் மெலிவும் முண்டு சகடுநாள் கடக ராசி;

9. இனி, ஜாதகனின் தகப்பனாரின் குணத்தைச் சொல்லுவோம். உலகில் நன்முறையில் வாழ்வான். பற்களில் ஊனமுள்ளவன். கடனும் சிறிது

உண்டு. உறவினர்களுடன் ஒத்து வாழ்பவன். தன்னைச் சார்ந்துள்ள ஏவலாட்கள் பலரைப் பெற்றவன். மெலிந்த உடலுடையவன். உரோகிணி நட்சத்திரம் கடக ராசியில்,

10. உதிப்பனும் என்று சொல்வோம் உணவுகள் குறைவி
[ராதான்
பதியது பின்னுல் செய்வன் பகவானின் பக்தி பூண்பன்
துதிசெய்தோர்க் குதவு வானும் சோம்பலுங் கொஞ்ச
[முண்டு
நதிதோய்வன் புத்திர ரேகை நற்கரம் தன்னில் உண்டு.

10. இவன் பிறப்பான் என்று சொல்லுவோம். போசன வசதி குறைவில்லாதவன். பிற்காலத்தில் புதிய வீடு ஒன்று கட்டுவான். கடவுட் பக்தி யுடையவன். தன்னைப் புகழ்ந்தவர்கட்கு உதவி புரிவான். சிறிது சோம்பலுண்டு. பல புண்ணிய நதிகளில் நீராடுவான். இவன் கையில் புத்திர பாக்கியத்தைக் குறிக்கும் ரேகை யொன்றுண்டு.

11. பித்தசூ டுடைய னுகும் பொய்யது வழுத்தா நெஞ்சம்
பத்தினி நேய னுகும் பாரின்மேல் பிரிய னுகும்
குற்றத்தை வெளிக்காட் டாதான் கோளரி போலே கோபம்
அத்தியைப் பெற்ற மாதே அறைந்தவிக் குணத்தா னுக்கு.

11. உடலில் பித்த சூடுடையவன். மனத்திலும் பொய்கூற எண்ணுதவன். மனைவிமீது அன்புள்ளவன். உலக மக்கள்மீது விருப்பங் கொண்டவன். தன் குறைகளை வெளியாருக்குத் தெரியாமல் மறைப்பவன். சிங்கம் போல் சினமுள்ளவன். விநாயகப் பெருமானைப்பெற்ற பார்வதியே! சொல்லப்பட்ட இவ்விதக் குணங்களையுடைய தந்தைக்கு;

12. பாலகன் உதிப்பா னுகும் பகருவோம் இவன்கு ணத்தைச்
சீலவான் கல்வி மேன்மை செகராசர் பேட்டி கொள்வன்
மால்பத்தி உடைய னுகும் மன்னனுல் உய்வா னுகும்
காலத்தை அறிந்து சொல்வன் [1]காலிகள் விருத்தி யுண்டு.

12. இந்த ஜாதகன் பிறப்பான். இவன் குணத்தைக் கூறுவோம். ஒழுக்க முள்ளவன். படிப்பினுல் மேன்மை பெற்றவன். உலக அரசர்களைப் பேட்டி காண்பான். திருமாலின்மீது பக்தியுடையவன். அரசனுல் தொழில் ஏற்று ஜீவனம் நடத்துவான். காலமறிந்து பேசுவான். கால் நடைகள் விருத்தி யுள்ளவன்.

---

1. கால் நடைகள்.

13. அன்னிய பாடை மேன்மை அழகிய வார்த்தை சொல்வன்
பொன்பணி சேர்ப்பா னுகும் புகழது ஏற்பா னுகும்
மன்னர்க்கு இவன்சொல் மேன்மை மாநிலம் விருத்தி [செய்வன்
முன்னமே கோபி யாவன் [1]முண்டக ரேகை யுண்டு.

13. வேற்று மொழிப் புலமையினால் மேன்மை பெறுவான். வேடிக்கையான பேச்சுகளைப் பேசுவான். செல்வம் ஆபரணங்கள் ஆகியவற்றைச் சேர்ப்பான். புகழ் பெறுவான். அரசர்களுக்கு இவன் சொற்களில் மதிப்பு உண்டாகும். சிறந்த நிலங்களை விருத்தி செய்வான். முன்கோப முடையவன். இவன் கையில் பத்ம ரேகையுண்டு.

14. சொல்லிடு வசன மெல்லாம் சுத்தமாம் சொகுசு உண்பன்
வெல்லும்சொல் உடைய னுகும் வீண்வம்பு புகலா னுகும்
நல்லிருள் விளக்குப் போலே நாயகன் உதித்த னென்றோம்
அல்லலைப் போதுங் காணன் அம்பிகை யாளே கேளாய்.

14. இவன் கூறுகின்ற சொற்களெல்லாம் தூய்மையுடையனவா யிருக்கும். சுகபோஜனம் செய்வான். வெற்றி யுண்டாக்கும் சொற்களையே பேசுவான். வீணை வம்புப் பேச்சுக்கள் பேசான். நல்ல இருட்டில் ஒரு விளக்கு ஏற்றியதுபோல், இந்த ஜாதகன் பிறந்து ஒளியுடன் விளங்கினான் என்று கூறினேம். துன்பத்தை எப்பொழுதும் அறியாதவன். பார்வதியே ! கேட்பாயாக.

15. தன்துணை முன்னுண் காணன் சக்திமார் மூவ ராகும்
சொன்னதில் கன்னி ஒன்று சோர்வுறும் கால்க ளுந்தான்
என்னகா ரணத்தி னுலே எய்திற்று வாயு ரோகம்
முன்சென்ம வினையி னுலே மேவிற்று அந்தத் தோடம்.

15. தனக்கு மூத்த சகோதர ரில்லாதவன். சகோதரிகள் மூவர் சொல்லப்பட்ட மூவரில் ஒருத்திக்குக் கால்கள் வாயு நோயால் ஊனமடையும். என்ன காரணத்தினால் அவளுக்கு வாயு ரோகம் உண்டாயிற்று ? முற்பிறப்பில் சேர்ந்த தீவினையினால் அந்த நோய் ஏற்பட்டது.

16. மங்கைசெய் வினைக ளென்ன வறிவிப்பீர் அந்தச் சங்கை
நங்கைமுன் சென்மம் சொல்வோம் [2]நாற்றலைப் பூசை [செய்யும்
துங்கமாம் பட்சி தன்னில் தோன்றினுள் கங்கை சேயாய்ப்
பொங்கிய குடும்பி யாகிப் பூவையும் வாழும் நாளில்;

1. தாமரை.
2. பிரமன்.

16. இவன் சகோதரி முற்பிறப்பில் செய்த தீவினை யாது? கூறுங்கள். இவள் முற்பிறவியைக் கூறுவோம். பிரமதேவன் இறைவனைப் பூசித்த தலமாகிய திருக்கழுக்குன்றத்தில், வேளாளர் குலத்தவளாகப் பிறந்தாள். நிறைந்த குடும்ப முடையவளாய் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில்;

17. இறப்பினில் கூடு கட்டி யிருக்கிற பட்சி தன்னைக்
குறிப்பாக வதைப்பி டித்து யொடித்தனள் இறகு தன்னை
பரவிற்று அந்தத் தோடம் பாவையும் மணமில் லாமல்
மறவியின் பதிக்குச் சென்று [1]மால்மகன் வரையப் பட்டு;

17. வீட்டுக் கூரையில் கூடு கட்டிக்கொண்டு, வாழ்ந்துவந்த ஒரு பறவையைப் பிடித்து, அதன் இறக்கையை ஒடித்துவிட்டாள். அந்தத் தோஷம் இவளைப் பற்றியது. அதன்பிறகு இவள் மனமில்லாமலே வாழ்ந்து, இறுதியில் மரணமடைந்து, பிரமதேவனுல் மீண்டும் படைக்கப்பட்டு;

18. இந்ததோர் குலமு தித்தாள் எய்திற்று முன்னூழ்த் தோடம்
அந்தவள் இருகால் ஊனம் அணுகிடு மென்று சொல்வோம்
வந்ததோர் வினைகள் தீர யறைகுவீர் சாந்தி தானும்.
எந்தசாந் திகள்செய் தாலும் விலகாது என்று சொல்வோம்.

18. இந்தக் குலத்தில் பிறந்தாள். முற்பிறப்புத் தீவினை இவளை யடைந்தது. அதனால், இவளது இரு கால்களுக்கு ஊனம் ஏற்படும் என்று சொல்லுவோம். ஏற்படும் துன்பங்கள் நீங்க, ஒரு சாந்தி கூறுவீர். எவ்வித மான பரிகாரங்கள் செய்தாலும் தோஷம் நீங்காது என்று சொல்லுவோம்.

19. மத்திய வயதி லேதான் மாதுவும் மரண மாகும்
சுத்தமாயப் பின்பா கத்தில் செப்புவோம் விவர மாக
வித்தகன் தனக்குப் பின்னுல் வீளங்காரே துணைவர் தாமும்
செத்திடு முதித்த போதும் செல்வதி கேட்டி டாயே.

19. மத்திய வயதில் இந்தச் சகோதரி மரண மடைவாள். இவளைப் பற்றி விவரமாகப் பிற்பகுதியில் கூறுவோம். இவனுக்குப் பின்பு துணைவர்கள் தோன்ற மாட்டார்கள். தோன்றினுலும் அழிவர். பார்வதியே! கேட்பாயாக.

---

1. திருமாலின் புதல்வராகிய பிரமதேவர்.

20. மைந்தன்தன் மணத்தின் கால மறைகின்றே மிருப
[தாண்டில்
சந்திர முகத்தாள் உத்ரம் சார்ந்திடும் குணத்தைச்
[சொல்வோம்
சுந்தர முகத்தா ளாகும் சோர்வோருக் கன்ன மீவள்
நிந்தைக ளேந்தா ளாவள் நிதம்சீலி யோக சாலி.

20. ஜாதகன் திருமண காலத்தைச் சொல்லுகின்றோம். இருபதாம் வயதில், இவனுக்கு வடக்குத் திசையிலுள்ள ஓர் ஊரிலிருந்து சந்திரன் போல் அழகிய முகமுடைய ஒரு பெண், மனைவியாக வாய்ப்பாள். அவள் குணங்களைக் கூறுவோம். அழகிய முகமுடையவள். தளர்ச்சி யடைந்த வருக்கு உணவு அளிப்பாள். பழிகளை ஏற்காதவள். ஒழுக்க முள்ளவள். அதிர்ஷ்ட முடையவள்.

21. வந்துபின் வரன்யோ கம்தான் மங்கள வார்த்தை கூர்வள்
சந்ததி பலத்தைச் சொல்வோம் தனித்திடும் குழவி எட்டாம்
நந்திடு முதலில் ரெண்டு நிகரங்கள் ஆண்பால் ரெண்டு
இந்திர வதனம் போலே எழில்கன்னி யிரண்டே யாகும்.

21. இவள் வந்தபிறகு கணவனுக்கு அதிர்ஷ்டம் உண்டாகும். நல்ல சொற்களையே பேசுவாள். ஜாதகனுக்குப் புத்திர பாக்கியத்தைக் கூறுவோம். எட்டுக் குழந்தைகள் தோன்றும். முதல் இரண்டு குழந்தைகள் அழியும். பின்பு இரண்டு மாளும். நிச்சயமாக இருப்பவை இரண்டு ஆண்களும் அழகிய முகமுடைய இரு பெண்களுமாம்.

22. என்னகா ரணத்தி னலே இவனுக்கு முதலில் புத்ரர்
பின்னமா மென்று சொன்னீர் பேசுவீர் அந்தச் சங்கை
கன்னியில் அரவு தங்கக் கழறினேம் அந்தச் சங்கை
உன்னத வானைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

22. என்ன காரணத்தினல், முதலில் தோன்றும் புதல்வர் மரிப்பர் என்று கூறினீர்கள். அதனை விளங்கச் சொல்லுங்கள். கன்னியா ராசியாகிய புத்திர ஸ்தானத்தில் இராகு தங்கியிருப்பதால் அவ்வாறு கூறினேம். உத்தமனை கணவனை யடைந்த பார்வதியே ! கேட்பாயாக.

23. மாதுரு முன்கோ பத்தாள் மாஞ்சிவப் புடைய ளாகும்
நீதான குணமில் லாதாள் தேகமு முணைச்சல் உண்டு
பாதக மனமில் லாதாள் பரவுப காரி யாமே
சூதிலாள் சமயோ கத்தாள் தோழன்தன் மனம்போல்
[வாழ்வள்.

23. இந்த ஜாதகனின் தாய் முன் கோபமுடையவள். கருஞ் சிவப்பு நிறத்தினள். தீங்கான குணமில்லாதவள். மெல்லிய உடலுடையவள். மனத்தில் கெடுதல் இல்லாதவள். பிறருக்கு உதவிபுரியும் இயல்பினள். வஞ்சனை யற்றவள். துன்பமும் இன்பமும் வாழ்வில் கலந்திருப்பவள். கணவன் மனத்துக்குகந்த முறையில் வாழ்க்கை நடத்துவாள்.

24. தன்துணை யாண்பால் மூன்று தையலு மொருத்தி என்றேம்
அன்னையில் தென்மேல் ஆமே அறைகின்றேம் அவள்தன்
[பூர்வம்
தென்திசைக் கடையூர் தன்னில் செனித்தனள் கர்ண
[சேயாய்
அன்னையும் தந்தை மிக்க அவளுமே வாழ்ந்து யின்னேள்;

24. இவளுக்குச் சகோதரர்கள் மூவர்; சகோதரி யொருத்தி யென்று கூறினேம். இவள் தாய் வீடு தென்மேற்குத் திசையிலுள்ளது. தாயின் முற்பிறப்பைச் சொல்லுகின்றேம். தென் திசையிலுள்ள திருக்கடையூரில் கருணீகர் வமிசத்தில் பிறந்தாள். தாய் தந்தையருடன் சிறப்பாக வாழ்ந்திருந்து;

25. தேவதாத் தலங்கள் சென்று தேடினேர்க் கன்ன மீந்து
மேவினுள் கால நாடு வேதத்தோன் வரையப் பட்டு
ஆவலா யிக்கு லத்தில் அணுகினு ளென்று சொல்வோம்
பாவைபின் சென்மம் சொல்வோம் பரங்குன்ற நகரி
[லேதான்;

25. தெய்வங்கள் கோயில் கொண்டுள்ள தலங்களுக்கு யாத்திரை சென்று, தன்னைத் தேடி வந்தவர்கட்கு உணவளித்து, சிலகாலஞ் சென்று மரண மடைந்தாள். பின்பு பிரமனால் படைக்கப்பட்டு இவ்வுலகில் இப் பிறப்பாகப் பிறந்தாள் என்று கூறுவோம். இவள் மறு பிறவியைக் கூறுவோம். திருப்பரங்குன்றம் என்ற சிறந்த நகரில்,

26. உதிப்பளாம் இக்கு லத்தில் உரைக்கின்றேம் தந்தை பூர்வம்
நதியினில் உயர்வ தான நற்சேது பதியி லேதான்
துதிசெயும் வைசியச் சேயாய்ச் செனித்துமே வணிபம்
[செய்து
பதியினில் திருவு முண்டாய்ப் பாவையும் மதலை யாகி;

26. இக்குலத்திலேயே பிறப்பாள். தந்தையின் முற்பிறவியைக் கூறுகின்றேம். தீர்த்தத்தில் சிறந்ததான சேதுக்கரையிலிருக்கும் ஓர் ஊரில், யாவரும் போற்றும் நிலையிலிருந்த வைசிய குலத்தவனுகப் பிறந்து, வியாபாரம் செய்து, செல்வம் பெற்று, மனைவி மக்களை யடைந்து, வாழுங் காலத்தில்,

27. வினையதைப் புகலக் கேண்மோ வீண்பழி ஒருபெண் பேரில்
சினமுடன் சொன்னன் என்றேம் செப்புவாள் அந்த மாது
பிழையான வார்த்தை யென்மேல் புகன்றிட்ட பாவி நீதான்
கனமுள பொருளும் நீங்கிக் காசினி தன்னில் வாழ்வாய்.

27. நேர்ந்ததொரு தீவினையைக் கூறுகின்றேம்; கேளுங்கள். கோபங் கொண்டு, ஒரு பெண்ணின்மீது அடாத பழியொன்றைக் கூறினன் என்று சொன்னேம். அதனை யறிந்த அந்தப் பெண் கூறுவாள். என்னைப் பற்றி அடாத சொற்களைக் கூறிய பாவியே! நீ, செல்வத்தை இழந்து இவ்வுலகில் வாழ்வாய்.

28. மற்றொரு சென்மம் தன்னில் வாய்த்தந்தம் ஊன மாயும்
குத்தமாய் வாழ்வா யென்று கூறினள் அந்த மாது
பற்றிற்று அந்தத் தோடம் பாலக னந்தி யந்தில்
அற்றன பொருள்கள் யாவும் அவன்மனச் சஞ்ச லத்தான்;

28. மற்றொரு பிறவியில் வாயிலுள்ள பற்கள் ஊனமடைந்து, துன்பத்துடன் வாழ்ந்திருப்பாய் என்று கூறினள், அந்தப் பெண். அந்தத் தோஷம் இந்த ஜாதகன் தந்தையைச் சேர்ந்தது. அதனல் இவன் தந்தையின் கடைசிக் காலத்தில் செல்வமெல்லாம் நீங்கியது. பொருளை யிழந்த மனவருத்தத்தினல்,

29. பலதல வாசம் சென்று பரமர்க்குத் தொண்டு பூண்டு
குலவினள் கால நாடு குறைதலை வரையப் பட்டு
நலமுள இக்கு லத்தில் நாயக னுதித்தா னென்றேம்
தலைவிசொல் போலே யிங்கு தந்தமும் குறையுண் டாகும்.

29. பல புண்ணியத் தலங்களுக்கு யாத்திரையாகச் சென்று, கடவுளுக்குத் தொண்டுசெய்து, மரணமடைந்தான். பிரமனல் மீண்டும் படைக்கப்பட்டு, நன்மையுடைய இக்குலத்தில் இவன் பிறந்தான் என்று கூறினேம். முற்பிறவியில், அந்தப்பெண் கூறியபடி, இப் பிறவியில் இவன் பற்களுக்கு ஊனமுண்டாகும்,

30. மறுசென்மம் குடகு தன்னில் மருவுவான் இக்கு லத்தில்
பொருளது பெருக்க மாகிப் புகழுடன் வாழ்வா னுமே
திருமகன் பூர்வம் தன்னைச் செப்புவோம் தில்லை தன்னில்
கருணீகர் குலமு தித்துக் காதலி மதலை யுண்டாய்;

30. மறுபிறப்பு, குடகு நாட்டில், இக்குலத்திலேயே பிறப்பான். செல்வம் நிரம்பப்பெற்று, கீர்த்தியுடன் வாழ்ந்திருப்பான். இனி, ஜாதகன் மூற்

பிறவியைக் கூறுவோம். சிதம்பரத்தில், கருணீகர் குலத்தில் பிறந்து, மனைவி மக்களை யடைந்து,

31. நேமியை விருத்தி செய்து நிமலனும் வாழ்ந்து மேதான்
தீமையை விலக்கும் சேது தீர்த்தமும் தோய்ந்து பின்னும்
வாமனன் பசனை செய்து மறலியின் பதிக்குப் புக்குப்
பூவயன் வரையப் பட்டுப் பிறந்தனன் என்று சொல்வோம்.

31. நிலபுலன்களை விருத்தி செய்துகொண்டு, இவன் வாழ்ந்து வந்தான். பாவங்களைப் போக்குகின்ற சேதுக்குச் சென்று தீர்த்தி, திருமாலைப் பஜனைசெய்து போற்றி, பின்பு மரணமடைந்து, மீண்டும் தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவனால் படைக்கப்பட்டு, இப்பிறப்பாகப் பிறந்தான் என்று கூறுவோம்.

32. வந்தவன் யோகச் சேதி யறைகின்றோம் தாயே கேளும்
சென்திரு கடாட்சம் எய்தும் செய்நிலம் விருத்தி யுண்டு
வந்தவர்க் கன்ன மீவ னரசனால் உய்வா னுகும்
எந்தக்கா லத்தில் ராச யோகமும் எய்தும் சொல்வீர்.

32. இங்ஙனம் பிறந்த இவன் யோகங்களைக் கூறுகின்றோம். தாயே! கேளுங்கள். இலட்சுமி கடாட்சம் உண்டாகும். நெல் விளையும் நிலங்கள் விருத்தியாம், வீடு தேடி வந்தவர்க்கு உணவு அளிப்பான். அரசனைச் சார்ந்து, தொழில்செய்து, பிழைப்பான். எந்தக் காலத்தில் இந்த ஜாதகனுக்கு இராச யோகம் வரும் என்று சொல்லுவீர்.

33. இருபது மூன்றுண் டின்மேல் இவனுக்கு ராச யோகம்
பிறையது போலே நேரும் பிழையின்றி யன்பா னுண்டும்
அரசுமே லுங்கு மென்றோம் அறைந்தது தப்பா தாகும்
பொருளதை யாயி ரம்பொன் பொருந்திடு மென்று
[சொல்வோம்.

33. இவனது இருபத்துமூன்றும் வயதுக்குமேல், வளர்பிறை போல இவனுக்கு இராசயோகம் உண்டாகும். அது வந்தது முதல் குற்றமில்லாமல் ஐம்பதாம் வயதுவரை அரசாட்சி செய்வதுபோன்ற உயர்ந்த பதவியில் இருப்பான் என்று கூறினோம். நாங்கள் கூறியவை தவறு. ஐயாயிரம் வெண்பொற் காசுகள் சேரும் என்று சொல்லுவோம்.

34. அந்தவாண் டின்மே லாக அவன்சித் திர்இல்லம் செய்வன்
விந்தையா யிருபா னுறு ஆண்டினில் தந்தை கண்டம்
பிந்தியு மூப்டான் மூன்று ஆண்டினில் அன்னை கண்டம்
கந்தனை யின்ற மாதே கழறின மொழிகுன் றாது.

34. இராசயோகம் வந்த வருஷத்துக்குப் பிறகு, அழகிய வேலைப்பாடு மிகுந்த வீடு கட்டுவான். இவனது இருபத்தாறும் வயதில் தந்தைக்கு மரணம் நேரும். ஜாதகன் மூப்பத்து மூன்றும் வயதில் தாய்க்கு மரணம் ஏற்படும். முருகப் பிரானைப் பெற்ற பார்வதியே! சொன்ன சொற்கள் தவறு.

35. அறுபது ஆண்டு தன்னில் அணுகிய கன்னி மாதம்
திருமகன் உடலை மேகும் செப்புவோம் இவன்பின் சென்மம்
அரங்கமா நகரந் தன்னில் அருளுவா னிக்கு லத்தில்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே

35. அறுபதாம் வயதில், புரட்டாசி மாதம் ஜாதகனுக்கு மரணம் உண்டாகும். இவன் மறு பிறவியைக் கூறுவோம். திருவரங்கத்தில் இக்குலத்தில் பிறப்பான். விநாயகரைப் புதல்வராக அடைந்த பார்வதியே! கேட்பாயாக.

36. செனித்திடுங் காலந் தன்னில் சித்திரை ரெண்டாம் பாதம்
குனித்த செய்த் தசையி ருப்புக் கூறுவோம் ஆண்டு நாலும்
கனமுள திங்க ளொன்பான் கழறுவோம் பலனை யாங்கள்
வினைவரும் சாத கர்க்கு இருகண்டம் நேரு மென்றோதும்.

36. ஜாதகன் பிறக்குங் காலத்தில், சித்திரை நட்சத்திரம் இரண்டாம் பாத மாகும். அப்பொழுது அங்காரக மகா தசை இருப்பு; நான்கு வருஷங்கள், ஒன்பது மாதங்கள் என்று கூறுவோம். அந்தக் காலத்துக்குப் பலனை நாங்கள் சொல்லுவோம். ஜாதகனுக்குத் துன்பம் நேரும். இரண்டு கண்டங்கள் ஏற்படும் என்று கூறினோம்.

37. தந்தைக்கு விரய முண்டு [1]சதுஷ்பாதம் சேத மெய்தும்
பந்துவில் சூதங் காணும் பகர்துணைச் சுபமும் நேரல்
விந்தையாய்ப் பதியும் நட்டம் விசனமே குடியாய் நிற்கும்
இந்திர னிறைஞ்சும் மாதே இதுபூர்வ பாக மாமே.

37. தகப்பனாருக்குச் செலவுகள் ஏற்படும். கால்நடைகள் சேதமாம். உறவினர் வழியில் அசுபங்கள் நிகழும். உடன்பிறந்தார்களுக்குச் சுபங்கள் நேரும். குடியிருக்கும் வீடு சேதமாம். வருத்தமே நிலைத்திருக்கும். தேவேந்திரன் வணங்குகின்ற தேவியே! இதுவரை கூறியது முதல் பாகமாகும்.


---

1. கால்நடைகள்

ஜாதகம் 44

1. மதிபுதன் கேது சியம் மறைநந்தி புகரும் கன்னி
[1]விதிரவி கடகம் புக்க விடம்சாடி சேயும் தேளில்
இதுவிதக் கோளும் நின்று இலக்கினம் நந்தி யாக
அதுபலன் சொல்லு மென்ன அத்திரி புகலு கின்றார்.

1. சந்திரன் புதன் கேது சிம்மத்திலும், குரு விருஷபத்திலும், சுக்கிரன் கன்னியிலும், சனி சூரியன் கடகத்திலும், ராகு கும்பத்திலும், செவ்வாய் விருச்சிகத்திலுமாக இவ்விதம் நவக்கிரகங்களும் நின்று, இலக்கினம் விருஷபமாஞல், அதற்குரிய பலன்களைக் கூறுங்கள் என்று பார்வதி தேவி கேட்க, அத்திரி முனிவர் சொல்லுகின்றார்.



2. இந்தசேய் ஆணும் சென்மம் இல்லமும் மேற்குப் பார்வை
தென்வட வீதி யாகும் சிம்மவா கனத்தாள் உத்ரம்
சின்னஹர் என்று சொல்வோம் சேயனும் வடுகர் வர்க்கம்
அன்னவன் உதிப்பா னுகும் அம்பிகை யாளே கேளாய்.

2. இஃது ஆண் பிறப்பு. இந்த ஜாதகன் பிறக்கும் வீடு தெற்கு வடக்கான வீதியில், மேற்கு நோக்கிய வாயிலை யுடையது. சிங்க வாகனத்தை யுடைய காளிதேவி கோயில் வீட்டுக்கு வடக்கில் உளது. சிறிய ஊர் என்று கூறுவோம். இவன் வடுகர் மரபினனைப் பிறப்பான். பார்வதியே! கேட்பாயாக.

3. இன்னவன் சனன யோகம் எழில்பெறும் தந்தை யோகம்
அன்னையின் துணைவர் யோகம் அவன்மனை புத்திர யோகம்
முன்பின்சென் மங்கள் யாவு முரைக்கின்றே மிந்நூல்
[தன்னில்
தந்தையின் துணைவர் ஏழில் ஆண்நாலு கன்னி மூன்று.

---

1. சனி

3. இவனுடைய யோகங்கள், அழகிய தந்தை, தாய், உடன் பிறந்தார், மனைவி, புதல்வர் யோகங்கள், இவர்களுடைய முற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் கூறுகின்றோம். தகப்பனுருக்கு உடன் பிறந்தவர் எழுவரில் ஆண்கள் நால்வர்; பெண்கள் மூவர்.

4. இவன்பிதா குணத்தைக் கேண்மோ இடரான புத்தி
[யில்லான்
அவனியை விரயம் செய்வன் நலிந்தோர்க்கு உதவி செய்வன்
தவமுடை யோர்கள் பக்தி செலவுகள் அதிக முண்டு
பவமனம் இல்லா ஞகும் பாவையர் மோக னுவன்.

4. இந்த ஜாதகன் தந்தையின் குணத்தைக் கூறுவோம்; கேளுங்கள். தவறுன புத்தி யில்லாதவன். நில புலன்களை அழிப்பான். துன்பமடைந்த வர்கட்கு உபகாரம் செய்வான். தவத்தைச் செய்யும் சான்றோர்களிடம் பக்தி பூண்டவன். மிகுந்த செலவுடையவன். தீமையில்லா மனத்தினன். பெண்கள் மோக முள்ளவன்.

5. மனத்தீர முடைய ஞகும் மாஞ்சிவப் புடைய ஞகும்
இனமதை ஆத ரிப்பன் இன்பச்சொல் அலைச்ச லுண்டு
கனமிலாக் குடும்பம் அந்தம் கட்செவி போலக் கோபம்
நினைவதை முடிப்பா ஞகும் நிகழ்த்துவோம் இவன்முன்
[சென்மம்.

5. மனத்தில் தைரிய முடையவன். கருமை கலந்த செந்நிற முள்ள வன். பந்துக்களைக் காப்பாற்றுவான். இனிய சொற்களைப் பேசுவான். அலைச்ச லுள்ளவன். அந்திய காலத்தில் சிறப்பில்லாக் குடும்பத்தைப் பெற் றிருப்பான். கொடிய விஷமுள்ள பாம்பு போல் கோப முள்ளவன். நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பான். இவன் முற்பிறப்பைக் கூறு வோம்.

6. சிங்கள நாட்டி லேதான் செனித்தனன் வன்னிய சேயாய்
மங்கையும் மதலை யுண்டாய் மன்னர்பால் அணுகி வாழ்ந்து
பொங்கிய சேது புக்குப் பின்புமே மரண மெய்திப்
புங்கவன் வரையப் பட்டுப் பிறந்தனன் என்று சொல்வோம்.

6. சிங்கள நாட்டில் வன்னியர் குலத்தவனுகப் பிறந்தான். மனைவி மக்களை யடைந்து, அரசர்களை யடுத்துத் தொழில் செய்து, ஜீவனம் நடத்திக் கொண்டு, சேதுவில் நீராடி, பின்பு மரணமடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, இப் பிறப்பில் பிறந்தான் என்று சொல்லுவோம்.

7. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவான் இந்தப்
[பாலன்
இன்னவன் குணத்தைக் கேண்மோ இடரான புத்தி
[யுள்ளான்
கன்னியர் மோக னுவன் கணபதி யொத்த தேகன்
பொன்னிற முடைய னுகும் பிறந்தஇல் அடையா னுமே.

7. சொல்லப்பட்ட இவ்விதக் குணங்களே யுடையவனுக்கு இந்த ஜாதகன் புதல்வனுகத் தோன்றுவான். இவன் குணத்தைக் கேளுங்கள். தவருன புத்தியுள்ளவன். பெண்கள்பால் மோகங் கொள்ளுவான். விநாயகரைப் போல் பருத்த தேகமுள்ளவன். பொன் போன்ற நிற முள்ளவன். பிறந்த வீடு சொந்த மில்லாதவன்.

8. இடமதை விட்டுத் தென்மேல் ஏகுவான் காலம் சொல்வீர்
அடைவுடன் ஏழாம் ஆண்டில் அவன்தந்தை மரண மெய்தி
விடமன மாகி யின்னேன் மேவுவா னென்று சொல்வோம்
திடமிலாக் குடும்பி யாகிச் சுகமது குறைச்ச லாகி ;

8. பிறந்த ஊரை விட்டு, தென்மேற்குத் திசையில் செல்லுவான். எப்பொழுது செல்லுவான் என்று கூறுங்கள். பிறந்து ஏழு வருஷங்களுக்குப் பிறகு, இவன் தந்தையின் மரணம் நேரும். துன்பம் நிறைந்த மனத்தினனுய் தென்மேற்குத் திசையில் சென்று வாழ்வான் என்று சொல்லுவோம். பலமில்லாத குடும்ப முடையவனுய், சுகங்கள் குறைந்து ;

9. உணவுக்கு ஒருவர் பக்கல் ஒதுங்கியே வாழ்வா னுகும்
பிணையாகும் தந்தை ஆஸ்தி பொருந்திடும் புதிதா யில்லம்
மணம்பின்னல் யோக மெய்தும் மரியாதை எங்கும் நேரும்
துணிவான குணமு மெய்தும் சுந்தரி கேட்டி டாயே.

9. உணவுக்காக மற்றெருருவரிடம் புகலடைந்து ஜீவிப்பான். பிதிரார்ச்சித சொத்துக்கள் கிடையாமல் போம். புதிய வீடு கிடைக்கும். திருமணத்துக்குப் பின்பு அதிர்ஷ்டம் உண்டாகும். எவ்விடத்திலும் மதிப்பு ஏற்படும். எச் செயலேயும் துணிவுடன் செய்யக்கூடிய நல்ல குணம் உண்டாகும். அழகியே ! மேலுங் கேட்பாயாக.

10. தன்துணை ஆண்பால் ரெண்டு தையலர் ஒன்று என்றேரும்
நொந்திடும் ஒன்று தானும் நுவன்றவாண் வேறுய்ச்
[செல்வன்
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் அவர்கள் சேதி
கந்தனே சான்ற மாதே கழறின மொழிகுன் ருது.

10. இந்த ஜாதகன் உடன் பிறந்தார்களில், ஆண்கள் இருவர்; பெண் ஒருத்தி என்று கூறினேம். சகோதரி இறப்பாள். மேற்கூறிய சகோதரர்கள் இருவரும் வேறு குடும்பமாகச் செல்லுவர். பிற்பகுதியில் அவர்களைப் பற்றிய செய்திகளைக் கூறுவோம். முருகனைப் பெற்ற பார்வதியே! கூறிய சொல் தவறாது.

11. மங்கள மிருபத் தேழில் மருவிடும் தென்மேல் திக்கில்
அங்கவள் குணத்தைச் சொல்வோம் அன்புள மனத்த
[ளாகும்
எங்கள்போல் அதிதிக் கன்னம் ஈகுவாள் சிவந்த மேனி
சங்கையா மனத்த ளாகும் தன்துணை தோஷ மெய்தும்.

11. இந்த ஜாதகனுக்கு இருபத்தேழாம் வயதில், தென் திசையிலுள்ள ஓர் ஊரிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் குணத்தைக் கூறுவோம். அன்பு நிறைந்த மனத்தினள். எங்களைப் போன்ற அதிதிகட்கு உணவு அளிப்பாள். சிவந்த தேகமுடையவள். மனத்தில் சிறிது சந்தேக முண்டு. இவள் உடன் பிறந்தார் சேத மடைவர்.

12. சஞ்சல மனத்த ளாகும் சீலியாம் விரத மேற்பள்
பஞ்சைகட் கன்ன மீவள் பர்த்தாவின் மனம்போல் வாழ்வள்
வெஞ்சினம் கொஞ்ச முண்டு வீண்வம்பு செல்லா ளாகும்
அஞ்சினோர் தம்மைக் காக்கும் அம்பிகை யாளே கேளாய்.

12. துன்பம் நிறைந்த மனம். ஒழுக்க முள்ளவள். விரதங்களை மேற்கொள்ளுவாள். கதியற்றவர்கட்கு உணவு அளிப்பாள். கணவன் மன மறிந்து வாழ்க்கை நடத்துவாள். கொடிய கோபம் சிறிதுண்டு. வீணான வம்புகளில் தலையிட மாட்டாள். அடைக்கல மென்று பயத்துடன் வந்தவர்களைக் காப்பாற்றும் பார்வதியே! கேட்பாயாக.

13. புத்திர விருத்தி தம்மைப் புகலவே பலத்தைக் காணேம்
சித்தமா யுதித்தா லும்தான் தீங்காகு மென்று சொல்வோம்
குற்றத்தைச் சொல்லு மென்ன குளிர்புக ரஞ்சில் தங்க
வெற்றியாய்ச் சனியும் பார்க்க விளம்பினேம் அந்தச் சங்கை.

13. இந்த ஜாதகனுக்குப் புத்திர பாக்கியத்தைப் பற்றிக் கூறுவோ மென்றால், அது சிறப்பாக இல்லை. அங்ஙனம் பிறந்தாலும் சேதமாம் என்று கூறுவோம். என்ன குற்றமென்று சொல்லுங்கள். சுக்கிரன் இலக்கினத்துக்கு ஐந்தாமிடத்தில் தங்கி, சனிபினால் பார்க்கப் படுவதால் புத்திர தோஷங் கூறினேம்.

14. பொன்னவன் அஞ்சைப் பார்க்கப் புத்திரன் தன்னுல் காமம்
இன்னவன் தனக்கு நேரும் எய்தாத காரணம்சொல்
முன்சென்ம வினையி னுலே விளங்கார்கள் சுதர்கள் தோடம்
என்ன வுழ் செய்தா னத்தின இயம்புவீர் முனியே நீர்தாம்.

14. குரு ஐந்தாமிடத்தைப் பார்ப்பதால், இந்த ஜாதகனுக்குப் புத்திர னுல் இனிதிக் கடன்கள் கடைபெறும். அப்படி யிருக்க, புத்திரர் தோன்றர் என்று நீங்கள் கூறக் காரணம் யாது? இந்த ஜாதகனுக்கு முற்பிறப்பில் ஏற் பட்ட ஒரு தோஷத்தினுல் புத்திரர் நிலையார். நீங்கு உண்டாகும். முற் பிறவியில் என்ன நீங்கு செய்தான். அதனைக் கூறுங்கள்? முனிவரே!

15. இன்னவன் இருந்த சென்மம் மொழிகின்றேம் சிறுபாக்
[கத்தில்
கர்ணமாம் குலமு தித்துக் காளைகளு ருடைய னுகி
அந்நகர்க் கணக்கு வேலை அவன்வாழ்நாட் வினையைக்
[கேண்மோ
தன்னுடைக் கொல்லை தன்னில் தங்கிற்று விருட்சம் ஒன்று.

15. இந்த ஜாதகன் முற் பிறப்பைக் கூறுகின்றேம். சிறுபாக்கம் என்ற ஊரில், கருணீகர் குலத்தில் பிறந்து, புத்திர பாக்கிய முடையவனுய், கணக்கு வேலை செய்து கொண்டு வாழ்ந்திருந்த காலத்தில், உண்டான தோஷத்தைக் கேளுங்கள். இவன் வீட்டுத் தோட்டத்தில் மரம் ஒன்று இருந் தது.

16. கருமுனி வாச மாகும் காளைதன் வேலைக் காகத்
தறிபடச் செய்தான் இன்னேன் சடைமுனிக் கிடமில்
[லாமல்
மருவிற்று வேறு சாகை வதிந்தசா பத்தைக் கேண்மோ
திருமகன் மறுசென் மத்தில் செனித்தயில் அடையா னுகி.

16. அந்த மரத்தில் கருப்பு முனி யொன்று வாசம் செய்து கொண் டிருந்தது. இவன் தன் உபயோகத்துக்காக அம் மரத்தை வெட்டினுன். அதனுல் வசித்துக் கொண்டிருந்த சடாமுனிக்கு இடமில்லாமல் வேறு மரக் கிளைக்குச் சென்றது. செல்லும்பொழுது அஃது ஒரு சாபமிட்டது. அதனைக் கேளுங்கள். மறு பிறப்பில், பிறந்த வீடு சொந்த மில்லாதவனுய்;

17. சுதர்களும் தோட மெய்தும் சுகமிலாக் குடும்பி யாகி
நிதியின்றி வாழ்வா யென்று நீள்சடை முனியும் சொல்ல
அதுசாபம் சேர்ந்த தென்றேம் அச்சென்மம் சுதர்கள்
[மாண்டு
சதியுள மனத்த னுகிச் சண்டன்தன் பதிக்குப் புக்கு;

17. புத்திர தோஷத்தையும் அடைவாய். நலமில்லாத குடும்பத்தைப் பெற்று, செல்வமில்லாமல் வாழ்வாய் என்று, நீண்ட சடையை யுடைய முனியும் கூறியது. அந்தச் சாபம் இவனைப் பற்றியது என்று கூறினேம். அப் பிறப்பில் புத்திரர்கள் இறந்து, துன்பமுள்ள மனத்தினனாய், மரண மடைந்து ;

18. வேதனால் வரையப் பட்டு விளங்குவான் இந்தப் பாலன்
பாதக முனியின் சாபம் பிதுரில்லம் ஆஸ்தி காணான்
தீதுண்டு சுதர்க ளுக்கு சேயிழை தன்னால் குற்றம்
ஓதுவீர் அந்தச் சங்கை உரைக்கின்றேம் கேளு மம்மா.

18. மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, இப் பிறப்பில் பிறப்பான் இந்த ஜாதகன். கொடிய சடாமுனியின் சாபத்தினால் தந்தையின் வீட்டையும், சொத்துக்களையும் அடையான். புத்திரர்களுக்கு நாசம் ஏற்படும். இவன் மனைவியினால் ஒரு தோஷம் உண்டாகும். அதனைக் கூறுகின்றேம். கேளுங்கள் தாயே !

19. பாரியின் பூர்வம் சொல்வேன் பரங்குன்ற நகரம் தன்னில்
நாரியும் வைசியச் சேயாய் நல்கியே மணமு மின்றிக்
காரிகை வாழும் நாளில் கலந்தவூழ் தன்னைக் கேண்மோ
தீரமா யில்லம் தன்னில் சேர்ந்தது அடைக்க லானும்.

19. மனைவியின் முற் பிறப்பைக் கூறுவோம். திருப்பரங் குன்றத்தில், வைசியக் குலத்தவளாய்ப் பிறந்து, மணமில்லாமல் வாழ்ந்து கொண்டிருந்த நாளில், ஏற்பட்ட தோஷத்தைக் கேளுங்கள். இவள் வீட்டில் ஒரு பறவை கூடு கட்டிக் கொண்டு வசித்தது.

20. இறகிலாக் குஞ்சுந் தானும் இருக்கிற சமயம் தன்னில்
அரிவையு மதைப்பி டித்து அந்தகன் பக்கல் சேர்த்தாள்
மருவிற்று அந்தத் தோட மறைகின்றேம் வேறு ஒன்று
வறுமையாய் ஏழை மாது மகவுக்கு அன்னம் வேண்ட ;

20. இறகில்லாத தன் குஞ்சு ஒன்றுடன், அஃது இருக்கின்ற சமயம் பார்த்து, அதனைப் பிடித்துக் கொன்று விட்டாள். அஃது ஒரு தோஷம் சேர்ந்தது. வேறு ஒன்றும் கூறுகின்றேம். தரித்திரத்தினால் ஓர் ஏழைப் பெண், தன் குழந்தைக்கு உணவு தருமாறு யாசிக்க ;

21. அரிபோலக் கோப முற்று அணுகாது அன்ன மென்ன
உரைகுவாள் அந்த மாது உதிக்கும்பின் சென்மம் தன்னில்
வருமில்லம் பாழ தாகும் மைந்தரும் துணையு மின்றித
திருகாக வாழ்வா யென்றுள் சேர்ந்தது அந்த தோடம்.

21. இவள் சிங்கம் போன்று கடுஞ் சினமடைந்து, உணவு கிடையாது என்று கூறி விரட்டினுள். அந்த ஏழைப் பெண் கூறுவாள். மறு பிறவியில் சொந்த வீடு இன்றியும், உடன் பிறந்தாரு மில்லாமல், துன்பத்தோடு வாழ்ந்திருப்பாய் என்றனள். அந்தத் தோஷம் இவளைப் பற்றியது.

22. மாதுக்குச் சுதர்க ளின்றி மறலிதன் பதிக்குச் சென்று
[1]வேதனுல் வரையப் பட்டு விளங்குவாள் இந்த மாது
சூதாகப் பட்சி தோடம் தாயில்லம் நாஸ்தி யாகும்
மேதினில் துணையும் தோடம் மெல்லியல் சாபத் தாலே.

22. இவள் அப் பிறவியிலேயே புத்திர பாக்கிய மில்லாமல் மரண மடைந்தாள். மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, இக் குலத்தவளாகப் பிறப்பாள் இவள். பறவையைக் கொன்ற தோஷத்தினுல் தாய் வீடு நாச மாகும். ஏழைப் பெண்ணின் சாபத்தால் சகோதர தோஷமும் ஏற்படும்.

23. புத்திர தோடம் எய்தும் புகலுவீர் அதற்குச் சாந்தி
சித்தமாய்க் கரும சாந்தி செய்துமே தாமி ரத்தில்
சத்தியம் பீசம் தன்னைச் சட்கோண மாய மைத்துப்
பத்தினி அணிந்து கொண்டு [2]பார்க்கவன் வார நோன்பு;

23. புத்திர தோஷமும் உண்டாகும். அதற்குச் சாந்தி யொன்று கூறுங்கள். நிச்சயமாய்க் கரும சாந்தி யொன்று செய்து, தாமிரத் தகட்டில், பராசக்தி பீஜாட்சரத்தை அறுகோண வடிவமுள்ள சக்கர மமைத்து எழுதி, அந்தத் தகட்டினை இவள் அணிந்து கொண்டு, வெள்ளிக் கிழமை தோறும் விரதம்;

24. ஓராண்டு கொள்வா ளாகி லுதிக்கும்சேய் தீர்க்க மென்றோம்
மாரனும் குளிசம் கொண்டு மாதமோர் ஏகா தசியும்
தீதிலா விரதம் கொள்ளச் சென்மமுழ் வினையுந் தீர்ந்து
பாரினில் சுதர்கள் தோன்றும் பகர்ந்தது தப்பா தாமே.

24. ஓர் ஆண்டு இருந்து வருவாளாயின், பிறக்கும் குழந்தை தீர்க்க மாம் என்று கூறினேம். இவள் கணவனும் தூய்மையுடன், மாதம் ஓர் ஏகாதசி யன்று குற்றமற்ற விரதத்தை யனுஷ்டிப்பானுகில், முற் பிறப்புத் தோஷங்கள் விலகி, புதல்வர்கள் தோன்றுவர். நாங்கள் கூறியவை தவறு.

---

1. பிரமன்

2. சுக்கிரன்

25. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அன்புள மனத்த
[ளாகும்
பன்னியே பேச வல்லள் பாட்டாளி மாஞ்சி வப்பள்
தன்துணை ஒன்று தோன்றும் தங்காது அதுவு மேதர்ன்
முன்சென்மம் தவளை தென்பால் உதித்தனள் அருகர்
[வர்க்கம்.

25. ஜாதகன் தாயாருடைய குணத்தைச் சொல்லுவோம். அன்பு நிறைந்த மனத்தினள். பன்னிப் பன்னிப் பேசுதலில் வல்லவள். உழைப் பாளி. கருமை கலந்த சிவப்பு நிற முடையவள். இவளுக்கு உடன் பிறந் தார் ஒருவர் உண்டு. அவர் நிலையார். முற்பிறப்பில் தவளை மலைக்குத் தெற்கில், ஜைனர் குலத்தவளாய்ப் பிறந்தாள்.

26. மங்கையும் வாழு நாளில் மைத்துனன் மனைவி பேரில்
சங்கையாய் வார்த்தை சொன்னுள் தன்பந்து அவளை நீக்க
நங்கையும் வருத்த முற்று நவிலுவாள் சாபந் தானும்
தங்கையென் றெண்ணு மல்தான் சாற்றினுய் சிலேடை
[வார்த்தை.

26. இவள் வாழ்ந்து கொண்டிருக்கும் நாளில், தனது மைத்துனன் மனைவிமீது வீண் பழி யுரைத்தாள். அதனால் அவள் புக்ககத்தார் அவளை விலக்கினர். வருத்த மடைந்த அவள் சாபமிடுவாள். என்னைச் சகோதரி யென்று கருதாமல், இரு பொருள் படும்படி என்னைப் பற்றிப் பழியுரைகளைக் கூறினுய்.

27. அலைகடல் துரும்பு போலே அலையவே வைத்த பாவி
குலவாது துணைவர் தாமும் கொண்டவன் மத்தில் மாண்டு
நிலையது இல்லா தாகி நேமியில் வாழ்வா யென்று
குலவியே தெருத்தூள் விட்டாள் குலவிற்று அந்தத் தோடம்.

27. பெரிய கடலில் அகப்பட்டுக் கொண்ட சிறு துரும்பைப் போல் என்னை அலைய வைத்த பாவியே! நீ வரும் பிறவியில், உடன்பிறந்தார் இன்றி, மத்திய காலத்தில் கணவன் இறக்க, நிலைத்த இன்பம் இல்லாமல் வாழ்வாய் என்று கூறி, தெரு மண்ணை வாரி யிறைத்தாள். அந்தத் தோஷம் இவளை யடைந்தது.

28. கன்னிகை பேதி யாலே காலன்தன் பதிக்குப் புக்கு
முன்னவன் வரையப் பட்டு உதித்தன ளென்று
[சொல்வோம்
பின்னமாய் மாது சாபம் பேதைக்குத் துணைவர் தோடம்
தன்வரன் மத்தில் மாள்வன் சஞ்சல மனத்த ளாமே.

28. அந்தியக் காலத்தில் பேதி ஏற்பட்டு மரண மடைந்தாள். பின்பு பிரமனால் படைக்கப் பட்டு, இப் பிறப்பில் பிறந்தாள் என்று கூறுவோம். முற் பிறப்பில் ஏற்பட்ட பெண் சாபத்தினால் இவளுக்குச் சகோதர தோஷம் உண்டாயிற்று. இவள் கணவனும் இடைக் காலத்தில் மாள்வான். துன் பம் குடிகொண்ட மனத்தினளாவள்.

29. ஈரொன்ப தாண்டு தன்னில் ஏதுவள் கால நாடு
கூறுவோம் இவள்பின் சென்மம் கோகர்ண நாட்டி லேதான்
பாரிய தனவா னுக்குப் பிறப்பளாம் வைசிய சேயாய்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

29. ஜாதகனின் பதினெட்டாம் வயதில் இவள் இயமனுலக மடை வாள். இவள் மறு பிறவியைக் கூறுவோம். திருக்கோகர்ணம் என்ற க்ஷேத் திரத்தில் மிகுந்த செல்வமுடைய வைசியனுக்குப் புதல்வியாகப் பிறப்பாள். ஆறு முகங்களை யுடைய முருகக் கடவுளைப் புதல்வராக வடைந்த அம்பிகையே! கேட்பாயாக.

30. தந்தையின் பின்சென் மங்கேள் தக்கோலம் அருகில்
[கீழ்பால்
சந்ததம் ரெட்டி வமிசம் செனிப்பனும் என்று சொல்வோம்
மைந்தனு மறுபா னேழில் மார்கழி மாதம் தன்னில்
அந்தகன் பக்கல் சேர்வன் அறைகுவோம் இவன்பின்
[சென்மம்.

30. தகப்பனாரின் முற் பிறவியைக் கேளுங்கள். தக்கோலம் என்ற ஊருக்கு அருகில், கிழக்குப் பக்கமாக உள்ள ஒரு சிற்றூரில், ரெட்டியார் வமி சத்தில் பிறப்பான் என்று கூறுவோம். ஜாதகன் அறுபத்தேழாம் வயதில், மார்கழி மாதத்தில் மரண மடைவான். இவன் மறுபிறப்பைக் கூறுவோம்.

31. உத்திரம் துவாரை தன்னில் உதிப்பனும் கோகு லத்தில்
சித்தசன் இச்சென் மத்தில் செய்தபுண் ணியங்க ளென்ன
சுத்தமு முடைய னுயும் சொல்லதைக் காத்த தாலும்
மூத்தின தலங்கள் சென்றும் உயர்வோர்கள் பத்தி யாலும் ;

31. வடக்கிலுள்ள துவாரகையில் இடையர் குலத்தவனாகப் பிறப் பான். இவன் இப் பிறப்பில் செய்த நல்வினைகள் யாவை? தூய்மை யுடையவனாயும், சொன்ன சொல்லைக் காப்பவனாயும், உயர்ந்த தலங்களுக்கு யாத்திரை சென்று வருபவனாயும், சான்றோர்களிடம் பக்தி யுள்ளவனாயும் ;

32. அறமதில் இச்சை யாலும் அவனுமே வாழ்வ தாலும்
வருகுவா னென்று சொல்வோம் மனைவியும் இவன்பின்
[கண்டம்
மறுசென்மம் வேங்க டத்தில் மாதுவும் வைணவ சேயாய்
உறைகுவா ளென்று சொன்னேம் உத்தமி கேட்டி டாயே.

32. தருமத்தில் ஆசை யுடையவனையும் இவன் வாழ்த்து வருவதால் துவாரகையில் பிறப்பான் என்று கூறுவோம். இவனுக்குப் பிறகு இவன் மனைவி மரண மடைவாள். அவள் மறு பிறவியில், திருவேங்கடத்தில், வைணவ மதத்தினளாய்ப் பிறப்பாள் என்று கூறினேம். உத்தமியே! கேட்பாயாக.

33. பாலகன் யோகச் சேதி பகருவோம் இனிமே லாக
ஞாலங்கள் கொஞ்சம் சேர்ப்பன் நற்கல்வி ஞானம் கற்பன்
ஏலவே சுகதுக் கங்கள் எய்திடும் தனமும் சேர்க்கான்
பால்பாக்கிய மில்லா னுகும் பண்போருக் கன்ன மீவன்.

33. ஜாதகனின் யோகங்களை இனிமேல் கூறுவோம். சிறிது நில புலன்கள் சேர்ப்பான். நல்ல ஞானத்தைப் புகட்டும் கல்வியைக் கற்பான். சுக துக்கங்கள் இவன் வாழ்க்கையில் சமமாக ஏற்படும். பொருளைச் சேர்க்க மாட்டான். பால் பசு பாக்கிய மில்லாதவன். நற்குண முடையோருக்கு உணவு அளிப்பான்.


34. பிறந்திடுங் காலம் தன்னில் பூரத்தில் முதல்பா தத்தில்
சிறந்தசுக் கிரனி ருப்புச் செப்புவோம் மூவைந் தாண்டும்
உறைந்திடும் திங்க ளெட்டும் உரைத்தனம் பூர்வ பாகம்
அறந்தனை வளர்க்கு மெங்கள் அம்பிகை யாளே கேளாய்.

34. ஜாதகன் சனன காலம், பூர நட்சத்திரம் முதல் பாதமாகும். அப்பொழுது சுக்கிர மகா தசை இருப்பு; பதினைந்து வருஷங்கள், எட்டு மாதங்களாம் என்று சொல்லுவோம். இங்ஙனம் முதற் பாகம் கூறினேம். தருமத்தை வளர்க்கின்ற தருமாம்பிகையே! கேட்பாயாக.

ஜாதகம் 45

1. நந்தியும் செனன மாக நவமதில் புகர்பான் புந்தி
சந்திரன் சனியும் தங்கத் தசமத்தில் பொன்னேன் தங்க
ஐந்தினில் பணிசேய் தங்க [1]அதிதியும் இலாப மேற
இந்தவார் கோளும் நின்றால் இயம்புவீர் பலனைத் தானே.

1. இலக்கினம் விருஷபமாகவும், சுக்கிரன் சூரியன் புதன் சந்திரன் சனி இவர்கள் ஒன்பதாம் வீட்டிலும், குரு பத்தாமிடத்திலும், ஐந்தாமிடத்தில் ராகுவும் செவ்வாயும், கேது இலாப ஸ்தானமாகிய பதினொன்றிலும், ஆக ஒன்பது கிரகங்களும் இவ்வாறு பொருந்தியிருந்தால் அதற்குப் பலன்களைக் கூறுங்கள்.



2. பிருகுவும் புகலு கின்றார் பிறந்திடும் ஆண்பால் சென்மம்
பெறுந்தந்தை யில்லம் சொல்வேன் புரந்தரன் வாச லாகும்
திருமாலின் கோட்ட முத்ரம் சிங்கவா கனத்தாள் கீழ்ப்பால்
பெருவயி றப்பன் மேல்பால் புகன்றனம் மாரி தென்பால்.

2. பிருகு முனிவர் கூறுகின்றார். இது ஆண்மகனின் ஜாதகமாகும். இவன் தந்தையின் வீட்டைக் கூறுவோம். அது கிழக்கு நோக்கிய வாயிலை உடையது. வடக்கில் விஷ்ணு கோவில் உண்டு. கிழக்கில் காளி கோவிலும், மேற்கில் மாரியம்மன் கோவிலும், தெற்கில் விநாயகப்பெருமான் கோவிலும் உள்ளன.

---

1. கேது

3. இத்தகை மாடி சூழு மிலகிய சிறுவூ ராகும்
முந்தின குலமே யென்றேரும் முதல்வனும் சேட்ட
[ஞகும்
பத்தினி அன்னை யில்லம் பிறப்பனும் தென்கீழ் தன்னில்
வித்தகன் குடும்பச் சேதி விளம்புவோம் இந்நூல் தன்னில்.

3. இத்தலைய அடையாளங்களுள்ள ஒரு சிறிய ஊரில் அந்தணர் மரபில், தந்தைக்கு முதல் புதல்வனாக இந்த ஜாதகன் தோன்றுவான். தென் கிழக்குத் திசையிலுள்ள இவன் தாய் வீட்டில் பிறப்பான். இந்நூலில் ஜாதகனது குடும்ப வரலாறுகளைக் கூறுவோம்.

4. தந்தையின் துணைவு ணென்று சத்தியும் அவ்வார் தீர்க்கம்
நொந்திடும் மற்ற தெல்லாம் நுவன்றவூண் இளையோ
[ஞகும்
அந்தவன் சேதி சொல்வேன் அற்பரை உறவு கொள்ளான்
முந்துமால் பக்தி கொள்வன் மொழிகுவான் தந்திர
[வார்த்தை.

4. இவன் தந்தையின் உடன்பிறந்தவர்களில் சகோதரன் ஒருவனும், சகோதரி ஒருத்தியும் தீர்க்கமாக இருப்பர். மற்றவர் மரணமடைவர். கூறப்பட்ட சகோதரன் தந்தைக்குத் தம்பியாவான். அவனைப் பற்றிக் கூறுவோம். ஈனர்களின் நேசம் கொள்ளமாட்டான். திருமாலிடம் பக்தி உள்ளவன். தந்திரமான மொழிகளைக் கூறுவான்.

5. கல்விமான் சிவந்த மேனி கண்முகம் வசிய முண்டு
நல்லவன் நல்ல வர்க்கு நாயகி மார்கள் மோகன்
வெல்லும்சொல் உடைய ஞகும் வேந்தர்பூ சிதமு மாவன்
இல்லறம் அலைச்ச லென்றும் இருவிதக் குணத்தா ஞகும்.

5. கல்வியறிவு வுள்ளவன். சிவப்பு நிறமுள்ளவன். அழகிய கண்ணும் முகமும் உடையவன். நல்லவர்க்கு நல்லவனுவான். பெண்கள்பால் மையல் உடையவன். பிறரை வெற்றி கொள்ளும் மொழிகளைப் பேசுவான். மன்னர்களால் போற்றப் படுபவன். குடும்பத்திற்காக அல்லல் படுவான். இருவிதக் குணங்க ளுடையவன்.

6. உடன்கூடி வாழ்வா ஞகும் உயர்வான புத்தி யேற்பன்
மடமையில் வடகீழ் நேரும் மைந்தர்கள் ஆண்பா லொன்று
விடவிழி மார்கள் ரெண்டு மேவிடும் தீர்க்க மாகத்
திடமதாய்க் குடும்பம் பின்னல் செப்புவோம் தாயே
[யாங்கள்.

6. சகோதரனுடன் ஒன்றுகச் சேர்ந்து வாழ்வான். மேன்மையான புத்திமதிகளே எற்பான். இவனுக்கு மனைவி வட கிழக்குத் திக்கிலிருந்து வாய்ப்பாள். சந்ததிகளில் ஆண் ஒருவனும், பெண்கள் இருவரும் தீர்க்க மாகத் தோன்றுவர். இவனைப் பற்றிய மற்ற விவரங்களைப் பின் பகுதியில் கூறுவோம். தாயே!

7. பாலகன் தந்தை சேதி பகருவோம் சிவந்த மேனி
ஞாலங்கள் விருத்தி செய்வன் இராசர்பூ சிதமு மாவன்
வேல்தனு ராசி யாகும் மிக்கபூ ரட்ட நாளாம்
சாலவே உதிப்பா னுகும் தன்னில்லம் கெட்டி செய்வன்.

7. ஜாதகனின் தகப்பனரைப் பற்றிக் கூறுவோம். சிவப்பு நிறமுள்ள வன். நிலபுலன்களை விருத்தி செய்வான். மன்னர்களால் போற்றப்படு வான். இவன் பூராட நக்ஷத்திரம், தனுர் ராசியில் தோன்றுவான். தான் பிறந்த வீட்டை உறுதியாக அமைப்பான்.

8. பின்தன்னில் சித்திரம் செய்வன் மேலான கர்மம் செய்வன்
துன்னுகிரா மாதி பத்தியம் செய்குவான் சின்னுள் தானும்
தன்தேகம் உணைச்சல் நீட்சி தன்பந்து தன்னுல் யோகம்
பின்துணை தனைக்காப் பானும் புதல்வன்பின் யோகம்
[சொல்வோம்.

8. பிறகு தன்வீட்டில் அழகிய சித்திரங்கள் சமைப்பான். மேன் மையான பணியாற்றுவான். கிராமத்திற்குத் தலைவனுகத் திகழுவான். உடல் மெலிந்து நீண்டுள்ளவன். தன் உறவினன் ஒருவனுல் யோக மடைவான். தன் தம்பியை யாதரிப்பான். இவனுக்கு, பிறகு ஏற்படும் யோகங்களைக் கூறுவோம்.

9. எந்தக்கா லத்தில் யோகம் இல்லமும் செய்வான் சொல்வாய்
அந்தவன் ஆருண் டின்மேல் அணுகிடும் இல்ல மென்றோம்
முந்தினுள் பொன்னும் நேரும் மேன்மையாய்க் குடும்பம்
[எய்தும்
அந்திய பாகம் தன்னில் பேசுவோம் விபர மாக.

9. எக்காலத்தில் இவன் அழகிய இல்ல மமைப்பான்? கூறுங்கள். இவன் பிறந்து ஆறு ஆண்டுகளுக்கு மேலாகப் புதியவீடு ஏற்படும் என்றோம். பழைய பொருள்களும் சேரும். குடும்பம் சிறப்புடன் நடைபெறும். பிற் பகுதியில் விவரமாகக் கூறுவோம்.

10. ஆதியில் குடும்ப லேச்சல் அல்பமாம் உணவு மெய்தும்
சாதகன் உதித்த பின்பு சந்திரன் பிறைபோல் யோகம்
ஓதுவேன் தலங்கள் செல்வன் உயர்வுளோர் நேசம்
[கொள்வன்
சூதிலான் வெகுளி யாகும் சுருக்கமாம் வார்த்தை யுண்டு.

10. முதலில் குடும்பம் வறுமையில் அல்லலுறும். போஜன வசதி குறையும். ஜாதகன் தோன்றியபிறகு, வளர்பிறைச் சந்திரன்போல யோகங்கள் ஏற்படுமென்று கூறுவோம். புண்ணியத் தலங்களுக்குச் செல்வான். மேலானவர் நட்புக் கொள்வான். சூது இல்லாதவன். வெளிப்படையான மனமுள்ளவன். சுருக்கமாக உரைப்பான்.

11. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
அன்னவன் குணமெவ் வாறு [1]அரிமகன் ஒப்ப தாகும்
முன்கோபி ஒருவர்க் கஞ்சான் மொழியது துண்ட மாகும்
அன்னிய பாடை மேன்மை அரசனுல் தொழிலு மேற்பன்.

11. இத்தகைய குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் தோன்றுவான்; அவன் குணங்கள் எத்தகையவை? மன்மதனைப் போல அழகானவன், முன் கோப முள்ளவன். எவருக்கும் பயப்படாதவன். கண்டிப்பாகப் பேசுபவன். அன்னிய மொழிகளைப் பயின்று மேன்மையடைவான். அரசாங்கப் பதவி வகிப்பான்.

12. தந்தைதாள் பூமி கொஞ்சம் தான்சில பூமி சேர்ப்பன்
பந்தினேர் மதிக்க உய்வன் பகவானின் பக்தி பூண்பன்
நொந்தபேர் தம்மைக் காப்பன் நிருபர்க்கு இவன்சொல்
[மேன்மை
செந்திரு விலாச மூண்டு சிறப்பான கல்வி யுண்டு.

12. தந்தையின் காலத்தில் கிடைத்த சிறிதளவான நிலங்களுடன் தானும் சில நிலங்களைச் சேர்ப்பான். சுற்றத்தார் மெச்ச வாழ்வான். கடவுள் மீது பக்தி உள்ளவன். துன்பமடைந்தவர்களைக் காப்பாற்றுவான். மன்னர்களும் இவன் வார்த்தைகளைப் போற்றுவர். இலட்சுமீ கடாட்சம் நிறைந்தவன். மேன்மையான கல்வியும் கற்றிருப்பான்.

13. வித்தையால் வேரூர் வாசம் விளம்புவோம் துணைவர் தம்மை
சுத்தமாய் ஆண்பா லொன்று தோகையும் அவ்வார் தீர்க்கம்
புத்தியில் பெரியோ னுவன் பொய்சொல்வன் மெய்யாய்த்
[தோன்றும்
குத்தத்தை மனத்தில் வையான் கோமளி கேட்டி டாயே.

1. மன்மதன்

13. கல்வி காரணமாக வேற்றூரில் சென்று வாழ்வான். இவன் சகோதர பாவத்தைக் கூறுவோம். சகோதரன் ஒருவனும், சகோதரி ஒருத்தியும் தீர்க்கமாக இருப்பார்கள். புத்தியில் மேன்மையானவன். இவன் கூறும் பொய் மொழிகளும் மெய்ம்மொழி போல் தோன்றும். பிறர் பிழை களே மனத்தில் வைக்க மாட்டான். பார்வதியே! கேட்பாயாக.

14. அன்னையு மாநி றத்தாள் அழகுளாள் பொறுமை சாலி
கன்னடை சூது வார்த்தை நாயகி யோக சாலி
அன்னியர் குற்றம் சொல்லாள் அடாவடி யில்லா ளாகும்
அன்னம் போல் நடையு மாகும் அவள்முக வசிய மில்லாள்.

14. இவன் தாய் கரிய நிறமுள்ளவள். அழகுள்ளவள். பொறுமை யுள்ளவள். கல்லொழுக்க முடையவள். சூதாகப் பேசுபவள். அதிர்ஷ்ட முடையவள். பிறர் குற்றங்களைக் கூறுள். பிடிவாத குணமில்லாதவள். அன்னம் போல் நடை யுள்ளவள். கவர்ச்சியான முகத்தைப் பெறுதவள்.

15. இல்லமும் தென்கீ ழாகும் இவள்துணை ஆண்பா லொன்று
வல்லிமார் நால்வர் தீர்க்கம் மரித்திடும் மற்ற தெல்லாம்
சொல்லுவோம் இவள்தன் பூர்வம் சோழநா டதனி
[லேதான்
புல்கிளுள் செக்கான் வமிசம் புத்திர ருடையா ளாகி.

15. இவள் பிறந்த வீடு தென் கிழக்குத் திசையிலுள்ளது. இவ ளுக்குச் சகோதரன் ஒருவனும், சகோதரிகள் நால்வரும் தீர்க்கமாக இருப்பர். மற்றவர் மரண மடைவர். இவள் முற்பிறப்பைக் கூறுவோம். சோழ நாட்டில் வாணிய குலத்தில் தோன்றி, மக்களே யடைந்து வாழ்ந்து வந்தாள்

16. அன்னிய மாதைத் தானும் அவள்வரன் தன்கைக் கொண்டு
கன்னிமேல் வெறுப்புக் கொள்ளக் காதலி யவள்மேல்
[நிந்தை
சொன்னதைக் கணவன் கேட்டுத் தோகையை விலக்க
[லுற்றுன்
பின்வந்தோள் மனவெ றுப்பால் புகலுவாள் சாபம் தானே.

16. வேறு பெண் ஒருத்தியை இவள் கணவன் வசியம் செய்து கொண்டான். இவள் அதனை யறிந்து, தன்கணவன் அப்பெண்மீது வெறுப்புக் கொள்ளும்படி சில சொற்களைக் கூறினுள். அதனுல் அவன் அப்பெண்ணை விலக்கினுன். அப்பெண் மனம் வருந்திச் சாப மொழிகளைக் கூறினுள்.

17. பழியது என்மேல் சொல்லிப் பற்க்கவே விட்ட பாவி
அழிவுண்டு சுதர்கள் யாவும் அணுகும்பின் சென்மந்
[தன்னில்
விழிமுக வசிய மின்றி விளங்குவா ளென்று சொல்லி
இழிவுண்டு வரனு மில்லம் இடைஞ்சலாய் வாழ்வா
[ளென்று ;

17. என்மேல் அடாப் பழிகளைக் கூறி விரட்டிய பாவி, தன் புத்திரர்களை இழந்து, மறு பிறப்பில், கண் முகம் கவர்ச்சியின்றி, கணவனுக்குத் தாழ்வுண்டாகி, துன்பங்க ளடைந்து, வீட்டில் கஷ்டத்துடன் வாழ்வாள் என்று ;

18. சொல்லியே சென்ரு ளென்ரேம் சேர்ந்தது அந்தத் தோடம்
வல்லியும் அந்தி யத்தில் வரனுடன் சேது புக்கு
நல்லதோர் தலங்கள் சென்று நலிந்தோர்க்கு அன்ன மீந்து
புல்கினுள் கால நாடு பிரமனுல் வரையப் பட்டு

18. கூறிச் சென்ருள் என்று சொன்னேம். அந்தத் தோஷம் சேர்ந்தது. இவள் கடைசி நாட்களில் தன் கணவனுடன் சேதுவுக்குச் சென்று நீராடி, நல்ல புண்ணியத் தலங்களுக்கும் சென்று, ஏழைகளுக்கு உணவளித்து, பிறகு மரணமடைந்தாள். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு ;

19. வந்தவ ளென்று சொல்வோம் மாதுவும் பிம்பம் போலே
சந்திர வதன மில்லாள் [1]சேத்திரம் [2]வனவா சங்கள்
அந்தவள் முன்சென் மத்தில் அல்பமாம் செக்கான் வமிசம்
முந்தின குலம்எவ் வாறு உதிக்கும்கா ரணங்கள் சொல்வீர்.

19. இப்பிறப்பில் தோன்றினுள் என்று சொல்லுவோம். இவள் அழகிய முகமில்லாதவள். வீட்டில் பல கஷ்டங்களை யனுபவித்து வந்தாள். அவள் முற்பிறப்பில் வாணிய குலத்தில் பிறந்து, இப்பிறப்பில் பிராமணர் குலத்தில் தோன்றியது எதனுல் ? காரணங்களைக் கூறுங்கள்.

20. முன்சென்மம் சேது சென்று முயர்வான தலங்கள்
[சென்றும்
தன்பலம் குலமே லாச்சுச் சாபமும் விலகா தோசொல்
கன்னிகை திகிலாய்ச் சொன்ன கனசாபம் விலகா தாகும்
என்னபுண் ணியஞ்செய் தாலும் விலகாது என்று
[சொல்வோம்.

---

1. வீடு
2. வனவாசத்தில் அனுபவிப்பது போன்ற துன்பங்கள்

20. முற்பிறப்பில் சேதுவில் நீராடியதாலும், புண்ணியத் தலங்கட்கு யாத்திரை செய்ததாலும் இப்பிறப்பில் அந்தணர் குலத்தில் பிறப்பு ஏற் பட்டது. இவற்றுல் பெண் கூறிய சாபம் விலகாதோ? கூறுங்கள். பெண் மனம் வருந்திக் கூறிய சாபம் விலகாது. எத்தகைய நற் கருமங்கள் புரிந்தாலும் நீங்காது என்று கூறுவோம்.

21. பின்சென்மம் கூடல் தன்னில் பிறப்பளாம் இக்கு லத்தில்
அன்னவள் சுகமாய் வாழ்வள் ஆருறு ஆண்டு தன்னில்
இன்னவள் உடல மேகும் இயம்பின மொழிகுன் றுது
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

21. பின் சென்மம், மதுரையில் இதே குலத்தில் பிறப்பாள். சுக மாக வாழ்வாள். முப்பத்தாரும் வயதில் மரண மடைவாள். கூறிய மொழி தவருது. விநாயகனைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

22. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் பதினெட்
[டாண்டில்
நீலியும் வடகீழ் தன்னில் நேருவாள் குணத்தைச்
[சொல்வேன்
சீலியாம் விரத மேற்பள் சிறுத்தோர்க்கு அன்ன மீவள்
சாலவே முன்கோ பத்தாள் சற்பாத்திரி யோக சாலி.

22. ஜாதகன் திருமணப் பருவத்தைக் கூறுவோம். பதினெட்டாம் வயதில், வடகிழக்குத் திசையிலிருந்து இவனுக்கு மனைவி வாய்ப்பாள். அவள் குணத்தைக் கூறுவோம். ஒழுக்க முள்ளவள். விரதம் மேற் கொள்வாள். ஏழைகளுக்கு உணவு அளிப்பாள். மிகவும் முன்கோப முள்ளவள். சற் பாத்திரி யோக முள்ளவள்.

23. மங்கையும் வந்த பின்பு வரனுக்கு அதிக யோகம்
பொங்கிய குடும்ப மேற்பள் பெரிதான பணிகள் சேர்ப்பள்
சங்கையென் றுரைச் சேராள் சதுர்முகன் மனைபோல்
[ஓப்பாம்
ஐங்கரன் தனைவ ளர்த்த அம்பிகை யாளே கேளாய்.

23. மனைவி வந்தபிறகு ஜாதகனுக்கு நல்ல அதிர்ஷ்டம் ஏற்படும். செல்வச் சிறப்புள்ள குடும்பத்தை யடைவாள். பெரிய அணிகலன்களைச் சேர்ப்பாள். சந்தேக முள்ளவர்களோடு நட்புக் கொள்ள மாட்டாள். ஸரஸ் வதியைப் போன்றவள். விநாயகனைப் பெற்று வளர்த்த பார்வதியே! கேட்பாயாக.

24. புத்திர விருத்தி தம்மைப் புகலவே பலத்தைக் காணும்
சுத்தமாய் உதித்தா லும்தான் தீங்காகு மென்று
[சொல்வோம்
குத்தத்தைச் சொல்லு மென்ன குசன்பணி ஐந்தி லேற
இத்தகைப் பலத் தினுலே யியம்பினேம் அந்தச் சங்கை.

24. புத்திர பாவத்தைப் பேசுங்கால், அது பலமுள்ளதாக இல்லை. தோன்றினாலும் மரணமடைவர் என்று கூறுவோம். குற்றத்தைக் கூறுங்கள் என, செவ்வாயும் இராகுவும் புத்திர ஸ்தானமாகிய ஐந்தாமிடத்தில் இருப்பதால் அந்தத் தோஷத்தைக் கூறினேம்.

25. பாலகன் முன்சென் மத்தில் பற்றிய சிலவே தோடம்
சாலவே சொல்லு மென்னச் சாதகன் பூர்வம் கேளாய்
ஆலங்கா டதனி லேதான் அணுகினன் கோவையிய னுக
வேல்விழி மதலை யுண்டாய் வியாபாரம் மிகவே செய்து ;

25. ஜாதகன் முற்பிறப்பில் சில குற்றங்கள் வந்தடைந்தன. அவைகள் யாவை? கூறுங்கள் என, இவன் முன் சென்மத்தைக் கேளுங்கள். திருவாலங்காட்டில், கோவையிலுப்பத் தோன்றினன். மனைவி மக்களை யடைந்து, வியாபாரங்களை நலமுடன் நடத்தி;

26. மைந்தனும் வாழும் நாளில் மருவின வினையைச்
[சொல்வேன்
கந்தன்தன் ஆல யத்தில் கார்க்கோடன் வாச மாகும்
இந்தவன் ஓர்நாள் தன்னில் ஏகினன் அந்தி யத்தில்
மந்தமாய் மகுடத் தாலே மயங்கியே தியங்கும் போது ;

26. இவன் வாழ்ந்து வரும் நாளில் நேர்ந்த தீவினையைக் கூறுவோம். முருகன் கோவிலில் பாம்பு ஒன்று வாழ்ந்து வந்தது. இவன் ஒருநாள் மாலை அங்குச் சென்றனன். பாம்பு மெல்லப் படமெடுத்து ஆடி வந்தபோது;

27. அரங்கமே செய்தும் போகா தடித்தனன் சிலையி னுலே
மறலியின் பதிக்குச் செல்ல மருவிற்று அந்தத் தோடம்
உரைக்கின்றோம் வேறு ஒன்று உயர்வோர்க்குப் பொருளைத்
[தந்து
திருகுகள் கணக்கில் செய்தான் செப்புவார் சாபம் தானும்.

27. விரட்டியும் போகாதிருக்கவே, கல்லெடுத்து அடித்தான். பாம்பு இறந்தது. அந்தத் தோஷம் இவனை யடைந்தது. மற்றொன்றையும் கூறுவோம். பெரியோர்களுக்குப் பொருள் கொடுத்து, கணக்கில் மாற்றங்களைச் செய்தான். அவர்கள் சாபமொழி கூறினார்கள்.

28. மறுசென்மம் தோன்றி நீயும் வனவாசம் பூர்வம் தன்னில்
பெறும்சுத ரில்லா வாழ்வாய்ப் புகழிலாக் குடும்ப மாகும்
திருகாகச் சொல்ல லுற்றூர் சேர்ந்தது அந்தத் தோடம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

28. மறுபிறவி எடுத்து, நீ முதற் பகுதியில் பல துன்பங்களே அனுபவிப்பாய். பெற்ற புதல்வர்கள் அழிந்து வாழ்வாய். புகழில்லாக் குடும்ப மேற்பாய் என்று குற்றமாகக் கூறினர். அந்தத் தோஷமும் வந்தடைந்தது. வேதங்களின் முடிவில் விளங்கும் பார்வதியே! கேட்பாயாக.

29. மாரனும் அந்தி யத்தில் மைந்தர்கள் தோட மாகிப்
பாரிய தலங்கள் சென்று பண்போர்க்கு அன்ன மீந்து
வாரியில் தீர்த்தம் தோய்ந்து மறலியின் பதிக்குப் புக்கு
ஆரியன் வரையப் பட்டு அணுகினு னென்று சொல்வோம்.

29. ஜாதகனும் கடைசி நாட்களில், தன் புதல்வர்களே இழந்து, பிறகு புண்ணியத் தலங்களுக்குச் சென்று, பெரியோர்களுக்கு உணவளித்து, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி முடிவில் இறந்தான். மீண்டும் பிரமனல் படைக்கப்பட்டுத் தோன்றினன் என்று கூறுவோம்.

30. முன்சென்மம் நாக தோட முயர்வோர்கள் சாபத் தாலும்
தன்சுதர் தோட மெய்தும் செயமுனி புகலு கின்றூர்
முன்சென்மம் வைசிய னாக உதித்தவ னிச்சென் மத்தில்
முன்குலம் உதிப்ப தென்ன மொழிகுவீர் முனியே நீர்தாம்.

30. முற்பிறப்பில் சேர்ந்த நாக தோஷத்தாலும், பெரியோர்க ளிட்ட சாபத்தாலும் இவனுக்குப் புத்திர தோஷம் ஏற்படும். செயமுனி கூறுகின்றூர். முற்பிறப்பில் வைசியனாக இருந்தவன் இப்பிறப்பில் அந்தணனாகத் தோன்றியது எப்படி? முனிவரே! தாங்கள் கூறுங்கள்.

31. பலதல வாசம் சென்று பகவானின் பத்தி கொண்டு
நலமுள சேது சென்ற நற்பலன் குலமே லாச்சு
விலகாதோ முன்னூழ்த் தோடம் வேலர்தன் ஆல யத்தில்
கலந்ததோ டங்கள் நீங்கா காதலி கேட்டி டாயே.

31. பல தலங்களுக்குச் சென்றதாலும், கடவுள் பக்தி கொண்டமையாலும், சேதுவுக்குச் சென்ற பலத்தினாலும் மேற்குலம் ஏற்பட்டது. முன் பிறவியில் ஏற்பட்ட தோஷம் நீங்காதா? முருகன் கோவிலில் இவனே யடைந்த குற்றம் நீங்காது. பார்வதியே! கேட்பாயாக.

32. முன்வினை விலக வேண்டி மொழிகின்றேம் கிரியை தானும்
அன்னவன் மனைவி யோடு அறுமுகன் தணிகைக் கேகிச்
சென்னி யாறுடையா னுக்குத் திருவடிக் கர்ச்சித் தேத்தி
அன்னமும் ஒன்பான் பேர்க்கு அளித்துமே சொர்ண
[தானம்;

32. முற்பிறப்பில் செய்த குற்றம் நீங்க, சாந்தியொன்று கூறுகின்றோம். இவன் தன் மனைவியுடன், முருகன் வீற்றிருக்கும் திருத்தணிகைக்குச் சென்று, சுப்பிரமணியர் திருவடிகளில் அருச்சித்து, ஒன்பது பேருக்கு உணவு அளித்து, பொன்னைத் தானமாக;

33. ஈந்துமே நகரம் சென்று எம்பெரு மானின் கோட்டம்
கூர்ந்துமே சோதி ஒன்று குமரனும் வைப்பா னுகில்
சேர்ந்ததோர் வினைகள் நீங்கிச் செனித்திடும் ஆண்பா
[லொன்று
ஏந்திழை மார்கள் அவ்வார் இயம்புவோம் தீர்க்க மாக.

33. அளித்து, தன்னூரடைந்து, சிவபெருமான் கோவிலில் விளக்கு ஒன்றை வைப்பானுயின், இவனை யடைந்துள்ள தோஷங்கள் நீங்கி, புத்திரன் ஒருவனும், புத்திரி ஒருத்தியும் தோன்றுவர். அவர்கள் தீர்க்கமாக இருப்பர்.

34. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் விரிஞ்சி
[தன்னில்
வந்தவன் இக்கு லத்தில் மாநிலம் கிருஷி செய்து
அந்தவன் வினையில் லாமல் அணுகினன் கால நாடு
முந்தினேன் வரையப் பட்டு முதித்தனன் என்று
[சொல்வோம்.

34. தந்தையின் முற்பிறப்பைக் கூறுவோம். விரிஞ்சிபுரத்தில் இதே குலத்தில் தோன்றி, பயிர்த்தொழில் புரிந்து, குற்றமின்றி வாழ்ந்து மரண மடைந்தான். பிரம்மனுல் படைக்கப்பட்டுப் பிறகு தோன்றினன் என்று சொல்லுவோம்.

35. இருபது ஒன்ப தாண்டில் ஏகுவான் கால நாடு
வரும்சென்மம் காஞ்சி தன்னில் வருகுவான் இக்கு லத்தில்
பொருளது பெருக்க மாகிப் புகழுடன் வாழ்வா னுகும்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

35. இருபத்தொன்பதாம் வயதில் இவன் தந்தை மரணமடைவான். மறுபிறப்பில், காஞ்சீபுரத்தில் இதே குலத்தில் தோன்றுவான். செல்வச் சிறப்பும் புகழும் பெற்று நன்கு வாழ்வான். விநாயகனைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

36. பாலகன் தனக்கு யோகம் பகருவோம் மூவே ழின்மேல்
சாலவே அரசர் மூலம் சீவனம் எய்து மென்றோம்
சாலவே பிறைபோல் யோகம் தங்கிடும் அன்பான் ஆண்டும்
ஏலவே அரசு ஓங்கும் இனமதிப் புடைய வாழ்வன்.

36. ஜாதகனுக்கு இருபத்தொரு வயதுக்குமேல் யோகத்தைக் கூறுவோம். அரசாங்க உத்தியோகத்தால் வாழ்வான் என்று கூறுவோம். வளர் பிறைச் சந்திரன்போல் ஐம்பது வயது வரை யோகம் நீடிக்கும். தன்னாட்சி செலுத்துவான். சுற்றத்தினர் மதிக்க வாழ்வான்.

37. அன்பது எட்டு ஆண்டில் ஆவணி மாதம் தன்னில்
இன்னவன் உடலம் ஏகும் இயம்புவோம் இவன்பின் [சென்மம்
கன்னியாக் குமரி தன்னில் கலப்பனும் இக்கு லத்தில்
உன்னத வாணி பெற்ற உத்தமி கேட்டி டாயே.

37. ஐம்பத்தெட்டாம் வயதில், ஆவணி மாதத்தில் இவன் மரணமடைவான். இவன் மறு பிறவியைக் கூறுவோம். கன்னியாகுமரியில் இக் குலத்தில் தோன்றுவான். விசாலாக்ஷியைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

38. செனித்திடும் காலம் தன்னில் திருவோணம் முதல்பா [தத்தில்
குனித்திடும் மதியி ருப்புக் கூறுவோம் ஒன்ப தாண்டும்
அனையவே திங்கள் ஐந்தும் அறைகின்றோம் பலனே யாங்கள்
வனவாசம் பூர்வ மாகும் மாநிலம் சேர்தல் உண்டு.

38. இவன் செனன காலம் திருவோணம் முதல் பாதமாம். அப் பொழுது சந்திர மகா தசையில் இருப்பு, வருஷம் ஒன்பதும், மாதங்கள் ஐந்தும் ஆம். பலன்களைக் கூறுவோம், முற்பகுதியில் வனவாசத்தைப் போல் துன்பங்கள் ஏற்படும். நிலபுலன்கள் சேரும்.

39. தந்தையின் துணைசு பங்கள் சார்ந்திடும் கிராமச் செட்டுப்
பிந்தியும் இல்லம் செய்தல் பின்துணை விருத்தி யாகும்
சிந்தையில் நினைத்தே யாங்கள் செப்பினோம் பூர்வ பாகம்
இந்திர னிறைஞ்சும் மாதே இயமபின மொழிகுன் றுது.

39. தந்தையின் இளைய சகோதரனுக்குத் திருமணம் நடைபெறும். கிராம வியாபாரம் ஏற்படும். பிறகு வீடு கட்டுவான். சகோதர விருத்தி யுண்டு. இவ்வாறு நன்கு யோசித்து முதல் பகுதியை நாங்கள் கூறினோம். இந்திரன் துதிக்கின்ற அன்னையே! கூறிய மொழி தவறாது.

ஜாதகம் 46

1. நந்தியும் சென்ன மாக ரவிபுதன் விரய மேறச்
சந்திரன் ஏழில் தங்கச் சல்லிய னிரண்டி லேற
மந்தனும் லாபம் புக்க மறைசேயும் தசம மாகச்
சுந்தர பாம்பு பாக்யம் சிகிமூன்றில் கிரகம் நின்றுல் ;

1. இலக்கினம் விருஷபமாக இருந்து, சூரியன் புதன் இலக்கினத்துக்குப் பன்னிரண்டாமிடத்திலும், சந்திரன் ஏழாமிடத்திலும், சுக்கிரன் மிதுனத்திலும், சனி மீனத்திலும், குரு செவ்வாய் பத்தாம் வீடான கும்பத்திலும், இராகு ஒன்பதாம் வீடான மகரத்திலும், கேது கடகத்திலும் தங்கியிருந்தால்,

சனி	சூரியன் புதன்	லக்கினம்	சுக்கிரன்
குரு செவ்வாய்	இராசி சக்கரம்		கேது
ராகு			
	சந்திரன்		

2. பலன்தன்னைப் புகலு மென்று பார்வதி கேட்கும் போது
குலகுரு வதிட்டர் சொல்வார் குறித்தது ஆண்பால்
[சென்மம்
தலமது வடதென் வீதி சாற்றுவோம் கீழ்பால் நோக்கம்
நலமுள தந்தி உத்திரம் நற்சோலை தடாக முண்டு.

2. உண்டாகும் பலன்களைக் கூறுங்கள் என்று பார்வதி கேட்கும் போது, குல குருவாகிய வசிஷ்ட முனிவர் கூறலானர். இஃது ஆண்மகன் ஜாதகமாகும். இவன் பிறந்த வீடு தெற்கு வடக்கு வீதியில், கிழக்கு நோக்கிய வாயிலை உடையது என்று கூறுவோம். விநாயகப் பெருமான் கோவிலும் பூஞ்சோலைகளும் குளமும் வடக்கில் உள்ளன.

3. தென்திசை காளி தங்கும் சிரமற்றேள் கீழ்ப்பா லாகும்
இந்தநல் அடையா ளத்துள் இறங்குவான் வைசியச் சேயாய்
அந்தவன் குடும்பச் சேதி அறிவிப்போ மிந்நூல் தன்னில்
தந்தையின் துணைய னேகம் தங்காது மத்தில் ஏகும்.

3. தெற்குத் திசையில் காளி கோவிலுண்டு. மாரியம்மன் கோயில் கிழக்கிலுளது. இவ்வாரூன அடையாளங்க ளுள்ள ஊரில், வைசிய குலத்தில் உதிப்பான். இந்நூலில் ஜாதகனின் குடும்ப வரலாறுகளைக் கூறுவோம். தந்தையின் சகோதரர்களில் பலர் நிலைத்திரார். இஸடயிலேயே மரித்து விடுவர்.

4. தனியனுய்த் தந்தை வாழ்வன் சாற்றுவோம் அவன்கு
[ணத்தை
இனிமையாய் வார்த்தை சொல்வன் இடரது ஒருவர்க்
[கெண்ணுன்
நன்மனம் புத்தி யாகும் நாயகி தன்னுல் யோகம்
கனமிலாக் குடும்ப மேற்பன் கலக்கமாம் மனத்த னுமே.

4. தனியாகத் தந்தை வாழ்வான். அவன் குணத்தைச் சொல்லுவோம். இனிய சொற்களைப் பேசுவான். எவருக்கும் தீங்கு நினையாதவன். நல்ல மனமும் நற்புத்தியும் உள்ளவன். மனைவியால் இவனுக்கு அதிர்ஷ்டமுண்டு. பெருமையில்லாத குடும்பத்தை யடையவான். சஞ்சலம் நிறைந்த மனத்தினன்.

5. சுகதுக்கம் கலந்து வாழ்வன் சோம்பிடான் காரி யத்தில்
பகையென்று மனத்தில் எண்ணுன் பலவித வணிபம்
[செய்வன்
அகமது பின்னுல் செய்வன் அல்பமாம் கல்வி யேற்பன்
உகமையாய்ப் பேச வல்லன் உணருமுன் கோபம்
[கொஞ்சம்.

5. இன்பம் துன்பம் இரண்டினையும் தன் வாழ்க்கையில் சமமாக அனுபவிப்பான். காரியங்கள் செய்வதில் சோம்பலில்லாதவன். மனத்திலும் ஒருவரை விரோதியென்று நினைக்கமாட்டான். பலவித வியாபாரங்கள் செய்வான். பிற்காலத்தில் சிறந்த வீடு ஒன்று கட்டுவான். அற்பமான கல்வியறிவுடையவன். தகுதியாகப் பேசுதலில் வல்லவன். ஒருவர் சொல்லுவன வற்றைக் கேட்குமுன் சிறிது கோப மடைவான்.

6. பித்தமாம் வாயு ரோகம் பொருந்திடும் அற்ப மாகும்
சுத்தமும் கொஞ்ச முண்டு துறவிமேல் பிரிய மில்லான்
நத்தினேர்க் குதவி செய்வன் நாற்காலி விருத்தி அற்பம்
பத்தினிக் கிட்ட னுகும் பலமிலா வணிபம் செய்வன்.

6. பித்தவாயு ரோகங்கள் இவனுக்குச் சிறிதளவு உண்டாம். தூய்மை யுடையவனுயும் இருப்பான். சந்நியாசிகள் மீது விருப்ப மில்லாதவன். துன்ப

மடைந்தவர்க்கு உதவி செய்வான். கால்நடைகள் விருத்தி சிறிது உண்டு. மனைவிக்கு விருப்பமானவன். பலமான வியாபாரத்தைச் செய்வான்.

7. தன்கரம் பிரம ரேகை சகலர்க்கும் நல்ல னுவன்
சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
அன்னவன் குணத்தைக் கேண்மோ அழகுளான் மாஞ்சி
[வப்பான்
உன்னத சாயல் [1]சோதி உணருவான் யூகக் கல்வி.

7. தன் கையில் பிரம ரேகை யுள்ளவன். அனைவருக்கும் நல்லவனுவன். சொல்லப்பட்ட இவ்விதக் குணங்களை யுடையவனுக்குப் புதல்வனாக இந்த ஜாதகன் பிறப்பான். இவன் குணத்தைக் கேளுங்கள். அழகுடையவன். கருமை கலந்த செந்நிறமுள்ளவன். சாய்ந்த பார்வை யுடையவன். ஊகித்து அறியும் நுட்பமான கல்வியைக் கற்பான்.

8. தந்தையி னில்லம் வாழான் தான்வேரூர் வாச மாகும்
வந்திடு மாமி ரெண்டு வணிபங்கள் செய்வா னுகும்
பிந்திய வயதில் யோகம் பலமுள வணிபம் பூமி
அந்தவன் சேர்ப்பா னுகும் ஆண்மையாய்க் குடும்ப
[மேற்பன்.

8. தந்தையின் வீட்டில் வசிக்கமாட்டான். வேற்றூரில் சென்று வாழ்வான். இவனுக்கு இரு மாமியர்கள். வியாபாரங்கள் செய்வான். பிற்காலத்தில் இவனுக்கு யோகங்களுண்டாம். பலமுள்ள வியாபாரம் ஏற்படும். விளைநிலங்களைச் சேர்ப்பான். ஆண்மையுடன் குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்துவான்.

9. எந்திட மெந்தக் கால மிதரவூர் செல்வ னுகும்
அந்ததோர் சேதி சொல்வீர் அறுநான்கு ஆண்டில் செல்வன்
தென்திசை யேகு வானும் சிறப்பான குடும்ப மேற்பன்
தந்தைக்கு மேலாய் வாழ்வன் தாட்சிணியன் கனத்த புத்தி.

9. எந்தக் காலத்தில், எந்தப் பக்கத்தில் உள்ள ஊருக்குச்செல்லுவான். அந்தச் செய்தியைச் சொல்லுங்கள். இருபத்து நான்காம் வயதில் தெற்குப் பக்கமாக வேறு ஓர் ஊருக்குப் போவான். சிறப்புள்ள குடும்பத்தை யடைவான். தன் தந்தையைவிடச் சிறப்புடையவனாக வாழ்வான். தாட்சிண்ய முள்ளவன். பெரும்புத்தி யுடையவன்.

---

1. பார்வை

10. கரமது விஷ்ணு ரேகை கனத்தபாக் கியம்பின் சேர்ப்பன்
பொரைசொலான் பிதாவின் ஆஸ்தி பொருந்திடா இவனுக்
[கேதான்
அறுமுகன் பத்தி கொள்வன் அறுநான்கு மூன்றுண்
[டின்மேல்
திருமகள் வாச மெய்தும் சிறப்பான குடும்ப மேற்பன்.

10. கையில் விஷ்ணு ரேகை யிருப்பதால், பெரிய செல்வத்தைப் பிற் காலத்தில் சேர்ப்பான். பொய் பொரைகள் சொல்லமாட்டான். தந்தையின் சொத்துக்கள் இவனுக்குக் கிடையாமல் போம். முருகப்பிரான் மீது பக்தி யுடையவன். இருபத்து ஏழு வயதுக்குமேல் இலட்சுமீ கடாட்சம் ஏற்படும். சிறப்புடைய குடும்ப வாழ்க்கைப் பொறுப்பை மேற்கொள்ளுவான்.

11. காரணம் யாது என்ன காரியும் தர்ம கர்மன்
தீரமாய் லாபம் நிற்கச் சேயும்பொன் தசமும் நிற்கக்
கூறினேம் யோகந் தானும் குளிர்புகர் தசைவி சேடம்
பாரினில் பொருளும் நேரும் பாலகன் எண்ணுன் காண்டில்.

11. இங்ஙனம் ஏற்படுவதற்கு ஆதாரங்கள் யாவை? தர்ம கர்மாதிப னை சனி தைரியமாய் இலாபஸ்தானத்திலும், செவ்வாயும் குருவும் பத்தா மிடமாகிய கும்பத்திலும் இருப்பதால் இத்தகைய யோகங்கள் உண்டாம் என்று சொன்னேம். சுக்கிர மகா தசையின் சிறப்பைக் கூறுவோம். மூப்பத் திரண்டாம் வயதில் செல்வம் பெறுவான்.

12. இல்லமும் அதன்மேல் நேரும் எவர்களும் மதிப்புக்
[கொள்ளல்
அல்லல்கள் அடையா ரகும் அதிகமாய்ப் புகழு மேற்பன்
வல்லவன் மணத்தின் கால மறைகின்றேம் பதினே
[ழாண்டில்
சொல்லுவோம் தென்மேல் நேரும் சோர்வுறு மறு ஆண்
[டில்தான்.

12. அதற்குமேல் புதிய வீடு ஒன்றும் இவனுக்குக் கிடைக்கும். யாவ ராலும் மதிக்கப்படுவான். தான்பங்கள் அடையான். மிகுந்த கீர்த்தியை யடைவான். ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேம். பதினே ழாம் வயதில், தென்திசையிலிருந்து இவனுக்கு மனைவி வாய்ப்பாள் என்று சொல்லுவோம். அவள் மணமான மறுவருஷத்திலேயே மாண்டு போவாள்.

13. மறுமனை யிருபான் மூன்றில் வந்திடும் தென்பால் பாரி
இருமனை அணுகும் வண்ண மியம்புவீர் விபரம் தன்னைப்
[1]பிருகுமே ஏழில் நீச்சம் புதன்ரவி விரயம் புக்க
நெறியுட னிரண்டு தாரம் நேர்ந்திடும் பால னுக்கு.

13. மறுமனைவி இருபத்து மூன்றும் வயதில் வாய்ப்பாள். அவளும் தென் திசையிலிருந்தே வருவாள். இவனுக்கு இரு மனைவியர் ஏற்படக் காரணம் யாது? விவரித்துக் கூறுங்கள். சந்திரன் ஏழாமிடத்தில் நீசனும், புதனும் சூரியனும் விரயஸ்தானமாகிய மேஷத்திலும் இருப்பதால் இவனுக்கு இரு மனைவியர் ஏற்படுவார்.

14. இதுவின்றிப் பூர்வம் தன்னில் இவன்சில கொடுமை
[செய்தான்
மருவிற்று அந்தச் சாப மறைகுவீர் பூர்வம் தன்னை
அதிபன்முன் சென்மம் சொல்வோம் மாயூர மருகில்
[கிழ்ப்பால்
நதிஓரம் சிறுஊர் தன்னில் நல்கிண னிக்கு லத்தில்;

14. இதுவல்லாமல், இந்த ஜாதகன் முற்பிறவியில் இல கொடிய செயல்களைச் செய்தான். அந்தத் தோஷங்கள் இவனை யடைந்தன. இவன் முன்சென்மத்தைக் கூறுவீர். இவனுடைய முன் பிறப்பைக் கூறுவோம்; மாயவரத்துக்குக் கிழக்குப் பக்கத்தில் நதியோரமுள்ள சிறிய ஊரொன்றில் இக்குலத்தில் பிறந்தான்.

15. பலவித வணிபம் செய்து பாவையும் மதலை யுண்டாய்
நலமுள குடும்பி யாகி நாயகன் வாழும் நாளில்
உலவின வினையைக் கேண்மோ கோதைமேல் நிந்தை
[சொல்லத்
தலைவியும் மனவெ றுப்பால் சாற்றுவாள் சாபந் தானும்.

15. பலவித வியாபாரங்கள்செய்து, மனைவி மக்களை யடைந்து, நன்மை மிக்க குடும்பத்துடன் இவன் வாழுகின்ற காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஒரு பெண்மீது வீண்பழி கூற, மனவெறுப்புடன் அவள் ஒரு சாபமிட்டாள்

---

1. சந்திரன்

16. பெண்பழி சொன்ன பாவி பிறக்கும்பின் சென்மந் தன்னில்
தன்மனை யிரண்டு மாயும் தந்தையில் அடையா னாகி
மண்ணின்மேல் வாழ்வாய் நீயும் மாதுவும் இவ்வார்
[சொல்லித்
தண்ணீரில் விழுந்து மாண்டாள் தங்கிற்று அந்தத் தோடம்.

16. அபலையாகிய என்மீது வீண்பழி கூறிய நீ, மறு பிறவியில் இரு மனைவியரை யடைந்து, தந்தையின் வீட்டில் வாழாதவனாய், உலகில் இருப்பாய் என்று அந்தப்பெண் கூறிவிட்டு, தண்ணீரில் விழுந்து இறந்தாள். அந்தத் தோஷம் இவனைச் சேர்ந்தது.

17. சிறுபொருள் ஏழைக் கீந்து செப்பிலுன் கணக்கில் மோசம்
மருவிற்று அதுவோர் தோடம் மாரனும் அந்தி யத்தில்
பெருமையும் தாழ்வுண் டாகிப் புக்கனன் கால நாடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்.

17. சிறிய தொகை யொன்றை ஓர் ஏழைக்குக் கடன் கொடுத்துவிட்டு, அதிகப்பணம் கொடுத்ததாகக் கணக்கு எழுதி மோசம் செய்தான். அந்தத் தோஷமும் இவனைச் சார்ந்தது. இவனும் தனது கடைசிக் காலத்தில் மதிப்புக் குறைந்தவனாகி வாழ்ந்து மரணமடைந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இக்குலத்தவனாகத் தோன்றுவான்.

18. மாதுவின் சாபம் தானும் மருவிற்று இச்சென் மத்தில்
காதலி யிரண்டு மாகும் காணுதான் தந்தை ஆஸ்தி
ஓதுவேன் புத்திர பாகம் உதித்திடு மிருநான் காகத்
தீதுண்டு சிலவே யென்றும் தீர்க்கமாம் பெண்பால்
[மூன்று.

18. முற்பிறப்பில் ஏற்பட்ட பெண்ணின் சாபம் இப்பிறவியில் தொடர்ந்தது. இப்பிறப்பில் மனைவியர் இருவராவார். தந்தையின் ஆஸ்தியை யடையான். இவனுக்குப் புத்திர பாவங் கூறுவோம். எட்டுக் குழந்தைகள் தோன்றும். இவற்றில் சில அழியும் என்று கூறினேம். பெண்கள் மூவர் தோன்றித் தீர்க்கமாவர்.

19. சுதராண்பால் இரண்டு என்றும் செயமுனி தடுத்துச்
[சொல்வார்
எதுவித மாதுக் கேதா னியம்புவீர் புத்திரர் விருத்தி
முதல்மனை சுதர்கள் காணுள் மொழிந்தனம் இளையா னுக்கு
அதிதிபோல் தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

19. ஆண் குழந்தைகள் இருவர் என்று சொன்னேம். செய முனிவர் மறுத்துச் சொல்லுவார். எந்த மனைவிக்குப் புத்திரபாக்கிய விருத்தி யுண்டாம்; கூறுங்கள். முதல் மனைவிக்குப் புத்திரர்கள் இல்லை. இரண்டாம் மனைவிக்குப் புதல்வர் தோன்றுவர் என்று கூறினேம். தவங்களை யாற்றும் பார்வதியே! கேட்பாயாக.

20. அத்திரி தடுத்துச் சொல்வார் [1]அஞ்சவன் விரயம் புக்கச்
சித்தமாய் நந்தி சென்மம் செனித்தவன் தனக்குப் புத்திரர்
சுத்தமாய்த் தீர்க்க மெவ்வார் செப்பின காரணம் சொல்
[2]பத்தினில் குருசேய் தங்கப் [3]பத்தவன் இலாப மேற;

20. அத்திரி முனிவர் மீண்டும் மறித்துச் சொல்லுவார். இலக்கினம் விருஷபமாக உள்ள இந்த ஜாதகனுக்கு ஐந்தாமிடத்தவனாகிய புதன் விரய ஸ்தானமாகிய மேஷத்தில் இருப்பதால், புத்திரர் தீர்க்கமாய் எங்ஙனமிருப்பார்? இங்ஙனம் கூறிய காரணம் யாது? கூறுங்கள். பத்தாமிடமாகிய கும்பத்தில் குருவும் செவ்வாயும் தங்கி, பத்தாமிடத்துக்குரிய சனி, இலாப ஸ்தானமாகிய மீனத்தில் இருப்பதனால்;

21. சுதரினல் தனக்குக் கருமம் தோன்றிடு மென்று
[சொல்வோம்
முதலினில் பெண்பால் தோன்றும் விளங்கிப்பின் விருத்தி
[புத்திரர்
புதல்வர்க ளிவன்மே லாகப் புகழ்பெற வாழ்வா ராகும்
அதிதிபோல் தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

21. புத்திரனல் இவனுக்கு இறுதிக் கடன்கள் நடைபெறும் என்று கூறுவோம். முதலில் பெண்கள் தோன்றுவர். பின்பு புத்திர விருத்தி ஏற்படும். இவன் புதல்வர் இவனைவிட மேன்மையாக வாழ்வர். தவங்களை யியற்றும் பார்வதி யம்மையே! கேட்பாயாக.

---

1. புதன்
2. கும்பம்
3. சனி

22. அன்னையின் குணத்தைச் சொல்வேன் ஆளனுக் கினிய
[ளாகும்
தன்சொலும் அடக்க முண்டு சற்பாத்திரி யீகை கொஞ்சம்
முன்கோபம் உடனே தாழ்வு உயர்வான புத்தி யேற்பள்
பொன்பணி அதிகம் காணுள் பொருந்திடும் பித்த சூடு.

22. ஜாதகன் தாயாரின் குணத்தைச் சொல்லுவோம். கணவனுக்கு இனியவள். பணிவுடன் பேசுவாள். சற்பாத்திரி யோகமுடையவள். கொடையுஞ் சிறிதுண்டு. முன்கோப முண்டு. உடனே சாந்தமடைவாள். மேன்மையான அறிவைப் படைத்தவள். பொன், ஆபரணங்கள் அதிக மில்லாதவள். இவளுக்குப் பித்த சூடு ஏற்படும்,

23. இல்லமும் கீழ்ப்பால் நேரும் இவள்துணை ஆண்பால்
[ரெண்டு
வல்லிமார் அவ்வார் தீர்க்கம் மருவாது மற்ற தெல்லாம்
தல்லியின் பூர்வம் சொல்வேன் சதுமுகன் பூசை செய்யும்
எல்லியில் உயர்வ தான எழில்பட்சி தன்னி லேதான் ;

23. இவன் வீடு கிழக்குப் பக்கத்தில் இருப்பதாம். இவளுடன் பிறந்தவர்களில், ஆண்கள் இருவரும் பெண்கள் இருவரும் தீர்க்கமாக விளங்குவர். மற்றவர் நிலையார். இவள் முற்பிறப்பைக் கூறுவோம். நான்முகன் பூசிக்கின்ற, உயர்ந்த திருக்கழுக்குன்றத்தில்.

24. வன்னிய குலமு தித்து மைந்தர்கள் அதிக முண்டாய்
முன்னோர்க்குத் தொண்டு பூண்டு மேதினில் நல்லோ ளாகி
உன்னதத் தலங்கள் சென்று உறங்கினுள் கால நாடு
பொன்னவன் வரையப் பட்டுப் பிறந்தனள் என்று
[சொல்வோம்.

24. வன்னியர் குலத்தில் தோன்றி, மக்கட் செல்வம் நிரம்ப உண்டாகி, சான்றோர்கட்குத் தொண்டுசெய்து, உலகில் நல்லவளாகி, உயர்ந்த தலங்களுக்கு யாத்திரையாகச் சென்று, பின்பு மரணமடைந்தாள். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறப்பாகப் பிறந்தாள் என்று கூறுவோம்.

25. மறுசென்மம் கொங்கு நாட்டில் வருவளாங் கங்கை
[சேயாய்ப்
பெருமையாய்க் குடும்பி யாகிப் பூவையும் வாழ்வா ளாகும்
திருமகன் தந்தை பூர்வம் செப்புவோ மினிமே லாக
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

25. மறுபிறவியில், கொங்குநாட்டில், வேளாளர் குலத்தவனாகப் பிறந்தான். பெருமை மிக்க குடும்பத்தைப்பெற்று, வாழ்வான். இனிமேல், ஜாதகன் தந்தையின் முன்பிறப்பைச் சொல்லுவோம். வேத முடிவில் விளங்குகின்ற பார்வதியே! கேட்பாயாக.

26. சொக்கர்வாழ் பாண்டி நாட்டில் செனித்தனன் மறவர்
[வம்சம்
தக்கெனக் குடும்பி யாகிச் சான்றோர்க்கு உதவி செய்து
நக்கன் தன் தொண்டு பூண்டு நமன்பதிக் காளா யின்னேன்
மிக்கவே யிக்கு லத்தில் மேவினு னிவனே யென்றோம்.

26. சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளியுள்ள பாண்டியநாட்டில், மறவர் குலத்தவனாகப் பிறந்தான்: தகுதியுள்ள குடும்பத்தவனாய், பெரியோர்கட்கு உபகாரங்கள் செய்து, சிவபெருமானுக்குத் தொண்டுகள் இயற்றி, எமனுலக மடைந்து, மீண்டும் இக்குலத்தில் பிறந்தான் இவன் என்று கூறினோம்.

27. வினையிற் றி வந்தா னென்றீர் வித்தகன் துணைவர் தோடம்
பிணையதைச் சொல்லு மென்னப் புனிதன்முன் சென்மந்
[தன்னில்
சினங்கொண்டு அன்னைக் கேதான் சாதமு மீயா னுயிப்
பிணைசெய்தான் அன்னை சாபம் புகுந்தது துணைவர்
[தோடம்.

27. முன் பிறவியில் எவ்விதத் தீவினைகளு மில்லாமல், வாழ்ந்து, இப்பிறப்பில் பிறந்தான் என்று கூறினீர்கள். இவனுக்குச் சகோதர தோஷம் ஏற்படக் காரணம் யாது? முன் பிறவியில் கோபத்தினால் தன்தாய்க்கு உணவு அளிக்காமல் தவறு செய்தான். அப்பொழுது தாயாரிட்ட சாபத்தினால் சகோதர தோஷம் ஏற்பட்டது இவனுக்கு.

28. தன் துணைப் பாகம் தன்னில் தனமதை மோசம் செய்தான்
அன்னவர் மனவெ றுப்பால் அறைகுவார் சாபம் தானும்
பின்சென்மம் துணைவர் தோன்றிப் பலமிலா நசிக்கு
[மென்றோம்
இன்னமும் பலவார் சொன்னார் எய்திற்றுச் சாபம் தானும்.

28. தன் உடன்பிறந்தானுக்குரிய சொத்தின் பாகத்தில் பணத்தை மோசம் செய்துவிட்டான். அவன் மன வெறுப்பினால் சாபமிட்டான். மறு

பிறப்பில் சகோதரர் தோன்றித் தீர்க்கமில்லாமல் அழிவர். இன்னும் பல வார்த்தை கூறினேன். அந்தத் தோஷம் இவனை யடைந்தது.

29. ஆகையா லிச்சென் மத்தில் அவன்துணை தோன்றும் நீதாம்
பாகமா யிவன்பின் சென்மம் பகருவோம் கடையூர் தன்னில்
போகபாக் கியங்க ளான புரவலர் குலத்தி லேதான்.
வேகமா யுதிப்பா னுகும் வித்தகி கேட்டி டாயே.

29. ஆகையினால், இப்பிறப்பில் இவனுக்கு உடன்பிறந்தார் தோன்றி அழிவர். இவன் மறு பிறப்பைக் கூறுவோம். திருக்கடையூரில், எல்லா விதச் சௌபாக்கியங்களையு முடைய அரச மரபில் பிறப்பான். பார்வதியே! கேட்பாயாக.

30. சாதகன் துணைஆண் மூன்று சத்திமார் ஒருத்தி யாகும்
ஓதுவேன் பின்பா கத்தில் உரைத்ததோர் துணைவர் சேதி
போதவே தாய்தந் தைக்குப் புகலுவேன் கரும காலம்
நீதியாய் முப்பான் ரெண்டில் நிகழ்த்துவோம் தந்தைக்
[கேதான்.

30. ஜாதகனுக்குச் சகோதரர்கள் மூவர். சகோதரி ஒருத்தி. பிற் பாகத்தில் உடன்பிறந்தார் செய்தியைச் சொல்லுவோம். இவன் தாய் தந் தையர்க்குக் கருமம் புரியுங் காலத்தைக் கூறுவோம். இவனுடைய முப்பத் திரண்டாம் வயதில் தந்தைக்கு இறுதிக் கடன்கள் செய்வான் என்று கூறு வோம்.

31. முப்பது ஏழு ஆண்டில் விளம்புவோம் அன்னைக் கேதான்
செப்புவோம் பால னுக்குச் [1]சேடன்தன் தசைகா லத்தில்
அப்போது அறுபா னெட்டில் ஆனிமா தத்தி லேதான்
தப்பித முடல மேகும் சங்கரி கேட்டி டாயே.

31. ஜாதகன் முப்பத்தேழாம் வயதில் தாயாருக்கு மரணம் ஏற் படும் என்போம். இவனுக்கு, இராகு மகா தசை காலத்தில், அறுபத்து எட் டாம் வயதில், ஆனி மாதத்தில் மரணம் உண்டாகும். பார்வதியே! கேட் பாயாக.

---

1. இராகு.

32. மறுசென்மம் துவாரை தன்னில் மருவுவான் சத்ரிய
[சேயாய்ப்
பெருமையாய்க் குடும்பி யாவன் பூவையு மிவன்பின்
[கண்டம்
குறைவுறு வார்த்தை தானும் குறித்தது தப்பா தாகும்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

32. மறுபிறப்பு, துவாரகையில், க்ஷத்திரிய வமிசத்தவனுகப் பிறப்பான். மேன்மையுள்ள குடும்பியாக வாழ்வான். மனைவியும் இவனுக்குப் பின்பு மரணமடைவாள். கூறியபடி தவறுது நடக்கும். வேத முடிவில் நடமாடும் அம்பிகையே! கேட்பாயாக.

33. இன்னவன் சென்ன கால மீட்டினுள் முதல்பா தத்தில்
புந்தியின் தசையி ருப்புப் புகலுவோ மீரே ழாண்டும்
வந்திடும் நிங்க ளேழு மறைந்தனம் பூர்வ பாகம்
இந்திர னிறைஞ்சு மாதே யியம்பின மொழிகுன் றூது.

33. இவன் பிறப்புக் காலம்; கேட்டை நட்சத்திரம் முதல் பாதம். புதன தசை இருப்பு; பதினன்கு வருஷங்கள், ஏழு மாதங்கள் என்று கூறுவோம். இது பூர்வ பாகமாம் என்று கூறினேம். தேவேந்திரன் வணங்குகின்ற பார்வதியே! கூறிய சொல் தவறுது.

ஜாதகம் 47

1. நந்தியும் சென்ன மாக நவமதில் புகர்பான் புந்தி
சந்திரன் சனியும் தங்கத் தசமத்தில் பொன்னேன் தங்க
ஐந்தினில் பணிசேய் தங்க [1]அதிதியும் இலாப மேற
யிந்தவார்க் கோளு நின்றுல் வியம்புவீர் பலனைத் தானே.

1. விருஷபம் இலக்கினமாக இருந்து, ஒன்பதாமிடமாகிய மகரத்தில் சுக்கிரன் சூரியன் புதன் சந்திரன் சனி தங்க, பத்தாமிடமாகிய கும்பத்தில் குருவும், ஐந்தாமிடமாகிய கன்னியில் இராகுவும் செவ்வாயும் இருக்க இலாப ஸ்தானமாகிய மீன ராசியில் கேதுவும் தங்கி இருந்தால் உரிய பலன் களைக் கூறுங்கள்.

கேது		லக்கினம்	
குரு	இராசி சக்கரம்		
புதன் சூரியன் சுக்கிரன் சந்திரன் சனி			
			இராகு செவ்வாய்

2. பிருகுமே புகலு கின்றுர் பிறந்திடும் ஆண்பால் சென்மம்
பெறுந்தந்தை யில்லம் சொல்வேன் புரந்தரன் வாச லாகும்
திருமாலின் கோட்ட முத்ரம் சிங்கவா கனத்தாள் கிழ்ப்பால்
பெருவயி றப்பன் மேல்பால் புகன்றனம் மாரி தென்பால்.

2. பிருகு மகரிஷி கூறுகின்றுர். இஃது ஒரு ஆண் மகனின் ஜாதகம். இவனைப் பெற்ற தந்தையின் வீட்டைக் கூறுவோம். கிழக்கு நோக்கிய வாயிலை உடையது. மகாவிஷ்ணு கோவில் வடபுற மிருக்கும். காளிகோவில் கிழக்கே உளது. மேற்குத் திசையில் விநாயகப் பெருமான் கோவிலும், மாரியம்மன் கோவில் தெற்கிலும் உள்ளன.

---

1. கேது

3. இத்தகை யாகி யேதா னிலகிய சிறுஜ ராகும்
முத்தின குலமே யென்றேரும் முதல்வனும் சேட்ட னுகும்
பத்தினி அன்னை யில்லம் பிறப்பனும் தென்கிழ் தன்னில்
வித்தகன் குடும்பச் சேதி விளம்புவோம் இந்நூல் தன்னில்.

3. இத்தகைய அடையாளங்களுடன் கூடிய ஒரு சிறு ஊரில் அந்தணர் குலத்தில் தந்தைக்கு முதற் புத்திரனாக ஜாதகன் தோன்றுவான். தென் கிழக்குத் திசையிலுள்ள தன் தாய் வீட்டில் பிறப்பான். இந்நூலில் ஜாதகன் குடும்ப வரலாறுகளைக் கூறுவோம்.

4. தந்தையின் துணைஆண் மூன்று சத்தியும் அவ்வார் தீர்க்கம்
நொந்திடு மற்ற தெல்லாம் நுகர்ந்தஆண் இளையோ ராகும்
அந்தவன் சேதி சொல்வேன் அற்பரை உறவு கொள்ளான்
முத்துமால் பத்தி கொள்வன் மொழிகுவான் தந்திர
[வார்த்தை.

4. தந்தையின் உடன்பிறந்தவர்களில் ஆண்கள் மூவரும், பெண்கள் மூவரும் தீர்க்காயுள் இருப்பர். மற்றவர் மரித்திடுவர். ஆண்கள் இவரது தம்பிகளாவர். அவர்களில் ஒருவனைப்பற்றிக் கூறுவேன். அவன் கீழோர் நட்புக் கொள்ளான். திருமாலிடம் பக்தி கொள்வான். தந்திரமாகப் பேசுவான்.

5. கல்விமான் சிவந்த மேனி கண்முகம் வசிய முண்டு
நல்லவன் நல்ல வர்க்கு நாயகி மார்கள் மோகன்
வெல்லும்சொல் உடைய னுகும் வேந்தர்பூ சிதமு மாவன்
இல்லறம் அலைச்ச லெய்து மிருவிதக் குணத்தா னுகும்.

5. கல்வி புள்ளவன். சிவந்த உடல். கண்ணும் முகமும் கவர்த்தக்க அழகு பொருந்தியவை. நல்லவர்களுக்கு நல்லவனுவான். பெண்களின் மீது விருப்பமுள்ளவன். பிறரால் வெல்லமுடியாத சொற்களைக் கூறுபவன். மன்னர்களின் மதிப்பைப் பெறுவான். கஷ்டத்துடன் இல்லறம் நடத்துவான். இருவிதக் குணங்களுடையவன்.

6. உடன்கூடி வாழ்வா னுகும் உயர்வான புத்தி யேற்பன்
மடமையில் தென்பால் நேரும் மைந்தர்கள் ஆண்பா
[லொன்று
விடவீழி மார்கள் ரெண்டு மேவிடும் தீர்க்கமாகத்
திடமதாய்க் குடும்பம் பின்னுல் செப்புவோம் தாயே
[யாங்கள்.

6. தன் சகோதரனுடன் ஒன்றுகவே வாழ்வான். மேலோர் கூறும் புத்திமதிகளைக் கேட்பான். தெற்குத் திசையில் இவனுக்கு மனைவி வாய்ப்பாள். புதல்வன் ஒருவனும் பெண்கள் இருவரும் தீர்க்கமாக இருப்பர். இவன் குடும்ப வரலாறுகளை நாங்கள் பிறகு கூறுவோம்; தாயே!

7. பாலகன் தந்தை சேதி பகருவோம் சிவந்த மேனி
ஞாலங்கள் விருத்தி செய்வன் இராசபூ சிதமூ மாவன்
வேல்தனு ராசி யாகும் மிக்கபூ ராட நாளாம்
சாலவே யுதிப்பா னுகும் தன்னில்லம் கெடுதி செய்வன்.

7. ஜாதகன் தந்தையைப் பற்றிக் கூறுவோம். சிவப்பு நிறமுள்ளவன், நில புலன்களைப் பெருக்குவான். மன்னர்களால் கௌரவிக்கப் படுவான். பூராட நட்சத்திரம் தனுர் ராசியில் ஜனன மாவான். தான் வசிக்கும் வீட்டை இடித்து விடுவான்.

8. பின்னதைச் சித்திரம் செய்வன் பெரிதான கருமம் செய்வன்
துன்னுகிரா மாதி பத்யம் செய்குவான் சிலநாள் தானும்
தன்தேகம் உணச்சல் நீட்சி தன்பந்து தன்னுல் யோகம்
பின்துணை தனைக்காப் பானும் புதல்வன்பின் யோகம்
[சொல்வோம்.

8. பிறகு, அதை அழகுறக் கட்டுவான். பெரிய செயல்களைப் புரிவான். சிலகாலம் தான் வசிக்கும் கிராமத்துக்குத் தலைவனுகத் திகழுவான். தன் உடல் மெலியும், உயரமும் உள்ளவன். தன் உறவினரால் யோகத்தை யடைவான். தன் தம்பியை யாதரிப்பான். இவன் பிந்திய யோகங்களைக் கூறுவோம்.

9. எந்தக் காலத்தில் யோகம் இல்லமும் செய்வான் சொல்வீர்
வந்தவன் நாலாண் டின்மே லணுகிடு மில்ல மென்றேரும்
மூந்தினுள் பொன்னும் நேரும் மேம்பாடாய்க் குடும்ப
[மெய்தும்
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் விபர மாக.

9. இவன் எப்பொழுது யோகவானுக இருந்து புதிய வீட்டைப் பெறுவான்? இவன் பிறந்த நான்கு ஆண்டுகளுக்குமேல் புதிய இல்லத்தைப் பெறுவான் என்றேரும். பழய காலத்துச் செல்வங்களையும் பெறுவான். மேன்மையாகக் குடும்பம் நடைபெறும். மற்றவற்றைப் பின்பகுதியில் விவரமாகக் கூறுவோம்.

10. ஆதியில் குடும்ப லேச்சல் அல்பமாம் உணவு மெய்தும்
சாதகன் உதித்த பின்பு சந்திரன் பிறைபோல் யோகம்
ஓதுவேன் தலங்கள் செல்வன் உயர்வுளோர் நேசம்
[கேள்வன்
சூதிலான் வெகுளி யாவன் சுருக்கமாம் வார்த்தை யுண்டு

10, முதலில் குடும்பம் கஷ்டப்படும். போஜன சுகமும் சிறிதளவே யாம். ஜாதகன் தோன்றிய பிறகு வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் வளரும். புண்ணியத் தலங்களுக்குச் செல்வான். மேலானவர் நட்புகொள் வான். கபட மில்லாதவன். வெளிப்படையாகப் பேசுபவன். சுருங்கச் சொல்லும் தன்மையினன்.

11. சொன்னவிக் குணத் தானுக்குத் தோன்று வாணிந்தப்
[பாலன்
அன்னவன் குணமெவ் வாறு அரிமகன் ஒப்ப தாகும்
முன்கோபி ஒருவர்க் கஞ்சான் மொழியது துண்ட மாகும்
அன்னிய பாடை மேன்மை அரசனுல் புகழு மேற்பன்.

11. இவ்விதக் குணமுள்ளவனுக்கு ஜாதகன் தோன்றுவான். அவன் குணம் எத்தகையது? மன்மதனைப்போல் அழகானவன். முன்கோபமுள்ள வன். ஒருவருக்கும் பயப்படாதவன். கண்டிப்பாகப் பேசுபவன். பிற மொழிகளில் தேர்ச்சி பெற்றிருப்பான். மன்னர்களால் மதிக்கப்படுவான்.

12. தந்தைநாள் பூமி கொஞ்சம் தான்சில பூமி சேர்ப்பன்
பந்தினோர் மதிக்க உய்வன் பகவானின் பத்தி பூண்பன்
நொந்தோர் தம்மைக் காப்பன் நிருபர்க்கு இவன்சொல்
[மேன்மைச்
செந்திரு விலாச முண்டு சிறப்பான கல்வி யுண்டு.

12. தந்தை காட்களில் வீடுநிலம் குறைவு யிருக்கும். இவன் சில நிலம் களேச் சேர்ப்பான். சுற்றத்தினர் மெச்ச வாழ்வான். கடவுள் பக்தி உள்ள வன். துன்பமடைந்தவர்களுக்கு உதவி யளிப்பான். அரசர்களும் இவன் சொல்லே மேன்மையாக மதிப்பர். இலட்சுமி கடாட்சம் நிறைந்தவன். மேன்மையான கல்வி யறிவைப் பெற்றிருப்பான்.

13. வித்தையால் வேறூர் வாசம் விளம்புவோம் துணைவர் [தம்மை
சித்தமாய் ஆண்பா லொன்று தோகையு மவ்வார் தீர்க்கம்
புத்தியில் பெரியோ னுகும் பொய்சொல்வன் மெய்யாத் [தோன்றும்
குத்தத்தை மனத்தில் வையான் கோமளி கேட்டி டாயே.

13. கல்வியால் பிற ஊருக்குச் சென்று வாழ்வான். உடன்பிறந்தவர்களில் ஆண் ஒருவனும், பெண் ஒருத்தியும் தீர்க்கமாக இருப்பர். புத்தியில் மேம்பட்டவன். இவன்கூறும் பொய்மொழி பிறருக்குப் மெய்யைப்போல் தோன்றும். பிறரிழைத்த குற்றங்களே மறந்து விடுவான். பார்வதிதேவியே கேளுங்கள்.

14. அன்னையு மாகி றத்தாள் அழகிலாள் பொறுமை சாலி
நன்னடை மிருது வார்த்தை நாயகி யோக சாலி
அன்னியர் குற்றம் சொல்லாள் அடாவடி யில்லா ளாகும்
அன்னம்போல் நடையு மாகும் அவள்முக வசிய மில்லாள்.

14. இவன் தாய் சரிய நிறமுள்ளவள். அழகு இல்லாதவள். பொறுமை உள்ளவள். நல்லாடத்தை யுடையவன். மென்மையாகப் பேசும் இயல்பினள். அதிர்ஷ்ட முள்ளவள்; பிறரது குற்றங்களைக் கூறுதவன். பிடிவாத மில்லாதவன். அன்னத்தைப்போல் நடை யுடையவள். முகவழகு அற்றவள்.

15. இல்லமும் தென்கீ ழாகு மிவள்துணை ஆண்பா லொன்று
வல்லிமார் நால்வர் தீர்க்கம் மரித்திடும் மற்ற தெல்லாம்
சொல்லுவோ மிவள்தன் பூர்வம் சோழநா டதனி லேதான்
புல்கினுள் செக்கான் வம்சம் புத்திர ருடையா ளாகி;

15. இவன் வீடு தென் கிழக்குத் திசையி லுள்ளது. இவளுக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரிகள் நால்வரும் தீர்க்கமாவர். மற்றவர் மரிப்பர். இவள் முன் சென்மத்தைக் கூறுவோம். சோழ நாட்டில், வாணிய குலத்தில் பிறந்து, புத்திரர்களை யடைந்து வாழும்போது;

16. அன்னிய மாதொ ருத்தி அவள்வரன் தன்கைக் கொண்டு
கன்னிமேல் வெறுப்புக் கொள்ள காதலி அவள்மேல் நிந்தை
சொன்னதைக் கணவன் கேட்டுத் தோகையை விலக்க [லுற்றான்
பின்வந்தோள் முன்வெ றுப்பால் புகலுவாள் சாபந் தானே.

16. வேறு பெண்ணின் கணவனைத் தான் வசியமாக்கிக் கொண்டு, அவள்மீது அவனை வெறுப்படையச் செய்தாள். மேலும், இவள் அப் பெண்ணைப் பற்றி, பழிகளைக் கூற, அவளது கணவன் கேட்டு, அந்தப் பெண்ணை நீக்கினான். அப்பெண்ணும் மனம் வெறுத்துச் சாபம் கொடுத்தாள்.

17. பழியது என்மேல் சோல்லிப் பறக்கவே விட்ட பாவி
அழிவுண்டு சுதர்கள் யாவும் அணுகும்பின் சென்மந்
[தன்னில்
விழிமுக வசிய மின்றி வளங்குவா யென்று சொல்லி
இழிவுண்டு வரனு மில்ல மிடைஞ்சலாய் வாழ்வா யென்று;

17. என்மீது அபாண்ட பழிகளைக் கூறி விரட்டியடித்த பாவியே! உன்புத்திரர்கள் அழிந்துபோவர். வரும் சென்மத்தில், கண்ணும் முகமும் அழகின்றி விளங்குவாய். தாழ்வுற்று, கணவன்வீட்டில் துன்பத்துடன் வாழக்கடவாய் என்று;

18. சொல்லியே சென்ரு ளென்ரேரும் சேர்ந்தது அந்தத் தோடம்
வல்லியும் அந்தி யத்தில் வரனுடன் சேது புக்கி
நல்லதோர் தலங்கள் சென்று நலிந்தோர்க்கு அன்ன மீந்து
புல்கினுள் கால நாடு பிரமனுல் வரையப் பட்டு.

18. சொல்லிச் சென்ருள். அந்தச் சாபம் இவளைத் தொடர்ந்தது. இவள் கடைசி நாட்களில் தன் கணவனுடன் சேதுவுக்குச் சென்று, நீராடி புண்ணியத் தலங்கள் சென்று, ஏழைகளுக்கு உணவளித்து, மரணமடைந் தாள் பிறகு பிரம்மனுல் படைக்கப்பட்டு;

19. வந்தவ ளென்று சொல்வோம் மாதுவின் சாபம் போலச்
சந்திர வதன மில்லாள் சேத்திர வனவா சங்கள்
அந்தவள் முன்சென் மத்தில் அல்பமாம் செக்கான் வம்சம்
முந்தின குலத்தி லெவ்வா ருதிக்கும்கா ரணங்கள் சொல்வீர்.

19. இப்பிறப்பில் தோன்றினுள். பெண்ணின் சாபப்படியே அழகிய முகமின்றி, வீட்டிலும், காட்டில் வசிப்பதைப் போலிருந்தாள். அவள் முன் சென்மத்தில் வாணிய குலத்தில் தோன்றி, இச்சென்மத்தில் அந்தணர் குலத்தில் தோன்றக் காரணங்கள் யாவை? கூறுங்கள்.

20. முன்சென்மம் சேது சென்று முயர்வான தலங்கள்
[சென்றும்
தன்பலம் குலமே லாச்சுச் சாபமும் விலகா தோசொல்
கன்னியைத் திகிலாய்ச் சொன்ன கனபாவம் விலகா தாகும்
என்னடிபுண் ணியஞ்செய் தாலு மிலகாது யென்று
[சொல்வோம்.

20. முன் சென்மத்தில் சேதுவுக்கும், உயர்ந்த புண்ணியத் தலங்களுக்கும் சென்றதன் காரணமாக மேன்மையான குலம் கிடைத்தது. சாபம் நீங்காதோ? கூறுங்கள். பெண்ணைத் துன்பமடையச் செய்த பெரும் பாவம்நீங்காது. எந்தச் சாந்தி செய்தாலும் அது நீங்காது. என்று கூறுவோம்.

21. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் பதினெட்
[டாண்டில்
நீலியும் வடகீழ் தன்னில் நேருவாள் குணத்தைச் சொல்வேன்
சீலியாம் விரத மேற்பள் சிறுத்தோர்க்கு அன்ன மீவள்
சாலவே முன்கோ பத்தாள் சற்பாத்திரி யோக சாலி.

21. ஜாதகன் திருமணக் காலத்தைக் கூறுவோம். பதினெட்டாம் வயதில், வடகிழக்குத் திசையிலிருந்து இவனுக்கு மனைவி வாய்ப்பாள். அவள் குணத்தைக் கூறுவோம். நல்லொழுக்க முடையவள். விரதங்களை மேற் கொள்வாள். ஏழைகளுக்கு உணவளிப்பாள். மிகவும் முன்கோப முடைய வள். சற்பாத்திரி யோகமுள்ளவள்.

22. பின் சென்மம் கூடல் தன்னில் பிறப்பளா மிக்குலத்தில்
அன்னவள் சுகமாய் வாழ்வள் ஆறுறு நாலு ஆண்டில்
இன்னவள் உடலம் ஏகும் இயம்பின மொழிகுன்றாது
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

22. இவள் பின் சென்மம் இதே குலத்தில் மதுரையில் ஏற்படும். நலமுற வாழ்வாள். காற்பதாம் ஆண்டில் மரணமடைவாள். கூறிய வார்த்தை தவறாது. விநாயகப் பெருமானைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

23. மங்கையும் வந்த பின்பு வரனுக்கு அதிக யோகம்
பொங்கிய குடும்பம் ஏற்பள் பெரிதான பணிகள் சேர்ப்பள்
சங்கையென் றுரைச் சேராள் சதுர்முகன் மனைபோல்
[ஓப்பாம்
[1]ஐங்கரன் தனைவ ளர்த்த அம்பிகை யாளே கேளாய்.

1. விநாயகன்.

23. இவள் வந்தபிறகு ஜாதகனுக்கு அதிர்ஷ்டம் பொங்கும். மேன்மையாகக் குடும்பம் நடத்துவாள். பெரிய அணிகலங்களைச் சேர்ப்பாள். குற்றமுள்ளவரோடு நட்புக் கொள்ளாள். பிரமனின் மனைவியான சரஸ்வதியை யொத்தவள். விநாயகனைப் பெற்று வளர்த்த பார்வதியே! கேட்பாயாக.

24. புத்திர விருத்தி தம்மைப் புகலவே பலத்தைக் காணும்
சித்தமா யுதித்தா லும்தான் தீங்காகு மென்று
[சொல்வோம்
குத்தத்தைச் சொல்லு மென்ன குசன்பணி யைந்தி லேற
இத்தகைப் பலத்தி னுலே யியம்பினேம் அந்தச் சங்கை.

24. புத்திர பாவத்தைப் பார்க்கும்போது பலனற்றதாகக் காணப்படுகின்றது. புத்திரர் தோன்றினும் நிலைத்திரார் என்று சொல்வோம். குற்றம் என்ன? செவ்வாய், இராகு புத்திர ஸ்தானமாகிய ஐந்தில் இருப்பதனால் அவ்வாறு கூறினேம்.

25. பாலகன் முன்சென் மத்தில் பற்றிற்றுச் சிலவே தோடம்
சாலவே சொல்லு மென்னச் சாதகன் பூர்வங் கேளாய்
ஆலங்கா டதனி லேதான் அணுகினன் கோவைசிய னுகி
வேவ்விழி மதலை யுண்டாய் வியாபாரம் மிகவே செய்து.

25. ஜாதகனது முன் சென்மத்தில் சில தோஷங்கள் சேர்ந்தன. அவற்றை நன்கு கூறுங்கள், என, ஜாதகனது முற்பிறவியைக் கேளுங்கள். திருவாலங்காட்டில் கோமுட்டிச் செட்டிமார் மாபில் தோன்றி, மனைவி மக்களையடைந்து, பலமுற வியாபாரங்களைச் செய்து:

26. மைந்தனும் வாழும் நாளில் மருவின வினையைச்
[சொல்வேன்
கந்தன்தன் ஆல யத்தில் கார்க்கோடன் வாச மாகும்
இந்தவன் ஓர்நாள் தன்னில் ஏகினன் அவ்வி டத்தில்
மந்தமாய் மகுடத் தாலே மயங்கியே தியங்கும் போது.

26. இவன் வாழ்ந்து வரும் நாளில், இவனுக்கு ஏற்பட்ட தீவினையைக் கூறுவேன். முருகப் பெருமான் கோவிலில் ஒரு பாம்பு வசித்து வந்தது. இவன் ஒருநாள் அவ்விடத்திற்குச் சென்றான். அதுவும், அங்கு மெல்ல, தன் படமெடுத்து ஆடிக் கொண்டிருக்கும்போது;

27. அரங்கமே செய்தும் போகா தடித்தனன் சிலையி னுலே
மறஷியின் பதிக்குச் செல்ல மருவிற்று அந்தத் தோடம்
உரைக்கிறேம் வேறு ஒன்று உயர்வோர்க்குப் பொருளைத்
[தந்து
திருகுகள் கணக்கில் செய்தான் செப்புவார் சாபம் தானும்.

27. சத்தியம் செய்தும் கூட, கல்லாலதனை யடித்தான். அஃது இறந்து போக, அத்தத் தோஷம் இவனை யடைந்தது. மற்றுரண்டும் கூறுகின்றேம். உயர்ந்தவர்களுக்குப் பொருள் கொடுத்து, கணக்கில் மாறுதல்களைச் செய்தான். அவர்களும் சாபமிட்டனர்.

28. மறுசென்மம் தோன்றி நீயும் வனவாசம் பூர்வம் தன்னில்
பெறும்சுத ரில்லா வாழ்வாய் புகழிலாக் குடும்ப மாகும்
திருகாகச் சொல்ல லுற்றூர் சேர்ந்தது அந்தத் தோடம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

28. நீ மறு பிறப்பெடுத்து, முதலில் வனவாசத்தைப்போல் கஷ்டமான வாழ்க்கையை நடத்தி, புத்திரர்கள் இன்றி வாழ்வாய். புகழற்ற குடும்பத்தைப் பெறுவாய். இவ்வாறு குற்றமாகக் கூறினர். அந்தத் தோஷமும் இவனை யடைந்தது. வேதங்களின் முடிவில் விளக்கப்படும் அரும்பொருளான பார்வதியே! கேட்பாயாக.

29. மாரனும் அந்தி யத்தில் மைந்தர்கள் தோடம் ஆகிப்
பாரிய தலங்கள் சென்று பண்போர்க்கு அன்ன மீந்து
வாரியில் தீர்த்தம் தோய்ந்து மறலியின் பதிக்குப் புக்கி
[1]ஆரியன் வரையப் பட்டு அணுகினு னென்று சொல்வோம்

29. ஜாதகனும் கடைசியில் புத்திரர்களை இழந்து, புண்ணியத் தலங்களுக்குச் சென்று, பெரியோர்களுக்கு உணவளித்து, புண்ணிய சமுத்திரத்தில் நீராடி மரணமடைந்தான். பிரமனால் படைக்கப்பட்டு, மறுபடியும் தோன்றினன் என்று கூறுவோம்.

30. மூன்சென்மம் நாக தோட முயர்வோர்கள் சாபத் தாலும்
தன்சுதர் தோட மெய்தும் சடைமுனி புகலு கின்றூர்
மூன்சென்மம் வைசிய னுக உதித்தவன் இச்சென் மத்தில்
மூன்குல முதிப்ப தென்ன மொழிகுவீர் முனியே நீர்தாம்.

---

1. பிரமன்

30. முற்பிறவியில் எற்பட்ட சர்ப்ப தோஷமும், உயிர்த்தவர் சாபமும் இப்பிறப்பில் சேர்ந்ததால் புத்திர தோஷம் எற்பட்டது. சடைமுடி தரித்த முனிவர் சொல்கின்றார். முற்பிறவியில் வைசியனாகப் பிறந்து வாழ்ந்தவன் இப்பிறவியில் உயர்ந்த அந்தணர் குலத்தில் உதிப்பது எவ்வாறு, என்று தாங்கள் கூறுங்கள் ; முனிவரே !

31. பலதல வாசம் சென்றும் பகவானின் பத்தி யாயும்
பலமுள சேது சென்ற நற்பதம் குலமே லாச்சு
விலகாதோ முன்னூழ்த் தோடம் வேலன்தன் ஆலயத்தில்
கலந்தநீதா டங்கள் நீங்கா காதலி கேட்டி டாயே.

31. பல புண்ணிய தலங்களுக்குச் சென்றும், கடவுளிடம் பக்தியைச் செலுத்தியும், மேன்மையான சேதுவுக்குச் சென்று சீராடியதுமான காரணங் களால் மேற்குலம் எற்பட்டது. முற் பிறவியில் செய்த தோஷங்கள் வில காவோ எனின், கந்தன் கோவிலில் சேர்ந்த தோஷங்கள் நீங்கா. பார்வ தியே ! கேட்பாயாக.

32. முன்வினை விலக வேண்டி மொழிகின்றேம் கிரியை தானும்
அன்னவன் மனைவி யோடு அறுமுகன் தணிகைக் கேகிச்
சென்னியா றுடையா னுக்குத் திருவடிக் கருச்சித் தேத்தி
அன்னமும் ஒன்பான் பேருக் களித்துமே சொர்ண தானம்.

32. முற் பிறப்பில் சேர்ந்த தீவினைகள் விலக ஒரு சாந்தி கூறுகின் றோம். ஜாதகன் தன் மனைவியுடன் ஆறுமுகன் திருக்கோயில் கொண்டுள்ள திருத்தணிகைக்குச் சென்று, சடைமுடியில் கங்கையை அணிந்துள்ள சிவ பெருமானின் அடியினைகளைப் பூசித்துப். பணிந்து, ஒன்பது பேருக்கு உணவை யளித்து, பொன்தானம் ;

33. சாந்துமே நகரம் சென்று எம்பெரு மானின் கோட்டம
கூர்ந்துமே சோதி ஒன்று குமரனும் வைப்பா னுகில்
சேர்ந்ததோர் வினைகள் நீங்கிச் செனித்திடு மாண்பா
[லொன்று
ஏந்திழை மார்க ளவ்வா றியம்புவோம் தீர்க்க மாக.

33. கொடுத்து, தன்னூர்சென்று, அக்குள்ள எம்பெருமான் கோவிலில் விளக்கேற்றி வைப்பானுயின், அவனை யடைந்த எல்லா வினைகளும் நீங்கப் பெற்றவனுய் ஒரு புத்திரனையும், ஒரு புத்திரியையும் தீர்க்கமாகப் பெறு வான் என்று கூறுவோம்.

34. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் விரிஞ்சி
[தன்னில்
வந்தனன் இக்கு லத்தில் மாநிலம் கிருஷி செய்து
அந்தவன் வினையில் லாமல் அணுகினன் கால நாடு
முந்தினேன் வரையப் பட்டு முதித்தனன் என்று
[சொல்வோம்.

34. தந்தையின் முன் சென்மத்தைக் கூறுவோம். அவன் விரிஞ்சி புரத்தில், இதே குலத்தில் தோன்றினன். மிகுதியான நிலங்களைப் பெற்று விவசாயம் செய்தான். எவ்விதக் குற்றமுமின்றி மரண மடைந்தான். பிறகு பிரமனுல் படைக்கப்பட்டுப் பிறந்தான் என்று கூறுவோம்.

35. இருபது ஓன்ப தாண்டில் ஏகுவான் கால நாடு
வரும் சென்மம் காஞ்சி தன்னில் வருகுவான் இக்கு லத்தில்
பொருளது பெருக்க மாகிப் புகழுடன் வாழ்வா னுகும்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

35. ஜாதகனின் இருபத் தொன்பதாம் வயதில் தந்தைமரண மடைவான். மறுபிறவி, காஞ்சீபுரத்தில் இதே குலத்தில் தோன்றுவான். செல்வம் வளர்ந்து கீர்த்தியுடன் வாழ்வான். விகாயகனைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

36. பாலகன் தனக்கு யோகம் பகருவோம் மூவே ழின்மேல்
சாலவே அரசர் மூலம் சிவன மெய்து மென்றும்
சாலவே பிறைபோல் யோகம் தங்கிடும் அன்பான் ஆண்டும்
ஏலவே அரசு ஓங்கு மினமதிப் புடனே வாழ்வன்.

36. ஜாதகனுக்கு இருபத்தொரு வயதுக்குமேல் யோகத்தைச் சொல்லுவோம். இவன் அரசாங்கத்தில் உத்தியோகம் பார்த்து வாழ்வான் என்போம். வளர்பிறைச் சந்திரன் போல் யோகங்கள் பெருகும். ஐம்பதாம் ஆண்டு வரை நல்லாட்சி செலுத்துவான். சுற்றத்தார் மதிக்க வாழ்வான்.

37. அன்பது எட்டு ஆண்டில் ஆவணி மாதம் தன்னில்
இன்னவன் உடலம் ஏகு மியம்புவோம் அவன்பின்
[சென்மம்
கன்னியா குமரி தன்னில் கலப்பனும் இக்கு லத்தில்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே

37. ஐம்பத்தெட்டாம் வயதில், ஆவணி மாதத்தில் இவன் மரண மடைவான் என்று கூறுவோம். அவன் பிற் பிறவி, கன்னியா குமரியில் இதே குலத்தில் எற்படும். உயர்ந்த விக்நேச்வரரைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

38. செனித்திடு காலம் தன்னில் திருவோண முதல்பா தத்தில்
குனித்திடும் மதியி ருப்புக் கூறுவோம் ஒன்ப தாண்டும்
அனையவே திங்கள் ஐந்தும் அறைகின்றேம் பலனை யாங்கள்
வனவாசம் பூர்வ மாகும் மாநிலம் சேர்தல் உண்டு.

38. அவன் செனன காலம் திருவோணம் முதல் பாசமாம், சந்திர மகா தசையில் இருப்பு ; வருஷம் ஒன்பதும், மாதங்கள் ஐந்தும் என்று கூறுகின்றேம். முதற் பகுதியில் வனவாசம் போன்ற துன்பங்கள் ஏற்படும், நில புலன்கள் சேரும்.

39. தந்தைபின் தூணை சு பங்கள் சார்ந்திடும் கிராமச் செட்டுப்
பிந்திய மில்லம் செய்தல் பின்துணை விருத்தி யாகும்
சிந்தையில் நினைத்த தோங்கும் செப்பினேம் பூர்வ பாகம்
இந்திர னிறைஞ்சும் மாதே யியம்பின மொழிகுன் றுது.

39. தந்தையின் தம்பிமார்களுக்கு நன்மைகள் ஏற்படும். கிராம வியாபாரம் ஏற்படும். பிறகு வீடு அமைத்தல், தம்பியர் விருத்தி, நினைத்தக் காரியம் கைக்கூடுதல் போன்றவை ஏற்படும். இவ்வாறு முதற் பகுதியைக் கூறினேம். இந்திரனல் வணங்கப்படும் தாயே! நாங்கள் கூறிய வார்த்தைகள் மாறு.

ஜாதகம் 48

1. நந்தியும் செனன மாக ரவிபுகர் ஏழில் தங்கப்
புந்தியும் எட்டில் தங்கப் பூமகன் ஆறி லேறச்
சந்திரன் பணிபொன் ஒன்பான் சனிபத்தில் கேது மூன்றில்
இந்தவார் கிரகம் நின்ரு லியம்புவீர் பலனேத் தானே.

1. இலக்கினம் விருஷபமாக விருந்து, சூரியன் சுக்கிரன் இலக்கினத்துக்கு ஏழாமிடத்திலும், புதன் எட்டிலும், செவ்வாய் ஆறுமிடத்திலும், சந்திரன் இராகு குரு ஒன்பதிலும், சனி பத்தாமிடமாகிய மகரத்திலும், கேது மூன்றுமிடத்திலுமாக, இவ்வாறு கிரகங்கள் தங்கியிருந்தால் அதற்குரிய பலன்களைக் கூறுங்கள்.

		லக்கினம்	
சனி	இராசி சக்கரம்		கேது
சந்திரன் இராகு குரு			
புதன்	சூரியன் சுக்கிரன்	செவ்வாய்	

2. சங்கரி கேட்கும் போது செயமுனி புகலு கின்ரூர்
இங்கிவை ஆண்பால் சென்மம் யிவன்தந்தை யில்லம்
[சொல்வேன்
தங்கிடு வடதென் வீதி தலைவாசல் கீழ்பால் வாசல்
மங்கிடும் கெடியும் வாயு அரசர்கள் வாச மாகும்.

2, இவ்வாறு பார்வதி கேட்கும்போது, செயமுனி கூறுகின்ரூர். இஃது ஆண்மகனின் ஜாதக மாகும். இவன் தந்தையின் வீட்டைக் கூறுவோம். வடக்குத் தெற்கான வீதியில், கிழக்கு நோக்கிய வாயிலை புடையது. வாயுத் திசையில் பாழடைந்த அரசர் வாழும் கோட்டை உண்டு.

3. வேலுடைக் கடவுள் தென்பால் மஸ்தானும் அருகில் தங்கும்
ஆலத்தை உண்டோன் அக்கினி அணுகிய பேரூராகும்
சாலியிவ் வடையா ளத்துள் சேஷ்டனும் கங்கை சேயாய்ச்
சாலவே குடும்பச் சேதி சாற்றுவோம் இந்நூல் தன்னில்.

3. வேலேந்திய கடவுளாகிய முருகப் பெருமான் திருக்கோயில் தெற்கிலும், அதனருகில் மகம்மதியர் பள்ளி வாசலும் உள்ளன. அக்கினியின் திசையாகிய தென்கிழக்கில் ஆலகால விடத்தைப் பருகிய சிவபெருமானின் கோவிலும் உண்டு. இத்தகைய அடையாள முடைய ஒரு சிறிய ஊரில், ஜாதகன் வேளாளர் மரபில் முதற் புத்திரனாகப் பிறப்பான். இந்நூலில் ஜாதகனின் குடும்ப வரலாற்றைக் கூறுவோம்.

4. தந்தையின் துணைவர் ஆறில் தோடமாம் கன்னி மூன்று
சந்ததம் விருத்தி என்றோம் சாற்றுவோம் தந்தை சேதி
முந்துமால் நிறத்த னாகும் மொழியதைக் காப்பா னாகும்
வந்தர்க் கன்ன மீவன் அரசர்கள் பேட்டி கொள்வன்.

4. இவன் தந்தையின் உடன்பிறந்தவர் அறுவரில் மூன்று சகோதரர் இறந்து விடுவர். சகோதரிகள் மூவர் தீர்க்கமாக இருப்பர் என்றோம். தந்தையைப் பற்றி கூறுவோம். கரிய நிறமுள்ளவன். சொன்ன சொல் தவறுதவன். தன்னை யடைந்தவர்கட்கு உணவு அளிப்பான். அரசர்கள் சந்திப்பு ஏற்படும்.

5. அரசனுல் செட்டுச் செய்வன் அம்மார்க்க வேலை செய்வன்
தரையதைக் கொஞ்சம் சேர்ப்பன் தாயது இரண்டு [என்றோம்
குறையென்றோர்க் குதவி செய்வன் குணமது இரண்டு [முண்டு
குறைசொலான் இளமனத்தான் புகழ்ந்தோரை யாத [ரிப்பன்.

5. மன்னன் ஆதரவால் வியாபாரங்கள் செய்வான். வியாபாரத் துறையில் வேலை செய்வான். சிறிது நிலங்களைச் சேர்ப்பான். இவனுக்குத் தாய்மார்கள் இருவர் என்று கூறினோம். துன்பமடைந்தவர்களுக்கு உதவி செய்வான். இருவிதக் குணங்க ளுடையவன். பிறர் மீது குற்றம் கூறான். இளகிய மன முடையவன். தன்னைப் புகழ்ந்தவரை யாதரிப்பான்.

6. நல்லவன் நல்லோ ருக்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
எல்லையை விட்டு நீங்கி ஏகுவான் குடகி லேதான்
அல்லல்கள் ஆதி காலம் அணுகிடும் முன்கோ பத்தன்
சொல்லது சுகமே யாகும் செறிந்திடும் பித்த வாயு.

6. நல்லவர்க்கு நல்லவனுவான். துஷ்டர்க்குத் துஷ்டனுவான். தன் ஊரை விட்டு நீங்கி மேற்குத் திசைக்குச் செல்லுவான். முதலில் இவனுக்குத் துன்பங்கள் பல ஏற்படும். முன்கோப முடையவன். இனிய மொழிகளே வழங்குவான். பித்த வாயு மேலிட்டிருக்கும்.

7. உண்டியும் சுகமாய்க் கொள்வன் உறுதியா மனத்த னுகும்
அண்டினோர்க் குதவி செய்வன் அவசர மனத்த னுகும்
முண்டக ரேகை யுண்டு மூலச்சூ டுடைய னுகும்
வண்டிபண் டாரம் பின்னுல் படைப்பனு மென்று
[சொல்வோம்.

7. போஜன சுக முள்ளவன். உறுதியான மனமுடையவன். தன்னை யடைந்தவர்களுக்கு உதவி செய்வான். அவசரப்படும் இயல்பைப் பெற்றவன். இவன் கையில் பத்மரேகை யுண்டு. மூலச் சூடு உடையவன். வண்டி முதலிய வாகனங்களையும், குறைவற்ற செல்வத்தையும் பிறகு பெறுவான் என்று சொல்லுவோம்.

8. முன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றேம் திருவா ரூரில்
வன்னிய மரபில் தோன்றி மனைவிமைந் தருமுண் டாகி
அன்னவன் கிருஷி செய்து அறமது இச்சை யாகிப்
பின்னோர்க்கு உதவி செய்து பவமது இல்லா தாகி;

8. இவன் முன் பிறவியைக் கூறுவோம். திருவாரூரில் வன்னியர் குலத்தில் பிறந்து, மனைவி மக்களைப் பெற்று, விவசாயம் செய்து, தருமத்தில் விருப்பம் கொண்டு, ஏழைகளுக்கு உதவி புரிந்து, பாவ மில்லாது;

9. காலன்தன் நாட டைந்து கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமில் லாத கங்கை குலமதில் உதித்தா னுகும்
சாலவே குணத்தா னுக்குச் செனிப்பனு மிந்தப் பாலன்
ஏலவே யிவன்கு ணத்தை யியம்புவோம் தாயே கேளு.

9. மரண மடைந்து, பிரமனுல் படைக்கப்பட்டு, வேளாளர் குலத்தில் உதித்தான். இத்தகைய பெருங்குணம் படைத்த இவனுக்கு ஜாதகன் புதல்வனுகப் பிறப்பான். இவனது குணத்தைக் கூறுவோம். தாயே! கேட்பாயாக.

10. மாநிறம் உணைச்சல் நீட்சி மருமமில் லாதா னுகும்
தேன்மொழி யீகை யுண்டு சிரமுகம் வடிவு காணும்
ஊனமில் லாத தேகி உயர்வான தொழிலும் செய்வன்
ஈனரை உறவு கொள்ளான் ஏவலாள் உடைய னுமே.

10. கரிய நிறமுள்ளவன். மெலிந்து நீண்ட உடலைப் பெற்றவன். இரகசியமில்லாதவன். இனிமையாகப் பேசுபவன். தான தருமங்கள் வழங்குவான். தலையும் முகமும் அழகாக இருக்கும். குற்றமற்ற உடலைப் பெற்றவன். மேன்மையான தொழில்களைப் புரிவான். கீழ் மக்களுடன் நேசங் கொள்ள மாட்டான். வேலையாட்களைப் பெற்றிருப்பான்.

11. இருவிதக் கல்வி கற்ப னிடுக்கமில் லாதா னுகும்
அரசர்க்கு இவன்சொல் மேன்மை அன்னிய தேச வாசம்
பரிவண்டி பின்னுல் சேர்ப்பன் பந்துவும் மெச்ச வாழ்வன்
நிறையவே குடும்பி யாவன் நிதானமாம் வார்த்தை கூர்வன்.

11. இரு துறைகளில் கல்வி பயிலுவான். துன்ப மில்லாதவன். அரசர்களும் இவன் சொற்களைப் போற்றுவர். பிற நாடுகளில் வசிப்பான். பிற்காலத்தில் குதிரை வண்டி வாங்குவான். சுற்றத்தார் மெச்ச வாழ்வான். நிறைந்த குடும்ப முள்ளவன். அடக்கமாகப் பேசுபவன்.

12. அன்னிய மக்கள் நேயன் அந்தமான் வஸ்து வாலே
பொன்பொருள் சேர்ப்பா னுகும் புதிதான இல்லம் செய்வன்
சொன்னசொல் காப்பா னுகும் துரவுகள் சோலை செய்வன்
பன்னுவோர்க் கன்ன மீவன் பலதல வாசம் செல்வன்.

12. பிற மக்களை நேசிப்பவன். அழகிய பொருள்களினுலே பொன் முதலிய செல்வங்களைச் சேர்ப்பான். புதிய வீடு ஒன்றைக் கட்டுவான். சொன்ன சொல் தவறுதவன். கிணறுகளுடன் பூஞ்சோலைகளை வளர்ப்பான். யாசகர்களுக்கு உணவளிப்பான். பல புண்ணியத் தலங்களுக்கு யாத்திரையாகச் சென்று வசிப்பான்.

13. தன்துணை ஆண்பால் ரெண்டு தையலும் அவ்வார் தீர்க்கம்
அன்னவர் சேதி யாவும் அறிவிப்போம் பின்பா கத்தில்
இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மிருபா னுந்தில்
கன்னிகை கீழ்ப்பால் நேரும் கழறுவோம் அவள்கு ணத்தை.

13. இவன் உடன்பிறந்தவர்களில் ஆண்கள் இருவரும், பெண்கள் இருவரும் தீர்க்கமாக இருப்பர். அவர்களைப் பற்றிப் பிற் பகுதியில் கூறுவோம். ஜாதகனின் திருமணம் நடைபெறும் காலத்தைக் கூறுவோம். இருபத்தைந்தாம் வயதில், கிழக்குத் திசையில் இவனுக்கு மனைவி வாய்ப்பாள். அவள் குணத்தைக் கூறுவோம்.

14. அன்னமும் அன்பா யீவள் ஆளன்தன் மனம்போல்
[வாழ்வள்
அன்னியர் மதிக்க வாழ்வள் ஆசார முடைய ளாகும்
அன்னம்போல் சாய லொக்கும் அதிதிகட் கன்ன மீவள்
பின்னமில் லாத தேகி பிறர்குற்றம் புகலா ளாகும்.

14. யாவருக்கும் அன்புடன் உணவளிப்பாள். கணவன் மனம் போல் வாழ்வாள். பிறர் பார்த்து மெச்சும்படி வாழ்க்கை நடத்துவாள். ஒழுக்க

முடையவள். அன்னத்தைப்போல் அழகானவள். விருந்தினர்கட்கு உணவளிப்பாள். கட்டமைந்த உடலைப் பெற்றவள். பிறர்மீது குற்றங்களைக் கூறுள்.

15. பால்பாக்ய முடைய ளாகும் பசித்தோர்க்கு அன்ன மீவள்
மால்மனை ஒப்ப தாகும் மாந்தளிர் மேனி யாகும்
நீலிக்கு வயது தீர்க்கம் நீள்சடை முனிவர் சொல்ல
வேல்விழி மாது ரெண்டு விளம்புவோம் பால னுக்கு.

15. பால் பாக்கியம் உடையவள். பசி என்கின்றவர்களுக்கு உணவளிப்பாள். இலக்குமியைப் போன்றவள். மாந்தளிரைப் போன்ற மென்மையான உடலைப் பெற்றவள். நீண்ட ஆயுளைப் பெற்றவள் என்று நீண்ட சடையையுடைய முனிவர் கூறினர். ஜாதகனுக்கு மனைவிமார் இருவர் என்று கூறுவோம்;

16. அத்திரி தடுத்துச் சொல்ல அதுவிப ரங்கள் சொல்வீர்
சத்தமத் தோனும் ஆறில் சரமதா யிருப்ப தாலே
வித்தகி மார்கள் ரெண்டு விளம்புவோம் தாயே யாங்கள்
இத்தகை முனிவர் சொல்ல இயம்புவார் பராசர் தாமும்.

16. என, அத்திரி மறுத்துக் கூற, அதற்கான விவரங்களைக் கூறுங்கள் என்றுள் பார்வதி. ஏழாமிடத்துக்கு உரியவனை செவ்வாய், ஆறில் தங்கியிருப்பதால், இரண்டு மனைவியர் ஏற்படுவர் என்று நாங்கள் கூறுவோம், தாயே! இவ்வாறு முனிவர் கூற, பராசரர் கூறுகின்றார்.

17. புகர்குசன் [1]மாறி நிற்கப் புகலொணு மார கங்கள்
தகைமையாய்த் தாரம் ஒன்றே சாற்றுவோம் பால னுக்கு
உகமையா யிதற்கு நேராய்ச் சாதக னூரி லேதான்
வகையுடன் காண்பா யாக மாதுவும் ஒன்றே சொன்னேம்.

17. சுக்கிரனும் செவ்வாயும் ஒருவருக் கொருவர் இடத்தை மாற்றிக் கொண்டு முறையே துலாத்திலும், விருச்சிகத்திலும் தங்கியிருப்பதால், மனைவிக்கு மரணம் கூற இயலாது. இவனுக்கு மனைவி ஒருத்தியே என்று கூறுவோம். ஜாதகன் ஊரிலேயே அவனுக்கு மனைவி வாய்ப்பாள். மனைவியும் ஒருத்தியே என்று கூறினேம்.

18. சுதர்களும் காண லுகும் தோன்றினும் தீதே யாகும்
அதுகுற்றம் புகலும் என்ன வைந்தவன் புதனே யாகச்
சதியாக எட்டில் தங்கச் செப்பினேம் சுதர்கள் தோடம்
அதிபன்முன் சென்மந் தன்னில் மருவிற்று வினைய னேகம்.

18. ஜாதகனுக்குக் புத்திர பாக்கியம் இல்லை. புதல்வர் தோன்றினாலும் மரண மடைவர். என் அவ்வாறு கூறினீர்? தோஷம் என்ன?

---

1. துலாம் சுக்கிரனுக்கு உரிய இடம். விருச்சிகம் செவ்வாய்க்கு உரிய இடம்.

புத்ர ஸ்தானாதிபதி புதன், எட்டாமிடத்தில் தங்கி யுள்ளதால், புத்திர தோஷத்தைக் கூறினேம். ஜாதகனது முற்பிறப்புத் தீவினைகள் பலவும் சேர்ந்தன.

19. என்னவூழ் செய்தா னதனை யியம்புவீர் முனியே நீர்தாம்
அன்னவன் பூர்வம் சொல்வேன் அழகர்வாழ் பாண்டி நாட்டில்
வன்னிய குலமே தோன்றி மனைவிமைந் தருமுண் டாகி
இன்னவன் வாழும் நாளி லியம்புவோம் ஊழி தானே.

19. ஜாதகன் எத்தகைய தீவினைகளைப் புரிந்தான். முனிவரே! தாங்கள் கூறுங்கள். அவனது முற்பிறவியைக் கூறுவேன். அழகர் திருக் கோயில் கொண்டுள்ள பாண்டிய நாட்டில், வன்னியர் குலத்தில் தோன்றி, மனைவி மக்களைப் பெற்று, ஜாதகன் வாழ்ந்து வரும் நாளில், சேர்ந்த வினையைக் கூறுவோம்.

20. பஞ்சையாய் ஏழை மாது பணிசெய்வே னென்று சொல்லி
வஞ்சியு மில்லம் வாழ மாதுவை யாத ரித்துத்
தஞ்சமாய்ச் சிலநாள் சென்று தையல்மேல் மோகம் கொண்டு
மிஞ்சியே போகம் துய்த்து மெல்லிக்குக் கருவு தங்க.

20. ஒரு ஏழைப் பணிப் பெண் வேலை செய்வேன் என்று கூறி இவன் வீட்டை யடைந்து வாழலானாள். இவனும் அப் பெண்ணை யாதரித்து, சில நாட்கள் சென்ற பிறகு, அப் பெண் மீது மோகங் கொண்டு, அதிகமாக அவளுடன் இன்பந் துய்த்தான். அவளும் கருவுற்றாள்.

21. பலவித பண்டி தங்கள் பாவைக்குச் செய்ய லுற்றான்
குலவின கருவு நீங்கக் கோதையும் சுகமே யாளுள்
உலவிற்று அந்தத் தோடம் உத்தமன் வேறு காணான்
தலைவனும் அந்தி யத்தில் தன்சுதர் பகையு மாகி;

21. பல மருத்துவங்கள் அவளுக்குச் செய்வித்தான். கருவும் அழிந்து போயிற்று. பெண்ணும் சுகமாயினாள். அந்தக் குற்றம் இவனை யடைந்தது. வேறு குற்றங்கள் ஒன்றும் இல்லை. இவனது கடைசி நாட்களில் பெற்ற புதல்வர்கள் விரோதிகளாகி, ஆகி;

22. மனமது சஞ்ச லத்தால் அறுமுகன் பத்தி கொண்டு
பிணையான கால நாடு புக்குமே பிரமன் லக்கம்
வினையிலாக் கங்கை சேயாய் மேவுவா னென்று சொல்வோம்
சினமுடன் முன்னூழ்த் தோடம் சேர்ந்தது பால னுக்கு.

22. மனங் குழம்பி, முருகப் பெருமானிடம் பக்தி கொண்டு, இவன் மரண மடைந்தான். பிறகு பிரமனால் படைக்கப்பட்டுக் குற்றமில்லாத வேளாளர் மரபில் தோன்றுவான் என்று சொல்லுவோம். முற்பிறப்பில் சேர்ந்த தோஷமும் ஜாதகனைத் தொடர்ந்தது.

23. சுதர்களும் தோட மெய்தும் செப்புவேன் அதற்குச் சாந்தி
அதிதிவாழ் அருணைக் கேதான் ஆளனும் மனைவி யேகி
நதிதோய்ந்து கிரியைச் சுற்றி நாதனுர்க் கருச்சித் தேத்தி
முதல்குல மூவேழ் பேருக் குதவுவான் அன்னம் தானே.

23. புத்திர தோஷமுண்டாம். அதற்குச் சாந்தி ஒன்று கூறுவேன். தேவர் வாசம் புரியும் திருவண்ணுமலைக்கு ஜாதகன் மனைவியுடன் சென்று, அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, கிரிப் பிரதட்சணம் செய்து, அண்ணுமலையானை அருச்சித்துப், பணிந்து, பிராமணர்கள் இருபத்தொரு பேர்களுக்கு ;

24. விடம்கந்தம் சொர்ண தான மீந்துமே யுள்ளூர் மீண்டு
அடைவுடன் மாதம் ஓர்நாள் அன்புடன் சட்டி நோன்பு
திடமுடன் ஆண்டு கொள்ள தீவினை விலகி யேதான்
உடன்சுதர் தோன்றும் தீர்க்கம் உத்தமி கேட்டி டாயே.

24. புஷ்பம், சந்தனம், பொன் முதலியன வழங்கி, தன்னூரடைந்து, வரிசையாக மாதம் ஒரு சஷ்டியன்று நோன்பு நோற்று, ஒரு வருட காலம் இங்ஙனம் செய்தால், தன்னை யடைந்த தோஷம் நீங்கி, உடனே புத்திரர் தோன்றுவர். பார்வதியே ! கேட்பாயாக.

25. சொற்படி செய்யா ஞகில் துலங்காது சுதர்கள் தாமும்
சொற்படி செய்வா ஞகில் தோன்றிடும் ஆண்பால் ரெண்டு
மைப்படி பெண்பால் ரெண்டு யறைகின்றேரும் தீர்க்க மாக
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் ருது.

25. கூறியபடி செய்யாவிட்டால் புத்திரர் தோன்ற மாட்டார். கூறியபடி செய்தால் புத்திரர் இருவரும், புத்திரிகள் இருவரும் தீர்க்கமாகத் தோன்றுவர். கங்கை நதியைச் சடையில் தரித்த சிவபெருமானின் தேவியே! யாம் கூறிய மொழிகள் தவரு.

26. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாநிறம் சமதே கத்தான்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உள்மனம் கபடு மில்லாள்
தீதாகப் பித்த வாயு செறிந்திடு மிளம னத்தாள்
ஓதுமுன் கோபி யாவள் உவப்புடன் வார்த்தை சொல்வள்.

26. இவன் தாயின் குணத்தைச் சொல்லுவேன். கரிய நிறமுள்ளவள். குறைவில்லாத அழகிய உடலமைப்புள்ளவள். இனிமையாகப் பேசுபவள். மனத்தின்கண் வஞ்சனை யற்றவள். பித்தவாயு மேலிட்டிருப்பவள். இளகிய மன முடையவள். கூறுவதற்கு முன் கோபமுள்ளவள். பிறர் மகிழச் சிரித்துப் பேசுபவள்.

27. தன்துணை ஆண்பா லொன்று தையலும் ஒன்றே தீர்க்கம்
அன்னையு மிரண்டு மாகும் அவள்வந்த பின்பு யோகம்
முன்சென்மம் புலியூர் தன்னில் உதித்தன ளிக்கு லத்தில்
பொன்பொரு ளுடைய ளாகிப் புகழான குடும்பி யாகி ;

27. உடன்பிறந்தவர்களில் சகோதரன் ஒருவனையும், சகோதரி ஒருத்தியையும் தீர்க்கமாகப் பெற்றிருப்பாள். இவளுக்கு இரு தாய்மார்களுளர். இவள் பிறந்த பிறகு குடும்பத்துக்கு யோக முண்டு. இவளது முற்பிறவி புலியூரில் இதே குலத்தில் ஏற்பட்டது. செல்வங்களைப் பெற்று, புகழுள்ள குடும்பத்தை யடைந்து ;

28. அறமதில் இச்சை உண்டாய் அதிதிகட் கன்ன மீந்து
திருகான கால நாடு சென்றனள் வரன்முன் னுகப்
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ ளிவளே யென்றேம்
மறுசென்மம் கொங்கு நாட்டில் மருவுவாள் சைவச் சேயாய்.

28. தருமத்தில் விருப்பங் கொண்டு, விருந்தினர்களுக்கு உணவளித்து கணவனுக்கு முன்பு மரண மடைந்தாள். பிறகு பிரமனுல் படைக்கப் பட்டுத் தோன்றியவள் இவள் என்று கூறினேம். மறு பிறவி கொங்கு நாட்டில், சைவ குலத்தில் ஏற்படும்.

29. மூப்பது ஏழு ஆண்டில் விளம்புவோம் தந்தை கண்டம்
செப்புவோ மிவன்பின் சென்மம் தில்லையில் பிரம்ம
[சேயாய்
ஓப்புடன் உதிப்பா னுகும் உத்தம னிச்சென் மத்தில்
தப்பிதம் அனந்தம் செய்து தனத்தின்மேல் யிச்சை யாயும்;

29. ஜாதகனது முப்பத் தேழாவது வயதில் தந்தைக்கு மரணம் ஏற்படும். இவன் மறு பிறவியைக் கூறுவோம். சிதம்பரத்தில் அந்தணர் குலத்தில் பிறப்பான். இப் பிறவியில் இவன் பிழைகள் புரிந்து, பொருளாசை கொண்டு ;

30. கூலியைக் குறைத்த தாலே கூறினீர் பிரம்ம சேயாய்ச்
சாலவே சொல்லு மென்னச் சதிகளும் அனந்தம் செய்தும்
வேலுடைக் கடவுள் பத்தி மெலிந்தோர்க்கு உதவி
[செய்தும்
சீலமா தலங்கள் சென்றும் சேயனும் வாழ்வ தாலே;

30. தொழிலாளர்களின் கூலியைக் குறைத்ததுமான பல குற்றங்கள் செய்தும் கூட, பிராமண மரபில், பிறப்பை எவ்வாறு கூறினீர்கள் ? நன்கு கூறுங்கள் எனவும், இவன் குற்றங்கள் பல செய்த போதிலும், முருகன் மீது பக்தி கொண்டமையாலும், ஏழைகளுக்கு உணவு அளித்தமையாலும், நல்ல புண்ணியத் தலங்கள் சென்று தரிசித்து வந்தமையாலும் ;

31. உதிப்பனும் பிரம்ம சேயாய் உரைக்கின்றேம் நாற்பா
[ணெண்டில்
அதிபதி அன்னை கண்டம் அறைந்தது தப்பா தாகும்
இதுநிற்க உதித்தோ னுக்கு இயம்புவோம் எழுப தாண்டில்
அதிதியே மகர மாதம் அறைந்தனம் கண்டம் தானே.

31. பிராமண குலத்தில் உதிப்பான் என்று கூறினேம். நாற்பதாம் வயதில் ஜாதகன் தாய் மரண மடைவாள். கூறியது தவறுது. இது நிற்க, ஜாதகனுக்கு எழுபதாம் வயதில், தை மாதத்தில் மரணத்தைக் கூறினேம். அன்னையே !

32. மறுசென்மம் தணிகை தன்னில் மறைக்குலம் உதிப்பா
[ணுகும்
திருமகன் யோகச் சேதி செப்புவோம் தாயே கேளு
பொருளது பெருக்கம் செய்வன் பிரபல புகழு மேற்பன்
தரையது சேர்ப்பா ணுகும் செட்டுகள் பலவார் செய்வன்.

32. மறு பிறவி திருத்தணிகையில் அந்தணர் குலத்தில் ஏற்படும். ஜாதகனது யோகங்களைக் கூறுவோம். தாயே ! கேளுங்கள். செல்வத்தை வளர்ப்பான். பெரும் புகழடைவான். நிலபுலன்களைச் சேர்ப்பான். பல வகை வியாபாரங்கள் செய்வான்.

33. ஐயைந்து ஆண்டு மேலாய் அற்புத யோகம் வாய்க்கும்
வையமேல் பொருளும் சேரும் வாக்குச்சொல் மேன்மை
[யாகும்
செய்தொழில் முயற்சி எய்தும் தீரமா மனத்த ணுகும்
பொய்யிலா ஏழாயி ரம்தான் பொன்தனைச் சேர்ப்பா ணுமே.

33. இருபத்தைந்தாம் வயதுக்கு மேல் விசேஷ யோகங்களைப் பெறுவான். உலகத்தில் பெரும் பொருளை யடைவான். கூறும் சொல் மேன்மை யடையும், செய்யும் தொழில் பலிதமாகும். தைரியமான மனமுடையவன். தவறின்றி ஏழாயிரம் பொன் சேர்ப்பான்.

34. எண்ணைஞ்சு ஆண்டு மட்டும் எய்திடும் விசேட யோகம்
திண்ணமாய் அதன்மே லாகச் சிலசிலச் செட்டு ஓங்கும்
வண்ணமாய்த் திருப்பணி செய்வன் வந்தவர்க் கன்ன [மீவன்
அண்ணலைப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

34. இந்த விசேஷ யோகம் நாற்பது வயது வரை நீடிக்கும். அதற்கு மேலும் சிற்சில வியாபாரங்கள் வளரும். நல்ல கோவில் திருப்பணிகளையும் புரிவான், தன்னை யடைந்தவர்களுக்கு உணவளிப்பான். சிவபெருமானைப் பூசிக்கும் பார்வதியே! கேட்பாயாக.

35. யோகம்எவ் விதமாய்ச் சொன்னீர் உரைப்பீர்கள் அந்தச் [சங்கை
பாகமாய்த் தர்ம கர்மன் பங்குவாய்த் தசமம் நிற்க
தோகையே யோகம் சொன்னேம் செப்பிய மொழிகுன் றாது
ஆகம விதிபோல் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

35. எவ்வாறு ஜாதகனுக்கு யோகத்தைக் கூறினீர்கள்? அதைக் கூறுங்கள். தர்ம கர்மாதிபனான சனி பத்தா மிடத்தில் நிற்பதால், பார்வதியே! யோகத்தைக் கூறினேம். கூறிய சொல் தவறாது. வேதங்களில் கூறியபடி செயலாற்றும் பார்வதியே! கேட்பாயாக.

36. செனித்திடு காலம் தன்னில் திருவோண மிரண்டாம் [பாதம்
குனித்திடு மதியின் காலம் கூறுவோம் ஆண்டு மூன்றும்
வனிதையே திங்க ளேழு மறைந்தனம் பூர்வ பாகம்
சினமிலாத் தவங்கள் செய்யும் செல்வதி கேட்டி டாயே.

36. ஜாதகனின் செனன காலம்; திருவோணம் இரண்டாம் பாதமாம். சந்திர மகா தசையில் இருப்பு: வருஷம் மூன்றும், மாதங்கள் ஏழும் என்று கூறுவோம். இவ்வாறு முற்பகுதியைக் கூறினேம். கோபமில்லாது தவங்களாற்றும் பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 49

1. கலிசனி [1]கலியி லாகக் கனகனும் சாடி புக்க
நிலமகன் மேரு வாக நீத்தோனும் மீனம் சேரப்
புலவனும் பணியும் கன்னி புகர்சியம் பானு கோலில்
தலமது யிடப மாகச் சாற்றுவீர் பலனைத் தானே.

1. சந்திரன் சனி மகரத்திலும், குரு கும்பத்திலும், செவ்வாய் தனுசிலும், கேது மீனத்திலும், புதன் ராகு கன்னியிலும், சுக்கிரன் சிம்மத்திலும்; சூரியன் துலாத்திலும் தங்கியிருந்து, இலக்கினம் விருஷபமாக இருந்தால் அதற்கான பலன்களைக் கூறுங்கள்.

<table>
<tr><td>கேது</td><td></td><td>லக்கினம்
சந்திரன்
சனி</td><td></td></tr>
<tr><td>குரு</td><td colspan="2" rowspan="2">இராசி
சக்கரம்</td><td></td></tr>
<tr><td></td><td>சுக்கிரன்</td></tr>
<tr><td>செவ்வாய்</td><td></td><td>சூரியன்</td><td>புதன்
ராகு</td></tr>
</table>

2. பிருகுமே புகலு கின்றார் பிறந்திடும் ஆண்பால் சென்மம்
பெறும்தந்தை யில்லம் சொல்வேன் புதன்வாடை [கீழ்மேல் வீதி
திருமாலின் கோட்டம் மேற்கில் சிரமற்றோள் அதற்கு [மேற்கில்
நிவாக னத்தாள் உத்ரம் நந்திவா கனத்தோன் தங்கும்.

2. பிருகு மகரிஷி கூறுகின்றார். இஃது ஆண்பால் ஜாதகமாகும். இவனைப் பெற்ற தந்தையின் வீட்டைக் கூறுவேன். கிழக்கு மேற்கு வீதியில் வீடு வடக்கு வாடையில் இருக்கும். மேற்கில் திருமாலின் கோவில் உண்டு. அதன் மேற்கில் விநாயகப் பெருமானின் கோயில். வடக்கே காளி கோவில் உளது. சிவபெருமானின் கோவில்;

3. அக்கினி கன்னி தென்மேல் அணுகிய சிறுவு ராகும்
மிக்கவே சேட்ட னாக விளம்புவோம் பிரம்ம சேயாய்த்
தக்கவே குடும்பச் சேதி சாற்றுவோம் இந்நூல் தன்னில்
நக்கனைப் பூசை செய்யும் நாயகி கேட்டி டாயே.

---

1. மகரம்

3. தென் கிழக்கில் இருக்கும். தென் மேற்கில் தூர்க்கை யாலயமும் உண்டு. இத்தகைய சிறு ஊரில் அந்தணர் குலத்தில் முதற் புதல்வனாக ஜாதகன் உதிப்பான் என்று கூறுவோம். இந் நூலில் இவனது குடும்ப வரலாற்றைக் கூறுவோம். சிவபெருமானைப் பூசை செய்யும் தலைவியே! கேட்பாயாக.

4. தந்தையின் துணைஆண் ஒன்று சாற்றுவோம் தீர்க்க மாக
அந்தவ னிளையோ னாக அறைகின்றோம் அவன்கு ணத்தைச்
சிந்தையில் கபடு முண்டு தேசமேல் செல்வா னாகும்
விந்தையாய்ப் பத்து வேலை வித்தகன் செய்வா னாகும்.

4. தந்தையின் சகோதரன் ஒருவன் தீர்க்கமாக உள்ளான் என்று கூறுவோம். அவன் இவனுக்கு இளையவன் என்றும் கூறுவோம். அவன் குணத்தைச் சொல்லுவோம். மனத்தில் கபடமுள்ளவன். பல தேசங்களில் சுற்றுவான். விநோதமான பற்பல தொழில்களைப் புரிவான்.

5. சிலவேளாள் தனவான் பக்கல் சேர்ந்துமே உய்வா னாகும்
பலதேசம் செல்வா னாகும் பாக்கியம் அதனால் சேர்ப்பான்
புலவன்போல் மொழிவா னாகும் பின்வய தினிலே யோகம்
குலவிடும் வாத தேகி கோதையும் ஒன்றே யென்றோம்.

5. சில நாட்கள் செல்வவான் ஒருவனை யடைந்து வாழ்ந்து வருவான். பற்பல தேசங்களுக்குச் செல்வான். அதனால் கன்மைகளைப் பெறுவான். பண்டிதர் போல் பேசுவான். பின் வயதில் யோகம் வாய்க்கும். வாத தேகமுள்ளவன். மனைவியும் ஒருத்தியே யுண்டு.

6. தென்திசை பாரி வாய்க்கும் சுதர்களும் ஆண்பால் ரெண்டு
கன்னிகை ஒன்று என்றோம் காவலன் ஒன்றாய் வாழ்வன்
அன்னவன் வயது தீர்க்கம் அதுவன்றித் துணைபெண் [காணன்
மன்னிய தந்தை சேதி யறைகின்றோம் தாயே கேளு.

6. மனைவி தெற்குத் திசையிலிருந்து வாய்ப்பாள். இரண்டு புத்திரர்களும் பெண் ஒருத்தியும் உளர் என்று கூறினோம். இவன் அவர்களுடன் சேர்ந்தே வாழ்வான். நீண்ட ஆயுளைப் பெற்றிருப்பான். இவனுக்குச் சகோதரிகள் இல்லை. ஜாதகனைப் பெற்ற தந்தையின் வரலாற்றை யுரைக்கின்றோம். தாயே! கேட்பாயாக.

7. மாநிறம் வாத தேகி மருமமில் லாதா னுகும்
ஊனமில் லாத தேகி உறுதியில் லாத நெஞ்சம்
ஈனமாம் குணமில் லாதா னிடர்செய்யான் யாவ ருக்கும்
தேன்மொழி பூமி யாலே சிவனம் செய்வா னுகும்.

7. கரிய நிறமுள்ளவன். இரகசியம் இல்லாதவன். குறைவு ஒன்று மில்லாத நல்ல உடலைப்பெற்றவன். உறுதி இல்லாத மனமுடையவன். கீழான குண மில்லாதவன். பிறருக்குத் தீங்கு இழைக்காதவன். தேன் போன்ற இனிய சொற்களைப் பேசுபவன். நிலபுலன்களால் வாழ்க்கையை நடத்துபவன் ஆவான்.

8. சுகதுக்கம் கலந்து வாழ்வன் சொல்லுமுன் கோபம்
[கொஞ்சம்
இகபரன் பத்தி பூண்பன் இடுக்கமாம் குடும்ப மாவன்
அகமது பின்னல் செய்வன் அஞ்சியே வார்த்தை கூர்வன்
மிகுதல வாசம் செய்வன் மேவிடும் வாயு பாதை.

8. சுகமும் துக்கமும் கலந்து வாழ்பவன். முன்கோப முடையவன். இறைவனிடம் பக்தி உள்ளவன். துன்பம் உள்ள குடும்ப முடையவன். வீட்டைப் பிற்காலத்தில் கட்டுவான். பயந்தே வார்த்தைகளைச் சொல்லு பவன். புண்ணியத் தல யாத்திரைகள் செய்வான். வாயு நோயால் துன்பப் படுவான்.

9. நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
வல்லியர் மோக னுவன் மாநிலம் விருத்தி செய்வன்
சொல்லதைக் காப்பா னுகும் சல்லிய பாதை யுண்டு
மல்லினில் செல்லா னுகும் மங்கையே கேட்டி டாயே.

9. நல்லவர்களுக்கு நல்லவன். தீயவர்களுக்குத் துஷ்டன். பெண்க ளிடம் மோக முடையவன். நிலபுலன்கள் விருத்தி செய்வான். சொன்ன சொல் தவறுதவன். கடன் தொல்லைகள் உள. வீண் சண்டைக்குப் போகான். பார்வதியே! கேட்பாயாக.

10. இந்நெறி உடையோ னுக்குப் பாலகன் உதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் யிருசி
[வப்பன்
மன்னர்கள் உறவு கொள்வன் வண்டிவா கனமு மேற்பன்
சொர்ணமும் சேர்ப்பா னுகும் தோகையர் மோக னுவன்.

10. இத்தகைய குணங்களை யுடைய இவனுக்கு, ஜாதகன் தோன்று வான். அவன் குணத்தைக் கூறுவேன். அழகுள்ளவன். கருஞ் சிவப்பு நிறமுடையவன். அரசர்கள்பால் நேசங் கொள்வான். வண்டி முதலிய வாகன வசதிகளைப் பெறுவான். பொன் பல சேர்ப்பான். பெண்களிடம் மையல் கொள்வான்.

11. வித்தையு மூன்று கற்பன் விவேகியாம் பெருமை யேற்பன்
நந்தினைர்க் குதவி செய்வன் நற்சித்ர இல்லம் செய்வன்
குத்தத்தை மனத்தில் வையான் கோவலர்க் கிவன்சொல்
[மேன்மை
சத்தியம் தவரு ஞகும் சந்தேக மனத்த ஞமே.

11. மூன்று துறைகளில் கல்வி பயிலுவான். பகுத்தறிவு படைத்த வன். மேன்மை யுள்ளவன். துன்ப மடைந்தவருக்கு உதவி செய்வான். அழகிய வீடு கட்டுவான். குற்றங்களை மனத்தின்கண் வைக்காது மறப்பான். மன்னர்களும் இவன் சொல்லைப் போற்றுவர். நன்னெறியினின்றும் பிறழா தவன். சந்தேக மன முடையவன்.

12. அன்னிய பாடை மேன்மை அதிகார முடைய ஞகும்
மன்னரால் உய்வா ஞகும் மாற்ருனை லகுவில் வெல்வன்
பொன்பணி சேர்ப்பா ஞகும் புகழது அதிகம் ஏற்பன்
தன்பந்து மேலாய் வாழ்வன் தந்தைஆர்ச் சிதங்கள் விருத்தி..

12. பிற மொழியினுல் உயர்ந்த அதிகாரத்தைப் பெறுவான். அர சாங்க உத்தியோகத்தால் பிழைப்பான். பகைவர்களைச் சுலபமாக வென்று விடுவான். பொருள்களைச் சேர்ப்பான். பெரும் புகழடைவான். தன் சுற் றத்தினர்களை விட நன்கு வாழ்வான். தந்தை சம்பாதித்த சொத்துக்களை விருத்தி செய்வான்.

13. யோகமெவ் விதமாய்ச் சொன்னீர் உரைப்பீர்கள் அந்தச்
[சங்கை
ஆகமன் தசத்தி லேற அப்புலி சனியும் பாக்கியம்
பாகனும் உச்ச மாகப் பளிங்கனும் நாலி லேற
போகபாக் கியங்க ளேற்பன் பேரிகை யோக முண்டு.

13. ஜாதகனுக்கு யோகத்தை எவ்வாறு கூறினீர்கள்? குரு பத்தா மிடத்திலும், சந்திரன் சனி மகரத்திலும், புதன் ஐந்தாமிடத்தால் உச்ச மாகவும், சுக்கிரன் நான்கா மிடத்திலும் நிற்பதால், போக போக்கியங்களை யடைவான். பேரிகை யோகம் இவனுக்கு உண்டு.

14. இந்திர யோக மொன்று இயம்பிடினும் பால னுக்கு
எந்திடம் பெருமை ஏற்பன் இன்பச்சொல் பாக்கிய வானும்
முந்துமால் அருளும் ஓங்கும் மேதினி சோலை கூவல்
சந்ததம் வறுமை காணுன் சட்டி ஆண் டதன்மேல் யோகம்.

14. ஜாதகனுக்கு இந்திர யோகம் உண்டு என்று கூறினும். சென்ற விடங்களி லெல்லாம் சிறப்பைப் பெறுவான். இனிய வார்த்தைகளைக் கூறுவான். அதிருஷ்ட முடையவ னுவான் உயர்ந்த திருமாலின் கருணையும் இவனுக்குக் கிடைக்கும். சோலை, கிணறு செய்விப்பான். எப்பொழுதும் வறுமை யறியாதவன். ஆறு வயதுக்கு மேல் யோகத்தைப் பெறுவான்.

15. தன் துணை ஆண்பா லொன்று சத்திமா ரிருவர் தீர்க்கம்
பின்னமா மிரண்டு யென்றேனும் பேசுவோம் பின்பால்
[சேதி
இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மிருப தாண்டில்
அன்னையின் வர்க்கம் நேரும் அம்மாது உள்ளு ராகும்.

15. உடன் பிறந்தவர்களில் ஆண் ஒருவனும் பெண்கள் இருவரும் தீர்க்கமாக இருப்பர். இருவர் மரண மடைந்து விடுவர். மற்றச் செய்திகளை, பிறகு கூறுவோம். இவன் திருமண காலத்தைக் கூறுவோம். இருபதாம் வயதில் தாய் வர்க்கத்திலிருந்து உள்ளூரிலேயே இவனுக்கு மனைவி வாய்ப்பாள்.

16. மாதுவின் குணத்தைச் சொல்வேன் வருவோரை
[யாத ரிப்பாள்
சூதிலாள் பெருமை சாலி தோழன்தன் மனத்துக் கேற்றுள்
காதலி வந்த பின்பு கலைபிறை போலே யோகம்
மேதினில் ரதிபோ லொப்பாம் வித்தகி தீர்க்க சீவி.

16. அவள் குணத்தைக் கூறுவேன். தன்னை யடைந்தவர்களை வர வேற்று உபசரிப்பாள். தீமையில்லாதவள். பொறுமை யுள்ளவள். கணவன் மனத்திற்கு ஏற்றவள். மனைவி வந்தபிறகு ஜாதகனுக்கு வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் வளரும். இவள் ரதிதேவியைப் போல் அழகுள்ளவள். நீண்ட ஆயுளைப் பெற்றிருப்பாள்.

17. புத்திர விருத்தி தன்னைப் புகலவே வளமு ருது
குத்தத்தைச் சொல்லு மென்ன குண்டையும் சென்ன
[மாயும்
விதகர் பணியும் புந்தி மேவிடம் அஞ்சே யாக
இத்தகைப் பலத்தி னுலே யியம்பினும் புத்திர தோடம்.

17. புத்திர பாவத்தைக் கூறுகையில், அது பலமுள்ளதாக இல்லை. குற்றத்தைக் கூறுங்கள் என, விருஷபம் இலக்கினமாகி, ஐந்தாமிடமாகிய புத்திர ஸ்தானத்தில் இராகுவும் புதனும் இருப்பதாலே புத்திர தோஷத்தைக் கூறினேம்.

18. இதுவன்றிப் பூர்வம் தன்னில் எய்திற்று வினைய னேகம்
அதுவினை புகலு மென்ன அவனுடைப் பூர்வம் கேளாய்
கதிதரும் பழனி நாட்டில் கலந்தனன் வைசியச் சேயாய்
விதவிதச் செட்டுச் செய்து வித்தகன் வாழும் நாளில்;

18. இதைத் தவிரவும், முற்பிறப்பில் பல தோஷங்கள் இவனை யடைந்தன. அத் தோஷங்களைக் கூறுங்கள்? அவனுடைய முற்பிறப்பைக் கேளாய். மோட்ச மளிக்கும் பழனியில் வைசிய குலத்தில் தோன்றினன். பற்பல வியாபாரங்களைச் செய்து, இவன் வாழ்ந்து வரும் நாளில்;

19. வந்ததோர் வினையைக் கேண்மோ மாரியின் கோட்டம் [தன்னில்
முந்திநா ளாக நாகம் மேவிற்று ஓர்நாள் தன்னில்
விந்தையாய் மகுடம் கொண்டு மேவிற்று வெளியி லேதான்
இந்தவன் அரங்கம் செய்து ஏகாம லியங்கும் போது;

19. இவனுக்கு நேர்ந்த தீவினையைக் கேளுங்கள். மாரியம்மன் கோவிலில் பல தினங்களாக ஒரு பாம்பு இருந்து வந்தது. ஒருநாள் படம் விரித்து வெளியில் வந்து ஆடிற்று. இவன் விரட்டியும் போகாமல் அதை ஆடிக் கொண்டே யிருக்கும்போது;

20. மாரனும் கழியால் வாட்ட மறலியின் பதிக்குச் சேர
கார்க்கோடன் தோட மொன்று கலந்தது பால னுக்கு
வேறொரு சங்கை சொல்வேன் வேதியர் மதலைக் காகப்
பாரினில் ஆவின் பாலைப் பகருவாய் என்று கேட்க;

20. ஜாதகன் அதனை ஒரு தம்பிரான் அடித்துக் கொன்றான். அதனால் சர்ப்ப தோஷம் இவனை யடைந்தது. மற்றொரு குற்றத்தையும் கூறுவேன். பிராமணன் ஒருவன் குழந்தைக்காக, பசுவின்பால் கொடு என்று இவனைக் கேட்கும்போது;

21. அரிதோலை கோப மூற்று அணுகாதே என்று சொன்னான்
மறையவர் சாபம் ஒன்று மருவிற்று அந்தம் தன்னில்
பெரும்சுதர் மரண மாகிப் போசனக் குறைவு நேர்ந்து
மருவினன் சேதுக் கேதான் மறையவர் தொண்டு பூண்டு;

21. சிங்கம்போல் சினந்து, போ என்று விரட்டினான். பிராமணன் சாபமும் இவனை யடைந்தது. கடைசி நாட்களில் புத்திரர்கள் மரணமடைந்து, போஜன சுகமில்லாது, சேதுவுக்குச் சென்றான். அந்தணர்களுக்குப் பணி விடைகள் செய்து;

22. சேதுவில் ஆல யத்தில் தீபங்கள் ஏற்றி வந்து
தீதான கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
மாதவக் குலமு திப்பான் மாமுனி தடுத்துச் சொல்வார்
காதலன் வைசியச் சேயாய்ச் கலந்தவ னிச்சென் மத்தில்;

22. சேதுவில் உள்ள கோவிலில் விளக்குகளை ஏற்றி வைத்து, பிறகு மரண மடைந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, அந்தணர் குலத்தில் தோன்றினான். மாமுனி மறுத்துக் கூறுவர். ஜாதகன் முற்பிறப்பில் வைசியனாக இருந்து இச்சென்மத்தில்;

23. முதல்குல முதிப்ப தென்ன வித்தகன் பூர்வம் தன்னில்
நதிசேது சென்ற தொன்று இராமர்தன் பூசை செய்யும்
கதிதரும் கடவுள் கோட்டம் காவலன் தீப புண்யம்
இதுகுல முதிப்பா னாகு இயம்புவார் அத்ரி தாமும்.

23. அந்தணர் குலத்தில் உதிக்கக் காரணம் என்ன? ஜாதகன் முற் பிறப்பில் சேது முதலிய புண்ணியத் தீர்த்தங்களுக்குச் சென்று நீராடியதும், இராமர் பூசைசெய்யும் இராமேச்வரம் கோவிலில் விளக்குகளை ஏற்றிவைத்த புண்ணியமும் சேர்ந்ததால், இந்த உயர்ந்த குலத்தில் உதிப்பான் என்று அத்திரி முனிவர் கூறினர்.

24. சேதுவின் பலத்தி னாலே தீராதோ அந்தத் தோடம்
மாதவர் சாபம் நீங்கா மாறியும் நாகத் தோடம்
சீதள பிறைபோல் நேரும் செப்புவீர் அதற்குச் சாந்தி
ஓதுவேன் விபரம் தன்னை உத்தமி கேட்டி டாயே.

24. சேதுவில் நீராடிய பலத்தினால் முற்பிறப்பில் அடைந்த தோஷங்கள் நீங்காவோ? அந்தணர் சாபம் நீங்காது. நாக தோஷமும் சந்திரனைப் போலவே வளரும். அதற்குச் சாந்தி கூறுங்கள். சாந்தியின் விவரத்தைக் கூறுவேன். பார்வதியே! கேட்பாயாக.

25. மைந்தனும் மனைவி யோடு அரங்கமா நகரம் சென்று
முந்துமாற் கருச்சித் தேத்தி மூவேழு மறை யோருக்கு
இந்தவன் சந்தர்ப் பணைசெய் தெழில்நகர் அடைந்து
[மேதான்
விந்தையாய்ச் சிலவே ளாக மோரிசைச் சலத்தி னேரம்.

25. ஜாதகன் தன் மனைவியுடன் ஸ்ரீரங்கம் சென்று, அரங்கநாதரைப் பூசித்துப் பணிந்து, இருபத்தோர் அந்தணர்களுக்கு விருந்தளித்து, தன்னூ ரடைந்து, ஒரு நீர்நிலைக் கரையின்மீது, சில நாக உருவங்களைச் செய்வித்து ;

26. பிரதிட்டை செய்வா னுகில் புதல்வர்கள் ஆண்பா லொன்று
அரிவையும் அவ்வார் தீர்க்கம் அறைந்தது தப்பா தாகும்
திருமகன் அன்னை சேதி செப்புவோம் இனிமே லாக
இருநிறம் சமதி ரேகம் இன்பச் சொல் முன்கோ பத்தாள்.

26. அங்கு, பிரதிஷ்டை செய்வானுயின் ஒரு புதல்வனும், புதல்வி ஒருத்தியும் தோன்றுவர். கூறியது பிறழாது. ஜாதகன் தாயின் வா லாற்றை இனிக் கூறுவோம். கரிய நிறமுள்ளவள். நல்ல உடலமைப்பைப் பெற்றவள். இனிய மொழியாள். முன்கோப முள்ளவள்.

27. மாதுவும் சமயோ கத்தாள் வளவுமே உள்ளு ராகும்
ஓதுவேன் துணை ஆண் மூன்று உத்தமி மார்கள் ரெண்டு
மேதினில் விருத்தி யென்றேரும் விளங்காது மற்ற தெல்லாம்
காதலி பூர்வம் தன்னைக் கழறுவோ மினிமே லாக.

27. இன்ப துன்பம் கலந்த யோக முடையவள். இருப்பிடம் உள்ளு ராகும். இவளுக்குச் சகோதரர் மூவரும், சகோதரிகள் இருவரும் உளர் என்று கூறுவேன். இவர்கள் தவிர மற்றவர் மரணமடைவர். இவள் முன் சென்மத்தை இனிக் கூறுவோம்.

28. சித்தர்வாழ் அருணை மேல்பால் செனித்தனன் சைவச் சேயாய்
புத்திர ரதிக முண்டாய்ப் புகழான குடும்பி யாகி
முத்திணேர்க் கன்ன மீந்து உலகினில் நல்லோ ளாகி
பத்தினி வரன்முன் னுகப் பறந்தனள் கால நாடு.

28. சித்தர்கள் வசிக்கும் திருவண்ணுமலைக்கு மேற்கில், சைவ குலத் தில் தோன்றினுள். அதிக புத்திரர்களைப் பெற்று, புகழுள்ள குடும்பத்தினை யடைந்து, பெரியோர்களுக்கு உணவளித்து, உலகில் பலருக்கும் நல்லவ ளாக இருந்து, தன் கணவனுக்கு முன்பாகவே இறந்துபோனுள்.

29. தலைநான்கோன் வரையப் பட்டுச் செனித்தனள் இந்த மாது
குலவுவோ மிவள்பின் சென்மம் கோகர்ணம் தன்னி
[லேதான்
உலவுவாள் சத்திரிய சேயாய் உயர்வான குடும்ப மேற்பள்
அலைகடல் துயின்றோன் தங்கை அறைந்தது தப்பா தாகும்.

29. பிரம்மனால் படைக்கப்பட்டு இவள் தோன்றினாள். இவள் பின் சென்மத்தைக் கூறுவோம். திருக்கோகர்ணத்தில் க்ஷத்திரிய குலத்தில் தோன்றி, நல்ல குடும்பத்தைப் பெறுவாள். பாற்கடலில் பள்ளிகொண்டுள்ள திருமாலின் தங்கையாம் பார்வதியே! யாம் உரைத்தவை தவறு.

30. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் மலாய்த்
[தேயத்தில்
சந்ததம் வன்னிய சேயாய்ச் செனித்துமே மனைவி மைந்தர்
தன்தன முடைய னாகிச் சேதுவின் பதிக்குச் சென்று
விந்தையாய்ப் பேதி யாலே மேவினான் கால நாடு.

30. தந்தையின் முன் சென்மத்தைக் கூறுவோம். மலாய் நாட்டில் வன்னிய குலத்தில் தோன்றி, மனைவி மக்களோ டடைந்து, சுயார்ச்சிதமான செல்வத்தைப் பெற்று, சேதுவுக்குச் சென்று, விநோதமான பேதியால் மரண மடைந்தான்.

31. பிரமனால் வரையப் பட்டுப் பிறந்தவ னென்று சொல்வோம்
பராசரும் தடுத்துச் சொல்வர் பகர்ந்திட்டீர் வன்னிய சேயாய்
மறைக்குல மிச்சென் மத்தில் வருகும்கா ரணங்க ளென்ன
உறைந்ததோர் சேது புண்யம் உதித்தவ னென்று
[சொல்வோம்.

31. பிரம்மனால் படைக்கப்பட்டுப் பிறந்தான் என்று சொல்லுவோம். பராசரர் தடுத்துக் கூறுவர். இவனே முன் சென்மத்தில் வன்னிய குலத்தினனாகக் கூறினீர்? இச்சென்மத்தில் உயர்ந்த பிராமண குலத்தில் தோன்றக் காரணம் என்ன? சேதுவில் நீராடிய புண்ணியத்தால் இக்குலத்தில் தோன்றினான் என்று கூறுவோம்.

32. மறுசென்மம் கலிங்க நாட்டில் வருகுவா னிக்கு லத்தில்
கருமகா லங்கள் சொல்வீர் காலுக்கு முப்ப தாண்டில்
உரைக்கின்றோம் தந்தை கண்டம் உத்தமி அன்னைக்
[கேதான்
மர்மமாய் நாற்பான் மூன்றில் மரிப்பளே என்று
[சொல்வோம்.

32. மறு பிறவி கலிங்க நாட்டில் இதே குலத்தில் பிறப்பான். ஜாதக னுடைய கரும தசையைக் கூறுங்கள். இவனது மூப்பதாம் வயதில் தந்தை யின் மரணம் ஏற்படும். தாய் இவனது நாற்பத்து மூன்றும் வயதில் இறந்து போவாள் என்று சொல்வோம்.

33. பாலனுக் கறுபான் ஒன்பான் பகராடி மாதம் தன்னில்
காலன்தன் பதிக்குச் செல்வான் கௌசிகர் மறுத்துச்
[சொல்வர்
சாலவே சகடை தோடம் சாற்றுவோம் பன்னிரண்
[டாண்டுள்
ஏலவே கண்ட மென்றேம் இயம்புவார் அத்திரி தாமும்

33. ஜாதகன், தனது அறுபத்தொன்பதாம் வயதில் ஆடி மாதத்தில் மரண மடைவான். கௌசிக முனி மறுத்துக் கூறுகின்றார். ஜாதகனின் பன்னிரண்டாம் வயதுக்குள் சகட யோகம் கூறுவோம். அப்பொழுதே இவ னுக்கு மரணம் என்று கூறுவோம். அத்திரி முனியும் கூறுவார்.

34. பொன்னவன் பத்தில் தங்கப் புகலொணு மார கங்கள்
பின்சென்மம் காஞ்சி தன்னில் பிறப்பனும் இக்கு லத்தில்
இன்னவன் யோகச் சேதி இயம்புவோம் இருப தாண்டில்
மன்னர்போல் தொழிலும் வாய்க்கும் மருவிடும் அன்பான்
[ஆறும்.

34. குரு பத்தாமிடத்தில் இருப்பதால் மாரகம் சொல்ல இயலாது. பிற்பிறவி காஞ்சிபுரத்தில் இதே குலத்தில் ஏற்படும். இவனுக்கு யோகங்கள் இருபதாம் வயதில் வரும். அரசனைப்போல் தொழில் செய்வான். ஐம் பத்தாரும் வயதுவரை அது நீடிக்கும்.

35. பிறைபோலே யோகம் சொனனேம் பிறந்தநாள் அவிட்ட
[மென்றேம்
தரைமகன் தசைஐந் தாண்டும் சார்ந்திடும் திங்க ளாறும்
குறைவுறும் குடும்ப மென்றேம் குழவிக்குப் பிணியு
[மூண்டு
வரவுக்குச் செலவு னேகம் மனமது சஞ்ச லங்கள்.

35. வளர்பிறைச் சந்திரனைப் போல யோகங்களைக் கூறினேம். இவன் சனன காலத்தில் அவிட்ட நட்சத்திரமாம். அங்காரக மகாதசையில் இருப்பு வருஷம் ஐந்து, மாதங்கள் ஆறும் ஆகும். குடும்பம் சிறுத்து விடும். குழந்தை களுக்கு நோய் ஏற்படும். வருவாய்க்கு அதிகமாகச் செலவு ஏற்படும். மனக் குழப்பங்கள் உண்டாகும்.


36. அன்னையின் வர்க்கத் தார்க்கு அலைச்சல்கள் பலன்கு
[றைச்சல்
அன்னையின் துணைசு பங்கள் ஆகிடும் பின்வி ருத்தி
பின்பாகம் விபரம் சொல்வோம் பேசிணேம் பூர்வ பாகம்
உன்னத வாணை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

36. தாய் வர்க்கத்தார்களுக்கு அலைச்சல் எற்படும். பலன்களும் குறைவே. மாமன்மார்களுக்கு மங்கள்ங்கள் ஏற்படும். பின்னல் விருத்தி யுண்டாகும். மற்றவை:ளப் பிற்பகுதியில் விவரமாகக் கூறுவோம். இவ் வாறு முற்பகுதியை உரைத்தோம். விநாயகப் பெருமானைப் பெற்ற தாயே! கேட்பாயாக.

ஜாதகம் 50

1. மதிராகு கோல தாக மாகேது மேட மாக
உதய னும் மீன மாக [1]ஒருகண்ணேன் காரி நந்தி
நிதிகுரு சேயும் வண்டி லக்கினம் குண்டை யாக
அதுபலன் புகலு மென்று அம்பிகை கேட்க லுற்றாள்.

1. சந்திரனும் ராகுவும் துலாத்திலும், கேதுவும் புதனும் மேஷத்திலும், சூரியன் மீனத்திலும், சுக்கிரன் சனி விருஷபத்திலும், செவ்வாய் குரு கடகத்திலும், இருக்க இலக்கினம் விருஷபமாகவும் உள்ள ஜாதக பலனைக் கூறுவீர் என்று பார்வதி கேட்டாள்.



2. இந்தசேய் ஆணும் சென்மம் இல்லமும் மேல்பால் நோக்கம்
தென்வட வீதி யாகும் [1]சினன்கோட்டம் கீழ்ப்பா லாகும்
சுந்தரி காளி யுத்ரம் அரன்கோட்டம் கீழ்ப்பா லாகும்
தென்மேல்பால் மாரி வாசம் [2]சலக்கரை அருகில் தங்கும்.

2. இந்தக் குழந்தை ஆண் பிறவியாம். தெற்கு வடக்காக உள்ள வீதியில் மேற்கு நோக்கிய வீட்டில் பிறப்பான். கிழக்குப் பக்கத்தில் அருக தேவன் கோயிலும், காளி கோயில் வடக்கிலும், சிவன் கோவில் கிழக்கிலும், தென் மேற்கில் மாரியம்மன் கோவிலும் உள்ளன. நீர்நிலை அருகிலுள்ளது.

---

1. சுக்கிரன்

1. அருகதேவன்

2. நீர்நிலை

3. இத்தகை யில்லந் தன்னில் இளவலும் உதய மாகும்
பெற்றதாய் தந்தை யோகம் பேதையர் புத்ர யோகம்
சுத்தமாய் முன்பின் சென்மம் செப்புவோ மிந்நூல் தன்னில்
அத்தியை வளர்த்த மாதே அருகர்தங் குலமே யாகும்.

3. இப்படிப்பட்ட வீட்டில் இவன் பிறப்பான். இவனுடைய தாய், தகப்பன், மனைவி, புத்திரர் யோகங்கள், முற்பிறப்பு, மறுபிறப்புக்கள் முதலியவற்றைக் கூறுவோம் இந்நூலில். யானைமுகக் கடவுளை வளர்த்த தாயே! இவன் சமண குலம்.

வேறு

4. அரிராசி நாட்டிநாள் அருளுவான் தந்தை
அவன்குணத்தைக் கூறுகின்றேம் துணைவர் காணுன்
கருநிறமாம் வாதமெய் காலாள் விருத்தி
கனத்தபுத்தி வறுமையிலான் கடன்கொள் ளாதான்
திருமாளி செய்திடுவன் தீர நெஞ்சன்
திகம்பரன்றன் பத்திகொள்வன் பூமி விருத்தி
தறிபடுமே தந்தமென்றேம் சமமாம் கல்வி
சாந்தமுண்டு சரசமொழி தாட் சிணிய னுவன்.

4. சிம்ம லக்கினம் கேட்டை நட்சத்திரத்தில் பிறந்த இவன் தந்தையின் குணத்தைக் கூறுகின்றேம். சகோதரர் இல்லை. கரிய நிறமுடையவன். மெய்க் காப்பாளர்கள் மிகுதியாக உள்ளவன். பெரும் புத்தி யுடையவன். தரித்திர மில்லாதவன். கடன் வாங்காதவன். அழகிய வீடு கட்டுவான். தைரியமான மன முடையவன். சிவபெருமான் மீது பக்தி கொள்வான். நிலங்கள் அதிகம் சேர்ப்பான். பற்கள் உடைந்திருக்கும். சுமாரான கல்வி உடையவன். சாந்த குணமுள்ளவன். சல்லாபமாகப் பேசுவான். தாட்சிண்ய முடையவன்.

5. முன்கோபம் கொஞ்சமுண்டு உடனே தாழ்வு
மொழிகாப்பன் மனம்வெகுளி உண்மை யாளன்
கன்னியர்கள் இட்டமுள்ளன் கடந்தோர்க் கன்பன்
கரமதனில் பிரமவரிக் காணு மென் றேம்.
அன்னியர்கள் மதிக்கவைப்வன் யார்க்கு நேயன்
அணுகுவான் இருவார்த்தை அணுகும் பித்தம்
துன்மைசெய்வோர் தமையுறவு கொள்ளு வானும்
சுதர்தோன்றும் முதல்நட்டம் தேவி யேகேள்.

5. கொஞ்சம் முன் கோபி. ஆனல் உடனே சாந்தமடைவான். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவான். சபடில்லாத மனமுடையவன். உண்

மையே பேசுவான். மாதர்கள்மேல் பிரிய முள்ளவன். துறவிகளிடத்தில் அன்புடையவன். கையில் பிரம ரேகை உள்ளவன். பிறர் மதிக்கும்படி வாழ்ந்திருப்பான். எவருக்கும் அன்பன். இருவிதமாகப் பேசுவான். பித்த முண்டு. தீமை செய்வோர்கள் நட்பைக் கொள்ளுவான். புத்திரருண்டு. ஆனல் முதல்வன் மரிப்பான். தேவியே ! கேளும்.

6. அத்திரியும் மறுத்துரைப்பார் துணையும் தோடம்
அவன்தந்தம் ஊனமென்றீர் அதுவு மன்றிப்
புத்திரர்கள் முதலில் நட்டம் காரணம்சொல்
புரவியோ னிலாபத்தில் கேதி ராறில்
பத்தினிதோர் பலமதனல் குத்தம் சொன்னேம்
பாவமது பூர்வத்தில் பதிந்த தாலே
இத்தகைகள் நேருமென்றேரும் பூர்வம் சொல்வீர்
இயம்புவீர் பிருகுமுனியே இயல்பா கத்தான்.

6. அத்திரி முனிவர் மறுத்துச் சொல்லுவார். உடன்பிறந்தார் இல்லே ன்றும், அவனுடைய பற்கள் ஊனமுள்ளன என்று கூறியதும் தவிர, முதல் புத்திரர்கள் மரிக்கக் காரணம் என்ன ? என்று கேட்க, சூரியன் மீனத்திலும், கேது பனிரண்டிலும் இருப்பதால் தோஷம் சொன்னேம். முற்பிறவியில் பாபம் செய்ததாலும் இக் கஷ்டங்கள் ஏற்படும் என்று சொன்னேம். முற் பிறப்பைப் பற்றிச் சொல்லுவீர் என்று பிருகு முனிவரைக் கேட்டாள்.

7. முன்சென்மம் திரிகோண மலைநா டதனில்
உதித்தனன்காண் வைசியகுலம் வணிபம் செய்து
தன்மனைவி மதலையுண்டாய்ப் பெருமை பூண்டு
தான்வாழ்நாள் விணைகேண்மோ சான்றோ ருக்குத்
துன்மையாய் விகடமொழி உரைத்த போது
செப்புவார் பெரியோரும் சுதன்பின் சென்மம்
தன்துணைகள் இல்லாமல் தந்தம் பாழாய்த்
தன்சுதரும் முதல்நட்டம் சாரு மென்று.

7. முற்பிறப்பில் திரிகோணமலை என்னும் இடத்தில், வைசிய குலத் தில் பிறந்து, வியாபாரம் செய்து, மனைவி மைந்தர்கள் உண்டாகிப், பெருமை யடைந்து, வாழ்ந்து வரும்போது ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். பெரி யோருக்குத் துன்பம் தரும் பரிகாசச் சொற்களைச் சொன்னபோது, பெரியோ ரும் பின்வருமாறு சொல்லுவார். இவனுக்கு மறு பிறப்பில் உடன் பிறந்தாரில் லாமல், பற்களும் பாழாகி, முதலில் தோன்றும் சந்ததியும் மரிக்கும் என்று,

8. சொல்லினர் அச்சாபம் சேர்ந்த தென்றோம்
சுதன்அந்தம் பலதலங்கள் சென்று மேதான்
அல்லலென்றோர்க் குதவிசெய்து அன்ன மீந்து
அந்தகன்தன் நாடடைந்து அயனும் லக்கம்
புல்கினன் இக்குலத்தில் புனித னாகப்
பொருந்தும்பெரி யோர்சாபம் பிறப்புத் தோடம்
பற்குறைவாம் முதல்புத்திரர் பொருந்தா தாகும்
பகருமிக் குணத்தானுக் கிந்தப் பாலன்.

8. சொன்னார்கள். பெரியோர்க ளுரைத்த அந்தத் தோஷம் இவனை இப்போது வந்தடைந்தது என்று சொல்லுவோம். இம் மைந்தன் கடைசியில் பல புண்ணிய ஸ்தலங்கள் சென்று, கஷ்டப்படுவோர்களுக்கு உபகாரம்செய்து, அன்னமளித்து, மரணமாகி, மறுபடியும் பிரமனால் படைக்கப்பட்டு, இவ் வுலகில் இந்த வமிசத்தில் நல்லவனாகப் பிறந்தான். ஆனால், பெரியோர் சாபத்தால் பிறப்பில் தோஷம் ஏற்படுவதுடன், பற்களும் சேதமாம். முதல் குழந்தைக்கும் கண்டமுண்டு. சொல்லிய இந்தக் குணமுடையவனுக்கு இந்த ஜாதகன்;

9. உதிப்பனும் இவன்குணத்தைப் புகலக் கேண்மோ
உயர்வான புத்தியுண்டு உறுதி யில்லான்
நிதிபெருக்கம் செய்திடுவன் பூமி விருத்தி
நிலையிலார்க் குதவிடுவன் நிதமும் சிலன்
துதிசெய்தோர் தமக்கிட்டன் சமமாம் கல்வி
தொடுத்ததையே வென்றிடுவன் [1]சுகம்போல்
[வார்த்தை
விதவிதவார்த் தையுரைப்பான் கபடில் லாதான்
விடைகள்விருத்தி வீண்பழியும் விரும்பா னாகும்.

9. புதல்வனாகப் பிறப்பான். இவனுடைய குணத்தைச் சொல்லு வோம். உயர்ந்த அறிவுடையவன். மனத்திட மில்லாதவன். செல்வத்தை அதிகமாகப் பெருக்குவான். பூமியை அதிகரிப்பான். ஏழையோர்க்கு உப காரம் செய்வான். நல்லொழுக்க முடையவன். தோத்திரப் பிரியன். சுமாரான கல்வி யறிவுடையவன். எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடிப்பான். இனிமையாகவும், விதவிதமாகவும் பேச வல்லவன். சூதில்லாதவன். எருதுகள் விருத்தியுள்ளவன். வீண் அபவாதத்தை விரும்ப மாட்டான்.

---

1. கிளி

10. ஆகுமே தந்தைமேல் வாழ்வா ஹுகும்
அறமதனில் இச்சையுண்டு அதிதி நேயன்
ஏகுவான் வெளிதேசத் தலங்க ளுக்கு
இடர்ப்புத்தி யில்லாதான் இருநி றத்தான்
தோகைமார் மோகமுளன் சோம்பல் கொஞ்சம்
சொல்காப்பன் துர்வினையாய்ச் செலவு செய்யான்
ஆகமத்தின் பயனறியான் புகழு மேற்பான்
அவன்கரத்தில் பத்மவரி அணுகு மென்றும்.

10. தன் தகப்பனுக்கு மேலான புகழுடன் வாழ்ந்திருப்பான். தர்மம் செய்வதில் விருப்ப முடையவன். விருந்தினர்களுக்கு இஷ்டன். வெளி தேசங்களுக்குச் செல்வான். கெடுதலில்லாத மனமுடையவன். கரிய நிறத்தோன். ஸ்திரீகளின் மீதுவிருப்ப முள்ளவன். சிறிது சோம்பலு முடையவன். சொன்ன வார்த்தையைத் தவறான். கெட்ட காரியத்தில் செலவு செய்ய மனமில்லாதவன். வேதங்களின் பிரயோசனத்தை அறியான். கியாதி உள்ளவன். அவனுடைய கையில் பத்ம ரேகையுண்டு.

11. பாலகன்தன் துணைமுன்னல் பெண்பா லொன்று
பகருவோம் சுதர்தோன்றிப் பிறப்ப ளாகும்
சீலிக்கு ஏகசுதர் தீர்க மெய்தும்
செனித்தவன்பின் ஆண்ஒன்று கன்னி யொன்று
சாலவே தீர்க்கமுறும் பின்பால் சேதி
சாற்றுகின்றே மிப்பாலன் மணத்தைக் கேண்மோ
ஏலவே யிருபதின்மூன் றுண்டு தன்னில்
எய்திடுமே உள்ளூரில் பாரி வாய்க்கும்.

11. ஜாதகனுக்கு மூத்த சகோதரி ஒருத்தி உண்டு. அவளுக்கு ஒரு மகன் தீர்க்கமாக உண்டு. ஜாதகனுக்குப் பிறகு ஆண்மகன் ஒருவனும், பெண் ஒருத்தியும், தீர்க்கமாவர். பிற்பகுதியில் மற்றவற்றைக் கூறுவோம். இந்தப் பையனுடைய திருமண காலத்தைப் பற்றிச சொல்லுவோம். இருபத்துமூன்றும் வயதில், உள்ளூரில் மனைவி வாய்ப்பாள்.

வேறு

12. மாதுவின் குணத்தை யறைகின்றேம் முனியே
மங்கள வார்த்தையே புகல்வள்
சூதுகள் இல்லாள் மாந்தளிர் மேனி
தோழன்தன் மனத்துக் கேற்றோள்
காதலி யோக சாலியே யாகும்
தன்முகம் வசியமே யுண்டு
ஓதுமூன் கோபிபால் பாக்கிய முடையாள்
உயர்வான குடும்பமே ஏற்பள்.

12. மனைவியின் குணத்தைக் கூறுகின்றோம் முனிவரே! கல்வார்த்தைகளைப் பேசுவாள். கபடில்லாதவள். மாந்தளிர்போன்ற சிவந்த மேனியுடையவள். கணவனுக்குப் பிரியமாவாள். யோகங்க ளுடையவள். வசிகரமான முகத்துடன் கூடியவள். சொல்லுமுன் கோபமுடையவள். சௌபாக்கியங்க ளுடையவள். மேன்மையாகக் குடும்பத்தைப் பெற்று நடத்துவாள்.

13. மங்கையும் தீர்க்க வயதுளாள் என்றோம்
மாமுனி தடுத்துமே சொல்வார்
சங்கைகள் உண்டு தனத்திலோர் விரயம்
சத்தமத் தோனுமே நீச்சம்
இங்கிவை பலத்தால் தாரமும் ரெண்டு
இயம்புவோம் பாலகன் தனக்குத்
துங்கமா முனிவர் தடுத்துமே சொல்வார்
தோன்றுது இருமனை தானே;

13. இவள் தீர்க்கம். முனிவர் தடுத்துக் கூறுகின்றார். தோஷங்கள் உள. செல்வத்தில் செலவனேகம். ஏழாம் வீட்டுக்காரனுகிய செவ்வாய் நீச்சமாக கடகத்தில் இருப்பதால், இந்த ஜாதகனுக்கு இரு மனைவியர் என்று சொல்லுவோம். முனிவர் மறுத்து, இவனுக்கு இருமனைவியார் ஏற்படார் என்று சொல்லுகின்றார்.

14. காரணம் புகல்வீர் கதிரவன் லாபம்
கவிமகன் சென்மத்தில் ஆட்சி
நாரியின் தானம் பொன்னவன் பார்க்க
நவின்றனன் தாரமும் ஒன்றே
காரியும் தர்ம கர்மனு மாகிக்
கலந்திடும் சென்மமே யாகக்
கூறுணைத் தாரம் ரெண்டெனு மொழியே
குழவியின் பலமதைக் கேளாய்.

14. காரணம் சொல்லுமென, சூரியன் லாப ஸ்தானமாகிய மீனத்தில் இருப்பதாலும், சுக்கிரன் விருஷபத்தில் ஆட்சியாக இருப்பதாலும், ஏழாம் இடமாகிய விருச்சிகத்தை குரு பார்ப்பதாலும், மனைவி ஒருத்தியே. சனியும் தர்மகர்மாதிபதியாகி, விருஷபத்தில் தங்கி இருக்க, இரண்டு தாரம் என்று சொல்ல முடியாது. புத்திர பாவத்தைப் பற்றிக் கேளுங்கள்.

15. சுதர்களும் எழுவர் தோன்றிடும் தாயே
சோர்வுறும் முதலதே யென்றேரும்
சதமுடன் ஆண்பால் இரண்டுமே தீர்க்கம்
சக்தியும் மூவராய்த் தீர்க்கம்
எதுவிதக் குத்தம் முதலினில் பீடை
இயம்பினீர் விபரமாய்ப் புகல்வீர்
புதனேந்தோ னுகி விரயத்தில் தங்கப்
பொருந்தாது முதல்சுதர் தாமே.

15. மக்கள் எழுவர் பிறப்பார்கள்! பார்வதியே. ஆலல் முதல் குழந்தை மரிக்கும். ஆண் மக்கள் இரண்டும், பெண் குழந்தைகள் மூன்றும் தீர்க்க ஆயுளுடன் விளங்கும். என்ன காரணத்தால் முதல் குழந்தை மரிக்கும் என்று சொன்னீர்? விபரமாகச் சொல்லுவீர் என, புதன், ஐந்தாம் வீட்டுக்கு உரியவனுகிப் பன்னிரண்டாம் வீடாகிய மேஷத்தில் இருக்க, முதல் குழந்தை விளங்காது.

16. அதுவின்றி அந்தம் புதல்வனும் சேதம்
அணுகிடும் பாலகன் தனக்கு
அதிபன்முன் சென்ம மறைகின்றேரும் தாயே
மதுரைமா நகர்க்குமேல் பாலில்
மதியது சிறுவூர் நதிகுல முதித்துப்
பறந்துமே பெருக்க மேயாகி
மதிநுதல் மைந்தர் மனைவியு முண்டாய்
வறுமைக ளின்றியே வாழ்ந்து;

16. அதுவன்றி கடைசிக் குழந்தையும் மரிக்கும். ஜாதகன் முற் பிறப்பைப் பற்றிக் கூறுகின்றேரும். தாயே! கேளும். மதுரைக்கு மேற்குப் பக்கத்தில் ஒரு சிறிய ஊரில், வேளாளர் குலத்தில் பிறந்து, செல் வங்கள் பெற்று, அறிவுடைய குழந்தைகளும் மனைவியும் ஏற்பட்டு, தரித் திரமில்லாதவனுக வாழ்ந்து ;

17. கடவுளர் பக்தி கொண்டுமே இன்னேன்
கனமிலார்க் குதவியே செய்து
திடமுள தலங்கள் சென்றுமே இன்னேன்
சேர்ந்தனன் காலன்தன் நகரம்
உடையவன் வரைய உதிப்பனும் பாலன்
உரைக்கின்றேரும் இவனுடை யோகம்
துடியிடை மோகன் தொல்புவி விருத்தி
சுந்தர முடையனும் என்றேரும்.

17. கடவுள் பக்திகொண்டு, ஏழைகளுக்கு உபகாரம் செய்து, பெரிய க்ஷேத்திர யாத்திரைசெய்து, கடைசியில் மரணமாவான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டுப் பிறந்தான் இவன் என்றேம். இவனுடைய யோகத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். சிறுத்த இடையுடைய மாதர்மேல் மோக முடையவன். பூமிகள் அதிகமாக விருத்தி செய்வான். அழகுடையவன் என்று சொன்னேம்.

18. "பிறையது போலே பூமிபொன் பெருக்கம்
பிதாவுமேல் வாழ்வானு மாவான்
பெருமையா மில்லம் நேரல்மூன் றூரில்
பூமியே வறுமையுங் காணல்
திருப்பணி செய்வன் திகம்பரன் பந்தி
தேறினோர்க் கன்னமு மீவன்
கரைமன முண்டு காலாட்கள் அதிகம்
கனத்ததோர் புகழு மெய்தும்.

18. வளர்பிறைச் சந்திரன்போல் பூமியும் செல்வங்களும் அதிகரிக்கும். தகப்பனைவிட மேலாய் வாழ்ந்து வருவான். பெரிய வீடு கட்டுவான். மூன்று ஊர்களில் விளை நிலங்கள் சேரும். தரித்திரம் இல்லாதவன். கோயில் திருப்பணி செய்வான். சிவபிரான் மேல் பக்தி யுடையவன். பெரியோர் களுக்கு அன்ன மளிப்பான். இளகிய மனத்தை உடையவன். வேலையாட்கள் அதிகமுள்ளவன். மிக்க புகழடைவான்.

19. எய்தும் யோகங்கள் எப்படிப் புகல்வீர்
[1]இரவியின் மகன்புகர் கூடி
ஐயமில் லாமல் சென்மத்தி லிருக்க
ஆறினில் ராகுவும் தங்கத்
துய்யபொன் உச்சம் செப்பிலே மோகம்
சிறப்பான குடும்பமே யாகும்
வையமேல் அட்ட மாதுவும் வாழ்வாள்
மங்கையே கேட்டிடு வாயே.

19. இவனுக்கு யோகங்கள் எப்படி எற்படும் என்று சொல்லுவீர் என, சூரியன் மகனை சனியும், சுக்கிரனும் சந்தேகமின்றி விருஷபத்தில் இருப்பதாலும், ஆறும் வீடாகிய துலாத்தில் ராகு தங்கி யிருப்பதாலும், தூய்மையான குரு உச்சமாக இருப்பதாலும் யோகமுண்டு என்று சொன் னேம். சிறந்த குடும்பமாகும். எட்டு இலட்சுமிகளும் இவன் வீட்டில் வாசம் செய்வார்கள். தாயே! கேளும்.

---

1. சனி

20. பாலகன் அன்னை சேதியைப் பகர்வோம்
பணிகள்மேல் இச்சையு மேற்பள்
சிலியாம் பித்த தேகியு மாவள்
சினம்கொஞ்சம் வெளியிடா ளென்றேரும்
ஞாலமேல் நல்லோள் நாயகன் மனம்போல்
நடப்பளா மீகையும் கொஞ்சம்
நீலியால் யோகம் நிந்தையேற் காளாம்
நேர்ந்திடும் வாய்வினல் பாதை.

20. ஜாதகன் தாயாரின் குணத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஆபரணங்களில் இஷ்டமானவள். ஒழுக்க முடையவள். பித்த தேகமுள்ள வள். கொஞ்சம் கோப முடையவள். ஆனல் வெளிக்காட்டமாட்டாள். உலகத்தாருக்கு நல்லவள். புருஷன் மனத்துக் கிசைந்தவாறு நடப்பாள். பிறருக்குக் கொடுக்கும் மனமுண்டு. இவளால் யோக மேற்படும். அவமானங்கள் அடைய மாட்டாள். வாயு உபத்திரவம் இருக்கும்.

21. தன்துணை ஆண்பால் ஒன்றுமே தீர்க்கம்
சக்திமார் மூவராய் விளங்கும்
கன்னியில் சிலரே சுகமிலா ரென்றேரும்
கழறுவோம் தாயில்ல முள்ளூர்
அன்னையின் பூர்வம் அறைகின்றேரும் இனிமேல்
அம்பலத் தாடிய நாட்டில்
மூன்குல முதித்து மதலைக ளுண்டாய்
மேதினில் வாழ்ந்திடு நாளில் ;

21. அவளுக்கு ஆண் சகோதரன் ஒருவன், தீர்க்கமா யிருப்பான். சகோதரிகள் மூவர் விளங்குவர். சில சகோதரிகள் குறைப்படுவர். அன்னையின் வீடு உள்ளூரிலுள்ளது. தாயின் முற்பிறப்பைப் பற்றி, இனிக் கூறுகிறேரும். சிவபெருமான் நடனமாடிய சிதம்பரத்தில் அந்தணர் குலத்தில் பிறந்து, குழந்தைகள் பெற்று, உலகத்தில் வாழ்ந்து வருகின்ற நாளில்;

22. விரதங்கள் முற்றுறச் செய்துமே யின்னேள்
மேவினள் காலநா டதனில்
பிரமனல் வரையப் பிறந்தன ளென்றேரும்
பூவையும் வறுமைக ளடையாள்
வரும்சென்மம் குடகு திக்கினில் மாதும்
வருகுவாள் இக்குலம் தன்னில்
பெருமையாய்க் குடும்பம் புகழுமே பெற்றும்
புண்ணிய வதியும்வாழ் வாளே.

22. சோன்புகள் பல இயற்றி இவள் மரண மடைந்தாள். பிறகு பிர மனால் படைக்கப்பட்டுப் பிறந்தாள். இவள் தரித்திரங்கள் அடையமாட் டான். மறுபிறப்பு இதே குலத்தில் தெற்குத் திசையில் அடைவாள். கண் ணியமுள்ள குடும்பத்தைப் புகழுடன் அடைந்து இப்புண்ணியசாலி விளங்கு வாள்.

வேறு

23. முப்பத்து எட்டு ஆண்டில் விளம்புவோம் தந்தை கண்டம்
அப்போது காரி காலம் அருணன்தூ துவனின் புகுத்தி
ஒப்புடன் நடக்கு மென்றேம் உரைத்தது தப்பா தாகும்
மைப்புடன் தவங்கள் செய்யும் வித்தகி கேட்டி டாயே.

23. ஜாதகனின் முப்பத்தெட்டாம் வயதில் தந்தை மரணம் அடை வான். இப்போது சனிமகா தசையில் புத புக்தி நடக்கும். சொன்ன சொல் தவறு. தவங்கள் செய்யும் பார்வதியே! கேளுங்கள்.

24. ஆறுறு ஆண்டு தன்னில் அன்னைக்குக் கண்டம் எய்தும்
காரியின் திசையி லேதான் கலந்திடும் சுயபு குத்தித்
தீரமாய் நடக்கு மென்றேம் செப்பின மொழிகுன் றாது
பாரினில் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

24. ஜாதகனின் முப்பத்தாறுவது வயதில் தாயின் மரணம் ஏற் படும். அப்பொழுது சனி மகா தசையில் சனி புக்தி நிச்சயமாக நடக்கும். சொன்ன சொல் தவறாது. உலகத்தில் தவங்கள் செய்யும் பார்வதியே! கேளுங்கள்.

25. தந்தைபின் சென்மம் சொல்வேன் தாமிர பரணி தன்னில்
முந்தின குலமு தித்து முயர்வான செட்டுச் செய்து
தன்தனம் அதிக முண்டாய்த் தரணியில் வாழ்வா னுகும்
கந்தனே யின்ற மாதே கழறின மொழிகுன் றாது.

25. தகப்பனின் மறு சென்மத்தைப் பற்றிக் கூறுவோம், தாமிர பரணிக் கரையில் அந்தணர் குலத்தில் பிறந்து, உயர்வான வியாபாரங்கள் செய்து, சுயார்ச்சிதமான பொருள் அதிகமுண்டாகி, பூமியில் வாழ்வன். முருகப் பிரானைப் பெற்ற தாயே! சொன்ன சொல் தவறாது.

26. உதித்தவன் மரண காலம் உரைக்கின்றேம் அறுபா னுறில்
சதியிலாத் துலாமா தத்தில் சதுர்த்தசி வளர்பக் கத்தில்
அதிபன்தன் உடல மேகு மறைகின்றேம் பின்சென் மத்தை
இதுகுலம் தனிலு திப்பான் ஈன்றவூர் தன்னி லேதான்.

26. ஜாதகனின் மரண காலத்தைப் பற்றிச் சொல்லுவோம். அறுபத்தாறும் வயதில், கெடுதலில்லாத ஐப்பசி மாதத்தில் சுக்கிலபட்சம் சதுர்த்தசி திதியில் மரண மடைவான். மறு சென்மத்தைப் பற்றிச் சொல்லுவோம். இதே குலத்தில் இவ்வூரிலேயே பிறப்பான்.

27. குடும்பத்தின் சேதி தம்மைக் கூறுவீர் முனியே நீர்தாம்
அடைவுடன் தந்தை பின்னுல் அவன்துணை வேறுய்ச்
[செல்வன்
திடமுடன் இல்லம் ஒன்று செய்குவான் முப்ப தாண்டில்
தடவரை மகளே பின்பால் சாற்றுவோம் விபரம் ரெண்டில்.

27. குடும்ப விவரங்களைச் சொல்லுங்கள் முனிவரே! ஜாதகன் தந்தையின் மரணத்துக்குப் பிறகு, அவனுடைய சகோதரனே விட்டுத் தனியாகப் போவான். முப்பதாவது வயதில் திடமான வீடு ஒன்று கட்டுவான். இமவானின் புத்திரியே! மற்றவைகளை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம்.

28. சுதனுமே செனிக்குங் காலைச் சோதியின் முதல்பா தத்தில்
சதி[1]கயர் திசையி ருப்புச் சாற்றுவோம் பதினே ழாண்டும்
அதனுடன் திங்கள் பத்தும் அறைந்தனம் பூர்வ பாகம்
துதி செய்தோர் தம்மைக் காக்கும் தேவியே மேலும் கேளே

28. இந்த ஜாதகன் பிறக்கும்போது, சுவாதி நட்சத்திரம் முதல் பாதம்; ராகு மகா தசை இருப்பு; பதினேழு வருஷங்களும், பத்து மாதங்களுமாம். இது முதல் பாகம். தோத்திரம் செய்பவரைக் காக்கும் தேவியே! மேலும் கேளும்.


---

1. ராகு

ஜாதகம் 51

1. நந்தியும் செனன மாக ரவிகுச னிரண்டி லேறப்
புந்தியும் புகரு மூன்றில் பொன்னவன் அஞ்சி லேறச்
சந்திரன் சனியும் ஒன்பான் சிகியாறில் பணியி ராறில்
இந்தவார் கிரகம் நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. விருஷபம் சென்ம லக்கினமாகவும், சூரியன் சனி மிதுனத்திலும், புதன் சுக்கிரன் கடகத்திலும், குரு கன்னியிலும், சந்திரன் சனி மகரத்திலும், கேது துலாத்திலும், ராகு மேஷத்திலுமாக நவக் கிரகங்களும் இருக்க, பலனைச் சொல்லுவீர்.



2. குறுமுனி புகலு கின்ரூர் குழவியும் பெண்பா லாகும்
வருமில்லங் கீழ்மேல் வீதி வாசலும் தென்பா லாகும்
அரன்கோட்டம் வடபா லாகும் ஆளிவா கனத்தாள்
[கீழ்ப்பால்
சிரமற்ரூள் மேல்பா லாகும் சிறுவூரம் பிரம்ம சேயாய்;

2. அகத்தியமுனிவர் சொல்லுகின்ரூர். ஜாதகம் பெண்ணினுடையது. கிழக்கு மேற்குத் தெருவில், தெற்கு நோக்கிய வாசலுடைய வீடு. வடக்கே சிவபெருமான் கோவில். யாளியை வாகனமாக வுடைய காளி தேவி கோயில் கிழக்கிலுள்ளது. மாரியம்மன் கோயில் மேற்கிலுள்ளது. சிறிய ஊர். பிராமண குலத்தவளாய்;

3. உதிப்பளாம் இரண்டாம் சென்மம் உயரன்னை தந்தை
[யோகம்
சநியிலாத் துணைவர் யோகம் தன்னவன் புத்திர யோகம்
அதிபதி மூன்பின் சென்ம மறைகின்ரூ மிந்நூல் தன்னில்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

3. இரண்டாம் பிறப்பாகப் பிறப்பாள். தாய், தந்தை, உடன் பிறந்தோர், புத்திரர், கணவன் இவர்களின் யோகங்கள், முற்பிறப்பு, மறுபிறப்பு இவைகளை இந்தச் சோதிட சாத்திரத்தில் சொல்லுவோம். அதிதியை ஆதரிக்கும் தாயே! கேளுங்கள்.

4. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சரசமாய் வார்த்தை
[கூர்வன்
தன்மனம் கபடு மில்லான் சகலர்க்கும் நல்லோ னுவன்
தந்தமும் தரள மொக்கும் செனவுப காரி யாவன்
தந்தைக்குத் தாழ்வாய் வாழ்வன் தன்துணை காணு னுகும்.

4. தகப்பனாரின் குணத்தைக் கூறுவோம். சல்லாபமாகப் பேசுவான். மனத்தில் சூதில்லாதவன். எல்லோருக்கும் நல்லவன். முத்துக்களைப் போன்ற பற்களை யுடையவன். ஜனங்களுக்கு உபகாரம் செய்வான். தன் தகப்பனுக்குக் குறைவான யோகத்துடன் வாழ்ந்திருப்பான். உடன் பிறந்தார்கள் இல்லை.

5. பூமியை விருத்தி செய்வன் புண்ணிய மனத்த னுகும்
நேமியில் நல்லோ னுவன் நினைத்ததை முடிக்க வல்லன்
காமனை யொத்த தேகன் கரமதில் விஷ்ணு ரேகை
தீமையை யொருவர்க் கெண்ணுன் சேவலங் கொடியோன்
[பத்தி.

5. வீடு நிலங்களை அதிகமாக்குவான். புண்ணிய மனமுடையவன். பூமியில் நல்லவனாக இருப்பன். எண்ணிய கருமத்தைச் சாதிக்க வல்லவன். மன்மதனைப் போன்ற அழகன். கையில் விஷ்ணு ரேகையுடையவன். ஒருவருக்கும் கெடுதல் எண்ணுதவன். முருகப் பிரான் மீது பக்திகொள்வான்.

6. புத்திமான் சுகபு சிப்பன் பூமியில் சல்ய முள்ளான்
பக்திமான் சில னுவன் பஞ்சைமேல் இரக்க முண்டு
குத்தத்தை மனத்தில் வையான் குலவிடும் பித்த சூடு
முத்தின தலங்கள் செல்வன் முதல்வியே கேட்டி டாயே.

6. புத்திசாலி. சுகமான உணவில் இஷ்டன். உலகில் விரோதிகளுண்டு. பக்தி யுள்ளவன். ஒழுக்க முள்ளவன். ஏழைமேல் அன்புடையவன். குற்றம் பாராட்டாத மனத்தன். பித்த சூடுடையவன். பிரபல க்ஷேத்திரங்களுக்குச் செல்லுவான். பார்வதியே! கேளும்.

7. என்னகா ரணத்தி னலே யிவனுக்குத் துணைகள் தோடம்
மூன்னமே கூறு மென்ன உயர்மதி காரி யொன்பான்
துன்மையாய்க் கேது ஆறில் தங்கின் பலத்தி னலே
தன்துணை காணு னகும் தரிக்கினும் தீதே யென்றோம்.

7. இவனுக்கு உடன்பிறந்தார் தோஷம் ஏற்படக் காரணமென்ன? சொல்லுங்கள் என்று கேட்க, சந்திரன் சனியுடன் கூடி மகரத்திலும், கேது ஆறிலும் இருப்பதால் தனக்கு உடன் பிறந்தவர்கள் இல்லை. பிறந்தாலும் மரிப்பர் என்றோம்.

8. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா ளிந்த மாது
அன்னவள் குணத்தைச் சொல்வேன் அரிமனை ஒப்ப தாகும்
கன்னென மொழியு மூண்டு கடந்தோருக் கன்ன மீவள்
தன்வரன் மனத்துக் கேற்றோள் சற்பாத்திரி யோக சாலி.

8. சொல்லிய இக்குண முடையவனுக்கு ஜாதகி மகளாகப் பிறப்பாள். அவள் குணத்தைக் கூறுவோம். இலக்குமி போன்றவள். கரும்பைப் போல் இனிய வார்த்தைக ளுடையவள். துறவிகளுக்கு அன்னமளிப்பாள். புருஷன் மனப்படி வாழ்வள். குணசாலி. சற்பாத்திரி யோகசாலி.

9. அன்னம்போல் வடிவு மொக்கும் அற்புதத் திகளு மில்லாள்
சொன்னசொல் காப்பா ளாகும் சிவந்தமெய் உயர
[மில்லாள்
உன்னத விரத மேற்பள் உணைச்சலாம் தேகி யாவள்
பின்னமில் லாத தேகி பிறர்குற்றம் புகலா ளாகும்.

9. அன்னம்போல் அழகுடைய தேகத்தாள். சிறுபுத்தி இல்லாதவள். சொன்ன வார்த்தைகளின்படி நடப்பாள். சிவந்த மேனியள். உயரமில்லாத வள். உயர்ந்த நோன்புகள் நோற்பாள். மெலிந்த தேகமுடையவள். குற்ற மில்லாத தேகமுடையவள். பிறருடைய குற்றத்தைச் சொல்லாதவள்.

10. மங்கைக்கு ரா ருக மருவிடும் துணைக ளென்றோம்
தங்காது ஆண்பா லுந்தான் சக்திமார் இருவ ராகும்
நங்கைக்குத் துணைஆண் தோடம் நவிலுவீர் விபரம்
[தன்னைத்
திங்களும் காரி யொன்பான் சுக்கிரன் மூன்றில் தங்க;

10. இப் பெண்ணுக்குப் பன்னிருவர் உடன் பிறந்தார் உளர். ஆண் மக்கள் இலையார். பெண்கள் இருவர் தீர்க்கம். பெண்ணுக்குச் சகோதர தோஷம் என்? காரணத்தை விபரமாகச் சொல்லுவீர். சகோதர ஸ்தான மாகிய கடகத்துக்குரிய சந்திரன், சனியுடன் ஒன்பதாமிடத்திலும், சுக்கிரன் சகோதர ஸ்தானமாகிய கடகத்திலும் இருக்க,

11. துணையாணபால் தோட மாமே செப்புவோம் மணத்தின்
[காலம்
பிணையிலா ஈரா முண்டுள் பேசுவோம் தென்பால் மாரன்
அணையவே வரன்கு ணத்தை அறிவிப்போம் மால்நி
[றத்தான்
சினமுண்டு உடனே தாழ்வு சிறப்புடன் பேசு வாணும்.

11. சகோதர தோஷமுண்டு. திருமண காலம் பன்னிரண்டுக்குள் என்று சொல்லுவோம். மணுளன் தெற்குத் திக்கிலிருந்து வருவான். அவன் குணத்தைச் சொல்லுவோம். திருமாலைப் போல் காரிய நிற முடையவன். கோபமுண்டு. ஆனல் உடனே தணியும். அலங்காரமாகப் பேசுவான்.

12. ஈகையுங் கொஞ்ச முண்டு இராசபூ சிதனு மாவன்
பாகமாய்ப் பேச வல்லன் பண்ணுவான் கிராமச் செட்டு
நாகரீ கங்க ளுண்டு நற்றந்தை ஆஸ்தி காணுன்
போகபாக் கியங்க ளேற்பான் புகலுவோம் கபடு கொஞ்சம்.

12. பிறருக்குக் கொடுக்கும் மனமுள்ளவன். அரசரால் பூசிக்கப் படுவான். கண்டிதமாகப் பேசுவான். கிராமத்தில் வியாபாரம் செய்வான். நாகரிகமாக வாழ்வான். தன் தந்தையின் சொத்துக்க ளில்லாதவன். சுக மான பாக்கியங்களுடையவன். கொஞ்சம் கபடுடையவன்.

13. தென் திசை செல்வா னுகும் செலவுகள் அதிகம் செய்யான்
உன்னத இல்லம் செய்வன் உம்பர்கள் பூசை பின்னல்
இன்னவன் செய்வா னுகும் இடுக்கமும் குணமும்
[கொஞ்சம்
தன்னுமே தனிக னுகும் சங்கரி கேட்டி டாயே.

13. தெற்குத் திக்கில் போவான். அதிகமான செலவுகள் செய்ய மாட்டான். உயர்வான வீடு கட்டுவான். பின்பு தேவர்களைப் பூசிப்பான். இன்ப துன்பங்கள் கலந்து இருக்கும். சுய முயற்சியால் தனவானுவன். ஈசுவரியே! கேளும்.

14. முன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றேம் தாயே
[கேளும்
கன்னியா குமரி தன்னில் கலப்பனும் வைசியச் சேயாய்
மன்னனல் அதிகா ரங்கள் மருவியே வாழும் நாளில்
பின்னமாய் வந்த வூழைப் பேசுவோம் தாயே கேளும்.

14. அவனுடைய முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். தாயே! கேளும். சன்னியா குமரியில், வைசிய குலத்தில் பிறந்தான். அரசனால் அதிகாரங்கள் பெற்று வாழ்ந்து வரும் நாளில், குற்றமாக வந்த தோஷத் தைக் கேளும்; தாயே!

15. வரனின்றி மாது தானும் மாதுரு இல்லம் வாழ்ங்கால்
அரிவைமேல் வேறெரு ருத்தன் ஆசையாய்க் காதல் பேசத்
திருமகள் இசையா ளாகித் தேவியும் தனியாய்ச் செல்ல
அரிவைமேல் மோகம் கொண்டான் அவள்பின்னல்
[சென்று மேதான்;

15. கணவனில்லாமல் பெண் ஒருத்தி மாத்திரம், அன்னையின் வீட் டில் இருந்து வரும்போது, அவள்மீது வேறெருவன், மோகம் கொண்டு காதல் வார்த்தைகள் பேசினான். அப்பெண், இசையாமல் தனியாகப் போகும்போது, அவளிடம் இச்சை கொண்டு அவன் அவளுக்குப் பின்னல் சென்று;

16. பலவந்த போகம் செய்தான் பாவையும் வெட்க முற்றுத்
தலம்சென்று துணைவ ரோடு சாற்றினாள் அந்தச் சங்கை
புலிபோலே கோப முற்றுப் புகன்றனர் அதிகாரி பக்கல்
கலகத்தோன் தனைய ழைத்துக் கண்டிதம் உரையு மென்ன;

16. வற்புறுத்தி இன்ப மனுபவித்தான். அவளும் வெட்கப்பட்டு, தன் வீடு சென்று, தன் உடன் பிறந்தாருக்கு அதனைச் சொன்னாள். அவர்கள் புலிபோல் கோபமடைந்து, அதிகாரியிடம் (ஜாதகியின் கணவன்) முறை யிட்டனர்: தவறு செய்தவனை அழைத்துக் கண்டித்துத் தண்டியுங்கள் என்றனர்.

17. தனமது அவனால் பெற்றுச் சத்திமேல் குற்றம் சொல்ல
வனிதையும் வருத்த முற்று அறைகின்ற சாபங் கேண்மோ
இனிவரும் சென்மந் தன்னில் எய்தாது தந்தை ஆஸ்தி
துணைவரு மில்லா ளாகித் திருடனால் அவமா னங்கள்;

17. கற்பழித்தவனிட மிருந்து பணம் பெற்றுக் கொண்டு, அதிகாரி இவள் மீதே குற்றம் சொன்னான். அப்பெண்ணும் வருத்தப்பட்டுச் சொன்ன சாபத்தைக் கேளும். "இனி வரும் மறு பிறப்பில், தந்தையினுடைய ஆஸ்தியை அடையாமல், உடன்பிறந்தார் இல்லாதவளாகித், திருடனால் அவமானங்கள்;

18. நேரிடும் தனமும் சேதம் நுவன்றுமே தெருத்தூள்
[விட்டாள்
காரிழை சாலம் தானும் கலந்தது பால னுக்கு
வேறுமே சிலவே சாபம் மேவிற்று என்று சொல்வோம்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

18. அடைவாய். பொருளும் சேதமாம்" என்று கூறித் தெரு மண்ணை வாரி இறைத்தாள். பெண்ணின் சாபம் இந்த ஜாதகியின் கணவனுக்கு ஏற்பட்டது. இன்னுமொரு சாபம் இவனுக்கு ஏற்பட்டது. ஆறுமுகனைப் பெற்ற பார்வதியே! கேளும்.

19. காலன்தன் நாட டைந்து கஞ்சனால் வரையப் பட்டுச்
சிலமாம் மறைக்கு லத்தில் செனித்தனன் என்று
[சொல்வோம்
நீலியின் சாபம் தானும் நேர்ந்ததால் துணைவர் தோடம்
சாலவே தந்தை யாஸ்தி சாராது என்று சொல்வோம்.

19. இவன் மரணமடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, ஒழுக்கமுள்ள பிராமணர் குலத்தில் பிறந்தான் என்று சொல்வோம். பெண்ணின் சாபம் இவனுக்கு ஏற்பட்டதால் உடன் பிறந்தார் இல்லை. தந்தையின் ஆஸ்தியும் இவனுக்குக் கிடைக்காது என்று கூறுவோம்.

20. சோரனால் துன்பம் நேரும் செப்புவீர் காலம் தன்னைத்
தீரமாய் மூப்ப தாண்டில் திருடரால் நட்ட மெய்தும்
மாரன்பின் சென்மம் சொல்வேன் மாயூர நகரி லேதான்
சேருவான் இக்கு லத்தில் செழிப்புள குடும்பி யாவன்.

20. திருடனால் ஏற்படும் கஷ்டங்கள் எப்போது என்பதைச் சொல் லும். நிச்சயமாக மூப்பதாவது வயதில், திருடனால் நஷ்டம் ஏற்படும். அவனுடைய மறு பிறப்பைப் பற்றிச் சொல்லுவேன். மாயவரத்தில், இதே குலத்தில், வளமுள்ள குடும்பத்தில் பிறப்பான்.

21. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் கன்னி மூன்று
சித்தசன் போலாண் ஒன்று செப்புவோம் தீர்க்க மாக
வித்தகி மார்கள் முன்னால் மேவிடு மென்று சொல்வோம்
அத்திரி புகலு கின்றார் ஐந்திடம் கன்னி யாக;

21. ஜாதகியின் மக்கட் செல்வத்தைப் பற்றிக் கூறுகிறோம். பெண் மூவர். மன்மதன் போல் ஆண் மகன் ஒருவன் தீர்க்கமாக இருப்பான். பெண் மக்கள் முன்னால் பிறப்பார் என்று சொல்லுவோம். அத்திரி முனிவர் கூறுகின்றார். ஐந்தாம் இடம் (புத்திர ஸ்தானம்) கன்னியாகவும்;

22. முடவனும் நவத்தி லேற வுதவாது ஆண்பா லுந்தான்
விடம்போலே பூர்வ தோடம் மேவிற்றுப் பாவைக்
[கேதான்
அடைவுடன் பூர்வ தோடம் அறிவிப்பீர் விபரம் தன்னைத்
தடமதில் உயர்வ தான தாமிர வருணி தன்னில் ;

22. சனி ஒன்பதாமிடமாகிய மகரத்திலும் இருப்பதால், ஆண் குழந்தை இராது. தவிர, கொடிய விஷம்போன்ற முன்னூழ் இவளை வந்தடைந்தது. முற்பிறப்பில் என்ன தோஷம் ஏற்பட்டது? விபரத்தைச் சொல்லும். தாமிரவருணிக் கருகிலுள்ள ஊரில், உயர்ந்த ;

23. பிறந்தனள் சத்ரிய சேயாய்ப் புத்திர ருடைய ளாகி
அரிவையும் வாழும் நாளில் அணுகின வினையைக்
[கேண்மோ
வரனுடைத் தங்கை பேரில் வருணித்தாள் சிலேடை
[வார்த்தை
வருவிழி மாது தானும் மனமது திகில டைந்து ;

23. அரச குலத்தவளாகப் பிறந்தனள். புத்திரர்களை அடைந்து வாழ்ந்து வரும் நாளில், இவளுக்கு ஏற்பட்ட தோஷத்தைக் கேளுங்கள். கணவனுடைய தங்கையைப்பற்றி, இரு பொருள் படும்படி சில சொற்களைச் சொன்னாள். அந்தப் பெண் அஞ்சிய மனமுடையவளாகி ;

24. பெண்பழி சொன்ன பாவி பிறக்கும்பின் கெண்மந் தன்னில்
அண்ணன்தம் பிகளு மின்றி அழகான சுதரா ணின்றி
மண்ணின்மேல் வாழ்வா யென்று வறைந்தனள் மாது
[தானும்
திண்ணமா யந்தச் சாபம் சேர்ந்தது பாவைக் கேதான்.

24. என் மீது காரணமின்றிப் பழி சொன்ன பாவி, மறு பிறவியில், உடன்பிறந்தார்க ளின்றியும், அழகான் ஆண் குழந்தை யில்லாமலும், பூமி யில் வாழ்ந்து வருவாளென்று சொன்னாள். நிச்சயமாய் அந்தச் சாபம் இவளை வந்தடைந்தது.

25. மாதுவும் அந்தி யத்தில் மகாசேது பதிக்குப் புக்குத்
தீதான கால நாடு சேர்ந்துமே பிரமன் லக்கம்
காதலி உதிப்பா ளாகும் கலந்திடு முன்னூழ்ச் சாபம்
தீதாகும் துணையா ணுந்தான் சுதராண்பால் தோட மாகும்.

25. பெண்ணும் கடைசிக் காலத்தில், சேது என்ற புண்ணிய ஸ்தலத்துக்குச் சென்று, மரணமடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்

பட்டு, பிறப்பாள். முற்பிறப்பில் ஏற்பட்ட தோஷத்தால் உடன் பிறந்தாரில்லாதவளாகவும், ஆண்மகன் இல்லாதவளாகவும் ஆவாள்.

26. அந்ததோர் தோடம் தீர அருளுவோம் சாந்தி தானும்
முந்திய கரும சாந்தி முறைப்படி செய்து மேதான்
சந்ததம் [1]ரேக்கி லேதான் சக்தியின் மூலம் தன்னை
விந்தையாய்க் கீறி யேதான் வித்தகி யணிவா ளாகில்;

26. அந்தத் தீவினை தீரச் சாந்தியைச் சொல்லுவோம். முதலில் முறைப்படி சாந்தி செய்து, தங்கத் தகட்டில், பராசக்தியின் (மூலத்தை) பீஜாக்ஷரத்தை எழுதி, அதை முறைப்படி பூசித்து, ஜாதகி அணிந்து வருவாளாஞல்;

27. முன்வினை நீங்கி யேதா னுதித்திடும் ஆண்பால் லொன்று
சொன்னவூழ் செய்யா ளாகில் சுதராண்பால் தீதே யாகும்
அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளாள்
[சிவந்த மேனி
தன்வரன் மனத்துக் கேற்றுரூள் தானிள மனத்தா ளாகும்.

27. முற்பிறப்பின் தீவினை நீங்கி, ஆண் குழந்தை யொன்று ஏற்படும். சொன்ன சாந்தியைச் செய்யா விட்டால், ஆண் குழந்தை ஏற்படாது. தாயின் குணத்தைப் பற்றிச் சொல்லுவேன். அழகுள்ளவள். சிவந்த உடலுடையவள். புருஷனுக் கிசைந்த மனமுடையவள். இளகிய மன முள்ளவள்.

28. தேகமே வலிவு மில்லாள் சீலியாம் விரத மேற்பள்
பாகமாய்ப் பேசு வாளாம் பாவைக்குத் துணையாண் ஒன்று
தோகையு மவ்வா ருகும் கூறுவார் வெளியூர் தன்னில்
போகத்தாள் போவா ளென்றும் பூமியில் நிந்தை
[யேற்பாள்.

28. வலிவில்லாத தேகமுடையவள். ஒழுக்கமுடையவள். நோன்பு களை ஏற்பாள். கண்டிதமாகப் பேசுவாள். இவளுக்குச் சகோதரன் ஒருவனும், சகோதரி ஒருத்தியும் உண்டு. வெளியூரில் போகத்தை உடையவள் (மண மாகும்). உலகில் அவமானங்க ளடைவாள்.

29. மாதுரு பூமி தன்னை யறைகின்றும் குடகு தன்னில்
நீதிலாச் சைவச் சேயாய்ச் செனித்துமே வறுமை யின்றி
ஓதுவார் தொண்டு பூண்டு உலகினில் நல்லோ ளாகிக்
காதலி வாழ்ந்து மேதான் காலன்தன் பதிக்குப் புக்கு;

---

1. தகடு

29. அன்னையின் முற் பிறவியைப் பற்றிச் சொல்லுவோம். குடகு நாட்டில், கெடுதலில்லாத சைவ மதத்தினளாகப் பிறந்து, தரித்திர மில்லாமல், வேத மோதுபவருக்குப் பணிகள் செய்து, உலகத்தில் நல்லவளாக வாழ்ந்து, மரண மடைந்து;

30. வந்தவ ளென்று சொல்வோ மறைகுவோம் இவள்பின்
[சென்மம்
முந்திய சேது தன்னி லுதிப்பளா மிக்கு லத்தில்
தந்தையின் பூர்வம் சொல்வேன் சட்டநா தீசர் வாழும்
அந்ததோர் நகரம் தன்னில் அணுகினன் சௌராஷ்ட்ர
[வம்சம்.

30. மீண்டும் பிறந்தவள் என்று சொல்லுவோம். இவள் மறுசென்மத்தைப் பற்றிச் சொல்லுவோம். சேதுவில், இந்தக் குலத்தில் பிறப்பாள். தந்தையின் முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவேன். சட்டநாதீச்வரர் எழுந்தருளி இருக்கும் சிகரத்தில், சௌராஷ்டிர வமிசத்தில் பிறந்தான்.

31. பலவித வணிபம் செய்து பாலகன் வாழும் நாளில்
குலவின விணையைக் கேண்மோ குலத்தினில் இருவர் தாமும்
கலகங்கள் மிகவே கொண்டு கழறினர் அரசர் பக்கல்
தலைவனும் ஒருவன் தன்பால் சாற்றினன் சிலேடை
[வார்த்தை.

31. பலவிதமான வியாபாரங்கள் செய்து வரும்போது ஏற்பட்ட தீவினையைக் கேளும். குலத்தில் இருவர்க்குள் வேற்றுமை ஏற்பட்டு அரசனிடம் போய் முறையிட, இவன் ஒரு பக்கமாக (இரு பொருள் படும்படி)ப் பொய்ச் சாட்சி சொன்னன்.

32. சொல்லினல் அவமா னங்கள் சேர்ந்தது ஒருவ னுக்குப்
புல்குவான் மனவெ றுப்பால் பொய்யது சொன்ன பாவி
நில்லாது துணைவர் தாமும் நேரும்பின் சென்மம் தன்னில்
அல்லலாய்த் துணைவ ரின்றி அழியுமே சுதரா ணும்தான்.

32. அந்தச் சொல்லினல் ஒருவனுக்கு அவமான மேற்பட்டது. அவனும் மன வெறுப்பினல், பொய் சொன்ன பாவிக்கு, மறு பிறவியில் உடன் பிறந்தாரின்றிக் கஷ்டம் ஏற்பட்டு, ஆண் குழந்தையும் அழியும் என்றான்.

33. இன்னமும் பலவார் சொன்னன் எய்திற்று அந்தச் சாபம்
அன்னவன் அந்தி யத்தில் அச்சேது பதிக்குச் சென்று
முன்னோர்க்கு அன்ன மீந்து மேவினன் கால நாடு
பொன்னவன் வரையப் பட்டுப் பிறந்தனன் என்று
[சொல்வோம்.

33. இன்னமும் பலவாறு சொன்னன். அந்தச் சாபம் இவனை அடைந்தது. இவன் கடைசியில் சேது ஸ்தலத்துக்குச் சென்று, பெரியோர் களுக்கு அன்னமளித்து, மரித்தான். பிறகு, பிரமனால் படைக்கப்பட்டுப் பிறந்தானென்று சொன்னேம்.

34. ஆகையால் முன்னூழ்ச் சாபம் அணுகிடு மிச்சென் மத்தில்
ஏகனுய் வாழ்வா னுகும் இவன்சுத ராண்பால் தோடம்
பாகமாய்ப் பராசர் சொல்வார் பாலகன் பூர்வம் தன்னி
லேகமாய்ச் சௌராஷ்ட்ர தேயாய் மேவின னிச்சென்
[மத்தில்;

34. ஆகையால், முற்பிறப்பின் தீவினை இவனுக்கு இந்தப் பிறவியில் எற்படும். தனியனுகவே வாழ்ந்திருப்பான். இவனுடைய ஆண் குழந்தை மரிக்கும். பராசரர் சொல்லுகின்றார். முற்பிறவியில் சௌராஷ்டிர வமிசத்தில் உதித்தான்; ஆனால் இப்பிறவியில்;

35. மறைக்குல முதிக்கும் வண்ண மறிவிப்பீர் முனியே நீர்தாம்
திருமகன் பூர்வம் தன்னில் சேதுவில் சென்ற புண்யம்
உறைகுவா னென்று சொல்வோம் ஓதுங்காதோ அந்தச்
[சாபம்
வறுமையால் சொன்ன சாபம் விலகாது என்று சொல்வோம்.

35. பிராமண குலத்தில் பிறந்த காரணம் யாது? சொல்லும், முனிவரே! முற்பிறவியில் சேதுவிற்குச் சென்ற புண்ணியத்தால் ஏற்பட்டது. சாபம் விலகாதோ? துன்பத்தோடு சொன்ன சாபம் நீங்காது என்று சொன்னேம்.

36. மறுசென்மம் காளத்தி தன்னில் வருவனே யிக்கு லத்தில்
கருமகா லங்கள் தம்மைக் கழறுவீர் விபர மாக
அறுஅஞ்சு நாலு ஆண்டில் அணுகிடும் தந்தை கண்டம்
திருகிலா அதன்மேல் நான்கு ஆண்டினில் அன்னை கண்டம்.

36. மறு பிறவியில் காளத்தியில் இதே குலத்தில் பிறப்பான். கருமகாலங்களைப் பற்றி விபரமாகச் சொல்லும். ஜாதகியின் முப்பத்து நான்காவது வயதில் தந்தை மரணமாவன். அதற்குமேல் நான்கு வருஷங்களில் தாயின் மரண மேற்படும்.

37. அன்பது நான்கு ஆண்டில் அணுகிடும் வரனும் கண்டம்
கன்னிக்கு அறுபான் ஒன்றில் கனமுள மகர மாதம்
சொன்னனே மார கங்கள் செப்புவோ மிவள்பின் சென்மம்
உன்னத பிரயாகை தன்னில் உதிப்பளா மிக்கு லத்தில்.

37. இவளது ஐம்பத்து நாலாம் வயதில் கணவன் மரணமடைவான். இவள் அறுபத்தோராம் வயதில், ஐந்தாம் மாதத்தில் இறப்பாள். இவளுடைய மறு சென்மத்தைச் சொல்லுவோம். உயர்ந்த பிரயாகையில், இக்குலத்தில் உதிப்பாள்.


38. மாதுவும் சென்ன காலம் மங்கலன் திசையி ருப்பு
ஒதுவே ணண்டு மூன்றும் உறைந்திடும் திங்க ளொன்றும்
சாதகி தனக்கு ரோகம் சாற்றுவோம் பூர்வ பாகம்
போதக வானே பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

38. ஜாதகியின் பிறப்புக் காலத்தில், அங்காரக மகா தசையில், மூன்று வருஷம், ஒரு மாதம் இருப்பு. இக்காலத்தில் ஜாதகிக்கு வியாதி ஏற்படும். இதுவரை முதல் பாகமாம். விநாயகரைப் பெற்ற பார்வதியே! மேலுங் கேளும்.

ஜாதகம் 52

1. சந்திரன் குண்டை யாகச் சனிராகு வண்டி யாகப்
புந்திபான் புகரும் வீணை பொன்தெருக் காலி லேறச்
[1]செந்தியும் [2]தூக்க மாகச் செம்பாம்பு மானைத் தாவ
நந்தியும் சென்ம மாக நவிலுவீர் பலனைத் தாமே.

1. சந்திரன் விருஷபத்திலும், சனி ராகு கடகத்திலும், புதன் சூரியன் சுக்கிரன் மிதுனத்திலும், குரு விருச்சிகத்திலும், செவ்வாய் துலாத்திலும், கேது மகரத்திலும், லக்கினம் விருஷபமாகவும் உள்ள ஜாதகருக்குப் பலன்களைக் கூறுங்கள் என்று;



2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்றார்
மேதினில் ஆணும் சென்மம் இவனில்லம் வடதென் வீதி
ஓதுவேன் மேற்கு வாசல் உயர்எதி ரில்லம் பாழாய்ப்
போதவே ஒருபால் இல்லம் புகலுவோம் உத்திரம் தந்தி.

2. பார்வதி கேட்கும்போது, கௌசிக முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண் பிறப்பு. இவனது வீடு வடக்குத் தெற்கான வீதியில், மேற்கு நோக்கிய வாசல் உடையது. எதிர் வீடு பாழ். ஒரு வாடையிலேயே வீடுகள் உள்ளன. வடக்கில் விநாயகர் ஆலயம் உண்டு.

---

1. செவ்வாய்

2. துலாம்

3. மீனத்தில் முருகன் கோட்டம் விளங்காது [1]சூழி சோலை
ஆனதோர் மார்க்க முண்டு அறைந்தனம் மேற்கி லேதான்
மான்மழு தரித்தோன் கோட்டம் வளமையாய்க் [2]குண்டம்
[உண்டு
தான ன சாலை மார்க்கம் தங்கிடுஞ் சிற்றூ ரென்றோம்.

3. வடகிழக்கில் சுப்பிரமணியர் கோவில் ஒன்று பாழடைந்துள்ளது. நீர்நிலை, சோலை முதலியனவும் உள்ளன. மேற்கில் ஒரு பெரிய சாலையும் உள்ளது. அங்கு மான் மழு இவற்றைத் தரித்த பரமசிவன் கோவிலும், குளமொன்றும் இருக்கின்றன. பெரிய சாலை யருகிலுள்ள ஒரு சிறிய ஊராகும்.

4. இவ்வித அடையா ளத்துள் இலகிய தந்தை யில்லம்
பவ்வமாய் வாச மாகும் பாலகன் செனித்த இல்லம்
ஒவ்விய கீழ்மேல் வீதி உத்திரம் வாச லாகும்
நல்லிய தட்சி ணத்தில் நன்மறை முருகன் கோட்டம்.

4. இவ்விதமான அடையாளங்க ளுடைய ஊரில், தந்தையின் வீட்டில் இந்த ஜாதகன் விளிப்பான். ஜாதகன் பிறந்த வீடு, கிழக்கு மேற்கான தெருவில், வடக்கு நோக்கியுள்ள வாசலை யுடையது. தெற்குப் பக்கத்தில் வேதங்களறிந்த முருகப் பெருமான் கோயிலுள்ளது.

5. பலதேவர் அவ்வூர் வாசம் பருகிய சமவூர் தன்னில்
நலமுள பொதுஇல் லத்தில் நாயகன் உதிப்பா னுகும்
குலவிய தந்தை மாதா குழவிகள் துணைவர் யோகம்
இலகிய முன்பின் சென்மம் இயம்புவோம் இந்நூல்
[தன்னில்.

5. பல தெய்வங்கள் வாசம் புரியும் அந்த ஊரில், நன்மையுள்ள ஒரு பொது வீட்டில் ஜாதகன் பிறப்பான். அவனுடைய தந்தை, தாய், குழந்தைகள், உடன் பிறந்தார் முதலியவர்களின் யோகங்கள், முற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இந் நூலில் சொல்லுகின்றோம்.

6. தந்தையின் சேதி கேளாய் சன்மார்க்கன் சிவந்த மேனி
எந்தையே வாயு ரோகி யாரையும் உறவு கொள்வன்
நொந்தபோர் தம்மைக் காப்பான் நேமியில் அரசு செய்வன்
சந்ததம் சகை யுள்ளான் சற்சன ருறவு கொள்வான்.

---

1. நீர்நிலை
2. குளம்

6. தந்தையின் விவரங்களைச் சொல்லுகின்றோம். நல்வழி நடப்பவன். சிவந்த உடலுடையவன். வாயு ரோக முள்ளவன். எல்லோரையும் உறவு கொள்வான். துன்ப மடைந்தோரை ஆதரிப்பான். உலகில் அரசாங்கத் தொழிலேற்பான். எப்பொழுதும் இரப்போருக்குக் கொடுக்கும் தன்மை யுள்ளவன். நல்லோர்கள் உறவு கொள்வான்.

7. இருவிதக் கல்வி கற்பன் இராசபூ சிதமு முள்ளான்
உறன்முறை மெச்ச வாழ்வன் ஒண்டொடி யார்க்கு நேயன்
திருமகள் வாச முள்ளான் தேவதா பத்தி கொள்வன்
கரமதில் கமல ரேகை காலாட்கள் உடைய னுமே.

7. இரண்டு விதமான கல்வி கற்பான். அரசர்களால் பூசிக்கப் படுவான். உறவினர்கள் பாராட்டும்படி வாழ்ந்து வருவான். பெண்கள் நேயன். இலட்சுமி அவனில்லத்தில் வாழ்ந்திருப்பாள். தெய்வ பக்தி யுடையவன். கையில் கமல ரேகை யுள்ளவன். வேலையாட்களை யுடையவன்.

8. வாக்குச்சொல் மேன்மை யாகும் வாகன முடைய
[னென்றோம்
நாக்கது தவரு னுகும் நாடெல்லாம் வாசம் செய்வன்
மூர்க்கரோ டிணக்கம் செய்யான் முன்கோபம் பின்பு
[சாந்தம்
தீக்குண மில்லா னுகும் தீர்த்தயாத் திரையும் செய்வன்.

8. தன் சொல்லுக்கு மதிப்புடையவன். வாகன வசதிக ளுடையவன். சொல் தவறுதவன். நாடு முழுவதும் வசிப்பான். (சுற்றி வருவான்.) கெட்ட சகவாச மில்லாதவன். முன்கோபி. ஆனால் பிறகு சாந்தமடைவான். கெட்ட குணமில்லாதவன். புண்ணிய நீர் நிலைகளில் ஸ்நானம் செய்ய யாத்திரை போவான்.

9. பால்தயிர் இட்ட முள்ளான் பாருளோர் வசியம் கொள்வன்
சீலமும் கொஞ்ச முள்ளான் செனவுப காரம் செய்வன்
காலத்தை அறிந்து சொல்வன் கந்தன்மேல் பக்தி
[கொள்வன்
கோலமாம் தைரி யத்தன் கூறுவான் சிலேடை வார்த்தை.

9. பால், தயிரில் விருப்ப முடையவன். உலகத்தி லுள்ளோர்களை வசப்படுத்துவான். நன்னடக்கை கொஞ்ச முள்ளவன். ஜனங்களுக்கு உபகாரி. வருங்காலத்தை யறிந்து சொல்லக் கூடியவன். முருகப் பெருமானிடம் பக்தி யுள்ளவன். தைரியசாலி. இரு பொருள்படப் பேசுவான்.

10. கபடுகள் இல்லா னுகும் கனத்ததோர் பூமி சேர்ப்பன்
தவசிகட் கன்பு பூண்பன் தந்தைக்கு மேலாய் வாழ்வன்
அவமதி யில்லான் நல்லன் அரசனுல் சீவிப் பானுமை
தரன்தரம் யோக முள்ளான் சங்கரி கேட்டி டாயே.

10. கபடம் இல்லாதவன். மிகுதியான விளைநிலங்கள் சேர்ப்பான். முனிவர்களிடம் அன்புடையவன். தன் தந்தைக்கு மேலாக விளங்குவான். கெட்ட புத்தி யில்லாதவன். நற்குண முடையவன். அரசன் ஆதரவால் வாழ்க்கைநடத்துவான் மேன் மேலும் யோக முடையவன். பார்வதியே! கேட்பாயாக.

11. இவனுடைத் துணைவர் தம்மை இயம்பவே ஆண்பா
[லொன்று
நவனியில் பெண்பால் அவ்வார் நாட்டுவோம் தீர்க்க மாக
அவனியில் துணைவன் சேதி அறைகின்றோம் சிவந்த மேனி
பவமுள பூகை சாலி பலவிதச் செட்டுச் செய்வன்.

11. இவனுடைய உடன் பிறந்தார்களைச் சொல்லும்போது, ஆண் மகன் ஒருவனும், பெண் ஒருத்தியும் தீர்க்கம் என்று நிச்சயமாகச் சொல்லுவோம். உடன் பிறந்தவன் விவரம் சொல்லுகின்றோம். சிவந்த உடலுடைய வன். ஊகமுள்ளவன். பலவிதமான வியாபாரங்கள் செய்வான்.

12. கிருஷியும் செய்வா னுகும் கண்ணிய மாக வாழ்வன்
உறன்முறைக் கினிய னுகும் உறுதியா மனத்த னுகும்
திருகது சொல்லா னுகும் செய்நன்றி மறவா னுகும்
தரைமிகத் தேட வல்லன் தரணியோர்க் குதவி செய்வன்.

12. பயிர்த்தொழில் செய்பவன். மதிப்புடன் வாழ்ந்து வருவான். உறவினருக்கு அன்பன். திடமான மன முடையவன். பொய் சொல்லாதவன். செய்த நன்றியை மறக்காதவன். பூமிகள் அதிகம் சேர்க்க முயல்பவன். உலகோருக்கு உபகாரி.

13. சொல்லது தவரு னுகும் சுத்தநன் மனத்த னுகும்
நல்லவ னுகி வாழ்வன் நாற்காலி விருத்தி யுள்ளான்
இல்லையென் றுரைக்க மாட்டான் எதிரியை வசியம்
[செய்வன்
புல்லிய ருறவு கொள்ளான் புண்ணிய மனத்த னென்றோம்.

13. சொல் தவருதவன். சுத்தமான நல்மன முடையவன். உலகில் நல்லவனுக வாழ்ந்து வருவான். பசு, காளைகள் விருத்தி யுடையவன். எதிரோருக்கு இல்லை யென்று சொல்ல மாட்டான். பகைவர்களை மயக்குவான். கீழானவர் உறவு கொள்ளாதவன். புண்ணிய மனமுடையவன்.

14. சுகபுசிப் புண்டய ருகும் சொல்லுவான் சுகமாய் வார்த்தை
பகையிலான் பாக்கிய முள்ளான் பஞ்சைமே லிரக்க மாவன்
இகபர னன்பு பூண்பன் எடுத்தகா ரியத்தைச் செய்வன்
வகையான குடும்பி யாவன் மங்கையே கேட்டி டாயே.

14. நல்ல உணவில் இஷ்டன். இனிமையாகப் பேசுவான். பிரோஜிக ளில்லாதவன். பாக்கியங்க ளுடையவன். ஏழைகளின் மேல் இரக்க முடையவன். சிவபெருமான் மீது பக்தி யுடையவன். எடுத்த காரி யத்தை முடிக்க வல்லமை யுடையவன். நல்ல குடும்ப முடையவன். தாயே! கேளுங்கள்.

15. மனைவியும் ஒன்றே யாகும் வரும்சுதர் ஆண்பால் ரெண்டு
கனமுள பெண்பால் நான்கு கழறுவோம் தீர்க்க மாகப்
பிணையாகு மற்ற தெல்லாம் பேசுவோ மிவனுக் கேதான்
அனையவே குடும்பம் ஒன்றாய் அறைகுவோம் மேலும்
[கேளே.

15. இவனுக்கு மனைவி ஒருத்தியே யுண்டு. குழந்தைகள்; ஆண் இருவர் பெண் மக்கள் நால்வர் தீர்க்கமாவர் என்று செல்லுவோம். மற்றவை யெல் லாம் நஷ்டமா மென்று சொல்லுவோம். எல்லோரும் ஒரே குடும்பமாய் வாழ்வர். மேலும் கேள்.

16. மற்றொரு துணைவி சேதி யறைகின்றோம் பின்பா கத்தில்
சொற்றவிக் குணத்தா னுக்குச் சேயனும் மூன்றும்
[சென்மம்
வித்தகன் உதிப்பா ருகும் விளம்புவோம் இவன்கு ணத்தை
அத்தியைப் பெற்ற மாதே அம்பிகை யாளே கேளாய்.

16. மற்றொரு சகோதரியின் செய்தியைப் பிற்பாகத்தில் சொல்லுகின் றோம். சொல்லப்பட்ட குணங்களையுடைய தங்கைக்கு ஜாதகன் மூன்றும் பிறப்பாகத் தோன்றுவான். இவன் குணங்களைக் கூறுவோம். யானை முகக் கடவுளைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

17. அன்னவன் இருசி கப்பு அளவுறும் சமதே கத்தன்
பின்னமில் லாத தேகம் பிரபல கீர்த்தி யேற்பன்
சொன்னசொல் பிசகா ருகும் தொடுத்திடும் கர்மம்
[வெல்வன்
நன்னயச் சொல்லு முள்ளான் நல்லவர் பெரியோர் நேயன்.

17. ஜாதகன் கருமை கலந்த சிவப்பு நிறம் பெற்றவன். நல்ல உடற் கட்டுடையவன். குற்ற மில்லாத உடல். எங்கும் பரவிய புகழைப் பெறு

வான். சொன்ன சொல் தவறுதவன். தொடங்கும் வேலையை முடிப்பதில் வல்லவன். நயமான சொற்களைப் பேசுபவன். நற்குணமுடைய சான்றோர் களுக்கு அன்பன்.

18. வித்தையும் இரண்டு தேர்வன் விவேகமும் பெருமை
[பூண்பன்
சித்தச னெப்ப தாகும் சென்றிடம் பெருமை யுள்ளான்
பத்தியு முடைய னாகும் பாருளோர்க் குதவி செய்வன்
நித்தியம் சுகபு சிப்பு நிமலியே கேட்டி டாயே.

18. இருவிதக் கல்வி கற்பான். விவேக முள்ளவன். பெருமை பெறுவான். மன்மதன் போன்ற வடிவழகுடையவன். செல்லு மிடங்க ளில் பெருமை ஏற்பான். தெய்வ பக்தி யுடையவன். உலகிலுள்ளாருக்கு இயன்ற உபகாரங்களைச் செய்வான். தினந்தோறும் சுகமான போஜனத் தைப் புசிப்பான். குற்ற மற்ற பார்வதியே! கேட்பாயாக.

19. கடன்கொளான் இடுக்கம் வந்து காரிய மறிந்து செய்வன்
உடன்படான் பிழைக ளுக்கு உபாயங்க ளதற்குச் செய்வன்
விடவுரை பகரா னுள்ளம் வெகுளிபோல் எவர்க்கும்
[தோன்றும்
மடவரால் போகம் கொள்வான் மனமது இரக்க வானே.

19. கடன் வாங்கமாட்டான். துன்பம் நேரிட்டபொழுது சமய மறிந்து நடப்பான். தவறு செய்ய உடன்படான். பிழை நேர்ந்தால், அத னைப் போக்கப் பலவித உபாயங்கள் செய்வான். நீய சொற்களைப் பேசான். யாவரிடமும் கோபமுள்ளவன் போல் தோன்றுவான். பெண்களிடம் இன்பம் அனுபவிப்பான். இரக்கம் பொருந்திய மன முடையவன்.

20. அரசனுல் சிவிப் பானும் அதிகார முடைய னாகும்
பெரும்பொருள் இச்சை யுள்ளான் பூமியி லெவர்க்கும்
[நல்லலன்
இரவினில் நடக்க வல்லான் விசேடபாக் கியமுஞ்
[சேர்ப்பன்
கரிபரி சகடு முள்ளான் கனத்ததோர் யூகை சாலி.

20. அரசரைச் சார்ந்து பிழைப்பான். அதிகாரம் செய்வான். மிக்க செல்வத்தை விரும்புவான். உலகில் எவருக்கும் நல்லவனு யிருப்பான். இரவுக் காலங்களில் பயமின்றி எங்கும் செல்ல வல்லவன். விசேஷமான பாக்கியங்களைச் சேர்ப்பான். யானை, குதிரை, வண்டிகள் இவற்றை யுடை யவன். பெரிய சாமர்த்தியவான்.

21. ரோமங்கள் நீட்சி யுள்ளான் நுவலுப தேசம் கொள்வன்
திமையை விரும்பா னுகும் தேகமே பித்த சூடு
சேமமாம் குடும்ப முள்ளான் சித்திர வீடு செய்வான்
நேயங்கள் தப்பா னுகும் நிருபர்க ளிட்டம் கொள்வன்.

21. தலை மயிர் நீள முள்ளவன். பெரியோர் கூறும் உபதேசங்களை ஏற்றுக் கொள்வான். கெடுதலை விரும்பாதவன். உடலில் பித்த சூடு உண்டு. நலமுள்ள குடும்பத்தைப் பெற்றவன். அழகிய வீட்டை அமைப் பான். ஒழுக்கங்கள் தவறுதவன். அரசர்களால் விரும்பப்படும் தன்மை யைப் பெறுவான்.

22. அவனுடைத் துணைவர் தம்மை அறைகின்றேம் மூத்தோர்
[காணேம்
நவனியில் இளையோ ருண்டு நாட்டுவோம் ஆண்பா
[லொன்று
பவமுள பெண்பா லவ்வார் பெருகிடு மிவனுக்கேதான்
தவசியே இளையோன் சேதி சாற்றுவோம் கேளுந் தாயே.

22. இவன் உடன் பிறந்தவர்களைக் கூறுகின்றேம். இவனுக்கு மூத் தவர் இல்லை. இளையவர் உண்டாவர் என்று கூறுவோம். இவனுக்குச் சகோதரன் ஒருவனும், சகோதரி ஒருத்தியும் தோன்றுவர். இனி, இவனு டைய இளைய சகோதரன் செய்தியைக் கூறுவோம். கேளுங்கள், தாயே!

23. தந்திர வாதி யாகும் சமர்த்தாக வார்த்தை சொல்வான்
தந்தையின் மேலாய் வாழ்வன் சகலகல் விகளும் கற்பன்
தன்னினத் தவர்க்கு நல்லோன் தயையுள குணவா னுகும்
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பா னிவனே
[யென்றேம்.

23. தந்திரசாலி. சாமர்த்தியமாகப் பேசுவான். தன் தந்தையினுஞ் சிறப்புற வாழ்வான். எல்லாவிதக் கல்வியையும் கற்பான். தன் இனத்த வர்கட்கு நல்லவனு யிருப்பான். இரக்கம் நிறைந்த தன்மையன். தான் கூறுகின்ற சொல்லே சிறப்புடையது என்று நிலை நாட்டுவான்.

24. அன்னிய தேசம் தன்னில் அவன்சில நாட்கள் வாசம்
அந்தணர் இட்டம் கொள்வன் அதிகாரம் சிலநாள்
[செய்வன்
அன்னியர்க் குதவு வானும் அவன்சிறு தீனி யிட்டன்
அன்னைதாய் தந்தை நேயன் அஞ்சிடான் எதிரிக் கேதான்.

24. சில காலம் அயல் நாட்டில் சென்று வாழ்வான். அந்தணர்களால் விரும்பப் படுவான். சிலநாட்கள் அதிகார முடைய பதவி வகிப்பான். அய லோர்க்கும் உதவிகள் செய்வான். சிற்றுண்டிகளில் விருப்பங் கொள்ளு வான். தாய் தந்தையர்களிடம் அன்புடையவன். விரோதிகட்குப் பயப் படான்.

25. அன்னிய ஒருவர் சொத்து அணுகிடு மிவனுக் கென்போம்
பொன்னெடு பணிதி சேர்க்கை பெறுவனும் பொய்கள்
[சொல்வான்
இந்நிலத் தவரும் மெச்ச யீகையு முடைய னுகும்
வந்தவர்க் கன்ன மீவன் மனமது கபடு முண்டு.

25. அயலா னொருவன் ஆஸ்தி இவனுக்குச் சேரும் என்போம். பொன், ஆபரணங்கள் முதலியவற்றை யடைவான். பொய்யுரை கூறு வான். இந்நில வுலகத்திலுள்ளவர்கள் பாராட்டும்படியான கொடை யுடை யவன். வீடு தேடி வந்தவர்க்கு அன்புடன் உணவளிப்பான். மனத்தில் கபட முடையவன்.

26. பாரியாள் ஒன்றே யாகும் பகருவோம் புத்திர பாகம்
நீரமாய் ஆண்பா லொன்று செப்புவோம் பெண்பால்
[மூன்று
கூறின நான்கும் தீர்க்கம் குணமில்லை மூன்று தானும்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

26. இவனுக்கு மனைவி யொருத்தியே. புத்திர பாவத்தைச் சொல்லு வோம். ஓர் ஆண் மகனும், மூன்று பெண்களும் தோன்றித் தீர்க்கமாவர். மேலும் மூன்று குழந்தைகள் பிறந்து சேதமாம். முருகக் கடவுளைப்பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

27. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோம் ஒருபான்
[எட்டில்
மேதினில் உத்தி ரத்தில் வித்தகி மாதுர் வர்க்கம்
காதலி வருவா ளாகும் கழறுவோம் அவள்கு ணத்தைத்
தீதுகள் இல்லா நெஞ்சம் செல்வியும் இருநி றத்தாள்.

27. ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். பதினெட்டாம் வயதில், வட திசையிலிருந்து, தாய் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பெண் இவனுக்கு மனைவியாக வாய்ப்பாள். அவள் குணத்தைச் சொல்லுவோம். தெடுதல்கள்-இல்லாத மனம். கரிய நிறமுடையவள்.

28. வரனுக்கு நேய முள்ளாள் மங்கைகன் னடக்கை யுள்ளாள்
திருமகள் ஒப்ப தாகும் செல்வியும் அதிட்ட சாலி
அரனடி யார்க்கு அன்னம் அன்புட னீய வல்லாள்
பொறுமையும் புகழு முள்ளாள் பூஷண மதிகம் சேர்ப்பள்.

28. கணவனுக்குப் பிரியமானவள். நல்ல நடத்தை யுடையவள். இலக்குமி போன்ற வடிவழகு பெற்றவள். அதிர்ஷ்ட முள்ளவள். சிவனடி யார்க்கு அன்புடன் உணவு அளிபபாள். அடக்கமும் கீர்த்தியும் உடையவள். ஆபரணங்கள் நிறையச் சேர்ப்பாள்.

29. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணேம்
சித்தபா யுநித்தா லுந்தான் திங்காகு மென்று சொன்னேம்
வித்தகர் முனிவர் கூற விளம்புவார் அத்திரி தாமும்
உத்தமர் தமக்குப் பாலர் உறங்கிடு மென்று சொன்னீர்.

29. புத்திர விருத்தியைப் பற்றிக் கூறுவோ மென்றால், கிரக நிலைகள் பலமுள்ளதாக இல்லை. பிறந்தாலும் கஷ்டமடையும் என்று சொன்னேம். இங்ஙனம் முனிவர் கூற, அத்திரி கேட்கின்றார். இவனுக்குப் புத்திர பாக்கியம் சிறப்புடையதாக இல்லை என்று கூறினீர்கள்.

30. காரணம் யாது என்னக் கௌசிகர் கூறு கின்றார்
பாரினில் ஐந்தாம் வீட்டோன் பண்டிதனு மாகி யேதான்
காரியும் ஐந்தைப் பாக்கக் கதிர்புகர் புதனே டுற்றுத்
தீரமா யிருப்ப தாலே செப்பினேம் மதலை தோடம்.

30. காரணம் என்ன? விசுவாமித்திரர் விடை கூறுகின்றார். ஐந்தாம் வீட்டுக்குரியவன் புதனுடன், சனி ஐந்தாம் வீட்டைப் பார்ப்பதாலும், சூரியன் சுக்கிரன் ஆகியோர் புதனோடு சேர்ந்து இருப்பதாலும், புத்திர தோஷம் கூறினேம்.

31. இதுவன்றி நவத்தில் கேது இருப்பதால் தோட மென்றேம்
அதுவிதத் தோடம் தன்னை அறிவிப்பீர் முனியே யென்றார்
அதிபனும் முன்சென் மத்தில் அறைகின்றேம் ஆலங்
[காட்டில்
வடுகர்தங் குலத்தில் வந்து வுதித்தன னிவனே யென்றேம்.

31. இது தவிர, ஒன்பதாமிடமாகிய மகரத்தில் கேது இருப்பதாலும் புத்திர தோஷம் ஏற்படும் என்று சொன்னேம். வேறு தோஷம் என்ன என்று கூறுவீர், முனிவரே! இவன் முற்பிறப்பில், திருவாலங்காட்டில், வடுகர் மரபினனாகப் பிறந்தான் என்று கூறினேம்.

32. உதித்துமே பெருமை பூண்டு உயர்நிதி பூமி யுண்டாய்ச்
சதியிலா அரசர் மெச்சத் தானவன் வாழ்ந்தா னென்றேரும்
விதியினுல் வந்த ஊழை விளம்புவோ மிவனுக் கேதான்
நதிசடை யணிந்தோன் தேவி நாயகி கேட்டி டாயே.

32. பிறந்து, பெருமை பெற்று, உயர்ந்த செல்வம், நிலபுலன் முதலியவற்றுடன், குற்றமற்ற அரசர்கள் பாராட்டும் வகையில் வாழ்ந்திருந்தா னென்று கூறினேம். அப்பொழுது விதிப்படி ஏற்பட்ட தோஷத்தைச் சொல்லுவோம். கங்கை நதியைச் சடைமுடியி லணிந்த சிவபெருமான் பத்தினியே! கேட்பாயாக.

33. பஞ்சையாய்ப் பெண்ணும் ஓர்நாள் பாலகன் தனக்கு
[அன்னம்
கெஞ்சினுள் இவன்பால் சென்று கேட்டனள் இல்லை
[யென்றான்
வஞ்சியும் வருத்தம் கொள்ள அவள்பேரில் கோப முற்று
மிஞ்சியே அடித்தா னென்றேரும் விளம்பினுள் ஏழை மாது.

33. அநாதையான ஒரு பெண் இவனிடம் வந்து, தன் புதல்வனுக்கு உணவு வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டாள். இவன் இல்லையென்று கூறினான். அவள் வருத்த மடைந்தாள். அதைக் கண்டு இவன் கோப முற்று, அவளை அடித்தான் என்று கூறினேம். அப்பொழுது ஏழைப் பெண் பிவன்றுமாறு கூறினுள்.

34. உன்னுடைச் செல்வம் நீங்கி உலகினில் வசிய மாகி
என்னைப்போல் பஞ்சை யாகி இனிச்சென்மம் சுதர்க
[ளின்றித்
தன்னிலே வாழ்வா யென்று தானவள் சொல்லி யேதான்
அன்னிய இல்லம் சென்றுள் அணுகிற்று அந்தத் தோடம்.

34. உன்னுடைய செல்வம் முதலியன நீங்கி, உலகில் துன்பமடைந்து, என்னைப்போல் கதியற்று, வருஞ் சென்மத்தில் புத்திரர்கள் இல்லாமல் வாழ்வாய் என்று கூறிவிட்டு வேறு வீடு சென்றுள். அந்தத் தோஷம் இவனை யணுகிற்று.

35. இதுவலால் இன்னும் ஒன்று இயம்புவோம் கேளும் தாயே
பதியினில் உரகன் ஒன்று பெருகிற்று அதனைக் கண்டு
அதிபனும் கழியி னுலே வாட்டினுன் மரண மெய்தி
அதுவிரு தோட மாச்சு அம்பிகை யாளே கேளாய்.

35. இது தவிர, இன்னுமொன்று சொல்லுவோம், கேளுங்கள். தாயே! இவன் வீட்டில் பாம்பு ஒன்று வந்தது. அதனை இவன் தடியால்

அடித்தான். பாம்பு இறந்தது. அந்த ஒரு தோஷமும் ஏற்பட்டது. பார்வதியே ! கேட்பாயாக.

36. இருவித தோடம் சேர்ந்து இலகிற்று அச்சென் மத்தில்
பெரும்செல்வம் குறைவு நேர்ந்து பூமியில் வறுமை புக்கு
குறையான மனத்த னுகிக் கூற்றனை யுதைத்தோ னுக்குச்
சரியாகப் பணிகள் செய்து தலமது செல்ல லுற்றான்.

36. இந்த இரண்டு தோஷங்களும் இவனை யடைந்தன. அப் பிறவியில் மிக்க செல்வம் குறைந்து, தரித்திர மடைந்து, கவலை நிறைந்த மனத்தினனாய், சிவபெருமானுக்குத் தொண்டு பூண்டு, பல தலங்களுக்கு யாத்திரை சென்றான்.

37. பலவிதத் தலங்கள் சென்று பாலகன் சேது புக்கு
நலமுள தீர்த்தம் தோய்ந்து ராமலிங் கத்தைப் போற்றிக்
குலவியே உள்ளூர் சென்று கூற்றன்தன் பதிக்குப் புக்குத்
தலைநான்கோன் வரையப் பட்டுச் செனித்தவ னிவனே
[பென்றோம்.

37. பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று, பின்பு சேதுவுக்குப் போய், கடலில் நீராடி, அங்குக் கோயில் கொண்டுள்ள இராமலிங்கப் பெருமானைப் போற்றி, துதித்து, உள்ளூர் மீண்டு, மரண மடைந்தான். பின்பு நான்கு தலைகளையுடைய பிரமனால் படைக்கப்பட்டு, பிறந்தவன் இவன் என்று கூறினோம்.

38. அத்திரி சொல்லு கின்றார் அவன்சென்மம் வடுக னென்றீர்
வித்தக னிக்கு லத்தில் விளங்குங்கா ரணங்க ளென்னச்
சித்தசன் முன்சென் மத்தில் சேதுவில் தோய்ந்த புண்யம்
உத்தம னுதித்தா னென்றோம் உரைக்கின்றோ மிச்சென்
[மத்தில் ;

38. அத்திரி முனிவர் கூறுகின்றார், அவன் முற் பிறப்பில் வடுகர் குலத்தவ னென்று கூறினீர்கள். இப் பிறப்பில் இக் குலத்தவனாகப் பிறக்கக் காரணங்கள் யாவை ? இவன் முற்பிறப்பில் சேதுவில் நீராடியதால் ஏற்பட்ட புண்ணியத்தினால் இப் பிறப்பில் இக் குலத்தவனாகப் பிறந்தான் என்று சொன்னோம். இச்சென்மத்தில் ;

39. சுதர்களுத் தோட மென்றேம் சொல்லுவோங் கிரிகை
[யொன்று
அதிபனும் மனைவி யோடு ஆலங்கா டதற்குச் சென்று
நதியினில் தோய்ந்து மேதான் நாயகர்க் கபிடே கித்துச்
சதியிலா வில்வம் தன்னல் சகஸ்ரவச் சனையும் செய்து;

39. புத்திர தோஷம் ஏற்படும் என்று கூறினேம். அது நீங்கச் சாந்தி யொன்று கூறுவோம். இவன் தன் மனைவியுடன் திருவாலங்காடு சென்று, நதியில் நீராடி, அங்குக் கோயில் கொண்டுள்ள சிவபெருமானுக்கு அபிடேகம் முதலியன வியற்றி, வில்வ பத்திரத்தால் ஸகஸ்ர நாம அருச்சனை செய்து;

40. நாகம்போல் ரசதம் தன்னல் நாயகன் செய்து மேதான்
பாகமாய்க் கந்தம் புட்பம் பாக்குடன் இலையும் சேர்த்து
ஆகம முணர்ந்தோ ரான அருமறை தமக்கு ஈந்து
தோகையால் வந்த வுளைழச் சுருதியோர்க் குரைத்து
[மேதான்;

40. பாம்பு போன்ற உருவ மொன்றை வெள்ளியால் செய்து, சந்தனம், மலர், வெற்றிலைபாக்கு இவைகளுடன் வேதங்களையுணர்ந்த அந்தணர்களுக்குத் தானமாகக் கொடுத்து, முன்சென்மத்தில் பெண்ணல் ஏற்பட்ட குறைகளை அவர்களிடம் சொல்லி.

41. அவ்வினை பொறுத்தித மென்று அவர்வாக்கால் ஆசி
[யேற்றுப்
பவ்யமா யுள்ளூர் மீண்டு பாலகன் சட்டி நோன்பு
செவ்வையா யோராண்டு கொள்ளச் செனித்திடு மதலை
[தீர்க்கம்
ஓவ்வியே செய்யா ஞகில் உதிக்கினும் தீதே யென்றேம்.

41. அந்தப் பாவம் தீரும்படி தானங்களை ஏற்றுக் கொண்டோம் என்று அவர்கள் கூறும் ஆசீர்வாதங்களைப் பெற்று, உள்ளூர் திரும்பி, சஷ்டி விரதம் ஓராண்டு நியமமாய் இருந்து வந்தால், பிறக்கும் குழந்தைகள் தீர்க்க முறும் என்று சொன்னேம்.

42. சொற்படி செய்வா ஞகில் துலங்கிடும் ஆண்பா லொன்று
செப்புவோம் பெண்பால் ரெண்டு தீர்க்கமா மென்று
[சொன்னேம்
மைப்படி மாதுர் சேதி யறைகின்றே மினிமே லாக
அப்பணி சடையோன் தேவி அருளுவோம் கேட்டி டாயே.

42. நாங்கள் கூறியபடி செய்வாளுளுல், ஓர் ஆண்குழந்தையும் பெண் கள் இருவரும் பிறந்து தீர்க்கமாம் என்று கூறினேம். இனி ஜாதகன் தாயின் செய்தியைச் சொல்லுவோம். கங்கை நதியைச் சடைமுடியி லணிந்த சிவபெருமான் தேவியே! கூறுவோம்; கேட்பாயாக.

43. அன்னையு மிருசி கப்பள் அவள்தேக மொடிச்ச லுள்ளாள்
கன்னென மொழியே கூர்வள் கல்வியும் பொறுமை யுண்டு
அன்னங்கள் போட யிச்சை அரனடி யார்க்கு நல்லாள்
பன்னியே பேச வல்லாள் பாவையு மிளம னத்தாள்.

33. இவன் தாய் கருமை கலந்த செந்நிற முடையவள். மெல்லிய சரீர முடையவள். கரும்புபோல் இனிய சொற்களைப் பேசுவாள். கல்வி யறிவுள்ளவள். பொறுமை யுடையவள். வீட்டுக்கு வருவர்க்கு உணவளிக்க விருப்பங் கொள்வாள். சிவனடியார்க்கு இனியவள். பன்னிப் பன்னிப் பேசு வாள். இளமைத் தன்மை நிறைந்த மனத்தினள்.

44. பர்த்தாவுக் கினிய ளாகும் பரவுப காரமுள்ளாள்
நித்தியஞ் சில மாவள் நிதானமாய் வார்த்தை சொல்வள்
உத்தம நடக்கை யுள்ளாள் உலகுளோர் நல்லோ ளென்பர்
வித்தகி வாயு ரோக மேவிடு மென்று சொன்னேம்.

44. கணவனுக்கு உகந்தவள். பிறருக்கு உதவி செய்யும் இயல்பினள். ஒழுக்க முடையவள். பொறுமையாய்ப் பேசுவாள். நன்னடத்தை யுள்ள வள். உலகினர் நல்லவள் என்று பாராட்டுவர். இவளுக்கு வாயு ரோகம் ஏற் படும் என்போம்.

45. மாதுரு யிரண்டே யாகும் மருமநூல் அறிவா ளாகும்
ஓதுவேன் பித்த தேகி யோகசா லிகளே யென்றேரும்
போதவே துணைவர் தம்மைப் புகலுவோம் நலமா யில்லை
தீதாகும் யாவும் தாமும் செல்விமா ரிருவர் தீர்க்கம்.

45. இவளுக்கு இரு தாய்மார். வேதாந்த சாஸ்திரங்களையும் உணர் வாள். பித்த தேக முடையவள். அதிர்ஷ்ட முள்ளவள் என்றேரும். இவள் உடன்பிறந்தார்களைப் பற்றிக் கூறுவோம். சகோதரபாவம் சிறப்புடையதாக இல்லை. தோன்றிய சகோதரர்கள் அழிவர். சகோதரிகள் இருவர் தீர்க்க மாவர்.

46. இவளுடைப் பூர்வந் தன்னை இயம்புவோம் தணிகை [யுத்ரம்
நவனியில் பேரூர் தன்னில் நாயகி ரெட்டி வம்சம்
அவனியில் உதித்து மேதான் அநேகமாய்ச் செல்வம் [பெற்றுத்
தவசிகள் அன்பு பூண்டு தன்வரன் மதலை யுண்டாய்;

46. இவளுடைய முற்பிறப்பைக் கூறுவோம். திருத்தணிகைக்குவடக்கில், ஒரு பெரிய ஊரில், ரெட்டியார் குலத்தில் பிறந்து, அதிகமாக வியாபாரங்கள் செய்து, தூறவிகளிடம் பக்திகொண்டு, கணவன், மக்கள் ஆகியோரை யடைந்து;

47. வருவோருக் கன்ன மீந்து மாநிலம் நல்லோ ளாகி
மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டுப்
பெருங்கங்கைக் குலத்தி லேதான் புகுந்தன ளிவளே
[யென்றும்
திருமகள் பெறுஞ்சென் மத்தைச் செப்புவோங் கேளுந்
[தாயே.

47. வீடு தேடி வருபவர்கட்கு உணவு அளித்து, எல்லோருக்கும் நல்லவளாக வாழ்ந்து, மரணமடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, வேளாளர் வமிசத்தில் பிறந்தவள் இவள் என்று கூறினேம். இவள் மறு பிறப்பைக் கூறுவோம். கேளுங்கள்; தாயே!

48. மறுசென்மம் காசி தன்னில் மறைக்குல முதிப்பா ளாகும்
திருமகள் வாசம் பூண்டு செல்வதி வாழ்வா ளாகும்
அருமறை முனிவர் கூற அம்பிகை கேட்க லுற்றுள்
திருமக ளிச்சென் மத்தில் செய்தபுண் ணியங்க ளென்ன.

48. மறு பிறப்பு, காசியில் அந்தணர் குலத்தில் பிறப்பாள். இல்லறமே நடாட்சி முண்டாகி, வளமுடன் வாழ்ந்திருப்பாள். இங்ஙனம் வேதங்களை யுணர்ந்த முனிவர்கள் சொல்ல, பார்வதி தேவி கேட்கின்றாள். இவள் இப் பிறவியில் இயற்றிய நல்வினைகள் யாவை?

49. சொல்லுவீர் முனியே என்றுள் துறவியும் சொல்லு கின்றார்
வல்லியு மிச்சென் மத்தில் வந்தவர்க் கன்ன மீந்து
புல்லிய புத்தி யின்றிப் பெரும்பொரு ளிச்சை வைத்து
நல்லோர்க்கு நல்ல ளாகி நாயகி இருப்ப தாலே.

49. சொல்லுங்கள் முனிவரே! என்றாள். முனிவர் சொல்லுகிறார். இவள் இப்பிறவியில், வீடுதேடி வந்தவர்கட்கு உணவு அளித்து, அற்ப புத்தியில்லாமல், சிறந்த பொருளை விரும்பி, நற்குணமுடைய சான்றோருக்கு நல்லவளாகி வாழ்வதால்,

50. பிறப்பளே பிரம்ம சேயாய்ப் பிதாவின்தன் பூர்வம்
[சொல்வேன்
திருக்காஞ்சி கீழ்ப்பா லாகச் செப்பிய பேரூர் தன்னில்
உரமுடன் செங்குந்த வம்சம் உதித்துமே பொருள்ப
[டைத்து
வருவோர்க்கும் ஏழை யோர்க்கும் மாநிதி யுதவி செய்தும்;

50. மறு பிறவியில் அந்தணர் வமிசத்தில் பிறப்பாள். இனி, ஜாதகன் தந்தையின் முற்பிறப்பைக் கூறுவோம். காஞ்சீபுரத்துக்குக் கிழக்குப் பக்கத்தில் உள்ள ஒரு பெரிய ஊரில் செங்குந்தர் மரபில் பிறந்து, செல்வம் படைத்து, தன்னிடம் வருபவர்கட்கும், தரித்திர மடைந்தவர்கட்கும், மிக்க பொருள் உதவியும்;

51. சாலைமார்க் கத்தி லேதான் தாகப்பந் தலும மைத்துச்
சாலவே வருவோ ருக்குச் சாதங்க ளளித்து வந்தும்
ஞாலமேல் முருகன் பக்தி நாயகன் செய்து வந்து
காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனல் வரையப் பட்டு;

51. மக்கள் செல்லும் சாலையில் தண்ணீர்ப் பந்தல் வைத்தும், சிவனடியார்களுக்கு உணவு அளித்தும், முருகக் கடவுள்மீது பக்தி பூண்டும் வாழ்ந்து, மரண மடைந்தான். பின்பு பிரமனல் படைக்கப்பட்டு;

52. வந்தவ னிவனே யென்றே மறைகின்றே மிவன்பின்
[சென்மம்
கொஞ்சியே தணிகை யுத்ரம் குலாவுவான் சத்ரிய சேயாய்
மிஞ்சியே துரகம் யானை மேதினில் அதிக மாகித்
கொஞ்சியே வாழ்வா னுகும் கோமாளி கேட்டி டாயே.

52. இவ்வுலகில் பிறந்தவன் இவன் என்று கூறினோம். இவன் மறு பிறப்பைக் கூறுகின்றோம். திருத்தணிகைக்கு வடக்கில், ஓர் ஊரில், அரச மரபினனகப் பிறப்பான். குதிரைகள் யானைகள் முதலியன பெற்று, மேன்மையுடன் வாழ்ந்திருப்பான். பார்வதி கேட்கின்றாள்,

53. எப்படிச் சத்ரிய னாக இவனுமே உதிப்பா னென்றீர்
இப்பிறப் பினிலே தானும் இவனொரு இச்சை வைத்து
தப்பிதம் சிலவே செய்தான் தானவன் சத்ரிய னாகச்
செப்பினீர் கார ணஞ்சொல் தேவியுங் கேட்க லுற்றாள்.

53. இவன் அரச மரபினனகப் பிறப்பான் என்று கூறினீர்கள், இப் பிறப்பில் பொருளில் இச்சை யுடையவனும், இவன் சில தவறான செயல்களைச் செய்தான். அம்படியிருக்க, தாங்கள் எவ்விதம் அங்ஙனம் கூறினீர்கள் ? காரணங்கள் சொல்லுங்கள் என்று கேட்கத் தொடங்கினாள்.

54. இச்சென்மம் தன்னிலேதான் ஈகையும் பெருமை யுண்டாய்த்
துச்சன குணமில் லாமல் துறவிகள் பக்தி பூண்டு
மிச்சமாய்க் கடவுட் பக்தி விரும்பின தாலே சொன்னேம்
அச்சுதன் தங்கை யாளே அறைந்தன மொழிகுன் றுது.

54. இப்பிறப்பில் கொடைத் தன்மையும் கீர்த்தியு முடையவனாய், கெட்ட குணங்களில்லாமல், துறவிகளிடம் பக்திகொண்டு, கடவுள் பக்தியையும் விருப்பத்தோடு செய்ததால், இவன் மறு பிறப்பில் அரசர் மரபில் தோன்றுவான் என்று சொன்னோம். திருமாலின் தங்கையான பார்வதியே! நாங்கள் சொன்ன சொற்கள் தவறு.

55. தந்தையின் மரண காலம் சாற்றுவோம் முப்பான் மூன்றில்
தந்தனூர் மாதம் தன்னில் சாற்றுவோங் கருமந் தானும்
பிந்திய அன்னைக் கேதான் பேசுவோம் நாற்ப தாண்டில்
சந்ததம் கன்னி மாதம் சாற்றுவோம் கண்டம் தானும்.

55. இவன் தகப்பனாரின் மரண காலத்தைக் கூறுவோம். முப்பத்து மூன்றும் வயதில், மார்கழி மாதத்தில் ஜாதகனுக்குக் கருமதசை எற்படுமென்று கூறுவோம். தாய்க்கு மரண காலத்தைக் கூறுவோம். நாற்பதாம் வயதில், புரட்டாசி மாதத்தில் இவன் தாய் மரண மடைவாள் என்று கூறுவோம்.

56. இன்னவன் மரண காலம் இயம்புவோ மறுபா னூறில்
தன்னிலே தனுசு மாதம் சதுர்த்தசி குறைப்பக் கத்தில்
உன்னத சுரத்தி னூலே உடலுமே வாடு மென்றோம்
பின்வரும் சென்மந் தன்னைப் பேசுவோம் கேளுந் தாயே.

56. ஜாதகன் மரண காலத்தைக் கூறுவோம். அறுபத்தாறும் வயதில், மார்கழி மாதம் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி திதியில் கடும் சுரத்தினாலே ஜாதகன் மரணமடைவான் என்று கூறினோம். இவன் பின் சென்மத்தைக் கூறுவோம். தாயே! கேளுங்கள்.

57. கச்சியில் நதிக்குக் கீழ்ப்பால் காவலன் பிரம்ம சேயாய்
உச்சித மாகத் தோன்றி உலகுளோர் எவரு மெச்ச
மிச்சமாய் அரசர் பக்கல் வித்தகன் அரசு செய்வான்
அச்சுதன் தங்கை யாளே அறைந்தன மொழிகுன் றுது.

57. காஞ்சீபுரத்தருகில், ஓடும் ஆற்றுக்குக் கிழக்குத்திசையில், ஜாதகன் பிராமண குலத்தில், நலமுறத் தோன்றி, உலகத்தார் மெச்சும்படி அரசாங்க உத்தியோகம் செய்வான். திருமாலின் சகோதரியான பார்வதியே! கூறிய மொழி மாறாது.

58. செயமுனி எழுந்தி ருந்து திடுக்கென உரைக்க லுற்றார்
பயமிலா வயது தீர்க்கம் பகரக்கா ரணமுஞ் சொல்வீர்
நயமுள் சென்மம் தொட்டு நாலுரா சிக்குள் வெள்ளி
வியமிலா திருப்ப தாலு மேழினில் குருவும் நிற்க ;

58. செய்முனி எழுந்து விரைந்து கூறலானார். ஜாதகனுக்கு நீண்ட ஆயுளைக் கூறிய காரணங்களைக் கூறுங்கள். ஜாதகனது சென்ம இலக்கின மான விருஷபத்துக்கு நான்கு, ராசிக்குள்ளாக சுக்கிரன் சுபனுக இருப்பதா லும், ஏழாம் இடத்தில் குரு தங்கியுள்ளதாலும்;

59. பூரண வயது என்றோம் பராசரும் சொல்லு கின்றார்
பார்மகன் ஏழோ னுகிப் பாரத்தி லிருப்ப தாலே
வீரியன் தனக்கு கண்டம் மேவிடு மவர்த சைக்குக்
கூறினீர் எவ்வி தத்தில் குறிப்பதைச் சொல்லு மென்றார்.

59. இவனுக்கு நீண்ட ஆயுள் என்று கூறினேம். பராசரர் கூறுகின் றார். ஏழாம் வீட்டுக்குடைய செவ்வாய் துலாத்தில் தங்கி யிருப்பதால், ஜாத கனுக்கு அங்கார மகா தசையில் கண்டத்தைக் கூறினீர்கள். அதன் விவ ரங்களை எடுத்துக் கூறுங்கள் என்றார்.

60. சொல்லுவோம் பித்த வாயு தோன்றியே வலிகள் போலும்
பில்லிகள் பிடித்தால் போலும் புக்கியே தோட மெய்தும்
அல்லல்கள் அடைந்த போதும் அந்தணன் ஏழில் நிற்கத்
தொல்லைகள் விலகு மென்றோம் சுதனுமே வயது தீர்க்கம்.

60. கூறுவோம். பித்த வாயுதோன்றி, வலிகள்போலும், பேய் பிடித்ததைப் போலவும், பல நோய்களும் இவனை வந்தடையும். கஷ்டங்கள் நேர்ந்தபோதிலும், குரு ஏழாமிடத்தில் (விருச்சிகத்தில்) நிற்கின்ற காரணத் தால் அவை விலகும் என்றோம். ஜாதகனுக்கு நீண்ட ஆயுர் பாவம் உண்டு.

61. அந்ததோர் பிணிகள் தீர அறைகின்றோம் சாந்தி யொன்று
எந்தையே கிரக சாந்தி இவனுக்குச் செய்து மேலும்
சந்ததம் தணிகைக் கேதான் சத்தமி கார்த்தி சென்று
கந்தனுக் கருச்சித் தேத்தக் கருமங்கள் விலகு மென்றோம்.

61. அந்த நோய்கள் தீர ஒரு சாந்தியை உரைக்கின்றோம். நவக் கிரக சாந்தி செய்து, மேலும், திருத்தணிகைக்குத் தொடர்ந்து ஏழு கிருத்தி கைகள் சென்று, சுப்பிரமணியக் கடவுளைப் பூசித்து வந்தால், இந்த நோய்கள் நீங்கும் என்றோம்.

62. எவ்விதங் கிரக சாந்தி இயம்புவீர் முனியே யென்றாள்
நவமணி கலச பூசை நாட்டியே வோமம் செய்து
அவனியி லிரணி யத்தில் அறுகோண பீச மிட்டுத்
தவசியே சகஸ்ர மாகத் தானதைச் செபித்தே தாயே.

62. நவக்கிரக சாந்தி எவ்வாறு செய்வது என்று, முனிவரே! தாங்கள் கூறுங்கள் என்றாள். நவ தானியங்களைப் பரப்பி, கலசங்களை வைத்து, அவை

களுக்குப் பூசைகளைப் புரிந்து, ஹோமங்கள் செய்து, தங்கத் தகட்டில் ஆறு கோண முள்ள சக்கரம் வரைந்து, ஆயிரம் முறை மூல மந்திரத்தை ஜபிக்க வேண்டும், தாயே!

63. மூலமும் ஐயுங் கிலியும் மொழிசவ்வும் அவ்வும் ரீயும்
சாலவே சரவண பவாவென்று சகஸ்திர உருவு தந்தால்
ஞாலமேல் சுகமே யாகும் நவின்றன மொழிகுன் ரூது
ஏலவே செய்யா னுகில் இடருக ளனந்த முண்டு.

63. அதன் மூல மந்திரமாவது: "ஓம், ஐம், க்லீம் சவ், அவ், ரீ, சர வணபவ" என்பதாம். இதை ஆயிரம் முறை ஜபம் செய்து வந்தால் உலகில் சுகமேற்படும். யாம் சொன்ன சொல் தவறாது. இதை இவன் செய்யா விடில் துன்பங்கள் பல ஏற்படும்.

64. சொற்படி செய்வா ராகில் சேய்தசைப் பிணியும் நீங்கும்
மைப்புடன் பொதுயோ கத்தை விளம்புவோ மிவனுக்
[கேதான்
எப்பவும் வறுமை யில்லான் இராசர்பூ சிதமு முள்ளான்
தப்பித மொருவர்க் கெண்ணுன் தனம்பூமி யதிகம்
[சேர்ப்பன்.

64. நாம் கூறியபடி செய்வானுயின், அங்காரக மகா தசையில் ஏற்படும் நோய்களும் நீங்கும். இனி, இவனுடைய பொதுவான யோகங்களைக் கூறுவோம். எப்பொழுதும் வறுமை யில்லாதவன். மன்னர்களால் பூசிக் கப் படுவான். பிறருக்குத் தீங்கை நினையாதவன். பொருள், நிலபுலன்களை மிகுதியாகச் சேர்ப்பான்.

65. பரவுப காரனுவன் பந்துவும் மேலாய் வாழ்வன்
தலமது புதிதாய்ச் செய்வன் சகலசம் பத்து முள்ளான்
பலவித லாபம் கொள்வன் பாரதி கார மோங்கும்
குலவுவான் துணைவ ரோடு கோமளி கேட்டி டாயே.

65. பிறருக்கு உதவி செய்வான். தன் சுற்றத்தினருக்கு மேலாக வாழ்வான். புதிய வீடு கட்டுவான். எல்லா ஐச்வர்யங்களையும் அடைவான். பற்பல இலாபங்களை யடைவான். பூமியில் அதிகாரஞ் செலுத்துவான். தன் சகோதரர்களுடன் கூடி வாழ்வான். பார்வதியே! கேட்பாயாக.

66. தேவதாப் பணியுஞ் செய்வன் செழிப்பான குடும்பி யாவன்
தாதைசெய் புண்ணி யத்தால் சாற்றிடும் யோகம் தானும்
மாதரசெய் கருமத் தாலும் மறைகின்ரு மிராச யோகம்
மேதினி லதிகக் கீர்த்தி விளங்கிடு மிவனுக் கேதான்.

66. கடவுளர்களுக்குக் கைங்கரியம் செய்வான். வளமுள்ள குடும்பத்தை ஏற்பான். தந்தை செய்த நல் வினைகளினால் இவனுக்கு யோகங்களைக் கூறினேம். இவன் தாய் செய்த புண்ணியத்தால் இவனுக்கு ராஜயோகத்தைக் கூறுகின்றேம். உலகில் இவனுக்குப் பெரும் புகழேற்படும்

67. சாதகன் செனிக்குங் காலம் சந்திரன் தசையி ருப்புக்
கோலமாய் ஆண்டு மாறும் குறித்தனம் திங்கள் ஒன்பான்
நீதான ரோக மெய்தித் தீர்ந்திடு தான பேதம்.
மேதினில் பாக்யம் சேரு ம விசித்திர வீடு மெய்தும்.

67. ஜாதகன் ஜனன காலத்தில் சந்திர மகா தசையில் இருப்பு, ஆறு வருஷங்களும் ஒன்பது மாதங்களும் ஆம்'என்று கூறுகின்றேம். அப்பொழுது கொடிய நோய்கள் ஏற்பட்டு நீங்கும். இட மாற்றம் ஏற்படும். உலகில் செல்வங்கள் சேரும். அழகிய வீடும் கிடைக்கும்.

68. தந்தைக்கு யோக மெய்தும் தாதையின் வர்க்கம் சூதம்
பிந்திய மாதுர் வர்க்கம் பேசுவோம் சூத கங்கள்
எந்தையே துணைவர் விருத்தி இயம்புவோம். விபரம்
[ரெண்டில்
இந்திர னிறைஞ்சு மாதே எழில்சுதன் பலனி தாமே.

68. தந்தைக்கு யோகங்கள் ஏற்படும். தந்தை வர்க்கத்தினர்களுக்கு அசுபங்கள் ஏற்படும். தாயின் வர்க்கத்திலும் அசுபங்கள் ஏற்படும் என்று கூறுவோம். சகோதர விருத்தி ஏற்படும். மற்ற விவரங்களை இரண்டாம் பகுதியில் கூறுவோம். இந்திரன் வணங்கும் அன்னையே! ஜாதகனுடைய பலன்கள் இவைதாம்.

ஜாதகம் 53

1. சந்திரன் தெரிவை நின்று சனிகருங் கோளும் கோலாய்ச்
சுந்தர பொன்னும் தேளில் துலங்கிடச் சிகியும் மேடம்
வந்திடு சுங்கன் [1]மாட்சி வள [2]ரூப செயத்தில் பானு
புந்திசேய் அரியில் பற்றிப் புல்லத்தி லுதித்த சேய்க்கு;

1. சந்திரன் கன்னியிலும், சனி ராகு துலாத்திலும், குரு விருச்சிகத்திலும், கேது மேஷத்திலும், சுக்கிரன் விருஷபத்திலும், சூரியன் கடகத்திலும், புதன் செவ்வாய் சிம்மத்திலும் நின்று, விருஷப லக்கினத்தில் பிறந்த ஜாதகனுக்குப் பலனைக் கூறுங்கள்.

	கேது	லக்கினம் சுக்கிரன்	
	இராசி சக்கரம்		சூரியன்
			புதன் செவ்வாய்
	குரு	சனி இராகு	சந்திரன்

2. வந்திடும் கீழ்மேல் வீதி வளருமில் லுத்திர நோக்கு
விந்தையாய் அரனும் சேலில் விளம்பினேனும் தென்பால்
[ஆகும்
எந்தையாய்த் துலையில் நின்று எழில்நன்மை செய்தோன்;
[தங்கும்
விந்தையாங் கோட்டம் சொல்லு செப்பினேனும் மேலும்
[கேளே.

2. கிழக்கு மேற்காயுள்ள தெருவில், வடக்கு நோக்கியுள்ள இல்லத்தில் பிறப்பான். சிவபெருமான் கோயில் வடகிழக்கி லுள்ளது. துலா பரத்தில் நின்று எங்களுக்கு நன்மை செய்தவனுகிய கிருஷ்ணனுடைய அதிசயமான கோயில் தெற்கிலுள்ளது. மேலும் கேளுங்கள். சொல்லுகின்றேம்.

---

1. சுக்கிரனுக்கு விருஷபத்திலும் துலாத்திலும் ஆட்சியுண்டு.

2. உபஜயம்: பிறந்த ராசியிலிருந்து 3, 6, 10, 11, ஆம் இடங்கட்குப் பெயர்.

3. இன்னமும் பலதே வாசம் இலகிய சிற்றூர் தன்னில்
நன்மையா யிந்தப் பாலன் நவிலும்வே ளாளர் சேயாய்
அன்னையே செனிப்பா னென்று அருளினேம் யிந்நூல்
[தன்னில்
மன்னவன் பலன்க ளெல்லாம் வழுத்திடக் கேளு மம்மா.

3. இன்னும் பல தேவர்கள் அங்கு வாசம் செய்கின்றனர். இவ்வித முள்ள ஒருசிற்றூரில், இந்த ஜாதகன், வேளாளர் குலத்தில் ஆண் மகனுகப் பிறப்பான், என்று இந்தச் சோதிட சாஸ்திரத்தில் கூறினேம். இவனுக் குரிய பலன்கள் அனைத்தையும் கூறுவோம்; கேளுங்கள்; தாயே!

4. முன்னிவ னிருந்த சென்மம் மொழிகுவோம் மருதூர்
[தென்பால்
நன்னய நகர மொன்றில் நற்குல மறையோ னுகிப்
பொன்னெடு பூமி யோங்கப் பிரபலத் தவனுய்த் தேர்ந்து
தன்னினத் தவர்கள் மெச்சச் சமர்த்தனுய்ப் பிரசங் கத்தில்;

4. இவனுடைய முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். மருதூருக் குத் தெற்கில் உள்ள பெரிய நகரத்தில், அந்தணர் குலத்தோனுகப் பிறந்தான். செல்வங்கள், நிலபுலன்கள் மிகுதியாகப் பெற்று, புகழுடன் தன் இனத் தவர் கொண்டாடும்படி இருந்து, பிரசங்கங்கள் பல புரிந்து;

5. வந்திடு மதிகா ரந்தான் வாகுடன் படைத்து யின்னேன்
சொந்திரு வாச முண்டாய்ச் சேர்பல மனுக்கள் சூழப்
புந்திடும் ஊக வானும் பெற்புடன் மாயோன் கோவில்
விந்தைசேர் பணியு மையன் விழாமுதல் நடத்த வுற்றுன்.

5. அதிகாரம் படைத்து, இலட்சுமீ கடாட்சம் பெற்று, வாழ்ந்து வந் தான். ஊக முள்ளவன். பல மன்னர்கள் கொண்டாட, பக்தியுடன் திரு மாலின் கோயிலில் ஒரு பெரிய திருவிழா நடத்தினுன்.

6. தரையில்வாழ் மனுக்கள் மெச்சத் தருமவா னென்றே
[யோதக்
குறைவுரு வாழும் நாளில் குறைந்தஓர் வூழைச் சொல்வேன்
இறையவன் அடியா னேனை யென்றுனைப் பெருமை
[பூண்டோன்
மறையவன் மனையில் வந்து வசனமொன் றுரைக்க
[வெண்ணி;

6. பூமியில் வாழும் அரசர்கள் தருமசிந்தை யுள்ளவன் என்று கொண் டாடினர்கள். இப்படி இருக்கும் நாளில் ஏற்பட்ட ஒரு தோஷத்தைச் சொல்லுவோம். திருமாலின் அடியான் என்று பெருமையுடைய, ஓர்

அந்தணன் இவனுடைய வீட்டிற்கு வந்து வார்த்தை ஒன்று சொல்ல நினைத்து ;

7. விடுதியில் புகுந்த காலை வியம்புரைக் கணிகை ஒன்றிப்
படிமிசை நடனம் செய்யப் பார்த்ததைப் பலபேர் சூழக்
கொடியொடு சுத்த இன்பம் கேட்டிவ னிருந்தா னங்கு
அடியவர் வரவை நோக்கி வசதியுற் றிருக்கக் கண்டு;

7. வீட்டிற்கு வந்தார். அப்போது இவன், வாய்பேசாது மனமொன்றி, ஒருநடனமாது, இசையுடன் நடனமாடியதை, மனைவியுடனும் இன்னும் பல ருடனும் இருந்து பார்த்து மகிழ்ந்திருந்தான். அடிகள் வந்ததைப் பார்த்தும் வாளா யிருக்கக் கண்டு ;

8. தத்துவச் சேட்டை நீக்கித் தனமதம் பிரம்ம பாதம்
வைத்தவர் வெகுளி பூண்டு வசனிப்பா ரினியோர் சென்மம்
சுத்தனும் வேளா ஞகித் தோன்றியும் வசைக ளுண்டாய்
நித்தமும் சுகிப்பா யென்று நினைத்தவர் போக லுற்றார்.

8. தத்துவ விசாரத்தை விட்டு, தன் ஆணவத்தைப் பகவானின் திரு வடிகளில் பணிந்து நீக்கிய, அடிகள் வெகுண்டு சொல்லுகின்றார். இனி, ஏற்படும் சென்மத்தில் வேளாளனுகப் பிறந்து தினமும் பழியுண்டாகி வாழ்வாய் என்று சொல்லிப் போனர்.

9. அந்தநல் லுழைப் போக்க அவதரிப் பானு மிவனும்
மைந்தனும் பெரியோன் சாபம் மாளவும் கிரியை பின்னல்
எந்தையே சொல்லு கின்றே மிவனது குடும்பச் சேதி
சுந்தரன் தந்தை வர்க்கம் சொல்லுவோம் கேட்டி டாயே.

9. அந்தச் சாபத்தைப் போக்க இவன் பிறப்பான். பெரியோருடைய சாபத்தைப் போக்குவதற்குச் சாந்தி யொன்று சொல்லுகின்றோம். இவனது குடும்ப வரலாற்றைக் கூறுகின்றோம். தகப்பனரின் வர்க்கத்தாரைப் பற்றிச் சொல்லுவோம். தாயே ! கேளுங்கள்.

10. தந்தையின் துணையாண் பாலுஞ் சார்ந்திடும் இரண்டு [தீர்க்கம்.
பிந்தியும் பெண்பால் ரெண்டு பேசுவோம் தீர்க்க மாக
எந்தையே இதற்கு மேலாய் இலகியே செனித்த போது
வந்துமே நிலையா வென்று வழுத்திலே மிந்நூல் தன்னில்.

10. தந்தைக்கு இரு சகோதரர் தீர்க்கமாக இருப்பார்கள். பிறகு இரு சகோதரிகளும் தீர்க்கமாவர். ஆனல், இதற்குமேல் பிறந்தாலும் நிலையார் என்று இந்நூலில் கூறினேம்.

11. பாலகன் துணைவர் தம்மைப் பகருவோம் மூவர் ஆகும்
சாலவே கன்னி யொன்று தரித்திடப் பலத்தைக் காணும்
கோலமா யிதற்கு மேலாய்க் குணமுடன் செனித்த போதும்
வேலனே யின்ற மாதே விளங்கிடா வென்று சொன்னேம்.

11. ஜாதகனின் உடன் பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். அவர்கள் மூவர். பெண்ணொருத்தி. அவள் நிலைத்திராள். இதற்கு மேலாய்ப் பிறந்தாலும் நிலைத்திருக்கப் பலமில்லை. முருகப்பெருமானே என்ற பார்வதியே! மேலும் கேளும்.

12. செப்பிய பாலன் தீர்க்கம் செல்வனின் நிறங்கு ணத்தைத்
தப்பிலா தெடுத்துச் சொல்வோம் சார்ந்திடும் இருசி கப்பன்
ஒப்பிய சமதே கத்தன் உறைந்திடு முணச்சல் தேகி
தப்பிலா தெடுத்துச் சொல்வோம் தலைவியே மேலும்
[கேளே.

12. சொன்ன ஜாதகன் தீர்க்க ஆயுளுடையவன். அவனுடைய நிறம் குணம் இவைகளைத் தவறில்லாமல் சொல்லுவோம். கருமை கலந்த சிவப்பு மேனியன். சமமான சரீர முடையவன். ஒல்லியான தேகமுள்ளவன். தவறின்றிச் சொல்லுவோம். தாயே! மேலுங் கேளும்.

13. இன்னவன் வெகுபேர்க் கன்பன் எய்திடும் இருடை யுள்ளான்
உன்னித வசன ஞமே உரைப்பதில் பிசகல் அற்பம்
அன்னைமேல் பிரீதி யுள்ளான் ஐயனின் சிரத்தை பூண்பன்
மன்னிய வாயச்சா லன்தான் வழுத்திஞை முனிவ ரம்மா.

13. இவன் வெகு பேர்களுக்குப் பிரியன். இரக்க மனமுள்ளவன். உயர்வான பேச்சுடையவன். பேசுவதில் தவறு கொஞ்சம். தாயாரின் மீது அன்புடையவன். கடவுளின் மேல் பக்தி யுள்ளவன். பேச்சு வன்மை யுடையவன். முனிவர்களாகிய நாங்கள் இவ்விதம் கூறினேம்.

14. கூறிடான் கடின வார்த்தை கொம்பனே யாட்கு நேயன்
தேறுவான் தமிழ்நூல் தன்னில் சிற்றுண்டிப் பிரிய னுவன்
பாரிய ஊக முள்ளான் பகைவரை லகுவாய் வெல்வன்
மூரிய கருணை வெள்ளம் முற்றிய வெங்கள் மாதே.

14. கடினமான வார்த்தைகளைப் பேசாதவன். மனிவிக்கு இஷ்டன். தமிழ் நூலில் தேர்ச்சி யுள்ளவன். சிற்றுண்டியில் இஷ்டன். யூக சாலி. விரோதிகளைச் சுலபமாக வெல்வான். மிகுதியான கருணை யுள்ள தாயே! ஈசுவரியே.

15. பிறவிகள் நேய முள்ளான் பின்னவன் தனக்கு நேயன்
குறியொன்று மணுகா தந்தைக் குறுஞ்செல்வம் சமமாய்
[ஓங்கும்
திறமுள வாய்ச்சா லன்தான் செய்தொழில் பலித முண்டு
திறமுள கிருஷி மூலம் நிகழ்த்துவான் தொழிலு மம்மா.

15. உடன் பிறந்தார்களால் விரும்பப் படுபவன். தனக்குப் பின் பிறந்த சகோதரன் மேல் அன்புடையவன். கெடுதல் அணுகாது. தந்தையுடைய ஆஸ்தி விருத்தியாகும். பேச்சு வன்மை யுடையவன். செய்யும் காரியம் பலிக்கும். பயிர்த் தொழில் செய்வான். தாயே!

16. பலபல விதத்தி னுலும் பகரிடும் வணிப மேன்மை
குலவிய பெரியோர் நட்புக் குணமுட னிவனுக் குண்டாம்
இலகிடும் தனங்கள் விருத்தி எழிலுள நிதியும் சேரும்
நலமில தன்னிய பாடை நல்கிடு மிவனுக் கென்றோம்.

16. பலபல விதங்களில் வியாபாரம் விருத்தி யடையும். பெரியோர் களுடைய சிநேகம் இவனுக்கு உண்டு. செல்வங்கள் பெருகும். நவநிதியும் சேரும். உயர்வில்லாத அன்னிய பாஷை இவனுக்கு வரும், என்றோம்.

17. இத்தகை யுடையா னுக்கு இயற்றுவோம் மணத்தின் காலம்
சக்தியே நாலே மூண்டுள் சார்ந்திடும் [1]திரிகோ ணந்தான்
வெற்றியாய் உதித்தாள் தன்னே விளக்கமாய் மணமு
[டிப்டான்
அத்திமா முகனே யின்ற அம்மையே கேட்டி டாயே

17. இவ்விதம் இருப்பவனுக்கு மணம் ஆகும் காலத்தைச் சொல்லு வோம். இருபத்தெட்டாம் வயதுக்குள் திரிகோண மலைக்கருகில் உள்ள ஊரில் பிறந்தவன். இவனுக்கு மனைவியாக வாய்ப்பவள் வருவாள். அவளைத் திருப்தியுடன் மணம் புரிவான். விநாயகனைப்பெற்ற பார்வதி தேவியே! கேளுங்கள்.

18. புத்திர விருத்தி ஆண்பால் புகலுவோம் மூவ ராகும்
சக்தியே பெண்பால் மூன்று சார்ந்திடும் தீர்க்க மாக
வெற்றியா யிதற்கு மேலாய் விளங்கியே செனித்த போதும்
பக்தியே நிலையா தென்று பகர்ந்திட்டோ மிந்நூல் தன்னில்.

---

1. திரிகோணமலை ; இது ஈழநாட்டிலுள்ளது.

18. புத்திர பாவத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஆண் மக்கள் மூவரும், பெண்கள் மூவரும் நிலையாக உள்ளனர். இதற்குமேல் உதித்தாலும் நிலைத்திரார் என்று இந்நூலில் கூறினேம், தாயே.

19. சொல்லிய புத்திர பாகம் சுகமுடன் இருக்க வேண்டி
வல்லிய முன்னுல் ஊழி வளமுடன் இருப்ப தாலே
நல்லனே யிந்தப் பாலன் நலமுள பாண்டிக் கேகிக்
கல்லலில் லாம லின்னேன் கழறிடும் தீர்த்தம் தோய்ந்து;

19. நாம் சொன்ன புத்திர பாவம் சுகமாக இருக்கச் சாந்தி சொல்லுவோம். தாயே! முற்பிறப்பில் செய்த பாபம் திடமாக இருப்பதால், இந்த ஜாதகன், வளமுள்ள பாண்டிய நாட்டுக்குச் சென்று, புண்ணியதீர்த்தத்தில் நீராடி;

20. அங்கயற் கண்ணி பாதம் அன்புடன் துதித்தி றைஞ்சிப்
பொங்கமாய் ரசதம் தன்னுல் புகழுள வில்வம் செய்து
சங்கரன் உமையாள் பாதம் தரித்திட அருச்சித் தேத்தி
இங்கித முடனே இன்னேன் எழிலுடன் உள்ளூர் மீண்டு;

20. அங்கையற்கண்ணி யம்மனைத் தோத்தரித்து, தாழ்மையுடன் பிரார்த்தித்து, வெள்ளியால் வில்வஇலை போன்று செய்து, உமையுடன் கூடிய சிவபெருமான் பாதங்களில் மனவியோடு, பக்தியுடன் பூசை முதலியன செய்து விட்டு, ஊருக்குத் திரும்பி;

21. அன்னமும் அகதி கட்கு அன்புட னளித்தா னுனல்
சொன்னதோர் புத்திர பாக்கியம் சுகமுடன் வழுத்தி நிற்கும்
வின்னமும் அடைந்தி டாது விளம்பினேம் இந்நூல்
[தன்னில்
அன்னையே யாங்கள் சொன்ன அருள்மொழி குன்றி டாது.

21. ஏழைகளுக்குப் பிரியத்துடன் உணவளித்து வந்தால், நாம் சொன்ன புத்திர பாக்கியம் சுகமாக இருக்கும்; குறைவுறாது, என்று இந்நூலில் சொன்னேம். தாயே! நாங்கள் சொன்ன வார்த்தைகள் தவறா.

22. இன்னவன் யோகச் செய்தி இயற்றுவோம் இனிமே லாகச்
சொன்னதோர் செனனம் தொட்டுத் துலங்கிய ஈரா
[ருண்டுள்
நன்னய தந்தை யோகம் நல்கிடும் இருஷி மூலம்
பின்னமில் லாமல் இன்னேன் விளங்கியே வாழ்வா னுகும்.

22. இவனுடைய யோக வரலாற்றைப் பற்றிக் கூறுவோம். பிறப்பு முதல் பன்னிரண்டு வயது வரையில் தந்தைக்குப் பயிர்த்தொழில் மூலம் யோக முண்டாகும். இவனும் குறைவுக ளில்லாமல் சௌக்கியமாக வாழ்ந்து வருவான்.

23. தானிய விருத்தி யாலும் தான்பல இனத் திலும்
வேணதோர் பூமி தானம் விளங்கிடும் பலம தாக
நாணயப் பலித முண்டாய் நானிலத் தவரும் மெச்சக்
காண்வே சமம தாகக் கருத்துடன் வாழ்வான் சொல்லே.

23. தானியங்கள் மிகுதியாலும், இன்னும் பல வழிகளாலும் சிறந்து வாழ்வான். பலமாகப் பூமிகள் அதிகம் சேரும். செல்வங்கள் பெருகும். உலகத்தவர் புகழுவார்கள். சமமான எண்ணங்களுடன் வாழ்ந்து வருவான்.

24. அதுமுதல் நாலாண் டுக்குள் அணுகிடும் நட்டம் கொஞ்சம்
கதியதாய் வந்து தீரும் கேவல மடைந்தி டாது
விதியதாய்ப் பால னுக்கு விளங்கிடும் வித்தை லாபம்
சதியிலா வாழ்வா னென்று சாற்றினே முனிவ ரம்மா.

24. அதிலிருந்து நான்கு வருஷங்களுக்குள் சிறிது நஷ்டம் சதியாக வந்து சேரும். ஆனால் கேவலமாகி விடாது. இவனுக்கு வித்தையினால் பலனுண்டாகும். கெடுதல்களின்றி வாழ்வானென்று முனிவர்களாகிய நாங்கள் சொன்னோம். தாயே!

25. சொல்லிய ஆண்டின் மேலாய்ச் சோர்விலா தொருப [தாண்டும்
வல்லியே சமயோ கந்தான் வளர்ந்திடும் கிருஷி யோங்கும்
நல்லவாம் பால னுக்கு நாட்டினோம் கீர்த்தி மேன்மை
கல்லலும் அடைந்தி டாமல் காலையும் வாழ்வா னுமே.

25. நாங்கள் சொன்ன வருஷங்களுக்கு மேல் பத்து ஆண்டுகளுக்கு, சமமான யோகமுண்டு. பயிர்த்தொழில் ஓங்கி விருத்தியாகும். இவனைப் புகழும், மேன்மையும் வந்தடையும். கஷ்டங்கள் அடையாமல் வாழ்வான்.

26. பலவித வணிப மூலம் பெருகிடும் தொழிலும் வாய்க்கும்
குலவிய அதன்மே லாறும் கூறுவோம் நயத்த யோகம்
இலகிய பொருளும் சேரும் எழில்நிதி தரமென் றோது
நிலவணி சடையோன் பக்கல் நின்றிடு உமையே கேளும்.

26. பலவித வியாபாரங்கள் மூலமாகத் தொழிலும் விருத்தியாகும். அதற்குமேல் ஆறு ஆண்டுகள் நயமான யோகமுண்டு. பொருளும் மிகுதியாகச் சேரும். செல்வங்கள் பெருகும். சந்திரனைச் சடை முடியில் தரித்த சிவபெருமான் பக்கத்தில் வீற்றிருக்கும் உமாதேவியே! கேளுங்கள்.

27. சொல்லிய ஆண்டி னுள்ளே சோர்வுறுங் கலகம் கொஞ்சம்
வல்லியே அதுவும் தீரும் வழுத்திய ஆண்டு தொட்டு
நல்லவன் ஆயுள் மட்டும் நாட்டுவோம் நயத்த யோகம்
கல்லலொன் றடைந்த போதும் கருதிடா நிவிர்த்தி யாமே.

27. நாம் சொன்ன வருஷத்திற்குள் கலகங்கள் கொஞ்சம் வரும். ஆனால், தாயே! அது தீர்ந்து போம். அது முதல் ஜாதகன் ஆயுள் முழுவதும் மிகுதியான யோகத்தைச் சொல்லுவோம். கஷ்டங்கள் வந்தாலும், சிரம மின்றி, உடனே நீங்கும்.

28. செய்தொழில் பலித மாகும் சிறந்திடும் நாண யங்கள்
உய்வகை உலகோர் போற்ற உறைவானிப் பாலன் தானே
கைப்பொருள் சமமாய்த் தேடிக் காலையும் வாழ்வா
[னென்று
மைப்படி உமையி னுளே வழுத்தினே முனிவ ரம்மா.

28. செய்யும் தொழில் விருத்தியாம். செல்வங்கள் மிகுதியாம். உலகத்தார் மெச்ச இவன் வாழ்ந்து வருவான். தான் முயற்சியால் பொருள் அதிகமாகத் தேடி வாழ்ந்து வருவான். இம்மாதிரி முனிவர்களாகிய நாங்கள் சொல்லுவோம். பார்வதியே!

29. பிரபலம் கீர்த்தி யேற்பன் பின்வெகு பேரைக் காப்பன்
நிறமையாய் அடிமை ஆட்கள் சேர்ந்திடும் கன்று காலி
குறைவது அடைந்தி டாமல் குணமுடன் வாழ்வா னென்று
அறந்தனை வளர்க்கு மாதே அம்மையே புகன்றிட்
[டோமே.

29. பிரபலமான புகழுடையவன். பல பேர்களை ஆதரிப்பான். வேலைக்காரர்கள் சேர்வர். கால் நடைகள் விருத்தி யுண்டு. குறைவில்லாமல் சௌக்கியமாக வாழ்ந்து வருவான். தர்மத்தை வளர்க்கும் தாயே! இங்ஙனம் கூறினேம்.

30. அற்பமாம் பலன்க ளெல்லாம் அணுகியே வந்த போது
சொற்பமாய் நிவிர்த்தி யாகும் சொல்லுவோம் தந்தை
[கண்டம்
கற்பமாம் பதினே ழாண்டுள் காளையின் தந்தை மாய்வன்
விற்புரு வத்தி னுளே விளம்புவோம் மேலும் கேளே.

30. கெடுதியான பலன்கள் ஏற்படும்போது அவைகள் சுலபமாகவே தீர்ந்து போம். தந்தையின் மரண காலத்தைச் சொல்லுவோம். ஜாதகனின் பதினேழாம் வயதுக்குள், தந்தை மரிப்பான். வில்லைப் போன்ற புருவத்தை யுடைய பார்வதியே! மேலுங் கேளுங்கள்.


31. சேருவான் பதவி தன்னில் செப்புவோம் இவன்பிற்
[சென்மம்
பாரினில் கொங்கு நாட்டில் பாலகன் சென்ன மாகிக்
கூறிடும் மறையோ னுகக் குணமுடன் செனிப்பா னென்று
வீரிய நவக்கோ ளாய்ந்து விளம்பினேம் முனிவ ரம்மா.

31. இவனுடைய மறு பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். கொங்கு நாட்டில், அந்தணர் குலத்தில் மேன்மையாக உதிப்பான். முனிவர்களாகிய நாங்கள், வன்மையுள்ள நவக்கிரகங்களின் நிலைகளே ஆராய்ந்து இவ்விதம் கூறினேம். தாயே!

ஜாதகம் 54

1. நந்தியும் [1]உயிரு மாக நற்காரி சென்மம் தங்க
மந்திரி நால தாக மந்தரக் கயிறு அஞ்சில்
புந்திசேய் பானு எட்டில் புகர்ஏழில் கேது லாபம்
சந்திரன் தசம தாகச் சதயமும் கடைபா தத்தில் ;

1. சனி சென்ம லக்கினமாகிய விருஷபத்திலும், குரு சிம்மத்திலும், ராகு கன்னியிலும், புதன் செவ்வாய் சூரியன் தனுசிலும், சுக்கிரன் விருச்சிகத்திலும், கேது மீனத்திலும், சந்திரன் கும்பத்திலும் நின்று, விருஷப லக்கினம், சதயம் கடைசி பாதத்தில்,



2. உதித்தது பலனெவ் வாறு உரைப்பீர்கள் முனியே நீர்தாம்
இதுசென்மம் ஆண்பா லாகும் இல்லமும் கீழ்ப்பால்
[நோக்கம்
நதிசடை அணிந்தோன் காளி நல்கிடும் கீழ்பால் தன்னில்
ததியுண்டோன் கணேசன் தென்மேல் தங்கிடும் சிறுஊ
[ராகும்.

2. பிறந்தவனின் பலன்களைச் சொல்லுவீர், முனிவரே ! இஃது ஆண் மகனின் சென்மம். வீடு கிழக்கு நோக்கி யுள்ளது. கங்கையைச் சடை முடியில் தரித்த சிவபெருமான் கோவிலும், காளி கோவிலும் கிழக்கே யுள்ளன. திருமால், விநாயகர் ஆகியோர் தென் மேற்கிலுள்ளனர். சிறிய ஊர்.

---

1. இலக்கினம்

3. சொல்லிய அடையா ளத்துள் சுதனுமே ஏழாம் சென்மம்
புல்குவான் வடுகர் வர்க்கம் புத்திரன் யோகச் சேதி
தல்லியின் தந்தை யோகம் சகோதரர் மனைவி புத்திரர்
வல்லவன் முன்பின் சென்ம மறைகின்றேம் தாயே
[கேளும்.

3. இவ்வாறு சொன்ன அடையாளங்களுள்ள ஊரில், இவன் ஏழாம் பிறப்பாக, வடுகர் குலத்தில் பிறப்பான். இவன் யோக வரலாற்றையும், தாய், தந்தை, சகோதரர்கள், மனைவி, புத்திரர் ஆகியோர் யோகங்களையும், இவன் முற்பிறப்பு, மறுபிறப்பு இவைகளைப் பற்றியும் சொல்லுகின்றேம். தாயே! கேளும்.

4. தந்தையின் துணையாண் தோடம் சத்தியும் ஒருத்தி தீர்க்கம்
தந்தையின் குணத்தைச் சொல்வோம் தரணியில் உய்வா
[ளுகும்
தந்தமும் பெரிதாய்க் காட்டும் தன்மனம் கபடு மில்லான்
தந்தியின் நிறத்த ளுகும் செகராசர் பேட்டி கொள்வன்.

4. தகப்பனுக்குச் சகோதர தோஷ மேற்படும். சகோதரி ஒருத்தி தீர்க்கமாக விருப்பாள். தந்தையின் குணத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். உலகத்தில் சுகமாய் வாழ்வான். பெரிய பற்களை உடையவன். கபடில்லாத மனமுள்ளவன். யானை போன்ற கரிய நிறமுடையவன். உலகில் அரசரைப் பேட்டி காண்பான்.

5. கிராமாதி காரம் செய்வன் கெடுதிக ளொருவர்க்
[கெண்ணுன்
தராதர மறிவ ளுகும் சல்லிய பாதை ஏற்பன்
பொரைசொலான் இளம னத்தன் புகழ்ந்தோருக் குதவி
[செய்வன்
அரிவையால் நிந்தை யேற்பன் அடாவடி கூரு ளுகும்.

5. கிராமாதிகாரியாக இருப்பான். மனத்தில் பிறருக்குத் துன்பத்தை நினையாதவன். பாகுபாடு உடையவன். கடன் தொந்தரவு உள்ளவன். கோள் சொல்லாதவன். இளகிய மனமுள்ளவன். துதி செய்தோருக்கு உபகாரி. பெண்ணால் அவமானங்களடைவான். அடாவடி சொல்லாதவன்.

6. மனைவியால் அவமா னத்தன் வரும்பொருள் செலவு முண்டு
அரிவையால் வழக்கு நேரும் அநேகமாய் விரோத மெய்தும்
சினமுண்டு உடனே தாழ்வு சிந்தையு மிரண்டு மாகும்
வினைமனம் கொஞ்சம் உண்டு வேவுகள் உடைய ளுகும்.

6. மனைவியினால் அவமானங்க ளேற்படும். அவளால் பொருட் செலவும் உண்டாகும். வழக்கும் ஏற்படும். பிறருடன் விரோதங்களும் உண்டாம். முன்கோபி. ஆனால் உடனே சாந்தமடைவான். மனத்தில் கெட்ட நினைவும் சிறிதுண்டு. இருவித எண்ணங்கள் கொண்டவன். உள வாளிக ளுள்ளவன்.

7. எப்போதும் வாயு கொஞ்சம் எய்திடு மென்று சொல்வோம்
செப்பிய குணத்தா னுக்குச் சேடிய ரிருவர் தம்மில்
ஒப்புடன் இளையா ளுக்கு உதிப்பனும் இந்தப் பாலன்
மைப்புடன் இவன்கு ணத்தை விளம்புவோம் தாயே
[யாங்கள்.

7. எப்போதும் வாயு ரோகமுடையவன். இவ்விதக் குணங்களுள்ள வனுக்கு இரு மனைவியர் வாய்ப்பர். அவர்களில், இளையவளுக்குப் பிறப்பான் இந்த ஜாதகன். இவனுடைய குணங்களைப் பற்றிக் கூறுவோம்; தாயே! நாங்கள்.

8. மாநிலம் சமதே கத்தான் வடிவினில் குள்ள னாகும்
தேன்மொழி கூறு வானும் செகராசர் பேட்டி கொள்வன்
ஊனமில் லாத தேகி உண்மையா மனத்த னாகும்
தானெனுங் கர்வம் கொஞ்சம் தந்தமுந் தரள மொக்கும்.

8. மாநிறத்தான். சமமான தேகமுள்ளவன். குள்ளமாக இருப் பான். இனிய வார்த்தைகளைக் கூறுவான். உலகில் அரசரைப் பேட்டி காண்பன். தேகத்தில் ஊன மில்லாதவன். உண்மையான மனமுள்ளவன். தானென்ற அகம்பாவ முடையவன். முத்துப் போன்ற பற்களுள்ளவன்.

9. வித்தையும் சமம தாகும் விவேகியாம் பொறுமை சாலி
உத்தம குணத்தா னாகும் உறுதியில் லாத நெஞ்சம்
பத்தினிக் கிட்ட னாகும் பரவுப காரி யாகும்
சுற்றத்தார் மதிக்க வாழ்வன் சோம்பிடான் காரி யத்தில்.

9. சமமான கல்வியறி வுடையவன். விவேகமுள்ளவன். பொறுமை சாலி. உயர்ந்த குணவான். திடமான மன மில்லாதவன், மனைவிக்கு விருப்பமானவன். பிறருக்கு உபகாரம் செய்வான். உறவினர் மெச்சும்படி வாழ்ந்திருப்பான். காரியங்களில் சோம்ப லில்லாதவன்.

10. அரசுமே சிலவூர் செய்வன் அடைந்தோரை யாத ரிப்பன்
பறைபள்ளு முடைய னாகும் பகவானின் பத்தி பூண்பன்
அரிகோபம் உடனே தாழ்வு அவசர மனமும் கொஞ்சம்
தரைபூர்வம் தென்பால் கொஞ்சம் சல்லியப் பாதை யுண்டு.

10. சில ஊர்களில் அரசனைப் போல் அதிகாரம் பெற்றிருவான். தஞ்சமென்றோரைக் காப்பான். பள்ளர், பறையர்களுடையவன். பகவான் மேல் பக்தி கொள்ளுவான். சிங்கம்போல் கோபம் கொள்வான். உடனே சாந்தமடைவான். சிறிது அவசர மனமுள்ளவன். தெற்குப் பக்கத்தில் பிதிரார்ச்சிதமான நிலமுள்ளவன். கடன் தொந்தர வுடையவன்.

11. இருபது ஐந்தாண் டுக்குள் எய்திடும் சல்லியப் பாதை
தரைவிர யத்தி னுலே சல்லியம் நீங்கு மென்றோம்
மறுபடி பூமி சேர்ப்பன் வாவிகள் சோலை செய்வன்
பெருகிடு மதன்மேல் செல்வம் புதுவில்லம் செய்வான்
[தென்பால்.

11. இருபத்தைந்தாம் வயதுக்குள் கடன் துன்பங்கள் நேரும். ஆனல் பூமியை விற்பதால் அவை நீங்கும். மறுபடி நிலங்களைச் சேர்ப்பான். நிணறுகளுள்ள தோட்டங்களை வளர்ப்பான். அதற்குப் பிறகு செல்வங்கள் மிகுதியாக உண்டாம். தெற்குப் பக்கமாகப் புது வீடு கட்டுவான்.

12. தன் துணை பெண்முன் ஒன்று சாற்றுவோம் தீர்க்க மாகப்
பின் துணை ஆண்பா லொன்று பேதையு மவ்வார் தீர்க்கம்
முன்தாயொன் றுண்டு என்றீர் மொழிகுவீர் அவர்க்குப்
[புத்திரர்
கன்னிகை ஒன்று தீர்க்கம் காதலி வெளியில் செல்வள்.

12. உடன் பிறந்தார்களில் முன் பிறந்த சகோதரி ஒருத்தி, நீண்ட ஆயுளுள்ளவள். பிறகு பிறக்கும் சகோதரி ஒருத்தியும், சகோதரன் ஒரு வனும் தீர்க்கமா யிருப்பர். பெரிய தாய் ஒருத்தி உண்டு என்று சொன் னீரே. அவளுக்குப் புத்திர பாக்கியத்தைச் சொல்லும். பெண் ஒருத்தி தீர்க்கமா யிருப்பாள். அவள் (பெரியஅன்னை) வெளியூர் செல்லுவாள்.

13. நிந்தைகள் பெறுவ ளாகும் நிகர்குலங் குற்ற மெய்தும்
தன் துணை ஆண்பால் சேதி சிங்கமும் சோதி நாவில்
அன்னவன் உதிப்ப னுகும் அவன்குணம் அரிந் றத்தான்
தன்னுடல் மெலிவு நீட்சி தமையன்சொல் தடுக்கா னுகும்.

13. பழிச் சொற்களை அடைவாள். குலத்திற்கு அவமான மேற் படும். ஜாதகனுடன் பிறந்தவனின் விபரம் சொல்லுவோம். சிம்ம இலக் கினம்; சுவாதி நட்சத்திரம் நாலாம் பாதத்தில் அவன் பிறப்பான். அவன் குணத்தைச் சொல்லுவோம். கரிய நிறமுடையவன். மெலிந்து நீண்ட உடலுடையவன். மூத்தவன் சொல்லை மீறுதவன்,

14. மத்தியில் வாயு பீடை மருவிடும் பின்பு சாந்தம்
சத்தியங் கூறு னுகும் தரணியில் சீவிப் பானும்
உத்தம னுகி வாழ்வன் உலதுக்கு விரோதி யாவன்
பத்தினிக் கிட்ட னுவன் பதார்குண மில்லா னுகும்.

14. இடைக் காலத்தில் வாயுவினுல் உபத்திரவம் ஏற்படும். பிறகு குறையும். உண்மை உரைக்காதவன். உலகில் நல்லவனுக வாழ்ந்து வந்தாலும், சிலருக்குப் பகைவனுக இருப்பான். மனைவிக்குப் பிரியன். அற்பகுண மில்லாதவன்.

15. பாரியு மொன்றே யாகும் பாவையும் மேல்பால் நேரும்
கூறொணுப் புத்திர பாகம் குவலயம் வறுமை காணுன்
தீரமாய்க் கால நாடு செல்லுவான் மத்தி லேதான்
வேறொரு தீங்கு காணுன் விமலியே கேட்டி டாயே.

15. மனைவி ஒருத்தியே. அவள் மேற்குப் பக்கத்திலிருந்து வருவாள். புத்திரப்பேறு சொல்வதற்கில்லை. உலகில் தரித்திரனுக இருக்க மாட்டான். இடைக் காலத்தில் மரிப்பான். வேறு துன்பங்கள் அடையான். தாயே! கேளுங்கள்.

16. கன்னிமுன் சேதி சொல்வேன் கணவனுக் கினிய ளாகும்
அன்னியர் குற்றம் சொல்லாள் அன்னமும் குறைவு றுதாள்
பொன்பணி அதிகம் காணுள் புருடனும் மேல்பால் நேரும்
இந்நிலம் சமயோ கத்தாள் எய்திடும் பித்த சூடு.

16. மூத்த சகோதரியைப் பற்றிச் சொல்லுவோம். கணவனுக்குப் பிரியமானவள். பிறரைக் குறை கூறுதவள். அன்னத்துக்குக் குறைவில்லாதவள். பொன் ஆபரணங்கள் அதிகமில்லாதவள். கணவனும் மேற்குப் பக்கத்திலிருந்து வருவான். உலகில் சமமான யோகமுடையவள். பித்த சூடுடையவள்.

17. சுதார்களும் ஆண்பா லொன்று தீர்க்கமாம் பாவைக் கேதான்
பதராகு மற்ற தெல்லாம் பாவையும் வயது தீர்க்கம்
அதுநிற்கப் பின்னேள் சேதி அரிநிறம் நற்கு ணத்தாள்
நறைமலர் இட்டம் கொள்வள் நாயகன் மனத்துக்
[கேற்றேள்.

17. அவளுக்குக் ஆண் குழந்தை ஒன்று தீர்க்கமாயுண்டு. மற்றவை மரிக்கும். அவள் நீண்ட ஆயுளுள்ளவள். இளைய சகோதரியின் விபரம் சொல்லுவோம். கரிய நிறமுடையவள். குணசாலி. மணமுள்ள புஷ்பங்களின் மீது விருப்ப முள்ளவள். கணவனுக்குப் பிரியமானவள்.

18. வரனுமே வடகீழ் கேரும் மைந்தர்கள் ஆணபால் மூன்று
அரிவைய ரிருவர் தீர்க்கம் அறிவுளாள் யோக சாலி
தரணியில் வறுமை காணுள் தாட்சிண்யம் கனத்த புத்தி
விரைவிலில் கோபி யாவள் மெல்லியும் தீர்க்க சிவி.

18. கணவன் வடகிழக்குத் திசையிலிருந்து வருவான். மக்களில் ஆண்கள் மூவரும், பெண்கள் இருவரும் தீர்க்கமா யிருப்பார்கள். நல்ல அறிவும் யோகமும் உடையவள். உலகில் வறுமை யில்லாதவள். தாட்சணிய முள்ளவள். பெருந்தன்மை யுடையவள். முன்கோபி. நீண்ட ஆயுளுள்ளவள்.

19. இன்னமும் விபர மாக இயம்புவோம் பின்பா கத்தில்
மன்னவன் மணத்தின் கால மறைகின்றேரும் இருபான்
[மூன்றில்
கன்னிகை தென்கீழ் தன்னில் கலப்பளாம் குணத்தைச்
[சொல்வோம்
அன்னம்போல் நடையு மொக்கும் அழகுளாள் சிவந்த
[மேனி.

19. இன்னும் விபரமாகப் பின் பாகத்தில் கூறுவோம். ஜாதகனுடைய இருபத்து மூன்றும் வயதில் மணமாகும் என்று சொல்லுவோம். மனைவி தென்கிழக்கி லிருந்து வருவாள். அவளுடைய குணங்களைச் சொல்லுவோம். அன்னத்தைப் போன்ற நடையுள்ளவள். அழகுடையவள். சிவந்த நிறமுள்ள சரீரமுள்ளவள்.

20. வந்துபின் வரன்யோ கந்தான் மாநிலம் நல்லோ ளாவள்
சிந்தையும் நல்ல தாகும் செனஉப காரி யாகும்
நிந்தைகள் ஏற்கா ளாகும் நீத்தோர்க்கு அன்ன மீவள்
பந்தினர் மதிக்க வாழ்வள் பகர்ந்திடாள் கட்டு வார்த்தை.

20. இவள் வந்த பிறகு ஜாதகனுக்கு நல்ல யோகமுண்டு. உலகத்தில் நல்லவளாக இருப்பாள். நன் மனமுடையுவள். ஜனங்களுக்கு உபகாரி. பழிகள் ஏற்க மாட்டாள். துறவிகளுக்கு அன்ன மிடுவாள். பந்துக்கள் மதிக்கும்படி வாழ்ந்திருப்பாள். பொய் கூற மாட்டாள்.

21. அவளுடைத் தாய்க்கு டும்ப மலிச்சலாம் பின்பு யோகம்
தவசிகட் கன்ன மீவள் சந்தேக மனத்த ளாகும்
நவநீதம் பலித முண்டு நங்கையும் வயது தீர்க்கம்
சிவன்தனைப் பூசை செய்யும் செல்வதி கேட்டி டாயே.

21. அவளுடைய அன்னையின் குடும்பம் முதலில் அலைச்சலுள்ளது. பிறகு யோக மேற்படும். தவம் செய்பவர்கட்கு அன்ன மளிப்பாள். சந்தேக மனமுடையவள். வெண்ணெய் முதலியவற்றை மிகுதியாய்ப் பெறுவாள். நீண்ட ஆயுளை உடையவள். பரமசிவனைப் பூசித்து வரும் செல்வியே! கேளுங்கள்.

22. புத்திர தோட மெய்தும் புகலுவீர் அந்தச் சங்கை
புத்திரத் தானந் தன்னில் [1]பூகாகம் இருப்ப தாலும்
புத்திரத் தானத் தாதி பொருந்திடும் எட்ட தாகப்
புத்திர தோடம் சொன்னேம் பராசரும் மறுத்துச்
[சொல்வார்.

22. புத்திர தோஷம் ஏற்படும் காரணங்களைச் சொல்லுவீர். புத்திர ஸ்தானமாகிய கன்னியில் ராகு இருப்பதாலும், அந்த வீட்டுக்குடையவனான புதன், எட்டாமிடமாகிய தனுசில் இருப்பதாலும், புத்திர தோஷம் ஏற்படும் என்று சொன்னேம். பராசரர் மறுத்துச் சொல்லுகின்றார்.

23. [2]பத்தினில் மதியும் தங்கப் பாலகன் தனக்குக் கர்மம்
புத்திரர் தன்னை நேரும் பூருவ தோடம் கொஞ்சம்
வித்தகன் தனக்குச் சேர்ந்து இருப்பதால் சொன்னேம்
[யாங்கள்
பத்தினி வினையை நீங்கள் பகருவீர் முனியே நீர்தாம்.

23. பத்தாமிடமாகிய கும்பத்தில் சந்திரன் இருப்பதால், ஜாதகனுக்குப் புத்திரனால் ஈமக்கடன்கள் கடைபெறும். ஆனால், முன் சென்மவினை சிறிது இவனை வந்தடைந்தது. அதனால் புத்திர தோஷம் சொன்னேம். முனிவரே! நீங்கள், பூர்வ வினையைச் சொல்லுங்கள்,

24. மைந்தனின் பூர்வம் தன்னை யறைகின்றேம் அருணை
[நாட்டில்
இந்ததோர் குல மு தித்து எழிலான குடும்பி யாகி
அந்தவன் வாழும் நாளில் அணுகின வினையைக் கேண்மோ
தன்னில்லம் வெகுநா ளாகச் சர்ப்பமும் வாச மாகும்.

24. ஜாதகன் முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். திருவண்ணாமலையில், இதே குலத்தில் பிறந்தான். வளமுள்ள குடும்பமுண்டாகி, அவன் வாழ்ந்து வரும்போது ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். இவன் வீட்டில் வெகு காலமாக ஒரு நல்ல பாம்பு இருந்து வந்தது.

---

1. இராகு
2. கும்பராசி

25. வாசமாய் இருந்த நாகம் மகுடத்தால் முற்றம் நேர
நேசனும் அரங்கம் செய்து நிகர்கழி யதனுல் வாட்ட
மாசிலாக் கால நாடு மருவிற்று அதுஓர் தோடம்
பூசைகள் புரியு மெங்கள் பூவையே கேட்டி டாயே.

25. வாழ்ந்து வந்த நல்ல பாம்பு ஒருநாள் படமெடுத்து, நடுவீட்டில் ஆட, ஜாதகனும் அதை வருத்தி, தடியினால் அடித்தான். அஃது இறந்தது. அஃது ஒரு தோஷமாம். பரமனுக்குப் பூசைகள் புரியும் பார்வதியே! கேளுங்கள்.

26. மாரனும் அந்தி யத்தில் மைந்தனும் நட்ட மாகித்
தீரமில் லாமல் நெஞ்சம் சென்றனன் கால நாடு
ஆரியன் வரையப் பட்டு அணுகுவா னிந்தப் பாலன்
கூறுவோம் நாகச் சாபம் குழவிகள் தோட மெய்தும்.

26. ஜாதகனுக்குக் கடைசியில் புத்திர நஷ்டம் ஏற்பட்டது. தைரிய மில்லாத நெஞ்சுடையவனுகி இறந்தான். பிறகு பிரமனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான் என்று சொல்லுவோம். சர்ப்ப தோஷத்தால் மக்களுக்குத் தோஷம் ஏற்படும்.

27. அந்ததோர் தோடம் தீர அருளுவீர் கிரியை ஒன்று
பந்தணி அன்னை ஊரில் பச்சைமால் ஆல யத்தைச்
சுந்தரி மண்ட லந்தான் சிலமாய் வலமாய் வந்து
மூந்திணைர் மாது மூன்று பேருக்கு அமுது சேலை ;

27. அந்த வினை நீங்க ஒரு சாந்தி அருளுங்கள். தன் தாயின் ஊரில் உள்ள, பச்சை நிறமுடைய திருமாலின் கோவிலை, இவன் மனைவியுடன் ஒரு மண்டலம் (45 நாட்கள்) ஒழுக்கத்துடன் பிரதட்சிணம் செய்து, பிராமண குலத்தவர்களான மூன்று பெண்களுக்கு உணவளித்து, ஆடை ;

28. விடம்கந்தம் பொருளும் தந்து வாக்கினுல் ஆசீர் ஏற்று
அடைவுடன் பஞ்சை கட்கு ஐயைந்து பேருக் கன்னம்
உடன்தந்து சுக்கிரன் நோன்பு உத்தமி கொள்வா ளாகில்
சுடர்முன்பு பனிபோ லத்தான் தீர்ந்திடும் நாக சாபம்.

28. மலர், சந்தனம் முதலானவைகளுடன் பொருளும் கொடுத்து, அவர்களுடைய வாயினுல் ஆசீர்வாதங்களைப் பெறவேண்டும். பிறகு இருபத்தைந்து எழைகட்கு உடனேயே அன்னமளிக்க வேண்டும். மேலும், வெள்ளிக்கிழமை தோறும் இவன் மனைவி நோன்பு இயற்றுவாளாகில், சூரியன் முன் பனிபோல் சர்ப்பதோஷம் நீங்கும்.

29. அல்லது வேறு சாந்தி அறைகின்றேரும் தாயே கேளும்
கல்லினில் நாகம் செய்து கங்கையின் கரையில் வைக்கப்
புல்கின தோடம் தீரும் பிறந்திடும் ஆண்பால் ரெண்டு
வல்லியும் அவ்வார் தீர்க்கம் மங்கையே கேட்டி டாயே.

29. அன்றி, வேறு ஒரு சாந்தி சொல்லுவோம், தாயே! கேளும். கல்லினுல் நாகப்பாம்பு உருவொன்று செய்து கங்கைக்கரையில் வைத்தால், அடைந்த தோஷம் நீங்கும். ஆண் குழந்தைகள் இரண்டு தோன்றும்: பெண் மக்கள் இருவரும் தீர்க்கமாயிருப்பர். தாயே! கேளும்.

30. வந்தவன் யோகச் சேதி யறைகின்றேரும் இனிமே லாக
நந்தியா விருத்தி உண்டு நாலாறு இரண்டாண் டின்மேல்
செந்திரு கடாட்ச மெய்தும் சல்லிய பாதை காணன்
பந்தினர் மதிப்புக் கொள்ளல் பாரினில் வறுமை காணன்.

30. ஜாதகனுடைய யோக வரலாற்றை இனிக் கூறுவோம். எருது, பசு முதலியன மிகுதியா யுண்டாம். இருபத்தாரும் வயதிற்குமேல் இலட்சுமீ கடாட்சம் ஏற்படும். துன்பங்கள் அடைய மாட்டான். உறவினர் மதிக்கும்படி வாழ்ந்திடுவான். உலகில் தரித்திரம் அடையான்.

31. அரசுமே மரண மட்டும் அவனுமே செய்வா னுகும்
திருமகள் மத்தி லேதான் சேராதோ விபரம் சொல்வீர்
வருகுமே சிலவே கோள்கள் மன்னவன் நாலில் தங்கப்
பரிதிமுன் பனிபோல் நீங்கும் பார்வதி கேட்டி டாயே.

31. அவன் கடைசி வரையில் மன்னன்போல் ஆட்சிசெய்து வருவான். இவனுக்கு நடுவில் கஷ்டங்கள் ஏற்படாவோ? விபரம் சொல்லும். சில துன்பங்கள் ஏற்படும். ஆனல், குரு நாலாமிடமாகிய சிம்மத்தில் தங்கியிருப்பதால் சூரியன்முன் பனிபோல் உடனே நீங்கும். பார்வதியே! கேளும்.

32. மந்தனின் தசைபிற் பாகம் பிரபல யோக மெய்தும்
எந்திடம் பெருமை யேற்பன் இடரிலா வாழ்வா னுகும்
முந்திநாள் ஆல யத்தை முதல்வனுய்ப் பணியும் செய்வன்
இந்திரன் போல வாழ்வன் எய்திடும் கூவல் சோலை.

32. சனிமகா தசை பிற்பாதியில் மிகுதியான யோகங்கள் ஏற்படும். பெருமையாக வாழ்ந்திடுவான். துன்பங்கள் இல்லாதவன். பழமையான ஆலயம் ஒன்றை முன்னிருந்து புதுப்பித்துத் திருப்பணிகள் செய்வான். தேவ அரசனைப்போல் புகழுடன் விளங்குவான். தோட்டம் ஏற்படுத்துவான். கிணறு முதலியன வெட்டுவிப்பான்.

33. எப்படி யோகம் சொன்னீர் இயம்புவீர் அந்தச சங்கை
மைப்புடன் வேசி யோகம் மேவிடும் கேசரி யோகம்
ஒப்புடன் தர்ம கர்ம யோகத்தால் உரைத்தோம் யாங்கள்
தப்பாம லிருபா னெட்டு ஆண்டுமேல் சாரும் யோகம்.

33. எப்படி யோக மேற்படும் என்று சொன்னீர்கள். விபரமாகக் கூறுங்கள். 'வேசி யோகம்' உள்ளவன். அவனுக்குக் கேசரி யோகம் ஏற் படும். தர்ம கர்மாதிபதியான (9-ஆம் இடம் 10-ஆம் இடம், இவைகளுக் குரிய) சனியினுடைய நிலையால் சொன்னோம். தவறுமல் இருபத் தெட்டாம் வயதிற்குமேல் யோகம் ஏற்படும்.

வேறு

34. இதற்குநே ரிடையாய் மனைதா யில்ல
மிருந்தவர் போலவே வாழ்வன்
அதுபிச கின்றிச் சாதகன் வாழ்வன்
அன்னையின் சேதியைக் கேளாய்
சதியிலா மனத்தாள் மால்நிற முடையாள்
சாதமும் குறைவுரு தாகும்
நிதியிலாள் பணிகள் அவ்வித் மாகும்
நிமலியும் பலகின முடையாள்.

34. இதற்கு எதிராகத் தன் மனைவியின் தாய் வீட்டிலிருப்பது போலவே எண்ணி வாழ்வன். குறையில்லாமல் ஜாதகனும் வாழ்ந்து வருவான். ஜாதகன் தாயின் குண விசேடங்களைக் கேளுங்கள். சூதில்லாத மன முடையவள். திருமாலைப் போன்ற கரிய நிறத்தினள். போஜன வசதி குறையாதவள். செல்வங்கள் இல்லாதவள். ஆபரணங்களும் இல்லாதவள். பலமற்ற தேக முடையவள்.

வேறு

35. இல்லமும் வடகி ழாகு மிவள்துணை ஆண்பால் காணுள்
வல்லியும் ஒருத்தி யாகு மறைகின்ரு மிவளின் பூர்வம்
எல்லையில் உயர்வ தான எழில்சோழ நாட்டி லேதான்
புல்கினுள் செக்கான் வம்சம் பூவையும் வாழும் நாளில் ;

35. இவளுக்கு வட கிழக்கில் வீடு உள்ளது. சகோதரனில்லை. சகோதரி ஒருத்தியுண்டு. இவளுடைய முற்பிறப்பைப் பற்றிச் சொல்லு வோம். பூமிகளிற் சிறந்த வளமுள்ள சோழ நாட்டில், வாணிய மரபில் தோன்றி, வாழ்ந்து வந்தபோதி,

36. கன்றுக்குப் பால்வி டாமல் கறந்தனள் அதுஓர் தோடம்
குன்றிய மனத்தோ ருக்குக் கொடுமைகள் சிலவே செய்தாள்
இன்னமும் சிலவே குற்றம் எய்திற்று என்று சொல்வோம்
அன்னவள் அந்தி யத்தில் அந்தக மாகி யேதான் ;

36. கன்றுக்குப் பாலை விடாமல் முழுவதையும் கறந்துவிட்டாள். அஃது ஒரு தோஷம். துன்பமடைந்த மனமுள்ளவர்களுக்குச் சில கொடுமைகள் செய்தாள். இன்னமும் சில தோஷங்கள் இவளுக்கு ஏற்பட்டன. இவள் கடைசியில் குருடாகி,

37. தென்திசைக் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
இன்னவள் உதித்தா ளென்றேரும் எய்திடும் முன்னூழ்த்
[தோடம்
தன்சுதர் முதலில் நட்டம் தன்துணை ஆண்பால் தோடம்
பின்மனை யாகி வாழ்வள் பேசுவோ மிவள்பின் சென்மம்.

37. இறந்தாள். பிறகு, பிரமனால் படைக்கப்பட்டு, இவள் பிறந்தா ளென்று கூறினேம். முற் பிறவியில் ஏற்பட்ட தோஷத்தால் புத்திரர்கள் முதலில் நஷ்டமடைவர். உடன்பிறந்த ஆண்மகனுக்குத் தோஷ மேற்படும். இரண்டாவது தாரமாக வாழ்ந்து வருவாள். இவள் மறு பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம்.

38. அறுமுகன் வாழ்போ ரூரில் அருளாவள் சைவச் சேயாய்ப்
பெறுந்தந்தை பூர்வம் சொல்வோம் பிரபுக்கள் தன்னி
[லேதான்
தறிதொழில் செயுங்கு லத்தில் செனித்துமே வாழும் நாளில்
மருவின வினையைக் கேண்மோ மனைவியை யில்லில்
[வைத்து ;

38. சுப்பிரமணியக் கடவுள் வாழும் திருப்போரூரில், சைவர் குலத்தில் தோன்றிடுவாள். ஜாதகன் தந்தையின் முற்பிறப்பைக் கூறுவோம். சேணியர் குலத்தில் பிறந்து, பிரபலமாக வாழ்ந்து வரும்போது, ஏற்பட்ட வினையைக் கேளுங்கள். மனைவியை வீட்டிலேயே இருத்தி ;

39. பிறர்கன்னி தன்பால் வாழப் பேதையும் வருத்த முற்று
உரைத்தசா பத்தைக் கேண்மோ உதிக்கும்பின் சென்மம்
[தன்னில்
மருவிமுன் பாரி புக்கு மவமானம் செய்வே னென்று
திருகாகக் கயிறு மாட்டிச் சென்றனள் கால நாடு.

39. வேறு மாதுடன் வாழ்ந்து வந்தான். மனைவி வருத்தமடைந்து சொன்ன சாபத்தைக் கேளுங்கள். இனி வரும் பிறவியில், முதல் மனைவியாக வந்து அவமானங்கள் செய்வேன் என்று சொல்லித் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தாள்.

40. அந்தரம் ததாஸ்து வென்ன அணுகிற்று அந்தச் சாபம்
இந்தவன் அந்தி யத்தில் இடுக்கங்கள் மிகவே கொண்டு
மூந்துமால் பத்தி யாகி மேவினன் கால நாடு
விந்தையாய்ப் பிரமன் லக்கம் விளங்கிஞ னென்று
[சொல்வோம்.

40. அங்ஙனமே அந்தச் சாபம் இவனை வந்தடைந்தது. இவன் கடைசியில் துன்பங்கள் மிகுதியாகப் பெற்று, திருமால் மீது பக்தி கொண்டு இறந்தான். பிறகு பிரமனால் படைக்கப்பட்டுப் பிறந்தான் என்று சொல்லுவோம்.

41. ஆகையா லிச்சென் மத்தில் அவமானம் மனைவி யாலே
பாகமாய் நேரு மென்றேரும் பகருவோ மிவன்பின் சென்மம்
தோகையே ரெட்டி வமிசம் தோன்றியே பெருமை யாகப்
போகபாக் கியங்கள் பெற்றுப் புண்ணியன் வாழ்வா னுகும்.

41. ஆகையால், இப் பிறப்பில் மனைவியால் அவமானங்க ளடைவான் என்று கூறினேம். இவன் மறுபிறப்பைக் கூறுவோம். தாயே! ரெட்டி யார் வமிசத்தில் பிறந்து, பெருமையுடன் செல்வங்கள் மிகுதியாகப் பெற்று, புண்ணியவானாக வாழ்வான்.

42. முப்பது ஒன்று ஆண்டில் விளம்புவோம் அன்னை கண்டம்
செப்பமாய் முப்பா றறில் செல்லுவாள் அன்னை தானும்
ஒப்புடன் அன்பான் ஒன்பான் ஆண்டினில் கன்னி மாதம்
தப்பிதம் சாத கர்க்குச் சாற்றுவோம் இவன்பின் சென்மம்.

42. ஜாதகன் முப்பத்தோராம் வயதில் அன்னைக்கு ஒரு கண்டம் ஏற் படும். திட்டமாக முப்பத்தாரும் வயதில் அன்னை மரண மடைவாள். ஐம்பத் தொன்பதாம் வயதில், புரட்டாசி மாதத்தில் ஜாதகன் இறப்பான். இவன் மறு பிறப்பைச் சொல்லுவோம்.

43. வேங்கடம் தன்னி லேதான் விளம்புவான் சத்ரியச்
[சேயாய்த்
தீங்கிலாக் குடும்பி யாகிச் செல்வனும் வாழ்வா னுகி
ஆங்கவன் சென்ன காலம் அரவுதன் தசைநா லாண்டும்
தாங்கிய திங்க ளைந்தும் சாற்றினேம் பூர்வ பாகம்.

43. திருவேங்கடத்தில் கூத்திரிய மரபில் தோன்றுவான். கெடுத லில்லாத குடும்ப முடையவனாகி, செல்வந்தனாக வாழ்ந்து வருவான். அவன் பிறந்த காலத்தில்; ராகு மகா தசையில் இருப்பு, நான்கு வருஷங்களும் ஐந்து மாதங்களுமாம். இவ்வாறு முதல் பாகத்தைக் கூறினேம்.

ஜாதகம் 55

1. சந்திரன் புகர்சேய் சியம் சனிமாதை கேது கோவில்
புந்தியு மிரவி வண்டி பொன்விடை ராகு மேடம்
இந்தவார் கிரகம் நின்று இலக்கினம் நந்தி யாகச்
சந்ததம் பலனைச் சொல்வீர் சங்கரி கேட்க லுற்றாள்.

1. சந்திரன் சுக்கிரன் செவ்வாய் சிம்மத்திலும், சனி கன்னியிலும், கேது துலாத்திலும், புதன் சூரியன் கடகத்திலும், குரு விருஷபத்திலும், ராகு மேஷத்திலும், இவ்விதமாக ஒன்பது கிரகங்களும் தங்கியிருந்து, இலக்கினம் விருஷபமாக இருப்பின், உரிய பலன்களைக் கூறுங்கள் என்று பார்வதி கேட்கலானாள்.

<table>
<tr><td></td><td>ராகு</td><td>லக்கினம்
குரு</td><td></td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">இராசி
சக்கரம்</td><td>புதன்
சூரியன்</td></tr>
<tr><td></td><td>சந்திரன்
சுக்கிரன்
செவ்வாய்</td></tr>
<tr><td></td><td></td><td>கேது</td><td>சனி</td></tr>
</table>

2. குறுமுனி சொல்லு கின்றார் கோதையே மனித சென்மம்
வருவது ஆண்பா லாகும் அவனில்லம் வடதென் வீதி
தெருவாசல் கீழ்ப்பா லாகும் தென்திசை சந்தி யுண்டு
கருமுனி அம்மன் வாசம் கௌதமர் பாரி யுண்டே.

2. அகத்தியர் கூறுகின்றார். இஃது ஆண்மகனின் ஜாதகமாகும். அவன் வீடு வடக்குத் தெற்கான தெருவில் கிழக்கு நோக்கிய வாயிலை உடையது. தெற்குத் திசையில் ஒரு சந்து உளது. கருப்பு முனி கோவிலும், அம்மன் கோவிலும் ஆங்கு இருக்கின்றன.

3. பக்கமாம் ஈசன் கோட்டம் பாழுதாம் இதுவல் லாமல்
சக்கரத் தோனு மீசன் தங்கிடும் கிழக்கி லேதான்
மிக்கவே மாரி காளி யானையின் கோட்டம் தென்கீழ்த்
தக்கவிவ் வடையா ளத்துள் சமவூரில் கங்கை சேயாய்;

3. வீட்டிற்குப் பக்கத்தில் பாழடைந்த சிவன்கோவில் ஒன்றுண்டு. கிழக்கில் விஷ்ணு கோவிலொன்றும், சிவன் கோவிலொன்றும் உள்ளன. தென் கிழக்கில் மாரியம்மன், காளி, விநாயகப் பெருமான், ஆகியோர்

கோவில்களும், இருக்கின்றன. இத்தகைய அடையாளங்கள் உள்ள அழகிய ஒருரில் வேளாள மரபில்,

4. உதிப்பனும் மூன்றும் சென்மம் உரைக்கின்றோம் தந்தை
[யோகம்
மதிமுதல் மாதுர் யோகம் அவன்துணை களத்திர புத்திரர்
விதியினுல் முன்பின் சென்மம் விளம்புவோம் குடும்பச்
[சேதி
அதிதிபோல் தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

4. இந்த ஜாதகன், தன் தந்தைக்கு மூன்றும் புத்திரனுகத் தோன்று வான். அவனுடைய தந்தை, தாய், சகோதரர், மனைவி, புதல்வர் முதலிய வர்களின் யோகங்களையும், முன்பின் பிறப்புக்களையும், குடும்ப வரலாறுகளை யும் கூறுகின்றோம். தவங்கள் புரியும் பார்வதியே! கேட்பாயாக.

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோ மெழுவ ராகும்
எந்தையே ஆண்பால் நான்கு இலகிடும் தீர்க்க மாக
நந்திடும் மற்ற தெல்லாம் நுவலுவோம் பிதாகு ணத்தைச்
சந்தத மிருஷி கப்பன் சமதேகம் கிருஷி செய்வன்.

5. இவன் தந்தையின் உடன்பிறந்தவர்களைக் கூறுவோம். அவர்கள் எழுவராவர். தாயே! அவர்களில் நான்கு சகோதரர்கள் தீர்க்கமாக இருப் பர். மற்றவர் மரிப்பார். இவன் தந்தையின் குணங்களைக் கூறுவோம். கருஞ் சிவப்பு நிறமுள்ளவன். குறைவு அதிகமில்லாது அழகிய உட லமைப்புள்ளவன். பயிர்த்தொழில் புரிபவன்.

வேறு

6. சொல்லதனில் ரெண்டுமுளான் சொகுச னுவன்
சுகதுக்கங் கலந்துறவாய் வாழ்வா னுகும்
நல்லவர்க்கு நல்லவனும் அடக்க முள்ளான்
நற்பூமி விருத்திசெய்வான் மந்த தேகி
புல்லியரை உறவுகொள்ளான் கல்வி கொஞ்சம்
புயபலத்தோன் சந்தேக மனத்த னுகும்
இல்லையென்று சொல்லாதான் மர்ம முள்ளான்
இவன்புளிப்பு இச்சையுளான் ரூகை வானே.

6. இருவிதமான சொத்க ளுண்டயவன். பகட்டாக வாழ்பவன். சுக துக்கங்கள் கலந்த வாழ்க்கை உடையவன். நல்லவர்களுக்கு நல்லவ னுவான். அடக்க முடையவன். நல்ல வினை நிலங்களை விருத்தி செய்வான். மந்தம்

மேலிட்ட உடல்நிலை யுடையவன். கீழ் மக்களுடன் நட்புக் கொள்ளாதவன். சிறிதே கல்வி யுள்ளவன். புய வலிமை மிக்கவன். ஐயங்கொண்ட மனத்தினன். யாசிப்பவர்க்கு இல்லையென்று கூறுதவன். இரகசிய முள்ளவன். புளிப்புச் சுவையுள்ள உணவுப் பொருள்களில் விருப்பமுள்ளவன். கொடை வழங்கும் இயல்பினன்.

7. கரமதினில் சுழியுடையோன் புசிப்பு இட்டன்
காதலிமேல் பட்சமுளான் கோபம் கொஞ்சம்
சிரமதனில் வடியுடையான் எவர்க்கு நண்பன்
திரமிலான் நற்குணத்தான் செலவு செய்யான்
அறமதினி லிச்சைகொஞ்சம் சமயோ கத்தன்
அண்டினோர்க் குதவிசெய்வன் பந்து நேயன்
விரைவினிலே நடக்கவல்லன் பின்னுல் யோகம்
விளம்புமிக் குணத்தானுக்கு மேவு வானே.

7. கையில் சக்கர ரேகை உடையவன். உணவில் விருப்பமுள்ளவன். மனைவியின்மீது அன்புள்ளவன். சிறிது கோப முடையவன். தலையில் வடு வுடையவன். அனைவராலும் நேசிக்கப்படுபவன். வீர்யமற்றவன். நற்குண முள்ளவன். வீண் செலவு செய்யாதவன். தருமத்தில் சிறிதே விருப்பமுள்ளவன். சமமான யோக முடையவன். தன்னை யடைந்தவர்களுக்கு உதவி செய்பவன். சுற்றத்தினர்களுக்கு நண்பன். வேகமாக நடந்து செல்லும் ஆற்றல் பெற்றவன். பிற் பகுதியில் யோகங்களைப் பெறுபவன். கூறப்பட்ட இக் குணங்களை உடையவனுக்கு ஜாதகன் புத்திரனுகத் தோன்றுவான்.

வேறு

8. இன்னவன் குணத்தை யாங்கள் இயம்புவோம் சிவந்த மேனி
நன்னய ஒடிசல் தேகி நற்கல்வி யுடைய னுகும்
உன்னத வார்த்தை சொல்வன் உறுதியா மனத்த னுகும்
பன்னியே பேச வல்லான் பாருகள் விருத்தி செய்வான்.

8. இவன் குணத்தை நாங்கள் கூறுவோம். சிவப்பு நிறமுள்ளவன். மிகவும் மெல்லிய உடலமைப்பைப் பெற்றவன். நல்ல கல்வி யறிவு உள்ளவன். மேன்மையான மொழிகளைக் கூறுவான். உறுதியான மனமுள்ளவன். பன்னிப்பன்னிப் பேசு மாற்ற லுள்ளவன். நிலபுலன்களை வளர்ப்பான்.

9. பெரியவர் உறவு கொள்வான் பூமியில் கீர்த்தி யேற்பான்
திருமகன் ஒப்ப தாகும் செகத்துளோர் மெச்ச வாழ்வன்
உறன்முறை மெச்ச வாழ்வன் ஒண்டொடி யார்க்கு நேயன்
நெறியுளான் காலி விருத்தி நிமலியே மேலும் கேளே.

2. பெரியோர்களுடன் நட்புக் கொள்வான். உலகில் புகழடைவான் மன்மதன் போன்றவன். உலகத்தார் புகழ வாழ்க்கை நடத்துவான். சுற்றத்தினர் மெச்சும்படி வாழ்வான். தன் மனைவியை நேசிப்பான். நல்லொழுக்க முள்ளவன். கால்கடை விருத்தியுண்டு. பார்வதியே! கேட்பாயாக.

10. கோதுமை ரேகை யுள்ளான் கூறுவான் சிலேடை வார்த்தை
தீதுகள் ஒருவர்க் கெண்ணுன் சித்திர வேலை செய்வன்
மேதினில் செட்டுச் செய்வன் வண்டிவா கனமு முள்ளான்
வேதியர் உறவு கொள்வான் மேதினில் சல்லியம்
[கொள்ளான்.

10. கையில் கோதுமை ரேகை யுள்ளவன். இரு பொருள்படப் பேசுபவன். பிறரெவர்க்கும் தீங்கு நினையாதவன், அழகிய பணிகளைப் புரிபவன். வியாபாரங்கள் செய்வான், வண்டி முதலிய வாகனங்களைப் பெற்றிருப்பான். அந்தணர்களுடன் நட்புக் கொள்வான். கடன்படா வாழ்வுடையவன்.

11. ஞாதிகள் மேலாய் வாழ்வன் நயம்படக் கூறு வானும்
மேதினில் தாதை போல விளங்குவா னிவனே யென்றும்
சூதுகள் செய்து இன்னுன் செயம்செய்வன் பகையோர்
[தம்மைப்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

11. தன் தாயாதிகளுக்கு மேல் நன்கு வாழ்பவன். மொழிகளை நயமாகக் கூறுபவன். உலகில் தன் தந்தை போன்று இவன் திகழ்வான் என்றும். தன் விரோதிகளைச் சூதான செயல்கள் செய்து வெற்றி கொள்வான். விநாயகப் பெருமானைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

12. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோம் மூத்தோர்
[காணுன்
அவனியில் இளையோர் இல்லை அவனுமே தனிய னுவன்
நவனியில் மணத்தின் காலம் நாட்டுவோம் ஈரொன் பானில்
பவமுள உள்ளூர் தன்னில் பகருவோம் மாதுர் வர்க்கம்.

12. இவன் உடன் பிறந்தவர்களைக் கூறுவோம். மூத்த சகோதரன் இல்லாதவன். தம்பியு மில்லாதவன். தனியனாக இருப்பான். இவனுக்குத் திருமணம் நிகழும் காலத்தைக் கூறுவோம். பதினெட்டாம் வயதில் இவனுக்கு, இவன் பிறந்த ஊரிலேயே தாய் வர்க்கத்தில் மனைவி வாய்ப்பாள் என்று கூறுவோம்.

13. அன்னவள் சிவந்த மேனி அம்மையின் வடிவு முள்ளாள்
தன்னுடைக் கணவன் சொல்லைத் தடையிலா நடத்தை
[செய்வள்
பின்னுறு மாது நல்லாள் பெற்றதாய் சமதை யாகும்
அன்னியர் தமக்கு நல்லாள் அடக்கமும் ஒழுக்க முள்ளாள்.

13. அவள் சிவந்த மேனியள். தன் தாயைப் போன்ற உருவத்தைப் பெற்றிருப்பாள். தன் கணவன் கூறும் சொல்லைத் தடை செய்யாது நிறை வேற்றுவாள். நற்குண முடையவள். தாயைப் போல் தயை யுள்ளவள். பிறரால் நல்லவள் என்று போற்றப் படுபவள். பணிவும் நல்லொழுக்கமு முடையவள்.

14. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலமு ரைது
சித்தமா யுரைத்தா லும்தான் தீங்காகு மென்று
[சொன்னேம்
அத்திரி புகலு கின்றார் அவனுக்குப் புத்திர தோடம்
பெற்றகா ரணங்கள் தம்மைப் பேசுவீர் முனியே நீர்தாம்.

14. புத்திர பாவத்தைக் கூறுங்கால், அது பலமுள்ளதாக இராது. புதல்வர்கள் தோன்றினும் நிலைக்க மாட்டார்கள் என்று கூறினேம். அத்திரி முனிவர் கூறுகின்றார். அவனுக்கு யாது காரணம் பற்றிப் புத்திர தோஷம் கூறினீர்கள். அதனைக் கூறுங்கள் முனியே!

15. அஞ்சினில் சனியும் நிற்க அஞ்சவன் புதனே யாகிக்
கஞ்சவன் தன்னை டுற்றுக் கர்ணதா னத்தில் நிற்கத்
துஞ்சிடு மதலை யென்றோம் தசமத்தோன் அதற்கு எட்டில்
மிஞ்சியே யிருப்ப தாலே முன்சென்மம் அநேக நிந்தை ;

15. புத்திர ஸ்தானமாகிய ஐந்தாமிடத்தில் சனி தங்கி யிருப்பதாலும், ஐந்தாமிடத்துக்குரிய புதன், சூரியனுடன் மூன்றாமிடமான கடகத்தில் இருப் பதாலும் புத்திரர்கள் பிறந்து இறப்பர். பத்தாமிடத்துக் குரியவனாகிய சனி, அவ் வீட்டிற்கு எட்டாமிடமாகிய கன்னியில் தங்கி யுள்ளதாலும் புத்திர தோஷ முண்டு. தவிரவும், முற்பிறப்பில் பல ஜீவனைகள் ;

16. செய்ததால் சுதர்கள் தோடம் செப்புவீர் அந்தச் சங்கை
ஐயமில் லாமல் சொல்வேன் ஆலங்கா டதற்குத் தெற்கில்
வையமேல் பேரூர் தன்னில் மருத்துவ குலமு தித்துக்
கையுத லுடைய னாகிக் கனத்தவர் பணையுண் டாகி,

16. செய்ததாலும் புத்திர தோஷம் ஏற்பட்டது. தீவினையைக் கூறுங்கள். அவ் வரலாறுகளை நன்கு கூறுவேன். திருவாலங்காட்டுக்குத் தென்மேற்கில் உள்ள ஒரு பெரிய ஊரில், செல்வச் சிறப்புள்ள மருத்துவக் குலத்தில் உதித்து, பொருளுடையவனுகத் திகழ்ந்து, ஏர், பண்ணைகளைப் பெற்று ;

17. சகலர்க்கும் உதவி யாகித் தரணியில் வாழும் நாளில்
பகையாக வந்த ஊழைப் பகருவோம் கேளும் தாயே
சுகமின்றி ஏழை தானும் சுதனுக்கு அன்னம் வேண்டி
முகப்பினில் வந்து நின்று மொழிந்தனள் அன்னம் தன்னை

17. அனைவருக்கும் உதவி செய்து நன்கு வாழ்ந்து வரும் நாளில், இவனுக்குச் சதியாக சேர்ந்த ஊழ்வினையைக் கூறுவோம்; தாயே! கேட்பாயாக. நலமில்லாத ஏழை ஒருத்தி, தன் புதல்வனுக்குச் சாதம் வேண்டி, வாயிலில் வந்து நின்று, அன்னத்தை யாசித்தான்.

18. பஞ்சைமேல் கோபம் கொண்டு பசிக்கன்னம் யில்லை [யென்றுன்
பஞ்சையும் மன்மே வெட்கிப் பகருவாள் சாபம் தானும்
தஞ்சமாய்ப் பின்சென் மத்தில் தன்துணை சுதரு மின்றி
அஞ்சியே வாழ்வா யென்று அறைந்தனள் ஏழை தானும்.

18. இவன், அவ்வேழை மீது கோபம் கொண்டு, அன்னம் இல்லையென்று உரைத்தான். அவளும் மனம் வருந்திக் கூறலானுள். "பிற் பிறப்பில் சகோதரர்களும் புதல்வர்களும் இல்லாமல் கஷ்டப்பட்டு வாழ்வாயாக" என்று கூறினுள்.

19. இதுவன்றி நீச்ச மாதை இவனுமே போகம் துய்த்தான்
அதிதிகள் பொருளை மோசம் அவனுமே செய்தா [னென்றோம்
சதமுட னிவ்வார் தோடம் சாதகன் தன்னைப் பற்றி
அதிபனு மந்தி யத்தில் மால்மலை தன்னில் சென்று ;

19. இதைத் தவிரவும், இழி குலத்தில் பிறந்தவளுடன் இன்ப மனுபவித்தான். விருந்தினர் பொருள்களை எடுத்துக் கொண்டு மோசம் செய்தான் என்று சொன்னேம். இத்தகைய குற்றங்கள் ஜாதகனை யடைந்தன. ஜாதகன் தனது கடைசி நாட்களில் அழகர் மலைக்குச் சென்றும் ;

20. தென்திசை யாவும் சென்று சேதுவின் தீர்த்தம் தோய்ந்து
அன்புடன் உள்ளூர் சென்று அவன்காலன் பக்கல் சென்று
நன்மறை யோனுல் லக்கம் நாட்டினில் வரையப் பட்டு
இன்னவன் கங்கை சேய்ாய் எய்தினு னிவனே யென்றோம்.

20. தென்னாட்டிலுள்ள தலங்களுக்குச் சென்றும், சேதுவில் நீராடியும், தன்னூர் திரும்பி மரண மடைந்தான். பிறகு பிரமனுல் படைக்கப் பட்டு, இந்த வேளாளர் மரபில் தோன்றியவன் இவன் என்றோம்.

21. ஆகையால் முன்னூழ்ச் சாபம் அவன்துணை தோட மாகும்
பாகமாய்ப் புத்திர தோடம் பகருவோ மிவனுக் கேதான்
மோகமாய்த் தோடம் நீர மொழிகின்றோம் சாந்தி தானும்
தோகையுந் தானு மாகச் சுருதியின் மலைக்குச் சென்று ;

21. ஆதலின் முற்பிறப்பில் ஏற்பட்ட சாபத்தினுல் சகோதர தோஷமும், புத்திர தோஷமும் இவனுக்கு ஏற்பட்டன என்று கூறுவோம். இந்தத் தோஷங்கள் நீங்கச் சாந்தி ஒன்று உரைக்கின்றோம். இவன் தன் மனைவியுடன் திருக்கழுக்குன்றத்துக்குச் சென்று ;

22. கிரியதைச் சுற்றி வந்து கங்கையைத் தரித்தோ னுக்கு
மருமலர் வில்வத் தாலே சகஸ்திர அருச்சனை செய்து
அரனடி யார்க்கு அன்ன மையைந்து பேருக் கீந்து
குருதியின் வார நோன்பு கொள்ளவும் தோடம் போக்கி ;

22. கிரிப் பிரதட்சிணம் செய்து, கங்கையைத் தன் சடைமுடியில் தரித்துள்ள சிவபெருமானை வில்வ தளங்களால் ஆயிர மர்ச்சனைகள் செய்து, இருபத்தைந்து சிவனடியார்களுக்கு உணவளித்து, செவ்வாய்க்கிழமை தோறும் விரதம் இருந்தால், இவனை யடைந்த தோஷங்கள் நீங்கி ;

23. மதலைகள் விருத்தி யாகு மறைகின்றோம் ஆண்பா லொன்று
மதிமுக மாதுஒன்று மறைகின்றோ மிவனுக் கேதான்
விதியதைச் செய்யா னுகில் விளங்காது சுதர்கள் தாமும்
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

23. புத்திர விருத்தி ஏற்படும் என்று கூறுவோம். பிறகு, இவனுக்கு புத்திரன் ஒருவனும், புத்திரி ஒருத்தியும் உண்டாவர் என்று கூறுகின்றோம். கூறப்பட்ட சாந்தியைச் செய்யானுயின் புத்திரப் பேறு ஏற்படாது. தேவர் களைக் காக்கும் பார்வதியே ! கேட்பாயாக.

24. அன்னையின் நிறம்சி கப்பாம் அழகுளாள் பொறுமை சாலி
கன்னென மொழியே சொல்வள் காசினில் நிந்தை யுள்ளாள்
இன்னமும் சித்தி ரங்கள் இயம்புவார் இவள்தன் பேரில்
சொன்னது மெய்யே யாகும் சொல்லுவோம் துணைவர்
[தம்மை

24. தாயின் நிறம் சிவப்பு. அழகுள்ளவள். பொறுமை யுள்ளவள். கரும்பினு மினிய சொல்லுடையவள். உலகில் பழிகளே ஏற்பாள் உலகினர்

இவள் மீது பற்பல பழிகளைக் கூறுவார்கள். யாம் கூறியவை யனைத்தும் உண்மையாம். அவளுடைய சகோதர பாவத்தைக் கூறுவோம்.

25. ஆணது ரெண்டு மாகும் அதுபோலே பெண்பா லாகும்
பூணுவோம் நான்கும் தீர்க்கம் புகலுவோம் குலத்தில்
[குற்றம்
காணவே மாதுர் பூர்வம் கழறுவோம் தாயே கேளும்
தோணிய ரப்பர் வாழும் சீர்காழி தன்னி லேதான்;

25. இவள் உடன் பிறந்தவர்களில்; ஆண்கள் இருவரும் பெண்கள் இருவருமாக நால்வர் தீர்க்கமாக இருப்பர். இவளது குலத்தில் குற்றங்களையும் கூறுவோம். தாயின் முற்பிறப்பைக் கூறுவோம். தாயே! கேட்பாயாக. தோணியப்பர் கோயில் கொண்டுள்ள சீகாழித் தலத்தில்;

26. வடுகர்தங் குலமு தித்து மைந்தர்க ளுள்ளா ளாகித்
திருமகள் விலாசம் பூண்டு செல்வங்கள் மிகவே யுண்டாய்
அடைவுடன் வாழும் நாளில் அவள்குல தெய்வம் மாரி
இடமதைச் சுத்தி செய்து ஏற்றினாள் தீபம் ஒன்று.

26. வடுகர் குலத்தில் தோன்றி, மக்களை யடைந்து, செல்வச் சிறப்புக்கள் பெற்று, சீருடன் வாழும் நாளில், அவள் குல தெய்வமான மாரியம்மன் கோவிலே வலம் வந்து, அங்கு ஒரு விளக்கேற்றி வைத்தாள்.

27. ஏற்றின தீபம் தானும் இவளுடை ஆயுள் மட்டும்
வேறொரு குறைவில் லாமல் விளங்குது யின்னும் தானும்
நாத்தனர் விதவை மாது நங்கைபால் வாழு நாளில்
கூற்றினைப் போலே வார்த்தை குறித்தனள் அவள்தன்
[பேரில்;

27. அந்த விளக்கு இவள் ஆயுள் வரை யாதொரு குறையுமின்றி விளங்கி வந்தது. விதவையான நாத்தி யொருத்தி இவளுடன் வாழ்ந்து வந்தாள். அவள் மீது இவள், இயமனைப் போல் சினந்து, சில மொழிகளைக் கூறலானாள்.

28. அவளுமே மன்மும் வெட்கி அடாநிந்தை சொன்ன பாவி
நவமதில் மறுசென் மத்தில் நாத்திக ளில்லா ளாயும்
அபவாத பிணைத்தும் நேரும் அதிர்ந்துபின் சலத்தில் வீழ்ந்து
இவளுமே மரண மானாள் ஈச்வரி கேட்டி டாயே.

28. அவளும் மனம் வருந்தி, என்மீது அடாத சொற்களைச் சொன்ன பாவி, மறு பிறவியில், நாத்திய ரின்றி, பல பழிகளை யேற்று, வாழ்க என்று கூறி, பிறகு, தண்ணீரில் விழுந்து மரண மடைந்தாள், பார்வதியே! கேட்பாயாக.

29. விதவையின் சாபம் தானும் மேவிற்று அவளுக் கேதான்
பதியினில் வரனு மாண்டு பத்தினி சிறையாய் நின்று
நதிபல தீர்த்தம் தோய்ந்து நமன்பதிக் காளாய்ச் சென்று
விதியவன் வரையப் பட்டு விளங்கிழை யிவளே யென்றோம்.

29. விதவையின் சாபம் இவளை வந்தடைந்தது. பிறகு, இவள் கணவன் இறந்து, விதவையாகி, புண்ணிய நதிகளில் நீராடி மரணமடைந்தாள். மீண்டும், பிரமனால் படைக்கப்பட்டு இப்பிறப்பில் தோன்றினாள் இவள் என்று கூறினோம்.

30. இச்சென்மம் தன்னி லேதான் இலகிடும் விசேட நிந்தை
கச்சணி மாது வுக்குக் காளையு மொன்றே தீர்க்கம்*
நச்சுவா பரணம் கொண்ட நாயகி தீப புண்யம்
மிச்சமாய் மறுசென் மத்தை விளம்புவோம் கேளும் தாயே.

30. இப்பிறவியில் பல பழிகள் இவளை யடையும். இவளுக்கு ஒரு புத்திரன் தீர்க்கமாக இருப்பான். பாம்பை அணியாகக் கொண்ட சிவபெருமான் தேவியே! கோவிலில் விளக்கேற்றிய பெரும் புண்ணியத்தைச் செய்த இவள் மறு பிறப்பைக் கூறுவோம்; கேளுங்கள். தாயே!

31. குறுமுனி இவ்வார் கூறக் கோதையும் கேட்க லுற்றார்
வரும்சுதர் ஒன்றே தீர்க்கம் வரைந்திட்டீர் இனிமே லாகப்
பெருகுமோ பெண்பா லுண்டோ பேசுவீர் முனியே நீர்தாம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

31. அகத்தியர் இவ்வாறு சொல்லவும், பார்வதி அவரைக் கேட்கலானாள். "இவளுக்கு ஒரே புத்திரன் என்று கூறினீர்கள். மேலும் இவளுக்குப் புத்திரர் உளரோ? பெண்கள் பிறப்பரா? முனியே! தாங்கள் கூறுங்கள்". வேதங்களின் முடிவில் விளங்கிடும் பரம்பொருளாகிய அம்பிகையே! கேளுங்கள்.

32. மூன்றினி லிரவி நிற்க அம்மூன்றில் காரி தங்கக்
காணுது உடன்பி றப்புக் காணிலும் தீதே யாகும்
தோணவே இவள்மூன் சென்மம் செமதக்கினி கோட்டத்
[துக்கு
நாணுமல் தீபம் ஒன்று நாட்டின பலத்தி னுலே;

32. மூன்று மிடமாகிய கடகத்தில் சூரியன் தங்கி யிருப்பதாலும், அதற்கு மூன்று மிடமாகிய கன்னியில் சனி தங்கி யிருப்பதாலும், புத்திரப் பேறு ஏற்படாது. தோன்றினும் நீதாம். இவள் முற்பிறப்பில் மாரி கோவிலில், தவறுது விளக்கு ஒன்று வைத்த காரணத்தால்;

33. புத்திரன் ஒன்றே யென்றேரும் புகலுவோம் இவள்பின்
[சென்மம்
சித்தமாய்த் தில்லை தன்னில் சேடர்தன் குலமு தித்து
வித்தகி வாழ்வா ளாகும் விளம்புவாள் அம்மன் தாமும்
உத்தமி இச்சென் மத்தில் உதித்தவள் கங்கை வம்சம்;

33. இவளுக்குப் புத்திரன் ஒருவன் தோன்றுவான் என்றேரும். இவள் பிற் பிறப்பைக் கூறுவோம். சிதம்பரத்தில் சேடர் குலத்தில் தோன்றி இவள் வாழ்வாள். பார்வதி கேட்கலானுள்; இவள் இப்பிறப்பில் சிறந்த வேளாளர் குலத்தில் தோன்றி;

34. சேடர்தன் குலத்தி லேதான் செனிக்கும்கா ரணங்க ளென்ன
நாடியே சொல்லு மென்ன நாயகி யிச்சென் மத்தில்
தேடுதற் கரிய ஈசன் சிந்தையு மில்லா ளாகி
மூடபுத் திகளு முண்டு மொழிந்திட்டோம் சேட வம்சம்.

34. மறு பிறவியில் சேடர் குலத்தில் தோன்றக் காரணங்கள் யாவை? தாங்கள் கூறுங்கள். இவள் இப் பிறப்பில், பலராலும் தேடுதற்கரிய பரம் பொருளின் நினைவின்றி, மூட புத்திகளைக் கொண்டு வாழ்ந்து வந்தமையால் சேடர் வமிசத்தில் தோன்றுவாளெனக் கூறினேம்.

35. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் பெண்ணை
[யோரம்
எந்தையே பேரூர் தன்னில் இலகிய குலால வம்சம்
இந்தவார் மன்னன் தோன்றி இடுக்கங்க ளில்லா னுகி
வந்தவர் தமக்கு அன்னம் வள்ளல்மேல் பத்தி கொண்டு;

35. தந்தையின் முன் சென்மத்தைக் கூறுவோம். பெண்ணையாற்றின் கரையோரத்தில் அமைந்துள்ள பெரிய ஊரொன்றில், குயவர் குலத்தில் தோன்றி, தன்பங்கள் எவையுமின்றித், தன்னை யடைந்தவர்களுக்கு விருந்தளித்து, இறைவன் மீது பக்தி கொண்டு;

36. நாவது தவறு னுகி நாட்டினில் நல்லோ னுகிப்
பாவையுஞ் சுதர்க ளுண்டாய்ப் பாரினில் வாழ்ந்தா
[னென்றேரும்
மேவியே மறலி பக்கல் வேதத்தோன் வரையப் பட்டுப்
பூவினில் காஞ்சி யுத்ரம் பிறந்தனன் இவனே யென்றேரும்.

36. சொன்ன சொல் தவறாது, உலகத்தவர்க்கு நல்லவனாகி, மனைவி மக்களோ டடைந்து வாழ்ந்து வந்தான் என்றோம். பிறகு மரண மடைந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, உலகில், காஞ்சிக்கு வடக்குத் திசையில் பிறந்தான் இவன் என்று கூறினோம்.

37. பின்சென்மம் வடதே சத்தில் பேசுங்கோ கரணம் தன்னில்
அன்புட னிக்கு லத்தில் அவனுமே உதிப்பா னாகும்
இன்பமாய்ப் பொருளும் பெற்று இகபர னன்பு பூண்டு
பின்சென்ம மில்லா னாகிப் புக்குவான் தேவ னாக.

37. மறுபிறப்பில், வட தேசத்திலுள்ள கோகர்ண மென்னும் தலத்தில், சிறந்த இதே குலத்தில் தோன்றுவான். நன்கு செல்வங்களைப் பெற்று, இறைவனிடம் அன்பு கொண்டு, மறு பிறவி இல்லாது, தேவர் களில் ஒருவனாகி, மோட்ச மடைவான்.

38. முப்பது ஆண்டு தன்னில் மூலமாம் சிம்ம மாதம்
செப்புவோம் தந்தைக் கேதான் சந்திரன் தசையி லேதான்
ஒப்புடன் ராகு புக்தி உறுதியாய் நடக்கு மென்றோம்
அப்பணி சடையோன் தேவி அறைந்தது தப்பா
[தென்றோம்.

38. ஜாதகனின் மூப்பதாம் வயதில், ஆவணி மாதம், மூல நட்சத்திரம் கூடிய தினத்தில் தந்தைக்கு மரணத்தைக் கூறுவோம். அப்பொழுது ஜாதக னுக்குச் சந்திர மகா தசையில் ராகு புக்தி நடைபெறும் என்றோம். சடைமுடியில் கங்கை யணிந்துள்ள சிவபெருமான் தேவியே! கேட்பாயாக.

39. எண்ணஞ்சு மூன்று ஆண்டில் இடபமா தத்தி லேதான்
திண்ணமாய் மாதுர் கண்டம் சேய்தசை கேது புக்தி
வண்ணமாய் நடக்கு மென்றோ மறைந்தது தப்பா தாகும்
அண்ணலைப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

39. ஜாதகனின் நாற்பத்து மூன்று மாண்டில், வைகாசி மாதத்தில், தாய் மரண மடைவாள். அஃது அங்கார மகாதசை கேது புக்தியில் நடை பெறும் என்றோம். கூறியது தவறாது. சிவபெருமானைப் பூசிக்கும் பார்வதியே! கேட்பாயாக.

40. சாதகன் மரண காலம் செப்புவோம் அறுப தாண்டில்
மேதினில் கூனி மாதம் வளர்பிறைத் திரயோ தசியில்
ஓதுவேன் நிசியி லேதான் உத்தமன் உடலம் வாடும்
போதவே இவன்பின் சென்மம் போற்றுவோம் கேளுந்
[தாயே.

40. ஜாதகனின் மரண காலத்தைக் கூறுவோம். அறுபதாம் வயதில் பங்குனி மாதத்தில், சுக்கில பட்சத் திரயோதசி திதியில், கள்ளிரவில் ஜாதகன் மரண மடைவான். இவனது மறு பிறப்பைக் கூறுவேன்; தாயே! கேளுங்கள்.

41. உத்திரம் காசி தன்னில் உதிப்பனும் பிரும்ம சேயாய்ப்
பக்தியாய்த் தேவ பூசை பண்ணுவான் பாக்கிய முள்ளான்
அத்திரி கேட்க லுற்றார் அவனுடை யோகச் சேதி
சித்தமாய்ச் சொல்லு மென்ன செப்புவார் முனிவர் தாமே.

41. வடக்குத் திக்கில் உள்ள காசித் தலத்தில், அந்தணர் மரபில் ஜாதகன் தோன்றுவான். பக்தியுடன் கடவுளுக்குப் பூசை பண்ணுவான். அதிருஷ்ட முடையவன். அத்திரி முனிவர் கேட்கலானார்; அவனுடைய யோகங்களே நன்கு கூறுங்கள். முனிவரும் கூறலானார்.

42. பத்தாண்டு மேலா யாகப் பகருவோம் யோகச் சேதி
வெற்றியாம் பாக்கியம் பூமி விசேடமாஞ் சல்லியங்
[கொள்வன்
உத்தமர் நேசம் கொள்வன் உலகுக்கு நல்லோ னுவன்
வித்தகன் வறுமை யில்லான் விருத்தியாம் காலி தானே.

42. பத்து வயதுக்கு மேல் யோகங்கள் உண்டு. நல்ல அதிர்ஷ்டம் உண்டாம். பூமியும் ஏற்படும். கடனும் உண்டு. பெரியோர்களின் நட்பைக் கொள்ளுவான். உலகத்தவர்க்கு நல்லவனுவான். வறுமை யில்லாதவன். கால்நடை விருத்தியு முண்டு.

43. கிரகமும் புதிதாய்ச் செய்வன் கண்ணிய மாக வாழ்வன்
உறன்முறை மெச்ச வாழ்வன் உதித்தபின் மாமன் யோகம்
திருமகள் கடாட்ச முள்ளான் சயம்செய்வ னெடுத்த வேலை
நிறையவே குடும்பி யாவன் நிமலியே கேட்டி டாயே.

43. புதிய வீட்டையும் கட்டுவான். மதிப்புடன் வாழ்வான். உறவினர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். இவன் தோன்றியபின் மாமன் மார்களுக்கு யோகங்கள் உண்டாம். இலட்சுமீ கடாட்சம் உள்ளவன். எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடிப்பான். நிறைந்த குடும்பத்தை யடைவான். பார்வதியே! கேட்பாயாக.

44. இவனுடை ஆஸ்தி மொத்தம் இயம்புவோ மெண்ணு
[யிரம்பொன்
நவனியில் சேர்ப்பா னுகும் நாயகன் குடும்பச் சேதி
அவனியி லிரண்டில் சொல்வோம் அறுரெண்டு ஆண்டு
[தன்னில்
கவனமாய் நிதிநிட் சேபம் கண்டிடு மென்று சொல்வோம்.

44. இவன் எண்ணூயிரம் பொன் மதிப்புள்ள ஆஸ்திகளை உலகில் சேர்ப்பான். இவன் குடும்ப வாலான்களை இரண்டாம் பகுதியில் கூறுவோம். பன்னிரண்டாம் வயதில் ஒரு புதையலும் கிடைக்கும் என்று சொல்லுவோம்.

45. செனித்திடு காலம் தன்னில் செம்பாம்பு தசையி ருப்புக்
குனித்திடு மாண்டு ஒன்று கூர்திங்கள் பதினென் முகும்
தினமது மூன்று மாகும் சேய்க்குமே நலிகள் உண்டு
தனமதில் கலக முண்டு தாய்பிணி வர்க்கம் சூதம்.

45. ஜாதகன் ஜனன காலத்தில், கேது மகா தசையில் இருப்பு; வருஷம் ஒன்று, மாதங்கள் பதினென்று, நாட்கள் மூன்றுமாம். பிறந்த போது பலாரிஷ்டங்களும் உண்டு, செல்வத்தின் காரணமாக வழக்குகளும் ஏற்படும். தாய் வர்க்கத்தில் பல அசுபங்கள் ஏற்படும்.

வேறு


46. சோரபய மாகும் சேர்ந்துவிடுங் காலிகளும்
பார்பலிதங் கொஞ்சம் பகருவோம் வீரமுடன்
மற்றபலன் யாவு மறைகுவோ மிரண்டினிலே
வெற்றிவேல் கண்ணரசே மேலுமே கேளாயே.

46. திருடர் பயமும் ஏற்படும். கால்நடைகள் மடிந்து போம். விஷ புலன்கள் விருத்தி சிறிது உண்டு. மற்றப் பலன்களை இரண்டாம் பகுதியில் கூறுவோம். வெற்றி பொருந்திய வேல் போன்ற கண்களைப் பெற்ற பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

ஜாதகம் 56

1. மதிதனு சனியுங் கோலாம் மங்களன் நந்தி யாகப்
புதன்புக ரிரவி கேது பொன்னுமே சிய மாக
விதிகருங் கோளுஞ் சாடி விடையது சென்ம மாக
இதுவகக் கோளும் நின்ருல் இயம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் தனுசிலும், சனி துலாத்திலும், செவ்வாய் விருஷபத்திலும், புதன் சுக்கிரன் சூரியன் கேது குரு சிம்மத்திலும், இராகு கும்பத்திலுமாக, இவ்வாறு ஒன்பது கிரகங்களும் தங்கி, இலக்கினம் விருஷபமாக விருந்தால், உரிய பலன்களைக் கூறுங்கள்.



2. சங்கரி கூறும் போது சயமுனி கூறு கின்ருர்
பொங்கிய ஆண்பால் சென்மம் பிறந்தஇல் வடதென் வீதி
இங்கித மேற்கு வாசல் யானையின் கோட்ட மேல்பால்
சிங்கவா கனத்தாள் தெற்கில் சிறப்புள நதியு முண்டு.

2. பார்வதி கேட்கும்போது, செயமுனி கூறலானர். இஃது ஆண்பால் ஜாதகமாகும். பிறந்த வீடு தெற்கு வடக்கு வீதியில் மேற்கு நோக்கிய வாயிலை உடையது. மேற்கில் விநாயகப்பெருமான் கோவில் உண்டு. காளி கோவிலும், சிறப்புள்ள நதியொன்றும் தெற்கில் உள்ளன.

3. அருகனின் ஈசன் கோட்டம் அழிந்திடு மிதுவல் லாமல்
குறைதலை மாரி தங்கும் கூர்முனி அம்மன் கோட்டம்
உரைக்கின்றேரும் தட்சி ணத்தில் உமையவள் ஈசன்
[கோட்டம்

உரம்பெற்ற சூழி யுண்டு மாரியும் மேற்கில் தங்கும்.

3. ஜைனர்கள் தெய்வமான அருகர் கோவில் ஒன்று பாழ்பட்டிருக்கும். தவிரவும், மாரியம்மன் கோவிலொன்றும் அங்கு உண்டு. முனியாண்டவர் கோயிலும், அம்மன் கோவிலுமுள்ளன. தெற்கில் பார்வதியின் கணவனுகிய சிவபிரான்கோவிலும் கீர்நிலையும் உள்ளன. மேற்கில் மாரியம்மன் கோவில் உள்ளது.

4. மாலவ னருகில் தங்கும் வடமேல்பால் அருகர் வாசம்
கோலமாய்த் துருவம் கீழ்ப்பால் குறித்தவிவ் வடையா
[ளத்துள்
ஏலவே சடஊர் தன்னில் இயல்கூரை யில்லம் தன்னில்
பாலனும் காந்த கோத்ரம் பாரினில் வருவா னென்றேரும்.

4. வீட்டின் அருகில் விஷ்ணு கோவிலும், வடமேற்கில் அருகர் கோவிலும், கிழக்குத் திசையில் அழகிய மலைக்கோட்டைகளும் உள்ளன. இவ் வாறு கூறப்பட்ட அடையாளங்களுள்ள அழகிய ஊரில், கூரை வேய்ந்த வீட்டில், காந்த கோத்திரத்தில் ஜாதகன் தோன்றுவான் என்று கூறினேம்.

5. அன்னையின் தந்தை யோகம் அவன்தந்தை புத்திர யோகம்
துன்னிய மனைவி யோகம் தோன்றிய முன்பின் சென்மம்
இன்னவன் சென்ன யோகம் இசைக்கின்றேரும் இந்நூல்
[தன்னில்
தன்னிய நவக்கோ ளாலே சாற்றினேம் கேளுந் தாயே.

5. ஜாதகனின் தாய், தந்தையர், புத்திரர்கள், மனைவி முதலியவர் களின் யோகங்களையும், முன்பின் சென்மங்களையும், ஜாதகன் சென்ன யோகத்தையும் ஒன்பது கிரகங்களின் அமைப்புக்களையும் நன்கு ஆராய்ந்து, இந்நூலில் கூறுவோம். தாயே! கேளுங்கள்.

6. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் சிவந்த மேனி
பந்தமா யொடிசல் தேகி பாருகள் சேர்ப்பா னுகும்
வந்தவர்க் கன்ன மீவன் மர்மமில் லாத நெஞ்சம்
சிந்தையும் வெகுளி யாவன் தெய்வமும் சக்தி யென்றேரும்.

6. தந்தையின் குணத்தை நாங்கள் கூறுவோம்! சிவப்பு நிறமுள்ள வன். மெல்லிய உடலுடையவன். நிலபுலன்களைச் சேர்ப்பான். தன் வீட்டை யடைந்தவர்களுக்கு உணவளிப்பான். இரகசியமில்லாத மனமுடையவன். வெளிப்படையான எண்ண முள்ளவன். கடவுளருள் நிறைந்தவன் என்றேரும்.

7. வித்தையும் புத்தி யுள்ளான் மேலவர் பக்தி கொள்வன்
உத்தம ஞகி வாழ்வன் உலகுக்கு நல்லோ ஞவன்
சத்திமேல் விருப்பம் கொள்வன் தயாளமாங் குணத்த
[ஞகும்
அத்திபோல் நடையு மாவன் அகசியம் செய்யா னென்ரேம்.

7. நற் கல்வியும், நல்லறிவும் உள்ளவன். பெரியோர்களிடம் பக்தி யுள்ளவன். மேன்மையாக வாழ்வான். உலகத்தவருக்கு நல்லவஞகத் திகழுவான். மனைவிமீது விருப்ப முள்ளவன். துன்பமுற்றவருக்கு இரங்கும் குணமுடையவன். யானையைப்போல் கம்பீர நடை யுள்ளவன். விகட மாகப் பேசுதல் செய்யான் என்று சொன்ரேம்.

8. மதிதொழில் செய்வா ஞகும் மங்கையர் மோக வானும்
பதியது செய்வா ஞகும் பந்துவை யாத ரிப்பன்
திதிநெய்பா லிட்டங் கொள்வன் தன்தேகம் மேக
[ரோகன்
துதிசெய்தோர் தமைக்காப் பானுந் துணைவரை
[யாதரிப்பன்

8. மதிக்கத் தக்க தொழில்களைப் புரிவான். பெண்கள்மீது இச்சை யுள்ளவஞவான். வீடுகளைக் கட்டுவான். உறவினர்களை யாதரிப்பான். தயிர், நெய், பால் இவைகளில் விருப்பமுள்ளவன். உடலில் மேக ரோகம் ஏற்பட்டு, துன்பப்படுவான். தன்னைப் புகழ்ந்தவர்களை யாதரிப்பான். சகோதரர்களைக் காப்பான்.

9. தந்தைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு முதல்மா தின்ற
மைந்தனு மிவனே யென்ரேம் வகுக்கின்ரேம் துணைவர்
[தம்மைப்
பிந்திய துணையாண் ரெண்டு பெண்ணது மூன்று மாகும்
சந்ததந் தீர்க்க மென்ரேம் சங்கரி கேட்க லுற்ருள்.

9. ஜாதகன் பாட்டனுக்கு இரு மனைவியர். முதல் மனைவிக்கு இவன் தந்தை தோன்றுவான் என்று கூறுவோம். சகோதர பாவத் தைக் கூறுகின்ரேம். இளைய சகோதரர்கள் இருவரும், சகோதரிகள் மூவரும் தோன்றுவர். ஐவரும் தீர்க்கமாக இருப்பர் என்ரேம். பார்வதி கேட்க லாளுள்.

10. மற்றொரு இளைய தாய்க்கு மைந்தர்கள் உண்டோ வென்னச்
சித்தமாய் ஆண்பா லொன்று செப்பிலே மிவளுக்
[கேதான்
வித்தகர் துணைவர் சேதி விளம்புவோ மிரண்டாம் பாகம்
அத்தியைப் பெற்ற மாதே அறைந்தன மொழிகுன் ரூது.

10. இவன் இளைய தாயாருக்கு மைந்தர்கள் தோன்றுவார்களோ? நிச்சயமாக அவளுக்கு ஆண்மகன் ஒருவன் தோன்றுவான் என்று சொன்னோம். இவனுடைய உடன்பிறந்தார் செய்திகளை இரண்டாம் பாகத்தில் கூறுவோம். விநாயகப் பெருமானைப் பெற்ற பார்வதியே! யாம் கூறிய மொழிகள் தவறு.

11. சாதகன் சிவந்த மேனி சமர்த்தனாய் வார்த்தை சொல்வன்
சூதிலான் கபடு மில்லான் சுகமான வார்த்தை சொல்வன்
பாதக மொருவர்க் கெண்ணுன் பலவிதக் கல்வி கற்பன்
மாதவர்க் கன்ப னாகும் வாக்குகள் சுத்த முள்ளான்.

11. ஜாதகன் சிவப்பு நிறமுள்ளவன். சாமர்த்தியமாக உரையாடுவான். சூதும் கபடமு மில்லாதவன். இனிய மொழிகளைப் பேசுவான். எவருக்கும் தீங்கு நினையாதவன். பல துறைகளில் கல்வி கற்பான். பெரியோர்களை நேசிப்பான். சொற்கள் தவறுதவன்.

12. பலவிதச் செட்டுச் செய்வன் பயிர்த்தொழி லுடைய னாகும்
நலமுள தீர்த்தம் தோய்வன் நசித்தவர்க் குதவி செய்வன்
விலைமாதர் விருப்பம் கொள்வன் விரும்புவான் சுகபு சிப்பு
கலகத்தில் மனம்வை யாதான் கனத்தவர் நேசம் கொள்வன்.

12. பல வியாபாரங்களைச் செய்வான். பயிர்த்தொழில் புரிவான். புண்ணியத் தீர்த்தங்களில் நீராடுவான். துன்பமடைந்தவர்களுக்கு உதவி செய்வான். வேசிகள்பால் நேசம் கொள்வான். சுக போஜனத்தை விரும்புவான். சச்சரவுகளில் மனம் செலுத்த மாட்டான். மேன்மையானவர்களிடம் நேசங் கொள்வான்.

13. உருத்திர ரேகை யுள்ளான் நுவலுப தேசம் கொள்வன்
நித்தியம் சில னுவன் நேமியில் வசையுங் கூறன்
பத்திமா னவர்க்கு நேயன் பாரினில் கீர்த்தி ஏற்பன்
சுற்றத்தார் மெச்ச வாழ்வன் சுகபோக வுடைய னாமே.

13. இவன் கையில் உருத்திர ரேகை யுண்டு. நல்லுபதேசங்களைப் பெறுவான். எப்பொழுதும் நல்லொழுக்க முடையவ னுவான். உலகில்

எவரையும் தூஷிக்காதவன். அடியார்களிடம் அன்பு கொள்வான். உலகில் புகழடைவான். பந்துக்கள் மெச்ச வாழ்வான். மிகுந்த சுகமுடையவனுவான்.

14. பால்பாக்யம் விருத்தி செய்வன் பகைவரை வசியம்
[செய்வன்
சீலமு முடைய னுகும் தீரமா மனத்த னுகும்
கோரின காரி யத்தைக் குணமுடன் முடிக்க வல்லன்
ஆறுமா முகன்மே லிட்டம் அவனுமே கொள்வா
[னென்றும்.

14, பால் பசு பாக்கியங்களை விருத்தி செய்வான். பகைவர்களையும் வசப்படுத்துவான். ஒழுக்க முடையவன். தைரியமுள்ள மனத்தினன். விரும்பிய காரியத்தை நலமுடன் முடிக்கும் ஆற்ற லுடையவன். இவன் முருகன் மீது பக்தி கொள்ளுவான் என்போம்.

15. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோ மாண்பா
[லொன்று
அவனியில் பெண்பால் அவ்வார் அறைகின்றோம் தீர்க்க மாகச்
சயமுனி இவ்வார் சொல்லச் செப்புவார் பராசர் தாமும்
நயமுடன் துணைவர் விருத்தி நாட்டினீ ரெவ்வி தங்கள்.

15. இவனது உடன்பிறந்தவர்களைப் பற்றிக் கூறுவோம். இவனுக்குச் சகோதரன் ஒருவனும். சகோதரி ஒருத்தியும் தீர்க்கமாக உளர் என்று கூறுவோம். செய முனி இப்படிச் சொல்லவும், பராசரர், சகோதர விருத்தியை எப்படிக் கூறினீர்கள்? என்று கேட்டார்;

16. அம்புலி மூன்றோன் ஆகி அட்டமம் தன்னி லேறத்
துன்மையாய்ச் சனிசேய் பார்க்கத் தோன்றுது துணைவ
[ரென்றும்
இன்பமாய்க் குருவும் நாலில் இருந்துமே பதியைப் பார்க்கத்
தன்மையாய்த் துணைவர் தோன்றும் தலைவியே கேட்டி
[டாயே.

16. மூன்றும் வீட்டுக் குடையவனை சந்திரன், எட்டாமிடத்தில் தங்கியிருந்து, சனி செவ்வாய் ஆகியோரால் பார்க்கப்படுகின்ற காணத்தால் சகோதரர் தோன்றமாட்டார் என்று கூறினோம், குரு, சிம்மத்திலிருந்து இலக்கினத்தைப் பார்ப்பதால் சகோதரர் தோன்றுவர். பார்வதியே! கேட்பாயாக.

17. இன்னவன் இனியோன் சேதி இயம்புவோம் சிவந்த
[மெய்யன்
அன்னிய குறவு கொள்வன் அகசிய மதிகம் செய்வன்
உன்னத வாத தேகி உரைக்குமுன் கோபம் கொஞ்சம்
பன்னியே பேச வல்லன் பாரினில் தந்திர வாதி.

17. இவன் தம்பியின் வாலாற்றைக் கூறுவோம். சிவந்த உடலுடையவன். அயலாருடன் சட்புக் கொள்ளுவான். மிகுதியாக அகசியம் பேசுவான். வாத சரீர முள்ளவன். கூறுமுன் கோபம் கொள்வான். கூறியதைக் கூறுவான். தந்திர முள்ளவன்.

18. உண்டியும் சுகமாய்க் கொள்வன் உறுதியா மனத்த னாகும்
அண்டினோர்க் குதவி செய்வான் அவன்பொரு ளிச்சை
[யுள்ளான்
தண்டமிழ் விசேட முள்ளான் தைரியன் காமி யாவன்
துண்டமாய்ப் பேச வல்லன் தொல்புவி சேர்ப்ப னென்றோம்.

18. சுக போஜன முள்ளவன். உறுதியான மனத்தினன். தன்னை அடைந்தவர்களுக்கு உதவி செய்வான். பொருள்கள் மீது விருப்பமுடையவன். தமிழ்மொழியில் விசேட அறிவுள்ளவன். தைரியமுள்ளவன். பெண்கள்பால் மோக முடையவன். கண்டிப்பாகப் பேசுமியல்பினன். நிலபுலன்களைச் சேர்ப்பான் என்றோம்.

19. சிறுதீனி விருப்பம் கொள்வன் செப்பினோம் மனைவி
[ரெண்டு
வருஞ்சுதர் ஆண்பால் ரெண்டு மங்கையு மவ்வா றாகும்
பெருமுனி புகலு கின்றார் பேசினீர் மனைவி ரெண்டு
வருமனை யெவர்க்குப் புத்திரர் வந்திடும் சொல்லு மென்ன.

19. சிற்றுண்டிகளில் விருப்ப முடையவன் என்று சொன்னோம். இரு மனைவியர். இவனுக்கு இரு புதல்வர்களும், இரு புதல்வியரும் தோன்றுவர். முனிவர் கூறுகின்றார். இரு மனைவியர் என்று கூறினீர்கள். இருவரில் யாருக்குப் புத்திரன் தோன்றுவான்? என்று கூறுங்கள்.

20. முதல்மாது கர்ப்ப நோயால் முடிந்துபின் மனைக்குப் புத்திரர்
சதமுடன் விருத்தி யென்றோம் தன்துணை வேறுய்ச் செல்வன்
எதுகாலம் சொல்லு மென்ன எண்ணைந்து ஆண்டின்
[மேலே
பதியது வேறுய்ச் செல்வன் பாக்கிய முடைய னென்றோம்.

20. முதல் மனைவி கருப்ப வியாதியால் மரணமடைவாள். இளையவ ளுக்குப் புத்திரர் நலமுறத் தோன்றுவர் என்றும். இவன், தன் சகோதர னிடமிருந்து பிரிந்து தனியாகச் செல்வான். எந்தக் காலத்தில் தனிக் குடும்ப மாகச் செல்லுவான்? கூறுங்கள் முப்பத்திரண்டு வயதுக்குமேல் வேறாகச் சென்றிடுவான். பாக்கிய முடையவனென்று கூறினேம்.

21. உதித்தவன் மணத்தின் காலம் உரைக்கின்றேம் ஒருபா [லறில்
சதியிலா வடகீழ் தன்னில் தந்தையின் துணைவர் வர்க்கம்
மதிநுதல் மாது சேர்வள் அவளுமே சிவந்த மேனி
சதியிலா மனத்த ளாகும் தன்மனம் போலே வாழ்வள்.

21. ஜாதகன் திருமணக் காலத்தைக் கூறுவோம். இவனது பதினாறும் வயதில், வடகிழக்குத் திசையில், தந்தையின் சகோதர வர்க்கத்திலிருந்து நல்ல அழகியான மனைவி வாய்ப்பாள். அவள் சிவந்த உடலுடையவள்; குற்றமில்லா மனத்தினள். கணவன் மனமொப்ப வாழ்வாள்.

22. பந்துவை யாத ரிப்பள் பஞ்சைமே லிரக்கங் கொள்வள்
முந்திய கோப முள்ளாள் மூலச்சூ டுடைய ளாகும்
எந்தையே புத்திர பாகம் இயம்புவோ மாண்பா லொன்று
பந்தமாய்ப் பெண்பால் ரெண்டு பகருவோ மிவனுக் கேதான்.

22. பந்துக்களை யாதரிப்பாள். ஏழைகள்பால் இரக்கம் கொள்வாள் முன்கோப முள்ளவள். மூலச் சூடு உடையவள். ஜாதகனது புத்திர பாவத் தைக் கூறுவோம். புத்திரன் ஒருவனும், பெண்கள் இருவரும் தோன்றிடுவர் என்று கூறுவோம்.

23. சயமுனி சொல்லும் போது செப்புவார் புசண்டர் தாமும்
வியமுண்டு சுதர்க ளுக்கு விளங்கினும் தீதே யாகும்
பயமிலாப் புயண்டர் சொல்லப் பராசரும் கேட்க லுற்றார்
தயவுடன் புத்திர தோடம் சாற்றுவீர் முனியே நீர்தாம்.

23. செயமுனி கூறும்போது புஜண்டர் கேட்கின்றார். புத்திரப் பேறு ஏற்படாது. ஏற்படினும் தீமையாகவே முடியும், என்று பயமின்றி, புஜண்ட முனிவர் கூற, பராசரர் கேட்கலானார். முனிவரே! தயைசெய்து நீங்கள், புத்திர தோஷம் ஏற்படக் காரணம் கூறுங்கள்?

23. நந்தியுஞ் சனன மாக நற்புத னென்தோ ணுகி
மைந்தர்தா னத்துக் கேதான் விரயத்தி லிருப்ப தாலும்
முந்திய கயறு பத்தி லெய்தலால் பூர்வ தோடம்
நொந்திடு மதலை யென்றும் நிமலியும் கேட்க லுற்றாள்.

24. விருஷபம் இலக்கினமாகவும், புதன் ஐந்தாம் வீடான புத்திர ஸ்தானத்துக் குரியவனுக இருந்து, விரய ஸ்தானமான பன்னிரண்டில் தங்கியுள்ள காரணத்தாலும், இராகு பத்தாமிடத்தில் தங்கியுள்ளதாலும், முற் பிறப்பில் செய்த வினைகள் அடைந்த காரணங்களாலும், புத்திர தோஷம் ஏற்படும் என்று கூறினேம். பார்வதியும் கேட்கலானுள்.

25. முன்செய்த வினைக ளென்ன மொழிகுவீர் முனியே நீர்தாம்
அன்னையே சொல்லு கின்றேன் அவனுடைப் பூர்வம் தன்னை
மன்னிய காஞ்சி கீழ்ப்பால் மால்மலை யருகி லேதான்
உன்னத தியின் வமிசம் உறைந்தன னிவனே யென்றேரும்.

25. முற்பிறப்பில் செய்த குற்றங்கள் என்ன ? முனிவரே ! தாங்களே கூறுங்கள். அன்னையே ! கூறுகின்றேன். இவன் முற்பிறப்பு, காஞ்சிபுரத்துக்குக் கிழக்கில், மால்மலைக்கு அருகிலுள்ளதொரு ஊரில், வன்னியர் குலத்தில் உண்டாயிற்று என்றேரும்.

26. ஓங்கிட வாணி பங்கள் உயர்பல இனத்தால் செய்து
தீங்கிலாத் தனமும் பெற்றுச் சேயிழை மதலை யுண்டாய்த்
தாங்கிலாக் கீர்த்தி பெற்றுத் தானவன் வாழும் நாளில்
தீங்கான வினைகள் தம்மைச் செப்புவோங் கேளுந் தாயே.

26. பற்பல தொழைகளில் வாணிபம் செய்து உயர்ந்து, குற்றமின்றிப் பொருள்களைப் பெற்று, மனைவி மக்களை யடைந்து, பெரும் புகழையும் பெற்று, இவன் வாழ்ந்துவரும் நாளில், எற்பட்ட தீவினைகளைக் கூறுவோம்; தாயே ! கேளுங்கள்.

27. வைசிய குலத்து மாது விதவையா யிருக்கக் கண்டு
உசிதமாய் அவள்மேல் மோகம் உத்தமன் கொண்டு
[மேதான்
அசைவிலாச் சில பொன்னும் அவளுக்கு ஈந்து பின்னும்
இசையவே போகம் துய்த்து இருக்கின்ற காலம் தன்னில் ;

27. வைசிய குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி, கணவனை யிழந்த கைம்பெண்ணை யிருப்பதைக் கண்டு, இவன் அவள்மீது மையல் கொண்டு, அவளுக்குப் புடவையும் பொருளும் அளித்து, இன்ப மனுபவித்து வருங் காலத்தில் ;

28. விதவைக்குக் கருவு தங்கி வித்தக னுடனே கூற
அதிதமாய்ப் பண்டி தங்கள் அவனுமே செய்தா னென்றேரும்
மதிறுதல் மாது வுக்கு மருந்தினுல் கருவை வாழ்ந்து
விதியினுல் வயது தீர்க்கம் மேவினுள் என்று சொன்னேரும்.

28. விதவையாகிய அவளுக்கு கரு ஏற்பட, இவனிடம் சென்னுள். உடனே இவன், பல மருத்துவங்கள் செய்தான் என்றேம். அவளுக்கு இத்தகைய வைத்தியங்களால் கருவழிந்தது. அவள் நீண்டநாள் வாழ்ந்திருந் தாள் என்று கூறினேம்.

29. இப்படிக் கருவு மூன்று இவனுமே யழித்தா னென்றேம்
செப்புவோ மந்தி யத்தில் சிலசில பிணியி னுலே
தப்பித மறலி பக்கல் சார்ந்துபின் நரகம் புக்கு
ஒப்புடன் மலரோன் தன்னுல் உத்தமன் வரையப் பட்டு ;

29. இவ்வாறு, இவன் மூன்று கருக்களே யழித்தான் என்றேம். கடைசி நாட்களில் சிற்சில வியாதிகளால் துன்பப்பட்டு, மரணமடைந்து நரகம் புகுந்த பிறகு, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு ;

30. வந்தவ னிவனே யென்றே மறைகின்றே மிச்சென் மத்தில்
சந்ததி ஆண்பால் தோடம் செனிக்கினும் தீதே யாகும்
முந்திப தோடம் தீர மொழிகின்றேம் சாந்தி தானும்
மைந்தனும் மனைவி யோடு வாலங்கா டதற்குச் சென்று ;

30. பிறந்தவன் இவன் என்று கூறினேம். ஆதலால், இப்பிறப்பில் புத்திர தோஷத்தைக் கூறுகின்றேம். தோன்றினலும் இறந்து போம். முற்பிறப்பில் செய்த குற்றம் நீங்க, சாந்தி யொன்றைக் கூறுகின்றேம். ஜாதகன், தன் மனைவியுடன் திருவாலங்காட்டுக்குச் சென்று;

31. அங்குள தீர்த்தம் தோய்ந்து அரனுக்கு அருச்சித் தேத்தித்
துங்கமாய் ரசதம் தன்னுல் சுதனேப்போல் செய்து மேதான்
இங்கிவன் விடங்க ளோடு இருபிறப் பாளர்க் கீந்து
தங்கின ஊழைச் சொல்லித் தானவர் பொறுத்தோ மென்று;

31. இவன் அங்குள்ள புண்ணியதீர்த்தத்தில் நீராடி, சிவபெருமானுக்கு அருச்சித்துத் துதித்து, பிறகு வெள்ளியால் புத்திரனேப்போல பிரதிமை செய்து, புஷ்பங்களுடன் அந்தணர்களுக்குக் கொடுத்து, நீ செய்த குற்றங் களேப் பொறுத்தோம் என்று ;

32. அவர்வாக்கால் ஆசீர் ஏற்று ஐயைந்து பரத்துக் கன்னம்
இவனுமே யளித்துப் பின்னும் இருவரு முள்ளூர் சென்று
நவனியில் மாதம் ஓர்நாள் சோமவா ரத்தில் நோன்பு
பவமுடன் கொள்வா ராகில் பாலர்கள் விருத்தி யென்றேம்.

32. அவர்கள் வாக்கினுல் ஆசிகளேப் பெற்று, இருபத்தைந்து தவிகட்கு உணவளித்து, இருவருமாகத் தம்மூரடைந்து, மாதம் ஒரு திங்கட்கிழமை விரதம் இருப்பாராகில் புத்திர விருத்தி யுண்டாம் என்று சொன்னேம்.

33. இப்படிச் செய்யா னுகில் இலகாது மதலை ஆண்பால்
செப்புவோம் மாதுர் சேதி தேவியும் இருசி கப்பள்
தப்பித மில்லா ளாகும் தன்வரன் மனம்போல் வாழ்வள்
ஒப்புடன் நற்கு ணத்தாள் உத்தமி யோக சாலி.

33. இவ்வாறு செய்யாவிட்டால் புத்திரர்கள் தோன்றார். இவன் தாயைப் பற்றிக் கூறுவோம். கருமை கலந்த நிறமுள்ளவள். குற்ற மற்றவள். கணவன் மனம்போல் வாழ்வாள். நல்ல குணமுடைய வள். அதிர்ஷ்ட முடையவள்.

34. அவசர மனத்த ளாகும் ஆண்துணை ஒன்றே யென்றும்
நவனியில் பெண்பால் ஒன்று நாட்டுவோம் தீர்க்க மாகத்
தவமுனி சொல்லும் போது சங்கரி கேட்க லுற்றாள்
பவமுள நாலோன் தன்னைப் பார்மகன் பார்த்த தாலும்.

34. அவசர மனமுடையவள். இவளுக்கு ஒரு சகோதரன் உண்டு. அவன் தென் திசையில் சென்று தீர்க்கமாக இருப்பான் என்று செய முனி கூறும்போது, பார்வதி கேட்கலானாள். நாலாம், இடத்துக்குரிய சூரியனை செவ்வாய் பார்ப்பதாலும்;

35. கேதுவும் கூடி நிற்கக் கிளர்மதி யெட்டில் நிற்க
ஓதுவீர் பலனை யென்றார் உரைக்கி றோம் கேளுந் தாயே
மேதினில் தாய்க்கு முன்னே மேவிடும் மாதுர் ஒன்று
தீதாகும் அந்த மாதுர் செப்புவோம் ஆண்பால் ஒன்று.

35. சூரியனுடன் கேது கூடி சிம்மத்தில் இருப்பதாலும், சந்திரன் தனுசில் தங்கியிருப்பதாலும், உரிய பலன்களைக் கூறுங்கள் என்று கேட் டாள். தாயே! கூறுகின்றோம். கேளுங்கள். தாய்க்கு முன்பாக மூத்த தாய் ஒருத்தி உண்டு. அவள் இறந்துவிடுவாள். அவளுக்கு ஒரு புத்திரன் உண்டு.

36. அவனுடன் மாமன் ரெண்டு அறைந்தன மிவனுக் கேதான்
இவர்களும் வடகீழ் தன்னில் இருப்பரா மென்று
[சொன்னோம்
நவனியில் அவர்கள் சேதி நாட்டுவோம் மூன்றும் பாகம்
தவசியே மாதுர் பூர்வம் சாற்றுவோம் விபர மாக.

36. அவனுடன் இரு மாமன்மார்கள் இவனுக்கு உண்டு என்றோம். இவர்கள் வடகிழக்குத் திசையில் இருப்பார்கள் என்று கூறினோம். அவர் களைப் பற்றி மூன்றும் பாகத்தில் கூறுவோம். முனிவரே! தாயின் மூற்பிறப்பை விவரமாகக் கூறுவோம்.

37. அன்னையின் பூர்வஞ் சொல்வேன் ஆலங்கா டதற்குக்
[கீழ்ப்பால்
உன்னதச் சிற்றூர் தன்னில் உறைந்தளள் வடுகர் வமிசம்
பொன்னெடு பணிதி யுண்டாய்ப் புத்திர ருள்ளா ளாகி
இன்னவள் குடும்பி யாகி யிடுக்கங்க ளில்லா ளாகி.

37. தாயின் முற்பிறப்பைக் கூறுவேன். திருவாலங்காட்டுக்குக் கிழக்கே யுள்ள சிறிய ஊரில், வடுகர் குலத்தில் தோன்றினள். செல்வம் ஆபரணங்கள் ஆகியவை பெற்று, புத்திரர்களை யடைந்து, சிறந்த குடும்பத் துடன் துன்பங்களில்லாமல் வாழ்ந்து ;

38. பேதியால் மரண மாகிப் பிரமனுல் வரையப் பட்டு
மேதினி யருகி லேதான் விளங்கினு ளிவளே யென்றும்
ஓதுவே னிச்சென் மத்தில் உத்தமி வறுமை யின்றித்
தீதுகள் யில்லா ளாகிச் செல்வதி வாழ்வா ளாமே.

38. முடிவில் பேதியால் மரணமடைந்தாள். பிறகு பிரமனுல் படைக் கப்பட்டு, காஞ்சீபுரத்துக்கருகில் உள்ளதொரு ஊரில், தோன்றினுள் இவள் என்று கூறினேம். இப் பிறப்பில் இவள், வறுமையின்றியும், தீமையில்லா மலும் வாழ்வாள்.

39. மறுசென்மந் தணிகை யுத்ரம் மாதுவுங் கங்கை வமிசம்
பெருமையா யுதித்து மேலும் பிரபல குடும்பி யாகி
இருவினை யில்லா ளாகி யிவளுமே வாழ்வா ளென்றும்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

39. இவளுக்கு மறுபிறவி, திருத்தணிகைக்கு வடக்கே, வேளாளர் மரபில் ஏற்படும். நல்ல புகழுள்ள குடும்பத்தை யடைந்து, குற்றங்கள் எவையு மின்றி, இவள் வாழ்ந்து வருவாள் என்று கூறுவோம். முருகப் பெருமானைப் பெற்ற பார்வதியே ! கேட்பாயாக.

40. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் காஞ்சி தன்னில்
முந்திய அருகர் வம்ச முதித்துமே பூமி யுண்டாய்ப்
பந்தமாய் மனைவி புத்ரர் பாக்கிய முடைய ளாகி
எந்தையே வாழும் நாளில் இயம்புவோ மூழி தானே.

40. தந்தையின் முற்பிறப்பைக் கூறுவோம். காஞ்சீபுரத்தில் ஜைன குலத்தில் தோன்றி, நிலபுலன்களைப் பெற்று, மனைவி மக்களை யடைந்து, பாக் கிய முடையவனுக வாழ்ந்து வரும் நாளில், அவனுக்கு நேர்ந்த வினையைக் கூறுவோம்.

41. தன்னுடைக் குருவின் புத்ரி தானவள் மேலே மோகம்
இன்னவ ரிச்சை வைத்து எழிலுள வார்த்தை பேசிப்
பொன்னெடு பணிதி யீந்து போகங்கள் துய்க்க வேண்டி
அன்னவள் இசையா ளாகி அவளுமே கூறு கின்றாள்.

41. அவன் தன்னுடைய ஆசிரியரின் மகள் மீது மோகம் கொண்டு, அழகிய மொழிகளைப் பேசி, பொன் பொருள் அணிகள் அளித்து, அவளுடன் இன்பமனுபவிக்க வேண்டும் போது, அப்பெண் அதற்கு ஒப்பாது கூறு கின்றாள்.

42. குருவின்தன் புத்திரி தன்னைக் கூடினால் பாப மென்றும்
பெருஞ்செல்வம் குறைவும் நேரும் பூமியில் வறுமை யாகும்
வரும்சென்மம் பிணியு முண்டாய் மாநிலம் வாழ்வா
[யென்று
திருமகள் சொல்லும் போது சேயனும் புணர்ந்தா
[னென்றோம்.

42. குருவின் மகளைச் சேர்ந்தால் பெரும் பாவம் ஏற்படும், பெருஞ் செல்வமாயினும் அழிந்து போகும். உலகில் வறுமைக்கு ஆளாக நேரிடும். மறு பிறவியிலும் நோய்கள் ஏற்படும். ஆதலின், சென்று, நன்முறையில் உலகில் வாழ்வாயாக; என்று அவள் கூறும்போதும் அவளுடன் இவன் சேர்ந்தான் என்றோம்.

43. மற்றொரு நாளி லேதான் மார்ச்சாலன் மேலே வெந்நீர்
குற்றத்தால் தெளித்தான் பாலன் கூக்குர லிட்டு மேதான்.
முற்றுப்போல் தேகம் பொங்கி மூர்ச்சையு மடைந்த தம்மா
பத்தினி தானெ டுத்துப் பாருக்குள் போட்டு விட்டாள்.

43. வேறொருநாள், பூனையின் மீது வெந்நீரைக் கொட்டினான். பூனை யும் கூச்சலிட்டு, முத்துப் போல் உடல் முழுவதும் கொப்புளங்கள் தோன்ற இறந்து போயிற்று. இவன் மனைவி அதனை எடுத்து பூமியில் புதைத்து விட் டாள்.

44. அந்ததோர் தோடந் தானும் அணுகிற்று இதுவல் லாமல்
முந்திய மாது வுக்கு முதல்அடை யாளம் போட்ட
நந்தியை உழவு செய்தான் நல்கிற்று அந்தத் தோடம்
அந்திய காலம் தன்னில் அவன்சில பாதை நேர்ந்து;

44. அந்தக் குற்றமும் இவனை யடைந்தது. அதுவுமன்றி, அம்மனுக்கு என்று குறிபோட்டு விடப்பட்ட காளையைப் பிடித்து, உழுதொழில் செய்

தான். அந்தத் தோஷமும் அடைந்தது. கடைசி நாட்களில் அவன் பல துன்பங்களே யடைந்து ;

45. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனுல் வரையப் பட்டு
ஞாலமேல் வந்தா னென்றேரும் நவிலுவோ மிச்சென் மத்தில்
ஆலம்போல் மேக ரோகம் அணுகிடு மிவனுக் கேதான்
வேலனே யின்ற மாதே வித்தகி கேட்டி டாயே

45. மரண மடைந்தான். பிறகு பிரமனுல் படைக்கப் பட்டு, இவ்வுல கில் தோன்றினான் என்றேரும். இப் பிறப்பில் விஷம்போல் மேக நோய் இவனுக்கு உண்டாகுமென்று கூறுவோம். வேலாயுதத்தைக் கையி லேந்திய முருகனைப் பெற்ற தாயே !கேட்பாயாக.

46. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிகுவாள் அம்மன் தாமும்
கனமுடன் மேக ரோகம் கண்டிடு மென்று சொல்வீர்
அனேவவே ரோகம் தீர அறைகுவீர் சாந்தி தானும்
வினேயது நீங்க வேண்டி விளம்புவோம் கிரியை தானே.

46. முனிவர் இவ்வாறு கூற, பார்வதி சொல்லுவாள். அவனுக்கு மேகநோய் ஏற்படுமென்று கூறினீர்கள். அந்நோய் தீரச் சாந்தியைக் கூறுங் கள். அந்நோய் நீங்கச் சாந்தியைக் கூறுவோம்.

47. நவமணி சாந்தி செய்து நற்சக்தி பூசை பண்ணி
அவனியில் தங்க பற்பம் அருந்தினுல் பிணியும் நீங்கும்
நவமணி சாந்தி எவ்வார் நடத்தும்கா ரணங்க ளென்னப்
பவமுள தங்க பற்பம் பலவிதம் சொல்லு வீரே.

47. நவதானிய சாந்திகள் புரிந்து, சக்தி பூசை செய்து, தங்க பஸ்மம் சாப்பிட்டால் அந் நோய் நீங்கிவிடும். நவதானிய சாந்தியை எவ்வாறு புரி வது ? அதுசெய்யக் காரணங்கள் யாவை ? மேன்மையான தங்க பஸ்மத் தைப் பற்றியும் கூறுங்கள்.

வேறு

48. தானியம் சமித்துக் கலசமும் ஒன்பான்
சதிபதி பிம்பமுமி ரண்டால்
ஆனவஸ் திரமும் அதற்குமேல் சாற்றி
அவருக்குக் கோடிபூ சளித்து
மோனமாய் மூல முரைத்திடக் கேளாய்
முக்கண்ணி ஐயும்ஓங் கிலியும்
தேன்மொழி சியும் அவ்வுமே உவ்வும்
சியுடன் நசிமசி யென்று ;

48. தானியங்கள் சேமித்து, ஒன்பது கலசங்கள் வைத்து, அம்பிகை இறைவன் ஆகியோர் திரு உருவங்கள் இரண்டு செய்து வைத்து, இரு வஸ்திரங்களையும் அவற்றிற்கு அணிவித்து, கோடி அருச்சனைகளைப் புரிந்து, மௌனமாக மூல மந்திரங்களை உச்சரித்து, முக்கண்ணி, ஐம், ஓம், க்லீம், தேன்மொழி, சீ, அவ், உவ், ஈசி, மசி என்று;

49. சகஸ்திரம் செபித்து ஓமத்தை வளர்த்து
சலவபி டேகமுஞ் செய்து
தகைமைவெண் தங்கம் தாலசுத்தி செய்து
தரைச்சூட மூலிகை தன்னிலே
உகையாய்க் கேளு புடமதைப் போட்டு
உற்றொரு மறுதின மெடுத்து
வகையுடன் ஆவின் வெண்ணெயில் கலந்து
மண்டலம் கொண்டிடு வாயே.

49. ஆயிரம் முறை ஜபம் செய்து, ஹோமங்கள் வளர்த்து, கீரிஞல் அபிஷேகங்களைச் செய்து, மேன்மையாக தங்கத்தைச் சுத்தி செய்வித்து, கற்பூரவள்ளி இலையில் வைத்து, புடம் செய்து, அடுத்த நாள் எடுத்து, முறையாகப் பசு வெண்ணெயில் குழைத்து ஒரு மண்டல காலம் சாப்பிட வேண்டும்.

50. பத்திய மதற்கு யில்லை பால னவ்விதமே செய்யச்
சத்திய பிணியும் தீரும் சொற்படி செய்யா ஞகில்
குற்றங்கள் அதிக முண்டாம் குறைவுகள் கைகால் நேரும்
அத்தியைப் பெற்ற மாதே அறைந்தன மொழிகுன் ருது.

50. அதற்குப் பத்தியம் கிடையாது. இவன் அவ்விதம் செய்தால் சூழ்ந்துள்ள நோய் நீங்கும். சொன்னபடி செய்யாவிட்டால் பிழைகள் மிகுதியாகத் தோன்றி, கை கால்கள் குறைந்து போம். விநாயகப் பெரு மானே ஈன்ற பார்வதியே! யாம் சொன்ன சொற்கள் தவறு.

51. இன்னவன் நிரியா ணங்க ளியம்புவோ மிருபா னெட்டில்
தன்னிலே கூனி மாதம் சாற்றுவோம் கண்டம் தானே
அன்னைக்கு நாற்பான் ரெண்டில் ஆவணி மாதம் தன்னில்
உன்னித கண்டம் சொன்னேனும் உத்தமி கேட்டி டாயே.

51. இவன் மரண காலத்தைக் கூறுவோம். ஜாதகனின் இருபத் தெட்டாம் வயதில், பங்குனி மாதத்தில், இவன் மரண மடைவான் என்று கூறுவோம். தாய்க்கு ஜாதகன் நாற்பத்திரண்டாம் வயதில், ஆவணி மாதத் தில் மரணம் நேரிடும் என்று சொன்னேம். உத்தமியே! கேட்பாயாக.

52. சாதகன் மரண காலம் சாற்றுவோம் அறுபான் ஏழில்
மேதினில் ஆடி மாதம் வளர்பிறைத் துவாதசி தன்னில்
தீதான பித்த பாண்டு செனித்துமே மரண மெய்தும்
போதக வானே பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

52. ஜாதகன் மரண காலத்தைக் கூறுவோம். அறுபத்தேழாம் வயதில், ஆடி மாதம் சுக்கில பட்சத் துவாதசியில், பித்தபாண்டு நோய் தோன்றி, மரண மடைவான். விநாயகனைப் புதல்வனு யடைந்த தாயே! கேட்பாயாக.

53. மறுசென்மம் காஞ்சி தன்னில் மைந்தனும் வைசியச்
[சேயாய்ச்
பெருமையா யுதித்து மேலும் பிரபலச் செட்டுச் செய்து
வருவோர்க்கு அன்ன மீந்து மாநிலம் நல்லோ னுகித்
திருகது இல்லா வாழ்வன் செல்வியே மேலும் கேளே.

53. மறு பிறப்பு, காஞ்சீபுரத்தில் வைசியர் குலத்தில் மேன்மையுடன் ஏற்படும். இவன் உயர்ந்த வியாபாரங்கள் புரிந்து, தன்னை யடைந்தவர்க ளுக்கு உணவளித்து, உலகில் அனைவருக்கும் நல்லவனுக இருந்து, குற்ற மில்லாது வாழ்ந்து வருவான். பார்வதியே! மேலும் கேட்பாயாக.

54. இன்னவன் யோகச் சேதி யியம்புவோம் வறுமை யில்லான்
தன்னிலே பாக்ய வானும் சலசெட்டுத் தொழிலு முள்ளான்
உன்னத பூமி சேர்ப்பன் உயர்திருப் பணியும் செய்வன்
அன்னவன் தெய்வ பக்தி அதிகமீர்த் திகளு மேற்பன்.

54. இவன் யோகங்களைக் கூறுவோம். வறுமை யில்லாதவன். பாக்கிய முள்ளவன். கடல் வாணிபம் புரிவான். சிறந்த நிலங்களைச் சேர்ப்பான். உயர்ந்த கோவில் திருப்பணிகளையும் செய்வான். கடவுள் பக்தி உள்ளவன். அதிகப் புகழையும் அடைவான்.

55. தாதைநாள் பூமி யில்லான் தந்தைநாள் பூமி விருத்தி
மேதினில் தந்தை யாஸ்தி விருத்திகள் மிகவே யுண்டாம்
சூதிலான் சல்லிய மில்லான் சொல்லது தவரு னுகும்
பாதக மில்லா னுகும் பார்வதி மேலும் கேளே.

55. பாட்டனர் காலத்தில் பூமி இல்லாதவன். தந்தை நாளில் விளைநில விருத்தி யுண்டு. இவன் தந்தை நாளில் ஆஸ்தி மிகவும் அதிகமாக விருத்தி யடையும். சூது இல்லாதவன். கடன் தொல்லையும் கிடையாது. சொன்ன சொல் தவறுதவன். பாவச் செயலற்றவன். பார்வதி! மேலும் கேட்பாயாக.

56. பிறந்திடு காலம் தன்னில் புகர்தசை யிருமூன் முண்டும்
சிறந்திடு மாத மூன்றும் சேர்ந்தநாள் பதினைந் தாகும்.
குறைந்திடுந் தனமுந் தானும் குலத்தினில் நிந்தை யாகும்
உறைந்திடும் துணைவர் விருத்தி உயர்சுபம் குடும்பம்.

[தன்னில்

56. இவன் ஜனன காலத்தில் சுக்கிர மகா தசையில் இருப்பு; வருஷம் ஆறும், மாதங்கள் மூன்றும், நாட்கள் பதினைந்துமாம். அக்காலத்தில் செல்வங் குறைந்து, குலத்தில் பழி ஏற்படும். சகோதர விருத்தி உண்டாகும். குடும்பத்தில் சுபங்களும் உண்டாம்.

57. தாய்துணை சுபமும் உண்டு சல்லியம் நேர்ந்து பின்பு
ஆயவே ருணங்கள் தீரும் அழகிய சகடு மூண்டு
நேயமாய்ப் பணையேர் விருத்தி நிலமது சேரு மென்றேரும்
தூயமா யிரண்டி லேதான் சொல்லுவோம் விபர மார்க.

57. மாமன்மார்களுக்கு நன்மை யுண்டாம். இவனுக்குக் கடன் ஏற்பட்டு,பிறகு அடைபட்டுப் போகும். அழகான வண்டி முதலிய வாகன வசதி யுண்டு. நலமுடன் ஏர், பண்ணை விருத்தியும் ஏற்படும். புதிதாக நிலங்கள் சேரும் என்று கூறினேம். மற்றவற்றை இரண்டாம் பாகத்தில் விவரமாகக் கூறுவோம்.

ஜாதகம் 57

1. பொன்துலை யிரவி மானில் பூமகன் வண்டி யாகச்
சந்திரன் சாடி யாகச் சனிபுகர் தேள தாகப்
புந்தியும் ராகு மேரு புக்கிடக் கேது வீணை
வந்தது சென்மம் நந்தி யறைகுவீர் பலனைத் தானே.

1. குரு துலாத்திலும், சூரியன் மகரத்திலும், செவ்வாய் கடகத்திலும், சந்திரன் கும்பத்திலும், சனி சுக்கிரன் விருச்சிகத்திலும், புதன் இராகு தனுசிலும், கேது மிதுனத்திலும் தங்கியிருந்து, இலக்கினம் விருஷபமாக இருப்பின், பலன்களைக் கூறுங்கள்.

		லக்கினம்	கேது
சந்திரன்	இராசி சக்கரம்		செவ்வாய்
சூரியன்			
புதன் ராகு	சனி சுக்கிரன்	குரு	

2. தானவன் செனித்த இல்லம் சாற்றுவோம் வடதென் வீதி
[1]கோனவன் வாடை யாகும் கூற்றினு யுதைத்தோன்
[கிழ்ப்பால்
ஈன்மாய் மாயோன் தங்கும் இதுவலால் மாரி காளி
ஆனதோர் தந்தி கோட்டம் அறைகின்றேரும் தென்கிழ்
[தன்னில்.

2. ஜாதகன் பிறந்த வீட்டைக் கூறுவோம். தெற்கு வடக்கு வீதியில் கிழக்கு வாடையி லுள்ளது. சிவபெருமான் கோயில் கிழக்குத் திசையில் இருக்கின்றது. பாழடைந்த விஷ்ணு கோயிலொன்றும் அங்கு உண்டு. இவை தவிர, மாரிகோவிலும், காளி கோவிலும், விநாயகப் பெருமான் கோயிலும் தென் கிழக்குத் திசையில் உள.

3. பரமனைப் பூசை செய்யும் பச்சையு முனியும் தெற்கில்
பெருநதி யருகில் தங்கும் பலமிலா ஈச னுண்டு
வரம்பெற்ற சூழி மீன மறைகின்றேரூஞ் சமவூர் தன்னில்
திறமையாய்க் கங்கை சேயாய்ச் செனிப்பனும் மூன்றாஞ்
[சென்மம்.

1. இந்திரன்

3. சிவபெருமானைப் பூசை செய்யும் அம்மன் கோவிலும், முனியாண்டவர் கோவிலும் தெற்குத் திசையில் உள்ளன. அவற்றிற்கு அருகில் பெரிய நதி யொன்று ஓடும். ஒரு சிவன் கோவிலு முண்டு. வட கிழக்கில் கீர்நிலையுமுளது. இப்படிப்பட்ட ஓர் அழகிய ஊரில், ஜாதகன் வேளாளர் மரபில் மூன்றும் புத்திரனைத் தோன்றுவான்.

4. இன்னவன் சென்ன யோகம் எழில்பெரும் தந்தை யோகம்
மன்னிய அன்னை யோகம் வரும்புத்திர களத்திர யோகம்
தன்னிலே முன்பின் சென்மம் சாற்றுவோம் இந்நூல்
[தன்னில்
அன்னையே யாங்கள் சொல்லும் அருள்மொழி குன்ரு
[தென்றேரும்.

4. இவன் ஜனன யோகத்தையும், தந்தை, தாய், புத்திரர், மனைவி ஆகியோர் யோகங்களையும், இவர்களது முன் பின் சென்மங்களையும் இந்நூலில் நாங்கள் கூறுவோம். அன்னையே! நாங்கள் சொல்லும் அருள் மொழி தவறுது என்ற சொல்லுவோம்.

5. இவன்பிதா குணத்தை யாங்கள் இயம்புவோம்
[மால்நி றதிதான்
அவனியில் சமதே கத்தான் அவன்யூகி கல்வி மானும்
நவமதில் நகை வானும் நன்மனம் கபடு மில்லான்
தவமுடை யோர்க்கு நேயன் சந்தேக மனத்த னுமே.

5. இவன் தந்தையின் குணத்தை நாங்கள் கூறுவோம். கரிய நிற முள்ளவன். குறைவற்ற உடலமைப்பைப் பெற்றவன். ஊகித்தறியும் ஆற்றலுள்ளவன். கல்வியறி வுள்ளவன். உலகில் கொடை வழங்குவான். நல்ல மனத்தினன். கபட மில்லாதவன். துறவிகளுக்கு நண்பன். சிறிது சந்தேக முடையவன்.

6. உண்டியும் சுகமாய்க் கொள்வன் உற்றவர் மெச்ச வாழ்வன்
தன்பூமி செலவு செய்வன் சனஉப காரனுவன்
குண்டைகள் விருத்தி யுள்ளான் குணமது யிரண்டு
[முள்ளான்
அண்டினோர் தம்மைக் காப்பன் அன்னிய பெண்கள் மோகன்.

6. சுக போஜன முடையவன். சுற்றத்தார் மெச்ச வாழ்வான். தன் பூமிகளை விரயம் செய்து விடுவான். ஜனங்களுக்கு உபகாரம் செய்வான். காளைகள் விருத்தி யுண்டு. இருவிதக் குணமுள்ளவன். தன்னை யடைந்தவர்களைக் காப்பான். அன்னியப் பெண்கள்மீது மையல் கொள்வான்.

7. அஞ்சின வார்த்தை யில்லான் ஆள்கார னுடைய னுவன்
மிஞ்சியே செலவு செய்வன் மேதினில் டம்ப னுவன்
பஞ்சுபோல் ரோம முள்ளான் பாரினில் நிந்தை யுள்ளான்
தஞ்சமாய் ரோக முள்ளான் தமையன்சொல் தட்டா
[னென்றும்.

7. பயந்த பேச்சில்லாதவன். வேலைக்காரர்க ளுடையவ னுவான். அதிகமாகச் செலவு செய்வான். டாம்பீகமாக வாழ்வான். மிருதுவான ரோமங்க ளுடையவன். பழிகளை ஏற்பன். வியாதி யுடையவன். தன் அண்ணன் சொல்லைத் தட்டாதவன் என்று கூறினோம்.

8. ரோமங்கள் நீட்சி யுள்ளான் நுட்பமாம் புத்தி யுள்ளான்
தீமையை விரும்பா னுகும் திருகுகள் அனந்தம் செய்வன்
நாவது தவரு னுகும் நல்லவர் நேசம் கொள்வன்
தாமத குணத்தா னுகும் சல்லிய முடைய னுமே.

8. நீண்ட தலைமயிர் உடையவன். நுண்ணிய அறிவு வாய்ந்தவன். தீமைகளை விரும்பாதவன். பல குற்றங்களைப் புரிபவன். சொன்ன சொல் தவறுதவன். நல்லவர் நட்புக் கொள்வான். தாமத குணம் மேலிட்டவன். கடனுடையவ னுவான்.

9. காரக தேக னுவன் கண்முகம் வசிய முள்ளான்
பாரினில் கிருஷி செய்வன் பகைவரைச் செயிப்பா னுகும்
சீரிய குணம்பின் சாந்தம் செல்வமும் பின்னு னுள்ளான்
ஆறுமா முகனுந் தெய்வம் அன்னியர் மெச்ச வாழ்வன்.

9. காரக ரோகமுள்ள மேனியன். அழகிய கண்களையும் முகத்தை யும் பெற்றிருப்பான். பயிர்த் தொழில் புரிவான். பகைவர்களை வெல்லு வான். முதலில் கோபம் கொள்வான். பின்பு சாந்தி யடைவான். பிற் காலத்தில் செல்வத்தைப் பெறுவான். முருகப் பெருமானிடம் பக்தி கொள்வான். பிறர் புகழ வாழ்வான்.

10. சொல்லிய குணத்தா னுக்குச் சுதனுமே மூன்றும் சென்மம்
புல்குவா னிவனே யென்றோம் போற்றுவோம் துணைவர்
[தம்மை
வல்லியே யைந்து மாகு மறைகின்றோம் பின்பா லொன்று
நல்லதோர் பெண்பால் அவ்வார் நாட்டுவோ மிவனுக்
[கேதான்.

10. இத்தகைய குண முடையவனுக்கு, இவன் மூன்றும் புத்திரனைத் தோன்றுவான் என்றோம். இவன் உடன் பிறந்தவர்களைக் கூறுவோம்.

பார்வதியே! இவனுடன் பிறந்தவர் ஐவராவர் என்று கூறுவோம். இவனுக்குப் பிறகு ஒரு சகோதரனும், சகோதரி ஒருத்தியும் தோன்றுவர் என்று கூறுவோம்.

11. மூந்திய துணைவர் ஒன்று மொழிந்திட்டோம் இவனுக்
[கேதான்
அந்தவன் குணத்தைச் சொல்வேன் அவனுமே வாத தேகி
எந்தையே சாயல் நேத்ரம் இவன்வீர லூன மாகும்
சந்ததம் கல்வி மானும் சரசமாய்ப் பேச வல்லான்.

11. இவனுக்கு மூத்த சகோதரன் ஒருவன் உளன் என்று கூறினேம். அவன் குணத்தைக் கூறுவோம். அவன் வாத சரீர முள்ளவன். அழகிய கண்களைப் பெற்றவன். அவனுக்கு ஒரு விரல் குறைவு. எப்பொழுதும் படித்துக் கொண்டே இருப்பான். அழகாகப் பேசும் ஆற்ற லுடையவன்.

12. வித்தையும் பெருக்க முள்ளான் விவேகியா மெவர்க்கும்
[நண்பன்
உத்தம னாகி வாழ்வன் உயர்வான குடும்பி யாவன்
வெற்றியே யடைவா னாகும் விரோபுலம் சேர்ப்பா னாகும்
சித்தமாய் வாயு பீடை செறிந்துபின் நிவிர்த்தி
[யென்றேரும்.

12. மிகுதியாகக் கல்வியைப் பெற்றிருப்பான். பகுத்தறிவு உள்ளவன். அனைவருக்கும் நேசன். உயர்வாக வாழ்வான். மேன்மையான குடும்பமேற்பான். தொடங்கிய செயலில் வெற்றி காண்பான். விரோ புலன்களைச் சேர்ப்பான். அவனுக்கு முதலில் வாயு நோய் தோன்றி, பிறகு நீங்கு மென்று கூறுவோம்.

13. ஏதுகா ரணத்தி னாலே இவன்காலில் வாயு பீடை
ஓதுவீர் முனியே என்றாள் உதித்தவன் சென்ம நந்தி
தீதான ஆறில் காரி சென்மநாள் பரணி யாக
மேதினில் காரி யாலே விளம்பினேம் பிணியும் தானே.

13. எந்தக் காரணத்தாலே இவன் காலில் வாயு நோய் வந்தது என்று கூறுங்கள், முனியே! என்றாள். ஜாதகன் இலக்கினம் விருஷபமாகி, ஆறு மிடத்தில் (துலாத்தில்) சனி தங்கியுள்ளதாலும், பிறந்த நட்சத்திரம் பரணியாக விருப்பதாலும், சனியால் இவனுக்கு வாயு ரோகத்தைக் கூறினேம்.

14. இதுவன்றிப் பூர்வம் தன்னில் இவன்மிகு துன்பம் [செய்தான்
அதனாலே அந்தத் தோடம் அணுகிடு மிவனுக் கேதான்
சதியான ரோகம் எவ்வார் சாந்தியும் சொல்லு மென்ன
மதிமுக வள்ளி மோகன் அறுமுகன் தன்னால் நீங்கும்.

14. இதைத் தவிரவும், இவன் முற்பிறப்பில் பல குற்றங்களைச் செய்தான். அதனால் அந்த வாயு ரோகம் இவனை யடைந்தது. அந்த ரோகம் தீரச் சாந்தியைக் கூறுங்கள். சந்திரனைப் போன்ற முகம் படைத்த வள்ளி மணாளன் முருகப்பெருமா னருளால் அந்த நோய் நீங்கும்.

15. நீங்கும்கா ரணங்க ளெவ்வார் நிகழ்த்துவீர் முனியே நீர்தாம்
சாந்தமாய்ப் பதினேர் கார்த்தி தணிகைக்குச் சென்று பின்பு
தீங்கிலா தர்ச்சித் தேத்திச் சிவன டியார்க்கு அன்னம்
சாங்கிவன் அளிப்பா னாகில் இலகிய பிணியும் நீங்கும்.

15. அது நீங்கும் வகை எப்படி என்று கூறுங்கள், முனியே! அமைதியுடன் பதினெரு கிருத்திகைகள் திருத்தணிகைக்குச் சென்று, பிறகு விதிப்படி கடவுளைப் பூசித்து, சிவனடியார்களுக்கு உணவளிப்பானாயின் இவனை யடைந்த நோய் நீங்கும்.

16. பாரியும் ஒன்றே யாகும் பாலர்கள் ஆண்பா லொன்று
தீரமாய்ப் பெண்பால் ரெண்டு செப்புவோம் இவனுக் [கேதான்
சாரியாய்ப் புதல்வர் தாமும் தவத்தினு லுதிக்கு மென்றோம்
வீரியன் வயது தீர்க்க மிவனுடன் கூடி வாழ்வன்.

16. இவனுக்கு மனைவி ஒருத்தியே ஆவள். புத்திரன் ஒருவனும் பெண்கள் இருவரும் உளராவர் என்று கூறுவோம். புதல்வர்களும் கல்வினையிலேயே வரிசையாகத் தோன்றுவர் என்றோம். ஜாதகன் நீண்ட ஆயுளுடையவன். புதல்வனுடன் கூடி வாழ்வான்.

17. அன்னையு மால்நி றத்தாள் அழகுளான் பொறுமை சாலி
தன்னிலே வாத தேகி சாதிப்பாள் சிலவே சங்கை
பின்னமில் லாத தேகி புருடனுக் கினிய ளாகும்
பன்னியே பேச வல்லாள் பாவைக்குக் கோபம் கொஞ்சம்.

17. தாயும் கரிய நிறமுள்ளவள். அழகானவள். பொறுமை யுள்ளவள். வாத ரோக முள்ள உடலுடையவள். சில சந்தேகங்கள் நீங்கும்படி பேசுவாள். கட்டமைந்த உடலைப் பெற்றவள். கணவனுக்கு நல்லவள். பேசியதையே திரும்பத் திரும்பப் பேசுவாள். சிறிது கோப முள்ளவள்.

18. அவள்துணை நவம தாகும் ஆண்மூன்று பெண்ணு மவ்வார்
நிறையவே தீர்க்க மென்றேரும் நிகழ்த்துவோம் அவள்தன்
[பூர்வம்
சிறுபாக்கம் தன்னி லேதான் செங்குந்த மரபில் தோன்றித்
திருமகள் விலாசம் பூண்டு சேயர்க ளுள்ளா ளாகி;

18. அவளுடன் பிறந்தவர்கள் ஒன்பதின்மர் ஆவர். அவர்களில் சகோதரர் மூவரும், சகோதரிகள் மூவரும் தீர்க்கமாக இருப்பர் என்று கூறுவோம். அவள் முன் சென்மத்தைக் கூறுவோம். சிறுபாக்கத்தில், செங்குந்தர் வகுப்பில் பிறந்து, செல்வங்களைப் பெற்று, இலட்சுமீ கடாட்ச முண்டாகி, புதல்வர்களைப் பெற்று;

19. தென்திசை சேது புக்குச் சிலசில தலங்கள் சென்று
அன்புடன் உள்ளூர் மீண்டு அவள்பந்து மெச்ச வாழ்ந்து
தன்வரன் முன்னே மாண்டு தலைநான்கோன் வரையப் பட்டு
இன்பமா யிக்கு லத்தில் இலகினு ளவளே யென்றேரும்.

19. தெற்குத் திசையிலுள்ள சேதுவுக்குச் சென்று, தீராடி, சில புண்ணியத் தலங்களுக்கும் சென்று தன்னூர் திரும்பி வந்து, அவள் சுற்றத்தார் மெச்ச வாழ்ந்து, கணவனுக்கு முன்பே இறந்து போனாள், பிறகு பிரமனால் படைக்கப் பட்டு, இன்பமுடன் இந்தக் குலத்தில் தோன்றினாள் என்று கூறினேம்.

20. மறுசென்மம் போரூர் தன்னில் வல்லியு மிக்கு லத்தில்
திருமகள் விலாசம் பூண்டு சேயர்க ளுள்ளா ளாகிப்
பெருமையாய்க் குடும்பி யாகிப் பூமியில் வாழ்வா ளாகும்
பெருவயி ரேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

20. மறு பிறப்பு, திருப்போரூரில் இக் குலத்தில் தோன்றி, செல்வங்களைப் பெற்று, மக்களை யடைந்து, மேன்மையுடன் குடும்ப மேற்று, பூமியில் வாழ்வாள். விநாயகப் பெருமானை என்ற பார்வதியே! கேட்பாயாக.

21. பிதுர்பூர்வம் கீழ்ப்பா லாகப் பேசுவோம் சமவூர் தன்னில்
சதிருட னிக்கு லத்தில் சார்ந்தன னிவனே யென்றேரும்
அதிகமாம் செட்டுச் செய்து அவனுமே கிருஷி யாலும்
பதியது பெருமை பூண்டு பாக்கிய முடையா னாகி;

21. ஜாதகன் தந்தை முன் சென்மத்தில், கிழக்குத் திசையில் உள்ள அழகிய ஊரில், இதே குலத்தில் பிறந்தான் என்று சொல்லுவோம். நல்ல வாணிபங்களைச் செய்து, பயிர்த் தொழிலையும் செய்து, சிறந்த வீடுடைய வனாகவும், நல்ல பாக்கியங்களைப் பெற்றும்;

22. இருக்கின்ற நாளி லேதான் இவன்குலம் தாழ்ந்த மாதைப்
பொருள்தாரே னென்று சொல்லிப் போகங்கள் துய்த்தா
[னென்றேம்
மறுபடி தனமீ யாமல் மங்கையும் சொல்லு கின்றாள்
வருசெண்ம முந்த னுக்கு மங்கையால் செலவு நேர்ந்து;

22. வாழ்ந்து வரும் நாளில், இவன் தாழ்ந்த குலத்தைச் சார்ந்த பெண் ஒருத்தியிடம் பொருள் தருகின்றேன் என்று கூறி, இன்பந் துய்த்தான். பிறகு பொருள் கொடுக்காததால், அப் பெண் கூறுகின்றாள். வரும் பிறப்பில் உனக்குப் பெண்ணால் செலவு ஏற்பட்டு;

23. தேகமே பிணியு மாகிச் சல்லிய முடைய னாகி
ஏகனுய் வாழ்வா யென்று இயம்பினை ளந்த மாது
வேகமாய்க் கோட்டம் தன்னில் விருட்சத்தை வெட்டி
[விட்டான்
ஆகவே அந்தத் தோடம் அடைந்தது இவனுக் கென்றேம்.

23. உடலில் நோய் தோன்றி, கடன் தொல்லை ஏற்பட்டு, தனியனாக வாழ்வாய் என்று கூறினாள். இவன் அவசரப்பட்டுக் கோவிலில் உள்ள மரத்தை வெட்டி விட்டான். அதனால் அந்தத் தோஷமும் இவனை யடைந்தது என்று கூறினேம்.

24. இன்ன மும் சிலவே தோடம் இவனுமே செய்தா
[னென்றேம்
அந்தியக் காலம் தன்னில் அவன்காலில் மூடம தாயும்
அந்தகன் பக்கல் சென்று அரிமகன் வரையப் பட்டு
வந்தவ னிவனே யென்றே மறைகின்றே மிச்சென் மத்தில்;

24. மற்றும் சிற்சில தோஷங்களை இவன் செய்தான் என்று கூறினேம். கடைசிக் காலத்தில் கால்கள் மூடங்கிப் போய் இறந்து போனான். பிறகு பிரமனால் படைக்கப் பட்டு, இவன் தோன்றினன் என்றேம். இப் பிறப்பில்.

25. மங்கையின் சாபம் போலே வந்திடும் மேக ரோகம்
சங்கையாய் ருணங்கள் நேரும் சயமூனி கூறு கின்றார்
தங்கிய குணங்கள் தீரச் சாற்றுவீர் மார்க்கம் ஒன்று
பொங்கமாய்க் கரும சாந்தி புனிதனும் செய்து கொண்டு;

25. பெண்ணின் சாபம் போலவே இவனுக்கு மேக நோய் ஏற்படும். கடன் தொல்லைகள் ஏற்படும். செயமுனி கூறுகின்றார். இத்தகைய துன்பங்கள் தீர வழி ஒன்று கூறுங்கள். நான்கு விதிப்படி கரும சாந்தியைச் செய்து

26. வெள்வங்கம் தன்னை நீற்று விமலன்மண் டலமும் கொள்ளக்
கள்ளமாய் ரோகம் தானும் காணுமல் ஓடு மென்றேரும்
துள்ளிய வங்க மெவ்வார் செய்வது சொல்லு மென்ன
நள்ளிருக ளற்று மெங்கள் நாயகி புகலக் கேளாய்.

26. வெள் வங்கத்தைப் பொடிசெய்து, அதனை, இவன் ஒரு மண்டலம் அருந்தினால் மேகரோகம் இவனை யணுகாது நீங்கிவிடும் என்று கூறுவோம். சிறந்த வெள்வங்கத்தை எவ்வாறு பொடி செய்வது? கூறுங்கள். காரிருள் போன்ற அஞ்ஞானத்தை யகற்றும் பார்வதியே! கூறுகின்றேரும், கேட்பாயாக.

வேறு

27. இலுப்ப நெய்யி லேழுதரம் உருக்கி ஊற்றி
இலைபோலே தகடுசெய்து இரட்டை மூலி
கிலுகிலுப்பைச் சமமாக ரவியு லர்த்திக்
கீரைதனை உரலிலிட்டுத் தூசாய்ச் செய்து
நலமுடனே உள்வைத்து மூட்டை யாக்கி
நற்சதுரங் கசபுடமாய் நீருய்ப் போகும்
கனலிலிட்டு எடுத்துநவ நீதங் கொள்ள
கண்டதொரு மேகம்போம் கருதி னேனே.

27. இலுப்பை யெண்ணெயில் ஏழு முறை அதைக் காய்ச்சி ஊற்றி, இலையைப்போல் மெல்லிய தகடாக்கி, இரட்டைமூலி, கிலு கிலுப்பை இரண்டையும் சரியளவு எடுத்து, சூரியபுடம் வைத்து, உரலில் போட்டு இடித்து, தூளாக்கி, அந்தத் தூளை மூட்டையைப் போல் செய்து, அதனுள்ளே வெள் வங்கத்தை வைத்து, ஒரு சதுரக கஜமுள்ள பள்ளத்தால் வைத்து நெருப்பிட்டு மூடி, பின்பு, நெருப்பிலிருந்து அதை எடுத்து வெண்ணெயில் கலந்து அருந்த, மேக நோய் உடனே நீங்கிவிடும் என்று கூறினேரும்.

வேறு

28. சாந்தியும் சக்தி பூசை தனையனும் செய்வா னாகில்
ஏந்திய நினைத்த தெல்லாம் இலகிடும் லாப மெய்தும்
சாந்தியும் செய்யா னாகில் சல்லிய மிகவே யுண்டாம்
கூர்ந்துமே யுரைத்த வார்த்தை குறையாது கேளுந் தாயே!

28. சாந்தியுடன், இவன் அம்பிகைக்குப் பூசையும் செய்து வந்தால் எல்லாக் குற்றங்களும் நீங்கிவிடும். இலாபங்கள் ஏற்படும். சாந்தி செய்யாவிடின் கடன் தொல்லைகள் மிகுதியாக ஏற்படும். ஆராய்ந்து கூறப்பட்ட சொற்கள் தவறு. தாயே! கேளுங்கள்.

29. தந்தையின் மரண காலம் சாற்றுவோம் இருபான் எட்டில்
எந்தையே ஆனி மாதம் எய்திடு மென்று சொன்னேம்
பிந்திய சென்மம் தன்னில் பேசுவோம் காளத்தி தன்னில்
முந்திய பிரம்ம சேயா யுதிப்பனு மென்று சொன்னேம்.

29. தந்தையின் மரண காலத்தைக் கூறுவோம். இருபத்தெட்டாம் வயதில், ஆனி மாதத்தில் தந்தைக்கு மரணம் ஏற்படும் என்று சொன்னேம். அவன் மறு சென்மம் காளஹஸ்தியில் ஏற்படும் என்று கூறுவோம். அவன் உயர்ந்த அந்தணர் குலத்தில் தோன்றுவான் என்று சொன்னேம்.

30. அன்னைக்கு மூப்பான் ரெண்டில் அணுகிய புரட்டை மாதம்
தன்னியே கண்ட மென்றேரும் சாதகன் குணத்தைச்
[சொல்வோம்
இன்னவ னிருநி றத்தான் ஈகைவான் பலர்க்கு நேயன்
உன்னத வார்த்தை சொல்வான் உயர்ந்ததோர் கல்வி
[கற்பான்.

30. இவன் தாய்க்கு இவனது மூப்பத்திரண்டாம் வயதில், புரட்டாசி மாதத்தில் மரணம் ஏற்படும். ஜாதகன் குணத்தைக் கூறுவோம். கரிய நிறமுள்ளவன். கொடையாளி. பலருக்கும் நண்பன். மேன்மையான வார்த்தைகளைக் கூறுவான். சிறந்த கல்வி கற்பான்.

31. வாக்குகள் பலித முள்ளான் மன்னர்கள் பேட்டி
[கொள்வான்
நாக்குகள் தவரு னுகும் நாயகி மார்கள் நேயன்
ஏற்கவே கிருஷி செய்வன் எதிரியை வசியம் கொள்வன்
பாக்கிய முடைய னுகும் பஞ்சமே லிரக்க முள்ளான்.

31. இவன் சொல்லுஞ் சொற்படி எல்லாம் நடைபெறும். அரசர்கள் சந்திப்பு ஏற்படும். சொன்ன சொல் தவறுதவன். மனைவி மீது அன்புள்ளவன், பயிர்த்தொழில் புரிவான். பகைவர்களை வசியமாக்கிக் கொள்வான். அதிர்ஷ்ட முள்ளவன். ஏழைகள் மீது இரக்க முடையவன்.

32. துண்டமுங் கொஞ்ச முள்ளான் துருசான வார்த்தை
[சொல்வன்
அண்டினோர் தமக்கு நேயன் அவன்பல செட்டுச் செய்வன்
வண்டியு முடைய னுகும் மாநிலம் சேர்ப்பா னென்றேரும்
பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் சேர்ப்பா னுமே.

32. கண்டிப்பாக இருப்பான். பட படவென்று பேசும் இயல்பினன். தன்னை யடைந்தவர்களுக்கு நண்பனுவான். பற்பல வியாபாரங்கள் செய்

வான். வண்டி முதலிய வாகனங்க ளுடையவன். வீடு நிலங்களைப் பெரிய அளவில் சேர்ப்பான் என்று கூறுவோம். பழைய காள்முத லிருந்த நிலங் களை ஜாதகன் சேர்ப்பான்.

33. இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோம் பதினே
[ழாண்டில்
கன்னிகை வடகீழ் தன்னில் கனத்ததோர் நகரம் தன்னில்
அன்னவன் துணைவி வர்க்கம் அணுகிய மாதைக்
[கொள்வன்
தன்னிலே சிவந்த மேனி சரசமாய் வார்த்தை சொல்வள்.

33. ஜாதகன் திருமணக் காலத்தைக் கூறுவோம். பதினேழாம் வய தில், வட கிழக்குத் திசையிலுள்ள பெரிய பட்டணத்திலிருந்து இவனுக்கு மனைவி வாய்ப்பாள். அவள், இவன் தாயின் வர்க்கத்தைச் சேர்ந்தவள். சிவந்த நிற முள்ளவள். இனிமையாகப் பேசுவாள்.

34. அன்னம்போல் சாய லுள்ளாள் அழகுளாள் நுணுக்கம்
[கொஞ்சம்
பன்னியே பேச வல்லாள் பாவைக்கு வயது தீர்க்கம்
இன்னவார் முனிவர் கூற ஈசுவரி கேட்க லுற்றுள்
சொன்னீரே மனைவி தீர்க்கம் சனிபுகர் ஏழில் நிற்க;

34. அன்னம் போன்ற நடையுள்ளவள். புத்தி கூர்மை சிறிதளவே யுள்ளவள். பேசியதையே பேசுவாள். நீண்ட வயதுள்ளவள். இவ்வாறு முனிவர் கூறவும், பார்வதி கேட்கலானாள். இவனுடைய மனைவி தீர்க்கமாக இருப்பாள் என்று கூறினீர்கள். சனியும் சுக்கிரனும் ஏழாமிடத் திலும்;

35. சத்தமத் தோன்ச ரத்தில் சார்ந்ததால் மனைவிக் கேதான்
குத்தமா மென்று சொன்னேம் குறுமுனி புகலு கின்றார்
சத்தமு மதற்கு நான்கு சந்திரன் இருப்ப தாலும்
சித்தமாய்ச் சேய்க்கு நாலில் சீர்குரு இருப்ப தாலே;

35. ஏழாம் வீட்டுக் குடையவன் சர ராசியான கடகத்திலும் இருப் பதால், களத்திர தோஷம் உண்டு என்று சொல்லுவோம். அகத்தியர் கூறுகின்றார். ஏழாமிடமாகிய விருச்சிகத்திற்கு நாலில் சந்திரன் இருப்ப தாலும், ஏழாம் வீட்டுக் குடையவனான செவ்வாய்க்கு நாலில் (துலா ராசியில்) குரு இருப்பதாலும் ;

36. மனைவியும் ஒன்றே யாகும் மறுமனை ஒன்று உண்டு
கனமுடன் இரண்டு தாரம் காளைக்கு வருவ தென்ன
அனையவே முதல்மா துக்கு அணுகாது மதலை தானும்
இணையிலா மறுமா துக்கு விளங்கிடும் புத்திர னென்றோம்.

36. மனைவி ஒருத்தியேயாம். மறு மனைவி ஒருத்தியும் வாய்ப் பாள். என், இவனுக்கு இரு மனைவிமார் என்று கூறினீர்கள்? முதல் மனைவிக்குப் புத்திரர்கள் தோன்றார். மறு மனைவிக்குப் புத்திரர்கள் தோன் றுவர் என்றோம்.

37. புத்திர னுண்பால் ஒன்று பெண்ணது மூன்று மாகும்
சித்தமாய் நான்கு தீர்க்கம் செப்புவோம் இவனமுன்
[சென்மம்
அத்தியும் வரதர் வாழும் அக்காஞ்சி தன்னி லேதான்
வித்தக னிக்கு லத்தில் விளங்கியே செட்டுச் செய்து;

37. புத்திரன் ஒருவனும் பெண்கள் மூவரும் தோன்றுவர். இந் நால் வரும் தீர்க்கமாக இருப்பர் என்று கூறுவோம். இவன் முற்பிறப்பைக் கூறு வோம். அத்திவரதர் கோயில் கொண்டிருக்கும் காஞ்சீபுரத்தில், இதே குலத்தில் தோன்றி, வியாபாரங்கள் செய்து;

38. கல்வியு முபதேசித்த கற்புள்ள குருவின் பெண்மேல்
கொள்ளாத மோகம் கொண்டு புகலுவான் சிலேடை
[வார்த்தை
வல்லியும் கோப முற்று வறைகின்றாள் சாபம் தானும்
நல்லதோர் மறுசென் மத்தில் நாயகி யிருவ ராயும்;

38. தனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியன் மகள் மீது மோகங் கொண்டு, இரு பொருள்பட உரையாட, அப் பெண்ணும் சினந்து சாபத்தைக் கொடுத் தாள். அடுத்த பிறப்பில் மனைவியர் இருவரை யடைந்து;

39. வாதையும் படுவா யென்று மங்கையும் சொல்ல லுற்றாள்
பாதக வார்த்தை தானும் பற்றிற்று யிவனுக் கேதான்
மேதினில் குற்றமாக வித்தகன் செய்தா னென்றோம்
பாதகம் நேரு மென்றோம் பார்வதி கேட்டி டாயே.

39. அல்லல்கள் படுவாய் என்று அப் பெண் கூறினாள். அந்தச் சாபம் இவனை யடைந்தது. ஜாதகன் பல தீவினைகளைப் புரிந்தான் என்று கூறி னோம். அவற்றினாலும் தோஷம் நேரு மென்றோம். பார்வதியே! கேட்பாயாக.

40. மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டு
விரைவினி னிக்கு லத்தில் விளங்கிலு னிவனே யென்றேரும்
இருமனை யிச்சென் மத்தில் இலகிடு மிவனுக் கேதான்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

40. பிறகு மரண மடைந்தான். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இக் குலத்தில் இந்த ஜாதகனுகத் தோன்றினன். இவனுக்கு இப் பிறப்பில் இரு மனைவியர் ஏற்படுவர். விராயகனைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

41. உதித்தவன் பொதுயோ கத்தை உரைக்கின்றேரும் வறுமை
[யில்லான்
நிதிமிக யுடையோ னுகும் நீங்கின பூமி சேர்ப்பன்
பதியது புதிதாய்ச் செய்வன் பந்துவும் புகழ வாழ்வன்
நதிபல தீர்த்தம் தோய்வன் நற்றிருப் பணியும் செய்வன்.

41. ஜாதகனது பொது யோகத்தை உரைக்கின்றேரும். ஏழைமை இல்லாதவன். செல்வம் மிகுந்தவன். தன்னை விட்டு நீங்கிய பூமிகளைத் திரும்பவும் சேர்ப்பான். புதிய வீட்டைக் கட்டுவான். சுற்றத்தார் மெச்ச வாழ்வான். பல நதிகளிலும், புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடுவான். நல்ல செயல்களையும் செய்வான்.

42. தாதைக்கு மேலாய் வாழ்வன் சத்தான வேலை செய்வன்
சூதினுல் பகையை வெல்வன் துராசையு மில்லா னுகும்
ஞாதிகள் வர்க்க மில்லான் நடனசங் கீத மிட்டன்
போதிப்பான் கல்வி ஞானம் புகழுளான் பெருமை யுள்ளான்.

42. தன் தந்தைக்கு மேலாக வாழ்வான். பயனுள்ள பணிகளைப் புரிவான். சூதினுல் விரோதிகளை வெல்லுவான். கெட்ட ஆசைக ளற்றவன். தாயாதிகள் இல்லாதவன். நாட்டியம், சங்கீதம் இவைகளில் விருப்ப முள்ளவன். கல்வி போதிப்பான். சிறந்த ஞானம் உள்ளவன். புகழும் பெருமையும் உடையவன்.

43. பிறந்தநாள் முதல்நான் காண்டும் பேசுவோம் பலனை
[யாங்கள்
குறைந்திடுந தனமுந் தாமும் குறையாக மனங்க ளுண்டு
வரவுக்குச் செலவ நேகம் மாடுகள் கெடுதி யாமே
தரையினுல் விளைவு கொஞ்சம் தைரியம் குறைவ தாமே.

43. பிறந்த நாள் முதல், நான்கு வயது வரை பலன்களைக் கூறுவோம். செல்வங்கள் குறைந்து போம். மனக் குறைகள் ஏற்படும். வருவாய்க்கு

அதிகமாகச் செலவு ஏற்படும். கால் நடைகளுக்குத் தீமைகள் உண்டாகும். நிலங்களில் விளைவும் குறைவாகும். தைரியமும் குறையும்.

44. அதற்குமேல் மரண மட்டும் அம்புலி போலே யோகம்
குதர்க்கங்கள் நிவிர்த்தி யாகும் குறித்தசல் லியங்கள் நீங்கும்
சதமான பூமி யோங்கும் சந்தோட மனங்க ளுண்டு
நிதிசேரும் நாட்கு நாளாய் நிமலியே மேலுங் கேளே.

44. அதற்குமேல் மரணம் வரை வளர்பிறைச் சந்திரன் போல் யோகம் பெருகும். குறைகள் நீங்கும். கடன் தொல்லைகளும் விலகிப் போகும். நல்ல விளை நிலங்கள் பெருகும். மனத்தில் மகிழ்ச்சி ஏற்படும். செல்வங்கள் நாள்தோறும் சேரும். பார்வதியே! கேட்பாயாக.

45. எவ்விதம் சல்லியம் நீங்கும் இயம்புவீர் முனியே நீர்தாம்
ஓவ்விய பந்து வாலே உதவியால் நிவிர்த்தி யென்றோம்
நவ்விய தென்கீழ் தன்னில் நற்றந்தை வர்க்கத் தானுல்
பவ்யமாய் நேரு மென்றோம் பார்வதி கேட்டி டாயே.

45. கடன் தொல்லை எப்படி நீங்கும்? முனிவரே! தாங்கள் கூறுங்கள். தனக்கு வேண்டிய பந்து ஒருவரின் உதவியால் கடன் தொல்லைகள் நீங்கும் என்று கூறினோம். தென் கிழக்குத் திசையில் தந்தை வர்க்கத்தைச் சேர்ந்த பந்துவால் அவ் வுதவி கிடைக்கும். பார்வதியே! கேட்பாயாக.

46. பிறந்தசேய்ச் சென்ன காலம் புகர்தசை ஆண்டு ஒன்று
சிறந்திடும் திங்கள் மூன்று தினமது ஏழு தாகும்
சிறந்ததோர் சாத கர்க்கு மிக்கவே கண்டம் நேரும்
குறைந்திடும் காலி தாமும் குடும்பத்தில் சுபமும் நேரும்.

46. ஜாதகனது பிறப்புக் காலத்தில் சுக்கிர மகா தசையில் இருப்பு; வருஷம் ஒன்று, மாதங்கள் மூன்று, நாட்கள் ஏழு ஆம். இக் காலத்தில் ஜாதகனுக்குப் பல கண்டங்கள் ஏற்படும். கால்நடைகள் விருத்தி குறையும். குடும்பத்தில் சுபங்களும் ஏற்படும்.

47. செலவுக ளதிக மாகும் சஞ்சல மனங்க ளுண்டு
நலமது கூடா தாகும் நற்பந்து சூத கங்கள்
பலதானியம் சேத மாகும் பகருவோம் விபரம் ரெண்டில்
மலையிறை மகளே யாங்க ளறைந்தது தப்பா தென்றோம்.

47. செலவு அதிகமாகும். பற்பல குழப்பங்கள் உண்டாகும். நன்மைகள் ஏற்படா. பந்துக்களில் சிலருக்கு அசுபங்கள் ஏற்படும். தானியங்கள் அழிந்து போம். மற்ற விவரங்களை இரண்டாம் பகுதியில் கூறுவோம். இமயமலை யரசனால் பெற்று வளர்க்கப்பட்ட பார்வதியே! நாங்கள் கூறியவை தவறு.

ஜாதகம் 58

1. பொன்புதன் ராகு மேடம் புகர்மதி யிரவி நந்தி
மந்தனும் மாதை புக்க மங்கலன் வீணை யாகப்
பிந்திய கேது கோலில் பேசுவோம் நந்தி சென்மம்
இந்தவார் கிரகம் நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. குரு புதன் ராகு மேஷத்திலும், சுக்கிரன் சந்திரன் சூரியன் விருஷபத்திலும், சனி கன்னியிலும், செவ்வாய் மிதுனத்திலும், கேது துலாத்திலும் தங்கியிருந்து, இலக்கினம் விருஷபமாக விருந்தால் உரிய பலனைக் கூறுங்கள்.

	குரு புதன் இராகு	சுக்கிரன் சூரியன் சந்திரன் லக்கினம்	செவ்வாய்
		இராசி சக்கரம்	
		கேது	சனி

2. சுந்தர னில்லம் தன்னைச் சொல்லுவோம் கீழ்மேல் வீதி
தென்திசை வாடை யாகும் தட்சிணம் வயல்க ளோடை
[1]இந்திரன் திசையில் மாரி யாளிவா கனத்தோள் மாயோன்
எம்மையே வாச மாகும் ஈசனும் கோட்ட முத்ரம்.

2. ஜாதகன் பிறந்த வீட்டைக் கூறுவோம். கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு வாடையில் உளது. தெற்குத் திசையில் வயல்களும், ஓடைகளும் உள்ளன. கிழக்குத் திக்கில் மாரியம்மன் கோயிலும், காளி கோயிலும், விஷ்ணு கோயிலும் இருக்கின்றன. வடக்குத் திசையில் சிவபெருமான் கோயிலுண்டு.

3. அருகினில் நதியு முண்டு யானையின் கோட்டம் மேற்கில்
குறுகிய துர்க்கை காணும் கூறுமிவ் வடையா ளத்துள்
திருமகள் விலாசம் போன்ற சமவூரில் கங்கை சேயாய்
உறைகுவா னிவனே யென்றேரும் உதத்மி கேட்டி டாயே.

---

1. கிழக்கு

3. வீட்டிற்கு அருகில், ஒரு நதி ஓடும். மேற்குத் திசையில் விநாயகப் பெருமான் கோயில். சிறிய துர்க்கை கோயிலொன்றும் அங்கு உண்டு. இத் தகைய அடையாளங்களுடன்கூடி, செல்வச் சிறப்புப் பெற்ற அழகிய ஓர் ஊரில் ஜாதகன், வேளாளர் மரபில் தோன்றி வாழ்வான் என்று கூறுவோம். பார்வதியே! கேட்பாயாக.

4. தாதைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு முதல்மா தின்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
போதவே துணைவர் தம்மைப் புகலவே பலத்தைக் காணும்
மேதினி லுதித்தா லுந்தான் விரயங்க ளுண்டா மென்னே.

4. பாட்டனரின், இரு மனைவிமார்களில், மூத்தவள் பெற்ற புதல் வனே ஜாதகனின் தந்தை என்று கூறுவோம். தந்தையின் சகோதர பாவத்தைக் கூறும்போது, அது பலமுள்ளதாகக் காணும். சகோதரர்கள் தோன்றினாலும் மரணமடைவர்.

5. மற்றொரு இளைய தாய்க்கு மைந்தரா ணென்று என்றும்
வித்தகன் வேறுய்ச் செல்வன் விளம்புவோம் பிதாகு
[ணத்தைச்
சுத்தமு முடைய னாகும் துறவிபோல் வேதம் சொல்வன்
வெற்றியு முடைய னாகும் வேல்விடை பத்தி கொள்வன்.

5. தந்தையின், இளைய தாயாருக்கு ஓர் ஆண்மகன் தோன்றுவான். அவன் சகோதரனைவிட்டுத் தனியாகச் சென்று வாழ்வான். தந்தையின் குணத்தைக் கூறுவோம். தூய்மை யுடையவன். முனிவர்களைப் போல் மெய்ஞ்ஞானம் உடையவனென்று கூறுவோம். வெற்றியுள்ளவன். முருகப் பிரான் மீதும், சிவபெருமான் மீதும் பக்தி கொண்டவன்.

6. மாநிறம் சமதே கத்தன் மறுமொழி யதிகம் கூர்வன்
ஆனவர் நேசம் கொள்வன் அவன்தந்தம் பெரிதாய்க்
[காட்டும்
தேன்மொழி கூறு வானும் சிலர்களால் நிந்தை யுள்ளான்
மாநில மதிகம் சேர்ப்பன் அவன்சித்ர வீடு செய்வன்.

6. கரியநிற முள்ளவன். குறைவு அதிகமின்றி அழகிய உடலமைப் பைப் பெற்றவன். கேள்விகளுக்கு அதிகமாக விடை கூறுவான். பெரி யோர்களுடன் நட்புக் கொள்ளுவான். நீண்ட பற்களை யுடையவன் இனிய மொழிகளைக் கூறுபவன். சிலரால் பழிக்கப் படுவான். நிலபுலன்களை அதிகமாகச் சேர்ப்பான். அழகிய இல்லங்களை அமைப்பான்.

7. நல்லோர்க்கு நல்ல னுவன் நற்கல்வி கிருஷி செய்வன்
புல்லிய புத்தி கொஞ்சம் புராதனம் விருத்தி செய்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான் இவன்பந்து மெச்ச
[வாழ்வன்
சொல்லிலே யவமா னங்கள் செய்திடு வானு மென்றோம்.

7. நல்லவர்களுக்கு நல்லவனுவான். சிறந்த கல்வி யறிவுடையவன், விவசாயம் செய்வான். கீழான புத்தி சிறிதளவு உண்டு. முன்னோர் காலத்திய சொத்துக்களே விருத்தி செய்வான். யாசிப்பவர்களுக்கு இல்லை யென்று கூற மாட்டான். சுற்றத்தினர் மெச்சும்படி வாழ்வான். பிறர் வெட்க மடையும்படி பேசுவான் என்று கூறினோம்.

8. கடன்கொள்ளான் இடுக்கண் வந்தால் காரியம் அறிந்து
[செய்வன்
உடன்படான் பிழைக ளுக்கு உபாயமும் அதற்குச்
[செய்வன்
விடவுரை கொஞ்சஞ் சொல்வன் மேதினில் டம்ப னுவன்
தடபுடல் செய்கை யுள்ளான் தங்கிடும் வாயு ரோகம்.

8. கடன் கொள்ள மாட்டான். துன்பம் வந்தாலும் செய்ய வேண்டிய காரியத்தை நன்கு ஆராய்ந்து பிறகு செய்வான். குற்றங்களுக்கு ஆளாக மாட்டான். குற்றம் நேராதிருக்க, தக்க உபாயங்களைச் செய்வான். கடுமையான மொழிகள் சில கூறுவான். உலகில் ஆடம்பரமாக வாழ்வான். இடம்பமாகச் செயல்களே ஆற்றுவான். வாயு ரோகத்தால் துன்பப்படுவான்.

9. குருஉப தேசங் கொள்வன் குணமது ரெண்டு முள்ளான்
திருமகள் வாச முள்ளான் தீரமா மனத்த னுகும்
பெருமையாய்க் குடும்பி யாகும் பேசுமிக் குணத்தா னுக்கு
இருமனை யிளையா ளுக்கு ஈன்றவ னிவனே யென்றோம்.

9. நற்குருவினிடம் நல்லுபதேசம் பெறுவான். இருவிதமான குணங்கள் உடையவன். இலட்சுமி கடாட்சம் உள்ளவன். தைரிய மனத்தினன். மேன்மையான குடும்பத்தை ஏற்பான். இத்தகைய குணங்களுடைய தந்தைக்கு இரு மனைவியர். அவர்களில். இளையவளிடம், தோன்றியவனே இந்த ஜாதகன், என்றோம்.

10. சாதகன் சிவந்த மேனி சமர்த்தாக வார்த்தை சொல்வன்
தீதிலாக் குணத்தா னுகும் தீங்கதை யொருவர்க்
[கெண்ணுன்
போதமே கல்வி கற்பன் புகழுளான் அன்ன மீவன்
சீதள குணத்தா னுகும் சிறப்பான குடும்பி யாவன்.

10. இவன் சிவந்த நிறமுள்ளவன். சாமர்த்தியமாகப் பேசுபவன். குற்றமற்ற குணமுள்ளவன். பிறருக்குத் தீமைகளே நினையாதவன். போதுமான அளவு கல்வி கற்றவன். புகழுள்ளவன். விருந்தினர்களுக்கு உணவு அளிப்பவன். தண்மையான குணமுள்ளவன். மேன்மையான குடும்பத்தை ஏற்பவன்.

11. அடிமையாங் குடிக ளுண்டு ஆவொடு நந்தி யுண்டு
திடமதா யில்ல முண்டு திருவொடு பணியும் செம்பொன்
தடமதில் வைப்பும் உண்டு சற்சன ருறவு கொள்வன்
மடவர்பால் மோகங் கொள்வன் வழுத்துவான் சிலேடை
[வார்த்தை.

11. ஏவலாட்கள் பலரைப் பெற்றவன். பசுக்கள், காளைகள் விருத்தி யுண்டு. கட்டுக் கோப்பான நல்ல வீட்டைப் பெற்றிருப்பான். பொருள்களோடு நகைகள், பொன்கள் முதலியன சேமித்து வைப்பான். பெரியோர் சட்பைக் கொள்ளுவான். பெண்கள்பால் மையல் கொள்ளுவான். இரு பொருள்படப் பேசுவான்.

12. தானிய விருத்தி யுண்டு சகலவா ணிபமும் செய்வன்
மானமாய்ச் சீவிப் பானும் மன்னர்க ளிட்டம் கொள்வன்
ஆனநற் சகடு முள்ளான் ஆசார மாகுதி நேயன்
வானவர் பூசை பூண்பன் அவன்திருப் பணியும் செய்வன்.

12. தானியங்கள் விருத்தி யுடையவன். பல வியாபாரங்கள் புரிவான். கண்ணியமாக வாழ்க்கை நடத்துவான். அரசர்களும் நேசிக்குமாறு நடந்து கொள்ளுவான். வண்டி முதலிய வாகன வசதிகளைப் பெற்றிருப்பான். ஒழுக்கம், வேள்வி முதலியவைகளில் பற்று உள்ளவன். கடவுளர்க்குப் பூசைகளைப் புரிவான். கோயில் திருப்பணிகளையும் செய்வான்.

13. கரமதி லுருத்தி ரேகை காமனை யொப்ப தாகும்
உறன்முறைக் கினிய னாகும் உள்மனம் கபடு மில்லான்
விரைவினில் நடக்க வல்லான் விளைபுலம் விசேடம்
[சேர்ப்பன்
உறன்முறை மேலாய் வாழ்வன் உலகுளோர் வசியம்
[கொள்வன்

13. கையில் உருத்திர ரேகை உண்டு. மன்மதனைப்போல் அழகானவன். சுற்றத்தினர்களுக்கு நண்பன். மனத்தில் கபடமில்லாதவன். வேகமாக நடக்கும் ஆற்றல் பெற்றவன். நிலபுலன்களை மிகுதியாகச் சேர்ப்பான். பந்துக்களைவிடச் சிறப்பாக வாழ்வான். உலகத்தினரை வசப்படுத்திக் கொள்ளுவான்.

14. இன்னவன் துணைவர் தம்மை இயம்பவே பலமு ருது
தன்னிலே யுதித்தா லுந்தான் சடுதியில் நட்ட மெய்தும்
இன்னவார் பராசர் சொல்ல இயல்செய முனிவர் சொல்வார்
அன்னவன் துணைவர் தாமும் அணுகாத கார ணஞ்சொல்.

14. இவனுடைய சகோதர பாவத்தைக் கூறுங்கால், அது பலமற்ற தாக உளது. சகோதரர்கள் தோன்றினாலும் விரைவிலேயே மரணமடைவர். இவ்வாறு பராசர முனிவர் கூற, செய முனிவர் சொல்லுகின்றார். இவனுக்குச் சகோதரர்கள் ஏற்படாதிருக்கக் காரணத்தைக் கூறுங்கள்.

15. ஐந்தினுக் குடையோன் புந்தி அறுரெண்டில் ராகு கூட
மந்தனு மைந்தில் நிற்க வறைகின்றோம் துணைவர் தோடம்
இந்தவார் கூறும் போது இயம்புவா ரத்ரி தாமும
சந்திர னுச்ச மாகச் சதுர்த்தோனுங் கூடி நிற்க ;

15. ஐந்தாவது, இடமாகிய கன்னிக்கு உரிய புதன், விரய ஸ்தானமாகிய மேஷத்தில் ராகுவுடன் கூடி நிற்பதாலும், ஐந்தாமிடத்தில் சனி தங்கி யிருப்பதாலும் இவனுக்குச் சகோதர தோஷத்தைக் கூறுகின்றோம். இவ்வாறு பராசரர் கூறும்போது, அத்திரி முனிவர் சொல்லுகின்றார். சந்திரன் உச்சமாகி, நான்காம் வீட்டுக்கு உடையவனுகிய சூரியனுடன் சேர்ந்து இலக்கினத்தில் இருக்கும்பொழுது ;

16. எப்படித் துணைவர் தோடம் இயம்பலாம் சொல்லு மென்ன
அப்பணி யிருந்த வீட்டிற் கங்கியு மதற்கு மூன்றில்
ஒப்புடன் இருந்த தாலே உரைத்திட்டோம் துணைவர்
[தோடம்
மைப்புடன் இவன்முன் சென்மம் மேவிய தோடத் தாலே;

16. எப்படிச் சகோதர தோஷத்தைச் சொல்லலாம்? காரணம் கூறுங்கள் என, இராகு இருக்கும் இடமாகிய மேஷ ராசிக்கு, மூன்றும் இடமாகிய மிதுனத்தில், செவ்வாய் தகுதியாகத் தங்கி யிருப்பதால், சகோதர தோஷம் கூறினேம். மேலும், இவனுக்கு முற்பிறவியில் ஏற்பட்ட தீவினையாலும்;

17. துணைவர்கள் தோட மெய்தும் சொல்லுவோம் அந்தி
[யத்தில்
கனமுடன் மணத்தின் காலம் கழறுவோ மினிமே லாக
அனையவே மணத்தின் காலம் அறைகின்றோ மிருபா
[னேழில்
கணிகையும் தட்சி ணத்தில் கலந்திடு மென்று சொன்னேம்.

17. சகோதர தோஷம் கடைசி நாட்களில் ஏற்படும் என்று கூறுவோம். இனி, இவன் திருமணக் காலத்தைக் கூறுவோம் இவனுக்கு இருபத்தேழாம் வயதில் தெற்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். என்று கூறினோம்.

18. அன்னவ ளிருசி வப்பு அவளுமுன் கோபி யாகும்
தன்வரன் மனம்போல் வாழ்வள் சகலர்க்கும் நல்லோ
[ளாவள்
பன்னியே பேச வல்லாள் பால்பாக்கிய முடைய ளாகும்
இன்னவள் யோக சாலி இவள்பித்த சூடாங் தேகம்.

18. அவள் கருஞ் சிவப்பு நிறமுள்ளவள். முன்கோப முடையவள். கணவன் மனத்துக்கு ஏற்ப நடப்பாள். அனைவருக்கும் நல்லவளாக இருப்பாள். கூறியவற்றையே மீண்டும் மீண்டும் பேசுபவள். பால் பாக்கியம் உடையவள். பித்த சூடு மேலிட்ட உடலுடையவள். அதிர்ஷ்ட முள்ளவள்.

19. மதலைகள் விருத்தி தன்னை யறையவே பலத்தைக் காணேம்
சதமுட னுதித்தா லுந்தான் சடுதியில் நட்ட மெய்தும்
அதுளவ்வார் சொல்லு மென்ன அஞ்சினில் காரி நிற்கப்
புதனஞ்சோ ஞகி யேதான் பொருந்திடும் விரய மாக ;

19. புத்திர பாவத்தைக் கூறுங்கால், அது பலமுள்ளதாகக் காணப்படவில்லை. தோன்றினாலும் விரைவிலேயே மரிப்பர். அஃது எப்படிக் கூறுங்கள். புத்திர ஸ்தானமாகிய ஐந்தாம் வீட்டில், சனி தங்கியிருப்பதாலும், ஐந்துக்குரிய புதன், விரய ஸ்தானமான மேஷத்தில் தங்கி யுள்ளதாலும் ;

20. புத்திர தோட முண்டாம் பூருவ வினையி னுலே
சித்தமாய் நேரு மென்றோம் செப்புவீ ரந்தச் சங்கை
வித்தகன் முன்சென் மத்தில் விரிஞ்சிபு ரடதற்குக்
[கீழ்ப்பால்
சிற்றாரில் தியின் வமிசம் செனித்தவ னிவனே யென்றோம்.

20. புத்திர தோஷம் உண்டு. முற்பிறப்பில் ஏற்பட்ட வினைகளினாலும் புத்திர தோஷம் ஏற்படும் என்று சொன்னோம். முற்பிறப்பு வினையைக் கூறுங்கள். ஜாதகன் முற்பிறப்பில் விரிஞ்சிபுரத்திற்குக் கிழக்கே யுள்ள ஒரு சிறிய ஊரில், வன்னியர் குலத்தில் தோன்றினன் என்றோம்.

21. அதிகார முடைய ஞகி அதிகபூ மிகளும் பெற்றுப்
பதியினில் திருவு முண்டாய்ப் பந்துபூ சிதனு மாகி
அதிபனும் வாழும் நாளி லறைகின்றோ மூழி தானும்
நதிசடை யணிந்தோன் தேவி நங்கையே கேட்டி டாயே.

21. அதிகாரமுள்ளவனாகி, அதிக நிலபுலன்களையும் செல்வச் சிறப்புக் களையும் பெற்று, சுற்றத்தினர்களால் போற்றப்பட்டு, வாழ்ந்து வரும்காளில், நேர்ந்த வினையைக் கூறுகின்றோம். சடைமுடியில் கங்கையை அணிந் துள்ள சிவபெருமான் மனைவியே! கேளுங்கள்.

22. அவ்வூரில் மறையோன் தானும் அவனுடன் நேச மாகிப்
பவ்வமாய்ச் செட்டுச் செய்து பாரினில் வாழும் நாளில்
ஒவ்வியே வந்த ஊழை உரைக்கின்றோம் விபர மாகத்
திவ்விய மறையோன் பெண்டைச் சேரவே கருத்தி
[லெண்ணி;

22. அந்த ஊரில் வாழ்ந்து வந்த அந்தணன் ஒருவனுடன் நட்புக் கொண்டு, நன்கு வியாபாரம்செய்து, வாழ்ந்து வந்த நாளில், இவனுக்கு நேர்ந்த தீவினையைக் கூறுவோம். இவன், அந்தப் பிராமணனுடைய அழ கிய மனைவியைச் சேர எண்ணங் கொண்டு,

23. வரனில்லா வேளைக் காலம் மறையவ னில்லம் சென்று
அரிவையி னுடனே பேசி அர்த்தமும் அவளுக் கீந்து
மருவவே வார்த்தை பேச மங்கைகற் புடையாள் தானும்
விரைவினில் திகில டைந்து விளம்புவாள் மாது தானும்.

23. கணவன், வீட்டில் இல்லாத நேரத்தில் அவள் வீட்டுக்குச் சென்று, அவளுடன் பேசி, பொருளும் அவளுக்குக் கொடுத்து, இன்ப மனுபவிப்ப தற்காகப் பேசும்போது, அப்பெண் கற்புடையவளாக இருந்ததால், சீக்கி ரமே பயப்பட்டுச் சொல்லுகின்றாள்.

24. வேதத்தோன் மாது இச்சை வைத்திடல் தோட மாகும்
நீதியை உரைப்பக் கேளாய் நேசன்தன் மனைவி போகம்
மேதினில் செய்தா னாகில் மேவிடு மனேகந் துன்பம்
பாதக புத்தி வேண்டாம் பாவையும் சொல்லும் போது;

24. அந்தணன் மனைவிமீது மோகம் வைப்பது தோஷமாகும். நியாயமாகச் சொல்லுகின்றேன்; கேள். சிநேகிதனுடைய மனைவியை, உல கில் போகம் துய்த்தால், பலவிதத் துன்பங்கள் நேரும்; கெட்ட புத்தியை நீக்கு, என்று பெண் சொல்லும்பொழுது;

25. பாவத்தை எண்ணா னாகிப் பலாத்கார போகம் செய்தான்
மேவிற்று அந்தத் தோடம் விளம்புவோம் இன்னும் ஒன்று
கோவின்பால் கொள்ளும் போது குட்டிக்குத் தராமல்
[செய்தான்
ஆவலா யந்தத் தோடம் அணுகிற்று இவனுக் கேதான்.

25. பாவத்தை எண்ணுதவனுய், பலவந்தமாகப் போகம் துய்த்தான். அந்தத் தோஷம் இவனே வந்தடைந்தது. இன்னும் ஒன்று கூறுவேம். பசுவின் பாலைக் கறக்கும்போது கன்றுக்கு விடாமலிருந்தான். அந்தத் தோஷமும் இவனே வந்தடைந்தது.

26. அன்னிய விதவை மாது அவள்சலம் கொள்ளச் சென்றுள் அன்னிய வேறெரு ருத்தன் அவள்பேரில் மோகம் கொண்டு அன்னவ ளுடன்பின் ளுக அணுகியே சிலவே வார்த்தை அன்னவ ளுடனே பேச அதற்கவ ளிசையா ளாகி ;

26. வேறு ஒரு கைம்பெண் தண்ணீர் கொண்டுவரச் சென்றுள். அன்னியன் ஒருவன் அவள் மீது மோகம்கொண்டு, அவளைப் பின்தொடர்ந்து சென்று, அவளுடன் சில வார்த்தைகள் பேசினுன். அதற்கு அவள் சம்மதிக்கவில்லே.

27. மோகத்தால் கையைத் தொட்டு முதல்வியை இழுக்கும் [போது
தோகையும் உதறிக் கொண்டு துணைவர்பால் சொல்லும் [போது
வேகமாய் இவன்பால் சென்று விளம்பினர் சங்கை [தன்னைப்
பாதகம் செய்தோன் தன்னே யவசர மாகக் கூவி ;

27. அந்த அன்னியன், மோகத்தால் அவள் கையைப்பற்றி இழுக்கும் போது, அப்பெண் கையை உதறிக்கொண்டு தன் சகோதரனிடம் முறையிட்டாள். அவர் சீக்கிரமாக இவனிடம் (ஜாதகியின் கணவன்) சென்று தவற்றைக் கூறினர். தவறு செய்தவனே அவசரமாகக் கூப்பிட்டு;

28. சங்கையை வினவும் போது தனமதை யவன்பால் பெற்று மங்கைமேல் குற்றம் சாட்ட மாதுவும் மனமும் வெட்கிப் பொங்கமாய்ப் பொருளும் பெற்றுப் பெண்பழி சொன்னே [னுக்குத்
தங்கிய மறுசென் மத்தில் சகோதர தோட மாயும் ;

28. தவற்றைப் பற்றி விசாரிக்கும்போது, குற்றம் செய்தவனிடமிருந்து பொருளைப் பெற்றுக்கொண்டு இவன், பெண் மீதிலேயே குற்றத்தைச் சொன்னன். பெண்ணும் மனம் நொந்து, பொருளைப் பெற்றுக் கொண்டு என்மீது அபாண்டம் சொன்னவனுக்கு, ஏற்படும் மறுபிறவியில், சகோதர தோஷமும் ;

29. மதலைகள் தோட மாயும் வர்க்கத்தில் நிந்தை யாயும்
அதிகாரி தனக்குச் சொல்லி அவளில்லம் சென்ரு
[ளென்ரேரும்
அதுவிதத் தோடந் தானும் அதிகாரி தனக்கு நேர்ந்து
அதிபனு மந்தி யத்தில் மனைவியும் மதலை மாண்டு ;

29. புத்திர தோடமும், அவன் வர்க்கத்தில் பழிகளும் ஏற்படும், என்று சொல்லித் தன் வீடு சென்ருள் என்ரேம். அந்தத் தோஷமும் அதிகாரிக்கு ஏற்பட்டு, அவனும் கடைசியில் மனைவி, புத்திரர்கள் இறந்து,

30. நதிபல தீர்த்தம் தோய்ந்து நற்சிந்தை யுடைய னாகி
மதிபிறை யணிந்தோ னுக்கு மன்னனும் ஊழியம் செய்து
சதிசெயும் மறலி பக்கல் தானவ னடைந்து மேதான்
விதியவன் வரையப் பட்டு விளங்கினு னிவனே யென்ரேரும்.

30. பல புண்ணிய நதிகளில் நீராடி, நல்ல மனமுடையவனும், சந்திரனே முடியில் அணிந்த சிவபெருமானுக்குத் தொண்டுகள் பல செய்தான். பிறகு இறந்தான். மறுபடியும் பிரமனுல் படைக்கப்பட்டுப் பிறந்தான் இவன் என்று சொன்னேம்.

31. முன்சென்மம் தீயின் வமிசம் முயன்றவன் அனேக துன்பம்
தன்னிலே செய்தா னென்றீர் சலக்குல மிச்சென் மத்தில்
அன்னவ னுதித்த தென்ன அறைகுவீர் அந்தச் சங்கை
முன்னமே சொல்லு கின்றேன் முனிவரே அருளு வீரே.

31. முற்பிறவியில் வன்னியர் குலத்தில் பிறந்து, அநேகவிதமான தீங்குகள் செய்தான் என்றுரைத்தீர். வேளாளர் குலத்தில் இப்பிறவியில் பிறந்த காரணமென்ன? சொல்லுவீர், முதலில் கேட்கின்றேன். முனிவரே கூறுங்கள்.

32. பலபல தீர்த்தம் தோய்ந்து பரமர்க்குத் தொண்டு செய்து
நலமுள சிந்தை யாயும் நாயகன் வாழ்ந்த தாலே
சலக்குலம் தனிலு தித்தான் சாற்றுவோ மிச்சென் மத்தில்
கிலமுண்டு துணைவர் புத்திரர் செனிக்கினும் தீதே யாமே.

32. பலப்பல நதிகளில் நீராடி, ஈசனுக்குத் தொண்டு செய்து, நல்ல மனமுடையவனுகி, ஜாதகன் இருந்து வந்ததால், வேளாளர் குலத்தில் பிறந்தான் என்று சொன்னேம். இப் பிறவியில், உடன்பிறந்தார், புத்திரர் தோஷ மேற்படும். தோன்றினலும் மரிப்பர்.

33. அந்ததோர் தோடந் தீர அருளுவோம் சாந்தி தானும்
மைந்தனும் மனைவி யோடு அருணைமா நகர்க்குச் சென்று
எந்தையே கிரியைச் சுற்றி யீசனுக் கருச்சித் தேத்தி
முந்திய ரசதம் தன்னுல் மொழிகின்றேம் சுதர்கள் செய்து;

33. அந்தத் தீவினை நீங்க ஒரு சாந்தி கூறுவோம். ஜாதகன் தன் மனைவியுடன் திருவண்ணுமலைக்குச் சென்று, ஈசனின் மலையைப் பிரதட்சிணம்செய்து, சிவபெருமானுக்கு அருச்சனை முதலியன செய்து துதித்து, வெள்ளியால் குழந்தை போன்ற உருவங்கள் செய்து;

34. விடம்புட்பம் கந்தத் தோடு வேதியர் தமக்கு ஈந்து
அடைவுடன் யிருபத் தேழு அகதிகட் கன்ன மீந்து
உடனேதான் உள்ளூர் சென்று உமையவ ளரனுக்
[கேதான்
திடமதா யபிடே கித்துச் சகஸ்திர அருச்சனை செய்ய;

34. மணமுள்ள புஷ்பம், சந்தனம் இவைகளுடன் அந்தணர்கட்குக் கொடுத்து, இருபத்தேழு அகதிகளுக்கு அன்ன மளிக்கவேண்டும். உடனே தன் சொந்த ஊருக்குச் சென்று, பார்வதியுடன் கூடிய சிவபெருமானுக்கு சகஸ்ர அபிஷேகம் செய்து, ஆயிரம் அர்ச்சனையும் செய்தால்;

35. முன்வினை நீங்கி யேதான் உதித்திடும் ஆண்பா லொன்று
அன்னம்போல் பெண்பால் ரெண்டு அறைகின்றேம்
[தீர்க்க மாகத்
தன்னிலே மாதர் சேதி சாற்றுவோ மிருசி கப்பள்
இன்னவள் ஓடிசல் தேகி இவளுமே யோக சாலி.

35. முன்செய்த தீவினைகள் நீங்கி, ஆண் குழந்தையொன்று பிறக்கும். அன்னத்தைப் போல் நடையுடைய பெண்கள் இருவர் உதிப்பர் என்று நிச்சயமாகச் சொல்லுவோம். அன்னையின் குண விசேஷத்தைப் பற்றிச் சொல்லுவோம். கருமை கலந்த சிவப்பு நிறமுடையவள். மெலிந்த உடலுள்ளவள். நல்ல யோக முடையவள்.

36. கல்விமான் அடக்க முள்ளாள் காதலி வர்க்கம் நாசம்
புல்லிய புத்தி யில்லாள் புகலுவோம் கோபம் கொஞ்சம்
இல்லையென் றுரைக்க மாட்டாள் எப்போதும் சொல்ப
[ரோகி
வல்லவள் பூர்வம் தன்னை யறைகின்றேம் கேளுந் தாயே.

36. கல்வி யறிவுள்ளவள். அடக்கமானவள். அவளுடைய வர்க்கம் நாசமடையும். அற்பமான புத்தி இல்லாதவள். கோபம் கொஞ்சமுண்டு.

கேட்டவருக்கு இல்லையென்று சொல்ல மாட்டாள். எப்பொழுதும் சிறிது ரோகமுடையவள். அவளுடைய முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். தரீயே! கேளுங்கள்.

37. வேதத்தோன் மலைக்கு மேல்பால் விளங்கிய நகரம் தன்னில்
ஓதுவேன் வடுக வமிசம் உதித்துமே பெருமை பூண்டு
மேதினில் மதலை யுண்டாய் விசேடமும் பணிக ளுண்டாய்த்
தீதிலா வாழும் நாளில் செப்புவோம் ஊழி தானே.

37. திருக்கழுக்குன்றத்துக்கு மேற்கில் இருக்கும் ஒரு பட்டணத்தில் வடுக மரபில் தோன்றுவாள். பெருமையுடன் குழந்தைகள் ஏற்பட்டு, அதிக மான ஆபரணங்களுடன், துன்பங்கள் இல்லாமல் வாழ்ந்து வரும்போது, ஏற் பட்ட தீவினையைச் சொல்லுவோம்.

38. நாயகன் வேறு மாதை நாட்குநாள் போகம் துய்த்து
ஆயவே வாழும் நாளில் அச்சங்கை இவளும் கண்டு
தீயமாம் குணங்க ளுற்றுத் தேவிமேல் குற்றம் சாட்டி
மாயமாய் விரோத முற்று நங்கையை விலக்க லுற்றாள்.

38. அவளுடைய கணவன் வேறு பெண்ணிடம் தினந்தோறும் போகந் துய்த்து வாழ்ந்து வந்தான். அதனை இவள் தெரிந்துகொண்டு, கெட்ட குணத்தையுடையவளாகி; கோபமுற்று, அந்தப் பெண்மீது குற்றம் சாட்டி னாள். விரோதம் கொண்டு அவளை விலக்கிவிடச் செய்தாள்.

39. மாதுவும் மனவெ றுப்பா லறைகின்றாள் சாபம் தானும்
தீதான குற்றம் என்மேல் சாற்றின பாபிக் கேதான்
ஓதுவேன் மறுசென் மத்தில் உடன்பிறந் தோர்கள் தோடம்
மேதினி லிரண்டாம் தாரம் மேவியே ரோக முற்று.

39. அப்பெண்ணும் மனவெறுப்புடன் சொல்லிய சாபத்தைக் கேளும். அபாண்டமாக என்பேரில் குற்றம் சொன்ன பாவியே! மறுபிறப்பில் உடன் பிறந்தோர்க ளில்லாமல், உலகில் இரண்டாவது மனைவியாக வாழ்க்கைப் பட்டு, வியாதி யடைந்து;

40. அன்னையின் குடும்பம் பாழாய் அலைச்சலாய் வாழ்வா
[யென்று
இன்னவள் சொல்லி யேதான் இறந்தனள் கயிறு மாட்டி
அன்னவள் சாபந் தானும் அணுகிற்று யிவளுக் கேதான்
துன்னிய மறலி பக்கல் சேர்ந்தன ளிவளே யென்றோம்.

40. தாயின் குடும்பம் அழிந்து, அலைச்சலுடன் வாழ்ந்து வரு வாய் என்று சொல்லிவிட்டு, தான் தூக்கு மாட்டிக்கொண்டு இறந்தாள். அவளுடைய சாபம் இவளை வந்தடைந்தது. இவளும் பிறகு இறந்தாள் என்று சொன்னேம்.

41. மலரயன் வரையப் பட்டு வந்தனள் கங்கை சேயாய்
நலமுள இச்சென் மத்தில் நாயகி சாபம் போலே
குலவிடும் என்று சொன்னேம் குறிக்கின்றோம் இவள்பின்
[சென்மம்
தலமதில் உயர்த்தி யான சக்திகா மாட்சி வாழும்;

41. பிறகு பிரமனுல் படைக்கப்பட்டு, வைசியக் குலத்தில் பிறந்தாள். நன்மையுடைய இப்பிறவியில், பெண் சாபப்படி நடந்து தீரும் என்று சொல் லுவோம். இவள் மறுபிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். சக்தியுள்ள காமாட்சி தேவி வாழும் ;

42. பிருதிவி தலத்தி லேதான் பிறப்பளாம் பிரம சேயாய்க்
குறைவிலா வாழ்வா ளாகும் கூறுவோம் தந்தை பூர்வம்
அறைகின்றோம் காஞ்சி தன்னில் அவனுமே சௌராட்டிர
[வமிசம்
உறைந்தனன் வணிபம் செய்து உலகுக்கு நல்லோ னுயும்;

42. உன்னதமான காஞ்சீபுரத்தில் அந்தணர் குலத்தில் பிறப்பாள். குறைகளில்லாமல் வாழ்ந்து வருவாள். தந்தையின் முற்பிறப்பைச் சொல்லு வோம். காஞ்சீபுரத்தில், அவன் சௌராஷ்டிர மரபில் தோன்றுவான். வியா பாரங்கள் பல செய்து, உலகத்தவருக்கு நல்லவனுகவும்;

43. தனிகனுய் வாழும் நாளில் சாற்றுவோம் ஊழி தானும்
இனமதில் ஒருபெண் பேரில் இடருக ளநேகம் சொன்னுன்
வினையான வார்த்தை தன்னை வித்தகன் அதனைக் கேட்டுக்
கணிகையை விலக்க லுற்றுன் கழறுவாள் சாபம் தானே.

43. செல்வங்க ளுள்ளவனுகவும் வாழ்ந்து வரும்போது, ஏற்பட்ட தீவினையைச் சொல்லுவோம். தன்னுடைய இனத்தில் ஒரு பெண்மீது பழிகள் அநேகம் சொன்னன். துன்பந் தரும் வார்த்தைகளைக் கேட்டு, அவள் கணவன் அப்பெண்ணை நீக்கி வைத்தான். அப்பெண் சாப மிடுவாள்.

44. மற்றொரு சென்மந் தன்னில் மனைவிய ரிருவ ராயும்
பெற்றிடு மாதா அவ்வார் புக்கிடு மொருபெண் ணுலே
குற்றமாம் நிந்தை நேரும் கோதையும் சொல்லி யேதான்
வித்தகி யில்லம் விட்டு மேவினுள் என்று சொன்னேம்.

44. இனிவரும் பிறவியில், மனைவிமார் இருவர் ஏற்படுவர். அன்னையும் இருவர். ஒரு பெண்ணால் அவமானங்கள் பல ஏற்படும் என்று சொல்லிவிட்டு, கணவன் வீடு நீங்கிச் சென்றாள் என்று கூறினேம்.

45. அந்தகன் பக்கல் சென்று அரிமகன் வரையப் பட்டு
வந்தவ னிவனே யென்றே மறைகின்றோம் இவன்பின்
[சென்மம்
முந்துகா ளத்தி கீழ்ப்பா லுதிப்பனும் வைசியச் சேயாய்
இந்தவார் முனிவர் கூற ஈசுவரி சொல்லு கின்றாள்.

45. மரண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டுப் பிறந்தவன் இவன் என்று சொல்லுகின்றோம். இவன் மறுபிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். உயர்ந்த காளஹஸ்திக்குக் கிழக்கில், வைசிய குலத்தில் பிறப்பான். இவ்வாறு முனிவர் சொல்ல, பார்வதி கேட்கலுற்றாள்.

46. இச்சென்மம் தன்னி லேதான் இகபரன் அன்பு பூண்டும்
மிச்சமாய்த் தவத்தோ னாகி மேவியே இருப்ப தாலே
உச்சிதப் படியே ரூத காரண முரைப்பீ ரென்ன
அச்சுதன் தங்கை யாளே அறைகின்றோம் விபர மாக.

46. இப் பிறவியில் ஈச்வரன், துறவிகள் இவர்கள்மீது பக்திகொண்டு, நல்லொழுக்க முடையவனாக இருந்தும், உயர்ந்த பதவி அடையாத காரணம் சொல்லுவீர், கிருஷ்ண பரமாத்மாவின் தங்கையே! சொல்லுகின்றோம்; விபரமாக.

47. அறமதில் இச்சை யின்றி அடாநிந்தை யுடைய னாயும்
அறநெறி பெரியோ ரைத்தான் அவனுக்குத் தாழ்தல்
[செய்து
பெரும்பொரு ளிச்சை மேலே பூசுபோல் காட்ட லாலும்
உறைகுவான் வைசியச் சேயாய் உத்தமி கேட்டி டாயே.

47. தருமத்தில் ஆசை யில்லாதவனாகி, மிகுதியான பழிகள் உடையனாய், தருமம் தெரிந்த, ஒழுக்கமுடைய பெரியோர்களை அவமதித்ததாலும், பொருள்களின்மீது ஆசையால், மேல் பூச்சுப்போல், ஆடம்பரத்துடன் வாழ்ந்ததாலும் வைசிய குலத்தவனாகப் பிறப்பான். தாயே! கேளுங்கள்.

48. தந்தைக்கு இருபான் மூன்றில் சாடியின் மாதம் தன்னில்
இந்தவன் கருமம் செய்வன் இராகுவின் தசையி லேதான்
மூந்திய சுயபு குத்தி யுதித்திடு மந்தக் காலம்
இந்திர னிறைஞ்சு மாதே இம்மொழி தப்பா தாமே.

48. ஜாதகன் தந்தைக்கு, தனது இருபத்துமூன்றும் வயதில், மாசி மாதம் ஈமக்கடன்கள் செய்வான். அப்போது இராகு மகா தசையில் இராகு புக்தி நடக்கும். இந்திரன் வணங்கும் பார்வதியே! இது தவறுது.

49. அன்னைக்கு யிருபா னேழில் ஆவணி மாதம் தன்னில்
இன்னவன் கருமம் செய்வன் இராகுவின் தசையி லேதான்
உன்னித காரி புக்தி உறைந்திடு மந்தக் காலம்
இன்னவார் முனிவர் கூற ஈசுவரி கேட்க லுற்றாள்.

49. தாய்க்கு, இருபத்தேழாம் வயதில், ஆவணி மாதத்தில், ஈமக் கடன்கள் செய்வான். இராகுவின் தசையில் சனி புக்தி அப்போது நடக்கும். இவ்வாறு முனிவர் சொல்ல, பார்வதி கேட்கலானாள்.

50. இதுமத்தில் மாது வுக்கு இலகாவோ மார கங்கள்
அதுதன்னைச் சொல்லு மென்ன அம்புலி தசையுள் பாதி
சதிசெயும் ரோகம் தானும் சார்ந்துபின் நிவிர்த்தி யாகி
அதிபர்க்கு இருபா னேழில் அறைந்தது தப்பா தாமே.

50. இதற்கிடையில் தாய்க்குக் கண்டம் உண்டாகாதோ? அதைச் சொல்லுங்கள் என்று கேட்டாள். சந்திர மகா தசை பாதியில் தன் பந்தரும் வியாதி யடைந்து, பிறகு தீர்ந்துவிடும். அப்பொழுது ஜாதகனுக்கு இருபத்தேழு வயது. சொன்னவை தவறு.

51. உதித்தவன் மரண காலம் உரைக்கின்றே மைம்பான்
[ரெண்டில்
சதியிலாத் தனுசு மாதம் சாற்றுவோம் கண்டம் தானே
அதுகாலம் பொன்னேன் சக்ரம் அப்பணி புக்தி யாகும்
திதியது துவா தசி யாகும் தேய்பிறை உடலம் வாடும்.

51. ஜாதகன் மரண மடையும் காலம் சொல்லுகின்றோம். ஐம்பத்தி ரண்டாம் வயதில், மார்கழி மாதத்தில் மரணம் மடைவான். அப்போது, குரு மகா தசையில் இராகு புக்தி நடக்கும். கிருஷ்ண பட்சம் துவாதசி திதி யாகும்.

52. மறுசென்மங் காளத்தி தன்னில் மறைக்குல முதிப்பா
[னென்றோம்
அரசர்பால் செட்டுச் செய்து அதிககீர்த் திகளு மேற்பன்
குறையிலா வாழ்வா னுகும் கூறின மொழிகுன் றாது
அறந்தனை வளர்க்கு மெங்கள் அம்பிகை புகன்றிட்
[டோமே.

52. மறுபிறப்பு, காளஹஸ்தியில், அந்தணர் குலத்தில் பிறப்பான் என்று சொல்லுவோம். அரசாங்க உத்தியோகம் செய்து, மிகுதியாகப் புக முடைந்து, குறைவு இல்லாதவனாக வாழ்வான். சொன்ன சொற்கள் தவறு. தருமத்தை வளர்க்கும் எங்கள் தாயே! இங்ஙனம் சொன்னோம்.

53. இவனுடை யோகம் தன்னை இயம்புவோம் சனனம்
[தொட்டு
அவனுடை மரண மட்டும் அம்புவி போலே யோகம்
அவனியும் அதிக முண்டு அரன்பணி செய்வா னாகும்
திருமகள் விலாச முள்ளான் தேவியே மேலுங் கேளே.

53. இவனுடைய யோகத்தைச் சொல்லுவோம். பிறந்தது முதல் மரணம் வரையில் வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தியாம். பூமியும் அதிகம் ஏற்படும். சிவபெருமானுக்குத் திருப்பணி செய்வான். இலட்சுமீ கடாட்சம் உடையவன், தேவியே! மேலுங் கேளும்.

54. பாலகன் செனிக்கும் காலம் பரிதியின் தசையி லேதான்
கோலமாய் ஆண்டு ரெண்டு கூர்திங்கள் இருநான் காகும்
சாலவே நாள்கள் பத்தும் சாதகன் தனக்கு ரோகம்
வேல்விழி மாதர் நோயால் மேவிடும் காலி பீடை.

54. ஜாதகன் பிறக்கும்போது, சூரிய மகா தசையில் செலவு இரண்டு வருஷம், எட்டு மாதம், பத்து நாட்கள். அப்போது ஜாதகனுக்கும், அவன் தாயாருக்கும் வியாதி ஏற்படும். கால் நடைகளுக்கும் பீடை உண்டு.

55. தந்தைக்கு ரோக மெய்தும் தன்பந்து சூத முண்டு
தன்தனம் செலவு செய்து சஞ்சல மனங்க ளாமே
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் விபர மாக
இந்திர னிறைஞ்சும் மாதே இம்மொழி தப்பா தாகும்.

55. தந்தைக்கு வியாதி ஏற்படும். தன் பந்து வர்க்கத்தில் அசுபங்கள் ஏற்படும். பணச் செலவு மிகுதியாகும். கலங்கின மனமுடையவனாக இருப்பான். விவரமாகப் பிற்பாகத்தில் சொல்லுவோம். இந்திரன் துதிக்கும் தாயே! இவ் வார்த்தைகள் தவறு.

ஜாதகம் 59

1. மதியு மீனம் குருமேடம்
மால்ஞா னியுமே மானதனில்
[1]விதியன் மேரு ரவிபுகர்சேய்
மிக்க சாடி பணிகடகம்
இதுவே கிரகம் [2]உயிர்நந்தி
இயம்பும் பலன்கள் தவமுனியே
அதுவே ஆண்பால் சென்னமுறும்
அறைவோம் இல்லம் சிறுஞாரம்.

1. சந்திரன் மீனத்திலும், குரு மேஷத்திலும், புதன் கேது மகரத்திலும், சனி தனுசிலும், சூரியன் சுக்கிரன் செவ்வாய் கும்ப விராசியிலும், ராகு கடகத்திலும் ஆக இந் நிலையில் நவக்கிரகங்களும் நின்று, லக்கினம் விருஷபமாகவுள்ள ஜாதகப் பலன்களைக் கூறுங்கள், முனிவரே! இஃது ஆண் பிறப்பு. இவன் பிறந்த வீடு சிறிய தோர் ஊரிலுள்ளது என்று சொல்லுவோம்.

சந்திரன்	குரு	லக்கினம்	
சூரியன் சுக்கிரன் செவ்வாய்	இராசி சக்கரம்		ராகு
புதன் கேது			
சனி			

2. தென்பால் வாசல் கீழ்மேற்குத்
தெருவாம் தந்தி மேற்கிலுறும்
முந்து மாரி தென்மேல்பால்
மேவும் வடபால் நதிக்கரையாம்
இந்து அணிந்தோன் குடிதானும்
இடியும் அயலில் தானுண்டு
பந்த காளி அருகிலுறும்
பாலன் சனிப்பான் பார்வதியே.

---

1. சனி
2. இலக்கினம்

2. அவ் வீடு கிழக்கு மேற்கான வீதியில், தெற்கு நோக்கிய வாயிலை யுடையது. விநாயகர் கோயில் வீட்டுக்கு மேற்கில் உளது. மாரியம்மன் கோயில் தென் மேற்கில் இருக்கின்றது. வடக்கே ஆற்றங்கரை. இளம் பிறைச் சந்திரனைத் தலையிலணிந்த சிவபெருமான் கோயில் ஆற்றங்கரைப் பக்கத்தில் உளது. காளிதேவி கோயிலும் அதனருகில் இருக்கின்றது.

3. வதியே தந்தை தாய்துணைவர்
மனைவி புத்ரர் யோகமெலாம்
பொதுவாய் முன்பின் சென்மங்கள்
புகல்வோம் தந்தை துணையாண்பால்
சதிராய்த் தங்கிப் பின்சேதம்
சத்தி மூன்று மவ்வாறும்
பதியே தந்தை குணம்சொல்வேன்
பதராம் கல்வி யிருநிறத்தான்.

3. ஜாதகனின் தந்தை, தாய், உடன் பிறந்தாள், மனைவி, புத்திரர் முதலானவர் யோகங்கள், மூற் பிறப்பு, மறு பிறப்புக்கள் முதலிய வனைத்தை தையும் இந்த நூலில் சொல்லுவோம், ஜாதகன் தந்தைக்குச் சகோதரன் ஒருவன் தோன்றிச் சில காலம் வாழ்ந்து, பின்பு மரிப்பான். சகோதரிகள் மூவர் தோன்றிச் சில நாட்கள் வாழ்ந்து அங்ஙனமே மடிவர். தந்தை யின் குணத்தைக் கூறுவோம். அற்பமான படிப்பு. கரிய நிறமுள்ளவன்,

4. தானே யிருவூர் கிருஷியுளன்
சாற்று மாமி யிரண்டென்றும்
ஊன மிலாதான் வலியுடையன்
உறப்புப் புளிப்பு இச்சையுளான்
வானோர் பத்தி கொஞ்சமுளன்
மருமமி லாதான் பூமிவிருத்தி
தேனே மொழியும் கூவல்செய்வன்
செய்த நன்றி மறவாதான்.

4. இரண்டு கிராமங்களில் பயிர்த் தொழில் செய்வான். அவனுக்கு மாமியர் இருவர் என்று சொன்னேம். உடலில் குற்றமொன்று மில்லாத வன். பலமுடையவன். உறைப்பிலும் புளிப்பிலும், விருப்பம் கொண்டவன். கடவுள் பக்தி சிறிதே யுடையவன். இரகசிய மில்லாத வன். நிலபுலன்கள் விருத்தி யுள்ளவன். இனிய சொற்களைப் பேசுவான். நிறை தோண்டுவிப்பான். பிறர் செய்த உதவியை மறவாதவன்.

5. மறவான் அன்னை தந்தைதனை
மறுத்து உரையான் பொறுமையுளன்
பொரைகோள் களவு செய்யாதான்
பின்யோ சனையு முடையவனே
பெருமை புகலான் இளமனத்தன்
பேதை சொல்லைத் தான்தவறுன்
விரைவில் நடப்பன் நற்குணத்தான்
வாயு பாதை யுடையவனே.

5. தாய் தந்தையரை மறவாது போற்றிக் காப்பவன். மறதி யின்றிப் பேசுவான். அடக்க முள்ளவன். பொய், கோள், களவு இல்லாதவன். பின் யோசனை யுள்ளவன். மேன்மையாகப் பேசான். இளகிய மனமுள் ளவன். மனைவி சொற்களை மீறுதவன், விரைவான நடை யுடையவன். நற்குண முள்ளவன். வாயு நோயினல் துன்ப முடையவன்.

வேறு

6. இக்நெறி யுடையா னுக்கு இருதார மினையா ளுக்கு
அன்னவன் ஐந்தாம் சென்மம் அவன்துணை ஆண்பால்
[மூன்று
கன்னிகை யிருவர் தீர்க்கம் காதலி மார்க ளுக்குத்
தன்வரன் வடபா லாகும் சங்கையாய்த் தாயில் லத்தில் ;

6. இத் தன்மை யுடைய தந்தைக்கு இரு மனைவியர். அவர்களில் இளையவளுக்கு இந்த ஜாதகன் ஐந்தாம் பிறப்பாகப் பிறந்தான். இவனுக் குச் சகோதரர் மூவர். சகோதரிகள் இருவர். இவர்கள் தீர்க்கமாக விருப்பர். சகோதரிகளுக்கு வடதிசையில் கணவன்மார் வாய்ப்பர். இவர் களில் ஒரு சகோதரி தாய் வீட்டில் ;

7. வாசமாய்ச் சங்கை சொல்வீர் மங்கைமுன் வரனு மாண்டு
பாசமாய்ப் பெண்பால் ஒன்று பருகிடு மில்லம் வாசம்
பேசின மாது தானும் பெருதன முடைய ளாகும்
நேசமாய்க் குற்ற மின்றி நிமலியும் வாழ்வா ளாகும்.

7. வசிப்பாள். அதற்குக் காரணங் கூறுங்கள். இவளுக்கு முன்பு கணவன் இறந்து விடுவான். அதனல் இவள் தன் தாய் வீட்டில் வந்து வசிப்பாள். சொல்லப்பட்ட இந்தப் பெண், கணவன் வீட்டுச் செல்வம் மிகுதியாகப் பெற்றவள். தன் செல்வத்தை வைத்துக் கொண்டு, துன்ப மின்றி, தாயின் வீட்டில் வாழ்ந்து வருவாள்.

8. குணமதைப் புகலு மையா கொடுரவார்த் தைகளு மில்லாள்
கனமுள புத்தி யாவள் கஞ்சமா நிறத்த ளாகும்
சினமதை வெளிக்காட் டாதாள் துணைவரை யாத ரிப்பாள்
வினையிலாப் பாட்டாளி யாகும் விருந்தினர் மதிக்க
[வாழ்வள்.

8. இவள் குணத்தைக் கூறுங்கள், முனிவரே! கடின சொற்களைப் பேசாதவள். மேன்மையான புத்தி யுடையவள். செந்தாமரை மலர் போல் செந்நிற முள்ளவள். கோபத்தை வெளிக் காட்டாதவள். உடன் பிறந்தோரை ஆதரிப்பாள். குற்ற மில்லாத உழைப்பாளி. விருந்தினர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவாள்.

9. இந்நெறி யுடையா ளுக்கு இவள்வரன் மத்தி யத்தில்
துன்னிய கால நாடு சேருங்கா ரணத்தைச் சொல்வீர்
முன்சென்மம் வாலங் காட்டி லுதித்தனள் வடுக மாது
தன்வரன் தன்னை டொத்துத் தணிகைக்குச் செல்லும்
[போது;

9. இத்தன்மை யுடையவளாகிய இவளுக்குக் கணவன் இடைக் காலத்தில் மரண மடையுங் காரணத்தைச் சொல்லுங்கள். முற் பிறப்பில், திருவாலங்காட்டில், வடுக மரபினளாகப் பிறந்தாள். தன் கணவனுடன் மனமொத்து, திருத்தணிகைக்குப் போய்;

10. அறுமுகன் தனைப்பூ சித்து அணுகினுள் கடைவீ திக்கு
உரைமஞ்சள் சிவப்புச் சீப்பு ஒண்டொடி வாங்கிக் கொண்டு
பொருளது ஈயாச் சென்றுள் புகலுவான் வணிகன் தானும்
மருமமாய்ச் சென்ற பாவி மஞ்சளு மாகா முன்னம்;

10. ஆறுமுகக் கடவுளைப் பூசித்து, கடைத் தெருவுக்குச் சென்றுள். அங்கு, மஞ்சள், குங்குமம், சீப்பு இவற்றை ஒரு கடையில் வாங்கிக் கொண்டு, கடைக்காரனுக்குப் பணம் கொடுக்காமல் சென்று விட்டாள். கடைக்காரன் சாபமிடுவான். என்னிட முள்ள பொருளைப் பெற்றுக் கொண்டு, பணம் கொடுக்காமல் மறைவாய்ச் சென்ற பாவியே! உனக்கு மஞ்சள் உபயோகப்படு முன்பாக;

11. வரனுமே மரண மெய்தும் மறுசென்மம் மகவாய்த்
[தோன்றித்
திருமணம் முடிந்து சின்னுள் சென்றுபின் கணவ னின்றி
உறைகுவா யென்று சொல்லி உதறினன் தெருத்தூள்
[தன்னை
மருவிற்று அந்தத் தோடம் மாதுவு மிச்சென் மத்தில்;

11. கணவன் மரண மடைவான். மறு பிறப்பிலும் பெண்ணாகப் பிறந்து, மணமாகிச் சிலகாலஞ் சென்று, கணவனை யிழந்து வாழ்வாய் என்று கூறித் தெருமண்ணை வாரி யிறைத்தான். அந்தத் தோஷம் இவளை யடைந்தது. அதனால், இவள் இப்பிறவியில் ;

12. மத்தியில் நாண விழ்ந்து மாதுரு யில்லம் வாழ்வள்
விதத்தகி பின்சென் மங்கே ளாலங்கா டதனி லேதான்
சுத்தமாஞ் சைவச் சேயாய்த் தோன்றுவா ளிவளே
[யென்றும்
சத்தியி னிலையோள் தானும் தன்வரன் தன்னை டொத்து ;

12. இடைக் காலத்தில் கணவனை யிழந்து, தாய் வீட்டில் வசிப்பாள். இவள் மறு பிறப்பைக் கூறுவோம். திருவாலங்காட்டில், தூய்மை யுடைய சைவ குலத்தவளாய்ப் பிறப்பாள் இவள், என்று கூறினோம். இவளுக்கு இளைய சகோதரி தன் கணவனுடன்;

13. அன்னையி னில்லம் வாழ்வள் அவள்சுதர் கன்னி யொன்று
மன்னவன் பின்னு லொன்று மருவிடும் மத்தில் சேதம்
பின்பாகம் விபர மாகப் பேசுவோம் முன்தாய் ஒன்று
சொன்னீரே அவட்குப் புத்திரர் தோன்றுமோ யில்லை
[யோசொல்.

13. தாய் வீட்டில் வசிப்பாள். அவளுக்குப் பெண் குழந்தை பொன்று தோன்றும். பின்பு ஆண் ஒன்று பிறந்து இடைக் காலத்தில் சேதமாம். இவர்களைப் பற்றிப் பிற்பாகத்தில் விவரமாகக் கூறுவோம். ஜாதகனுக்கு மூத்த தாயார் ஒருத்தி யுண்டென்று கூறினீர்களே ! அவளுக்குப் புத்திரர் உதிப்பரோ ? இல்லையா ? சொல்லுங்கள்.

வேறு

14. ஆணது இரண்டு பெண்ணது நான்கு
அறைகின்றோம் தீர்க்கமாய் என்றோம்
நாணறும் சிலவே ஆண்துணை விருத்தி
நசித்திடும் ஒன்றதாய் வாழ்ந்து
காணவே வேறுய்ச் செல்லுவர் பின்பு
கழறுவோம் பின்பாலில் யாங்கள்
பூணுவோ முதித்தோன் குணமதை யாங்கள்
பிறர்பொரு ளிச்சையில் லாதான்.

14. அவளுக்கு ஆண்கள் இருவர், பெண்கள் நால்வர் தோன்றித் தீர்க்கமாவர் என்று சொன்னோம். சில பெண்கள் இடைக்காலத்தில் கண

வன்மார்களே யிழப்பர். சகோதரர் விருத்தி யுண்டு. சகோதரர்கள் ஒன்றாக வாழ்ந்து, பின்பு வேறாய்ச் செல்லுவர். இவர்களைப் பற்றிப் பிற் பகுதியில் நாங்கள் சொல்லுவோம். இனி, ஜாதகன் குணத்தை நாங்கள் சொல்லு வோம். அயலார் செல்வத்தில் ஆசை யில்லாதவன்.

15. பயிர்த்தொழில் செய்வன் பகையதை யெண்ணுன்
படிப்பிலான் சிவந்தமெய் யூகை
நயமுட னுரைப்பன் நாற்காலி விருத்தி
நற்றுணை தனையா தரிப்பன்
செயம்செய்வ னெடுத்த வேலையை யென்றும்
துணைவரை வேறதாய்ச் செய்வன்
தயையுடன் பின்பால் சேர்ந்திடு வானும்
தனியனாய் முன்துணை வாழ்வன்.

15. விவசாயம் செய்வான். மனத்தில் விரோத மெண்ணுதவன். படிப்பில்லாதவன். சிவந்த உடல். ஊகிக்கும் சக்தி சிறிதுண்டு. நயமா கப் பேசுவான். கால்நடைகள் விருத்தி யுண்டு. சகோதரர்களே ஆதரிப் பான். ஆரம்பித்த காரியங்களில் வெற்றி யடைவான் என்று கூறினோம். உடன் பிறந்தார்களைப் பிற்காலத்தில் வேறு குடும்பமாகச் செல்லும்படி செய் வான். சிறிது காலத்தில் மீண்டும் ஒன்று சேருவான். மூத்த சகோதரன் மாத்திரம் தனியாகவே வசிப்பான்.

வேறு

16. முகமது வசிய முள்ளான் முன்கோபம் வெளிக்காட்
[டாதான்
பகையென்று மனத்தில் வையான் பாரதை விருத்தி
[செய்வான்
அகமது பின்பால் செய்வன் அதற்குப்பின் ரணஞ் விர்த்தி
செகமதில் புகழு மேற்பன் சொல்லது தவரு ஞகும்.

16. இந்த ஜாதகன் முக வசீகர முள்ளவன். முன்கோப முண்டு. ஆனால், அதனை அதிகமாக வெளிப்படுத்த மாட்டான். மனத்தில் விரோத குண மில்லாதவன். பூமியை விருத்தி செய்வான். பிற்காலத்தில் வீடு கட் டுவான். பின்பு கடன் நிவர்த்தி யாகும். உலகில் கீர்த்தி பெறுவான். சொல் தவறுதவன்.

17. இருபது மூன்று ஆண்டுள் இவனுக்குப் பாரி வாய்க்கும்
வரும்கன்னி துணைவி புத்ரி அவள்துணை காணு ளாகும்
உரைக்கின்றே மவள்குணத்தை உறுதியில் லாத நெஞ்சம்
இருநிறம் யூகை சாலி இனோத்தோர்மேல் பிரிய மாவள்.

17. இருபத்து மூன்று வருஷங்களுக்குள் இந்த ஜாதகனுக்கு மனைவி வாய்ப்பாள். சகோதரியின் புதல்வியே இவனுக்கு மனைவியாக வருவாள். அவளுக்குச் சகோதரர் இல்லை. அவள் குணத்தைக் கூறுகின்றேம். உறுதியில்லாத மனமும், கரிய நிறமு முடையவள். ஊகிக்கும் சக்தி யுடையவள். ஏழைகள் மீது அன்புடையவள்.

18. நாபிச்சூ டுடைய ளாகும் நாயகன் மனம்போல் வாழ்வள்
பாபத்துக் கிடங்கொ டாதாள் பரவுப காரி யாவள்
நாவது சுத்த முண்டு நற்பணீ காணு ளாகும்
தேவியும் வறுமை காணுள் தேவதாப் பக்தி பூண்பள்.

18. நாபிச் சூட்டு நோயுள்ளவள். கணவன் மனத்திற் கேற்ப நடப்பவள். நீமைகளுக்கு இடங் கொடாதவள். பிறருக்கு உதவி செய்பவள். வாக்குத் தூய்மை யுள்ளவள். ஆபரணங்கள் இல்லாதவள். தரித்திரம் இல்லாதவள். கடவுள் பக்தி கொள்ளுவாள்.

19. சத்தமஞ் சுதர்கள் தோன்றும் தங்காது ஆண்பா லுந்தான்
வித்தகி பெண்பால் ரெண்டு மேவிடும் தீர்க்க மாகப்
புத்திர தோடம் எவ்வார் புகலுவீர் சங்கை தன்னைக்
குத்தமாய் அஞ்சோன் ஒன்பான் குலவியே கேது கூடி;

19. ஏழு புதல்வர்கள் தோன்றுவர். ஆண் குழந்தை நிலையாது. இருபெண்கள் தீர்க்கமாக விளங்குவர். புத்திர தோஷம் எப்படி ஏற்பட்டது? காரணத்தைக் கூறுங்கள். ஐந்தாமிடத்துக் குரிய புதன், ஒன்பதா மிடமா கிய மகரத்தில் கேதுவுடன் சேர்ந்து இருப்பதாலும்;

20. காரியு மஞ்சைப் பார்க்கக் கழறினேம் சுதராண் தோடம்
வீரியன் பூர்வம் தன்னில் மேவிற்று வினைய நேகம்
கூறுவீர் பூர்வம் தன்னைக் குற்றுல மருகி லேதான்
பாரிய ஊரி லேதான் பிறந்தனன் கங்கை சேயாய்.

20. சனி ஐந்தா மிடத்தைப் பார்ப்பதாலும், ஆண் குழந்தைக்குத் தோஷங் கூறினேம். ஜாதகனின் முற் பிறவியில் அநேக தீவினைகள் வந்தடைந்தன. இவன் முற்பிறப்பைக் கூறுங்கள். திருக்குற்றுலத்துக் கருகில் உள்ள ஒரு பெரிய ஊரில், வேளாளர் குலத்தவனாகப் பிறந்தான்.

21. தரணிக ளதிக முண்டாய்த் தன்மனை மதலை யாகிக்
குறையிலா வாழும் நாளில் கூறுவோம் வினையை நாங்கள்
குரவர்பால் மறையோ னுக்காய்க் கூறினன் கட்டு
[வார்த்தை
மறைசாப மொன்றுண் டாச்சு அறைகின்றே மின்னு
[மொன்று.

21. நிலபுலன்கள் மிகுதியாகி, மனைவி மக்களை யடைந்து, குறை பின்றி வாழ்கின்ற காலத்தில் எற்பட்ட தீவினையை நாங்கள் கூறுவோம். சான்றோராகிய ஓர் அந்தணரிடம் பொய்யுரைகள் கூறினன். அந்த அந்தணரின் சாபம் ஒன்று இவனுக்கு உண்டாயிற்று. இன்னு மொன்று கூறுகின்றோம்.

22. பஞ்சைகள் சாபம் உண்டு பரவிற்று இதுவு மன்றி
நஞ்சதைக் கொன்ற தோடம் நல்கிற்று இச்சென் மத்தில்
துஞ்சிடும் சுதராண் என்றோம் தோகையால் சிலவே
[தோடம்
வஞ்சியின் பூர்வம் கேளாய் வள்ளுருக் கருகில் தெற்கில் ;

22. அகதிகள் சிலர் சாபமும் உண்டு. அந்தச் சாபமும் சேர்ந்தது. இவையன்றி, பாம்பினைக் கொன்ற தோஷம் வேறு எற்பட்டது. ஆதலின் இப் பிறவியில் இவனுக்குப் பிறக்கும் ஆண் குழந்தை இறக்கும் என்று சொன்னோம். மனைவியாலும் சில தோஷங்கள் உண்டாயின. மனைவியின் முற்பிறவியைக் கேட்பாயாக. திருவள்ளூருக்கு அருகாமையில், தெற்குத் திசையில்;

23. இக்குல முதித்து யின்னுள் எழில்வரன் மதலை யுண்டாய்த்
தக்கவே குடும்பி யாகிச் சார்ந்ததோர் வினையைக் கேண்மோ
நக்கன்தன் அடியார் மாலை நல்குவா யன்ன மென்னக்
குக்கல்போல் கோபம் கொண்டு கூடாது என்று
[சொன்னாள்.

23. இக்குலத்தில் பிறந்து, கணவன் மக்கள் ஆகியோரை யடைந்து, தகுந்த குடும்பியாக வாழும்போது, உண்டான தீவினையைக் கேளுங்கள். சிவனடியார் ஒருவர், ஒரு நாள் மாலை, இவள் வீட்டுக்கு வந்து, சிறிது உண வளிப்பாயாக என்று கேட்க, நாயைப் போல் கோபங் கொண்டு, உணவில்லை யென்று கூறினாள்.

24. அதிதியும் மனவெ றுப்பால் அறைகின்றார் சாபந் தானும்
வதிசதி பின்சென் மத்தில் மைந்தரர்ண் தோட மெய்தும்
சதமுடன் துணைக ளின்றித் தந்தையார்ச் சிதங்கள் பாழாய்
இதுவித மடைவாள் என்று இயம்பியே சென்ற
[ரென்றோம்.

24. இதைக் கண்ட அடியவரும் மனவெறுப் படைந்து, சாபமிடுகின்றார். இவளுக்கு வரும் பிறவியில் புத்திர தோஷம் ஏற்படும். தீர்க்காயுளுடைய உடன்பிறந்தார் இல்லாமல், தந்தையினால் தேடி வைக்கப்பட்ட சொத்துக்கள் சேதமாகி, துன்பத்தை யடைவாள், என்று கூறிச் சென்றார், என்று சொன்னேம்.

25. சடைமுனி சாபம் ஒன்று தங்கிற்று இவளுக் கேதான்
உடன்சுதர் மரண மாகி உத்தமி தனியாய் வாழ்ந்து
அடைவுடன் கால நாடு அடைந்துமே பிரமன் லக்கம்
திடமதா யிக்கு லத்தில் செனித்தவ ளிவளே யென்றோம்.

25. இது தவிர, சடைமுனியின் சாபம் ஒன்று இவளுக்கு ஏற்பட்டது. அதனால் உடனே புதல்வர்கள் மரண மடைந்து, தனியளாக வாழ்ந்து, எமபுரஞ் சென்று, மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, இக் குலத்தில் பிறந்தவள் இவள், என்று சொன்னேம்.

26. முனிசாபம் அதிதி சாபம் மேவிடு மிச்சென் மத்தில்
வினைவரும் சுதனு ணுக்கு விளங்காது முதலில் விருத்தி
கனமுட னிரண்டாம் விருத்தி கன்னிகை யாக நேரும்
பினைவரும் அதன்பின் னுகப் பிழைபோகச் சாந்தி செய்ய ;

26. சடைமுனியின் சாபம், விருந்தினராக வந்த சிவனடியார் சாபம் ஆகிய இரண்டும் இப் பிறவியில் இவளே யடைந்தன. அவற்றால் முதலில் தோன்றும் புத்திரனுக்கு விருத்தி யாகாது. இரண்டாவதாகப் பிறக்கும் குழந்தை பெண்ணாக விருக்கும். அது தீர்க்கமாக விளங்கும். அதற்குப் பிறகு தோன்றும் குழந்தை, முன் செய்த தீவினை நீங்கச் சாந்தி செய்தால்;

27. முன்வினை நீங்கி யேதான் உதித்தசேய் தீர்க்க மெய்தும்
கன்மசாந் திகள்செய் யானேல் காளைகள் தோன்றி தோடம்
சொன்னவூழ் செய்வா னாகில் சுதராண்பால் ஒன்று தீர்க்கம்.
கன்மசாந் திகளெவ் வாறு கழறுவீர் விபர மாக.

27. முற் பிறவி தோஷம் நீங்கி, பிறந்த குழந்தை தீர்க்கமாகும் கர்ம சாந்திகளைச் செய்யாம லிருப்பானாகில், புதல்வர்கள் தோன்றி நஷ்டமாவர். சொல்லப்பட்ட சாந்தியைச் செய்வானுயின் புதல்வன் ஒருவன் தீர்க்கம். கரும சாந்திகள் எவ்விதம் செய்ய வேண்டும்? விவரமாகச் சொல்லுவீர்.

வேறு

28. தானியம் சமித்து கலசமு மொன்பான்
சதிபதி பிம்பமும் ரெண்டாம்
ஆனவத் திரமும் அதற்குமேல் சாற்றி
அந்தாவ காந்தத்தில் மூலம்
ஊனமில் லாமல் சகஸ்திரம் உரைக்க
ஓங்கிடும் ஓமமே யென்றோம்
மானமாய்த் தாம்பிரத் தகட்டினி லம்மன்
பீசத்தை வரைந்துமே பின்பு ;

28. நவதானியங்கள், சமித்துக்கள் இவற்றைச் சேகரித்து, ஒன்பது கலசங்கள் ஸ்தாபித்து, இறைவன் அம்பிகை உருவங்கள் இரண்டினையும் பிரதிஷ்டை செய்து, வஸ்திரம் முதலியவற்றைச் சாத்தி, மூல மந்திரத்தைக் குற்றமில்லாமல் ஆயிரம் முறை கூறி, நெருப்பில் உயர்ந்த ஹோமம் செய்ய வேண்டும் என்று கூறினோம். பெருமையுடன் தாமிரத் தகட்டில் அம்பிகையின் பீஜாட்சரத்தை வரைந்து, பின்பு ;

29. முன்சொல்லு மூலம் சகஸ்திரம் உரைத்து
முழுவெள்ளைக் கூழ்ப்பாண்ட பலியும்
பின்சக்தி பூசை செய்துமே அணிந்து
பேதையும் [1]சுக்கிர விரதம்
இன்பமா யிருக்க வினைகளும் நீங்கி
எய்திடும் சுதராண் விருத்தி
துன்பமென் றிதனை நிவிர்த்தியுஞ் செய்யச்
சுதர்தோட முற்றிடுந் தானே.

29. முன்பு கூறிய மூல மந்திரத்தினால், ஆயிரம் முறை செபம் செய்து, முழு வெள்ளைப் பூசணிக்காயைப் பலியாகக் கொடுத்து, அதற்குப் பிறகு அம்பிகை பூஜை இயற்றி, அந்தத் தகட்டினை யணிந்து கொண்டு, இந்த ஜாதகன் மனைவி, வெள்ளிக் கிழமை விரதத்தை மன மகிழ்ச்சியுடன் அனுஷ்டித்து வந்தால், முற்பிறப்பில் ஏற்பட்ட தோஷங்கள் விலகி, ஆண் குழந்தை விருத்தி யுண்டாம். இதனைச் செய்யாமல் விலக்கினால் புத்திர தோஷம் ஏற்படும்.

---

1. வெள்ளிக்கிழமை தோறும் விரதம் இருத்தல்.

வேறு

30. அன்னைகுணம் மாஞ்சிவப்பள் சமதே கத்தள்
அறிவுள்ளாள் பொறுமையுண்டு முன்கோ பத்தாள்
தர்மகுணம் கபடில்லாள் வாயு பாதை
தங்கிடுமே இல்லமது கீழ்ப்பா லாகும்
தன்துணைஆண் காணுமல் கன்னி தோன்றும்
சலிப்பாகு மவைகளுமே சாற்றுள் பொய்யும்
மனமதுசஞ்சலமாக வாழ்வா ளாகும்
சாற்றுவோம் பூர்வமதைத் தக்கோ லத்தில்.

30. ஜாதகன் தாயார் குணத்தைச் சொல்லுவோம். கருஞ் சிவப்பு நிற முள்ளவள். சமமான உடலமைப்பைப் பெற்றவள். அறிவுடையவள். அடக்க முள்ளவள். முன் கோப முண்டு. தரும சிந்தனை யுடையவள். வஞ்சனை யில்லாதவள். வாயு ரோக முண்டு. இவள் பிறந்த வீடு, இவ் வூரி லேயே கிழக்குப் பக்க முளது. இவளுக்குச் சகோதர ரில்லை. சகோதரி கள் தோன்றுவர். அவர்களும் அழிவர். பொய் கூறுள். எப்பொழுதும் மனத்தில் துன்பங்கள் நிறைந்து வாழ்வாள். இவள் முற் பிறப்பைச் சொல்லுவோம். தக்கோலம் என்ற ஊரில் ;

வேறு

31. செங்குந்த மரபில் தோன்றிச் சேயர்கள் வரனு முண்டாய்
மங்கையும் வாழு நாளில் வந்தவூழ் தன்னைக் கேளாய்ச்
சங்கையாய் நாத்தி பேரில் தப்பான வார்த்தை சொல்லித்
தங்கள்பந் துக்கள் விட்டுச் சக்தியை விலக்க லுற்றுள்.

31. செங்குந்தர் வமிசத்தில் பிறந்து, கணவன் மக்கள் ஆகியோரை யடைந்து, இவள் வாழ்ந்து வந்த காலத்தில் உண்டான தீவினையைக் கேட் பாயாக. தனது நாத்தியின் மீது தவறுன சொற்களைக் கூறி, அவள் உறவி னரிட மிருந்து அவளை விலக்கினுள்.

32. ஏகின மாது தானும் இயம்புவாள் மனவெ றுப்பால்
பாகமாய்ப் பின்சென் மத்தில் பெருகாது துணைகள் தாமும்
தோகையும் இரண்டாம் பாரி தோன்றியே நிந்தை
[பெற்றுப்
போகமும் குறைவு நேர்ந்து பூமியில் வாழ்வாள் என்று ;

32. விலக்கப்பட்ட அந்தப் பெண், மன வெறுப்படைந்து சொல்லு வாள். என் மீது வீண் பழி கூறி விலக்கிய இவளுக்கு, மறு பிறவியில் உடன் பிறந்தார் நிலையார். இவளும் இழிவளாக வாழ்க்கைப் பட்டு, பழியுண்டாகி, இன்பம் குறைந்து வாழ்வாள் என்று ;

33. சொல்லியே சென்ற ளென்றேரும் தொடர்ந்தது அந்தத்
[தோடம்
வல்லியு மந்தி யத்தில் வாய்ரணம் தன்னுல் மாண்டு
புல்கினு ளிக்கு லத்தில் புக்கிற்று முன்னூழ்த் தோடம்
நில்லாது துணைக ளுந்தான் நேருவா ளிரண்டாம் பாரி.

33. கூறிச் சென்றுள் என்று சொன்னேம். அந்தத் தோஷம் இவளைத் தொடர்ந்தது. இவள் கடைசிக் காலத்தில், வாய்ப் புண் ஏற்பட்டு, மரண மடைந்து, மீண்டும் தோன்றினுள் இக் குலத்தில். முன் செண்ம தோஷ இவளை யடைந்தது. அதனுல் இவளுக்கு உடன் பிறந்தார் தோன்றினும் நிலையார். இளையவளாக வாழ்க்கைப் படுவாள்.

34. சஞ்சல மாக வாழ்வள் தன்பணி யதிக மில்லாள்
வஞ்சியின் செண்மம் சொல்வோம் வளமுள காஞ்சி தன்னில்
தஞ்சமா யிக்கு லத்தில் செனிப்பளா மிந்த மாது
வஞ்சியே தந்தை பூர்வம் வகுக்கின்றே மினிமே லாக.

34. எப்பொழுதும் துன்பத்துடன் வாழ்க்கை நடத்துவாள். தனக்குச் சொந்தமான ஆபரணங்கள் மிகுதியாக இல்லாதவள். இவள் மறுபிறப்பைக் கூறுவோம். செழிப்புள்ள காஞ்சீபுரத்தில், இக் குலத்திலேயே பிறப்பாள். பார்வதியே! இனி, ஜாதகன் தகப்பனரின் முற்பிறப்பைச் சொல்லுகின்றேரும்.

35 பொங்கிய மலைநா டதனில் பிறந்தனன் செக்கான் வமிசம்
வஞ்சியு மதலை யுண்டாய் வளமுள குடும்பி யாகி
இங்கவன் வாழு நாளில் இயம்புவோம் ஊழி தானும்
துங்கமாஞ் சுருதி யோர்க்குச் சொற்பமாய்ப் பொருளைத்
[தந்து ;

35. சிறந்த சேர நாட்டில், வாணியர் வமிசத்தில் தோன்றினன். மனைவி மக்கள் உண்டாகி, வளமுள்ள குடும்ப முடையவனுய், இவன் வாழ்ந்து வருங் காலத்தில் ஏற்பட்ட தோஷ மொன்றைச் சொல்லுவோம், தூய்மையுடைய அந்தணர்களுக்குச் சிறிதளவு பொருளைக் கடனுகக் கொடுத்து விட்டு;

36. செய்தனன் கணக்கில் மோசம் செப்புவார் மறையோர்
[தாமும்
ஐயமாய்ச் சொன்ன பாவி அணுகிய பின்சென் மத்தில்
தையலு மிரண்டு மாகித் தன்துணை தோன்றித் தீதாம்
வையமேல் வாழ்வா யென்று வறைந்திட்டார் மறையோர்
[தாமும்.

36. அதிசயமாகக் கொடுத்ததாக எழுதி, கணக்கில் மோசடி செய்தான். இதனை யுணர்ந்த அந்தணர் கூறுவார். கணக்கில் மோச முரைத்த பாவியே! நீ, வரும் பிறவியில், மனைவியர் இருவரைப் பெறுவாய். உனக்கு உடன் பிறந்தார் தோன்றி மரண மடைவர். தனியனாக இவ் வுலகில் வாழ் வாய், என்று கூறினர் அந்தணர்.

37. இன்னமுஞ் சிலவே தோடம் எய்திற்று இவனுக் கேதான்
துன்னிய கால நாடு மேவியே பிரமன் லக்கம்
அன்னவ னிக்கு லத்தில் அணுகினு னென்று சொல்வோம்
முன்வினை யிச்சென் மத்தில் மேவிடும் மனைவி ரெண்டாய்;

37. மேலுஞ் சில தோஷங்கள் இவனுக்கு ஏற்படன. பின்பு மரண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, இக் குலத்தவனாகப் பிறந் தான் என்று கூறுவோம். முற் பிறப்புத் தீவினையினால், இப் பிறப்பில் மனைவியர் இருவராகி;

38. துணைகளும் தோன்றித் திதாம் சல்லிய பாதை நேரும்
பிணையாகுஞ் சுதர்கள் தாமும் பேசுவோம் இவன்பின்
[சென்மம்
அனையவே தக்கோ லத்தில் அணுகுவா னிக்கு லத்தில்
சினமிலாத் தவங்கள் செய்யும் தேவியே கேட்டி டாயே.

38. உடன் பிறந்தார்களுந் தோன்றி, அழிவர். கடன் தொந்தரவு உண்டாகும், புதல்வர் நஷ்டமும் ஏற்படும். இவன் மறு பிறப்பைக் கூறு வோம். தக்கோலத்தில், இக் குலத்தவனாகப் பிறப்பான். சாந்தமுடன் தவங்களை யியற்றும் பார்வதி தேவியே! கேட்டாயாக.

39. மூப்பது ஐந்து ஆண்டில் உயர்தேளின் மாதம் தன்னில்
செப்புவோம் தந்தை கண்டம் சென்றுபின் நாற்ப தாண்டில்
ஒப்புடன் மகர மாதம் உரைக்கின்றோம் தாயின் கண்டம்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் ரூது.

39. ஜாதகன் மூப்பத்தைந்தாவது வயதில், கார்த்திகை மாதம் தந்தையின் மரணம் ஏற்படும் என்று சொல்லுவோம். பின்பு, இவனுடைய நாற்பதாம் வயதில், தை மாதம் தாயின் மரணத்தைக் கூறுகின்றோம். கங்கை நீரை யணிந்த சடை முடியை யுடைய சிவபெருமான் பத்தினியே! கூறிய சொல் தவறாது.

40. அறுபது வொன்ப தாண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
திருமகன் உடல மேகும் செயமுனி கூறு கின்றார்
வருமவன் தனக்கு மேதான் ஆதியில் கண்டம் நேரும்
உறைந்திடும் சகட யோகம் உயர்மீன மதியும் நிற்க ;

40. அறுபத்தொன்பதாம் வயதில், ஐப்பசி மாதத்தில் ஜாதகன் மரண மடைவான். செய முனிவர் சொல்லுகின்றார். இவனுக்கு, ஆரம்பத்தில் கண்டம் ஒன்று உண்டாகும். சகட யோகமும் ஏற்படும். இலாபஸ்தான மாகிய மீன ராசியில் சந்திரன் தங்கி யிருப்பதால் ;

41. பங்கமே நேரு மென்றோரும் பாலகன் வயது தீர்க்கம்
சங்கையாய்ப் பிணிகள் நேர்ந்தும் சனியேழி லிருப்ப தாலே
பங்கயன் முன்பனி போலப் பறந்திடு மென்று சொல்வோம்
அங்கவன் பின்சென் மத்தை அறிவிப்போம் தாயே கேளும்.

41. யோக முண்டாவதற்குத் தடையு மேற்படும். இவன் வயது தீர்க்கம். இவனுக்குப் பல வியாதிகள் வந்தாலும், சனி எழா மிடமாகிய விருச்சிகத்தி லிருப்பதால், சூரியனுக்கு முன்பு பனியைப் போல் அவை நீங்கும் என்று கூறுவோம். இவன் மறு பிறப்பைச் சொல்லுவோம் ; தாயே! கேளுங்கள்.

42. உத்திரம் வள்ளூர் தன்னில் உதிப்பனும் சைவச் சேயாய்
வித்தகன் யோகச் சேதி விளம்புவோ மினிமே லாக
முத்துசா மரையோ கங்கள் முக்குடை யோக மொன்றும்
சுத்தமாய்ப் பலனைச் சொல்வோம் சுகதுக்க மிரண்டு
[முள்ளான்.

42. வடக்கே, திருவள்ளூரில் சைவ குலத்தவனுகப் பிறப்பான். இனிமேல் இப்பிறப்பில் இவனுக் குண்டாகும் யோகங்களைப் பற்றிச் சொல்லுவோம். முத்து, சாமரை யோகங்கள், முக்குடை யோகம் ஒன்று ; ஆக மூன்று யோகங்க ளுண்டாம். இவற்றிற்குப் பலன்களைக் கூறுவோம். இன்பம் துன்பம் இரண்டு முள்ளவன்.

43. அன்னமுங் குறைவி ராதான் அணுகாது தனங்கள் தாமும்
முன்னோனுல் செலவ னேகம் வீண்செல வில்லா
[னென்றோரும்
தந்தைநாள் பூமி கொஞ்சம் தானவன் விரயம் செய்வன்
அன்னவன் சல்லியம் கொள்வன் அரசனுல் பகையு
[மெய்தும்.

43. போஜன வசதி குறையாதவன். புதிதாகச் செல்வம் சேராது. தனக்கு மூத்தவனால் செலவுகள் பல நேரும். தாலுக வீண் செலவு செய்ய மாட்டான் என்று சொன்னேம். தந்தை காலத்தில் சேர்ந்த நிலபுலன்களில் சிறிதளவு இவன் விரயம் செய்து விடுவான். கடன் வாங்குவான். அரசர் விரோதமும் ஏற்படும்.

44. பகையினால் பாதை காணும் பணங்கொஞ்சம் செலவு [முண்டு
தகைமையாய் வேறுய்ச் சென்று சாருவா ரொன்று கத்தான்
சகமதில் நிந்தை யேற்பன் செயஞ்செய்வன் தொடுத்த [தெல்லாம்
உகமையாய்ப் பின்பால் சேதி உரைக்கின்றேம் தாயே [யாங்கள்.

44. அந்த விரோதத்தினால் துன்ப மடைவான். பணச் செலவும் சிறிதுண்டு. வேறு குடும்பமாகப் பிரிந்து போய்ச், சிலகாலஞ் சென்று, மீண்டும் ஒன்று சேருவான். உலகில் பழிகளே ஏற்பான், தொடங்கிய செயல்கள் அனைத்தையும் வெற்றியுடன் முடிப்பான். மற்றவற்றை நாங்கள் பிற்பாகத்தில் சொல்லுகின்றேம்; தாயே!

45. பிறந்திடு காலந் தன்னில் புதன்தசை பனிரண் டாண்டும்
சிறந்திடுந் திங்க ளெட்டுஞ் செப்புவோம் பலனே யாங்கள்
உறைந்திடும் துணைவி ருத்தி உயருறும் பூமி தானும்
நிரந்தரம் பலித மோங்கும் நிமலியே கேட்டி டாயே.

45. ஜாதகன் பிறந்த காலத்தில் புத மகா தசை இருப்பு; பனிரண்டு வருஷங்களும் எட்டு மாதங்களுமாம். அக் காலத்துக்குரிய பலன்களே நாங்கள் சொல்லுவோம். சகோதர விருத்தி ஏற்படும். நிலபுலன்கள் மிகுதியாம். நிலையான பலன்களே யடைந்து உயர்வான். குற்ற மற்ற பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 60

1. மதிசிகி வீணை யாக மால்புகர் பரிதி கன்னி
விதிமீனம் சேயு நந்தி வேந்தனுஞ் சாடி யாகத்
சதிகயர் மேரு வாகச் சென்மமும் விடைய தாக
இதுபலன் புகலு மென்று ஈசுவரி கேட்க லுற்றாள்.

1. சந்திரன் கேது மிதுனத்திலும், புதன் சுக்கிரன் சூரியன் கன்னியிலும், சனி மீனத்திலும், செவ்வாய் விருஷபத்திலும், குரு கும்பத்திலும், ராகு தனுசிலுமாக இருந்து, சென்மமும் விருஷபமாக இருப்பின் ஏற்படும் பலனைச் சொல்லு மென்று பார்வதி கேட்க லானாள்.

சனி		லக்கினம் செவ்வாய்	கேது சந்திரன்
குரு	இராசி சக்கரம்		
ராகு			புதன் சுக்கிரன் சூரியன்

2. அத்திரி புகலு கின்றார் ஆணது சென்ன மாகும்
வித்தக னில்ல முன்னல் மேவிடும் கிழக்கு மேற்கு
சுத்தமா மருகர் ஈசன் சிங்கவா கனத்தா ளுத்ரம்
சத்தியா மாரி மேற்கில் சார்ந்திடும் தென்பால் தீர்த்தம்.

2. அத்திரி முனிவர் கூறுகின்றார். இம்மை ஆண் பிறப்பாகும். ஜாதகன் பிறந்தவீடு வீதியின் முன்னல் இருக்கும். அது கிழக்கு மேற்கு வீதியிலுள்ளது. தாய்மையான ஐனார் கோயிலும், சிவபெருமான் கோவிலும், சிங்கவாகனமுடைய காளிதேவி கோவிலும் வடக்கிலுள்ளன. மாரியம்மன் கோவில் மேற்கிலுள்ளது. தெற்கில் ஒரு நீர்க்கிலையுள்ளது.

3. இந்தநல் லடையா ளத்துள் இவனுமே யுதிப்பா னாகும்
வந்திடு மில்லம் மேற்கில் வளமுள ஊரே யாகும்
சொந்தவோ ரில்ல மன்று தென்வாடை கீழ்மேல் பக்கம்
மைந்தன்தன் குடும்பச் சேதி யறைகின்றோ மிந்நூல்

[தன்னில்.

3. இவ்விதமான அடையாளங்களுள்ள ஓர் ஊரில் ஜாதகன் பிறப்பான். பிறக்கும் வீடு மேற்குத் திசையில் செழிப்புள்ள ஊரிலாகும். அவ்வீடு இழக்கு மேற்கு வீதியில் தெற்குச் சாரியில் உள்ளது. ஜாதகனுடைய குடும்பச் செய்திகளை இந்த நூலில் சொல்லுகின்றேன்.

4. தந்தையின் துணையாண் ஒன்று சாற்றுவோம் பின்பால்
[சேதம்
சந்ததி யவருக் குண்டு [1]சாகையும் வேறே யாகும்
சேர்ந்ததோர் தந்தை சேதி செப்புவோம் மால்நி றத்தான்
தன்தனம் கொடுக்கல் வாங்கல் செய்குவான் அரசர் மூலம்.

4. தகப்பனின் சகோதரர் ஒருவர் உண்டு ஆனால் கொஞ்ச காளில் அவர் மரிப்பர். அவருக்குச் சந்ததியும் இருக்கும். தனியாக வீடு ஒன்றும் உண்டு. தந்தையின் குணங்களைப் பற்றிச் சொல்லுவோம். கருமை நிற முள்ளவன். சுயார்ச்சிதமான பணத்தைக் கொடுக்கல் வாங்கல் செய்வான். அரசர் மூலமாக;

5. தொழிலுமே ஏற்பா னுகும் தொல்புவி பின்னுல் சேர்ப்பான்
பழிகளு கஞ்சு வானும் பகவானின் பத்தி பூண்பன்
செழிப்புள கல்வி மானும் செகராசர் பேட்டி கொள்வன்
தொழிலாலே சீவிப் பானும் துன்பத்தை யெவர்க்கு
[மெண்ணுன்.

5. ஒரு தொழிலை ஏற்று நடத்துவான். பூமிகளனேகம் பிற்காலத்தில் சேர்ப்பான். பழிகளுக்குப் பயப்படுவான். பகவான் மீது பக்தி யுள்ளவன். மிகுதியான கல்வி யுள்ளவன். அரசனைப் பேட்டி காண்பான். தொழிலால் சீவித்து வருவான். ஒருவருக்கும் கெடுதல் எண்ணுதவன்.

6. அன்னிய தேச வாசன் அதிகார மூடைய னுகும்
சொன்னசொல் சுருக்க மாகும் சோம்பிடான் காரி யத்தில்
பொன்பணி சேர்ப்பா னுகும் புகழ்ந்தோரை யாத ரிப்பான்
பின்னமில் லாத தேகி புகன்றவிக் குணத்தா னுக்கு;

6. வேறு தேசத்தில் சிலகாலம் வாழ்ந்து வருவான். அதிகாரங்கள் உடையவன். சுருக்கமாகப் பேசுவான். காரியங்களில் சோம்பலில்லாதவன். பொன்னுபரணங்கள் சேர்ப்பான். துதி செய்தவரைக் காப்பான். ஊன மில்லாத தேக மூடையவன். இப்படிச் சொன்ன இக்குண மூடையவனுக்கு;

---

1. வீடு

7. பாலக னுதிப்பா னுகும் பகருவோ மிவன்கு ணத்தை
மாலவ னிறத்த னுகும் மன்னனுல் சீவ னங்கள்
ஏலவே வனவா சங்கள் எய்திடு மத்தி லேதான்
வேல்விழி மார்கள் மோகன் விகடங்கள் கூரு னுகும்.

7. ஜாதகன் பிறப்பான். இவன் குணங்களைப் பற்றிச் சொல்லு வோம். திருமாலைப் போல் கரிய நிறமுடையவன். அரசன் ஆதரவால் வாழ்க்கை நடத்துவான். வனவாசம் போன்ற கஷ்டங்கள் இடையில் ஏற்படும். வேலைப்போன்ற விழிகளையுடைய பெண்கள் மீது விருப்ப முடையவன். விகடமாகப் பேசாதவன்.

8. கல்வியால் பெருமை யேற்பன் கடனது கொள்ளா னுகும்
மல்லில்முன் செல்லா னுகும் மனமது சஞ்ச லத்தான்
சொல்லது சுருக்கம் செய்வன் துணைவரைப் பிரிதல்
[செய்வன்
எல்லையை விருத்தி செய்வன் இடர்செய்யான் யாவ ருக்கும்.

8. கல்வி யறிவினுல் பெருமை யடைவான். கடன் கொள்ளாதவன். சண்டைக்கு முன் செல்லமாட்டான். சஞ்சலமான மனமுடையவன். சுருக்கமாகப் பேசுவான். உடன் பிறந்தாரிடமிருந்து விலகிடுவான். பூமியை விருத்தி செய்வான். ஒருவருக்கும் தீங்கு செய்யாதவன்.

9. வித்தையைப் போதிப் பானும் வி3வகியாம் பித்த தேகி
சத்தியந் தவறு னுகும் தாதையார்ச் சிதத்தில் வாழான்
பத்தினி வந்த பின்பு பாலகன் தனக்கு யோகம்
குத்தத்தை மனத்தில் வையான் குலமுற வாகி வாழான்.

9. கல்வியைப் பிறருக்குப் போதித்து வருவான். விவேகமுள்ளவன். பித்த சரீர முடையவன். சத்தியம் தவறுதவன். பிதுரார்ச்சித சொத்தினுல் வாழாதவன். இவன் மனைவி வந்த பிறகு, இவனுக்கு யோகமேற்படும். குற்றத்தை மனத்தில் எண்ணுதவன். தன் குலத்தோருடன் உறவாக இருக்க மாட்டான்.

10. இன்னவன் செங்கை தன்னில் இலகிடு மாலின் ரேகை
மன்னனுல் சீவ னங்கள் மருவிடு மரண மட்டும்
பொன்பின்னுல் சேர்ப்பா னுகும் புகழான யில்லம் செய்வன்
எந்நேர மனமுந் துக்கம் இவனுமே கொள்வா னுகும்.

10. இவனுடைய கையில் விஷ்ணு ரேகை யுண்டு. அரசாங்க உத்தியோகம் இவன் மரண காலம் வரையில் இருந்து வரும். பின்னுல் செல்வங்கள் சேர்ப்பான். பிறர் மெசசும்படியான வீடு கட்டுவான். எந்த நேரமும் துக்கம் குடிகொண்ட மனத்தினனுவான்.

11. தன்துணை ஆண்பால் ரெண்டும் தங்கிடும் தீர்க்க மாக
முன்பின்னுல் தோன்று மென்றேரும் மொய்குழல் மார்கள்
[மூன்று
சொன்னது தீர்க்க மென்றேரும் துணைஆண்பால் வேருய்ச்
[செல்வர்
அன்னவர் சேதி பின்பால் அறிவிப்போம் தாயே யாங்கள்.

11. அவனுக்கு இரு சகோதரர்கள் நீண்ட ஆயுளுடன் விளங்குவர். முன்னுல் ஒருவரும் பின்னுல் ஒருவரும் தோன்றுவார். மூன்று சகோதரி கள் உளராவர். அவர்களும் தீர்க்கமாய் இருப்பர். சகோதரர் தனியாகச் சென்று விடுவர். தாயே! அவர்கள் விவரங்களே நாங்கள், பின்னுல் சொல்லு வோம்.

12. மைந்தனின் மணத்தின் கால மறைகின்றே மிருபா
[னெட்டுள்
அந்தவள் தென்பால் தன்னில் அருளுவாள் துணைவி
[வர்க்கம்
பந்தணி மாது சேதி பகருவோ மிருகி கப்பள்
வந்தபின் விசேட யோகம் மறுத்துரை யதிகம் கூருள்.

12. ஜாதகனின் மணம் நடைபெறும் காலம் சொல்லுகின்றேரும். இருபத்தெட்டாம் வயதிற்குள் எற்படும்: மனைவி தென்திசையிலிருந்து வரு வாள். அந்தப் பெண் சகோதரி வர்க்கத்திலிருந்து வருவாள். அவள் செய்தியைச் சொல்லுவோம். கருமை கலந்த சிவப்பு நிறமுள்ளவள். அவள் வந்த பிறகு ஜாதகனுக்கு நல்ல யோகம் எற்படும். கணவன் வார்த்தையை மீறிக் கூறுதவள்.

13. முன்கோபி உடனே தாழ்வு வுயர்வான குடும்ப மேற்பள்
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பாள் பித்த தேகி
அன்னியர் குற்றம் சொல்லாள் ஆசாரம் விரத சாலி
பொன்பணி அதிகம் சேர்ப்பள் புகழ்ந்தோரை யாத ரிப்பள்.

13. முன்கோப முடையவள். உடனே சாந்தியுறுவாள். உயர்ந்த குடும்பத்தைப் பெறுவாள். தன் வார்த்தையே மேன்மை என்று சாதிப்பாள். பித்த சரீர முடையவள். பிறர் குற்றத்தைச் சொல்லாதவள். ஆசாரம் உடையவள். விரதங்களே மேற்கொள்ளுவாள். மிகுதியான பொன்னு பரணங்களைச் சேர்ப்பாள். துதி செய்தவரை ஆதரிப்பாள்.

14. மங்கையும் தீர்க்க சீவி மாதுவும் நடக்கை நன்மை
சங்கையா மனத்த ளாகும் சாதமு மன்பா யீவள்
எங்கள்போ லதிதிக் கன்னம் ஈகுவா ளந்த மாது
ஐங்கரன் தனைவ ளர்த்த அம்பிகை யாளே கேளாய்.

14. நங்கையும் நீண்ட ஆயுள் உடையவள். நன்னடத்தை உள்ளவள். சந்தேக மனம் உடையவள். அன்புடன் அன்ன மளிப்பாள். எங்களைப் போன்ற துறவிகளுக்கு அன்னமளிப்பாள் அந்தப் பெண். விநாயகனை வளர்த்த பார்வதியே! கேளுங்கள்.

15. மதலைக ளறுவர் தோன்று மறைகின்றே மாண்பா
[லொன்று
மதிமுகப் பெண்பால் மூன்று மருவிடும் தீர்க்க மாக
முதல்சுதர் தீதே யாகும் மொழிகுவீ ரந்தச் சங்கை
புதனைந்தா மிடத்தோ னுகிப் புகர்பானு கூடி நிற்க;

15. குழந்தைகள் ஆறு பேர் தோன்றுவார்கள் என்று சொல்லுகின்றோம். ஆண் மகன் ஒருவனும், அழகிய பெண்கள் மூவரும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்பர். முதல் மகன் இறந்து விடுவான். அதற்குக் காரணம் சொல்லுங்கள். புதன், ஐந்தாமிடமாகிய கன்னிக்கு உரியவனாகி, சூரியன் சுக்கிரன் இவர்களுடன் சேர்ந்தும்,

16. நந்தியும் சென்ன மாக நவின்றன னந்தத் தோடம்
சந்ததி யிவன்மே லாகச் சகலமும் பெற்று வாழ்வர்
வந்தவன் முன்சென் மத்தை யறைகின்றே மினிமே லாகச்
செந்தில்மாமலைக்குத் தென்பால் சிறுவூரில் வைசியச் சேயாய்;

16. இடபம் லக்கினமாகவும் இருப்பதால் அந்தத் தோஷம் சொன்னோம். பின்பு மக்கள் இவனுக்கு மேலாக எல்லாவற்றையும் பெற்று வாழ்வார்கள். ஜாதகன் முற்பிறவியை இனிமேல் சொல்லுகின்றோம். திருச்செந்தூர் மலைக்குத் தெற்கிலுள்ளதொரு சிற்றூரில் வைசிய மாபினனாய்;

17. பிறந்துமே செட்டுச் செய்து பேதையர் மதலை யுண்டாய்
வருகிற நாளி லேதான் வந்தவூழ் தன்னைக் கேண்மோ
மறையோர்க்கு இடைஞ்சல் செய்தான் மனமது கோப
[முற்று
உரைக்கின்றோர் சாபந் தானும் உதிக்கும்பின் சென்மம்
[தன்னில்;

17. தோன்றி, வியாபாரங்கள் செய்து, மனைவி குழந்தைகள் உண்டாகி, இருக்கும் நாளில், எற்பட்ட தீவினையைக் கேளுங்கள். அந்தணர்

களுக்குத் துன்பம் இழைத்தான். அவர்கள் கோபமடைந்து சாப மிடுவார்கள். "இனி ஏற்படும் மறு சென்மத்தில்;

18. வனவாசம் வெளியூர் வாசம் வருந்துணை யேது மின்றித்
தினமன சஞ்ச லங்கள் சினபந்து உதவி யின்றி
வினைமன மாகச் சொன்னர் மேவிற்று அந்தச் சாபம்
கனமுள வேறு ஒன்று கழறுவோம் தாயே கேளும்.

18. வனவாசமும், வெளியூரில் இருக்கையும் ஏற்படும். சகோதரர் கள் ஒருவருமின்றித் தினமும் மனத்துக்குச் சஞ்சலங்கள் ஏற்பட்டு பந்து ஜனங்கள் உதவியின்றி இருப்பாய்" என்று கோபத்துடன் சொன்னர்கள். அச் சாபம் வந்தடைந்தது. திடமான வேறு ஒன்றும் சொல்லுவோம். தாயே! கேளும்.

19. அந்நகர் சைவன் நேசம் அரும்பொருள் உதவி செய்து
இன்னவன் வாழும் நாளில் இவன்மனை தன்மேல் மோகம்
கன்னிகை யிசையா ளாகிக் கழறினள் வார்த்தை யொன்று
அன்னிய மாது போக மாகாது வாயுள் தீது;

19. அப்பட்டினத்தில், சைவனொருவனுடன் நேசம் கொண்டு, அவ னுக்குப் பொருள் முதலியன கொடுத்து, உபகாரம் செய்து, இவன் வாழ்ந்து வரும் நாளில், நண்பன் மனைவி மீது மோக மடைந்தான். அப் பெண்ணும் இசையாதவளாகிக் கூறினள், "வேறு பெண்ணை விரும்புவது தவறு. ஆயு ளுக்கும் கெடுதி;

20. தோழன்தன் மனைவி போகம் செய்திடில் பிணியு மெய்தும்
ஆழியின் பின்சென் மத்தில் அலைச்சலாங் குடும்ப மாகும்
வாழ்மனை யணுகா தாகும் வனவாச மாகி வாழ்வாய்
தோழியு மிவ்வார் கூறச் சோகத்தால் தனத்தைப் பற்ற;

20. "ஒருவனுடன் மனைவியுடன் போகம் துய்த்தால் வியாதிகள் உண் டாம்; அலைச்சலான குடும்பம் மறு பிறவியில் உண்டாகும். வாழும் வீடும் உன்னைச் சேராது. வனவாசத்தைப் போல் வாழ்ந்து வருவாய்" என்று நண்பன் மனைவி கூறியும், இவன் கேட்காமல் காம விகாரத்தினால். அவள் மார்பகத்தைப் பற்ற,

21. கன்னிகை கோப முற்றுக் காலன்போ லவனைப் பார்த்து
முன்சாபம் நேரு மென்று முயன்றன ளில்லம் தன்னில்
தன்மன சஞ்ச லத்தால் சாகைக்குச் சென்று ளென்றோரும்
துன்மையாய்க் கற்பின் சாபம் சேர்ந்தது என்று

[சொல்வோம்.

21. அப்பெண் கோபமடைந்து, யமனைப் போல் அவனைப் பார்த்து, "முன் சொன்ன சாபம் அடைந்தே தீரும்" என்று கூறி, மனச் சஞ்சல மடைந்து, தன் வீட்டுக்குச் சென்றாள் என்றும். கற்புடைய அப்பெண்ணின் சாபம் இவனுக்குத் தன்பமாக வந்து சேர்ந்தது, என்று கூறுவோம்.

22. அந்திய காலம் தன்னில் அறுமுகன் பக்தி யாலும்
தென்திசை கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
முந்தின சீல மாக வுதிப்பனும் சினகு லத்தில்
பந்தணி கற்பின் சாபம் பற்றுமே யிச்சென் மத்தில்.

22. கடைசிக் காலத்தில், ஆறுமுகக் கடவுள் மீது பக்தி கொண்டு இறந்தான். பிறகு பிரமனால் படைக்கப்பட்டு, நல்ல ஒழுக்கமுடைய ஜைன குலத்தில் பிறந்தான். இப் பிறவியில் கற்புடைய பெண்ணின் சாபம் வந்தடைந்தது.

23. சொல்போலே நேரு மென்றும் செப்புவோ மிவனின் [யோகம்
நல்லவர் நேசம் கொள்வன் நற்கல்வி யிரண்டு நேரும்
சல்லியம் கொள்ளா னாகும் தன்பூமி பின்னால் சேர்ப்பன்
இல்லறம் வேறு செய்தல் இடுக்கமில் லாமல் வாழ்வன்.

23. சொல்லியது போல் நடைபெறும் என்றும். இவனுடைய யோகத்தைச் சொல்லுவோம். நல்லவருடன் நட்புக் கொள்வான். இருவித மான கல்வி கற்பான். கடன் கொள்ளாதவன். செல்வங்கள், பூமி இவை களைப் பின்னால் சேர்ப்பான். வேறு வீடு கட்டுவான். தன்பமில்லாமல் வாழ்ந்து வருவான்.

24. பாலகன் தனக்கு யோகம் பகர்ந்தகா ரணங்க ளெவ்வார்
நீலனும் தர்ம கர்மன் முந்திடும் லாப மாக
ஆலமும் மேரு வாக அந்தணன் தசமம் தங்க
மாலிந்தில் மதியும் ரெண்டில் வந்ததால் யோகம் கேளே.

24. "ஜாதகனுக்கு யோகங்கள் எப்படிச் சொன்னீர்கள்?". சனியும் தர்ம கர்மாதிபதி (ஒன்பது, பத்தாமிடங்களுக் குரியவன்) ஆகி லாப ஸ்தானமாகிய மீனத்தில் இருப்பதாலும், சுக்கிரன் தனுசிலும், குரு பத்தாமிட

மாகிய கும்பத்திலும், புதன் ஐந்திலும், சந்திரன் இரண்டாமிடமாகிய மிதுனத்திலும் தங்கியிருப்பதால் ஏற்படும் யோகத்தைக் கேளும்.

25. பருவத யோக மொன்று பகருவோ மதுவு மன்றித்
தருமகர் மாதி யோகம் சார்ந்திடு மிவைக ளாலே
திருமக னிருபாண் டின்மேல் சகராசர் பேட்டி யாலே
உறைகுவான் சிவ னங்கள் உரைக்கின்றோ முப்பாண்
[டின்மேல்;

25. பர்வதயோகம் ஒன்று உண்டு என்று சொல்வோம். அதுவன்றி தர்ம கர்மாதிபதி யோகம் ஏற்படும். இவைகளால், ஜாதகனுக்கு இருபதாவது வயதிற்கு மேல் அரசர் சந்திப்புண்டாகி, அரசாங்க உத்தியோகத்தால் ஜீவனம் ஏற்படும் என்று சொல்லுகின்றோம். முப்பதாம் வயதிற்கு மேல்;

26. பிறைபோலத் தொழிலும் ஓங்கும் பூமியும் பொருளும்
[சேரும்
அருகர்தன் அருளி னுலே அவன்குறை நிவிர்த்தி யாகும்
பெருகிடும் பால்பாக் கியங்கள் பந்துவும் புகழ வுய்தல்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

26. வளர்பிறையைப் போல் தொழிலும் விருத்தியாகும். பொருள் பூமி இவைகள் சேரும். அருகக் கடவுள் அருளினால் அவனுடைய துன்பங்கள் நிவிர்த்தியாகும். பாக்கியங்கள் மேன் மேலும் பெருகும். உறவினர்கள் கொண்டாடும்படி வாழ்வான். யானைமுகக் கடவுளைப் பெற்ற பார்வதியே! கேளுங்கள்.

27. பாலகன் அன்னை சேதி பகருவோ மிருநி றத்தாள்
ஞாலமேல் நல்லோ ளாவள் நாயகன் மனத்துக் கேற்றோள்
சீலமாம் அருகர் பத்தி சிந்தையும் நல்ல தாகும்
காலத்தை அறிந்து வாழ்வள் கனத்திடும் வரன்யோ
[கந்தான்.

27. இவனுடைய அன்னையின் குணங்களைச் சொல்லுவோம். கருமை நிறமுடையவள். உலகத்தில் நல்லவளாய் இருப்பாள். கணவன் மனம் போல் வாழ்வாள். ஒழுக்கம் உடையவள். அருகக் கடவுள் மீது பக்தி உள்ளவள். நல்ல மனமுடையவள். வரும் காலத்தை அறிந்து வாழ்ந்து வருவாள். கணவனுடைய யோகங்கள் மிகுதியாம்.

28. இல்லமும் தென்பா லாகும் இவள் துணை யாண்பா
[லொன்று
சொல்லுவோம் தீர்க்க மாகச் செப்புவோ மிவள்முன்
[சென்மம்
எல்லையில் உயர்வ தான எழில்கொங்கு நாட்டிடு லேதான்
நல்லதோர் கங்கை சேயாய் நல்கியே வாழும் நாளில்;

28. இவளுடைய வீடு தெற்குப் பக்கத்திலுள்ளது. சகோதரன் ஒருவனுண்டு. அவனும் நீண்ட ஆயுள் உள்ளவன். இவளுடைய முற்பிறவியைப் பற்றிச் சொல்லுவோம். வளம் பொருந்திய கொங்கு நாட்டில், உயர்ந்த வேளாளர் மரபில் தோன்றி, வாழ்ந்து வரும் பொழுது;

29. அன்னிய மாது பேரில் அடாவடி கூற லுற்றுள்
கன்னிகை வருத்த முற்றுக் கழறின சாபம் கேண்மோ
பின்னமாய் வார்த்தை யென்மேல் புகன்றிட்ட பாவிக்
[கேதான்
உன்துணை கன்னி யின்றி உதிக்கும்பின் சென்மம் தன்னில்;

29. வேறு பெண் மீது அடாவடி சொல்லலாளுள். அப் பெண்ணும் வருத்தமடைந்து, சொன்ன சாபத்தைக் கேளுங்கள். துன்பம் அடையும் படியான வார்த்தைகளே என்மீது சொன்ன பாவிக்கு, எப்படும் மறு பிறவியில், உடன் பிறந்த பெண்ணொருத்தி இல்லாமல்;

30. எனைப்போலே துணைப்பெண் தோட மியம்பினு ளந்த
[மாது
வினையாகச் சேர்ந்த தென்றேரும் வேறுஓர் பாவ மின்றிச்
சினமூள காலை நாடு சேர்ந்துமே பிரமன் லக்கம்
வனிதையு முதித்தா ளென்றே மறைகின்றே மிவள்பின்
[சென்மம்.

30. என்னைப் போலவே, வேறு பெண் துணை யில்லாமல் இருப்பாய் என்று அம்மாது சாப மிட்டாள். அந்தத் தீவினை இவளைச் சேர்ந்தது என்று கூறினேம். வேறொரு நன்மை யில்லாமல் இறந்து, பிறகு பிரமனால் படைக்கப்பட்டு, இப்பெண் பிறந்தாள் என்று சொன்னேம். இவளுடைய மறு பிறப்பு;

31. தென்திசை ஆழி தன்னில் செனிப்பளாம் சைவச் சேயாய்த்
தன்தந்தை பூர்வம் சொல்வேன் தடமலி நாட்டி லேதான்
முன்குலம் தனிலு திர்த்து மேதினில் வாழும் நாளில்
தன்துணை பாகம் தன்னைத் தராமலே மோசம் செய்தான்.

31. தெற்குச் சமுத்திரக் கரையோர முள்ள தொரு ஊரில் சைவக் குலத்தவளாகத் தோன்றுவாள். ஜாதகியினுடைய தந்தையின் முற்பிறவி யைச் சொல்லுவேன். கொங்கு நாட்டில், அந்தணர் குலத்தில் பிறந்து, உலகில் வாழ்ந்து வரும் பொழுது, தன் சகோதரனுடைய பாகத்தைத் தராமல் மோசம் செய்தான்.

32. மனமது வருத்த முற்று வறைந்தசா பத்தைக் கேண்மோ
வினைசெய்த பாவி யேநீ மேவும்பின் சென்மம் தன்னில்
துணையொரு கன்னி யின்றித் தந்தையார்ச் சிதமு மின்றிச்
சினமுடன் வனவா சங்கள் செய்துமே வாழ்வாய் நீயும்.

32. மன வருத்தமடைந்த சகோதரன் இட்ட சாபத்தைக் கேளும், "நீங்கு செய்த பாவியே! நீ, வரும் பிறவியில், உடன் பிறந்தார்களின்றி, தந்தையால் சம்பாதிக்கப்பட்ட பொருளும் இல்லாமல், கோபத்துடன் காட்டில் வாழ்வதுபோல் வசித்து வருவாய்".

33. இன்னமும் பலவார் சொன்னார் எய்திற்று அந்தச் சாபம்
முன்சாப மிச்சென் மத்தில் மேவிடும் பால னுக்குத்
தன்னில்லம் காண னுகும் செய்கினும் பாழ தாகும்
தன்னுமே தனியாய் வாழ்வன் தையலார் துணைகள்
[காணன்.

33. இன்னும் பலவிதமாகச் சொன்னார். அத்தீவினை வந்தடைந்தது. முன் செய்த தீவினை, இப் பிறவியில் ஜாதகனுடைய தந்தைக்கு ஏற்படும். சொந்த வீடு இல்லாமல், கட்டினும் பாழாகி, தானும் தனியாக வாழ்ந்து வருவான். சகோதரிகள் இல்லாம லிருப்பான்.

34. இருபது ஆண்டு தன்னில் ஏகுவான் கால நாடு
வருஞ்சென்மம் குடகு திக்கில் மருவுவா னிக்கு லத்தில்
திருகிலா வன்னைக் கேதான் செப்புவோ மிருபான்
[ரெண்டில்
மறலியின் நாட்டைச் சேர்வள் மங்கையே கேட்டி டாயே.

34. ஜாதகனின் இருபதாவது வயதில் மரண மடைவான். மறு பிறவி இதே குலத்தில் மேற்குத் திக்கில் பிறப்பான். தீமையில்லாத அன்னைக்கு ஜாதகனின் இருபத்திரண்டாம் வயதில் மரண மேற்படும். தாயே! கேளுங்கள்.

35. மைந்தனின் மரண கால மறைகுவோ மறுபான் மூன்றில்
தன்தனுர் மாதம் தன்னில் சட்டியில் வளர்பக் கத்தில்
இந்தவன் உடல மேகும் இயம்புவோம் இவன்பின்
[சென்மம்
மந்தரைக் கிரியின் பக்கல் வருகுவா னிக்கு லத்தில்.

35. ஜாதகனின் மரண காலம் சொல்லுவோம். அறுபத்து மூன்றும் வயதில், மார்கழி மாதம், சுக்லபட்ச சஷ்டி திதியில் இவன் மரிப்பான். இவனுடைய மறு பிறவியைப் பற்றிக் கூறுவோம். இக் குலத்திலேயே மந்தர மலைக்குப் பக்கத்தில் உள்ள ஊரில் பிறப்பான்.

36. பிறந்திடு காலம் தன்னில் புனர்பூச மிரண்டாம் பாதம்
குருதசை ஆண்டு எட்டும் கூறிய திங்கள் மூன்றும்
மருவிடும் பால னுக்கு அறைந்தனம் பூர்வ பாகம்
அறந்தனை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

36. ஜாதகன் பிறக்கும் பொழுது, புனர்பூச நக்ஷத்திரம் இரண்டாம் பாதம். குரு மகா தசையில் எட்டு வருஷங்களும், மூன்று மாதங்களும் செலவாம். இப்படியாக முதல் பாகத்தைக் கூறினேம். தர்மத்தை வளர்க்கும் எங்கள் உயிரைப் போன்ற தாயே! கேளுங்கள்.

ஜாதகம் 61

1. மதிபுதன் ரவியு மேடம் மங்களன் வீணை புக்க
விதிசாடி ஞானி வண்டி வெள்ளியு மீன மாக
அதிகயர் குருவு மானில் சென்மமும் நந்தி புக்க
இதுவிதக் கோளும் நின்ரு லியம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் புதன் சூரியன் மேஷத்திலும், செவ்வாய் மிதுனத்திலும், சனி கும்பத்திலும், கேது கடகத்திலும், சுக்கிரன் மீனத்திலும், இராகு குரு மகாத்திலும் ஆக, இங்ஙனம் கவக்கிரகங்களும் நின்று, இலக்கினம் விருஷபமாக இருந்தால் ஏற்படும் பலன்களைக் கூறுங்கள்.

சுக்கிரன்	சந்திரன் புதன் சூரியன்	லக்கினம்	செவ்வாய்
சனி	இராசி சக்கரம்		கேது
குரு இராகு			

2. அத்திரி புகலு கின்ரூர் ஆணது சென்ன மாகும்
வித்தக னுதித்த யில்லம் விளம்புவோம் வடக்கு வாசல்
சுத்தமால் கீழ்ப்பா லாகும் தூதுவன் மேல்பால் தங்கும்
உத்திரம் காளி வாசம் ஓடையும் தென்பால் தங்கும்.

2. அத்திரி முனிவர் சொல்லுகின்ரூர். ஆண்மகன் பிறப்பான். இவன் பிறந்த வீட்டைக் கூறுவோம். வடக்கு நோக்கிய வாயிலுடையது. திருமால் ஆலயம் கிழக்குப் பக்கத்தில் உளது. ஆஞ்சநேயர் கோவில் மேற்கில் இருக்கும். வடக்கில் காளிதேவி கோயில். தெற்கில் நீரோடை உண்டு.

3. இன்னமும் பலதே வாசம் இலகிய பேரூர் தன்னில்
அன்னையின் இல்ல மாகும் அருகினில் சந்து முண்டு
தன்துணை களத்ர புத்ரர் தாய்தந்தை யோகச் சேதி
முன்பின்சென் மங்கள் யாவு முரைக்கின்ரே மிந்நூல்

[தன்னில்.

3. மேலும் பல தெய்வங்கள் வாசம் செய்கின்ற பெரியதோர் ஊரில், தாய் வீட்டில் தோன்றுவான். வீட்டுக்கு அருகில் சந்து ஒன்று உண்டு. ஜாதகன் உடன்பிறந்தார், மனைவி, மக்கள், தாய்தந்தையர் ஆகியோர்களுடைய யோகங்கள், முற்பிறப்பு, மறுபிறப்புக்கள் இவை யனைத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் கூறுகின்றோம்.

4. தந்தையின் துணையாண் ஒன்று சகிதமா ரல்வா
[ரென்றோம்
பிந்திய பாகம் தன்னில் பேசுவோ மவர்கள் சேதி
எம்மையே பிதாகு ணத்தை இயம்புவோ மாம்சி வப்பன்
முந்திய கல்வி காணுன் மேவுவான் வெளிதே சத்தில்.

4. ஜாதகன் தகப்பனுருக்குச் சகோதரன் ஒருவனுண்டு. சகோதரியும் அங்ஙனமே ஒருத்தி யென்று கூறினோம். பிற்பாகத்தில் அவர்கள் செய்தியைச் சொல்லுவோம். எங்கள் தாயே! தந்தையின் குணத்தைக் கூறுவோம். கருமை கலந்த சிவப்பு நிறமுள்ளவன். உயர்ந்த கல்வியறிவில்லாதவன். அயல்நாடு செல்லுவான்.

5. சிலவேளாள் ராச மூலஞ் சீவனம் செய்வா னுகும்
இலகுவான் துணைவர் தம்மை விரயமாம் தந்தை ஆஸ்தி
சொல்மொழி யிரண்டு முண்டு செலவுகள் செய்வா னுகும்
வினையிலான் அல்ப வஸ்து நுகருவா னென்று சொல்வோம்

5. சிலகாலம் அரசர் ஆதரவினால் ஜீவனம் செய்வான். உடன்பிறந்தாரை விட்டுப் பிரிவான். தந்தையின் சொத்துக்களை விரயம் செய்வான். இருவிதமாகப் பேசுவான். மிகுதியாகச் செலவு செய்வான். கெட்ட எண்ணமில்லாதவன். அற்பமான பொருள்களை விரும்புவான் என்று கூறுவோம்.

6. பாரியால் பெருமை யேற்பன் பசித்தோருக் குதவி செய்வன்
தீரமில் லாத நெஞ்சன் சீக்கிர நடையு·மாவன்
சிறுவான் சிலவே வேளை செனபந்துக் கிணக்கஞ் செய்வன்
நேருமே நாபிச் சூடு நிமலியே கேட்டி டாயே.

6. மனைவியால் மேன்மை யடைவான். பசியென்று வந்தவர்கட்கு உபகாரம் செய்வான். தைரியமில்லாத மனத்தினன். விரைவான நடையுடையவன். சில வேளைகளில் கோபிப்பான். உறவினர்களுடன் ஒத்து வாழ்வான். இவனுக்கு நாபிச் சூட்டு நோய் உண்டாகும். தூய்மையுடைய பார்வதியே! கேட்பாயாக.

7. சொன்னவிக் குணத்தா னுக்குச் சுதனுமே யுதிப்பா னுகும்
அன்னவன் துணைமுன் காணு னணுகிடும் பின்னுல் மூன்று
கன்னிகை யொன்றே தீர்க்கங் கழறுவோ மவள்கு ணத்தை
உன்னத வார்த்தை சொல்வள் உணர்ச்சலா மாஞ்சி வப்பள்.

7. சொல்லப்பட்ட இவ்விதக் குணங்களை யுடையவனுக்கு, இந்த ஜாதகன் புதல்வனுகத் தோன்றுவான். இவனுக்கு மூத்த சகோதர் இல்லை. இவனுக்குப் பின்னுல் மூவர் தோன்றுவர். அவர்களில் சகோதரி யொருத்தியே தீர்க்கமாக விளங்குவாள். அவள் குணத்தைச் சொல்லுவோம். உயர்ந்த சொற்களைப் பேசுவாள். மெல்லிய உடலுடையவள். கருஞ் சிவப்பு நிறமுள்ளவள்.

8. வரனுமே தென்பா லாகும் மைந்தர்கள் ஆண்பால் ரெண்டு
அரிவைய ரவ்வார் தீர்க்கம் ஆளன்தன் மனம்போல்
[வாழ்வள்
பெருமையாய்க் குடும்ப மேற்பள் பொன்பணி யதிக
[முண்டு
வருவோரை யாத ரிப்பள் மாதுதன் நடக்கை நன்மை.

8. இவளுக்குத் தென் திசையிலுள்ள ஊரிலிருந்து கணவன் வாய்ப்பான். புதல்வர்கள் இருவர். பெண்கள் இருவர் தோன்றித் தீர்க்கமாக விளங்குவர். கணவனின் மனமறிந்து வாழ்க்கை நடத்துவாள். மேன்மையான குடும்பப் பொறுப்பை ஏற்பாள். பொன்னுபரணங்கள் மிகுதியாக இவளுக்குண்டு. வீடு தேடி வருபவர்களை ஆதரிப்பாள். இவள் நல்லொழுக்க முடையவள்.

9. சாதகன் குணம்நி றத்தைச் சாற்றுவோம் சிவந்த மேனி
நீதிவான் கல்வி கொஞ்சம் நிகர்தந்தை ஆஸ்தி காணுன்
சாதிப்பான் சிலவே சங்கை தாயில்லம் சிலநாள் வாசம்
சூதிலான் உணர்ச்சல் நீட்சி துரைராசர் பேட்டி கொள்வன்.

9. ஜாதகன் குணம் நிறம் இவற்றைச் சொல்லுவோம். சிவந்த உடல். நீதியாய் நடப்பவன். சிறிதே கல்வி கற்றவன். பிதுரார்ச்சித சொத்துக்கள் இல்லாதவன். சில சந்தேக விஷயங்களைத் தெளிவுபடுத்திக் கூறுவான். தன் தாயாரின் பிறந்தகத்தில் சிலகாலம் வசிப்பான். வஞ்சனை யில்லாதவன். மெலிந்து நீண்ட சரீர முடையவன். அரசர்களைப் பேட்டி காண்பான்.

10. சிலநாட்கள் ராச மூலம் சீவனம் செய்வா னுகும்
பலவிதச் செட்டுஞ் செய்வன் பாருகள் சேர்ப்பா னுகும்
விலைமாதர் மோகம் கொள்ளான் விருந்தினர் பிரிய னுகும்
புலவன்போல் மொழிவா னுகும் புண்ணியத் தலங்கள்
[செல்வன்

10. சிலகாலம் அரசாங்க உத்தியோகத்தால் பிழைப்பான். பலவிதத் தொழில்கள் செய்வான். நிலபுலன்கள் சேர்ப்பான். வேசையர் மீது மையல் கொள்ளமாட்டான். விருந்தினர்மீது அன்புடையவன். பெரிய புலவரைப் போல் பேசுவான். புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்வான்.

11. அனலினையால் யோகம் வாய்க்கும் அதிகமாய்ப் பொருள்பின்
[சேர்ப்பன்
சொன்னசொல் காப்பா னுகும் துருசான நடையு மாவன்
மன்னனுல் செட்டுச் செய்வன் மாற்றூன லகுவில் வெல்வன்
தன்கரம் உற்ற ரேகை தாய்துண பகையும் பின்னுல்.

11. இவனுக்குத் தாயினுல் அதிர்ஷ்டம் ஏற்படும். மிகுதியான செல்வத்தைப் பிற்காலத்தில் சேர்ப்பான். கூறிய வார்த்தையைக் காப்பாற்றுவான். விரைவான நடையுள்ளவன். அரசர் மூலம் பணியாற்றுவான். விரோதியை எளிதில் வெல்லுவான். கையில் ஒரு ரேகையுண்டு. தாயிடமும், உடன்பிறந்தார்களிடமும் பின்பு விரோதம் ஏற்படும்.

12. சுகைபு முடைய னுகும் இதரதே சங்கள்-வாசம்
ஆகம நுணுக்கம் தேரான் அடைந்தோரை யாத ரிப்பன்
பாகமாய்ப் பேச வல்லான் பலர்களால் பெருமை யேற்பன்
போகவா ரிதியைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

12. கொடை யுள்ளவன். அயல் நாடுகளுக்குச் செல்லுவான். வேதாந்த நூல்களின் நுட்பங்களை யுணரமாட்டான். தன்னை யடைந்தவர்களை ஆதரிப்பான். பக்குவமாய்ப் பேசுவதில் வல்லவன். பலராலும் பெருமை யடைவான். போகக் கடலான சிவபெருமானைக் கணவனை வடைந்த புண்ணியவதியே! கேட்பாயாக.

13. உதித்தவன் மணத்தின் காலம் உரைக்கின்றூம் ஐயைந்
[தாண்டில்
மதிமுக மனைவி தென்பால் மருவிடும் குணத்தைச்
[சொல்வோம்
அதிசய வார்த்தை கூர்வள் ஆளன்தன் மனம்போல்
[வாழ்வள்
துதிசெய்தோர்க் கன்ன மீவள் தோகைக்கு வயது தீர்க்கம்.

13. ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். இருபத்தைந்தாம் வயதில், சந்திரனைப்போல அழகிய முகமுள்ள மனைவி, இவனுக்குத் தென் திசையிலிருந்து வாய்ப்பாள். அவள் குணங்களைக் கூறுவோம். அதிசயத்தை யுண்டாக்கும் சொற்களைப் பேசுவாள். கணவன் மனமறிந்து நடப்பவள். புகழ்ந்தோருக்கு உணவு அளிப்பாள். இவள் தீர்க்க வயது பெற்றிருப்பாள்.

14. குறுமுனி தடுத்துச் சொல்வார் கூறினீர் தார மொன்று
மரித்திடு ரெண்டாம் மாது மருவிடும் தீர்க்க மாக
வருமாறு சொல்லு மென்ன மங்கல னிரண்டில் தங்க
[1]அருணனும் விரயம் தங்க அணுகிடும் தாரம் ரெண்டு.

14. அகத்திய முனிவர் தடுத்துச் சொல்லுவார். இவனுக்கு மனைவி ஒருத்தியே தீர்க்கம் என்று கூறினீர்கள். அவள் மரிப்பாள். இரண்டாம் மனைவி ஏற்பட்டு, தீர்க்கமாக விளங்குவாள். அதற்குக் காரணம் கூறுங்கள். செவ்வாய் இரண்டாமிடமாகிய மிதுனத்தில் தங்கியிருப்பதாலும், புதன் விரயஸ்தானமாகிய மேஷத்தில் இருப்பதாலும் இரு மனைவியர் ஏற்படுவர்.

15. இதுவன்றிப் பூர்வம் தன்னில் எய்திற்று வினைய னேகம்
அதுவினை சொல்லு மென்ன அவனுடைப் பூர்வங் கேளாய்ப்
பதியினில் உயர்வ தான பாண்டிய நாட்டி லேதான்
சதிசெயும் வைசியச் சேயாய்ச் செனித்தனன் என்று
[சொல்வோம்.

15. இது தவிர, மூற்பிறப்பில் செய்த பல தீவினைகள் இவனை யடைந்தன. அவ்வினைகளைக் கூறுங்கள். ஜாதகன் மூற்பிறப்பைக் கேட்பாயாக. உயர்ந்த பாண்டிய நாட்டில் வைசியர் குலத்தவனுகப் பிறந்தான் என்று கூறுவோம்.

16. பொங்கிய குடும்பி யாகிப் பெரிதான செட்டுச் செய்து
மங்கையு மதலை யுண்டாய் வாழ்நாளில் வினையைக்
[கேண்மோ
சங்கையா யேழை யோனும் தன்சுதன் மணங்கள் வேண்டி
மங்கல்யம் பலியுங் கேட்க வாகுமே பென்று கூற.

16. நிறைந்த குடும்ப முடையவனும், பெரிய வியாபாரம் செய்து, மனைவி மக்களை யடைந்து, வாழ்கின்ற காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஓர் ஏழை, தன் புதல்வன் திருமணத்துக்காக, இவனிடம் சென்று திருமாங்கல்யம், பொருள் இவற்றைக் கேட்க, இவனும் அங்ஙனமே கொடுப்பதாகக் கூறினன்.

---

1. புதன்.

17. அவன்சில சாமான் சேர்த்து அடுத்தநாள் முத்திரை கேட்கக்
கவனமில் லாமல் போனேன் கழறவே யேழை யோனும்
நவனியில் வேறு முத்ரை நல்கியே மண மு டித்துப்
பவ்மன முடைய னுகிப் பகருவான் சாபம் தானும்.

17. பின்பு அந்த ஏழை, தன்னுல் இயன்ற பொருள்களைச் சேகரித்துக் கொண்டு, அடுத்த நாளில் இவனிடம் சென்று, திருமாங்கல்யம் தரும்படி கேட்டான். இவன் உடனே, தாங்கள் கேட்டதை மறந்துவிட்டேன் என்றான். ஏழையும் மிக்க முயற்சியுடன் வேறு திருமாங்கல்யம் பெற்று மணத்தை முடித்தான். பின்பு மனம் வருந்தி ஒரு சாப மிடுவான்.

18. மங்களம் சொல்லி ரெண்டாய் மாங்கல்ய மிரண்டு நேரும்
சங்கையாய்ப் பின்சென் மத்தில் சக்திமார் இருவர் நேரும்
மங்கிடும் தந்தை யாஸ்தி வனவாச மாக வாழ்வான்
இங்கிவை சொல்லி யேதான் இறைத்தனன் தெருத்தூள்
[தானும்.

18. மறுபிறப்பில் இவன், இரு முறை மாங்கல்ய தாரணம் செய்யும் படி நேரும். இவனுக்கு மனைவியர் இருவர் ஏற்படுவர். தந்தையின் சொத்துக்கள் அழியும். வனவாசம் செய்வதுபோல் துன்பமடைந்து வாழ்வான் என்று இங்ஙனம் சொல்லி, தெரு மண்ணை வாரி யிறைத்தான்.

19. அதுவொரு தோட மாகும் அறைகின்றேம் வேறு ஒன்று
பதியினி லுரக னென்று பரவிற்று வெகுநா ளாகச்
சதியாக மகுடத் தாலே தணித்தது முற்றந் தன்னில்
அதிபனு மரங்கஞ் செய்து வாட்டினன் கழியி னுலே.

19. அது ஒரு தோஷமாக ஏற்பட்டது. வேறு ஒன்றும் சொல்லுகின்றேம். வீட்டில் பாம்பு ஒன்று ரீண்ட நாட்களாக வசித்து வந்தது. அஃது ஒருநாள் படமெடுத்து முற்றத்தில் ஆடியது. இவன் அதனை வருத்திக் கம்பினுல் அடித்துக் கொன்றான்.

20. அதுஒரு தோட மாகும் அணுகிற்றுப் பால னுக்கு
வருஞ்சுதர் தோட மாகி மனமது சஞ்ச லத்தால்
மறலியின் பதிக்குப் புக்கு மறையோனுல் வரையப் பட்டுப்
பிறந்தன னென்று சொல்வோம் புண்ணிய சாலி கேளாய்.

20. பாம்பைக் கொன்ற தோஷம் இவனைச் சேர்ந்தது. அதனுல் பிறக்கும் பிள்ளைகளுக்குத் தோஷ மேற்பட்டு, மனத்தில் மிக்க துன்பங்களுண்டாகி, மரண மடைந்தான். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இப் பிறப்பில் தோன்றினன் என்று கூறுவோம். புண்ணியவதியே! கேட்பாயாக.

21. முன்சென்ம வினையிச் சென்ம மேவிற்றுப் பால னுக்குத்
தன்மனை யிரண்டு மேரும் சாற்றுவீர் அதற்குச் சாந்தி
வந்தது வந்தே தீரு மறையவே மாட்டோம் யாங்கள்
எந்தக்கா லத்தில் போகும் இயம்புவீர் முனியே நீர்தாம்.

21. முற்பிறப்பில் ஏற்பட்ட தீவினை, இப்பிறப்பில் இவனையடைந்தது. இவனுக்கு இரு மனைவியர் ஏற்படுவர். அதற்குச் சாந்தி கூறுங்கள். வருவது வந்தே நீங்கும். நாங்கள் சாந்தி கூறவே மாட்டோம். எப்பொழுது இந்த ஜாதகன் முதல் மனைவி இறப்பாள். முனிவரே! தாங்கள் கூறுங்கள்.

22. வந்தவ ளாண்டுக் குள்ளே மரிப்பளாம் வேறு மாது
விந்தையா யிருபா னெட்டுள் மேவிடுங் குடகு தன்னில்
அந்தவள் குணத்தைக் கேளாய் அன்புள மனத்த ளாகும்
சிந்தையும் நல்ல தாகும் சிறப்பான குடும்ப மேற்பள்.

22. மணமாகி வந்து ஒரு வருஷத்துக்குள் முதல் மனைவி இறப்பாள். இவனது இருபத்தெட்டாம் வயதுக்குள் இரண்டாம் மனைவி மேற்குத் திசையிலிருந்து வாய்ப்பாள். அவள் குணத்தைக் கேட்பாயாக. அன்பு நிறைந்த மனத்தினள். நற்குண முடையவள். மேன்மையான குடும்பத்தை யடைவாள்.

23. வந்துபின் யோகம் வாய்க்கும் விரதங்கள் பூண்பா ளாகும்
பந்துவும் புகழ வாழ்வள் பால்பாக்ய முடைய ளாகும்
அந்தவள் தனக்குப் புத்திரர் அணுகாது அணுகில் தீதாம்
முந்தின வினையி னுலே மேவாது சுதர்கள் தாமே.

23. இவள் வந்த பிறகு ஜாதகனுக்கு யோகங்கள் ஏற்படும். சிறந்த விரதங்களை மேற்கொள்ளுவாள். உறவினர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவாள். பால் பசு பாக்கியங்க ளுள்ளவள். இவளுக்குப் புதல்வர் தோன்றார். தோன்றினும் நிலையார். முற்பிறப்புத் தீவினையினால் இப்பிறப்பில் புதல்வர் தோன்றி நிலையார்.

24. அதற்கொரு சாந்தி சொல்வோம் அரசின்கீழ் நாகம் நிற்கும்
எதுதலம் நின்ரு லும்தான் இவள்பாரி லீரேழு நாளும்
விதிபோலே பிரதிட்டை செய்து வெள்ளியின் வார நோன்பு
அதிபதி கொள்வா ளாகில் வந்திடும் சுதர்கள் தீர்க்கம்.

24. புத்திர தோஷம் நீங்க ஒரு சாந்தி சொல்லுவோம். அரசமரத்தின்கீழ் நாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஏதாவது ஒரு க்ஷேத்திரத்தில், இந்த ஜாதகன் மனைவியும், ஒரு நாகத்தின் உருவமைத்துப் பிரதிஷ்டை செய்து, பதினான்கு வெள்ளிக்கிழமை நோன்பு கொண்டால் புத்திரர் தோன்றித் தீர்க்கமாவர்.

25. சொற்படி செய்வா ளாகில் தோன்றிடு மாண்பா லொன்று
மைப்படி பெண்பால் மூன்று வறைந்தனம் தீர்க்க மாகச்
செப்புவோ மன்னே சேதி சிவந்தமெய் முன்கோ பத்தாள்
பொற்பணி சேர்ப்பா ளாகும் பூமியில் நிந்தை யேற்பள்.

25. கூறியபடி செய்வாளாஞல், ஆண் குழந்தையொன்றும், பெண் கள் மூவரும் தோன்றித் தீர்க்கமாவர் என்று சொன்னேம். இனி, ஜாதகன் தாயின் செய்தியைச் சொல்லுவோம். சிவந்த உடல். முன்கோப முடைய வள். பொன்னபாணங்களைச் சேர்ப்பாள். உலகில் பழி ஏற்பாள்.

26. தன்துணை ஆண்பால் ரெண்டு தையலர் அவ்வார் தீர்க்கம்
முன்துணை ஆண்பால் சேதி மொழிகின்றேம் சிவந்த [மெய்யன்
அன்னியர் மதிக்க வாழ்வன் அடாவடி தன்னில் செல்லான்
பின்னமில் லாத தேகி புண்ணிய மனத்த னுமே.

26. இவளுக்குச் சகோதரர் இருவரும், சகோதரிகள் இருவரும் தீர்க்க மாக விளங்குவர். இவளுக்கு மூத்த சகோதரனின் செய்தியைக் கூறுகின் றேம். சிவந்த நிறமுடையவன். அயலோர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். வீண் வம்புகளில் தலையிடான். குற்றமில்லாத உடலைப் பெற் றவன். நல்ல மன முடையவன்.

27. பாரியு மிரண்டே யாகும் பாலர்கள் காணு னுகும்
நாரியால் நிந்தை யேற்பன் நாயகன் மத்தி யத்தில்
சேருவான் கால நாடு செப்புவோ மினையோன் சேதி
மாறியே வார்த்தை சொல்வன் மனமது கபடு முண்டு.

27. இவனுக்கு மனைவியர் இருவர். புத்திரர்கள் இல்லாதவன். மனைவியால் அவமானத்தை யடைவான். இவன் மத்திய வயதில் மரண மடைவான். இவனுக்கு இளையவனின் செய்தியைக் கூறுவோம். முரண் பட்ட சொற்களைப் பேசுவான். மனத்தில் வஞ்சனை யுள்ளவன்.

28. நகையுங் கொஞ்ச முண்டு இன்பச்சொல் தனத்தி லிச்சை
ஆகம மறியா னுகும் அன்னையால் பெருமை ஏற்பன்
தோகையு மொன்றே யாகும் சுதர்களு மாண்பா லொன்று
பாகமாய்ப் பெண்பா லொன்று பகருவோம் தீர்க்க சிவி.

28. கொடைக் குணமும் சிறிதுண்டு. இனிய சொற்களைப் பேசு வான். செல்வத்தில் விருப்ப முள்ளவன். வேதாந்த நூல்களின் பொருளை யறியான். தாயினால் மேன்மை பெறுவான். மனைவி யொருத்தியே யாவள். புதல்வன் ஒருவனும் புதல்வி ஒருத்தியும் தோன்றித் தீர்க்கமாக விளங்குவர் என்று கூறுவோம்.

29. மத்தியில் யோகம் வாய்க்கும் வருந்துணை தன்னு லேதான்
சித்தமே கரப்பு முண்டு தீரமில் லாத நெஞ்சம்
பத்தினி அன்னை பூர்வம் பகருவோம் தோகை மேற்கில்
வித்தகி ரெட்டி வம்சம் விளங்கியே சுதர்க ளுண்டாய்;

29. இடைக் காலத்தில் சகோதரனால் இவனுக்கு யோகங்கள் வாய்க்கும். மனத்தில் வஞ்சனையுண்டு. தைரியமில்லாத மனமுடையவன். இனி, தாயின் முற்பிறப்பைக் கூறுவோம். தோகைமலைக்கு மேற்கில், ரெட்டியார் குலத்தில் பிறந்து, கணவனும் புதல்வர்களும் ஏற்பட்டு;

30. சுகமுள குடும்பி யாகிச் சோர்வோருக் கன்ன மீந்து
வகையான கால நாடு பாவையும் சென்று மேதான்
சகபதி வரையப் பட்டுச் செனித்தனள் கௌரி வர்க்கம்
மிகுதவம் புரியு மெங்கள் வித்தகி கேட்டி டாயே.

30. வளமுள்ள குடும்பியாகி, அடைந்தவர்கட்கு உணவளித்து, மரண மடைந்தாள். மீண்டும், உலகங்களைப் படைப்பவனுகிய பிரமனால் படைக்கப்பட்டு, கௌரீக வமிசத்தில் பிறந்தாள். மிகுதியாகத் தவங்களே யாற்றும் பார்வதியே! கேட்பாயாக.

31. பின்சென்மம் காஞ்சி தன்னில் பிறப்பளாம் சௌராட்ர
[வமிசம்
பொன்பொரு ளுடைய ளாகிப் புத்திர ரதிக முண்டாய்
அன்னவள் வாழ்வா ளாகும் அறைந்தன மொழிகுன் றாது
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

31. மறுபிறப்பு, காஞ்சீபுரத்தில், சௌராஷ்டிர வமிசத்தில் பிறப்பாள். பொன், செல்வம் முதலியன பெற்று, புத்திர பாக்கியம் மிகுதியாகப் பெற்று, வாழ்ந்திருப்பாள். கூறிய சொல் தவறாது. உத்தமமான கணவனை யடைந்த பார்வதியே! கேட்பாயாக.

32. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோங் கொங்கு
[நாட்டில்
வந்தனள் கங்கை சேயாய் மனைவிமைந் தருமுண் டாகிப்
பிந்தினோர் பொருள்க வர்ந்தான் பேசுவா ரேழை யோர்கள்
தன்தந்தை ஆஸ்தி நீங்கித் தடமது யில்லா தாகி.

32. ஜாதகன் தந்தையின் முற்பிறப்பைக் கூறுவோம். கொங்கு நாட்டில், வேளாளர் வமிசத்தில் பிறந்தான். மனைவி மக்களை யடைந்து,

ஏழைகளின் பொருளை யபகரித்தான். ஏழை மக்கள் பின்வருமாறு கூறுவார்கள். இவன், தந்தை ஆஸ்தியை இழந்து, இருப்பிடம் இல்லாதவனாய்;

33. அலைகுவா னென்று சொல்ல அணுகிற்றுப் பால னுக்கு
நிலையது இல்லா தாகி நேர்ந்தனன் கால நாடு
தலைநான்கோன் வரையப் பட்டுச் செனித்தவ னிவனே [யென்றும்
குலவிடு மேழை சாபம் கூறினைத் தந்தை யாஸ்தி.

33. அலைந்து திரிவான் என்று சொன்னார்கள், அந்தச் சாபம் இவனை யடைந்தது. நிலையில்லாமல் அலைந்து மரண மடைந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு இப்பிறப்பில் பிறந்தவன் இவன் என்று கூறினேம். ஏழையின் சாபம் இவனைப் பற்றியதால் இவன் தந்தையின் ஆஸ்தி இவனுக்குக் கிடைக்காது.

34. வனவாச மாக வாழ்வ னறைகின்றோம் பின்சென் மங்கள்
வினையிலா வள்ளூர் கீழ்ப்பால் மேவிய சிறுவூர் தன்னில்
சினமுள விக்கு லத்தில் செனிப்பனு மிவனே யென்றும்
கனமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

34. வனத்தில் வாழ்வதுபோல் துன்பத்துடன் வாழ்வான். இவன் மறு பிறப்பைக் கூறுகின்றோம். குற்றமில்லாத திருவள்ளூருக்குக் கிழக்கிலுள்ள ஓர் சிறிய ஊரில் இக்குலத்தில் பிறப்பான் இவன் என்று கூறினேம். பெருமை பொருந்திய யானைமுகக் கடவுளைப் புதல்வராக வடைந்த பார்வதியே! கேட்பாயாக.

35. ஆறுறு ஒன்று ஆண்டில் அந்தகன் பக்கல் தந்தை
சேருவா னென்று சொல்வோம் சென்றுபின் நாற்பான் [ரெண்டில்
பாரினில் அன்னை கண்டம் பகர்ந்தன மொழிகுன் றுது
தீரமாய்த் தவங்கள் செய்யும் செல்வதி கேட்டி டாயே.

35. ஜாதகனது முப்பத்தேழாம் வயதில் தந்தை மரண மடைவான் என்று சொல்லுவோம். அதற்கு பிறகு, நாற்பத்திரண்டாம் வயதில் தாயின் மரணம் ஏற்படும். கூறிய மொழிகள் தவறு. தவங்களைச் செய்யும் அம்பிகையே! கேட்பாயாக.

36. வந்தவன் யோகச் சேதி யறைகின்றோம் செனனம் தொட்டுப்
பிந்தியு மிருபா னுண்டுள் பலமுறு யோக மென்றும்
அன்னையின் துணைவர் பக்கல் அணுகியே வாழ்வா னுகும்
மன்னனுல் அதிகா ரங்கள் வந்திடு மதன்மே லாக.

36. ஜாதகனின் யோகச் செய்திகளைச் சொல்லுகின்றோம். பிறந்தது முதல் இருபது வயதுக்குள் இவனுக்குப் பலமான யோகமில்லை என்று சொன்னோம். அக்காலத்தில் தன் தாய்மாமன்மாரை அடைந்து வாழ்வான். இருபது வயதுக்குமேல் அரசாங்க உத்தியோகம் இவனுக்குக் கிடைக்கும்.

37. சிலவேளாள் சீவிப் பானும் சிறப்புறு மையைந் தாண்டும்
குலவிடு மதன்மே லாகக் கூறுவோம் செட்டுச் செய்வான்
நிலமது சேர்க்கல் உண்டு நேர்ந்திடு மரும னேதான்
கலகத்தா லுரன்றிப் பொன்னுங் கலந்திடு மென்று
[சொல்வோம்.

37. சிலகாலம் அரசாங்க உத்தியோகத்தால் ஜீவிப்பான். இருபத்தைந்து வயது முடிய இது சிறப்பாக நீடிக்கும். அதற்குமேல் சொல்லுவோம். வியாபாரம் செய்வான். வீடுகிலங்களைச் சேர்ப்பான். மறு மனைவி வாய்ப்பாள். வெண்பொற் காசுகள் மூலமாகக் கலகம் எற்படும் என்று சொல்லுவோம்.

38. எப்படிக் கலகம் சொல்வாய் இவனன்னை துணையி னாலே
செப்பினோம் பொருளால் நேரும் சிலருத விகளால் நீங்கும்
ஒப்புடன் தென்பால் வேறு உறைகுவா னிவனே யென்றோம்
தப்பித மின்றிச் செட்டுச் செய்குவான் தனமும் சேர்ப்பான்.

38. கலகம் எப்படி ஏற்படும் என்று சொல்லுவீர். ஜாதகன் தாயின் உடன்பிறந்தாரால் பொருளுக்காகக் கலகம் நேரும். சிலருடைய உதவியினால் கலகம் நீங்கும். பின்பு, தெற்குத் திசை நோக்கிச் சென்று, தனியாக வாழ்வான் இவன் என்று கூறினோம். குற்றமில்லாமல் வியாபாரங்கள் செய்வான். செல்வமும் சேர்ப்பான்.

39. அதுமுதல் பிறைபோல் யோகம் அணுகிடு மில்லம் செய்வன்
விதவித லாப மெய்தும் வித்தகி சனங்க ளாலே
உதவிக ளநேக முண்டு உரைக்கின்றோம் பின்பால் சேதி
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

39. அதற்கு பின்பு இவனுக்கு வளர்பிறைச் சந்திரன்போல் மேன் மேலும் யோகங்கள் வாய்க்கும். வெவ்வேறான இலாபங்கள் ஏற்படும். மனைவியின் பிறந்தகத்தாரால் உதவிகள் பல கிடைக்கும். மற்றச் செய்திகளைப் பிற்பாகத்தில் கூறுகின்றோம். முனிவர்களை யாதரிக்கின்ற பார்வதியே! கேட்பாயாக.

40. அறுபது ஒன்ப தாண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
திருமக னுடல மேகும் செப்புவோ மிவன்பின் சென்மம்
அருணையில் கங்கை சேயாய் அருளுவா னென்று
[சொல்வோம்
பெருவயி ரூனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

40. அறுபத்தொன்பதாம் ஆண்டில், ஐப்பசி மாதம், ஜாதகனுக்கு மரணம் ஏற்படும். மறுபிறப்பு, திருவண்ணுமலையில் வேளாளர் குலத்தவனுய்ப் பிறப்பான் என்று கூறுவோம். விநாயகரைப் புதல்வராக அடைந்த புண்ணியவதியே! கேட்பாயாக.


41. செனித்திடும் காலந் தன்னில் சிங்கதசை ஆண்டு ஐந்தும்
குனித்திடுந் திங்க ளெட்டுங் கூறுவோம் பலனே யாங்கள்
தனமது சேர்த லுண்டு தன்தேக நலியு மாகும்
வினையிலாப் பூர்வ பாகம் விளம்பினேந் தாயே யாங்கள்.

41. ஜாதகன் பிறப்புக் காலத்தில், கேது மகா தசை இருப்பு; வருஷங்கள் ஐந்தும், மாதங்கள் எட்டுமாம். அக் காலத்துப் பலனைக் கூறுவோம், நாங்கள். செல்வம் சேரும். உடலுக்குப் பிணியுண்டு. தாயே! இதுவரை நாங்கள் முதற் பாகத்தைக் கூறினேம்.

ஜாதகம் 62

1. திங்களும் மீன மாகச் செம்பொனும் ராகு தேளில்
மங்கலன் காரி பானு மாலவன் தனுசி லேறக்
கங்கைகோள் மான தாகக் காணியுஞ் சென்ன மாக
இங்கிவை கோளும் நின்றுல் இயம்புவீர் பலனைத் தானே;

1. சந்திரன் மீனத்திலும், குரு ராகு விருச்சிகத்திலும், செவ்வாய் சனி சூரியன் புதன் தனுசி லும், சுக்கிரன் மகரத்திலும் ஆக, இவ்விதம் நவக் கிரகங் களும் நின்று, இலக்கினம் விருஷபமாஞல், ஏற்படும் பலன்களைக் கூறுங்கள்;



2. சுந்தரி கேட்கும் போது செயமூனி கூறு கின்றார்
இங்கிவை ஆண்பால் சென்மம் இவன்தந்தை அன்னை
[யோகம்
தந்துணை களத்ர புத்ரர் சாதகன் முன்பின் சென்மம்
உன்னத நவக்கோ ளாய்ந்து உத்தமி கேட்டி டாயே.

2. என்று பார்வதி கேட்கும்பொழுது, செயமுனிவர் சொல்லுகின் றார். இஃது ஆண் பிறப்பு. இவனுடைய தந்தை, தாய், உடன் பிறந்தார், மனைவி, புதல்வர் ஆகியோர் யோகங்கள், ஜாதகனது முற்பிறப்பு மறு பிறப் புக்கள் முதலிய வனைத்தையும், மேன்மையான நவக் கிரகங்களையும் ஆராய்ந்து சொல்லுவோம். பார்வதியே! கேட்பாயாக.

3. தந்தையின் குணத்தைச் சொல்வோம் சமர்த்தாக வார்த்தை
[சொல்வன்
சிந்தையில் மர்மங் கொஞ்சம் சீக்கிர நடையு மாவன்
கந்தன்மேல் பக்தி பூண்பன் கட்டுவார்த் தைகள் சொல்வன்
வந்தயில் தன்னை விட்டு மறுநாடு செல்வா னுகும்.

3. தகப்பனுரின் குணத்தைக் கூறுவோம். சாமர்த்தியமாகப் பேசுவான். மனத்தில் சிறிது மர்ம முடையவன். விரைந்த நடை யுடையவன். முருகப் பிரான் மீது பக்தி கொள்ளுவான். சொற்களைக் கட்டிக் கூறுவான். பிறந்த வீடு நீங்கி வேறு நாடு செல்லுவான்.

4. அரசனுல் தொழிலும் ஏற்று அதுநீங்கி அவனுல் செட்டுத்
திருமகன் செய்வா னுகும் சித்தினி சாதி யாவன்
வருவோர்க்கு அன்ன மீவன் மருமநூல் அறிவா னுகும்
பொருளது சேர்ப்பா னுகும் பின்விர யங்கள் செய்வன்.

4. அரசன் ஆதரவினுல் உத்தியோகம் ஏற்பான். பின்பு அது நீங்கி, அரசன் ஆதரவினுலேயே வியாபாரம் செய்வான். இவன் சித்தினி சாதிப் புருஷன். வீடு தேடி வருபவர்க்கு உணவளிப்பான். வேதாந்த ரகசியங்களை யுணர்த்தும் நூல்களைக் கற்பான். செல்வஞ் சேர்ப்பான். அவற்றைப் பின்பு செலவு செய்வான்.

5. இல்லமுங் காணு னுகும் இவன்வன வாச முண்டு
தல்லிதாய்க் கிட்ட முண்டு தன்துணை யநேகம்
[தோன்றும்
நில்லாது சிலவே யென்றேரும் நிலைப்பது ஆண்பால் மூன்று
எல்லையில் வாழ்வா னுகும் இவன்வன வாசம் செய்வன்.

5. சொந்த வீடு இல்லாதவன். வனவாசம் செய்வது போன்ற துன்பம் இவனுக்கு உண்டு. தன் பாட்டி(தாயைப் பெற்றவளு)க்கு விருப்பமானவன். இவனுக்கு உடன் பிறந்தார் பலர். சிலர் நிலைத்திராமல் மடிவர் என்று சொன்னேம். நிலைத்து நிற்பவர்கள் சகோதரர் மூவரே. அளவில்லாத பொருளைப் பெற்று வாழ்வான்.

6. மாஞ்சிவப் புடையன் நீட்சி மாடுகள் விருத்தி யில்லான்
தேன்மொழி கூறு வானும் தீரனு மெவர்க்கு மஞ்சான்
காண்முக வடிவு முண்டு கரமதில் விஷ்ணு ரேகை
ரனரை நேசம் கொள்ளான் எதிரியை வசியம் கொள்வான்.

6. கருஞ் சிவப்பு நிறமுடையவன். உயர முள்ளவன். கால் நடைகள் விருத்தி இல்லாதவன். தேன் போல் இனிய வார்த்தைகளைப் பேசுவான். தைரிய முள்ளவன். ஒருவர்க்கும் பயப்பட மாட்டான். முகத்தில் வசிகர முடையவன். இவன் கையில் விஷ்ணு ரேகை யுண்டு. கீழ்மக்களை உறவாகக் கொள்ள மாட்டான். விரோதிகளை வசப்படுத்துவான்.

7. இங்நெறி யுடையா னுக்கு இவனுமே வுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் சிவந்த்
[மேனி
கன்னென மொழியே சொல்வன் கல்வியு மிரண்டு கற்பன்
பன்னியே பேச வல்லன் பார்மன்னர் பின்னுல் உய்வன்.

7. இப்படிப்பட்ட தன்மைகளே யுடைய தந்தைக்கு, இந்த ஜாதகன் பிறப்பான். அவன் குணத்தைச் சொல்லுவேன். அழகுடையவன். சிவந்த உடல். கரும்பு போல் இனிய மொழிகளைப் பேசுவான். இருவிதக் கல்வி கற்பான். பன்னிப் பன்னிப் பேசுவான். பிற்காலத்தில் அரசர்களால் ஜீவிப்பான்.

8. அதிகார மேற்பா னுகும் அடைந்தோரை யாத ரிப்பன்
பெருமையும் புகழு மேற்பன் பொய்யதை மெய்போல்
[சொல்வன்
பதியது சேர்ப்பா னுகும் பத்தினி யன்னை யாலே
சதியான தோட மெய்தும் சாற்றுவீ ரந்தச் சங்கை.

8. அதிகார முள்ள பதவிகளே ஏற்பான். தன்னை யடைந்தவர்களைக் காப்பான். பெருமையுங் கீர்த்தியு மடைவான். பொய்மொழிகளே மெய் போல் கூறுவான். வீடுகள் கட்டுவான். இவனுக்குத் தாயினுல் ஒரு தோஷ முண்டாகும். அந்தத் தோஷத்தைக் கூறுங்கள்.

9. அன்னையின் குணத்தைக் கேளாய் அழகுளாள் மாஞ்சி
[வப்பள்
தந்தமும் பெரிதாய்க் காட்டும் தன்வரன் தன்பால் வாழாள்
அன்னிய சுகத்துக் கிச்சை அதிகமாய்க் கொள்வா ளாகும்
தன்துணை ஆண்பால் ஒன்று தையலர் அவ்வார் தீர்க்கம்.

9. ஜாதகன் தாயின் குணத்தைக் கேட்பாயாக. அழகுடையவள். கருஞ் சிவப்பு நிறமுள்ளவள். பெரிய பற்க ளுடையவள். தன் கணவனு டன் வாழாதவள். பிறரால் ஏற்படும் சுகத்தை மிகுதியாக விரும்பிப் பெறு வாள். இவளுக்குச் சகோதரன் ஒருவனும், சகோதரி ஒருத்தியும் தீர்க்க மாக விருப்பர்.

10. அவர்களும் தோட முண்டு அத்திரி தடுத்துச் சொல்வார்
இவளுக்குத் தோட மெவ்வா றியம்பினீர் மதியும் லாபம்
நவனியில் குருவு மேழில் நல்கியே இருப்ப தாலே
அவமானம் நேரும் சேதி அறிவிப்பீர் முனியே நீர்தாம்.

10. அவர்களுக்கும் தோஷங்கள் உண்டாம். அத்திரி முனிவர் இடை மறித்துக் கூறுவார். இவளுக்கு எப்படித் தோஷங் கூறினீர்கள்? சந்திரன் லாப ஸ்தானமாகிய மீனத்திலும், குரு ஏழாமிட மாகிய விருச்சிகத்திலும் தங்கி யிருப்பதால், அவமானங்கள் பல ஏற்படும். அந்த விவரங்களைக் கூறுங்கள், முனிவரே! நீங்கள்.

11. நாலினுக் குடையோ னெட்டில் நல்கியே புதன்சேய் கூடிக்
கோலமா யிருப்ப தாலே கோதையும் பலவார் போகம்
சாலவே செய்வா ளாகும் தந்தைக்கு வபிமா னப்பெண்
நீலியு மாவா ளென்றும் நேர்ந்திடுங் குலத்தில் குற்றம்.

11. நான்காம் இடத்துக்குரிய சூரியன், எட்டாமிடமாகிய தனுர் ராசியில். புதன் செவ்வாய் ஆகியோருடன் சேர்ந்து தங்கி யிருப்பதால், இவள் பலவிதமான போகங்களை அனுபவிப்பாள். ஜாதகன் தந்தைக்கு அபிமானப் பெண்ணாக இருப்பாள் இவள் என்று சொன்னோம். அதனால் குலத்தில் குற்றம் உண்டாகும்.

12. காரணம் யாது என்ன காதலி பூர்வம் தன்னில்
பாரிய வினைகள் செய்தாள் பரவிற்று அந்தத் தோடம்
கூறுவீர் அந்தச் சங்கை கோதையின் பூர்வம் கேளாய்
வாரியின் ஓரம் தன்னில் மாவலி நகரி லேதான்;

12. இங்ஙனம் நேரக் காரணம் என்ன? இவள் முற் பிறப்பில் மிகுதியான தீவினைகள் செய்தாள். அந்தத் தோஷங்கள் பரவின. தீவினைகள் யாவை என்று கூறுங்கள், தாயின் முற்பிறப்பைக் கேட்பாயாக. கடற்கரை யோரமுள்ள மகாபலி புரத்தில்;

13. உதித்தனள் கங்கை சேயாய் உயர்வான குடும்பி யாகி
வதிசதி வாழும் நாளி லாலய மோர்நாள் செல்லத்
துதிசெயு மடியார் மாது தோகைமேல் நிந்தை சொன்னாள்
மதிநுதல் மாது தானும் மனமது வெட்கம் கொண்டு;

13. வேளாளர் குலத்தவளாகப் பிறந்தாள். உயர்ந்த குடும்பத்தைப் பெற்று, வாழ்ந்திருக்கும் காலத்தில், இவள் ஒருநாள் கோயிலுக்குச் சென்று, அங்கு இறைவனைப் போற்றிக் கொண்டிருந்த தேவதாசியொருத்தியைக் குறித்து, நிந்தையான சொற்களைக் கூறினாள். அவள் அவற்றைக் கேட்டு மனத்தில் வெட்கமடைந்து;

14. வேசியின் மாது யாங்கள் விபசாரம் செய்யக் கூடும்
மாசிலாக் குலத்து மாதே மறுசென்மம் மகவாய்த்
[தோன்றித்
தாசியாய் வாழ்வாய் நீயும் சாற்றியே யவளு மேதான்
நேசமாய்க் கடவுள் பாதம் நிமலியும் பணிந்து சென்றுள்.

14. வேசையர் மகளாகிய யாங்கள் விபசாரங்கள் செய்தல் கூடும். குற்ற மற்ற குலத்தில் பிறந்த பெண்ணே! நீ மறு பிறப்பில், பெண்ணாகப் பிறந்து, வேசியாக வாழ்வாய் என்று கூறிவிட்டு, கடவுளின் திருவடிகளில் அன்புடன் வணங்கி, அவள் சென்றுள்.

15. மாதுவின் சாபந் தானும் மருவிற்றுப் பாவைக் கேதான்
தீதாக வேறு ஒன்று செப்புவோம் நாத்தி போில்
சூதான நிந்தை வார்த்தை செப்பினு ளிந்த மாது
காதலி வருத்த முற்றுக் கழறுவாள் முனியே கேளும்.

15. அப் பெண்ணின் சாபம் இவளுக்கு ஏற்பட்டது. வேறு தோஷம் ஒன்றும் ஏற்பட்டது. அதனைக் கூறுவோம். இவள் தன் நாத்தி மீது, வஞ்சனையுடன் பழிச் சொற்கள் பல கூறினுள். நாத்தியும் வருத்த மடைந்து பின்வருமாறு சொல்லுவாள். முனிவரே! கேளுங்கள்.

16. பெண்பழி சொன்ன பாவி பிறக்கும்பின் சென்மந் தன்னில்
வண்ணமாய் மருவி யேதான் வருணங்கள் மிகவே
[பூண்பாய்த்
திண்ணமாய்ச் சொல்லி யேதான் தெருத்தூளை விட்டா
[ளென்றேும்
கண்ணன்தன் தங்கை யாளே கலந்தது வந்தத் தோடம்.

16. பெண்ணின் மீது அபாண்டமாகப் பழி கூறிய பாவியே! மறு பிறப்பில் மிக்க துன்பங்களை யடைவாய், என்று நிச்சயத்துடன் கூறி, தெரு மண்ணை வாரி யிறைத்தாள் என்று கூறினேும். திருமாலின் சகோதரியே! அந்தத் தோஷம் இவளைச் சேர்ந்தது.

17. அந்திய காலம் தன்னில் அவளுக்கு வாய்ப்புண் கண்டு
தென்திசைக் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
வந்தவ ளிவளே யென்றேும் மருவிற்று நாத்தி சாபம்
மூந்திய வேசி சாபம் மேவிற்று இச்சென் மத்தில்.

17. அதனால் கடைசிக் காலத்தில் வாய்ப்புண் ஏற்பட்டு, இயமனுலக மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, இப் பிறப்பில் பிறந்தவள்

இவள் என்று கூறிலேம். இவளுக்கு நாத்தியின் முன் சென்ம சாபம் ஏற் பட்டது. வேசியின் சாபமும் இப்பிறப்பில் தொடர்ந்தது.

18. [1]சித்திர மனந்த மாகச் செப்புவர் மாதைத் தானும்
வித்தகி கபடு மில்லாள் வெஞ்சின மதிக முண்டு
சத்தியற் றேருக் கன்னம் தருகுவாள் என்று சொல்வோம்
சத்திபின் சென்மஞ் சொல்வோம் தாமிர வருணி தன்னில்;

18. இவளைப் பற்றிப் பலவிதமாகப் பழி கூறுவர். இவள் கபட மில்லாதவள். கொடிய கோபம் மிகுதியாக உண்டு. கதியில்லாதவர்கட்கு உணவளிப்பாள் என்று கூறுவோம். இவள் மறு பிறப்பைக் கூறுவோம். தாமிர வருணியாற்றுப் பக்கத்தில் உள்ளதோர் ஊரில் ;

19. உதிப்பளா மிந்த மாது உயர்வான சைவச் சேயாய்
மதித்திடக் குடும்பி யாகி வாழ்குவா ளிந்த மாது
இதுசென்மம் செய்த புண்யம் இயம்புவீர் முனியே நீர்தாம்
நிதியற்றோர்க் கன்ன மீந்து நெஞ்சது இரக்க மாயும்;

19. உயர்ந்த சைவ குலத்தவளாகி, பலரும் மதிக்கும்படியான குடும்ப முடையவளாய் வாழ்வாள் இவள். இப் பிறப்பில் இவள் செய்த புண்ணியங் கள் யாவை என்று கூறுங்கள், முனிவீரே! நீங்கள். செல்வ மில்லாத ஏழைகட்கு உணவளித்தும், மனத்தில் இரக்கம் கொண்டும் ;

20. மனமது கபடு மின்றி மாதுவும் வாழ்வ தாலே
கனமுள சைவச் சேயாய்க் கலப்பளா மிந்த மாது
சினமிலா விருபா னேழில் தேள்மாத மன்னை கண்டம்
வினையிலாத் தவங்கள் செய்யும் வித்தகி கேட்டி டாயே.

20. மனத்தில் வஞ்சனை யில்லாமலும் இவள் வாழ்ந்து வருவதால் மறு பிறப்பில் பெருமை பெற்ற சைவ குலத்தவளாகப் பிறப்பாள் இவள். ஜாதகனது இருபத்தேழாம் வயதில், கார்த்திகை மாதம், தாயாருக்கு மரணம் ஏற்படும். குற்றமில்லாத தவங்களைப் புரியும் பார்வதியே! கேட்பாயாக.

21. சாதகன் துணைவர் தம்மைச் சாற்றவே முன்ஆண் ஒன்று
ஓதுவேன் அவன்கு ணத்தை உணைச்சலாம் மாஞ்சி வப்பன்
சூதிலான் கல்வி ரெண்டு துரைராசர் பேட்டி கொள்வன்
பாதக மனமில் லாதான் பரஉப காரி யாவன்.

21. ஜாதகன் உடன் பிறந்தாரைப் பற்றிக் கூறுவோம். இவனுக்கு மூத்த சகோதரன் ஒருவன். அவன் குணத்தைச் சொல்லுவேன். மெல்

1. பழிகள்

லிய உடலுடையவன். கருஞ் சிவப்பு நிற முள்ளவன், வஞ்சனை யில்லாத வன். இருவிதக் கல்வி கற்பான். அரசர்களைப் பேட்டி காண்பான். கெட்ட எண்ண மில்லாதவன். பிறருக்கு உபகாரம் செய்வான்.

22. மன்னனு லுய்வா னுகும் வருவோரை யாத ரிப்பன்
பொன்முத்து பணிகள் சேர்ப்பன் புகழ்ந்தோரை யாத
[ரிப்பன்
அன்னியர் மதிக்க வாழ்வன் அநேகபாக் கியமும் சேர்ப்பன்
முன்கோப முடைய னுகும் மேவிடுந் தாரம் ரெண்டு.

22. அரசனைச் சார்ந்து பிழைப்பான். வீடு தேடி வருபவர்களை ஆத ரிப்பான். பொன், முத்து, ஆபரணங்கள் இவற்றைச் சேர்ப்பான். தன் னைப் புகழ்ந்தவர்களைக் காப்பான். அயலார் மதிக்கும்படி வாழ்க்கை நடத் துவான். மிகுதியான செல்வங்களைச் சேர்ப்பான். முன் கோப முடைய வன். இவனுக்கு மனைவியர் இருவர்.

23. இருமுத்ரை யணுகா தாகும் எய்திடு மபிமான மொன்று
பெறுஞ்சுத ராண்பால் ரெண்டு பேதையு மவ்வார் தீர்க்கம்
திருமக னிவனே டொத்துச் சிலவேளாள் வாழ்வா னுகும்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

23. இவன் இரு மனைவியர்க்குத் திருமாங்கல்யம் அணிவிக்க மாட் டான். அபிமானப் பெண் ஒருத்தி ஏற்படுவாள். இவனுக்கு இரண்டு புதல்வர் களும், இரண்டு பெண்களும் பிறந்து தீர்க்கமாவர். புதல்வர்கள் இவனோடு சில காலம் சேர்ந்து வசிப்பார்கள். யானைமுகக் கடவுளைப் பெற்ற பார்வ தியே! கேட்பாயாக.

24. பின்துணை பெண்பால் ஒன்று பேசுவோம் பால னுக்கு
இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோ மீரெட்
[டாண்டில்
கன்னிகை யன்னை வர்க்கம் கலப்பளாங் குணத்தைச்
[சொல்வேன்
அன்னம்போல் சாய லொக்கும் ஆளனுக் கேற்ற மாது.

24. ஜாதகனுக்குப் பின் பிறந்த பெண்ணொருத்தி யுண்டு. இனி, ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். பதினாறும் வயதில், தாய் வர்க்கத்தைச் சேர்ந்த பெண் மனைவியாக வாய்ப்பாள். அவள் குணத்தைக் கூறுவேன். அன்னம் போன்ற சாயலுடையவள். கணவனுக்குப் பொருத்த மானவள்.

25. சுத்தமு மறத்தி லிச்சை சுந்தரி வயது தீர்க்கம்
அத்திரி தடுத்துச் சொல்வார் [1]அரவுமே ஏழில் தங்கப்
பத்தினி யிரண்டு நேரும் பாவையர் தீர்க்க மோசொல்
வித்தகி மார்கள் ரெண்டும் விளம்பிலேம் தீர்க்க மாக.

25. தூய்மை யுடையவள். தருமத்தில் விருப்பங் கொண்டவள். தீர்க்கமான வயதுடையவள். அத்திரி முனிவர் தடுத்துக் கூறுவார். இராகு, களத்ர ஸ்தான மாகிய ஏழாமிடத்தில் தங்கி யிருப்பதால், இவனுக்கு இரு மனைவியர் ஏற்படுவர். அவர்கள் இருவரும் தீர்க்க மாவார்களோ? கூறுங்கள். மனைவியர் இருவரும் தீர்க்கமுற விளங்குவர் என்று கூறினேம்.

26. முதல்மனை தீர்க்க மாக மறுபாரி யணுகுஞ் சேதி
விதங்களைச் சொல்லு மென்ன விளம்புவோங் தாயே கேளும்
சுதர்களுங் காண வகிச் செய்குவான் வேறு பாரி
அதுவெந்தக் காலம் நேரு மாறாறு ஆண்டில் நேரும்.

26. முதல் மனைவி தீர்க்கமுடன் வாழும்போது, மறு மனைவி வாய்ப் பதற்குக் காரணங் கூறுங்கள். கூறுவோம், தாயே! கேளுங்கள். புதல்வர் கள் இல்லாத காரணத்தால் வேறு ஒருத்தியை மணப்பான். அஃது எப்பொ ழுது கடைபெறும்? மூப்பத்தாரும் வயதில் மறுமணம் கடைபெறும்.

27. புத்திரர் ஆண்பால் ரெண்டு பெண்ணது வொன்றே தீர்க்கம்
வித்தகன் பூர்வம் சொல்வேன் [1]வேதத்தோன் பூசை
[செய்யும்
சித்தமாய்ப் பட்சி தன்னில் செனித்தனன் வைசியச்
[சேயாய்ப்
பத்தினி மதலை யுண்டாய்ப் பாரினில் வணிபம் செய்து;

27. புதல்வர்கள் இருவரும், புதல்வி யொருத்தியும் தோன்றித் தீர்க்க மாக விளங்குவர். ஜாதகன் முற் பிறப்பைக் கூறுவேன். பிரமன் பூசிக் கின்ற திருக்கழுக்குன்றத்தில், வைசிய குலத்தவளுகப் பிறந்தான். மனைவி மக்களை யடைந்து, உலகில் வியாபாரங்கள் செய்து;

28. தனமது பெருக்க மாகித் தரணியில் வாழு நாளில்
வினையதைப் புகலக் கேண்மோ வேளாள்ன் நேச மாகச்
சினமிலா வாழ்ந்தா னென்றேங் தேவியு மிவன்மேல் மோகம்
அனையவே காதல் கொண்டு அறைந்தனள் சிலேடை
[வார்த்தை.

---

1. பிரமன்

28. செல்வம் மிகுந்து, வாழுகின்ற காலத்தில் எற்பட்ட தீவினையைக் கேளுங்கள். வேளாள ஞருவன் இவனிடம் நட்புக் கொண்டு, அன்புடன் வாழ்ந்து வந்தான். அவன் மனைவி, இவன் மீது ஆசை கொண்டு, இவனைச் சேர்வதற்காகக் காதல் மொழிகளை இரு பொருள் படக் கூறினாள்.

29. மடமயி லாளே கேளாய் வார்த்தையை விலக்கு நீயும்
உடலுயி ரொத்த நேசன் உன்வர னிதைய றிந்தால்
விடம்போலப் பகையு மெய்தும் வெறுத்திடு வந்த வார்த்தை
அடைவுடன் சாந்தஞ் சொல்ல அம்மாது மனமும் வெட்கி

29. அதனை யுணர்ந்த இவன், அவளை நோக்கி, பெண்ணே! நீ பேசுவதை நிறுத்து. நீ என் உயிர் போன்ற நண்பன் மனைவி. உன் கணவன் இதனை யறிந்தால், கொடிய விஷம் போன்ற விரோதம் எங்களுக்கிடையில் ஏற்படும். அந்த வார்த்தையை விட்டுவிடு, என்று அவளுக்குச் சமாதானங் கூறினான். அவள் இவன் கூறிய சொற்களைக் கேட்டு வெட்கமடைந்து,

30. மற்றொரு சென்மந் தன்னில் மறுபாரி யாவே னென்று
சுத்தமாய்ச் சலத்தில் வீழ்ந்து தோகையு மாண்டா
[ளென்றும்
குத்தமா யந்தத் தோடங் குலவிற்றுப் பால னுக்கு
வித்தகன் கணக்கில் மோசம் விளம்பினு னேழை யோர்க்கு.

30. மறு பிறப்பில் உனக்கு இரண்டாம் மனைவியாக வருவேன் என்று கூறி, நீரில் விழுந்து அவள் மரண மடைந்தாள் என்று கூறினேம். அந்தத் தோஷம் இவனை யடைந்தது. இது தவிர, அதிகப் பணம் கொடுத்ததாகக் கணக்கில் எழுதி, ஏழைகளை ஏமாற்றினான்.

31. ஏழைகள் மனவெ றுப்பால் இயம்புவார் சாபந் தானும்
தாமுறு மன்னை யாலே தன்குலக் குற்ற மாகும்
பாழாகு மில்லந் தானும் பரதேசம் தன்னில் தோன்றும்
ஆழியி லவ்வார் சொல்ல வணுகிற்று அந்தத் தோடம்.

31. ஏமாற்ற மடைந்த ஏழைகள், மன வெறுப்புடன் சாப மிடுவார்கள். உன் தாயினால் குற்ற மேற்பட்டு, உன்னுடைய குலம் தாழ்வடையும்; வீடு பாழாகும்; நீயும் வேறு நாடு செல்லுவாய்; என்று இவ்விதமாகக் கூறவே அந்தத் தோஷமும் இவனைச் சேர்ந்தது.

32. மைந்தனு மந்தி யத்தில் மலர்வனம் சோலை வைத்துக்
கந்தன்தன் தொண்டு பூண்டு காலன்தன் பதிக்குச் சென்று
முந்திய பிரமன் லக்கம் மேதினில் வரையப் பட்டு
விந்தையாய் மலாய்த்தே சத்தில் மேவுவா னிவனே
[யென்றும்

32. அந்திய காலத்தில் பூஞ்சோலைகள் வைத்து, முருகப் பிரானுக்குத் தொண்டு செய்து, மரண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு மலாய் நாட்டில் பிறப்பான் இவன் என்று சொன்னோம்.

33. இவனுடை யோகச் சேதி இயம்புவோம் பேரி யோகம்
தவறியே தர்ம கர்ம யோகமுஞ் சாற்ற லாகும்
அவனிகள் சேர்ப்பா னுகும் அரசர்பூ சிதமு மெய்தும்
நவனியில் புகழு மேற்பன் நாட்டினில் நல்லோ னுவன்.

33. ஜாதகன் யோகங்களைப் பற்றிக் கூறுகின்றோம். பேரிகை யோகம், தர்ம கர்மாதிபதியான சனியால் ஏற்படும் யோகம் ஒன்று ஆகிய இரண்டும் ஏற்படும். வீண் நிலங்களைச் சேர்ப்பான். அரசர்களால் பூசனையும் பெறுவான். உலகில் கீர்த்தி யடைவான். நல்லவனுவன்.

34. பலருக்கு மிவன்சொல் மேன்மை பரிவண்டி யுடைய னுகும்
தலமதில் சித்திரம் செய்வன் தன்மனை வந்த பின்பு
நிலவுபோல் யோகம் வாய்க்கும் நேமிகள் பணிகள்
[பொன்னும்
குலவும்பதி னுயி ரம்பொன் கூறுவோம் பால னுக்கு.

34. எல்லோருக்கும் இவன் சொற்கள் மேன்மை யுடையனவா யிருக்கும். குதிரை, வண்டிகள் இவற்றை யுடைய னுவான். வீட்டைச் சித்திரங்களால் அலங்கரிப்பான். இவன் மனைவி வந்த பின்பு, வளர் பிறைச் சந்திரன் போல் யோகங்கள் வாய்க்கும். வீண் நிலங்கள், பொன், ஆபரணங்கள், பத்தாயிரம் வெண் பொற்காசுகள் முதலியன ஜாதகனுக்குச் சேரும் என்று சொல்லுவோம்.

35. அன்பது ஆண்டு மட்டும் அரசுமே செய்வா னுகும்
துன்பங்க ளிதற்குள் ளாகத் தோன்றுதோ விபரம்
[சொல்வீர்
பொன்னவ னேழில் நிற்கப் பிழையது நேரா தாகும்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

35. ஐம்பது வயது வரை அரசனைப் போல் சிறப்பான தொழில் செய்து வாழ்வான். இதற்குள்ளாக இவனுக்குத் துன்பங்கள் எவையும் நேராவோ? விவரத்தைக் கூறுங்கள். குரு விருச்சிகத்தில் தங்கி யிருப்பதால் குற்றமெவையும் நேரா. உத்தமமான கணவனைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

36. இருபது மூன்று ஆண்டில் இல்லமுஞ் சொந்தம் நேரும்
தருவுண்டு விசேட பூமி சதுஷ்பாதம் விருத்தி யாகும்
பெருடுஞ் செல்வ மேலாய்ப் பேசின மொழிதன் ரூது
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

36. இருபத்து மூன்றும் வயதில் சொந்த வீடு ஏற்படும். பயனுள்ள மரங்கள், விசேடமான நிலபுலன்கள், கால்நடைகள் இவை விருத்தியாம். செல்வம் மேன்மையாக உயரும். கூறிய சொற்கள் தவறு. வேத முடிவில் விளங்குகின்ற பார்வதியே! கேட்பாயாக.

37. தந்தையின் பூர்வந் தன்னைச் சாற்றுவோம் பரங்குன்
[றத்தில்
வந்தன னிக்கு லத்தில் மனைவிமைந் தருமுண் டாகி
விந்தையாய்க் கிருஷி செய்து வாழுநாள் வினையைக்
[கேண்மோ
பிந்திய வேழை மாது போகமே துய்த்து யின்னேன்.

37. ஜாதகன் தந்தையின் முற் பிறப்பைக் கூறுவோம். திருப்பரங் குன்றத்தில், இக் குலத்தில் பிறந்தான். மனைவி மக்களை யடைந்து, விவசாயம் புரிந்து வாழ்கின்ற காலத்தில், ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். பிற் பட்ட குலத்தைச் சேர்ந்த கதியற்ற வொரு பெண்ணுடன் இவன் இன்ப மனுபவித்து வந்ததை;

38. பந்துவு மதைய றிந்து பாவையை விலக்கும் போது
சிந்தையுங் கலக்க மாகத் தேவியு மிவன்பால் சென்று
உந்தனின் மதியால் கெட்டேன் ஊரெலாம் வசையு
[மானேன்
எந்தனைக் காப்பா யென்ன என்பாரி பொல்லாள் செல்வாய்.

38. அவள் உறவினர் உணர்ந்து, அவளை விலக்கத் துணிந்தனர். அவள் கலக்க மடைந்து, இவனிடம் போய், உன்னால் நான் கெட்டு விட் டேன்; ஊரார் ஆனைவரும் கூறும் வசைக்கு ஆளானேன்; என்னைக் காப்பா யாக என்று கேட்டாள். இவன் அதற்கு, என் மனைவி கொடியவள்; நீ என்னிடம் வரத் தகாது; சென்றுவிடு என்றான்.

39. கன்னிகை வருத்த முற்றுக் கழறுவாள் சாபம் தானும்
பின்வரும் சென்மம் தன்னில் பரதேசம் இடையில் சென்று
மன்னனால் அரசு செய்து மலிதீபம் போல லிந்து
அன்னிய மாது வாலே அதிசய மிகவே காண்பாய்.

39. அந்த ஏழைப் பெண் மிக்க வருத்த மடைந்து, ஒரு சாபங் கூறினாள். மறு பிறவியில் அந்திய தேசத்துக்கு இடைக் காலத்தில் சென்று, அரசன் ஆதரவினால் மேன்மையுள்ள தொழில் புரிந்து, மலை மீது வைக்கப் பட்டுள்ள விளக்குப் போல் அலைந்து, அயலா ளொருத்தியினால் ஆச்சரிய மான துன்பங்கள் பல அடைவாய்.

40. தனமது அதிகம் சேர்த்துச் சல்லிய பாதை யாயும்
இனமது பகையு மாகி இருடிபோல் வாழ்வா யென்று
பிணையாகச் சொல்லிச் சென்றாள் மேவிற்று வந்தத் தோடம்
தனயனு மந்தி யத்தில் தன்மனை யில்லா னாகி;

40. மேலும், பொருளை மிகவும் சேர்த்து, பின்பு கடன் தொல்லைகளும் உண்டாகி, உறவினர்கள் பகை ஏற்பட்டு, காட்டில் வசிக்கும் முனிவரைப் போல வாழ்வாய் என்று சொல்லிச் சென்றாள். அந்தத் தோஷம் இவனை யடைந்தது. இவனும் தனது கடை காளில் மனைவி யில்லாதவனாகி,

41. சங்கையாய்க் கால நாடு சேர்ந்துமே பிரமன் லக்கம்
சிங்கள நாட்டி லேதான் செனிப்பனு மிவனே யென்றும்
மங்கையின் சாபம் போலே மருவிடு மிச்சென் மத்தில்
எங்கள்போல் சிலநாள் வாழ்வன் ஈச்வரி கேட்டி டாயே.

41. துன்பத்துடன் மரண மடைந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, ஈழ நாட்டில் பிறப்பான் இவன் என்று கூறினோம். ஏழைப் பெண் ணின் சாபம் ஏற்பட்டதால், இப் பிறவியில் சிலகாலம் முனிவர்களாகிய எங்களைப் போல் வனவாசம் செய்வான். பார்வதியே! கேட்பாயாக.

42. இருபது நாலு ஆண்டில் இசைவீணை[1] மாதம் தன்னில்
உறைகுவான் கால நாடு உதித்தவன் கருமம் செய்யான்
பெரு[2]மழைக் கோளின் காலம் பணிபுக்தி நடக்கு
[மென்றும்
அறைகுவோம் இவன்பின் சென்மம் [3]அரனடிப் பாதம்
[தன்னில்;

42. ஜாதகனின் இருபத்து நான்காம் வயதில், ஆனி மாதம் தந்தை இயமனுலக மடைவான். இந்த ஜாதகன் இவனுக்கு இறுதிக் கடன்கள் செய்ய மாட்டான். அப்பொழுது சுக்கிர மகா தசையில் ராகு

---

1. ஆனி
2. சுக்கிரன்
3. திருவண்ணாமலை

புத்தி நடைபெறும் என்று சொன்னேம். தந்தையின் மறு பிறப்பைக் கூறுவோம். திருவண்ணுமலையில் ;

43. பிறப்பனு மிக்கு லத்தில் புத்திரன் தனக்குக் கேளாய்
அறுபது ஆறு ஆண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
நிறைபக்கம் சட்டி தன்னில் நீங்கிடும் உடல மென்றேரும்
மறுசென்மம் சேது தன்னில் மறைக்குல முதிப்பா னுகும்

43. இக் குலத்தில் பிறப்பான். ஜாதகனுக்கு மரண காலத்தைக் கூறுவோம். கேட்பாயாக. அறுபத்தாரும் வயதில், ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் சஷ்டி திதியில் மரண மடைவான் என்று சொன்னேம். மறு பிறவி சேதுவில் அந்தணர் குலத்தவனுகப் பிறப்பான்.

44. காவலன் செனிக்கும் காலம் கடைநாளில் மூன்றும் பாதம்
மால்திசை ஆண்டு ஏழு வறைகின்றேரும் பலனை யாங்கள்
ஏலவே தான பேதம் எய்திடும் சல்லிய பாதை
கோலமாம் தொழிலு மேதான் குறைமனம் தந்தைக்
[கேதான்.

44. ஜாதகன் பிறப்புக் காலம், இரேவதி நட்சத்திரம் மூன்றும் பாதமாம். அப்பொழுது புத மகா தசையில் இருப்பு ; ஏழு வருஷங்கள், என்று சொல்லுகின்றேரும். அக்காலத்தில் இடமாற்றம், கடன் தொல்லைகள், சிறந்த தொழில், தந்தைக்கு மனத்தில் கவலை முதலியன ஏற்படும்.

45. இடம்தொழில் நிலையா தாகும் எய்திடும் செலவ நேகம்
உடன்துணை தோன்று மென்றேரும் உதித்தவன் தனக்கு
[ரோகம்
விடமனம் சபல புத்தி விளம்புவோம் சித்தி ரங்கள்
தடவரை மகளே யாங்கள் சாற்றினேம் பூர்வ பாகம்.

45. செய்யும் தொழிலும், இருப்பிடமும் நிலையா. செலவுகள் மிகுதியாம். சகோதரர் தோன்றுவர் என்று கூறினேம். ஜாதகனுக்கு வியாதி உண்டாகும். மனத்தில் கொடிய எண்ணம் தோன்றும். சபல புத்தியுண்டு. பழிகள் ஏற்படும். மலையரசன் புதல்வியே ! இங்ஙனம் நாங்கள் முதல் பாகத்தைக் கூறினேம்.

ஜாதகம் 63

1. நந்தியும் சென்ன மாக ரவிபுகர் ராகு சியம்
புந்தியும் வண்டி யாகப் பூமகன் கோல தாகச்
சந்திரன் மான தாகச் சனிவீணை கேது சாடி
இந்தவார் கோள்கள் நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. விருஷபம் லக்கினமாகி, சூரியன் சுக்கிரன் ராகு சிம்மத்திலும், புதன் கடகத்திலும், செவ்வாய் துலாத்திலும், சந்திரன் மகாத்திலும், சனி மிதுனத்திலும், கேது கும்பத்திலுமாக இவ்விதம் நவக்கிரகங்களும் நின்ரூல் ஏற்படும் பலன்களைக் கூறுங்கள்:

		லக்கினம்	சனி
கேது	இராசி சக்கரம்		புதன்
சந்திரன்			சூரியன் சுக்கிரன் ராகு
		செவ்வாய்	

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்ரூர்
மேதினில் ஆண்பால் சென்மம் விளம்புவோம் தந்தை
[யில்லம்
நீதியாய்க் கீழ்மேல் வீதி நிகர்உத்ரம் வாடை யாகும்
போதக வாணை கீழ்ப்பால் பொருந்திடும் வடகீழ் ஈசன்.

2. என்ரு பார்வதிதேவி கேட்கும்போது, விசுவாமித்திர முனிவர் சொல்லுகின்ரூர். இஃது ஆண் பிறப்பு. இவன் பிறந்த தந்தையின் வீட்டைக் கூறுவோம். கிழக்கு மேற்கு வீதியில், வடக்கு வரிசையில் உள்ள வீடாகும். யானைமுகக் கடவுள் கிழக்கில் எழுந்தருளி யிருக்கின்ரூர். வட கிழக்கில் சிவபெருமான் கோயில் கொண்டுள்ளார்.

3. சிங்கவா கனத்தாள் தெற்கில் சதிபாஞ்சாலி யருகில்
[தங்கும்
பங்கய வாவி யுண்டு பகருவோம் மேற்கில் மாரி
தங்கிடும் ஓடை யுண்டு சாருமிவ் வடையா ளத்துள்
மங்கையே சிற்ரூர் தன்னில் வருகுவான் கங்கை சேயாய்.

3. சிங்க வாகனத்தையுடைய துர்க்கையின் ஆலயம் தெற்கிலுள்ளது. திரௌபதியம்மன் கோயில் அதற்குப் பக்கத்தில் உள்ளது. தாமரை மலர்கள் நிறைந்த தடாகம் ஒன்று அங்கு உண்டு. சொல்லப்பட்ட இவ்வடையாளங்கள் கொண்ட சிறிய ஊரில் ஜாதகன் வேளாளர் குலப் புதல்வனாக,

4. உதிப்பனு மிரண்டாஞ் சென்மம் உரைக்கின்றே மிவனின் [யோகம்
மதித்திட வன்னி யோகம் அவன்தந்தை துணைவர் யோகம்
சதியிலா களத்ர புத்ரர் சாதகன் முன்பின் சென்மம்
விதிக்கின்றே மிந்நூல் தன்னில் வித்தகி கேட்டி டாயே.

4. இவன் தந்தைக்கு இரண்டாம் பிறப்பாகப் பிறப்பான். இவனுடைய யோகங்கள், தாய், தந்தையர், உடன்பிறந்தார், மனைவி, புத்திரர் முதலானவரின் யோகங்கள், ஜாதகன் முற்பிறப்பு, மறுபிறப்புக்கள் இவையனைத்தையும் இந்நூலில் கூறுகின்றேம். பார்வதியே! கேட்பாயாக.

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோ மாண்பால் [காணும்
வந்திடும் கன்னி நான்கு வறைந்தன மிவனுக் கேதான்
எம்மையே தந்தை சேதி இயம்புவோ மினிமே லாகச்
சந்ததம் வாத தேகி தானவ னிருநி றத்தான்.

5. தகப்பனாருடன் பிறந்தவர்களைப் பற்றிக் கூறுவோம். ஆண்கள் எவருமிலர். இவனுடன் பிறந்த பெண்கள் நால்வர் உளர் என்று சொன்னோம். இனி, தந்தையின் செய்தியைச் சொல்லுவோம். வாத சரீரமுடையவன். கரிய நிறமுள்ளவன்.

6. பாக்கிய முடைய னுகும் பரஉப காரி னுவன்
வாக்குகள் தவரு னுகும் மருமமில் லாதா னுகும்
தாக்கிய துணைவர் தம்மால் தானவன் பெருமை பூண்பன்
யோக்கிய னுகி வாழ்வன் உத்தமர் நேசம் கொள்வன்.

6. பாக்கியங்க ளுள்ளவன். பிறருக்கு உபகாரம் செய்வான். சொன்ன சொற்கள் தவறுதவன். மனத்தில் மறைவில்லாதவன். தன்னுடன் பிறந்தாரால் மேன்மை பெறுவான். யோக்கியனுக வாழ்க்கை நடத்துவான். நல்லோர் நட்பைக் கொள்ளுவான்.

7. பூமியும் பரிபா லிப்பான் புகழுளான் அன்ன மீவன்
தாமத குணத்தி னுகும் சதுஷ்பாதம் விருத்தி செய்வன்
தீனமாய் விரும்பா னுகும் செய்ந்நன்றி மறவா னுகும்
சாமிமேல் பக்தி பூண்பன் தானிய முடைய னுமே.

7. பூமியைக் காப்பான். ஏழைகட்கு உணவளிப்பான். தாமத குணமுள்ளவன். கால் நடைகளை விருத்தி செய்வான். கெட்ட செயலைச் செய்ய ஆசைப் படாதவன். ஒருவர் செய்த உதவியை மறவாதவன். கடவுள் பக்தி கொள்ளுவான். தானிய சம்பத்துப் பெற்றவன்.

8. பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் விருத்தி செய்வன்
வண்டிவா கனமு முள்ளாள் மாநில நல்லோ னுவன்
தண்டமி முடைய னுகும் தன்கரம் பத்ம ரேகை
குண்டுணி கலகம் கூறுன் குலத்துளோர் மெச்ச வாழ்வன்.

8. முன்னோர் காலத்திய வீடுகளை இவன் விருத்தி செய்வான். வண்டி முதலிய வாகன வசதிகளுடையவன். உலகத்தில் நல்லவனாக வாழ்வான். குளிர்ந்த தமிழ் மொழிப் பயிற்சி யுடையவன். இவன் கையில் பத்ம ரேகை யுண்டு. கோள் சொல்லமாட்டான். கலகம் செய்யாதவன். தன் குலத்தவர் மதிக்கும்படி வாழ்க்கை நடத்துவான்.

9. இக்குண முடையா னுக்கு இவனுமே உதிப்பா னுகும்
மிக்கவே வுதிப்பா னுகும் விளம்புவோ மிவன்கு ணத்தை
நக்கன்மேல் பக்தி யுள்ளான் நற்கல்வி யூகை சாலி
பக்குவ மான வார்த்தை பகருவான் இவனே யென்றும்.

9. இவ்விதக் குணங்களை யுடையவனுக்கு இந்த ஜாதகன் புதல்வனாகப் பிறப்பான். ஜாதகன் குணத்தைச் சொல்லுவோம். சிவபெருமான் மீது பக்தி யுள்ளவன். நல்ல கல்வி யறிவுடையவன். ஊகித்துணரும் ஆற்றல் பெற்றவன். பக்குவமாகப் பேசுவான் இவன் என்று சொன்னேம்.

10. நந்தியா வுடைய னுகும் நற்புத்தி யீகை யுள்ளான்
தந்தையின் ஆர்ச்சி தத்தைத் தாவன் விருத்தி செய்வன்
முந்திய செட்டுச் செய்வன் முயற்சியாய்க் குடும்பி யாவன்
வந்தவர்க் கன்ன மீவன் மர்மமு முடைய னுமே.

10. காளைகள், பசுக்கள் மிகுதியாக வுடையவன். நல்ல புத்தியுள்ளவன். கொடையாளி. தகப்பனாரால் தேடி வைக்கப்பட்ட ஆஸ்தியை மேலும் விருத்தியடையச் செய்வான். வியாபாரம் செய்வான். தன் முயற்சியால் சிறந்த குடும்ப முடையவனாக ஆவான். வீடு தேடி வந்தவர்க்கு உணவளிப்பான். இரகசிய முடையவன்.

11. சிவந்திடு மேனி யாவன் திருமகள் வாச முள்ளான்
அவனியோர்க் குதவி செய்வன் அற்பரை யுறவு கொள்ளான்
இவன்கரம விஷ்ணு ரேகை யிகபர னன்பு பூண்பன்
நவனியில் நல்லோ னுவன் நாயகி மேலுங் கேளை,

11. சிவந்த உடலுடையவன். இலட்சுமீ கடாட்ச முள்ளவன். உலகினருக்கு உதவி செய்வான். கீழ் மக்கள் உறவைக் கொள்ளமாட்டான். இவன் கையில் விஷ்ணு ரேகை பொருந்தி யுள்ளது. இம்மை மறுமைப் பயன்களை யளிக்கும் கடவுள் மீது பக்தி கொள்ளுவான். உலகில் நல்லவனாக வாழ்வான். தலைவியே! மேலுங் கேள்.

12. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோம் நான்க தாகும்
நவனியில் ஆண்பா லொன்று நாயகி மூன்று மாகும்
அவனியில் ஆண்பா லுந்தான் அறைகின்றேம் மிளையோ
[ரைக
பவமுள கடகம் சிம்மம் பகருவோம் அவன்கு ணத்தை.

12. இவனுடன் பிறந்தவர்களைக் கூறுவோம். அவர்கள் நால்வர். சகோதரன் ஒருவனும், சகோதரிகள் மூவரு மாவர். சகோதரன் இவனுக்கு இளையவன் என்று கூறுகின்றோம். கடக லக்னம்; சிம்ம ராசியில் பிறந்த அவனது குணத்தைக் கூறுவோம்.

13. நல்லோர்க்கு நல்ல னுவன் லண்டர்க்கு மிண்ட னுவன்
அல்லல்க ளணுகா னுகும் அற்பரை உறவு கொள்ளான்
இல்லையென் றுரைக்க மாட்டா னீகைவான் கல்வி மானும்
சொல்லது இரண்டு முள்ளான் சுகமுளான் வறுமை
[யில்லான்

13. நல்லவர்க்கு நல்லவன். கெட்டவர்க்குத் துஷ்டன். துன்பங்கள் எவையும் அணுகாமல் விழிப்புட னிருப்பான். கீழ் மக்களை நட்பாகக் கொள்ள மாட்டான். கேட்டவர்க்கு இல்லையென்று சொல்லான். கொடையாளி. படிப்புடையவன். இருவிதமாகப் பேசுவான். சுக முடையவன். தரித்திரம் இல்லாதவன்.

14. சமதேகம் சிவந்த மெய்யன் சகலர்க்கு நல்லோ னுவன்
தவசிகள் உறவு கொள்வான் தான்பித்த தேகி யாவன்
இவன்கரம் ருத்ர ரேகை யின்பமாய் வார்த்தை சொல்வன்
சிவன்தனைப் பூசை பூண்பன் சிறப்பாக வார்த்தை சொல்வன்.

14. சமமான உடலமைப்பைப் பெற்றவன். சிவந்த உடலுடையவன். அனைவருக்கும் நல்லவன். தவஞ் செய்யும் சான்றோர் உறவைக் கொள்ளுவான். பித்த சரீர முடையவன். இவன் கையில் உருத்திர ரேகையுண்டு. இனிமைதரும் சொற்களைப் பேசுவான். சிவபெருமானைப் பூசிப்பான். மேன்மையான சொற்களையே பேசுவான்.

15. வணிபங்கள் செய்வா னுகும் மனமதில் கபடு முள்ளான்
துணிவான மனத்த னுகும் தொல்புவி யதிகம் சேர்ப்பன்
கனமான புத்தி யுள்ளான் கண்முக வசிய முள்ளான்
அனேயவே ஆள்கள் சேர்த்தி அநேகமா தரையே சேர்வன்.

15. வியாபாரங்கள் செய்வான். மனத்தில் வஞ்சனே நிறைந்தவன். துணிந்த மன முடையவன். வீனே நிலங்களே மிகுதியாகச் சேர்ப்பான். மேன்மையான புத்தி யுடையவன். கண், முகம் இவைகளில் வசீகரம் உடையவன். எவளாட்கள் பலரைப் பெற்றிருப்பான். பல பெண்களேச் சேர்வான்.

16. பாரியாள் ஒன்றே யாகும் பகருவோம் புத்ர பாகம்
தீரமாய் ஆண்பால் ஒன்று செல்விமார் மூன்று மாகும்
கூறுவோம் நான்குஞ் தீர்க்கம் கூடியே யிவன்பால் ஒன்றுய்
வீரியன் வாழ்வா னுகும் வித்தகி கேட்டி டாயே.

16. இவனுக்கு மனைவி ஒருத்தியே. புத்திர பாவத்தைச் சொல்லுவோம். ஆண் ஒன்று, பெண்கள் மூவர். இந் நால்வரும் தீர்க்கமாவர். இந் நால்வருடன் சேர்ந்து, இவன் வாழ்வான். பார்வதியே! கேட்பாயாக.

17. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோம் பதினு ருண்டுள்
மேதினில் தந்தை வர்க்கம் விளம்புவோம் உள்ளூ ராகும்
காதலி சிவந்த மேனி கனத்ததோர் புத்தி சாலி
நீதிலாக் குணத்தா ளாகும் சென்மமுஞ் சாடி யென்றேரும்.

17. ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இவனுடைய பதினேரும் வயதுக்குள், உள்ளூரில் வசிக்கும் தந்தை வர்க்கத்தைச் சேர்ந்த பெண்ணேருத்தி இவனுக்கு மனைவியாக வாய்ப்பாள். அவள் சிவந்த நிற முடையவள். மேன்மையான புத்தி யுள்ளவள். குற்றமற்ற குணமுடையவள். கும்ப லக்னத்தில் பிறந்தவள் என்று கூறினேம்.

18. தந்தையின் ஆஸ்தி காணுள் தாயினுல் யோக முள்ளாள்
வந்தவர்க் கன்ன மீவள் வரனுக்கு நேய முள்ளாள்
அந்தவள் பித்த சூடு அணுகிடும் கோபம் கொஞ்சம்
தந்துணே ஆண்பால் ஒன்று சாற்றுவோ மிவளுக் கேதான்.

18. தகப்பனர் ஆஸ்தி எவையும் இல்லாதவள். தாயாரால் யோக மடைவாள். வீடு தேடி வந்தவர்கட்கு உணவளிப்பாள். கணவனுக்குப் பிரியமானவள். இவள் உடலில் பித்த சூடு பொருந்தி யிருக்கும். கோபஞ் சிறிதுண்டு. இவளுக்குச் சகோதரன் ஒருவன் உண்டு என்று சொல்லுவோம்.

19. பொறுமையும் பெருமை யுள்ளாள் பூடண முடைய ளாகும்
திருமகள் ஒப்ப தாகும் சிவப்பணி செய்வா ளென்றும்
வறுமைக ளடையா ளாகு மவளுக்கு வயது தீர்க்கம்
பெருமுனி யிவ்வார் கூறப் பராசரும் சொல்லு கின்றார்.

10. அடக்கமும் பெருமையும் உடையவள். ஆபரணங்களைப் பெற்றவள். இலட்சுமீ தேவி போன்ற வடிவழ குடையவள். சிவபெருமானுக்குத் தொண்டு செய்வ ள். தரித்திர மில்லாதவள். தீர்க்கமான ஆயுளைப் பெற்றவள். முனிவர் இங்ஙனம் சொல்லப், பராசரர் கூறுகின்றார்.

20. எப்படி வயது தீர்க்க மியம்பினீர் முனியே நீர்தாம்
செப்புவா யந்தச் சங்கை தனத்துளோ னதற்கு ரெண்டில்
ஒப்புடன் நாலோன் ஆட்சி ஒன்பதில் மதியும் நிற்க
இப்படிக் கிரகத்தா லேயே வியம்பினேம் தாரம் ஒன்றே.

20. முனிவரே! நீங்கள் இவளுக்கு வயது தீர்க்கம் என்று எப்படிக் கூறினீர்கள்? அதற்குக் காரணத்தைச் சொல்லுங்கள். தனஸ்தானத்துக் குரிய புதன், அதற்கு இரண்டாமிடமாகிய கடகத்திலும், நாலாமிடமாகிய சிம்ம விராசிக்குரிய சூரியன் தன்னிடத்தில் ஆட்சியாகவும், ஒன்பதாமிட மாகிய மகரத்தில், சந்திரன் இருப்பதுமாகிய கிரக நிலைகளைக் கொண்டு மனைவி ஒருத்தியே தீர்க்கம் என்று சொன்னேம்.

21. மறுத்துமே பராசர் சொல்வார் மங்களன் ஏழோ னுகி
சரத்தினி லிருப்ப தாலே சனியது குடும்பம் நிற்க
உரைத்திட்டோம் தாரம் ரெண்டே உரைக்கின்றார் கௌசி
[கர்தாம்
குருவுமே அஞ்சில் தங்கக் குசனுமே நட்ப தாக;

21. இதனை மறுத்துப் பராசரர் சொல்லுவார். செவ்வாய் ஏழாம் வீடாகிய விருச்சிக ராசிக் குடையவனுகி, சர ராசியாகிய துலாத்தில் தங்கியிருப்பதாலும், சனி குடும்ப ஸ்தானமாகிய மிதுனத்தில் இருப்பதாலும் இவனுக்கு மனைவியர் இருவரே யாவர் என்று கூறினேம். கௌசிக முனிவர் சொல்லுகின்றார். குரு ஐந்தாமிடமாகிய கன்னியில் தங்கி, செவ்வாய் துலாத்தில் நட்பாகவும் இருப்பதால்,

22. மனைவியு மொன்றே யாகு மவளுமுன் மரண மெய்தும்
அனையபின் னிவனு மாள்வன் அதுஎந்தக் காலஞ்
[சொல்வோம்
கனமுட னேம்ப தாண்டில் காதலி மரண மெய்தும்
சினமிலாப் புத்திர பாவம் செப்புவோ மினிமே லாக.

22. மனைவி ஒருத்தியே. அவளும் இவனுக்கு முன்பே மரணமடைவாள். பின்பு இவன் இறப்பான். அஃது எந்தக் காலம் என்று கூறுவோம். இவனுடைய ஐம்பதாம் வயதில் மரண மடைவாள். இனிமேல் புத்திர பாவத்தைக் கூறுவோம்.

23. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மாண்பா லொன்று
சித்தமாய்க் கன்னி ரெண்டு செப்புவோ மிவனுக் கேதான்
வித்தகர் சொல்லும் போது விளம்புவா ரத்திரி தாமும்
குத்தமா யாண்பால் காணுன் செப்புவீ ரந்தச் சங்கை.

23. புத்திர விருத்தியைப் பற்றிச் சொல்லுவோம். இவனுக்கு ஆண் மகன் ஒருவனும், பெண்கள் இருவரும் நிச்சயம் தோன்றுவர் என்று சொல்லுவோம். இங்ஙனம் முனிவர் சொல்லும்போது, அத்திரி முனிவர் கூறுகின்றார். ஆண் குழந்தை தோன்றாது. அதற்குக் காரணங் கூறும்.

24. நந்தியுஞ் சென்ன மாக நற்புதன் மூன்றி லேற
நொந்திடு மதலை ஆண்பால் நிகர்குரு அஞ்சில் நிற்கத்
தஞ்சமாய் மதியு மொன்பான் தங்கிடம் புத்திரர் [தோன்றும்
இந்திர னிறைஞ்சு மாதே விம்மொழி தப்பா தாமே.

24. விருஷபம் சென்ம லக்கினமாகவும், புத்திர ஸ்தானாதிபதி புதன் இலக்கினத்துக்கு மூன்றாமிடமாகிய கடகத்திலும், குரு ஐந்தாமிடமாகிய கன்னியிலும் நிற்பதால் ஆண் குழந்தை பிறந்து கஷ்ட மடையும். சந்திரன் ஒன்பதாமிடமாகிய மகரத்தில் தங்கியிருப்பதால் புத்திரர் தோன்றுவர். தேவேந்திரன் வணங்குகின்ற பார்வதிதேவியே! சொன்ன விச் சொற்கள் தவறு.

25. மாதுரு குணத்தை யாங்க ளறைகின்றோம் சிவந்த மேனி
மேதினில் உயர மில்லாள் வீண்அப வாத மில்லாள்
பாதக மொருவர்க் கெண்ணுள் பஞ்சைமே லிரக்க மாவள்
சூதுகள் எண்ணு ளாகும் தோகையும் யோக சாலி.

25. ஜாதகன் தாயாரின் குணத்தை நாங்கள் சொல்லுகின்றோம். சிவந்த உடல். உயரமில்லாதவள். வீண் பழி யில்லாதவள். எவருக்குந் தீங்கு நினையாள். ஏழை மீது இரக்கங் கொள்ளுவாள். வஞ்சனை எண்ணங் கொள்ளாள். அதிர்ஷ்ட முடையவள்.

26. அடக்கமும் பெருமை யுண்டு அன்னம்போல் சாய லுள்ளாள
நடக்கையும் நல்ல தாகும் நவிந்தோர்க்கு அன்ன மீவள்
துடுக்கென வார்த்தை கூரூள் சொல்லுமுன் கோபம்
[கொஞ்சம்
திடமான குடும்பி யாவள் செல்வதி மேலும் கேளே.

26. பொறுமையும், பெருமையும் உடையவள். அன்னப் பறவை போன்ற சாயலே யுடையவள். நல்லொழுக்க முள்ளவள். துன்பமடைந்த வர்கட்கு உணவளிப்பாள். துடுக்கான சொற்களைப் பேசாள். சொல்லுவ தற்குமுன் கோப மடைவாள். பலமுள்ள குடும்பத்தை யுடையவள். பார் வதியே! கேட்பாயாக.

27. அவள்துணை யாண்பால் ரெண்டு அறைகின்றோம் தீர்க்க
[மாக
நவனியில் மூன்று நட்டம் நவிலுவோ மிவளுக் கேதான்
இவள்துணை யொருவ ருக்கு இலகாது புத்திரர் தாமும்
தவசியே சாகை மேற்கில் சாற்றுவோ மருகில் சிற்றூர்.

27. அவளுடன் பிறந்த சகோதரர் இருவர் தீர்க்கமாக விளங்குவர் என்று சொல்லுகின்றோம். இவளுக்கு உடன்பிறந்தார் மூவர் பிறந்து நஷ்டமடைவர் என்றும் சொல்லுவோம். இவள் சகோதரர் ஒருவருக் குப் புத்திரப் பேறு எற்படாது. முனிவரே! இவள் பிறந்த வீடு ஜாதகன் ஊருக்குப் பக்கத்திலுள்ள சிறிய ஊரிலுள்ளது.

28. அன்னையின் பூர்வம் சொல்வோம் அருணைக்கு உத்தி ரத்தில்
தன்னிலே பேரூர் தன்னில் செனித்தனள் வைசியச் சேயாய்
இன்னவள் காஞ்சி தன்னி லேகினள் வரன்பா லுந்தான்
உன்னத பணிக ளுண்டாய் ஓங்கிய குடும்பி யாகி;

28. தாயின் முற்பிறப்பைச் சொல்லுவோம். திருவண்ணாமலைக்கு வடக்கில் உள்ளதொரு பெரிய ஊரில், வைசிய குலத்தவளாய்ப் பிறந்தாள். மணமாகிக் காஞ்சிபுரத்திலுள்ள கணவன் வீட்டுக்குச் சென்றனள். உயர்ந்த ஆபரணங்களைப் பெற்று, மேன்மையான குடும்ப முடையவளாய்;

29. மதலைக ளுடைய ளாகி மங்கையும் வாழும் நாளில்
சதியினுல் வரனு மாண்டு தென்திசைத் தலங்கள் சென்று
நதிபல தீர்த்தம் தோய்ந்து நாயகி யுள்ளூர் சென்று
பதியினில் சுகமாய் வாழ்ந்து பஞ்சைகட் கன்ன மீந்து;

29. மக்கள் தோன்றி, இவள் வாழ்ந்துவந்த காலத்தில், விதி வலியி னுல் கணவன் இறந்து, தெற்குத் திசையிலுள்ள பல புண்ணியத் தலங்களுக் குச் சென்று, தரிசித்து, புண்ணிய நதிகள் பலவற்றில் நீராடி, உள்ளூருக்குத் திரும்பி, சுகமாக வாழ்ந்து, கதியற்றவர்கட்கு உணவளித்து.

30. மறலியின் பதிக்குச் சென்று மலரயன் வரையப் பட்டுப்
பெருமையாய்க் கங்கை சேயாய்ப் பிறந்தன ளிவளே
[யென்றேரும்
அறைகின்றேரும் இவள்பின் சென்மம் அக்காஞ்சி தன்னி
[லேதான்
உறைகுவா ளிக்கு லத்தில் உத்தமி கேட்டி டாயே..

30. முடிவில் மாண மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, மேன்மையுடன் வேளாளர் குல மகளாய்ப் பிறந்தாள் இவள் என்று சொன் னேம். இவள் மறு பிறவியைக் கூறுகின்றேரும். காஞ்சிபுரத்திலேயே இக் குலத்தில் பிறப்பாள். பார்வதியே! கேட்பாயாக.

31. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் ஓதூர்
[தன்னில்
வந்தனன் தியின் வமிசம் வளமுள குடும்பி யாகி
முந்திய செட்டுச் செய்து முயற்சியாய்த் தலங்கள் தோய்ந்து
கந்தனே யருச்சித் தேத்திக் காவலன் மரண மாகி ;

31. தகப்பனரின் முற்பிறவியைக் கூறுவோம். ஓதூரில் வன்னியர் குலத்தவனுய்ப் பிறந்தான். செழிப்புள்ள குடும்ப முடையவனுய், சிறந்த வியாபாரம் செய்து, தன் முயற்சியினுல் மேன்மையான புண்ணியத் தலங் கட்கு யாத்திரை சென்று, அங்குள்ள தீர்த்தங்களில் நீராடி, முருகப்பிரா னுக்கு அருச்சனே முதலியன செய்து வணங்கி, மரண மடைந்து;

32. கஞ்சனுல் வரையப் பட்டுக் கங்கையின் குலத்தி லேதான்
மிஞ்சியே வுதித்தா னென்றேரும் விளம்புவோ மிவன்பின்
[சென்மம்
கஞ்சியில் பிரம்ம சேயாய்க் காவல னுதிப்பா னாகும்
தஞ்சமா னிவனின் பூர்வம் சாற்றுவோம் விபர மாக.

32. மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, வேளாளர் வமிசத்தில் பிறந் தான் என்று சொன்னேம். இவன் மறு பிறப்பைக் கூறுவோம். காஞ்சி புரத்தில் அந்தணர் குலத்தவனுய்ப் பிறப்பான். இனி, ஜாதகன் முற்பிற வியை விவரமாகக் கூறுவோம்.

33. சாதகன் முன்சென் மத்தைச் சாற்றுவோ மாலங் காட்டில்
தீதிலா யிக்கு லத்தில் செனித்துமே பூமி யுண்டாய்
மேதினில் மதலே யுண்டாய் விளங்கியே வாழும் நாளில்
கோதிலா வந்த வூழைக் கூறுவோம் விபர மாக.

33. ஜாதகன் முற்பிறப்பைச் சொல்லுவோம். திருவாலங்காட்டில், இக் குலத்தில் பிறந்து, நிலபுலன்கள் எற்பட்டு, புதல்வர்களே யடைந்து, வாழ்ந்திருக்கும் நாளில், வந்த தீவினேயை விவரமாகச் சொல்லுவோம்.

34. தன்னுடை வேலைக்காரி சக்தியும் விதவை யாகி
இன்னவள் மேலே மோகம் இவனுமே காதல் கொண்டு
பொன்பணி யவளுக் கீந்து போகங்கள் துய்த்தா
[னென்றேும்
அன்னவள் தனக்குக் கர்ப்பம் அணுகிற்று இவனு லேதான்.

34. இவள் வீட்டில் வேலைசெய்யும் விதவையான வேலைக்காரியை இவன் விரும்பி, அவள்மீது காதல் கொண்டு, செல்வம், ஆபரணங்கள் முதலி யன அவளுக்குக் கொடுத்து, அவளுடன் இன்ப மனுபவித்தான் என்று சொன்னேம். அவளுக்கு இவனல் கருப்ப மேற்பட்டது.

35. மாதுவும் மனங்க லங்கி வருவித்தா ளந்தச் சேதி
தீதான பண்டி தங்கள் செய்தன னனந்த மாக
மாதுக்குக் கருவ ழிந்து மங்கையும் மரண மாகிப்
போதவே யந்தத் தோடம் புக்கிற்று விவனுக் கேதான்.

35. அந்தப் பெண் மனக்கலக்க மடைந்து, இவனிடம் தான் கரு வுற்ற செய்தியைக் கூறினள். உடனே துன்பத்தை யுண்டாக்கும் பல வைத்தியங்களை இவன் செய்தான். பெண்ணுக்கு ஏற்பட்ட கரு அழிந்து, அவளும் மரண மடைந்தாள். அந்தத் தோஷம் இவனைச் சேர்ந்தது;

36. அந்திய காலம் தன்னில் அவனுக்கு வாயு பீடை
வந்துபின் மரண மெய்தி மால்மகன் வரையப் பட்டு
வந்தன னிக்கு லத்தி லறைகின்றேும் முன்னூழ்த் தோடம்
சந்ததம் சேரு மென்றேும் சங்கரி கேட்டி டாயே.

36. கடைசிக் காலத்தில் இவனுக்கு வாயு ரோகம் ஏற்பட்டு மரண மடைந்தான். பின்பு திருமாலின் புதல்வனுகிய பிரமனுல் படைக்கப்பட்டு, இக்குலத்தில் பிறந்தான் என்று சொல்லுகின்றேும். முற்பிறப்பில் உண் டான தோஷம் நிச்சயமாய் இவனை யடையும் என்று சொன்னேம். பார் வதியே! கேட்பாயாக.

37. தோடத்தா லிச்சென் மத்தில் தோன்றுங்கா ரணங்க
[ளென்ன
வாசமாய்த் தந்தை தாமும் பாலிய மரண மெய்தும்
நேசமாய் முதலில் புத்ரன் நிலைக்காது மனைவி தோடம்
தூசுபோல் மனத்த ளான சுந்தரி மேலுங் கேளே.

37. அந்தத் தோஷமிருந்தும், இப்பிறப்பில் புத்திரர் எண்ணம் தோன்றுவர். காரணம் கூறுங்கள். முற்பிறவி தோஷத்தினுல், ஜாதகனின் இளமைப் பருவத்திலேயே தந்தை மரண மடைவான். இவனுக்கு முதலில்

தோன்றும் புத்திரன் நிலையான். மனைவிக்குத் தீங்குண்டாகும். தூய்மையான மனத்துடன் கூடிய பார்வதியே! கேட்பாயாக.

38. சாதகன் யோகச் சேதி சாற்றுவோம் சனனம் தொட்டுப்
போதவே மரண மட்டும் பொருந்திடு யோகம் தானும்
தீதுகள் அணுகா தாகும் திருமகள் அருளு முண்டாம்
மேதினில் கீர்த்தி யேற்பன் விளைபுலம் விசேடம் சேர்ப்பன்.

38. ஜாதகன் யோகச் செய்திகளைக் கூறுவோம். பிறந்தது முதல் மரணம் வரை யோகங்கள் பொருந்தி யிருக்கும். கெடுதல்கள் இவனை யடையா. இலட்சுமீ கடாட்சம் ஏற்படும். உலகில் புகழை ஏற்பான். விளை நிலங்களை விசேஷமாகச் சேர்ப்பான்,

39. நல்லஇல் லறங்க ளுண்டு நளினமாய் வித்தை யுண்டு
அல்லலு மணுகா தாகும் அகதிகட் கன்ப னுவன்
புல்லமாஞ் சகடு முண்டு புகழ்பதி யில்லம் செய்வன்
நல்லவெண் கலங்கள் தூசு நலமுள பணிகள் சேர்ப்பன்.

39. நல்ல வீடு கிடைக்கும். தருமங்கள் செய்வான். சுகமான கல்வியறிவு உண்டு. கஷ்டங்கள் இவனை யடையாவாம். கதியற்றவர்கட்கு அன்பன். காளைகள், வண்டிகள் பெற்றிருப்பான். புகழ் பொருந்திய புது வீடு அமைப்பான். நல்ல பாத்திரங்கள், ஆடைகள், ஆபரணங்கள் இவற்றைச் சேர்ப்பான்.

40. சல்லிய சோதி டங்கள் சாத்திர மறிய வல்லன்
இல்லையென் றெவர்க்கும் சொல்லான் ஏவலா
[ளதிக முள்ளான்
நல்லவர் சேர்க்கை கொள்வன் நயந்தோர்க்கு அன்ன மீவன்
மல்லுக்குச் செல்லா னுகும் வடிவேல ரிட்டங் கொள்வன்.

40. சுக்கிர நாடியாகிய சோதிட சாஸ்திரத்தை நன்கு கற்றறிவான். யாசிப்பவர் எவருக்கும் இல்லையென்று சொல்ல மாட்டான். ஏவலாட்கள் மிகுதியாகப் பெற்றவன். நல்லவர்கள் நட்பைக் கொள்ளுவான். தன்னிடம் நேமமாகக் கேட்பவர்களுக்கு உணவு அளிப்பான். வீண் சண்டைக்குச் செல்லான். கூர்மையான வேலாயுதத்தை யுடைய முருகப்பிரான் மீது பக்தி கொள்ளுவான்.

41. பலவூரில் பூமி சேர்ப்பன் பரமர்க்கு அன்ன மீவன்
தலமது தீர்த்தம் தோய்வன் திருப்பணி வேலை செய்வன்
கலகங்கள் கூறு னுகும் கனத்ததோர் புத்தி மானும்
உலகுளோர்க் குதவி செய்வன் உயர்ந்ததோர் குடும்பி
[யாவன்.

41. பல கிராமங்களில் வீடுகளிலங்களைச் சேர்ப்பான். அடியார்கட்கு உணவளிப்பான். புண்ணியத் தலங்களுக்குச் சென்று, தீர்த்தங்களில் நீராடுவான். கோயில் திருப்பணிகள் புரிவான். கலகங்கள் செய்யமாட்டான். மேன்மையான புத்தி யுடையவன். உலகத்தவருக்கு உதவி செய்வான். உயர்ந்த குடும்பமுள்ளவனாவான்.

42. அறுபது இரண்டு ஆண்டில் ஆவணி மாதம் தன்னில்
குறைபக்கம் துவாதசி தன்னில் கூற்றன்தன் பதிக்குச்
[சேர்வன்
வருஞ்சென்மம் அவ்வூர் மேற்கில் மறைக்குல முதிப்பா
[னாகும்
பெருமையும் புகழு முண்டாய்ப் புண்ணியன் வாழ்வா னாமே.

42. அறுபத்திரண்டாம் வயதில், ஆவணி மாதம் கிருஷ்ண பட்சம் துவாதசி திதியில் இயமனுலக மடைவான். மறுபிறவி, அவ்வூருக்கு மேற்கிலுள்ளதொரு கிராமத்தில் அந்தணர் குலத்தில் பிறப்பான். மேன்மையும் கீர்த்தியு முண்டாகி வாழ்ந்திருப்பான்.

43. இதுமத்தில் ஒன்பா னண்டில் இயல்தேளின் மாதம்
[தன்னில்
சதியினுல் தந்தை வீழ்வன் தப்பாது என்று சொன்னேம்
மதிமுக மாது வுக்கு மாறாறு ஆண்டு தன்னில்
பொறுமையாய் மகர மாதம் புக்கிடுங் கண்டந் தானே.

43. இது நடுவில், ஜாதகனின் ஒன்பதாம் வயதில், கார்த்திகை மாதம் தந்தை மரண மடைவான். சொன்னது தவறாது என்று கூறினேம். தாய்க்கு, இவனது முப்பத்தாறும் வயதில் தை மாதம் கண்டம் ஏற்படும்.

44. துணைவனு மிவனே டொத்துத் தொல்புவி தன்னில்
[வாழ்வன்
கனமுள குடும்பி யாகிக் காலையும் வாழ்வா னாகும்
பிணையிலாக் குடும்பச் சேதி பேசுவோ மிரண்டி லேதான்
சினமிலாத் தவங்கள் செய்யும் செல்வதி கேட்டி டாயே.

44. இவன் சகோதரனும் இவனுடன் மனமொத்து ஒன்றாக வாழ்வான். மதிப்புள்ள குடும்பியாக ஜாதகன் வாழ்ந்திருப்பான். மேலும் இவனுடைய குடும்ப மேன்மைகளைக் குறித்து இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். கோபமில்லாது தவங்களைப் புரியும் பார்வதியே! கேட்பாயாக.

45. சாதகன் செனிக்கும் காலை சந்திரன் தசையி ருப்பு
மேதினில் ஆண்டு ஏழு மேவிய திங்க ளைந்தும்
போதவே நாள்கள் பத்தும் போற்றுவோம் பலனை யாங்கள்
தாதையின் வர்க்கம் தோடம் சகோதர விருத்தி யுண்டு.

45. ஜாதகன் பிறப்புக் காலத்தில் சந்திர மகா தசை இருப்பு; வருஷங்கள் ஏழும், மாதங்கள் ஐந்தும், நாட்கள் பத்துமாம். அக்காலத்துக்குரிய பலன்களே நாங்கள் சொல்லுவோம். தந்தையின் வர்க்கத்தில் தோஷங்கள் உண்டாம். சகோதர விருத்தியுண்டு.

46. குடும்பமும் மேல்மேல் ஓங்கும் கூடிடும் பூமி தானும்
திடமுள திருஷி யோங்கும் செனித்தவன் தனக்கு ரோகம்
உடன்வீடு செய்வா னுகும் உறைந்திடும் பணிதி தானும்
விடமன மூள்ளோர் நேசம் வித்தகி கேட்டி டாயே

46. குடும்பம் மேலும் மேலும் விருத்தியடையும். விளைநிலங்கள் மிகுதியாகச் சேரும். திடமான பயிர்த்தொழில் உயரும். ஜாதகனுக்கு வியாதியும் உண்டாகும். வீடு கட்டுவான். ஆபரணங்கள் சேர்ப்பான். விஷம்போல் கொடிய மனமுள்ளவர் நட்பு இவனுக்கு வாய்க்கும். பார்வதியே! கேட்பாயாக.

47. இந்தநற் பலன்கள் யாவும் இசைந்தன மிந்நூல் தன்னில்
சுந்தரன் தனக்குப் பூமி சுவர்ணமும் கிரக மாகும்
எந்தையே நாற்பா யிரம்பொன் இசைந்தன மனுப [விப்பன்
இந்திர னிறைஞ்சு மாதே யிப்பலன் சொல்வோம் யாமும்.

47. இவ்விதமான நல்ல பலன்கள் பலவற்றை இந்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் சொன்னோம். ஜாதகனுக்கு நிலத்திலிருந்து புதையல் கிடைக்கும். புதிய வீடு எற்படும். நாற்பதினாயிரம் பொன்னைச் சேர்த்து அனுபவிப்பான். இந்திரனால் வணங்கப்படும் எங்கள் தாயே! நாங்கள் இல்வாறு பலன்களைக் கூறுவோம்.

ஜாதகம் 64

1. நந்தியும் செனன மாக நாலினில் குருவும் கேது
புந்தியும் பானு மஞ்சில் புகர்சனி ஆறில் தங்கச்
சந்திரன் விரயம் புக்கச் சேய்[1] தனம் பணியும் பத்தில்
இந்தவார் கோளு நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. விருஷபம் இலக்கினமாகி, குருவும் கேதுவும் நாலாமிடமாகிய கடகத்திலும், புதனும் சூரியனும் கன்னியிலும், சுக்கிரனும் சனியும் ஆறுமிடமாகிய துலாத்திலும், சந்திரன் விரய ஸ்தானமாகிய மேஷத்திலும், செவ்வாய் தன ஸ்தானமாகிய மிதுனத்திலும், இராகு கும்பத்திலுமாக இவ்விதம் ஸகல கிரகங்களும் நின்றூல் உரிய பலன்களைக் கூறுங்கள்.

	சந்திரன்	லக்கினம்	செவ்வாய்
ராகு	இராசி சக்கரம்		
			குரு கேது
		சுக்கிரன் சனி	புதன் சூரியன்

2. மாதுவும் கேட்கும் போது வதிட்டரும் கூறு கின்ரூர்
மேதினில் ஆண்பால் சென்மம் மேற்கது வாச லாகும்
ஓதுவோம் வடதென் வீதி உமையவ ளீசன் கீழ்ப்பால்
ஆதிமால் மாரி காளி யைங்கரன் தென்கீழ் தங்கும்.

2. என்று பார்வதி தேவி கேட்கும்போது, வசிஷ்ட முனிவர் சொல்லுகின்ரூர். இஃது ஆண்பிறப்பு. பிறக்கும் வீட்டுக்கு மேற்கில் வாயில். வடக்குத் தெற்கான தெருவில் அவ்வீடு உளது என்று சொல்லுவோம். உமாதேவியின் கணவராகிய சிவபெருமான் கோயில் கிழக்கிலுள்ளது. திருமால், மாரியம்மன், காளிதேவி, விநாயகர் ஆகியோர் கோயில்கள் தென்கிழக்கில் உள்ளன.

3. தென்திசைக் கருப்ப னம்மன் சீலமாம் நதியு முண்டு
அன்பிலா புத்தர் வாயு அழகிய துருவம் கீழ்ப்பால்
இன்னுமே சோலை சூழி இலகிய சமவூர் தன்னில்
உன்னத வேளா ளுக உதிப்பனு மிந்தப் பாலன்.

---

1. இலக்கினத்துக்கு இரண்டாமிடம் : ஈண்டு மிதுனம்.

3. இதற்குத் திசையில் கருப்பு முனியும் அம்பிகையும் வாசம் செய்வர். நல்லமையான கதியொன்றும் அங்குண்டு. புத்த பகவான் கோயில் வடமேற்கில் உள்ளது. அழகிய மலைக்கோட்டை யொன்று கீழ்ப்பக்கத்தில் விருக்கின்றது. மேலும், சோலைகள், நீர் நிலைகள் முதலானவற்றுடன் விளங்கும் ஊரில் உயர்ந்த வேளாளர் மரபினராக இந்த ஜாதகன் பிறப்பான்.

4. பாலகன் சென்ன யோகம் பெருகிய வன்னி யோகம்
ஞாலமேல் தந்தை யோகம் நற்றுணை களத்ர புத்ரர்
கோலமாய் முன்பின் சென்மம் கூறுவோ மிந்நூல்
[தன்னில்
வேலனே ஈன்ற மாதே வித்தகி கேட்டி டாயே.

4. ஜாதகன் யோகங்கள், தாய்தந்தையர், மனைவி, புத்திரர் யோகங்கள், முற்பிறப்பு, மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இந்நூலில் சொல்லுவோம். முருகப் பிரானைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

5. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் மால்நி
[றத்தான்
பந்தமாய்ச் சமதே கத்தன் பந்துவும் புகழ வாழ்வன்
சிந்தையில் மர்ம மில்லான் செலவுகள் அதிக முள்ளான்
எந்தையே சல்லிய முள்ளான் ஈகைவான் பெருமை சாலி.

5. தந்தையின் குண விசேடங்களை நாங்கள் கூறுவோம். சரிய நிதமுடையவன். சமமான உடலமைப்பைப் பெற்றவன். உறவினரும் பாராட்டும் வகையில் வாழ்வான். மனத்தில் மறைவில்லாதவன். மிகுதியாகச் செலவுள்ளவன். கடனுள்ளவன். கொடையாளி. பெருமையுடையவன்.

6. பலபேர்க்கும் பந்தி னர்க்கும் பலருடை நண்பாய் நிற்பன்
சொலுமொழி பிசகு மில்லான் சோம்பிடான் கல்வி
[யுள்ளான்
கலங்கள் செய்யா னாகும் காரிழைப் பிரிய னாவன்
நலம்படக் கூறு வானும் நாயகன் வறுமை யுள்ளான்.

6. அயலார் பலருக்கும், உறவினருக்கும் நண்பனாயிருப்பான். சொல்லும் வார்த்தை தவறாதவன். சோம்பலுடைய மாட்டான். பழிப்புள்ளவன். கலகங்கள் செய்யான். மனைவி மீது அன்புடையவன். நல்ல முறையில் பேசுவான். வறுமை யுடையவன்.

7. பூமியும் விரயம் செய்வன் புண்ணிய மனத்த னாகும்
தாமதங் குணத்த னாகும் சஞ்சல புத்தி யுள்ளான்
காமனே யொத்த தேகன் கரம்காலில் வலிவு முள்ளான்
தீமையை விரும்பா னாகும் திருகுகள் அனந்தம் சொல்வான்.

7. வீரை நிலங்களை விற்பான். நல்ல மனமுடையவன். தாமத குண முள்ளவன். சஞ்சல மடையும் புத்தியைப் பெற்றவன். மன்மதன்போல் வடிவழ குடையவன். கை கால்களில் வலிவுள்ளவன். கெடுதலை விரும்பா தவன். மாறுபாடான சொற்கள் பலவற்றைச் சொல்வான்.

8. ஏறுகள் விருத்தி செய்வன் இடறுக ளனந்த முள்ளான்
தீரமா மனத்த னுகும் செய்ந்நன்றி மறவா னுகும்
வீரியன் புத்தி மானும் வீண்அப வாத முள்ளான்
ஆறுமா முகனும் தெய்வம் அம்பிகை யாளே கேளாய்.

8. காளை மாடுகளை விருத்தி செய்வான். மிகுதியாகத் துன்பங்கள் உடையவன். தைரியம் பொருந்திய மனத்தினன். பிறர்செய்த உதவியை மறவாதவன். வீர முள்ளவன். புத்திசாலி. வீண் பழிகளை ஏற்பான். சுப்பிரமணியக் கடவுளை வணங்குவான். அம்பிகையே ! கேட்பாயாக.

9. முகமது வசிய முள்ளான் முன்கோபம் பின்பு சாந்தம்
பகைவரை உறவு கொள்வன் பால்தயிர் இட்டம் கொள்வன்
தகைமையாய்க் கிருஷி செய்வன் தைரியன் சுகபு சிப்பன்
சிகையது நீட்சி யுள்ளான் தேவியே கேட்டி டாயே.

9. முகத்தில் வசிகர முள்ளவன். முன்கோப முடையவன். உடனே சாந்த மடைவான். பகைவர்களையும் நட்பாகக் கொள்ளுவான். பால் தயிர் இவற்றில் பிரிய முடையவன். தக்க முறையில் பயிர்த்தொழில் செய்வான். தைரிய மனமுடையவன். சுகமான போஜனத்தைப் புசிப்பான். தலைமயிர் நீண்டுள்ளவன். பார்வதியே ! கேட்பாயாக.

10. இக்குண முடையா னுக்கு இவனுமே இரண்டாம் சென்மம்
மிக்கவே உதிப்ப னுகும் விளம்புவோ மிவன்கு ணத்தை
தெரிக்கவே விருஷி றத்தான் சுந்தரன் வாத தேகி
பக்குவ மாக வார்த்தை பகருவான் சாயல் நேத்ரம்.

10. இவ்விதமான குணங்களைப் பெற்றவனுக்கு, இந்த ஜாதகன் இரண்டாம் புதல்வனுகப் பிறப்பான். இவன் குணங்களைக் கூறுவோம். கரிய நிறமுடையவன். வாத சரீர முள்ளவன். பக்குவமாகப் பேசுவான். சாய்ந்த பார்வை யுள்ளவன்.

11. கரமதில் ஊன முள்ளான் கல்வியு முடைய னுகும்
பெருமையாய்க் குடும்பி யாவன் பெம்மான்மேல் பக்தி
[கொள்வன்
திருமகள் வாச முள்ளான் சென்றிடம் பெருமை பூண்பன்
சிரமுகம் வடிவு காணும் தேவியே கேட்டி டாயே.

11. கையில் சிறிது ஊன முடையவன். கல்வியறிவுள்ளவன். பெருமைபெற்ற குடும்பியாக வாழ்வான். கடவுள் பக்தி கொள்ளுவான். இலட்சுமீ கடாட்சம் உள்ளவன். செல்லும் இடங்களில் பெருமை யடைவான்; முகத்தில் வசீகர முள்ளவன். பார்வதி தேவியே! கேட்பாயாக.

12. பூமியும் விருத்தி செய்வன் புண்ணிய மனத்த னுகும்
தீமையை விரும்பா னுகும் செய்ந்நன்றி மறவா னென்றும்
நேமியோர் மெச்ச வாழ்வன் நிதம்சுக புசிப்பா னுகும்
காமனை விருப்பங் கொள்வன் பார்வதி கேட்டி டாயே.

12. வீடு நிலங்களை விருத்தி செய்வான். நல் மன முடையவன். கெடுதலை விரும்பாதவன். பிறர் செய்த நன்றியை மறவான். உலகோர் பாராட்டும் வகையில் வாழ்க்கை நடத்துவான். தினந்தோறும் சுகமான போஜனத்தைப் புசிப்பான். மன்மதனை வடிவழகால் தன்னிடம் விருப்பங் கொள்ளும்படி செய்ய வல்லவன். பார்வதியே! கேட்பாயாக.

13. கோதுமை ரேகை யுள்ளான் குத்திரம் பேசா னுகும்
சேதுவைத் தீர்த்தம் தோய்வன் சனஉப காரி னுவன்
தீதான ரோகம் காலில் செறிந்திடு மிவனுக் கேதான்
சோதரர் தமைக்காப் பானும் சுந்தரி கேட்டி டாயே.

13. கையில் கோதுமை ரேகை யுள்ளவன். குயுக்தியாகப் பேசான். சேது மகா தீர்த்தத்தில் நீராடுவான். மக்களுக்கு உதவிகள் செய்வான். இவனுக்குக் காலில் கெட்ட வியாதியொன்று உண்டாகும். சகோதரர்களைப் பாதுகாப்பான். அழகியே! கேட்பாயாக.

14. அத்திரி முதலா யுள்ள அறுமுனி யிவ்வார் கூற
வித்தகர் புசண்டர் சொல்வார் விளம்பினீர் ரோக மொன்று
குத்தத்தைச் சொல்லு மென்ன கூறுவார் வதிட்டர் தாமும்
சித்தமா யாறில் காரி செறிந்ததால் சொன்னே னையா.

14. அத்திரி முதலான ஆறு முனிவர்களும் இவ்வாறு சொல்ல, சிறந்த ஞானமுடைய புஜண்டர் கேட்கின்றார். இவனுக்கு வியாதி யொன்று ஏற்படும் என்று கூறினீர்கள்? அதற்குக் காரணம் என்ன? சொல்லுங்கள். வசிஷ்டர் கூறுகின்றார். ஐயா! ஆற்மிடமாகிய தலாத்தில் சனி தங்கியிருப்பதால் ரோகம் ஏற்படும் என்று கூறினேம்.

15. இதுவன்றிப் பூர்வம் தன்னில் எய்திற்று அந்தத் தோடம்
விதியதைச் சொல்லு மென்ன விளம்பினர் முனிவர் தாமும்
மதிபனும் முன்சென் மத்தில் மாபலி நகரம் மேல்பால்
பதியது பேரூர் தன்னில் பாலகன் ரெட்டி வம்சம்;

15. இது தவிர, முற்பிறப்பில் ஒரு தோஷம் ஏற்பட்டது; அதனைக் கூறுங்கள் என, முனிவர் சொல்லுகின்றார். ஜாதகன் முற்பிறவியில் மகா பலி புரத்துக்கு மேற்கில் உள்ளதொரு பெரிய ஊரில், செட்டியார் மரபினனாக;

16. உதித்துமே பெருமை பூண்டு உயர்பூமி யுடையா னாகி
நிதியது அதிக முண்டாய் நேமியில் கீர்த்தி யாகி
வதிபனும் வாழும் நாளில் வந்தஊழ் தன்னைச் சொல்வேன்
கதியான தந்தை பேரில் கோபமு மிகவே கொண்டு;

16. பிறந்து, பெருமைபெற்று, உயர்ந்த விஷயங்களுண்டாகி, செல்வப் பெருக்கமும் ஏற்பட்டு, உலகில் புகழுடையவனாய் வாழ்ந்துவந்த காலத்தில் உண்டான தோஷத்தைச் சொல்லுவோம். தன் தந்தையின்மீது மிகுதியாகக் கோபங் கொண்டு;

17. எத்தினன் தந்தை யைத்தான் இதுவன்றி யின்னும் [சொல்வேன்
சித்தசன் தனையெ ரித்த சிவாலயம் தன்னில் சென்று
நித்தியம் பூசை செய்ய நேர்ந்தஓர் புட்பம் தன்னை
வித்தகன் தானெ டுத்தான் மேவிற்று தோடம் தானே.

17. உதைத்தான். தவிரவும், மேலுங் கேள். மன்மதனை எரித்த சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கோவிலுக்குச் சென்று, அவர் நித்திய பூஜைக்காக வுள்ள மலரொன்றைக் காலால் மிதித்தான். அந்தத் தோஷம் இவனை யடைந்தது.

18. அந்தியக் காலம் தன்னில் அவன்காலில் சோர்வு கண்டு
எந்தையே காலன் பக்கல் ஏகியே நகரம் புக்குச்
சந்ததம் பிரம னாலே தானவன் வரையப் பட்டு
வந்தவ னிவனே யென்றே மறைகின்றோம் முன்னூழ்த் [தோடம்;

18. கடைசிக் காலத்தில், கால்களில் தளர்ச்சி ஏற்பட்டு, மரண மடைந்து, நரகம் சேர்ந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இவ்வுலகில் பிறந்தவன் இவன் என்று கூறினோம். மேலுஞ் சொல்லுகின்றோம். முற்பிறப்பில் ஏற்பட்ட தோஷங்கள்;

19. அணுகிடும் கால்கள் ஊனம் அம்பிகை கேட்க லுற்றாள்
வினையது விலகு தற்கு விளம்புவீர் சாந்தி தானும்
சினமது விலக்கு கின்ற திருத்தணி தலத்துக் கேதான்
கனமுடன் பதினோர் திங்கள் காவலன் சென்று மேதான்;

19. இவனே இப்பிறப்பில் அடையும். அதனால் இவன் கால்களில் ரோகம் ஏற்படும். பார்வதி கேட்கின்றாள். தோஷம் தீருவதற்குச் சாந்தி கூறுங்கள். கோபத்தைத் தணியச் செய்கின்ற திருத்தணிகை மலைக்குப் பதினொரு மாதங்கள் இவன் சென்று;

20. முருகனை யருச்சித் தேத்தி முடிவினில் இருபத் தேழு
பெரியவர்க் கன்ன மீந்தால் பேசின பிணியும் நீங்கும்
உரைக்கின்றோம் துணைவர் தம்மை யுதித்தது முதலில்
[நட்டம்
திருமகன் பின்னு லேதான் செப்புவோ மாண்பா லொன்று.

20. அங்கு எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானுக்கு அருச்சனைகள் செய்து, போற்றி, கடைசியில் இருபத்தேழு சான்றோர்களுக்கு உணவு அளித்தால், முன்பு கூறிய ரோகம் நீங்கும். இவனுடைய துணைவர்களைப் பற்றிக் கூறுகின்றோம். இவனுக்கு முன்பு தோன்றியவர் கஷ்டமடைவர். இவனுக்குப் பிறகு சகோதரன் ஒருவன் தோன்றுவான்.

21. பெண்ணது அவ்வார் தீர்க்கம் பேசுவோ மிவனுக் கேதான்
திண்ணமாய் மணத்தின் காலம் செப்புவோம் ஈரொன்
[பானில்
கன்னியுந் தட்சி ணத்தில் காதலி வருவா ளாகும்
அன்னவள் சேதி தன்னை அறைகின்றோம் சிவந்த மேனி.

21. பெண்ணைருத்தியும் பிறந்து தீர்க்கமாவாள் என்று சொல்லுவோம். ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். பதினெட்டாம் வயதில், தெற்குத் திசையிலிருந்து, மனைவியாக வாய்ப்பவள் வருவாள். அவள் செய்தியைச் சொல்லுகின்றோம். சிவந்த உடல்.

22. பால்பாக்ய முடைய ளாகும் பகையிலாள் கோபம்
[கொஞ்சம்
சிலமும் கொஞ்ச மூள்ளாள் சனஉப காரம் செய்வள்
சாலவே அன்ன மீவள் சமர்த்துளாள் வறுமை யில்லாள்
கோலமாய்ப் புத்ர பாகம் கூறுவோம் கேளும் தாயே.

22. பால் பச பாக்கியங்க ளுள்ளவள். எவரிடமும் விரோதமில்லாதவள். சிறிது கோப முடையவள். கல்லொழுக்கமும் சிறிதே பெற்றவள். மக்களுக்கு உபகாரங்கள் செய்வாள். யாசிப்பவர்கட்கு மிகுதியாக உணவளிப்பாள். சாமர்த்திய முடையவள். தரித்திர மில்லாதவள். சிறப்பாக, ஜாதகனுக்குப் புத்திர பாவத்தைச் சொல்லுவோம். தாயே! கேளுங்கள்.

23. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணேம்
சித்தமா யுதித்த லுந்தான் தீங்காகு மென்று சென்னேம்
பத்திய வதிட்டர் சொல்லப் பராசரும் கேட்க லுற்றார்
வித்தகர் தனக்குப் புத்திரர் விளங்காது என்று சொன்னீர்.

23. புத்திர விருத்தியைப் பற்றிச் சொல்லுவதற்கு, தரகபல மில்லை. பிறந்தாலும் நாசமடையும் என்று கூறினேனும் என வசிஷ்ட முனிவர் சொல்ல, பராசரர் கேட்கின்றார். ஜாதகனுக்குப் புத்திரர் தோன்றி நிலையார் என்று சொன்னீர்கள்.

24. காரணம் யாது வென்ன கனலியும் புதனு மஞ்சில்
சீரிய குசனும் பார்க்கச் சென்மமும் நந்தி யாகக்
கூறினேனும் புத்திர தோடம் குருவுமே நாலில் நிற்க
வீரியன் புத்ர கர்மம் மேவுவா னென்று சொன்னேம்.

24. காரணம் என்ன? சூரியனும் புதனும் ஐந்தாமிடமாகிய கன்னியில் தங்கி, அவர்களைச் செவ்வாய் பார்ப்பதாலும், சென்ம லக்கினம் விருஷபமாக விருப்பதாலும் புத்திர தோஷங் கூறினேம். குரு நாலாமிடமாகிய சிம்மத்தில் இருப்பதால், ஜாதகனுக்குப் புத்திரனால் இறுதிக் கடன்கள் செய்யப் பெறும் என்று கூறினேம்.

25. பத்தினில் ராகு நிற்கப் பாலகன் மூன்றாம் தோடம்
சித்தமாம் நேர்ந்த தாலே செப்பினேம் புத்திர சங்கை
சுத்தத்தைச் சொல்லு மென்ன குமரனும் முன்சென்
[முத்தில்
வித்தகன் ஏழை யோரை விளங்காமல் செய்தா னென்றோம்.

25. இலக்கினத்துக்குப் பத்தாமிடமாகிய கும்பத்தில் ராகு தங்கியிருப்பதாலும், முற்பிறப்பில் ஏற்பட்ட தீவினையாலும், புத்திர தோஷங் கூறினேம். தீவினை யாது? என்று கூறுங்கள். இவன் முற்பிறப்பில் ஏழைகள் சிலரை வாழ முடியாமல் செய்தான்.

26. அவர்கள்தம் பூமி யாவும் அபகரித் தானும் மேலும்
நவமதி லவர்கள் சாபம் நல்கிற்று வாகை யாலே
பவமுள விச்சென் மத்தில் பாலர்கள் தோட மென்றோம்
தவசியே தோடம் தீரச் சாந்தியுங் கூறு கின்றோம்.

26. அவர்களுடைய நிலமனைத்தையும் அபகரித்துக் கொண்டான். மேலும், அந்த ஏழைகள் கூறிய சாபமும் இவனை யடைந்தது. ஆகையினால்,

இப்பிறப்பில் புத்திர தோஷம் எற்படும் என்று சொன்னேம். விரதங்களே மேற்கொள்ளும் பார்வதியே! புத்திர தோஷந் தீரச் சாந்தி யொன்றுஞ் சொல்லுகின்றேம்.

27. மனைவியுந் தானு மாக மாவலி நகரம் சென்று
கனமுள தீர்த்தம் தோய்ந்து காமன்தன் தந்தை தம்மை
அனையவே யருச்சித் தேத்தி அருமறை ஐவ ருக்குத்
தனம்புட்பம் கந்தத் தோடு தாம்பூல தான மீந்து;

27. மனைவியுந் தானும், மஹாபலிபுரத்துக்குச் சென்று, அங்கு கடலில் நீராடி, மன்மதன் தந்தையாகிய திருமாலுக்கு அருச்சனைகள் செய்து துதித்து, அரிய வேதங்களே யுணர்ந்த அந்தணர் ஐவருக்கு, பணம், மலர், சந்தனம் இவற்றுடன் தாம்பூல தானம் வழங்கி;

28. மறுபடி யுள்ளூர் மீண்டு மாதமோர் கார்த்தி கைக்கு
அரனடி யார்க்கு அன்னம் அன்புட னீவா னுகில்
பெருமையாய்ச் சுதர்கள் தோன்றும் பேசுவோம் ஆண்பா
[லொன்று
துருசான பெண்பால் ரெண்டு செப்புவோ மிவனுக் கேதான்.

28. மறுபடியும் உள்ளூருக்குத் திரும்பி, மாதம் ஒரு கிருத்திகையன்று, சிவனடியார்களுக்கு அன்புடன் உணவளிப்பானுகில், மேன்மையாகப் புத்திரர்கள் தோன்றுவர். ஆண்மகன் ஒருவனும், பெண்கள் இருவரும் இவனுக்குத் தோன்றுவர் என்று கூறினேம்.

29. மாதுரு இருந் றத்தாள் வாததே கத்தா ளென்றேம்
நிதிலாக் குணத்தா ளாகும் நிங்கதை யெண்ணு ளென்றேம்
மேதினில் மூர்க்கம் கொஞ்சம் விளம்புவோம் துணைவர்
[தம்மைக்
கோதிலா நவம தாகும் கூறுவோம் பெண்பால் மூன்று.

29. ஜாதகனின் தாயார் கரிய நிறமுடையவள். வாத தேக முடையவள் என்று கூறினேம். குற்ற மற்ற குணத்தை யுடையவள். நிலையை மனத்திலும் நினைக்கமாட்டாள் என்று சொன்னேம். மூர்க்கத்தன்மை சிறிதுண்டு. இவளுடன் பிறந்தவர்களைச் சொல்லுவோம். குற்ற மற்ற ஒன்பதின்மர் தோன்றுவர். அவர்களில் பெண்கள் மூவர் என்று சொல்லுவோம்.

30. ஆணது அவ்வா றுகும் அறைந்தன மாறுந் தீர்க்கம்
தோணவே மாதுர் பூர்வம் சொல்லுவோம் சிறுபாக் கத்தில்
பூணுஞ்செங் குந்த வம்சம் பிறந்துமே மதலை யுண்டாய்
வேணுகோ பாலன் பக்தி வித்தகி மிகவே கொண்டு;

30. ஆண்களும் மூவர். இவர்கள் அறுவரும் தீர்க்கமாவர் என்று சொல்லுவோம். தாயின் முற்பிறப்பைக் கூறுவோம். சிறுபாக்கம் என்ற ஊரில், செங்குந்தர் மரபில் பிறந்து, மக்களே யடைந்து, கண்ணபிரானிடத்தில் மிக்க பக்தி கொண்டு;

31. சிலசிலத் தலங்கள் சென்று சேதுவில் தீர்த்தம் தோய்ந்து
தலைவியு முள்ளூர் சென்று தன்வரன் முன்னே மாண்டு
குலவிய பிரமன் லக்கம் கோதையும் வரையப் பட்டு
இலகினு ளிக்கு லத்தில் ஈச்வரி கேட்க லுற்றுள்.

31. சில புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று, ஆங்கு எழுந்தருளியுள்ள கடவுளரைத் தரிசித்து, சேதுவில் நீராடி, பின்பு இவள் உள்ளூர் திரும்பி, தன் கணவனுக்கு முன்பே மரண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இக் குலத்தவளாகப் பிறந்தாள். பார்வதி கேட்கின்றாள்.

32. முன்சென்மம் செசவு வம்சம் முயன்றவ ளிச்சென் மத்தில்
உன்னதக் கங்கை வம்சம் உறைந்தகா ரணங்க னென்ன
உன்னத சேது தீர்த்தம் உறைந்ததா லிக்கு லத்தில்
அன்னவள் ஞதித்தா ளென்றேரும் அம்பிகை கேட்டி டாயே.

32. முற்பிறப்பில் செசவுத்தொழில் செய்யும் செங்குந்த மரபில் தோன்றி, இப்பிறப்பில், உயர்ந்த வேளாளர் வமிசத்தில் பிறந்த காரணம் யாது? மேன்மையான சேதுவில் நீராடியதால் இக்குலத்தில் பிறந்தாள் என்று சொன்னோம். பார்வதியே! கேட்பாயாக.

33. பின்சென்மம் பேரூர் தன்னில் பிறப்பளே யிக்கு லத்தில்
தன்வரன் சுகமுண் டாகித் தனதான்ய மேல்மே லோங்கி
உன்னத மதலை யுண்டாய உற்றோர்கள் மெச்ச வாழ்வள்
கன்னென மொழியி னுளே கழறுவோம் தந்தை பூர்வம்

33. மறுபிறப்பு, திருப்போரூரில் இக்குலத்தில் தோன்றுவாள். கணவனைப் பெற்று, அவனால் சுகமடைந்து, செல்வம், தானிய விருத்தி முதலியன மேன்மேலும் அதிகரித்து, உயர்ந்த புத்திர பாக்கிய முண்டாகி, உறவினர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவாள். கரும்பு போன்ற இனிய சொற்களைப் பேசும் பார்வதியே! இனி, தந்தையின் முற்பிறப்பைக் கூறுவோம்.

34. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோ மவ்வூர்
[கீழ்ப்பால்
சந்தத மருகி லேதான் சமவூரி லிக்கு லத்தில்
வந்தனன் பூமி யாலும் வளமுள செட்டி னாலும்
முந்திய லாபம் பெற்று முயற்சியாய்க் குடும்பி யாகி;

34. தகப்பனரின் முற்பிறப்பைச் சொல்லுவோம். முன்பு கூறப்பட்ட ஊருக்குக் கிழக்குத் திசையிலுள்ளதாகிய சிறிய ஊரில், இக்குலத்தில் பிறந்தான். வீடு நிலங்களாலும், செழிப்புள்ள வியாபாரத்தினாலும், மிக்க லாபமடைந்து, சொந்த முயற்சியினால் நல்ல குடும்பத்தை யுடையவனாய்;

35. வாழ்கின்ற நாளி லேதான் வந்தவூழ் தன்னைச் சொல்வோம்
தாழ்வான குலத்து மாதைத் தருகின்றேன் தனமு மென்று
பாழான காமத் தாலே பலாத்கார மாகச் சேர்ந்து
ஏழைக்குப் பொருள்த ராமல் லிருத்தினி னிவனே
[யென்றோம்.

35. வாழ்ந்து கொண்டிருந்த நாளில், ஏற்பட்ட தீவினையைச் சொல்லுவோம். கீழ்க் குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தியைக் கண்டு, உனக்குப் பணம் கொடுக்கின்றேன் என்று சொல்லி, கொடிய காமவிச்சையால் அவளுடன் பலாத்காரமாக இன்ப மனுபவித்தான். பின்பு அவளுக்குச் சிறிதும் பொருள் தராமல் இருந்துவிட்டான் இவன் என்று சொன்னோம்.

36. இதுவன்றி யின்னு மொன்று இயம்புவோம் வழிமார்க்
[கத்தை
அதிபனு மடைத்து விட்டா னுலய விருட்சம் தன்னைச்
சதியாக வெட்டி விட்டான் சார்ந்தது வந்தத் தோடம்
சதியாகப் பொய்ச்சூள் செய்தான் சேர்ந்தன விவைகு
[ளெல்லாம்.

36. இதுவல்லாமல், வேறு சொல்லுவோம். பலரும் செல்லும் பாதைக்குக் குறுக்கே வேலி போட்டு அடைத்தான். கோவிலில் இருந்த (கோவிலுக்குச் சொந்தமான) மாமொன்றை வெட்டி விட்டான். பொய்ச் சத்தியம் செய்தான். இந்தத் தோஷங்களனைத்தும் இவனைச் சேர்ந்தன.

37. அந்திய காலம் தன்னில் அவனுமே வாயு நோயால்
முந்தியே மரண மாகி மறையோனுல் வரையப் பட்டு
வந்தவ னிவனின் தந்தை யம்பிகை கேட்க லுற்றுள்
சந்தத முன்னு மூலே சார்ந்ததோ டங்க ளென்ன.

37. கடைசிக் காலத்தில், வாயு ரோகத்தினால் மரணமடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டுப் பிறந்தவன் இவன் தந்தை யாவன். பார்வதி கேட்கின்றாள். முற்பிறவியில் செய்த தீவினைகளால், இவனுக்கு இப் பிறப்பில் ஏற்பட்ட தோஷங்கள் யாவை ?

38. இச்சென்மந் தன்னி லேதான் இவனுமே தனிய னுயும்
மிச்சமாய்ச் சல்யம் நேர்ந்தும் விரயமாம் பூமி தானும்
அச்சமா மனத்த னுயும் அணுகியே வாழ்வா னுகும்
பச்சைமால் தங்கை யாளே பகர்ந்திட்ட மொழிகுன் ரூது.

38. இப் பிறப்பில் இவன் உடன் பிறந்தார் எவருமின்றித் தனியனுகி, கடன் தொல்லே ஏற்பட்டு, வீடு நிலங்கள் கைவிட்டுப் போய், எப்பொழுதும் திகிலடைந்த மனத்தனுய் வாழ்ந்திருப்பவ னுவான். நீல நிறமுடைய திருமா ளின் சோதரியே! நாங்கள் சொன்ன சொற்கள் தவரு.

39. பின்சென்மங் காளத்தி தன்னில் பிறப்பனே பிரம்ம சேயாய்
அன்னவன் அரசர் மூலம் அணுகியே சீவிப் பானும்
தன்னிலே விவர்கள் காலம் சாற்றுவோ முப்ப தாண்டில்
உன்னத வானி மாதம் உரைத்திட்டோம் தந்தை கர்மம்.

39. மறுபிறப்பு, திருக்காளத்தியில், அந்தணர் குலத்தவனுகப் பிறந்து, அரசரால் அதிகாரம் பெற்று ஜீவிப்பான். இனி, தாய் தந்தையர் மரண காலங் கூறுவோம். ஜாதகன் முப்பதாம் வயதில், ஆனிமாதம் தந்தையின் இறுதிக் கடன்கள் நடைபெறும் என்று சொன்னேம்.

40. அத்திரி சொல்லு கின்ரூர் அருக்கன்தன் தசைகா லத்தில்
சித்தமாய்த் தந்தை கண்டம் செப்புவோ மிவனுக் கேதான்
பத்தியாய் வதிட்டர் சொல்வார் புந்தியு மூச்ச மாக
உத்தம னருக்கன் சேரில் உரைக்கொணு தந்தக் காலம்.

40. அத்திரி முனிவர் சொல்லுகின்ரூர். ஜாதகனுக்குச் சூரிய மகா தசையில் தந்தையின் மரணம் நேரும் என்று கூறுவோம். வசிட்ட முனிவர் சொல்லுவார். புதன் உச்சமாகி, அவனுடன் சூரியனும் சேர்ந்திருந்தால், அக்காலத்தில் (சூரிய மகாதசை) தந்தைக்குக் கண்டம் நேரும் என்று சொல்ல முடியாது.

41. இராகுவுங் கரும மேற அவர்தசை சுயபு குத்திப்
பாகமாய் நடக்குங் காலம் பகர்ந்தனம் தந்தை கண்டம்
ஆகவே மாது ருக்கு அறைகின்ரே முப்பான் நாலில்
[1]தோகையின் மாதம் தன்னில் சொல்லுவோங் கண்டந்
[தானே.

41. இராகு கர்மஸ்தானத்தில் தங்கியிருப்பதால், ராகு மகா தசை ராகு புக்தி நடக்கும் சமயத்தில் தந்தையின் கண்டம் ஏற்படும் என்று சொன்

1. புரட்டாசி

னேம். தாயாருக்கு ஜாதகனின் முப்பத்து நாலாம் வயதில், புரட்டாசி மாதம் மரணம் உண்டாகும் என்று சொல்லுவோம்.

52. சாதகன் மரண காலம் சாற்றுவோ மறுபான் மூன்றில்
மேதினில் தேளின் மாதம் வளர்பிறைத் தசமி தன்னில்
தீதான சூலை யாலே தேகமே வாடு மென்றேரும்
மாதுகேள் பின்சென் மத்தை யறைகின்றேரு கேளுந் தாயே.

42. ஜாதகனுக்கு மரண காலத்தைச் சொல்லுவோம், அறுபத்து மூன்றும் வயதில், கார்த்திகை மாதம், பூர்வ பட்சம் தசமி திதியில் சூலை நோய் ஏற்பட்டு மரணமடைவான் என்று கூறினேம். இவன் மறு பிறப்பைக் கூறுகின்றோம். கேளுங்கள், தாயே!

43. உத்திரம் தணிகை கீழ்ப்பால் உதிப்பனும் பிரம சேயாய்ச்
சித்தமா யரசர் பக்கல் சீவிப்பா னிவனே யென்றேரும்
சுத்தமா யோகச் சேதி சொல்லுவோம் சனனம் தொட்டு
வித்தக னுருண் டுந்தான் விளம்புவோம் சல்ய முண்டு.

43. வடக்குத் திசையிலுள்ள திருத்தணிகைக்குக் கிழக்கில் இருப்பதொரு சிற்றூரில், அந்தணர் குலத்தவனாய்ப் பிறப்பான். இவன் அரசரை யடைந்து ஜீவிப்பான் என்று சொன்னேம். இனி, இவனுடைய யோக விவரங்களைக் கூறுவோம். பிறப்பு முதல் ஆறும் வயது முடிய, குடும்பத்தில் கடன் தொந்தரவு உண்டு என்று சொல்லுவோம்.

44. யோகமும் குறைவ தாகு முற்றதோர் பூமி சேதம்
பாகமாய் ரோக முண்டு பகருவோ மிதன்மே லாகச்
சாகின்ற வரைக்கு மேதான் சந்திரன் போலே யோகம்
ஆகவே பலனுண் டாகும் ஆலயப் பணிகள் செய்வன்.

44. நலங்கள் குறையும். நில புலன்கள் நஷ்டமாம். வியாதியுண்டு. அதற்குமேல் இவன் இறக்கும்வரை வளர்பிறைச் சந்திரன்போல யோகங்கள் உண்டாம். நல்ல பலன்கள் ஏற்படும். இவன் காலத்தில் கோயில் திருப்பணிகள் பல புரிவான்.

45. சோலைகள் துரவு செய்வன் சுகமுளான் பெருமை யுள்ளான்
சிலவான் பூமி சேர்ப்பன் சல்லிய மில்லா னுகும்
ஞாலமேல் கீர்த்தி மானும் நாட்டினில் செட்டுச் செய்வான்
பால்பசு விருத்தி யுள்ளான் பாக்கிய முடைய னுமே.

45. சோலைகள், கிணறுகள் அமைப்பான். சௌக்கிய முடையவன். பெருமை யுள்ளவன். ஒழுக்கமுடையோன். வீண புலன்களைச் சேர்ப்பான்.

கடனில்லாதவ னுவான். உலகில் புகழ்பெறுவான். வியாபாரங்கள் செய்வான். பால்தரும் பசுக்கள் விருத்தி யுடையவ னுவான். பாக்கியங்க ளுள்ளவன்.

46. இரவிக்கு விருபக் கத்தில் இனியகோ ளிருப்ப தாலே
இரவியின் காலம் தொட்டு இயம்புவோம் யோகம் தானும்
இரவியின் தசையி லேதான் இடுக்கமாய் ரோகம் வாய்க்கும்
இரவிமுன் பனிபோல் நீங்கும் ஈச்வரி கேட்டி டாயே.

46. சூரியனிருக்கு மிடத்துக்கு முன்னிடத்(சிம்மம்)திலும், பின்னிடத்(துலாம்)திலும், சுபக் கிரகங்கள், குரு, சுக்கிரன், முறையே தங்கியிருப்பதால், சூரிய மகாதசை முதற்கொண்டு, ஜாதகனுக்கு யோகங்களுண்டாம் என்று சொல்லுவோம். சூரிய மகா தசையில் இவனுக்கு வியாதியும் உண்டாகும். ஆனால், அது, சூரியன் முன்பு பனிபோல உடனே நீங்கும். பார்வதியே! கேட்பாயாக.

47. பாலகன் செனிக்குங் காலம் பளிங்குதன் தசையி லேதான்
கோலமா யாண்டு மாறும் கூறுவோம் திங்கள் ஒன்று
ஞாலமே லிருபா னுளும் நாட்டுவோம் பலனே யாங்கள்
கால்களில் ரோகம் வாய்க்கும் கடனது மிகவுண் டாமே.

47. ஜாதகன் பிறப்புக் காலத்தில் சுக்கிர மகா தசை இருப்பு; ஆறு வருஷங்கள், ஒரு மாதம், இருபது நாட்கள் ஆம். இக் காலத்துக் சூரிய பலன்களே நாங்கள் சொல்லுவோம். கால்களில் வியாதி யுண்டாகும். குடும்பத்தில் கடனும் மிகுதியாக ஏற்படும்.

48. வரவுக்குச் செலவ னேகம் மாநிலம் விரய மாகும்
குறையுண்டு குடும்பம் தன்னில் குறித்தனம் காலி சேதம்
பெருமையாய்த் துணைவர் விருத்தி பேசுவோம் தந்தை
[நோயாம்
அறந்தனை வளர்க்கு மாதே அறைகின்றேம் விபரம்
[ரெண்டில்.

48. வருவாய்க்கு அதிகமாகச் செலவு உண்டாகும். விளை நிலங்கள் கைவிட்டுப் போம். குடும்பத்தில் குறைகள் ஏற்படும் என்று சொன்னோம் கால்நடைகள் சேதமாம். சகோதர விருத்தி யுண்டாம் என்று சொல்லுவோம். தந்தைக்கு வியாதி வரும். தருமத்தை வளர்க்கின்ற அம்பிகையே! மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம்.

———

ஜாதகம் 65

1. சந்திரன் புகரும் வில்லில் சனிகேது மாதை புக்க
புந்திதேள் ராகு கெண்டை பொன்னவன் நந்தி யாகச்
செந்தியு மிரவி கோலில் சென்மமும் விடைய தாக
இந்தவார் கோளு நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் சுக்கிரன் தனுசிலும், சனி கேது கன்னியிலும், புதன் விருச்சிகத்திலும், இராகு மீனத்திலும், குரு விருஷபத்திலும், செவ்வாய் சூரியன் துலாத்திலுமாக, இவ்விதம் கவக்கிரகங்களும் தங்கி, இலக்கினம் விருஷபமாக விருந்தால் உரிய பலன்களைச் சொல்லுவீர்.

ராகு		லக்கினம் குரு	
	இராசி சக்கரம்		
சந்திரன் சுக்கிரன்	புதன்	செவ்வாய் சூரியன்	சனி கேது

2. உமையவள் கேட்கும் போது உரைக்கின்ரூர் புயண்டர்
[தாமும்
அமைந்திடு மாண்பால் சென்மம் அறைகின்ரூ மில்லந்
[தானும்
யமனுத்ரம் வீதி யாகும் இந்திரன் வாடை யாகும்
சிவன்கோட்டம் மேற்கில் தங்கும் தட்சிணம் சாலை
[மார்க்கம்.

2. இங்ஙனம் பார்வதி கேட்கும்போது, புஜண்ட மாமுனிவர் சொல்லுகின்ரூர். இஃது ஆண் பிறப்பு. இவன் பிறக்கும் வீட்டைச் சொல்லுகின்ரூம். தெற்கு வடக்கான தெருவில், வடக்கு வாடையிலுள்ள வீடாகும். வீட்டுக்கு மேற்கில் சிவபெருமான் கோயில் உள்ளது. தெற்கில் பலருஞ் செல்லும் சாலையொன்று இருக்கின்றது.

3. தந்தியு முத்ரம் நிற்கும் சாற்றினேம் வடகீழ் தன்னில்
கந்தன்தன் கோட்டம் பாழாம் கனத்ததோர் சேரி சூழி
சந்தத மார்க்க முண்டு சாருமிவ் வடையா ளத்துள்
எம்மையே வொருபா லில்லம் எதிரில்ல மில்லை யென்ரூம்

3. விநாயகப் பெருமான் வடக்கில் கோயில் கொண்டுள்ளார். வட கிழக்கில் பாழடைந்த முருகப் பிரான் கோயிலொன்றுளது என்று சொன்னேம். பல சாதி மக்களும் சேர்ந்திருக்கும் சேரியாம் அவ்வூர். அங்கு நீர் நிலைகள், சாலை முதலியன உள்ளன. பொருந்திய, இவ் வடையாளங்கள் உள்ள இடத்தில் ஜாதகன் பிறந்தான். அங்கு ஒரு வரிசையிலேயே வீடுகளுள்ளன. இவன் பிறந்த வீட்டுக்கு எதிர் வரிசையில் வீடுகள் இல்லை.

4. இன்னவன் சென்ன யோகம் எழில்பெறும் தந்தை யோகம்
மன்னிய அன்னை யோகம் வரும்புத்ர களத்ர யோகம்
தன்னிலே துணைவர் யோகம் சாற்றுவோம் முன்பின் [சென்மம்
பின்னையும் சாந்தி தானும் பேசுவோ மிந்நூல் தன்னில்.

4. ஜாதகன் சென்ன யோகங்கள், தந்தை, தாய், உடன் பிறந்தார், மனைவி, பிறக்கும் பிள்ளைகள் ஆகியோர் யோகங்கள், முற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் சொல்லுவோம். மேலும் இந் நூலில் சாந்தி பரிகாரங்கள் சிலவற்றையும் கூறுவோம்.

5. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் சிவந்த [மேனி
சந்ததம் ஓடிசல் தேடி சரசமாய் வார்த்தை சொல்வன்
தன்தன முடைய னுகும் சன்மார்க்கன் யூகை சாலி
நொந்தவர் தம்மைக் காப்பன் நீங்காத செல்வ முள்ளான்.

5. ஜாதகன் தந்தையின் குணங்களை நாங்கள் சொல்லுவோம். சிவந்த நிறமும் மெலிந்த உடலுமுள்ளவன். சல்லாபம் செய்வான். சொந்த முயற்சியால் தேடிய பொருளைப் பெற்றவன். நல்வழியைக் கடைப் பிடிப்பவன். சாமர்த்தியவான். துன்ப மடைந்தவர்களைக் காப்பான். தன்னை விட்டு நீங்காத செல்வ முள்ளவன்.

6. ரோமங்கள் நீட்சி யில்லான் நுவலப தேசங் கொள்வான்
தீமையை யொருவர்க் கெண்ணன் சென்உப காரஞ் [செய்வான்
தாமத குணத்த னுகும் தைரியன் பெருமை யுள்ளான்
நேமியில் சில னுவன் நிகழ்த்துவோ மிவனை தானும்.

6. தலை மயிர் நீளமாக இல்லாதவன். பெரியோர் கூறும் உபதேச மொழிகளை ஏற்பான். எவருக்கும் கெடுதி நினையான். மக்களுக்கு உதவி செய்வான். தாமதமாக எதனையும் நிரகிக்கும் குணமுள்ளவன். தைரிய சாலி. பெருமை யுடையவன். உலகில் நல்லொழுக்க முடையனாக வாழ்வான் இவன் என்று சொல்லுவோம்.

7. மூலச்சூ டுடைய னுவன் முயற்சியாய்க் குடும் பியாவன்
சாலவே கிருஷி செட்டுத் தானவன் செய்வா னென்றேரும்
ஞாலமேல் சுகபு சிப்பன் நளினமாய் வார்த்தை சொல்வன்
தோள்மார்பு வடிவ முள்ளான் சொல்லது தவறு
[னென்றேரும்.

7. மூலச் சூட்டு நோயுடையவன். சொந்த முயற்சியால் நல்ல குடும் பியாக விருப்பான். பொருத்தமாக வியாபாரங்கள், பயிர்த் தொழில் முதலிய வற்றை இவன் செய்வான் என்று கூறினேம். உலகில் என்றும் சுகமான உணவை உட்கொள்ளுவான். சுகமாகப் பேசுவான். மார்பு, தோள் இவற் றில் அடையாளங்க ளுள்ளவன். சொல் தவறுதவன் என்று கூறினேம்.

8. தந்தைநாள் யோக முள்ளான் சல்லிய மில்லா னென்றேரும்
பிந்தியும் வறுமை யில்லான் பிரபல பூமி சேர்ப்பன்
சொந்தமாய்ச் சகடு முள்ளான் சுத்தநன் மனத்த னுகும்
முந்திய கோபங் கொஞ்ச மெய்திடு பித்த தேகி.

8. இவன் தந்தையின் காலத்திலேயே அதிர்ஷ்ட முள்ளவன். கட னில்லாதவன். பிற்காலத்தில் தரித்திர மில்லாதவன். அதிகமாக வீடு நிலங்களைச் சேர்ப்பான். சொந்த வண்டி யுடையவன். தூய்மையான மன முள்ளவன். முன் கோபம் சிறிதுண்டு. பித்ததேகி யாவன்.

9. உடன்பிறந் தோனு ணென்று உத்தமி யவ்வா ருகும்
நடுவது வயதி லேதான் நாயகி விதவை யாவள்
அடைவுடன் துணைவன் சேதி அறைகின்றேரும் சிவந்த
[மெய்யன்
கடல்போலக் கீர்த்தி யேற்பன் கனராச ரிட்டங் கொள்வன்.

9. இவனுக்குச் சகோதரன் ஒருவனும், சகோதரி யொருத்தியும் உள ராவர். சகோதரி மத்திய வயதில் கைம்பெண் ணுவாள். சகோதரன் செய் தியைச் சொல்லுகின்றேரும். சிவந்த நிற முள்ளவன். கடல் போல் மிகு தியான புகழை யடைவான். பெரிய அரசாங்கவின் பிரியத்தைத் தேடிக் கொள்ளுவான்.

10. உண்டியும் சுகமாய்க் கொள்வன் உலகுக்கு நல்லோ னுவன்
பண்டிபண் டார முள்ளான் பரதேசம் சிலநாள் வாசம்
தண்டமிழ்க் கல்வி யாலே தானதி காரம் செய்வன்
முண்டக ரேகை யுள்ளான் மொழிகுவான் சுகமாய்
[வார்த்தை.

10. சுக போஜனம் கொள்ளுவான். உலகத்தினருக்கு நல்லவன். வண்டி முதலான வாகன வசதிகள், கிடங்குகள் உடையவன். வெளி நாடு களுக்குச் சென்று சிலகாலம் வாசம் செய்வான். தண்மையான தமிழ்க் கல்வி யில் நன்கு தேர்ந்து, அதனால் சில காலம் உத்தியோகம் வகிப்பான். கையில் பத்ம ரேகை யுடையவன். சுகமாகப் பேசுவான்.

11. நல்லோர்க்கு நல்ல னுவன் நாதனுர் பக்தி கொள்வன்
சொல்லுமே நெறியுள் ளோனும் துறவிகட் கன்பு பூண்பன்
அல்லலு மில்லா னுகும் அரசனுல் சீவிப் பானும்
புல்லிய குறவு கொள்ளான் புகன்றனம் மாமி ரெண்டு.

11. நல்லவர்க்கு நல்லவன். இறைவன் மீது பக்தி கொள்ளுவான். பேச்சில் ஒழுங்குள்ளவன். துறவிகளிடம் அன்பு பூண்பான். துன்பங்க ளில்லாதவன். அரசன் ஆதரவில் ஜீவிப்பான். கீழோர் சேர்க்கையைக் கொள்ள மாட்டான். இவனுக்கு மாமியர் இருவர் என்று சொன்னேம்.

12. எப்படி மாமி ரெண்டு இயம்புவீர் முனியே என்ருள்
செப்புவோ மனையா னுக்குத் தாய்மார்க ளிருவ ரென்றேம்
மைப்படி மனையா னொன்று வருஞ்சுத ராண்பால் ரெண்டு
எய்ப்புடன் பெண்பா லொன்று இணைந்திடு மூன்றும்
[தீர்க்கம்.

12. இவனுக்கு எங்ஙனம் மாமியர் இருவர் ஆவர்? கூறுங்கள் முனி வரே! என்று பார்வதி கேட்டாள். சொல்லுவோம். இவன் மனைவிக்குத் தாயாரிருவர் என்று சொன்னேம். இவனுக்கு மனைவி ஒருத்தியே. மக் களில், ஆண்கள் இருவரும் பெண்ணொருத்தியு மாவர். இவர்கள் மூவரும் தீர்க்கமாக விளங்குவர்.

13. மற்றவை சேத மாமே மைந்தர்கள் யோக வானும்
குற்றமில் லாம லொன்றுய்க் குலவுவா னென்று
[சொன்னேம்
உற்றதோர் குணத்தா னுக்கு உதிப்பனு மேழாஞ் சென்மம்
வெற்றிவேல் தம்மைப் பெற்ற வித்தகி கேட்டி டாயே.

13. மேலும் பிறப்பன சேதமாம். புதல்வர்கள் யோக முடையவர்க ளாகத் திகழுவார்கள். இவன் புதல்வர்களுடன் மன வேற்றுமை யின்றி, ஒரே குடும்பமாக வாழ்வான் என்று கூறினேம். முன்பு கூறப்பட்ட குணங் களை யுடைய தந்தைக்கு ஏழாம் பிறப்பாக இந்த ஜாதகன் பிறப்பான். வெற்றியைத் தரும் வேலாயுதத்தைக் கையிலேந்தும் முருகக் கடவுளைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

14. இன்னவன் நிறங்கு ணத்தை இயம்புவோம் சிவந்த மேனி
அன்னவன் சமதே கத்தன் யாரையும் உறவு கொள்வான்
உன்னத கல்வி ரெண்டு உரைத்திட்டோம் தீர்க்க மாக
பன்னியே பேச வல்லன் பாருகள் விருத்தி செய்வன்.

14. ஜாதகன் நிறம் குணம் இவைகளைச் சொல்லுவோம். சிவந்த உடல். சமமான உடலமைப் புள்ளவன். யாவரையும் உறவாகக் கொள்ளு வான். உயர்ந்தவையான இருவிதக் கல்வி கற்பான். தீர்க்க வயதுடன் இருப்பான் என்று சொன்னேம். பன்னிப் பன்னிப் பேசுவதில் வல்லவன். நிலபுலன்களை விருத்தி செய்வான்.

15. நல்லவன் நல்ல வர்க்கும் நலமிலார் தங்க ளுக்கும்
புல்லர்க்கு விரோதி யாவன் புகழுளான் வறுமை யில்லான்
மல்லுரை தனக்கு அஞ்சான் மாற்றுனை எதிர்த்து வெல்வன்
சொல்லது விரண்டு முள்ளான் தோகையர் மோக னுவன்.

15. நல்லவர்க்கு நல்லவனு மிருப்பான். கெட்டவர்கட்கும், அற்ப புத்தி யுடையவர்களுக்கும் விரோதியாக இருப்பான். கீர்த்தி யுடையவன். தரித்திரம் இல்லாதவன். வீண் பேச்சுப் பேசி, சண்டைக் கிழுப்பவர்களைக் கண்டு பயப்பட மாட்டான். விரோதிகளைத் தகுதியான முறையில் எதிர்த்து வெற்றி கொள்ளுவான். இரு விதமாகப் பேசுவான். பெண்கள்பால் மோக முடையவன்.

16. கருத்ததோர் குழலா னேது காரிய மறிந்து செய்வன்
பொறுத்திடுங் குண மு முண்டு பொய்யுரை யற்ப முண்டு
சிறுத்தவர்க் குதவி செய்வன் செட்டுமே செய்வா னுகும்.
அறத்தின்மே லிச்சை யுள்ளான் அரசர்பூ சிதனே யாவன்.

16. கருமையான தலைமயி ருடையவன். காரண் காரியங்களை யுணர்ந்து எவற்றையும் செய்வான். பிறர் தனக்குச் செய்த குற்றங்களைப் பொறுக்கும் குணமும் இவனுக்கு உண்டு. சிறிது பொய்யும் பேசுவான். சிறுமை யடைந்தவர்களுக்கு உதவி புரிவான். வியாபாரங்கள் செய்வான். தருமத்தில் ஆசையுள்ளவன். அரசர்களால் மதிக்கப் படுபவன் ஆவான்.

17. தன்னினத் தோர்க்கு நல்லோன் தன்கரம் ருத்ர ரேகை
பொன்னெடு பணிதி சேர்க்கை புதுமனை சித்ரம் செய்வன்
இன்னவன் நெய்பா லிட்டன் இசைந்திடு படியால் தானும்
அன்னியர் யாரு மெச்ச ஆவுகள் விருத்தி யுள்ளான்.

17. தன் இனத்தவர்களுக்கு நல்லவன். இவன் கையில் உருத்ர ரேகை பெற்றவன். பொன், ஆபரணங்கள் இவற்றைச் சேர்ப்பான். புது வீடு கட்டி, அதனைச் சித்திரங்களால் அழகு படுத்துவான். நெய், பால் முதலியவற்றில் விருப்ப முடையவன். பொருந்தும் வகையில் அயலார் எவரும் பாராட்ட வாழ்வான். பசுக்கள் விருத்தி யுடையவன்.

18. தாதைநாள் முதலாய் யோகம் தங்கிடும் பிறைபோல்
[யோகம்
தீதிலாக் குடும்ப மென்றேரும் தெய்வமும் கந்தன் காளி
ஓதுவோம் துணைவர் தம்மை உத்தம ணண்பா லொன்று
மேதினில் பெண்பால் நான்கு விருத்தியா மென்று
[சொன்னேம்.

18. தகப்பனர் காலம் முதல் வளர்பிறைச் சந்திரன் போல யோகங் கள் பெருகும். தீங்கில்லாத குடும்பம் இவனுடையது என்று கூறினேம். இவன் முருகப் பிரானையும், காளிதேவியையும் வணங்குவான். உடன் பிறந் தார்களைப் பற்றிச் சொல்லுவோம். உத்தம குணங்களுடைய சகோதரன் ஒருவனும், சகோதரிகள் நால்வரும் பிறந்து வளர்ச்சி யடைவர் என்று கூறி னேம்.

19. ஆண்துணை மூத்தோ ரில்லான் அறைகின்றேரும் மிளைய
[ணுகப்
பூணுவோ மவன்தன் சேதி புயபல முடைய ணுவன்
தோணவே கல்வி கற்பன் துருசான நடையு மாவன்
பான்மையாய்ப் பேச வல்லன் பத்தினி நேய ணுமே.

19. இவனுக்கு மூத்த சகோதர ரில்லை. இருப்பவன் இளையவன் என்று சொல்லுகின்றேரும். அவன் செய்தியைச் சொல்லுவோம். தோள் வலியுடையவன். கல்வி கற்பான். தரிதமான நடை யுடையவன். தகுதி யாகப் பேச வல்லவன். மனைவிக்குப் பிரிய மானவன்.

20. தொடுத்ததை வெல்வா ணுகும் சொல்லு முன் கோபி யாகும்
அடுத்தவர் தம்மைக் காப்பன் அடாநிந்தை பேச வல்லன்
விடுகதை யதிகம் சொல்வன் மெல்லியர் மோக ணுவன்
தடபுடல் செய்கை யுள்ளான் தாதைபோல் வாழ்வா ணுமே.

20. தொடங்கிய செயலே வெற்றியுடன் முடிப்பான். கூறு முன்பு கோப மடைவான். தன்னை யடைந்தவர்களைக் காப்பான். சிலர் மீது வீண் பழிச் சொற்கள் கூறுவதில் வல்லவன். விடுகதைகள் பல சொல்லுவான். பெண்கள்பால் மோக முடையவன். ஆடம்பரமான செயல்கள் பல செய் வான். தகப்பனாரைப் போல் சிறப்புடன் வாழ்வான்.

21. மனைவியு மொன்றே யாகும் வருஞ்சுத ராண்பால் ரெண்டு
கனமுள பெண்பா லவ்வார் கழறுவோம் தீர்க்க மாக
இனமதால் பெருமை யுள்ளான் இராசபூ சிதனு மாவன்
இணையிலா வாழ்வா னென்றேம் இயலுடைத் தேவி
[கேளாய்.

21. இவனுக்கு மனைவி ஒருத்தியே. புதல்வர்கள் இருவரும், அங்ஙனமே பெண்கள் இருவரும் தோன்றித் தீர்க்கமாவர் என்று சொல்லுவோம். தன்னைச் சேர்ந்தவரால் பெருமை யுடையவன். அரசர்களால் மதிக்கப் படும் தன்மையையும் பெறுவான். ஒப்பில்லாத வாழ்க்கை நடத்துவான் என்று சொன்னேம். அழகுடைய பார்வதியே! கேட்பாயாக.

22. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோம் பதின்மூன்
[றுண்டில்
மேதினி லுத்தி ரத்தில் விளங்கிடு நகரம் தன்னில்
கோதிலா மாதர் வர்க்கம் குறித்தனம் மனைவி தானும்
சோதித்து நவக்கோ ளாலே சொலுமொழி குன்று
[தென்றேம்.

22. ஜாதகன் திருமண காலத்தைச் சொல்லுவோம். பதின்மூன்றும் வயதில், வடக்குத் திசையிலுள்ள நகரம் ஒன்றிலிருந்து, இவன் தாய் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பெண் மனைவியாக வாய்ப்பாள் என்று சொன்னேம். நவக் கிரகங்களையும் நன்கு ஆராய்ந்து நாங்கள் சொன்ன சொற்கள் தவறு என்று கூறினேம்.

23. அவள்நிறம் சிவந்த மேனி அழகுளாள் பொறுமை சாலி
நவனியில் தாயார் ரெண்டு நாட்டுவோ மிளையா ளுக்கு
இவ்வுமே வுதிப்பா ளாகும் இன்பமாய் வார்த்தை
[சொல்வாள்
பவமுள வயது தீர்க்கம் பகருவோம் புத்திர பாகம்.

23. மனைவியின் நிறம் சிவப்பு. அழகுடையவள். அடக்க முள்ளவள். தாய்மார் இருவர் என்று சொல்லுவோம். இவள் இளையவளுக்குப் புதல்வியாகத் தோன்றுவாள். இன்பத்தைத் தரும் சொற்களைப் பேசுவாள். இவள் வயது தீர்க்கம். புத்திர பாவத்தைச் சொல்லுவோம்.

24. அத்திரி சொல்லு கின்றூர் அவனுக்குத் தாரம் ரெண்டு
சித்தமாய் நேரு மென்றேம் செப்புவீர் அந்தச் சங்கை
சத்தமன் சேயே யாகிச் சரத்தினி லிருப்ப தாலும்
அதிதிக்குப் பகையோன் நீச்சம் அணுகியே ஆறி லுஞ்சேர்;

24. அத்திரி முனிவர் கூறுகின்றார், ஜாதகனுக்கு இரு மனைவியர் நிச்சயமாய் ஏற்படுவர் என்று சொன்னேம். அதற்குக் காரணங்கள் கூறுங்கள். களத்திர ஸ்தானமாகிய ஏழாம் வீட்டுக் குரியவன் செவ்வாயாகி, சர ராசியான துலாத்தில் அவன் தங்கி யிருப்பதாலும், கேதுவுக்குப் பகைவ னுகிய சூரியன் நீச்சமாகி, துலாத்தில் இருப்பதாலும்;

25. காரியும் ஏழைப் பார்க்கக் கழறினேம் தாரம் ரெண்டு
கூறுவார் பராசர் தாமும் குடும்பத்தோன் ஏழில் நின்று
தீரமாய்க் குருவும் பார்க்கச் செப்பினேம் தார மொன்றே
பாரியா ளொருத்திக் கேதான் பதிப்பன்மாங் கலியம்
[ரெண்டு.

25. சனி ஏழாமிடத்தை(களத்திர ஸ்தானத்தை)ப் பார்ப்பதால், மனைவியர் இருவர் என்று சொன்னேம். இதனைக் கேட்டு, பராசரர் சொல்லு வார். குடும்ப ஸ்தானத்துக் குரிய புதன், களத்திரஸ்தானமாகிய விருச்சிகத் தில் தங்கி, குருவினுல் பார்க்கப் படுவதால், மனைவி ஒருத்தியே! ஒரு மனை விக்கே இரு மாங்கலியங்கள் அணிவிப்பான்.

26. முத்திரை யிரண்டு என்று மொழிந்திட்டீர் முனியே நீர்தாம்
குத்தத்தைச் சொல்லு மென்னக் குறித்தன முப்பா னேழில்
சித்தமாய்ச் சோர ராலே தேவிமாங் கலியம் நீங்கிச்
சுத்தமாய் வேறு முத்ரை தோன்றிடு மென்று சொன்னேம்.

26. முனிவரே! நீங்கள் இருமாங்கலியம் இரண்டு அணிவிப்பான் என்று கூறினீர்கள். அதற்குரிய காரணத்தைக் கூறுங்கள். முப்பத்தேழாம் வயதில் இவன் மனைவியின் மாங்கலியம் திருடரால் அபகரிக்கப்படும். பின்பு வேறு மாங்கலியம் அணிவிப்பான் என்று சொன்னேம்.

27. இதுவன்றி வேறு சங்கை யியம்பொணு திவனுக் கேதான்
வதிட்டரும் சொல்லு கின்றார் மாதுவு மபிமா னத்தாள்
பதியினில் வருவா ளாகும் பகருவோம் முப்பா னைந்தில்
சதியிலா வடுக சாதி தானவ ளென்று சொன்னேம்.

27. இது வல்லாமல், வேறு தோஷம் எவையும் இவனுக்குச் சொல்ல முடியாது. வசிஷ்ட முனிவர் கூறுகின்றார். இவனுக்கு அபிமானப் பெண் ஒருத்தி ஏற்படுவாள் என்று சொல்லுவோம். அவள், இவனுடைய முப்பத் தைந்தாம் வயதில் வருவாள். வடுகர் குலத்தைச் சேர்ந்தவள் என்று சொன் னேம்.

28. அத்திரி முதலா யுள்ள அருமுனி யிவ்வார் கூறப்
பத்தினி சொல்லு கின்ருள் பகர்ந்திட்டீர் யாவு முண்மை
சித்தசன் தனக்குப் புத்திரர் சேதியைச் சொல்லு மென்ன
வித்தகர் பராசர் சொல்வார் மெல்லியே கேட்டி டாயே.

28. அத்திரி முதலான அரிய முனிவர்கள் இங்ஙனம் சொல்ல, பார்வதி கேட்கின்ருள். இதுவரை ஜாதகனுக்கு உண்மையான பலன்களைக் கூறினீர்கள். இவனுக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும் விவரத்தைச் சொல்லுங்கள் என, பராசரர் சொல்லுவார். மென்மைத் தன்மை வாய்ந்த பார்வதியே! கேட்பாயாக.

29. உதித்தவன் தனக்குப் புத்ரர் உரைக்கவே மாட்டோ மம்மா
விதியினை லுதித்தா லுந்தான் விளங்காது யிவனுக் கேதான்
அதுஎவ்வார் சொல்லு மென்ன அஞ்சினில் காரி கேது
சதியுட னிருப்ப தாலே சாற்றினேஞ் சுதர்கள் தோடம்.

29. ஜாதகனுக்குப் புத்திர பாக்கியம் ஏற்படும் என்று சொல்லமாட்டோம்; தாயே! இவனுக்குப் புதல்வர்கள் பிறந்தாலும் நிலைத்திரார். அது என்? என்று சொல்லுங்கள். புத்திர ஸ்தானமாகிய ஐந்தாமிடத்தில் சனி, கேது குற்றமாகத் தங்கி யிருப்பதால் புத்திர தோஷங் கூறினேம்.

30. இதுவன்றிப் பூர்வ சென்மம் இவன்மிகு பாவம் செய்தான்
அதனலே கருவு தோடம் அறைந்தன மிவனுக் கேதான்
அதிபன்முன் சென்மம் தன்னில் வந்ததோர் வினையைச்
[சொல்வீர்
மதிநுதல் மாதே யாங்க ளறைகின்றேரும் விபர மாக.

30. இது தவிர, முன் பிறப்பிலும் இவன் மிகுந்த தீவினைகள் செய்தான். அதனல் இவனுக்குத் தோன்றும் பிள்ளைகள் கர்ப்பத்திலேயே தோஷம் அடைவர் என்று சொன்னேம். முற்பிறப்பில் இவனுக்கு ஏற்பட்ட தோஷங்களைச் சொல்லுங்கள். பிறைச் சந்திரன் போல் வளைந்த புருவத்தை யுடைய பார்வதியே! அவற்றை விவரமாக நாங்கள் சொல்லுகின்ரோம்.

31. சாதகன் முன்சென் மத்தைச் சாற்றுவோம் மாவலி பக்கல்
மேதினில் போரூர் தன்னில் விளங்கினன் வைசியச்
[சேயாய்ப்
போதவே செட்டுச் செய்து பூமியு மதிக முண்டாய்த்
தீதிலா வாழும் நாளில் செப்புவோம் ஊழி தானே.

31. ஜாதகன் முற்பிறப்பைச் சொல்லுவோம். மஹாபலிபுரத்துக்குப் பக்கத்தில் உள்ள திருப்போரூரில், வைசியர் குலப் புதல்வனாய்த் தோன்றினான். தக்க முறையில் வியாபாரம் செய்து, நில புலன்களை மிகுதியாகப் பெற்று, குற்றமில்லாது வாழுகின்ற காலத்தில் ;

32. அங்நகர் நதியின் பக்கல் அணுகிய அரசின் கீழே
தங்தியும் நாகம் நிற்கும் தானவர் வாசம் கொள்வார்
மங்திர மோதும் வேத மறையவர் பூசை செய்வார்
இங்தவா ரிடத்தி லேதான் இரவினில் ஏது செய்தான்.

32. அவ்வூர் ஆற்றங்கரையில் உள்ள அரசமரத்தின் கீழே விநாயகர் எழுந்தருளியிருப்பார். நாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும். பல தேவர்கள் அங்கு வாசம் செய்வர். மந்திரங்களை ஜபிக்கும் அந்தணர்கள் அங்கு வந்து பூஜை முதலியன புரிவார்கள். இவ்விடத்தில் ஒருநாள் இரவு வேளையில் இவன் என்ன செய்தானென்றால் ;

33. விதவையை மரத்தின் கீழே வித்தகன் போகம் துய்த்தான்
அதனாலே கருவு தங்கி அநேகமாய் அவிழ்த்த மீயச்
சதியினால் கருவு நீங்கிச் சத்தியு மாண்டா ளென்றோம்
இதுவொரு தோட மென்றோம் இசைக்கின்றோம் மேலுங் [கேளே.

33. கைம்பெண் ஒருத்தியுடன், அரச மரத்தின் கீழ் இன்பந் துய்த்தான். அதனால் அவளுக்கு கர்ப்பமுண்டாகவே, இவன் பல மருந்துகளை அவளுக்குக் கொடுத்தான். மருந்துகளால் கருவழிந்து பெண்ணும் மரண மடைந்தாள் என்று கூறினோம். இதுவொரு தோஷம் என்று சொன்னோம். மேலுங் கூறுகின்றோம் ; கேட்பாயாக.

34. மேலான மறையோன் தன்னை வெகுளாளாய் நேசம் செய்து
ஏலவே புத்திரி மேலே இவன்மோகம் கொண்டு மேதான்
ஞாலமேல் பணிகள் தூசு நாயகன் அளித்து வந்து
ஆலம்போல் சிலேடை வார்த்தை அறைந்தன னவளுக் [கேதான்.

34. மேன்மையுள்ள அந்தணன் ஒருவனை நீண்ட நாட்களாக நட்பாகக் கொண்டு, அவன் புதல்வி மீது, இவன் மோகமடைந்து, பொன்னாபரணங்கள், ஆடைகள் முதலியன அளித்து, விஷம்போன்று கொடிய சிலேடை வார்த்தைகளை அவளிடம் கூறினான்.

35. தாழ்வான குலத்தோன் சொல்லைத் தட்டிலு ளந்த மாது
ஆழியில் போகம் துய்த்தால் அநேகபா வங்கள் நேரும்
வாழ்வுமே குறைவு மாகும் மங்கையுஞ் சொல்லும் போது
பாழான காமத் தாலே பலாத்கார மாகச் சேர்ந்தான்.

35. தாழ்ந்த குலத்தவனுன இவன் சொல்லை அந்தப் பெண் மறுத்தாள். என்னுடன் நீ இன்ப மனுபவித்தால், பல பாவங்கள் உன்னை யடையும்; உன் வாழ்வும் தாழ்வடையும்; என்று பலவிதமாக அவள் கூறியும், பாழான காமவிச்சையினுல் அவள் கூறியவற்றைக் கேளாமல் பலாத்காரமாக அவளைச் சேர்ந்தான்.

36. அந்ததோர் சேதி தன்னை அவள்தாயு மறிந்து கொண்டு
பிந்தியு மனவெ றுப்பால் புகலுவாள் சாபம் தானும்
என்மகள் போகம் துய்த்த இடும்பனும் பாபிக் கேதான்
சந்ததி யில்லா தாகித் தன்செல்வம் குறைவுண் டாகி;

36. அந்தச் செய்தியை அவள் தாய் தெரிந்துகொண்டு, மனவெறுப் படைந்து, சாபமொன்று கூறுவாள். என் மகளிடம் பலாத்காரமாக இன்ப மனுபவித்த பாவி, இப்பிறப்பில் புத்திரபாக்கிய மில்லாமல், செல்வங்களும் குறைந்து;

37. பூமியில் வாழ்வா னென்றுள் பின்சென்மம் சுதர்க ளின்றி
நேமியில் வமிச தோடம் நேர்ந்திடு மென்று சொல்லித்
தாமத குணத்த னைத்தான் சதுர்மறை கூறி யேதான்
தீமையாய் மண்ணை வாரித் தெருவினி லிறைத்தா
[ளென்றோம்.

37. உலகில் வாழ்ந்திருப்பான்; மறுபிறப்பில் புதல்வர்கள் இல்லாமல் வசம் தோஷமும் ஏற்படும்: என்று சொல்லி, தாமதக் குணத்தை யுடைய இவன் பொருட்டு, அந்த அந்தணப் பெண்ணின்தாய் தெரு மண்ணை வாரி யிறைத்தாள்என்று கூறினோம்.

38. அந்ததோர் தோடந் தானும் அணுகிற்று அச்சென் மத்தில்
தன்தனம் யாவும் போக்கிச் சல்லிய முடைய னுகிப்
பிந்தியும் தட்சி ணத்தில் புக்கினன் தலங்கள் தோறும்
கந்தவேள் தோகை தன்னில் கனமுள பேதி யாலே;

38. அந்தத் தோஷம் அப் பிறவியிலேயே இவனை யடைந்தது. சொந்த ஆஸ்தியெல்லா மழிந்து, கடன் தொந்தரவுடையவனுகி, தென் திசையிலுள்ள பல புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று, முருகப் பிரான் எழுந்தருளியுள்ள தோகைமலையில் சென்று, கந்தனை வணங்கி, அந்தத் தலத்திலேயே பின்பு பேதியினுல்,

39. அந்தக ணுட டைந்து அருநர கினிலே சென்று
பிந்தியும் பிரமன் லக்கம் பூமியில் வரையப் பட்டு
வந்தவ னிவனே யென்றேம் மங்கையும் கேட்க லுற்றாள்
முந்திய சென்மம் தன்னில் மொழிந்திட்டீ ரதேக பாவம்.

39. இயமனுலக மடைந்து, கொடிய நரகத்துக்குச் சென்று, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, பிறந்தவன் இவன் என்று சொன்னேம். பார்வதி கேட்கலானுள். முற்பிறப்பில் மிகுதியான பாவங்கள் செய்தான் என்று கூறினீர்கள்.

40. இக்குல முதித்த தென்ன இயம்புவீர் முனியே என்றாள்
முக்கியத் தலங்கள் சென்றும் முருகன்தன் ஆல யத்தில்
தக்கவே மரண மெய்தத் தன்பலத் தாலே யீங்குப்
புக்கனன் பூவைசிய ணுகப் புண்ணிய வதியே கேளாய்.

40. அங்ஙனமிருக்க, இப்பிறப்பில் இக்குலத்தில் பிறந்த காரணம் யாது? என்று கேட்டாள் பார்வதி. சிறந்த தலங்கள் பலவற்றிற்குச் சென்றதாலும், முருகப் பிரான் கோயிலில் மரண மடைந்ததன் பயனுலும் இப்பிறப்பில் வைசிய குலத்தவனுய்ப் பிறந்தான், புண்ணியசாலியே! கேட்பாயாக.

41. இச்சென்மம் தன்னி லேதான் இலகிற்று முன்னூழ்த் [தோடம்
நச்சுப்போல் சேரு மென்றேம் நல்காது மதலை தானும்
கச்சணி தோடம் தீர்க்கக் கழறுவோம் சாந்தி தானும்
இச்சையாய் மனைவி யோடு இருவரும் தில்லை புக்கு ;

41. இப் பிறப்பில் முன் சென்மத் தோஷங்கள் கொடிய விஷம்போல் இவனைச் சேரும் என்று கூறினேம். அந்தக் காரணத்தால் மக்கள் பிறந்து விளங்கார். பெண் சாபம் நீங்க, சாந்தியைச் சொல்லுவோம். மனைவியுர் தானுமாக, சிதம்பரம் சென்று;

42. அங்குள தீர்த்தந் தோய்ந்து அரனுக்கு வருச்சித் தேத்திப்
பொங்கமாய் ரசதம் தன்னுல் புதல்வரைப் போலே செய்து
பங்கயம் விடங்கள் கந்தம் பார்மறை யோருக் கீந்து
சங்கையை யவர்க்கு வோதித் தானதைப் பெற்றே மென்று;

42. அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, நடராசப் பெருமானுக்கு அருச்சனை முதலியன செய்து, போற்றி, வெள்ளியினுல் புதல்வரைப் போல் பிரதிமைகள் செய்து, பொன், மலர், சந்தனம் முதலியவற்றுடன் அந்தணர்க்குத் தானமாகக் கொடுத்து, தோஷங்களை யவர்கட்குச் சொல்லி, அந்தத் தோஷங்கள் நீங்க, இவற்றைத் தானமாகப் பெற்றுக்கொண்டோம் என்று;

43. அவர்வாக்கால் ஆசீர் ஏற்று அவனுமே உள்ளூர் மீண்டு
நவமதி லோராண் டுந்தான் நாயகன் சட்டி நோன்பு
இவனுமே கொள்வா னுகில் இலகிடுஞ் சுதர்க ளென்றேரும்
கவனமாய்ச் செய்யா னுகில் காளைகள் சேத மென்றேரும்.

43. அவர்கள் வாக்கால் ஆசீர்வாதங்களைப் பெற்று, உள்ளூர் மீண்டு, ஒரு வருஷகாலம் சஷ்டி விரதம் இருந்து வருவானுகில், புதல்வர்கள் தோன்றுவர் என்று கூறினேம். இந்தப் பரிகாரத்தைக் கவனமுடன் செய்யாவிட்டால் புத்திரர்கள் பிறந்து நஷ்டமாவர் என்று சொன்னேம்.

44. சொற்படி செய்வா னுகில் தோன்றிடு மாண்பா லொன்று
செப்புவோம் பெண்பால் ரெண்டு தீர்க்கமா மென்று
[சொன்னேம்
ஒப்புடன் மாதுர் சேதி உரைக்கின்றே மினிமே லாக
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுது.

44. சொன்னபடி சாந்தி செய்வானுகில், புதல்வன் ஒருவனும் பெண்கள் இருவரும் தோன்றித் தீர்க்கமாவர் என்று கூறினேம். இனிமேல் தாயின் செய்தியைச் சொல்லுகின்றேரும். கங்கையை யணிந்த சடை முடியோடு விளங்குஞ் சிவபெருமான் தேவியே! கூறிய சொல் தவறுது.

45. மாதுரு நிறஞ்சி வப்பாம் மங்கைநன் னடக்கை யுள்ளாள்
மேதினில் ஒடிசல் தேகி வரனுக்கு நேய முள்ளாள்
நீதுக ளெண்ணு ளாகும் திருமகள் ஒப்ப தாகும்
ஓதுவாள் சுபமாய் வார்த்தை உறுதியாய்க் கோபம்
[கொஞ்சம்.

45. தாயின் நிறம் சிவப்பு. நல்ல நடத்தை யுடையவள். மெல்லிய தேக முள்ளவள். கணவனுக்குப் பிரியமானவள். எவருக்கும் மனத்தால் கெடுதல்களே நினையாள். இலக்குமி போன்ற அழகுடையவள். நல்மொழிகள் கூறுவாள். நிச்சயமாய்க் கோபம்சிறிது உண்டு.

46. அவளுடைத் துணைவர் தம்மை அறைகுவோ மாண்பா
[லொன்று
நவனியில் பெண்பால் மூன்று நாட்டுவோ மிவளுக் கேதான்
அவனியில் மாம னுக்கு அறைகின்றேரும் தாரம்
[ரெண்டாய்ப்
பவமுள முதல்மா துக்குப் பாலர்க ளில்லை யென்றேரும்.

46. அவள் உடன்பிறந்தார்களைச் சொல்லுவோம். இவளுக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரிகள் மூவரும் உளராவர் என்று கூறுவோம்.

இவர்கள் தீர்க்கமாவர். இந்த ஜாதகனின் மாமனுக்கு இரு மனைவியர் என்று சொல்லுகின்றோம். முதல் மனைவிக்குப் புதல்வர்கள் இல்லை என்று சொன்னோம்.

47. மறுமனை யாட்குப் புத்ர ரறைகின்றே மாண்பால் ரெண்டு
திருவெனை பெண்பால் ரெண்டு செப்புவோ மிவர்கள் தீர்க்கம்
குறைவிலாக் குடும்பச் செய்கை கூறுவோ மிரண்டி லேதான்
பெருவயி றோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

47. இரண்டாம் மனைவிக்குப் புத்திர பாக்கியமுண்டு என்று சொல்லுகின்றோம். ஆண்மக்கள் இருவரும், இலக்குமி போன்ற புத்திரிகள் இருவரும் தோன்றி, தீர்க்கமாவர் என்று சொல்லுவோம். இவனுடைய குடும்பச் செய்தியை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். பெருவயிற்றை யுடைய விநாயகரைப் பெற்ற புண்ணியவதியே! கேட்பாயாக.

48. அன்னையின் பூர்வம் தன்னை அறைகின்றோம் ஓதூர்
[தன்னில்
பன்னுசெங் குந்த வம்சம் பாவையு முதித்து மேலும்
பொன்னெடு பணிதி பெற்றுப் புத்திர ரில்லா ளாகி
இன்னவ ளறத்தி லிச்சை இயலுடன் வைத்தா ளென்றோம்.

48. தாயின் முற்பிறப்பைக் கூறுகின்றோம். ஓதூரில் செங்குந்தர் மாபில் பிறந்து, செல்வம், ஆபரணங்கள் முதலியன பெற்று, புதல்வர்களில்லாதவளாய், தர்மச் செயல்களில் ஆசைகொண்டு வாழ்ந்திருந்தாள் என்று சொன்னோம்.

49. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனுல் வரையப் பட்டு
ஞாலமே லிக்கு லத்தில் நாயகி யுதித்தா ளென்றோம்
கோலமா யிவள்பின் சென்மம் கூறுவோ முள்ளூர் தன்னில்
சிலமாஞ் சைவ வம்சம் செனிப்பளாம் பெருமை யுள்ளாள்.

49. இயமனுலக மடைந்து, பிரமனுல் படைக்கப்பட்டு, இக்குலத்தில் இவள் பிறந்தாள் என்று கூறினோம். இவள் மறுபிறப்பைக் கூறுவோம். உள்ளூரிலேயே, நல்லொழுக்கமுடைய சைவ குலத்தவளாகப் பிறப்பாள். பெருமை யுடையவள்.

50. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் தவனை யுத்ரம்
பங்கமாய்ச் சிற்றூர் தன்னில் பாலகன் தியின் வம்சம்
வந்துமே பூமி யுண்டாய் மக்களும் மனைவி யாகித்
தன்தனம் குறைச்ச லாகிச் சகலர்க்கு நல்லோ னாகி;

50. தந்தையின் முற்பிறப்பைச் சொல்லுவோம். தவலை மலைக்கு வடக்கில், உள்ளதொரு சிற்றூரில், வன்னியர் வமிசத்தில் பிறந்து, நில புலன்களை யடைந்து மனைவி மக்களைப் பெற்று, சொந்தமாகத் தேடிய பொருள் குறைவடைந்து, அனைவருக்கும் நல்லவனாகி;

51. தேவதாப் பணியுங் கொண்டு சண்டன்தன் பதிக்குச்
[சென்று
பூமகன் வரையப் பட்டுப் பிறந்தவ னிவனே யென்றும்
ஆவலா யிவன்பின் சென்மம் அக்காஞ்சி தன்னி லேதான்
மேவுவான் பிரம சேயாய் வித்தகி கேட்டி டாயே.

51. கடவுளர்க்குத் தொண்டு பூண்டு, மரண மடைவான். மீண்டும், தாமரை மலர்மீது வீற்றிருக்கும் பிரமனால் படைக்கப்பட்டுப் பிறந்தவன் இவன் என்று சொன்னேம். இவன் மறு பிறவியில், காஞ்சிபுரத்தில், அந்தணர் குலத்தவனாகப் பிறப்பான். பார்வதியே! கேட்பாயாக.

52. இந்ததோர் சென்மந் தன்னில் இவன்செயும் புண்ணிய
[மென்ன
முந்தவே கூறு மென்ன முதல்வனும் ஏழை யோர்க்குத்
தன்தன முதவி செய்து சகலர்க்கும் நல்லோ னாகிச்
சிந்தையுங் கபடில் லாமல் தேவதாப் பக்தி கொண்டு;

52. இப்பிறப்பில் ஜாதகன் தந்தை இயற்றும் புண்ணியச் செயல்கள் யாவை? அவற்றைக் கூறுங்கள். ஏழை மக்களுக்குப் பொருளுதவி செய்து, அனைவருக்கும் நல்லவனாகி, மனத்தில் கபடமில்லாது, தெய்வ பக்தி கொண்டு;

53. வருவோருக் கன்ன மீந்து மஞ்சின பேரைக் காத்தும்
இருப்பதால் மறையோ னாக இயம்பினேம் நூலை யாய்ந்து
நிரையவே காலந் தன்னை நிகழ்த்துவோ முப்பா னேழில்
பெருமையாய்க் கன்னி மாதம் பேசுவோம் தந்தைக்
[கேதான்.

53. வீடுதேடி வருபவர்கட்கு உணவளித்து, அஞ்சினவர்களுக்கு அபயந்தந்து வாழ்ந்து வருவதால், மறுபிறப்பில் அந்தணனாகப் பிறப்பான் என்று சோதிட நூலை நன்கு ஆராய்ந்து, சொன்னேம். தாய்தந்தையர், ஜாதகன் ஆகியோர் மரண காலத்தைச் சொல்லுவோம். ஜாதகனின் முப்பத் தேழாம் வயதில், புரட்டாசி மாதம் தந்தை மரணமடைவான்,

54. அன்னைக்கு நாற்ப தாண்டில் ஐப்பசி மாதந் தன்னில்
திண்ணமாய்க் கண்ட முண்டு செப்புவோஞ் சாத கர்க்கு
உன்னித வறுப தாண்டில் உயராடி மாதம் தன்னில்
பன்னிய பருவந் தன்னில் பாலகன் உடலம் வாடும்.

54. தாய்க்கு, ஜாதகனது நாற்பதாம் வயதில், ஐப்பசி மாதத்தில் நிச்சயம் கண்ட முண்டாகும். ஜாதகனுக்கு மரணகாலங் கூறுவோம். அறுபதாம வயதில், ஆடிமாதம் பௌர்ணமி யன்று மரணமடைவான்.

55. மறுசென்மந் துவாரை தன்னில் மறைக்குல முதிப்பா
[ரகும்
பெருமையாய்ச் செட்டுச் செய்து பிரபல கீர்த்தி யாகித்
திருமகள் விலாசம் பூண்டு செல்வனும் வாழ்வா ரகும்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

55. மறு பிறப்பு, துவாரகையில் அந்தணர் குலத்தில் பிறப்பான் மேன்மையுடன் வியாபாரங்கள் செய்து, எங்கும் பரவிய புகழையடைந்து இலட்சுமீ கடாட்சம் பெற்று வாழ்ந்திருப்பான். சுப்பிரமணியக் கடவுளைப் புதல்வராக வடைந்த பார்வதியே! கேட்பாயாக.

56. இன்னவன் யோகச் சேதி இசைக்கின்றோம் சென்னைந்
[தொட்டுத்
தன்னிலே மரண மட்டுஞ் சந்திரன் பிறைபோல் யோகம்
பின்னமில் லாமல் வாழ்வன் பூமியும் விருத்தி செய்வான்
உன்னத மூன்று கிராமம் உறைந்திடும் பூமி தானே.

56. இவனுடைய யோகங்களைப் பற்றிக் கூறுகின்றோம். பிறப்பு முதல் மரணம் வரை வளர்பிறைச் சந்திரன்போல் யோகங்களால் வாழ்வான். குற்றமின்றி வாழ்வான். நிலபுலன்களை விருத்தி செய்வான். மூன்று கிராமங்களில் இவனுக்கு விளை நிலங்கள் சேரும்.

57. பாக்கிய மேன்மே லுண்டு பாரினில் செட்டு ஓங்கும்
வாக்குச்சொல் மேன்மை யாகு மரசர்பால் செட்டுச்
[செய்வன்
யோக்கிய ரகி வாழ்வன் உலகெலாம் வசியங் கொள்வன்
தீக்குண நிவிர்த்தி செய்வன் செல்வதி கேட்டி டாயே.

57. மேன் மேலும் பாக்கியங்கள் உண்டாம். வியாபாரம் செழிக்கும். சொல்லும் சொற்களுக்கு மதிப்பு ஏற்படும். அரசர் ஆதரவால் தொழில் செய்வான். நாணய முள்ளவனாக வாழ்ந்திருப்பான். உலகத்தாரை வசப் படுத்துவான். கெட்ட குணங்களை நீக்குவான், பார்வதியே! கேட்பாயாக.

58. சாதகன் செனிக்குங் காலம் செம்பாம்பு தசையி ருப்பு
ஓதுவேன் திங்கள் நான்கும் உறைந்திடும் நாள்க ளேழும்
மேதினில் ரோகங் காட்டும் விரயங்கள் மிகுதி யாகும்
நீதான சூது முண்டு செப்புவோங் கேளுந் தாயே.

58. ஜாதகன் பிறப்புக் காலத்தில். கேது மகாதசை இருப்பு; நான்கு மாதங்களும், நாட்களேழுமாம். அக்காலத்தில் வியாதி யுண்டாகும். செலவுகள் அதிகமாக ஏற்படும். இவனைப் பற்றிச் சிலர், சூதான செயல்களைச் செய்வர். மேலுங் கூறுவோம். தாயே! கேளுங்கள்.

59. புகர்தசை தன்னி லேதான் பிறந்திடுந் துணைவர் தாமும்
வகையான பூமி சேரும் வருந்துணை சுபமு மெய்தும்
தகைமையாய்த் தானிய விருத்தி சகடுவா கனமு மெய்தும்
செகமதில் பரியு மெய்துஞ் செப்புவோ மிரண்டி லேதான்.

59. சுக்கிர மகாதசையில் துணைவர் தோன்றுவர். வகையாக வீடு நிலங்கள் சேரும். உடன் பிறந்தார்கள் வழியில் சுபச் செயல்கள் நிகழும். தானிய விருத்தி யுண்டு. வண்டி முதலான வாகன வசதிகள் ஏற்படும். குதிரைகள் பெறுவான். மற்றவற்றை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம்.

ஜாதகம் 66

1. விடையது செனன மாக வேதிய னதிலே தங்க
மூடவனுங் கேது வெட்டில் உதயனும் தசம தாக
அடைவுடன் பணியும் ரெண்டில் ஆரலு மஞ்சி லேற
உடுபதி புகரும் லாபம் ஒன்பதில் புதனும் நிற்க;

1. விருஷபம் இலக்கினமாகவும், குரு இலக்கினத்திலும், சனி கேது தனுசிலும், சூரியன் கும்பத்திலும், இராகு மிதுனத்திலும், செவ்வாய் கன்னியிலும், சந்திரன் சுக்கிரன் மீனத்திலும், புதன் மகரத்திலும் தங்கியிருந்தால்;

சந்திரன் சுக்கிரன்		லக்கினம் குரு	இராகு
சூரியன்	இராசி சக்கரம்		
புதன்			
சனி கேது			செவ்வாய்

2. சொல்லுவீர் பலனே யென்று சுந்தரி கேட்கும் போது
புல்குவார் பராசர் தாமும் பிறந்திடு மாண்பால் சென்மம்
இல்லமும் கீழ்ப்பால் நோக்கம் ஈசனு மெதிரில் தோன்றும்
வல்லிமா காளி தந்தி வடதிசை தோன்று மென்றோம்.

2. உரிய பலன்களைக் கூறுவீர் என்று பார்வதி கேட்கும்போது பராசர முனிவர் கூறுகின்றார். இம்மது ஆண் பிறப்பாகும். இவன் பிறக்கும் வீடு கிழக்குப் பார்த்த வாயிலுடையது. சிவபெருமான் கோவில் வீட்டுக்கு எதிரில் உள்ளது. வடக்கில் காளி கோயிலும், விநாயகர் ஆலயமும் உள்ளன.

3. மாலவன் வாயு வென்றோம் மருவிய பேரு ராகும்
சாலவே தந்தை யில்லம் சாற்றிறினைஞ் சேட்ட னுகப்
பாலகன் மயன்கு லத்தில் பிறப்பனு மென்று சொல்வோம்
ஞாலமேல் குடும்பச் சேதி நாட்டுவோ மிந்நூல் தன்னில்.

3. வடமேற்குத் திசையில் திருமாலின் கோயில் உள்ளது. பெரிய ஊர். தந்தையின் வீட்டில் இந்த ஜாதகன் மூத்த புத்திரனாக, பொற்கொல்லர் குலத்தில் பிறப்பான் என்று கூறுவோம். அவர்களுடைய குடும்பச் செய்திகளை இந்தச் சோதிட சாஸ்திரத்தில் சொல்லுவோம்.

4. தந்தையின் குணத்தைச் சொல்வேர்ம் சான்றோர்கள் பக்தி
[பூணுன்
நிந்தைக ளேற்பா ருகும் நேமியில் திரிவா ருகும்
முந்திடு மனத்த ருகும் நிருபர்க ளிட்டம் கொள்ளான்
சந்ததி பகையு மாவன் தைரிய மில்லா னெஞ்சம்.

4. தந்தையின் குணத்தைச் சொல்லுவோம். பெரியோர்களிடம் பக்தி யில்லாதவன். பழிகள் அடைவான். உலகில் அலைச்சலுள்ளவன். முற்போக்கான மனமுள்ளவன். வேலையாட்களிடம் விருப்ப மில்லாதவன். சந்ததியில்லாதவன். தைரியமில்லாத மனத்தினன்.

5. பொன்தொழில் புரிவா ருகும் புகழது ஏற்கா ருகும்
தன்பந்து விரோதி யாவன் சாகைவிட் டகல்வா ருகும்
முன்கோபி சில மில்லான் மொழியது விரண்டு மாகும்
அன்னவன் கல்வி காணுன் அற்பமாம் தொழிலுஞ் செய்வன்.

5. பொன் தொழில் செய்து வருவான். புகழில்லாதவன். சுற்றத் தார்க்குப் பகைவனுவான். தன் வீட்டை விட்டுச் செல்வான். முன்கோப முடையவன். ஒழுக்க மில்லாதவன். இருவிதமாகப் பேசுவான். கல்வி யறிவில்லாதவன். அற்பத் தொழில் செய்து வருவான்.

6. தன்துணை யாண்பால் ரெண்டு சத்தியு மவ்வா ருகும்
அன்னவர் சிலர்க்கு விருத்தி யாகியே யாவும் ஏகும்
இன்னவன் தனியாய் வாழ்வன் ஏகுங்கா ரணங்க ளெவ்வார்
செந்தீயு மஞ்சில் தங்கச் செங்கதிர் தசம மாக;

6. உடன் பிறந்தாரில் ஆண்மக்கள் இருவரும், பெண்கள் இருவருமா வர். அவர்கள் சிலகாலம் தீர்க்கமாக விருத்து பின்பு அனைவரும் மரிப்பர். இவன் தனித்து வாழ்ந்திருப்பான். மற்றவர்கள் இறக்கும் காரணங்க ளென்ன? செவ்வாய் ஐந்தாமிடமாகிய கன்னியிலும், சூரியன் பத்தாமிட மாகிய கும்பத்திலும்;

7. இருப்பதால் துணைவர் தோடம் இதுவன்றிப் பூர்வம்
[தன்னில்
திருமகன் செய்த தோடம் சேர்ந்தது இச்சென் மத்தில்
உரைப்பீர்கள் பூர்வம் தன்னே உத்தமன் முன்சென்
[மங்கேள்
[1]அரிவையாங் குமரி தன்னில் அணுகிஞன் வன்னிய சேயாய்.

---

1. கன்னியா குமரி

7. இருப்பதால், உடன்பிறந்தாருக்குத் தோஷ மேற்படும். இதுவல்லாமல், முற்பிறப்பில் இந்த ஜாதகனின் தந்தை செய்த தீவினையும் இப்பிறவியில் அவனைச் சார்ந்தது. தந்தையின் முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுங்கள். உயர்ந்த முற்பிறப்பைப் பற்றிக் கேளும். கன்னியா குமரியில் வன்னியர் மரபில் தோன்றினன்.

8. பாரியும் மதலை யுண்டாய்ப் பாரினில் சீவித் தேதான்
தீரமாய்க் குடும்பி யாகிச் சேயனும் வாழும் நாளில்
பாரியின் தங்கை பேரில் பகர்வார்த்தை சொல்லும் போது
நாரியும் திகில டைந்து நவின்றசா பத்தைக் கேண்மோ.

8. மனைவி, மக்களை யடைந்து உலகில் வாழ்ந்து வந்தான். திடமான குடும்ப மேற்பட்டுச் செல்வன் வாழ்ந்து வரும்போது, தன் மனைவியின் தங்கைமீது மோகங் கொண்டு, அடாத வார்த்தைகளைக் கூற, அப்பெண்ணும் பயந்து சொன்ன சாபத்தைக் கேள்.

9. இல்லாத வார்த்தை யென்மேல் இடிபோலே சொன்ன பாவி
அல்லலாய்ப் பின்சென் மத்தில் அலையின்மேல் துரும்பு [போலும்
வல்லியு மதலை விட்டு வனவாசம் துணைகள் தோடம்
புல்லியே சென்ரு ளென்ரேரும் புக்கிற்று வந்தத் தோடம்.

9. அடாத வார்த்தைகளை இடிபோல் என்மீது சொன்ன பாவியே! இனி ஏற்படும் சென்மத்தில் துன்பமடைந்து, அலைமேல் இருக்கும் துரும்பு போற் தத்தளித்து, மனைவி மக்களை இழந்து, காட்டில் இருப்பதுபோல் வசித்து, உடன்பிறந்தார் நஷ்டத்தையு மடைவாய்; என்று சொல்லிச் சென்றுள். அந்தத் தோஷம் வந்தடைந்தது.

10. அந்தியக் காலந் தன்னில் அவன்வாய்ப்புண் தன்னால் மாண்டு
முந்திய பிரமன் லக்கம் விளங்கினு னென்று சொல்வோம்
முற்சென்மம் வன்னிய சேயா யுதித்தவ னீச்சென் மத்தில்
பொற்ரொழில் புரியு கின்ற பாஞ்சால குலமெவ் வாறு;

10. அவனும் தன் கடைசிக் காலத்தில் வாயில் புண் ஏற்பட்டு, அதனால் மரண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறப்பாகப் பிறந்தான் என்று சொல்லுவோம். முற்பிறப்பில் வன்னியர் குலத்தவனாகப் பிறந்தவன், இச்சென்மத்தில் எப்படிப் பொற் கொல்லர் வமிசத்தவனாக;

11. பிறக்குங்கா ரணங்க ளெவ்வார் புனிதன்முன் சென்மந்
[தன்னில்
அறுமுகன் பக்தி யாயும் அலையிலாச் சேது சென்று
பெரியோர்க்கு அன்ன மீந்த புண்ணிய முதித்தா னென்றேும்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

11. பிறந்தான். முற்பிறப்பில் இவன் ஆறுமுகக் கடவுளிடம் பக்தி பூண்டு, சேதுவுக்குச் சென்று, பெரியோர்களுக்கு அன்னமளித்த புண்ணியத்தால் இக்குலத்தில் தோன்றினான். யானைமுகக் கடவுளாகிய விநாயகனைப் பெற்ற பார்வதியே! கேளுங்கள்.

12. இங்நெறி யுடையா னுக்கு இப்பால னுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் யூகை
[சாலி
உன்னத கல்வி கற்பன் உயர்வான வேலை செய்வன்
பொன்ரத்னப் பணிகள் செய்வன் போசன வறுமை காணுன்.

12. இவ்வாறான தன்மையுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவன் குணங்களைப் பற்றிச் சொல்லுவோம். அழகுடையவன். ஊக சாலி. உயர்ந்த கல்விகளைக் கற்பான். அழகான வேலைகளைச் செய்வான். பொன், நவரத்தின வேலைகளைச் செய்வான். உணவுக்குத் தரித்திரமில்லாதவன்.

13. பலரையும் நேசம் செய்வன் பாருகள் சேர்ப்பா னுகும்
விலைமாதர் போலே வார்த்தை வீண்வம்பில் செல்லா னுகும்
தலம்செய்வன் பெரியோர் நேசன் சண்முகன் பத்தி
[பூண்பன்
உலகுளோர் மெச்ச வாழ்வன் உரைப்பதில் கபடு மூண்டு.

13. எல்லோருடனும் நட்புக் கொள்ளுவான். நிலபுலன்களை விருத்தி செய்வான். வேசையரைப் போல் சரசமாகப் பேசும் வன்மை யுடையவன். வீண் வம்புகளுக்குப் போகாதவன். வீடு கட்டுவான். பெரியோர்களுக்கு விருப்பமானவன். ஆறுமுகக் கடவுளின் மீது பக்தி யுடையவன். உலகத்தவர் புகழும்படி வாழ்ந்து வருவான். பேச்சில் சிறிது கபடமுண்டு.

14. தந்தையை யுறவு கொள்ளான் தன்கரங் கோதுமை ரேகை
சிந்தையில் மர்ம வானும் செப்பிடு பொன்போல் சேர்ப்பன்
பிந்தின துணையா ணென்று பேசுவோந் தீர்க்க மாக
அந்தவன் குணத்தைச் சொல்வோம் அற்றமாந் தலைநா
[ளில்தான்.

14. தந்தையிடம் பற்றுக் கொள்ளாதவன். கையில் கோதுமை ரேகை யுள்ளவன். மனத்தில் இரகசிய முள்ளவன். செப்புப் பொருளில் வைத்திருப்பது போல், பொன்னைச் சேர்த்து வைப்பான். உடன்பிறந்த தம்பி யொருவனுண்டு. அவன் நீண்ட ஆயுளுள்ளவனு மிருப்பான். அவன் குணத்தைச் சொல்லுவோம். மிருகசீருட நட்சத்திரத்தில் ;

15. சிலைசென்மம் தோன்று வானும் செய்குவா னிரணிய வேலை
நலம்படப் பொருந்து நெஞ்சம் நாற்காலி விருத்தி யுண்டு
கலைகற்பன் பூமி சேர்ப்பன் கரமதில் சக்ர ரேகை
மலைரேகை யுடைய னுகும் மருவரை வெல்வா னுகும்.

15. தனுர் லக்னத்தில் பிறப்பான். பொன் வேலை செய்வான். நலமுற எண்ணும் மனமுடையவன். கால் நடைகள் விருத்தியாம். கலையை நன்கு கற்பான். பூமியை விருத்தி செய்வான். கையில் சக்கர ரேகையும், பருவத ரேகையும் உள்ளவன். பகைவரை வெல்லும் சக்தி யுடையவன்.

16. முகமது வசிய முண்டு முனிவதை வெளிக்காட் டாதான்
அகமது விரண்டு செய்வன் அறுமுகன் பக்தி பூண்பன்
செகமதி லீகை கொஞ்சம் சிலம்போல் வெளிம யக்கன்
உகமையாய் வார்த்தை சொல்வன் உள்மனம் கபடு முண்டு.

16. முக வசீகர முடையவன். கோபத்தை வெளிக் காட்டாதவன். இரண்டு வீடு கட்டுவான். சுப்பிரமணியக் கடவுளின்மீது பக்தி யுடையவன். உலகத்தில் பிறருக்குக் கொடுக்கும் மனமுள்ளவன். ஒழுக்க முள்ளவன் போல் தோற்ற முடையவன். உபமானத்துடன் பேசுவான். கபட மன முள்ளவன்.

17. மனைவியுந் தென்மேல் நேரும் மாதுவு மொன்றே யாகும்
கனமுள சுதரா ணென்று காதலி மார்கள் மூன்று
சினமிலாத் தீர்க்க மெய்தும் சேயர்கள் தவத்தால் தோன்றும்
அனையவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

17. இவனுக்குத் தென் மேற்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப் பாள். ஒரு மனைவியே. மக்களில் ஆண்மகன் ஒருவனும் பெண்கள் மூவ ரும் தோன்றுவார். அவர்கள் நீண்ட ஆயுளுள்ளவர்கள். மக்கள் இவர்க ளியற்றிய நல் வினையால் தோன்றுவார்கள். தவங்களைச் செய்யும் தாயே! கேளும்.

18. சிலவேளை யொன்றுய் வாழ்ந்து செல்குவான் வேற தாகத்
தலைவனும் யோக வானும் சம்பத்து முடைய னுகும்
விலகுநாள் புகலு மென்ன வித்தகன் முப்பா னுறுள்
தலமது பிரித லாகும் சங்கரி கேட்டி டாயே.

18. சின்னட்கள் ஒன்றுய் வாழ்ந்துவந்து, பிறகு வேறுகச் செல்வான். யோகவான். செல்வங்கள் உள்ளவன். தனியாகப் பிரியும் காலம் எப்போது? ஜாதகன் முப்பத்தாறும் வயதுக்குள் இடமாற்றம் ஏற்படும். பார்வதியே! கேளுங்கள்.

19. உதித்தவன் மணத்தின் காலம் உரைக்கின்றே மாறு
[றுண்டில்
மதிநுதல் மனைவி தென்பால் மருவுவாள் குணத்தைச்
[சொல்வோம்
அதிசய வார்த்தை சொல்வள் அன்னமு மன்பா யிவள்
துதிசெய்தோர்க் குதவு வாளாம் சோம்பிடாள் காரி யத்தில்.

19. ஜாதகனுக்கு மணமாகுங் காலத்தைச் சொல்லுகின்றேரும். இவனது முப்பத்தாறும் வயதில், தெற்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவளுடைய குணத்தைச் சொல்லுவோம். பிறர் அதிசயிக்கும்படி பேசுவாள். வீடு தேடி வந்தவர்கட்கு அன்ன மளிப்பாள். புகழ்ந்தவர்களுக்கு உபகாரம் செய்வாள். காரியங்கள் செய்வதில் சோம்ப லில்லாதவள்.

20. மாரன்தன் மனைபோல் ஒப்பாம் வருவோரை யாத ரிப்பள்
காரிகை யோக சாலி கனத்தபுத் திகளு மேற்பள்
பாரினில் நல்லோ ளாவள் பர்த்தாவின் மனத்துக் கேற்றேள்
கூறுமுன் கோபங் கொஞ்சம் கோதைக்கு வயது தீர்க்கம்.

20. இரதி தேவியைப் போன்ற அழகுடையவள். வந்தவர்களை ஆதரிக்கும் குணமுள்ளவள். யோக முடையவள். பெரியோர்களின் அறிவுரைகளை ஏற்று நடப்பாள். நல்ல குண முடையவள். கணவனின் மனத்துக்கு ஏற்றவள். சொல்வதற்குமுன் கோப மடைவாள். அவளுக்கு நீண்ட வயது.

21. புத்திர ருதிக்கா ராகும் புக்கினுந் தீதே யாகும்
குற்றத்தைச் சொல்லு மென்னக் குசனேந்தில் பணியும்
[ரெண்டு
வித்தகன் சென்மம் நந்தி மேவின பலத்தி னுலே
சுத்தமாய்ச் சுதர்கள் தோடம் சுதனுமுன் சென்மந் தன்னில்;

21. புத்திர பாக்கிய மில்லாதவள். புத்திரர் பிறந்தாலும் நிலையார். என்ன குற்றம் எற்பட்டதென்று சொல்லுங்கள். செவ்வாய் ஐந்தாமிடமாகிய புத்திர ஸ்தானத்திலும், இராகு மிதுனத்திலும் தங்கி, விருஷப இலக்

னத்தில்பிறந்த காரணத்தால் நிச்சயமாய்ப் புத்திரர்கட்குத் தோஷ மேற் படும். ஜாதகன் முற்பிறவியில் ;

22. செய்ததோர் வினைய நேகம் சேயர்கள் தோட மெய்தும்
ஐயங்க ளென்ன செய்தான் அறிவிப்பீ ரந்தச் சங்கை
வையமே லுயர்வ தான மலைநாட்டில் கங்கை சேயாய்க்
கைமுத லுடைய னாகிக் காதலி மத லியுண்டாய்;

22. செய்த தீவினைகள் பல. அவற்றாலும் குழந்தைகட்குத் தோஷம் ஏற்படும். என்ன தீவினைகள் செய்தான்? அவற்றைச் சொல்லுவீர். உல கத்தில் உயர்ந்த சேர நாட்டில், வைசிய குலத்தில் பிறந்து, செல்வங்கள் அடைந்து, மனைவி மக்கள் உடையவனாகி வாழ்ந்து வந்தபோது;

23. வந்ததோர் வினையைக் கேண்மோ மனைவிமேல் நிந்தை [சொல்லிப்
பிந்தியோர் மாது பக்கல் புக்கியே போகம் துய்க்கத்
தன்மனை வெறுப்பி னாலே சாற்றுவாள் சாபந் தானும்
எந்தனைத் தனியாய் விட்டு ஏகின பாவிக் கேதான்;

23. ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். மனைவிமேல் பழிகள் கூறி, வேறு பெண்ணொருத்தியுடன் இருந்து இன்ப மனுபவித்து வந்தான். அப் பொழுது மனைவி மன வெறுப்பினால் சொல்லிய சாபத்தைக் கேளும். என் னைத் தனியாக விட்டுச் சென்ற பாவி;

24. மறுசென்மந் தோன்றி யேதான் மனைவிமுன் காணு தாயும்
பெறுஞ்சுதர் தோட மாயும் பூவையர் துணைக ளின்றித்
திருகாகும் தந்தை தானும் செப்பிய சலத்தால் மாண்டாள்
திருகாக வந்த சாபம் சேர்ந்திடு மிச்சென் மத்தில்.

24. மறு பிறப்பில், மனைவி நிலையாமல், தோன்றும் குழந்தைகள் சேதமாகி, உடன்பிறந்த சகோதரிகள் இல்லாமல், தகப்பனுடன் பகை ஏற் பட்டு வாழ்வான், என்று சொல்லித், தண்ணீரில் வீழ்ந்து மாண்டாள். அந் தத் தீவினை இப்பிறப்பில் இவனை வந்தடைந்தது.

25. தந்தையின் சாபந் தானும் சார்ந்திடு மிதுவல் லாமல்
நிந்தைகள் தொழிலால் நேரும் நிமலர்க்குப் பலசா பத்தால்
சந்ததி தோட மெய்தும் சாற்றுவோங் கிரியை யொன்று
கந்தனை யின்ற மாதே காதலி தானு மாக ;

25. இதுவன்றி, தந்தையின் சாபமும் வந்தடையும். தொழிலால் அவமானங்கள் ஏற்படும். பல தீவினைகளால் இவனுக்குப் புத்திர தோஷம்

ஏற்படும். இதற்குச் சாக்ஷி ஒன்று கூறுவோம். முருகப் பெருமானைப் பெற்ற தாயே! பார்வதியே! இவனும் மனைவியும்;

26. தங்நகர் மேற்கி லேதான் [1]சமதக்னி பாரி வாசம்
அங்நகர் சென்று மேதான் அம்மைக்கு அபிடே கித்துத்
துன்னிய மறைமா துக்குத் துயில்கந்தம் விடமுந் தந்து
தங்நகர் அடைந்து இன்னேன் சத்தியின் விரதம் கொள்ள;

26. தங்கள் ஊருக்கு மேற்கில் மாரியம்மன் எழுந்தருளியுள்ள நகர மொன்றிற்குச் சென்று, அம்மனுக்கு அபிஷேகம் முதலியன செய்து, உயர்வான அந்தணர் குலப் பெண்மணிக்கு, புடவை, சந்தனம், மலர் முதலியன அளித்து, உள்ளூர் மீண்டு, சக்தி நோன்பு ஏற்பானுயில்,

27. சுதர்தோன் றும்தீர்க்க மெய்தும் செப்புவோ மாண்பா
[லொன்று
மதிமுகப் பெண்பால் ரெண்டு வறைகின்றேரும் தீர்க்க மாகப்
புதல்வனு மிவன்மே லாகப் புகழுடன் வாழ்வா னுகும்
அதிதிபோல் தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

27. புத்திர விருத்தி ஏற்படும். அவர்கள் நீண்ட ஆயுளுடையராயிருப்பர். ஆண்மகன் ஒருவனும் அழகிய பெண்களிருவரும் தீர்க்காயுளுடனிருப்பர். புத்திரனும் இவனுக்கு மேற்பட்ட புகழுடனிருப்பான். அதிதி தேவிகள்போல் தவங்கள் இயற்றும் தாயே! கேளுங்கள்.

28. அன்னையின் குணத்தைச் சொல்வோம் அற்புத மொழியு
[மூண்டு
உன்னத தேகி யாவள் உத்தம குணத்தா ளாகும்
பன்னுமுன் கோபங் கொஞ்சம் பாவையும் மாஞ்சி வப்பள்
துன்மையாம் பித்த சூடு தோன்றிடும் பாவைக் கேதான்.

28, தாயின் குணத்தைச் சொல்லுவோம். அதிசயமான சொற்களுடையவள். சிறந்த உடலமைப்புள்ளவள். நல்ல குணசாலி. சிறிது முன்கோப முடையவள். கருஞ் சிவப்பு மேனியள். உடலில் பித்த சூடு ஏற்படும்.

29. வரன்சொல்லைத் தடுத்து வாழ்வள் மைந்தர்மே லாசை
[யேற்பள்
திருமக ளொப்ப தாகும் சிலியா மீகை கொஞ்சம்
வருவோரை யாத ரிப்பள் மங்கைக்குத் துணையாண் தோடம்
அரிவையு மொன்றே தீர்க்கம் அம்பிகை யாளே கேளாய்.

---

1. மாரியம்மன்

29. கணவன் சொல்லை மீறிப் பேசுவாள். மக்களின் மீது ஆசையுடையவள். இலட்சுமீ போன்ற வடிவழகுடையவள். ஒழுக்க முள்ளவள். பிறருக்குக் கொடுக்கும் தன்மை சிறிதுடையவள். வீட்டுக்கு வந்தவரை ஆதரிப்பாள். இவளுக்குச் சகோதர தோஷ மேற்படும். பெண் ஒருத்தி தீர்க்காயுளுடனிருப்பாள். தாயே! கேளுங்கள்.

30. இல்லமுங் கீழ்ப்பால் நேரும் இவள்பூர்வம் புகலக் கேண்மோ
எல்லையி லுயர்வ தான எழில்கொங்கு நாட்டி லேதான்
வல்லியும் வைசியச் சேயாய் மதலைக ளுடைய ளாகி
நல்லதோர் குடும்பம் பெற்று நாயகி வாழும் நாளில்;

30. ஊருக்குக் கிழக்குப் பக்கத்தில் வீடு ஒன்று ஏற்படும். இவளுடைய முற்பிறப்பைச் சொல்லக் கேளும். உலகில் உயர்ந்ததும் செழிப்புள்ளதுமான கொங்கு நாட்டில், வைசிய குலத்தவளாகத் தோன்றி, புத்திரருடையவளாகி, நல்ல குடும்பம் ஏற்பட்டு, வாழ்ந்து வரும்போது;

31. பஞ்சையாய் ஏழை பேரில் பாவமாம் வார்த்தை சொல்ல
வஞ்சியும் மனவெ றுப்பா லறைகுவாள் சாபந் தானும்
நஞ்சுபோ லென்மேல் குற்றம் நவின்றிட்ட பாவிக் கேதான்
தஞ்சமாய்ப் பின்சென் மத்தில் தன்வரன் பகையே யெய்தும்.

31. வறுமையுடைய் பெண்ணொருத்தி மீது, நிந்தையான சொற்களைச் சொல்ல, அவளும் மன வருத்தமடைந்து, சாபமிட்டாள். விஷம் போல் கொடிய குற்றம் என்மீது சொன்ன பாவிக்கு, ஏற்படும் மறுபிறவியில், கணவனின், விரோத மேற்படும்.

32. சிறையாகச் சிலநாள் வாழ்வாள் சுதர்பெண் ணுமில்லா
[தாகிப்
பெறுஞ்சுத ராண்பா லுந்தான் பேதைய ரின்றி வாழ்வள்
அரிவையு மிவ்வார் சொல்ல வணுகிற்று வந்தத் தோடம்
பெருவயி றூனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

32. சிறையிலிருப்பது போல் சிலகாலம் வாழ்ந்து வருவாள். ஆண் குழந்தையும் பெண்ணும் இல்லாதவளாகி வாழ்வாள் என்று சொன்னாள். அந்தச் சாபம் இவளே வந்தடைந்தது. விநாயகனே ஈன்ற புண்ணியவதியே! கேளும்.

33. மங்கைக்கு இச்சென் மத்தில் மருவிடு மாது சாபம்
சங்கையாய்ச் சிறையாய் வாழ்வள் தன் துணை ஆண்பால்
[தோடம்
பொங்கிய மணங்க ளின்றிப் பூவையும் வாழ்வா ளாகும்
ஐங்கரன் தனவ ளர்த்த அம்பிகை யாளே கேளாய்.

33. இவளுக்கு இப்பிறவியில் ஏழைப் பெண்ணின் சாபம் வந்தடைந்தது. சந்தேகத்துடன் சிறையிலிருப்பது போல் வாழ்ந்து வருவாள். சகோதர தோஷம் ஏற்படும். நன்மைகள் இல்லாமல் வாழ்ந்து வருவாள். விநாயகரை வளர்த்த பார்வதியே! கேளுங்கள்.

34. எண்ணைந்து இரண்டு ஆண்டில் ஏகுவாள் அன்னை தானும்
திண்ணமா யிவள்பின் சென்மம் செப்புவோங் கலிங்க
[நாட்டில்
வண்ணமா யிக்கு லத்தில் வருகுவா ளென்று சொல்வோம்
அண்ணலைப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

34. ஜாதகனது நாற்பத்திரண்டாம் வயதில், நிச்சயமாகத் தாய் மரண மடைவாள். இவள் மறு பிறப்பைச் சொல்லுவோம். கலிங்க நாட்டில், இக் குலத்தில் பிறப்பாள் என்று கூறுவோம். சிவபெருமானைப் பூசை செய்யும் பார்வதியே! கேளுங்கள்.

35. நாற்பது வொன்று ஆண்டில் நவிலுவோம் தந்தை கண்டம்
ஏற்பவே யிவன்பின் சென்மம் இயம்புவோம் தில்லை தன்னில்
தீர்ப்பாகக் கங்கை சேயாய்ச் செனிப்பனு மென்று
[சொல்வோம்
பார்க்கவே தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

35. நாற்பத்தொன்றும் வயதில்; ஜாதகனின் தந்தைக்கு மரணம் ஏற்படும் என்று சொல்லுவோம். இவனுடைய மறு பிறப்பைக் கூறுவோம். சிதம்பரத்தில், வைசிய குலத்தவனுகப் பிறப்பான் என்று சொல்லுவோம். தவங்களே இயற்றும் பார்வதியே! கேளுங்கள்.

36. அறுபது ஆறு ஆண்டில் ஐப்பசி மாதந் தன்னில்
திருமகன் தனக்குக் கண்டஞ் செப்புவோ மிவன்பின்
[சென்மம்
கருவூரில் பிரம்ம சேயாய்க் கலப்பனு மென்று சொல்வோம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

36. அறுபத்தாறும் வயதில், ஐப்பசி மாதம் ஜாதகனுக்கு மரணம் ஏற்படும். இவனுடைய மறுபிறப்பைச் சொல்லுவோம். கருரில், அந்தணர்

குலத்தவனுகப் பிறப்பான் என்று சொல்லுவோம். வேதங்களின் முடிவில் விளங்குகின்ற அம்பிகையே! கேளுங்கள்.

37. பாலக னிச்சென் மத்தில் பகருவோம் யோகந் தானும்
[1]மால்மகன் வாச மெய்தும் வளமுள குடும்ப மேற்பன்
ஞாலங்கள் விருத்தி யுண்டு நாட்டினில் வறுமை காணுன்
சாலவே சொர்ண வேலை செய்துமே வுய்வா னுகும்

37. ஜாதகனுக்கு இப் பிறவியில் எற்படும் யோகங்களைச் சொல்லுவோம். திருமாலின் மகன் (மன்மதன்) போல் வாழ்ந்து வருவான். செழிப்புள்ள குடும்பத்தை யடைவான். நிலபுலன்கள் விருத்தி ஏற்படும். உலகில் தரித்திர மடையாதவன். பொன் வேலைகள் செய்து வருவான்.

38. நினைத்தது முடிப்பா னுகும் நீணிலம் பணிக ளில்லம்
தனமெண்ணு யிரம்பொன் சேர்ப்பன் சாதகன் சென்ன [காலம்
கனமுள [2]கடைநாள் தன்னில் [3]கணக்கன்தன் தசையி [ருப்புச்
சினமிலா வாறு ஆண்டும் செப்பினேம் பூர்வ பாகம்.

38. எண்ணிய காரியத்தை முடிக்க வல்லவன். விளை நிலங்கள், ஆபரணங்கள், வீடு முதலியன அடைவான். எண்ணூயிரம் வெண் போற் காசுகள் சேர்ப்பான். ஜாதகனுடைய பிறப்புக் காலத்தில் இரேவதி நட்சத்திரம்; புதமகா தசை இருப்பு; ஆறு வருஷங்கள் ஆம். இவ்வாறு முதல் பாகம் சொன்னேம்.

---

1. மன்மதன்
2. இரேவதி
3. புதன்

ஜாதகம் 67

1. மதியு மேடம் சிகிசியம்
மால்பொன் னிரவி தேளதனில்
வியன் ராகு சாடியுற
வெள்ளி குசனுங் கோலதனில்
பதியு நந்தி பலனெவ்வார்
பகர்வீர் முனியே விபரமதாய்
இதுவே ஆண்பால் சனனமுறும்
இல்லம் வடதென் வீதியதே.

1. சந்திரன் மேஷத்திலும், கேது சிம்மத்திலும், குரு புதன் சூரியன் விருச்சிகத்திலும், இராகு சனி கும்பத்திலும், சுக்கிரன் செவ்வாய் துலாத்திலும், விருஷபம் இலக்கின மாகவு மிருந்தால், பலன் எவ்வாறு? விவரமாகச் சொல்லுவீர்; முனிவரே! இஃது ஆண் மகனுகப் பிறந்தவனின் ஜாதகம். இவன் பிறந்தவீடு வடக்குத் தெற்கான வீதியிலுள்ளது.

	சந்திரன்	லக்கினம்	
ராகு சனி	இராசி சக்கரம்		
			கேது
	சூரியன் குரு புதன்	சுக்கிரன் செவ்வாய்	

2. அதுவே மேற்கு வாசலது
ஐரா வதத்தோன் நகரமுறும்
பதியு மயலா ருடையதென்றேரும்
பாரா ளரசர் கெடியுண்டு
சுதனும் வடுகர் குலமாகும்
செப்பு மன்னே தந்தைதுணை
புதல்வர் களத்ரம் பூர்வவினை
புகலக் கேண்மோ இந்நூலில்.

2. மேற்கு நோக்கியுள்ள வாசலை யுடையது. ஐராவத மென்னும் யானையை யுடைய தேவேந்திரனது நகரமாகிய அமராவதியைப் போன்றது.

பிறந்த வீடு அயலாருடையது. அங்கு, நாட்டையாளும் அரசர் கோட்டை யுண்டு. இவன் வன்னியர் மரபில் தோன்றுவான். இவனுடைய தந்தை, தாய், உடன்பிறந்தார், புத்திரர், மனைவி இவர்களின் யோகங்களையும், முற்பிறப்புத் தீவினை முதலியனவற்றையும் சொல்லக் கேளும்.

3. தந்தை துணையா ணென்றுறுமே
சக்தி யவ்வார் தான்புகல்வோம்
பிந்தி பாகம் அவர்சேதி
புகலக் கேண்மோ பூவையரே
வந்தோன் தந்தை குணங்கேளாய்
வாக்குத் தவரு னூகையுளன்
சொந்த வில்லங் காணுதான்
துறவோர்க் கன்பன் சிவந்தமெய்யன்.

3. தந்தைக்கு ஒரு சகோதரனும், சகோதரி ஒருத்தியும் உளர். அவர் கள் செய்தியைப் பிற்பாகத்தில் கூறுவோம். ஜாதகன் தந்தையின் குணத் தைக் கேளுங்கள். சொன்ன சொல் தவறுதவன். ஊகசாலி. சொந்த வீடில்லாதவன். துறவிகளுக்கு நேயன். சிவந்த உடலுள்ளவன்.

4. மர்ம நூலெத் தானறிவன்
மாமி மூன்று தான்நாடும்
பெரியோ ருறவு அறமிச்சை
புகழ்ந்தோர்க் கன்பன் பெரும்புத்தி
நெறியைத் தவறுன் தான்யசெட்டு
நிகழ்த்து ஞான நூலறிவன்
குருமேல் பக்தி தலவாசம்
கொள்வான் சீலன் குணவானே.

4. மரும நூல நன்கு தெரிந்தவன். இவனுக்கு மூன்று மனைவியர். பெரியோர்கள் உறவுள்ளவன். தர்மத்தில் இச்சை யுடையவன். துதித்த வருக்கு நேயன். தாராள புத்தி யுள்ளவன். ஒழுக்கந் தவறுதவன். தானிய வியாபாரம் செய்வான். ஞான நூலைப் படித்தவன். குரு பக்தி யுடையவன். சிறந்த தலங்களுக்குச் சென்று வசிப்பான். நன்னடத்தை யுள்ளவன். நற்குண முடையவன்.

5. வானோர் பக்தி சிலமுளன்
அறைந்த குணத்தா னுக்குவிவன்
தேனே வுதிப்பன் இவன்குணத்தைச்
செப்பக் கேண்மோ சிவந்தமெய்யன்
ஊனமி லாதான் உயரமிலான்
உறுதியி லாதான் இளமனத்தன்
பான்மை யாக வார்த்தைகொள்வன்
பகவான் பக்தி கொண்டிடுவன்.

5. தெய்வ பக்தி யுள்ளவன். ஒழுக்க முடையவன். இவ்விதக் குணங் களுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இவனுடைய குணத்தைக் கேளுங்கள். சிவந்த மேனி. ஊன மில்லாதவன். குள்ளன். திடமில்லாது இளகிய மன முடையவன். பொருத்தமாகப் பேசுவான். பகவான் மீது பக்தி யுள்ளவன்.

6. இடுவன் ஏழை தமக்கன்னம்
இலைத்தோ ரிடரைத் தான்தீர்ப்பன்
படையில் செல்லான் கல்வியுளன்
பண்போர் நேயன் பதரில்லான்
கடனே கொள்வன் நிவிர்த்திசெய்வன்
கருதான் கட்டு வார்த்தைகளை
திடமாய்க் குடும்பம் பின்னலே
செட்டுச் செய்வன் தேவியரே.

6. ஏழைகளுக்கு அன்ன மளிப்பான். துன்ப மடைந்தவரின் கஷ்டங் களைத் தீர்த்து வைப்பான். சண்டைக்குச் செல்லாதவன். கல்வி யறிவு உள்ளவன். நல்லவருக்கு விருப்பமானவன். கெடுத லில்லாதவன். கடன் வாங்குவான். அதனைத் தீர்ப்பான். பொய் சொல்லாதவன். செளக்கிய மான குடும்ப முள்ளவன். பிற்காலத்தில் வியாபாரம் செய்வான், தாயே!

7. அறவே தந்தை ஆஸ்தியிலான்
அயலார் பொருள்மே லிச்சையிலான்
துறவோர்க் கன்னந் தானீவன்
சுகமும் துக்க முடையவனே
குருவை மறவான் சுகபுசிப்பன்
கோதை யிட்டம் குணவானும்
பொரைசொல் லாதான் பின்வயதில்
பொருந்து மில்லம் பொருளென்றும்.

7. தந்தையின் ஆஸ்தி சிறிதும் இல்லாதவன். பிறர் பொருள்களின் மீது விருப்ப மில்லாதவன். தாயவிகளுக்கு அன்ன மளிப்பான். சுக துக்கங்களைச் சமமாகப் பெற்றவன். குருவை மறக்காதவன். போஜனத்தில் பிரிய முள்ளவன். மனைவிக்கு விருப்ப மானவன். குணசாலி. பொய், கோள்கள் சொல்லாதவன். வயதான பின்பு இவனுக்கு இல்லம், பொருள் முதலியன சேரும் என்றோம்.

8. மாரன் தனக்குத் துணையாண்பா
லறைந்தோம் நால்வர் முன்பின்னுய்
நாரி காணு னத்திரியும்
நவில்வார் நான்கில் ஞானியுறக்
காரி பார்த்த பலனெவ்வார்
கழறுவீர் முனியே பாலனுக்கு
வேறு அன்னை யிரண்டிலுமே
விளம்பு வீர்கள் சுதர்களையே.

8. ஜாதகனுக்குச் சகோதரர் நால்வர். இவனுக்கு முன்பும் பின்பும் தோன்றுவர். சகோதரி யில்லை. அத்திரி முனிவர் சொல்லுகின்றார். இலக்கினத்துக்கு நான்கில் இருக்கும் கேதுவை, சனி பார்ப்பதால் எற்படும் பலனைச் சொல்லுவீர், முனிவரே! ஜாதகனுக்கு மற்றுமுள்ள தாயாரிருவருக்கும் எற்படும் குழந்தைகளைப் பற்றிக் கூறுங்கள்.

9. என்றே விரண்டாம் மாதுக்கு
எய்தா சுதர்கள் ஏகுவளே
மூன்றுந் தாய்க்குக் கன்னியொன்று
மேவும் தீர்க்கம் முனிவர்களே
அன்றே துணைவர் சேதிகளை
அறிவிப் போமே பின்பாலில்
மன்றல் காலம் நாலஞ்சுள்
மங்கை யுள்ளூர் குடிகினிலே ;

9. இரண்டாந் தாய்க்குக் குழந்தைகள் பிறவா. அவள் இறந்து விடுவான். மூன்றும் தாய்க்கு ஒரு பெண் குழந்தை பிறந்து, தீர்க்காயுளுடன் விளங்கும். உடன் பிறந்தார் செய்திகளைப் பற்றிப் பிற்பாகத்தில் சொல்லுவோம். ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இருபதாம் வயதிற்குள் மணம் கைடபெறும். மனைவி உள்ளூரிலிருந்தே ;

10. நேரும் குணத்தைத் தான்புகல்வோம்
நீத்தோர்க் கன்னம் தானளிப்பள்
கூறும் சொல்லே சுகமாகும்
கொழுநன் மனம்போல் நடந்திடுவள்
பாரி புத்தி நன்னடக்கை
பதராள் மாலின் மனையொப்பாம்
பாரில் சீலி தேவபக்தி
பாவை வயது தீர்க்கமுறும்.

10. வாய்ப்பாள். அவளுடைய குணத்தைச் சொல்லுவோம். துற விகளுக்கு அன்ன மிடுவாள். இன்பமான வார்த்தைகளைச் சொல்லுவாள். கணவன் மனம் போல் நடப்பாள். பரந்த நோக்க முடையவள். நன் னடத்தை யுள்ளவள். பயமில்லாதவள். இலட்சுமியைப் போன்ற வடிவழ குடையவள். உலகத்தில் சுகமாய் வாழ்வாள். தெய்வ பக்தி யுள்ளவள். அவளுக்கு நீண்ட ஆயுள் உண்டு.

வேறு

11. எப்படி வயது தீர்க்கம் இயம்பினீர் கார ணஞ்சொல்
ஒப்புடன் பொன்னேன் ஏழில் உறைந்ததால் தீர்க்க
[மென்றோம்
அப்படி நடவா தாகும் ஆரலு மாறில் தங்கத்
தப்பிதம் சரத்தி லேறச் சாற்றினேம் தாரம் ரெண்டு.

11. வயது எப்படி தீர்க்கம்? காரணத்தைச் சொல்லுங்கள்: உயர் வான குரு, ஏழாமிடமாகிய விருச்சிகத்தில் இருப்பதால், சொன்னேம். அப்படி நடவாது. செவ்வாய் ஆறாமிடமாகிய துலாத்தில் இருக்கின்ற படி யாலும், அது சர லக்கினமாய் இருப்பதாலும், இவனுக்கு மனைவியர் இருவர் என்று சொன்னேம்.

12. முதல்மனை யெவ்வார் சொல்வீ ருதித்திடு சுதரா ணென்று
அதுவின்றி வேறு காணுள் அந்தகன் பக்கல் சேர்வள்
பதியினுக் கிரண்டாம் மாது பரவுவா ளவனின் தங்கை
வதிசதி குணத்தைச் சொல்வோ மாஞ்சிவப் புடைய
[ளாமே.

12. முதல் மனைவிக்குப் பலன் எங்ஙனம்? அவளுக்கு ஆண் குழந்தை ஒன்று பிறக்கும். வேறு பிறவாது. அவள் இறந்து விடுவாள். முதல் மனைவியின் தங்கையே ஜாதகனுக்கு இரண்டாம் மனைவியாக வாய்ப்பாள். அவளுடைய குணத்தைச் சொல்லுவோம். மாநிற முடையவள்.

13. அன்னம்போல் சாய லொக்கும் ஆளனுக் கினிய ளாகும்
தன்சொலு மடக்க முண்டு சாற்றுமுன் கோபி யாவள்
பொன்பணி யிச்சை யுள்ளாள் புகழ்ந்தோரை யாத ரிப்பள்
சொன்னசொல் சுகமே யெய்தும் சுந்தரி சமயோ கத்தாள்.

13. அன்னம் போன்ற நடை யுடையவள். கணவனுக்குப் பிரியமானவள். அடக்கம் பொருந்திய சொல்லுடையவள். சொல்லுவதற்கு முன் கோபங் கொள்ளுவாள். பொன்னுபரணங்களில் விருப்ப முள்ளவள். புகழ்ந்தவர்களைக் காப்பாள். அவள் கூறியபடி எவையும் நடைபெறும். சமமான யோக முடையவள். அழகுள்ளவள்.

14. மனமது கபடு மில்லாள் மறுமொழி யதிகம் கூறுள்
இனமதை யாத ரிப்பள் எதிரிபால் குற்றம் சொல்லாள்
கனமுடன் புத்திர பாகம் கூறுவோம் ஆண்பால் ரெண்டு
சினமிலாப் பெண்பால் ரெண்டு செப்புவோம் தீர்க்க மாக.

14. கபட மில்லாத மன முடையவள். எதிர்மொழி அதிகம் சொல்லாதவள். சுற்றத்தாரை ஆதரிப்பாள். விரோதியர்பாலும் குற்றம் சொல்லாதவள். ஜாதகன் புத்திர பாவத்தைச் சொல்லுவோம். ஆண் மக்கள் இருவரும், பெண்கள் இருவரும் பிறந்து நீண்ட ஆயுளுட னிருப்பர் என்போம்.

15. தென்முனி யிவ்வார் சொல்லச் செயமுனி தடுத்துச்
[சொல்வார்
என்னமாய்ச் சுதர்கள் விருத்தி இயம்பினீர் நந்தி சென்மம்
பொன்புத னிரவி யேழில் பொருந்தியே சரமி ருக்கப்
பின்னமாஞ் சுதர்கள் ளென்றேரும் பொருந்தாது பாவைக்
[கேதான்.

15. அகத்தியர் இவ்வாறு சொல்ல, செயமுனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். எங்ஙனம் குழந்தைள் விருத்தி என்று சொன்னீர்கள். விருஷபம் சென்ம லக்கினமாகவும், குரு புதன் சூரியன் ஆகியோர் விருச்சிகத்திலிருப்பதாலும், குழந்தைகள் மரிக்கும். இவளுக்குப் புத்திர விருத்தி யிராது என்றேரும்.

16. கருமத்தோன் ஆட்சி யாகக் கனகனும் லாபம் பார்க்கப்
பொருந்திடும் சுதர்கள் தாமும் புத்திரர் தன்னில் கருமம்
உறைந்திடு மிவனுக் கேதான் உறுஞ்சுதர் யோக வான்கள்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

16. கருமாதிபதியான சனி ஆட்சியாக இருப்பதாலும், குரு லாப ஸ்தானமாகிய மீனத்தைப் பார்ப்பதாலும், குழந்தைகள் பிறக்கும். புத்திர

னல் இவனுக்கு ஈமக் கடன்கள் நடைபெறும். பிறக்கும் குழந்தைகள் யோக சாலிகள். வேதங்களின் முடிவில் விளங்கும் தாயே! கேளுங்கள்.

வேறு

17. அன்னைகுணம் மாஞ்சிவப்பள் முன்கோ பத்தாள்
ஆளனுக்குப் பகையாவள் அறிவோர் நேயள்
தன்துணையா ணைன்றென்றேரும் கன்னி ரெண்டு
சாற்றுகின்றேரும் நற்குணத்தாள் தவருள் வார்த்தை
பன்னியுரை யறமிச்சை பித்த தேகி
பல்வலியும் நாபிவினை பகர லாகும்
முன்சென்மம் புலியூரில் தீயின் வமிசம்
உதித்தனள்காண் வரன்மதலை உயர்வா யில்லம்.

17. தாயின் குணத்தைச் சொல்லுவோம். மாறிற முடையவள். முன் கோபி. கணவன் மீது விரோதம் கொண்டவள். பெரியோர்களுக்குப் பிரியமானவள். உடன் பிறந்த சகோதரன் ஒருவனும், சகோதரிகள் இருவரும் உளராவர் என்று சொல்லுவோம். நற்குண முடையவள். சொல் தவறுதவள். பன்னிப் பன்னிப் பேசுவாள். தர்மத்தில் இச்சை யுள்ளவள். பித்த தேக முடையவள். பல் வலியும், வயிற்று வலியு முள்ளவள், மூற் பிறப்பில் வன்னியர் மரபினளாகப் பிறந்தாள். கணவன், மக்கள் முதலா னேருடன் உயர்ந்த குடும்பம் உண்டாகி ;

18. இல்லறமும் வினையின்றிக் கால நாடு
ஏகினள்காண் பிரமன்லக்க மிக்கு லத்தில்
வல்லியுமே வுதித்தனள்காண் பின்சென் மத்தை
யறிவிப்போ மரங்கத்தில் வைசியச் சேயாய்த்
தொல்லையின்றித் தானுதிப்பாள் தந்தை பூர்வம்
செப்புகின்றேரும் சோழநா டதனி லேதான்
எல்லைவிருத்தி செய்யும்பூ வைசிய ருக
இறங்கினன் மனைவிமைந்தர் இயலாய் வாழ்ந்தான்.

18. வாழ்ந்து வந்து, தீவினைக ளில்லாமல் இறந்தாள். பிறகு பிரமனுல் படைக்கப் பட்டு, இக் குலத்தில் பிறந்தாள். மறு சென்மத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஸ்ரீரங்கத்தில், வைசியக் குலத்தவளாய்த் தன்பங்கினின்றிப் பிறப்பாள். தந்தையின் முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுகின்றேரும். சோழ நாட்டில், பயிர்த்தொழில் செய்யும் வைசியனுகப் பிறந்தான். மனைவி மக்களை யடைந்து, செல்வாக்குடன் வாழ்ந்து வந்தான்.

19. வந்தவினை தான்புகல்வோம் மறையோ னீன்ற
மதலைக்கு மணம்வேண்டி யிவன்பால் பொன்னைத்
தந்திடுவீ ரெனமொழிய [1]முறியும் வாங்கித்
தனமீந்து பின்னுண்டில் பினையும் கேட்கப்
பிந்திசில நாள்சென்று ஈகு வேன்யான்
பிராமணன்தன் சொல்போலே பின்னுல் கேட்கச்
சிந்தையினில் கபடுண்டாய் வேறு வார்த்தை
சீர்மறையோன் தான்சொல்லக் கோப முற்று ;

19. அப்பொழுது ஏற்பட்ட தீவினையைச் சொல்லுவோம். அந்தணன் ஒருவன் தன் பெண்ணுக்குத் திருமணம் செய்விப்பதற்காக இவனிடம் பணம் வேண்ட, பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டு, இவன் பணம் கொடுத்து, மறு வருடத்தில் கேட்கும்போது, பின்னும் சில நாட்கள் சென்று தருவதாகச் சொன்னன். அவன் சொல்லியது போல் சில நாட்கள் சென்று கேட்கும் போது, மறையவன் மனத்தில் கெட்ட எண்ணங் கொண்டு, வேறு வார்த்தை சொல்ல இவன் கோப மடைந்து ;

வேறு

20. அரசர்பால் முறியைக் காட்டி அவன்தந்த பொருளுக் கீடு
உறையில்லங் கொண்டா னென்றேம் ஓதுவான் மனவெ [றுப்பால்
குறையான பொருளைத் தந்து கூட்டைக்கைக் கொண்ட [பாவி
வருஞ்சென்மம் தந்தை யில்லம் மருவாமல் வனவா சங்கள் ;

20. அரசனிடம் பத்திரத்தைக் காண்பித்து, அவன் கொடுத்த பொருளுக்கு ஈடாக அந்தணன் வீட்டைக் கைப்பற்றிக் கொண்டான். பிராமணனும் மன வெறுப்படைந்து, குறைவான பொருளைக் கொடுத்து வீட்டை எடுத்துக் கொண்ட பாவியே! இனி ஏற்படும் பிறவியில், தந்தையின் வீடு சேராமல், வனவாசம் போன்ற துன்பங்களும்,

21. பாரிமார் தன்னுல் துன்பம் பணமது யில்லா தாகிக்
கூறியே தெருத்தூள் விட்டார் கூற்றன்போ லந்தத் [தோடம்
வீரியன் தன்னைப் பற்ற வித்தக னந்தி யத்தில்
மாறிற்றுச் செல்வந் தானும் வாயுவால் மரண மெய்தி ;

21. மனைவியால் துன்பம் ஏற்பட்டு, பொருளில்லாதவனுகி விடுவாய், என்று கூறித் தெரு மண்ணை வாரி யிறைத்தான். விஷம் போல் அந்தத்

1. பத்திரம்

தீவினை ஜாதகனைப் பெற்ற தந்தையை அடைந்தது. அவனும் கடைசிக் காலத்தில் செல்வங்களிழந்து, வாயு நோயினால் மரண மடைந்து ;

22. கஞ்சனுல் வரையப் பட்டுக் கலந்தனன் வடுக வர்க்கம்
நஞ்சுபோல் மறையோர் சாபம் நல்கிற்று இச்சென் மத்தில்
வஞ்சிமார் மூன்று மெய்தும் வனவாச மாக வாழ்வர்
துஞ்சிடுந் தந்தை யாஸ்தி தோகையர் குலத்தில் நிந்தை ;

22. மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, வன்னியர் குலத்தில் பிறந்தான். விஷம் போல் கொடிய அந்தணன் சாபம் இப் பிறவியில் வந்தடைந்தது. மனைவியர் மூவர் ஏற்படுவர். வனவாசத்தைப் போல் கஷ்டப் படுவான். தந்தையின் ஆஸ்தி அழியும். மனைவி வர்க்கத்தில் பழியும் ;

23. நேரிடு மென்று சொல்வோம் நிமலன்பின் சென்மம்
[சொல்வோம்
தேறினோர் பதவி சேரும் துவாரையில் பிரம்ம சேயாய்
வீரிய னுதிப்பா னுகு முனிவருங் கேட்க லுற்றூர்
மாரனிச் சென்மந் தன்னில் வரைந்தபுண் ணியங்க ளென்ன.

23. ஏற்படும், என்று சொல்லுவோம். இவனுடைய மறு பிறப்பைச் சொல்லுவோம். பெரியோர்கள் வாழ்ந்து வரும் துவாரகையில், அந்தணர் குலத்தவனுகப் பிறப்பான். முனிவர் கேட்கலானர். ஜாதகன் இப் பிறவியில் செய்த புண்ணியங்கள் யாவை ?

24. அரிபக்தி மிகவே பூண்டும் அதிதிகள் நேயங் கொண்டும்
பெருமவ ரிட்டங் கொண்டும் புண்ணிய மனத்த னுமே
திருகிலா வார்த்தை யின்றித் திகைத்தோரை யாத ரித்தும்
கரைமன முடைய னுயும் கர்வலன் வாழ்வ தாலே ;

24. திருமால் மீது மிக்க பக்தியாயும், அதிதிகளிடம் நட்புக் கொண்டும், பெரியவர்களுக்குப் பிரியனுயும், நல்ல மன முடையவனுகவும், சேர்மையான வார்த்தைகளைப் பேசுபவனுயும், பயந்தவர்களுக்கு உதவி செய்தும், இளகிய மன முடையவனுகவும், வாழ்ந்து வருவதால் ;

25. உதிப்பனுந் துவாரை தன்னில் உயர்மறைக் குலத்தி
[லேதான்
அதிபன்தன் பூர்வம் சொல்வோம் மாயூரந் தன்னி லேதான்
நதிகுலந் தனிலு தித்து நாயகி மதலை யுண்டாய்
மதியினில் திருகு முண்டாய்ப் பாலனும் வாழு நாளில் ;

25, மறு பிறவியில், துவாரகையில், உயர்ந்த அந்தணர் குலத்தில் பிறப்பான். ஜாதகனுடைய முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். மாய வரத்தில், வேளாளர் குலத்தவனுய்ப் பிறந்து, மனைவி மக்களுடன், புத்தியில் சிறிது மாறுபாடு எற்பட்டு, வாழ்ந்து வரும் நாளில் ;

26. வித்தையைத் தனக்குச் சொன்ன வாத்தியின் மகள்மேல்
[மோகம்
சித்தசன் கொண்டு மேதான் தனம்பணி யவளுக் கீந்து
குற்றமாய் வார்த்தை சொல்லக் குருமகள் தங்கை வேண்டும்
புத்தியை நீக்கு மென்ன பலாத்கார மாகச் சேர்ந்தான்.

26. தனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் மகள் மீது மோகங் கொண்டு, செல்வம், ஆபரணங்கள் முதலியன அவளுக்குக் கொடுத்து, தகாத வார்த்தைகள் சொல்ல, அவள், உனக்கு நான் தங்கை முறை ஆக வேண்டும். கெட்ட எண்ணத்தை விடு என்றுள். இவன் அவளுடன் பலாத்காரமாகச் சேர்ந்து இன்ப மனுபவித்தான்.

27. சிலவேளாள் நேச மாகிச் சனபந்து துணைய றிந்து
விலக்கினுர் மாதைத் தானும் மாதுவுந் திகில டைந்து
கலக்கினீர் மனத்தைத் தானுங் கங்கையின் குலத்து
[வேந்தே
நிலையைவிட் டகலச் செய்தீர் நிந்தைக ளும்மால்
[பெற்றேன்.

27. சின்னுட்கள் அவளுடன் நட்புக் கொண்டு இருந்தான். அதனைத் தன் உறவினர்க ளறிந்ததும், அந்தப் பெண்ணை நீக்கினன். அப் பெண்ணும் பயப்பட்டு இவனிடம் சென்று, என் மனத்தைக் கலங்கச் செய்தீர். வேளாளர் குலத்தரசே! என்னுடைய நிலையிலிருந்து மாறும்படி செய்தீர்கள். உம்மால் அவமானங்க ளடைந்தேன் ;

28. எந்தனைக் காப்பா யென்ன என்பாரி பொல்லாள் செல்வாய்
இந்தவார் சொல்லும் போது இடிவிழு மரம்போ லாகி
அந்தவள் சாபம் சொல்வாள் அணுகிய பின்சென் மத்தில்
சொந்தஇல் காணு தாயும் தோகையர் இருவ ராயும் ;

28. என்னை ஆகரிப்பீர், என்று கூற, ஜாதகன், என் மனைவி பொல்லாதவள், அதனல் நீ இங்கிருந்து சென்றுவிடு என்றுன். அவளும் திகிலடைந்து, சாப மிடுவாள். இனி வரும் பிறவியில், சொந்த வீடு இல்லாமலும், மனைவிமார் இருவராகவும் ;

29. சஞ்சல மனத்த னுயும் தனமது பெருக்க மின்றி
வஞ்சியும் சொல்லிச் சென்று ளடைந்தது வந்தத் தோடம்
தஞ்சமாய் வேறு ஒன்று சாற்றுவோம் தாயே கேளும்
துஞ்சிய ஏழை யோர்கள் சுதனுக்கு மணங்கள் வேண்டி ;

29. நிலையான மன மில்லாதவனுயும், செல்வங்கள் அதிகமில்லாம லும் வாழ்வாய் என்று அப்பெண் சொல்லிவிட்டுச் சென்றுள். அந்தத் தீவினை இவனை வந்தடைந்தது. இது தவிர, வேறு ஒன்றும் சொல்லு வோம், தாயே ! கேளுங்கள். துன்பமடைந்த ஏழையொருவர், தன் மகன் திருமணத்துக்காக இவனிடம் வந்து ;

30. முத்திரை யறமா யீயும் மொழிப்படித் தாரே னென்னச்
சித்தமாய் மணங்கள் கூட்டிச் சிறந்தநா ளதனில் கேட்கப்
புத்தியு மலைச்ச லாகிப் பூடணை மறந்தே னென்ன
வித்தகர் வருத்த முற்று விளம்புவார் சாபந் தானும்.

30. திருமாங்கல்யம் செய்து தரவேண்டும் என்றனர். இவனும் நீங் கள் கேட்டபடி தருகின்றேன் என்று சொன்னுன். மணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டு, நல்லதொரு நாளில் இவனிடம் வந்து கேட்கும்போது, புத்தி மாறி, திருமாங்கல்யம் செய்து வைக்க மறந்துவிட்டேன் என்று சொன்னுன். அவர் வருத்த மடைந்து, சாபமிடுவார்.

31. மறுசென்ம மகவாய்த் தோன்றி மாதுவு மிரண்டு மாகிப்
பெரும்பொரு ளில்லா தாகிப் பூமியில் வாழ்வா யென்று
உறைந்தன னேழை தானும் உத்தம னந்தி யத்தில்
குறைவான குடும்பி யாகிக் கூற்றன்தன் பதிக்குப் புக்கு ;

31. மறு சென்மம் ஆண் மகனுய்ப் பிறந்து, இரு மனைவியரைப் பெற்று, செல்வங்கள் இல்லாதவனுகி பூமியில் வாழ்ந்துவருவாய் என்று ஏழை யோர் கூறினர். இவனும், கடைசி நாட்களில், குடும்பத்தில் குறை எற்பட்டு இறந்தான்.

32. சிரநான்கோன் வரையப் பட்டுச் செனிப்பனும் வடுகர் [வர்க்கம்
இருமனை யணுகு மென்றேரும் இல்லமும் சொந்தம் காணன்
பொருளது அதிகம் காணன் பேசுவோ மிவனின் யோகம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

32. மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு வடுகர் குலத்தில் பிறந்தான். இப் பிறப்பில் இரு மனைவியவர் ஏற்படுவர். சொந்த வீடு இல்லாதவன் ஆவன். பொருளும் மிகுதியாக இராது. இவனுடைய யோகத்தைப் பற்றிச் சொல்லுவோம். வேதங்களின் முடிவில் விளங்கும் தாயே ! கேளுங்கள்.

வேறு

33. பிறந்தநாள் முதலாய் இருபதோன் பாண்டும்
பேசுவோம் பலன்தனை யாங்கள்
குறைவுறுங் குடும்பம் மனமுஞ்சஞ் சலங்கள்
கோள்களு வகள்வன வாசம்
பொருளது சேரா செலவனே கங்கள்
பெருமலை தீபத்தைப் போன்று
திருகுண்டு நினைத்த காரிய மென்றேரும்
செயமுனி தடுத்துமே சொல்வார்.

33. பிறந்தது முதல் இருபத்தொரு வயதுவரையில் ஏற்படும் பலனைச் சொல்லுவோம். குடும்பத்தில் குறைவு ஏற்படும். மனம் ஒரு நிலையிலிராது. வீட்டில் களவு நடக்கும். வனவாசத்தைப் போல் துன்பங்கள் ஏற்படும். பொருள் சேராது. மிகுதியான செலவு உண்டு. பெரிய அலைகாற்றி லகப் பட்ட தீபம்போல, நினைத்த செயல்கள் நடவாமல் குழப்பங்கள் ஏற்படும் என்று சொன்னேம். செயமுனி தடுத்துச் சொல்லுகின்றார்.

வேறு

34. இருபது வொன்பா ணெண்டும் இயம்பினாய் தரித்திர யோகம்
நிறைகுறை யுண்டோ சொல்வாய் நீருள நிழல்போல் நேரும்
பெருகிடு மதன்மே லாகப் புத்திரன் மரண மட்டும்
குறைவுறுக் குடும்ப மென்றேரும் கூடிடும் நினைத்த
[தெல்லாம்.

34. இருபத்தோர் வயது வரையில் தரித்திர யோகம் சொன்னீர்கள். அது குறைவுபடுமோ, மிகுமோ என்று சொல்வீர். நிழல் நிறைந்த இடத்தில் நீர் இருந்து குளிர்ச்சி தருவதுபோல், அதற்குப் பிறகு நிலையில் நன்மை ஏற்படும். ஜாதகன் மரணமடையும்வரை குடும்பத்தில் குறைவு இராது. எண்ணிய காரியங்கள் கைகூடும்.

35. இல்லமும் புதிதாய் நேரும் இன்பங்கள் மிகவே யுண்டாம்
தொல்லைகள் நிவிர்த்தி யாகும் சுகமிகப் பெருகு மென்றேரும்
நல்லவர் நேச மெய்தும் நாதனுர் பத்தி பூணல்
சல்லியங் கொள்ளா னுகும் சகலசம் பத்து நேரும்.

35. வீடு புதிதாய்க் கட்டுவான். மிக்க சுகங்கள் ஏற்படும். துன்பங் கள் தீரும். நலங்கள் மிகுதியாம். நல்லவருடைய நட்பு ஏற்படும். கடவுள் பக்தி உண்டாகும். கடன் கொள்ள மாட்டான். எல்லாவிதச் சம்பத்துக்களும் பொருந்தும்.

36. என்னகா ரணத்தி னலே இயம்பினீர் யோகந் தானும்
தர்மகர் மாதி தானும் சந்திரன் தன்னை பார்க்கப்
பின்வய தினிலே யோகம் பொருந்திடும் பால னுக்கு
அன்னமே யாங்கள் சொல்லும் அருள்மொழி குன்ரு
[தென்ரேம்.

36. என்ன காரணத்தால் யோகம் ஏற்படும் என்று கூறினீர்? தர்ம கர்மாதிபதியான சனி, மேஷத்திலுள்ள சந்திரனைப் பார்ப்பதால், பின் வயதில் இந்த ஜாதகனுக்கு யோக ஏற்படும் தாயே! நாங்கள் சொன்ன மொழிகள் தவறுமல் பலிதமாம் என்ரேம்.

37. எந்தக்கா லத்தி லேதான் இல்லமும் நேருஞ் சொல்வீர்
வந்தவன் முப்பான் மூன்றில் வாங்குவா னில்லந் தானும்
முந்திய செட்டு ஓங்கும் முயற்சியாய்க் குடும்பம் ஓங்கும்
சந்திரமங் களயோ கங்கள் சார்ந்திடு மென்று சொல்வோம்.

37. எந்தக் காலத்தில் வீடு கிடைக்கும் என்றுசொல்வீர். ஜாதகன் முப்பத்து மூன்ரும் வயதில் வீடு வாங்குவான். முன்செய்த வியாபாரம் விருத்தியாகும். குடும்பமும் விருத்தியாம். சந்திர மங்கள யோகம் ஏற்படும் என்று சொல்லுவோம்.

38. ஈரொன்ப தாண்டு தன்னில் இவன்தந்தை கண்டம் நேரும்
ஆரூறு ஒன்று ஆண்டில் அன்னையின் கண்டம் நேரும்
பாரியு மிவன்பின் னலே பறப்பளாங் கால நாடு
நாரிமூன் இருபான் ரெண்டில் நமன்பதி சேர்வா ளாமே.

38. ஜாதகனின் பதினெட்டாம் வயதில், தந்தை இறப்பான். முப்பத்தேழாம் வயதில், அன்னைக்கு மரணம் ஏற்படும். இவனுடைய இரண்டாம் மனைவி இவனுக்குப் பின்னல் மரண மடைவாள். முதல் மனைவி இவனது இருபத்திரண்டாம் வயதில் எமனுலகம் செல்வாள்.

39. அறுபது ஆறு ஆண்டில் அணுகிய மேட மர்தம்
திருமக னுடலம் ஏகும் செப்புவோ மிவன்பின் சென்மம்
அரங்கமா நகரந் தன்னில் அந்தணர் குலமு திப்பான்
பராசரும் புகலு கின்ரூர் பாலக னிச்சென் மத்தில்.

39. அறுபத்தாரும் வயதில் சித்திரை மாதம், ஜாதகன் மரணமடைவான். இவன் மறு பிறவியில் ஸ்ரீரங்கத்தில் அந்தணர் குலத்தில் பிறப்பான். பராசர முனிவர் சொல்லுகின்ரூர். ஜாதகன் இப் பிறவியில்;

40. செய்தபுண் ணியங்க ளென்ன செப்புவீர் முனியே நீர்தாம்
ஐயமில் மனத்த னுயும் அதிதிகள் நேசங் கொண்டு
பொய்யுரை பகரா தாலும் பெம்மானின் பத்தி பூண்டும்
நையவே கூரு தாலும் நலிந்தோரை யாத ரித்தும் ;

40. என்ன நற்செயல்கள் செய்தான் ? சொல்லுவீர் முனிவரே ! சந்தேகமில்லாத மனத்தனுகவும், விருந்தினரிடம் நேசமாயும், பொய் மொழிகள் சொல்லாமலும், சிவபெருமான் மீது பக்தியாயும், புண்படக் கூறுதலுகவும், துன்ப மடைந்தோரை ஆதரித்தும் வாழ்ந்து ;

41. வருவதால் மறுபி றப்பு வரங்கமா நகரந் தன்னில்
மறைக்குல முதிப்பா னுகும் மன்னரால் சிவிப் பானும்
திருசென்மம் தேவ ராகச் சேருவா னிந்தப் பாலன்
பெருவயி ரூனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

41. வருவதால், மறு பிறப்பு ஸ்ரீரங்கத்தில், அந்தணர் குலத்தில் பிறப்பான். அரசாங்க உத்தியோகம் ஏற்று வாழ்க்கை நடத்துவான். பிறகு முத்தி யடைவான். விநாயகனைப் பெற்ற பார்வதியே ! கேளுங்கள்.

42. செனித்திடுங் காலந் தன்னில் செம்பாம்பு தசையி ருப்புக்
குனித்திடு ஆண்டு மூன்றும் கூறுவோம் திங்க ளொன்றும்
வினைவரும் சாத கர்க்கு மிக்கதாய் தந்தை ரோகம்
துணைவிருத்தி யிடபே தங்கள் சூதகம் மிகவே நேரும்.

42. ஜாதகன் பிறக்கும் காலத்தில் கேது மகா தசையில் இருப்பு ; மூன்று வருஷங்களும், ஒரு மாதமுமாம். அப்பொழுது ஜாதகனுக்கும் அவனுடைய தாய்க்கும் நோய் ஏற்படும். சகோதர விருத்தியுண்டு. இட மாற்றமும் ஏற்படும். குடும்பத்தில் அசுபங்கள் நிகழும்.

43. சந்திரன் தனக்கு ஏழில் சல்லியன் குசனு நிற்க
அந்ததோர் பலனெவ் வாறு அறைகின்றேரு கேளுந் தாயே
வந்தவன் தேடும் செம்பொன் மனைபணி நிதிகள் யாவும்
முந்துமே மூயி ரம்பொன் மொழிந்திட்டோம் வயது
[பின்னல்.

43. சந்திரன் இருக்குமிடத்துக்கு ஏழாமிடமாகிய துலாத்தில், சுக்கிரனும் செவ்வாயுந் தங்கியிருப்பதால் ஏற்படும் பலன் எங்ஙனம்? சொல்லுவோம், முனிவரே ! கேளுங்கள். ஜாதகனுக்குப் பொருள், வீடு, ஆபரணங்கள், செல்வங்கள் ஆகிய இவை ஏழாயிரம் பொன்னுக்கு மேற்பட்ட மதிப்புடையன வாய்ச் சேரும். இவைகள் பிற்காலத்தில் ஏற்படுமென்று சொன்னேனும்.

ஜாதகம் 68

1. நந்தியும் செனன மோக ரவிபுத னதிலே நிற்கச்
சந்திரன் நான்க தாகச் சனிகுரு நவத்தி லேற
விந்தையாய்ப் புகரு லாபம் மெய்ஞ்ஞானி சேய்வி யத்தில்
மந்தர கயிறு வாறி லறிவிப்பீர் பலனைத் தானே.

1. விருஷபம் இலக்கினமாகவும், சூரியன் புதன் லக்கினத்திலும், சந்திரன் நான்காமிடமாகிய சிம்மத்திலும், சனி குரு ஒன்பதாமிடமாகிய மகரத்திலும், சுக்கிரன் பதினொன்றிலும், கேதுவும் செவ்வாயும் பன்னிரண்டாமிடமாகிய மேஷத்திலும், இராகு ஆறுமிடமாகிய துலாத்திலும் தங்கி இருந்தால் உண்டாகும் பலன்களைக் கூறுங்கள்;

சுக்கிரன்	கேது செவ்வாய்	லக்கினம் புதன் சூரியன்	
	இராசி சக்கரம்		
சனி குரு		சந்திரன்	
		இராகு	

2. மங்கையுங் கேட்கும் போது மாமுனி புகலு கின்றார்
இங்கிவை யாண்பால் சென்மம் இவன்தந்தை யில்லம்
[சொல்வோம்
[1]பங்கயன் [2]குடகு வீதி பார்வையும் தென்பா லாகும்
செங்கண்மால் கோட்டம் தன்மேல் சிதைந்திடும் வடமே.
[லீசன்.

2. என்று பார்வதி கேட்கும்போது, பராசரர் கூறுகின்றார். இஃது ஆண் பிறப்பு. இவன் தந்தையின் வீட்டைப் பற்றிக் கூறுவோம். கிழக்கு மேற்காக அமைந்த வீதியில் தெற்குத் திசையை நோக்கிய தாகும். அத் தென் திசையில் சிவந்த கண்களையுடைய திருமாலின் கோயிலும், வட மேற்கில் இடிந்துள்ள சிவபெருமான் கோயிலும் உள்ளன.

---

1. சூரியன்; அவன் தோன்றுமிடம் கிழக்கு

2. மேற்கு

3. அந்தரி காளி தங்கும் யானையின் கோட்டங் கீழ்ப்பால்
இந்தநல் லடையா ளத்துள் இலகிய சுமவூர் தன்னில்
விந்தையாய்த் தந்தை யில்லம் விளம்பினேந் தாயே
[யாங்கள்
சந்ததங் கங்கை சேயாய்ச் சேட்டனு யுதிப்ப னுமே.

3. கிழக்கே துர்க்கை, காளி, விநாயகர் இவர்களின் கோயில்களுள் ளன. தாயே! நாங்கள், இத்தகைய அடையாளங்களுடன் கூடிய ஊரில் தந்தையின் வீட்டில், இந்த ஜாதகன் மூத்த புதல்வனுய்ப் பிறப்பான் என்று சொன்னேம்.

4. தாதைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு மிளையா னின்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
ஆதிரை தேளாம் ராசி அணுகுவான் குணத்தைச்
[சொல்வோம்
பாதக மனம்வை யாதான் பரவுப காரி யாவன்.

4. ஜாதகன் பாட்டனருக்கு மனைவியர் இருவர். அவர்களில் இளைய மனைவிக்குப் பிறந்த புதல்வனே இவனுக்குத் தந்தையாவான் என்று சொல் லுவோம். தந்தை, திருவாதிரை நட்சத்திரம்; விருச்சிக ராசியில் பிறப்பான். அவன் குணங்களைச் சொல்லுவோம். மனத்தில் கெடுதல் எண்ணுதவன். பிறருக்கு உதவி செய்வான்.

5. மர்மநூ லறிவா னுகும் மறுத்துரை யதிகம் கூர்வன்
பெருமையும் புகழு மேற்பன் பிஞ்ஞுகன் தனைத்து திப்பன்
இருவிதக் குணத்தா னுகும் எதிரியை வசியம் கொள்வன்
நிறையவே குடும்பி யாவன் நீணிலம் விருத்தி செய்வன்.

5. வேதாந்த ரகசியங்களை யுணர்த்தும் நூல்களை உணர்வான். பெரி யோர் கூறுகின்றவற்றுக்கு எதிர்மொழி மிகுதியாகச் சொல்வான். மேன்மை யடைவான். கீர்த்தியைப் பெறுவான். சிவபெருமானைத் துதிப்பான். இருவிதக் குணங்க ளுள்ளவன். விரோதிகளையும் வசப்படுத்துவான். நிறைந்த குடும்ப முடையவ னுவான். மிகுதியான விளைபுலங்களை விருத்தி செய்வான்.

6. பலசகா யங்கள் செய்வன் பரிந்துப சாரம் சொல்வன்
வலப்புறம் வடிவு மூண்டு மடையரை யுறவு கொள்ளான்
தலந்தீர்த்தம் தோய்வா னுகும் சுற்பாத்ரன் கல்வி மேன்மை
சரசனும் பந்து வுக்குத் தீரனு மென்று சொல்வோம்.

6. மக்களுக்குப் பலவித உதவிகள் செய்வான், ஆதரவுடன் உப சாரங்கள் செய்வான். இவன் உடலின் வலப்பக்கத்தில் அடையாள

மொன்றுண்டு. அறிவில்லாதவர்களை நட்பாகக் கொள்ள மாட்டான். புண்ணியத் தலங்களுக்குச் சென்று தீர்த்தங்களில் நீராடுவான். தகுதி வாய்ந்தவன். படிப்பினால் மேன்மை யுள்ளவன். உறவினர்களுக்கு இனியவன். தைரிய முள்ளவன் என்று கூறுவோம்.

7. குருவுப தேசஞ் செய்வன் குறிப்பினில் கொடுமை தோன்றும்
தரையதை விருத்தி செய்வன் சத்திமார் மோக னுவன்
பொரைசொல்வன் சுகபு சிப்பன் பெரிதான குடும்ப
[மூன்னுல்
அரிபோல்க் கோப மெய்தும் அணுகிடும் நாபிச் சூடு.

7. குருவைப் போல் பெரிய உபதேசங்கள் செய்வான். கொடுமை நிறைந்த தோற்ற முடையவன். நிலபுலன்களை விருத்தி செய்வான். பெண்கள் பால் மோக முடையவ னுவன். கோள் முதலியன சொல்லுவான். சுகமான போஜனத்தைப் புசிப்பான். பெரிய குடும்பத்தை ஏற்பான். சிங்கம் போல் கோப மடைவான். இவனுக்கு நாபிச்சூட்டு நோய் உண்டாகும்.

8. இந்நெறி யுடையா னுக்கு இவனுக்குத் தாரம் மூன்றில்
பின்மனை யாளுக் கின்னோன் பிறப்பனு மிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் ஆண்மையும் சிவந்த
[மேனி
பன்னுவான் கலைகள் தம்மைப் பணிதிபாத் திரங்கள்
[சேர்ப்பன்.

8. இத் தன்மையுடைய தந்தைக்கு மனைவியர் மூவர். அவர்களில் மூன்றுவது மனைவிக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இவன் குணங்களைச் சொல்லுவோம். ஆண்மை யுடையவன். சிவந்த உடல். பல கலைகளைப் பயில்வான். ஆபரணங்கள், பாத்திரங்கள் இவற்றைச் சேர்ப்பான்.

9. அரசர்பூ சிதமு மாவன் அடைந்தோரை யாத ரிப்பன்
தரையதை விருத்தி செய்வன் தந்தைக்கு மேலாய் வாழ்வன்
பெருமையும் புகழு மேற்பன் பூமியில் சல்லியம்
[கொள்ளான்
பரிவண்டி யுடைய னுகும் பந்துவும் மெச்ச வாழ்வன்.

9. அரசர்களால் மதிப்பும் பெறுவான். தன்னை அடைந்தவர்களை ஆதரிப்பான். நிலபுலன்களை விருத்தி செய்வான். தந்தையினுஞ் சிறப்பாக வாழ்வான். மேன்மையும் கீர்த்தியு மடைவான். கடன் வாங்க மாட்டான். குதிரை வண்டி யுடையவன். உறவினர் பாராட்ட வாழ்வான்.

10. உண்டியும் சுகமாய்க் கொள்வன் உறைப்பொடு புளிப்பி
[லிச்சை
தண்டமிழ் நுணுக்கம் தேர்வன் தனமது கொடுக்கல்
[வாங்கல்
குண்டுணி கூரு ளுகும் கோதையர் மோக னுவன்
பண்டிபண் டார முள்ளான் பலதிருப் பணியும் செய்வன்.

10. போஜன சுக முடையவன். காரம், புளிப்பு இவற்றில் விருப்ப முடையவன். இனிய தமிழ்க் கல்வியின் நுணுக்க மறிந்தவன். பணம் கொடுக்கல் வாங்கல் செய்வான். கோள் சொல்ல மாட்டான். பெண்கள் பால் மோக முடையவன். வண்டி, கிடங்குகள் உள்ளவன். கோயில் திருப் பணிகள் பல செய்வான்.

11. சோலைகள் துரவு செய்வன் சொல்லதைக் காப்பா ளுகும்
காலத்தை யறிந்து ரைப்பன் காலிக ளதிக்ம் சேர்ப்பன்
பால்தயி ரிட்டம் கொள்வன் பரமன்தன் பக்தி பூண்பன்
சீலவான் சயன மெத்தை சிறப்புள குடும்பி யாவன்.

11. நந்தவனங்கள் வைப்பான். கிணறுகள் வெட்டுவான். சொன்ன சொல் தவற மாட்டான். சரியான சமயத்தை அறிந்து கூறுவான். மாடு களை மிகுதியாக வைத்திருப்பான். பால், தயிர் இவற்றை அதிகமாக விரும்பி உண்பான். இறைவனிடம் பக்தி கொள்ளுவான். ஒழுக்க முடையவன். சயன சுகமுண்டு. சிறப்பான குடும்பத்தை யுடையவன்.

12. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்கள் முனியே
[நீர்தாம்
பாகனும் ரவியும் சென்மம் பாக்கிய கருமத்தோ ளுட்சி
ஏகனுய்ப் புகரும் லாபம் எய்தின பலத்தி னுலே
போகவான் பூமி பொன்னும் புகன்றனம் முப்பா
[யிரம்பொன்.

12. நீங்கள், இவனுக்கு யோகங்களே எப்படிக் கூறினீர்கள்? காரணஞ் சொல்லுங்கள், முனிவரே! புதனும் சூரியனும் இலக்கினத்திலும், பாக்கிய ஸ்தானமாகிய மகரத்துக்கும், கரும ஸ்தானமாகிய பத்தாமிடத்துக்கும் (கும்பம்) உரிய சனி, ஒன்பதில் ஆட்சியாகவும், சுக்கிரன் லாப ஸ்தானமாகிய மீனத்தில் தனியனுயும் இருக்கும் பலத்தைக் கொண்டு யோகங்கள் கூறி னேம். போகங்களே அனுபவிப்பான். மூப்பதினுயிரம் பொன்னும், நில புலங்களும் சேர்ப்பான்.

13. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோ மாண்பால்
[தோடம்
நவனியில் கன்னி ரெண்டு நாட்டுவோம் தீர்க்க மாக
அவர்சேதி பின்பால் சொல்வேன் அன்னையின் குணத்தைக்
[கேளாய்த்
தவமது புரிவா ளாகும் தானிரு நிறத்த ளாமே.

13. இவனுடன் பிறந்தோரைப் பற்றிச் சொல்லுவோம். சகோதரர் இல்லை. இரு சகோதரிகள் உளராவர். அவர்கள் தீர்க்கம் என்போம் அவர்களைப் பற்றிப் பிற்பகுதியில் கூறுவோம். இவனது தாயின் குணங்களைப் பற்றிக் கேட்பாயாக. நல் வினைகள் செய்பவள். கரிய நிற முடையவள்.

14. அன்னம்போல் சாய லொக்கும் அறமது இச்சை கொஞ்சம்
முன்கோப மதிகம் வார்த்தை மொழியது சுகமே யாகும்
தன்துணை யாண்பால் மூன்று தையலர் காணு ளாகும்
மன்னிய வில்லம் கீழ்ப்பா லறைந்தனம் பாவைக் கேதான்.

14. அன்னத்தைப் போன்ற சாயலுடையவள். தருமத்தில் ஆசையுள்ளவள். மிகுதியான முன்கோப முடையவள். இனிய மொழி யுரைப்பாள். இவளுடன் பிறந்தவர்கள் மூன்று ஆண் மக்கள். சகோதரி இல்லை. இவளுடைய வீடு கீழ்ப்புறமாக உள்ளதெனக் கூறினேம்.

15. மாதுரு பூர்வம் சொல்வேன் மாதியா கேசர் வாழும்
நீதியாய் மேல்பால் தன்னில் நேர்ந்தனள் கர்ண சேயாய்க்
காதலி சுதர்க ளுண்டாய்க் கனமுள குடும்பி யாகி
மேதினில் வாழு நாளில் விளம்புவோ மூழி தானே.

15. தாயின் முற்பிறவியைக் கூறுவோம். தியாகேசர் வாழும் திருவாரூருக்கு மேற்கில், கருணீகர் குலத்தவளாய்ப் பிறந்து, அன்புள்ள பிள்ளைகளைப் பெற்று, பெருங் குடும்பியாகி, உலகினில் இவள் வாழும்போது, நேர்ந்த தோஷத்தைக் கூறுவோம்.

16. பஞ்சையா யேழை மாது பாலர்க்கு அன்னம் வேண்டிக்
கெஞ்சியே யிவள்பால் சென்று கிளிமொழி வார்த்தை கூற
மிஞ்சிய வார்த்தை சொல்லி விரட்டினுள் ஏழை தன்னை
வஞ்சியும் மனவெ றுப்பா லறைகுவாள் சாபம் தானும்.

16. வறுமையுற்ற ஓர் ஏழைப்பெண், குழந்தைகளுக்காக உணவு வேண்டி இவளிடம் சென்று கெஞ்சிக் கேட்க, அவ் வேழைப் பெண்ணைக் கடுஞ்சொற்கள் கூறி விரட்டினுள். அப்பெண்ணும் மன வெறுப்படைந்து சாபமிட்டாள்.

17. பாலர்சோ றீயாப் பாவி பெருகாது சுதர்கள் தாமும்
சாலவே பின்சென் மத்தில் சந்ததி குறைவு நேர்ந்து
ஏலவே வாழ்வா ளென்று இயம்பியே வேறு இல்லம்
கோலமாய்ச் சென்ரு ளென்ரேரும் குலவிற்று வதுவோர்
[தோடம்.

17. குழந்தைகளுக்கு அன்னமிடாத பாவிக்குப் புத்திரர் தோன்ரூர். வரும் பிறவியில் புத்திர தோஷம் ஏற்பட்டு, வாழ்வாளென்று கூறி, வேறு வீட்டை நாடிச் சென்ரூள், அவ் வேழைப் பெண். அந்த ஒரு தோஷ முண்டாயிற்று.

18. மறைமாது வயது சென்ரேரன் மணமது புரிந்து கொண்டு
உறைந்தனள் தலவா சங்கள் உத்தமி யவளைப் பார்த்துச்
சரியிலா மாரன் தன்னைத் தான்மணம் கொண்டாய் நீயும்
அரிமகன் சுகமெவ் வாறு அறிவிப்பாய் மாதே நீதான்.

18. மேலும், ஓர் உத்தமியான அந்தணப்பெண், வயது சென்ற ஒரு வனை மணம் புரிந்து கொண்டு, புண்ணிய கூஷத்திரங்களில் வசித்து வந்தாள். அவளைப் பார்த்து இந்தப் பெண், 'நீ உனக்குச் (வயதில்) சமனில்லா ஒரு வனை மணம் புரிந்து கொண்டாய். நீ எவ்வாறு மண வாழ்க்கையின் இன் பத்தை அறிவாய்? எனக்கு நீ அதனைச் சொல்லுவாய், என்று கேட்டாள்.

19. மாதுவும் மனமும் வெட்கி யறைகின்ரூள் சாபம் தானும்
மேதினில் மறுசென் மத்தில் முதுமையே யடைந்தான்
[றன்னை
நீதியாய் மூன்ரும் மாதாய் நேருவா யென்று சொல்லிக்
காதலி கலக்க மாகக் கழறியே சென்ரு ளென்ரேரும்.

19. இதனைக் கேட்ட அந்தணர் குலப்பெண் வெட்கமடைந்து, ஒரு சாபமிட்டாள். நீ மறு பிறவியில் வயது சென்ற ஒருவனுக்கு மூன்ரூவது மனைவியாவாய் என்று வருத்தத்துடன் கூறி விட்டுச் சென்ரூள் என்று கூறினேம்.

20. வேதத்தோன் மனையின் சாபம் மேவிற்றுப் பாவைக்
[கேதான்
சூதான கால நாடு சுதர்களும் சேர்ந்து மேதான்
போதக வானை கோட்டம் பொருத்தினுள் தீப மொன்று
சோதியு மரண மட்டும் சுந்தரி வைத்துப் பின்பு;

20. இவ்வாறு இப்பெண்ணை, மறையவன் மனைவியின் சாபம் வந் தடைந்தது. பிள்ளைகள் இறந்தனர். விநாயகர் கோயிலில் தான் இறக்கு மட்டும் விளக்கேற்றி வைத்தாள். பின்பு,

21. வரன்முன்னே மரண மாகி மால்மகன் வரையப் பட்டு
மருவினுள் கங்கை சேயாய் மறைமாது சாபம் போலே
திருமணம் மூன்றும் மாதாய்ச் செப்புவோம் பாவை தானும்
குறையான வேழை சாபம் குழவிகள் தோட மாமே.

21. கணவனுக்கு முன்னே மரணமடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, வேளாளர் குலத்தினளாய்ப் பிறந்தாள். பார்ப்பனியின் சாபப்படி மூன்றும் மனைவியானுள். எழைப் பெண்ணின் சாபப்படி புத்திர தோஷ முண்டாயிற்று.

22. அத்திரி தடுத்துச் சொல்வார் ஆனையின் கோட்ட தீபம்
வைத்தபுண் ணியங்க ளென்ன வறிவிப்பீர் முனியே நீர்தாம்
இத்தகைப் பாலன் தானும் எய்திடு மென்று சொல்வோம்
வித்தகி வறுமை காணுள் விளம்புவோ மிவள்பின் .
[சென்மம்.

22. அத்திரி முனிவர் இடைமறித்துக் கூறுவார். விநாயகப் பெருமான் கோவிலில் விளக்கேற்றி வைத்ததால் ஏற்பட்ட புண்ணியங்கள் என்னவென்று சொல்லுங்கள், முனிவரே! நீங்கள். அதனுல்தான் இந்த ஜாதகன் இவளுக்குப் புதல்வனுகத் தோன்றுவான் என்று கூறுவோம். இவன் தாய் தரித்திர மில்லாதவள். இவளது மறுபிறவியைச் சொல்லுவோம்.

23. மறுசென்மம் காளாத்தி தன்னில் மருவுவாள் சௌராட்டிர
[வமிசம்
குறைவிலாக் குடும்பி யாவள் கூறுவோம் தந்தை பூர்வம்
பிருதிவி தலத்தி லேதான் பிறந்தனன் வைசியச் சேயாய்ப்
பெருகிய மனைவி மைந்தர் பலமுள குடும்பி யாகி ;

23. மறுபிறவி, திருக்காளத்தியில், சௌராஷ்டிரர் குலத்தவளாகப் பிறந்து, குறைவில்லாத குடும்பத்தை யடைவாள். இனி, தந்தையின் முற்பிறவியைக் கூறுவோம். காஞ்சீபுரத்தில் வைசிய குலத்தவனுகப் பிறந்தான். மனைவி மக்களை யடைந்து, சிறந்த குடும்ப முடையவனுகி ;

24. சுந்தரன் வாழு நாளில் சேர்ந்தவூழ் தன்னைக் கேண்மோ
முந்தின வடியார் சாபம் மேவிற்று இதுவு மன்றி
விந்தையாய் வேறு மாதை மேவியே கருவ ழித்தான்
அந்தகன் பக்கல் மாது அடைந்தன ளதுவோர் தோடம்

24. இவன் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில், இவனை யடைந்த தோஷத்தைக் கேளுங்கள். இறையவன் அடியவர் சாபம் ஒன்று இவனுக்கு ஏற்பட்டது. இது தவிர, வேறு பெண்ணுடன் சேர்ந்து, அவளுக்குத் தோன்றிய கருவை யழித்தான். அதனால் அந்தப் பெண் இயமனுலக மடைந்தாள். அஃது ஒரு தோஷமாயிற்று.

25. இன்னமும் சிலவே தோடம் எய்திற்று இவனுக் கேதான்
அந்தகன் பக்கல் சென்று அயனுமே வரையப் பட்டுப்
பிந்திய கங்கை சேயாய்ப் பிறந்தன னென்று சொல்வோம்
வந்திடு மனைவி மூன்று மைந்தர்கள் தோட மெய்தும்.

25. இன்னும் சில தோஷங்களும் இவனை வந்தடைந்தன. இவன் பின்பு மரணமடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, வேளாளர் வமிசத்துவனுய்ப் பிறந்தனன் என்று கூறுவோம். இவனுக்கு மூன்று மனைவியர். புத்திர தோஷ முண்டு.

26. முன்னிரு மாதா தீர்க்க முடிவுண்டோ விபரம் சொல்வீர்
தன்சுதர் தோன்றித் தீதாம் சாகுங்கா ரணங்க ளென்ன
முன்சென்ம மதிதி சாபம் மேவின பலத்தி னுலே
கன்னிமா ரவ்வா ருகும் கழறுவோ மிவன்பின் சென்மம்.

26. இவனுடைய மூத்த தாயார்கள் இருவரும் தீர்க்க மாவார்களோ? அன்றி இடையில் மரிப்பார்களோ? விவரம் சொல்வீர். இவனுக்குப் பிள்ளைகள் பிறந்து மரிப்பர். இறக்கும் காரணம் யாது? முன் பிறவியில் அதிதியின் சாபம் ஏற்பட்டதால், புத்திரர்களுக்குத் தோஷ மேற்பட்டது. புதல்வியரும் அங்ஙனமே மடிவர். இவனது மறு பிறப்பைக் கூறுவோம்.

27. உத்திரம் துவாரை தன்னில் உதிப்பனும் வைசியச் சேயாய்
மெத்தெனப் பொருள்ப டைத்து வித்தகன் வாழ்வா னுகும்
சித்தமா யிவர்கள் காலம் செப்புவீர் முனியே நீர்தாம்
சுத்தமா யிருபா னென்றில் [1]சுரூமாதம் தந்தை கண்டம்.

27. வடக்கிலுள்ள துவாரகையில் வைசியனுய்ப் பிறப்பான். மிக்க செல்வந்தனுக வாழ்வான். முனிவரே! இவர்கள் மரண காலம் கூறுவீர். ஜாதகனின் இருபத்தொன்றும் வயதில், தை மாதம் தந்தைக்கு மரண முண்டாகும்.

---

1. ஸ்தமாதம்

28. முப்பது மூன்று ஆண்டி லுயர்துலே மாதம் தன்னில்
செப்புவோ மன்னே கண்டம் சந்திரன் தசையே யாகும்
மைப்புட னுதித்தோ னுக்கு விளம்புவோம் மணத்தின்
[காலம்
ஒப்புட னீரே ழாண்டுள் உரைக்கின்றே மன்னே வர்க்கம்.

28. ஜாதகனது முப்பத்து மூன்றும் வயதில், ஐப்பசி மாதத்தில் அன்னே இறப்பாளெனக் கூறுவோம். அப்பொழுது சந்திர மகா தசை யாகும். ஜாதகனுக்கு மணவினே நிகழும் காலத்தைக் கூறுவோம். பதி னொன்று வயதிற்குள் மணம் நிகழும். மனேவி, இவன் தாய் வர்க்கத்தைச் சேர்ந்தவள்.

29. கன்னிகை யோக சாலி கஞ்சமா நிறத்த ளாகும்
சொன்னசொல் சுகமே யாகும் துறவிகட் கன்ன மீவள்
அன்னவள் தனக்குத் தீர்க்கம் அத்திரி தடுத்துச் சொல்வார்
மன்னிய வேழோன் தானும் மரபுத்தா னத்தி லேறி ;

29. அவள் யோகமுள்ளவள். செந்தாமரை போன்ற நிறமுடையாள். இனிய சொல்லுடையவள். சன்யாசிகட்கு உணவளிப்பாள். அவளுக்கு வயது தீர்க்கம். அத்திரி மறித்துக் கூறுவார். ஏழாமிடத்திற்குடைய செவ் வாய் விரய ஸ்தானத்திலும் ;

30. சிகிகூடிச் [1]சரத்தி லேறத் தேவிமா ரிரண்டு வென்றேம்
அகமனே யிரண்டு காணுன் அருணனும் ரவியும் சென்மம்
தகைமையாய்க் குருவும் பார்க்கச் சாராது மறும னேதான்
செகமதில் தவங்கள் செய்யும் செல்வதி கேட்டி டாயே.

30. கேது மேஷத்திலும் நிற்பதால் இவனுக்கு இரண்டு மனேவியர் எனக் கூறினேம். இரு மனேவியர் இரார். புதனும் சூரியனும் இலக்கினத் தில் நிற்க, குருவும் அவர்களேப் பார்ப்பதால் இன்னெரு மனேவி யில்லே. உலகினில் தவங்கள் புரியும் பார்வதியே ! கேட்பாயாக.

31. சுதர்களு மாண்பால் ரெண்டு தோகையு மவ்வார் தீர்க்கம்
அதமாகு மூன்று என்றேம் அவனுடைப் பூர்வம்
[சொல்வோம்
சதமுடன் பாண்டி நாட்டில் செனித்தனன் தீயின் வமிசம்
பதியினில் திருவு முண்டாய்ப் பரவுப காரு யும் ;

---

1. ஈண்டு மேஷம்

31. ஆண் மக்கள் இருவரும், பெண்கள் இருவரும் தோன்றி, தீர்க்க மாவர். மேலும் மூன்று பிறந்து கேதமாம் என்று சொன்னேம். ஜாதகன் முற்பிறப்பைச் சொல்லுவோம். பாண்டிய நாட்டில், வன்னியர் மரபில் பிறந்தான். செல்வத்தைப் பெற்று, பிறருக்கு உபகாரியாகவும்;

32. அறமதி லிச்சை யுண்டாய் அந்தகன் பக்கல் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிவனே யென்றேம்
திருமகன் யோகச் சேதி செப்புவோந் தாயே கேளும்
தரையது வதிகம் சேர்ப்பன் செகராசர் பேட்டி கொள் வன்

32. தருமத்தில் ஆசையுள்ளவனும் வாழ்ந்து, இறந்தபின், பிரமனுல் மீண்டும் படைக்கப்பட்டுப் பிறந்தான் இவன் என்றேம். தாயே! இவனு டைய யோகச் செய்தியைக் கூறுவோம், கேட்பாயாக. நிலங்களை மிகுதி யாகச் சேர்ப்பான். அரசர்களைப் பேட்டி காண்பான்.

33. தந்தைக்கு மேலாய் வாழ்வன் சம்பத்து வுடைய னுகும்
இந்திர போக மேற்பன் எதிரிக்கு அஞ்சா னுகும்
விந்தையா யிரண்டு இல்லம் மேவிடும் பால னுக்குப்
பந்துவும் மேலாய் வாழ்வன் பார்வதி கேட்டி டாயே.

33. தந்தையினும் சிறக்க வாழ்வான். செல்வ முடையவன். இந்திர போகத்தை அடைவான். பகைவர்க்குப் பயப்பட மாட்டான். இவனுக்கு இரண்டு வீடுகள் உண்டாம். உறவினரைவிடச் சிறப்பாக வாழ்வான். பார் வதியே! கேட்பாயாக.

34. அறுபது ஆண்டு தன்னில் ஆவணி மாதம் தன்னில்
திருமக னுடல மேகும் செப்புவோம் பின்சென் மத்தை
உறையூரு தன்னி லேதான் உதிப்பனும் பிரம்ம சேயாய்க்
குறுமுனி தடுத்துச் சொல்வார் கூறினீர் வயது தீர்க்கம்.

34. அறுபதாம் வயதில், ஆவணி மாதம் இவன் இறப்பான். இவ னது மறுபிறப்பைக் கூறுவோம். உறையூரில், அந்தணர் குலத்தவனுய்ப் பிறப்பான். அகத்திய முனிவர் இடையே தடுத்துக் கூறுவார். வயது தீர்க்கம் என்று உரைத்தீர்.

35. நாலாண்டுள் சாத கர்க்கு நாட்டுவோம் மார கங்கள்
காலத்தைச் சொல்லு மென்னக் கழறுவோம் சகடை [யொன்று
பாலகன் சென்ன காலம் [1]பரமோட்சன் தசையே யாகும்
சாலவே நடக்கு மென்றேம் சாற்றினேம் மார கங்கள்.

1. சேது

35. பிறக்து நான்கு வருஷங்களுள் இவனுக்கு மாரகங்கள் கூறுவோம். காலத்தைக் கூறும் என்று கேட்க, சகடயோகம் கடைபெறும் கேது மகா தசையில் கண்டங்கள் நேருமென்று சொன்னேம். இவனுக்கு அப்பொழுது மாரகம் ஏற்படும்.

36. பொன்னவன் நவத்தி லேறிப் புகருச்சன் புதனுஞ்
[சென்மம்
இன்னவா றிருப்ப தாலே இவனுக்கு வயது தீர்க்கம்
சொன்னனே யிதற்கு நேராய்ச் சாதகச் சுருதி தன்னில்
மன்னிய [1]யெட்டாம் பாகம் வரைந்தனம் கண்டு
[கொள்ளே.

36. குரு ஒன்பதிலும், சுக்கிரன் உச்சனுக மீனத்திலும், புதன் இலக்கினத்திலும் இருப்பதால், இவனுக்கு வயது தீர்க்கம் என்று சொன்னேம். இதற்குமேல் ஜாதக நூலில் எட்டாம் பாகம் பற்றி எழுதி யிருப்பதைக் கண்டு கொள்க.

---

1. ஆயுள்பாவம்.

ஜாதகம் 69

1. மதிசிகி தனுசு வாக மால்ரவி வண்டி யாக
நிதிபுகர் சனியுஞ் சிம்மம் நிலமகன் தேள தாக
அதிகுரு மகர மாக அரவுமே வீணை யாக
வதிபனும் மிடபஞ் சென்மம் வருவதால் பலன்சொல்

[வீரே

1. சந்திரன் கேது தனுசிலும், புதன் சூரியன் கடகத்திலும், சுக்கிரன் சனி சிம்மத்திலும், செவ்வாய் விருச்சிகத்திலும், குரு மகரத்திலும், இராகு மிதுனத்திலும் தங்கி, உதிக்கும் இலக்கினம் விருஷபமாக இருந்தால் ஏற்படும் பலனைச் சொல்லுவீர்;

		லக்கினம்	ராகு
	இராசி சக்கரம்		சூரியன் புதன்
குரு			சுக்கிரன் சனி
கேது சந்திரன்	செவ்வாய்		

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூற லுற்றார்
நீதியா யாண்பால் சென்மம் நிகழ்த்துவோ மிவன்த னில்லம்
கோதிலா வடதென் வீதி கூறுவோம் கிழக்குப் பார்வை
ஆதியாய் வடக்குத் திக்கில் யானையின் கோட்டந் தானே.

2. என்று பார்வதி கேட்கும்போது, கௌசிக முனிவர் சொல்லுகின்றார். பிறப்பது ஆண் சென்மம். இவனுடைய வீடு, தெற்கு வடக்கான தெருவில் கிழக்கு நோக்கியுள்ளது. வடக்கில் விநாயகர் கோவிலுண்டு.

3. அருகினில் முசல்மான் கோரி அத்தியு மங்குத் தங்கும்
தெற்கினில் மடங்கள் சோலை தேவிமா காளி நிற்கும்
பெருகிய யானை கோவில் பேசிணேம் நதியு முண்டாம்
திருவெனும் பேரூர் தன்னில் தேவியே வாசம் செய்வன்.

3. வீட்டுக்குப் பக்கத்தில் மகமதியரின் பள்ளிவாசலும், விநாயகர் கோயிலொன்றும் உள்ளன. தெற்குத் திசையில் மடங்களும், தோட்டம்

களும், காளி கோயிலும் இருக்கின்றன. அங்கு ஒரு விநாயகர் கோயில் உண்டு. அதற்கு அருகில் ஆறு ஒன்று ஓடும். தேவியே! இவ்விதமான அழகிய பெரிய ஊரில் ஜாதகன் வாசம் செய்து வருவான்.

4. இல்லத்தில் பாகம் ரெண்டாய் இசைக்கின்றே மிவனுக்
[கேதான்
சொல்லுவேன் தந்தை வீட்டில் சுந்தரன் செனிப்பா னுகும்
வில்நுதல் தந்தை வீட்டில் வித்தக னடைய மாட்டான்
அல்லலைத் தவிர்க்கு மாதே அறைகின்றே மெலுங் கேளே.

4. இவன் வீடு இரண்டு பாகமாகும் என்று சொல்லுவோம். தந்தையின் வீட்டில் இவன் பிறப்பான். பாட்டனர் (தாயைப் பெற்றவர்) வீட்டில் இவன் தங்கமாட்டான். துன்பங்களைத் தீர்க்கும் தேவியே! சொல்லுகின்றோம்; மேலுங் கேளுங்கள்.

5. இன்னவன் சென்ன யோகம் எழில்தந்தை தாயின் யோகம்
மன்னிய களத்திர் யோகம் வரும்புத்திரன் துணைவர் யோகம்
தன்னிலே முன்பின் சென்மம் சாந்தியுங் கூறு கின்றோம்
அன்னையே யாங்கள் சொல்லும் அடைமொழி குன்று
[தென்றோம்.

5. இவனுடைய பிறப்பு, அழகிய தாய், தந்தை, வரும் மனைவி, பிறக்கும் குழந்தைகள், சகோதரர் இவர்களின் யோகங்கள், முற்பிறப்பு மறுபிறப்புக்கள், சாந்தி, ஆகிய வனைத்தைப் பற்றியும் சொல்லுவோம். தாயே! நாங்கள் சொல்லுபவை தவறு.

6. தந்தைபின் துணைவர் தம்மைச் சாற்றுவோ மாண்பால்
[மூன்று
வந்ததோர் கன்னி யொன்று அறைகின்றோம் தீர்க்க மாக
எம்மையே யவன்கு ணத்தை இயம்புவோம் சிவந்த மேனி
சந்தத முயர மில்லான் சன்மார்க்கன் நெறியுள் ளோனும்.

6. தந்தையின் உடன் பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். ஆண் மக்கள் மூவரும் ஒரு பெண்ணும் நீண்ட ஆயுளுடன் இருப்பர். தந்தையின் குணத்தைப் பற்றிக் கூறுவோம். சிவந்த மேனியன். குள்ளன். நல்வழியில் செல்லுவான். நல்ல பழக்கங்களை யுடையவன்.

7. சொன்னசொல் கேட்பார் னுகும் துறவிகள் நேசம்
[கொள்வள்
கன்னென மொழியு முள்ளான் கதித்ததோர் புத்தி யுள்ளான
பன்னியே யுரைக்க வல்லான் பால்மேல் பிரிய முள்ளான்
உன்னதப் பொருளும் சேர்ப்பன் உத்தமி மேலுங் கேளே.

7. பெரியோர் சொல்லும் வார்த்தைகளைக் கேட்பான். நீத்தோர் களிடம் அன்புடையவன். இனிய சொற்க ளுடையவன். சிறந்த புத்தி யுடையவன். பன்னிப் பன்னிப் பேசுவான். சிறுவர்கள் மீது அன்புள்ளவன். உயர்ந்த பொருளைச் சேர்ப்பான். தாயே! மேலுங் கேள்.

8. சகலர்க்கும் நண்ப னுவன் தானிய விருத்தி செய்வன்
இகபர னன்பு கூர்வன் எதிரியை வசியம் செய்வன்
வகையான வார்த்தை கூர்வன் மர்மமும் கொஞ்ச முள்ளான்
தகைமையாய்க் குடும்ப முள்ளான் தரணியோர் மெச்ச
[வாழ்வன்.

8. எல்லோருக்கும் பிரியனுவன். தானிய விருத்தி செய்வான். துற விகளிடம் பக்தி யுடையவன். விரோதிகளை வசீகரிக்க வல்லவன். நன் றாகப் பேசுவான். சிறிது இரகசிய முள்ளவன். செழிப்பான குடும்பமுடை யவன். உலகத்தவர் புகழும்படி வாழ்ந்திருப்பான்.

9. இன்னவன் செங்கை தன்னில் இலகிடும் தனரே கைதான்
மன்னிய சுழியு முள்ளான் மர்மமுங் கொஞ்ச முள்ளான்
பன்னுமுன் கோபங் கொஞ்சம் பாவைமேல் விருப்ப
[முள்ளான்
அன்னியர் மெச்ச வாழ்வன் அம்மையே மேலுங் கேளே.

9. இவன் கையில் தன ரேகையுண்டு. ஒரு சுழியும் உடையவன். சிறிது வஞ்சனை யுள்ளவன். முன் கோபமுடையவன். மனைவியின் மீது விருப்ப முள்ளவன். பிறர் புகழும்படி வாழ்ந்திருப்பான். தாயே! மேலுங் கேளும்.

10. இக்குண முடையா னுக்கு இவனுமே யுதித்த பாலன்
தொக்கவே பலன்கள் யாவும் சொல்லுவோம் சிவந்த மேனி
தக்கதோர் கல்வி யுள்ளான் தனமுளான் கோபம் கொஞ்சம்
சிக்கனம் பொருளுஞ் சேர்ப்பன் தேவிமேல் பிரிய னுவன்.

10. இவ்விதக் குணங்களுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் புதல்வ னுக்குப் பிறப்பான். இவனுக்கு உரிய பலன்கள் எல்லாவற்றையும் கூறு வோம். சிவந்த உடல். தக்க கல்வி யறிவுடையவன். செல்வமுள்ளவன். கோபமுண்டு. செட்டாகப் பொருள் சேர்ப்பான். மனைவி மீது அன்புடை யவன்.

11. சொன்னசொல் தப்பா னுகும் துறவிகள் நேசம் கொள்வன்
பன்னியே யுரைக்க வல்லான் பந்துவுக் கினிய னுவன்
அன்னம்போல் நடையு முள்ளான் யாரையு முறவு
[கொள்வன்
உன்னத தந்த முள்ளான் உயர்ந்ததோர் பூமி சேர்ப்பன்.

11. சொன்ன சொல் தவறுதவன். சந்நியாசிகளிடம் பக்தி யுடையவன். பன்னிப் பன்னிப் பேசுவான். உறவினர்களுக்கு விருப்பமானவன். அன்னத்தைப் போல் நடையுடையவன். எல்லோரையும் நட்புக் கொள்ளுவான். நல்ல வரிசையுடன் அமைந்த பற்களுள்ளவன். செழிப்புள்ள பூமியைச் சேர்ப்பான்.

12. ரோமங்க ளதிக முள்ளான் நுவலுப தேசங் கொள்வான்
காமனே யொத்த தேகன் கணக்கினி லுக வாளும்
தீமையு மொருவர்க் கெண்ணுன் சித்தினி சாதி யாவன்
தாமதக் குணத்தா னுகும் தைரிய முடைய னென்றேரும்.

12. உடலில் அதிக உரோமங்க ளிருக்கும். பெரியோர் கூறும் உபதேசங்களைக் கேட்பான். மன்மதனைப் போன்ற உடலழகன். கணக்கில் ஊக முள்ளவன். ஒருவருக்கும் கெடுதல் எண்ணுதவன். சித்தினி ஜாதிப் புருடன். தாமதக் குணமுள்ளவன். தைரியசாலி.

13. இன்னவன் துணைவர் தம்மை இசைக்கின்றே மாண்பால்
[ரெண்டு
கன்னியு மவ்வா றுகும் கனத்திடு நான்கும் தீர்க்கம்
அன்னமே யிதன்மேல் தோன்றில் அரிட்டமாம் துணைவர்
[தாமும்
சொன்னசொல் தப்பா தென்றேரும் சுந்தரி மேலுங் கேளே.

13. அவனுடைய உடன் பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். ஆண் மக்கள் இருவரும், பெண்கள் இருவரும் உளராவர். நால்வரும் நீண்ட ஆயுளுள்ளவர். தாயே! அவர்களுக்குப் பிறகு பிறந்தாலும் நிலையார். கூறிய மொழிகள் தவறு. பார்வதியே! கேளும்.

14. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மொருபா னெட்டில்
நீதியாய்க் கிழக்குத் திக்கில் நிர்மித்த மாதைக் கொள்வன்
போதவே புத்திர பாகம் புகலுவோ மாண்பால் காணும்
மாதுதா னிரண்டு வென்று வழுத்தினேம் கேளு மம்மா.

14. ஜாதகனுடைய திருமணக் காலத்தைப் பகருவோம். பதினெட்டாம் வயதில், கிழக்குத் திசையிலிருந்து வரும் பெண்ணை மணப்பான். புத்

திர பாவத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஆண் சந்ததியில்லை. இரு பெண் கள் தோன்றுவர் என்று சொன்னேம். கேளுங்கள்.

15. முனிவரிவ் வாறுரைக் கூற மொழிகுவா ளம்மன் தானும்
அனையவே சாத கர்க்கு ஆண்மக னில்லை யென்றீர்
கனிவுட னந்தச் சங்கை கழறுவீ ரென்று கேட்கச்
சினமிலா விசுவா மித்திரர் செப்புவார் கேளு மம்மா.

15. இவ்வாறு முனிவர் சொல்ல, பார்வதியும் சொல்லுகின்றாள் ஜாதகனுக்கு ஆண் சந்ததிகள் இரா வென்று கூறினீர். அதற்குக் காரணம் என்ன? சொல்லுங்கள், என்று கேட்க, கோபமில்லாத விசுவாமித்திரர், கூறுகின்றார். கேளும்; தாயே!

16. அஞ்சினுக் குடையோன் புந்தி [1]அலவனில் இருக்க வேதான்
தஞ்சமா யந்த வீட்டோன் தான்சிகி யோடு எட்டில்
மிஞ்சியே முன்னுள் ஊழி விளங்கின தாலே யம்மா
துஞ்சிடு மதலை யென்றேம் தோன்றினு மரிட்டந் தானே.

16. தாயே! ஐந்தாம் வீட்டுக்குடைய புதன், கடகத்தில் தங்கி, நாலாம் வீட்டுக்(கடகத்துக்கு)குரிய சந்திரன், கேதுவுடன் எட்டாம் வீட்டி(தனுர் ராசி)லிருப்பதாலும், முற்பிறப்பில் செய்த தீவினை யாலும், குழந்தைகள் பிறவா என்று கூறினேம். பிறந்தாலும் மரண மடையும்.

17. முன்சென்ம வூழை நீங்கள் முயலுவீர் என்று கேட்க
அன்புடன் முனிவர் சொல்வார் அம்மைக்கு விபர மாக
இன்னவன் முன்சென் மத்தில் எழில்பட்சி தன்னி லேதான்
மன்னவன் சூத்ர வம்சம் வந்தவ னிவனே யென்றேம்.

17. முற்பிறப்பில் எப்பட்ட தீவினையைக் கூறுங்கள், என்று வினவ, அன்புடன் முனிவர் பார்வதிக்கு விவரமாகச் சொல்லுகின்றார். இவன் முற் பிறவியில், செழிப்புள்ள திருக்கழுக்குன்றத்தில், நான்காம் வருணத்தவனாகப் பிறந்தான், என்று சொன்னேம்.

18. சூத்திர னாகி யேதான் சோலைகள் துரவு முண்டாய்
நாற்றிசைக் கீர்த்தி பெற்று நன்மைந்தர் மனைவி யோடு
வேற்றொரு குறைவில் லாமல் வித்தகன் வாழும் நாளில்
பூர்த்தியாய் வந்த வூழைப் புகலுவேன் கேளு மம்மா.

18. சூத்திர வம்சத்தில் பிறந்து, தோட்டம், கிணறு உள்ளவனாக எல்லாத் திசைகளிலும் புகழடைந்து, மனைவி மக்களுடன், குறைவு இல்லா

1. கடகவிராசி

மல் வாழ்ந்து வரும் காளில், வந்த தீவினையைச் சொல்லுகின்றேம்; தாயே! கேளுங்கள்.

19. அந்நகர் நதியின் பக்கல் அணுகிய வரசின் கீழே
தந்தியும் நாகம் நிற்கும் தானவர் வாச மாவர்
மந்திர மோதும் வேத மறையவர் பூசை செய்வார்
இந்தவா ரிடத்தி லேதான் இரவினில் ஏது செய்தான்;

19. அந்த ஊரின் பக்கத்திலிருந்த, ஆற்றின் அருகில் உள்ள அரச மரத்தின் கீழ், ஒரு விநாயகர் உருவச் சிலையும், நாகப் பாம்பின் சிலையும் உள்ளன. வேறு பல தேவர்களும் அங்கு வாசம்செய்து வந்தனர். மந்திரங்கள் ஓதும் அந்தணர்கள் அங்குப் பூசை முதலியன செய்து வருவார்கள். இவ் வாறான இடத்தில், இவன் இரவில் என்ன தீவினை செய்தான் என்றால்;

20. விதவையை மரத்தின் கீழே வித்தகன் போகம் துய்த்தான்
அதனாலே கருவு தங்கி அனேகமா யவிழ்த்த மீயச்
சதியினால் கருவு நீங்கிச் சக்தியு மாண்டா ளென்றேரும்
மதிநுத லாள்தன் தோடம் வந்தது விவனுக் கம்மா.

20. கைம்பெண் ஒருத்தியுடன் அம் மரத்தின் கீழ், ஜாதகன் இன்பம் அநுபவித்தான். அதனால் அவளுக்குக் கருவேற்பட்டுப் பலவித மருந்துகள் கொடுத்தான். மருந்துகளின் வலியால் கரு நீங்கிப் பெண்ணும் மரண மடைந்தாள். அந்தத் தோஷம் இவனுக்கு ஏற்பட்டது.

21. ஆகையா லிச்சென் மத்தில் அந்தியக் காலந் தன்னில்
யோகமும் குறைச்ச லாகி உயர்பூமி யாவும் நீங்கிப்
பாகமா யுணவு இன்றிப் பாலகன் சேதுக் கேகி
வாகையாய்த் தீர்த்தம் தோய்ந்து மனமது களிப்புக் [கொண்டு;

21. ஆகையால் இப் பிறவியில், கடைசிக் காலத்தில் யோகங்களுக்குக் குறை வேற்பட்டு, பூமிகள் அனைத்தும் அழிந்து, நல்ல உணவில்லாமல், ஜாதகன் சேதுவுக்குச் சென்று, பக்தியுடன் நீராடி, மனத்தில் சந்தோஷ மடைந்து;

22. இராமலிங் கத்தைப் போற்றி நலமுடன் மதுரை புக்குத்
தீமையை விலக்கும் வைகை தீர்த்தமும் முழுகி யேதான்
சோமனை யணிந்த சொக்க நாதர்தம் பாதம் போற்றித்
தாமத மாகவேதான் பலதீர்த்தம் தோய்ந்து இன்னேன்;

22. இராமலிங்கத்தைப் பூசித்து, பிறகு மதுரை சென்று பாவங் களைப் போக்கும் வைகையில் நீராடி, சந்திரனைத் திருமுடியி லணிந்த சிவ

பெருமானுகிய சொக்கநாதர் பாதங்களைப் பூசித்து, இன்னும் பல புண்ணிய நதிகளில் நீராடி;

23. மறுபடி யுள்ளூர் மீண்டு மரணமே யாகி யேதான்
திறமையா யிக்கு லத்தில் செனித்தவ னிவனே யென்றேரும்
அருமறை முனிவர் கூற அம்மனும் கேட்க லுற்றுள்
பெருமையா யிக்கு லத்தில் பிறந்தகா ரணத்தைச்
[சொல்வீர்.

23. மறுபடியும் உள்ளூரடைந்து இறந்தான். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இக்குலத்தில் பிறந்தான் என்று கூறினேம். வேதங்களறிந்த முனிவர் இவ்விதமாகக் கூற, பார்வதியும் கேட்கலாளுள். உயர்ந்த இக் குலத்தில் பிறந்த காரணங்களைச் சொல்லுவீர்.

24. சேதுவின் நீர்த்தத் தாலே சேயன்செங் குந்த வம்சம்
மேதினி லுதித்தா னென்றேரும் விளம்புவோம் முன்னூழ்
[தன்னில்
நீதாகும் புத்திர ராண்பால் செப்புவோங் கிரிகை யொன்று
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

24. சேதுவில் நீராடியதால் ஜாதகன் செங்குந்த மரபில் தோன்றினுன் என்றேரும். முற்பிறவியில் ஏற்பட்ட தீவினையால் ஆண் குழந்தைகளுக்குத் தோஷ மேற்படும். அதற்குச் சாந்தியொன்று சொல்லுவோம். யானேமுகக் கடவுளே உலகத்துக் களித்த புண்ணியவதியே! கேளும்.

25. பாலகன் மனைவி யோடு பட்சிதன் மலைக்கு ஏகிச்
சிலமா யோர்வா ரந்தான் சிறப்புடன் கிரியைச் சுற்றி
ஆலத்தை யுண்டோன் பாதம் அர்ச்சித்து ரசதம் தன்னில்
வேலனைப் போலே செய்து விடம்புட்பம் கந்தத் தோடு;

25. ஜாதகன் மனைவியுடன் திருக்கழுக்குன்றத்துக்குச் சென்று, ஒழுக்கத்துடன் ஒரு வாரம் திருமலையை வலம்வந்து, ஆலகால விஷத்தை யுண்ட சிவபெருமானின் பாதங்களுக்கு அருச்சனை முதலியன செய்து, வெள்ளியால் முருகனைப் போன்ற உருச் செய்து, அதனை, மலர் சந்தணம் முதலிய வைகளோடு;

26. மறையவர் தமக்கு ரூந்து மவருடன் முன்னூழ் தன்னைக்
குறைவிலாத வர்க்கு வோதிக் குணமுடன் ஏழு பேர்க்குத்
திறமுட னன்ன மீந்து சேயனு முள்ளூர் மீண்டு
சரிவர வோராண் டுந்தான் சட்டியின் விரதம் கொண்டால்;

26. அந்தணருக்குக் கொடுத்து, அவரிடம் தான் செய்த பாவத்தைச் சொல்லி, நற்குணத்துடன், எழுவருக்கு அன்னமளித்துப் பிறகு, உள்ளூருக்குத் திரும்பி, ஒரு வருடம் சஷ்டி நோன்பு கொண்டால் ;

27. புத்திர னுண்பா லொன்று புகலுவோம் தீர்க்க மாகப்
பத்தியாய்ச் செய்யா னெனில் பெருகாது புத்திரன் தானும்
வித்தகன் தந்தைக் கேதான் விளம்புவோம் முன்சென்
[மத்தை
அத்திமா முகனைப் பெற்ற அம்மையே கேளு மம்மா.

27. ஆண் குழந்தை யொன்று பிறந்து தீர்க்கமாம். பக்தியாகச் சாந்தி செய்யாவிட்டால் குழந்தை பிறவாது. ஜாதகன் தந்தையின் முற் பிறப்பைச் சொல்லுவோம் யானைமுகக் கடவுளைப் புதல்வராக வடைந்த தாயே ! கேளுங்கள்.

28. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் காசி பக்கல்
வந்ததோர் பிரம்ம சேயாய் வணிபங்க ளதிகம் செய்து
பந்தமாய்ப் பூமி யுண்டாய்ப் பாலர்கள் மனைவி யோடு
சந்ததம் தனங்கள் பெற்றுத் தான்வாழும் காலம் தன்னில்;

28. தந்தையின் முற்பிறவியைச் சொல்லுவோம். காசிக்கு அருகில், அந்தணர் குலத்தில் பிறந்து, வியாபாரம் மிகுதியாய்ச் செய்து, பூமிகளுண்டாகி, குழந்தைகள் மனைவியுடனும், செல்வத்துடனும் வாழ்ந்திருந்தபோது ;

29. இகபரன் அன்பில் லாமல் ஏழைமேல் விருப்ப மின்றிச்
செகமதில் கீர்த்தி பெற்றுச் செல்வியும் மதலை பேரில்
அகமதில் அன்பு பூண்டு அவனுமே வாழ்ந்து பின்பு
தகையுடன் மரண மாகித் தாமரைக் கஞ்சன் தன்னுல்;

29. துறவிகள் மீது பக்தியின்றியும், ஏழைகளிடம் அன்பு இல்லாமலும், உலகத்தில் புகழுடன் செல்வங்களடைந்து, மனைவி மக்கள் மீது அதிக விருப்பமுடன் இருந்து வந்தான். பிறகு மரண மடைந்தான். தாமரை மலரில் அவதரித்த பிரமனுல் ;

30. வரையவே விக்கு லத்தில் வந்தவ னிவனின் தந்தை
அருமறை முனிவர் கூற அம்மனும் கேட்க லுற்றுள்
பெருமையாய் முன்சென் மத்தில் பிராமண குலமு தித்துத்
தெரியவே விச்சென் மத்தில் செங்குந்த மரபி லேதான்;

30. மீண்டும் படைக்கப்பட்டு இக்குலத்தில் பிறந்தான். முனிவர் இவ் விதமாகக் கூற, பார்வதி கேட்கலானாள். பெருமையுடன் முற்பிறவியில் அந்தணர் குலத்தில் பிறந்து, இப்பிறவியில்; சென்குந்த வமிசத்தில்;

31. உதித்தகா ரணங்க ளென்ன உமையவள் கேட்கும் போது
நதிசடை முனிவர் சொல்வார் நாயகன் முன்சென் மத்தில்
பசுபதி தமைத்தொ ழாமல் பஞ்சைமே லிரக்க மின்றிச்
சதியுட னிருந்த தாலே தானவ னிச்சென் மத்தில்;

31. பிறந்த காரணங்க ளென்ன வென்று, உமாதேவி கேட்கும்போது, சடை முடியை யுடைய முனிவர் சொல்லுகின்றார். ஜாதகனின் தந்தை முற்பிறவியில் பரமசிவனைத் துதிக்காமலும், ஏழைகள் மீது இரக்கம் இல்லா மலும் இருந்து வந்ததால் இப் பிறவியில்;

32. பிறந்தவ னிவனே யென்றோம் பின்சென்மம் ஆழி தன்னில்
சிறந்திடு சைவ னுகிச் செம்பொன்னு மதிகம் பெற்று
நிரந்தர மாக வாழ்வான் நிமலியும் கேட்க லுற்றாள்
தெரிந்திடு மாதுர் சேதி செப்புவீ ரென்று கேட்டாள்.

32. இக் குலத்தில் பிறந்தான் என்று கூறுவோம். மறு பிறப்பு, திருவாழி என்னும் ஊரில், உயர்ந்த சைவ மரபில் தோன்றி, பொருள்கள் மிகுதியாகப் பெற்று, நீண்ட ஆயுளுடன் வாழ்வான். பார்வதியும் கேட்க லானாள். அன்னையின் குணங்களைப் பற்றிச் சொல்லுவீர், என்றாள்.

33. மாதுகு குணத்தை யாங்க ளறைகின்றோ மிருசி வப்பாம்
மேதினில் சமதே கத்தாள் வித்தகி யூகை சாலி
நீதிலாக் குணத்தா ளாகும் நியரை மனத்தி லெண்ணாள்
வேதனை யொருவர்க் கெண்ணாள் மெல்லிசொல் வலிவு
[மில்லாள்.

33. தாயின் குண வரலாற்றைக் கூறுவோம். கருமை கலந்த சிவப் பான மேனி. சமமான தேகத்தை யுடையவள். ஊக முள்ளவள். கெடுத லில்லாத குண முடையவள். கெட்டவரை மனத்திலும் நினையாதவள். ஒருவருக்கும் தீங்கு எண்ணுதவள். சொல் வன்மை இல்லாதவள்.

34. பித்தமாந் தேக முள்ளாள் பேசுவோம் துணைவர் தம்மை
வித்தக ணண்பா லொன்று மேதினில் கன்னி யவ்வார்
சுத்தமா யிரண்டு திர்க்கம் துலங்காது மற்ற தெல்லாம்
அத்திமா முகனைப் பெற்ற அம்மையே மேலுங் கேளே.

34. பித்த தேகி. இவளுடைய தூணவர்களைப் பற்றிச் சொல்லு வோம். ஆண் ஒருவனும் பெண் ஒருத்தியும் நிச்சயமாக நீண்ட ஆயுளுள்ள வர்கள். மற்றவர் நிலையார். யாரேனுமுக்க கடவுளே என்ற தாயே! மேலுங் கேட்பாயாக.

35. மாதுரு முன்சேன் மத்தை யறைகின்றோம் வேங்க டத்தில்
தீதிலா வன்னிய வம்சம் செனித்துமே பெருமை பூண்டு
போதவே சுகங்க ளுண்டாய்ப் புத்திர ருடனே வாழ்ந்து
மாதவர் தமைத்து தித்து மறலியின் பதியைப் புக்கு.

35. தாயின் முற்பிறவியைச் சொல்லுவோம். திருவேங்கடத்தில், உயர்ந்த வன்னியர் மரபில் தோன்றி, பெருமையுடன் சுகங்க ளேற்பட்டு, புதல்வருடன் வாழ்ந்து வந்து, பெரியோர்களைப் பூசித்து, இயமனுலக மடைந்து;

36. கஞ்சனுல் வரையப் பட்டுக் காதலி யிச்சென் மத்தில்
மிஞ்சிய குலத்தி லேதான் விரைந்தன ளிவனே யென்றோம்
வஞ்சியு மன்ன மீவள் மன்னுபூ டணமு மற்பம்
தஞ்சமா யிவள்பிற் சென்மம் சாற்றுவோங் கேளு மாதே.

36. மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, இப் பிறவியில் இக் குலத்தி னளாகத் தோன்றினுள் என்று சொல்லுவோம். வீடு தேடி வருபவர்க்கு அன்புடன் அன்ன மளிப்பாள். ஆபரணங்க ளதிக மில்லாதவள். இவளு டைய மறு பிறவியைச் சொல்லுவோம். கேளும்; தாயே!

37. தோகையின் மலைக்குக் கீழ்ப்பால் தோன்றிய பேரூர் தன்னில்
பாகமாய்ச் சத்திரிய வம்சம் பாவையும் பிறப்பா ளென்றோம்
போகங்க ளதிகம் பெற்றுப் பூடண மிகுதி யாகிச்
சோகமில் லாமல் வாழ்வாள் சுந்தரி மேலும் கேளே.

37. தோகை மலைக்குக் கிழக்கில், உள்ளதொரு பெரிய ஊரில், சத்தி ரிய மரபில் தோனறுவாள். மிகுதியான போகத்துடன், ஆபரணங்கள் அதிக மடைந்து, துக்க மில்லாமல் வாழ்ந்து வருவாள். தாயே! மேலுங் கேளுங்கள்.

38. பிறந்தசேய்ச் சனன காலம் பேசுவோம் புகரில் ஆண்டு
சிறந்திடு விருப்பு ஆண்டு செப்புவோ மொருபா னேந்தும்
விரைந்திடுந் திங்க ளேந்து விளம்புநா ளொருபா னேழும்
உறைந்திடும் பலன்க ளெல்லாம் உரைக்கின்றோங் கேளும்
[மாதே.

38. ஜாதகன் பிறந்த காலத்தில், சுக்கிர மகா தசையில் இருப்பு; பதினைந்து வருஷங்களும், மாதங்கள் ஐந்தும், நாட்கள் பதினேழும் என்று சொல்லுவோம். அப்பொழுது ஏற்படும் பலன்கள் எல்லாவற்றையும் சொல்லுகின்றோம், கேளும்; தாயே!

39. வெள்ளியின் தசையி லேதான் விளம்புவோம் பலனை [யாங்கள்
தெள்ளிய கல்வி யுண்டாம் திருமகள் வாச மாகும்
ஒள்ளிய செட்டு மோங்கும் உற்றதோர் துணைவர் விருத்தி
வள்ளிய தானி யங்கள் வந்திடு மென்று சொன்னோம்.

39. சுக்கிர மகா தசையில் ஏற்படும் பலனை நாங்கள் சொல்லுவோம். தெளிந்த கல்வி உண்டாகும். இலட்சுமீ கடாட்சம் ஏற்படும். வியாபாரம் விருத்தியாம். சகோதரர்கள் விருத்தி யாவர். தானியங்கள் மிகுதியாக வரும் என்று கூறினோம்.

40. பூமியும் பொருளும் வாய்க்கும் புதிதாகக் கிரகம் நேரும்
நேமியோர் மெச்ச வாழும் நித்திய மிலாபம் நேரும்
திமையு மணுகா தென்றோம் செய்தொழில் விருத்தி யாகும்
தாமத வடிமை யாட்கள் தங்கிடு மிவனுக் கேதான்.

40. வீடு நிலங்களும் பொருளும் சேரும். புதிதாக வீடு கிடைக்கும். உலகத்தவர் புகழும்படி வாழ்வான். தினந்தோறும் இலாபம் ஏற்படும். தன்பங்க ளடைய மாட்டான். செய்யும் தொழில் மேன்மை யடையும். வேலையாட்கள் இருந்து வருவார்கள்.

41. நற்பலன் நடந்து வந்தும் நற்றசை தன்னி லேதான்
அற்பமாம் துணைவர் சேதம் அநேகமாய்ச் செலவு நேரும்
சொற்புகழ் தந்தை பாட்டி சோர்ந்திடும் சேத மாகும்
கற்பான மாதர் வர்க்கம் கழறுவேன் சூத கங்கள்.

41. நற்பலன் எற்பற்டாலும், அந்தத் தசையிலேயே உடன் பிறந்தாருக்கு கஷ்டமும் ஏற்படும். மிகுதியான செலவும் உண்டாகும். பாட்டி (தந்தையைப் பெற்றவள்) மரண மெய்துவாள். கற்புடைய அன்னையின் வர்க்கத்தாருக்கு அசுபங்கள் ஏற்படும்.

42. ஆறினுக் குடையோன் நாலில் அணுகியே யிருப்பா னாகில்
கூறுவோந் துணைவ ருக்குக் குணமிலா ரோகம் வாய்க்கும்
மாரியாள் பாதை யுண்டாம் வந்திடும் பூமி யாலும்
நாரியே விரோத முண்டு நற்பொருள் சேத மாகும்.

42. ஆரும் வீட்டுக்குரிய சுக்கிரன் நாலில் (சிம்மம்) இருப்பதால், உடன் பிறந்தாருக்குத் தீராத நோய் உண்டாகும் என்று சொல்லுவோம். அம்மை நோய் ஏற்படும். பூமியால் விரோதங்கள் உண்டாம். தாயே! பொருட் சேதமும் உண்டு.

43. கோவுகள் வந்து சேரும் குறைவிலா வன்னம் நேரும்
நாவுசொல் மேன்மை யாகும் நற்றந்தை துணைவ ருக்கு
மேவிய புதல்வர் விருத்தி வீரிய தந்தை தாயார்
சேமமாந் தீர்க்க முண்டாம் செப்புவோம் மேலுங் கேளே.

43. பசுக்கள் மிகுதியாகச் சேரும். உணவுக்குக் குறைவிராது. இவன் கூறிய சொற்களுக்கு மதிப்புண்டு. தன் தந்தையின் உடன் பிறந்தாருக்குக் குழந்தைகள் விருத்தியாம். தந்தை தாயார்க்குச் சுகமுண்டு. நீண்ட ஆயுளைப் பெறுவர். மேலுஞ் சொல்லுவோம்.

44. செயமுனி யிதனைக் கேட்டுத் திடுக்கென வுரைக்க லுற்றூர்
நவமதுக் குடையோ னென நற்சனி சேர்ந்த தாலே
கவனமாய்க் கேளு மையா காளைதன் சிறிய தந்தை
மனைவிக்குத் தோடம் நேரும் மாமுனி கேளு மென்றூர்.

44. செயமுனி இதனைக் கேட்டு, திடுக்கிட்டுச் சொல்ல லானூர். முனிவரே! நன்கு கவனித்துக் கேளுங்கள். ஒன்பதா (மகரம்) மிடத்துக்குரிய சனி, நாலில் (சிம்மம்) இருப்பதாலே, ஜாதகன் சிறிய தந்தையின் மனைவிக்குத் தீங்கு நேரும். முனிவரே! கேளும் என்றூர்.

45. எவ்விதத் தோடத் தாலே யிசைந்திட்டீர் முனிவ ரேசொல்
பவ்வமாய்க் கர்ப்ப நோயால் பாவையு மரண மாகும்
நவ்விய வுடன வர்க்கு நற்சுபம் நேரு மென்றேும்
திவ்விய மாதே யாங்கள் சொல்மொழி குன்றி டாது.

45. எவ்விதத் தோஷத்தால் தீங்கு நேரும் என்று, நீங்கள் கூறினீர், முனிவரே! சொல்லுங்கள். கருப்ப நோயால் அவள் மரண மடைவாள். உடனேயே சிறிய தந்தைக்கு மணம் நடைபெறும். தாயே! நாங்கள் சொன்ன சொற்கள் தவறு.

வெண்பா

46. பானு தசையில் பசுநட்டம் தந்தைநோய்
தேன்மொழியாள் வர்க்கத்தில் சேதமாம் — ஈனர்களால்
தனவிரயங் காணும் தன்தேகம் சூடுண்டாம்
அனைவருமே விரோதபகை யாம்.

46. சூரிய மகா தசையில், கால்நடைகளுக்கு நஷ்டம் ஏற்படும். ஜாதகனின் தந்தைக்கு வியாதி யுண்டாகும். மனைவி வர்க்கத்தினருக்குக் கெடுதல்கள் ஏற்படும். கெட்டவர்களால் பணச் செலவும் ஏற்படும். தன்னுடைய தேசத்திலும் சூடு உண்டாகும். எல்லோரும் பகைவராவர்.

47. கண்நோய் சுரந்திரிச்சல் கனவுண்டு காரிழையாள்
புண்நோய் மனக்கலக்கம் பொருந்துமே—மண்ணினில்
கோள்கலகம் யாவர்க்கும் நேர்ந்துபின் கூடிவரும்
வாள்விழியாள் பாரிவாய்ப் பாள்.

47. கண் வலி, சுரம், அலைச்சல்கள் உளவாம். கெட்ட கனவுகள் தோன்றும். மனைவிக்கு நோய் ஏற்பட்டு, அதனால் மனச் சஞ்சலங்கள் ஏற்படும். பூமியினால் கலகங்கள் ஏற்பட்டுப் பிறகு தீர்ந்து இவனைச் சாரும். வாள்போன்ற விழிகளை யுடைய பெண் மனைவியாவள்.

வேறு

48. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிகுவார் பராசர் தாமும்
கனிவுட னிரவி யோடு கணக்கனும் கூடி நிற்க
அனையவே பலனை நீரும் அறைகுவீ ரென்று கேட்கச்
சினமிலா நூலை யாய்ந்து செப்புவோங் கேளு மையா.

48. இப்படி முனிவர் சொல்லும்போது, பராசர முனிவர் கூறுகின்றார். சூரியனுடன் புதனும் சேர்ந்து இருப்பதால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் என்று கேட்டார். சோதிட சாஸ்திரத்தை நன்றாகப் பரிசீலனை செய்து சொல்லுவோம், கேளும்.

49. இரவியின் தசைமுற் பாகம் இடருக ளதிக முண்டு
திறமையாய்ப் பின்பா கத்தில் செப்புவோம் சுபப லன்கள்
பெருமையாய்ப் பூமி சேரும் புண்ணிய தீர்த்தம் நேரும்
அருமறை யவர்நே சத்தால் அனைத்துமே நன்மை யாகும்.

49. சூரிய மகா தசையின் முதல் பாதியில், துன்பங்கள் மிகுதியாம். பிற்பாதியில் நல்ல பலன்கள் ஏற்படும். விளை நிலங்கள் அதிகமாகச் சேரும். புண்ணிய நதிகளில் நீராடுவான். அந்தணர்கள் நட்பினால் எல்லாம் இனிதே முடியும்.

50. பகைவரு முறவு கொள்வர் பசுக்களும் விருத்தி யாகும்
சுகமாகும் மாதர் தந்தை துணைவர்க்குச் சுகமே யுண்டாம்
அகமது புதிதாய் நேரும் அநேகரும் வசிய மாகும்
தகைமையா யாட்கள் விருத்தி தனமது விசேட முண்டாம்.

50. விரோதிகளும் உறவாடுவார்கள். பசுக்கள் விருத்தியாம். தாய் தந்தையர், உடன் பிறந்தார் ஆகியோர்க்குச் சௌக்கியங்கள் ஏற்படும். இவனும் சுகமுட னிருப்பான். புதிய வீடு கட்டுவான். பலர் இவனால் வசீகரிக்கப் படுவர். வேலையாட்கள் அதிகமாவர். பொருள்களும் மிகுதியாம்.

51. மதிதசைப் பலனை யாங்க ளறைகின்றேம் புத்ர விருத்தி
நிதியுடன் பூமி சேரும் நினைத்தகா ரியங்க ளாகும்
பதியினால் திருவுஞ் சேரும் பகைவெல்லும் தொழில்வி [ருத்தி
சதமுடன் துணைவ ருக்குச் சடுதியில் மணமு முண்டாம்.

51. சந்திர மகா தசையின் பலனை நாங்கள் கூறுகின்றேம். புத்திர விருத்தி ஏற்படும். பொருள்களுடன் பூமி வந்தடையும். எண்ணிய காரியங்கள் நடைபெறும். பூமியினால் செல்வங்கள் சேரும். விரோதிகள் வெற்றி கொள்ளப்படுவர். தொழிலும் மேன்மை யடையும். உடன் பிறந்தோருக்கு விரைவில் மணம் சேரும்.

52. தன்மனை பாதி வீடு தனக்குமே நேரு மென்றேம்
இன்னமும் செல்வ மோங்கும் எந்திடம் பெருமை காணும்
அன்னமே செட்டு வோங்கும் அவன்மனை யாலுங்-கூட
உன்னதத் தலங்கள் தோய்வன் ஊழியந் தீரு மென்றேம்.

52. தன்னுடைய வீட்டில் பாதி வீடுதான் இவனுக்குக் கிடைக்கும். மேன்மேல் செல்வங்கள் பெருகும். பெருமை உண்டாகும். தாயே! வியாபாரம் விருத்தி யாகும். மனைவியால் நன்மை ஏற்படும். உயர்ந்த தலங்களுக்குச் சென்று, அங்குள்ள தீர்த்தங்களில் நீராடுவான். செய்த தீவினைகள் நீங்கும் என்று கூறினேம்.

53. மதியுடன் கேது கூடி மரபுத்தா னத்தில் நிற்க
விதியினால் தந்தைக் கேதான் விளம்புவோங் கண்டந் தானே
சதியுடன் பூமி யாலே தானது கலகம் நேரும்
பதியினில் துணைவர் சேதம் பந்துவின் பகைய தாமே.

53. சந்திரனுடன் கேது கூடி ஆயுள் ஸ்தானத்தில் இருப்பதால், தந்தைக்குக் கண்டங்கள் ஏற்படும். பூமியால் கலகங்களும் உண்டாம். உடன் பிறந்தோர்களுக்குத் தீங்குகள் நேரும். சுற்றத்தாரின் விரோதம் ஏற்படும்.

54. தந்தைக்குத் தோட மென்று சாற்றினீர் முனிவ ரேகேள்
எந்ததோர் காலந் தன்னில் எவர்புசிப் பினிலே தோடம்
முந்தவே கூறு மென்ன மொழிகுவார் முனிவர் தாமும்
சந்திரன் தசையில் கேது தானவன் புசிப்பி லேதான் ;

54. தந்தைக்குக் கண்டம் என்று கூறினீர்கள். முனிவர்களே! தாங்கள் அவனுக்கு எந்தத் தசையில் யாருடைய புக்தியில் மரணம் ஏற்படும் என்று முதலில் கூறுங்கள், என்று பார்வதி கேட்டாள். முனிவர் சொல்லுகின்றார். சந்திர மகா தசையில், கேதுவின் புக்தியில் ;

55. இவன்பிதா தனக்குக் கண்ட மிசைத்திட்டோ மிதுவல்
[லாமல்
குசன்தசை யோகந் தன்னைக் கூறுவோம் விபர மாகச்
சதமுள பூமி யாலே தானிய மனேகம் நேரும்
கவனமாய்ப் புத்ர விருத்தி கனத்தவர் நேச மாவர்.

55. இவனுடைய தந்தைக்கு மரண மேற்படும் என்று சொல்லுவோம். இதுவன்றி அங்காரக மகா தசையில் ஏற்படும் யோகத்தை விவரமாகச் சொல்லுவோம். செழிப்புள்ள பூமியால் தானிய விருத்தி ஏற்படும். புத்திரர்களும் தோன்றுவர். பெரியோர்களின் நட்பைக் கொள்ளுவான்.

56. செய்தொழில் செட்டு மோங்கும் செகமெலாம் வசிய மாகும்
ஐயமில் லாம லேதான் அவன்குடும் பங்க ளோங்கும்
கையில்வே லுடையோ னுக்குக் கனத்ததோர் பணிகள்
[செய்வான்
செய்யவே மனவி யர்க்குச் சிலசில பாதை யுண்டாம்.

56. செய்யும் வியாபாரம் விருத்தியாகும். உலகத்தோர் இவனிடம் பிரியமா யிருப்பர். சந்தேக மில்லாமல் இவனுக்குக் குடும்ப விருத்தி ஏற்படும். கையில் வேலேந்திய முருகக் கடவுளுக்கு மிகுதியாகத் திருப்பணிகள் செய்து வருவான். இக்காலத்தில் மனைவிக்குச் சிற்சில துன்பங்கள் ஏற்படும்.

57. கர்ப்பநோ யதனால் ரோகம் கண்டிடு மிவளுக் கேதான்
செப்புவேன் கருங்கோள் காலம் திரமாய்ச் சுபங்க ளுண்டு
எப்பவும் யோக முண்டு இவன்புத்ர சுபமு முண்டாம்
அப்பணி சடையோன் தன்னை அவனுமே பூசை செய்வன்.

57. கருப்ப நோய் ஏற்பட்டு, அதனால் மனைவிக்குத் துன்பங்கள் நேரும். இராகு மகா தசையில், ஜாதகனுக்குச் சுபங்கள் ஏற்படும். எப்போதும் யோகங்க ளுடையவன். இவனுக்குச் சிறந்த புத்திர பாக்கியம் ஏற்படும். கங்கையைச் சடையில் தரித்த சிவபெருமானைப் பூசிப்பான்.

58. மர்துரு தோட முண்டு வறைகின்றே மத்தி யத்தில்
பேதிக்கும் குடும்பந் தானும் பிரபலச் செட்டு மோங்கும்
தீதிலாச் சகடு நேரும் செனங்களும் வசிய மாகும்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

58. அன்னைக்கு இடைக் காலத்தில் நீங்கு ஏற்படும் என்று சொல்லு கின்றோம். அதனால் குடும்பத்தில் பிளவு ஏற்படும். ஆனால் வியாபாரம் விருத்தியாகும். கெடுதலில்லாத சகட யோகம் ஏற்படும். மக்களும் இவ னுக்கு வசமாவர். யானை முகத்தோனைப் பெற்ற புண்ணியவதியே! கேளும்.

59. மந்திரி தசையி லேதான் வரும்பல னற்ப மாகும்
சந்ததம் பொருளுஞ் சேதம் தானினைத் ததுவு மாகாப்
பந்தமாய் விரோதம் பூமி பலிக்காது நட்ட மாகும்
இந்தவே மனக்க லக்கம் முன்பாகம் சுகமில் லானே.

59. குரு மகா தசையில் ஏற்படும் பலன்கள் மிகக் குறைவு. எல்லாப் பொருள்களும் நாச மடையும். எண்ணிய காரியங்கள் கைகூடா. விரோதங் கள் ஏற்படும். நிலங்களில் நல்ல விளைவுகள் இரா. கஷ்டங்க ளடைவான். இவ்வாறான மனச் சங்கடங்கள் இருக்கும். முதல் பாதியில் சுக மில்லாதவ னுவன்.

60. குருதசை சிசிபு சிப்பில் கூறுவோஞ் சாத கர்க்கு
மறலியின் பதியைச் சேர்வன் மறுசென்மம் பாண்டி நாட்டில்
திறமையா யிக்கு லத்தில் செனிப்பனே யிவனே யென்றும்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்மையே மேலும் கேளே.

60. குரு மகா தசை, கேது புக்தியில் ஜாதகனுக்கு மரண மேற்ப டும். மறு பிறப்பு, பாண்டிய நாட்டில் இக் குலத்திலேயே தோன்றுவான் இவன் என்று கூறினோம். ஆறுமுகக் கடவுளை உலகுக் களித்த தாயே! மேலும் கேண்மின்!

61. தந்தையின் மரண காலம் சாற்றுவோ மிருபா னென்பான்
வந்ததோர் மாது வுக்கு வறைகின்றேம் முப்பா னென்பான்
பந்தமாய்ச் சாத கர்க்கும் பகருவோ மறுபா லுலில்
முந்திய [1]கடக மாதம் மொழிகின்றே மமவாசை தன்னில்.

61. தந்தையின் மரண காலத்தைச் சொல்லுவோம். ஜாதகனின் இருபத் தொன்பதாம் வயதில், தந்தைக்கு மரணம் நேரும். அன்னைக்கு இவனது முப்பத் தொன்பதாம் வயதில் மரணம் ஏற்படும். ஜாதகன் அறுபத்து நான்காம் வயதில், ஆடி மாதத்தில் அமாவாசை யன்று;

62. இவனுடை யுடலம் வாடும் இதற்குள்ளாய்க் குடும்பச் சேதி
அவனியில் நாற்பான் ஐந்தில் அறைகின்றேம் வேற தாகும்
நவமதில் மனையா ளுக்கு நாட்டுவோ மிவன்பின் னுலே
கவனமாய்க் கேளு மாதே கழறின மொழிகுன் றுது.

62. மரண மடைவான். இதற்குள்ளாக, குடும்பச் செய்திகளைச் சொல்லுவோம். நாற்பத்தைந்தாம் வயதில், குடும்பம் வேறுகும். இவன் மனைவிக்கு, இவனுக்குப் பிறகு மரணம் ஏற்படும். கவனமாகக் கேளும், தாயே! சொன்ன சொற்கள் தவறு.


---

1. ஆடி

ஜாதகம் 70

1. சந்திரன் கேது மீனம் சனிநந்தி புகரும் வீணை
புந்திபான் குருவும் நண்டில் பூமகன் ராகு கன்னி
இந்தவார் கிரகம் நின்று இடபமும் சென்ம மாக
அந்ததோர் பலன்க ளெவ்வார் அறிவிப்பீர் முனியே நீர்தாம்.

1. சந்திரன் கேது மீனத்திலும், சனி விருஷபத்திலும், புதன் சூரியன் குரு கடகத்திலும், செவ் வாய் ராகு கன்னியிலு மாகக் கிரகங்கள் தங்கி, விரு ஷபமும் இலக்கினமாகவிருந் தால் ஏற்படும் பலன்களைச் சொல்லுவீர்.



2. தென்முனி புகலு கின்றூர் செனித்திடு மாண்பால் சென்மம்
தந்தைதா யில்ல மன்று சாரய லார்க ளில்லம்
முன்புயில் லதற்குக் கீழ்ப்பால் மேவிடும் புதிதா யில்லம்
தென்வாசல் கீழ்மேல் வீதி சிவன்மால்வே லவனு முத்ரம்.

2. அகத்திய முனிவர் சொல்லுகின்றூர். பிறப்பு ஆண் மகன். இவன் பிறப்பது பாட்டனாரின் வீடன்று. வேறு ஒருவருடைய வீடாகும். தந்தை முன்பிருந்த வீட்டிற்குக் கிழக்குப் பக்கத்தில் புதிதாக இவனுக்கு வீடு கிடைக் கும். கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு நோக்கியுள்ள வாசலை யுடையது. வடக் கில் பரமசிவன் கோவிலும், திருமாலின் கோவிலும், சுப்பிரமணியக் கடவுள் கோவிலும் உள்ளன.

3. தந்தியும் குடகில் தங்கும் சிறுஹரா மிந்தப் பாலன்
அந்தவன் சென்ன மாகும் அவன்தந்தை தாயின் யோகம்
தந்துணை களத்திர புத்திரன் சாதகன் யோகச் சேதி
முந்தின சென்மம் யாவு முரைக்கின்றே மிந்நூல் தன்னில்.

3. விநாயகப் பெருமான் கோவில் மேற்கில் உள்ளது. இவ்வாறுள்ள சிறிய ஊரில், இந்த ஜாதகன் பிறப்பான். தந்தை, அன்னை, உடன்பிறந்தார்கள், மனைவி, புத்திரன், ஜாதகன் ஆகியோர் யோகங்களைப் பற்றியும், முற்பிறப்பு முதலிய வுனைத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் கூறுகின்றோம்.

4. தந்தையின் துணையாண் டிரண்டு தீர்க்கமாம் முன்பின் னுக
இந்தவன் செனிக்கும் காலை ஏகுவார் வேறு கத்தான்
முன்தந்தை யவ்வா றுகும் மொழிகின்றோம் பின்பால் சேதி
சந்ததம் பிதாகு ணத்தைச் சாற்றுவோம் கேளுந் தாயே.

4. தகப்பனுக்கு இரு சகோதார்கள் உளராவர். அவர்கள் நீண்ட ஆயுளுள்ளவர்கள். அவர்கள் இவனுக்கு முன்னும் பின்னுமாகப் பிறப்பர். இவன் பிறந்தவுடன் அவர்கள் தனியாகச் செல்வர். பெரிய தந்தையும் தனியாகச் சென்று விடுவான். அவர்களைப் பற்றிப் பிற்பாகத்தில் சொல்லுவோம். தந்தையின் குணத்தைச் சொல்லுவோம். தாயே! கேளுங்கள்.

5. கல்விமான் விடம முண்டு கடவுளர் பக்தி பூண்பன்
இல்லையென் றுரைக்க மாட்டான் இன்பமாம் வார்த்தை [சொல்வன்
நல்லவ னுகி வாழ்வன் நாயக னிருசி வப்பன்
சொல்லதைக் காப்பா னுகும் சுகதுக்க முடைய னுமே.

5. கல்வி யறிவுள்ளவன். கெடிதலான மனமுடையவன். கடவுளின் மீது பக்தி யுள்ளவன். இரந்தவருக்கு இல்லை என்று சொல்லாதவன். இனிமையாகப் பேசுபவன். நல்லவனுக வாழ்ந்து வருவான். அவன் கருமை கலந்த சிவந்த மேனியன். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவான். சுக துக்கங்கள் கலந்து எற்படும்.

6. பழிதனக் கஞ்சு நெஞ்சன் பரிந்துப சாரஞ் செய்வன்
வழிபடு குணத்தா னுகு மரிபோலக் கோப முண்டு
பிழையெண்ணு மனத்த னுகும் பிதுரில்லம் வாழா னுகும்
மழுவுமான் ரேகை யுண்டு மனமது வெகுளி யாவன்.

6. பழிக்குப் பயப்படும் மன முள்ளவன். அன்புடன் உபசாரம் செய்பவன். தெய்வ பக்தி உடையவன். சிங்கம் போலக் கோபமுண்டு. தீங்குகள் எண்ணுத மனமுள்ளவன். தந்தையின் வீட்டில் வசிக்காதவன். உருத்ரா ரேகை யுள்ளவன். வெகுளியான மன முடையவன்.

7. செட்டுக்கள் செய்வா னுகும் தினம்சிலன் எதிரிக் கஞ்சான்
குட்டாக வார்த்தை சொல்வன் குலவுவான் வேறூர் தன்னில்
இட்டர்க ளநேகம் சேர்ப்பன் எப்போதும் சஞ்ச லத்தான்
திட்டரைச் சேரா னுகும் சிக்கிர நடையு மாவன்.

7. வியாபாரங்கள் செய்வான். நல்லொழுக்க முள்ளவன். விரோதி களுக்குப் பயப்படாதவன். மறை பொருள் தோன்றப் பேசுவான். வேறு ஓர் ஊரில் வசித்து வருவான். பல நண்பர்களை யுடையவன். எப்போதும் நிலையில்லாத மன முடையவன். தீயர்கள் நேசம் இல்லாதவன். வேகமாக நடப்பான்.

8. அதிதிமேல் ஆசை யுண்டு அறமதில் இச்சை யுண்டு
நிதியிலான் மாநி றத்தன் நீர்தோய்வன் நாபிச் சூடன்
ததிநெய்பால் பிரிய முண்டு தன்வாக்குப் பலித முண்டு
பொதுமாதர் மோகம் கொள்ளான் புகழ்ந்தோரை யாத
[ரிப்பன்.

8. துறவிகளின் மீது பக்தி யுள்ளவன். தருமத்தில் பற்றுள்ளவன். பொருளில்லாதவன். மாநிற முள்ளவன். புண்ணிய நதிகளில் நீராடுவான். வயிற்றில் சூடுடையவன். தயிர், பால், நெய் இவைகளில் விருப்பமுள்ள வன். சொன்ன சொற்கள் பலிதமாம். விலைமாதர் மீது மோகம் கொள்ளாத வன். புகழ்ந்தவர்களைக் காப்பன்.

9. இந்நெறி யுடையா னுக்கு இவனுமே வுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் மாநி
[றத்தான்
தன்மனம் கபடு மில்லான் சரசவான் ஊகை சாலி
அன்னியர் உறவு கொள்வன் அணுகிடும் நாபிச் சூடு.

9. இவ்விதக் குணங்க ளுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைப் பற்றிச் சொல்லுவோம். அழகுள்ளவன். மாநிற முடையவன். மனத்தில் கபடில்லாதவன். அழகாகப் பேசுபவன். ஊக முள்ளவன். பிறருடன் கட்புக் கொள்ளுவான். நாபிச் சூடு எற்படும்.

10. வித்தையில் புத்தி யுண்டு வீண்வம்பில் செல்லா னுகும்
சுத்தவான் தந்தை தம்மால் சுகமது காணு னுகும்
பத்தினி தன்னால் யோகம் பகருவோம் பால னுக்கு
வெற்றிச்சொல் லுடைய னுகும் வியாபாரம் கிருஷி
[செய்வன்.

10. கல்வி கற்பதில் ஆர்வ முள்ளவன். வீணை வம்புக்குச் செல்லா தவன். தாய்மை யுடையவன். தந்தையினால் சௌக்கியங்க ளில்லாதவன்.

இந்த ஜாதகனுக்கு மனைவியால் யோகங்கள் எற்படும் என்று சொல்லுவோம்; பேச்சு வன்மை யுள்ளவன். பயிர்த் தொழிலும் வியாபாரமும் செய்வான்.

11. தென்திசை தன்னில் மைந்தன் சிறிதுநாள் வாச மாகும்
அன்னையின் வர்க்கம் தன்னில் அணுகியே வாழ்வா னுகும்
தன்துணை மூத்தோர் காணுன் தையலார் பின்பா லுண்டு
கன்னிமார் நால்வார் தீர்க்கம் கழறுவோம் பின்பால் செய்தி.

11. தெற்குத் திக்கில் சின்னுட்கள் வசித்து வருவான். தாய் வீட் டிற்குச் சென்று வாழ்வான். தனக்கு மூன்பிறந்த சகோதர னில்லாதவன். பெண்கள் பின்னுல் பிறப்பர். நான்கு சகோதரிகள் மீண்ட ஆயுளுள்ளவ ராவர். பிற்பாகத்தில் அவர்களைப் பற்றிய விவரம் சொல்லுவோம்.

12. பாரிய மிருபா னுண்டுள் பகருவோம் பின்பால் தன்னில்
நாரிய மன்னை வர்க்கம் நாயகி வருவா ளாகும்
கூறுவோ மவள்கு ணத்தைக் குலமதிப் புடைய ளாகும்
தேறிளை விருத்தி யுண்டு சிவந்தமெய் யுடைய ளாமே.

12. இருபத்திரண்டாம் வயதுக்குள் மனைவி வாய்ப்பாள் என்று சொல்லுவோம். விவரங்களைப் பிற்பாகத்தில் கூறுவோம். அவளும் தாயின் வர்க்கத்திலிருந்து வருபவள். அவளுடைய குணங்களைச் சொல்லுவோம். குலத்தில் மதிப்பு உடையவள். தெளிந்த அறிவுடையவள். சிவந்த மேனியள்.

13. புத்திமான் வறுமை காணுள் பொய்யது புகலா ளாகும்
சித்தமேல் கரப்பு மில்லாள் சீலியாம் யோக சாலி
பத்திரி தன்னுல் லாபம் பணிகளும் பூமி நேரும்
உத்தம குணத்தா ளாகும் உயர்வான விரத மேற்பள்.

13. புத்திசாலி. தரித்திரம் இல்லாதவள். பொய் சொல்லாதவள். ஒழுக்க முடையவள். யோகசாலி. இவளால் கணவனுக்கு யோகங்கள் ஏற் படும். ஆபரணங்களும், வீடு நிலங்களும் சேரும். உயர்ந்த குணசாலி. மேன்மையான நோன்புகளை ஏற்று நடத்துவாள்.

14. புத்திர விருத்தி சொல்லுவோம் பெண்ணது மூன்று தீர்க்கம்
சித்தசன் போலே யாண்பால் செப்புவோ மவ்வா றுக
அத்தரி தடுத்துச் சொல்வார் அஞ்சினில் ராகு நிற்கக்
குற்றமாய்ச் சேயுந் தங்கக் குழவிகள் தோட மெய்தும்.

14. புத்திர பாவத்தைச் சொல்லுவோம். மூன்று பெண்களும், மன் மதன்போல் அழகுள்ள புத்திரர் மூவரும் தீர்க்கமாவர். அத்திரி முனிவர்

மறுத்துச் சொல்லுகின்றார். ஐந்தாமிடமாகிய கன்னியில் இராகுவும், செவ்வாயும் இருப்பதால் புத்திர தோஷம் ஏற்படும்.

15. கருமத்தோன் சென்மந் தங்கக் கணக்கனு மூன்றி லேறிக்
குருவுடன் சேர்வ தாலே குழவிகள் விருத்தி யாகும்
குருதியு மிராகு வஞ்சில் கூடின பலத்தி னுலே
உறங்கிடு முதலி லிரண்டு உத்தமி கேட்டி டாயே.

15. கர்மாதிபதியான சனி, விருஷபத்தி லிருக்க, புதனும் கடகத்தில் குருவுடன் சேர்ந்து இருப்பதால், புத்திர விருத்தி ஏற்படும். இராகுவும் அங்காரகனும் கன்னியா ராசியில் இருப்பதால் முதல் இரண்டு மரிக்கும். தாயே! கேளுங்கள்.

16. அன்னையும் நற்கு ணத்தாள் ஆளனுக் கினிய ளாகும்
பன்னியே பேச வல்லள் பலருக்கு நல்லோ ளாவள்
தன்துணை யாண்பால் மூன்று தையல ரிரட்டை யாகும்
பின்னமாஞ் சிலவே நாளில் தாயில்லங் கீழ்ப்பா லாகும்.

16. தாயும் நற்குண முடையவள். கணவனுக்குப் பிரியமானவள். பன்னிப் பன்னிப் பேசுவாள். எல்லோருக்கும் நல்லவள். இவளுக்கு மூன்று சகோதரர்களும் இரு சகோதரிகளும் தோன்றுவர். தோன்றிச் சின்னட்களில் சேதமடைவர். அன்னையின் வீடு கிழக்கிலுள்ளது.

17. இல்லமுங் கெடுதி நேரும் ஏகனுந் தீர்க்க மாகும்
செல்லுவான் வெளிநா டதனில் செட்டுக்கள் செய்வா
[னுகும்
அல்லல்கள் மாத ராலே அணுகிடு மென்று சொல்வோம்
புல்குவார் சிலேடை வார்த்தை பந்துக்க ளென்று
[சொல்வோம்.

17. வீட்டுக்கும் கெடுதி யுண்டாகும். ஒரு சகோதரன் நீண்ட ஆயுளுள்ளவன். அவன் வெளி நாட்டுக்குச் சென்று அங்கு வியாபாரங்கள் நடத்துவான். அவனுக்குப் பெண்களால் துன்பங்கள் நேரும் என்று சொல்லுவோம். உறவினர்கள் இவனைப் பற்றி இருபொருள் படும்படி பேசுவார்கள்.

18. மாதுரு பூர்வம் சொல்வோம் மால்மலை கீழ்ப்பா லாக
மேதினில் பேரூர் தன்னில் விளங்கினுள் செட்டி வம்சம்
போதன முடையா ளாகிப் புத்திர ரதிக முண்டாய்க்
காதலி வாழு நாளில் கழறுவோம் ஊழி தானே.

18. அன்னையின் மூற்பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். திருவேங் கட மலைக்குக் கிழக்கில் உள்ளதொரு பெரிய ஊரில் செட்டியார் மரபில் தோன்றினாள். செல்வங்கள் மிகுதியாகப் பெற்று, புத்திரர்களும் ஏற்பட்டு வாழ்ந்து வரும்போது, வந்த தீவினையைச் சொல்லுவோம்.

19. மறுமாது சுதருக் காக வாவின்பா லிவளைக் கேட்டக்
குறைவான வார்த்தை சொன்னாள் கூறுவார் மறையோர்
[தாமும்
பெருஞ்சுதர் தோட மெய்தும் பிறக்கும்பின் சென்மம்
[தன்னில்
குறைவுறும் குழவிக் கேதான் கூறியே சென்று ளென்றோம்.

19. ஓர் அந்தணப்பெண், தன் குழந்தைக்காகப் பசுவின்பால் தருமாறு, இவளைக் கேட்கும்போது, இவள் இழிவாகப் பேசினாள். பிராமணப் பெண் ணும் சொல்லுவாள். உனக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குத் தீங்கு ஏற்படும். இனி ஏற்படும் மற பிறவியிலும் குழந்தைகள் மரிக்கும் என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

20. அந்ததோர் சாபம் தானும் அணுகிற்றுப் பாவைக் கேதான்
பிந்தியும் வேறு ஒன்று புகலுவோம் ஏழை தன்னை
இந்தவள் வேலை வாங்கி இறக்கமாய்க் கூலி தந்தாள்
அந்ததோர் சாபந் தானும் அணுகிற்றுப் பாவைக் கேதான்.

20. அந்தச் சாபம் இவளுக்கு ஏற்பட்டது. வேறு ஒன்றும் சொல்லு வோம். ஓர் ஏழையிடம் வேலையை வாங்கிக் கொண்டு, மிகக் குறைவான கூலியைக் கொடுத்தாள். அந்தத் தோஷமும் இவளை வந்தடைந்தது.

21. சுதர்களு மந்தி யத்தில் தோன்றுமே சஞ்ச லத்தால்
துதிக்கையான் கோட்டத் துக்குத் தீபமு மொன்று
[வைத்துச்
சதியான கால நாடு சென்றுமே நரகம் புக்கு
விதியவன் வரையப் பட்டு விளங்கினு ளிவளே யென்றோம்.

21. குழந்தைகள் கடைசிக் காலத்தில் பிறக்கும். மனக்வலை யடைந்து இவள் விநாயகர் ஆலயத்தில் தீபம் ஒன்று ஏற்றிவைத்து, பிறகு மரண மடைந்தாள். அங்கும் கஷ்டங்களை(நரகத்தை)யடைந்தாள். பிறகு பிரமனால் படைக்கப்பட்டுப் பிறந்தாள் இவள் என்று சொன்னோம்.

22. பாலர்பா லீயாத் தோடம் பஞ்சைகள் சாபந் தானும
நீலிக்குச் சேர்ந்த தாலே நிலைக்காது முதலில் புத்திரர்
காலன்தன் நாட்டைச் சேரும் காவலன் விருத்தி யெவ்வார்
ஏலவே நந்தி கோட்டம் ஏற்றின தீப புண்யம் ;

22. குழந்தைக்குப் பால் தாத பாவத்தாலும், ஏழையின் சாபத் தாலும் இவளுக்குத் தோஷ மேற்பட்டு, முதலில் தோன்றும் குழந்தைகள் கிலேத்திராமல் மரித்திடும். பின்பு புத்திர விருத்தி எப்படி ஏற்பட்டது? விநாயகர் கோவிலில் விளக்கு ஏற்றிய புண்ணியத்தால் புத்திர விருத்தி யுண்டாயிற்று.

23. இப்பாலன் தீர்க்க மென்றேரும் ஏழைகள் சாபத் தாலே
ஒப்புடன் சுகங்கு றைச்சல் விதேசமேல் சிலநாள் வாசம்
ஒப்புட னில்லம் பாழாம் உரைக்கின்றே மிவள்பின்
[சென்மம்
ஒப்புடன் மலாய்த்தே சத்தி லுதிப்பளாம் விசுவ சேயாய்.

23. ஜாதகன் நீண்ட ஆயுளுள்ளவனாக விருப்பான் என்று சொன் னோம். ஏழைக்குச் செய்த தீவினையால் சுகங்கள் குறையும். வேறு நாட்டில் சிலகாலம் வசித்து வருவான். இருக்கும் வீடு பாழடையும். தாயின் மறு பிறவியைப் பற்றிச் சொல்லுகின்றோம். மலாய் நாட்டில் விசுவகர்ம மாபில் பிறப்பாள்.

24. தந்தையின் பூர்வம் தன்னைச சாற்றுவோம் கொங்கு நாட்டில்
வந்தனன் கங்கை சேயாய் வளமுள குடும்பி யாகி
விந்தையாய் வணிபம் செய்து வேதிய ருறவு கொண்டு
கந்தன்மேல் பக்தி கொண்டு காலன்தன் நாட டைந்து ;

24. தந்தையின் முற்பிறவியைப் பற்றிச் சொல்லுவோம். கொங்கு நாட்டில், வேளாளர் மாபில் தோன்றி, செழிப்புள்ள குடும்ப மேற்பட்டு, வியா பாரங்கள் மிகுதியாகச் செய்து, அந்தணர் ஒருவருடன் நட்புக் கொண்டு, சுப்பிரமணியக் கடவுளின்மீது பக்தி பூண்டு, மரண மடைந்து ;

25. மால்மகன் வரையப் பட்டு வந்தனன் வடுகர் வர்க்கம்
சாலவே விவன்பின் சென்மம் சாற்றுவோம் கலிங்க
[நாட்டில்
சீலமாம் வைசியச் சேயாய்ச் செனிப்பனு மென்று
[சொல்வோம்
ஆலத்தை யுண்டோன் தேவி அறைந்தது தப்பா தாமே.

25. மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, வன்னிய குலத்தில் தோன்று வான். இவன் மறுபிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். கலிங்க நாட்டில், வைசிய

குலத்தில் தோன்றுவான் என்று கூறுவோம். ஆலகால விஷத்தை அருந்திய பரமசிவனின் தேவியே! சொன்ன சொற்கள் தவறு.

26. உதித்தவன் பூர்வம் சொல்வோம் உயர்காஞ்சி தென்கீழ்
[தன்னில்
நதிகுலம் தனிலு தித்து நாயகன் மதலை யுண்டாய்ச்
சதியிலா வாழும் நாளில் சாற்றுவோ மூழி தானும்
அதிதியும் பசிநோ யாலே அந்தியில் அன்னம் கேட்க;

26. ஜாதகன் முற் பிறவியைச் சொல்லுவோம். உயர்வான காஞ்சி புரத்துக்குத் தென் கீழாக உள்ளதோ ரூரில், வைசிய குலத்தில் பிறந்து, குழந்தைகளைப் பெற்று, துன்பமில்லாமல் வாழ்ந்து வந்தபோது, ஏற்பட்ட தீவினையைக் கேளும். ஒரு பரதேசி, பசியால் வாடி, மாலை நேரத்தில் இவனிடம் வந்து உணவை யாசிக்க;

27. பாரிமேல் கோப முற்றுப் பரிந்தவார்த் தைகளு மின்றிச்
சீறியே செல்லு மென்னச் சிவனடி வருத்த முற்றுக்
கூறுவார் சாபந் தானும் குறிக்கும்பின் சென்மம் தன்னில்
மாறிடும் தந்தை யில்லம் மனைவியில் சிலநாள் வாழ்வாய்.

27. இவன் கோபமடைந்து, அன்பான வார்த்தைக ளில்லாமல், கோபத்துடன் "வெளியே போ" என்று சொன்னன். சிவனடியார் வருத்தமடைந்து சொல்லிய சாபத்தைக் கேளும். இனி வரும் மறுபிறவியில், தந்தையின் வீடு இல்லாமல், மனைவியின் வீட்டில் சின்னாட்கள் வாழ்ந்து வருவாய்.

28. தன்துணை யாண்பா லின்றிச் சஞ்சல மனத்த னாகிப
பொன்பொரு ளில்லா னாகிப் பூமியில் வாழ்வா யென்று
இன்னவார் சொல்லி யேதான் ஏகினன் வேறு இல்லம்
பின்னமா யந்தச் சாபம் புக்கிற்றுப் பால னுக்கு.

28. உடன் பிறந்த சகோதர ரில்லாமல், கலக்கம் பொருந்திய மன முள்ளவனாகி, செல்வங்க ளிழந்து, பூமியில் வாழக்கடவாய், என்று சொல்லி, வேறு வீட்டிற்குச் சென்றார். துன்பமாக அந்தத் தீவினை ஜாதகனை வந்தடைந்தது.

29. அந்தியக் காலந் தன்னில் அணுகிற்றுக் குன்ம நோயாம்
அந்தகன் பக்கல் சென்று அனைவரும் குடைவு கோர்ந்து
பொன்னவன வரையப் பட்டுப் பிறப்பரும் வகார் வர்க்கம்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாதே.

29. கடைசிக் காலத்தில் வயிற்றுவலி உண்டாயிற்று. உணவுக்குக் கஷ்டப்பட்டான். பின்பு மரண மடைந்தான். மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, வடுகர் குலத்தில் பிறந்தான். விநாயகரைப் பெற்ற பார்வதியே! கேளுங்கள்.

30. பஞ்சைகள் சாபம் போலே பரவிடும் துணையாண் காணுன்
வஞ்சிபால் சிலநாள் வாழ்வன் மறுநகர் வாச மெய்தும்
தஞ்சமா யிவனின் யோகம் சாற்றுவோ மினிமே லாக
அஞ்சின பேரைக் காக்கும் அம்பிகை யாளே கேளாய்.

30. ஏழையோர்கள் சாபத்தைப் போல், சகோதரனில்லாமல், மனைவி யின் வீட்டில் சின்னுட்கள் வாழ்ந்து வருவான். வேறு ஊரில் வசித்து வருவான். இனி, இவனுடைய யோகத்தைச் சொல்லுவோம். பயந்தவர் களைக் காப்பாற்றும் தேவியே! கேளுங்கள்.

31. நாலைந்து ஆண்டு மட்டும் வறுமையாம் கொடுமை தானும்
காலினில் தீபம் போலே கழறுவோர் தந்தைக் கேதான்
கோலமாங் குடும்பந் தானும் குறைமதி போலே யோகம்
நீலியும் வந்த பின்பு நீங்காது செல்வ மோங்கும்.

31. இருபது வயது வரையில் தரித்திரம் நிலைத்திருக்கும். காற்றி லேயும் விளக்குப் போல் தந்தை கஷ்டப் படுவான். குடும்பத்தில் கிருஷ்ண பக்ஷ சந்திரன் போல் யோகங்கள் குறையும். மனைவி வந்த பிறகு செல்வங் கள் பெருகும்.

32. அத்திரி தடுத்துச் சொல்வார் அறைந்திட்டார் தரித்திர [யோகம்
சித்தமாய்த் தர்ம கர்மன் சனியாகிச் சென்மந் தங்க
வெற்றியாம் வேசி யோகம் விளங்கின பலத்தி னுலே
குத்தமாய்த் தரித்ர யோகங் கூறினேம் விவரஞ் சொல்வீர்.

32. அத்திரி முனிவர் தடுத்துக் கூறினர். தரித்திர யோகமும் சொன் னீர்கள். தர்ம கர்மாதிபதியான சனி, விருஷபத்தில் இருக்க, வேசி யோகம் ஏற்படும். அந்தப் பலத்தினுல்தான் தரித்திர யோகம் சொன்னேம். விவரம் சொல்லுங்கள்.

33. மூவேழு ஆண்டு மேலாய் வெள்ளியின் தசையே யாகும்
பாவயோ கங்கள் நீங்கிப் பருவத யோக மெய்தும்
பூவினில் வணிபத் தாலே பொருளது பூமி சேர்ப்பன்
ஆவலாய்ப் பாவை யாலே அணுகிடும் விசேட யோகம்.

33. இருபத்தோராம் வயதுக்கு மேல், சுக்கிர மகாதசையில், கெட்ட யோகங்கள் நீங்கி பருவத யோகம் வரும். பூமியில் வியாபாரத்தால் செல்வங்கள் பெருகும். பூமியும் கிட்டும். தன் மனைவியால் விசேஷ யோகங்கள் ஏற்படும்.

34. புதன்கேது தசைகள் தம்மில் பொருந்தாது யோக
[மென்றேரும்
அதுவன்றிப் பூர்வ காலம் அணுகிற்றுச் சாபந் தானும்
சதியான மனத்த னாகும் சந்தான யோகம் பின்னல்
சுதர்தோன்றில் விசேட யோகம் செப்பலா மிவனுக்
[கேதான்.

34. புதன் கேது இவர்கள் தசையில் யோகங்கள் கிட்டா. அதுவு மன்றி, பூர்வ வினையால் ஏற்பட்ட சாபமும் வந்தடையும். குற்றமுள்ள மனத்தினன். பின்னல் சந்தான யோகம் ஏற்படும். இவனுக்குப் புத்திரர் பிறந்த பின்பு, விசேஷமான யோகங்கள் உண்டாம்.

35. இருபது வொன்ப தாண்டில் எழில்மேட மாதந் தன்னில்
பெறுந்தந்தை கண்ட மென்றேரும் புக்குப்பின் மூப்பா
[னுறில்
[1]அரிமாதம் அன்னை கண்டம் அறைந்தது தப்பா தாகும்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

35. இவனது இருபத்தொன்பதாம் வயதில், சித்திரை மாதம், தந்தைக்குக் கண்டம் ஏற்படும். பிறகு, மூப்பத்தாறும் வயதில், ஆவணி மாதம் அன்னைக்குக் கண்டம் ஏற்படும். சொன்ன சொற்கள் தவறு. விநாயகரைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

36. அறுபது எட்டு ஆண்டில் ஐப்பசி மாதந் தன்னில்
குறைபக்க மமாவா சையாங் குமரன்ற னுடல மேகும்
வருஞ்சென்மந் துவாரை தன்னில் மாரனுங் கோகு லத்தில்
உறைகுவா னென்று சொல்வோம் உத்தமி கேட்டி டாயே.

36. அறுபத் தெட்டாம் வயதில், ஐப்பசி மாதம்; கிருஷ்ண பட்சம் அமாவாசையில் ஜாதகன் இறந்து விடுவான். மறு பிறப்பு; துவாரகையில் இடைக்குலத்தில் பிறப்பான் என்று சொல்லுவோம். தாயே! கேளுங்கள்.

---

1. ஆவணி

37. காவலன் சனிக்குங் காலே கடைநாளில் முதல்பா தத்தில்
தாவிய புதனி ருப்புச் சாற்றுவோ மீரே ழாண்டும்
மேவிய திங்க ளைந்தும் விளம்புவோம் பலனே யாங்கள்
ஓவிய தான பேத முதித்தவன் தனக்கு ரோகம்.

37. ஜாதகன் பிறக்கும்போது ரேவதி நட்சத்திரம் முதல் பாதம், புத மகா தசை இருப்பு; பதினேழு வருஷங்களும், ஐந்து மாதங்களுமாம் என்று சொல்லுவோம். அக் காலத்துக்குரிய பலனைக் கூறுவோம். இட மாற்றம் ஏற்படும். பிறக்கும் குழந்தைக்கு ரோகம் உண்டாகும்.

38. பலவித விரய மாகும் பகைமனத் தாப முண்டு
நிலபேத மில்லஞ் செய்தல் நிகரன்னை துணைவர் சேதம்
நலமிலார் தந்தை தாயர் நற்றுணை விருத்தி யாகும்
மலையிறை மகளே யாங்கள் வழுத்தினேம் பூர்வ பாகம்.

38. பலவிதத்திலும் செலவு உண்டாகும். விரோதங்களும் மன வருத்தமும் ஏற்படும். இடமாற்றம், வீடு கட்டுதல் முதலியன உண்டு. மாமன் மார்களுக்கு நஷ்டம் ஏற்படும். தாய் தந்தையர்க்கு சௌக்கியக் குறைவு, சகோதர விருத்தியுண்டு. இமவானின் புத்திரியே! இங்ஙனம் முதல் பாகத்தைச் சொன்னேம்.

*ஜாதகம் 71

1. மதிகேது மீன மாக மறைரவி கடக மாகப்
பதன்புகர் வீணை புக்கப் பூமகன் ராகு கன்னி
விதிநந்தி சென்மங் குண்டை விளம்புவீர் பலனே யென்று
வதிபதி கேடகும் போது வதிட்டருங் கூறு கின்றார்.

1. சந்திரன் கேது மீனத்திலும், குருவும் சூரியனும் கடகத்திலும், புதன் சுக்கிரன் மிதுனத்திலும், செவ்வாய் ராகு கன்னியிலும், சனி விருஷபத்திலும், ஜன்ம லக்கினம் விருஷபமாகவும் இருந்தால், எற்படும் பலனைக் கூறுங்கள் என்று பார்வதி கேட்க, வசிஷ்டர் சொல்லுகின்றார்.

சந்திரன் கேது		லக்கினம் சனி	புதன் சுக்கிரன்
	இராசி சக்கரம்		குரு சூரியன்
			ராகு செவ்வாய்

2. இந்தசே யாணைஞ் சென்மம் ஈன்றதில் வேறொன் றுரும்,
தந்தையில் கீழ்மேல் வீதி தென்வாசல் புதிதா யாகும்
முந்துமா லீசன் வேலன் மேவிடும் வடபா லாகத்
தந்தியுங் குடகில் தங்கும் சிறுவூரா மென்று சொல்வோம்.

2. இஃது ஆண் பிறவியாம். வேறு வீட்டில் பிறப்பான். வீடு கிழக்கு மேற்காண தெருவில் தெற்கு நோக்கியுள்ள வாயிலை யுடையது. புதியதான வீடு. திருமாலின் ஆலயமும், சிவபெருமான் கோயிலும், முருகப்பிரானுடைய கோயிலும் வடக்குப் பக்கமா யுள்ளன. மேற்கில் விநாயகர் ஆலய முள்ளது. சிறிய ஊர் என்றுரைப்போம்.

3. இன்னவன் சென்ன யோகம் எழில்பெறுந் தந்தை யோகம்
அன்னையின் துணைவர் புத்ர ரவருடை முன்பின் சென்மம்
சந்தத மிந்நூல் தன்னில் சாற்றுவோங் கேளுந் தாயே
தந்தையின் துணையாண் டெண்டு சாற்றுவோம் தீர்க்க மாக.

3. இவனுடைய சென்ன யோகத்தையும், தந்தை, தாய், உடன்பிறந்தார், புத்திரர் இவர்களுடைய யோகக்களையும், ஜாதகனுடைய முற்பிறப்பு,

*70ஆம் ஜாதகப் பாடல்களில் பெரும்பாலன, இந்த ஜாதகத்திலும் காணப்பெறுகின்றன.

மறுபிறப்பு இவைகளையும் இந்தச் சோதிட நூலில் கூறுவோம்; தாயே! தந்தைக்கு இரு சகோதரர்கள் தீர்க்கமாயிருப்பர்.

4. சனிக்குங்கால் வேறுய்ச் செல்வர் தந்தையின் குணத்தைக்
[கேளாய்
வினையெண்ணுன் யாவருக்கும் விடமது போலே கோபம்
கனமுள புத்தி யுண்டு கசடரை யுறவு கொள்ளான்
தினஞ்சில னெதிரிக் கஞ்சான் செட்டுக்கள் செய்வா னுகும்.

4. அவர்கள் இவன் பிறக்கும்போது தனியாகச் செல்வர். தந்தையின் குணத்தைக் கேளுங்கள். ஒருவருக்கும் கெடுதலெண்ணுத மனத்தினன். நஞ்சு போல் கோப முண்டு. உயர்ந்த புத்திசாலி. கெட்டவருடன் நட்புக் கொள்ளாதவன். தினந்தோறும் நல்ல ஒழுக்கமுடன் நடப்பவன். விரோதிகளுக்குப் பயப்படாதவன். வியாபாரம் செய்வான்.

5. சிலவேநாள் ஒருவர் தன்பால் சீவனம் செய்வா னுகும்
நலமுள தந்தை யில்லம் நாயக னடையா னுகும்
விலைமாதர் மோகங் கொள்ளான் வீண்பழி யேற்கா னுகும்
தலமதை விட்டு நீங்கிச் சாருவா னயலூர் தன்னில்.

5. சிலகாலம் ஒருவரை யடுத்து வேலைசெய்து வருவான். நன்மையுள்ள தந்தையின் வீட்டை அடைய மாட்டான். வேசையர்மீது இச்சையில்லாதவன். வீண் பழி ஏற்காதவன். இருப்பிடத்தை விட்டுச் சென்று வேரூரில் வாழ்ந்து வருவான்.

6. மாநிற முணைச்சல் தேகி மருமமில் லாதா னுகும்
வானவர் பக்தி பூண்பன் மருவிடும் நாபிச் சூடு
ஞானமாம் குணங்க ளில்லான் எதிரிகட் கஞ்சா னுகும்
பான்மையாய்ப் பேச வல்லன் பந்துவுக் கிணக்கம்
[சொல்வான்.

6. மாநிற முள்ளவன். ஒல்லியான சரீர முடையவன். இரகசியமில்லாதவன். தெய்வ பக்தி யுள்ளவன். நாபிச் சூடுடையவன். இழிவான குணங்களில்லாதவன். விரோதிகட்குப் பயப்படாதவன். பொருத்தமாகப் பேசுபவன். உறவினர்களுக்கு இணங்கி யிராதவன்.

7. கோதுமை ரேகை யுண்டு குறையென்றோர்க் குதவி
[செய்வன்
மீதிலான் தனமு மென்றும் விரயங்க ளதிகஞ் செய்வன்
மாதவர்க் கன்ன மீவன் வணிபங்கள் செய்வா னுகும்
சாதிப்பான் சிலவே [illegible] தினேவ ரென்றும்.

7. கையில் கோதுமை ரேகை யுடையவன். துன்ப மடைந்தவருக்கு உபகாரம் செய்பவன். பொருள்களே மீதம் வையாதவன். மிகுதியாகச் செலவு செய்பவன். பெரியோர்களுக்கு அன்ன மளிப்பவன். வியாபாரங்கள் செய்வான். சில சந்தேகமான விஷயங்களைத் தெளிவாக்குவான். அவனைப் போலவே சகோதரரும் இருப்பர்.

8. இந்நெறி யுடையா னுக்கு இவனுமே வந்தஞ் சென்மம்
அன்னவ னுதிப்பா னுகும் அவன்துணை முன்னோர் காணுன்
எந்தக்கா ரணத்தி னுலே இயம்பினீ ரந்தச் சங்கை
மன்னிய லாபம் தன்னில் மதிகேது விருப்ப தாலே;

8. இக்குணங்க ளுடையவனுக்கு ஜாதகன் கடைசி பிறப்பாகப் பிறப்பான். ஆனல் அவனுக்கு முன்பிறந்தவர் இல்லாதவன். என்ன காரணத்தினல் தோஷம் சொன்னீர்கள்? இலாப ஸ்தானமாகிய மீனத்தில், சந்திரனும் கேதுவும் இருப்பதால்;

9. சொல்லினேம் துணைமுன் தோடம் சிறுவன்பின் ஆண்பால் [காணுன்
வல்லிமார் கான்கும் தீர்க்கம் வரன்துணை காணு வண்ணம்
புல்குவீர் மூன்றில் பானு பொன்னவன் இருப்ப தாலே
நில்லாது துணையா னுந்தான் நிமலியே கேட்டி டாயே.

9. இவனுக்கு முன் பிறந்தவருக்குத் தோஷமுண்டு என்று சொன்னேம். இவனுக்குப் பின்பு, சகோதரர் பிறந்து நிலையார். நான்கு சகோதரிகள் பிறந்து தீர்க்கயா யிருப்பர். இவனுக்குச் சகோதர தோஷம் எப்படக் காரணம் சொல்லுவீர். மூன்றுமிடத்தில் சூரியனும், குருவும் இருப்பதால் சகோதரர் நிலைத்திரார். தாயே! கேளுங்கள்.

10. சாதகன் குணத்தைச் சொல்வோம் சார்ந்தவான் ஊகை சாலி
பாதக மனம்வை யாதான் பரிந்துப சாரம் செய்வன்
நீதிவான் கல்வி மானும் நிதானமாய் வார்த்தை சொல்வன்
காதலி தன்னுல் யோகம் கழறுவோம் பால னுக்கு.

10. ஜாதகன் குணத்தைச் சொல்லுவோம். சாந்த முடையவன். ஊக முள்ளவன். கெட்ட மன மில்லாதவன். அன்புடன் உபசாரம் செய்வான். நீதி யுள்ளவன். கல்வி யறிவுடையவன். அடக்கமாகப் பேசுபவன். மனைவியால் இவனுக்கு அதிர்ஷ்டம் சற்படும் என்று சொல்லுவோம்.

11. அன்னையின் வர்க்கத் தானுல் அணுகியே வாழ்வா னுகும்
தென்திசை தன்னில் செல்வன் தந்தைபால் அணுகி வாழான்
தன்னுட லிருந்நி றத்தான் சமதேகம் பித்த சூடு
கன்னிகை வந்த பின்பு கழறுவோம் யோகந் தானே.

11. தாயின் வர்க்கத்தினரைச் சார்ந்து வாழ்ந்து வருபவன். தெற்குத் திசையில் செல்வான். தந்தையுடன் வாழ்ந்திருக்க மாட்டான். கரிய நிற முள்ளவன். சமமான சரீர முடையவன். பித்த சூடுள்ளவன். மனைவி வந்த பிறகு மிகுதியான அதிர்ஷ்டங்கள் ஏற்படும்.

12. தந்தைநாள் பூமி கொஞ்சம் தானதை விருத்தி செய்வன்
பிந்தியும் பாரி யாலே பிரபலப் புகழு மேற்பன்
சொந்தமா யில்லம் சித்ரம் செய்குவான் பலர்க்கு நேயன்
மூந்துமால் பக்தி கொள்வன் மூலச்சூ டுடைய னுமே.

12. பிதுரார்ச்சிதமான வீனை நிலங்களை விருத்தி செய்வான். பிறகு மனைவியால் மிகுதியான செல்வாக்கை யடைவான். சொந்தமான அழகிய வீடு ஒன்று கட்டுவான். பல பேருக்கு நண்பன். திருமாலின் மீது பக்தி கொள்ளுவான். மூலச் சூடுடையவன்.

13. சிலவேநாள் பாரி யில்லம் செல்லுவா னிந்தப் பாலன்
பலவிதத் தொழிலுஞ் செய்வன் பந்துவுக் கினிய னுவன்
சொலுமொழி காப்பா னுகும் செய்ந்நன்றி மறவா னுகும்
தலமது தீர்த்தம் தோய்வன் சங்கரி கேட்டி டாயே.

13. சின்னட்கள் மனைவியின் பிறந்த வீட்டிற்குச் சென்று இவன் வாழ்ந்திருப்பான். பலவிதமான தொழில்கள் செய்து வருவான். உறவினர்களுக்குப் பிரியனுக இருப்பான். சொன்ன சொற்னைக் காப்பான். பிறர் செய்த உபகாரத்தை மறவாதவன். புண்ணியத் தீர்த்தங்களில் நீராடுவான். சங்கரியே! கேளுங்கள்.

14. இருபது ஆண்டு தன்னில் இவனுக்குப் பாரி வாய்க்கும்
வருங்கன்னி தென்பா லாகும் மாதுரு கிளையி லேதான்
உரைக்கின்றேம் அவள்கு ணத்தை யுணர்ச்சலாம் மாஞ்சி
[வப்பள்
பெரும்புத்தி அடக்க மாவள் பொய்யது புகலா ளாமே.

14. இவனுடைய இருபதாம் வயதில் மனைவி வாய்ப்பாள். அவள் தெற்குத் திசையிலிருந்து வருவாள். அன்னையின் வர்க்கத்திலிருந்து வரும் அப்பெண்ணின் குணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேம். மெல்லிய சரீர

முடையவள். கருமை கலந்து சிவந்த மேனி. தாராள புத்தி யுடையவள். பொறுமைசாலி. பொய் சொல்லாதவள்.

15. பாரியால் சிலவே ஆஸ்தி பெருகிடும் வறுமை காணுள்
சீரியோர்க் குதவி செய்வள் தேவதா விரத மேற்பள்
கூறுவோம் புத்திர பாகம் கோதையு மூன்று என்றேரும்
தேறிடும் ஆண்பால் மூன்று செப்பின ஆறும் தீர்க்கம்.

15. மனைவியால் சில செல்வங்கள் விருத்தியாம். தரித்திர மில்லாதவள். பெரியவர்களுக்கு உபகாரம் செய்யும் தன்மையினள். தெய்வ பக்தி பூண்பாள். புத்திர பாவத்தைப் பற்றிச் சொல்லுவோம். பெண்கள் மூவரும், ஆண் மக்கள் மூவரும் பிறந்து நீண்ட ஆயுளுள்ளவர்வர் என்றேரும்.

16. அத்திரி தடுத்துச் சொல்வார் அஞ்சினில் சேயும் ராகு
குத்தமா யிருப்ப தாலே கூறுணுப் புத்ரர் தாரும்
பத்தினுக் குடையோன் சென்மம் புதன்புக ரிரண்டில்
[தங்கச்
சுத்தமாய்ச் சுதர்கள் விருத்தி செப்பின மொழிகுன் ரூது.

16. அத்திரி முனிவர் மறுத்துச் சொல்லுவார். ஐந்தாமிடமாகிய கன்னியில் செவ்வாயும் ராகுவும் கூடி இருப்பதால் புத்திரர்கள் உளராவர் என்று சொல்லலாகாது. பத்தாமிடமாகிய கும்பத்துக் குடையவனுன சனி இலக்கினத்திலும், புத்திர ஸ்தானுதிபதியான புதன், இலக்கினுதிபதியான சுக்கிரனுடன் மிதுனத்தில் ஆட்சியாகவும் இருப்பதால், நிச்சயமாகக் குழந்தைகள் விருத்தியாம். சொன்ன சொற்கள் தவரு.

17. அன்னையும் நற்குணத் தாள் ஆளனுக் கினிய ளாகும்
பன்னியே பேச வல்லாள் பலருக்கு நல்லோ ளாவள்
தன்துணை யாண்பா லொன்று தையலர் நான்கு என்றேரும்
இன்னவ ரில்லம் கீழ்ப்பா லியம்புவோ மில்லம் பாழாம்.

17. ஜாதகன் தாய் நற்குண முடையவள். கணவனுக்குப் பிரியமான வள். பன்னிப் பன்னிப் பேசுவாள். எல்லோருக்கும் நல்லவளாக இருப்பாள். அவளுக்குச் சகோதரன் ஒருவனும், சகோதரிகள் நால்வரும் இருப்பர். அவளுடைய வீடு கீழ்ப் பக்கத்திலுள்ளது. ஆனல் பாழடைந்தது.

18. காரணம் யாது வென்னக் கழறின தாயின் பின்னேன்
வேரொரு நகரம் தன்னில் மேவுவா னதுவு மின்றி
நாரியர் வேறு மாதை நாயகன் நேசம் செய்து
தீரமாய் வாழ்வா னுகும் சிதைந்திடு மில்ல மென்றேரும்.

18. காரணம் என்ன? தாயின் பின் பிறந்த சகோதரன் வேலூர் ஊருக்குச் சென்று வசித்து வருவான். தவிரவும், வேறு மாது ஒருத்தியை அவன் நட்புக்கொண்டு அவளுடன் தைரியத்துடன் வாழ்ந்து வருவான். அதனால் வீடு பாழடையும் என்று கூறினேம்.

19. மாதுரு பூர்வம் சொல்வோம் மால்மலை கீழ்ப்பா லாக
மேதினில் பேரூர் தன்னில் விளங்கினுள் ரெட்டி வம்சம்
தீதுளோர்க் கன்ன மீந்து தேவதா விரதம் பூண்டு
சூதின்றிப் பவமில் லாமல் சென்றனள் கால நாடு.

19. அன்னையின் முற் பிறவியைச் சொல்லுவோம். திருவேங்கட மலைக்குக் கிழக்குப் பக்கத்திலுள்ள ஒரு பெரிய ஊரில், ரெட்டியார் மரபில் தோன்றி வாழ்ந்து வந்தாள். கஷ்டமடைந்தவர்களுக்கு அன்னமளித்து, தெய்வ பக்தி கொண்டு, மனத்தில் கபடமில்லாமல் வாழ்ந்து வந்து, நீதின்றி, இறந்தாள்.

20. சிரநான் கோன் வரையப் பட்டுச் செனித்தனள் வடுகர் [வம்சம்
வருஞ்சென்மம் புதுவை தன்னில் மாதுவும் சைவச் சேயாய்
உறைகுவாள் சுபமுண் டாகி உத்தமி வாழ்வா ளாகும்
பெருவயி ரூனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

20. பிறகு, பிரமனால் படைக்கப்பட்டு, வடுகர் குலத்தில் தோன்றினாள். இனி வரும் சென்மத்தில் புதுச்சேரியில் சைவ மரபினளாகப் பிறப்பாள். நன்மைகள் ஏற்பட்டு, உத்தமியாக வாழ்ந்து வருவாள். பெரு வயிற்றையுடைய விநாயகனைப் பெற்ற பார்வதியே! கேளுங்கள்.

21. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் கொங்கு நாட்டில்
வந்தனன் கங்கை சேயாய் வளமுள குடும்பி யாகி
விந்தையாய் வணிபம் செய்து வேதிய ருறவு கொண்டு
கந்தன்மேல் பக்தி கொண்டு காலன்தன் நாட டைந்து;

21. தந்தையின் பூர்வ வரலாற்றைச் சொல்லுவோம். கொங்கு நாட்டில் வேளாளர் குலத்தில் தோன்றி, செழிப்புள்ள குடும்ப மேற்பட்டு, வியாபாரங்கள் மிகுதியாகச் செய்து, அந்தணர்களுடன் நட்புக்கொண்டு, முருகப் பிரான் மீது பக்தியுடன் வாழ்ந்து வந்தான். பிறகு இறந்து;

22. மால்மகன் வரையப் பட்டு வந்தவ னிவனே யென்றும்
சாலவே பின்சென் மத்தைச் சாற்றுவோம் விரிஞ்சி
[மேற்கில்
சீலமாம் வைசியச் சேயாய்ச் செனிப்பனு மென்று
[சொல்வோம்
ஆலத்தை யுண்டான் தேவி அறைந்தது தப்பா தாமே.

22. திருமாலின் மகனுகிய பிரமனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவனிவன் என்று சொல்லுவோம். இனி, இவன மறுபிறப்பைச் சொல்லுவோம். விரிஞ்சி காட்டுக்கு மேற்கில் ஒழுக்கமுடைய வைசிய குலத்தில் தோன்றுவான் என்று கூறுவோம். ஆலகாலத்தை யுண்ட பரமசிவனின் பத்தினியே! சொன்னவை தவறு.

23. உதித்தவன் பூர்வம் தன்னே உரைக்கின்றேரும் காஞ்சி
[தன்னில்
நதிகுலந் தனிலு தித்து நாயகி மனைவி மைந்தர்
சதியிலா வாழும் நாளில் சாற்றுவோம் வினையை யாங்கள்
அதிதியும் பசிநோ யாலே அந்தியில் அனனங் கேட்க;

23. ஜாதகனின் முற் பிறவியைப் பற்றிச் சொல்லுவோம். காஞ்சி புரத்தில் வேளாளர் மரபில் பிறந்து, மனைவி மக்களை யடைந்து, திங்கில் லாமல் வாழ்ந்து வரும்போது, ஏற்பட்ட தீவினையை நாங்கள் சொல்லுவோம். பசியால் வாடிய ஒரு சிவனடியார், மாலையில் அன்னம் கேட்கும்போது;

24. பாரிமேல் கோபத் தாலே பரிந்தவார்த் தைகளு மின்றிச்
சீறியே செல்லு மென்னச் சிவனடி- வருத்த முற்றுக்
கூறுவார் சாபம் தானும் குறிக்கும்பின் சென்மம் தன்னில்
வெகிருரு நகரம் வாழ்வாய் மெல்லியில் சிலநாள் நின்று;

24. மனைவிமீது இருந்த கோபத்தினுல், நல்ல வார்த்தைகள் சொல்லாமல், கோபத்துடன் "போ" என்று சொல்ல, சிவனடியாரும் வருத்த மடைந்து சாபமிட்டார். இனி ஏற்படும் மறு சென்மத்தில், வேற்நூரில் சென்று வாழ்ந்து வருவாய். மனைவியின் வீட்டில் சின்னஞ்சிறு குழந்தைகள் இருந்து;

25. தன்துணை யாண்பா லின்றிச் சஞ்சல மனத்த னுகிப்
பொன்பொரு ளில்லா னுகிப் பூமியில் வாழ்வாய் நீயும்
இன்னவார் சொல்லி யேதான் ஏகினர் வேறு இல்லம்
பின்னமா யந்தச் சாபம் பூக்கிற்றுப் பாலனுக்கு.

25. உடன்பிறந்த சகோதரனில்லாமல் சஞ்சலமான மனத்துடன், செல்வங்களின்றி, நீ பூமியில் வாழ்வாய், என்று சொல்லிவிட்டு வேறு வீட்டுக்குச் சென்றான். அந்தச் சாபம் இவனுக்குத் துன்பமாக வந்தடைந்தது.

26. அந்தியக் காலம் தன்னில் அணுகிற்றுக் குன்ம நோயும்
அன்னமுங் குறைவு நேர்ந்து அந்தகன் பக்கல் புக்குப்
பொன்னவன் வரையப் பட்டுப் பிறப்பனும் வடுகர் வர்க்கம்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே

26. கடைசிக் காலத்தில் இவனுக்கு வயிற்று நோய் ஏற்பட்டது. போஜன சுகம் குறைந்து, எமபுரம் அடைந்து, பிறகு பிரமனால் படைக்கப் பட்டு, வன்னிய குலத்தில் பிறப்பான். உயர்ந்த விநாயகனைப் பெற்ற பார் வதியே! கேளுங்கள்.

27. பஞ்சைகள் சாபம் போலே பரவிடும் துணையாண் காணுன்
வஞ்சிபால் சிலநாள் வாழ்வன் மறுநகர் வாச மாகும்
தஞ்சமா யிவனின் யோகம் சாற்றுவோம் சனனம்
[தொட்டுக்
கொஞ்சிய விருபா னுண்டும் குறைமதி போலே யோகம்.

27. ஏழைகள் சாபத்தால் சகோதர னில்லாதவ னுவான். மனைவி யின் வீட்டில் சின்னாட்கள் வாழ்ந்து வருவான். வேற்றூரில் வசிப் பான். இவனுக்கு ஏற்படும் யோகங்களைச் சொல்லுவோம். இவன் பிறந்த முதல் இருபது வயது வரையில் கிருஷ்ண பட்சச் சந்திரன்போல் யோகங்கள் குறையும்.

28. பெருமலைத் தீபம் போலே பிதுர்மனம் திரிசல் காணும்
வரவுக்குச் செலவ நேகம் மறுநகர் வாச மாகும்
திருகாகும் நினைத்த தெல்லாம் செப்புவோ மதன்மே
[லாகப்
பிறைபோலே யோக மெய்தும் பராசரும் தடுத்துச்
[சொல்வார்.

28. குன்றின் மேல் தீபம் போல, தகப்பன் மனம் நிலையில்லாது சஞ்சல மடையும். வரவுக்கு மேல் செலவு ஏற்படும். வேற்றூரில் வாழ்ந்து வருவான். நினைத்த காரியங்கள் நடவாமல் தீங்காம். அதற்கு மேலாகச் சொல்லு வோம். சுக்கில பட்சச் சந்திரன் போல் அதிருஷ்டம் விருத்தியாகும். பரா சரரும் மறுத்துச் சொல்லுகின்றார்.

29. எப்படி யோகம் நேரும் இயம்புவீர் சங்கை தன்னைச்
செப்புவோம் தர்ம கர்மன் சனியாகிச் சென்மம் தங்க
ஒப்புடன் புகரு ரெண்டி லுறைந்ததால் யோகம்
[சொன்னோம்
தப்பித முன்னுள் நேர்ந்த சங்கையைச் சொல்லு மென்ன.

29. எப்படி யோக மேற்படும்? அந்தச் சந்தேகத்தை விளக்குங்கள். சொல்லுகின்றோம். சனி தர்ம கர்மாதிபதியாகி (ஒன்பது, பத்தாம் வீட்டுக் குரியவன்) ஜென்ம லக்கினமாகிய விருஷபத்தில் தங்கியிருப்பதாலும், இலக்கினாதிபதியான சுக்கிரன் இரண்டாமிடமாகிய மிதுனத்தில் தங்கியிருப்பதாலும், யோக மேற்படும் என்று சொன்னோம். முற்பிறவியில் இவனுக்கு உண்டான தோஷத்தைச் சொல்லுங்கள்.

30. புதன்கேது தசைகா லத்தில் பொருந்தாது யோக மென்றோம்
அதுவின்றிப் பூர்வ சாபம் அணுகிற்றுப் பால னுக்கு
நதிபுகர் தசைநா ளாக நாட்குநாள் பிறைபோல் யோகம்
நிதிபூமி செட்டு மேன்மை சேர்ந்திடு மென்று சொல்வோம்.

30. புதன், கேது இவர்களின் மகா தசைகளில் யோகங்கள் ஏற்படா. அதுவுமல்லாமல், முற்பிறவியில் செய்த தீவினை இப்பாலனைச் சேர்ந்தது. சுக்கிர மகா தசை ஆரம்பத்திலிருந்து, நாளுக்கு நாள் சுக்கில பட்சச் சந்திரன் போல் யோகமேற்படும். செல்வங்கள் உண்டாம். விளை நிலங்கள், வியாபாரம் இவை விருத்தியாம் என்று கூறுவோம்.

31. தருமகர் மாதி யோகம் சார்ந்திடும் வேசி யோகம்
பெருமையாய்ப் புகழு மேற்பன் புத்திர ருதித்த பின்பு
திருமகள் வாச மெய்தும் தீரமா மனமு மெய்தும்
பொருளது பெருக்க முண்டு போசன வறுமை காணுன்.

31. தர்ம கர்மாதிபதி யோகமும், வேசி யோகமும் ஏற்படும். மேன்மையுடன் புகழடைவான், பிள்ளைகள் பிறந்த பிறகு இலட்சுமீ கடாட்சம் ஏற்படும். தைரியமான மனமுண்டு. செல்வங்கள் விருத்தியாம். உணவில் தரித்திரமில்லாதவன்.

32. இருபது வொன்ப தாண்டில் எழில்மேட மாதந் தன்னில்
பெறுந்தந்தை கண்ட மென்றோம் புக்குப்பின் முப்பா னுறில்
அரிமாத மன்னை கண்டம் அறைந்தது தப்பா தாகும்
பெருவயி றோடுப் பெற்ற புணைய லலி கேளாய்.

32. ஜாதகனின் இருபத் தொன்பதாம் வயதில், சித்திரை மாதத்தில் தந்தைக்கு மரணம் ஏற்படும். பிறகு முப்பத்தாறும் வயதில், ஆவணி மாதத்

தில் தாய்க்குக் கண்டம் உண்டாகும். சொன்னவைகள் தவறு. விரோயகனைப் பெற்ற தாயே! கேளுங்கள்.

33. அறுபது எட்டு ஆண்டில் ஐப்பசி மாதந் தன்னில்
குறைபக்க மட்மா வாசை குமரன்த னுடல மேகும்
வருஞ்சென்மம் துவாரை தன்னில் மாரனுங் கோகு லத்தில்
உறைகுவா னென்று சொல்வோம் உத்தமி கேட்டி டாயே.

33. அறுபத்தெட்டாம் வயதில், ஐப்பசி மாதத்தில், கிருஷ்ணபட்ச அமாவாசையன்று, ஜாதகன் மரண மடைவான். மறுபிறவி துவாரகையில் இடையர் மரபில் தோன்றுவான் என்று சொல்லுவோம். உத்தமியே! கேளுங்கள்.

34. காவலன் செனிக்குங் காலை நடைநாளில் முதல்பா தத்தில்
தாவிய புதனி ருப்புச் சாற்றுவோ மீரே ழாண்டும்
மேவிய திங்க ளைந்தும் விளம்புவோம் பலனை யாங்கள்
ஓவிய தான பேத முதித்தவன் தனக்கு ரோகம்.

34. ஜாதகன் பிறக்கும்போது இரேவதி நட்சத்திரம் முதல் பாதம். புத மகாதசை யிருப்பு, பதினேன்கு வருஷங்களும், ஐந்து மாதங்களுமாம்; அப்போது ஏற்படும் பலனைச் சொல்லுவோம். இடமாற்றமும், ஜாதகனுக்கு வியாதியும் ஏற்படும்.

35. பலவித விரய மாகும் பகைமனத் தாப முண்டு
நிலைபேத மில்லஞ் செய்தல் நிகர்சாதி சேத மெய்தும்
நலமிலாத் தந்தை தாய்கள் மற்றுமே விருத்தி யாகும
மலையிறை மகளே பின்பால் வழுத்துவோம் தாயே கேளும்.

35. பலவிதமாகச் செலவுகள் ஏற்படும். விரோதமும் உண்டு. மனத் தாங்கல் ஏற்படும். இடமாற்றம் ஏற்பட்டு, புது வீடு கட்டுவான். தன் வர்க்கத்தாருக்கு நஷ்டம் உண்டாகும். உடல் நலிவு ஏற்பட்டிருந்த தாய் தந்தையர்கள் சுகமடைவர். பர்வதராஜன் புத்திரியே! மற்றவற்றைப் பிற பாகத்தில் சொல்லுவோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகம் 72

1. பிறைபுகர் மேட மாகப் புரவியோன் நந்தி யாகக்
குருதுலாம் ஞானி கன்னி கூரியன் வீணை புக்கத்
தரைமகன் [1]சாப மாகச் சனிகலை பணியு மீனம்
வருவது நந்தி சென்ம மறைகுவீர் பலனைத் தானே.

1. சந்திரன் சுக்கிரன் மேஷத்திலும், சூரியன் விருஷபத்திலும், குரு துலாத்திலும், கேது கன்னியிலும், புதன் மிதுனத்திலும், செவ்வாய் தனுசிலும், சனி மகாத்திலும், ராகு மீனத்திலும் நின்று விருஷபம் லக்கினமாக இருந்தால் எற்படும் பலனைக் கூறுங்கள்.

ராகு	சந்திரன் சுக்கிரன்	லக்கினம் சூரியன்	புதன்
	இராசி சக்கரம்		
சனி			
செவ்வாய்		குரு	கேது

2. அத்திரி சொல்லு கின்றார் ஆணது செலன மாகும்
வித்தக னில்லஞ் சொல்வொம் வடவாடை கீழ்மேல் வீதி
உத்திர திக்கி லீசன் உறங்கின கோட்ட முண்டு
சத்தியு மேல்பால் தங்கும் சிறுவூரா மருகர் வர்க்கம்;

2. அத்திரி முனிவர் சொல்லுகின்றார். இங்ஙனம் கிரகங்கள் இருந்தால் ஆண் பிறப்பு உண்டாகும். இவன் பிறக்கும் வீட்டைச் சொல்லுவோம். கிழக்கு மேற்கான வீதியில் வடக்கு வரிசையி லுள்ளதாகும். வீட்டுக்கு வட திசையில் பாழடைந்த சிவபெருமான் கோயிலொன் றுண்டு. அம்மன் கோயில் மேற்கிலுள்ளது. சிறிய ஊர். இவ்வூரில் வேளாளர் குலத்தில்;

3. உதிப்பனு மிந்தப் பாலன் உரைக்கின்றே மிவனின் யோகம்
மதிநுத லன்னை தந்தை யவன்துணை களத்ர புத்ரர்
சதியிலா முன்பின் சென்மம் சாற்றுவோ மிந்நூல் தன்னில்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை பாலை கௌரி

1. தனுர் ராசி

3. இந்த ஜாதகன் தோன்றுவான். இவனுக்கு ஏற்படும் யோகத்தைச் சொல்லுகின்றோம். இவனது தாய்தந்தையர், உடன்பிறந்தார், மனைவி, புத்திரர் இவர்களின் யோகங்கள், முற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுவோம். முனிவர்களே ஆதரிக்கின்ற பார்வதியே! கேட்பாயாக.

4. தாதைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு மிளையா ளீன்ற
நீதியோய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
போதவே துணைகள் காணுன் புகலுவோ மவன்கு ணத்தைச்
சூதிலான் மாநி றத்தன் தொல்புவி விருத்தி செய்வன்.

4. ஜாதகன் பாட்டனுருக்கு இரு மனைவியர். அவர்களில் இளையவ ளுக்குப் பிறந்தவன், இந்த ஜாதகனின் தந்தையாவான் என்று சொல்லு வோம். உடன்பிறந்தாரில்லாதவன். அவன் குணங்களைக் கூறுவோம். வஞ்சனை யில்லாதவன். கரிய நிற முடையவன். நீண்ட காலமாகவுள்ள விளை நிலங்களை விருத்தி செய்வான்.

5. பலருக்கும் பந்தினர்க்கும் பரிந்துப சாரம் செய்வன்
கலகத்தைக் கூறு ளுகும் காலிகள் விருத்தி யுள்ளான்
நிலையதைக் காப்பா ளுகும் நீத்தோர்க ளுறவு கொள்வன்
தலமது செல்வா ளுகும் சினதேவன் பக்தி கொள்வன்.

5. அயலார் பலருக்கும், உறவினர்கட்கும் அன்புடன் உபசாரங்கள் செய்வான். கலகம் செய்ய மாட்டான். கால்நடைகள் விருத்தி யுள்ளவன். தன் நிலையிலிருந்து தாழ்வடையாமல் காத்துக் கொள்வான். துறவிகள் சேர்க்கையைக் கொள்ளுவான். பல புண்ணியத் தலங்கட்கு யாத்திரை செய்வான். அருகதேவன் மீது பக்தி கொள்ளுவான்.

6. முன்கோபம் பின்பு சாந்தம் மூலச்சூ டுடைய ளுகும்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பன் கிருஷி செய்வன்
பொன்பணி சேர்ப்பா ளுகும் புகழ்ந்தோரை யாத ரிப்பன்
பின்னமில் லாத தேகி பிறர்குற்றம் புகலா ளுகும்.

6. முன்கோப முண்டு. பின்பு சாந்த முறுவான். மூலச் சூட்டுநோ யுடையவன். தன் சொற்களே சிறந்தன என்று நிலை நாட்டுவான். விவசாயம் புரிவான். பொன், ஆபரணங்கள் முதலியன சேர்ப்பான். தன்னைப் புகழ்ந்த வர்களைக் காப்பான். குற்றமில்லாத உடலைப் பெற்றவன். அயலார் குற் றத்தைக் கூறமாட்டான்.

7. சொன்னவிக் குணத்தா னுக்குச் சுதனுமே வுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் மால்நி
[றத்தன்
உன்னத வார்த்தை சொல்வன் உணர்ச்சலாம் மீட்சி யாவன்
மன்னரை யுறவு கொள்ளான் மாநிலம் கிருஷி செய்வன்.

7. சொல்லப்பட்ட இவ்விதமான குணங்களையுடைய தந்தைக்கு, இந்த ஜாதகன் புதல்வனாய்ப் பிறப்பான். அவன் குணத்தைக் கூறுவோம். அழகுடையவன். கரிய நிற முள்ளவன். உயர்ந்த முறையில் பேசுவான். மெலிந்து நீண்ட சரீர முடையவன். அரசர்கள் நட்பைப் பெறாதவன். உலகத்தில் பயிர்த்தொழில் புரிவான்.

8. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வன் உறைப்பொடு புளிப்பி
[ரிச்சை
குண்டுணர் கூரு னுகும் குணமது விரண்டு மூண்டு
தண்டமிழ் நூணுக்கம் தேர்வன் சதுஷ்பாதம் விருத்தி
[யுண்டு
பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் விருத்தி செய்வன்.

8. சுக போஜனம் கொள்ளுவான். காரம், புளிப்பு இவைகளில் விருப்பங் கொள்ளுவான். கோள் சொல்ல மாட்டான். இருவிதக் குணங்களுள்ளவன். குளிர்ந்த தமிழ் மொழியின் நூட்பங்களை ஆராய்ந்து உணருவான். கால் நடைகள் விருத்தி யுடையவன். முன்னோர் காலம் தொடங்கியுள்ள வீடு நிலங்களை இவன் விருத்தி செய்வான்.

9. அவசர மனத்த னுகும் அருகர்தன் பக்தி கொள்வன்
தவசிகள் உறவு கொள்வன் சந்தேக மனத்த னுகும்
பவமன மில்லா னுகும் பத்தினி நேசம் கொள்வன்
நவநீத வஸ்து இட்டம் நாயகி கேட்டி டாயே.

9. அவசரப்படும் இயல்பினன். அருகதேவன் மீது பக்தி கொள்ளுவான். தவஞ்செய்யும் சான்றோர்கள் நட்பைக் கொள்ளுவான். சந்தேகப்படும் மனமுள்ளவன். உலக ஆசை மிகுதியாக இல்லாதவன். மனைவி மீது விருப்பங் கொள்ளுவான். வெண்ணெயில் பிரிய முடையவன். தலைவியே! கேட்பாயாக.

10. இன்னவன் செங்கை தன்னில் இலஞ்சிடும் சங்கு சக்ரம்
அன்னிய ருறவு கொள்வன் அடாவடி கொஞ்சம் உண்டு
பன்னியே பேச வல்லன் பரிந்துப சாரம் செய்வன்
பின்னமில் லாத தேகி பேதையே கேட்டி டாயே.

10. இவனுடைய கையில் சங்கு சக்கர ரேகைகள் பொருந்தியுள்ளன. யலார் நட்பைப் பெறுவான். சிறிது அடாவடித்தன முண்டு. பன்னிப் ன்னிப் பேசுதலில் வல்லவன். வீட்டுக்கு வந்தவர்கட்கு அன்புடன் உபசா ங்கள் செய்வான். குற்றமில்லாத உடலுள்ளவன். தாயே! கேட்பாயாக.

1. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோ மிருமூன் றுகும்
அவனியில் ஆண்பால் ரெண்டும் அணுகிடும் கன்னி யவ்வார்
நவனியில் தீர்க்க மென்றேம் நசித்திடு மிரண்டு தானும்
தவசியே யவர்கள் சேதி சாற்றுவோம் பின்பா கத்தில்.

11. இவனுடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுவோம். அறுவ ரவர். சகோதரர் இருவரும், சகோதரிகள் இருவரும் தீர்க்கமாக விளங்கு பர் என்று சொன்னேம். இருவர் மரிப்பர். தவங்களை யாற்றும் அம்பி கையே! அவர்களைப் பற்றிய செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுவோம்.

12. இன்னவன் மணத்தின் காலமியம்புவோ மூவே ழாண்டில்
கன்னிகை தென்பால் நேரும் கழறுவோ மவள்கு ணத்தைப்
பொன்பணி யாசை யுள்ளாள் புகழ்தோரை யாத ரிப்பள்
கன்னென மொழியே சொல்வள் கட்டுரை பகரா ளாகும்.

12. ஜாதகனுடைய திருமணம் நடைபெறும் காலத்தைச் சொல்லு வேம். இருபத்தொன்றும் வயதில், இவனுருக்குத் தென் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் குணத்தைச் சொல்லுவோம். பொன்னபரணங் களில் விருப்ப முடையவள். தன்னைப் புகழ்த்தவர்களை ஆதரிப்பாள். கரும்பு போல் இனிய சொற்களைப் பேசுவாள். சொற்களைக் கட்டிக் கூறுள்.

13. வரன்மனம் போலே வாழ்வள் மாதுநன் னடக்கை யுண்டு
அரிவைக்கு வயது தீர்க்கம் அத்திரி யிவ்வார் சொல்லப்
பராசரும் தடுத்துச் சொல்வார் பார்மக னெட்டில் தங்கக்
குருவுமே வாறில் தங்கக் கோதைய யிருவ ராகும்.

13. கணவனின் மன மறிந்து வாழ்க்கை நடத்துவாள். கல்லொழுக்க முடையவள். தீர்க்கமான வயதுள்ளவள். அத்திரி முனிவர் இங்ஙனம் சொல்ல, பராசரர் மறுத்துக் கூறுவார். செவ்வாய் எட்டாமிட மாகிய தனூர் ராசியிலும், குரு ஆறுமிடத்திலும் இருப்பதால் இவனுக்கு மனைவியர் இருவராவர்.

14. புகர்மதி விரயம் தங்கப் போகிடு முதல்ம னைதான்
தகைமையாய் மறும னைதான் தங்கிடும் பால னுக்குப்
பகைவரும் காலம் சொல்வீர் பாலக னிருபான் னென்பான்
தகைமையாய்ச் சுதர்கள் தோன்றிச் செல்லுவாள் கால நாடு.

14. சுக்கிரனும் சந்திரனும் விரயஸ்தானத்தில் தங்கி யிருப்பதால், முதல் மனைவி இறப்பாள். ஜாதகனுக்கு இரண்டாம் மனைவி ஏற்பட்டு நிலைப்பாள். முதல் மனைவிக்கு மரணம் நேரும் காலத்தைச் சொல்லுங்கள். ஜாதகனின் இருபத்தொன்பதாம் வயதில், புதல்வர்கள் பிறந்து முதல் மனைவி மரண மடைவாள்.

15. மிகுபித்த ரோகத் தாலே விளம்புவோ முதல்ம னைதான்
வகையுடன் வேறு மாது மருவிடும் வேறு ஆண்டில்
அகமதின் தென்பால் நேரும் அறைந்தது தப்பா தாகும்
மிகுதவம் புரிய மெங்கள் வித்தகி கேட்டி டாயே.

15. மிக்க பித்த வாயு உண்டாகி முதல் மனைவி இறப்பாள் என்று சொல்லுவோம். பின்பு, மறு வருஷத்தில் வேறு மனைவி வாய்ப்பாள். தன் வீட்டுக்குத் தெற்குப் பக்கத்திலிருந்து அவள் வருவாள். கூறியது தவறுது நாட்கும். மிகுந்த தவங்களைப் புரியும் எங்கள் தாயே! கேட்பாயாக.

16. சுதர்களுங் காண லுகும் தோன்றினுந் தீதே யாகும்
எதுவிதக் கார ணத்தால் இயபினீ ரந்தச் சங்கை
புதல்வர்தா னத்தில் கேது பூமக னெட்டில் தங்க
அதுகுற்றம் மதலை தோடம் அவன்பூர்வ வினையா மென்னே.

16. புத்திரர்கள் இரார். பிறந்தாலும் நஷ்ட மடைவர். எந்தக் கார ணத்தால் புத்திர தோஷம் ஏற்படும் என்று கூறினீர்கள். புத்திர ஸ்தான மாகிய ஐந்தாமிடத்தில் கேதுவும், எட்டாமிடமாகிய தனுசில் செவ்வாய் இருப்பதாலும், முற் பிறப்புத் தீவினையாலும் புத்திர தோஷங் கூறினேம்.

17. முன்னவ னிருந்த சென்ம மொழிகின்றே முனியே கேளும்
தென்திசைப் பாண்டி நாட்டில் செனித்தனன் வைசியச்
[சேயாய்ப்
பொன்னெடு பணிக ளுண்டாய்ப் பேதையர் மதலை யாகி
உன்னதச் செட்டுச் செய்து உத்தமன் வாழு நாளில்;

17. இவன் முற்பிறப்பைச் சொல்லுகின்றேம். முனிவரே! கேளுங் கள். தென் பாண்டி நாட்டில், வைசியர் குலப் புதல்வனுப் பிறந்தான்.

பொருளும் ஆபரணங்களும் உண்டாகி, மனைவி மக்கள் ஏற்பட்டு, மேன்மை யான வியாபாரங்கள் செய்து கொண்டு, இவன் வாழ்ந்து வரும் காலத்தில்;

18. வந்தவூழ் தன்னைக் கேண்மோ வாசுகி யில்லம் வாசம்
விந்தையர் யோர்நாள் தன்னில் மகுடத்தால் வெளியில் காண
அந்தவ னரங்கஞ் செய்தும் அப்பணி திகைத்து நிற்க
மைந்தனும் கழியால் வாட்ட மறலியின் பதிக்குச் செல்ல;

18. இவனை யடைந்தத் தீவினையைக் கேளுங்கள். நல்ல பாம்பு ஒன்று இவன் வீட்டில் வசித்து வந்தது. அஃது ஒரு நாள் படமெடுத்து ஆடிக் கொண்டு வெளியில் வந்தது. இவன் அந்தப் பாம்பினைத் துன்புறுத் தவே, அது திகைத்து நின்றது. உடனே, ஒரு கம்பினால் நல்லபாம்பினை கன்முக அடித்தான்; பாம்பு இயமனுலகம் சேர்ந்தது.

19. அதுவொரு தோட மாச்சு அறைகின்றேம் வேறு வொன்று
அதிபதி விதவை போகம் அணைந்துமே கருவ ழித்தான்
சதியான பண்டி தத்தால் சத்தியு மாண்டா ளென்றேம்
இதுதோடந் தீர வேண்டி ஏகினன் சேதுக் கேதான்.

19. பாம்பினைக் கொன்றது ஒரு தோஷமாகி இவனை யடைந்தது. வேறு ஒன்றும் சொல்லுகின்றேம். ஒரு கைம்பெண்ணுடன் இன்ப மனு பவித்து வந்து, அவளுக்கு ஏற்பட்ட கருவினை யழித்தான். இவன் கருவை யழிக்கச் செய்த வைத்தியங்களால் அப் பெண் மரண மடைந்தாள் என்று சொன்னேம். இத்தத் தோஷம் நீங்குவதற்காக, சேதுவுக்குச் சென்றான் இவன்.

20. அறமதி லிச்சை யுண்டாய் அந்தகன் பக்கல் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
உறைந்திடு முன்னூழ்த் தோடம் உறுஞ்சுதர் தோட
[மெய்தும்
கருவதை யழித்த தோடம் கன்னிகை மரண மெய்தும்.

20. அந்தியக் காலத்தில் தருமத்தில் ஆசை யேற்பட்டு, பின்பு மரண மடைந்தான் மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டுத் தோன்றுவான் இந்த ஜாதகன். முன் சென்ம தீவினை இவனைச் சாரும். புத்திர தோஷம் ஏற்படும். கருவை யழித்த குற்றத்தால் மனைவி மரண மடைவாள்.

21. குறுமுனி புகலு கின்றார் கூறினீர் வைசிய னென்று
பெருஞ்சைன குலத்தி லெவ்வார் பிறந்தகா ரணங்கள்
[சொல்வீர்
திருமகன் பூர்வந் தன்னில் சேதுவில் சென்ற புண்யம்
அருகர்தங் குலமு திப்பான் அவ்வினை விலகா தோசொல்.

21. அகத்திய முனிவர் சொல்லுகின்றார். இந்த ஜாதகன் முற்பிறப்பில் வைசிய குலத்தவ னென்று சொன்னீர்கள். இப்பொழுது பெருமை மிக்க ஜைன குலத்தில் தோன்றிய காரணம் யாது? ஜாதகன் முற் பிறப்பில் சேதுவுக்குச் சென்று, நீராடிய புண்ணியத்தால், இப் பிறப்பில் ஜைன குலத்தவனுகப் பிறப்பான். எற்பட்ட தோஷங்கள் விலகாவோ? கூறுங்கள்.

22. வினையது விலகா தாகும் விதவையின் கருவின் தோடம்
கனமுள சாபந் தீரக் கழறுவீர் கிரிகை யொன்று
வினையாகக் கருவில் மாண்ட பேதைக்குப் புகலோம் சாந்தி
சினமுள வரவத் திற்குச் செப்புவோங் கிரிகை யொன்று.

22. தோஷம் நீங்காது. கைம்பெண்ணுக்கு எற்பட்ட கருவை யழித்த பெரிய தோஷம் நீங்குவதற்குச் சாந்தி யொன்று சொல்லுங்கள். கருவால் பெண் இறந்து உண்டாகிய தோஷத்துக்குச் சாந்தி யொன்றுங் கூறுமே. நல்ல பாம்பினைக் கொன்ற தோஷத்துக்குச் சாந்தி யொன்று கூறுவோம்.

23. பணியது சிலையால் செய்து பலர்செல்லு மார்க்கந் தன்னில்
தனயனும் வைத்துப் பின்பு சதுர்த்தசி விரதம் கொள்ளக்
குணமாகும் சுதர்கள் தாமுங் குழவியு மாண்பா லொன்று
அணிவிழி பெண்பால் ரெண்டு அறைகின்றோம் பால னுக்கு.

23. நல்ல பாம்பினைப் போல், கல்லினால் உருவொன்று அமைத்து, பலருஞ் செல்லுகின்ற சாலவழியில் பிரதிஷ்டை செய்து வைத்து, பின்பு சதுர்த்தி யன்று விரதமும் மேற்கொண்டால், புத்திர தோஷமும் நீங்கி, நலமாகும். ஜாதகனுக்கு ஆண் குழந்தை யொன்றும், அழகிய கண்களைக் கொண்ட பெண்கள் இருவரும் பிறந்து தீர்க்கமாவர் என்று சொல்லுகின்றோம்.

24. பின்பாகம் விவர மாகப் பேசுவோ மந்தச் சங்கை
அன்னையின் குணத்தைச் சொல்வோம் அன்புள மனத்த
[ளாகும்
சொன்னசொல் சுகமே யெய்தும் சொல்லுமுன் கோபி
[யாகும்
உன்னத விரத மேற்பள் உயர்வொடு அன்ன மீவள்.

24. இரண்டாம் பாகத்தில் விபரமாக இந்தத் தோஷ பரிகாரங்களைக் கூறுகின்றோம். ஜாதகன் தாயின் குணத்தைச் சொல்லுவோம். அன்பு நிறைந்த மனத்தினள். அவள் சொல்லும் சொற்கள் சுகந் தருவனவா யிருக்கும். கூறுவதற்கு முன் கோபங் கொள்ளுவாள். உயர்ந்த விரதங்களை மேற் கொள்ளுவாள். வீடு தேடி வந்தவர்கட்கு மேன்மையாக உணவளிப்பாள்

25. பால்பாக்ய முடைய ளாகும் பகையான்று மனத்தில்
[வையாள்
சீலியாம் யோக சாலி சிறுத்தோர்க்கு அன்ன மீவள்
ஞாவமேல் நல்லோ ளாவள் நாதனுர் பக்தி பூண்பள்
சாலவே பித்த வாயு தங்கிடு மென்று சொல்வோம்.

25. பால் பசு பாக்கிய முள்ளவள். எவரையும் விரோதிகள் என்று மனத்தாலும் நினைக்க மாட்டாள். ஒழுக்க முடையவள். அதிர்ஷ்ட முள்ளவள். ஏழைமை யடைந்தவர்களுக்கு உணவளிப்பாள். உலகில் நற்குண முடையவளாக விளங்குவாள். கடவுள் மீது பக்தி கொள்ளுவாள். மிகுதியாகப் பித்த வாயு இவள் உடலில் தங்கி யிருக்கும் என்று சொல்லுவோம்.

26. தன்துணை யாண்பால் மூன்று தையல ரிரண்டு வென்றோம்
அன்னையி னில்ல முள்ளூர் அறைகின்றே மிவள் முன்
[சென்மம்
தென்திசைப் பழனி நாட்டில் செனித்தனள் மறைக்கு
[லத்தில்
அன்னியர் மதிக்க வாழ்ந்து அச்சென்மம் பவமில் லாமல்;

26. இவளுடன் பிறந்தவர்களில் ஆண்கள் மூவர், பெண்கள் இருவர் என்று சொன்னோம். இவளுக்குத் தாய் வீடு உள்ளூரிலேயே யுள்ளது. இவளுடைய முற்பிறப்பைச் சொல்லுகின்றோம். தெற்குத் திசையிலுள்ள பழனியில், அந்தணர் குலத்தவளாகப் பிறந்தாள். அயலார் பாராட்டும்படி வாழ்ந்து, அப் பிறவியில் தீவினை யின்றி;

27. கர்லன்தன் பதிக்குச் சென்று கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமா மருகர் வர்க்கம் செனித்தன் ளென்று சொல்வோம்
சாலவே விவள்பின் சென்மம் சாற்றுவோங் குடகு தன்னில்
ஏலவே விக்கு லத்தில் எய்துவா ளென்று சொல்வோம்.

27. இயமனுலக மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, ஒழுக்க முடைய ஜைனர் குலத்தில் பிறந்தாள் என்று கூறுவோம். இவள் மறு பிறப்பைச் சொல்லுவோம். குடகு நாட்டில் இக் குலத்தவளாகவே பிறப்பாள் என்று கூறுவோம்.

28. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் காஞ்சி.
[கீழ்ப்பால்
பிந்திய வூரி லேதான் பிறந்தனன் செங்குந்த வம்சம்
முந்திய குடும்பி யாகி மேதினில் வாழு நாளில்
வந்தவும் தன்னைக் கேண்மோ மறையவர் விரோத முற்று;

28. தசப்பஞரின் முற்பிறப்பைச் சொல்லுவோம். காஞ்சீபுரத்துக் குத் கிழக்கிலுள்ள ஊரொன்றில், செங்குந்தர் மரபில் பிறந்தான். மேன் மையான குடும்ப முடையவனாய் வாழுகின்ற காலத்தில் ஏற்பட்ட தீவினை யைக் கேளுங்கள். அந்தணர் இருவர் தம்முள் விரோதங் கொண்டு;

29. அரசர்பால் செல்லும் போது அவனுமே யொருவன் பக்கல்
உரைத்தனன் கட்டு வார்த்தை உரையதால் துன்பம் நேர
மறையவன் மனவெ றுப்பா லறைந்ததோர் சாபங் கேளாய்
மறுசென்மம் துணைக ளின்றி மாதுரு விரண்டு மாகும்.

29. அரசனிடம் சென்று நியாயம் வழங்குமாறு கேட்கின்ற காலத் தில், இவன் அவர்களுள் ஒருவரிடம் பொருளைப் பெற்றுக் கொண்டு, ஒரு பக்கமாய்ப் பொய்ச் சாட்சி கூறினான். அதனால் மற்ற அந்தணருக்குத் துன்பம் நேரிட்டது. துன்ப மடைந்த அந்தணன் மன வெறுப்பினால், கூறிய சாபத்தைக் கேட்பாயாக. நீ, வரும் பிறவியில் உடன்பிறந்தார் இல்லாதவ னாகவும், இரு தாய்மார்களை யடைந்தும்;

30. ஆதியில் வறுமை யுண்டாய் அவனியில் வாழ்வ தாகும்
தீதாகச் சொல்லிச் சென்றான் சேர்ந்தது வந்தச் சாபம்
வேதனை வேறு காணான் வித்தக னந்தி யத்தில்
மேதினில் தலங்கள் சென்று மேலவர் பக்தி கொண்டு;

30. முதலில் தரித்திர னாயும், வாழ்ந்திருப்பாய் என்று கூறிச் சென்றான். அந்தச் சாபம் இவனைச் சேர்ந்தது. வேறு தீங்கு ஒன்றும் இவனுக்கு ஏற்படவில்லை. கடைசிக் காலத்தில், நாட்டிலுள்ள பல புண்ணி யத் தலங்களுக்கு யாத்திரை சென்று, சான்றோர் மீது பக்தி கொண்டு;

31. மறலியின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப் பட்டு
அருகர்தங் குல முதித்தான் அம்மறை சாபத் தாலே
திருமகன் துணைகள் தோடம் செப்புவோ மிவன்பின்
[சென்மம்
பெருவெளி கேரள நாட்டில் பிறப்பனு மிக்கு லத்தில்.

31. மரணமடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, அருகர் குலத்தவனாகப் பிறந்தான் இவன். முற்பிறப்பில் ஏற்பட்ட அந்தணர் சாபத் தால், இப் பிறப்பில் இவனுக்குச் சகோதர தோஷம் உண்டாகும். இவன் மறுபிறப்பைச் சொல்லுவோம். மலையாள நாட்டில் இக் குலத்தவனாகத் தோன்றுவான்.

32. முப்பத்து நாலு ஆண்டில் மேவுவான் தந்தை கண்டம்
அப்போது பணியின் காலம் அலரியின் மகன்பு சிப்பான்
செப்புவோ முப்பா னேழில் செல்லுவா ளன்னை தானும்
மைப்புடன் தவங்கள் செய்யும் வித்தகி கேட்டி டாயே.

32. ஜாதகனின் முப்பத்து நான்காம் வயதில் தந்தை மரண மடைவான். அப்பொழுது ஜாதகனுக்கு, இராகு மகா தசையில் சனி புக்தி நடக்கும். இவனது முப்பத்தேழாம் வயதில் தாயார் இறப்பாள் என்று சொல்லுவோம். தவங்களே யாற்றும் பார்வதியே! கேட்பாயாக.

33. அறுபது வொன்ப தாண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
திருமக னுடல மேகும் செப்புவோ மிவன்பின் சென்மம்
பிருதிவி தலத்தி லேதான் பிறப்பனு மிக்கு லத்தில்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

33. அறுபத் தொன்பதாம் வயதில், ஐப்பசி மாதம் ஜாதகன் உடலி லிருந்து உயிர் பிரியும். இவன் மறு பிறப்பைச் சொல்லுவோம். காஞ்சி புரத்தில் இந்தக் குலத்தில் பிறப்பான். அறிதற்கரிய வேதங்களின் முடிவில் விளங்குகின்ற அம்பிகையே! கேள்.

34. பாலகன் யோகச் சேதி பகருவோ மினிமே லாகச்
சாலவே கிருஷி செய்வன் சகடுவா கனமு மேற்பன்
ஞாலங்கள் விருத்தி செய்வன் நாதனுர் பக்தி பூண்பன்
சோலைகள் துரவு செய்வன் தந்தைக்கு மேலாய் வாழ்வன்.

34. ஜாதகனின் யோக விவரங்களே இனிமேல் சொல்லுவோம். மிருதியாக விவசாயத் தொழிலில் ஈடுபடுவான். வண்டி முதலான வாகன வசதிகளைப் பெறுவான். விலை நிலங்களை விருத்தி செய்வான். கடவுள் பக்தி கொள்ளுவான். பூந்தோட்டங்கள் வளர்ப்பான். கிணறுகள் வெட்டு விப்பான். தன்னுடைய தகப்பனுருக்கு மேலான நன்னிலையில் வாழ்ந்திருப் பான்.

35. சல்லியங் கொள்ளா னுகும் தன்பந்துக் கிணக்களுஞ்
[சொல்லான்
இல்லமும் மூன்று பாகம் எய்துவான் காலம் சொல்வீர
வல்லவ னிருபா னுறு வாண்டினில் முன்னோன் கேருய்
மல்லுக ளவனுல் நேரு மறைகுவீ ரவன்கு ணத்தை.

35. கடன் வாங்கமாட்டான். தன் உறவினரோடு ஒத்து வாழமாட்டான். இவன் இருக்கும் வீடு மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படும். எப்பொழுது வீட்டில் பாகம் ஏற்படும்? சொல்லுங்கள். இவனது இருபத்தாரும் வயதில் இவனுக்கு மூத்த சகோதரன் வேறு குடும்பமாகச் செல்லவேண்டும் என்று சொல்லுவான். அவனால் வீண் சண்டை உண்டாகும். அவன் குணங்களைச் சொல்லுங்கள்.

36. முன்கோபி வெகுளி யாவன் மொழியது விரண்டு முண்டு
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பான் தைர்ய மில்லான்
அன்னியர் சொல்லைக் கேட்பன் அடாவடி யதனில்
[செல்வன்
பன்னியே பேச வல்லன் பாவையு மொன்று வென்றோம்.

36. முன் கோபமுடையவன். வெள்ளை மனம் படைத்தவன். இருவிதமாகப் பேசுவான். தான் சொல்லுகின்ற வார்த்தைகளே மேன்மையுடையன என்று நிலை நிறுத்துவான். மனத்தில் தைரியமில்லாதவன். அயலார் எவரும் கூறுகின்ற சொற்களைக் கேட்பான். வீண் வம்புகளில் தலையிட்டுக் கொள்ளுவான். பன்னிப் பன்னிப் பேசுவதில் சிறந்தவன். அவனுக்கு மனைவி ஒருத்தியே என்று சொன்னோம்.

37. குடகினில் நேரு மென்றோம் குழவிகள் முன்னுண் காணுன்
விடவிழி பெண்பால் ரெண்டு விளம்புவோ மாண்பால்
[ரெண்டு
அடைவுடன் தீர்க்க மெய்தும் அந்தியில் வறுமை யுள்ளான்
தடவரை மகளே பின்பால் சாற்றுவோ மவன்தன் சேதி.

37. அவள் மேற்குத் திசையிலிருந்து வருவாள் என்று சொன்னோம். முதலில் ஆண் குழந்தைகள் இவனுக்குப் பிறவா. பெண்கள் இருவரும், பின்பு ஆண் குழந்தைகள் இருவரும் பிறந்து தீர்க்கமாவர் என்று சொல்லுவோம். கடைசிக் காலத்தில் தரித்திர நிலை யடைவான். மலையரசன் புதல்வியே! இவர்களது செய்தியை விவரமாகப் பிற்பாகத்தில் சொல்லுவோம்.

38. தந்தையின் முன்னோன் வேறு சாற்றுவோம் பால னுக்குச்
சந்ததம் வறுமை காணுன் திருப்பணி கொஞ்சம் செய்வன்
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் விவர மாக
கந்தனை யின்ற மாதே கழறின மொழிகுன் ரூது.

38. ஜாதகன் தந்தைக்கு மூன் பிறந்த (மூத்ததாய்க்கு) சகோதரன் ஒருவனுண்டு என்று சொல்லுவோம். அவன் தரித்திர மின்றி வாழ்வான். கோயில் திருப்பணிகள் சிலகாலம் செய்வான். அவனைப் பற்றிப் பிற்பாகத்தில் விவரமாகப் பேசுவோம். முருகப் பிரானைப் பெற்ற தாயே! நாங்கள் கூறிய சொற்கள் தவறு.

39. பாலகன் செனிக்குங் காலைப் பரணியில் மூன்றும் பாதம்
சாலவே புகரி ருப்புத் தங்கிடு வாண்டு வைந்தும்
ஏலவே திங்கள் மூன்றும் எய்திடு மந்தக் காலம்
ஆலத்தை யுண்டோன் தேவி அறைந்தனம் பூர்வ பாகம்.

39. ஜாதகன் பிறப்புக் காலத்தில், பரணி நட்சத்திரம் மூன்றும் பாதம். சுக்கிர மகா தசை இருப்பு; ஐந்து வருஷங்களும், மூன்று மாதங்களுமாம். ஆலகால விஷத்தை யுண்ட சிவமெருமான் பத்தினியே! இந்த லக்னம் முதற் பாகத்தைச் சொன்னேம்.

ஜாதகம் 73

1. கலிபுகர் [1]கலேயி லாகக் காரியுஞ் சிம்ம மாகப்
[2]புலவனும் பொன்னேன் பானு புக்கிடம் சாடி யாக
நிலமகன் மேட மாக [3]நீத்தோனுந் தேள தாக
[4]மலிலப்பாம்பு நந்தி புக்க விடையது சென்ம மாக;

1. சந்திரன் சுக்கிரன் மகரத்திலும், சனி சிம்மத்திலும், புதன் குரு சூரியன் கும்பத்திலும், செவ்வாய் மேஷத்திலும், கேது விருச்சிகத்திலும், இராகு லக்கினத்திலும் நின்று, விருஷபம் சென்ம லக்கினமாகவும் இருந்தால்,

	செவ்வாய்	லக்கினம் ராகு	
புதன் குரு சூரியன்	இராசி சக்கரம்		
சந்திரன் சுக்கிரன்			சனி
	கேது		

2. சொல்லுவீர் பலனே யென்று சுந்தரி கேட்கும் போது
புல்லுவார் பராசர் தாமும் பிறந்திடு மாண்பால் சென்மம்
இல்லமும் வடதென் வீதி இந்திரன் வாடை யாகும்
எல்லைமா காளி மேற்கில் இதுவன்றி யருகர் [5]வாயு.

2. எற்படும் பலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதி கேட்கும் போது, பராசர முனிவர் கூறுகின்றார். இந்த நிலையில் கிரகங்கள் இருந்தால் ஆண் குழந்தை பிறக்கும். பிறக்கும் வீடு வடக்குத் தெற்கான வீதியில் கிழக்கு வரிசையில் உள்ளது. ஊரெல்லைக் காவல் தெய்வமாக விளக்கும் காளிதேவி கோயில் வீட்டுக்கு மேற்கில் உள்ளது. ஜின தேவர் வடமேற்கில் கோயில் கொண்டுள்ளார்.

---

1. மகரம்
2. புதன்
3. கேது
4. இராகு
5. வடமேற்கு

3. அதன்வட மேல்பால் கன்னி அணுகிடுஞ் சிறுவூர் தன்னில்
அதிபனும் சேட்ட ஞக வருவனே யிந்தப் பாலன்
சதியிலா வன்னை தந்தை தன்துணை களத்ர புத்ரர்
வதிபன்முன் சென்மம் யாவு மறைகின்றேரும் தாயே கேளுரு.

3. அதற்கு வடமேற்கில் அம்பிகை கோயில். இங்ஙனமுள்ள சிற்றூரில் ஜாதகன் மூத்த புதல்வனுகப் பிறப்பான். இவனுடைய தாய், தந்தையர், உடன்பிறந்தோர், மனைவி, புதல்வர், ஜாதகனது முற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் நாங்கள் சொல்லுகின்றேரும்; தாயே!

4. தந்தையின் துணையாண் காணுன் தையலா ரொருத்தி தீர்க்கம்
அந்தவன் குணத்தைச் சொல்வோம் அவளுமாஞ் சிவப்ப
[ளாகும்
தன்தன மில்லா ளாகும் சமயோக முள்ளோன் வாழ்வாள்
சிந்தையுங் கலக்க முள்ளாள் சிறப்பிலாக் குடும்பி யாவள்.

4. ஜாதகன் தந்தைக்குச் சகோதரன் இல்லை. சகோதரி யொருத்தி தீர்க்கமாக விளங்குவாள். அவள் குணத்தைக் கூறுவோம். அவள் கருஞ் சிவப்பு நிறமுள்ளவள். தனக்குச் சொந்தமான செல்வ மில்லாதவள். சுக மும் துக்கமும் கலந்த வாழ்க்கை யுடையவள். மனத்தில் கலக்க முள்ளவள். மேன்மை யில்லாத குடும்பத்தைப் பெற்றவள்.

5. மனமது நல்ல தாகும் மைந்தர்க ளாண்பால் ரெண்டு
கனமுள பெண்பால் மூன்று கழறுவோம் தீர்க்க மாக
வினையினுல் சல்ய பாதை மேவிடு மிவளுக் கேதான்
தனயனும் பதின்மூன் ருண்டு மேலேதான் யோகம் நேரும்.

5. கல்மன முள்ளவள். மக்களில் ஆண்கள் இருவர். பெண்கள் மூவர். இவர்கள் தீர்க்கமாக விளங்குவர் என்று சொல்லுவோம். முற் பிறப்புத் தீவினையினுல் இவளுக்குக் கடன் தொந்தரவு எற்படும். தன் புதல் வனுக்குப் பதின்மூன்று வயதானபிறகு இவளுக்கு அதிர்ஷ்டம் வாய்க்கும்.

6. பின்பாகம் விவர மாகப் பேசுவோம் தாயே யாங்கள்
தந்தையின் குணத்தைச் சொல்வோம் சமர்த்தாக வார்த்தை
[சொல்வன்
தன்தனம் செலவு செய்வன் சாந்தவான் மாஞ்சி வப்பன்
நொந்திடு மனத்த ஞகும் நேமியில் சல்யம் கொள்வான்.

6. தாயே! நாங்கள் இரண்டாம் பாகத்தில் இவரைப் பற்றி விவரமாகச் கூறுவோம். இனி, ஜாதகனின் தந்தையின் குணத்தைச் சொல்லுவோம்.

சாமர்த்தியமாகப் பேசுவான். தன் செல்வத்தைச் செலவழிப்பான். சாந்த குண முடையவன். கருஞ் சிவப்பு நிறமுள்ளவன். துன்ப மடைந்த மனத்தினன். கடன் வாங்குவான்.

7. அன்னையால் பூமி சேர்ப்பன் அருகர்தம் பக்தி கொள்வன்
நன்னய வசன முள்ளான் நாவலர்க் கிரங்கி ஈவான்
பொன்பணி செலவு செய்வன் பூசனை புரித லற்பம்
மன்னர்பால் வழக்குச் சொல்வன் மருவிடும் பித்தச் சூடு.

7. தன் தாய்மூலம் வீடு நிலங்களைச் சேர்ப்பான். ஜினதேவன் மீது பக்தி கொள்ளுவான். நயமான சொற்களைப் பேசுவான். புலவர்களுக்கு மனமிரங்கிப் பொருள் வழங்குவான். பொன், ஆபரணங்கள் இவற்றைச் செல விடுவான். கடவுளுக்குச் சிறிதளவே பூசனை புரிவான். அரசாங்க நீதி மன்றத்தில் வழக்குகளை வாதிப்பான். இவன் உடலில் பித்தச் சூடு பொருந்தி யிருக்கும்.

8. பகைவரைச் செயிப்பா னுகும் பந்துவும் பகையு மெய்தும்
நயமுள வார்த்தை சொல்வன் நல்லோர்க்கு நல்ல னுவன்
அகமது பின்னுல் செயவன் அல்படுத் திகளுங் கொஞ்சம்
உவமையாய்க் கதைகள் சொல்வன் உறுதி மான் பூமி
[விருத்தி.

8. விரோதியரை வெற்றி கொள்ளுவான். உறவினர்கள் பகையாவர். நயம் பொருந்திய சொற்களைப் பேசுவான். நற்குண முடையவர்க்கு நல்லவன். பிற்காலத்தில் வீடு கட்டுவான். கீழான புத்தியுஞ் சிறிதுண்டு. உபமானங்களுடன் கதைகளைச் சொல்லுவான். மனத்திட முள்ளவன். நில புலன்களை விருத்தி செய்வான்.

9. தந்தையார்ச் சிதங்கள் விருத்தி தாயாதி பகையால் நேரும்
சந்ததம் கிருஷி செய்வன் சற்பாத்திரன் பூர்வ யோகம்
விந்தையால் மத்தி யத்தில் வியாகூலம் விரயம் நேரும்
கந்தனை யீன்ற மாதே கழறுவோம் பின்பால் சேதி.

9. தன் தந்தையால் தேடி வைக்கப்பட்ட சொத்துக்களை மேலும் விருத்தி செய்வான். விவசாயம் புரிவான். தருதி வாய்ந்தவன். முன் சென்ம வினையால் இடைக்காலத்தில் மனத்தில் சஞ்சலங்களும், பொருட் செலவும் உண்டாம். முருகப் பிரானைப் புத வராக வடைந்த பார்வதியே! பிற்பாகத்தில் மற்றவற்றைச் சொல்லுவோம்.

10. சொன்னவிக் குணத்தா னுக்குச் சுதனுமே யுதிப்டா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அற்பபுத் திகளு
[முள்ளான்
தன்னிறம் மாறி றத்தான் சத்தான வார்த்தை யில்லான்
துன்னிய குளறு வார்த்தை சொல்சுக மில்லா னுமே.

10. சொல்லப்பட்ட இவ்விதக் குணங்களே யுடையவனுக்கு இந்த ஜாதகன் புதல்வனுகப் பிறப்பான். இவன் குணங்களைக் கூறுவோம். கீழான புத்தி யுடையவன். மாறிற முள்ளவன். பயனுள்ள வார்த்தைகளைப் பேசாதவன். குளறிப் பேசுவான். பேசுஞ் சொற்களில் நல மில்லாதவன்.

11 துண்டமாங் குணத்த னுகும் தனம்பின்னல் பாதி யெய்தும்
குண்டைகோ விருத்தி யுண்டு குவலயம் நிந்தை யெய்தும்
அண்டினோர்க் குதவி செய்யான் அருகர்தன் பக்தி
[கொள்ளான்
தண்டமிழ் காணு னுகும் தரியலர் போலே வாழ்வன்.

11. கண்டிப்பாகப் பேசுங் குண முடையவன். பிற்காலத்தில் பாதிச் செல்வம் சேரும். நாளை, பசுக்கள் விருத்தி யேற்படும். உலகில் பழியுண்டு. தன்னை அடைந்தவர்களுக்கு உதவி செய்யமாட்டான். ஜின தேவன் மீது பக்தி கொள்ளாதவன். குளிர்ந்த தமிழ்க் கல்வியின் இன்பத்தை யுணரமாட்டான். பகைவரைப்போல் அஞ்சி வாழ்வான்.

12. அன்னியர் பொருள்மே லிச்சை அடாவடி கூறு வானும்
அன்னையின் வர்க்கத் தாரால் அவனுமே பெருமை பூண்பன்
பின்துணை சேத மெய்தும் பேசுவோ மதன்பின் விருத்தி
கன்னிகை யொருத்தி தோன்றும் கழறுவோ மதன்பின்
[பாலே.

12. அயலார் பொருள்மீது விருப்ப முடையவன். அடாவடியாகப் பேசுவான். தன் தாயின் வர்க்கத்தாரால் பெருமை யடைவான். கூ வனுக்குப் பின் தோன்றிய சகோதரன் மரிப்பான். அதற்குப் பின்னுல் புத்திர விருத்தியாம். சகோதரி யொருத்தி தோன்றுவாள். அதற்குமேல் சொல்லுவோம்.

13. தீர்க்கமாய்க் குணத்தைச் சொல்வோம் சிவந்தமெய்
[யுகசாலி
ஏற்கவே கல்வி மானும் இடரென்றோர்க் குதவி செய்வன்
கார்க்கடல் போல்கு டும்பம் காலிகள் பதினேர் விருத்தி
பார்ப்பவர் மதிப்பாய் வாழ்வன் பஞ்சைகட் குதவி செய்வன்.

13. தீர்க்கமாக வுள்ள சிறிய சகோதரன் குணத்தைச் சொல்லுவோம். சிவந்த மேனியன். ஊக முடையவன். பொருத்தமான் கல்வியைப் பெற்ற வன். தன்பமென்று வந்தவர்கட்கு உதவிகள் செய்வான். கடல்போல் பெரிய குடும்ப முடையவன். கால் நடைகள், பண்ணை, எர்கள் விருத்தி யுடையவன். பார்ப்பவர்கள் மதிக்கும்படி வாழ்க்கை நடத்துவான். அகதி கட்கு உதவி செய்வான்.

14. வறுமைக ளடையா னுகும் வண்டிவா கனமு முள்ளான்
திருமக னுைப்ப தாகும் சேயில்லம் சேர்ப்பா னுகும்
பொருளது சேர்ப்பா னுகும் பிறந்தபின் சல்யம்
[கொள்ளான்
அருகர்தன் பக்தி கொள்வன் அன்பான மனத்த னுமே.

14. தரித்திரம் அடையான். வண்டி முதலான வாகன வசதிகளுள் ளவன். இலட்சுமியின் புதல்வனுன மன்மதன்போன்ற வடிவழ குடைய வன். தன் புதல்வனுக்காக வீடு கட்டுவான். செல்வஞ் சேர்ப்பான். புதல் வன் பிறந்தபின்பு கடன் வாங்கமாட்டான். ஜினதேவன் மீது பக்தி கொள்ளு வான். அன்பு பொருந்திய மனத்தினன்.

15. முன்துணை தனைக்காப் பானும் மேவிடும் பாரி யொன்று
தென்திசை தன்னில் நேரும் சேயர்க ளாண்பால் ரெண்டு
கன்னிகை யொன்று தீர்க்கம் காவலன் சுகமே யாவன்
பின்பாகம் விவர மாகப் பேசுவோம் தாயே யாங்கள்.

15. தனக்கு மூத்த சகோதரனைக் காப்பான். இவனுக்கு மனைவி ஒருத்தியே. அவள் தென் திசையிலிருந்து வருவாள். மக்களில் ஆண்கள் இருவரும் பெண் ஒருத்தியும் தீர்க்கமாக விளங்குவர். இவன் நலமுடைய னுக விருப்பான். தாயே! நாங்கள் பிற்பாகத்தில் விவரமாக இவன் செய்தி யைக் கூறுவோம்.

16. பெண்துணை சேதி கேளாய் பெரும்புத்தி யடக்க மாள்வள்
தன்மையாய் வார்த்தை சொல்வள் தரித்திர மடையா
[ளாகும்
விண்ணவர் பக்தி கொள்வள் விரதங்கள் பூண்பா ளாகும்
கண்ணிய குடும்பி யாவள் கேவல மணுகாச் சித்தம்.

16. ஜாதகன் சகோதரியின் செய்திகளைக் கேட்பாயாக. பெரும் புத்தி யுடையவள். அடக்க முள்ளவள். குளிர்ந்த சொற்களைச் சொல்லு வாள். எப்பொழுதும் தரித்திர மடையாள். கடவுளர் பக்தி கொள்ளு

வாள். வீரதங்களே மேற் கொள்ளுவாள். மதிப்பான குடும்ப முடையவள். அற்பமான வற்றிற்கு இடங் கொடாத மன முள்ளவள்.

17. வரனுமே தென்பால் நேரும் மைந்தர்க ளாண்பால் மூன்று
அரிவைய ரிரண்டு வென்றேரும் அன்புள மனத்த ளாகும்
குறையின்றி வாழ்வா ளாகுங் கூறுவோம் பின்பால் சேதி
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

17. இவளுக்குக் கணவன் தென் திசையிலிருந்து வாய்ப்பான். மக்களில் ஆண்கள் மூவரும் பெண்கள் இருவரும் தோன்றுவர் என்று கூறினோம். அன்பு பொருந்திய மனத்தினள். குறையின்றி வாழ்க்கை நடத்துவாள். இவளைப் பற்றிய மற்றைய செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுவோம். பெருவயிற்றோ னுகிய விநாயகரைப் பெற்ற புண்ணியவதியே! கேட்பாயாக.

18. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மிருப தாண்டில்
காதலி தென்பால் தன்னில் கலப்பளா மந்த மாது
ஓதுவோ மவள்கு ணத்தை உயரிலா மனத்த ளாகும்
தீதான குணத்த ளாகும் சொல்வது அநிக முண்டு.

18. ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இருபதாம் வயதில் தென் திசையிலிருந்து இவனுக்கு மனைவி வாய்ப்பாள். அவள் குணங்களைச் சொல்லுவோம். உயர்ந்த எண்ண மில்லாதவள். கெட்ட குண முள்ளவள். மிகைபடப் பேசுவாள்.

19. பரவச முடைய ளாகும் பர்த்தாவின் மனம்போல் வாழாள்
குறையான மனத்த ளாகும் கோதையு மத்தி யத்தில்
கருவினுல் மரண மாகும் கழறுவோ மந்தச் சங்கை
வருங்கேது வேழில் தங்க ஆரலும் விரயம் புக்க;

19. சிறிய செயல்களுக்கும் பரவச மடைவாள். கணவன் மனமறிந்து வாழ மாட்டாள். குறை நிரம்பிய மனமுள்ளவள். மத்திய வயதில் கர்ப்ப பாதையால் மரண மடைவாள். அதற்குக் காரணங் கூறுவோம். கேது களத்திர ஸ்தானமாகிய விருச்சிகத்திலும், ஏழாம் வீட்டுக்குடையவனுன செவ்வாய் விரயஸ்தானமாகிய மீனத்திலும் தங்கி யிருப்பதால்,

20. மனைவியு மரண மெய்தும் மருவாது மரும னைதான்
வினைவருங் காலம் சொல்வீர் வித்தகன் முப்ப தாண்டில்
அனையும்பா ரிக்கே கண்டம் அதன்பின்பு மனைவி காணுன்
சினமுடன் சிறையாய் வாழ்வன் சேயன்முன் பூர்வ தோட்டம்.

20. இந்த ஜாதகன் மனைவி மரண மடைவாள். மறு மனைவி ஈற் படான். மனைவி மரண மடையுங் காலத்தைச் சொல்லுங்கள். ஜாதகனின் மூப்பதாம் வயதில் மனைவிக்குக் கண்ட மேற்படும். முற்பிறப்பில் உண்டான தோஷத்தினால் அதற்குப் பிறகு வேறு மனைவி யில்லாதவனாகிச் சிறையில் இருப்பவனைப் போல் வாழ்ந்து வருவான்.

21. சங்கையைச் சொல்லு மென்னச் சொந்தில்மா மலையி லேதான்
வந்தனன் விசுவ சேயாய் [1]அயம்வேலை செய்து வாழ்ந்து
பொங்கிய குடும்ப மாகிப் புகழ்பெற வாழும் நாளில்
தங்கிய வூழைச் சொல்வோம் சங்கரி கேட்டி டாயே.

21. முற்பிறப்பில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுங்கள். திருச்செந்தில் மலையில் விசுவகர்ம குலத்தில் பிறந்து, இரும்பு வேலைசெய்து, நிறைந்த குடும்பத்தை யடைந்து, புகழோடு வாழ்ந்து வந்த காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுவோம். சங்கரியே! கேட்பாயாக.

22. கொல்லையில் கிருஷி தன்னைக் கோவுமே மேயக் கண்டு
வல்லவன் வாய்ப்பூட் டிட்டு வடித்தனன் கழியி னாலே
புலகிற்று வந்தத் தோடம் பிராமணர் தமக்கு வின்னென்
சொல்லினன் கட்டு வார்த்தை செம்பொனைப் பெற்றுக்
[கொண்டு.

22. இவனுடைய புன்செய் நிலத்தில் விளைந்த பயிரை, பசுவொன்று மேய்ந்து கொண்டிருப்பதை இவன் கண்டு, அதன் வாயைக்கட்டி கம்பினால் அதனை யடித்தான். அந்தத் தோஷம் இவனைச் சேர்ந்தது. பொன்னைப் பெற்றுக்கொண்டு, சில அந்தணர்களைப் பற்றிப் பொய்யுரைகள் பல கூறினான்.

23. இவனுடை வார்த்தை யாலே ஏழைக்குத் துன்பம் நேர்ந்து
அவமான மதிக முண்டாய் அறைகுவார் சாபந் தானும்
நவனியில் பின்சென் மத்தில் நவில்வது குற்ற மாயும்
பவமாக மனைவி மாண்டு பலர்நிந்தை யேற்பா யென்று;

23. இவன்[1]சொன்ன சொற்களால் ஏழை யந்தணருக்குத் துன்பமேற் பட்டது. அவர் மிக்க அவமானம் அடைந்து பின்வருமாறு சாபமிடுவார். மறு பிறவியில், நீ கூறும் சொற்களைத்தும் தவறுடையனவாகி, மனைவி இறந்து, பலர் கூறும் பழிச் சொற்களை ஏற்பாய் என்று;

---

1. இரும்புவேலை செய்பவன்; கருமான்.

24. சொல்லியே தெருத்தூள் விட்டார் சேர்ந்தது வந்தத் [தோடம்
வல்லவ னந்தி யத்தில் வாய்ப்புண்ணுல் மரண மெய்திப்
புல்கினு னருகர் வர்க்கம் பேதையர் சாப மொன்று
நல்லதோர் கோவின் தோடம் நல்கிடு மிச்சென் மத்தில்.

24, கூறி, தெரு மண்ணை வாரி யிறைத்தார். அந்தத் தோஷம் இவனை யடைந்தது. கடைசிக் காலத்தில் வாயில் புண் ஏற்பட்டு மரண மடைந்து, இப்பிறவியில் ஜைனர் மரபில் பிறந்தான். ஏழை யந்தணர் சாபம் ஒன்று, நல்ல பசுவை யடித்த தோஷம் ஒன்று ஆகிய விரண்டும் இச் சென்மத்தில் இவனை யடையும்.

25. அறையூமை யாக வாழ்வன் அம்மனைத் தோட மெய்தும்
நெறியிலான் சுகமில் லாதான் நீத்தோர்க ளுறவு கொள்ளான்
உரைக்கின்றே மன்னை சேதி உள்மனம் கபடு கொஞ்சம்
இருநிறம் சமமாந் தேகம் இன்பமாய் வார்த்தை சொல்வள்.

25. அவற்றுல் செவிடு கலந்த ஊமையாக வாழ்வான். மனைவிக்குத் தோஷ மேற்படும். நல்ல வழியைக் கடைப் பிடிக்காதவன். சௌக்கியமில் லாதவன். துறவிகள் நட்பைக் கொள்ளாதவன். இனி, இவனது தாயின் செய்தியைச் சொல்லுகின்றேம். மனத்தில் வஞ்சனை சிறிதுண்டு. கரிய நிற முடையவள். சமமான உடலமைப்புள்ளவள். இனிய சொற்களைப் பேசுவாள்.

26. பணிகளு மதிக மில்லாள் பரஉப காரஞ் செய்வள்
துணிவுள மனத்த ளாகும் சுகதுக்க மூடைய ளாகும்
கணிகைக்குத் துணையாண் மூன்று காதலி மார்கள் ரெண்டு
மணமது பிரிய மாவள் மாதுரு வில்லங் தெற்கு.

26. ஆபரணங்கள் மிகுதியாக வில்லாதவள். பிறருக்கு உதவிகள் புரிவாள். திடமான மன முடையவள். இன்பமும் துன்பமுங் கலந்த வாழ்க் கையுள்ளவள். இவளுக்குச் சகோதரர் மூவர். சகோதரிகள் இருவர். நறு மணமுள்ள பொருள்களில் விருப்ப முடையவள். இவள் தாய் வீடு, ஜாதகன் ஊருக்குத் தெற்குத் திசையிலுள்ளது.

27. மாதுலர் சேதி யாவு மறைகின்றேம் பின்பா கத்தில்
ஓதுவோ மன்னை பூர்வம் உயர்பாண்டி கீழ்ப்பா லாக
மேதினில் சிறுவூர் தன்னில் விளங்கினுள் கர்ண சேயாய்ப்
போதன முடைய ளாகிப் புகழான குடும்பி யாகி ;

27. ஜாதகனின் மாமன்மார் செய்திக னனைத்தையும் இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம். தாயின் முற்பிறவியைச் சொல்லுவோம். உயர்ந்த மதுரைக்குக் கிழக்கில் உள்ளதொரு சிறிய ஊரில், கருணீகர் குலத்தவளாகத் தோன்றினாள். மிகுந்த செல்வம் பெற்று, புகழுள்ள குடும்பத்தை யுடையவளாகி.

28. அறமதி லிச்சை யாகி அந்தகன் பக்கல் சென்று
சிரகான்கோன் வரையப் பட்டுச் செனித்த வளிவளே
[யென்றோம்
மறுசென்மங் கொங்கு நாட்டில் வருகுவாள் பிரம்ம சேயாய்ப்
பெருமையும் புகழுண் டாகிப் புண்ணிய வதியும் வாழ்வள்.

28. தருமத்தில் விருப்பம் ஏற்பட்டு, மரண மடைந்து, மீண்டும் தான் முகக் கடவுளால் படைக்கப்பட்டுப் பிறந்தவள் இவள் என்று சொன்னோம் மறு பிறப்பு, கொங்கு நாட்டில் அந்தணர் குலத்தவளாய்ப் பிறந்து, மேன்மையும் புகழுமுண்டாகி, இவள் வாழ்ந்திருப்பாள்.

29. தந்தையின் பூர்வஞ் சொல்லுவோம் தண்டகா வனத்தி
[லேதான்
வந்தனன் வடுகர் வர்க்கம் வளமுள குடும்பி யாகிச்
சிந்தையும் நல்ல தாகித் தேவதாப் பக்தி கொண்டு
இந்தவன் வாழு நாளில் இயம்புவோம் ஊழி தானே.

29. ஜாதகன் தந்தையின் முற்பிறப்பைச் சொல்லுவோம். தண்ட காரணியம் என்ற இடத்தில் வடுகர் குலத்தவனுகப் பிறந்தான். செழிப்புள்ள குடும்பத்தைப் பெற்று, நல்ல மன முடையவனுகி, தெய்வ பக்தி கொண்டு, இவன் வாழ்ந்துவந்த காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுவோம்.

30. சங்கரன் பூசை செய்யும் சதுர்மறை யோனுக் கான
நங்கையை வார்த்தை பேசி நாயகி தனைப்போ கித்தான்
துங்கமா மறையோன் சொல்வன் தோன்றிடு மறுசென்
[மத்தில்
பங்கமாய்த் துணையா ணின்றிப் பலவித சஞ்ச லத்தால் ;

30. சிவபெருமானைப் பூசிக்கும் ஓர் அந்தணன் மனைவியிடம் சென்று, பலவிதமான சொற்களைக் கூறி, அவளுடன் இன்பந் துய்த்தான். இதனை யுணர்ந்த, தூய்மையுடைய அந்த அந்தணன் கூறுவான். வரும் பிறவியில், சகோதர னில்லாமலும், மனத்தில் சஞ்சலங்கள் ஏற்படும்;

31. சல்லிய பாதை யுண்டாய்த் தாய்வழி பகையால் பூமி
புல்கிடு மென்று சொல்லிப் புகன்றனர் மறையோர் தாமும்
வல்லவ னந்தி யத்தில் வாயுவால் மரண மாகி
நல்லதோர் பிரமன் லக்கம் நல்கினு னருகர் வர்க்கம்.

31. கடன் தொந்தரவு உண்டாகியும், தாய் வர்க்கத்தாரிடம் பகையாயும் வாழ்வாய் என்று அந்தணர் கூறினர். இவன் தனது கடைசிக் காலத்தில் வாயு நோயால் மரண மடைந்து, பிரமனுல் மீண்டும் படைக்கப் பட்டு, ஜைன குலத்தில் பிறந்தான்.

32. மறையவர் சாபத் தாலே வருந்துணை யாணுங் காணுன்
குறைவுள குடும்ப மெய்தும் குலபந்து பகையு மெய்தும்
மருவிடும் பின்னுல் பூமி மாதுரு ஆஸ்தி யாவும்
வருதுங்கா லங்கள் சொல்வீ ரறுரெண்டு வாண்டு கொண்டு;

32. அந்தணர் சாபத்தினுல் இப்பிறப்பில் தனக்குச் சகோதரனில்லாதவனுவான். குறையுள்ள குடும்பம் ஏற்படும். உறவினர்களிடம் பகையுண்டாகும். பிற்காலத்தில் நிலபுலன்கள், தாயின் பிறந்தகச் சொத்துக்கள் முதலிய யாவும் இவனுக்குச் சேரும். அவை வருங்காலத்தைச் சொல்லுங்கள். பனிரண்டு வயதுமுதல்:

33. ஈரேழு வாண்டு மட்டும் இனபந்து பகைவ ழக்குக்
கூறுவோ மதன்பின் னுகக் குலவிடும் விசேட பூமி
பாரினில் சல்லியம் நீங்கும் பகைவரும் வசிய மாகும்
போர்செயம் முன்னே ரிட்டம் பிரபல குடும்ப மெய்தும்.

33. பதினன்கு வயது வரையில் உறவினர்களிடம் பகையும் வழக்குகளும் நேரும். அதற்குப் பிறகு விசேஷமான நிலபுலன்கள் சேரும். கடன் துன்பங்கள் நீங்கும். பகைவரும் இவன் வசமாவர். சண்டையில் வெற்றி ஏற்படும். பெரியோர்களின் விருப்பத்தைப் பெறுவான். பிரபலமான குடும்பம் உண்டாகும்.

34. பின்சென்ம மவ்வு ருத்ரம் பிறப்பனு மிக்கு லத்தில்
பொன்பொரு ளுடைய னுகிப் பூமியில் வாழ்வா னுகும்
மன்னிய முப்பா னுலில் மார்கழி மாதம் தன்னில்
துன்னிய காலன் பக்கல் சேருவா னென்று சொல்வோம்.

34. மறுபிறப்பு, அவ்வூருக்கு வடக்குத் திசையிலுள்ள கிராமத்தில், இக் குலத்திலேயே பிறப்பான். பொன், செல்வம், முதலியன பெற்று, உலகில் வாழ்வான். ஜாதகனின் முப்பத்து நான்காம் வயதில் மார்கழி மாதம், இவன் மரண மடைவான் என்று சொல்லுவோம்.

35. முப்பது வொன்பா ஞண்டில் மேடமா தத்தி லேதான்
செப்புவோ மன்னே கண்டம் செனித்தவன் நாற்ப தாண்டில்
ஓப்புடன் குடும்ப மாதம் உரைக்கின்றேம் வாயு வாலே
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் ருது.

35. ஜாதகனின் முப்பத்தொன்பதாம் வயதில், சித்திரை மாதம் தாயின் மரணத்தைச் சொல்லுவோம். ஜாதகன், நாற்பதாம் வயதில், மாசி மாதம் வாயு நோயினால் மரண மடைவான் என்று கூறுகின்றேம். கங்கை யைச் சடைமுடியில் அணிந்துள்ள சிவபெருமான் பத்தினியே! நாங்கள் கூறிய சொற்கள் தவறு.

36. பின்சென்ம மவ்வூர் தன்னில் பிறப்பனுங் கோகு லத்தில்
அன்னவன் யோகச் சேதி அறுரெண்டு ஆண்டு மட்டும்
தன்தனம் செலவு மெய்தும் தன்பந்து பகையு மாகும்
உன்னத வழக்கு நேரும் உரைக்கின்றேம் பின்பால் சேதி.

36. மறு பிறவி, அவ்வூரிலேயே இடையர் குலத்தவனுகப் பிறப்பான். இவன் யோக விவரங்களைச் சொல்லுவோம். பனிரண்டு வயதுவரை தன் செல்வத்துக்குச் செல வேற்படும். தன் உறவினர் பகையாவர். வழக்குகள் ஏற்படும். பிற்பாகத்தில் விவரமாக இவற்றைச் சொல்லுகின்றேம்.

37. சொல்லிய வாண்டின் மேலாய்த் தொல்லைக ளடையா ஞகும்
வல்லவன் சென்ன காலம் மதிதசை யாண்டு வொன்பான்
புல்குவோந் திங்க ளொன்பான் பிழைவருஞ் சல்லிய பாதை
அல்லல்க ளதிக முண்டு ஆவுகள் சேத மெய்தும்;

37. முன்பு கூறிய பன்னிரண்டு வயதுக்குமேல் துன்பங்கள் அடைய மாட்டான். இவன் பிறப்புக் காலத்தில் சந்திர மகா தசை இருப்பு; ஒன்பது வருஷங்களும் ஒன்பது மாதங்களுமாம். அக்காலத்தில் குற்றங்கள் பல வுண்டாம். கடன் தொந்தர வுண்டு. துன்பங்கள் மிகுதி. பசுக்கள் சேதமாம்.

38. பந்துவும் பகைய தாகும் பாருளோர் நிந்தை கூறும்
வந்தவன் தனக்கு ரோகம் மருவிடுந் துணேவி ருத்தி
தன்தனம் செலவு முண்டு சாற்றுவோம் பின்பால் சேதி
இந்திர னிறைஞ்சு மாதே இயம்புவோம் விபர மாக.

38. உறவினர் பகையாவர். உலகத்தோர் இவனைப் பற்றிப் பல பழிச் சொற்களைக் கூறுவர். இவனுக்கு வியாதி யுண்டாகும். சகோதர விருத்தி ஏற்படும். தன் செல்வத்துக்குச் செலவு உண்டு. பிற்பாகத்தில் மற்றவற் றைச் சொல்லுவோம். இந்திரனால் வணங்கப்படும் தாயே! விவரமாகச் சொல்லுவோம்.

39. ஈரொன்ப தாண்டு தன்னில் இயம்யுவோம் தந்தை யன்னை
கூறுவோ மந்த வாண்டில் கூடிடும் புதிதா யில்லம்
தீரமாய் ஊழி சேதம் சிறப்புறுங் குடும்பந் தானும்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

39. ஜாதகனின் பதினெட்டாம் வயதில் பாட்டி (தந்தையின் தாய்) இறப்பாள் என்று சொல்லுவோம். அந்த வருஷத்தில் புதிய வீடு கிடைக்கும் இவனுக்கு என்று கூறுவோம். முன் சென்ம தோஷங்கள் விலகும். குடும்பம் பெருமை யடையும். ஆறுமுகக் கடவுளை புதல்வராக வடைந்த பார்வதியே! கேட்பாயாக.

40. சாதகன் துணைபின் னேனுஞ் சனபந்து புகழ வாழ்வன்
பூதலத் தோர்க ளிட்டம் புகழான குடும்பி யாவன்
மாதவர்க் கன்ன மீவன் வண்டிவா கனமு மேற்பன்
ஓதுவோ மிரண்டு வில்லம் உத்தம னடைவா னுமே.

40. ஜாதகனின் இளைய சகோதரனும் உறவினர் புகழும்படி வாழ்ந்திருப்பான். உலகத்தவர் விருப்பத்தைப் பெறுவான். கீர்த்தி பொருந்திய குடும்ப முடையவ னுவான். சிறந்த தவங்களைப் புரியும் முனிவர்களுக்கு உணவளிப்பான். வண்டி முதலான வாகன வசதிகளைப் பெறுவான். இரண்டு வீடுகளை யடைவான் என்று சொல்லுவோம்.

41. பூமிக ளதிகஞ் சேர்ப்பன் பொருந்திடு மூன்று வில்லஞ்
சேமமாங் குடும்பி யாவன் சினதேவர் பக்தி பூண்பன்
நேமியோர்க் குதவி செய்வன் நிகர்தான்யச் செட்டுச்
[செய்வன்
வாமனன் தங்கை யாளே வறைகின்றேம் பின்பால் சேதி.

41. வீடு நிலங்களை மிகுதியாகச் சேர்ப்பான். மூன்று வீடுகள் சேரும். நலமுள்ள குடும்ப முடையவ னுவான். அருக தேவன் மீது பக்தி கொள்ளுவான். உலகினர்க்கு உதவிகள் புரிவான். தானிய வியாபாரம் செய்வான். வாமனனுய் வந்த திருமாலின் சோதரியே! பிற்பாகத்தில் மற்ற வற்றைச் சொல்லுகின்றேம்.

ஜாதகம் 74

1. சந்திரன் கன்னி குருசுசன் சிம்மம்
சல்லியன் நந்தியில் புக்க
புந்தியு மிரவி வீணையில் தங்கப்
பின்சிகி யலவணைத் தாவ
மந்தனுந் தேளில் விடமது மானில்
மாடது சென்மமே யாக
இந்தவார் கிரகம் கூடிடில் பலன்கள்
எவ்வித முரைத்திடு வீரே.

1. சந்திரன் கன்னியிலும், குரு செவ்வாய் சிம்மத்திலும், சுக்கிரன் விருஷபத்திலும், புதன் சூரியன் மிதுனத்திலும், கேது கடகத்திலும், சனி விருச்சிகத்திலும், இராகு மகரத்திலும் தங்கி, விருஷபம் ஜன்ம லக்கினமாக விருந்தால் ஏற்படும் பலன்கள் எங்ஙனம் என்று சொல்லுவீர்.

		லக்கினம் சுக்கிரன்	புதன் சூரியன்
	இராசி சக்கரம்		கேது
இராகு			குரு செவ்வாய்
	சனி		சந்திரன்

2. உரைப்பக்கேள் தாயே ஆணது சென்னனம்
உதிக்குமில் கிழக்குமேல் வீதி
நிறையவுத் திரங்கள் வாசலாங் கீழ்ப்பால்
நிமலிமா காளியுந் தந்தி
அரிதனின் கோட்ட மீனத்தி லீசன்
அமர்ந்திடு மருகருத் திரமே
சரியிலாக் கெடியும் தென்திசை காணும்
சடைகாரி மேற்கினில் வாசம்.

2. சொல்லக் கேளுங்கள், தாயே! ஆண் பிறப்பாகும். பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில், வடக்கு நோக்கி யுள்ள வாசலை யுடையது. கிழக்கு காளி கோயிலும், விநாயர் ஆலயமும், திருமாலின் கோயிலு முள்ளன. வடகிழக்குத் திசையில் சிவபெருமான் ஆலயமும், வடக்கில் ஜின தேவர் கோவிலும் உள்ளன. பாழடைந்த கோட்டை யொன்று தெற்குத் திசையிலுள்ளது. சடைமுனி மேற்கில் வாசம்.

3. வாசமாம் பேரூர் பலவித வணிபம்
வளர்ந்திடும் வைசியர் வர்க்கம்
பாசமா யுதிப்பான் தந்தைதாய் யோகம்
பத்தினி புத்திரர் துணைவர்
நேசமா முன்பின் சென்மங்கள் யாவுமே
நிகழ்த்துவோம் நவமணி யாய்ந்து
பேசுவோம் தந்தை வர்க்கமா மிணென்று
பேதைய ரறுவர்கள் தீர்க்கம்.

3. பெரிய ஊரில் வசிப்பான். அவ்வூரில் பலவிதமான வியாபாரங்கள் விருத்தி யாம். வைசிய குலத்தில் பிறப்பான். தந்தை, தாய், மனைவி, புத்திரர், உடன் பிறந்தார் இவர்களின் யோக வரலாறுகளையும், முற்பிறப்பு, மறு பிறப்பு இவைகளையும் நவக்கிரகங்களையும் ஆராய்ந்து சொல்லுவோம். தந்தையின் வர்க்கத்தாரைப் பற்றிச் சொல்லுவோம். ஒரு சகோதரனும், ஆறு சகோதரிகளும் தீர்க்கமா யிருப்பர்.

4. புகன்றவாண் பின்னோன் குணமதை யுரைப்போம்
கூறுவான் தந்திர வார்த்தை
உகமையாய்க் கதைகள் உள்மனங் கவடு
உண்மையை வெளிவிடா னென்றேரும்
பகையென்றேர் தம்மை வசீகரம் செய்வன்
பலவணி பங்களும் செய்வன்
தகைமையாய்ப் பூமி கிருஷியு முடையன்
தைரியன் தன்முடை யோனும்.

4. சொல்லிய சகோதரன் தம்பி யாவன். அவனுடைய குணத்தைக் கூறுவோம். தந்திரமாகப் பேசுவான். உபமானங்களுடன் கதைகள் சொல்லுவான். கபடமுடைய மனத்தினன். உண்மையை வெளியில் தெரிவிக்காதவன். விரோதிகளைத் தன்வசப் படுத்துவான். பலவிதமான வியாபாரங்கள் செய்வான். மிகுதியான. விளைநிலங்களை யுடையவன். பயிர்த் தொழிலு முடையவன். தைரியசாலி. செல்வங்க ளுள்ளவன்.

5. பாரியும் ஒன்று பாலராண் ஒன்று
பைங்கொடி மார்களு மூன்று
கூறினோம் நான்கும் தீர்க்கமே யெய்தும்
குமரனுஞ் சிலவேளா ளொன்றுய்
வேறதாய்ச் செல்வன் காலத்தைப் பின்பால்
விளம்புவோம் தந்தையின் சேதி
திறமையில் லாத நெஞ்சினை யுடையன்
செப்புமுன் கோபமே வுண்டாம்.

5. மனைவி ஒருத்தியே. ஒரு மைந்தனும் பெண்கள் மூவரு மாவர். கால்வரும் நீண்ட ஆயுளுடையவர்கள். அவன் சில நாட்கள் ஒன்று யிருந்து பிறகு தனியாகச் சென்று விடுவான். அந்தக் காலத்தைப் பிறகு உரைப் போம். தந்தையைப் பற்றிச் சொல்லுவோம். திறமை யில்லாத மனத்தி னன். சொல்வதற்கு முன் கோப மடைவான்.

6. சல்லியங் கொள்வன் பின்புத்தி யுடையன்
தரணிகள் சேர்த்திடு வானும்
சொல்லது விரண்டு சுகதுக்க முடையன்
துறவிகள் நேசமே கொள்ளான்
புல்லியர் புத்தி போசன சுகியன்
பிதுர்பகை மனைவிசொல் கேட்பன்
மல்லில்முன் செல்லான் மரமாட்டுந் தொழிலும்
வணிபங்கள் செய்திடு வானும்.

6. கடனுபத்திரவம் உடையவன். பின்புத்தி யுள்ளவன். விளைநிலங் களைச் சேர்ப்பான். இருவிதமாகப் பேசுவான். வாழ்க்கையில் சுக துக்கங் கள் கலந்து இருக்கும். துறவிகள் சிநேகம் கொள்ளாதவன். பெண்கள்பால் மோக முடையவன். சுகமாகப் புசிப்பான். தந்தையிடம் விரோதி முள்ள வன். மனைவியின் பேச்சைக் கேட்டு நடப்பவன். கூன்டைக்குச் செல்லா தவன். மாங்களை யிணைக்குந் தொழிலும், இதர வியாபாரங்களும் செய்வான்.

7. செய்குவன் குடும்பம் வேறுக வின்னோன்
சமயோக முடையவ னாகும்
தையல்மார் மோகன் மாநிற முடையன்
தரணியில் வறுமைகள் காணுன்
ஐயமா மனத்தன் ஆசார மில்லான்
அரிபத்தி கொஞ்சமு முடையன்
பொய்யுரை யல்பம் வழுத்திடு மனத்தன்
புறஞ்சொல்லு குணத்தனென் றுரைப்போம்.

7. குடும்பத்தை வேறுகப் பிரித்து விடுவான். இவன் சமமான யோகத்தை யுடையவன். பெண்கள் மீது மைய லுள்ளவன். கரிய நிற முடையவன். உலகில் தரித்திர மில்லாதவன். சந்தேக மன முள்ளவன், ஆசார மில்லாதவன். திருமாலின் மீது சிறிது பக்தி யுள்ளவன். அற்ப காரியங்களுக்கும் பொய் சொல்லும் மனத்தினன். கோள் சொல்லுங் குண முள்ளவ னென்று சொல்லுவோம்.

8. உரைத்தவிக் குணத்தா னுக்குமே யிவனும்
உதிப்பனுஞ் சேட்டனு மென்றேரும்
வருந்துணை யாண்பா விரண்டென வுரைப்போம்
மங்கையு மூன்றுமே தீர்க்கம்
மறலியின் பதிக்குச் செல்லுமே மூன்று
மைந்தன்பின் னுண்துணை யொன்று
அரிராசி மூலம் பிந்திலு னுதிக்கும்
அதன்பலன் கூறுவோம் யாங்கள்.

8. இவ்விதம் கூறிய குண முள்ளவனுக்கு ஜாதகன் மூத்த குமாரனுகப் பிறப்பான். சகோதரர் இருவர் பிறகு பிறப்பார்கள். சகோதரிகள் மூவர் தீர்க்கமா யிருப்பர். சகோதரிகள் மூவர் பிறந்து இறந்து போவார்கள். சிம்ம ராசியில் மூல நட்சத்திரத்தில் பிறந்த கடைசிச் சகோதரனின் பலன் களைக் கூறுவோம் நாங்கள்.

9. புத்திமான் கல்வி பெரியவர் நேசன்
புகழுளன் செட்டுகைகள் செய்வன்
வித்துவான் சூரன் சிம்மம்போல் கோபம்
மேவிடும் பயமிலா மனத்தன்
நத்தினேர்க்குதவும் நாதனுர் பத்தி
நற்ருதை யொப்பென வாழ்வன்
சித்திர யில்லம் செய்குவ னிவனே
சேயிழை யொன்றென வுரைத்தோம்.

9. புத்திசாலி. கல்வி யறிவுள்ளவன். பெரியோர்களுக்கு நண்பன். புகழுடையவன். வியாபாரங்கள் செய்வான். வித்துவான். சூரன். சிங்கம் போல் கோப முள்ளவன். பயமில்லாத மனத்தினன். அடைந்தவர் களே ஆதரிப்பான். சிவபெருமான் மீது பக்தி யுள்ளவன். தந்தையைப் போல் வாழ்வான். அழகான வீடு கட்டுவான். மனைவி ஒருத்தியே யாவள் என்று கூறுவோம்.

10. சுதர்களுங் காணுத் தோன்றினுந் திதாஞ்
செப்புவோம் பின்பாலன் சேதி
அதுவின்றி நான்கா மாணது விடபம்
அங்நாள் தன்னிலே தோன்றும்
சதியிலா மனத்தன் தனமது சேர்ப்பன்
தரணியில் சல்லியம் கொள்ளான்
நதிபல தீர்த்த மறமதி லிச்சை
நாட்டினில் புகழுமே வேற்பன்.

10. குழந்தைகளும் பிறவா. பிறந்தாலும் நிலைத்திரா. பின் பிறக்கும் தம்பியின் செய்திகளைச் சொல்லுவோம். அவனும் நிலையான். பின்பு, நான்காவதாக, ரிஷப லக்கினத்தில் தோன்றும் ஆண் மகனைருவன் உளன். அவன், கெடுத லில்லா மனத்தினன். பொருள்களைச் சேர்ப்பான். உலகில் கடன் கொள்ளாதவன். புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவான். தருமத்தில் விருப்ப முள்ளவன். உலகில் புகழ் அடைவான்.

11. மனையுமே யொன்று மைந்தராண் ரெண்டு
மங்கையு மிரண்டுமே வென்றோம்
கனமுள குடும்பி கனத்தவர் நேசம்
காசுகள் தானியம் வணிபம்
இனமதற் கினிய னிடரது வணுகான்
இவனுடன் சிலநாட்க ளொன்றுய்
மனமொத்து வாழ்ந்து வேறதாய்ச் செல்வன்
மங்கையே கேட்டிடு வாயே.

11. மனைவி யொருத்தியே. புதல்வர்க ளிருவரும், பெண்கள் இருவருமாவர் என்று கூறுவோம். செழிப்புள்ள குடும்ப முள்ளவன். பெரியோர்கள் நட்புடையவன். காசுக் கடையும், தானிய வியாபாரமும் உடையவன். பந்துக்களுக்கு இஷ்டன். துன்பங்கள் அடையாதவன். ஜாதகனுடன் ஒரே குடும்பமாக மனமொத்து வாழ்ந்திருப்பான். பிறகு வேறுகச் செல்லுவான். தாயே! கேளுங்கள்.

12. சாதகன் குணத்தைச் சாற்றுவோம் தாயே
சம்பத்து வுடையனு மூகி
போதன முடையான் கல்விமான் பூமி
பொருந்திடு மந்திகமா யென்றோம்
மாதவர் புத்தி மரமாட்டுந் தொழிலே
மாநிலம் தானிய வணிபம்
சூதிலான் பெரியோ ருறவுமே கொள்வன்
தொடுத்தை வெல்வனென் றுரைப்போம்.

12. ஜாதகன் குணத்தைச் சொல்லுவோம். தாயே! சம்பத்துக்களுள்ளவன். ஊக முடையவன். மிகுதியான செல்வங்களுள்ளவன். கல்வி யறிவுடையவன். மிகுதியாக வீடு நிலங்கள் சேர்ந்திடும் என்று கூறுவோம். தூறவிகளின் மீது பக்தி யுள்ளவன். தச்சுவேலை செய்பவன். நிலங்கள அதிகமாக உண்டு. தானிய வியாபாரம் செய்பவன். கபடில்லாத மனத்தினன். பெரியோர்களிடம் நட்புக் கொள்ளுவான். எடுத்த காரியங்களை முடிக்க வல்லவன் என்போம்.

13. சொல்லுமுன் கோபி சாமிமேல் பத்தி
துறவிகட் கன்னமே யீவன்
வெல்லுவா னெதையும் சோலையுந் துரவும்
விப்பிரர் பத்தியே கொள்வன்
நல்லவ னுகப் புகழுமே வேற்பன்
நற்றிருப் பணிகளுஞ் செய்வன்
வல்லியர் மோகன் சல்லியங் கொள்ளான்
மனமது கபடுமில் லானே.

13. சொல்வதற்கு முன் கோப மேற்படும். பகவான் மீது பக்தி யுள்ளவன். துறவிகளுக்கு அன்ன மளிப்பான். எக் காரியத்தையும் ஜயிக்க வல்லவன். தோட்டம், துரவுகள் உள்ளவன். பிராமணர் மீது பக்தி யுடையவன். நல்லவனுகப் புகழடைவான். உயர்ந்த திருப்பணிகள் செய்வான். பெண்கள் மீது மையலுள்ளவன். கடன் கொள்ளாதவன். கபடமில்லாத மனத்தினன்.

14. குலத்துளோர் மதிக்கப் புகழது மேற்பன்
குஞ்சர நடையுமே யாவன்
தலமது தீர்த்தந் தோய்ந்திடு வானும்
தன்கரம் கனகரே கையுமே
பலபணி சேர்ப்பன் ஏழையர்க் கன்பன்
பணமது கொடுக்கல்வாங் கலுமே
நலமுளோர் நேசம் மன்னர்கள் பேட்டி
நாயகன் வறுமையே காணுன்.

14. குலத்தவர் பாராட்டும்படியான புகழடைவான். யானை போன்ற கம்பீரமான நடை யுள்ளவன். புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவான். கையில் கனக ரேகை யுண்டு. வேலையாட்கள் பலனுள்ளவன். ஏழைகளுக்கு அன்பனுக விருப்பான். பணம் கொடுக்கல் வாங்கல் செய்து வருவான். நல்லவர்கள் நேசமும் அரசர்கள் பேட்டியும் உள்ளவன். வறுமை யில்லாதவன்.

15. ஈரெட்டு ஆண்டில் மனைவியும் வாய்க்கும்
இவனன்ன வர்க்கத்தி லேதான்
கூறுவோம் தென்பால் குணமதைச் சொல்வோம்
குலத்துளோர் மதிக்கவே வாழ்வள்
சிறிடாள் சிவந்த மேனியாம் பொறுமை
தேவதா பத்தியே கொள்வள்
மாரன்தன் மனம்போல் வாழ்குவா ளென்றேும்
மறுமொழி கூறிடா ளிவளே.

15. பதினேழும் வயதில் ஜாதகனுக்கு மனைவி வாய்ப்பாள். அவள் இவனுடைய தாய் வர்க்கத்திலிருந்து வருவாள். அவள் குணத்தைச் சொல்லுவோம். குலத்தவர் பாராட்டும்படி வாழ்ந்து வருவாள். கோப மில்லாதவள். சிவந்த உடல். பொறுமைசாலி. தெய்வ பக்தி யுள்ளவள். கணவன் மனம் அறிந்து வாழ்ந்து வருவாள். மறு வார்த்தை சொல்லாதவள்.

16. பணிகளு மிச்சை பரிந்துப சாரம்
பண்ணுவாள் பாவைகன் னடக்கை
கனமுள சுதராண் ஒன்றென வுரைப்போம்
கன்னிகை மூன்றென தீர்க்கம்
பிணையாகு மூன்று பொருந்தினேந் தாயே
புத்திர னிவனுக்கு மேலாய்த்
துணிவுடன் வாழ்வான் பிரபல யோகம்
செப்புவோம் பார்வதி கேண்மோ.

16. ஆபரணங்களில் பிரிய முள்ளவள். வந்தவர்களை அன்புடன் உபசரிப்பாள். நன்னடக்கை யுள்ளவள். சிறந்த புதல்வன் ஒருவனும், மூன்று பெண்களும் தீர்க்கமாக வினங்குவர். மூவர் மரித்திடுவர்; தாயே! ஜாதகனுடைய புத்திரன் இவனுக்கு மேல் தைரியமாக வாழ்ந்து வருவான். பிரபலமான அதிருஷ்டங்கள் ஏற்படும் என்று சொல்லுவோம். பார்வதியே! கேளுங்கள்.

வேறு

17. அன்னை குணம் கூறுகின்றேரும் மாஞ்சி வப்பள்
அழகுடையாள் முன்கோபி யடக்க முண்டு
பின்புத்தி சமயோகம் ஏழைக் கன்பள்
பிழையிலாள் துணையாண்பால் மூன்றே தீர்க்கம்
கன்னியு மொன்றென்றேரு தீர்க்க மாகும்
காதலியி னில்லமது தென்பா லாகும்
பொன்பணிக ளதிகமிலார் சல்ய முள்ளார்
புகலுவோம் ஏழாண்டின் மேலாய் யோகம்.

17. தாயின் குணத்தைச் சொல்லுவோம். கருமை கலந்த சிவந்த மேனி. அழகுள்ளவள். முன் கோபி. பொறுமைசாலி. பின்புத்தி யுடையவள். சமமான யோகத்தை யுள்ளவள். ஏழைகளின் மீது அன்புடைய வள். தவறில்லாதவள். மூன்று சகோதரர்கள் நீண்ட ஆயுளுள்ளவர்கள். சகோதரி ஒருத்தியும் அவ்வாறுவள். அவளுடைய வீடு தெற்குப் பக்கத்திலுள்ளது. பொன் ஆபரணங்கள் அதிக மில்லாதவள். கடனுண்டு. ஏழு வருஷத்துக்கு மேல் யோக மேற்படும்.

18. வந்திடுமே வன்னேதுணை வர்க்கு மேதா
னறைகின்றேம் பின்பாலி லவர்கள் சேதி
முன்சென்ம மன்னேக்கு மொழிகின் றேம்யாம்
முதல்தலத்தில் சேடர்குல முதித்தாள் மாது
பொன்பணிக ளதிகமின்றி மதலே யுண்டாய்த்
புருடன்மனம் போல்வாழ்ந்து சுகமுள் ளோளாய்த்
தன்வரன்முன் மரணமெய்தி வைசியச் சேயாய்ச்
செனித்தனள்காண் பின்சென்மம் சாற்றக் கேண்மோ.

18. தாயினுடன் பிறந்தவர்களின் செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுவோம். தாயின் முற் பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். சாஞ்சிபுரத்தில் சேடர் குலத்தில் தோன்றி, பொன்னுபரணங்கள் அதிக மில்லாமல், குழந்தைகளே யடைந்து கணவன் மனம் போல் வாழ்ந்து, சுக முடையவளாகி, தன் கணவனுக்கு முன்பாக இறந்து, இப் பிறவியில் வைசிய மாபில் தோன்றினள். மறு பிறவியைச் சொல்லுவோம் : கேளுங் கள்.

19. சாற்றுகின்றேம் முக்கூடல் கங்கை சேயாய்ச்
செனிப்பளாம் வறுமையின்றி வாழ்வா ளாகும்
போற்றுகின்றேம் தந்தைதன் பூர்வம் சொல்வோம்
புலியூரில் கங்கைகுலம் பிறந்தா னென்றேம்
நீத்தோர்க்கு வன்னமீந்து அறத்தி லிச்சை
நீள்நிலத்தில் சிவித்து நிருபன் வாழ்ந்து
வேற்றுபவ மில்லாமல் மரண மாகி
விளங்கினன் வைசியகுலம் விமலன் தானே.

19. முக்கூடலில், வேளாள மாபினளாகத் தோன்றுவாள் என்று சொல்லுவோம். தரித்திரமில்லாமல் வாழ்ந்து வருவாள். தந்தையின் முற் பிறவியைச் சொல்லுவோம். புலியூரில், வேளாளர் குலத்தில் பிறந்தான் என்றேம். துறவிகளுக்கு அன்னமளித்து, தருமத்தில் விருப்பமுள்ளவனும், நீண்ட நிலவுலகத்தில் சிவனம் செய்து வந்தான். வேறு தன்பங்கள் இல்லா மல் மரணமடைந்து, (பிறகு இப்பிறவியில்) வைசிய குலத்தில் பிறந்தான்.

20. விமலனுடைப் பின்சென்மம் விரிஞ்சி நாட்டில்
மேவுவான் தனவைசிய குலத்தி லேதான்
நவமதனில் செட்டுசெய்து புகழு மேற்பன்
நாயகன்தன் பூர்வமதைப் புகலக் கேண்மோ
தவசிறுபாக் கம்தன் னிலே வன்னிய சேயாய்ச்
செனித்துமே விவசாயம் மனவி மைந்தர்
அவனிதனில் நல்லோனுய் அறத்திலிச்சை
அதிதிகட்கு அன்னமீந்து அந்த கன்தன்;

20. இவனுடைய மறுபிறப்பு, விரிஞ்சி நாட்டில் ஏற்படும். இதே வைசிய குலத்தில் பிறந்து, விதவிதமாக வியாபாரங்கள் செய்து, புகழடைந்து வருவான். ஜாதகனுடைய முற்பிறப்பைப் பற்றிச் சொல்லுகிறோம், கேளுங்கள். சிறுபாக்கத்தில், வன்னிய மரபில் தோன்றி, பயிர்த்தொழில் செய்து, மனைவி மைந்தர்களை அடைந்து, உலகில் நல்லவனுக வாழ்ந்து வந்து, தருமத்தில் விருப்பமேற்பட்டு, அதிதிகளுக்கு அன்னமளித்து, எமனுடைய;

21. பக்கமதில் தான்சேர்ந்து பிரம னுலே
பாரினிலே வரையவந்தான் செக்கான் வம்சம்
புகலுவோம் யோகமதை தாதை மேலாய்ப்
புவிசேர்ப்பன் செட்டுச்செய்வன் புகழு மேற்பன்
மிக்கசித்தி வில்லமதும் வணிப மோங்கும்
வீனையென்றோர்க் குதவிடுதல் வேசி யோகம்
மிக்கமால் யோகமொன்று கௌரி யோகம்
விளம்புவோம் திருப்பணியுமேதில் செய்வான்.

21. பக்கத்தைச் சார்ந்து, பிறகு பிரமனுல் படைக்கப்பட்டு, இப் பூவுலகில் வாணிய மரபில் தோன்றினன். அவனுடைய யோகங்களைச் சொல்வோம். தந்தைக்கு மேலாக வீனை நிலங்களைச் சேர்ப்பான். வியாபாரங்கள் செய்து கியாதி அடைவான். மிக்க அழகான வீடு கட்டுவான். வியாபாரம் விருத்தியாகும். கெடுதலடைந்தவர்கட்கு உதவி புரிவான். வேசி யோக முள்ளவன். திருமால் யோகம் ஒன்றும், கௌரி யோகம் ஒன்றும் இவனுக்கு உளவாம். உலகில் திருப்பணியும் செய்வான் என்று சொல்லுவோம்.

22. மேதினில் சகடுடையன் காலா ளுள்ளான்
விருந்தினர்க் குதடுவிவன் சிறப்பாய் வாழ்வன்
சாதகன்தன் சென்னமுதல் ஆருண் டுள்ளே
சல்லியங்கள் பூமியதால் சாரு மென்றேரும்
மாதவரும் சொலும்போதத் திரியுஞ் சொல்வார்
வரும்பூமி செலவுமெவ்வார் சல்ய மெவ்வார்
ஓதுவீர் விபரமதை யன்னை தந்தை
உடன்பிறந்தோன் கூட்டாகப் பூமி கொள்வன்.

22. உலகில் வண்டி முதலிய வாகன வசதி யுள்ளவன். வேலையாட்க ளைப் பெற்றவன். கஷ்ட மடைந்தவர்களுக்கு உதவுவான். சிறப்புடன் வாழ்ந்து வருவான். ஜாதகன் பிறப்பு முதல் ஆறு வயதுக்குள் நிலத்தினால் கடன் ஏற்படும் என்று சொன்னோம். முனிவர் சொல்லும்போது அத்திரி கேட்கின்றார். நிலத்தினால் எப்படிச் செலவுண்டு? எவ்வளவு கடன் ஏற்படும்? அதை விபரமாகச் சொல்லுங்கள். தாய், தந்தை, சகோதரர்கள் இவர்கள் எல்லோரும் பொதுவாக வீடு நிலங்களை வாங்குவார்கள்.

23. அன்னவன்தன் குணஞ்சொல்வேன் மாநி றத்தான்
அரிபத்தி தந்தையில்ல மணுகா ளுகும்
தன்மனத்தில் கபடுமில்லான் மனைவி யூரில்
தானடைந்து பலவணிபம் சாற்று வாளும்
பொன்னுடையன் தங்நகர மடைவா ளுகும்
பெரிதான வில்லமது செய்வர் ளுகும்
பின்னமிலா மனைவியொன்று சுதரா ணென்று
பேதையர்கள் மூன்றுமே தீர்க்க மாக.

23. அவனுடைய குணத்தைச் சொல்லுவோம். கருமை நிற முடைய வன். திருமாலின் மீது பக்தி யுள்ளவன். தகப்பனின் வீடு இவனுக்குச் சேராது. மனத்தில் கபடமில்லாதவன். மனைவியின் ஊரை அடைந்து. அங்கு, பல வியாபாரங்கள் செய்து வருவான். (பொன்) செல்வங்கள் அடைவான். பிறகு தன் ஊரைடைந்து, பெரிய வீடு ஒன்று கட்டுவான். கெடுதியில்லா மனைவி யொருத்தி. புதல்வன் ஒருவனும், பெண்கள் மூவரும் தீர்க்க சிவியா யிருப்பர்.

24. ஆகியவிக் குணத்தானும் சேர்ந்து பூமி
அமைத்திடுவான் பின்பிரித லதனுல் சல்யம்
பாகமாய்த் தானுரைத்தோம் நிவிர்த்தி யெவ்வார்
பார்விரயம் வெகுவாகச் செய்து நீங்கும்
தோகைகேள் ஏழாண்டு முதலா யாகத்
தொல்புவியில் சல்லியங்கள் காணு ஞகும்
போகபாக் கியமுடையோன் அறிவோர் நேயன்
புண்ணியதோர் தலம்செல்வன் பெரியோ னென்றேம்.

24. இவ்விதக் குணங்களுடையவனும் தந்தை முதலானவருடன் சேர்ந்து பூமியை வாங்குவான். பிறகு எல்லோரும் பிரிவார்கள். அதனுல் கடன் ஏற்படும் என்று சொன்னேம். எப்படித் தீரும்? நிலங்களே மிகுதியாக விற்றுல் கடன் நீங்கும். மிகுதியான போகங்களே யனுபவிப்பான். அறிவாளிகளுக்கு இஷ்டன். புண்ணிய க்ஷேத்திரம் போய் வருபவன். பெரியவனுவன்.

25. தந்தைகண்டம் நாற்பத்து ரெண்டு ஆண்டில்
தனுர்மாதம் தான்சொல்வோம் நாற்பான் மூன்றில்
விந்தையாய் மான்மாதம் அன்னை கண்டம்
மேதினியில் எழுபத்துமூன் றுண்டி லேதான்
முந்துகன்னி மாதத்தில் சாத கன்றன்
உடலமது ஏகிடுமே பின்சென் மங்கள்
சந்ததமும் வேங்கடத்தில் சத்ரிய சேயாய்ச்
சாருவா னென்றுரைப்போம் தவறு வாரா.

25. ஜாதகனின் நாற்பத்திரண்டாம் வயதில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். அப்போது மார்கழி மாதம் என்று சொல்லுவோம். நாற்பத்து மூன்றும் வயதில், தை மாதத்தில் தாய்க்குக் கண்டம் ஏற்படும். எழுபத்து மூன்றும் வயதில், புரட்டாசி மாதத்தில் ஜாதகன் இறப்பான். அவன் பின் பிறவியில் திருவேங்கடத்தில் க்ஷத்திரிய மரபில் தோன்றுவான் என்று சொல்லுவோம். சொன்னது தவருது.

வேறு

26. ஒன்பது வாண்டு தன்னில் உயர்தாதை யுடலம் ஏகும்
பின்னைந்து வாண்டி லேதான் பிதாவன்னை கண்டஞ்
[சொல்வோம்
அன்னையி னன்னை தந்தை அறைகின்றேம் பின்பால் சேதி
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

26. ஒன்பதாம் வயதில் பாட்டனாரின் மரணம் ஏற்படும். பிறகு ஐந்து வருடத்தில் பாட்டி (தந்தையின் தாய்) மரண மடைவான். தாயாரின் அண்ணை, தந்தை இவர்களைப் பற்றி, பிற் பகுதியில் சொல்லுகின்றோம். உயர்ந்த வினாயகக் கடவுளைப் பெற்ற பார்வதியே! கேளுங்கள்.

27. பாலகன் செனிக்குங் காலை பரிதியின் தசையி லேதான்
சாலவே வாண்டு மூன்றும் சாற்றுவோம் திங்கள் ஒன்பான்
வேலனும் நலியு மாகும் விரயங்கள் அதிக மெய்தும்
ஏலபின் துணைவர் விருத்தி இயம்புவோம் விபரம் ரெண்டில்.

27. ஜாதகன் பிறக்கும்போது சூரிய மகா தசையில், மூன்று வருடங்களும் ஒன்பது மாதங்களு மிருப்பாம். அக்காலத்தில் இவனுக்கு உடம்பு அசௌக்கிய மேற்பட்டு, செலவுகள் அதிகம் உண்டாம். இளைய சகோதரர்களைப் பற்றி இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம்.

ஜாதகம் 75

1. [1]சனூர் வாகனந்தான் [2]சென்ன மாக
இரண்டில்பணி மூன்றில்புத னிரவி நாலில்
வாசமாம் சனிபுகரு மேழில் சேயும்
மதியுமெட்டில் செம்பாம்பு மன்ன னென்பான்
பேசுவீர் பலனெவ்வார் பராசர் சொல்வார்
பிறந்தசேய் ஆண்சென்னம் வந்த இல்லம்
பாசகயி றுடையவெமன் வாச லாகும்
பலமிலாச் சிற்றூராம் கீழ்மேல் வீதி.

1. விருஷபம் இலக்கினமாகவும், மிதுனத்தில் ராகுவும், மூன்றாமிடமாகிய கடகத்தில் புதனும் சூரியனும், நான்காம் வீடாகிய சிம்மத்தில் சனியும் சுக்கிரனும், விருச்சிகத்தில் செவ்வாயும் சந்திரனும், தனுசில் கேதுவும், ஒன்பதாமிடமாகிய மகரத்தில் குருவும் தங்கியிருந்தால் ஏற்படும் பலன்கள் யாவை? பராசர முனிவர் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆண். பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில், தெற்கு நோக்கிய வாயிலுடையது. சாதாரணமான சிறிய ஊர்.

		லக்கினம்	ராகு
	இராசி சக்கரம்		புதன் சூரியன்
குரு			சனி சுக்கிரன்
கேது	செவ்வாய் சந்திரன்		

2. வீதிசொன்னேம் கூரையில்லம் கோகு லத்தில்
விளம்புவோம் திருதியையாஞ் சென்ன மாகும்
மாதுர்தந்தை துணைகளத்ர புத்ர யோகம்
மாரனும் முன்சென்ம மறையக் கேளாய்த்
தீரமாய்த் தந்தைதுணை யீரஞ் சாகும்
சீர்ணமாஞ் சிலவென்றே மாண்பால் மூன்று
கூறுவோம் தீர்க்கமதாய் முன்னு னென்று
குறிக்கின்றே மிவன்குணத்தைக் குணவா னுமே.

1. இடபம்
2. இலக்கினம்

5. இங்ஙனமாக ஜாதகன் வீடு அமைந்திருக்கும் தெருவைக் கூறினோம். அது கூரை வேய்ந்த வீடு. இடையர் குலத்தில் தந்தைக்கு மூன்றும் புதல்வனுகப் பிறந்தவன் என்று சொல்லுவோம். ஜாதகனின் தாய் தந்தையர், உடன் பிறந்தார், மனைவி, புத்திரர் முதலானவர் யோகங்கள், ஜாதகனின் முற் பிறப்பு மறு பிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் நாங்கள் சொல்லக் கேட்பா யாக. தந்தையுடன் பிறந்தோர் பதின்மராவர். சிலர் சேதமாவர் என்று கூறினோம். மூன்று ஆண்கள் தீர்க்கமாக விளங்குவர் என்று சொல்லுவோம். இந்த ஜாதகனின் தந்தைக்கு மூத்தவனொருவ னுண்டு. அவன் தன்மை யைக் கூறுகின்றோம். குணசாலி.

3. மேதினியில் புகழ்பற்பன் கல்வி மானும்
வீண்வம்பில் சேராதா னீகை யுள்ளான்
மாதவர்க் கன்னமீவன் மருமங் கொஞ்சம்
மாநிலத்தை விருத்திசெய்வன் மனைவி ரெண்டு
சூதிலான் சுதராண்பா லொன்றே யாகும்
சுந்தரிமா ரஞ்சென்றே செப்பு வோமே
காதலியுங் கேட்கலுற்ற ளம்மா துக்குக்
கழறினீர் புத்ரவிருத்தி முதல்ம னைக்கு.

3. உலகில் புகழடைவான். படிப்பாளி. வீண் வம்புக்குச் செல்லாதவன். கொடை யுள்ளவன். தவத்தை யாற்றும் பெரியோர்களுக்கு உண வளிப்பான். சிறிது மர்ம முள்ளவன். நிலபுலன்களை விருத்தி செய்வான். இவனுக்கு மனைவியர் இருவர். வஞ்சனை யில்லாதவன். புதல்வன் ஒருவனே. புதல்வியர் ஐவர் என்று சொல்லுவோம். பார்வதி கேட்கின்றாள். இரண்டு மனைவியரில் யாருக்குப் புத்திர விருத்தி கூறினீர்கள்? முதல் மனைவிக்கு;

4. கன்னிகையு மிரண்டுண்டா மன்னை தாமும்
காலன்பதி சென்றிடுவாள் பின்ம னைக்கு
மன்மதன்போ லாணொன்று பெண்பா லொன்று
வறைகின்றேம் தீர்க்கமதாய் மருவி வாழ்வர்
பின்தந்தை சேதிசொல்வோம் வார்த்தை யாளன்
பிறர்குற்றம் சொல்லிடுவான் கிருஷி செய்வன்
தன்சொல்லே மேன்மையதாய்ச் சாதிப் பானும்
சகலரையும் வசியம் கொள்வன் தரணிசேர்ப்பன்.

4. பெண்கள் இருவர் தோன்றுவர். பின்பு, முதல் மனைவி இயம னுலக மடைவாள். இரண்டாம் மனைவிக்கு மன்மதன் போன்ற அழகிய புதல்வனொருவனும், பெண்ணொருத்தியும் தோன்றித் தீர்க்கமுடன் சேர்ந்து வாழ்வார்கள். இனி, ஜாதகன் சிறிய தகப்பனார் செய்கையைச்

சொல்லுவோம். நன்கு பேசுவான். பிறர் குற்றங்களே வெளிப்படையாகச் சொல்லுவான். விவசாயஞ் செய்வான். தான் கூறுகின்ற சொற்களே சிறந்தன வென்று மேலே நாட்டுவான். அனைவரையும் வசப்படுத்துவான். நிலபுலங்களேச் சேர்ப்பான்.

5. ஈகைகொஞ்சம் பால்பாக்யம் மனைவி யொன்று
இந்த்ரன்சுதர் போலாண்பா லிரண்டே யாகும்
தோகையர்க ளொன்றுண்டு தீர்க்க சிவி
சுகமான குடும்பமென்றேம் பின்னேன் சேதி
ஆகமத்தி னுணுக்கறியான் மால்நி றத்தான்
அவனியினில் கிருஷியுமே செய்வா னாகும்
போகபாக் கியமுடையன் வறுமை காணுன்
பிறர்குற்றஞ் சொல்லாதான் மனைவி யொன்றே.

5. கொடைக் குணம் சிறிதே யுண்டு. பால் பசு பாக்கிய முள்ளவன். மனைவி ஒருத்தியே. இந்திரன் புதல்வன் போன்ற அழகிய புத்திரர்கள் இருவர் உளராவர். பெண்ணொருத்தி யுண்டு. அவள் தீர்க்கமான ஆயுளைப் பெற்றவள். சௌக்கியமான குடும்பத்தைப் பெற்றவள் என்று சொன்னேம். இவனுக்கு இளையவன் செய்தியைக் கூறுவோம். வேதாந்த இரகசியங்களே உணரமாட்டான். கரிய நிறமுடையவன். பயிர்த் தொழில் புரிவான். போகங்களே யனுபவிப்பான். தரித்திர மில்லாதவன். பிறர் மீது குற்றங் கூறுதவன். அவனுக்கு மனைவி ஒருத்தியே.

6. எய்திடுஞ் சுதராண்பா லொன்றே தீர்க்கம்
இதுவன்றிப் பெண்ரெண்டு இயம்பக் கேளாய்
ஐயமென்றேஞ் சேட்டசுதர் விரோத மின்றி
அவன்துணைவ ருடனொத்து வாழ்வா னாகும்
பொய்யுரையான் தந்தைகுண மீகை யாளன்
பிழையில்லான் வறுமையிலான் மால்நி றத்தன்
செய்குவான் சிலர்க்குதவி கிருஷி செய்வன்
தீரநெஞ்சன் பொறுமையுள்ளான் தேவி பட்சன்.

6. ஆண் குழந்தை யொன்று பிறந்து தீர்க்கமாகும். இது தவிர பெண்கள் இருவர் தோன்றுவர். சொல்லுகின்றேம், கேட்பாயாக. மூத்தலில் தோன்றும் புதல்வர் சேதமாவர் என்று சொன்னேம். சிறிய தந்தை மற்ற சகோதரர்களுடன் விரோத மில்லாமல் ஒற்றுமையாக வாழ்வான். இனி, தந்தையின் குணத்தைச் சொல்லுவோம். பொய்ச் சொற்கள் சொல்லான். கொடை யுடையவன். குற்ற மில்லாதவன். தரித்திரத்தைக் கண்டவன். கரிய நிறத்தினன். துன்ப மடைந்த சிலருக்கு உதவி செய்

வான். பயிர்த் தொழில் புரிவான். தைரியம் பொருந்திய மனத்தினன். பொறுமை யுடையவன். மனைவி மீது விருப்ப முள்ளவன்.

7. தன்துணைசொல் கடவாதான் இளம னத்தன்
தரணியினில் பாட்டாளி யடக்க முண்டு
சொன்னகுண வானுக்கு விந்தப் பாலன்
தோன்றுவான் துணையாண்பா லிரண்டே யாகும்
கன்னிகையும் ஒன்றுண்டு மூன்றும் தீர்க்கம்
கழறுவோ மிவன்குணத்தை மால்நி றத்தன்
பன்னுகலை யுரைவல்லன் கிருஷி செய்வன்
பார்சேரப்பன் நாற்காலி விருத்தி யுள்ளான்.

7. தன் மூத்த சகோதரன் கூறுகின்றவற்றை மீறி நடவாதவன். இளகிய மன முடையவன். உலகில் உழைப்பாளியாக விளக்குவான். அடக்க முடையவன். இங்ஙனம் கூறப்பட்ட குணங்களை யுடைய தந்தைக்கு இந்த ஜாதகன், புதல்வனாகப் பிறப்பான். இவனுக்குச் சகோதரர் இருவரே யாவர். சகோதரியும் ஒருத்தி யுண்டு. இவர்கள் மூவரும் தீர்க்கமாக விளங்குவர். ஜாதகன் குணங்களைச் சொல்லுவோம். கரிய நிற முடையவன். கலைகளை யாராய்ந்து, பிறருக்கு எடுத்துக் கூறும் வல்லமை பெற்றவன். பயிர்த் தொழில் செய்வான். நிலபுலன்கள் சேர்ப்பான். கால்நடைகள் விருத்தி யுள்ளவன்.

8. உள்ளமதை யுரைத்திடுவோம் பிதாதன் மேலாய்
உறைகுவான் கடவுள்பக்தி வுடையா னுகும்
கள்ளமன மில்லாதான் பால்மோ ரிட்டம்
கனராசர் பேட்டிகொள்வன் காலந் தன்னில்
பள்ளுப்பறை யுடையவனும் பெருமை யேற்பன்
பதர்வர்த்தை சொல்லானும் பகையென் றெண்ணுன்
தெள்ளுதமிழ்க் கணக்கறிவன் சகடு முள்ளான்
தெளிந்தோர்க ளிட்டமுளன் சிறப்பாய் வாழ்வன்.

8. இவன் மன வியல்பைச் சொல்லுவோம். தன் தகப்பனாரை விட மேன்மையாக வாழ்ந்திருப்பான். தெய்வபக்தி யுடையவன். வஞ்சனை யில்லாத மனமுள்ளவன். பால், மோர் இவற்றில் மிக்க விருப்ப முடைய வன். தக்க காலத்தில் அரசர்களைப் பேட்டி காண்பான். பள்ளர், பறையர் முதலான ஏவலாட்கள் பலரைப் பெற்றவன். மேன்மை பெறுவான். அற்ப மான சொற்களைப் பேசாதவன். பகைவர் என்று எவரைப்பற்றியும் மனத் தால் நினையான். தெள்ளிய தமிழ் நூல்களைப் படித்து அறிவான். வண்டி முதலான வாகன வசதிகளுள்ளவன். தெளிந்த அறிவுடைய சான்றோர்கட்கு விருப்பமானவன். சிறப்புடன் வாழ்க்கை நடத்துவான்.

9. வாழ்மனை யொன்றுண்டு ஈரொன் பானில்
மாதுருதன் வர்க்கத்தில் வருமே யென்றும்
தாழ்வான வார்த்தையிலாள் முன்கோ பத்தாள்
தன்வரன்போல் நடந்திடுவள் பணிமே லிச்சை
பாழான புத்தியில்லாள் பந்து மெச்ச
பகர்சிறந்த குடுமபியளாய்ப் பாலிப் பாளாம்
தீயகுணம் வெளிக்காட்டா ளேழைக் கன்பள்
தெய்வபக்தி யுடையவளாந் தேவி யாளே.

9. இவனுக்கு மனைவி யொருத்தி யுண்டு. அவள் இவனுடைய பதினெட்டாம் வயதில் தாய் வர்க்கத்திலிருந்து வருவாள். அற்பமான சொற் களைப் பேசாதவள். முன் கோப முடையவள். கணவன் மனமறிந்து நடப் பாள். கெட்ட புத்தி யிலலாதவள். உறவினர் பாராட்டும் வகையில் சிறந்த குடும்பத்தை யேற்று நடத்துவாள். கெட்ட குணமில்லாதவள். ஏழை யோரிடம் பிரியமாக விருப்பாள். கடவுள் பக்தி யுடையவள்.

வேறு

10. தானே சுதர்க ளாணென்று
சத்தி மூன்று தான்தீர்க்கம்
வானோர் தேசம் செல்மூன்று
மைந்தன் பூர்வம் தான்கேளாய்
தேனே புதுவை நகரதனில்
செனித்தான் தீயின் குலமதனில்
மாநிலஞ் செட்டுத் தான்செய்து
மனைவி மைந்தர் தாமுண்டாய் ;

10. இந்த ஜாதகனுக்குப் புதல்வன் ஒருவன். பெண்கள் மூவர் பிறந்து தீர்க்கமாவர். மேலும் மூன்று பிறந்து மரண மடையும். ஜாதகன் முற் பிறப்பைக் கேட்பாயாக. புதுச்சேரியில், வன்னியர் மரபில் பிறந்தான். உலகில் வியாபாரம் செய்து, மனைவி மக்களைப் பெற்று ;

11. ஆய மறையோர்க் குதவிசெய்து
அறத்தி லிச்சை மிகப்பெருகி
மாயன் பசனை கோட்டமது
மைந்தன் செய்து புத்தியதாய்த்
தீய காலன் பக்கலிலே
சேர்ந்தா னிந்தப் பாலனுமே
ஆயன் வரைய விக்குலத்தில்
அணுகி வந்தா னென்றுரைத்தோம் ;

11. சாஸ்திரங்களே யாராயும் அந்தணர்கட்கு, இயன்ற உதவிகளைச் செய்து, தருமத்தில் மிகுந்த விருப்பம் ஏற்பட்டு, திருமாலுக்குப் பஜனை கோவில் ஒன்று அமைத்து, நற்புத்தியுடன் வாழ்ந்து, முடிவில் கொடிய இயமனுலகம் அடைந்தான், இந்த ஜாதகன். மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, இக்குலத்தில் பிறந்தான் இவன் என்று சொன்னேம்.

12. உரைப்போ மிவனின் யோகத்தை
உயர்வாய்க் குடும்பி தானுவன்
தரையை விருத்தி செய்திடுவன்
சதுஷ்பா தங்கள் சேர்த்திடுவன்
மறையோர் நேசம் மிகக்கொள்வன்
வாக்குத் தவறுன் வீடவாக்கன்
குறையென் ருரை யாதரிப்பன்
கோபா லனையே துதிசெய்வன்.

12. இவன் யோகங்களைக் கூறுவோம். உயர்ந்த குடும்பத்தை யுடையவன். நிலபுலன்களை விருத்தி செய்வான். கால் நடைகளைச் சேர்ப் பான். அந்தணர்கள் நட்பை மிகுதியாகப் பெறுவான். சொன்ன சொல் தவறுதவன். விடம்போன்று கொடிய வாக்குடையவன். குறையென்று வந்தவர்களைக் காப்பான். கண்ணபிரானையே வணங்குவான்.

13. சித்திர வில்லந் தானணுகும்
சிறிதா யேழு வாண்டினிலே
பத்தும் பதினு ருண்டினிலே
பகர்வோம் வேறு வில்லமுமே
சுத்த மூடையா னெண்ணுன்கு
வாண்டின் மேலே வேறுவன்
பெற்ற பாகம் நான்காக
பிரித லென்றும் பேதையரே.

13. இவனுக்கு ஏழுவயதில் அழகிய சிறிய வீடு கிடைக்கும். பதி னுறும் வயதில் வேறு வீடொன்றும் கிடைக்கும் என்று சொல்லுவோம். தாய்மை யுடையவளுக வாழ்வான். மூப்பத்திரண்டாம் வயதுக்குமேல் வேறு குடும்பமாகச் செல்லுவான். இவன் பிதாரார்ச்சித்த சொத்துக்கள் நான்கு பங்காகப் பிரியும் என்று கூறினேம்; பார்வதியே.

14. அறவே அன்னை குணஞ்சொல்வோம்
அணுகும் செனித்த வீடில்லாள்
குறையா மனமு மிருநிறத்தாள்
கூறுஞ் சொல்லே சுகமாகும்
பொரையே செல்லாள் நற்குணத்தாள்
பின்யோ சனையு முள்ளவளே
நிறையக் குடும்பந் தானுவள்
நுவல்முன் கோப முடையவளே.

14. தாயின் குணங்களைச் சொல்லுவோம். பிறந்த வீடு சொந்த மில்லாதவள். மனத்தில் குறையுடையவள். கரிய நிறத்தினள். கூறுஞ் சொற்கள் நல்லனவாம். பொய் பொரை சொல்லமாட்டாள். நற்குண முடையவள். பின் யோசனை யுள்ளவள். நிறைந்த குடும்ப முடையவள். கூறுவதற்கு முன் கோபமுள்ளவள்.

15. உடையோள் தனக்குத் துணையாண்பால்
ஒன்றே தீர்க்கம் பெண்ணவ்வார்
அடைவாய் மறுதா யொன்றுண்டு
அலைவாள் வெளிதே சங்களிலே
திடமாய் மாமன் சேதியது
செப்பக் கேண்மோ தந்தையில்லம்
அடையான் மாம னில்லத்தில்
அடைந்து வாழ்வா னறிவித்தோம்.

15. இவளுடன் பிறந்தவர்களில் சகோதரன் ஒருவனும், சகோதரி ஒருத்தியும் தீர்க்கமாவர். இவளுக்கு மாற்றுந்தா யொருத்தி யுண்டு. இவள் வெளி நாடுகளுக்குச் சென்று அலைவாள். மாமன் செய்திகளைச் சொல்லுவோம். கேளுங்கள். தன் தகப்பனாரின் வீட்டில் வசிக்க மாட்டான். அவன் மாமனின் வீடு சென்று வாழ்ந்திருப்பான் என்று சொன்னோம்.

16. அறிவாய் மனைவி யொன்றேயாம்
அவளும் தந்தை முன்துணைவன்
பரிவாய்ப் புதல்வி யெனவுரைப்போம்
பால ராண்பா லிரண்டேயாம்
நெறியாய்ப் பெண்பா லவ்வாருய்
நிகழ்த்தும் தீர்க்கச் சிவனுமாம்
குறியே யிவன்த னுள்ளூரில்
குலாவி வாழ்வா னெனவுரையே

16. ஜாதகன் மாமனுக்கு மனைவி ஒருத்தியே. அவன் ஜாதகனின் பெரிய தகப்பனரின் புதல்வியாவள் என்று சொல்லுவோம். புத்திரர் இருவரும், பெண்கள் இருவரும் பிறந்து தீர்க்கமாவர் என்று கூறுவோம். இவன் தன் உள்ளூரிலேயே வசித்து வருவான் என்போம்.

வேறு

17. அன்னையின் பூர்வஞ் சொல்வோம் அச்சிறு பாக்கங்
[கீழ்ப்பால்
உன்னதச் சிறுவூர் தன்னில் உதித்தனள் கங்கை சேயாய்த்
தன்னினத் தவரு மெச்சச் சந்ததி வரனு மூண்டாய்
இன்னவள் வாழு நாளில் இயம்புவோ மூழி தானே.

17. ஜாதகன் தாயின் முற் பிறப்பைச் சொல்லுவோம். அச்சிறுபாக்கத்திற்குக் கிழக்கில், உயர்ந்ததாகிய சிறிய ஊரொன்றில், வேளாளர் வமிசத்தவளாகப் பிறந்து, தன் குலத்தவர்கள் பாராட்ட, கணவன், மக்கள் ஆகியோரை யடைந்து, இவள் வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில் ஏற்பட்ட தீவினை யொன்றைச் சொல்லுவோம்.

18. தோகையின் மலைக்குச் சென்றுள் தோழனே டிவளு
[மேதான்
பாகமாய் வள்ளி பங்கன் பதங்களை யருச்சித் தேத்தித்
தோகையுங் கடைவீ திக்குச் சென்றுபின் சிவப்பு மஞ்சள்
வாகையாய்ச் சீப்பு வாங்கி யிரணியந் தராமல் சென்றுள்.

18. தோகைமலைக்குக் கணவனுடன் இவள் சென்றுள். அங்கு எழுந்தருளியுள்ள வள்ளிமணாளனை சுப்பிரமணியக் கடவுளின் பாதங்களில் அருச்சனை முதலியன செய்து, துதித்து, பின்பு கடைத் தெருவிற்குச் சென்று, குங்குமம், மஞ்சள், சீப்பு இவற்றை வாங்கிக்கொண்டு பணம் கொடுக்காமல் போய்விட்டாள்.

19. சென மருள் வதனு லந்தச் செட்டியு மறதி யாகி
நினைவுண்டாய்ப் பார்க்கும் போது நிமலியே காணு ளாகி
நினைமனங் கொண்டு செட்டி விளம்புவான் மாதே நீயும்
தனமது ஈயாச் சென்றுய் கரிமஞ்ச ளாகா முன்னம் ;

19. மக்கள் கூட்ட மிகுதியால் கடைக்காரன் அவளைக் கவனியாமல் மறந்தான், பின்பு நினைவு ஏற்பட்டு, கவனிக்கும்பொழுது இவளைக் காணவில்லை. உடனே வணிகன் கூறுவான். பெண்ணே ! நீ பொருளைப் பெற்றுக் கொண்டு பணம் தராமல் சென்றுவிட்டாய். கரிமஞ்சள் உனக்கு உபயோகப்படு முன்பாகவே ;

20. வரனுமே மரண மாகி மறுசென்ம மகவாய்த் தோன்றிக்
கருவற்ற மனைபா ழாகிக் காளைகள் சிலவே தோன்றி
வரனுமே மத்தி யத்தில் மறலியின் பதிக்குச் செல்வன்
உரைமஞ்சள் காணு தாகி உலகினில் வாழ்வா யென்று;

20. உன் கணவன் இறந்து, மறு பிறப்பிலும் பெண்ணாய்ப் பிறந்து, வீடு பாழடைந்து, புதல்வர்களும் சிலர் தோன்றி, கணவனும் மத்திய காலத்தில் மரண மடைவான். மஞ்சள் பூசிக் கொள்ளாமல் கைம்பெண்ணாக நீ வாழ்வாய், என்று கூறி;

21. முருகர்முன் தூளை வாரி யிறைத்தன னென்று சொன்னேம்
உறைந்தது வந்தத் தோடம் ஓராண்டில் வரனு மாண்டு
[1]திருக்கயி று வீலகி யேதான் சென்றனள் காலன் பக்கல்
மறையவன் வரையப் பட்டு வந்தவ ளிவளே யம்மா.

21. முருகப் பிரான் சந்நிதிக்கு முன்பாக, தெரு மண்ணை வாரி யிறைத்தான் என்று கூறினேம். அந்தத் தோஷம் இவளை யடைந்தது. அதற்குப் பின்பு ஒரு வருஷத்தில் கணவன் இறந்து, மாங்கலிய மிழந்து, தானும் மரண மடைந்தாள். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, பிறந்தவள் இவள்; தாயே!

22. வணிகன்தன் சாபம் பேர்லே வந்திடு மிச்சென் மத்தில்
பிணையாகு மில்லந் தானும் பெற்றதா யிரண்டு மாகும்
அணைகின்ற வரனு மத்தில் அந்தகன் பக்கல் சேர்வான்
கனமுள வசிட்டர் சொல்வார் காவல னெந்தக் காலம்;

22. முற் பிறப்பில் ஏற்பட்ட வணிகன் சாபத்தைப் போல, இப் பிறப்பில், வீடு பாழடையும். தாய்மா ரிருவ ராவர். கணவனும் இடைக் காலத்தில் மரணமடைவான். பெருமை பொருந்திய வசிஷ்ட முனிவர் கூறுவார். இவள் கணவன் எந்தக் காலத்தில்;

23. ஏகுவான் விவரஞ் சொல்வீர் ஈரஞ்சு வாண்டு தன்னில்
பாகமாய்க் கும்ப மாதம் பறப்பனுங் காலன் பக்கல்
தோகையும் விதவை யாகிச் சேருவாள் முப்பா னெண்டில்
ஆகம மகர மாதம் அந்தகன் பக்கல் சேர்வள்.

23. மரண மடைவான் என்ற விவரத்தைச் சொல்லுங்கள். மண மாகிப் பத்து வருஷங்களில், மாசி மாதம் இயமனுலக மடைவான். இவள் கைம்பெண்ணாகி, முப்பதாம் வயதில் தைமாதம் மரண மடைவாள்.

---

1. மாங்கல்யச் சரடு

24. மறுசென்மந் தோகை தெற்கில் வைசியக் குலமு தித்து
வறுமைக ளில்லா வாழ்வ ளறைகின்றேந் தந்தை பூர்வம்
திருக்கடை யூர்க்கு மேற்பால் சிறுவூரில் வன்னிய ஞகத்
தரைமிக வுடைய ஞகித் தன்மனை மதலை யுண்டாய்;

24. மறுபிறப்பு, தோகைமலைக்குத் தெற்கில், வைசியர் குலத்தவளாய்ப் பிறந்து, தரித்திர மில்லாதவளாக வாழ்ந்திருப்பாள். தந்தையின் முற் பிறப்பைக் கூறுகின்றேம். திருக்கடையூருக்கு மேற்கில் உள்ளதொரு சிற்றூரில், வன்னியர் குலத்தவளுகத் தோன்றி, நிலபுலன்கள் மிகுதியாகப் பெற்று, மனைவி மக்களை யடைந்து;

25. சுகமுள குடும்பி யாகித் தேவதாப் பக்தி கொண்டு
பகையான காலன் பக்கல் பறந்தன னிவனே யென்றேம்
செகபதி வரையப் பட்டுச் செனித்தனன் கோகு லத்தில்
தகைமையாய்க் குடுமபி யாவன் தனதான்யப் பெருக்க
[முண்டாம்.

25. சௌக்கியமுள்ள குடும்பத்தை யுடையவனுய், தெய்வ பக்தியுடன், வாழ்ந்து, மரணமடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, இடைக் குலத்தில் பிறந்தான் இவன் என்று சொன்னேம். சுகமுள்ள குடும்பியாக வாழ்வான். செல்வம், தானியங்கள் முதலியன பெருக்க மடையும்.

26. மறுசென்மம் காஞ்சி தன்னில் வணிகர்தங் குலமே
[தோன்றித்
திருமகள் விலாசம் பெற்றுச் செட்டுக்க ளதிகஞ் செய்து
வறுமைக ளில்லா வாழ்வன் வந்தவர் தம்மைக் காப்பன்
சிறுமைக ளில்லா நெஞ்சன் செப்புவோந் தேவி கேளே.

26. மறுபிறப்பு, காஞ்சிபுரத்தில் வணிகர் குலத்தவனுய்த் தோன்றி, இலட்சுமி கடாட்சம் பெற்று, வியாபாரங்கள் மிகுதியாகச் செய்து, தரித்திர மில்லாது வாழ்வான். தன்னை யடைந்தவர்களைக் காப்பான். தாழ்வு இல்லாத மனமுடையவன். பார்வதி தேவியே! மேலும் கூறுவோம், கேட்பாயாக.

ஜாதகம் 76

1. நந்தியுஞ் சென்ன மாக ரவிபுதன் புகர்சே யஞ்சில்
சந்திரன் சனிபொன் லாபம் [1]தவசியு மிரண்டி லேற
மந்தர கயிறு எட்டில் மருவினுல் பலனெவ் வாறு
சுந்தரி கேட்கும் போது செயமுனி கூறு கின்றார்.

1. விருஷபம் சென்ம லக்கினமாகி, சூரியன் புதன் சுக்கிரன் செவ்வாய் கன்னியிலும், சந்திரன் குரு சனி லாபஸ்தான மாகிய மீனத்திலும், கேது மிதுனத்திலும், ராகு தனுசிலும் தங்கியிருந்தால், ஏற்படும் பலன்கள் யாவை? என்று பார்வதிதேவி கேட்கும்போது, செய முனிவர் சொல்லுகின்றார்.

சந்திரன் சனி குரு		லக்கினம்	கேது
	இராசி சக்கரம்		
ராகு			சூரியன் புதன் சுக்கிரன் செவ்வாய்

2. இந்தசே யாணுஞ் சென்மம் இல்லமும் வடதென் வீதி
இந்திர நோக்கம் வாசல் யாளிவா கனத்தா ளுத்ரம்
சந்ததம் கீழ்ப்பால் கன்னி சாற்றுவோஞ் சிறுஷ் ராகும்
வந்தவ ணுணுஞ் சென்ம மறைகின்றோம் தாயே கேளும்.

2. இஃது ஆண் பிறப்பு. வீடு, வடக்குத் தெற்கான வீதியில் கிழக்கு நோக்கிய வாயிலுடையது. சிங்க வாகனத்தையுடைய துர்க்கை வடக்கில் கோயில் கொண்டுள்ளாள். கிழக்குப் பக்கத்தில் காளிதேவி கோயில். சிறிய ஊர் என்று சொல்லுவோம். கேளுங்கள், தாயே!

3. இன்னவன் சென்ன யோகம் எழில்பெறுந் தந்தை யோகம்
மன்னிய வன்னை யோகம் வருந்துணை களத்ர புத்ரர்
முன்பின்சென் மங்கள் யாவு முரைக்கின்றோ மிந்நூல்
[தன்னில்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

---

1. கேது

3. இவன் சனன யோகங்கள், தந்தை, தாய், உடன்பிறந்தார், மனைவி, மக்கள் முதலானவர் யோகங்கள், முற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய விஷயத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுகின்றோம். உத்தமமான கணவனை யடைந்த பார்வதியே! கேட்பாயாக.

4. தந்தையின் துணையாண் மூன்று சத்தியு மொன்றே தீர்க்கம்
அந்தவர் வேறுய்ச் செல்வர் அவர்பலன் பின்பால்
[சொல்வோம்
இந்தவன் தந்தை சேதி இயம்புவோ மிருநி றத்தான்
வந்தவர் தம்மைக் காப்பான் மருமத்தை வெளிக்காட்
[டானும்.

4. ஜாதகன் தந்தைக்குச் சகோதரர்கள் மூவர். சகோதரி யொருத்தியே தீர்க்கமாக விளங்குவாள். சகோதரர் வேறு குடும்பமாகச் செல்லுவர். அவர்கள் செய்தியைப் பிற்பாகத்தில் சொல்லுவோம். இந்த ஜாதகன் தந்தையின் குணங்களைக் கூறுவோம். கரிய நிற முடையவன். வீடு தேடி வந்தவர்களைக் காப்பான். மனத்திலுள்ள இரகசியங்களை வெளிவிட மாட்டான்.

5. தரணிகள் பலவூர் சேர்ப்பன் சரசமாய் வார்த்தை கூர்வன்
மறையவர்க் குதவி செய்வன் மாடுகள் பணியோர் விருத்தி
உறன்முறை மதிக்க வாழ்வன் உயர்வான குடும்ப மேற்பன்
குறையென்றோர்க் குதவி செய்வன் குவலயம் புகழு மேற்பன்.

5. பல கிராமங்களில் விளை நிலங்களைச் சேர்ப்பான். சரசமாகப் பேசுவான். அந்தணர்களுக்கு உதவிகள் செய்வான். மாடுகள், பண்ணைகள், ஏர்கள் விருத்தி யுடையவன். உறவினர் மதிக்கும்படி வாழ்க்கை நடத்துவான். மேன்மையான குடும்பத்தை யடைவான். துன்பமென்று வந்தவர்கட்கு உதவிகள் செய்வான். உலகத்தில் கீர்த்தி பெறுவான்.

6. துணைவரை யாத ரிப்பன் தொடுத்ததை வெல்வா னுகும்
[னுகும்
பிணையதை யொருவர்க் கெண்ணுன் பொய்யது புகலா
மணங்கந்த மிட்ட முண்டு வாக்குச்சொல் மேன்மை யாகும்
அனையவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

6. உடன்பிறந்தோரைக் காப்பான். தொடங்கிய செயலில் வெற்றி காண்பான். எவருக்குந் துன்பஞ் செய்ய நினையான். பொய் கூறான். மண முள்ள பொருள்களில் விருப்பமுண்டு. இவன் சொல்லுகின்ற சொற்கள் மதிப்புடையனவாம். தவங்களைச் செய்யும் பார்வதியே! கேட்பாயாக.

7. இங்கெறி யுடையா னுக்கு இவனுமே யுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அவனிரு நிறத்த
[னுகும்
உன்னதத் தரளத் தந்தம் உவமையாய் வார்த்தை கூர்வன்
முன்தந்தை கர்மஞ் செய்வன் உயர்வான குடும்பி யாவன்.

7. இத்தன்மைகளை யுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் புதல்வனுகத் தோன்றுவான். இவன் குணங்களைக் கூறுவோம். கரிய நிற முடையவன். மூத்துப் போன்ற பற்களுடையவன். உபமானங்களுடன் பேசுவான். பெரிய தகப்பனருக்கு இறுதிக் கடன்கள் செய்வான். உயர்ந்த குடும்பத்தைப் பெறுவான்.

8. வித்தையுஞ் சிரமம தாகும் விவேகியாம் வெகுபேர் நேயன்
குத்தத்தை மனத்தில் வையான் கொடுமையை யெவர்க்கு
[மெண்ணன்
சுற்றத்தார் மதிக்க வாழ்வன் சோம்பிடான் காரி யத்தில்
நத்தினோர்க் குதவு வானும் நவின்றிடான் கட்டு வார்த்தை.

8. இவனுக்குக் கல்வி கற்பது சிரமமாக விருக்கும். விவேக முடையவன். பலருக்கு அன்பன். மனத்தில் கெடுதி நினையான். எவருக்கும் நன்மை செய்ய எண்ணமாட்டான். உறவினர் மதிக்கும்படி வாழ்வான். காரியங்கள் செய்வதில் சோம்பலடைய மாட்டான். துன்ப மடைந்தவர்கட்கு உதவி செய்வான். சொற்களைக் கட்டிக் கூறான்.

9. தந்தைமுன் துணைவ ருக்குச் சந்ததி யில்லா தாகி
இந்தவன் தத்து வாகி யேகுவ னதுவு மின்றிச்
சொந்தமாந் தந்தை யாஸ்தி சேர்ந்திடும் பால னுக்கு
மைந்தனும் நான்கு கர்ம மறைந்தன மென்று சொல்லே.

9. தந்தையின் மூத்த சகோதரருக்குப் புதல்வர்கள் இல்லாமல், இவன் சுவீகாரப் புத்திரனுகச் செல்லுவான். தவிர, சொந்தத் தந்தையின் ஆஸ்தியும் இவனுக்குக் கிடைக்கும். இவன் தன் முன்னோர் நால்வருக்கு இறுதிக் கடன்கள் செய்வான் என்று கூறினேம்.

10. தந்தைநாள் பூமி மேலாய்த் தானவன் விருத்தி செய்வன்
விந்தையா யிரண்டு வில்ல மேவிடும் பால னுக்கு
நிந்தைக ளேற்கா னுகும் நினைத்தது முடிக்க வல்லன்
சுந்தர முடைய னுகும் தோகையே கேட்டி டாயே.

10. தந்தையின் காலத்தில் தேடி வைக்கப்பட்ட விளைநிலங்களை இவன் சிறப்பாக விருத்தி செல்வான். இவனுக்கு இரு வீடுகள் சேரும். பழிகள் ஏற்காதவன். நினைத்ததை முடிக்கும் வல்லமை பெற்றவன். அழகுடையவன். பார்வதியே! கேட்பாயாக.

11. இன்னவன் செங்கை தன்னில் இலகிடும் விஷ்ணு ரேகை
மன்னர்பூ சிதமு மாவன் மாற்றூனை லகுவில் வெல்வன்
தன்னினத் தவரைக் காப்பன் தனமது பெருக்குஞ் செய்வன்
முன்திருப் பணியுஞ் செய்வன் முயற்சியாய் வாழ்வான்
[மாதே.

11. இவனது கைகளில் விஷ்ணு ரேகை பொருந்தியிருக்கும். அரசர்களால் மதிக்கப்படும் தன்மையும் உள்ளவன். பகைவனை எளிதில் வெற்றி கொள்ளுவான். தன் உறவினர்களைக் காப்பான். செல்வத்தை விருத்தி செய்வான். உயர்ந்த கோயில் திருப்பணிகள் இயற்றுவான். தன் முயற்சியால் பொருள் சம்பாதித்து வாழ்ந்திருப்பான்; தாயே!

12. இன்னவன் துணைவர் தம்மை இயம்புவோ முன்னோர்
[சேதம்
கன்னிகை யொருத்தி தீர்க்கம் கழறுவா ரத்திரி தாமும்
என்னகா ரணத்தி னுலே இவன துணை யாண்பால் சேதம்
பொன்சனி லாபம் நிற்கப் புகன்றன மந்தத் தோடம்.

12. இவன் உடன் பிறந்தார்களைப் பற்றிச் சொல்லுவோம். இவனுக்கு மூன்பிறந்தவர் நஷ்டமாவர். சகோதரி யொருத்தி தீர்க்கமாக விருப்பான். அத்திரி முனிவர் சொல்லுவார். என்ன காரணத்தினுல், இவன் சகோதரர் நஷ்டமாவர்? குருவும் சனியும் லாப ஸ்தானவாகிய மீனத்தில் தங்கியிருப்பதால் சகோதர தோஷம் கூறினேம்.

13. மங்கையு மெவ்வார் தீர்க்க மறிவிப்பீ ரந்தச் சங்கை
திங்களும் லாபம் நிற்கத் தீர்க்கமாங் கன்னி தானும்
நங்கையின் குணத்தைச் சொல்வீர் நவின்றிடாள் வார்த்தை
[தானும்
சங்கையா லுரைமை யாகும் தாய்துணை வறுமை மெய்தும்.

13. சகோதரி எங்ஙனம் தீர்க்கமாக விளங்குவாள்? அந்தச் சந்தேகத்தை விளக்குங்கள். சந்திரன் லாபஸ்தான மாகிய மீனத்தில் தங்கியிருப்பதால் சகோதரி தீர்க்கமாவள். இவன் இவ்வை சகோதரியின் குணத்தைச் சொல்லுவீர். பேசமாட்டாள். ஊமையாவள். இவள் தாயின் சகோதரன் தரித்திர மடைவான்.

14. சுதர்களு மாண்பா லொன்று தோகையு மவ்வார் தீர்க்கம்
முதுமையாய்க் குடும்ப மேற்பள் வித்தகி யூக சாலி
துதிபாக்ய முடைய ளாகும் சாற்றினேம வயது தீர்க்கம் –
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

14. அவளுக்கு ஆண் மகன் ஒருவனும், பெண் ஒருத்தியும் பிறந்து தீர்க்கமாவர். முதிர்ந்த அநுபவத்துடன் குடும்பத்தை ஏற்பாள். ஊக முடையவள். பால், தயிர் பாக்கிய முள்ளவள். தீர்க்கமான வயதுடைய வள் என்று கூறினேம். முனிவர்களைக் காக்கின்ற அம்பிகையே! கேட்பா யாக.

15. கன்னிகை பூமை யாகக் கலந்தகா ரணங்க ளென்ன
முன்சென்ம வினையாந் தாயே மொழிகுவீ ரந்தச் சங்கை
இன்னவள் பூர்வஞ் சொல்வோம் இருடிவா முருணை நாட்டில்
மன்னர்தங் குலமு தித்து வளமுள குடும்பி யாகி;

15. இந்தப் பெண் ஊமையாக இருப்பதற்குக் காரணம் என்ன? தாயே! அது முற்பிறப்பில் ஏற்பட்ட தீவினைப் பயனும். அந்தத் தீவினை என்ன வென்று கூறுங்கள். இவள் முற்பிறப்பைச் சொல்லுவோம். முனி வர்கள் வசிக்கின்ற திருவண்ணாமலையில், அரச மரபினளாய்ப் பிறந்து, செழிப்புள்ள குடும்ப முடையவளாய்;

16. மாதுவும் வாழு நாளில் வந்தோர் வினையைக் கேண்மோ
தீதாக வார்த்தை யொன்று செப்பினுள் நாத்தி பேரில்
ஓதின வார்த்தை யாலே ஒதுக்கினு ரினத்தோர் தாமும்
காதலி வருத்த முற்றுக் கழறின சாபங் கேளாய்.

16. இவள் வாழ்ந்துக் கொண்டிருந்த காலத்தில், ஏற்பட்ட தீவினை யைக் கேளுங்கள். தன் நாத்தியைப் பற்றிக் கெட்ட வார்த்தை யொன்று சொன்னாள். அந்த வார்த்தையைக் கேட்டு, நாத்தியின் கணவன் வீட்டோர் அவளை விலக்கினர். அவள் வருத்த மடைந்து கூறிய சாபத்தைக் கேளுங் கள்.

17. பின்சென்மந் தோன்றி யேதான் பேச்சது யில்லா தாகி
என்போலே துணைப்பெ ணின்றி எய்துஞ்சக் களத்தி
[யொன்று
துன்மையாய் வாழ்வாய் நீயும் செப்பியே தெருத்தாள்
[விட்டுக்
கன்னியுஞ் சென்று ளென்றேரும் கலந்தது வந்தச் சாபம்.

17. மறுபிறப்பில் பேச முடியாத ஊமையாகப் பிறந்து, என்னைப் போன்ற சகோதரி யில்லாமல், சக்களத்தி யொருத்தியை யடைந்து, துன்பத் துடன் வாழ்வாய் என்று சொல்லித் தெரு மண்ணை வாரி யிறைத்து விட்டு அவள் சென்றாள் என்று கூறினேம். அந்தச் சாபம் இவளைச் சேர்ந்தது.

18. ஆகையா லிச்சென் மத்தில் அணுகிடும் நாத்தி சாபம்
தோகையும் ஊமை யாகும் சிலசேதி பின்பால் சொல்வோம்
போகபாக் கியங்க ளேற்பள் புத்திரர் யோக வான்கள்
பாகமாய்த் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

18. ஆகையினால், இப் பிறப்பில், நாத்தியின் சாபம் இவளைத் தொடரும். இவள் ஊமையாவள். இவளைப் பற்றிய இன்னுஞ் சில விவரங்களைப் பிற்பாகத்தில் கூறுவோம். போகங்களை யநுபவிப்பாள். இவள் புத்திரர் யோக முடையவர்களாக விளங்குவர். தவங்களைப் புரியும் பார்வதியே! கேட்பாயாக.

19. பாலகன் மணத்தின் காலம் பகருவோ மிருபா னுறுள்
நீலியுங் கீழ்ப்பால் நேரும் நுவலுவோ மவள்கு ணத்தைச்
சீலியாம் விரத மேற்பள் சனவுப காரி யாவள்
ஞாலமேல் நல்லோ ளாவள் நாயகி சிவந்த மேனி.

19. ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இருபத்தாறும் வயதுக்குள், இவனுருக்குக் கிழக்கிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் குணத்தைச் சொல்லுவோம். ஒழுக்க முள்ளவள். விரதங்களை ஏற்பாள். மக்களுக்கு உதவி புரியும் இயல்பினளாக விளங்குவாள். உலகில் நல்லவளாக இருப்பாள். சிவந்த மேனியள்.

20. புண்ணிய மனத்த ளாகும் புருடன்தன் மனத்துக் கேற்றோள்
கண்ணிய குடும்ப மேற்பள் கேவல மணுகாச் சித்தம்
தண்மையாய்ப் பொறுமை சாலி சாதமு மன்பா யீவள்
அண்ணலைப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

20. நல்ல மன முடையவள். கணவன் மனத்துக்கு ஏற்றவள். மதிப்பான குடும்பத்தை ஏற்றுக் கொள்ளுவாள். அற்ப குணங்க ளடையாத மனத்தை யுடையவள். பொறுமை யுள்ளவள். வீடு தேடி வந்தவர்க்கு அன்புடன் உணவளிப்பாள். சிவபெருமானைப் பூஜை செய்கின்ற பார்வதியே! கேட்பாயாக.

21. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மாண்பா லொன்று
சுத்தமாய்ப் பெண்பால் ரெண்டு செப்புவோம் தீர்க்க மாகக்
குற்றமா மொன்று வென்றேரும் கூறுவோம் பின்பால் சேதி
சித்தசன் தனையெ ரித்த தேவியே கேட்டி டாயே.

21. புத்திர பாக்கியத்தைப் பற்றிச் சொல்லுவோம். ஆண் மகன் ஒருவன், பெண்கள் இருவர். இவர்கள் மூவரும் தீர்க்கம் என்று கூறுவோம். ஒரு குழந்தை பிறந்து சேதமாகும் என்று சொல்லுவோம். மன்மதனை எரித்த சிவபெருமானின் பத்தினியே! கேட்பாயாக.

22. அன்னையின் குணத்தைச் சொல்வோ மழகுளாள் பொறுமை [சாலி
தன்னினத் தவரைக் காப்பள் சாதமு மன்பா யிவள்
பொன்பணி சேர்ப்பா ளாகும் பூவையும் யோக சாலி
தன்வரன் மனத்துக் கேற்றோள் சாந்தமா மென்று [சொல்வோம்.

22. தாயின் குணங்களைச் சொல்லுவோம். அழகுடையவள். பொறுமை யுள்ளவள். தன் உறவினர்களைக் காப்பாள். வீடு தேடி வந்தவர்கட்கு அன்புடன் உணவளிப்பாள். செல்வம், ஆபரணங்கள் இவற்றைச் சேர்ப்பாள். அதிர்ஷ்ட முடையவள். கணவன் மனத்துக்கு உகந்தவள். சாந்த குண முடையவள் என்று கூறுவோம்.

23. முன்கோபங் கொஞ்ச முண்டு மொழியது சுகமே யாகும்
பின்னமில் லாத தேகி பொருந்திடும் பித்த வாயு
அன்னியர் குற்றம் சொல்லாள் அடிசிலுக் கினிய ளாகும்
தன்துணை யாண்பா லொன்று தையல ரிருவ ரென்றேரும்.

23. சிறிது முன் கோப முண்டு. சுகமாகப் பேசுவாள். குற்ற மில்லாத உடலுடையவள். இவள் சரீரத்தில் பித்தவாயு பொருந்தி யிருக்கும். அயலார் குற்றத்தைக் கூறாதவள். உணவு சமைப்பதில் இனியவள். இவளுக்குச் சகோதரன் ஒருவனும், சகோதரிகள் இருவருமாவர் என்று கூறுவோம்.

24. மாதுரு பூர்வந் தன்னை யறைகின்றே மினிமே லாக
ஓதுரு தலத்தி லேதான் உதித்தனள் வைசியச் சேயாய்ப்
போதன முடைய ளாகிப் புகழ்ச்சியாய் வாழும் நாளில்
நீதாக வந்த ஆழைச் செப்புவோந் தாயே கேளும்.

24. இனிமேல் தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். ஒரு ஊரில் வைசிய குலத்தவளாகப் பிறந்தாள். மிக்க செல்வ முடையவளாய், சீர்த்தி

புடன் வாழ்கின்ற காலத்தில், இவளுக்குத் துன்பத்தைத் தருவதற்காக வந்த தோஷத்தைச் சொல்லுவோம்; கேளுங்கள், தாயே!

25. மறையவர் மதலைக் காக வாவின்பா லிவளைக் கேட்கக்
குறையான வார்த்தை சொல்லிக் கொடாமலே சென்ற
[ளென்றும்
உரைசெய்வார் மறையோர் தாமும் உதிக்கும்பின் சென்மந்
[தன்னில்
பிறவாதே சுதர்கள் தாமும் பிறக்கினுந் தீதே யாகும்.

25. அந்தணர் ஒருவர் தன் புதல்வனுக்காகப் பசும்பால் வேண்டுமென்று துன்பத்துடன் இவளைக் கேட்க, இழிவாகப்பேசி, கொடுக்காமல் சென்றுவிட்டாள் இவள், என்ற சொன்னேம். உடனே அந்தணர் சொல்லுவார். வரும் பிறவியில் உனக்குப் புதல்வர்கள் தோன்றார். பிறந்தாலும் நஷ்டமாவர்.

26. சொல்லியே சென்ற ரென்றும் சேர்ந்தது வந்தச் சாபம்
புல்லியோர் சாப மொன்று புக்கிற்று மாதுக் கேதான்
வல்லியு மந்தி யத்தில் வயிர்வேதை தன்னுல் மாண்டு
எல்லையை யளந்தோன் மைந்தன் எழுதிட வந்தா
[ளென்றும்.

26. என்று சொல்லிச் சென்றார் எனக் கூறினேம். அந்தத் தோஷம் இவளை யடைந்தது. ஏழையோர் சாபம் ஒன்றும் இவளைச் சேர்ந்தது. இவள் தனது கடைசிக் காலத்தில், வயிற்று நோயினுல் மரணமடைந்து, உலகங்களை அளந்த திருமாலின் புதல்வராகிய பிரமதேவனுல் மீண்டும் படைக்கப்பட்டு, இப்பிறப்பில் பிறந்தாள் என்று சொன்னேம்.

27. முன்சென்ம சாபத் தாலே வுதித்தசேய் நட்ட மாகும்
தென்முனி புகலு கின்றார் சாதக னெவ்வார் தீர்க்கம்
மன்னவன் தத்துச் சென்ற னுகையால் தீர்க்க சீவி
கன்னிகை வாய்ப்பேச் சின்றிக் கூறினேந் தீர்க்க
[மென்றும்.

27. முற்பிறப்பில் ஏற்பட்ட சாபத்தினுல், பிறந்த குழந்தை நஷ்டமாகும். அகத்திய முனிவர் கூறுகின்றார். ஜாதகன் எவ்வளவு தீர்க்கமாக வாழ்வான்? இவன் சுவீகாரம் சென்றான். அதனுல் தீர்க்கமாக வாழ்கின்றான். இவன் சகோதரி ஊமையாகித் தீர்க்கமுடன் வாழ்வாள் என்று சொன்னேம்.

28. பின்சென்மந் தில்லை கீழ்ப்பால் பேரூரில் சத்ரிய சேயாய்
இன்னவ ளுதிப்பா ளாகும் இயல்பான குடும்பம் பெற்றுப்
பொன்பொரு ளுடைய ளாகிப் பூவையும் வாழ்வா ளாகும்
கன்னென மொழியை யொக்கும் காதலி கேட்டி டாயே.

28. ஜாதகனின் தாய், மறு பிறப்பு, சிதம்பரத்திற்குக் கிழக்கில் உள்ள தொரு பெரிய ஊரில், க்ஷத்திரிய மரபினளாய்ப் பிறந்து, பொன், செல்வம் முதலானவைகளே யடைந்து, வாழ்ந்திருப்பாள். கரும்புபோல் இனிய சொற் களைப் பேசும் பார்வதியே! கேட்பாயாக.

29. முன்சென்மம் தந்தைக் கேதான் மொழிகின்றேம் விரிஞ்சி
[தன்னில்
துன்மதி செக்கான் வம்சம் தோன்றியே வறுமை யின்றி
அன்னியர்க் குதவி யாகி ஆபத்தைச் சிலர்க்குக் காத்தும்
பன்னுவோர்க் கன்ன மீந்து பவமது வில்லா னுகி;

29, தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். விரிஞ்சி நாட் டில், வாணிய வமிசத்தில் பிறந்து, தரித்திர மில்லாதவனுகி, அயலோர் பலருக்கு உதவிகள் செய்து, துன்பமடைந்த சிலரைக் காத்து, தன்னைப் புகழ்ந்தவர்கட்கு உணவளித்து, நிலையே யில்லாதவனுக வாழ்ந்து;

30. மறலியின் பதிக்குப் புக்கு மறையவன் வரையப் பட்டுத்
திருமக னுதித்தா னென்றேம் செப்புவோ மிவன்பின்
[சென்மம்
அரிகர தீர்த்தந் தன்னில் அருமறைக் குலமு திப்பான்
பிருகுமே தடுத்துச் சொல்வார் புனிதனிச் சென்மந் தன்னில்;

30. மரண மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இப்பிறப் பாகப் பிறந்தான் என்று சொன்னேம். இவன் மறு பிறப்பைச் சொல்லு வோம். ஹரிஹர தீர்த்தம் என்ற தலத்தில், அந்தணர் குலத்தவனுகப் பிறப் பான். பிருகு முனிவர் தடுத்துக் கூறுவார். இவன் இப்பிறவியில்;

31. என்னபுண் ணியங்கள் செய்தான் இயம்புவீர் முனியே
[நீர்தாம்
முன்னோருக் குதவி யாயும் மொழியதைக் காத்த லாலும்
அன்னவ னறத்தி லிச்சை ஆபத்தைச் சிலர்க்குக் காத்தும்
உன்னதத் தலங்கள் சென்றும் உறைந்தா லுதிப்ப னுகும்.

31. என்ன நல்வினைகள் செய்தான்? பெரியோர்கட்கு உதவிபுரிவ தாலும், சொன்ன சொற்களைக் காப்பதாலும், தருமத்தில் விருப்ப

மூடையவனுக விருப்பதாலும், துன்பமடைந்த சிலரைக் காத்தலாலும், உயர்ந்த புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரைசென்று வருவதாலும் மறு பிறவியில் அந்தணர் குலத்தில் பிறப்பான்.

32. உதித்தவன் பூர்வம் தன்னை உரைக்கின்றேம் தாயே கேளும்
நதிதனி லுயர்வ தான நற்சேது பதியி லேதான்
சதியிலாக் கங்கை சேயாய்ச் செனித்துமே வறுமை யின்றி
அதிதிகட் கன்ன மீந்து அரிபத்தி மிகவே கொண்டு;

32. ஜாதகன் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். தாயே! கேளுங்கள். தீர்த்தங்களில் உயர்ந்ததான சேது தீர்த்தக் கரையிலுள்ள ஊரில், குற்றமற்ற வேளாளர் குலத்தவனுகப் பிறந்து, தரித்திரமில்லாமல், விருந்தினர்களுக்கு விரும்பி யுணவளித்து, திருமால் பக்தி மிகுதியாகக் கொண்டு;

33. தாகப்பந் தலும மைத்துச் சண்டன்தன் பதிக்குப் புக்கு
ஆகமன் வரையப் பட்டு அருளுவா னிந்தப் பாலன்
போகபாக் கியங்க ளேற்பன் பிதாமேலாய் வாழ்வா னுகும்
ஊகைவான் சல்யங் காணுன் உலகினில் வறுமை காணுன்.

33. தண்ணீர்ப் பந்தல் வைத்து, வாழ்ந்திருந்து, மரணமடைந்தான். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இப்பிறப்பில் இக்குலத்தவனுகப் பிறப்பான் இவன். போகங்களையும் செல்வத்தையு மடைவான். தந்தையினுஞ் சிறப்பாக வாழ்வான். சாமர்த்தியசாலி. கடனில்லாதவன். தரித்திரமின்றி வாழ்வான்.

34. பிறைபோலச் செல்வ மோங்கும் பேச்சதைக் காப்பா னுகும்
கருமகா லங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர்தாம்
இருவாறு வாண்டுக் குள்ளே இவன்தந்தை யரிட்ட மாகும்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

34. இவனுக்கு வளர்பிறைச் சந்திரன்போல, நாளுக்கு நாள் செல்வம் உயரும். முனிவரே! நீங்கள், ஜாதகனுக்குக் கருமதசை வரும் காலத்தைச் சொல்லுங்கள். பன்னிரண்டாம் வயதுக்குள், இவன் தந்தை மரணமடைவான். பெரு வயிற்றையுடைய விநாயகரைப் புதல்வராக வடைந்த புண்ணியவதியே! கேட்பாயாக.

35. ஆறஞ்சு மூன்று வாண்டில் அன்னைக்குக் கண்ட மாகும்
பாரிக்கு வறுபா னுண்டில் பகருவோங் கண்டந் தானும்
மாரனுக் கறுபா னேழில் மகரமா தத்தி லேதான்
கூறுவோ மார கங்கள் கோதையே கேட்டி டாயே.

35. முப்பத்து மூன்றும் வயதில் தாயின் மரணம் ஏற்படும். மனை விக்கு இவனது அறுபதாம் வயதில் கண்ட முண்டாகும் என்று சொல்லு வோம். ஜாதகனுக்கு அறுபத்தேழாம் வயதில், தை மாதம் மரணம் ஏற் படும் என்று சொல்லுவோம். தாயே ! கேட்பாயாக.

36. பின்சென்மங் கடையூர் தன்னில் பிறப்பனுஞ் சௌராட்ர [வம்சம்
பொன்பொரு ளுடைய னுகிப் பூமியில் வாழ்வா னுகும்
இன்னவன் சென்ன காலம் ரேவதி முன்னுள் தன்னில்
முன்பாத மென்று சொல்வோம் முதல்வியே கேட்டி டாயே.

36. மறு பிறப்பு, திருக்கடையூரில், சௌராஷ்ட்ர மரபினனுகப் பிறப்பான். பொன்னும், செல்வமும் உடையவனுகி, உலகில் வாழ்வான். இவன் பிறப்புக் காலம், உத்திரட்டாதி முதற் பாதமாகும் என்று சொல்லு வோம். உலகங்களுக்கு முதல்வியே ! கேட்பாயாக.


37. காரியின் தசையி ருப்புக் கழறுவோ மீரெட் டாண்டும்
தீரமாய்த் திங்க ளொன்பான் செப்புவோம் பூர்வ பாகம்
கூறுவோம் பின்பால் தன்னில் குழவியின் சேதி யாவும்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

37. பிறப்புக் காலத்தில் சனி தசை இருப்பு; பதினெரு வருஷங் களும் ஒன்பது மாதங்களும் ஆம். இங்ஙனம் முதல் பாகத்தைக் கூறுவோம். ஜாதகனின் மற்றச் செய்திக ளனைத்தையும் பிற்பாகத்தில் சொல்லுவோம். சுப்பிரமணியக் கடவுளைப் புதல்வராக வடைந்த பார்வதியே ! கேட்பாயாக.

ஜாதகம் 77

1. நந்திபுஞ் சென்ன மாக ரவிபுகர் புந்தி தங்க
மந்திரி விரயம் புக்க மங்கள னேழில் தங்கச்
சந்திரன் நவத்தி லேறச் சனிகேது தசம மாக
மந்தர் கயிறு நாலில் வருவதால் பலன்சொல் வீரே.

1. விருஷபம் லக்கினமாகவும், சூரியன் சுக்கிரன் புதன் இலக்கினத்திலும், குரு விரய ஸ்தானமாகிய மேஷத்திலும், செவ்வாய் ஏழாமிடமாகிய விருச்சிகத்திலும், சந்திரன் ஒன்பதாமிடமான மகரத்திலும், சனி கேது பத்தாமிடமாகிய கும்பத்திலும், ராகு நாலாமிடமான சிம்மத்திலு மிருப்பதால் ஏற்படும் பலனைச் சொல்லுவீர்.



2. மங்கையுங் கேட்கும் போது வதிட்டருங் கூறு கின்றார்
இங்கிது வாண்பால் சென்மம் இல்லமுங் கீழ்மேல் வீதி
தங்கிடும் வடக்கு வாசல் தந்தியு மாரி மேற்கில்
அங்கது சிறுவு ராகும் அறைகின்றேனுந் தாயே கேளும்.

2. பார்வதி கேட்கும்போது வசிஷ்டர் சொல்லுகின்றார். இஃது ஆண் பிறப்பு. பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் வடக்கு நோக்கியுள்ள வாயிலை யுடையது. விநாயகர் கோயிலும், மாரியம்மன் கோவிலும் மேற்குப் பக்கத்திலுள்ளன. சிறிய ஊர் என்று சொல்லுகின்றேம். தாயே! கேளும்.

3. வன்னிய குலமு திப்பான் வருவனே யாருஞ் சென்மம்
அன்னையின் தந்தை யோகம் அவன்துணை களத்ர புத்ரர்
இன்னவன் யோகச் சேதி இயம்புவே மூன்பின் சென்மம்
உன்னதை வானே பெற்ற உத்தமி கேட்டி டாயே.

3. ஜாதகன் வன்னிய குலத்தில், ஆறுவது பிறப்பாகப் பிறப்பான். தந்தை, தாய், உடன்பிறந்தார், மனைவி, புத்திரர் இவர்களுடைய யோகச் செய்திகளையும், மூற்பிறப்பு, மறு பிறப்பு இவைகளையும் கூறுவோம். உயர்ந்த வியாசனைப் பெற்ற புண்ணியசாலியே! கேளும்.

4. தந்தையின் துணையா ணென்று சத்தியு மவ்வா றாகும்
நொந்திடு மற்ற தெல்லாம் நுவன்றவா ணிளையோ னாகும்
அந்தவன் சேதி சொல்வோம் அரிநிறம் சமதே கத்தன்
கந்தன்மேல் பக்தி கொள்வன் கல்வியு மற்ப மாகும்.

4. தந்தையைப் பற்றிச் சொல்லுவோம். ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் இருப்பர். மற்றவர் நிலையார். கூறப்பட்டவன் தந்தைக்கு இளையவன். அவனுடைய செய்திகளைச் சொல்லுவோம். கருமை நிறமுள்ள வன். சமமான உடலமைப்பைப் பெற்றவன். முருகக் கடவுள் மீது பக்தி யுள்ளவன். அற்பமான கல்வி யுள்ளவன்.

5. பயிர்த்தொழில் புரிவா னாகும் பலசகா யங்கள் செய்வன்
அயலார்பொன் னிச்சை யில்லான் ஆவுகள் விருத்தி யுண்டு
பயமிலான் தந்திர வார்த்தை பாருகள் சேர்ப்பா னாகும்
செயஞ்செய்வ னெடுத்த கேலை செலவுக ளதிகஞ் செய்யான்.

5. பயிர்த்தொழில் செய்து வருவான். பல உதவிகள் செய்வான். பிறருடைய பொருளின் மீது ஆசை வைக்கமாட்டான். பசுக்கள் விருத்தியாம், பய மில்லாதவன். தந்திரமாகப் பேசுவான். வீண நிலங்களை விருத்தி செய்வான். எடுத்த வேலையை திறமாகச் செய்து முடிப்பான். அதிகச் செலவு செய்யாதவன்.

6. துணைவன்சொல் கடவா னாகும் சோம்பலுங் கொஞ்ச [முண்டு
பணையோர்கள் விருத்தி செய்வன் பதரினிற் செல்லா னாகும்
கனமுள குடும்பி யாவன் காதலி யொன்றே தீர்க்கம்
அனையவே துலாமோ ணத்தில் அணுகிடு மென்று [சொல்வோம்.

6. சகோதரன் சொல்லைத் தட்டாதவன். சிறிது சோம்ப லுள்ளவன். பண்ணைகளையும் ஏர்களையும் விருத்தி யாக்குவான். கெட்ட வழிகளில் செல்லாதவன். செழிப்புள்ள குடும்ப மேற்படும். மனைவி ஒருத்தியே தீர்க்கமாயிருப்பாள். அவள் துலாராசி, திருவோண நட்சத்திரத்தில் பிறப்பாள்.

7. மதலிக ளெழுவர் தோன்றும் மரித்திடுஞ் சிலவே
[யென்றேரும்
சதமுட ணெண்பால் மூன்று சத்தியு மொருவர் தீர்க்கம்
அதிபன்தன் னுடனே வாழ்வன் வயதுமே தீர்க்க மெய்தும்
இதுவிவ ரங்கள் பின்னுல் இயம்புவோங் தாயே கேளும்.

7. ஏழு குழந்தைகள் தோன்றும். அவைகளில் சில நிலையா. மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும் நீண்ட ஆயுளுடனிருப்பர். இவன் சகோதரருடன் வாழ்ந்து வருவான். தீர்க்கமான ஆயுளுண்டு. விவரங்களைப் பிற் பகுதியில் சொல்லுவோம்; தாயே! கேளுங்கள்.

8. தந்தையின் குணத்தைச் சொல்வோம் தாட்சிண்யன்
[பொறுமை சாலி
தந்தமுந் தரள மொக்கும் சலித்தோர்க்கு உதவி செய்வன்
தன்பந்து மதிக்க வாழ்வன் தானிரு நிறத்த னுகும்
தந்தியி னருளு மோங்கும் சமதேக னென்று சொல்வோம்.

8. தகப்பனின் குணத்தைச் சொல்லுவோம். தாட்சிண்ய முடையவன். அடக்கமானவன். முத்துப் போன்ற பற்களுள்ளவன். நொந்தவர்களுக்கு உபகாரி. சுற்றத்தார் மெச்ச வாழ்ந்து வருவான். கருமை கலந்த சிவந்த நிறமுடையவன். விநாயகரின் அருள் ஏற்படும். சமமான சரீரமுள்ளவன் என்று சொல்லுவோம்.

9. கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன் கரமதில் கமல ரேகை
மருவிடும் பித்த சூடு வண்டிவா கனமு மேற்பன்
பொரைசொலா னிளம னத்தன் புகழ்ந்தோரை யா தரிப்பன்
தரையினு லுய்வா னுகும் சாதமுங் குறைவு றுதான்.

9. கடன் வாங்குவான். அதைத் தீர்த்து விடுவான். கையில் தாமரை ரேகையுண்டு. பித்த சூடுடையவன். வண்டி, முதலிய வாகனங்களுள்ளவன். பொய் சொல்லாதவன். இளகிய மனமுள்ளவன். துதி செய்தவர்களைக் காப்பாற்றுவான். பூமியில் விருஷி முதலிய செய்து, அதனால் ஜீவித்திருப்பான். அன்னத்துக் குறைவில்லாதவன்.

10. பால்தயிர் பிரிய னுகும் பாருகள் சேர்ப்ப னுகும்
காலத்தை யறிந்து வாழ்வன் கருதிடான் கட்டு வார்த்தை
வேலன்மேல் பக்தி கொள்வன் வெஞ்சினம் வெளிக்காட்
[டாதான்
சேலன்போல் வெளிம யக்கன் சிந்தையில் கலக்க மாகும்.

10. பால், தயிர் இவற்றில் விருப்பமுள்ளவன். விலைநிலங்களை விருத்தி செய்வான். வரும் காலத்தை முன் கூட்டி யறிந்து வாழ்க்கையை நடத்துவான். பிறர் மீது இல்லாத பழிகளைச் சொல்லாதவன். வேலேந்திய முருகக் கடவுள் மீது பக்தியுள்ளவன். கொடிய கோபத்தை வெளிக்காட்டாதவன். ஒழுக்கமுள்ளவன் போல் தோற்ற முள்ளவன். மனத்தில் சஞ்சலமுள்ளவன்.

11. கன்னிகை சேதி பின்பால் கழறுவோம் தாயே யாங்கள்
இன்னவன் பூர்வம் தன்னை இயம்புவோம் தாயே கேளும்
கன்னியா குமரி தன்னில் கலந்தனன் சேடர் வம்சம்
தன்மனை மதலை யுண்டாய்த் தனமிகப் பெருக்க மாகி;

11. இவனுடைய மனைவியின் செய்திகளைப் பிற்பாகத்தில் கூறுவோம்; தாயே! இவனுடைய முற் பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். தாயே! கேளுங்கள். கன்னியா குமாரியில், சேடர் மரபில் தோன்றி, மனைவி, மக்களை யடைந்து, செல்வவாளுக வாழ்ந்து வந்து;

12. பெரிதான தலங்கள் சென்று பெரியோர்க்கு வன்ன மீந்து
மறலியின் நகரஞ் சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருவிலா வுதித்தா னென்றேரும் செப்பின குணத்தா னுக்கு
வருவனே யிந்தப் பாலன் மைந்தனின் குணத்தைச்
[சொல்வோம்.

12. புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று, பெரியோர்களுக்கு அன்னமளித்து, பிறகு, இயமபுரம் அடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, நீதிலா விக்குலத்தில் பிறந்தான் என்றேரும். இப்படிச் சொல்லிய குணமுள்ளவனுக்கு ஜாதகன் பிறப்பான். ஜாதகனின் குணத்தைச் சொல்லுவோம்.

13. பாலக னிருசி வப்பன் பலகலை யுணர்வா னுகும்
மால்மக ளெப்ப தாகும் மன்னனால் தொழிலு மேற்பன்
சிலவான் முன்கோ பத்தன் செய்ந்நன்றி மறவா னுகும்
நூலங்கள் விருத்தி செய்வன் நயப்புடன் வார்த்தை யுண்டு.

13. ஜாதகன் கருமை கலந்த சிவப்பு நிற முள்ளவன். பல கலைகளைக் கற்றறிந்தவன். திருமாலின் மகளை மன்மதனைப் பொத்த அழகியே சரீரமுள்ளவன். அரசாங்க உத்தியோகம் ஏற்று நடத்துவான். ஒழுக்க முள்ளவன். முன் கோப முடையவன். செய்த உபகாரத்தை மறக்காத குணவான். விளைநிலங்களை விருத்தி செய்வான். நயமாகப் பேசும் தன்மையன்.

14. அன்னிய பாடை கற்பன் அடாவடி கொஞ்ச முண்டு
பொன்பொருள் புதையல் வைப்பன் புகழ்ந்தோரை யாத [ரிப்பன்
கன்னியர் மோக னுவன் காலாட்க ளுடைய னுகும்
சொன்னசொல் காப்பா னுகும் சோம்பிடான் காரி யத்தில்.

14. வேறு பாஷை கற்றுணர்வான். அடாவடி சிறிதுள்ளவன். பொருள், பொன் இவைகளைப் பூமியில் புதைத்து வைப்பான். தோத்திரம் செய்தவரைக் காப்பான். பெண்களின் மீது மைய லுடையவன். வேலை யாட்க ளுள்ளவன். சொன்ன வார்த்தைகளைத் தவற விடாதவன். காரியத் தில் சோம்ப லில்லாதவன்.

15. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளந்தச் சங்கை
பாகனும் பரிதி சென்மம் பார்மகன் ஏழில் திங்கத்
தோகையே தர்ம கர்மன் தசமத்தில் நிற்ப தாலே
ஊகயோ கங்க ளொன்று உயர்பேரி யோக மொன்று.

15. யோகங்கள் எப்படிச் சொன்னீர்? அந்தச் சந்தேகங்களைத் தெளி வியுங்கள். சூரியனும், புதனும் ஜன்ம லக்கினமாகிய விருஷபத்திலும், பூமிகாரகனுகிய செவ்வாய், ஏழாமிடமாகிய விருச்சிகத்திலும், தர்மகர் மாதிபதியாகிய சனி, பத்தாமிடமாகிய கும்பத்தில் ஆட்சியாகவும் இருப் பதால், தாயே! "ஊக யோகங்கள்" என்ற ஒன்றும், உயர்ந்த "பேரி யோகம்" ஒன்றும்;

16. சொல்லிலே மிரண்டு யோகம் துரைராசர் தம்மா லுய்வன்
எல்லோக ளதிகஞ் சேர்ப்பன் ஏவலா ளுடைய னுகும்
வல்லவ னுகி வாழ்வன் வடதிசை யரசன் போலே
புல்குவா னிந்தப் பாலன் பராசரு மறித்துச் சொல்வார்.

16. ஆகிய இரண்டு யோகங்கள் ஏற்படும் என்று கூறினேம். அரசரால் உத்தியோகம் அடைந்து வாழ்வான். பூமிகள் மிகுதியாகச் சேர்ப்பான். வேலையாட்கள் உடையவன். சாமர்த்தியசாலியாக வாழ்ந்தி ருப்பான். குபேரன் போல் புகழ் பெற்று வாழ்வான், இந்த ஜாதகன். பராசர முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார்.

17. எந்தக்கா லத்தில் ராச யோகமு மெய்துஞ் சொல்வீர்
வந்ததன் மூவெட் டாண்டுள் மருவிடும ராச் யோகம்
பிந்தியு மன்பான் மூன்று வாண்டுக்கு மரசு செய்வன்
கந்தனே யீன்ற மாதே கழறின மொழிகுன் றுது.

17. எந்தக் காலத்தில் ராஜ யோகம் ஏற்படும் என்று சொல்லுங்கள். ஜாதகனுடைய இருபத்து நான்காம் வயதுக்குள் ராஜ யோகம் ஏற்படும். ஐம்பத்து மூன்றும் வயது வரையில், அரசன் போல் புகழ் பெற்று, ராஜ்யாதிகாரம் ஏற்று நடத்துவான். முருகக் கடவுளே உலகத்துக் களித்த தாயே! கூறிய சொற்கள் தவரு.

18. இவனுடைத் துணைவர் தம்மை இயம்பமுன் கன்னி யொன்று
அவளுமே தீர்க்க மெய்தும் அணுகாது மற்ற வெல்லாம்
தவசியே யிவன்பின் னுலே தையல ரொன்று தீர்க்கம்
பவமாகு மற்ற வெல்லாம் பகருவீ ரந்தச் சங்கை.

18. ஜாதகனுடைய உடன் பிறந்தார்களைச் சொல்லுங்கால், சகோதரி ஒருத்தி யென்றும், அவள் தீர்க்கமா யிருப்பாள் என்றும் சொல்லுவோம். மற்றவை நிலையா. இவனுக்குப் பின்னுல் பிறந்த சகோதரி ஒருத்தியும் நீண்ட ஆயுளுள்ளவள். மற்றவை நிலைத்திரா. அதற்குரிய தோஷத்தைச் சொல்லுங்கள்.

19. அரவுமே நாலில் தங்கி அந்தணன் பார்ப்ப தாலே
மருவாது துணையா ணுந்தான் மாரன்தன் மணத்தைச் [சொல்வோம்
இருபது வாண்டு தன்னில் இவனுக்குப் பாரி வாய்க்கும்
வருங்கன்னி தென்பால் தன்னில் மாதுரு வர்க்கம் நேரும்.

19. நான்கா மிடமாகிய சிம்மத்தில் ராகு இருந்து, அந்த இடத்தை குரு மேஷத்தி லிருந்து பார்ப்பதால் உடன்பிறந்த சகோதரன் இருக்க மாட்டான். ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இருபதாம் வயதில் இவனுக்கு மனைவி வாய்ப்பாள். அவள் அன்னை வர்க்கத்தவள். தெற்குத் திசையிலிருந்து வருவாள்.

20. மாதுவின் குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனி யாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உண்மையா மனத்த ளாகும்
காதலி யோக சாலி [1]கார்க்கோடன் போலே கோபம்
பாதக மனமில் லாதாள் பர்த்தாவின் மனத்துக் கேற்றுேள்.

20. மனைவியின் குணத்தைச் சொல்லுவேன். மாந்தளிர் போன்ற மென்மையான சரீர முள்ளவள். இனிமையாகப் பேசுவாள். உண்மை பொருந்திய மன முள்ளவள். அவள் அதிர்ஷ்ட முடையவள். விஷமுள்ள பாம்பு போலக் கோப முண்டு. கெட்ட மன மில்லாதவள். கணவன் மனத்துக் கேற்றவள்.

---

1. பாம்பு

21. பொன்பணி யதிக மேற்பள் புகழ்தோரை யாத ரிப்பள்
பின்னமில் லாத தேகி பால்பாக்ய முடைய ளாகும்
அன்னம்போல் சாய லொக்கும் அடியார்க்கு வன்ன மீவள்
கன்னிகை தீர்க்க சிவி காதலி கேட்டி டாயே.

21. பொன்னுபரணங்கள் மிகுதியாக அடைவாள். புகழ்ந்தவர்களை ஆதரிக்கும் குண முள்ளவள். ஊன மில்லாத உடலுடையவள். புரல் பசு பாக்கிய முடையவள். அன்னத்தைப் போன்ற நடை யழகி. பக்தர்களுக்கு அன்புடன் அன்ன மளிப்பாள். நீண்ட ஆயுளுள்ளவள். தாயே! கேளுங்கள்.

22. சுதர்களுங் காணு தாகும் தோன்றினுந் தீதே யாகும்
எதுவிதக் குற்றத் தாலே இயம்பினீ ரந்தச் சங்கை
புதல்வர்தா னத்தோன் புந்தி புகருடன் கூடி சென்ம
மதுநிற்கக் காரி பத்தி லணுகின பலத்தால் சொன்னேம்.

22. குழந்தைகள் இல்லாதவள். பிறந்திடினும் நிலையா என்று சொன்னேம். என்ன குற்றத்தால் புத்திர தோஷம் சொன்னீர். புத்திர ஸ்தானத்துக்கு (ஐந்தா மிடமாகிய கன்னிக்கு) உரியவனுன புதன், சுக்கிரனுடன் கூடி விருஷபத்தில் தங்கி யிருப்பதாலும், சனி பத்தில் ஆட்சியாக இருப்பதனுலும் சொன்னேம்.

23. பூருவ வினையுங் கொஞ்சம் பொருந்திற்றுப் பால னுக்குக்
கூறுவீ ரந்தச் சங்கை குழவியின் முன்சென் மங்கேள்
பாரினி லுயர்வ தான பட்சியின் மலிக்கு வுத்ரம்
வாரியி னேரந் தன்னில் வளமிலாச் சிறுவூர் தன்னில்;

23. முற்பிறவியில் செய்த தீவினையும் சிறிது எற்பட்டது, இந்த ஜாதகனுக்கு. அந்தத் தோஷங்களைச் சொல்லுங்கள். ஜாதகனின் முற்பிறவியைக் கேள். உலகில் உயர்ந்த திருக்கழுக்குன்றத்துக்கு வடக்கில் சமுத்திரத்துக்கு அருகி லிருக்கும் செழிப்பில்லாத ஒரு சிற்றூரில்;

24. கங்கையின் குலமு தித்துக் காசுகள் பெருக்க முண்டாய்
மங்கையு மதலை யுண்டாய் வாழ்நாளில் வினையைச்
[சொல்வோம்
நங்கையர்ம் விதவை தன்னை நாயகன் போகம் துய்த்து
அங்கது கருவு தங்கி அழித்தனன் பண்டி தத்தால்.

24. வேளாள வமிசத்தவனுகப் பிறந்து, செல்வங்களை மிகுதியாக அடைந்து, மனைவி மக்களுடன் வாழ்ந்து வரும் நாளில் எற்பட்ட தீவினையைச் சொல்லுவோம். ஒரு கைம் பெண்ணுடன் ஜாதகன் இன்ப மனுபவித்து, அதனுல் கரு எற்பட்டு, அதைப் பலவித ஔடதங்களால் போக்கினுன்.

25. இப்படி மூன்று செய்தான் எய்திற்று வந்தத் தோடம்
தப்பிதம் வேறு வொன்று சாற்றுவோர் தாயே கேளும்
ஒப்புட னுவின் கன்றை உறங்கவே செய்த தோடம்
மைப்புட னிரண்டு தோட மேவிற்று வென்று
[சொல்வோம்.

25. இவ்விதம் மூன்று முறை செய்தான். அந்தத் தோஷம் இவனை யடைந்தது. இது தவிர, வேறு ஒன்று சொல்லுகின்றோம், கேளுங்கள், தாயே! பசுவின் கன்றுக்குப் பால் விடாமல் கறந்ததனால் அது மரித்தது. அந்தத் தோஷம் ஒன்று; ஆக இரண்டு; இவனுக்கு ஏற்பட்டன, என்றும் சொல்லுவோம்.

26. அந்தியக் காலந் தன்னில் அவன்சுதர் யாவு மற்றுத்
தன்மனை மரண மாகிச் சஞ்சல மனத்த னுகித்
தென்திசைக் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
இந்தவ னுதிப்பா னுகும் எய்திடு முன்னூழ்த் தோடம்.

26. கடைசிக் காலத்தில் இவனுக்கு, குழந்தைகள், மனைவி இவர்கள் இறந்து மனக்கலக்கம் ஏற்பட்டு இறந்தான். பிறகு பிரமனால் படைக்கப் பட்டு, இப்பிறவில் பிறந்தான். முன் செய்த தீவினையும் இவனை யடைந்தது.

27. பாலர்க்குத் தோடஞ் சொன்னீர் பகருவீர் கிரிகை யொன்று
சாலவே மனைவி யோடு தணிகைக்கு வேழு கார்த்தி
சீலம்போல் சென்று வின்னேன் தேவனை யருச்சித் தேத்தி
ஏலவே கடைநாள் திங்கள் ஏழுபேர் பரத்துக் கன்னம்;

27. புத்திரர்க்குத் தோஷத்தைச் சொன்னீர். அதற்குச் சாந்தி யொன்று கூறுங்கள். இவன் மனைவியுடன் திருத்தணிகைக்கு, ஏழு கார்த்திகை ஆசார நியமங்களுடன் சென்று, அங்கிருக்கும் முருகக் கடவுளுக்கு அருச்சனை முதலியன செய்து, தொழுது, கடைசி மாதத்தில் ஏழு பரதேசிகளுக்கு அன்னம்;

28. தந்துபின் ரசதம் தன்னால் மைந்தனைப் போலே செய்து
முந்தின குலத்தோ ருக்கு விடங்கந்தம் தனமும் சேர்த்து
அந்தவ னிடத்துப் பின்பு அறுமுகன் விரதங் கொள்ள
வந்ததோர் வினைகள் நீங்கி மதலைகள் தோன்று மென்றோம்.

28. அளித்துப், பிறகு, வெள்ளியால் குழந்தைபோல் உரு ஒன்று செய்து, அந்தணருக்கு புஷ்பம், சந்தனம், பணம் இவைகளுடன் கொடுத்து, உள்ளூர் மீண்டு, ஆறுமுகனுக்கு உகந்த சஷ்டி விரதம் ஏற்க, ஏற்பட்ட தீவினைகள் நீங்கி, குழந்தைகள் தோன்றும் என்றோம்.

29. சொற்படி செய்யா ஞகில் சுதர்தோன்றூர் தோன்றில் தீதாம்
சொற்படி செய்வா ஞகில் தோன்றிடு மாண்பா லொன்று
மைப்படி பெண்பால் ரெண்டு வறைகின்றேரு தீர்க்க மாக
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் ரூது.

29. சொல்லியபடி செய்யாவிடில் குழந்தைகள் தோன்றூ. அப்படித் தோன்றினும் நிலையா. செய்தால் ஆண் குழந்தை யொன்றும், பெண் குழந்தை யிரண்டும், தீர்க்கமாக உண்டு என்று சொல்லுகின்றேரும். கங்கையைச் சடை முடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! சொன்ன சொற்கள் தவறூ.

30. மைந்தனி னன்னை சேதி யறைகின்றே மினிமே லாகச்
சிந்தையு நல்ல தாகும் சிறுத்தோர்க்குத் தாக மீவள்
சுந்தர மூடைய ளாகும் சோம்பிடா ளடக்க வார்த்தை
முந்தின கோப மேற்ப ஞண்மையா மனத்த ளாகும்.

30. இனி, ஜாதகனின் தாயின் செய்திகளைச் சொல்லுவோம். நல்ல மனமுடையவள். கஷ்டமடைந்தவருக்கு உதவுவாள். அழகுள்ளவள். சோம்பலில்லாதவள். பணிவு நிரம்பிய சொற்களைப் பேசுவான். முன்கோப மூண்டு. உண்மையான மனமுள்ளவள்.

31. குடும்பத்தை யாத ரிப்பள் குணமது நல்ல தாகும்
தடபுடல் செய்கை யுண்டு தன்துணை யாண்பா லிலந்து
விடவிழிப் பெண்பா லொன்று விளம்புவோம் பாவைக்
[கேதான்
அடைவுட னில்லந் தெற்கு அறைந்தன முனியே யாங்கள்.

31, குடும்பத்தைக் காப்பான். நற்குண முடையவள். ஆடம்பரச் செய்கைகளில் விருப்ப முள்ளவள். உடன் பிறந்தவர்களில் ஐந்து சகோதரரும், விஷம்போன்று கொடுமை நிறைந்த கண்களுடைய பெண் ஒருத்தியும் உண்டு என்று சொல்லுவோம்; முனிவரே! நாங்கள். அவளுடைய வீடு தெற்குத் திசையிலுள்ளது என்று கூறினேம்.

32. முன்னவள் இருந்த சென்மம் மொழிகின்றேருஞ் சிறுபாக்
[கத்தில்
கன்னிகை வைசியச் சேயாய்க் கலந்துமே சுகமுள்
[ளோளாய்ப்
பின்னேருக் குதவி செய்து பேதையும் வாழு நாளில்
தன்னுடை யில்லந் தன்னில் தங்கிற்று வடைக்க லாணும்.

32. இவளுடைய மூற்பிறவியைச் சொல்லுவோம். சிறுபாக்கத்தில், வைசிய குலத்தில் பிறந்து, சுகமுள்ளவளாகி, தாழ்ந்தவருக்கு உபகாரம் செய்து வாழ்ந்தவரும் நாளில், இவன் வீட்டில் ஒரு குருவி வந்து தங்கியது.

33. மாதுவு மதைக்க லேத்து மருவின கருவுஞ் சாகத்
தீதாக வந்தத் தோடம் சேர்ந்தது பாவைக் கேதான்
காதலிக் கிச்சென் மத்தில் காலேக ளுதிக்குந் தீதாம்
போதக வானே போலே புதல்வனு மொருவன் தீர்க்கம்.

33. இவன் அதனுடைய கூட்டைக் கலைத்தாள். அதன் முட்டை களும் உடைந்தன. அந்தத் தோஷம் வினையாக இவளைச் சார்ந்தது. அதனால் (ஜாதகனின் தாய்க்கு) இப்பிறவியில் குழந்தைகள் பிறந்தும் நிலையா. விநாயகனைப் போன்ற ஒரு புதல்வன் தீர்க்கமாக விருப்பான்.

34. இந்ததோர் சுதனு மெவ்வார் இயம்பினீர் தீர்க்க மாக
மூந்திய சென்மந் தன்னில் மூடிகன் கோட்டத் துக்கு
அந்தவள் தீப மொன்று அணுகின பலத்தி னுலே
மைந்தனு மொருவன் தீர்க்கம் மங்கையே கேட்டி டாயே.

34. இந்தப் பிள்ளை எப்படித் தீர்க்கமாயிருப்பான் என்றுரைத்தீர்? மூற்பிறவியில் மூஞ்சுறு வாகனத்தோராகிய விநாயகர் கோவிலில், அவள் ஏற்றிவைத்த தீபத்தின் பலத்தால் ஒரு மகன் தீர்க்கமா யிருப்பான். தாயே! கேளுங்கள்.

35. ஆறுறு விரண்டு ஆண்டில் அன்னைக்குக் கண்ட மெய்தும்
கூறுவோ மிவள்பின் சென்மங் குற்றுல நாட்டி லேதான்
பாரிய தனவா னுக்குப் பிறப்பளா மிக்கு லத்தில்
தீரமாய்த் தவங்கள் செய்யும் செல்வதி கேட்டி டாயே.

35. ஜாதகனின் மூப்பத்தெட்டாம் வயதில், தாய்க்கு மரணம் ஏற்படும் என்று சொல்லுவோம். அவள் மறு பிறவி, குற்றுலத்தில் மிகுந்த செல்வ வானுக்கு, இதே குலத்தில். பிறப்பாள். மிக்க தவங்கள் புரியும் பார்வதி தேவியே! கேளுங்கள்.

36. இருபது வொன்ப தாண்டில் எய்திடும் தந்தை கண்டம்
வருஞ்சென்மம் தணிகை மேற்பால் மருவிய பேரூர் தன்னில்
உறைகுவான் கங்கை சேயாய் உரைத்தது தப்பா தாகும்
கரிமத வானே பெற்ற காதலி கேட்டி டாயே.

36. ஜாதகனின் இருபத்தொன்பதாம் வயதில் தந்தைக்குக் கண்டம் உண்டு. மறு பிறவி திருத்தணிகைக்கு மேற்கில் ஒரு பெரிய ஊரில், வேளாளர் மரபினனுகப் பிறப்பான். சொன்ன சொற்கள் தவறு. விநாய கனேப் பெற்ற பார்வதியே! கேளுங்கள்.

37. பாலகன் மரண காலம் பகருவோ மன்பா னெட்டில்
சிலமா மகர மாதம் தேய்பிறை சட்டி தன்னில்
ஞாலமே லுடலம் வாடும் நவிலுவோ மிவன்பின் சென்மம்
ஆலங்கா டதனி லேதான் அருளுவான் பிரம்ம சேயாய்.

37. ஜாதகனுடைய மரண காலத்தைச் சொல்லுவோம். ஐம்பத் தெட்டாம் வயதில், உயர்ந்த தைமாதம் கிருஷ்ணபட்சம் சஷ்டி திதியில் மரண மெய்துவான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுவோம். திருவாலங்காட்டில் அந்தணர் குலத்தவனுகப் பிறப்பான்.

38. இந்ததோர் சென்மந் தன்னி லிவன்செய்த புண்ய மென்ன
தந்தியின் கோட்டம் செய்தும் தான்மாற்குத் தொண்டு
[பூண்டும்
மூந்திய தலங்கள் சென்று முதலவன் வாழ்வ தாலே
விந்தையாய்ப் பிரம்ம சேயாய் விளங்குவா னென்று
[சொல்வோம்.

38. இப் பிறவியில் இவன் செய்யும் புண்ணியங்களென்ன? விநாயகர் ஆலயத்தில் திருப்பணி செய்தும், பெரியோருக்குத் தொண்டுகள் செய்தும், புண்ணியத் தலங்களுக்குச் சென்றும், ஜாதகன் வாழ்ந்து வருவதால், அந்தணர் குலத்தவனுகப் பிறப்பான் என்று சொல்லுவோம்.

39. அன்னவன் சென்ன கால மவிட்டநாள் முதல்பா தத்தில்
துன்னுசேய்த் தசையைந் தாண்டுந் திங்களு மாற தாகும்
இன்னவன் தனக்கு ரோக மில்லத்தில் கலக மெய்தும்
பன்னுவோம் பின்பால் சேதி பார்வதி கேட்டி டாயே.

39. இவன் பிறக்கும்போது அவிட்ட நட்சத்திரம் முதல் பாதமாம். அங்காரக மகா தசையில் சென்றது போக விருப்பு; ஐந்து வருஷங்களும். ஆறு மாதங்களுமாம். அக் காலத்தில் இவனுக்கு வியாதி யுண்டாகும். வீட்டில் கலக மேற்படும். மற்ற விவரங்கள் பிற் பகுதியில் சொல்லுவோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகம் 78

1. மதியுஞ் சேயும் நந்தியுற
மன்னன் விஷ சிஷியம்
விதியன் கோலில் புகர்மேடம்
வெய்யோன் மீனம் புதன்சாடி
இதுவே கிரக மிடபமுயிர்
இயம்பு முனியே பலனதனை
அதுவே வாண்பால் செனனமுறும்
அணுகு மில்லங் கீழ்மேற்கு.

1. சந்திரனும் செவ்வாயும் விருஷபத்திலும், குரு மிதுனத்திலும், கேது சிம்மத்திலும், சனி துலாத்திலும், சுக்கிரன் மேஷத்திலும், சூரியன் மீனத்திலும், புதன் ராகு கும்பத்திலுமாக, நவக்கிரங் களும் நின்று, விருஷபம் ஜன்ம லக்கினமாக விருந் தால் எற்படும் பலன்களைச் சொல்லுவீர், முனிவரே! இஃது ஆண் பிறப்பு. பிறக் கும் வீடு கிழக்கு மேற்குத் தெருவில்;

சூரியன்	சுக்கிரன்	லக்கினம் சந்திரன் செவ்வாய்	குரு
புதன் இராகு	இராசி சக்கரம்		
			கேது
		சனி	

2. தென்பால் வாசல் மேல்வாடை
சிறப்புற் றோங்கும் பேரூராம்
அன்னை காளி யுத்திரமாம்
அழகாய் நதியு மிருபுறமாம்
இன்னோன் நான்காம் செனனமுமாய்
எய்தும் கங்கை வர்க்கமதில்
அன்னை தந்தை துணையோகம்
அருள்வோம் முன்பின் சென்மங்கள்.

2. தெற்கு நோக்கியுள்ள வாயிலை யுடையது. மேற்கு வரிசையுள்ளது. சிறப்புள்ள ஓர் பெரிய ஊர். வடக்கில் காளி தேவி கோவில். ஊரின் இரு பக்கங்களிலும் அழகான ஆறுகள் ஓடுகின்றன. இவன் வேளாளர் குலில்

நான்காம் பிறப்பாகப் பிறப்பான். இவனுடைய தந்தை, தாய், உடன்பிறந்தார் முதலியவர் யோகங்கள், முற்பிறப்பு, மறு பிறப்பு ஆகிய அனைத்தையும் சொல்லுவோம்.

3. தந்தை துணையாண் தோடமுறும்
சத்தி யொன்று தீர்க்கமதாய்
நிந்தை பெறுவன் மாந்தளிர்போல்
நிறமா முணைச்சல் வர்மமுளான்
விந்தை யாகப் பேசிடுவன்
வெல்லும் சொல்லன் வீரியவான்
பந்த மாகும் பிதுராஸ்தி
பாரில் வறுமை யுடையவனே.

3. தந்தையுடன் பிறந்தவனுக்குத் தோஷ முண்டாகும். சகோதரி யொருத்தி நீண்ட ஆயுளுள்ளவள். தந்தை, அவமானங்கள் ஏற்பான். மாந்தளிர்போன்ற நிறமுள்ளவன். மெல்லிய தேகத்தன். மனத்தில் பொறுமையுமுள்ளவன். வேடிக்கையாகப் பேசுபவன். பேச்சு வன்மை யுடையவன். வீரிய முள்ளவள். தந்தையின் ஆஸ்தி யில்லாதவன். உலகில் தரித்திரம் உடையவன்.

4. கடனே கொள்வன் பின்நிவிர்த்தி
கடந்தோர் போல வார்த்தையுளன்
விடம்போல் விலகும் தந்தையில்லம்
மேதில் சொற்பச் செட்டுசெய்வன்
மடைய ருறவு கொள்ளாதான்
வருவோர் தமக்கு உதவிடுவன்
நடையுங் கடினம் [1]தூசுதொழில்
நயப்பாய்ச் செய்வன் நாயகியே.

4. கடன் வாங்குவான். பின்பு தீர்த்து விடுவான். துறவிகள்போல் பேசுபவன். விஷம்போல் தன் தந்தையின் வீடு இவனுக்குக் கிடையாமல் போகும். சிறிய வியாபாரம் செய்துவருவான். அற்பர்களின் உறவில்லாதவன். தன் வீடுதேடி வந்தவர்கட்கு உபகாரம் செய்வான். கடினமான நடை யுள்ளவன். நெசவுத் தொழில் செய்து வருவான். தாயே!

---

1. ஆடை

5. கொள்ள விற்க வல்லவனும்
குழியும் முகத்தில் தானணுகும்
கள்ளமி லாதான் போல்வார்த்தை
கன்னி மார்கள் மோகமுளன்
விள்ள வுரைப்பன் தேவாலயம்
மேவுங் கரத்தில் சிவன்ரேகை
தள்ளா ணுணவு யாவதையும்
தரணி சேர்ப்பான் சங்கரியே.

5. பொருள்களை வாங்கி விற்பதில் சாமர்த்திய முள்ளவன். முகத்தில் ஒரு குழியுண்டு.மனத்தில் கபட எண்ணம் இல்லாதவன் போலப் பேசுவான். பெண்கள் மீது மோக முள்ளவன். கண்டித்துப் பேசுபவன். தேவாலயத் திருப்பணிகள் செய்வான். கையில் உருத்திர ரேகை யுடையவன். எல்லா வித உணவுகளையும் உண்பான். பூமி சேர்ப்பான். சங்கரியே!

வேறு

6. இக்குண முடையோ னுக்கிவன் தானு
மெய்துவா னிவன்குணங் கேண்மோ
பக்குவ வார்த்தை பலசகா யங்கள்
பஞ்சைமே லிரக்கமு மாவன்
தக்கவே கல்வி ஞானநூ லறிவன்
தரியலர் தமைவெற்றி கொள்வன்
நக்கன்மேல் பக்தி பூமியுஞ் சேர்ப்பான்
நறறிருப் பணியுமே செய்வன்.

6. இவ்விதக் குணங்க ளுடையவனுக்கு, ஜாதகன் பிறப்பான். இவனு டைய குணத்தைக் கேளுங்கள். பொருத்தமாகப் பேசுபவன். பலருக்கு உதவிகள் செய்வான். ஏழைகள் மீது இரக்க முடையவன். தகுந்த கல்வி யறிவுள்ளவன். ஞான நூல்களை யுணரும் ஆற்ற லுடையவன். விரோதிகளை வெல்வான். சிவபெருமான் மீது பக்தி யுடையவன். விளை நிலங்களைச் சேர்ப்பான். நலமுள்ள திருப்பணிகள் செய்பவன்.

7. பலதொழில் செய்வ னில்லமுஞ் சேர்க்கை
பாரினில் சல்லியங் கொள்ளான்
தலந்தீர்த்தம் தோய்வன் சகடுகள் கொள்வன்
சனபந்து புகழவே வாழ்வன்
[1]குலகுரு சொல்ல வத்திரி மறுத்துக்
கூறினர் யோகமெவ் விதத்தால்
நீலதெரி விப்பூர் காரியு முச்சம்
நீத்தோனும் நாலினில் தங்க;

7. பலவிதமான தொழில்கள் செய்து வருவான். வீடு சேரும். உலகில் கடனில்லாதவன். சிறந்த தீர்த்தங்களில் நீராடுவான். வண்டிகள் வாங்குவான். சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்திருப்பான். இங்ஙனம் வசிஷ்டர் சொல்ல, அத்திரி முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். யோகத்தை எப்படிச் சொன்னீர்? அதனைத் தெரியுங்கள் என, சனி தனுலாத்தில் உச்சமாயிருப்பதாலும், நாலில் (சிம்மத்தில்) கேது தன்னி யிருப்பதாலும்;

8. புதன்ரவி புகரும் சேய்மதி பொன்னும்
பொருத்தமா யிடைவிடா திருக்க
அதுசர்ப்ப யோகம் சகலரும் புகழ்தல்
அவன்பிதா வுக்கிவ ளுலே
மிதமிலாப் புகழு மெய்திடு மென்றேரும்
வீண்பழி தான்புக லாதான்
அதிபன்தன் புதல்வர் தசமதாய்த் தோன்றும்
மங்கைய ரிருவர்தாம் தீர்க்கம்.

8. புதன், சூரியன், சுக்கிரன், செவ்வாய், சந்திரன், குரு இவர்கள் (குடும்பத்திலிருந்து மிதுனம் வரையில்) இடைவிடாமல் அடைந்திருப்பதாலும், எல்லோரும் புகழும்படியான "சர்ப்ப யோகம்" இவனுக்கு ஏற்படும். இவனுடைய தந்தைக்கு இவனால் அளவிலாப் புகழ் உண்டாகும் என்று சொன்னேம். பிறரைப் பற்றி வீண் பழிகள் கூறுதலன். இவனுக்குத் தோன்றும் புதல்வர் பதின்மர். இரு பெண்களும் தோன்றித் தீர்க்கமாயிருப்பர்.

---

1. வசிட்டர்

9. சத்தமஞ் சென்ம மாணது வொருவன்
சனிப்பனும் தனுசுரா சியினில்
சுத்தமாய்ப் பூசம் நாளது தானும்
செப்புவோ மவன்பலன் தாயே
வெற்றிச்சொல் லுடையன் வீண்வம்பு கலவான்
வித்தையும் சமரச மாகும்
புத்தியில் பெரியோன் பெரிதான செட்டுப்
பூவையர் மோகமே கொள்வன்.

9. இவனுக்கு ஏழாவது புதல்வன் ஒருவன் தனுர் ராசி, பூச நட்சத்திரத்தில தோன்றுவான். அவனுடைய பலன்களைச் சொல்லுவோம். பேசுவதில் சமர்த்தன். வீண் வம்புக்குச் செல்லாதவன். மிதமான கல்வியறிவுள்ளவன். புத்தியில் சிறந்தவன். பெரிய வியாபாரம் செய்வான். மாதர் மீது விருப்பங் கொள்ளுவான்.

10. வறுமைகள் காணுன் மாதுவு மொன்று
மைந்தரு மூன்றென விளம்பும்
அரிவைய ரவ்வார் தீர்க்கமே யாகும்
அத்திரி தடுத்துமே சொல்வார்
திருமகன் தனக்கு [1]வரிட்டமே சொல்வோம்
சிலசில பிணிகளுண் டாகி
மறலியைக் காண்பான் போலவே நேரும்
வயதுமே தீர்க்கமா மென்னே.

10. தரித்திர மில்லாதவன். மனைவியொருத்தி. மூன்று புதல்வர்கள் தோன்றுவர். மூன்று பெண்களும் தோன்றித் தீர்க்கமா யிருப்பர். அத்திரி முனிவர் தடுத்துச் சொல்லுவார். அவனுக்கு, அரிஷ்டம் ஏற்படும். சிற்சில வியாதிகள் உண்டாம். பிறகு, மரணத்தைப்போல் கொடிய துன்பம் ஏற்படும். தீர்க்கமான வயது உண்டு.

11. உதித்தவன் மணத்தை யுரைப்பக்கேள் தாயே
ஒருபதி னெட்டினில் குடகில்
அதிபதி யன்னைவர்க் கத்திலே நேரும்
மாதுவின் குணமதைப் புகல்வீர்
துதிசெய்தோர்க் கன்னம் சுகமுட னீவள்
சொல்லுது மிஞ்சுத லுண்டு
கதிதரு விரத மேற்றிடு வாளாம்
கனயோக முள்ளவ ளாமே.

1. துன்பங்கள்.

11. ஜாதகன் திருமண காலத்தைச் சொல்லுவோம். தாயே! பதினெட்டாம் வயதில், மேற்குத் திசையில், இவனுடைய தாயின் வர்க்கத்திலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் குணத்தைச் சொல்லுவோம். புகழ்ந்தவருக்கு அன்புடன் அன்ன மளிப்பாள். சில சமயங்களில் கணவன் சொற்களை மீறிப் பேசுவாள். நன்மைதரும் விரதங்களை மேற் கொள்ளுவாள். மிகுதியான யோக முடையவள்.

12. சுதர்தமைக் காணுள் தோன்றினுந் தீதாம்
செப்புவீ ரச்சங்கை தன்னைப்
புதனுமஞ் சோனுய்ப் பத்தினில் சேர்ந்து
பிரியாமல் ராகுவும் நிற்க
அதுவின்றிச் சென்மம் நந்தியே யாக
அப்பலன் சுதீன மென்றோம்
அதிபன்செய் வினையால் மதலைகள் தோடம்
அறிவிப்பீ ரவ்வினை தானே.

12. ஜாதகனுக்குக் குழந்தைகள் தோன்ரு. தோன்றினாலும் நிலையா. அதற்குரிய தோஷத்தைச் சொல்லுவீர். புதன் ஐந்தாம் வீட்டிற்குரியவனுகி, பத்தாம் வீடாகிய கும்பத்தில் இராகுவுடன் கூடியிருப்பதாலும், சென்ம லக்கினம் விருஷபமாக இருப்பதாலும், புத்திர தோஷ மேற்படும் என்று சொன்னேம். இவன் முற்பிறவியில் செய்த தீவினையாலும் குழந்தைகட்குத் தோஷமுண்டு. அந்தத் தீவினையைச் சொல்லுங்கள்.

13. தானவன் பூர்வம் பிருதிவி தன்னில்
சௌராட்டிர குலமதில் தோன்றி
மான்விழி மனையு மைந்தரு முண்டாய்
வளமுள செட்டுமே செய்து
ஈனமாங் குலத்து மாதினைச் சேர்ந்தான்
எளியோர்க்குப் பொருளதை யுதவி
ஊனமா யில்லம் யாவையுங் கொண்டான்
உறைந்தது ஏழையோர் சாபம்.

13. ஜாதகன் முற்பிறவியில், காஞ்சியில், சௌராஷ்டிர வகுப்பில் பிறந்து, மானைப்போல அழகிய விழிகளையுடைய மனைவியும் புத்திரர்களும் உண்டாகி, செழிப்புள்ள வியாபாரம் செய்து வரும்போது, கீழ்க்குலத்தில் தோன்றிய வொரு பெண்ணைச் சேர்ந்தான். தவிரவும், ஏழைகளுக்குப் பொருள் கடனுகக் கொடுத்து, குறைவான விலைக்கு அவர்களது வீடு முதலிய யாவற்றையும் அபகரித்துக் கொண்டான். அந்த ஏழைகளின் சாபம் இவனை யடைந்தது.

14. அந்தியக் காலம் அறமதி விச்சை
அரிபக்தி கொண்டுமே மாண்டு
வந்தவ னென்றேரும் மதலைகள் தோடம்
மறைகின்றே மதற்குச்சாந் திகளும்
முந்துமால் மலைக்கு மனைவியோ டேகி
முகுந்தனுக் கருச்சித்து வின்னேன்
தன்தனம் தூசு வழுதுமே சேர்த்துச்
சதுர்மறை மாதுக்கு வீந்து;

14. கடைசிக் காலத்தில் தருமத்தில் விருப்பங் கொண்டு, திருமாலின் மீது பக்திபூண்டு, மரணமடைந்து, மீண்டும் இப்பிறவியில் பிறந்தவன் இவன் என்றேரும். புத்திர தோஷம் தீரச் சாந்திகளைச் சொல்லுகின்றேரும். திருமாலின் மலைக்கு (திருவேங்கட மலைக்கு) மனைவியுடன் சென்று, மாலவனுக்கு அருச்சனை முதலியன செய்து பூசித்து, பொருள், ஆடைகள், அன்னம் முதலியன சேர்த்து அந்தணர் குலப் பெண்ணுக்குக் கொடுத்து;

வேறு

15. தங்கக ரடைந்து வின்னேன் சட்டியின் விரதங் கொள்ள
முன்வினை நீங்கி யேதான் னுதித்திடு மாண்பா லொன்று
கன்னிகை மூவர் தீர்க்கம் கழறின மொழிகுன் றுது
உன்னத வாணை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

15. தனது ஊரடைந்து, இவன் சஷ்டி விரதம் மேற்கொள்ளுவானுகில் முற்பிறப்பில் செய்த தீவினைகள் நீங்கி, ஓர் ஆண் குழந்தை பிறக்கும். பெண்கள் மூவர் பிறந்து தீர்க்கமா யிருப்பர். சொன்ன சொற்கள் தவறு. உயர்ந்த விநாயகரைப் பெற்ற உத்தமியே ! கேளுங்கள்.

16. அன்னையு மாஞ்சி வப்பள் ஆளன்தன் மனம்போல்
[வாழ்வள்
பொன்பணி யுடைய ளாகும் புகழ்ந்தோரை யாத ரிப்பள்
சொன்னதைக் காப்பா ளாகுந் துணையாண்பா லிரண்டு
[வென்றேரும்
கன்னிமார் நால்வ ரென்றேரும் கனிக்காது மற்ற தெல்லாம்.

16. தாய், கருமை கலந்த சிவந்த மேனி யுள்ளவள். கணவன் மனம் போல் வாழ்ந்து வருவாள். பொன்னபரணங்கள் உடையவள். புகழ்ந்தவர்களை ஆதரிப்பாள். சொன்ன சொற்களைக் காக்கும் தன்மையாள். இவளுக்கு, இரு சகோதரர்களும் நான்கு சகோதரிகளும் உளராவர் என்று சொன்னேம். மற்றவர் நிலையார்.

17. இல்லமுங் குடகி லென்றேரும் இவள்வந்த பின்பு யோகம்
அல்லல்கள் நிவிர்த்தி செய்வன அவள்பூர்வம் புகல்வோம்
[கேளும்
நல்லதோர் விரிஞ்சி தன்னில் நாயகி ரெட்டி வம்சம்
புல்கினுள் வறுமை யின்றிப் புத்திர ருள்ளா ளாகி;

17. தாயின் வீடு மேற்கி லுள்ளது என்றேரும். இவள் வந்தபிறகு யோகம் எற்படும். துன்பங்கள் நிவிர்த்தியாம். இவளுடைய முற்பிறவியைச் சொல்லுவோம், கேளுங்கள். விரிஞ்சி நாட்டில், ரெட்டியார் வமிசத்தில் தோன்றி, தரித்திரமில்லாமல் மணமாகி, புத்திரரை யடைந்து வாழ்ந்திருக்கும்போது;

18. இரவினி லகதி தானும் ஈகுவா யன்ன மென்ன
அரிபோலே கோப முற்று அயல்வீடு செல்லு மென்ன
உரைக்கின்றார் சாபந் தானு முதிக்கும்பின் சென்மந்
[தன்னில்
பிறக்குஞ்சேய் பாதி தீதாய்ப் போய்விடு மென்று சொல்லி;

18. இரவில், ஒரு பாதேசி உணவு யாசிக்க, இவள் சிங்கம்போல் கோப மடைந்து, வேறு வீட்டுக்குச் செல் என்று கூறினாள். பாதேசி சாபமிடுகின்றார். இனி எற்படும் மறு பிறவியில், பிறக்கும் குழந்தைகளில் பாதி நிலையாமல் போம் என்று சொல்லி;

19. ஏகினார் வேறு வில்லம் எய்திற்று வந்தத் தோடம்
தோகையி னந்தி யத்தில் தொடர்ந்தது குன்ம நோயும்
வேகமாய்க் கால நாடு மேவியே பிரமன் லக்கம்
பாகமா யுதித்தா ளென்றேரும் பரதேசி சாபந் தானும்;

19. வேறு வீட்டுக்குச் சென்றுவிட்டார். அந்தத் தீவினை இவளுடைய கடைசிக் காலத்தில் வந்தடைந்தது. வயிற்று நோயால் துன்பப் பட்டு இறந்தாள். பிறகு, பிரமனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்று கூறினேம். பாதேசியினுடைய சாபத்தால்;

20. பெற்றிடுஞ் சுதர்கள் பாதி போய்விடும் பாவைக் கேதான்
மற்றொரு சென்மஞ் சொல்வோம், மதுரைக்குக் கீழ்ப்பா
[லாகச்
சிற்றாரி லிந்தப் பாவை செனிப்பளாஞ் சைவச் சேயாய்
நத்தினோர்க் குதவி செய்யும் நங்கையே கேட்டி டாயே.

20. இவளுக்குப் பிறக்கும் குழந்தைகளில் பாதி மரிக்கும். இவளுடைய மற்று பிறவியைச் சொல்லுவோம். மதுரைக்குக் கிழக்குப் பக்கத்தில், ஒரு சிறிய ஊரில், சைவ குலத்தவளாகப் பிறப்பாள். பக்திகொண்டு வேண்டு பவர்களுக்கு, உதவிபுரியும் பார்வதியே! கேளுங்கள்.

21. தந்தையின் பூர்வஞ் சொல்வோம் தாமிர வருணி தன்னில்
வந்தன னிக்கு லத்தில் மாநிலம் கிருஷி செய்து
பொன்பணி யதிக முண்டாய்ப் புகழான குடும்பி யாகி
வந்தவூழ் தன்னைக் கேண்மோ வளமிலா வேழை யோர்க்கு;

21. தந்தையின் முற்பிறவியைச் சொல்லுவோம். தாமிர வருணிக்குச் சமீபத்திலுள்ள ஓர் ஊரில், இதே குலத்தில் பிறந்தான். மிகுதியான விளைநிலங்களில் படைத்து, பயிர்த்தொழில் செய்து, பொன், ஆபரணங்கள் இவை அதிகமாக ஏற்பட்டு, புகழுள்ள குடும்பத்தவனாக இருக்கும்போது, ஏற்பட்ட ஜீவனையைக் கேளுங்கள்.

22. தனமது வுதவி செய்து சாகையைத் தன்கைக் கொண்டான்
வினைமன மாகச் சொல்வார் மேவும்பின் சென்மந் தன்னில்
கனமுள வில்ல மின்றி யடைகுவார் வேரூர் தன்னில்
துணையாண்பால் தோட மெய்தும் சொல்லியே தெருத்தூள்
[விட்டார்.

22. ஒருவருக்குப் பொருளைக் கடனாகக் கொடுத்து, அவர் வீட்டைக் கைப்பற்றினான். தன்பமடைந்தவர் சொல்லுவார். இனி ஏற்படும் பிறவியில் நல்ல வீடில்லாமல், வேரூரில் சென்று வாழ்வாய், சகோதரனுக்கும் தோஷம் ஏற்படும் என்று சொல்லித் தெரு மண்ணை வாரி யிறைத்தார்.

23. மைந்தனு மரண காலம் வழக்குகள் மிகவே யுண்டாய்த்
தன்தனம் செலவு நேர்ந்து சல்லிய பாதை யாலே
தென்திசைக் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
வந்தவ னிவனே யென்றோம் மருவிடு முன்னூழ்ச் சாபம்.

23. கடைசிக் காலத்தில், மிகுதியான வழக்குகள் ஏற்பட்டு, தன்னுடைய செல்வங்களனைத்தும், செலவழிந்து, கடனடைந்து, பிறகு இறந்து விட்டான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டுப் பிறந்தவன் இவன் (ஜாதகனின் தந்தை) என்று சொல்லுவோம். இவன் முற்பிறப்பில் செய்த ஜீவனை இப்பிறப்பில் இவனைச் சாரும்.

24. வனவாச மாக வாழ்வன் வளமையாய்க் குடும்பம் பின்னல்
கனதனப் பெருக்க முண்டு கழறுவோ மிவன்பின் சென்மம்
வினைதீர்க்கும் வேலூர் தன்னில் மேவுவா னிக்கு லத்தில்
அனையவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

24. காட்டில் வசிப்பதுபோல் தனித்து வாழ்வான். பின்னல் செழிப்புள்ள குடும்பம் ஏற்படும். செல்வங்கள் விருத்தியாம். இவனுடைய மறுபிறப்பைச் சொல்லுவோம். பாவங்களைப் போக்கும் வேலூரில் இக்குலத்தில் தோன்றுவான். மிகுதியான தவங்களை இயற்றும் பார்வதியே! கேளுங்கள்.

25. ஆறைந்து நான்கு ஆண்டில் அறைந்தனம் தந்தை கண்டம்
தீரமாய் நாற்பான் மூன்றில் செல்லுவா ளன்னை தானும்
மாரனு மெழுப தாண்டில் மார்கழி மாதந் தன்னில்
சேருவான் கால நாடு செயமுனி தடுத்துச் சொல்வார்

25. ஜாதகனது மூப்பத்துநான்காம் வயதில், தந்தைக்கு மரணம் உண்டாகும். நாற்பத்து மூன்றும் வயதில், தாய் இறந்து போவாள். ஜாதகன் எழுபதாம் வயதில் மார்கழி மாதத்தில் இறப்பான். செயமுனி தடுத்துச் சொல்லுகின்றார்.

26. எப்படி வயது தீர்க்க மிவனுக்குச் சகடை தோடம்
தப்பிதம் பனிரெண் டாண்டில் சார்ந்திடுங் கண்ட
[மென்றேரும்
அப்படி நடவா தாகு மறைந்தனம் சகடை பங்கம்
ஒப்புடன் குருவும் ரெண்டில் உறைந்ததால் வயதுந் தீர்க்கம்.

26. ஜாதகனுக்கு எவ்வளம் தீர்க்கமான வயது உண்டு என்று கூறினீர்? சகடை தோஷ முண்டன்றே? பன்னிரண்டாம் வயதில் ஒரு கண்டம் உண்டாகும். அப்படி நடவாது. சகடை யோகம் பங்க மடைந்தது என்று சொன்னேம். எப்படியென்றால், குரு இரண்டாமிடமாகிய மிதுனத்தில் தங்கியிருப்பதால் வயது தீர்க்கம்.

27. கரியவன் தசைநா லாகக் கலக்காதோ வந்தக் காலம்
வரும்பிணி யனேக முண்டு மறலியு மணுகா ருகும்
திருமகன் வயது தீர்க்கம் செப்புவோ மிவன்பின் சென்மம்
அரன்காளி நடனஞ் செய்யு மந்நகர் தன்னி லேதான்.

27. சனி மகா தசை, நான்காவதாக வருவதால் அப்போது மரணம் ஏற்படாதோ? அந்தச் சமயத்தில் மிகுதியான நோய்கள் ஏற்படும். ஆனால் மரணமடைய மாட்டான். இவனுக்கு வயது தீர்க்கம். இவனுடைய மறுபிறப்பைச் சொல்லுவோம். சிவனும் காளியும் நடனமிடும் சிதம்பரத்தில்;

28. பிறப்பனும் பிரம்ம சேயாய்ப் புதல்வனிச் சென்மந் தன்னில்
உறைந்தபுண் ணியங்க ளென்ன உரைப்பீர்கள் முனியே
[நீர்தாம்
திருப்பணி செய்த லாலும் தேவதாத் தலங்கள் சென்றும்
நெறியதைக் காத்த லாலும் நிமலனு முதிப்ப னுமே.

28. அந்தணர் குலத்தில் பிறப்பான். இவனுக்கு இப்பிறவியில் ஏற்பட்ட புண்ணியங்க ளென்ன? முனிவர்களே! நீங்கள் சொல்லுங்கள். திருப்பணிகள் செய்து வருவதாலும், புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவதாலும், ஒழுக்கத்தைக் காப்பாற்றுவதாலும் இவன் மறு பிறவியில் அந்தணர் குலத்தில் பிறப்பான்.

29. வந்தவன் குடும்பச் சேதி யறைகின்றே மீரஞ் சாண்டுள்
விந்தையா யில்லம் வாங்கல் விருத்தியாந் தொழிலு
[மென்றேரும்
பிந்தியும் பூமி சேர்க்கை பேசுவோ மூவைந் தின்மேல்
சந்ததம் யோகம் சொல்வோம் தனம்பூமி பெருக்க முண்டு.

29. இவனுடைய குடும்பச் செய்திகளைச் சொல்லுகின்றோம். பத்தாம் வயதுக்குள் வீடு வாங்குவான். தொழிலும் விருத்தியடையும். பிறகு பூமிகள் சேரும். பதினைந்தாம் வயதுக்குமேல் எப்போதும் அதிர்ஷ்டம் இருந்துகொண்டே யிருக்கும். பொருள், பூமிகள் மிகுதியாம்.

30. மாரனுஞ் சென்ன காலம் [1]மாந்தலை யிரண்டாம் பாதம்
சேர்ந்தசேய் ஆண்டு நாலும் செப்புவோம பலனை யாங்கள்
பாரினில் துணைவர் விருத்தி பலவித லாப மெய்தும்
கூறினேம் பூர்வ பாகம் கோமளி கேட்டி டாயே.

30. ஜாதகன் பிறக்கும் காலத்தில், மிருகசீரிஷ நட்சத்திரம் இரண்டாம் பாதம். அங்காரக மகா தசை செலவுபோக இருப்பு; நான்கு வருஷங்கள் ஆம். அதற்குரிய பலன்களைச் சொல்லுவோம்; நாங்கள். சகோதர விருத்தியும், பலவிதமான இலாபமும் உண்டாம். இவ்வாறு முதல் பாகஞ் சொன்னேம். அழகியே! கேளுங்கள்.

---

1. மிருக சிரீடம்

ஜாதகம் 79

1. கலிகன்னி பொன்னேன் கோலில் [1]கவிபுதன் பானு தேளில்
நிலமகன் மேரு வாக நீத்தோனுஞ் சாடி புக்க
மலிகய றரியில் தங்க மந்தனுங் கடக மாகத்
தலமது நந்தி யாகச் சாற்றுவீர் பலனைத் தானே.

1. சந்திரன் கன்னியிலும், குரு துலாத்திலும், சுக்கிரன் புதன் சூரியன் விருச்சிகத்திலும், செவ்வாய் தனுசிலும், கேது கும்பத்திலும், ராகு சிம்மத்திலும், சனி கடகத்திலுமாக நின்று, இலக்கினம் விருஷபமாக விருந்தால் ஏற்படும் பலனைச் சொல்லுவீர்.

		லக்கினம்	
கேது	இராசி சக்கரம்		சனி
			இராகு
செவ்வாய்	சுக்கிரன் சூரியன் புதன்	குரு	சந்திரன்

வேறு

2. தானே ஆண்பால் செனனமுறும்
தந்தை யில்லம் தென்பார்வை
மானைத் தரித்தோன் கீழ்ப்பாலில்
மடிந்த கோட்டம் வடகாளி
பான்மை யாகத் தென்மாரி
பாண்டு சுதர்கள் குடகாகும்
மேன்மை யாக மார்க்கமுறும்
மேவும் தந்தி நீர்க்கரையாம்.

2. இஃது ஆண் பிறப்பு. தகப்பனாரின் வீடு தெற்கு நோக்கி யுள்ளது. மானைத் தரித்த சிவபெருமான் ஆலயம் கிழக்கிலும், வடக்கில் பாழடைந்த காளி கோயிலும், தெற்கில் மாரியம்மன் கோயிலும், மேற்கில் (பாண்டவர்கள்) திரௌபதி யம்மன் கோயிலும், பெரிய சாலை ஒன்றும் உள்ளன. ஒரு சிற்றோலைக் கருகில் விநாயகர் எழுந்தருளி யிருக்கின்றார்.

---

1. சுக்கிரன்

3. ஆமே தந்தை தாய்துணைவர்
அணையும் பாரி புத்திரர்கள்
தீமை சுகமு முன்சென்மம்
செப்பக் கேண்மோ விந்நூலில்
காமன் தந்தை துணையாண்பால்
கழறுவோ மொன்றே பெண்ரெண்டு
போமே விருநான் கென்றுரைப்போம்
புகல்வோந் தந்தை குணமதனை.

3. அன்னை, தந்தை, உடன்பிறந்தார், மனைவி, புத்திரர்கள் முதலானவர் யோகங்கள், எற்படும் நன்மை தீமைகள், முற்பிறப்பு ஆகிய வனைத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம், கேளுங்கள். ஜாதகனுடைய தந்தைக்குச் சகோதரன் ஒருவனும், சகோதரிகளிருவரும் நிலைத்திருப்பர். எட்டுக் குழந்தைகள் பிறந்து நீதாம் என்று சொல்லுவோம். தந்தையின் குணத்தைச் சொல்லுவோம்.

4. குணமு மிரண்டு மால்நிறமும்
கோபம் முன்னுல் பின்தாழ்வு
மணமு மிரண்டு நீட்சியுளன்
அத்திக் காலன் வறுமையுளன்
துணிவா மனத்தன் உணைச்சலுளன்
தொடுத்த தையே வென்றிடுவன்
கனமாங் குடும்பம் பின்வயதில்
காலி பனையே ருள்ளவனே.

4. இருவிதக் குணங்களைப் பெற்றவன். கரிய நிறத்தினன். முன் கோபி. பிறகு சாந்த மடைவான். இரு மனைவிய ருடையவன். யானைக் காலுள்ளவன். தரித்திர முள்ளவன். தைரியம் நிறைந்த மன முடையவன். மெல்லிய தேக முள்ளவன். தொடங்கிய செயலில் வெற்றி யடைவான். பிற்காலத்தில் செழிப்புள்ள குடும்பத்தை யடைவான். கால்நடைகள், பணங்கள், எர் முதலியன விருத்தி யுள்ளவன்.

5. உள்ள துரைப்பன் நிலஞ்சேர்ப்பன்
உவமைக் கதைகள் தான்சொல்வன்
பள்ளுப் பறையுந் தான்சேர்ப்பன்
பலசெட் டுகளுந் தான்செய்வன்
தள்ளான் பெரியோர் வார்த்தைதனைச்
சகடு முடையான் சீலனுமாம்
விள்ள வுரைப்ப னவசரத்தன்
வீண்வம் பினிலே செல்லாதான்.

5. மெய்யே பேசுபவன். விளை நிலங்களைச் சேர்ப்பான். உவமானத் துடன் கதைகளைச் சொல்லுவான். பள்ளர், பறையர்களைச் சேர்ப்பான். பலவிதமான வியாபாரம் செய்து வருவான். பெரியோர்கள் வார்த்தைகளை அவமதிக்காதவன். வண்டிகள் உள்ளவன். ஒழுக்க முள்ளவன். கண்டிப் பாகப் பேசுவான். அவசர மனத்தன். வீண் வம்புக்குச் செல்ல மாட் டான்.

6. தானந் தருமம் சிலர்க்குதவி
செய்வன் தெய்வத் தொண்டுகளும்
மான மாகச் சீவிப்பன்
மருவுங் கரத்தில் தனரேகை
ஊனமி லாத தேகியுமாம்
உரைத்தோம் பாரி யிரண்டாக
ஆன விரண்டாம் பாரிக்கு
அப்பா லனுமே தான்தோன்றும்.

6. தான தருமங்கள் செய்வான். சிலருக்கு உபகாரம் செய்து வரு வான். கண்ணியமாக வாழ்ந்து வருவான். கையில் தன ரேகை யுள்ள வன். ஊன மில்லாத தேகத்தை யுடையவன். இரண்டு மனைவிமார் உள ராவர். அவர்களில் இரண்டாம் மனைவிக்கு இந்த ஜாதகன் பிறப்பான்.

7. தோன்றும் பாலன் குணங்கேளாய்த்
தேக மூணைச்சல் நீட்சியுளன்
சான்றோ ருறவு கொள்ளாதான்
சபல குணமு மானிறத்தன்
ஈன்ற வன்னை துணைநாஸ்தி
இயல்பாய்க் குடும்பி தானுவன்
ஆன்ற கிருஷி தான்செய்வன்
அற்பக் கல்வி யுடையவனே.

7. ஜாதகனின் குணங்களைக் கேளுங்கள். மெலிந்து நீண்ட உடலு டையவன். பெரியோர்களின் நட்பைக் கொள்ளாதவன். சபல குண முள் ளவன். கருமை கலந்த சிவப்பு நிறம். பெற்ற தாய்க்கு உடன் பிறந்தா ரில்லை. சாதாரணமான குடும்பத்தை யுடையவன். பயிர்த் தொழில் செய் வான். அற்பமான கல்வி யறிவுள்ளவன்.

8. அவனே வறுமை காணுதான்
ஆவு விருத்தி பசுவேர்கள்
தவமே புரிவோர்க் கனமீவன்
தந்தை யாஸ்தி விர்த்தி செய்வன்
இவனின் துணையாண் காணுனும்
ஏகும் பிணையது துணைதானும்
நவனியில் கன்னி பின்விர்த்தி
நவில்வோ மொன்று தீர்க்கமுறும்.

8. தரித்திர மில்லாதவன். பசுக்கள் விருத்தி புண்டு. பண்ணைகளும் ஏர்களும் உடையவன். தவம் செய்பவர்களுக்கு அன்ன மளிப்பான். தந்தை நாள் ஆஸ்தியை விருத்தி செய்வான். இவனுடன் பிறந்த சகோதர நில்லை. தோன்றினும் நிலைத்திரார். சகோதரி யொருத்தி பிறந்து தீர்க்கமா யிருப்பாள்.

9. தீர்க்க மான பெண்சேதி
சிவந்த மேனி சுகவார்த்தை
பார்க்கும் நல்லோள் பதரில்லாள்
பகவான் பத்தி கொண்டிடுவள்
மூர்க்க குறவு கொள்ளாதாள்
மூலச் சூடு வுடையவளாம்
ஏற்கப் பணியும் வறுமையிலாள்
எய்தும் வரனு முள்ளுராம்.

9. சகோதரியின் வரலாற்றைக் கூறுவோம். சிவந்த உடலைப் பெற்றவள். இனிமையாகப் பேசுவாள். உலகத்தாருக்கு நல்லவள். அற்ப குணங்களில்லாதவள். தெய்வ பக்தி யுள்ளவள். கெட்டவர்களிடம் நட்புக் கொள்ளாதவள். மூலச் சூடுடையவள். ஆபணங்களே அணிவாள். தரித்திர மில்லாதவள். இவளுக்கு உள்ளூரிலேயே கணவன் வாய்ப்பான்.

10. மங்கை போன பின்யோகம்
மருவுஞ் சுதர்க ளாணென்று
திங்கள் முகம்போல் பெண்மூன்று
தீர்க்க மாகும் பாவைக்கு
இங்கோன் மன்றல் காலமதை
இயம்பக் கேண்மோ விருபதுக்குள்
நங்கை யணுகுந் தந்தைவர்க்கம்
நவில்வோ மாது குணந்தானே.

10. இவள் வந்த பிறகு அதிருஷ்டங்கள் உண்டாகும். ஆண் மகன் ஒருவனும், அழகிய முகத்துடன் கூடிய பெண்கள் மூவரும் தீர்க்கமாகத் தோன்றுவர். ஜாதகனுக்கு மணமாகுங் காலத்தைச் சொல்லுகின்றோம், கேளுங்கள். இருபதாம் வயதுக்குள் தந்தையின் வர்க்கத்திலிருந்து மனைவி வருவாள். அவளுடைய குணத்தைச் சொல்லுவோம்.

வேறு

11. மாதுமா நிறத்தாள் நற்குண முடையாள்
வருவோரை யாதரிப் பவளாஞ்
சூதுகள் கொஞ்சம் முன்கோப முடையாள்
தோகைபோல் சாயலு முண்டு
மேதினில் நல்லோள் பணிதிமே லிச்சை
விகடவார்த் தைகளுங் கொஞ்சம்
போதக வானை யாதரித் தவளே
பூவைக்கு வயதுமே தீர்க்கம்.

11. ஜாதகனின் மனைவி கருமை நிறமுள்ளவள். நற் குணசாலி. வந்தவர்களை ஆதரிக்கும் குணத்தாள். கபட முள்ளவள். முன் கோபி. மயில் போல் அழகிய சாய லுடையவள். உலகத்தில் நல்லவள் என்ற பெய ரெடுப்பாள். ஆபரணங்களில் விருப்ப முடையவள். வேடிக்கையாகப் பேசுந் தன்மையும் சிறிதுண்டு. யானைமுகக் கடவுளை வளர்த்த தாயே! இவள் நீண்ட ஆயுளுள்ளவள்.

12. தென்முனி புகலச் செயமுனி தடுத்துச்
செப்புவா ரேழினுக் குடையோன்
பின்னமா யெட்டில் மேவியே யேழில்
புதன்புகர் பானுவுந் தங்கத்
தன்மனை யெவ்வார் தீர்க்கமென் றுரைத்தீர்
சங்கையைச் செல்லுவீ ரென்ன
பொன்புகர் சேயு மாறியே நிற்கப்
புகர்க்கொன்பா னைந்தினில் தங்க ;

12. அகத்திய முனிவர் இவ்வாறு கூற, செயமுனி தடுத்துச் சொல்லு கின்றார். ஏழாமிடத்துக் குரிய செவ்வாய், பலமில்லாமல் எட்டாமிடமா கிய தனுசில் இருப்பதாலும், ஏழாமிடத்தில் புதன் சுக்கிரன் (மனைவி, பாக்கி யத்துக் குரியவன்) சூரியன் தங்கியிருப்பதாலும், அவனுடைய மனைவி தீர்க்கமாவள் என்று எங்ஙனம் சொன்னீர்கள் ? அந்தச் சந்தேகத்தை விளக் குங்கள் என, குரு சுக்கிரனது (ஆறுமிடம்) வீட்டிலும், சுக்கிரன் செவ்வாய் (ஏழாமிடம்) வீட்டிலும், செவ்வாய், குருவினது (எட்டாமிடம்) வீட்டிலும்,

சுக்கிர னிருக்கும் இடத்துக்கு ஒன்பதா மிடத்துக் குரியவனான சந்திரன், ஐந்தா மிடமாகிய கன்னியிலும் இருப்பதால்;

13. மனைவியு மொன்றே யறைந்தன முனியே
மைந்தர்கள் பலமதைக் கேளாய்க்
கனமுள விருநான் காகுமே வதிலோர்
காலையுங் கன்னிகை மூன்று
சினமிலாத் தீர்க்க முதல்சுதர் சேதம்
சதுர்த்தியுஞ் சட்டியட் டமியும்
வினையாகு மென்றேங் காரணம் யாது
விடபமே சென்மம தாக;

13. மனைவி ஒருத்தியே தீர்க்கமாவள் என்று கூறுவோம். முனிவரே! புத்திர பாக்கியத்தைக் கேளுங்கள். எட்டுக் குழந்தைகள் பிறக்கும். அவர்களில் ஒரு புத்திரனும், மூன்று பெண்களும் நீண்ட ஆயுளுட னிருப்பர். முதலில் பிறக்கும் குழந்தையும், சான்காவதும், ஆறுவதும், எட்டாவதும் மரிக்கும் என்று கூறுவோம். காரணம் என்ன? விருஷபம் ஜன்ம லக்னமாகவும்;

14. பத்தினில் கேது பதிந்ததால் புகன்றேம்
பாலன்மா துருபலன் கேளாய்ப்
புத்தியுஞ் சபலங் கபடிலாள் கோபி
பொய்யது புகன்றிடாள் மர்மி
வித்தகி துணைகள் விளங்கிடா வென்றேம்
மெல்லியில் தென்திசை யாகும்
அத்திரி சொல்வார் துணைதோட மெவ்வார்
அம்புலி தனக்குமே மூன்றில்;

14. பத்தா மிடமாகிய கும்பத்தில் கேது இருப்பதாலும் புத்திர தோஷஞ் சொன்னேம். ஜாதகன் அன்னையின் பலன்களைக் கேளுங்கள். சபல புத்தி யுடையவள். சூதில்லா மனத்தினள். கோப முடையவள். பொய் சொல்லாதவள். இரகசிய முடையவள். அவளுக்குச் சகோதரர்கள் இலர் என்று கூறுவோம். அவளுடைய பிறந்த வீடு தெற்குத் திசையி லுள்ளது. அத்திரி முனிவர் கூறுகின்றார். எப்படிச் சகோதர தோஷம் ஏற்படும்? சந்திர னிருக்கு மிடத்துக்கு, மூன்று மிடமாகிய விருச்சிகத்தில்,

15. பானுவும் புதனும் புகருமே கூடித்
தங்கிட ராகுவு நாலில்
இன்மதா யிருக்கத் துணைதோடஞ் சொன்னேம்
இயம்பினீர் முன்தாயொன் னென்றீர்
கனமுள வவட்குச் சுதர்களுண் டோசொல்
காளையொன் றுண்டென மொழிவோம்
பிணையாகு மேழு வவன்குணம் புகல்வீர்
பித்ததே கத்தனுந் தாயே.

15. சூரியன் புதன் சுக்கிரன் தங்கி யிருப்பதாலும், ராகு நாலா மிட மாகிய சிம்மத்தில் இருப்பதாலும் சகோதர தோஷம் ஏற்படும் என்று சொன் னேம். ஜாதகனுக்குப் பெரிய தாயொருத்தி உண்டு என்று சொன்னீர். அவளுக்குக் குழந்தைகள் உண்டோ? சொல்லுங்கள். புத்திரன் ஒருவன் உண்டு என்று கூறுவோம். மேலும் எழுவர் தோன்றி மரிப்பர். அவளுடைய குணத்தைச் சொல்லுவீர். பித்த தேக முடையவள், தாயே!

16. தாய்தந்தைக் கிடருமெண் ணுதவ னுகும்
சத்புத்ரன் கல்விமா னூகை
தியரை யணுகான் செட்டுக்கள் செய்வன்
தேறின புத்தியு முடையான்
ஏயமீன்ராசி யவிட்டநா ளுதிப்பன்
யாவர்க்கும் நல்லவ னுவன்
காய்குண மில்லான் வறுமைக ளடையான்
கனதன முடைய வனுமே.

16. தாய் தந்தையருக்குக் கெடுதி லெண்ணுத மனத்தினன். நல்ல வன். கல்விமான். ஊக முள்ளவன். அற்ப குறைவைக் கொள்ளாதவன். வியாபாரங்கள் செய்வான். உயர்ந்த புத்தி யுடையவன். மீன லக்கினம் அவிட் டநட்சத்திரத்தில் பிறப்பான். எல்லோருக்கும் நல்லவனு யிருப்பான். கெட்ட குண மில்லாதவன். தரித்திர மடையாதவன். மிகுந்த செல்வங்க ளுடை யவன்.

17. பாரியு மொன்று பகருவோ முனியே
பாலர்க ளதிகமே தோன்றும்
வேறொரு பாகம் விளம்புவோ மதனை
வித்தக னுடன்கூடி வாழ்வன்
மாரன்தன் னுலே தந்தைபின் வேரு
யடைகுவான் முன்னவன் தானும்
காரிழை யன்னை பூருவம் புகல்வோம்
கடையூர்க்குக் கீழ்த்திசை தன்னில்:

17. அவனுக்கு மனைவியும் ஒருத்தியே என்று சொல்லுவோம்; முனிவரே! புத்திர விருத்தி மிகுதி. அதனைப் பிற பாகத்தில் விவரமாகக் கூறுவோம். ஜாதகனுடன் சேர்ந்து வாழ்ந்து வருவான். தந்தையின் காலத்துக்குப் பிறகு ஜாதகனிட மிருந்து பிரிந்து வேறுகச் செல்லுவான். ஜாதகனுடைய தாயின் முற் பிறவியைப் பற்றிச் சொல்லுவோம். திருக்கடையூருக்குக் கிழக்கில்;

18. சிறியவூர் தன்னில் வன்னிய குலத்தில்
சனித்துமே நாத்தியின் மேலே
வருவித்தாள் சிலேடை வார்த்தைகள் தாமும்
மாதுவு மனந்திகி லடைந்து
உரைப்பதைக் கேண்மோ வுன்துணை யற்று
உறைசுதர் மரணமே யாவர்
வருஞ்சென்மஞ் துணைக ளின்றியே நீயும்
மருபாரி யாகியே வாழ்வாய்.

18. ஒரு சிற்றூரில் வன்னிய மரபினளாகத் தோன்றி, கணவனின் சகோதரியின் மீது, இரு பொருள் படும்படியாகச் சில வார்த்தைகள் கூறினாள். அப் பெண்ணும் மனத்தில் வருத்த முற்றுச் சொன்னதைக் கேளுங்கள். உன், உடன்பிறந்தார் மரித்து, பிறக்கும் குழந்தைகள் இறந்து, மறு பிறவியிலும் சகோதரரின்றி, இரண்டாம் மனைவியாக வாழ்ந்து வருவாய் என்றாள்.

19. இன்னமும் பலவார் சொல்லினாள் மாது
ஏகினாள் ததாஸ்துமே யென்றோர்
கன்னிகை சாபம் கலந்தது வென்றோங்
காதலி யந்தியந் தன்னில்
தன்சுதர் துணைகள் சண்டன்தன் பதிக்குச்
சார்ந்துமே சஞ்சல மடைந்து
முன்னவன் கோட்டந் தீபமும் வைத்து
மேவினள் மறலியின் பதிக்கு.

19. இன்னும் பலவிதமாகச் சொல்லிவிட்டுச் சென்றாள். அப் பெண்ணின் சாபம் அங்ஙனமே இவளை யடைந்தது என்று கூறினேம். இவளும் கணடகிக் காலத்தில், தன் குழந்தைகளும் சகோதரர்களும் இறக்க, மன வருத்த மடைந்து, விநாயகர் கோயிலில் தீபம் ஏற்றி வைத்துச் சிலகாலம் வாழ்ந்திருந்து, எமபுரம் அடைந்தனள்.

20. விதியவன் வரையக் கங்கையின் குலத்தில்
மேவினுள் முன்வினை யாலே
உதவாவே துணைகள் சுதர்களே விருத்தி
ஓர்ஆனை முகத்தோன் கோட் டத்தில்
நிதந்தீபம் வைத்த புண்ணியத் தாலே
நேர்ந்தனர் சுதர்களே யென்றேரும்
மதிநுதல் மாது பின்சென்மம் புகல்வோ
மலைநாட்டி லிக்குல முதிப்பாள்.

20. பிறகு பிரமனுல் படைக்கப் பட்டு, வேளாளர் மரபில் தோன்றினுள். இவள் முற் பிறப்பில் செய்த தீவினையால் சகோதர விருத்தி யில்லை. புத்திர விருத்தி யுண்டு. விநாயகர் கோயிலில் தினந்தோறும் தீபம் ஏற்றி வைத்த புண்ணியத்தால், இப் பிறவியில் குலக்தைகள் பிறக்கும் என்றேரும். இவளுடைய மறு பிறவியைச் சொல்லுவோம். மலை நாட்டில் இக் குலத்தவளாகப் பிறப்பாள்.

21. தந்தைமூன் சென்மஞ் சாற்றுவோ மினிமேல்
தண்டகா வனத்திலே தானுந்
தன்தன முடைய தனவைசிய னுக்குச்
சந்ததி யாகவே தோன்றித்
தன்தனம் கொடுக்கல் வாங்கலுஞ் செய்து
தான்வாழ்நாள் வினைதனைக் கேண்மோ
தன்மனை தங்கை விதவையில் லத்தில்
சார்ந்தன ளவன்போகம் துய்த்து ;

21. தந்தையின் முற் பிறப்பைச் சொல்லுவோம். தண்டகாவனம் என்று பெயருள்ள (விந்திய மலைக்குத் தெற்கில்) இடத்தில் தன் சுயார்ச்சிதத்தால் மிகுந்த செல்வ முள்ள ஒரு வைசியனுக்குப் புதல்வனுகத் தோன்றி, கொடுக்கல் வாங்கல் செய்து வரும்போது, எற்பட்ட தீவினையைக் கேளுங்கள். தன் மனைவியின் தங்கை, விதவையாகித் தன் வீட்டுக்கு வந்தாள். அவளுடன் போகம் துய்த்து ;

22. கருவதை முயன்று கலித்தன னென்றேரும்
கன்னியுங் கருவினுல் மாண்டாள்
அறுமுகன் தனக்கு ஆழியஞ் செய்து
அந்தகன் பக்கலில் சென்று
பிரமனுர் வரைய விக்குல முதித்தான்
பேதையின் கருவின்தோ டத்தால்
வருமனை யிரண்டு வந்திடு மென்றே
மங்கையே கேட்டிடு வாயே.

22. ஏற்பட்ட கருவை முயற்சி செய்து கலைத்தான், என்றோம். அக் கைம் பெண்ணும் அதனால் இறந்தாள். ஆறுமுகக் கடவுளுக்குத் திருப்பணிகள் செய்து, பிறகு, இறந்தான். பிரமனால் மீண்டும் படைக்கப்பட்டு, இக் குலத்தில் பிறந்தான். பெண்ணின் கருவைக் கலைத்த தோஷத்தால் இவனுக்கு இருமனைவியர் ஏற்படுவர் என்று கூறுவோம்; தாயே! கேளுங்கள்.

23. மறுசென்மந் தில்லை மறைக்குல முதித்து
மாரனை யெரித்தவன் பூசை
உறைகுவா னென்றோ மிச்சென்மந் தன்னில்
உறைந்தபுண் ணியங்களைப் புகல்வீர்
சிறுமையோர்க் குதவி செய்வத னாலும்
தேவதாப் பணிகள்செய் வதனால்
பெரியவர்க் கன்பு தலவாசஞ் சென்ற
புண்ணிய முதிப்பனெனப் புகன்றோம்.

23. மறு பிறப்பு, தில்லையில் அந்தணர் குலத்தில் பிறந்து, மன்மதனை எரித்த சிவபெருமானைப் பூசித்து வருவான் என்றோம். இப் பிறவியில் ஏற்படும் புண்ணியங்களைச் சொல்லுங்கள். ஏழைகளுக்கு, உபகாரம் செய்து வருவதாலும், தெய்வத்துக்குத் திருப்பணிகள் செய்வதாலும், பெரியோர்களிடத்தில் அன்புள்ளவனாக இருப்பதாலும், புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்ற நல்வினையாலும், அந்தணர் குலத்தில் பிறப்பான் என்று கூறினோம்.

வேறு

24. சாதகன் பூர்வஞ் சொல்வோம் தவசிவா முருனை தன்னில்
சூதிலா ரெட்டி வம்சம் தோன்றியே வறுமை யின்றிப்
பாதக மில்லா னாகிப் பறந்தனன் கால நாடு
மாதவன் வரையப் பட்டு வருவனே யென்று சொல்வோம்.

24. ஜாதகனின் முற் பிறவியைச் சொல்லுவோம். தவமியற்றும் பெரியோர்கள் வாழ்ந்துவரும் திருவண்ணாமலையில், கெடுதலில்லாத ரெட்டியார் மரபில் தோன்றி, தரித்திர மில்லாமலும், துன்ப மின்றியும் வாழ்ந்து வந்து, பிறகு இறந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இக்குலத்தவனாகப் பிறந்தான் என்று சொல்லுவோம்.

25. வந்தவன் யோகச் சேதி யறைகின்றோ மினிமே லாகத்
தந்தைக்குச் சமமாய் வாழ்வன் தரணிகள் விருத்தி
[செய்வன்
சந்தத மூப்பான் ரெண்டில் தான்வேறுய்ச் செல்வா னாகும்
கந்தனை யின்ற மாதே கழறின மொழிகுன் றாது.

25. இனிமேல் ஜாதகன் யோகச் செய்தியைச் சொல்லுவோம். தகப்பனுருக்குச் சமமான வாழ்க்கை நடத்துவான். விலை நிலங்களை விருத்தி செய்வான். முப்பத்திரண்டாம் வயதில் தனியாகப் பிரிந்து செல்வான். முருகப் பெருமானை யீன்ற தாயே! சொன்ன சொற்கள் தவறு.

26. இருபது வாறு வாண்டி லேகுவன் தந்தை யென்றேரும்
நிறையவே முப்பா னுறில் நீங்குவா ளன்னை யென்றேரும்
அறுபது வொன்ப தாண்டில் அழகிய கன்னி மாதம்
திருமக னுடல மேகும் செப்புவோ மிவன்பின் சென்மம்.

26. ஜாதகனுடைய இருபத்தாறும் வயதில் தந்தை இறப்பான். முப்பத்தாறும் வயதில் தாய் இறப்பாள். அறுபத்தொன்பதாம் வயதில் புரட்டாசி மாதம், ஜாதகனுக்கு மரணம் எற்படும். இவனுடைய மறு பிறவியைச் சொல்லுவோம்.

27. உத்திரம் தணிகை கீழ்ப்பால் உதிப்பனும் ரெட்டி வம்சம்
முற்றின குடும்பி யாகி மேதினில் புகழு மேற்பன்
பத்தினி யிவன்பின் ஞாலே பறப்பளாங் கால நாடு
அத்தியைப் பெற்ற மாதே அறைந்தன மொழிகுன் ரூது.

27. வடக்கிலுள்ள திருத்தணிகைக்குக் கிழக்கில், ரெட்டியார் மரபில் தோன்றி, முதிர்ந்த குடும்ப மேற்பட்டு, உலகில் கீர்த்தி யடைவான். இவனுக்கு முன்பே, இவன் மனைவி இறந்து விடுவாள். விநாயகனைப் பெற்ற பார்வதியே! சொன்ன சொற்கள் தவறு.

28. அன்னவன் சென்ன காலம் அத்தநாள் முதல்பா தத்தில்
சந்திரன் தசையி ருப்புச் சாற்றுவோ மாண்டு வெட்டில்
பிந்திய திங்க ளாறும் பேசுவோம் பிற்பா கத்தில்
இந்திர னிறைஞ்சு மாதே இயம்பின மொழிகுன் ரூது.

28. ஜாதகன் பிறக்கும்போது ஹஸ்த நட்சத்திரம் முதல் பாதம். சந்திர மகா தசையில் இருப்பு; எட்டு வருஷங்களும், ஆறு மாதங்களும் ஆம் என்று கூறுவோம். மற்றவற்றைப் பிற் பகுதியில் சொல்லுவோம். இந்திரன் முதலிய தேவர்கள் வணங்குகின்ற தாயே! நாங்கள் சொன்னவை தவறு.

ஜாதகம் 80

1. நந்தியும் சென்ன மாக நற்காரி புகரும் தங்க
மந்திரி சேயு மூன்றில் மலிநாக மாறி லாகச்
சந்திர னேழி லாகச் செங்கதிர் புதனும் கேது
வந்திட மீரு ருக வறைகுவீர் பலனைத் தானே.

1. விருஷபம் ஜன்ம லக்கினமாகவும், சனி சுக்கிரன் இலக்கினத்திலும், குரு செவ்வாய் மூன்ரு மிடமாகிய கடகத்திலும், இராகு ஆருமிடமாகிய துலாத்திலும், சந்திரன் ஏழாமிடமாகிய விருச்சிகத்திலும், சூரியன் புதன் கேது பன்னிரண்டாமிடமாகிய மேஷத்திலும், தங்கியிருந்தால், எற்படும் பலனைச் சொல்லுவீர்.

<table>
<tr><td></td><td>சூரியன்
புதன்
கேது</td><td>லக்கினம்
சனி
சுக்கிரன்</td><td></td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">இராசி
சக்கரம்</td><td>குரு
செவ்வாய்</td></tr>
<tr><td></td><td></td></tr>
<tr><td></td><td>சந்திரன்</td><td>இராகு</td><td></td></tr>
</table>

2. குறுமுனி புகலு கின்ரூர் குறித்தது வாண்பா லாகும்
வருமில்லம் வடதென் வீதி வாசலு மேல்பால் நோக்கம்
அரிவா கனத்தாள் கீழ்ப்பால் நந்திவா கனத்தோன் வாயு
பெருவயி ரோனுந் தங்கும் பெருமாளின் கோட்டந்
[தென்மேல்.

2. அகத்திய முனிவர் சொல்லுகின்ரூர். இம்மது ஆண் பிறப்பு. பிறக்கும் வீடு தெற்கு வடக்கான தெருவில், மேற்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. சிங்கத்தை வாகனமாகக் கொண்ட காளிதேவி கோயில் கிழக்கிலும், இடபவாகனமுடைய சிவபெருமான் கோயில் வடமேற்கிலும், விநாயகர் கோவிலும் திருமாலின ஆலயமும் தென்மேற்கிலும், உள்ளன.

3. மாரியு மருகில் தங்கும் மருவிய சிறுவு ராகும்
தீரனுங் கங்கை சேயாய்ச் செனிப்பனு மென்று சொல்வோம்
காரிழை யன்னை தந்தை களத்திர புத்திர யோகம்
கூறுவோ முன்பின் சென்மங் கோதையே கேட்டி டாயே.

3. வீட்டுக்கு அருகில் மாரியம்மன் கோவில் உண்டு. சிறிய ஊர். இங்கு, ஜாதகன் வேளாளர் மரபினருப் பிறப்பான் என்று சொல்லுவோம். தாய், தந்தை, மனைவி, புத்திரர் இவர்களின் யோகங்கள், மூற் பிறப்பு, மறு பிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

4. தந்தையின் துணையாண் மூன்று சாற்றுவோம் பால னுக்கு
எம்மையே சிலரே வேரூர் ஏகுவா ரென்று சொல்வோம்
அந்தவர் சேதி பின்பால் அறிவிப்போந் தாயே யாங்கள்
இந்தவன் தந்தை சேதி இயம்புவோ மதன்மே லாக.

4. ஜாதகனின் தந்தைக்கு மூன்று சகோதரர்கள் உளராவர் என்று கூறுவோம். அவர்களில் சிலர் வேற்றூருக்குச் சென்று வாசம் செய்வர் என்று சொல்லுவோம். தாயே! நாங்கள், அவர்களின் செய்திகளைப் பிற பாகத்தில் தெரிவிப்போம். ஜாதகன் தந்தையின் செய்திகளை, இனிமேல் சொல்லுவோம்.

5. ஊகைவா னுணுக்கந் தேர்வன் உண்மையா மனத்த னுகும்
ஆகம மறியா னுகும் அவனியை விருத்தி செய்வன்
தாகமென் றோர்க்கு ஈவன் தனமது வில்லா னுகும்
பாகமாய்ப் பேசு வானும் பதர்குண மில்லா னுகும்.

5. ஊக முள்ளவன். நூட்பமுள்ள நூல்களை யாராவான். உண்மையான மனமுடையவன். வேத சாஸ்திரங்களின் நூட்பங்களை அறியாதவன். வீண் நிலங்களை விருத்தி செய்வான். தாகமென்று வந்தவர்கட்கு அன்புடன் நீர் கொடுப்பான். செல்வங்களில்லாதவன். அழகாகப் பேசுபவன். அற்பகுண மில்லாதவன்.

6. சுகதுக்கங் கலந்து வாழ்வன் சொல்லதைக் காப்பா னுகும்
பகையென்று மனத்தில் வையான் பணிந்தோரை யாத
[ரிப்பன்
செகமதில் நல்லோ னுகும் சேயிழை சொல்தட் டாதான்
மிகுதவம் புரியு மெங்கள் வித்தகி கேட்டி டாயே.

6. சுகம் துக்கம் இரண்டுங் கலந்த வாழ்க்கை யுடையவன். சொன்ன படி நடப்பவன். மனத்தில் விரோத எண்ண மில்லாதவன். பணிந்தவர் களைக் காப்பாற்றுவான். உலகில் நல்லவன் என்ற பெயருடையவன். மனைவி வார்த்தையைத் தட்டாதவன். மிகுந்த தவங்கள் புரியும் எங்கள் தாயே! கேளுங்கள்.

7. மூன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றேரும் பசுமாத் தூரில்
அன்னவன் சேடர் வம்சம் அணுகியே நெசவு செய்து
தன்மனை மதலை யுண்டாய்ச் சங்கரன் பூசை செய்து
இன்னவன் வாழு நாளில் எய்தின வினையைக் கேண்மோ.

7. ஜாதகன் தந்தையின் முற்பிறப்பைச் சொல்லுகின்றோம். பசுமாத் தூரில், சேடர் வமிசத்தில் பிறந்து, நெசவுத் தொழில் புரிந்து, மனைவி மக்களுடன் சிவபெருமானைப் பூசித்து, வாழ்ந்து வந்த நாளில், எற்பட்ட தினைனையைக் கேளுங்கள்.

8. கன்னிகை வேறு மாது கணவனு மில்லா ளாகி
அன்னையில் வாச மாக அவள்பேரி லடாத வார்த்தை
இன்னவன் சொல்லும் போது இடிவிழு மரம்போ லாகி
மின்னலி னிடையாள் சொல்வாள் வீண்பழி சொன்ன பாவி;

8. வேறு ஒரு பெண், கணவனில்லாமல், தன் தாயின் வீட்டில் வசித்து வரும்போது, அவள் மீது இவன் மோகங் கொண்டு, தகாத வார்த்தைகள் கூற, மின்னலைப் போன்ற, இடையுடைய அப்பெண், இடி விழுந்த மரம்போல், திடுக்கிட்டவளாய்ச் சாப மிடுகின்றாள். அடாத பழிகள் என்மீது சொன்ன பாவி;

9. மறுசென்மந் துணையெ னைப்போல் மருவாது வென்று [சொல்ல
உறைந்தது வந்தச் சாபம் உத்தமன் வேறு காணுன்
மறலியின் நாடு சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருமக னுதித்தா னென்றேரும் சேர்ந்திடு மாது சாபம்.

9. மறு பிறவியில் என்னைப் போன்ற சகோதரி யில்லாதவ னுவான். என்று சொல்ல, அந்தச் சாபம் இவனைச் சார்ந்தது. வேறு தினை, யில்லாமல் இயமபுரம் அடைந்து, பிரமனால் மீண்டும் படைக்கப்பட்டு, இந்த ஜாதகன் தந்தையாகப் பிறந்தான் என்றோம். பெண்ணின் சாபம் இப் பிறவியில் வந்தடைந்தது.

10. பெண்துணை தேடா மாகும் பேசின குணத்தா னுக்கு
இன்னவ னுதிப்பா னுகும் இயம்புவோ மிவன்கு ணத்தை
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பான் வல்வா யன்தான்
முன்துணை பக்கம் வாழான் மேவுவான் வெளியூர் சித்ரம்.

10. அதனால் உடன் பிறந்த பெண்களுக்குத் தோஷம் ஏற்படும் இவ்வாறு கூறிய குணங்க ளுடையவனுக்கு, ஜாதகன் பிறப்பான். அவன் குணங்களைப் பற்றிச் சொல்லுவோம். தன் சொல்லே உயர்ந்தது என்று நிலை நாட்டுவான். வாக்கு வன்மை யுள்ளவன். மூன் பிறந்த சகோதரனுடன் சேர்ந்து வாழமாட்டான். வடக்குப் பக்கமாயுள்ள வேற்றூருக்குச் சென்று வாழ்வான்.

11. மால்மனை கடாட்சம் பெற்றுப் பெருகுவா னந்தப் பாலன்
சீலவான் கல்வி மானும் சிலசில தான்யச் செட்டு
பாலகன் செய்வா னுகும் பத்தினி யூரில் வாசம்
ஆலம்போல் கோப மேற்பன் அறிவாளி யென்று
[சொல்வோம்.

11. இலட்சுமி கடாட்சம் ஏற்பட்டு, மிகுதியான செல்வங்களை யடைவான். நல்லொழுக்க முள்ளவன். கல்வியறி வுடையவன். சிற்சில தானிய வியாபாரங்கள் செய்து வருவான். மனைவியின் ஊரில் வாழ்ந்து வருவான். விஷம்போல் கொடிய கோபமுள்ளவன். அறிவாளி யென்று சொல்லுவோம்.

12. கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன் கஞ்சமா ரேகை யுண்டு
உடன்படான் பிழைக ளுக்கு உறுதியா மனத்த னுகும்
தடபுடல் செய்கை யுண்டு சாதுர்ய வார்த்தை சொல்வன்
திடமதாய்க் குடும்பி யாவன் தந்தையார்ச் சிதத்தை
[வேண்டான்.

12. கடன் வாங்குவான். அதைத் தீர்த்து விடுவான். கையில் பத்ம ரேகை யுள்ளவன். தவறுகட் குட்படாதவன். திட மன முள்ளவன். ஆடம்பரச் செய்கை யுள்ளவன். அழகாகப் பேசுபவன். செழிப்புள்ள குடும்ப முண்டு. தந்தையால் தேடி வைக்கப்பட்ட பொருள்களை வேண்டாதவன்.

13. தன்துணை யாண்பால் மூன்று சத்திமார் நால்வ ராகும்
பின்னமாஞ் சிலவே யென்றும் பேசுவோம் பின்பால் சேதி
இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மிருப தாண்டில்
அன்னையின் வர்க்கம் நேரும் அதுவுமே வடபா லாகும்.

13. உடன் பிறந்தவர்களில் சகோதரர் மூவரும், சகோதரிகள் நால்வருமாவர். அவர்களில் சிலர் நிலையார். அவர்களைப் பற்றிப் பின் பாகத்தில் கூறுவோம். ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இருபதாம் வயதில், வடக்குப் பக்கத்திலுள்ள கிராமத்திலிருந்து, தாயின் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பெண் மனைவியாக வாய்ப்பாள்.

14. மாதுவின் குணத்தைச் சொல்வோம் மாந்தளிர் மேனி யாவள்
சூதான மனமுங் கொஞ்சம் சொல்லது வதிக மூண்டு
காதலி நடையு நன்மை கணவனுக் கினிய ளாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உத்தமி வயது தீர்க்கம்.

14. மனைவியின் குணத்தைக் கூறுவோம். மாந்தளிர் போன்ற மேனி யுள்ளவள். சிறிது கபட முடையவள். அதிகமாகப் பேசுபவள். நல்லொழுக்க முள்ளவள். கணவனுக்குப் பிரியமானவள். இனிமையாகப் பேசுபவள். நீண்ட ஆயுளுள்ளவள்.

15. மங்கைபாட் டாளி யாகும் வருவோரை யாத ரிப்பள்
சங்கையென் றேரைச் சாராள் தங்கிடு நாபிச் சூடு
பங்கய மூகத்தா ளாகும் பாவையு மீகை கொஞ்சம்
அங்கவள் சீலி யாகும் அம்பிகை யாளே கேளாய்.

15. வேலை செய்வதில் விருப்பமுள்ளவள். தன்னை யடைந்தவரைக் காப்பாள். சந்தேகமுடையக் கூடியவர்களிடம் நட்புக் கொள்ளாதவள். நாபிச் சூடுள்ளவள். செந்தாமரை மலர்போன்ற அழகிய முக முடையவள். கொடுக்குந் தன்மை சிறிதுள்ளவள். நல்லொழுக்க முடையவள். அம்பி கையே! கேளுங்கள்.

16. சுதர்களு முதலில் தோடம் செப்புவோ மதன்பின் விருத்தி
சதமுட னுண்பா லொன்று சத்திமார் மூவர் தீர்க்கம்
எதுவிதக் காரணத்தால் இயம்பினீர் முதலில் தோடம்
புதனேந்தா மிடத்தோ னுகிப் பொருந்திட மீரு ருக.

16. ஜாதகனுக்கு முதலில் பிறந்த குழந்தைகளில் சிலர் கிலையார். பிறகு விருத்தியாம். ஆண் மகன் ஒருவனும், பெண்கள் மூவரும் தீர்க்கமா யிருப்பர். என்ன காரணத்தினால் முதலில் தோன்றும் சில குழந்தை களுக்குத் தீங்கு ஏற்படும் என்று சொன்னீர்கள்? புதன் ஐந்தாமிடமாகிய (புத்திர ஸ்தானம்) கன்னிக்குரியவனாகி, பன்னிரண்டா மிடமாகிய (விரய ஸ்தானம்) மேஷத்தில் இருப்பதால்;

17. சொல்லினே மந்தச் சங்கை சுதனுடைப் பூர்வம் கேளாய்
வல்லியம் பூசை செய்யும் வாழைமா நகரி லேதான்
புல்கினன் செக்கான் வம்சம் பெரிதான செட்டுச் செய்து
வல்லவன் வாழ் நாளில் வளமிலா ஏழை யோர்க்கு;

17. முதலில் தோன்றும் குழந்தைக்குத் தோஷம் என்று சொன்னேம். ஜாதகனுடைய முற் பிறவியைக் கேளுங்கள். புலிக்கான் முனிவர் பூசிக்கின்ற சிதம்பரத்தில், வாணியர் மரபில் பிறந்து, பெரிய வியாபாரங்கள் செய்து வாழ்ந்து வரும்போது, எழைகளுக்கு ;

18. கொஞ்சமாய்ப் பொருளைத் தந்து குடியதைப் பறித்துக்
[கொண்டான்
பஞ்சைகள் மனவெ றுப்பால் பகர்ந்தசா பத்தைக் கேண்மோ
தஞ்சமாய்ப் பின்சென் சத்திவ் தந்தைபி ஞஸ்தி யின்றி
வஞ்சியூர் வாச மாவாய் வேட்டகந் தன்னி லேதான்.

18. சிறிது பொருள் கொடுத்து, அவர்களுடைய வீடுகளை அபகரித்துக் கொண்டான். எழைகள் மனவருத்தத்துடன் கூறிய சாபத்தைச் சொல்லுகின்றேம் ; கேளுங்கள். இனி யடையும் மறு பிறவியில், பிதுரார்ச்சித மான ஆஸ்தி யில்லாமல், வேட்டகத்திலேயே வாழ்ந்து வருவாய்.

19. இன்னமும் பலவார் சொன்னர் எய்திற்று வந்தச் சாபம்
மன்னனு மந்தி யத்தில் வருவோர்க்குத் தாக மீந்து
துன்மையாய்க் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
இந்நில முதிப்பா னுகும் எய்திடு மேழை சாபம்.

19. என்றும், இன்னும் பலவிதமாகவும் சென்னர்கள். அந்தத் தீவினை முற் பிறவியிலேயே ஜாதகனை அடைந்தது. இவனும் கடைசிக் காலத்தில், தாகமென்றேருக்குத் தண்ணீர் கொடுத்துச், சிலகாள் துன்பத்துடன் வாழ்ந்து எமனுலக மடைந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இவ் வுலகில் பிறப்பான். இப் பிறவியில் எழையோர் சாபம் இவனைச் சாரும்.

20. தந்தையி னில்லம் வாழான் தரணிகள் விரும்பா னுகும்
மூந்தினள் வறுமை கொஞ்ச முயர்வான குடும்பம் பின்னள்
விந்தையாய் வணிபத் தாலே மேன்மையாய்ப் பொருளும்
[சேர்ப்பான்
பந்தினர் மதிக்க வுய்வன் பகரமாங் குடும்பி யாவன்.

20. தந்தையின் வீட்டில் வாழ மாட்டான். வீனை நிலங்கள் சேர்ப்பதில் விருப்ப மில்லாதவன். முதலில் சிறிது தரித்திர முண்டு. பின்னுட்களில் உயர்ந்த குடும்ப மடைந்து, அதிசயமான வியாபாரங்களால் மிகுதியாகப் பொருள்கள் சேர்ப்பான். உறவினர் மதிக்கும்படி வாழ்ந்து வருவான். செழிப்புள்ள குடும்ப மேற்படும்.

21. இருபது வேழாண் டின்மேல் இவனுக்கு யோக மென்றேரும்
பொருளது சேர்த்த லாகும் போகிடும் சல்யப் பாதை
திருமகள் கடாட்ச முண்டு தீரமா மனமு மென்றேரும்
பிரிவான தலமே வாசம் பேதையே கேட்டி டாயே.

21. இருபத்தேழாம் வயதுக்கு மேல் ஜாதகனுக்கு அதிர்ஷ்டம் ஏற்பும். பொருள்கள் மிகுதியாகச் சேரும். கடன்கள் நீங்கும். இலட்சுமீ கடாட்ச முண்டு. தைரியம் பொருந்திய மன முள்ளவன். இரண்டாகப் பிரிக்கப்பட்ட வீட்டில் வசித்து வருவான். தாயே! கேளுங்கள்.

22. பலவிதச் செட்டு வோங்கல் பணியோர்கள் நேசங்
[கொள்ளல்
நலமூள்ளோ ருதவி யாகும் நல்கிடுஞ் சுதர்கள் தாமும்
குலத்துளோர் தம்மைக் காத்தல் குண்டைடகோ விருத்தி
[யாகும்
அலைகடல் துயின்றேரன் தங்கை அறைந்தன மொழிகுன்
[ருது.

22. பலவிதமான வியபாரங்கள் விருத்தியாகி, வேலையாட்களை நேசித்து, நல்லவர்கள் நட்பு ஏற்பட்டு, புத்திர பாக்கிய முண்டாகி, தன் இனத்தவரை ஆதரித்து வாழ்ந்து வருவான். பசு, காளைகள் விருத்தியாம். பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள பரமனின் தங்கையாம் பார்வதியே! கூறிய சொற்கள் தவறு.

23. புந்தியும் விரய மாகப் பிறையுமே நீச்ச மாக ;
அந்ததோர் பலனு மெவ்வார் அறிவிப்பீர் முனியே நீர்தாம்
தந்தைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு மிளையா ளுக்கு
இந்தவ ணுதிப்பா ளுகும் இயம்புவீ ரன்னை சேதி.

23. புதன் விரயஸ்தானமாகிய மேஷத்தில் இருப்பதாலும், சந்திரன் நீச்சமாக விருச்சிகத்தில் இருப்பதாலும் ஏற்படக் கூடிய பலன்களைத் தெரிவிப்பீர், முனிவரே! தகப்பனாரின் இரு மனைவியரில், இளையவளுக்குப் பிறந்தவன் இந்த ஜாதகன். இவன் அன்னையின் செய்திகளைக் கூறுங்கள்.

24. சொல்லது சுருக்க மாகும் துருசான கோப மேற்பள்
நல்லவ ளாக வாழ்வள் நடைநன்மை பொறுமை சாலி
புல்லிய புத்தி யில்லாள் புறஞ்சொலாள் புண்ய சாலி
அல்லலைப் பொழுதுங் காணு ளம்பிகை யாளே கேளாய்.

24. சுருக்கமாகப் பேசுபவள். சீக்கிரம் கோப மடைவாள். நல்லவள் என்ற பெயருடன் வாழ்ந்து வருபவள். நன்னடக்கை யுள்ளவள்.

அடக்க முள்ளவள். கெட்ட புத்தி யில்லாதவள். கோள் சொல்லாதவள் புண்ணிய மனத்தினள். துன்பங்க ளடையாதவள். தாயே! கேளுங்கள்.

25. மாதுவும் வந்த பின்பு வரனுக்கு யோக மெய்தும்
சூதிலாள் துணையாண் ரெண்டு தோகையும் நால்வ
[ரென்றேரும்
போதவே வுத்ர மில்லம் புகலுவோ மிவள்முன் சென்மம்
மேதினி லுயர்வ தான மேல்நாட்டில் கொங்கு தன்னில்;

25. இவள் வந்த பிறகு ஜாதகனின் தந்தைக்கு அதிர்ஷ்டங்கள் ஏற்படும். கபடமில்லாதவள். இவளுக்கு இரு சகோதரர்களும், நான்கு சகோதரிகளும் உளராவர். வடக்குத் திசையில் இவளுக்கு வீடு உண்டு. இவள் முற் சென்மத்தில் மேற்குப் பக்கமாக வுள்ள கொங்கு நாட்டில்;

26. பிறந்தனள் கர்ண சேயாய்ப் பெரிதான குடும்பி யாகி
அறமதி லிச்சை யுண்டாய் அச்சென்மம் வினையில் லாமல்
மறவியின் நாடு சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருமக ளுதிப்பா ளாகும் செப்புவோங் கருமை காலம்.

26. கருணீகர் மரபில் பிறந்தாள். செழிப்புள்ள குடும்ப மேற்பட்டு, தரும சிந்தனை யுடையவளாக, அந்தப் பிறவியில் தீவினைகளின்றி இறந்து, பிறகு பிரமனால் படைக்கப்பட்டு, இம் மரபினளாகப் பிறந்தாள் என்றேரும். ஜாதகனுக்குக் கருமதசை ஏற்படும் காலங்களைச் சொல்லுவோம்.

27. ஏழாண்டு ளன்னை கண்டடம் இயம்புவோ மிவள்பிற்
[சென்மம்
தாழ்விலாத் தணிகை தன்னில் செனிப்பளாம் பிரம்ம
[சேயாய்ச்
சூழவே விருநான் காண்டுள் தந்தையு மரண மெய்தும்
ஆழியி லிவன்பின் சென்மம் அறைகின்றே முனியே கேளும்.

27. ஜாதகனுடைய ஏழு வயதுக்குள் தாய்க்கு மரணம் ஏற்படும். தாயின் மறு பிறவியைச் சொல்லுவோம். குறைவில்லாத திருத்தணியில், அந்தணர் குலத்தில் பிறப்பாள். எட்டு வயதுக்குள் ஜாதகனின் தந்தையும் மரண மடைவான். இவனுடைய (ஜாதகனின் தந்தை) மறு பிறப்பைச் சொல்லுகின்றேரும், கேளுங்கள்.

28. தென்திசை யாழி தன்னில் செனிப்பனும் விசுவ சேயாய்ப்
பொன்வேலை யதிகம் செய்து புகழுடன் வாழ்வா னம்மா
அன்பது வேழு ஆண்டில் அணுகிய தேளின் மாதம்
இன்னவ னுடல மேகும் ஈசுவரி கேட்டி டாயே.

28. தெற்குச் சமுத்திரத்துக்குச் சமீபமான ஊரில் பொற்கொல்லர் மரபில் தோன்றுவான். பொன் வேலைகள் அதிகமாகச் செய்து, செல்வாக்குடன் வாழ்ந்து வருவான். தாயே! ஜாதகன், தனது ஐம்பத்தேழாம் வயதில் கார்த்திகை மாதம் இறப்பான். ஈசுவரியே! கேளுங்கள்.

29. மறுசென்மம் மதுரை தன்னில் வைசியக் குலமு தித்துப்
பெரிதான செட்டுச் செய்து புகழுடன் வாழ்வா னம்மர
திருமகன் சென்ன காலம் சனிதசை யாண்டு வைந்தும்
உறைந்திடுந் திங்க ளாறும் உரைத்தனம் பூர்வ பாகம்.

29. மறு பிறவியில், மதுரையில், வைசிய குலத்தில் பிறந்து, விரிவான வியாபாரம் செய்து, புகழுடன் வாழ்ந்து வருவான். தாயே! ஜாதகன் பிறப்புக் காலத்தில், சனி மகா தசையில் இருப்பு; ஐந்து வருஷங்களும், ஆறு மாதங்களுமாம். இவ்வாறு முதல் பாகத்தைச் சொன்னேம்.

ஜாதகம் 81

1. நந்தியுஞ் சென்ன மாக நற்குரு புகர்சேய் தங்கச்
சந்திர னிரண்டி லாகச் சர்ப்பமும் மூன்றி லாக
மந்தனும் தசத்தி லாக மால்பதி னொன்றி லாகச்
செந்திரு பானு மேடம் சிகிநலம் பலனெவ் வாறு.

1. விருஷபம் சென்ம லக்கினமாகி, குரு சுக்கிரன் செவ்வாய் இலக்கினத்திலும், சந்திரன் மிதுனத்திலும், இராகு கடகத்திலும், சனி பத்தாமிடமாகிய கும்பத்திலும், புதன் பதினோராமிடமாகிய மீனத்திலும், சூரியன் மேஷத்திலும், கேது மகரத்திலும் தங்கியிருந்தால் பலன்கள் எங்ஙனம்?

புதன்	சூரியன்	லக்கினம் குரு சுக்கிரன் செவ்வாய்	சந்திரன்
சனி	இராசி சக்கரம்		ராகு
கேது			

2. அந்தரி கேட்கும் போது அத்திரி முனிவர் சொல்வார்
இந்தசே யாணும் சென்ம மில்லமும் கீழ்மேல் வீதி
தென்வாடை மாரி காளி சிவன்கோட்டம் வடகீ ழாகும்
சின்னவூர் கர்ண சேயாய்த் திருநிய சென்ன மாகும்.

2. என்று பார்வதி தேவி கேட்கும்போது, அத்திரி முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண் பிறப்பு. பிறக்கும் வீடு கிழக்கு மேற்கான வீதியில் தெற்கு வாடையிலுள்ளது. மாரியம்மன், காளிதேவி, சிவபெருமான் ஆகியோர் கோயில்கள் வடகிழக்குத் திசையி லுள்ளன. சிறிய ஊர். ஜாதகன் கருணீகர் குலத்தவனாய், மூன்றும் பிறப்பாகப் பிறப்பான்.

3. இன்னவன் சென்ன யோகம் எழில்பெறு தந்தை யோகம்
அன்னையுந் துணைவர் யோகம் அவன்பாரி புத்திர யோகம்
முன்பின்சென் மங்கள் யாவு முரைக்கின்றே மிந்நூல்
[தன்னில்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

3. ஜாதகன் ஜனன யோகங்கள், பெற்ற தந்தை, தாய், உடன்பிறந்தார், மனைவி, புதல்வர் முதலானோர் யோகங்கள், முற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இந்த நூலில் நாங்கள் சொல்லுகின்றோம். உயர்ந்த கணவனை யடைந்த பார்வதியே ! கேட்பாயாக.

4. பாலகன் தந்தைக் கேதான் பகருவோம் துணையாண்
[ரெண்டு
வேல்விழி பெண்பால் ஒன்று விருத்தியாம் துணைவர் தாமும்
ஏலவே வேறுய்ச் செல்வர் ஏகுவான் ஒருவன் தானும்
சாலவே வொருவன் தீர்க்கம் செப்புவோம் பின்பால் சேதி.

4. ஜாதகன் தந்தைக்கு உடன்பிறந்தார் விருத்தியுண்டு. சகோதரர் இருவர் என்று சொல்லுவோம். சகோதரி ஒருத்தி. சகோதரர் வேறு குடும்பமாகச் செல்லுவர். அவர்களில் ஒருவன் மரண மடைவான். ஒருவன் தீர்க்கமாக விருப்பான். அவனைப் பற்றிப் பிற்பாகத்தில் சொல்லுவோம்.

5. இவன்பிதா குணத்தைச் சொல்வோம் இடரான புத்தி யில்லா
னவனிகள் விருத்தி செய்வன் நற்றல வாசஞ் செய்வன்
தவசிக ளுறவு கொள்ளான் சந்தேக மனத்த னுகும்
பவமன மில்லா னுகும் பத்தினிக் கிட்ட னுகும்.

5. ஜாதகன் தகப்பனாரின் குணங்களைச் சொல்லுவோம். தவறான புத்தி யில்லாதவன். வீண நிலங்களை விருத்தி செய்வான். சிறந்த புண்ணியத் தலங்களுக்குச் சென்று வசிப்பான். தவத்தோர் சேர்க்கையைக் கொள்ளாதவன். சந்தேகம் நிரம்பிய மனத்தினன். தீமையில்லாத நெஞ்சன். மனைவிக்குப் பிரியமானவன்.

6. விடைராசி கார்த்தி நாளில் மேவுவா னுகை சாலி
திடமதாய்க் குடும்பி யாவன் சீக்கிரங் கோபஞ் சாந்தம்
படைசெல்லான் சொல்லில் வெற்றி பற்கள்நோய் கொஞ்ச
[முண்டு
மடையரை யுறவு கொள்ளான் மாஞ்சிவப் புடைய னுகும்.

6. விருஷபலக்கினம், கார்த்திகை நட்சத்திரத்தில் பிறப்பவன். சாமர்த்தியமுள்ளவன். திடமான குடும்ப முள்ளவ னுவன்; விரைவில் கோபமடைந்து பின்பு சாந்தமுறுவான். படைகளில் சேரான். சொல்லுஞ் சொற்கள் பலித முள்ளவன். பல் நோய் சிறிது உண்டு. மூடர்கள் நேசங் கொள்ளான். கருஞ் சிவப்பு நிறமுள்ளவன்.

7. அறுமுக ணுமங் கொண்டோன் ஆள்கார ருடைய ணுகும்
பொருள்கடன் கொள்ளா ணுகும் போசன வறுமை காணுன்
தரையதைச் சேர்ப்பா ணுகும் சமகல்வி யுடைய ணுகும்
கரிமத வாணை பெற்ற காதலி கேட்டி டாயே.

7. சுப்பிரமணியக் கடவுளின் பெயரைக் கொண்டவன். எவலாட்க ளுடையவன். கடன் வாங்கமாட்டான். போஜனத்தில் தரித்திரமில் லாதவன். விளைநிலன்களைச் சேர்ப்பான். சுமாரான கல்வி யறிவுள்ளவன். விநாயகக் கடவுளைப் புதல்வராக வடைந்த பார்வதியே! கேட்பாயாக.

8. சாதகன் நிறங்கு ணத்தைச் சாற்றுவோ மிருசி கப்பன்
சோதியுங் குறைவு நேரும் சூட்சும புத்தி யேற்பன்
சாதிப்பன் சிலவே சங்கை சமர்த்தான வார்த்தை யுண்டு
மாதவர்க் கன்ப ணுகும் மயில்வாக னத்தோன் பத்தி.

8. ஜாதகன் நிறம் குணம் இவற்றைச் சொல்லுவோம். கருமை கலந்த சிவந்த நிறமுள்ளவன். கண் ஒளி மங்கும். நுட்பமான புத்தியுடை யவன். சில சந்தேகங்களைத் துணிவுடன் போக்குவான். சாமர்த்தியமாகப் பேசுவான். பெரிய தவங்களைச் செய்யும் முனிவர்கட்கு அன்பன். மயில் வாகனத்தைக் கொண்ட முருகப்பிரான் மீது பக்தி யுள்ளவன்.

9. என்னகா ரணத்தி ணுலே யிவன்சோதி குறையுண் டாகும்
முன்னமே சொல்லு மென்ன மூமூமதி யிரண்டில் தங்கப்
புன்மையாய்ஞ் சோதி தானும் புதல்வனு முன்சென் மத்தில்
கன்மங்கள் மிகவே செய்தான் கலந்தன வந்தத் தோடம்.

9. என்ன காரணத்தினால், இவன் கண் ஒளிபோம்? முதலில் அத னைச் சொல்லுங்கள். சந்திரன் குடும்ப ஸ்தானமாகிய இரண்டாமிடத்தில் தங்கி யிருப்பதால் சோதி குறையும். இவன் முற்பிறவியில் தவறான செயல் கள் பல செய்தான். அந்தத் தோஷங்கள் இவனை யடைந்தன.

10. சொல்லுவோ மிவன்முன் சென்மம் சீகாழி தன்னி லேதான்
புல்லினன் வன்னியர் சேயாய்ப் பூசாரித் தொழிலுஞ் செய்து
அன்னவன் வாழு நாளில் அணுகின வினையைக் கேண்மோ
வல்லியா மாரிக் கேதா னவன்பூசை செய்து வந்து;

10. இவன் முற்பிறவியைச் சொல்லுவோம். சீர்காழியில், வன்னியர் குலப் புதல்வனாய் பிறந்தான். கோயில் பூசாரியாக வாழுகின்ற காலத்தில், இவனை யடைந்த தீவினையைக் கேளுங்கள். மாரியம்மனுக்கு இவன் பூசை செய்து வரும்போது;

11. மாரிகண் மலரைத் தானு மர்மமாய்க் கொண்டு வந்து
பாரிக்குப் பணிகள் செய்தான் பற்றிற்று வந்தத் தோடம்
வேரொருரு தீங்கு காணன் வித்தக னந்தி யத்தில்
ஆறுமா முகத்தோன் பத்தி அவனுமே கொண்டு மேதான்;

11. ஒருநாள் மாரியம்மனுக்குச் சாத்தப் பட்டிருந்த கண்மலரை, இரகசியமாகக் கொண்டுவந்து, விற்று, மனைவிக்கு நகைகள் செய்தான். அந்தத் தோஷம் இவனை யடைந்தது. வேறு கெடுதல்கள் எவையு மில்லாதவன். கடைசிக் காலத்தில், சுப்பிரமணியக் கடவுள் மீது பக்திகொண்டு;

12. காலன்தன் நாடு சென்று கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமாங் கங்கை சேயாய்ச் செனிப்பனு மிந்தப் பாலன்
ஆலத்தை யுண்டோன் மாரி அவளுடைக் குற்றத் தாலே
வேல்விழி யிரண்டுங் குற்றம் விலகுமோ விலகா தோசொல்.

12. மரண மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, ஒழுக்க முள்ள வேளாளர் மரபினனுய்ப் பிறப்பான் இவன். மாரியம்மனுக்குச் செய்த அபசாரத்தினுலே கண்கள் இரண்டிலும் பார்வையில்லாது போம். அந்தக் குற்றம் விலகுமோ ? விலகாதோ ? சொல்லுங்கள்.

13.* என்னசாந் திகள்செய் தாலும் விலகாது வந்தத் தோடம்
எந்தக்கா லத்தில் சோதி ஏகிடும் விபரஞ் சொல்வீர்
இந்தவன் மூன்றுண் டுள்ளே ஏகிடுஞ் சோதி யென்றும்
அந்தவன் மணமுங் காணன் அதிதிபோல் வாழ்வா னுகும்
கந்தனே யின்ற மாதே கழறின மொழிகுன் றாது.

13. எவ்விதமான சாந்திகள் செய்தாலும் அந்தக் குற்றம் நீங்காது. எந்தக் காலத்தில் இவன் கண் பார்வை இழப்பான் ? விவரமாகச் சொல்லுவீர். இவன் பிறந்து மூன்று வருஷங்களுக்குள் பார்வை யிழப்பான் என்று சொன்னேம். மணம் இல்லாதவ னுவான். துறவிபோல் வாழ்வான். முருகக் கடவுளைப் புதல்வராகப் பெற்ற தாயே ! கூறிய சொற்கள் குறைவுபடா.

14. தன்துணை முன்ஆண் ஒன்று தங்கும்பின் ஆண்பால் ரெண்டு
கன்னிமா ரிருவ ராகும் கழறுவோ முன்னேன் சேதி
பொன்பணி சேர்ப்பா னுகும் பூமியைப் பரிபா லிப்பன்
அன்னியர் மதிக்க வாழ்வன் ஆண்மையாய்க் குடும்பி யாவன்.

---

*இப்பாடலில் ஒருவரி மிகுந்துள்ளது.

14. இவனுக்கு முன்பிறந்த சகோதரன் ஒருவனும், பின்பிறந்த சகோதரர் இருவரும் உளராவர். இவனுக்குச் சகோதரிகள் இருவரும் உள்ளனர். மூத்த சகோதரன் செய்தியைச் சொல்லுவோம். பொன், ஆபரணங்கள் இவற்றைச் சேர்ப்பான். பூமியைக் காப்பான். அயலார் மதிக்கும்படி வாழ்க்கை நடத்துவான். ஆண்மையுள்ள குடும்பஸ்தனும் விளங்குவான்.

15. வறுமையில் லாதா னென்றேரும் வஞ்சனை மனமில் லாதான்
அறுமுகன் பத்தி கொள்வன் அணுகிடும் பாரி யொன்று
பெருஞ்சுதர் ஆண்பால் ஒன்று பேதையர் மூவ ராதும்
குறையிலா வாழ்வா னுகும் குமரனுந் தீர்க்க சிவி.

15. தரித்திர மில்லாதவன் என்று சொன்னேரும். வஞ்சனை யில்லாத மனத்தினன். சுப்பிரமணியக் கடவுள் மீது பக்தி கொள்ளுவான். மனைவி யொருத்தி வாய்ப்பாள். மக்களில் ஆண்மகன் ஒருவனும் பெண்கள் மூவரும் தோன்றுவர். குறையின்றி வாழ்வான். தீர்க்க ஆயுளுடையனுக வாழ்வான்.

16. பின்துணை சேதி யாவும் பேசுவோம் பின்பா கத்தில்
அன்னையின் குணத்தைச் சொல்வோ மழகுளாள் ரதிபோ [லொப்பாம்
முன்கோப முடனே தாழ்வு மொழியது வதிக முண்டு
மன்னவன் மனத்துக் கேற்றேள் வஞ்சனை மனமில் லாதாள்.

16. ஜாதகனின் இளைய சகோதரர் செய்திக ளனைத்தையும் பிற் பாகத்தில் கூறுவோம். தாயார் குணங்களைக் கூறுவோம். இரதிதேவியைப் போல் அழகுடையவள், முன்கோப முண்டு. உடனே சாந்த மாறுவாள். அதிகமாகப் பேசுவாள். கணவன் மனத்துக்கு உகந்தவள். கபடம் பொருந்திய மன மில்லாதவள்.

17. சொல்லதைக் காப்பா ளாகும் தோகைக்கு வன்னை ரெண்டு
புல்குவாள் முதல்தாய்க் கின்னுள் பூவைக்குத் துணையாண் [ரெண்டு
வல்லிமா ரல்வார் தீர்க்கம் வளமான குடும்ப மேற்பள்
எல்லிகள் பலவூர் சேர்ப்பள் இந்திரன் போலே வாழ்வள்.

17. சொல்லும் சொற்களைக் காப்பாற்றுவாள். இவளுக்குத் தாய் மார் இருவர். இவள் முதல் தாயாருக்குப் புதல்வியாகத் தோன்றுவாள். சகோதரர் இருவரும், சகோதரிகள் இருவரும் இவளுக்கு உளராவர். அவர்கள் தீர்க்க முள்ளவர்கள். செழிப்பான குடும்பத்தை ஏற்பாள். பல ஊர்களில் நிலங்களைச் சேர்ப்பாள். இந்திரனைப் போன்ற யோகங்களுடன் வாழ்வாள்.

18. மாதுரு பூர்வந் தன்னை யறைகின்றேந் தாயே கேளும்
நீதிலாப் பாண்டி தன்னில் செனித்தனள் மறவர் வர்க்கம்
போதன முடைய ளாகிப் புண்ணியத் தலங்கள் சென்றும்
சீதளப் பிறைய ணிந்த தேவர்க்குத்[1] தொண்டு பூண்டு ;

18. தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம்; தாயே! கேளுங்கள். குற்றமற்ற பாண்டிய நாட்டில், மறவர் மரபில் பிறந்தாள். மிக்க செல்வத்தை யடைந்து, பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று வழிபட்டு, குளிர்ந்த பிறைச்சந்திரனைத் தலையிலணிந்துள்ள சிவபெருமானுக்குத் தொண்டுகள் செய்து;

19. மறலியின் பதிக்குச் சென்று மலரயன் வரையப் பட்டு
அரிவையு முதித்தா ளென்றேம் ஆண்மையாய்க் குடும்பி [யாவள்
வருஞ்சென்மந் தக்கோ லத்தில் வருவளே சத்ரியச் சேயாய்
நிறையவே குடும்பி யாவள் நிமலியுங் கேட்க லுற்றாள்.

19. மரண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறப்பில் பிறந்தவள் இவள் என்று கூறினேம். சிறந்த குடும்ப முடையவளாவாள். மறு பிறப்பு, தக்கோலத்தில், க்ஷத்திரிய மரபினளாய்ப் பிறப்பாள். நிறைந்த குடும்பியாவாள். பார்வதி கேட்கின்றாள்.

20. மங்கைக்கு மறுதா யொன்று வறைந்திட்டே ரவட்குப் புத்ரர்
தங்குமோ தங்கா தோசொல் சடைமுனி தோடத் தாலே
நங்கைக்குச் சுதர்கள் காணாள் நற்கரு நீங்கு மாகில்
நிங்கள்போல் வதன மொத்த தேவிக ளிருவர் நேரும்.

20. இவளுக்கு மாற்றாந்தாய் ஒருத்தியுண்டு என்று கூறினீர்கள். அவளுக்குப் புதல்வர்கள் தோன்றி நிலைப்பார்களோ? நிலையார்களோ? கூறுங்கள். சடைமுனியின் சாபத்தினால், அவள் புத்திர பாக்கிய மடையாள். குற்றம் நீங்கினால், சந்திரன்போல் அழகிய முகத்தையுடைய புதல்விகள் இருவர் தோன்றுவர்.

21. உதித்தவன் தந்தை பூர்வம் உரைக்கின்றேந் மருணை யுத்ரம்
சதியிலாப் பேரூர் தன்னில் செனித்தனன் வடுக னாக
அதிகமாய் வணிபம் செய்து அதிதிகட் கன்ன மீந்து
விதவிதத் தலங்கள் சென்று மேவினன் காள னாடு.

---

1. சிவபெருமான்

21. ஜாதகன் தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருவண்ணாமலைக்கு வடக்கில், பெரியதேர் ஊரில், வடுகர் மரபினனாகப் பிறந்தான். மிகுதியாக வியாபாரங்கள் செய்து, தவமுடையோர்க்கு உணவளித்து, பல புண்ணியத் தலங்கட்கு யாத்திரை சென்று வந்து, மரணமடைந்தான்.

22. பொன்னவன் வரையப் பட்டுப் பிறந்தன னென்று
[சொல்வோம்
மன்னவன் தனக்கு முப்ப தாண்டினில் மரிப்பான் தந்தை
பின்சென்மம் பிருதிவி தன்னில் பிறப்பனு மிக்கு லத்தில்
பொன்பணி யுடைய னாகிப் புகழான செட்டுச் செய்வன்.

22. மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறப்பாகப் பிறந்தான் என்று கூறுவோம். ஜாதகனின் முப்பதாம் வயதில் தந்தை மரணமாவன். மறுபிறப்பு, காஞ்சிபுரத்தில் இக் குலத்தவனாகப் பிறப்பான். பொன், ஆபரணங்கள் இவற்றை யுடையவனாய், புகழ்பெற்ற வியாபாரம் செய்வான்.

23. ஆறாறு வொன்று ஆண்டில் அன்னைக்குக் கண்ட மெய்தும்
காரியின் தசையி லேதான் கனகன்தன் புக்தி யாகும்
நாரிக்கு விதற்குள் ளாக நல்வினை காண்பா ளோசொல்
வேறுதீங் கில்லா னென்றும் விளம்பின வயது தீர்க்கம்.

23. ஜாதகன் முப்பத்தேழாம் வயதில் தாயார் மரண மடைவாள். அப்பொழுது ஜாதகனுக்குச் சனி மகா தசை குருபுக்தி நடைபெறும். அவள் இறப்பதற்குள் நன்மைகள் எவையேனும் அடைவாளோ? சொல்லுங்கள். வேறு குற்றம் ஒன்றும் ஏற்படாது. கூறிய வயதுவரை தீர்க்கமாக விருப்பாள்.

24. உதித்தசேய் யோகந் தன்னை யுரைக்கின்றோம் கல்வி மானும்
அதிபதி யாக வாழ்வன் அறன்தொண்டு புரிவா னாகும்
பதியினில் சித்திரஞ் செய்வன் பண்போர்க ளுறவு
[கொள்வன்
ததிபாக்கிய முடைய னாகும் சாதமுங் குறைவு றாதான்.

24. ஜாதகனின் யோகங்களைச் சொல்லுகின்றோம். படிப்பாளி, தலைவனாக விளங்குவான். சிவத்தொண்டு புரிவான். வீட்டைச் சித்திரங்களால் அலங்கரிப்பான். நற்குண முடையோர்களின் நட்பைக் கொள்ளுவான். பால், தயிர் பாக்கிய முடையவன். உணவுக்குக் குறைவேற் படாதவன்.

25. துணைவர்க ளுதவி யாலே சுதனுமே சீவிப் பானும்
கனமான குடும்ப மென்றேும் கடனிலான் காலாள் சேர்க்கை
இனத்துக்கு விவன்சொல் மேன்மை ஏகுவான் தலவா
[சங்கள்
மனக்கண்ணுல் கல்வி மானும் மங்கையே கேட்டி டாயே.

25. உடன்பிறந்தோரின் உதவியால் இவன் வாழ்வான். மதிப்புள்ள குடும்பம் என்று கூறிலேும். கட னில்லாதவன். எவலாட்கள் பலரைச் சேர்ப்பான். சுற்றத்தார்களுக்கு இவன் சொற்களில் மதிப்பு உண்டு. பல தலங்களுக்குச் சென்று வாசம் செய்வான். அகக் கண்ணுல் கல்வி கற்ற வன். பார்வதியே! கேட்பாயாக.

26. நாற்பது வாண்டு தன்னில் நற்றுலா மாதந் தன்னில்
கூப்பிடு வானுங் காலன் குழவியை யென்று சொல்வோம்
ஏற்கவே விவன்பின் சென்மம் இயம்புவோம் தணிகை
[தன்னில்
ஆர்க்கவே வைசியச் சேயாய் அருளுவா னென்று
[சொல்வோம்.

26. நாற்பதாம் வயதில், ஐப்பசிமாதம் இயமன் இந்த ஜாதகனே அழைப் பான் என்று கூறுவோம். இவன் மறு பிறவியைச் சொல்லுவோம். திருத் தணிகையில் வைசியர் மரபினனுகப் பிறப்பான் என்று கூறுவோம்.

27. அன்னவன் சென்ன காலம் ஆதிரை மூன்றும் பாதம்
துன்ராகு தசைநா லாண்டும் திங்களும் நவமே யாகும்
பன்னுவோம் பலனும் யாங்கள் பத்தினி பாரி யாலே
இன்னவன் துன்பம் நேரும் இடருக ளதலுல் நேரும்.

27. ஜாதகன் பிறப்புக் காலத்தில் திருவாதிரை நட்சத்திரம், மூன்றும் பாதமாம். இராகு மகா தசை இருப்பு; நான்கு வருஷங்களும், ஒன்பது மாதங்களுமாம். அககாலத்திய பலன்களே நாங்கள் சொல்லுவோம். மனைவி யால் இவனுக்குத் துன்பங்கள் நேரும். பல கஷ்டங்கள் உண்டாம்.

28. இல்லமும் வேற தாகும் இவன்பிதா துணையுஞ் சேதம்
அல்லலாம் மாது ரில்லம் அக்குடி பேத மாகும்
நல்லதோர் துணைபின் விருத்தி நாற்காலி நட்ட மெய்தும்
எல்லிகள் சேர்த் லுண்டு இயம்புவோம் விபரம் பின்னுல்.

28. வீடு வேறுகும். இவன் தந்தையுடன் பிறந்த சகோதரருக்கு நாசமேற்படும். தாயின் பிறந்த வீட்டில் துன்பங்கள் உண்டாம். அவள் குடும்பம் வேறுகப் பிரியும். இவனுடைய இளைய சகோதரர்களுக்கு விருத்தி யுண்டு. கால் நடைகள் நஷ்டமாம். பூமிகள் சேரும். விவரமாகப் பிற் பகுதியில் சொல்லுவோம்.

ஜாதகம் 82

1. பிறைகன்னி காரி தேளில் புரவியோன் மேரு வாகத்
தரைமகன் நந்தி யாகச் சல்லியன் புந்தி ராகு
உறையிட மான தாக உயர்குரு சீய மாக
வருவது சென்மம் நந்தி யறைகுவீர் பலனே யென்று ;

1. சந்திரன் கன்னியிலும், சனி விருச்சிகத்திலும், சூரியன் தனுசிலும், செவ்வாய் விருஷபத்திலும், சுக்கிரன் புதன் ராகு மகரத்திலும், குரு சிம்மத்திலும், கேது கடகத்திலும் தங்கி, விருஷபம் இலக்கினமாக விருந்தால், பலன்களைச் சொல்லுங்கள் என்று ;

		லக்கினம் செவ்வாய்	
	இராசி சக்கரம்		கேது
சுக்கிரன் புதன் ராகு			குரு
சூரியன்	சனி		சந்திரன்

2. சங்கரி கேட்கும் போது சடைமுனி புகலு கின்றார்
இங்கிது வாண்பால் சென்மம் இல்லமும் வடதென் வீதி
தங்கிடு மேற்கு வாசல் சாகையும் வாடை யாகும்
துங்கமாம் நகர மாகும் துரைராசர் வாச மாகும்.

2. பார்வதி கேட்கும்போது, சடை முடியையுடைய முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண் பிறப்பு. வீடு வடக்குத் தெற்கான வீதியில் மேற்குப் பார்த்த வாயிலையுடையது. வீடு வட கோடியில் உள்ளது. அரசர்கள் வாசஞ் செய்யும் சிறந்த நகரமாம்.

3. வாரியும் கீழ்ப்பா லாமே வளமுள கெடியு முண்டு
கூறின வடையா ளத்துள் குழவியுஞ் சேட்ட னாக
வீரியன் முத்ரிய சேயாய் விளங்குவா னிவனே யம்மா
தீரமாய்க் குடும்பச் சேதி செப்புவோ மினிமே லாக.

3. கீர்திலை யொன்று கிழக்குப் பக்கத்திலுள்ளது. சிறந்த காவலையுடைய கோட்டையொன்றும் அங்குண்டு. சொல்லிய அடையாளங்களுள்ள

இடத்தில், தன் தந்தைக்கு மூத்த புதல்வனாக, முத்திய குலத்தில் இந்த ஜாதகன் பிறப்பான் ; தாயே ! இவன் குடும்பச் செய்திகளை, தைரியத்துடன் இனிமேல் சொல்லுவோம்.

4. தந்தையின் துணைவர் காணன் தனியனுய் வாழ்வா னம்மா
எந்தக்கா ரணத்தி னலே இவன்தனி சொன்னீ ரையா
ஒன்பதில் ராகு நீங்க உடுபதி யைந்தி லாக
இன்னவார் பலத்தி னலே இவன்தனி சொன்னேம்
[யாங்கள்.

4. தந்தை, உடன்பிறந்தார் இல்லாமல் தனியனுய் வாழ்வான். என்ன காரணத்தால் தனியனுய் வசிப்பான் என்று கூறினீர்கள். ஒன்பதாமிட மாகிய மகரத்தில் இராகுவும், சந்திரன் கன்னியிலும் தங்கி யிருக்கும் பலத் தைக் கொண்டு, தனியாக வாழ்வான் என்று நாங்கள் கூறினேம்.

5. தந்தையின் குணத்தைச் சொல்வோம் சிவந்தமெய் ஊகை
[சாலி
தந்தையால் சுகமி லாதான் சல்லிய பாதை யேற்பன்
தன்தன மூள்ளா னகும் சகலர்க்கு நல்லோ னவன்
தன்மனம் கபடு மில்லான் சரசமாய் வார்த்தை யுண்டு.

5. தந்தையின் குணங்களைச் சொல்லுவோம். சிவந்த உடல். சாமர்த் தியசாலி. தன் தந்தையினல் சுக மடையாதவன். கடன் தொந்தரவை யடைவான். தன் சொந்த முயற்சியால் சேர்த்த செல்வ முடையவன். அனைவருக்கும் நல்லவன். மனத்தில் வஞ்சனை யில்லாதவன். சரசமான பேச்சு உண்டு.

6. ஆதியில் வறுமை யேற்பன் அடாவடி கூரு னகும்
மாதுவால் பெருமை யேற்பன் மனைவியூர் வாசம் சின்னள்
சீதளக் குணத்தா னகும் சல்லிய பாதை தீர்ப்பன்
மேதினி சேர்ப்பா னகும் விளம்புவோ மிவன்பின் சென்மம்.

6. முதலில் தரித்திரனை விருப்பான். அடாவடியாகப் பேசமாட் டான். மனைவியால் பெருமை யடைவான். மனைவியின் பிறந்தகத்தில் சிலகாலம் வசிப்பான். தண்மையான குண முள்ளவன். கடனைத் தீர்ப்பான். நிலை நிலங்களைச் சேர்ப்பான். இவன் மறு பிறவியைச் சொல்லுவோம்.

7. கந்தன்வாழ் தணிகை தன்னில் கலந்தனன் ரெட்டி வம்சம்
மூந்தின குடும்பி யாகி முதல்வனும் வாழு நாளில்
பிந்தினோர்க்குப் பொருளீ யீந்து பூமியைப் பறித்துக்
[கொண்டான்
அந்தவ ரறைந்த சாபம் அடைந்தது வென்று சொல்வோம்.

7. முருகப்பிரான் கோயில் கொண்டுள்ள திருத்தணிகையில், ரெட்டியார் மாபில் தோன்றினன். முதிர்ந்த குடும்ப முடையவனும், இவன் வாழ்கின்ற காலத்தில், ஏழைகளுக்குச் சிறிது பொருளைக் கடனுகக் கொடுத்து, பின்பு, அவர்கள் நிலத்தை யபகரித்துக் கொண்டான். அவர்கள் கூறிய சாபம் இவனை யடைந்தது என்று கூறுவோம்.

8. மாரனு மந்தி யத்தி லறுமுகன் தொண்டு பூண்டு
தீரமாய்க் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
பாரினி லுதிப்பா னுகும் பகருவோ முன்னூழ்ச் சாபம்
மாரனுந் தனியாய் வாழ்வன் மாநிலஞ் சல்ய மேற்பன்.

8. இவன் கடைசிக் காலத்தில், சுப்பிரமணியக் கடவுளுக்குத் தொண்டு செய்து, மரணமடைந்து, மீண்டும் பிரமனல் படைக்கப்பட்டு, இவ்வுலகில் இக்குலத்தவனுகப் பிறப்பான். முன் பிறவியில் ஏற்பட்ட சாபத்தினுல், இவன் உடன்பிறந்தார்களின்றித் தனியாக வாழ்வான். கடன் ஏற்பான்.

9. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளான் சிவந்த
[மேனி
தன்னுடல் வலிவு முண்டு தந்தையால் சுகமில் லாதான்
மன்னனு லுய்வா னுகும் மாதாவால் பெருமை யேற்பன்.

9. சொல்லப்பட்ட இவ்விதக் குணங்களை யுடையவனுக்கு இந்த ஜாதகன் புதல்வனுகப் பிறப்பான். இவன் குணங்களைச் சொல்லுவோம். அழகுள்ளவன். சிவந்த உடல். உடலில் வலியுள்ளவன். தந்தையினல் சௌக்கியத்தை யடையாதவன். அரசாங்க உத்தியோகம் ஏற்று ஜீவிப்பான். தாயினல் மேன்மை யடைவான்.

10. வித்தையு மூன்று கற்பன் விவேகியா மெவர்க்கு நல்லன்
புத்தியில் பெரியோ னுகும் பொய்யது வழுத்தா னுகும்
சத்தியங் கூறு னுகும் தன்பந்து மதிக்க வாழ்வன்
சுத்தம்போல் வெளிம யக்கன் சொல்லது சுருக்க மாகும்.

10. மூன்று விதக் கல்வி கற்பான். விவேகி. யாவர்க்கும் நல்லவன். உயர்ந்த புத்தி யுள்ளவன். பொய்யை நினையாத மனம். பொய்ச் சத்தியம் கூறான். தன் உறவினர் மதிக்கும்படி வாழ்க்கை நடத்துவான். தூய்மை யுடையவன் என்று வெளியார் எண்ணி மயங்கும்படி செய்வான். சுருக்கமாகப் பேசுவான்.

11. சொல்லிடு வசன மெல்லாஞ் சுத்தமாம் சொகுச னுவன்
வெல்லுவான் எதிரி தன்னை வீண்பழி யேற்கா னுகும்
அல்லலில் லாமல் வாழ்வன் அரசர்பூ சிதனு மாவன்
இல்லற மிரண்டு செய்வன் ஏவலா ளுடைய னுகும்.

11. கூறுகின்ற சொற்கள் அனைத்தும் ஒழுங்குடையவாம். சொகுசாக இருப்பவன். பகைவனை வெற்றி கொள்ளுவான். வீண் அபவாதங்களை ஏற்காதவன். துன்பங்களின்றி வாழ்வான். அரசரால் மதிப்பும் பெறுவான். வீட்டை இரண்டாகப் பிரிப்பான். (இரு மனைவியரை யடைவான்.) ஏவலாட்களைப் பெற்றவன்.

12. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளந்தச்
[சங்கை
நாகமு மான தாக நற்சனி யேழி லாக
ஆகம னுலி லாக அம்புலி யஞ்சி லாகத்
தோகையே தர்ம கர்ம யோகமொன் றுரைக்க லாகும்.

12. இவனுக்கு யோகங்களை எப்படிச் சொன்னீர்கள்? அதற்குக் காரணங்களைக் கூறுங்கள். தாயே! இராகு மகரத்திலும், சனி விருச்சிகத்திலும், குரு சிம்மத்திலும், சந்திரன் கன்னியிலும் தங்கியிருப்பதால், தர்ம கர்மாதி யோகம் ஒன்று இவனுக்கு உண்டாகும் என்று சொல்லலாம்.

13. பருவத யோக மொன்று பகருவோம் பால னுக்குப்
பொருளது பெருக்கஞ் செய்வன் பூமியை விருத்தி செய்வன்
அரசனுல் தொழிலு மேற்பன் அவனியை விருத்தி செய்வன்
பெருமையும் புகழு மேற்பன் பிதுர்மேலாய் வாழ்வா
[னம்மர்.

13. இவனுக்குப் பர்வத யோகம் ஒன்றும் சொல்லுவோம். செல்வத்தை விருத்தி செய்வான். நிலபுலங்களை அதிகப்படுத்துவான். அரசாங்கத் தொழிலை ஏற்பான். பூமியை வளர்ப்பான். மேன்மையும் புகழு மடைவான். தந்தையினும் மேன்மையாக வாழ்வான்? தாயே!

14. எந்தக்கா லத்தில் ராச யோகமு மெய்தும் சொல்வீர்
பொன்னவன் தசைபூர் வத்தில் பொருந்திடு மரசு தானும்
மந்தன்தன் தசைவ ரைக்கும் வளர்பிறை போலே
[யோங்கும்
பின்பாகம் விபரஞ் சொல்வோம் பேதையே கேட்டி டாயே.

14. எந்தக் காலத்தில் இவனுக்கு இராச யோகம் உண்டாகும் என்று கூறுங்கள். குரு மகா தசையின் தொடக்கத்தில் அரசாங்க உத்தியோகம் ஏற்படும். சனி மகா தசை தொடங்கும் வரையில் வளர்பிறைச் சந்திரன்போல, இராச யோகம் வளரும். பிற்பாகத்தில் விவரமாகச் சொல்லுவோம். தாயே! கேட்பாயாக.

15. தன்துணை காணு ளுகுஞ் சாற்றுவீ ரந்தச் சங்கை
என்னகா ரணத்தி னுலே இவன்துணை தோடஞ்
[சொல்வோம்
துன்மையாய்க் கேது மூன்றில் தொடர்ந்ததால் துணையுங்
[காணுன்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

15. தன்னுடன் பிறந்தாரில்லாதவன். அதற்குக் காரணஞ் சொல்லுவீர். என்ன காரணத்தினுல் சகோதர தோஷம் ஏற்பட்டது என்று கூறுவோம். கொடிய தன்மையுடைய கேது மூன்று மிடமாகிய கடகத்தில் தங்கியிருப்பதால், உடன் பிறந்தார் இலராவர். உயர்ந்த கணவனை யடைந்த பார்வதியே! கேட்பாயாக.

16. மாதுரு குணத்தைச் சொல்வோ மாந்தளிர் மேனி யாவள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உள்மனம் கபடு மில்லாள்
சீதள குணத்தா ளாகும் செய்ந்நன்றி மறவா ளாகும்
வேதனை யொருவர்க் கெண்ணுள் விரதங்கள் பூண்பா
[ளாகும்

16. ஜாதகன் தாயாரின் குணத்தை நாங்கள் சொல்லுவோம். மாந்தளிர் போன்ற மென்மையான சரீர முடையவள். சுகமாய்ப் பேசுவாள். மனத்தில் வஞ்சனை யில்லாதவள். தண்மையான குண முள்ளவள். பிறர் செய்த நன்றியை மறவாதவள். ஒருவர்க்கும் துன்பம் எண்ணுதவள். விரதங்களை மேற் கொள்ளுவாள்.

17. கல்விமான் ஊகை சாலி கடந்தோர்க்கு வன்ன மீவள்
நல்லதோர் தலங்கள் செல்வள் நாதனூர் பத்தி பூண்பள்
இல்லையென் றுரைக்க மாட்டாள் யாவர்க்கும் நல்லோ
[ளாவள்
சொல்லது சுருக்க மாகும் துர்வார்த்தை கூரு ளாகும்.

17. படிப்பாளி. சாமர்த்திய முடையவள். துறவிகட்கு உணவளிப் பாள். நல்ல தலங்களுக்கு யாத்திரை செல்லுவாள். கடவுள் மீது பக்தி கொள்ளுவாள். யாசிப்பவர்க்கு இல்லை யென்று சொல்ல மாட்டாள். யாவ ருக்கும் நல்லவள். சுருக்கமாகப் பேசுவாள். கெட்ட வார்த்தைகள் சொல் லாதவள்.

18. அன்னையின் வர்க்கத் தாரால் அற்பமாம் வார்த்தை கேட்பள்
கன்னிகை யோக சாலி கண்முகம் வசிய மூண்டு
பொன்பணி சேர்ப்பா ளாகும் பூமியில் நிந்தை யேற்பள்
மன்னவன் மனம்போல் வாழ்வள் வருவோரை யாத ரிப்பள்.

18. இவளுடைய தாய் வர்க்கத்தாரால், அற்பமான பேச்சுக்களைக் கேட்டுக் கொள்ளுவாள். யோக முடையவள். கண்ணும் முகமும் வசிகர மாக வமைந்தவள். பொன் ஆபரணங்கள் முதலியவற்றைச் சேர்ப்பாள். கணவனுடன் மன மொத்து வாழ்க்கை நடத்துவாள். வீடு தேடி வருபவர் களை ஆதரிப்பாள்.

19. தன்துணை காணு ளாகும் தாயில்ல மில்லா ளாகும்
என்னகா ரணத்தி னாலே இயம்பினீ ரந்தச் சங்கை
சந்திரன் தனக்கு மூன்றில் சனியுமே விருப்ப தாலே
கன்னிக்குத் துணையுந் தோடம் காணுது வில்ல மென்றேரும்.

19. தனக்கு உடன் பிறந்தா ரில்லாதவள். தன் தாய்க்குச் சொந்த வீடில்லை. என்ன காரணத்தினால் அவ்வாறு கூறினீர்கள்? ஜாதகனுக்கு, சந்திரனுக்கு மூன்று மிடத்தில் (விருச்சிகம்) சனி தங்கி யிருப்பதால் தாய்க்குச் சகோதர தோஷம் ஏற்படும். அவளுடைய தாய் வீடு மில்லை யென்றேரும்.

20. முன்னவ ளிருந்த சென்ம மொழிகின்றேரும் கொங்கு
[நாட்டில்
கன்னியுஞ் செக்கான் வம்சம் கலந்துமே சுகமாய் வாழ்ந்து
பொன்பொரு ளுடையா ளாகிப் பூவையும் வாழு நாளில்
துன்மைகள் வந்த சேதி செப்புவோங் கேளுந் தாயே

20. இவள் முற் பிறவியைச் சொல்லுகின்றேரும். கொங்கு நாட்டில், வாணியர் குலத்தில் பிறந்து, சௌக்கிய மடைந்து, பொன்னும் பொரு

ளும் உடையவளாம், வாழுகின்ற காலத்தில் தோஷங்கள் வந்த விவரங்களைச் சொல்லுவோம். கேளுங்கள் ; தாயே!

21. அந்நகர் விசேட காலம் ஆலயம் வரனை டொத்துக்
கன்னியுஞ் சென்று மேதான் கடவுளுக் கருச்சித் தேத்தி
இன்னவள் கடைவீ திக்குப் புகுந்துமே சிவப்புச் சிப்புப்
பொன்மஞ்சள் வாங்கிக் கொண்டு பொன்னியாச் சென்ரு
[ளென்ரேரும்.

21. அவ்வூர் உற்சவ சமயத்தில், தன் கணவனுடன் கோவிலுக்குச் சென்ருள். கடவுளுக்கு அருச்சனைகள் முதலியன செய்து, போற்றி, பின்பு கடை வீதிக்குச் சென்று, குங்குமம், மஞ்சள், சீப்பு, இவற்றை வாங்கிக் கொண்டு, பணம் கொடுக்காமல் சென்று விட்டாள் என்று கூறினேம்.

22. வணிபனும் பின்னல் பார்த்து மாதுவைக் காணு ஞகிச்
சினங்கொண்டு புகலும் சாபம் சிலசாமான் வாங்கிக்
[கொண்டு
தனமது வீயாச் சென்ற தையலுக் கிச்சென் மத்தில்
இனமது வாகா வண்ணம் ஏகுவான் வரனு மேதான்.

22. கடைக்காரன் பிறகு இவள் பணம் கொடுக்காமல் சென்றுவிட்டதை அறிந்து, கோப மடைந்து, சாப மிடுவான். என்னிடம் சில பொருள் களைப் பெற்றுக் கொண்டு, பணம் தராமல் சென்ற பெண்ணுக்கு, இப் பிறவியில், குங்குமும் மஞ்சளும் உபயோக மாகு முன்பே, கணவன் இறப்பான்.

23. மற்றெரு சென்மந் தன்னில் வயதுகா லத்தி லேதான்
வித்தகன் மரிப்பா ஞகும் விளங்கார்கள் சுதர்கள் தாமும்
குத்தமாய்ச் சொல்ல லுற்ருன் குலவிற்று வந்தச் சாபம்
சத்திக்கு வேறு வொன்று சேர்ந்தது புகலக் கேண்மோ.

23. மறு பிறவியில், தக்க வயதில் கணவன் மரண மடைவான். புத்திரர்கள் தோன்றி விளங்க மாட்டார்கள், என்று குற்றமாகக் கூறினன். அந்தச் சாபம் இவளை யடைந்தது. வேறு ஒரு தோஷமும் இவளைச் சேர்ந்தது. சொல்லுகின்ரேரும் ; கேளுங்கள்.

24. இறப்பினில் கூடு கட்டி இருக்கின்ற பட்சி தன்னைக்
குறிப்பாக வதனைக் கண்டு கூட்டினைக் கலைத்தா ளென்ரேரும்
மருவிற்று வந்தத் தோடம் மாதுவு மந்தி யத்தில்
பெறுஞ்சுதர் யாவு மாண்டு புனிதனு மரண மாகி ;

24. வீட்டுக் கூரையில் கூடு கட்டிக் கொண்டு வாழ்கின்ற பறவை யைக் கண்டு, இவள் அதன் கூட்டினைக் கலைத்தாள் என்று சொன்னேம். அந்தத் தோஷம் இவளே யடைந்தது. இவளுடைய கடைசிக் காலத்தில் பெற்ற புதல்வர்கள் அனைவரும் மாண்டு கணவனும் இறக்க;

25. சஞ்சல மனத்த ளாகித் தந்தியின் கோட்டத் துக்கு
இந்தவள் தீப மொன்று ஏற்றியே மரண மாகி
முந்தினேன் வரையப் பட்டு வுதித்தவ ளென்று
[சொல்வோம்
நஞ்சுபோல் வணிகன் சாபம் நல்கிடு மிச்சென் மத்தில்.

25. சஞ்சல மடைந்த மனத்தினளாய், விநாயகர் கோயிலுக்குத் தினந் தோறும் விளக்கொன்று ஏற்றி வைத்து சிறிது நாள் வாழ்ந்திருந்து, மரண மடைந்தாள். மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, இக் குலத்தில் பிறப்பாள் என்று கூறுவோம். கொடிய விஷம் போல, வணிகனின் சாபம் இப் பிற வியில் இவளே யடையும்.

26. பருவகா லத்தி லேதான் பர்த்தாவு மரிப்பா னுகும்
குருவியின் தோடத் தாலே குடியின்றி வாழ்வா ளாகும்
பெறுஞ்சுதர் தோட மெய்தும் பராசரும் புகலு கின்றூர்
திருமக னெவ்வார் தீர்க்கம் செப்புவீர் முனியே நீதாம்.

26. தக்க பருவத்தில் கணவன் இறப்பான். பறவையின் கூட்டி னைக் கலைத்த தோஷத்தால், சொந்த வீடின்றி வேறு மனையில் வசிப்பாள். பெற்ற புதல்வர்களுக்குத் தோஷ மேற்படும். பராசரர் கேட்கின்றூர். ஜாத கன் மாத்திரம் எங்ஙனம் தீர்க்க மாவன், முனிவரே! நீங்கள் கூறுவீர்களாக.

27. முன்சென்மங் கணேச னுக்கு வேற்றின தீப புண்யம்
மன்மதன் போலா ணென்று மருவிடுந் தீர்க்க மாக
இன்னவள் பின்சென் மத்தை இயம்புவோம் தக்கோ
[லத்தில்
அன்னவள் சைவச் சேயாய் அருளுவா ளென்று
[சொல்வோம்.

27. முற் பிறவியில், விநாயகர் கோயிலில் விளக்கு ஏற்றின புண்ணி யத்தால் மன்மதனைப் போன்ற அழகுடைய புதல்வன் ஒருவன் தீர்க்கமாக விளங்குவான். தாயின் மறு பிறப்பைச் சொல்லுவோம். தக்கோலத்தில், சைவ குலத்தவளாகப் பிறப்பாள் என்று கூறுவோம்.

28. கருமகா லங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர்தாம்
திருதிய வாண்டு தன்னில் செல்லுவான் தந்தை தானும்
மறுசென்மங் காளாத்தி தன்னில் வருவனே சைவச் சேயாய்
அறுமுகன் தனைவ ளர்த்த அம்பிகை யாளே கேளாய்.

28. முனிவரே! நீங்கள், ஜாதகனுக்குக் கருமதசை வரும் காலங்களைக் கூறுங்கள். ஜாதகன் பிறந்து மூன்றுவது வருஷத்தில் தந்தை இறப்பான். மறு பிறப்பில், இவன் தந்தை, காளஹஸ்தியில், சைவ குலத்தவனுகப் பிறப்பான். சுப்பிரமணியரைப் புதல்வராக வடைந்து வளர்த்த அம்பிகையே! கேட்பாயாக.

29. அன்னைக்கு முப்பா னுறில் அணுகிடுங் கண்டந் தானும்
இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோ மிருபாண் [டுள்ளே
தென்திசை யன்னை வர்க்கஞ் சேருவாள் குணத்தைச் [சொல்வோம்
கன்னென மொழியே சொல்வள் கபடிலா ளென்று [சொல்வோம்.

29. ஜாதகனின் மூப்பத்தாறும் வயதில் தாய்க்கு மரணம் ஏற்படும். ஜாதகனின் திருமண காலத்தைச் சொல்லுவோம். இருபது வயதிற்குள் தெற்குத் திசையிலிருந்து, தாய் வழியைச் சேர்ந்த பெண் இவனுக்கு மனைவி யாக வருவாள். அவள் குணங்களைச் சொல்லுவோம். கரும்பு போல் இனிய சொற்களைப் பேசுவாள். வஞ்சனை யில்லாதவள் என்று சொல்லு வோம்.

30. பால்பாக்ய முடைய ளாகும் பசித்தோர்க்குத் தாக மீவள்
சீலியாம் விரத மேற்பள் சனவுப காரி யாகும்
ஞாலமேல் நல்லோ ளாவள் நாயகன் மனத்துக் கேற்றோள்
வேல்விழி தீர்க்க சீவி விருடியுந் தடுத்துச் சொல்வார்.

30. பால் பசு பாக்கிய முடையவள். பசி யென்று வந்தவர்கட்கு உணவு அளிப்பாள். ஒழுக்க முடையவள். விரதங்களை மேற் கொள்ளு வாள். மக்களுக்கு உபகாரங்கள் செய்வாள். உலகில் நல்லவளாக விருப் பாள். கணவன் மனத்துக் குகந்தவள். தீர்க்க வயதுடையவள். முனிவர் தடுத்துக் கூறுவார்.

31. இருமனை சாத கர்க்கு எய்திடு மென்று சொல்வோம்,
வருமாறு புகலு மென்ன மந்தனு மேழில் தங்க
அரிவைய ரிரண்டு வென்றும் அத்திரி மறுத்துச் சொல்வார்
குருவுமே நாலில் தங்கக் கூறுணுத் தாரம் ரெண்டு.

31. இரு மனைவியர் ஜாதகனுக்கு ஏற்படுவர் என்று கூறுவோம். வரும் காரண மென்ன? சொல்லுங்கள். சனி, களத்திர ஸ்தானமாகிய ஏழாமிடத்தில் இருப்பதால், மனைவியர் இருவர் என்று சொன்னேம். அத்திரி முனிவர் இதனை மறுத்துச் சொல்லுவார். குரு நாலாமிடமாகிய விம்மத்தில் தங்கி யிருப்பதால், ஜாதகனுக்கு இரு மனைவியர் என்று சொல்ல முடியாது.

32. வேறொரு வபிமா னந்தான் மேவிடு மென்று சொல்வோம்
சேருங்கா லங்கள் சொல்வீர் சௌரியன் தசையில் நேரும்
ஆறறு வாண்டு தன்னில் அணுகிடும் வன்னிய மாது
மாரன்தன் மரண மட்டும் விலகாது வென்று சொல்வோம்.

32. வேறொரு பெண் அபிமானமாக இவனிடம் தங்குவாள் என்று கூறுவோம். அவள் இவனிடம் வரும் காலத்தைச் சொல்லுவீர். சனி மகா தசையில் சேருவாள். இவனது முப்பத் தாரும் வயதில் வன்னியர் குலத்தைச் சேர்ந்த பெண் ணொருத்தி இவனுக்கு அபிமானப் பெண்ணாக வருவாள். இவன் மரண காலம் வரை அவள் விலக மாட்டாள் என்று கூறுவோம்.

33. சுதர்களு மாண்பால் ரெண்டு தோகையு மவ்வார் தீர்க்கம்
பதராகு மூன்று வென்றேரும் பகருவோ மிவன்மூன்
[சென்மம்
சதியிலா வருணை தன்னில் செனித்தனன் கவரை சேயாய்
நிதிமிக வுடைய னாகி நிமலனும் வாழு நாளில்;

33. மக்களில் ஆண்கள் இருவரும், பெண்கள் இருவரும் தோன்றித் தீர்க்கமாவர். மேலும் மூன்று பிறந்து சேதமாம் என்று கூறினேம். இவன் மூற் பிறப்பைச் சொல்லுவோம். குற்ற மற்ற திருவண்ணாமலையில், கவரை குலத்தினனாய்ப் பிறந்தான். மிதத்த செல்வ முடையவனாய் ஜாதகன் வாழ்ந்து வரும்போது;

34. தன் மனை வார்த்தை கேட்டுத் தாயினை யெற்றும் போது
அன்னையும் வருத்தி மூற்று அறைந்தசா பத்தைக்
[கேண்மோ
பின்சென்மந் துணைய மின்றிப் பிதாவினால் சுகமு மின்றித்
தன்னிலே வாழ்வா யென்னச் சார்ந்தது வந்தச் சாபம்.

34. தன் மனைவியின் வார்த்தையைக் கேட்டு, தாயினை அடித்தான். அப்போழுது, தாய் வருத்த மடைந்து சொன்ன சாபத்தைக் கேளுங்கள். மறு பிறப்பில் உடன் பிறந்தோ ரில்லாமல், தந்தையினால் ஒருவித சுகமும் எற்படாமல் தனித்து வாழ்ந்திருப்பாய் என்று சொல்ல, அந்தச் சாபம் இவனைச் சேர்ந்தது.

35. ஆகையா லிச்சென் மத்தில் அவன்துணை யில்லா தாகும்
பாகமா யிவனின் யோகம் பகருவோ மினிமே லாகப்
போகபாக் கியங்க ளுள்ளான் பூருவ பொருளும் நேரும்
தாகமென் றோர்க்கு வீவன் தரணியில் மர்ம மில்லான்.

35. ஆகையினால், இப்பிறவியில் இவனுக்குச் சகோதர ரில்லை. இனி மேல், இவனுடைய யோகங்களைச் சொல்லுவோம். நல்ல போகங்களை அனுபவிப்பான். செல்வங்களை யடைவான். முன்னோர் காலைய ஆஸ்தியும் சேரும். பசியென்று வந்தவர்கட்கு உணவளிப்பான். மனத்தில் வஞ்சனையில்லாதவன்.

36. குருதசைக் காலந் தன்னில் கூடிடும் நிதிநிட் சேபம்
திருமகன் மரண காலஞ் செப்புவோ மறுபா னைந்தில்
[1]அரிவையர் மாதந் தன்னில் அணுகிடும் பாலன் கண்டம்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

36. குரு மகா தசைக் காலத்தில் இந்த ஜாதகனுக்குப் புதையல் கிடைக்கும். இவன் மரண காலத்தைச் சொல்லுவோம். அறுபத்தைந்தாம் வயதில், புரட்டாசி மாதம் மரணம் நேரும். விநாயகரைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

37. பின்சென்மம் பட்சி தன்னில் பிறப்பனும் சைவச் சேயாய்
அன்னவன் சனன காலம் [2]அங்காரன் தசையைந்
[தாண்டும்
தன்னுடன் திங்க ளொன்றும் சாற்றினும் பூர்வ பாகம்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

37. மறு பிறப்பு; திருக் மூக் குன்றத்தில், சைவ மரபினனாய்ப் பிறப்பான். இவன் பிறப்புக் காலத்தில் அங்காரக மகா தசை செல்லும்; ஐந்து வருஷங்களும், மாதம் ஒன்றுமாம். இங்ஙனம் முதற் பாகத்தைச் சொன்னோம். உயர்ந்த கணவனை யடைந்த உத்தமியே! கேட்பாயாக.

---

1. புரட்டாசி
2. அங்காரகன்

ஜாதகம் 83

1. நந்தியுஞ் சென்ன மாக நற்காரி சென்மந் தங்க
மந்திரி மூன்றி லாக மங்கலன் ரெண்டில் நிற்கப்
புந்தியு மஞ்சி லாகப் புரவியோன் புகரு நாலில்
சந்திர னெட்டி லாகச் சர்ப்பமு மாறில் நிற்க ;

1. விருஷபம் ஜன்ம லக்கினமாகி, சனி இலக்கினத்திலும், குரு மூன்ரு மிடமாகிய கடகத்திலும், செவ்வாய் மிதுனத்திலும், புதன் ஐந்தாமிட மாகிய கன்னியிலும், சூரியன் சுக்கிரன் சிம்மத்திலும், சந்திரன் எட்டாமிடமாகிய தனுசிலும், இராகு துலாத்திலும் தங்கியிருந்து ;

	கேது	லக்கினம் சனி	செவ்வாய்
	இராசி சக்கரம்		குரு
			சூரியன் சுக்கிரன்
சந்திரன்		ராகு	புதன்

2. மூலமு மூன்றும் பாத முரைப்பீர்கள் பலனே யென்று
வேலனே வளர்த்தோள் கேட்க விருடியும் புகலு கின்றூர்
பாலராண் சென்ன மாகும் பகருவோர் தந்தை யில்லம்
காலன்தன் வர்ச லாகும் கருமுனி யானே தென்மேல்.

2. மூல நட்சத்திரம் மூன்றும் பாதத்தில் பிறந்த ஜாதகருக்குப் பலனைக் கூறுங்கள் என்று பார்வதி கேட்க, முனிவர் சொல்லுகின்றூர். இஃது ஆண் பிறப்பு. பிறந்த தந்தையின் வீட்டைக் சொல்லுவோம். தெற்கு நோக்கிய வாயிலுடையது. முனியாண்டவர், விநாயகர் ஆகியோர் வீட்டுக்குத் தென் மேற்கில் வாசம் செய்கின்றனர்.

3. ஈசனு மேல்பா லாகு மியம்புவோ மடமு முண்டு
பேசுவோங் கங்கை சேயாய்ப் புதல்வனுஞ் சேட்ட ஞகும்
மாசிலா வன்னை தந்தை டனைவிமைந் தர்கள் யோகம்
ஆசையாய் முன்பின் சென்ம மறைகின்றே மிந்நூல்
[தன்னில்.

3. சிவபெருமான் மேற்கில் எழுந்தருளி யிருக்கின்றூர். மடம் ஒன்றும் அங்கு உண்டு என்று சொல்லுவோம். வேளாளர் குலத்தில் மூத்த புதல்வ

ஞகப் பிறப்பான், ஜாதகன், என்று கூறுவோம். குற்றமற்ற தாய்தந்தையர் மனைவி, மக்கள், முதலானவர் யோகங்கள், முற்பிறப்பு மறுபிறப்புக்கள் முதலிய வனைத்தையும், இந்தச் சோதிட நூலில் சொல்லுகின்றோம்.

4. தந்தையின் துணையாண் ரெண்டு சத்திமா ரறுவ ராகும்
அந்தவர் வேறுய்ச் செல்வ ரறைகின்றோம் பிதாகு ணத்தைச்
சிந்தையு மிரண்டு மாகும் சேர்ந்தோருக் குதவி செய்வன்
நந்தியும் பணையோர் விருத்தி நற்புத்தி யுடைய னாகும்.

4. தந்தைக்குச் சகோதரர் இருவரும், சகோதரிகள் அறுவரும் உள ராவர். அவர்கள் தந்தையை விட்டுத் தனியாகச் சென்றுவிடுவர். தந்தை யின் குணத்தைப் பற்றிச் சொல்லுவோம். சஞ்சல மன முள்ளவன். தன்னை யடைந்தவர்களுக்கு உபகாரி. காளைகள், பண்ணைகள், ஏர்கள் முதலிய விருத்தியாம். நல்ல புத்தியுள்ளவன்.

5. மாநிறஞ் சமதே கத்தன் மாமிய ரிருவ ராகும்
ஊனமில் லாத தேகி ஓராறு முகத்தோன் பத்தி
ஈனமாங் குணமில் லாதான் இழிவுமே யறியா னாகும்
பான்மையாய்ப் பேசு வானும் பதர்குண மில்லா னாகும்.

5. கரிய நிறமும், சமமான உடற்கட்டும் பொருந்தியவன். இவனுக்கு, இரு மனைவிகள். குற்றமில்லாத சரீர முடையவன். சுப்பிரமணியக் கடவுள் மீது பக்தி யுள்ளவன். இழிவான குணங்களில்லாதவன். கெட்ட புத்தி யில்லாதவன். அழகாகப் பேசுபவன். அற்ப எண்ணங்க ளில்லாதவன்.

6. கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன் கருதிடான் கட்டு
[வார்த்தை
உடன்படான் பிழைக ளுக்கு உறுதியில் லாத நெஞ்சம்
திடமதாய்க் குடும்பம் பின்னல் செய்தன்றி மறவா னாகும்
தடபுடல் செய்கை யுண்டு சந்தேக மனத்த னாகும்.

6. கடன் வாங்குவான், ஆனால் அதைத் தீர்த்து விடுவான். கெட்ட வார்த்தைகளே மனத்திலும் நினையாதவன். தவறுகள் செய்வதற்கு விருப்ப மில்லாதவன். மனத்தில் திடம் இல்லாதவன். உறுதியான குடும்பம் பின்னல் ஏற்படும். பிறர் செய்த உபகாரங்களே மறவாதவன். ஆடம்பரமான செயல் களில் பிரிய முள்ளவன். சந்தேகமுள்ள மனத்தன்.

7. முன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றேஞ் சிறுபாக்
[கத்தில்
வன்னிய குலமு தித்து மனவிமைந் தருமுண் டாகித்
தன்மமாங் குணத்த னாகிச் சண்டன்தன் பதிக்குச் சென்று
பொன்னவன் வரையப் பட்டுப் பிறந்தன னென்று
[சொல்வோம்.

7. இவனுடைய முற் பிறவியைச் சொல்லுவோம். சிறுபாக்கத்தில் வன்னிய மரபினனாகத் தோன்றி, மனவி மக்கள் ஏற்பட்டு, தரும சிந்தனை யுள்ளவனாகி, ஏமபுரமடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, பிறந்த வன் என்று கூறுவோம்.

8. சொல்லிய குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
வல்லவன் குணத்தைச் சொல்வோ மாநிற முடைய னாகும்
இல்லையென் றுரைக்க மாட்டான் சுகையுங் கொஞ்ச முண்டு
நல்லவ னாகி வாழ்வன் நயம்படக் கூறு வானும்.

8. இங்ஙனம் கூறிய குணங்களை யுடையவனுக்கு, இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைச் சொல்லுவோம். கரிய நிற முள்ள வன். யாசிப்பவர்களுக்கு இல்லை யென்று கூறாதவன். கொடுக்கும் தன் மையன். உலகில் நல்லவன் என்ற பெயருடன் வாழ்ந்து வருவான். நியாய மாகப் பேசும் குணமுடையவன்.

9. பூமியா லுயர்வ வடைவன் பெரும்புத்தி யுடைய னாகும்
தாமதக் குணமு முண்டு சல்லிய பாதை யேற்கான்
[1]ஆமதைச் சித்திரஞ் செய்வன் அறிவுளான் கிருஷி செய்வன்
நேமியை விரயம் செய்யான் நினைத்தகா ரியமுஞ் செய்வன்.

9. பூமியினால் (பயிர்த்தொழில் செய்து வருவதால்) மேன்மை யடை வான். தாராள புத்தியுள்ளவன். தாமதக்குணமும் உடையவன். கடன் தொந்தரவு இல்லாதவன். வீட்டைச் சித்திரங்களால் அலங்காரம் செய்வான். சிறந்த அறிவுள்ளவன். பயிர்த் தொழில் செய்வான். வீண் நிலங்களை விற்றுவிட மாட்டான். எண்ணிய காரியங்களை முடிக்கும் திறனுள்ளவன்.

10. கந்தன்தன் பத்தி கொள்வன் கருதிடான் கட்டு வார்த்தை
சிந்தையு நல்ல தாகும் செனவுப காரி யாவன்
நந்தியா விருத்தி யுண்டு நயம்படக் கூறு வானும்
பந்துவு மதிக்க வாழ்வன் பொய்யது பேசா னுகும்.

---

1. வீடு; அகம் என்பது ஆமென இடைக்குறைந்து முதல் நீண்டது.

10. முருகப் பெருமான் மீது பக்தி கொள்ளுவான். இல்லாத வார்த்தைகளைப் புனைந்து கூற நினையாதவன். நல்ல மன முள்ளவன். ஜனங்களுக்கு உபகாரம் செய்யும் தன்மையினன். பசு, காளைகள் விருத்தியாம். இனிமையாகப் பேசுந் தன்மையினன். இனத்தார் மதிக்கும்படி வாழ்க்கை நடத்துவான். பொய் பேசாதவன்.

11. பாரியும் வந்த பின்பு பகருவோம் யோகந் தானும்
தீரனுக் கிரண்டாந் தாயில் சிறியாட்கு வுதித்த பாலன்
கூறுவோந் துணையாண் காணுன் கோதையு மொன்றே
[தீர்க்கம்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

11. இவனுக்கு மனைவி வந்த பிறகு அதிர்ஷ்டங்கள் மிகுதியாம், இவனுடைய தந்தையின் இரு மனைவியரில் இளையவளுக்குப் பிறந்தவன் இவன். இவனுக்குச் சகோதரரில்லை. சகோதரி ஒருத்தி தீர்க்கமா யிருப்பாள். ஆறுமுகக் கடவுளை உலகத்துக் களித்த தாயே! கேளுங்கள்.

*12. என்னகா ரணத்தி னுலே இவன்துணை யாண்பால் தோடம்
பொன்னவன் மூன்றில் தங்கப் பிறையுமே வெட்டி லாகச்
சொன்னதோர் பலத்தி னுலே துணையாண்பால் தோட
[மெய்தும்
முன்வினை யாவ தேதோ மொழிகுவீர் முனியே நீர்தாம்.

12. ஜாதகனுடன் பிறந்தவர்களில் சகோதரனுக்குத் தோஷம் ஏற்படக் காரணம் யாது? (எட்டாம் வீட்டுக்குரிய) குரு மூன்றுமிடமாகிய சகோதர ஸ்தானத்தில் தங்கி, அத்த வீட்டுக் குரியவனுகிய சந்திரன் எட்டாம் வீடாகிய தனுசில் தங்கி யிருப்பதால், சகோதரனுக்குத் தோஷம் ஏற்படும். முற்பிறவியில் செய்த ஏதாவது தீவினைகள் உண்டோ? சொல்லுங்கள், முனிவரே! நீர்தாம்.

*13. மைந்தரு மில்லா ளாகி மரிப்பளா மந்த மாது
பந்தணி கன்னி யொன்று பகர்ந்திட்டீர் குணத்தைச்
[சொல்வீர்
சிந்தையு நல்ல தாகும் செனவுப காரி யாவள்
பிந்தியோ சனையு முள்ளாள் பொய்யது புகலா ளாகும்.

13. குழந்தைகளில்லாதவளாகி, இறந்து விடுவாள், அப்பெண். சகோதரி யொருத்தி யுண்டு என்று சொன்னீர்களே. அவளுடைய குணத்தைச் சொல்லுங்கள். நல்ல மனமுள்ளவள். ஜனங்களுக்கு உபகாரம் செய்பவள். பின் யோசனையும் உள்ளவள். பொய் சொல்லாதவள்.

---

* 12, 13 ஆம் பாடல்கள் தொடர்பின்றி யுள்ளன.

14. பாவமும் பழியு மேற்காள் பசித் தோர்க்குத் தாகமீவள்
நாவதைக் காப்பா ளாகும் நல்லோர்க்கு நல்ல ளாவள்
தேவதாப் பத்தி கொள்வள் சீக்கிரக் கோபஞ் சாந்தம்
ஆவலாய்த் தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

14. பாவம் செய்யாதவள். அவமானங்களும் அடைய மாட்டாள். பசி என்று வந்தவர்களுக்கு அன்னமும், தாகத்துக்கு நீரும் அளிப்பாள். சொல்லடக்க முள்ளவள். நல்லவர்கட்கு நல்லவளாக விருப்பாள். தெய்வ பக்தி யுடையவள். கோபமடைந்து விரைவில் சாந்த முறுவாள். தவங் களைச் செய்துவரும் தாயே! கேளுங்கள்.

15. வரனுமே வடபால் நேரும் மைந்தர்க ளாண்பால் ரெண்டு
அரிவைமா ரவ்வார் தீர்க்கம் அழகான குடும்பி யாவள்
பெருமையாய் வாழ்வா ளாகும் பேதையுந் தீர்க்க சீவி
கரிமத வாணை பெற்ற காதலி கேட்டி டாயே.

15. இவளுக்கு வடக்குத் திசையிலிருந்து கணவன் வாய்ப்பான். புதல்வர்களில் ஆண் குழந்தைகள் இருவரும், பெண்களிருவரும் தீர்க்கமா யிருப்பர். செழிப்புள்ள குடும்பத்தை யுடையவள். பெருமையுடன் வாழ்ந்து வருவாள். அவளும் நீண்ட ஆயுளுள்ளவள். யாணைமுகக் கடவுளைப் பெற்ற தாயே! கேளுங்கள்.

16. உதித்தவன் மணத்தின் காலம் உரைத்தன மிருபான்
[ரெண்டுள்
அதிசதி வடபால் நேரு மறைகின்றே மவள்கு ணத்தைச்
சதியிலா மனத்த ளாகும் சாந்தமுங் கோப மேற்பள்
துதிசெய்தோர்க் குதவு வாளாம் சொல்லது சுருக்க மேயாம்.

16. ஜாதகனின் திருமணக் காலத்தைக் கூறுவோம். இருபத்திரண் டாம் வயதுக்குள், வடக்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவ ளுடைய குணத்தைச் சொல்லுவோம். கபடமில்லாத மனமுள்ளவள். கோப முற்று, பின்பு சாந்தமடைவாள். தோத்திரம் செய்தவர்களுக்கு உபகாரி. சுருக்கமாகப் பேசுபவள்.

17. மாந்தளிர் மேனி யாகும் வருவோரை யாத ரிப்பள்
ஏந்திய தனத்தா ளாகும் இடரான புத்தி யில்லாள்
காந்தம்போல் குணமு முண்டு கருதிடாள் கட்டு வார்த்தை
வேந்தன்தன் மனம்போல் வாழ்வள் வித்தகி வயது தீர்க்கம்

17. மாந்தளிர் போன்ற மென்மையான உடலுள்ளவள். அண்டி வந்தவர்களைக் காப்பாள். மிகுதியான செல்வங்க ளுடையவள். கெட்ட புத்தி யில்லாவள். வசீகரிக்கும் குணத்தினள். புனைந்து சொல்லும் இயல் பில்லாதவள். கணவன் மனம்போல வாழ்ந்து வருவாள். நீண்ட ஆயு ளுள்ளவள்.

18. சுதர்களுந் தோன்று தாகும் தோன்றினுந் தீதே யாகும்
எதுவிதக் கார ணத்தால் இயம்புவீ ரந்தச் சங்கை
புதனைந்தா மிடத்தில் தங்கப் பூமகன் பார்த்த தாலே
பதியுமே நந்தி யாகப் பகர்ந்தன மந்தச் சங்கை.

18. குழந்தைகள் பிறவா. அப்படித் தோன்றினாலும் நிலையா. எந்தக் காரணத்தால் அந்தத் தோஷம் சொன்னீர்கள்? புதன் ஐந்தா மிடமாகிய கன்னியில் தங்கியிருப்பதாலும், அதைச் செவ்வாய் பார்ப்பதாலும், ஜன்ம லக்கினம் விருஷபமாக இருப்பதாலும், தோஷம் சொன்னேம்.

19. பாலகன் முன்சென் மத்தில் பகருவோம் பெண்ணை [யோரம்
சாலவே சிறுவூர் தன்னில் செனித்தனன் வடுக சேயாய்
ஏலவே கிருஷி செய்து விளங்கிய வினையைச் சொல்வோம்
வேலன்த னுல யத்தில் வேறுமா துடனே சேர்ந்தான்.

19. ஜாதகன் முற் பிறவியைச் சொல்லுவோம். பெண்ணையாற்றுக் கருகிலுள்ள ஒரு சிற்றூரில் வன்னிய குலத்தினனாகப் பிறந்தான். பயிர்த் தொழில் செய்து வாழ்ந்து வருங்கால், ஏற்பட்ட தீவினையைச் சொல்லு வோம். சுப்பிரமணிய சுவாமி கோவிலில் வேறு ஒரு பெண்ணுடன் இன்பம் அனுபவித்தான்.

20. அதுவொரு தோட மாச்சு அதுவின்றி வேறு சொல்வோம்
நிதியதை யேழைக் கீந்து நிவேசனம் யாவுங் கொண்டான்
பதியிழந் தோர்கள் சாபம் பற்றிய தென்று சொல்வோம்
சதியிலாத் தவங்கள் செய்யும் சங்கரி கேட்டி டாயே.

20. அஃது ஒரு தோஷமாயிற்று. அதுவுமின்றி, வேறு ஒன்று சொல்லுகின்றோம். ஏழைகளுக்குக் கொஞ்சமாகப் பொருளைக் கடனாகக் கொடுத்து, குடியிருந்த வீட்டைப் பறித்துக் கொண்டான். வீட்டை யிழந்த ஏழைகள் இட்ட சாபம் இவனைச் சார்ந்தது; மிகுந்த தவங்களை இயற்றும் சங்கரியே! கேளுங்கள்.

21. ஆகையா லிச்சென் மத்தில் அணுகிடும் ரெண்டு தோடம்
பாகமாய்ச் சுதர்கள் தோன்றப் பகருவோங் கிரிகை
[யொன்று
தோகையுந் தானு மாகத் திருவணு மலைக்குச் சென்று
ஆகமம் போலே சென்று அக்கிரி வலமாய் வந்து ;

21. ஆதலால் இப் பிறவியில் இரண்டு தோஷங்கள் இவனைப் பற்றியன. தோஷங்கள் நீங்கிப் புத்திரர்கள் ஏற்படச் சாந்தி யொன்று சொல்லுகின்றேம். மனைவியும் தானுமாக இந்த ஜாதகன் திருவண்ணுமலைக்குச் சென்று, வேதத்தில் சொல்லியபடி, அம்மலையை பிரதட்சிணம் முதலியன செய்து ;

22. அரனடி நலமும் பெருக அன்னமு மன்பா யீந்து
திருகிலாச் சோம வார விரதமோ ராண்டு கொள்ள
மருவின வினைகள் நீங்கி மைந்தர்கள் விருத்தி யென்றேம்
ஒரு-ஆணுங் கன்னி மூன்றும் உதித்திடுந் தீர்க்க மாக.

22. சிவனடியார்களுக்கு மனமுவந்து அன்னமளித்து, கஷ்டமில்லாத சோம வார விரதம் ஏற்று, ஒரு வருஷம் நடத்திஞல் ஏற்பட்ட தீவினைகள் நீங்கி, குழந்தைகள் விருத்தி யேற்படும். ஒரு மகனும், மூன்று பெண்களும் பிறந்து தீர்க்கமா யிருப்பர்.

23. வந்தவன் பொது யோகத்தை யறைகின்றேங் காயே கேளும்
பந்துவும் மதிக்க வாழ்வன் பாரபட் சங்கள் பேசான்
சிந்தையு மிரண்டு மாகும் தீரமில் லாத நெஞ்சம்
நந்தியும் விருத்தி யுண்டு நாகம்போல் கோப மேற்பன்.

23. ஜாதகனுடைய பொது யோகங்களைச் சொல்லுகின்றேம். தாயே! கேளுங்கள். உறவினர் மதிக்கும்படி வாழ்ந்து வருவான். ஒருதலைப் பக்கமாகப் பேசாதவன். மனத்தில் இருவித எண்ணங்களுள்ளவன். தைரியமில்லாத மனத்தினன். பசு, காளைகள் விருத்தியாகும். சர்ப்பம்போல் கோப மடைவான்.

24. தரணியை விருத்தி செய்வன் சாதமுங் குறைவு றுதான்
திருமகன் தனக்கு யோகம் செப்பின காரணஞ் சொல்
தருமகர் மாதி சென்மஞ் சர்ப்பமு மாறி லாக
அருணன்தூ துவனு முச்சம் ஆகிய பலத்தி னுலே ;

24. வீடு நிலங்களை விருத்தி செய்வான். சாப்பாட்டுக்குக் குறைவில்லாதவன். ஜாதகனுக்கு அதிருஷ்ட மேற்படக் காரணம் சொல்லுங்கள். தர்ம கர்மாதிபதி (ஒன்பதாம் இடம், பத்தாம் இடம் இவைகட் குரியவன்)

யான சனி விருஷபத்தில் தங்கி யிருப்பதாலும், ராகு ஆரூமிடமாகிய துலாத்திலும், புதன் ஐந்தாமிடமாகிய கன்னியிலும் உச்சமாக இருக்கும் பலத்தினாலும்;

25. வறுமையில் லாமல் வாழ்வ னறைகின்றே மன்னே சேதி
திருமகள் ஒப்ப தாகும் செய்ந்நன்றி மறவா ளாகும்
வருவோரை யாத ரிப்பள் வரன்மனம் போலே வாழ்வள்
பெரும்புத்தி யுடைய ளாகும் பித்ததே கத்தா ளாகும்.

25. தரித்திரமில்லாமல் வாழ்ந்து வருவான். தாயின் செய்திகளைச் சொல்லுவோம். இலக்குமி போன்ற அழகுள்ளவள். பிறர் செய்த உப காரத்தை மறக்காதவள். இல்லை என்று வந்தவர்களை ஆதரிப்பாள். கணவன் மனம்போல் வாழ்வாள். தாராள சித்தையுள்ளவள். பித்த தேக முடையவள்.

26. இல்லமும் வடபா லாகு மிவள்துணை யாண்பால் ரெண்டு
வல்லியு மிருவ ராகும் மறுத்துறை கூரு ளாகும்
தல்லிபோ லாத ரிப்பள் சந்தேக மனத்த ளாகும்
சொல்லுவோ மிவள்முன் சென்மம் சொக்கர்வாழ் பாண்டி
[தன்னில்;

26. தாயின் வீடு வடக்குத் திக்கிலுள்ளது. அவளுக்கு இரு சகோதரரும், இரு சகோதரிகளும் உளராவர். கணவன் வார்த்தைக்கு மறு வார்த்தை பேசாதவள். கணவனைத் தாய்போல் ரட்சித்து வருவாள். சந்தேகமான மனமுள்ளவள். இவளுடைய முற்பிறவியைச் சொல்லுவோம். சொக்கநாதர் எழுந்தருளி யிருக்கும் பாண்டிய நாட்டில்;

27. வைசிய குலமு தித்து வளமுள குடும்பி யாகிப்
பசியென்றோர்க் குதவி செய்து பவமது யில்லா ளாகி
அசைவிலாக் கால நாடு அணுகியே பிரமன் லக்கம்
வசியம்செய் பிருதிவி தன்னில் வந்தன ளென்று
[சொல்வோம்.

27. வைசிய மரபினளாகப் பிறந்து, செழிப்புள்ள குடும்பம் உண்டாகிப், பசித்தவர்களுக்கு அன்னமளித்து, வேறு பாவச் செயல்களின்றி, எமபுரம் சென்று, மீண்டும், பிரமனால் படைக்கப் பட்டு, இப் பூவுலகில் பிறந்தாள் என்று சொல்லுவோம்.

28. வந்தவள் வறுமை காணு ளறைகின்றே மிவள்பின்
[சென்மம்
செந்தில்மா மலையி லேதான் செனிப்பளாம் பிரம்ம சேயாய்
விந்தையாய் முப்பா னெட்டில் மேவுவாள் கால நாடு
தந்தியை வளர்த்த யெங்கள் தயாபரி கேட்டி டாயே.

28. அவள் தரித்திர மில்லாதவள். இவளுடைய மறு பிறவியைச் சொல்லுகின்றோம். திருச்செந்தூரில், அந்தணர் மரபினளாகத் தோன்றி அதிசயமாக முப்பத்தெட்டாம் வயதில் மரண மடைவாள். விநாயகனை வளர்த்துவந்த எங்கள் தாயே! கேளுங்கள்.

29. பரிதியின் தசையந் தத்தில் பகருவோம் தந்தை கண்டம்
பிறைதசை தனிலி ரண்டு கண்டமும் பேச லாகும்
மறலியி மணுகா ளுகும் மங்கலன் தசையில் சொல்வோம்
அறந்தனை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

29. சூரிய மகா தசையின் முடிவில் தந்தைக்குக் கண்ட மேற்படும். சந்திர மகா தசையிலும் இரண்டு கண்டங்கள் நேரும். ஆனால், மரணம் ஏற்படாது. அங்காரக மகா தசையில்தான் மரணம் ஏற்படும் என்று சொல்லுவோம். தருமத்தை வளர்க்கும் எங்கள் உயிருக்குயிரான தாயே! கேளுங்கள்.

30. தந்தைபின் சென்மம் சொல்வோந் தக்கோல நகரி லேதான்
பிந்திய குலமு தித்துப் பூமியை விருத்தி செய்து
வந்தவர்க் கன்ன மீந்து மறுசென்ம மறைக்கு லத்தில்
அந்தவ னுதிப்பா ளுகும் அம்பிகை யாளே கேளாய்.

30. தந்தையின் மறு பிறவியைக் கூறுவோம். தக்கோல நகரில், நான்காம் வருணத்தவளுகப் பிறந்து, விளை நிலங்களைப் பெருக்கி, ஏழையோர்களுக்கு அன்னமளித்து, மாண்டு, மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, அந்தணர் குலத்தில் பிறப்பான், தாயே! கேளுங்கள்.

31. உதித்தவன் மரண காலம் உரைக்கின்றே மறுபான்
[ரெண்டில்
சதியிலாத் தனுசு மாதம் சண்டன்தன் பதிக்குச் செல்வன்
அதிபன்பின் சென்மம் சொல்வோம் மலைநாட்டில் சத்ரியச்
[சேயாய்
அதிபதி யாக வாழ்வன் அம்பிகை யாளே கேளாய்.

31. ஜாதகனுக்கு மரணமேற்படும் காலத்தைச் சொல்லுகின்றோம். அறுபத்திரண்டாம் வயதில், மார்கழி மாதத்தில், இயமபுரம் செல்லுவான். அவனுடைய மறுபிறவியைச் சொல்லுவோம், மலையாள நாட்டில், க்ஷத்திரிய

மரபினனுகத் தோன்றி, செல்வாக்குடன் வாழ்ந்து வருவான். தாயே! கேளுங்கள்.

32. பொன்னவன் தனக்கு ஆறில் பிறையுமே யிருப்ப தாலே
மன்னனுக் கெவ்வார் தீர்க்க வயதுமே புகன்றீ ரையா
சந்திரன் தனுசில் தங்கச் சகடைகள் பங்க மென்றேரும்
சொன்னது வயது தீர்க்கம் சுந்தரி யாளே கேளாய்.

32. குருவிருக்கு மிடத்துக்கு ஆரும்மிடத்தில் சந்திரன் இருப்பதால் ஜாதகனுக்கு நீண்ட ஆயுள் என்று எப்படிச் சொன்னீர்கள். சந்திரன் தனுசில் இருப்பதால் சகடையோக பங்க மேற்பட்டது. நாம் முற் கூறிய வயது தீர்க்கமாகும். அழகியே! கேட்பாயாக.

33. செனித்திடுங் காலம் தன்னில் செம்பாம்பு தசைரெண் [டாண்டும்
குனித்திடு நவமாந் திங்கள் கூறுவோம் பலனே யாங்கள்
இனசூதஞ் சாத கர்க்கு எய்திடும் பிணியு மென்றேரும்
கனமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

33. ஜாதகனின் ஜனன காலத்தில் கேது மகா தசை யிருப்பு, இரண்டு வருடங்களும், ஒன்பது மாதங்களுமாம். அப்போதுள்ள பலனைக் கூறுவோம் நாங்கள். தன் வர்க்கத்தாருக்கு அசுபங்கள் நேரும். வியாதியும் உண்டாகும். யானைமுகத்தோனைப் பெற்ற பார்வதியே! கேளுங்கள்.

ஜாதகம் 84

1. மதிபுதன் வெள்ளி கன்னி மறைசேயுந் தேள தாக
விதியவன் ராகு வண்டி வெய்யவன் சீய மாக
இதுவிதக் கோளு நின்று லக்கினம் நந்தி யாக
அதுபலன் சொல்லு மென்ன அறைகுவார் பராசர் தாமே.

1. சந்திரன் புதன் சுக்கிரன் கன்னியிலும், குரு செவ்வாய் விருச்சிகத்திலும், சனி ராகு கடகத்திலும், சூரியன் மிம்மத்திலுமாக, நவக்கிரகங்களும் இருந்து, விருஷபமும் ஜன்ம லக்கினமாக வீருந்தால் ஏற்படும் பலனைச் சொல்லுவீர். பராசரர் சொல்லுகிறார்.

		லக்கினம்	
	இராசி சக்கரம்		சனி ராகு
கேது			சூரியன்
	குரு செவ்வாய்		சந்திரன் புதன் சுக்கிரன்

2. பிறந்திடும் பெண்பால் சென்மம் பேசுவோம் தந்தை
[வர்க்கம்
அரிவைமார் ரெண்டு தோன்று மதுமத்தி லேகு
[மென்றேும்
உரைக்கின்றேும் பிதாகு ணத்தை வுண்மையா மனத்த
[ஞகும்
மறுநகர் வாசம் செய்வன் மாநிற முடைய னுமே.

2. இஃது பெண் பிறப்பு. தந்தையின் வர்க்கத்தாரைப் பற்றிச் சொல்லுவோம். அவருக்கு இரு சகோதரிகள் தோன்றுவர். அவர்கள் இடைக் காலத்தில் மரிப்பர். தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றோம். உண்மையான மனமுள்ளவன். வேற்நாரில் வாழ்ந்து வருவான். காரியநிற முடையவன்.

3. ஊகைவான் கணக்கில் தேர்வன் உதவாது தந்தை யாஸ்தி
ஏகனுய் வாழ்வா னுகும் ஏகுவான் குடகு தன்னில்
ஆகம நூணுக்கந் தேரான் அறுமுகன் பக்தி பூண்பன்
தோகைசொல் கடவா னுகும் தோத்திரப் பிரிய னுகும்.

3. ஊக முள்ளவன். கணக்கில் நிபுணன். தந்தையின் ஆஸ்திகள் இல்லாதவன். ஒருவனுகவே வாழ்ந்து வருவான். குடகு நாட்டுக்குச் செல்லுவான். வேதாந்த ரகசியங்கள் அறியாதவன். முருகப்பிரானிடம் பக்தி யுள்ளவன். மனைவியின் சொல்லைத் தட்டாதவன். தோத்திரம் செய்யப்படுவதில் இஷ்டன்.

4. ஒருவர்பால் அணுகி யேதான் உத்தமன் சீவிப் பானும்
திருகிலாக் குணத்தா னுகும் செய்ந்நன்றி மறவா னுகும்
தரையதை வீரயம் செய்வன் சாற்றிடான் கட்டு வார்த்தை
விரைவினில் நடக்க வல்லன் வெஞ்சினம் வெளிக்காட்
டாதான்.

4. ஒருவரை அண்டி ஜீவனம் செய்துவருவான். கெட்ட குணங்களில்லாதவன். பிறர் தனக்குச் செய்த உபகாரங்களை மறக்காத மனத்தினன். வீண் விலக்கைச் செலவு செய்யாதவன். இல்லாத வார்த்தைகளைப் புனைந்து பேசாதவன். வேகமாக நடக்கும் தன்மையன். கடுமையான கோபத்தை வெளி விடாதவன்.

5. என்னகா ரணத்தி னுலே இவன்துணை தோடம் சொன்னீர்
முன்னமே கூறு மென்ன மெய்ஞ்ஞானி ஒன்பான் நிற்கத்
துன்சனி ராகு பார்க்கச் செப்பினேம் துணைவர் தோடம்
முன்சென்ம வினைய னேக மூண்டன வென்று சொல்வோம்.

5. என்ன காரணத்தால் இவனுக்கு முதலில் (ஜாதகியின் தந்தைக்கு) உடன்பிறந்தார் தோஷம் சொன்னீர்கள்? அதைச் சொல்லுங்கள். கேது ஒன்பதாமிடமாகிய மகரத்தில் இருப்பதாலும், அவ்விடத்தைச் சனி ராகு பார்ப்பதாலும் (தந்தைக்குச்) சகோதர தோஷ மேற்படும் என்றேம். முற்பிறப்பில் செய்த தீவினையும் மிகுதியாக உண்டென்று கூறுவோம்.

6. என்னவூழ் செய்தா னதனை யியம்புவீர் முனியே நீர்தாம்
கன்னியா குமரி தென்பால் கலந்தனன் கர்ண சேயாய்த்
தன்மனை மதலை யுண்டாய்ச் செகராசர் பேட்டி கொண்டு
அங்ஙகர் கணக்கு வேலை அவனுமே செய்து வந்து;

6. என்ன தீவினை செய்தான். அதனைச் சொல்லுங்கள்; முனிவரே! சீர்சன். கன்னியாகுமரிக்குத் தெற்குப் பக்கத்தில், கருணீகர் மரபில்

தோன்றி, மனைவி மக்களை யடைந்து, அரசரைப் பேட்டி கண்டு, அங்ஙகர் கணக்கர் வேலை புரிந்து வந்தபோது ;

7. வந்தவூழ் தன்னைக் கேண்மோ வளமிலா வேழை யோர்பால்
தன்தனம் அவரால் பெற்றுத் தரணியைத் தாரே னென்றும்
பிந்தியும் வேறோர் பக்கல் புரட்டினுன் பூமி தன்னை
நொந்தவர் மனவெ றுப்பால் நுவலுவார் சாபந் தானும்.

7. ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். செல்வங்க ளில்லாத ஏழை களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு, வீடு நிலங்களைத் தருகிறேன் என்று சொல்லித், தராமல் வேறொருவனுக்குக் கொடுத்து விட்டான். மனம் வருந் திய ஏழைகள் வெறுப்படைந்து சாப மிடுவர்.

8. ஆசைவார்த் தைகள் சொல்லி அரும்பொருள் பறித்த பாவி
நாசமாம் புத்திரர் தாமும் நல்காது தந்தை யாஸ்தி
பேசும்பின் சென்மந் தன்னில் பிதுராஸ்தி காணு தாகி
வாசமா மில்லம் நீங்கி மறுதேச வாச மாகி;

8. ஆசை வார்த்தைகளைச் சொல்லி, அரிய பொருள்களை அபகரித்த பாவிக்கு, புத்திரர்கள் நாசமடைவர். தந்தையின் ஆஸ்தி கிடைக்காது. மறு பிறவியிலும் தந்தையின் ஆஸ்திகள் காணுதவனுகி, குடியிருக்கும் வீடும் இவனைச் சாராமல், வேறு ஊரில் வாசம் ஏற்பட்டு ;

9. உறுந்துணை சுதர்க ளின்றி ஒண்டியாய் வாழ்வா யென்று
தெருத்தூளைத் தூற்றிச் சென்றூர் சேர்ந்தது வந்தத் தோடம்
திருமக னந்தி யத்தில் செல்வங்கள் குறைவுண் டாகி
மறலியின் பதிக்குப் புக்கு மறையவன் வரையப் பட்டு.

9. ஏற்படும் சகோதரர்கள், பிறக்கும் குழந்தைகள் இல்லாமல் இவர் ஒண்டியாக வாழ்ந்து வருவாய் என்று சொல்லித், தெரு மண்ணை வாரி யிறைத்துவிட்டுச் சென்றனர். அந்தத் தோஷம் இவனைச் சார்ந்தது. இவன் கடைசிக் காலத்தில் செல்வங்க ளழிந்து இறந்து, மீண்டும் பிரமனுல் படைக் கப்பட்டு;

10. வந்தனன் கங்கை சேயாய் மருவீடும் முன்னூழ்ச் சாபம்
தந்துணை தோட மெய்தும் தந்தையார்ச் சிதங்கள் நீங்கும்
இந்தவார் மன்ன னுக்கு இவளுமே சேட்டை யாக
விந்தையா யுதிப்பா ளாகும் விளம்புவோ மிவள்கு ணத்தை.

10. வேளாளர் குலத்தவனுகப் பிறந்தான். முற்பிறப்பில் செய்த தீவினை இவனைச் சாரும். உடன்பிறந்தார் தோஷ மேற்படும். தந்தையால் சம்பாதிக்கப்பட்ட பொருள்கள் இவனைச் சாராமல் நீங்கும். இவ்விதக்

குணங்க ளுள்ளவனுக்கு இந்த ஜாதகி மூத்த புதல்வியாகத் தோன்றுவாள். இவளுடைய குணங்களைச் சொல்லுவோம்.

11. சாதகி நிறங்குணத்தைச் சாற்றுவோ மாநி றத்தாள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உள்மனம் கவடில் லாதாள்
மேதினில் வாத தேகி வித்தையு முடைய ளாகும்
தீதுக ளொருவர்க் கெண்ணுள் நீரமில் லாத நெஞ்சம்.

11. ஜாதகியின் நிறம் குணம் இவைகளைச் சொல்லுவோம். கரிய நிற முள்ளவள். அழகாகப் பேசுபவள். மனத்தில் கபட மில்லாதவள். வாத சரீர முள்ளவள். கல்வி யறிவுள்ளவள். பிறருக்குத் தீங்குகள் எண்ணுத வள். தைரியமில்லாத மனத்தினள்.

12. அடிசிலுக் கினிய ளாகும் அழகுளாள் அடக்க முண்டு
தடைசொலாள பெரியோ ருக்குச் சாதமு மன்பா யீவள்
படிமிசை நல்லோ ளாவள் பரிந்துப காரம் செய்வள்
மடையரை யுறவு கொள்ளாள் மலர்க்கரம் விஷ்ணு ரேகை.

12. உருசியாகச் சமையல் செய்வாள். அழகுள்ளவள். பொறுமை சாலி. பெரியோருக்கு எதிர்வார்த்தை பேசாதவள். அன்னம் அன்பாக அளிப்பாள். உலகில் நல்லவளாக விளங்குவாள். அன்புடன் உபசரிப்பாள். மூடர் சிநேகம் இல்லாதவள், கையில் விஷ்ணு ரேகையுண்டு.

13. தந்தையால் பெருமை காணுள் தாய்வழி தன்னுல் நேரும்
வந்தவர்க் கன்ன மீவள் வளமையாய்க் குடும்ப மேற்பள்
பிந்திநாள் யோக மேற்பள் பிறர்குற்றம் புகலா ளாகும்
கந்தன்மேல் பக்தி பூண்பள் காதலி கேட்டி டாயே.

13. தந்தையினுல் பெருமை யில்லாதவள். தாயின் வழியில் சௌக்கி யங்க ளேற்படும். வீடுதேடி வந்தவர்களுக்கு அன்ன மளிப்பாள். செழிப் புள்ள குடும்பத்தை ஏற்று நடத்துவாள். பின்னுட்களில் யோகம் எய்தும். பிறருடைய குற்றத்தைப் பாராட்டாதவள். முருகக்கடவுள் மீது பக்தி யுள்ளவள். தாயே! கேளுங்கள்.

14. தன்துணை யறுவர் தோன்றும் தங்காது சிலவே யென்றேரும்
அந்தியக் கன்னி யொன்று அணுகிடுந் தீர்க்க மாக
இந்தவள் துணையாண் பாலும் இலகாத காரணஞ் சொல்
மந்தனும் ராகு மூன்றில் மருவின பலத்தி னுலே;

14. உடன்பிறந்தவர்கள் அறுவர். அவர்களில் சிலர் நிலையார். கடைசியில் பிறந்த பெண் ஒருத்தியே தீர்க்கமாக விருப்பாள். இவளுக்கு சகோதரன் இல்லாத காரணங்கள் என்ன. சனியும் ராகுவும் மூன்றுமிடத்தில் (சகோதர ஸ்தானத்தில்) தங்கி யிருக்கும் பலத்தினால்,

15. துணையாண்பால் தோட மெய்தும் தாய்செய்த கொடுமை
[யாலே
பிணியது நேர்ந்த தேன்றேரும் பேசுவீ ரந்தச் சங்கை
கனமுள விவள்முன் சென்மம் கழருவோர்ந் தாயே கேளும்
சினமிலாக் கடையூர் தன்னில் செனித்தனள்செங் குந்த
[வம்சம்.

15. ஆண் சகோதரனுக்குத் தோஷ மேற்படும். ஜாதகி முற்பிறவியில் செய்த கொடுமைகளால் தோஷம் சேர்ந்தது. அந்தத் தீவினையைச் சொல்லுங்கள். இவளுடைய முற்பிறவியைச் சொல்லுவோம். தாயே! கேளுங்கள். திருக்கடையூரில் செங்குந்த மரபில்;

16. வரனுண்டாய் மதலை யுண்டாய் வாழ்நாளில் வினையைக்
[கேண்மோ
அரிவையும் வரனுங் கூடி ஆழியில் திருவிழாச் சென்று
பிறையணிந் தோனைப் போற்றிப் புக்கிலுள் கடைவீ திக்கு
உரைமஞ்சள் சிவப்புச் சீப்பு ஒண்டொடி வாங்கிக் கொண்டு;

16. கணவன், மக்கள் ஆகியோரை யடைந்து வாழுகின்ற காலத்தில், ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். இவள் தன் கணவனுடன் திருவாழி என்ற தலத்தில் கடைபெற்ற திருவிழாவுக்குச் சென்று, இளம்பிறைச் சந்திரனைச் சடைமுடியில் அணிந்த சிவபெருமானைப் போற்றி, பின்பு கடை வீதிக்குச் சென்றாள். அங்கு ஒரு கடையில் மஞ்சள், குங்குமம், சீப்பு இவற்றைப் பெற்றுக் கொண்டு;

17. தனமது வீயாச் சென்றாள் செட்டியும் பின்பால் பார்த்து
வனிதையைக் காணு ஞகி யறைகின்றான் சாபந் தானும்
இனமது வாகா முன்னம் ஏகுவான் வரனு மேதான்
கனமுள பின்சென் மத்தில் கணவனு மத்தில் மாண்டு;

17. கடைக்காரனுக்குப் பணம் தாமலேயே சென்றனன். இவள் சென்ற பிறகு, வணிகன் திரும்பிப் பார்த்து, இவளைக் காணுதவனும், ஒரு சாப மிடுகின்றான். மஞ்சள் முதலியன உபயோகப்படு முன்பாகவே, உன் கணவன் இறப்பான், மறு பிறப்பிலும், மத்திய காலத்தில் கணவன் இறக்க;

18. உறும்புத்தி ரனுமே யின்றி உலகினில் வாழ்வாய் நீயும்
திருகாகச் சொல்லி யேதான் தெருத்தூஷ விட்டா
[னென்றேும்
மருவிற்று வந்தத் தோடம் மாரனு மாண்டில் மாண்டு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று சொல்வோம்.

18. புதல்வரில்லாமல், உலகில் வாழ்ந்திருப்பாய் நீ, என்று சொல்லி, தெரு மண்ணை வாரி யிறைத்தான் என்று கூறினேும். அந்தத் தோஷம் இவளே யடைந்தது. இவளும் மறு வருஷத்திலேயே கணவனை யிழந்து, முடிவில் தானும் இறந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு இப்பிறப்பில் பிறந்தவள் இவள் என்று சொல்லுவோம்.

19. குங்கும மஞ்சள் சாபம் கொழுநனு மத்தில் மாள்வன்
தங்காது சுதரா ணுந்தான் தன்வர னில்லஞ் சேராள்
அங்கவள் குணமெவ் வாறு அறிவிப்பீர் முனியே நீர்தாம்
துங்கமா மனத்த ளாகும் சோம்பிடாள் காரி யத்தில்.

19. குங்குமம் மஞ்சள் ஆகியவற்றிற்கு விலைப் பணம் தராது வந்த பாவத்தினுல், இவள் கணவனும் மத்திய வயதில் மடிவான். ஆண் குழந்தைகள் நிலையா. தன் கணவனின் வீட்டில் வசிச்சமாட்டாள். இவள் குணங்கள் எப்படி? முனிவரே, நீங்கள் கூறுவீர்களாக. தூய்மையான மனத்தினள். காரியம் செய்வதில் சோம்ப லில்லாதவள்.

20. முன்கோபி வாத தேகி யுயர்வான புத்தி யேற்பள்
தந்தமுந் தேயுங் கொஞ்சம் தாயினுல் பெருமை யேற்பள்
சந்ததஞ் சஞ்ச லத்தாள் தங்கிடும் பித்த சூடு
வந்தவர்க் கன்ன மீவள் வரன்மனம் போலே வாழ்வள்.

20. முன் கோப முடையவள். வாத சரீர முள்ளவள். உயர்ந்த புத்தியுடையவள். இவளுடைய பற்கள் தேய்வுற்றிருக்கும். தனது தாயரால் மேன்மை யடைவாள். எப்பொழுதும் சஞ்சலங்கள் உள்ளவள். இவள் உடலில் பித்த சூடு உண்டு. வீடு தேடி வந்தவர்கட்கு உணவு அளிப்பாள். கணவன் மனம்போல் வாழ்க்கை நடத்துவாள்.

21. இருவிதக் குணத்தா ளாகும் ஈகையுங் கொஞ்ச முண்டு
வருந்துணை யாண்பால் மூன்று மங்கைய ரிருவர் தீர்க்கம்
அரிவையு மவரோ டொத்து அணுகியே வாழ்வா ளாகும்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

21. இருவிதக் குணங்க ளுடையவள். கொடையும் சிறிதளவு உண்டு. இவளுடன் பிறந்த சகோதரர் மூவர். சகோதரிகள் இருவர். இவர்கள்

தீர்க்கமாவர். இவள் அவர்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருவாள். விநாயகக் கடவுளைப் புதல்வராக வடைந்த பார்வதியே! கேட்பாயாக.

22. மறுசென்மம் வேங்க டத்தில் மாதுவும் ரெட்டி வம்சம்
பெருமையாய்க் குடும்பம் பெற்றுப் புகழ்ச்சியாய் வாழ்வா
[ளாகும்
திருமகள் மணத்தின் காலம் செப்புவோம் பதினே
[ழாண்டுள்
வரனுமே மேல்பால் நேரு மறைகின்றே மவன்கு
[ணத்தை.

22. மறுபிறப்பு, திருவேங்கடத்தில் ரெட்டியார் குலத்தவளாகப் பிறந்து, பெருமையுள்ள குடும்பத்தை யடைந்து, புகழோடு வாழ்வாள். இவள் திருமண காலத்தைச் சொல்லுவோம். பதினேழாம் வயதுக்குள் திருமணம் கடைபெறும். கணவன் மேற்குத் திசையிலுள்ள ஊரொன்றி லிருந்து வாய்ப்பான். அவன் குணங்களைச் சொல்லுகின்றேம்.

23. புத்திமான் பொறுமை சாலி புவிராசர் பேட்டி கொள்வன்
வித்தையு மிரண்டு கற்பன் வீண்வம்பில் செல்லா னுகும்
வெற்றியா மரசர் பக்கல் மேவியே சீவிப் பானும்
உத்தம குணத்தா னுகும் உயர்வான குடும்ப மேற்பன்.

23. புத்திசாலி. பொறுமை யுடையவன். இருவிதக் கல்வி கற் பான். வீண் வம்புச் சண்டைக்குப் போகமாட்டான். அரசர்களைச் சார்ந்து, உத்தியோகம் ஏற்று, வாழ்க்கை நடத்துவான். நற்குண முள்ளவன். உயர்ந்த குடும்பத்தை யடைவான்.

24. மிதுனமு மவிட்ட நாளில் விளம்புவா னிவனே
[யென்றேம்
நிதிபாக்கிய மிட்ட முண்டு தரணியை விருத்தி செய்வன்
அதிகார முடைய னுகும் அண்டினோர் தம்மைக் காப்பன்
பதியது சித்திரம் செய்வன் பலதல வாசம் செய்வன்.

24. மிதுன லக்னம் அவிட்ட நட்சத்திரத்தில் பிறப்பான் இவன் என்று சொன்னேம். தயிர் முதலான வற்றில் விருப்ப முடையவன். நில புலன்களை விருத்தி செய்வான். அதிகாரமுள்ள பதவி ஏற்பான். தன்னை யடைந்தவர்களை ஆதரிப்பான். வீடுகளைச் சித்திரங்களால் அழகுபடுத்து வான். பல புண்ணியத் தலங்களுக்கு யாத்திரையாகச் சென்று சிலகாலந் தங்கி மீருப்பான்.

25. மாதுவும் போன பின்பு வளர்பிறை போலே யோகம்
ஓதுவோம் வயதுந் தீர்க்கம் உரைக்கின்றோம் புத்திர பாகம்
மேதினி லாண்பால் ரெண்டு மெல்லியு மவ்வார் தீர்க்கம்
போதக வானே பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

25. ஜாதகி வந்தபிறகு கணவனுக்கு வளர்பிறைச் சந்திரன்போல் யோகங்கள் உயரும். வயது தீர்க்கமாக விருக்கும். புத்திர பாவத்தைச் சொல்லுவோம். ஆண்கள் இருவரும், பெண்கள் இருவரும் பிறந்து தீர்க்க மாவர். யானேமுகக் கடவுளைப் புதல்வராக வடைந்த புண்ணிவதியே! கேட்பாயாக.

26. அத்திரி தடுத்துச் சொல்வார் அச்சுத ரெவ்வார் விருத்தி
சித்தமாய் சொல்லு மென்னத் திங்களும் புதனு மைந்தில்
வெற்றியா யிருப்ப தாலே விளம்பினேஞ் சுதர்கள் விருத்தி
பத்தினி தவத்தால் தோன்றும் பார்வதி கேட்டி டாயே.

26. அத்திரி முனிவர் நடுவே தடுத்துச் சொல்லுவார். புத்திர விருத்தி எப்படி ஏற்படும்? நிச்சயமாய்க் கூறுங்கள். என, சந்திரனும் புதனும் ஐந்தா (புத்திர ஸ்தானம்) மிடத்தில் வெற்றியுடன் தங்கியிருப்பதால் புத்திர விருத்தி ஏற்படும் என்று சொன்னேம். தவங்களைச் செய்து உலகில் தோன்றும் பார்வதியே! கேட்பாயாக.

27. [1]காதலி தானந் தன்னில் ஞனகனும் சேயுந் தங்கப்
புதல்வர்கள் தமக்கு மேலாய்ப் புகழ்ச்சியாய் வாழ்வா
[ளாகும்
அதிசதி பூர்வந் தன்னை யறைகின்றோ மினிமே லாக
அதிதிவாழ் சேர நாட்டில் அணுகினுள் வைசியச் சேயாய்.

27. களத்திர ஸ்தானத்தில் (விருச்சிகத்தில்) குருவும் செவ்வாயும் தங்கியிருப்பதால், புதல்வர்களைவிடச் சிறப்புடன் இந்த ஜாதகி வாழ்ந்திருப் பாள். இனி, இவள் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். பற்றுக்கள் அகன்ற ஞானிகள் வசிக்கின்ற சேரநாட்டில் வைசியர் குலத்தவளாய்ப் பிறந்தாள்.

28. சுகமுள குடும்பி யாகிச் சுதர்களும் வரனு மூண்டாய்
இகபர னன்பு பூண்டு இடரென்றோர்க் குதவி செய்து
தகைமையாய்க் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
பகையிலா விக்கு லத்தில் பிறந்தன ளென்று சொல்வோம்.

28. செழிப்புள்ள குடும்ப மேற்மட்டு, பிள்ளைகளையும் கணவனையும் அடைந்து, துறவிகளிடத்தில் அன்பாக விருந்து, தன்பமென்று வந்தவர்

1. களத்திரஸ்தானம்; இலக்கினத்துக்கு ஏழாமிடம்.

கட்கு உபகாரம் செய்து, ஏமபுரம் அடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, இப்பிறவியில் பிறந்தாள் என்று சொல்லுவோம்.

29. ஈராறு வாண்டுக் குள்ளே ஏகுவன் தந்தை யென்றேரும்
ஆறுறு வாணடு தன்னில் அன்னைக்குக் கண்ட மெய்தும்
கூறுவோ மன்பான் மூன்றில் கொழுநனும் மரண மாகும்
தீரமாய்த் தவங்கள் செய்யும் செல்வதி கேட்டி டாயே.

29. ஜாதகியின் பன்னிரண்டாம் வயதுக்குள் தந்தை இறந்து விடுவான். முப்பத்தாரும் வயதில் தாயும் இறப்பாள். ஐம்பத்து மூன்றாம் வயதில் கண வன் இறப்பான். திடமுடன் தவங்களை இயற்றும் பார்வதியே! கேளுங்கள்.

30. சாதகி மரண காலம் சாற்றுவோ மன்பா னென்பான்
மேதில்லை காசி மாதம் வளர்பிறைத் துவாதசி தன்னில்
தீதிலா வுடல மேகும் செப்புவோ மிவள்பின் சென்மம்
மாதவர் புகழும் போரூர் மறைக்குல முதிப்பா ளாகும்.

30. ஜாதகியின் மரண காலத்தைச் சொல்லுவோம். ஐம்பத் தொன் பதாம் வயதில், வைகாசி மாதம் சுக்கில பட்சத் துவாதசி திதியன்று இறப் பாள். இவளுடைய மறுபிறப்பைச் சொல்லுவோம். மிகுந்த தவங்களியற் றிய பெரியோர்கள் கொண்டாடும் திருப்போரூரில், அந்தணர் குலத்தவளாகப் பிறப்பாள்.

31. இந்ததோர் சென்மந் தன்னி லிசைந்தபுண் ணியங்க
[ளென்ன
அந்தவ ளிச்சென் மத்தில் அடாவடி சொல்லா தாலும்
சந்ததங் கடவுள் தியானம் தானவள் கொண்ட தாலே
மூந்தின குலமு திப்பாள் முதல்வியே கேட்டி டாயே

31. இந்தப் பிறவியில் ஏற்பட்ட புண்ணியங்கள் என்ன? அவள் இப் பிறவியில் அடாவடியாகப் பேசாததாலும், எப்பொழுதும் கடவுள் பக்தி பூண்டு வந்ததாலும் உயர்ந்த அந்தணர் குலத்தில் பிறப்பாள். முதல்வியே! கேளுங்கள்.

32. தந்தைபின் சென்மஞ் சொல்வோம் தக்கோலம் கீழ்ப்பர
[லாகப்
பிந்திய வூரி லேதான் பிறப்பனும் ரெட்டி வம்சம்
மூந்தின குடும்பி யாகி முதல்வனும் வாழ்வா னுகும்
கந்தனை யின்ற மாதே கழறின மொழிகுன் றுவே.

32. தந்தையின் மறுபிறவியைச் சொல்லுவோம். தக்கோலத்துக்குக் கிழக்குப் பக்கத்திலுள்ள ஓர் ஊரில், ரெட்டியார் வமிசத்தில் பிறப்பான்.

உயர்ந்த குடும்ப மேற்பட்டு வாழ்ந்து வருவான். முருகக் கடவுளைப் பெற்ற பார்வதியே! சொன்ன சொற்கள் தவறு.

33. சாதகி செனிக்குங் காலைச் சித்திரை முதல்பா தத்தில்
ஓதுசேய் தசையாண்டு வாறும் உறைந்திடுந் திங்க
[ளெட்டும்
காதலி துணைபின் விருத்தி காலன்தன் பதிக்குச் சேரும்
தீதுண்டு தான பேதம் செலவுக ளதிக முண்டு.

33. ஜாதகி பிறக்கும்போது சித்திரை நட்சத்திரம் முதல் பாதம். அங்காரக மகா தசையில் செலவுபோக விருப்பு; ஆறு ஆண்டுகளும், எட்டு மாதங்களுமாம். அவளுக்குப் பின் பிறந்தவர்களில் சிலர் இறப்பர். இட மாற்றம் ஏற்படும். மிகுதியாகச் செல வுண்டாம்.

34. அன்னையின் வர்க்கம் சூதம் அவள்தந்தை தாயும் நோயாம்
இந்தவள் பிணியு மெய்தும் எய்திடுங் களவு கொஞ்சம்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விபர மாக
இந்திர னிறைஞ்சு மாதே இறைஞ்சின மொழிகுன் றுது.

34. தாயின் வர்க்கத்தாருக்கு அசுபம் ஏற்படும். அவளுடைய பெற் றோர்களும். வியாதியால் கஷ்டப்படுவர். ஜாதகிக்கும் வியாதி உண்டாகும். வீட்டில் திருட்டுப் போகும். பிற்பாகத்தில் விவரமாகச் சொல்லுவோம். இந்திரன் முதலானோர் வணங்கும் பார்வதியே! சொன்ன வார்த்தை கள் தவறு.

ஜாதகம் 85

1. சந்திரன் நந்தி யாகச் சனிவீணை சேயுங் கோலில்
புந்திபொன் னிரவி கன்னி புகர்ராகு வரிபில் புக்க
பிந்திய கேது சாடி பேசுவோஞ் சென்மம் நந்தி
இந்தவார் கோளும் நின்ருல் இயம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் விருஷபத்திலும், சனி மிதுனத்திலும், செவ்வாய் துலாத்திலும், புதன் குரு சூரியன் கன்னியிலும், சுக்கிரன் ராகு சிம்மத்திலும், கேது கும்பத்திலும், விருஷபம் லக்கினமாகவு மிருந்து, இவ்விதம் நவக்கிரகங்களும் தங்கியிருந்தால் ஏற்படும் பலனைச் சொல்லுவீர்.

<table>
<tr><td></td><td></td><td>லக்கினம்
சந்திரன்</td><td>சனி</td></tr>
<tr><td>கேது</td><td colspan="2" rowspan="2">இராசி
சக்கரம்</td><td></td></tr>
<tr><td></td><td>சுக்கிரன்
இராகு</td></tr>
<tr><td></td><td></td><td>செவ்வாய்</td><td>புதன்
குரு
சூரியன்</td></tr>
</table>

2. பத்தினி கேட்கும் போது பராசரும் புகலு கின்ருர்
சித்தச ஞணஞ் சென்மம் செப்புவோம் தந்தை யில்லம்
உத்திரம் வாச லாகும் உரைக்கின்ருேங் கீழ்மேல் வீதி
சுத்தமாய் நதியும் தெற்கில் செப்புவோ மீசன் மேற்கில்.

2. பார்வதி கேட்கும்போது பராசரர் சொல்லுகின்ருர். இஃது ஆண் பிறப்பு என்று சொல்லுவோம். தந்தையின் வீடு வடக்கு நோக்கிய வாயிலுள்ளது. கிழக்கு மேற்கான வீதி. தெற்குப் பக்கத்தில் தூய்மையான நதி யொன்றுண்டு. சிவபெருமான் மேற்குத் திக்கில் எழுந்தருளி யுள்ளார்.

3. மாரியுங் காரி கீழ்ப்பால் மார்க்கமுஞ் சல்லிய முண்டு
ஆனமா முகத்தோன் வாயு அறைகின்ருேஞ் சமவு ராகும்
கூறுமிவ் வடையா ளத்துள் குறித்தனம் தந்தை யில்லம்
காரிழை மைந்த ரில்லம் கழறுவோங் கேளுந் தாயே.

3. மாரியம்மன் கோயில் கிழக்கிலும், சாலை வழியொன்று அருகிலும் உள்ளது. விநாயகர் கோயில் வடமேற்கில் உள்ளது. சாதாரணமான ஒரு

சிற்றாகும். இவ்வித வடையாளங்க ளுள்ளது தந்தையின் வீடு. மனைவி மக்களின் வீடுகளைப் பற்றிச் சொல்லுவோம், கேளுங்கள்.

வேறு

4. தந்தையில்லந் தனக்குவட கீழ்ப்பா லாகும்
சாற்றுவோங் கீழ்மேற்கு வீதி யாகும்
நேர்ந்திடுமே மேல்பாலில் மாயோன் கோட்டம்
நுவலுவோ மடமுண்டு மஸ்தான் கோரி
தென்திசையில் சாலையுண்டு நீரோடை காணும்
தேவியெனும் ஈசனுண்டு தென்கீழ் தன்னில்
இந்தவடை யாளத்துள் சமவூர் தன்னில்
இயம்புவோ மிவன்குணத்தை யியம்பக் கேளாய்.

4. தந்தையின் வீடு தன் வீட்டுக்கு வடகிழக்கி லுள்ளது. தெரு, கிழக்கு மேற்காக விருக்கும். மேற்குப் பக்கத்தில் திருமாலின் கோவிலும், ஒரு மடமும் உண்டு. தருக்கர் மருதியும் உள்ளது. தெற்குப் பக்கத்தில் ஒரு சாலையும், நீரோடை யொன்றும் உள. தென் கிழக்கில் தேவியின் ஆலயமும், சிவபெருமான் ஆலயமும் உள்ளன. இவ்வித அடையாளங்க ளுள்ளதோர் ஊரில் பிறப்பான். இவனுடைய குணத்தைச் சொல்லுவோம், கேளுங்கள்.

வேறு

5. தந்தையின் வர்க்கந் தன்னைச் சாற்றவாண் பலத்தைக்
[காணும்
விந்தையாய்க் கன்னி யொன்று விளம்புவோ மிவனுக்
[கேதான்
தந்தையின் குணத்தைச் சொல்வோம் சகலர்க்கும்நல்லோ
[னுவன்
விந்தையாய்ப் பேச வல்லன் வீண்வம்பில் செல்லா னுகும்.

5. தந்தையின் வர்க்கத்தாரைச் சொல்லுவோம். சகோதரன் இல்லை. ஒரு சகோதரி யுண்டு என்று சொல்லுவோம். தந்தையின் குணத்தைச் சொல்லுவோம். எல்லோருக்கும் நல்லவனாக விருப்பான். வித்தையாகப் பேசும் தன்மையன். வீண் வழக்குகளில் செல்லாதவன்.

6. இருவித மனமு மில்லான் ஈகைவா னடக்க முள்ளான்
பெருமவர் நேசங் கொள்வான் புண்ணிய மனத்த னுகும்
திருமகள் வாச முள்ளான் சினவுப காரி யாவன்
வறுமைக ளில்லா னுகும் மங்கையே மேலுங் கேளே.

6. இருவிதக் குணங்கள் இல்லாதவன். கொடை யுண்டு. அடக்க முள்ளவன். பெரியவர்கள் நட்புக் கொள்ளுவான். நல் மனத்தினன். இலட்சுமீ கடாட்ச முள்ளவன். ஜனங்களுக்கு உபகாரி. தரிதரமில்லா தவன். தாயே! மேலுங் கேளுங்கள்.

7. பூமியும் பரிபா லிப்பன் புதிதான கிரகஞ் செய்வன்
தீமைக ளொருவர்க் கெண்ணுன் தீரமில் லாத நெஞ்சம்
தாமதக் குணத்தா னுகும் சல்லியங் கொள்ளா னென்றேும்
காமனை விருப்பங் கொள்ளான் காதலி கேட்டி டாயே.

7. பூமிகளைக் காத்து வருவான். புது வீடு கட்டுவான். பிறருக்குத் தீங்குகள் எண்ணுதவன். தைரிய மில்லாத மனத்தினன். தாமதமான குண முள்ளவன். கடன் வாங்காதவன். காமவின்பத்தில் விருப்ப மில்லாதவன். தாயே! கேளுங்கள்.

8. இங்நெறி யுடையா னுக்கு இவனுமே சேட்ட னுக
அந்தவ னுதிப்பா னுகும் அறைகின்றே மவன்கு ணத்தைப்
பின்னமில் லாத தேகன் பித்தசூ டுடைய னுகும்
உன்னத சிவந்த மெய்யன் உணர்ச்சலாஞ் சிறிதே கல்வி.

8. இவ்விதம் ஒழுக்க முடையவனுக்கு ஜாதகன் முதல் புதல்வனைப் பிறப்பான். அவனுடைய குணத்தைச் சொல்லுவோம். குற்ற மில்லாத தேக முள்ளவன். பித்தச் சூடுள்ள சரீரம். சிவந்த உடலுடன் கூடிய வன். மெல்லிய தேகம். சிறிதே கல்வி யுள்ளவன்.

9. அறமதி லிச்சை கொஞ்சம் அற்பரை யுறவு கொள்ளான்
மருமமு முடைய னுகும் மாநிலம் விருத்தி செய்வன்
பொறுமையும் புகழு முள்ளான் பூடணஞ் சேர்ப்பா னுகும்
திருகுகள் சொல்லா னுகும் சனசகா யங்கள் செய்வன்.

9. தருமத்தில் விருப்பம் சிறிதுள்ளவன். தோணவருடன் நட்புக் கொள்ளாதவன். இரகசிய முள்ளவன். வீணுகிலங்களை விருத்தி செய் வான். அடக்க முள்ளவன். புகழுடையவன். ஆபரணங்கள் சேர்ப்பான். பொய் சொல்லாதவன். ஜனங்களுக்கு உபகாரி.

10. ஆதியில் வறுமை யுள்ளான் அலைச்சலாங் குடும்ப முள்ளான்
மேதினி வீரொன் பான்மேல் விளம்புவோம் யோகந் தானும்
சாதிப்பான் சிலவே சங்கை தன்குலத் தொழிலால் மேன்மை
தூதன வில்லஞ் சேர்ப்பன் நிமலியே மேலுங் கேளே.

10. ஆதியில் தரித்திர முள்ளவன். அலைச்சலான குடும்ப முடையவன். பதினெட்டு வயதுக்கு மேல் அதிருஷ்டங்கள் ஏற்படும். சில சந்தேகங்களை நிவர்த்தி செய்வான். தன் குலத்தொழில் செய்து மேன்மையடைவான். புதிதான வீடு கட்டுவான். தாயே! மேலுங் கேள்.

11. உண்டியி லுறைப்பி லிச்சை உயர்வான குடும்பி யாவன்
பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் விருத்தி செய்வன்
வண்டிவா கனமுஞ் சேர்ப்பன் வணிபங்கள் மேன்மே
[லோங்கும்
எண்டிசைச் கீர்த்தி கொள்வன் இவன்துணை தன்னைக்
[காப்பன்.

11. உறைப்புப் பொருளில் பிரிய முள்ளவன். உயர்ந்த குடும்ப முள்ளவன். பழைய காட்களிலிருந்த விளைநிலங்களை ஜாதகன் விருத்தி செய்வான். வண்டி முதலிய வாகனங்கள் உள்ளவன். வியாபாரம் மேன்மேலும் விருத்தி யாகும். எட்டுத் திசைகளிலும் இவன் புகழ் பரவும். இவன் சகோதரனை ஆதரிப்பான்.

12. இவன்துணை யாண்பால் ரெண்டு இயம்புவோந் தீர்க்க மாக
நவனியில் இவன்தம் மோடு நாயகன் வாழ்ந்து பின்னல்
அவனியில் வேறுய்ச் செல்வன் ஆறுறு ஆண்டு தன்னில்
பவமுள குடும்பம் வேறும் பார்வதி கேட்டி டாயே.

12. இவனுடன் பிறந்த சகோதரர்கள் இருவர் தீர்க்க முடையவராயிருப்பர் என்று சொல்லுவோம். இவர்களுடன் ஜாதகன் ஒன்றுபட்டு வாழ்ந்திருந்து, பின்பு வேறு குடும்பமாகச் செல்லுவான். இவனது முப்பத்தாறும் வயதில் குடும்பம் வேறுகும். பார்வதியே! கேட்பாயாக.

13. அன்னையின் குணத்தைச் சொல்வோம் அழகுளாள் சிவந்த
[மேனி
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பாள் தீர நெஞ்சம்
இன்னவ ளுணர்ச்சல் தேகி எதிரிக்கு வஞ்சா ளாகும்
பன்னியே பேச வல்லாள் பாட்டாளி யென்று சொல்வோம்.

13. ஜாதகன் தாயின் குணங்களைச் சொல்லுவோம். அழகுடையவள். சிவந்த உடல். தான் சொல்லுகின்ற சொற்களே சிறந்தன என்று கூறி நிலை நாட்டுவாள். தைரியமான மன முடையவள். மெலிந்த சரீர முள்ளவள். விரோதிகட்குப் பயப்படாதவள். பன்னிப் பன்னிப் பேசுபவள். உழைப்பாளி என்று கூறுவோம்.

14. பித்ததே கத்தா ளாகும் பெருதன முடையா ளாகும்
சுத்தமு முடையா ளாகும் துராசையு மில்லா ளாகும்
புத்திமான் சொற்ப ரோகி பொருளின்மே லிச்சை யுள்ளாள்
சுற்றத்தார் மதிக்க வாழ்வள் சுகதுக்க முடைய ளாமே.

14. பித்த தேகத்தை யுடையவள். பெரிய செல்வத்தைப் பெற்றவள். தூய்மை யுடையவள். கெட்ட எண்ண மில்லாதவள். புத்திசாலி. சிறிது வியாதி யுள்ளவள். செல்வத்தில் ஆசை யுள்ளவள். உறவினர் மதிக்கும்படி வாழ்க்கை நடத்துவாள். இன்பமும் துன்பமும் கலந்த வாழ்க்கை யுடையவள்.

15. இவளுடைத் துணைவ ரேழு இரண்டுஆண் விருத்தி
[யென்றேம்
நவனியில் மற்ற வெல்லாம் நசித்திடு மிவளுக் கேதான்
தவசியே இவள்தன் பூர்வம் சாற்றுவோஞ் சேர நாட்டில்
பவமுள முத்திரியச் சாதி பகர்ந்தன மிவளே யென்றேம்.

15. இவளுடன் பிறந்தவர் எழுவர். அவர்களில் இரு ஆண் மக்கள் விருத்தியாவர். மற்றவர் அனைவரும் அழிவர். தவம் புரியும் அம்மையே! இவள் முற் பிறப்பைச் சொல்லுவோம். சேர நாட்டில் முத்திரிய குலத்தினளாய்ப் பிறந்தாள் இவள் என்று சொன்னேம்.

16. பிறந்துமே சுகமாய் வாழ்ந்து புத்திர ருள்ளா ளாகி
அறந்தனி லிச்சை யின்றி அணுகியே வாழு நாளில்
வரன்தம்பி மனைவி பேரில் அடாநிந்தை சிலவே கூறி
உறன்முறை யோர்கள் கேட்டு ஒதுக்கிலு ரந்த மாதை.

16. பிறந்து, கலங்கள் பெற்று, புதல்வர்களை யடைந்து, தருமத்தில் விருப்ப மில்லாமல், வாழ்ந்து வருகின்ற காலத்தில், தன் கணவனின் சகோதரன் மனைவி மீது வீண் பழிகள் சிலவற்றைச் சொன்னாள். அவற்றை அவள் புக்ககத்தார் கேட்டு, அவளை விலக்கினர்.

17. மாதுவும் மனங்க லங்கி யறைகின்றாள் சாபந் தானும்
தீதுக ளென்மேல் குற்றம் செப்பின பாவிக் கேதான்
மேதினில் மறுசென் மத்தில் மத்திய வயதி லேதான்
சேதமா முத்திரை தானும் சிலேடையால் சிலர்கள்
[சொல்ல;

17. விலக்கப் பட்ட பெண் வருத்த மடைந்து, சாபங் கூறுகின்றாள். கெடுதல்களை என்மீது கூறிய பாவியே! மறு பிறவியில் மத்திய வயதில், உனக்குத் திருமாங்கலியம் விலகும். உன்னைப் பற்றிச் சிலேடையாகச் சிலர் பேசும்படி;

18. சென்னமே வெடுப்பா யென்று செப்பியே சலத்தில் வீழ்ந்து
வனிதையு மரண மானுள் மாதுவு மச்சென் மத்தில்
கன்மிலாக் குடும்பி யாகிக் காதன்தன் பதிக்குச் சென்று
இணையிலாக் கஞ்சன் தன்னுல் மேதினில் வரையப் பட்டு ;

18. பிறவி யெடுத்து வாழ்வாய் என்று கூறி, தண்ணீரில் விழுந்து மாண்டாள். பின்பு, இவள் ஜாதகனின் தாய் அப் பிறவியில் மதிப்புள்ள குடும்பமில்லாது, மரண மடைந்து, ஒப்பற்ற பிரமதேவனுல் உலகில் படைக்கப்பட்டு ;

19. வந்தவ ளிவளே யென்றேரும் மாதுவின் சாபந் தானும்
முந்தியே யணுகி வந்து முத்திரை மத்தி யத்தில்
நைந்திடுஞ் சிலர்கள் நிந்தை நாயகி தன்மேல் சொல்வார்
இந்தவள் பின்சென் மத்தை இயம்புவோங் கேட்டி டாயே.

19. இப் பிறவியில் பிறந்தவள் இவள் என்று சொன்னேம். பெண்ணின் சாபம் முதன்மையாக இப்பிறவியில் தொடர்ந்ததால், இவள் திருமாங்கலியம் மத்திய காலத்தில் விலகும் (கணவன் மரிப்பான்). சிலா இவளைப் பற்றிப் பழி கூறுவர். இவள் மறு பிறவியைச் சொல்லுவோம்; கேட்பாயாக.

20. முருகன்வாழ் தணிகை கீழ்ப்பால் அருகினில் சிற்றூர் [தன்னில்
திருமகள் ரெட்டி வம்சம் செனித்துமே சுகமாய் வாழ்வள்
பராசரிவ் விதமாய்ச் சொல்லப் பிருகுமே கேட்க லுற்றூர்
வருஞ்சென்மம் ரெட்டி வம்சம் வருங்கார ணங்க ளென்ன.

20. முருகப்பிரான் எழுந்தருளி யிருக்கும் திருத்தணிகைக்குக் கிழக்கிலுள்ள சிறிய ஊரொன்றில், ரெட்டியார் குலத்தினளாகப் பிறந்து, சௌக்கியமுடன் வாழ்வாள். பராசரர் இங்ஙனம் சொல்ல, பிருகு முனிவர் கேட்கலானர். வரும் பிறவியில் ரெட்டியார் மரபில் பிறக்கக் காரணங்கள் யாவை ?

21. இந்ததோர் சென்மந் தன்னில் யாவர்க்கும் பகையு மாகிப்
பிந்தியு மறஞ்செய் யாமல் பேதையும் வாழ்வ தாலே
என்னமாய் ரெட்டி வம்சம் எய்துவாள் விபரஞ் சொல்வீர்
அந்தவ ளிச்சென் லத்தில் அவள்குல தெய்வ பக்தி ;

21. இப் பிறப்பில், எல்லோருக்கும் பகையாகி, பிற்காலத்திலும் தருமம் செய்யாமல், இவள் வாழ்ந்து வருவதால், எங்ஙனம் ரெட்டியார் குலத்தில் பிறப்பாள் ? விவரங் கூறுங்கள். அவள் இப்பிறவியில், தன்குல தெய்வத்தின்மீது பக்தி ;

22. கொண்டதால் மறுபி றப்புப் புல்குவாள் ரெட்டி வம்சம்
பண்டிபண் டார முண்டாய்ப் பாவையும் வாழ்வா ளாகும்
விண்டிடு தந்தை பூர்வம் விளம்புவோங் காஞ்சி தன்னில்
தண்டமிழ்க் கலைகள் தேர்ந்த சாலிய குலமு தித்து:

22. கொண்டு வாழ்வதால், மறு பிறப்பில் ரெட்டியார் மரபில் தோன்றுவாள். வண்டிகள், கிடங்குகள் முதலானவை யேற்பட்டு, வர்த்திருப்பாள். இனி, ஜாதகன் தந்தையின் வரலாற்றைச் சொல்லுவோம். காஞ்சீபுரத்தில், தண்ணிய தமிழ்க் கலைகளை யுணர்ந்த செசவாளர் மரபில் பிறந்து,

23. நெசவுக ளுடைய ஞகி நேமியில் செட்டுச் செய்து
பசியென்றோர் தம்மைக் காத்துப் பாலர்கள் மனைவி
[யுண்டாய்
வசையின்றிக் காலன் பக்கல் வந்துபின் மலரோ னுலே
அசைவிலா வடுகர் வம்சம் அணுகினு னிவனே யென்றோம்.

23. நெசவுத் தொழில்கள் செய்பவனாக, உலகில் வியாபாரங்கள் செய்து, பசி யென்று வந்தவர்களைக் காத்து, மக்கள் மனைவி ஆகியோரை யடைந்து, பழி யில்லாமல் மரண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, குற்றமற்ற வடுகர் குலத்தில் பிறந்தான் இவன் என்று கூறினோம்.

24. இவனுமே விச்சென் மத்தில் யாவர்க்கு நல்லோ னுயும்
துர்ச்சன குணமில் லாமல் துராசையு மில்லா ஞகி
நவனியில் பித்த பாண்டால் நாயகன் மரண மெய்தும்
தவசியே யிவன்பின் சென்மஞ் சாற்றுவோங் கேளுந் தாயே.

24. இவன் இப்பிறவியில் அனைவர்க்கும் நல்லவனாய், கெட்ட குணங்களில்லாமல், நீய ஆசையுமின்றி, பித்த பாண்டு நோயால் மரணமடைவான். இவன் மறு பிறப்பைச் சொல்லுவோம்; தாயே! கேளுங்கள்.

25. வடமலை தன்னி லேதான் வணிகர்தங் குலமு தித்து
அடைவுடன் செயமே செய்து அரிபத்தி மிகவே கொண்டு
மடவரல் மதலை யுண்டாய் வாழ்குவா னிவனே யம்மா
திடமதாய்த் தவங்கள் செய்யுந் தேவியே கேட்டி டாயே.

25. வேங்கடத்தில் வணிகர் குலத்தவனாகப் பிறந்து, தொடங்கிய செயலில் வெற்றி பெற்று, திருமால் மீது மிகுதியான பக்தி கொண்டு, மனைவி மக்களை யடைந்து, இவன் வாழ்ந்து வருவான். திடமாகத் தவங்களைப் புரியும் தேவியே! கேட்பாயாக.

26. சாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோ மூவைந் தாண்டில்
காதலி வடகீழ் தன்னில் கலந்திடு மந்தக் காலம்
மாதுலன் குடும்பந் தன்னில் வந்திடுஞ் சுபங்கள் தாமும்
ஓதுவோ மவள்கு ணத்தை உறுதியா மனத்த ளாமே.

26. ஜாதகன் திருமண காலத்தைச் சொல்லுவோம். பதினைந்தாம் வயதில், வடகிழக்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அந்தக் காலத்தில் இவன் மாமன் குடும்பத்தில் சுபச் செயல்கள் நிகழும். மனைவியின் குணத்தைச் சொல்லுவோம். திடமுள்ள மனத்தினள்.

27. மாங்குயில் சிவந்த மேனி மர்மமுங் கொஞ்ச முள்ளாள்
தீங்கதை யொருவர்க் கெண்ணுள் சனவுப காரி யாவள்
ஓங்கிய குடும்பி யாவள் உரைக்கின்றேம் வறுமை யில்லாள்
பாங்கியும் பாக்ய முள்ளாள் பார்வதி கேட்டி டாயே.

27. குயில் போன்ற குரலையுடையவள். சிவந்த மேனி யுடையவள். மனத்தில் சிறிது இரகசிய முடையவள். ஒருவர்க்கும் தீங்கு நினையாள். மக்களுக்கு உதவி செய்வாள். உயர்ந்த குடும்ப முடையவளாக வாழ்வாள். தரித்திரம் இல்லாதவள் என்று சொல்லுகின்றோம். பாக்கிய முடையவள். பார்வதியே! கேட்பாயாக.

28. சுதர்களு மேழு தோன்றும் தோகையு மிரண்டு தீர்க்கம்
புதல்வனு மிரண்டு தீர்க்கம் போற்றுவோ மிவனுக் கேதான்
அதமாகு மற்ற தெல்லாம் அவளுமே வந்த பின்பு
பதியினில் திருவு மோங்கும் பாக்கிய மேல்மே லுண்டாம்.

28. ஜாதகனுக்கு மக்கள் எழுவர் தோன்றுவர். பெண்கள் இருவரும் புத்திரர் இருவரும் தீர்க்கமாக விளங்குவர் என்று சொல்லுவோம். மற்றவர் அழிவர். மனைவி வந்த பின்பு குடும்பத்தில் செல்வம் பெருகும். பாக்கியங்கள் மேன்மேலும் எற்படும்.

29. இன்னவன் முன்சென் மத்தை இயம்புவோந் தவளை யுத்ரம்
பன்னிய சிற்றூர் தன்னில் பிறந்தனன் தியின் வம்சம்
அன்னவன் கிருஷி யாலே அதிகமாய்த் தனங்கள் பெற்றுத்
தன்பந்து மெச்ச வாழ்ந்து சகலர்க்கும் நல்லோ னாகி;

29. ஜாதகன் முற்பிறப்பைச் சொல்லுவோம். தவளை மலைக்கு வடக்கில் உள்ளதொரு சிற்றூரில், வன்னியர் மரபில் பிறந்தான். விவசாயத்தின் மூலம் மிக்க செல்வத்தைப் பெற்று, உறவினர் பாராட்டும்படி வாழ்ந்து, அனைவருக்கும் நல்லவனாகி;

30. பாரியாள் மதலை யுண்டாய்ப் பாரினில் சுகமாய் வாழ்ந்து
சீரிய காலன் பக்கல் சென்றுபின் பிரம னுலே
மறையவன் வரையப் பட்டு விளங்கினு னிவனே யென்றும்
தீரமா யவனின் யோகம் செப்புவோங் கேளுந் தாயே.

30. மனவி மக்கள் ஏற்பட்டு, உலகில் சுகமுடன் வாழ்ந்து, பின்பு மரண மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, இப் பிறப்பில் பிறந் தான் இவன் என்று கூறினேம். இவன் யோகங்களைச் சொல்லுவோம்; கேளுங்கள்; தாயே!

31. ஈரெட்டு வாண்டு மேலாய் எய்திடுஞ் சுகமே யெய்தும்
பாரிய குடும்பி யாவன் பாரினில் செட்டுச் செய்வன்
நாரியும் வந்த பின்பு நயப்புறும் விசேட யோகம்
ஊரெலாம் மெச்ச வாழ்வன் உலகெலாம் வசியங் கொள்வன்.

31. பதினறு வயதுக்கு மேல் நலங்கள் ஏற்படும். பெரிய குடும்ப முடையவ னுவன். உலகில் வியாபாரங்கள் செய்வான். மனவி வந்த பிறகு விசேடமான யோகங்கள் வாய்க்கும். ஊரார் அனைவரும் பாராட்டும் படி வாழ்வான். உலகத்தினர் அனைவரையும் தனக்கு வசமாகும்படி செய்வான்.

32. சுயதொழில் செய்வா னுகும் தொல்புவி சேர்ப்பா னுகும்
நயமுள நீதி செட்டு நல்கிடு மூவெட் டின்மேல்
அயலாரால் பொருள்கை கூடும் அதிகீர்த் திகளு மேற்பன்
பயமிலாப் பக்க மில்போல் பெருகிடுஞ் செல்வந் தானே.

32. சொந்தமாகத் தொழில் செய்து பிழைப்பான். வீனே நிலங்களை சேர்ப்பான். செல்வம், வியாபாரம் இவை இருபத்து நான்காம் வயதில் நேரும். அயலாரால் செல்வம் கிடைக்கும். மிக்க கீர்த்திகள் அடைவான். தன் வீட்டுக்கு அருகிலுள்ள ஒரு வீட்டிலுள்ளது போல் செல்வம் பெருகும்.

33. பக்கமில் சொன்னீ ரையா பகருவீர் திக்குத் தானும்
தக்கவே கீழ்ப்பா லாகத் தடுத்தமூன் றுமில் போலத்
திக்கெலாம் புகழ வாழ்வன் தீரன்தன் னீரஞ் சாண்டிற்
மிக்கவே தந்தை கண்டம் விளம்புவோ மொழிதப் பாது.

33. பக்கத்திலுள்ள வீட்டைப் பற்றிக் கூறினீர்கள். அஃது எத்தத் திசையி லிருக்கின்றது என்று சொல்லுங்கள். கிழக்குப் பக்கமாக உள்ள தன் வீட்டுக்கு மூன்றும் வீட்டைப் போல், உலகத்தின ரனைவரும் புகழும்படி

வாழ்வான். இவனுடைய பத்தாம் வயதில் தந்தையின் மரணம் ஏற்படும் என்று சொல்லுவோம். சொன்ன சொல் தவறுது.

34. நாலேழு வாண்டு தன்னில் நன்மாதுர் கண்ட முண்டு
சாலவே யன்பா னெட்டில் தனுர்மாதம் தசமி தன்னில்
ஏலவே பித்தப் பாண்டால் இவனுக்குக் கண்டம் நேரும்
ஆலத்தை யுண்டோன் தேவி அறைந்தது தப்பா தாகும்.

34. இவனது இருபத்தெட்டாம் வயதில் தாயின் மரணம் உண்டாகும். ஐம்பத்தெட்டாம் வயதில், மார்கழி மாதம் தசமி திதியில், பித்த பாண்டு நோய் உண்டாகி, இவனுக்கு மரணம் நேரும். ஆலால விஷத்தை யருந்திய சிவபெருமானின் மனைவியே! சொல்லியது தவறுது.

35. இதுமத்தில் சாத கர்க்கு இலகாதோ மார கங்கள்
எதுவித நோய்கள் வந்தும் இரணியன் அஞ்சில் நிற்க
அதுபிணி யுடனே நீங்கி ஐம்பத்தெட் டாண்டு நிற்பன்
விதியது சதியாய் நிற்கும் விளம்புவோ மிவன்பின்
[சென்மம

35. குறிப்பிட்ட இந்த வயதுக்குள் ஜாதகனுக்கு மரண மேற்படாதோ? எப்படிப் பட்ட வியாதிகள் வந்தாலும், குரு ஜன்ம மிடத்தில் தங்கி யிருப்பதால், உடனே நீங்கி, ஐம்பத்தெட்டு வயது வரை தீர்க்காயுளாக வாழ்வான். ஐம்பத்தெட்டாம் வயதில் இவனுக்கு விதி சதி செய்யும் (மரண மேற்படும்). இவன் மறு பிறப்பைச் சொல்லுவோம்.

36. அந்நகர் தன்னி லேதான் அறைந்தனன் செங்குந்த வம்சம்
பொன்பணி யதிக முண்டாய்ப் பூமியில் வாழ்வா னுகும்
இன்னமும் பதினு முண்டில் இவன்தாதை தாய்க்குக்
[கண்டம்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

36. அந்த நகரத்தில் செங்குந்தர் மரபில் தோன்றுவான். பொன்னும், ஆபரணங்களும் மிகுதியாக ஏற்பட்டு, உலகில் வாழ்ந்திருப்பான். இவனது பதினாறும் வயதில் தந்தையைப் பெற்ற பாட்டி இறப்பள். உத்தமனுன் கணவனை யடைந்த பார்வதியே! கேட்பாயாக.

37. பொதுவாக யோகம் நன்றுய்ப் புகலுவோம் வறுமை
[யில்லான்
நதிபல தீர்த்தந் தோய்வன் நகைபூமி வீடு யாவும்
பதினெரு பொன் தன்னைப் படைப்பனு மிவனை யம்மா
அதிதிபோல் தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

37. பொதுவாக இந்த ஜாதகனின் யோகங்களைச் சொல்லுவோம். தரித்திர மில்லாதவன். பல புண்ணிய நதிகளில் நீராடுவான். ஆபரணங்கள், நிலபுலன்கள், பதினாயிரம் பொன் ஆகியவற்றை இவன் பெறுவான்; தாயே! முனிவர்களைப் போல் தவங்களை யியற்றுகின்ற பார்வதியே! கேட்பாயாக.

38. செனித்திடுங் காலந் தன்னில் சந்திரன் தசையி ருப்புக்
குனித்திடு வாண்டு நாலும் கூறிய திங்கள் நாலும்
துணைவரும் விருத்தி யாகும் சுகதுக்க மிரண்டு முண்டு
வணிபன்தன் தனக்கு ரோகம் வந்துபின் நிவிர்த்தி யாகும்.

38. ஜாதகன் பிறப்புக் காலத்தில் சந்திர மகா தசையில் இருப்பு; நான்கு வருஷங்களும், நான்கு மாதங்களுமாம். அக்காலத்தில் இன்பமும் துன்பமும் வாழ்க்கையில் கலந்து வரும். ஜாதகனுக்கு வியாதி உண்டாகிப் பிறகு தீரும். சகோதர விருத்தி ஏற்படும்.

39. அன்னைக்கு ரோக மெய்தும் அந்ததோர் வர்க்கஞ் சூதம்
பின்பாகம் விபர மாகப் பேசுவோ மினிமே லாகத்
தன்துணை சேதி யாவும் சாற்றுவோ மிரண்டி லேதான்
கன்னென மொழியி னுளே கழறின மொழிகுன் றாது.

39. தாய்க்கு வியாதி யுண்டாகும். தாயின் வர்க்கத்தாருக்கு அசுபங்கள் நிகழும். பிற்பாகத்தில் விவரமாகக் கூறுவோம். இனிமேல் உடன் பிறந்தார்களைப் பற்றிய செய்திக ளனைத்தையும் இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். இனிமையான சொற்களையுடையவளே! சொன்ன சொற்கள் தவறா.

ஜாதகம் 86

1. சந்திரன் தேள தாகச் சனிகோவில் சிகியுஞ் சிம்மம்
புந்தியும் புகர்சேய் மானில் பகலவன் ராகு சாடி
மந்திரி கடக மாக வறைகின்றேரும் சென்மம் நந்தி
இந்தவார் கோளும் நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் விருச்சிகத்திலும், சனி துலாத்திலும், கேது சிம்மத்திலும், புதன் சுக்கிரன் செவ்வாய் மகரத்திலும், சூரியன் ராகு கும்பத்திலும், குருகடகத்திலுமாக, நவக்கிரகங்களுளிருக்க, இலக்கினம் விருஷபமாக விருந்தால், எற்படக்கூடிய பலனைச் சொல்லுவீர்.

		லக்கினம்	
சூரியன் இராகு	இராசி சக்கரம்		குரு
புதன் சுக்கிரன் செவ்வாய்			கேது
	சந்திரன்	சனி	

2. மங்கையுங் கேட்கும் போது வறைகின்ரூர் பராசர் தாமும்
இங்கிவைப் பெண்பால் சென்மம் இவள்தந்தை யில்லங் [கேளாய்
துங்கமாய்க் கீழ்மேல் வீதி தென்வாசல் மாயோன் தந்தி
பொங்கமாய் மேற்கே தங்கும் புகலுவோம் மஸ்தா னுண்டு.

2. பார்வதி கேட்கும்போது பராசர முனிவர் கூறுகின்ரூர். இஃது பெண் பிறவியாம். இவளுடைய தந்தையின் வீட்டைக் கேளுங்கள். கிழக்கு மேற்கு வீதியில், தெற்கு நோக்கியுள்ள வாயிலுள்ளது. திருமாலின் ஆலயமும், விநாயகர் கோயிலும் மேற்கிலுள்ளன. பள்ளிவாசலும் அங்கு உண்டு.

3. மடமுண்டு சமாதி யுண்டு மர்க்கமு மோடை தென்பால்
திடமுள நதியு முண்டு தென்கீழ்பா லீசன் மாரி
அடைவுடன் கிழக்குக் கன்னி அருகினில் சலமும் உண்டு
மடமயி லாளே சொன்னே மறைகின்ரே மன்னை யில்லம்.

3. அருகில் ஒரு மடமும் சமாதியும் உள்ளன. ஒரு சாலையும் சிறிய ஓடையும், தெற்குப் பக்கத்தில் ஒரு பெரிய ஆறும் உள்ளன. தென் கிழக்கில்

சிவபெருமான் ஆலயமும், மாரியம்மன் கோவிலும் உள்ளன. கிழக்கில் அம்மன் கோவில். பக்கத்தில் நீர்க்கிலேயும் உண்டு. மயிலேப்போன்ற சாயலுள்ளவளே! தாயின் வீட்டைப் பற்றிச் சொல்லுவோம்.

4. அவ்வீதி தென்மேல தாகும் அந்தகன் வாடை யாகும்
ஓவ்விய சமவூர் தன்னி லுரைததிட்டோ மன்னே தந்தை
பவ்வமாய் வரன்புத்ர யோகம் பகருவோம் முன்பின் [சென்மம்
நவ்விய நவக்கோ ளாய்ந்து நாட்டுவோங் கேளுந் தாயே.

4. அவ்வீடு தந்தையின் வீட்டுக்குத் தென்மேற்கில் இருக்கும். தெற்கு வரிசையில் உள்ளது. ஒரு சமமான சிற்றூர் என்று சொல்லுவோம். தாய், தந்தை, கணவன், புத்திரர் இவர்களின் யோகங்களைப் பற்றியும், முற்பிறப்பு மறு பிறப்பு இவைகளையும், நவக்கிரங்களையும் நன்கு ஆராய்ந்து சொல்லுகின்றோம். கேளுங்கள், தாயே!

5. தந்தையின் துணைவ ரேழில் ஆணொன்று தீர்க்க மெய்தும்
மூந்திய துணைக ளெல்லாம் முயலுவோ மிளையோ ராக
வந்தவன் சேதி கேளா யழுத்தமாம் நெஞ்ச முள்ளன்
மூந்திய கோபங் கொஞ்சம் மொழிகுவான் கட்டு வார்த்தை.

5. தந்தைக்கு உடன்பிறந்தவர்கள் எழுவரில் சகோதரன் ஒருவன் தீர்க்கமா யிருப்பான். மற்றவர்க ளெல்லோருக்கும் இவன் இளையவனுவன். தந்தையின் பின் பிறந்தவனின் செய்திகளைக் கேளுங்கள். நெஞ்சழுத்த முள்ளவன். சிறிது முன்கோப முடையவன். இல்லாத வார்த்தைகளைப் புனைந்து பேசுபவன்.

6. மால்நிற முயர மில்லான் மருவுவான் துணைவ னோடு
சாலவே கிருஷிச் செட்டு சாப்பாடு சுகிய னுகும்
ஏலவே கல்வி கொஞ்சம் இடுக்கமாங் குணத்தா னுகும்
ஆலம்போல் மனத்த னுகும் அம்பிகை யாளே கேளாய்.

6. கரிய நிற முள்ளவன். உயர மில்லாதவன், சகோதரனுடன் சேர்ந்து வாழ்பவன். மிகுதியாகப் பயிர்த்தொழிலும், வியாபாரமும் செய்து வருவான். போஜன சௌக்கிய முள்ளவன். சிறிது கல்வியறி வுடையவன். கெட்ட குணங்கள் நிறைந்தவன். விஷம்போல் கொடிய மனத்தன். தாயே! கேளுங்கள்.

7. தந்திர வாதி யாகுஞ் சகலரை நேசங் கொள்வன்
பந்தினர்க் குதவி செய்வான் பட்சணப் பிரிய னுகும்
ஏந்தையே மனவி யொன்று இயம்புவோ முத்தி ரத்தில்
பந்தமாய்ப் புத்திர ரான்பால் பகருவோ மொன்றே யாகும்.

7. தந்திரசாலி. எல்லோரையும் கட்புக் கொள்ளுவான். உறவினர் களுக்கு உபகாரி. சிற்றுண்டிகளில் பிரியன். மனைவி ஒருத்தியே யாவள் என்று சொல்லுவோம். அவளும் வடக்குத் திசையிலிருந்து வருவாள். ஒரு புத்திரன் பிறப்பான் என்று கூறுவோம்.

8. பெண்ணது விரண்டு என்றேரும் பராசரிவ் விதமாய்க் கூற
வண்ணமாய்ப் புயண்டர் சொல்வார் மனைவியு மெந்தக்
[காலம்
அண்ணலுக் கணுகும் சொல்வீர் அவளுக்கு வாரு
[மாண்டில்
திண்ணமாய்ப் பாரி சேரும் சேயனு மொன்றுய் வாழ்வன்.

8. இரு பெண்களும் உளராவர் என்று கூறினேம். பராசரர் இவ்வித மாகச் சொன்னபோது. புஜண்ட முனிவர் சொல்லுகின்றார். ஜாதகியின் சிறிய தந்தைக்கு மனைவி எப்போது வருவாள், சொல்லுங்கள். ஜாதகியின் ஆரும் வயதில் நிச்சயமாகச் சிறிய தந்தைக்கு மனைவி வாய்ப்பான். இரு சகோதரர்களும் ஒன்றுக வாழ்ந்து வருவார்கள்.

9. இவள்பிதா குணத்தைக் கேளாய் ஈகைவான் சல்யம்
[கொள்வன்
நவனியில் பூமி சேர்ப்பன் நளினமாய் வார்த்தை சொல்வன்
பவமுள சித்திர வீடு படைப்பனுங் கல்வி கொஞ்சம்
தவசிக ளுறவு கொள்ளான் தரணியில் நல்லோ னுவன்.

9. இவளுடைய தந்தையின் குணத்தைக் கேளுங்கள். கொடுக்கும் தன்மையன். கடன் கொள்ளாதவன். உலகில் வீணிலங்களைச் சேர்ப்பான். இனிமையாகப் பேசுபவன். அழகுள்ள வீடு கட்டுவான். சிறிதே கல்வி யறிவுள்ளவன். தவம்செய்வோ ருறவு இல்லாதவன். உலகில் நல்லவன் என்ற பெயர் பூண்பன்.

10. ஆதியில் வறுமை யுள்ளான் அணுகிடு மூலச் சூடு
நீதியாய் நடக்கை யுள்ளான் நேமியோர் மெச்ச வாழ்வன்
வேதனை யொருவர்க கெண்ணுன் விளம்புவோ மாமி
[ரெண்டு
சூதிலான் காலா ளுள்ளான் துணைவரை யாத ரிப்பன்.

10. முதலில் தரித்திர முள்ளவன். மூலச் சூடுடையவன். சேர்மை பாக நடந்து கொள்ளுவான். உலகத்தவர் புகழும்படி வாழ்ந்து வருபவன். பிறருக்குத் தீங்கு நினையாதவன். இவனுக்கு இரு மனைவியர் என்று சொல்லு வோம். கபட மில்லாதவன். வேலையாட்க ளுள்ளவன். உடன்பிறந்தவரை ஆதரிப்பான்.

11. சிவந்திடு மேனி யாவன் சேயிழை தன்னுல் யோகம்
கவர்ந்திடா னயலார் பொன்னைக் கண்முகம் வசிய
[முள்ளான்
நவரியில் தயிர்பா லிட்டன் நற்பணி யிச்சை யில்லான்
அவமதிப் பில்லா வாழ்வன் அறைந்தன மொழிகுன் ருது.

11. சிவந்த உடலுள்ளவன். மனைவியால் அதிருஷ்டங்கள் ஏற்படும். பிறர் பொருளைத் தீண்டாதவன். கண்கள் முகம் இவை வசீகரம் பொருந்தி யவன். உலகில் தயிர், பால் இவைகளில் விருப்ப முள்ளவன். நற் காரியங் களில் விருப்ப மில்லாதவன். தன் மதிப்புடன் வாழ்ந்து வருவான். சொன்ன சொற்கள் தவரு.

12. இருபது வாண்டு மேலாய் இளம்பிறை போலே யோகம்
பெருகிடு மிவனுக் கேதான் பேச்சது காப்பா னுகும்
வருமனை யிரண்டே யாகு மறைகின்ரு மிளையா னுக்கு
வருகுவா ளிந்த மாது மங்கையுங் கேட்க லுற்ருள்.

12. இருபது வயதுக்குமேல் வளர்பிறைச் சந்திரன்போல் அதிர்ஷ் டங்கள் விருத்தியாம். சொல்லைக் காப்பாற்றும் தன்மையன். இரு மனைவி யர் ஏற்படுவர். அவர்களில் இளையவளுக்குப் பிறந்தவள் இந்த ஜாதகி. பார் வதி கேட்கின்ருள்.

13. என்னகா ரணத்தி னுலே இவனுக்கு மனைவி ரெண்டு
ஒதுவீ ரந்தச் சங்கை யுத்தமன் முன்சென் மத்தில்
தீதுக ளதிகஞ் செய்தான் சேயிழை தோட மெய்தி
மேதினி லிரண்டாம் தாரம் மேவிற்று என்று சொன்னேம்.

13. என்ன காரணத்தினுல் ஜாதகியின் தந்தைக்கு இரு மனைவியர் ஏற்படுவார்? அந்தச் சந்தேகத்தைத் தெளிவியுங்கள். அவன் முற்பிறவி யில் மிகுந்த தீவினைகள் செய்தான். அதனுல் மனைக்குத் தோஷ மேற்பட்டு, இரண்டாம் மனைவி வாய்த்தனள் என்று சொன்னேம்.

14. முதல்மனை தனக்குப் புத்திர ரெய்தாது மரண மாகி
விதியினு லிரண்டா மாது மேவிற்று வென்று சொன்னேம்
பாரிபு மவ்வு ராகு மவன்வினை சொல்லு மென்னச்
சதியிலாச் சொல்லு கின்றேன் சேரநாட் டதனி லேதான்.

14. முதல் மனைவிக்குப் புத்திர பாக்கியம் இல்லாமல் மரணமடைந்து, முற்பிறவியில் செய்த தீவினையால் இரண்டாம் மனைவி ஏற்பட்டாள் என்று கூறுவோம். அவள் உள்ளூரி லுள்ளவள். அவனுடைய தீவினையைச் சொல்லுங்கள். சந்தேகமின்றிச் சொல்லுகின்ரும். சேரநாட்டில்;

15. கொங்கணர் வாழு மூரில் கோகுலந் தனிலு திந்து
மங்கையு மதலை யுண்டாய் வணிபங்க ளதிகம் செய்து
இங்கிவன் வாழும் நாளில் இயம்புவோ மூழி தானும்
மங்கையின் துணைவி மூத்தோள் வரனின்றி வாழ்ந்தா
[ளென்றேும்.

15. கொங்கணர் வாழ்ந்துவரும் ஊரில், இடையர் குலத்தில் தோன்றி, மனைவி மக்களுடன் வாழ்ந்து, வியாபாரங்களும் மிகுதியாகச் செய்து வரும் போது, ஏற்பட்ட தீவினையைச் சொல்லுவோம். மனைவியின் மூத்த சகோதரி, தன் கணவனை இழந்து, இவன் வீட்டில் வசித்து வந்தாள் என்றுசொன்னேம்.

16. தையலைப் போகந் துய்த்துத் தான்சில நாட்கள் சென்று
பையவே கருவுண் டாகிப் பலவித வவிழ்த்த மீய
வையமேல் மரண மெய்த வடைந்தது வந்தத் தோடம்
ஐயமா மின்ன மொன்று அறைகின்றேும் கேட்டி டாயே.

16. அவளிடம் இன்பம் அனுபவித்தான். சின்னட்களுக்குப் பிறகு அவளுக்குக் கரு வுண்டாயிற்று. அதை நீக்கப் பலவித மருந்துகள் கொடுத்தான். அதனால் அவள் இறந்தாள். அந்தத் தோஷம் இவனைச் சார்ந்தது. இன்னென்றும் சொல்லுகின்றேும், கேளுங்கள்.

17. ஏழையோன் மணத்துக் காக இவனைமர்ங் கலியம் கேட்கத்
தாழ்விலாத் தாரே னென்று தைரியங் கூறும் போது
ஏழையு மணங்கள் கூட்டி மாங்கல்யம் நாளில் கேட்க
ஊழியா லீயா நின்றுன் அவர்வேறு முத்திரை வாங்கி;

17. ஓர் ஏழை தன் கலியாணத்துக்காக இவனைத் திருமாங்கல்யம் கேட்கும்போது, தருகின்றேன் என்று தைரியம் சொன்னேன். ஏழையும் அவ்வார்த்தையை நம்பி, கலியாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து, ஓர் நல்ல நாளில் திருமாங்கலியம் கேட்கும்போது, கெட்ட எண்ணத்தால் கொடுக்காமலிருந்தான். அவன் வேறு திருமாங்கலியம் வாங்கி;

18. மணமது முடித்தா னென்றே மறைகின்றுன் பின்புச்
[சாபம்
கனமுடன் தாரே னென்று காரியக் காலந் தன்னில்
பிணையாகச் சொன்ன பர்வி பேதையு மரண மாவாள்
இனிவருஞ் சென்மந் தோறு மிருமனை யாக வாழ்வாய்.

18. திருமணத்தை முடித்தான் என்று கூறினேம். பின்பு அவன் ஒரு சாபமிட்டன். நிச்சயமாகத் தருகின்றேன் என்று சொல்லிவிட்டுச் சமயத்தில்

தாமல் வேறுவிதமாகச் சொன்ன பாவியே! உன் மனைவி இறப்பாள். இனி ஏற்படும் பிறவியில் ஒவ்வொன்றிலும், இரு மனைவியர்களை யடைவாய்.

19. என்றுமே தெருத்தூள் வாரி யிறைத்தன னந்தத் தோடம்
அந்தவன் தன்னைச் சார்ந்து அவன்மனை மரண மெய்தும்
குன்றிய மனத்த னுகிக் கூற்றன்தன் பதிக்குச் சென்று
சந்ததம் பிரம னுலே தரணியில் வரையப் பட்டு;

19. என்று கூறித் தெருமண்ணை வாரி யிறைத்தான். அந்தத் தினை ஜாதகியின் தந்தையைச் சார்ந்தது. அவனுடைய மனைவி இறக்க, மன வருத்த மடைந்தவனும் எமபுரம் அடைந்தான். பிறகு பிரமனுல் படைக்கப் பட்டு இப்பூமியில்;

20. பிரிதிவி கிழ்ப்பா லாகப் பிறந்தன னிவனே யென்றும்
அறைகின்றே மிச்சென் மத்தி லாதியில் வறுமை யுண்டாய்
இருமனை நேர்ந்த தம்மா ஏழையோர் சாபம் போலே
அறந்தனை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

20. காஞ்சிக்குக் கிழக்கில் பிறந்தான் இவன் என்று கூறுவோம். இப் பிறவியில் முதலில் தரித்திர மேற்படும் என்று சொல்லுவோம். ஏழைகளிட்ட சாபம்போல் இரு மனைவியர் ஏற்பட்டனர். தருமத்தை வளர்க்கும் எங்கள் உயிருக்குயிரான தாயே! கேளுங்கள்.

21. சாதகி குணத்தைச் சொல்வோம் தானவ ளிருநி றத்தாள்
மேதினில் புத்தி சாலி வீண்வம்பில் செல்லா ளாகும்
தீதான குணமில் லாதாள் சொல்லுமுன் கோபங் கொஞ்சம்
சூதிலா ளன்ன மீவள் சுபமுடன் வாழ்வா ளாகும்.

21. ஜாதகியின் குணத்தைச் சொல்லுவோம். கருமை கலந்த சிவப்பு நிறமுள்ளவள். புத்திசாலி. வீண் வம்புக்குப் போகாதவள். கெட்டகுணமில் லாதவள். சிறிது முன்கோபம் உண்டு என்று சொல்லுவோம். கபட மில்லாதவள். ஏழையோர்க்கு அன்னமிடுவாள். மக்களுடன் வாழ்ந்து வருவாள்.

22. பெருதன முடையா ளாகும் பந்துவுக் கினிய ளாகும்
திருமக ளொப்ப தாகும் சனவுப காரி யாவள்
வருவோரை யாத ரிப்பாள் வாக்குக்கள் சுத்த முள்ளாள்
வரன்மனம் போலே வாழ்வா ளம்பிகை யாளே கேளாய்.

22. நிறைந்த செல்வ முள்ளவள். உறவினருக்குப் பிரியமானவள். இலட்சுமீயைப் போன்றவள். ஜன்ங்களுக்கு உபகாரம் செய்வாள். அடைந் தவரைக் காப்பாள். சொல் தவறாதவள். கணவன் மனமறிந்து வாழ்ந்து வருவாள். தாயே! கேளுங்கள்.

23. அவள்துணை நான்கு தோன்றும் அவர்களி லாண்பால் [ரெண்டு
நவனியில் கன்னி யொன்று நாட்டுவோந் தீர்க்க மாக
இவளுடை மணத்தின் கால மியம்புவோ மீரஞ் சாண்டில்
பவமுள மேற்குத் திக்கில் பகருவோம் வரனுண் டாகும்.

23. அவளுக்கு உடன்பிறந்தவர் நால்வர் உளராவர். அவர்களில் இரு சகோதரரும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுளுட னிருப்பர். இவளுடைய திரு மணக் காலத்தைச் சொல்லுவோம். பத்தாம் வயதிலேயே மேற்குத் திசையி லிருந்து கணவன் வாய்ப்பான்.

24. வரனுமே சிவந்த மேனி வித்தையு முடைய னாகும்
பரம்பரைத் தொழிலே செய்வன் பாருகள் விருத்தி யுண்டாம்
திருமகள் வாச முள்ளான் சிறப்பான குடும்பி யாவன்
பெருமவர் நேசங் கொள்வன் புராதனம் விருத்தி செய்வன்.

24. இவளுடைய கணவன் சிவந்த நிறமுள்ளவன். கல்வியறிவுடை யவன். பரம்பரையாக வந்த தொழிலையே செய்துவருவான். விளை நிலங் களை அதிகரிக்கச் செய்வான். இலட்சுமீ கடாட்ச முள்ளவன். செழிப் புள்ள குடும்பத்தை யடைவான். பெரியோர்களின் நட்பைக் கொள்ளுவான். பிதுரார்ச்சிதத்தை விருத்தி செய்வான்.

25. புத்திர ராண்பா லொன்று பெண்ணது விரண்டு மாகும்
சித்தமாய் மூன்றுந் தீர்க்கம் சீரண மிரண்டு மெய்தும்
அத்திரி சொல்லு கின்றார் அவர்வரன் துணைவர் சேதி
சுத்தமாய்ச் சொல்லு மென்னச் செப்புவார் பராசர் தாமும்.

25. ஒரு புத்திரனும் இரு பெண்களும் தோன்றுவார்கள். இம்மூவரும் தீர்க்கமாவர். மேலும் இரு குழந்தைகள் பிறந்து, இறந்துபோம். அத்திரி முனிவர் சொல்லுகின்றார். ஜாதகியின் கணவனுடன் பிறந்தவர்களது செய் திகளை நன்கு ஆராய்ந்து கூறுங்கள். பராசரர் சொல்லுகின்றார்.

26. வரன்துணை தன்பின் வந்தோ ரவர்கள்தஞ் சேதி யாவும்
உரைக்கின்றே மிரண்டி லேதான் உத்தமி மாதுர் சென்ம
முரைக்கின்றே மால்நி றத்தா ளன்னம்போல் சாய
[லுள்ளாள்
உயரமில் லாளா கும்மே உத்தமி நன்ன டக்கை.

26. கணவனுடன் பிறந்தவர்கள், ஜாதகிக்குப் பின் பிறந்தவர்கள் முதலியவர்களின் செய்திகளை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். ஜாதகி அன்னையின் குணத்தைக் கூறுவோம். கரிய நிற முடையவள். அன்னம் போன்ற நடை உள்ளவள். குள்ளமானவள். நன்னடக்கையுள்ள உத்தமி யாவள்.

27. அன்னையின் துணையாண் காணுள் அறைகின்றேம் பெண்பா
[லொன்று
இன்னவள் தீர்க்க மெய்தும் இவளூழ் ளூரில் வாழ்வள்
அன்னவள் தனக்குப் புத்திர ரணுகாது வணுகில் தீதாம்
சொன்னது தப்பா தாகும் தேவியும் கேட்க லுற்றுள்.

27. தாய்க்கு உடன்பிறந்த சகோதரர் இல்லை. சகோதரி ஒருத்தி யுண்டு. அவளும் நீண்ட ஆயுளுள்ளவள். உள்ளூரில் வாழ்ந்து வருவாள். அவளுக்குப் புத்திர பாக்கியம் இல்லை. பிறந்தாலும் நிலையா. கூறிய சொற் கள் தவறு. பார்வதியும் கேட்கலானாள்.

28. மாதுர்துணை காணு ளென்றீ ரில்லமு மாஸ்தி யாவும்
எவர்களே யடைவார் சொல்வீ ரிவள்தந்தை தனக்குப் பாதி
நவனியில் சேரு மென்றேம் நாயகி துணைவர் தோடம்
அவனியில் வந்த தென்ன அறிவிப்பாய் விபர மாக.

28. தாய்க்கு உடன்பிறந்தவர் இல்லை என்றீர். வீடும் பொருள்களும் யார் அடைவார்கள் என்று சொல்லுங்கள். ஜாதகியின் தந்தைக்குப் பாதி சேரும் என்று கூறுவோம். ஜாதகியின் தாய்க்கு சகோதர தோஷ மேற்பட்டக் காரணங்களை விபரமாகச் சொல்லுங்கள்.

29. தவளையின் மலைக்குத் தெற்கில் சார்ந்திடும் பேரூர் தன்னில்
இவளுமே செக்கான் வம்ச மியன்றனள் சுகமுண் டாகி
அவளில்லை மடைக்க லானு மணுகிற்றுத் தெரிய வில்லம்
பவமுள பட்சி தன்னைப் பத்தினி பிடித்துக் கொன்றுள்.

29. தவளை மலைக்குத் தெற்குப் பக்கத்தில் உள்ள ஒரு பெரிய ஊரில் இவள் (ஜாதகியின் தாய்) வாணியர் மரபில் (மூற்பிறவியில்) பிறந்தாள்.

சௌக்கியமாக வாழ்ந்து வந்தாள். அப்போது அவள் வீட்டில் ஒரு பட்சி வசித்து வந்தது. இவன் அதைப் பிடித்துக் கொன்றுவிட்டான்,

30. அந்ததோர் தோடந் தானும் அணுகிற்று விவளுக் கேதான்
அந்தியக் காலந் தன்னி லவர்சுதர் துணைவ ரின்றி
அந்தகன் பக்கல் சென்று அயனுலே வரையப் பட்டு
வந்தவ ளிவளே யென்றே மறைகின்றே மிச்சென் மத்தில்.

30. அந்தத் தோஷம் இவளுக்கு ஏற்பட்டது. கடைசிக் காலத்தில் உடன்பிறந்தவர்கள், குழந்தைகள் இவர்களில்லாமல் இறந்து, பிறகு பிரமனால் படைக்கப்பட்டு, பிறந்தவள் இவன் என்று கூறினேம். இவளுக்கு இப் பிறவியில்;

31. தன்துணை தோட மெய்தும் தன்னில பாகம் ரெண்டாய்
வந்திடு மென்று சொன்னே மறைகின்றே மிவள்பின்
[சென்மம்
கந்தன்தன் மலைக்கு மேற்கில் காதலி ரெட்டி வம்சம்
மூந்தியே வுதிப்பா ளாகும் தேவியே கேட்டி டாயே.

31. உடன் பிறந்தவர்களுக்குத் தோஷமேற்பட்டு, தன்னுடைய நில புலன்கள் இரு பங்குகளாகி, வந்து சேரும் என்று கூறுவோம். இவளுடைய மறு பிறவியைச் சொல்லுவோம். முதுகப்பெருமான் எழுந்தருளி யுள்ள தோகை மலைக்கு மேற்குத் திசையில், ரெட்டியார் மரபில் தோன்றுவாள் தேவியே! கேளுங்கள்.

32. சாதகி முன்சென் மத்தைச் சாற்றுவோங் கூடல் தன்னில்
நீதிலாக் குலால வம்சம் செனித்துமே சுகமாய் வாழ்ந்து
பாதக மனமில் லாமல் பாவையும் மரண மெய்தும்
நீதியா யருகர் வம்சம் நிமலியு முதித்தா ளென்றேரும்.

32. ஜாதகியினுடைய முற்பிறவியைச் சொல்லுவோம். மதுரையில், நீமையில்லாத குயவர் மரபில் தோன்றி, சௌக்கியமாக வாழ்ந்து வந்தாள். கெட்ட எண்ணங்க ளில்லாதவளாக விருந்து, பிறகு இறந்தாள். மீண்டும் சமண குலத்தவளாகப் பிறந்தாள் என்று கூறினேம்.

33. மாதுரு மரண கால மறைகின்றேரும் நாற்பான் மூன்றில்
ஓதுவோங் கண்ட முண்டு உரைக்கின்றேரும் முப்ப
[தாண்டில்
மேதினில் தந்தை கண்டம் விளம்புவோ மிவன்பின்
[சென்மம்
சூதிலாக் காஞ்சி தன்னில் செனிப்பனும் வைசியச் சேயாய்.

33. அன்னையின் மரண காலத்தைச் சொல்லுகின்றோம். ஜாதகியின் நாற்பத்து மூன்றும் வயதில் இறப்பாள் என்று கூறுவோம். ஜாதகியின் முப்பதாம் வயதில் தந்தைக்கு மரணம் ஏற்படும் என்று உரைப்போம். தந்தை மறுபிறவியில் தீமையில்லாத காஞ்சீபுரத்தில் வைசிய குலத்தில் தோன்றுவான்.

34. உதித்தவ ளொன்பா லுறில் உயர்தனுர் மாதந் தன்னில்
விதியது முடியு மென்றோம் விளம்புவோ மிவள்பின்
[சென்மம்
கதிதரு மருணை நாட்டில் காதலி சத்ரிய வம்சம்
பதியினி லுதிப்பா ளாகும் பார்வதி கேட்டி டாயே.

34. ஜாதகி தொண்ணூற்றொரும் வயதில், உயர்ந்த மார்கழி மாதம் இறப்பாள். என்று சொன்னோம் இவள் மறு பிறவியைச் சொல்லுவோம். மோட்சத்தை யளிக்கும் திருவண்ணுமலையில் க்ஷத்திரிய மரபினளாகத் தோன்றுவாள். பார்வதியே! கேளுங்கள்.

35. இன்னமுஞ் சிலவே செய்தி இயம்புவோம் விபரம் ரெண்டில்
கன்னிகை யுதிக்குங் காலம் காரியின் தசையி லேதான்
பன்னியே பன்னீ ராண்டும் பகருவோந் திங்க ளொன்றும்
தன்னிலே பலனைச் சொல்வோம் சங்கரி கேட்டி டாயே.

35. இன்னும் சில விவரங்கள் இரண்டாம் பாகத்தில் விரிவாகச் சொல்லுவோம். ஜாதகி பிறக்கும்போது சனி மகா தசையில் பன்னிரண்டு வருஷங்களும் ஒரு மாதமும் ஆம். இவ்விதமாகப் பலனைச் சொல்லுவோம், தாயே! கேளுங்கள்.

1. நந்தியுஞ் சென்ன மாக ரெண்டினில் கேது தங்கச்
சந்திரன் நாலி லாகச் சுக்கிரன் ஏழில் நிற்கப்
புந்திபான் ராகு வெட்டில் பொன்பத்தில் சேய்லா பத்தில்
மந்தனும் லாபம் நிற்க மருவினுல் பலனெவ் வாறு.

1. விருஷபம் சென்ம லக்கினமாகி, இலக்கினத்துக்கு இரண்டாமிட மாகிய மிதுனத்தில் கேதுவும், சந்திரன் நான்காமிட மாகிய சிம்மத்திலும், சுக்கிரன் விருச்சிகத்திலும், புதன் இராகு சூரியன் தனுசிலும், குரு பத்தாமிட மாகிய கும்பத்திலும், செவ்வாயும் சனியும் லாபஸ்தானமாகிய மீன ராசியிலும் தங்கி யிருத்தல் பலன் எங்ஙனம் உள்ளது?

செவ்வாய் சனி		லக்கினம்	கேது
குரு	இராசி சக்கரம்		
			சந்திரன்
புதன் சூரியன் ராகு	சுக்கிரன்		

2. மங்கையும் கேட்கும் போது மாமுனி புகலு கின்றார்
இங்கிவை யாண்பால் சென்மம் இல்லமும் வடதென் வீதி
தங்கிடும் மேற்கு வாசல் சைலமும் மேல்பால் தங்கும்
அங்கது வல்ப வில்லம் அறுமுக னடிமை வர்க்கம்.

2. பார்வதி இவ்வாறு கேட்கும்போது, முனிவர் கூறுகின்றார். இஃது ஆண் பிறப்பு. பிறக்கும் வீடு வடக்குத் தெற்கான வீதியில் மேற்கும் பார்த்த வாயிலை யுடையது. மேற்கில் மலையொன்று உள்ளது. சாதாரண வீடு. முருக பக்தர்கள் வம்சத்தில்;

3. பிறப்பது மிந்தப் பாலன் பேசுவோ மிவனின் யோகம்
அரிவையர் புத்திர யோகம் அவன்துணை தந்தை யோகம்
திருமகள் முன்பின் சென்மம் செப்புவோ மிந்நூல்

[தன்னில்

கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

3. இந்த ஜாதகன் தோன்றுவான் என்று சொல்லுவோம். இவன் யோகங்கள், மனைவி, மக்கள், உடன் பிறந்தார், தந்தை முதலானவர் யோகங்கள், மூற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இந்த நூலில் நாங்கள் கூறுவோம். விநாயகக் கடவுளைப் புதல்வராக வடைந்த பார்வதியே! கேட்பாயாக.

4. தன்துணை யாணை யொன்று சக்தியு மவ்வார் தீர்க்கம்
அந்தவாண் முன்னே ணுகும் ஆண்டுக்குள் வேருய்ச்
[செல்வன்
நொந்திடு மற்ற வெல்லாம் நுவலுவோம் பிதாகு ணத்தை
விந்தையாய்ப் பேசு வானும் மேன்மையாய்த் தவங்கள்
[செய்வன்.

4. ஜாதகன் தந்தைக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரி யொருத்தியும் உளராவர். அவர்கள் தீர்க்கம். சகோதரன் தந்தைக்கு மூத்தவனுவன். ஜாதகன் பிறந்து ஒரு வருஷம் முடிவதற்குள் மூத்த சகோதரன் வேறு குடும்பமாகச் செல்லுவான். ஜாதகன் தந்தையுடன் தோன்றியவர்களில் மேற்கூறிய இருவர் தவிர, மற்றவ ரனைவரும் மரிப்பர். இனி, தந்தையின் குணங்களைச் சொல்லுவோம். வேடிக்கையாகப் பேசுவான். மேன்மையான நல்வினைகள் பல செய்வான்.

5. மனமது கபடு கொஞ்சம் மாஞ்சிவப் புடைய ணுகும்
தனமுளோர் நெசங் கொள்வன் கல்வியுஞ் சமம தாகும்
இனமதிப் பில்லா வாழ்வன் எய்தாது தந்தை யாஸ்தி
மனைவியின் ஊரில் வாழ்வன் வடதிசை யென்று சொவோம்.

5. மனத்தில் சிறிது கபட முண்டு. கருமை கலந்த சிவப்பு நிற முடையவன். செல்வர்கள் நட்பைக் கொள்ளுவான். சுமாரான கல்வியறிவுடையவன். சுற்றத்தாரிடம் மதிப்பில்லாமல் வாழ்வான். இவனுக்குத் தகப்பனரின் சொத்துக் கிடைக்காது. மனைவியின் பிறந்த ஊருக்குச் சென்று வாழ்வான். அவ்வூர் வடதிசையி லுள்ளது என்று கூறுவோம்.

6. அறுமுகன் பேரைச் சொல்லி அவனுமே வுய்வா ணுகும்
பொருள்சேர்ப்பன் செலவு செய்வன் பேதையும் பகைய
[தாகும்
குறைவோர்க்குச் சகாயம் செய்வன் கூறுவான் சுகமாய்
[வார்த்தை
தரிதொழில் பூர்வம் செய்வன் சக்திமார் மோக ணுவன்.

6. சுப்பிரமணியக் கடவுளின் பெயரைத் தியானம் செய்து கொண்டு ஜீவிப்பான். செல்வம் சேர்ப்பான். அதனைச் செலவழிப்பான். மனைவி

யிடம் விரோதம் ஏற்படும். குறையுற்றவருக்கு உதவிகள் செய்வான். சுக மாகப் பேசுவான். முதலில் சேவுத் தொழில் செய்து வாழ்வான். பெண் கள்பால் மையலுடையவன்.

7. முன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றேம் திருச்செந் [தூரில்
கன்னமாங் குலமு தித்துக் காதலி மதலை யுண்டாய்
அந்நகர் கணக்கு வேலை அவனுமே செய்யும் நாளில்
வன்னிய குலத்து மாது வளமையாய் இருக்கும் காலை.

7. இவனுடைய மூற் பிறவியைச் சொல்லுகின்றோம். திருச்செந் தூரில், கருணீகர் மரபில் தோன்றி, மனைவி, மக்களை யடைந்து, அவ்வூர்க் கணக்குப் பிள்ளையாக அவன் பணியாற்றி வந்தான். அக்காலத்தில், அவ் வூரில், வன்னியர் குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி செல்வச் சிறப்புடன் இருப்பதைக் கண்டு ;

8. பொருளது வவளால் பெற்றுப் பின்புமே தராமல் [விட்டான்
அரிவையும் மனமும் வாடி அறைந்தசா பத்தைக் கேண்மோ
மறுசென்மம் தந்தை யாஸ்தி மருவாது வேரூர் வாசம்
தரித்திர முடைய னுயும் தரணியு மில்லா தாயும்;

8. இவன், அவளிடம் பொருளைக் கடனுகப் பெற்று பிறகு திரும்பக் கொடுக்காமல் மோசம் செய்து விட்டான். மோசம்போன வன்னி யர் குலப் பெண், மனவருத்த மடைந்து சொல்லிய சாபத்தைக் கேளுங்கள். மறுபிறவியில் உனக்குத் தந்தையின் ஆஸ்தி கிடைக்காது. வேற்றூரில் சென்று வாழ்வாய். தரித்திரத்தை யடைந்து, நிலபுலன்க ளில்லாதவனுய் ;

9. உன்பக்கல் நேசம் செய்து உற்றபொன் வாங்கு வேன்யான்
இன்னமும் பலவார் சொன்னுள் எய்திற்று வந்தச் சாபம்
மன்னனு மந்தி யத்தில் வறுமைகள் மிகவே கொண்டு
தொல்காலன் நாடு சென்று சிரநான்கோன் வரையப் பட்டு;

9. வாழும்பொழுது; உன்னிடம் நட்புக்கொண்டு, எப்படியாவது, நான் இப்பிறவியில் இழந்த செல்வத்தைப் பெறுவேன் என்றும், இன்னும் பல வாறும் சொன்னுள். அந்தச் சாபம் இவனை யடைந்தது. இவன், கடைசிக் காலத்தில் மிக்க வறுமை யடைந்து, எமனுலகஞ் சென்று, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு;

10. வந்தவ னென்று சொல்வோம் மருவிடு மாது சாபம்
தந்தையி னஸ்தி காணுன் சாருவான் வேட்ட வூரில்
தென்காற்றுப் பஞ்சு போலும் திரிவனு மதுவு மன்றிப்
பொன்தந்த மாது தானும் புக்குவாள் தன்பால் தன்னில்.

10. இப் பிறப்பாகப் பிறந்தான் என்று கூறுவோம். இப் பிறப்பில் முன்பு ஏற்பட்ட பெண் சாபஞ் சேர்ந்ததால், பிதுரார்ச்சித சொத்து இல்லாதவனுவான். தன் மனைவியின் ஊரை யடைந்து வாழ்வான். பின்பு தென்றலில் அகப்பட்டுத் தவிக்கும் பஞ்சுபோல், அவ்வூரினின்றும் கீங்கிப் பல விடங்களுக்குச் சென்று அலைவான். முற் பிறப்பில் இவனுக்கு, பொருள் கடனுகக் கொடுத்த பெண் இப்பிறப்பில் இவனை யடைவாள்.

11. கடனது வாங்க வேண்டிக் காவலன் தன்னை டொத்து
அடைந்துமே வாழ்வா ளாகும் அதனுலே பகைய னேகம்
திடமுடன் பொருளும் பூமி சேர்ப்பனும் பிற்கா லத்தில்
தடவரை மகளே யாங்கள் சாற்றின மொழிகுன் ருது.

11. தன் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக இவனுடன் மனமொத்து வாழ்ந்து வருவாள். பின்பு பணத்தின் காரணமாக இருவருக்கும் விரோதம் பலவிதங்களில் ஏற்படும். பிற்காலத்தில் உறுதியான மனத்துடனிருந்து பொருள், பூமி இவற்றைச் சேர்ப்பான். பர்வதராஜன் புத்திரியே! நாங்கள் சொன்ன சொல் தவறாது.

12. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவான் மூன்றுஞ் [சென்மம்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அவனிரு சிவப்ப ணுகும்
பன்னுவான் ஞான நூலைப் பார்க்கிய மில்லா ணுகும்
தன்னுடல் சோம்ப னுள்ளான் தந்தையால் சுகமு மேற்பன்.

12. சொல்லப்பட்ட இவ்விதக் குணங்களையுடைய தந்தைக்கு மூன்றும் பிறப்பாக, இந்த ஜாதகன் பிறப்பான். இவன் குணங்களைச் சொல்லுவோம். கருஞ் சிவப்பு நிற முள்ளவன். ஞான மார்க்கத்தைப் போதிக்கும் நூல்களைப் படித்துச் சொல்லுவான். பார்க்கிய மில்லாதவன். ஆடம்பர முள்ளவன். சோம்பேறி. தந்தையினல் சுகமடைவான்.

13. சொல்லது சுகமே யாகும் சுந்தர முடைய ணுகும்
வல்லிபால் பொருளு மேற்பன் மாதாவும் பகையு மாகும்
அல்லலாய் வாழ்வா ணுகும் அறுமுகன் பேரைச் சொல்லி
வல்லவும் சிவிப் பானும் மங்கையே கேட்டி டாயே.

13. இவன் சொற்கள் கேட்பவருக்குச் சுகந்தரும். அழகுடையவன். மனைவியால் பொருளடைவான். தாய் பகையாவள். துன்பமடைந்து வாழ்வான். சுப்பிரமணியக் கடவுள் பெயரைச் சொல்லித் துதித்துக் கொண்டு பிழைப்பான். பார்வதியே! கேட்பாயாக.

14. தன்துணை நான்கு தோன்றும் தங்காது மூன்று தாரமும்
கன்னியு மொருத்தி தீர்க்கம் காதலி சுபமுண் டாகித்
தன்சுத ரொன்று தீர்க்கம் சாருவாள் கால நாடு
இன்னவன் தனியாய் வாழ்வன் ஈச்வரி கேட்டி டாயே.

14. இவனுடன் தோன்றுபவர் நால்வர். மூவர் ஸ்திரீயார். சகோதரி யொருத்தி தீர்க்கமாக விருப்பாள். சகோதரிக்கு மணம் நடைபெற்று, புதல்வன் ஒருவன் தோன்றித், தீர்க்கமாவான். சிலகாலஞ் சென்று சகோதரி மரண மடைவாள். இவன் தனியனாய் வாழ்ந்திருப்பான். பார்வதியே! கேட்பாயாக.

15. மங்கள மிருபான் ரெண்டுள் மருவிடு முள்ளூர் மாது
அங்கவள் குணத்தைச் சொல்வோம் அழகுளா ளிருநி
[றத்தாள்
சிங்கம்போல் கோப முண்டு தேவிபாட் டாளி யாகும்
தங்காது சுதர்கள் முன்னூல் சத்தியும் தீர்க்க மெய்தி;

15. இவனுக்கு இருபத்திரண்டாம் வயதுக்குள் மணம் நடைபெறும். மனைவி உள்ளூரைச் சேர்ந்தவள். அவள் குணங்களைச் சொல்லுவோம். அழகுடையவள். கரிய நிற முள்ளவள். சிங்கத்தைப் போல் கடுஞ்சின முடையவள். உழைப்பாளி யாவள். இவளுக்கு முதலில் தோன்றும் குழந் தைகள் ஸ்திரீயா. இவள் தீர்க்கமுற்று வாழ்வாள்.

16. சுதர்களும் பின்னூல் விருத்தி செப்புவோ மாண்பால் ஒன்று
மதிநுதல் பெண்பால் ரெண்டு வறைகின்றோம் தீர்க்க மாக
இதுநிற்க உதித்தோன் பூர்வம் இயம்புவோம் விரிஞ்சி
[தன்னில்
பொதுமாதர் குலமு தித்துப் பேதைக்குப் பரதம் சொல்லி;

16. பின்பு புத்திர விருத்தி எற்படும் என்று சொல்லுவோம். புத்திரன் ஒருவனும், சந்திரன் போன்ற முகத்தையுடைய பெண்களிருவரும் தோன்றி, தீர்க்கமாவர் என்று சொல்லுகின்றோம். இது நிற்க, ஜாதகன் முற்பிறப்பைச் சொல்லுவோம். விரிஞ்சிபுரத்தில், வேசையர் மாபில் தோன்றி, பெண்களுக்குப் பரத நாட்டியக் கலையைக் கற்பித்து;

17. மாரனும் வாழும் நாளில் மருவின வினையைக் கேண்மோ
தீரம்ர்க் கல்வி சொன்னேன் தேவியைப் புணர லுற்றான்
வேறொரு தீங்கு சொல்வேன் வேதியர் தன்பால் பொய்யைக்
கூறினு னதனுல் குற்றம் குலவிற்று மறையோ ருக்கு.

17. இவன் வாழ்ந்துக் கொண்டிருந்த காலத்தில் சேர்ந்த ஜீவினையைக் கேளுங்கள். தைரியமாக, கல்வி கற்பித்த ஆசிரியர் மனைவியுடன் இன்பம் துய்த்தான். வேறொரு ஜீவினையுஞ் சொல்லுவோம். ஓர் அந்தணரிடம் பொய் கூறினான். அதனால், அவருக்குத் தீங்கு ஏற்பட்டது.

18. மனமது வருத்த முற்று வறைந்தசா பத்தைக் கேண்மோ
வினையாகப் பொய்யைச் சொன்னன் மேவும்பின் சென்மம்
[தன்னில்
துணையுமே வில்ல தாகிச் செனித்தவில் லடையா தாகிக்
கனமிலாக் குடும்பி யாயும் காசினி தன்னில் வாழ்வன்.

18. அந்தணர் மனவருத்த மடைந்து, கூறிய சாபத்தைக் கேளுங்கள். எனக்குக் குற்ற முண்டாகும்படி பொய் சொன்னவன், வரும் பிறவியில், உடன் பிறந்தோரில்லாமலும், பிறந்த வீடு சொந்த மில்லாமலும், பெருமை யற்ற குடும்ப முடையவனாகவும் உலகில் வாழ்வான்.

19. இன்னமும் பலவார் சொன்னர் எய்திற்று வந்தச் சாபம்
மன்னனு மந்தி யத்தில் வாய்ப்புண்ணுல் மரண மாகிப்
பொன்னவன் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
தன்துணை நட்ட மெய்தும் தரித்திரம் குடியாய் நிற்கும்.

19. இன்னும் பலவிதமாகக் கூறினர். அந்தச் சாபம் இவனை யடைந்தது. கடைசிக் காலத்தில் வாய்ப்புண் ஏற்பட்டு மரண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு இக் குலத்தவனாகப் பிறப்பான் இவன். இப் பிறவியில் இவன் உடன்பிறந்தோர் சேதமாவர். தரித்திரம் இவனிடம் நிலையாய்த் தங்கும்.

20. பிறந்தவில் லடையா னுகுங் பெற்றதாய்ப் பகையு மாகும்
உரைக்கின்றேரும் இவனின் யோகம் உதித்தநாள் முதலா
[மாகக்
குறைபிறை போல்கு டும்பம் கூறுவோம் முப்பாண் டுக்குப்
பொருளிலான் சோம்ப லுள்ளான் போசன வறுமை யுண்டு.

20. பிறந்த வீட்டைச் சொந்தமாக அடையான். பெற்றதாய் இவனுக்குப் பகையாவள். இவன் யோகங்களைக் கூறுகின்றோம். பிறந்த நாள் முதல் முப்பதாம் வயது முடியத், தேய் பிறை போலக் குடும்பத்தில் அதிர்ஷ்டக் குறைவுண்டாகும் என்று சொல்லுவோம். அக்காலத்தில் செல்வ மில்லாதவனாக விருப்பான். சோம்பேறி. போஜன வசதி குறைந்தவன் ஆவன்.

21. தந்தையால் சுகமு மேற்பன் தரணிகள் வேரூர் சேர்ப்பன்
சிந்தையில் கலக்கம் நீங்கும் செயமுனி மறுத்துச் சொல்வர்
முந்திய மாது வொன்று மேவுவாள் தந்தைக் கென்றீர்
தந்தையின் மரண மட்டும் சாருவாள் என்று சொல்வோம்.

21. பின்பு தந்தையினுல் சௌக்கியத்தை யடைவான். வேற்றூரில் நிலபுலன்கள் சேர்ப்பான். கலக்கம் நீங்கும். செயமுனிவர் மறுத்துக் கூறுவார். இவன் தகப்பனரிடம் பெண்ணொருத்தி வந்து சேருவாள். என்று முன்பு கூறினீர்கள். அவள் ஜாதகன் தந்தையின் மரணம்வரை உடனிருப்பாள் என்று சொல்லுவோம்.

22. மாதுவைக் காப்பா னுகும் மாநிலஞ் சேர்ப்பா னுகும்
காதலி பகையு மாகும் கெட்டபுத் தியினு லேதான்
ஓதுவோம் பின்பால் சேதி உத்தமி சேதி யாவும்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்

22. அவனே ஜாதகனும் காப்பாற்றுவான். இவனுடைய கெட்ட புத்தியினுல் மனைவியே இவனுக்குப் பகையாவள். விவரமாகப் பிற்பாகத்தில் அவள் செய்தி யனைத்தையும் சொல்லுவோம். யானைமுகனைப் பெற்ற புண்ணியவதியே! கேட்பாயாக.

23. அன்னையின் குணத்தைச் சொல்வேம் அடாவடி யுடைய [ளாகும்
அன்னியர் குற்றம் சொல்வள் அரிபோலே கோப மேற்பள்
தன்வரன் மனம்போல் வாழாள் சாதிப்பாள் சிலவே சங்கை
பன்மையாய் வார்த்தை சொல்வள் தோகையுஞ் தீர்க்க சீவி.

23. தாயின் குணங்களைச் சொல்லுவோம். அடாவடித்தன முள்ளவள். அயலார் மீது குறை கூறுவாள். சிங்கம் போன்று கோப முடையவள். தன் கணவன் மனத்திற் கேற்ப இருக்க மாட்டாள். சில சந்தேகங்களைத் தீர்ப்பாள். பக்குவமாகப் பேசுவாள். தீர்க்கமாக வாழ்வாள்.

24. தன்துணை யாண்பா லொன்று சத்தியு மவ்வார் தீர்க்கம்
அன்னவன் குடும்ப லேச்சல் அவளுடைப் பூர்வம் கேளாய்த்
தென்திசை யாழி தன்னில் செனித்தனள் வைசியச் சேயாய்
முன்னமே குடும்பி யாகி முதல்வியும் வாழு நாளில்.

24. தன்னுடன் பிறந்த சகோதரன் ஒருவனும், சகோதரி யொருத்தியும் தீர்க்கமாக விருப்பர். சகோதரன் குடும்பத்துக்கு அலேச்ச லுண்டாகும்.

இவள் முற் பிறவியைக் கேள். தென்திசையிலுள்ள திருவாழி என்னும் ஊரில், வைசிய குலத்தவளாய்ப் பிறந்தாள். முதன்மையான குடும்ப முடை யவளாய் இவள் வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில் ;

25. பஞ்சையா யேழை மாது பாலர்க்கு வன்னம் வேண்டிக்
கெஞ்சினுள் மாது பக்கல் கிளிமொழி வார்த்தை யின்றி
மிஞ்சிய வார்த்தை சொல்லி விரட்டினு ளேழை தன்னை
வஞ்சியும் மனவெ றுப்பால வறைந்தசா பத்தைக் கேண்மோ.

25. அநாதையான ஏழைப் பெண் ஒருத்தி, தன் குழந்தைக்குச் சிறிது உணவளிக்கும்படி இவளிடம் சென்று கெஞ்சிக் கேட்டாள். இவள் இனிய சொற்களைக் கூறாமல், கடுஞ் சொற்களைக் கூறி அவளை விரட்டினாள். ஏழைப் பெண் மனவெறுப் படைந்து கூறிய சாபம் கேளுங்கள்.

26. பாலர்சோ றீயாப் பாவி பெருகாரே சுதரு னக்குச்
சாலவே பின்சென் மத்தில் சந்ததி நட்ட மாயும்
ஏலவே வறுமை யாயும் எசமானர் பகையு மாகும்
ஞாலமேல் வாழ்வா யென்ன நல்கிற்று வந்தச் சாபம்.

26. குழந்தைக்கு உணவு தாராது விரட்டி யடித்த பாவியே ! உனக் குப் புத்திரர் தோன்றார். வரும் பிறவியில் சந்ததிக்கு நஷ்ட முண்டாகி, மிக்க வறுமை யடைந்து, கணவனிடம் விரோதம் ஏற்பட்டு, உலகில் வாழ் வாய் என்று கூற, அந்தச் சாபம் இவளைச் சேர்ந்தது.

27. அந்தியக் காலந் தன்னில் அவள்சுதர் யாரு மின்றித்
தந்தியின் கோட்டத் திற்குத் தானெரு தீபம் வைத்துப்
பந்தணீ மரண மாகிப் பிரமனுல் வரையப் பட்டு
இந்தவ ளுதித்தா ளென்றேம் எய்டும் முன்னூழ்ச் சாபம்.

27. புதல்வர்கள் எவருமின்றி வாழ்ந்து, கடைசிக் காலத்தில், விகாய னர் கோயிலில் தீபம் ஏற்றிவைத்து, மரண மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இவள் இப் பிறவிலல் பிறந்தாள் என்று சொன்னேம். முற் பிறப்புத் தோஷம் இப் பிறப்பில் இவளை யடையும்.

28. தன்வரன் பகையு மாயும் தன்சுதர் நட்ட மாயும்
அந்தவள் வறுமை யாக அவனியில் வாழ்வா ளம்மா
இந்தசே யெவ்வார் தீர்க்கம் இயம்புவீர் முனியே நீர்தாம்
மூந்தினு சென்மந் தன்னில் மூடிகன் கோட்டத் திற்கு ;

28. கணவன், தனக்குப் பகையாகியும், புதல்வர் கஷ்ட மேற்பட்டும் தரித்திர முடையவளாகவும் வாழ்ந்திருப்பாள், தாயே! இந்த ஜாதகன் மாத்திரம் எங்ஙனம் தீர்க்கமாக விளங்குவான்? முனிவரே! தாங்கள் கூறுங்கள். விநாயகர் கோவிலில்,

29. சோதியின் புண்ணி யத்தால் தீர்க்கமா மென்று
[சொல்வோம்
காதலி பின்சென் மத்தைக் கழறுவோம் கொங்கு நாட்டில்
தீதான வலியர் வம்சம் செனிப்பளா மென்று சொல்வோம்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

29. தீபமேற்றி வைத்த புண்ணியத்தால் இவன் தீர்க்கமாக விருப்பான் என்று சொல்லுவோம். தாயின் மறு பிறப்பைச் சொல்லுவோம். கொங்கு நாட்டில், வலியர் (செம்படவர்) குலத்தில் தோன்றுவாள் என்று சொல்லுவோம். விநாயகரைப் பெற்ற புண்ணியவதியே! கேட்பாயாக.

30. மூப்பது வெட்டு வாண்டில் விளம்புவோம் தந்தை
[கண்டம்
செப்புவோ மிவன்பின் சென்மம் சேதுவின் தலத்தி
[லேதான்
ஓப்புவான் பிர்ம்ம சேயாய் உரைத்தது தப்பா தாமே
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுது

30. ஜாதகனது மூப்பத்தெட்டாம் வயதில் தந்தையின் மரணத்தைச் சொல்லுவோம். தந்தையின் மறு பிறவியைக் கூறுவோம். சேது தீர்த்தக் கரையில் அந்தணர் குலத்தவனுப்ப் பிறப்பான். சொல்லியது தவறுது. கங்கையைச் சடை முடியி லணிந்த பரமசிவனின் தேவியே! கூறிய சொல் தவறுது.

31. எண்ணஞ்சு நாலு வாண்டில் எய்திடு மன்னை கண்டம்
திண்ணமா யறுபான் ஏழில் சிராவண மாதந் தன்னில்
வண்ணமாய்ப் பாலன் கண்ட மறைகின்றோம் பின்சென்
[மத்தை
அண்ணல்வாழ் அருணை தன்னில் அடைகுவான் சைவச்
[சேயாய்.

31. ஜாதகனது நாற்பத்துநான்காம் வயதில் தாய்க்கு மரண முண்டாகும். நிச்சயமாய் அறுபத்தேழாம் வயதில், ஆவணி மாதம் ஜாதகனுக்கு மரணத்தைக் கூறுகின்றேம். இவன் மறு பிறப்பைச் சொல்லுகின்றேம். சிவபெருமான் எழுந்தருளி யுள்ள திருவண்ணாமலையில் சைவர் குலத்தவனாய்த் தோன்றுவான்.

32. உதித்திடு காலந் தன்னில் உத்திர முதல்பா தத்தில்
கதிர்த்தசை யாண்டு வைந்தும் கலந்திடுந் திங்கள் தானும்
பதிகெடும் தரித்தி ரங்கள் பலர்பகை யனங்கு றைச்சல்
இதுமுதல் பாதம் சொன்னேம் ஈசுவரி கேட்டி டாயே.

32. பிறக்குங் காலத்தில் உத்திர நட்சத்திரம் முதல் பாதமாம். சூரிய மகா தசை ஐந்து வருஷங்களும் நான்கு மாதங்களும் இருப்பாம். அக் காலத்தில் வீட்டுக்கு அழிவும், தரித்திரமும், பலர் விரோதங்களும், போஜனக் குறைவும் ஏற்படும். இங்ஙனம் முதற் பாகங் கூறினேம். பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 88

1. பிறைபுதன் பானு நண்டில் புகர்சியம் பொன்னேன் கன்னி
கரியவன் தேள தாகக் கரும்பாம்பு மேரு வாகத்
தரைமகன் நந்தி யாகச் சிகிவீணை குண்டை சென்மம்
உரைப்பீர்கள் பலனை யென்று உத்தமி கேட்கும் போது;

1. சந்திரன் புதன் சூரியன் கடகத்திலும், சுக்கிரன் சிம்மத்திலும், குரு கன்னியிலும், சனி விருச்சிகத்திலும், இராகு தனுசிலும், செவ்வாய் விருஷபத்திலும், கேது மிதுனத்திலும் தங்கி, ஜன்ம லக்கினம் விருஷபமாக விருந்தால், உரியவரம் பலன்களைக் கூறுவீர் என்று பார்வதி கேட்கும்போது;

		லக்கினம் செவ்வாய்	கேது
	இராசி சக்கரம்		சந்திரன் புதன் சூரியன்
			சுக்கிரன்
இராகு	சனி		குரு

2. பிருகுமே புகலு கின்றார் பிறந்திடு மாண்பா லாகும்
பெறுந்தந்தை யில்லம் சொல்வேன் புரந்தரன் வாடை
[யாகும்
அரன்கோட்ட முத்திர மாகும் ஆனையின் கோட்டம்
[தென்பால்
குறைதலை மாரி தென்மேல் கூறுவோம் பலதெய் வங்கள்.

2. பிருகு முனிவர் சொல்லுகின்றார். ஆண் பிறப்பு ஏற்படும். தந்தையின் வீட்டைக் கூறுவோம். கிழக்கு வரிசையில் உள்ளது. வீட்டுக்கு வடக்கில் சிவபெருமான் கோயில். விநாயகர் கோயில் தெற்கில் உள்ளது. மாரியம்மன் கோயில் தென் மேற்கில் விருக்கின்றது. இன்னும் பல தெய்வங்கள்;

3. அந்நகர் தன்னில் வாசம் அப்பிரலன் சேட்ட னுக
இன்னவ னுதிப்பா னுகும் இயம்புவோ மிவனின் யோகம்
அன்னையின் தந்தை யோகம் அவன்துணை களத்திர புத்திரர்
முன்பின்சென் மங்கள் யாவும் உரைக்கின்றோ மிந்நூல்
[தன்னில்.

3. அந்த நகரத்தில் எழுந்தருளி யுள்ளனர். இந்த ஜாதகன் தந்தைக்கு மூத்த புதல்வனுகப் பிறப்பான். இவன் யோகங்கள், தாய் தந்தையர் யோகங்கள், உடன் பிறந்தார், மனைவி, புதல்வர் முதலானவர் யோகங்கள், இவர்களுடைய முற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுகின்றோம்.

4. தந்தையின் துணைந வத்தில் ஆண்துணை தோட மெய்தும்
பந்தணி மார்கள் சட்டி யாகவே பகர்வோம் தாயே
அந்தவர் சிலவே துன்பம் அழகாகச் சுதர்கள் வாழ்வர்
பிந்திய பாகம் தன்னில் பேசுவோ மவர்கள் சேதி.

4. ஜாதகன் தந்தையுடன் பிறந்த ஒன்பதின்மரில் சகோதரர்கள் மரண மடைவர். தாயே! இவனுடைய சகோதரிகள் அறுவர் என்று சொல்லுவோம். அவர்களில் சிலர் துன்ப மடைவர். மற்றவர் சிறப்புடன் கணவன், மக்கள் ஆகியோருடன் வாழ்வர். பிற்பாகத்தில் அவர்கள் செய்திகளனைத்தையும் கூறுவோம்.

5. பாலகன் தந்தை சேதி பகருவோம் மாநி றத்தான்
சிலவான் கல்வி மானும் சிலுகான குணமுங் கொஞ்சம்
ஞாலங்கள் விருத்தி செய்வன் நாதனுர் பத்தி பூண்பன்
சால்ராசி உத்தி ராடம் செனிப்பனும் ஊக சாலி.

5. ஜாதகன் தந்தை வரலாற்றைக் கூறுவோம். கரிய நிறத்தினன். ஒழுக்க முள்ளவன். கல்வி யறிவுடையவன். இடக்கரான குணம் சிறிது உண்டு. நிலபுலன்களை விருத்தி செய்வான். கடவுள் மீது பக்தி கொள்ளுவான். கும்ப லக்கினம், உத்திராட நட்சத்திரத்தில் பிறப்பான். சாமர்த்திய சாலியாவன்.

6. கலைத்தொழில் புரிவா னுகும் காதலிக் கிட்ட னுகும்
சொலுமொழி காப்பா னுகும் சுற்றத்தார் மதிக்க வாழ்வன்
நலமதை யெவர்க்கும் செய்வன் நற்சித்ர மில்லம் செய்வன்
விலைமாதர் மோகங் கொள்ளான் வெற்றியாம் நினைத்த
[வெல்லாம்.

6. நெசவுத்தொழில் (கலைகளை யாராயுந் தொழிலை) செய்வான். மனைவிக்கு இஷ்டன். சொன்ன சொல்லைக் காப்பான். பந்துக்கள் பாராட்டும்படி வாழ்வான். யாவருக்கும் நல்லவற்றைச் செய்வான். வீட்டினைச் சித்திரங்களால் அழகு படுத்துவான். வேசையர் மீது விருப்பங் கொள்ளுவான். இவன் நினைத்துச் செய்யும் செயல்களெல்லாம் பலிதமாம்.

7. தந்தையின் ஆஸ்தி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
தன்துணை தன்னுல் லாபம் சாந்தமுங் கோப மேற்பன்
நிந்தைகள் பாரி யாலே நேர்ந்திடும் விட்ட முள்ளான்
சிந்தையு மிரண்டு மாகும் சல்லியப் பாதை யேற்பான்.

7. பிதுரார்ச்சிதமான ஆஸ்தியை மேலும் விருத்தி செய்வான். உடன் பிறந்தோரால் இவனுக்கு இலாபம் உண்டு. கோப மடைவான். உடனே சாந்த முறுவான். மனைவியால் இவனுக்குப் பழிகள் ஏற்படும். விஷமத்தன முள்ளவன். இருவிதமான எண்ணங் கொண்டவன். கடன் தொந்தரவுடை யவ னுவன்.

8. அன்ன முஞ் சுகமாய்க் கொள்வன் ஆபத்தென் றேரைக்
[காப்பன்
பொன்பணி யதிகம் சேர்ப்பன் போசன வறுமை காணுன்
பின்னமில் லாத தேகி பித்தசூ டுடைய னுகும்
இந்நெறி யுடையா னுக்கு இருதார மிலையா ளுக்கு;

8. சுக போஜனங் கொள்ளுவான். துன்ப மென்று வந்தவர்களைக் காப்பான். செல்வம், ஆபரணங்கள் இவற்றை மிகுதியாகச் சேர்ப்பான். போஜனத்தில் தரித்திர மில்லாதவன். குற்றமில்லாத உடலமைப்புள்ள வன். பித்தச் சூடுடையவன். இத் தன்மைகளுடைய ஜாதகனின் தந்தைக்கு மனைவியர் இருவர். அவர்களில் இளையவளுக்கு;

9. சாதக னுதிப்பா னுகும் சாற்றுவோ மவன்கு ணத்தைச்
சூதிலான் புத்தி மானும் சுந்தர முடையா னுகும்
தீதென்றோர்க் குதவி செய்வன் தேறினோர் தொண்டு
[பூண்பன்
மாதவர் போலே சொல்லும் வார்த்தையுஞ் சுபமே யாகும்.

9. இந்த ஜாதகன் பிறப்பான். அவன் குணங்களைச் சொல்லுவோம். வஞ்சனை யில்லாதவன். புத்திசாலி. அழகுடையவன். துன்ப மடைந்தோம் என்று வந்தவர்களுக்கு உதவி செய்வான். சான்றோர்களுக்குத் தொண்டு செய்வான். தவசிகள்போல் சொல்லும் வார்த்தைகள் நன்மை பயக்கும்.

10. வித்தையும் மேன்மை யாகும் விருந்தினர் பிரிய மாகும்
சத்தியங் கூரு னுகும் தாதைபோல் வாழ்வா னுகும்
சுத்தமாம் தலங்கள் செல்வன் துறவிக்கு வன்ன மீவன்
புத்தியில் பெரிய னுவன் போசன வறுமை காணுன்.

10. படிப்பில் மேன்மை யடைவான், வீட்டுக்கு வரும் விருந்தினர்களிடம் அன்புடனிருப்பான். பொய்ச் சத்தியம் சொல்லான். தந்தையைப்

போல் மேன்மையாக வாழ்வான். நல்லமையான தலங்களுக்கு யாத்திரை செல்லுவான். தூரதேசத்து உணவளிப்பான். புத்தியில் பெரியவன். போஜனத்தில் தரித்திர மில்லாதவன்.

11. தன்துணை யாண்பால் ரெண்டு சத்திமா ரவ்வார் தீர்க்கம்
நொந்திடு மற்ற தெல்லாம் நுவலுவார் பராசர் தாமும்
மூந்திதா யொன்றே யென்றீர் மொழிகுவீ ரவர்க்குப்
[புத்ரர்
அன்னவள் சுதரும் காணுள் அழகுளாள் கபடு மில்லாள்.

11. இவனுடன் பிறந்த சகோதரர் இருவர். சகோதரிகள் இருவர். இவர்களனைவரும் தீர்க்கமாக விருப்பர். மேலும் தோன்றுபவர் மரிப்பர். பராசரர் சொல்லுவார். இவனுக்கு மூத்த தாய் ஒருத்தி யுண்டு என்று கூறினீர்கள் அவளுக்குப் புத்திர பாவத்தைப் பற்றிச் சொல்லுங்கள். அவளுக்குப் புத்திர பாக்கியம் இல்லை. அழகுடையவள். வஞ்சனை யில்லாதவள்.

12. பரவச முடைய ளாகும் பர்த்தாவை விட்டு நீங்கி
உறைகுவாள் வேறூர் பக்கல் உலகினில் நிந்தை யேற்பள்
பொருளது அவளால் சேதம் பேசுவோம் பின்பால் சேதி
அறந்தனை வளர்க்கும் எங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

12. பரவசப் படும் தன்மையள். கணவனிடமிருகது நீங்கி, வேறூர் இடத்தில் சென்று வசிப்பாள். அதனல் உலகத்தில் பழி ஏற்படும். அவளால் ஜாதகன் தந்தைக்குப் பொருள் நஷ்டம் உண்டாகும். அவளைப் பற்றிய மற்றைய விவரங்களைப் பிற்பகுதியில் சொல்லுவோம். தருமத்தை வளர்க்கும் எங்கள் உயிர்போன்ற தாயே! கேட்பாயாக.

13. அன்னையின் சேதி கேளாய் ஆளனுக் கினிய ளாகும்
முன்கோபி மூர்க்கங் கொஞ்சம் மொழியது சுகமே யாகும்
பன்னியே பேசு வாளாம் பதர்குணம் இல்லா ளாதும்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பா ளென்று
[சொல்வோம்.

13. ஜாதகனின் தாயின் செய்தியைக் கேட்பாயாக. கணவனுக்கு இனியவள். முன்கோப முடையவள். மூர்க்கத்தன்மை சிறிதுண்டு. இனிய சொற்களைப் பேசுவாள். பன்னிப் பன்னிப் பேசுவாள். அற்ப குணம் இல்லாதவள். தான் கூறுகின்றவையே சிறந்தன என்று நிலைநாட்டுவாள் என்று கூறுவோம்.

14. இல்லமும் வடபா லாகும் இவள்துணை யாண்பால் ரெண்டு
வல்லிமா ரவ்வா ருகும் மாதுவும் யோக சாலி
தல்லிபோ லாத ரிப்பாள் சங்கையென் ரோரைச் சேராள்
நல்லதோர் குணமும் பூர்வம் நாகம்போல் குணம்பின் பாலில்.

14. இவள் வீடு வடக்கிலுள்ளது. இவளுக்குச் சகோதரர் இருவர். சகோதரிகளும் அங்ஙனமே இருவர். இவள் அதிர்ஷ்ட முள்ளவள். தாய் போலப் பிறரை ஆதரிப்பாள். குற்றமுள்ளவரைச் சேராள். முதலில் கல்ல தன்மையுடன் பேசுவாள். பின்பு சீறுகின்ற நாகம்போல் கோபங் கொள்ளுவாள்.

15. முன்சென்மந் தோ கை கிழ்ப்பா லோதியூர் முத்ரிய சேயாய்
அன்னவ ளுதித்து மேலும் அழகான குடும்பி யாகித்
தன்சுத ரதிக முண்டாய் சண்முகன் பக்தி யாகிப்
பின்னோர்க்கு அன்ன மீந்து புருடன்முன் மரண மாகி;

15. முற்பிறப்பில், தோகைமலைக்குக் கிழக்கில், ஒதியூரில், முத்திரிய குலத்தவளாய்ப் பிறந்து, சிறந்த குடும்ப முடையவளாய், புதல்வர்களே மிகு தியாக வடைந்து, ஆறுமுகக் கடவுள்மீது பக்திகொண்டு, தரித்திரமுள்ளவர் களுக்கு உணவளித்து, கணவனுக்கு முன்பே மரண மடைந்து;

16. வந்தவ ளென்று சொல்வோம் வறுமையெப் போதுங் [காணுள்
பிந்திய சென்மம் சொல்வோம் பெருமலை வேங்க டத்தில்
இந்ததோர் குலமு திப்பாள் எழிலான குடும்பி யாகி
அந்தவள் வாழ்வா ளாகும் அம்பிகை யாளே கேளாய்.

16. இப்பிறப்பில் மீண்டும் பிறந்தவள் என்று சொல்லுவோம். எப் பொழுதும் தரித்திர மறியாதவள். இவள் மறு பிறப்பைச் சொல்லுவோம். பெருமைபெற்ற திருவேங்கட மலையில், இக்குலத்தவளாகப் பிறப்பாள். சிறப்புடைய குடும்பத்தவளாய் வாழ்ந்திருப்பாள். பார்வதி யம்மையே! கேட்பாயாக.

17. தந்தையின் முன்சென் மத்தைச் சட்டநா தீசர் நாட்டில்
வந்தனன் வேளா ளுக மனைவிமைந் தருமுண் டாகி
அந்தவன் வாழு நாளில் அணுகின விணையைக் கேண்மோ
சொந்தவில் பாரி தன்னைச் சிறையுடன் வைத்து இன்னோன்;

17. ஜாதகன் தந்தையினுடைய முற்பிறப்பைச் சொல்லுவோம். சட்டநாதப் பெருமான் எழுந்தருளி யிருக்கின்ற சீகாழியில் வேளாளர் குலத் தவனுகப் பிறந்தான். மனைவி மக்களே யடைந்து இவன் வாழுகின்ற காலத்

தில், இவனைப் பற்றிய நீவினையைக் கேளுங்கள். தன் சொந்த வீட்டில் மனைவியைச் சிறையிட்டு, இவன்;

18. விலைமாது பக்கல் வாசம் மேவினன் சொந்த மாது
கலவர புத்தி யாகிக் கழறுவாள் சாபந் தானும்
குலவிய பின்சென் மத்தில் கோதையா யுன்பால் சேர்ந்து
அலைதரும் பதுபோ லுன்னை ஆக்கியு மவமா னங்கள் ;

18. வேசை யொருத்தியிடம் சென்று வசித்துவந்தான். சொந்த மனைவி மனக் கலவர மடைந்து சாபங் கூறுவாள். வரும் பிறவியில் மனைவி யாக உன்னை யணுகி, காற்றில் அலையும் தரும்பைப்போல உன்னைத் துன் பப்படும்படி செய்தும், அவமானங்கள் பல;

19. செய்துமே பொருள்க வர்ந்து செல்லுவேன் வேறு பக்கல்
தையல்கற் புடையாள் மாது சலமதில் மாண்டா
[ளென்றேனும்
ஐயங்கள் நேர்ந்த தென்றேனும் அதுவன்றி யின்னுஞ்
[சொல்வோம்
மைவிழி வேசை மாதை மருவியே பொருளீ யாமல்;

19. உண்டாக்கி, உனது செல்வத்தையும் அபகரித்துக் கொண்டு வேறிடம் போவேன் என்று கூறி, கற்புடைய இவனுடைய மனைவி, ஜலத் தில் வீழ்ந்து இறந்தாள் என்று கூறினேனும். அந்தத் தோஷம் இவனுக்கு எற் பட்டது என்று சொன்னேனும். அதுவன்றி, இன்னுமொன்று கூறுவோம். வேசை யொருத்தியுடன் இன்ப மனுபவித்துவிட்டு, அவளுக்குப் பொரு ளெதுவும் தராது,

20. தந்திர மொழியால் சென்றுன் தையலும் மனமே வெட்கி
இந்திர சாலம் சொல்லி இணைந்துபின் தராத பாவி
பிந்திய சென்மம் தன்னில் பேதையால் அவமா னங்கள்
வந்திடும் துணையா ணின்றி வையகம் தன்னில் வாழ்வாய்.

20. தந்திரமாகப் பேசிச் சென்றுன். அவள் மனத்தில் வெட்க முற்று, இந்திர ஜாலத்தைப் போல், பலவித சொற்கள் கூறி என்னை மயக்கி என்னுடன் சேர்ந்து, பின்பு பொருளெதுவும் தராமல் சென்றுவிட்ட பாவியே! மறு பிறவியில் உனக்கு மனைவியால் அவமானங்கள் நேரும். உடன் பிறந்த சகோதர ரில்லாமல் உலகில் வாழ்ந்திருப்பாய் என்று சாபங் கூறினள்.

21. ஆகையா லிச்சென் மூத்தி லணுகிடும் தாரம் ரெண்டு
தோகையா லவமா னங்கள் சேர்ந்திடும் துணையாண்
[காணுன்
பாகமா யிவன்பின் சென்மம் பகருவோம் தணிகை
[தன்னில்
நாகரீ கங்க ளுள்ள நற்சைவ குலமு திப்பான்.

21. ஆதலினால், இப்பிறப்பில் இவனுக்கு இரு மனைவியர் ஏற்படுவர். மனைவியால் அவமானங்கள் நேரும். சகோதரனில்லாதவனுவான். இவன் மறுபிறப்பைச் சொல்லுவோம். திருத்தணிகையில் நாகரீகங்கள் பொருந்திய நல்லதொரு சைவ குலத்தில் பிறப்பான்.

22. நாற்பது வாண்டு தன்னில் நமன்பதி தந்தை சேர்வன்
ஏற்கவே வதன்மே லேழும் இயம்புவோ மன்னை
[கண்டம்
தீர்ப்பாகக் கேது தன்னில் சனிபுக்தி தந்தைக் கென்றேரும்
ஆர்க்கவே புகரின் காலம் அம்புலி புக்தி யன்னை.

22. ஜாதகனின் நாற்பதாம் வயதில் தந்தை மரண மடைவான், அதற்கு ஏழு வருஷங்களுக்குப் பின்பு தாயார் இறப்பாள். தந்தை இறக்கும்பொழுது, ஜாதகனுக்கு, கேது மகா தசை சனி புக்தி நடைபெறும் என்று சொல்லுவோம். சுக்கிர மகா தசை சந்திர புக்தியில் தாயின் மரணம் ஏற்படும்.

23. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் பதினெட்
[டாண்டுள்
நீலியும் கீழ்ப்பால் நேரும் நுவலுவோ மவள்கு ணத்தைச்
சீலியாம் சிவந்த மேனி செனசகா யங்கள் செய்வள்
மால்மனை யொப்ப தாகும் வளமுள குடும்பி யாவள்.

23. ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். பதினெட்டாம் வயதுக்குள் மனைவி கீழ்த் திசையிலிருந்து வருவாள். அவள் குணத்தைச் சொல்லுவோம். ஒழுக்க முடையவள். சிவந்த உடலுள்ளவள். மக்களுக்கு உபகாரங்கள் செய்வாள். இலக்குமி போன்ற உடலழகுள்ளவள். செழிப்புள்ள குடும்ப முடையவள்.

24. பால்பாக்ய முடைய ளாகும் பகையென்று மனத்தில்
[கொள்ளாள்
வேலுடைக் கடவுள் பக்தி விரும்புவாள் யோக சாலி
ஞாலமேல் நல்லோ ளாவள் நாயகன் மனத்துக் கேற்றோள்
மூலக்கூ டுடைய ளாகும் மொழியது சுகமே யாகும்.

24. பால் பசு பாக்கிய முடையவள். ஓருவரையும் தனக்கு விரோதி என்று மனத்தில் கருத மாட்டாள். முருகக் கடவுள் மீது பக்திகொள்ளு வாள். யோக முடையவள். உலகில் நல்லவள். கணவன் மனத்துக்கு உகந்தவள். மூலச் சூடுடையவள். இனிய மொழி யுள்ளவள்.

25. கன்னிகை தீர்க்க சீவி கழறுவோம் புத்ர பாகம்
மன்மதன் போலா ணிரண்டு மங்கையர் மூவ ராகும்
இன்னவர் விருத்தி யென்றேரும் இலகாது மற்ற வெல்லாம்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

25. இவள் தீர்க்கமான வயதுடையவள். ஜாதகனுக்குப் புத்திர பாவம் கூறுவோம். மன்மதனைப்போல் வடிவழகுடைய இரண்டு புத்திரர் களும், பெண்கள் மூவரும் பிறப்பர். இவர்கள் விருத்தியாவர். மேலும் பிறப்பவை நிலையா. உயர்ந்த கணவனை யடைந்த பார்வதியே! கேட்பாயாக.

26. இன்னவன் முன்சென் மத்தை எடுத்துரா முரைப்பக்
[கேளாய்ப்
பொன்முக ராற்றி னேரம் பேரூரில் ரெட்டி வம்சம்
உன்னதக் குடும்பி யாகி உயர்ந்தோர்க்கு அன்ன மீந்து
முன்வினை யில்லா தாகி யொதுங்கினன் கால நாடு.

26. இந்த ஜாதகன் முற்பிறவியைப் பற்றி நாங்கள் சொல்லுவோம்; கேட்பாயாக. பொன்முகரி யாற்றங் கரையிலுள்ள பெரிய ஊரில், ரெட்டி யார் வமிசத்தில் பிறந்து, உயர்ந்த குடும்ப முடையவனாகி, பெரியோர் களுக்கு உணவளித்து, முற்பிறப்புத் தீவினை யெவையு மில்லாமல் மரண மடைந்தான்.

27. பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
உரைக்கின்றே மிவனின் யோகம் உதித்தநாள் முதலா
[வாகத்
திருமகன் மரண மட்டும் செல்வமும் குறைவு றாதான்
பொருளது பெருக்கஞ் செய்வன் பூமியைப் பரிபா லிப்பான்.

27. மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இப்பிறப்பில் தோன்றுவான் இவன். இவன் யோகங்களைச் சொல்லுகின்றோம். பிறந்தது முதல் மரணம் வரையில் செல்வக் குறைவு நேராது. செல்வத்தைப் பெருக்குவான். வீடு நிலங்களைக் காப்பான்.

28. தூசுகள் செட்டு வோங்கும் சொல்லதைக் காப்பா னாகும்
காசுகள் சேர்ப்பா னாகும் கனத்தவர் நேசங் கொள்வன்
யாசகர்க் குதவி செய்வன் எவருக்கு மிவன்சொல் மேன்மை
தேசமேல் புகழு மேற்பன் சிறப்புடன் வாழ்வா னம்மா.

28. ஆடை வியாபாரம் செய்து உயர்வடைவான். சொன்ன சொல்லைக் காப்பான். பொருள் சேர்ப்பான். மதிப்புடைய பெரியோர் நட்பைக் கொள்ளுவான். யாசிப்பவர்கட்கு உதவி செய்வான். இவன் சொல்லுகின்ற வார்த்தை யாவருக்கும் உயர்வாக விருக்கும். உலகில் புகழை யடைவான். பெருமையாக வாழ்வான். தாயே!

29. யோகமெவ் விதமாய்ச் சொன்னீர் உரைப்பீர்கள் அந்தச்
[சங்கை
[1]ஆகமன் அஞ்சி லேற [2]அசுரர்மந் திரியும் நாலில்
பாகனும் மதியும் மூன்றில் பங்குமே ஏழில் தங்க
..... யோ கங்க ளொன்று ளயோகம் பேரியோகம்.

29. இவனுக்கு யோகங்கள் உண்டாம் என்று சொன்னீர்களே? எவ் விதம் உண்டாம் என்று கூறுங்கள். குரு கன்னியிலும், சுக்கிரன் சிம்மத்தி லும், புதன் சந்திரன் கடகத்திலும், சனி விருச்சிகத்திலும் தங்கியிருப்பதால் ..... யோக மொன்றும், ளயோக மொன்றும், பேரி யோக மொன்றும்;

30. தர்மகர் மாதி யோகம் சதுர்த்தயோ கத்தி னாலே
அறந்திருப் பணியும் செய்வன் அவன்தாதை போலே
[வாழ்வன்
குறையென்றோர்க் குதவி செய்வன் குலமதிப் பாக வாழ்வன்
பொருந்திய தலங்கள் செல்வன் பிழையது எவர்க்கு
[மெண்ணன்.

30. தர்மகர்மாதி யோக மொன்றும் ஆகிய நான்கு யோகங்களினால் தருமச் செயல்கள் பல செய்வான். தன் தந்தையைப் போல் சிறப்பாக வாழ்வான். துன்பமென்று வந்தவர்க்கு உதவி செய்வான். குலத்தில் மதிப் புடையவனாக வாழ்வான். தல யாத்திரைகள் செய்வான். எவருக்கும் துன்பம் செய்ய மனையான்.

31. மதிதசைக் காலந் தன்னில் மாரனுக் கெழுப தாண்டில்
நதியெனும் கடகத் திங்கள் நாயக னுடல மேகும்
அதிபன்பின் சென்மம் சொல்வோ மறுமுகன் வாழ்வோ
[ரூரில்
நிதிமிக வுடையா னுக்கு நேருவான் பிரம்ம சேயாய்.

---

1. குரு
2. சுக்கிரன்

31. சந்திர மகா தசைக் காலத்தில், (அஃதாவது) ஜாதகன் எழுபதாம் வயதில் ஆடி மாதம். மரண மடைவான். இவன் மறு பிறவியைச் சொல்லு வோம். முருகப்பிரான் எழுந்தருளி யிருக்கும் திருப்போரூரில் மிக்க செல்வ முள்ள அந்தணனுக்குப் புதல்வனாகப் பிறப்பான்.

32. இந்ததோர் சென்மந் தன்னில் இவன்செய்த புண்ய மென்ன
சிந்தையும் நல்ல தாயும் சிலருக்கா பத்தைக் காத்தும்
மூந்தின தலங்கள் சென்றும் மொழியதைக் காத்த லாலும்
அந்தவன் மறைக்கு லத்தி லருளுவா னென்று
[சொல்வோம்.

32. இப்பிறப்பில் இவன் செய்த புண்ணியங்கள் யாவை? நல்மன முடையனாக வாழ்ந்துவந்து, சிலர்க்கு நேரும் துன்பத்தைக் காத்து, உயர்ந்த தலங்களுக்கு யாத்திரை செல்வதாலும், சொன்ன சொற்களைக் காப் பாற்றுவதாலும், அந்தணர் குலத்தில் பிறப்பான் என்று சொல்லுவோம்.

33. இதுமத்தில் கேது காலம் இலகாதோ மாரு கங்கள்
மதியினுக் கைந்தில் பொன்னேன் பளிங்குமே நாலில் தங்க
விதவிதப் பிணிகள் வந்தும் வெய்யோன்முன் பனியே
[போலே
அதுவினை நிவிர்த்தி யாகி அறைந்தனம் வயது தீர்க்கம்.

33. இதற்கிடையில் கேது மகா தசையில் மரணம் ஏற்படாதோ? சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் குருவும், சுக்கிரன் நான்காமிடமாகிய சிம்மத் திலும் தங்கியிருப்பதால் பலவிதமான வியாதிகள் உண்டாகி, சூரியனுக்கு முன்பு பனிபோல் நிவிர்த்தியாம். இவன் தீர்க்க வயதுடன் விளங்குவான்.

34. பிறந்திடு காலந் தன்னில் பூசத்தின் முதல்பா தத்தில்
கரியவன் தசையி லாண்டு கழறுவோம் பதினே ழாகும்
மருவிடும் திங்கள் நாலு மறைகின்றோம் பலனை யாங்கள்
திருமாளி செய்த லுண்டு தரணிகள் சேர்க்கை யாகும்.

34. ஜாதகன் பிறப்புக் காலத்தில் பூச நட்சத்திரம் முதல் பாதம் சனி மகா தசையில் பதினேழு வருஷங்களும், நான்கு மாதங்களும் இருப் பாம். அக்காலத்துக்குரிய பலன்களை நாங்கள் சொல்லுகின்றோம். புதிய வீடு கட்டப்படும். நிலபுலன்கள் சேரும்.

35. பின்துணை விருத்தி யாகும் பிதாதுணை முன்னேன் நட்டம்
பொன்பொருள் சேர்த லுண்டு பொன்னவன் புக்தி
[தன்னில்
தந்தையின் தந்தை கண்டம் தன்பந்து சுபமுஞ் சூதம்
இன்னமும் விபரமாக இயம்புவோம் பின்பா கத்தில்.

35. ஜாதகனுக்குப் பின்பு சகோதர விருத்தி யுண்டாகும். தகப்பனாரின் மூத்த சகோதரன் நஷ்டமாவன். பொன், செல்வம் முதலியன சேரும். குரு புக்தியில் தந்தையின் தக்ஷைக்கு (பாட்டனாருக்கு) மரணம் சேரும். தன் உறவினர்களுக்குச் சுபங்களும், அசுபங்களும் நிகழும். இன்னும் விவரமாகப் பிற்பாகத்தில் சொல்லுவோம்.

ஜாதகம் 89

1. நந்தியுஞ் சென்ன மாக ராகுவுங் காரி மூன்று
புந்தியும் புகரு மஞ்சில் புரவியோன் நாலி லாகச்
சந்திர னுறி லேறச் [1]சிகண்டிசே யேழி லாக
இந்தவார் கோள்கள் நின்ரூல் இயம்புவீர் பலனே யென்று ;

1. விருஷபம் லக்கினமாகி, இராகு சனி கடகத்திலும், புதன் சுக்கிரன் கன்னியிலும், சூரியன் சிம்மத்திலும், சந்திரன் துலாத்திலும், குரு செவ்வாய் விருச்சிகத்திலும் தங்கி யிருந்தால் உரிய பலன்களைச் சொல்லுவீர்.

		லக்கினம்	
	இராசி சக்கரம்		ராகு சனி
கேது			சூரியன்
	குரு செவ்வாய்	சந்திரன்	புதன் சுக்கிரன்

2. சங்கரி கேட்கும் போது சடைமுனி புகலு கின்ரூர்
இங்கிவை யாண்பால் சென்மம் இல்லமுங் கீழ்ப்பால் வாசல்
தங்கிடு மேல்பால் மாயோன் [2]தணல்காளி மாரி தங்கும்
ஐங்கர னீச னுத்ர மாளிவா கனத்தாள் மீனம்.

2. இங்ஙனம் பார்வதி கேட்கும்போது, சடைமுடியை யுடைய முனிவர் சொல்லுகின்ரூர். இம்மீன ஆண் பிறப்பு. வீடு கிழக்குப் பார்த்த வாயிலுடையது. திருமால் கோயில் மேற்கி லுள்ளது. அக்கினி மூலையில் காளி தேவியும் மாரியம்மனும் எழுந்தருளி யுள்ளனர். விநாயகப் பெருமானும் சிவபெருமானும் வடக்கில் கோயில் கொண்டுள்ளனர். சிங்க வாகன முடைய துர்க்கையம்மன் கோயில் வடகிழக்கில் உள்ளது.

---

1. குரு

2. அக்கினி மூலை; தென்கிழக்கு.

3. இத்தகை யடையா ளத்து ளிலகிய சிறுஊர் தன்னில்
வித்தகன் கங்கை சேயாய் மேவா னிரண்டாம் சென்மம்
பெற்றதாய் தந்தை யோகம் பேதையர் புத்ர யோகம்
சுத்தமாய் முன்பின் சென்மம் செப்புவோ மிந்நூல்
[தன்னில்.

3. இவ்வகையான அடையாளங்களுடன் விளங்கிய சிறிய ஊரில், வேளாளர் குலத்தவனாய் ஜாதகன் பிறப்பான். தந்தைக்கு இரண்டாம் புதல்வனாகத் தோன்றுவான். இவனது தாய் தந்தையர், மனைவி, மக்கள் முதலானவர் யோகங்கள், முற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுவோம்.

4. தந்தையின் துணையாண் ஒன்று சக்திமார் நால்வ ராகும்
பிந்திய துணையா ணுகப் பேசுவோ மவன்கு ணத்தை
நந்தியா விருத்தி யுண்டு நவின்றிடான் மொழிகள் தாமும்
எந்தக்கா ரணத்தி னுலே இவன்மொழி யில்லா னென்றீர்.

4. ஜாதகன் தந்தைக்குச் சகோதரன் ஒருவன். சகோதரிகள் நால்வர். இவனுடைய சகோதரன் இளையவனுவன். அவன் குணங்களைச் சொல்லுவோம். காளை, பசு விருத்தி யுடையவன். பேச முடியாத ஊமை யாவன். எந்தக் காரணத்தினுல் இவன் பேசமுடியாத ஊமையாக இருப்பான் என்று கூறினீர்கள்.

5. முன்சென்ம வினையாம் தாயே மொழிகுவீ ரந்தச் சங்கை
தென்திசைக் கண்ண னூரில் செனித்தனன் வன்னிய
[சேயாய்க்
கன்னிகை கற்பின் பேரில் கழறினுன் நிந்தை வார்த்தை
அன்னவள் வருத்த முற்று அறைகின்றுள் சாபம் தானும்.

5. ஊமை யானதற்குக் காரணம், முற்பிறப்பில் செய்த தீவினைப் பயனும். அதனைக் கூறுங்கள். தெற்குத் திசையிலுள்ள கண்ணனூரில் வன்னியர் குலத்தவனுக முற் பிறப்பில் பிறந்தான். ஒரு கற்புடைய பெண் மீது அபாண்டமாக பழி கூறினுன். அவள் வருத்த மடைந்து, சாபங் கூறினுள்.

6. நிந்தைகள் சொன்ன பாவி நேரும்பின் சென்மந் தன்னில்
உந்தன்வாய் வார்த்தை யின்றி உன்துணைப் பகையு மாகும்
சுந்தரி சுதரு மின்றித் துணைவனும் பிணியு மாயும்
இந்தவள் சொல்லி யேதான் இறைத்தனள் தெருத்தூள்
[தானும்.

6. என் மீது பழி கூறிய பாவியே! வரும் பிறவியில், வாய்ப் பேச் சின்றி, சகோதரனிடம் பகை யேற்பட்டு, மனைவி, மக்கள் இல்லாமல், சகோதரனுக்கு வியாதி யுண்டாகி, துன்பத்துடன் வாழ்வாய் என்று சொல்லி விட்டுத் தெரு மண்ணை வாரி யிறைத்தாள்.

7. ஆகையா லிச்சென் மத்தில் அவனுரமை யாகி வாழ்வன்
தோகையும் ஒன்றே தீர்க்கம் சுதர்களும் ஆண்பா லொன்று
ஏகனுய் வாழ்வா னகும் இவனுமே தீர்க்க ஜீவி
பாகமாய்த் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

7. ஆகையினுல், இப் பிறவியில் இவன் ஊமையாகி வாழ்வான். இவனுக்கு மனைவி யொருத்தி தீர்க்கமாக விருப்பாள். மக்களில் ஆண் மகன் ஒருவனுண்டு. தனித்து வாழ்வான். தீர்க்கமான ஆயுளுடையவன். தவங்களே யாற்றும் பார்வதியே! கேட்பாயாக.

8. தந்தையின் சேதி சொல்வோம் தரணியை விருத்தி [செய்வான்
விந்தையாய்ப் பேசு வானும் வீண்பழி ஏற்பா னகும்
பந்தினர் மதிப்புக் கொள்ளல் பரவிடு மேக ரோகம்
எந்தக்கா ரணத்தி னுலே இவன்பிணி சொன்னீ ரையா.

8. ஜாதன் தந்தையின் செய்தியைச் சொல்லுவோம். நிலபுலங்களே விருத்தி செய்வான். வேடிக்கையாகப் பேசுவான். வீண் அபவாதங்கள் ஏற்பான். உறவினரிடம் மதிப்புப் பெறுவான். மேக ரோகம் உண்டாகும். என்ன காரணத்தினுல் இவனுக்கு வியாதி யுண்டாகும் என்று சொன்னீர்கள்.

9. ஒன்பதில் கேது தங்க உயர்சனி பார்த்த தாலே
துன்மையாய் ரோக மென்றேரும் சுதனுடைப் பூர்வ தோட்டம்
அந்ததோர் வினையை நீங்கள் அறிவிப்பீர் விபர மாக
இந்தவன் பூர்வம் சொல்வோம் இருடிவா முருனை தன்னில்;

9. தந்தையின் பலனைச் சொல்லக்கூடிய ஒன்பதா மிடமாகிய மகரத்தில் கேது தங்கி, அவனைச் சனி பார்ப்பதால் கொடிய வியாதி யுண்டாகும் என்று சொன்னேம். இவனுடைய முன் சென்ம தீவினையாலும் வியாதி ஏற்படும். அந்தத் தீவினை யாது என்று கூறுங்கள். இவன் முற் பிறப்பைக் கூறுவோம். முனிவர்கள் வசிக்கின்ற திருவண்ணுமலையில்,

10. உதித்தனன் வைசியச் சேயாய் உயர்வான செட்டுச் செய்து
அதிபனும் வாழு நாளில் மருவின வினையைக் கேண்மோ
பதியில்மார்ச் சலம் தானும் பகைசெய்ய வெங்கீர் ஊற்ற
அதனுலே தேகம் பொங்கி அந்தகன் பக்கல் சேர;

10. வைசிய குலத்தவனுய்ப் பிறந்தான். உயர்ந்த வியாபாரங்கள் செய்து, இவன் வாழ்ந்துகொண்டிருந்த காளில், ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். வீட்டில் பூனை யொன்று வந்து துன்பம் உண்டாக்கிற்று. அதன் மீது இவன் வெந்நீரை ஊற்றினன். அதனல் அதன் உடம்பில் கொப்புளங்கள் உண்டாக, அது இறந்தது.

11. அதுவொரு தோட மாச்சு அதுவன்றி வேறு சொல்வோம்
மதிபிறை யணிந்தோ னுக்கு வருச்சித்த மலர்மி தித்தான்
முதல்குலத் தோர்க்குப் பொய்யை மொழிந்தனன் அரசர் [பக்கல்
அதனலே வவர்க்குத் தீங்கு அடைந்தது புகலும் சாபம்.

11. அது ஒரு தோஷமாக இவனை யடைந்தது. வேறு ஒன்றும் கூறுவோம். பிறைச் சந்திரனைத் தலையிலணிந்த சிவபெருமானுக்கு அருச்சனை செய்யப்பட்ட மலர்களைக் கால்களால் மிதித்தான். அரசரிடம் அந்தணர்களைப் பற்றிப் பொய்ச்சாட்சி கூறினன். அதனல் அவர்கட்குத் தீங்கு உண்டாயிற்று. அவர்கள் சாபமிட்டனர்.

12. பொய்மொழி சொன்ன பாவி பிறக்கும்பின் சென்மந் [தன்னில்
கைகாலும் தேக மெல்லாம் காரகப் பிணியால் வாழ்வாய்
ஐயமா மனத்தால் சொல்ல அடைந்தது வந்தச் சாபம்
வையமேல் தவங்கள் செய்யு மம்பிகை யாளே கேளாய்.

12. பொய்ச் சொற்கள் சொன்ன பாவியே! மறு பிறவியில் உன் கை கால், உடல் முதலியவெல்லாம் மேக வியாதி பாவி வாழ்வாய் என்று துன்ப முற்ற மனத்துடன் சொன்னர்கள். அந்தச் சாபம் இவனை யடைந்தது. உலகில் தவங்களைச் செய்யும் பார்வதியே! கேட்பாயாக.

13. பாலக னந்தி யத்தில் பற்களுங் குறைவு நேர்ந்து
காலன்தன் நாடு சென்று கஞ்சனல் வரையப் பட்டு
ஞாலமே லுதிப்பா னுகும் நல்கிடும் முன்னூழ்த் தோடம்
ஆலம்போல் மேகம் காணும் அம்பிகை யாளே கேளாய்.

13. ஜாதகனின் தந்தை கடைசிக் காலத்தில பற்களுக்கு ஊன மேற் பட்டு மரணமடைந்தான். மீண்டும் பிரமனல் படைக்கப் பட்டு, இவ்வுலகில் இப் பிறப்பாகப் பிறப்பான். முன்சென்ம தீவினை இப்பிறப்பில் தொடரும். அதனல் விஷம் போன்று கொடிய மேகரோகம் உண்டாகும். பார்வதியே! கேள்.

14. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அரிநிறம் சமமாய்க்
[கல்வி
தன்னுடல் மெலிவு நீட்சி தரணியால் ஜீவிப் பானும்
பின்னமில் லாத தேகி புகலுவான் தந்திர வார்த்தை.

14. சொல்லப்பட்ட இவ்வித குணங்களுடைய தந்தைக்கு, இந்த ஜாதகன் பிறப்பான். இவன் குணங்களைச் சொல்லுவோம். கரிய நிறம். சுமாரான கல்வி யுடையவன். மெலிந்து நீண்ட உடலுடையவன். உலகில் விவசாயத்தால் ஜீவிப்பான். குற்ற மில்லாத உடலுடையவன். தந்திரமாகப் பேசுவான்.

15. சல்லியங் கொள்ளா னுகும் தனம்வீணுய்ச் செலவு செய்யான்
எல்லையைப் பரிபா லிப்பன் இடுக்கமென் றோருக் கீவன்
சொல்லது சுருக்க மாகும் துணைவன்சொல் காப்பா னுகும்
இல்லமுஞ் செய்வா னுகும் ஏவலா ளுடைய னுகும்.

15. கடன் வாங்க மாட்டான். வீண் செலவு செய்யான். வீட்டு நிலங்களைப் பாதுகாப்பான். தன்பமென்று வந்தவர்கட்குப் பொருள் கொடுப்பான். சுருக்கமாகப் பேசுவான். உடன்பிறந்தோன் கூறுவதைக் கேட்பான். வீடு கட்டுவான். ஏவலாட்க ளுடையவன்.

16. தன்துணை யாண்பால் ரெண்டு சத்தியும் ஒருத்தி தீர்க்கம்
சொன்னஆண் முன்பின் னுகும் செப்புவோம் மூன்றேன்
[சேதி
பின்னமில் லாத தேகி பேச்சதைக் காப்பா னுகும்
பன்னியே பேசு வானும் பற்களுந் தரள மொக்கும்.

16. இவனுடன் பிறந்தவர்களில் சகோதரர் இருவரும், சகோதரி யொருத்தியும் தீர்க்கமாக விருப்பார்கள். மேற்கூறிய சகோதரர்களில் மூத்தவன் ஒருவனும், இளையவன் ஒருவனுமாவர். மூத்த சகோதரன் செய்தியைச் சொல்லுவோம். குற்ற மில்லாத உடலுடையவன். சொன்ன சொற்களைக் காப்பாற்றுவான். பன்னிப் பன்னிப் பேசுவான். முத்துப் போன்ற வெண்மையான பற்களுள்ளவன்.

17. மால்நிறம் உணிச்சல் நீட்சி மர்மமில் லாதா னுகும்
ஞாலங்கள் விருத்தி செய்வன் நாற்காலி பலித மற்பம்
வேலன்மேல் பக்தி பூண்பன் விகடங்கள் கூரு னுகும்
ஆலம்போல் கோபம் சாந்தம் அம்பிகை யாளே கேளாய்.

17. கரிய நிறமுடையவன். மெல்லிய சரீர முடையவன். மனத்தில் மறைவில்லாதவன். வீண் நிலங்களை விருத்தி செய்வான். கால்நடைகள் விருத்தி நிறைதேயாம். முருகப்பிரான் மீது பக்தி பூண்பான். அகங்கார மாகப் பேசமாட்டான். விஷமுள்ள பாம்பினைப் போன்ற கொடிய கோபமுண்டு. பின்பு சாந்த முறுவான். பார்வதியே! கேட்பாயாக.

18. பாரியும் ஒன்றே யாகும் பாவையும் தென்கிழ் நேரும்
நாரிக்குச் சுதராண் ரெண்டு நாயகி வொன்றே தீர்க்கம்
மாரனும் வயது தீர்க்கம் வருவோரை யாத ரிப்பன்
நீரமில் லாத நெஞ்சம் செல்வதி கேட்டி டாயே.

18. இவனுக்கு மனைவி யொருத்தியே. அவள், இவனூர்க்குத் தென் கிழக்குத் திசையிலிருந்து வருவாள். அவளுக்கு இரு புதல்வரும், ஒரு பெண்ணும் தோன்றித் தீர்க்கமாவர். இவன் தீர்க்க வயதுடனிருப்பான். வீடு தேடி வருபவரை ஆதரிப்பான். தைரிய மில்லாத மனமுள்ளவன். செல்வியே! கேட்பாயாக.

19. கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன் கலைராசி புணர்த்த [லானுன்
உடன்படான் பிழைக ளுக்கு உண்மையா மனத்த னுகும்
தடபுடல் செய்கை யுண்டு தன்துணை யாத ரிப்பன்
விடபிணி பரவுந் தாயே விளம்பின மொழிகுன் றுது.

19. கடன் வாங்குவான். அதனைத் தீர்த்து விடுவான். மகர லக்னத்தில் பிறந்தவன். தவறு செய்ய உடன்பட மாட்டான். உண்மை பொருந்திய மனமுள்ளவன். ஆடம்பரச் செய்கைக ளுடையவன். தன் சகோதரனை ஆதரிப்பான். கொடிய விஷம்போன்ற வியாதி இவனுக்கு ஏற்படும். சொன்ன சொல் தவறுது.

20. பின்துணை சேதி தன்னைப் பேசுவோம் பின்பா கத்தில்
இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோ மிருபான் [ரெண்டில்
கன்னிகை வடபால் நேரும் காதலி தந்தை வர்க்கம்
முன்னேனும் சுகமாங் காலம் விளம்புவோம் மனைவி சேதி.

20. இளைய சகோதரன் செய்தியைப் பிற் பகுதியில் சொல்லுவோம். ஜாதகனின் திருமண காலத்தைக் கூறுவோம். இருபத் திரண்டாம் வயதில் வடக்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் இவன் தந்தை வர்க்கத்தைச் சேர்ந்தவள். இவனுக்கு மணமாகும்பொழுது, மூத்த சகோதரன் கல்ல நிலையிலிருப்பான். மனைவியின் செய்தியைச் சொல்லுவோம்.

21. இருநிறஞ் சமதே கத்தள் இன்பச்சொல் யூகை சாலி
பெரும்புத்தி யடக்க வார்த்தை பிழையான குணமில் லாதாள்
வருவோரை யாத ரிப்பள் மாரன்தன் மனத்துக் கேற்றோள்
நெறிகாப்பள் சீலி யாவள் நிமலியுந் தீர்க்க சீவி.

21. கரிய நிற முடையவள். சமமான உடலமைப் புள்ளவள். சுகமாகப் பேசுவாள். சாமர்த்திய முடையவள். பெரும் புத்தி யுடையவள். அடக்க முடன் பேசுபவள். தவறுண குண மில்லாதவள். வீடு தேடி வருபவரை ஆதரிப்பாள். கணவன் மனத்துக்கு உகந்தவள். நல்வழியினின்றும் தவறாது காத்துக் கொள்ளுவாள். ஒழுக்க முடையவள். இவள் தீர்க்கமான வய துடையவள்.

22. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலமு ரைது
சக்திமா ரிருவர் தீர்க்கம் சந்ததி யாண்பால் தோடம்
குற்றத்தைச் சொல்லு மென்னக் குண்டையுஞ் சென்ன
[மாகப்
புத்திரத் தானந் தன்னில் புதன்புக ரிருப்ப தாலே ;

22. புத்திர விருத்தியைப் பற்றிச் சொல்லுவதற்குப் பலமில்லை. பெண்கள் இருவர் பிறந்து தீர்க்கமாவர். ஆண் குழந்தைக்குத் தோஷ மேற் படும். என்ன குற்றம் என்று சொல்லுங்கள் ? விருஷபம் லக்கினமாகி, புத்திர ஸ்தானமாகிய கன்னியில் புதனும் சுக்கிரனும் சேர்ந்து இருப்பதால் ;

23. சொல்லுவோ மந்தச் சங்கை சுதனுடைப் பூர்வங் கேளாய்
எல்லையி லுயர்வ தான விரிஞ்சிமா நகரி லேதான்
பொல்லாத வடுக சேயாய்ப் பிறந்துமே கிருஷி செய்து
வல்லியு மதலை யுண்டாய் வாழ்நாளில் வினையைச்
[சொல்வோம்.

23. ஆண் குழந்தைக்குத் தோஷ மேற்படும் என்று சொன்னோம். ஜாதகன் முற் பிறப்பைக் கேளாய். உலகில் உயர்ந்ததான விரிஞ்சி நகரில், வடுகர் குலத்தவனாய்ப் பிறந்து, பயிர்த் தொழில் செய்து, மனைவி மக்களை யடைந்து, வாழ்ந்து வருகின்ற காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லு வோம்.

24. துணைவன்தன் மதலை தன்னைச் சோற்றில்வஞ் சனையைச்
[செய்தான்
வினையது நேர்ந்த தென்றோம் வேறொன்று புகலக் கேளாய்க்
கனமிலா வேழை மாது காளைக்கு அன்னம் வேண்ட
சினங்கொண்டு துரத்தி விட்டான் சேர்ந்தது வந்தத்
[தோடம்.

24. தனது சகோதரனின் குழந்தைக்குச் சோறிடும் பொழுது வஞ்சனை செய்தான். அதனால் குற்றமேற்பட்டது என்று சொன்னேம். இன்னு மொன்று சொல்லக் கேட்பாயாக. எழைப் பெண்ணொருத்தி தன் புதல்வனுக்கு உணவு யாசிக்கும் பொழுது, இவன் கோபங் கொண்டு, அவளை விரட்டி விட்டான். அந்தத் தோஷம் இவனைச் சேர்ந்தது.

25. இதுவன்றித் தந்தை செய்த இடரினால் வம்ச தோடம்
அதிபனு மந்தி யத்தில் மாதலம் சேது சென்று
சதியான கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
நதிகுலந் தனிலு தித்தான் நல்கிடு முன்னூழ்ச் சாபம்.

25. இதுவல்லாமல், இவன் தந்தை செய்த தீவினையினாலும் சந்ததிக்குத் தோஷ மேற்பட்டது. இவன் கடைசிக் சுாலத்தில் புண்ணிய ஸ்தல மாகிய சேது சென்று, பின்பு மாண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டு, வேளாளர் குலத்தில் பிறந்தான். இவன் முற்பிறப்பில் செய்த தீவினைகள் இப் பிறப்பில் தொடரும்.

26. கருமபுத் திரனுங் காணன் கன்னிமா ரிருவர் தீர்க்கம்
திருமகன் தனக்குக் கர்மம் செய்குவார் விபரம் சொல்வாய்
வரும்துணை முன்னேன் புத்ரன் மாரற்குக் கருமம்
[செய்வான்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

26. தனக்கு இறுதிக் கடன்கள் செய்வதற்குப் புதல்வன் இல்லாதவனுவான். பெண்கள் இருவர் பிறந்து தீர்க்கமாவர். இவனுக்கு இறுதிக் கடன்கள் செய்பவர் யாவர்? விவரத்தைச் சொல்லுங்கள். இவனது மூத்த சகோதரரின் புதல்வன் இவனுக்கு இறுதிக் கடன்கள் செய்வான். யானைமுகக் கடவுளைப் புதல்வராக வடைந்த பார்வதியே! கேட்பாயாக.

27. இன்னவன் யோகம் சொல்வோம் இடரிலா வாழ்வா னுதும்
பொன்மிகத் தேடு வானும் பூமியை விருத்தி செய்வன்
அன்னியர் மதிக்க வாழ்வன் அன்னமுங் குறைவு றுதான்
தன்மமாங் குணத்த னுகும் செயமுனி மறுத்துச் சொல்வார்.

27. ஜாதகனின் யோகங்களைக் கூறுவோம். துன்ப மில்லாமல் வாழ்வான். மிகுதியாகச் செல்வத்தைத் தேடுவான். வீடு நிலங்களை விருத்தி செய்வான். அயலார் பாராட்டும்படி வாழ்வான். போஜனக் குறை வேற்படாதவன். தரும சிந்தை யுள்ளவன், செய முனிவர் மறுத்துப் பேசுவார்.

28. யோகம்மெவ் விதமாய்ச் சொன்னீர் உரைப்பீர்க ளந்தச் [சங்கை
ஆகமன் குசனும் ஏழில் அரவங்கா ரியுமே மூன்றில்
பாகமா யிருப்ப தாலே பாஸ்கர யோக மொன்று
தோகையே தர்மகர்ம யோகமொன் றுரைக்க லாகும்.

28. யோகங்களே எங்ஙனம் கூறினீர்கள்? காரணங் கூறுங்கள். குருவும் செவ்வாயும் விருச்சிகத்திலும், இராகுவும் சனியும் மூன்று (கடகத்திலும்) மிடத்திலும், தங்கியிருப்பதால், பாஸ்கர யோகம் ஒன்றும், தர்மகர்மாதிபதி யோகமொன்றும் இவனுக்குச் சொல்லலாம்.

29. அதன்பலன் வறுமை காணுன் அடாவடி தன்னில் [செல்லான்
பதிசெய்வன் முன்னோர் செய்தி பந்தியு மிவனே செய்யான்
சதிதரும் கடவுள் தொண்டு காவலன் செய்வா னுகும்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

29. இந்த யோகங்களின் பயன்கள் யாவை யெனின், தரித்திர மில்லாதவனுவன். வீண் வம்புக்குப் போகமாட்டான். வீடு கட்டுவான் முன்னோர் செய்துவந்த தொழில்களே முறையாகச் செய்வான். கடவுளுக்குத் தொண்டு புரிவான். முனிவர்களேக் காக்கின்ற பார்வதி தேவியே! கேட்பாயாக.

30. அன்னையு மிருநி றத்தாள் அறிவுளாள் கோபங் கொஞ்சம்
அன்னமு மன்பா யிவள் ஆளன்தன் மனத்துக் கேற்றோள்
அன்னவள் யோக சாலி அயல்குற்றம் புகலா ளாகும்
அன்னியர்க் கிணக்கம் சொல்லாள் அணுகிடு மேக ரோகம்.

30. ஜாதகனின் தாய் கரிய நிற முடையவள். நல்ல அறிவுடையவள், சிறிதே கோப முள்ளவள். வீடு தேடி வந்தவர்கட்கு அன்புடன் உணவளிப்பாள். கணவன் மனத்துக்கு இசைந்தவள். அயலார் கூறும் குறைகளுக்கு இடமில்லாதவள். இவளுக்கு மேகரோகம் ஏற்படும்.

31. இல்லமுந் தென்கீ ழாகும் இவள்துணை யாண்பால் ரெண்டு
வல்லிமா ரிருவ ராகு மறைகின்றோம் இவள்முன் சென்மம்
கல்மலி நாட்டி லேதான் கருணீகர் குலமு தித்துத்
தொல்லையு மில்லா ளாகித் தேவியும் வாழு நாளில்;

31. இவள் வீடு, ஜாதகன் வீட்டுக்குத் தென்கிழக்குத் திசையிலுள்ளது. இவளுடன் பிறந்தவர்களில் ஆண்கள் இருவர். பெண்கள் இருவராவர். இவள் முற்பிறப்பைச் சொல்லுகின்றோம். மலை நாட்டில், கருணீகர் மரபில் பிறந்து, துன்பமெவையும் இல்லாதவளாய் வாழ்ந்து வரும் காலத்தில்;

32. இவள்வர னன்னை தன்னை எற்றிலு ளதுவு மன்றிக்
கரமதா லடிக்க லுற்றுள் கலந்தது வந்தச் சாபம்
உறன்முறை புசிக்குங் காலை யோரவஞ் சனையுஞ் செய்தாள்
மருவிற்று வதுவோர் தோடம் மறலியின் நாடு சேர்ந்தாள்.

32. இவள் கணவனின் தாயை (மாமியை)த் தன் கால்களினுல், இன முடன் ஒரு முறை உதைத்தாள். அதுவுமல்லாமல் கைகொண்டு அடித்தாள். அந்தத் தோஷம் இவளை யடைந்தது. ஒரு சமயம், தன் வீட்டில் உறவினர் கள் உண்ணும் வேளையில், பாரபட்சமாக உணவளித்தாள். அந்தத் தோஷம் ஒன்றும் சேர்ந்தது. சிலகாலஞ் சென்று மரணமடைந்தாள்.

33. சிரநான்கோன் வரையப் பட்டுச் செனித்தவ ளென்று
[சொல்வோம்
கரங்கால்கள் குறைவ துண்டு கருமகா லங்கள் சொல்வோம்
கரியவன் தசையந் தத்தில் கண்டமு மொன்றுண் டாகும்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

33. மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இப் பிறவியில் பிறந்தவள் இவள் என்று சொல்லுவோம். நோயினுல் கைகால்கள் குறைவதும் இந்த ஜாதகனுக்குக் கருண தசை வருங்காலத்தைச் சொல்லுவோம். சனி மகா தசை முடிவில் இவனுக்குக் கண்ட மொன்று நேரும். விநாயகரைப் புதல்வ ராக வடைந்த புண்ணியவதியே! கேட்பாயாக.

34. இருபது நாலு வாண்டில் இயம்புவோ மன்னை கண்டம்
ஒருபது ஏழு வாண்டில் உறைந்திடு தந்தை கண்டம்
பெருநர கினிலே வாழ்ந்து பிறப்பனும் செங்குந்த சேயாய்ப்
பிரிதிவிக் கருகில் கீழ்ப்பால் பேரூரி லுதிப்பா னுகும்.

34. ஜாதகனது இருபத்து நான்காம் வயதில் தாய்க்கு மரணம் நேரும் என்று சொல்வோம். இவனது பதினேழாம் வயதில் தந்தைக்கு மரணம் உண்டாகும். பெரிய நரகத்தில் சிலகாலம் கிடந்தழன்று, காஞ்சிபுரத்துக்கு அருகில் கிழக்குப் பக்கமாகவுள்ள பெரிய ஊரொன்றில் செங்குந்தர் குலத்தவ னுய்ப் பிறப்பான்.

35. அன்னையின் சென்மம் சொல்வோ மாலங்கா டதனி
[லேதான்
உன்னத சைவச் சேயாய் உதித்துமே வறுமை யின்றிப்
பொன்னது பெருக்க மாகிப் பூமியில் வாழ்வா ளாகும்
கன்னென மொழியை யொத்த காதலி கேட்டி டாயே.

34. ஜாதகனின் தாயின் மறு பிறவியைச் சொல்லுவோம். திருவாலங் காட்டில் உயர்ந்த சைவ குலத்தவளாய்ப் பிறந்து, தரித்திர மில்லாமல், செல்வம் மிகுதியாகி, உலகில் வாழ்ந்திருப்பாள். கரும்பு போன்ற இனிய மொழிகளைப் பேசும் பார்வதியே! கேட்பாயாக.

36. பாலகன் மரண காலம் பகருவோ மறுபா ரெனன்றில்
ஏலவே துலாமா தத்தில் ஏகுமே வுடல மென்றோம்
சாலவே பின்சென் மத்தைச் சாற்றுவோம் காஞ்சி தன்னில்
சீலமாம் வைசியச் சேயாய்ச் செனிப்பனு மென்று
[சொல்வோம்.

36. ஜாதகன் மரண காலத்தைச் சொல்லுவோம். அறுபத்து மூன்றும் வயதில் ஐப்பசி மாதம் மரண மடைவான். இவன் மறு பிறவியைச் சொல்லு வோம். காஞ்சிபுரத்தில் ஒழுக்கமுள்ள வைசியக் குலத்தவனுய்ப் பிறப்பான் என்று கூறுவோம்.


37. மன்னவன் செனிக்குங் காலம் மந்திரி தசையி ருப்புப்
சொன்னனே வாண்டு எட்டும் திங்களும் ஏழ தாகும்
முன்பாக்கம் விபரம் சொன்னேம் மொழிகின்றோம் பின்பால்
[சேதி
அன்னையே யாங்கள் சொல்லும் அருள்மொழி குன்ரு
[தென்றோம்.

37. ஜாதகன் பிறப்புக் காலத்தில் குரு மகாதசை இருப்பு; எட்டு வருஷங்களும், ஏழு மாதங்களுமாம். இவ்விதம் விவரமாக முதற்பாகங் கூறினேம். மற்றவற்றைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். தாயே! நாங்கள் கூறும் அருள்வாக்குத் தவறுது என்று சொல்லுவோம்.

ஜாதகம் 90

1. கலிகலி காரி சாடி கவிமகன் மேட மாகப்
புலவனும் பானு வீணை பொன்நந்தி யரவு சீயம்
நிலமகன் கோல தாக விடபமுஞ் சென்ம மாகப்
பலன்தனைப் புகலு மென்று பார்வதி கேட்கும் போது;

1. சந்திரன் மகரத்திலும், சனி கும்பத்திலும், சுக்கிரன் மேஷத்திலும், புதன் சூரியன் மிதுனத்திலும், குரு விருஷபத்திலும், ராகு சிம்மத்திலும், செவ்வாய் துலாத்திலும், கேது கும்பத்திலும் தங்கி, விருஷபம் ஜன்ம லக்கினமாக விருந்தால் ஏற்படும் பலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதி கேட்கும் பொழுது;



2. பிருகுமே புகலு கின்ரூர் பிறந்திடு மாண்பால் சென்மம்
வருமில்லம் வடதென் வீதி வாசலும் மேல்பால் நோக்கம்
அரன்கோட்ட முத்ர மாகும் அரிகர புத்ரன் தென்பால்
குறைதலை மாரி மேற்குக் குஞ்சர முகத்தோன் மேல்பால்.

2. பிருகு முனிவர் சொல்லுகின்ரூர். ஆண் மகன் தோன்றுவான். பிறக்கும் வீடு, வடக்குத் தெற்கான தெருவில். மேற்குப் பார்த்த வாயிலையுடையது. வீட்டுக்கு வடக்கில் சிவபெருமான் கோயிலொன் றுண்டு. ஐயனர் கோவில் தெற்கில் உளது. மாரியம்மன் கோயில் மேற்குத் திசையிலிருக்கின்றது. யானைமுகக் கடவுளும் மேற்கில் எழுந்தருளி யிருக்கின்ரூர்.

3. பத்திர காளி வாயு பகர்ந்தவிவ் வடையா ளத்துள்
வித்தகன் செங்குந்த சேயாய் மேவுவான் மூன்ரூஞ் சென்மம்
பெற்றதாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகம்
சுத்தமாய் முன்பின் சென்மம் செப்புவோ மிந்நூல் தன்னில்.

3. பத்திர காளி தேவி கோயில் வடமேற்கில் இருக்கின்றது. சொல்லிய இவ் வடையாளங்களுள்ள ஊரில், செங்குந்தர் குலத்தவனாய் ஜாத

கன் தோன்றுவான். இவனைப் பெற்ற தாய் தந்தையர், மனைவி, மக்கள் முதலானவர் யோகங்கள், முற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இந்த நூலில் நாங்கள் சொல்லுவோம்.

4. தந்தையின் குணத்தைச் சொல்வோம் சரசமாய் வார்த்தை [யுண்டு
தந்தமுந் தரள மொக்கும் தரணிகள் சேர்ப்பா னுகும்
தந்தையால் பெருமை யேற்பன் சாதமுங் குறைவு முதான்
தன்துணை தன்னுல் நிந்தை சார்ந்திடு மென்று சொல்வோம்.

4. ஜாதகன் தகப்பனரின் குணங்களைச் சொல்லுவோம். சரசமாக உரையாடுவான். முத்துப் போன்ற பற்களுள்ளவன். விளைநிலங்களைச் சேர்ப்பான். தகப்பனரால் பெருமை யடைவான். போஜன சௌக்கியம் குறைவுபடாதவன். இவனுக்குச் சகோதரனுல் பழியுண்டாகும் என்று சொல்லுவோம்.

5. இனமதிப் போடு வாழ்வன் ஏவலா ளுடைய னுகும்
தனங்கடன் கொள்ளா னுகும் சலராசி யூணு முண்ணன்
சினமிலா வுதிப்பா னுகும் சேயிழைப் பிரிய னுகும்
நினைவதை முடிப்பா னுகும் நிமலியே கேட்டி டாயே.

5. குலத்தில் மதிப்புடையவனுய் வாழ்ந்திருப்பான். ஏவலாட்கள் பலரைப் பெற்றவன். பணம் கடன் வாங்கமாட்டான். மீன் முதலியன வற்றைப் புசியான். கோபமில்லாதவன். மனைவி மீது விருப்பமுள்ள வன். எண்ணியவற்றைச் செய்து முடிப்பதில் வல்லவன். பார்வதியே! கேட்பாயாக.

6. முன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றே மாழி தன்னில்
வந்தவன் கங்கை சேயாய் வளமுள குடும்பி யாகி
அன்னவன் வாழு நாளில் அவன்மனை யில்லந் தன்னில்
தன்னுமே தனியாய் விட்டுச் சக்திபால் போகந் துய்த்தான்.

6. இவனது முற்பிறவியைச் சொல்லுகின்றேம். திருவாழி என்ற ஊரில், வேளாளர் குலத்தவனுய்ப் பிறந்தான். செழிப்புள்ள குடும்பமுடைய வனுய் வாழுகின்ற காலத்தில், இவன் மனைவியை வீட்டில் தனியாக விட்டு, வேறு பெண்ணொருத்தியிடஞ் சென்று இன்ப மனுபவித்தான்.

7. குலமது வருத்த முற்றுக் கூறுவாள் சாபந் தானும்
விலைமாத ராசை யாலே வீண்சிறை வைத்த பாவி
குலமது மெழுகு போலே வொண்டியாய் வாழ்வாய் நீயும்
தலைவிமூன் னுக யானும் தங்கியே யவமா னங்கள்;

7. இவன் மனைவி யதனை யுணர்ந்து வருத்தமடைந்து, ஒரு சாப மிடுவாள். வேசையர் மீதுள்ள விருப்பத்தால் என்னைச் சிறையிடுவதுபோல் வீட்டில் தனியாய் விட்ட பாவியே! வரும் பிறவியில் அனலிலிட்ட மெழுகு போல் உன் குலம் பாழாகி, நீ தனியாய் வாழ்வாய். யான் உன் முதல் மனைவியாக வந்து, உனக்கு அவமானங்களை;

8. செய்துமே பொருளைப் பெற்றுச் செல்லுவேன் வேறு
[பக்கல்
ஐயமா மனத்த ளாகி அறைந்துமே நீரில் மாண்டாள்
தையலின் சாபந் தானும் சார்ந்தது வென்று சொல்லுவோம்.
வையமேல் வேறு சொல்வோர் வரும்பொரு ளீயா தாகி;

8, உண்டாக்கி, பொருளைப் பெற்றுக்கொண்டு வேறு இடம் செல்லு வேன் என்று வருத்தமுற்ற மனத்துடன் சொல்லிவிட்டு, நீரில் விழுந்து இறந்தாள். அப்பெண்ணின் சாபம் இவனை யடைந்தது என்று சொல்லு வோம். வேறு ஒன்றும் சொல்லுவோம். ஒரு பெண்ணிடம் பணம் கொடுக்காமல்;

9. தந்திர மொழிகள் பேசித் தையலைப் போகம் செய்தான்
அந்தவள் மனமும் வெட்கி அறைகின்றாள் வார்த்தை
[யொன்று
தந்தன மீயா தாகித் தந்திரம் செய்த பாவி
பிந்திய சென்மந் தன்னில் பேதையால் நிந்தை யேற்பன்.

9. தந்திரமாகச் சரச மொழிகள் பல கூறி, இன்ப மனுபவித்தான். பின்பு, அப்பெண் மனத்தில் வெட்கங் கொண்டு, ஒரு வார்த்தை சொல்லு கின்றாள். பணம் தராமல் தந்திரமாகப் பேசி என்னிடம் இன்ப மனுபவித்த பாவி, மறு பிறவியில், தன் மனைவியால் பழிகள் பல அடைவான்.

10. இன்னமும் பலவார் சொன்னாள் எய்திற்று வந்தச் சாபம்
மன்னுநல் லறங்க ளன்றி மறலியின் பதிக்குச் சென்று
பொன்னவன் வரையப் பட்டுப் பிறந்தவ னென்று
[சொல்வோரம்
முன்சாப மிச்சென் மத்தில் மேவிடும் பால னுக்கு.

10. என்றும், இன்னும் பலவிதமாகவும் சொன்னாள். அந்தச் சாபம் இவனை யடைந்தது. அப் பிறப்பில், நல்ல செயல்கள் எவையுமில்லாமல், எமனுலக மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறவியில் பிறந்தவன் இவன் என்று கூறுவோம். முற்பிறவியில் ஏற்பட்ட சாபம் இப்பிறவியில் இவனைச் சாரும்.

11. ஆண்துணை தோட மெய்தும் அம்பிகை மார்க ளாறு
பூணுவோம் தீர்க்க மாகப் போகிடு மிரண்டு வென்றோம்
நாணிடு முதல்ம னைதான் நற்பொருள் செலவு முண்டு
வேணுகோ பாலன் தங்கை விளம்பின மொழிகுன் றுவே.

11. சகோதரனுக்குத் தோஷ முண்டாகும். சகோதரிகள் அறுவர் பிறந்து தீர்க்கமாக விளங்குவர். மேலும் இருவர் பிறந்து மரிப்பர் என்று சொன்னோம். முதல் மனைவி இவனைவிட்டுப் பிரிவாள். அவளால் பொருட் செலவு ஏற்படும். கண்ணபிரானின் தங்கையே! சொன்ன சொற்கள் தவறு.

12. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோகைய ரிருவர் தம்மில்
பின்மனை யாளுக் கேதான் பிறப்பனு மிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளா னிருநி
[றத்தான்
சொன்னசொல் லிரண்டு முண்டு சுத்தவான் பொருளுள்
[ளோனும்.

12. கூறப்பட்ட குணங்களை யுடையவனுக்கு, மனைவியர் இருவரா வர். அவர்களில் இளையவளுக்குத் தோன்றுவான் இந்த ஜாதகன். இவன் குணங்களைச் சொல்லுவோம். அழகுடையவன். கரிய நிற முடையவன். இருவிதமாகப் பேசுவான். நுய்மை யுடையவன். செல்வ முடையவன்.

13. புத்திமான் பெருமை யோனும் புகழ்ந்தோருக் குதவி
[செய்வன்
வித்தையு முடைய னுகும் விளைபுலம் விருத்தி செய்வன்
சித்தமே கரப்பு முள்ளான் சனவசி யங்கள் கொள்வன்
அத்திபோல் நடையு மாவன் அகசிய வார்த்தை கூர்வன்.

13. புத்திசாலி. பெருமை யுடையவன். தன்னைப் புகழ்ந்தவர்கட்கு உபகாரங்கள் செய்வான். கல்வி யுடையவன். விளைநிலங்களை விருத்தி செய்வான். மனத்தில் மறைவுள்ளவன். மக்களைத் தன் வசப்படுத்து வான். யானைபோன்ற கம்பீர நடையுடையவன். விகடமாகப் பேசுவான்.

14. அஞ்சிடான் யாவ ருக்கும் அன்னமுங் குறைவு றுதான்
மிஞ்சின பொருளுஞ் சேர்ப்பன் விதவிதச் செட்டுச் செய்வன்
வஞ்சனை யெண்ண னுகும் வத்திரத் தொழிலுஞ் செய்வன்
வஞ்சியர் மோக னுவன் வளமான வில்ல மேற்பன்.

14. எவருக்கும் பயப்பட மாட்டான். உணவுக்குக் குறையில்லாத வன். மிகுந்த செல்வத்தைச் சேர்ப்பான். விதவிதமான வியாபாரங்கள் செய்வான். மனத்தில் எவருக்கும் தீங்கு நினையான். நெசவுத் தொழில்

செய்வான். பெண்கள்பால் மோக முடையவன். செழிப்புள்ள குடும்பத்தை யடைவான்.

15. இன்னவன் தனக்கு யோகம் இயம்பின காரணஞ்சொல்
தன்மகன் மாதி பத்தில் சந்திரன் நவத்தில் தங்கப்
பொன்னவன் சென்மந் தங்கப் புட்கர யோக மொன்று
சொன்னனே தன்ம கன்ம யோகமொன் றுரைக்க லாகும்.

15. இவனுக்கு இவ்விதமான யோகங்களைக் கூறியதற்குக் காரணம் கூறுங்கள். தர்ம கர்மாதி பதியான சனி, பத்தாமிடத்திலும், சந்திரன் ஒன்பதாமிடமாகிய மகரத்திலும், குரு லக்கினத்திலும் தங்கியிருப்பதால் புஷ்கர யோகம் ஒன்றும், தர்மகர்மாதிபதி யோகமொன்றும் இவனுக்கு உண்டாம் என்று சொல்லலாம்.

16. அதுபலன் வறுமை காணன் அளகேச னெப்ப வாழ்வன்
இதுநிற்கத் தந்தைதந்தை இவன் செய்யும் புண்ணி யத்தால்
நிதிமிகப் பெருக்க மாகும் நேமியோர்க் குதவி செய்தல்
நதிசடை யணிந்தோன் மாதே நவின்றன மொழிதன் றேவ.

16. அந்த யோகங்கள் இருப்பதால், தரித்திரமடைய மாட்டான். குபேரனைப் போல வாழ்வான். இவன் பாட்டனும், தந்தையும், இவனும் செய்கின்ற நல்வினைகளால் செல்வம் மிகுதியாகச் சேரும். உலகினர்க்கு உதவிகள் செய்வான். கங்கை நதியைச் சடைமுடியில் தரித்துள்ள சிவபெருமான் பத்தினியே! சொன்ன சொற்கள் தவறு.

17. பாலகன் துணையாண் டிரண்டு பாவையு மவ்வார் தீர்க்கம்
சாலவாண் முன்பின் னுகுஞ் செப்புவோம் முன்னைன் சேதி
காலத்தை யறிந்து ரைப்பன் கபடில்லான் கல்வி மானும்
ஞாலங்கள் விருத்தி செய்வன் நயப்பான வார்த்தை யோனே.

17. ஜாதகனுக்குச் சகோதரர் இருவர். சகோதரிகளும் இருவராவர். சகோதரர்களில் மூத்தவன் ஒருவனும், இளையவன் ஒருவனுமாவன். மூத்த சகோதரன் செய்திபைச் சொல்லுவோம். சமயமறிந்து பேசுவான். சூதில்லாதவன். படிப்பாளி. வீண் நிலங்களை விருத்தி செய்வான். நயமாகப் பேசுபவன்.

18. பாரியு மொன்றே யாகும் பாலர்க ளாண்பால் டிரண்டு
நாரியர் மூவர் தீர்க்கம் நாட்டினில் வறுமை காணன்
வேலுடைக் கடவுள் பக்தி விரும்புவான் ஊக சாலி
ஆலத்தை யுண்டோன் தேவி அவனுமே தீர்க்க சீவி.

18. இவனுக்கு மனைவி ஒருத்தியே. மக்களில் ஆண்கள் இருவரும் பெண்கள் மூவரும் தோன்றித் தீர்க்கமாவர். உலகில் தரித்திர மில்லாமல் வாழ்வான். சுப்பிரமணியக் கடவுள் மீது பக்தி கொள்ளுவான். சாமர்த்திய முள்ளவன். ஆலகால விஷத்தை யருந்திய சிவபெருமான் பத்தினியே! இவன் தீர்க்கமான வயதுடையவன்.

19. மற்றவர் சேதி யாவு மறைகின்றேம் பின்பா கத்தில்
விற்தகன் மணத்தின் காலம் விளம்புவோ மீரெட்
[டாண்டில்
பத்தினி கீழ்ப்பா லாகும் பாலன்தன் துணைவி புத்ரி
சத்தியின் குணத்தைச் சொல்வோம் சாதிப்பாள் சிலவே
[சங்கை.

19. மற்றவர்களைப் பற்றிப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேம். ஜாதகன் திருமணக் காலத்தைக் கூறுவோம். பதினேழும் வயதில், இவனுக்குக் கிழக்குத் திசையிலுள்ளதொரு கிராமத்தில் வசிக்கும் இவனது சகோதரியின் புதல்வி மனைவியாக வாய்ப்பாள். அவள் குணத்தைச் சொல்லுவோம். சில சந்தேகங்களைத் தெளிவு படுத்துவாள்.

20. வருவோரை யாத ரிப்பள் ளரிபோலே கோபங் கொஞ்சம்
திருகிலாக் குணத்தா ளாகும் தீங்கது வொருவர்க்
[கெண்ணுள்
குறையென்றோர்க் குதவி செய்வள் கோதையும் தீர்க்க சிவி
பராசரும் மறுத்துச் சொல்வார் பாரியு மிரண்டே
[யென்றேம்.

20, வீட்டுக்கு வருபவரை ஆதரிப்பாள். சிங்கம் போன்று கோபம் சிறிதுண்டு. குற்றமில்லாத குண முடையவள். ஒருவருக்கும் தீங்கு நினையாதவள். துன்பமென்று வந்தவர்களுக்கு உபகாரம் செய்வாள். தீர்க்கமான வயதுடையவள். பராசர முனிவர் மறுத்துக் கூறுவார். இவனுக்கு மனைவியர் இருவர் என்று கூறினேம்.

21. காரணஞ் சொல்வீ ரையா களத்திரத் தோனும் சேயாய்த்
தீரமாய்ச் [1]சரத்தில் தங்கச் சுக்கிரன் ஈரா றுகக்
கூறினேந் தாரம் ரெண்டு குறுமுனி தடுத்துச் சொல்வார்
மாரனுக் கிரண்டு தாரம் மருவாது என்க ருத்து.

21. காரணம் கூறுங்கள். களத்திர ஸ்தானமாகிய ஏழாம் வீட்டுக்கு உடையவன் செவ்வாயாகி, அவன் சராசி யாகிய துலாத்திலும், சுக்கிரன் பனிரண்டா மிடமாகிய மேஷத்திலும் தங்கி யிருப்பதால், இவனுக்கு இரு

1. ஈண்டு துலாம்

மனைவியர் என்று சொன்னேம். அகத்திய முனிவர் தடுத்துச் சொல்லுவார். இவனுக்கு இரு மனைவியர் ஏற்படார் என்பது என் கருத்தாகும்.

22. சொல்லுவீ ரந்தச் சங்கை சூரியன் புதனும் ரெண்டில்
சல்லியன் தனக்கு ஏழில் சேய்நிற்கத் தார மொன்றே
வல்லிமா ரிருவர் காணுன் மாதுவு மிவன்முன் னேலே
செல்லுவாள் கால நாடு செப்புவோ மந்தந் தன்னில்.

22. நீங்கள் அதற்குக் காரணம் கூறுங்கள். சூரியனும் புதனும் குடும்ப ஸ்தானமாகிய மிதுனத்திலும், சுக்கிரனுக்கு ஏழாமிடமாகிய துலாத்தில் செவ்வாயும் தங்கி யிருப்பதால் இவனுக்கு மனைவி யொருத்தியே. இரு மனைவியர் இல்லை. இவன் மனைவி இவனுக்கு முன்பே மரண மடைவாள் என்று சொல்லுவோம்.

23. மதலைகள் முதலில் நட்டம் விருத்தியா மதன்பின் னுகச்
சதமுட னுண்பா லொன்று சக்திமார் நால்வ ராகும்
எதுவிதக் கார ணத்தால் இயம்பினீர் முதலில் தோடம்
புதனேந்தா மிடத்தோ னுகி ஆண்டிடம் ரெண்டே யாக;

23. முதலில் இவனுக்குக் குழந்தைகள் பிறந்து சேதமாம். பின்பு விருத்தியாம். ஆண் குழந்தை யொன்றும், பெண்கள் நால்வரும் தோன்றுவர். என்ன காரணத்தினால் முதலில், குழந்தைகளுக்குத் தோஷம் கூறினீர்கள். புதன் ஐந்தாமிடத்துக் குரியவனுகி, இரண்டாம் (மிதுனம்) வீட்டில் ஆட்சியாக விருப்பதாலும்;

24. நந்தியும் சென்ன மாக நவின்றன மந்தச் சங்கை
முந்திய சென்மம் தன்னை மொழிகின்றேம் தாயே கேளும்
தென்திசைப் பெண்ணை யோரம் செனித்தனன் மூன்றுஞ் [சென்மம்
பொன்மிக வுடைய னுகிப் புகழான செட்டுச் செய்து;

24. ஜன்ம லக்னம் விருஷபமாக விருப்பதாலும், அந்நாமம் சொன்னேம். ஜாதகன் முற்பிறப்பைச் சொல்லுகின்றேம்; தாயே! கேள். தெற்குத் திசையில், பெண்ணை யாற்றங்கரை யோரமுள்ள ஊரொன்றில் தந்தைக்கு மூன்றும் பிறப்பாகப் பிறந்தான். செல்வம் மிகுதியாகப் பெற்று, கீர்த்தி யுண்டாக்கும் தொழில்கள் பலசெய்து;

25. அறமதி லிச்சை யுண்டாய் அச்சென்ம வினையில் லாமல்
மறலியின் நாடு சென்று மரையவன் வரையப் பட்டு
முருகர்த மடிமை வர்க்க முதிப்பனு மிந்தப் பாலன்
திருமகன் வறுமை காணுன் திரமா மனத்த னுகும்.

25. தருமத்தில் பற்று ஏற்பட்டு, அப்பிறப்பில் தீங்கு எவையுமில்லாமல், இயமனுலக மடைந்து, மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு, முருகனுக்குத் தொண்டு பூண்ட அடியார் குலத்தில் தோன்றுவான் இவன் தரித்திர மடையான். தைரியமுள்ள மனத்தினன்.

26. மாதுரு குணத்தைச் சொல்லுவோ மனமது தளர்ச்சி யுண்டு
சீதள முகத்தா ளாகும் செய்ந்நன்றி மறவா ளாகும்
ஓதுவாள் நல்ல வார்த்தை உத்தமி நடக்கை நன்மை
மேதினில் நல்லோ ளாகும் விசனமே காணு ளாகும்.

26. தாயின் குணத்தைச் சொல்லுவோம். மனத்தில் சோர்வுள்ளவள். குளிர்ச்சி பொருந்திய மனத்தினள். பிறர்செய்த உதவியை மறவாதவள். நல்ல சொற்களைச் சொல்லுவாள். நன்னடத்தை யுடையவள். உலகில் நல்லவள் என்று பெயரெடுப்பாள். துன்பமே காணாதவள்.

27. வந்துபின் பிறைபோல் யோகம் மருவிடு மென்று
[சொல்லுவோம்
தன்துணை யாண்பால் ரெண்டு சத்திமா ரவ்வார் தீர்க்கம்
நொந்தபோர்க் குதவி செய்வள் நிதானமாய் வார்த்தை
[கொள்வள்
கந்தனை ஈன்ற மாதே கழறுவோ மிவள்முன் சென்மம்.

27. இவள் வந்தபிறகு ஜாதகன் தந்தைக்கு வளர்பிறைச் சந்திரன் போல் யோகங்கள் பெருகும் என்று கூறுவோம். இவளுக்குச் சகோதரர் இருவரும், சகோதரிகள் இருவரும் பிறந்து தீர்க்கமாவர். துன்பமடைந்தவர்கட்கு உதவி செய்வாள். பணிவாகப் பேசுவாள். முருகப்பிரானைப் பெற்ற தாயே! இவள் முற்பிறவியைச் சொல்லுவோம்.

28. தோகையின் மலைக்குக் கீழ்ப்பால் செனித்தனள் பேரூர்
[தன்னில்
பாகமாய் முத்ரிய சேயாய்ப் பவமது வில்லா தாகி
ஆகம முணர்ந்தோர் தொண்டு அம்மையுங் கொண்டு
[மேதான்
ஏகினள் கால நாடு இறையவன் வரையப் பட்டு;

28. தோகைமலைக்குக் கிழக்கில் உள்ள பெரிய ஊரொன்றில், முத்ரிய குலத்தில் பிறந்தாள். தீவினையில்லாமல், வேதங்களை யுணர்ந்த சான்றோர் கட்குத் தொண்டு பூண்டு வாழ்ந்து மரண மடைந்தாள். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு;

29. பிரிதிவி தலத்தி லேதான் பிறந்தன ளென்று சொல்வோம்
வருஞ்சென்மம் வேங்க டத்தில் வருகுவா ளிக்கு லத்தில்
குருதிசைக் காலம் தன்னில் குழவிக்கு நாற்ப தாண்டில்.
கரிமத வாணைபெற்ற காதலி கேட்டி டாயே

29. காஞ்சிபுரத்தில் பிறந்தாள் என்று கூறுவோம். வரும் பிறவியில் திருவேங்கடத்தில் இக்குலத்தில் பிறப்பாள். யானைமுகக் கடவுளைப்பெற்ற தாயே! கேட்பாயாக. குரு மகா தசையில் அந்தாவது ஜாதகனின் நாற்பதாம் வயதில்;

30. அன்னைக்குக் கண்டம் மெய்து மாறஞ்சு மூன்று வாண்டில்
தந்தையி னுடல மேகும் செப்புவோம் பின்சென் மத்தை
மன்னிய தணிகை தன்னில் வருகுவான் சைவச் சேயாய்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

30. தாய்க்கு மரணம் உண்டாகும். முப்பத்து மூன்றும் வயதில் தந்தை மரண மடைவான். தந்தையின் மறு பிறவியைச் சொல்லுவோம். திருத்தணிகையில் சைவ குலத்தவனுய்ப் பிறப்பான். உயர்ந்த கணவனை யடைந்த பார்வதியே! கேட்பாயாக.

31. பாலகன் வயது சொல்வோம் பங்குதன் தசையந் தத்தில்
சாலவே யெழுப தாண்டில் தனுர்மாதங் கண்ட மெய்தும்
ஏலவே விவன்தன் சென்மம் இயம்புவோம் விரிஞ்சி
[தன்னில்
சீலமாம் வைசியச் சேயாய்ச் செனிப்பனு மென்று
[சொல்வோம்.

31. ஜாதகன் வயதளவைக் கூறுவோம். சனி மகா தசை முடிவில், எழுபதாம் வயதில், மார்கழி மாதம் மரண மடைவான். இவன் மறு பிறப்பைச் சொல்லுவோம். விரிஞ்சிபுரத்தில் ஒழுக்கமுள்ள வைசிய குலத்தவனுய்ப் பிறப்பான் என்று கூறுவோம்.

32. உதித்திடு காலந் தன்னில் உத்ராடம் கடைப்பா தத்தில்
கதிர்த்தசைத் திங்கள் நாலும் கழறினேம் பூர்வ பாகம்
மதிதசைப் பலனைச் சொல்வோம் வருந்துணை யல்லஞ்
[செய்தல்
விரதியாம் பிதாவு மேதான் மேதினி சேர்த லுண்டு.

32. ஜாதகன் பிறப்புக் காலத்தில் உத்திராடம் கடைசி பாதமாகும். சூரிய மகா தசையில் இருப்பு; நான்கு மாதங்கள். இவ்விதம் முதற் பாகங் கூறினேம். சந்திர மகா தசையின் பலன்களைச் சொல்லுவோம். உடன் பிறந்தோர் விருத்தி யுண்டாம். வீடு கட்டுவான். தந்தை சிறந் விரத முடையவனுக விளங்குவான். வீடு நிலங்கள் சேரும்.

ஜாதகம் 91

1. பிறைமீனம் சிங்கசேய் மேடம் புதன்புகர் காரி நந்தி
பரிதிபொன் வீணையாகப் பணிகோலி லிடபஞ் சென்மம்
உரைப்பீர்கள் பலனே யென்று உத்தமி கேட்கும் போது
பராசரும் புகலு கின்றார் பிறந்திடு மாண்பால் சென்மம்.

1. சந்திரன் மீனத்திலும், கேது செவ்வாய் மேஷத்திலும், புதன் சுக்கிரன் சனி விருஷபத்திலும், சூரியன் குரு மிதுனத்திலும், இராகு துலாத்திலும் தங்கி, ஜன்ம லக்கினம் விருஷபமாக விருந்தால் உரிய பலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதி கேட்கும்போது பராசர முனிவர் கூறுகின்றார். ஆண் மகன் தோன்றுவான்.

சந்திரன்	கேது செவ்வாய்	லக்கினம் புதன் சுக்கிரன் சனி	சூரியன் குரு
	இராசி சக்கரம்		
		ராகு	

2. இல்லமுங் கீழ்ப்பால் நோக்கம் யமனுத்ர வீதி யாகும்
வல்லிமா காளி தென்பால் வடதிசை யானை கோட்டம்
புல்கிடுந் தென்பால் சந்து பெருவயி றப்பன் மேல்பால்
எல்லையை யளந்தோ னுத்ர ஏழில்மாரி யருகில் தங்கும்.

2. இவன் வீடு தெற்கு வடக்கான வீதியில், கிழக்கு நோக்கிய வாயிலுடையது. காளிதேவி கோயில் தெற்கில் உள்ளது. வடக்குத் திசையில் யானைமுகத்தை யுடைய விநாயகர் ஆலய மிருக்கும். தெற்குப் பக்கத்தில் சந்து ஒன்று உளது. மேற்குத் திசையில் மற்றொரு விநாயகர் கோவிலும், வடக்கில் உலகை யளந்த திருமாலின் ஆலயமும் உள்ளது. சமீபத்தில் மாரியம்மன் கோவில் ஒன்றுண்டு.

3. இன்னமும் பலதே வாசம் இலகிய பேரு ராகும்
அன்னவன் கர்ண சேயாய் அருளுவா னென்று சொல்வோம்
மன்னவன் யோகந் தானு மவன்தந்தை தாயின் யோகம்
தன்துணை களத்திர புத்ரர் சாற்றுவோ முன்பின் சென்மம்.

3. இவ்வித அடையாளங்களுள்ள ஒரு பெரிய ஊரில், ஜாதகன் கருணீகர் மரபினனாகத் தோன்றுவான் என்றுரைப்போம். அவனுடைய யோகங்களையும், அவனுடைய தந்தை, தாய், உடன் பிறந்தவர்கள், மனைவி, புத்திரர் இவர்களுடைய யோகங்களைப் பற்றியும், முற்பிறப்பு மறு பிறப்பு ஆகிய இவற்றையும் சொல்லுவோம்.

வேறு

4. தந்தைதுணை பதினொன்றில் ஆண்பால் ரெண்டு
சத்தியுமே யவ்வாறுய்த் தீர்க்க மென்றோம்
நொந்திடுமே மற்றவெல்லாம் தந்தை சேதி
நுவலுவோம் சிவந்தமெய்யன் ஊகை சாலி
சிந்தையது விரண்டுமுண்டு பொருள்மே லிச்சை
செல்லுவான் மனைவிபக்கல் சிறப்பாய் வாழ்வன்
பந்தணிமார் மோகமுளன் பதரில் செல்லான்
பால்சேர்ப்பன் பலர்மெச்ச வாழ்வா னுமே.

4. தந்தையினுடன் பிறந்தவர் பதினொருவரில் இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் நீண்ட ஆயுளுள்ளவர்கள். மற்றவர் கிலையார். தந்தையின் செய்தியைச் சொல்லுவோம். சிவந்த மேனி, ஊக முடையவன். இருவித மன முள்ளவன். பொருள்கள் மீது விருப்ப முடையவன். மனைவியின் வர்க்கத்தாருடன் சேர்ந்து சிறப்புற வாழ்ந்து வருவான். பெண்கள் மீது மையலுடையவன். அற்ப காரியங்களில் மனத்தைச் செலுத்தாதவன். பால் பாக்கிய முடையவன். பலர் புகழும்படியான வாழ்க்கை நடத்துவான்.

5. ஆகுமே தந்தைத ஞஸ்தி காணுன்
அதிககல்வி பலர்வணங்க வவனும் வாழ்வன்
நாகரிக னுகவுளன் நடையும் நன்மை
நயப்பான வார்த்தையுளன் கோபங் காட்டான்
பாகமாய்ப் பேசிடுவான் வாத தேகி
படையில்செல்லான் சொல்வெற்றி பகவான் பத்தி
போகபாக் கியங்களுளன் பேதை யாலே
போசனமும் வறுமையிலான் சல்யம் காணுன்.

5. தன் தந்தையின் ஆஸ்தியில்லாதவன். மிகுந்த கல்வியறிவுள்ளவன். பலர கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். நாகரீகமான தோற்ற முள்ளவன். நன்னடக்கை யுடையவன். இனிமையாகப் பேசுபவன். கோபத்தை வெளி விடாதவன். கண்டித்துப் பேசும் தன்மை

யுள்ளவன். வாத சரீர முள்ளவன். போருக்குச் செல்லாதவன். பேச்சு வன்மை யுடையவன். தெய்வ பக்தி யுள்ளவன். மனோவியிலுல் போக பாக்கியங்கள் உடையவன். சாப்பாட்டிற்குக் குறை வில்லாதவன். கடன் படாதவன்.

வேறு

6. குலத்தொழில் புரிவா னுகும் குணமது விரண்டு முண்டு
புலவன்போல் மொழிவா னுகும் பேதையர் மோக னுவன்
திலகம்போல் பந்து கட்குத் தீரமா மனத்த னுகும்
பலர்மெச்ச வாழ்வா னுகும் பார்வதி கேட்டி டாயே.

6. தன் குலத் தொழிலையே செய்து வருவான். இருவிதமான குணங் களுள்ளவன். புலவன் போன்ற பேச்சு வன்மை யுடையவன். பெண்கள் மீது மைய லுள்ளவன். பந்துக்களுக்குப் பிரியன். தைரியமான மனத்தன். உலகத்தவர் புகழும்படி வாழ்க்கை நடத்துவான். பார்வதி தேவியே! கேளுங்கள்.

7. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளான் மாஞ்சி [வப்பன்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பான் கல்வி மானும்
உன்னத வார்த்தை சொல்வன் உறுதியா மனத்த னுமே.

7. இவ்வாறு சொல்லப்பட்ட குணங்களே யுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைச் சொல்லுவோம். அழ குள்ளவன். திருமாலைப் போன்ற நிற முடையவன். தன்னுடைய வார்த்தை மேன்மையானது என்று நிலைநாட்ட வல்லவன். மிகுந்த கல்வி யறிவுள்ள வன். உயர்ந்த நோக்கங்களுள்ள பேச்சுடையவன். திடமான மனத்தன்.

8. பலரையும் வசியங் கொள்வன் பரவுப காரனுவன்
குலத்தொழில் புரிவா னுகும் குண்டைகோ விருத்தி யுண்டு
கலகத்தைக் கூரு நெஞ்சன் காதலி மார்கள் மோகன்
நிலையதைக் காப்பா னுகும் நினைத்தகா ரியமு டிப்பன்.

8. எல்லோரையும் வசீகரிக்கும் தன்மையன். பிறருக்கு உபகாரி. தன் குலத் தொழிலையே செய்து வருவான். பசு, காளைகள் விருத்தி யுண்டு. கலகம் செய்வதற்கு இஷ்டப்படாத மன முள்ளவன். பெண்களின் மீது விருப்ப முடையவன். தன் நிலையிலிருந்து தாழ்வு ஏற்படாமல் காத்துக் கொள்ளுவான். எண்ணிய காரியங்களைச் செய்து முடிக்கும் வல்லமை யுடையவன்.

9. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வன் உண்மையை
[வெளிக்காட் டாதான்
பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் விருத்தி செய்வன்
துண்டமாய்க் கூரு னுகும் தொல்புவி செட்டுச் செய்வன்
வண்டிவா கனமு மேற்பன் வருணித்தோர்க் குதவி செய்வன்.

9: இனிய உணவை உட்கொள்ளுவான் உண்மையை (தன் மனத்தி லுள்ளவற்றை) வெளி விடாதவன். பல நாட்களாக வுள்ள பிதுரார்ச்சிதமான நிலங்களை விருத்தி செய்வான். கண்டித்துப் பேசாதவன். உலகில் வியா பாரம் செய்து வருவான். வண்டி முதலிய வாகனங்கள் அடைவான். தோத் திரம் செய்தவர்கட்கு உபகாரி.

10. இல்லமுஞ் செய்வா னுகும் ஏவலா ளுடைய னுகும்
அல்லலெப் போதுங் காணுன் அவசர மனமுங் கொஞ்சம்
சல்லியங் கொள்ளா னுகும் தன்பந்து மதிக்க வாழ்வன்
புல்லியோ ருறவு கொள்ளான் புகழது வேற்பா னுகும்.

10. வீடு கட்டுவான். வேலையாட்களை யுடையவன். துன்பங்கள் அடையாதவன். சிறிது அவசர புத்தி யுள்ளவன். கடன் படாதவன். உறவினர் கொண்டாடும் படியான வாழ்க்கை நடத்துவான். தீயோருடன் நட்புக் கொள்ளாதவன். நல்ல செல்வாக் குள்ளவன்.

11. பகைவரை நாசஞ் செய்வன் பணிதிபாத் திரங்கள் சேர்ப்பன்
உகமையாய் வார்த்தை சொல்வன் உரகன்போல் சினமுங்
[கொஞ்சம்
இகபரன் பத்தி பூண்பன் எதிரியை வசியங் கொள்வன்
தகமையாய்க் குடும்ப மேற்பன் தரித்திர மின்றி வாழ்வன்.

11. விரோதிகளை யொழிக்கும் திற னுடையவன். ஆடை யாபரணங் கள், பாத்திரங்கள் இவைகளைச் சேர்ப்பான். உவமானத்துடன் பேசும் குண முள்ளவன். ஸர்ப்பம் போல் கோபம் கொள்ளுவான். துறவிகளிடம் பக்தி யுடையவன். பகைவர்களை வசீகரிக்கும் தன்மையன். செழிப்புள்ள குடும்ப முள்ளவன். தரித்திர மில்லாமல் வாழ்ந்து வருவான்.

12. தன்துணை யாண்பால் ரெண்டு சத்திமா ரவ்வார் தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் பேசின வாண்பா லுந்தான்
முன்பின்னல் தோன்று மென்றும் முன்னவன் சேதி
[கேளாய்
கன்னென மொழியே சொல்வன் கல்விமான் பெருகை
[யோனே.

12. ஜாதகனுக்கு சகோதரர்க ளிருவரும், சகோதரிக ளிருவரும் தீர்க்கமா யிருப்பர். மற்றவர் நிலையார். நாம் கூறிய சகோதரரில் ஒருவர் முன்னும், மற்றவர் பின்னும் பிறப்பர். முன் பிறந்த சகோதரனின் செய்தியைக் கேளுங்கள். கரும்பைப் போல் இனிமையான சொற்களைப் பேசுபவன். கல்வி யறிவுடைமவன். பெருமை யுள்ளவன்.

13. நல்லவன் நல்ல வர்க்கு மிண்டர்க்கு மிண்ட னுவன்
சொல்லது விரண்டு முண்டு செல்லுவான் வெளியூர்
[சின்னாள்
சல்லியங் கொள்ளா னுகும் சனமது துணையால் நேரும்
வல்லியாம் பாரி ரெண்டு மருவிடு மென்று சொல்வோம்.

13. நல்லவர்களுக்கு நல்லவனுகவும், தீயவர்களுக்குத் தீயவனுகவும் நடந்து கொள்ளுவான். இருவிதமாகப் பேசுபவன். சின்னாட்கள் வெளியூர் சென்று வாழ்ந்து வருவான். கடன் வாங்காதவன். உடன்பிறந்தவர்களால் ஜனப் பெருக்க முண்டு. மனைவியர் இருவர் ஏற்படுவர் என்று கூறுவோம்.

14. சுதர்களு மாண்பா லொன்று தோகைய ரிருவ ராகும்
அதிபதி முதல்மா துக்கு மைந்தர்க ளின்றி நட்டம்
சதியிலா மறுது ணைக்குச் சந்ததி விருத்தி சொன்னேம்
அதிபதி யாக வேதான் அளகேச னெப்பாய் வாழ்வன்.

14. ஒரு மகனும் இரு மகளும் பிறப்பார்கள். இவனுடைய முதல் மனைவி புத்திர பாக்கியமின்றி இறந்து விடுவாள். கெட்ட மன்மில்லாத இரண்டாம் மனைவிக்குப் புத்திர பாக்கியம் உண்டு என்று கூறினேம். குபேரன் போல் மிக்க செல்வத்துடன் வாழ்ந்து வருவான்.

15. ஈகைவான் நுணுக்கந் தேர்வன் இன்பச்சொல் லுடைய
[னுகும்
பாகமாய்ப் பேசு வானும் பணிந்தோர்க்கு வுதவி செய்வான்
நாகரீ கங்க ளுள்ளான் நாதனர் பத்தி பூண்பன்
போகபாக் கியங்க ளுள்ளான் புண்ணியன் தீர்க்க சாலி.

15. கொடை யுள்ளவன். நுண்ணிய அறிவுடையவன். கண்டிப் பாகப் பேசுபவன். தன்னை வணங்கியவர்களுக்கு உபகாரம் செய்வான். நாகரிகமாக வாழ்க்கை நடத்துவான். சிவபெருமான் மீது பக்தி யுள்ளவன். போக பாக்கியங்களை அடைவான். புண்ணியசாலி. தீர்க்கமா யிருப்பான்.

16. பின்துணை சேதி சொல்வோம் பேச்சது விரண்டு மாகும்
பொன்பணி சேர்ப்பா னுகும் போசன வறுமை காணுன்
அன்னியர் மதிக்க வாழ்வன் ஆண்மையாய்க் குடும்ப
[மேற்பன்
தன்குலத் தொழிலுஞ் செய்வன் சாதிப்பான் சிலவே சங்கை.

16. ஜாதகனுக்குப் பின்பிறந்தவனின் செய்திகளைச் சொல்லுவோம். இருவித்மாகப் பேசவான். பொன்னுபரணங்களைச் சேர்ப்பான். போஜனத்தில் வறுமை யில்லாதவன். பிறர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். சிறப்புறக் குடும்பத்தை ஏற்று நடத்துவான். தன் குலத்தொழில் செய்து வருவான். சில சந்தேகங்களைத் தெளிவிப்பான்.

17. பாலகன் வயது தீர்க்கம் பத்தினி யொன்றே தீர்க்கம்
சாலவே சுதராண் ரெண்டு சத்திமார் மூவர் தீர்க்கம்
ஞாலங்கள் விருத்தி செய்வன் நற்கல்வி பொறுமை தந்த்ரம்
சீலம்போல் வெளிம யக்கன் தேவதாப் பணியுஞ் செய்வன்

17. அவனுடைய வயது தீர்க்கம். மனைவி யொருத்தியே. அவள் நீண்ட ஆயுளுடனிருப்பாள். இரு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் தோன்றி, தீர்க்காயுளுடனிருப்பார். விளைநிலங்களைப் பெருக்குவான். கல்வியறிவுள்ளவன். அடக்க முள்ளவன். தந்திரசாலி. கள்ளொழுக்க முடைய வன்போல் தோற்ற மளிப்பான். தெய்வத் திருப்பணிகளும் செய்வான்.

18. இன்னமும் சிலவே சேதி இயம்புவோ முத்தர பாகம்
மன்னவன் மணத்தின் கால மறைகின்றே மிருபான்
[ரெண்டில்
கன்னிகை தென்பால் நேருங் கழறுவோ மவள்கு ணத்தை
உன்னத வார்த்தை சொல்வாள் உயர்வான புத்தி யேற்பாள்.

18. இன்னும் மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுவோம். ஜாதகனின் திருமணக் காலத்தைக் கூறுவோம். இருபத்திரண்டாம் வயதில், தெற்குத் திசையிலிருந்து மனைவி வருவாள். அவளுடைய குணத்தைச் சொல்லுவோம். உயர்ந்த நோக்கங்கொண்ட பேச்சைப் பேசுபவள். உயர்வான புத்தியுடையவள்.

19. அன்னம்போல் வடிவு மொக்கும் அடாவடி கூறு ளாகும்
அன்னமு மன்பா யீவள் அடிசிலுக் கினிய ளாகும்
அன்னியர் குற்றஞ் சொல்லாஞ் ஆளன்தன் மனத்துக்
[கேற்றோள்
அன்னவள் யோக சாலி அரிமனை யொப்ப தாகும்.

19. அன்னம் போன்ற மென்மையான் சரீர முள்ளவள். அடாவடியாகப் பேசாதவள். பிறருக்கு அன்புடன் அன்ன மளிப்பாள். உருசியாகச் சமைக்கத் தெரிந்தவள். பிறர் மீது குற்றம் சொல்லாதவள். கணவன் மனத்துக்குத் தகுந்தவள். அதிருஷ்ட முள்ளவள். இலக்குமீ போன்ற அழகுள்ளவள்.

20. பால்பாக்ய முடைய ளாகும் பசித்தோர்க்குத் தாக மீவள்
சீலியாம் புத்தி மானும் சிந்தையும் நல்ல தாகும்
காலத்தை யறிந்து ரைப்பள் காதலி தீர்க்க சிவி
ஆலத்தை யுண்டோன் தேவி அறைந்தன மொழிகுன்
[ருவே.

20. பால் பாக்கிய முள்ளவள். பசியென்று வந்தவர்களுக்கு அன்புடன் அன்னமும், தாகத்துக்குத் தண்ணீரும் அளிப்பாள். நல்லொழுக்கமுடையவள். புத்திமான். நல்ல மன முள்ளவள். காலத்தைத் தெரிந்து வருவனவற்றை முன் கூட்டிச் சொல்லும் திறனுடையவள். அவள் தீர்க்கமாக இருப்பாள். கொடிய விஷத்தையுண்ட சிவபெருமானின் தேவியே! சொன்ன சொற்கள் தவரு.

21. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மாண்பா லொன்று
சத்திமார் மூவர் தீர்க்கம் செயமுனி மறுத்துச் சொல்வார்
எத்தகைப் பலத்தி னுலே இயம்பினீ ரந்தச் சங்கை
பத்தினுக் குடையோ னுகிப் புதன்புகர் கூடி நிற்க;

21. புத்திர பாக்கியத்தைச் சொல்லுவோம். ஆண் மகன் ஒருவனும் பெண் மக்கள் மூவரும் தீர்க்கமாக விருப்பார். ஜயமுனி தடுத்துச் சொல்லுகின்றார். எந்தப் பலத்தினுல் அவ்வாறு புத்திர விருத்தி சொன்னீர்கள்? பத்தாமிடத்துக் குரியவனுன சனி லக்கினத்தில் புதனுடனும், ஆட்சியாயிருக்கும் சுக்கிரனுடனும் கூடி யிருப்பதாலும்;

22. பொன்னவ னிரண்டில் தங்கப் புகன்றனம் புத்ர விருத்தி
இன்னவள் முன்சென் மத்தை இயம்புவோ முனியே
[கேளும்
தென்திசை யாழி தன்னில் செனித்தனன் வேளா னுக
உன்னதக் குடும்பி யாகி உயர்வோர்கள் பத்தி பூண்டு;

22. குரு இரண்டா மிடமாகிய மிதுனத்தில் இருப்பதாலும், புத்திரபாக்கியம் சொன்னேனும். ஜாதகனுடைய முற்பிறவியைப் பற்றிச் சொல்லுவோம். முனிவரே! கேளுங்கள். தெற்குச் சமுத்திரத்துக்கு அருகிலுள்ள ஊரில், வேளாளனுகப் பிறந்து உயர்ந்த குடும்பங்கள் எற்பட்டு, பெரியோர்களிடம் பக்தி கொண்டு;

23. அறமதி லிச்சை யுண்டாய் அதிதிகட் கன்ன மீந்து
மறலியின் நாடு சென்று மறையவன் வரையப் பட்டுப்
பெருமையா யிக்கு லத்தில் பிறப்பனு மிந்தப் பாலன்
உரைக்கின்றே மிவனின் யோகம் உத்தமி கேட்டி டாயே.

23. தருமத்தில் விருப்ப மேற்பட்டு, தவசிகளுக்கு அன்ன மளித்து, பிறகு மரண மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டுப், பெருமை யுடன், இப் பிறவியில், இந்தக் குலத்தில் பிறந்தான். இவனுடைய யோகத் தைக் கூறுகின்றேம், தாயே! கேளுங்கள்;

24. தரணியைப் பரிபா லிப்பன் தனமது பெருக்கஞ் செய்வன்
உறன்முறை மதிக்க வாழ்வன் உயர்வான குடும்பி யாவன்
பறைபள்ளு முடைய னுகும் பணிந்தோரை யாத ரிப்பன்
அரசர்க்கு விவன்சொல் மேன்மை அறமதி லிச்சை யுண்டு.

24. பூமியை ஆளும் அதிகார முடையவன். செல்வங்களை விருத்தி செய்வான். பந்துக்கள் கொண்டாட வாழ்ந்து வருவான். உயர்ந்த குடும் பத்தை அடைவான். பள்ளர் பறையர்கள் உள்ளவன். தாழ்ந்தவர்களைக் காப்பான். அரசர்கள் இவன் சொற்களுக்கு மதிப்பு வைப்பர். தருமத்தில் விருப்ப முள்ளவன்.

25. யோகமெவ் விதமாய்ச் சொன்னீர் உரைப்பீர்க ளந்தச்
[சங்கை
பாகனுங் காரி வெள்ளி பற்றிடஞ் சென்ம மாக
ஆகம னிரண்டி லாக அரவுமே யாறில் தங்கத்
தோகையாம் வேசி யோகம் துரகத யோக மொன்று.

25. யோகங்கள் எற்படும் என்று எப்படிக் கூறினீர். காரணத்தைச் சொல்லுங்கள். புதன் சனி சுக்கிரன் மூவரும் இலக்கினத்திலும், குரு இரண்டாமிடத்திலும் ராகு ஆறு மிடத்திலும், இருப்பதால் "வேசி யோகம்" ஒன்றும் "துரகத யோகம்" ஒன்றும்;

26. தருமகர் மாதி யோகம் சாந்திடும் பால னுக்குக்
குறைவிலாச் செல்வ மென்றேம் குலமதிப் போடு வாழ்வன்
பொருள்கடன் கொள்ளா னுகும் போசன வறுமை காணுன்
பெரும்புக ழேற்பா னுகும் புதல்வனுந் தீர்க்க சீவி.

26. "தர்ம கர்மாதி யோகம்" ஒன்றும் ஆகிய இவைமூன்றும் ஜாதக னுக்கு ஏற்படும். நிறைந்த செல்வங்கள் பெற்றவன். தன் இனத்தவரால்

மதிக்கப்பட்டு வாழ்ந்து வருவான். கடன் வாங்காதவன். உணவில் தரித்திர மில்லாதவன். மிகுந்த செல்வாக் குடையவன். நீண்ட ஆயு ளுள்ளவன்.

27. மாதுரு குணத்தைச் சொல்வோம் மனமது கபடு மில்லாள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உறுதியில் லாத நெஞ்சம்
பாதக மனமில் லாதாள் பஞ்சைமே லிரக்க மாவள்
சூதிலாள் சிவந்த மேனி தோழன்தன் மனத்துக் கேற்றோள்.

27. தாயின் குணத்தைச் சொல்லுவோம். கபடமில்லாத மன முடையவள். இனிமையாகப் பேசுவாள். திடமற்ற மனத்தினள். மனத்தில் கெட்ட எண்ணங்க ளில்லாதவள். ஏழைகள் மீது அன்புடையவள். சூதில் லாதவள். சிவந்த உடல். கணவன் மனத்திற்கு ஒப்ப நடக்க வல்லவள்.

28. மங்கையும் யோக சாலி மறுத்துரை யதிகங் கூறுள்
திங்கிடும் காது மந்தம் தாயில்லம் வாச மாகும்
அங்கவள் துணையும் காணுள் அறிவிப்பீ ரந்தச் சங்கை
திங்கட்கு மூன்றில் காரி சேர்ந்ததால் சொன்னேம் யாங்கள்.

28. ஜாதகனின் தாய் அதிருஷ்ட முள்ளவள். எதிர்த்துப் பேசும் குணமில்லாதவள். சிறிது காது செவிடு. தன் தாயின் வீட்டில் வசிப்பாள். தன்னுடன் பிறந்தவர்க ளில்லாதவள். அவ்வாறு ஏற்படுவதற்குரிய தோஷத்தைச் சொல்லுங்கள். சந்திரன் இருக்கு மிடமாகிய மீனத்துக்கு, மூன்று மிடமாகிய விருஷபத்தில் சனி இருப்பதால், நாங்கள் அங்ஙன முரைத்தோம்.

29. முன்சென்ம மாலங் காட்டி லுதித்தனள் முதற்கு லத்தில்
பொன்பணி யுடைய ளாகிப் புத்திர ரதிக முண்டாய்
அன்னவள் வாழு நாளில் அணுகின வினையைக் கேண்மோ
கன்னிகை யொருத்தி பேரில் கழறுறு வார்த்தை சொல்ல;

29. மேலும், முற்பிறவியில், திருவாலங்காட்டில், அந்தணர் குலத்தில் பிறந்தாள். பொன், ஆபரணங்கள் முதலியன உடையவளாய் புத்திர பாக்கியங்கள் பெற்று, அவள் வாழ்க்கை நடத்தி வரும்போது ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஒரு பெண்மீது அபாண்டமான பழிச் சொல்லைக் கூறி;

30. மாதுவும் வெட்க முற்று வறைந்தசா பத்தைக் கேண்மோ
பாதக வார்த்தை யென்மேல் பகர்ந்திட்ட பாவிக் கேதான்
மேதினில் பின்சென் மத்தில் விளங்காரே துணைவர் தாமும்
காதுமே மந்த மாயுங் காசினி தன்னில் வாழ்வாள்.

30. அப்பெண்ணும் மனத்தில் துன்ப மடைந்து கூறின சாபத்தைக் கேளுங்கள். அடாத வார்த்தை என் மீது சொன்ன பாவி, உலகில் ஏற்படும் மறு பிறவியில், உடன்பிறந்தா ரில்லாமல், காது செவிடாகி, காச நோயுடன் வாழ்வாள் என்றும்;

31. இன்னமும் பலவார் சொன்னுள் எய்திற்று வந்தச் சாபம்
கன்னிக்கு வந்தி யத்தில் காசங்கள் கண்டு மேதான்
தென்கால நாடு சென்று சிரநான்கோன் வரையப் பட்டு
இங்கிலந் தனிலு தித்தாள் எய்திடும் முன்னூழ்த் தோடம்.

31. இன்னும் பலவிதமாகவும் சொல்லிச் சென்றுள். அந்தச் சாபம் இவளை (ஜாதகனுடைய தாயை) அடைந்தது. காச நோய் கடைசிக் காலத்தில் ஏற்பட்டு, அதனால் மரண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இவ்வுலகில் பிறந்தாள். முற்பிறவியில் செய்த தீவினை இவளை அணுகிற்று.

32. உடன்துணை யில்லா ளாகும் உரைக்கின்ற ரத்திரி தாமும்
மடமையில் முன்சென் மத்தில் மறைக்குல முதித்தா
[ளென்றீர்
அடைவுட னிச்சென் மத்தில் அவள்குலந் தாழ்வ தென்ன
விடவிழி முன்சென் மத்தில் விரதங்கள் முற்றச் செய்யாள்.

32. அதனால் உடன்பிறந்த சகோதரர் இல்லாதவளாகி விடுவாள், முனிவர் கேட்கின்றார். இவள், முற்பிறவியில் அந்தணர் குலத்தவளாகப் பிறந்தவள் என்று சொன்னீர். இப்பிறவியில் தாழ்ந்த குலத்தில் பிறக்கக் காரணம் என்ன? அவள் முற்பிறவியில் நோன்புகள் ஒன்றும் நிறைவாகச் செய்யவில்லை.

33. ஆகையால் குலந்தாழ் வாச்சு அன்னையால் சுகமு மில்லாள்
ஏகமாய் வாழ்வா ளாகும் இயம்புவோ மிவள்பின் சென்மம்
தோகையின் மலைக்கு மேற்பால் சிறுவூரி லருகர் வர்க்கம்
பாகமா யுதிப்பா ளாகும் பார்வதி கேட்டி டாயே.

33. ஆகையால் தாழ்ந்த குலத்தில் பிறந்தாள். தன் தாயினால் சுகங்களில்லாதவளாகி, தனியாகவே வாழ்ந்து வருவாள். இவள் மறுபிறவியில்,

தோகை மலைக்கு மேற்குப் பக்கத்திலுள்ள ஒரு சிற்றூரில், சமணகுலத்தில் பிறப்பாள் என்று சொல்லுவோம். தாயே! கேளுங்கள்.

34. தந்தைமுன் சென்மஞ் சொல்வோம் தாமிர வருணி தன்னில்
நிந்தைசெய் வைசியச் சேயாய் நேர்ந்துமே செட்டுச் செய்து
மூந்தினேர் தொண்டு பூண்டு முயர்வான சேது சென்றும்
அந்தவன் வினையில்லாமல் அணுகினன் கால நாடு.

34. ஜாதகன் தந்தையின் முற்பிறவியைச் சொல்லுவோம். தாமிர வருணி நதிக்கருகில், உள்ளதொரு ஊரில், வைசிய மரபினனாகத் தோன்றி, வியாபாரங்கள் செய்து, அந்தணர்களைப் பூசித்து, உயர்ந்த சேது ஸ்நானம் முதலியன செய்து, பாவங்களின்றி இறந்தான்.

35. வேதனுல் வரையப் பட்டு விளங்கினு னிவனே யென்றும்
ஓதுவோ மிவன்பின் சென்மம் உயர்காஞ்சி தன்னி லேதான்
மாதவக் குலமு திப்பான் மறுத்துமே வத்திரி சொல்வார்
கோதிலா விச்சென் மத்தில் குறையது சிலர்க்குச் செய்தான்.

35. பிறகு வேதங்களறிந்த பிரமனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவன் இவன் என்று சொன்னோம். இவனுடைய மறு பிறப்பு, புகழ்பெற்ற காஞ்சி புரத்தில், தவங்கள் மிகுதியாக இயற்றும் அந்தணர் குலத்தில் ஏற்படும். அத்திரி முனிவர் இடைமறித்துச் சொல்லுகின்றார். இப் பிறவியில் சிலருக் குத் தீன்பங்கள் செய்தான்.

36. பின்சென்ம மறைக்கு லத்தில் பிறக்குங்கா ரணங்கள்
[சொல்வீர்
அன்னவ னிச்சென் மத்தில் அற்புதக் கல்வி யாலும்
தன்மனம் தெய்வ பக்தி செய்வதா லுதிப்பா னுகும்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

36. அங்ஙனமிருக்க மறு பிறவியில் அந்தணர் குலத்தில் பிறக்கும் காரணம் என்ன? அதனைச் சொல்லுவீர். அவன், இப் பிறவியில் சிறந்த கல்வி யறிவுடனிருப்பதாலும், தெய்வ பக்தி கொண்டிருப்பதாலும் அந்தணர் மரபில் பிறப்பான். உயர்ந்த கணவனை யடைந்த தாயே! கேளுங்கள்.

37. ஆறுறு வீரண்டு வாண்டில் அணுகிடும் தந்தை கண்டம்
தீரமாய் நாற்ப தாண்டில் செப்புவோ மன்னை கண்டம்
மாரனுக் கறுபா னெட்டில் மார்கழி மாதந் தன்னில்
கூறுவோங் கண்ட மொன்று குறித்தன மொழிகுன் முவே.

37. ஜாதகனின் முப்பத் தெட்டாம் வயதில் தந்தைக்கு மரணம் ஏற் படும். ஜாதகனின் நாற்பதாம் வயதில் அன்னை மரண மடைவாள். அறுபத் தெட்டாம் வயதில் மார்கழி மாதம் ஜாதகனுக்கு மரணம் உண்டாகும். கூறிய சொற்கள் தவறு.


38. மறுசென்மம் வள்ளுர் தள்னில் மறைக்குல முதிப்பா ணுகும்
திருமகன் சென்ன காலம் சனிதசை யாண்டு வொன்று
உரைத்தனம் பூர்வ பாகம் உரைக்கின்றேம் பின்பால் சேதி
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

38. மறுபிறவி, திருவள்ளூரில் அந்தணர் குலத்தில் பிறப்பான். ஜாதக னின் ஜனன காலத்தில் சனி மகா தசை ஒரு வருஷம். இங்ஙனம் முதல் பாகத்தைச் சொன்னேம். பிற்பாகத்தில் மற்ற விபரங்கள் சொல்லுவோம். வேதங்களின் முடிவில் விளங்கும் தாயே! கேளுங்கள்.

ஜாதகம் 92

1. பிறைபுதன் பானு வெள்ளி புக்கிடம் நந்தி யாகக்
கரியவன் ராகு சாடி கனகனுந் தனுசு வாகத்
தரைமகன் மான தாகச் சிகியீயம் நந்தி சென்மம்
உரைப்பீர்கள் பலனே யென்று உத்தமி கேட்கும் போது;

1. சந்திரன் புதன் சூரியன் சுக்கிரன் விருஷபத்திலும், சனி ராகு கும்பத்திலும், குரு தனுசிலும், செவ்வாய் மகாத்திலும், கேது சிம்மத்திலும் தங்கி, ஜன்ம லக்கினம் விருஷபமாக விருந்தால் உரிய பலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதி தேவி கேட்கும்போது;



2. தென்முனி புகலு கின்றார் செனித்திடு மாண்பால் சென்மம்
அன்னவ னில்லஞ் சொல்வோம் அந்தகன் வாச லாகும்
உன்னத நகர மாகும் உயர்வான மஸ்தான் மேற்கில்
மன்னர்கள் வாச மாகும் மடங்களு மனேக முண்டு.

2. அகத்திய முனிவர் சொல்லுகின்றார். ஆண் பிறப்பு ஏற்படும் பிறப்பவன் வீட்டைக் கூறுவோம். தெற்குப் பார்த்த வாயிலை யுடையது. உயர்ந்த பட்டணமாகும். மேன்மையுடைய மகமதியர் பள்ளிவாசல் மேற்கில் உளது. அரசர்கள் வாசம் செய்யுமிடம். மடங்கள் பல அங்கு உள்ளன.

3. வடமேல்பா லீசன் கோட்டம் மாகாளி தென்கீ ழாகும்
அடைவுடன் பலதே வாசம் அநேகவா லயங்க ளுண்டு
குடதிசைத் தீர்த்த முண்டு கூறுமிவ் வடையா ளத்துள்
திடமுள சம்பு கோத்திரம் சேயனு முதிப்பா னுகும்.

3. வீட்டுக்கு வடமேற்கில் சிவபெருமான் கோயில். காளிதேவி கோயில் தென்கிழக்குத் திசையில் உளது. இன்னும் பல தேவர்கள் வாசம் செய்யும் கோயில்கள் அந்நகரில் உள்ளன. மேற்குத் திசையில் நீர் நிலை யொன்றுண்டு. சொல்லப்பட்ட இவ்வடையாளங்களுள்ள விடத்தில் ஐம்பு கோத்திரத்தில் ஜாதகன் தோன்றுவான்.

4. இன்னவன் சென்ன யோகம் எழில்பெறுந் தந்தை யோகம்
அன்னையின் துணைவர் யோகம் அவன்மனை புத்திர யோகம்
முன்பின்சென் மங்கள் யாவு முரைக்கின்றே மிந்நூல்
[தன்னில்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

4. இந்த ஜாதகன் பிறப்புக் காலத்தில் உள்ள யோகங்கள், அழகிய தந்தை, தாய், உடன்பிறந்தார், ஜாதகனுடைய மனைவி, புத்திரர் முதலான வர்களின் யோகங்கள், முற்பிறப்பு மறு பிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இத்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுகின்றோம். உயர்ந்த கணவனை யடைந்த பார்வதியே! கேட்பாயாக.

5. தந்தையின் துணையாண் நான்கு சத்தியு மொருத்தி
[யென்றோம்
அந்தவர் வேறுய்ச் செல்வர் அவர்சேதி பின்பால் சொல்வோம்
இந்தவன் தந்தை சேதி இயம்புவோ மால்நி றத்தான்
விந்தையாய்ப் பேசு வானும் வீண்வம்பு செல்லா னுகும்.

5. ஜாதகனின் தந்தைக்குச் சகோதரர் நால்வரும் சகோதரி யொருத் தியுமாவர் என்று சொன்னோம். சகோதரர்கள் வேறு குடும்பமாகச் செல்லு வர். அவர்கள் செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுவோம். இவன் தந் தையின் செய்தியைச் சொல்லுவோம். கரிய நிற முள்ளவன். வேடிக்கை யாகப் பேசுவான். வீண் வம்புகளுக்குப் போக மாட்டான்.

6. பலருக்கு வில்லஞ் செய்வன் பாருக ளற்ப மூண்டு
நலமுடன் கூலி செய்வன் நயம்படக் கூறு வானும்
தொலைவினில் நடக்க வல்லன் சோம்பிடான் காரி யத்தில்
பலமிலாக் குடும்பம் பூர்வம் பொய்யது புகலா னுகும்.

6. மக்கள் பலருக்கு வீடு கட்டிக் கொடுப்பான். நிலபுலன்கள் சொற்ப மாக உள்ளவன். கூலிவேலை செய்வான். நயமாகப் பேசுவான். வெகு தூரம் நடந்துசெல்லும் ஆற்றல் படைத்தவன். காரியங்கள் செய்வதில் சோம்பலில்லாதவன். முதலில் குடும்பம் பலமில்லாமல் இருக்கும். பொய் சொல்ல மாட்டான்.

7. வஞ்சகர் வஞ்ச ணுகும் மருமமுங் கொஞ்ச முண்டு
அஞ்சின வார்த்தை கூறுன் அறுமுகன் நாமங் கொண்டோன்
செஞ்சொலி னுணுக்கஞ் சொல்வன் திகைத்தோர்க்கு வுதவி
[செய்வன்
கஞ்சமாம் ரேகை யுண்டு காலிகள் பலித மில்லான்.

7. வஞ்சனைக் குணம் உள்ளவர்களிடம், இவனும் வஞ்சகனுகவே பழகுவான். மனத்தில் மர்மம் சிறிது உண்டு. பிறருக்குப் பயந்து பேச மாட்டான். சுப்பிரமணியக் கடவுள் பெயரைக் கொண்டவன். சிறந்த தமிழ்ச் சொற்களிலுள்ள நுட்பங்களை யாராய்ந்து விளக்குவான். கதியில்லாது வருத்துபவருக்கு உபகாரங்கள் செய்வான். இவன் கையில் பத்ம ரேகை யுண்டு. கால்நடைகள் விருத்தி யில்லாதவன்.

8. கடன்கொளா னிடுக்க மில்லான் காரியச் சமர்த்த ணுகும்
விடவாக்குச் சீல ணுவன் வித்தையுஞ் சமம தாகும்
தடபுடல் செய்கை யுண்டு தாட்சிணியன் கனத்த புத்தி
படைசெலான் சொல்லில் வெற்றி பணிந்தோரை யாத
[ரிப்பன்.

8. கடன் வாங்க மாட்டான். துன்ப மில்லாதவன். செயல்கள் செய்வதில் சாமர்த்திய முடையவன். விஷம்போல் கொடிய வாக்குடையவன். ஒழுக்க முள்ளவன். சுமாரான கல்வி யுள்ளவன். ஆடம்பரச் செயல்களுடையவன். தாட்சிணிய முள்ளவன். பெரும்புத்தி யுடையவன். படைகளில் சேர்ந்து சண்டைக்குச் செல்லாதவன். சொன்ன சொற்கள் பலிதமாம். வணங்கியவர்களைக் காப்பான்.

9. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவானிந்தப்
[பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளா னிருநி
[றத்தான்
தன்னுடல் மெலிவு முண்டு சாந்தமுங் கோப மேற்பன்
அன்னியர் மதிக்க வாழ்வன் அறுமுகன் பக்தி கொள்வன்.

9. சொல்லப்பட்ட இவ்விதக் குணங்களையுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் புதல்வனுகப் பிறப்பான். இவன் குணங்களைச் சொல்லுவோம். அழகுடையவன். கரிய நிற முள்ளவன். மெலிந்து நீண்ட உடலுடைய வன். கோப மடைவான். பின்பு சாந்த முறுவான். அயலார் பாராட்டும் படி வாழ்வான். சுப்பிரமணியக் கடவுள்மீது பக்தியுட னிருப்பான்.

10. கல்வியுஞ் சமம தாகும் கருதிடான் கட்டு வார்த்தை
இல்லறங் கூலி யாக எய்துவான் சிலர்க்கு வென்றேரும்
வல்லியர் மோக னுவன் மனமது கபடு மில்லான்
சொல்லதைக் காப்பா னுகும் துன்பங்க ளெவர்க்கு
[மெண்ணுன்.

10. சமமான கல்வியுள்ளவன். சொற்களைப் புனைந்து சோல்ல நினை யான். சிலர் வீடுகளில் கூலிவேலை செய்வான் என்று சொன்னேரும். பெண் கள்பால் மோக முடையவன். மனத்தில் வஞ்சனை யில்லாதவன். சொன்ன சொல்லைக் காப்பான். எவருக்கும் துன்பம் செய்ய நினையான்.

11. கரமதில் வீணை ரேகை காகுத்தன் ரேகை யுண்டு
உறைந்திடும் பித்த சூடு உறுதியா மனத்த னுகும்
விரைவினில் நடக்க வல்லன் விளைபுலம் விருத்தி செய்வன்
தறிபடக் கூரு னுகும சங்கரி கேட்டி டாயே.

11. இவன் கையில் வீணை ரேகை யுண்டு. காகுஸ்த ரேகை யொன்று முளது. இவன் உடலில் பித்த சூடு பொருந்தி யிருக்கும். திடமான மனத் தினன். வேகமாக நடப்பதில் வல்லவன். விளைநிலங்களை விருத்தி செய் வான். கண்டிப்பாகப் பேசமாட்டான். பார்வதியே! கேட்பாயாக.

12. தன்துணை முன்னு ணென்று தங்கும்பி னுண்பால் மூன்று
கன்னிமார் தோட மெய்தும் காளைகள் சின்னு ளொன்றுய்
அன்னவர் வாழ்வா ராகும் அந்தணன் தசையந் தத்தில்
இன்னவர் வேறுய்ச் செல்வர் இயம்புவோம் பின்பால் சேதி.

12. இவனுக்கு முன்பிறந்த சகோதரன் ஒருவன். இவனுக்கு இளைய சகோதரர் மூவர். சகோதரிகள் தோன்றி நஷ்டமாவர். சகோதரர் சில காலம் இவனுடன் சேர்ந்து வாழ்வர். ஜாதகனுக்குக் குரு மகா தசை முடி வுக் காலத்தில் சகோதரர்கள் பிரிந்து வேறு குடும்பமாகப் போவார்கள். அவர்கள் செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுவோம்.

13. பத்தொன்ப தாண்டு தன்னில் பாவையுந் தென்பால் திக்கில்
விததகன் மணங்க ளெய்தும் விளம்புவோ மிவள்கு
[ணத்தை
உத்தமக் குணத்தா ளாகும் உறுதியா மனத்தி ளாகும்
சித்தமே காப்பு மில்லாள் சிலியாம் விரத மேற்பள்.

13. ஜாதகன், பத்தொன்பதாம் வயதில், தன்னூருக்குத் தென்திசை யிலுள்ள ஓரிடத்திலிருந்து பெண்ணொருத்தியை மணப்பான். அவள் குணங்களைச் சொல்லுவோம். நற்குண முடையவள். திட மனமுள்ளவள்.

மனத்தில் வஞ்சனை யில்லாதவள். ஒழுக்க முள்ளவள். விரதங்களை அநுஷ்டிப்பாள்.

14. மாதுவும் வந்த பின்பு வரனுக்கு யோகம் சொன்னேனும்
தீதான குணமில் லாதாள் சிக்கிரக் கோபம் சாந்தம்
மேதினில் நல்லோ ளாவள் வீண்வம்பில் செல்லா ளாகும்
சாதிப்பள் சிலவே சங்கை சத்தியும் தீர்க்க சிவி.

14. மனைவி வந்த பிறகு கணவனுக்கு யோகங்களுண்டாம் என்று கூறினேம். கெட்ட குணமில்லாதவள். விரைவில் கோபம் கொண்டு, பின்பு சாந்தமடைவாள். உலகில் நல்லவளாக விளங்குவாள். வீண் வம்புக்குப் போகமாட்டாள். சில சந்தேகங்களைத் தீர்ப்பாள். தீர்க்கமான வயதுடையவள்.

15. சுதனுக்கு வாண்பால் ரெண்டு தோகையர் மூவ ராகும்
பதராகு முதலி லென்றேரும் பராசரும் மறுத்துச் சொல்வார்
எதுவிதக் கார ணத்தால் இயம்பினீர் முதலில் புத்ரர்
புதனேந்தா மிடத்தோ னுகிப் பொருந்திடஞ் சென்ம மாக;

15. ஜாதகனுக்கு, புத்திரர் இருவரும், பெண்கள் மூவரும் தோன்றுவர். முதலில் இரண்டு தோன்றி அழியும் என்று கூறினேம். பராசரமுனிவர் மறுத்துச் சொல்லுவார். என்ன காரணத்தினால் முதலில் புத்திர தோஷம் ஏற்படும் என்று கூறினீர்கள். புதன் ஐந்தாமிடத்துக் குரியவனுகி, லக்கினத்தில் தங்கி யிருப்பதால்;

16. சொல்லினே மந்தச் சங்கை செப்புவோ மிவன்முன்
[சென்மம்
எல்லையி லுயர்வ தான எழிலுள் காளாத்தி தன்னில்
புல்கினன் முத்ரிய னுகப் புகழான குடும்பந் தன்னில்
வல்லியு மதலை யுண்டாய் வாழ்நாளில் வினையைச்
[சொல்வோம்.

16. முதலில் தோன்றும் புத்திரர்கட்குத் தோஷ மேற்படும் என்று சொன்னேம். ஜாதகன் முற்பிறவியைச் சொல்லுவோம். ஸ்தலங்களில் உயர்ந்ததான திருக்காளத்தியில் முத்ரிய வம்சத்தவனுக்கு, கீர்த்திபெற்ற குடும்ப மொன்றில் பிறந்தான். மனைவி மக்களை யடைந்து வாழுகின்ற காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுவோம்.

17. பலர்செல்லு மார்க்கந் துற்றுன் பற்றிற்று வதுவோர்
[தோடம்
நலமுள வாவின் பாலை நாயக னறக்க றந்தான்
குலவிற்று வதுவோர் தோடம் குமரனு மந்தி யத்தில்
நிலையிவார்க குதவி செய்து நீத்தோர்க்கு வன்ன மீந்து;

17. பலரும் செல்லுகின்ற சாலை வழியை யடைத்தான். அஃது ஒரு தோஷம் ஏற்பட்டது. பசும்பாலை, கன்றுக்கு விடாமல் முழுவதும் கறந்து விட்டான். அந்தத் தோஷ மொன்று ஏற்பட்டது. இவன் கடைசிக் காலத்தில், கதியற்ற ஏழைகட்கு உபகாரங்கள்செய்து, துறவிகட்கு உணவளித்து;

18. அறமதி லிச்சை யுண்டாய் அந்தகன் நகரஞ் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
உலவிடு முன்னூழ்த் தோடம் உதித்தசேய் முதலில் நட்டம்
மலியிறை மகளே யாங்கள் வழுத்தின மொழிகுன் றுது.

18. தருமம் செய்வதில் ஆசை ஏற்பட்டு, மரண மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இக்குலத்தில் பிறப்பான் இவன். முற்பிறப்புத் தோஷங்கள் இவனை யடையும். அதனுல் முதலில் பிறந்த குழந்தைக்கு நஷ்ட மேற்படும். பர்வதராஜன் புதல்வியே! நாங்கள் கூறிய சொற்கள் தவறு.

19. வந்தவன் யோகச் சேதி யறைகின்றே மினிமே லாகத்
தன்தன முடைய னுகும் சல்லியப் பாதை யேற்கான்
மூந்திநாள் பூமி கொஞ்சம் முதல்வன்பின் சேர்ப்பா னுகும்
சிந்தையு நல்ல தாகும் திருப்பணிக் குதவி செய்வன்.

19. இனி, ஜாதகன் யோக விவரங்களைச் சொல்லுகின்றேம். சொந்த முயற்சியால் சம்பாதித்த பொருளுடையவன். கடன் தொந்தரவு அடையான். முன்னேர் நாளைய நிலபுலன்கள் சிறிதுண்டு. இவற்றோடு மேலும் ஜாதகன் சேர்ப்பான். நல்மன முடையவன். கோயில் திருப்பணிகளுக்கு உதவி செய்வான்.

20. இருபது வாண்டு மேலாய் இளம்பிறை போலே யோகம்
பெருகியே வறுமை காணுன் பொருள்கடன் கொள்ளா
[னுகும்
உரைக்கின்றே முப்பான் நான்கு ஆண்டுமே லுயர்வாம்
[யோகம்
தரையினில் பொருளும் நேரும் சஞ்சல மின்றி வாழ்வன்.

20. இருபது வயதுக்கு மேல் பிறைச்சந்திரன் போல் இவனுக்கு யோகங்கள் பெருகும். தரித்திரமில்லாதவனுவான். கடன் வாங்க மாட்டான். மூப்பத்து நான்காம் வயதுக்கு மேல் யோகம் உயரும் என்று சொல்லுகின்றோம். பூமியிலிருந்து புதையல் கிடைக்கும். துன்பமின்றி வாழ்வான்.

21. சாதகன் தனக்கு யோகம் சார்ந்தகா ரணங்கள் சொல்வீர்
ஆதவன் புதனுஞ் சென்மம் ஆரலும் நவத்தி லுச்சம்
தீதிலாத் தர்ம கர்மஸ் சனியாகித் தசமந் தங்கப்
போதனம் புதையல் நேரும் பொருந்துங்கா லங்கள்
[சொல்வீர்.

21. ஜாதகனுக்கு யோகம் ஏற்பட்ட காரணங்களைச் சொல்லுங்கள். சூரியனும் புதனும் லக்கினத்திலும், செவ்வாய் மகரத்தில் உச்சமாகவும், தர்ம கர்மாதிபதியான சனி, பத்தாமிட மாகிய கும்பத்தில் ஆட்சியாகவும் இருப்பதால் புதையல் கிடைக்கும். புதையல் கிடைக்கும் காலத்தைச் சொல்லுவீர்..

22. குருதசை யந்தந் தன்னில் கூடிடும் நிதிநிட் சேபம்
திருப்பணிக் குதவி செய்வன் தேவதாத் தலங்கள் செல்வன்
தரித்திர மில்லா னுகும் சாதமுங் குறைவி ராதான்
அறந்தனை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

22. குரு மகா தசை முடிவில் புதையல் கிடைக்கும். பெரிய கைங்கரியங்களுக்குப் பொருளுதவி செய்வான். தெய்வங்கள் கோயில் கொண்டுள்ள புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்வான். வறுமை யில்லாதவன். போஜன சுகங் குறையாதவன். தருமத்தினை வளர்க்கும் எங்கள் தருமாம்பிகையே! கேட்பாயாக.

23. அன்னையின் குணத்தைச் சொல்வோ மரிநிறம் சமமாந்
[தேகம்
அன்னமு மன்பா யிவள் ஆளன்தன் மனத்துக் கேற்றோள்
அன்னியர் குற்றஞ் சொல்லாள் அறிவுளாள் பொறுமை
[சாலி
அன்னவள் வறுமை காணுள் அணுகிடும் பித்த சூடு.

23. தாயின் குணத்தைச் சொல்லுவோம். கரிய நிறம். சமமான உடலமைப்புள்ளவள். அன்புடன் உணவளிப்பாள். கணவன் மனத்துக்கு உகந்தவள். பிறர் மீது குற்றம் சொல்லாதவள். அறிவுடையவள். அடக்கமுள்ளவள். தரித்திரம் அடையாள். இவளுக்குப் பித்த சூடு ஏற்படும்.

24. சீலியாம் நல்லோ ளாவள் செனசகா யங்கள் செய்வள்
நீலிக்குத் துணையாண் ரெண்டு வித்தகி மார்க ளவ்வார்
சாலவே விவள்பின் சென்மஞ் சாற்றுவோந் தக்கோ லத்தில்
நீலியுஞ் செங்குந்த சேயாய் நேர்ந்துமே வறுமை யின்றி ;

24. ஒழுக்க முள்ளவள். நற்குண முடையவள். மக்களுக்கு உதவி புரிவாள். இவளுக்குச் சகோதரர் இருவர். சகோதரிகளும் இருவர். இவள் மறுபிறவியைச் சொல்லுவோம். தக்கோலத்தில், செங்குந்த மரபினளாகப் பிறந்து, தரித்திரமல்லாமல் ;

25. அறுமுகன் பத்தி யாகி அனைவர்க்கும் நல்லோ ளாகிச்
சிறியோர்க்குத் தாக மீந்து சென்றனள் கால நாடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தன ளென்று சொல்வோம்
அரிவையும் வறுமை காணுள் அம்பிகை யாளே கேளாய்.

25. சுப்பிரமணியக் கடவுள் மீது பக்தி பூண்டு, எவருக்கும் நல்லவ ளாகி, ஏழைகளுக்கு உணவு முதலியன அளித்து, வாழ்ந்து, மூடியில் இறந்தாள். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இப் பிறப்பில் பிறந்தாள் என்று சொல்லுவோம். தரித்திர மில்லாதவள். பார்வதியே ! கேட்பாயாக.

26. ஐயைந்து வாண்டு தன்னில் அந்தகன் நகரம் சேர்வள்
வையமேல் மறுசென் மத்தை யறைகின்றேரும் பட்சி
[தன்னில்
தையலும் வைசியச் சேயாய்ச் செனிப்பளா மென்று
[சொல்வோம்
ஐயமென் றேரைக் காக்கும் அம்பிகை யாளே கேளாய்.

26. ஜாதகனது இருபத்தைந்தாம் வயதில் இவள் மரண மடைவாள். இவள் மறு பிறவியைக் கூறுவோம். திருக்கழுக்குன்றத்தில், சைவ குலத்தவ ளாய்ப் பிறப்பாள் என்று சொல்லுவோம். அடைக்கலமென்று வந்தவரைக் காப்பாள். பார்வதியே ! கேட்பாயாக.

27. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோ மாழி தன்னில்
விந்தையாய் வணிபம் செய்யும் வைசியக் குலமு தித்துப்
பந்தணி மதிலை யுண்டாய்ப் பாக்கிய மதிகம் பெற்று
அந்தவள் வினையில் லாமல் அடைந்தோர்க்குத் தாக மீந்து;

27. தகப்பனுரின் முற் பிறவியைச் சொல்லுவோம். திருவாழி என்ற தலத்தில், வியாபாரங்கள் செய்கின்ற வைசிய குலத்தில் தோன்றி, மனைவி மக்களை யடைந்து, செல்வங்கள் மிகுந்து, தீவினை யின்றி, தன்னை யடைந்த வர்கட்கு உணவு முதலியன தந்து ;

28. மறஷியின் நாடு சென்று மறையவன் வரையப் பட்டுப்
பிருதிவி தலத்தில் வாழ்வன் பேசுவோ மிருபான் ரெண்டில்
உறைகுவான் கால நாடு உரைக்கின்றே மிவன்பின் சென்மம்
அருணையில் வேளா ளுகி அரன்தொண்டு புரிவா ளுகும்.

28. எமனுலக மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, காஞ்சி புரத்தில் பிறந்து வாழ்வான். ஜாதகனுடைய இருபத்திரண்டாம் வயதில் தந்தை எமனுலக மடைவான். இவன் மறுபிறப்பைச் சொல்லுகின்றோம். திருவண்ணுமலையில், வேளாளர் குலத்தவளுய்ப் பிறந்து, சிவத் தொண்டு செய்து வருவான்.

29. சாதகன் மரண காலம் சாற்றுவோ மறுபா னேழில்
மாதவர் போற்று கின்ற மார்கழி மாதந் தன்னில்
தீதான சூலை யாலே தேகமே வீடு மென்றோம்
போதக வாளை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

29. ஜாதகனின் மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். அறுபத் தேழாம் வயதில், பெரியோர் போற்றும் மார்கழி மாதம், சூலை நோய் ஏற் பட்டு மரணமடைவான் என்று கூறினேம். விசாயகரைப் புதல்வராக வடைந்த புண்ணியவதியே ! கேட்பாயாக.

30. பின்சென்மந் தணிகை மேற்பால் பேருரில் ரெட்டி வம்சம்
உன்னதக் குடும்பி யாகி உயர்வான பொருளும் பெற்று
அன்னவன் வாழ்வா ளுகும் அறைந்தன மொழிகுன் றுது
கன்னல்போல் மொழியை யொக்குங் காதலி கேட்டி டாயே

30. மறுபிறப்பில், திருத்தணிகைக்கு மேற்கில் உள்ளதொரு பெரிய ஊரில், ரெட்டியார் மரபில் பிறந்து, உயர்ந்த குடும்ப மடைந்து, மிக்க செல்வம் பெற்று, வாழ்வான். சொன்ன சொற்கள் தவறு. கரும்பு போல் இனிய சொற்களைப் பேசும் பார்வதியே ! கேட்பாயாக.

31. பாரியு மிவன்பின் கண்டம் பகருவோந் தாயே யாங்கள்
மாரனுஞ் செனிக்குங் காலை மாந்தலை முதல்பா தத்தில்
ஆரலின் தசையைந் தாண்டும் அணுகிடுந் திங்க ளேழுங்
கூறினேம் பூர்வ பாகம் கோதையே கேட்டி டாயே.

31. மனைவி இவனுக்குப் பிறகு மரிப்பாள் என்று நாங்கள் சொல்லு வோம். தாயே ! ஜாதகன் பிறக்கும் பொழுது, மிருகசிரிஷ நட்சத்திரம் முதல் பாதமாம். அங்காரக மகா தசை ஐந்து வருஷங்களும் ஏழு மாதங்களு மாம். இவ்வளவும் முதற் பாகம் கூறினேம். பார்வதியே ! கேட்பாயாக.

ஜாதகம் 93

1. நந்தியுஞ் செனன மாக நாலினில் பொன்னேன் காரி
சந்திர னிரண்டி லாகச் சிகிமூன்றில் புகரு மாறில்
புந்தியு மிரவி யேழில் பூமகன் பத்தி லாக
மந்தரக் கயிறு மொன்பான் வாதிரை ரெண்டாம் பாதம்.

1. விருஷபம் ஜன்ம லக்கினமாகி, குரு சனி சிம்மத்திலும், சந்திரன் மிதுனத்திலும், கேது கடகத்திலும், சுக்கிரன் துலாத்திலும், புதன் சூரியன் விருச்சிகத்திலும், செவ்வாய் கும்பத்திலும், இராகு மகாத்திலும் நிற்க, திருவாதிரை இரண்டாம் பாதத்தில் பிறந்தவருக்கு;

		லக்கினம்	சந்திரன்
செவ்வாய்	இராசி சக்கரம்		கேது
ராகு			குரு சனி
		புதன் சூரியன் / சுக்கிரன்	

2. பலனதைப் புகலு மென்று பார்வதி கேட்கும் போது
குருகுரு வசிட்டர் சொல்வார் குறித்தது வாண்பால் சென்மம்
தலமது கீழ்மேல் வீதி தென்வாசல் பேரூ ராகும்
அலைகடல் கீழ்ப்பா லாகும் அரசர்கள் கெடியு முத்ரம்.

2. பலன்களைச் சொல்லுமென்று பார்வதி கேட்கும்போது, குலகுரு வாகிய வசிஷ்டர் சொல்லுவார். பிறப்பு ஆண் மகன். வீடு, கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப் பார்த்த வாயிலுடையது. பெரிய ஊராகும். கிழக்கில் சமுத்திரம் உள்ளது. அரசர்கள் கோட்டையொன்று வடக்கில் இருக்கின்றது.

3. இந்திரன் நகர மொப்பாம் இயம்பின வடையா ளத்துள்
அந்தவில் வாடை யாகும் அப்பாலன் மூன்றுஞ் சென்மம்
சந்ததங் கங்கை சேயாய்ச் செனிப்பனு மிந்தப் பாலன்
சுந்தரன் குடும்பச் சேதி செப்புவோ மினிமே லாக.

3. தேவேந்திரன் நகரமாகிய அமராவதியை யொத்தது. சொல்லப்பட்ட அடையாளங்களுள்ள ஊரில், தென் வாடையிலுள்ள வீட்டில், மூன்றும் பிறப்பாக, வேளாளர் குலத்தில் ஜாதகன் பிறப்பான். இவனது குடும்பச் செய்திகளை இனிமேல் சொல்லுவோம்.

4. தந்தையின் துணையா ணைந்து சதத்தியு மொன்றே தீர்க்கம்
அந்தவர் வேறுய்ச் செல்வர் அலைகடல் போலே துன்பம்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோ மவர்கள் சேதி
இந்தவன் தந்தை சேதி இயம்புவோ மினிமே லாக.

4. ஜாதகன் தந்தைக்குச் சகோதரர் ஐவர். சகோதரி யொருத்தி தீர்க்கமாக விருப்பாள். சகோதரர் வேறு குடும்பமாகச் செல்லுவர். கடல் போல் பெரிய துன்பம் இவன் குடும்பத்தில் ஏற்படும். பிற்பாகத்தில் அவர்கள் செய்தியைச் சொல்லுவோம். இனி, ஜாதகன் தந்தையின் செய்தியைச் சொல்லுவோம்.

5. கல்விமான் கடவுள் பத்தி கனராசர் பேட்டி கொள்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான் ஈகைவா னெவர்க்கும் [நண்பன்
சொல்லதைக் காப்பா னுகும் தோகையால் பொறுமை [யேற்பன்
இல்லறம் வாழ்வா னுகும் எதிரிக்கு வீணக்கஞ் சொல்வான்.

5. படிப்பாளி. கடவுட் பக்தி யுடையவன். பெரிய அரசர்களைப் பேட்டி காண்பான். கேட்டவர்க்கு இல்லையென்று சொல்லாதவன். கொடையாளி. யாவருக்கும் நண்பன். சொன்ன சொல்லைக் காப்பான். மனைவியால் பெருமை யடைவான். ஒழுங்காக இல்லற வாழ்க்கை நடத்துவான். பகைவர்க்குப் பணிந்து பேசமாட்டான்.

6. பூமியைத் தனத்தி னுலே போக்குவான் ஞாதி கட்கு
மாமிய ரிருவ ராகு மரசனு லுய்வா னுகும்
தாமதக் குணமுங் கொஞ்சம் சாராட்ச னுடைய னுகும்
மாமன்னர் மெச்ச வாழ்வன் வளமுள தலங்கள் செல்வன்.

6. பங்காளிகளிடம் வீண நிலங்களை அடகுவைத்துப் பணம் வாங்குவதனால், அவற்றை இழப்பான். இவனுக்கு மனைவியர் இருவர். அரசாங்க உத்தியோகம் ஏற்றுப் பிழைப்பான். தாமதக் குணமுஞ் சிறிதுடையவன். ஏவலாட்க ளுடையவன். பெரிய அரசர்கள் பாராட்டும்படி வாழ்வான். மேன்மை பொருந்திய ஸ்தலங்களுக்குச் செல்லுவான்.

7. உண்டியுஞ் சகமாய்க் கொள்வன் உறைப்பொடு புளிப்பி [லிச்சை
கண்டித முடைய னுகும் கரமதில் பிரம்ம ரேகை
எண்டிசை புகழு மேற்ப னினோத்தோர்மேல் பிரிய னுவன்
குண்டுணி கூரு னுகும் கோதையே கேட்டி டாயே.

7. சுகமான போஜனம் கொள்ளுவான். உறைப்புப் பொருளிலும் புளிப்புச் சுவையிலும் விருப்ப முள்ளவன். கண்டிப்பான பேச்சுள்ளவன், கையில் பிரமரேகை யுடையவன். எட்டுத் திசைகளிலும் கீர்த்தி யேற்பான். எழுபுயர் மீது இரக்கங் கொள்ளுவான். கோள் முதலியன சொல்லான். பார்வதியே! கேட்பாயாக.

8. சொன்னவிக் குணத்தா னுக்குச் சுதனுமே வுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளான் சிவந்த [மேனி
உன்னதக் கல்வி ரெண்டு உணருவா னுகை வாணும்
மன்னரா லுய்வா னுகும் மாநிலம் நல்லோ னுகும்.

8. சொல்லப்பட்ட இக்குணங்களை யுடையவனுக்கு, இந்த ஜாதகன் பிறப்பான். இவன் குணங்களைச் சொல்லுவோம். அழகுடையவன். சிவந்த உடலுள்ளவன். உயர்ந்த பாஷைக ளிரண்டு கற்பான். சிறந்த விஷயங்களைக் கிரகிப்பான். சாமர்த்தியசாலி. அரசாங்க உத்தியோகம் ஏற்று வாழ்வான். உலகில் நல்லவன் என்ற பெயரடைவான்.

9. கடன்கொள்ளா னிடுக்க மில்லான் காரியச் சமர்த்த னுகும்
உடன்படான் பிழைக ளுக்கு உயர்வான தலங்கள் செல்வன்
படையில்முன் செல்லா னுகும் பசித்தோர்மேல் பிரிய னுகும்
மடையரை யுறவு கொள்ளான் வாக்கதைக் காப்பா னுகும்.

9. கடன் வாங்கமாட்டான். துன்ப மில்லாதவன். செயல்களைத்து வதில் திறமை யுள்ளவன். குற்றங்கள் புரிய உடன்படாதவன். புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லுவான். படையில் முன்பு சென்று நிற்க மாட்டான். பசித்து வந்தவர்களை அன்புடன் வரவேற்று உபசரிப்பான். மூடர்கள் நேசம் கொள்ளான். சொன்ன சொல்லைக் காப்பான்.

10. அதிகாரத் தொழிலு மேற்பன் ஆள்கார ருடைய னுகும்
ததிநெய்பா லிட்டங் கொள்வன் சான்றோர்கள் பக்தி [பூண்பன்
துதிசெய்தோர் தம்மைக் காப்பன் தொல்புவி வறுமை [காணுன்
சதிசெயா மனத்த னுகுந் தன்கரம் விஷ்ணு ரேகை.

10. அதிகாரம் செய்யக்கூடிய உத்தியோகத்தை ஏற்று நடத்துவான். ஏவலாட்களைப் பெற்றவன். தயிர், நெய், பால் இவற்றில் விருப்ப முள்ளவன். சான்றோர் மீது பக்தி கொள்ளுவான். தன்னைப் புகழ்ந்தவர்களை யாதரிப்பான். உலகில் வறுமையின்றி வாழ்வான். குற்றம் நினையா மனத்தினன், கையில் விஷ்ணு ரேகை யுண்டு.

11. பஞ்சமர் துணைவ ராகப் பகருவோம் பால னுக்கு
வஞ்சிமா ரிருவர் தீர்க்க மறைகின்றே மூத்தோள் சேதி
வெஞ்சினம் வெளிக்காட் டாதாள் விகடங்கள் கூறு ளாகும்
கஞ்சமா நிறத்த ளாகும் கடவுளர் பக்தி பூண்பள்.

11. இவனுக்குத் துணைவர் ஐவர் என்று சொல்லுவோம். அவர்களில் சகோதரிகள் இருவர் தீர்க்கமாக விளங்குவர், மூத்த சகோதரியின் செய்தியைச் சொல்லுகின்றேம். கோபத்தை வெளிக் காட்டாதவள். அலட்சியமாகப் பேசாதவள். தர்மரை மலர்போன்ற செந்நிற முடையவள். தெய்வ பக்தி கொள்வாள்.

12. மனமது சஞ்ச லத்தால் மைந்தர்க ளாண்பா லொன்று
கனமிலாக் குடும்பி யாவள் கணவனு மத்தி லேகும்
வனிதையுஞ் சிறையாய் வாழ்வள் வயதுமே தீர்க்க
[மென்றேரும்
வினையிலாத் தவங்கள் செய்யும் வித்தகி கேட்டி டாயே.

12. மனச் சஞ்சலம் அடைவாள். புத்திரன் ஒருவன் உளன். பெருமை யில்லாத குடும்ப முள்ளவள். இவள் கணவன் மத்திய வயதில் மரிப்பான். சிறையிலிருப்பது போல வாழ்வாள். தீர்க்க வயதுடையவள். குற்றமற்ற தவங்களே யாற்றும் பார்வதியே! கேட்பாயாக.

13. பாலன்பின் கன்னி சேதி பகருவோ மினிமே லாக
ஞாலங்கள் விருத்தி யுண்டு நாகம்போல் கோபங் கொஞ்சம்
சிலம்போல் வெளிம யக்கஞ் சிந்தையு மிரண்டு மாகும்
காலத்தை யறிந்து ரைப்பள் கணவனுக் கினிய ளாகும்.

13. ஜாதகன் இளைய சகோதரியின் செய்தியை இனிச் சொல்லுவோம். விளைநிலங்கள் விருத்தி யுடையவன். பாம்புபோன்று கொடிய கோபஞ் சிறிள்ளவள். ஒழுக்க முள்ளவள்போல் வெளியாரை மயங்கச் செய்வாள். இருவித எண்ணங்க ளுள்ளவள். காலமறிந்து பேசுவாள். கணவனுக்கு இனியவள்.

14. சுகதுக்கங் கலந்து வாழ்வள் சுதர்கன்னி யொன்றே தீர்க்கம்
தகைமையாய் வேறு காணுள் சக்தியும் தீர்க்க சீவி
செகமதில் நல்லோ ளாவள் சேயிழை நடக்கை நன்மை
மிகுதவம் புரியு மெங்கள் வித்தகி கேட்டி டாயே.

14. இன்பம் துன்பம் இரண்டும் கலந்த வாழ்க்கை யுடையவள். இவளுக்குப் பெண்ணொருத்தி பிறந்து தீர்க்கமாவள். வேறு சந்ததி யடையாள்.

இவள் தீர்க்கமான வயதுடையவள. உலகில் நல்லவளாக விருப்பாள். நன்னடத்தை யுடையவள். மிக்க தவங்களைப் புரியும் தாயே! கேட்பாயாக.

15. இன்னமும் விபர மாக யியம்புவோம் பின்பா கத்தில்
மன்னவன் மணத்தின் கால மறைகின்றே மிருப தாண்டுள்
கன்னிகை வடபால் நேரும் கழறுவோ மவள்கு ணத்தைப்
பின்னமில் லாத தேகி பிறர் குற்றம் புகலா ளாகும்.

15. இன்னும் விவரமாகப் பிற்பாகத்தில் சொல்லுவோம். ஜாதகன் திருமணக் காலத்தைக் கூறுவோம். இருபதாம் வயதில், வடதிசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் குணங்களைச் சொல்லுவோம். குற்றமில்லாத உடலுடையவள். அயலார்மீது குற்றங் கூறாதவள்.

16. அடிசிலுக் கினிய ளாகும் ஆளன்தன் மனத்துக் கேற்றோள்
துடையிடை சிவந்த மேனி.சொல்சுகம் நடையும் நன்மை
விடவிழி வந்த பின்பு வித்தகன் தனக்கு யோகம்
கடினசித் தங்க ளில்லாள் கட்டுரை பகரா ளாகும்.

16. சமைப்பதில் சிறந்தவள். கணவன் மனத்துக்கு உவந்தவள். துடி போன்று மெல்லிய இடை யுடையவள். சிவந்த உடலுள்ளவள். கூறுகின்ற சொற்கள் சுகமுடையனவா யிருக்கும். இவள் வந்த பிறகு கணவனுக்கு யோகங்கள் உண்டாம். கடினமான மனமில்லாதவள். சொற்களைப் பூனந்து சொல்லாள்.

17. மங்கையுந் தீர்க்க சீவி மறுத்துரை கூற ளாகும்
இங்கிவை முனிவர் கூற இயம்புவா ரத்திரி தாமும்
நங்கைய ரிருவ ராக நவிலுவோம் பால னுக்குச்
சங்கையாய்ச் சொல்லு மென்ன [1]சௌமியன் பானு ஏழில்;

17. இவள் தீர்க்க வயதுட னிருப்பாள். பெரியோர் சொற்களை மறுத்துப் பேசாள். இவ்வாறு முனிவர் சொல்ல, அத்திரி முனிவர் மேலுங் கூறுகின்றார். இந்த ஜாதகனுக்கு மனைவியர் இருவர் என்று சொல்லுவோம். காரணங் கூறுங்கள். புதன் சூரியன் விருச்சிகத்திலும்;

18. காரியும் நாலில் தங்கக் கவிமக னறி லேறக்
கூறினேந் தாரம் ரெண்டு தோகைய ரிருவ ருந்தான்
மாறுமோ தீர்க்க மாமோ யறைகுவீ ரந்தச் சங்கை
காரிழை முதல்ம ணத்தாள் காலன்தன் பதிக்குச் செல்வள்.

18. சனி சிம்மத்திலும், சுக்கிரன் துலாத்திலும் தங்கி யிருப்பதால் இரண்டு மனைவியர் என்று சொன்னேம். இரு மனைவியருந் தீர்க்கமாவரோ?

1. புதன்

அன்றி இறப்பரோ? அந்தச் சந்தேகத்தை விளக்குங்கள். முதல் மனைவி மரண மடைவாள்.

19. எந்தக்கா லத்தில் செல்வாள் இயம்புவீ ரந்தச் சங்கை
மந்தன்தன் தசைப்பூர் வத்தில் மரிப்பளா மந்த மாது
புந்தியின் தசைப்பூர் வத்தில் பின்மனை வருவா ளாகும்
அந்தவள் குணமெவ் வாறு அறிவிப்பீர் முனியே நீர்தாம்.

19. எந்தக் காலத்தில் முதல் மனைவி மரண மடைவாள்? சொல்லுங்கள். சனி மகா தசை முதற் பகுதியில் முதல் மனைவி இறப்பாள். புத மகா தசைத் தொடக்கத்தில் மறு மனைவி வாய்ப்பாள். அவள் குணங்கள் எப்படி? முனிவரே! நீங்கள் சொல்லுங்கள்;

20. அன்னம்போல் சாய லொக்கும் அடாவடி கூரு ளாகும்
அன்னமு மன்பா யிவள் அடிசிலுக் கினிய ளாகும்
அன்னியர் குற்றஞ் சொல்லாள் ஆளன்தன் மனத்துக்
[கேற்றோள்
அன்னவள் யோக சாலி யட்டக்கமாய் வார்த்தை யுண்டு.

20. அன்னம் போன்ற நடை யுடையவள். அடாவடித்தனமாகப் பேசமாட்டாள். வீட்டுக்கு வந்தவர்கட்கு அன்புடன் உண வளிப்பாள். சமைப்பதில் சிறந்தவள். அயலார் மீது குற்றங் கூறுதவள். கணவன் மனத்துக்கு உகந்தவள். யோக முடையவள். பணிவான சொற்களைப் பேசுபவள்.

21. ஊகையாள் நுட்ப புத்தி உண்மையா மனத்த ளாகும்
ஆகம முணர்ந்தோ ருக்கு அன்னமு மன்பா யிவள்
நாகம்போல் கோபங் கொஞ்சம் நல்லோர்க்கு நல்ல ளாவள்
தாகமென் றோர்க்கு யிவள் சத்தியுந் தீர்க்க சீவி.

21. ஊக முள்ளவள். நுட்ப புத்தி யுடையவள். உண்மை பொருந்திய மன முள்ளவள். வேத முணர்ந்த அந்தணர் முதலானவர்க்கு அன்புடன் உணவு அளிப்பாள். பாம்பு போல் சினம் சிறிதுண்டு. நல்லவர்க்கு நல்லவள். பசியென்று வந்தவர்க்கு உணவளிப்பாள். தீர்க்க வயதுடையவள்.

22. சுதர்களு மாண்பா லொன்று தோகையும் நால்வர் தீர்க்கம்
எதுவித மாதுக் கேதான் இயம்பினீ ரந்தச் சங்கை
முதல்மனை தனக்குப் புதல்வி மூவர்கள் தீர்க்க மாவர்
சதியிலாப் பின்ம னைக்குச் சாற்றுவோ மாண்பெண்
[ரெண்டும்.

22. இவனுக்குப் புத்திரன் ஒருவனும், புதல்வியர் நால்வரும் தோன்றித் தீர்க்கமாவர். எந்த மனைவிக்கு இவர்கள் தோன்றுவர் என்று கூறினீர்கள். முதல் மனைவிக்குப் பெண்கள் மூவர் தோன்றித் தீர்க்க மாவர். இரண்டாம் மனைவிக்குப் புதல்வி யொருத்தியும், புதல்வன் ஒருவனும் தோன்றுவர்.

23. முன்னவ னிருந்த சென்ம மொழிகின்றேங் கொங்கு [நாட்டில்
மன்னனின் குலமு தித்து வணிபங்கள் மிகவே செய்து
பொன்னெடு பணிதி யுண்டாய்ப் புகழுடன் வாழு நாளில்
கன்னிகை விதவை போகம் கலந்துமே கருவு தங்க ;

23. ஜாதகன் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். கொங்கு நாட்டில் அரசர் குலத்தவனுய்ப் பிறந்து, வியாபாரங்கள் மிகுதியாகச் செய்து, செல்வம் ஆபாணங்கள் முதலியன பெற்று, புகழோடு வாழுகின்ற காலத்தில், கைம்பெண் ஒருத்தியுடன் இன்ப மனுபவித்தான். அவளுக்குக் கரு வேற்படவே ;

24. பண்டிதஞ் செய்யும் போது பாவைக்குக் கருவு நீங்கிச்
சண்டன்தன் பதிக்குச் சென்றுள் சார்ந்தது வந்தத் தோடம்
துண்டமாய் வேறு வொன்று செப்புவோ மேழைக் கேதான்
ஒண்டொடி மணங்கள் வேண்டி உரைத்தனர் முத்திரை [தானும்.

24. பல வைத்தியங்கள் செய்தான். அவற்றுல் அவளுக்குக் கர்ப்பம் நிலைத்து, இயமனுலக மடைந்தாள். அந்தத் தோஷம் இவனே யடைந்தது. வேறு ஒன்றும் சொல்வோம். ஏழை யொருவர், தன் மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டி, மாங்கலியம் ஒன்று இவனிடம் வேண்டினர்.

25. தருகிறே னென்று சொல்லத் தைரிய மவர்க்கு வோதக்
குறையுளோர் மற்ற வெல்லாம் கொண்டுமே வடுத்த [நாளில்
திருமுத்ரை கேட்கும் போது சேயனு மறைய லானுன்
வறுமையோர் புகலுஞ் சாப மனைவிய ரிருவ ராவர்.

25. கொடுக்கின்றேன் என்று அவர்களுக்குத் தைரியம் கூறினான். அவர்கள் மற்றப் பொருள்களெல்லாம் சேகரித்துக் கொண்டு, திருமணத்துக்கு முதல்நாள் இவனிடம் வந்து, மாங்கலியம் கேட்க, இவன் கொடுக்காமல் ஒளித்து கொண்டான். ஏழையுஞ் சாப மிடுவார். உனக்கு வரும் பிறவியில் மனைவியர் இருவராவர்.

26. சிலவேநாள் வனவா சங்கள் சிறையுடன் வாழ்வா யென்னக்
குலவிற்று வந்தச் சாபங் குமரனு மந்தி யத்தில்
தலஞ்சேது பதிக்குச் சென்று சான்றோர்க்கு வன்ன மீந்து
நலமிலாக் கால நாடு நல்கியே பிரமன் லக்கம்.

26. சிலநாட்கள் வனத்தில் வசிப்பது போல் துன்பத்துடன்; வீட்டில் சிறையாக வாழ்வாய் என்று கூறினர். அந்தச் சாபம் இவனைச் சேர்ந்தது, இவன், அப்பிறவியின் கடைசிக் காலத்தில், சேதுவுக்குச் சென்று நீராடி, பெரியோர்கட்கு உணவளித்து, கொடிய இயமனுலக மடைந்தான். பின்பு பிரமனால் படைக்கப்பட்டு;

27. உதிப்பனு மிந்தப் பாலன் உறைந்திடு மூன்னூழ்ச் சாபம்
அதிபதி யிரண்டு நேரும் மாமுனி தடுத்துச் சொல்வார்
நதிகேது சென்ற புண்யம் நசிக்காதோ வந்தப் பாவம்
சதிகரு தோடம் நீங்காச் சர்ப்பம்போல் வளரு மென்றோரும்.

27. இப் பிறப்பில் தோன்றுவான் இவன். மூன் சென்ம தீவினை இவனைச் சேரும். அதனால் மனைவியர் இருவராவர். முனிவர் தடுத்துச் சொல்லுவார். சேதுவில் சீராடிய புண்ணியத்தால் தீவினை நீங்காதோ? கருவழித்த தோஷம் நீங்காது. கொடிய பாம்பின் விஷம் போல், கொடியதாக வளரும்.

28. வந்தவன் யோகச் சேதி யறைகின்றோ முனியே கேளும்
இந்திரன் போலே வாழ்வன் இருபத்து மூன்றுண் டின்மேல்
சந்திரன் பிறைபோல் யோகம் தங்கிடும் ராச மூலம்
விந்தையா யரசு வோங்கு மேன்மையாய்ப் புகழு மேற்பன்.

28. ஜாதகன் யோகங்களைக் கூறுகின்றோம். முனிவரே! கேளுங்கள். இந்திரன் போல் சிறப்புடன் வாழ்வான். இருபத்து மூன்றும் வயதுக்கு மேல் வளர்பிறைச் சந்திரன் போல் யோகங்கள் உண்டாம். அரசாங்க உத்தியோகம் பெற்று உயர்வடைவான். சிறந்த புகழடைவான்.

29. அன்பது மூன்று வாண்டும் அரசுமே செய்வா னுகும்
பின்புமே வரசர் மூலம் பொருளுமே பெற்று வாழ்வன்
உன்னதச் செட்டுச் செய்வன் உயர்வான தலங்கள் செல்வன்
பொன்பணி யுடைய னுகும் பூவையா ளில்லஞ் சேரும்.

29. ஐம்பத்து மூன்றும் வயது வரை அரசாங்க உத்தியோகத்தைச் சிறப்புறச் செய்வான். பிறகு அரசர் வழியாகப் பொருள் பெற்று வாழ்வான். உயர்ந்த வியாபாரங்கள் செய்வான். புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்லுவான். செல்வம், ஆபரணங்கள் இவற்றை யுடையவனுவான். இவன் வீட்டில் இலட்சுமீ வாசம் புரிவாள்.

30. அத்திரி முனிவர் சொல்வார் அரசுக்கு விதற்குள் ளாகக்
குற்றங்கள் நேரா வோசொல் குருவுமே நாலில் தங்க
எத்தனை கோள்கள் வந்தும் இரவிமுன் பனிபோல் நீங்கும்
சுத்தமாய்த் தவங்கள் செய்யுந் துறவியே கேட்டி டாயே.

30. அத்திரி முனிவர் கூறுவார். இவன் செய்கின்ற அரசாங்க உத்தியோகத்துக்கு மத்தியில் குறைகள் நேராவோ? கூறுங்கள். குரு சிம்மத்தில்ல் தங்கி யிருப்பதால், எவ்வளவு தின்பங்கள் வந்தாலும் சூரியனுக்கு முன்பு பனி போல் விலகும். தூய்மையுடன் தவங்களைச் செய்யும் தவசி போன்ற பார்வதியே! கேட்பாயாக.

31. எழுபது மூன்று வாண்டில் [1]இடபமா தத்தி லேதான்
நழுவுவான் கால நாடு நாயக னென்று சொல்வோம்
அழிவிலா விவன்பின் சென்ம மப்புவின் தலத்தி லேதான்
பழியிலாப் பிரம்ம சேயாய்ப் பிறப்பனு மென்று
[சொல்வோம்.

31. ஜாதகன், தனது எழுபத்து மூன்றும் வயதில் வைகாசி மாதத்தில் இயமபுரம் அடைவான் என்றுரைப்போம். இவன் மறு பிறப்பில், திருவானைக்காவில் குற்றமில்லாத அந்தணர் குலத்தவனாகப் பிறப்பான் என்று கூறுவோம்.

32. இந்ததோர் சென்மந் தன்னி லிவன்செய்த புண்ணிய
[மென்ன
முந்தவே கூறு மென்ன மொழியதைக் காத்த லாலும்
வந்தவர்க் கன்ன மீந்தும் மனமது கவடு மின்றிச்
சிந்தையு நல்ல தாயுஞ் சிலசிலத் தலங்கள் சென்றும் ;

32. இப்பிறவியில் ஜாதகன் செய்த நற்காரியங்கள் என்னவென்று கூறுங்கள், என்று வினவ, சொன்ன சொல் தவறாமல் நடந்ததாலும், பசியென்று வந்தவர்கட்கு அன்ன மளித்து வந்ததாலும், சூதில்லாத மனமுடையவனாகி, நல்ல எண்ணத்துடன் சில புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று;

33. அறமதி லிச்சை யுண்டாய் அவனுமே வாழ்வ தாலே
மறைக்குல முதிப்பா னாகு மாதுரு குணத்தைச் சொல்வோம்
குறையென்றோர்க் குதவி செய்வள் குரூரத்தை வெளிக்காட்
[டாதாள்
வரனுக்கு யிவளால் யோக மருவிடும் பித்த வாயு,

---

1. வைகாசி

33. தருமம் செய்வதில் பிரிய முள்ளவனுக வாழ்ந்து வருவதாலும் அந்தணர் குலத்தில் மறு பிறவி ஏற்படும். தாயின் குணத்தைச் சொல்லு வோம். கஷ்ட மடைந்தவர்கட்கு உபகாரம் செய்பவள். கொடுமையை வெளி யில் காண்பிக்காதவள். தன் கணவனுக்கு (ஜாதகன் தந்தைக்கு) இவளால் அதிர்ஷ்டங்க ளேற்படும். பித்த வாயு உள்ளவள்.

34. புத்திமான் பொறுமை சாலி புண்ணிய மனத்த ளாகும்
பத்திமா னவர்க்கு வன்னம் படைப்பளாந் தேவ பக்தி
சித்தமே கபடு மில்லாள் சீலியாம் புலிபோல் கோபம்
பெற்றதா யிரண்டு மாகும் பேதைக்குத் துணையாண்
[தோடம்.

34. புத்திசாலி. அடக்க முள்ளவள். நல்ல மன முள்ளவள். பக்தி யுடன் அடியார்களுக்கு அன்னம் அளிப்பாள். தெய்வ பக்தி யுள்ளவள். சூதில்லாத மன முள்ளவள். கன்னடக்கை யுடையவள். புலிபோல் கோபங் கொள்ளுவாள். இவளுக்கு இரு தாய்மார்களாவர். சகோதர தோஷம் ஏற்படும்.

35. கன்னியுந் தோன்றுந் தீதாம் காதலி தனியந் தத்தில்
முன்சென்மம் புகலக் கேண்மோ மூலமாங் குடியி லேதான்
வன்னிய குலமு தித்து வளமான குடும்பி யாகி
அன்னவள் வாழும் நாளில் அணுகின வினையைக்
[கேண்மோ.

35. பெண் ஒருத்தி பிறப்பாள். அவள் நிலையாள். கடைசியில் இவள் தனித்து வாழ்வாள். இவளது முற்பிறப்பைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். மூலமாங்குடி என்ற ஊரில், வன்னிய மரபில் தோன்றுவாள். இவள் சிறந்த குடும்ப முடையவளாக வாழ்ந்து வரும் நாளில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள்.

36. வரனுடைத் தம்பி பேரில் வருணித்தாள் சிலேடை
[வார்த்தை
திருமகன் வருத்த முற்றுச் செப்பின சாபங் கேண்மோ
குறையான வார்த்தை யென்மேல் கூறின பாவிக் கேதான்
மறுசென்மந் துணைவ ரின்றி வருஞ்சுதர் பாதி சேதம் ;

36. தன் கணவனுடைய தம்பியின் மீது இருபொருள் படும்படியான தகாத வார்த்தைகள் சொன்னாள். அவன் வருத்த மடைந்து சொன்ன சாபத்தைக் கேளுங்கள். என்மீது இவ்வாத பழிகளைச் சொன்ன பாவிக்கு, ஏற்படும் மறுபிறவியில் உடன்பிறந்தா ரில்லாமலும், குழந்தைகளில் பாதி நிலையாமல் போம் ;

37. அன்னையு மிரண்டு மாகும் அறைந்துமே சென்ரு ரென்ரேரும்
துன்மைகள் சார்ந்த தாலே தோகைக்கு விச்சென் மத்தில்
தன்துணை யில்லா தாயும் தன்சுதர் பாதி நட்டம்
இன்னவார் நேரு மென்ரேரும் ஈசுவரி கேட்டி டாயே.

37. தாய்மார் இருவரும் ஏற்படுவர் என்று சொல்லிவிட்டுச் சென்ரூள். அந்தத் தீவினை ஜாதகனின் தாய்க்கு இப்பிறவியில் வந்து சேர்ந்தது. அதனால், உடன்பிறந்தார் இல்லாதவ ளாவள். பிறக்கும் குழந்தைகளில் பாதி இறந்துபோம் என்று கூறினேம். ஈசுவரியே! கேளுங்கள்.

38. அன்பது விரண்டு வாண்டில் அணுகிய கன்னி மாதம்
இன்னவ ளுடல மேகும் இயம்புவோ மிவள்பின் சென்மம்
கன்னியா குமரி தன்னில் கலப்பளாஞ் சத்ரியச் சேயாய்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

38. ஜாதகனின் ஐம்பத்திரண்டாம் வயதில் புரட்டாசி மாதம் தாயின் மரணம் ஏற்படும். இவள், மறு பிறவி, கன்னியா குமரியில், அரச குலத்தவளாகப் பிறப்பாள். உயர்ந்த கணவனை அடைந்த உத்தமியே! கேளுங்கள்.

39. தந்தையின் முன்சென் மத்தைச் சாற்றுவோம் பாண்டி
[தன்னில்
பிந்தின குலமு தித்துப் பேதையும் புத்ர ருண்டாய்
விந்தையாய் வணிபம் செய்து மேலோர்க்குத் தொண்டு
[பூண்டு
அந்தநாள் வினைக ளின்றி அணுகினன் கால நாடு.

39. தந்தையின் முற் பிறப்பைப் பற்றிச் சொல்லுவோம். பாண்டிய நாட்டில், நான்காம் வருணத்தவனுகத் தோன்றி, மனைவி மக்களை அடைந்து, விநோதமாக வியாபாரம் செய்து, பெரியோர்களுக்குத் தொண்டு செய்து, தன்பங்கள், தீவினைகளின்றி; இறந்தான்.

40. சிரநான்கோன் வரைய்ப் பட்டுச் செனித்தவ னிவனே
[யென்ரேரும்
இருபது வெட்டு வாண்டில் எழில்மேட மாதந் தன்னில்
உறைகுவான் கால நாடு உரைக்கின்ரே மிவன்பின்
[சென்மம்
பிருதிவி தலத்தி லேதான் பிறப்பனுஞ் சைவச் சேயாய்.

40. நான்கு தலைகளையுடைய பிரமனால் மீண்டும் படைக்கப்பட்டு, இப்பிறவியில் பிறந்தான் என்று சொன்னேம். ஜாதகனது இருபத் தெட்டாம் வயதில், அழகிய சித்திரை மாதம் தந்தை இறப்பான், இவனுடைய மறுபிறப்பைச் சொல்லுகின்றோம். காஞ்சீபுரத்தில், சைவ குலத்தவனுகப் பிறப்பான்.

41. அன்னவன் சென்ன காலம் அரவுநில் வீரா ரூண்டும்
மன்னிய திங்கள் ளேழு மறைகின்றோம் பலனைத் தானே
இன்னவன் தனக்கு ரோகம் எய்திடு மன்னை நோயும்
பொன்னது செலவு முண்டு பின்துணை யுதிக்கும் தீதாம்.

41. ஜாதகனுடைய ஜனனகாலத்தில், இராகு மகாதசையில் இருப்பு; பன்னிரண்டு வருஷங்களும் ஏழு மாதங்களுமாம். அக்காலத்திய பலனைச் சொல்லுவோம். ஜாதகனுக்கு வியாதி ஏற்படும். தாய்க்கும் நோய் உண்டாகும். பணச் செலவு மிகுதியாம். ஜாதகனுக்கு இளையவன் தோன்றுவான். ஆனல், அவனுக்கு மரண முண்டாகும்.

42. *இடமது பேத மாகும் இடருக ளநந்தம் நேரும்
உடன்பிதா கலகம் ரோகம் உற்றவர் சூத மாகும்
.....
தடவரை மகளே யாங்கள் சாற்றுவோம் பின்பா கத்தில்.

42. இடமாற்றம் உண்டாகும். அளவில்லாத துன்பங்கள் விளையும். தகப்பனர், சகோதரர் ஆகியோர்க்குள் கலகம் ஏற்படும். வியாதி யுண்டாகும். சுற்றத்தாருக்கு அசுபங்கள் வரும். இமவானின் புத்திரியே (பிற்பாகத்தில் விவரமாகச் சொல்லுவோம்.

43. பாலன்முன் துணையின் பூர்வம் பகருவோம் விரிஞ்சி [தன்னில்
சீலமாங் கர்ண சேயாய்ச் செனித்துமே சுகமாய் வாழ்ந்து
நீலிக்கு மதலை யுண்டாய் வித்தகி வாழும் நாளில்
ஆலம்போல் வந்த வூழை அறிவிப்போ மினிமே லாக.

43. மூத்த சகோதரியின் முற்பிறப்பைச் சொல்லுவோம். விரிஞ்சி நாட்டில், நல்லொழுக்க முடைய கருணீகர் குலத்தவளாகப் பிறந்து, சௌக்கிய முடையவளாய், கணவன், மக்களை யடைந்து வாழ்ந்து வரும் போது, விஷம்போல் வந்தடைந்த தீவினையைச் சொல்லுவோம்; இனிமேல்.

* இப்பாடலில் மூன்றும்வரி மூலப்பிரதியில் காணப்படவில்லை.

44. வரனுட னுலை யத்தில் மங்கையுஞ் சென்று மேதான்
அரனடி சேவித் தேதான் அணுகினுள் கடைவீ திக்கு
உரைமஞ்சள் சிவப்புச் சீப்பு ஒண்டொடி வாங்கிக் கொண்டு
பொருளீயாச் சென்ரு ளென்ரேரும் புகலுவான் வணிகன்
[சாபம்.

44. தன் கணவனுடன், ஒரு கோவிலுக்குப் போய் இறைவனைச் சேவித்துத் திரும்பும் பொழுது, கடைத் தெருவுக்குச் சென்ருள். அங்கு ஒரு கடையில் பூசும் மஞ்சள், குங்குமம், சீப்பு முதலியன வாங்கிக் கொண்டு, உரிய விலைப்பணம் கொடுக்காமல் சென்ருள். கடைக்காரன் சாப மிட்டான்.

45. இனமது வாகா முன்னம் ஏகுவான் வரனு மேதான்
வனிதைபின் சென்மந் தன்னில் மத்தியில் விதவை யாயும்
தினமன சஞ்ச லத்தால் சிறையுடன் வாழ்வா யென்று
தெருத்தூளைத் தூற்றும் போது ததாஸ்தென் றந்தரம் சேர.

45. நீ வாங்கிய பொருள்கள் உபயோகப்படு முன்பு, உன் கணவன் மரணமடைவான். மறு பிறவியிலும் மத்திய காலத்தில் கணவனை யிழந்து, தினந்தோறுஞ் சஞ்சலமான மனத்துடன் சிறையில் வாழ்வது போல் வாழ்வாய் என்று கூறி, தெரு மண்ணை வாரி இறைத்தான். அப்போது அப் படியே அந்தச் சாபம் இவளை யடைந்தது.

46. மாதுக்கு வந்தச் சாபம் மருவிற்று வந்த வாண்டில்
காதலன் மாண்டு பின்பு கன்னியுஞ் சிறையாய் வாழ்ந்து
போதக வானைக் கோட்டம் பொருத்தினுள் தீப மொன்று
நீதான கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்.

46. பெண்ணுக்கு அந்தச் சாபம் ஏற்பட்டது. அதே வருஷத்தில் இவள் கணவன் மரண மடைய, சிறையி லிருப்பது போல் வாழ்ந்து வந்தாள். விநாயகர் ஆலயத்தில் தீபம் ஒன்று ஏற்றி வைத்தாள். பிறகு, நீக்க முடி யாத எமபுரம் அடைந்து, மீண்டும் பிரமனல் படைக்கப்பட்டுப் பிறந்தாள்.

47. முன்சென்மம் வணிகன் சாபம் மேவிடு மிச்சென் மத்தில்
தன்வரன் மத்தி லேகும் சஞ்சல மனமாய் வாழ்வள்
பின்சென்ம மரங்கந் தன்னில் பிறப்பளாம் சத்ரியச் சேயாய்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

47. முற் பிறவியில் ஏற்பட்ட கடைக்காரன் சாபம், இப் பிறவியில் தொடர்ந்தது. கணவன் இடையில் இறப்பான். கலக்கமுள்ள மனத்தவளாக வாழ்ந்து வருவாள். மறுபிறவி ஸ்ரீரங்கத்தில் க்ஷத்திரிய மாபினளாகத் தோன்றுவாள். உயர்ந்த கணவனைப் பெற்ற பார்வதியே! கேளுங்கள்.

48. அன்பது வேழு வாண்டில் ஆடிமா தத்தி லேதான்
இன்னவ ளுடல மேகும் ஈசுவரி கேட்டி டாயே

.....

.....

48. ஜாதகனின் ஐம்பத்தேழாம் வயதில் ஆடி மாதம் இவளுடைய மரணம் ஏற்படும் என்று கூறுவோம். பார்வதியே! கேளுங்கள்.

---

*இப்பாடலில் இறுதி வரிகளிரண்டும் எட்டிவில்லை.

ஜாதகம் 94

1. [1]ஆலோன் கன்னி சனிகோலாம்
அரவு சாடி சேய்நந்தி
மாலோன் புகர்கே துவுஞ்சீயம்
மன்னன் பரிதி கடகமுறும்
பால [2]னுயிரு மிடபமதாய்ப்
பகர்வீர் முனியே பலன்விவரம்
சால வாண்பால் சென்னமுறும்
தந்தை யில்லம் வடபார்வை.

1. சந்திரன் கன்னியிலும், சனி துலாத்திலும், ராகு கும்பத்திலும், செவ்வாய் விருஷபத்திலும், புதன் சுக்கிரன் கேது சிம்மத்திலும், குரு சூரியன் கடகத்திலும் தங்கி, இலக்கினம் விருஷபமாக வுள்ள ஜாதகப் பலன்களைச் சொல்லுவீர், முனிவரே ! இஃது ஆண்பிறப்பு ; தந்தையின் வீடு வடக்கு நோக்கியுள்ளது.

		லக்கினம் செவ்வாய்	
ராகு	இராசி சக்கரம்		குரு சூரியன்
			கேது புதன் சுக்கிரன்
		சனி	சந்திரன்

2. மாரி மேல்பால் காளிதென்மேல்
மருவும் சிறுவூர் கூரையில்லம்
பாரில் நவமாஞ் சென்னமுமே
பகர்வோம் ரெட்டி குலமாகும்
கூறுந் தந்தை தாயோகம்
கோதை புத்ரர் துணையோகம்
தீரன் முன்பின் சென்னமெலாம்
செப்பு மிந்நூல் சேயிழையே.

---

1. சந்திரன்
2. இலக்கினம்

2. மேற்கில் மாரியம்மனும், தென் மேற்கில் காளி கோவிலும் உள்ள சிறு ஊரில் கூரை வேயப்பட்ட வீட்டில் இந்த ஜாதகன் ஒன்பதாம் பிறப்பாக, செட்டியார் மரபில் தோன்றுவான். தந்தை, தாய், மனைவி, புத்திரர்கள், உடன்பிறந்தார் இவர்களின் யோகங்களையும், ஜாதகனின் முற்பிறப்பு, மறுபிறப்பு ஆகியவைகளையும் இந்தச் சோதிட நூலில் சொல்லுகின்றோம். தாயே !

3. இளைய தந்தை துணையாண்பால்
இரண்டு கன்னி யவ்வாரும்
பழகி வாழ்வார் பிதாசேதி
பகர்வோம் ஊகி கல்வியுளன்
தழைக்க குடும்பி பூமிவிருத்தி
சல்லிய பாதை யுடையவனும்
பிழையாம் புத்தி முன்கோபி
பின்யோ சனையு முடையவனே.

3. தந்தையின் உடன்பிறந்தவர், சகோதரர் இருவரும், சகோதரிகள் இருவரு மாவர். எல்லோரும் ஒருமிக்க வாழ்வார்கள். தந்தையின் செய்திகளைச் சொல்லுவோம். ஊக முள்ளவன். கல்விமான். செழிப்புள்ள குடும்ப முடையவன். கட னுள்ளவன். விளை நிலங்களை விருத்தி செய்வான். கெட்ட புத்தி யுள்ளவன். முன் கோபி. பின் யோசனை யுள்ளவன்.

4. அவனை சிலநாள் கிராமச்செட்டு
அணுகு முணைச்சல் நீட்சியுளன்
தவசிக ளுறவு கொள்ளாதான்
தங்கும் பித்த வாயுவென்றே
மவனி தன்னில் சிலபகையும்
நல்கும் தேக பலகீனம்
சிவனை நினையான் சமகல்வி
செப்பு மிவன்முன் சென்மமதை.

4. அவன் சிலகாலம் கிராமத்தில் வியாபாரம் செய்து வருவான். மெலிந்து நீண்ட சரீர முடையவன். துறவிகளிடம் பக்தி யில்லாதவன். பித்த வாயு பொருந்திய சரீர முடையவன். பூமியால் சில விரோதங்கள் ஏற்படும். பலம் குறைந்த சரீர முள்ளவன். பரமசிவனை மனத்திலும் நினையாதவன். (தெய்வ பக்தி யில்லாதவன்.) சமமான கல்வியறி வுடையவன். இவனுடைய முற்பிறவியைச் சொல்லுவோம்.

5. சென்மங் கொங்கு நாடதனில்
சனித்தான் வைசிய குலமதனில்
பொன்பூ மிகளு முடையவனுய்ப்
பேதை புதல்வர் தாமுண்டாய்
இன்னேன் அறத்தி லிச்சையின்றி
எமனுர் உலகந் தான்சென்று
பொன்னேன் வரையத் தானுதித்தான்
புகலுங் குணத்தா னுக்குவிவன்;

5. கொங்கு நாட்டில், வைசிய மரபினனுகத் தோன்றி, செல்வங்கள், விஞ நிலங்கள் மிகுதியாகப் பெற்று, மனைவி மக்களுடன் வாழ்ந்து வந்தான். தருமத்தில் விருப்பமின்றி இறந்தான். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டுப் பிறந்தான். இங்ஙனம் சொல்லப்பட்ட குணங்க ளுடையவனுக்கு இந்த ஜாதகன்;

6. உதிப்பா னிவனின் குணங்கேளாய்
உவமை யாகப் பேசிடுவன்
துதிசெய் தோருக் குதவிடுவன்
சுகமுந் துக்க முடையவனே
பதியும் பின்னுல் செய்திடுவன்
பகவான் பக்தி கொண்டிடுவன்
சதிசெய் தோரைத் தான்சேரான்
சமமாங் கல்வி தந்த்ரமொழி.

6. பிறப்பான். இவனுடைய குணதிசயங்களைக் கேளுங்கள். உப மானத்துடன் பேசும் பழக்க முள்ளவன். தன்னைப் புகழ்பவர்கட்கு உபகாரி. இன்பந் துன்பமும் கலந்த வாழ்க்கை நடத்துவான். பிற்காலத்தில் வீடு கட்டுவான். தெய்வ பக்தி யுள்ளவன். கெட்ட எண்ண முடையவரோடு நட்புக் கொள்ளாதவன். சமமான கல்வி யறிவுள்ளவன். தந்திரமாகப் பேசுபவன்.

7. தரணி தன்னுல் தானுய்வன்
சல்யன் முன்வந் தாண்டுவரை
மருவு மத்மேல் காணுனும்
மாடு பணியோர் விருத்தியுளன்
குருவின் கால மதிகபுகழ்
கூடும் யாவும் நிதிசேர்க்கை
திருமா துறையும் பூமிவிர்த்தி
தீர மனமுஞ் சனவிட்டம்.

7. விவசாயம் செய்து ஜீவிப்பான். முதலில் ஒரு வருஷம் கடன் தொந்தரவுள்ளவனாக விருப்பான். பின்பு நிவிர்த்தியாகும். மாடுகள், பண்ணை, ஏர் விருத்தி யுள்ளவன். குரு மகா தசையில் மிக்க கீர்த்தி பெறுவான். தொடங்கிய செயல்கள் எல்லாம் கைகூடும். செல்வஞ் சேர்ப்பான். இலட்சுமீ தேவி இவனிடம் வாசம் புரிவாள். நிலபுலன்கள் விருத்தியாம். தைரியமுள்ள மனத்தின னவன். பந்துக்களால் விரும்பப் படுவான்.

8. தன்துணை யிருநான் காகத் தோன்றிடு மதிலாண் ரெண்டு
கன்னிகை யவ்வா ருகும் கழறுவோம் பால னுக்கு
முன்துணை யாண்பால் சேதி மொழிகின்றோம் சிவந்த
[மெய்யன்
உன்னத வார்த்தை சொல்வன் உள்மனம் கவடு மில்லான்.

8. இவனுடன் பிறப்பவர் நால்வர். அவர்களில் இவனுக்குச் சகோதரர் இருவர். சகோதரிகள் இருவர் என்று சொல்லுவோம். இவனுக்கு மூத்த சகோதரனின் செய்தியைச் சொல்லுகின்றோம். சிவந்த நிறமுடையவன். உயர்ந்த முறையில் பேசுவான். மனத்தில் வஞ்சனை யில்லாதவன்.

9. பூமியால் சிவிப் பானும் பொருத்தமாய்ப் பேசு வானும்
தாமதக் குணமுங் கொஞ்சம் சர்ப்பம்போல் கோப முண்டு
நேமியில் நல்லோ னவன் நேர்ந்திடும் தென்பால் பாரி
காமனை விருப்பங் கொள்வன் கணக்கினி லூக வானே.

9. விவசாயத் தொழில் புரிந்து ஜீவிப்பான். பொருத்தமாகப் பேசுவான். சிறிது தாமத வியல்புடையவன். பாம்புபோல் சீற்றமுண்டு. உலகில் நல்லவனாக விளங்குவான். இவனூர்க்குத் தெற்கிலிருந்து, இவனுக்கு மனைவி வாய்ப்பாள். மன்மதன் போன்ற வடிவழகுள்ளவன். கணக்கில் ஊக முள்ளவன்.

10. சுதர்களுந் தவத்தால் தோன்றும் செப்புவோ மாண்பா
[லொன்று
அதிசதி பெண்பால் ரெண்டு அறைகின்றோம் தீர்க்க மாகப்
பதியது செய்வ னுகும் பதுமரே கையுமே யுண்டாம்
அதிதிக ளுறவு கொள்ளான் அவ்சர மனத்த னுகும்.

10. இவன் இயற்றிய நல்வினைகளால் இவனுக்குப் புதல்வர் தோன்றுவர் என்று சொல்லுவோம். ஆண்மகன் ஒருவனும், பெண்கள் இருவரும் தோன்றித் தீர்க்கமாக விளங்குவர் என்று சொல்லுகின்றோம். வீடு கட்டுவான். கையில் பத்ம ரேகை யுள்ளவன். துறவோர் நட்பைக் கொள்ளாதவன். அவசரப்படும் இயல்பினன்.

11. அதற்குப்பின் சேதி சொல்வோம் அற்பமாம் புத்தி [கொஞ்சம்
சதியாக மனமுங் கொஞ்சம் சந்தேக மனத்த ஞகும்
நிதியது செலவு செய்யான் நீத்தோர்க ளுறவு கொள்ளான்
ததிபாக்கிய முடைய ஞகும் தரணியா லுய்வா ஞகும்.

11. அவனுக்கு இளையவனின் செய்தியைச் சொல்லுவோம். அற்ப புத்தி சிறிதுள்ளவன். குற்றமுள்ள எண்ணம் சிறிது உண்டு. சந்தேக மனத்தினன். பொருளைச் செலவு செய்யமாட்டான். துறவிகளின் நட்பைக் கொள்ளான். தயிர் பால் பாக்கியங்க ளுள்ளவன். பூமியால் ஜீவிப்பான்.

12. சுகதுக்கங் கலந்து வாழ்வன் துணைவரை யாத ரிப்பன்
உகமையாய்ப் பேசு வானும் உண்மையை வெளிகாட் [டாதான்
பகையோர்க ளுறவு கொள்வன் பகவானின் பக்தி பூணன்
அகமது செய்யா ஞகும் அஞ்சிடா னெதிரி கட்கு.

12. இன்பமும் துன்பமும் கலந்த வாழ்க்கை யுடையவன். சகோதரர் களைக் காப்பான். உபமானத்துடன் பேசுவான். மனத்திலுள்ளவற்றை வெளிவிட மாட்டான். விரோதிகளையும் நட்புக் கொள்ளுவான். கடவுள் மீது பக்தி கொள்ளான். வீடு கட்டுவான். போரில் பகைவருக்குப் பயப்பட மாட்டான்.

13. பாரியும் வடமேல் நேரும் பாலரும் மாண்பால் மூன்று
நாரியு மிரண்டு தீர்க்கம் நாட்டினில் வறுமை காணன்
வீரிய சமர்த்த ஞகும் கணக்கினில் வல்ல ஞகும்
வேறொரு கிராமம் வாசம் வீண்பழி யேற்பா ஞகும்.

13. இவனுக்கு மனைவி வடமேற்குத் திசையிலிருந்து வாய்ப்பாள். குழந்தைகளில் ஆண்கள் மூவரும், பெண்கள் இருவரும் தீர்க்கமாக விளங்குவர். தரித்திர மில்லாதவன். வீரிய முடையவன். சாமர்த்தியசாலி. கணக்கில் சிறந்தவன். வேறு கிராமத்தில் சென்று வசிப்பான். வீண் பழி களை யடைவான்.

14. மாதுரு குணத்தைச் சொல்வோ மாந்தளிர் மேனி யாகும்
பாதக மனமில் லாதாள் பலர்சகா யங்கள் செய்வள்
சூதிலாள் கோபங் கொஞ்சம் துணைவர்க ளாண்பால் ரெண்டு
காதலி யொன்று வுண்டு கனக்காது ஏகு மென்றோம்.

14. ஜாதகன் தாயின் குணங்களைச் சொல்லுவோம். மார்துளிர் போல் மென்மையான சரீர முடையவள். கெட்ட எண்ண மில்லாதவள். பலருக்கு உபகாரங்கள் செய்வாள். வஞ்சனை யில்லாதவள். சிறிது கோப முடையவள். இவளுடன் பிறந்தவர்கள் சகோதரர் இருவரும், சகோதரி யொருத்தியுமாவர். சகோதரி நிலையாது மரிப்பாள்.

15. பித்ததே கத்தா ளாகும் பிறர்குற்றம் புகலா ளென்றேரும்
சுற்றத்தார் மதிக்க வாழ்வள் சோம்பிடாள் காரி யத்தில்
புத்தியில் பெரியோ ளாகும் புருடனுக் கினியா ளென்றேரும்
நத்தினோர்க் குதவி செய்வள் நாயகி தீர்க்க சிவி.

15. பித்த தேக முடையவள். அயலார் குற்றத்தைச் சொல்லாதவள். பந்துக்கள் மதிக்கும்படி வாழ்க்கை நடத்துவாள். செயல்கள் புரிவதில் சோம்ப லில்லாதவள். பெரும்புத்தி யுள்ளவள். கணவனுக்கு இனியவள். துன்ப மடைந்தவர்க்கு உதவி புரிவாள். தீர்க்கமான வயதுள்ளவள்.

16. அன்னையின் பூர்வந் தன்னை அறிவிப்போம் தோகை
[கீழ்ப்பால்
சின்னவூர் தன்னி லேதான் செனித்தனள் மருத்துவச்
[சேயாய்த்
தன்சுத ரதிக முண்டாய்த் தரணியில் வறுமை யின்றி
முன்னோர்க்குத் தொண்டு பூண்டு முன்பவ மில்லா ளாகி.

16. தாயின் முற்பிறப்பைச் சொல்லுவோம். தோகை மலைக்குக் கிழக்கேயுள்ள சிறிய ஊரொன்றில், மருத்துவக் குலத்தவளாய்ப் பிறந்தாள். புதல்வர்களை மிகுதியாக வடைந்து, உலகில் தரித்திரமில்லாமல், சான்றோர் கட்குத் தொண்டுசெய்து, முன்சென்ம தீவினையின்றி வாழ்ந்து,

17. மறலியின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப் பட்டு
அரிவையு முதித்தா ளென்றேரும் அறைகின்றே மிவள்பின்
[சென்மம்
உறையூரில் கங்கை சேயாய் உதிப்பளாஞ் சுகமுள்
[ளோளாய்க்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

17. எமனுலகஞ் சென்று, திருமாலின் புதல்வராகிய பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறப்பில் பிறந்தாள் இவள் என்று சொன்னோம். இவள் மறு பிறப்பைச் சொல்லுகின்றோம். உறையூரில், சௌக்கியமுள்ள வேளாளர் குலத்தவளாய்ப் பிறப்பாள். யானைமுகக் கடவுளைப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

18. ஈரெட்டு வாண்டு தன்னில் இயம்புவோர் தந்தை கண்டம்
கூறுறுணு மார கங்கள் குறித்தனம் பத்தொன் பாண்டில்
மார்கழி மாதந் தன்னி லறைகின்றேரு கண்டந் தானும்
வேறொரு சென்மந் தன்னை விளம்புவோம் முனியே கேளும்.

18. ஜாதகன் பதினாறும் வயதில் தந்தைக்கு ஒரு கண்டம் நேரும் என்று கூறுவோம். அப்பொழுது மரணமுண்டாகும் என்று சொல்ல முடியாது. இவனது பத்தொன்பதாம் வயதில் மார்கழி மாதம் தந்தைக்கு மரணம் ஏற்படும் என்று சொல்லுகின்றோம். தந்தையின் மறுபிறப்பைச் சொல்லுவோம்; முனிவரே! கேளுங்கள்.

19. சிங்கள நாட்டி லேதான் சிவனடிப் பாதந் தன்னில்
சங்கையாய் வைசியச் சேயாய்ச் செனிப்பனுஞ் செட்டுச்
[செய்து
பொங்கியே வாழ்வா னுகும் பேதையு மதலை யுண்டாய்
ஐங்கரன் தனைவ ளர்த்த அம்பிகை யாளே கேளாய்.

19. ஈழ நாட்டில், அரனடிப்பாதம் என்ற இடத்தில், வைசியக் குலத்தவனுப்ப் பிறப்பான். வியாபாரம் செய்து, மனைவி, புதல்வர் ஆகியோரைப் பெற்று, பெருமையுள்ள குடும்பியாக வாழ்வான். விநாயகரைப் புதல்வராக வடைந்த பார்வதியே! கேட்பாயாக.

20. அன்னைக்கு முப்ப தாண்டில் ஐப்பசி மாதந் தன்னில்
துன்மையாய்ப் பித்த பாண்டால் சோர்ந்திடு முடல
[மென்றேரும்
மன்னவன் காலந் தன்னில் மதிபுத்தி நடக்கு மென்றேரும்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

20. தாய், ஜாதகனது முப்பதாம் வயதில், ஐப்பசி மாதம் கொடிய பித்த பாண்டு நோயால் மரண மடைவாள் என்று கூறினேம். அப்பொழுது குரு மகா தசை சந்திர புத்தி நடக்குமென்று சொன்னேம். உயர்ந்த கணவனை யடைந்த பார்வதியே! கேள்.

21. மாரனின் மணத்தின் காலம் மறைகின்றே மிருப தாண்டில்
காரிழை தென்பால் நேரும் கழறுவோ மவள்கு ணத்தைத்
தீரமா மனத்த ளாகும் செய்ந்நன்றி மறவா ளாகும்
யாரையு முறவு கொள்வ ளற்புத வார்த்தை சொல்வள்.

21. ஜாதகனின் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். இருபதாம் வயதில் தெற்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் குணங்களைச் சொல்லுவோம். தணிவுள்ள மனத்தினள். பிறர்செய்த உதவியை மறவாதவள். எவரையும் நட்பாகக் கொள்ளுவாள். அதிசயமாகப் பேசுவாள்.

22. வந்தபின் யோகம் வாய்க்கும் மறுமொழி யதிகங் கூறுள்
செந்திரு விலாச முண்டு சிறப்பான குடும்பி யாவள்
நிந்தைக ளேற்கா ளாகும் நிமலியுந் தீர்க்க சீவி
சந்ததி பலததை யாங்கள் சாற்றுவோ மினிமே லாக.

22. இவள் வந்தபிறகு கணவனுக்கு யோகம் ஏற்படும். கணவன் சொற்களுக்கு மிகுதியாக எதிர்வார்த்தை சொல்ல மாட்டாள். இலட்சுமீ கடாட்ச முள்ளவள். மேன்மையான குடும்ப முடையவ ளாவள். பழிகள் ஏற்காதவள். தீர்க்க வயதுள்ளவள். ஜாதகனுக்குப் புத்திர பாக்கியத்தைப் பற்றி, இனிமேல் நாங்கள் சொல்லுவோம்.

23. சுதர்களு மாண்பா லொன்று தோகையு மிருவர் தீர்க்கம்
புதல்வரும் தவத்தால் தோன்றும் புகலுவீ ரந்தச் சேதி
மதியுமே வஞ்சில் தங்க மாலவன் புகரு நாலில்
இதுபலன் முதலி லாண்பால் இலகாது வென்று
[சொன்னேம்.

23. ஆண் குழந்தை யொன்றும், பெண்கள் இருவரும் தோன்றித் தீர்க்க மாவர். இவன் செய்த நல்வினையால் புதல்வன் தோன்றுவான். அந்த விவரத்தைக் கூறுங்கள். சந்திரன் ஐந்தாமிடமாகிய கன்னியிலும், புதனும் சுக்கிரனும் சிம்மத்திலும் தங்கியிருப்பதன் பலனாக முதலில் தோன்றும் புதல்வர் விளங்கார் என்று கூறினேம்.

24. இன்னவன் முன்சென் மத்தை இயம்புவோங் காஞ்சி
[தன்னில்
வன்னிய குலமு தித்து மனைவிமைந் தருமுண் டாகி
உன்னதப் புவியி னுலே உத்தமன் சிவித் தேதான்
தென்திசைக் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்.

24. ஜாதகன் முற்பிறப்பைச் சொல்லுவோம். காஞ்சீபுரத்தில் வன்னியர் குலத்தவனுகப் பிறந்து, மனைவி மக்களை யடைந்து, விவசாயம்செய்து ஜீவித்து, மரண மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு;

25. *இந்ததோர் பாலன் தோன்றும் இயம்புவோ மிவனின்
[யோகம்
தன்மகன் மாதி யோகம் சாமரை யோக மொன்று
சுந்தரன் தனக்குச் சொன்னேம் தொல்புவி விருத்திசெய்வன்

* இப்பாடலின் நான்காம் வரி ஏட்டிலில்லை.

25. இக்குலத்தில் பிறப்பான் இவன். இவன் யோகங்களைச் சொல்லு வோம். தர்ம கர்மாதிபதி யோக மொன்றும், சாமரை யோக மொன்றும் இவனுக்குக் கூறினேம். பழையகாலமுதல் உள்ள நிலங்களை விருத்தி செய்வான்.

26. ஈரெட்டு வாண்டு மேலாய் ஏகிடுஞ் சல்ய பாதை
கூறுவீர் விபரந் தன்னைக் குவலயம் பலித மாகி
மாறிடு மென்று சொல்வோம் மறைந்தவாண் டதன்மே
[லாகத்
தீரமா மனமுண் டாகும் சிறப்பான குடும்ப மேற்பன்.

26. பதினேழும் வயதுக்கு மேல் கடன் தொந்தரவு நீங்கும். விவர மாகக் கூறுங்கள். வீண் நிலங்களில் நல்ல பலனுண்டாகி, கடன் தீரும் என்று கூறுவோம். அதற்கு அடுத்த வருஷத்தில் மனத்தில் தெளிவு ஏற் பட்டு, மேன்மையுள்ள குடும்பத்தை யடைவான்.

27. உதித்தநாள் முதலா மாக ஒருபத்து வாண்டு மட்டும்
விதவிதக் கலக முண்டு விரயமா மிலாப மில்லான்
நிதநிதம் வழக்கு முண்டு நினைத்தகா ரியங்க ளாகாச்
சதியுண்டு சனங்க ளெல்லாம் சதாதிரிச் சலுமே யுண்டு.

27. பிறந்தநாள் முதல் பத்து வருஷங்கள் வரை, இவன் குடும்பத்தில் பல கலகங்கள் நிகழும். பொருட் செலவு ஏற்படும். இலாபம் உண்டாகாது. தினந்தோறும் வழக்குகள் நேரும். எண்ணிய செயல்கள் நடவா. தன் சொந்த ஜனங்கள் பகையாவர். எப்பொழுதும் அலைச்சல் இருந்து கொண் டிருக்கும்.

28. குருதசைக் காலந் தன்னில் கூடிடும் நிதிநிட் சேபம்
வருமாறு சொல்லு மென்ன மன்னவ னுச்ச மாகக்
கரியவ னுறி லுச்சம் கணக்கனு நாலி லேற
மருவிடும் நிதிநிட் சேப மங்கையே கேட்டி டாயே.

28. குரு மகா தசையில் ஜாதகனுக்குப் புதையல் கிடைக்கும். கிடைப் பதற்குக் காரணஞ் சொல்லுங்கள். குரு உச்சமாகவும், சனி துலாத்தில் உச்சமாகவும், புதன் சிம்மத்திலும் இருப்பதால் புதையல் கிடைக்கும். பார் வதியே! கேட்பாயாக.

29. மதிதனுக் கிரண்டில் காரி மருவிட வேறே ராஸ்தி
நிதிபூமி யில்லஞ் சேரும் நிருபன்தங் காலந் தன்னில்
அதுதந்தை துணைவர் வர்க்கம் அணுகிடு மென்று
[சொல்வோம்
துதிசெய்தோர் தம்மைக் காக்கும் தேவியே கேட்டி டாயே.

29. சந்திரன் இருக்கு மிடத்துக்கு இரண்டாமிட மாகிய தனாத்தில், சனி தங்கி யிருப்பதால், குரு மகா தசையில் வேறொருவரின் சொத்து, பூமி, முதலியன இவனுக்குச் சேரும். அந்த ஆஸ்திகள் தன் தகப்பனாரின் சகோதர வர்க்கத்தாரால் கிடைக்கும் என்று கூறுவோம். தோத்திரம் செய்தவர்களைக் காக்கும் பார்வதி தேவியே! கேட்பாயாக.

30. காரியின் காலந் தன்னில் காளையி னுடல மேகும்
கூறுவீர் காலந் தன்னைக் குழவிக்கு வன்பான் ரெண்டில்
காரிழை மாதந் தன்னில் கனமுள பருவ மாகும்
பாரினில் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

30. சனி மகா தசைக் காலத்தில் ஜாதகன் மரண மடைவான். இறக்கும் வயதைக் கூறுங்கள். ஐம்பத்திரண்டாம் வயதில் புரட்டாசி மாதம் வளர்பிறைப் பருவத்தில் இறப்பான். உலகில் தவங்களைப் புரியும் தேவியே! கேள்.

31. மறுசென்மங் கலிங்க நாட்டில் வணிகர்தங் குலமு தித்துப்
பெருமையாய்ச் செட்டுச் செய்து பேதையு மதிலை
[யுண்டாய்த்
திருமகன் வாழ்வா னுகும் செப்பின மொழிகுன் றாது
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

31. மறு பிறப்பு, கலிங்க நாட்டில், வணிகர் குலத்தில் பிறந்து, மேன்மையுடன் வியாபாரம் செய்து, மனைவி மக்களை யடைந்து வாழ்ந்திருப்பான். சொன்ன சொல் தவறாது. அரிதற்கரிய வேதங்களின் முடிவில் வீற்றிருக்கின்ற பார்வதியே! கேட்பாயாக.

32. செனித்திடு காலந் தன்னில் சித்திரை யிரண்டாம் பாதம்
கனமுள சேயி ருப்புக் கலந்திடு மாண்டு நான்கும்
வினையிலாத் திங்கள் மூன்றும் விளம்பிணும் பூர்வ பாகம்
அனையவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

32. ஜாதகன் பிறக்கும் காலத்தில் சித்திரை நட்சத்திரம் இரண்டாம் பாதமாம். அப்பொழுது அங்காரக மகா தசை யிருப்பு ; நான்கு வருஷங்களும், மூன்று மாதங்களுமாம். இவ்வாறு பலன்களை நாங்கள் சொன்னோம். தவங்களைப் புரியும் பார்வதியே ! கேள்.


33. அத்திரி தடுத்துச் சொல்வார் அவன்துணை யெந்தக் காலம்
சுத்தமாய்ச் சொல்லு மென்ன சுதர்குரு தசைப்பூர் வத்தில்
வித்தகர் பாகம் ரெண்டாய் மேவிடு மென்று சொல்வோம்
வெற்றியாய்த் தவங்கள் செய்யும் விமலியே கேட்டி டாயே.

33. அத்திரி முனிவர் தடுத்துப் பேசுவார். ஜாதகனுடைய சகோதரர் எப்பொழுது பிரிந்து செல்லுவர். நன்கு ஆராய்ந்து கூறுங்கள். குரு மகா தசைத் தொடக்கத்தில் இவன் குடும்பம் இரு பிரிவாகும் என்று சொல்லுவோம். தவங்கள் செய்யும் தேவியே ! கேட்பாயாக.

ஜாதகம் 95

1. நந்தியுஞ் சென்ன மாக ரவிபுதன் புகரும் ரெண்டில்
செந்தியுஞ் சென்ன மாகச் சேடனும் ரசலி லாக
மந்தனு மேழி லாக மதிகேது தசம மாகப்
பொன்னவன் லாப மாகப் பூரட்டாதி முதல்பா தத்தில் ;

1. விருஷபம் ஜென்ம லக்கினமாகி, சூரியன் புதன் சுக்கிரன் மிதுனத்திலும், செவ்வாய் இலக்கினத்திலும், இராகு சிம்மத்திலும், சனி விருச்சிகத்திலும், சந்திரன் கேது கும்பத்திலும், குரு மீனத்திலும் தங்கி, பூரட்டாதி நட்சந்திரம் முதல் பாதத்தில் ;



2. வந்தது பலனெவ் வாறு வறிவிப்பீர் முனியே நீர்தாம்
இந்தசே யாணுஞ் சென்மம் இல்லமும் வடதென் வீதி
முந்துமா லுத்திர மாகு முயர்சிவன் தங்கு மென்றும்
சந்தத மீனஞ் சத்தி சாற்றுவோஞ் சமவு ராகும்.

2. பிறந்த சேய்க்குப் பலன் எப்படி ? கூறுங்கள், முனிவரே! நீங்கள். இஃது ஆண் பிறப்பு. பிறக்கும் வீடு வட்க்குத் தெற்கான தெருவிலுள்ளது. திருமாலின் ஆலயமும், சிவபெருமான் கோயிலும் வீட்டுக்கு வடக்கிலுள்ளன. அம்பிகை கோயில் வடகிழக்கி லுள்ளது. சுமாரான ஊர் என்று சொல்லுவோம்.

3; பாலகன் கங்கை சேயாய்ப் பிறப்பனு மென்று சொல்வோம்
சாலவே வன்னை தந்தை சகோதரர் களத்ர புத்ரர்
ஏலவே முன்பின் சென்மம் இயம்புவோ மிந்நூல் தன்னில்
ஆலத்தை யுண்டோன் தேவி அறிவிப்போம் பிதாகு

[ணத்தை.

3. இந்த ஊரில், ஜாதகன் வேளாளர் குலத்தவனுய்ப் பிறப்பான் என்று கூறுவோம். இவன் தந்தை தாயார். உடன் பிறந்தோர், மனைவி, புத்திரர் முதலானவர் யோகங்கள், முற் பிறப்பு மறு பிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இந்தக் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுவோம். ஆல கால விஷத்தை யருந்திய சிவபெருமான் பத்தினியே! ஜாதகன் தந்தையின் குணங்களைச் சொல்லுவோம்.

4. தந்தையின் துணையா ணென்று சாற்றுவோர் தீர்க்க மாகத்
தந்தையின் சேதி கேளாய்ச் சாந்திமான் தரணி விருத்தி
தன்தன முடைய னுகும் சகலர்க்கும் நல்லோ னுவன்
தன்பந்து மதிக்க வாழ்வன் சாதமுங் குறைவு ரூதான்.

4. தந்தையுடன் பிறந்த சகோதரன் ஒருவனுண்டு. அவன் தீர்க்க மென்று சொல்லுவோம். தந்தையின் செய்தியைக் கேட்பாயாக. சாந்த முடையவன், விளைநிலங்கள் விருத்தி யுள்ளவன். சொந்தமாகச் சேர்த்த செல்வ முடையவன். அனைவருக்கும் நல்லவன். தன் சுற்றத்தார் பாராட் டும்படி வாழ்ந்திருப்பான். போஜன வசதி குறையாதவன்.

5. யோசனை பலவுஞ் செய்வன் உண்மையா மனத்த னுகும்
பாசமாய்ப் பேசு வானும் பரஉப காரி யாவன்
தாசிக ளுறவு கொள்ளான் தன்தேகம் பித்த சூடு
பேச்சதைக் காப்பா னுகும் பின்புத்தி யுடைய னுகும்.

5. பலவித யோசனைகள் செய்வான். உண்மை பொருந்திய மனத் தன். அன்புடன் பேசுவான். பிறருக்கு உதவிகள் செய்பவன். வேசையர் நட்புக் கொள்ளமாட்டான். உடலில் பித்த சூடுள்ளவன். சொன்ன சொற் களைக் காப்பான். பின்புத்தி யுள்ளவன்.

6. இன்நெறி யுடையா னுக்கு இப்பால னுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அற்புத வார்த்தை
[சொல்வன்
பொன்கடன் கொள்ளா னுகும் பூமியை விருத்தி செய்வன்
சின்னட்கள் கிராமச் செட்டுச் செய்வனு மென்று
[சொல்வோம்.

6. இத்தன்மை யுடையவனுக்கு இந்த ஜாதகன் தோன்றுவான். இவன் குணங்களைச் சொல்லுவோம். அதிசயமாகப் பேசுவான். பணம் கடனுகப் பெற மாட்டான். விளை நிலங்களை விருத்தி செய்வான். சில காலம் கிராமத்தில் வியாபாரம் செய்வான் என்று கூறுவோம்.

7. புத்தியில் பெரியோ னுகும் புண்ணிய மனத்த னுகும்
இத்தமே கரப்பு மில்லான் தீங்காது வொருவர்க் கெண்ணுன்
நித்தியஞ் சீல னுவன் நிருபர்க ளிட்டங் கொள்வன்
வெற்றிச்சொல் லுடைய னுகும் வேண்டினோர்க் குதவி
[செய்வன்.

7. புத்தியில் பெரியவன். நல்மன முடையவன். மனத்தில் வஞ்சனை யில்லாதவன். ஒருவருக்கும் கெடுதி நினையான். நல்லொழுக்க முள்ளவன். அரசர்கள் அன்பைப் பெறுவான். வெல்லும் சொற்களைக் கூறுவான். தன்னிடம் வந்து குறைபிரந்தவர்களுக்கு உபகாரங்கள் செய்வான்.

8. அந்தரம் பறப்பான் போலே அவன்கிள வி்தனில் காண்பான்
சுந்தர முடைய னுகும் சுகபுரிப் புடைய னுகும்
நந்தியா விருத்தி யுண்டு நல்லோர்க்கு நல்ல னுவன்
பிந்தியோ சனையுஞ் செய்வன் பிறர்குற்றம் புகலா னுகும்.

8. ஆகாயத்தில் பறந்து செல்லுபவனைப்போல் அவசரமாகப் பேசு வான். அழகுடையவன். நல்லுணவை உண்பான். காளை, பசுக்கள் விருத்தி யுள்ளவன். நல்லவர்க்கு நல்லவன். பின் யோசனை செய்பவன். அயலார் குற்றத்தைச் சொல்லான்.

9. வறுமையெப் போதுங் காணுன் வளமுள தலங்கள் செல்வன்
சிறியோரா பத்தைக் காப்பன் தீரமா மனத்த னுகும்
உறைந்திடும் பித்த சூடு உலகினில் நல்லோ னுவன்
அறமதி லிச்சை யுண்டு அம்பிகை யாளே கேளாய்.

9. எப்பொழுதும் தரித்திர மடையான். சிறந்த தலங்களுக்குச் சென்று வருவான். ஏழையோரைத் துன்பங்களிலிருந்து காப்பான். தைரியம் பொருந்திய மனத்தினன். இவன் உடலில் பித்த சூடு பொருந்தி யிருக்கும். உலகத்தாருக்கு நல்லவன். தருமஞ் செய்வதில் விருப்ப முண்டு. பார்வதி யே! கேட்பாயாக.

10. தன்துணை யாண்பா லொன்று சத்திமார் மூவர் தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் பேசின வாண்பா லுந்தான்
சொன்னவாண் வேறுய்ச் செல்வன் செப்புவோம் பின்பால்
[சேதி
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

10. இவனுடன் பிறந்த சகோதரன் ஒருவனும் சகோதரிகள் மூவரும் தீர்க்கமாக விளங்குவர், மேலும், பிறப்பவை யனைத்தும் சேதமாம். மேற் கூறிய சகோதரன் சிலகாலஞ் சென்று வேறு குடும்பமாகச் செய்லுவான்.

அவனைப் பற்றிய செய்தியைப் பிற்பாகத்தில் சொல்லுவோம். உயர்ந்த கணவனை யடைந்த பார்வதியே! கேட்பாயாக.

11. பாலகன் மணத்தின் காலம் பகருவோ மிருபா னெனறுள்
வேல்விழி வடபால் நேரும் விளம்புவோ மவள்கு ணத்தை
ஞாலமேல் நல்லோ ளாவள் நாயகன் மனத்துக் கேற்றோள்
சீலியாம் விரத மேற்பள் சிந்தையு நல்ல தாகும்.

11. ஜாதகனுக்குத் திருமணக் காலஞ் சொல்லுவோம். இருபத் தோராம் வயதுக்குள், வடக்குத் திசையிலுள்ள பெண்ணொருத்தி மனைவி யாக வாய்ப்பாள். அவள் குணங்களைக் கூறுவோம். உலகில் நல்லவளாக விளங்குவாள். கணவன் மனத்துக் குகந்தவள். ஒழுக்க முள்ளவள். நல்ல மன முடையவள்.

12. அரவுபோல் கோபங் சாந்தம் அடாவடி கூரு ளாகும்
வருவோரை யாத ரிப்பள் வஞ்சனை மனமில் லாதாள்
பெரும்புத்தி யடக்க வார்த்தை பித்தவா யுடைய ளாகும்
மர்மமுங் கொஞ்ச முண்டு வயதுமே தீர்க்க மெய்தும்.

12. பாம்பு போன்று சீறுவாள். பின்பு சாந்த மடைவாள். அடா வடித்தனமாகப் பேசாள். வீட்டுக்கு வருபவரை யாதரிப்பாள். வஞ்சனை யில்லாத மன முடையவள். பெரும் புத்தி யுள்ளவள். பணிவு பொருந்திய சொற்களைப் பேசுவாள். பித்த வாயு நோயுள்ளவள். மனத்தில் சிறிது மருமம் முடையவள். தீர்க்கமான வயதுடையவள்.

13. மங்கையு நடக்க நன்மை வளமுள குடும்ப மேற்பள்
சங்கையா மனத்த ளாகும் தறிபடக் கூரு ளாகும்
தங்கமும் பணிக ளிச்சை சாதமு மன்பா யிவள்
ஐங்கரன் தனைவ ளர்த்த அம்பிகை யாளே கேளாய்.

13. இவள், நன்னடத்தை யுள்ளவள். சிறப்பான குடும்பப் பொறுப் பை யேற்று நடத்துவாள். சந்தேகம் நிறைந்த மனத்தினள். கண்டிப் பாகப் பேச மாட்டாள். பொன்னாபரணங்களில் விருப்ப முள்ளவள். வீடு தேடி வந்தவர்க்கு அன்புடன் உணவளிப்பாள். விநாயகப் பெருமானைப் புதல்வராக வடைந்து வளர்த்த அம்பிகையே! கேள்.

14. புத்திர னுண்பால் நட்டம் பெண்ணது மூன்று விருத்தி
எத்தகைப் பலத்தி னுலே இயம்பினீ ராண்பால் தோடம்
பத்தினில் கேது தங்கப் பஞ்சமன் புதனே யாகிச்
சுத்தமா யாட்சி யாகச் செப்பினை மந்தச் சங்கை.

14, ஜாதகனுக்கு ஆண் குழந்தை யொன்றுபிறந்து சேதமாகும். புதல் வியர் மூவர் தோன்றித் தீர்க்கமாவர். எவ்விதக் கிரக நிலைகளைக் கொண்டு ஆண்குழந்தைக்குத் தோஷங் கூறினீர்கள்? பத்தா மிடமாகிய கும்பத்தில் கேதுவும், ஐந்தாமிடத்துக்கு உரியவன் புதனுகி, அவன் மிதுனத்தில் ஆட்சி யாகவும் இருப்பதால் புத்திர தோஷங் கூறினேம்.

15. தென்முனி புகலு கின்றூர் சந்திரன் பத்தில் தங்கக்
கர்மபுத் திரனு மொன்று கழறுவோ மந்தந் தன்னில்
இன்னவன் முன்சென் மத்தை இயம்புவோங் காஞ்சி
[தன்னில்
வன்னிய குலமு தித்து மனைவிமைந் தருமுண் டாகி;

15. அகத்திய முனிவர் சொல்லுகின்றூர். சந்திரன் கும்பத்தில் தங்கி யிருப்பதால், ஜாதகனுக்குக் கருமம் செய்வதற்குரிய புதல்வன் ஒருவன் கடைசிக் காலத்தில் தோன்றித் தீர்க்கமாவன் என்று சொல்லுவோம் ஜாதகன் முற் பிறவியைக் கூறுவோம். காஞ்சீபுரத்தில் வன்னியர் குலத்தவ னுய்ப் பிறந்து, மனைவி மக்கள் எற்பட்டு ;

16. சுகமுள குடும்பி யாகிச் சுதனுமே வாழு நாளில்
பகையதைப் புகலக் கேண்மோ பசுவின்பா லறக்க றந்தான்
மிகுதவம் புரிவோ ருக்கு வித்தக னிடைஞ்சல் செய்தான்
பகைமையாய் மறையோ ருக்குப் புகன்றனன் கட்டு
[வார்த்தை.

16. சௌக்கியமுள்ள குடும்பத்தை யுடையவனுய் இவன் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் நேர்ந்த தீவினையைச் சொல்லுவோம் ; கேளுங் கள். பசுவின் பாலை, கன்றுக்குச் சிறிதும் விடாமல் கறந்து விட்டான். மிக்க தவங்களைப் புரியுஞ் சான்றோருக்குத் தீங்குகள் பல செய்தான். சில அந்தணர்களுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி கூறினன்.

17. ஆதலா லிச்சென் மத்தில் அவன்சுத ராண்பால் தோடம்
காதலி மனைவி யாலே கலந்தன சிலவே துன்பம்
ஓதுவீ ரந்தச் சங்கை உத்தமி பூர்வங் கேளாய்
வேதன்பூ சிக்கு மந்த விணைதமாம் பட்சி தன்னில்;

17. ஆகையினல் இப்பிறவியில் இவனுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைக் தைக்குத் தோஷ மேற்படும். இவன் மனைவியின் முற்பிறவியிலும் சில தோஷங்கள் சேர்ந்தன. அந்தத் தீவினைகளைப் பற்றிக் கூறுங்கள். ஜாதகன் மனைவியின் முற் பிறப்பைக் கேளுங்கள். பிரமன் பூசிக்கின்ற சிறந்த ஸ்தல மாகிய திருக்கழுகுக் குன்றத்தில் ;

18. பஞ்சால குலமு தித்துப் பாவையும் வாழும் நாளில்
தஞ்சமாய் வந்த ஊழைச் சாற்றுவோந் தாயே கேளு
அஞ்சின பேரைக் காக்கும் அம்முனி குலதெய் வந்தான்
வஞ்சியுந் தொழாமல் நின்றுல் மனமுமே கர்வத் தாலே.

18. பஞ்சால மரபில் தோன்றி இவள் வாழ்கின்ற காலத்தில், இவளை யடைந்த தோஷத்தைச் சொல்லுவோம். தாயே! கேளுங்கள். பயந்தவர் களைக் காக்கும் தன் குல தெய்வமாகிய முனியாண்டவரை, கர்வத்தினுல் வணங்காமல் இருந்தான்.

19. கருமுனி புகலுஞ் சாபம் கைதொழாப் பாவிக் கேதான்
வருஞ்சென் மம் சுதராண் காணு மருவுவே னுன்பால் [யானும்
திருகாகச் சொல்லும் போது சேர்ந்தது வந்தச் சாபம்
மருவுரு தோடங் கேளாய் மைத்துனன் மதலைக் காக ;

19. கருப்பு முனி சாபமிட்டது. கர்வத்தினுல் என்னை வணங்காம லிருந்த பாவியே! வரப்போகின்ற பிறவியில் உனக்கு ஆண் குழந்தை தோன்றுது ; நானும் உன்னை யடைவேன் ; என்று இங்ஙனம் குற்ற மேற் பற்பட்டி சொல்லியபோது, அந்தச் சாபம் இவளைச் சேர்ந்தது. மேலும் ஒன்று கேட்பாயாக. தன் மைத்துனன் குழந்தைக்கு ;

20. சிலவேவஞ் சனைகள் செய்தாள் சேர்ந்தது வந்தத் தோடம்
தலைவியு மந்தி யத்தில் தன்சுத ரில்லா ளாகிக்
குலவினுள் கால நாடு குறைதலை வரையப் பட்டு
நலமுள கங்கை சேயாய் நாயகி யுதிப்பா ளாகும்.

20. சில வஞ்சனைகள் செய்தாள். அந்தத் தோஷமும் இவளை யடைந்தது. இவள் கடைசிக் காலத்தில் புதல்வரில்லாமல் மரண மடைந் தாள். மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, நன்மை பொருந்திய வேளாளர் குலத்தவளாய் இப் பிறவியில் தோன்றுவாள்.

21. மாதுக்கு மூன்தோ டத்தால் மைந்தராண் தோட மெய்தும்
நீதான முனிதன் பக்கல் சேர்ந்துமே வாச மாகும
பாதகம் விலக வேண்டிப் பகருவீர் கிரியை யொன்று
வேதம்போல் கரும சாந்தி வித்தகி தனக்குச் செய்து;

21. முற் பிறவியில் இவளுக்கு ஏற்பட்ட தோஷங்களினுல். இப் பிறப்பில் ஆண் குழந்தைக்குத் தீங்கு நேரும், கொடிய முனி இவளை யடைந்து வசிக்கும். இந்தத் தீங்கு நீங்கச் சாந்தி யொன்று கூறுங்கள்.

வேதங்களிற் கூறியுள்ளது போன்று தோஷம் நீங்குவதற்குச் சாந்தியொன்று இவளுக்குச் செய்து ;

22. சத்தியின் பீசந் தன்னைத் தாமிர ரேக்கில் கீறிச்
சத்தியின் மூலந் தன்னைச் சகத்திரஞ் செபித்து மேதான்
பத்தினி யணிவா ளாகில் பாலராண் விருத்தி தீர்க்கம்
குற்றமாய்ச் செய்யா ளாகில் குழவியாண் தோடஞ்
[சொன்னேம்.

22. பராசக்தியின் மூல மந்திரத்தைத் தாமிரத் தகட்டில் எழுதி, அம்மூல மந்திரத்தை ஆயிரம் முறை செபித்து, பின்பு அந்தத் தகட்டினை இவள் அணிந்து கொள்வாளாகில் ஆண் குழந்தைகள் பிறந்து விருத்தியாம். சாந்தி செய்விக்காமல், ஜாதகன் தவறுவானுகில், ஆண் குழந்தைக்குத் தோஷ மேற்படும்,

23. மறுமனை நேரு மாகில் மதலையாண் விருத்தி சொல்வீர்
குறையுறு மாண்பா லுந்தான் கூடாது வென்று
[சொல்வோம்
கருமசாந் திகளைக் காலங் கழறுவீர் முனியே நீர்தாம்
அருணனும் புந்தி மத்தில் அச்சாந்தி செய்வா ளாகில்;

23. இன்னொரு மனைவி வாய்த்தால், ஆண் குழந்தை விருத்தி எற்படுமோ ? சொல்லுங்கள். அம்பொழுதும் ஆண் குழந்தைக்குத் தோஷ முண்டாகும் என்று கூறுவோம். கர்ம சாந்திகள் எந்தக் காலத்தில் செய்யப்பட வேண்டும். முனிவரே ! நீங்கள் சொல்லுங்கள். புத மகா தசை மத்தியில் அந்தச் சாந்திகளைச் செய்வாளுளுல் ;

24. கருமபுத் திரனும் விருத்தி கழறின மொழிகுன் ருது
பெருவயி ரேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்
திருமகன் செய்வி னைக்குச் செப்புவோங் கிரிகை யொன்று
அருணைக்கு விருவர் சென்று அக்கிரி மூன்று நாளும் ;

24. ஜாதகனுக்கு உரிமைக் கடன்கள் செய்யும் புத்திரன் தோன்றி விருத்தியாவான். சொன்ன சொல் தவறுது. பெருவயிற்றை யுடைய விராயகரைப் புதல்வராக வடைந்த புண்ணியவதியே! கேட்பாயாக. ஜாதகன் செய்த தீவினைக்குச் சாந்தி யொன்று சொல்லுவோம். திருவண்ணுமலைக்கு ஜாதகனும் மனைவியும் சென்று. அம்மலையை மூன்று காட்கள் ;

25. வலம்வந்து வருச்சித் தேத்தி யதிதிக ளேழு பேர்க்கு
நலமூட னன்ன மீய நசித்திடு மந்தத் தோடம்
தலைவன்தன் யோகச் சேதி சாற்றுவோ மினிமே லாக
உலகினில் நல்லோ னவன் உணவுக்கு வறுமை காணுன்.

25. வலம் வந்து, இறையவனுகு அருச்சனை முதலிய செய்து; போற்றி, ஏழு அதிதிகட்கு நல்ல உணவு அளிப்பாராகில், இவனுக்கு ஏற் பட்ட தோஷங்கள் போம். இனிமேல், ஜாதகனின் யோக விவரங்களைச் சொல்லுவோம். உலகில் நல்லவனுக விளங்குவான். போஜனத்தில் தரித் திர மடையான்.

26. சல்லியங் காணு னுகும் தனமது கையி ருப்புச்
சொல்லுவோம் பூமி விருத்தி சுற்றத்தார் மதிப்புக் கொள்ளல்
நல்லவ னுகி வாழ்வன் நடத்துவன் சகடு தானும்
அல்லலைச் சிலர்க்குக் காப்பன் அம்பிகை யாளே கேளாய்.

26. கடனில்லாதவன். கையிருப்பில் பொருள் உண்டு. வீடு நிலங்கள் விருத்தியாம். உறவினர் பாராட்டுதலை ஏற்பான். நல்லவனுக வாழ்ந்திருப்பான். வண்டி முதலிய வசதியான வாகனங்கள் வைத்து நடத்து வான். சிலரைத் துன்பத்திலிருந்து காப்பான். அம்பிகையே! கேட்பாயாக.

27. தந்தைதாள் பூமி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
பிந்தியுஞ் சோலை கூவம் புதிதாகச் செய்வா னுகும்
சிந்தையு நல்ல தாகும் சிறப்புடன் வாழ்வா னுகும்
கந்தனை யின்ற மாதே கழறின மொழிகுன் ருது.

27. தகப்பனுர் கால முதலுள்ள நிலங்களை விருத்தி செய்வான் சோலை, கிணறு முதலியவற்றைப் புதிதாக அமைப்பான். நல்மன முள்ளவன் பெருமையுடன் வாழ்வான். முருகக் கடவுளைப் புதல்வராக வடைந்த பார்வதியே! சொன்ன சொல் தவருது.

28. அன்னையின் குணத்தைச் சொல்வோ மடக்கமும் பெருமை [யுண்டு
அன்னமு மன்பா யீவள் அறிவுளாள் யோக சாலி
அன்னியர்க் குதவி செய்வள் அடாவடி யில்லா ளாகும்
அன்னவள் துணையா ணுன்று அம்பிகை மார்கள் ரெண்டு.

28. ஜாதகன் தாயின் குணங்களைச் சொல்லுவோம். பணிவு, பொறுமை முதலிய குணங்க ளுள்ளவள். வீடுதேடி வந்தவர்கட்கு அன்பு டன் உணவளிப்பாள். அறிவுடையவள். அதிர்ஷ்ட முள்ளவள். அயலார்க்கு

உதவிகள் செய்வாள். அடாவடித்தன மில்லாதவள். இவளுக்குச் சகோதரன் ஒருவன் உளன். சகோதரிகள் இருவர் உளராவர்.

29. மற்றவை சேத மாமே மருவிடும் பித்த வாயு
விக்தகி பூர்வஞ் சொல்வோம் திருவிர்த்தா சலத்தி லேதான்
மெத்தெனக் குடும்பி யாகி விளங்கினுள் வைசியச்
[சேயாய்ச்
சுத்தமு முன்டய ளாகித் தொல்புவி பவமில் லாமல்;

29. மேலும் பிறப்பவை சேதமாம். இவளுக்குப் பித்த வாயு நோய் உண்டாகும். இவள் முற்பிறவியைச் சொல்லுவோம். விருத்தாசலத்தில், வைசிய மரபில் பிறந்து, நல்ல குடும்ப முடையவளாய் விளங்கினுள். தூய்மை யுடையவளாய், உலகில் தீவினையின்றி;

30. மரலியின் பதிக்குப் புக்கு மறையவன் வரையப் பட்டு
அரிவையு முதித்தா ளென்றோம் அறைகின்றே மிவள்பின்
[சென்மங்
கருவூரில் தனவா ணுகக் காப்பளாஞ் சௌராட்டிர வம்சம்
நிறையவே குடும்பி யாவள் நிமலியே கேட்டி டாயே.

30. இயமபுர மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டுப் பிறந்தாள் இவள் என்று சொன்னோம். இவள் மறு பிறவியைச் சொல்லுகின்றோம். கருவூரில், செல்வமுள்ள சௌராஷ்டிர மரபில் தோன்றுவாள். நிறைந்த குடும்ப முடையவளாய் வாழ்வாள். குற்றமற்ற பார்வதியே ! கேள்.

31. தந்தையின் முன்சென் மத்தைச் செப்புவோந் தோகை
[மேல்பால்
முந்தின குலமு தித்து முயர்வான குடும்பி யாகி
அந்தவன் வினையில் லாமல் அணுகினுன் கால நாடு
எந்தையே பிரமன் லக்கம் எய்தினு னென்று சொல்வோம்.

31. தந்தையினுடைய முற்பிறவியைச் சொல்லுவோம். தோகை மலைக்கு மேற்கில், அந்தணர் குலத்தில் தோன்றி, உயர்ந்த குடும்பத்தை யடைந்து, தீவினைக ளில்லாமல் இறந்தான். பிறகு பிரமனால் மீண்டும் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான் என்று உரைப்போம்.

32. முப்பது நாலு வாண்டுள் விளம்புவோந் தந்தை கண்டம்
செப்புவோ மிவன்பின் சென்மம் சீர்காழி தன்னி லேதான்
ஓப்புவா னிக்கு லத்தில் உயர்வான குடும்பி யாவன்
அப்பணி சடையோன் தேவி அருள்மொழி குன்றி டாது.

32. ஜாதகனின் முப்பத்து நான்காம் வயதிற்குள் தந்தைக்கு மரண மேற்படும். தந்தையின் மறு பிறவியைச் சொல்லுவோம். சீர்காழியில் இதே குலத்தில் பிறப்பான். சிறந்த குடும்பத்தை யடைவான். கங்கை யைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! சொன்ன சொற் கள் தவறு.

33. எண்ணஞ்சு நாலு வாண்டில் இயம்புவோ மன்னை கண்டம்
திண்ணமா யன்பா னேழில் செப்புவோங் கும்ப மாதம்
வண்ணமாய்ச் சாத கர்க்கு வறைகின்றே மார கங்கள்
அண்ணலைப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

33. ஜாதகனின் நாற்பத்து நான்காம் வயதில் தாய்க்குக் கண்டம் ஏற் படும். நிச்சயமாக ஐம்பத்தேழாம் வயதில் மாசி மாதத்தில் ஜாதகன் இறந்து விடுவான் என்று கூறுவோம். சிவபெருமானைத் துதிக்கும் பார் வதியே! கேட்டிடுவாய்.

34, மறுசென்மந் தக்கோ லத்தில் வருவனே பிரம்ம சேயாய்
அரசனுல் தொழிலும் பெற்று அவனுமே வாழ்வா னுகும்
திருமகன் சென்ன காலம் செம்பொனின் தசையி ருப்பு
உரைத்தனம் பதிமூன் றுண்டும் உறைந்திடும் திங்கள்
[பத்தும்.

34. ஜாதகன் மறு பிறவியில், தக்கோலத்தில், அந்தண குலத்தவனுகப் பிறப்பான். அரசாங்க உத்தியோகம் அடைந்து ஜீவித்து வருவான். ஜாத கன் ஜனன காலத்தில் புதமகாதசை யிருப்பு பதிமூன்று வருடங்களும் பத்து மாதங்களுமாம்.

35. முதற்பாகம் புகன்றேம் யாங்கள் மொழிகின்றேம் பின்பால்
[சேதி
அதிபதி மனைவி தானும் மாரன்பின் மரிப்ப ளாகும்
சதியிலா விவள்பின் சென்மஞ் செப்புவோங் தணிகை
[தன்னில்
முதல்குல முதிப்பா ளாகும் மொழிந்தன முனியே யாங்கள்.

35. இந்நனம் முதல் பாகத்தைச் சொன்னேம். மற்றவை. பின் பாகத்தில் கூறுவோம். ஜாதகனின் மனைவி இவனுக்குப் பின் இறப்பாள். அவளுடைய மறு பிறப்பு, திருத்தணியில் அந்தண குலத்தவளாகப் பிறப் பாள் என்று கூறுவோம். முனிவரே!

ஜாதகம் 96

1. நந்தியு [1]முதய மாக ரவிபுகர் சென்மந் தங்கப்
புந்திபொன் மதியும் ரெண்டில் [2]புயங்கனு மூன்றி லாக
மந்தனும் லாப மாக மங்கள னெட்டி லாக
இந்தவார் கோளும் நின்ரூல் இயம்புவீர் பலனே யென்று;

1. விருஷபம் சென்ம லிலக்கினமாகி, சூரியன் சுக்கிரன் இலக்கினத்திலும், புதன் குரு சந்திரன் மிதுனத்திலும், ராகு கடகத்திலும், சனி இலாப ஸ்தானமாகிய மீனத்திலும், செவ்வாய் தனுசிலும், கேது மகரத்திலுமாக ஸவக்கிரகங்கள் நின்ரூல், உரிய பலன்களைச் சொல்லுவீர்.

சனி		லக்கினம் சூரியன் சுக்கிரன்	புதன் குரு சந்திரன்
	இராசி சக்கரம்		இராகு
கேது			
செவ்வாய்			

2. சுந்தரி கேட்கும் போது செயமுனி புகலு கின்ரூர்
இந்தசே யாணஞ் சென்மம் இல்லமு மேல்பால் நோக்கம்
தென்வட வீதி யாகும் சிவன்கோட்டந் தென்பா லாகும்
சுந்தரி காளி யுத்ர மணுகிடும் கீழ்ப்பால் தீர்த்தம்.

2. பார்வதி இங்ஙனம் கேட்கும்பொழுது, ஜெய முனிவர் சொல்லுகின்ரூர். இம்மது ஆண் பிறப்பு. பிறக்கும் வீடு மேற்குப் பார்த்த வாயிலுடையது. தெற்கு வடக்கான தெரு. சிவபெருமான் கோயில் தெற்குத் திசையிலுள்ளது. காளிதேவி கோயில் வடக்கிலும், நீர்நிலை யொன்று கிழக்கிலு முள்ளன.

3. இத்தகை யடையா ளத்துள் இலகிய பேரூ ராகும்
வித்தகன் கங்கை சேயாய் விளங்குவான் சேட்ட னுகப்
பெற்றதாய் தந்தை யோகம் பேதையர் புத்ர யோகம்
வித்தகன் முன்பின் சென்மம் விளம்புவோ மிந்நூல் தன்னில்.

---

1. இலக்கினம்
2. இராகு

3. இத்தகைய அடையாளங்கள் கொண்டு விளங்கும் பெரிய ஊரில், வேளாளர் குலத்தில், தன் தந்தைக்கு மூத்த புதல்வனாகத் தோன்றுவான் இந்த ஜாதகன். இவனது தாய், தந்தையர், மனைவி, மக்கள் முதலியவர்கள் யோகங்கள், முற்பிறப்புமறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் இந்த நூலில் கூறுவோம்.

4. தந்தையின் துணை நவத்துள் ளாயிணென்று கன்னிரெண்டு
இந்தவர் விருத்தி யென்றோம் இயம்பின வாண்பா லுந்தான்
முந்தின துணைவ னுக வேறுவ னுதிக்கா முன்னம்
அந்தவன் சேதி பின்பால் அறிவிப்போந் தாயே யாங்கள்.

4. தசப்பனுடன் பிறந்த ஒன்பதின்மரில் சகோதரன் ஒருவனும், சகோதரிகள் இருவருமே தீர்க்கமாவர். சொல்லப்பட்ட சகோதரன், ஜாதகன் தந்தைக்கு முன் பிறந்தவன். இவன் தோன்றுவதற்குமுன்பே வேறு குடும்பமாகச் செல்லுவான். தாயே! நாங்கள் அவனைப் பற்றிய செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுவோம்.

5. சோதியுந் தனுசு ராசி தோன்றுவான் தந்தை யென்றோம்
ஓதுவோ மவன் குணத்தை உண்மையை வெளிக்காட்
[டாதான்
சாதிப்பான் சிலவே சங்கை தரணிபா லுய்வா னுகும்
மேதினில் சல்ய முள்ளான் வித்தகி மேலுங் கேளே.

5. சுவாதி நட்சத்திரம் தனுர்லக்கினத்தில் ஜாதகனின் தந்தை பிறப்பான். அவன் குணங்களைச் சொல்லுவோம். மனத்திலுள்ளவற்றை வெளிவிட மாட்டான். சில சந்தேகங்களைத் துணிவுடன் தீர்ப்பான். சில புலன்களில் பயிர்செய்து ஜீவிப்பான். கடனுள்ளவன். பார்வதியே! கேள்.

6. இருநிறங் குள்ள னுவன் யாரையு முறவு கொள்வன்
அரிரேகை கமல ரேகை அணுகிடுஞ் சமமாங் கல்வி
விரைவினில் நடக்க வல்லன் வேண்டினோர்க் குதவி
[செய்வன்
முருகர்தம் பத்தி பூண்பன் முதல்வியே கேட்டி டாயே.

6. கரியநிற முடையவன். குட்டையன். யாவரையுந் தனக்கு நட்பாகக் கொள்ளுவான். விஷ்ணு ரேகையும் தாமரை ரேகையும் உடையவன். சுமாரான கல்வியறிவுள்ளவன். வேகமாக நடப்பதில் வல்லவன். தன் உதவியை விரும்பியவர்கட்குச் செய்வான். முருகப்பிரான் மீது பக்தி பூண்பான். எல்லாப் பொருட்கும் முதலானவளே! கேட்பாயாக.

7. இந்நெறி யுடையா னுக்கு இப்பால னுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளான் சிவந்த [மேனி
பன்னியே பேசு வானும் பல்கலை யுணர்வா னுகும்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பான் ஊக வானும்.

7. இத்தன்மையுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் புதல்வனுகத் தோன்றுவான். அவன் குணங்களைக் கூறுவோம். அழகுடையவன். சிவந்த உடலுடையவன். பன்னிப் பன்னிப் பேசுவான். பல சாஸ்திரங்களைக் கற்று உணருவான். தான் சொல்லுகின்ற சொற்களே சிறந்தன என்று நிலைநாட்டுவான். ஊகித்துணரும் சக்தி பெற்றவன்.

8. உண்டியுஞ் சிறிதே வுண்பன் உறைப்பொடு புளிப்பி விச்சை
குண்டுனி கூரு னுகும் குஞ்சர நடையு மாவன்
அண்டர்கள் பூசை பூண்பன் ஆவுகள் [1]பணையேர் விருத்தி
எண்டிசைப் புகழு மேற்பன் இணக்கமா மனத்த னுகும்.

8. சிறிதளவே உணவு உட்கொள்ளுவான். உறைப்புப்பொருளிலும் புளிப்பிலும் விருப்பமுள்ளவன். கோள் முதலியன சொல்லமாட்டான். யானையைப் போல் கம்பீர நடையுடையவன். தெய்வங்கட்குப் பூசைகள் புரிவான். பசுக்கள், பண்ணை, ஏர்கள் விருத்தியுள்ளவன். எட்டுத் திசைகளிலும் கீர்த்தி பெற்றவன். நல் மனமுள்ளவன்.

9. பலருக்கும் பந்தி னர்க்கும் பிரிந்துப சாரஞ் செய்வன்
தலவாசம் செல்வா னுகும் சண்முகன் பத்தி பூண்பன்
நலமதை யெவர்க்குஞ் செய்வன் நல்லோர்க்கு நல்ல னுவன்
ந்லஞ்செய்வான் பந்துக் கட்குத் நங்கையே கேட்டி டாயே.

9. மக்கள் பலருக்கும், உறவினர்கட்கும் அன்புடன் உபசாரங்கள் பல செய்வான். புண்ணிய ஸ்தலங்கட்கு யாத்திரை செல்லுவான். சுப்பிரமணியக் கடவுள்மீது பக்தி கொள்ளுவான். யாவருக்கும் நன்மையே புரிவான். நல்லவர்க்கு நல்லவனுக விளங்குவான். சுற்றத்தார்கட்கு நல்லவற்றைச் செய்வான். பார்வதியே! கேட்பாயாக.

10. தன்துணை யாண்பால் ரெண்டு தங்கிடும் கன்னி மூன்று
இன்னவர் தீர்க்க மென்றேரும் இயம்புவோம் பின்பால் சேதி
மன்னவன் மணத்தின் கால மறைகின்றே மிருப தாண்டில்
கன்னிகை யன்னை வர்க்கங் கலப்பளா மேல்பால் தன்னில்;

---

1. தொகுதி வயல் பண்ணை என்பது மிகுதியான நிலத் தொகுப்பைக் குறிக்கும். பண்ணைபென்பதே பணையென இடைக் குறைந்தது.

10. ஜாதகனுக்குச் சகோதரர் இருவர். சகோதரிகள் மூவர். இவர்கள் தீர்க்கமாவர் என்று சொன்னேம். இவர்களைப் பற்றிய செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுவோம். ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். இருபதாம் வயதில், மேற்குத் திசையிலிருந்து ஜாதகனது தாய் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி மனைவியாக வாய்ப்பாள்.

11. மாதுவின் குணத்தைச் சொல்வோ மாந்தளிர் மேனி யாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உள்மனங் கபடு மில்லாள்
பாதக மனமில் லாதாள் பரவுப காரி யாதும்
வேதனை யொருவர்க் கெண்ணுள் விளங்குமூன் கோபி
[யாகும்.

11. அவள் குணங்களைக் கூறுவோம். மாந்தளிர் போன்ற மென்மையான உடலுடையவள். இனிய சொற்களைப் பேசுவாள். மனத்தில் வஞ்சனைகளும் கெட்ட எண்ணமும் இல்லாதவள். பிறருக்கு உதவிபுரியும் இயல்பினள். ஒருவருக்குந் துன்பம் செய்ய நினையாள். முன்கோப முள்ளவள்.

12. அன்னம்போல் சாய லொக்கும் அடாவடி கூறு ளாகும்
அன்னியர் குற்றஞ் சொல்லாள் ஆளன்தன் மனத்துக்
[கேற்றாள்
அன்னமு மன்பா யீவள் அடைந்தோரை யாத ரிப்பாள்
அன்னவள் யோக சாலி அவளுக்கு வயது தீர்க்கம்.

12. அன்னப்பறவை போன்ற சாயலுள்ளவள். அடாவடித்தனமாகப் பேசாதவள். பிறர்மீது குற்றங் கூறமாட்டாள். கணவன் மனத்துக்கு உகந்தவள். வீடு தேடி வந்தவர்கட்கு அன்புடன் உணவளிப்பாள். தன்னிடம் புகலடைந்தவர்களைக் காப்பாள். அதிர்ஷ்ட முள்ளவள். தீர்க்கமான வயதுடையவள்.

13. புத்திர ரெழுவர் தோன்றும் போகிடு முதலில் புத்ரர்
சித்தமா யாண்பால் ரெண்டு செல்விமா ரவ்வார் தீர்க்கம்
குற்றங்கள் முதலி னென்றீர் கூறுவீ ரந்தச் சங்கை
புத்திரத் தானத் தோனும் புதனுமி துனந் தங்க ;

13. ஜாதகனுக்கு மக்கள் எழுவர் தோன்றுவர். முதலில் சிலர் தோன்றி மரிப்பர். நிச்சயமாய் ஆண்கள் இருவரும் பெண்கள் இருவரும் தீர்க்கமாக விளங்குவர். முதலில் தோன்றும் குழந்தைகட்குத் தோட மேற்படும் என்று சொன்னீர்கள். அதற்குக் காரணஞ் சொல்லுங்கள். புத்திர ஸ்தானத்துக்குரியவன் புதனுமி, அவன் இரண்டாம் வீடாகிய மிதுன ராசியில் தங்கி ;

14. நந்தியுஞ் சென்ன மாக நவின்றன மந்தச் சங்கை
மைந்தனின் முன்சென் மத்தை யறைகின்றேம் புதுவை
[தன்னில்
விந்தையாய் வணிபம் செய்யும் வைசியக் குலமு தித்துத்
தன்தன முடைய னுகிச் சகலர்க்கும் நல்லோ னுகி ;

14. விருஷபம் ஜன்ம விலக்கினமாக இருப்பதால் முதலில் தோன்றும் குழந்தைகள் சிலருக்குத் தோடம் உண்டாகும் என்று கூறினேம். ஜாதகன் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். புதுச்சேரியில், வியாபாரம் செய்யும் இயல்புடைய வைசிய மரபில் பிறந்து, சொந்த முயற்சியால் தேடிய செல்வத்தைப் பெற்று, அனைவருக்கும் நல்லவனுகி ;

15. பலதல வாசஞ் சென்று பகவானின் பக்தி யாகிக்
குலவினன் கால நாடு குறைதலை வரையப் பட்டுத்
தலைவனு முதிப்பா னுகுஞ் சாற்றுவோ மிவனின் யோகம்
நிலஞ்சேர்ப்பான் சல்யங் காணுன் நேமியோர் மெச்ச
[வாழ்வன்.

15. பல புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று, தெய்வபக்தி கொண்டு வாழ்ந்து, மரண மடைந்தான். மீண்டும் பிரம்மனல் படைக்கப் பட்டு, இக்குலத்தில் பிறப்பான் இவன். இவன் யோகங்களைச் சொல்லுவோம். விளைநிலங்கள் சேர்ப்பான். கடனில்லாதவன். உலகத்தோர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான்.

16. குருவுப தேசங் கொள்வன் [1]கோவலர் மெச்ச வாழ்வன்
பெருயையும் புகழு மேற்பன் பிஞ்ஞகன் தனைத்து திப்பான்
திருகிலாக் குணத்தா னுகும் செயஞ்செய்வ னெடுத்த வேலை
நறைமலர் சோலை வைப்பன் நங்கையே கேட்டி டாயே.

16. நல்ல ஆசிரியரையடைந்து நல்லுபதேசங்களைப் பெறுவான். அரசர்கள் பாராட்டும்படி வாழ்வான். மேன்மையும் கீர்த்தியும் அடைவான். சிவபெருமானைத் துதிப்பான். குற்றமில்லாத நற்குணத்தவன். தொடங்கிய காரியங்களை வெற்றியுடன் முடிப்பான். மணமுள்ள மலர்ச்செடிகள் கொண்ட நந்தவனம் வளர்ப்பான். பார்வதியே ! கேட்பாயாக.

17. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீக ளந்தச் சங்கை
பாகனும் வதிபன் ரெண்டில் பரிதியும் புகருஞ் சென்மம்
ஏகனுய்க் காரி லாபம் இருப்பதால் கமல யோகம்
தோகையே தர்ம கர்ம யோகமென் றுரைக்க லாகும்.

1. அரசர்

17. இவனுக்கு யோகங்கள் எங்ஙனம் சொன்னீர்கள்? அதற்குரிய காரணங் கூறுங்கள். புதனும் குருவும் மிதுனத்திலும், சூரியன் சுக்கிரன் இலக்கினத்திலும், சனி இலாபஸ்தானமாகிய மீனத்தில் தனியலுகவும் தங்கியிருப்பதால் கமலயோக மொன்றும் தர்மகர்மயோக மொன்றும் ஜாதகனுக்கு ஏற்படும் என்று சொல்லலாம்.

18. ஆகையால் வறுமை காணுன் அளகேசன் போலே வாழ்வன்
தாகமென் றோருக் கீவன் சகலர்க்கு மிவன்சொல் மேன்மை
நாகரி கங்க ளுண்டு நடையது நன்மை யாகும்
போகவா ரிதியைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

18. இவ்விதம் யோகங்கள் அடைவதனுல், ஜாதகன் தரித்திரமடைய மாட்டான். குபேரன்போல் மிகுந்த செல்வமுடையனுகி வாழ்வான். பிறி யென்று வந்தவர்கட்கு உணவளித்து உபசரிப்பான். யாவரும் இவன் கூறு கின்ற சொற்களே மேன்மை யுடையனவாக நினைப்பர். நாகரிகங்களுள்ள வன். நல்லொழுக்க முடையவன். யோகக்கடலாகிய சிவபெருமானைக் கணவனுகவடைந்த புண்ணியவதியே! கேட்பாயாக.

19. மாதுரு குணத்தைச் சொல்வோ மாஞ்சிவப் புடைய ளாகும்
சூதிலாள் முன்கோ பத்தாள் சொல்லது சுருக்க மாகும்
வேதனை யொருவர்க் கெண்ணுள் வரன்மனம் போலே
[வாழ்வள்
காதலி சமயோ கத்தாள் கடுநடை யுடைய ளாகும்.

19. ஜாதகன் தாயின் குணங்களைக் கூறுவோம். கருமை கலந்த சிவப்பு நிறமுள்ளவள். வஞ்சனை யில்லாதவள். முன்கோப முள்ளவள். சுருக்கமாகப் பேசுவாள். ஒருவருக்குந் துன்பம் நினையாதவள். கணவனின் மனமறிந்து வாழ்க்கை நடத்துவாள். இன்பமும் துன்பமும் கலந்த யோக முடையவள். விரைவாக நடப்பதில் வல்லவள்.

20. தன்துணை யாண்பால் ரெண்டு சத்தியு மவ்வார் தீர்க்கம்
சொன்னவா ரொருவன் தானும் சோர்வுறு மிரண்டா
[மாண்டில்
தென்மேல்பா லில்ல மாகும் செப்புவோம் பின்பால் சேதி
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

20. இவனுக்குச் சகோதரர் இருவர். சகோதரிகளும் இருவர் தோன்றித் தீர்க்கமாக விளங்குவர். மேற்கூறிய சகோதரர்களில் ஒருவன் தோன்றிய இரண்டாம் வருஷத்தில் இறப்பான். தாயின் பிறந்தகம் தென் மேற்கிலுள்ளது. சகோதர சகோதரிகளைப் பற்றிய விவரங்களைப் பிற்

பகுதியில் சொல்லுவோம். உயர்ந்த கணவனை யடைந்த உத்தமியே! கேட்பாயாக.

21. மாதுரு முன்சென் மத்தை யறைகின்றோம் விரிஞ்சி
[தன்னில்
சூதிலாக் கர்ண சேயாய்த் தோன்றியே வறுமை யின்றி
மேதினில் நல்லோ ளாகி வினையது மில்லா ளாகி
நீதியாய்க் கால நாடு நேர்ந்துமே பிரமன் லக்கம்;

21. தாயாரின் முற்பிறப்பைச் சொல்லுகின்றோம். விரிஞ்சிபுரத்தில், குற்றமில்லாத கருணீகர் வமிசத்தவளாய்ப் பிறந்து, தரித்திரமில்லாமல், நற்குணமுடையவளாய், நீங்குகளைவையுமின்றி வாழ்ந்து, மரணமடைந்தாள். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு;

22. வந்தவ ளென்று சொல்வோம் மறுசென்மந் தக்கோ லத்தில்
இந்ததோர் குலமு தித்து எழிலான குடும்பி யாகி
அந்தவள் வாழ்வா ளாகும் அறைந்தன மொழிகுன் றுவே
கந்தனை யீன்ற மாதே கழறுவோம் தந்தை கண்டம்.

22. இப்பிறப்பில் பிறந்தவள் என்று சொல்லுவோம். இவள் மறு பிறவியில் தக்கோலத்தில் இக்குலத்திலேயே தோன்றி, சிறந்த குடும்ப முடையவளாய் வாழ்ந்திருப்பாள். கூறிய சொற்கள் தவறு. முருகப் பிரானைப் புதல்வராக வடைந்த பார்வதியே! ஜாதகன் தந்தைக்கு மரண காலங் கூறுவோம்.

23. முன்சென்மங் கடையூர் தன்னி லுதித்தனன் செக்கான்
[வம்சம்
பொன்பொரு ளுடையா ளுகிப் பெரிதான செட்டுச் செய்து
உன்னதத் தலங்கள் சென்று ஒதுங்கினுன் கால நாடு
பொன்னவன் வரையப் பட்டுப் பிறந்தவ னென்று
[சொல்வோம்.

23. ஜாதகன் தந்தை முற்பிறவியில் திருக்கடையூரில் வாணியர் மரபில் பிறந்தான். செல்வமுடையவனுய், பெரிய வியாபாரங்கள் செய்து, உயர்ந்த ஸ்தலங்களுக்குச் சென்று, வழிபட்டு, மரண மடைந்தான். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இக்குலத்தில் பிறந்தவன் என்று சொல்லுவோம்.

24. மறுசென்ம மாலங் காட்டில் வருவனே சைவச் சேயாய்ப்
பொருளது பெருக்க மாகிப் புகழுடன் வாழ்வா ளுகும்
கருமகா லங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர்தாம்
அறுவஞ்சு வாண்டில் தந்தை அணுகுவான் கால நாடு.

24. இவன் மறுபிறப்பு, திருவாலங்காட்டில், சைவ மரபினனுய்ப் பிறப்பான். செல்வப் பெருக்கம் ஏற்பட்டு, கீர்த்தியுடன் வாழ்வான். முனிவரே! நீங்கள், ஜாதகனுக்குக் கருமதசை வரும் காலத்தைச் சொல்லுங்கள். இவனது மூப்பதாம் வயதில் தந்தை இயமபுரஞ் செல்லுவான்.

25. நாற்பது வாண்டு தன்னில் நமன்பதி யன்னை சேர்வள்
ஏற்கவே வறுபான் ரெண்டில் இடபமா தத்தி லேதான்
ஆர்க்கவே வளர்பக் கத்தில் அட்டமி திதியி லேதான்
தீர்ப்பாகச் சாத கர்க்குச் செப்புவோ மார கங்கள்.

25. ஜாதகனின் நாற்பதாம் வயதில், தாய் மரண மடைவாள். அறுபத்திரண்டாம் வயதில், வைகாசி மாதம், வளர்பிறைப் பருவத்தில் அஷ்டமி திதியில் ஜாதகனுக்கு நிச்சயமாக மரணமுண்டாகும் என்று சொல்லுவோம்.

26. அத்திரி மறுத்துச் சொல்வார் ஆண்டுக்குள் கண்ட மூன்று
சித்தமாய் மூன்ருண் டுக்குள் செப்புவோ மார கங்கள்
இத்தகை முனிவர் கூற இயம்புவார் பிருகு தாமும்
சுத்தமாய்ச் சனியும் லாபம் சுக்கிரன் சென்மந் தங்க ;

26. அத்திரி முனிவர் இடைமறித்துக் கூறுவார். ஜாதகன் பிறந்து ஒரு வருஷத்துக்குள் மூன்று கண்டங்கள் இவனுக்கு நேரும். இவற்றிலிருந்து மீள்வானுகில், மேலும் மூன்று வருஷங்களுக்குள் இவனுக்கு மரணம் நேரும் என்று சொல்லுவோம். இவ்வாறு அத்திரி முனிவர் கூறவும், பிருகு முனிவர் சமாதானஞ் சொல்லுகின்ருர். நிச்சயமாய்ச் சனி இலாப ஸ்தானத்திலும், சுக்கிரன் லக்கினத்திலும் நின்று ;

27. மந்திரி யிரண்டி லேற வரும்வினை விலகு மென்ருரும்
எந்தநோய் வந்த போதும் இரவிமுன் பனிபோல் நீங்கும்
பிநதிய சென்மஞ் சொல்வோம் பிருதிவி தலத்தி லேதான்
முந்தின குலமு திப்பான் முதல்வியே கேட்டி டாயே.

27. குரு மிதுனத்தில் இருப்பதால், ஜாதகனுக்கு இளமையில் ஏற்படும் தீவினைகள் விலகிப்போம் என்று சொன்னேம். எத்தகைய வியாதி வந்தாலும் சூரியனுக்கு முன்பு பனிபோல் நீங்கிப் போம். ஜாதகன் மறு பிறவியைக் கூறுவோம். காஞ்சிபுரத்தில், அந்தணர் மரபினனுகத் தோன்றுவான். உலகங்களுக்கு முதல்வியே! கேட்பாயாக.

28. சனித்தநாள் முதலா மாகச் சிலசில கலகம் வெற்றி
தனமது செலவு முண்டு சலலியப் பாதை யேற்பன்
இனபகை விரோத மாகும் இபபல னைந்தாண் டுக்கும்
நினைவது முடியா தாகும் நிமலியே கேட்டி டாயே.

28. ஜாதகன் பிறந்தநாள் முதல் சில கலகங்கள் ஏற்பட்டு, அவற்றின் முடிவில் இவனுக்கு வெற்றியை யளிக்கும். பொருட் செலவுண்டு. கடன் தொந்தரவை யடைவான். உறவினர்களின் விரோதம் வரும். இவ்வித மான பலன்களே ஐந்து வருஷங்கள் நீடிக்கும். நினைத்த செயல்கள் நிறை வேறு. குற்றமற்ற பார்வதியே! கேட்பாயாக.

29. சொல்லிய வாண்டின் மேலாய்ச் சந்திரன் பிறைபோல் [யோகம்
எல்லிகள் பலித மாகும் ஏவலா ளில்லஞ் செய்தல்
சல்லியங் காணு ஞுதும சம்பத்து முடைய ஞுதம்.
அல்லித் தவிர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

29. மேற்கூறிய மூன்று வருஷங்களுக்குப் பின்பு, வளர்பிறைச் சந்திரன் போல் யோகங்கள் உயரும். லாபஸ்தானங்களில் நல்ல பலனேற் படும், ஏவலாட்கள் ஏற்படுவர். புதிய வீடு கட்டுவான். கடனில்லாத வனுவான். செல்வமுடையவனுக விருப்பான். துன்பங்களை நீக்குகின்ற எங்கள் உயிரான தாயே! கேள்.

30. பாலகன் செனிக்குங் காலை பணிதசை பதினே ழாண்டுஞ்
சாலவே திங்கள் மூன்றுஞ் சாற்றுவோம் பலனை யாங்கள்
ஞாலங்கள் சேர்த லுண்டு நவிலுவோம் பின்பால் சேதி
ஆலதனை யுண்டோன் தேவி அறிவிப்போம் விபர முத்ரம்.

30. ஜாதகன் பிறப்புக் காலத்தில் இராகுமகாதசை பதினேழு வருஷங் களும் மூன்று மாதங்களும் இருப்பாம். அக்காலத்துக்குரிய பலன்களை நாங்கள் கூறுவோம். லாபஸ்தானங்கள் சேரும். மற்றச் செய்திகளைப் பிற் பாகத்தில் சொல்லுவோம். ஆலகால விஷத்தை யருந்திய சிவபெருமான் பத்தினியே! விவரங்களைப் பின்பு தெரிவிப்போம்.

ஜாதகம் 97

1. நந்தியு முதய மாக ராகுசேய் காரி பத்தில்
புந்தியுஞ் சென்ன மாகப் புகர்பானு ரெண்டி லாகச்
சந்திரன் குருவு மெட்டில் சிங்கிராவில் மூலம் பூர்வம்
இந்தவார் கோளு நின்றுல் இயம்புவீர் பலனை யென்று;

1. விருஷபம் ஜன்ம விலக்கின மாகி, ராகு செவ்வாய் சனி கும்பத்திலும், புதன் இலக்கினத்திலும், சுக்கிரன் சூரியன் மிதுனத்திலும், சந்திரன் குரு தனுசிலும், கேது சிம்ம விராசியிலுமாக நவக்கிரகங்களும் தங்கி, மூல நட்சத்திரம் முதல் பாதத்தில் தோன்றிய ஜாதகருக்குப் பலன்களைச் சொல்லுவீர் என்று;

		லக்கினம் புதன்	சுகுரன் சூரியன
ராகு செவ்வாய் சனி	இராசி சக்கரம்		கேது
சந்திரன் குரு			

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்றார்
மேதினி லாணைஞ் சென்மங் விளங்குமில் வடதென் வீதி
ஆதவன் வாச லாகும் அக்கினி காளி மாரி
போதக வானை கோட்டம் பொருந்திடும் வடபால் தன்னில்.

2. பார்வதி தேவி கேட்கும் பொழுது, விசுவா மித்திர முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண்பிறப்பு. பிறக்கும் வீடு வடக்குத் தெற்கான வீதியில் கிழக்கு நோக்கிய வாயிலை யுடையது. அக்கினி மூலையில் காளி தேவி கோயிலும் மாரியம்மன் கோயிலும் உள்ளன. யானைமுகக் கடவுள் கோயில் வடக்கில் உளது.

3. தென்திசை கணேசன் மார்க்கம் சிவன்கோட்டம் வடகீ
[ழாகும்
அந்தரி யதற்கு வுத்ரம் அணுகிய சமவூ ராகும்
சந்ததி தசமாஞ் சென்மம் செங்குந்த மரபே யாகும்
இந்தவன் குடுச்பச் சேதி இயம்புவோ மினிமே லாக.

3. தெற்குத் திசையிலும் விநாயகர் கோயிலுண்டு. சாலையுமுள்ளது. சிவபெருமான் ஆலயம் வடகிழக்கிலுள்ளது. அம்பிகை அதற்கு வடக்கில் வாசம். இங்ஙனமான, ஊரில் செங்குந்த மரபினருக, தந்தைக்குப் பத்தாம் பிறப்பாக ஜாதகன் தோன்றுவான். இனிமேல் இவனது குடும்ப வரலாற்றினைச் சொல்லுவோம்.

4. தந்தையின் துணையாண் மூன்று சத்திமா நிருவ ராகும்
அந்தவர் வேறுய்ச் செல்வர் அறைன்கிறேம் பிதா
[குணத்தைக்
கந்தன்மேல் பக்தி கொள்வன் காரகப் பிணியுங் கொஞ்சம்
சிந்தையும் நல்ல தாகும் சனவுப காரி யாகும்.

4. ஜாதகன் தகப்பனருக்குச் சகோதரர் மூவரும் சகோதரிகள் இருவருமாவர். சகோதரர் வேறு குடும்பமாகச் செல்லுவர். தந்தையின் குணங்களைச் சொல்லுகின்றேம். முருகப் பிரான் மீது பக்தி யுடையவன். மேக ரோகம் சிறிதுண்டு. நல்மன முடையவன். மக்களுக்கு உபகாரஞ் செய்வான்.

5. கடன்புடா னிடுக்க மில்லான் கருதிடான் கட்டு வார்த்தை
படையில்முன் செல்லா னுகும் பசித்தோர்க்குத் தாக மீவன்
தடபுடல் செய்கை கொஞ்சம் தறித்தொழில் புரிவ னுகும்
மடையரை யுறவு கொள்ளான் மாநிலம் நல்லோ னுவன்.

5. கடன் கொள்ளமாட்டான். துன்பமில்லாதவன். இல்லாதவற்றைப் புனைந்து பேச நினையான். சண்டையில் முன்செல்லாதவன். பசியென்று வந்தவர்கட்கு உணவும் நீரும் தருவான். ஆடம்பரச் செய்கைகள் சிறிதுள்ளவன். நெசவுத் தொழில் செய்வான். மூடர்கள் நேசங் கொள்ளான். உலகினில் நல்லவனுக விளங்குவகன்.

6. இருவிதக் குணமு முண்டு எய்திடு மாமி ரெண்டு
அரவுபோல் கோபஞ் சாந்தம் அடாவடி கூரு னுகும்
நெறிகாப்பான் சிவந்த மெய்யன் நீத்தோர்க ளுறவு
[கொள்ளான்
அரிவையர் மோக னுவன் அம்பிகை யாளே கேளாய்.

6. இருவிதக் குணங்கள் படைத்தவன். இவனுக்கு மாமியார் இருவர். பாம்பு போல் சீற்ற மடைவான். பின்பு சாந்த முறுவான். அடாவடித் தனமாகப் பேசான். ஒழுங்கு முறையைக் கடைபிடிப்பான். சிவந்த உடலுள்ளவன். துறவிகள் நேசங் கொள்ளாதவன். பெண்பால் மோக முடையவன். அம்பிகையே! கேட்பாயாக.

7. முன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றேம் திருவா ரூரில்
கன்னமாங் குலமு தித்துக் காதலி மதலை யுண்டாய்
அந்நகர் கணக்கு வேலை அவன்செய்நாள் வினையைக்
[கேண்மோ
தன்மனை வார்த்தை கேட்டுத் தாயாரை யெற்ற லுற்றான்.

7. இவனது முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருவாரூரில், கருணீகர் மரபில் பிறந்து, மனைவி மக்களை யடைந்து, அந்நகரத்துக் கணக்கு வேலையை அவன் பார்த்து வந்த காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள்! தன்மனைவியின் சொல்லைக் கேட்டு, தாயினைப் நோக்கித் தாழ்வான சொற்களைக் கூறி, உதைத்தான்.

8. மாதுவும் வருத்த முற்று வறைந்தசா பத்தைக் கேண்மோ
பாதக மனைசொல் லாலே பதர்மொழி புகன்றிட் டாயே
மேதினில் மறுசென் மத்தில் விளங்கார்கள் சுதர்கள் தாமும்
ஓதுவாள் தந்தக் குற்றம் உறைந்திடுங் காலில் ரோகம்.

8. தாய் மிக்க வருத்த மடைந்து கூறிய சாபத்தைக் கேளுங்கள். கொடியவளான மனைவியின் சொற்களைக் கேட்டு, தாழ்வாக என்னை உதைத்து, இழிவான சொற்களைக் கூறினாய். உனக்கு மறுபிறவியில் புதல்வர் தோன்றி விளங்கார்கள். பற்களில் துன்பமுண்டாகும். கால்களில் வியாதி ஏற்படும் என்றும்;

9. இன்னமும் பலவார் சொன்னாள் எய்திற்று வந்தச் சாபம்
அந்தியக் காலந் தன்னில் அரசனால் துன்பம் நேர்ந்து
தென்திசைக் கால நாடு சென்றுமே நரகம் புக்த
வந்தன னென்று சொல்வோம் மருவிடு மூன்னூழ்ச் சாபம்.

9. இன்னும் பலவிதமாகவும் சொன்னாள். அந்தச் சாபம் இவனை யடைந்தது. கடைசிக் காலத்தில், அரசாங்கத்தினால் துன்பங்களடைந்து, இய்மபுர மடைந்து, நரகம் அடைந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டுப் பிறந்தவன் என்று கூறுவோம். இப் பிறப்பில் முற்பிறவியில் ஏற் பட்ட தீவினை இவனைச் சாரும்.

10. தந்தமும் பிணியு மாகும் தங்கிடுங் கார கங்கள்
இந்தவார் குணத்தா னுக்கு இப்பால னுதிப்பா னாகும்
அந்தவன் குணத்தைச் சொல்வோம் அழகுளா னிருசி வப்பன்
சிந்தையு நல்ல தாகும் செனவுப காரி யாவன்.

10. அதனால் இவனுக்குப் பற்களில் நோய் உண்டாகும். மேக வியாதி ஏற்படும். இத் தன்மையான குணங்களுடையவனுக்கு இந்த ஜாதகன்

தோன்றுவான். இவன் குணங்களைக் கூறுவோம். அழகுடையவன். கருமை கலந்த செந்நிற முடையவன். நல்மனமுள்ளவன். மக்களுக்கு உபகாரங்கள் செய்வான்.

11. கல்வீமான் கடவுள் பக்தி கண்முகம் வசிய முண்டு
எல்லைகள் சேர்ப்பா னுகும் இடுக்கமென் றோரைக் காப்பன்
தொல்லையு மேற்பா னுகும் சோம்பிடான் காரி யத்தில்
நல்லவன் நல்ல வர்க்கும் நடையது துருசு முண்டு.

11. படிப்பாளி. கடவுள் பக்தி யுள்ளவன். கண்களும் முகமும் வசிகரமாக விளங்கும். பூமிகள் சேர்ப்பான். துன்பமென்று வந்தவர்களைக் காப்பான். கஷ்டங்களைத் தைரியமாகத் தாங்குவான். செயலாற்றுவதில் சோம்பலடைய மாட்டான். நல்லவர்க்கு நல்லவன். விரைவாக நடப்பான்.

12. குலத்தொழில் புரிவா னுகும் கோதைமார் தன்னல் நிந்தை
விலைமாதர் மோகங் கொள்ளான் வீண்பழி கூரு னுகும்
சொலு மொழி காப்பா னுகும் சித்திர வில்லஞ் செய்வன்
பலருக்கும் நல்லோ னுவன் பார்வதி கேட்டி டாயே.

12. தனது குலத்தொழிலைச் செய்வான். பெண்களால் பழியடைவான். வேசையர் மீது மோகங் கொள்ளமாட்டான். பிறர் மீது வீண்பழியைச் சொல்லான். சொன்ன சொற்களைக் காப்பான். அழகிய வீடு கட்டுவான். அனைவருக்கும் நல்லவனாக விருப்பான். பார்வதியே! கேட்பாயாக.

13. தன்துணை யாண்பால் காணுன் சத்திமார் மூவர் விருத்தி
என்னகா ரணத்தி னுலே இவன்துணை யாண்பால் தோடம்
மன்னனு மதியு மெட்டில் மருவின பலத்தால் சொன்னேம்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

13. தன்னுடன் பிறந்த சகோதரன் இல்லாதவன். சகோதரிகள் மூவர் தோன்றி விருத்தியடைவர். என்னகாரணத்தினால் இவனுக்குச் சகோதர தோஷம் எற்படும்? குருவும் சந்திரனும் எட்டாமிடமாகிய தனுசில் சேர்ந்த பலத்தினால் சகோதர தோஷங் கூறினேம். உயர்ந்த கணவனை யடைந்த பார்வதியே! கேட்பாயாக.

14. உதித்தவன் மணத்தில் காலம் உரைக்கின்றே மையைந்
[தாண்டில்
அதிசதி வடபால் நேரும் அறைகின்றே மவள்கு ணத்தைத்
துதிசெய்தோர்க் குதவு வாளாந் தோகைபோல் சாய
[லொக்கும்
சதியிலா மனத்த ளாகும் சந்தேக குணத்தா ளென்றேரும்.

14. ஜாதகனின் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். இருபத்தைந்தாம் வயதில், வடக்குத் திசையிலிருந்து இவனுக்கு மனைவி வாய்ப்பாள். அவள் குணங்களைக் கூறுகின்றோம். தன்னைப் புகழ்ந்தவர்கட்கு உதவி செய்வாள். மயில்போல் சாயலுடையவள். குற்றமில்லாத மனமுள்ளவள். சந்தேக குணமுடையவள்.

15. மாதுவும் வறுமை காணுள் வருவோரை யாத ரிப்பள்
சாதிப்பாள் சிலவே சங்கை தன்வரன் மனத்துக் கேற்றோள்
காதலி தீர்க்க சிவி கண்முகம் வசிய முண்டு
மாதவர் பராசர் சொல்வார் மனைவிமா ரிருவர் நேரும்.

15. இவள் தரித்திர மடையாள். வீடுதேடி வருபவரை ஆதரிப்பாள். சில சந்தேகங்களைத் துணிவுடன் போக்குவாள். தன்கணவனின் மனமறிந்து நடப்பாள். தீர்க்கமான வயதுள்ளவள். கண்களும் முகமும் வசீகரமுள்ளவள். பெரிய முனிவராகிய பராசரர் சொல்லுவார். இவனுக்கு மனைவியர் இருவர் ஏற்படுவர்.

16. காரணம் புகலு மென்னக் காரிசேய்ப் பணியும் பத்தில்
தீரமா யிருப்ப தாலே செப்பினேந் தாரம் ரெண்டு
கூறின தாரம் ரெண்டுங் குறையுண்டோ தீர்க்க மாமோ
வேறொரு தீங்குங் காணுன் விருத்தியா மிருவ ருந்தான்.

16. இருமனைவியர் ஏற்படக் காரணங் கூறுங்கள். சனி, செவ்வாய், ராகு ஆகியோர் பத்தாமிட மாகிய கும்பத்தில் திடமாய்த் தங்கியிருப்பதால் இவனுக்கு இரு மனைவியர் ஏற்படுவர் என்று கூறினேம். சொல்லிய மனைவியர் இருவரும் தீர்க்கமாவார்களோ? அன்றி இடையில் எவருக்கேனும் தீங்குண்டாகுமோ? இவனுக்குத் தீங்கெதுவும் நேராது. இரு மனைவியரும் தீர்க்கமாக விளங்குவார்.

17. மருமனை யெந்தக் கால மருவிடு விபரஞ் சொல்வீர்
இருபது வெட்டு வாண்டில் எய்திடுந் தென்பால் பாரி
வரிவிழி குணமெவ் வாறு மாநிறம் பித்த தேகி
அரவுபோல் கோப மேற்பள் அடாவடி கொஞ்ச முண்டு.

17. ஜாதகனுக்கு இரண்டாம் மனைவி எந்தக்காலத்தில் ஏற்படுவாள்? விவரங் கூறுங்கள். இவனது இருபத்தெட்டாம் வயதில், தெற்குத் திசையிலிருந்து இரண்டாம் மனைவி வாய்ப்பாள். அவள் எத்தகைய குணமுள்ளவள்? மாநிற முடையவள். பித்ததேக முள்ளவள். பாம்புபோல் சீற்றமுடையவள். அடாவடித்தனஞ் சிறிதுண்டு.

18. சொல்லது வதிக மாகும் சுந்தர முடைய ளாகும்
இல்லையென் றுரைக்க மாட்டாள் இடரான புத்தி யில்லாள்
வெல்லுஞ்சொல் லுடைய ளாகும் வித்தகி தீர்க்க சீவி
அல்லலென் றோருக் கீவள் அம்பிகை யாளே கேளே.

18. மிகுதியான சொற்களைப் பேசுவாள். அழகு உடையவள். தன்னிடம் வந்து கேட்பவருக்கு இல்லை யென்று சொல்ல மாட்டாள். தவறான புத்தி யில்லாதவள். இவள் கூறுகின்ற சொற்கள் பலிதமாம். தீர்க்கமான வயதுடையவள். துன்பமடைந்தோம் என்று வந்தவர்கட்குப் பொருள் கொடுப்பாள். அம்பிகையே! கேட்பாயாக.

19. சுதர்களு மாண்பால் மூன்று தோகையர் நால்வ ராகும்
எதுவித மாதுக் கேதான் இயம்பினீ ரந்தச் சங்கை
முதல்மனை தனக்குக் கன்னி மேவிடு மென்று சொன்னேம்
சதியிலாப் பின்ம னைக்குச் செப்பினே மற்ற வெல்லாம்.

19. மக்களில் புதல்வர் மூவரும், பெண்கள் நால்வருமாவர். எந்த மனைவிக்கு இவர்கள் தோன்றுவர் என்று கூறினீர்கள்? முதல் மனைவிக்குப் பெண்ணொருத்தி பிறப்பாள் என்று கூறினேம். குற்றமில்லாத இரண்டாம் மனைவிக்கு மற்றவர் தோன்றுவர் என்று சொன்னேம்.

20. பாலகன் முன்சென் மத்தைப் பகருவோந் தாயே கேளும்
சிலமாந் தில்லை தன்னில் செனிப்பனும் வேளா ளுக
ஞாலங்கள் விருத்தி செய்து நாயகன் வாழு நாளில்
வேல்விழி யேழை மாது விதவையாய் வன்ய சேயும்;

20. ஜாதகன் முற்பிறப்பைச் சொல்லுவோம். தாயே! கேளுங்கள். ஒழுக்கமுள்ள பெரியோர்கள் வசிக்கின்ற சிதம்பரத்தில், வேளாளனுகப் பிறப்பான். நிலபுலன்களை விருத்திசெய்து, இவன் வாழ்கின்ற காலத்தில், வேல்போன்ற விழியையுடைய வன்னியர் மரபில் தோன்றிய, கணவனை யிழந்தவளாகிய ஏழைப் பெண்ணொருத்தி;

21. இல்லத்தில் பணிகள் செய்வோம் இடுவீர்க ளென்ன மென்ன
வல்லியை யாத ரித்து வருநாளில் மாது தானும்
சில்லரை புத்தி கொண்டு சிலபணி தன்கைப் பற்றிச்
சொல்லாமல் சென்று ளென்றோரும் சேயனும் பின்னல்
பார்த்து;

21. ஜாதகன் வீட்டுக்குவந்து, வேலைசெய்து கொண்டிருக்கின்றேன், வயிற்றுக்கு உணவு அளியுங்கள் என்று கூறினாள். இவன் அங்ஙனமே அவளை ஆதரவு கொடுத்துக் காப்பாற்றி வரும் காலையில், ஏழைப் பெண்,

தனக்கிருந்த அற்ப புத்தியினால், இவன் வீட்டிலிருந்த சில ஆபரணங்களை அபகரித்துக் கொண்டு, எவரிடமும் கூறாமல் சென்றுவிட்டாள் என்று சொன்னேன். ஜாதகன் பின்பு இதனையுணர்ந்து;

22. மங்கையைக் காண நெஞ் வானையின் கோட்டம் முன்பாய்ச்
சங்கையா மனத்த நெஞ்சித் தையல்முன் கடனே காணேன்
ஐங்கரா வவட்குக் கூலி அருளுவா யென்று சொல்லிச்
செங்கையால் தூசு தூற்றிச் சென்றன னில்லத் துக்கு.

22. எங்குத் தேடியும் அவளைக் காணாதவனாய், விநாயகர் கோவிலுக்கு முன்பாக நின்று துன்பமுற்ற மனத்துடன், இவளிடம் நான் முன்பு கடன் படவில்லை. அங்ஙனமிருக்கவும் எனக்குத் தெரியாமல் பொருள், நகைகள் இவைகளை யபகரித்துச் சென்றவளுக்கு, விநாயகரே! தகுந்த தண்டனை யருளுங்கள் என்று சொல்லிவிட்டு, கையினால் தெருமண்ணை வாரியிறைத்து விட்டுத் தன் வீடு சென்றான்.

23. மாரனு மந்தி யத்தில் மறையோர்க்குத் தொண்டு பூண்டு
தீரமாய்க் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
பாரினி லுதிப்பா னெகும் பாவைமுன் பொருள்க வர்ந்தோள்
சேருவாள் மறும னைதான் செல்வதி கேட்டி டாயே.

23. ஜாதகன் அப்பிறவியில், தன் கடைசிக் காலத்தில், வேதங்களை யுணர்ந்த சான்றோர்கட்குத் தொண்டுபூண்டு, இயமபுர மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இவ்வுலகில் தோன்றுவான். முற்பிறவியில் இவன் வீட்டில் பொருளைக் கவர்ந்த பெண், இப்பிறவியில் இவனது இரண்டாம் மனைவியாக வருவாள். செல்வியே! கேட்பாயாக.

24. இன்னவன் யோகச் சேதி இயம்புவோ மினிமே லாக
அன்னிய ருறவு கொள்வன் அரன்தொண்டு புரிவா னெகும்
பின்னமில் லாத தேகி புதுவில்லஞ் செய்வா னெகும்
பன்னியே பேசு வானும் பதர்குண மில்லா னெகும்.

24. இனிமேல் ஜாதகனின் யோக விவரங்களைச் சொல்லுவோம். அயலார் சட்பைக் கொள்ளுவான். சிவத்தொண்டு செய்வான். குற்றமில்லாத உடலுடையவன். புதிய வீடு கட்டுவான். பன்னிப் பன்னிப் பேசுவான். அற்ப குணம் இல்லாதவன்.

25. தரணிகள் பின்னுல் சேர்ப்பன் சந்திரன் தசையி லேதான்
திருமாளி செய்வா னெகும் சல்லியப் பாதை காணன்
பெருமையும் புகழு மேற்பன் போசன வறுமை காணன்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

25. வீரே நிலங்களைப் பிற்காலத்தில் சேர்ப்பான். சந்திர மகா தசையில் புதிய வீடு கட்டுவான். கடன் தொந்தரவு அடையான். மேன்மையும் கீர்த்தியும் பெறுவான். போஜனத்தில் தரித்திர மில்லாதவன். யாமுனைக் கடவுளைப்பெற்ற தாயே! கேட்பாயாக.

26. [1]அலரியின் தசைவ ரைக்கும் அணுகிடுஞ் சல்லியப் பாதை
[2]நிலவுதன் தசையி லேதான் நேர்ந்திடும் சுதர்கள் தாமும்
பலமுள வில்லஞ் செய்தல் பூருவப் பொருளும் நேரல்
தலவாசம் செல்ல லுண்டு செயமுனி புகலு கின்றார்.

26. சூரிய மகா தசை முடிவு வரையில் கடன் தொந்தரவு ஏற்படும். சந்திர மகா தசையில் புத்ரபாக்கியம் ஏற்படும். பலமுள்ள வீடு கட்டுவான். முன்னோர் காலத்திய செல்வமும் கிடைக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லுவான். செய முனிவர் சொல்லுகின்றார்.

27. நிதியெந்தக் கால நேரும் நுவலுவீ ரந்தச் சங்கை
மதிதசை மத்தில் நேரு மாறுறு வாண்டு தன்னில்
இதுவிப ரங்க ளெல்லாம் இயம்புவோம் பின்பா கத்தில்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

27. எந்தக் காலத்தில் முன்னோர் காலத்திய செல்வம் கிடைக்கும். அந்தச் சந்தேகத்தை விளக்கிச் சொல்லுங்கள். முப்பத்தாறும் வயதில் சந்திரமகாதசை மத்தியில் செல்வம் கிடைக்கும். இதுபற்றிய விவரங்களனைத்தையும் பிற்பாகத்தில் சொல்லுவோம். முனிவர்களைக் காக்கின்ற பார்வதியே! கேட்பாயாக.

28. மாதுரு குணத்தைச் சொல்வோம் மாந்தளிர் மேனி யாகும்
சூதிலா ளடக்க வார்த்தை சோம்பிடாள் பித்த தேகி
பாதக மனமில் லாதாள் பார்த்தாவுக் கினிய ளாகும்
வேதனை யொருவர்க் கெண்ணுள் வித்தகி கேட்டி டாயே..

28. ஜாதகன் தாயின் குணங்களைச் சொல்லுவோம். மாந்தளிர் போன்ற மென்மையான சரீர முள்ளவள். பணிவான சொற்களைப் பேசுபவன். காரியங்கள் செய்வதற்குச் சோம்பலடைய மாட்டாள். பித்த சரீர முள்ளவள். கெடுதல் இல்லாத மனமுடையவள். கணவனுக்கு உகந்தவள். எவருக்கும் துன்பம் எண்ணுதவள். பார்வதியே! கேட்பாயாக.

---

1. சூரியன்

2. சந்திர மகா தசை

29. அன்னையும் ரெண்டு மாகும் அவள்துணை யாண்பால் காணுள்
கன்னிமா ரிருவர் தீர்க்கம் காதலி யில்லங் கிழ்ப்பால்
முன்சென்ம மருணை யுத்ரம் மேவிய சிறுவூர் தன்னில்
வன்னிய குலமு தித்து வாழ்நாளில் வினையைச் சொல்வோம்.

29. இவளுக்குத் தாய்மார் இருவர். சகோதரர் இல்லாதவள். சகோதரிகள் இருவர் தோன்றித் தீர்க்கமாக விளங்குவர். இவளுடைய வீடு கிழக்குத் திசையிலுள்ளது. இவள் முற்பிறவியில், திருவண்ணுமலைக்கு வடக்கில் உள்ளதொரு சிறிய ஊரில், வன்னியர் மரபினளாய்ப் பிறந்து, வாழுகின்ற காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுவோம்.

30. வரன்தம்பி பேரில் நிந்தை வருணித்தா ளிந்த மாது
குறைவுள மனத்த ளுகிக் கூறுவான் சாபந் தானும்
பொரைசொன்ன பாவிக் கேதான் பின்சென்மந் துணையா
[ணின்றி
வருஞ்சுதர் பாதி நட்டம் மருவிடு மென்று சொல்ல;

30. இவள் தன் கணவனின் தம்பிமீது பழிச் சொற்கள் கூறினள். அவன் வருத்தமுள்ள மனத்தினளாய், சாபமொன்று கூறுவான். என்மீது பழிகூறிய பாவிக்கு, மறு பிறவியில் சகோதர னில்லாமல், தோன்றும் புதல்வர்களிலும் பாதிப்பேர் கஷ்டமாவர் என்று கூற;

31. அதுசாபஞ் சேர்ந்த தென்றேரும் அம்மாது வந்தி யத்தில்
சதியான வாய்ப்புண் கண்டு சென்றனள் கால நாடு
விதியவன் வரையப் பட்டு விளங்கினு ளென்று
[சொல்வோம்
சுதர்பாதி தோட மாகும் துணையாண்பா லில்லா ளாகும்.

31. அந்தச் சாபம் இவளே யடைந்தது. இவளும் கடைசிக் காலத்தில், வாயில் கொடிய புண் ஏற்பட்டு, இயமபுரம் அடைந்தாள். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு இப்பிறப்பில் பிறந்தாள் என்று சொல்லுவோம். இப்பிறப்பில் இவளுக்குப் பிறக்கும் குழந்தைகளில் பாதி கஷ்டமடையும், சகோதரன் இல்லாதவளாவாள்.

32. பின்சென்ம மாலங் காட்டில் பிறப்பளாஞ் சைவச் சேயாய்க்
கன்மகா லங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர்தாம்
சந்திரன் தசையி லேதான் செப்புவோ முப்பா னுண்டு
மன்னிய தந்தை கண்ட மருவிடு மென்று சொல்வோம்.

32. இவள் மறு பிறப்பு, திருவாலங்காட்டில் சைவ குலத்தவளாய்ப் பிறப்பாள். முனிவரே! நீங்கள். ஜாதகனுக்குக் கரும தசை வரும் காலத்தைச் சொல்லுங்கள். சந்திரமகாதசையில் ஜாதகனது மூப்பதாம் வயதில் தந்தைக்கு மரணம் நேரும் என்று கூறுவோம்.

33. மதிதசைக் காரி புக்தி மாதுரு கண்ட மெய்தும்
இதுநிற்க வுதித்தோ னுக்கு எழுபது வாண்டு தன்னில்
கதிதருந் தனுசு மாதங் காவல னுடல மேகும்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

33. சந்திரமகாதசை சனி புக்தியில் ஜாதகன் தாயாருக்கு மரணம் உண்டாகும். இது நிற்க, ஜாதகனுக்கு எழுபதாம் வயதில், மார்கழி மாதம் மரணம் ஏற்படும். முனிவர்களைக் காக்கும் பார்வதியே! கேட்பாயாக.

34. மறுசென்மங் காஞ்சி தன்னில் வருவனே பிரம்ம சேயாய்த்
திருமக னிச்சென் மத்தில் செய்தபுண் ணியங்க ளென்ன
அறுமுகன் பக்தி யாயும் அரண்தொண்டு புரிவ தாலும்
வருவோரை யாத ரித்தும் ஆபத்தைச் சிலர்க்குக் காத்தும்;

34. ஜாதகன் மறுபிறப்பு, காஞ்சிபுரத்தில் அந்தணர் குலத்தவனாகப் பிறப்பான். இவன் இப்பிறப்பில் செய்த நல்வினைகள் யாவை? சுப்பிரமணியக் கடவுள்மீது பக்திகொண்டு தொண்டுகள் செய்வதாலும், வீட்டுக்கு வருபவர்களை ஆதரிப்பதாலும், சிலருக்கு நேரும் துன்பங்களிலிருந்து அவர்களைக் காப்பதாலும்;

35. மனமது கவடு மின்றி மாரனும் வாழ்வ தாலே
கனமுள பிரம்ம சேயாய்க் கலப்பனு மென்று சொல்வோம்
சினமிலாப் பிதாபின் சென்மஞ் செப்புவோம் விரிஞ்சி [தன்னில்
வினையிலா வேளா னுக வளங்குவா னென்று சொல்வோம்.

35. மனத்தில் வஞ்சனையின்றி இவன் வாழ்வதாலும், பெருமை மிக்க அந்தணர் மரபில் பிறப்பான் என்று கூறுவோம். இவன் தந்தையின் மறு பிறப்பைச் சொல்லுவோம். விரிஞ்சிபுரத்தில் குற்றமில்லாத வேளாளனாகப் பிறப்பான் என்று புகலுவோம்.

36. செனித்திடுங் காலந் தன்னில் சிகிதசை யாண்டு வைந்தும்
குனித்திடுந் திங்க ளேழும் கூறினேம் பூர்வ பாகம்
வினையுண்டு சாத கர்க்கு மெல்லியல் பிணியு மாகும்
கனமிலாக் குடும்ப மெய்துங் காதலி கேட்டி டாயே.

36. ஜாதகன் பிறக்குங் காலத்தில் கேதுமகாதசை இருப்பு; வருஷங்கள் ஐந்தும், மாதங்கள் ஏழுமாம். இவ்விதம் முதற்பாகஞ் சொன்னேம். அக்காலத்தில் ஜாதகனுக்குத் துன்பங்கள் ஏற்படும். மனைவிக்கு வியாதியுண்டாகும். பெருமையில்லாத குடும்பத்தை யடைவான். பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 98

1. பிறைநந்தி கேது நண்டு பூ'மகன் தனுசு வாக
அரவுமே மான தாக அந்தணன் புந்தி பானு
திருகிலாக் குடத்தில் தங்கச் சுக்கிரன் காரி மீனம்
வருவது விடபம் சென்ம மறைகுவீர் பலனை யென்று;

1. சந்திரன் விருஷபத்திலும், கேது கடகத்திலும், செவ்வாய் தனுசிலும், இராகு மகாத்திலும், குரு புதன் சூரியன் குற்றமற்ற கும்பத்திலும், சுக்கிரன் சனி மீனத்திலும் தங்கி, ஜன்ம லக்கினம் விருஷபமாக விருந்தால் பலனைச் சொல்லுங்கள் என்று;

சுக்கிரன் சனி		லக்கினம் சந்திரன்	
குரு புதன் சூரியன்	இராசி சக்கரம்		கேது
ராகு			
செவ்வாய்			

2. அந்தரி கேட்கும் போது அத்திரி முனிவர் சொல்வார்
இந்தசே யாணைஞ் சென்மம் இல்லமும் மேல்பால் நோக்கம்
தென்வட வீதி யாகும் சிங்கவா கனத்தா ளீசன்
தென்கீழ்ப்பால் தங்கு மென்றேரும் திருமாலின் கோட்டம்
[தென்மேல்.

2. பார்வதிதேவி கேட்கும்பொழுது, அத்திரி முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண் பிறப்பு. இவன் வீடு தெற்கு வடக்கான தெருவில் மேற்குப் பார்த்த வாயிலுடையது. சிங்க வாகனத்தையுடைய துர்க்கை, சிவபெருமான் கோயில்கள் தென்கிழக்கில் உள்ளன என்று சொன்னேம். தென்மேற்கில் விஷ்ணு கோயில் உளது.

3. அருகினில் கணேசன் தங்கும் அரூபியா மாரி யுத்ரம்
குறுகிய ஊரே யாகுங் கூரையா மில்ல மாகும்
திருமகன் பத்தாஞ் சென்மஞ் செப்புவோம் வடுகர் வர்க்கம்
உரைக்கின்றோ மிவனின் யோகம் உத்தமி கேட்டி டாயே.

3. அதற்கு அருகில் வீராயகர் கோயில் இருக்கின்றது. உடலில்லாது தலை மட்டுமுள்ள மாரியம்மன் வடக்கில் வாசம். சிறிய ஊராகும். வீடு கூரை வேயப்பட்டது. இவன் பத்தாம் பிறப்பாக வடுகர் மரபில் தோன்றுவான் என்று சொல்லுவோம். இவனது யோகங்களைச் சொல்லுகின்றோம்; பார்வதியே! கேட்பாயாக.

4. தந்தையின் துணைந வத்துள் ஆண்ரெண்டு கன்னி மூன்று
அந்தவர் சேத மெய்தி அறைகின்றோம் அவன்கு ணத்தைச்
சிந்தையும் நல்ல தாகுஞ் சிவந்தமெய் பொறுமை சாலி
தந்தையி னில்லம் விட்டுச் சாருவான் வடகீழ் தன்னில்.

4. தகப்பனருடன் பிறந்த ஒன்பதின்மரில், ஆண்கள் இருவரும், பெண்கள் மூவருமாவர். அவர்கள் அனைவரும் இறப்பர். ஜாதகன் தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றோம். நல்மன முடையவன். சிவந்த உடல். பொறுமை யுடையவன். தன் தகப்பனாரின் வீட்டை வீட்டு நீங்கி, வடகிழக்குத் திசையில் செல்லுவான்.

5. தரணியை விருத்தி செய்வன் தன்மனை யூரில் செல்வன்
மருமமில் லாதா னுகும் மாடாடு களுமே விருத்தி
இருவூரில் பூமி சேர்ப்பன் ஈகைவான் நற்கு ணத்தான்
பொருளது சல்ய மேற்பன் போகிரு மந்த மென்றோம்.

5. விளைநிலங்களை விருத்தி செய்வான். தன் மனைவியின் ஊருக்குச் செல்லுவான். மனத்தில் மறைவில்லாதவன். கால் நடைகள் விருத்தியுள்ளவன். இரண்டு கிராமங்களில் நிலங்கள் சேர்ப்பான். கொடையுள்ளவன். நற்குணமுடையவன். கடன் படுவான். கடைசிக் காலத்தில் கடன் நீங்கும்.

6. அந்தியில் சிறையாய் வாழ்வன் அன்ன முங் குறைவு றுதான்
முந்தின சென்மம் சொல்வோ மூலமாங் குடியி லேதான்
வந்தனன் வைசியச் சேயாய் வணிபங்கள் செய்து வின்னோன்
நொந்தவர்க் கன்ன மீந்து நிருபனும் வாழும் நாளில்;

6. கடைசிக் காலத்தில் சிறைப்பட்டவன் போன்று வீட்டினுள் அடைந்து கிடப்பான். உணவுக்குக் குறைவில்லாதவன். இவன் முற்பிறப்பைச் சொல்லுவோம். மூலமாங்குடியில், வைசிய மரபினனாகப் பிறந்து, வியாபாரங்கள் செய்து, தரித்திர மடைந்தோருக்கு உணவளித்து, வாழ்ந்து கொண்டிருக்கும் நாளில்;

7. சுடலையில் விருட்சம் தன்னைத் தறித்தன னந்தப் பாலன்
அடைவுடன் முனியும் வாசம் அதுநிற்க இடமில் லாமல்
விடம்போலே புகலும் சாபம் வீடது அழித்த பாவி
உடன்வரும் சென்மந் தன்னில் உன்தந்தை யில்ல மின்றி;

7. இடுகாட்டில் இருந்தொரு மரத்தை வெட்டினன் இவன். மரத்தில் ஒரு முனி வாசம் செய்து வந்தது. அஃது இருப்பதற்கு இடமில்லாமல், விஷம் போல் கொடியதொரு சாபமிடும். தான் குடியிருந்த இடத்தை அழித்த பாவியே! வரும் பிறவியில் உன் தந்தையின் வீட்டில் இல்லாமல்;

8. மனைவியூர் வாச மாயு மந்தத்தில் சிறையாய் வாழ்ந்து
சினமுடன் செல்லும் போது சேர்ந்தது வந்தச் சாபம்
கனமுள விச்சென் மத்தில் கலந்திடு மந்தச் சாபம்
அனைபாரி அந்த மின்றி அவன்தந்தை யில்ல மின்றி;

8. மனைவியின் ஊருக்குச் சென்று வசித்து, கடைசிக் காலத்தில் சிறைப்பட்டவன் போன்ற துன்பத்துடன் இருப்பாய் என்று கோபத்துடன் அம்முனி கூறவே, அந்தச் சாபம் இவனைச் சேர்ந்தது. இப்பிறப்பில் அச் சாபம் இவனைச் சேரும். மனைவி கடைசிக் காலத்தில் இறக்க, தந்தையின் வீடும் தனக்குக் கிடைக்காமல்;

9. பாரினில் வாழ்வா னுகும் பகர்ந்தவிக் குணத்தா னுக்குத்
தீரனும் உதிப்பா னுகுஞ் செப்புவோம் இவன்கு ணத்தை
நாரியர் மோக னுவன் நவின்றிடான் கட்டு வார்த்தை
பாரினி லுய்வா னுகும் பாலகன் சிவந்த மேனி.

9. இவன் வாழ்வான். சொல்லிய விக்குணங்களையுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இவன் குணங்களைச் சொல்லுவோம். பெண்கள் பால் மோகமுள்ளவன். சொற்களைப் புனைந்து கூறான். உலகில் நல்வழியில் பிழைப்பான். சிவந்த உடலுடையவன்.

10. சமரசக் கல்வி யுண்டு சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
அமைப்பனு மிரண்டு வில்லம் அன்னமுங் குறைவு றுதான்
தவநிலை யந்தம் நிற்பன் சாதமும் ஏழைக் கீவன்
இமையவர் தன்னைப் போற்றுன் இடருக ளொருவர்க் [கெண்ணுன்.

10. சமரச ஞானம் போதிக்கும் கல்வி கற்பான். கால் கடைகள் விருத்தி யுள்ளவன். இரண்டு வீடுகள் கட்டுவான். உணவுக்குக் குறை வில்லாதவன். கடைசிக் காலத்தில் தவம் புரியும் பெரியோர்களைப் போன்ற

நிலையில் இருப்பான். ஏழைகளுக்கு உணவளிப்பான். தெய்வத்தைத் துதிக்க மாட்டான். எவருக்குந் துன்பம் நினையான்.

11. கடன்படா னிடுக்க மில்லான் காரிய சமர்த்த னுகும்
உடன்படான் பிழைக ளுக்கு உறுதியா மனத்தா னுகும்
படைசெல்வன் வெற்றி காண்பான் பாருக ளதிகஞ்
[சேர்ப்பன்
தடபுடல் செய்கை கொஞ்சம் தங்கிடும் நாபி சூடு.

11. கடன் அடையான். துன்பமில்லாது வாழ்வான். செயல்களைச் செய்து முடிப்பதில் சாமர்த்தியசாலி. தவறு செய்யச் சம்மதிக்கமாட்டான். திடமுள்ள மனத்தினன். படைகளில் சேர்ந்து சென்று போரில் வெற்றி காண்பான். நிலபுலன்களைச் சேர்ப்பான். ஆடம்பரச் செய்கைகள் சிறி துள்ளவன். நாபிச்சூடு உண்டு.

12. இன்னவன் துணைவர் தம்மை இயம்புவோ மாண்பால்
[மூன்று
கன்னியும் காண தாகுங் கழறுவோ முன்னோன் சேதி
அன்னியர் மதிக்க வாழ்வன் அண்டின பேரைக் காப்பான்
சொன்னதைக் காப்பா னுகுந் தோகையு மொன்றே
[தென்கீழ்.

12. இவனுடன் பிறந்தவர்களைப் பற்றிக் கூறுவோம். ஆண்கள் மூவர். பெண்கள் எவருமிலர். இவனது மூத்த சகோதரன் செய்தியைச் சொல்லுவோம். அயலார் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். தன்னை யடைந்தவர்களைக் காப்பான். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவான் இவனுக்கு மனைவி ஒருத்தியே. அவள் தென்கிழக்குத் திசையிலிருந்து வாய்ப்பாள்.

13. சுதர்களு மாண்பால் ஒன்று தீர்க்கமாம் வேறு காணன்
வதிபனு மத்தில் ஏகும் அவன்பின்னோன் சேதி கேளாய்ச்
சதியுண்டு மாநி றத்தன் தக்கவர் நேசங் கொள்வன்
நிதிகட னில்லா னுகும் நீள்நிலம் விருத்தி செய்வன்.

13. இவனுக்குப் புதல்வன் ஒருவன் தோன்றித் தீர்க்கமாவன். வேறு சந்ததி யில்லாதவன். இவன் மத்திய வயதில் மரிப்பான். இவனுக்கு இளையவன் செய்தியைக் கேட்பாயாக. பால், தயிர் பாக்கியமுள்ளவன். கரியநிற முடையவன். தகுதியுள்ள பெரியோர் சட்பைக் கொள்ளுவான். பணம் கடன் வாங்கமாட்டான். பெரிய நிலங்களை விருத்தி செய்வான்.

14. வாததே கத்த ஞகும் மர்மமூங் கொஞ்ச முண்டு
சூதுகள் சிலவே செய்வன் தோகையு மொன்றே கீழ்ப்பால்
ஓதுவோஞ் சுதராண் ரெண்டு உத்தமி யவ்வார் தீர்க்கம்
மேதினில் தீர்க்க மென்ரேரும் வெஞ்சினம் வெளிக்காட்
[டாதான்.

14. வாத தேகமுள்ளவன். மனத்தில் சிறிது மறைவுண்டு. சூதான செயல்கள் சில செய்வான். இவனுக்கு மனைவி யொருத்தியே. அவள் கிழக்குத் திசையிலிருந்து வாய்ப்பாள். இவனுக்குப் புத்திரர் இருவரும் பெண் இருவரும் பிறந்து தீர்க்கமாவர் என்று கூறினேம். கொடிய கோபத்தை வெளி விடாதவன்.

15. பால்பாக்ய முடைய ஞகும் பகையென்று மனத்தில்
[வையான்
ஞாலங்கள் சேர்ப்பா ஞகும் நயப்புரு வார்த்தை யுண்டு
சீலம்போல் வெளிம யக்கன் சிந்தையும் வேற தாகும்
வேல்விழி பட்ச ஞகும் விளம்புவோ மவன்பின் சேதி.

15. பால் பசு பாக்கியமுடையவன். எவரையுந் தனக்கு விரோத மென்று நினையான். பூமிகளைச் சேர்ப்பான். நயமான சொற்களைப் பேசு வான். இவன் ஒழுக்கமுடையவன் என்று எண்ணி வெளியார் நினைத்து மயங்கும்படி செய்வான். வேறுபட்ட மனத்தினன். மனைவிபால் விருப்ப முள்ளவன். இவனுக்கு இளைய சகோதரன் செய்தியைச் சொல்லுவோம்.

16. விதுரன்போல் குணத்த ஞகும் வீண்பழி யேற்கா ஞகும்
சுதரின்மேல் பிரிய ஞகுஞ் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
நிதிசேர்ப்பன் செலவு செய்யான் நீத்தோர்க ளுறவு
[கொள்ளான்
அதிகமாம் வார்த்தை யில்லான் ஆள்கார ருடைய ஞகும்.

16. விதுரரைப் போல் மெய்ஞ்ஞான முள்ளவன். வீண் பழி யடையான். புதல்வர்கள் மீது அன்புடையவன். கால் நடைகள் விருத்தி யுள்ளவன். செல்வஞ் சேர்ப்பான். செலவு செய்யமாட்டான். துறவிகள் நேசங் கொள்ளாதவன். மிகுதியாகப் பேசான். ஏவலாட்களைப் பெற்றவன்.

17. பாரியு மொன்றே யுள்ளூர் பாலர்கள் கன்னி மூன்று
தீரமாம் ஆண்பால் ரெண்டு செப்புவோந் தீர்க்க மாக
வீரியன் வயது தீர்க்கம் மேவியே யொன்ருய் வாழ்வர்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

17. இவனுக்கு மனைவி யொருத்தியே. அவ்வூரிலிருந்து வாய்ப்பாள். மக்களில் பெண்கள் மூவரும் புத்திரர் இருவரும் பிறந்து தீர்க்கமாக விளங்குவர் என்று சொல்லுவோம். இவனும் தீர்க்க வயதுடனிருப்பான். சகோதரர்களுடன் ஒன்றுகச் சேர்ந்து வசிப்பான். சுப்பிரமணியரைப் புதல்வராக வடைந்த பார்வதியே! கேட்பாயாக.

18. மைந்தனின் மணத்தின் கால மறைகின்றேம் மூப்ப தாண்டில்
பந்தணி மாது தென்கீழ் இன்னவள் குணத்தைச்
[சொல்வேன்
செந்திரு மகள்போ லொப்பாளுஞ் சொல்லது அதிக மேற்பள்
மூந்தின கோபி யாவள் மூலச்சூ டுடைய ளாமே.

18. ஜாதகனின் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். மூப்ப தாம் வயதில், தென்கிழக்குத் திசையிலிருந்து ஒரு பெண் இவனுக்கு மனைவியாவாள். அவள் குணங்களைச் சொல்லுவோம். இலக்குமியைப் போன்ற அழகுடையவள். அதிகமாகப் பேசுபவள் மூன்கோப முள்ளவள். மூலச்சூடுடையவள்.

19. தோகைபோல் சாய லொக்கும் தொடுவழக் கதனில்
[செல்லாள்
வேகமாய் நடக்க வல்லாள் மேதினில் யோக சாலி
பாதக மனமில் லாதாள் பர்த்தாவுக் கினிய ளாகும்
தாகமென் றோர்க்கு நீவள் சத்தியும் தீர்க்க சீவி.

19. மயில் போன்ற சாயலுடையவள். வீண் சண்டைக்குப் போக மாட்டாள். விரைவாக நடப்பதில் வல்லவள். உலகில் அதிர்ஷ்ட முடைய வளாக விளங்குவாள். கெட்ட எண்ணமில்லாதவள். கணவனுக்கு நல்ல வள். தாகமென்று வந்தவர்க்கு நீரும் உணவும் தருவாள். தீர்க்கமான வயதுள்ளவள்.

20. புத்திர தோட மெய்தும் புகலுவீ ரந்தச் சங்கை
புத்திர நாதன் புந்தி பொன்னவன் கூடி பத்தில்
சித்தமா யிருப்ப தாலும் சென்மமும் நந்தி யாக
இத்தகைப் பலத்தி னுலே இடருண்டு சுதருக் கேதாம்.

20. ஜாதகனுக்குப் புத்திரதோஷ முண்டாகும். அதற்குரிய காரணத்தைச் சொல்லுங்கள். புத்திர ஸ்தானாதிபதி புதன் குருவுடன் சேர்ந்து பத்தாமிடமாகிய கும்பத்தில் தங்கி யிருப்பதும், ஜன்ம லக்கினம் விருஷபமாக விருப்பதுமான இத்தகைய பலத்தினால், புத்திரர்களுக்குத் தோஷமேற்படும்.

21. குறுமுனி புகலு கின்றார் குபேரனு மூச்ச மாகப்
பிருகுமே லாபம் தங்கப் புதல்வர்கள் விருத்தி யாகும்
வருவதில் முதலில் மூன்று மறலியின் பதிக்குச் சென்று
அரிவையு மிரண்டும் தீர்க்கம் ஆணது வொன்று தீர்க்கம்.

21. அகத்தியர் சொல்லுகின்றார். சந்திரன் விருஷபத்தில் உச்சமாகி, சுக்கிரன் லாபஸ்தானத்தில் தங்கி யிருப்பதால், புத்திர விருத்தி யுண்டாகும். தோன்றுபவர்களில் முதலில் மூவர் எமனுலக மடைவர். பெண்கள் இருவரும் ஆண் மகன் ஒருவனுந் தோன்றித் தீர்க்கமாவர்.

22. முன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றேம் பெண்ணை [யோரம்
கன்னமாங் குலமு தித்துக் காதலி மதலை யுண்டாய்
அன்னவன் வாழு நாளில் அல்பமாம் மாது பேரில்
உன்னத வார்த்தை சொல்ல வுடையவன் அதைய றிந்து ;

22. ஜாதகன் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். பெண்ணையாற் றங்கரையோரமுள்ள ஊரொன்றில், க்ருஹஸ்தர் மரபில் தோன்றி, மனைவி மக்களை யடைந்து, வாழ்கின்ற காலத்தில், அற்பகுணத்தினால் ஒரு பெண்ணைப்பற்றி, பழிச்சொற்களைக் கூற, அவள் கணவன் அதனை யுணர்ந்து;

23. மாதுமேல் பகையும் பேச மங்கையுந் திகி லடைந்து
பாதக மொழியைச் சொன்ன பாவிக்கு மற்றுசென் மத்தில்
தீதாகுந் துணைபெண் ணின்றிச் சுதர்களும் நட்ட மெய்தும்
காதலி சொல்ல லுற்றாள் கலந்தது வந்தத் தோடம்.

23. அவள்மீது விரோதம் கொள்ள, பெண்ணும் பயப்பட்டு, என்மீது கொடிய பழிச்சொற்களைக் கூறிய பாவிக்கு மறு பிறவியில், சகோதரி தோன்றித் தோஷமடைவாள். புதல்வர்களும் கஷ்டமாவர் என்று கூறினாள். அந்தத் தோஷம் இவளை யடைந்தது.

24. கன்றுபா லறக்க றந்தான் காதல னந்தி யத்தில்
குன்மநோ யதனால் மாண்டு குறைதலை வரையப் பட்டு
இன்னவ னுதிப்பா னாகும் எய்திடு மாது சாபம்
பின்துணை யில்லா தாகும் பேதைபெண் துணையு மின்றி ;

24. கன்றுக்குப் பால் விடாமல் முழுவதனையும் கறந்து விட்டான். இவன் கடைசிக் காலத்தில் வயிற்று நோயினால் இறந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறப்பில் தோன்றுவான். முற்பிறப்பில் உண்டான பெண் சாபம் இவனை இப்பொழுது அடையும். இவனுக்குப் பின் பிறந்தவர் இல்லாதவனாவன். சகோதரிகள் இல்லாமல்;

25. சுதர்களில் முதலில் சேதஞ் செப்புவோ மிவனின் யோகம்
பதமாக வாழ்வா னுகும் பாரினில் சீவிப்பா னும்
நிதிகடன் இருபான் ஏழும் நின்றிடும் அதன்மேல் காணுன்
சதமும் கீழ்ப்பால் நீங்குந் தனமது நேரு மென்றோம்.

25. தோன்றும் புதல்வர்களில் சிலர் கஷ்டமாவர். இவன் யோகங் களைச் சொல்லுவோம். பதத்துடன் வாழ்க்கை நடத்துவான். பூமியால் ஜீவிப்பான். இருபத்தேழாம் வயதுமுடிய கடன் இருக்கும். அதற்குமேல் கடன் இல்லாதவ னுவன். கிழக்குத் திசை நோக்கிச் செல்லுவான். அங்கு, செல்வம் கிடைக்கும் என்று சொன்னேம்.

26. மூப்பது வொன்றுன் டின்மேல் மேவிடு மப்பால் பூமி
தப்பிதக் குணமில் லாதான் சகோதரர் சொல்த டுக்கான்
ஒப்புடன் முப்பான் ஒன்பான் ஆண்டின்மே லில்லம்
[வேறு
செப்புவோம் வறுமை காணுன் செல்வமாய் வாழ்வா னுகும்.

26. முப்பத்தோராம் வயதுக்குமேல், வேறு இடத்திலிருந்து பூமி கிடைக்கும். தவருன குணங்க ளில்லாதவன். சகோதரர் சொற்களைத் தடுத்துப் பேசமாட்டான். முப்பத்தொன்பதாம் வயதுக்குமேல் இவன் வேறு வீட்டில் வசிப்பான். தரித்திரம் அடையான். செல்வாக்குடன் வாழ்வான்.

27. பாலகன் தனக்கு யோகம் பகர்ந்தகா ரணங்கள் சொல்வீர்
ஆலமும் நவத்தி லேற அந்தணன் புதனும் பத்தில்
நீலனும் லாப மேற நிகர்தர்ம கர்ம யோகம்
மாலினே யோக மொன்று வறைந்தனம் பால னுக்கு.

27. ஜாதகனுக்கு இவ்வித யோகங்கள் ஏற்படும் என்று சொல்லக் காரணங்கள் யாவை? இராகு ஒன்பதாமிடத்திலும், குருவும் புதனும் பத்தா மிடத்திலும், சனி லாப ஸ்தானவாகிய மீனத்திலும் தங்கி யிருப்பதால் தர்ம கர்ம யோகம், மாலினே யோகம் என்ற இரண்டும் இவனுக்கு வாய்க்கும் என்று சொன்னேம்.

28. ஆகையால் வறுமை காணுன் ஆடுமா டுகளும் விருத்தி
பாகமாய் முப்பா னுறுள் பண்ணுவா னில்ல மென்றோம்
தாகமென் றோர்க்கு மீவன் சம்பத்துப் பெற்று வாழ்வன்
போகபாக் கியங்க ளுள்ளான் புண்ணிய வதியே கேளாய்.

28. ஆதலினல் தரித்திரம் அடையான். ஆடு, மாடுகள் விருத்தி யுள்ளவன். முப்பத்தாரும் வயதுக்குள் வீடு கட்டுவான் என்று சொன்னேம்.

தாகமென்று வந்தவர்கட்கு உணவும் நீரும் அளிப்பான். செல்வம்பெற்று வாழ்வான். யோகங்களே அனுபவிப்பான். பாக்கியங்களே யடைவான். புண்ணியசாலியே! கேட்பாயாக.

29. மாதுரு நற்கு ணத்தாள் மாநிறம் பித்த தேகி
ஓதுவாள் நல்ல வார்த்தை உயர்வான புத்தி யேற்பள்
பாதக மனமில்லா தாள் பர்த்தாவுக் கினிய ளாகும்
சூதிலா ளென்று சொல்வோம் துணைவர்க ளில்லா ளாகும்.

29. ஜாதகனின் தாய் நற்குண முடையவள். கரியநிற முடையவள். பித்த தேக முள்ளவள். நல்ல சொற்களைப் பேசுவாள். உயர்ந்த புத்தி யுள்ளவள். கெட்ட எண்ண மில்லாதவள். கணவனுக்கு இனியவள். வஞ் சனையற்றவள் என்று கூறுவோம். உடன்பிறந்தோர் இல்லாதவள்.

30. இல்லமு முள்ளூ ராகும் இயம்புவோ மிவள்முன் [சென்மம்
எல்லையி லுயர்வ தான எழில்சேர நாட்டி லேதான்
வல்லியுங் கங்கை சேயாய் வாழ்நாளில் வினையைச் [சொல்வோம்
புல்லியோர்க் கினஞ் செய்து போற்றுவார் சாபம் தானும்.

30. இவள் பிறந்த வீடு உள்ளூரிலேயே யுள்ளது. இவள் முற்பிறப் பைச் சொல்லுவோம். பூமிகளிற் சிறந்ததான உயர்ந்த சேரவள நாட்டில், வேளாளர் குலத்தவளாய்ப் பிறந்து வாழுகின்ற காலத்தில் சேர்ந்த தீவினை யைச் சொல்லுவோம். ஏழைகட்குத் தின்பஞ் செய்தாள். அவர்கள் சாப மிடுவார்கள்.

31. பஞ்சைகட் கிடங்கொ டாத பாவிக்கு மறுசென் மத்தில்
துஞ்சிடுந் துணைவர் தானுஞ் சுதர்களில் இரண்டு பங்கு
நஞ்சாகு மென்று சொல்ல நல்கிற்று வந்தச் சாபம்
அஞ்சின பேரைக் காக்கும் அம்பிகை யாளே கேளாய்.

31. ஏழைகட்கு இடங்கொடுக்காத பாவிக்கு, மறு பிறவியில் சகோத ரர் மரிப்பர். பிறக்கும் பிள்ளைகளில் இரண்டு பங்கு இறக்கும் என்று கூறவே, அந்தச் சாபம் இவளே யடைந்தது. பயந்தவர்களைக் காக்கும் அம்பிகையே! கேள்.

32. ஆகையா லிச்சென் மத்தில் அவள்துணை யில் லாதாகிப்
போகுமே சுதரி ரண்டு பூவைதா யில்லம் பாழாம்
ஏகுவா ளையைந் தாண்டில் பரம்பதம் பின்சென் மங்கேள்
தோகையில் சைவச் சேயாய்த் தோன்றுவா ளென்று [சொல்வோம்.

32. ஆகையினால் இப்பிறப்பில், இவள் உடன்பிறந்தாரில்லாதவளாவாள். பிறக்கும் குழந்தைகளிலும் இரண்டு பங்கு இறக்கும். தாய் வீடு பாழாம். ஜாதகனது இருபத்தைந்தாம் வயதில் பரமபத மடைவாள். இவள் மறு பிறப்பைக் கேள். தோகை மலையில், சைவ குலத்தவளாய்த் தோன்றுவாள் என்று கூறுவோம்.

33. [1]மூப்பது விரண்டு வாண்டில் விளம்புவோந் தந்தை
[கண்டம்
செப்புவோ மிவன்பின் சென்மந் திருப்புகழ் தன்னி லேதான்
ஓப்புமேல் செங்குந்த ரைக உயர்வான செட்டுச் செய்வன்

.....

33. மூப்பத்திரண்டாம் வயதில் ஜாதகன் தந்தைக்கு மரணம் ஏற்படும் என்று சொல்லுவோம். பிதாவின் மறு பிறப்பைக் கூறுவோம். திருப்புகழ் என்ற தலத்தில், செங்குந்த மாபினனாய்ப் பிறந்து, உயர்ந்த வியாபாரங்கள் செய்வான்.

34. அறுபது எட்டு ஆண்டில் ஆவணி மாதந் தன்னில்
திருமக னுடலம் ஏகுஞ் செப்புவோம் பின்சென் மத்தைக்
கருவூரில் கங்கை சேயாய்க் கலப்பனும் என்று சொல்வோம்
அரிவையும் இவன்பின் ஞாலே அருளுவோம் நாங்கள் தாமே.

34. அறுபத்தெட்டாம் வயதில், ஆவணி மாதம் ஜாதகன் மரணமடைவான். இவன் மறுபிறவியைச் சொல்லுவோம். கருவூரில் வேளாளர் குலத்தவனாய்ப் பிறப்பான் என்று கூறுவோம். இவனுக்குப் பின்பு மனைவி இறப்பாள் என்று நாங்கள் புகலுவோம்.

35. [2]உதித்திடும் காலம் தன்னில் ரோகிணி ரெண்டாம் பாதம்
மதிதசை ஆண்டு வைந்தும் மருவிடும் திங்கள் பத்தும்
முதல்பாதம் விபரஞ் சொன்னேம் மொழிகின்றேம்
[பின்பால் சேதி

.....

35. ஜாதகன் பிறப்புக் காலத்தில் உரோகிணி நட்சத்திரம் இரண்டாம் பாதமாம். அப்பொழுது சந்திரமகாதசை ஐந்து வருஷங்களும் பத்து மாதங்களும் இருப்பாம். இங்ஙனம் முதல் பாகத்தை விவரமாகக் கூறினேம். பிற்பகுதியில் மேலுஞ் சொல்லுகின்றேம்.

1, 2. இப்பாடல்களின் நான்காம் வரி ஏட்டிலில்லை.

ஜாதகம் 99

1. கலிபுகர் பொன்னுஞ் சாடி கதிரவன் மீன மாகப்
புலவனும் மேட மாகப் பூமகன் ராகு நந்தி
குலவிய சீயம் காரி கேதுவும் தேள தாகத்
தலமது நந்தி யாகச் சாற்றுவீர் பலனே யென்று ;

1. சந்திரன் சுக்கிரன் குரு கும்பத்திலும், சூரியன் மீனத்திலும், புதன் மேஷத்திலும், செவ்வாய் ராகு விருஷபத்திலும், சனி சிம்மத்திலும், கேது விருச்சிகத்திலும் நின்று, ஜன்ம லக்கினம் விருஷபமாக விருந்தால் பலன் கூறுங்கள் என்று;

சூரியன்	புதன்	லக்கினம் செவ்வாய் ராகு	
சந்திரன் சுக்கிரன் குரு	இராசி சக்கரம்		
			சனி
	கேது		

2. சுந்தரி கேட்கும் போது அத்திரி முனிவர் சொல்வார்
இந்தசேய் ஆணும் சென்மம் இறங்குமில் தென்பால் வாசல்
அந்தரி தென்மே லாகும் ஆனையின் கோஷ்டம் மேற்கில்
சின்னவூர் என்று சொல்வோம் சேயனும் சேட்ட னுக ;

2. பார்வதிதேவி கேட்கும்போது, அத்திரி முனிவர் கூறுகின்றார். இஃது ஆண் பிறப்பு. பிறக்கும் வீடு தெற்குப் பார்த்த வாயிலுடையது. தர்க்கை தென்மேற்கில் வாசம் புரிவாள். விநாயகர் கோயில் மேற்கிலுள்ளது. சிறிய ஊர் என்று கூறுவோம். ஜாதகன் மூத்த புத்திரனாக:

3. உதிப்பனும் இனத்தார் வீட்டில் உறுந்தந்தை தாயின்
[யோகம்
மதிநுதல் மனைவி யோகம் மைந்தர்கள் இவனின் யோகம்
சதியிலா முன்பின் சென்மம் செப்புவோ மிந்நூல்
[தன்னில்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

3. உறவினர் வீட்டில் பிறப்பான். இவனைப்பெற்ற தாய், தந்தையர், மனைவி, புத்திரர், ஜாதகன் முதலானவர் யோகங்கள், குற்றமற்ற முற் பிறப்பு மறு பிறப்புக்கள் ஆகியவனைத்தையும் இந்தச் சோதிட நூலில் சொல்லுவோம். முனிவர்களைக் காக்கும் பார்வதியே! கேள்.

4. தந்தையின் வர்க்கம் தன்னைச் சாற்றவே பலமு ருது
எந்தகா ரணத்தி னுலே இவன் துணை தோடம் சொன்னீர்
சந்ததம் பரிதி லாபம் சடைநாக மதற்கு மூன்றில்
இந்தவார் கிரகத் தாலே இயம்பிலை மந்தச் சங்கை.

4. ஜாதகன் தந்தையின் வர்க்கத்தைச் சொல்ல, அது பலமுள்ள தாகவில்லை. என்ன காரணத்தினுல் ஜாதகன் தந்தைக்குச் சகோதர தோஷங் கூறினீர்கள்? சூரியன் லாப ஸ்தானத்திலும், இராகு அதற்கு மூன்று மிடமாகிய மேஷத்திலும் தங்கியிருக்கும் கிரக வலிமையினுல் சகோ தர தோஷங் கூறினேம்.

5. பாலகன் தந்தை சேதி பகருவோ மிருந் றத்தான்
சீலவான் ஊகை சாலி தேவியால் பெருமை பூண்பன்
ஞாலங்கள் அதிக முண்டு இராசன்போல் வாழ்வா னுகும்
ஆலம்போல் பகைவ ருக்கு அவனுமே கருட னுவன்.

5. ஜாதகன் தந்தையின் செய்திமை இனிமேல் சொல்லுவோம். கரிய நிற முள்ளவன். ஒழுக்க முடையவன். சாமர்த்தியசாலி. மனைவியால் பெருமை யடைவான். வீண நிலங்கள் மிகுதியாகப் பெற்றவன். அரசன் போல் மேன்மையுடன் வாழ்வான். பாம்புபோன்ற பகைவருக்கு இவன் கருடன் போன்றவன்.

6. பலவூரில் பூமி சேர்ப்பன் பஞ்சைமேல் இரக்க னுவன்
விலைமாதர் மோக மில்லான் மேவுவான் மனைவி ஊரில்
தலவாசம் செல்வா னுகும் சகலரை வசியம் கொள்வன்
புலவன்போல் வார்த்தை சொல்வன் புயபல முடைய
[னுகும்.

6. பல கிராமங்களில் நிலங்கள் சேர்ப்பான். ஏழைகளின்மீது இரக் கங் கொள்ளுவான். வேசையர்மீது விருப்பங் கொள்ளாதவன். மனைவியின் ஊரில் வசிப்பான். ஸ்தல யாத்திரை செல்லுவான். அனைவரையும் வசப் படுத்துவான். புலவர் போல் பேசுவான். தோள் வலிவுள்ளவன்.

7. பாரியூர் சிலநாள் வாசம் பகைத்தோரை நசிக்க வைப்பன்
தீரவான் ஒரும ணத்தில் செய்குவான் ரெண்டு முத்திரை
கூறுவீர் விபரந் தன்னைக் கோதைய ரிருவ ருக்கு
மாரன்மாங் கலியஞ் செய்வன் மாதாவு மொன்று என்றேரும்.

7. மனைவியினுடைய ஊரில் சின்னஞ்சட்கள் வசித்து வருவான். விரோதிகளை ஒழிப்பான். தைரிய முள்ளவன். ஒரே கலியாணத்தின் போது இரு மாங்கலியம் அணிவிப்பான். அதன் விவரங்களைச் சொல்லுங் கள். (ஜாதகனின் தந்தை) இரு பெண்களுக்கு மங்கலநாண் கட்டுவான். தாய் ஒருத்தி என்று சொல்லுவோம்.

8. தந்தையின் ஊரில் வாழ்வன் தன்மனை யூரில் வாசம்
தந்தையின் ஞாதி தாமும் நல்குவா ரரசு வோங்கும்
பிந்தியுந் தன்னூர் தன்னில் பிரிதலாஞ் செய்வா னென்றும்
அந்ததோர் ஞாதி கட்கு அவர்பலன் பின்பால் சொல்வோம்.

8. தன் தந்தையினுடைய ஊரில் வாழ்ந்து வருவான். தன் வேட்ட கத்திலும் வாசம் செய்வான். தன் தந்தையின் பங்காளியுடன் சேர்ந்து வாழ்வான். தொழிலில் மேன்மை யடைவான். பிறகு தன்னூரில் பிரிந்து வாழ்ந்திருப்பான். அந்தப் பங்காளிகளின் பலனைப்பிற் பாகத்தில் சொல்லுவோம்.

9. புத்திமான் பொறுமை சாலி புயபல முடைய னுகும்
வித்தையு மிரண்டு கற்பன் விவேகியா மெவர்க்கு நேயன்
பத்தினிப் பகையு மாகும் பணிந்தோரை யாத ரிப்பான்
சுத்தமுங் கொஞ்ச முண்டு சீதையின் வரன்போர்
[கொண்டோன்.

9. புத்திசாலி. அடக்கமுள்ளவன். தோள்களில் வலிவுடையவன். இருவிதப் பாஷைகள் கற்று வருவான். விவேகமுள்ளவன். எல் லோருக்கும் அன்பன். மனைவியுடன் விரோதித்துக் கொள்ளுவான். அண்டினவர்களைக் காப்பாற்றுவான். ஆசாரம் சிறிதுள்ளவன். சீதாப் பிராட்டியின் கணவனான இராமன் என்ற பெயர் பூண்டவன்.

10. ஊகவான் நுணுக்கந் தேர்வன் உண்மையா மனத்த னுகும்
ஆகம முணர்ந்தோர்க் கிட்டன் அரசர்கள் வணங்க வாழ்வன்
பாகமாய்ப் பேசு வானும் பந்துவை யாத ரிப்பன்
போகபாக் கியங்க ளுள்ளான் பொய்மெய்யும் புகல்வா
[னுகும்.

10. ஊகமுள்ளவன். சாஸ்திரங்களிலுள்ள இரகசியங்களைத் தெரிந்து கொள்ளுவான். உண்மையான மனமுடையவன். வேதங்களறிந்தவர் களுக்குப் பிரியமானவன். அரசர்களால் மதிப்புப் பெற்றவன். கண்டித் துப் பேசுபவன். உறவினர்களை ஆதரித்து வருவான். மிகுந்த போகங்களை யடைவான். பொய் உண்மை இரண்டும் கலந்து பேசுவான்.

11. உண்டியுஞ் சிறுத்து வுண்பன் உவமையாய்ப் பேசு வானும்
வண்டிவா கனமு முள்ளான் மறுமாதர் மோக னுவன்.
எண்டிசைப் புகழு மேற்பன் இடரான குணமில் லாதான்
பண்டுநாள் பூமி யுண்டு பாவையில் அணுகி வாழ்வன்.

11. சிறிதாகவே சாப்பிடுவான். உபமானத்துடன் பேசும் தன்மை யன். வண்டி முதலிய வாகனங்களுள்ளவன். வேற்றுப் பெண்களிடம் மையல் கொள்ளுவான். எட்டுத் திசைகளிலும் புகழை அடைவான். தீய குணங்களில்லாதவன். பிதுரார்ச்சிதமான விளைநிலங்கள் இருக்கும். மனைவியின் வீடு சென்று, வாழ்வான்.

12. சொல்லிய குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
புல்குவோ மிவன்கு ணத்தைப் பேரர சர்போல் வாழ்வன்
தல்லியூர் வாச மாகுஞ் செப்புவா னிரண்டு கல்வி
நல்லவன் பலபேர்க் கன்பன் நடத்துவான் பரியும் வண்டி.

12. இங்ஙனம் சொல்லப்பட்ட குணங்களுடையவனுக்கு இந்த ஜாத கன் பிறப்பான். இவனுடைய குணத்தைச் சொல்லுவோம். பெரிய அரச னைப் போல் செல்வாக்குடன் வாழ்வான். தாயினுடைய ஊரில் வசிப்பான். இருவிதமான கல்வி கற்பான். நன்னடத்தை யுள்ளவன். பலருக்குப் பிரியமானவன். குதிரை வண்டியை வைத்திருப்பவன்.

13. அன்னிய பாடை மேன்மை அற்புத வார்த்தை சொல்வன்
மன்னர்க்கு விவன்சொல் மேன்மை மாடுவா டுகளும்
[விருத்தி
அன்னையின் ஆஸ்தி யாவும் அணுகிடு·மிவனுக் கேதான்
உன்னதத் தலங்கள் செல்வன் உயர்வான புத்தி யேற்பன்.

13. அன்னிய பாஷையில் தேர்வு மிகவடைந்து அதிசயிக்கத்தக்க பேச்சு வன்மை யுடையவனுவன். அரசர்கட்கு இவனுடைய வார்த்தையில் மதிப்புண்டு. கால்நடை விருத்தியாகும். தாயினுடைய ஆஸ்திகள் முழுமை யும் இவனே வந்தடையும். உயர்ந்த கூடத்திரங்களுக்குச் செல்வான். உயர்ந்த நோக்கமுடையவன்.

14. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தன்பந்து வணங்க வாழ்வன்
இந்திர போகம் ஏற்பன் இடரான புத்தி யில்லான்
கன்னியர் மோக னுவன் காலினில் பிணியு மேற்பன்
பின்னிவிர்த் திகளு முண்டு பெரியோர்க ளுறவு கொள்வன்.

14. தகப்பனுக்கு மேல் சிறப்பாக வாழ்ந்து வருவான். உறவினர்கள் வணங்கும்படி வசித்து வருவான். இந்திரன் போன்று போக சௌக்கியங்

களைப் பெறுவான். தீய எண்ணங்களில்லாதவன். கன்னியர்கள் மீது மையலுடையவன். கால்களில் சிறிது நோயுள்ளவன். பிறகு தீர்ந்து போம். பெரியோர்கள் நட்புக் கொள்ளுவான்.

15. தந்தையி னுஸ்தி தன்னைத் தானவன் விரயம் செய்து
அன்னையின் செனித்த வூரில் அரசுமே செய்வா னுகும்
இன்னமும் விவரங் கேட்கில் இயம்புவோம் பின்பா கத்தில்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

15. தந்தையின் சம்பாத்தியத்தை வீரயம் செய்து விடுவான். தாய் பிறந்த ஊரில் உத்தியோகம் ஏற்பான். இன்னும் மற்ற விவரங்கள் கேட்பாயானால், பிற்பாகத்தில் சொல்லுவோம். உயர்ந்த கணவனை யடைந்த உத்தமியே! கேளுங்கள்.

16. தன்துணை காணு னுகும் தனியனுய் வாழ்வா னம்மா
முன்தாய்க்குச் சுதர்க னுண்டோ மொழிகுவீ ரந்தச் சங்கை
அன்னவள் சுதரு மின்றி அந்தகன் நகரஞ் சேர்வள்
கன்னென மொழியை யொக்கும் காதலி கேட்டி டாயே.

16. ஜாதகனுக்கு உடன் பிறந்தவரில்லை. தனித்து வாழ்ந்து வருவான். முதல் தாய்க்குக் குழந்தைக ளிருப்பாரோ? அதைச் சொல்லுவீர். அவள் புத்திர பாக்கிய மில்லாமல் மரிப்பாள். கரும்பைப் போன்ற இனிய வாத்தைகளைப் பேசும் பார்வதியே! கேளுங்கள்.

17. மாதுரு குணத்தைச் சொல்வோம் மருமமுங் கொஞ்ச [முண்டு
சூதிலாள் மூர்க்கங் கொஞ்சம் சுருக்கமாய் வார்த்தை [யேற்பள்
பாதக மனமில் லாதாள் பணிந்தோரை யாத ரிப்பள்
சாதிப்பாள் சிலவே சங்கை தயாளமாங் குணத்த ளாகும்.

17. அன்னையின் குணத்தைச் சொல்லுவோம். சிறிது இரகசிய முடையவள். கபடில்லாதவள். சிறிது மூர்க்கமு முடையவள். அடக்க மாகப் பேசுபவள். கெட்ட மனமில்லாதவள். அடைந்தவர்களை ஆதரித்து வருவாள். சில சந்தேகங்களைத் தீர்த்து வருவாள். தயையுடன் கூடிய குணமுள்ளவள்.

18. இல்லம்விட் டகலா ளாகும் இனிமையாய் வார்த்தை
[சொல்வள்
வல்லவன் மனம்போல் வாழாள் மங்கைக்குத் துணையாண்
[காணுள்
தல்லிபோல் கன்னி யொன்று தன்வரன் மணமே கொள்வள்
நில்லாது மத்தி லேதும் நேராது சுதர்கள் தாமே.

18. வீட்டை விட்டுச் செல்லாதவள். அழகாகப் பேசுபவள். கணவன் மனம் போல் வாழ்ந்து வராதவள். உடன்பிறந்தவ னில்லாதவள். அன்னையைப்போன்ற சகோதரி யொருத்தி உண்டு. அவளும் தன் கணவனையே மணப்பள். அவன் நிலைத்திராமல் இடையில் இறந்து விடுவான். குழந்தைகள் பிறவா.

19. அன்னையின் முன்சென் மத்தை அறிவிப்போம் முனியே
[கேளும்
தென்திசை யாழி தன்னில் செனித்தனள் வேளாண் வம்சம்
உன்னதக் குடும்பி யாகி உத்தமி வாழு நாளில்
கன்னிகை யொருத்தி பேரில் கழறுணு வார்த்தை
[சொல்ல ;

19. தாயின் முற்பிறவியைச் சொல்லுவோம். முனிவரே! கேளுங்கள். தெற்குச் சமுத்திரத்திற் கருகிலுள்ள ஓர் ஊரில், வேளாள மரபினளாகத் தோன்றினள். உயர்ந்த குடும்பத்தை யடைந்து சிறந்தவளாக வாழ்ந்து வரும் பொழுது வேறு ஒரு பெண் மீது, சொல்லக்கூடாத நிந்தை வார்த்தைகளைச் சொன்னள்.

20. மங்கையும் திகில டைந்து வறைந்தசா பத்தைக் கேண்மோ
நங்கமாய் வார்த்தை யென்மேல் நவின்றிட்ட பாவிக்
[கேதான்
தங்காது துணைவர் புத்ரர் செனிக்கும்பின் சென்மந் தன்னில்
அங்கவள் துணையு மின்றி அவள்சுதர் கன்னி யின்றி ;

20. அப்பெண்ணும் பயந்துரைத்த சாபத்தைக் கேளுங்கள். அவமான மடையும்படி என்மீது அபாண்டம் சொன்ன பாவியே உனக்கு உடன் பிறந்தவர், புத்திரர்கள் நிலையாமலும், இனி ஏற்படும் மறு பிறவியிலும் உடன் பிறப்பில்லாமல், புத்திர பாக்கியமில்லாமல், வாழ்வாய் ;

21. இன்னமும் பலவார் சொன்னுள் அதிதிகள் ததாஸ்து [வென்னப்
புன்மையா யந்தச் சாபந் தோகைக்கு நேர்ந்த தென்றேும்
கன்னிகை யந்தி யத்தில் கனத்ததோர் பரத்துக் கன்னம்
துன்னுபூஞ் சோலை வைத்துச் செல்மார்க்கந் தாகம் வைத்து;

21. என்றும் இன்னும் பலவிதமாகவும், கூறினுள். பெரியோர்களும் அப்படியே ஆகட்டும் என்றனர். அதேபோல் அந்தத் தீவினை இப் பெண்ணுக்கு (ஜாதகனின் தாய்க்கு) ஏற்பட்டது. அவளும் கடைசிக் காலத்தில் மிகுதியான ஏழைகட்கு அன்னமளித்து, தளிர்த்து வளரும் பூஞ் சோலை ஏற்படுத்தி, வழிகடை மார்க்கங்களில் தண்ணீர்ப் பந்தலமைத்து ;

22. மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருமக ளுதித்தா ளென்றேும் சேர்ந்தது முன்னூழ்ச் சாபம்
அரிவைக்குத் துணையின் தோடம் அவள்சுதர் கன்னி [காணுள்
வறுமையு மில்லா ளாகும் மங்கையே கேட்டி டாயே.

22. எமபுரமடைந்தாள். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு இப் பிறவியில் பிறந்தாளென்று சொன்னேம். முற்பிறவியின் தீவினை இப் பிறவியில் இவளை வந்தடைந்தது. இவள் உடன்பிறந்தவர் தோஷ மெய்தி, புத்திர பாக்கிய மடையாமல், தரித்திர மில்லாமல் வாழ்ந்தாள். தாயே ! கேளுங்கள்.

23. மறுசென்மம் வள்ளூர் தன்னில் வருவளே சைவச் சேயாய்ப்
பெருமையாய்க் குடும்பி யாகிப் பேதையும் வாழ்வா ளாகும்
உரைக்கின்றேந் தந்தை பூர்வம் உயர்வான அருணை [தன்னில்
நிறைசெயும் வைசியச் சேயாய் நேர்ந்துமே செட்டுச் [செய்து;

23. மறுபிறப்புத் திருவள்ளூரில் சைவ குலத்தவளாகப் பிறப்பாள். பெருமையான குடும்பத்தை யடைந்து இப்பெண் வாழ்ந்து வருவாள். ஜாதகனின் தந்தையின் முற்பிறவியைச் சொல்லுவோம். உயர்ந்த திரு வண்ணுமலையில், நிறைந்த வைசியனுகப் பிறந்து, வியாபாரம் செய்து வந்து ;

24. சுகமுள குடும்பி யாகித் தோகையு மதலை யுண்டாய்ச்
சகமதில் வாழு நாளில் செய்ததோர் வினையைக் கேண்மோ
இகபர னடியா ருக்கு இடைஞ்சல்கள் செய்யும் போது
அகமது கலக்க முற்று அறைந்தசா பத்தைக் கேண்மோ.

24. சுகமான குடும்ப மேற்பட்டு, மனைவி மக்களை யடைந்து, உலகில் வாழ்ந்து வரும் காளில் செய்த தீவினையைக் கேளுங்கள். ஈசுவரனின் அடியார்களுக்குத் துன்பங்களிழைத்தபோது அவர்கள் மனங்கலங்கிச் சொல்லிய சாபத்தைக் கேளுங்கள்.

25. துன்பங்கள் செய்த பாவி செனிக்கும்பின் சென்மந் தன்னில்
முன்துணை யில்லா தாயு முன்தந்தை யூரி லின்றி
மன்னிய வேட்ட கத்தில் மருவியே வாழ்வா யென்று
அன்னவர் சாபந் தானும் அணுகிற்று வென்று
[சொல்வோம்.

25. எங்களுக்குத் துன்பங்கள் செய்த பாவி! பிறக்கும் மறு சென்மத்தில் உடன் பிறந்த மூத்த சகோதரன் இல்லாதவனுயும், தன் தந்தையின் ஊரில் வாழ்ந்து வராமலும், இருப்பாய். மனைவியின் வீட்டில் இருந்து வாழ்வாய் என்று அவர்கள் சாபமிட்டனர். அச்சாபம் இவனை வந்தடைந்தது.

26. மாரனு மந்தி யத்தில் அதிதிகட் கன்ன மீந்து
தேறினோர் தொண்டு பூண்டு திருப்பணி வேலை செய்து
சீரிய கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
பாரினி லுதிப்பா னுகும் பற்றுமுன் னூழி தானும் ;

26. ஜாதகனின் தந்தையும், தன் முன் பிறவியின் முடிவில், ஏழை கட்கு அன்னமளித்து, துறவிகளிடம் பக்தி பூண்டு; ஆலயத் திருப்பணிகள் செய்தான். பிறகு துன்பந்தரும் எமபுரமடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு இவ்வுலகில் பிறந்தான். முன்செய்த தீவினை வந்தடைந்தது.

27. தனியனுய் வாழ்வா னுகும் தந்தையூர் வாச மில்லான்
இனிவருஞ் சென்மஞ் சொல்வோம் இருடிவாழ் காளாத்தி
[தன்னில்
கனமான சத்திரிய சேயாய்க் காவல னுதிப்பா னுகும்
அனையவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

27. தன் தகப்பனின் ஊரிலில்லாமல் தனித்து வாழ்ந்து வருவான். மறு பிறவியைச் சொல்லுவோம். தவம் செய்பவர் வாழ்ந்து வரும் காளத்தி க்ஷத்திரத்தில், க்ஷத்திரிய குலத்தவனுகப் பிறப்பான். மிகுதியான தவங்களை யியற்றும் பார்வதியே! கேட்டிடுவாய்.

28. இருபது வொன்ப தாண்டில் இயம்புவோம் தந்தை கண்டம்
குருதசை சுயபு குத்தி கூறிடு மந்தக் காலம்
மர்மமாய் நாற்ப தாண்டில் மடிவுண்டு வன்னை தாமும்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

28. ஜாதகனது இருபத்தொன்பதா மாண்டில் தந்தைக்கு மரணம் ஏற்படும். அப்போது குரு மகா தசை, குருபுக்தி நடக்கும் என்ற சொல்லு வோம். நிச்சயமாக ஜாதகனின் நாற்பதாம் வயதில் அன்னை இறந்து விடு வாள். யானைமுகக் கடவுளைப் பெற்ற தாயே! கேளுங்கள்.

29. பாலகன் மணத்தின் காலம் பகருவோ மூவே ழாண்டுள்
வேல்விழி கீழ்ப்பால் நேரும் விளம்புவோ மவள்கு
[ணத்தைச்
சீலியாம் புத்தி மானும் சிறுத்தோருக் குதவி செய்வள்
மால்மனை யொப்ப தாகும் வள்ளல்மேல் பத்தி பூண்பள்.

29. ஜாதகனின் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். அவ னுடைய இருபத்தோராம் வயதுக்குள் வேலைப்போன்ற விழிகளுடைய பெண் கிழக்குப் பக்கத்திலிருந்து வருவாள். அவளுடைய குணத்தைச் சொல்லுவோம். ஒழுக்கமுள்ளவள். புத்திசாலி. கஷ்டமடைந்தோருக்கு உபகாரி. இலக்குமி போன்ற அழகுடையவள். கடவுள்மீது பக்தி யுள்ளவள்.

30. அன்னம்போல் வடிவ மொக்கும் அற்புத வார்த்தை
[சொல்வள்
அன்னியர் மதிக்க வாழ்வள் ஆளன்தன் மனத்துக்
[கேற்றோள்
பின்னோர்க்குத் தாக மீவள் பிழையான குணமில் லாதாள்
கன்னிகை சுகமாய் வாழ்வள் கருதிடாள் கட்டு வார்த்தை.

30. அனனம் போன்ற மென்மையான சரீரமுடையவள். விசித்திர மாகப் பேசுபவள். பிறர் மதிக்கும்படி வாழ்க்கை நடத்துவாள். கணவன் மனத்திற் குகந்தவள். ஏழைகட்கு உணவளிப்பாள். தவறான குணங் களில்லாதவள். அவளும் சௌக்கியத்துடன் வாழ்ந்து வருவாள். பொய்த்து பேசுவதை மனத்திலும் நினையாள்.

31. சுதர்களு மாண்பால் ரெண்டு தோகையு மொருத்தி
[யென்றோம்
வதிட்டரு மறுத்துச் சொல்வார் மாரனுக் கிரண்டு தாரம்
சதமுடன் நேரு மென்றோம் செப்புவீ ரந்தச் சங்கை
அதிதியாங் கேது வேழில் அணுகின பலத்தால் சொன்னோம்.

31. இரு புதல்வர்களும், ஒரு புதல்வியும் பிறப்பார்கள். வசிஷ்ட முனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். ஜாதகனுக்கு இரு மனைவியர் நிச்சய மாக நேரும் என்றுரைத்தோம். அதற்குக் காரணம் உரைப்பீர். அதிதி யாகிய கேது, ஏழாமிடமாகிய விருச்சிகத்தில் தங்கியிருப்பதால் கூறினோம்.

32. மந்திரி யிரண்டு நான்கை மருவுயே பார்த்த தாலே
பந்தணி யொன்றே தீர்க்கம் பற்றுது வேறு மாது
சந்ததி யெவ்வார் விருத்தி சென்மமும் நந்தி யாக
ஐந்திடத் தோன்வி யத்தில் அணுகின பலத்தி னுலே ;

32. குரு, கும்பத்திலிருந்து இரண்டாமிடமாகிய மிதுனத்தையும் நான்காமிடமாகிய சிம்மத்தையும் பார்ப்பதால் மனைவி யொருத்தியே தீர்க்கமாவள். வேறு மனைவி ஏற்படமாட்டாள். புத்திர விருத்தி எப்படி உண்டாகும்? விருஷபம் ஜன்ம லக்கினமாகவிருந்து, ஐந்தாமிடத் தோனுகிய புதன் விரயஸ்தானமாகிய மேஷத்தில் தங்கி யிருப்பதால் ;

33. சுதர்களு மெவ்வார் தோன்றும் செப்புவீர் முனியே நீர்தாம்
நிதிகுரு பத்தில் தங்க நிலவுமே நவத்தி லாகச்
சுதனுலே கர்மம் நேரும் செப்பின மொழிகுன் றுது
ததியுண்டோ னருளி னுலே செனித்திடு மென்று
[சொல்வோம்.

33. குழந்தைகள் எப்படிப் பிறக்கும் என்று சொல்லுங்கள்? முனிவரே! நீங்கள். குரு பத்தாமிடமாகிய கும்பத்திலும்; சந்திரன் ஒன்பதாமிட மாகிய மகரத்திலும் தங்கியிருப்பதால், புத்திரனுல் தன் கர்மக்கடன்கள் செய்யப் பெறுவான். சொல்லிய வார்த்தைகள் தவறு. தயிரை இஷ்டத் துடன் புசித்த கண்ணனின் அருளால் குழந்தை யேற்படும் என்றுரைப்போம்.

34. முன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றேம் பாண்டி
[தன்னில்
மன்னர்தங் குலமு தித்து மாநிலம் செட்டுச் செய்து
கன்னிகை மதலை யுண்டாய்க் காவலன் வாழு நாளில்
துன்மைகள் வந்த சேதி செப்புவோ முனியே கேளும்.

34. ஜாதகன் முற்பிறவியைச் சொல்லுவோம். பாண்டிய நாட்டில், அரச குலத்தில் பிறந்து, வீடுநிலங்கள் அடைந்து, வியாபாரம் செய்து வந்து, மனைவி மக்களைப் பெற்று, இவன் வாழ்ந்து வரும் நாளில் ஏற்பட்ட தீமையைச் சொல்லுகின்றோம், முனிவரே! கேளுங்கள்.

35. மறையவ ரிருவர் தாமும் வினவினுல் விரோத முற்று
அரசர்பால் செல்லும் போது அவர்களி லொருவர் பக்கல்
தெரியாத வார்த்தை சொல்லச் சொல்வினுல் துன்பம் நேரக்
குறைவுள மனத்த ராகிக் கூறுவோஞ் சாபந் தானும்.

35. இரு அந்தணர்கள் நில விஷயமாகச் சண்டையிட்டு, அரசரிடம் சென்று முறையிட்டனர். அவர்களில் ஒருவர் பக்கமாக இவன் தனக்குத்

தெரியாமல் இருந்தபோதிலும் சாட்சி சொன்னதால் மற்றவருக்குத் துன்பம் நேரிட்டது. அவரும் மனவருத்த மடைந்தவராகச் சபமிட்டார்.

36. வீண்வார்த்தை சொன்ன பாவி மேவும்பின் சென்மந்
[தன்னில்
ஆண்பெண்கள் துணையு மின்றி அவன்தந்தை யாஸ்தி
[யின்றிப்
பூணவே வாழ்வா யென்னப் புக்கிற்று வந்தச் சாபம்
நாணிய மனத்த னாகி நலிந்தோர்க்கு வன்ன மீந்து ;

36. இல்லாத வார்த்தைகளைச் சொன்ன பாவிக்கு ஏற்படும் மறு பிறவியில் உடன் பிறந்தவரின்றி, தன் தந்தையினுடைய செல்வங்களில்லா மல் வாழ்ந்து வருவாய் என்று சொல்ல, அந்தச் சாபம் இவனை வந்தடைந் தது. வெட்கப்பட்ட மனத்தை யுடையவனாக ஏழைகட்கு அன்னமளித்து;

37. பலவிதத் தலங்கள் சென்று பகவானின் பக்தி பூண்டு
மேவினன் கால நாடு குறைதலை வரையப் பட்டுத்
தலைவனு முதிப்பா னாகும் தங்கிடு முன்னாழ்ச் சாபம்
நிலமதில் தனிய னாவன் நீங்குவான் தந்தை யாஸ்தி.

37. பலவிதமான புண்ணியத் தலங்களுக்குச் சென்று, தெய்வபக்தி யுடன் இறந்தான். சிவபெருமானால் ஒரு தலையைக் குறைவாக வடைந்த பிரமனால் படைக்கப்பட்டு இந்த ஜாதகன் பிறப்பான். முற்பிறவியில் செய்த தீவினை வந்தடையும். உலகத்தில் செல்வவானாக விருப்பன். ஆனால் தந்தையின் பொருள்க ளில்லாதவன்.

38. வந்தவன் யோகஞ் சொல்வோம் வடதிசை யரசன் போல
இந்தவன் வாழ்வா னாகும் எப்படிச் சொல்லு மென்ன
ஒன்பது பத்தோன் காரி உற்றிடம் நான்க தாகப்
பொன்பத்தில் பிறையு மொன்பான் பொருந்தின பலத்தால்
[சொன்னோம்.

38. ஜாதகனின் யோகங்களைச் சொல்லுவோம். வடக்குத் திசைக்கு அதிபனான குபேரனைப்போல் வாழ்ந்து வருவான். எப்படி என்று சொல்லுங் கள்? ஒன்பதாமிடம் பத்தாமிடங்களுக்குரிய சனி, நான்காமிடமாகிய சிம்மத் தில் தங்கி யிருப்பதாலும், குரு பத்தாமிடமாகிய கும்பத்திலும், சந்திரன் ஒன்பதாமிடமாகிய மகரத்திலும் தங்கி யிருப்பதன் பலத்தாலும் உரைத்தோம்.

39. சேதுவுஞ் செல்வா னாகும் திருப்பணி வேலை செய்வன்
காதியு மதிக மேற்பன் கௌரவ மாக வாழ்வன்
நீதிமான் நிருப ரிட்டன் நிந்தைக ளேற்கா னாகும்
சாதிப்பான் சிலவே சங்கை தர்மமாங் குணத்த னாகும்.

39. சேதுவுக்குச் சென்றிடுவான். ஆலயத் திருப்பணிகள் செய்வான். செல்வாக்குடையவன். கௌரவமாக வாழ்ந்து வருவான். நீதியுள்ளவன். வேலையாட்களுள்ளவன். பழிகள் அடையாதவன். சில சந்தேகங்களை நிவர்த்தி செய்வான். தர்மமான குணமுடையவன்.

40. அன்பது வேழு வாண்டில் ஆவணி மாதந் தன்னில்
இன்னவ னுடல மேகும் இயம்புவோ மிவன்பின் சென்மம்
கன்னியாக் குமரி தன்னில் கலப்பனும் பிரம்ம சேயாய்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

40. ஐம்பத்தேழாம் வயதில் ஆவணி மாதத்தில் இந்த ஜாதகன் மரணமடைவான். இவன் மறுபிறவி, கன்னியா குமரியில் அந்தணக் குலத்தவளுக்குப் பிறப்பான். உயர்ந்த கணவனை யடைந்த தாயே! கேளுங்கள்.


41. உதித்திடு காலந் தன்னில் ஓணத்தின் மூன்றும் பாதம்
மதிதசை யாண்டு மூன்றும் மாதமோ ரைந்து மாகும்
அதனுடன் நாட்கள் பத்தும் அறைந்தனம் பூர்வ பாகம்
சதியிலாத் தவங்கள் செய்யுஞ் சங்கரி கேட்டி டாயே.

41. ஜாதகன் ஜனன காலத்தில் திருவோண நட்சத்திரம் மூன்றும் பாதம். சந்திரமகா தசையாகி யிருப்பு; மூன்று வருடங்களும் ஐந்து மாதங்களும் பத்து நாட்களுமாம் என்று முதல் பாகத்தில் சொன்னேம். தவறில்லாத தவங்களை இயற்றும் பார்வதியே! கேளுங்கள்.

ஜாதகம் 100

1. சந்திரன் உச்ச மாகத் செம்பொன்னு மிதுன மாகப்
புந்திசேய் பானு ராகு புக்கிடங் கடக மாக
மந்தனுஞ் சாடி யாக மழைக்கோளு நீச்ச மாக
இந்தவார் கோளு நின்று ரோகிணி இரண்டாம் பாதம்;

1. சந்திரன் அவனுக்கு உச்சஸ்தானமாகிய விருஷபத்திலும், குரு மிதுனத்திலும், புதன் செவ்வாய் சூரியன் ராகு கடகத்திலும், சனி கும்பத்திலும், சுக்கிரன் அவனுடைய நீசஸ்தானமாகிய கன்னியிலுமாக, நவக்கிரகங்கள் இருந்து, ரோகிணி இரண்டாம் பாதத்தில் பிறந்து, (விருஷபமும் லக்கினமாகவுள்ள ஜாதகத்திற்கு);



2. பலனதைப் புகலு மென்று பார்வதி கேட்கும் போது
நலமுள பிருகு சொல்வார் நாயகன் சென்ன மாகும்
தலமது கீழ்மேல் வீதி தென்வாசல் சிறுவு ராகும்
குலமது ரெட்டி வம்சம் குழவியும் மூன்றுஞ் சென்மம்.

2. எற்படும் பலனைக் கூறுங்கள் என்று பார்வதி கேட்கலுற்றாள். நன்மை மிக்க பிருகு முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண் பிறப்பு. ஒரு சிற்றூரில், கிழக்கு மேற்கு வீதியில், தெற்கு நோக்கியுள்ள வாசலையுடைய வீட்டில் பிறப்பான். ரெட்டியார் மரபில் தோன்றுவான். மூன்றாவது பிறப்பாகப் பிறப்பான்.

3. பெருவயி றப்பன் மேல்பால் பேசுவோர் தென்மேல் கன்னி
மருவிடு மென்று சொல்வோம் மாடமா ளிகையா மில்லம்
உரைக்கின்றோங் குடும்பச் சேதி உற்றதாய் தந்தை யோகம்
திருமகன் முன்பின் சென்மம் செப்புவோ மிந்நூல் தன்னில்.

3. விநாயகர் ஆலயம் மேற்குப் பக்கத்திலும், தென்மேற்கில் அம்மன் கோவிலும் உள்ளன. மாடங்கள் முதலியன உள்ள ஒரு மாளிகையில் பிறப்

பான். அவனுடைய குடும்பச் செய்திகளையும், பெற்ற தாய் தந்தையர் யோகங்களையும், ஜாதகனின் முற்பிறப்பு மறுபிறப்பு இவைகளையும் இந் நூலில் சொல்லுவோம்.

4. தந்தையின் துணையாண் காணுன் சத்தியு மொன்றே தீர்க்கம்
எந்தகா ரணத்தி னுலே இவன்துணை யாண்பால் தோடம்
ஒன்பதில் கேது தங்க உரைத்தன மந்தச் சங்கை
இந்தவன் தந்தை சேதி இயம்புவோ மினிமே லாக.

4. தந்தைக்குச் சகோதரனில்லை. சகோதரி யொருத்தி தீர்க்கமா யிருப்பாள். எந்தக் காரணத்தினுல் இவனுக்கு உடன் பிறந்தவர் தோஷம் எற்படும் சொல்லுங்கள். ஒன்பதாமிடமாகிய மகரத்தில் கேது தங்கி யிருப் பதால், அந்தத் தோஷம் சொன்னேம். இவனுடைய தந்தையின் பலன் களைச் சொல்லுவோம், இனிமேல் ;

5. கல்விமான் ஊக சாலி காகுத்தன் நாமங் கொண்டோன்
எல்லைக ளதிகம் சேர்ப்பன் ஏவலா ளுடைய னுகும்
நல்லதோர் புகழு மேற்பன் நற்சேது பதிக்குச் செல்வன்
அல்லல்க ளணுகா தாகும் ஆண்மையாய்க் குடும்பி யாவன்.

5. கல்வி யறிவுள்ளவன். ஊக முடையவன். இராமன் என்ற பெய ருள்ளவன். விளைநிலங்க ளதிகம் சேர்ப்பான். வேலையாட்க ளுடையவன். நன்மையான கீர்த்தியைப் பெறுவான். நன்மைதரும் சேதுவுக்குச் சென்று நீராடுவான். துன்பங்கள் அடையாதவன். தைரியமாகக் குடும்பத்தை யேற்று நடத்துவான்.

6. இனமதிப் புடனே வாழ்வன் இடரொன்றேர்க் குதவி [செய்வன்
கனமான வில்லம் செய்வன் கௌரவ குடும்ப மேற்பன்
நினைவதை முடிப்பா னுகும் நிட்டூர வசனங் கூறன்
தனமது புதையல் வைப்பான் தருமமாங் குணத்த னுகும்.

6. பந்து ஜனங்கள் கொண்டாட வாழ்க்கை நடத்துவான். துன்ப மடைந்தவர்கட் குதவி செய்வான். பெரியதொரு வீடு கட்டுவான். கௌரவ மான குடும்பத்தை யடைவான். எண்ணிய காரியங்களை முடிக்கும் திறமை யுள்ளவன். வருந்தத் தக்க வார்த்தைகளைக் கூறுதவன். செல்வத்தைப் புதையல் வைப்பான். தரும சிந்தை யுடையவன்.

7. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோகைய ரிருவர் தம்மில்
பின்மனை யாளுக் கின்னுன் பிறப்பனு மிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளான் சிவந்த
[மேனி
மன்னன்போல் வாழ்வா னுகும் மங்கள வார்த்தை கூர்வான்.

7. இங்ஙனம் சொல்லப்பட்ட குணங்களை யுடையவனுக்கு இரு மனைவியர். அவர்களில் இளையவளுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைச் சொல்லுகின்றோம். அழகுள்ளவன். சிவந்த உடல். அரசன்போல் செல்வாக்குடன் வாழ்ந்திருப்பான். நல்ல வார்த்தைகளையே பேசுவான்.

8. தந்தையால் சுகமில் லாதான் தாய்துணை யுதவி யுண்டு
தந்தையி னஸ்தி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
தந்தமும் தரள மொக்கும் சாராட்கள் அதிக மேற்பன்
தன்பந்து புகழ வாழ்வன் தனதான்யம் விருத்தி செய்வன்.

8. தன் தந்தையினால் நன்மை ஏற்படாதவன். தாயின் உடன் பிறந்தவர்களால் உதவி பெறுவான். தன் பிதுரார்ச்சிதமாக வுள்ள சொத்துக்களை அதிகரிப்பான். முத்துப் போன்ற பற்களுள்ளவன். வேலையாட்கள் மிகுதியாக உடையவன். தன்னுடைய சுற்றத்தார் புகழும்படி வாழ்ந்திருப்பான். செல்வங்களையும் தான்யங்களையும் பெருக்குவான்.

9. வித்தையு மிரண்டு கற்பன் விவேகியா மெவர்க்கு நேயன்
சுத்தவான் சொல்காப் பானும் தொடுத்ததை வெல்வா னுகும்
சித்தமே கரப்பு மில்லான் தீங்கதை யெவர்க்கு மெண்ணுன்
புத்தியில் பெரியோ னுவன் பொய்யது புகலா னுகும்.

9. இருவிதமான கல்வி கற்பான். விவேக முள்ளவன். எல்லோருக்கும் நல்லவன். சுத்த முள்ளவன். சொன்ன வார்த்தைகளைக் காப்பாற்றுவான். எடுத்த காரியத்தை ஜெயிக்க வல்லவன். மனத்தில் கெட்ட எண்ணங்க ளில்லாதவன். தீங்கை ஒருவருக்கும் மனத்தில் நினையாதவன். புத்தியில் சிறந்தவன். பொய் பேசாதவன்.

10. தன்துணை முன்பெண் ரெண்டு சாற்றுவோந் தீர்க்க மாகப்
பின்துணை கன்னி யொன்று பேசுவோம் பால னுக்கு
முன்தாய்மா ரொன்றுண் டென்றீர் மொழிகுவீ ரவர்க்குப்
[புத்ரர்
சந்ததி எழுவர் தோன்றும் சதுர்நட்ட மென்று சொல்வோம்.

10. ஜாதகனுக்கு முன் பிறந்த பெண்களிருவர், தீர்க்கமாவர். பின் பிறக்கும் சகோதரி யொருத்தி உண்டு என்று சொல்லுவோம். ஜாதக னுக்குப் பெரிய அன்னை ஒருத்தி யுண்டு என்று கூறினீரே? அவளுக்குப் புத்திர பாக்கிய முண்டோ? சொல்லுங்கள். ஏழு சந்ததிகள் தோன்றும். அவர்களில் நால்வர் நிலையார் என்று கூறுவோம்.

11. திருதிய கன்னி விருத்தி தேவியு மரிப்ப ளாகும்
உறைகுவ ரொருத்தி தானும்-உறையாது துணையா
[ணென்றீர்
வருவிப்பீ ரந்தச் சங்கை மாநாகம் மூன்றில் தங்க
பெருகாது துணையா ணுந்தான் பேதையே கேட்டி டாயே.

11. மூன்று பெண்கள் தீர்க்காயுளுடன் இருப்பர். பெரிய அன்னை இறந்து விடுவாள். ஒரு சகோதரி இருப்பாள் என்றும், சகோதரனில்லை என்றும் சொன்னீர்களே? அதற்குக் காரணஞ் சொல்லுங்கள்? ராகுவாகிய கொடிய நாகம் மூன்றுமிடமாகிய சகோதர ஸ்தானத்தில் தங்கி யிருப்பதால் உடன் பிறந்தார் விருத்தியாகார் என்று சொன்னேம். தாயே! கேட்டிடுவாய்.

12. மாதுரு குணத்தைச் சொல்வோம் மால்மனை ஒப்ப தாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உரகன்போல் கோப மேற்பள்
தீதிலாக் குணத்தா ளாகும் தேவிநன் னடக்கை யுண்டு
பாதக மனமில் லாதாள் பஞ்சைமே லிரக்க முண்டு.

12. அன்னையின் குணத்தைச் சொல்லுவோம். திருமாலின் மனைவி யாகிய இலக்குமி போன்றவள், அழகாகப் பேசுபவள். ஸர்ப்பம்போல் கோபமடைவாள். தீய குணங்க ளில்லாதவள். அவளும் நன்னடத்தை யுள்ளவள். கெட்ட மன மில்லாதவள். ஏழைகளின்மீது இரக்க முள்ளவள்.

13. சுகையுங் கொஞ்ச முண்டு இன்பமாய் வார்த்தை யுண்டு
பாகமாய்ப் பேசு வாளாம் பதர்குண மில்லா ளாகும்
நாகரீ கங்க ளுண்டு நல்லோர்க்கு நல்ல ளாவள்
போகபாக் கியங்க ளேற்பள் புகழ்ந்தோரை யாத ரிப்பள்.

13. கொடையுஞ் சிறிது உண்டு. இனிய சொற்களைப் பேசுதல் செய்வாள். பக்குவமாகச் சொற்களைக் கூறுவாள். அற்ப குணமில்லாத வள். நாகரிக முள்ளவள். நல்லவர்க்கு நல்லவள். யோகங்களை அனு பவிப்பாள். பாக்கியங்களை அடைவாள். தன்னைப் புகழ்ந்தவரைக் காப்பாள்.

14. இல்லமு மேல்பா லாகும் இவள்துணை யாண்பால் மூன்று
வல்லிமா ரிருவ ராகு மறைகின்றே மிவளின் பூர்வம்
எல்லியி லுயர்வ தான எழில்சோழ நாட்டி லேதான்
புல்கினுள் கர்ண சேயாய்ப் புகழான குடும்பி யாகி;

14. இவள் வீடு மேற்குத் திசையிலுள்ளது. இவளுக்குச் சகோதரர் மூவர். சகோதரிகள் இருவர் ஆவர். இவள் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். நிலத்தில் சிறந்ததான அழகிய சோழவள நாட்டில் கருணீகர் குலத்தவளாய்ப் பிறந்து, கீர்த்தியுள்ள குடும்பத்தை யுடையவளாகி;

15. மாதுவும் வாழு நாளில் மருவின வினையைக் கேண்மோ
காதலி வரனே டொத்துக் கண்ணனூர் தலங்கள் சென்று
பாதகம் விலக்கு மாரி பாதத்தைப் போற்றி செய்து
சூதுள மனத்த ளாகிச் சென்றனள் கடைவீ திக்கு;

15. இவள் வாழ்ந்துகொண்டிருக்கும் காலத்தில் அடைந்த தீவினையைக் கேளுங்கள். தன் கணவனுடன் கண்ணனூர் என்ற புண்ணிய தலத்துக்குச் சென்று, தீமையைப் போக்குகின்ற மாரியம்மன் பாதங்களில் பணிந்து, துதித்து, வஞ்சனையான எண்ணத்துடன் கடைவீதிக்குச்சென்றாள்.

16. குங்கும மஞ்சள் சீப்புக் கோதையும் வாங்கிக் கொண்டு
தங்கமு மீயா தாகிச் சர்வமான் போல்ம றைந்தாள்
அங்கவன் வணிபன் பார்த்து அம்மாதைக் காணு னுகி
மங்கின மனத்த னுகி யறைந்திட்ட சாபங் கேண்மோ.

16. ஒரு கடையில் குங்குமம் மஞ்சள் சீப்பு இவற்றை வாங்கிக் கொண்டு பணம் கொடுக்காமல் மான்போல் துள்ளியோடி மறைந்துவிட்டாள். இவள் பணம் தராததை வணிகன் உணர்ந்து, இவளை எங்குத் தேடியும் காணாதவனாய், வருத்தமுற்ற மனத்துடன் கூறிய சாபத்தைக் கேளுங்கள்.

17. இனமது வாகா வண்ணம் ஏகுவான் வரனு மேதான்
வனிதைபின் சென்மந் தன்னில் மத்தியில் விதவை யாகித்
தினமன சஞ்ச லத்தால் தேவியும் வாழ்வா னென்று
வினைமன மாகச் சொல்ல மேவிற்று வந்தச் சாபம்.

17. என்னிடம் பெற்றுக்கொண்டு சென்ற குங்குமம் முதலிய பொருள்கள் உபயோகப்படு முன்பாகவே இவள் கணவன் இறப்பான். மறு பிறவியிலும் இவள் மத்திய காலத்திலேயே கைம்பெண்ணாகி, நாள்தோறும் மனத்தில் துன்பங்கள் நிறைந்து வாழ்ந்திருப்பாள் என்று துன்பமுற்ற மனத்துடன் கடைக்காரன் கூறவும், அந்தச் சாபம் இவளை யடைந்தது.

18. இதுவன்றி வேறு காணுள் இம்மாதுக் கந்த வாண்டில்
வதிபனு மரண மாகி மனமது துயரங் கொண்டு
நிதியிலா வேழை யோர்க்கும் நீத்தோர்க்குந் தாகந் தந்து
விதியது முடிந்து மாது விளங்கினு ளிவளே யென்றோம்.

18. இதுவல்லாது, முற்பிறவியில் வேறு நீங்கு இல்லாதவள். இவள் கணவன் அவ்வருஷத்திலேயே இறக்க, மனத்தில் துன்ப மடைந்து, செல்வ மில்லாத ஏழை மக்களுக்கும், துறவிகட்கும் உணவு, நீர் முதலிய உதவி, தன்வாழ்நாள் முடிந்து, எமனுலகஞ் சென்று, மீண்டும் இப்பிறவியில் பிறந்து விளங்கினுள் இவள் என்று சொன்னோம்.

19. மாதுக்கு விச்சென் மத்தில் மருவிடும் வணிபன் சாபம்
காதலன் மத்தி யத்தில் காலன்தன் பதிக்குச் செல்வன்
வேதனை மனத்த ளாகி மேதினி தன்னில் வாழ்வள்
ஓதுவா ரத்ரி தாமும் உத்தமி யிச்சென் மத்தில்;

19. இவளுக்கு இப்பிறவியில் கடைக்காரனின் சாபம் சேரும். கணவன் மத்திய வயதில் எமனுலக மடைவான். துன்பமுற்ற மனத்தினளாய், உலகில் வாழ்வாள். அத்திரி முனிவர் சொல்லுவார். இவள் இப் பிறவியில்;

20. பலதல வாசஞ் சென்று பாவையும் வாழ்வ தாலே
விலகாதோ வந்தச் சாபம் வணிகனும் வறுமை யோனுய்
நலமுளோர் தம்பால் பொன்னை நாயகன் கடனுய்ப் [பெற்றுக்
குலவினுன் லெட்சுமி செட்டுக் கொடுவிடம் போலே நேரும்.

20. பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வசித்து வருவதால், அந்தச் சாபம் நீங்காதோ? கடைக்காரன், தரித்திர முள்ளவனுய், நலமுள்ள செல்வர்களிடம் சென்று பொருளைக் கடனுகப் பெற்றுக் கொண்டுவந்து, வியாபாரம் செய்துவந்தான். அதனல், இவள் வாங்கிய பொருள்களுக்குப் பணம் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டு வந்ததற்குச் சாப மிட்டான். அந்தச் சாபம் கொடிய விஷம்போன்று இவளைவிட்டு நீங்காமல் தொடரும்.

21. மங்கைக்குச் சாபத் தாலே மாரனு மரிப்பா னென்றீர்
பொங்கின குடும்ப மெவ்வார் போற்றுவீர் முனியே நீர்தாம்
அங்கவள் முன்சென் மத்தில் அதிதிக்கு மேழை யோர்க்கும்
நங்கையுந் தாகந் தந்த நற்பலன் வறுமை காணுள்.

21. இவளுக்கு வணிகன் சாபம் ஏற்பட்டதால் கணவன் இறப்பான் என்று சொன்னீர்கள். இப் பிறப்பில் நிறைந்த செல்வமுடைய குடும்பத்தவளாக இருப்பாள் என்று எவ்வாறு சொல்லுவீர்கள்? முனிவரே! நீங்கள்

இவள் முற்பிறவியில் விருந்தினராக வந்தவர்கட்கும், ஏழை மக்களுக்கும், உணவு, நீர் முதலியன அளித்ததால் ஏற்பட்ட நல்ல பலனால் இப்பிறப்பில் தரித்திர மில்லாதவளாவாள்.

22. பின்சென்மம் பட்சி தன்னில் பெரிதான குடும்பந் தன்னில்
மூன்குல முதிப்பா ளாகும் மொழிகின்றேம் பிதாமுன்
[சென்மங்
கன்னியாக் குமரி தன்னில் கலந்தனன் வேளா ளுக
உன்னதக் குடும்பி யாகி உத்தமன் வாழு நாளில்;

22. மறுபிறப்பு, திருக்கழுக்குன்றத்தில், பெரிய அந்தணர் குடும்ப மொன்றில் பிறப்பாள். இனி, ஜாதகன் தந்தையின் முற்பிறப்பைச் சொல்லு கின்றேம். கன்னியா குமரியில், வேளாளர் குலத்தவளுக்குப் பிறந்தான். உயர்ந்த குடும்ப முடையவனாய், இவன் வாழ்ந்துகொண் டிருக்கும்போது;

23. விதவையைப் போகந் துய்த்து மேவிற்றுக் கருவு தானும்
அதஞ்செய்தான் பண்டி தத்தால் அம்மாது மரித்தா
[ளென்றேம்
சதியாக வந்தத் தோடம் தங்கிற்று விச்சென் மத்தில்
முதல்மனை கர்ப்பத் தாலே மேவுவாள் கால நாடு.

23. கைம்பெண் ணொருத்தியுடன் இன்பந் துய்த்தான். அவளுக்குக் கருவேற்பட்டது. பல மருத்துவங்கள் செய்து கருவை யழித்தான், இவன். அதனால் அவள் இறந்தாள். அந்தத் தோஷம் இவனை யடைந்தது. இப் பிறவியில் இவன் முதல் மனைவி கர்ப்ப பாதையினால், மரண மடைவாள்.

24. பின்சென்ம மரங்கந் தன்னில் பிறப்பனும் பிரம்ம சேயாய்
அன்னவ னிச்சென் மத்தில் அணுகின புண்ணிய மென்ன
உன்னதச் சேது சென்றும் உயர்வோருக் குதவி செய்து
பின்னோரா பத்தைக் காத்தும் பூமியில் வாழ்வ தாலே;

24. மறுபிறவியில், ஸ்ரீரங்கத்தில், அந்தணர் குலத்தவனாய்ப் பிறப் பான். இவன் இப்பிறப்பில் செய்த நற்செயல்கள்யாவை? உயர்ந்த சேது தீர்த்தஞ்சென்று நீராடியும், சான்றோர்க்கு உதவியும், ஏழை மக்கள் சிலர்க்கு நேர்ந்த துன்பங்களைக் காத்தும் உலகில் வாழ்ந்து வருவதால்;

25. பிறப்பனும் பிரம்ம சேயாய்ப் பேசுவீர் கரும காலம்
திருகாக நாற்பான் ரெண்டில் தந்தையு மரிப்பா னுகும்
உரைக்கின்றேம் நாற்பான் ரெண்டு வாண்டினி லன்னை
[கண்டம்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

25. மறு பிறவியில் அந்தணர் மாபினனுய்ப் பிறப்பான். ஜாதகனுக்குக் கருமதசை வருங் காலத்தைச் சொல்லுங்கள். ஜாதகனது நாற்பதாம் வயதில் தந்தை மரண மடைவான். இவனது நாற்பத்திரண்டாம் வயதில் தாய்க்குக் கண்டம் உண்டாகும் என்று சொல்லுகின்றேம். யானைமுகக் கடவுளைப் புதல்வராகப் பெற்ற பார்வதியே! கேட்பாயாக.

26. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் பத்தொன் பாண்டில்
வேல்விழி யன்னை வர்க்கம் மேவுவாள் மேல்பால் தன்னில்
நீலியின் குணத்தைச் சொல்வோம் நீத்தோர்க்குத் தாக
[மீவள்
மால்மனை யொப்ப தாகும் மாரன்தன் மனத்துக் கேற்றோள்.

26. ஜாதகன் திருமண காலத்தைச் சொல்லுவோம். பத்தொன்பதாம் வயதில், இவனுர்க்கு மேற்குத் திசையிலிருந்து இவன் தாய் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி மனைவியாக வாய்ப்பாள். அவள் குணங்களைக் கூறுவோம். துறவிகட்கு உணவு, நீர் முதலியன அளிப்பாள். இலட்சுமி போன்றவள். கணவன் மனத்திற்கு உகந்தவள்.

27. புத்திமான் சிவந்த மேனி புண்ணிய மனத்த ளாகும்
சுத்தமு முடைய ளாகும் சொல்லது சுகமே யாகும்
பத்திமா னவர்க்கு வன்னம் படைப்பளாம் வறுமை
[காணுள்
எத்திசை நல்லோ ளாவள் இடரென்றோர்க் குதவி செய்வள்.

27. புத்திசாலி. சிவந்த உடலுடையவள். நல்மன முள்ளவள். தூய்மை யுடையவள். சுகமாகப் பேசுவாள். பக்தியுடைய அடியவர்கட்கு உணவளிப்பாள். தரித்திரம் அடையாள். எல்லாத் திசைகளிலும் நல்லவள் என்று பெயரெடுப்பாள். துன்பமென்று வந்தவர்க்கு உதவிசெய்வாள்.

28. கன்னிகை தீர்க்க சிவி கழறுவா ரத்திரி தாமும்
மன்னவன் தனக்குத் தார மருவிடு மிரண்டே யாக
என்னகா ரணத்தி னுலே இயம்பினீர் ரந்தச் சங்கை
துன்மையா யேழோன் நீச்சம் சராராசி தனிலி ருக்க;

28. தீர்க்கமான வயதுடையவள். அத்திரி முனிவர் சொல்லுவார். ஜாதகனுக்கு இரு மனைவியர் ஏற்படுவர். என்ன காரணத்தினுல் அங்ஙனம் கூறினீர்கள்? கொடிய தன்மையாய், ஏழாமிடமாகிய களத்திர ஸ்தானத்துக்குரிய செவ்வாய், சராராசி யாகிய கடகத்தில் நீச்சமாய் இருப்பதால்;

29. நாரியு மிரண்டு வென்றேரும் பராசரு மறுத்துச் சொல்வார்
தீரமாய்க் குருவும் ரெண்டில் சேர்ந்ததோர் பலத்தி னுலே
வேறுமோர் தாரங் காணுன் மெல்லிய லொன்றே தீர்க்கம்
நாரியு மிவன்முன் னுலே நமன்பதி செல்வா ளாகும்.

29. இவனுக்கு இரு மனைவியர் என்று சொன்னேம். பராசர முனிவர் இதனை மறுத்துக் கூறுவார். தைரியமாய்க் குரு குடும்ப ஸ்தானமாகிய மிதுனத்தில் தங்கியிருக்கும் பலத்தினால், இரண்டாம் மனைவியை யடைவான். மனைவி யொருத்தியே தீர்க்கமாக விருப்பாள். இவனுக்கு முன்பே இவன் மனைவி எமபுர மடைவாள்.

30. எந்தக்கா லத்தில் செல்வாள் இயம்பினீர் முனியே நீர்தாம்
அந்ததோர் சேதி தன்னை யறிவிப்போ மந்தந் தன்னில்
சந்ததி பலத்தை யாங்கள் சாற்றுவோ மாண்பால் ரெண்டு
விந்தையாய்க் கன்னி ரெண்டு மேவிடுந் தீர்க்க மாக.

30. முனிவரே! நீங்கள், எந்தக் காலத்தில் ஜாதகன் மனைவி மரிப்பாள் என்று கூறினீர்கள்? அந்தச் செய்தியை முடிவில் கூறுவோம். ஜாதகனுக்குப் புத்திர பாக்கியத்தைப் பற்றி இனிமேல் சொல்லுவோம். புதல்வர்கள் இருவரும், பெண்கள் இருவருந் தோன்றித் தீர்க்கமாக விளங்குவர்.

31. சாதகன் முன்சென் மத்தைச் செப்புவோங் காரைக் காலில்
சூதிலா வேளாண் வம்சம் தோன்றியே வாழு நாளில்
மாதவர்க் கிடைஞ்சல் செய்தா னறைகின்றூர் சாபந் தானும்
தீதுகள் செய்த பாவி சனிக்கும்பின் சென்மந் தன்னில்;

31. ஜாதகன் முற்பிறவியைக் கூறுவோம். காரைக்காலில், குற்றமில்லாத வேளாளர் மரபில் பிறந்து வாழுகின்ற காலத்தில், தவத்தைச் செய்யுஞ் சான்றோர்களுக்கு இடையூறுகள் செய்தான். அவர்கள் சாபமிடுகின்றூர்கள். எங்களுக்குத் துன்பங்கள் செய்த பாவி, பிறக்கும் மறு பிறவியில்;

32. அண்ணன்தன் பிகளு மின்றி அப்பனின் சுகமு மின்றி
மண்ணின்மேல் வாழ்வா னென்ன மருவிற்று வந்தச் சாபம்
புண்ணிய மனத்தோ ருக்குக் குமரனு மன்ன மீந்து
திண்ணமாய்க் கடவுள் தொண்டு செய்துமே மரண மாகி;

32. உடன்பிறந்த சகோதரர் இல்லாமல், தந்தையினாலும் சுகமடையாமல், உலகில் வாழ்ந்திருப்பான் என்று சொல்லவே, அந்தச் சாபம் இவ

னைச் சேர்ந்தது. இவன் நல் மனமுடைய சான்றோருக்கு உணவளித்து உபசரித்து, கடவுளுக்குத் தொண்டுகள் பல செய்து வாழ்ந்து மரண மடைந்து;

33. வேதனுல் வரையப் பட்டு விளங்குவா னிவனே யென்றும்
ஓதுவோ மிவனின் யோகம் உயர்வான குடும்பி யாவன்
மேதினில் விருத்தி செய்வன் வேந்தர்க ளிட்டங் கொள்வன்
ஆதவன் போல்பந் துக்குள் அதிகமாய்ப் புகழு மேற்பன்.

33. மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இப்பிறப்பாகத் தோன்று வான் இவன் என்று சொன்னோம். இவன் யோகங்களைச் சொல்லுவோம். உயர்ந்த குடும்ப முடையவனுவான். நிலபுலங்களை விருத்தி செய்வான். அரசர்களின் பிரியத்தைச் சம்பாதிப்பான். தன் உறவினர்களுக் கிடையில், மிக்க கீர்த்தி பெற்றுச் சூரியன் போன்று விளங்குவான்.

34. அன்பது நாலு வாண்டில் அவன்பாரி கண்ட மெய்தும்
மன்னனுக் கன்பா னெட்டில் மார்கழி மாதந் தன்னில்
தன்னுட லேகு மென்றோம் செப்புவோ மிவன்பின் சென்மம்
பொன்முக ணற்றி னேரம் பேரூரில் பிரம்ம சேயாய்;

34. இவனது ஐம்பத்து நான்காம் வயதில் மனைவி மரண மடைவாள். ஐம்பத்தெட்டாம் வயதில் மார்கழி மாதம் ஜாதகன் இறப்பான். இவன் மறு பிறப்பைச் சொல்லுவோம். பொன்முகரி யாற்றோரமுள்ள பெரிய ஊரொன்றில் அந்தணர் மரபினனுய்;

35. பிறப்பனு மிந்தப் பாலன் பராசரும் மறுத்துச் சொல்வார்
குருவுக்கீ ராறில் திங்கள் குலவினுல் சகடை தோடம்
மர்மமா யாருண் டுக்குள் மாரகம் நேரா தோசொல்
பிறையுமே யுச்ச மாகப் புகலொணுச் சகடை பங்கம்.

35. இந்த ஜாதகன் பிறப்பான். பராசர முனிவர் மறுத்துப் பேசுவார். குரு இருக்குமிடமாகிய மிதுனத்துக்குப் பனிரண்டாமிடத்தில் (விருஷபத்தில்) சந்திரன் தங்கியிருப்பதால் சகட யோகத்துக்குப் பங்க மேற்படும். ஆதலின் இவன் பிறந்து ஆறு வருஷங்களுக்குள் மரணம் நேராதோ? கூறுங்கள். சந்திரன் விருஷபத்தில் உச்சமாக விருப்பதால் சகடயோக பங்கம் ஏற்படும் என்று சொல்ல முடியாது.

36. மந்திரி யிரண்டில் தங்க வயதுமே தீர்க்க மெய்தும்
எந்தநோய் வந்த போதும் இரவிமுன் பனிபோல் நீங்கும்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விபர மாகக்
கந்தனே யின்ற மாதே கழறின மொழிகுன் முவே.

36. குரு மிதுனத்தில் தங்கி யிருப்பதால் ஜாதகன் தீர்க்கமான வயதைப் பெறுவான். எந்த வியாதி வந்தபொழுதும் சூரியனுக்கு முன்பு பனி போல் நீங்கும். பிற்பாகத்தில் விவரமாக மற்றப் பலன்களைச் சொல்லுவோம். முருகப்பிரானைப் புதல்வராக வடைந்த பார்வதியே! நாங்கள் கூறியவை தவறு.

37. உதித்திடு காலந் தன்னில் உரோகிணி யிரண்டாம் பாதம்
மதிதசை யாண்டு வாறும் மருவிடும் நவமாந் திங்கள்
இதுமுதல் பாகஞ் சொன்னேம் இப்பலன் பின்பால் [சொல்வோம்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாயாய்.

37. ஜாதகன் பிறப்புக் காலத்தில் உரோகிணி நட்சத்திரன் இரண்டாம் பாதமாம். அப்பொழுது சந்திர மகா தசை ஆறு வருஷங்களும் ஒன்பது மாதங்களும் இருப்பாம். இங்ஙனம் முதல் பாகத்தைக் கூறினேம். இக்காலத்துக்குரிய பலன்களைப் பிற்பாகத்தில் கூறுவோம். முனிவர்களைக் காக்கின்ற பார்வதியே! கேட்பாயாக.

ஜாதகம் 101

1. பிறைநந்தி காரிவீணை பொன்சியஞ் சேயுந் தேளில்
பரிதியும் புதனுங் கோலாம் பளிங்கனும் ராகு கன்னி
வருவது சென்மம் நந்தி யறைகுவீர் பலனே யென்று
அரன்மனை யாளுங் கேட்க அத்திரி புகலு கின்றார்.

1. சந்திரன் விருஷபத்திலும், சனி மிதுனத்திலும், செவ்வாய் விருச்சிகத்திலும், சூரியன் புதன் துலாந்திலும், சுக்கிரன் ராகு கன்னியிலும் நின்று, விருஷபம் ஜன்ம லக்கினமாக விருந்தால் பலன் எங்ஙனம் என்று, சிவபெருமான் மனைவியாகிய பார்வதி கேட்க, அத்திரி முனிவர் சொல்லுகின்றார்.

கேது		லக்கினம் சந்திரன்	சனி
	இராசி சக்கரம்		குரு
	செவ்வாய்	சூரியன் புதன்	சுக்கிரன் இராகு

2. இந்தசே யாணைஞ் சென்மம் இல்லமுங் கீழ்மேல் வீதி
தென்வாடை மாரி கீழ்ப்பால் சிங்கவா கனத்தோள்
[மேல்பால்
நந்தியு மருகில் தங்கும் சிறுவூராம் நான்காஞ் சென்மம்
அந்தவன் ரெட்டி- வம்சம் அறைகின்றேந் தாயே யாங்கள்.

2. இஃது ஆண் பிறப்பு. பிறக்கும் வீடு கிழக்கு மேற்கான வீதியில் தெற்கு வாடையில் உள்ளது. மாரியம்மன் கிழக்கில் கோவில் உள்ளது. சிங்க வாகனத்தைக் கொண்ட துர்க்கை கோயில் மேற்கில் உள்ளது. விநாயகர் கோயில் வீட்டுக்கு அருகில் இருக்கும். சிறிய ஊர். தாயே! ஜாதகன் ரெட்டியார் மரபில் தந்தைக்கு நான்காம் பிறப்பாகத் தோன்றுவான் என்று நாங்கள் சொல்லுகின்றோம்.

3. பாலகன் சனன யோகம் பெற்றதாய் தந்தை யோகம்
சாலவே துணைவர் யோகம் தன்மனை புத்ர யோகம்
ஏலவே முன்பின் சென்மம் இபம்புவோ மிந்நூல் தன்னில்
ஆலத்தை யுண்டோன் மாதே அறிவிப்போம் பிதுர்வர்க்
[கத்தை.

3. ஜாதகன் ஜனன கால யோகங்கள், பெற்ற தாய்தந்தையர், உடன்பிறந்தோர், மனைவி, புதல்வர் யோகங்கள், முற்பிறப்பு, மறுபிறப்புக் கள் முதலிய வனைத்தையும் இத்தச் சோதிட நூலில் காங்கள் சொல்லுவோம். ஆலகால விஷத்தை யுண்ட சிவபெருமான் பத்தினியே! ஜாதகன் தந்தை வர்க்கத்தாரைப் பற்றிச் சொல்லுவோம்.

4. தாதைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு முதல்மா தின்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
ஓதுவோங் துணையாண் காணுன் உத்தமி யொன்றே தீர்க்கம்
தீதிலாப் பின்தா யொன்று செப்பினீ ரவர்க்குப் புத்ரர்;

4. ஜாதகனின் பாட்டனுருக்கு மனைவியர் இருவர். அவர்களில் மூத் தவளுக்குப் புதல்வனுகப் பிறந்தவன் ஜாதகனின் தந்தையாவான். இவனுக் குச் சகோதர னில்லை. சகோதரி யொருத்தியே தீர்க்கமாக விளங்குவாள். குற்றமற்ற இளைய தாயொருத்தி யுண்டு என்று கூறினீர்கள். அவளுக்குப் புத்திர பாவத்தை;

5. சொல்லுவீர் முனியே நீர்தாம் சுதனுமே யொருவன் தீர்க்கம்
வல்லிமா ரெழுவ ராகும் மன்னனும் வேருய்ச் செல்வன்
அல்லலில் லாமல் வாழ்வன் அவன்பலன் பின்பால்
[சொல்வோம்
புல்குவோம் தந்தை சேதி புயபல முடைய னுகும்.

5. சொல்லுங்கள், முனிவரே! நீங்கள். அவளுக்குப் புதல்வன் ஒரு வனே பிறந்து தீர்க்கமாவன். புதல்வியர் எழுவர் தோன்றுவர். புதல்வன் வேறு குடும்பமாகச் செல்லுவான். துன்பமின்றி வாழ்க்கை நடத்துவான். அவனுக்குரிய பலன்களைப் பிற்பாகத்தில் சொல்லுவோம். இனி ஜாதகன் தந்தை வரலாற்றினைக் கூறுவோம். தோள் வலி யுடையவன்.

6. இருநிறஞ் சமதே கத்தோன் சுகைவா னின்பச் சொல்லன்
நெறியதைக் காப்பா னுகும் நீணிலந் தன்னு லுய்வன்
அரிநாம முடைய னுகும் ஆபத்தைச் சிலர்க்குக் காப்பன்
பறைபள்ளு முடைய னுகும் பாருளோர் மெச்ச வாழ்வன்.

6. கரிய நிறமுள்ளவன். சமமான உடலமைப் புள்ளவன். இன்பந் தரும் சொற்களைப் பேசுவான். ஒழுங்கு முறையைக் கடை பிடிப்பான். பயிர்த் தொழிலால் ஜீவனஞ் செய்வான். திருமாலின் பெயரைக் கொண்ட வன். சிலரைத் துன்பத்திலிருந்து காப்பான். பறையர் பள்ளர் முதலான வர்களே எவலாட்களாகப் பெற்றவன். உலகினர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான்.

7. சல்லிய பாதை யேற்கார் சாதமுங் குறைவு ரூதான்
இல்லறஞ் சித்ரஞ் செய்வன் எதிரியை வசியங் கொள்வன்
மல்லுக்கு முன்செல் லாதான் அவனியில் புகழு மேற்பன்
சொல்லுவோ மிவன்முன் சென்மஞ் துறவியே கேட்டி
[டாயே.

7. கடன் தொந்தரவை யடையான். போஜன சுகங் குறையாதவன். குடும்பத்தை அழகுபெற நடத்துவான். பகைவரையுந் தனக்கு உறவாகக் கொள்ளுவான். வீண் சண்டைக்குப் போக மாட்டான். உலகில் கீர்த்தி யடைவான். இவன் முற்பிறப்பைச் சொல்லுவோம். முனிவரே! கேளுங்கள்.

8. பிருதிவி தலத்தி லேதான் பிறந்தனன் சௌராட்டிர வம்சம்
பெரிதான செட்டுச் செய்து பேதையு மதலை யுண்டாய்க்
குறைவிலாக் குடும்பி யாகிக் குமரனு வாழு நாளில்
மருவின வினையைக் கேண்மோ வளவுமே துணைக்குப் பாகம்.

8. காஞ்சீபுரத்தில், சௌராஷ்டிர வமிசத்தவனாகப் பிறந்தான். பெரிய வியாபாரங்கள் செய்து, மனைவி மக்களை யடைந்து, நிறைந்த குடும்ப முள்ளவனாக இவன் வாழுகின்ற காலத்தில் நேர்ந்த தீவினையைக் கேளுங்கள். வீட்டில் ஒரு பாகத்தைச் சகோதரனுக்கு;

9. தந்தத்தில் மோசம் செய்தான் செப்புவான் துணைவன் சாபம்
விந்தைகள் செய்த பாவி மேவும்பின் சென்மந் தன்னில்
உன்துணை ஆணில் லாமல் உலகினில் வசையு மேற்பாய்
இந்தவார் சொல்ல லுற்றான் எய்திற்று வந்தச் சாபம்.

9. பிரித்துக் கொடுத்ததில் மோசஞ் செய்தான். இதனை யுணர்ந்த சகோதரன் சாப மிடுவான். பாகம் பிரிக்கும்பொழுது, ஆச்சரியங்கள் பல செய்து ஏமாற்றிய பாவியே! நீ மறு பிறப்பில், சகோதர னில்லாமல், உல கில் பழி யடைவாய் என்றும், இன்னும் பலவிதமாகவும் சொன்னான். அந்தச் சாபம் ஜாதகன் தந்தையை யடைந்தது.

10. மாரனு மந்தி யத்தில் வருவோர்க்குத் தாக மீந்து
தீரமாய்க் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
பாரினி லுதித்தா னென்றேரும் பற்றுமே துணையின் சாபம்
நேரது துணையா னுந்தான் நிமலியே கேட்டி டாயே.

10. கடைசிக் காலத்தில் வீடு தேடி வந்தவர்களுக்கு உணவு, நீர் முத லியன அளித்து, முடிவில் மரணமடைந்தான் என்று சொன்னோம். சகோ

தரன் சாபம் இப்பிறப்பில் இவனைச் சேரும். ஆதலின் இப் பிறவியில் சகோதரன் தோன்றான். குற்றமற்ற பார்வதியே! கேட்பாயாக.

11. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளான் மாநி
[றத்தான்
தன்மனங் கபடு மில்லான் தருமமாங் குணத்த னுகும்
பன்னுவான் கல்வி ரெண்டு பாரது விருத்தி செய்வன்.

11. சொல்லப்பட்ட இவ்விதக் குணங்களை யுடைய தந்தைக்கு ஜாதகன் புதல்வனுகத் தோன்றுவான். இவள் குணங்களைக் கூறுவோம். கரிய நிறமுள்ளவன். மனத்தில் வஞ்சனை யில்லாதவன். தரும சிந்தை யுடையவன். இருவிதக் கல்வி கற்பான். நிலபுலன்களை விருத்தி செய்வான்.

12. சுகமான வார்த்தை சொல்வன் சோர்வோருக் குதவி
[செய்வன்
இகபரன் பத்தி பூண்பன் யாவர்க்கும் நல்லோ னுவன்
பகையென்று மனத்தில் வையான் பாரபட் சங்கள் பேசான்
மிகுதலஞ் செல்வா னுகும வீன்பழி யேற்கா னுகும்.

12. இனிமையான சொற்களைப் பேசுவான். தளர்ச்சி யடைந்தவருக்கு உதவிகள் செய்வான். கடவுளிடம் பக்தி கொள்ளுவான். அனைவருக்கும் நல்லவனுக விருப்பான். எவரையும் தனக்கு விரோதியர் என்று மனத்தில் எண்ண மாட்டான். வேண்டியவர், வேண்டாதவர் என்று பாகு பாடு கொண்டு பேசாதவன். சிறந்த புண்ணிய ஸ்தலங்கள் பலவற்றிற்கு யாத்திரை செல்லுவான். வீண் பழிகளை யடையான்.

13. வறுமையெப் போதுங் காணன் மாநில மிருஷர் சேர்ப்பன்
திருமாளி சித்ரஞ் செய்வன் தேறினோர் தொண்டு பூண்பன்
பறைபள்ளு பணையோர் விருத்தி பலசகா யங்கள் செய்வன்
அரிபோலக் கோபஞ் சாந்தம் அரசன்போல் வாழ்வா னுகும்.

13. எப்பொழுதும் தரித்திர மடையான். இரண்டு கிராமங்களில் விளைநிலங்களைச் சேர்ப்பான். வீட்டைச் சித்திர மெழுதி யலங்கரிப்பான். முற்று முணர்ந்த பெரியோர்கட்குத் தொண்டு செய்வான். பறையர் பள்ளர்களை எவலாட்களாகப் பெற்றுள்ளவன். பண்ணைகள் எர்கள் முதலிய விருத்தி யுண்டு. பலருக்கு உதவிகள் செய்வான். சிங்கம் போன்று சின மடைவான். பின்பு சாந்த முறுவான். அரசனைப் போல மேன்மையுடன் வாழ்வான்.

14. வண்டிவா கனமு முண்டு மாற்றூணை யுறவு கொள்வன்
பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் விருத்தி செய்வன்
துண்டமாய்க் கூறு ஞகும் தொடுத்தை வெல்வா ஞகும்
[1]மூண்டக ரேகை யுண்டு மேவிடு மாலின் ரேகை.

14. வண்டி முதலான வாகன வசதிக ளுள்ளவன். பகைவரையும் உறவாகக் கொள்ளுவான். பழைய நாள் முதலுள்ள நிலங்களை இவன் விருத்தி செய்வான். கண்டிப்பாகப் பேசாதவன். தொடங்கிய செயல்களை வெற்றியுடன் முடிப்பான். கையில் பத்ம ரேகை யுண்டு. விஷ்ணு ரேகையும் உளது.

15. தன்துணை முன்பெண் ரெண்டு தங்கிடுந் தீர்க்க மாகப்
பின்துணை பெண்பா லொன்று பேசுவோம் பால னுக்குத்
தென்முனி புகலு கின்றார் சேயனுக் கெவ்வார் யோகம்
பன்னுவீர் முனியே நீர்தாம் பார்மக னேழில் தங்க;

15. இவனுக்கு முன் பிறந்த சகோதரிகள் இருவர் தீர்க்கமாக விளங்குவர். பின் பிறந்த சகோதரி யொருத்தியு முண்டு என்று சொல்லுவோம். அகத்தியர் சொல்லுகின்றார். முனிவரே! நீங்கள் ஜாதகனுக்கு எங்ஙனம் யோகங்களைக் கூறுவீர்? செல்வாய் விருச்சிகத்திலும்;

16. தர்மகர் மாதி ரெண்டில் சார்ந்திடப் பொன்னேன் நாலில்
இருப்பதால் பேரி யோகம் இயம்புவோம் வேசி யோகம்
மருவின யோகத் தாலே வடதிசை யரசன் போலே
திருமகன் வாழ்வா ஞகும் செம்பொன்னும் புதையல்
[வைப்பான்.

16. தர்மகர்மாதி பதியான சனி மிதுனத்திலும், குரு சிம்மத்திலும் தங்கி யிருப்பதால், பேரிகை யோக மொன்றும், வேசி யோக மொன்றும் ஏற்படும் என்று சொல்லுவோம். இவற்றால் இவன் வடதிசை அரசனுகிய குபேரன் போன்று வாழ்வான். பொன்னைப் புதைத்து வைப்பான்.

17. சத்துரு நாச மாவான் சகரசர்க் கிவன்சொல் மேன்மை
வெற்றியே யடைவா ஞகும் மேன்மையாய்த் தலங்கள்
[செல்வன்
சுத்தவான் தருமஞ் செய்வன் சொல்லதைக் காப்பா ஞகும்
மூற்றினேர்க் கன்ன மீவ னுயர்திருப் பணியுஞ் செய்வன்.

---

1. மூண்டகம்—தாமரை

17. இவன் விரோதி யழிவான். அரசர்க்கு இவன் கூறுகின்ற சொற்களில் மதிப்புண்டு. தொடங்கிய செயல்களில் வெற்றியே பெறுவான். சிறந்த தலங்களுக்கு யாத்திரை செல்லுவான்: தூய்மை யுடையவன். தருமஞ் செய்வான். சொன்ன சொற்களைக் காப்பான். மூற்றுந் துறந்த முனிவர்கட்கு உணவளிப்பான். உயர்ந்த திருப்பணிகள் பல செய்வான்.

18. பாலகன் மணத்தின் காலம் பகருவோ மிருபான் ரெண்டில்
வேல்விழி தென்மேல் நேரும் விளம்புவோ மவள்கு
[ணத்தைச்
சீலியாம் புத்தி மானும் சிந்தையு நல்ல தாகும்
மால்மனை யொப்ப தாகும் வருவோரை யாத ரிப்பள்.

18. ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இருபத்திரண்டாம் வயதில், தென்மேற்குத் திசையிருந்து மனைவி வாய்ப்பாள். அவள் குணங்களைச் சொல்லுவோம். ஒழுக்க முள்ளவள். நல்ல மன முடையவள். திருமாலின் மனைவியாகிய இலக்குமி போன்றவள். வீடு தேடி வருபவர்களைக் காப்பாள்.

19. அன்னம்போல் சாய லொக்கும் ஆளன்தன் மனத்துக்
[கேற்றோள்
அன்னியர் குற்றஞ் சொல்லாள் ஆபத்தென் றோரைக்
[காப்பள்
அன்னவள் யோக சாலி அதிகமாய் விரத மேற்பள்
அன்னவள் தீர்க்க சீவி அம்பிகை யாளே கேளாய்.

19. அன்னப்பறவை போன்ற மென்மைத் தன்மை யுடையவள். கணவன் மனத்துக்கு உகந்தவள். அயலார் மீது குறை கூறமாட்டாள். துன்பமென்று வந்தவரைக் காப்பாள். இவள் அதிர்ஷ்ட முள்ளவள். மிகுதியான விரதங்களை மேற்கொள்ளுவாள். தீர்க்கமான வயதுடையவள். பார்வதியே! கேட்பாயாக.

20. புத்திர விருத்தி தம்மைப் புகலவே பலமு ருது
சித்தமா யுதித்தா லுந்தான் திங்காகு மென்று சொல்வோம்
எத்தகைப் பலத்தி னுலே இயம்பினீ ரந்தச் சங்கை
குற்றமாய் ராகு வெள்ளி குழவியின் தானந் தங்க;

20. புத்திர விருத்தியைப் பற்றிச் சொல்லுவோ மென்றால், திரகபுல்மில்லை. பிறந்தாலும் நிச்சயமாய் மரணமடையும் என்று சொல்லுவோம்,

எவ்விதக்கிரக பலத்தைக் கொண்டு அந்தத் தோஷம் கூறினீர்கள். குற்ற மேற்படும்படி ராகுவும் சுக்கிரனும் புத்திர ஸ்தானமாகிய கன்னியில் இருப்பதால் ;

21. சுதர்களுந் தோடஞ் சொன்னேங் தென்முனி மறுத்துச் [சொல்வார்
புதன்புகர் மாறி நிற்கப் பத்தினிக் குடையோன் ரெண்டில்
சதமுட னிருப்ப தாலே சந்ததி விருத்தி யென்றேரும்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

21. புத்திர தோஷங் கூறினேம். அகஸ்திய முனிவர் இதனை மறுத்துப் பேசுவார். புதன் சுக்கிரன் ஆகியோர் மாறி (முறையே புதன் ஆரூமிட மாகிய துலாத்திலும், சுக்கிரன் ஐந்தாமிடமாகிய கன்னியிலும்) இருப்ப தாலும், பத்தாமிடத்துக்குரிய சனி குடும்ப ஸ்தானமாகிய மிதுனத்தில் தங்கி யிருப்பதாலும் புத்திர விருத்தி ஏற்படும் என்று சொன்னேம். முனிவர் களைக் காக்கின்ற பார்வதியே ! கேட்பாயாக.

22. முன்னவ னிருந்த சென்மம் மொழிகின்றேரும் பெருமுக்கல் [தன்னில்
வன்னிய குலமு தித்து வறுமுகன் நாமங் கொண்டு
தன்மனை மதலை யுண்டாய்த் தரணியை விருத்தி செய்து
பின்னேருக் குதவி செய்து புதல்வனும் வாழு நாளில் ;

22. முன்பு இவன் இருந்த பிறவியைச் சொல்லுகின்றேரும். பெரு முக்கல் என்னும் ஊரில், வன்னிய மரபினனாகப் பிறந்து, ஆறுமுகக் கடவுளின் பெயரைப் பூண்டு, மனைவி மக்களைப் பெற்று, நில புலன்களை விருத்தி செய்து, ஏழைமை யடைந்தவர்களுக்கு உபகாரங்கள் செய்து, இவன் வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில் ;

23. இல்லத்தில் வெகுநா ளாக இருந்தது நாக மொன்று
அல்லலாய் மகுடத் தாலே அதுமுற்றத் தியங்கும் போது
வல்லவ னரங்கஞ் செய்து வாட்டினன் கழியி னுலே
புல்லிற்றுக் கால நாடு பூவையே கேட்டி டாயே.

23. வீட்டில் நீண்ட நாட்களாகப் பாம்பு ஒன்று வசித்து வந்தது. பிறருக்குத் தன்பம் விளைவிக்கும் வகையில் ஒரு நாள் அந்தப் பாம்பு பட மெடுத்து ஆடிக் கொண்டு முற்றத்தில் சஞ்சரித்தது. அப்பொழுது இவன்

அதனைத் தடுத்துத் தடியால் நன்கு புடைத்தான். உடனே அப் பாம்பு எமனுலகஞ் சென்றது. பார்வதியே! கேட்பாயாக.

24. விதவையைப் போகஞ் செய்து மேவிற்றுக் கருவு தானும்
அதஞ்செய்தான் பண்டி தத்தால் அணுகிற்று வதுவோர்
[தோடம்
வதிபனு மந்தி யத்தி லறுமுகன் தொண்டு பூண்டு
சதியான கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்;

24. கைம்பெண் ஒருத்தியுடன் இவன் இன்ப மனுபவித்தான். அவளுக்குக் கரு வேற்பட்டது. மருத்துவஞ் செய்து அக் கருவை யழித்தான், இவன். அந்தத் தோஷ மொன்று இவனை யடைந்தது. இவனும் அப் பிறவியில் கடைசிக் காலத்தில், முருகப்பிரானுக்குத் தொண்டு பூண்டு, குற்றமுள்ள இயமனுலக மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு;

25. பிறப்பனு மிந்தப் பாலன் பொருந்திடு முன்னூழ்த் தோடம்
பெறுஞ்சுதர் தோட மெய்தும் புகலுவோங் கிரிகை
[யொன்று
அரவுமே சிலையில் செய்து அம்மாரி கோட்டந் தன்னில்
திருமகன் வைப்பா னுகில் தீவினை விலகி யேதான்;

25. இப்பிறப்பில் தோன்றுவான் இந்த ஜாதகன். முற்பிறப்புத் தீவினை இவனைச் சேரும். அதனால், தோன்றும் புதல்வர்களுக்குத் தோஷமுண்டா தீவினை நீங்கச் சாந்தியொன்று சொல்லுவோம். பாம்பு போன்ற உருவொன்றைக் கல்லில் செய்து, மாரியம்மன் கோவிலில் ஜாதகன் பிரதிஷ்டை செய்து வைப்பானுகில், தோஷங்கள் விலகி;

26. மதலையா ணிரண்டு தீர்க்கம் மங்கைமார் மூவர் விருத்தி
முதல்சுதர் தோட மெய்தும் விளம்புவோ மிவனின் யோகம்
சதிசெயா மனத்த னுகும் திருப்பணி கொஞ்சஞ் செய்வன்
அதனமாம் பூமி சேர்க்கை யாவர்க்கு மிவன்சொல்
[மேன்மை.

26. ஆண் குழந்தைகள் இரண்டு தோன்றித் தீர்க்கமாம். பெண்களும் மூவர் தோன்றி விருத்தியாவர். முதலில் தோன்றும் குழந்தை சேதமாகும். ஜாதகனின் யோகங்களைச் சொல்லுவோம். குற்றம் நினையாத மனத்தினன். நற்பணிகள் சில செய்வான். நிலபுலன்களைச் சேர்த்தல் முடியாதுபோம். யாவரும் இவன் கூறுகின்ற சொற்களை மேன்மையர்க்கக் கருதுவர்.

27. மன்னவன் தசைவி சேடம் மார்த்தாண்ட யோக மெய்தும்
பொன்னது கொடுக்கல் வாங்கல் பூமியும் பெருக்க மாகும்
இன்னமும் விபரங் கேட்கில் இயம்புவோ பின்பா கத்தில்
கன்னென மொழியை யொக்கும் காதலி புகன்றிட் டோமே.

27. குரு மகா தசையின் விசேடப் பலன் யாதெனின், இவனுக்கு மார்த்தாண்ட யோகம் உண்டாகும். பணங் கொடுத்தல் வாங்குதல் செய்வான். நிலபுலங்களை விருத்தி யாக்குவான். இன்னும் விவரமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டால், பிற்பாகத்தில் சொல்லுவோம். கரும்பு போன்ற இனிய சொற்களைப் பேசும் பார்வதியே! இங்ஙனம் நாங்கள் சொன்னோம்.

28. மாதுரு குணத்தைச் சொல்வோம் மாந்தளிர் மேனி யாகும்
சூதிலாள் முன்கோ பத்தாள் சொல்லது சுருக்க மாகும்
பாதக மனமில் லாதாள் பதர்குண மில்லா ளாகும்
காதலி நடையு நன்மை கணவன்தன் மனத்துக் கேற்றோள்.

28. ஜாதகனின் தாயின் குணங்களை நாங்கள் கூறுவோம். மாந்தளிர் போன்ற மென்மையான சரீர முடையவள். மனத்தில் வஞ்சனை யில்லாதவள். முன்கோப முடையவள். சுருங்கப் பேசுவாள். மனத்தில் கெட்ட எண்ணங்களைக் கொள்ளாதவள். அற்பகுண மில்லாதவள். நன்னடத்தை யுடையவள். கணவன் மனத்துக்கு உகந்தவள்.

29. மங்கைபாட் டாளி யாகு மருவிடும் பித்த வாயு
சங்கையென் றோரைச் சாராள் தன்துணை யாண்பால் [மூன்று
நங்கைமா ரிருவ ராகும் நல்கின வாண்பால் ரெண்டு
தங்காவே யொருவன் தானுந் தீர்க்கமாம் வயது மேற்பன்.

29. இவள் நல்ல உழைப்பாளி யாவள். இவளுக்குப் பித்தவாயு நோய் ஏற்படும். குற்ற முடையவர்களோடு சேரார். இவளுக்குச் சகோதரர் மூவர். சகோதரிகள் இருவர். கூறிய சகோதரர்களில் இருவர் நிலையார். ஒருவன் தீர்க்கமான வயதை யடைவான்.

30. மாரனும் பகைய தாகு மறைகின்றோ மன்னை பூர்வம்
வாரியி னோரை மாக மாவலி நகரி லேதான்
நாரியுஞ் சைவச் சேயாய் நல்கியே சுகமாய் வாழ்ந்து
வேறொரு வினையு மின்றி மேவினள் கால நாடு.

30. அந்தச் சகோதரன் இவளுக்கு விரோதியாவான். ஜாதகன் தாயுடைய முற்பிறப்பைச் சொல்லுகின்றோம். கடற்கரை யோரமாக வுள்ள மகாபலிபுரத்தில், சைவ குலத்தவளாய்ப் பிறந்து, சௌக்கியமுடன் வாழ்ந்து, தீங்கு எவையு மில்லாமல் மரண மடைந்தாள்.

31. பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று சொல்வோம்
அரிவையும் வறுமை காணுள் அழகான குடும்பி யாவள்
குருதசைப் பின்பா கத்தில் குழவிக்கு முப்பத் தாறில்
மறலியின் நாட்டை யன்னை வாங்குவா ளென்று
[சொல்வோம்.

31. மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இப்பிறப்பில் தோன்றி யவள் இவள் என்று கூறுவோம். இவள் தரித்திர மடையாள். சிறப்புள்ள குடும்ப முடையவள். குருமகாதசையின் பிற்பகுதியில், அஃதாவது ஜாதகனின் முப்பத்தாறும் வயதில், இவள் (ஜாதகன் தாயார்) எமபுர மடை வாள் என்று கூறுவோம்.

32. மறுசென்மம் பட்சி தன்னில் வருவளே பிரம்ம சேயாய்
அரிவைக்கு விச்சென் மத்தில் அணுகின புண்ணிய மென்ன
வரன்மனம் போல வாழ்ந்தும் மனமது விளக லாயும்
பெரிதான தலங்கள் சென்றும் பின்னோரா பத்தைக்
[காத்தும்;

32. மறுபிறப்பு, திருக்கழுக்குன்றத்தில், அந்தணர் குலத்தவளாய்ப் பிறப்பாள். இப்பிறவியில் இவள்செய்த நல்வினைகள் யாவை? கணவன் மனமறிந்து வாழ்க்கை நடத்தியும், இளகிய மனமுடையவளாயும், புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வந்தும், ஏழைமை யுடையவரைத் தன்பங்களி னின்று காத்தும்;

33. மாதுவும் வாழ்வ தாலே மறைக்குல முதிப்பா ளாகும்
ஓதுவோம் பதின்மூன் றுண்டில் உறங்குவான் தந்தை
[தானும்
மேதினில் மறுசென் மத்தை விளம்புவோம் வேங்க டத்தில்
தீதிலா விக்கு லத்தில் செனிப்பனு மென்று சொல்வோம்.

33. வாழ்ந்து வருவதால், மறுபிறவியில் அந்தணர் குலத்தவளாய்ப் பிறப்பாள். ஜாதகனது பதின்மூன்றும் வீயதில், தந்தை மரண மடைவான். தந்தையின் மறுபிறப்பைச் சொல்லுவோம். திருவேங்கடத்தில், குற்றமற்ற விக்குலத்திலேயே பிறப்பான் என்று கூறுவோம்.

34. அறுபது வாண்டு தன்னில் ஐப்பசி மாதந் தன்னில்
குறைபக்க மேகா தசியில் குழவியி னுடல மேகும்
வருஞ்சென் மந் துவாரை தன்னில் வருவனே யிக்கு லத்தில்
பெருமையாய்க் குடும்பி யாவன் புகலுவார் பராசர் தாமும்.

34. அறுபதாம் வயதில், ஐப்பசி மாதம், கிருஷ்ண பட்சம் எகாதசி திதியில் ஜாதகன் இறப்பான். மறுபிறவி, துவாரகையில், இக்குலத்தவனைத் தோன்றுவான். மேன்மையுள்ள குடும்ப முடையவனுவான். பராசர முனிவர் சொல்லுவார்.


35. பாரிக்கு மெந்தக் காலம் பகருவீர் முனியே நீர்தாம்
மாரன்பின் மரிப்ப ளாகும் மைந்தனுஞ் சென்ன காலம்
கூறுவோ மதியி ருப்புக் குறித்தன முப்பான் திங்கள்
தீரமாய் நாட்கள் பத்துஞ் செப்பிணேம் பூர்வ பாகம்.

35. முனிவரே! நீங்கள்; இவன் மனைவிக்கு எந்தக் காலத்தில் மரண மூண்டாகும் என்று சொல்லுங்கள். ஜாதகனுக்குப் பின்பு அவனது மனைவி இறப்பாள். ஜாதகன் பிறப்புக் காலத்தில் சந்திர மகாதசை இருப்பு; இரண்டு வருஷங்களும், ஆறு மாதங்களும் நாட்கள் பத்தும் ஆம். இவ்வாறு முதற் பாகத்தைக் கூறினேம்.

ஜாதகம் 102

1. அம்புலி காரி தேளில் அந்தணன் சேயுஞ் சீயம்
தெம்புத னிரவி வீணை சிங்கவண்டி புகரும் நந்தி
நம்பிய ராகு மானில் நந்தியுஞ் சென்ன மாக
அம்மையுங் கேட்கும் போது அத்திரி புகலு கின்றார்.

1. சந்திரன் சனி விருச்சிகத்திலும், குரு செவ்வாய் சிம்மத்திலும், புதன் சூரியன் மிதுனத்திலும், கேது கடகத்திலும், சுக்கிரன் விருஷபத்திலும், ராகு மகரத்திலும் நின்று, ஜன்ம லக்கினம் விருஷப மாக விருந்தால் உரிய பலன்கள் யாவை ? என்று பார்வதி தேவி கேட்கும் போது, அத்திரி முனிவர் சொல்லு கின்றார்.



2. இந்தசே யாணுஞ் சென்மம் இல்லமுங் கீழ்மேல் வீதி
தென்வாச லுத்தி ரத்தில் தந்தியி னீசங் குண்டம்
விந்தையாய் மடமுஞ் சோலை விளங்கிடுந் தென்மேல் காளி
எந்தையே மாரி தென்கீழ் இயம்பினேஞ் சிறுவூர் தன்னில் ;

2. இஃது ஆண் பிறப்பு. இவன் கிழக்கு மேற்கான தெருவில், தெற்கு நோக்கிய வாயிலுள்ள வீட்டில் பிறப்பான். வீட்டுக்கு வடக்கில் விநாயகர் கோயிலும், பரமசிவன் ஆலயமும். குளமொன்றும், அற்புதமான மடமொன்றும், தோட்டங்களும் உள்ளன. தென்மேற்கில் காளி கோயில் உண்டு. எங்களுக்குத் தந்தைபோன்று விளங்கும் பார்வதியே ! தென்கிழக் கில் மாரியம்மன் கோயிலுள்ளது என்று கூறுவோம். சிறிய ஊராம்.

3. உதிப்பனுந் தீயின் வம்சம் ஒன்பதாஞ் சென்ன மாகும்
இதுவித வடையா எத்துள் இறங்குவா னிந்தப் பாலன்
விதியதைச் சொல்லு கின்றேரும் வித்தகன் தூணவர் புத்ரன்
சதிதந்தை தாயின் யோகம் சாற்றுவோ முன்பின் சென்மம்.

3. இவ்வாறுன அடையாளங்கள் கொண்டதோர் ஊரில், வன்னியர் மாபில், தன் தந்தைக்கு ஒன்பதாம் பிறப்பாக இந்த ஜாதகன் தோன்று வான். இவனுடைய ஆயுள், சகோதரர், மக்கள், தந்தை, தாய் முதலான வர் யோகங்கள், முற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையும் சொல்லு கின்றோம்.

4. ஈரஞ்சு துணைவர் தம்மில் இருரெண்டு துணைவர் விருத்தி
தீரமா யாண்பால் ரெண்டு சேயிழை யவ்வா ருகும்
மாரன்பி னிளையோ னுக வறைந்தன மாண்பா லுந்தான்
பாரினி லொருவ னுக்குப் பாலர்கள் விருத்தி யென்றோம்.

4. உடன்பிறந்தவர்கள் பதின்மர். அவர்களில் இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் தீர்க்கமா யிருப்பர். சகோதரர் இருவரும் ஜாதகனுக்குப் பின் பிறந்தவர் என்று சொன்னோம். அவர்களில், ஒரு தம்பிக்குப் பலன் களைச் சொல்லுவோம். புத்திர விருத்தி ஏற்படும்.

5. அவன்குண மாநி றத்தான் அடக்கவா னிளம னத்தன்
நவனியில் கிருஷி செய்வன் நற்புத்தி கிருஷி செய்வன்
பவமதில் மனம்வை யாதான் பரவுப காரி யாவன்
சிவனடி யார்க்கு வன்பன் துணைவன்சொல் கடவா னுமே.

5. அவனுடைய குணத்தைச் சொல்லுவோம். கருமை நிற முள்ள வன். அடக்க முடையவன். இளகிய மனமுள்ளவன். உலகில் விவசாயம் செய்து வருவான். நல்ல புத்தியுடன் பயிர்த்தொழில் செய்வான். பாவத் தில் மனமில்லாதவன். பிறருக்கு உபகாரம் செய்பவன். சிவனடியார்களி டம் பக்தியுள்ளவன். சகோதரன் வார்த்தையை மீறுதவன்.

6. மனைவியு மொன்றே யாகும் மைந்தர்க ளாண்பால் நான்கு
சினமிலாப் பெண்பா லொன்று தீர்க்கமா மற்ற வெல்லாம்
வினையாகு மொன்றுய் வாழ்வன் வித்தக னிளையோன் சேதி
மணமுளான் மதலை காணன் மனமது கபடி லில்லான்.

6. மனைவி யொருத்தியே யாவள். நான்கு புத்திரர்களும் ஒரு புத்திரி யும் தீர்க்கமா யிருப்பர். மற்றவர்கள் பிறந்து நிலையார். சகோதரனுடன் ஒன் றுகவே வாழ்ந்து வருவான். இவனுடைய மற்ற தம்பியின் பலன் களைச் சொல்லுவோம். மணமானவன். ஆனால் புத்திர பாக்கிய மில்லாத வன். மனத்தில் கபடில்லாதவன்.

7. சொல்லதைக் காப்பா னுகுந் தோகையர் மோக வானும்
மல்லுக்குச் செல்லா னுகும் மதுரச்சொல் லுடைய னுகும்
நல்லவ னுகி வாழ்வன் நாயகி கேட்க லுற்றாள்
வல்லவன் புதல்வன் தோட மறிவிப்பீர் முனியே நீர்தாம்.

7. சொன்ன வார்த்தைகளின்படி நடப்பவன். பெண்கள் மீது மைய லுள்ளவன். வீண் சண்டைக்கு முன் செல்லாதவன். இனிமையான சொற் களே பேசுபவன். உலகில் நல்லவன் என்ற பெயர்பூண்டு வாழ்ந்து வருவான். பார்வதி கேட்கின்றாள். இவனுக்குப் புத்திர தோஷம் ஏற்படக் காரண மென்ன? அவற்றைச் சொல்லுங்கள், முனிவரே! தாங்கள்.

8. புத்திர தோடஞ் சொல்வோம் பூருவ மரங்கங் கீழ்ப்பால்
வித்தகன் சிறுவூர் தன்னில் விளங்கினு னிக்கு லத்தில்
பத்தினி மதலை யுண்டாய்ப் பாரினில் சீவித் தேதான்
நத்தினோர்க் குதவி செய்து நாயகன் வாழு நாளில் ;

8. புத்திர தோஷம் ஏற்படக் காரணம் உரைப்போம். இவன் முற் பிறவியில் ஸ்ரீரங்கத்துக்குக் கிழக்கிலுள்ள ஓர் சிற்றூரில் வன்னியர் குலத்தி லேயே பிறந்து, மனைவி மக்களை யடைந்து உலகில் சௌக்கியமாக விருந்து, துன்ப மடைந்தவர்களை யாதரித்து வரும்போது;

9. வந்ததோர் வினையைக் கேளாய் மாதுரு தந்தைக் கேதான்
நிந்தைக ளதிகஞ் செய்தான் நிமலியின் வார்த்தை யாலே
அந்தவர் வெறுப்பி னுலே அறைகுவார் சாபந் தானும்
பிந்திய சென்மந் தன்னில் புதல்வர்கள் காணுய் நீயும் ;

9. ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். தாய் தந்தையர்க்கு தன் மனைவியின் வார்த்தையைக் கேட்டு அவமானங்க ளேற்படும் காரியங்களைச் செய்தான். அவரும் மனவெறுப்பினுல் கூறிய சாபத்தைக் கேளும். இனி ஏற்படும் மறுபிறவியில் நீ குழந்தைகளை அடையமாட்டாய்.

10. சங்கையாய்ச் சொன்னு ரென்றேரும் சார்ந்தது வந்தத் [தோடம்
மங்கையே வேறு சொல்வோம் விதவையைப் போகந் [துய்த்து
நங்கைக்குக் கருவு தங்கி நாயகன் பண்டி தத்தால்
பங்கமே செய்தா னென்றேரும் பரவிற்று வந்தத் தோடம்.

10. என்று சாபமிட்டனர். அந்தத் தீவினை இவனைச் சார்ந்தது. தாயே ! வேறு ஒன்றும் சொல்லுவோம். ஒரு கைம்பெண்ணுடன் இன்பம் அனுபவித்தான். அதனுல் அப்பெண்ணுக்குக் கருவேற்பட்டது. மருந்து

கள் அவளுக்குக் கொடுத்து அந்தக் கருவை யழித்தான் என்று சொன் னேம். அந்தத் தோஷமும் இவனே வந்தடைந்தது.

11. ஆகையா லச்சென் மத்தில் அந்தணர்க்கு ஊழி செய்து
ஏகினன் காலன் பக்கல் இதயவன் வரையப் பட்டுப்
பாகமாய்ச் சத்ரியச் சேயாய்ப் பிறந்தவ னிவனே யென்றும்
தோகையின் கருவின் தோடம் தாய்தந்தை விரோத
[தோடம்;

11. அப்பிறவியில் பிராமணர்களுக்குத் தொண்டுகள் செய்து இறந் தான். திருமாலின் இதயத்திலிருந்து உதித்த பிரமனால் மீண்டும் படைக் கப்பட்டு (வன்னிய குல) க்ஷத்திரியனுகப் பிறந்தவன் இவன் என்றும். தாய் தந்தையருடன் ஏற்பட்ட, விரோதம் பெண்ணின் கருவழித்த தோஷம், ஆகியவை,

12. நச்சுப்போ லிச்சென் மத்தில் நல்கிற்றுச் சுதர்கள் தோடம்
அச்சங்கள் தீர வேண்டி அறைகுவீர் கிரியை தானும்
எச்சாந்தி செய்தா லுந்தான் விலகாது தாயின் சாபம்
அச்சுதன் தங்கை யாளே அறைகின்றே மிவன்பின்
[சென்மம்

12. இப் பிறவியில் கொடிய விஷம்போல் இவனைச் சார்ந்தது. புத் திர தோஷம் நீங்க ஒரு சாந்தியைச் சொல்லுங்கள். எந்தச் சாந்திசெய்தா லும் தாயின் சாபம் நீங்காது. கண்ணபிரானின் தங்கையே! இவன் மறு பிறப்பைச் சொல்லுவோம்.

13. வெண்மலை யருகில் மேற்கில் வேளாள குலமே தோன்றிக்
கண்ணிய குடும்பி யாகிக் கிளைத்திடுங் குடும்பந் தானும்
வண்ணமாய்த் துணைவி பெண்பா லறைகின்றே மிவரைம்
[ரெண்டில்
அண்ணலைப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

13. சுவேதகிரிக்குச் சமீபமாக, மேற்கிலுள்ள ஊரில், வேளாளர் குலத்தவனுகப் பிறந்து, மதிப்புள்ள குடும்ப முடையனுகி விளங்குவான். குடும்பமும் நன்கு பெருகும். இவனுக்குச் சகோதரி யொருத்தி யுண்டு. அவளைப் பற்றிய விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றேம். சிவபெருமானைப் பூசிக்கும் பார்வதி யம்மையே! கேட்பாயாக.

14. தைரியன் ஈகை வாணும் சமர்த்தாக வார்த்தை சொல்வன்
பயமிலா மனத்த னுகும் பரவுப காரி னுவன்
சயஞ்செய்வ னெடுத்த வேலை சிறப்பான குடும்பி யாவன்
அயலார்பொ னிச்சை யில்லான் ஆடுமா டுகளும் விருத்தி.

14. மனத்தில் துணிவுள்ளவன். சாமர்த்தியமாகப் பேசுவான். அச்ச மில்லாத மனத்தினன். பிறருக்கு உதவிகள் செய்வான். தொடங்கிய செயல்களை வெற்றியுடன் முடிப்பான். மேன்மை யுள்ள குடும்பியாக விருப் பான். அயலார் செல்வத்தில் ஆசை யில்லாதவன். ஆடுகள், மாடுகள் இவற்றை மிகுதியாகப் பெற்றவன்.

15. தேவதாப் பத்தி கொள்வன் செய்நிலம் விருத்தி செய்வன்
தாவினோர்க் குதவு வாணுஞ் சல்லிய மென்று லச்சம்
கோவலன் மதிக்க வாழ்வன் கோள்கல கங்கள் செய்யான்
நாவது தவறு னுகும் நாட்டினில் வறுமை காணுன்.

15. தெய்வ பக்தி கொள்ளுவான். நெல் வினையும் நிலங்களை விருத்தி செய்வான். தன்னை யடைந்தவர்களுக்கு உதவி செய்வான். கடன் கொள்ளுவதென்றால் பயப்படுவான். அரசன் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். சொல் தவறுதவன். உலகில் தரித்திர மடையா தவனாக விருப்பான். புறங் கூறுதவன்.

16. பதநடை வார்த்தை யவ்வார் பந்துவும் புகழ வாழ்வன்
நதிபல தீர்த்தந் தோய்வன் நற்சித்ர வில்லஞ் செய்வன்
ததிநெய்பால் குறைவு மில்லான் தன்கரம் விஷ்ணு ரேகை
சதிதரும் பொருள்மே லிச்சை தன்குலத் தொழிலும்
[விருத்தி

16. தகுதியான ஒழுக்கமும் சொற்களும் பொருந்தியவன். உறவினர் பாராட்டும்படி வாழ்ந்திருப்பான். பல புண்ணிய நதிகளில் நீராடுவான். அழகிய வீடு கட்டுவான். பால், தயிர், நெய் இவற்றிற்குக் குறைவில்லாத வன். இவன் கையில் விஷ்ணு ரேகை யுண்டு. மனிதனுக்குக் குறையை யுண்டாக்கும் செல்வத்தின்மீது பற்றுள்ளவன். தன் குலத் தொழிலை விருத்தி செய்வான்.

17. இந்நெறி யுடையா னுக்கு இருதார மினையா ளுக்கு
அன்னவ னுதிப்பா னுகும் அவன்துணை யாண்பா லொன்று
கன்னிகை யவ்வா றுகுங் கழறின விருவர் தீர்க்கம்
முன்துணை யென்று சொல்வோம் முதல்வியுங் கேட்க
[லுற்றுள்.

17. இத்தன்மை யுடையவனுக்கு மனைவியர் இருவர். அவர்களில் இளைய மனைவிக்குப் பிறந்தவன் இந்த ஜாதகன். இவனுக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரி யொருத்தியும் உளராவர். சொல்லப்பட்ட இவ்விருவரும் தீர்க்கமாக விளங்குவர். மேற்கூறிய சகோதரன் இவனுக்கு மூத்தவன் என்று சொல்லுவோம். பார்வதி தேவி கேட்கின்றாள்.

18. முதல்மாதா வொன்று வென்றீர் மொழிகுவீ ரவட்குப்
[புத்ரர்
சதியிலா வறுவர் தோன்றும் தீர்க்கமா மொருவ னென்றோம்
மதிநுத லந்த மாதா வருங்கர்ப்பத் தாலே மாள்வாள்
சதியிலா வவன்தன் சேதி சாற்றுவோம் பரணி மீனம்.

18. ஜாதகனுக்கு மூத்த தாய் ஒருத்தி யுண்டு என்று கூறினீர்கள். அவளுக்குப் புத்திர பாக்கியத்தைப் பற்றிச் சொல்லுவீர். மக்கள் அறுவர் தோன்றுவர். அவர்களில் ஒருவன் தீர்க்கமாக விளங்குவான் என்று சொன்னோம். பிறைச் சந்திரன் போன்று வளைந்த புருவத்தை யுடைய மூத்த தாயார் தனக்கு ஏற்படும் கருவினால் இறப்பாள். மேற்கூறப்பட்ட ஜாதகன் மூத்த சகோதரனின் செய்தியைச் சொல்லுவோம். பரணி நட்சத்திரம், மீன விலக்கினத்தில் பிறப்பான்.

19. குணமது வுயர மில்லான் புன்சிரிப் புடைய னுதும்
பிணையிலா வார்த்தை சொல்வன் புத்திமா னறிவோர் நேயன்
கனமான குடும்பி யாவன் கல்விமா னீகை யுள்ளான்
அனையவே பாரி யொன்று அம்மனை தென்பால் நேரும்.

19. உயர மில்லாதவன். புன்னகை யுடையவன். குற்றமற்ற சொற்களைப் பேசுவான். புத்திசாலி. சான்றோர்கட்கு கண்பன். மதிப் புள்ள குடும்பத்தை யுடையவனாவான். படிப்பாளி. கொடை யுள்ளவன். இவனுக்கு மனைவி ஒருத்தியே. அவள், இவனூர்க்குத் தென்திசையி லிருந்து வருவாள்.

20. வறுமைக ளடையா னுகும் மாநிலங் இருஷி செய்வன்
பெறுஞ்சுத ராண்பால் ரெண்டு பெண்ணது வவ்வார்
[தீர்க்கம்
திருகாக வலிபோ லொன்று செனித்திடு முதலி லேதான்
குறைவய தில்லா வாழுங் குறித்தன மைந்துந் தீர்க்கம்.

20. தரித்திர மடையாதவன். விளைநிலங்களில் பயிர் செய்வான். இவனுக்குப் பிறக்கும் குழந்தைகளில் ஆண்கள் இருவரும், பெண்கள் இருவரும் தீர்க்கமாவர். முதலில், இயற்கைக்கு விரோதமாக, அலி போல் ஒன்று

தோன்றும். இக்குழந்தையும் நிறைந்த ஆயுளோடு விளங்கும். இவர்கள் ஐவரும் தீர்க்கமாவர்.

21. அந்தமில் லாத புத்ரர் அணுகுங்கா ரணங்க ளென்னப்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோ மந்தச் சங்கை
இந்தவன் துணைவன் சேதி இயம்புவோ மாஞ்சி வப்பன்
முந்துமால் பத்தி கொள்வன் மூலச்சூ டுடைய னுமே.

21. மிகுதியான புதல்வர்கள் இவனுக்குத் தோன்றுவதற்குக் காரணங்கள் யாவை? பிற்பாகத்தில் அவற்றைக் கூறுவோம். இவனது மூத்த தாய்க்குப் பிறந்த சகோதரனின் செய்தியைச் சொல்லுவோம். கருஞ்சிவப்பு நிறமுண்டையவன். திருமால் மீது பக்தி கொள்ளுவான். மூலச் சூடு உடையவன்.

22. வித்தையும் புத்தி மானும் வீண்வம்பில் செல்லா னாகும்
சித்தினி சாதி யாவன் சிறப்பான குடும்பி யாவன்
நத்தினோர் தம்மைக் காப்பன் நாட்டினில் கிருஷி செய்வன்
எத்திசை புகழு மேற்பன் இடுக்கமில் லாமல் வாழ்வன்.

22. கல்வி யறிவுடையவன். புத்திசாலி. வீண் வம்புக்குப் போக மாட்டான். சித்தினி ஜாதிப் புருஷனுவன். மேன்மையுள்ள குடும்ப முடையவன். கஷ்ட மடைந்தவர்களைக் காப்பான். விவசாயஞ் செய்வான். எல்லாத் திசைகளிலும் கீர்த்தி பெறுவான். துன்ப மில்லாது வாழ்வான்.

23. பாரியு மொன்றே யாகும் பாலர்க ளாண்பால் மூன்று
நாரியு மொருத்தி யாகும் நவின்றதோர் நான்குந் தீர்க்கம்
வீரிய னுடனே வாழ்வன் வயதுமே தீர்க்க மாகும்
கூறுவோம் பெண்பால் சேதி கோதையே மேலுங் கேளே.

23. இவனுக்கு மனைவி ஒருத்தியே. மக்களில் ஆண்கள் மூவரும் பெண் ஒருத்தியு மாவர். சொல்லியபடி நால்வரும் தீர்க்கமாக விளங்குவர். இவன் தன் புதல்வர்களுடன் ஒற்றுமையாக வசிப்பான். இவனுக்குத் தீர்க்கமான வயதுண்டு. சகோதரியின் செய்தியைச் சொல்லுவோம். பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

24. முன்கோபம் பின்பு சாந்த முத்தம குணத்த ளாகும்
தன்சொலு மடக்க முண்டு தன்வரன் தென்பா லாகும்
பின்னமா மாண்டுக் குள்ளே பின்வரன் நேரு மென்றும்
அன்னவன் தென்பா லாகும் அறைகின்றேம் புத்ர பாகம்.

24. முன்கோப முள்ளவள். பின்பு சாந்தமுறுவாள். நற்குண முடையவள். பணிவு பொருந்திய சொற்க ளுடையவள். இவள் கணவன்

இவளூர்க்குத் தென்திசையில் வாய்ப்பான். மணமான முதல் வருஷத்திலேயே கணவன் மரிப்பான். மீண்டும் இவளுக்கு மணம் நடைபெறும் என்று கூறினேம். அவனும் இவளூர்க்குத் தென்திசையி லிருந்தே வாய்ப்பான்.

25. சுதராண்பா லொன்றே யாகுந் தோகையு மூன்று
[வென்றேரும்
இதுநான்குந் தீர்க்க மெய்தும் ஈசுவரி கேட்க லுற்றுள்
மதிநுதல் மாதுக் கேதான் வரன்தோட மணுகுஞ் சேதி
விதிதனைச் சொல்லு மென்ன விளம்புவார் பராசர் தாமும்.

25. இவளுக்குப் புதல்வன் ஒருவனே யாவன். பெண்கள் மூவர் என்று சொன்னேம். இவர்கள் நால்வருந் தீர்க்கமாவர். பார்வதி கேட்கின்றாள். இவளுக்கு முதற் கணவன் இறப்பதற்குக் காரணமான வினையைச் சொல்லுங்கள் என்று கேட்க, பராசரர் சொல்லுவார்.

26. முன்சென்ம மருணை கீழ்ப்பா லுதித்தன ளிக்கு லத்தில்
தன்வரன் மதலை யுண்டாய்ச் சஞ்சல மில்லா வாழ்ந்து
அன்னவள் வரன்தன் னோடு அருணைமா நகர்க்குச் சென்று
உன்னதக் கடவுள் பாதம் உத்தமி தரிசித் தேதான் ;

26. இவள் முற்பிறவியில் திருவண்ணாமலைக்குக் கிழக்கில் உள்ள தோர் ஊரில், இக் குலத்தவளாகப் பிறந்தாள். கணவன், மக்கள் ஆகியோரை யடைந்து துன்பங்க ளில்லாமல் வாழ்ந்து, தன் கணவனுடன் ஒரு சமயம் திவவண்ணாமலைக்குச் சென்று, உயர்ந்த சிவபெருமானின் திருவடிகளை வணங்கி ;

27. குங்கும மஞ்சள் சீப்புக் கோதையும் வாங்கிக் கொண்டு
[1]தங்கமு மீயா தாகிச் சர்வமான் போலச் சென்றுள்
துங்கமா மனத்த னனை செட்டியும் பின்பு பார்க்க
மங்கையைக் காணு னாகி யறைகின்றான் மனவெ றுப்பால்.

27. கடை வீதிக்குச் சென்று, குங்குமம், மஞ்சள், சீப்பு இவற்றை ஒரு கடையில் இவள் வாங்கிக்கொண்டு, அவற்றிற்குரிய விலைப் பணத்தைத் தராமல், மரன் போல் துள்ளியோடி மறைந்தனள். தூய்மையான மன முடைய கடைக்காரனும் இவள் சென்ற பிறகு, நினைவு வந்து பார்க்க, இவளைக் காணாதவ னானன். இவள் மீது மன வெறுப்புக் கொண்டு பின்வருமாறு கூறுகின்றான்.

---

1. பணம்

28. பொருளது ஈயாச் சென்ற பாவியும் வரனு மாண்டு
மறுசென்ம மகவாய்த் தோன்றி வரனுண்டாய் ஆண்டில்
[மாள்வன்
திருகான வார்த்தை சொல்லித் தூற்றினன் தெருத்தாள்
[தன்னை
உறைந்தது வந்தத் தோடம் ஓராண்டு பேதி யாலே;

28. விலைப் பணத்தைத் தராது சென்ற பாவியும், கணவன் இறக்க' கைம்பெண்ணாகித் தானும் மாண்டு, மறு பிறப்பிலும் பெண்ணாய்த் தோன்று வாள். இவளுக்கு மணமான வருஷத்திலேயே இவள் கணவன் இறப்பான், என்று தீர்க்கதரிசனமாகும்படியான சொற்களைக் கூறி, தெரு மண்ணை வாரி யிறைத்தான். அந்தத் தோஷம் இவளைச் சேர்ந்தது. ஒரு வருஷத்திற்குப் பிறகு பேதி யேற்பட்டு;

29. கணவனு மடிந்து பின்பு கன்னியும் வருத்த முற்றுப்
பிணியான மேக ரோகம் புக்கியே மரண மாகிக்
கனமுடன் பிரமன் லக்கம் கருதியே வந்தா ளென்றோம்
வினையது செட்டிச் சாபம் மேவிற்று விவளுக் கேதான்.

29. கணவன் இறக்க, வருத்த மடைந்து, கொடிய மேக வியாதி யுண்டாகி மரண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு இப்பிறப்பில் தோன்றினள் என்று கூறினோம். வியாபாரியின் சாபம் இவளைச் சேர்ந்தது.

30. பாலிய மணமு மெய்தும் பகைவரு முடனே யாண்டில்
நீலியின் வினைகள் நீங்க நுவலுவீர் சாந்தி தானும்
ஆலத்தை யுண்டோன் நாட்டில் அணுகின சாபத் துக்கு
ஏலவே சாந்தி சொல்வோம் இசைந்தாலும் நிவிர்த்தி யாகா.

30. அதனால் இவளுக்கு இளமையிலேயே ஒரு முறை மணம் கடை பெறும். உடனே, ஒரு வருஷத்தில் கணவனுக்கு மரண முண்டாகும். இவள் தீவினைகள் விலகுவதற்குச் சாந்தி யொன்று கூறுங்கள். ஆலகால விஷத்தை யருந்திய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற திருவண்ணா மலையில் ஏற்பட்ட தோஷத்துக்குச் சாந்தி யொன்று கூறுவோம். அதனைச் செய்தாலும் தீவினை நீங்காது.

31. சாதகன் நிறங்கு ணத்தைச் சாற்றுவோங் கல்வி மானும்
சூதுளான் தந்த்ர வாதி சொல்லுமுன் கோபி யாவன்
மாதவர் பத்தி பூண்பன் மறுத்தவார்த் தைகள் சொல்லான்
சாதிப்பான் சிலவே சங்கை தானவன் வாத தேகி.

31. ஜாதகனின் நிறம் குணம் இவைகளைச் சொல்லுவோம். படிப் பாளி. வஞ்சனை யுடையவன். தந்திர முள்ளவன். கூறுவதற்கு முன் கோபங் கொள்ளுவான். தவங்களே யியற்றும் சான்றோர்களிடம் பக்தி யுடையவனுவான். பெரியோர் கூறுகின்றவற்றிற்கு மறுப்புரைகள் சொல் லான். சில சந்தேகங்களைத் துணிவுடன் நீக்குவான். வாத சரீர முள்ளவன்.

32. வந்தவ னிருசி வப்பன் வளர்த்தியில் சமதே கத்தோன்
சுந்தர வடிவ னுருஞ் சுற்றத்தா ரேற்கை யுண்டு
தந்தைதாய் யோக முள்ளான் தன்பந்து புகழ வாழ்வன்
தந்தையா லில்லஞ் சேருந் தானிய தனமுண் டாமே.

32. இவன் கருஞ் சிவப்பு நிறமுள்ளவன். அதிகப் பருமனும் மெலி வும் இல்லாத உடலுடையவன். அழகிய உருவ முள்ளவன். இவன் சொற்களை சுற்றத்தார் மதிப்பர். தந்தை தாய் முதலியவர்களால் அதிர்ஷ்ட மடைவான். உறவினர் பாராட்டும்படி வாழ்வான். தகப்பனாரால் இவனுக்கு வீடொன்று கிடைக்கும். செல்வமும் சேரும்.

33. பாலியம் தன்னில் வேறு மாதர்கள் மோகங் கொள்வன்
பாலுள பசுக்கள் நந்தி யலித்திடுங் குறைவு ருதான்
இயல்பெறு தந்தை யாலே எழில்வருஞ் செல்வ முண்டு
சிலநாட்க ளிவன்தன் னுலே செப்பினேம் பொருளுண்
[டாமே.

33. வாலிப வயதில் அயல் மாதர்கள் மீது மையல் கொள்ளுவான். பாலைப் பொழியும் பசுக்கள், காளை மாடுகள் பலித முள்ளவன். எப்பொழு தும் குறைவை யடையான். இவனைப் பெற்ற தந்தையால் இவனுக்கு நன்மை கிடைக்கும். செல்வஞ் சேரும். வீடு கிடைக்கும். சிறிது காலத் துக்குப் பின்பு, ஜாதகன் முயற்சியினுலும் செல்வம் உண்டாகும்.

வேறு

34. பூமியல்லால் வேறுதொழி லிவனுக் கில்லை
புண்ணியனும் பிறந்தபின்னே பூமி சேரும்
காரியத்தில் வெகுவாக முயற்சி செய்வன்
கனமான காரையினு லில்ல முண்டாம்
நேமியிலே மானிடரும் நேய முண்டாம்
நெஞ்சிரக்க முடையனுமா மீத னுண்டு
ஆமிவனுக் கற்பகண்டம் அணுகி டாது
அணுகிடுமேல் நிவிர்த்தியென்றே மம்மை யேகேள்.

34. விவசாயத்தினு லன்றி, வேறு தொழிலினுல் இவனுக்கு ஜீவனம் இல்லை. இவன் பிறந்த பிறகு தந்தைக்கு நிலங்கள் சேரும். ஒரு செயலைச் செய்து முடிக்க மிகவும் முயலுவான். நிடமுள்ள கல்வீடு கட்டுவான். மக்கள் பலருடன் இவனுக்கு நட்பு ஏற்படும். மன விரக்க முள்ளவன் ஆவான். கொடைக் குணம் உள்ளவன். இவனுக்குக் கண்டம் எவையும் ஏற்படா. அப்படி ஏற்பட்டாலும் நிவிர்த்தியாம் என்று சொன்னேனும். தாயே! கேட் பாயாக.

35. நிதிபணிகள் வண்டியொடு செய்யு மாவும்
நிலையான தானியங்க ளதனுல் லாபம்
நதிகள்பல தலவாசம் செல்வா னுகும்
நல்லடியார் மறையோர்க்கு மன்ப னுகும்
சதியெவர்க்குஞ் செய்யாத நேச னுகும்
சாத்திரமும் புராணமதைச் சாரு நெஞ்சன்
பதியினிலே திருவோங்கும் வறுமை காணுன்
பாராளு மன்னவனுல் பலனுண் டாமே.

35. செல்வம், ஆபரணங்கள், வண்டி முதலான வசதிகள், நெல் விளை நிலங்கள், பசுக்கள், தானிய சம்பத்துக்கள் ஆகியவற்றுல் இலாபங்கள் அடை வான். நதிகள் பலவற்றில் நீராடுவான். புண்ணிய ஸ்தலங்கள் பலவற்றுக் குச் செல்லுவான். கடவுளடியார்களுக்கும், அந்தணர்களுக்கும் பிரிய மானவன். ஒருவருக்குந் தீங்கு நினையாத நண்பனுவன். பல சாஸ் திரங்கள், புராணங்கள் இவற்றைப் படித்து, அவற்றில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் பதிந்த மன முடையவன். வீட்டில் செல்வங் கொழிக்கும். தரித்திரம் அடையான். காட்டை யாட்சி புரிகின்ற அரசனுல் இவனுக்கு நன்மை யுண்டாகும்.

வேறு

36. பதினேந்து வாண்டு தன்னில் பாவையும் வாய்க்கு [மென்றேரும்
வதிசதி தெற்கி லன்னை வர்க்கத்தில் வருவா ளென்றேரும்
சதியிலா மனத்த ளாகும் தானவ ளிருநி றத்தாள்
அதிகமாய் வார்த்தை கூர்வள் ஆளனுக் கினிய ளாகும்.

36. பதினேந்தாம் வருஷத்தில் இவனுக்கு மனைவி வாய்ப்பாள் என்று சொன்னேனும். இவன் தாய் வழியைச் சேர்ந்த அவள், இவனூருக்குத் தென் திசையிலிருந்து வருவாள் என்று கூறினேனும். குற்ற மற்ற மனத்தினள். கரிய நிற முடையவள். மிகுதியாகப் பேசுவாள். கணவனுக்கு இனியளா யிருப்பாள்.

37. புத்திர ராண்பா லொன்று பெண்ணது மூன்று மாகும்
சுத்தமாய் நான்குந் தீர்க்கஞ் செப்புவோ மிவன்தன் பூர்வம்
அத்தியின் வரதர் வாழும் அக்காஞ்சி தன்னி லேதான்
வித்தகன் கௌரி வம்சம் விளங்கிஞ னந்தப் பாலன்.

37. ஜாதகனுக்கு, புத்திரன் ஒருவனும் பெண்கள் மூவருந் தோன்றித் தீர்க்கமாவர். ஜாதகன் முற் பிறவியைச் சொல்லுவோம். அத்திகிரி வரத ராசப் பெருமான் எழுந்தருளி யிருக்கும், காஞ்சீபுரத்தில் கௌரீக மரபில் பிறந்தான் இந்த ஜாதகன்.

38. அரசஞல் சீவ னங்கள் ஆதிமால் பத்தி கொண்டு
மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டுப்
பெருமையாய்த் தீயின் வம்சம் பிறந்தவ னிந்தப் பாலன்
உரைக்கின்றேம் யோகச் சேதி உறவோர்கள் புகழ
[வாழ்வன்.

38. அரசாங்க உத்தியோகத்தால் ஜீவனம் செய்து வந்தான். முதன் மையான திருமால் மீது பக்தி கொண்டு வாழ்ந்திருந்து, மரண மடைந்து, மிண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, மேன்மையுடன் இப்பிறப்பில், வன்னியர் குலத்தில் பிறந்தவன் இவன். இவனது யோக விவரங்களைச் சொல்லு கின்றேம். உறவினர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான்.

39. தந்தைக்குத் தாழ்வு முதான் சதுஷ்பாதம் விருத்தி செய்வன்
வந்தவர்க் கன்ன மீவன் மால்புத்தி யதிகங் கொள்வன்
எந்திடம் பெருமை யேற்பன் இடரின்றி வாழ்வா ஞகும்
முன்துணை தன்னே டொத்து மேவுவா னிந்தப் பாலன்.

39. தன் தந்தையின் நிலைக்குத் தாழ்வடைய மாட்டான். கால் நடைச் செல்வங்களைப் பெருக்குவான். வீடு தேடி வந்தவர்க்கு உணவளிப்பான். திருமால் மீது மிகுதியாகப் பக்தி கொள்ளுவான். எவ்விடத்திலும் பெருமை யடைவான். துன்ப மில்லாமல் வாழ்வான். தனது மூத்த சகோதரனுடன் மனமொத்து இந்த ஜாதகன் வாழ்ந்திருப்பான்.

40. மாதுரு விருந்நி றத்தாள் மர்மமில் லாதா ளாகும்
ஓதுவாள் நற்கு ணத்தாள் உண்மையா மனத்த ளாகும்
பாதக விடங்கொ டாதாள் பஞ்சைகட் கன்ன மீவள்
மேதினி லுணைச்சல் தேகி வந்தபி னதிக யோகம்.

40. ஜாதகன் தாய் கரிய நிற முள்ளவள். மனத்தில் மறை வில்லாத வள். நல்ல சொற்களைப் பேசுவாள். நற்குண முடையவள். உண்மை பொருந்திய மனத்தினள். மனத்தில் கெட்ட எண்ணத்துக்கு இடங்

கொடாதவள். அகதிகட்கு உணவு கொடுப்பாள். மெலிந்த சரீர முள்ளவள். இவள் வந்த பிறகு ஜாதகன் தந்தைக்கு மிகுதியான யோகங்க ளுண்டாம்.

41. துணைவர்க ளாண்பால் நான்கு தீர்க்கமாந் தென்மே லில்லம்
அவர்களுஞ் சிலரா ளொன்றுய் அணுகிப்பின் வேறுய்ச்
[செல்வர்
கனமுட னன்னீ பூர்வம் கழறுவோம் பெண்ணை தெற்கில்
வினையிலாச் சேடர் வம்சம் மேவினு ளிந்த மாது.

41. இவளுக்குச் சகோதரர்கள் நால்வர் தோன்றித் தீர்க்க மாவர். இவளுக்குப் பிறந்த வீடு தென்மேற்குத் திசையிலுள்ளது. இவள் சகோதரர் கள் சில நாட்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து, பின்பு வேறு குடும்பமாகச் செல்லு வர். ஜாதகனின் தாயின் முற் பிறவியைச் சொல்லுவோம். பெண்ணை யாற் றுக்குத் தெற்கில் உள்ளதோர் ஊரில், குற்றமற்ற சேடர் குலத்தவளாகப் பிறந்தாள் இவள்.

42. மாதுக்கு வரனு முண்டாய் மைந்தர்க ளதிக மாகி
மேதினில் வாழு நாளில் விளம்புவோ மூழி தானும்
சூதுக்க ளையலார் புத்ரர் தொடுத்தந்தப் பணிகைக்
[கொண்டாள்
ஓதுவாள் சுதரின் தாயார் உதித்திடுஞ் சுதர்க ளேகும்.

42. பெண்ணுக்கு மணமேற்பட்டுப் பிறகு புத்திர பாக்கியம் அதிக மாக வடைந்து உலகில் வாழ்ந்து வரும் நாளில், ஏற்பட்ட தீவினையைச் சொல்லுவோம். கெட்ட எண்ணத்துடன், வேறு ஒருவரின் குழந்தை தரித்திருந்த ஆபரணத்தைத் திருடிக் கொண்டாள். குழந்தையின் தாய் அதை யறிந்து சாபமிட்டாள். உனக்குப் பிறக்கும் குழந்தைகள் மரிக்கும்.

43. மறுசென்மந் தோன்றி யேதான் மறுமனை யாவாய் நீயும்
உறுஞ்சுத நிரண்டு பாகம் உறங்கிடு மென்று சொல்லி
அரிகோட்டந் தெருத்தூள் தூற்றி அவள்மனை சென்று
[னென்றேரும்
கருமமுஞ் சேர்ந்த தென்றேரும் காதலி யந்தி யத்தில்;

43. மறு பிறவியில் நீ இரண்டாம் மனைவியாக வாழ்ந்து வருவாய். பிறக்கும் குழந்தைகளில் இரண்டு பங்கு இறக்கும் என்று சொல்லி விஷ்ணு ஆலயத்தருகில் தெரு மண்ணை வாரி யிறைத்தாள். பிறகு வீட்டுக்குச் சென்று விட்டாள். அந்தத் தீவினை இவளைச் சார்ந்தது. கடைசியில் இவள்;

44. சுதர்களும் பகைய தாகிச் சேர்ந்தனள் காலன் பக்கல்
விதியவன் வரையப் பட்டு விளங்கிலு ளிந்த மாது
சுதரிரு பாகம் நீங்குஞ் சுந்தரி தன்னுல் துக்கம்
வதிசதி வறுமை காணும் வறைகின்றே மிவள்பின்

[சென்மம்.

44. புத்திரர்களிடம் விரோத மடைந்து இறந்தாள். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டுப் பிறந்தாள். குழந்தைகளில் இருபங்கு மரிக்கும். துக்க மடைவாள். தரித்திரம் ஏற்படும். இவளுடைய மறுபிறவியைச் சொல்லு கின்றோம்.

45. வேதத்தோன் மலைக்கு மேற்கில் விளங்கிய சிறுவூர் தன்னில்
யாதவர் குலமு தித்து யாவரு மதிக்க வாழ்வள்
ஓதுவோந் தந்தை பூர்வம் உயர்பாண்டி நாட்டி லேதான்
சூதிலாக் கங்கை சேயாய்ச் செனித்தன ளிவனே யென்றோம்.

45. திருக்கழுக்குன்ற மலைக்கு மேற்கில் விளங்கும் ஒரு சிற்றூரில், யாதவர் குலத்தில் பிறந்து, எல்லோரும் புகழும்படி வாழ்ந்து வருவாள். தந்தையின் முற் பிறப்பைக் கூறுவோம். உயர்ந்தபாண்டிய நாட்டில் கபட மில்லாத வேளாளருகப் பிறந்தவனிவன் என்றுரைப்போம்.

46. பெரிதான குடும்ப மாகிப் புகழுடன் வாழு நாளில்
மறையவ னேழை தானும் மணத்துக்கு உதவி கேட்கத்
தருகிறே னென்று சொல்லித் தான்முறி திட்டிக் கொண்டு
பொருளது வவனுக் கீந்து பின்சில நாட்கள் சென்று;

46. பெரிய குடும்பத்தை யடைந்து செல்வாக்குடன் வாழ்ந்து வரும் போது, ஏழைப் பிராமணன் ஒருவன் தன் கலியாணத்துக்காக உதவி தரும்படி வேண்டினன். இவனும் தருவதாக வாக்களித்து, அவனுக்குப் பொருளைக் கொடுத்து, அதற்குப் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டான். சிலகாலம் கழிந்து ;

47. தனமதைக் கேட்கும் போது சாலங்கள் செய்ய லுற்றுன்
வினமன மாகக் கொண்டு மேலவர் பக்கஞ் சென்று
கனமுள முறியைக் காட்டக் காவலரது போல் சொல்லச்
சினமுள வில்லந் தன்பால் சேர்ந்தன னிவனே யென்றோம்.

47. பணத்தைத் திருப்பிக் கேட்கும்போது அவன் சில சமா தானங்கள் சொன்னன். இவன்கெட்ட எண்ணத்துடன் மேலதிகாரிகளிடம் பத்திரத்தைக் காட்டினன். அதிகாரிகளும் பத்திரத்தி லுள்ளபடி கொடுக்க

வேண்டியதுதான் என்று சொன்னார்கள். இவன் கோபமடைந்து பிராமணனின் வீட்டைக் கைக்கொண்டான் என்று சொன்னேம்.

48. மறையவன் வெறுப்பி னுலே வறைகின்றன் பாவி யேநீ
பொருளது சுவைத்துத் தந்து பின்புவில் லத்தைக்
[கொண்டாய்
வருஞ்சென்மந் தாழ்வாய்த் தோன்றி மனைவியு மிரண்டே
[யாகிப்
பெருந்தாதை யாஸ்தி நீங்கிப் புக்குவா யென்று சொல்லி;

48. அந்தணன் மன வெறுப்படைந்து சொல்லுகின்றன். பாவியே! நீ, பொருளை இன்பமுடன் கொடுத்து விட்டு, பிறகு என் வீட்டை அபகரித்துக் கொண்டாய். இனி வரும் பிறவியில், தாழ்ந்த குலத்தவனுகப் பிறந்து, இரு மனைவியர்களை யடைந்து, பெருமை மிக்க தந்தையினுடைய ஆஸ்திகளில்லாமல் வாழ்வாய் என்றுரைத்து;

49. ஓதியே சென்ற ரென்றேம் உறைந்தது வந்தத் தோடம்
நீதிவா னறத்தி லிச்சை நினைத்துமே யுடலம் நீங்கி
வேதனுல் வரையப் பட்டு விளங்கினு னிவனே யென்றேம்
மாதுவு மிரண்டே யாகு மவன்தாதை யாஸ்தி காணுன்.

49. சென்று விட்டார் என்றேம். அந்தச் சாபம் இவனை வந்தடைந்தது. இவனும் தருமத்தில் விருப்ப முள்ளவனுகி இறந்தான். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவன் இவன் என்றேம். இவனுக்கு இரு மனைவியர் ஏற்பட்டுத், தன் பிதுரார்ச்சிதமான பொருள்களில்லாதவனுனன்.

50. ஈரொன்ப தாண்டு தன்னி லெழில்மேட மாதந் தன்னில்
கூறுவோந் தந்தை கண்டம் குறிக்கின்றேம் பின்சென்
[மத்தைப்
பாரினி லுயர்வ தான கோகர்ணந் தன்னி லேதான்
வீரியன் சைவச் சேயாய் மேவுவா னென்று சொல்வோம்.

50. ஜாதகனின் பதினெட்டாம் வயதில், எழில் மிக்க சித்திரை மாதத்தில் தந்தை மரண மடைவான். அவனுடைய மறு பிறப்பைச் சொல்லுகின்றேம். பூமியில் உயர்ந்த திருக்கோகர்ணம் என்ற க்ஷேத்திரத்தில், சைவ குலத்தவனுகப் பிறப்பான் என்றுரைப்போம்.

51. இருபது நாலு வாண்டில் இடபமா தத்தி லேதான்
உரைக்கின்றே மன்னே கண்டம் உதித்தவ னன்பா னேழில்
நெறியுட னனி மாதம் நீங்கிடு முடலந் தானும்
மறுசென்மந் தணிகை தன்னில் மறைக்குல முதிப்ப னுகும்

51. ஜாதகனின் இருபத்து நான்காம் வயதில் வைகாசி மாதம் தாய்க்கு மரணம் ஏற்படும். ஜாதகன், ஐம்பத்தேழாம் வயதில் ஆனி மாதம் இறந்து விடுவான். இவன் மறு பிறவி, திருத்தணிகையில் அந்தணர் குலத்தில் தோன்றுவான்.

52. பிறந்திடு காலந் தன்னில் புதன்தசை தனிலி ருப்புச்
சிறந்திடு வாண்டு நாலுந் திங்களும் பதினென் றுகும்
வருகின்ற முன்று னீணக்கு மாரனு மரண மாவன்
திருகிலா வாறு மாண்டில் தேவிக்கு மறும ணங்கள்.

52. ஜாதகன் பிறக்கும்போது புத மகா தசையில் இருப்பு ; நான்கு வருஷங்களும் பதினெரு மாதங்களுமாம். மூன் பிறந்த சகோதரிக்குக் கணவன் இறந்து விடுவான். ஆறு வருஷங்களுக்குப் பிறகு அவளுக்கு மறுபடி சுபங்கள் நடக்கும்.

53. கூடிடுங் தெற்குத் திக்கில் குறித்தனஞ் சாத கர்க்கு
வாடிய பிணிக ளெய்தும் மந்திரி நாலில் நிற்க
ஓடிடு மந்த நோய்கள் உத்தமி கேட்க லுற்றுள்
நாடிய குடும்பச் சேதி நல்குவீர் முனியே நீர்தாம்.

53. கணவன் தெற்குத் திக்கிலிருந்து வருவான். ஜாதகனுக்கு ரோகங்கள் ஏற்படும். குரு நாலாமிடத்தில் இருப்பதால் வந்த வியாதிகள் நீங்கும். பார்வதி கேட்கின்றாள். குடும்பச் செய்தியைச் சொல்லுங்கள்; முனிவரே ! நீர் தாம்.

54. இருபது வாண்டு மேலாய் இல்லமும் வேற தாகும்
சிறியதோர் தந்தைக் கேதான் செப்பினீர் புத்ர தோடம்
கருமங்க ளெவர்கள் செய்வார் கழறுவீர் விபர மாக
மருமமா யவன்முன் புத்ரர் வகுத்தமை கருமத் துக்கு.

54. ஜாதகன் இருபதாம் வயதுக்குமேல், வேறு வீட்டுக்கு மாறுவான். சிறிய தந்தைக்குப் புத்திர தோஷம் உண்டு என்று சொன்னீர்களே. அப்படியானால் அவருக்குக் கடைசியில் கரும காரியங்கள் செய்பவர் யார் ?

அதனை விவரமாகச் சொல்லுங்கள். முன்னமேயே, அவனுடைய மூத்த சகோதரனின் புத்திரன் ஈமக்கடன்கள் செய்வதற்கு இருப்பதாகச் சொல்லி யிருக்கிறோம்.

55. அந்தவர் நான்கு வென்றோம் அவர்களில் மூன்றும் புத்ரன்
விந்தையாய்க் கருமஞ் செய்வன் வித்தகன் சேதி யாவும்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விவர மாக
இந்திர னிறைஞ்சு மாதே இம்மொழி தப்பா தாமே.

55. அவர்கள் நால்வரில், மூன்றும் புத்திரன் இவனுக்குக் கருமங்கள் செய்வான். ஜாதகன் செய்திகள் எல்லாவற்றையும் விவரமாகப் பிற்பகுதியில் சொல்லுவோம். இந்திரன் வணங்குகின்ற பார்வதியே! இம்மொழிகள் தவறு.

ஜாதகம் 103

1. மதிவண்டி கேது கன்னி மறைதுலாஞ் சேயு மேரு
புதன்ராகு மீன மாகப் புகர்சாடி காரி மானில்
உதயனும் மேட மாக உயிரது நந்தி யாக
இதுவிதக் கோளு நின்ரு லியம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் கடகத்திலும், கேது கன்னியிலும், குரு துலாத்திலும், செவ்வாய் தனுசிலும், புதன் ராகு மீனத்திலும், சுக்கிரன் கும்பத்திலும், சனி மகரத்திலும், சூரியன் மேஷத்திலுமாக விருந்து, விருஷபம் சென்ம விலக்கினமாகி, இங்ஙனம் கவக்கிரகங்க ளிருந்தால் உரிய பலனைச் சொல்லுவீர்.

புதன் இராகு	சூரியன்	லக்கினம்	
சுக்கிரன்	இராசி சக்கரம்		சந்திரன்
சனி			
செவ்வாய்		குரு	கேது

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்ரூர்
மேதினி லாண்பால் சென்மம் வந்தவில் வடதென் வீதி
நீதியாய்க் கிழக்கு வாசல் அருகினில் தெற்கில் தந்தி
ஓதுவோங் குண்ட முத்ரம் ஓங்கிடாச் சிற்ரு ராமே.

2. பார்வதி கேட்கும்போது கௌசிக முனிவர் உரைக்கின்ரூர். இஃது ஆண் பிறவி. பிறந்த வீடு, வடக்குத் தெற்கு வீதியில் கிழக்கு நோக்கியுள்ள வாயிலை யுடையது. வீட்டுக்குப் பக்கத்தில் தெற்குத் திசையில் விநாயகர் ஆலயமும், வடக்கில் ஒரு குளமும் உள்ளன. வளமிலாச் சிற்ரூராகும்.

3. அன்னையி னில்ல மாகும் அவன்தந்தை யருகில் மீனம்
தென்வட வீதி யாகும் சிறப்புள கீழ்ப்பால் வாசல்
தந்தியும் வடகீழ் காளி சலக்கரை மேற்கில் தங்கும்
இந்தவா றடையா ளங்கள் இயம்பினேங் கேளுந் தாயே.

3. இது ஜாதகன் தாயின் வீடு. ஜாதகனின் தந்தையின் வீடு அருகில் தென்மேற்குத் திசையிலுள்ளது. தெற்கு வடக்காகவுள்ள தெருவில் கிழக்கு நோக்கியுள்ள வாயிலுடையது. விநாயகர் ஆலயம் வட கிழக்கிலும்,

காளி கோவிலும் ஒரு நீர் நிலையும் மேற்குப் பக்கத்திலும் உள்ளன. இவ்வித வடையாளங்களைச் சொன்னேம். தாயே! கேளுங்கள்.

வேறு

4. தந்தை துணை யாணைந்து பெண்பால் மூன்று
சாற்றுகின்றேரும் பெரிதான குடும்பி யென்றேரும்
அந்தவருஞ் சிலகாலம் ஒன்றுய் வாழ்ந்து
அறுமூன்று வாண்டின்மேல் வேறுய்ச் செல்வர்
நொந்துவிடுஞ் சிலவென்றேரும் பிதாகு ணத்தை
நுவலுவோ மிருமூன்று சென்ன மாகும்
விந்தையாய்ப் பேசவல்லான் எதிரிக் கஞ்சான்
மேவுவான் மணையில்லம் சிலவே காலம்.

4. தந்தையினுடன் பிறந்தவர்களைச் சொல்லுவோம். ஐந்து சகோதரர்களும் மூன்று சகோதரிகளுமுள்ள ஒரு பெரிய குடும்பம். அவர்கள் எல்லோரும் சில வருஷங்கள் ஒரே குடும்பமாக வாழ்ந்து, ஜாதகன் தந்தையின் பதினெட்டாம் வயதிற்குமேல் தனியாகச் சென்று விடுவார்கள். சில சகோதரர்கள் இடைக்காலத்தில் இறப்பர். தந்தையின் குணங்களைச் சொல்லுவோம். அவன், தன் தந்தைக்கு ஆரும் பிறவியாகப் பிறப்பான். வியக்கும் படி பேசுந் திறனுள்ளவன். விரோதிகளைக் கண்டு பயப்படாதவன். தன் மனைவியின் வீட்டில் சிலகாலம் சென்று வாழ்ந்து வருவான்.

5. காலத்தை யறிந்துரைப்பான் கல்வி யில்லான்
கபடில்லா ஞதியினில் வறுமை யுள்ளான்
பால்பாக்யம் விருத்தியுளன் பலஊர் பூமி
பண்பாகச் செய்திடுவன் பணையேர் விருத்தி
வேல்விழியார் மோகமுளன் மாஞ்சி வப்பன்
விருந்தினர்மேல் பிரியமுளன் சுகபு சிப்பன்
சாலவே வருவோர்க்கு வன்ன மீவன்
தடாகமுஞ் சோலைசெய்வான் தைரி யத்தன்.

5. வருங் காலத்தை யறிந்து சொல்ல வல்லவன். கல்வியில்லாதவன். வஞ்சனை யில்லாதவன். ஆரம்ப காலத்தில் தரித்திர முள்ளவன். பசுக்களை யடைந்து பால் பாக்கியம் பெற்று விளங்குவான். பல ஊர்களில் வீடுநிலங்களை வாங்கிச் சேர்ப்பான். பண்ணை, ஏர் முதலியன மிகுதியாக வுடையவன். பெண்கள்மீது மைய லுள்ளவன். கருஞ் சிவப்பு நிறமுடையவன். விருந்தினர்களை அன்புடன் உபசரிப்பான். சௌக்கியமாக உண்

பான். வந்தவர்களுக்கு மிகுதியாக அன்ன மளிப்பான். தோட்டம், தரவுகள் ஏற்படுத்துவான். தைரியமுள்ளவன்.

*6. தன்மகுண முயரமில்லான் சமதே கத்தன்
தன்கரத்தில் கோதுமையுஞ் சங்கு சக்ரம்
பின்னமிலாத் தேகமுளன் மூலச் சூடன்
வீண்வம்பில் செல்லாணும் பிரிய வார்த்தை
சொன்னசொல் தவருணுஞ் சுகபு சிப்பன்
துறவோர்போ லிலாகிரியுஞ் செலுத்து வாணும்.

6. குளிர்ந்த மனமுள்ளவன். குட்டையானவன். சமமான சரீர அமைப்புடையவன். தன்னுடைய கையில் கோதுமை ரேகை, சங்கு சக்ர ரேகைக ளுள்ளவன். குறைவில்லாத தேகத்தன். மூலச்சூட்டு நோயுள்ள வன். வீண் வம்புக்குச் செல்லாதவன். பிரியமாகப் பேசுபவன். தான் சொன்ன சொற்களினின்று தவருதவன். போஜனத்தில் விருப்ப முடைய வன். சில பரதேசிகளைப்போல் லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பான்.

7. ஆகியவிக் குணத்தானுக் கிந்தப் பாலன்
அருளுவான் பஞ்சமியாஞ் சனன மென்றேம்
பாகமாய்த் துணைவர்பதி னென்றே யாவர்
பறந்திடுமே சிலகென்றேம் பெண்பால் மூன்று
வாகையுட ணைரண்டு வைந்துந் தீர்க்கம்
வறைகின்றே மவர்சேதி பின்பா கத்தில்
தோகையே சாதகன்றன் குணத்தைச் சொல்வோம்
சொற்பகல்வி மால்நிறத்தான் தேவி பட்சன்.

7. இங்ஙனமுள்ள குணங்களையுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் ஐந் தாவது புத்திரனுகப் பிறப்பான். ஜாதகனுடன் பதினெருவர் பிறப்பர். அவர்களில் சிலர் இறப்பர். மூன்று பெண்களும், ஆண்களிருவருமான ஐவர் நீண்ட ஆயுளுட னிருப்பர். அவர்களுடைய செய்திகளைப் பிற்பாகத் தில் சொல்லுவோம். தாயே! ஜாதகன் குணங்களைக் கூறுகின்றேம். அற்பமான கல்வியமிவுள்ளவன். கரியநிற முடையவன். மனைவிமீது பிரிய முள்ளவன்.

---

* இப்பாடலின் இறுதிவரி ஏட்டிலில்லை.

8. சன்மார்க்கன் முன்கோபி கிருஷி செய்வன்
சாந்தவான் நடைகடியன் சல்யங் கொள்வன்
மூன்வயதில் செல்வமுளன் தாயில் லத்தில்
எய்துவான் சிலகால மூன்னு ணில்லான்
பின்வயதில் வறுமையுளான் சல்லியங் கொள்வான்
பித்ததே கத்தானும் புறஞ்சொல் லாதான்
தன்தந்தை தன்க்குத்தாழ்வாய்க் குடும்பி யாவன்
சங்கரியு மதைமறுத்து ஓது கின்றுள்.

8. நல்வழிகளில் செல்லுவான். சிறிது முன்கோப முண்டு. விவ சாயம் செய்து வருவான். சாந்த முள்ளவன். வேகமாக நடக்கும் திறமை யுள்ளவன். கடன் படுவான். ஜாதகனுடைய ஆரம்ப காலங்களில் செல்வ முண்டு. தன் தாயின் வீட்டில் சிலகாலம் வாழ்ந்து வருவான். மூத்த சகோதர னில்லாதவன். பிற்காலத்தில் தரித்திர முள்ளவன். கடன் வாங்குவான். பித்ததேக முடையவன். கோள் சொல்லாதவன். தன்னு டைய தந்தைக்குத் தாழ்வான அந்துஸ்துடன் கூடிய குடும்ப மடைவான். பார்வதியும், அதனைத் தடுத்துச் சொல்லுகின்றுள்.

9. ஓதினீர் எதுவரைக்கும் யோகஞ் சொல்வீர்
உதித்தவனு மூவேழு வாண்டு மட்டும்
மாதுத னில்லத்தில் வாழ்வா னுகும்
வறுமையிலா னதன்மேலே தந்தை யில்லம்
நீதியாய் வந்தடைவன் குடும்பம் வேறு
நிகழ்த்துவோ மிருமூன்று பாக மாகக்
கோதிலாப் போசனமும் வேறே யாகும்
குறிக்கின்றே மிருபத்தே ழாண்டு தன்னில்;

9. இதுவரை பலன்களைச் சொன்னீர்கள். யோகம் எந்தக் காலம் வரையில் உள்ளது என்று கூறுங்கள். ஜாதகனுடைய இருபத்தேராம் வயது வரையில், தன் தாயின் வீட்டில் வாழ்வான். தரித்திர மில்லாதவன். அதற்குமேல், தன் தந்தையின் வீட்டிற்குச் சென்று வாழ்ந்து வருவான். குடும்பத்தில் ஆறு பாகங்கள்செய்து ஒரே வீட்டில் தனிக் குடும்பமாக வாழ்ந்து வருவான். ஜாதகனுடைய இருபத்தேழாம் வயதில்;

10. தன்னிலே சிக்கிவிடும் பூமி யாவும்
சங்கரியுங் கேட்கலுற்றுள் தாயில் லத்தில்
இந்தவனும் வாசமுறுங் கார ணஞ்சொல்
இயம்புவோ மன்னே துணை காணு தாகி
அந்தவொரு வாஸ்தினில் அணுகு வானும்
அறிவிப்போம் தாய்குணத்தை யிருந் றத்தாள்
வந்தவர்க்கு வன்னமீவள் முன்கோ பத்தாள்
வரன்மனம்போல் வாழ்ந்திடுவள் மைந்தர் நேயள்.

10. **விளக்கம்** லெல்லாம் பந்தகத்தில் அகப்பட்டுக் கொள்ளும் என்று கூறுவோம். பார்வதி கேட்கலானாள். தன் தாயில்லத்தில் ஜாதகன் வசித்துவரக் காரணங்களை யுரைப்பீர். தன் தாய்க்கு உடன்பிறந்தவரில்லாததால், அந்தச் செல்வத்தை இவன் அனுபவித்து வருவான். அவனுடைய தாயின் குணங்களைச் சொல்லுவோம். இல்லை என்று வந்தவர்கட்கு அன்ன மளிப்பாள். முன்கோப முடையவள். தன் கணவன் மனமறிந்து வாழ்வாள். புத்திரன் மீது அன்புள்ளவள்.

11. நேயமுண்டு வேழையின்மே லிளம னத்தாள்
நேமியோர்க் குதவிசெய்வள் நிதான வார்த்தை
தோயுமே பித்தவாயு வலிவு முள்ளாள்
சுந்தரிக்குத் துணையொன்றுங் காணு ளாகும்
மாயுமே விருந்தாலு மவள்தன் பூர்வம்
வறைகின்றேரும் சிறுபாக்க மருகில் கீழ்ப்பால்
தீயின்குலம் தனினுதித்துச் சுதர்க ளுண்டாய்ச்
சிறப்பான குடும்பமென்று செப்பு வோமே.

11. ஏழைகளின் மீது இரக்க முடையவள், இளகிய மன முள்ளவள். பெரியோர்கட்கு உதவிசெய்து வருவாள். மெதுவாகப் பேசுபவள். பித்த வாயுவுள்ள சரீரத்தினள். நல்ல பலசாலி. இவளுக்குச் சகோதரர்க ளில்லை. அப்படியே இருந்தாலும் நிலையார். அவளுடைய முற்பிறப்பைச் சொல்லுவோம்: சிறுபாக்கத்துக் கருகில், கிழக்கில் உள்ளதோர் ஊரில் வன்னிய குலத்தவளாகப் பிறந்து, குழந்தைகளை யடைந்து, பெருமையுள்ள குடும்பத்தைப் பெறுவாள் என்றுரைப்போம்.

12. செப்புவோம் வினையதனைத் தாயே கேளும்
கேந்திரத்தில் வாசமுறு மடைக்க லானும்
தப்பிதமாய்க் குஞ்சுகளைக் கலைத்துக் கொன்றுள்
சஞ்சலத்தால் சாபமிட்ட பட்சி தாமும்
ஒப்புடனே யப்பாவம் நேர்ந்த தென்றேம்
உரைக்கின்றே மின்னமொன்று உமையே கேளும்
கப்பியதோர் விடாய்க்காலம் நதிக டந்தாள்
கனத்தபெரி யோருக்கு விடைஞ்சல் செய்தாள்.

12. அப்போது ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேம். தாயே! கேட்டிடுவாய். தன்வீட்டில் கூடுகட்டி வாழ்ந்துவந்த பறவையின் கூட்டினைக் கலைத்துக், குஞ்சுகளையும் கொன்றுள். மனவருத்த மடைந்த பறவையும் சாபமிட்டது. அந்தப் பாவம் இவளைச் சேர்ந்தது என்று கூறினேம். இன்னும் ஒன்றுஞ் சொல்லுகின்றேம். பார்வதியே! கேட்பாயாக. மாதவிடாய்க் காலத்தில் இவள் ஓர் ஆற்றிலிறங்கி, அதனைக் கடந்தாள். பெரியோர்கட்குச் சில இடையூறுகள் செய்தாள்.

13. செய்ததனால் அதிதிமனம் வெறுப்புக் கொண்டு
செப்புவார் மாதேநீ மறுசென் மத்தில்
அய்யமன தாகவுமே துணைகா ணுமல்
அருளுஞ்சுதர் பாதியுமே அவியு மென்று
நய்யமன மாயுரைத்துச் சென்று ரென்றேம்
நல்கிற்று வந்தத்தோட மந்தி யத்தில்
கைகாலும் வாயுநோயால் பாதை கண்டு
காலன்தன் பதிசென்றுள் கருதிக் கேளே.

13. இவள் இடையூறு செய்ததனைக் கண்ட பெரியோர், மன வெறுப்புடன் பின் வருமாறு சொல்லுவார். நீ மறு பிறப்பில் துன்ப முள்ள மனத்தினளாய், உடன் பிறந்தோர் இல்லாமல் வாழ்வாய். பிறக்கும் குழந்தைகளில் பாதி இறக்கும்; என்று துன்ப முற்ற மனத்துடன் கூறிச் சென்றனர் என்று சொன்னேம். அத்தத் தோஷம் இவளைச் சேர்ந்தது. அதனால், கடைசிக் காலத்தில் கை கால்களில் வாயு உபாதை யுண்டாகி, எமனுலக மடைந்தாள். பார்வதியே! சிந்தித்துக் கேட்பாயாக.

14. கருதிஞன் பிரமன்லக்கம் வந்தா ளென்றேரும்
காதலியு மிச்சென்மந் துணைகா ணுதாள்
பெருஞ்சுதரில் பாதிதுன்ப மென்று சொல்வோம்
பணிகளுமே யதிகமிலாள் பாவை யர்க்கு
வருஞ்சென்ம முக்கூடல் வைசியச் சேயாய்
பலமான குடும்பத்தில் வாழ்வா ளாகும்
அருமறையின் முடிவில்விளை யாடுந் தாயே
அறைந்தமொழி தப்பாது வறையக் கேளாய்.

14. மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு இவ்வுலகில் பிறந்தாள் என்று கூறினேம். இவள், இப்பிறவியில் உடன்பிறந்தோ ரில்லாதவ ளாவாள். தோன்றுகின்ற குழந்தைகளில் பாதி கஷ்டமாம் என்று கூறுவோம். ஆபரணங்கள் அதிகமாக இல்லாதவள். இவளுக்கு மறு பிறவியைச் சொல்லு வோம். திருமுக்கூடல் என்ற தலத்தில் வைசியக் குலத்தவளாய்த் தோன்றி, பெருமையுள்ள குடும்பத்தோடு வாழ்வாள். வேதங்களின் உச்சியில் திருவிளை யாடல் புரிகின்ற தாயே! நாங்கள் கூறிய மொழிகள் தவறு. மேலுங் கூறக் கேள்.

15. அறையக்கேள் தந்தையின்தன் பூர்வஞ் சொல்வோம்
அருணைக்குத் தட்சிணத்தில் செங்குந்த வம்சம்
உறைந்துமே நெசவுசெய்து வறுமை யின்றி
உயர்வோர்க்கு வண்ணமீந்து தலங்கள் சென்று
திருமுருகர் பத்தியதாய்ப் பவமில் லாமல்
சென்றனன்காண் மறலிபதி திருமால் மைந்தன்
வரையவந்தான் பத்மகுல வடுக ஞுக
வறைகின்றேரும் பின்சென்ம மாதே கேளு.

15. சொல்லக் கேள். ஜாதகன் தகப்பனாரின் முற் பிறவியைச் சொல்லுவோம். திருவண்ணுமலைக்குத் தெற்கில், செங்குந்தர் மரபில் தோன்றி, நெசவுத் தொழில் செய்து, தரித்திரமில்லாமல், சான்றோர்க்கு உணவளித்து, புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று, முருகப் பிரான் மீது பக்தி பூண்டு, தீவினை யில்லாமல் எமனுலகஞ் சென்றனன். மீண்டும் விஷ்ணுவின் புதல்வனுகிய பிரமதேவனுல் படைக்கப்பட்டு, பத்ம கோத்திர வடுக மரபினனுகப் பிறந்தான். இவன் மறு பிறப்பைச் சொல்லு கின்றேரும். தாயே! கேள்.

16. கள்ளழகர் வாழ்பாண்டி நாட்டி லேதான்
காதலனும் பிரம்மகுலஞ் செனிப்ப னுகும்
வள்ளலெனு முனிசொல்ல வம்மன் தானும்
மறுத்துமிவ னிச்சென்ம மற்ப வயது
கொள்ளைகொண்டு புசித்ததனுல் மறுபி றப்புக்
கூறினீர் மறையவனுய்க் குதிக்கும் வண்ணம்
விள்ளுவா யிச்சென்ம மறத்தி லிச்சை
இளமனமாய் வருவோர்க்கு வன்ன மீந்தும் ;

16. கள்ளழகர் பெருமான் எழுந்தருளி யிருக்கின்ற பாண்டிய நாட்டில், அந்தணர் குலத்தவனுக இவன் தோன்றுவான். இங்ஙனம் முனிவர் கூற, பார்வதியம்மன் இதனை மறுத்து, இப் பிறவியில் இவனுக்கு அற்ப ஆயுள் தான். இப்பிறப்பில் கொள்ளை யடித்துச் சீவனம் செய்தான். அங்ஙன மிருக்க, மறு பிறவியில் அந்தணர் மரபில் பிறப்பான் என்று சொன்னீர்கள். காரணங் கூறுங்கள் என்றனள். இப்பிறப்பில், தருமத்தில் ஆசை கொண்டும், வீடு தேடி வருபவருக்கு இரக்கமுற்ற மனத்துடன் உணவு தந்தும் ;

வேறு

17. தேவதாப் பத்தி கொண்டு சிறுத்தவர்க் குதவி செய்தும்
தாவிய பேரைக் காத்துந் தவறிலா வார்த்தை யாயும்
மேவியே வாழ்வ தாலே விளம்பினேம் பிரம்ம சேயாய்ச்
சோமனை யணிந்தோன் பாரி சொலுமொழி குன்ரு
[தென்றும்.

17. தெய்வ பக்தி பூண்டும், ஏழைமை யுடையோர்க்கு உதவிகள் செய்தும், தன்னை யடைந்தவர்களைக் காப்பாற்றியும், குற்றமற்ற சொற்களைப் பேசியும், உலகில் வாழ்வதால், மறு பிறப்பு அந்தணர் குலத்தவனுகத் தோன்றுவான் என்று சொன்னேம். சந்திரனைச் சடைமுடியி லணிந்த சிவபிரான் பத்தினியே! நாங்கள் சொல்லும் சொற்கள் குறைவுபடா வென்று சொன்னேம்.

18. தந்தையின் மரண காலஞ் சாற்றுவோ முப்பான் மூன்றில்
வந்தவை காசி மாத மறைந்தனங் கண்டந் தானே
பிந்தியு முப்பா னுறில் பூசமா தத்தி லேதான்
வந்திடு மன்னை கண்டம் வழுத்தின மொழிகுன் ருது.

18. ஜாதகன் தந்தையின் மரண காலத்தைச் சொல்லுவோம். ஜாதகனது முப்பத்து மூன்றும் வயதில் வைகாசி மாதம் மரணம் ஏற்படும் என்று சொன்னேம். பின்பு, இவனது முப்பத்தாறும் வயதில், தை மாதம் தாயாருக்கு மரண முண்டாகும். சொல்லிய சொல் தவறாது.

19. சாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோ மிருபான் மூன்றுள்
காதலி வடகீழ் தன்னில் கழறுவோ மந்த மாது
ஓதுவோ மவள்கு ணத்தை உறுதியில் லாத நெஞ்சம்
தீதிலாக் குணத்த ளாகுஞ் செப்புமுன் கோபி யாவள்.

19. ஜாதகன் திருமண காலத்தைச் சொல்லுவோம். இருபத்து மூன்றும் வயதுக்குள், வடகிழக்குத் திசையி லிருந்து இவனுக்கு மனைவி வாய்ப்பாள். அவள் குணங்களைச் சொல்லுவோம். திடமற்ற மனத்தினள். குற்றமற்ற குண முள்ளவள். கூறுவதற்கு முன்பே கோபங் கொள்ளுவாள்.

20. மாநிறம் வாத தேகி மருமத்தை வெளிக்காட் டாதாள்
பான்மையாய்ப் பேச வல்லாள் பரவுப காரி யாகும்
ஈனமாங் குணங்க ளில்லாள் இவளுமே யோக மில்லாள்
ஆனவள் வந்த பின்பு அணுகிடுஞ் சல்லி யங்கள்.

20. கரிய நிறமுள்ளவள். வாத சரீர முடையவள். இரகசியத்தை வெளிவிடாதவள். இனிமையாகப் பேசபவள். பிறருக்கு உபகாரி. கெட்ட குணங்க ளில்லாதவள். அதிருஷ்ட மில்லாதவள். அவள் வந்த பிறகு கணவனுக்குக் கடன் உபத்திரவங்கள் ஏற்படும்.

21. வயதுமே தீர்க்க மென்றோம் மாமுனி யிவ்வார் சொல்ல
செயமுனி யெழுந்தி ருந்து திடுக்கென வுரைக்க லுற்றார்
வியமேழோன் குசனே யாகி யிருநான்கி லிருப்ப தாலே
பயமிலாச் சொன்னீர் யாதும் பகருவோந் தாரம் ரெண்டாய்.

21. தீர்க்கமான வயதுள்ளவள் என்று சொல்லுவோம், என்று முனிவர் கூறச், செயமுனி திடுக்கிட்டுக் கூறலானார். ஏழாமிடத்துக்கும் பனிரண்டாமிடத்துக்கு முரியவனுகிய செவ்வாய், எட்டாமிடத்தில் தங்கியிருந்தும், பயமில்லாமல் சொல்லுகின்றீர். இவனுக்கு இரண்டனைவியர் என்று நாம் சொல்லுவோம்.

22. சொன்னது மெய்தா னையா சூரிய னுச்ச மாக
மன்னிய வேழோ னெட்டில் வந்ததால் தார மொன்றே
இன்னவார் முனிவர் கூற ஈசுவரி சொல்லு கின்றாள்
அன்னவன் தனக்குப் பாரி யணுகிடு மொன்றே யாக.

22. நீர் உரைப்பது உண்மைதான். சூரியன் மேஷத்தில் உச்சமாகவும், ஏழாமிடமாகிய விருச்சிகத்துக் குரிய செவ்வாய் எட்டாமிடத்தில் (தனுசில்) இருப்பதாலும், ஒரே மனைவி என்று முனிவர் சொன்னார். ஈசுவரி கூறுகின்றாள். அவனுக்கு மனைவி ஒருத்தியேதான். ஆனால்;

23. ஆகிய வம்மா துக்கு அணுகிடும் முத்திரை ரெண்டு
போகிடு முதல்மாங் கல்யம் புகன்றனங் கள்ள ளுலே
பாகமாய் மறுமாங் கல்யம் பண்ணுவா னிவனே யென்றேரும்
தாகமாய்ப் பின்பா கத்தில் சாற்றுவோ மந்தச் சங்கை.

23. அப் பெண்ணுக்குத் திருமாங்கலியம் இரண்டு ஏற்படும். முதல் மாங்கல்யம் திருடனால் அபகரிக்கப்படும். அதனால் வேறு மாங்கல்யம் ஒன்று செய்து அணிவிப்பான் இவன் என்று சொன்னேம். பிற்பாகத்தில் விவரமாகச் சொல்லுவோம்.

24. புத்திர விருத்தி தம்மைப் புகலவே பலத்தைக் காணேும்
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று சொல்வோம்
அத்திரி சொல்லு கின்றார் அச்சங்கை விபரஞ் சொல்வீர்
பத்திய வஞ்சில்-கேது புதனுமே நீச்ச மாக.

24. புத்திர பாவத்தைக் கூறப் பலமில்லை. பிறந்தாலும் நிலைத்திரா வென்று கூறுவோம். அத்திரி முனிவர் சொல்லுகின்றார். புத்திர தோஷ மேற்படக் காரணஞ் சொல்லுங்கள். ஐந்தாமிடத்தில் கேது தங்கி, அவ் வீட்டுக்காரனுகிய புதன், நீசனுக மீனத்தில் இருப்பதாலும்.

25. நந்தியுஞ் சனன மாக நவின்றனம் புத்ர தோடம்
வந்திடுஞ் சுதர்க ளாண்பால் மறலியின் பதிக்குச் செல்லும்
விந்தையாய்க் கன்னி ரெண்டு மேவிடுந் தீர்க்க மாக
இந்தவார் முனிவர் கூற இயம்புவார் பராசர் தாமும்.

25. விருஷபம் இலக்கினமாக இருப்பதாலும், புத்திர தோஷம் சொன்னேம். பிறக்கும் ஆண் குழந்தைகள் எமனுலகஞ் செல்லும். ஆனால், இரு பெண்கள் பிறந்து தீர்க்கமாக விளங்குவர். இவ்வாறு முனிவர் சொல்ல, பராசரர் கூறுகின்றார்.

26. சுதராண்பால் காணு னென்று செப்பினீர் கருமஞ் செய்வோர்
விதங்களைச் சொல்லு மென்ன வித்தகன் பூர்வந் தன்னில்
அதிகமாய் வினைகள் செய்தான் அடைந்தது வந்தத் தோடம்
வதிபன்செய் வினைக ளென்ன வறைகுவீர் முனியே நீர்தாம்.

26. ஆண் குழந்தைகள் இரார் என்று சொன்னீர்கள். இவனுக்கு இறுதிக் கடன்கள் யாவர் செய்வார் என்று சொல்லுங்கள். ஜாதகன் முற் பிறவியில் மிகுதியாகத் தீங்குகள் செய்தான். அந்தத் தோஷங்கள் இவனைச் சார்ந்தன. முனிவரே! நீங்கள்; இவன்செய்த தீவினைகளெவை யென்று சொல்லுவீர்.

27. முன்னவ னிருந்த சென்ம மொழிகின்றேம் புலியூர் தன்னில்
அன்னவன் வன்ய ஞக அணுகியே மனைவி மைந்தர்
தன்னிலே கிருஷி செய்து தானவன் வாழு நாளில்
பின்னமாய் வந்த வூழைப் பேசுவோந் தாயே யாங்கள்.

27. ஜாதகன் முற்பிறவியைச் சொல்லுவோம். புலியூரில், அவன் வன்னியர் குலத்தவனுகப் பிறந்து, மனைவி மக்கள் ஏற்பட்டு, விவசாயம் செய்து கொண்டு, வாழ்ந்து வரும்போது சேர்ந்த தீவினையைச் சொல்லுவோம்; தாயே! கானுங்கள்.

28. அங்ஙகர் மாரி கோவில் அரவ மே வெகுநாள் வாசம்
மன்னிய மதுடத் தாலே வந்தது வெளியி லோர்நாள்
இன்னவன் கழியால் வாட்டி யமபுரஞ் சேர்த்தா
[னென்றேம்
பின்னமா யந்தத் தோடம் புக்கிற்று விவனுக் கேதான்.

28. அவ்வூர் மாரியம்மன் கோயிலில் வெகு நாட்களாகப் பாம்பு ஒன்று வாழ்ந்து வந்தது. அஃது ஒருநாள் வெளியில் வந்து, படமெடுத்து ஆடியது. இவன் ஒரு தடியால் அடித்தான். அஃது இறந்தது என்றேம். தன்பமாக அந்தத் தோஷம் இவனைச் சார்ந்தது.

29. அந்தியக் காலந் தன்னில் அவன்சுதர் யாவு மற்று
அந்தக ஞகி யேதான் அணுகினன் காலன் பக்கல்
விந்தையாய் நரகம் புக்கு வேதத்தோன் வரையப் பட்டு
வந்தவ னிந்தப் பாலன் மங்கையே மேலுங் கேளே.

29. கடைசிக் காலத்தில் குழந்தைகள் அனைத்தும் இறந்து, குருடனுகி இறந்தான். அங்கும் நரகத்தை யடைந்து, வேதங்களே யுணர்ந்த பிரமனுல் மீண்டும் படைக்கப்பட்டுப், பிறந்தவன் இந்த ஜாதகன். தாயே! மேலுங் கேள்.

30. முன்சென்ம மரவின் தோடம் முயன்றதா லிச்சென் மத்தில்
தன்சுத ராண்பால் தோடம் செனிக்கினுந் தீதே யாகும்
அந்ததோர் தோடந் தீர அருளுவோம் சாந்தி தானும்
தங்ஙகர் தென்பால் தன்னில் சலக்கரை யரசு நிற்கும்.

30. முற்பிறவியில் பாம்பைக் கொன்ற தோஷம் ஏற்பட்டதால் இப் பிறவியில் ஆண் குழந்தைகட்குத் தோஷம் உண்டாகும். அப்படிப் பிறந்தாலும் நிலைத்திராது. அந்தத் தோஷந் தீர, சாந்தியொன்று கூறுகின்றேம். தன்னுடைய ஊருக்குத் தெற்கிலுள்ள ஓர் ஆற்றங்கரையில் அரசமரம் ஒன்று உள்ளது.

31. அரசின்கீழ் நாகஞ் செய்து அந்தணர்க் கன்ன மீந்து
விரதங்க ளேகா தசியில் வித்தக னநுட்டிப் பானேல்
வருமனை தீர்க்க மெய்து மைந்தராண் விருத்தி யாகும்
திருகென்று செய்யா ஞகில் சேய்சுத ராணுந் தோடம்.

31. அதன்கீழே நாகம்போல் ஓர் உருச்செய்து, பிரதிஷ்டை செய்து, பிராமணர்களுக்கு அன்னமளித்து, ஏகாதசி விரதத்தை ஜாதகன் அநுஷ்டித்து வந்தால், ஏற்பட்ட தீவினைநீங்கி, மனைவி, நீண்ட ஆயுளுடனிருப்பாள். ஆண் குழந்தை விருத்தியும் ஏற்படும். சொல்லிய சாந்தியைச் செய்யாவிட்டால் ஆண் குழந்தைகட்குத் தோஷம் உண்டாகும்.

32. இன்னவன் பொதுயோ கத்தை இயம்புவோஞ் சென்னனந்
[தொட்டும்
அன்னவ னிருபான் மூன்று ஆண்டெல்லை வறுமை காணுன்
பின்னையு மதன்மே லேழு வாண்டுமே பீடை யுண்டு
தன்னிலே யோக மில்லான் சல்லியங் கொள்வா னுமே.

32. இந்த ஜாதகனுக்குரிய பொதுவான யோகங்களைப் பற்றிச் சொல்லுவோம். பிறப்பு முதல், இருபத்து மூன்றும் வயதுவரை, தரித்திர மடையான். அதற்கு மேல் ஏழு வருஷங்கள்வரை பலவிதத் துன்பங்கள் ஏற்படும். யோக மில்லாதவ னுவநன். கடன் வாங்குவான்.

33. மூப்பது வாண்டு மேலாய் மேவிடும் விசேட யோகம்
செப்புவோம் பலிதம் பூமி சல்லிய நிவர்த்தி யுண்டு
ஒப்புடன் பந்து மேலாய் ஓங்கிடுங் குடும்பந் தானும்
மைப்புடன் மூப்பா னெனன்பான் வீரியன் துணைவர் வேறு.

33. மூப்பதாம் வயதுக்கு மேல் இவனுக்கு விசேஷமான அதிர்ஷ்டங்கள் வாய்க்கும். விளை நிலங்களில் நல்ல பலன்கள் கிடைக்கும் என்று சொல்லுவோம். கடன் தொந்தரவு நீங்கும். உறவினர்கள் மதிக்கும்படி இவன் குடும்பம் மேன்மை யடையும். இவனது மூப்பத்தொன்பதாம் வயதில், சகோதரர்கள் வேறு குடும்பமாக;

34. செல்லுவா ரவர்கள் சேதி செப்புவோ மிரண்டி லேதான்
வல்லவன் குணத்தைக் கேளாய் வாக்குச்சொல் லிரண்டு
[மூள்ளான்
நல்கிடும் பித்த சூடு நற்கரம் கத்திரி ரேகை
இல்லையென் றுரைக்க மாட்டான் ரேகைவா னென்று
[சொல்வோம்.

34. செல்லுவார்கள். அவர்களைப் பற்றிய விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். ஜாதகன் குணங்களைக் கேட்பாயாக, நல்ல சொற்களைப் பேசுபவன். சொன்ன சொற்படி நடப்பவன். இவன் உடலில் பித்த சூடு உண்டு. கத்திரி ரேகை இவன் கையில் விளங்கும். கேட்டவர்க்கு இல்லை யென்று சொல்லாதவன். தரும முடையவன் என்று கூறுவோம்.

35. அறுபது வாண்டு தன்னில் அணுகிய கும்ப மாதம்
குறைபக்கந் துவாதசி தன்னில் கூற்றன் தன் பதிக்குச்
[செல்வன்
மறுசென்மங் காளாத்தி தன்னில் மாரனும் ரெட்டி வமிசம்
பெருமையா யுதித்து மேலும் பூமியில் சீவிப் பானும்.

35. அறுபதாம் வயதில், மாசி மாதம், கிருஷ்ணபட்சத் துவாதசியில் ஜாதகன் எமனுலக மடைவான். மறு பிறப்பு, திருக்காளஹஸ்தியில் ரெட்டியார் மரபினனாக மேன்மையுடன் பிறந்து வாழ்வான்.

36. பிறந்திடு காலந் தன்னில் பொன்தசை தனிலி ருப்புச்
சிறந்திடு வாண்டு ரெண்டு திங்களு மேழு தாகும்
உறைந்திடுந் தனதா னியங்கள் உடன்துணை விருத்தி யாகும்
பெருமையும் புகழு முண்டு பிறந்தவன் தனக்கு ரோகம்.

36. ஜாதகன் பிறப்புக் காலத்தில், குரு மகா தசையில் இருப்பு; இரண்டு வருஷங்களும் ஏழு மாதங்களுமாம். அக்காலத்தில் செல்வம், தானியங்கள் சேரும். சகோதர விருத்தி யுண்டாம். மேன்மையும் கீர்த்தியும் பெறுவான். ஜாதகனுக்கு வியாதி ஏற்படும்.

37. இன்னமுஞ் சிலவே சேதி இயம்புவோம் விபரம் ரெண்டில்
அன்னவன் முப்பா றது ஆண்டினில் நிதிகள் காணும்
விந்தைக ளதன்மே லாக விளம்புவோம் விபரம் ரெண்டில்
இந்திரனி றைஞ்சு மாதே இயம்பிய மொழிதப் பாதாம்.

37. இன்னும் சில செய்திகளைப் பற்றி விவரமாக இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். ஜாதகனது முப்பத்தாரும் வயதில் புதையல் கிடைக்கும். அதற்கு மேல் இன்னுஞ் சில வியப்பான செயல்களைக் குறித்து விவரமாக இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். இந்திரன் வணங்குகின்ற பார்வதியே! நாங்கள் கூறிய சொற்கள் தவறு.

ஜாதகம் 104

1. மதியுங் கன்னி புகர்மேரு
மாலும் புயங்கன் ரவிசாடி
விதியன் வண்டி சிகிசீயம்
வேந்தன் நந்தி குசனுடு[1]
பதியும் நந்தி பலனெவ்வார்
பகர்வீர் முனியே விபரமதாய்
இதுவே யாண்பால் செனனு முறும்
இல்லங் கீழ்மேல் வீதியதே.

1. சந்திரன் கன்னியிலும், சுக்கிரன் தனுசிலும், புதன் இராகு சூரியன் கும்பத்திலும், சனி கடகத்திலும், கேது சிம்மத்திலும், குரு விருஷபத்திலும், செவ்வாய் மேஷத்திலும் தங்கி, ஜன்ம லக்கினம் விருஷபமாகவு முள்ள ஜாதகப் பலன் எங்ஙன மென்று விவரமாகச் சொல்லுங்கள், முனிவரே! இஃது ஆண் பிறப்பு. பிறக்கும் வீடு கிழக்கு மேற்கான வீதியிலுள்ளது.

	செவ்வாய்	லக்கினம் குரு	
புதன் ராகு சூரியன்	இராசி சக்கரம்		சனி
			கேது
சுக்கிரன்			சந்திரன்

2. அதுவுந் தெற்கு வாசலது
அணுகுங் கூரை யெதிர்பாழாம்
நதியுங் கீழ்ப்பால் மார்க்கமுறும்
அரிவா கனத்தாள் தென்கிழ்ப்பால்
புதிதாய் மர்ரி தென்மேற்கில்
பொருந்தும் வடபால் மடஞ்சோலை
மதியை யணிந்தோன் கணேசனுமே
மருவுங் குண்டஞ் சிற்றாரில்.

2. வீட்டுக்கு வாயில் தெற்கு நோக்கி யிருக்கின்றது. கூரை வேய்ந்த வீடு. எதிர் வரிசையில் பாழடைந்த வீடு ஒன்றுளது. வீட்டுக்குக் கிழக்கில்

1. மேஷம்

ஆறு ஒன்று ஒடும். சாலே வழியும் உண்டு. சிங்க வாகனத்தைக் கொண்ட துர்க்கை தென்கிழக்குத் திசையில் கோயில் கொண்டுள்ளாள். புதியதாகக் கட்டப்பட்ட மாரியம்மன் கோயில் தென்மேற்கில் உள்ளது. வடக்கில் மடமும் சோலையும் உள்ளன. இளம்பிறைச் சந்திரனைச் சடைமுடியில் அணிந்த சிவபெருமானும், விநாயகக் கடவுளும் அங்கு எழுந்தருளி யுள்ளனர். அந்தச் சிறிய ஊரில் குளமொன்று முண்டு.

3. ஊரி லுதிப்பா னனந்தந்தை
உற்ற துணைவர் மனைவிமைந்தர்
தீரன் யோகமுன் பின்சென்மம்
சொல்வோந் தந்தை துணைவர்தமை
பாரில் தசமே யாணுறு
பாவை யிரண்டு பகர்ந்தோமே
தீர மாகத் தந்தைகுணம்
செப்பக் கேளாய்த் தேவியரே.

3. இங்ஙனமுள்ள சிறியதோர் ஊரில், இந்த ஜாதகன் தோன்றுவான். ஜாதகனின் தாய் தந்தையர் உடன் பிறந்தோர், மனைவி, மக்கள் யோகங்கள், ஜாதகனின் யோகங்கள், முற்பிறப்பு மறுபிறப்புக்கள் ஆகிய வனைத்தையுங் கூறுவோம். ஜாதகன் தந்தையுடன் பிறந்தவர் பதின்மரில் ஆண்கள் அறுவர், பெண்கள் இருவர் நிச்சயமாக விளங்குவர் என்று கூறினோம். தந்தையின் குணங்களைச் சொல்லுவோம்; பார்வதி தேவியே! கேள்.

4. மேலாஞ் சிவப்பு நிறைச்சலுளான்
வித்தை சுத்தி யுடையவனும்
சீலன் கிருஷி செய்திடுவான்
சேர்ந்தோர்க் கன்பன் தீரமிலான்
பால்மோ ரிட்டன் உபகாரி
பகவான் பத்தி கொண்டிடுவன்
சால வயலார் பொருள்வேண்டான்
தரணி விருத்தி செய்திடுவன்.

4. நல்ல சிவப்பு நிறமுள்ளவன். மெல்லிய உடலுடையவன். கல்வியறிவுள்ளவன். தூய்மை யுள்ளவன். நல்லொழுக்க முடையவன். விவசாயத் தொழில் புரிபவன். தன்னைச் சேர்ந்தவர்களிடம் அன்புடனிருப்பான். மனத்தில் தைரிய மில்லாதவன். பால், மோர் இவற்றில் விருப்ப முள்ளவன். பிறருக்கு உதவிகள் செய்பவன். கடவுள் பக்தி யுடையவன். அயலார் பொருளில் ஆசை வையாதவன். நிலபுலன்களை விருத்தி செய்வான்.

5. இடுவ னேழை தமக்கன்னம்
இனிதாய் வார்த்தை மிகவுரைப்பன்
திடமாங் குடும்பி யாவனெனச்
செப்புந் தலவா சங்கள்செய்வன்
மடையர் தம்மைச் சேராதான்
மனைவி யிரண்டு மருவிடுமே
கடனே கொள்ளான் பவமில்லான்
கனத்த புத்தி யுடையானே.

5. ஏழை மக்கட்கு உணவளிப்பான். இனிய சொற்களைப் பேசுவான். பலமுள்ள குடும்பி யாவான் என்று சொல்லுவோம். புண்ணிய ஸ்தலங்களில் சிலகாலம் வசிப்பான். மூடர்கள் நட்பைக் கொள்ளான். இவனுக்கு மனைவிமார் இருவர். கடன் வாங்க மாட்டான். தீவினை யில்லாதவன். சிறந்த அறிவுள்ளவன்.

6. உடையோன் தனக்கு விப்பாலன்
உதிப்பான் சிவந்த மேனியனும்
கடையே சென்மங் கிருஷிசெய்வன்
கருதா னதிகப் பொய்வார்த்தை
படையில் செல்லான் சகடுமுளன்
பணையோர் விருத்தி செய்திடுவன்
விடவாக் குடையோன் நாலிந்தில்
மேவும் பாரி யுள்ளூரில்.

6. இவ்வனம் கூறப்பட்ட குணங்களை யுடையவனுக்கு, இந்த ஜாதகன் புதல்வனுகத் தோன்றுவான். ஜாதகன் சிவந்த நிறமுள்ளவன். தந்தைக்குக் கடைசிப் புதல்வனுகப் பிறப்பான். பயிர்த் தொழில் புரிவான். மிகுதியாகப் பொய்ச் சொற்களைக் கூற மனத்திலும் நினையான். படையில் சேர்ந்து சண்டைக்குப் போக மாட்டான். வண்டி முதலான வாகன வசதிகளுள்ளவன். பண்ணை ஏர் முதலியவற்றை விருத்தி செய்வான். விஷம் போன்ற கொடிய வாக்குள்ளவன். உள்ளூரிலேயே இவனது இருபதாம் வயதில் மனைவி வாய்ப்பாள்.

வேறு

7. பாரியாள் குணத்தைச் சொல்வோம் பரவுப காரி யாவள்
கூறுவாள் சுகமாய் வார்த்தை கோபத்தை வெளிக்காட்
[டாதாள்
நாரிக்குத் தாயார் ரெண்டு நல்கிடு மிளையா ளுக்குப்
பாரினில் உதிப்பா ளாகும் பாவைதன் நடக்கை யுள்ளாள்,

7. மனைவியின் குணங்களைக் கூறுவோம். பிறருக்கு உதவி செய்யும் இயல்பினள். இனிய சொற்களைப் பேசுவாள். கோபத்தை வெளியில் புலப்படுத்தாதவள். இவளுக்குத் தாய்மா ரிருவர். இவள், தன் தந்தையின் இளைய மனைவிக்குப் பிறப்பாள். நல்ல நடத்தை யுடையவள்.

8. பந்துவும் புகழ வாழ்வள் பஞ்சைமே லிரக்க மாவள்
கஞ்சம்போல் மேனி யாவள் காதலி துணையாண் ரெண்டு
தஞ்சமாய்ப் பெண்பால் ஒன்று சாற்றினேம் தீர்க்க மாக
வஞ்சனை செய்யா ளாகும் வருவோரை யாத ரிப்பள்.

8. உறவினர் பாராட்டும் வகையில் வாழ்க்கை நடத்துவாள். அநாதைகளான மக்கள்மீது இரக்கங் கொள்ளுவாள். செந்தாமரை மலர் போன்று சிவந்த உடலைப் பெற்றவள். இவளுக்குச் சகோதரர் இருவர். சகோதரியும் ஒருத்தி. இவள் தீர்க்கமுடன் விளங்குவாள் என்று சொன்னேம். எவருக்கும் வஞ்சனை செய்ய மாட்டாள். வீடு தேடி வருபவரை அன்புடன் ஆதரிப்பாள்.

9. சாதகன் துணைவர் தம்மைச் சாற்றவாண் பலத்தைக் [காணேம்
மேதினில் பெண்பா லொன்று விளங்கிடும் தீர்க்க மாகக்
காதலி தனக்குப் புத்ரர் கழறுவோம் ஆண்பால் ரெண்டு
நீதிலாப் பெண்பா லொன்று செப்புவோம் தீர்க்க மாக.

9. ஜாதகனுடன் பிறந்தவர்களைச் சொல்லுவோம். சகோதரர் இல்லை. சகோதரி யொருத்தி பிறந்து தீர்க்கமாக விளங்குவாள். இவளுக்குப் புத்திர பாவத்தைக் கூறுவோம். ஆண்கள் இருவரும், பெண்ணொருத்தியுந் தோன்றித் தீர்க்கமாவர் என்று சொல்லுவோம்.

10. செயமுனி யதனைக் கேட்டுத் திடுக்கென வுரைக்க லுற்றார்
நயமுடன் மூன்றேறென் ஐந்தில் நற்குரு பார்த்த தாலே
தயவுடன் இளைய மாதா சார்ந்திடு மவட்குப் புத்ரர்
பயமிலா ஆண்பா லொன்று பகருவோம் தீர்க்க மாக.

10. செயமுனிவர் இதனைக் கேட்டுத் திடீரென ஒன்று கூறுவார். மூன்றுமிடத்தவனுகிய சந்திரன், ஐந்தாமிடமாகிய கன்னியில் தங்கி, அவனைக் குரு பார்த்ததால் இந்த ஜாதகனுக்கு இளையதாய் ஒருத்தியுண்டு. அவளுக்கு ஆண்மகன் ஒருவன் பிறந்து தீர்க்கமுடன் விளங்குவான் என்று கூறுவோம்.

11. மறுதுணை காணு ணுகும் மங்கையும் நீரால் மாய்வள்
உறுந்துணை சேதி சொல்வோ முணைச்சலாம் சிவந்த மேனி
[1]பரிநாளாம் கடக ராசி பிறப்பணு மந்தப் பாலன்
துரிதமாய் நடக்க வல்லன் துணைவன்சொல் கடவா ணுமே.

11. வேறு ஆண்துணை ஜாதகனுக்கு இல்லை. இவன் சகோதரியும் தண்ணீரில் மூழ்கி இறப்பாள். ஜாதகனின் சகோதரனை (இளைய தாயார் புதல்வன்)ப் பற்றிச் சொல்லுவோம். மெலிந்த உடலுள்ளவள். சிவந்த நிறமுடையவள். அசுவினி நட்சத்திரம் கடக விலக்கினத்தில் பிறப்பான் இந்தச் சகோதரன். விரைவாக நடப்பதில் வல்லவன். தன் சகோதரன் (ஜாதகன்) சொற்களை மீறுதவன்.

12. தீமையை யொருவர்க் கெண்ணுன் சிறப்புள குடும்பி
[யாவன்
மாமிகள் இரண்டு மாகும் மாநிலம் கூவல் செய்வன்
சேமமாஞ் சித்ர இல்லஞ் செய்குவான் சகாய ணுவன்
பூமியும் பரிபா லிப்பன் புண்ணிய வதியே கேளாய்.

12. ஒருவருக்குங் கெடுதல் நினையாதவன். மேன்மையான குடும்ப முடையவன். இவனுக்கு மனைவிமார் இருவர். விளைநிலத்தில் கிணறு தோண்டுவிப்பான். சௌக்கிய முள்ளவன். அழகிய வீடு கட்டுவான். பிறருக்கு உபகாரி. நிலபுலன்களை ஒழுங்காகக் காப்பான். புண்ணிய சாலியே! கேள்.

13. புத்திரர் ஆண்பால் ரெண்டு பெண்ணது அவ்வார் தீர்க்கம்
குத்தமாம் இரண்டு என்றேங் குறுமுனி புகலு கின்றார்
பத்தினி யெம்மா துக்குப் பகருவீர் புத்திர விருத்தி
வித்தகி முதல்மா துக்கு மேவிடும் சுதர்கள் ஒன்று.

13. இவனுக்கு (ஜாதகனின் தம்பிக்கு)ப் புத்திரர் இருவர். பெண்களும் இருவர் தோன்றித் தீர்க்கமாவர். மேலும் இரண்டு குழந்தைகள் பிறந்து சேதமாம் என்று கூறினேம். அகத்தியர் சொல்லுகின்றார். எந்த மனைவிக்குப் புத்திர விருத்தி ஏற்படுமென்று சொன்னீர்கள்? இவனுடைய முதல் மனைவிக்கு ஒருகுழந்தை யுண்டாகும்.

14. மதலையி னுடனே தானும் மடிவளே கூவந் தன்னில்
பதியினிக் கிரண்டா[1]மாது பகருவோ மவர்க்குப் புத்ரர்
சதமாகச் சொன்னேம் யாங்கள் சாதகர் தமக்குப் புத்ரர்
விதங்களைச் சொல்லு மென்ன விளம்புவார் பராசர் தாமும்.

1. அசுவினி

14. பிறந்த குழந்தையுடன், முதல் மனைவி கிணற்றில் தவறி விழுந்து மடிவாள். பின்பு, இவனுக்கு இரண்டாம் மனைவி ஏற்படுவாள் என்று சொல்லுவோம். அவளுக்கு முன்பு கூறியது போல் நிச்சயமாக ஆண்கள் இருவரும், பெண் குழந்தைகள் இருவருந் தோன்றித் தீர்க்கமாவர் என்று கூறினேம், நாங்கள். ஜாதகனுக்குப் புத்திர பாக்கியத்தைப் பற்றிச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்க, பராசர முனிவர் சொல்லுவார்.

15. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணுஞ்
சித்தமா யுதித்தா லுந்தான் திங்காகு மென்று சொல்வோம்
அத்திரி மறித்துச் சொல்வார் அவனுக்குப் புத்ர தோஷம்
பெத்தகா ரணங்க ளத்தைப் பேசுவீர் விபர மாக.

15. ஜாதகனுக்குப் புத்திர விருத்தியைப் பற்றிச் சொல்லுவதற்குக் கிரகபலம் இல்லை. பிறந்தாலும் நிச்சயமாய் அழியும் என்று கூறுவோம். அத்திரி முனிவர் இதனை இடைமறித்துப் பேசுவார். ஜாதகனுக்குப் புத்திர தோஷம் ஏற்பட்ட காரணங்களை விவரமாகச் சொல்லுவீர்.

16. அஞ்சினுக் குடையோ னேடு அருக்கனும் ராகு கூட
அஞ்சினில் மதியும் நிற்க அட்டமத் தோனும் பார்க்க
நஞ்சாகு மதலை யென்றேரும் நாயகன் முன்சென் மத்தில்
மிஞ்சிய வினைகள் செய்தான் மேவிற்று வந்தத் தோடம்.

16. ஐந்தாமிடத்துக்கு உரியவனுடைய புதனுடன், சூரியனும் இராகுவும் கூடி, கும்பத்தில் இருப்பதாலும், சந்திரன் ஐந்தாமிடமாகிய கன்னியில் நின்று, எட்டாமிடத்தவனுடைய குரு அவனைப் பார்ப்பதாலும் பிறக்கும் குழந்தைகள் தோஷமாம் என்று சொன்னேம். தவிரவும், ஜாதகன் முற் பிறப்பில் மிகுதியான தீவினைகளைச் செய்தான். அந்தத் தோஷமும் இவனை யடைந்தது.

17. முன்வினை சொல்லு மென்ன மொழிகுவார் பராசர் தாமும்
பெண்ணையாம் நதிவ டக்காய்ப் பேரூரில் பிரம்ம தேயாய்
அன்னவன் உதித்து மேலும் அழகிய மனைவி மைந்தர்
உன்னதக் குடும்பி யாகி உயர்பூமி அதிக முண்டாய்;

17. முற்பிறப்பில் இவன் செய்த தீவினைகள் யாவை? என்று பார்வதிதேவி கேட்க, பராசர் முனிவர் சொல்லுவார். பெண்ணையாற்றுக்கு வடக்கில் உள்ளதொரு பெரிய ஊரில், அந்தணர் குலத்தவனுய்ப் பிறந்து, மனைவி மக்களை யடைந்து, மேன்மையான குடும்பத்தைப் பெற்று, மிகுதி யான நிலபுலன்களுடன்;

18. அதிகாரங் கிராம வேலை அரசர்க ளிட்டங் கொண்டு
வதிபனும் வாழு நாளில் வந்தவூழ் தன்னைச் சொல்வோம்
மதிமுக மாதொ ருத்தி வரனின்றித் தாயில் லத்தில்
கதியிலா வாழ்ந்தா ளென்றேங் காதலி தன்மேல் மோகம் ;

18. கிராமாதிகாரம் செய்து கொண்டு, மன்னர்களின் அன்பைப் பெற்று, இவன் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுவோம். சந்திரன் போன்று முகமுடைய பெண்ணொருத்தி கணவனை யிழந்து, ஆதரவில்லாமல் தாய் வீட்டில் வசித்து வந்தாள் என்று சொன்னேம். அவள்மீது மையல் ;

19. அன்னவன் கொண்டு மேதான் அகசிய வார்த்தை பேச
கன்னிகை இசையா ளாகிக் கடினவார்த் தைகளுஞ் சொல்ல
இன்னவன் சிலநாட் சென்று இடுக்கமா யொருநாள் தன்னில்
கன்னிகை தனியாய்த் தானுய்க் கங்கைக்குச் சென்று
[ளென்றேம்.

19. அயலானொருவன் கொண்டு, பசப்பு வார்த்தைகள் பல அவளிடங் கூறினன். அப்பெண் அதற்கு உடன்படாமல், கடுமையாகச் சில சொற்களைச் சொன்னாள். அவன் சென்றுவிட்டான். பின்பு சிலகாலஞ் சென்று, ஒருநாள் அவள், தனிமையாக நீர் கொணரச் சென்றாள் என்று கூறினேம்.

20. தனிவரு மாதைப் பார்த்துத் தானவன் பலவந் தத்தால்
பிணையாகப் போகந் துய்த்தான் பேதையும் மனங்க லங்கித்
துணைவனே டுரைத்தா ளென்றேஞ் சிங்கம்போல் கோப
[மூற்றுக்
கனமுள மறையோன் பக்கல் கழறினன் அந்தச் சங்கை.

20. தனிமையாக வருகின்ற பெண்ணை அவன்கண்டு, அவளிடஞ் சென்று பலாத்காரமாக இன்ப மனுபவித்தான். அவள் மனக் குழப்ப மடைந்து, தன் வீட்டுக்குச் சென்று, தனது சகோதரனிடங் கூறினாள். உடனே அவன் சிங்கம் போன்று கோப மடைந்து, பெருமையுடைய அந்தணனை (ஜாதகன்) அவ்வூர் அதிகாரியிடம் இந்தக் குற்றத்தைக் கூறினன்.

21. அதிகாரி குற்ற வாளை யழைத்துமே வினவும் போது
சதிசெய்தா னென்று வெண்ணித் தனமது வவனுல் பெற்று
அதிசதி தன்மேல் குற்றம் அதிகாரி சொல்லும் போது
மதிமுக மாது தானு மறைகின்றாள் மனவெ றுப்பால்.

21. அதிகாரி (ஜாதகன்) குற்றவாளியை யழைத்து, விசாரிக்கும் பொழுது, குற்றவாளியால் பொருள் பெற்றுக்கொண்டு, பெண்ணின்மீதே

குற்றம் கூறினான். இதனைக்கேட்டு மன வெறுப்படைந்த பெண் பின்வரு மாறு சொல்லுகின்றாள்.

22. [1]எதிரிபால் பொருள் பெற்று என்பேரில் நிந்தை சொன்னாய்
கதிபெறு மறுசென் மத்தில் காளைகள் இல்லா வாழ்வாய்
இதுவன்றித் துணையா ணின்றி இப்பாரில் வாழ்வா யென்று
.....

22. என் எதிரியிடம் பொருளைப் பெற்றுக்கொண்டு. என்மீது பழி கூறினாய். மறுபிறப்பில், புதல்வரின்றி வாழ்வாய். தவிரவும், சகோதரர் கள் இல்லாதவனாகவும் இவ்வுலகில் வசிப்பாய்.

23. சொல்லியே சென்றா ளென்றேஞ் சேர்ந்தது வந்தத்
[தோடம்
புல்லியோர் தம்மால் சாபம் பொருந்திற்றுச் சிலவே
[யென்றேம்
வல்லவ னந்தி யத்தில் வாய்ரணம் தன்னில் மாண்டு
நல்லதோர் ரெட்டி வம்சம் நல்கினை னென்று சொன்னேம்.

23. என்று சொல்லிவிட்டுச் சென்றாள் எனக் கூறினேம். அந்தத் தோஷம் இவனை யடைந்தது. மேலும், ஏழையோர் சாபமொன்றும் ஏற் பட்டது. அப்பிறவியில் இவன் வாய்ப்புண் ஏற்பட்டு, மரணமடைந்து, இப்பிறவியில் கலமுடைய ரெட்டியார் குலத்தில் பிறந்தான் என்று கூறினேம்.

24. இதுவன்றிப் பாரி யாலே யெய்திற்றுச் சிலவே தோடம்
அதுவினை சொல்லு மென்ன அப்புலி யூரி லேதான்
நதிகுலந் தனிலு தித்து நாயகன் மதலை யுண்டாய்
வதிசதி வாழு நாளில் வறைகின்றே மூழி தானே.

24. இவை தவிரவும், ஜாதகன் மனைவி மூலமாகவும் சில தோஷங் கள் அடைந்தன. அவற்றைக் கூறுங்கள் என்று பார்வதிதேவி கேட்டாள். இவன் மனைவி முற்பிறவியில், புலியூரில், வேளாளர் குலத்தவளாகப் பிறந்து, கணவன், மக்கள் ஆகியோரை யடைந்து, வாழ்கின்ற காலத்தில் ஏற்பட்ட தீவினை யொன்றைச் சொல்லுகின்றேம்.

25. பஞ்சையாய்ப் பெண்ணும் ஓர்நாள் பாலர்க்கு வன்னங்
[கேட்க
மிஞ்சியே கோப முற்று விரட்டினாள் மாதைத் தானும்
பஞ்சையும் மனவெ றுப்பால் பகருவாள் சாபந் தானும்
மிஞ்சிய சென்மந் தன்னில் விளங்காது சுதர்க ளென்று;

1. இப்பாடலின் நான்காம் வரி எட்டி லில்லை

25. கதியற்ற ஏழைப் பெண்ணொருத்தி, தன் குழந்தைகளுக்கு உணவு தரும்படி இவளை யாசிக்க, மிகுந்த கோபங் கொண்டு அப்பெண்ணை இவள் விரட்டினாள். ஏழைப் பெண் மன வெறுப்புக்கொண்டு பின்வரு மாறு சாப மிடுவாள். வரும் பிறவியில் உனக்குப் புதல்வர் தோன்றி விளங் கார் என்று சொல்லிவிட்டு;

26. வேறொரு இல்லஞ் சென்றாள் மேவிற்று வந்தத் தோட்டங்
காரிழை கொல்லை தன்னில் கருமுனி வாச மாகும்
பாரிய தெய்வ மாகப் பலருமே பூசை செய்வார்
நாரியும் மனத்தி லெண்ணாள் நற்பொருள் கர்வத் தாலே.

26. வேறு வீட்டை நாடிச் சென்றாள். அந்தத் தோஷம் இவளை யடைந்தது. இவள் வீட்டுத் தோட்டத்தில் கருப்பன் என்ற தெய்வம் வாசஞ்செய்து வந்தது. பெரிய தெய்வமாக எண்ணிப் பக்தியுடன் அதற் குப் பூசை செய்வார்கள். செல்வச் செருக்கினால், இவள் அத்தெய்வத்தை மனத்தாலும் நினைக்கவில்லை.

27. கருமுனி மதலை யெல்லாங் காலன்தன் பதிக்குப் போக்கித்
திருமக ளந்தி யத்தில் செறிந்தது பைத்தி யங்கள்
மறலியின் பதிக்குச் சென்று மலரயன் வரையப் பட்டுப்
பெருமையா யிக்கு லத்தில் பிறந்தன ளென்று
[சொல்வோம்.

27. கருப்பு முனியின் சாபத்தினால், இவள் குழந்தைக ளனைத்தும் எமனுலகம் சென்றன. இவளுடைய கடைசிக் காலத்தில் புத்தி மாறுதல் (பைத்தியம்) ஏற்பட்டது. அந்நிலையுடனே மரணமடைந்து, தாமரை மல ரில் வீற்றிருக்கும் பிரம தேவனால் மீண்டும் படைக்கப்பட்டு, மேன்மையுடன் இக்குலத்தில் பிறந்தாள் இவள் என்று கூறுவோம்.

28. பாலர்கள் அன்ன மீயாப் பாவமும் முனியின் தோடம்
ஆலம்போல் சேர்ந்த தென்றும் அணுகாது சுதர்கள் தாமே
கோலமாய் வந்த ஊழைக் குறைபடச் சாந்தி சொல்வீர்
சாலவே கரும சாந்தி செய்துபின் சக்தி பீசம்;

28. ஏழைப் பெண்ணின் குழந்தைகட்கு உணவு தராததனால் ஏற் பட்ட தீவினையும், கருப்பு முனியாண்டவனை வணங்காம லிருந்ததால் உண் டாகிய தோஷமும் கொடிய விஷம் போல இவளை இப்பிறப்பில் அடைந்தன என்று சொன்னோம். அதனால் இவளுக்குப் புதல்வர் தோன்றார். இவளை யடைந்த தோஷங்கள் விலகிப்போக சாந்தியொன்று சொல்லுவீர். மிகுதி யாகக் கர்ம சாந்திகளை ஜாதகன் இவளுக்காகச் செய்து, பின்பு, பராசக்தி யின் மூல மந்திரத்தை;

29. செய்துமே அணிவா ளாகில் சென்மவூழ் விலகி யேதான்
தையற்குக் குழவி தோன்றுஞ் சதியென்று செய்யா ளாகில்
ஐயமாஞ் சுதர்கள் என்றேம் அச்சாந்தி யெவ்வார் செய்யப்
பையவே யந்தி யத்தில் பகருவோம் விபர மாக.

29. ஒரு தகடுசெய்து எழுதி, அதனை இவளுக்கு அணிவிப்பாளாகில், முன்சென்மத் தீவினைகள் நீங்கி, புதல்வர்கள் தோன்றுவர். இந்தச் சாந்தி செய்யத் தவறுவானேல், புதல்வர்கள் தோன்றுவது சந்தேகமே என்று சொன்னேம். சொல்லப்பட்ட சாந்தியை எங்ஙனம் செய்வது? அதனைப் பற்றி இறுதியில் விவரமாகக் கூறுவோம்.

30. அன்னையின் குணத்தைச் சொல்வோம் அவளிரு நிறத்தா
[ளாகும்
தன்சொலு மடக்க முள்ளாள் சாந்தவான் வலிவு மில்லாள்
உன்னத மேக ரோகம் உறைந்திடு மூணைச்சல் தேகி
அன்னியர் குற்றஞ் சொல்லாள் ஆளன்தன் மனம்போல்
[வாழ்வள்.

30. ஜாதகன் தாயாரின் குணங்களைச் சொல்லுவோம். கரிய நிற முடையவள். பணிவு நிரம்பிய சொற்களைப் பேசுவாள். சாந்த முள்ளவள். பலமில்லாதவள். இவளுக்கு கொடிய மேக வியாதியுண்டு. மெல்லிய சரீர முடையவள். அயலார் மீது குற்றங் கூறமாட்டாள். கணவனின் மனக் குறிப்புணர்ந்து செயலாற்றுவாள்.

31. அறமதி லிச்சை யுள்ளாள் அவள்துணை நவமே யென்றேந்
திருவெனும் பெண்பால் நான்கு செல்வர்க ளோவ ராவர்
அவர்களி லிருவர் தென்பால் அணுகுவா ரென்று
[சொல்வோம்
இருவர்க ளுள்ளூர் வாழ்வா ரிவளில்ல முத்ர மென்றேம்.

31. தருமஞ் செய்வதில் விருப்ப முள்ளவள். இவளுடன் பிறந்தவர் ஒன்பதின்மர் என்று கூறினேம். இலக்குமிபோன்ற பெண்கள் நால்வர். ஆண்கள் ஐவர். சொல்லப்பட்ட ஒன்பதின்மரில் இருவர் மரணமடைவர் என்று கூறுவோம். இரு சகோதரிகள் உள்ளூரிலேயே கணவன்மார்க ளுடன் வசிப்பர். இவன் வீடு வடக்குத் திசையிலுளது.

32. அன்னையின் பூர்வஞ் சொல்வோ மச்சிறு பாக்கம் தன்னில்
இவளுமே வைசியச் சேயாய் எய்தியே சுகமாய் வாழ்ந்து
தன்னிலே சுதர்க ளுண்டாய்ச் சகலர்க்கு நல்லோ ளாகி
வந்தவர்க் கன்ன மீந்து மறலியின் பதிக்குச் சென்று;

32. தாயின் முற்பிறவியைச் சொல்லுவோம். அச்சிறுபாக்கத்தில், வைசிய மரபினளாகப் பிறந்து, சௌக்கியமாய் வாழ்க்கை நடத்தி, புத்திரப் பேறு பெற்று, அனேவர்க்கும் நல்லவளாகி, வீடு தேடி வந்தவர்க்கு உண வளித்து, மரண மடைந்து;.

33. வந்தவ ளிவளே யென்றே மங்கையும் வந்த பின்பு
பொங்கிருஞ் செல்வந் தானும் புகலுவோ மிவள்பின்
[சென்மம்
தென்திசை யரங்கந் தன்னில் செனிப்பளாஞ் சைவச்
[சேயாய்த்,
தன்பணி வதிக முண்டாய்த் தரணியில் வாழ்வ ளாமே.

33. மீண்டும் பிறந்தவள் இவள் என்று சொன்னேம். இவள் மனைவி யாக வந்தபிறகு கணவனுக்குச் செல்வம் கொழிக்கும். இவள் மறுபிறப் பைச் சொல்லுவோம். தென் திசையிலுள்ள ஸ்ரீரங்கத்தில், சைவ மரபின ளாகப் பிறப்பாள். மிகுதியான ஆபரணங்கள் முதலியவற்றை யடைந்து, உலகில் வாழ்ந்திருப்பாள்.

34. இவன்பிதா பூர்வஞ் சொல்வோம் விரிஞ்சிமா நகரந் தன்னில்
பவமுள வன்னிய சேயாய்ப் பிறந்தனன் கிருஷி யாலே
தவசிக ளுறவு கொண்டு சான்றோர்கள் பக்தி கொண்டு
நவனியில் வறுமை யின்றி நாயகன் சுகமே வாழ்ந்து;

34. ஜாதகன் தந்தையின் முற்பிறப்பைச் சொல்லுவோம். விரிஞ்சி புரத்தில், வன்னியர் குலத்தவனுய்ப் பிறந்தான். விவசாயத் தெழில் புரிந்து, தவங்களைச் செய்யும் பெரியோர்களிடம் உறவுகொண்டு, சான்றோரி டம் பக்தி பூண்டு, உலகில் தரித்திர மில்லாமல் சௌக்கியமுடன் வாழ்ந்து;

35. தென்திசைத் தலங்கள் சென்று சென்றனன் காலன் பக்கல்
வந்தனன் ரெட்டி வம்ச மாதியில் வறுமை யுண்டாம்
தன்தந்தை யாஸ்தி காணுன் தானவன் வடபால் சென்று
உன்னத பூமி சேர்ப்பன் உயர்வுண்டு மதிபோல் செல்வம்.

35. தென் திசையிலுள்ள புண்ணிய ஸ்தலங்கள் பலவற்றுக்குச் சென்று தரிசித்துவிட்டு, மரண மடைந்தான். இப்பிறப்பில் ரெட்டியார் மரபில் தோன்றினன். முதலில் இவனுக்குத் தரித்திரமுண்டு. தன் தந் தையின் அஸ்தியை யடையான். வடதிசை நோக்கிச் சென்று, நிலபுலன் களைச் சேர்ப்பான். வளர்பிறைச் சந்திரன்போல இவனுக்குச் செல்வத்தில் உயர்வுண்டாகும்.

36. ஈரொன்ப தாண்டு தன்னில் இயல்துலா மாதந் தன்னில்
சேருவான் காலன் பக்கல் தந்தையு மென்று சொன்னேம்
நாரியு மன்னைக் கேதான் நாட்டுவோம் நாற்பா னைந்தில்
தீரமாய்த் தனுசு மாதஞ் செப்புவோங் கண்டம் தானே.

36. ஜாதகனின் பதினெட்டாம் வயதில், ஐப்பசி மாதம் தந்தை இயமனுலக மடைவான் என்று கூறினேம். தாயாரின் மரண காலத்தைச் சொல்லுவோம். ஜாதகனது நாற்பத்தைந்தாம் வயதில், மார்கழி மாதம் நிச்சயமாய் மரணம் ஏற்படும் என்று கூறுவோம்.

37. சாதகன் பொதுயோ கத்தைச் சாற்றுவோஞ் சனனந் [தொட்டு
மேதினில் மரண மட்டும் வளர்பிறை போலே செல்வம்
பாதக மனமில் லாதான் பாருகள் சேர்ப்பா னுகும்
நீதியாய்க் கூவல் செய்வான் நிகர்சித்திர வில்லஞ் செய்வன்.

37. ஜாதகனுக்குப் பொதுவாக உண்டாகும் யோகங்களைச் சொல்லுவோம். பிறப்பு முதல் மரணம்வரை வளர்பிறைச் சந்திரன்போல் செல்வம் பெருகும். கெடுதலில்லாத மனத்தினன். நிலபுலன்களைச் சேர்ப்பான். கிணறுகள் தோண்டுவிப்பான். அழகிய வீட்டினை யமைப்பான்.

38. எந்தகா லத்தி லேதான் எய்திடு மில்லந் தானும்
வந்தவன் மூப்பா னெட்டின் மேலில்லஞ் செய்வா னுகும்
பிந்தியும் நாற்பா னெட்டில் பொருந்திடும் வேறு இல்லம்
முந்திய குடும்பி யாகு மெய்திடுங் காலாள் விருத்தி.

38. எந்தக் காலத்தில் இவனுக்கு புதிய வீடு கிடைக்கும். முப்பத் தெட்டாம் வயதிற்குமேல் ஜாதகன் புதிய வீடு கட்டுவான். மறுபடியும் நாற் பத்தெட்டாம் வயதில் வேறு வீடு கிடைக்கும். முதன்மையான குடும்பமுள் ளவனுவான். எவலாட்கள் விருத்தி யுள்ளவன்.

39. நாட்குநாள் பூமி சேர்ப்பன் நாற்பது மூன்றுண் டின்மேல்
தீர்ப்பாகச் சுதர்கள் விருத்தி செப்பிய சாந்தி செய்யில்
பார்ப்போர்க்குப் பெருமை யேற்பன் பாரினில் சல்லியங் [கொள்ளான்
காப்பனு மேழை தன்னைக் காதலி தன்னுல் யோகம்.

39. நாளுக்கு நாள் நிலங்களைச் சேர்ப்பான். நாற்பத்து மூன்றும் வயதுக்குமேல், முன்பு கூறப்பட்ட சாந்தியைச் செய்தால், நிச்சயமாகப் புத்திர விருத்தி யேற்படும். காண்பவர்கள் மேன்மையாக இவனைப் பற்றி

னக்கும்படி வாழ்வான். கடன் வாங்க மாட்டான். கதியற்றவர்களை ஆத
ரான். மனைவியால் இவனுக்கு அதிர்ஷ்டம் வாய்க்கும்.

அன்பது வேழு வாண்டில் அணுகிடுங் கண்ட மென்றேரும்
மன்னிய மேட மாதம் வளர்பிறைச் சட்டி தன்னில்
இன்னவ னுடல மேகும் இயம்புவோ மறுசென் மத்தைத்
தென்திசை தில்லை தன்னில் செனிப்பனும் பிரம்ம சேயாய்.

40. ஐம்பத்தேழாம் வயதில், சித்திரை மாதம், சுக்கில பட்சம் சஷ்டி
யில் ஜாதகன் மரண மடைவான் என்று சொன்னேம். இவனது மறு
ப்பைக் கூறுவோம். தெற்குத் திசையிலுள்ள சிதம்பரத்தில், அந்தணர்
த்தவனுகப் பிறப்பான்.

செனித்திடு காலந் தன்னில் சேய்தசை தனிலி ருப்புக்
குணித்திடு மாண்டு நாலுங் கூறுவோந் திங்கள் மூன்றும்
விணையுண்டு சாத கர்க்கு மிக்கநாற் காலி பீடை
இனபந்து சூத மெய்தும் இயம்புவோம் விவரம் ரெண்டில்.

41. ஜாதகன் பிறப்புக் காலத்தில், அங்காரக மகா தசையில், நான்கு
நஷத்திரங்களும், மூன்று மாதங்களு மிருப்பாம். அக்காலத்தில் ஜாதகனுக்குத்
ன்பங்க ளுளவாம். கால் நடைகளுக்கு மிகுதியான நோய்க ளுண்டாம்.
ர உறவினர்களுக்கு அசுபங்கள் நிகழும். மேலும் விவரங்களைப் பிற்பாகத்
ல் சொல்லுவோம்.

சாந்தியின் விபர மெவ்வார் சாற்றுவீர் முனியே நீர்தாம்
கூர்ந்திடு கலச மொன்பான் குலவுதா னியங்க ளவ்வார்
சேர்சமித் தவ்வா றுகச் சேர்த்துமே ஆடை சாற்றி
ஏந்திழைக் காடை சாற்றி எதிர்வந்து மூலஞ் சொல்லே.

42. மூன்பு கூறுவதாகச் சொன்ன சாந்திசெய்யும் விவரங்கள் எங்
னம்? முனிவரே! நீங்கள் கூறுங்கள். ஒன்பது கலசங்கள் ஸ்தாபித்து,
தானியங்களை ஒன்பது பாலிகைகளில் நிறைத்து வைத்து, கலசங்களுக்குப்
த்தாடைகள் அணிவித்து, அம்பிகையின் திருவுருவத்துக்கும் புது ஆடை
ர் சாத்தி, சமித்துக்களையும் ஒன்பது கட்டாகக் கட்டிவைத்து, அம்பிகை
ன் உருவத்துக்கு முன்பு வந்து பணிந்து பின்வருமாறு மூல மந்திரத்தை
பிக்க வேண்டும்.

வேறு

*43. ஓம்ஐயுங் கிலியுஞ் சவ்வும் மவ்வும்
முன்வினை நீங்கி ஓம்நசிமசி பட்படு ஸ்வாஹா
இந்தவார் மர்மஞ் சகஸ்திரஞ் சொல்லியே
இரணியத்தி லிம்மொழி வரையே
பின்பந்த வோமங்கள் தீப்படும் வாத்தி
யருளுவாய் கோடிதூ சதனைத்
தந்திடு வெள்ளைப் பூசனி பலியும்
சத்தியும் பூசனை வைத்துப்
பிந்தியுஞ் சகஸ்திரம் செபித்துமே தகட்டைப்
பேதையு மணிந்துபின் தூசை ;

43. என் முன்சென்மத் தீவினைகள் நீங்கவேண்டும் என மனத்தில் நினைத்து இரகசியமாக, ஓம், ஐம், க்லீம், சவ், மவ், ஓம், நசி, மசி, பட்படு, ஸ்வாஹா என்று இவ்விதமாக ஆயிரம்முறை ஜபித்து, பொற்றகட்டில் இந்த மந்திரத்தை எழுதி, கழுத்துக்கணைக் கொண்டு ஹோமத்தீ வளர்த்து, ஹோமத்தைச் செய்துவைத்த ஆசிரியருக்கு மிகுதியாகச் சன்மானங்கள் தெய்து, அவருக்குப் புதிய ஆடைகளையும் அளித்து, ஹோமம் செய்யும்பொழுது முழு வெள்ளைப் பூசனிக்காயைப் பலிகொடுத்து, அம்பிகையின் சந்நிதியில் மூல மந்திரம் பொறிக்கப்பட்ட தகட்டினை வைத்துப் பூசை இயற்றி, மறுபடியும் ஆயிரம்முறை ஜபம்செய்து, பிறகு தகட்டினை, ஜாதகன் மனைவி அணிந்துகொண்டு, புது ஆடைகளை;

44. செய்பவர்க் கீந்து சிறியவர்க் கொண்பால்
சாதமு மளித்துப்பின் சுக்கிரம்
ஐயமில் லாமலே விரதமே கொண்டு
அணுகிடு மாண்சுதர் ஒன்று
மைவிழி பெண்பா லவ்வாறு தோன்றும்
மைந்தனு மிடபமாம் பரணி
உய்குவா னென்றேஞ் சாதகன் மேலாய்
உதிப்பனும் நாற்பாலு லாண்டில்.

44. ஹோமத்தைச் செய்வித்தவர்க்குக் கொடுத்து, ஏழைகளுக்கு பால், உணவு முதலியன கொடுத்ததவி, பின்பு வெள்ளிக்கிழமை தோறும்

* இப்பாடலில் ஒருவரி மிகுந்துளது.

மனத்தில் குற்றமில்லாமல் விரதம் அநுஷ்டித்து வருவாளாஞல் ஆண் குழந்தையொன்று தோன்றும். சுருமையான விழிகளையுடைய பெண் ணொருத்தியும் பிறப்பாள். ஜாதகன் புதல்வன் விருஷப லக்னம், பரணி நட்சத்திரத்தில் பிறப்பான். தன் தந்தையைவிடச் சிறப்புடன் ஜீவிப்பான். ஜாதகனின் நாற்பத்து நான்காம் வயதுக்குமேல் இவன் தோன்றுவான்.


45. வயதுமே தீர்க்க மெய்தும் வரைந்தசாந் திகள்செய்
[யானேல்
வியமாகுஞ் சுதர்க ளென்றே மிருமனை நேரு மாகில்
தயவுடன் சுதர்க ளுண்டோ சாற்றுவீர் முனியே நீர்தாம்
வியமாகுஞ் சுதர்க ளென்றேரும் விளம்புவோம் விவரம்
[ரெண்டில்.

45. இவன் தீர்க்க வயதுடன் விளங்குவான். சொல்லப்பட்ட சாந்தி களைச் செய்யாது தவறுவாஞகில், புத்திர தோஷமுண்டாம் என்று சொன் னேம். இவனுக்கு இரண்டாம் மனைவி வாய்ப்பாளாகில் புத்திரர் தோன்று வரோ? முனிவரே! நீங்கள் சொல்லுங்கள். அவளுக்குத் தோன்றும் புதல்வர்களும் கஷ்டமாவர் என்று சொன்னேம்.—விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம்.

ஜாதகம் 105

1. மதிபுக ரீரவி நந்தி மங்களன் கடக மாகப்
புதன்சிகி வீணை யாகப் பொன்சனி மீன மாகச்
சதிசெயும் ராகு மேரு சென்மமு மிடப மாக
இதுவிதக் கோளு நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் சுக்கிரன் சூரியன் விருஷபத்திலும், செவ்வாய் கடகத்திலும், புதன் கேது மிதுனத்திலும், குரு சனி மீனத்திலும், ராகு தனுசிலுமாக நவக்கிரகங்களும் நின்று, இலக்கினம் விருஷபமாக வுள்ள ஜாதகப் பலனைச் சொல்லுங்கள்.



2. மங்கையுங் கேட்க லுற்ரூள் மாமுனி கூறு கின்ரூர்
இங்கிவை யாண்பால் சென்மம் இல்லமும் வடதென் வீதி
தங்கிடு கிழக்குப் பார்வை சங்கரன் கோட்ட முத்ரம்
சிங்கம்போல் ரூபங் கொண்ட தேவனுங் கீழ்ப்பா லாகும்.

2. என்று பார்வதிதேவி கேட்கும்போது, முனிவர் சொல்லுகின்ரூர். இஃது ஆண்பிறப்பு. பிறக்கும் வீடு வடக்குத் தெற்கான வீதியில் கிழக்கு நோக்கிய வாயிலை யுடையது. சிவபெருமான் கோயில் வடக்குத் திசையி லுள்ளது. நரசிம்மமாக அவதாரம் செய்த திருமால் கோயில் கிழக்குத் திசையில் உள்ளது.

3. தந்தியு முத்ரம் நிற்குஞ் சத்திமா காளி மேற்கில்
இந்தநல் லடையா ளத்துள் இலகிய நகர மாகும்
முந்திய தலமே யென்ரூம் முயற்சியாய்ச் செட்டு வோங்கும்
கந்துக வாச மாகுங் கவுரியின் குலமே யாகும்.

3. விநாயகர் வடக்கில் எழுந்தருளியுள்ளார். அம்பிகை, காளிதேவி ஆகியோர் கோயில்கள் மேற்கிலுள்ளன. இவ்விதமான நல்ல அடையாளங்

கள் விளங்கிய முதன்மையான நகரமாம் என்று சொன்னேம். அங்கு, தன் முயற்சியால் செய்யும் வியாபாரங்கள் உயர்ந்து விளங்கும். கட்டுத் தறியை முறிக்கின்ற யானைகள் வாசம்புரியும். இக்ககரில் கௌரீச வழிசத்தவனுக ஜாதகன் தோன்றுவான்.

வேறு

4. தந்தைதுணை பதிஞென்றில் ஆண்பால் மூன்று
சத்தியெனும் பெண்ணிருத்தி தீர்க்க மாகும்
பிந்தினதோர் துணையாகப் பேச லாகும்
பிரிதலுண் டவரவர்கள் பாகம் நான்காம்
தந்தைகுண மாஞ்சிவப்பன் சமதே·கத்தான்
சமர்த்தாக வார்த்தைசொல்வன் செட்டுச் செய்வன்
தன்மனத்தில் கபடுமிலான் ஊகை சாலி
தர்மகுண முன்கோபஞ் சாற்ற லாமே.

4. ஜாதகன் தந்தையுடன் பிறந்த பதிஞெருவரில் ஆண்கள் மூவர், பெண்ணிருத்தி. இவர்கள் நால்வரும் தீர்க்கமாவர். சகோதரர் மூவரும் இவனுக்கு இளையவர் என்று சொல்லுவோம். அவர்கள் தனித்தனியே வேறு குடும்பமாகப் பிரிவர். சொத்துக்கள் நான்கு பாகமாம். தந்தையின் குணங்களைச் சொல்லுவோம். கருமை கலந்த செந்நிற முடையவன். சமமான உடலமைப்பைப் பெற்றவன். சாமர்த்தியமாகப் பேசுவான். வியாபாரம் செய்வான். மனத்தில் வஞ்சனை யில்லாதவன். ஊகித்துணரும் ஆற்றல் படைத்தவன். கரும சிந்தை யுடையவன். முன்கோப முண்டு என்று கூறலாம்.

5. வித்தைபுத்தி யுடையவனும் பெரியோர் நேயன்
வீண்வம்பில் செல்லாணும் தைரி யத்தன்
நத்திணைரைக் காத்திடுவன் வாயு ரோகி
நாட்டினில் புகழுடையன் தெய்வ பக்தி
பித்தநலி மூலச்சூ டுடைய ணுகும்
பூமிகளைச் சேர்த்திடுவன் யோக சாலி
சுத்தமுளான் வறுமையிலா னீகை வாணும்
சிறுத்தவர்மே லிட்டமுளன் தேவி யேகேள்.

5. கல்வி யறிவுள்ளவன். நற்புத்தி யுடையவன். சான்ரோர்கள் அன்பைப் பெற்றவன். வீண் வம்புக்குப் போகமாட்டான். தைரியமுள்ளவன். துன்ப மடைந்தவர்களைக் காப்பான். வாயுரோக முள்ளவன். உலகில் கீர்த்தி யுள்ளவன். தெய்வ பக்தி யுடையவன். பித்தத்தால் துன்ப முறுவான். மூலச் சூடுடையவன். நிலபுலன்களைச் சேர்ப்பான். அதிர்ஷ்ட

முள்ளவன். தூய்மை யுடையவன். தரித்திர மில்லாதவன். கொடையாளி. தரித்திர மடைந்தவர்களிட்டம் அன்பு கொண்டவன். பார்வதியே! கேட்பாயாக.

வேறு

6. இன்நெறி யுடையா னுக்கு இவனுமே யாருஞ் சென்மம்
அன்னவ னுதிப்பா னுகும் அறைகின்றே மவன்கு ணத்தைப்
பின்னமில் லாத தேகன் பூமியில் செட்டுச் செய்வன்
அன்னியர் மெச்ச வாழ்வன் அவசர மனத்த னுமே.

6. இத் தன்மை யுடையவனுக்கு இந்த ஜாதகன் ஆரும் பிறப்பாகத் தோன்றுவான். இவன் குணங்களைச் சொல்லுகின்றோம். ஊன மில்லாத உடலுடையவன். வியாபாரம் செய்வான். அயலோர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். அவசர புத்தி யுள்ளவன்.

7. இருவிதக் கல்வி கற்பன் ஈகைவான் மனப யத்தன்
வறுமைகள் முன்பா கத்தில் வந்திடுஞ் செலவ னேகம்
குறையுண்டு குடும்பந் தன்னில் கூறுவோம் பின்பா கத்தில்
திருமகள் வாச முள்ளான் செம்பொன்னுஞ் சேர்ப்பா னுமே.

7. இருவிதமான கல்வி கற்பான். கொடையாளி. மனத்தில் அச்ச முள்ளவன். இளமைக் காலத்தில் இவனுக்குத் தரித்திர மேற்படும். செலவுகள் மிகுதி. குடும்பத்தில் குறை வேற்படும். விவரமாக இவற்றைப் பிற பகுதியில் சொல்லுவோம். இலட்சுமீ கடாட்சம் உடையவன். செம்மை பொருந்திய வெண்பொற் காசுகள் சேர்ப்பான்.

8. ரோமங்கள் நீட்சி யுள்ளான் நுவலுப தேசங் கொள்வன்
தீமையை யொருவர்க் கெண்ணன் தேவியால் யோக முண்டு
தாமதக் குணத்தா னுகுஞ் சஞ்சல புத்தி யுண்டு
நேமியோர்க் குதவி செய்வன் நிமலியே மேலுங் கேளே.

8. நீண்ட தலை மயிர் உடையவன். பெரியோர் சொல்லும் உபதேசங்களை ஏற்பான். ஒருவருக்குந் தீங்கு நினையான். மனைவியால் இவனுக்கு அதிர்ஷ்ட முண்டு. தாமதக் குண முள்ளவன். சஞ்சல மடையும் புத்தி யுடையவன். உலகிலுள்ள மக்களுக்கு உதவிகள் புரிவான். குற்ற மற்ற பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

9. தந்தையி னுர்ச்சி தத்தைத் தானவன் விருத்தி செய்வன்
சிந்தையும் வெகுளி யாவன் தேவதாப் பத்தி கொள்வன்
பிந்திய வயதில் பாக்கியம் பெற்றிடு வானு மென்றுமே
முந்தியே சல்லிய முள்ளான் முன்கரம் விஷ்ணு ரேகை.

9. தகப்பனாரால் தேடிவைக்கப் பட்ட ஆஸ்திையை இவன் மேலும் விருத்தி செய்வான். மனத்தில் கபட மற்றவன். தெய்வ பக்தி கொள்ளு வான். பிற் காலத்தில் பாக்கியங்களை யடைவான் என்று கூறிலேும். முன்பே கடனுள்ளவன். கையில் விஷ்ணு ரேகை யுடையவன்.

10. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோ மிருமூன் றுகும்
அவனியில் கன்னி யொன்று ஆணது வொருவன் தீர்க்கம்
இவனுமே யிளையோ னுக இயம்புவோங் கடகஞ் சென்மம்
நவனியில் பூரட் டாதி நாயக னுதிப்பா னுகும்.

10. இவனுடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுவோம். மொத்தம் அறுவர். அவர்களில், சகோதரி யொருத்தியும், சகோதரன் ஒருவனுமே தீர்க்கமாவர். கூறப்பட்ட சகோதரன், ஜாதகனுக்கு இளையவன் என்று சொல்லுவோம். கடக லக்கினம், பூரட்டாதி நட்சத்திரத்தில் அவன் பிறப்பான்.

11. அவன்குணங் கல்வி கொஞ்சம் அவசர மனத்த னுகும்
தவசிக ளுறவு கொள்ளான் தனமதைச் செல்வு செய்யான்
இவனுமுன் கோபங் கொஞ்சம் இருவித வார்த்தை
[சொல்வன்
உவமையாய்ப் பேசா னுகும் உள்மனங் கபடு கொஞ்சம்.

11. இளைய சகோதரனின் குணங்களைச் சொல்லுவோம். சிறிதே கல்வி யறிவுடையவன். அவசர புத்தி யுள்ளவன். தவங்களை யியற்றும் பெரியோர் நட்பைக் கொள்ள மாட்டான். செல்வத்தைச் செலவு செய்யாத வன். இவனுக்கு முன்கோபம் சிறிதுண்டு. இருவிதமாகப் பேசுவான். உபமானங்களைச் சேர்த்துப் பேசாதவன், மனத்தில் சிறிது கபடமுண்டு.

12. போசன மிட்டங் கொள்வன் பதார்த்தங்க ளதிகங்
[கொள்வன்
வேசிகள் மோக னுவன் வீணப வாத மேற்பன்
பாசமா யெவர்க்கு நண்பன் பலகாரப் பிரிய னுகும்
காசுமே லாசை யுள்ளான் கரமதி லுருத்திர ரேகை.

12. போஜனத்தில் விருப்பங் கொண்டவன். சாதம் தவிர காய் கறி முதலிய மற்றையவற்றை மிகுதியாகப் புசிப்பான். வீலமாதர் மீது மோக முடையவன். வீண் பழிகளை யடைவான். அன்புடன் எவருக்கும் நண்ப னுவன். சிற்றுண்டிகளில் விருப்ப முள்ளவன். பணத்தில் இச்சை யுடை யவன். இவன் கையில் உருத்திர ரேகை யுண்டு.

13. சிலவேளா ளொன்றுப் வாழ்ந்து செல்லுவான் வேறு
[கத்தான்
கலகங்கள் கூறு வானுங் காவலன் சிவந்த மெய்யன்
பலவிதக் குணத்தா னுகும் பாருகள் விருத்தி செய்வன்
அலைகடல் துயின்றோன் பக்தி அவனுமே கொள்வா னுகும்.

13. தன் மூத்த சகோதரனுடன் (ஜாதகனுடன்) ஒற்றுமையாகச் சில காலம் வசித்திருந்து, பின்பு வேறு குடும்பமாகச் செல்லுவான். கலகங்கள் செய்வான். சிவந்த உடலுள்ளவன். பலவிதக் குணங்க ளுடையவன். சில புலன்களை விருத்தி செய்வான். திருப்பாற்கடலில் யோக நித்திரை புரிகின்ற திருமாலின் மீது இவன் பக்தி கொள்ளுவான்.

14. பாரியா ளொன்றே யாகும் பாலர்க ளாண்பா லொன்று
தீரமாய்ப் பெண்பால் ரெண்டு செப்புவோ மிவனுக் கேதான்
கூறுவோ மூன்றுந் தீர்க்கங் குறித்தன மிரண்டு சேதம்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

14. இவனுக்கு மனைவி ஒருத்தியே. இவனுக்கு, ஆண் மகன் ஒருவனும் பெண்கள் இருவரும் உளராவர்; என்று சொல்லுவோம். இம்மூவரும் தீர்க்கமுடன் விளங்குவர் என்று சொல்லுவோம். மேலும் இரண்டு தோன்றிச் சேதமாம் என்று கூறினேம். முருகப்பிரானைப் புதல்வராக வடைந்த தாயே! கேள்.

15. உதித்தவன் மணத்தின் காலம் உரைக்கின்றே மிருபா
[னென்றில்
சதியிலாக் கிழ்ப்பா லாகச் சார்ந்திடு மந்த மாது
வதிசதி சிவந்த மேனி மர்மமில் லாதா ளாகும்
பதியினில் வாழ்வா ளாகும் பாவைநன் னடக்கை யுள்ளாள்.

15. ஜாதகனின் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். இருபத் தோராம் வயதில், இவனூர்க்குக் கிழக்கிலிருந்து, இவனுக்கு மனைவி வாய்ப் பாள். அவள் சிவந்த மேனியள். மனத்தில் மறைவில்லாதவள். கணவன் வீட்டில் நலமுடன் வாழ்க்கை நடத்துவாள். நல்ல நடத்தை யுடையவள்.

16. மாதுவும் வந்த பின்பு வந்திடும் விசேட யோகம்
பாதக மனமில் லாதாள் பரவுப காரி யாகும்
சூதிலாள் பொறுமை யுண்டு சொல்லது சுகமே யாவள்
மாதவர்க் கன்ப ளாகும் வரன்மனம் போலே வாழ்வள்.

16. இவள் வந்த பிறகு, கணவனுக்கு (ஜாதகனுக்கு) விசேடமான யோகங்களுண்டாம். கெட்ட எண்ண மில்லாதவள். பிறருக்கு உதவி செய்யும் இயல்பினள். வஞ்சனை யில்லாதவள். பொறுமை யுடையவள். இவள்

சொற்கள் நலந்தருவனவாம். பெரிய தவங்களைச் செய்யும் சான்றோர்க்குப் பிரியமானவள். கணவனின் மனமறிந்து வாழ்வாள்.

17. சுதர்களு மாண்பால் ரெண்டு தோகையு மூன்று மாகும்
சதமாகு மைந்துந் தீர்க்கஞ் சிரண மூன்று வென்றேரும்
மதிமுக மாதுர் சேதி யறைகின்றே மினிமே லாகச்
சதியிலா மனத்த ளாகுந் தங்கிடும் பித்த வாயு.

17. ஜாதகனுக்குத் தோன்றிய மக்களில், ஆண்கள் இருவரும், பெண்கள் மூவருமாவர். இவ்வைவரும் நிச்சயமாகத் தீர்க்கமாவர். மேலும் மூன்று பிறந்து சேதமாம் என்று கூறினேம். சந்திரன் போன்று அழகிய முகமுடைய தாயின் (ஜாதகனைப் பெற்றவள்) செய்தியை இனிமேல் சொல்லுகின்றேம். குற்றமற்ற மனத்தினள். உடலில் பித்தவாயு தங்கியிருக்கும்.

18. பொறுமையு மடக்க முண்டு புண்ணிய மனத்த ளாகும்
இருநிற மன்பா யன்ன மீகுவாள் சஞ்ச லத்தாள்
வறுமைகள் மத்தி யத்தில் வந்திடும் ஊக வானும்
மருமமுங் கொஞ்ச முண்டு வம்பிகை யாளே கேளாய்.

18. பொறுமை யுடையவள். பணிவுள்ளவள். நல்மன முடையவள். கரிய நிற முள்ளவள். வீடு தேடி வந்தவர்க்கு அன்புடன் உணவளிப்பாள். சஞ்சலமடையும் இயல்பினள். இவள் வாழ்க்கையின் மத்திய காலத்தில் தரித்திரம் ஏற்படும். ஊகிக்கும் சக்தி யுள்ளவள். மனத்தில் சிறிது மர்ம முண்டு. பார்வதி யம்மையே! கேட்பாயாக.

19. துணைவர்கள் நான்க தாகுஞ் சோர்ந்திடும் யாவுந் தானும்
கனமுள பெண்பா லொன்று கழறுவோர் தீர்க்க மாக.
வினையிலா விவள்த னில்லம் பேசுவோர் கிழ்ப்பா லாக
அனையவே யிவள்தன் பூர்வம் அறிவிப்போம் விவர மாக.

19. இவளுடன் பிறந்த சகோதரர் நால்வர். அனைவரும் மரிப்பர். சகோதரி யொருத்தி தீர்க்கமாக விருப்பாள் என்று சொல்லுவோம். குற்றமில்லாத இவளது வீடு கிழ்த்திசையி லுள்ளது என்று சொல்லுவோம். இவளுடைய முற் பிறப்பு வரலாறுகளை விவரமாகத் தெரிவிப்போம்.

20. அச்சிறு பாக்கங் கிழ்பபால் அணுகிய சிற்றூர் தன்னில்
பச்சைமால் மதத்த ளாகிப் பாரினில் கங்கை சேயாய்க்
கச்சணி மாது தோன்றிக் காதலி வறுமை யின்றி
துச்சன குணமில் லாமல் சுதர்களு மூடைய ளாகி;

20. அச்சிறு பாக்கத்துக்குக் கிழக்கே யுள்ளதொரு கிற்றூரில், திருமாலைத் தொழும் வேளாள மரபினளாய்ப் பிறந்து, தரித்திரமல்லாமலும், கெட்ட குணங்களின்றியும், கணவன், மக்கள் ஆகியவரை யடைந்து ;

21. பெரிதான குடும்பி யாகிப் பூமியில் வாழு நாளில்
வரன்துணை மனைவி பேரி லறைந்திட்டாள் சிலவே குற்றம்
உறன்முறை யதனைக் கேட்டு ஓதுக்கினர் மாதைத் தாமும்
விரைவினில் திகில டைந்து விளம்புவாள் சாபந் தானும்.

21. மேன்மையுள்ள குடும்பத்தவளாய் உலகில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில், தன் கணவனின் சகோதரனது மனைவி மீது, அபாண்டமாகச் சில குற்றங்களைக் கூறினள். இவள் புக்ககத்தைச் சேர்ந்த பந்துக்கள், இதனைக் கேட்டு அவளை விலக்கினர். விரைவில் மிக்க திகிலடைந்து, அப் பெண்பின்வருமாறு சாப மிடுகின்றாள்.

22. பெண்பழி சொன்ன பாவி பிறந்திடு மறுசென் மத்தில்
தன்துணை யில்லா தாகித் தன்குலங் குற்ற மாயும்
அன்னவள் மத்தி யத்தில் அமங்கலி யாக வாழ்வாள்
இன்னவார் சொல்லி யேதான் இறைத்தனள் மண்ணை வாரி

22. "பெண்ணின் மீது வீண் பழியைச் சொன்ன பாவி, வரும் பிறவியில், தன்னுடன் பிறந்தவர்கள் இல்லாதவளாய், குலத்திலும் களங்க முடையவளாய், வாழ்க்கையின் மத்திய காலத்தில் கணவனை யிழந்து, கைம் பெண்ணாகி வாழ்வாள்" என்று இவ்வாறு கூறிவிட்டு, தெரு மண்ணை வாரி யிறைத்தாள்.

23. மனமது கலக்க முற்று மங்கையுஞ் சொல்ல லுற்றாள்
வினையது விவளைச் சேர்ந்து வித்தகி யந்தி யத்தில்
பிணையான [1]பல்லரணை கண்டு புக்கினள் காலன் பக்கல்
கனமுடன் பிரம னுலே காசினில் வரையப் பட்டு;

23. அந்தப் பெண் மிகவும் மனக்கலக்க மடைந்து, இவற்றைச் சொன்னாள். அத் தீவினை இவளை (ஜாதகன் தாயை)ச் சேர்ந்தது. கடைசிக் காலத்தில் பல்நோய் எற்பட்டு இவள் மரண மடைந்தாள். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இவ்வுலகில் ;

24. வேதத்தோன் மலைக்கு மேற்கில் மேவிய பேரூர் தன்னில்
கோதிலாக் கௌரி வம்சம் குதித்தன ளிவளே யென்றும்
ஓதுவோ முன்னூழ்ச் சாபம் உறுந்துணை யில்லா தாகும்
தீதான நிந்தை யுள்ளாள் செப்புவோ மிவள்பின் சென்மம்.

1. பல் வியாதி

24. திருக்கழுக்குன்றத்துக்கு மேற்கில் உள்ளதொரு பெரிய ஊரில், குற்றமல்லாத கௌரீக வமிசத்தில் பிறந்தாள் இவள் என்று கூறினேம். முற் பிறவியில் இவளுக்கு ஏற்பட்ட சாபத்தினால் இப் பிறவியில் உடன் பிறந்தோர் இல்லாதவளாவாள் என்று சொல்லுவோம். கொடிய பழியையும் அடைவாள். இவள் மறுபிறப்பைக் கூறுவோம்.

25. வடமலை வேங்க டத்தில் மாதுவும் வைசியச் சேயாய்
உறைகுவாள் சுகமுண் டாகி உத்தமி வாழ்வா ளாகும்
சடைமுனி யிவ்வார் கூற சங்கரி கேட்க லுற்றாள்
அடைவுட னிச்சென் மத்தில் அவள்செய்த புண்ய மென்ன.

25. வடக்கிலுள்ள திருவேங்கட மலையில், வைசிய குலத்தவளாய்த் தோன்றி, சௌக்கியத்துடன் இவள் வாழ்வாள். சடை முடியை யுடைய முனிவர் இவ்வாறு சொல்ல, பார்வதி கேட்கத் தொடங்கினாள். இப் பிறவியில் இவள் செய்த நல்வினைகள் யாவை ?

26. சொல்லுவீர் முனியே நீர்தாம் துன்பமாய் வருவோ ருக்கு
அல்லலைத் தீர்த்த தாலும் அயலார்தங் குற்றந் தன்னை
வல்லியுஞ் சொல்லாத தாலும் மாதுவுந் தெய்வ பக்தி
நல்லதோர் மனத்த ளாயும் நாயகி வாழ்வ தாலே;

26. முனிவரே ! நீங்கள் சொல்லுங்கள். துன்பத்துடன் வருபவரது, கஷ்டங்களைப் போக்குவதாலும், பிறர் மீது குற்றங்களைக் கூறுதலாலும், தெய்வ பக்தி யுடையவளாயும், நல் மனமுள்ளவளாயும் இவள் வாழ்ந்து வருவதாலும்;

27. பிறப்பளா மிவளே யென்றேம் பெரும்பணி யதிக
[முண்டாய்
வறுமைக ளில்லா ளாகி மாலின்மேல் பக்தி கொண்டு
அறமதி லிச்சை பூண்டு அவளுமே வாழ்வா ளாகும்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

27. மறுபிறப்பில், திருவேங்கட மலையில், வைசிய குலத்தவளாய்ப் பிறப்பாள் இவள் என்று கூறினேம். மிக்க ஆபரணங்கள் முதலியன பெற்று, திருமாலின்மீது பக்தி பூண்டு, தருமஞ் செய்வதில் ஆசையுண்டாகி, இவள் வழ்ந்து வருவாள். பெருவயிற்றை யுடைய விநாயகரைப் புதல்வராக வடைந்த புண்ணியவதியே ! கேட்பாயாக.

28. சாதகன் பூர்வந் தன்னைச் சாற்றுவோங் காஞ்சி மேல்பால்
மேதினி லருகில் சிற்றூர் விளங்குமால் தலத்தி லேதான்
கோதிலாப் பாவை வம்ச குலத்தினி லுதித்து மேலும்
மாதுகள் தமக்கு வித்தை யோதியே பரதஞ் சொல்லி ;

28. ஜாதகன் முற் பிறவியைச் சொல்லுவோம். காஞ்சிபுரத்துக்கு மேற்கில், மிகவும் அருகிலுள்ளதும், திருமால் எழுந்தருளி யிருக்கும் சிறந்த தலமு மானதொரு சிறிய ஊரில், குற்றமற்ற கௌரீக குலத்தில் பிறந்து, பெண்களுக்குக் கல்வியும், பரத நாட்டியமுங் கற்பித்துக் கொண்டு ;

29. பெருமையும் புகழுண் டாகிப் பூமியுங் கொஞ்ச முண்டாய்
வறுமைக ளிலலா வாழ்ந்து மாலின்மேல் பக்தி கொண்டு
திருமகீ மதலை யுண்டாய்ச் செகமதில் நல்லோ னாகி
மறலியின் பதிக்குச் சென்று மலரயன் வரையப் பட்டு;

29. பெருமையும் கீர்த்தியும் ஏற்பட்டு, சிறிது நிலபுலன்களையு மடைந்து, தரித்திர மின்றி வாழ்ந்து, திருமால்மீது பக்தி பூண்டு, அழகிய மனைவி மக்கள் ஆகியோரை யடைந்து, உலகத்தாருக்கு நல்லவனாகி, மரண மடைந்து மீண்டும்; தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனால் படைக்கப் பட்டு ;

30. வந்தவ னிவனே யென்றே மறைகின்றே மிவனின் யோகம்
வந்தநாள் முதலா யாக வரும்நான்கு வாண்டு மட்டும்
தன்தனஞ் செலவே நேருந் தன்பூமி விரய மாகும்
சிந்தையும் கலக்க மாகுஞ் சல்லிய மிகவே யுண்டாம்.

30. இப்பிறப்பில் பிறந்தவன் இவன் என்று சொன்னோம். இவனது யோகங்களைச் சொல்லுகின்றோம். பிறந்த நாள் முதல் நான்கு வருஷங்கள் வரை, குடும்பத்தில் பணச் செலவு ஏற்படும். வீடு நிலங்கள் விற்கப்படும். மனக் கலக்கங்க ளுண்டாம். கடன் தொந்தரவு மிகுதியாக உண்டாகும்.

31. மூவெட்டு வாண்டு மேலாய் மொழிகின்றோம் விசேட [யோகம்
தாவிய பூமி சேருஞ் சல்லிய நிவிர்த்தி யாகும்
மேவிய செட்டு வோங்கும் விளங்கிடுந் தனதான் யங்கள்
தீவெல்லாங் கீர்த்தி யேற்பன் செம்பொனு மிகவே சேரும்.

31. ஜாதகனது இருபத்து நான்கு வயதுக்கு மேல் விசேஷமான யோகங்கள் ஏற்படும் என்று சொல்லுகின்றோம். வீடுநிலங்கள் சேரும். வியாபாரத் தொழில் மேன்மையுறும். செல்வம், தானியங்கள் இவைகள் மிகு தியாம். நாடெங்கும் புகழடைவான். மிகுதியான பொன்கள் சேரும். கடன் தொந்தரவு நீங்கும்.

32. வண்டிவா கனமு மெய்தும் வாக்குச்சொல் மேன்மை
[யாகும்
குண்டைகோ விருத்தி யுண்டு குலத்துளோர் மதிக்க
[வாழ்வன்
பண்டிபண் டாரஞ் சேர்ப்பன் பலவிதச் செட்டுச் செய்வன்
அண்டர்கள் பூசை செய்வன் அம்பிகை யாளே கேளாய்.

32. வண்டி முதலான வாகன வசதிகள் ஏற்படும். இவன் சொல்லு கின்ற வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். காளை, பசுக்கள் விருத்தி யாம். குலத்தவர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். வண்டிகள், இடங்கு முதலியன அமைப்பான். பலவிதத் தொழில்கள் புரிவான். தெய்வ பூஜை செய்வான். பார்வதி யம்மையே! கேட்பாயாக.

33. மூப்பது வாண்டு தன்னில் மேவிடும் வேறு யில்லம்
செப்புவோம் உத்தி ரத்தில் சித்திர வீடு நேரும்
எப்போதும் வறுமை யில்லான எடுத்தகா ரியமு டிப்பன்
அப்பணி சடைடேயோன் தேவி அருளிய மொழிகுன் றுது.

33. மூப்பது வருஷத்துக்கு மேல், வேறு வீடொன்று இவனுக்குக் கிடைக்கும். வடக்குத் திசையில் அவ் வழகிய வீடு கிடைக்கும் என்று சொல்லுவோம். எப்பொழுதும் தரித்திர மில்லாதவ னுவான். தொடங் கிய செயல்களைத் திறம்படச் செய்து முடிப்பான். கங்கையை யணிந்த சடைமுடியை யுடைய சிவபெருமான் பத்தினியே! கூறிய சொல் தவறாது.

34. தந்தையின் பூர்வந் தன்னைச் சாற்றுவோ மோதூர்
[மேற்கில்
முந்திய பேரூர் தன்னில் உதித்தனன் தீயின் வம்சம்
தந்தன மில்லா னுகிச் சந்ததி மனைவி யுண்டாய்ச்
சிந்தையில் தெய்வ பக்தி சேயனுங் கொண்டு மேதான் ;

34. ஜாதகன் தகப்பனாரின் முற்பிறப்பைச் சொல்லுவோம். ஓதூர் என்ற தலத்துக்கு மேற்கிலுள்ள தொரு பெரிய ஊரில், வன்னியர் குலத்தவ னுகப் பிறந்தான். சொந்தமாகப் பொருளில்லாதவனும், மனைவி மக்களை யடைந்து, மனத்தில் தெய்வ பக்தி பூண்டு ;

35. வறுமைகள் மிகவே கொண்டு மறலியின் பதிக்குச் சென்று
சிரனுன்கோன் வரையப் பட்டுச் செனித்தன னிவனே
[யென்றேரும்
மறுசென்மம் வள்ளூர் தன்னில் மறைக்குல முதிப்பா னுகும்
பெருமுனி கூறும் போது புகலுவார் அம்மன் தாமும்.

35. மிக்க தரித்திரமுடன் வாழ்ந்து, எமனுலக மடைந்து, நான்கு தலைகளை யுடைய பிரமனுல் மீண்டும் படைக்கப்பட்டு, இப் பிறப்பாகப்

பிறந்தவன் இவன் என்று சொன்னேம். மறுபிறப்பு, திருவள்ளூரில் அந்தணர் மாபில் பிறப்பான். முனிவர் இங்ஙனம் சொல்லும்போது, பார்வதியம்மன் கேட்கின்றுள்.

36. என்னகா ரணத்தி னுலே இவன்மறைக் குலமு திப்பான்
முன்னமே கூறு மென்ன மொழிகுவார் கௌசி கர்தாம்
அன்னவன் மறையோர் நேசம் அரிபக்தி மிகவே கொண்டு
வந்தவர்க் கன்ன மீந்து மனமது கபடு மின்றி;

36. என்ன காரணங்களினுல் இவன் மறுபிறப்பில் அந்தணர் குலத்தவனுகத் தோன்றுவான்? அவற்றை முதலில் சொல்லுங்கள், என, கௌசிக முனிவர் கூறுவார். இவன் இப்பிறவியில் அந்தணர்களிடம் நட்புக் கொண்டும், திருமால் மீது மிக்க பக்தியுடனும், வீடு தேடி வந்தவர்கட்கு உணவளித்தும், மனத்தில் வஞ்சனே யின்றியும்;

37. இருப்பதால் மறுபி றப்பில் இயம்பிடு மறை யோனுக்
கருமத்தின் காலம் சொல்வோங் காவலன் நாலாண்
[டின்மேல்
பெருமாசி தன்னி லேதான் பேசுவோந் தந்தை கண்டம்
திறமையாய் முப்பான் மூன்றில் சிங்கமா தத்தி லே தான்.

37. வாழ்ந்து வருவதால், மறுபிறப்பில் அந்தணனுகத் தோன்றுவான் என்று சொன்னேம். ஜாதகனுக்குக் கருமதசை வரும் காலங்களைக் கூறுவோம். ஜாதகன் பிறந்து நான்கு வருஷங்களுக்குப் பின்பு, மாசி மாதம் தந்தைக்கு மரண முண்டாகும். ஜாதகனது முப்பத்து மூன்றும் வயதில், ஆவணி மாதம்;

38. அன்னைக்குக் கண்ட மெய்தும் அறுபது ரெண்டு வாண்டில்
உன்னதத் தனுசு மாதம் உயர்பக்க மேகா தசியில்
இன்னவ னுடலம் வாடும் இயம்புவோம் பின்சென்
[மத்தைக்
கன்னென மொழி யினுளே காதலி கேட்டி டாயே.

38. தாய்க்கு மரணம் ஏற்படும். அறுபத்திரண்டாம் வயதில் உயர்ந்த மார்கழி மாதம் சுக்கிலபட்சம் ஏகாதசியில் ஜாதகன் மரண மடைவான். இவன் மறுபிறப்பைச் சொல்வோம். கரும்பு போன்ற இனிய சொற்களைக் கூறும் பார்வதியே! கேள்.

39. அவ்வூரில் கங்கை சேயாய் அதிகமாய்த் தனவா னுக்குப்
பவ்வமா யிவனு தித்துப் பாரினில் செட்டுச் செய்து
திவ்விய குணத்தா னுகிச் சேயனும் வாழ்வா னுகும்
ஒவ்விய மலையின் மாதே உத்தமி கேட்டி டாயே.

39. அவ்வூரிலேயே வேளாளர் குலத்தில் மிக்க செல்வ முடைய ஒருவனுக்குப் புதல்வனுய்த் தோன்றுவான். மிகுந்த வியாபாரங்கள் செய்து, நல்ல குணமுடையவனுய், இவன் வாழ்ந்திருப்பான். ஒப்பில்லாத இமயமலை யரசன் புதல்வியே! கேட்பாயாக.

40. பாலகன் செனன காலம் பானுவின் தசையி லேதான்
கோலமா யாண்டு ரெண்டு கூறுவோந் திங்க ளாறும்
பாலகன் தனக்கு ரோகம் பலவித விரய மாகும்
ஞாலமேல் தாய்தந் தைக்கு நாட்டுவோம் ரோகந் தானே.

40. ஜாதகனது பிறப்புக் காலத்தில், சூரிய மகா தசையில் செலவு இரண்டு வருஷங்களும் ஆறு மாதங்களுமாம் என்று சொல்லுவோம். அக் காலத்தில் ஜாதகனுக்கு வியாதி யுண்டாகும். பலவிதச் செலவுகள் ஏற்படும். தாய் தந்தையர்க்கும் நோயுண்டாம் என்று சொல்லுவோம்.

41. சுயபந்து சூத மெய்துஞ் சோதரால் களவு கொஞ்சம்
வியமுள மணங்க ளெய்தும் விளங்குவர் துணைவர் தாமும்
பயமுள கண்டம் நேரும் பாலகன் தனக்கு மேதான்
நயமுடன் ரெண்டி லேதான் நாட்டுவோம் விபர மாக.

41. உறவினர்களுக்கு அசுபங்கள் ஏற்படும். சகோதராால் பிதிராாச் சிதச் சொத்தில் சிறிது அபகரிக்கப்படும். செலவுகள் உண்டு. சுபச் செயல்கள் நிகழும். உடன்பிறந்தோர் சிறந்து விளங்குவர். ஜாதகனுக்கு அச் சத்தை விளைவிக்கும் கண்டங்கள் உண்டாம். விவரமாக இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம்.

ஜாதகம் 106

1. ஈசனூர் வாகனந்தான் சென்ன மாகி
இரவிபுத னதிலிருக்கச் சிகியும் வீணை
நேசமுடன் குருசனியு மரியில் புக்க
நீள்மதியும் தெருக்காலில் குசனுங் கும்பம்
வாசமுள புகர்மீனம் ராகு வில்லில்
வந்தசே யாண்பிறப்பு வடையா ளங்கேள்
தேசமெலாம் புகழ்கின்ற கிரிக்குத் தெற்குத்
தினமரசர் வாழூர்க்கு வத்தர மாமே.

1. சிவபெருமான் வாகனமாகிய விருஷபம் சென்ம லக்கினமாகி, சூரியன் புதன் இலக்கினத்திலும், கேது மிதுனத்திலும், குரு சனி சிம்மத்திலும், சந்திரன் விருச்சிகத்திலும், செவ்வாய் கும்பத்திலும், சுக்கிரன் மீனத்திலும், இராகு தனுசிலும் நிற்க, பிறந்த குழந்தை ஆண் பிறப்பாகும். பிறந்த ஊரின் அடையாளம் கேட்பாயாக. உலகெங்கும் புகழ்கின்ற திருவேங்கட மலைக்குத் தெற்கிலும், மன்னர்கள் வாழுகின்ற நகர மொன்றுக்கு வடக்கிலும் உள்ளது.

சுக்கிரன்		லக்கினம் சூரியன் புதன்	கேது
செவ்வாய்	இராசி சக்கரம்		குரு சனி
ராகு	சந்திரன்		

2. கீழ்மேல்பால் சாலையுண்டு மத்தி லேதான்
கிளைக்குமே சிற்றாரில் கீழ்மேல் வீதி
தாழ்விலா வடபார்வை யில்லாத் தானும்
சக்தியரன் தந்திகோட்ட மீசான் யத்தில்
சூழவே தென்மேற்கில் சமணன் கோயில்
சொல்லுவோ மேற்கினிலே துர்க்கை நிற்கும்
வாழ்வான மாதுருதன் வீட்டில் வந்தோன்
வமிசமோ கங்கைகுல மாரன் தானே.

2. அவ்வூருக்குக் கிழக்கிலும், மேற்கிலும் சாலை மார்க்கங்க ளுள்ளன. இவற்றுக்கு இடையில் இருக்கின்றதொரு சிற்றூரில், கிழக்கு மேற்கான தெருவில் வடக்குப் பார்வை யுடைய வீட்டில் ஜாதகன் பிறப்பான். வட கிழக்கில், அம்பிகை, பரமசிவன், விநாயகர் ஆகியோர் கோயில்கள் உள்ளன. தென்மேற்கில் ஜினதேவர் ஆலய மூள்ளது. மேற்கில் துர்க்கையம்மன் கோயில் உள்ளது என்று சொல்லுவோம். ஜாதகன் தனது தாய் வீட்டில் பிறந்தவன். இவன் வேளாள மரபில் தோன்றியவன்.

வேறு

3. சாதகன் செனன யோகஞ் சாற்றிய வன்னை யோகம்
போதவே துணைவர் யோகம் புதல்வரும் மனைவி யோகம்
நீதியாய்த் தந்தை யோகம் நிகழ்த்துவோம் பின்முன்
[சென்மம்
சோதியாய் இவன்பின் சென்மஞ் சொல்லுவோங் கேளு
[மம்மா.

3. ஜாதகனின் ஜனன கால யோகங்கள், தாய், தந்தையர், உடன் பிறந்தார், மனைவி, மக்கள் ஆகியோர் யோகங்கள், தந்தையின் யோகம் முத லியவற்றைக் கூறுவோம். இவர்களது முற்பிறப்பு மறு பிறப்புக்களையும், ஜாதகனது மறுபிறப்பையும் சொல்லுவோம். கேளுங்கள், தாயே!

வேறு

4. இன்னவன் செனன மிருப்பிட மதற்கு
இசைகுவோங் கடிகைமூன் றுக்குள்
நண்ணிய வடபால் தந்தையின் ஊரும்
நவிலுவோங் கிழக்கினில் மார்க்கம்
முன்னமீ சானியங் காளியும் வாசம்
முயன்றிடுஞ் சக்தியும் நிற்கும்
மன்னவன் திசையில் மாரியுங் குண்டம்
வடமேற்கில் நதிக்கரை யாமே.

4. ஜாதகன் பிறந்த ஊருக்கு வட திசையில், மூன்று நாழிகை வழி தொலைவில், தந்தையின் ஊருளது என்று சொல்லுவோம். அவ்வூருக்குக் கிழக்கில் சாலையொன் றுள்ளது என்று கூறுவோம். வடகிழக்கில் காளி தேவி வாசம் புரிகின்றாள். அம்பிகையும் அங்கு எழுந்தருளி யிருக்கின்றாள். கிழக்குத் திசையில் மாரியம்மன் கோயிலும் குளமும் உள்ளன. வடமேற்கில் ஆற்றங்கரை யுண்டு.

வேறு

5. தந்தையி னில்லந் தன்னைச் சாற்றுவோங் கீழ்மேல் வீதி
வந்ததோர் வடபால் நோக்கம் வாசலில் மூத்தோன் வாசம்
சிந்தையா யெதிரில் பாழாம் தென்மேற்கில் கோட்ட முண்டு
நொந்திடு மந்தக் கோயில் நுவலுவோங் கேளு மம்மா.

5. ஜாதகனது தந்தையின் வீட்டைச் சொல்லுவோம். கிழக்கு மேற்கான தெருவில் வடக்குப் பார்த்த வாயிலுடையது. வாயிலருகில் விநாயகர் வாசம் புரிகின்றார். எதிர்வீடு பாழடைந்துளது. தென்மேற்குத் திசையில் கோயிலொன்றுண்டு. அதுவும் பாழ்பட்டிருக்கும். மேலுஞ் சொல்லுவோம். கேளுங்கள், தாயே!

6. தந்தைக்குச் சகோதரங்கள் சாற்றுவோ மாண்பால் ரெண்டு
வந்திடுங் கன்னி யொன்று வளமுடன் விருத்தி யாகும்
எந்தையே யினிமே லாக இலகினு மரிட்ட முண்டாம்
தந்திமா முகனைப் பெற்ற தையலே கேட்டி டாயே.

6. ஜாதகன் தந்தையுடன் பிறந்தவர்களில் ஆண்கள் இருவர் என்று சொல்லுவோம். சகோதரி யொருத்தியும் தோன்றி விருத்தியாவாள். இவர்களுக்குப் பிறகு தோன்றினாலும் விளங்காமல் நஷ்டமாம். விநாயகரைப் புதல்வராக வடைந்த பார்வதியே! கேட்பாயாக.

7. சாதகன் சகோதரங்கள் சாற்றவாண் பலத்தைக் காணும்
நீதியாய்க் கன்னி நான்கு நிலைத்திடு மென்று சொன்னேம்
தீதிலா விதன்மே லாகச் செனிக்கினு மரிட்ட முண்டாம்
போதக வானை பெற்ற புண்ணிய சாவி கேளாய்.

7. ஜாதகனுடன் பிறந்தவர்களைப் பற்றிக் கூறும்போது, அவனுக்குச் சகோதரர்கள் இல்லை என்று சொல்லலாம். சகோதரிகள் நால்வர் தோன்றி, நிலைப்பார்கள் என்று கூறினேம். இவர்களுக்குப் பின்பு தோன்றினாலும் நிலையாமல் நஷ்டமாம். யானைமுகக் கடவுளைப் புதல்வராக வடைந்த புண்ணியவதியே! கேட்பாயாக.

8. இன்னவன் நிறங்கு ணத்தை இயற்றுவோம் ஓடிச்ச
[லுள்ளான்
நண்ணிய சமதே கத்தன் நாட்டுமா நிறமாந் தேகன்
பன்னிய பயிரு முள்ளான் பாலர்க ளதிக மில்லான்
அன்னங்கள் போட வல்லான் அண்டின பேரைக் காப்பன்.

8. ஜாதகன் நிறம், தன்மை இவற்றைச் சொல்லுவோம். மெல்லிய சரீரமுடையவன். சமமான உடலமைப்பைப் பெற்றவன். கரிய நிற முள்ளவன். பயிர்த்தொழி லுடையவன். மக்கட் செல்வம் மிகுதியாக அடையாதவன். வீடு தேடி வந்தவர்களுக்கு உணவளிக்க வல்லவன். தன்னை யடைந்தவர்க்கு காப்பான்.

9. பதநடை சொகுசு முண்டு பருத்ததோர் விழியு முள்ளான்
இதமுள வெவர்க்கு நல்லன் ஏழைமேல் பிரிய னுவன்
சதமுள தரளத் தந்தம் தரணியு மதிக முள்ளான்
கதைகளைக் கேட்க வல்லான் கல்வியு மற்ப மாமே.

9. இலாகவமான நடையுடையவன். பெரிய கண்களுள்ளவன். நல்லவர்கள் யாவருக்கும் நல்லவனுக விருப்பான். ஏழைகள் மீது அன்புடையவன். உறுதியானவையும் முத்துக்கள் போன்றவையுமான பற்களுள்ளவன். நிலபுலன்கள் மிகுதியாகப் பெற்றவன். பெரியோர் சொல்லுகின்ற புராணக் கதைகளைக் கேட்பதில் வல்லவன். சிறிதே கல்வி யுள்ளவன்.

10. கணக்கினில் சமர்த்த னுகும் கனமுட னெவர்க்கு நல்லன்
பிணக்குக ளதிகஞ் செய்யான் பொய்யிலான் பித்த தேகி
வணக்கமு முடைய னுவன் வள்ளல்மேல் பத்தி யுள்ளான
குணக்கெழுந் தனமுந் தானே கூறுவோ மேலுங் கேளே.

10. கணக்கில் சாமர்த்தியசாலி. யாவருக்கும் நல்லவனுக விளங்குவான். மாறுபாடான செயல்கள் மிகுதியாகச் செய்யாதவன். பொய்யுரையான். பித்த தேக முடையவன். பணிவுள்ளவன். கடவுள் பக்தி யுடையவன். இவன் வீட்டுக்குக் கிழக்கில் புதையல் கிடைக்கும். மேலும் சொல்லுவோம்; கேட்பாயாக.

11. முன்கோபங் கொஞ்ச முண்டு முனிவர்கள் பக்தி யுள்ளான்
தன்மனங் கபடு முண்டு சந்தோட வார்த்தை சொல்வான்
அன்னியர் குற்றந் தன்னை அயலாருக் குரைக்க மாட்டான்
மன்னவன் புளிப்பி லிச்சை மர்மமா மனத்த னுமே.

11. சிறிது முன் கோப முள்ளவன். தவமுடையோர் மீது பக்தி கொள்ளுவான். மனத்தில் வஞ்சனை யுடையவன். மகிழ்ச்சிதரும் சொற்களைப் பேசுவான். ஒருவர் செய்த குற்றத்தைப் பிறரறியக் கூறமாட்டான். புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களில் விருப்ப முடையவன். மனத்தில் மறைவுள்ளவன்.

12. உறுதியா மனத்த னுகும் உண்மையை வெளிவி டாதான்
கருதிடான் நினைத்த கார்யம் காவலன் முடிப்ப னம்மா
வருவோர்க்கு வன்ன மீவன் மாதுரு தீர்க்க முள்ளாள்
பெருமையு முடைய னுவன் ப்ரபலமு மாக வாழ்வன்.

12. திடமுள்ள மனத்தினன். மனத்திலுள்ளவற்றை வெளிவிட மாட்டான். கெடுதியை மனத்திலும் நினையான். நினைத்த செயல்களே இவன் செய்து முடிப்பான். தாயே! வீடு தேடி வருபவர்க்கு உணவளிப்பான். இவன் தாய் தீர்க்க வயதுள்ளவள். மேன்மை யுடையவன். எங்கும் பரவிய புகழுடையவனாக வாழ்வான்.

13. கோதுமை ரேகை யுண்டு குறைசுழி ரேகை யுண்டு
ஆதியாய்ச் சங்கு சக்ரம் அவன்கையி லுண்டு வம்மா
பாதியா யவன்வீ டுந்தான் பகிர்ந்துபின் மூன்று பங்கு
நீதியாய்ச் சொன்னேம் யாங்கள் நிமலியே கேட்டி டாயே:

13. கையில் கோதுமை ரேகை யுள்ளவன். சுழி யொன்று முடைய வன். சங்கு சக்கர ரேகைகளும் இவன் கையில் உள்ளன. முதலில் இவன் வீடு பாதியாகப் பிரிக்கப்பட்டு, பின்பு மூன்று பங்குகளாகப் பிரிக்கப்படும் என்று முறையாக நாங்கள் சொன்னேம். குற்றமற்ற பார்வதியே! கேட் பாயாக.

14. கால்கரம் வலுவ தாமே கனத்தவ ரிட்ட முள்ளான்
மால்தேவி யருளு முண்டா மைந்தன்சொல் தவறான் மேலு
நீள்புவி தன்னில் சூழி நிறுத்துவான் விருப்ப முள்ளான்
கோவுகள் விருத்தி யுள்ளான் கூறுவோ மணத்தைக் கேளே.

14. இவனுக்குக் கை கால்கள் வலிவுள்ளனவாக இருக்கும். மதிப் புடைய பெரியோர் விருப்பத்தைப் பெறுவான். இலட்சுமீ கடாட்சம் ஏற்ப டும். சொல் தவறாதவன். குளம் முதலான நீர்நிலைகளே யமைப்பான். மேன்மை யுடையவன். பசுக்கள் விருத்தி யுள்ளவன். இவன் திருமணத் தைப் பற்றிச் சொல்லுவோம். கேட்பாயாக.

15. சாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோ மிருபான் ரெண்டுள்
மாதிவள் மேற்குத் திக்கில் வந்திடுங் களத்ரந் தானே
நீதிலாக் குணத்தை யாங்கள் செப்புவோஞ் சிவந்த தேகி
கோதிலாப் பித்த முள்ளாள் கூறுவோ மேலுங் கேளே.

15. ஜாதகனின் திருமணம் நடைபெறுங் காலத்தைக் கூறுவோம். இருபத்திரண்டாம் வயதில், மேற்குத் திசையிலிருந்து இவனுக்கு மனைவி வாய்ப்பாள். அவளது குற்றமற்ற குணங்களே நாங்கள் சொல்லுவோம்.

வெந்த உடலுள்ளவள். பித்த சரீர முடையவள். மேலுங் கூறுவோம். கேட்பாயாக.

16. தன்மன மிசையா ளாகுந் தந்தையார்ச் சிதமில் லாளாம்
பந்தமா மாம னில்லம் பெருகிடு மிவளுக் கம்மா
சந்ததஞ் சொற்ப ரோகி தன்வார்த்தை தடுத்துச்
[சொல்வார்
மைந்தரு மதிக மில்லாள் மங்கையும் வாழ்வா ளம்மா.

16. மனத்தில் நல்லெண்ண மில்லாதவள். தகப்பனாரால் தேடி வைக்கப்பட்ட சொத்துக்க ளில்லாதவள். மாமன் வீடு இவளுக்குக் கிடைக்கும். தாயே! சிறிது வியாதி யுடையவள். இவள் கூறுகின்றவற்றைப் பலரும் மறுத்துப் பேசுவர். புத்திர பாக்கியம் மிகுதியாக வடையாதவள். இவ் வாறுக இவள் வாழ்ந்திருப்பாள்.

17. இவ்வித மறுவர் கூற இயல்முனீ கேட்க லுற்றார்
செவ்வையா யொன்பா னேடு செழித்தபொன் கூடி நின்றுல்
நவ்விய புத்திர தோடம் நாட்டினீ ரந்தச் சேதி
பவ்வமா யுரைப்பீ ரிந்தப் பாலகன் தனக்குத் தானே.

17. இங்ஙனம் ஆறு முனிவர்களுஞ் சொல்ல, ஏழாவது முனிவ ரொருவர் கேட்கின்றார். நன்முறையில் ஒன்பதா மிடத்தவனுகிய சனியுடன், குருவும் சேர்ந்து நின்றதால், ஜாதகனுக்குப் புத்திர தோஷம் ஏற்படு மென்று சொன்னீர்கள். அந்த விவரத்தைத் தகுந்தவாறு சொல்லுங்கள்!

18. முனிவரிவ் வாறுய்க் கேட்க மொழிகுவார் புசண்டர் தாமும்
பனிமதி நீச்ச னுகப் பார்மக னஞ்சைப் பார்க்கக்
கனிவுள முன்னுள் வூழி காலோக்கு நேர்ந்த தாலே
இனியிந்த சென்மந் தன்னில் இவனுக்காண் புத்திர ரில்லை.

18. இவ்விதம் ஒரு முனிவர் கேட்கவும், புஜண்டமா முனிவர் விடை சொல்லுவார். சந்திரன் நீச்சமாகவும் செவ்வாய் ஐந்தா மிடத்தை (புத்திர ஸ்தானத்தை) ப் பார்ப்பதாலும், ஜாதகனுக்கு முற் பிறப்பில் ஜீவஹத்தி பல சேர்ந்ததாலும், இப்பிறப்பில் இவனுக்கு ஆண் குழந்தை யில்லை.

வேறு

19. முன்சென்ம வுழைச் சொலுமென்று கேட்க
மொழிகுவார் புசண்டரு மேதான்
மன்னவ னுலங் காட்டினி லேதான்
வன்னிய சாதியாய்ப் பிறந்து
சொன்னமும் பூமி புத்திரர் பெண்டு
சுகமுடன் வாழ்கின்ற நாளில்
அன்னிய மாது அவள்பேரில் மோகம்
அன்புடன் கொண்டவ னுதி ;

19. முற் பிறப்புத் தீவினைகளைக் கூறுங்கள், என்று பார்வதி தேவி கேட்கவும், புஜண்ட முனிவர் சொல்லுவார். ஜாதகன் முற் பிறவியில், திருவாலங்காட்டில், வன்னிய மரபினனுய்ப் பிறந்து, பொன் நிலபுலன்கள் முதலியன பெற்று, மனைவி மக்களை யடைந்து சௌக்கியமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் நாளில், அயலான் மனைவி யொருத்திமீது மையல்கொண்டு ;

வேறு

20. பலவித வார்த்தை கூறிப் பாவையைப் போகந் துய்த்துக்
குலவியே வருங்கா லத்தில் குறித்தவள் கேள்வன் கண்டு
இலகிடா தோட்டி விட்டான் எம்மையும் புலம்பி வாடி
நலமிலா விவன்பால் வந்து நங்கையு மேது சொல்வாள்.

20. பலவிதமான நய மொழிகளைச் சொல்லி, அவளுடன் இன்ப மனுபவித்து வந்த காலத்தில், அவள் கணவன் இதனை யுணர்ந்தான். உடனே இவளைத் தன் வீட்டில் இருக்க வொட்டாது விரட்டி விட்டான். இவளும் மிக்க வருத்தமுற்று, இவனிடம் (ஜாதகனிடம்) வந்து பின்வருமாறு கூறுவாள்.

21. உன்னுடை மதியால் கெட்டேன் உலகத்தில் வசையு [மானேன்
என்னயான் செய்வே னென்ன இறையவன் அமைத்த [வாறே
துன்னிய விவ்வா றுகத் தோகையும் புலம்பும் போது.
இன்னவ னேது செய்தான் எந்தையே கேட்டி டாயே.

21. உனது தூர்ப்போதனையால் நான் அழிந்தேன். உலகத்தில் பழி யடைந்தேன். யான் யாது செய்வேன். கடவுள் காட்டிய வழி இதுவோ ? என்று இங்ஙனம் சொல்லி, அவள் புலம்பும் பொழுது, இவன் என்ன செய்தா னென்று சொல்லுவோம். முனிவரே ! கேளுங்கள்.

22. என்னுடை யாயுள் மட்டும் இறையவன் தனக்கொப் பாக
உன்னையும் பிரியே னென்று உறுதியும் பலமாய்ச் சொல்லி
அன்னையே யவளைச் சேர்ந்து அழகுடன் வாழும் போது
வின்னமா யோர்நாள் தீங்கு விளைந்ததை யுரைக்கக் கேளே.

22. எனது ஆயுள் முடிவுவரை, கடவுள் சாட்சியாக, உன்னை விட்டுப் பிரியாமல் இருப்பேன் என்று நிச்சயமாகக் கூறி, அவளுடன் சௌக்கியமாக வாழ்ந்துகொண் டிருக்கும்போது, ஒரு தீங்கு நேர்ந்தது. அதனை சொல் லக் கேட்பாயாக.

23. வந்திடு வம்மா துக்கு வளர்கரு வயிற்றில் தங்கச்
சொந்தமா யின்னேன் கண்டு சுகமுடன் கர்ப்ப முற்றிச்
சந்ததி யுதித்த தாலுல் செல்வமு மவளுக் கென்று
விந்தையாய் மனத்தி லெண்ணி மேல்நமக் கிடைஞ்ச
[லென்று ;

23. இவனுடன் வந்து சேர்ந்த அப் பெண்ணுக்கு, வயிற்றில் கரு தங்கியது. இவன் அதனை யுணர்ந்து, இவள் கர்ப்பம் முதிர்ந்து, குழந்தை பிறந்தால், நம் சொத்துக்கள் அவளையே சாரும் என்ற விசித்திர எண்ணத்தை மனத்தில் கொண்டு, இனிமேல் இவளால் நமக்கு இடையூறுதான் என்று கருதி ;

24. அவளுடைக் கருவை மாய்க்க அனேகமா யவிழ்த்த மீந்து
பவமுடன் சிசுவும் வீழப் பாவையு மரண மானுள்
அவமுள வந்தத் தோடம் அணுகிவன் தன்னைச் சூழ்ந்து
தவமுள ஆயுள் போக்கித் தரித்திடு மரண மாகி ;

24. அவளுடைய கருவினை யழிப்பதற்குப் பலவித மருந்துகள் கொடுத் தான். அதனால் குழந்தையும் மரித்து, அவளும் இறந்தாள். குற்ற முடைய வந்தத் தோஷம் இவனைச் சூழ்ந்தது. இவனும் சிறிது காலத்தில் மரண மடைந்து ;

25. நரகத்தில் பன்னாள் மூழ்கி நாற்றலைக் கஞ்சன் தன்னால்
உரமுடன் வரையப் பட்டு உதித்திடு மிச்சென் மத்தில்
திறமைகா ராள னாகத் திகழ்குலந் தன்னில் வந்த
அறமிக வளர்க்கு மாதே அவனிவ னென்று சொன்னேம்.

25. பலகாலம் நரகத் துன்பத்தை அனுபவித்து, நான்கு தலைகளை யுடைய பிரமனால் மீண்டும் படைக்கப் பட்டு, இப்பிறவியில் காராளர் குலப் புதல்வனாய்ப் பிறப்பான். தருமத்தினை வளர்க்கின்ற தருமாம்பிகையே! அத்தன்மை யடைந்தவன் இவன் என்று சொன்னேம்.

26. முந்திரா ளுழி தங்கி முனிவுட னின்னே னுக்கு
விந்தையா யிருப்ப தாலே விளங்காரே புத்ர ரெல்லாம்
நைந்திடு மரிட்ட மாகும் நாயகி தனக்கு ரோகம்
தந்திமா முகனைப் பெற்ற தையலே கேட்டி டாயே.

26. முற் பிறப்புத் தீவினை, கொடிய தன்மையாய் இப் பிறப்பில் இவனிடம் தங்கி யிருப்பதால், தோன்றும் புதல்வர்கள் நிலையார். நஷ்டமாவர். மனைவிக்கும் வியாதி யுண்டாகும், விநாயகக் கடவுளைப் புதல்வராக வடைந்த தாயே! கேட்பாயாக.

27. அவ்விதத் தோடந் தீர அருளுவோங் கிரிகை யொன்று
நவ்விய நவக்கோ ளோமம் நவிலுசாந் திகளுஞ் செய்து
ஒவ்விய ரசதந் தன்னில் உறும்பாலன் செய்து மேலும்
பவ்யமாய்த் தான மீந்து பரிதியின் வார நோன்பு;

27. அந்தத் தோஷம் நீங்குவதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுவோம்: நவக்கிரக ஹோமத்தையும் சாந்திகளையும் செய்து, வெள்ளியால், குழந்தை யின் உருவொன்று செய்து, அதனைத் தானமாகக் கொடுத்து, ஞாயிற்றுக் கிழமை விரதத்தினை;

28. ஓராண்டு செய்வா ளுகில் உதித்திடும் பிள்ளை தீர்க்கம்
சீரான யோகந் தானுஞ் செழிப்புறும் நினைத்த வெல்லாம்
நேராக முடியு மேலும் நீள்நில மதிக முண்டு
காராளன் தன்னைப் பெற்ற காதலி மேலுங் கேளே.

28. ஒரு வருஷம் செய்துவந்தால், தோன்றும் குழந்தை தீர்க்கமாம். நல்ல யோகங்கள் மிகுதியாக ஏற்படும். நினைத்தவை யனைத்தும் இனிதாக முடியும். வீண் நிலங்கள் அதிகமாகச் சேரும். கரிய நிறமுள்ள யானைமுகத் தோனைப் புதல்வராக வடைந்த பார்வதியே! மேலுங் கேள்.

29. சாந்தியுஞ் செய்யா ளுகில் சந்ததி விருத்தி யில்லை
நேர்ந்தகா ரியங்க ளாகா நீணில மலைச்ச லுண்டு
கூர்ந்திடுங் கிரிகை செய்தால் குணமாகும் யாவும் நன்மை
சான்றோர்கள் தம்மைக் காக்கும் தயாபரி மேலுங் கேளே.

29. சாந்தி செய்யாம லிருப்பாளுகில், புத்திர விருத்தி ஏற்படாது. நினைத்த செயல்கள் கைகூடா. அலைச்சல் உண்டாகும். பொருந்திய சாந்தி யைச் செய்தால் தோஷம் நிவர்த்தியாகும். யாவும் நன்மையாகவே முடி யும். தவமியற்றும் பெரியோர்களைக் காக்கும் தயையுடைய பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

30. இவ்விதம் புசண்டர் கூற இயல்கும்ப முனியுஞ் சொல்வார்
செவ்வையா யொன்போன் பத்தோன் சேர்ந்துமே விருப்ப
[தாலும்
பவ்வமாய்க் குருவுஞ் சேர்ந்து பந்துவின் தான மேறக்
கவ்விய பலங்கள் தம்மைக் கழறுவீ ரென்று கேட்க ;

30. இங்ஙனம் புஜண்ட முனிவர் சொல்லவும், அகத்திய முனிவர் பின்வருமாறு கூறுவார். ஒன்பதாமிடத்துக்கும் பத்தாமிடத்துக்கும் உரிய சனியோடு, குருவும் சேர்ந்து பந்து ஸ்தானமாகிய (நான்காமிடம்) நிம்மத்தில் இருப்பதால் ஏற்படும், பலன்களைச் சொல்லுவீர் என்று கேட்க;

31. செயமுனி சொல்லு கின்றார் சேயோனும் வருவோ ருக்கு
நயமுடன் தண்ணீர்ப் பந்தல் நாயக னளிப்பான் மேலும்
பயமிலா மார்க்கந் தன்னில் பார்சுமை தாங்கி வைப்பான்
தயையுடன் சோலை வைப்பன் தர்மமாய் மடமுஞ் செய்வன்.

31. செய முனிவர் கூறுகின்றார். தண்ணீர்ப் பந்தல் வைத்து, சாலைவழியில் செல்பவருக்கு, ஏற்படும் விடாய்தீரத் தண்ணீ ரளிப்பான். பாரம் சுமந்து செல்லுபவர்கள், தங்கள் சுமையை இறக்கிவைத்து இளைப் பாறுவதற்குச் சுமைதாங்கி வைப்பான். கருணையுடன், வெயிலில் செல்லு வோர் தங்குவதற்கு சாலைகளில் மரங்களை வளர்த்துச் சோலை யமைப்பான். தரும சத்திரம் கட்டுவான்.

32. ஆலய வேலை செய்வன் அரனுக்குப் பூசை செய்வன்
சீலமாய் வருவோ ருக்குத் தினமன்ன மளிப்பான் மேலும்
கோலமாய்த் திட்சை யுள்ளான் குறைவிலாச் சித்ர வீடு
வேலனுஞ் செய்வா னென்று விளம்பினே முனிவ ரம்மா.

32. கோயில் திருப்பணிகள் செய்வான். சிவபெருமானுக்குப் பூசை கள் புரிவான். தன் வீடு நோக்கிவரும், ஒழுக்கமுள்ள சான்றோர்கட்குத் தினந்தோறும் உணவளித்து உபசரிப்பான். தீட்சை மேற் கொள்ளுவான். இவன் குறையொன்று மில்லாத அழகிய வீடு கட்டுவான் என்று முனிவர்க ளாகிய நாங்கள் கூறினேம்; தாயே!

33. சாதகன் செனித்த நாளாய்ச் சாற்றுவோம் பலனைக் கேளாய்
மேதினி லிருபான் நான்குள் விரயங்க ளநேக நேரும்
போதவே தந்தை மரணங் காலிபூமி பலிதம் நட்டம்
தீதான குணமாஞ் சௌக்யக் குறைவாகுஞ் சனங்கள்
[பகையாம்,

33. ஜாதகன் பிறந்ததுமுதல் ஏற்படும் பலன்களைச் சொல்லுவோம்; கேள். இவனது இருபத்துநான்காம் வயதுக்குள் செலவுகள் மிகுதியாக நேரும். தந்தை இறப்பான். கால் நடைகள் சேதமடையும். விளைநிலங்களில் நஷ்ட மேற்படும். கெடுதலான குணங்களுடையனாக விருப்பான் நலக்குறை வுண்டாகும். உறவினர்கள் பகையாவர்.

வேறு

34. அதுமுத லீரைஞ் சாண்டுமே பலன்கள்
அறிகின்றேஞ் சமபல னாகும்
நிதியது வில்லான் பெரியவர் நேசம்
நீள்நில மதிகமே சேர்ப்பன்
பதிதனில் சுகமாங் கூபங்க ளுண்டு
பாதையில் தர்மமே செய்வன்
அதிகமாங் கீர்த்தி நினைத்தது முடிப்பன்
ஆவுக ளடிமைகள் விருத்தி.

34. அந்தக் காலம் முதல் பத்து வருஷங்கள் வரைக்கும், ஜாதகனுக்குச் சுகதுக்க மிரண்டிலும் சமமான பலன்கள் ஏற்படும் என்று உணருகின்றோம். செல்வமில்லாது விளங்குவான். பெரியோர் நட்பு உண்டாகும். நிலபுலன்கள் மிகுதியாகச் சேர்ப்பான். குடும்பத்தில் சௌக்கியம் உண்டு. கிணறுகள் தோண்டுவிப்பான். சாலை மார்க்கங்களில் வருபவருக்காகத் தண்ணீர்ப் பந்தல், சுமைதாங்கி முதலியன அமைத்தலாகிய நற்காரியங்களைச் செய்வான். புகழ் மிகுதியாம். நினைத்த செயல்களை முடிப்பான். பசுக்கள் விருத்தியும், ஏவலாட்கள் பலரும் உடையவன்.

35. சந்ததி யுண்டு சீரண மாகும்
தன்பந்து மரணமே யாகும்
சிந்தையில் கிலேசம் வந்திடும் பின்பு
தீர்ந்திடு மிதற்குமேல் யாவும்
அந்தமாய் மரணம் வரைக்குமே பலன்கள்
அறைகின்றேம் பாக்கிய விருத்தி
சந்ததி யுண்டு தானியஞ் சேரும்
சம்பத்து வதிகமே யுண்டாம்.

35. புத்திர பாக்கியம் ஏற்படும். பின்பு அவை நஷ்டமாம். உறவினர் மரணமடைவர். மனத்தில் கவலை தோன்றும். பிறகு நிவிர்த்தியாம். இதற்குமேல் மரணம்வரை உண்டாகக்கூடிய பலன்களைச் சொல்லுகின்றோம். பாக்கியங்கள் மிகுதியாம். சந்ததி விருத்தியுண்டு. நெல் முதலான தானியங்கள் சேரும். செல்வமும் மிகுதியாகக் கிடைக்கும்.

36. தேவதாப் பணியுஞ் செய்குவான் சோலை
சித்திர வீடுமே யுண்டாம்
மேவலர் புகழ யாவரு மெச்ச
மேதினில் கீர்த்தியு முண்டாம்
ஆவலா யடுத்தோர் தம்மையே காப்பன்
அநேகபூ மிகளுமே சேரும்
கோவலர் மெச்ச வாழ்ந்திடு வானும்
கூறினே முனிவர்க ளம்மா.

36. தெய்வத் திருப்பணிகள் பல புரிவான். சோலைகள் அமைப்பான். அழகிய வீடு இந்த ஜாதகனுக்குக் கிடைக்கும். பகைவரும் இவனை மெச்சும்படியும், உலகத்தினர் அனைவரும் பாராட்டும்படியும் மிகுந்த கீர்த்தியுண்டாகும். தன்னை யடுத்திருப்பவரை அன்புடன் காப்பான். அதிக நிலபுலன்கள் சேரும். அரசர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். இவ்விதமாக முனிவர்களாகிய நாங்கள் சொன்னோம்.

வேறு

37. துன்னவன் மரண காலம் அறைகின்றே மறுபான் மூன்றி
அன்னியத் தேளின் மாதம் சனி நாளில் பருவந் தன்னில்
இன்னவன் பித்த ரோகம் இருமலால் மரண மாகிப்
பொங்நகர் தன்னைச் சார்ந்து பிறந்திடுஞ் சென்மஞ்
[சொல்வோம்.

37. ஜாதகனின் மரண காலத்தைச் சொல்லுகின்றோம். அறுபத்து மூன்றும் வயதில், கார்த்திகை மாதம் சனிக்கிழமை பௌர்ணமியன்று, பித்த வியாதியால் உண்டாகிய இருமலினால் மரணமடைந்து, பொன்னுலக மடைவான். மீண்டும் தோன்றும் பிறவியைச் சொல்லுவோம்.

38. காசியின் நதியின் பக்கல் கனமுள வைசிய ஜாதித்
தேசங்கள் தன்னி லேதான் செட்டுக்க ளதிகஞ் செய்து
பாசமாய் யாவ ருக்கும் பந்துக்கள் தமக்கு மேலாய்ப்
பூசையும் புரிவா னன்னம் போடுவா னகதி கட்கு;

38. காசி க்ஷேத்திரத் தருகில் ஓடுகின்ற கங்கை நதிக்குப் பக்கத்திலுள்ளதோர் ஊரில், மேன்மையுள்ள வைசிய குலத்தவனுய்த் தோன்றி, பல நாடுகளுக்குச் சென்று, வியாபாரங்களே மிகுதிபாகச் செய்து, உறவினர்களுக்கும், மற்றவர்க்கும் மேலான நிலையை யடைந்து, அதிதி பூஜைகள் செய்வான். கதியற்றவர்க்கு உணவளிப்பான்.

39. தானமுந் தர்மஞ் செய்வன் சகலரும் புகழ வாழ்வன்
ஆனந்த முடையோ ஞக அண்ணலைப் பூசை செய்து
தானவ னுடனே சேர்வன் சத்தியே மொழிகுன் றுவே
ஆனமா முகனைப் பெற்ற அன்னையே மேலுங் கேளே.

39. தான தருமங்கள் செய்வான். அனைவரும் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். எப்பொழுதும் மகிழ்ச்சி யுடையவனாய், கடவுளுக்குப் பூஜைகள் புரிந்து, உடனே இயமனுலகமடைவான். அம்பிகையே! நாங்கள் சொல்லிய சொற்கள் தவறு. யானைமுகக் கடவுளைப் புதல்வராகப் பெற்ற தாயே! மேலுங் கேட்பாயாக.

40. அறுவரிவ் வாருய்க் கூற அன்புள பராசர் சொல்வார்
திறமையாய்ப் புதல்வர் சேதி செப்புவீ ரென்று கேட்கப்
பெருமையாய்ப் புசண்டர் சொல்வார் பேசின சாந்தி
[செய்தால்
அறைகின்றே மாண்பா லொன்று அன்புடன் கன்னி
[ரெண்டு.

40. ஆறு முனிவர்கள் இங்ஙனம் சொல்ல, அன்புடைய பராசரர் கூறுவார், இவனுக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும் விவரங்களைச் சொல்லுவீர் என, சிறப்பாக புஜண்ட முனிவர் கூறுவார். முன்பு கூறிய சாந்தியை ஜாதகன் செய்தால், புதல்வன் ஒருவனும், பெண்கள் இருவரும் தோன்றுவர் என்று சொல்லுகின்றோம்.

41. மூவருந் தீர்க்கஞ் சொன்னேம் மொழிகின்றே மிரண்டாம்
[பாகம்
யாவத்துச் சேதி யெல்லா மறைகின்றேம் விவர மாக
மூவர்க்கு மேன்மை யான முத்தியுங் கொடுக்கு நல்ல
தேவியே யாங்க ளிப்போ சொலுமொழி குன்றி டாவே.

41. மேற்கூறிய மூவரும் தீர்க்கமாவர் என்று சொன்னேம். மற்றச் செய்திக ளனைத்தையும் விவரமாக இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம். பிரமன், சிவபெருமான், விஷ்ணு ஆகிய மூன்று தேவர் நிலைகளினும் சிறந்ததான வீட்டுப் பேற்றை யளிக்கும். பார்வதி தேவியே! நான்கள் இப்பொழுது சொல்லிய மொழிகள் தவறுபடா.

ஜாதகம் 107

1. பிறைசனி மான தாகப் புயங்களுங் [1]கெண்டை யாகக்
குருகோலில் சேயு மேரு கூரியன் பானு வெள்ளி
விரைகட கத்தில் தங்க வின்சிகி கன்னி யாக
வருஞ்சென்மம் நந்தி யாக வறைகுவீர் பலனைத் தானே.

1. சந்திரன் சனி மகரத்திலும், இராகு மீனத்திலும், குரு துலாத்திலும், செவ்வாய் தனுசிலும், புதன் சூரியன் சுக்கிரன் கடகத்திலும், கேது கன்னியிலும் நின்று, ஜென்ம லக்கினம் விருஷபமாக விருந்தால் எற்படும் பலன்களைச் சொல்லுவீர்.

இராகு		லக்கினம்	
	இராசி சக்கரம்		புதன் சூரியன் சுக்கிரன்
சந்திரன் சனி			
செவ்வாய்		குரு	கேது

2. வந்தவ ணைஞ் சென்மம் வாசனு முத்திர நோக்கம்
இந்திரன் குடகு வாடை யாளிவா கன்ததர ஞத்ரம்
சந்திரன் சடைய ணிந்தோன் தானவன் கோட்ட மீனம்
தந்தியுந் தென்மே லாகுந் தலையற்றேள் குடகு வென்றோம்;

2. இஃது ஆண் பிறப்பு. பிறந்த வீட்டுக்கு வாயில் வடக்கு நோக்கியது. கிழக்கு மேற்கான வீதியாகும். சிங்கவாகனமுடைய துர்க்கையம்மன் கோயில் வடக்கிலுள்ளது. பிறைச் சந்திரனைத் தலையிலணிந்த சிவபெருமான் கோவில் வடகிழக்குத் திசையில் இருக்கின்றது. விநாயகர் தென் மேற்கில் எழுந்தருளி யிருக்கின்றார். மாரியம்மன் கோயில் மேற்கில் உளது என்று கூறினேம்.

3. மாலும்பாஞ் சாலி வாயு வறைகின்றேஞ் சமஹர் தன்னில்
சாலவே பிரம்ம சேயாய்ச் செனிப்பனு மிவனே யென்றோம்
ஏலவே யன்னை தந்தை யிவன்துணை களத்ர புத்ரர்
கோலமா முன்பின் சென்மங் கூறுவோந் தாயே யாங்கள்.

1. மீனராசி

3. திருமால், திருவேபதியம்மன் ஆகியோர் கோயில்கள் வடமேற்குத் திசையில் உள்ளன என்று சொல்லுகின்றோம். இங்ஙனமாக வுள்ள சமமான நிலப்பாங்குடைய ஊரில், அந்தணர் குலத்தவனுய்ப் பிறப்பான் இந்த ஜாதகன் என்று சொன்னேம். இவனது தாய்தந்தையர், உடன் பிறந்தார், மனைவி மக்கள் முதலானவர்களைப் பற்றியும், முற்பிறப்பு மறு பிறப்புக் களைக் குறித்தும் நாங்கள் சொல்லுவோம்; தாயே!

4. கல்விமான் கடவுட் பத்தி கபடதைக் காட்டா ஞகும்
இல்லேயென் றுரைக்க மாட்டான் இடர்செய்யான் யாவ
[ருக்கும்
சல்லிய முடைய ஞகுந் தன்துணை காணு ஞகும்
புல்லிய புத்தி யில்லான் பேதைய ரிட்டங் கொள்வன்.

4. ஜாதகன் தந்தை, கல்வி யறிவுடையவன். தெய்வ பக்தி யுள்ளவன். வஞ்சனையை வெளிக்காட்டாதவன். தன்னிடம் வந்து யாசிப்பவர்களுக்கு இல்லே யென்று கூறமாட்டான். ஒருவருக்குந் துன்பஞ் செய்யாதவன். கடனுள்ளவன். உடன் பிறந்தார் இல்லாதவன். அற்ப புத்தி கிடையாது. பெண்கள் மீது விருப்ப முடையவன்.

5. செலவுக ளதிகஞ் செய்வன் சினவுப காரி யாவன்
நலமூளோர் நேசங் கொள்வன் நற்றல வாசஞ் செல்வன்
அலேகடல் துயின்றோன் பக்தி அவனுமே கொள்வா ஞகும்
கலகத்தைக் கூறு நெஞ்சன் கரமதி லுருத்ர ரேகை.

5. மிக்க செலவுகள் செய்வான். மக்களுக்கு உதவிகள் செய்பவன். நற்குணமுடைய பெரியோர் நட்பைப் பெறுவான். நல்ல புண்ணிய ஸ்தலங் களுக்குச் சென்று சிலகாலம் வசிப்பான். அலேகளையுடைய பாற்கடலில் கண் வளர்ந்தருளிய திருமால் மீது இவன் பக்தி கொள்ளுவான். பிறரைப் பற்றிக் கலகமான சொற்களைக் கூற நினையாத மனத்தினன். இவன் கையில் உருத்ர ரேகை யுண்டு.

6. இவனுடைப் பூர்வஞ் சொல்வோ மினிதான பெண்ணே
[யோரம்
நவமதில் சிற்றூர் தன்னில் நல்கினுன் கங்கை சேயாய்
அவனியில் சீவித் தேதான் அன்புளோ ருறவு கொண்டு
பவமது விலக்குஞ் சேது பறந்துமே தீர்த்தந் தோய்ந்து;

6. ஜாதகனின் தந்தையின் முற் பிறப்பைச் சொல்லுவோம். நல்ல பெண்ணே யாற்றங்கரை யோரமுள்ள சிறிய ஊரொன்றில், வேளாளர் குலத் தவனுகப் பிறந்தான். தன்னிடம் அன்புகொண்ட பெரியோர்கள் நட்பைப்

பெற்று, உலகில் வாழ்க்கை நடத்தி, தீவினையைப் போக்குகின்ற சேது வுக்குச் சென்று நீராடி ;

7. அகதிகட் கன்ன மீந்து அனேகவா லயங்கள் சென்று
பகையான கால நாடு பறந்துமே பிரமன் லக்கம்
தகைமையா யிக்கு லத்தில் செனித்தவ னிவனே யென்றேம்
வகையுட னின்றே னுக்கு வருவனே யிந்தப் பாலன்.

7. கதியற்ற ஏழைகளுக்கு உணவளித்து, மிகுதியான கோயில்களுக் குச் சென்று, ஆங்கு எழுந்தருளியுள்ள கடவுள்ளரை தரிசித்து, பின்பு மரண மடைந்து, மீண்டும் பிரமனல் படைக்கப்பட்டு, இக் குலதனில் பிறப் பான் இவன் என்று சொன்னேம். இத்தன்மைக ளுடையவனுக்கு இந்த ஜாதகன் புதல்வனுகப் பிறப்பான்.

8. வந்தவன் குணத்தைச் சொல்வோ மாந்தளிர் போலு மேனி
தந்தமுந் தரள மொக்குஞ் சகலர்க்கும் நல்லோ னுவன்
வந்தவர்க் கன்ன மீவன் வாக்கது சுத்த முள்ளான்
நொந்தவர்க் குதவி செய்வன் நீக்குவான் தந்த யாஸ்தி.

8. ஜாதகனின் குணங்ளைச் சொல்லுவோம். மாந்தளிர் போன்று மென்மையான சரீர முள்ளவன். முத்துப் போன்ற பற்களுள்ளவன். அனை வர்க்கும் நல்லவன். வீடு தேடி வந்தவர்கட்கு அன்னமளித்து உபசரிப்பான். வாக்குத் தூய்மை யுள்ளவன். துன்ப மடைந்தவர்க்கு உதவிகள் செய்வான். பிறரார்ச்சித சொத்துக்களை விரயம் செய்வான்.

9. முகமது வடிவு காணு முன்கோபம் வெளிக்காட் டாதான்
பகையென்று மனத்தில் வையான் பரிந்துப சாரஞ் [செய்வன்
உவமைகள் சொல்லா னுகும் உரைக்கின்றேங் கிருஷி [யென்றேம்
தகமையாய்க் கார கங்கள் தங்கிடு மிவனுக் கேதான்.

9. முக வசிகர முள்ளவன். முன் கோபத்தை வெளியில் காண்பிக் காதவன். விரோத மென்ற சொல்லையே மனத்தால் நினையான். வீட்டுக்கு வந்தவர்கட்கு அன்புடன் உபசாரங்கள் செய்வான். உபமானங்களுடன் பேசாதவன். விவசாயஞ் செய்வான் என்று சொல்லுகின்றேம். இவனுக்கு உடலில் மேக வியாதி உண்டாகும்.

10. காரக தேக னுவன் காணுஞ் தந்தை யாஸ்தி
பாரியாள் பக்கல் சென்று பாரது விருத்தி செய்து
தீரனும் வாழ்வா னுகுஞ் செப்புவோ மணத்தின் காலம்
நாரியு மிருப தாண்டில் நல்கிடும் வடகீழ் தன்னில்.

10. மேக வியாதி பொருந்திய தேகமுள்ளவன். பிதிரார்ச்சித சொத்துக்களே யடையான். மனைவியின் பிறந்தகஞ் சென்று தங்கி, வீடு நிலங்களே விருத்திசெய்து, பயிர்த்தொழில் புரிந்து வாழ்ந்திருப்பான். இவனது திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இருபதாம் வயதில், வடகிழக்குத் திசையிலிருந்து இவனுக்கு மனைவி வாய்ப்பாள்.

11. அவள்குண மாஞ்சி வப்பள் அடைந்தோரை யாத ரிப்பள்
தவசிகட் கன்ன மீவள் தன்வரன் மனம்போல் வாழ்வள்
நவனியில் பொய்கள் சொல்லாள் நற்புத்தி துணைகள்
[காணுள்
இவள்தந்தை யில்லம் நீங்காள் இடைஞ்சல்க ளொருவர்க்
[கெண்ணுள்.

11. அவள் தன்மைகளைச் சொல்லுவோம். கருமை கலந்த செந்நிற முள்ளவள். வீடு தேடி வந்தவர்களைக் காப்பாள். தவஞ்செய்யும் பெரியோர்க்கு உணவளிப்பாள். தன் கணவன்மனமறிந்து வாழ்க்கை நடத்துவாள். பொய்யுரை கூறாள். நல்ல புத்தி யுடையவள். உடன் பிறந்தோர் இல்லாதவள் தந்தையின் வீட்டிலேயே வசிப்பாள். ஒருவருக்குந் தீங்கு நினைக்காதவள்.

12. பால்பாக்ய முடைய ளாகும் பரிந்துப சாரஞ் செய்வள்
சீலமு மறத்தி லிச்சை செல்வியும் வந்த பின்பு
போலாகு மில்லங் கேடு புகையினல் நட்ட மெய்தும்
சாலவே தந்தை யில்லந் தானவள் வாழ்வா ளாமே.

12. பால் பசு பாக்கிய முடையவள். வீட்டிற்கு வந்தவர்கட்கு அன்புடன் உபசாரங்கள் செய்வாள். நல்லொழுக்க முள்ளவள். தருமஞ் செய்வதில் ஆசையுடையவள். இவள் வந்த பிறகு கணவன் வீட்டுக்குக் கெடுதி யுண்டாகும். நெருப்பினல் நஷ்டமேற்படும். அதனல் தன் தந்தையின் வீட்டிலேயே வசிப்பாள்.

13. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணும்
சித்தமா யுதித்தா லுந்தான் சீரண மென்று சொல்வோம்
அத்திரி சொல்லு கின்றூர் அவனுக்குப் புத்ர தோடம்
பெற்றகா ரணங்கள் தன்னைப் பேசுவீர் முனியே நீர்தாம்.

13. ஜாதகனுக்குப் புத்திர விருத்தியைக் குறித்துச் சொல்லுவதற்குச் சரதல மில்லை. பிறக்தாலும் நஷ்டமாம் என்று கூறுவோம். அத்திரி

முனிவர் கூறுகின்றார். முனிவரே! நீங்கள், இவனுக்குப் புத்திர தோஷம் ஏற்பட்டதற்குரிய காரணத்தைக் கூறுங்கள்.

14. அஞ்சினில் கேது தங்க அஞ்சவன் மூன்றி லேறத்
துஞ்சிடு மதலை யென்றேஞ் செயமுனி தடுத்துச் சொல்வார்
தஞ்சமாய்க் கருமந் தன்னைத் தான்குரு பார்த்த தாலே
குஞ்சிய மதலை யாலே கூறுவோங் கருமந் தானே.

14. புத்திர ஸ்தானமாகிய கன்னியில் கேது தங்கி யிருப்பதாலும், ஐந்தாமிடத்துக்குரிய புதன், மூன்று மிடமாகிய கடகத்தில் இருப்பதாலும் குழந்தைகள் பிறந்து சேதமாம் என்று கூறினேம். செய முனிவர் மறுத்துச் சொல்லுவார். கருமஸ்தான மாகிய பத்தாமிடத்தைக் குரு பார்ப்பதால், புதல்வனால் இந்த ஜாதகனுக்கு இறுதிக் கடன்கள் செய்யப்பெறும் என்று சொல்லுவோம்.

15. ஆயு முதலில் பீடை அணுகிடு மிவனுக் கேதான்
பாகத்தைச் சொல்லு மென்ன பாலர்கள் தானந் தன்னில்
வேகமாய்க் கேது தங்க விளம்பிநே மந்தச் சங்கை
மோகமாய்ச் சுதரா ணென்று மேவிடும் பெண்பால்

[ரெண்டு.

15. புத்திரர் தோன்றினாலும், ஜாதகனுக்கு முதலில் தோன்றும் குழந்தை நஷ்டமாம். காரணத்தைச் சொல்லுங்கள், என்று கேட்க, புத்திர ஸ்தானமாகிய கன்னியில், கேது தங்கி யிருப்பதால், அவ்விதத் தோஷம் கூறினேம். பின்பு, இவனுக்குப் புதல்வன் ஒருவனும், பெண்கள் இருவரும் தோன்றுவர்.

16. மூன்றுமே தீர்க்க மெய்தும் விளங்காது மூன்று வென்றேரும்
சான்றவர் வதிட்டர் சொல்லச் செயமுனி கூறு கின்றார்
ஏந்திழை செய்தோ டத்தான் ஏகிடு முதலில் புத்ரர்
கூர்ந்துமே வினையைச் சொல்வீர் கோதையின் பூர்வங்

[கேளாய்.

16. இம் மூவரும் தீர்க்க மடைவர். மேலும் மூன்று தோன்றி நிலையா வென்று சொன்னேம், என பெரியோராகிய வசிஷ்ட முனிவர் சொல்லு கின்றார். இவன் மனைவி முற்பிறப்பில் செய்த தீவினையாலும், இப்பிறப்பில் இவர்களுக்கு முதலில் தோன்றும் குழந்தை மரிக்கும். தீவினை யென்ன தென்று சொல்லுங்கள். ஜாதகனின் மனைவியினுடைய முற்பிறப்பைக் கேட்பாயாக.

17. வேதத்தோன் பூசை செய்யும் விளங்கிய பட்சி தன்னில்
மாதவர் குலமே தோன்றி வறுமையில் லாமல் வாழ்ந்தாள்
ஓதுவோம் வினையை யாங்கள் ஓர்நாளில் பஞ்சை மாது
போதவே சுதர்க்கு வன்னம் போடுவா யென்று கேட்க ;

17. பிரமன் பூசிக்கின்ற திருக் கழுக்குன்றத்தில், சிறந்த தவங்களை யியற்றும் சான்றோர்கள் மரபில் பிறந்து, தரித்திரமின்றி வாழ்ந்தாள். அப் பொழுது நேர்ந்த தீவினையை நாங்கள் கூறுவோம். ஏழைப் பெண்ணொருத்தி ஒரு நாள், தன் குழந்தைகட்கு உணவு அளிக்குமாறு இவளிடம் வந்து கேட்க ;

18. அந்ததோர் வேளை தன்னில் அவள்வரன் தன்மேல் கோபம்
வந்ததோர் பஞ்சை பேரில் வருணித்தார் விசேட வார்த்தை
நொந்திடு மனத்தா ளாகி நுவலுவா ளேழை சாபம்
பிந்திய சென்மந் தன்னில் விளங்கார்கள் துணைவர் தாமே.

18. அந்தச் சமயத்தில் இவள், தன் கணவன்மீது கோபங் கொண்டு, பிச்சை கேட்ட ஏழைப் பெண்ணைப் பற்றித் தகாத சொற்களைக் கூறினாள். உணவை யாசித்த பெண்ணும் மனவருத்த மடைந்து, சாபமொன்று கூறுவாள். வரப்போகும் பிறவியில் உனக்குச் சகோதரர்கள் இருக்கமாட்டார்கள்.

19. முதல்சுதர் தோட மெய்து மேவாளாம் வரனில் லத்தில்
அதிகமாய்ச் சொல்லிச் சென்றாள் அடைந்தது வதுவோர் தோடம்
அதிசதி வந்தி யத்தில் வரனின்றித் தனியாய் வாழ்ந்து
சதியான காலன் பக்கல் சார்ந்தன ளென்று சொன்னேம்.

19. முதலில் தோன்றும் குழந்தை நஷ்டமாகும். கணவன் வீட்டில் வசிக்க மாட்டாய், என்னும் மிகுதியான சொற்களைக் கூறிவிட்டுச் சென்றாள். அந்தத் தோஷம் இவளை யடைந்தது. அப்பிறவியில், கடைசிக் காலத்தில் இவள் கணவனை யிழந்து, தானும் எமனுலக மடைந்தாள் என்று கூறினேம்.

20. மால்மகன் வரையப் பட்டு வந்தவ ளிவளே யென்றும்
சீலிக்கு வேழை சாபஞ் செறிந்திடு மிச்சென் மத்தில்
சாலவே துணையாண் காணுள் சுதர்களு முதலில் பீடை
ஞாலத்தோன் விதியவ் வாறு நடக்குமென் றுரைத்தோம் [யாங்கள்.

20. மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறவியில் பிறந்தவள் இவள் என்று சொன்னேம். இப்பிறப்பில் ஏழைப் பெண்ணின் சாபம் இவளைச் சாரும். அதனால், சகோதரரில்லாதவளாவாள். முதலில் தோன்றும்

குழந்தைக்கும் பீடை யுண்டு. பிரமன் விதித்த கட்டளைப்படி அங்ஙனம் கடைபெறும் என்று நாங்கள் கூறினேம்.

21. சுதனவன் மூன்றுஞ் சென்மந் தோன்றிடும் யோக வானும்
இதுவன்றி யிவனின் பூர்வம் இயம்புவோந் தாயே யாங்கள்
கதிதருந் தில்லை தன்னில் கனமுள வைசியச் சேயாய்
நிதிமிக வுடையா னாகி நேமியில் செட்டுச் செய்து;

21. மூன்றும் பிறப்பாக ஆண் மகனொருவன் இவனுக்குத் தோன்றி, யோக முடையவனாக விளங்குவான். தாயே! நாங்கள், ஜாதகனின் மூற் பிறப்பைக் இனிக் கூறுவேகம். நற்கதியை யளிக்கும் சிதம்பரத்தில், மேன்மையுள்ள வைசிய மரபினனாய்த் தோன்றி, மிக்க செல்வத்தைப் பெற்று, வியாபாரஞ் செய்து;

22. இடரென்றோர்க் குதவி செய்து யாவர்க்கும் நல்லோ னாகி
அடைவுடன் வாழு நாளில் அகதியு மோர்நாள் தன்னில்
சடலமுஞ் சோர்ந்து மேதான் தருகுவா யன்ன மென்ன
உடன்சென்று மனைவி பக்கல் ஓதினு னந்தச் சங்கை.

22. தன்பமென்று வந்தவர்களுக்கு உதவிகள் செய்து, அனைவருக்கும் நல்லவனாகி, வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில், ஒரு நாள் கதியற்ற ஏழை யந்தணர் ஒருவர், உடல் சோர்வுற்று, உணவு தருவாய் என்று இவனிடங் கேட்க, இவன் தன் மனைவி யருகில் சென்று இச் செய்தியைச் சொன்னான்.

23. மனைவியு மிதனைக் கேட்டு மர்மமாய் நின்று ளென்றும்
வினைமன மார்கச் சொன்னார் வேதிய ரதிதி தாமும்
கனமுள் பின்சென் மத்தில் காளையா யுதித்து நீயும்
அனையவே மனைவி யில்லம் அடைந்துமே வாழ்வா யென்று;

23. இவன் மனைவி, இந்தச் செய்தியைக் கேட்டு, ஒன்றுங் கூறாமல் மௌனமாய் இருந்தாள். அந்தணராகிய அதிதி, வருத்தமுற்ற மனத்துடன் கூறினார். "மறுபிறப்பிலும், ஆண் மகனாகப் பிறந்து, நீ மனைவியின் பிறந்தகத்துக்குச் சென்று வாழ்வாய்" என்றும்:

24. பாரியா ளில்லம் வாழ்ந்தால் பாவங்கள் விலகு மென்று
கூறிய சென்ற ரென்றோங் குலவிற்று வந்தத் தோடம்
வேறொரு தீங்கு காணுன் வித்தக னந்தி யத்தில்
காரண சேது சென்று கடவுளுக் கருச்சித் தேத்தி;

24. மனைவியின் வீட்டில் சென்று வாழ்ந்திருந்தால், உன் தீவினைகள் அனைத்தும் நீங்கும் என்றும் சொல்லிச் சென்றார் என்று சொன்னேம்.

அர்தத் தோஷம் இவனைச் சேர்ந்தது. அந்தச் சென்மத்தில் வேறு தீங்கு இல்லாமல் வாழ்ந்தான். அப்பிறவியில் இவன், சேதுக்குப் போய், அங்கு எழுந்தருளி யிருக்கும் கடவுளுக்கு அருச்சனை முதலியவை செய்து, போற்றி,

25. பாலர்க்கு வன்ன மீந்து பாலனு முள்ளூர் சென்று
குலவினன் காலன் பக்கல் குறைதலை வரையப் பட்டு
நலமுள பிரம்ம சேயாய் நல்குவா னிந்தப் பாலன்
நிலைமையா யதிதி சாபம் நேர்ந்திடு மிச்சென் மத்தில்.

25. எழைக் குழந்தைகள் பலருக்கு உணவளித்து, உள்ளூருக்குப் போய், எமனுலக மடைந்தான். மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, இப் பிறவியில் செளக்கியமுள்ள அந்தணர் மரபினனுய்ப் பிறப்பான் இவன். இப் பிறப்பில், அதிதியின் சாபம் இவனைச் சேரும்.

26. பாரியா ளில்லம் வாசம் பகருவோம் யோகச் சேதி
வீரதே சரியோ கங்கள் சீர்தர்ம கர்ம யோகம்
கூறுவோம் பலனே யாங்கள் குணமது நல்ல தாகும்
சீரியோர்க் கன்ன மீவன் திவ்வியத் தலங்கள் செல்வன்.

26. மனைவியின் பிறந்தகஞ் சென்று வசிப்பான். ஜாதகனின் யோகங் களைப் பற்றிச் சொல்லுவோம். வீரசேகரி யோகங்கள், தர்மகர்ம யோகம் ஆகியவை இவனுக்கு ஏற்படும். இவற்றின் பலன்களை நாங்கள் சொல்லு வோம். சற்குண மூடையவனாக விருப்பான். சான்றோர்களுக்கு உணவ ளித்து உபசரிப்பான். புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்வான்.

27. சல்லியங் கொள்ளா னுகுஞ் சாந்தவான் பித்த தேகி
இல்லையென் றுரைக்க மாட்டான் எய்திடும் விவசா யங்கள்
புல்குங்கா ரகரோ கங்கள் பொருந்துங்கா லங்கள் சொல்வீர்
நல்லதோ ரிருபா னுறு வாண்டினில் நல்குந் தானே.

27. கடன் வாங்க மாட்டான். சாந்த மூடையவன். பித்த தேகமுள் ளவன். தன்னிடம் வந்து யாசித்தவர்களுக்கு இல்லை யென்று சொல்லாத வன். பயிர்த் தொழில் புரிவான். மேக வியாதி இவனுக்குத் தோன்றும். அது எற்படும் காலத்தைச் சொல்லுங்கள். இவனது இருபத்தாறும் வயதில் மேகரோகம் வரும்.

28. வினையது நிவிர்த்தி யெவ்வார் விளம்புவோம் வங்க பற்பம்
தனயனுங் கொள்வா னுகில் சாராது வந்த ரோகம்
கனமுள வங்க மெவ்வா கழறுவீர் விவர மாகப்
பினையிலா விரண்டி லேதான் பேசுவோ மந்தச் சங்கை.

28. இந்த வியாதி எங்ஙனம் நீங்கும், என்று சொல்லுவோம். வங்க பஸ்மத்தை ஜாதகன் உட்கொள்ளுவானுகில், மேகவியாதி இவனை யடையாது. மேன்மையான வங்க பஸ்மத்தை எவ்விதம் செய்வது? விவரமாகச் சொல்லு வீர். இரண்டாம் பாகத்தில் அதனைப் பற்றிக் கூறுவோம்.

29. சாதகன் துணைவர் தம்மைச் சாற்றுவோ மாண்பால்
[ரெண்டு
காதலி மார்கள் மூன்று கழறுவோர்ந் தீர்க்க மாக
ஓதுவோ முன்னோன் சேதி உறையுமே சுகம தாகப்
பாதக மனமில் லாதான் பரிந்துப சாரஞ் செய்வன்.

29. ஜாதகனுடன் பிறந்தவர்களைச் சொல்லுவோம். ஆண்கள் இரு வர், பெண்கள் மூவர். இவர்கள் தீர்க்கமாவர் என்று புகலுவோம். ஜாதக னுக்கு மூத்த சகோதரனின் வரலாற்றைக் கூறுவோம். சௌக்கியமாக வாழ்வான். கெட்ட எண்ண மில்லாதவன். வீட்டுக்கு வந்தவர்களை அன்பு டன் உபசரிப்பான்.

30. தந்திர மொழியுஞ் சொல்வன் தங்கிடு மிடையில் மச்சம்
வந்திடு மனைவி ரெண்டு மைந்தர்க ளாண்பால் ரெண்டு
விந்தையாய்க் கன்னி மூன்று மேவிடுந் தீர்க்க மாக
எந்தமா துருக்குப் புத்ரர் இயம்பினீர் விவரஞ் சொல்வீர்.

30. தந்திரமாகப் பேசுவான். இடுப்பில் மச்ச மொன்றுண்டு. இவ னுக்கு இரு மனைவியர் வாய்ப்பர். மக்களில் ஆண்கள் இருவரும், பெண்கள் மூவரும் தோன்றித் தீர்க்கமாக விளங்குவர். எந்த மனைவிக்குப் புதல்வர் தோன்றுவர் என்று கூறினீர்கள். விவரமாகச் சொல்லுங்கள்.

31. முதல்மனை பெண்பா லொன்று மேவிப்பின் நீரால் போகும்
விதியினுல் ரெண்டா மாது விளம்புவோ மற்றப் பால்ர்
பதியினில் வாழ்வா ராகும் பாலனும் வறுமை காணுன்
வதிபன்பின் துணைவன் சேதி மனைவியு மொன்றே யாகும்.

31. இவன் முதல் மனைவிக்குப் பெண்ணொருத்தி தோன்றுவாள். பின்பு முதல் மனைவி தண்ணீரில் விழுந்து இறப்பாள். விதிப்படி மணந்த இரண்டாவது மனைவிக்கு மேற்கூறிய புதல்வர்கள் தோன்றுவர் என்று சொல்லுவோம். அவர்கள் ஒற்றுமையுடன் ஒரே வீட்டில் வசிப்பார்கள். இவன் வறுமைத்துன்ப மடையான். இனி, ஜாதகனுக்கு இளைய சகோ தரனின் செய்தியைச் சொல்லுவோம். அவனுக்கு மனைவி யொருத்தியே யாவள்.

32. கல்வியால் பெருமை பூண்பன் கிராமாதி காரஞ் செய்வன்
நல்லவர் பலர்கள் நேயன் நற்புத்தி சுதரா ணென்று
வல்லியு மிரண்டு வென்றோம் வறுமைக ளில்லா னுகும்
சொல்லுவோம் பின்பா கத்தில் துணைவர்கள் சேதி யாவும்.

32. படிப்பினால் பெருமை யடைவான். கிராமத் தலையை ஏற்று நடத்துவான். நற்குணங்கள் வாய்ந்த பெரியோரின் அன்புக்கு உரியவன். நல்ல புத்தி யுடையவன். இவனுக்குப் புதல்வன் ஒருவனும், பெண்கள் இருவருமாவர் என்று சொன்னோம். தரித்திர மில்லாதவன். ஜாதகன் சகோதரர்களைப் பற்றிய மற்றச் செய்திக ளனைத்தையும் பிற்பாகத்தில் கூறுவோம்

33. அன்னையின் குணத்தைச் சொல்லுவோம் அன்புள மனத்த
[ளாகும்
தன்சொலு மடக்க முண்டு தன்துணை யாண்பால் மூன்று
கன்னிகை யவ்வா றுதங் காதலி யில்ல மீனம்
முன்கோபம் வெளிக்காட் டாதாள் மொழிகின்றோம்
[பூர்வந் தன்னை.

33. ஜாதகன் தாயின் குணங்களைக் கூறுவோம். அன்பு பொருந்திய மனத்தினை யுடையவள். பணிவு நிரம்பிய சொற்களைப் பேசுவாள். இவளுக்குச் சகோதரர்கள் மூவர். சகோதரிகளும் மூவராவர். இவள் வீடு வடகிழக்குத் திசையில் உள்ளது. முன்கோப முள்ளவள். ஆனால், அதனை மிகுதியாக வெளிப்படுத்த மாட்டாள். இவள் முற்பிறவியைச் சொல்லுவோம்.

34. கன்னியாக் குமரி தன்னில் காதலி சைவச் சேயாய்
முன்னோர்க்கு வன்ன மீந்து மேவினள் தலங்க ளுக்குத்
தன்வரன் முன்னே மாண்டு சதுர்முகன் வரையப் பட்டு
வந்தவ ளிந்த மாது மறுசென்மந் துவாரை தன்னில் ;

34. கன்னியா குமரியில், சைவ மரபினளாய்த் தோன்றி, சான்றோர்க்கு உணவு முதலியன வளித்து, புண்ணியத் தலங்கள் பலவற்றுக்குக் கணவனுடன் சென்று, வாழ்ந்து, தன் கணவனுக்கு முன்பாக மரண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறப்பில் பிறந்தவள் இவள் என்று சொன்னோம். மறு பிறப்பு, துவாரகையில் ;

35. உதிப்பளாம் பிரம்ம சேயாய் உரைக்கின்றோம் நிரியா
[ணத்தைச்
சதியிலா முப்பா னெட்டில் தாய்க்குமே கண்டம் நேரும்
அதற்குமுன் ஈரெட் டாண்டில் அறைகின்றோந் தந்தை
[கண்ட
மதிபனுக் கறுப தாண்டில் மகரமா தத்தி லேதான் ;

35. அந்தணர் குலத்தவளாய்ப் பிறப்பாள். தாய் தந்தையர்க்கு மரண காலத்தைச் சொல்லுகின்றோம். ஜாதகனின் முப்பத்தெட்டாம் வயதில், தாயின் மரணம் நேரும். அதற்குப் பதினாறு வருஷங்களுக்கு முன்பாக, தந்தைக்கு மரணம் ஏற்படும். ஜாதகனுக்கு அறுபதாம் வயதில் தை மாதம்;

36. ஏகிடு முடல மென்றோம் இயம்புவோம் பின்சென் மத்தைப்
பாகமா யரங்கந் தன்னில் பிறப்பனு மிக்கு லத்தில்
தோகையே பிதாவின் சென்மஞ் செப்புவோங் காஞ்சி
[தன்னில்
போகவா னிக்கு லத்தில் பிறப்பனு மென்று சொல்வோம்.

36. மரணம் நேரும் என்று சொன்னோம். ஜாதகனின் மறு பிறவியைச் சொல்லுவோம். திருவரங்கத்தில், இக் குலத்தவனுகப் பிறப்பான். தந்தையின் மறு பிறப்பைக் கூறுவோம். காஞ்சீபுரத்தில், இக் குலத்திலேயே தோன்றுவான் என்று செயல்லுவோம்.

37. மூப்பது வாண்டு தன்னில் மேவிடும் நிதிநிட் சேபம்
செப்புவோம் விவரம் ரெண்டில் சகடுவா கனங்கள் நேரும்
ஒப்புடன் சுதராண் தோன்றும் உலகுளோர் வசிய மாகும்
தப்பித மில்லை யாங்கள் சாற்றிய மொழிகுன் றுவே.

37. மூப்பதாம் வயதில் ஜாதகனுக்குப் புதையல் கிடைக்கும். அதனைப் பற்றிய விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். வண்டி முதலிய வாகன வசதிகள் ஏற்படும். ஆண் குழந்தை பிறக்கும். உலகத்தோ ரனைவரும் இவனுக்கு வசியமாவர். நாங்கள் இங்ஙனம் சொல்லுவதில் தவறொன்று மில்லை. கூறிய சொற்கள் தவறா.

38. பாலகன் செனிக்குங் காலை பரிதியின் தசையி ருப்புச்
சாலவே யாண்டு மூன்றுந் தங்கிடுந் திங்கள் ரெண்டும்
ஏலவே பிணியு மெய்தும் எய்திடுஞ் சல்லிய யங்கள்
காலங்கள் விவர மாகக் கழறுவோந் தாயே யாங்கள்.

38. ஜாதகன் பிறப்புக் காலத்தில் சூரிய மகா தசையில் இருப்பு; மூன்று வருஷக்களும், இரண்டு மாதங்களுமாம். அக்காலத்தில் இவனுக்கு வியாதி யுண்டாகும். கடன் ஏற்படும். தாயே! நாங்கள் எவ்வெக் காலங்களில் எவ்வெப் பலன்கள் உண்டாம் என்று விவரமாகப் பின்பு சொல்லுவோம்.

ஜாதகம் 108

1. மதியு மீனங் குருமேடம்
மால்ஞா னியுமே மானதனில்
[1]விதியது தேளில் ரவிபுகர்சேய்
மிக்க சாடி பணிகடகம்
இதுவே கிரக முயிர்நந்தி
இயம்பும் பலன்கள் தவமுனியே
அதுவே யாண்பால் சென்னமுறும்
அறைவோ மில்லஞ் சிறுவூராம்.

1. சந்திரன் மீனத்திலும், குரு மேஷத்திலும், புதன் கேது மகரத்திலும், சனி விருச்சிகத்திலும், சூரியன் சுக்கிரன் செவ்வாய் கும்பத்திலும், இராகு கடகத்திலுமாக இங்ஙனமே நவக்கிரகங்களும் உள்ளன. ஜன்ம விலக்கினம் விருஷபம். முனிவரே! இவ்வாறுள்ள ஜாதகப் பலன்களைச் சொல்லுங்கள். இஃது ஆண் பிறப்பு. பிறக்கும் வீடு சிறிய ஊரிலுள்ளது என்று சொல்லுவோம்.

சந்திரன்	குரு	லக்கினம்	
சூரியன் சுக்கிரன் செவ்வாய்	இராசி சக்கரம்		ராகு
புதன் கேது			
	சனி		

2. தென்பால் வாசல் கீழ்மேற்குத்
தெருவாந் தந்தி மேற்கிலுறும்
மூந்து மாரி தென்மேற்கில்
மேவும் வடபால் நதிக்கரையாம்
இந்து யணிந்தோன் குடிதானும்
இடியு மையனூர் தாமுண்டு
பந்த மாகு மடையாளம்
பாலன் சனிப்பான் பார்வதியே.

2. கிழக்கு மேற்குத் தெருவில் தெற்குப் பார்த்த வாயிலையுடைய வீடாகும். விநாயகர் மேற்குத் திசையில் எழுந்தருளி யிருக்கின்றார். மாரி

---

1. சனி

யம்மன் கோயில் மேற்கில் உள்ளது. வடக்கில் ஆற்றங்கரை யிருக்கின்றது. அங்கு, இளம்பிறைச் சந்திரனைத் தலையிலணிந்த சிவபெருமானின் இடிந்த கோயிலொன் றுண்டு. ஐயனரும் அவ்விடத்தில் வாசம் புரிகின்றார். தகுதி யாகச் சொன்ன அடையாளங்கள் கொண்ட விடத்தில் ஜாதகன் தோன்று வான்; பார்வதியே!

3. பதியே தந்தை தாய்துணைவர்
மனைவி புத்ரர் யோகமெலாம்
பொதுவாய் முன்பின் சென்மங்கள்
புகல்வோந் தந்தை துணையாண்பால்
சதியே காணன் பெண்மூன்று
அனேகம் பின்னல் சேதமுறும்
பதியே தந்தை குணஞ்சொல்வோம்
பகரான் கல்வி யிருநிறத்தான்.

3. ஜாதகன், அவனது தாய்தந்தையர், உடன்பிறந்தோர், மனைவி மக்கள் முதலானவர் யோகங்களையும், முற்பிறப்பு மறுபிறப்புக்களையும் சொல்லுவோம். தந்தைக்குச் சகோதரனில்லை. சகோதரிகள் மூவர். மேலும் பல தோன்றி பின்பு சேதமாம். தந்தையின் குணங்களைக் கூறு வோம். கல்வியறி வில்லாதவன். கரிய நிற முடையவன்.

4. தானே தனியாய்க் கிருஷியுளன்
சாற்று மாமி யிரண்டென்றும்
ஊனமி லாதான் வலியுடையன்
உறப்பு புளிப்பி லிச்சையுளன்
வானோர் பக்தி கொள்ளாதான்
மர்மமி லாதான் பூவிருத்தி
தேனே மொழியுங் கூவல்செய்வன்
செய்நன் றிகளு மறவாதான்.

4. தன் முயற்சியால் சொந்தமாக விவசாயத் தொழில் புரிவான். இவனுக்கு மனைவியர் இருவர் என்று கூறினேம். உடலில் ஊனமில்லாத வன். உறைப்புச் சுவையும் புளிப்புச் சுவையும் பொருந்தியுள்ள பொருள் களில் விருப்பமுள்ளவன். தெய்வ பக்தி யில்லாதவன். மனத்தில் மறை வில்லாதவன். நிலபுலன்கள் விருத்தி யுள்ளவன். தேன் போன்று இனிய சொற்களைப் பேசுவான். ஈனரு தோண்டுவிப்பான். பிறர் செய்த உதவியை மறவாதவன்.

5. மறவான் செய்த நன்றிகளே
மறுத்தே யுரையான் பெருமையுளன்
பொரைபொய் களவு செய்யாதான்
பின்யோ சனையு முடையவனே
பெருமை புகலா னிளமனத்தன்
பேதை சொல்லைத் தான்தவருன்
விரைவில் நடப்பான் நற்குணத்தான்
மேலோர் பக்தி கொள்ளாதான்.

5. அயலார் தனக்குச் செய்த உபகாரங்களே என்றும் மறந்துவிட மாட்டான். பெரியோர்கள் கூறுகின்ற சொற்களுக்கு எதிர்மொழி சொல் லாதவன். மேன்மை யுள்ளவன். புறஞ் சொல்லாதவன். பொய் உரைக்க மாட்டான். திருட்டுத் தொழில் புரியாதவன். பின் யோசனை யுள்ளவன். தன்னைப் பற்றிய பெருமைகளைத் தானே கூறிக் கொள்ளாதவன். இளகிய மனமுடையவன். மனைவியின் சொற்களுக்குத் தடை சொல்லாதவன். வேகமாக நடப்பான். நற்குண முடையவன். மேன்மையுடைய சான்றோர் மீது பக்தி கொள்ள மாட்டான்.

வேறு

6. இந்நெறி யுடையா னுக்கு இருதார மிளையா ளுக்கு
அன்னவ னுதிப்பா ளுகும் அவன்துணை யாண்பால் மூன்று
கன்னிகை யிருவர் தீர்க்கங் கழறுவோம் பின்பால் சேதி
முன்தாய்க்குச் சுதர்க ளுண்டோ மொழிகுவீர் முனியே
[நீர்தாம்.

6. இத்தன்மைகளே யுடையவனுக்கு இரு மனைவியராவர். அவர் களில் இளைய மனைவிக்கு ஜாதகன் புதல்வனுகத் தோன்றுவான். இவனுக்குச் சகோதரர் மூவர். சகோதரிகள் இருவர். இம்மூவரும் தீர்க்கமாவர். பிற் பாகத்தில் அவர்களைப் பற்றிய செய்திகளைச் சொல்லுவோம். ஜாதகனின் மூத்த தாய்க்குப் புதல்வர்கள் உளரோ? முனிவரே! நீங்கள் சொல்லுங்கள்.

வேறு

7. ஆணது வொன்று பெண்ணது மவ்வார்
அறைகுவோந் தீர்க்கமா மென்றேம்
நாணிடுஞ் சிலவே யவர்கள்வே றுவர்
நவிலுவோம் பின்பாகம் விபரம்
பூணுவோ முதித்தோன் குணத்தையே யாங்கள்
பிறர்பொரு ளிச்சையில் லாதான்
நாணிய மனத்தன் சிவந்தமெய் யீகை
நாயகன் கல்வியே யில்லான்.

7. புதல்வன் ஒருவனும், புத்திரி யொருத்தியும் தோன்றுவர் என்று சொல்லுவோம். இவர்கள் தீர்க்கமாவர் என்று சொன்னோம். மேலுஞ் சில தோன்றி யழியும். ஜாதகனின் சகோதரர்கள் வேறு குடும்பமாகப் பிரிந்து செல்வர். பிற்பாகத்தில் அதனை விவரமாகச் சொல்லுவோம். ஜாதகனின் குணங்களை நாங்கள் சொல்லுவோம். அயலார் செல்வத்தில் ஆசை வையாதவன். நாணம் பொருந்திய மனத்தினன். சிவந்த நிறமுடையவன். கொடையாளி.. படிப்பில்லாதவன்.

8. பயிர்த்தொழில் செய்வான் பகையதை யெண்ணுன்
பத்தினி வர்க்கமே நாசம்
நயமுட னுரைப்பன் முகவடி வுள்ளான்
நாற்காலி விருத்தியே செய்வன்
சயஞ்செய்வ னெடுத்த வேலையை யென்றோம்
துணைவரை வேறதாய்ச் செய்வன்
கயவரைச் சேரான் கனத்தபுத் திகளுங்
கண்முக வசியமே யுள்ளான்.

8. விவசாயஞ் செய்வான். எவருக்கும் மனத்திலும் விரோதத்தை நினையாதவன். இவன் மனைவி வர்க்கத்தினருக்கு நாச மேற்படும். நயமாகப் பேசுவான். முகத்தில் ஓர் அடையாள முடையவன். கால் நடைகளை விருத்தி செய்வான். தொடங்கிய செயலை வெற்றியுடன் முடிப்பான் என்று கூறினோம். சகோதரரை வேறுகப் பிரிந்து செல்லும்படி செய்வான். கீழோர் நட்புக் கொள்ளான். மேன்மையான புத்தி யுள்ளவன். கண், முகம் இவை வசீகர முள்ளவன்.

வேறு

9. இருபது மூன்று வாண்டுள் இவனுக்குப் பாரி வாய்க்கும்
வருங்கன்னி துணைவி புத்ரி வந்திடு முன்தாய் பேத்தி
உறைக்கின்றோ மவள்கு ணத்தை உறுதியாஞ் சிவந்த மேனி
பெரும்புத்தி யடக்க மாவள் புலிபோலக் கோப முண்டு.

9. இருபத்து மூன்றும் வயதுக்குள் ஜாதகனுக்கு மனைவி வாய்ப்பாள். இவனுக்கு மனைவியாக வருபவள், இவனது சகோதரியின் புதல்வியும், மூத்த தாயின் பேத்தியும் ஆவாள். அவள் குணங்களைச் சொல்லுகின்றோம். திடமும், சிவந்த நிறமும் உடைய உடலினள். மேன்மையான புத்தி யுடையவள். பணிவுள்ளவள். கொடிய புலி போன்று கோப மடைவாள்.

10. நாபிச்சூ டுடைய ளாகும் நாயகன் மனம்போல் வாழ்வள்
பாபத்துக் கிடங்கொ டாதாள் பரவுப காரி யாவள்
நாவது சுத்த முண்டு நற்பணி காணு ளாகும்
தேவியுஞ் சமயோ கத்தாள் துணையது காணு ளாகும்.

10. நாபிச் சூடு உடையவள். கணவன் மனக்கருத்துப்போல் வாழ்க்கை நடத்துவாள். தீவினைக்கு இடங் கொடுக்காதவள். பிறருக்கு உதவி புரியும் இயல்பினள். வாக்குத் தூய்மை யுள்ளவள். சிறந்த ஆப ரணங்களே யடையாதவள். இன்பமும் துன்பமுங் கலந்த சமமான யோக முள்ளவள். இவளுக்கு உடன்பிறந்தா ரில்லை.

11. சத்தமஞ் சுதர்கள் தோன்றுந் தங்காது வாண்பா லுந்தான்
வித்தகி பெண்பால் ரெண்டு மேவிடுந் தீர்க்க மாகப்
புத்திர தோட மெவ்வார் புகலுவீர் சங்கை தன்னைக்
குத்தமா யஞ்சோ ரென்பான் குலவியே கேது கூடி;

11. ஜாதகனுக்கு மக்கள் எழுவர் தோன்றுவர். அவர்களில் ஆண் குழந்தைகள் நிலையா. பெண்கள் இருவர் மாத்திரம் தீர்க்கமாக விளங்குவர். ஜாதகனுக்குப் புத்திர தோஷம் ஏற்படக் காரணம் யாது? சந்தேகத்தை விளக்கிக் கூறுங்கள். தீங்குண்டாகும் வகையில், ஐந்தாமிடமாகிய புத்திர ஸ்தானத்துக்குரிய புதன், ஒன்பதாமிடமாகிய மகரத்தில் கேதுவுடன் சேர்ந்து தங்கி;

12. காரியும் பார்த்த தாலே கழறினேஞ் சுதராண் தோடம்
வீரியன் பூர்வந் தன்னில் மேவிற்று வினைய நேகங்
கூறுவீர் பூர்வந் தன்னைக் குற்றுல மருகி லேதான்
பாரிய வூரி லேதான் பிறந்தனன் கங்கை சேயாய்.

12. சனியால் பார்க்கப்படுவதால் ஆண் குழந்தைகட்குத் தோஷங் கூறினேம். தவிரவும், ஜாதகனது முற்பிறப்பின் தீவினைகளும் பல சேர்ந்தன. ஜாதகனுக்கு முற்பிறவியைச் சொல்லுங்கள். திருக்குற்றுலத்துக்கு அருகில் உள்ளதொரு பெரிய ஊரில், வேளாளர் குலப் புதல்வனுய்ப் பிறந்தான்.

13. தரணிக ளதிக முண்டாய்த் தன்மனை மதலை யாகிக்
குறையிலா வாழு நாளில் கூறுவோம் பவத்தை யாங்கள்
குரவர்பால் மறையோ னுக்காய்க் கூறினுன் கட்டு வார்த்தை
மறைசாப மொன்றுண் டாச்சு வறைகின்றே மின்னு

[மொன்று.

13. நிலபுலன்கள் மிகுதியாக உண்டாகி, மனைவி மக்களைப் பெற்று, குறையொன்றும் இல்லாமல் வாழ்ந்து வந்த காலத்தில், ஏற்பட்ட தீவினையை நாங்கள் சொல்லுவோம். சான்றோர்களிடம் சென்று, ஒரு அந்தணனைப் பற்றிப் பொய்யுரைகள் சொன்னன். அதனை யறிந்த அந்தணன் இவனுக் கிட்ட சாபம் இவனை வந்தடைந்தது. இன்னும் ஒன்றைச் சொல்லுகின்றோம்.

14. பஞ்சைகள் மதலைக் கன்னம் பகராத சாப மொன்று
[1]நஞ்சதைக் கொன்ற தோடம் நல்கிற்று விச்சென் மத்தில்
துஞ்சிடுஞ் சுதரா ணென்றோந் தோகையால் சிலவே
[தோடம்
வஞ்சியின் பூர்வங் கேளாய் வள்ளுருக் கருகில் தெற்கில்;

14. எழைகளின் குழந்தைகட்கு உணவளிக்காத பாவம் ஒன்று; பாம்பினை யடித்துக் கொன்ற தோஷமொன்று ஆகிய இவைகள் இப்பிறப்பில் இவனை யடைந்தன. ஆதலினால், தோன்றும் ஆண் குழந்தைகள் சேதமாம் என்று சொன்னோம். இவன் மனைவியாலும் சில தோஷங்கள் சேர்ந்தன. ஜாதகன் மனைவியின் முற்பிறப்பைக் கேட்பாயாக. திருவள்ளுருக் கருகில், தெற்குத் திசையிலுள்ளதொரு ஊரில்;

15. இக்குல முதித்து யின்னுள் எழில்வரன் மதலை யுண்டாய்த்
தக்கவே குடும்பி யாகிச் சார்ந்ததோர் வினையைக் கேண்மோ
நக்கன்த னடியார் மாலை நல்குவா யன்ன மென்னக்
குகைகல்போல் கோபங் கொண்டு கூடாது வென்று
[சொன்னள்.

15. இக்குலத்தவளாகவே பிறந்து, அழகிய கணவன், மக்கள் ஆகியோரை யடைந்து, தகுந்த குடும்ப முடையவளாகி, வாழும்போது, வந்து சேர்ந்த தோஷத்தைக் கேளுங்கள். சிவனடியார் ஒருவர், ஒருநாள் மாலையில் இவள் வீட்டுக்கு வந்து, சிறிது உணவளிப்பாய் என்று கேட்கவும், காய் போல் சினமுற்று, உணவு இல்லையென்று கூறி யனுப்பினள்.

16. அதிதியு மனவெ றுப்பால் அறைகின்றார் சாபந் தானும்
மதிசதி பின்சென் மத்தில் மைந்தராண் தோட மெய்தும்
சதமுடன் துணைக ளின்றித் தந்தையார்ச் சிதமும் பாழாய்
இதுவித மடைவா ளென்று இயம்பியே சென்ற ரென்றோம்.

---

1. பாம்பு

16. அதிதியாக வந்த சிவனடியாரும், மனவெறுப் படைந்து, சாப மொன்று கூறுகின்றார். இவளுக்கு மறுபிறப்பில் தோன்றும் ஆண் குழந்தைகள் தோஷமாம்; தன்னுடன் பிறந்தா ரில்லாதவ ளாவாள்; தந்தை யின் சொத்துக்கள் இவளுக்குக் கிடைக்காமல் பாழாம். இவ்விதமான துன்பங்களே அடைவாளெனச் சொல்லி விட்டு, அடியார் சென்றார் என்று கூறினேம்.

17. சடைமுனி சாப மொன்று தங்கிற்று யிவளுக் கேதான்
உடன்சுதர் மரண மாகி உத்தமி தனியாய் வாழ்ந்து
அடைவுடன் கால நாடு அடைந்துமே பிரமன் லக்கம்
திடமதா யிக்கு லத்தில் செனித்தவ ளென்று சொல்வோம்.

17. சடாமுனியின் சாபமொன்றும் இவளுக்கு ஏற்பட்டது. ஆக, இவ்விதத் தோஷங்களால், அப்பிறப்பில் தோன்றிய குழந்தைகள் இறக்க, இவள் தனிமையாய்ச் சிலகாலம் வாழ்ந்து, இயமனுலக மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இக்குலத்தில் பிறந்தவள் இவள் என்று கூறுவோம்.

18. முனிசாப மதிதி சாப மேவிடு மிச்சென் மத்தில்
வினைவருஞ் சுதரா ணுக்கு மெல்லியாள் சேட்டி விருத்தி
பிணையாகும் பின்னு லேதான் புகலுவீர் கிரியை யொன்று
கனமுள சுதர்கள் வேண்டிக் கருமசாந் திகளுஞ் செய்ய;

18. சடாமுனியின் சாபமும், அதிதியாக வந்த சிவனடியார் சாபமும் இப்பிறப்பிலும் இவளைச் சாரும். அவற்றால், பிறக்கும் ஆண் குழந்தைக்குத் தோஷ மேற்படும். மூத்தவளாகப் பிறந்த பெண்ணொருத்தி தீர்க்கமான வயதடனிருப்பாள். இவளுக்குப் பின்பு தோன்றுவன மரண மடையும். இந்தத் தோஷம் நீங்குவதற்குச் சாந்தி யென்று சொல்லுவீர். பெருமை யுடைய புத்திரர் தோன்றுவதற்கு, விதிப்படி கர்ம சாந்திகள் செய்தால்;

19. முன்வினை நீங்கி யேதான் உதித்தசேய் தீர்க்க மெய்தும்
கன்மசாந் திகள்செய் யாவேல் காலைகள் தோன்றித்
[தோடம்
சொன்னவூழ் செய்வா ளாகில் சுதனென்று தீர்க்க மெய்தும்
கன்மசாந் திகளெவ் வாறு கழறுவீர் முனியே நீர்தாம்.

19. முற்பிறப்புத் தீவினை நீங்கி, பிறந்த ஆண் குழந்தை தீர்க்க மடையும். கரும சாந்திகள் செய்யாது ஜாதகன் தவறுவானாகில், ஆண் குழந்தைகள் பிறந்து தோஷமாம். சொல்லியபடி முற்பிறப்புத் தீவினைகள்

நீங்குவதற்குச் சாந்திகள் செய்வாளுளுல், புதல்வனெருவன் தோன்றித் தீர்க்க மடைவான். முனிவரே! நீங்கள், கர்மசாந்திகளே எங்ஙனம் செய்வது என்று கூறுங்கள்.

வேறு

20. தானியஞ் சமித்துக் கலசமு மொன்பான்
சதிபதி பிம்பமும் ரெண்டாம்
ஆனவத் திரமு மதற்குமேல் சாத்தி
மந்தர காண்டத்தில் மூலம்
ஊனமில் லாமல் சகஸ்திர முரைக்க
ஓங்கிடு மோமமே யென்றேும்
மானமாய்த் தாமிரத் தகட்டினி லம்மன்
பீசத்தை வரைந்துமே பின்பு;

20. கவதானியங்கள், சமித்துக்கள் இவைகளைச் சேகரித்து, ஒன்பது கலசங்கள் ஸ்தாபித்து, அம்பிகை, இறைவன் ஆகியோர் உருவங்கள் இரண்டனையும் பிரதிஷ்டை செய்து, புத்தாடைகளை அவைகளுக்கு அணிவித்து, மந்தர சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள மூலமந்திரத்தை, தவறில்லாமல் ஆயிரம் முறை ஜபித்து, உயர்ந்த ஹோமம் செய்ய வேண்டும் என்று கூறினேும். பின்பு, மேன்மையாக, தாமிரத் தகடு ஒன்றில், அம்பிகையின் பீஜாட்சரத்தை எழுதி, பிறகு;

21. முன்சொலு மூலஞ் சகஸ்திர முரைத்து
முழுவெள்ளைக் கூழ்ப்பாண்ட பலியும்
பின்சத்தி பூசை செய்துமே வணிந்து
பேதையுஞ் சுக்கிர விரதம்
இன்பமா யிருக்க வினைகளும் நீங்கி
எய்திடுஞ் சுதராண் விருத்தி
வன்பமாய் நிவிர்த்தி செய்திடு வானேல்
சுதர்தோடம் முற்றிடுந் தானே.

21. முன்பு சொல்லப்பட்ட மூலமந்திரத்தை ஆயிரம் முறை மீண்டும் ஜபித்து, முழு உருவத்துடன் கூடிய வெள்ளைப் பூசணிக்காயைப் பலியாகக் கொடுத்து, அதற்குப் பிறகு பராசக்திக்குப் பூசை செய்து, அந்தத் தகட்டினை ஜாதகன் மனைவி அணிந்து கொண்டு, வெள்ளிக்கிழமை விரதத்தினை, மன மகிழ்ச்சியுடன் அனுஷ்டித்து வந்தால், அடைந்த தீவினைகள் விலகி, ஆண் குழந்தைகளுக்கு விருத்தி யுண்டாம். இதனைச் செய்யாமல், கெட்ட எண்ணத்துடன் நீக்குவானேல், புத்திர (ஆண் குழந்தை) தோஷம் ஏற்படும்.

22. தானவ னெந்தக் காலத்தில் செய்யச்
சாற்றுவீர் முனிவரே யென்ன
மானமாய் முப்பான் மூன்றினில் செய்ய
வந்ததோர் வினைகளும் போக்கி
ஊனமில் லாமல் நான்கது விருத்தி
உதித்திடு மாண்சுத ரென்றேரும்
பான்மையாய்ச் சாந்தி விபரமாய்ச் சொன்னேம்
பகருவோ மன்னையின் சேதி.

22. சொல்லப்பட்ட சாந்தியினை ஜாதகன் எந்தக் காலத்தில் செய்ய வேண்டும்? கூறுங்கள், முனிவரே! மூப்பத்துமூன்றும் வயதில், மேன்மை யாக, இந்தச் சாந்தியைச் செய்தால், ஏற்பட்ட தீவினைகள் நீங்கி, குற்ற மில்லாத மக்கள் கால்வர் தோன்றி விருத்தியாவர். ஆண் குழந்தைகள் தோன்றும் என்று சொன்னேம். பொருந்திய வகையில் சாந்தி விவரத்தைக் கூறினேம். இனி, ஜாதகன் தாயின் செய்தியைச் சொல்லுவோம்.

வேறு

23. *அன்னைகுண மாஞ்சிவப்பள் சமதே கத்தாள்
அறிவுள்ளாள் பொறுமையுண்டு முன்கோ பத்தாள்
தன்மகுணஞ் சாந்தமுண்டு வாயு பாதை
தங்கிடுமே வில்லமுந்தான் கீழ்ப்பா லாகும்
தன்துணையாண் காணுளாங் கன்னி தோன்றும்
சலிப்பாகு மதுவுந்தான் மத்தி யத்தில்

.....

அறைகின்றேரும் பூர்வமதைத் தக்கோ லத்தில்.

23. தாயின் குணங்களைக் கூறுவோம். கருமை கலந்த செந்நிற முடையவள். சமமான உடலமைப்பைப் பெற்றவள். அறிவுடையவள். பொறுமை யுள்ளவள். முன்கோப முடையவள். தருமசிந்தை யுள்ளவள். சாந்தியும் உடையவள். இவளுக்கு வாயு நோய் ஏற்படும். இவள் பிறந்தகம் ஜாதகன் வீட்டுக்குக் கிழக்கில் உள்ளதாகும். தன்னுடன் பிறந்த சகோதர னில்லாதவள். சகோதரி தோன்றுவாள். மத்திய வயதில் அவளும் மரண மடைவாள். தாயின் முற்பிறப்பைச் சொல்லுகின்றேரும். தக்கோலத்தில்;

*இப்பாடலின் இறுதியில் சில பகுதிகள் எட்டிலில்லை.

வேறு

24. செங்குந்த மரபில் தோன்றிச் சேயர்கள் வரனு மூண்டாய்
மங்கையும் வாழு நாளில் வந்தவூழ் தன்னைக் கேளாய்ச்
சங்கையால் நாத்தி பேரில் தப்பான வார்த்தை சொல்லித்
தங்கள்பந் தினரை விட்டுச் சத்தியை விலக்க லுற்றுள்.

24. செங்குந்த மரபினளாய்ப் பிறந்து, கணவன், மக்கள் ஆகியோரைப் பெற்று, இவள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் இவளை யடைந்த தீவினையைக் கேள். தனது, நாத்தி மீது சந்தேகங் கொண்டு, தவறான சொற்களைக் கூறி, அவள் கணவன் வீட்டாரிடமிருந்து அவளை விலக்கச் செய்தாள்.

25. ஏகின மாது தானும் இயம்புவாள் மனவெ றுப்பால்
பாகமாய்ப் பின்சென் மத்தில் பெருகாரே துணைகள் தாமும்
தோகையு மிரண்டாம் பாரி தோன்றியே நிந்தை பெற்றுப்
போகமுங் குறைவு நேர்ந்து பூமியில் வாழ்வா யென்று;

25. கணவன் வீட்டாரால் விலக்கப்பட்டுச் சென்ற பெண்ணும் மன வெறுப்படைந்து சொல்லுவாள். மறுபிறப்பில் உன்னுடன் பிறந்தோர் நிலைக்கமாட்டார்கள். நீ இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்பட்டு, பழி களை யடைந்து, சௌக்கியக் குறைவுண்டாகி, உலகில் வாழ்ந்திருப்பாயாக என்று;

26. சொல்லியே சென்ற ளென்றேங் தொடர்ந்தது தோடந் [தானும்
வல்லியு மந்தி யத்தில் வாய்ரணந் தன்னுல் மாண்டு
புல்லிரு ளிக்கு லத்தில் புக்கிற்று மூன்னூழ்த் தோடம்
நில்லாவே துணைக ளுந்தான் நேருவா ளிரண்டாம் பாரி.

26. சொல்லி விட்டுச் சென்றாள் என்று கூறினேம். இந்தத் தோஷம் இவளைத் தொடர்ந்தது. அப்பிறவியில் கடைசிக் காலத்தில் இவள் வாய்ப் புண்ணேற்பட்டு மரண மடைந்தாள். பின்பு, இக்குலத்தவளாகப் பிறந்தாள். முற்பிறப்புத் தோஷம் இப்பிறப்பில் இவளை யடைந்தது. அதனால் இவ ளுக்குச் சகோதரர்கள் நிலையார். இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப் படுவாள்.

27. சஞ்சல மனமாய் வாழ்வாள் தன்பணி யதிக மில்லாள்
வஞ்சிபின் சென்மஞ் சொல்வோம் வளமுள காஞ்சி தன்னில்
தஞ்சமா யிக்கு லத்தில் செனிப்பளா மிந்த மாது
தஞ்சமாய்த் தந்தை பூர்வஞ் சாற்றுவோ மினிமே லாக.

27. கலக்கங்கள் நிறைந்த மனத்துடன் வாழ்வாள். தனக்குச் சொந்தமான ஆபரணங்கள் மிகுதியாக இல்லாதவள். இவள் மறுபிறப்பைக் கூறுவோம். செழிப்புள்ள காஞ்சிபுரத்தில், இக்குலத்திலேயே தோன்றுவாள் இவள். இனிமேல், ஜாதகன் தகப்பனாரின் முற்பிறப்பைச் சொல்லுவோம்.

28. பொங்கிய மலைதே சத்தில் பிறந்தனன் செக்கா னுகி
மங்கையு மதலை யுண்டாய் வளமுள குடும்பி யாகி
இங்கவன் வாழு நாளில் இயம்புவோ மூழி தானும்
துங்கமாஞ் சுருதி யோர்க்குச் சொல்பமாய்ப் பொருளுந்
[தந்து ;

28. சிறப்புள்ள மலைநாட்டில், வாணியர் மரபினனுகப் பிறந்தான். மனைவி மக்களை யடைந்து, செழிப்புள்ள குடும்பமுடையவனுகி, இவன் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் சேர்ந்த தோஷமொன்றைச் சொல்லுவோம். தூய்மையுடைய அந்தணர் சிலருக்குச் சிறிதளவே கடனுகப் பொருள் கொடுத்து;

29. செய்தனன் கணக்கில் மோசஞ் செப்புவார் மறையோர்
[தாமும்
ஐயமாய்ச் செய்த பாவி அணுகிய பின்சென் மத்தில்
தையலு மிரண்டு மாகித் தன்துணை தோட மெய்தி
வையமேல் வாழ்வா யென்று வறைந்திட்டார் மறையோர்
[தாமும்.

29. அவர்கள் திரும்பத் தரும்பொழுது, அதிகமாகத் தரவேண்டும் என்று பொய்க் கணக்கு எழுதி வைத்திருந்து காட்டினுன். அந்த அந்தணர்கள் சாபமிடுவார்கள். கணக்கில் மோசஞ் செய்த பாவியே! வரப்போகும் பிறவியில், இரு மனைவியரை யடைந்து, சகோதர தோஷமுற்று, உலகில் வாழ்ந்திருப்பாய் என்று அவர்கள் கூறினர்கள்.

30. இன்னமுஞ் சிலவே தோடம் எய்திற்று விவனுக் கேதான்
துன்னிய கால நாடு சேர்ந்துமே பிரமன் லக்கம்
அன்னவ னிக்கு லத்தில் அணுகினு னென்று சொல்வோம்
முன்வினை யிச்சென் மத்தில் மேவிற்று மனைவி ரெண்டாய்.

30. இன்னுஞ் சில தோஷங்களும் இவனைச் சார்ந்தன. அப்பிறப்பில் இவ்விதமாக வாழ்ந்து, எமனுலகஞ் சேர்ந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, இக்குலத்தவனுக இப்பிறவியில் இவன் பிறந்தான் என்று கூறுவோம். முற்பிறப்புத் தீவினையினுல் இப்பிறப்பில் இவனுக்கு இரு மனைவியர் ஏற்பட்டனர்.

31. துணைகளுந் தோன்றித் தீதாஞ் சுதர்களு மத்தி யத்தில்
பிணையாக வேறுய்ச் செல்வர் பேசுவோ மிவன்பின் சென்மம்
அணையதக் கோலந் தன்னில் அணுகுவா னிக்கு லத்தில்
சினமிலாத் தவங்கள் செய்யுந் தேவியே கேட்டி டாயே.

31. சகோதரர்களுந் தோன்றி மரிப்பர். இவன் புதல்வர்களும் இடைக்காலத்தில் இவனிடம் விரோதங் கொண்டு வேறு குடும்பமாகச் செல்லுவர். இவன் மறுபிறவியைக் கூறுவோம். தக்கோலத்தில், இக் குலத்தவனாகவே தோன்றுவான். கோபமடையாமல் தவங்களை யாற்றுகின்ற பார்வதி தேவியே! கேட்பாயாக.

32. முப்பது வைந்து வாண்டி லுயர்தேளின் மாதந் தன்னில்
செப்புவோந் தந்தை கண்டஞ் சென்றுபின் முப்பா
[ரைன்பான்
ஓப்புடன் மகர மாதம் உரைக்கின்றே மன்னை கண்டம்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுவே.

32. ஜாதகனின் முப்பத்தைந்தாம் வயதில், கார்த்திகை மாதம் தந்தையின் மரணத்தைச் சொல்லுவோம். பின்பு, முப்பத்தொன்பதாம் வயதில், தை மாதம் தாயின் மரணத்தைக் கூறுகின்றோம். கங்கையை யணிந்த சடைமுடியோடு கூடிய சிவபெருமான் பத்தினியே! நாங்கள் சொல்லிய சொற்கள் தவறு.

33. அறுபது வொன்ப தாண்டில் ஐப்பசி மாதந் தன்னில்
திருமகன் தனக்குக் கண்டஞ் செயமுனி கூறு கின்றார்
வருமவன் தனக்கு மேதான் மத்தியில் கண்டம் நேரும்
உறைந்திடுஞ் சகட யோகம் உயர்மீன மதியு நிற்க;

33. அறுபத்தொன்பதாம் வயதில், ஐப்பசி மாதம் ஜாதகனுக்கு மரணம் உண்டாகும். செயமுனிவர் சொல்லுகின்றார். ஜாதகனுக்கு மத்திய காலத்தில் கண்டம் ஏற்படும். சகடயோகம் தங்கும். மீன ராசியில் சந்திரன் இருப்பதனால்;

34. பங்கமே நேரு மென்றும் பாலகன் வயது தீக்கம்
சங்கையாய்ப் பிணிகள் நேர்ந்துஞ் சனியேழி லிருப்ப தாலே
பங்கயன் முன்பனி போலே பறந்திடு மென்று சொல்வோம்
அங்கவன் பின்சென் மத்தை அறிவிப்போந் தாயே யாங்கள்.

34. சகட யோகத்துக்குப் பங்கமேற்படும் என்று கூறினோம். ஜாதகனுக்கு வயது தீர்க்கமே. தீங்குண்டாக்கும் நோய்கள் வந்தாலும், சனி ஏழாமிடத்தில் தங்கியிருப்பதால், சூரியனுக்கு முன்பு பனிபோல் அவை விலகிப்போம் என்று கூறுவோம். தாயே! ஜாதகனின் மறுபிறப்பை நாங்கள் சொல்லுவோம்.

35. உத்திரம் வள்ளூர் தன்னில் உதிப்பனுஞ் சைவச் சேயாய்
வித்தகன் யோகச் சேதி விளம்புவோ மினிமே லாக
முத்துசா மரையோ கங்கள் முக்குடை யோக மொன்று
சுத்தமாய்ப் பலனைச் சொல்வோஞ் சுகதுக்க மிரண்டு
[முள்ளான்.

35. வடக்கிலுள்ள திருவள்ளூரில், சைவ குலத்தவனுகப் பிறப்பான். இனிமேல், ஜாதகனது யோக விசேஷங்களைச் சொல்லுவோம். முத்து யோகம், சாமரை யோகம், முக்குடை யோகம் ஆகிய இம்மூன்றும் இவனுக்கு வரும். இவற்றுக்குப் பலன்களைச் சொல்லுவோம். இன்பம், துன்பம் இரண்டும் உள்ளவன்.

36. அன்னமுங் குறைவு றுதான் அணுகாவே தனங்கள் தாமும்
பொன்பணி யதிக மில்லான் புத்திரன் போக மென்றும்
தன்னிலே சல்ய மில்லான் தந்தையு மிகளும் விருத்தி
சொன்னசொல் காப்பா னுகுந் துணைவனு லவமா னத்தான்.

36. போஜனத்துக்குக் குறைவேற்படாதவன். செல்வங்கள் சேரா. பொன்னுபரணங்கள் மிகுதியாக இல்லாதவன். இவன் புத்திரன் யோக வானுக விளங்குவான் என்று சொன்னேம். கடனில்லாதவன். தந்தையால் சேர்த்து வைக்கப்பட்ட நிலபுலன்களும் விருத்தியாம். சொன்ன சொல் தவறுன். உடன்பிறந்தானுல் அவமான மடைவான்.

37. இல்லமு மிருபத் தேழில் இலகிடும் பாகம் நான்காம்
அல்லல்மத் தியத்தில் நேரும் அலைச்சல்கள் மிகவே யெய்தும்
வல்லவன் சேதி யெல்லா மறைகின்றேம் விபரம் ரெண்டில்
நல்லவ னுகி வாழ்வன் நாயகி கேட்டி டாயே.

37. ஜாதகனது இருபத்தேழாம் வயதில், வீடு நான்கு பங்காகப் பிரிக்கப்படும். மத்திய காலத்தில் ஜாதகனுக்குப் பல துன்பங்கள் உண்டாம். மிகுதியான அலைச்சல்கள் ஏற்படும். இவனது மற்றச் செய்திகளனைத்தையும் விவரமாக இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றேம். நற்குண முடையவனுக வாழ்ந்திருப்பான். தலைவியே! கேட்பாயாக.

38. பிறந்திடு காலந் தன்னில் புதன்தசை யாண்டு வாறும்
உறைந்திடுந் திங்க ளாறும் உதித்திடுந் துணைபின் விருத்தி
வரும்பிணி யன்னை தந்தை மைந்தனும் பிணியால் வாடிக்
குறைந்திடுங் காலி தாமுங் கூறுவோம் பின்பால் சேதி.

38. ஜாதகன் பிறப்புக் காலத்தில், புத மகா தசை இருப்பு, ஆறு வருஷங்களும், ஆறு மாதங்களுமாம். அக்காலத்தில், இவனுக்கு இளைய சகோதர னொருவன் தோன்றிடுவான். தாய் தந்தையர்க்கு நோய் வரும். ஜாதகனும் வியாதியால் துன்பப்படுவான். கால் நடைகளுக்குச் சேதமுண்டாகும். மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுவோம்.

ஜாதகம் 109

1. நந்தியுஞ் செனன மாக ரவிபுதன் புகரு மீனம்
மந்திரி கடக மாக மங்கலன் ராகு சாடி
சந்திரன் மான தாக சனிதுலாங் கேது சீயம்
இந்தவார் கோளுஞ் சேரில் இயம்புவீர் பலனைத் தானே.

1. விருஷபம் ஜன்ம லிலக்கினமாகி, சூரியன் புதன் சுக்கிரன் மீனத்திலும், குரு கடகத்திலும், செவ்வாய் ராகு கும்பத்திலும், சந்திரன் மகரத்திலும், சனி துலாத்திலும், கேது சிம்மத்திலுமாக இவ்விதம் கவக்கிரகங்களும் நின்றால், உரிய பலன் களைச் சொல்லுவீர்.

சூரியன் சுக்கிரன் புதன்		லக்கினம்	
செவ்வாய் ராகு	இராசி சக்கரம்		குரு
சந்திரன்			கேது
		சனி	

2. உத்தமி கேட்கும் போது உரைக்கின்றார் வதிட்டர் தாமும்
சித்தச ஞண்பால் சென்மம் செனித்தவில் கீழ்மேல் வீதி
சுத்தமாய் வடக்கு வாடை தோகைவா கனத்தோன் தந்தி
குற்றமில் லாமல் மேற்கில் கூறுவோ முத்தி ரத்தில்.

2. பார்வதி இங்ஙனம் கேட்கும்பொழுது, வசிட்ட முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண்பிறப்பு. பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் வடக்கு வாடையி லுள்ளது. மயில் வாகனத்தையுடைய முருகப்பிரான், விநாயகர் ஆகியோர் கோயில்கள் மேற்கிலுள்ளன என்று சொல்லுவோம். வடக்கில்;

3. நீலிமா காளி தங்கும் நீர்க்குள மருகில் தங்கும்
சாலவே துருவங் கீழ்ப்பால் சக்கரத் தோனுந் தென்கீழ்
ஏலவே தென்மேல் திக்கில் இருந்திடு மாயோன் கோட்டம்
ஆலத்தை யுண்டோன் வாயு அணுகிடு மென்று
[சொல்வோம்.

3. பத்திரகாளி வாசம் புரிவாள். நீர் நிறைந்த குளமொன்று வீட்டுக்குச் சமீபத்தில் உள்ளது. அரசரது மலைக்கோட்டை கிழக்கில் இருக்

கின்றது. சக்கராயுதத்தை யேந்திய திருமால் தென்கிழக்கில் எழுந்தருளி யிருக்கின்றார். தென்மேற்குத் திசையிலும் விஷ்ணு கோயிலொன்று உண்டு. ஆலகால விஷத்தை யுண்டருளிய சிவபெருமான் ஆலயம் வட மேற்கிலுள்ளது என்று கூறுவோம்.

4. இன்னமும் பலதே வாசம் இலகிய சோலை யுண்டு
அந்நகர் ப்ருதிவி யாகும் அறைந்தவில் கெட்டி யாகும்
சொன்னவிவ் வடையா ளத்துள் தோன்றுவா னெட்டாஞ்
[சென்மம்
தன்னிலே கௌரி வம்சஞ் சாற்றினேங் கேளுந் தாயே.

4. இன்னும் பல தெய்வங்கள் அங்கு வாசம் புரிகின்றனர். சோலை யொன்று உளது. அந்த நகரத்தில் உள்ள கோயிலில் ப்ருதிவி லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. முன்பு சொல்லப்பட்ட ஜாதகன் வீடு உறுதி பெற்றதாகும். கூறப்பட்ட இவ்வடையாளங்களுள்ள விடத்தில் தன் தந்தைக்கு எட்டாம் பிறப்பாக, கௌரீக மரபில் ஜாதகன் தோன்றுவான் என்று நாங்கள் சொன்னோம்; தாயே! கேளுங்கள்.

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோம் நவம தாகும்
சொன்னதி லாண்பால் ரெண்டு தீர்க்கமா மென்று
[சொல்வோம்
அன்னவர் வேறுயச் செல்வர் அவர்களு மூத்தோ ராவர்
விந்தையாய்த் தந்தை சேதி விளம்புவோங் கேளுந் தாயே.

5. தகப்பனுருடன் பிறந்தவர்களைப் பற்றி நாங்கள் சொல்லுவோம். அவர்கள் ஒன்பதின்மர். சொல்லப்பட்ட ஒன்பதின்மரில் ஆண்கள் இருவர் தீர்க்கமாவர் என்று கூறுவோம். அவர்கள் வேறு குடும்பமாகச் செல்லுவர். அவ்விருவரும் ஜாதகன் தந்தைக்கு மூத்தோராவர். தந்தையின் செய்திகளைச் சொல்லுவோம்; கேளுங்கள், தாயே!

6. மானிறஞ் சமதே கத்தன் மருமமில் லாத நெஞ்சம்
தேன்மொழி கூறு வானுஞ் செனசகா யங்கள் செய்வன்
ஆன்றவர் நேசங் கொள்வன் ஆசாரங் கல்வி மானும்
ஈனமாங் குணங்க ளில்லான் எதிரியை வசியங் கொள்வன்.

6. மானிற முள்ளவன். சமமான உடலமைப் புள்ளவன். மனத்தில் மறைவில்லாதவன். தேன்போன்ற இனிய சொற்களைப் பேசுவான். மக்களுக்கு உதவிகள் செய்வான். சான்றோர்களிடம் நேசத்தைப் பெறுவான். ஒழுக்க முள்ளவன். படிப்பாளி. தாழ்வான குணங்க ளில்லாதவன். பகைவனை வசப்படுத்துவான்.

7. கூறிடான் கடின வார்த்தை கொம்பனை யாட்கு நேயன்
தேரிய மனத்த னாகுஞ் சிற்றுண்டிப் பிரிய னாகும்
பாரது கொஞ்ச முண்டு பகைவரை லகுவில் வெல்வன்
சீரிய செட்டுச் செய்வன் சிரமுக வடிவு முள்ளான்.

7. கடுமையான சொற்களைப் பேச மாட்டான். மனைவிக்கு விருப்ப மானவன். தெளிந்த மனமுள்ளவன். சிற்றுண்டிகளில் விருப்ப முடைய வன். நிலபுலன்கள் சிறிதுண்டு. விரோதிகளை எளிதில் வெற்றி கொள்ளு வான். உயர்ந்த வியாபாரங்கள் செய்வான். தலையிலும் முகத்திலும் அடை யாளங்க ளுள்ளவன்.

8. பிறவிகள் தமக்கு நேயன் பின்துணை யில்லா னாகும்
அரிபக்தி கொஞ்ச முள்ளான் அல்பமாந் தொழிலைச்
[செய்வன்
திறமுள வாசா லன்தான் செய்தொழில் பலித முண்டு
குறைவிலாக் குடும்பி யாவன் குஞ்சர நடையு மாவன்.

8. உலகத்தில் பிறப்பெடுத்த அனைவர்க்கும் நல்லவன். இவனுக்கு இளைய சகோதரன் இல்லாதவன். விஷ்ணு பக்தி சிறிதுடையவன். அற்ப மான தொழிலைச் செய்வான். நல்ல பேச்சாளி. செய்யும் செயல்களில் வெற்றி யடைவான். குறைவற்ற குடும்ப முடையவ னாவான். யானை போன்று கம்பீர நடை யுடையவன்.

9. இன்னவன் வெகுபேர்க் கன்பன் இடரான புத்தி யில்லான்
உன்னத வசன னாகும் உறைப்பொடு புளிப்பி லிச்சை
மன்னுவா சங்க ளாகும் மருமத்தை வெளிக்காட் டாதான்
பொன்னது வில்லா னாகும் புண்ணிய வதியே கேளாய்.

9. இவன் பலருக்கு நண்பன். தவறான புத்தி யில்லாதவன். உயர்ந்த முறையில் பேசுபவன். உறைப்புச் சுவையுள்ள பொருள்களிலும், புளிப்புச் சுவை பொருந்திய பொருள்களிலும் விருப்ப முள்ளவன். நிலையான வாழ்க் கையை யுடையவன் ஆவன். மனத்திலுள்ளவற்றை வெளிப்படுத்தாவன். செல்வ மில்லாதவன். புண்ணியசாலியே! கேட்பாயாக.

10. இக்குண முடையோ னுக்கு இவனுமே வுதிப்பா னாகும்
மிக்கவே விவன்கு ணத்தை விளம்புவோம் மால்நி றத்தான்
சிக்கன முடையா னாகுந் தேவதாப் பக்தி கொள்வன்
மைக்கண்ணி மார்கள் மோகன் மர்மத்தை வெளிக்காட்
[டாதான்.

10. இவ்விதக் குணங்களை யுடையவனுக்கு இந்த ஜாதகன் புதல்வனுக்குத் தோன்றுவான். இவன் குணங்களைக் கூறுவோம். காரிய நிற மூடையவன். சிக்கன வாழ்க்கை யுள்ளவன். தெய்வபக்தி யுடையவன். பெண்களால் மோக மூடையவன். மனத்திலுள்ளவற்றை வெளிப்படுத்தாதவன்.

11. வித்தையு மூன்று கற்பன் விவேகியாம் பெரியோ ரிட்டம்
நத்தினோர்க் குதவி செய்வன் நலமறிந் துரைக்க வல்லன்
புத்தியில் பெரியோ னுவன் பூடண மதிகஞ் சேர்ப்பன்
நித்தியஞ்சில னுவன் நேமிக ளதிகஞ் சேர்ப்பன்.

11. மூன்றுவிதக் கல்விகள் கற்பான். பகுத்தறிவுள்ளவன். சான்றோர் அன்புக் குரியவன். துன்ப மடைந்தவர்களுக்கு உதவி புரிவான். பொருள்களின் நன்மை தீமைகளை யுணர்ந்து பேசுதலில் வல்லவன். அறிவில் பெரியவன். பொன்னுபரணங்களை மிகுதியாகச் சேர்ப்பான். நல்லொழுக்க முடையவன். நிலபுலன்களை மிகுதியாகச் சேர்ப்பான்.

12. அரசனுல் தொழிலுஞ் செய்வன் அசுவவா கனமு முள்ளான்
குறைவிலாக் குடும்பி யாவன் குலத்துளோர் மெச்ச வாழ்வன்
திருமகள் வாச முள்ளான் சனங்களுக் குதவி செய்வன்
பரிவண்டி யுடைய னுகும் பால்பசு விருத்தி யுள்ளான்.

12. அரசாங்க உத்தியோகஞ் செய்வான். குதிரையை, ஏறிச் செல்லும் ஊர்தியாகப் பெற்றவன். குறையில்லாத குடும்பமுள்ளவ னுவான். தன்குலத்தி லுள்ளோர் பாராட்டும்படி வாழ்ந்திருப்பான். இலட்சுமீ கட்டாட்சம் பெற்றவன். மக்களுக்கு உதவிகள் செய்வான். குதிரை வண்டி யுடையவன். பால்தரும் பசுக்கள் விருத்தி யுள்ளவன்.

13. இன்னவன் துணைவர் தம்மை இயம்புவோ மாண்பால்
[ரெண்டு
கன்னிகை யவ்வா ருகுங் கழறுவோம் நாலுந் தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் பின்துணை காணு னுகும்
அன்னவர் துணைவர் சேதி அறைகின்றேங்ங் கேட்டி டாயே.

13. ஜாதகனுடன் பிறந்தவர்களைப் பற்றிக் கூறுவோம். ஆண்கள் இருவர். பெண்கள் இருவர். இவர்கள் நால்வருந் தீர்க்கமாவர் என்று சொல்லுவோம். மேலும் பிறப்பவர் சேதமாவர். ஜாதகனுக்கு இளைய சகோதரர் இல்லை. உடன்பிறந்தார்களில் ஒருவன் செய்திகளைச் சொல்லுகின்றேம்; கேட்பாயாக.

14. கல்விமான் செட்டுச் செய்வன் கண்முகம் வசிய முள்ளான்
நல்லவன் நல்ல வர்க்கு நாட்டினில் செட்டுச் செய்வன்
மல்லுக்குச் செல்லா னுகு மனமது கபடு மில்லான்
புல்லிய புத்தி யில்லான் புண்ணிய மனத்த னுகும்.

14. படிப்பாளி. நல்லதொரு தொழில் செய்வான். கண்கள், முகம் இவைகளில் வசீகர முடையவன். நல்லவர்க்கு நல்லவனுக விளங்குவான். சிறந்த வியாபாரஞ் செய்வான். வீண் சண்டைக்குப் போகமாட்டான். மனத்தில் வஞ்சனை யில்லாதவன். அற்ப புத்தி கொள்ளாதவன். நல்மன முள்ளவன்.

15. ஈட்டினு ளிடபஞ் சென்மம் யாவர்க்கும் நல்லோ னுவன்
கூட்டுவா ணிபமுஞ் செய்வன் குணமது விரண்டு மூண்டாம்
வேட்டகந் தென்மேல் திக்கில் விளங்கிடுஞ் சுதராண்
[ரெண்டு
தாட்டியாய்ப் பெண்பால் மூன்று சாற்றினேந் தீர்க்க மாக.

15. கேட்டை நட்சத்திரம், விருஷப லக்னத்தில் இவன் பிறப்பான். எல்லோருக்கும் நல்லவனுவன். கூட்டு வியாபாரங்கள் செய்வான். இரு விதக் குணங்கள் படைத்தவன். இவன் மனைவியின் வீடு தென்மேற்குத் திசையில் உள்ளது, இவனுக்குப் புதல்வ ரிருவர் உளராவர். பெண்களும் மூவர். இவர்க ளனைவரும் தீர்க்கமாவர் என்று கூறினேம்.

16. ஆதியி லொருவன் கீழ்ப்பா லணுகியே சீவிப் பானும்
நீதிவான் மால்நி றத்தான் நிதமுமே சீல னுவன்
வேதனை யொருவர்க் கெண்ணுன் விருத்தியாந் தந்தை
[யாஸ்தி
மாதவர் பக்தி கொள்வன் மறுதுணை சேதி சொல்வோம்.

16. மூத்த சகோதரன் இவனூர்க்குக் கீழ்த் திசையில் சென்று ஜீவனஞ் செய்வான். நியாய முள்ளவன். கரிய நிற முள்ளவன். ஒழுக்க முடையவ னுவான். எவருக்குந் துன்பஞ் செய்ய நினையான். தந்தையால் தேடி வைக்கப்பட்ட சொத்துக்கள் இவன் காலத்தில் விருத்தியாம். தவ முடைய பெரியோர்பால் பக்தி கொள்ளுவான். இன்னொரு சகோதரனின் செய்தியைச் சொல்லுவோம்.

17. தனுசூ ராடஞ் சென்மஞ் சனிப்பனும் நல்லோ னுவன்
இனங்களுக் குதவி செய்வன் இடரான புத்தி யில்லான்
வனிதையர் மோக வானு மாநிலஞ் செட்டுச் செய்வன்
சினமுளான் முரட னுவன் தீரனும் ஊக சாலி.

17. பூராட நட்சத்திரம், தனுர் லக்னத்தில் தோன்றுவான். நல்லவன். உறவினர்களுக்கு உதவி செய்வான். தவருன புத்தி யில்லாதவன். பெண்கள்பால் மையல் கொள்ளுவான். வியாபாரஞ் செய்வான். கோப முடையவன். முரட்டுத்தன முள்ளவன். தைரிய முடையவன். சாமர்த்தியசாலி.

18. வறுமைக ளடையா ளுகும் மாநிலங் கிருஷி செய்வன்
நறைமலர் கந்த மிட்டன் நாற்காலி விருத்தி யுள்ளான்
குறையுருன் சுகபு சிப்பன் கூறுவான் சிலேடை வார்த்தை
மறையவர் நேயங் கொள்வன் மனைவியு மொன்றே யாகும்.

18. தரித்திரமடைய மாட்டான். பயிர்த்தொழில் செய்வான். மணமுள்ள மலர்களிலும், மற்றப் பொருள்களிலும் விருப்ப முடையவன். கால்நடைகள் விருத்தி யுடையவன். தரித்திர மடையான். சுகமான போஜனத்தை யுட்கொள்ளுவான். இருபொருள்படப் பேசுவான். அந்தணர் நட்பைக் கொள்ளுவான். இவனுக்கு மனைவி யொருத்தியே.

19. தென்திசை நேரு மென்றேனு சேயர்க ளாண்பால் மூன்று
கன்னிகை யொன்று மாகும் கழறின நான்குந் தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் பிரியாம லொன்றுய் வாழ்வன்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

19. அவள் தென் திசையிலிருந்து வாய்ப்பாள் என்று கூறினேம். மிக்களில், ஆண்கள் மூவரும், பெண்ணொருத்தியு மாவர். கூறப்பெற்ற நால்வருந் தீர்க்கமாவர். மேலும் பிறப்பன சேதமாம். இவன் சகோதரர்களுடன் ஒற்றுமையாய் வாழ்வான். உயர்ந்த கணவனை யடைந்த பார்வதியே! கேட்பாயாக.

20. துணைவர்க ளொன்றுய் வாழ்ந்து செல்லுவார் வேற தாக
அனையவே பின்பா கத்தில் அறிஷிப்போ மந்தச் சங்கை
கனமுடன் பெண்பால் சேதி கழறுவோம் ரெண்டி லேதான்
பிணையிலா மாதுர் சேதி பேசுவோ மினிமே லாக.

20. சிலகாலஞ் சகோதரர்கள் ஒற்றுமையாக வாழ்ந்து, பின்பு வேறுகப் பிரிந்து செல்லுவர். அந்தச் செய்தியைப் பிற்பாகத்தில் தெரிவிப்போம். சகோதரியின் செய்தியையும் இரண்டாம் பாகத்தில் கூறுவோம். குற்றமற்ற தாயின் வரலாற்றை இனிக் கூறுவோம்.

21. மாதுரு சிவந்த மேனி மர்மமாங் குணத்தா ளாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உறுதியாங் குணத்த ளாகும்
தீதிலாக் குணத்தா லென்றேங் தேவிகன் னடக்கை
[யுள்ளாள்
வேதனை யெண்ணு நெஞ்சம் மேதினி லுணைச்சல் தேகி.

21. ஜாதகனின் தாய் சிவந்த உடலுடையவள். மனத்தில் மறைவுள்ளவள். இனிதாகப் பேசுவாள். உறுதியான மனம் படைத்தவள். தீங்கில்லாத எண்ணமுடையவள் என்று கூறினேம். நன்னடத்தை யுள்ளவள். மனத்தில், பிறருக்குத் துன்பஞ்செய்ய நினையாள். மெலிந்த சரீரமுடையவள்.

22. அன்னமு மன்பா யீவள் ஆளனுக் கினிய ளாகும்
பன்னியே பேச வல்லாள் பெருகிடும் பித்த சூடு
பின்னமில் லாத தேகி பிறந்தவில் தென்மே லாகும்
அன்னையு மிரண்டு முள்ளாள் ஆதிதாய் தனக்குத் தோன்றும்.

22. வீட்டுக்கு வந்தவர்கட்கு அன்புடன் உணவளிப்பாள். கணவனுக்கு உகந்தவள். பன்னிப் பன்னிப் பேசுவாள். உடலில் பித்த சூடு மேலிட்டவள். குற்றமில்லாத உடலுடையவன். இவளுக்குப் பிறந்தகம் தென்மேற்குத் திசையிலுள்ளது. தாய்மார் இருவரைப் பெற்றவள். இவள் முதல் தாய்க்குத் தோன்றுவாள்.

23. இவள்துணை நான்கே தோன்றும் இடராகு மிரண்டு
[மென்றேரும்
பவமுள வாண்பால் ரெண்டு பெருகிடுந் தீர்க்க மாகத்
தவசியுஞ் சொல்லும் போது செயமுனி கேட்க லுற்றூர்
அவளுக்குப் பின்தா யொன்று அறைந்திட்டீ ரவட்குப்
[புத்ரர் ;

23. இவளுடன் நால்வர் பிறப்பர். அவர்களில் இருவர் மரிப்பர் என்று சொன்னேம். இரண்டு ஆண்மக்கள் தீர்க்கமாக வினங்குவர். இங்ஙனம் முனிவர் கூறும்போது, செய முனிவர் கேட்கின்றார். இவளுக்கு இளைய தாயொருத்தி யுண்டு என்று கூறினீர்கள்? அவளுக்குப் புத்திரர் எத்தனையர்? என்று;

24. சொல்லுவீர் முனியே நீர்தாம் செப்புவோங் கேளு மம்மா
வல்லிக்கு வாண்பா லொன்று மங்கையு மிரண்டு மாகும்
நில்லாவே மற்ற வெல்லாம் நிகழ்த்துவோ மன்னை பூர்வம்
அல்லலை யகற்று மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

24. முனிவரே! நீங்கள் கூறுங்கள். சொல்லுகின்றோம்; கேளுங்கள்; தாயே! இவ்வய தாய்க்கு ஆண் குழந்தை யொன்றும் பெண்களிருவரும் பிறந்து தீர்க்கமாவர். மேலும் பிறப்பன நிலையா. தாயின் முற்பிறப்பைச் சொல்லுவோம். துன்பங்களே நீக்குகின்ற எங்கள் உயிர்போன்ற தாயே! கேட்பாயாக.

25. அருணைக்குக் கீழ்ப்பா-லாக அருகினில் பேரூர் தன்னில்
திருமகள் விலாசம் பெற்ற செங்குந்த மரபில் தோன்றி
வரனுமே வுள்ளூர் தன்னில் மதலைக ளதிக முண்டாய்
வருவோருக் கன்ன மீந்து மாதுவுஞ் சுகமாய் வாழ்ந்து;

25. திருவண்ணாமலைக்குச் சமீபமாக உள்ளதொரு பெரிய ஊரில், இலட்சுமீ கடாட்சத்தைப் பூரணமாகப் பெற்ற செங்குந்த வமிசத்தில் பிறந்து, உள்ளூரிலேயே கணவனை யடைந்து, மக்கட் செல்வம் மிகுதியாகப் பெற்று, வீட்டுக்கு வந்தவர்கட்கு உணவளித்து, சௌக்கியமுடன் வாழ்ந்து;

26. பலவிதத் தலங்கள் சென்று பஞ்சைமே லிரக்க முண்டாய்க்
குலவியே ஊழில் லாமல் கூற்றன்தன் பதிக்குச் சென்று
நலமுள கஞ்ச னுலே நாட்டினில் வரையப் பட்டுத்
தலைவியுங் கௌரி வம்சஞ் சார்ந்தன ளென்று சொல்வோம்.

26. பல ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று, அதிகிகள் மீது இரக்கங் கொண்டு, தீவினையில்லாமல், மரணமடைந்து, பிரமனால் மீண்டும் படைக்கப்பட்டு, இப்பிறப்பில், கௌரீக வமிசத்தில் பிறந்தாள் இவள் என்று கூறுவோம்.

27. இச்சென்மந் தன்னி லேதான் இவளுக்குச் சுகமுண் டாகி
இச்சைக ளில்லா வாழ்வள் இயம்புவோ மிவள்பின்
[சென்மம்
மிச்சமாய்க் காஞ்சி தென்பால் விளங்குவாள் வைசியச்
[சேயாய்க்
கச்சணி சுகமாய் வாழ்வள் காதலி மேலுங் கேளே.

27. இப்பிறப்பில் இவளுக்குச் சௌக்கியங்க ளேற்பட்டு, துன்பமில்லாமல் வாழ்ந்திருப்பாள். இவள் மறுபிறப்பைச் சொல்லுவோம். காஞ்சீபுரத்துக்குத் தெற்குப் பக்கத்தி லுள்ளதோர் ஊரில், வைசிய மாபினளாய்ப் பிறந்து, சுகமுடன் வாழ்வாள். பார்வதியே! மேலுங் கேள்.

28. தந்தையின் பூர்வஞ் சொல்வோங் தக்கோல மருகில்
[கீழ்ப்பால்
முந்திய சிற்றூர் தன்னி லுதித்தனன் தீயின் வம்சம்
தந்தன மதிக முண்டாய்த் தன்மனை மதலை யுண்டாய்
வந்தவர்க் கன்ன மீந்து மார்க்கத்தில் தாகப் பந்தல்:

28. ஜாதகன் தகப்பனுரின் முற்பிறப்பைக் கூறுவோம். தக்கோலத்துக்குச் சமீபமாகக் கிழக்கிலுள்ள சிறிய ஊரில், வன்னியர் மரபில் தோன்றினன். சொந்தமாகத் தேடிய பொருள் மிகவுடையவனாகி, மனைவி மக்களேற்பட்டு, வீடு தேடி வந்தவர்க்கு உணவளித்து, சாலைவழியில் வருபவருக்கு உதவியாகத் தண்ணீர்ப் பந்தல்;

29. வைத்துமே யறத்தி லிச்சை வளமுள தலங்கள் சென்று
வித்தக னாழில் லாமல் மேவினன் காலன் பக்கல்
பத்திய பிரம னுலே பாரினில் வரையப் பட்டுச்
சத்தியின் குலத்தி லேதான் சார்ந்தன னென்று சொன்னேம்.

29. அமைத்து, தருமத்தில் விருப்ப முடையவனாகி, சிறந்த தலங்களுக்கு யாத்திரை சென்று, தீவினையின்றி, இயமனுலக மடைந்தான். பிரமனால் மீண்டும் படைக்கப்பட்டு, கௌரீக வமிசத்தவனாக இப்பிறப்பில், தோன்றினன் என்று கூறுவோம்.

30. இந்ததோர் சென்மந் தன்னில் இவனுமே சுகமாய் வாழ்ந்து
அந்தகன் பக்கல் சென்று அயனுமே வரையப் பட்டுப்
பிந்திய சென்மந் தன்னைப் பேசுவோ மரங்கந் தன்னில்
முந்திய குலமு திப்பான் முதல்வியே கேட்டி டாயே.

30. இப்பிறப்பில், இவன் சௌக்கியமாக வாழ்ந்து, எமனுலக மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, மறுபிறவியில் திருவரங்கத்தில், அந்தணர் மரபில் தோன்றுவான். எல்லா வுலகங்களுக்கும் முதன்மையானவளே! கேட்பாயாக.

31. மங்கையுங் கேட்க லுற்றுள் மாரனு மிச்சென் மத்தில்
சங்கையா யற்பச் செட்டுச் செய்துமே பொருள்மே லிச்சை
துங்கமா மனமு மின்றிச் சொல்லது தவறுத லாலும்
இங்கிவன் மறுபி றப்பு இருபிறப் பாளர் வம்சம்.

31. பார்வதி கேட்கலானாள். இவன் இப்பிறவியில், குற்றமுடன், அற்பமான வியாபாரங்கள் செய்து, பொருளில் விருப்ப முடையவனாய், தூய்மையுள்ள மனமில்லாதவனாகி, சொன்ன சொல்லைக் காப்பாற்றாமல் வாழ்ந்து வந்தும், மறுபிறப்பு அந்தணர் மரபில்;

32 உதிக்குங்கா ரணங்க ளென்ன உரைப்பீர்கள் முனியே
[நீர்தாம்
வதிபனு மிச்சென் மத்தில் மனமது கபடு மின்றி
நிதியிலா வேழை யோரை நிருபனுங் காத்த லாலும்
அதிதிமேல் பக்தி யுண்டாய் யாவர்க்கும் நல்லோ னாகி;

32. பிறக்குங் காரணங்கள் யாவை? என்று, கூறுங்கள் முனிவரே! தாங்கள். ஜாதகன் இப்பிறப்பில், மனத்தில் வஞ்சனை யில்லாமலும், செல்வ மில்லாத ஏழை மக்களைக் காப்பாற்றியும், வீட்டுக்கு வருகின்ற அதிதிகளிடத்தில் பக்தி பூண்டும், அனைவர்க்கும் நல்லவனாகியும்;

33. தேவதாப் பக்தி கொண்டு சிறுத்தவர்க் கன்ன மீந்து
தாவியே வாழ்வ தாலே சனிப்பனும் பிரம்ம சேயாய்
மேலவர் பூசை செய்து வித்தகன் சுகமாய் வாழ்ந்து
ஓவிய தேவ னாக உதிப்பனு மென்று சொல்வோம்.

33. தெய்வ பக்தியுடனும், தரித்திரர்களுக்கு உணவளித்தும், வாழ்ந்து வருவதால், மறுபிறப்பில் அந்தணர் குலத்தவனாகப் பிறப்பான். அதேத பிறவியில், சான்றோர்களுக்குப் பூசை முதலியன செய்து, சௌக்கியமாய் வாழ்ந்து, மரணமடைந்து, தேவர்களில் ஒருவனாகத் தோன்றுவான் என்று கூறுவோம்.

34. சாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோ மிருப தாண்டில்
மேதினில் தெற்குத் திக்கில் வித்தகி மாதர் வர்க்கம்
காதலி வருவா ளாகுங் கழறுவோ மவள்கு ணத்தைச்
சூதிலாள் சிவந்த மேனி சொல்லுமுன் கோபி யாவள்.

34. ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். இருபதாம் வயதில், இவனுக்குத் தெற்குத் திசையிலிருந்து, தாய் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி மனைவியாக வாய்ப்பாள். அவள் குணங்களைச் சொல்லுவோம். வஞ்சனை யில்லாதவள். சிவந்த உடலினள். கூறுவதற்கு முன்பு கோப மடைவாள்.

35. வரனுக்கு நேய முள்ளாள் மங்கைகற் புடைய ளாகும்
திருமக ளொப்ப தாகுந் தேவியும் யோக சாலி
பெரும்பணி யதிக முள்ளாள் பூமியில் நல்லோ ளாவள்
வருவோருக் கன்ன மீவள் மாநிலம் நல்லோ ளாவள்.

35. கணவனுக்குப் பிரியமானவள். கற்புடையவள். இலக்குமி போன்ற வடிவழ குடையவள். அதிர்ஷ்ட முள்ளவள். மிகுதியான ஆபரணங்க ளுள்ளவள். உலகில் நற்பெயருடன் விளங்குவாள். வீட்டுக்கு வரு

பவர்க்கு உணவளித்து உபசரிப்பாள். உலக மக்களுக்கு நல்லவளாக விருப்பாள்.

36. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணும்
சுத்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று சொன்னேம்
வித்தகர் வதிட்டர் சொல்ல விதுரருங் கேட்க லுற்றார்
புத்திரத் தோட மெவ்வார் பொருந்துங்கா ரணங்க
ளெவ்வார்.

36. ஜாதகனுக்குப் புத்திர பாக்கியத்தைப் பற்றிக் கூறுவதற்குக் கிரக வலிவில்லை. அங்ஙனம் தோன்றினாலும், தோஷமடையும் என்று கூறினேம் வசிஷ்டர் இவ்வாறு சொல்ல, விதுரர் என்பவர் கேட்கின்றார். புத்திரத் தோஷம் ஜாதகனுக்கு ஏற்படக் காரணங்கள் யாவை?

37. அஞ்சினுக் குடையோன் நீச்சம் அலரியும் புகருங் கூடி
அஞ்சிடம் பார்ப்ப தாலும் அறைந்தனம் புத்திரத் தோடம்
மிஞ்சிய மதியு மொன்பான் மேவியே குருவும் பார்க்கத்
தஞ்சமாய்ச் சுதர்கள் தோன்றுஞ் செனிப்பினுந் தீதே
யாமே.

37. ஐந்தாமிடத்துக்குரிய புதன் மீனத்தில் நீச்சமாகவும், சூரியனும் சுக்கிரனும் சேர்ந்து மீனத்தில் தங்கி, ஐந்தாமிடமாகிய புத்திர ஸ்தானத்தைப் பார்ப்பதாலும், புத்திர தோஷம் ஏற்படும் என்று சொன்னேம். சந்திரன் ஒன்பதாமிடமாகிய மகரத்தில் தங்கி, குருவினால் பார்க்கப்படுவதால், புதல்வர்கள் தோன்றுவர். பிறந்தாலும் நஷ்டமடைவர்.

38. இதுவன்றிப் பூர்வ தோடம் எய்திற்று வந்தத் தோடம்
அதுவினை சொல்லு மென்ன அறைகின்றார் வதிட்டர் தாமும்
வதிபன்தன் பூர்வஞ் சொல்வோம் மாவலி யருகில் சிற்றார்
நதிகுலந் தனிலு தித்து நாயகி மதலை யுண்டாய்;

38. இதுவல்லாமல் முற்பிறப்பில் ஏற்பட்ட தோஷமொன்றும் இப்பிறப்பில் ஜாதகனைச் சார்ந்தது. அந்தத் தோஷத்தைச் சொல்லுங்கள் என்று கேட்க, வசிஷ்டர் சொல்லுகின்றார். ஜாதகனின் முற்பிறப்பைச் சொல்லுவோம். மகாபலிபுரத்துக் கருகில் உள்ளதொரு சிறிய ஊரில், வேளாளர் குலத்தவனாய்ப் பிறந்து, மனைவி மக்களை யடைந்து;

39. சுகமான பூமி யுண்டாய்ச் சுதனுமே வாழ நாளில்
பகையாக வந்த வூழைப் பகருவோம் விபர மாக
இபகர னன்பு பூண்ட அதிதியு மோர்நாள் தன்னில்
அகமது சென்று மேதான் அன்னமுங் கேட்க லுற்றார்.

39. பலன்தரும் நிலபுலன்களே யடைந்து, இவன் வாழ்ந்து வரும் நாளில், இவனுக்கு விரோதமாக எற்பட்ட தோஷத்தை விவரமாகக் கூறுவோம். இவ்வுலக வாழ்விற்கும், மறுவுலக முத்திக்கும் தலைவனுகிய கடவுளிடம் பக்தியுண்ட அடியவர் ஒருவர், இவன் வீட்டுக்கு வந்து உணவு யாசித்தார்.

40. வந்தவர் கேட்கும் போது மனத்தினில் கோப முற்று
இந்தநே ரத்தில் சாதம் இல்லையென் றுரைத்த போது
அந்தவர் சொல்லு கின்றார் அன்பனே கோபம் வேண்டாம்
என்பசி யதிக மாச்சு ஈகுவாய்ச் சாத மென்ன;

40. வந்து கேட்கும்போது இவன் மனத்தில் சீற்றமடைந்து "இந்நேரத்தில் அன்னம் இல்லை" என்று கூறினன். அதைக்கேட்ட அதிதி உரைக்கின்றார். அன்பனே! கோபிக்காதே. எனக்குப் பசி மிகுதியாக வுள்ளது. கொஞ்சம் வயிற்றுக்கு உணவு அளிப்பாய் என்றார்.

41. சினமது வதிக முற்றுச் செல்லுவாய் வேறு யில்லம்
அன்னமு மிங்கே யில்லை அதிதியுஞ் சொல்லு கின்றார்
வினையாகச் சொன்ன பாவி மேவிடு மறுசென் மத்தில்
கனமான புதல்வ ரின்றிக் காசினில் வாழ்வா யென்று;

41. அவன் மீண்டும் அதிகமாகக் கோபமடைந்து, வேறு வீட்டுக்குப் போ; இங்கு அன்னமில்லை என்றான். அதிதியாக வந்தவர் கூறுகின்றார். 'எனக்குத் தீங்காக மொழிந்த பாவியே! எற்படும் மறுபிறவியில், நீ நிலையான புத்திர பாக்கிய மில்லாமல் தனித்து வாழ்வாய்'

42. செப்பியே வேறில் சென்றார் சேர்ந்தது வந்தத் தோடம்
தப்பிதம் வேறு வொன்று சார்ந்தது சொல்லக் கேளாய்
மைப்படி மாது தானு மங்கல்ய மீந்து நிற்க
ஒப்புட னவள்மேல் மோகம் உத்தமன் போகந் துய்த்து;

42. என்று சொல்லி வேறு வீட்டுக்குச் சென்றார். அந்தத் தீவினை இவனைச் சார்ந்தது. இதுவுமன்றி, வேறு ஒன்றும் சொல்லுகின்றோம். கேளுங்கள். கைம்பெண் ணொருத்தியைக் கண்டு அவள் மீது இவன் மையல் கொண்டு, அவளுடன் இன்ப மனுபவித்து வந்தான்.

43. பின்சில நாளி ருந்து பேதைக்குக் கருவு தங்கி
அன்னவன் பண்டி தங்கள் அநேகமா யவட்குச் செய்து
கன்னிக்குக் கருவு நீங்கிக் காதலி சுகமே யானாள்
இன்னவன் மூன்று கர்ப்பம் இப்படிச் செய்தா னென்றோம்.

43. சின்னாட்கள் சென்றபிறகு, அப்பெண்ணுக்குக் கரு ஏற்பட்டது. ஜாதகனும் பலவித வைத்தியங்கள் அவளுக்குச் செய்தான். அப்பெண்ணும் கரு நீங்கிச் சுகமடைந்தாள். இங்ஙனம் மும்முறை கர்ப்பத்தைக் கலைத்தான்.

44. அந்ததோர் தோட மொன்று அணுகிற்று யிவனுக் கேதான்
பிந்தியு மறையோ னீன்ற பிள்ளைக்கு வாவின் பாலை
இந்தவன் தன்னைக் கேட்க இல்லையென் றுரைத்தா னம்மா
வந்தது வந்தத் தோடம் மங்கையே மேலுங் கேளே.

44. அந்தத் தோஷம் இவனை யடைந்தது. மேலும், அந்தணனொருவன், தன் குழந்தைக்குப் பசுவின் பால் வேண்டுமென்று இவனைக் கேட்டான். இவன் இல்லையென்று சொன்னான். அந்தத் தோஷமும், இவனை யடைந்தது. தாயே! மேலுங் கேட்டிடுவாய்.

45. இப்படிப் பலவே தோடம் எய்திற்று யிச்சென் மத்தில்
தப்பிதஞ் சுதர்க ளுக்குத் தரிக்கினுங் தீதே யாகும்
செப்புவோ மதற்குச் சாந்தி தேவியுந் தானு மாக
மைப்புடன் பட்சிக் கேகி விளங்கிய கிரியைச் சுற்றி;

45. இவ்விதமாகப் பல தீவினைகள் இவனுக்கு ஏற்பட்டன. அதனால் இப்பிறவியில் புத்திர தோஷம் ஏற்படும். குழந்தைகள் தோன்றினாலும் நிலையா. அந்தத் தோஷங்கள் தீர, சாந்தியொன்று சொல்லுவோம். இந்த ஜாதகனும், தன் மனைவியுடன், திருக்கழுக்குன்றத்துக்குச் சென்று, அங்குள்ள மலையைப் பிரதட்சிணம் செய்து;

46. அரனுக்கு வருச்சித் தேத்தி ஆறைந்து பரத்துக் கன்னம்
உறுமன மாக வீந்து உத்தம னுள்ளூர் சென்று
குருதியின் வார நோன்பு கொண்டிட வினைகள் போக்கிப்
பெருமையாய்ப் புதல்வர் தோன்றும் பிறந்தன தீர்க்க
[மாமே.

46. சிவபெருமானுக்கு அருச்சனை முதலியன செய்து, துதித்து, உவந்த மனத்துடன் முப்பது பாதேசிகட் கன்னம் அளித்து, இருவரும் உள்ளூருக்குத் திரும்பி, செவ்வாய்க் கிழமை தோறும் நோன்பு இயற்றினால் செய்த தீங்குகள் நீங்கிப் பெருமையுடன் புதல்வர்கள் பிறப்பார்கள். பிறக்கும் புத்திரர்களும் தீர்க்கமாவர்.

47. சொற்படி செய்யா னகில் துலங்காது மதலை யென்றோம்
சொற்படி செய்வா னகில் தோன்றிடுஞ் சுதரா ணென்று
மைப்படி பெண்பால் ரெண்டு வறைகின்றோங் தீர்க்க மாக
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுவே.

47. நாங்கள் கூறியபடி செய்யாவிட்டால், குழந்தைகள் பிறவா வென்று சொன்னேம். செய்தாலுகில் ஆண் மகவு ஒன்றும், பெண் மக்கள் இருவரும் பிறந்து நீண்ட ஆயுளுட னிருப்பர். கங்கை நீரைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! நாங்கள் சொன்ன வார்த்தைகள் தவறு.

48. இன்னவன் பொதுயோ கத்தை இயம்புவோந் தாயே கேளும்
தன்சொலே மேன்மை யாகச் சாற்றுவான் சல்யங்
[கொள்ளான்
அன்னவன் ரா.சர் மூலம் அணுகியே சீவிப் பானும்
மன்னவர் வசியங் கொள்வான் மாநில மதிகஞ் சேர்ப்பன்.

48. ஜாதகனுடைய மற்றப் பொதுப் பலன்களைக் கூறுவோம்; தாயே கேட்டிடுவாய். தன்னுடைய சொற்களே மேன்மையுள்ளன வென்று சாதிக்க வல்லவன். கடன் படாதவன். அரசாங்க உத்தியோகம் ஏற்று ஜீவித்து வருவான். அரசனையும் வசப்படுத்த வல்லவன். விளை நிலங்களைப் பெருக்குவான்.

49. சித்திர வீடு செய்வன் திருப்பணி வேலை செய்வன்
சுற்றத்தார் மதிக்க வாழ்வன் சுகபுசிப் புடைய னுவன்
எத்திசைக் கீர்த்தி யேற்பன் எடுத்தகா ரியஞ்செ யிப்பன்
சத்தியந் தவறு னுகுஞ் சங்கரி மேலுங் கேளே.

49. அழகான புதிய வீடு கட்டுவான். ஆலயத் திருப்பணிகள் செய்வான். பந்துக்கள் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். நல்ல உணவைப் புசிப்பான். எட்டுத் திசைகளிலும் புகழடைவான். எடுத்த காரியங்களை முடிக்குந் திறனுள்ளவன். சத்தியந் தவறாதவன். தாயே! மேலுங் கேளுங்கள்.

50. அன்னிய பாடை யாலே அனேககீர்த் திகளு மேற்பன்
அன்னிய தேசந் தன்னில் அவனுக்கு லாப மெய்தும்
இன்னவார் முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்றாள்
இன்னவன் தனக்கு யோகம் எப்போது வணுகுஞ்
[சொல்வீர்.

50. அயல் மொழியில் தேர்வுற்று, மிகுந்த புகழை அடைவான். அயல் நாட்டில் அவனுக்கு (வியாபாரத்தால்) இலாபம் கிடைக்கும். இங்ஙனம் முனிவர் சொல்லும்போது, பார்வதி கேட்கலானாள். ஜாதகனுக்கு எப்போது யோகம் எற்படும் என்று சொல்லுங்கள்.

51. இருபது மூன்றுண் டின்மேல் எய்திடும் ராச யோகம்
பிறையது போலே வாய்க்கும் புக்குப்பின் நாற்பா னெட்டும்
குறையின்றி வாழ்வா னுகுங் கூறுவோ மதன்மே லாக
மறையவன் விரோத முற்று விலகிடுந் தொழிலுந் தானே.

51. ஜாதகனின் இருபத்து மூன்றும் வயதுக்குமேல், ராஜயோகம் ஏற்படும். பிறைச் சந்திரன் போல, மேன்மேலும் யோகம் வளரும். அந்த யோகம் வந்த பிறகு, நாற்பத்தெட்டாம் வயது வரையில் குறைவில்லாமல் வாழ்ந்து வருவான் என்றுரைப்போம். அதற்கு மேல் விரோத மேற்பட்டு, அரசாங்க உத்தியோகத்தி லிருந்து விலகி விடுவான்.

52. செட்டுக்கள் பலவாய்ச் செய்வன் சேர்ந்திடு மாள்பெ ருக்கம்
திட்டமாய்ப் பூமி யாலுஞ் சேர்ந்திடுந் தனமே யென்றும்
குட்டாகச் சொல்லு கின்றேங் குமரன்தன் பூமி வீடு
மட்டில்லாப் பணிகள் யாவு மறைகின்றேரும் நாற்பா
[யிரம்பொன்.

52. வியாபாரங்கள் பலவிதமாகச் செய்வான். மிகுதியாய்ப் பணியாட்கள் உடையவன். இவனுக்கு, நிச்சயமாக வீடு நிலங்களால் செல்வங்கள் விருத்தியாம் என்று சொல்லுவோம். விரிவில்லாமல் உரைக்கின்றோம். ஜாதகன் நிலங்கள், வீடு, உத்தியோக முதலியவற்றால் நாற்பதாயிரம் பொன்வரை சேர்ப்பான்.

53. எப்படி யோகஞ் சொன்னீ ரியம்புவீ ரந்தச் சங்கை
தப்பிலாத் தன்ம கர்மன் சனியாகி வுச்ச மாகி
மைப்புடன் பளிங்கன் பொன்ன னிருவரு முச்ச மாகச்
செப்பினேம் யோகந் தானுந் தேவியே கேட்டி டாயே.

53. எப்படி அதிர்ஷ்டங்கள் ஏற்படும் என்று கூறுங்கள். அந்தச் சந்தேகத்தைத் தீர்ப்போம். தீங்கில்லாத சனி, தர்ம கர்மாதிபதியாகி துலாத்தில் உச்சமாகவும், சுக்கிரன் மீனத்தில் உச்சமாகவும், குரு கடகத்தில் உச்சமாகவு மிருப்பதால், ராஜயோகம் ஏற்படும் என்று சொன்னேம். தாயே! கேளுங்கள்.

54. ஐயைந்து வாண்டு தன்னில் ஐப்பசி மாதந் தன்னில்
பைய்யவே தந்தை கண்டம் பணிதசை புகர்பு சிப்பில்
செய்திடு மதன்மே லாகச் செப்புவோ மிருபா னெட்டில்
தைமாத மாதுர் கண்டஞ் சங்கரி கேட்டி டாயே.

54. ஜாதகனது இருபத்தைந்தாம் வயதில், ஐப்பசி மாதம் தந்தைக்கு மரணம் உண்டாகும். அப்போது இராகுமகாதசை சுக்கிர புக்தி நடை

பெறும். அதற்குமேல் இருபத்தெட்டாம் வயதில் தை மாதம் அன்னை மரண மடைவாள். சங்காரியே! கேட்டிடுவாய்.

55. உதித்தவன் மரண காலம் உரைக்கின்றேரு மறுபா னைந்தில்
சதியிலா விடப மாதஞ் சத்தமி குறைபக் கத்தில்
விதியது முடியு மென்றேரும் விளம்புவோ மிவன்பின்
[சென்மம்
பதியது தில்லை தன்னில் பிராமணக் குலமு தித்து;

55. ஜாதகனின் மரண காலத்தைக் கூறுவோம். அறுபத்தைந்தாம் வயதில், கெடுதலில்லாத வைகாசி மாதம், கிருஷ்ண பட்சத்துச் சப்தமி திதியில் இறப்பான். இவனுடைய மறு பிறவியைச் சொல்லுகின்றோம். சிதம்பரத்தில், அந்தணர் குலத்தில் பிறந்து;

56. பெருமையாய்க் குடும்பி யாகிப் பெம்மானைப் பூசை செய்து
அரசனுல் தொழிலும் நேர்ந்து அநேககீர்த் திகளும் பெற்றுத்
திருமகள் விலாசம் பெற்றுச் செல்வனும் வாழ்வா னுகும்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

56. பெருமையுள்ள குடும்ப மடைந்து, தெய்வத்தைப் பூசித்து, அரசாங்க உத்தியோகம் பெற்று, மிகுதியான புகழடைந்து, இலட்சுமீ கடாட்சம் பெற்று, தனவந்தனுக வாழ்ந்து வருவான். விநாயகரைப் புதல்வ ராகப் பெற்ற தாயே! கேளுங்கள்.

57. சாதகன் செனிக்குங் காலைச் சந்திரன் தசையி ருப்பு
ஓதுவோ மாண்டு மூன்றும் உயர்திங்க ளொன்ப தாமே
தீதுண்டு சாத கர்க்குச் சுபமுண்டு துணைவ ருக்கு
மேதினில் பூமி கொஞ்சம் வந்திடுந் தொழிலால் லாபம்.

57. ஜாதகன் ஜனன காலத்தில், சந்திர மகா தசையில் இருப்பு; மூன்று வருஷங்களும் ஒன்பது மாதங்களுமாம், அப்போது ஜாதகனுக்குப் பிணிகள் ஏற்படும். உடன் பிறந்தவர்கட்கு நலமுண்டாம். வீடு நிலங்கள் சேரும். தொழிலால் இலாபம் வரும்.

ஜாதகம் 110

1. சந்திரன் தனுசி லாகச் சனிகுரு மேடம் புக்க
புந்தியும் புகருங் கோலில் பூமகன் வீணை புக்க
மந்தரக் கயறு பானு [1]விடமதில் கேது நந்தி;
இந்தவார் கிரகம் நின்று இடபமுஞ் சென்ம மாக.

1. சந்திரன் தனுசிலும், சனி ராகு மேஷத்திலும், புதன் சுக்கிரன் துலாத்திலும், செவ்வாய் மிதுனத்திலும், ராகு சூரியன் விருச்சிகத்திலும், கேது விருஷபத்திலுமாக, இங்ஙனம் நவக்கிரகங்களிருந்தால்;

	சனி குரு	லக்கினம் கேது	செவ்வாய்	
		இராசி சக்கரம்		
சந்திரன்	இராகு சூரியன்	புதன் சுக்கிரன்		

2. பலனதைச் சொல்லு மென்று பார்வதி கேட்கும் போது
குலகுரு வதிட்டர் சொல்வார் குறித்தது வாண்பால் [சென்மம்
தலமது வடதென் வீதி சனிவாச லெதிர்வீ டில்லை
நலமிலாக் கணேசன் மேற்கில் நதிக்கரை யருகி லுண்டே.

2. ஏற்படும் பலனைச் சொல்லுவீர், என்று பார்வதி கேட்கும்போது, குலகுருவான வசிஷ்டர் சொல்லுகின்றார். இந்த ஆண் பிறப்பு. பிறந்த வீடு வடக்குத் தெற்கான வீதியில், வடகிழக்கே நோக்கியுள்ள வாயிலையுடையது. எதிரில் வீடுகளில்லை. மேற்குத் திக்கில் விநாயகர் ஆலயமும் அருகில் ஒரு நதியும் உள்ளன.

3. இந்தநல் லடையா ளத்துள் இலகிய சிறுவூர் தன்னில்
முந்தின குலமு திப்பான் மேவிடு மைந்தஞ் சென்மம்
தந்தைதாய் துணைவர் புத்ரர் தன்மனை குடும்பச் சேதி
இந்தவன் முன்பின் சனம மியம்புவோ மிந்நூல் தன்னில்.

---

1. விருச்சிகம்

3. இவ்விதவடையாளங்களுள்ள ஒரு சிற்றூரில், அந்தண குலத்தில், தன் தந்தைக்கு ஐந்தாம் மகனாகப் பிறப்பான் இந்த ஜாதகன். ஜாதகனின் தாய் தந்தையர், சகோதரர்கள், புத்திரர்கள், மனைவி இவர்களின் செய்திகளையும், குடும்ப விவரங்களையும், ஜாதகனின் முற்பிறப்பு மறுபிறப்புக்களையும் இந்த நூலில் சொல்லுவோம்.

4. தந்தையின் துணைவர் நான்கு செனித்திடு மதிலா
ணென்று
விந்தையாய்க் கன்னி யொன்று மேவிடுஞ் சிலவே நாளில்
அத்தவ னேகு வானும் அவனுக்குச் சுதரா ணென்று
இந்தவ னுடனே வாழ்ந்து இடராக வேருய்ச் செல்வன்.

4. தந்தைக்கு உடன் பிறந்தவர் நால்வர். அவர்களில் ஒரு சகோதரனும், சகோதரி யொருத்தியும் நிலைப்பர். ஆனால், அந்தச் சகோதரன் சில காலஞ் சென்று இறப்பான். அவனுக்கு ஆண்மகன் ஒருவன் பிறப்பான். அவன், இந்த ஜாதகனுடன் சிலகாலம் ஒற்றுமையுடன் வாழ்ந்து, பின்பு, மனத்தாங்கலுடன் தனியாகச் சென்று விடுவான்.

5. எந்தக்கா லத்தில் செல்வான் எழுமூன்று வாண்டில்
[போவான்
நொந்திடு மனத்த னாகி நேமியில் சல்ய முண்டாய்
மந்தரத் தனத்தி னுலே மதிகெட்டுச் செல்வா னென்றும்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விபர மாக.

5. எந்தக் காலத்தில் தனித்துச் செல்வான்? ஜாதகனின் இருபத்தோராம் வயதில், மனவருத்த மடைந்து, கடன் உபத்திரவம் ஏற்பட்டு, பணத்தினுல் புத்தி கெட்டு, தனியாகச் சென்று விடுவான் என்று சொன்னேம். பிற்பாகத்தில் இவனைப் பற்றி விரிவாகச் சொல்லுவோம்.

வேறு

6. குழலே தந்தை குணங்கேளாய்க்
கூறுஞ் சொல்லே சுகமாகும்
பழைய நாளாய் வறுமையிலான்
பதார்வார்த் தையினில் செல்லாதான்
பிழையை யெவர்க்கு மெண்ணுதான்
பூமி விருத்தி செய்திடுவன்
குழையு முனியாங் குறுமுனிபோல்
கூறுவான் ஞானம் பண்டிதங்கள்.

6. தாயே! தந்தையின் குணத்தைக் கேளுங்கள். இன்பமுறும்படி பேசுபவன். வெகுநாட்களாகவே தரித்திர மில்லாதவன். அற்பமான

பேச்சுக்களைப் பேசாதவன். ஒருவருக்குந் தீங்கு செய்ய நினையாதவன். விளை நிலங்களைப் பெருக்குவான். அகத்திய முனிவரைப்போல் மிகுந்த கல்வி யறிவுடையனாய்ப் பலருக்குங் கற்பிக்கும் பண்டிதனாகவிருப்பான்.

7. இடுவன் ஏழை தமக்கன்னம்
இனிதா யுரைப்பன் கிருஷிசெய்வன்
கடனே கொள்வன் பணையோர்கள்
தனக்கும் பால்பாக் கியமுடையோன்
மடையோர் வணங்கச் செய்திடுவன்
மருவும் பித்த சூடென்றோம்
தடைசொல் லாதான் பெரியோர்க்குச்
சற்றுக் கோப முடையவனே.

7. ஏழைகளுக்கு அன்னமளிப்பான். இனிமையாகப் பேசுபவன். விவசாயம் செய்து வருவான். சிறிது கடன் வாங்குவான். பண்ணை, ஏர் முதலியன உள்ளவன். பால், பசு முதலியன விருத்தியாம். புத்தியில்லாத வர்களை வணங்கும்படி செய்யுந் திறனுடையவன். உடலில் பித்த சூடுள்ள வன். பெரியோர் சொற்களை மீறுதவன். சிறிது கோபத்தை யடைவான்.

8. நந்தி ராசி பூராட
நாளி லுதிப்பா னுணைச்சலுளன்
வந்த பிணியை விளக்குங்குணம்
மனத்தில் வன்மங் கொஞ்சமுளன்
நிந்தை கொஞ்ச மேற்றிடுவன்
நிருப ரிட்டன் மாநிறத்தான்
எந்தவிடமும் பெருமையுளன்
ஏழை மனத்தன் என்றுரைப்போம்.

8. விருஷப லக்கினம், பூராட நக்ஷத்திரத்தில் பிறப்பான். மெல்லிய சரீர முடையவன். பிறருக்கு வரும் வியாதிகளைத்தீர்க்கும் குணமுள்ளவன். மனத்தில் சிறிது கொடுமை யுடையவன். சிறிது பழியை அடைவான். அரசர்களுக்கு விருப்பமானவன். கரிய நிறமுள்ளவன். சென்ற விடங்களி லெல்லாம் புகழடைவான். ஏழைகளிடத்தில் இரக்கம் கொள்ளுவான், என்று சொல்லுவோம்.

வேறு

9. சொல்லியவிக் குணத்தானுக் கிந்தப்பாலன்
தோன்றுவா னிவன்குணத்தைச் செப்பக் கேண்மோ
அல்லலென்றோர் தமைக்காப்பன் கல்வி மானும்
அவனிதனி லிருத்திசெய்வ னறிவோர் நேயன்
மல்லுக்குச் செல்லாதான் கபடு மில்லான்
வணிபங்கள் செய்திடுவன் மாநி றத்தான்
வெல்லுஞ்சொல் லுடையவனும் புகழு மேற்பன்
விருந்தினர்மேல் பட்சமுளான் விவேகி யாவன்.

9. இங்ஙனம் கூறிய குணங்களை யுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இவனுடைய குணங்களைச் சொல்லுகின்றோம்; கேளுங்கள். துன்பமடைந்தவர்களுக்கு உதவி செய்வான். கல்வி யறிவுள்ளவன். நிலங்களைப் பெருக்குவான். அறிவுடையோர்க்கு நண்பன். வீண் சண்டைக்கு முன் செல்லாதவன். மனத்தில் சூதில்லாதவன். வியாபாரங்கள் செய்வான். கரிய நிற முடையவன். வாக்கு வன்மையால் ஜயிக்கும் குணமுள்ளவன். புகழுடையவன். விருந்தாக வருபவரிடம் பிரியமுடைய வன். பாகுபா டுடையவன்.

வேறு

10. அன்னவ னிருசி வப்பன் அளவிலாச் சமதே கத்தோன்
சொன்னமு முடையா னுகுஞ் சொல்லதைக் காப்பா னுகும்
உன்னத விரண்டு கல்வி உணருவான் சல்லியங் கொள்ளான்
பின்னமில் லாத தேகன் பேதையர் மோகங் கொள்வன்.

10. ஜாதகன், கருஞ்சிவப்பு நிறமுள்ளவன். சமமான சரீரமுடைய வன். பொன் முதலிய செல்வங்களைப் பெற்றவன். சொன்ன சொற்களை மீறுதவன். உயர்ந்த இருவிதக் கல்வியைக் கற்றுத் தேர்வான். கடன் படாதவன். ஊனமில்லாத சரீரம் படைத்தவன். பெண்கள் மீது மையல் கொள்ளுவான்.

11. துணைவரு முன்னேன் காணுன் தோகையு மொருத்தி
[யென்றோம்
கனமுட னவள்தன் சேதி கழறுவோஞ் சிவந்த மேனி
பிணையான குணமில் லாதாள் பேச்சது குளறு மூண்டு
அணையவே வரனுங் கீழ்ப்பால் அறைந்தனஞ் சுதர்கள்
[காணுள்.

11. மூன் பிறந்த சகோதர னில்லாதவன். ஒரு சகோதரி தீர்க்க மாயிருப்பாள். அவளுடைய செய்தியைக் கூறுவோம். சிவந்த சரீர முள்ளவள். தீய குணங்களில்லாதவள். குழறிப் பேசுந் தன்மையினள். அவளுக்குக் கணவன் கிழக்குப் பக்கத்திலிருந்து வருவான். புத்திர பாக்கிய மில்லாதவள்.

12. வரன்சுகங் காணு ளாகும் மத்தியில் விதவை யாவள்
உரையுங்கா ரணங்க ளென்ன உத்தமி பூர்வந் தன்னில்
பெரிதான பாவங்கள் செய்தார் பேசுவீ ரந்தச் சங்கை
திருமகள் பூர்வங் கேளாய் தில்லையில் வைசியச் சேயாய்;

12. கணவனுல் சௌக்கியங்க ளடையாதவள். மத்திய வயதில் கைம்பெண்ணுவாள். அதற்குக் காரணங்கள் யாவை? ஜாதகனின் சகோதரி மூற்பிறவியில் பெரிய பாவங்கள் செய்தாள். அவைகளைச் சொல்லுங்கள். அவளுடைய மூற்பிறவியைக் கேளுங்கள். சிதம்பரத்தில், வைசிய மரபினளாக;

13. உதித்துமே சுகமாய் வாழ்ந்து உயர்பணி யதிக முண்டாய்
மதித்திடக் குடும்பி யாகி மதலைகள் வரனு முண்டாய்ச்
சதியாக வந்த வூழைச் சாற்றுவோந் தாயே யாங்கள்
வதிபதி வினைதக் காலம் வந்தனள் கடைவீ திக்கு.

13. பிறந்து, சுகமாக வாழ்ந்து வந்தாள். உயர்ந்த ஆபரணங்களை மிகுதியாகப் பெற்று, மதிப்புள்ள குடும்ப மேற்பட்டு, கணவனை யடைந்து, மக்களை யடைந்து, வாழ்ந்து வந்தாள். அப்போது சேர்ந்த தீவினையைச் சொல்லுவோம்; தாயே! திருவிழாக் காலத்தில் அவள் தன் கணவனுடன் கடைத்தெருவுக்கு வந்தாள்.

14. குங்கும மஞ்சள் சீப்புக் கோதையும் வாங்கிக் கொண்டு
தங்கமு மீயா ளாகிச் சாகைக்குச் சென்று ளென்றேம்
பொங்கமாய் வணிகன் பார்த்துப் பேதையைக் காணு ளுகிச்
சங்கையா மனத்த ளுகிச் சாற்றுவான் சாபந் தானும்.

14. குங்குமம், மஞ்சள், சீப்பு முதலியன ஒரு கடையில் வாங்கிக் கொண்டு, அதற்குரிய விலைப் பணத்தைக் கொடுக்காமல், தன் வீட்டுக்குச் சென்று விட்டாள். இப்பெண்ணைக் காணுததால் கடைக்காரன் மனத்தில் கலவரமடைந்து, கோபத்துடன் ஒரு சாபமிட்டான்.

15. மஞ்சளு மாகா முன்னே மாரனு மரண மாகித்
தஞ்சமாய்ப் பின்சென் மத்தில் தன்வரன் நேர்ந்து மேதான்
கொஞ்சுங்கால் மரண மாகுங் குறைமன மாக வாழ்வாய்
நஞ்சுபோல் கூறி யேதான் நற்றெருத் தூளை விட்டான்.

15. வாங்கிச் சென்ற மஞ்சள் உபயோகிக்கப்படுமுன், உன் கணவன் இறந்து, இனி ஏற்படும் மறுபிறவியிலும் கணவனுடன் சிறப்பாக வாழ்ந்து வரும்போது, கைம்பெண்ணாகி, நீயும் குறைவுள்ள மனத்துடன் வாழ்ந்து வருவாய், என்று விஷம் போன்ற கொடிய சாபமிட்டு, தெருமண்ணை வாரி இறைத்தான்.

16. அந்ததோர் தோடந் தானும் அணுகிற்று விவளுக் கேதான்
தன்வரன் மரண மாகித் தனியாகச் சிலநாள் வாழ்ந்து
முந்திய சேது புக்கு முயர்வோர்கள் பக்தி கொண்டு
அந்தகன் நகர டைந்து அயனுமே வரையப் பட்டு;

16. அந்தத் தோஷம் இவளுக்கு ஏற்பட்டது. உடனே தன் கணவன் இறக்க, சிலகாலம் தனியாக வாழ்ந்து வந்தாள். பிறகு, பாவங்களைத் தீர்க்கச் சேதுவுக்குச் சென்று, பெரியோர்களிடம் பக்தி கொண்டு, எமபுரம் அடைந்தாள். பின்பு பிரமனால் படைக்கப் பட்டு;

17. மறைக்குலந் தனிலு தித்தாள் மாதுமுன் சென்மந் தன்னில்
குறையான வைசியச் சேயாய்க் குதித்தவ ளிச்சென் மத்தில்
அருமறைக் குலமு திக்க அமைந்தபுண் ணியங்க ளென்ன
உறைந்தனள் சேது தீர்த்தம் உயர்வோருக் கன்ன மீந்தும்;

17. அந்தணர் குலத்தில் பிறந்தாள். முற்பிறவியில் குறைவுள்ள வைசிய மரபினில் பிறந்த இப் பெண், இப்பிறவியில் அந்தணர் குலத்தில் தோன்றுவதற்கு என்ன புண்ணியங்கள் செய்தாள்? இவள், முற்பிறவியில் சேதுவில் நீராடிய புண்ணியத்தாலும், பெரியோர்க்கு அன்ன மளித்து வந்ததாலும்;

18. பலத்தினு லுதித்தா ளென்றேரும் பரவிற்று வணிகன் சாபம்
குலவிடு மதலை காணுள் கொழுநனு மரண மாகும்
தலைவியுந் தாயில் லத்தில் சஞ்சல மாக வாழ்வள்
நிலைமையாய் முன்சென் மத்தில் நேர்ந்தனள் சேது
[வென்றீர்.

18. ஏற்பட்ட நற்பலனால் (அந்தணர் குலத்தில்) பிறந்தாள் என்று சொல்லத்தோம். கடைக்காரன் சாபம் இவளைச் சார்ந்தது. இப்பிறப்பில் குழந்தைகள் பிறவா. கணவனும் இறந்து விடுவான். இவளும் தன் தாயின்

வீட்டில் மனக் கவ்டத்துடன் வாழ்ந்து வருவாள். மூற் பிறவியில் சேது வில் நீராடியதால்;

19. பவமது விலகா தோசொல் பசப்பினுல் வந்த சாபம்
இவளுக்கு விலகா தாகும் இவளின்பின் சென்மஞ்
[சொல்வோம்
எழில்காஞ்சி தன்னி லேதான் இவளுமே விக்கு லத்தில்
பழிகளில் லாம லேதான் பிறப்பளா மென்று சொல்வோம்.

19. செய்த பாவங்கள் தீராவோ? சொல்லுங்கள். கடைக்காரனே ஏமாற்றியதால் ஏற்பட்ட சாபம் இவளுக்கு நீங்காது. இவளுடைய மறு பிறப்பைச் சொல்லுவோம். செழிப்புள்ள காஞ்சிபுரத்தில், தீங்குகளில்லா தவளாக இக்குலத்திலேயே பிறப்பாள் என்றுரைப்போம்.

20. சாதகன் துணைவர் பின்னுல் சாற்றுவோ மைவர் தோன்றும்
மேதினி லாண்பால் மூன்று மெல்லியு மொருத்தி தீர்க்கம்
ஓதுவோம் பெண்பால் சேதி ஓரேழாஞ் சென்ன மாகும்
காதலி வரனுந் தெற்றில் கழறுவோம் யோக சாலி.

20. ஜாதகனுக்கு இளைய சகோதரர்கள் ஐவரில், மூன்று ஆண் மக்களும், பெண் ஒருத்தியும் தீர்க்கமா யிருப்பர். சகோதரி ஏழாவது பிறப்பாகப் பிறப்பாள். அவளுக்குத் தெற்குப் பக்கத்திலிருந்து கணவன் வாய்ப்பான். அவளும் யோகசாலி.

21. சுதர்களு மாண்பால் மூன்று தோகையு மிரண்டு வென்றோம்
இதுவைந்துந் தீர்க்க மெய்தும் இடரிலா வாழ்வா ளாகும்
சதியிலாத் துணையாண் சேதி சாற்றுவோம் பின்பா கத்தில்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

21. அவளுக்கு மூன்று புத்திரர்களும், இரு புத்திரிகளும் பிறப்பார்கள். இவர்கள் ஐவரும் நீண்ட ஆயுளுட னிருப்பர். துன்ப மில்லாமல் வாழ்ந்து வருவார்கள். கபட மில்லாத, உடன் பிறந்தவர் செய்தியைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். அதிதிகளை ஆதரிக்கும் தாயே! கேளுங்கள்.

22. மணமது பதினே ழாண்டில் மருவிடுங் குடகு திக்கில்
குணமது நல்ல தாகுங் கூறுஞ்சொல் சுகமே வெய்தும்
வினையிலாள் நடக்கை நன்மை விரும்பினோர்க் கன்ன மீவள்
கனமுள குடும்பி யாவள் காதலி வயது தீர்க்கம்.

22. ஜாதகனுக்கு, பதினேழாம் வயதில் மேற்குத் திக்கிலிருந்து மனைவி வருவாள். நற்குண முள்ளவள். இனிமையாகப் பேசுவாள். பாவங்க

ளில்லாதவள். கன்னடக்கை யுடையவள். யாசித்தவர்கட்கு அன்னமளிப் பாள். செழிப்புள்ள குடும்பத்தை யடைந்து தீர்க்காயுளுட னிருப்பாள்.

23. எப்படி வயது தீர்க்கம் ஏழிடம் ராகு நிற்க
ஒப்புடன் தாரம் ரெண்டு உரைக்கலா மிவனுக் கேதான்
அப்படி நடவா தாகும் ஆரலு மிரண்டில் நிற்க
ஒப்புடன் வர்க்கி லேதான் ஒருபரல்[1] இருப்ப தாலே.

23. இவளுக்கு எப்படி நீண்ட ஆயுள் உண்டு என்று சொல்லுங்கள். ஏழாமிடமாகிய விருச்சிகத்தில் ராகு இருப்பதால் ஜாதகனுக்கு இரு மனைவி யர் என்று சொல்லலாம். ஆனால், அப்படி நடவாது. செவ்வாய் இரண்டா மிடமாகிய மிதுனத்தில் இருப்பதாலும், அஷ்டவர்க்க முறையில் நற்பலனைக் கணக்கிடும் பரல் ஒன்று இருப்பதாலும்,

24. மறுமனை யணுகா தாகும் மனைவியு மொன்றே தீர்க்கம்
பெருஞ்சுத ரெழுவர் தோன்றும் பேதையு மூன்று வென்றேம்
திருநிலா வாண்பா லொன்று தீர்க்கமா மிவனுக் கேதான்
வருஞ்சுத ரிவன்மே லாக வாழ்குவா னென்று சொல்வோம்.

24. இரண்டாம் மனைவி வாய்க்க மாட்டாள். மனைவி ஒருத்தியே தீர்க்கமா யிருப்பாள். மக்கள் எழுவர் பிறப்பார்கள். பெண்கள் மூவரும் ஒரு புதல்வனும் நீண்ட ஆயுளுடன் இருப்பர். புதல்வன் ஜாதகனை விட, மேன்மையான அதிர்ஷ்டங்களுடன் வாழ்ந்து வருவான்.

25. அன்னைமா நிறத்த ளாகும் அழகுளாள் பொறுமை சாலி
முன்கோபம் வாத தேகி மேதினில் நல்லோ ளாவள்
தன்வரன் மனம்போல் வாழ்வள் சனசகா யங்கள் செய்வள்
தன்துணை யாண்பால் மூன்று தையலா ரொருத்தி
[யென்றேம்.

25. ஜாதகனுடைய தாயைப் பற்றிச் சொல்லுவோம். கருமை கலந்த சிவப்பு நிறத்தினள். அழகுள்ளவள். அடக்கமுள்ளவள். முன்கோப முள் ளவள். வாத சரீரி. உலகில் நல்லவளாகி வாழ்ந்திருப்பாள். கணவன் மனத்தை யொத்து வாழ்ந்து வருவாள். ஜனங்களுக்கு உபகாரி. உடன் பிறந்தவர்களில் மூன்று சகோதரர்களும், ஒரு சகோதரியும் உளராவர் என்று கூறுவோம்.

26. இல்லமுந் தென்பா லாகும் இவள்பூர்வஞ் சொல்லக்
[கேண்மோ
நல்லதோர் பாண்டி நாட்டில் நற்சைவ குலமே தோன்றி
அல்லலென் றேருக் கன்னம் அளித்துமே விரதம் பூண்டு
புல்கினாள் கால நாடு பிரமனும் வரையப் பட்டு;

---

1. பரல் : அஷ்டவர்க்கத்தில், நற்பலனைக் கணக்கிட்டறிவதற்கு உபயோகிக்கும் கல் முதலியன.

26. அவளுடைய வீடு, ஜாதகன் வீட்டுக்குத் தென்புறத்தி லுள்ளது. இவளுடைய முற்பிறவியைச் சொல்லுவோம், கேளுங்கள். பாண்டிய நாட்டில் உயர்ந்த சைவ குலத்தில் பிறந்து, துன்பமடைந்து வந்தவர்களுக்கு அன்னமளித்து, நல்ல நோன்புக ளியற்றி, பிறகு இறந்தாள். மீண்டும் பிர மனால் படைக்கப்பட்டு;

27. வந்தவ ளிவளே யென்றே மறைகின்றே மிவள்பின்
[சென்மம்
முந்தின காஞ்சி தன்னி லுதிப்பளா மிக்கு லத்தில்
தன்தன மதிக முண்டாய்த் தரணியில் வாழ்வா ளாகும்
சந்ததம் பிதாவின் பூர்வஞ் சாற்றுவோங் கேளுந் தாயே.

27. பிறந்தவள் இவள் என்று சொல்லுவோம். இவளுடைய மறு பிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சிபுரத்தில் இதே குலத்தில் தோன்று வாள். தன் முயற்சியால் தேடிய செல்வங்களை அடைந்து, பூமியில் வாழ்ந்து வருவாள். தந்தையின் முற்பிறவியைச் சொல்லுவோம். கேளுங்கள்! தாயே!

28. சேரநாட் டதனி லேதான் செனித்தனன் சூத்திர னுக
பாரினில் சிவித் தேதான் பாலர்கள் மதலை யுண்டாய்
நீரணிக் கடவுள் பக்தி நீத்தோர்க ளுறவு கொண்டு
தேறின மனத்த னுகித் தீமர வுரியும் பூண்டு;

28. சேரநாட்டில் நான்காம் வருணத்தவனுகப் பிறந்தான். பயிர்த் தொழில் செய்து, மனைவி மக்களுடன் வாழ்ந்திருந்தான். கங்கையை முடி யில் தரித்த சிவபெருமான் மீது பக்தி யுள்ளவனுகி, துறவிகளுக்குத் தொண்டு கள் செய்து, முதிர்ந்த ஞானத்தை யடைந்து, மரவுரி அணிந்து;

29. காலநா டடைந்து வின்னேன் கஞ்சனில் வரையப் பட்டுச்
சீலமாம் பிரம்ம சேயாய்ச் செனித்தன னென்று
[சொல்வோம்
ஏலவே முன்த வத்தால் இடர்வினை தீர்ப்பா னுகும்
சாலவே பின்சென் மத்தைச் சாற்றுவோந் தாயே யாங்கள்.

29. சிலகால மிருந்து, பிறகு இறந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, நல்லொழுக்கமுள்ள, அந்தணர் குலத்தவனுகப் பிறந்தான் என்று சொல்லுவோம். முற்பிறப்பில் செய்த நற்செயல்களால் துன்பங்கள் பாவங்கள் இவைகள் நீங்கப் பெறுவான். இவனது மறு சென்மத்தைக் கூறுவோம்; தாயே!

30. உத்தரந் துவாரை தன்னில் உதிப்பனு மிக்கு லத்தில்
சித்தசன் தனையெ ரித்த தேவனைப் பூசித்தே தான்
வித்தகன் தேவ லோக மேவுவா னென்று சொல்வோம்
இத்தகை முனிவர் கூற இயம்புவார் பராசர் தாமும்.

30. துவாரகைக்கு வடக்கில் இக் குலத்தில் தோன்றுவான். மன் மதனை யெரித்த சிவபெருமானுக்குப் பக்தியுடன் தொண்டு செய்து, இவன் (ஜாதகனின் தந்தை) தேவலோகன் என்று சொல்லுவோம். இங்ஙனம் முனி வர் சொல்லவும், பராசர முனிவர் கூறுகின்றார்.

31. இந்ததோர் சென்மந் தன்னில் இருவிதக் குணத்தா லுயும்
தன்மனங் கபடு முண்டாய்த் தனத்தின்மே லிச்சை யாயும்
அன்னவன் வாழ்வு தாலே அணுகுங்கா ரணங்கள் சொல்வீர்
சிந்தையி லிரக்க மாயுஞ் சிறுத்தோருக் குதவி யாயும்,

31. இப்பிறவியில், ஜாதகனின் தந்தை, இருவிதக் குணங்களுடையவ னும், மனத்தில் சிறிது கபட முண்டாகியும், செல்வத்தில் மிக்க விருப்ப முள்ளவனும் வாழ்ந்து வருவதால், மறு பிறவியில், அந்தணர் குலம் ஏற் படக் காரணங்களைக் கூறுங்கள். மனத்தில் இரக்க முள்ளவனாகவும் துன்ப மடைந்தவர்கட்கு உபகாரம் செய்தும்;

32. தேவதாத் தலங்கள் சென்றுஞ் செனவுப காரி யாயும்
காவலன் வாழ்வு தாலே கண்ணன்வாழ் நாட்டி லேதான்
மேவுவான் பிரம்ம சேயாய் விளம்பின மொழிகுன் றாது
ஆவலாய்த் தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

32. தெய்வ தரிசனத்துக்குப் பல க்ஷேத்திரங்கள் சென்றும், ஜனங் களுக்கு உதவி யளித்தும் வாழ்ந்து வருவதால், மறுபிறவியில் கண்ணன் வாழ்ந்துவந்த துவாரகை நகரில் அந்தணர் குலத்தவனாகப் பிறப்பான். நாங் கள் உரைத்தது தவறாகாது. விருப்பத்துடன், தவங்களை இயற்றும் பார் வதியே! கேளுங்கள்.

33. உதித்தவன் பூர்வஞ் சொல்வோம் உயர்காஞ்சி தன்னி
[லேதான்
நதிகுலந் தனிலு தித்து நாயகி மதலை யுண்டாய்ப்
பதியினில் திருவு முண்டாய்ப் பகவானின் பக்தி கொண்டு
அதிதிகட் கன்ன மீந்து அரன்கோட்டந் தொண்டு பூண்டு;

33. ஜாதகனின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். உயர்ந்த காஞ்சி புரத்தில், வேளாள மரபில் தோன்றி, மனைவி மக்களை யடைந்து, இலட்சுமி

கடாட்சத்துடன், வாழ்ந்து வந்தான். தெய்வ பக்தி யுள்ளவனுகி, அதிதி களுக்கு அன்புடன் அன்னமளித்து, சிவபெருமானுக்குத் தொண்டுகள் பல செய்து ;

34. மறலியின் பதிக்குப் புக்கு மால்மகன் வரையப் பட்டு
மறைக்குலந் தனிலு திப்பா னறைகின்ரு மிவனின்
[யோகம்
திருமகன் சென்னந் தொட்டுச் செப்புவோ மிருபான்
[ரெண்டும்
வறுமைகள் சல்லியம் நேரும் மனமது சஞ்ச லங்கள்.

34. இறந்தான். மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு, அந்தணர் குலத்தவனுகப் பிறந்தான் என்று சொன்னேம். இந்த ஜாதகனுடைய அதிர்ஷ்டங்களைப் பிறப்பு முதலாகச் சொல்லுவோம். ஜாதகன் இருபத் திரண்டாம் வயதில் தரித்திர மடைவான். கடன் உபத்திரவங்கள் நேரும். மனத்தில் சஞ்சலங்கள் ஏற்படும்.

35. கத்திரி யோக மென்ரேங் கலகமாங் குடும்பந் தானும்
சித்தமா யதன்மே லாகச் சந்திரன் பிறைபோல் யோகம்
நித்தியம் லாப மெய்தும் நேமியில் வணிபஞ் செய்தல்
சுத்தமாய் ரணமுங் காணுன் தொல்புவி விருத்தி செய்வன்.

35. கத்திரி யோகம் ஏற்படும். குடும்பத்தில் சச்சரவு உண்டாகும். அதற்குப்பிறகு, பிறைச் சந்திரன்போல் யோகம் வளரும். நிச்சயமாகப் பூமியில் வியாபாரங்கள் செய்து, தினந்தோறும் மிக்க லாபமடைந்து, செல்வத்துடன் வாழ்வான். கடனுபத்திரவங்கள் இரா. விளைநிலங்களைப் பெருக்குவான்.

36. ஒருவர்பா லடங்கி யுய்வன் உரைக்கின்ரே மையைந்
[தின்மேல்
பெருமையாய்ப் பலவியா பாரம் புகலுவோம் வடபால்
[தன்னில்
குறைவிலாத் தனம்ப டைத்துக் குல்த்துளோர் மதிக்க
[வாழ்வன்
உரைக்கின்ரே மூவா யிரம்பொன் உத்தமன் சேர்ப்பா ஞமே.

35. ஒருவரை அடைந்து அவருக்கு அடங்கி, உத்தியோகம் செய்து வாழ்வான். ஜாதகன், இருபத்தைந்தாம் வயதுக்குமேல் கண்ணியமுடன் பல வியாபாரங்களைச்செய்து, வடக்குத் திக்கிலிருந்து நிறைந்த செல்வங்களை யடைந்து, தன் பந்து ஜனங்களால் புகழப்பட்டு, வாழ்ந்து வருவான். மூவா

யிரம் பொன் நாணயங்கள் இந்த ஜாதகன் சேர்த்திடுவான் என்று சொல்லுவோம்.

37. சிலவேகா ளுத்ரத் திக்கில் செல்லுவான் தொழில்மூ லத்தால்
நிலைமையாய்ப் பின்பா கத்தில் நேமிப்போ மந்தச் சங்கை
குலவுவான் துணைவ ளோடு குமரனும் வாழ்வா னுகும்
மலையிறை மகளே யாங்க ளறைந்தது தப்பா தாமே.

37. வியாபாரம் காரணமாகச் சிலகாலம் வடக்குத் திசையில் உள்ள தொரு பட்டணஞ் சென்று வருவான். அந்த விவரங்களைப் பின் பாகத்தில் சொல்லுவோம். இவன் தன் உடன்பிறந்தவளோடு, சேர்ந்து வசிப்பான். மலையரசனின் புதல்வியே! நாங்கள் கூறியவைகள் தவறு.

38. இருபது வேழு வாண்டில் இயல்தனு மாதந் தன்னில்
திருமகன் தந்தை கண்டஞ் செப்புவோ முப்பான் மூன்றில்
பெருவாடி மாதந் தன்னில் பேசுவோ மன்னை கண்டம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

38. ஜாதகனின் இருபத்தேழாம் வயதில், மார்கழி மாதம் தந்தை இறந்துவிடுவான். மூப்பத்துமூன்றும் வயதில் ஆடி மாதம், தாய் இறப்பாள் என்று சொல்லுவோம். வேதங்களின் முடிவில் விளக்கப்படும் தாயே! கேட்டிடுவாய்.

39. அறுபது வேழு வாண்டில் ஆடிமா தத்தி லேதான்
வருங்கண்டஞ் சாத கர்க்கு வறைகின்றோம் பின்சென்
[மத்தைத்
திருக்கடை யூரி லேதான் செனிப்பனு மிக்கு லத்தில்
அரசனுல் தொழிலும் பெற்று அவனுமே வாழ்வா னுகும்.

39. அறுபத்தேழாம் வயதில் ஆடிமாதம், ஜாதகனுக்கு மரணம் ஏற் படும். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். திருக்கடையூர் என்ற க்ஷேத்திரத்தில், அந்தண குலத்தவனுகத் தோன்றுவான். அரசாங்க உத்தியோகம் ஏற்று வாழ்ந்து வருவான்.

40. பிறந்திடுங் காலந் தன்னில் பூராட முதல்பா தத்தில்
சிறந்தசுக் கிரன்த சையில் செப்புவோ மூவைந் தாண்டும்
உறைந்திடும் பதினெரு திங்கள் உரைக்கின்றோம் பலனை
[யாங்கள்
பறந்திடுந் தந்தை பின்னேன் பணமது செலவே யுண்டு.

40. ஜாதகனுக்கு, ஜனன காலத்தில் பூராட நக்ஷத்திரம் முதல்பாதம். அப்போது சுக்கிர மகா தசையில் இருப்பு; பதினேந்து வருஷங்களும் பதினெரு மாதங்களுமாம். அப்போதுள்ள பலனைச் சொல்லுவோம். தந்தைக்குப் பின்பிறந்தவன் இறந்துவிடுவான். ஜாதகனுக்குப் பணச்செலவு அதிகம் உண்டாகும்.

14. சல்லியம் நேரு மென்றேந் தன்துணை விருத்தி யாகும்
வல்லவன் தனக்கு ரோகம் வந்துபின் நிவிர்த்தி யாகும்
தல்லியுந் தந்தை நோயாஞ் சதுட்பாதஞ் சேத மெய்தும்
சொல்லுவோம் பின்பால் சேதி சுந்தரி கேட்டி டாயே.

41. கடன் உபத்திரவம் ஏற்படும். சகோதர விருத்தியுண்டு. ஜாதகனுக்கு வியாதி உண்டாகி, பிறகு நீங்கும். தாய், தந்தையர் நோயால் பீடிக்கப்படுவர். கால்நடைகட்குச் சேத மேற்படும். பிற்பாகத்தில் விவரங் கூறுவோம். அழகியே! கேளுங்கள்.

ஜாதகம் 111

1. நந்தியுஞ் சென்ன மாக ராகுவு மதனில் தங்கப்
புந்தியு மிரவி மீனம் பூமகன் கோல தாகச்
சந்திரன் மேரு வாகச் சனிசுரு கேது வுச்சம்[1]
மகதிரி சிய மாக வெள்ளியுங் [2]கொச்சை புக்க ;

1. விருஷபம் லக்கினமாக, ராகுவும் அவ்விடத்திலிருக்க, புதன் சூரியன் மீனத்திலும், செவ்வாய் துலாத்திலும், சந்திரன் தனுசிலும், சனி மகரத்திலும், கேது (அதனுடைய உச்ச ஸ்தானமாகிய) விருச்சிகத்திலும், குரு சிம்மத்திலும், சுக்கிரன் மேஷத்திலுமாக;

புதன் சூரியன்	சுக்கிரன்	லக்கினம் ராகு	
	இராசி சக்கரம்		
சனி			குரு
சந்திரன்	கேது	செவ்வாய்	

2. இந்தவார் கிரகம் நின்றுல் இயம்புவீர் பலனைத் தானே
சந்திர வதனுள் கேட்கச் செயமுனி புகலு கின்றூர்
வந்தவ னுணுஞ் சென்மம் வடதெற்கு வீதி யாகும்
இந்திரன் வாச லாகும் ஈசனு மாயோன் கீழ்ப்பால்.

2. இங்ஙனம் நவக்கிரகங்களின் அமைப்பு இருந்தால் ஏற்படும் பலனைச் சொல்லுவீர், என்று அழகிய முகத்தையுடைய பார்வதி கேட்கும்போது, ஜெய முனிவர் சொல்லுகின்றூர். இஃது ஆண் குழந்தையின் ஜாதகம். இவன் பிறக்கும் வீடு வடக்குத் தெற்கு வீதியில் கிழக்கு நோக்கியுள்ள வாயிலை யுடையது. சிவபெருமான் ஆலயமும் திருமாலின் கோவிலும் கிழக்கில் உள்ளன.

---

1. சண்டு விருச்சிகம்

2. மேஷவிராசி

3. அருகினில் மாரி தங்கும் அக்கினி திக்கி லேதான்
காரிமுகத் தோனின் கோட்டங் காளியுந் தங்கு மென்றேரும்
பெருமுனி யம்மன் தெற்கில் மேல்பாலி லீச னுண்டு
உருகிய நதியு முண்டு கோதையின் வரத்தால் வந்த;

3. அருகில் மாரியம்மன் கோவிலும், தென் கிழக்குத் திக்கில் விநாயகர் ஆலயமும் காளி கோவிலும் உள்ளன. பெரிய முனீச்வரர் கோவிலும், அம்மன் கோவிலும் தெற்கில் உள்ளன. மேற்கில் பாழடைந்த சிவ பெருமான் கோவிலும் இருக்கும். அருகில் ஆறு ஒன்று ஓடுகின்றது. கங்கை யருளால் வந்த;

4. நதியுண்டு மீனத் திக்கில் நாட்டுவோஞ் சமஷ்டி தன்னில்
வதிபனுங் கங்கை சேயாய் வருவனு மிவனே யென்றேரும்
பெருந்தந்தை தாயின் யோகம் புத்திரர் மனைவி யோகம்
சதியிலா முன்பின் சென்மஞ் சாற்றுவோ மிந்நூல்
[தன்னில்.

4. ஓர் நதியும் வடகிழக்குத் திசையில் ஓடும். இங்ஙனமுள்ள ஒரு நகரமான ஊரில், வேளாளனாகப் பிறப்பான் இந்த ஜாதகன் என்று சொல்லுவோம். இவனைப் பெற்ற தாய் தந்தையரின் யோகங்களையும் மனைவி, மக்கள் இவர்களின் அதிர்ஷ்டங்களையும், துன்பங்களில்லாத மூற் பிறவி மறுபிறவி இவற்றையும் இந்தச் சாஸ்திரத்தில் கூறுவோம்.

5. தந்தையின் வர்க்கந் தன்னில் சாற்றவாண் பலத்தைக்
[காணேம்
வந்திடுங் கன்னி நான்கு வறைகின்றே மிவனுக் கேதான்
எந்தையே பிதாகு ணத்தை இயம்புவோ மிருநி றத்தான்
சந்தத நீட்சி யில்லான் தரணியோர் மெச்ச வாழ்வன்.

5. தந்தையின் உடன்பிறந்தவர்களாகக் கூறுவதற்குச் சகோதரர் எவருமில்லை. ஆனால் சகோதரிகள் நால்வர் உளராவர் என்று சொல்லுகின்றேரும். தாயே! தந்தையின் குணத்தைக் கூறுவோம். கரிய நிறத்தினன். அதிக உயரமில்லாதவன். உலகத்தினர் புகழும்படி வாழ்ந்து வருவான்.

6. சொன்னசொல் கேட்பா னுகுந் துருசான கோபி யாவன்
பன்னியே பேச வல்லன் பாருளோர் வசியங் கொள்வன்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பான் மூர்க்க முள்ளான்
அன்னியர்க் குதவி செய்வன் அவன்சுக போச னத்தான்.

6. பெரியோர் சொன்ன வார்த்தைகளைக் கேட்பான். விரைவில் கோபத்தை யடைவான். பன்னிப் பன்னிப் பேசுபவன். உலகத்தவரை

வகிரிக்கும் குணமுள்ளவன். தன் வார்த்தைகளே சிறந்தனவென்று நிலை நாட்டுவான். மூர்க்க குணமுள்ளவன். பிறருக்கு உபகாரி. சாப்பாட்டில் மிகுந்த விருப்பமுள்ளவன்.

7. மனைவியி னிட்ட மாவன் மறுமாது விருப்பங் கொள்வன்
கனமுள குடும்பி யாவன் கவடில்லா னன்ன மீவன்
பணையோர்கள் விருத்தி யுள்ளான் பரவுப காரி னுவன்
வினையது வொருவர்க் கெண்ணுன் புண்ணிய சாலி கேளாய்.

7. மனைவியிடம் பிரியத்துட னிருப்பான். வேற்றுப் பெண்ணிடம் மையல் கொள்ளுவான். செழிப்புள்ள குடும்பத்தை ஏற்பான். சூதுகளில் லாதவன். அன்னமளிப்பதில் விருப்ப முள்ளவன். பண்ணை, ஏர் முதலி யன பெருகும். பிறருக்கு உபகாரி. நீங்குகள் ஒருவருக்கும் நினையாதவன். புண்ணியவதியே! மேலும் கேளுங்கள்.

8. இக்குண முடையோ னுக்கு இருநான்கு சனன மாக
மிக்கவே வுதிப்பா னுகும் விளம்புவோ மிவன்கு ணத்தைச்
சிக்கன மில்லா னுகுந் தீரனும் யூகை சாலி
தக்கவே கல்வி கற்பன் தான்சம தேக மென்றேம்.

8. இங்ஙனம் சொல்லப்பட்ட குணங்க ளுடையவனுக்கு, இந்த ஜாத கன் எட்டாம் பிறப்பாகப் பிறப்பான். இவனுடைய குணத்தைச் சொல்லு வோம். சிக்கனமானச் செலவு செய்யாதவன். தைரிய முள்ளவன். ஊக முள்ளவன். தகுந்த கல்வி யறிவுடையவன். சமமான சரீர அமைப் புள்ளவன்.

9. சுற்றத்தார் வெகுகு டும்பி செல்வர்க்கு விருப்ப முண்டாம்
சத்திய மென்று லச்சந் தான்கொள்வன் வீண னல்லன்
புத்திமான் பெரியோர் நேயன் பொருளப காரிக்க மாட்டான்
வெற்றியாய் முன்னோன் தன்னுல் விளங்கிய செயலி
[லீவான்.

9. பந்து ஜனங்கள் மிகுதியாக உடையவன். தனவான்களிடம் மதிப் புடையவன். சத்தியத்துக்குப் பயப்பட்டவன். உபயோகமற்றவ னல்லன். புத்திசாலி. பெரியோர்களுக்கு விருப்பமானவன். பிறர் பொருள்களின் மீது விருப்ப மில்லாதவன். தன் முன்னோர்கள் செய்த தொழிலையே வெற்றிகரமாக நடத்துவான்.

10. நலமுள பணிகள் சேர்ப்பன் நந்தியுஞ் செந்தெ லுண்டாம்
புல்லிய துன்ப மற்பம் பிற்பாகம் விசேட யோகம்
கலகமுங் கொஞ்சஞ் செய்வன் கனபெரி யோர்க ளிட்டன்
பலபல வணிபஞ் செய்வன் பாக்கியம் பெருகும் செல்வன்.

10. நன்மையுள்ள பல ஆபரணங்களைப் பெருக்குவான். மிகுதியான தானியங்கள் காளைகள் இவைகளை உடையவன். துன்பங்கள் மிகக் குறைவு. பிற்பாதியில் விசேஷ அதிருஷ்டங்கள் ஏற்படும். கலகங்கள் சிறிது விலகிப் பான். பெரியோர்களுக்கு அன்பன். பலவிதமான வியாபாரங்கள் செய் வான். பாக்கியங்கள் விருத்தியாகும். செல்வந்தனாக விருப்பான்.

11. தனமுறுங் குணவா னுகுந் தன்குல மணுகாத் தீரன்
மனவஞ்ச ரிடத்திற் சாரான் மைந்தர்க ளற்ப முள்ளான்
சினமது கொஞ்ச முள்ளான் சிறுத்தவர்க் குதவி செய்வன்
வினையிலா மனத்த னுகும் வித்தகி மேலுங் கேளே.

11. செல்வங்கள் சேரும். நல்ல குண முள்ளவன். தைரிய முள்ளவன். வஞ்சகமான எண்ணங்க ளுள்ளவரிடம் சேராதவன். குறைவான புத்திர விருத்தி யுள்ளவன். சிறிது கோப மடைவான். துன்ப மடைந்தவர்கட்கு உதவி செய்வான். தீங்கில்லாத மனமுடையவன். தாயே! மேலுங் கேள்.

12. இவன்தனை யீன்ற தந்தை இவன் பூமி யிவர்க்குக்
[கொஞ்சம்
இவனுலே பூமி கொஞ்சம் எய்திடு மீகை யுள்ளான்
தலமது தீர்த்தந் தோய்வன் தரணியில் கிருஷி செய்வன்
சிவபக்தி யுடைய னுகுஞ் செல்வதி மேலுங் கேளே.

12. ஜாதகனுக்கு, பிதுரார்ச்சிதமான நிலங்கள் சிறிதும் இவனுல் தேடப்பட்ட நிலங்கள் கொஞ்சமும் சேரும். கொடுக்கும் குணமுள்ளவன். புண்ணியத் தீர்த்தங்களில் நீராடுவான். உலகில் விவசாயம் செய்பவன். சிவ பெருமான்மீது பக்தி யுள்ளவன். செல்வியே! மேலுங் கேள்.

13. துணைவர்கள் நவம தாகுஞ் சொல்லுவோம் நான்கு தீர்க்கம்
கனமுட னுண்பா லாகக் கழறுவோந் தீர்க்க மாகப்
பிணையாமே மற்ற வெல்லாம் பேசுவோ மிவனுக் கேதான்
கனமத வானைப் பெற்ற காரிழை யாளே கேளாய்.

13. உடன் பிறந்தவர்கள் ஒன்பதின்மர். அவர்களில் நான்கு சகோத ரர் மட்டும் தீர்க்க சீவிகளாக விருப்பர் என்று சொல்லுவோம். மற்றவர்கள் நிலையார். யானைமுகனை ஈன்ற தாயே! கேட்டிடுவாய்.

14. இருபத்து வாறு வாண்டில் இவனுக்கு மணமும் வாய்க்கும்
வருங்கன்னி குடகு திக்கில் அவள்குணம் பொறுமை யுண்டு
திருகது சொல்லா ளாகுந் தேகமு மிருசி வப்பள்
அரனடி யார்க்கு நல்லள் அழகிய மெய்ய ளாமே.

14. ஜாதகனுக்கு இருபத்தாரும் வயதில் மணம் கடைபெறும். மேற்குத் திக்கிலிருந்து மனைவி வருவாள். அவளுடைய குணத்தைச் சொல்லுவோம். அடக்க முள்ளவள். பொய் சொல்லாதவள். கருமை கலந்த சிவந்த மேனி யுள்ளவள். சிவனடியார்களுக்கு நல்லவளாக விருந்து உபசரிப்பாள். அழகிய உடலுடையவள்.

15. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணும்
சித்தமா யுதித்தா லுந்தான் திங்காகு மிவளுக் கேதான்
அத்திரி சொல்லு கின்றார் அவனுக்குப் புத்திர தோடம்
பெற்றிடுந் தோடந் தன்னைப் புகலுவீர் முனியே நீர்தாம்.

15. ஜாதகனின் புத்திர பாவத்தைச் சொல்லக் கிரக பலமில்லை. தோன்றினும் நிலையா. அத்திரி முனிவர் கூறுகின்றார். முனிவரே! நீர் ஜாதகனுக்குப் புத்திர தோஷம் ஏற்படக் காரணத்தைச் சொல்லுங்கள்.

16. நந்தியுஞ் சனன மாக நற்புகர் விரய மேற்றப்
புந்தியு நீச்ச மாகப் பூமக னுறில் தங்க
வந்திடுஞ் சுதர்கள் தோடம் மதியுமே வெட்டில் நிற்க
முந்திய சனனந் தன்னில் மேவிற்று வந்தத் தோடம்.

16. விருஷப லக்கினத்தில் பிறந்து, இலக்கினாதிபதியான சுக்கிரன் விரயஸ்தானமாகிய மேஷத்திலும், புத்திர ஸ்தானத்துக் குரிய புதன் நீச்சமாக மீனத்திலும், செவ்வாய் ஆரூடமிடமாகிய (மறைவு ஸ்தானம்) துலாத்திலும், சந்திரன் எட்டாமிடமாகிய தனுசிலும் தங்கியிருப்பதால், புத்திர தோஷம் ஏற்பட்டது. தவிரவும், முற்பிறவியில் செய்த தீவினையும் இவனைச் சார்ந்தது.

17. அந்ததோர் தோடந் தன்னை அறிவிப்பீர் முனியே நீர்தாம்
சந்ததஞ் சொல்லு கின்றேஞ் சாதகன் செய்கை தன்னை
முந்திய தோட மெய்து மொழிகின்றே மிந்நூல் தன்னில்
தந்தியைப் பாதம் போற்றிச் சாற்றுவோம் விபர மாக.

17. முனிவரே! தாங்கள் அந்தத் தோஷத்தைத் தெரிவியுங்கள் நிச்சயமாகக் கூறுகின்றோம். ஜாதகனின் முற்பிறவியில் சேர்ந்த தீவினையை இந்தச் சோதிட சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம். விநாயகரின் பாதங்களில் தொழுது வணங்கி விவரமாகக் கூறுவோம்.

வேறு

18. அவனியிலே காஞ்சிநகர் தென்மேல் திக்கில்
அருகினிலே சமணமத மணுகி வந்தான்
தவநிலையை யுடையனுமாய்க் கடவுள் பத்தி
தான்பணிந்து பணியேர்கள் பெருக்க மூண்டாய்
நவனியிலே தனம்பெற்றுச் செட்டுச் செய்து
நாயகனும் வாழ்நாளில் வந்த வூழை
உவமையாய்ச் சொல்லுகின்றேந் தாயே கேளும்
ஊர்க்கணக்கன் மனைவிமே லிச்சை கொண்டான்.

18. (இந்த ஜாதகன் முற்பிறவியில்,) காஞ்சீபுரத்துக்குச் சமீபமாக, தென்மேற்குத் திசையில் உள்ளதோர் ஊரில், சமண குலத்தவனுகப் பிறந் தான். விரதங்களே யனுஷ்டித்து, தெய்வபக்தியுடன் பெரியோர்களே வணங்கி, பண்ணை ஏர் முதலியன விருத்தியாகி, உலகில் செல்வங்க ளுடைய வனுகி, வியாபாரம் செய்து வாழ்ந்து வரும் நாளில், ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேம். தாயே! கேளுங்கள். அவ்வூர் கணக்குப் பிள்ளையின் மனைவி மீது மோகம் கொண்டான்.

19. இச்சைகொண்டு போகித்து வாழு நாளில்
இதைவரனுந் தானறிந்து மனைவி மீது
மிச்சமதாய்க் கோபமுற்று விரோதம் பேச
வித்தகனுஞ் சமணன்மே லாசை கொண்டு
உச்சடித்தாள் வரன்சேதி யாவுந் தானும்
உன்கணவன் பக்கலிலே வேண்டா மென்றும்
நிச்சயமா யென்பக்கல் வருக வென்று
நேமித்தா னம்மொழிபோல் நின்றுள் மாது.

19. மோகமுற்று, அவளோடு இன்ப மனுபவித்து வரும் நாட்களில், கணக்குப் பிள்ளை யிதை யறிந்து கொண்டு, தன் மனைவியின் மீது மிகக் கோப மடைந்து அவளுரைப் பேசினுன். அப்பெண்ணும் (இந்த ஜாதகன்மீது) சமணன்மீது அளவற்ற மோகங் கொண்டு, தன் கணவன் கூறிய வனைத்தை யும் இவனிடம் வந்து கூறினுள். இவனும் அதனைக் கேட்டு, இனி நீ உன் கணவன் வீடுக்குச் செல்ல வேண்டாம், என்னுடனேயே வாழ்ந்து வருவா யாக என்று சொன்னுன். அந்தப் பெண்ணும் இவன் கூறியபடி வந்து தங்கி யிருந்தாள்.

20. இன்பமிலாக் கணக்கனுக்கு விரண்டா மாது
இவள்விலக கருணீகன் வருத்த முற்று
என்மனைவி தனைக்கெடுத்த பாவிக் கேதான்
இப்பிறப்பில் யாதொன்று மெய்தா தாகிப்
பின்சென்ன வம்சங்க ளில்லா வாகிப்
போகவர மளித்திடுவாய் ஈசா நீயும்
தென்புலத்தார் தமைநோக்கி வருத்த முற்றான்
சேதியெனும் பாவமது சேர்ந்த தம்மா.

20. இன்பங்க ளிழந்த கணக்குப் பிள்ளையின் இரண்டாவது மனைவி யான இவள் விலகி விட்டதால், கணக்கன் வருந்த மடைந்து, சொல்லுகின் றான். ஈசனே! நீ என் மனைவியின் மனத்தைக் கலைத்துக் கெடுத்த பாவிக்கு இப்பிறப்பில் இன்பங்க ளெவையும் இல்லாமலும், மறு பிறப்பில் வம்சங்கள் வளராமலும் போக அருள்வாய், என்று பிதுர் தேவதைகளை மனத்திலுல் நினைத்துத் தியானித்து வருத்தத்துடன் இங்ஙனம் சொன்னான். அந்தத் தோஷம் இவனை வந்தடைந்தது.

வேறு

21. கடவுளார் தமக்கு விட்ட காளையை ஏரில் கட்டி
அடைவுட னுழுதா னென்றேம் அதுவொரு தோட மாச்சுத்
திடமுடன் தாய்தந் தைக்கே செப்பினன் விரோத
[வார்த்தை
தொடர்ந்தது வந்தத் தோடஞ் சுந்தரி கேட்டி டாயே.

21. மற்று மொன்று சொல்லுகின்றேம். ஈசுவரனுக்காக விடப்பட் டிருந்த காளையை, எரில் பூட்டித் தன் நிலத்தில் உழுதான் என்றேம். அது வும் ஒரு தோஷமாயிற்று. தாய் தந்தையர் மீது விரோதமான வார்த்தை களைச் சொன்னான். அந்தத் தீவினையும் இவனைச் சார்ந்தது. அழகியே! கேளுங்கள்.

22. செட்டுக்கள் செய்யுங் காலை சிலசில மோசஞ் செய்தான்
கட்டமா யேழை சாபங் காவலன் தன்னைப் பற்றி
ஓட்டிய தந்தி யத்தில் உத்தமன் மனைவி மாண்டு
கட்டங்கள் கொஞ்ச நேர்ந்து காலன்தன் பதிக்குச்
[சென்றான்.

22. வியாபாரம் செய்து வரும்போது, ஏழைகளுக்கு மோசங்கள் செய் தான். கஷ்ட மடைந்த ஏழைகளின் சாபம், ஜாதகனை (மூற்பிறவியில்,) வந் தடைந்தது. அவனும் கடைசிக் காலத்தில், மனைவி இறக்க, சிறிது துன்ப மடைந்து மாண்டான்.

23. வேதனுல் வரையப் பட்டு வித்தக னுதித்தா னென்றேரும்
ஓதுவோ னிச்சென் மத்தில் உறைந்தது விந்தச் சாபம்
தீதாகு மனைவி மைந்தர் செனிக்கினுந் தீதே யாகும்
போதக வானே பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

23. பிரமனுல் மீண்டும் படைக்கப் பட்டு, இப்பிறவியில் பிறந்தான். இச்சென்மத்தில் முற்பிறவிச் சாபம் இவனை வந்தடைந்தது. அதனுல், மனைவிக்குத் தோஷம் ஏற்படும். புத்திரர்கள் பிறந்தாலும் நிலையார். விநாயகனைப் பெற்ற பார்வதியே! கேளுங்கள்.

24. முன்கர்ம வினைகள் தீர மொழிகின்றேஞ் சாந்தி தானும்
அன்னவன் மனைவி யோடு அருணமா நகர்க்குச் சென்று
மன்னிய தீர்த்தந் தோய்ந்து வளமுள கிரியைச் சுற்றி
அண்ணலுக் கருச்சித் தேத்தி ஆறஞ்சு பரத்துக் கன்னம்;

24. முற்பிறவியில் செய்த தீவினைகள் அகல, ஒரு சாந்தி கூறுவோம். இவன் தன் மனைவியுடன் திருவண்ணுமலைக்குச் சென்று, அங்குள்ள தீர்த்தத்தில் நீராடி, மலையை வலம் வந்து, அங்கு எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானுக்கு அருச்சனை முதலியன செய்து, துதித்து, முப்பது பாதேசிகளுக்கு அன்னம்;

25. தந்துபின் நூறு தீபஞ் சங்கரன் கோட்டந் தன்னில்
இன்பமாய் வைத்துப் பின்பு இவனுமே யுள்ளூர் சென்று
[1]சந்திரன் வார நோன்பு திங்களி லோர்நாள் கொள்ளச்
சங்கைகள் யாவு நீங்கிச் செனித்தசேய் தீர்க்க மாகும்.

25. அளித்துப் பிறகு, நூறு தீபங்கள் சிவபெருமான் ஆலயத்தில் பக்தியுடன் ஏற்றி வைக்க வேண்டும். பின்பு, தன்னுடைய ஊருக்குத் திரும்பி, மாத மொரு முறை, திங்கட் கிழமை தோறும் நோன்பு இயற்றினுல், தீவினைகளெல்லாம் நீங்கிப் பிறக்கும் குழந்தைகள் தீர்க்கமாம்.

26. அப்படிச் செய்வா னுகில் அறைகின்றேரும் பெண்பால்
[ரெண்டு
செப்புவோந் தீர்க்க மாகச் சேயராண் காண னுகும்
இப்படி முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்றுள்
ஒப்புடன் சாத கர்க்குக் கருமங்கள் யாரே செய்வார்.

26. அப்படிச் செய்வா னுனல், பிற்காலத்தில் இரு புத்திரிகள் தோன்றுவார். அவர்களும் தீர்க்கமாவர். ஆண் குழந்தைகள் பிறவா. இங்ஙனம்

---

1. திங்கட்கிழமை

முனிவர் சொல்ல, ஈசுவரி கேட்டலானுள். ஜாதகனுக்கு ஈமக் கடன்கள் யார் செய்வர் ?

27. சொல்லுவீ ரென்று கேட்கச் சுந்தர னிளையோன் புத்ரன்
வல்லியே கருமஞ் செய்வன் விதுரரும் கேட்க லுற்றார்
நல்லதோ நிளையோ ரென்று நாட்டினீர் பின்னத னுலே
சொல்லுவீர் துணைவர் தம்மைச் செயமுனி புகலு கின்றார்.

26. என்று சொல்லுங்கள். ஜாதகனின் இளைய சகோதரனின் புதல்வன், ஈமக் கடன்கள் செய்வான். விதுரர் கேட்கின்றார். கலமிக்க இளைய சகோதர னொருவ னுண்டு என்று கூறினீர்களே ! எப்படிச் சொன்னீர்கள். உடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுவீர். செயமுனிவர் சொல்லு கின்றார்.

28. இன்னவன் பின்வரு வோராம் இவர்களு மென்று [சொல்வோம்
அன்னவர் தீர்க்க மாவர் அவர்களி லெவர்செய் வார்கள்
தன்னிலே கடையோன் தானுஞ் செப்பினே மந்தச் சங்கை
இன்னமும் விவரமாக இயம்புவோ மிரண்டி லேதான்.

28. ஜாதகனுக்குப் பின் பிறந்த தம்பியர் இவர்கள் என்றுரைப்போம். அவர்கள் நீண்ட ஆயுளுள்ளவர்கள். அவர்களில் யாவர் ஜாதகனுக்குக் கரு மங்களைச் செய்வார்கள். அவகளில் கடைசியில் பிறந்தவ (னுடைய புத் திர) ன் ஜாதகனுக்கு உரிமைக் கடன்கள் செய்வான் என்று சொல்லுவோம். இன்னும் விவரமாக இரண்டாம் பாகத்தில் கூறுவோம்.

29. அன்னைய மிருநி றத்தாள் யாவர்க்கும் நல்லோ ளாவள்
கன்னென மொழியே சொல்வாள் கனத்தபுத் திகளு [மூள்ளாள்
உன்னத நிந்தை யுள்ளாள் உத்தமி யோக சாலி
தன்மன மில்லா தாகுங் கபடிலா ளென்று சொன்னேம்.

29. தாயின் குணங்க ளாவன : கருமை கலந்த சிவந்த மேனியள். எல்லோருக்கும் நல்லவளாவள். இனிய மொழிகளைப் பேசுபவள். தாராள புத்தி யுள்ளவள். நிரம்பப் பழிகளை ஏற்பாள். அதிர்ஷ்ட மூடையவள். பிறர் சொல்வதைக் கேட்டு நடப்பவள். சூதில்லாதவள் என்று கூறினேம்.

30. வருவோரை யாத ரிப்பள் விளைந்திடுஞ் சொற்ப ரோகம்
திருமக ளுறைந்த பின்பு செல்வங்கள் மிகவே யுண்டாம்
குறைவிலாக் குடும்பி யாவள் கூறுவோர் துணைவர் தம்மை
நெறியுட னேழ தாகும் நிகரமா ணென்றே யாகும்.

30. அடைந்தவர்களை ஆதரித்து வருவாள். சிறிது நோய் வரும். இவள் வந்த பிறகு செல்வங்கள் விருத்தியாம். குறைவில்லாத குடும்ப முடையவள். இவளுடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுவோம். எழுவர் தோன்றுவர். அவர்களில் சகோதரன் ஒருவனே நிலைப்பான்.

31. பெண்ணது மூன்று வென்றேம் பேசுவோ முள்ளூ ராகும்
அன்னையின் பூர்வந் தன்னை அறைகின்றேங் காஞ்சி
[தன்னில்
உன்னத சௌராட்டிர வம்சம் உதித்துமே பணிக
[ளுண்டாய்த்
தன்வரன் மதலை யுண்டாய்ச் சகலர்க்கு நல்லோ ளாகி ;

31. சகோதரிகள் மூவர் என்று சொன்னேம். அவர்கள் உள்ளூரி லேயே வசித்து வருவார்கள். தாயின் முற்பிறவியைச் சொல்லுவோம். காஞ்சீபுரத்தில், சௌராட்டிர வமிசத்தில் பிறந்து, ஆபரணங்கள் மிகுதியாக வடைந்து, கணவன் குழந்தை இவர்களை யடைந்து, எல்லோருக்கும் நல்லவள் என்ற பெயர் பூண்டு ;

32. அறமதி லிச்சை வைத்து ஆலயப் பத்தி கொண்டு
வருவோருக் கன்ன மீந்து அவள்குல தெய்வத் துக்குப்
பெருமையாய்ப் பூசை செய்து பிரபலக் குடும்பி யாகி
இருவினை யில்லா ளாகி எமபதஞ் சேர்ந்தா ளென்றேம்.

32. தருமத்தில் விருப்பங் கொண்டு, தெய்வ பக்தியுடன் தன்னைச் சார்ந்தவர்களுக்கு அன்புடன் அன்ன மளித்து வந்தாள். அவள் தன் குல தெய்வத்துக்குப் பெருமையுடன் பூசை முதலியன செய்து, பிரபலமான குடும்ப முடையவளாகி, தீவினைகளின்றி இறந்தாள்.

33. அரிமகன் வரையப் பட்டு அணுகினுள் கங்கை சேயாய்
மறுசென்மந் தணிகை தன்னில் மருவுவாள் பிரம்ம
[சேயாய்த்
திருமகள் வாசம் பூண்டு சேயர்க ளில்லா ளாகிப்
பெருமையாய் வாழ்வா ளாகும் புண்ணிய சாலி கேளாய்.

33. திருமாலின் மகனுகிய பிரமனுல் மீண்டும் படைக்கப் பட்டு, வேளாளர் குலத்தவளாகப் பிறந்தாள். மறுபிறப்பு, திருத்தணிகையில், அந் தணர் மரபின்னாகப் பிறப்பாள். இலட்சுமீ கடாட்சம் பெற்று, குழந்தைக ளில்லாதவளுக்க பெருமையுடன் வாழ்ந்து வருவாள். புண்ணியசாலியே ! கேளுங்கள்.

34. மூனிவரிவ் விதமாய்க் கூற மொழிகுவா ளம்மன் தாமும்
பிணையிலா மாது வுக்குப் பேசினீர் பிரம்ம சேயாய்
அனையவே விச்சென் மத்தில் அவள்செய்த புண்ணிய்
[மென்ன
கனமுட னுரைப்பீ ரென்னக் கழறுவார் முனிவர் தாமே.

34. இங்ஙனம் முனிவர் சொல்ல, பார்வதி கூறுகின்றாள். இவள் வரும் ஜன்மத்தில், அந்தணர் குலத்தில் பிறப்பாள் என்று சொன்னீர்களே. அங்ஙனமாயின் அவள் இப் பிறவியில், செய்த நற்காரியங்க ளெவை? அவற்றைச் சொல்லுங்கள், என, முனிவர் சொல்லுவார்.

வேறு

35. இப்பிறப் பதனி லறத்தின்மே லிச்சை
யாவர்க்கு நல்லவ ளாயும்
ஒப்புடன் தெய்வ பத்தியுங் கொண்டு
ஒருவர்குற் றங்கள்சொல் லாமல்
மைப்புட னிருந்தா ளாகையால் யாமும்
விளம்பினே மறைக்குல மென்று
செப்பமாய் நூலில் மந்திரி யிருக்கச்
செல்வதி யுதிப்பளென் றுரைத்தோம்.

35. இப் பிறவியில், அவள் தருமத்தில் விருப்ப முடையவளாயும், எல்லோருக்கும் நல்லவளாயும் இருந்து, தெய்வ பக்தி கொண்டு, குற்றங்க ளெவையுங் புரியாமல் இருந்து வந்ததால், அந்தணர் குலத்தில் பிறப்பாள் என்று நாங்கள் கூறினேம். தவிரவும், நாலா மிடத்தில் குரு இருப்பதால் அங்ஙனம் உரைத்தோம்.

வேறு

36. தந்தைமுன் சென்மஞ் சதிருட னுரைப்போம்
முந்திய காஞ்சி முதல்தீர்த்தங் கிழ்ப்பால்
வந்தவனிக் குலத்தில் வணிபங்கள் செய்து
தன்தன முண்டாய்த் தரணியோர்க் குதவி ;

36. தந்தையின் முற் பிறவியைச் சொல்லுவோம். உயர்ந்த காஞ்சி புரத்தில், நீர் நிலைக்குக் கிழக்கில், வேளாள குலத்தில் பிறந்து, வியாபாரங்கள் செய்து, தன்னுல் சம்பாதிக்கப் பட்ட பொருள்களே யுடையவனுய், உலகத் தவருக்கு உதவிகள் பல ;

37. செய்துமே சுகமாய்த் தீரனும் வாழ்ந்து
ஐயமில் லாமல் அணுகியே விருந்து
வையமேல் மறலி மாருகர் சென்று
உய்யவே விங்கு உதித்தன னிவனே.

37. செய்துவந்து, சௌக்கியங்க ளடைந்து, துன்பங்க ளில்லாமல் வாழ்ந்து வந்து, இறந்தான். மீண்டும் இவ்வுலகில் இப் பிறப்பாகப் பிறந் தான்.

38. மறுசென்மங் கேளாய் வளவுக்கு மேற்கில்
அருகினில் பேரூர் அவனுஞ்செங் குந்தம்
பெரும்பொருள் படைத்த புண்ணியன் தனக்கு
வருவனே மகனுய் மங்கையே கேளாய்.

38. மறு பிறவியைக் கேளுங்கள். தன் வீட்டுக்குச் சமீபமாக, மேற்கில் உள்ளதொரு பெரிய ஊரில், செங்குந்த மரபில், செல்வங்கள் மிகுதியாகப் படைத்த புண்ணியசாலி யொருவனுக்கு மகனுகப் பிறப்பான். தாயே! கேளுங்கள்.

வேறு

39. அன்னவ னேழா மாண்டில் அழகிய மேட மாதம்
தந்தைக்கு மரண மெய்துஞ் சாற்றுவோ மதன்மே லாகப்
பின்னையு முப்பா லென்பான் பேசிய தனுசு மாதம்
அன்னைக்குக் கண்டம் நேரும் அம்பிகை யாளே கேளாய்.

39. ஜாதகனுடைய ஏழாம் வயதில், சித்திரை மாதம் தந்தைக்கு மரணம் ஏற்படும். அதற்குமேல் ஜாதகனின் முப்பத் தொன்பதாம் வயதில், மார்கழி மாதம் தாய்க்கு மரணம் உண்டாகும். தாயே! கேளுங்கள்.

40. உதித்தவன் மரண காலம் உரைக்கின்றே மன்பா லென்றில்
சதியிலாக் கடக மாதஞ் சத்தமி வளர்பக் கத்தில்
வதிபன்த னுடலம் வாடும் மங்கையுங் கேட்க லுற்றூர்
எதுவிதக் கார ணத்தால் இயம்பினீர் சொல்லு மென்ன.

40. ஜாதகன் மரண காலத்தைச் சொல்லுகின்றேம். ஐம்பத் தோரும் வயதில், ஆடி மாதம் சுக்கில பட்சம் சப்தமி திதியில் இறப்பான். பார்வதி கேட்கின்றுள். எந்தக் காரணத்தால் மரணகாலம் இப்பொழு தென்று சொன்னீர்கள்?

41. மந்திரி யெட்டோ ணுகி வாகனத் தான மேற
மந்திரி தசைக்கா லத்தில் வரன்புகர் புசிக்குங் காலே
இந்தவன் மரண மெய்தும் இனிசென்மஞ் சொல்லக்
[கேளாய்
மூந்திய மதுரை தன்னி லுதிப்பனு மிக்கு லத்தில்.

41. குரு, அஷ்டமாதிபதியாகி, வாகனஸ்தானமாகிய (நான்காம் இடம்) சிம்மத்தில் இருப்பதால், குருமகாதசை சுக்கிரபுக்தியில், ஜாதகனுக்கு மரணம் ஏற்படும். இனி இவனது மறு பிறப்பைச் சொல்லுவோம்; கேளுங்கள். உயர்ந்த மதுரைமா நகரில், இக் குலத்தில் பிறப்பான்.

42. இவனுடைக் குடும்பச் சேதி இயம்புவோம் நாற்ப
[தாண்டில்
அவனியில் வேற தாகும் அதுவுமே பானு வைந்தாம்
நவனியில் முப்பான் மேலே நாட்டுவோம் விசேட யோகம்
பவமுள சல்யங் கொள்ளான் பணிதிபாத் திரங்கள்
[சேர்ப்பன்.

42. இவனுடைய குடும்பச் செய்திகளைச் சொல்லுவோம். நாற்பதாம் வயதில் வேறு குடும்பமாகச் சென்றுவிடுவான். இவனுக்கு உலகில் முப்பதாம் வயதுக்குமேல் விசேஷமான அதிர்ஷ்டங்கள் உண்டாகும். துன்பம் தரத்தக்க கடனே யடையான். ஆபரணங்கள், பாத்திரங்கள் இவற்றைச் சேர்ப்பான்.

43. ஆறஞ்சு மூன்று வாண்டில் அணுகிடு மிரும லென்றேரும்
கூறுவோ மதற்குச் சாந்தி குமரர்க்கு வருச்சித் தேத்தி
வீரியன் பவள நீரை வாரமு மதுவில் கொள்ளத்
தீருமே வந்த ரோகஞ் செப்பின மொழிகுன் ருது.

43. ஜாதகனது முப்பத்து மூன்றும் வயதில், காசரோய் உண்டாகும். அதற்குச் சாந்தி சொல்லுவோம். சுப்பிரமணியக் கடவுளுக்கு அருச்சனை முதலியன செய்து, துதித்து, பவள தீர்த்தத்தை ஒருவாரம் தேனில் கலந்து சாப்பிட்டால், அந்த ரோகம் தீரும். சொன்ன சொற்கள் தவறு.

44. பவளநீ ரெவ்வார் செய்யப் பலனதைச் சொல்லு வீரே
அவனியில் பழச்சாற் றுலே ஆட்டிப்பின் தீயில் வைக்கச்
சிவமாகு மதனே யின்னேன் சேர்த்திடப் பிணியுந் தீரும்
கவனமாய்ச் சொன்னேம் பாரு காதலி கேட்டி டாயே.

44. பவள தீர்த்தம் எப்படிச் செய்வதென்று சொல்லுங்கள். பழங்களிலிருந்து சாறுபிழிந்து கலந்து, பிறகு அதனை நெருப்பில் காய்ச்சினால், சிவந்த நிறமாகும். அந்த நீரை இவன் உட்கொண்டால் நோய் அகலும். நாங்கள் கூறியவற்றைக் கவனமாகக் கேள், தாயே!

45. பாரியு மிவன்பின் னுலே பகருவோங் கண்டங் தானே
கூறின மொழியைக் கேட்டுக் குறுமுனி புகலு கின்றூர்
சீரிய வேழில் கேது சேயுமே வாறில் தங்க
நாரியு மெவ்வி தத்தால் நாட்டினீர் பின்னுல் கண்டம்.

45. இவனுடைய வனைவி, இவனுக்குப் பின்பு இறப்பாள் என்று சொல்லுவோம். இங்ஙனம் முனிவர் கூறியவற்றைக் கேட்டு, அகத்தியர் சொல்லுகின்றூர். ஏழாமிடத்தில் கேதுவும், ஆறுமிடத்தில் செவ்வாய் தங்கி யிருப்பதால், எங்ஙனம் ஜாதகனுக்குப் பின்பு, மனைவிக்கு மரணம் ஏற்படும் என்று சொன்னீர்கள்?

46. பொன்னவன் நாலில் நிற்கப் புதனுமே விலாப மேற
இன்னவன் பின்னு லேதான் எய்திடு மனைவி கண்டம்
அன்னவன் யோக வானும் அன்னங்கள் குறைவு ரூது
இன்னமும் விபர மாக இயம்புவோ மிரண்டி லேதான்.

46. குரு நாலாமிடமாகிய சிம்மத்திலும், புதன் மீனத்திலும் (இலாப ஸ்தானம்) இருப்பதால் ஜாதகனுக்குப் பின்பு தான் மனைவி மரிப்பாள். அவன் மிகுந்த பொருள்கள் அடைவான். போஜன வசதி குறைவில்லாதவன். மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம்.

47. பாலகன் செனிக்குங் காலம் பரிதியின் தசையி லேதான்
கோலமா வாண்டு நான்குங் குறித்திடுந் திங்க ளாறும்
ஞாலமே விருபான் நாளும் நாட்டுவோம் பலனை யாங்கள்
சாலவே துணைவர் விருத்தி தன்பந்து சூத மாகும்.

47. ஜாதகன் பிறக்கும்போது சூரிய மகா தசையில் இருப்பு; நான்கு வருஷங்களும். ஆறு மாதங்களும், இருபது நாட்களுமாம். அக்காலத்திய பலனை நாங்கள் சொல்லுவோம். சகோதர விருத்தி யுண்டு, பந்துக்கள் வீட்டில் அசுபம் உண்டாம்.

வெண்பா

48. பானு தசையில் பசுநட்டங் தந்தைநோய்
ஈனர்களால் நிந்தையுண்டு விதுவன்றி—மானனைக்கும்
பாலனுக்கும் ரோகம் பெருகியபின் நிவர்த்தியதாஞ்
சாலவிரண் டில்சொல்வோஞ் சார்ந்து.

48. சூரியமகாதசையில் பசுக்களுக்கு நஷ்டம். தகப்பனருக்கு வியாதி படுத்தும். அற்பர்களால் பழிகள் ஏற்படும். இவையன்றி தாய்க்கும் குழந்தைக்கும் வியாதி உண்டாகி, பிறகு நிவர்த்தியாம். மற்றவற்றை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம்.

ஜாதகம் 112

1. திங்களும் வீணை யாகச் சனிகன்னி சிலன் கோலாம்
செங்கதிர் புந்தி மானில் சுங்கனுங் சாடி யாக
மங்கலன் மேடங் கேது விடராகு தெருக்கால் நந்தி
துங்கமாம் சென்ன மாகச் சொல்லுவீர் பலனைத் தானே.

1. சந்திரன் மிதுனத்திலும், சனி கன்னியிலும், குரு துலாத்திலும் சூரியன் புதன் மகரத்திலும், சுக்கிரன் கும்பத்தி செவ்வாய் மேஷத்திலும், இராகு லக்கினத்திலும், கேது விருச்சிகத்திலும் தங்கி, விருஷப லக்கினத்தில் பிறந்தவரின் பலனைச் சொல்லுங்கள்.

	செவ்வாய்	லக்கினம் ராகு	சந்திரன்
சுக்கிரன்	இராசி சக்கரம்		
சூரியன் புதன்			
	கேது	குரு	சனி

2. குறுமுனி புகலு கின்றார் குறித்தது வாண்பால் சென்மம்
பெறுந்தந்தை யில்ல மாகும் பேசுவோம் வடதென் வீதி
அருக்கனின் பார்வை யாகும் அந்தரி மாரி மீனம்
தருந்தந்தி கீழ்ப்பா லாகுஞ் சலக்கரை மேற்கில் தங்கும்.

2. அகத்திய முனிவர் சொல்லுகின்றார். பிறந்தது ஆண்மகன். அவனுடைய தந்தையின் வீட்டில் பிறப்பான். அது வடக்குத் தெற்கான வீதியில் கிழக்குப் பார்த்த வீடாகும். துர்க்கையம்மன் கோயிலும், மாரியம்மன் கோயிலும் வடமேற்குத் திக்கில் உள்ளன. கிழக்கில் விநாயகர் ஆலய முண்டு. மேற்குப் பக்கத்தில் ஒரு நீர்நிலை யுளது.

3. இத்தகை மாடி சூழ்ந்த இளவலு மிரண்டாஞ் சென்மம்
பெற்றிடு மன்னை மாதா புத்திரர் மனைவி யோகம்
வித்தகன் முன்பின் சென்மம் விளம்புவோ மிந்நூல் தன்னில்
அத்தியைப் பெற்ற மாதே அறைகின்றோம் மேலுங் கேளே.

3. இத்தகைய அடையாளங்களுள்ள இடத்தில் பிறந்த ஜாதகன் தன் தகப்பனுருக்கு இரண்டாம் பிறப்பாவன். இவனைப் பெற்ற தாய் தந்தையர், மனைவி புத்திரர் இவர்களுடைய யோகங்களையும், ஜாதகன் முற்பிறவி மறு பிறவி இவைகளையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் சொல்லுவோம். விஜயகனைப் பெற்ற தாயே! மேலுங் கேட்பாயாக.

4. தாதைக்குத் தாரம் ரெண்டில் தரித்திடு மீளையா ளீன்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
ஓதுவோந் துணையா ணைந்து பெண்ணது மூன்று மாகும்
ஓதுவோம் பிதாகு ணத்தை உள்மனங் கவடு கொஞ்சம்.

4. பாட்டனுருக் குற்ற இரு மனைவியரில், இளையவளுக்குப் பிறந்த வன் ஜாதகனுடைய தந்தையாவன் என்றுரைப்போம். தந்தைக்கு ஐந்து சகோதரர்களும், மூன்று சகோதரிகளும் உளராவர். தந்தையின் குணத்தைச் சொல்லுவோம். மனத்தில் சிறிது கபட முள்ளவன்.

5. முன்கோபம் வெளிக்காட் டாதா னுயர்வான குடும்பி
[யாவன்
தன்சொலு மேன்மை யாகுந் தக்கோர்கள் நேசங் கொள்வன்
முன்வயது தரித்திர ஞகு முதித்தவில் லடையா ஞகும்
மன்னர்கள் மதிக்க வாழ்வன் வாததே கத்தா ஞகும்.

5. முன்கோபத்தை வெளியிற் தெரிவிக்காதவன். செழிப்புள்ள குடும்பத்தை யடைவான். தன்னுடைய வார்த்தைக்கு மதிப்புள்ளவன். தக்க அறிவாளிகள் நட்பைக் கொள்ளுவான். ஆயுளின் முற்பகுதியில் தரித்திரனாக விருப்பான். தான் பிறந்த வீட்டைச் சொந்தமாக அடையாதவன். அரசர்கள் மதிப்பைப் பெற்றவன். வாத சரீர முள்ளவன்.

6. பலவணி பங்கள் செய்வன் பாருகள் சேர்ப்பா ஞகும்
நலமுள வில்லஞ் செய்வன் நாற்காலி விருத்தி யுள்ளான்
கலவரப் புத்தி யாவன் கவடிலல் பூமி சேர்ப்பான்
தலைவியும் வந்த பின்பு சம்பத்து மேலு முண்டாம்.

6. பலவித வியாபாரங்கள் செய்து வருவான். வீண நிலங்களைப் பெருக்குவான். உறுதியான வீடு கட்டுவான். கால்நடைகள் விருத்தி யுள்ளவன். சஞ்சலமான (பயந்த) புத்தி யுடையவன். சூதுகள் செய்து பூமியை அடைவான். மனைவி வந்த பிறகு சம்பத்துக்களை அதிகமாகப் பெறுவான்.

7. ரோமங்கள் நீட்சி யில்லான் நுவலுப தேசங் கொள்ளான்
தீமையை வெளிக்காட் டாதான் செய்நன்றி மறவா னுகும்
மாமிக ளிரண்டே யாகும் வந்தவர்க் கன்ன மீவன்
நேமியோர் மதிக்க வாழ்வன் நிதஞ்சுக போச னத்தன்.

7. நீண்ட தலை மயிர் இல்லாதவன். பெரியோர்களின் உபதேசங்களை ஏற்கான். மனத்திலுள்ள தீய வெண்ணங்களை வெளியிடாதவன். பிறர் செய்த நன்மைகளை மறவாதவன். இவனுக்கு மனைவியர் இருவர். தன்னை யடைந்தவர்கட்கு அன்னமளிப்பான். உலகத்தவரின் மதிப்புப் பெற்று வசித்துவருவான். தினந்தோறும் நல்ல புணவைப் புசிப்பான்.

8. சொன்னவிக் குணத்தா னுக்குச் சுந்தர னுதிப்ப னுகும்
அன்னவன் துணைமுன் காணன் ஆண்துணை யிளையோன்
[ணென்று
கன்னிகை யிரண்டு வென்றேங் கருதின மூன்றுந் தீர்க்கம்
பின்துணை யாண்பால் சேதி பேசுவோந் தாயே யாங்கள்.

8. இங்ஙனம் சொல்லப்பட்ட குணங்களை யுடையவனுக்கு, இந்த ஜாதகன் பிறப்பான். இவனுக்கு முன் பிறந்த சகோதரரில்லாதவன். தம்பி ஒருவன் பிறப்பான். இரு சகோதரிகள் தோன்றுவர் என்று கூறுவோம். கூறப்பட்ட மூவரும் நீண்ட ஆயுளுடையவர்கள். ஜாத்கனுக்குப் பின் பிறந்தவனின் செய்தியைச் சொல்லுவோம்; தாயே!

9. இருவிதக் கல்வி யுள்ளான் யாரையும் வசியங் கொள்வன்
பெருமவர் நேசங் கொள்வன் பெற்றதா யில்லஞ் சேர்வன்
மரச்செட்டுச் செய்வா னுகும் மாநிலம் வறுமை காணன்
திருகான குணமில் லாதான் சிக்கிரக் கோபி யாவன்.

9. இருவிதக் கல்வி கற்பான். அனைவரையும் வசிகரிக்கும் இயல்பினன். பெரியோர்களின் நட்பைக் கொள்ளுவான். தர்யின் வீட்டில் வசிப்பான். மர வியாபாரம் செய்து வருவான். உலகில் தரித்திர மில்லாதவன். தீய குணங்களில்லாதவன். விரைவினில் கோபங்கொள்ளுவான்.

10. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வன் உள்மனங் கபடு கொஞ்சம்
துண்டமாய் வார்த்தை யுள்ளான் தோகையு மொன்றே
[யாகும்
கண்டிதஞ் சுதராண் ரெண்டு கன்னிகை ரெண்டு வென்றேம்
மூண்டக ரேகை யுள்ளான் முதல்வியுங் கேட்க லுற்றாள்.

10. நல்ல போஜனத்தில் பிரிய முடையவன். மனத்தில் சிறிது வஞ்சனை யுள்ளவன். கண்டித்துப் பேசுபவன். மனைவியும் ஒருத்தியே.

நிச்சயமாக இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறப்பர். பத்ம ரேகை யுள்ளவள். பார்வதியும் கேட்கலானாள்.

11. தந்தையால் பெருமை யாகச் சாற்றினீ ரதனை நீக்கி
விந்தையா யன்னை யில்ல மேவுங்கா ரணங்க ளென்ன
அந்தவ னன்னைக் கேதான் ஆண்துணை யில்லா தாகி
இந்தவன் சென்று னென்றேரும் ஈச்வரி கேட்டி டாயே.

11. தன் தந்தையினால் ஜாதகனின் தம்பி பெருமை யடைவான் என்றுரைத்தீர்களே. அதனை நீக்கிக் தாய் வீட்டுக்குச் செல்லுங் காரணங்கள் யாவை என்று கூறுங்கள். ஜாதகனின் தாய்க்குச் சகோதரர் இல்லாததால் இவன் அங்குச் சென்றான். பார்வதியே! கேளுங்கள்.

12. பின்துணை பெண்பால் சேதி பேசுவோம் வாத தேகி
கன்னென மொழியே சொல்வள் கனத்தபுத் திகளு
[முள்ளாள்
அன்னியர் மதிக்க வாழ்வள் அழகுளாள் சிவந்த மேனி
தன்வரன் வடமே லாகுஞ் சந்ததி யொன்று தோன்றும்.

12. ஜாதகனுக்குப் பின் பிறந்த சகோதரியின் செய்திகளைச் சொல்லு வோம். வாத சரீர முடையவள். கரும்பைப் போன்ற இனிய வார்த்தை களைப் பேசபவள். பெரும் புத்தி யுள்ளவன். பிறர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவாள். அழகுடையவள். சிவந்த உடல். இவளுக்குக் கணவன், வடமேற்குத் திசையிலிருந்து வாய்ப்பான். சந்ததி யொன்றுண்டு.

13. அதுதிதாம் வேறு காணுள் அம்பிகை கேட்க லுற்றாள்
வதிபதி சுதர்கள் தோடம் வருங்கா ரணங்க ளென்ன
சதிசெய்தாள் மூன்சென் மத்தில் சதுர்மறை சாபம் நேர்ந்து
கதியிலா வேழை மாது கழறின சாபம் நேர்ந்து;

13. அதுவும் மரிக்கும். வேறு சந்ததி யடையாள். பார்வதி கேட் கின்றாள். இவளுக்குப் புத்திர தோஷம் ஏற்படக் காரணங்கள் யாவை? முற்பிறவியில் சில குற்றங்கள் செய்தாள். தவிரவும், நான்கு வேதங்களை யுணர்ந்த அந்தணர் சாப மொன்றும், கதியில்லாத ஏழைப் பெண்ணொருத்தி யின் சாபமும் முற்பிறவியில் ஏற்பட்டு;

14. வந்ததால் சுதர்கள் தோட மதுநீங்கச் சாந்தி சொல்வீர்
எந்தசாந் திகள்செய் தாலும் விலகாது குழவி தோடம்
சந்ததஞ் சுகமாய் வாழ்வள் தையல்பின் மாது சேதி
முந்தியக் கோபி யாவள் முடக்கமாங் குணத்த ளாமே.

14. இப்பிறப்பிலுந் தொடர்ந்ததால், புத்திர தோஷம் சொன்னேம். தோஷங்கள் தீரச் சாந்திகள் சொல்லுங்கள். எவ்விதமான சாந்திகள் செய்தாலும் இவளுக்கு ஏற்பட்ட புத்திர தோஷம் நீங்காது. ஆனால், சுகத்துடன் வாழ்ந்து வருவாள். ஜாதகனின் இரண்டாஞ் சகோதரியின் செய்திகளைச் சொல்லுவோம். முன் கோபி. அடக்க முடையவள்.

15. வறுமைகள் சமயோ கத்தாள் வரனுமே தென்மே லாகும்
பெறுஞ்சுத ராண்பால் நான்கு பெண்ணது வொன்று மாகும்
மருமத்தை வெளிக்காட் டாதாள் வயதுமே தீர்க்க மாகும்
அருமறை முடிவி லாடும் அம்பிகை புகன்றிட் டோமே.

15. தரித்திர முள்ளவள். சாதாரண யோகங்களைப் பெறுவாள். இவளுக்குத் தென்மேற்குத் திசையிலிருந்து கணவன் வாய்ப்பான். புத்திரர்கள் நால்வரும், ஒரு புத்திரியும் தோன்றுவர். இரகசியத்தை வெளியிடாதவள். தீர்க்க சீவி. வேதங்களின் முடிவில் விளங்குந் தாயே! நாங்கள் இங்ஙனம் கூறினேம்.

16. உதித்தவன் குணத்தைச் சொல்வோம் உலகுக்கும் நல்லோ
[னவன்
சதியிலா மனத்த னகுஞ் சாப்பாடு சுகமே யென்றும்
துதிசெய்தோர்க் கன்ப னகும் தொடுத்ததை வெல்வா
[னகும்
பதியினில் வாழா னகும் பல்கலை யுணர்வா னகும்.

16. ஜாதகன் குணத்தைக் கூறுவோம். உலகத்தாரால் நல்லவன் என்று கூறப்படுவான். மனக்தில் கெட்ட எண்ணமில்லாதவன். போஜன சுகமுள்ளவன் என்றும். தோத்திரம் செய்தவர்களை அன்புடன் ஆதரிப்பான். தொடங்கிய செயலை வெற்றியுடன் முடிக்கும் வல்லமை யுள்ளவள். தன் வீட்டில் வாழாதவன். பலவிதக் கலைகளைப் படித்தவன்.

17. அன்னிய பாடை கற்பன் அயல்தேசஞ் சிலநாள் வாசம்
உன்னத வாத தேகி உறைப்பொடு புளிப்பி லிச்சை
மன்னர்கள் நேசங் கொள்வன் மாநிறஞ் சமதே கத்தான்
பின்னமில் லாத தேகன் பொய்யது வழுத்தா நெஞ்சம்.

17, அயல் மொழியைக் கற்பான். அயல் நாட்டில் சிலகாலம் வசிப்பான். வாத சரீர முள்ளவன். உறைப்புப் பொருள்களிலும் புளிப்புப் பொருள்களின் மீதும் விருப்ப முடையவன். அரசர்கள் நட்புக் கொள்ளுவான். மாநிற முள்ளவன். சமமான உடலமைப் புள்ளவன். ஊனமில்லாத சரீரத்தை யுடையவன். பொய்கள் கூற நினையாத மனத்தினன்.

18. அடிமையாங் குடிக ளுண்டு ஆவொடு நந்தி சேரும்
திடமுளக் குடும்ப மென்றேஞ் சொல்லதைக் காப்பா னுகும்
கடன்கொளா னிடுக்க முள்ளான் காரிய மறிந்து செய்வான்
கடினமா யுரைக்கா னுகுங் காதலி மேலுங் கேளே.

18. வேலையாட்கள் உடையவன். பசு, எருதுகள் விருத்தியாம். செழிப்புள்ள குடும்பத்தை யடைவான். சொன்ன சொற்களைக் காப்பாற்று வான். கடன்படாதவன். துன்பங்களை விளைவிக்கும் காரியங்களை முன்பே அறிந்து, அதற்கிணங்கச் செய்ய வேண்டியவைகளைச் செய்வான். கடின மாகப் பேசாதவன். தாயே! கேளுங்கள்.

19. மூவைந்து நான்கு ஆண்டி லுதித்திடும் மனைவி தானும்
தீவுமே தென்மே லாகுந் தேவியின் குணத்தைச் [சொல்வோம்
நாவது சுத்த முள்ளாள் நளினமாய் வார்த்தை சொல்வள்
பாவத்துக் கிடங்கொ டாதாள் பஞ்சைமே லிரக்க மாவள்.

19. ஜாதகனது பத்தொன்பதாம் வயதில் மனைவி வாய்ப்பாள். அவள் தென் மேற்குத் திசையிலுள்ள ஓர் ஊரிலிருந்து வருவாள். அவளுடைய குணங்களைச் சொல்லுவோம். வாக்குத் தூய்மை யுள்ளவள். அழகாகப் பேசுபவள். பாவச் செயல்களுக்கு உடன்படாதவள். ஏழைகளின்மீது இரக்க முள்ளவள்.

20. மாநிறஞ் சமதே கத்தாள் வறுமைக ளடையா ளாகும்
ஊனமில் லாத தேகி உதித்திடுஞ் சுதர்கள் ரெண்டு
ஈனமா மொன்று வென்றேரும் எய்திடுந் தீர்க்க மொன்று
ஆனவள் சேட்டி யாக அறைந்தன மிவனுக் கேதான்.

20. மாநிற முள்ளவள். சமமான உடலமைப் புள்ளவள். தரித்திரம் அடையாதவள். குறைவில்லாத சரீர முள்ளவள். மக்களிருவர் தோன்றுவர். அவர்களில் ஒருவர் மரிப்பர். பெண் குழந்தை யொன்று தீர்க்கமாக விளங் கும். அவள் ஜாதகனின் மூத்த புதல்வி என்று சொல்லுவோம்.

21. விபாதிமுனி யிவ்வார் சொல்லப் புகலுவா ளம்மன் தாமும்
சுதர்களுந் தோட மெவ்வார் செப்புவீ ரந்தச் சங்கை
விதியவ னஞ்சில் நிற்க விளம்பிலே மந்தச் சங்கை
வதிபனுக் கருமஞ் செய்வோ ரறைகுவீர் விவர மாக.

21. அகஸ்திய முனிவர் இங்ஙன முரைக்கவும், பார்வதி சொல்லுகின் ரூள். ஜாதகனுக்குப் புத்திர தோஷம் எப்படி ஏற்பட்டது என்று சொல்லு வீர்? சனி ஐந்தாமிடமாகிய புத்திர ஸ்தானத்தில் இருப்பதால் தோஷங் கூறினேம். ஜாதகனுக்கு, ஈமக்கடன்கள் செய்பவர் யார் என்று கூறுங்கள்.

22. மறுமனை யொன்று நேரும் மங்கையின் துணைவி தானும்
உறைந்திடு மவர்க்குப் புத்திரர் உரைக்கின்றேஞ் சுதராண்
[ரெண்டு
திருமக ளொப்ப தாகச் செல்வியு மவ்வா றாகு
மறைகின்றேரும் நாற்பா னென்றில் மங்கையும் வருவ
[ளாகும்.

22. ஜாதகனுக்கு இரண்டாம் மனைவி ஒருத்தி யுண்டு. அவள் முதல் மனைவியின் தங்கையே யாவள். அவளுக்குப் புத்திர பாக்கியம் உண்டு. இரு புத்திரர்களும் இலக்குமி போன்ற அழகுடைய இரு புத்திரிகளும் பிறப்பார்கள். இரண்டாம் மனைவி நாற்பத்தோராம் வயதில் வருவாள்.

23. பாரியு மிரண்டு மாகப் பகர்ந்தகா ரணங்கள் சொல்வீர்
நாரியின் தானம் தன்னில் நாகமும் இருப்ப தாலும்
ஆரலும் விரயம் புக்க அறைந்தனந் தாரம் ரெண்டு
தீரமாய்த் தீர்க்க மெய்துஞ் சேயிழை யிருவ ருந்தான்.

23. ஜாதகனுக்கு இரு மனைவியர் ஏற்படக் காரணங்கள் யாவை? என்று கூறுங்கள். களத்திர ஸ்தானத்தில் (ஏழாம் இடத்தில், ஈண்டு விருச்சிகத்தில்) ராகு இருப்பதாலும், அந்த வீட்டுக் குரியவனுகிய செவ்வாய் விரயஸ்தானமாகிய மேஷத்தில் இருப்பதாலும், இரு மனைவியர் ஏற்படுவர் என்று உரைத்தோம். ஆனல், இரு மனைவியருந் தீர்க்கமா யிருப்பர்.

24. சாதகன் பூர்வஞ் சொல்வோந் திகழெட்டுக் குடியி லேதான்
போதன முடையா னுக்குப் பிறந்தனன் கங்கை சேயாய்
மாதவர் பத்தி பூண்டு வந்தவர்க் கன்ன மீந்து
சூதிலா வாழு நாளில் செப்புவோ மூழி தானும்;

24. ஜாதகனின் முற் பிறவியைச் சொல்லுவோம். புகழ்பெற்ற எட்டுக்குடியில், மிகுந்த செல்வங்களே யடைந்து வாழ்ந்து வந்தவனை ஒரு வேளாளனுக்குப் புதல்வனுகப் பிறந்தான். தவங்களே யியற்றிய துறவிகளிடம் பக்தி கொண்டு, பசித்து வந்தவர்கட்கு அன்னமளித்து, சூதுகளில்லாமல் வாழ்ந்துவந்த நாளில், ஏற்பட்ட தீவினையைச் சொல்லுவோம்.

25. பஞ்சையா யிளைத்த மாது பாலக னில்லஞ் சேர்ந்து
அஞ்சியே பணிகள் செய்து அவள்வயிறு வளர்த்து வாழ்ந்து
மிஞ்சியே பருவக் கால மேவினுள் காலன் பக்கல்
தஞ்சமா யந்த மாது சார்ந்திட் வெண்ணங் கொண்டான்.

25. ஏழைமையால், துன்பமடைந்த ஒரு பெண், ஜாதகனுடைய வீட்டுக்கு வந்து பயபக்தியுடன் வேலைகளைச் செய்து, வயிறு வளர்த்து வந்தாள். அவளும், பருவக் காலத்தில் இறந்து விட்டாள். ஜாதகனும் அவள் மீது மையல் கொண்டு, அவளை அடைய எண்ணியிருந்தான்.

26. அக்கடன் தீர்க்க வேண்டி அமைகுவா ளிரண்டாம் பாரி
மிக்கவே சுதராண் தோன்றும் வித்தகன் பின்னுல் கர்மம்
முக்யமாய் நேரு மென்றே முதித்தசேய் பரணி நந்தி
தக்கநா ளுதிப்பா னுகுஞ் சங்கரி மேலுங் கேளே.

26. அந்தக் கடனைத் தீர்ப்பதற்காக, அந்த எழைப் பெண் ஜாதகனுக்கு இப் பிறவியில் இரண்டாம் மனைவியாக வருவாள். இவளுக்குப் புத்திரன் பிறப்பான். ஜாதகனுக்கு இவளுல் ஈமக் காரியங்கள் செய்யப்படும். புதல்வன் பரணி நட்சத்திரம், விருஷப ராசியில் பிறப்பான். ஈசுவரியே! மேலும் கேட்டிடுவாய்.

27. இன்னவன் பொதுயோ கத்தை இயம்புவோஞ் சனனந்
[தொட்டு
அன்னவன் மரண மட்டும் அவனியில் வறுமை காணுன்
தன்னில்ல மூப்பா னந்தில் சாகையும் வேற தாகும்
பின்னேயு நாற்பா னென்றில் பூமியும் பிரித லுண்டாம்.

27. ஜாதகனுடைய பொது யோகங்களைச் சொல்லுவோம். அவனுடைய பிறப்பு முதல் இறப்பு வரையில் தரித்திரம் இல்லாதவன். ஜாதகனின் முப்பத்தைந்தாம் வயதில் தன் வீட்டிலேயே தனிக் குடும்பம் ஏற்படும். பிறகு, நாற்பத் தொன்றும் வயதில், பூமி, வீடு முதலியன பிரிக்கப்படும்.

28. தந்தையின் பாக மாறுய்ச் சார்ந்திடு மென்று சொன்னேம்
தந்தையின் பூமி விருத்தி தாழ்வுறச் செய்வா னுகும்
தந்தைபோல் யோக மில்லான் சமரச யோக மாகும்
தன்தன மதிக மில்லான் சந்ததி தன்னுல் யோகம்.

28. தந்தையின் ஆஸ்தி ஆறு பாகமாகப் பிரிக்கப்படும் என்று சொல்லுவோம். தந்தை தேடிவைத்த வீடு நிலங்களின் மதிப்புக் குறைவுபடாமலிருக்கச் செய்வான். தந்தையைப் போன்ற மிகுந்த யோக மில்லாதவன். இன்பமும் துன்பமும் கலந்த யோக முள்ளவன். தன் முயற்சியால் சம்பாதிக்கப் பட்ட செல்வங்களில்லாதவன். புத்திரர்களால் யோக மேற்படும்.

29. இன்னமும் பூமி சேர்ப்பன் இயம்புவோ மன்னே சேதி
கன்னென மொழியு முள்ளாள் காதலி வந்த பின்பு
தன்வரன் யோக மெய்துந் தரித்திடும் பால்பாக் கியங்கள்
அன்னவ ளறத்தி லிச்சை அவளில்லம் வடகீ ழாகும்.

29. மேலும் பூமிகளைச் சேர்ப்பான். தாயின் செய்திகளைச் சொல்லுவோம். கரும்பைப் போன்று இனிய வார்த்தைக ளுள்ளவள். இவளை மணந்த பிறகு ஜாதகனின் தந்தைக்கு அதிருஷ்டங்கள் அதிகமாம். பால்

பாக்கியங்க ளுள்ளவள். தருமம் செய்வதில் விருப்ப முடையவள். அவ ளுடைய வீடு வடகிழக்கி லுள்ளது.

30. துணைகளுங் காணு ளாகுந் தோகையின் பூர்வஞ்
[சொல்வோம்
கனமுள வாலங் காட்டுக் கருகினில் தெற்கி லேதான்
வினையிலாக் கோகு லத்தில் விளம்பிணு ளிந்த மாது
சினமிலா வாழு நாளில் செப்புவோ மூழி தானே.

30. உடன் பிறந்தவ ரில்லாதவள். இவளுடைய முற் பிறவியைச் சொல்லுவோம். உயர்ந்த திருவாலங்காட்டுக்கு அருகில், தெற்குத் திசையில், தீங்கில்லாத இடையர் மாபில் தோன்றுவாள் இவள். தீவினை யில்லாமல் இவள் வாழ்ந்து வரும்போது. நேர்ந்த தீவினையைச் சொல்லுவோம்.

31. வேதத்தோன் தாகம் வேண்ட வினயமு மவன்கைக்
[கொண்டு
தீதாகத் தந்து பின்பு தீங்கதை யவனுங் கண்டு
ஓதுவான் சிலபே ருக்கு உள்கவ டாகத் தந்தாய்
பாதகி துணைகா ணுமல் பிறப்பளே யென்று சொல்லி,

31. ஓர் அந்தணன் தாகத்துக்குத் தண்ணீர் கேட்க; அவள் வணக் கத்துடன் அசுத்தமான நீரைக் கொடுத்தாள். அந்தணனும் அதை யறிந்து ஒரு சாபமிட்டான். நல்லொழுக்க முடைய எனக்கு, சூதாக, தூய்மை யில்லாத நீரைக் கொடுத்தாய். நீ, மறுபிறவியில், உடன் பிறந்தவர் இல்லாமல் வாழ்வாய் என்று சொல்லி;

32. மனவருத் தங்க ளாக வருந்திணு ளந்தத் தோடம்
வினையாகச் சேர்ந்த தென்றேரும் விமலன்தன் பூசைக் காகத்
கனமுள வாவின் பாலைக் காதலி தந்தா ளென்றேரும்
வனிதையு மந்தி யத்தில் வயிறுவேதை தன்னில் மாண்டு;

32. மனவருத்த மடைந்து சென்றார். அந்தத் தீவினை இப்பிறவியில் வந்தடைந்தது. இது தவிரவும், கடவுட் பூசைக்காக, தண்ணீர் கலந்த பசுவின் பாலைக் கொடுத்தாள் என்றுரைத்தோம். இவளும் கடைசிக் காலத்தில், வயிற்று வலியால் மாண்டு;

33. வந்தவ ளிவளே யென்றேரும் மறையவன் வாக்குப் போலே
தன்துணை காணு ளாகுஞ் சாற்றுவோ மறுசென் மத்தை
விந்தையாய் வேங்க டத்துள் விளங்குவாள் மறைக்கு லத்தில்
முந்துமால் பக்தி கொண்டு மேவுவா ளிவளே யம்மா.

33. இப் பிறவியில் பிறந்தாள் என்றேம். அந்தணன் சாபப்படி, உடன்பிறந்தவர் இல்லாதவ ளாவாள். மறு பிறவியைச் சொல்லுவோம். திருப்பதியில், அந்தணர் குலத்தவளாகப் பிறப்பாள். முதல்வனுகிய திருமாலின் மீது பக்தி பூண்டு வாழ்வாள் இவள்.

34. தந்தையின் பூர்வஞ் சொல்வோம் விரிஞ்சிபால் பிரம்ம [சேயாய்
முந்தியக் குடும்பி யாகி முதலுண்டாய்க் கிருஷி செய்து
நிந்தைக ளில்லா னுகி நிமலனு மரண மாகி
வந்தவ னிவனே யென்றேம் மங்கையுங் கேட்க லுற்றாள்.

34. தந்தையினுடைய, முற் பிறவியைச் சொல்லுவோம். விரிஞ்சி புரத்தில், அந்தணர் குலத்தவனுகப் பிறந்து, உயர்ந்த குடும்பத்தை யடைந்து, செல்வங்க ளுண்டாகி, விவசாயம் செய்து வந்து, பழிகள் அடையாமல், இறந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவன் இவன் என்று உரைத்தோம். பார்வதி கேட்கலாளுள்.

35. முன்சென்ம மறைக்கு லத்தி லுதித்தவன் குலந்தாழ் வாக
வந்தகா ரணங்க ளென்ன மறைகளே விரும்பா னுகிச்
சந்ததம் வாழ்ந்த தாலே செனித்தன னென்று சொல்வோம்
பிந்திய சென்மந் தன்னைப் பேசுவோ மினிமே லாக.

35. முன் பிறவியில் அந்தணர் குலத்தில் பிறந்தவன், இப்பிறவியில் தாழ்வான குலத்தில் பிறக்கும் காரணங்கள் என்ன? வேதங்களே விரும்பி யுணராமல் வாழ்ந்து வந்ததால் பிறந்தான் என்று கூறினேம். தந்தையின் மறுபிறவியைச் சொல்லுவோம்.

36. அரங்கமா நகரந் தன்னில் அந்தணர் குலமு தித்துத்
திருமகள் விலாசம் பெற்றுச் செல்வனும் வாழ்வா னுகும்
பராசருங் கேட்க லுற்றார் பாலக னிச்சென் மத்தில்
இருள்மன மாகக் கொண்டும் ஏழையை மோசஞ் செய்தும்,

36. ஸ்ரீரங்கத்தில், அந்தணர் குலத்தில் தோன்றி, இலட்சுமி கடாட்சம் பெற்று, செல்வந்தனுக வாழ்ந்து வருவான். பராசர முனிவர் கேட் கின்றார். ஜாதகன் இப்பிறவியில் கபடமுள்ள மனத்தினனுகவும், ஏழைகளை மோசம் செய்தும்;

37. வந்தவன் மறுபி றப்பு மறைக்குலங் கார ணஞ்சொல்
விந்தையாய்த் தடாகங் கூவல் விளங்கிய சோலை வைத்தும்
அந்தணர்க் குதவி செய்து ஆபத்தைக் காத்த லாலு
முந்திய குலமு திப்பான் மொழிகின்றேங் கர்ம காலம்.

37. வாழ்ந்து வருபவனுக விருப்பதால், மறு பிறவி அந்தணர் குலத்த வனுகத் தோன்றக் காரணம் யாது? அதிசயிக்கும்படியான பெரிய குளம், கிணறு, செழிப்புள்ள சோலை முதலியன ஏற்படுத்தியும், பிராமணர்கட்கு உபகாரம் செய்தும், துன்ப மடைந்தவர்களைக் காத்தும், வாழ்ந்து வருவ தால் முதன்மையான அந்தணர் குலத்தில் பிறப்பான். இவனுக்குக் கரும தசை வருங் காலத்தைச் சொல்லுவோம்.

38. முப்பது வெட்டு வாண்டில் உயர்தனுர் மாதந் தன்னில்
செப்புவோ மன்னை கண்டஞ் சென்றுபின் நாற்பான் மூன்றில்
ஓப்புடன் சிம்ம மாதம் உரைக்கின்றேங் தந்தை கண்டம்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் ருது.

38. ஜாதகனின் முப்பத்தெட்டாம் வயதில், மார்கழி மாதம், தாய்க்கு மரணம் ஏற்படும். அதற்குப் பிறகு, நாற்பத்து மூன்றும் வயதில், ஆவணி மாதம் தந்தைக்கு மரண முண்டாகும். கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! சொன்ன சொற்கள் தவறு.

39. அறுபது வெட்டு வாண்டில் அழகிய மகர மாதம்
நிறைபக்கம் பூச நாளில் நீங்குமே யாவி தானும்
மறுசென்மங் கோகர் ணத்தில் மைந்தனுஞ் சத்ரிய சேயாய்ப்
பெருமையும் புகழு மேற்பன் புண்ணிய சாலி கேளாய்.

39. அறுபத்தெட்டாம் வயதில் தை மாதம் பௌர்ணமி யன்று, பூச நக்ஷத்திரத்தில், ஜாதகன் இறந்து விடுவான். இவன் மறு பிறப்பில் திருக் கோகர்ணத்தில் வன்னிய குல க்ஷத்திரியனுகப் பிறப்பான். பெருமையுட னும் செல்வாக்குடனும் வாழ்ந்து வருவான். புண்ணியவதியே! கேட்டி டுவாய்.

40. பாலகன் செனிக்குங் காலம் பணிதசை பதினேந் தாண்டும்
சாலவே கல்வி நேருந் தன் துணை விருத்தி யாகும்
ஏலவே தான பேதம் எய்திடும் பூமி தானும்
மேல்மேலும் பால்பாக் கியங்கள் விருத்தியாங் குடும்பந்
[தானே.

40. ஜாதகன் பிறக்கும்போது, ராகு மகா தசை, பதினேந்து வருடங்கள் இருப்பாம். அக்காலத்தில் இவனுக்குக் கல்வி யறிவு விருத்தியாம். உடன் பிறந்தவர்களும் விருத்தியாவர். இடமாற்றமும் உண்டு. வீடு நிலங்கள் பெருகும். பால் பாக்கியங்களே மிகுதியாகப் பெற்ற குடும்பத்தை யடைவான்.


41. பாரியு மிவன்பின் னுலே பகருவோ மாரக ங்கள்
மாரனுந் தந்தை பின்னுல் மருவுவா னில்லந் தன்னில்
தீரமா யரசர் தம்மால் செட்டுக்கள் செய்வா னுகும்
கூறுவோம் விவரம் பின்னுல் கோதையே கேட்டி டாயே.

41. இவனுக்குப் பிறகு, மனைவிக்கு மரணம் எற்படும். ஜாதகன், தன் தந்தையின் காலத்துக்குப் பிறகு அந்த வீட்டில் வாழ்வான். அரசாங்க உத்தியோகம் அடைந்து, வியாபாரங்கள் செய்து வருவான். மற்ற விவரங்கள் பிற்பகுதியில் சொல்லுவோம். பார்வதியே! கேளுங்கள்.

ஜாதகம் 113

1. மதிவண்டி குசனும் நீச்சம் மறையவன் கோல தாகப்
புதன்ரவி புகரும் நந்தி புரிசனி தேள தாகத்
தனுராகு கேது வீணை சென்மமும் நந்தி யாக
இதுவிதக் கோளும் நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே

1. சந்திரன் கடகத்திலும், செவ்வாய் கடகத்தில் நீச்சமாகவும், குரு துலாத்திலும், புதன் சூரியன் சுக்கிரன் இலக்கினத்திலும், சனி விருச்சிகத்திலும், இராகு தனுசிலும், கேது மிதுனத்திலுமாக, இவ்விதம் நவக்கிரகங்களும் நின்று, ஜன்ம லிலக்கினம் விருஷபமாக விருந்தால் உரிய பலன்களைச் சொல்லுவீர்.



2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்ரூர்
மேதினி லாண்பால் சென்மம் விளம்புமில் கூறு கின்ரேரும்
நீதியாய்க் கீழ்மேல் வீதி நுவலுவோ முத்ர வாசல்
ஆதியாய் மாயோன் மேற்கில் ....

2. பார்வதிதேவி இங்ஙனம் கேட்கும்போது, விசுவாமித்திர முனிவர் சொல்லுகின்ரூர். இஃது ஆண் பிறப்பு. பிறக்கும் வீட்டைச் சொல்லு கின்ரேரும். கிழக்கு மேற்கான வீதியில் வடக்குப் பார்த்த வாயிலுடையது என்று சொல்லுவோம். திருமால் மேற்கில் எழுந்தருளி யிருக்கின்ரூர்.

3. தென்திசை தந்தி சாலை சலக்கரை யோடை காணும்
சந்திரன் சடைய ணிந்தோன் தென்கீழ்ப்பால் சமவூர் [தன்னில்
இந்தநல் லடையா ளத்துள் இலகிய கூரை யில்லம்
வந்தன னரண்டாஞ் சென்ம மறைகுவோ மேலுங் கேளே.

3. தெற்குத் திசையில் விநாயகர் ஆலயம், சாலைவழி, கீர்நிலை, ஓடை முதலியன உள்ளன. பிறைச் சந்திரனைச் சடைமுடியில் தரித்துள்ள சிவ

பருமான் கோவில் தென்கிழக்குத் திசையில் இருக்கின்றது. இத்தகைய டையாளங்களுடன் சமதிலப் பகுதியான ஊரில், கூரை வேய்ந்த வீட்டில், ன் தந்தைக்கு இரண்டாம் பிறப்பாக ஜாதகன் தோன்றினன் என்று சால்லுவோம். மேலுங் கேள்.

4. தாதைக்குத் தாரம் மூன்றில் தரித்திடும் நடுமா தின்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
போதவே துணைவர் தம்மைப் போற்றுவோம் பெண்பா [லொன்று
தாகு மென்று சொன்னேஞ் செப்புவோ மந்தச் சேதி.

4. ஜாதகன் பாட்டனருக்கு மனைவியர் மூவர். அவர்களில் இரண் ாம் மனைவிபெற்ற புதல்வனே ஜாதகன் தந்தையாவான் என்று கூறு வோம். அவன் உடன்பிறந்தாரைச் சொல்லுவோம். சகோதரி யொருத்தி தான்றி மரிப்பாள் என்று சொன்னேம். ஜாதகன் தந்தை வரலாற்றை ரைப்போம்.

5. இருநிறஞ் சமதே கத்தான் ஈகைவான் கல்வி யில்லான்
வறுமைக ளாதில் சொல்வோம் மைத்துன ரில்லா னாகும்
திருமனை பின்னல் செய்வன் செனவுப காரி யாவன்
உறன்முறைக் கினிய னாகும் உத்தமி மேலுங் கேளே.

5. கரிய நிற முள்ளவன். சமமான உடலமைப்பைப் பெற்றவன். கொடையாளி. படிப்பில்லாதவன். ஆரம்ப காலத்தில் தரித்திர முள்ளவன் என்று கூறுவோம். தனக்கு மைத்துனர் இல்லாதவன். பிற்காலத்தில் அழகிய வீடு கட்டுவான். மக்களுக்கு உதவி செய்பவன். உறவினர்களுக் குப் பிரியனவன். பார்வதியே! மேலுங் கேள்.

6. பூமியு மில்லா னாகும் புயபல முடைய னாகும்
நேமியோர்க் குதவி செய்வன் நிகர்தந்தை யாஸ்தி யில்லான்
தீமையை யொருவர்க் கெண்ணன் சிரசினில் மச்ச முள்ளான்
தாமதக் குணத்தா னாகுந் தனமது பின்னல் சேர்ப்பன்.

6. நிலபுலன்கள் இல்லாதவன். தோள் வலி யுடையவன். உலகி னர்க்கு உதவிகள் செய்வான். தந்தையால் சம்பாதிக்கப்பட்ட ஆஸ்தியில்லா தவன். ஒருவருக்குங் கெடுதல் புரிய எண்ணமாட்டான். தலையில் மச்ச மொன்றுள்ளவன். தாமதக் குணங்க ளுள்ளவன். பிற்காலத்தில் செல்வஞ் சேர்ப்பான்.

7. சுயதொழி லதனுல் லாபஞ் சேத்திரம் புதிதாய்ச் செய்வன்
கனமுளோர் வசியங் கொள்வன் காதலி பட்ச முள்ளான்
வினையிலா மனத்த னுகும் வீண்வம்பில் செல்லா னுகும்
தனமது பின்னுல் சேர்ப்பன் சகலர்க்கு நல்லோ னுவன்.

7. சொந்தமாகச் செய்யுந் தொழிலில் இலாப மடைவான். புதிய வீடு கட்டுவான். மேன்மையுடைய பெரியோரைத் தன்வசப்படுத்துவான். மனைவி மீது விருப்ப முடையவன். குற்றமில்லாத மனமுள்ளவன். வீண் சண்டைக்குப் போகமாட்டான் என்று கூறினேம். பிற்காலத்தில் பொரு ளைச் சேர்த்து வைப்பான். அனைவர்க்கும் நல்லவன்.

8. இலாகிரிப் பிரிய னுவன் நாட்டினில் நல்லோ னுவன்
பாகமாய்ப் பேச வல்லான் பாருகள் சேர்ப்பா னுகும்
ஊகையு முடைய னுகும் உள்மனங் கபடு மில்லான்
நாகரீ கங்க ளுள்ளான் நாயகி மேலுங் கேளே.

8. போதை தரும் பொருள்களில் விருப்ப முள்ளவன். உலகில் நற் குணமுடையவனுக விளங்குவான். பக்குவமாகப் பேசுதலில் வல்லவன். நிலபுலன்களைச் சேர்ப்பான். ஊகித்துணரும் சக்தி யுடையவன். மனத்தில் வஞ்சனை யில்லாதவன். நாகரிக முள்ளவன். தலைவியே! மேலுங் கேள்.

9. ரோமங்சுள் நீட்சி யுள்ளான் நுண்ணிய புத்தி யுள்ளான்
சேமமாங் குடும்பம் பின்னுல் செய்நிலம் சேர்ப்பா னுகும்
காமனை விருப்பங் கொள்வான் கட்டுவார்த் தைகளு
[மில்லான்
நேமியி லீகை வானும் நிமலியே மேலுங் கேளே.

9. தலைமயிர் நீண்டுள்ளவன். நுட்பமான அறிவுடையவன். செளக் கியமான குடும்ப முடையவன். பிற்காலத்தில் வீண நிலங்களைச் சேர்ப் பான். மன்மதன் போல் வடிவழகுடையவன். இல்லாதவற்றைப் புனைந்து கூறு மியல்பில்லாதவன். உலகில் கொடையாளியாக விளங்குவான். குற்ற மற்ற பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

10. இக்குண முடையோ னுக்கு இவனுமே வுதிப்பா னுகும்
மிக்கவே விவன்கு ணத்தை விமலியே மேலுங் கேளே
தக்கவே கல்வி கற்பன் சகலர்க்கும் நல்லோ னுவன்
மிக்கவே பூமி சேர்ப்பன் விமலியே மேலுங் கேளே.

10. இவ்விதக் குணங்களை யுடையவனுக்கு இந்த ஜாதகன் புதல்வனு கத் தோன்றுவான். இவன் குணங்களைச் சொல்லுவோம். சிவந்த உடலுள் ளவன். தகுந்த கல்வி கற்பான். எல்லோருக்கும் நல்லவனுக விருப்பான்.

மிகுந்த நிலபுலன்களைச் சேர்ப்பான். குற்றமற்ற பார்வதியே! மேலுங் கேட்பாயாக.

11. வித்தையு மிரண்டு கற்பன் விவேகியாம் பொறுமை சாலி
நத்தினேர்க் குதவி செய்வன் நயம்படக் கூறு வானும்
சிக்கன மில்லா னுகுஞ் சனவுப காரி யாகும்
அத்திபோல் நடையு மாகும் அம்பிகை யாளே கேளாய்.

11. இருவிதக் கல்வி கற்பான். விவேக முள்ளவன். பொறுமைக் குணங்கள் பொருந்தியவன். துன்ப மடைந்தவர்கட்கு உபகாரங்கள் செய்வான். நயமாகப் பேசுவான். பொருளைச் செலவழிப்பதில் சிக்கனமில்லாதவன். மக்களுக்கு உபகாரங்கள் செய்வான். யானைபோன்று கம்பீர நடையுள்ளவன். பார்வதியே! கேட்பாயாக.

12. கைமுத லுடைய னுகுங் கனத்தவர் பணிசே வுண்டாம்
உய்வகை பூமி யாலும் உயர்ந்ததோர் செட்டி னாலும்
பொய்யது சொல்லா னுகும் பிதாவுக்கு மேலாய் வாழ்வான்
தையலார் மோக னுவன் சம்பத்து வுடைய னுமே.

12. கைப்பொரு ளுள்ளவன். ஏர், பண்ணை, எருதுகள் உள்ளவன். சிறந்த வியாபாரத்தினாலும், விவசாயஞ் செய்தலாலும் ஜீவிப்பான். பொய்கள் கூறமாட்டான். தன் தந்தையைவிடச் சிறப்பாக வாழ்க்கை நடத்துவான். பெண்கள்பால் மையலுள்ளவன். செல்வ முடையவன்.

13. அறமதி லிச்சை யுள்ளான் அதிசய வார்த்தை சொல்வன்
பரம்பரைத் தொழிலே செய்வன் பலவூரில் பூமி சேர்ப்பன்
நிறையவே குடும்பி யாவன் நேமியில் நல்லோ னுவன்
பொரைசொலான் வெகுத னத்தன் புண்ணியஞ் செய்வா
னெனன்றோம்.

13. பிறருக்கு உதவிகள் புரிய விருப்பமுள்ளவன். கேட்பவர் வியப்படையும்படியே பேசுவான். பரம்பரையாக வந்த தன் குலத்தொழிலைச் செய்து வருவான். பல கிராமங்களில் வீடு நிலங்களைச் சேர்ப்பான். நிறைந்த குடும்பமுள்ளவன். உலகில் நல்லவன் என்ற பெயரடைவான். பிறர்மீது பழிகூற மாட்டான். மிகுந்த செல்வ முள்ளவன். நல்வினைகள் பல புரிவான் என்று கூறினோம்.

14. இவனுடைத் துணைவர் தம்மை இசைக்கின்றே மறுவர்
[தோன்றும்
அவனியில் பெண்பா லொன்று அறைகின்றே மூத்தோ
[ளொன்று
இவனுக்கு விளையோ ராண்பால் இயம்புவோ மிருவ ராகும்
தவசியே பெண்பா லொன்று சாற்றுவோ மம் தீர்க்க மாக.

14. இவனுடன் பிறந்தவர்களைச் சொல்லுகின்றோம். ஆறுபேர் தோன்றுவர். இவனுக்கு மூத்த சகோதரி யொருத்தியுண்டு என்று கூறுகின்றோம். ஜாதகனுக்கு இளைய சகோதரர் இருவர் என்று கூறுவோம். இளைய சகோதரி யொருத்தியும் தீர்க்கமாக விளங்குவாள் என்று சொல்லுவோம்.

15. மூன்று துணை பெண்பால் சேதி மொழிகின்றே மிருசி வப்பள்
சனமது புகழ வாழ்வள் சனசகா யங்கள் செய்வள்
அன்னவள் பிறந்த பின்பு அவள்தந்தை தனக்கு யோகம்
பின்னமில் லாத தேகி பூடண முடைய ளாமே.

15. ஜாதகனின் மூத்த சகோதரியின் வரலாற்றைச் சொல்லுகின்றோம். கருஞ் சிவப்பு நிறமுள்ளவள். பந்து ஜனங்கள் புகழும்படி வாழ்க்கை நடத்துவாள். மக்களுக்கு உதவிகள் செய்வாள். இவள் பிறந்த பிறகு, இவளது தந்தைக்கு யோகங்க ளுண்டாம். குற்றமில்லாத உடலைப் பெற்றவள். ஆபரணங்க ளுடையவள்.

16. வரனுமே வடபா லாகு மறைகின்றோம் புத்ர பாவம்
திறமையா யாண்பால் இரண்டு தேவியு மூன்று மாகும்
பெருமையா யைந்துந் தீர்க்க மேகிடு மூன்று வென்றோம்
வரன்பக்கல் சென்ற பின்பு வறைந்தனம் யோகந் தானே.

16. இவளுக்குக் கணவன் வட திசையிலிருந்து வாய்ப்பான். புத்திர பாவத்தைச் சொல்லுகின்றோம். ஆண் குழந்தைகள் இருவரும் பெண்கள் மூவரும் தோன்றுவர். மேன்மையுடன் இவர்கள் ஐவரும் தீர்க்கமாக விளங்குவர். மேலும் மூன்று பிறந்து சேதமாம் என்று கூறினோம். இவள் கணவனை யடைந்தவுடன் யோகமுண்டாகும் என்று சொன்னோம்.

17. பின்துணை யாண்பால் சேதி பேசுவோஞ் சிவந்த மேனி
அன்னவன் கல்வி ரெண்டு யாவர்க்கும் நல்லோ னவன்
சொன்னது செயமே செய்வன் தோகையர் மோக னவன்
பன்னியே பேச வல்லன் பஞ்சைமே விரக்க முள்ளான்.

17. ஜாதகனின் இளைய சகோதர னொருவனின் செய்தியைச் சொல்லுவோம். சிவந்த உடல். இருவிதக் கல்வி கற்பான். எல்லோருக்

கும் நல்லவனாக விருப்பான். செய்வதாகச் சொல்லியவற்றை வெற்றியுடன் செய்து முடிப்பான். பெண்கள்பால் மோக முள்ளவன். இன்னிப் பன்னிப் பேசுவான். கதியற்ற ஏழைகள் மீது இரக்க முள்ளவன்.

18. சுற்றத்தா ரேற்கை யுள்ளான் சுகமிகும் பின்னுல் யோகம்
கொற்றவர் மெச்ச வாழ்வன் கரமதில் கமல ரேகை
வெற்றியாய்ச் சொல்லு முள்ளான் விளைபுலம் விருத்தி [செய்வன்
உற்றநற் றுணைவர் மேலாய் உயர்ச்சியாய் வாழ்வா னுமே.

18. உறவினர் மதிக்கும் தன்மை யுள்ளவன். மிக்க சுக மடைவான். பிற்காலத்தில் இவனுக்கு யோகம் உண்டாகும். அரசர்கள் பாராட்டும்படி வாழ்வான். கையில் பத்மரேகை யுள்ளவன். வெற்றி விளைவிக்கின்ற சொற்களைப் பேசுவான். விளைநிலங்களை விருத்தி செய்வான். தன் சகோதரர்களைவிட மேன்மையான நிலையில் வாழ்ந்திருப்பான்.

19. தன்னுடன் கூட வாழ்வன் தன்மனை யொன்றே யாகும்
அன்னவன் தனக்குப் புத்ர ரறைகின்றே மிருநான் காகும்
தன்னிலே யாண்பா லொன்று சத்தியு மூன்று மாகும்
பின்னமா மற்ற வெல்லாம் புண்ணிய வதியே கேளாய்.

19. தன் சகோதரனுடன் சேர்ந்து வசிப்பான். இவனுக்கு மனைவி யொருத்தியே. இவனுக்கு மக்கள் எண்மர் என்று சொல்லுகின்றோம். அவர்களில் புதல்வன் ஒருவனும், புதல்வியர் மூவரும் தீர்க்கமாக விளங்குவர். மற்றவர் மரிப்பர். புண்ணியசாலியே! கேட்பாயாக.

20. மற்றது துணைவி சேதி யறைகின்றே மிரண்டி லேதான்
பெற்றதாய்ச் சேதி தன்னைப் பேசுவோ மிருநி றத்தாள்
உற்றோர்கள் மெச்ச வாழ்வள் உண்மையா மனத்த ளாகும்
சுத்தமு முடைய ளாகுந் துணைவர்க ளில்லா ளென்றே மும்.

20. ஜாதகனின் இரண்டாம் சகோதரியின் செய்தியை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகனின் தாயாரின் வரலாற்றினைக் கூறுவோம். கரிய நிற முள்ளவள். உறவினர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவாள். உண்மை பொருந்திய மனமுள்ளவள். தூய்மை யுடையவள். உடன்பிறந்தாரில்லாதவள் என்று சொன்னோம்.

21. அன்னமு மன்பா யிவள் ஆளனுக் கினியா ளாகும்
தன்சொலு மடக்க முள்ளாள் தானவள் புத்தி சாலி
சொர்ணமும் பணிபின் னுலே சேர்ந்திடு மிவளுக் கேதான்
தன்துணை காணு ளாகுஞ் சத்தியே மேலுங் கேளே.

21. வீட்டுக்கு வருபவர்கட்கு அன்புடன் உணவளிப்பாள். கணவனுக்கு இனியவள். சொற்களில் பணிவு நிரம்பியவள். புத்திசாலியாக விளங்குவாள். இவளுக்குப் பொன்னும் ஆபரணங்களும் பிற்காலத்தில் சேரும். தனக்குச் சகோதரரில்லாதவள். அம்பிகையே! மேலுங் கூறுகின்றவற்றைக் கேள்.

22. மனமது கபடு மில்லாள் மறுமொழி கூரு ளாகும்
சினமது வெளிக்காட் டாதாள் செப்புவோம் நன்ன டக்கை
வனிதையுஞ் சொல்ப ரோக மறைகின்றேம் யோக சாலி
இனமதை வணங்கி வாழ்வள் இன்பமாய் வார்த்தை
[சொல்வள்.

22. மனத்தில் கபட மில்லாதவள். கணவன் சொற்களுக்கு எதிர் மொழி சொல்லாதவள். கோபத்தை வெளிப்படுத்தாதவள். நல்லொழுக்க முள்ளவள் என்று சொல்லுவோம். சிறிது வியாதியுடையவள். அதிர்ஷ்ட முடையவள் என்று சொல்லுகின்றோம். பந்துக்களிடம் மரியாதையுடன் இருந்து வருவாள். இன்பந்தரும் சொற்களைப் பேசுவாள்.

23. சாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோ மீரெட் டாண்டில்
காதலி வடக்குத் திக்கில் கலந்திடு மென்று சொன்னேம்
ஓதுவோ மவள்கு ணத்தை உறுதியில் லாதா ளாகும்
பாதக மனமில் லாதாள் பஞ்சைகட் கன்ன மீவள்.

23. ஜாதகன் திருமண காலத்தைச் சொல்லுவோம். பதினெரும் வயதில், வடக்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள் என்று கூறுவோம். அவள் குணங்களைச் சொல்லுவோம். மனத்தில் திடமில்லாதவள். கெட்ட எண்ணங் கொள்ளாதவள். ஏழைகள் மீது இரக்கங் கொண்டு உணவளிப்பாள்.

24. மாநிறம் நற்கு ணத்தாள் மறையவர் நேசங் கொள்வாள்
ஈனமாங் குணங்க ளில்லாள் இடரான புத்தி யில்லாள்
தானமுந் தர்மஞ் செய்வள் தன்வரன் மனம்போல் வாழ்வள்
ஊனமாம் வார்த்தை யில்லாள் உரைக்கின்றேம் புத்ர
[பாவம்.

24. கரியநிற முடையவள். நற்குணமுள்ளவள். சான்றோரான அந்தணர்களிடம் நட்புக் கொள்ளுவாள். தாழ்வான குணங்களில்லாதவள். தவறான புத்தியில்லாதவள். தான தருமங்கள் செய்வாள். தன் கணவனின் மனமறிந்து வாழ்க்கை நடத்துவாள். குற்றமுள்ள சொற்களைப் பேசாதவள். புத்திர பாவத்தைக் கூறுகின்றேம்.

25. தந்தைபோல் புத்திர னென்று சாற்றுவோர்ந் தீர்க்க
[மெய்தும்
விந்தையாய்ப் பெண்பால் ரெண்டு மேவிடுந் தீர்க்க மாக
இந்தவார் முனிவர் கூற ரூச்வரி கேட்க லுற்றுள்
ஐந்திடம் புதனே யாகி அதிபுகர் கூடி நிற்க ;

25. ஜாதகனின் தந்தையைப் போன்று புதல்வன் ஒருவன் தோன்றித் தீர்க்க மடைவான் என்று சொல்லுவோம். பெண்களும் இருவர் தோன்றித் தீர்க்கமாவர். இவ்வாறு முனிவர் சொல்ல, பார்வதிதேவி கேட்கலானாள். புத்திர ஸ்தானமாகிய ஐந்தாமிடத்துக் குரியவன் புதனாகி, அவன் சுக்கிர னோடு சேர்ந்து இலக்கினத்தில் இருப்பதால்;

26. மதலைகள் தோட மென்று வறைகின்றே மிவனுக் கேதான்
முதலிலே மூன்று சேதம் எய்திடும் பின்னுல் விருத்தி
.....வார் என்று அத்திரி கேட்கும் போது
நதிசடை விச்வா மித்ரர் நாட்டுவார் விபர மாக.

26. இவனுக்குப் புத்திர தோஷமுண்டாம் என்று சொல்லுகின்றோம். முதலில் தோன்றும் மூன்று குழந்தைகள் சேதமாம். அவற்றிற்குப் பின்பு தோன்றுபவை விருத்தியாம்.....என்று அத்திரி முனிவர் கேட்கவே, விசுவாமித்திரர் விவரமாகக் கூறுவார்.

27. முன்சென்ம வினையி னுலே எய்திடு மந்தத் தோடம்
அந்ததோர் சேதி தன்னை அறிவிப்பாய் விபர மாக
இந்தவன் முன்சென் மத்தை இயம்புவோர்ங் காளத்தி
[தன்னில்
முந்திய குலமு தித்து மனைவிமைந் தருமுண் டாகி ;

27. முற்பிறப்பில், ஜாதகன் இயற்றிய தீவினையால் இப்பிறப்பில் புத்திர தோஷம் உண்டாகும். முற்பிறப்புத் தீவினைகளைப் பற்றி விவரமாகச் சொல்லுவோம். ஜாதகனது முற்பிறப்பைச் சொல்லுவோம். காளஹஸ்தியில், அந்தணர் மரபில் பிறந்து, மனைவி மக்களைப் பெற்று;

28. கிருஷியால் சீவித் தேதான் கௌரவக் குடும்பி யாகி
வரும்வினை சொல்லு கின்றோம் வெள்ளாட்டி விதவை
[மாதை
மறையவன் போகித் தேதான் வருகின்ற நாளி லேதான்
கருவுகள் மூன்று தோன்றிக் கனத்தபண் டிதங்கள் செய்ய ;

28. பயிர்த்தொழிலினுல் ஜீவனம் செய்து, மதிப்புள்ள குடும்பமுடைய னுய், வாழும்பொழுது இவனைச் சேர்ந்த வினையைக் கூறுகின்றோம். பணிப்

பெண்ணான கைம்பெண் ணொருத்தியுடன், இந்த வந்தணன் இன்பமனு பவித்து வரும் காளில், மூன்று முறை அவளுக்குக் கருப்பம் தோன்றியது. இவன் பெரிய வைத்தியங்கள் அவளுக்குச் செய்வித்ததனால்,

29. விதவைக்குக் கருவு நீங்கி வித்தகி சுகமே யாளுள்
வதிபர்க்கு வந்தத் தோட மடைந்தது வந்தி யத்தில்
நதிபல தீர்த்தந் தோய்ந்து நாயக னுள்ளூர் மீண்டு
சதிசெயுங் காலன் பக்கல் சார்ந்தன னென்று சொன்னேம்.

29. கைம்பெண்ணுக்குக் கருவழிந்தது. அவள் சௌக்கிய மடைந் தாள்; கருவழித்த தோஷம் இவனைச் சார்ந்தது. அப்பிறப்பில், கடைசிக் காலத் தில், இவன் பல புண்ணிய நதிகளில் நீராடி, உள்ளூருக்குத் திரும்பி, துன்ப மிழைக்கின்ற எமனைச் சார்ந்தான் (மரண மடைந்தான்) என்று கூறினேம்.

30. பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தனன் காஞ்சி கீழ்ப்பால்
தெரியவே வடுகர் வம்சஞ் செனிததவ னிவனே யென்றேம்
மறைக்குல மூன்சென் மத்தில் வந்தவ னிச்சென் மத்தில்
குறைவான குலத்தில் வந்த குணங்களைக் கூறு வீரே.

30. மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, இப்பிறப்பில், காஞ்சிபுரத் துக்குக் கிழக்கில் உள்ளதோர் ஊரில், வடுகர் மரபினனுகப் பிறந்தவன் என்று கூறினேம். முற்பிறப்பில் அந்தணர் மரபில் பிறந்தவன், இப்பிறப் பில், தாழ்ந்த வடுகர் மரபில் தோன்றிய காரணங்களைச் சொல்லுங்கள்.

31. மூன்சென்ம மறைகள் தம்மை முயலாம லிருந்த தாலே
பின்சென்மம் வடுகர் வம்சம் பிறந்தனன் கருவின் தோடம்
தன்சுதர் முதலில் மூன்று சேதமாம் பின்பு விருத்தி
அந்தவூழ் நீங்க வேண்டி அறைகின்றேஞ் சாந்தி தானே.

31. முற்பிறப்பில், வேதங்களை முறைப்படி ஓதாமல் இருந்ததால், இப்பிறப்பில் வடுகர் மரபினனுகப் பிறந்தான். கருவழித்த தோஷத்தினுல் தனக்குத் தோன்றும் மக்களில் முதல் மூவர் சேத மாவர். பின்பு தோன் றுபவர் விருத்தியாவர். அந்தத் தோஷங்கள் விலகுவதற்குச் சாந்தி யொன்று சொல்லுகின்றேம்.

32. சிசுவத்தி செய்த தோடஞ் செப்பவே மாட்டோஞ் சாந்தி
எதுசாந்தி செய்தா லுந்தான் விலகாவே வினைகள் தாமே
வதிபன்தன் தந்தை பூர்வ மறைகின்றேம் பங்காட் டூரில்
சதிசெயும் தியின் வம்சஞ் செனித்தவ னிவனே யென்றேம்.

32. கருவழித்த தோஷத்துக்கு நாங்கள் சாந்தி கூறவே மாட்டோம். எந்தச் சாந்திகள் செய்தாலும், தோஷங்கள் நீங்கா. ஜாதகன் தகப்பனாரின் முற்பிறப்பைச் சொல்லுகின்றோம். திருப்பனங்காட்டூரில், வன்னிய மரபினனைப் பிறந்தான் இவன் என்று கூறினோம்.

33. மார்ச்சால மில்லந் தன்னில் மருவிற்று வோர்நாள் தன்னில்
பாரினில் புத்திர னுண்டாய்ப் பலவிதக் குற்றஞ் செய்யத்
தீரனு மதனைக் கண்டு சேரியில் விட்டா னென்றோரும்
பாரினில் தாயில் லாச்சேய்ப் பசிநோயால் மரண முற்று ;

33. பூனை யொன்று இவன் வீட்டில் வசித்து வந்தது. ஒரு நாள் அப் பூனை, குட்டி யொன்றை ஈன்றது. அஃது இவன் வீட்டில், பலவிதத் துன் பங்களை யுண்டாக்கியது. அதனைக் கண்ட இவன், குட்டியைக் கொண்டு போய், பலர் நிறைந்து வாழும் சேரி யொன்றில் விட்டான் என்று கூறினோம். தாயில்லாத அந்தப் பூனைக் குட்டி பசித் துன்பத்தால் மரண மடைந்து.

34. அந்ததோர் தோடந் தானும் அணுகிற்று வந்தி யத்தில்
நற்றல வாசஞ் செய்து நமன்பதிக் காளா யின்னோன்
முற்றிய வேத னுலே உலகினில் வரையப் பட்டுச்
சித்தமாய் வடுகர் வம்சஞ் செனித்தவ னிவனே யம்மா.

34. அந்தத் தோஷங்கள் இவனை அப்பிறவியில் அடைந்தன. கடைசிக் காலத்தில், புண்ணியத் தலங்கள் பலவற்றிற்குச் சென்று வசித்து, மரண மடைந்து, பிரமதேவனுல் மீண்டும் படைக்கப்பட்டு, வடுகர் குலத்தவனாக இப்பிறப்பில் தோன்றியவன் இவனே யாவான் ; தாயே !

35. முன்சென்மம் பூனை சாபம் முயன்றதா லிச்சென் மத்தில்
தன்துணை தாயுந் தோடந் தரித்திர முதலில் காட்டும்
பின்வய தினிலே செல்வம் பெறுவனும் வறுமை யில்லான்
பின்சென்மங் காளாத்தி தன்னில் பிறப்பனும் வைசியச்
[சேயாய்.

35. முற்பிறப்பில் பூனைக்குட்டி பிறந்த தோஷம் ஏற்பட்டதால், இப் பிறவியில் இவனுக்குச் சகோதர தோஷம் உண்டாகும். தாய்க்குத் தீங்குண்டாம். ஜாதகன் வாழ்நாளின் முற்பகுதியில், தரித்திரம் தோன்றும். ஆயுளின் பிற்பகுதியில் செல்வமடைவான். வறுமை யடையான். மறு பிறப்பு, திருக்காளத்தியில், வைசியனுய்ப் பிறப்பான்.

36. மாதுரு முன்சென் மத்தை யறைகின்றேர்ந் தணிகை
[யுத்திரம்
மேதினில் சிற்றூர் தன்னில் விளங்கிஞள் கௌரி வம்சம்
ஆதியில் தெரியாக் காலம் அடைக்கலான் கருவை
[யின்ஞள்
சூதிலா வுடைத்தா ளென்றேருஞ் சேர்ந்தது வந்தத்
[தோடம்.

36. ஜாதகனது தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். திருத்தணிகைக்கு வடக்கில் உள்ள தொரு சிற்றூரில், கௌரீக வமிசத்தில் தோன்றிஞள். நன்மை தீமைகளைப் பிரித்துணரும் தன்மையில்லாத இளமைக் காலத்தில், தன் வீட்டில் கூடு கட்டிக்கொண்டு வாழ்ந்திருந்த பறவையின் முட்டைகளை, இவள், மனத்தில் கெட்ட வெண்ணங்களையும் மில்லாமல், உடைத்து விட்டாள் என்று சொன்ஞேம். அந்தத் தோஷம் இவளைச் சேர்ந்தது.

37. இன்னமு மேழை மாது ரன்றதோர் குழவிக் கேதான்
அன்னமு மிவளைக் கேட்க அதற்கவ ளிசையா ளாகிப்
பின்னமாய் வார்த்தை சொல்லப் பேதையு மனவெ
[றுப்பால்
கன்னிகை மறுசென் மத்தில் காதலி துணைவ ரின்றி ;

37. வேறு ஒன்றும் உண்டு. ஏழைப் பெண் ஞெருத்தி, தனக்குப் பிறந்த குழந்தைக்காக இவளிடஞ் சென்று, சிறிது உணவு தருமாறு கேட்டாள். இவள் உணவு தருவதற்கு சம்மத மில்லாமல், குற்றமுள்ள சொற்கள் பலவற்றைக் கூறவே, ஏழையும் மன வெறுப்புக் கொண்டு, நீ, மறு பிறவியில் உடன் பிறந்தோ ரில்லாமல் ;

38. வாழுவா யென்று சொல்லி மங்கையும் புகன்று சென்ருள்
சூழ்ந்தது வந்தத் தோடந் தோகையு மந்தி யத்தில்
பாழான குன்ம நோயால் பாரினில் வாட்ட முற்றுத்
தாழ்வுடன் காலன் பக்கல் சார்ந்தன ளென்று சொன்ஞேம்.

38. வாழ்வாய், என்று கூறிவிட்டுச் சென்ருள். அந்தத் தோஷம் இவளைச் சார்ந்தது. இவளும் அப்பிறவியில் கடைசிக் காலத்தில், கொடிய வயிற்று நோயினல் வருந்தி, மாணமடைந்தாள் என்று கூறினேம்.

39. இந்ததோர் சென்மந் தன்னில் இவள்துணை யில்லா தாகும்
பிந்திய சென்மந் தன்னைப் பேசுவோங் காஞ்சி தன்னில்
தன்தன வைசிய னுக்குத் தான்மக வாகத் தோன்றி
முந்திய செல்வம் பெற்று முயற்சியால் வாழ்வா ளாகும்.

39. இப்பிறப்பில், இவள் உடன்பிறந்தா ரில்லாதவ ளாவள். இவளது மறுபிறப்பைச் சொல்லுவோம். காஞ்சிபுரத்தில், தன் முயற்சியால் சம்பா தித்த பொருளையுடைய வைசிய னொருவனுக்குப் பெண்ணாய்ப் பிறந்து, மிகுந்த செல்வத்தை யடைந்து, சுய முயற்சியுடன் வாழ்ந்திருப்பாள்.

40. மூப்பது ரெண்டு வாண்டில் மூடராடி மாதந் தன்னில்
செப்புவோந் தந்தை கண்டஞ் சென்றுபின் மூப்பா
[னெட்டில்
ஓப்புடன் தனுசு மாதம் உரைக்கின்றே மாதுர் கண்டம்
அப்ப்ணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுவே.

40. முப்பத் திரண்டாம் வயதில், ஆடி மாதம், ஜாதகன் தந்தைக்கு மரணம் உண்டாகும் என்று சொல்லுவோம். பின்பு, இவனது முப்பத் தெட்டாம் வயதில், மார்கழி மாதம் தாய்க்குக் கண்டம் ஏற்படும் என்று கூறுகின்றோம். கங்கையைச் சடை முடியில் தரித்துள்ள சிவபெருமானின் மனைவியே! நாங்கள் சொன்ன சொற்கள் தவறு.

41. இரண்டுமூன் றுண்டு வேழு இருபது வாண்டி லேதான்
வருங்கண்டஞ் சாத கர்க்கு வந்துபின் நிவிர்த்தி யாகும்
அறுபது வொன்று வாண்டில் ஆடிமா தத்தி லேதான்
பருவத்தி லுடலம் வாடும் பார்வதி கேட்டி டாயே.

41. ஜாதகனுக்கு இரண்டு, மூன்று, ஏழு, இருபதாம் வயதுகாலங்களில் கண்டங்கள் நேரும். வந்த பிறகு நிவிர்த்தியாம். அறுபத் தோராம் வயதில், ஆடிமாதம், பௌர்ணமியில், ஜாதகன் மாணமடைவான். பார்வதி தேவியே! கேட்பாயாக.

42. மறுசென்மங் காளத்தி தன்னில் மன்னர்தங் குலமு தித்துப்
பெருமையாய்ச் செட்டுச் செய்து பிரபல குடும்பி யாகி
உறைகுவா னென்று சொன்னேனும் உரைக்கின்றே
[மிவனின் யோகம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

42. இவன் மறுபிறப்பு, திருக்காளத்தியில், அரசர் மரபினனாகப் பிறந்து, மேன்மையுடன் வியாபாரஞ் செய்து, கீர்த்திபெற்ற குடும்ப முடைய வனாய், வாழ்வான் என்று கூறினேம். இவன் யோகங்களைச் சொல்லு கின்றோம். அரிய வேதங்களின் முடிவில் விளங்குகின்ற பார்வதி தேவியே! கேள்.

43. பலவிதச் செட்டுச் செய்வன் பாக்கிய முடைய னுகும்
தலமது தீர்த்தம் தோய்வன் செனபந்து மெச்ச வாழ்வன்
குலத்துக்கு மேலாய் வாழ்வன் கூறிய சித்ர வீடு
நிலைமையாய் நான்கு வாண்டில் நிகழ்த்துவோம் பூமி
[சேர்ப்பன்.

43. பலவிதமான வியாபாரங்கள் செய்வான். பாக்கியங்க ளுள்ளவன். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள தீர்த்தங்களில் நீராடுவான். பந்து ஜனங்கள் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். நான்கு வருஷங்களில் வீடு நிலபுலன்களைச் சேர்ப்பான்.

44. தந்தைநாள் பூமி யில்லான் தரணிக ளதிகஞ் சேர்ப்பன்
தந்தனம் பூமி வீடு சாற்றுமை யாயி ரம்பொன்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விவர மாகக்
கந்தனை யின்ற மாதே கழறுவோ மேலுங் கேளே.

44. தகப்பனார் காலத்திய நிலபுலன்கள் இல்லாதவன். இவன் காலத்தில் மிகுதியாக வீடு நிலங்களைச் சேர்ப்பான். இவனிடமுள்ள செல்வம், பூமி, வீடு இவற்றின் மதிப்பு ஐயாயிரம் பொன்களாம் என்று சொல்லுவோம். மற்றவற்றைப் பிற்பாகத்தில் விவரமாகச் சொல்லுவோம். முருகக் கடவுளைப் புதல்வராக வடைந்த பார்வதியே! மேலுங் கூறுவோம்; கேட்பாயாக.

45. செனித்திடுங் காலந் தன்னில் சனிதசை யெட்டு வாண்டும்
குனித்திடும் பதினேர் திங்கள் கூறுவோம் பலனை யாங்கள்
கனமுள செட்டு வோங்குங் காளைபின் துணைவர் விருத்தி
வினையுண்டு நீங்கு மென்றே மேவிடுஞ் சித்திர வீடு.

45. ஜாதகன் பிறப்புக் காலத்தில், சனிமகாதசை இருப்பு; எட்டு வருஷங்களும், பதினெரு மாதங்களுமாம் அக்காலத்தில் இவனுக்கு வியாபாரம் உயரும். இவனுக்குப் பின் தோன்றிய சகோதரர்களுக்கு விருத்தியுண்டாம். தன்பங்கள் நேரும். ஆனால், அவை நீங்கும் என்று சொன்னேம். அழகிய வீடு வாய்க்கும்.

ஜாதகம் 114

1. திங்களுங் கேது கோலில் சேய்நந்தி சனியுங் கன்னி
பங்கயன் [1]மலரோன் புந்தி பார்க்கவன் [2]சேல தாகப்
பொங்குறு ராகு மேடம் புக்கிடச் சென்மந் நந்தி
தங்கின கிரக மிவ்வார் சாற்றுவீர் பலனைத் தானே ;

1. சந்திரன் கேது துலாத்திலும், செவ்வாய் விருஷபத்திலும், சனி கன்னியா ராசியிலும், சூரியன் குரு புதன் சுக்கிரன் மீனத்திலும், ராகு மேஷத்திலுமாகி இவ்வாறு நவக்கிரகங்களும் நின்று, ஜன்ம லக்கினம் விருஷபமாக விருந்தால், உரிய பலன்களைக் கூறுங்கள்.

குரு சூரியன் புதன் சுக்கிரன்	ராகு	லக்கினம் செவ்வாய்	
	இராசி சக்கரம்		
		சந்திரன் கேது	சனி

2. சங்கரி கேட்கும் போது செயமுனி கூறு கின்றார்
இங்கித வாணஞ் சென்மம் இல்லமுங் கீழ்மேல் வீதி
தென்திசை வாச லாகுஞ் [3]சேயனு மேல்பால் தங்கும்
துங்கமா மீசன் மாரி தினகரன் திசையில் காணும்.

2. என்று பார்வதி கேட்கும்போது, செயமுனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண் பிறப்பு, பிறக்கும் வீடு கிழக்கு மேற்கான வீதியில், தெற்கு நோக்கிய வாயிலுடையது. சுப்பிரமணியக் கடவுள் ஆலயம் வீட்டுக்கு மேற்கிலுள்ளது. தாய்மை யுள்ள சிவபெருமான், மாரியம்மன் ஆகியோர் கோயில்கள் கிழக்குத் திசையி லுள்ளன.

3. இன்னமும் பலதே வாசம் இலகிடு மவ்வூர் தன்னில்
உன்னதப் பேரு ராகும் உயர்செட்டு வரசர் வாசம்
சொன்னவிவ் வடையா ளத்துள் சுதனுமே யந்தர சென்மம்
தன்னிலே வாச மென்றோஞ் சாற்றுவோங் கேளுந் தாயே.

---

1. குரு
2. மீனவிராசி
3. சுப்பிரமணியக் கடவுள்

3. இன்னும் பல தெய்வங்களின் கோயில்களைக் கொண்ட மேன்மையுள்ள பெரிய ஊரில், உயர்ந்த முறையில் வியாபாரங்கள் நடைபெறும். அங்கே அரசர்கள் வாசஞ் செய்கின்றனர். சொல்லப்பட்ட இவ் வண்டையாளங்களுடன் கூடிய இடத்தில் ஜாதகன் தன் தந்தைக்கு நடுப் புதல்வனுகப் பிறந்து வசிப்பான் என்று கூறினேம். மேலுங் கூறுவோம். கேளுங்கள்; தாயே!

4. தந்தையின் வர்க்கந் தன்னைச் சாற்றவே பலத்தைக் காணும்
அந்ததோர் தாதை சேதி ஆயில்யம் கோலாஞ் சென்மம்
எந்தையே மாஞ்சி வப்பன் இலகிடும் வாத தேகி
.....சமர்த்தாக வார்த்தை சொல்வன்.

4. ஜாதகன் தந்தையின் வர்க்கத்தினர் விருத்தியைப் பற்றிச் சொல்லுவதற்குக் கிரக வலிவில்லை. பாட்டனரின் செய்தியைக் கூறுவோம். ஆயில்ய நட்சத்திரம், துலா லக்கினத்தில் பிறந்தவன் இவன். கருமை கலந்த செந்நிற முள்ளவன். வாத சரீர முள்ளவன். ..... சாமர்த்தியமாகப் பேசுவான்.

5. யோசனை பலவுஞ் செய்வன் உண்மையா மனத்த னுகும்
காசுவியா பாரஞ் செய்வன் கனராசர் பேட்டி கொள்வன்
தூசுபோல் மனத்த னுகுஞ் சொல்லுமுன் கோபி யாவன்
பாசமா யெவர்க்கும் நண்பன் பால்பாக்ய முடைய னுமே.

5. மிகுந்த யோசனைகள் செய்வான். உண்மை நிரம்பிய மனத்தினன். பணங் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்வான். மேன்மையுள்ள அரசரைப் பேட்டி காண்பான். தூய்மையான மனத்தை யுடையவன். கூறுவதற்கு முன் கோபங் கொள்ளுவான். யாவருக்கும் சிநேகிதன். பால் பாக்கியங்கள் பெற்றவன்.

6. மாமியு மிரண்டே யாகும் மர்மமாய்த் தொழிலே செய்வன்
சேமமாங் குடும்பி யாவன் தலவாசஞ் செய்வா னுகும்
தீமையை யொருவர்க் கெண்ணன் சீலமுங் கொஞ்ச முண்டு
தாமதக் குணத்தா னுகுந் தரைமிகத் தேட வல்லான்.

6. இவனுக்கு மனைவிமார் இருவர். பிறர் அறியாமல் சில தொழில்களைச் செய்வான். சௌக்கிய முள்ள குடும்ப முடையவன். பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று, சிலகாலம் வசிப்பான். ஒருவருக்குந் தீங்கு நினையான். ஒழுக்கஞ் சிறிதுள்ளவன். தாமதக் குண முள்ளவன். நிலபுலன்களை மிகுதியாகச் சேர்ப்பதில் வல்லவன்.

7. பலவித தேசஞ் செல்வன் .....
..... காரி யங்கள் செய்வன் நாதனுர் பத்தி பூண்பன்
உலகுளோர்க் குதவி செய்வன் உறுதிவான் செல்வ
[முள்ளான்
கலகத்தில் செல்லா னுகுங் கனத்தவ ரிட்டங் கொள்வன்.

7. அயல் நாடுகள் பலவற்றிற்குச் செல்லுவான். .....
.....செயல்களைச் செய்வான். கடவுள் பக்தி யுடையவன். உல
கத்தினருக்கு உபகாரங்கள் செய்வான். மனத்தில் திட முள்ளவன். செல்வ
முடையவன். வீண் சண்டை, கலகம் முதலியன நிகழுகின்ற இடத்துக்குப்
போகமாட்டான். பெரியார் அன்பைப் பெறுவான்.

8. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வன் உற்றுரைக் காப்பா னுகும்
தண்டமிழ் நுணுக்கந் தேர்வன் சகலபா டைகளுங் கற்பன்
வண்டிவா கனமு முள்ளான் வாக்கது தவரு னுகும்
முண்டக ரேகை யுண்டு மூலச்சூ டுடைய னுமே.

8. சுக போஜனங் கொள்ளுவான். தன்னை யடைந்தவர்களைப் காப்
பான். தண்மையான தமிழ் மொழியிலுள்ள நூட்பங்களை யாராய்ந்து உண
ருவான். எல்லா மொழிகளையும் கற்பான். வண்டி முதலான வாகன வச
திக ளுள்ளவன். சொல் தவறுதவன். கையில் பத்மரேகை யுண்டு.
மூலச் சூடு உள்ளவன்.

9. இங்நெறி யுடையா னுக்கு மிருதார மிலையா ளுக்கு
அன்னவ னுதிப்பா னுகும் அவன்குணம் புகலக் கேளாய்
.....பலகாரி யங்கள் செய்வன்
உன்னதத் தரளத் தந்தம் உலகுக்கு நல்லோ னுவன்.

9. இவ்விதக் குணங்க ளுடையவனுக்கு மனைவியர் இருவர். அவர்க
ளில் இளைய மனைவிக்கு இந்த ஜாதகன் தந்தை தோன்றுவான். அவன்
குணங்களைச் சொல்லக் கேள்..... .....பல செயல்களைச்
செய்வான். உயர்ந்த முத்துக்கள் போன்று வெண்மையான பற்க ளுடைய
வன். உலகத்தினருக்கு நல்லவன்.

10. கல்விகள் மூன்று கற்பன் காலாட்க ளுடைய னுகும்
நல்லவன் நல்ல வர்க்கு நயமுள வார்த்தை சொல்வன்
அல்லங்க ளடையா னுகும் அருகர்தன் பக்தி கொள்வன்
புல்லிய புத்தி யில்லான் புராதனம் விருத்தி செய்வன்.

10. மூன்று விதக் கல்வி கற்பான். எவலாட்களைப் பெற்றவன். நற்
குண முள்ளவர்களுக்கு நண்பன். இனிமை பொருந்திய சொற்களைக் கூறு

வான். துன்பங்கள் அணுகாதவன். அருக தேவனிடம் பக்தியுள்ளவன். அற்ப புத்தி யில்லாதவன். முன்னோர் ஆஸ்தியை விருத்தி யாக்குவான்.

11. கைமுத லுடைய னுகுங் கரமதில் விஷ்ணு ரேகை
ஐயமென் றேரைக் காப்பன் அரசனுல் செட்டுச் செய்வன்
தையல்மார் மோகங் கொள்வன் தன்பந்து வாத ரிப்பன்
பொய்யது புகலா னுகும் புகழுளான் மர்ம வானே.

11. கைப் பொருளுடையவன். இவன் கையில் விஷ்ணு ரேகை யுண்டு. துன்ப மென்று வந்தவர்களைக் காப்பான். அரசாங்கத் தோழில் புரிவான். பெண்கள்பால் மையல் கொள்ளுவான். தன் உறவினர்களைக் காப்பாற்றுவான். பொய்யுரைகள் சொல்லான். கீர்த்தி பெறுவான். மனத் தில் மறைவுள்ளவன்.

12. துணைவர்க ளாண்பால் காணுன் தோகைய ரைந்து தீர்க்கம்
வினையிலாப் பராசர் சொல்வார் விளங்காரே துணையா
[ணென்றீர்
பிணிவந்த கார ணஞ் சொல் பிறையுமே வாறில் நிற்க
கனமுள .... ஆண் தோடம்.

12. தன்னுடன் பிறந்த சகோதர ரில்லாதவன். சகோதரிகள் ஐவர் தோன்றித் தீர்க்கமாவர். குற்ற மற்ற பராசர முனிவர் கூறுவார். இவனுக் குச் சகோதரர் தோன்றி விளங்கார் என்று கூறினீர்கள். சகோதர தோஷம் ஏற்படக் காரணம் யாது? கூறுங்கள். சகோதர ஸ்தானத்துக் குரிய சந்திரன் ஆரு மிடமாகிய துலாத்திலும், பெருமையுடைய.....
.....சகோதரருக்குத் தோஷம் உண்டு.

13. தந்தைக்குத் துணைகள் தோடஞ் சாற்றின காரணஞ் சொல்
புந்தியும் லாபந் தன்னில் புதனுமே நீச்ச மாக
ஐந்திடத் தோன் ரூறில் அணுகிட ராகு மேடம்
நொந்திடுந் துணையா ணுந்தான் நேர்ந்தது முன்னூழ்த்
[தோடம்.

13. ஜாதகன் தகப்பனருக்குச் சகோதர தோஷம் ஏற்படும் என்று கூறிய காரணம் யாது? கூறுங்கள். ஐந்தா மிடத்தவனுகிய புதன் இலாப ஸ்தானமாகிய (மீனம்) பதினேரா மிடத்தில் நீச்சனும், இராகு விரய ஸ்தானமாகிய மேஷத்திலும் தங்கி யிருப்பதால், தந்தைக்குச் சகோதரர் தோன்றி மரிப்பர். தவிரவும் முற்பிறப்புத் தோஷமும் சேர்ந்தது.

14. வினையதைச் சொல்லு மென்ன விளம்புவார் முனிவர்
[தாமுங்
கனமுள வேங்க டத்தில் காவலன் பிரம்ம சேயாய்த்
தனமது வதிகம் பெற்றுச் சகோதரர் மனைவி மைந்தர்
சினமிலா வாழு நாளில் செப்புவோ மூழி தானே.

14. முற்பிறப்புத் தீவினையைச் சொல்லுங்கள், என்று பார்வதி யம்மன் கேட்கவும், முனிவர் சொல்லுவார். மேன்மை பெற்ற திருவேங்கடத்தில், இவன் அந்தணர் குலப் புதல்வனாய்த் தோன்றி, மிகுந்த செல்வத்தைப் பெற்று, சகோதரர்கள், மனைவி மக்களுடன் துன்பமில்லாது வாழுகின்ற காலத்தில் ஏற்பட்ட தோஷத்தைக் கூறுவோம்.

15. தன்மனை.....கொண்டு
தன்துணை தனைவி லக்கச் சகோதரன் புகலு கின்றான்
பின்வருஞ் சென்மந் தன்னில் பேதைய ரிருவ ராயும்
ஒன்துணை காணு தாகி உலகினில் வசையு மாகி;

15. தன் மனைவி.....ஏற்று, தனது சகோதரனே கூக்கவே, அவன் சொல்லுகின்றான். வரப்போகும் பிறவியில், இரு மனைவியரை யடைந்து, சகோதர னில்லாமல், உலகில் பழிகள் பெற்று ;

16. மறுமதம் நானே தோன்றி வல்பமாம் பொருளுக் காகத்
.....செலவு செய்வேன்
குறையுள மனத்த னுகத் கொள்ளுவே னென்று கூறித்
திருமாலி னெதிரில் நின்று தியவித் தான்து ணைவன்.

16. மறு பிறவியில் நானே திரும்பவும் பிறந்து, அற்பமான பொருளை யடைவதற்காக..... உன் செல்வத்தையும் அழிப்பேன். குறை நிரம்பிய மனமுள்ளவனுக ஆக்கு வேன் என்று கூறி, திருமாலின் சன்னிதி முன்பு நின்று, விளக்கை யணைத்துச் சத்தியம் செய்தான்.

17. அதுவொரு தோடம் மாச்சு அதுவன்றி வேறு சொல்வோம்
நதிகுலத் தோனை ருத்தன் நாயகன் மணமு டிக்கக்
.....கலந்திடு சிலவே பொன்னைச்
சதியிலாப் பின்பால் தாரேன் சாற்றினை னேழை யோனும்.

17. அந்த தோஷ மொன்று இவனுக்கு ஏற்பட்டது. தவிரவும் இன்னொன்று சொல்லுவோம். வேளாள குலத்தில் பிறந்த ஏழை யொருவன், மணஞ் செய்து கொள்ளுவதற்காக,..... பிறகு கொடுப்பதாகச் சொல்லி, சிறிதளவு பொருளை இவனிடம் வேண்டினான்;

18. இல்லத்தை முறியில் தீட்டி ஈந்தனன் சிலவே பொன்னை
வல்லியை மணமு டித்து வந்துபின் சிலநாள் சென்று
நல்குவாய்ப் பொருளை ..... சென்று தருவே னென்னப்
புல்லிய புத்தி யாலே புக்கின னரசர் தன்பால்.

18. ஜாதகன் தந்தையும், அந்த ஏழை வீட்டைத் தான் கொடுக்கும் பொருளுக்கு ஈடு காட்டிப் பத்திரம் எழுதச் செய்து பொருள் தந்தான். ஏழையும், மணம் செய்துக்கொண்டு திரும்பினன். சில காலத்துக்குப் பின்பு இவன், அந்த ஏழையோனை வேளாளனிடஞ் சென்று நான் கொடுத்த பொருளைத் திரும்பத் தருவாய் என்று கேட்டான். சிலநாள் சென்று தருவ தாக வேளாளன் கூறவும், இவன் (ஜாதகன் தந்தை) தனது அற்ப புத்தி யால் நியாயாதிபதியிடஞ் சென்று முறையிட்டான்.

19. முறிபோலே வில்லங் கொண்டான் முதல்வனை விலக்க
[லுற்றன்
சிறியோனும் மனவெ றுப்பால் செப்புவா னரையக்
[கேளாய்
வருஞ்சென்மந் துணையாண் காணுய்..... .....கி
உறையில்லந் தனியே யாகி உன்பொருள் விரயம் செய்ய;

19. நியாயாதிபதி யளித்த தீர்ப்பின் படியும், பத்திரத்தில் எழுதி யுள்ளவாறும், வேளாளனது வீட்டைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, அவனைத் தனியே விலக்கினன். ஏழை வேளாளனும் மனவெறுப்பினல், பின்வருமாறு சொல்லுவான். வரும்பிறவியில் சகோதர னில்லாதவனுய் .....வசிக்கும் வீடு சொந்த மில்லாமல் தனியனுவாய். உன் செல்வத்தைச் செலவழிக்க;

20. வடுகர்தங் குலமு தித்து வரும்பொரு ளழிப்பே னென்று
கடவுளைத் தோத்த ரித்துக் கங்கையோன் சென்ரு
[னென்ரேரும்
திடமாக வந்தத் தோடஞ் சேர்ந்தது .....
.....தனந்தி யத்தில் அணுகினன் காசி பிரயாகைப்

20. வடுகர் மாபில் தோன்றி, சிறந்த பொருளனைத்தையும் அழிப் பேன் என்று கடவுளை மனத்தில் தியானம் செய்துக் கொண்டே கூறிச் சென்ரூன், வேளாளன் என்று கூறினேரும். ..... உறுதியாக அந்தத் தீவினை அப்பிறப்பில் ஜாதகன் தந்தையைப் பற்றியது. அவனுந் தனது கடை நாளில், காசி, பிரயாகை முதலிய;

21. சிலசிலத் தலங்கள் சென்று திருநக ரடைந்து வின்னேன்
நலமிலாக் காலன் பக்கல் நல்கினு னிந்தப் பாலன்
தலைநான்கோன் வரையப் பட்டுச் செனித்தனன் புத்தர்
[வம்சம்
உலவிய முன்னூழ்த் தோடம் உத்தமி கேட்க லுற்றாள்.

21. சில புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று, உள்ளூர் மீண்டான். பின்பு, கொடிய இயமனைச் சேர்ந்தான் (மரணமடைந்தான்) இவன் மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறப்பில் பௌத்த மரபில் பிறந்தான்; முற்பிறப்பில் சேர்ந்த தீவினை இப்பிறவியில் தொடர்ந்தது. பார்வதி கேட்கலானாள்.

22. எந்தக்கா லத்தி லேதான் இருவரு மொன்றுய்ச் சேர்ந்து
தந்தனஞ் செலவு செய்வார் சாற்றுவீர் விவர மாக
இந்தவ னுதித்த பின்பு எய்திடும் பகைய னேகம்
விந்தையாய்ப் பிணிக ளாலே விரயங்கள் நேரு மென்றோம்

22. எந்தக் காலத்தில், ஜாதகன் தந்தையும் அவன் சகோதரனும் ஒன்று சேர்ந்து தங்கள் செல்வத்தை விரயம் செய்வார்கள்? விவரமாகச் சொல்லுவீர். ஜாதகன் பிறந்த பிறகு, அவர்கள் குடும்பத்தில் விரோதங்கள் பல ஏற்படும். வியப்பை யளிக்கும் வியாதிகள் பலவற்றால், செல்வத்துக்கு விரய மேற்படும் என்று கூறினேம்.

23. மறைக்குல முன்சென் மத்தில் வந்தவ னிச்சென் மத்தில்
அருகர்தங் குலத்தில் தோன்றும் அச்சேதி சொல்லு மென்ன
மறைகள்மேல் விருப்ப மின்றி மன்னவன் வாழ்வ தாலே
விரைவினி லிக்கு லத்தில் மேவினு னென்று சொன்னேம்.

23. முற்பிறப்பில் இவன் (ஜாதகன் தந்தை) அந்தணர் மரபில் பிறந்து, இப்பிறவியில் சமண குலத்தில் தோன்றுவதற் குரிய காரணத்தைச் சொல்லுங்கள் என்று பார்வதி தேவி கேட்டாள். வேதங்களே யோதுவ தற்கு ஆசை யில்லாமல் இவன் முற்பிறப்பில் வாழ்ந்து வந்ததால், இப்பிறப் பில் இக்குலத்தவனாகத் தோன்றினான் என்று கூறினேம்.

24. குலத்து நன்னடக்கை கொஞ்சம்.....
குலத்துவுண் டிகள்போல்.....
.....
.....

24. நல்லொழுக்கம் சிறிது..... .....தங்கள் மரபில் உண்ணுவது போல்.....

25. *.....
.....
.....
.....னிட மணுகிவாழ்வன் தென்கீழ் தூரம்

25. .....
.....தென்கிழக்குத் திசையில் தொலைவிலுள்ள மனவி வீட்டை யடைந்து வசிப்பான்.

26. மாதுரு சேதி யெல்லா மறைகின்றேரும் ரெண்டி லேதான்
மேதினி லன்னை பூர்வஞ் விளம்புவோர் தாயே கேளும்
ஓதுவான் குலத்தி லேதான் உயர்தன முடையோ னென
.....செங் குந்த னுக்குச் செனித்தவ ளிந்த மாது.

26. ஜாதகன் தாயின் விசேஷமான செய்திக ளனைத்தையும் இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றேரும். தாயாருடைய முற்பிறவியைச் சொல்லுவோம். தாயே! கேள். சொல்லப்படுகின்ற நன்மை யுடைய செங்குந்த மரபில், மிக்க செல்வந்தனுகிய ஒருவனுக்குப் புதல்வியாக பிறந்தாள் இவள்.

27. பூடண முடைய .....
நாடெலா நல்லோ ளாகி நதிபல தீர்த்தந் தோய்ந்து
வாடினுர்க் கன்ன மீந்து வானியின் கோட்டத் துக்கு
நாடோருந் தீப மொன்று நல்கியே மரண மாகி;

27. பொன்னுபரணங்களைப் பெற்று, ...
.....தேசமெங்கும் நற்பெயருடன், பல புண்ணிய நதிகளில் நீராடி தன்பமுற்ற ஏழைகட்கு உணவளித்து, விநாயகர் கோயிலுக்குத் தினந்தோறும் விளக்கொன்று ஏற்றி வைத்து, பின்பு மரண மடைந்து ;

28. வேதனுல் வரையப் பட்டு விளங்கிய ளதற்குத் தெற்கில்
பூதலம் வறுமை காணுள் பராசருங் கேட்க லுற்றூர்
போதக வானை கோயில் மணிவிளக் கிட்ட புண்யம்
ஓதுவீர் பலனை யென்றூர் உயர்தீப பலத்தி னுலே;

28. மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, முன்பு பிறந்த ஊருக்குத் தெற்கில் பிறந்தாள். உலகில் தரித்திரம் அடையாதவள். பராசர முனிவர் கேட்கலானூர். விநாயகர் கோயிலில் விளக்கேற்றி வைத்த நற்செயலுக்குப் பலனைச் சொல்லுங்கள் என்றூர். விளக்கேற்றி வைத்த உயர்வான புண்ணியத்தால் ;

---

* இப்பாடலின் முழுவுருவமும் கிடைக்க வில்லை

29. தனம்பணி யதிக முண்டு சந்ததி யதிக முண்டு
கனமான வாண்பா லொன்றுக் கழறினேங் தீர்க்க மாகச்
சினமிலாப் பின்சென் மத்தைச் செப்புவோங் கலிங்க
[நாட்டில்
வினையிலாப் பிரம்ம சேயாய் விளங்குவா ளென்று
[சொல்வோம்.

29. இப்பிறப்பில், செல்வம் ஆபரணங்கள் மிகுதியாம். சந்ததி விருத்தி யேற்படும். பெருமை யுடைய புதல்வ னொருவன் தீர்க்கமாக விளங்குவான் என்று சொன்னேம். இவளது மறு பிறவியைச் சொல்லுவோம். கலிங்க தேசத்தில், குற்ற மற்ற அந்தணர் மரபில் தோன்றுவாள் என்று கூறுவோம்.

30. உதித்தவன் மணத்தின் காலம் உரைக்கின்றே மீரா
[ராண்டில்
மதிமுக மாதர் வர்க்க மாதுலன் மகளைக் கொள்வன்
விதிபதி யிருநி றத்தாள் வரன்மனம் போலே வாழ்வள்
துதிசெய்தோர் தம்மைக் காப்பள் தோகைபோல் சாய
[லுள்ளாள்.

30. ஜாதகனின் திருமண காலத்தைச் சொல்லுகின்றோம். பனிரண்டாம் வயதில், சந்திரன் போன்று அழகிய முகத்தை யுடைய, தாயாரின் வர்க்கத்தைச் சேர்ந்தவளும், இவன் மாமன் மகளுமான பெண்ணை, மனைவியாகக் கொள்ளுவான், அவள் கரிய நிற முடையவள். கணவன் மனப் போக்குப் படியே வாழ்க்கை நடத்துவாள். தன்னைப் புகழ்ந்தவர்களை ஆதரிப்பாள். மயில் போன்று அழகிய சாயலுள்ளவள்.

31. தேவதாப் பக்தி கொள்வள் தீங்கென்றோர்க் குதவி யாவள்
ஆவுகள் விருத்தி யுள்ளாள் அன்னங்கள் போட வல்லாள்
நாவுமே தவறு ளாகும் நாயகி யோக சாலி
பாவத்திற் கிடங்கொ டாதாள் பகருவோம் புத்திர பாவம்

31. தெய்வத்திடம் பக்தி கொள்ளுவாள். தன்பமென்று வந்தவர் கட்கு உபகாரகள் செய்வாள். பசுக்கள் விருத்தி யுடையவள். வீடு தேடி வந்தவர்க்கு உணவு அளித்து உபசரிப்பதில் சிறந்தவள். சொல் தவறுதவள். அதிர்ஷ்ட முடையவள். தீயச் செயலுக்கு இடங் கொடாத மனத்தினள். ஆனி, ஜாதகனுக்குப் புத்திர பாவம் கூறுவோம்.

32. புத்திர விருத்தி தம்மைப் புகலவே பலத்தைக் காணேும்
சித்தமா யுதித்தா லுந்தான் தீதாகு மென்று சொன்னேும்
அத்திரி கேட்க லுற்றார் அவனுக்குப் புத்ர தோடம்
பெற்றகா ரணங்கள் தம்மைப் பேசுவீர் முனியே நீர்தாம்.

32. புத்திர விருத்தி ஏற்படுமென்று சொல்லுவதற்குக் கிரக பல மில்லை. பிறந்தாலும் நிச்சயம் மரிக்கும் என்று கூறினேும். அத்திரி முனிவர் கேட்கின்றார். ஜாதகனுக்குப் புத்திர தோஷம் ஏற்படக் காரணங்கள் யாவை? முனிவரே! நீங்கள் சொல்லுங்கள்.

33. அஞ்சினில் காரி நிற்க அஞ்சவன் நீச்ச மாகத்
துஞ்சிடு மதலை யென்றேஞ் சுதனுமே முன்சென் மத்தில்
மிஞ்சிய வினைகள் செய்தான் மேவுமிப் பிறவி லேதான்
நஞ்சுக லென்ன செய்தா னறிவிப்பீர் விபர மாக.

33. ஐந்தா மிடமாகிய (புத்திரஸ்தானம்) கன்னியில் சனி தங்கி யிருப் பதாலும், ஐந்தாமிடத்துக்குரிய புதன் மீனத்தில் நீச்சமாகவும் இருப்பதால் குழந்தைகள் பிறந்து சேதமாம் என்று சொன்னேும். தவிரவும், ஜாதகனும் முற்பிறப்பில் மிக்க தீவினைகள் செய்தான். அவை இப்பிறவியில் இவனைச் சேரும். என்ன தீவினைகள் செய்தான்? விவரமாகத் தெரிவிப்பீராக.

34. இன்னவன் முன்சென் மத்தை இயம்புவோந் தாயே கேளும்
நன்னிய கொச்சி நாட்டில் நற்கரு ணீகர் வம்சம்
தன்னிலே யுதித்து மேலுஞ் சகோதரர் நால்வ ராகித்
தன்மனை மதலை யுண்டாய்ச் சகோதரர் பிரியுங் காலம்

34. ஜாதகன் முற்பிறப்பைச் சொல்லுவோம். தாயே! கேளுங்கள். நன்மை புடைய கொச்சியைச் சார்ந்த (மலையாளம்) பிரதேசத்தில் கருணீகர் மரபில் தோன்றி, நான்கு சகோதரர்களை யடைந்து, தனக்கு மனைவி மக்கள் ஏற்பட்டு, வாழ்ந்தான். பின்பு, சகோதரர் பாகம் பிரித்துக்கொண்டு செல்லு கின்ற சமயத்தில்;

35. உறுந்துணைப் பாக மெல்லாம் எடுத்தவன் மறைத்து விட்டு
அறிந்திலே னிதுவே யன்றி அகோரமாய்ப் பழியைச்
[சொன்னன்
தெரிந்திட்டோர் துணைவர் தாமுஞ் சிவன்செயல் தன்னை
[நொந்தார்
உறைந்தது வந்தத் தோடம் உரைக்கிறேன் மின்னு மொன்று

35. தன் சகோதரர்களுக் குரிய பூஸ்திபின் பங்குக ளனைத்தையும் இவன் மறைத்துவிட்டான். இது தவிர, சகோதரர் மீது கொடிய பழிகளை

யும் கூறினன். இவனது மோசத்தை யுணர்ந்த சகோதரர்கள், இவன் செய லைக் கண்டு மனங் வருந்தினர். அந்தத் தோஷமொன்று இவனைச் சார்ந்தது. இன்னுமொரு தோஷத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

36. அந்நகர்க் கணக்கு வேலை அவனுமே மோசஞ் செய்தான்
பொன்னிலா வேழை யோர்க்குப் பூமியைத் தாரே னென்று
சொன்னது பொருளும் பெற்றுச் சுதந்திரஞ் செய்யா
[விட்டான்
பின்னையும் வருத்த முற்றுப் புகலுவா ரேழை யோர்கள்.

36. அந்த நகரத்து கணக்கு வேலையை இவன் பார்த்து வந்த போது, கணக்கில் சில மோசங்கள் செய்தான். மிக்க செல்வ மில்லாத ஏழை மக்க ளிடஞ் சென்று, எனது வீட்டு நிலத்தைக் கொடுக்கின்றேன் என்று சொல்லி, அவர்களிடம் சிறிது பொருளைப் பெற்றுக் கொண்டு, பின்பு தனது நிலத்தை அவர்களுக்குக் கொடுக்காம லிருந்து விட்டான். ஏழை மக்கள் வருத்த மடைந்து கூறுவார்கள்.

37. ஆசைவார்த் தைகள் சொல்லி அரும்பொருள் பறித்த பாவி
பாசமாய்.....தாகி
வாசமா மில்ல நீங்கி வருந்துணை யாணில் லாமல்
பேசிஞ ரேழை தாமும் புக்கிற்று வந்தத் தோடம்.

37. எங்களுக்கு நிலம் தருவதாக ஆசை வார்த்தைகள் கூறி, பொருளை யபகரித்துக் கொண்ட பாவியே! அன்பாக.....
ஆகி, வசிக்கும் வீட்டிலிருந்து நீங்கி, உடன் பிறந்த சகோதர ரில்லாமல் வாழ்வாய் என்று கூறினர், ஏழையோர். அந்தத் தோஷம் அப்பிறவியில் இவனைச் சேர்ந்தது.

38. இப்படிப் பலவாய்த் தோடம் எய்திற்று வந்தி யத்தில்
தப்பித வாயு நோயால் சண்டனுந்தன் பதிக்குச் சென்று
ஓப்புடன் பிரமன் தன்னுல் உயர்வுடன் வரையப் பட்டு
மைப்புட னருகர் வம்சம் மேவினு னிவனே யம்மா.

38. இங்ஙனம் பலவிதத் தோஷங்கள் அப்பிறப்பில் இவனை யடைந் தன. தனது கடைசிக் காலத்தில் வாயு ரோகத்தால் எமனுலக மடைந்து, மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, அருகர் குலத்தவனுகப் பிறந்தான் இவன்.

39. பஞ்சைகள் சாபந் தானும் பரவிற்று விச்சென் மத்தில்
தஞ்சமாய்த் துணையாண் தோடஞ் சந்ததி யவ்வா றாகும்
மிஞ்சிய தோடந் தீர விளம்புவோஞ் சாந்தி தானும்
வஞ்சியும்.....தென்கீழ்;

39. ஏழை மக்களின் சாபம் இப்பிறப்பில் ஜாதகனை யடைந்தது. அதனல் இவனுக்குச் சகோதர தோஷமும், புத்திர தோஷமும் ஏற்பட்டன இவனுக்கு ஏற்பட்ட மிகுந்த தோஷங்கள் நீங்குவதற்கு ஒரு சாந்தி கூறுவோம். மனைவியும்.....தென்கிழக்குத் திசையில் உள்ள;

40. நதிக்கரை யருகர் நிற்கும் நற்குல தெய்வத் துக்குத்
ததிநெய்பா லபிடே கித்துக் சமாராத னையுஞ் செய்து
அதிதிகட் கன்ன மீந்து அணுகிய வினையும் நீங்கிச்
சுதர்களுந் தோன்று மென்றேரும் தோகையே மேலுங்
[கேளே.

40. ஆற்றங்கரை யருகில், அரசமரத்தடியில் வீற்றிருக்கும் தன் குல தெய்வத்துக்கு, தயிர் நெய் பால் முதலியவற்றல் அபிஷேகஞ் செய்து, அதிதிகளாக வந்தவர்க்கும், மற்றவர்க்கும் போஜன மளித்ததால், முற்பிறப்புத் தீவினைகள் நீங்கி, மக்கள் தோன்றுவர் என்று சொன்னேம். மயில் போன்ற சாயலே யுடைய உமாதேவியே! மேலுங் கேட்பாயாக.

41. சொற்படி செய்வாஞகில் தோன்றிடுஞ் சுதரா ணைன்று
மைக்கண்ணி மார்கள் மூன்று வறைந்தனந் தீர்க்க மாகச்
சொற்படி செய்யா ஞகில் இலகாது சுதர்கள் தாமே
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுவே.

41. நாம் கூறியவாறு சாந்தியைச் செய்வாஞகில், புதல்வ னொருவனும், புதல்வியர் மூவரும் தோன்றித் தீர்க்கமாவர் என்று சொன்னேம். சொன்னபடி செய்யாது தவறுவாஞகில், புதல்வர் தோன்றி விளங்கார். கங்கை நீரைத் தரித்த சடைமுடியை யுடைய சிவபிரான் பத்தினியே! நாங்கள் கூறிய சொற்கள் த்வறு.

42. இருபது வெட்டு வாண்டில் இயல்கும்ப மாதந் தன்னில்
திருமகன் தந்தை தானுஞ் செல்லுவா னென்று சொன்னேம்
மருமமாய் முப்பான் மூன்றில் மேடமா தத்தி லேதான்
அருமையாய் மாதுர் கண்டம் அருளுவோங் கேளுந் தாயே.

42. ஜாதகனது இருபத்தெட்டாம் வயதில், மாசி மாதம் தந்தை மரண மடைவான் என்று கூறினேம். இவனது முப்பத்து மூன்றும் வயதில், சித் திரை மாதம், தாய் மரணத்தைக் கூறுவோம். தாயே! கேளுங்கள்.

43. பாலக னறுபான் ரெண்டில் பெருகிய விசாக மாதம்
சாலவே மூன்பக் கத்தில் தசமியா நாளில் கண்டம்
ஏலவே.....காசி பக்கல்
ஏலவே விக்கு லத்தில் எய்துவான் சுகமுள் ளோனுய்.

43. அறுபத்திரண்டாம் வயதில், வைகாசி மாதம் சுக்கில பட்சத் தசமி திதியில் ஜாதகனுக்கு மரணம் நேரும். ஏற்கவே.....
.....காசி க்ஷேத்திரத்துக்கு அருகில் உள்ள தோர் ஊரில், இக்குலத்தில் பிறந்து நலமுள்ளவனுக விருப்பான்.

44. இன்னவன் பொதுயோ கத்தை இயம்புவோஞ் சென னைந்
[தொட்டு
அன்னவன் மரண மட்டும் அம்புலி போலே யோகம்
மன்னுகே சரியோ கங்க ளறைந்தன லட்சுமி நோக்கு
.....புகலுனுற் பாயி ரம்பொன்.

44. இந்த ஜாதகனுக்குக் குரிய பொதுவான யோகங்களைச் சொல்லு வோம். பிறப்பு முதல் மரணம் வரை வளர்பிறைச் சந்திரன் போல இந்த ஜாதகனுக்கு அதிர்ஷ்டங்கள் வாய்க்கும். கேசரி யோகம் உண்டாகும் என்று சொன்னேம். இலட்சுமி கடாட்சம் உண்டு.....
.....நாற்பதினுயிரம் வெண் பொற்காசுகள் சேர்ப்பான் என்று சொல்லுவோம்.

45. திருப்பணி வேலை செய்வன் திகம்பரன் பக்தி கொள்வன்
வருவோர்க்கு வன்ன மீவன் மார்க்கத்தில் குளங்கள் கூவல்
தருவுமே செய்வா னுகுஞ் செகராசர் வணங்க வாழ்வன்
குறுமுனி கேட்க லுற்றூர் கூறினீர் யோக மொன்று.

45. ஆலயத் திருப்பணிகள் செய்வான். சிவபெருமான் மீது பக்தி கொள்ளுவான். வீடு தேடி வருபவர்க்கு உணவளித்து உபசாரங்கள் செய் வான். மக்கள் செல்லும் சாலை வழியில் குளங்கள் வெட்டுவிப்பான். கிணறு கள் தோண்டுவிப்பான், மரங்கள் வளர்ப்பான். நாட்டிலுள்ள அரசர்களும் தன்னை வணங்கும்படி மேன்மையுடன் வாழ்ந்திருப்பான். அகத்திய முனி வர் கேட்கின்றூர். ஜாதகனுக்கு யோகங்கள் ஏற்படுமென்று சொன்னீர்கள்.

46. புகருச்சந் தர்ம கர்மன் பொருந்தியே பார்த்த தாலே
வகையான யோகஞ் சொன்னே மசுவமுஞ் சகடு மேற்பன்
பகைவரைச் செயிப்பா னுகும் பலவூரில் பூமி சேர்ப்பன்
தகைமையாய்ச் செட்டுச் செய்வன் சாற்றின மொழிகுன்
[ருவே.

46. சுக்கிரன் மீனத்தில் உச்சமாகி, தர்மகர்மாதிபதியாகிய சனியினால் பார்க்கப்படுவதால், ஜாதகனுக்கு வாய்க்கப் போகும் யோகங்களைக் கூறினேம். குதிரைகள், வண்டிகள் இவற்றைப் பெறுவான். விரோதிகளை வெற்றி கொள்ளுவான். பல கிராமங்களில் வீடு நிலங்கள் சேர்ப்பான். தகுதியாக வியாபாரங்கள் செய்வான். நாங்கள் கூறிய சொற்கள் தவறு.

47. புத்திரன் செனன காலம் பொன்தசை தனிலி ருப்புச்
சுத்தமா யாண்டு வொன்பான் சேர்ந்திடு திங்க ளெட்டும்
வித்தகன் தனக்கு ரோக மேவிடு வழக்கு நேரும்
குற்றமாய்ச் செலவ னேகங் கூறுவோர் துணைவர் விருத்தி.

47. ஜாதகன் ஜனன காலத்தில் குருமகா தசையில் இருப்பு; ஒன்பது வருஷங்களும், எட்டு மாதங்களுமாம். அக்காலத்தில் ஜாதகனுக்கு வியாதிகள் ஏற்படும். சச்சரவு உண்டாகும். தவறான வழியில் செலவுகள் பல வுண்டாம். சகோதர விருத்தி யுண்டு என்று சொல்லுவோம்.

48. சேதமாய்ப் பந்து சூதந் திரிச்சல்க ளநேக முண்டு
.....ஆகும் பெண்துணை சுகமு மெய்தும்
தீதுகள் வந்தே நீங்குஞ் செப்புவோம் விபரம் ரெண்டில்
போதக வாணை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

48. உறவினர் வழியில் சேதங்களும் சுபங்களும் நிகழும். ஜாதகனுக்கு அலைச்சல்கள் உண்டாம்..... ஏற்படும். சகோதரி சௌக்கிய மடைவாள். கெடுதல் வந்து தீரும். மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். யானை முகத்தோனைப் புதல்வனாக வடைந்த புண்ணியவதியே! கேட்பாயாக.

ஜாதகம் 115

1. சந்திரன் பரிதி புந்தி செம்பாம்பு நந்தி யாக
அந்தணன் ராகு தேளில் ஆரலு மேட மாகச்
சுந்தரப் புகரும் வீணை தனுசினில் காரி புக்க
நந்தியுஞ் சென்ன மாக நவிலுவோம் பலனைத் தானே.

1. சந்திரன் சூரியன் புதன் கேது விருஷபத்திலும், குரு ராகு விருச்சிகத்திலும், செவ்வாய் மேஷத்திலும், சுக்கிரன் மிதுனத்திலும், சனி தனுசிலும் நின்று, விருஷபம் ஜன்ம லக்கினமாகவு முள்ள ஜாதகப் பலனை நாங்கள் சொல்லுவோம்.

	செவ்வாய்	லக்கினம் சந்திரன் சூரியன் புதன் கேது	சுக்கிரன்
	இராசி சக்கரம்		
சனி	குரு இராகு		

2. சங்கரி கேட்கும் போது செயமுனி கூறு கின்றார்
இங்கிவை யாண்பால் சென்மம் இல்லமும்.....
.....கோட்டங் கீழ்ப்பால்
புங்கமாங் கணேசன் தெற்கில் பிரிதலாங் கெடியுங் காணும்.

2. பார்வதிதேவி இவ்வாறு கேட்கும்போது, செய முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண் பிறப்பு. பிறக்கும் வீடு..... கோயில் கிழக்கில் உள்ளது. தாய்மையுடைய விநாயகரது கோயில் தென் திசையி லிருக்கின்றது. இடிந்துள்ள கோட்டை யொன்றும் அங்குக் காணப்படும்.

வேறு

3. காணும் வடகீ ழீசனும்
கங்கை யெடுத்தோ னுத்திரமாம்
தோணும் பள்ளி வாசலுமே
சினதே கோட்ட மதன்தெற்கே
பூணு மடையா ளத்தினிலே
பேரூர் தன்னில் தானுதிப்பான்
வேணு கோபா லன்தங்கை
[மேலுஞ் சொல்வோங் கேட்டிடுவாய்.]

3. வட கிழக்கில் சிவபெருமான் கோயில் காணப்பெறும். கங்கை யைச் சடைமுடியில் தரித்துள்ள சிவபெருமானின் மற்றொரு கோயில் வடக் கிலுள்ளது. அங்கு மகமதியர் பள்ளிவாச லுண்டு. அதற்குத் தெற்கில் ஜின தேவர் ஆலயம் இருக்கின்றது. பொருந்திய இவ்வடையாளங்களுடன் விளங்கும் பெரியதோர் ஊரில், ஜாதகன் தோன்றுவான். கண்ணபிரானின், சோதரியே! மேலும் சொல்லுவோம் கேளுங்கள்.

4. இன்றே தந்தை தாய்யோகம்
எழில்சேர் துணைவர் களத்ரபுத்ரர்
அன்றே யோகம் பூர்வபவம்
அறிவிப் போமே யிந்நூலில்
சென்ற தாதை தனக்குமனை
திரிதி யத்தில் கடையாட்கு
நன்று யுதித்தா னிவன்தந்தை
நல்காத் துணையாண் பெண்ரெண்டே.

4. இப்பொழுது, ஜாதகனின் தாய் தந்தையர் யோகங்கள், மேன்மை பொருந்திய உடன்பிறந்தார் மனைவி மக்கள் முதலானவர் யோகங்கள், முற்பிறப்பு, மறுபிறப்பு ஆகிய வனைத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தி லிருந்து நாங்கள் தெரிவிப்போம். காலஞ்சென்ற ஜாதகனின் பாட்டனு ருக்கு மனைவியர் மூவர். அவர்களில், கடைசி மனைவிக்குப் புதல்வனாக ஜாதகன் தந்தை தோன்றினான். இவனுடன் பிறந்தவர்களில் ஒரு சகோதர னும், சகோதரியும் இலையார்.

5. இரண்டே தீர்க்கம்.....

.....

.....கபடில்லான்
கருதான் கட்டு வார்த்தைகளே
அண்டர் பணியு மால்பத்தி
அவனி மீதில் செட்டுத்தொழில்
முண்டக ரேகை கரமதனில்
மூலச் சூடு முடையவனே.

5. இருவர் தீர்க்கமுடன் விளங்குவர்..... கபட மில்லாதவன். இல்லாதவற்றைப் புனைந்து சொல்லுவதற்கு நினையான். தேவர்களால் வணங்கப்படுகின்ற திருமாலின் மீது பக்தி கொள்ளுவான். உலகில் வியாபாரஞ் செய்வான். இவன் கையில் பத்ம ரேகையைப் பெற்றவன். மூலச் சூடுள்ளவன்.

6. இவனே யுணைச்ச லிருநிறத்தான்
ரகை யாள னறமிச்சை
தவமே புரிவோர்க் கனமீவன்
தந்தங் குற்றஞ் சமதேகன்

.....

.....போலிருப்பான்
நவனி பின்னுல் சேர்த்திடுவன்
நற்போ சனத்தான் பலர்நேயன்.

6. ஜாதகனின் தந்தை மெல்லிய சரீர முடையவன். கரிய நிறம் படைத்தவன். கொடையாளி. தருமத்தில் விருப்ப முள்ளவன். தவங்களே இயற்றும் சான்றோர்க்கு அன்புடன் உணவளிப்பான். பற்களில் ஊன முள்ளவன். சமமான உடலமைப்பைப் பெற்றவன்..... போல விருப்பான். பிற்காலத்தில் விலைநிலங்களைச் சேர்ப்பான். சுகமான போஜனத்தை உண்பவன். பலருக்கு அன்பன்.

7. நேயப் பொருந்த உரைத்திடுவன்
நிமலிக் கன்பன் சிலனுமாம்
மாய னுதித்த நாள்தோன்றும்
[1]மாய னுருவே ராசியதாம்
தோயுந் ததிமேல் பிரியமுளன்
தொல்லே சுகமுந் தான்விருத்தி

.....

.....உரைப்போம்.

1. மீனராசி: சிம்மவிராசி யெனினுமாம்

7. அன்புடனும், பொருந்தும் விதத்திலும் பேசுவான். மனிவிக்குப் பிரியமானவன். ஒழுக்க முள்ளவன். திருமால் அவதரித்த நாளாகிய திரு வோணத்தில் இவன் பிறப்பான். விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாகிய மீனமே இவன் தோன்றிய லக்கினமாம். தோய்ந்த கெட்டித் தயிரில் விருப்ப முள்ளவன். துன்பமும், இன்பமும் விருத்தியுள்ளவன்.....
.....சொல்லுவோம்.

8. உரைத்த குணத்தா னுக்கிவனும்
உதிப்பா னிவனின் செயல்கேளாய்ப்
பெருத்த சொல்லே கல்விமிகும்
பெரிதாய்ச் செட்டு மிகச்செய்வன்
மறுத்துச் சொல்லான் பெரியோர்க்கு
மதன்போ லழகன் வறுமையிலான்
வேற்றோர்க் கன்னம்.....
.....

8. சொல்லப்பட்ட குணங்களை யுடையவனுக்கு இந்த ஜாதகன் தோன்றுவான். இவனது செய்திகளைக் கேள். மேன்மை பொருந்திய சொற்களைப் பேசுவான். மிகுந்த கல்வியறி வுள்ளவன். பெரிய வியாபாரங்கள் செய்வான். பெரியோர் கூறுகின்ற சொற்களுக்கு எதிர்மொழிகள் சொல்லாதவன். மன்மதன்போன்ற வடிவழ குடையவன். தரித்திரமில்லாதவன். அயலாருக்கு அன்புடன் உணவு அளிப்பான்.

9. பன்னுஞ் சொல்லே வேறாகிப்
புகல்வான் பந்து நேயமுறும்
மன்னர் பேட்டி சொல்தவறா
னரிபோல் கோபந் தானுண்டு
பின்னமி லாதான் கரமதினில்
பிரமன் ரேகை யரிரேகை
பொன்னு மணிகள் சேர்த்திடுவன்
பிதாமே லாக வாழ்வானும்

9. சொல்லுகின்ற சொற்களையே சில சமயங்களில் வேறுபடுத்திக் கூறுவான். உறவினர்கட்கு அன்புளக விருப்பான். அரசர்களைப் பேட்டி காண்பான். சொன்ன சொற்கள் தவறான். சிங்கம் போன்று மிக்க தினமுடையவன். உடலில் குற்ற மில்லாதவன். கையில் பிரம்ம ரேகையும், விஷ்ணு ரேகையு முடையவன். பொன்னுபாணங்களைச் சேர்ப்பான். தன் தந்தையை விட மேன்மையாக வாழ்ந்திருப்பான்.

10. .....

பெற்ற சகடு காலிவிருத்தி
கடனே கொள்ளான் கைமுதலுங்
கனத்தோர் நேசஞ் சிகையதிகம்
மடைய ருறவு கொள்ளாதான்
மாமி யிரண்டு மருவிடுமே
படையில் செல்லான் பலபாவை
பட்ச முடையோன் பார்வதியே.

10. ..... அடைந்த வண்டி, கால்நடைகள் விருத்தி யாம். கடன் வாங்க மாட்டான். கைமுத லுள்ளவன். பெரியோர்கள் நட்பைப் பெற்றவன். தலைமயிர் மிகுதியாக வுடையவன். மூடர்களின் உறவைக் கொள்ளமாட்டான். இவனுக்கு மாமியார் இருவர். படையில் சேர்ந்து சண்டைக்குப் போகமாட்டான். பெண்கள் பலர்மீது மையல் உடையவன். பார்வதியே!

11. வ.....

.....ஒன்று
இதுவே தீர்க்க மிலையவனுய்
இயம்புந் துணைவன் சேதிசொல்வோம்
துதிசெய் தோருக் கன்பனுமாஞ்
சொல்சோ ராதான் [1]துலைசென்மம்
பொதுவோ ணத்தி லுதித்திடுவன்
பெம்மான் பக்தி கொண்டிடுவன்.

11. .....ஒருவன். இத்தச் சகோதரன் தீர்க்கமாக விளங்குவான். ஜாதகனுக்கு இலையவனைச் சொல்லிய சகோத ரனின் செய்தியைக் கூறுவோம். தன்னைப் புகழ்ந்தவர்களுக்கு அன்பன். சொன்ன சொல் தவறுதவன். துலா லக்கினம் திருவோண நட்சத்திரத்தில் பிறப்பான். கடவுள் பக்தி கொள்ளுவான்.

---

1. துலாலக்கினம்

12. அன்னம்.....

.....

சொன்ன மொழியு மிரண்டுண்டு
துறவோர் பத்தி கொள்ளாதான்
கன்னென மொழியே பலசெட்டுக்
கலகங் கூர்வன் ஈகைகொஞ்சம்
பொன்னு சைகளு முடையவனும்
பூமி விருத்தி செய்வனென்றோம்.

12. உணவு.....இருவிதமாகப் பேசுவான். துறவிகளிடம் பக்தியுட னில்லாதவன். கரும்பு போன்ற இனிய சொற்க ளுடையவள். பலவித வியாபாரங்கள் செய்வான். கோள் சொல்லுவான். கொடைக் குணஞ் சிறிதுண்டு. செல்வம் பொன்னுபர ணங்கள் முதலியவற்றில் விருப்ப முள்ளவன். நிலபுலன்களை விருத்திசெய் வான் என்று சொன்னோம்.

13. செய்வன் மணமு மொன்றேயாம்

.....

தி.....முறும்
செனித்தோ னுடனே தான்வாழ்வன்
பைய நடவான் வறுமைபடான்
பகையை நாசஞ் செய்திடுவன்
மெய்யில் பித்த சூடுடையவன்
விளங்கு முகத்தில் மாரிகுற்றம்.

13 இவனுக்கு மனைவி யொருத்தியே. ..... அடைவான். ஜாதகனுடன் சேர்ந்து வாழ்ந்திருப்பான். மெதுவாக நட வான். தரித்திர மடையான். தனது பகைவர்களை அழிப்பான். உடலில் பித்த சூடுள்ளவன். இவன் முகத்தில் அம்மையினால் ஏற்பட்ட தழும்புகள் உளவாம்.

14. குற்ற மதனு லிடைவிழிபோம்
கெடுமே விறந்த.....

.....

உரைப்போ மின்னும் பின்பாலில்
மற்ற துணைவி மார்சேதி
வருவிப் போமே யிரண்டினிலே
பற்று விவன்தன் மணக்காலம்
பகரக் கேண்மோ பார்வதியே.

14. அந்தக் குற்றத்தினால், இவனுக்குப் பார்வையும் மங்கிப்போம். கடந்த.....பிற்பாகத்தில் மேலுங் கூறுவோம். ஜாதகனின் மற்ற சகோதரிகளின் செய்தியை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். ஜாதகனின் திருமணக் காலத்தைச் சொல்லக் கேளுங்கள்; பார்வதியே!

வேறு

15. வதிபதியே யீரெட்டில் வடகீழ் தன்னில்
மாதுர்தன் வர்க்கத்தில் மனைவி யாவள்
.....ஆளன்மனம் போல வாழ்வள்
.....அறிவோர்க் கன்பு
சதியில்லா மனமுடையாள் தீர்க்க சிவி
சண்டருமே யதைமறுத்து வோது கின்றார்
இதுபாரி கெடுதியுண்டு கர்ப்பத் தாலே
ஏகிடுவள் மறுபாரி யெய்துந் தானே.

15. இவனது பதினாறும் வயதில், வட கிழக்குத் திசையிலிருந்து, தாய் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி இவனுக்கு மனைவியாக வாய்ப்பாள்.....கணவனின் மனமறிந்து வாழ்க்கை நடத்துவாள்.....சான்றோர்களிடம் அன்பு செலுத்துவாள்..... குற்றமற்ற மனமுள்ளவள். தீர்க்கமான வயதைப் பெற்றவள். புசண்ட முனிவர் அதனை மறுத்துப் பேசுகின்றார். இவன் மனைவி கருப்ப பாதையினால் இறப்பாள். பின்பு மறு மனைவி வாய்ப்பாள்.

வேறு

16. தானே யிரண்டு.....
.....
.....ராகு மன்னனுற
மருவீராறி லேழோனும்
ஊன மாக விருப்பதனால்
உரைத்தோ மந்தச் சங்கைதனை
வானோர் புகரும் புதன்மாறி
மதியும் ரவியுங் கூடியுற;

16. இரண்டாம் மனைவி.....ராகு, குரு ஆகியோர் களத்திர ஸ்தானமாகிய ஏழாமிடத்திலும், இலக்கினத்துக்குப் பனிரண்டாமிடமான (விரய ஸ்தானம்) மேஷத்தில் செவ்வாயும், குற்றமுண்டாகும்படி தங்கியிருப்பதால், இவனுக்கு இரு மனைவியர் என்று கூறினோம். சுக்கிரனும் புதனும் முறையே மாறி, சுக்கிரன் மிதுனத்திலும், புதன் விருஷபத்திலும் சூரியனும் சந்திரனும் சேர்ந்து இலக்கினத்திலும்;

17. உறவே தார மென்றேயாம்
உரைப்போ மிதற்கு நேராக
அறிவாய்ச் சாதக வேழ்பாவத்
.....
.....
சேதி யுரைத்தோ மதனிலறி
பரிவாய் வர்க்கில் [1]பரலொன்று
பகர்ந்தோந் தீர்க்கம் பாவையொன்றே.

17. இருப்பதால், இவனுக்கு மனைவி யொருத்தியே யாவள் என்று சொல்லுவோம். இதற்கு ஆதாரமாகச் சோதிட சாஸ்திரத்தில் ஏழாம் பாவத் (களத்திரம்)தின் பலனை யுணர்வாயாக. அஷ்டவர்க்கத்தில் ஈற் பலனையறியும் பரல் மூலம் உணர்ந்து சொன்னோம். ஆதலின் இவனுக்கு மனைவி யொருத்தியே தீர்க்கமாவாள்.

18. பாவை தனக்குச் சுதர்காணுள்
பற்றுந் தோடம் பகர்ந்தோம்யாம்
மேவு மதலை தோடமதை
விளம்பு வீர்கள் விபரமதாய்
தாவு மந்த.....
.....
.....விதத்தினுல்
அணுகும் புத்ர தோடமுமே.

18. இவள் புதல்வரை யடையாள். தோன்றினும் தோஷமாம் என்று கூறினோம். இவளுக்குப் புத்திர தோஷ மேற்படுங் காரணங்களை விவரமாகச் சொல்லுங்கள். .... காரணத்தால், புத்திர தோஷ மேற்படும்.

வேறு

19. இதற்குநே ரிடையாய்ச் சாதக ரீதி
யதிலைந்தாம் பாவத்தில் பாரே
அதுவினை யெவ்வார் புகலுவீர் முனியே
அவனுமுன் பவமதி லதிகஞ்
சதிசெய்தான் சொல்வீர் சாற்றுவோங் கேளாய்ச்
சட்டநா தீசர்வாழ் நகரில்
முதி.....
.....செய்து ;

1. 1304-ஆம் பக்கக் கீழ்க் குறிப்பைக் காண்க.

19. இப்பொழுது கூறியதற்கு ஆதாரம் சோதிட சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள ஐந்தாம் பாவத்தில் (புத்திர பாவம்) காண்பாயாக. வேறு தீவினை யாது ? முனிவரே ! சொல்லுவீர். ஜாதகன் முற்பிறவியில் மிக்க தீவினைகளைச் செய்தான். அவற்றைக் கூறுங்கள். சொல்லுவோம்; கேள். சட்டநாதப் பெருமான் எழுந்தருளி யிருக்கின்ற சீர்காழியில்;..... செய்து;

20. செய்துமே வருங்கா லத்திலே செய்த
தீவினை புகலுவோங் கேளாய்
ஐயமே யெடுக்குந் தன்குல மாரன்
அவன்பாரி வசிகர முடையாள்
தையல்மே லிச்சை தன்வச மாக்கித்
தனம்பணி யவளுக்கு யீந்து
வையமே லதிக நிந்தையே யேற்று
.....மேல் கொண்டு.

20. இயற்றி வருகின்ற காளில், செய்த தீவினையைச் சொல்லுவோம்; கேள். பிச்சை யெடுத்து வயிறு வளர்க்கின்ற தனது குலத்தைச் சேர்ந்த ஒருத்தன் மனைவி அழகாக விருந்தாள். அவள் மீது இவன் மையல் கொண்டு, அவளைத் தன் வசப்படுத்தி, பணம், ஆபரணங்கள் முதலியன அவளுக்குக் கொடுத்து, அதனால் உலகத்தில் மிக்க பழியை யடைந்து;.....மீது ஏற்பட்டு;

21. கொண்டவென் பாரி கெடுத்திடு பாவி
குலவிய செல்வமும் நீங்கி
கொண்டதோர் மனைவி சுதர்களு மாண்டு
கோவலர் தண்டனை யாகி
அண்டர்த முலகில் அருநர கினிலே
அமுந்தியு மறுசென்மந் தாழ்வாய்க்
கொண்டுமே மனைவி குழவியால் மாண்டு
குலம்விளங் காமல்வாழ் குவையே.

21. என் மனைவியைக் கெடுத்த பாவியே! நீ மறு பிறவியில், அடைந்த செல்வம் கைவிட்டுப் போய், அடைந்த மனைவி மக்கள் இறக்க, அரசாங்க தண்டனையடைந்து, மேலுலகஞ் சென்று, நரகத்தில் அகப்பட்டு, துன்புற்று, மறு பிறப்பில் தாழ்வான குலத்தில் பிறந்தும், உன் மனைவி கர்ப்ப நோயால் இறக்கவும், உன் வம்சம் விளங்காமலும் தனித்து வாழ்வாய் என்றும்;

வேறு

22. இன்னமும் பலவாய்ச் சொல்லி இறைத்தனன் தெருத்தூள்
[தன்னைத்
துன்னிய மறையோர் சாபந் தொடர்ந்தது விவனுக் கேதான்
மன்னனுல் தொழிலும் நீங்கி மாநிலம் வறுமை யாகி
அன்னவன் சுதர்க ளற்று அந்தகன் பக்கல் சேர்ந்து ;

22. இன்னும் பலவாறுங் கூறித் தெரு மண்ணை வாரி யிறைத்தான். தூய்மையான அந்தணர் சாபம் இவனை அப்பிறப்பிலேயே தொடர்ந்தது. அதனுல், அரசாங்க உத்தியோகம் நீங்கி, உலகில் வறுமை யுடையவனுகி, புதல்வர்களின்றி, வாழ்ந்து மரண மடைந்து;

23. நரகத்தில் பன்னுள் மூழ்கி நாற்றலைக் கஞ்சன் தன்னுல்
வரையவே குலமுந் தாழ்வாய் வந்தனன் பூவைச்ய னுக
மறையவன் சாபம் போலே மைந்தர்கள் தோட மெய்தும்
குறுமுனி புகலு கின்றூர் கூறின சாபம் போலே.

23. நரகத்தில் பலகாலம் அகப்பட்டு, வருந்தி, நான்முகப் பிரமதேவனுல் மீண்டும் படைக்கப்பட்டு, முற்பிறவிக்குத் தாழ்ந்ததாகிய வைசிய மரபினனுய்ப் பிறந்தான். அந்தணனது சாபத்தைப்போல் இவனுக்கு இப்பிறவியில் புத்திர தோஷம் ஏற்படும். அகத்திய முனிவர் சொல்லுகின்றூர். முற்பிறவியில் அந்தணன் மொழிந்த சாபம்போல,

24. பாரிக்குக் காணு தோசொல் பகருவீ ரந்தச் சங்கை
காரிக்குக் காணு தாகுங் கனமறை யேழில் நிற்க
வரியவன் தனக்குப் புத்ரர் விளங்கார்க ளென்று
[சொல்வோம்
தீரவே சாந்தி யொன்று செப்புவீர் விவர மாக.

24. இவன் மனைவிக்குத் தோஷ மேற்படாதோ? அந்தச் சங்கேகத்தை விளக்குங்கள். மனைவிக்குத் தோஷ முண்டாகாது. குரு ஏழாமிடமாகிய விருச்சிகத்தில் தங்கியிருப்பதால், ஜாதகனுக்கு, புத்திரர் தோன்றி நிலையார் என்று கூறுவோம். புத்திர தோஷந் தீரச் சாந்தியொன்று விவரமாகக் கூறுங்கள்.

25. ஆகம முறையை சொல்வோம் அந்தணர் சாபத் துக்குத்
தோகைமா ரிரண்டு தீர்க்கஞ் சுதராண்பால் நான்குந்
[தோன்றும்
பாகமாய்க் கிரிகை செய்யப் பகருவீர் விவர மாகச்
சாகுங்கால் துணைவன் புத்ரன் சஞ்சலஞ் செய்வா னுமே.

25. பிராமணர் சாபத்திற்கு வேத சாஸ்திரத்தில் கூறப்பட்ட முறைப் படி சாந்தி முறையைச் சொல்லுவோம். இந்தச் சாந்தியைச் செய்தால், புத்திரர் நால்வரும், பெண்கள் இருவரும் இந்த ஜாதகனுக்குத் தோன்றித் தீர்க்கமாக விளங்குவர். புத்திரர் தோன்றுவிடில், இவனுக்குக் கருமங்கள் செய்பவர் யாவர் என்று விவரமாகச் சொல்லுவீர். இறந்த பிறகு, இவனது சகோதரன் புதல்வன் இவனுக்கு இறுதிக் கடன்கள் செய்வான்.

26. சேயர்க ளிருவர் முன்னல் செப்பினே மிளையோன் செய்வன்
தூயவே சொன்னேம் யாங்கள் சுதன்சேதி யிரண்டில்
[கேளாய்
ஆயவே யன்னை சேதி அறைகின்றே மாரி றத்தாள்
மாயன்மேல் பத்தி கொள்வள் வருவோரை யாத ரிப்பள்.

26. ஜாதகன் சகோதரனுக்கு இரு புதல்வர்கள் உளராவர் என்று முன்பே சொன்னேம். அவ்விருவரில் இளையவன் இவனுக்குக் கருமம் செய்வான் என்று நாங்கள் கூறினேம். அவன் செய்தியைப் பற்றி இரண்டாம் பாகத்தில் சொல்லக் கேட்பாயாக. ஜாதகனின் தாயின் செய்தியைச் சொல்லுகின்றேம். கரிய நிற முடையவள். திருமால் மீது பக்தி கொள்ளுவாள். வீடுதேடி வருபவரைக் காப்பாள்.

27. பாலர்மேல் பிரிய முள்ளாள் பலர்சகா யங்கள் செய்வாள்
சிலமு மறத்தி லிச்சை சொல்லுமுன் கோபங் கொஞ்சம்
ஞாலமேல் நல்லோ ளாவள் நாயகி வந்த பின்பு
ஏலவே யோகம் வாய்க்கும் இல்லமுந் தென்கீ ழாமே.

27. மக்கள் மீது விருப்ப முள்ளவள். பலருக்கு உபகாரங்கள் செய்வாள். ஒழுக்க முள்ளவள். தருமஞ் செய்வதில் விருப்ப முடையவள், கூறுவதற்குமுன் கோபங் கொள்ளுவாள். உலகில் நல்லவளாவாள். இவள் வந்த பிறகு ஜாதகன் தந்தைக்கு யோகங்க ளுண்டாம். இவள் வீடு தென் கிழக்குத் திசையிலுள்ளது.

வேறு

28. ஆமே துணைக ளீருறில்
அழிவு சிலவே தாமெய்தும்
சேமாங் குடும்பந் தாய்பூர்வம்
செப்பக் கேண்மோ தில்லைதனில்
நேமந் தவறுக் குலாலவம்சம்
நேர்ந்து வறத்தி லிச்சையதாய்த்
தீமையி லாமல் தான்.....
.....

28. இவளுடன் பிறந்தவர் பன்னிருவர். அவர்களில் சிலர் மரிப்பர். குடும்பம் சௌக்கியமுடன் விளங்கும். தாயின் முற்பிறவியைச் சொல்லக் கேளுங்கள். சிதம்பரத்தில், ஒழுக்கந் தவறாத குயவர் மரபில் பிறந்து, தரு மஞ் செய்வதில் ஆசையுள்ளவளாய், தீங்கு சொல்லாயு மில்லாமல்;

வேறு

29. வரன்முன்னே மரண மாகி மறையவன் வரையப் பட்டுத்
திருமக ளிக்கு லத்தில் செனித்தன ளென்று சொல்வோம்
.....பா ளாகும்
அருமறை முடிவி லாடும் அம்பிகை புகன்றிட் டோமே.

29. கணவனுக்கு முன்பே மரணமடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு; இப்பிறப்பில் பிறந்தாள் இவள் என்று கூறுவோம்.....
.....வாழ்ந்திருப்பாள். அறிதற்கரிய வேதங்களின் முடிவில் நடனமாடும் அம்பிகையே! இங்ஙனம் நாங்கள் சொன்னோம்.

30. தந்தையின் பூர்வஞ் சொல்வோஞ் செலகண.....
.....யின்ன வைசியச் சேயாய்
முந்திய தனங்கள் பெற்று முயர்வான குடும்பி யாகி
வந்தவர்க் கன்ன மீந்து மாலின்மேல் பக்தி கொண்டு;

30. ஜாதகன் தகப்பனாரின் முற்பிறப்பைச் சொல்லுவோம்.....
.....வைசிய குலப் புதல்வனாய்த் தோன்றி, முன்னோர் செல்வத்தை யடைந்து, மேன்மையான குடும்ப முடையவனாகி, வீடுதேடி வருபவர்க்கு உணவளித்து, திருமாலின்மீது பக்தி பூண்டு;

31. .....காலன் பக்கல்
நவனியில் பிரமன் லக்கம் நாயக னுதித்தா னென்றோம்
இவனதில் வறுமை யுண்டு இரு.....
.....ம கண்டந் தானே.

31.....மரணமடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இப்பிறப்பில் பிறந்தான் இவன் என்று சொன்னோம். இவனது இளமைக் காலத்தில் குடும்பத்தில் தரித்திரமுண்டு.....
.....கண்ட மேற்படும்.

32. பணிதசை புகர்பு சிப்பில் பகருவோர் தந்தைக் கேதான்
துணிவுடன் முப்ப தாண்டில்.....
.....கனகன்தன் தசையி லேதான்
அனையவே சுயபு குத்தி அறைந்தது தப்பா தாமே.

32. இராகு மகா தசை சுக்கிர புக்தியில் ஜாதகன் தந்தைக்கு மரணத்தைச் சொல்லுவோம். திடமாக, ஜாதகனின் மூப்பதாம் வயதில், ... குருமகாதசை குரு புக்தியில் மரணம் நேரும். கூறிய சொற்கள் தவறு.

33. அன்பது வாறு வாண்டில்.....
.....தில் யிடபமா தத்தி லேதான்
முன்பக்கந் தசமி தன்னி லுடலமே யேகு மென்றோம்
பின்சென்மங் காஞ்சி தன்னில்.....

33. ஐம்பத்தாறும் வயதில்..... ..... வைகாசி மாதம் பூர்வ பட்சம் தசமி திதியில் ஜாதகன் உடலிலிருந்து உயிர் பிரியும் என்று சொன்னோம். இவன், மறுபிறப்பு, காஞ்சிபுரத்தில்;

34. .....தானும் அருணைமா நகரி லேதான்
குறவர்தங் குலமு தித்துக் குவலயஞ் செட்டுச் செய்வன்
திருமகன் யோக.....
.....தை அந்த வாண்டு முதலா யாக;

34. .....திருவண்ணாமலையில், குறவர் மரபில் தோன்றி, உலகில் வியாபாரஞ் செய்வான். ஜாதகன் யோகங்கள்..... .....அந்த வருஷம் முதல்;

35. பிறையது போலே செல்வம் பொருந்திடுஞ் சயன மெத்தை
தரும.....மெய்யும் புகழு மேற்பன்
பிரபலக் குடும்பி யாவன்.....
நெறியுளா னுரு யிரம்பொன் நேமியில் சேர்ப்ப னாகும்.

35. வளர்பிறைச் சந்திரன்போல் செல்வம் உயரும். சயன சுகமுண்டு. தருமத்தில்..... .....உடலையும், கீர்த்தியையும் அடைவான். பிரபலமான குடும்ப முடையவ னாவான். ஒழுங்குள்ளவன். உலகில் வாழுங் காலத்துக்குள் ஆறுயிரம் வெண்பொற் காசுகள் சேர்ப்பான்.

36. .....வன்.....
.....தாசிதா சர்களு முள்ளான் தரியலர் வெற்றி
[கொள்வன்
வாசமாஞ் செட்டுச் செய்வன் மாநிலங் கிருஷி யுள்ளான்
.....

36. .....வன். .....பணிப் பெண்களையும், பணியாட்களையும் பெற்றவன். பகைவரைச் செயிப்பான். நல்ல விவசாயத் தொழில் புரிவான். வியாபாரங்கள் செய்வான்.

37. செனித்திடு காலந் தன்னில் சந்திரன் தசையி ருப்புக்
குனித்திடு வாண்டு ரெண்டு கூறுவோந் திங்க ளெட்டும்
வினைவருஞ்.....
.....வர் நேச மாகுங் கனத்திடுஞ் செட்டுத் தானே.

37. ஜாதகன் பிறப்புக் காலத்தில் சந்திர மகா தசையில் இருப்பு; இரண்டு வருஷங்களும் எட்டு மாதங்களுமாம் என்று சொல்லுவோம். அக் காலத்தில் துன்பங்கள் நேரும். .....ணன்பாவர். வியாபாரம் உயரும்.

38. பந்துவுஞ் சுபமுஞ் சூதம் பெருகிடுந் துணைவர் விருத்தி
தந்தை.....
நிந்தையுங் கொஞ்ச நேரும் நிகழ்த்துவோம் பின்பா கத்தில்
இந்திர னிறைஞ்சு மாதே இயம்பின மொழிகுன் ருவே.

38. உறவினர்களுக்கு அசுபங்கள் நிகழும். உடன்பிறந்தோர் விருத்தி யதிகம். தந்தை .....பழியுஞ் சிறிது உண்டா கும். மற்றெல்லாவற்றையும் விவரமாகப் பிற்பாகத்தில் கூறுவோம். தேவேந்திரன் வணங்குகின்ற பார்வதியே! கூறிய சொற்கள் தவறுபடா.

ஜாதகம் 116

1. சந்திரன் கன்னி யாகச் சனிதேளில் ராகு மேரு
புந்தியு மிரவி வெள்ளி [1]புலியினில் கேது வீணை
மந்திரி சேயுங் கோலில் மாடது சென்ம மாகி
இந்தவார் கோள்கள் நின்றூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் கன்னியிலும், சனி விருச்சிகத்திலும், ராகு தனுசிலும், புதன் சூரியன் சுக்கிரன் சிம்மத்திலும், கேது மிதுனத்திலும், குரு செவ்வாய் துலாத்திலும் ஆக, இவ்விதக் கிரகங்கள் நின்று, விருஷபம் ஜன்ம லக்கினமாக விருந்தால் உரியவாம் பலன்களைக் கூறுங்கள்.

		லக்கினம்	கேது
	இராசி சக்கரம்		
			புதன் சூரியன் சுக்கிரன்
ராகு	சனி	குரு செவ்வாய்	சந்திரன்

2. பிறந்தசே யாணுஞ் சென்மம் பேசுவோங் கிழ்மே லாகும்
மறலியின் வாச லாகு மருகரும் வடமே லாகும்
பெருவயி றப்ப னுத்ரம் பலமிலாக் கோட்ட மாகும்
அரிவாக னத்தாள் மாரி அணுகிடும் வடகீழ் தன்னில்.

2. பிறந்த குழந்தை ஆண் பிறப்பு. வீடு, கிழக்கு மேற்கான வீதியில் தெற்கு நோக்கிய வாயில் கொண்டது என்று கூறுவோம். ஜினதேவர் கோயில் வடமேற்குத் திசையில் உளது. பெருவயிற்றோனாகிய விநாயகர் ஆலயம் வடக்கில் இருக்கின்றது. அஃது உறுதி யில்லாததாகும். சிங்க வாகனத்தைக் கொண்ட துர்க்கை, மாரியம்மன் ஆகியவர் வடகிழக்குத் திசையில் வாசம் புரிவர்.

---

1. சிம்மம்

3. குடகினில் [2]சந்தி நிற்குங் கூறுமிவ் வடையா ளத்துள்
திடமிலா வில்ல மாகுஞ் சேத்திரம் பாகம் ரெண்டாம்
அடைவுடன் நான்காஞ் சென்மம் அவனுமே யுதிப்பா னுகும்
தடவரை மகளே யாங்கள் சாற்றுவோம் பலன்கள் யாவும்.

3. வீட்டுக்கு மேற்கில் நாற்சந்தி யுண்டு. சொல்லப்படுகின்ற இவ் வடையாளங்களுக்குள், ஜாதகன் பிறக்கும் வீடு பலமில்லாததாம். அவ்வீடு இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கும். தன் தந்தைக்கு நான்காம் பிறப் பாக இந்த ஜாதகன் தோன்றுவான். மலையாசன் புதல்வியே! நாங்கள் ஜாதகனுக்குரிய பலன்கள் அனைத்தையுஞ் சொல்லுவோம்.

4. தந்தையின் துணைவ ரைந்தில் ஆணொன்று கன்னி மூன்று
சந்ததந் தீர்க்க மெய்துஞ் சாற்றுமாண் மூத்தோ னுகும்
அந்தவன் சேதி சொல்வோம் அவனியில் கிருஷி செய்வன்
நிந்தையு மில்லா னுகும் நிருபர்க ளிட்டங் கொள்ளான்.

4. ஜாதகன் தகப்பனுருடன் பிறந்த ஐவரில், சகோதரன் ஒருவனும், சகோதரிகள் மூவரும் தீர்க்க வயதைப் பெற்று வாழ்ந்திருப்பர். சொல்லு கின்ற சகோதரன் ஜாதகன் தந்தைக்கு மூத்தவனுவன். அவன் செய்தியைச் சொல்லுவோம். பயிர்த்தொழில் செய்வான். பழியில்லாதவன். அரசர்கள் விருப்பத்தை யேற்காதவன்.

5. மாநிறம் வாத தேகி மருமமில் லாதா னுகும்
வானவர் பக்தி கொள்வன் மறுமொழி யதிகங் கூறுன்
ஈனமாங் குணங்க ளில்லான் ஏகபுத் திரனு மாகும்
தானவ னுதிக்கு முன்னே சாருவான் வேற தாக.

5. கரிய நிறமுடையவன். வாத சரீர முடையவன். மனத்தில் மறை வில்லாதவன். தெய்வ பக்தி கொள்ளுவான். பெரியோர் கூறுகின்றவற்றுக்கு எதிர் வார்த்தைகள் மிகுதியாகப் பேசாதவன். தாழ்வான குணங்கள் இல் லாதவன். ஒரே புதல்வனை யடைவான். ஜாதகன் தோன்றுவதற்கு முன்பே, தனிக் குடும்பமாகச் செல்லுவான்.

6. கடனிலான் சமயோ கத்தான் காதலி பட்ச னுவன்
இடஞ்சித்ரம் பின்னல் செய்வன் இவன்பித்த தேகி யாவன்
உடன்பிறந் தோர்கள் பட்சன் உறுதியில் லாத நெஞ்சன்
விடவுரை பகரா னுகும் விளம்புவோம் விபரம் ரெண்டில்.

---

2. தெருக்கள் கூடுமிடம்

6. கடனில்லாதவன். இன்பமும் துன்பமும் கலந்த சமமான யோகங்களுடையவன். மனைவி மீது விருப்பமுள்ளவன். வீட்டைச் சித்திரங்களால் பிற்காலத்தில் அழகு படுத்துவான். பித்த தேகமுள்ளவன். தன்னுடன் பிறந்தோர்கள் மீது பிரியமுடனிருப்பான். திடமற்ற மனம் படைத்தவன். நீச் சொற்களைப் பேசான். இவனைப் பற்றிய மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம்.

7. இவன்பிதா குணத்தைச் சொல்வோம் யானைபோல் நிறத்தா [னுகும்
தவசிய ருறவு கொள்ளான் தரணியில் கிருஷி செய்வன்
நவனியில் கல்வி கொஞ்சம் நற்புத்தி தைரி யத்தன்
பவமுள தந்தர வாதி பரவுப காரி யாவன்.

7. ஜாதகன் தந்தையின் குணங்களைச் சொல்லுவோம். யானை போன்று கரிய நிற முடையவன். தவங்களைப் புரியும் சான்றோர் உறவைக் கொள்ளமாட்டான். உலகில் பயிர்த் தொழில் புரிந்து வாழ்வான். சிறிது படிப்புள்ளவன். நல்ல புத்தி யுடையவன். தைரிய முள்ளவன். தந்திரசாலி. பிறருக்கு உதவிபுரியும் இயல்பினன்.

8. [1]மானது சென்ம ராசி மருவுபூ ரட்டை நாளாம்
பான்மையாய்ப் பேச வல்லன் பத்தினி நேய னுவன்
ஈனமாங் குணங்கள் கொஞ்சம் இடரிலான் சமயோ கத்தான்
மானனை யார்க்கு நேயன் மறுத்துவுத் தரமே சொல்வான்.

8. இவன் பிறந்த ராசி மகரம். நட்சத்திரம் பூரட்டாதியாம். பக்குவமாகப் பேசுதலில் வல்லவன். மனைவிக்குப் பிரியமானவன். அற்ப குணங்கள் சிறிது உளவாம். துன்ப மில்லாதவன். சமமான யோகங்களுடையவன். மான் போன்ற விழிகளையுடைய பெண்கள் பலருக்கு அன்பன். பெரியோர் கூறுகின்றவற்றை மறுத்துப் பேசுவான்.

9. நந்தியா வனையு மில்லம் நற்பணி செய்த லுண்டு
தந்தையும் பூமி விருத்தி சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
வந்தவர்க் கன்ன மீவன் வளமிலாப் போச னத்தன்
முந்திய கோபங் கொஞ்ச முதித்துபின் சாந்த முண்டு.

9. காளைகள் பசுக்கள் வாங்குவான். நிலபுலன்கள், ஆபரணங்கள், வீடு முதலியன வாங்குவான். தன் தந்தை காளைய நிலங்களை விருத்தி செய்வான். கால் நடைகள் விருத்தியுண்டு. வீடு தேடி வந்தவர்களுக்கு உணவளித்து

---

1. மகரம்

உபசரிப்பான். போஜன சௌக்கிய மில்லாதவன். முன் கோபஞ் சிறிதுண்டு; தோன்றிப் பின் சாந்த மடைவான்.

10. சொன்னவிக் குணத்தா னுக்குச் சுந்தர னுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளான் மாநி
[றத்தான்
முன்கோபம் வாத தேகி மூலச்சூ டுடைய னுகும்
கன்னிகை மோக னுவன் காலாட்கள் விருத்தி யுள்ளான்.

10. சொல்லப்பட்ட இக் குணங்களே யுடைய தந்தைக்கு ஜாதகன் தோன்றுவான். இவன் குணங்களைச் சொல்லுவோம். அழகுடையவன். கரிய நிறமுள்ளவன். முன் கோப முடையவன். வாத சரீர முள்ளவன். மூலச் சூடுடையவன். பெண்கள்பால் மோக முள்ளவன். எவலாட்கள் பலரைப் பெற்றவன்.

11. நடையது துருசு மாவன் நாற்காலி விருத்தி யுள்ளான்
அடைமொழி கூரு னுகும் அதிகமாய்க் கிருஷி செய்வன்
மடையரை யுறவு கொள்ளான் வாக்குகள் குளறு முண்டு
கடனது கொள்ளா னுகுங் கண்முகம் வசிய முள்ளான்.

11. விரைந்த நடை யுடையவன். கால் நடைகள் வளர்ச்சி யுள்ளவன். அடித்தடித்துப் பேசாதவன். மிகுதியாகப் பயிர்த் தொழில் புரிவான். மூடர்கள் நேசத்தைக் கொள்ளமாட்டான். பேசும்பொழுது குழறும். கடன் வாங்குதல் செய்யான். கண் முகம் இவைகளில் வசிகர முள்ளவன்.

12. ஊகைவான் வம்பில் செல்லான் உலகுக்கு நல்லோ னுவன்
ஆகம மறியா னுகும் அறமதி விச்சை யுண்டு
போகபாக் கியமு முள்ளான் புதிதாகக் கிருகஞ் செய்வன்
நாகரி கங்க ளுள்ளான் நாயகி கேட்க லுற்றுள்.

12. ஊக முடையவன். வீண் சண்டைக்குப் போகான். உலகத்தினருக்கு நல்லவன். வேதங்களை யுணராதவன். தருமத்தில் விருப்ப முடையவன். போகங்களும், செல்வங்களு முள்ளவன். புதிய வீடு கட்டுவான். நாகரிக முடையவன். பார்வதி கேட்கின்றுள்.

13. எந்தக்கா லத்தி லேதான் இல்லமும் புதிதாய்ச் செய்வன்
வந்தவன் மூன்றுண் டிண்மேல் வளமையாய்க் கிரகங்
[செய்வன்
தன்துணை முன்பால் காணன் தனக்குப்பின் துணைநான்
[காகும்
சொன்னதி லாண்பா லொன்று தோகையு மிருவர் தீர்க்கம்.

13. எந்தக் காலத்தில் புதிய வீடு கட்டுவான்; ஜாதகன் பிறந்து மூன்று வருஷங்களுக்கு மேல், புதிய வீடு கட்டுவான். தனக்கு மூத்தவர் இல்லாதவன். இளையவர் நால்வர். கூறப்பட்டவர்களில் ஆண்மகன் ஒருவன். பெண்கள் இருவர். இவர்கள் தீர்க்கமாவர்.

14. பின்வரு மாண்பால் சேதி பேசுவோ மேடஞ் சென்மம்
மன்னிய வவிட்ட நாளாம் மருவுவா னிருநி றத்தான்
பன்னியே பேச வல்லான் பார்மன்ன ரிட்டங் கொள்வன்
அள்ளியர் மதிக்க வாழ்வன் யாரையு மூறவு கொள்வன்.

14. ஜாதகனின் இளைய சகோதரன் செய்தியைச் சொல்லுவோம். மேஷ லக்கினம், அவிட்ட நட்சத்திரத்தில் தோன்றுபவன். கரிய நிறமுள்ளவன். பன்னிப் பன்னிப் பேசுவதில் வல்லவன். அரசர்கள் விருப் பத்தைப் பெறுவான். அயலோர் பாராட்டும்படி வாழ்க்கை நடத்துவான். அனைவரையும் தனக்கு நட்பாகக் கொள்ளுவான்.

15. உயர்வான குடும்பி யாவன் உரைப்பனுந் தர்க்கந் தன்னை
அயலார்பொ னிச்சை யில்லான் அதிகக்கல் விகளுங் கற்பன்
பயமிலா மனத்த னுகும் பாருகள் விருத்தி செய்வன்
நயமான வார்த்தை யுள்ளான் நவிலுவோம் மனைவி
[யொன்று.

15. உயர்வு பெற்ற குடும்ப முடையவனுவான். வாதங்கள் புரிவான். பிறர் செல்வத்தில் ஆசையில்லாதவன். மிகுதியாகக் கல்வி கற்பான். அச்ச மில்லாத மனத்தினன். சிலபுலன்களை விருத்தி செய்வான். நயமாகப் பேசுதல் செய்வான். இவனுக்கு மனைவி யொருத்தியே, என்று சொல்லு வோம்.

16. சுதர்களு மாண்பால் மூன்று தோகையு மிரண்டு வென்றேரும்
சதமாகு மைந்துந் தீர்க்கந் தன்னுடன் கூடி வாழ்வன்
மதிநுதல் துணைவியர் சேதி யறைகின்றே மிரண்டி லேதான்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்

16. இவனுக்குப் புதல்வர்கள் மூவர், புதல்வியர் இருவர் என்று கூறினேம். இவர்கள் ஐவருந் தீர்க்க முள்ளவராவர். இவன் தன் சகோதர னுடன் (ஜாதகன்) சேர்ந்து வாழ்வான். சந்திரன் போன்ற புருவங்களை யுடைய சகோதரிகள் செய்திகளை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றேம். முனிவர்களைக் காக்கின்ற பார்வதியம்மையே! கேள்.

17. உதித்தசேய் மணத்தின் காலம் உரைகின்றே மிருபான்
[ரெண்டில்
வதிபதி தென்மேல் திக்கில் மாதுரு கிளையி லேதான்
சதியிலா மனத்த ளாகும் சரசமாய் வார்த்தை சொல்வள்
அதிதிமேல் பக்தி கொள்வள் அதிகமாய் வார்த்தை
[சொல்வள்.

17. ஜாதகனின் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். இருபத்திரண்டாம் வயதில், இவன் தாயார் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி இவனுக்கு மனைவியாக வாய்ப்பாள். தீமையில்லாத மனத்தினள். அழகாகப் பேசுபவள். துறவிகளிடம் பக்தி கொள்ளுவாள். மிகுதியாகப் பேசுவாள்.

18. வரன்மனம் போலே வாழாள் மங்கைநன் னடக்கை யுண்டு
திருமக ளொப்ப தாகுந் தீர்க்கமாம் வயது மூள்ளாள்
குறுமுனி யிவ்வார் கூறக் கௌசிகர் கேட்க லுற்றார்
இருமனை யணுகு மென்று என்னுடைக் கருத்தே யையா.

18. கணவன் மனமறிந்து வாழ்க்கை நடத்தமாட்டாள். நன்னடத்தை யுள்ளவள். இலட்சுமிதேவி போன்ற வடிவழகுடையவள். தீர்க்கமான வயதைப் பெற்றவள். அகத்திய முனிவர் இங்ஙனம் சொல்லவும், விசுவாமித்திர முனிவர் கேட்கின்றார். ஐயா! இவனுக்கு இரு மனைவியர் ஏற்படுவர் என்பது என் கருத்து.

19. காரணம் யாது என்ன காரியு மேழில் தங்கத்
தாரணி மைந்த னுறில் சரராசி யாக நிற்கத்
தீரமா யிரண்டில் கேது சேர்ந்துமே விருப்ப தாலே
நாரியு மிரண்டு என்று நவின்றனம் வசிட்டர் சொல்வார்.

19. ஜாதகனுக்கு இரு மனைவியர் ஏற்படக் காரணம் யாது? என்று பார்வதிதேவி கேட்டாள். சனி, ஏழாமிடமாகிய (களத்திரஸ்தானம்) விருச்சிகத்திலும், அவ்வீட்டுக்குரிய செவ்வாய் சராராசியாகிய துலாத்திலும், கேது குடும்பஸ்தானமாகிய மிதுனத்திலும் நிற்பதால் இவனுக்கு மனைவியர் இருவர் என்று கூறினோம். வசிஷ்ட முனிவர் கூறுவார்.

20. வருமனை யொன்றே தீர்க்க மபிமான மொன்றுண் டாகும்
திருமண முடிக்குங் காலத் திருகுக ளனந்த மாகிக்
குறித்தபெண் கூடா தாகிக் கொள்ளுவான் வேறு மாதை
அறிவிப்போம் விபரம் ரெண்டில் அபிமான மெந்தக் காலம்

20. ஜாதகன் மனைவி யொருத்தியே தீர்க்கமாக விளங்குவாள். ஆனால், இவனுக்கு அபிமானப் பெண்ணொருத்தி யுண்டு. மணமாகுங் பொழுது,

மாறுபாடுகள் பல தோன்றி, குறிப்பிட்ட பெண்ணே மணக்கவியலாமல், வேறு பெண்ணே மணந்து கொள்ளுவான். இது விவரத்தை இரண்டாம் பாகத்தில் தெரிவிப்போம். அபிமானப் பெண் எந்தக் காலத்தில் ;

21. நேரிடும் விபரஞ் சொல்வீர் நிமலன்முப் பாண்டின் மேலே
கூறினேம் வடுக மாது குணக்கினி லிருந்து நேரும்
நாரிபாட் டாளி யாகும் நற்புத்தி யோக சாலி
சீரிய குணமில் லாதாள் சென்மாந்தர வினையால் நேரும்.

21. வருவாள். விவரங் கூறுங்கள். ஜாதகனது முப்பதாம் வயதுக்கு மேல், வடுக மாபினளொருத்தி, கிழக்குத் திசையிலிருந்து அபிமானப் பெண்ணாக வாய்ப்பாள். அவள் நல்ல உழைப்பாளி. நல்ல புத்தி யுடையவள். யோக முள்ளவள். கோபிக்கும் தன்மை யில்லாதவள். முற்பிறப்புத் தீவினை யால் அவள் இவனுக்கு அபிமானப் பெண்ணாக வாய்ப்பாள்.

22. மதலைகள் விருத்தி தம்மை யறைகின்றேம் நலமே
[தோன்றும்
முதிலிலே மூன்று சேத மெய்திப்பின் விருத்தி யாகும்
சதமுட னெண்பா லொன்று சத்திக ளிருவ ராகும்
இதுமூன்றுந் தீர்க்க மெய்தும் இடராகு மற்ற வெல்லாம்.

22. புத்திர விருத்தியைப் பற்றிச் சொல்லுவோம். புத்திர பாக்கியம் ஏற்படும். முதலில் மூன்று தோன்றி மரிக்கும். பின்பு தோன்றுபவை விருத்தியாம். ஆண் குழந்தை யொன்றும், பெண்கள் மூவருந் தோன்றுவர். இம்மூவரும் தீர்க்கமாவர். மேலும் பிறப்பவை சேதமாம்.

23. எப்படிச் சுதராண் விருத்தி இயம்புவீர் முனியே நீர்தாம்
தப்பிதஞ் சொன்ன வார்த்தை சென்மமு மிடப மாக
மைப்புட னேந்தோன் புந்தி யாகியே நாலி லாகச்
செப்பொணுச் சுதரா ணுந்தான் செயமுனி மறுத்துச்
[சொல்வார்.

23. ஜாதகனுக்கு ஆண் குழந்தை தோன்றி விருத்தியாம் என்று எங்ஙனம் கூறினீர்கள் ; நீங்கள் சொன்னது தவறு. விருஷபம் ஜன்ம லக்கினமாகி, ஐந்தாமிடத்துக் குரியவன் புதனாகி, அவன் நான்காமிட மாகிய சிம்மராசியில் இருப்பதால், ஜாதகனுக்கு ஆண் குழந்தை தோன்றும் என்று கூறவியலாது. செய முனிவர் இதனை மறுத்துக் கூறுவார்.

24. கருமத்தை பொன்னேன் பார்க்கக் கலிமதி யைந்தில் நிற்க
உருமத்துக் குழவி யாண்பால் உறைந்திடு மிவனுக் கேதான்
வருஞ்சுத ராரூஞ் சென்ம மறைந்தன மிவனுக் கேதான்
அருமறை மூடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

24. கருமஸ்தானமாகிய பத்தாமிடத்தைக் குரு ஐந்தாம் பார்வை யாகப் பார்ப்பதாலும், சந்திரன் புத்திர ஸ்தானமாகிய ஐந்தா மிடத்தில் இருப்பதாலும், இந்த ஜாதகனுக்கு கருமங்கள் செய்யக்கூடிய ஆண் குழந்தை தோன்றித் தீர்க்கமாகும். இவனுக்குப் பிறக்கும் ஆண்மகன் ஆரும் பிறப் பாவன் என்று சொன்னேம். அறிதற்கரிய வேதங்களின் உச்சியில் நட னமாடும் பார்வதியே! கேள்.

25. அன்னையின் குணத்தைச் சொல்வோம் அவளிரு நிறத்தா
[ளாகும்
பன்னியே பேசு வாளாம் பலர்சகா யங்கள் செய்வள்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பாள் பித்த தேகி
முன்கோப மூர்க்கங் கொஞ்சம் முன்தாயொன் றுண்டென்
[றேமே.

25. ஜாதகன் தாயின் குணங்களைச் சொல்லுவோம். கரிய நிறமுடை யவள். பன்னிப் பன்னிப் பேசுவாள். பலருக்கு உதவிகள் செய்வாள். தான் கூறுகின்ற சொற்களே மேன்மை யுடையன என்று நிலை நாட்டுவாள். பித்த தேக முள்ளவள். முன்கோப முடையவள். மூர்க்கத் தன்மை சிறி தண்டு. இவளுக்கு மூத்த தாயொருத்தி யுண்டு என்று சொன்னேம்.

26. தன்துணை யறுவ ராகுங் சாய்ந்திடு மிரண்டு வென்றேம்
மன்னவ னுண்பா லொன்று மங்கையு மூன்று மாகும்
சொன்னது நான்குந் தீர்க்கந் தென்மேல்பா லில்ல மாகும்
அன்னவள் பூர்வஞ் சொல்வோம் அம்பிகை யாளே கேளாய்.

26. இவளுடன் பிறந்தோர் அறுவர், அவர்களில் இருவர் மரிப்பர் என்று சொன்னேம். சகோதரன் ஒருவனும், சகோதரிகள் மூவருமாவர். சொல்லப்பட்ட நால்வரும் தீர்க்கமுடன் விளங்குவர். இவள் வீடு தென் மேற்குத் திசையில் உளது. தாயின் முற்பிறப்பைச் சொல்லுவோம். பார் வதி யம்மையே! கேள்.

27. தில்லையின் கீழ்ப்பா லாகச் சிறுவூரில் வைசியச் சேயாய்
வல்லியு முதித்தா ளென்றேம் வளமுள தனவா னுக்கு
இல்லறஞ் சிறப்புற் றோங்கி இவள்வர னருகி லுண்டாம்
நல்லதோர் சுதர்க ளாகி நாட்டினில் வாழு நாளில்.

27. சிதம்பரத்துக்குக் கிழக்கிலுள்ள தொரு சிற்றூரில் வைசிய மரபில் மிகுந்த செல்வ முடைய ஒருவனுக்கு புதல்வியாகப் பிறந்தாள் என்றுகூறி னேம். இவளூர்க்கு அருகி லுள்ள கிராமத்திலேயே கணவனை யடைந்து, சிறப் பான இல்லறம் வாய்ந்து, நன் மக்களைப் பெற்று, உலகில் வாழுகின்றகாலத் தில் ;

28. பஞ்சையாய் மாது தானும் பகல்பால ரன்னங் கேட்க
வஞ்சியும் வைத்துக் கொண்டு மகவுசோ றீயா நின்றாள்
பஞ்சையும் மனவெ றுப்பால் பாலர்சோ றீயாப் பாவி
துஞ்சிடுஞ் சுதர்கள் யாவுந் தோன்றிடு சென்ம மவ்வார்.

28. அநாதைப் பெண் ணொருத்தி தன் குழந்தைக்குச் சிறிது உணவு தருமாறு ஒரு நாள் பகலில் இவள் வீட்டுக்கு வந்து கேட்க, உணவை வைத் துக் கொண்டே குழந்தைக்கு உணவளிக்காமல் இருந்தாள். எழைப் பெண் ணும் மன வெறுப்படைந்து, குழந்தைகட்கு உணவளிக்காத பாவியே ! உன் குழந்தைகள் எல்லாம் மரிக்கும். வரும் பிறவியிலும் அங்ஙனமாம்.

29. சொல்லியே சென்றா ளென்றோந் சேர்ந்தது வந்தத் தோடம்
வல்லிக்கு வந்தி யத்தில் மகவுவாண் தோடமெய்தி
நல்லதோர் தலங்கள் சென்று நல்தீர்த்த மிகவே தோய்ந்து
புல்கினு ளுள்ளூர் தன்னில் புக்கினுள் காலன் பக்கல்.

29. என்று கூறிவிட்டுச் சென்றாள் என்று சொன்னேம். அந்தத் தோஷம் இவளை யடைந்தது. அப்பிறப்பில் கடைசிக் காலத்தில் இவளுக் குப் புத்திர தோஷம் ஏற்பட்டு, புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று, நல்ல தீர்த்தங்களில் நீராடி, உள்ளூர் திரும்பினாள். பின்பு மரண மடைந்தாள்.

30. வேதனுல் வரையப் பட்டு விளங்கினு ளருகர் வம்சம்
மாதுவின் சாபத் தாலே வருஞ்சுதர் தோட மெய்தும்
பாதகந் தீர வேண்டிப் பணிசிர மணிந்தோ னுக்குச்
சோதியு மரண மட்டுந் துலங்கிட வொன்று வைத்தாள்;

30. மீண்டும் பிரமனுல் படைக்கப் பட்டு, அருகர் குலத்தவளாகத் தோன்றினாள். முற்பிறப்பில் ஏற்பட்ட பெண்ணின் சாபத்தினுல், பிறக்கும் புதல்வர்களுக்குத் தோஷ முண்டாம். தீவினை நீங்குவதற்காக, பாம்பினைச் சடைமுடியில் தரித்துள்ள சிவபெருமான் கோயிலில், இவள் மரண காலம் வரையில் தீபமொன்று ஏற்றி வைப்பாளாகில் ;

31. மதலிகள் சுகமே யாகும் மருமமாய்ச் செய்யா ளாகில்
அதமாகுஞ் சிலவே யென்றேரும் அம்மொழி தப்பா தாகும்
வதிபதி பின்சென் மத்தை யறைகின்றே ருரூண யுத்ரம்
நிதிமிக வைசியச் சேயாய் நேருவா ளிவளே யென்றேரும்.

31. தீபம் ஏற்றிய பலத்தினால் புத்திர பாக்கியம் ஏற்பட்டு, கலமாம். கெட்ட எண்ணத்தால் தீபம் ஏற்றி வைக்கத் தவறுவாளானால், தோன்றுங் குழந்தைகளில் சில சேதமாம். கூறிய சொற்கள் தவறு. தாயின் மறு பிறப்பைச் சொல்லுகின்றேரும். திருவண்ணாமலைக்கு வடக்கில், உள்ளதோர் ஊரில், செல்வத்தை மிகுதியாகப் பெற்ற வைசிய னொருவனுக்குப் புதல்வி யாகப் பிறப்பாள் இவள் என்று கூறினேம்.

32. குறைவான குலத்தில் தோன்றுங் காரணங் கூறு மென்ன
வரன்சொல்லைத் தடுத்த லாலும் விரதத்தில் குறைவாய்ச்
[செய்தும்
அறமிச்சை யில்லா தாலும் அணுகுவாள் வைசியச் சேயாய்ப்
பெறுந்தந்தை பூர்வஞ் சொல்வோம் புண்ணிய வதியே
[கேளாய்.

32. மறு பிறவியில் தாழ்ந்த குலத்தில் பிறக்கும் காரணத்தைச் சொல் லுங்கள், என்று பார்வதி கேட்டாள். கணவன் கூறுகின்ற சொற்களுக்கு எதிர்மொழி கூறியதாலும், விரதங்களைக் குறையாகச் செய்ததாலும், தரு மத்தில் விருப்பமின்றி யிருந்ததாலும், மறுபிறப்பில் வைசிய மரபினளாய்ப் பிறப்பாள். ஜாதகன் தந்தையின் முற்பிறப்பைச் சொல்லுவோம்; புண் ணியவதியே! கேள்.

33. ஓதுரு கீழ்ப்பா லாக உறைந்திடுஞ் சமவூர் தன்னில்
தீயின்தன் குலமு தித்துச் சுதர்களு மில்லா தாகித்
தீதுகள் விலக்கு கின்ற திருக்ககாஞ்சி தனிலே சென்று
மாதவர் துதித்து மீசர் மங்கைக்கு மருச்சித் தேத்தி;

33. ஓதூர் என்ற தலத்துக்குக் கிழக்கில் உள்ளதொரு சம நிலப்பரப் பாகவுள்ள ஊரில், வன்னியர் மரபில் தோன்றி, குழந்தைகள் இல்லாமல், தீமைகளைப் போக்கி, நன்மைகளை விளக்குகின்ற காஞ்சிபுரத்திற்குச் சென்று, பெரிய தவத்தைச் செய்யும் முனிவர்கள் போற்றுகின்ற ஏகாம்பர நாதரின் பத்தினியாகிய காமாட்சி யம்மனுக்கு அருச்சனை முதலியன செய்து, துதித்து, மீண்டான்.

34. அவருடை யருளி னுலே யணுகிற்றுச் சுதர்கள் தாமும்
தவசிகட் கன்ன மீந்து சங்கரன் பக்தி கொண்டு
இவனுமே மரண மாகி இக்குலந் தன்னில் வந்தான்
பவமூள மாது சொல்வார் பாலகன் தியின் வம்சம் ;

34. அந்தத் தேவியின் கருணையால், புதல்வர்கள் தோன்றினர். பின்பு, முனிவர்களுக்குப் பக்தியுடன் உணவளித்து, சிவபெருமான்மீது பக்தி பூண்டு, மரணமடைந்து, இப்பிறப்பில் இக்குலத்தவனுகத் தோன்றினன். பார்வதிதேவி சொல்லுவாள். இவன் முற்பிறப்பில் வன்னியர் குலத்தில் பிறந்து;

35. வந்தவ னிச்சென் மத்தில் வடுகர்தங் குலமு தித்த
எந்தக்கா ரணங்கள் சொல்வீர் இகபரன் தொண்டு செய்து
மூந்திய வகதிக் கன்ன முயற்சியா யளித்த தாலே
இந்ததோர் குலமு தித்தான் இனிவரும் பிறப்பைக் கேளாய்.

35. இப்பிறப்பில் வடுகர் மரபில் தோன்றுதற்குக் காரணங்கள் யாவை ? கூறுங்கள். இம்மைக்கும், மறுமைக்கும் உரியவனுகிய கடவுளுக்குத் தொண்டு செய்தும், கதியற்ற ஏழை மக்கட்கு அன்புடன் உணவளித்து, வாழ்ந்து வந்ததால், இப்பிறப்பில் வடுகர் மரபினனுகப் பிறந்தான். இவனது மறுபிறப்பைக் கேள்.

36. அந்நகர் தன்னி லேதான் அருளுவா னிக்கு லத்தில்
என்னகா ரணங்கள் சொல்வீர் இவன்குலஞ் சீலங் கொஞ்சம்
முன்னற மில்லா மல்தான் முதல்வனும் வாழ்வ தாலே
தன்குல முதிப்பா னுகுஞ் சத்தியே மேலுங் கேளே.

36. அந்த நகரத்திலேயே இக்குலத்தில் பிறப்பான். என்ன காரணத்தால் மறு பிறவியிலும் இக்குலத்திலேயே பிறப்பான் ? கூறுங்கள். சிறிதே ஒழுக்க முடையவனுயும், தருமச் செயல்களின்றியும் இவன் வாழ்ந்து வருவதால், வடுகர் மரபிலேயே தோன்றுவான். பார்வதியே ! மேலுங் கேள்.

37. சாதகன் பூர்வஞ் சொல்வோஞ் சோழநா டதனி லாழி
பாதக மனத்த னுகப் பாஞ்சால குலமு தித்துப்
போதவே சிலர்க்கு வாய்த்தாழ் பூட்டினன் கேளிக்கை யாக
மாதவர் தவசிக் கேதான் மர்மசாத் திரத்தைச் சொல்லி;

37. ஜாதகன் முற்பிறவியைச் சொல்லுவோம். சோழ நாட்டில், திருவாழி என்ற ஊரில், கொடுமை நிறைந்த மனத்தினனுக வன்னியர் மரபில் தோன்றி, சிலருக்கு விளையாட்டாக வாய்ப் பூட்டிட்டான். மிக்க தவத்தைச் செய்த முனிவரொருவருக்கு, இரகசிய மந்திர மொன்றைக் கூறி ;

38. வாயோடச் செய்தா னின்னேன் மாதவன் மறுவெ றுப்பால்
ஓதினர் மறுசென் மத்தில் உளறுவா யுடைய ஞகி
மேதினில் வாழ்வா யென்று விளம்பியே சென்ரு ரென்ரேரும்
போதவே யந்தத் தோடம் பொருந்திற்று வச்சென் மத்தில்.

38. வாயினுல் தடங்களில்லாது பேச முடியாமல் செய்து விட்டான் இவன். தவரியும் மன வெறுப்பினுல் கூறுவார். மறுபிறப்பில் நீ குழறிப் பேசு மியல்புடையவனுய், உலகில் வாழ்ந்திருப்பாய் என்று கூறிச் சென்ரூர் என்று கூறினேம். அந்தத் தோஷம் அப்பிறவிலேயே இவனே யடைந்தது.

39. மைந்தனு மந்தி யத்தில் வாயுநோய் கண்டு மேதான்
அந்தகன் பக்கல் சென்று அயனுமே வரையப் பட்டு
வந்தவ னிவனே யென்ரேரும் வாய்ப்பூட்டுத் தோட மொன்று
மூந்திய பெரியோர் சாப மேவிற்று விவனுக் கேதான்.

39. கடைசிக் காலத்தில் வாயுரோக முண்டாகி, மரணமடைந்து, பிரமனுல் மீண்டும் படைக்கப் பட்டு, இப்பிறப்பில் பிறந்தான் இவன், என்று சொன்னேம். வாய்ப் பூட்டிட்ட தோஷ மொன்றும், முனிவர் சாப மொன்றும் இவனே யடைந்தன.

40. ஆகையா லூமை போலே அணுகிடு முன்னு லேதான்
பாகமாய்ப் பின்னுல் பேசும் பகருவோஞ் சாந்தி தானும்
எகமா மூர்த்திக் கேதான் எழில்தீப கலசஞ் செய்து
ஆகம விதிபோல் முல்லே அலரினுல் சகஸ்திர நாமம் ;

40. ஆதலினுல், இளமைக் காலத்தில் ஊமை போன்று பேசவியலாமல் விளங்குவான். சிலகாலஞ் சென்று பேசுவான். நன்கு பேசுந் தன்மையை யுடையச் சாந்தி யொன்று கூறுவோம். முதல்வனை கடவுளுக்குக் கோயி லில் தீபகலசம் ஒன்று செய்து வைத்து, வேதாகமங்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி, முல்லே மலரினுல், கடவுளின் ஆயிரம் பெயர்களேச் சொல்லி ;

41. அர்ச்சனே செய்வா ஞகில் அணுகிய வினேயும் போக்கி
மிச்சமாய் வார்த்தை யெய்தும் மூப்பது ஒன்று வாண்டில்
கச்சணி கன்னி மாதங் கழறுவோந் தந்தை கண்டம்
இச்சையா யவ்வாண்டில் கூனி யிவன்மாதுர் கண்டம்
[நேரும்.

41. அருச்சனே செய்வாஞனுல், அடைந்த தீவினே நீங்கி, நன்கு பேசுந் திறன் வரும். ஜாதகன் மூப்பத் தோரும் வயதில்; புரட்டாசி மாதம் தந்தையின் மரணத்தைக் கூறுவோம். அவ் வருஷத்திலேயே, பங்குனி மாதம் தாயின் மரணம் ஏற்படும்.

42. அன்பது நாலு வாண்டில் அழகிய மேட மாதம்
பின்பக்கஞ் சட்டி தன்னில் பிறந்தசேய் மரண மெய்தும்
இன்னவார் முனிவர் கூற எதிர்மொழி பராசர் சொல்வார்
அன்னவ ரிரண்டா மாண்டில் அணுகிடுங் கண்ட மென்றோம்.

42. ஐம்பத்து நான்காம் வயதில், சிறந்த சித்திரை மாதம் கிருஷ்ண பட்ச சஷ்டி திதியில் ஜாதகன் மரணமடைவான். இவ்வாறு முனிவர் கூற, பாராசர முனிவர் எதிர்மொழி யொன்று சொல்லுவார். ஜாதகனுக்குப் பிறந்த இரண்டாம் வருஷத்திலேயே கண்ட மொன்று உண்டாகும்.

43. காரணம் யாது வென்னக் கனமுள சகடை யொன்று
தீரமா யிருப்ப தாலே செப்பிலே மந்தத் தோடம்
கூறினீர் சரிதா னையா குருவுமே யாறில் தங்கிப்
பாரிய நாலில் வெள்ளி பானுவு மிருப்ப தாலே;

43. காரணம் என்ன? சகடயோகம் பலமாகப் பற்றி யிருப்பதால், ஜாதகனுக்கு அந்தத் தோஷத்தைக் கூறினேம். சொன்னது பொருத்த மானதுதான். ஆனல், குரு ஆறுமிடமாகிய துலாத்திலும், சுக்கிரன் சூரியன் நான்காமிடமாகிய சிம்மத்திலும் தங்கி யிருப்பதால்;

44. ஏதுநோய் வந்த போதும் இரவிமுன் பனிபோல் நீங்கும்
ஓதுவோ மவன்பின் சென்மன் உயராலங் காட்டி லேதான்
தீதிலாக் கங்கை சேயாய்ச் செனிப்பனுஞ் சுகமுண் டாகிப்
போதக வானைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

44. எவ்வித வியாதிகள் இவனுக்கு வந்தாலும், சூரியனுக்கு முன்பு பனிபோல் அவை விலகிப்போம். ஜாதகன் மறுபிறப்பைச் சொல்லுவோம். உயர்ந்த தலமாகிய திருவாலங்காட்டில், குற்றமற்ற வேளாளர் குலத்தவனுத் தோன்றி, நலமுடன் வாழ்வான். யானைமுகத்தை யுடைய விநாயகனைப் பெற்ற பார்வதியே! கேட்டிடுவாய்.

வேறு

45. இந்ததோர் சென்மம் வறுமைகள் சாணுன்
யாவர்க்கு நல்லவ னுகித்
தந்தைபூ மிகளை விருத்தியே செய்வன்
தாரணியில் சல்லியங் கொள்ளான்
வந்தவர்க் கன்னந் தருவானே தேவ
வடிமைகள் செய்திடு வானும்
சிந்தையில் கபடு கொஞ்சமு முண்டு
சித்திர மதிகமுஞ் செய்வன்.

45. இப்பிறப்பில், தரித்திரம் அடையான். அனேவர்க்கும் நல்லவனக விருப்பான். தந்தை நாளேய பூமிகளே இவன் விருத்தி செய்வான். உலகில் கடன் வாங்கமாட்டான். வீடுதேடி வந்தவர்க்கு உணவளிப்பான். தெய்வத் தொண்டுகள் செய்வான். மனத்தில் சிறிது வஞ்சனே யுள்ளவன். வீட்டை மிகுதியான சித்திரங்களால் அழகு படுத்துவான்.

வேறு

46. செனித்திடு காலந் தன்னில் சந்திரன் தசையி ருப்புக்
குனித்திடு வாண்டு மொன்று கூறிய திங்கள் நாலும்
வினவருஞ் சாத கர்க்கு மேவிப்பன் நிவிர்த்தி யாகும்
அனேயவே விவரம் ரெண்டில் அறிவிப்போந் தாயே கேளும்.

46. ஜாதகன் பிறப்புக் காலத்தில், சந்திரமகாதசையில் இருப்பு, வருஷம் ஒன்றும், மாதங்கள் நான்குமாம். அக்காலத்தில் ஜாதகனுக்கு, துன்பங்கள் ஏற்பட்டு, பின்பு நிவிர்த்தியாம். அந்த விவரங்களேப் பிற பாகத்தில் தெரிவிப்போம். தாயே! கேளுங்கள்.

ஜாதகம் 117

1. மதியும் பரிதி குசன்கோலாம்
மாலுங் தேளில் புகர்மேரு
[1]விதியன் கேது மாதையுற
விடமுங் கெண்டை பொன்நந்தி
[2]பதியு மிடபம் பலனெவ்வார்
பகர்வீர் முனியே விபரமதாய்த்
துதிசெய் வதிட்டர் தான்சொல்வார்
தோன்று மாண்பால் சென்னமுமே.

1. சந்திரன் சூரியன் செவ்வாய் துலாத்திலும், புதன் விருச்சிகத்திலும், சுக்கிரன் தனுசிலும், சனி கேது கன்னியிலும், இராகு மீனத்திலும், குரு விருஷபத்திலுமாக நவக்கிரகங்களும் நின்று, விருஷபம் ஜன்ம லக்கினமாக விருந்தால் ஏற்படும் பலன்களே சொல்லுவீர், முனிவரே! முனிவர்களால் துதி செய்யப்படும் வசிஷ்ட முனிவர் விவரமாகக் கூறுகின்றார். பிறப்பு ஆணாகும்.

ராகு		லக்கினம் குரு	
	இராசி சக்கரம்		
சுக்கிரன்	புதன்	சந்திரன் சூரியன் செவ்வாய்	சனி கேது

2. சென்னந் தந்தை யில்லமுமே
.....
..... லாத கூரையுமாம்
கருதுஞ் சிறுவு ரென்றுரைப்போம்
அனமே கோயி லவ்வூரில்
அணுகா தென்றேரு கோகுலமாம்
தனயன் சேட்ட ரகவுமே
சாற்றக் கேண்மோ சங்கரியே.

---

1. சனி
2. இலக்கினம்

2. தந்தையின் வீடு.....கூரை வேயப்பட்டதாகும். அதுவும் சிற்றாரிலாகும் என்று உரைப்போம். தாயே! அவ்வூரில் கோவில் எவையும் இல்லை. ஜாதகன், இடையர் குலத்தில் தன் தந்தைக்கு மூத்த புதல்வனாகப் பிறந்தான். இன்னும் சொல்லுகின்றோம்; கேள், பார்வதியே!

3. சங்கையி லாமல் தாய்தந்தை
தன்பின் னோர்கள் மனைவிமைந்தர்
பொங்கு யோகம் முன்சென்மம்
பொருந்தும் பின்சென் மங்களுமே
தங்குந் தந்தை குணஞ்சொல்வேன்
ஈகை கொஞ்சம் பேருடையோன்
துங்க மனமே சொற்சோரான்
தொடுத்த தையே வென்றிடுவான்.

3. சந்தேக மில்லாமல், ஜாதகனின் தாய் தந்தையர், சகோதரர்கள், மனைவி மக்கள் ஆகியோரது யோகங்கள், முற்பிறவி, எற்படும் மறுபிறவி ஆகியவனைத்தைப் பற்றியும், தந்தையின் குணங்களையுஞ் சொல்லுவோம். சிறிதே கொடை யுள்ளவன். நற்பெய ருடையவன். தூய்மையான மனத் தினன். சொல் தவறாதவன். எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடிக்க வல்லவன்.

4. இடுவ னேழை தமக்கன்னம்
இனிதா யுரைப்பன் கிருஷியுள்ளான்
கடனே கொள்வான் பணையோர்கள்
கலிக்குங் கோவு [1]மேதியுமே
படரு மேடந் தனதான்யம்
பந்து புகழச் செய்திடுவான்
இடரே யில்லா வாழ்ந்திடுவன்
மருவும் பித்தச் சூடென்றோம்.

4. ஏழைகட்கு அன்ன மளிப்பான். அன்புடன் வார்த்தையாடுவான். விவசாயம் செய்து வருவான். கடன் படுவான். பண்ணை, ஏர் முதலியன விருத்தியாம். பசுக்கள் பெருகும். வீட்டு கிலங்கள் விருத்தியாம். ஆடுகள் எருமைகள் விருத்தி யுண்டு. தன தான்யங்கள் பெருகும். பார்த்துக்கள் கொண்டாடும்படி வாழ்வான். தன்பங்க ளில்லாமல் வசிப்பான். பித்தச் சூடுள்ளவன்.

---

1. எருமை மாடு

5. என்றே துணைவர் .....
..... சொல்கடவான்
.....
இசையுந் துணைவ ரீரைஞ்சில்
நன்றே மூன்று விருத்தியதாம்
நசிக்கு மற்ற யாவையுமே
வென்றி முன்னுல் தானுரைத்த
குணத்தா னுக்கு விப்பாலன்
சென்று வருவா னிவன்குணத்தைச்
செப்பக் கேண்மோ தேவியரே.

5. தந்தையின் உடன்பிறந்தவர் பதின்மர். அவர்களில் மூவர் நிலைத் திருவார். மற்றவர் மரிப்பர். முன்புரைத்த குணங்களுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணத்தைச் சொல்லுகின்றேம். தேவியே! கேளுங்கள். வார்த்தையை மீறுதவன்.

6. தேவி பட்சன் .....
..... னுரைப்பன்
தாவி னோருக் குதவிசெய்வன்
தரணி தன்னில் கடன்கொள்ளான்
ஓவும் பூமி விருத்தியுண்டு
கூறுஞ் சொல்லே சுகமாகும்
பாவ மனமு மில்லாதான்
பகவான் பத்தி கொண்டிடுவன்.

6. மனவிமீது அன்புள்ளவன்.....பேசுவான். தன்னை அண்டினவர்கட்கு உபகாரம் செய்வான். உலகில் கடன் வாங்காதவன். விளை நிலங்கள் பெருகும். பேசும் பேச்சுக்களில் இனிமையுண்டு. கெட்ட மன மில்லாதவன். தெய்வபக்தி யுள்ளவன்.

7. தந்தை தமக்குத் தாழாதான்
தலவா சங்கள் சென்றிடுவன்
மூந்தி னோர்க்கு வனமீவன்
முறைகள்..... .....
.....ஆதரிப்பன்
பாரில் தான்யச் செட்டுசெய்வன்
விந்தை யாகத் தாரை.....
..... குடும்பியென்றோம்.

7. தந்தையினுடைய அந்தஸ்துக்குத் தாழ்வு இல்லாதவன். புண்ணியத் தலங்களுக்குச் சென்று வசித்து வருவான். பெரியோர்களுக்கு அன்ன மளிப்பன்..... ஆதரித்து வருவான். உலகில் தானிய வியாபாரம் செய்து வருவான். அதிசயமாக.....குடும்பமுள்ளவன் என்றேும்.

8. இல்லம் புதிதாய்ச் செய்திடுவன்
எந்தக் காலந் தானுரைப்பீர்
சொல்வோம் நாலு வாண்டினிலே
சொற்பக் கிரகஞ் செய்திடுவன்
புல்லும் பதிமூன் றுண்டுதனில்
பிறக்கு மேழு இல்லமுமே
.....
.....தம் தானெய்தும்.

8. புதிய வீடு கட்டுவான். எந்தக் காலத்தில் கட்டுவான் என்று சொல்லுங்கள். ஜாதகனது நான்காம். வயதில், சிறிய வீடு ஒன்று கட்டப் படும். ஜாதகனின் பதின்மூன்றும் வயதில் புதியதாக ஏழு வீடுகள் கட்டப் படும்.....வந்து சேரும்.

வேறு

9. துணைவர்க ளெழுவர் தோன்றிடு மென்றேும்
தீர்க்கமா யாணது வொன்று
பிணையிலாப் பெண்பால் மேவுமே யவ்வார்
விளம்புவோந் தீர்க்கம தாகப்
பிணையாவா மற்ற துணைவரு மென்றேும்
பேசுவோ மாண்பலன் கேளாய்க்
கனமுடன் வாழ்வன் கல்விமான் ஊகை
கனத்தவர் நேசமே கொள்வன்.

9. ஜாதகனுடன் எழுவர் தோன்றுவர். அவர்களில் ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுளுள்ளவர்கள். மற்றவர் யாவரும் நிலையார். சகோதரனின் பலன்களைச் சொல்லுவோம்; கேளுங்கள். செல்வாக்குடன் வாழ்ந்து வருவான். கல்வியறி வுள்ளவன். ஊகசாலி. பெரியோர் நட்பைக் கொள்ளுவான்.

வேறு

10. .....செய்யு மாவும்
நிதமான தானியங்க ளதனுல் லாபம்
நதிகள்பல சிவதலமும் வசித்துப் போற்றி
நல்லடியோர் மறையோர்க்கு வன்ப னுகும்
பதிசெய்வன் புதிதாகத் துணைசொல் தட்டான்
பாராளு மன்னவரால் பலனுண் டாகும்
சதியெவர்க்குஞ் செய்யாத நேச னுகும்
சாத்திரமும் புராணமதை.....

10. .....நிலங்களும், பசுக்களும்... ..... தானியங்களால் மிகுதிபான லாபமடைந்து, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, சிவக்ஷேத்திரங்களுக்குச் சென்று சிறிதுகாலம் வசித்து இறை வனைத் தோத்திரம்செய்து, சிவனடியார்கள் அந்தணர்கள் முதலானவர்க் குப் பிரியமுள விருப்பான்.....புதிய வீடு கட்டு வான். தன் சகோதரன் வார்த்தையை மீறுதவன். உலகத்தை ஆண்டு வரும் அரசர்களால் இவனுக்குப் பிரயோசனம் ஏற்படும். ஒருவருக்கும் தீங்கு நினையாதவன். அனைவருக்கும் நண்பனுவன்..... சாஸ்திரங்கள், புராணங்கள் இவற்றை;

11. .....கேளா னிவனே யாகும்
அரசுடை யுதவியினு லதிக யோகம்
விற்புருவ மாதுர்மனை யொன்றே யாகும்
விளங்கிடுமே சுதராண்பால் மூன்று மாகும்
மைப்படியாள் பெண்ணிரண்டு வளைந்தோம் பாரு
வளமான குடும்பியதாய் வாழ்வா னுமே
நெற்கட்டு வண்டியொரு.....
.....நிதான மாக.

11. .....கேட்காதவன். இவன் அரசாங்க உத்தியோகம் ஏற்று, மிகுந்த அதிர்ஷ்டங்களை அடைவான். இவனுக்கு, வில்லைப்போன்ற அழகிய புருவங்களுடைய மனைவி ஒருத்தியே யாவள். பிறக்கும் குழந்தைகளில், ஆண்மக்கள் மூவரும், பெண்கள் இரு வருமாவர் என்று கூறினேம். செழிப்புள்ள விளை நிலங்களுடன் கல்ல குடும்பத்தை யேற்று, வாழ்ந்து வருவான். நெற்கதிர்க்கட்டுகள் நிரம்பிய வண்டியுடன்.....பொருமையாக;

12. வறுமையிலாள் சுகவார்த்தை வரனுக் கன்பாம்
மாஞ்சிவப்பள் குணசாலி மறுத்துக் கூறுள்
திருமகளுக் கொப்பாக நடக்கை நன்மை
சனவுதவி செய்திடுவள் தீர மில்லாள்
பெரும்புத்தி கீழ்ப்பாலில் வரனு மெய்தும்
புத்திரரு மாணென்று பெண்பால் மூன்று
.....காதலியே
..... மணத்தின் காலங் கழறுவோமே.

12. தரித்திர மில்லாதவள். அழகாகப் பேசுவாள். தன் கணவனுக்கும் பிரியமானவள். மாறிற முடையவள். நற்குணசாலி. கணவன் சொல்லை மீறுதவள். இலக்குமி தேவிக்கு ஒப்பான அழகுடையவள். நன்னடக்கை யுள்ளவள். ஜனங்களுக்கு உபகாரி. தைரிய மில்லாதவள். தாராள புத்தி யுள்ளவள். இவளுக்குக் கிழக்குத் திக்கிலிருந்து கணவன் வாய்ப்பான். இவளுக்குப் புத்திரன் ஒருவனும் புதல்வியர் மூவரும் தோன்றுவர், ...மணமேற்படும் காலத்தைக் கூறுவோம்.

வேறு

13. மூவைந்து வாண்டு தன்னில் மேவிடுங் கிழ்ப்பால் பாரி
தாவிய துணைவி வர்க்கஞ் சாற்றின மிருசி வப்பள்
மேவிய தந்திர வாதி வீண்பழி யேற்கா ளாகும்
பாவத்திற் கிடங்கொ டாதாள் பஞ்சைகட் குதவி செய்வள்.

13. ஜாதகனின் பதினேந்தாம் வயதில் திருமணம் கடைபெறும். இவனுக்குக் கிழக்குத் திக்கிலிருந்து மனைவி வாய்ப்பான். அவள் ஜாதகனின் சகோதரியின் வர்க்கத்தைச் சேர்ந்தவள். கருமைநிற முள்ளவள். தந்திரசாலி. அபவாதங்களை யடையாதவள். தீய செயல்களை மனத்தில் நினையாதவள். ஏழைகட்கு உதவுவாள்.

14. சுதர்களுங் காண ளாகுந் தோன்றினுந் தீதே யாகும்
.....ச்சுவரி புகலு கின்றுள்
மதலைகள் தோட மெவ்வா றறைகுவீர் விவர மாகச்
சதியாக வஞ்சில் காரி செம்பாம்பு கூடி நிற்க ;

14. குழந்தைகள் பிறவா. பிறந்தாலும் நிலைத்திரா. பார்வதிதேவி கேட்கலானாள். குழந்தைகட்குத் தோஷம் ஏற்படக் காரணம் என்ன வென்று விவரமாகச் சொல்லுங்கள். கெடுதியுண்டாகும் வகையில் புத்திர ஸ்தானமாகிய கன்னியில் சனியும், கேதுவும் சேர்ந்து தங்கி;

15. நந்தியுஞ் சென்ம மாக நாட்டிலே மந்தத் தோடம்
முந்துசெய் வினையி னுலே மேவிற்று வந்தத் தோடம்
அந்ததோர் வினையைச் சொல்வீர் அவனுமுன் சென்மந்
[தன்னில்
கந்தவேள்.....தன்னில் ;

15. விருஷபமும் ஜன்ம லக்கினமாக விருப்பதால், புத்திர தோஷ மேற்படும் என்று சொன்னேம். அதுவன்றி, முற்பிறவியில் செய்த தீவினை யாலும் இங்ஙனம் நேரும் என்று கூறினேம். அந்தத் தோஷத்தைச் சொல் லுங்கள் என்று பார்வதி கேட்டாள். ஜாதகன் முற்பிறவியில் முருகப் பிரான் வாழ்ந்துவரும், ...இடத்தில்

16. மறைக்குலந் தனிலு தித்து மன்னர்பா லரசு செய்து
பெரிதான குடும்பி யாகிப் புண்ணியன் வாழு நாளில்
வருமனை தங்கை தானு மங்கல்ய மின்றி வாழ்ந்தாள்
அரிவையைப் போகந் துய்த்து அவளுக்குக் கருவு தங்கி ;

16. அந்தணர் குலத்தவனுய்ப்பிறந்து, அரசாங்க உத்தியோகம் ஏற்று, பெரியதான குடும்பத்தை யடைந்து, புண்ணியசாலியாக வாழ்ந்து வந்தான். தன் மனைவியின் தங்கை மாங்கல்யமிழந்து விதவையாக இவன் வீட்டில் வாழ்ந்தாள். அவளிடம் இவன் இன்ப மனுபவித்து வந்தான். அவளுக்குக் கருவேற்பட்டது.

17. பலவிதப் பண்டி தங்கள் பண்ணவுங் கருவ ழிந்து
குலவிய யிவ்வார் மூன்று கூறியே கருவ ழித்து
உரைக்கின்றேம் வேறு வொன்று.....
பலமுள நாக மொன்று புக்கிற்று வில்லந் தன்னில்.

17. பலவிதமான வைத்தியங்கள் செய்தான். அதனுல் கருவழிந்தது. இங்ஙனம் மும்முறை கருவைக் கலைத்தான். இது தவிர, வேறு ஒன்று சொல்லுகின்றேம். ..... பலமுள்ள நல்ல பாம்பு ஒன்று இவனுடைய வீட்டுக்கு வந்தது.

18. குடாரியா லதைப்பி டித்துக் கொன்றன னிவனே
[யென்றேம்
அடைவுட னந்தத் தோடம் அணுகிற்று விதுவு மன்றி
உடன்வந்தோன் தனக்குப் பாகம் உதவாமல் செய்தா
[னென்றேம்
திடமதா யந்தத் தோடஞ் சேர்ந்தது விவனுக் கேதான்.

18. அதைக் கொறடாவினுல் பிடித்து அழுத்திக் கொன்றான் இவன் என்று கூறினேம். அந்தத் தோஷமும் இவனைச் சார்ந்தது. அதுவுமன்றி, தன்னுடன் பிறந்த சகோதரனுக்கு, உரிய பாகத்தைத் தராமல் மோசம் செய்தான். அந்தத் தீவினையும் இவனை வந்தடைந்து.

19. .....அவன்சுதர் யாவும் பட்டு
அந்தகன் பக்கல் சென்று அருநர கினிலே புக்குப்
பிந்தியும் வேத னுலே பூமியில் வரையப் பட்டு
வந்தவ னிவனே யென்றே மங்கையுங் கேட்க லுற்றாள்.

19. .... இவனுடைய குழந்தைகளெல்லாம் இறந்தன. முடிவில் எமபுர மடைந்து மீண்டும் வேதங்களறிந்த பிரமனுல் படைக்கப்பட்டு, இக்குலத்தில் பிறந்தவன் இந்த ஜாதகன் என்று சொன்னேம். பார்வதியும் கேட்கலாளுள்.

20. முன்சென்ம மறைக்கு லத்தி லுதித்தவ னிச்சென் மத்தில்
தன்குலந் தாழ்வ தாகச் செனிக்குங்கா ரணங்க ளென்ன
அன்னவன் முன்சென் மத்தில்.....
இன்னவ னுதித்தா னென்றேம் இச்சென்ம முன்னூழ்ப்
[பாவம்;

20. முற்பிறவியில் அந்தணர் குலத்தில் பிறந்தவன் இப்பிறவியில் தாழ்ந்த குலத்தில் பிறந்த காரணங்கள் என்னவென்று கூறுவீர். ஜாதகனுடைய முற்பிறவியில் ..... இப் பிறவியில் பிறந்தான். முந்தின பிறப்பில் செய்த தீவினை இந்தப் பிறவியில்;

21. செறிந்ததால் மதலை யினஞ் செப்புவீ ரதற்குச் சாந்தி
உரைக்கின்றே மனைவி யோடு உயர்தில்லை நகரஞ் சென்று
அரன்மாலுக் கருச்சித் தேத்தி ஐயைந்து மறையோர்க்
[கன்னம்
பெருமையா யீந்து பின்பு பின்னக ரங்கள் சென்று;

21. வந்தடைந்ததால் குழந்தைகளுக்குத் தோஷ மேற்படும். அத்தத் தோஷந் தீரச் சாந்தியொன்று கூறுங்கள். ஜாதகன் தன் மனைவியுடன் உயர்ந்த க்ஷேத்திரமாகிய சிதம்பரத்துக்குச் சென்று (ஒரே ஆலயத்தில் கோயில் கொண்டுள்ள) நடராஜப் பெருமானுக்கும் கோவிந்தராஜப் பெருமானுக்கும் அருச்சனை முதலியன செய்து, துதித்து, இருபத்தைந்து அந்தணர்கட்கு, அன்புடன் அன்னமளித்து, பிறகு தன்னூருக்கு மீண்டு;

22. .....விரதங் கொள்ளப்
பாதகம் விலகி யேதான் பகருவோம் பெண்பால் ரெண்டு
மேதினி லாண்பால் காணுன் விதுரருங் கேட்க லுற்றார்
சாதகன் தனக்குக் கருமஞ் செய்குவார் விபரஞ் சொல்வீர்.

22. .....விரதம் எடுத்துக் கொண்டால், செய்த தீவினை நீங்கும். இரு பெண் குழந்தைகள் பிறக்கும். ஆண் குழந்தை பிறவாது. விதுரர் கேட்கின்றார். ஜாதகனுக்குக் கருமம் செய்பவர் யாவர் என்று சொல்லுங்கள்.

23. தன்துணை புத்திரன் தானுந் தனக்குமே கருமஞ் செய்வன்
பின்பாகம் விவர மாகப் பேசுவோம்.....
அன்னையின் குணத்தைச் சொல்வோம் அவளிரு நிறத்த
[ளாகும்
தன்சொலு மடக்க முண்டு தன்மனங் கவடு கொஞ்சம்.

23. தன் சகோதரனின் புத்திரன் இவனுக்கும் ஈமக் கடன்கள் செய்வான். பிற்பாகத்தில் விவரமாகச் சொல்லுவோம். ..... தாயின் குணங்களைச் சொல்லுவோம். கருமை கலந்த சிவந்த நிறமுடையவள். அடக்கமாகப் பேசுபவள். மனத்தில் சிறிது வஞ்சனை யுள்ளவள்.

24. பித்தசூ டுடைய ளாகும் பெண்துணை யிரண்டு தீர்க்கம்
சித்தமா யாண்பா லொன்று தீர்க்கமா மென்று சொல்வோம்
வித்தகி யில்லங் கீழ்ப்பால் விளங்கிடும் வறுமை காணுள்
நத்தின பேரைக் காப்பள் நவிலுவோ மிவள்தன் பூர்வம்.

24. பித்த சூடுள்ளவள். இவளுக்கு இரு சகோதரிகள் தோன்றி மீண்ட ஆயுளுள்ளவர்க ளாவர். ஒரு சகோதரனும் தீர்க்கமா யிருப்பான். இவளுடைய வீடு ஜாதகன் வீட்டுக்குக் கிழக்கில் இருக்கும். தரித்திரமில்லாதவள். தன்ப மடைந்தவர்களைக் காப்பாள். இவள் முற்பிறப்பைக் கூறுவோம்.

25. வாரியி னருகி லேதான் மாவலி நகரந் தன்னில்
காரிழை வன்னிய சேயாய்க் கலந்துமே சுகமுண் டாகிப்
பாரினில் சுதர்க ளுண்டாய்ப் பஞ்சைமே லிரக்க மாகி
நாரணன் பசனைக் கோட்டம் நாயகி யூறிச் செய்து ;

25. சமுத்திரக் கரையில் உள்ள மகாபலிபுரத்தில், வன்னிய மரபில் தோன்றி, சுகங்களடைந்து, புத்திர பாக்கியம் உண்டாகி, ஏழைகளின் மீது இரக்கங் கொண்டு வாழ்ந்தாள். திருமாலின் மீது பக்தியுடன் பூஜை செய்யக் கோயில் ஒன்று கட்டுவித்தாள்.

26. வரன்முன்னே மரண மாகி மறையவன் வரையப் பட்டு
அரி.....மாது
திருமகள் நாற்ப தாண்டில் சித்திரை மாதந் தன்னில்
மறலியின் பதிக்குச் செல்வள் மறுசென்மங் கூறு
[வோம்யாம்.

26. தன் கணவனுக்கு முன்பாக மரணமடைந்து, பிறகு பிரமனால் படைக்கப் பட்டு, ...
.....ஜாதகனின் நாற்பதாம் வயதில் சித்திரை மாதம் எமபுரம் அடைவாள். இவளது மறு பிறவியைச் சொல்லுவோம்.

27. பொங்கிய காஞ்சி தன்னில் பிறப்பளே சௌராட்ர வம்சம்
மங்கையுஞ் சுகமாய் வாழ்வள் அவன்தந்தை பூர்வஞ்
[சொல்வோம்
துங்கமா முனிவர் வாழுந் திருவரு ணையிலே தானுந்
.....தோன்றி கனத்ததோர் செட்டுச் செய்து ;

27. செழிப்புள்ள காஞ்சிபுரத்தில், சௌராஷ்டிர மாபில் தோன்று வாள். சௌக்கியமாக வாழ்ந்து வருவாள். ஜாதகன் தந்தையின் முற் பிறவியைச் சொல்லுவோம். தூய்மையுள்ள முனிவர் வாழ்ந்து வரும் திருவண்ணாமலை யென்ற க்ஷேத்திரத்தில்..... பிறந்து, விரிவான வியாபாரம் செய்து வந்து ;

28. அரன்தொண்டு மிகவே கொண்டு அகதிகட் கன்ன மீந்து
பெருமையாய்க் குடும்பி யாகிப் பந்துவும் புகழ வாழ்ந்து
பெரியவ ருறவு கொண்டு புக்கினன் காலன் பக்கல்
பிரமனால் வரையப் பட்டுப் பிறந்தனன் கோகு லத்தில் ;

28. சிவபெருமானுக்குப் பக்தியுடன் தொண்டுகள் செய்து, ஏழை கட்கு அன்னமளித்து, பெருமையுடன் கூடிய குடும்பத்தை யடைந்து, சுற்றத் தார் கொண்டாடும்படி வாழ்க்கை நடத்தி, பெரியோர்களிடம் நட்புக் கொண்டு வாழ்ந்திருந்து, பிறகு இறந்தான். மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு, இப் பிறப்பில் இடையர் மாபில் தோன்றினன் இவன்.

29. இந்ததோர் சென்மந் தன்னில்.....
தந்தையின் பூமி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
சந்ததம் வறுமை காணுன் சாதங்கள் குறைவு றுதான்
எந்தையே மூப்பா னேழில் எழில்மீன[1] மாதந் தன்னில்;

29. இந்தப் பிறவியில் தன் தந்தை காலத்திய விளைநிலங்களைப் பெருக்குவான். ஒரு காலும் தரித்திர மில்லாதவன். போஜன வசதிக்குக் குறைவில்லாதவன். எங்களுக்குத் தாய் போன்றவளே ! ஜாதகனின் மூப்பத் தேழாம் வயதில், பங்குனி மாதம் ;

---

1. பங்குனி

30. காலன்தன் பதிக்குச் செல்வன் கழறுவோ மிவன்பின்
[சென்மம்
சாலவே காளாத்தி தன்னில் சத்ரியக் குலமே தோன்றி
.....து வித்தகன் செய்வா னுகும்
ஆலத்தை யுண்டோன் தேவி அறைந்தது தப்பா தாமே.

30. தந்தை இறப்பான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுவோம். காளஹஸ்தி க்ஷேத்திரத்தில், வன்னியகுல க்ஷத்திரியனுகப் பிறந்து,.....
.....செய்து வருவான். கொடிய ஆலகால விஷத்தை யுண்ட பரமசிவனின் தேவியே! நாங்கள் சொன்ன சொற்கள் தவறு.

31. அறுபது வாறு வாண்டில் ஐப்பசி மாதந் தன்னில்
திருமகன் தனக்குக் கண்டஞ் செயமுனி கேட்க லுற்றூர்
கரும்பாம்பு தசையா மாதி காலத்தில் நடக்கு மென்றேரும்
உறைந்திடுங் கண்ட மென்றேரும்.....

31. தனது அறுபத்தாரும் வயதில், ஐப்பசி மாதம் ஜாதகனுக்குக் கண்டம் ஏற்படும். செய முனிவர் கேட்கலானர். ராகு மகா தசை ஜனன காலத்தில் நடைபெறும் என்றேரும். அப்போது ஜாதகனுக்குக் கண்டம் உண்டாகும் என்று கூறுவோம்.

32. இருப்பதால் வயது தீர்க்கம் இயம்பின காரணஞ் சொல்
குருவுமே சென்மந் தங்கக் குருடனு மெட்டில் நிற்க
வருவினை யதிக முண்டாய் விலகிடும் பிணியுந் தானும்
நிறையவே வயது மென்றேரும் நிகழ்த்துவோ மிவன்பின்
[சென்மம்.

32. இருப்பதால் வயது தீர்க்கம் என்று சொன்னேம். கண்டம் ஏற்படக் காரணஞ் சொல்லுங்கள். குரு ஜன்ம லக்கினமாகிய விருஷபத்திலும், சுக்கிரன் (இலக்கினுதிபதி) எட்டா மிடத்திலும் (ஆயுள் ஸ்தானம்), தங்கி இருப்பதால், தீங்குகள் மிகுதியாக ஏற்பட்டு, பிறகு அவை தீரும். நிறைந்த வயதுண்டு என்று கூறுவோம். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுவோம்.

33. உத்திரம் வேங்க டத்தில் உதிப்பனும்.....
.....மூ மேற்ப னிராசபூ சிதனு மாவன்
வித்தக னிச்சென் மத்தில் விளம்புவோம் பொதுயோ
[கத்தைச்
சித்திர வில்லஞ் செய்வன் சென்றிடம் பெருமை பூண்பன்.

33. வடக்குத் திசையிலுள்ள திருவேங்கடத்தில் பிறப்பான்.....
.....அடைவான்.
அரனால் பூசிக்கப்படுவான். ஜாதகன் இப்பிறவியில் அடையும் பொது யோகங்களைச் சொல்லுவோம். அழகிய வீடு கட்டுவான். சென்ற விடங்களி லெல்லாம் புகழடைவான்.

34. தன்னினத் தவர்க்கு மேலாய்த் தனிகளுய் வாழ்வா னுகும்
தந்தையால் பூமி பொன்னுந் தானுண்டாம் விருத்தி யாகும்
.....தும் நினைத்த வெல்லாம்
பிந்தினேர் தம்மைக் காப்பன் பிரபலக் குடும்பி யென்றேும்.

34. தன் பந்து ஜனங்களைவிட மேன்மையாகவும், தனவானுகவும் வாழ்ந்து வருவான். பிதுரார்ச்சித சொத்துக்களும். வீளை நிலங்களும் பெறுவான். அவை விருத்தியுமாம்.....
எண்ணியவெல்லாம்.....
ஏழைகளைக் காப்பான். பிரபலமான குடும்பமடைவான் என்றேும்.

35. காதலன் செனிக்குங் காலை கரும்பாம்பு தசையி ருப்பு
மேதினி லாண்டு பத்தும் விளங்கிய திங்கள் பத்தும்
தீதாகுந் தந்தை முன்னேன் செல்குவான் காலன் பக்கல்
மேதினி தன்னுல்.....

35. ஜாதகன் பிறக்கும்போது ராகு மகா தசை செலவுபோக இருப்பு: பத்து வருஷங்களும், பத்து மாதங்களுமாம். தந்தைக்கு முன் பிறந்த சகோதரன் இறந்து விடுவான். உலகில் பூமியால்.....


36. தானவன் வணக்க மாவன் சலமூல பரியு நேரும்
ஈனமாஞ் செயமி ராது இடருண்டு விந்தக் காலம்
ஆனதோர் குருவின் காலம் அதுமனம் போலே நேரும்
வானவர் பூசை செய்யு மங்கையே யிரண்டில் சொல்வோம்.

36. அவன் பணிவுள்ளவன். கடல் கடந்து அயல்நாடுகளிலிருந்து கப்பலில் வரும் குதிரைகளைப் பெறுவான். இக்காலத்தில் வெற்றி ஏற் படாது. துன்பங்கள் நேரும். குரு மகா தசையில் நன்மைகள் ஏற்படும். தேவர்களால் தோத்திரம் செய்யப்படும் பார்வதியே! இரண்டாம் பாகத்தில் மற்றவற்றைச் சொல்லுவோம்.

ஜாதகம் 118

1. ஈசனுர் வாகனந்தான் செனன மாக
ஏழில்சனி குருவைந்தில் கேது மூன்றில்
பாகமா மதிவெள்ளி யிரவி பத்தில்
பணிபுதன்சேய் நவத்திலுற பலனெவ் வாறு
நேசனெனு மாண்பாலுஞ் செனன மாகும்
நிகர்தந்தை யில்லமது கீழ்மேல் வீதி
பாசகயி றுடையவெமன் வாச லாகும்
பச்சைமால் மேல்பாலில் பெருகாக் கோட்டம் ;

1. விருஷபம் லக்கினமாகவும், ஏழாமிடமாகிய விருச்சிகத்தில் சனியும், குரு ஐந்தா மிடமாகிய கன்னியிலும், கேது மூன்ரு மிடமாகிய கடகத்திலும், சந்திரன் சுக்கிரன் சூரியன் பத்தா மிடமாகிய கும்பத்திலும், இராகு புதன் செவ்வாய் ஒன்பதா மிடமாகிய மகரத்திலு மிருக்க, ஏற்படும், பலன் எப்படி யென்று சொல்லுங்கள். ஜாதகம் ஆண்மக னுடையது. இரண்டாம் பிறவியாம். தந்தையின் வீடு கிழக்கு மேற்கான வீதியில் தெற்கு நோக்கிய வாயில் உடையது. பச்சை நிறமுடைய திருமாலின் பாழடைந்த கோயில் மேற்கில் உள்ளது.



2. அம்மாரி காளிவட கீழ்ப்பா லாகும்
அரு.....பாலில் சந்தி மேற்கில்
தும்பியுத்ரந் துலங்காது சிற்றூ ராகும்
சினகுலத்தி லிப்பாலன் செறியுந் தாயே
தென்பாக மாதுரில்லங் குடகு திக்கில்
செனித்தவனு மிப்பாலன் சேதி சொல்வோம்
.....பாலுந் தாய்தந்தை களத்ர புத்ரர்
இனிசென்ம முன்சென்ம மியம்பக் கேளாய்.

2. மாரியம்மன் கோயில், காளி கோயில் முதலியனவும் வடகிழக்கில் உள்ளன. சமீபத்தில்.....மேற்குப் பக்கத்தில் சந்து ஒன்றும், வடக்கில் பாழடைந்ததொரு விநாயகர் ஆலயமு முள்ள, ஒரு சிற்றூரில், சமண குலத்தில் இந்த ஜாதகன் பிறப்பான், தேவியே ! தெற்குப் பக்கத்தில் தாயின் வீடுள்ளது. மேற்குப் பக்கத்தில் இந்த ஜாதகன் பிறந்தவனாவான். அவனுடைய செய்தியைச் சொல்லுவோம்..... தாய், தந்தையர், மனைவி, மக்கள் இவர்கள் யோகங்களையும், இனி ஏற்படும் பிறவி, முன் பிறவி ஆகியவற்றையும் சொல்லக் கேளுங்கள்.

3. இயம்புவோந் தந்தைதுணை யாண்பால் ரெண்டு
இதுவன்றிப் பெண்ணிருத்தி தீர்க்க மெய்தும்
வியமாகு மிரண்டென்றோந் தந்தை சேதி
விளம்புவோஞ் சிவந்தமெய்யன் வாத தேகி
நயமான வார்த்தை சொல்வன்.....கையான்
நல்லோர்க்கு நல்லவனுங் கிருஷி செய்வன்
அயலார்பொ ணிச்சையிலா னருக்கன் தேளில்
ஈன்றவனுங் குறைவார்த்தை சிலவே தோன்றும்.

3. தந்தைக்கு உடன் பிறந்தவர் இரு ஆண் மக்கள், ஒரு பெண். இம் மூவரும் தீர்க்கமாயிருப்பர். இரு குழந்தைகள் பிறந்து மரிக்கும். தந்தையின் செய்திகளைச் சொல்லுவோம். சிவந்த உடல். வாத சரீர முள்ளவன். நயமாகப் பேசும் இயல்பினன்.....நல்லவருக்கு நல்லவனாக இருப்பான். விவசாயம் செய்து வருவான். பிறர் பொருளின் மீது ஆசை யில்லாதவன். கார்த்திகை மாதத்தில் இவனைப்பற்றிப் பழிகள் சில தோன்றும்.

4. தோன்றுநடை கடிதாகுந் துரிதங் கோபம்
தொடுத்ததையே வென்றிடுவன் வறுமை காணுன்
ஈன்றதாய் தந்தைக்கிட்டன் பூமி விருத்தி
இடற.....இடுக்கண் தீர்ப்பன்
சான்றோர்கள் நேசமுளன் தெய்வ பக்தி
சதுஷ்பாதம் விருத்தியுளன் தனரே கையுளான்
.....ன்றசௌ பாக்கியவா னிளம னத்தான்
பின்னில்லஞ் செய்திடுவன் புகழு மேற்பன்.

4. விரைவான நடை யுடையவன். விரைவில் கோபங் கொள்ளுவான். தொடங்கியவற்றை வெற்றியுடன் முடிப்பான். தரித்திர மில்லாதவன். தன்னைப் பெற்ற தாய்தந்தையர்க்கு விருப்பமானவன். நிலபுலன்கள் விருத்தி யுள்ளவன்.....துன்பத்தைத்

தீர்ப்பான். சான்றோர்களிடம் அன்புடையவன். தெய்வ பக்தி கொள்ளு வான். கால்நடைகள் வளர்ச்சி யுள்ளவன். கையில் தனரேகை யுள்ளவன். .....சம்பத்துக்க ளுள்ளவன். இளகிய மனத் தினன். பிற்காலத்தில் வீடு கட்டுவான். கீர்த்தி யடைவான்.

5. பன்னுமிவன் பின்துணையாண் பரணி கன்னி
பிறந்தவனின் சேதி.....
.....விழியு முண்டுசற்றே சாயல் தோன்றும்
தாரணியை விருத்திசெய்வன் பாட்டாளியாமே
தன்துணைவர் சொல்தட்டான் தன்க ரத்தில்
பத்மரே கையுமே யுள்ளோ னுவன்
வந்தவர்க் கன்னமிடு மெதிரிக் கஞ்சான்
வாக்குச்சொல் தப்பாதான் வறுமை காணுன்.

5. சொல்லப்படுகின்ற, இவனது இளைய சகோதரன் பரணி நட்சத்தி ரம் கன்னியா லக்கினத்தில் பிறந்தவன். அவன் செய்திகளை.....
.....கண்களுடையவன். சிறிது சாய்ந்த பார்வை யுடையவன். நிலபுலன்களை விருத்தி செய்வான். உழைப்பாளி. தன் சகோதரர் சொற்களை மீறுதவன். தனது கையில் பத்ம ரேகை யுள்ள வன். வீடு தேடி வந்தவர்களுக்கு உணவளிப்பான். பகைவரைக் கண்டு பயப்பட மாட்டான். சொன்ன வார்த்தை தவறுதவன். தரித்திரம் அடையான்.

6. காணு .....னன் கபடில் லாதான்
கனத்தபுத்தி .....நாற் காலி விருத்தி
வீணன மொழிபேசான் மனைவி யொன்று
மிக்கபதி னன்கினிலே மேவு வாளாம்
ஆண்சுதனு மொன்றுபெண்பா லிரண்டு தீர்க்கம்
அவியுமது வவ்வாறு சல்யங் கொள்ளான்
பூணுவான் தலவாசம்.....
போகுமட்டும் போசனத்துக் குறைவு காணுன்.

6. .....வஞ்சனை யில்லாதவன். மேலான புத்தி யுள்ளவன்.....கால்நடை வளர்ச்சி யுடையவன். வீண் வார்த்தைகளைப் பேச மாட்டான். இவனுக்கு மனைவி யொருத்தியே. இவனது பதினன்காம் வயதில், அவள் வருவாள். இவனுக்குப் புதல்வன் ஒருவனும், புதல்வியர் இருவரும் தோன்றி, தீர்க்கமாவர். மேலும் மூன்று தோன்றி மரிக்கும். கடன் வாங்குதல் செய்யான். புண்ணியத் தலங்களுக்

குச் சென்று வாசம் புரிவான்.....இறக்கும் வரை போஜன வசதிக்குக் குறைவில்லாதவன்.

7. குற்றமிலா வவன்பின்னே ஞருஞ் சென்மம்
கூரரியாம் பூரநா ளுரைத்தோ மம்மா
விரைவினிலே நடக்கவல்லன் மர்ம முள்ளான்
வீண்வம்பு செல்வாஞ்ஞ் சோம்பல் கொஞ்சம்
அருகர்பத்தி யிருநிறத்தான் யோக சாலி
அவனியிலே கிருஷியடா வடியு மாவன்
தரைவிருத்தி செய்திடுவன் சல்யங் கொள்ளான்
சாப்பாடு சுகியனென்றேம் தன்ம னத்தன்.

7. இவனுக்குப் பின்பு தோன்றிய குற்ற மில்லாத இளைய சகோதரன், ஆரும் பிறப்பாவான். அவன், சிம்ம லக்கினம் பூர்வ பங்குனி நட்சத்திரத்தில் தோன்றுவான் என்று சொன்னேம். தாயே! வேகமான நடையுடையவன். மனத்தில் மறைவுள்ளவன். வீண் வம்புக்குப் போவான். சிறிது சோம்ப லுள்ளவன். ஜினதேவனிடம் பக்தி கொள்ளுவான். கரிய நிறமுடையவன். அதிர்ஷ்ட முள்ளவன். பயிர்த்தொழில் செய்வான். அடாவடித்தன முடையவன். பூமியை விருத்தி செய்வான். கடன் கொள்ள மாட்டான். போஜன சுக முடையவன் என்று சொன்னேம். தரும சிந்தை யுள்ளவன்.

8. தன்துணைக்குத் தாழ்வானும் வறுமை காணன்
தையலர்கள் மோகமுளன் தன்சொல் மேன்மை
பின்புத்தி மனைவியொன்று புத்ர தோடம்
புரிதவத்தால் ஆண்ஒன்று பெண்பா லவ்வார்
சொன்னதுவுந் தீர்க்கமுறும் பெண்பா லொன்று
செப்பினே மவள்குணத்தைத் தாயே யாங்கள்
கன்னல்மொழி சிவந்தமேனி சீல முள்ளாள்
கவடில்லாள் நற்குணத்தாள் கனத்த புத்தி.

8. தன் சகோதரனை விட, அந்தஸ்தில் தாழ்வுள்ளவன். தரித்திர மில்லாதவன். பெண்கள்பால் மையலுள்ளவன். இவன் சொற்களை அனைவரும் மேன்மையாகக் கருதுவர். பின் யோசனை யுள்ளவன். இவனுக்கு மனைவி யொருத்தியே. இவனுக்குப் புத்திர தோஷம் உண்டு. இவன் செய்கின்ற கல்வினையால் புதல்வன் ஒருவனும், புதல்வி யொருத்தியும் தோன்றுவர். சொல்லப்பட்ட இருவரும் தீர்க்கமாவர். இவனுக்குச் சகோதரி யொருத்தி யுண்டு என்று கூறினேம். தாயே! நாங்கள் அவள் குணத்தைச் சொல்லுவோம். கரும்பு போன்ற இனிய சொற்க ளுள்ளவள். சிவந்த உட

லுடையவள். ஒழுக்க முள்ளவள். வஞ்சனை யில்லாதவள். நற்குண முள்ளவள். பெரும்புத்தி யுடையவள்.

9. புத்தியுள்ள வரனெய்துங் குடகு திக்கில்
பொருந்தாது சுதரென்றேரும் வறுமை காணுள்
சித்திரப்பணி யுடையவளாஞ் சிறப்பாய் வாழ்வள்
திகம்பரன்றன் தொண்டுசெய்யில் செனிக்கும் புத்ரர்
சுத்தமா யாணென்று பெண்பா லவ்வார்
செப்பினேம் வரன்தனியாய்ச் சிறப்பாய் வாழ்வள்
வித்தகிதன் பின்வயதில் சுதர்க ளென்றேரும்
மேம்பாடாய் வாழ்ந்திடுவள் விமலி யேகேள்.

9. இவளுக்கு மேற்குத் திசையிலிருந்து, சிறந்த அறிவுடைய கணவன் வாய்ப்பான். புத்திர பாக்கிய மடையான் என்று கூறினேம். தரித்திர மில்லாதவள். சித்திர வேலை செய்வாள். மேன்மையுடன் வாழ்க்கை நடத்துவாள். சிவபெருமானுக்குத் தொண்டுகள் செய்வாளாகில், இவளுக்குப் புதல்வர் தோன்றுவர். புதல்வன் ஒருவனும், புதல்வி யொருத்தியும் பிறப்பர் என்று சொன்னேம். தன் கணவனுடன் சிறப்பாக வாழ்ந்திருப்பாள். இவளுக்குப் பிற்காலத்தில் மக்கட் செல்வ முண்டாம் என்று சொன்னேம். மேன்மையுடன் வாழ்வாள். குற்ற மற்ற பார்வதியே! கேள்.

10. கேளீ சாதகன்றன் குணத்தைச் சொல்வோம்
கேள்வியுடன் சிவந்தமெய்யன் ஊகை சாலி
தாளாதா னற்பமொழி யொருவர் சொல்லில்
தன்சொல்லே மேம்பாடாய்ச் சாதிப் பானும்
வேளையொத்த தேகமுளன் வறுமை காணுன்
மேன்மையாய்க் கல்வியுளன் பெரியோர் நேயன்
வாளைவிழி மார்மோக னரசரிட்டன்
மாதுருசொல் சொகுசுடையன் மர்ம மில்லான்.

10. தாயே! நீங்கள், ஜாதகன் குணங்களை நான்கள் சொல்லக் கேளுங்கள். கேள்வி யறிவுடையவன். சிவந்த உடலுள்ளவன். ஊக முள்ளவன். ஒருவர் தன்னைப் பற்றிக் குறைவாகப் பேசினால் பொறுக்க மாட்டான். தான் கூறுகின்ற சொற்களே சிறந்தன வென்று நிலைநாட்டுவான். மன்மதனைப் போன்ற உடலழகுள்ளவன். தரித்திர மடையான். சிறப்பான கல்வி யறிவுடையவன். பெரியோர்களிடம் அன்புடையவன். வாள்போன்ற கண்களை யுடைய பெண்கள்பால் மையல் கொண்டவன். மன்னர்கள் விருப்பத்தைப் பெறுவான். தாயின் சொற்களைத் தட்டாதவன். சொகுசுள்ளவன். மனத்தில் மறைவில்லாதவன்.

வேறு

11. இல்லா தவர்மேல் இரக்கமுளன்
இனிதாய் ராச வதிகாரன்
சொல்லும் நெறியோன் தொடுத்ததையே
சுகமாய் வெல்வன் புகழுடையவன்
பொல்லா தாரைப் பொருந்தவைப்பன்
புகழ்சேர் ஞானம் தானுரைப்பன்
அல்ல லணுகா தென்னாளும்
அவனி மீதில் சிலநாளாம்.

11. பொருளில்லாத தரித்திரர் மீது இரக்க முடையவன். அரசாங்க உத்தியோகத்தை இனிதாகச் செய்வான். பேச்சில் ஒழுங்குள்ளவன். தொடங்கியவற்றை எளிதில் வெற்றியுடன் முடிப்பான். கீர்த்தி யுள்ளவன். பகைவர்களையும் ஒற்றுமைப் படுத்துவான். புகழ் பொருந்திய ஞான நூல்களைப் பிறருக்குக் கற்பிப்பான். எக்காளும் இவனைத் துன்பங்க ளணுகா. உலகில் சிலகாலம் ;

12. சிலநாள் வாசந் தொழிலாலே
வண்டி வாகன முடையவனும்
குலவும் பணிக ளைவைசேர்ப்பன்
கொள்வா னதிக பூமியுமே
பலனுல் பெருமை தானேற்பன்
பாரில் திருப்ப ணியுஞ்செய்வன்
நலனே யென்று போர்கொள்வன்
நவில்வான் தந்திர வார்த்தைதனே.

12. தொழில் செய்து ஜீவித்து வருவான். வண்டி முதலான வாகன வசதிகளைப் பெற்றவன். ஆபரணங்களைச் சேர்ப்பான். மிகுந்த விளைநிலங்களை யடைவான். அவற்றிலிருந்து கிடைக்கும் பயன் மிகுதியால் மேன்மை பெறுவான். உலகில் பல நற்பணிகளைப் புரிவான். இவன் நல்லவற்றையே செய்வான் என்று உலகத்தோர் கூறும் நற்பெயரை யடைவான். தந்திரமாகப் பேசுவான்.

13. தனியே துணைவர் பின்னுறு
சாரு மாறில் ஆண்தீர்க்கம்
கனமாம் பெண்பா லிரண்டென்றும்
கழறு மூன்றுந் தீர்க்கமுறும்
மனிதன் சேதி தரணியரி
வரைந்தோன் பாலன் சுகசீவி
இனமாம் பந்து பூசிதனும்
ஈகை யாளன் புறமேற்பன்.

13. இவனுக்குப் பின்பு அறுவர் தோன்றுவர். அவர்களில் சகோதர னொருவனும், சகோதரிகள் இருவரும் தீர்க்கமாவர் என்று சொன்னேம். சகோதரன் செய்தியைச் சொல்லுவோம். சிம்ம விலக்கினத்தில் இல்வுலகில் தோன்றியவன். நலமுடன் ஜீவிப்பான். தன் உறவினர்களைப் போற்று வான். கொடை வழங்குவான். பழிகளை யடைவான்.

14. பன்னு வானும் பலகலையும்
பகவான் பக்தி யதிகமுளன்
தன்சொல் லிரண்டு தானுடையன்
தரிய லரையே தான்செயிப்பன்
பொன்னு பரணந் தான்சேர்ப்பன்
பொருந்த வுரைப்பன் கிருஷிசெய்வன்
மன்னர் தம்மால் வாணிபமும்
வழுத்த குணவா னறைந்தோமே.

14. பல சாஸ்திரங்களைப் பயிலுவான். கடவுளிடம் மிகுதியாகப் பக்தி கொள்ளுவான். இருவிதமாகப் பேசுவான். பகைவர்களை வெல்லுவான். பொன்னுபரணங்களைச் சேர்ப்பான். பொருத்தமாகப் பேசுவான். பயிர்த் தொழில் புரிவான். அரசாங்க வழியால் வியாபாரம் செய்வான். பிறர் போற்றும்படியான குணங்க ளுள்ளவன் என்று கூறினேம்.

15. ஆமே யிவர்க்குத் தார மொன்று
அமைந்தோன் சுதரா ணென்றுரைத்தோம்
தீமையி லாத பெண்ணொன்று
தீர்க்க மெய்தும் பிதாபூமி
தாமே விருத்தி செய்திடுவன்
சதிராய்க் குடும்பந் தானுவன்
நேமி தன்னில் தானுதவி
நிகழ்த்து முண்மை யென்றுரைப்போம்.

15. ஜாதகனின் சகோதரனுக்கு மனைவி யொருத்தியே. புதல்வன் ஒருவன் உளனுவான் என்று சொன்னேம். குற்ற மற்ற பெண்ணொருத்தி பிறந்து நீர்க்கமாக விளங்குவாள். தந்தை காலத்திய நிலபுலன்களை விருத்தி செய்வான். பெருமை யுள்ள குடும்ப முடையவ னுவான். உலக மக்களுக்கு உதவிகள் செய்வான். உண்மையே பேசுவான் என்று சொல்லு வோம்.

16. பெண்பால் சேதி பின்னுரைப்போம்
பிறந்தோன் மணத்தின் காலமதைத்
திண்ண மிருபா னிரண்டினிலே
தேவி யமையுங் குடகினிலே
அன்னை துணைவன் புத்திரியை
அன்பாய்க் கொள்வன் குணங்கேளாய்த்
தன்மை யாவள் வறுமையிலாள்
சரச வார்த்தை ரதிதேவி.

16. சகோதரியின் செய்தியைப் பிற்பாகத்தில் சொல்லுவோம். ஜாதகன் திருமணக் காலத்தை யுரைப்போம். இவனது இருபத் திரண்டாம் வயதில் நிச்சயமாய் இவனுக்கு மேற்குத் திசையிலிருந்து மனைவி வாய்ப்பாள். தாய்மாமன் புதல்வியை அன்புடன் மணம் புரிந்து கொள்ளுவான். அவள் குணங்களைக் கேட்பாயாக. நல்ல குணங்க ளுள்ளவள். தரித்திர மில்லாத வள். சரசமாகப் பேசுவாள். இரதிதேவி போன்ற அழகுடையவள்.

17. தேவி வந்த பின்னதிக
யோகஞ் சிறப்பாய்ச் செப்பிடலாம்
நேமி நாதன் பயபக்தி
நித்திய விரதந் தான்பூண்பள்
தாவி னுரைத் தற்காப்பள்
சாற்று ளயலார் குற்றத்தைப்
பாவ மனமுஞ் செல்லாதாள்
பந்து புகழ வாழ்ந்திடுவள்.

17. இவள் வந்த பிறகு கணவனுக்கு மிகுந்த யோகங்க ளுண்டாம் என்று கூறலாம். உலகத்துக்குத் தலைவனுகிய பரமனிடம் பக்தி கொள்ளு வாள். விரதங்களை மேற்கொள்ளுவான். தன்னை யடைந்தவரை ஆதரிப் தன்னைக் குற்றங்களி னின்று காத்துக் கொள்ளுவாள். அயலார் மீது குற்றங் களைக் கூறுள். தீயவற்றில் மனத்தைச் செலுத்தாதவள். உறவினர் பாராட் டும்படி வாழ்ந்திருப்பாள்.

18. இவனே வயது தீர்க்கமுறும்
இவ்வார் வதிட்டர் தானுரைக்கத்
தவமே புரியு மத்திரியுந்
தடுத்துச் சொல்வார், சனியேழில்
கவன மேழோன் குசனுகிக்
கூரியன் பாம்பி னுடன்நிற்கப்
பவடி கையிற் சித்திரம்
....

18. இவள் தீர்க்க வயதுள்ளவள். இங்ஙனம் வசிஷ்ட முனிவர் கூறவும், தவங்களே யாற்றும் அத்திரி முனிவர் தடுத்துப் பேசுவார். ஏழாமிட மாகிய களத்திர ஸ்தானத்தில் சனியிருப்பதாலும், அவ்விடத்துக்கு உரியவன் செவ்வாயாகி, அவன் இராகுவுடனும் புதனுடனும் சேர்ந்து இருப்பதால், ...

19. .....
பதியுஞ் சிலரே வேறுவர் செப்பு மன்னே பூர்வமதை
....
.....

19. குடும்பத்திலிருந்து சிலர் பிரிந்து வேறுவர். ஜாதகன் தாயின் முற்பிறப்பைச் சொல்லுங்கள்.....

20. ....
.....முன்னே
கனமாய்ச் சென்று விக்குலத்தில்
கலந்தாள் வறுமை காணுளாம்
இனமே மதிக்க வாழ்ந்திடுவள்
இயம்பும் பின்னுல் சென்மத்தை
அனமே யரங்க மறைசேயாய்
அதிலுந் தீதா மம்பிகையே.

20. .....முன்பே, மரண மடைந்து, மீண்டும் மேன்மையுடன் இக்குலத்தில் பிறந்தாள். தரித்திர மடையாதவள். உறவினர் பாராட்டும்படி வாழ்வாள். இவள் மறு பிறவியைக் கூறுங்கள். திருவரங்கத்தில், இவள் அந்தணர் மரபினளாய்ப் பிறந்து, வாழ்ந்து, மரண மடைவாள்; பார்வதியே!

வேறு

21. அம்பிகையே தந்தைதன் பூர்வஞ் சொல்வோம்
அலையோர மோதூரில் கங்கை சேயாய்த்
தெம்பான குடும்பியதாய் மனைவி மைந்தர்
செழிப்புற்றுச் சோலைகளு மதிக முண்டாய்ப்
பொன்பலவும் பூமியதால் சீவித் தேதான்
புகழ்ந்தோர்க்கு வன்னமீந்து வநேக தர்மம்
உம்பர்பணி விடைசெய்து காலன் பக்கல்
ஒதுங்கினு னிப்பால னுமையே கேளாய்.

21. தாயே! ஜாதகன் தந்தையின் முற்பிறவியைச் சொல்லுவோம். கடற்கரையிலுள்ள ஒதூரில் வேளாளர் குலத்தவனுய்ப் பிறந்து பலமுள்ள குடும்பத்தவனுகி, மனைவி மக்களுடன் வளம்பெற்று, சோலைகள் முதலியன வைத்து, மிகுதியான செல்வமும் நிலபுலன்களும் பெற்று வாழ்ந்து, தன்னைப் புகழ்ந்தவர்கட்கு உணவு அளித்து உபசரித்து, இன்னும் பல தருமச் செயல்களைச் செய்து, தெய்வத் திருப்பணிகள் இயற்றி, மரண மடைந்தான் இவன். உமாதேவியே! கேட்பாயாக.

வேறு

22. கேளுமென் தாயே பிரமனும் வரைய
இக்குலந் தன்னிலே வந்தான்
நீள்புவி வறுமை கண்டிலா னிவனே
நிகழ்த்துவோ மறுமையில் தந்தை
தாழ்விலாக் காசி பக்கலில் சத்திய
குலத்தினி லின்னுனுந் தோன்றி
ஆழியில் கரிமா வுடையவ னுகி
அதிகமாய்ச் செல்வமே பெறுவன்.

22. என் தாயே! கேள். மீண்டும் பிரமனல் படைக்கப்பட்டு, இக் குலத்தில் பிறந்தான். உலகில் தரித்திரம் அடையான் இவன் என்று சொல்லுவோம். மறுபிறப்பில், உயர்ந்த காசி க்ஷேத்திரத்தில் அரசர் மரபில் பிறந்து, யானை குதிரைகள் உடையவனுய், மிக்க செல்வத்தையும் அடைந்து வாழ்வான்.

வேறு

23. பெறுவா னென்றீ ரிச்சென்மம்
பெற்ற செயல்கள் சொல்வீர்கள்
வருவோர்க் கன்ன மனங்களிப்பாய்
வேண்டி னோருக் குதவியதால்
அருகர் பக்தி மிகவுண்டாய்
அறத்தி விச்சை பணிசெய்து
பொரைசொல் லின்றி வாழ்வதனல்
பிறப்பன் சத்ரிய குலமாமே.

23. மறுபிறவியில் அரசர்போன்ற நிலையை ஜாதகன் தந்தை அடைவான் என்று கூறினீர்கள். இவன் இப்பிறவியில், செய்த நற்செயல்களைக் கூறுங்கள். வீட்டுக்கு வருபவர்க்கு மன மகிழ்ச்சியுடன் உணவளித்தும், தன் உதவியை விரும்பியவர்களுக்கு உபகாரங்கள் செய்தும், ஜினதேவனிடத்தில் மிக்க பக்தியுடையனுயும், தருமத்தில் ஆசைகொண்டும், திருப்பணிகள் பல இயற்றியும், கோள் கூறுமலும் வாழ்ந்திருப்பதால் மறுபிறவியில் அரசர் மரபில் தோன்றுவான்.

24. ஆமே யுதித்தோன் பூர்வமதை
அறையக் கேளாய் கலிங்கினிலே
தாமே வடுகர் தங்குலத்தில்
தரித்து வரசன் சேவனங்கள்
பூமி தனிலே வறுமையின்றிப்
பொருந்துங் காலம் வினைசொல்வோம்
நேமி தனிலே மறைமாதை
நிமல னுசை வார்த்தைசொல்லி ;

24. ஜாதகனின் முற்பிறப்பைச் சொல்லக் கேள். கலிங்க நாட்டில், வடுகர் மரபில் தோன்றி, அரசாங்க உத்தியோகத்தால் ஜீவித்து, உலகில் தரித்திர மில்லாதவனுகி, வாழ்கின்ற காலத்தில், ஏற்பட்ட தீவினையைக் கூறுவோம். ஓர் அந்தணப் பெண்ணிடம் ஆசை வார்த்தைகள் கூறி;

25. சொல்லிச் சேர்த்துச் சிலநாள்பின்
சினத்தோ டறிந்து தான்விலக்க
வல்லி பயந்து வடுகன்பால்
வந்து வுந்தன் வார்த்தையினால்
அல்ல லானே னெந்தனீ
ஆத ரித்து வாழுமென
இல்லாள் பொல்லா தாளென்பால்
வேண்டேன் நீயும் போகுவையே.

25. தன்னுடன் சேர்த்துக்கொண்டு வசித்து வந்தான். இதனை யறிந்த அவள் இனத்தவர் அவளை விலக்கினர். அத்தணப் பெண் பயந்து, இவனிடம் வந்து, உன் சொற்களைக் கேட்டுத் துன்பங்க ளடைந்தேன்; என்னை நீயே ஆட்கொண்டு காப்பாற்ற வேண்டும் என்றாள். உடனே இவன், என் மனைவி பொல்லாதவள்; உன்னை நான் விரும்பவில்லை. நீ புறப்பட்டுச் செல்லுவாய் என்றான்.

வேறு

26. ஏகுவா யென்று சொல்ல இருபிறப் பாளர் மாது
போகவே மனமு மின்றிப் புகலுவாள் சாபந் தானுஞ்
சாகுவா ளாந்தன் பாரி சனித்திடுங் கர்ப்பத் தாலே
பாகவே பின்சென் மத்தில் பத்தினி யவ்வா றுகும்.

26. புறப்பட்டுச் செல் என்று இவன் கூறவும், அந்தணப் பெண், செல்ல மனமில்லாமல் சாபமிடுவாள். தோன்றும். கர்ப்பத்தினால் உன் மனைவி மரிப்பாள். மறுபிறப்பிலும் மனைவி அங்ஙனமே மரண மடைவாள்.

27. அம்மொழி யுரைத்துச் சென்றாள் அணுகிற்று யிவனுக்
[கேதான்
துன்பங்க ளரச னாலே செய்தொழில் நீங்கி யேதான்
பொன்பணி யாவும் போக்கிப் பூமியில் வறுமை யாகிச்
செம்மையாய்த் தலங்கள் சென்று சிலர்கள்பால் யாசித்
[தேதான் ;

27. அந்தச் சொற்களைக் கூறிச்சென்றாள். அந்தத் தோஷம் இவனைச் சேர்ந்தது. அரசாங்கத்தினால் துன்பங்க ளுண்டாகி, உத்தியோகமும் நீங்கி, செல்வம், ஆபரணங்கள் யாவற்றையும் இழந்து, உலகில் தரித்திரனாகி, கல்மனமுடன் பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று, சிலரிடம் பொருள் யாசித்து;

28. தான்திருப் பணியுஞ் செய்து சண்டன்தன் பதிக்குச் சென்று
மேன்மையா யருகர் வம்ச மேவினு னிந்தப் பாலன்
மாயடி மாது சாப முறைந்திடு மிச்சென் மத்தில்
பான்மையாய்த் தாரம் ரெண்டு பகருவோர் தப்பா தாமே.

28. ஆலயத் திருப்பணிகள் செய்து, எமனுலக மடைந்து, மேன்மை யுடன் இப்பிறப்பில் ஜைன மாபில் பிறந்தான் இந்த ஜாதகன். அந்தணப் பெண்ணின் சாபம் இப்பிறப்பிலும் இவனைத் தொடரும். ஆதலின் இவ னுக்கு இரு மனைவியர் ஏற்படுவர். கூறியவை தவறுபடா.

29. தப்பாது வென்று சொன்னீர் சாந்தியுங் கூறு மென்னச்
செப்பவே மாட்டோ மம்மா செயல்மாது தோடத் துக்கு
மைப்புடன் தாரம் ரெண்டு மேவிடுங் குறிதப் பாது
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுவே.

29. சொன்ன சொற்கள் தவறுவென்று கூறினீர்கள். தோஷம் விலகச் சாந்தியொன்று கூறுங்கள், என்று பார்வதிதேவி கூறினுள். அந்த ணர் குலப்பெண்ணுல் ஏற்பட்ட தோஷத்துக்கு நாங்கள் சாந்தி கூறவே மாட்டோம்; தாயே! இவனுக்கு இரு மனைவியர் ஏற்படுவர். சொன்னவை தவறு. கங்கையைத் தரித்த சடைமுடியை யுடைய சிவபெருமான் பத் தினியே! கூறிய மொழிகள் குறைவுபடா.

வேறு

30. குன்றுமம லிவன்யோகங் கூறக் கேளாய்க்
குறித்தநா லாண்டதனில் கூடுஞ் சுபமும்
நன்றுக வைந்தாண்டி லில்லஞ் செய்வன்
நராதிபனுல் சிவனங்கள் நாட்டி னுனமே
வென்றிசெறி பதின்மூன்றில் தந்தை தாய்க்கு
விளம்புவோங் கண்டமொன்று நேருந் தானே
அன்றவன் தந்தைதாயும் பூமி விருத்தி
ஐமூன்று வாண்டினிலே குடும்பம் வேறும்.

30. இவன் இப்பிறப்பில் அடையும் யோகங்களைத் தவறுமல் சொல்லக் கேட்பராக. பிறந்து நான்கு வருஷங்களில் குடும்பத்தில் சுபங்கள் நிகழும். இவனது இருபத்தைந்தாம் வயதில் புதிய வீடு கட்டுவான். இவனுக்கு அர சாங்க உத்தியோகத்தால் ஜீவனம் நடைபெறும் என்று சொன்னேம். வெற்றி பொருந்திய இவனது பதின்மூன்றும் வயதில், தாய் தந்தையர்க்குக் கண்ட மொன்று நேரும் என்று சொல்லுவோம. அதற்குப் பின்பு குறையொன்று மின்றித் தாய் தந்தையர் தீர்க்க ஆயுளுடன் விளங்குவர். நிலபுலன்கள் விருத்தியாம். ஜாதகனது பதினைந்தாம் வயதில் குடும்பம் வேறுகப் பிரியும்.

31. வேறுகு மிருபத்தே ழாண்டில் [1]கூனி
விளம்புவோர் தந்தைக்கு மார கங்கள்
மாறுது மூப்பத்து வேழி லாளி[2]
மாதத்தி லன்னைக்கு வகுக்க லாகும்
சாரியா யெழுபது வாண்டு தன்னில்
சாடிமா தத்தினிலே சாத கர்க்குக்
கூறுவோ மாரகங்கள் குறிதப் பாது
குலவுமறு சென்மமதைக் கூறு வோம்யாம்.

31. இவ்வனம் பிரிந்த பிறகு, ஜாதகனது இருபத்தேழாம் வயதில், பங்குனி மாதம் தந்தைக்கு மரணம் சேரும் என்று கூறுவோம். தவறுமல், இவனது மூப்பத்தேழாம் வயதில், ஆவணி மாதம் தாய்க்கு மரணமுண்டாகும் என்று சொல்லலாம். எழுபதாம் வயதில், மாசி மாதம் ஜாதகனுக்கு மரணத்தைச் சொல்லுவோம். சொன்னவை தவறு. நாங்கள், ஜாதகனின் மறு பிறப்பைக் கூறுவோம்.

வேறு

32. ஆமே சேது தனிலின்னோன்
அதிக சைவக் குலமுதித்துத்
தாமே பொருளுந் தான்பெற்றுச்
சான்றோர்க் கன்னந் தானளிப்பன்
பூமி தன்னில் மிகச்செட்டுப்
பொருந்துங் கீர்த்தி மிகப்பெருகும்
தீமையி லாது தவஞ்செய்யுந்
தேவி கேளா யின்னமுமே.

32. சேதுவில், இவன், சைவ குலத்தில் பிறந்து, தன் முயற்சியால் மிக்க செல்வத்தைப் பெற்று, சான்றோர்கட்கு உணவு முதலியன அளித்து உபசரிப்பான். உலகில், மிக்க வியாபாரங்கள் செய்வான். இவன் புகழ் மிகவும் அதிகரிக்கும். குற்றமில்லாத தவங்களைச் செய்யும் பார்வதியே! இன்னுங் கேள்.

---

1. பங்குனி
2. ஆவணி

33. இன்னேன் செனன காலத்திலே
இயம்பு மவிட்ட மூன்றுங்கால்
மன்னு சேயி லாண்டிரண்டு
மறைவோ முதித்தோன் தனக்குப்பிணி
என்ன பிணியும் வந்தெய்தில்
இரவி முன்னே பனிபோலத்
துன்னு மென்றேம் பின்பாகஞ்
சொல்வோந் தோகைய ரேகேளும்.

33. இந்த ஜாதகன் பிறப்புக் காலத்தில், அவிட்ட நட்சத்திரம் மூன்றும் பாதமாம். அங்காரக மகா தசையில் இரண்டு வருஷங்கள் இருப்பாம் என்று சொல்லுவோம். அக்காலத்தில் ஜாதகனுக்கு, வியாதிகள் உண்டாம். எத்தகைய ரோகங்கள் வந்தாலும், சூரியனுக்கு முன்பு பனிபோல் மறையும் என்று சொன்னேம். மற்றச் செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுவோம்; பார்வதி தேவியே!

ஜாதகம் 119

1. மதிகுசன் கேது வீணை மறைகன்னி புகருங் கோலாம்
புதன்ரவி சீய மாகப் புயங்கனு மேரு நின்று
விதியவன் தேளதாக விடபமுஞ் சென்ம மாக
இதுவி தக் கோளு நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் செவ்வாய் கேது மிதுனத்திலும், குரு கன்னியிலும், சுக்கிரன் துலாத்திலும், புதன் சூரியன் சிம்மத்திலும், ராகு தனுசிலும், சனி விருச்சிகத்திலுமாக இவ்விதம் கவக்கிரகங்களும் நின்று, விருஷபம் ஜன்ம லக்கினமாக விருந்தால் உரிய பலன்களைக் கூறுவீர்.

		லக்கினம்	சந்திரன் செவ்வாய் - கேது
	இராசி சக்கரம்		புதன் சூரியன்
ராகு	சனி	சுக்கிரன்	குரு

2. தானது வாண்பால் சென்மந் தந்தையில் கீழ்ப்பா லாகும்
.....பத்திர காளி தென்மேல்
ஆனதோ ரோடை மேற்கில் அணுகிய சிற்றா ராகும்
தானவன் தெற்கு வில்லந் தாய்தந்தை யில்லந் தானும்.

2. இஃது ஆண் பிறப்பு. இவனது தந்தையின் வீடு கிழக்கிலுள்ளது. .....பத்திரகாளி தென்மேற்குத் திசையில் வாசம் புரிகின்றூள். நீரோடை யொன்று மேற்கிலுள்ளது. இங்ஙனமுள்ள சிறிய ஊரில், இந்த ஜாதகன் பிறந்த வீடு தெற்குத் திசையில் இருக்கின்றது. பிறந்த வீடு இவனது தாய் தந்தையர் இருவருடையதும்;

3. அல்லவே வதற்குத் தெற்கில் அநேகமாந் தலங்க ளாகும்
இல்லமும் வடதென் வீதி இந்திர நோக்க மாகும்
நல்லதோர் பேரு ராகு நற்பாண்டி தேச மாகும்
வல்லவன் யோகச் சேதி யறைகுவோ மூன்பின் சென்மம்.

3. அல்லாத அயல் வீடாம். ஜாதகன் தோன்றிய வீட்டுக்குத் தெற்கில் பல வீடுகளுள்ளன. பிறந்த வீடு தெற்கு வடக்கான வீதியில் கிழக்கு

நோக்கிய வாயிலை யுடையது. ஜாதகன் பிறந்த இடம் பாண்டி நாட்டி லுள்ள சிறந்ததொரு பெரிய ஊராகும். இவனது யோகங்களைப் பற்றியும், முற்பிறப்பு மறுபிறப்புக்களையும் இந்த நூலில் சொல்லுவோம்.

4. சென்மமு மூன்ற தாகுந் தந்தையின் துணைபன் னென்றும்
நன்மையா வாண்பால் மூன்று நங்கையு நான்க தாகும்
தின்மையா மற்ற வெல்லாந் துணையாண்பா லொருவ
[னுந்தான்
அன்னிய தேசஞ் செல்வன் அகதிபோல் அடைவா னாகும்.

4. தன் தந்தைக்கு ஜாதகன் மூன்றும் பிறப்பாவன். இவன் தகப்ப னுருக்கு உடன்பிறந்தார் பதினொருவர். அவர்களில் சகோதரர் மூவரும், சகோதரிகள் நால்வரும் நலமுடன் விளங்குவர். மற்றவர் நிலையார். சகோ தரன் ஒருவன் அயல்நாடு செல்லுவான். கதியற்றவன்போல் பல இடங் களுக்குச் சென்று பிழைப்பான்.

5. மனைகாணென் மா.....தானும்
சினமாகச் செல்வா னாகுஞ் செனிக்காமு னுத்ர மென்றேம்
வனிதையுங் கேட்க வுற்றாள் மனைசுதர் காண வண்ணம்
பிணையாகச் சென்றேன் பின்னல் பேதையும் வருமோ
[சொல்வீர்.

5. தனக்கு மனைவி இல்லாதவனுவன்..... இன்னொரு சகோதரன், கோபித்துக் கொண்டு, ஜாதகன் பிறப்பதற்கு முன்பே வடதிசை நோக்கிச் செல்லுவான் என்று கூறினேம். பார்வதி தேவி கேட்கின்றாள். மனைவி மக்கள் அறியாதபடி கோபமாகச் சென்ற வனைத் தொடர்ந்து மனைவியும் பின்பு செல்லுவாளோ ? சொல்லுங்கள்.

6. சொல்லுவோ மெம்மைப் போலே சடைமுடி தரித்துக்
[கொண்டு
எல்லைக ளதிக.....தலங்கள் சென்று
நல்லவு னங்கள் கொள்வன் வெல்லுவான் காலன் தன்னை
.....மேவுவான் தேவ னாக

6. கூறுவோம். எங்களைப்போல சடைமுடி யணிந்துகொண்டு, வெகு தொலைவிலுள்ள.....ஸ்தலங்களுக்குப் போய், மௌன விரதத்தைக் கொள்ளுவான். எமனை ஜயிப்பான். (நரகத் துன்பத்தை படையான்.).....தேவனாக விளங்குவான்.

7. ஆகுமே வாரூண் டின்மேல் அப்பாலன் நேரு மென்றோம்
பாகமாய்த் தந்தை சேதி பகருவோஞ் சதய மீனம்
போகவா னிருநி றத்தான் புரவலர் நேசங் கொள்வன்
.....ஏகு வானும்.

7. முன்பு கூறிய தந்தையின் சகோதரன். அங்ஙனம் விரதம் மேற்கொண்டு சென்ற, ஆறு வருஷங்களுக்குப் பிறகு ஜாதகன் தோன்று வான். இனி, தந்தையின் செய்தியைச் சொல்லுவோம். சதய நட்சத்திரம் மீன விலக்கினத்தில், தோன்றுவான். யோகங்களை யனுபவிப்பவன். கரியநிற முள்ளவன். அரசர்கள் நட்பைப் பெறுவான்..... செல்லுவான்.

8. ஊகவான் பலதேர் நேயன் உறுதியான் சுகபு சிப்பன்
பாகமா யன்னிய பாடை பகருவான் தைரி யத்தன்
தோகையர் மோக வானஞ் சொல்லுமுன் கோபி யாவன்
நாகரீ கங்க ளுள்ளான் நாட்டினில் புகழு மேற்பன்.

8. ஊக முள்ளவன். பலருக்கு நண்பன். மனத்திட முடையவன். சுகமான போஜனத்தைப் புசிப்பான். அயல்மொழியை முறைப்படி பேசுவான். தைரிய முள்ளவன். பெண்கள்பால் மைய லுள்ளவன். கூறுவ தற்கு முன்பு கோபங் கொள்ளுவான். நாகரிக முடையவன். உலகில் கீர்த்தி யடைவான்.

9. வறுமைக ளடையா ஞகும் மன்னர்கள் பேட்டி கொள்வன்
.....வெகு பேர்கள் பன்.....
.....உள்நிறை.....கொள்வன் உறைந்திடும் பித்த சூடு
தருகரங் கமல ரேகை சதியிலா மனத்த னென்றோம்.

9. தரித்திர மடையாதவன். அரசர்களைப் பேட்டி காண்பான்..... .....கொள்ளுவான். உடலில் பித்தசூடு பொருந்தியவன். கையில் பத்மரேகை யுள்ளவன். குற்றமற்ற மனத்தினன் என்று கூறினோம்.

10. சொன்னவிக் குணத்தா னுக்குச் சுந்தர னுதிப்பா ஞகும்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளான் சிவந்த [மெய்யன்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பான் கல்வி மானும்
பின்னமில் லாத தேகன் பொய்யது வழுத்தா நெஞ்சம்.

10. சொல்லப்பட்ட இவ்விதக் குணங்களை யுடையவனுக்கு, இந்த ஜாதகன் பிறப்பான். இவன் குணங்களைச் சொல்லுவோம். அழகுடைய

வன். சிவந்த உடலுள்ளவன். தான் கூறுகின்ற சொற்களே சிறந்தன என்று நிலை நாட்டுவான். படிப்பாளி. குற்றமற்ற உடலுடையவன். பொய் கூற நினையாத மனமுள்ளவன்.

11. கல்வியால் பெருமை பூண்பன் காலாட்கள் விருத்தி
[யுள்ளான்
இல்லையென் றுரைக்க மாட்டான் இராசபூ சிதனு மாவன்
மல்லுக்குச் செல்லா னுகும் வாக்கது சுத்த முள்ளான்
இல்லமும் புதிதாய்ச் செய்வன் எதிரிக்கு வஞ்சா நெஞ்சம்.

11. கற்குங் கல்வியால் மேன்மை பெறுவான். எவலாட்களே மிகுதியாக உடையவன். கேட்டவர்க்கு இல்லையென்று சொல்லாதவன். அரசர்களால் மதிக்கப்படுபவனும். வீண் சண்டைக்குப் போகமாட்டான் வாக்குத் தூய்மை யுடையவன். புதிய வீடு கட்டுவான். பகைவர்க்குப் பயப்படாத மனமுள்ளவன்.

12. .....கீர்த் திகளுங் கொள்வன்
பரிவண்டி யுடைய னுகும் பகவான்மேல் பக்தி கொள்வன்
நெறியுள னொருவர்க் கஞ்சான் நேர்ந்திடு மிரண்டு கல்வி
மருமமு மில்லா தானு மவன்திருப் பணியுஞ் செய்வன்.

12.....புகழை யடைவான். குதிரை வண்டியுள்ளவன். கடவுள்மீது பக்தி கொள்ளுவான், ஒழுங்குள்ளவன். ஒருவருக்கும் பயப்பட மாட்டான். இருவிதக் கல்வி பயிலுவான். மனத்தில் மறைவில்லாதவன். கோயில் திருப்பணிகள் செய்வான்.

13. கடன்கொளா னிடுக்க மில்லான் காதலி மார்கள் மோகன்
உடன்படான் பிழைக னுக்கு.....
.....யதிகங் கூர்வன் அதிகார முடைய னுகும்
படபட நடையு முள்ளான் பலதீர்த்தந் தோய்வா னுகும்.

13. கடன் வாங்க மாட்டான். தின்ப மில்லாதவன். பெண்களிடம் மையலுள்ளவன். தவறான செயல்களைச் செய்யச் சம்மதியான்..... .....மிகுதியாகச் சொல்லுவான். தரிதமான நடையுடையவன். பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவான்.

14. இன்னவன் துணைவர் தம்மை யியம்புவோ மறுவர்
[தோன்றும்
முன்துணை யாண்பா லொன்று மேவிடுந் தீர்க்க மாக
அன்னவ னிரண்டாஞ் சென்மம் அவன்குணம் நாகை வானும்
பன்னு.....வன்.

14. இவனுடன் பிறந்தார்களைச் சொல்லுவோம். ஆறுபேர் தோன்றுவர். ஜாதகனுக்கு முன்பிறந்த சகோதரன் ஒருவன் தீர்க்கமாக விளங்குவான். அவன் தன் தந்தைக்கு இரண்டாம் பிறப்பாகப் பிறந்தவன். அவன் குணங்களைச் சொல்லுவோம். கொடையாளி. சொல்லு.....

15. வித்தையும் புத்தி யுள்ளான் விடவாக்கு வடக்க முள்ளான்
நத்திணைர்க் குதவி செய்வன் ராசனுல் சீவிப்பா னும்
சுத்தவான் கல்வி ரெண்டு துணைவன்சொல் கடவா னுகும்
பத்தினி நேய னுவன் பரவுப காரஞ் செய்வன்.

15. கல்வி கற்றவன். நற்புத்தி யுடையவன். கொடிய வாக்குள்ளவன். பணிவு நிரம்பியவன். துன்ப மடைந்தவர்கட்கு உதவிகள் செய்வான். அரசாங்க உத்தியோகத்தால் ஜீவிப்பான். தூய்மை யுள்ளவன். இருவிதக் கல்வி கற்பான். சகோதரன் சொற்களை மீறுதவன். மனைவிக்குப் பிரியமானவன். பிறருக்கு உபகாரங்கள் செய்வான்.

16. குடும்பத்தை யாத ரிப்பன் குலவிடு மனைவி ரெண்டே
அடைவுடன் கூறு வோம்யாம் அம்மனுங் கேட்க லுற்றுள்
மடவாரு மிருவ ரென்றீர் மங்கையர் தீர்க்க மோசொல்
அடைவுடன் முதல்மா துந்தான் அவியுமே கர்ப்ப நோயால்.

16. குடும்பத்தை நன்கு காப்பாற்றுவான். இவனுக்கு மனைவியர் இருவர் என்று கூறுவோம். பார்வதிதேவி கேட்கின்றாள். மூத்த சகோதரனுக்கு மனைவியர் இருவர் என்று கூறினீர்கள். இரு மனைவியரும் தீர்க்காயுள்ளவர்களோ? கூறுங்கள்: முதல் மனைவி கர்ப்ப வேதனையால் இறப்பாள்.

17. மதலைகள் பெண்பா லொன்று வறைகின்றேந் தீர்க்க மாக
இதுவன்றிக் காணு ளாகும் இளையவள் தனக்குப் புத்ரர்
சதமுட னுண்பால் ரெண்டு சத்தியு மவ்வா றுகும்
.....னுகும் நிதானமாங் குடும்பி யென்றோம்.

17. மூத்த மனைவிக்கு, பெண் ஒருத்தி பிறந்து, தீர்க்கமாக விளங்குவாள் என்று சொல்லுகின்றோம். இவள் தவிர, வேறு மக்கள் தோன்றார். இளைய மனைவிக்கு, ஆண்கள் இருவரும், பெண்களிருவருந் தோன்றுவர். .....அமைதியான குடும்ப முடையவள் என்று சொன்னோம்.

18. இன்னமுஞ் சிலவே சேதி இயம்புவோம் விவரம் ரெண்டில்
பின்துணை யாண்பா லொன்று பெண்ணது விரண்டு தீர்க்கம்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அம்பிகை யாளே
[கேளாய்
உன்னத வார்த்தை சொல்வன் உள்மனம் கபடு மூண்டு.

18. இன்னுஞ் சில செய்திகளை விவரமாக இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். ஜாதகனுக்குப் பின்பிறந்த சகோதரன் ஒருவனும், சகோதரிகள் இருவரும் தீர்க்கமாக விளங்குவர். இவ்விய சகோதரனின் குணங்களைக் கூறுவோம். பார்வதியே! கேட்பாயாக. உயர்ந்த முறையில் பேசுவான். மனத்தில் வஞ்சனை யுடையவள்.

19. சொல்லது விரண்டு முண்டு.....தை கூர்வன்
வெல்லுவான் எதிரி தன்னை வித்தையு மிரண்டு முள்ளான்
வல்லியால் பெருமை யேற்பன் மன்னர்கள் பேட்டி
[கொள்வன்
புல்லிய புத்தி கொஞ்சம் பூமியில் வறுமை காணுன்.

19. இருவிதமாகப் பேசுவான்.....சொல்லுவான். பகைவரை வெல்லுவான். இருவிதக் கல்வி கற்றவன். மனைவியால் மேன்மை பெறுவான். அரசர்களைப் பேட்டி காண்பான். சிறிது அற்ப புத்தியுண்டு. தரித்திர மடையான்.

20. பாரியு மொன்றே யாகும் பாலர்க ளாண்பால் மூன்று
நாரிழை நான்க தாகும் .....
.....மத்தி யத்தில் மேவுவான் வேற தாக
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

20. இவனுக்கு மனைவி யொருத்தியே. மக்களில், ஆண்கள் மூவரும் பெண்கள் நால்வருமாவர்.....மத்திய வயதில் வேறு குடும்பமாகச் செல்லுவான். சுப்பிரமணியக் கடவுளைப் புதல்வராகப் பெற்ற பார்வதியே! கேள்.

21. சாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மொருபா குறில்
மேதினி லுத்தி ரத்தில் விளங்கிய தந்தை வர்க்கம்
காதலி வருவா ளாகுங் கழறுவோ மவள்கு ணத்தை
மேதினில் சிவந்த மேனி வரன்மனம் போலே வாழ்வள்.

21. ஜாதகன் திருமணக் காலத்தைச் சொல்லுவோம். பதினைரும் வயதில், வடக்குத் திசையிலிருந்து, இவனது தந்தை வழியைச் சேர்ந்த பெண்ணொருத்தி மனைவியாக வாய்ப்பாள். அவள் குணங்களைச் சொல்லுவோம். சிவந்த உடலுடையவள். கணவனின் மனமறிந்து வாழ்வாள்.

22. .....து மாகும் அன்புள மனத்த ளாகும்
தன்சொலு மடக்க முள்ளாள் தர்மமாங் குணத்த ளாகும்
பொன்பணி யதிக முள்ளாள் பொருந்தின வார்த்தை
[சொல்வள்
தன்னிலே வயது தீர்க்கம் சங்கரி கேட்க லுற்றுள்.

22. .....ஏற்படும். அன்பு பொருந்திய மனத்தினள். சொற்களில் பணிவு நிரம்பியவள். நற்குண முடையவள். செல்வம், ஆபரணங்கள் இவைகளை நிரம்பப் பெற்றவள். பொருந்தும் வகையில் பேசுவாள். தீர்க்கமான வயதுடையவள். பார்வதி கேட்கின்றாள்.

23. மாதுரு விரண்டு வென்றீ ரறைகுவீ ரந்தச் சங்கை
மேதினில் முதல்மா துக்கு முந்திய புதல்வ ருண்டோ
காதலி யவர்க்குப் புத்ரர் கழறினே மொன்று தீர்க்கம்
நீதியா யிவனின் தாயார் நேரிடும் ரெண்டா மாதாய்.

23. இவனுக்குத் தாய்மார் இருவர் என்று சொன்னீர்கள்? அந்தச் சந்தேகத்தை விளக்குங்கள். மூத்த தாயாருக்குப் புதல்வர்கள் உளரா வரோ? அவளுக்குப் புதல்வன் ஒருவன் பிறந்து தீர்க்கமாவான் என்று கூறினேம். இவனுடைய தாயார், இவன் தந்தைக்கு இளைய மனைவியாவாள்.

24. அத்திரி சொல்லு கின்றார் அம்மனை வயது தீர்க்கம்
பெற்றகா ரணங்க ளெவ்வார் பேசுவீர் முனியே நீர்தாம்
சுத்தமாய் நாலோ ரறில் விதியத்தோன் சேர்ந்த தாலே
வித்தகி.....த்தான்.

24. அத்திரி முனிவர் கூறுகின்றார். தந்தைக்கு, முதல் மனைவி தீர்க்கமாக இருப்பதற்குக் காரணங்கள் யாவை? முனிவரே! நீங்கள் சொல்லுங்கள். நான்கா மிடத்தவனுகிய சூரியன் ஆறுமிடத்தில் சனியுடன் சேர்ந்திருப்பதால், முதல் மனைவி;.....

25. ஆகியுங் காரி யேழில் அணுகியே யிருப்ப தாலே
பாகமா யபிமா னப்பெண் பற்றுமே முப்பா னுண்டில்
மோகமாய்க் கவரை மாது மெய்திடு மென்று சொல்வோம்
ஏகமாய்த் தவங்கள் செய்யும் வித்தகி மேலுங் கேளே.

25. ஆனாலும், சனி களத்திர ஸ்தானமாகிய விருச்சிகத்தில் தங்கியிருப்பதால், ஜாதகனுடைய மூப்பதாம் வயதில், அபிமானப் பெண் ஒருத்தி வருவாள். கவரை குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி, இவனுக்கு அன்

புடன் அபிமானப் பெண்ணுவாள் என்று கூறுவோம். மிக்க தவங்களைப் புரியும் பார்வதியே! கேட்பாயாக.

26. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மினிமே லாகச்
சுத்தமா யாண்பா லொன்று தோகையு நான்கு மாகும்
பத்திய வைந்துந் தீர்க்கம் பரந்திடு மென்று சொன்னேம்
வித்தகன் தனக்குச் சேட்டர் வீறுது வென்று சொன்னேம்.

26. இனிமேல் ஜாதகனுக்குப் புத்திர பாத்தியத்தைப் பற்றிச் சொல்லுவோம். சிறந்த ஆண்மக னொருவனும், பெண்கள் நால்வரும் தோன்றுவர். இவர்கள் ஐவரும் தீர்க்கமாக விளவகுவர் என்று கூறினேம். இவனுக்கு, முதலில் தோன்றும் குழந்தைகள் சில கிலேயா என்று சொன்னேம்.

27. சுதனுமே யிவன்மே லாகச் செப்பலாம் யோகந் தானும்
விதங்களைச் சொல்லு.....
அதிகார முடைய னுகும் அநேககீர்த் திகளு மேற்பன்
கதிதருங் கடவுட் பக்தி கனத்ததோர் குடும்பி யாவன்.

27. இவன் புதல்வன் இவனுக்கு மேலான யோகங்களை யனுபவிப்பான் என்று சொல்லலாம். காரணங்களைக் கூறுங்கள்..... .....அதிகாரமுள்ள பதவியை வகிப்பான். மிக்க புகழ்பெறுவான். கடவுட் பக்தி யுள்ளவன். மதிப்புள்ள குடும்ப முடையவனுவான்.

28. அன்னையின் குணத்தைச் சொல்வோம் அன்புள மனத்த
[ளாகும்
தன்சொலு மடக்க முண்டு தன்வரன் மனம்போல் வாழ்வள்
..... கோபங் கொஞ்சம்
பின்னமில் லாத தேகம் பொருந்திடும் பித்த சூடு.

28. ஜாதகன் தாயாரின் குணங்களைச் சொல்லுவோம். அன்பு பொருந்திய மனத்தினள். பணிவு நிரம்பிய சொற்களைக் கொண்டவள். தன் கணவனின் மனமறிந்து நடப்பாள்..... .....கோபம் சிறிதுண்டு. குற்றமில்லாத உடலுடையவள். பித்தசூடு பொருந்தியவள்.

29. வருவோரை யாத ரிப்பள் மர்மத்தை வெளிக்காட் டாதாள்
திருமக ளொப்ப தாகுந் தேவியும் யோக சாலி
பெரும்புத்தி யுடைய ளாகும் பெண்துணை யொன்றே
[தீர்க்கம்
வருமாண்பால்..... .....

29. வீடு தேடி வருபவரைப் பரிவுடன் காப்பாள். மனத்திலுள்ள இரகசியங்களை வெளிப்படுத்த மாட்டாள். இலக்குமி போன்ற வடிவழகுள்ளவள். இவள் அதிர்ஷ்ட முள்ளவள். தாராள புத்தி யுடையவள். இவளுக்குச் சகோதரி யொருத்தி தீர்க்கமாக விருப்பாள். தோன்றும் சகோதரன்.....

30. உத்திர மில்ல மாகும் உரைக்கின்றே மவள்தன் பூர்வம்
அத்தியின் வரதர் வாழும் அக்காஞ்சி தன்னி லேதான்
வித்தகி வன்னிய சேயாய் விளங்கியே வரனு மவ்வார்
சுத்தமு முடைய ளாகிச் சுதர்களு மதிக மூண்டாய்;

30. இவள் வீடு வடதிசையி லுள்ளது. இவள் முற்பிறப்பைச் சொல்லுகின்றோம். அத்தி வரதர் எழுந்தருளி யிருக்கின்ற காஞ்சிபுரத்தில், வன்னியர் மரபினளாய்ப் பிறந்து, கணவனை யடைந்து, தூய்மை யுடையவளாய், மக்கட் செல்வம் நிரம்பப் பெற்று ;

31. தேவதாப் பக்தி கொண்டு சிறுத்தவர்க் கன்ன மீந்து
.....மூன்ப தாகப்
பூவயன் வரையப் பட்டுப் பிறந்தன ளதற்குத் தெற்கில்
பாவையும் வந்த பின்பு பாவலன் தனக்கு யோகம்.

31. தெய்வ பக்தியுடன், துன்பமடைந்தவர்கட்கு உணவு முதலியன அளித்து,.....முன்பாகவே, தாமரை மலரில் எழுந்தருளியுள்ள பிரமனால் மீண்டும் படைக்கப்பட்டு, முன்பு பிறந்த ஊருக்குத் தெற்கில் பிறந்தாள். இவள் வந்த பிறகு, ஜாதகன் தந்தைக்கு யோகங்களுண்டாம்.

32. மறுசென்ம மாழி தன்னில் வைசியக் குலகு தித்துப்
பெருமையும் புகழு மேற்பள் பூமியில் வறுமை காணுள்
உரைக்கின்றேந் தந்தை பூர்வ மோதூருக் கருகி லேதான்
தெரியு.....னென்றேரும்.

32. மறுபிறப்பு, திருவாழி என்ற தலத்தில், வைசிய மரபில் பிறந்து, மேன்மையுங் கீர்த்தியு மடைவாள். தரித்திர மில்லாதவளாவள். ஜாதகன் தந்தையின் முற் பிறப்பைச் சொல்லுகின்றோம். ஓதூருக்கு அருகில், ...என்று சொன்னோம்.

33. சுகமுள குடும்பி யாகிச் சுதர்களு மதலை யுண்டாய்
இகபர னன்பு ளோர்க்கு ஈன்றனன் தாக மன்னம்
தகைமையாய்த் தலங்கள் சென்று சான்றோர்மேல் பக்தி
[கொண்டு
பகையான காலன் பக்கல் பறந்தன னென்று சொல்வோம்

33. சௌக்கியமுள்ள குடும்பத்தவனும், மனைவி மக்களை யடைந்து, கடவுளிடம் பக்தி பூண்ட அடியவர்கட்கு உணவு, நீர் முதலியவைகளை அன்புடனளித்து உபசரித்தான். பல புண்ணியத் தலங்கட்கு யாத்திரை சென்று, சான்றோர் மீது பக்தி பூண்டு, பகைவனுன எமனிடஞ் சேர்ந்தான் என்று கூறுவோம்.

34. கஞ்சனுல் வரையப் பட்டுக் கலந்தன னிக்கு லத்தில்
தஞ்சமா யரங்கந் தென்பால் செனிப்பனும் பிரம்ம சேயாய்
.....வின்யோகம் செப்புவோம் மறுசென் மத்தை
மிஞ்சிய குடும்பி யாகி வித்தகன் வாழ்வா னுமே.

34. மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு, பிறந்தான். இவன் மறு பிறப்பைச் சொல்லுவோம். திருவரங்கத்துக்குத் தெற்கில், அந்தணர் மரபினனுய், இந்தக் குலத்திலேயே பிறப்பான். யோகங்களை அடைவான். மேலான குடும்பத் தவனுய் உலகில் வாழ்வான்.

35. உதித்தவன் பூர்வஞ் சொல்வோம் உயர்தில்லை தன்னி
[லைதான்
நிதிமிக வுடையோ னுக்கு நேர்ந்தனன் வைசியச் சேயாய்
அதிதி.....ஆ லயங்கள் சென்று
சுதனின்றி வாழ்ந்தா னென்றேங் தோகையே கேட்டி டாயே.

35. ஜாதகனின் முற்பிறப்பைச் சொல்லுவோம். உயர்ந்த சிதம்பரத்தில், செல்வம் மிகுதியாகப் பெற்ற வைசியனுருவனுக்குப் புதல்வனுகப் பிறந்தான். விருந்தாக வந்தவர்க்கு, உணவளித்து, பல தலங்களிலுள்ள கோயில்களுக்குச் சென்று, கடவுளரை வழிபட்டு, புதல்வர்களின்றி வாழ்ந்தான் என்று கூறினேம். பார்வதியே! கேள்.

36. மறலியின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப் பட்டு
உறைந்தன னிக்கு லத்தில் உதித்தவன் யோகஞ்
[சொல்வோம்
பெருமையுங் கீர்த்தி யேற்பன் புண்ணிய மனத்த னுகும்
அரசனுல் தொழிலு மூள்ளான்.....பன்.

36. பின்பு மரணமடைந்து, திருமாலின் மகனுகிய பிரமனுல் படைக்கப் பட்டு, இக்குலத்தவனுகப் பிறந்தான், இவனது யோகங்களைச் சொல்லு

வோம். மேன்மையுங் கீர்த்திபுமடைவான். நல்மன முள்ளவன். அரசாங்க உத்தியோகஞ் செய்வான்.

37. வண்டிவா கனமு முள்ளான் மாநில மதிகஞ் சேர்ப்பன்
அண்டினோர்க் குதவி செய்வன் அவன்பந்து மேலாய்
[வாழ்வன்
தண்டமிழ் நுணுக்கந் தேர்வன் திருப்பணி செய்வா னுகும்
எண்டிசை நல்லோ னுவன் இவன்தந்தை பாக மூன்றுய்.

37. வண்டி முதலான வாகன வசதிகள் பெற்றவன். நிலபுலன்கள் மிகுதியாகச் சேர்ப்பான். தன்னை அடைந்தவர்க்கு உபகாரங்கள் செய்வான். தன் உறவினர்களைவிட மேன்மையாக வாழ்ந்திருப்பான். தண்மையான தமிழ்க் கல்வியின் நுட்பங்களை ஆராய்வான். நற்பணிகள் பல செய்வான். எட்டுத் திசைகளிலும் நல்லவனுக விளங்குவான். இவன் தந்தையின் சொத்துக்கள் மூன்று பங்குகளாகப் பிரிக்கப்பட்டும் ;

38. கூறுவோ மிருப தாண்டில்.....க
மாறிடு நாற்ப தாண்டி லறைகின்றேம் பின்பால் சேதி
ஆறஞ்சு வாண்டு தன்னில் அணுகிய கன்னி மாதம்
பாரினில் தந்தை கண்டம் பகர்ந்தது தப்பா தாகும்.

38. ஜாதகனது இருபதாம் வயதில்,.....என்று சொல்லுவோம். நாற்பதாம் வயதில், அது மாறும். பிற்பாகத்தில் விவரமாகச் சொல்லுகின்றேம். ஜாதகனது முப்பதாம் வயதில், புரட்டாசி மாதம் தந்தைக்கு மரணம் நேரும். சொன்னவை தவறு.

39. முப்பது நாலு வாண்டில் [1]மூலமா தத்தி லேதான்
செப்புவோ மன்னை கண்டஞ் சனித்தவன் தனக்குக்
[கேளாய்
.....மாதந் தன்னில்
அப்பனி னுடல மேகும் அத்திரி சொல்லு கின்றூர்.

39. ஜாதகனின் முப்பத்து நான்காம் வயதில், ஆவணி மாதம் தாயின் மரணத்தைச் சொல்லுவோம்.....மாதத்தில், ஜாதகன் மரணம் நேரும். அத்திரி முனிவர் சொல்லுகின்றூர்.

40. ஐந்தாண்டில் ராகு சக்ரம் அட்டம மிருப்ப தாலே
வந்திடுங் கண்ட மென்றேம் வதிட்டருஞ் சொல்லு கின்றூர்
ஐந்திடங் குருவே நிற்க அருணனும் நாவில் நிற்க
புந்தியின் தசையி லேதான் போற்று.....

1. ஆவணி

40. ராகு, ஆயுள் ஸ்தானமாகிய எட்டாம் மிடத்தில் இருப்பதால், ஜாதகனது ஐந்தாம் வயதில், கண்டம் ஏற்படுமென்று கூறினோம். வசிஷ்ட முனிவர் சொல்லுகின்றார். ஐந்தாமிடமாகிய புத்திர ஸ்தானத்தில் குருவும், சிம்மத்தில் புதனும் இருப்பதால், புதமகாதசையில் ;

41. இதுவன்றிப் பத்தோ னேழில் இருப்பதால் தாய்தந் தைக்கு
வதிபனுங் [1]கருமஞ் செய்வன் அவன்தாதை யெட் டாண்டில்
[கண்டம்
சதியிலா வீரா ருண்டில் தந்தையின் தாய்க்குக் கண்டம்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை புகன் றிட் டோமே.

41. இதுவும் தவிர, பத்தாமிடத்துக்கு உரியவனான் சனி, ஏழாமிடமாகிய விருச்சிகத்தில் இருப்பதால், ஜாதகன் தாய் தந்தைக்குக் கருமம் செய்வான். இவன் பாட்டனாருக்கு இவனது எட்டாம் வயதில் கண்டம் சேரும். பன்னிரண்டாம் வயதில, தந்தையின் தாயாருக்கு (பாட்டிக்கு)மரணம் உண்டாகும். முனிவர்களைக் காக்கின்ற பார்வதியே! இங்ஙனம் நாங்கள் சொன்னோம்.

42. இன்னவன் தேடும்.....னென்றோம்
அன்னவன் சென்ன காலம் ஆரலின் தசைமூன் றாண்டும்
மன்னிய திங்க ளொன்று மறைகின்றோம் பலநா யாங்கள்
தன்துணை விருத்தி யாகுஞ் செனித்தவன் தனக்குக் கண்டம்.

42. இந்த ஜாதகன்.....என்று சொன்னோம். இவனது பிறப்புக் காலத்தில், அங்காரக மகாதசை மூன்று வருஷங்களும் ஒரு மாதமும் இருப்பாம். அக்காலத்துக்குப் பலன்களை நாங்கள் சொல்லுகின்றோம். சகோதர விருத்தி ஏற்படும். ஜாதகனுக்குக் கண்டமொன்று ;

43. வந்திடும் நிவிர்த்தி யாகும் வருந்தந்தை துணைசு பங்கள்
விந்தையா.....மெய்து
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விபர மாக
இந்திரன் இறைஞ்சு மாதே இம்மொழி தப்பா தாமே.

43. சேர்ந்து, நீரும். தந்தையினுடன் பிறந்தவர்க்குச் சுபச் செயல்கள் நிகழும். வியப்பாக.....அடையும், பிற்பாகத்தில், விவரமாக மற்றவற்றைச் சொல்லுவோம். இந்திரன் வணங்குகின்ற பார்வதி யம்மையே! நாங்கள் கூறிய மொழிகள் தவறு.

---

1. ஈமக்கடன்.

ஜாதகம் 120

1. பிறைநந்தி புதன்பான் சியம் புகர்கன்னி பணிசேய் கோலில்
குருகாரி மேரு வாகக் [1]கொண்டலில் கேது தங்க
எருதுமே சனன மாக இயம்புவீர் பலனே யென்று
அரன்மாது கேட்கும் போது அத்திரி புகலு கின்றார்.

1. சந்திரன் விருஷபத்திலும், புதன் சூரியன் சிம்மத்திலும், சுக்கிரன் கன்னியிலும், இராகு செவ்வாய் துலாத்திலும், குரு சனி தனுசிலும், மேஷத்தில் கேதுவும் தங்கியிருந்து, விருஷபம் இலக்கினமாகவும் இருந்தால் உண்டாகும் பலனைச் சொல்லுங்கள் என்று சிவபெருமானின் தேவியாகிய பார்வதி கேட்கும்போது, அத்திரி மாமுனிவர் கூறுகின்றார்.

	கேது	லக்கினம் சந்திரன்	
	இராசி சக்கரம்		சூரியன் புதன்
குரு சனி		இராகு செவ்வாய்	சுக்கிரன்

2. இந்தசே யாணுஞ் சென்மம் இயம்புவோங் கீழ்மேல் வீதி
தென்பார்வை யெதிர்வீ டில்லை சினர்கோட்டங் காணு
[மென்றோரும்
முந்துமா லீசன் கோட்ட முடிவுறு மவ்வூர் தன்னில்
அந்தரக் காளி யுத்ரம் அறுபட்ட மாரி தென்மேல்.

2. இந்த ஜாதகம் ஆண் குழந்தையி னுடையது. இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கு வீதியில் தெற்கு நோக்கி யுள்ள வாயிலை யுடையது. எதிர்ப் பக்கத்தில் வீடுகளில்லை. ஆனல் ஜைன தேவர் கோயில் ஒன்றுளது. முதல்வரான சிவபெருமான் கோயில் ஒன்று பாழடைந் துளது. அவ்வூரில் வடக்குத் திசையில் காளி கோயில் உண்டு. மாரியம்மன் கோயில் தென்மேற்குத் திசையிலும் ;

---

1. மேஷ விராசி

3. இத்தகை யடையா ளத்துள் இறங்குவா னெட்டாஞ்
[சென்மம்
முத்தின சினகு லத்தில் மொழிகின்றேம் தந்தை யன்னை
வித்தகன் யோகச் சேதி விளம்புவோ மிந்நூல் தன்னில்
அத்திறை வளர்த்த மாதே அறைகின்றேம் கேட்டி டாயே.

3. உள்ள இத்தகைய அடையாளங்களை யுடைய ஊரில், ஜாதகன் முதிர்ந்த சமண குலத்தில், தன்தந்தைக்கு எட்டாம் பிறப்பாகப் பிறப்பான். ஜாதகனின் தந்தை தாய் மற்றும் அவனுடைய யோகங்கள் யாவற்றையும், இந்தச்சோதிட நூலில் சொல்லுகின்றேம். விநாயகனைப் பெற்று வளர்த்த தாயே! கேளுங்கள்.

4. குதிரைநா ளெருது ராசி குதிப்பனு மால்நி றத்தான்
சதியிலா மனத்த னுகுந் தனமது பெருக்கஞ் செய்வன்
அதிதிகட் கன்ன மீவன் ஆபத்தென் றோரைக் காப்பன்
ததிநெய்பா லிட்டங் கொள்வன் தானியப் பெருக்கஞ்
[செய்வன்.

4. அசுவனி நட்சத்திரம் விருஷப ராசியில் (ஜாதகனின் தந்தை) பிறப்பான். அவன் கரிய நிறமுள்ளவன். கெட்ட மனமில்லாதவன். செல்வத்தை விருத்தி செய்வான். அதிதிகளுக்கு அன்ன மளிப்பான். தன்ப மடைந்தவரைக் காப்பாற்றுவான். தயிர் பாலில் விருப்ப முள்ளவன். தானியங்களைப் பெருக்குவான்.

5. துணைவியால் பெருமை யேற்பன் சோம்பிடான் காரி யத்தில்
தணிவுள குணத்தா னுகுந் தரணிகள் விருத்தி செய்வன்
சினமுண்டு வெளிக்காட் டாதான் செகமதில் நல்லோ
[னுவன்
நினைத்ததை முடிக்க வல்லன் நிர்மலன் பக்தி கொள்வன்.

5. மனைவியால் (ஜாதகனின் தாய்) பெருமை அடைவான். காரியங்களில் சோம்பலில்லாதவன். குளிர்ந்த நெஞ்ச முடையவன். வினைநிலங்களைப் பெருக்குவான். கோப மடைவான். ஆனால் வெளியில் காட்ட மாட்டான். உலகத்தவருக்கு நல்லவனுக இருப்பான். எண்ணிய காரியத்தை முடிக்கும் வல்லமை யுள்ளவன். கடவுள் மீது பக்தி யுடையவன்.

6. ஊகைவான் நுணுக்கந் தேர்வன் உயர்வான புத்தி யேற்பன்
ஆகம மறிந்தோ ருக்கு அன்னமு மன்பா யீவன்
நாகரி கங்க ளுண்டு நாற்காலி பலித மாகும்
வேகமாய் நடக்கி வல்லன் வேந்தர்பூ சிதனு மாவன்.

6. ஊகமுள்ளவன். சாஸ்திர ரகஸ்யங்களை அறிந்து தேர்ச்சி பெறுவான். மேலான புத்தியுள்ளவன். வேதங்களறிந்தவர்கட்கு அன்புடன் அன்ன மளிப்பான். நாகரிகமாக வாழ்ந்து வருவான். பசு முதலியன விருத்தி அடையும். விரைவாக நடப்பான். அரசரால் கன்கு மதிக்கப் படுவான்.

7. தன்துணை யாண்பா லொன்று தங்காது வென்று
[சொன்னேம்
கன்னிமார் நால்வர் தீர்ககங் கனமுளக் குடும்ப மேற்பன்
சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளான் சிவந்த
[மேனி.

7. உடன் பிறந்த சகோதரன் ஒருவன் உண்டு. ஆனால் அவன் தரித்திரான். நான்கு சகோதரிகள் தீர்க்கமாயிருப்பர். செழிப்புள்ள குடும்பத்தை யடைவான். இங்ஙனம் சொல்லிய குணங்களை யுடைய தந்தைக்குப் புதல்வனாக ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணத்தைக் கூறுவோம். அழகுள்ளவன். சிவந்த உடல்.

8. வித்தையு மூன்று நேரும் விவேகியா மூன்கோ பத்தன்
புத்தியில் பெரியோ னவன் புகழது வேற்பா னுகும்
சுத்தவான் பொறுமை சாலி தொழுதோரை யாத ரிப்பன்
பித்தமே கத்த னுகும் பொய்மெய்யாய்ப் புகல்வா னுகும்.

8. மூன்று விதமான பாஷைகள் கற்பான். விவேக முடையவன். மூன்கோபி. சிறந்த அறிவாளி. நல்ல செல்வாக்கு அடைவான். சுத்த முள்ளவன். பொறுமை யுடையவன். தோத்திரம் செய்பவரைக் காப்பான். பித்த சரீர முள்ளவன். பொய்யை, உண்மை போல் பேசுபவன்.

9. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தனமது பெருக்களுஞ் செய்வன்
வந்தவர்க் கன்ன மீவன் வளமையாய்க் கிரிகை செய்வான்
எந்திடம் பெருமை யேற்பன் ஏவலா ளுடைய னுகும்
நந்தியும் விருத்தி யுண்டு நல்லோர்க்கு நல்லோ னுவன்.

9. தன் தந்தைக்கு மேலான புகழுடன் வாழ்ந்து வருவான். செல்வங்கள் மிகுதியாக உடையவன். வந்தவர்கட்கு அன்ன மளிப்பான். விருத்தியாகும் காரியங்களையே செய்வான் சென்ற விடங்களி லெல்லாம் பெருமை அடைவான். பணியாட்கள் நிறைந்தவன். எருது (பசு) முதலிய கால்நடைகள் அதிகரிக்கும். நல்லவர்களுக்கு நல்லவனாக விருப்பான்.

10. கரமதில் ருத்திர ரேகை கமலரே கையு மூண்டு
உறன்முறைக் குதவி செய்வன் ஓரவஞ் சனையும் பேசான்
தீரமான காரி யத்தைச் செய்குவா னென்று சொல்வோம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

10. கையில் உருத்திர ரேகையும், கமல ரேகையும் உள்ளவன். பந்து ஜனங்களுக்கு உபகாரம் செய்வான். ஓர வஞ்சனையாகப் பேசாதவன். தைரியமாகக் காரியங்களே செய்யும் இயல்பினன். வேதங்களின் முடிவில் நடமாடும் தாயே! கேளுங்கள்.

11. இன்னவர் துணைவர் தம்மை இயம்புவோம் ஆண்பால் [ரெண்டு
கன்னிகை மூவ ராகுங் கழறின வைந்துந் தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் புதல்வனின் மணத்தைச் [சொல்வோம்
கன்னலின் சுவையை யொக்குங் காதலி கேட்டி டாயே.

11. இவனுடைய உடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுவோம் ஆண் மக்களிருவரும், பெண்கள் மூவருமான ஐவரும் தீர்க்கமாக விருப்பர். மற்றும் பிறப்பவர் நிலையார். ஜாதகனின் திருமண காலத்தைச் செல்லுவோம். கரும்பை போன்ற இனிய சொற்களை யுடைய பார்வதியே! கேட்டிடுவாய்.

12. இருபது வாண்டு தன்னில் இவனுக்குப் பாரி வாய்க்கும்
வருமனை யுள்ளு ராகும் மாதுரு கிளையி லேதான்
உறைக்கின்றே மவள்கு ணத்தை உயர்வான புத்தி யுண்டு
திருமக ளொப்ப தாகுஞ் சிலியாஞ் சிவந்த மேனி.

12. ஜாதகனுக்கு இருபதாம் வயதில், மனைவி உள்ளூரி லிருந்தே வாய்ப்பாள். அவள் தன் தாயின் வர்க்கத்தி லிருந்து வருவாள். அவளுடைய குணத்தைச் சொல்லுவோம். உயர்ந்த புத்திசாலி. இலக்குமியைப் போன்ற அழகுடையவள். கல்லொழுக்க முள்ளவள். சிவந்த உடலையுடையவள்.

13. வயதுமே தீர்க்க மெய்தும் மாமுனி தடுத்துச் சொல்வார்
வியமாகு முதல்ம னைதான் மேவிய விரண்டாம் பாரி
பயமிலாச் சொன்ன சங்கைப் பகருவீர் விபரந் தன்னை
நயமிலா வேழோ ரூறில் ராகுவுங் கூடி நிற்க;

13. தீர்க்க ஆயுளுள்ளவள். முனிவர் மறுத்துக் கூறுவார். இவனுக்கு முதல் மனைவி கஷ்ட மாவள். இரண்டாம் மனைவியைப் பெறுவான்.

பயமில்லாமல் சொன்ன தோஷத்துக்குக் காரணம் விவரமாகச் சொல்லுங்கள். ஏழாம் வீட்டுக் குரியவனுகிய செவ்வாய் கன்மை யில்லாமல், ஆறும் வீடாகிய (மறைவு ஸ்தானம்) துலாத்தில் ராகுவுடன் கூடி யிருப்பதால் ;

14. இருதாரம் நேரு மென்றேரும் இயம்பின மொழியு முண்மை
அரிவைய ரிரண்டு தீர்க்கம் ஆகுமோ மடியு மோசொல்
மறலியின் நாட்டை முன்னேள் வாங்குவாள் கோபத் தாலே
திறமாக மறும னேதான் சேருவா ளென்று சொல்வோம்.

14. ஜாதகனுக்கு இரு மனைவியர் எற்படுவர் என்றேரும். கூறிய சொற்கள் முற்றிலும் உண்மை. இரு மனைவியரும் தீர்க்காயு ளுள்ளவரா ? அல்லது இறந்து விடுவார்களா ? சொல்லுங்கள். முதல் மனைவி கோப மடைந்து, (தற்கொலை செய்துக் கொண்டு) இறப்பாள். திறமையுள்ள இளை யவள் வந்து சேருவாள் என்றேரும்.

15. எந்தக்கா லத்தில் மாது ஏகுவாள் விபரஞ் சொல்வீர்
வந்தவ னிருபா னேழில் மடிவுண்டு வென்று சொல்வோம்
பிந்தியும் அந்த வாண்டில் புதுமண முடிப்பா னுகும்
அந்தவள் தீர்க்க சீவி அம்பிகை யாளே கேளாய்.

15. எந்தக் காலத்தில் ஜாதகன் மனைவி இறப்பாள். விவரத்தைச் சொல்லுங்கள். ஜாதகனுடைய இருபத்தேழாம் வயதில், முதல் மனைவிக்கு மரணம் நேரும் என்றுரைப்போம்; அதே வருஷத்தில் புதிதாக மணம் செய்து கொள்ளுவான். அவள் நீண்ட ஆயுளுடையவள். அம்பிகையே ! கேளுங்கள்.

16. புத்திர விருத்தி தானும் பொருந்தாது முதல்ம னைக்குக்
குத்தத்தைச் சொல்லு மென்னக் குருடனும் அஞ்சில் நீச்சம்
பத்தினுக் குடையோ னெட்டில் பகர்ந்ததால் சொன்னேம்
[யாங்கள்
அத்தியை வளர்த்த மாதே அறைகின்றேரும் வரும னைக்கு.

16. முதல் மனைவிக்குப் புத்திர பாக்கியம் இல்லை. அவளுக்கு எற் பட்ட குற்றம் என்ன வென்று சொல்லுங்கள். இலக்கினுதிபதியாகிய சுக்கி ரன் புத்திர ஸ்தானமாகிய கன்னியில் நீச்சமாகவும், பத்தாம் வீட்டுக் குரிய சனி எட்டாமிடத்திலும், இருப்பதால் தோஷம் கூறினேம். வீராயனை வளர்த்த தாயே ! சொல்லுகின்றேரும்; கேளுங்கள். இரண்டாம் மனைவிக்கு;

17. சுதர்களு மாண்பால் ரெண்டு தோகையு மூன்று மாகும்
இதுவைந்துந் தீர்க்க மெய்தும் ஏகிடும் முதலில் ஒன்று
ஏதுகார ணத்தால் சொன்னீர் இரண்டைடைந்தோன் புதனே
[யாகி
சதுர்த்ததில் இருப்ப தாலே செப்பினே மந்தச் சங்கை.

17. இரு ஆண் குழந்தைகளும், மூன்று பெண் குழந்தைகளும் பிறக்கும். இவர்க ளனைவரும் தீர்க்கம். முதலில் பிறந்த குழந்தை யொன்று நிலையாது. எந்தக் காரணத்தால் அப்படிக் கூறினீர்கள்? இரண்டாமிடம் (மிதுனம்) ஐந்தாமிடம் (கன்னி) இவைகட் குரியவன் புதனாகி, அவன் நாலாமிடமாகிய சிம்மத்தில் (சூரியனுடன்) இருப்பதால் அந்த தோஷம் கூறினேம்.

18. முன்னவ னிருந்த சென்ம மொழிகின்றேந் திருவா ரூரில்
தின்மையாய்க் கர்ண சேயாய்ச் செனித்துமே மனைவி
[மைந்தர்
அந்நகர் கணக்கு வேலை அவன்பார்க்குங் காலந் தன்னில்
பின்னேர்பால் பொருளும் பெற்றுப் பூமியைத் தாரே
[னென்று ;

18. ஜாதகனின் முற்பிறப்பைச் சொல்லுவோம். திருவாரூரில் கருணீகர் மரபில் தோன்றி, மனைவி மக்களை யடைந்து, அவ்வூரின் கணக்குப் பிள்ளை வேலையை அவன் பார்த்து வரும்போது, ஏழைகளிட மிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு, பூமியைத் தருகிறேன் என்று ;

19. சொல்லியே மோசஞ் செய்தான் செப்புவா ரேழை யோர்கள்
அல்லல்க ளெமக்குச் செய்தாய் அணுகும்பின் சென்மந்
[தன்னில்
வல்லிமா ரிருவ ராயு மைந்தர்கள் தோட மாயும்
புல்கியே சென்று ரென்றேம் புக்கிற்று வந்தச் சாபம்.

19. சொல்லிவிட்டுத் தராமல் மோசம் செய்தான். ஏழைகள் அதனால் பின்வருமாறு சாபமிட்டனர். "எங்களுக்குத் துன்பங்கள் இழைத்த பாவியே! இனி ஏற்படும் மறுபிறவியில் உனக்கு மனைவிமா ரிருவராகவும், புத்திர தோஷத்தை யடைந்தும் வாழ்வாய்" என்று சொல்லிச் சென்றனர். அந்தத் தீவினை இவனை யடைந்தது.

20. இன்னமுஞ் சிலர்கள் சாபம் எய்திற்றுப் பால னுக்கு
அன்னவ னந்தி யத்தில் அவன்பாரி மரண மாகித்
தன்மனச் சஞ்ச லத்தால் சங்கரன் தொண்டு பூண்டு
முன்னேர்க்குத் தொண்டு பூண்டு மொழுங்கினன் கால
[நாடு.

20. இன்னும் சிலரிட்ட சாபங்களும், இவனுக்கு ஏற்பட்டன். இவன் கடைசிக் காலத்தில் மனைவி மாண்டு, மனத்தில் துன்பமடைந்து, சிவபெருமானுக்குத் தொண்டு செய்து, பெரியோர்களைப் பூசித்து, பிறகு இறந்தான்.

21. சிரநான்கோன் வரையப் பட்டுச் செனிப்பனுஞ் சினகு
[லத்தில்
மருவிடு மேழை சாபம் மனைவிமா ரிருவ ரெய்தும்
உரைப்பீர்கள் சாந்தி யொன்று உரைக்கவே மாட்டோம்
[யாங்கள்
வருவது வந்தே தீரும் மங்கையே கேட்டி டாயே.

21. நான்கு தலைகளுள்ள பிரமனுல் மீண்டும் படைக்கப்பட்டு, சமண குலத்தில் பிறந்தான். எழைகளிட்ட சாபத்தால் இரு மனைவியர் வாய்ப்பார். அதற்குச் சாந்தி யொன்று கூறுங்கள். நாங்கள் சாந்தி சொல்லவே மாட்டோம். வருவது அவச்யம் வந்தே தீரும். தாயே! கேட்டிடுவாய்.

22. இன்னவன் யோகச் சேதி இயம்புவோ மினிமே லாகப்
பொன்பணி சேர்ப்பா னுகும் புகழது வதிக மேற்பன்
தன்துணை சொல்தட் டாதான் தரணியா லுய்வா னுகும்
இன்பமாய் வார்த்தை கூர்வன் உண்மையை வெளிக்காட்
[டாதான்.

22. ஜாதகனின் யோகச் செய்தியை இனிமேல் சொல்லுவோம். பொன் ஆபரணங்களைச் சேர்ப்பான். மிகுதியான செல்வாக்கு அடைவான். தன் சகோதரன் வார்த்தையை மீறுதவன். உலகில் விவசாயம் செய்து வாழ்ந்து வருவான். கரும்பைப்போன்ற இனிய பேச்சுக்கள் பேசுவான். உண்மையை வெளியிடாதவன்.

23. எப்படி யோகஞ் சொன்னீர் இயம்புவீர் முனியே நீர்தாம்
செப்புவோந் தர்ம கர்மன் சனியாகி வெட்டில் சேர
மைப்புடன் யோகஞ் சொன்னேம் விடமது வாறி லேற
ஒப்புட னிந்திர யோகம் உரைத்தனம் பால னுக்கு.

23. யோகம் எப்படி ஏற்படும் என்று சொன்னீர்கள்? முனிவரே! அதைக் கூறுங்கள். தரும கர்மாதிபதியானவன் சனியாகி, அவனும் எட்டாம் இடத்தில் இருப்பதால் யோகம் ஏற்படும் என்றேம். இராகு ஆறாமிடத்தில் இருப்பதால் ஜாதகனுக்கு இந்திரயோகம் ஏற்படும் என்று கூறினேம்.

24. அத்திரி தடுத்துச் சொல்வார் அந்தணன் தனக்கு வாறில்
குத்தமாய் மதியுந் தங்கக் குறித்தனஞ் சகட யோகம்
மெத்தவே பொருளெவ் வாறு மேவிடும் விபரஞ் சொல்வீர்
சித்தமாய் மதியு முச்சஞ் சேயுமே பார்த்த தாலே ;

24. அத்திரிமா முனிவர் மறுத்துக் கூறுகிறார். குருவிருக்கு மிடத்துக்கு ஆறுமிடத்தில் சந்திரன் நீமையாக விருப்பதால் சகடயோகம் உண்டு. எவ்வாறு மிருதியான பொருள்கள் எற்படும் ? அந்த விவரம் சொல்லுங்கள். நிச்சயமாக, சந்திரன் தன் உச்சஸ்தானமாகிய விருஷபத்தி லிருப்பதாலும், செவ்வாய் சந்திரனைப் பார்ப்பதாலும் ;

25. [1]பங்கமாஞ் சகடை யென்றேரும் பாலகன் யோக வானும்
சிங்கம்போல் பகைவருக்குச் சிரித்த.....
.....
.....


25. சகடயோக பங்கம் எற்படும் என்றேரும். ஜாதகன் நல்ல யோக முள்ளவன். எதிரிகட்குச் சிங்கம் போன்று பயங்கரமானவன். சிரித்த,
.....

1. இந்தச் செய்யுளின் முழுஉருவமும் எட்டில் கிடைக்கவில்லை.

ஜாதகம் 121

1. சந்திரன் மே ட மாச் சேயரி புகருங் கன்னி
புந்திபொன் ராகு தேளில் பரிதியுங் கோல தாக
மந்தனுங் தனுசி லாக மெய்ஞ்ஞானி நந்தி புக்க
இந்தவார் கோள்கள் நின்று இலக்கின மிடப மாக;

1. சந்திரன் மேஷத்திலும், செவ்வாய் சிம்மத்திலும், புதன் குரு ராகு விருச்சிகத்திலும், சூரியன் துலாத்திலும், சனி தனுசிலும், கேது விருஷபத்திலுமாக நவக்கிரகங்கள் நின்று இலக்கினம் விருஷபமாக விருந்தால் (எற்படும் பலனைச் சொல்லுவோம்).



2. குறித்தது வாண்பால் சென்மங் குறிக்கின்றே மில்லங்
[தன்னைத்
தலமது கிழ்மேல் வீதி சண்டன்தன் வாடை யாகும்
நவமுள கணேசன் மேற்கில் நல்கிடும் வடமேல் மாரி
.....

2. இவ்வீடு ஆண் பிறப்பாகும். இவனுடைய வீட்டைப் பற்றிச் சொல்லுகின்றோம். அது, கிழக்கு மேற்கு வீதியில், தெற்கு வரிசையில் உள்ளது. நன்மை மிக்க விநாயகர் மேற்கில் எழுந்தருளியுள்ளார். வட மேற்குத் திசையில் மாரியம்மன் கோயிலுள்ளது.

3. .....
.....
.....இல்லம் இறங்குவா னிந்தப் பாலன்
தடவரை மகளே நான்காஞ் சென்னமா யுதிப்ப னுமே.

3. .....வீட்டில்

இந்த ஜாதகன் பிறப்பான். இமவானின் புத்திரியே! இவன் தன் தந்தைக்கு நான்காவது குழந்தையாகத் தோன்றுவான்.

4. வந்தவன் யோகச் சேதி வளமுள அன்னை தந்தை
முந்திய துணைவர் தாமும் மதிப்புள முன்பின் சென்மம்
வந்திடு மதலை தன்னின் வளமுள யோகந் தானும்
கந்தனை யீன்ற மாதே கழறுவோம் தந்தை சேதி.

4. ஜாதகன் யோகச் செய்திகளையும், செழிப்புள்ள தாய் தந்தையர், உடன்பிறந்தவர் யோகங்களைப் பற்றியும், முற்பிறப்பு மறுபிறப்பு ஆகியவற்றையும், பிறக்கும் குழந்தைகளின் யோகத்தையும் சொல்லுகின்றோம். முருகனைப்பெற்ற தாயே! தந்தையின் யோகச் செய்தியைக் கூறுகின்றோம்.

5. மாநிறஞ் சமதே கத்தோன் மர்மமில் லாதா னுகும்
தேன்மொழி கூர்வா னுகுஞ் செய்ந்நன்றி மறவா னுகும்
.....
.....

5. கரியநிற முள்ளவன். சமமான உடலமைப் புடையவன். இரகசியமில்லாதவன். இனிய வார்த்தைகள் உரைப்பான். செய்த நன்றியை மறவாதவன்.....

6. .....ச காயன் உறுதிவான் சுகபு சிப்பன்
போகிடுந் தந்தை யாஸ்தி புதிதாக வில்லாம் பின்னல்
சேகரஞ் செய்வா னுகும் சிலருக்குப் பாதை செய்வன்
பாகமாய்க் கூறு கின்றோம் பாவையே கேட்டி டாயே.

6. .....சகாயன். உறுதியான மனத்தினன். உணவில் சௌக்கிய முடையவன். தந்தையின் ஆஸ்தி கைவிட்டுப் போம். பின்கர்லத்தில் புதிய வீடு கட்டுவான். சிலருக்குத் துன்பங்க ளிழைப்பான். பாங்காகச் சொல்லுகின்றோம். பார்வதியே! கேளுங்கள்.

7. வரைகுவான் கணக்குத் தானும் தந்தனம் வரவு முண்டு
செலவுகள் செய்வா னுகுஞ் சிந்தையில் கபடு கொஞ்சம்
சிலர்நிந்தை யேற்பா னுதம்.....
.....

7. கணக்குகள் எழுதி ஜீவிப்பான். தன்னுல் சம்பாதிக்கப்பட்ட பொருள் அதிகமாக உள்ளவன். மிகுதியாகச் செலவுகள் செய்வான். மனத்தில் சிறிது வஞ்சக முடையவன். சிலரால் பழிகளை அடைவான்.....

8. .....
.....
போதனம் பின்னுல் சேர்ப்பன் புத்திநல் லறிவு முள்ளான்
ஆதியில் வறுமை யுள்ளான் அயலார்பொன் னிச்சை
[யுள்ளான்.

8. .....
பின்னுட்களில் பெரிதான செல்வங்கள் சேர்ப்பான். நன்மையான புத்தியும் அறிவு முள்ளவன். ஆரம்பத்தில் தரித்திர முள்ளவன். பிறர் செல்வத்தில் ஆசை யுடையவன்.

9. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோ மினிமே லாக
.....
..... பருகாது என்று சொல்வோம்
தவசியே துணைவர் சேதி சாற்றுவோ மிருநி றத்தன்.

9. இவனுடைய உடன்பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுவோம்.
.....
.....தவங்களை யியற்றும் பார்வதியே! உடன் பிறந்தவர் செய்தியைச் சொல்லுவோம். கரியநிற முள்ளவன்.

10. வஞ்சக நெஞ்ச னுவன் வசனமுஞ் சுகமு மாவன்
அஞ்சிடான்.....
.....
.....வேரூர் செல்வன் தனத்தின்மே லிச்சை யுள்ளான்.

10. வஞ்சகமுள்ள மனத்தன். இன்பமாகப் பேசுபவன். பயப் படாதவன்.....
.....வேற்றூருக்குச் செல்வான். செல்வத்தில் ஆசை யுடையவன்.

11. பாரியு மொன்றே யாகும் பாலர்கள் காணு ஞகும்
வேறதாய் வாசஞ் செய்வன் வேந்தர்பூ சிதமு மாவன்
.....
.....ஓம்.

11. மனைவி ஒருத்தியே யாவள். குழந்தைகள் பிறவா. அவனும் தனித்து வாழ்ந்து வருவான். அரசரால் மதிப்புப் பெற்றவன்.....
.....
.....

12. சுதர்களுந் தோன்றுந் தீதாஞ் சயமுனி கேட்க லுற்றார்
வதிபனுஞ் சுதர்கள் தோட மறைந்தினீர் உருமஞ்
[செய்வோர்
விதங்களே.....
.....

12. பிள்ளைகளும் பிறப்பர். ஆனல் மரித்து விடுவர். ஜயமுனிவர் கேட்கலானர். அவனுக்குப் புத்திர தோஷம் ஏற்படும் என்று சொன்னீர்களே. ஜாதகனின் தந்தைக்கு ஈமக்கடன்கள் செய்பவர் யார்? என்பதை;
.....

13. இங்நெறி யுடையா னுக்கு இவனுமே சனிப்பா ஞகும்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் அழகுளான் சிவந்த
[மெய்யன்
பன்னியே பேச வல்லன் பல்கலே.....
.....

13. இக் குணங்களுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இவனுடைய குணத்தைச் சொல்லுகின்றோம். அழகுள்ளவன். சிவந்த உடல். பன்னிப் பன்னிப் பேசுபவன். பல கலைகளே.....
.....

14. .....வசியங் கொள்வன்
மன்னர்கள் பேட்டி கொளவன் மாநிலஞ் சேர்ப்பா ஞகும்
நிந்தையாய் வார்த்தை சொல்வன் விருந்தினர் பிரிய மாகும்
முந்துமால் பக்தி கொள்வன் முதல்வியே கேட்டி டாயே.

14. .....வசிகரிக்கும் குணமுடையவன். அரசர்களால் மதிக்கப்படுவன். விளை நிலங்களை அதிகரிப்பான். பழிக்கப்படும்படி பேசுபவன். விருந்தாளிகளை யுபசரிப்பான். தேவர்கட்கு, முதல்வரான திருமாலின்மீது பக்தி கொள்ளுவான். ஈசுவரியே! கேட்டிடாயே.

15. .....வசித்தே வெல்வன் வண்டிவா கனமு முள்ளான்
பெரும்புத்தி யுடைய னுகும் புகழ்ந்தோரை யாத ரிப்பன்
உறன்முறை மெச்ச வாழ்வன் ஒண்டோடி மார்கள் நேயன்
.....

15. .....வசித்து வந்து ஜெயிப்பான். வண்டி முதலிய வாகனங்களுள்ளவன். தாராள புத்தி யுடையவன். தோத்திரம் செய்தவரைக் காப்பாற்றுவான். பந்துக்கள் புகழும்படி வாழ்ந்து வருவான். பெண்களுக்குப் பிரியமானவன்.

16. .....
.....அவள்கு ணத்தைச்
சந்ததம் பித்த தேகி சமையலுக் கினிய ளாகும்
வந்தவர்க் கன்ன மீவள் வரனுமே தென்பால் நேரும்.

16. .....
.....அவளுடைய குணத்தைச் சொல்லுவோம். பித்த ரோகமுடையவள். சுவையுடன் சமைக்க வல்லவள். தன்னை வந்தடைந்தவர்கட்கு அன்னமளிப்பாள். அவளுக்குத் தென்திசையிலிருந்து கணவன் வாய்ப்பான்.

17. சுதர்களும் எழுவர் தோன்றும்.....
.....
.....வள் வயதுமே தீர்க்கமெய்தும்.....
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

17. ஏழு புத்திரர்கள் பிறப்பார்கள். .....
.....தீர்க்கமான வயதுள்ளவள். .....கதியற்றவரைக் காக்கும் பார்வதியே! கேளுங்கள்.

18 பின்துணை யாண்பா லொனறு பேசுவோங் கன்னி யவ்வார்
அன்னவன் குணத்தைச் சொல்வோம்.....
.....
சொன்னசொல் மேன்மை யாகச் சாதிப்பான் கல்வி மானும்.

18. ஜாதகனுக்குப் பிறகு பிறந்த சகோதரன் ஒருவரும், ஒரு சகோதரியும் உள்ளனர். சகோதரனுடைய குணங்களைக் கூறுவோம்.....
.....சொன்ன சொற்களே மேலானவை என்று ஸ்திரப்படுத்துவான். கல்வி யறிவுள்ளவன்.

19. தந்தைபின் துணைவ னுக்குத் தானவன் கர்மஞ் செய்வன்
நிந்தைகள் ஏற்பா னகும் நேமியில் சில.....
.....
.....தீர்க்க மாக.

19. தந்தையின் பின் பிறந்த தம்பிக்குக் கருமங்கள் செய்வான். பழிகள் அடைவான். உலகில் சில.....
.....தீர்க்கமாம்.

20. இன்னமுஞ் சிலவே சேதி இயம்புவோம் பின்பா கத்தில்
கன்னிகை சேதி கேளாய்க் கணவனுக் கினிய ளாகும்
தன்சொலு மதிக முண்டு தரணியில்.....
.....

20. இன்னமும் சில செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுவோம். சகோதரியின் வரலாற்றைக் கேளுங்கள். கணவனுக்குப் பிரியமானவள். மிகுதியாகப் பேசுபவள். உலகில்.....

21. .....மாதுவுந் தீர்க்க சீவி.....
திருமகள் சேது சென்று தீர்த்தயாத் திரைக ளாடி
வருஞ்சுத ரந்தி யத்தில் ஆணது வொன்று தீர்க்கம்
பெருவயி ரூனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

21. .....பெண்ணும் நீண்ட ஆயுளுடையவள்.....
அவள் கேது க்ஷேத்திரத்துக்குச் சென்று, தீர்த்தயாத்திரைகள் செய்து வந்ததால், கடைசிக் காலத்தில் ஆண் குழந்தை யொன்று நீண்ட ஆயுளுள்ளதாகத் தோன்றும். விநாயகனைப் பெற்ற பார்வதியே! கேளுங்கள்.

22. .....

.....

தென்திசை பாரி வாய்க்குஞ் செப்புவோ மவள்கு ணத்தை
செந்நிறம் பித்த தேகி செல்விநன் னடக்கை யுண்டு.

22. ..... தெற்குத் திசையிலிருந்து மனைவி வருவாள். அவளுடைய குணத்தைச் சொல்லுவோம். சிவந்த நிறம். பித்த தேகமுள்ளவள். அவளும் நன் னடத்தை யுடையவள்.

23. வருவோரை யாத ரிப்பள் மனமது கவடு மில்லாள்

.....

.....

பராசருங் கேட்க லுற்றூர் பணியேழில் இருப்ப தாலே.

23. தன்னை அடைந்தவர்களை ஆதரித்து வருவாள். மனத்தில் சூதில்லாதவள். ....பராசரர் கேட்கலானார். இராகு ஏழாமிடமாகிய விருச்சிகத்தில் இருப்பதால்,

24. மனைவியு மிரண்டு நேரும் மறுத்தவர் கூறு கின்றூர்
பணியுமே வுச்ச மாகிப் பண்டிதன் பொன்னென் கூடி

.....

.....

24. இரு மனைவியர் வாய்ப்பர். முனிவர் தடுத்துச் சொல்லுகின்றூர். ராகு உச்சமாக இருப்பதாலும், புதனும் குருவும் சேர்ந்து இருப்பதாலும்;

.....

வேறு

25. .....நே ரிடையாய்ச் சாதகச் சுருயில்
ஏழாம் பாகத்தில் பாரே
அதுவின்றி வர்க்கில் வித்தவு மொன்று
அணுகியும் பாரியு மொன்றே
பொதுமாது எந்தக் காலத்தில் நேரும்

.....

.....

.....

25. .....நோராகச் சோதிட நூலில் ஏழாம் பாகத்தில் பார்க்கவும்.
.....மனைவி ஒருத்தியே. வேசை
எந்தக் காலத்தில் வருவாள்? .....

வேறு

26. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணேும்
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று சொல்வோம்
குத்தத்தைச் சொல்லு மென்னக் குறுமுனி கூறு கின்றார்
அத்தியை வளர்த்த மாதே அறைந்தன மொழிகுன் றுவே.

26. புத்திர பாவத்தைச் சொல்லப் பலமில்லை. அப்படிப் பிறந்தாலும் நிலையாது என்று சொல்லுவோம். அவனுக்கு ஏற்பட்ட தோஷம் என்ன வென்று கூறுங்கள், என்று பார்வதி கேட்க, அகத்திய முனிவர் சொல்லு கின்றார். விநாயகனைப் பெற்ற பார்வதியே! நாங்கள் சொன்னவை தவறு.

27. அஞ்சினுக் குடையோன் புந்தி அந்தண னுடனே கூடி
தஞ்சமாய்த் தர்ம கர்மன் சனியுமே பார்த்த தாலே
கொஞ்சிடுங் குழவி யென்றேறுங் கோதைய ரிருவர் தீர்க்கம்
துஞ்சிடு மாண்பா லுந்தான் தோகையே கேட்டி டாயே.

27. ஐந்தாமிடத்துக் குரியவனான புதன், குருவுடன் கூடி யிருப்பதா லும், புத்திரத்தானத்தைத் தர்மகர்மாதிபதியாகிய சனி பார்ப்பதாலும் குழந்தை பிறக்கும் என்றேறும். மனைவியர் இருவர் தீர்க்கமாவர். ஆனால் பிறந்த வாண்குழந்தை மரிக்கும். பார்வதியே! கேட்டிடுவாய்.

28. .....
வல்லவன் தனக்குக் கர்ம மறைந்தனந் திசையைச்
[சொல்வாய்ப்
புல்குவான் கீழ்ப்பால் தன்னில் புதல்வியுஞ் சுதனு மேதான்
மெல்லியர்.....

28. .....
ஜாதகனுக்குக் கருமங்கள் செய்வான் என்று சொன்னேேம். செல்லுந் திசையைச் சொல்லுங்கள். கிழக்குத் திசைக்கு, மகனும், மகளும் செல்வார்கள்.

29. .....

வதிபன்தன் பூர்வந் தோட மைந்தராண் காணு ஞகும்
அதுவினை சொல்லு மென்ன அவனுடைச் சென்மங்
[கேளாய்
கதிதருஞ் சோழ நாட்டில்.....

29. .....

ஜாதகனுடைய முற்பிறப்புத் தோஷத்தால் ஆண் குழந்தை பிறவாதாகும். அவனுக்கு ஏற்பட்ட தீவினையைச் சொல்லுங்கள். ஜாதகனுடைய முற்பிறப்பைக் கேளுங்கள். .....நன்மை மிக்க சோழவள நாட்டில்,.....

30. .....

.....வருமுண் டாகி
வதிபனும் வாழு நாளி லறைகின்றேம் ஊழி தானும்
அதிதியும் பசிநோ யாலே அந்தியில் அன்னங் கேட்க.

30. .....

.....ஏற்பட்டு

ஜாதகன் வாழ்ந்து வரும் நாளில், ஏற்பட்ட தீங்கைச் சொல்லுகின்றோம். ஓர் ஏழை பசியால் கஷ்டப்பட்டு மாலை நேரத்தில் அன்னம் கேட்க;

31. முகவெறி கொண்டு.....

.....

.....பாலர்கள் தோட மாகும்
தகைமையாய் மறுசென் மத்தில் தந்தையில் காணு தாகி;

31. முகத்தில் கோபவெறி தோன்ற.....

.....புத்திர தோஷம் ஏற்படும். அதனால் மறுபிறவியில் தந்தையினுடைய வீட்டை அடையாதவனாகி;

32. வனவாச மாகச் சென்று மமைந்தது வந்தத் தோடம்

.....

நைந்துமே கருவ ழித்தா னடைந்தது அந்தத் தோடம்.

32. காட்டில் வசிப்பது போன்று தனித்து வாழ்ந்து வந்தான். அந்தத் தோஷம் வந்தடைந்தது.....
.....
சிரமப்பட்டுக் கருவை அழித்தான். அந்தத் தீவினையும் இவனைச் சார்ந்தது.
.....

33. நாகத்தின் சாப மொன்று நல்கிற்று இவனுக் கேதான்
பாகமா யந்தி யத்தில்.....
.....
....

33. இது தவிர, சர்ப்ப தோஷம் ஒன்று இவனுக்கு ஏற்பட்டது இவனுடைய கடைசிக் காலத்தில்.....
.....

ஸப்தரிஷிநாடி : விருஷப லக்னம் முற்றும்.

BULLETIN OF THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

AN APPEAL.

The Government Oriental Manuscripts Library, Madras, is unique in point of variety and vastness of collections covering a very wide field of Indian Literature in Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Mahratti, Arabic, Persian and Urdu. The dates of several of the manuscripts go back to many hundreds of years. From an academic point of view, these collections contain some very interesting specimens of Literary, Scientific, Historical and Artistic importance. A large number of them have not yet been printed and some of them are available only in this Library. With a view to placing these manuscripts in the hands of the public in a printed form, the Government of Madras were pleased to sanction the starting of a BULLETIN under the auspices of the Government Oriental Manuscripts Library. For the present only two numbers are issued in a year. They contain critical editions of original works in Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Mahratti, Persian and Urdu. The annual subscription is only Rs. 4 inland and 8 shillings foreign. Scholars, Patrons of Culture, Universities, Public Libraries and Educational Institutions are requested to enrol themselves as susbscribers for this Bulletin and thus encourage the cause of Oriental Studies and Culture.

A few copies of back numbers are available for sale, post free, at the following prices which should be sent in advance.

Vol. I, No. 2, July to December, 1948	..	Rs. 2.
Vol. II, 1949	..	Rs. 4.
Vol. III, 1950	..	Rs. 4.
Vol. IV, 1951	..	Rs. 4.

T. CHANDRASEKHARAN,
Curator,
Government Oriental Manuscripts Library.

TRIPLICANE,
MADRAS-5.

LIST OF CATALOGUES PUBLISHED BY THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

SANSKRIT.

Descriptive Catalogues.

	Numbers.	*Price.* Rs A. P.
* Vol. I.—Part I, Vedic Literature	.. 1 to 46	0 12 0
* Vol. I.—Part II. Vedic Literature	.. 47 to 245	0 12 0
* Vol. I —Part III. Vedic Literature	.. 246 to 852	2 0 0
* Vol. II.—Vedic Literature	.. 853 to 1245	1 12
* Vol. III.—Grammar, Lexicography and Prosody	.. 1246 to 1805	1 8 0
* Vol. IV —Part I. Ithihāsa and Purāṇa	.. 1806 to 2337	1 8 0
* Vol. IV.—Part II Upapurāṇas and Sthalamāhātmyas	.. 2338 to 2610	1 4 0
* Vol. V.—Dharmaśāstra	.. 2611 to 3045	1 8 0
* Vol. VI.—Dharmaśāstra	.. 3046 to 3427	1 4 0
* Vol. VII.—Dharmaśāstra	.. 3428 to 3872	1 4 0
* Vol. VIII.—Arthaśāstra, Kāmaśāstra and Systems of Indian Philosophy—Nyāya	.. 3873 to 4334	1 4 0
* Vol. IX.—Systems of Indian Philosophy—Vaiśeṣika, Yoga, Mīmāmsā and Vedānta-Advaita Philosophy	.. 4335 to 4780	1 12 0
* Vol. X.—Systems of Indian Philosophy—Dvaita, Viśiṣṭādvaita and Śaiva Vedāntas	.. 4781 to 5122	1 12 0
* Vol XI.—Systems of Indian Philosophy	.. 5123 to 5558	1 12 0
Vol. XII.—Religion	.. 5559 to 6266	1 12 0
Vol. XIII.—Religion	.. 6267 to 7006	1 12 0
* Vol. XIV.—Religion	.. 7007 to 7729	1 12 0
* Vol XV.—Religion	.. 7730 to 8165	1 12 0
* Vol. XVI.—Religion, Vrata and Pūjā	.. 8166 to 8780	1 12 0
Vol. XVII.—Stotras	.. 8781 to 9357	1 12 0
Vol. XVIII.—Stotras—Praśamsā Stotras	.. 9358 to 10540	1 12 0
Vol. XIX.—Stotras—Praśamsā Stotras	.. 10541 to 11450	1 12 0
Vol XX.—Kāvyas	..11451 to 12143	2 12 0
Vol. XXI.—Kāvyas	.. 12144 to 12783	3 0 0
Vol. XXII.—Rhetoric, Poetics, Music, Dancing and Śilpa śāstra	..12784 to 13068	4 0
Vol. XXIII.—Medicine	..13069 to 13381	1 8 0
Vol. XXIV.—Jyotiṣa	..13382 to 14076	3 2 0
* Vol. XXV.—Supplemental	..14077 to 14560	2 4 0
Vol. XXVI.—Supplemental	..14561 to 15000	2 12 0
Vol. XXVII.—Supplemental	..15001 to 15692	5 14 0
Vol. XXVIII.—Supplemental	..15693 to 16200	3 12 0
Vol. XXIX —Supplemental	..16201 to 16700	3 2 0
Vol. XXX.—Supplemental	..16701 to 17200	7 10 0
Vol. XXXI.—Supplemental	..17201 to 17700	11 12 0

Triennial Catalogues.

* Vol. I-A (1911—13)	.. 1 to 342	2 0 0
* Vol. I-B (1911—13)	.. 343 to 573	1 6 0
* Vol. I-C (1911—13)	.. 574 to 801	1 6 0
Vol. II-A (1914—16)	.. 802 to 1329	18 2 0
Vol. II-B (1914—16)	.. 1330 to 1456	
Vol. II-C (1914—16)	.. 1457 to 1942	
* Vol. III-A (1917—19)	.. 1943 to 2348	6 0 0
* Vol. III-B (1917—19)	.. 2349 to 2679	6 0 0
* Vol. III-C (1917—19)	.. 2680 to 2894	4 4 0
Vol. IV-A (1920—22)	.. 2895 to 3203	9 0 0
Vol. IV-B (1920—22)	.. 3204 to 3634	8 0 0
Vol. IV-C (1920—22)	.. 3635 to 4155	10 0 0
* Vol. V-A (1923—25)	.. 4156 to 4300	4 0 0
* Vol. V-B (1923—25)	.. 4301 to 4415	2 8 0

SANSKRIT—*contd.*

TRIENNIAL CATALOGUES—*(cont.)*

	Numbers.	*Price.* RS. A. P.
* Vol. V-C (1923—25) ..	4416 to 5041	5 12 0
Vol. VI (1926—28) ..	5042 to 5380	10 0 0
Vol. VII (1929—31) ..	5381 to 5532	2 14 0
Vol. VIII (1931-32—1933-34) ..	5533 to 5700	1 4 0
Vol. IX (1934—37) ..	5701 to 5996	6 0 0
Vol. X-A (1937-38 to 1939-40) ..	5997 to 6496	14 10 0
Vol. X-B and X-C (1937-38 to 1939-40) ..	6497 to 7496	*In the press.*

GENERAL.

Alphabetical Index of Sanskrit Manuscripts, Part I. ..		13 12 0
Alphabetical Index of Sanskrit Manuscripts, Part II ..		10 0 0
Alphabetical Index of Sanskrit Manuscripts, Part III ..		3 6 0
Author Index of Sanskrit Manuscripts ..		1 8 0

TAMIL.

DESCRIPTIVE CATALOGUES.

Vol I.—Alphabet, Primer. Lexicography, Grammar and Literature ..	1 to 511	1 14 0
Vol. II.—Itihāsa, Purāṇa, Religion and Philosophy (Vaiṣṇavism) ..	512 to 1122	2 2 0
Vol. III.—Religion and Philosophy (Śaivism) ..	1123 to 1620	6 0 0
Vol. IV.—Religion and Philosophy (Śaivism) ..	16 1 to 1867	3 10 0
Vol. V.—Alchemy, Medicine, Magic, Witchcraft and Supplement	1868 to 2173	6 0 0
Vol. VI.—Miscellaneous ..	2174 to 2725	19 12 0
Vol. VII.—Local Records ..	2726 to 2949	13 4 0
Vol. VIII.—Local Records ..	2950 to 3169	*In the press.*

TRIENNIAL CATALOGUES.

Vol. I.—Miscellaneous (1910-13) ..	1 to 114	1 6 0
Vol. II.—Miscellaneous (1914-16) ..	115 to 310	4 14 0
Vol. III.—Miscellaneous (1917-19) ..	311 to 409	5 0 0
Vol. IV.—Miscellaneous (1920-22) ..	410 to 535	5 0 0
Vol. V.—Miscellaneous (1923-25) ..	536 to 859	6 8 0
Vol. VI.—Miscellaneous (1926-28) ..	860 to 952	4 10 0
Vol VII.—Miscellaneous (1929-34) ..	953 to 1055	2 6 0
Vol. VIII.—Miscellaneous (1935-43) ..	1056 to 1473	34 14 0
Vol. IX.—Miscellaneous (1944-49) ..	1474 to 1605	13 8 0

GENERAL.

Alphabetical Index of Tamil Manuscripts. Vol. I ..		5 4 0
Alphabetical Index of Tamil Manuscripts, Vol. II ..		12 6 0
Alphabetical Index of Tamil Manuscripts, Vol. III Local Records ..		8 6 0
Author Index of Tamil Manuscripts ..		3 10 0

TELUGU.

DESCRIPTIVE CATALOGUES.

Vol. I.—Ithihāsa, Purāṇa and Māhātmya ..	1 to 369	2 12 0
Vol. II (1).—Śṛṅgāra Prabandhas ..	370 to 616	1 0 0
Vol. II (2).—Śṛṅgāra Prabandhas ..	617 to 806	4 0 0
Vol. III.—Śṛṅgāra Prabandhas ..	807 to 941	3 14 0
Vol. IV.—Prabandhas—Dvipadakāvya ..	942 to 1221	5 12 0
Vol. V.—Grammar, Prosody and Lexicography ..	1222 to 1395	3 6 0
Vol. VI.—Vacana Kāvyas ..	1396 to 1466	1 4 0
Vol. VII.—Śatakas ..	1467 to 1833	5 6 0
Vol. VIII.—Yakṣagānams and Daṇḍakams ..	1834 to 2040	4 10 0
Vol IX.—Vedānta ..	2041 to 2273	21 12 0
Vol. X.—Gaṇita and Jyotiṣa ..	2274 to 2399	13 0 0
Vol, XI.—Medicine ..	2400 to 2481	6 8 0
Vol. XII.—Music (Saṅgīta) ..	2482 to 2592	7 6 0
Vol. XIII.—History ..	2593 to 2657	4 14 0
Vol. XIV.—Local tracts (Mackenzie Collections) ..	1 to 150	*In the press.*

TRIENNIAL CATALOGUES.

* Vol. I.— Miscellaneons (1910-13) ..	1 to 137	1 6 0
Vol. II.—Miscellaneous (1913-16) ..	138 to 292	2 6 0
Vol. III.—Miscellaneous (1916-19) ..	293 to 539	6 0 0
Vol. IV.—Miscellaneous 1919-22) ..	560 to 715	7 14 0
Vol. V,—Miscellaneous (1922-28) ..	716 to 812	3 0 0
Vol. VI.—Miscellaneous (1928-41) ..	813 to 1069	25 12 0

TELUGU—*contd.*

	Numbers.	*Price.* RS. A. P.
GENERAL.		
Alphabetical Index of Telugu Manuscripts ..		3 12 0
KANNADA.		
DESCRIPTIVE CATALOGUES.		
Vol. I.—Grammar, Lexicography, Prosody, Itihāsa and Purāṇa	1 to 138	6 0 0
Vol. II.—Itihāsa and Purāṇa ..	139 to 317	4 12 0
Vol. III.—Religion—Āgama ..	318 to 476	6 12 0
Vol. IV.—Religion—Āgama, Vīraśaiva and Christianity ..	477 to 825	21 12 0
Vol. V.—Religion and Kāvyas ..	826 to 1038	35 2 0
Vol. VI.—Kāvyas		*In the press.*
GENERAL.		
Alphabetical Index of Kannada Manuscripts ..		2 4 0
MALAYALAM.		
DESCRIPTIVE CATALOGUES.		
Vol. I Miscellaneous ..	1 lo 351	8 2 0
Vol. II Do. ..	352 to 368	2 8 0
GENERAL.		
Alphabetical Index of Malayalam Manuscripts ..		0 2 0
ISLAMIC LANGUAGES.		
Descriptive Catalogue of Islamic Manuscripts, Vol. I		13 14 0
Descriptive Catalogue of Islamic Manuscripts, Vol. II		16 12 0
Alphabetical Index of Urdu Manuscripts		0 2 0
Alphabetical Index of Persian Manuscripts		1 2 0
Alphabetical Index of Arabic Manuscripts		0 8 0
MARATHI.		
Alphabetical Index of Marāṭhī Manuscripts Subject Index of Marāṭhī Manuscripts	In one volume	9 14 0
Descriptive Catalogue of Marāṭhī Manuscripts—Kaifiyats ..		*In the press.*

N. B.—*The books marked with an asterisk are out of stock.

LIST OF BOOKS PUBLISHED BY THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS, UNDER THE MADRAS GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS SERIES.

Serial Number	Name of the work.	Name of the Editor.	Language	Price. Rs.	A.	P.
1.	*Sarva-siddhānta-saṅgraha	M. Rangacarya, M. A. Rao Bahadur.	SANSKRIT.	0	12	0
2.	*Gaṇita-sārasaṅgraha	Do.	Do.	2	4	0
3.	Padya-cūḍāmaṇi with commentary	Do.	Do.	2	8	0
4.	Brahma-siddhi with commentary	Mahāmahopādhyāya S. Kuppuswami Sastri.	Do.	7	12	0
5.	Ratneśvara-prasādana-nāṭakam	P. P. S. Sastri	Do.	1	2	0
6.	Rāmānuja-campū with commentary	Do.	Do.	3	0	0
7.	Mahābhāṣya with the commentary of Kaiyaṭa and super-commentary - Pradīpoddyotana of Annambhaṭṭa, Vol. I. Āhnikas 1 to 4.	P. P. S. Sastri & Dr. A. Sankaran.	Do.	20	12	0
8.	Śāstradīpikā with the commentary Mayūkhāvaḷi	P. P. S. Sastri	Do.	*In the press.*		
9.	Bāla-bhārata with commentary	Do.	Do.	2	0	0
10.	Nayā-mañjarī	Do.	Do.	2	0	0
11.	Ḍamarukam with commentary	Do.	Do.	0	8	0
12.	Śṛṅgāra-prakāśa, Part I.	Do.	Do.	1	8	0
13.	Mahābhāṣya with the commentary of Kaiyaṭa and the super commentary Pradīpoddyotana of Annambhaṭṭa. Vol. II. Āhnikas 5 to 9.	T. Chandrasekharan, M. A., L. T.	Do.	*In the press.*		
14.	Naṉṉūr Kāṇḍikaiyurai.	Do.	TAMIL.	*In the press.*		
15.	Māṇikka-vācakar Ammāṇai.	Do.	Do.	Do.		
16.	Ādi-parvattādi-parvam.	Do.	Do.	Do.		
17.	Vasu-carittiram.	Do.	Do.	Do.		
18.	Sakala-nīti-kathā-nidhānamu.	Do.	TELUGU.	Do.		
19.	Pañca-tantramu.	Do.	Do.	Do.		
20.	Sundara-kāṇḍam (Rāmāyanam) by Venkamatya.	Do.	KANNADA.	Do.		
21.	Bhāgavatam Bhāṣā	Do.	MALAYALAM	Do.		
22.	Raṅgābhyāsam.	Do.	Do.	Do.		

N. B.—No. 5 is available at the Balamanorama Press, Mylapore, Madras.
Nos. 8 to 12 are available at the Sri Vani Vilas Press, Srirangam.
*The books marked with an asterisk are out of stock.

LIST OF BOOKS PUBLISHED BY THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS, UNDER THE MADRAS GOVERNMENT ORIENTAL SERIES.

Serial Number.	Name of the work.	Name of the Editor.	Language.	Price. Rs.	A.	P.
I.	Kappal Śāttiram	T. P. Palaniappa Pillai, B. O. L.	*Tamil*	1	10	0
II.	Anubhava Vaiddiya Murai. Volumes I & II.	Dr. C. Dorairajan & Dr. C. S. Uttamarayan, H. P. I. M.	Do.			
	Vol. I			3	14	0
	Vol. II			4	8	0
III.	Āṭṭāṇa Kōlāhalam	Tirumalai Sri Saila Sarma	Do.	5	0	0
IV.	Upadēsa-kāṇḍam Volumes I, II & III.	V. S. Chengalvaraya Pillai, M. A.	Do.			
	Vol. I			4	10	0
	Vol. II			5	0	0
	Vol. III			5	8	0
V.	Cōḷaṉ Pūrva Paṭṭayam	C. M. Ramachandra Chettiar, B.A., B.L.	Do.	5	0	0
VI.	Koṅgadeśa Rājākkaḷ	Do.	Do.	1	8	0
VII.	Sivajñāṇa-dīpam	T. P. Palaniappa Pillai, B O L.	Do.	1	6	0
VIII.	Daṭca-nāyaṇār Vaiddiya Aṭṭavaṇai	Dr. K. Tyagarajan, L I.M.	Do.	1	8	0
IX.	Abhinaya-darpaṇamu	T. V. Subba Rao, B.A., B.L.	*Telugu*	1	12	0
X.	Auṣadha-yōgamulu	Dr. Veturi Sankara Sastri	Do.	3	12	0
XI.	Vaidya Nighaṇṭuvu	Do.		2	12	0
XII.	Dhanur-vidyā Vilāsamu	Veturi Prabhakara Sastri	Do.	4	14	0
XIII.	Yōga-darśana-viṣayamu	Vedam Lakshmi Narayana Sastri, B.O L.	Do.	1	2	0
XIV.	Khaḍgalakṣaṇa Sirōmaṇi	N. Venkata Rao, M.A.	Do.	1	12	0
XV.	Tantra-sāra saṅgraha (Viṣanārāyaṇīya)	Vaidyaratna. Dr. M. Doraiswami Ayyangar	*Sanskrit*	15	4	0
XVI.	Bhārgava-nāḍikā	Dr. C. Kunhan Raja, M.A., D. Phil.	Do.	6	0	0
XVII.	Hariharacaturaṅgam	S. K. Ramanatha Sastri	Do.	6	8	0
XVIII.	Brahma-sūtravṛtti-Mitākṣarā of Annambaṭṭa	P. S. Rama Sastri	Do.	7	0	0
XIX.	Nyāyasiddhānta-tattvāmṛtam of Srinivasa	S. Subrahmanya Sastri, B O L.	Do.	2	8	0
XX.	Garbha-cikitsā	Dr. N. Madhava Menon, A.M.A.C.,	*Malayālam*	3	8	0
XXI.	Vāstulakṣaṇam and Śilpaviṣayam	S. K. Ramanatha Sastri	Do.	2	0	0
XXII.	Kaṇakku-sāram-Bālaprabōdham	Dr. C. Achuta Menon, B.A., Ph. D.	Do.	2	0	0
XXIII.	Kaṇakku-sāram	Do.	Do.	2	12	0
XXIV.	Kriyākramam	P. Narayanan Kutty Menon, M.A.	Do.	2	4	0
XXV.	Lōkōpakāra of Cāmuṇḍarāya	H. Sesha Ayyangar	*Kannada*	8	0	0
XXVI.	Raṭṭa atam	Do.	Do.	4	4	0
XXVII.	Vaidya-sāra-saṅgraha	Vaidyaratna Dr. G. Srinivasamurti, B.A., B.L., M.B. & C.M.	Vol. I	*In the press*		

Serial Number.	Name of the work	Name of the Editor	Language.	Price.
XXVIII.	Aśva-śāstram of Abhinavacandra	Dr. P. Srinivasa Rao & H Sesha Ayyangar	*Kannada*	4 2 0
XXIX.	Auṣadhagalu-Vaidya Viṣaya	Vaidyaratna Dr. G. Srinivasamurthi, B.A., B.L., M.B. & CM.	Do	6 14 0
XXX.	Saṅgīta-ratnākara	M. Mariappa Bhat, M.A., L.T.	Do.	1 8 0
XXXI.	Sūpa Śāstra	U. Sitaramacarya	Do.	2 0 0
XXXII	Jami-al-Ashya	Afzal-ul-Ulama Hakim Abdul Qadir Ahmed Sahib	*Persian*	13 8 0
XXXIII.	Tibb-e-Faridi	Do.	Do.	8 4 0
XXXIV.	Tahqiq-al-Buhran	Do.	Do.	1 8 0
XXXV.	Safinat-al-Najat	Janab Rahim Ahmed Farooqui, M.A.	Do.	1 10 0

Serial Nos. XXXVI to LXX were published under the auspices of the TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY. TANJORE.

LXXI.	Vaiddiyak Kaḷañciyam	Dr. C. N. Kuppuswami, H.P.I.M., & Dr. V. S. Parvati, L.I.M.	*Tamil*	2 8 0
LXXII.	Anubhava-vaiddiya-muṟai, Vol. III.	Do.	Do.	5 0 0
LXXIII.	Anubhava Vaidyamu	Dr. Mulugu Visvesvara Sastri, H.P.I M.	*Telugu*	6 0 0
LXXIV.	Saivācāra-saṅgrahamu	Vidvan G. J. Somayaji, M.A., L T.	Do.	2 0 0
LXXV.	Ārogya-cintāmaṇi	Dr. N. Visvanatha Sarma	*Sanskrit*	9 0 0
LXXVI.	Tattvasāra with Ratnasāriṇī	Karappankad V. S. Venkatacaryaswami,	Do.	6 0 0
LXXVII.	Sūtrārthāmṛtalahārī	Dr. R. Nāgaraja Sarma. M.A , Ph.D., L.T.	Do.	3 4 0
LXXVIII.	Ratna-dīpikā and Ratna śāstram	Sri P. S. Rama Sastri	Do.	2 4 0
LXXIX.	Aśva-cikitsā	Dr. C. K. Velayudhan Nair, B. V. Sc.	*Malayāḷam*	1 8 0
LXXX.	Phalasāra-samuccaya	Dr. C. Achutha Menon, B.A. Ph.D	Do.	8 0 0
LXXXI.	Mahā-sāram	Dr. M. K. Vaidyar, A.M.A.C.	Do	11 0 0
LXXXII.	Saptariṣi-nāḍi	Professer K. Natesan	*Tamil*	20 0 0
LXXXIII.	Karnāṭaka Rājākkaḷ Savistāra Carittiram	V. R. Ramachandra Dikshitar, M.A.	Do.	*In the press.*
LXXXIV.	Bharata-siddhāntam	P. Sambamurti, B.A., B.L.	Do.	Do.
LXXXV.	Piḷḷaippiṇi-Vākaṭam	Vaidyaratna Dr. M. Duraiswami Ayyangar	Do.	Do.
LXXXVI.	Anubhava Vaiddiyam Vol. IV	Dr. C. N. Kuppuswami, H. P. I. M.	Do.	Do.
LXXXVII.	Māṭṭu-Vākaṭam	Dr. I. M. Azizuddin, B.A., G.M.V C.; B.V. Sc., Ph. D. (Edin.)	Do.	Do.
LXXXVIII.	Brahma Vidyā Sudhārṇavamu	V. V. Kriṣna Rao, B.A.	*Telugu*	Do.
LXXXIX.	Rāgatāḷa Cintāmaṇi	T. V Subba Rao, B.A., B.L.	Do.	Do.
XC.	Vaidya-cintāmaṇi	Dr. Mulugu Visvesvara Sastri, H.P.I.M.	Do.	Do.
XCI.	Kumāra Rāmuni Kathā	Dr. N. Venkataramanayya, M.A., Ph.D.	Do.	Do.
XCII.	Kāṭamarāju Caritra	Sri V. Prabhakara Sastri	Do.	Do.
XCIII.	Deva-keraḷam (Candra-kalā-nāḍi)	Sri T. S. Ranganatha Josyar	*Sanskrit*	Do

Serial Number.	Name of the work.	Name of the Editor.	Language.	Price.
XCIV.	Pātañjala - Yogasūt r a-bhāṣya-vivaraṇam	P. S Rama Sastri and S. R. Krishanamurti Sastri	*Sanskrit*	*In the Press*
XCV.	Kiḷi-vaṇḍu-samvādam	V. H. Subrahamanya Sastri	*Malayālam*	Do.
XCVI.	Advaita-vedāntam	S. K. Ramanatha Sastri	Do.	Do.
XCVII.	Bārhaspatya-sūtra with Commentary	Dr. C. Achyuta Menon, B.A., Ph. D.	Do.	Do.
XCVIII.	Karaṇa-paddhati	Do.	Do.	Do.
XCIX.	Yōga-sāram	Dr. M. K. Vaidyar A.M. A.C.	Do.	Do.
C.	Vaidya-sāra-saṅgraha Volume II	Vaidyaratna Dr. G Srinivasamurti, B.A., B.L., M.B. & C. M.	*Kannaḍa*	Do.
CI.	Sadguru-rahasya	Sri M. Mariappa Bhat, M.A., L.T	Do.	2 6 0
CII.	Shawakil-al-Hur	Dr. M. Abdul Haq, M.A. D. Phil.	*Arabic*	*In the press*

Terms of Sales

Packing, Postage and Sales Tax extra.

25 per cent. discount will be allowed to all *bona fide* book-sellers.

Books will not be sent by V. P. P.

The cost of the books together with the sales tax, packing and postal charges, should be sent in advance to:

THE CURATOR,
GOVRRNMENT ORIENTAL MANUSCRIPTS
LIBRARY, UNIVERSITY BUILDINGS.
TRIPLICANE, MADRAS 5.
INDIA.

L 9190a



M. L. J. PRESS, MADRAS—4.